
# வீரயுக நாயகன் வேள்பாரி-1



முன்னுரை

இளைப்பாற நிழலின்றித் தவிக்கும் வழிப்போக்கனின் கண்ணில் படும் பெரும் ஆலமரம்போல, மூவேந்தர்களும் மன்னர்கள் பலரும் ஆண்ட தமிழகத்தில், தவித்தலைந்த உயிர்களுக்காகத் தன்னையே தந்தவன் வேள்பாரி.

தன்னலமற்ற கொடை உள்ளத்தாலும், அன்புவழிப்பட்ட வாழ்வியல் மரபாலும் பாரியின் புகழ் தமிழ் நிலம் எங்கும் பரவியது. மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் அவன் புகழ் கண்டு வெதும்பினர். பறம்பு நாட்டின் நிலவளம் அவர்களின் கண்களை உறுத்தியது. பாரிக்கு எதிராகத் தனித்தனியே அவர்கள் மேற்கொண்ட போர் முயற்சிகள் கைகூடவில்லை. இறுதியில் மூவேந்தர்களும் ஒன்றிணைந்தனர். அவர்களின் கூட்டுப்படை பாரியின் பறம்புநாட்டை அனைத்துத் திசைகளில் இருந்தும் ஒருசேரத் தாக்கியது. சின்னஞ்சிறு `டிராய்' நகரின் மீது மொத்த கிரேக்கப் படையும் போர் தொடுத்ததைப் போலத்தான் இதுவும் நிகழ்ந்தது.

தலையானங்கானத்துப் போர், வெண்ணிலைப் போர், வாகைப் பறந்தலைப் போர், கழுமலப் போர் என சங்ககாலத் தமிழகம், குருதி பெருக்கெடுத்து ஓடிய எண்ணற்ற போர்க்களங்களைக் கண்டது. அங்கெல்லாம் நடைபெற்ற போரில் மூவேந்தர்களில் யாரேனும் ஒருவர் வெற்றிபெற்றார்.

மற்றவர்கள் தோற்றோடினர். ஆனால், `பறம்புமலைப் போரில்' மட்டுமே மூவேந்தர்களும் ஒருசேர தோல்வியைத் தழுவினர். தமிழக வரலாற்றில் அதற்கு முன்பும் அதற்குப் பின்பும் நிகழாத வீரச்சரித்திரம் இது.

பெரும் நிலப்பரப்பை ஆண்ட மூவேந்தர்களின் கூட்டுப்படை, ஒரு குறுநில மன்னனால் சிதறடிக்கப்பட்டது. அதன் பின் மூவேந்தர்களும் ஒன்றாய் சதிசெய்து, வஞ்சினம் நிகழ்த்தி, பாரியின் உயிர் பறித்தனர். வீரத்தால் சாதிக்க முடியாததை துரோகம் செய்து முடித்தது.

வென்றவர்களின் பெயர்கள் இன்று வரை துலங்கவில்லை. ஆனால் வீழ்த்தப்பட்ட பாரி, வரலாற்றில்

ஒளிரும் நட்சத்திரமானான்; வள்ளல் என்ற சொல்லின் வடிவமானான். முல்லைக்கொடிக்குத் தேரைத் தந்தவன் மட்டும் அல்ல... தனது வீரத்தால் என்றும் ஒளிவீசும் வெற்றிக்கொடியை நாட்டிச்சென்றவன் வேள்பாரி.

இயற்கைக்கும் மனிதனின் பேராசைக்கும் இடையில் இன்று நடக்கும் போராட்டத்தின் ஆதிவடிவம்தான் வேள்பாரியின் கதை. திரும்பும் திசையெல்லாம் அருவி கொட்டும் குறிஞ்சி நிலத்தில், அந்த அருவி நீரினும் குழுமையுடை பாரியின் கரம்பற்றி நடக்க வாருங்கள்...




குலப்பாடல்

மூக்கை விடைத்தபடி பாய்ந்துகொண்டிருந்தன குதிரைகள். மேடு பள்ளமற்ற பாதை இன்னும் விரைந்து, `வா...' என்று தேரோட்டியை அழைத்தது. தேரை ஓட்டும் ஆதன், குதிரையின் கடிவாளத்தைச் சுண்டியபடி வேகத்தை மேலும் அதிகப்படுத்தினான்.

அதிகாலையில் இருள் கலையத் தொடங்கியபோது இவர்கள் புறப்பட்டனர். அறுக நாட்டை ஆளும் சிறுகுடி மன்னன் செம்பனின் தென்திசை மாளிகை அது. அங்குதான் நேற்றிரவுத் தங்கல். அதுவரை தேரை ஓட்டிவந்தவன் நாகு.

“இனி அடர் காட்டுப்பகுதியில் பயணம் இருக்கும். இந்த நிலப்பாதையை நன்கு அறிந்த தேரோட்டி இவன். இவனது பெயர் ஆதன். நாளை இவன்தான் உங்களை அழைத்துச் செல்வான்” என்று கூறி வணங்கி விடைபெற்றான்.

புறப்படும்போது, நாகுவிடம் ஆதன் கேட்டான், ‘‘இவர் யார்... மன்னரின் சுற்றத்தாரா?”

“இல்லை... ‘இவரின் அடிமை நான்!’ என்று மன்னர் என்னிடம் கூறினார்.”

பதில் கேட்டு ஆதன் நடுக்குற்றான். சற்று நிதானித்து, “அப்படியென்றால் ஏன் தனியாக வந்திருக்கிறார். உடன் பாதுகாப்புக்கு யாரும் வரவில்லையா?”

“பெரும் படையே புறப்பட்டது” என்று சொன்ன நாகு, சற்றுக் குரல் தாழ்த்தி, “முதலில் தேரை ஓட்ட, வளவனின் இருக்கையில் ஏறி அமர்ந்ததே மன்னர்தான். இவர் ஒற்றைச் சொல்தான் சொன்னார்.

எல்லோரும் நின்றுகொண்டார்கள். நான் மட்டும் அவரை அழைத்துக்கொண்டுவந்தேன்” - சொல்லி விட்டு புறப்படத் தயாராகும்போது, ஆதன் மீண்டும் கேட்டான்...

“மன்னர்களை ஆளும் இந்தத் தெய்வத்துக்குத் தனித்த பெயர் எதுவும் இருக்கிறதா?”

“பெரும்புலவர் கபிலர்.”

ஆதன் இரவு முழுவதும் தூங்கவில்லை. பதற்றத்திலேயே இருந்தான். பொழுது விடிந்தது. தூக்கமின்மையைக் காட்டிக்கொள்ளாமல், உற்சாகமாகக் குதிரையைப் பூட்டி தேரைத் தயார்செய்தான். மாளிகையில் இருந்து கபிலர் வெளியேறி வந்தார். நரை முழுமைகொள்ளாத தாடி, வேந்தனைப்போல தலைமுடியை உச்சியில் முடிச்சிட்டு, சிறுகோள் ஒன்றைச் செருகியிருந்தார். பேரறிவின் இறுமாப்பு கண்ணொளியில் மின்னியது. பார்த்ததும் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினான் ஆதன்.

அவரது வாழ்த்துச்சொல் காதில் கேட்க எழுந்து திரும்பியபோது, அவர் குதிரையின் கழுத்தைத் தடவிக்கொடுத்துக்கொண்டிருந்தார். குதிரைகள் புதிய மனிதர்களைத் தொடவிடாது. ஆனாலும் தேரில் பூட்டப்பட்டிருந்ததால், ஓர் அளவுக்கு மேல் அதனால் விலகவோ, முகத்தைத் திருப்பவோ முடியவில்லை.


“மயிலும் குதிரையும் தனது மொத்த அழகையும் நீண்டு திருப்பும் கழுத்தில் வைத்திருக்கிறது” என்று சொன்னவர், சிரித்த முகத்தோடு தேரில் ஏறினார்.

ஆதன், மிகத் திறமையான தேரோட்டி. பயணத்தின் அதிர்வு பசுந்தூள் மெத்தையைக் கடந்து உடலில் உணர முடியாதபடி, தேரைச் செலுத்துவான். அவன் நினைத்ததைவிட வேகமாகவே வேட்டுவன் பாறைக்கு வந்துவிட்டான். அருகில் வந்ததும் வேகத்தைக் குறைக்க, கடிவாளத்தை இழுத்து நிறுத்தினான். கடிவாளத்தில் இருக்கும் பூண் எழுப்பிய உலோக ஒலி தனித்து மேலெழும்பியது. தலைதூக்கிப் பார்த்தார் கபிலர். எதிரில் இரு சிறுகுன்றுகள். அதற்குப் பின்னால் அடுக்கடுக்காக மலைத் தொடர்கள். அதன் உச்சி, வெண்மேகத்துக்குள் மறைந்திருந்தது. மேலெழும்பிய உலோக ஒலி, மலையோடு மறைந்தது.

“அய்யா... இதுதான் பச்சை மலைத்தொடரின் முன்னால் இருக்கும் வேட்டுவன் பாறை. இந்த வழியாகத்தான் பாரியின் பறம்பு மலைக்குப் போக வேண்டும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.” கபிலர் வண்டியைவிட்டுக் கீழே இறங்கிப் பார்த்தார். கண்ணுக்கெட்டும் தூரம் வரை மலை விரிந்துகிடந்தது. நீர் வற்றிய காட்டாற்றைக் கடந்து வேட்டுவன் பாறையில் பாதி ஏறுவது வரை, ஆதன் நின்று பார்த்துக்கொண்டே இருந்தான்.

“இதற்கு முன்னால் பறம்பு நாட்டுக்குப் போனது கிடையாது. பாதை எவ்வளவு தூரம் இருக்கும். துணைக்கு யாராவது வருவார்களா? போய்ச் சேர எத்தனை நாளாகும் என எதுவும் தெரியாது. தன்னந்தனியாக எந்தத் தைரியத்தில் இந்த அடர்வனத்துக்குள் இவர் போய்க் கொண்டிருக்கிறார்?” - ஆதனுக்கு வியப்பு குறையவே இல்லை. வேறு வழியின்றி அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டான். உச்சிவெயிலிலும் ஈரக்காற்று வீசியது. குன்றின் சரிவில் போய்க்கொண்டிருந்த பாதை சற்றே வளைந்து மேல் நோக்கி ஏறியது. பாறையில் இருந்து சரிந்துகிடக்கும் வேர்கள், கைபிடிக்க வாகாக இருந்தன. கபிலர் வேரை இறுகப் பிடித்து விசைகொடுத்து மேலேறியபோது, தனக்கு வயதாகிவிட்டதை

உணர்ந்தார். உடல் வேர்த்தது, மூச்சுவாங்கியது, நடையின் வேகத்தைச் சற்றே குறைக்கலாமா என்று யோசிக்கையில், கால்கள் நின்றுகொண்டுதான் இருந்தன. சிறிது இளைப்பாறி மீண்டும் நடந்தார்.



இடப்புறம் கீழே நீர் வற்றிக்கிடக்கும் காட்டாற்றின் அழகைப் பார்த்தபடி, ஒற்றையடிப் பாதையை நோக்கி கண்களைத் திருப்பினார். செடிகளுக்கு இடையில் ஏதோ உருவம் தெரிகிறதே என்பதை உணர்ந்தவர், மீண்டும் கீழே உற்றுப்பார்த்தார். இவர் நடக்கும் பாதையை நோக்கி ஓர் இளைஞன் கையில் வேல் கம்போடு சரசரவென மேலேறி வந்தான்.

கபிலருக்கு அவனது உருவம் பதியவில்லை... அவன் வந்த வேகம்தான் பதிந்தது. மேலே ஏறியவன் கபிலரைக் கடந்து முன்னால் போய்க்கொண்டிருந்தான். நின்று பேச அவனுக்குப் பொழுது இல்லை. நடந்துகொண்டே கேட்டான்.

“நீங்கள் யார் எனத் தெரிந்துகொள்ளலாமா?”

கபிலர், கண்ணிமைத்து அவனைப் பார்த்தார். பதில் சொல்லுவதற்குள் மறைந்துவிடுவானோ என்று தோன்றியது. குரல் உயர்த்திச் சொன்னார்.

“கபிலர்.”

“நான் பெயரைக் கேட்கவில்லை. யார் எனக் கேட்டேன்?”



எதிர்காற்றில் சற்றே தடுமாறினார் கபிலர். தடுமாற்றத்துக்குக் காற்று காரணம் அல்ல என்பதை, அவரது மனம் சொல்லியது.

“நான் புலவன்.”

“பாணர் குலமா?” - கேட்டபடி நடந்து போய்க்கொண்டே இருந்தான். அவனைப் பார்ப்பது, பாதையில் கவனம்கொள்வது, பதில் சொல்வது என்ற மூன்று வேலைகளை கபிலர் செய்யவேண்டி இருந்தது.
“இல்லை... பாணர்கள் பாடல் பாடுபவர்கள். இசைஞர்கள், கலைஞர்கள். நான்

அவர்கள் இல்லை. நான் புலவன்; எழுதக் கற்றவன்.”

பதில் சொல்லி முடிக்கும்போது, கேள்வி வந்தது...

“எழுத்து என்றால்..?”

மலையேறும் ஒரு பாதையில், இவ்வளவு தூர இடைவெளியில் ஓர் உரையாடலா?

உரத்தக் குரலில் பதில் சொல்வதற்கு மூச்சுக்காற்று ஒத்துழைக்க மறுத்தது. ஆனாலும் கபிலர் உரத்தே சொன்னார்...

``மரத்தை ஓவியமாக வரைந்து பார்த்திருக்கிறாயா?”

“பார்த்திருக்கிறேன்... குகைப் பாறையில் நிறைய மரங்கள் ஓவியமாக வரையப்பட்டுள்ளன.”

“அதேபோல, நாம் பேசும் ஒலியை ஓவியமாக வரைவதுதான் எழுத்து” - அவனது நடையின் வேகம் கொஞ்சம் குறைந்தது. யோசிக்கிறான் என்று புரிந்தது. அவனைக் கொஞ்சம் உள்ளிழுக்க முடியும் என்ற நம்பிக்கை கபிலருக்கு வந்தது.



“உனது பெயர் என்ன?”

“நீலன்.”

“இங்கே வா... வரைந்து காட்டுகிறேன்” என்று சொன்ன கபிலர், கீழே கிடந்த காய்ந்த குச்சியைக் குனிந்து எடுத்தார். அவன் சட்டென அருகில் வந்தான். அதைக் கவனித்தபடியே, குச்சியால் கீறி அவனது பெயரை மண்ணில் எழுதினார்.

அதைப் பார்த்ததும் உதட்டோரத்தில் ஓர் இளஞ்சிரிப்பு. மீண்டும் நடக்கத் தொடங்கியவன், “நான் என்ன யானையின் சாணத்தில் செரிக்காமல் கிடக்கும் ஈக்கியைப்போலவா இருக்கிறேன்?”



எதிர்காற்று மீண்டும் அடித்து கபிலரைத் தள்ளாடவைத்தது. நீலன் வேகமாகப் போய்க் கொண்டிருந் தான். கபிலர் ‘அவனை ரசிக்கத் தொடங்கினார். ‘அவனது வேகம், இறுகித் திரண்ட உடல், வீரனுக்கே உரிய மிடுக்கு, சிறு கண்கள், உள்ளத்தில் இருந்து உருவாகும் கேள்விகள், அவன் கையில் இருக்கும்போதே வேல் இவ்வளவு வேகமாகப் போகிறதே, அவன் எறிந்தால் எவ்வளவு வேகம் கொள்ளும்?’ என யோசித்த கபிலர், இந்த இடைவெளியில் கேள்வியை நாம் ஆரம்பித்துவிடுவோம் என முடிவுசெய்து, “உனக்கு மணமாகிவிட்டதா?” என்றார்.

“இல்லை... விரைவில் நடக்கும்” - சற்று இடைவெளிவிட்டுச் சொன்னான், “என்னவளைத்தான் பார்த்துவிட்டு வருகிறேன்.”

“எங்கே இருக்கிறாள்?”

“அதோ... அந்த மலையின் பின்புறம் இருக்கிறது அவளது குடில்.”

“அந்த மலைக்குப் பின்புறமா?’’ - ஓசையின் நீளமே உணர்வைச் சொன்னது.

“நாள்தோறும் இவ்வளவு தூரம் போய் வருவாயா?”

“நாளும் இருமுறை போய் வருவேன். சில நாட்களில் இருமுறை இங்கு வந்து

செல்வேன்.”

கபிலருக்கு அவன் மீதான ஈர்ப்பு இன்னும் கூடியது. ஓர் ஊஞ்சலைப்போல இரு குன்றுகளுக்கும் இடையில் தினமும் ஆடுகிறவன் என்று, மனதில் ஒரு சித்திரம் உருவாகிக்கொண்டிருக்கையில், கேள்வியை அவன் தொடுத்தான்.
“பெண்ணின் இதழ் இவ்வளவு சுவையேறி இருக்கிறதே, எப்படி?”

அந்த இளஞ்சிரிப்பு கபிலரின் உதட்டோரத்தில் வந்து உட்கார்ந்தது. ஊஞ்சலில் தன்னையும் ஏற்ற நினைக்கிறான். சரி... அவனது வேகத்தைக் குறைத்தால் போதும் என நினைத்தவர், பதில் சொல்லும் முன் அடுத்த கேள்வியை அவனே கேட்டான்.

“உங்களுக்கு மணமாகிவிட்டதா?”

“இல்லை.”

“அப்படியென்றால் நான் உங்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கக் கூடாது அல்லவா?”

ஏதாவது ஓர் இடத்தில் நின்றால்தானே பதில் சொல்வதற்கு, கணப்பொழுதில் மூன்று கொப்பு தாவுகிறான். இவனை எப்படி அடைத்து நிறுத்துவது என யோசித்த கபிலர், “உனக்கும்தான் மணமாகவில்லை” என்றார்.

“நான் வீரன்.”

கபிலர் திகைத்துப்போனார். இவன் என்னை என்ன சொல்ல வருகிறான் என யோசிக்கையில் அவன் பதிலைத் தொடர்ந்தான்...

“எப்போது போர் மூளும் எனத் தெரியாது. பறம்பு நாட்டுக்குச் சூழவும் எதிரிகள். போர்க்களத்தில் நான் சாயும்போது எனது ஈட்டியை இறுகப் பற்றி முன்னேற, என் மகன் வந்து நிற்கவேண்டும். வீரர்களின் வாழ்வு மிகக் குறுகியது, நிதானமாக வாழ்ந்து, எழுத்துக்கள் எல்லாம் கற்று, நாடுதோறும் பயணம்போய், ஒரு காத தூரத்தை மூன்று நாழிகை நடந்து கடக்க எங்களுக்கு அவகாசம் இல்லை புலவரே!”



ஊஞ்சல் அறுபட்டு தான் மட்டும் விழுவதுபோல் உணர்ந்தார் கபிலர்.

வேட்டுவன் பாறையின் இரண்டாவது குன்றில் கால் பதிக்கும் வரை, கபிலர் அவனிடம் பேச்சுக் கொடுக்க வில்லை. அவனைப் பற்றிய ஒரு கணிப்பை உருவாக்கிக்கொள்ள முடியவில்லை. எதை உருவாக்கினாலும் அடுத்த கணமே அதைக் குழைத்து விடுகிறான். அவன் கையில் வைத்திருக்கும் வேல்முனையைவிடக் கூர்மையானதாக இருக்கிறது அவன் அளிக்கும் பதில்கள். அவனைக் கணிக்க முடியவில்லை என்பதை மனம் ஏற்கவில்லை. ஆனால், ஒன்று புரிந்தது. அவனது நடைவேகத்துக்கு எங்கோ போயிருக்க வேண்டும். அவ்வாறு போகாததில் இருந்து, அவன் தன்னை அழைத்துக்கொண்டு போகிறான் என ஊகித்தார் கபிலர்.

சிறிது நேரத்துக்குப் பின்னர் மௌனம் கலைத்துப் பேசத் தொடங்கினார், “பாரியின் பறம்பு மலை எவ்வளவு தொலைவில் இருக்கிறது?”

“இந்த நாட்டின் பெயர்தான் பறம்புநாடு; பாரி இருக்கும் மலையின் பெயர் ஆதிமலை. அந்த மலையில்தான் வேளீர் குலத்தைத் தோற்றுவித்த மாவீரன் `எவ்வி’, தலைநகரை உருவாக்கினான்.”

நிலப்பகுதிக்கு வந்து பாணர்கள் பாடிய பாடல்களில் இருந்தே பலவற்றை நாம் ஊகித்துக்கொள்கிறோம். ஆனால், உண்மை எவ்வளவு விரிவுடையதாக இருக்கிறது என

யோசித்தபடி கபிலர் கேட்டார், “அங்கு இருந்துதான் பாரியின் அரசாட்சி நடக்கிறதா?”

கேள்வி, நீலனுக்குச் சிரிப்பை உண்டாக்கியது. “பாரி அரசன் அல்ல... வேளீர் குலத் தலைவன். நாட்டை ஆள்வதைப்போல காடும் ஆளப்படுகிறது என நீங்கள் நினைக்கிறீர்கள். காட்டை யாராலும் ஆளமுடியாது. சின்னஞ்சிறு மனிதனால் என்ன செய்ய முடியும்? பகை, துரோகம், வீரம், சாவு, அவ்வளவுதான். ஆனால், காட்டைப் பாருங்கள் எண்ணிலடங்கா உயிர்கள், ஒவ்வொன்றும் அளவில்லா ஆற்றல்கொண்டது. ஒரு பச்சிலையை வாயில் வைத்தால், அந்தக் கணமே நீங்கள் செத்து மடிவீர்கள். துளிர்விடும் ஒற்றை இலை உங்களின் வாழ்வை முடித்துவைக்கப் போதுமானது. உங்களால் முடிவுசெய்ய முடியுமா, காடு இலைகளால் ஆனதா, மரங்களால் ஆனதா, மிருகங்களால் ஆனதா, பாறைகளால் ஆனதா, பறவைகளால் ஆனதா, கொம்புகளால் ஆனதா?”

அவன் பேசிக்கொண்டேபோனான். கபிலரால் ஒருகட்டத்தில் அவனது பேச்சைப் பின்தொடர முடியவில்லை. பாறைகள் உருள்வதைப்போல வார்த்தைகள் உருண்டு கொண்டிருந்தன.மூச்சுவிட அவகாசம் எடுத்துக் கொண்டார். அவர் நின்றுவிட்டதை உணர்ந்த அவன் திரும்பிப் பார்த்துச் சொன்னான், ``எங்களின் பாதங்கள் மண்ணைப் பிடித்து நடந்து பழகியவை. சமவெளியில் வாழும் உங்களின் பாதங்கள் மண்ணில் தேய்த்து நடந்து பழகியவை. பாதடியைக் கழட்டிவிட்டு பாதத்தை முன்னெடுத்து வையுங்கள். பற்களைப்போல விரல்களுக்கும் கவ்விப்பிடிக்கத் தெரியும்.”

இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு தனக்கு ஒருவன் நடைபயிலச் சொல்லிக்கொடுக்கிறான். இளம்பருவத்தில் இப்படித்தான் ஏமாற்றி நடை பழக்கினார்களா?



சீறூர் மன்னன், முதுகுடி மன்னன், குறுநில மன்னன், சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்கள், கல்வியில் சிறந்த சான்றோர்கள், அறவோர், `எட்டி’ பட்டம் சூடிய பெருங்குடி வணிகர்கள் என எத்தனையோ பேரோடு கழிந்துபோன இந்தக் காலங்களில், மொழியும் அறிவும் ஞானமுமே என்னுள் எப்போதும் நிலைகொண்டது. ஆனால், ஒருபோதும் எனது தாயின் நினைவு தோன்றியது இல்லை. கணப்பொழுதில் என்னை எனது தாயின் மடியில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டானே, முன்னால் போகும் இவன் யார்?”

கபிலர் ஒருவித உணர்ச்சி மேலிட்ட வராக பாதடியைக் கழட்டிவிட்டு, அவனை நோக்கி நடந்தார். அவன் குன்றின் உச்சியை அடைந்து, அவரது வருகைக்காகக் காத்திருந்தான். அவர் மூச்சு வாங்கியபடி உச்சியை நெருங்கினார். எதிரில் பெரும் மலைத்தொடரின் அடுக்குகள் தெரிந்தன.

நீலன் சொன்னான்... “முதல் அடுக்குக்கு ‘காரமலை’ என்று பெயர். அதன் மேல் நின்று பார்த்தால்தான், மூன்றாம் அடுக்கைப் பார்க்க முடியும்... அதுதான் ஆதிமலை.”

உச்சிக்கு வந்ததும், அதுவரை இல்லாத வேகத்தோடு காற்று வந்து அவரைத் தள்ளியது. உடலைச் சற்றுத் திருப்பி காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுத்து நின்றபடி, எதிர்திசையைப் பார்த்தார். நீண்டுகிடக்கும் மலைத்தொடர் தனது இரு கரங்களையும் விரித்து அவரை அழைப்பதுபோல் இருந்தது.

நீலன் சரிவில் இறங்கத் தொடங்கினான். “இனி வேகமாக நடக்க வேண்டும். பொழுதுசாய சிறிது நேரம்தான் இருக்கிறது. மலையின் விளிம்பை சூரியன் கடந்துவிட்டால், ஒரு பனை தூரத்தைக் கடப்பதற்குள் இருள் நம்மை அடைத்துவிடும். அதன் பிறகு நீங்கள் நடப்பது கடினம். விரைவில் வாருங்கள்” என்று சொல்லியபடி தாவிச் சரிந்தான்.

கபிலர் வேகமாக இறங்கத் தொடங்கினார், அவன் நடக்கவில்லை தாவிக் கடந்துகொண்டிருக்கிறான் என்பதைப் பார்த்தவாறு, சிறு புதர்களை விலக்கி, வேகமாக நடக்க முயற்சித்துக்கொண்டிருந்தார். ஏறும்போது முன்னால் செல்பவன் எவ்வளவு உயரம் போனாலும், ஆளைப் பார்த்துவிட முடியும்.

இறங்கும்போது அப்படி அல்ல. அங்கொன்றும் இங்கொன்றுமாக அவனது உருவம் மறைந்து தெரிந்தது. பேச்சுக் கொடுத்தால் மட்டுமே அவனைப் பின்தொடர முடியும் என்பதை உணர்ந்த கபிலர், கவனமாக நடந்தபடி கேட்டார்.

“ `காடுகள் கொம்புகளால் ஆனதா?’ என்று எப்படிக் கேட்டாய்?” என்றார்.

“கொம்புகள் என்றால் மிருகங்களின் கொம்புகள் என்று நினைத்துவிட்டீர்களா? நான் மரங்களின் கொம்புகளைச் சொன்னேன்.”


கபிலருக்கு விளங்கவில்லை. கழுத்தை நீட்டிப்பார்த்தார். அவன் எந்தப் புதர் தாண்டி போய்க் கொண்டிருக்கிறான் எனத் தெரிய வில்லை. சத்தமாகக் குரல்கொடுத்தார்...

“கொப்புகளைத்தான் கொம்புகள் என்று சொல்கிறாயா?”

“இல்லை... நாங்கள் மரத்தின் வேர்களை மரக்கொம்புகள் என்றுதான் சொல்வோம். மரம் மேல் நோக்கி வளருவது அல்ல... கீழ் நோக்கி வளருவது. இறுகிய மண்ணையும் கரும்பாறையும் தனது கொம்புகளால் பிளந்துகொண்டு அது உள்செல்கிறது. மரத்தின் முழு ஆற்றலும் அதன் கொம்புகளில்தான் இருக்கிறது. உடலைவிட நீளமானவை அதன் கொம்புகள்.”

தான் கற்றவற்றை ஒருவன் தலைகீழாகப் புரட்டிக் கொண்டிருக்கிறான் எனத் தோன்றியபோது, முன்வைத்த வலதுகால் இடறியது. சிறுபாறையில் பாதம் நழுவிச் சரிந்தது. பக்கத்தில் இருந்த செடியைப் பிடித்து, கீழே விழுந்துவிடாமல் நின்றார் கபிலர்.

கால் இடறி கற்கள் உருளும் சத்தம் கேட்டதும், நீலன் வேகமாக மேலேறிவந்தான், பக்கத்தில் இருந்த வேம்பின் மீது கை சாய்த்து நின்றார் கபிலர். `சிறிது நேரம் உட்காருங்கள்’ என்று சொன்னவன், பாதங்களை உள்ளங்கையால் பிடித்து, தசைகளை இழுத்துவிட்டான். அவரது முகத்தைப் பார்த்தபடி, “நடக்கலாமா?” என்றான். கொஞ்சம் பொறுப்பா என்பதுபோல அவரது பார்வை இறைஞ்சியது. கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார். வேப்பம் பூக்கள் சுற்றிலும் உதிர்ந்து கிடந்தன. பூக்களை எடுத்து உள்ளங்கையில் வைத்து உற்றுப்பார்த்தார். மூச்சுக்காற்றில் பூக்கள் அசைந்தன. பேச்சுக் கொடுத்தால் உட்கார்ந்திருக்கும் நேரத்தைச் சிறிது நீட்டிக்கலாம் என யோசித்த கபிலர் “வேப்பம் பூ, யாருக்கு உரியது தெரியுமா?” என்றார்.



“சிற்றெறும்புக்கு உரியது.”

கபிலர் பதற்றம் அடைந்தார்.

“நான் அதைக் கேட்கவில்லை. வேப்பம் பூ மாலை யார் சூடுவதற்கு உரியது தெரியுமா?” என்று கேட்டுவிட்டு, ஏதாவது பதிலைச் சொல்லிவிடுவானோ என்ற பதற்றத்தில் அவரே பதிலையும் சொன்னார்...

“பாண்டிய மன்னனுக்கு உரியது.”

“சரி... அப்படியே நடக்கத் தொடங்குங்கள். நான் அருகிருந்து அழைத்துச் செல்கிறேன்” என்றான்.

கபிலர் நடக்கத் தொடங்கினார். எட்டுவைக்கும்போது கால் நரம்பு சுண்டுவது போல் இருந்தது. சூரியனின் அடிவிளிம்பு காரமலையின் தலையைத் தொட்டது.

முன்னால் நடந்தபடியே கேட்டான்... “வயல் நண்டைப் பார்த்திருக்கிறீர்களா?”

சம்பந்தம் இல்லாமல் கேட்கிறானே என எண்ணியபடி, “பார்த்திருக்கிறேன்” என்றார்.

“வயல் நண்டின் கண்கள் வேப்பம்பூவைப் போலத்தான் இருக்கும். உங்கள் பாண்டியன் வயல் நண்டை மாலையாக அணிந்துகொள்வானா?” - கேட்டபடி நமட்டுச் சிரிப்போடு நாலு எட்டு முன் தாவிச் சென்றான்.

கபிலர் நிலைகுலைந்துபோனார். பெரும் வேந்தனை சாதாரண வீரன் ஒருவன் இவ்வளவு தாழ்த்தி தன்னிடம் பேசுகிறானே. இதைக் கேட்டுக்கொண்டிருப்பது அறம் அல்ல என்று தோன்றியது. இந்த எண்ணம் முழுமை அடையும் முன்னர், அவருக்குள் இருந்த கவிஞன் விழித்துக்கொண்டு வெளியில் வந்தான். என்ன அழகான ஓர் உவமை? கணநேரத்தில் எப்படி இவ்வளவு பொருத்தமான ஓர் ஒப்பீட்டைச் செய்தான். காதலுக்குள் சூழ்கொண்டு கிடக்கிற ஒருவனுக்கு உவமைகள் வராதா என்ன? மனதில் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்க, கபிலர் கேட்டார்... “வயல் நண்டின் கண்கள்தான் அப்படி இருக்குமா... கடல் நண்டின் கண்கள் அப்படி இருக்காதா?”

“எனக்குத் தெரியாது. நான் கடல் பார்த்தது இல்லை. ஆனால் நீரும் நிலமும் மாறுபடுகையில், வடிவமும் மாறுபடத்தான் செய்யும்.”

“மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் கடல் பார்க்க வேண்டும்.”

“ஏன்?”

“அது அவ்வளவு விரிந்து பரந்தது... அளவற்றது.”

முன்னால் போய்க்கொண்டிருந்த நீலன், சட்டெனத் திரும்பி கபிலரை நேர்கொண்டு பார்த்துக் கேட்டான்...

“எங்கள் பாரியின் கருணையை விடவா?”

கபிலர், மனதுக்குள் சுருங்கிப் போனார்!

- பாரி வருவான்..

\

# வீரயுக நாயகன் வேள்பாரி-2

**இது** சுமார் முன்னூறு ஆண்டுகாலக் கதை, அப்போது வடவேங்கடம், தென்குமரி என்று தமிழ் நிலத்துக்கு எல்லையோ, பெயரோகூட உருவாகிவிடவில்லை. அடர்ந்த வனத்தில், ஆற்றுப்படுகையில், வண்டல் பூமியில், வற்றிய பாலையில், கடலோரத்தில், மலைமுகட்டில் என வெவ்வேறு வகையான நிலங்கள்தோறும் இனக்குழுக்களாகச் சேர்ந்து வாழ்ந்த மக்கள், தங்களின் குலமுறைப்படியான வாழ்வை நடத்திக்கொண்டிருந்தனர். அரசோ, அரசனோ உருவாகவில்லை. குலத் தலைவன் மட்டுமே இருந்தான். அவனே குலங்களை வழிநடத்திக் கொண்டிருந்தான்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட மனிதக் கூட்டங்கள் தங்களின் தனித்த அடையாளங்கோடு செழித்திருந்தன. இயற்கையோடு இயந்த வாழ்வு. தேவை மட்டுமே ஆசையாகவும் கனவாகவும் இருந்தது. உழைப்பும் விளைச்சலும் பொதுச் சொத்து. கொண்டாட்டமும் குதூகலமும் இயல்பின் பிரதிபலிப்பு. எல்லா மனிதனும் சரிநிகராக இருந்தனர். இயற்கையான பிரிவினையான ஆண், பெண் என்ற பாலினப் பிரிவினை மட்டுமே இருந்தது.





வேட்டையாடிய உணவை நெருப்பில் சுட்டு தின்றுகொண்டிருந்தபோது, குகையில் இருந்த பெண்கள் ஓய்வு நேரத்தில் நீரைக் கொதிக்கவைத்து இறைச்சியை அதில் வேகவைத்தனர். மாமிசத்தையும் கிழங்குகளையும் நெருப்பில் சுடாமலே உண்ணக்கூடிய பக்குவத்துக்கு அவர்கள் மாறினர். வேகவைத்த உணவு என்ற புதியதொரு வகையை உருவாக்கினர்.

அன்றில் இருந்து நெருப்பில் சுட்ட உணவுகளுக்கு `ஆண் உணவு' என்று பெயர் ஆயிற்று. நீரில் வேகவைக்கப்பட்ட உணவுகளுக்கு `பெண் உணவு' என்று பெயர் ஆயிற்று. ஆண், அவசரத்தின் அடையாளம் ஆனான். பெண், பக்குவத்தின் அடையாளம் ஆனாள். உணவு, தாவரங்கள், விலங்குகள், பறவைகள், மலைகள், நதிகள் என எல்லாமே தம்மைப்போலவே ஆணாகவும் பெண்ணாகவும் இருக்கின்றன என்ற முடிவுக்கு வந்தனர்.

இயற்கையின் அதிஅற்புதம் எல்லாம் எதிர்பாலினத்தின் மீதான வசீகரத்தில் இருந்தே தொடங்குகிறது. எல்லாவிதமான புதிய ஆற்றலின் ஊற்றுக்கண்ணாக அவையே இருக்கின்றன. காதலுக்குள்தான் இயற்கையின் இயங்குசக்தி பொதிந்துகிடக்கிறது. ஆண், பெண் என்ற இரு சக்திகள். ஒருபோதும் ஒன்றை ஒன்று முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத ஆதி ரகசியங்களை தன்னுள்கொண்டுள்ளது. நீரும் மண்ணும்போலத்தான் ஆணும் பெண்ணும். நொடி நேரத்தில் ஒன்றினுள் ஒன்று கலக்கவும் முடியும்; மறுநொடியில் ஒன்றைவிட்டு மற்றொன்று கழலவும் முடியும். அதுவே அதன் இயல்பு.

உயிரினங்களில் இயற்கை உருவாக்கியது இந்த ஒரு பிரிவினை மட்டுமே. இதுவன்றி வேறு பிரிவினைகள் இல்லாமல் அழகாகவும் அமைதி யாகவும் இருந்தது அந்தக் காலம். ஆனால், அந்த அமைதி நீண்டு நிலைக்கவில்லை. மெள்ளக் குலைய ஆரம்பித்தது.

பெரும் மாளிகை சரியக் காரணமான ஒற்றைச் செங்கல்லைப் போலத்தான் சொத்தும், சொத்தின் மீதான ஆசையும். தனக்கான உடமை, தனது சந்ததிக்கான சேமிப்பு என ஆரம்பித்தபோது, குலங்களின் அமைதி குலைய ஆரம்பித்தது; ஏற்றத் தாழ்வுகள் உருவாகின; குலங்களில் வலுத்தவனின் கை ஓங்கியது; வல்லமை பொருந்தியவனின் கைகளில் அதிகாரம் நிலைகொண்டது. வலிமையடைந்த குலம் பிற குலங்களை அடக்கியாள நினைத்தது. தமிழ் நிலம் எங்கும் இருந்த நூற்றுக் கணக்கான குலங்கள் ஒன்றோடு ஒன்று மோதத் தொடங்கின. அடர்ந்த காட்டில் விடாது கேட்கும் இடியோசை போல, அந்த மோதல்களின் ஓசை கேட்டுக்கொண்டே இருந்தது. நூற்றாண்டுகளாகக் குருதி ஆறு நிற்காமல் ஓடியது.



ஆரம்ப காலத்தில் மனிதனுக்குத் தேவையான பெரும் செல்வமாக கால்நடைகளே இருந்தன. எனவே, கால்நடைகளை அதிகப்படுத்தவே எல்லா குலங்களும் ஆசைப்பட்டன. அடுத்த இனக் குழுவின் கால்நடைகள் இரவோடு இரவாகக் களவாடப்பட்டன. களவு கொடுத்தவன் ஆயுதங்களோடு குறுக்கே பாய்ந்தான். ஓட்டிச் செல்லப்படும் கால்நடைக்கும், மீட்டுத்திரும்பும் கால்நடைக்கும் இடையில் மனிதன் செத்து விழுந்துகொண்டே இருந்தான்.

அடுத்தகட்டமாக, நல்ல விளைநிலங்களைக் கைப்பற்ற குலங்கள் மோதிக்கொண்டன. செழிப்பான விளைநிலங்கள் எங்கிருக்கிறதோ, அங்கே மனித ரத்தம் ஆண்டு முழுவதும் உலரவில்லை. கால்நடைகளைப் பறிக்கும்போது மோதலாக இருந்த செயல், இப்போது போர்களாகப் பரிணமித்தது. ஒரு போர் இன்னொரு போரை உற்பத்திசெய்தது. தொடக்க காலத்தில் தோல்வியடைந்த நாட்டின் வீரர்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். ஆனால், இப்போது அப்படி அல்ல, அவர்களின் கைகளும் உழைப்பும் புதிய அரசுக்குத் தேவையாக இருந்தன. எனவே, அவர்கள் அடிமைகளாக்கப்பட்டு நுகத்தடியில் பூட்டப்பட்டனர். வீழ்ந்தவனின் நிலத்தை வென்றவன் வாள்கொண்டு உழுது பயிரிட்டான். `பிறர் மண் உண்ணும் செம்மலே' என்று அவர்கள் போற்றப்பட்டனர்.

பெருகிவந்த தேவையும் கடல்வழி வணிகமும் எண்ணற்ற அடிமைகளை அனுதினமும் கோரின. நிலத்துக்காகத் தொடங்கிய போர் இப்போது அடிமைகளைப் பெறுவதற்கானதாக மாறியது. போர் எனும் நிரந்தரமான கொதிநீர்க் கொப்பரைக்குள் எண்ணிலடங்கா இனக் குழுக்கள் விழுந்து, ஒன்றோடு ஒன்று மோதி, அழித்து, கொன்று, செரித்து, மிஞ்சியவை மேலேறின.

மேலேறியவர்கள் தாங்கள் இனி குலத்தலைவர்கள் அல்ல, வேந்தர்கள் என்று அறிவித்தனர். `வம்ப வேந்தர்கள் (புதிய வேந்தர்கள்) வாழ்க வாழ்க' என்ற முழக்கம் மூன்றில் இரு பங்கு நிலப்பகுதியில் ஒலித்தது. வேந்தனுக்கு என்று தனித்த அடையாளங் களை சான்றோர்கள் உருவாக்கினர். மணிமுடி, அரச முரசு, வெண் கொற்றக்குடை, ஆணைச்சக்கரம் இவை வேந்தர்களுக்கு உரியன. வேந்தர்கள் என்றால் அது சேர, சோழ, பாண்டியராகிய மூவர் மட்டுமே. மற்ற எல்லோரும் குறுநில மன்னர்கள் என்று அறிவித்தனர்.

எந்த ஓர் அறிவிப்பும் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதிக்குத்தான் பொருந்தும். மூவேந்தர்களின் நிலப்பகுதிக்கு வெளியே இருந்த ஆட்சியாளர்கள் இந்த அறிவிப்பை காலிலே மிதித்து, காறி உமிழ்ந்தனர். குடவர், அதியர், மலையர், வேளீர் என இருபதுக்கும் மேற்பட்ட குலத் தலைவர்கள் வாளேந்தி வஞ்சினம் உரைத்தனர். காவிரி, வைகை, பேரியாறு என ஆற்றங் கரையில் மூவேந்தர்களின் நாடுகள் அமைந்தன. இவர்களின் தலைமையை ஏற்காத சுதந்திர இனக் குழுக்களாகச் செயல்பட்டவர்கள் பெரும்பாலும், மலை மற்றும் காடு சார்ந்த நிலப்பகுதியை ஆண்டு கொண்டிருந்தனர்.




ஐவகை நிலத்தில் அமைந்த அனைத்து நாடுகளுக்குள்ளும் ஊடுருவி ரத்தநாளங்களாக, குறுக்கும் நெடுக்கும் அலைந்து கொண்டிருந்தவர்கள் பாணர் சமூகத்தைச் சார்ந்த கலைஞர்கள். அவர்கள் பாடிய பாடல்களும், கூறிச்சென்ற கதைகளும் நிலம் எங்கும் பரவிக்கிடந்தன. அவர்கள் யாழெடுத்து மீட்டி, பீறிடும் குரலில் பாடியபோதுதான், போர்க்களத்தில் மரணத்தைத் தழுவியவன் வரலாற்றில் உயிர்கொண்டு உலவினான். அவர்கள் தங்களின் நைந்துபோன மேலாடைக்குள் புகழை விதைக்கும் அபூர்வத்தை வைத்திருந்தனர். எல்லோருக்கும் தேவை, புகழ். தலைமுறை தலைமுறையாகச்

சொல்லப்பட வேண்டிய வீர கதையின் நாயகனாக நிலைபெற வேண்டிய புகழ். அதை விதைப்பவர்களாக பாணர்கள் இருந்தனர்.

குலத் தலைவர்களும் சிற்றரசர்களும் பாணர் சமூகத்தை அரவணைத்து அள்ளித்தந்தனர். அவர்களின் ஆற்றலையும் வள்ளல்தன்மையையும் பாணர்கள் விடாமல் பாடினர். இந்த வறிய கலைஞர்களின் வற்றாத குரல், தமிழ் நிலம் எங்கும் மிதந்துகொண்டே இருந்தது.

இப்போது வள்ளல்களின் தலைநாயகனாக பறம்பு நாட்டை ஆளும் வேள்பாரி இருந்தான். அவனது ஆளுகையும் ஆற்றலும் வாரிக்கொடுக்கும் வள்ளல்தன்மையும் நிலம் எங்கும் பரவின. நாடுகள்தோறும் பாணர்கள் பாரியைப் பற்றிய பாடலைப் பாடிக்கொண்டே இருந்தனர். தங்களின் பசியைப் போக்க யாரும் இல்லாத காட்டுப் பகுதியில்கூட, காலில் சலங்கை கட்டி துடிப்பறை முழங்க பாரியைப் பற்றி பாடினால் பசி மறந்துபோவதாக, அவர்கள் ஊருக்குள் வந்து சொல்லிவிட்டுப் போயினர். பசித்தவரின் குரலாக பாரி மாறியதால், எல்லா நாட்டுக் குள்ளும் நிறைந்திருந்தான். அதோடு நிற்காமல் அவனது புகழை உச்சத்துக்குக் கொண்டு போனது, முல்லைக் கொடிக்குத் தேரைத் தந்தான் என்பது. இந்தக் கதையைக் கேட்கும் ஒவ்வொரு வனின் மனதுக்குள்ளும் ஒரு பச்சிளங்கொடி துளிர்விடுகிறது. இது உண்மையோ, பொய்யோ தெரியாது. ஆனால், இந்தக் கதை என் குழந்தைக்கு, என் சுற்றத்துக்கு, என் சமூகத்துக்கு, என் வேந்தனுக்கு மிக அவசியம் என மக்கள் நினைத்தனர்.

விளைந்த நெல்லை அறுக்கும் முன்னர், வரி வாங்க கூரிய வாளோடு வந்து நிற்கும் வேந்தனு டைய வீரர்களிடம், மக்கள் வரியோடு சேர்த்து ஒரு முல்லைக்கொடியையும் கொடுத்து அனுப்பு வதாக பக்கத்து நாடுகளில் பேசிக்கொண்டார்கள்.


தமிழ் நிலம் முழுவதும் சுற்றி அலையும் பாணர் குழுக்கள், ஒரு முறையாவது பறம்புநாடு சென்று திரும்பினர். எல்லா மன்னர்களிடமும் பரிசல் பெற்ற பாணர்கள் பாரியிடம்தான் கருணையைப் பெற்றனர். கருணை வற்றப்போவதே இல்லை. அது அவர்களின் நினைவுகளில் சுரந்துகொண்டே இருந்தது.

பாணர்கள் தங்களின் நினைவில் இருந்து மட்டும் அல்ல, நினைவு மறந்தும் பாடும் பாடலாக பாரியின் பாடலே இருந்தது. புகார் நகரில் நாளங்காடியில் காவல் புரிந்த ஒரு வீரன், கடைவீதியில் அலைந்துகொண்டிருந்த பாணர் குழு ஒன்றைப் பார்த்துக் கேட்டான், ``பாரி பறம்பை ஆள்கிறானா... அல்லது பாணர்களை ஆள்கிறானா?''

நாளங்காடிக்கு மிக அருகில்தான் பட்டினப்பாக்கம் இருக்கிறது. அதுதான் சோழ நாட்டு வேந்தனும் உயர்குடிகளும் வாழும் பகுதி. காவல் வீரன் கேட்ட கேள்வி விரைவிலேயே பட்டினப் பாக்கத்துக்கு வந்து சேர்ந்தது. சிறிது காலத்திலேயே மூவேந்தர்களின் அரண்மனை களிலும் அந்தக் கேள்வி எதிரொலித்தது. இந்தக் கேள்வி தனக்குள் ஒரு பதிலையும் கொண்டிருந்தது. அந்தப் பதில் மூவேந்தர்களின் உறக்கத்தைக் குலைத்தது.

மூவேந்தர்கள் எனும் பேரரசர்களையும் மீறி நிலைபெற்றிருந்தது பாரியின் புகழ். அவர்களால் பாரியை ஒன்றும் செய்துவிட முடிய வில்லை. காரணம், பாரியின் மாவீரம், பறம்பு நாட்டின் நிலவியல் அமைப்பு, படை வலிமை இவை எல்லாம்தான். ஆனாலும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

இந்த நிலையில்தான் கபிலர், அறுக நாட்டை ஆளும் சிறுகுடி மன்னன் செம்பனின் மாளிகைக்கு தற்செயலாக வந்து சேர்ந்தார்.



அன்றைய தமிழ் நிலத்தின் பெரும் புலவராக விளங்கியவர் கபிலர். கபிலரைப் போன்ற புலவர்களே, மாற்றரசுக்குள் நுழையவும், அரசனுக்கு அறிவுரை சொல்லவும், போரைத் தடுக்கவும், அவசியம் எனக் கருதப்பட்ட தாக்குதலை நடத்தவும் காரணமாக இருந்தார்கள். அவர்கள் நிலம் எங்கும் சுற்றி அலைந்தபடி இருந்தனர். கடற்கரையில் காய்ந்த மீனும், ஆயர்குடியின் தயிர் மத்தும் இவர்களின் பாடலில் சுவையைக் கூட்டின. பாலை நிலத்தின் ஊன் சோறும், குறிஞ்சி நிலத்தின் புளித்த கள்ளும் தமிழ்க் கவிதைகளைச் செழிப்புறச்செய்தன.

கபிலர், பறம்பு நாட்டுக்கும் போனது இல்லை; வேள்பாரியைச் சந்தித்ததும் இல்லை. ஆனால், பாரியைப் பற்றி பாணர்கள் மீண்டும் மீண்டும் பாடியபோது அவருக்கு ஆச்சர்யத்தைவிட சந்தேகமே வலுப்பெற்றது. எல்லோராலும் அதிகம் புகழப்படும் ஓர் இடத்தில் பிழைகள் மலிந்திருக்கும். யாருடைய கவனத்தையும் சிதைக்கும் ஆற்றல் புகழுக்கு உண்டு. அதற்கு அடிமையாகாதவர்களை அது சந்தித்தது இல்லை என்ற அகம்பாவம்தான் புகழின் ஆணிவேர். எனவே, புகழால் நிலைபெற்றுள்ள ஒன்றின் மீது இயல்பான கசப்பு கபிலருக்கு உருவாகியிருந்தது.

நடுநாட்டு அரசன் வேண்மானைக் காணச் சென்றுகொண்டிருந்த கபிலர், பயணக் களைப்பு மிகுதியால், சற்று ஓய்வெடுத்துச் செல்லலாம் என்று முடிவெடுத்தார். வாலியாற்றங் கரையில் அமைந்த செம்பனின் அரண்மனையை நோக்கி தேரை ஓட்டச் சொன்னார். பாணர்களின் கூத்தை பகல் எல்லாம் பார்த்திருந்த செம்பனுக்கு, மாலையில் திடீரென கபிலர் வந்தது பெரும் மகிழ்வைத் தந்தது.

பச்சை நிறக் குப்பியில் நிறைந்து வழியும் கள்ளோடு தொடங்கியது அன்றைய இரவு. கள்ளைப் பருகத் தொடங்கியதும் அதன் புளிப்புச் சுவை சற்றே மாறுபட்டதாக இருக்கிறதே என்று உணர்ந்த கபிலர், “இது என்ன கள்?” என்று கேட்டார்.

“தேனில் இருந்து தயாரித்து, மூங்கில் குழாயில் இட்டு நன்கு புளிக்கவைத்த முற்றிய கள். நாங்கள் இதை `தேங்கள்' என்போம். உங்களைப் போல் புலவர்கள் `தேறல்' என்று சொல்வீர்கள்” என்றான் செம்பன். அப்போது வீரன் ஒருவன், உண்பதற்கான கறித்துண்டங்களை குழிசி பானை நிறையக் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போனான். அந்தப் பானையை கபிலர் எடுத்து உண்ண ஏதுவாக அவரை நோக்கித் தள்ளிவைக்க முயன்றான் செம்பன், பானையை ஒரு கையால் தள்ள முடியவில்லை. இன்னொரு கையில் இருந்த குப்பியைக் கீழே வைத்துவிட்டு இரு கைகளாலும் தள்ளினான். அதைக் கவனித்த கபிலர் கள்ளைப் பருகியபடியே கேட்டார், “பகல் எல்லாம் பாணர்களுக்கு அள்ளி வழங்கியதால், உனது கரம் சோர்ந்துபோய்விட்டதா?”

“இல்லை, பெரும் புலவரே... அவர்களுக்கு அள்ளி வழங்கும் நல்வாய்ப்பு எதுவும் இன்று எனக்குக் கிடைக்கவில்லை.”

“ஏன்?”

“அவர்கள் பறம்பு மலையில் பாரியைப் பார்த்துவிட்டு வருபவர்கள், எடுத்துச் செல்ல முடியாத அளவு பொருட்களோடுதான் இங்கு வந்தார்கள். என்னை நன்கு அறிந்த கீழ்க்குடி பாணர் கூட்டம் அது. எனவே என்னோடு விருந்துண்டு ஆடிக்களித்துவிட்டுப் போனார்கள்.”

நெய்யிலே வறுத்தெடுத்த மான் கறியின் கால்சப்பையைக் கடித்து இழுத்தபடி கபிலர் கேட்டார், “பறம்பு நாட்டுக்குப் போய்த் திரும்புபவர்கள், இந்தப் பக்கம் ஏன் வந்தார்கள்?”

``அறுக நாட்டின் தென் திசை எல்லை, பச்சை மலைத் தொடரில்தான் முடிகிறது. அந்தப் பக்கம் இருக்கும் வேட்டுவன் பாறையின் வழியாக பறம்பு மலைக்குப் போகும் பாதை ஒன்று உண்டு. ஆனால், அது முறையான பாதை அல்ல. அதில் எப்படி இவர்கள் இறங்கிவந்தார்கள் என்று தெரியவில்லை” என்று சொல்லியபடி தனக்கான கறித்துண்டை எடுத்துக் கடித்தான்.

“பாதையை முறையற்று வைத்திருப்பது அரச குற்றம்” என்றார் கபிலர்.

“மலைப்பாதையைப் பாதுகாப்பது கடினம் அல்லவா?” எனக் கேட்டான் செம்பன்.

“அவன் தேருக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தால், பாதையைப் பாதுகாத்திருப்பான். முல்லைக்குக் கனிவு காட்டியவன் பாதையைக் கைவிடத்தான் வேண்டும். கைவிடப்பட்ட பாதையால், வணிகம் வளராது. வணிகம் பெருகாத நாட்டில், வளம் கூடாது. வளமற்ற நாட்டில் நிறைந்திருப்பது மக்களின் கண்ணீர்த் துளிகளே.”

“பறம்பு நாடு வளமிக்கது. அது மட்டும் அல்ல, பாரியைப் பார்க்கப்போன யாருமே பாதை தவறியோ, வனமிருகங்களிடம் சிக்கிக்கொண்டோ, வழி தெரியாமல் இடர்பட்டதாகவோ நான் கேள்விப்பட்டது இல்லை” என்றான் செம்பன்.

“பாதை சரியில்லாத வழியில் பயணம் மட்டும் எப்படிச் சரியாக இருக்க முடியும்?” - கபிலரின் திடமான கேள்விக்கு செம்பனிடம் பதில் இல்லை. குப்பியில் இருந்த கள் தீர்ந்துகொண்டே இருந்தது.

“பாரி, விருந்தினரை நிர்வகிப்பதில் தேர்ந்தவன் என்று நினைக்கிறேன். ஆனால், வள்ளல்தன்மை என்பது நிர்வாகத்திறமை அல்ல. அது குழந்தையின் குரல் கேட்ட கணத்தில் பால் கசியும் தாயின் மார்பைப் போன்றது.”


“நீங்கள் பாரியை வள்ளல் இல்லை என்கிறீர்களா?”

“பாரியை வள்ளல் என்றோ, சிறந்த அரசன் என்றோ, என்னால் இப்போது சொல்லிவிட முடியாது” - தான் பேசும் வார்த்தைகளை உணர்ந்த வாறே கபிலர் சொன்னார், “நாளை காலை நான் வேட்டுவன் பாறை வழியாக பாரியின் பறம்பு நாட்டுக்குள் நுழைவேன்.”

செம்பன் அதிர்ந்து பார்த்தான்.

“நடுநாட்டுக்கு அல்லவா போவதாகச் சொன்னீர்கள்?”

“நாம் தீர்மானித்தபடி எல்லாம் நடந்துவிடுவது இல்லை. வார்த்தைதான் நம்மை வழிநடத்துகிறது. ஒரு குப்பி கள் பல நேரம் வரலாற்றையே மாற்றியிருக்கிறது. யார் அறிவார், ஒரு கையால் நீ பானையைத் தள்ளாமல் போனதால் இன்னும் என்னென்ன நடக்கப்போகிறதோ!” - கபிலரின் வார்த்தையைக் கேட்டு செம்பன் ரசித்துச் சிரித்தான்.



மறுநாள் காலை கபிலரை, பறம்பு நாட்டுக்குப் பாதுகாப் போடு அழைத்துச் செல்ல ஒரு படையோடு செம்பன் தயாராக இருந்தான். “நான் பரிசோதிக்க நினைப்பது பாரியை, உனது படைபலத்தை அல்ல” - கபிலரின் குரல், படையுடன் சேர்த்து செம்பனையும் சாய்த்தது. தனித்த தேரில் கபிலர் புறப்பட்டார்.

கபிலர் தனது துணிச்சல் கொண்டு பாரியை அளவிட முடிவுசெய்து, வேட்டுவன் பாறையின் வழியே மேலே ஏறினார். எங்கு இருந்தோ வந்த நீலன், அவருடன் இணைந்துகொண்டான். இப்போது வரை அவருக்குப் பிடிபடவில்லை, அவன் வந்து இணைந்தது தற்செயலா... அல்லது நிலைத்த ஏற்பாடா?

ஆனால், நீலனுக்குப் பிடிபட்டிருந்தது. கபிலர் காலில் ஏற்பட்டுள்ளது தசைப்பிடிப்பு. அது நேரம் ஆக ஆக வலியைக் கூட்டும். இந்த இடத்தில் ஆபத்து அதிகம். எனவே பேச்சுக் கொடுத்தபடி விரைவாக தனது குடிலுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என முடிவோடு வேகவேகமாக முன்நகர்த்திச் சென்றான்.

வானில் பறவைக் கூட்டங்கள் வலசை வலசையாக கூடு திரும்பிக்கொண்டிருந்தன. இரவின் வாசல் கதவு திறக்கப்போகிறது. பசுவின் மடுவில் இரவுப்பால் சுரக்கத் தொடங்கியிருக்கும். மண்ணைப் பார்க்க முடிகிற வெளிச்சம் இன்னும் எவ்வளவு பொழுது நீடிக்கும் என்று யோசித்தபடி நீலன் விரைவுகொண்டு நடந்தான். கபிலர் ஏதோ கூப்பிடுவதுபோல் இருந்தது, திரும்பிப் பார்த்தான். அவர் ஒன்றும் சொல்லவில்லை, ஆனால், அவரது முகக்குறியை அவனால் உணர முடிந்தது.

“மலை இறக்கம் இன்னும் சிறிது தொலைவுதான், அதன் பிறகு சமதரைதான்” என்று சொல்லி ஒரு கையைப் பிடித்து அவருக்கு உதவினான்.


“நான் சிறிது நேரம் உட்கார்ந்துகொள்ளவா?” -குரல் தளர்ந்து, ஒரு குழந்தையைப்போல கேட்டார் கபிலர்.

அவனோ ``கீழே இருக்கும் அந்தப் பனையடிவாரம் போய்விடலாம்” என்று சொல்லி உட்காரவிடாமல் கீழிறக்கிக் கொண்டிருந்தான். அவருக்கு வலி அதிகமாகிக்கொண்டே இருந்தது.

சமதரைக்கு வந்தவுடன், பனைமரத்தின் அடிவாரத்தில் அவரை அமரவைத்துவிட்டு, ``சிறிது நேரத்தில் வந்துவிடுகிறேன்" என்று சொல்லி. தெற்குப் பக்கமாக ஓடத் தொடங்கினான்.

கபிலருக்கு வலி அதிகமாகிக் கொண்டே இருந்தது. `இவ்வளவு வேகமாக எதற்கு ஓடுகிறான்?' என்று யோசனை தோன்றியது. ஆனால், `இப்போதாவது உட்காரவிட்டானே...' என்ற நிம்மதிப் பெருமூச்சு விட்டார். நேரமாகிக்கொண்டிருந்தது. பனைமட்டைகளும் பனந்தாழ்களும் எங்கும் கிடந்தன. அதைப் பார்த்துக்கொண்டிருந்தவருக்குத் திடீரென சந்தேகம் வந்தது. `ஒருவேளை அவளைப் பார்க்கப் போய்விட்டானோ? அடுத்த குன்றைத் தாண்ட வேண்டுமே. எப்படி இருட்டுவதற்குள் வந்து சேருவான்? பெண்ணின் இதழ் சுவை பற்றி நாம் கொஞ்சம் சொல்லியிருந்தால் போகாமல் இருந்திருப்பானோ? இல்லை... இல்லை... சொல்லியிருந்தால் அப்போதே புறப்பட்டுப் போயிருப்பான், எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்க, அதே வேகத்தோடு வந்து நின்றான். கைகளில் பச்சிலைகள் இருந்தன.

“இதை வாயில் போட்டு மெல்லுங்கள்” என்றான்.



“என்ன இலை இது?”

“முதலில் இலையை வாயில் போட்டு மெல்லுங்கள். கால் வலி நின்ற பிறகு கேளுங்கள்... சொல்கிறேன்” என்றான். கபிலர் பச்சிலையை மென்றார். சிறிது நேரம் கழித்து இருவரும் நடக்கத் தொடங்கினர்.

“பச்சிலை பறிக்கப்போவதாக இருந்தால் என்னை முதலிலேயே உட்காரவிட்டிருக்கலாமே, ஏன் வலுக்கட்டாயமாக பனைமரம் வரை கீழே இறக்கினாய்?”

“பனைமரம் எங்களின் குலச் சின்னம், மனிதனுக்கு மட்டும் அல்ல, பறம்பு மலையின் எல்லா உயிர்களுக்கும் அது தெரியும். அதனிடம் ஒப்படைத்துவிட்டுப் போனால், எந்த ஆபத்தும் வராது. அதனால்தான் பனை அடிவாரத்தில் உங்களை உட்காரவைத்தேன்.”

தனது எண்ணத்துக்கும் அவனது எண்ணத் துக்கும் இருக்கும் வேறுபாட்டை உணர்ந்தபோது கால் வலியைத் தாண்டிய ஒரு வலியை உணர்ந்தார் கபிலர்.

தென்னை எத்திசையும் வளைந்து வளரக்கூடிய தன்மையுடையது. பனையோ தன் இயல்பிலேயே செங்குத்தாக வளரக்கூடியது. இயல்புதான் ஒன்றின் குணத்தைத் தீர்மானிக்கிறது. வளைந்து கொடுக்காத பறம்பு நாட்டின் இயல்பு பனையிலும், பனைமரத்தின் இயல்பு பறம்பு நாட்டிலும் நிலைகொண்டுள்ளது. முள்ளம்பன்றியைப் போல அடி முதல் நுனி வரை உடல் சிலிர்த்தபடி வளரும் பனைமரம், பறம்பு நாட்டின் ஆவேச அடையாளம். அதன் நிழலிலேதான் பாதுகாக்கப்பட்டிருந்தோம் என்ற உண்மை கபிலருக்கு விளங்கியபோதுதான் இன்னொன்றும் விளங்கியது, நீண்ட பொழுதுக்கு முன்பே பாரியின் பாதுகாப்புக்குள் தான் வந்துவிட்டோம் என்பது.

**- பாரி வருவான்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-3

**வள்ளியைத் தேடி...**

**செ**ழித்து வளர்ந்திருந்த புற்கள், தோள் அளவுக்கு இருந்தன. அதற்கு நடுவில் மெல்லிய கோடுபோல இருக்கும் ஒற்றையடிப் பாதையை கவனமாகப் பார்த்து, நீலன் முன் நடந்தான். சிறிது நேரம் எந்தப் பேச்சும் எழாமல் இருந்தது. சூரியன், காரமலையின் பின்புறம் இடுப்பு அளவுக்கு இறங்கியிருந்தான். வலி சற்றுக் குறைந்ததுபோல் இருந்தது. கபிலர் பேச்சைத் தொடங்கினார்.




“இந்தக் காட்டில் எவ்வளவோ அழகான, வடிவுகொண்ட வாசனைப் பூக்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் விட்டுவிட்டு, பனம் பூவை ஏன் பறம்பு நாட்டின் குலச் சின்னமாக ஆக்கினார்கள்?”

“பனம் பூ வெறும் அழகு அல்ல; ஆயுதம். அது ஆயுதம் மட்டும் அல்ல; பேரழகு. இந்த மலைத்தொடர் எங்கும் அலைந்து திரியும் வேளீர் மக்கள், பனம் பூவின் குருத்து ஒன்றை எப்போதும் தங்களின் இடுப்பில் செருகிவைத்திருப்பார்கள். குட்டையில் தேங்கிக்கிடக்கும் நீரில் விஷம் ஏறியிருக்கும். அலைந்து திரிபவர்களுக்குத் தாகம் எடுத்தால், எந்தக் குட்டை நீரிலும் பனங்குருத்தைப் போட்டு, சிறிது நேரம் கழித்து அந்த நீரை அருந்துவார்கள். எவ்வித விஷமும் தாக்காது. அது ஒரு விஷமுறி. பனம் பூ அழகு, ஆயுதம், அருமருந்து... இன்னும் எவ்வளவோ இருக்கின்றன”- பேசிக்கொண்டே நடையின் வேகத்தைக் கூட்டினான் நீலன். கதை சொல்ல ஆரம்பித்தால், கபிலர் பசுவின் பின்னால் வரும் கன்றைப்போல வருவார் என்பதை அவன் கண்டறிந்து நீண்ட நேரமாகிவிட்டது.

“பறம்பு மலையின் பனைமரத்துக் கள்ளை அருந்தியிருக்கிறீர்களா?”

“இல்லை.”

“இன்னும் சற்று விரைவாக நடந்தால், இன்றே அருந்தலாம்.”

கபிலர், நீண்ட நேரம் கழித்து வலி மறந்து சிரித்தார். கள்ளைச் சொல்லி இழுக்கிறான் எனத் தெரிந்தது.

“ஏன்... நேரம் கழித்துப் போனால், கள் தீர்ந்துவிடுமா?”

“இறக்கப்பட்ட கள்ளுக்கு ஒரு நேரம் இருக்கிறது. கள் மதப்பேறித் திரண்டிருக்கும்போது அருந்த வேண்டும். அப்போதுதான் கீழ் நாக்கில் இருந்து உச்சந்தலைக்குப் பாய்ந்தோடி கிறங்கச்செய்யும். நேரம் தவறினால், அந்த ஆட்டம் தவறும்.”

“உன் பேச்சே கள்ளூறிக்கிடக்கிறதே?”

“நான் சிறுவன். நீங்கள் பாரியோடு அமர்ந்து கள் அருந்த வேண்டும். மஞ்சள் கொடியில் இருந்து இறங்கும் சாற்றைத் துளித்துளியாக இறக்கி, சுண்ணத்தின் அளவைக் கூட்டிக் குறைத்து, கள்ளுக்குள் இருக்கும் போதைக்கு வித்தைகாட்டுவான் பாரி. அவனோடு அமர்ந்து கள் அருந்தும் நாள்தான் வாழ்வின் திருநாள்.”

கபிலர், வாஞ்சையோடு அவனைப் பார்த்தார். `கள்ளையும் மிஞ்சிய இடத்தில் பாரியை வைத்திருக்கிறானே!’ என யோசிக்கையில், நீலன் தொடர்ந்தான்... “பெருங்குடி பாணன் ஒருவன், பாரியை `பனையன் மகனே..!’ என வர்ணித்துப் பாடியுள்ள பாடலைக் கேட்டிருக்கிறீர்களா?”

“இல்லை.”

“முழுநிலா நாளில் அந்த அரிய காட்சியைக் காணவேண்டுமே! ஆதிமலை அடிவாரம், ஊர் மன்றலில் எல்லோரும் திரண்டிருக்க, பேரியாழ் மீட்டி, பறை முழங்கி, `பனையன் மகனே...பனையன் மகனே!’ எனப் பாடலைப் பாடத் தொடங்கினால், பறம்பு நாடே எழுந்து ஆடும்” - சொல்லும்போதே துள்ளிக் குதித்தான் நீலன்.



`தனி ஒரு வீரன், நாட்டை ஆளும் தலைவனை இவ்வளவு நேசிப்பதா!' - பிற நாட்டில், அரசனுக்கும் அரசத் தொழில் செய்யும் வீரர்களுக்கும் குடிமக்களுக்கும் இடையே இல்லாமல்போன அன்புமயமான

ஓர் அடிச்சரடு பறம்பு நாட்டில் இருப்பதைப் பார்த்தார் கபிலர். `இதுதான் குலவழியில் நடக்கும் ஆட்சிக்கும், பிற அரசாட்சிகளுக்கும் உள்ள வேறுபாடு' என நினைத்தபடி கபிலர் கேட்டார்.

“உனக்குப் பாடத் தெரியுமா?”

“பறம்பைப் பற்றியும் பாரியைப் பற்றியும் இன்று முழுவதும் பாடிக்கொண்டே இருப்பேன். அது மட்டும் அல்ல... எங்கள் குலப்பாடலும் எனக்குத் தெரியும்.”

“உனது குலப்பாடல் இருக்கட்டும். பாரியின் குலப்பாடல் உனக்குத் தெரியுமா?”

“தெரியும். மாவீரன் `எவ்வி’யிடம் இருந்து அது ஆரம்பிக்கிறது.”

“அதைப் பாடுவாயா?”

“நான், பாணனும் அல்ல; பாரியின் குலத்தவனும் அல்ல. எனவே, நான் அதைப் பாடுவது முறையும் அல்ல.”

இவ்வளவு நேரம் பேசிவந்த நீலனிடம் இருந்து முதன்முறையாக ஒரு தகவல் கபிலருக்குக் கிடைத்தது. பறம்பு மலையில் பாரியின் குலமக்கள் மட்டும் அல்ல, வேறு குலத்தவரும் இருக்கிறார்கள் என்று. குலத் தலைவன் ஆளும் நாட்டில் வேறு குலத்தவர்கள் இருப்பது இல்லை. அப்படியே இருந்தாலும், மரத்துக்குள் நெருப்பு மறைந்து இருப்பதைப் போல, ஆள்வோருக்கான ஆபத்து அதற்குள் மறைந்திருக்கும். யோசித்தபடி வந்து கொண்டிருந்த கபிலரின் நடை, சற்றே பின்தங்கியது.

“விரைந்து வாருங்கள்” என்றான் நீலன்.

“இந்தத் தர்ப்பைப் புற்களின் சுனை மேலெல்லாம் அறுக்கிறது. அதுதான்...” என்று சமாளிக்க ஒரு காரணத்தைச் சொன்னார்.

“இந்தப் புற்களுக்கு என்ன பெயர் சொன்னீர்கள்?”

“தர்ப்பைப் புற்கள். சேரன் வேள்வி நடத்தியபோது, அந்தணர்கள் இதுபோன்ற தர்ப்பைப் புல்கொண்டுதான் சடங்குகளைச் செய்தார்கள்.”

“நாங்கள் இதை `நாக்கறுத் தான் புல்' எனச் சொல்வோம்.”

“அப்படியா? இது யாருடைய நாக்கை அறுத்தது... ஏன் இந்தப் பெயர்?”

“அது முருகன் காதலித்த போது நடந்த நிகழ்வு.”

“கள்ளின் சுவையைவிடக் களிப்பூட்டக்கூடியது அல்லவா காதலின் சுவை! அதுவும் முருகனின் காதல் கதையை காலம் முழுவதும் கேட்டுக் கொண்டே இருக்கலாமே... சொல்” என்றார் ஆர்வத்துடன்.

“எனது காதலியைப் பார்க்க, ஒரு குன்று தாண்டிப் போவதையே, `இவ்வளவு தொலைவா?’ எனக் கேட்டவர் ஆயிற்றே. முருகனின் கதையைக் கேட்டால், இங்கேயே மயக்கம் அடைந்துவிடுவீர்கள்.”

“ஏற்கெனவே எனக்கு சற்று மயக்கமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் காதலின் ஆற்றலே, மயக்கம் நீங்காமல் வைத்திருப்பதுதானே!”

“முருகனாவது பரவாயில்லை. ஆறு குன்றுகள் தாண்டிப் போனான். ஆனால் வள்ளியோ, அவனைப் பார்க்க பதினொரு குன்றுகள் தாண்டி வந்தாள். என்ன இருந்தாலும் வள்ளி நிலமகள் அல்லவா? அவளின் ஆற்றல் சற்றே அதிகம்.”

`குறிஞ்சி நிலத் தலைவன் முருகனைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இவன்

முற்றிலும் புதியதோர் இடத்தில் இருந்து கதையைத் தொடங்குகிறானே!' என்று கபிலர் ஆச்சர்யப்பட்ட கணத்தில் இருந்து அவன் கதையைத் தொடங்கினான்.

“இந்தக் காரமலையின் அடிவாரத்தில் குடில் அமைத்து, குலம் தொடங்கியதொரு காலம். இந்தக் காலத்தில் பயிர்கள் விளையவைத்து தினையை அறுத்தும், கிழங்குகளைப் பிடுங்கியும், கொண்டுவந்து சேர்ப்பதும் இவ்வளவு கடினமாக இருக்கின்றன. அப்போது எப்படி இருந்திருக்கும்? காவலுக்குப் போய் பறவைகளிடம் இருந்தும், விலங்குகளிடம் இருந்தும் காப்பாற்றிக் கொண்டுவருவது பெரும்பாடு.

விளைச்சல் காலம் தொடங்கி விட்டால், முருகனும் எவ்வியும் தினைப்புலம் காக்கப் போவார்கள். வயதிலே இளையவனான `எவ்வி'தான், முருகனுடன் எந்நேரமும் இருக்கும் தோழன். கீழ்மலையின் விளைச்சலைப் பாதுகாத்துக் கொண்டுவந்து சேர்ப்பது அவர்களின் வேலை. அந்த ஆண்டு பயிர்கள் மிகவும் செழித்து வளர்ந்திருக்கின்றன. பயிர்கள் முற்றத் தொடங்கும் போதுதான் வேலையின் கடினம் தெரிய ஆரம்பிக்கும். மானும் மிளாவும் கிளியும் குருவிகளும் இன்னும் பிற உயிரினங்கள் எல்லாம் பயிர்களை மேய, பகலிலே வரும்; யானைகளும் பன்றிகளும் இரவு வரும். இவற்றிடம் இருந்து விளைச்சலைக் காக்க வேண்டும். வயலுக்கு நடுவே புன்னைமரத்தில் பரண் அமைத்து தட்டை, தழல், கவண் எனப் பல கருவிகளை வைத்து விதவிதமாக ஓசை எழுப்பி, விளைச்சலைப் பாதுகாத்தனர். இரவு-பகலாகக் கண்விழிப்போடு இருக்க வேண்டும். காட்டிலே கிடைக்கும் தேனையும் கிழங்கையும் தின்றுகொண்டு, பல நாட்கள் இருவரும் பரணிலே தங்கியிருந்தனர்.

ஒருநாள் காலை, காட்டுப்பன்றிக் கூட்டம் ஒன்று உள்நுழைந்துவிட்டது. காட்டுப்பன்றி, பயிர்களை அழிப்பதில் மிக வேகமாகச் செயல்படக்கூடியது. மிக வலுவான பற்களை உடைய அது, புலியுடனும் போர் புரியும் வல்லமை உடையது. பரணில் இருந்து இறங்கி வந்து இருவரும் விரட்டியிருக்கின்றனர். அது ஓடுவதுபோல் சிறிது தூரம் ஓடி புதரில் மறைந்துகொண்டு, இவர்கள் மீண்டும் பரண் ஏறியதும் விளைச்சலைத் தின்ன உள்ளே நுழைந்துவிடும். மறுபடியும் விரட்டி இருக்கின்றனர். இப்படியே பலமுறை நடந்திருக்கிறது. அந்தப் பன்றிக்கூட்டம் போவதாக இல்லை.

``எவ்வி... நீ பரணிலேயே காவலுக்கு நின்றுகொள். நான் இந்தப் பன்றிக் கூட்டத்தை காரமலைக்கு அப்பால் விரட்டிவிட்டு வருகிறேன்” என, வில்லோடு புறப்பட்டுப் போனான் முருகன்.



யானைக் கூட்டத்தைக்கூட எளிதில் விரட்டிவிடலாம். ஆனால், பன்றிக்கூட்டத்தை விரட்டிச் செல்வது எளிது அல்ல. புதருக்குள் ஒளிந்துகொள்ளும்; திசை மாற்றி நம்மை ஏமாற்றும்; எளிதில் ஓடாது. தனது உயிருக்கு ஆபத்து என அது உணர்ந்தால் மட்டுமே தப்பி ஓட ஆரம்பிக்கும். இல்லை என்றால், அதை நகர்த்த முடியாது. முருகன் அதை நகர்த்தப் பெரும்பாடுபட்டான். அவனுடைய தோல் உறையில் இருந்த அம்புகள் ஒவ்வொன்றாகத் தீர்ந்தன. முருகன், வேட்டையாடுவதில் மிக வல்லவன். அவன் அம்பு எறியும் எந்த இலக்கும் தப்பாது. ஆனால், அன்று அவனுடைய எந்த வித்தையும் பலன் அளிக்கவில்லை. பன்றிக் கூட்டத்தைக் கண்டால், புலியே பின்வாங்கும். ஒற்றை வீரனால் என்ன செய்ய முடியும்? எல்லா அம்புகளும் தீர, கடைசியில் ஓர் அம்பு மட்டுமே மிஞ்சியது. அதைக் குறிபார்த்து எறிய நீண்ட நேரம் எடுத்தான். அந்தப் பன்றிக்கூட்டத்தின் தலைவன் யார் என்பதை அவன் கண்டறிந்து, அதற்குக் குறிவைத்து அடித்தான். அவை புதருக்குள் ஓடிய வேகத்தில் அம்பு தைத்ததா... இல்லையா எனத் தெரியாத நிலையில், உள்ளே இருந்து காதைக் கிழிப்பதுபோல ஒரு சத்தம் வந்தது. பன்றிகளின்

ஓட்டம் என்ன என்பது அதன் பிறகுதான் தெரிந்தது. மலையைக் கடக்கும் வரை அவை நிற்கவில்லை.

அவற்றை விரட்டிவிட்டு தனது பரண் நோக்கி நடக்கத் தொடங்கினான் முருகன். கை, கால்கள் எல்லாம் குச்சிகளால் கீறி, ரத்தம் வழிந்தது. உச்சிப்பொழுது ஆகிவிட்டது. முருகனுக்கு நா வறண்டு உள்ளிழுத்தது. அந்தத் திசையில் வேங்கை முடுக்குக்கு அருகில் ஓர் அருவி இருப்பது தெரியும். நீர் அருந்த அந்த இடத்துக்குப் போனான். பெரும் ஓசையுடன் அருவி கொட்டிக்கொண்டிருந்தது. கையில் இருந்த வில்லையும் தோல் பையையும் சிறு பாறையில் வைத்துவிட்டு, நீரை நோக்கி நடந்தான். நீர்த்துளிகள் காற்றில் மிதந்துவந்து அவன் மீது படிந்தன. குளிர்ச்சியை உணர்ந்தபடி நீர் பருகக் குனிந்தான். பாறையின் பின்புறம் இருந்து சிரிப்பொலி கேட்டது. அருவியில் யாரோ குளித்துக்கொண்டிருப்பதுபோல் இருந்தது. யார் என உற்றுப்பார்த்தான் தெரியவில்லை. `சற்று அருகில் போய்ப் பார்ப்போம்' என நகர்ந்து முன்னே சென்றான். அவனது கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. கொட்டும் அருவிக்குள் இருந்து சற்றே விலகி அவள் வெளியே வந்தாள். தான் வாழ்வில் இதுவரை பார்த்திராத பேரழகு. முருகன் இமை மூடாமல் பார்த்தான். நீர் வடியும் கூந்தலைச் சிலுப்பியபடி இந்தப் பக்கம் திரும்பினாள். இவ்வளவு நேரம் அவன் எறிந்த மொத்த அம்புகளும் கூந்தலுக்குள் இருந்து பாய்ந்து வந்து அவன் மீது எகிறின.



எவ்வி, எத்தனையோ முறை சொல்லிப் பார்த்தான், ``தினைக்கதிர் பரிந்து நிற்கிறது. அறுப்பு முடிந்ததும் அவளைத் தேடிப் போவோம்'' என்று. ஆனால் முருகனோ, ஒருநாள்கூடத் தாமதிக்கத் தயாராக இல்லை. அப்புறம் கதிரை எங்கே காப்பாற்றுவது? எல்லா பறவைகளும் விலங்குகளும் அவர்கள் காவல்காத்த நிலத்துக்கு வந்து சேர்ந்தன. பறவைகள் எல்லாம் தினைக்கதிரைத் தின்றுவிட்டு பரண் மேல் உட்கார்ந்து ஓய்வெடுத்தன. விலங்குகள் பரணின் அடிவார நிழலில் இளைப்பாறின.

பல நாட்கள் அலைந்து, பச்சைமலைத்தொடரின் இரண்டாவது அடுக்கில் இருக்கும் வள்ளியின் இருப்பிடத்தைக் கண்டறிந்தனர். அந்த இடத்தைப் பார்த்ததும் எவ்வி சொன்னான், “இவர்கள் நம்மை ஏற்க மாட்டார்கள்.”

“ஏன்?”

“இவர்கள் கொடிக் குலம். நாமோ வேடர் குலம். எப்படி ஏற்றுக்கொள்வார்கள்?”

“ஏற்றுக்கொள்ளவேண்டியது வள்ளி மட்டும்தான். மற்றவர்களைப் பற்றி ஏன் யோசிக்கிறாய்? அவளது சம்மதம் பெற வழி சொல்.”

பேசிக்கொண்டிருந்தபோது, வள்ளி தன் தோழிகளோடு போவதைப் பார்த்ததும் எவ்வி சொன்னான், “இந்த மலைத் தொடரிலேயே அழகான மனிதன் நீதான் என்று நினைத்திருந்தேன். ஆனால் இப்போதுதான் தெரிந்தது.”

“என்ன?”

“அழகு என்றால் என்னவென்று?”

எவ்வி சொன்னபோது முருகன் மகிழ்ந்து சிரித்தான். இதுவரை இல்லாத ஒரு பேரழகாக அந்தச் சிரிப்பு இருந்தது. அதன் பிறகு அவளைச் சந்தித்துப் பேசி, அவளின் சம்மதம் பெற நடந்த முயற்சிகள் எத்தனையோ. ஆனால், ஒன்றும் கைகூடவில்லை. இந்தக் காட்டில் அவள் அறியாதது எதுவும் இல்லை. எனவே, எதைக்கொண்டும் அவளின் மனதில் தனித்த இடத்தைப் பெற முடியவில்லை. முருகன் என்ன முயற்சி செய்தாலும், வள்ளி ஏறெடுத்துக்கூடப் பார்ப்பதாக இல்லை. தினைப்புலம் காப்பதும் பறவைகளைக் கவன்கல் கொண்டு விரட்டுவதும், மான்கள் வந்தால் தப்பையால் ஒலி எழுப்பித் துரத்துவதுமாக வள்ளி வழக்கம்போல தனது வேலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.


முருகனுக்குத்தான் வழியே பிறக்கவில்லை. ஒருநாள் எவ்வி ஓர் ஆலோசனை சொன்னான். “அவள் தினைப்புலம் காத்து வீடு திரும்பும் வழியில், அருவி கடந்து சிறிது தூரத்தில் சரக்கொன்றை மரம் ஒன்று இருக்கிறது. அந்த இடம் அவள் போகும்போது, நீ அவளின் எதிர்ப்பட்டு நின்று பேசு. உன் காதலைச் சொல்.அவள் ஏற்றுக்கொள்வாள்.”

“அந்த இடத்தில் அப்படி என்ன இருக்கிறது?” என்று முருகன் கேட்டான்.

“அந்த இடம் முழுக்க முல்லைக்கொடி படர்ந்துகிடக்கிறது. அவள் மாலை நேரம்தான் வருவாள். அப்போதுதான் முல்லை மலரத் தொடங்கும். அந்த மனம் யாவரையும் மயக்கும். காற்று எங்கும் சுகந்தம் வீசும். உன் காதல் அங்கே கைகூடும்” என்று சொல்லி அனுப்பினான்.

முருகனும் அவன் சொன்ன இடத்தில் அவளை எதிர்கொண்டு பேசினான். முதல் முறையாக அவள் அவனிடம் பேசத் தொடங்கினாள். ஆனால், அந்தப் பேச்சில் காதல் இருப்பதுபோல தெரியவில்லை. காட்டுக்குள் தப்பிப்போன ஆட்டுக்குட்டியை விசாரிப்பதைப் போலத்தான் அந்த விசாரிப்பு இருந்தது.

எவ்வி, இன்னொரு யோசனை சொல்ல முன்வந்தபோது, முருகன் தடுத்துவிட்டான். “காதல், சம்பந்தப்பட்டவர்களின் சாமர்த்தியத்தால்தான் கைகூடும்” என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். வழக்கம்போல வள்ளி செல்லும் வழியில் எதிர்ப்பட்டான்.



“உன்னை ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன். நீ என்னோடு வா” என்று அழைத்தான்.

அவளோ, ``தினைப்புலத்துக்குப் போக வேண்டும். தோழிகள் காத்திருப்பார்கள்'' என்று காரணம் சொல்லி மறுத்தாள்.

“அதிக நேரம் இல்லை. சிறிது நாழிகை வந்தால் போதும்” என வலியுறுத்தினான்.

வள்ளியும் வேறு வழியின்றி, “சரி” எனத் தலையாட்டினாள்.

முருகன், அவளை அழைத்துக்கொண்டு சென்றான். இருவரும் எதையும் பேசிக் கொள்ளவில்லை. கூச்சம் தவிர்த்து முருகன் பேச்சைத் தொடங்கினான்...

“உன் தாய் வள்ளிக்கிழங்கு எடுக்கப் போன இடத்தில் இடுப்பு வலி கண்டு உன்னை ஈன்றெடுத்ததால், `வள்ளி' எனப் பெயர் வைத்தார்களாமே?”


“அது ஊரார் சொல்லும் காரணம். உண்மைக் காரணம் வேறு” என்று மட்டும் சொல்லி நிறுத்திக் கொண்டாள், என்னவென்று சொல்லவில்லை.

சிற்றோடையில் நீர் ஓடிக்கொண்டிருந்தது. கல் மேல் கால் பதித்து அதைத் தாவிக் கடந்தனர். அந்த இடத்தில் தனியாக ஒற்றை மரம் இருந்தது. முருகன், வள்ளியை அந்த மர அடிவாரத்தில் போய் சிறிது நேரம் நிற்கச் சொன்னான். அவளும் மரத்தின் அருகே போனாள். முருகனோ, நீரோடையின் அருகில் இருக்கும் சிறு பாறையில் அமர்ந்துகொண்டு அவளைப் பார்த்தபடி இருந்தான்.

`எதற்கு இங்கே நிற்கச் சொல்கிறான்?' என்ற யோசனையிலேயே அவள் நின்றுகொண்டிருந்தாள். மேலே பார்த்தாள். மரம் முழுக்கக் காயும் மொட்டுமாக இருந்தன. ஒரு பூகூட இல்லை. `இது என்ன மரம்? இதுவரை பார்த்ததில்லையே...’ என யோசித்தாள். மரத்தின் மீது கை வைத்து, பட்டையைச் சிறிது உரித்து நுகர்ந்துபார்த்தாள். என்ன மணம் என்பதை அவளால் அனுமானிக்க முடியவில்லை.

“நின்றது போதுமா?” என்று கேட்டாள்.

முருகனோ, “இன்னும் சிறிது நேரம்” என்றான்.





மரப்பட்டைகளுனூடே எறும்பின் வரிசை ஒன்று போய்க்கொண்டிருந்தது. அதை உற்றுப்பார்த்தபடி விரல்களால் பட்டைகளை மெள்ள வருடினாள். அவளுக்கு, ஏதோ ஓர் உள்ளுணர்வு தோன்றியது. என்னவென்று தெரியவில்லை.

“புறப்படலாம்” என்றான் முருகன்.

அவளும் புறப்பட்டாள். நடந்துவரும்போது அந்த மரத்தை மீண்டும் மீண்டும் திரும்பிப் பார்த்தாள். ஆனால், முருகனிடம் எதுவும் கேட்கவில்லை. இவளை எதிர்பார்த்து தோழிகள் காத்திருந்தனர். வந்ததும், சற்றே கோபித்துக்கொண்டனர்.

மறுநாள் பொழுது விடியவும் முருகன் புறப்பட்டான். “எங்கே?” என்று எவ்வி கேட்டான்.

“நேற்று வள்ளியை அழைத்துச் சென்ற இடத்துக்கு” என்றான்.

“மீண்டும் அதே இடத்துக்கா?”




“ஆம்... காரணத்தை வந்து சொல்கிறேன்” என்று சொல்லிவிட்டு புறப்பட்டவன், “புதிய பரண் ஒன்று அமைத்துவை. நான் திரும்பி வரும்போது வள்ளியும் உடன் வருவாள்” என்று சொல்லிச் சென்றான்.

எவ்வி ஆச்சர்யத்தோடு பார்த்தான். முருகன் வழக்கத்தைவிட உற்சாகத்தோடு சென்றான்.

நேற்று சந்தித்த இடத்திலேயே வள்ளியைச் சந்தித்தான். ``சிறிது நேரம் என்னுடன் வா'' என்று அழைத்தான். அவள் தனக்கு வேலை இருப்பதாகச் சொல்லி மறுத்தாள். முருகன் மீண்டும் அழைத்தான். வள்ளியோ, “மரங்களில் எறும்பூறுவது ஒன்றும் அதிசயம் அல்ல” என்று சொல்லிவிட்டு நடக்கத் தொடங்கினாள்.

“இந்த ஒருமுறை மட்டும் வா. இனி நான் உன்னை அழைக்க மாட்டேன்” என்றான் முருகன்.

அந்தக் குரலை மறுக்க முடியவில்லை.

“சரி... இந்த முறை மட்டும் வருகிறேன்” என்று சொல்லிப் புறப்பட்டாள். இருவரும் நேற்று சென்ற வழியில் நடந்தனர்.

வள்ளி கேட்டாள்... “முருகு என்று ஏன் உனக்குப் பெயர் வைத்தார்கள்?”

“நான் மிக அழகாக இருந்ததால், இந்தப் பெயர் வைத்ததாக எனது தாய் சொன்னாள்” - பதிலைச் சொல்கையில் முருகனின் முகம் எல்லாம் வெட்கம் பூரித்தது.

“எங்கள் ஊரில் எட்டு வகை கள் உண்டு. அதில் ஒரு வகை கள்ளுக்கு `முருகு' எனப் பெயர்” என்றாள் வள்ளி.

“கள்ளுக்கு எதற்கு இந்தப் பெயர் வைத்தார்கள்?” என்று கேட்டான் முருகன்.

“தெரியவில்லை. மயக்கும் தன்மை இருப்பதால் இந்தப் பெயர் வைத்திருப்பார்கள் என நினைக்கிறேன்” என்றாள் வள்ளி.

முருகன் திரும்பி அவளைப் பார்த்தான். அவள் தலை குனிந்திருந்தாள். ஆனாலும் அவளது முகத்தில் படர்ந்த வெட்கத்தை மறைக்க முடியவில்லை.

பேசியபடியே அந்த நீரோடை அருகில் வந்தார்கள். முருகன் வழக்கம்போல் அந்த இடத்தில் இருந்த சிறு பாறையின் மீது ஏறி அமர்ந்தான். வள்ளி, மரத்துக்கு அருகே போக ஓடையைத் தாண்டிக் குதித்து, தலைதூக்கிப் பார்த்ததும் அப்படியே அதிர்ந்து நின்றாள். அவள் கண்களையே அவளால் நம்ப முடியவில்லை. உறைந்துபோனவளாக, கண்ணிமை கொட்டாமல் பார்த்தாள். எதிரில் இருந்த அந்த மரம் முழுவதும் பூக்கள் பூத்துக் குலுங்கின. மஞ்சளும் நீலமும் ஒன்றுகலந்த வண்ணத்தில் முயல் காதைப்போல நீண்டு விரிந்த மலர்கள். மரமே நிரம்பி வழியும் பூக்கூடையாக நின்று ஆடியது. ஒரு சிற்றிலைகூட தெரியவில்லை. மலரின் மனம் காற்று எங்கும் பரவ, அந்த வெளியே மணத்துக்கிடந்தது. நம்பவே முடியாத அதிசயத்தைப் பார்த்தபடி இருந்த வள்ளி, திரும்பி முருகனைப் பார்த்தாள்.

“நேற்று ஒரு பூ கூட இல்லாத மரத்தில், இன்று மரம் எங்கும் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றனவே

எப்படி?”

முருகன் சொன்னான், “பெண்ணுடைய அணுக்கத்தால் மலரும் மரம் இது. நேற்று நீ இதைத் தொட்டுத் தழுவினாய். உன் மூச்சுக்காற்றை அதன் பட்டைகளும் கணுக்களும் நுகர்ந்தன. இதன் அத்தனை மொட்டுக்களுக்குள்ளும் உன் பெண்மை பாய்ந்தோடியது. பல ஆண்டுக் காத்திருப்புக்குப் பிறகு அது பூப்பெய்தியுள்ளது. இதன் பெயர் ஏழிலைப் பாலை. இந்த வனத்தில் இருக்கும் பத்து பேரதிசயங்களில் இதுவும் ஒன்று.”

அந்த மொத்தப் பூக்களும் தனக்குள் இருந்து மலர்ந்தனவா? வள்ளிக்கு உடல் சிலிர்த்தது. ஓடிச்சென்று அந்த மரத்தைக் கட்டித் தழுவினாள். பட்டைகளின் மீது இதழ் குவித்து முத்தமிட்டு, இறுகத் தழுவினாள். கண்களில் நீர் வழிந்தது. அவளது மார்பகங்களை கணுக்கள் குத்தி அழுத்தின. மெய்மறந்து கண்கள் செருகினாள். மரம் குலுங்கி பூக்களை உதிர்த்தது.

அவளது அணைப்புக்குள் இப்போது முருகன் இருந்தான். அவளது கரங்கள் இணைந்து முருகன் கழுத்தை இறுக்கின. அவளது கீழ் உதடு நடுங்கியது. அதன் விளிம்பில் இருந்த சிறு மச்சத்தில் இருந்து முருகனின் பார்வை நகரவே இல்லை. இருவரது மூச்சுக்காற்றும் மோதித் திரும்பின. காதல் அனல் அடிக்க, ஏழிலைப் பாலையும் சூடேறியது. பூக்கள் சொரிந்து அவர்களது உடல்களை மூடின. ஆனாலும் உள்ளுக்குள் மலர்ந்துகொண்டே இருந்தன.

**- பாரி வருவான்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-4




பரண் அமைக்க, காலையில் இருந்தே இடம் தேடிக் கொண்டிருந்தான் எவ்வி. அவனுக்கு முருகன், வள்ளியோடு வருவான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. `நேற்றே முருகன் அழைத்த இடத்துக்கு, வள்ளி தன் தோழிகளுக்குத் தெரிவிக்காமல் சென்றிருக்கிறாள். ஒருமுறை முருகனின் பின்னால் சென்றால், பிறகு காலம் முழுவதும் சென்றுகொண்டே இருக்க வேண்டியதுதான். அதற்குச் சிறந்த உதாரணமே நான்தான்' என்று நினைத்துக் கொள்வான். `இன்று வள்ளியுடன்தான் முருகன் வருவான். ஆனால், மீண்டும் அதே மரத்தைப் பார்க்க ஏன் அழைத்துப்போனான் என்பதுதான் விளங்கவில்லை' என யோசித்தபடியே பரண் அமைக்க ஏதுவான இடம் தேடிக்கொண்டே இருந்தான்.


பச்சைமலையில் யானைப்பள்ளத்தின் தென்திசையில் இருந்த முகட்டில், ஒரு வேங்கைமரம் தனித்து நின்றிருந்தது. இப்படி ஓர் இடத்தில், தனித்த வேங்கை மரத்தை யாரும் பார்த்திருக்க மாட்டார்கள்.




எவ்வி, அதன் மீது ஏறி அதன் உச்சியை அடைந்தான். மேற்கொப்பில் நின்று நான்கு புறமும் பார்த்தான். மொத்த மலையும் அந்த வேங்கைமரத்துக்குக் கீழ்ப்பணிந்து இருந்தது. காற்று, எல்லா திசைகளில் இருந்தும் சுழன்று வந்தது. தனது வேகத்துக்கு ஏற்ப வேங்கை மரத்தை விரல்களால் கோதி இசை கூட்டிச் சென்றது காற்று.

இன்று முருகனுக்கும் வள்ளிக்கும் தலைநாள் இரவு. குறிஞ்சி நிலத்தின் பேரழகே இந்த நாளுக்காக

வடிவமைக்கப்பட்டதுதான். கைக்கு எட்டும் தூரத்தில் வெள்ளிகள் பூத்துக்கிடக்க, கால்களுக்கு அடியில் காடு மிதக்க, காமம் பெருத்து, காதல் தழைக்க இதுவே ஏற்ற இடம் என எண்ணியபடி கீழ் இறங்கினான்.



அன்று பகல் முழுவதும் காட்டின் ஒவ்வொரு திசைக்கும் ஓடினான். செவ்வருவிக்குப் பக்கத்தில் விளைந்த சந்தனமரம் ஒன்று இருப்பது அவனுக்கு தெரியும். நண்பகல் கடந்தபோது சந்தனமரக் கிளைகளோடு வேங்கைமர அடிவாரம் வந்தடைந்தான். வரும்போதே சிலாக்கொடியை அறுத்து வந்திருந்தான்.

வேங்கைமரத்தின் உச்சியில், நாற்கிளைகளுக்கு நடுவில் சந்தனமரக் கட்டைகளைக் குறுக்கிட்டு அடுக்கி, சிலாக்கொடியால் இறுகக் கட்டினான். கொடிகளிலே மிக உறுதியானது சிலாக்கொடி. இவ்வளவு உயரத்தில், பரணை உலையவிடாமல் இறுகப்பிடித்திருக்கும் ஆற்றல் அதற்குத்தான் உண்டு. அதன் இன்னொரு சிறந்த குணம், கொடியை அறுத்த மூன்று நாட்கள் வரை அதன் சாறு கசிந்து வெளிவந்தபடியே இருக்கும். அதில் இருந்து வரும் நறுமணத்துக்கு ஈடே கிடையாது. சந்தனமர வாசத்தில், சிலாக்கொடியின் நறுமணத்தோடு வேங்கைமர உச்சியில் திரும்பும் திசை எல்லாம் பச்சைமலைக் காற்றை அள்ளி அணைத்து எம் குறிஞ்சித் தலைவனும் தலைவியும் நடத்தும் ஆதிக்கூத்து, எம் குலத்தைப் பெருக்கி, காதலைத் தழைக்கச்செய்யும்.

பெருமிதத்தோடு வேலையை முடித்த எவ்வி, தினைப்புனம் காக்கும் இடத்துக்கு வந்தபோது மாலை மயங்கி, கருக்கத் தொடங்கியது. அவன் எதிர்பார்த்ததுபோலவே வள்ளியோடு முருகன் வந்தான். காதலிக்கத் தொடங்கியதும் கைகூடும் ஓர் அழகு இருக்கிறதே, மனிதர்களைக் கண்டு மலர்களும் மயங்கும் காலம் அதுதான்.

முருகன் கேட்கும் முன்னரே மேல் திசை நோக்கி கையைக் காட்டினான் எவ்வி. தலையை உயர்த்தி மேலே பார்த்தான் முருகன். ‘நிலவிலே பரண் அமைத்துவிட்டானா?’ என்பதுபோல இருந்தது அவன் பார்வை. ‘நான் அதை நோக்கி படி அமைத்திருக்கிறேன். அங்கு போவது உன் வேலை' எனப் பதிலளிப்பது போன்று இருந்தது எவ்வியின் பார்வை.

முருகனும் வள்ளியும் பின்தொடர, தீப்பந்தம் ஏந்தியபடி முன் நடந்தான் எவ்வி. தனக்குப் பின்னால் இருளுக்குள்தான் எவ்வளவு விளையாட்டு? `சின்னச்சின்னச் சிரிப்புகளுக்கு என்ன அர்த்தம்?, இது பதிலா... கேள்வியா?, இவ்வளவு மெதுவாகப் பேச முடியுமா? பின்தொடரும் ஓசையே கேட்காமல்

இருக்கிறதே! அவன் வள்ளியை அழைத்து வருகிறானா... அல்லது சுமந்து வருகிறானா? திரும்பிப் பார்த்தால் அவர்களின் நெருக்கம் குலைந்துவிடும். வேண்டாம்' என யோசித்தபடியே, வேங்கைமர அடிவாரம் வந்தான் எவ்வி. பந்தம் ஒளி அந்த இடம் படரும்போதுதான் தெரிந்தது, முருகனும் வள்ளியும் ஏற்கெனவே அங்கு வந்து அமர்ந்து இருந்தது. எவ்வி அதிர்ந்துபோனான்.

“என்னைப் பின்தொடர்ந்து வருகிறீர்கள் என்றல்லவா நினைத்தேன்!”

“மனிதனால் காதலை அழைத்துவர முடியாது; காதல்தான் மனிதரை அழைத்துவரும்.”

எவ்வியிடம், பேச வார்த்தைகள் இல்லை. வணங்கி விடைபெற்றான். அப்போது எவ்வியின் கையில் ஒரு பொருளைக் கொடுத்தான் முருகன்.

“எம் காதலின் பரிசு” என்றாள் வள்ளி.

அவர்கள் மர ஏணியில் ஏறிச்சென்று பரணில் அமர்ந்தனர். எங்கும் சூழ்ந்திருந்த இருளுக்குள் இருந்து, காற்று இசையைச் சுரந்தது. அசையும் இலைகளுக்கு இடையில் விண்மீன்கள் கண்சிமிட்டின. “இத்தனை கண்களுக்கு இடையில் நாம் வெட்கம் களைவது எப்படி?” என்று கேட்டபடி வள்ளி நாணினாள்.



முருகன் சொன்னான், “வெட்கம் களைகையில் இவற்றைப் பார்க்க கண்கள் ஏது நமக்கு?”

சுடர் அணைவதுபோல பேச்சுக்குரல் மெள்ள அணைந்தது. வேங்கைமரம் தனது கிளைகளை அசைக்கத் தொடங்கியது. சந்தன வாசத்துக்குள் சிலாக்கொடியின் நறுமணம் இறங்கியபோது, காற்று எங்கும் சுகந்தம் பரவி மேலெழுந்தது. மரத்தின் கொப்பொன்றில் இருந்த ஆண் பல்லி குரலெழுப்பி, தனது துணையை அழைத்தது. ஓசை கேட்ட திசை நோக்கி முருகன் திரும்பியபோது, அவன் கன்னம் தடுத்து வள்ளி சொன்னாள், “அடுத்தவர் காதல் காண்பது பிழை.”

“முதலில் அதனிடம் சொல்” என்றான் முருகன். சிதறித் தெறித்த வள்ளியின் சிரிப்பொலியை, காடு எங்கும் அள்ளிக்கொண்டு போனது காற்று.


எவ்வி, காரமலையின் அடிவாரத்தில் இருக்கும் தனது ஊருக்கு வந்துசேர்ந்தான்.

“முருகன் எங்கே?” என்று கேட்ட ஒவ்வொருவருக்கும் ஒரு பதிலைச் சொன்னான். இதுவரை அடையாத ஒரு மகிழ்வை இப்போது அடைந்திருப்பதாக அவனது மனம் துள்ளிக்குதித்தது. முருகன் தந்த காதல் பரிசைப் பார்த்தான். அது ஒரு பூண்டுபோல் இருந்தது. `இதை என்ன செய்வது?' என யோசித்தபடி பூண்டைத் தட்டி, பக்கத்தில் நீர் நிறைந்திருந்த பைங்குடத்தில் போட்டான். நீருக்குள் இருந்து குமிழ்கள் இடைவிடாது வந்தன. அந்த நீர், பழச்சாறுபோல மாறிக்கொண்டிருந்தது.

அதை மூங்கில் குடுவையில் ஊற்றி ஒரு மிடறு குடித்தான். அதன் சுவைக்கு ஈடு சொல்ல வார்த்தைகளே இல்லை. மனிதர்கள் யாரும் இதுவரை இப்படி ஒரு சுவையை அனுபவித்திருக்க மாட்டார்கள். குடத்தில் இருந்த மொத்தத்தையும் குடித்து முடித்தான். குடத்தின் கீழ் பூண்டு அப்படியே இருந்தது. மீண்டும் குடம் நிறையத் தண்ணீரை ஊற்றினான். நீர், பழச்சாறாக உருமாறியது. மீண்டும் அதைக் குடிக்கத் துணிந்தபோது, காட்டின் கீழ்ப்புறம் இருந்து பெரும் ஓசை கேட்டது. குடத்தை அப்படியே வைத்துவிட்டு வெளியே ஓடிவந்து பார்த்தான்.

கையில் தீப்பந்தங்களோடு மனிதக் கூட்டம். வேட்டுவன் பாறைக்குப் பின்புறமாக நடந்து, காட்டின் தென்திசை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். `யார் இவர்கள்?' `இந்த நள்ளிரவில் பந்தம் ஏந்தி எங்கே சென்று கொண்டிருக்கின்றனர்?' என, ஊரில் இருந்த ஒவ்வொருவருக்கும் ஒரு சந்தேகம் எழுந்தது. முதுகிழவன் சொன்னான், “நாம் கீழே இறங்கிப்போய், அவர்கள் யார்... எங்கே போகின்றனர்... என்ன இடர் நேர்ந்தது என்று கேட்போம்” என்றார்.

“நம் மீது தாக்குதல் தொடுத்துவிட்டால்?”



“இது நம் இடம். நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது”

“சரி" என்று சிலர் மட்டும் புறப்பட்டுச் சென்றனர். மற்றவர்கள் குடிலைக் காத்தபடி மேலேயே நின்றனர்.

முதுகிழவனும் எவ்வியும் முன்னால் நடக்க, இளைஞர் சிலர் பின்தொடர்ந்தனர். மலைச்சரிவில் வேகமாக இறங்கினர். எங்கு இருந்தோ வந்த பலத்த காற்று அவர் மீது மோதிச் சென்றது. எவ்விக்கு, பரணை நோக்கி நினைவு சென்றது. `இந்தக் காற்றுக்கு பரண் தாங்குமா?' என, மனதுக்குள் சின்னதாக அச்சம் உருவானது. அவன் தென்திசை உச்சியை அண்ணாந்து பார்த்தான். மறுகணமே அடுத்த சந்தேகம் உருக்கொண்டது, `ஒருவேளை வேங்கைமரம் உந்தித் தள்ளியதில் இருந்துதான் இந்தக் காற்றே உருவாகியிருக்குமோ?'

பெருங்கடல் நடுவே மிதக்கும் சிறு தெப்பம்போல், உச்சிக்காட்டின் உள்ளங்கையில் ஆடிக்கொண்டிருந்தது பரண். வெகுதூரத்தில் பெண் யானையின் பிளிறல் கேட்டது. யானைகள் முயங்கிக் கூடுகின்றன. நிலவைப் பார்த்தபடி இருந்த வள்ளி சொன்னாள், “இன்னும் சிறிது நேரத்தில் இரவுப் பூக்கள் மலரத் தொடங்கும்.”

“எப்படிச் சொல்கிறாய்?” - மெல்லியதாகக் கேட்டது முருகனின் குரல்.

“பூவின் மேலிதழ் விலகத் தொடங்கி, மூன்றாம் நாழிகை முடியப்போகிறது.”

“நாம் பரண் ஏறத் தொடங்கும் போதேவா?”

“இல்லை, நீங்கள் ஆண் பல்லியின் அழைப்பைக் கேட்டுத் திரும்பியபோது.”

“நீ எந்த மலரைச் சொல்கிறாய்?”

“மலர்களில் ஏது வேறுபாடு? எல்லா மலர்களும் ஒரே இனம்தான்… பெண் இனம்.”

இரவு மலர்கள் மலரத் தொடங்கின. திசை எங்கும் புதிய நறுமணம் படர்ந்தது. மூங்கில் அடர்ந்த கீழ்த் திசையில் இருந்து குழலிசையைக் காற்று அள்ளிவந்தபோது, அதனுடன் காதலின் உயிரோசையும் இணைந்தது. வேங்கைமரம் நிலைகொள்ளாமல் ஆடியது.


தீப்பந்தம் ஏந்தி, கடுங்குரலோடு சென்றுகொண்டிருந் தவர்களை, வேடர் குல முதுகிழவன் மறித்துக் கேட்டான்...

“எங்கே போகிறீர்கள்?”

முதுகிழவனின் கேள்விக்குப் பெருங்குரலில் பதில் சொன்னான் ஒருவன், ``நாங்கள் கொடி குலத்தைச் சேர்ந்தவர்கள். பச்சைமலையின் ஈரடுக்கின் கீழ் இருக்கிறோம். எங்களின் குலமகள் வள்ளியைக் காணவில்லை. நேற்று காலை குடில் விலகி, தினைப்புனம் காக்கச் சென்றாள். ஆனால், அவள் பரணுக்குப் போகவில்லை. எங்கே போனாள் என அவள் தோழிகளுக்கும் தெரியவில்லை. அவர்களாகத் தேடிப்பார்த்துவிட்டு, மாலையில்தான் எங்களிடம் வந்து சொன்னார்கள். அப்போது முதல் நாங்கள் தேடிவருகிறோம். எங்கேயும் காணவில்லை. கீழ்த்திசைக்கு ஒரு குழு சென்றுள்ளது. நாங்கள் யானைப்பள்ளம் நோக்கிப் போகிறோம்” என்றான்.

எவ்விக்கு, அப்போதுதான் ஆபத்து புரிந்தது. `இவர்களை அந்தப் பக்கம் போகவிடக் கூடாது' எனச் யோசிக்கையில், முதுகிழவன், “இந்தப் பெருங்காட்டில் நீங்கள் மட்டும் எப்படித் தேடுவீர்கள்? நாங்களும் உடன் வருகிறோம். ஆளுக்கு ஒரு பக்கமாகத் தேடுவோம்” என்றார்.

ஆபத்து, பேராபத்தாக மாறியதை எவ்வி உணர்ந்தான். `என்ன செய்யலாம்?' என யோசிப்பதற்குள் முதுகிழவன், “ஏன் நிற்கிறீர்கள்... புறப்படுங்கள்” என்று சொல்லி, அவர்களோடு நடக்கத் தொடங்கினார்.



“சற்று நில்லுங்கள். நான் மற்றவர்களையும் அழைத்துவருகிறேன்” என்று சொன்ன எவ்வி, அவர்களின் பதிலை எதிர்பார்க்காமல் குடிலை நோக்கி விரைந்து ஓடினான். `சரி, இன்னும் கூடுதல் ஆட்களோடு சென்று தேடுவது நல்லதுதான்' என யோசித்த அவர்கள், அவன் வரும் வரை பொறுத்திருக்க முடிவுசெய்தனர். கொடி குலத்தைச் சார்ந்த ஒரு பெரியவர் மட்டும் சொன்னார், “அடுத்த குலப்பெண்களுக்கு ஆபத்து என்றால், உங்களைப்போல் உதவிசெய்ய இன்னொருவர் இந்தக் காட்டில்

இல்லை” என. முதுகிழவன் சற்றே பெருமிதத்தோடு தலையசைத்தான்.

அதே வேகத்தில் எவ்வி மலை மேல் இருந்து இறங்கி வந்தான். அவனுக்குப் பின்னால் ஒருவன் பைங்குடத்தைத் தலையில் வைத்துத் தூக்கிவந்தான். வேறு ஆட்கள் யாரும் வரவில்லை. ‘என்ன... இவன் யாரையும் அழைக்காமல், பானையோடு ஒருவனை மட்டும் அழைத்து வருகிறான்!’ என யோசிக்கையில், ‘`மற்றவர்கள் எல்லாம் ஆயுதங்களோடு வருகிறார்கள். அவர்கள் வருவதற்குள் நீங்கள் இந்தப் பழச்சாறை அருந்தி இளைப்பாருங்கள்” என்று சொல்லி, மூங்கில் குவளையில் ஆளுக்கு ஒரு குவளையாக அந்தப் பூண்டுச்சாற்றைக் கொடுத்தான். பழச்சாற்றின் சுவையாலும் அது தந்த எல்லையற்ற மயக்கத்தாலும், ‘`இதற்கு நிகர் இந்த உலகில் எதுவும் இல்லை'’ என ஆளாளுக்கு அதைப் புகழத் தொடங்கினர்.

பானை, முழுவதும் தீர்ந்தது. அதற்குள் இன்னொருவன் தலையில் பானையோடு வந்து சேர்ந்தான். பூண்டை எடுத்து அந்தப் பானையில் போட்டான் எவ்வி. அடுத்த சுற்று எல்லோரும் குடித்தனர். முதுகிழவன் மட்டும் புலம்பினான்,

“ `நிலமகள்... குலமகள்' என என்னென்னமோ சொன்னார்கள். இப்போது பழச்சாற்றைக் குடிக்க முந்திக்கொண்டிருக்கிறார்கள்” என்று சொல்லிக்கொண்டே மூன்றாம் குவளையை அருந்தியவன், மயங்கிச் சாய்ந்தான். எல்லோரும் விடாமல் குடித்து அதிமதுரச் சுவையில் மூழ்கினர்.

அவர்கள் குடிக்கும்போது சிந்திய துளிகள் இந்தப் புற்கள் எங்கும் சிதறின. அதன் வாசனை காற்றில் கலந்து எங்கும் பரவியது. நுகர்வுச்சக்தியை அதிகம்கொண்டிருந்த பாம்புகள், காடு முழுவதும் இருந்து பெரும்வேகம்கொண்டு இங்கு வந்தன. பாம்புகளின் எண்ணிக்கை, கணக்கில் அடங்காமல் இருந்தது. ஒவ்வொரு புல்லுக்கும் ஒரு பாம்பு வந்து சேர்ந்தது. புற்களில் இருந்த பழச்சாற்றுத் துளியை அவற்றை தம் நாவால் நக்கின. புல்லின் ஓரம் இருந்த சுனைாக்கிகள் அவற்றின் நாவுகளை இரு கூறுகளாக அறுத்தன. ஆனால், பழச்சாற்றின் சுவை அவற்றை விடுவதாக இல்லை. மீண்டும் நக்கின. அடித்தொண்டை வரை நாக்கு இரு கூறுகளாகப் பிளந்தது. எல்லா பாம்புகளுக்கும் நாக்குகள் இரு கூறுகளாயின. அன்றில் இருந்து இந்தப் புற்கள் `நாக்கறுத்தான் புற்கள்' ஆயின.

கதையைச் சொல்லியபடி, நீலன் முன் நோக்கி நடந்துகொண்டிருந்தான். பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்த கபிலருக்கு, கண்கட்டுவதுபோல் இருந்தது. எங்கும் இருள் அடர்ந்தது. நீலன், இருளுக்குள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தான்.

கபிலருக்கு மீண்டும் நினைவு திரும்பிய போது மறுநாள் பிற்பகலாகியிருந்தது. நடந்த களைப்பை மீறி, பசி அவரை எழுப்பியது. சாணத்தால் மெழுகப்பட்ட ஒரு குடிலில் இருந்த மரப் படுக்கையின் மேல் அவர் படுக்க வைக்கப் பட்டிருந்தார். கண்விழித்து எழுந்தவருக்கு, தான் எங்கு இருக்கிறோம் என்பது குழப்பமாக இருந்தது. ‘இது எந்த இடம்? இங்கே எப்படி நான் வந்தேன்?' என்று கேள்விகள் எழுந்தபடி இருந்தன. அவரது வலதுகாலில் பச்சிலைகொண்டு கட்டு போடப்பட்டிருந்தது. வீட்டுத் திண்ணையின் ஓரம் சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தனர்; சிறு பறை ஒன்றை கோலால் அடித்து ஒளியெழுப்பியபடி, குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருந்தனர்.

“நேற்று தள்ளாடித் தடுமாறி வந்தது இவர்தானா?” என்று ஒரு சிறுவன் கபிலரைப் பார்த்து கேட்டுவிட்டு ஓடினான்.

`நான் எப்போது தள்ளாடி வந்தேன்?' என யோசிக்கையில், சற்று குழப்பமாகவே இருந்தது. கபிலர் எழுந்துவிட்ட தகவல் கிடைத்ததும் நீலன் அந்த இடம் வந்து சேர்ந்தான்.

“இது என்ன ஊர்? நான் எங்கே இருக்கிறேன்?”

“நீங்கள் வரவேண்டிய இடத்துக்குத்தான் வந்திருக்கிறீர்கள். ஆனால், வந்தது தெரியாமல் வந்தீர்கள்.”

“புரியும்படியாகச் சொல்” என்றார் கபிலர்.

“உங்களின் வலதுகால் தசை பிறண்டுவிட்டது. அந்த நிலையில் உங்களால் அதிகத் தொலைவு நடக்க முடியாது. நடக்க, நடக்க வலி கூடத்தான் செய்யும். பொழுது வேறு மறைந்துகொண்டிருந்தது. இருட்டுவதற்குள் இந்த இடம் வந்து சேர வேண்டும். இடையில் நாகக் கிடங்கு வேறு. இந்தக் காட்டில் எத்தனை வகை பாம்புகள் இருக்கின்றனவோ, அத்தனை வகையான பாம்புகளும் அங்கு உண்டு. நாங்கள் வெளியில் இருந்து வரும் யாரையும், அந்தப் பக்கமாக அழைத்துவர மாட்டோம்; ஆற்றைச் சுற்றிதான் அழைத்து வருவோம். ஆனால், உங்களுக்கு அடிபட்டதால் ஆற்றைச் சுற்ற முடியாது எனத் தெரிந்துவிட்டது. சரி, நாகக் கிடங்கின் வழியே வேகமாக அழைத்துச் செல்லலாம் என்றால், நீங்கள் பனைமரத்தைக் கடப்பதற்குள் உட்கார்ந்துவிட்டீர்கள். எனவே, எனக்கு வேறு வழி தெரியவில்லை. உங்களுக்கு `தனைமயக்கி’ மூலிகையைக் கொடுத்தேன்” என்றான்.

“அது என்ன மூலிகை? நான் கேள்விப்பட்டதே இல்லையே!” என்றார் கபிலர்.

“அது உங்களின் நினைவை மயக்கும். அதனால் நீங்கள் வலியை மறப்பீர்கள். அதே நேரத்தில் உங்களின் இயக்கத்தை நிறுத்தாது. அதனால்தான் உங்களின் தோளைத் தாங்கிப்பிடித்து என்னால் அழைத்துவர முடிந்தது. நீங்களும் தள்ளாடித் தடுமாறி நடந்து வந்தீர்கள்.”

கபிலர், வியப்பில் உறைந்துபோனார். “என்னை மயக்கவைத்து நடக்கவைத்தாயா! இது எப்படிக் கைகூடியது?”

“கைகூடியதால்தான் நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள், வந்தது தெரியாமல்.”

பெண் ஒருத்தி மண் கலயத்தில் கூழ் கொண்டுவந்து கொடுத்தாள்.

“குடியுங்கள், நீங்கள் உணவருந்தி நாளாகப்போகிறது” என்றான் நீலன்.

கூழ் முழுவதையும் குடித்த பிறகுதான் தெளிச்சி ஏற்பட்டது.

“அது என்ன பழச்சாறு? நேற்று ஒன்று சொன்னாயே. பெயர் மறந்துவிட்டேன்” என்றார் கபிலர்.

“அது உங்களுக்கு நினைவு இருக்கிறதா?” எனக் கேட்டான் நீலன்.

“நன்றாக நினைவு இருக்கிறது. `புல்லில் சிந்திய அந்தப் பழச்சாற்றைப் பாம்புகள் வந்து நக்கியதால், அவற்றின் நாக்குகள் இரு கூறுகளாகி விட்டன' எனச் சொன்னது வரை நினைவு இருக்கிறது.”

“அதன் பிறகுதானே கதையின் முக்கியமான பகுதியே இருக்கிறது” என்றான் நீலன்.




“எனக்கு முற்றிலும் நினைவில்லை. அதன் பிறகு முருகனும் வள்ளியும் என்ன ஆனார்கள்? என்னதான் நடந்தது?”

“மொத்தக் கதையையும் என்னால் திருப்பிச் சொல்ல முடியாது. பழச்சாற்றைக் குடித்தவர்கள் மயக்கம் தெளிய பல நாட்கள் ஆனதாம். அதிகம் குடித்தது எவ்விதான். எத்தனை நாட்கள் என்று தெரியவில்லை. மயக்கம் கலைந்து மரத்தடிக்குப் போனானாம். வேங்கைமரத்தில் கட்டப்பட்டிருந்த சந்தனக்கட்டைகள்

தழைத்து, காற்றில் ஆடிக்கொண்டிருக்கின்றன. அவற்றைப் பார்த்தும் எவ்விக்குப் புரிந்தது. புன்னகையோடு ஊர் திரும்பிவிட்டான்.



“முருகன் எங்கே... ஏன் அழைத்துவரவில்லை?" என்று கேட்டதற்கு, “காதலை மனிதனால் அழைத்துவர முடியாது; காதல்தான் மனிதனை அழைத்துவரும்” என்று சொல்லிவிட்டு, அந்தப் பூண்டுச்சாற்றை அருந்தப் போய்விட்டான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு, காட்டுக்குள் சந்தனவேங்கை மரங்கள் புதிதாகத் தழைத்திருப்பதாகச் சொன்னார்கள். அதன் பக்கத்திலேயே சிலாக்கொடியும் படர்ந்திருந்தது. எங்கு சந்தனவேங்கை இருக்கிறதோ, அங்கு முருகனும் வள்ளியும் இருப்பதாக எங்கள் நம்பிக்கை. அதன் பிறகு, இந்தப் பெருங்காட்டில் காதலின் அடையாளமாக சந்தனவேங்கை மாறியது.

முருகனுக்குப் பிறகு, குலத்தலைவன் ஆனான் எவ்வி. கொடி குலமும் வேடர் குலமும் இணைந்தன. இருவரும் தங்களது இடங்களை விட்டு அகன்று, மூன்றாம் மலையான ஆதிமலையை அடைந்தனர். அங்கு புதுநகர் ஒன்றை அமைத்தான் எவ்வி. அதன் பிறகு அவனது வம்சாவழிகள் தலைமை தாங்க, வேளீர் குலம் தழைத்தது. அந்த வம்சத்தின் நாற்பத்திரண்டாவது தலைவன்தான் வேள்பாரி.

இதுதான் வேல்முருகனில் தொடங்கி வேள்பாரி வரையிலான கதை.”

கதையைக் கேட்ட கபிலர், கூழ் குடித்த கலயத்தை நீண்ட நேரம் கையில் வைத்தபடியே அமர்ந்து இருந்தார்.

“நான் இப்போது தனைமயக்கி மூலிகை எதுவும் தரவில்லை” என்று நீலன் சொன்ன போதுதான், ஆச்சர்யம் அகன்றார். கலயத்தை அந்தப் பெண்ணிடம் திருப்பித் தரும்போது கபிலரின் வாய் முணுமுணுத்தது,

“தனைமயக்கி மூலிகை, இலைகளில் மட்டும் அல்ல; கதைகளிலும் இருக்கிறது.”

**- பாரி வருவான்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-5




தனது நினைவில் இல்லாத ஒரு நாளைப் பற்றி கேள்விப்பட்ட கணத்தில் இருந்து, கபிலர் சற்றே அதிர்ந்துபோயிருந்தார். நீலன், அவர் அருகில்தான் உட்கார்ந்திருந்தான். அவனிடம் பேச கபிலரின் மனம் விரும்பினாலும், அவரது எண்ணங்கள் முழுவதும் கைதவறிப்போன நினைவுக்குள்தான் இருந்தன.

நீலன் எழுந்தான்.

“ஊர்ப் பழையன் உங்களைப் பார்க்க வேண்டும் எனச் சொல்லியிருந்தார். அவரை அழைத்துவருகிறேன்” என்று சொல்லிச் சென்றான். ஊரின் மிக வயதான ஆணை `பழையன்' என்றும், பெண்ணை `பழைச்சி' என்றும் அழைப்பது வழக்கம்.



அதே யோசனையில் இருந்த கபிலர், தான் உட்கார்ந்திருக்கும் மரப்பலகையை விரலால் கீறிக்கொண்டிருந்தார். `எவ்வளவு அகலமான பலகையாக இருக்கிறது. இது என்ன மரம்?' என்று அதை உற்றுப்பார்த்தார். அவரால் கண்டறிய முடியவில்லை. அந்தப் பெண், சிறு மூங்கில் கூடையில் நாவற்பழங்களைக் கொண்டுவந்து கொடுத்தாள். அதை வாங்கிக்கொண்ட கபிலர் “இது என்ன மரம்?” என்று கேட்டார்.

“திறளி மரம்” என்று சொன்னாள்.

“திறளி மரம் இவ்வளவு அகலமாக இருக்குமா!”

“இது நடுப்பாகம்தான். அடிப்பாகம் இன்னும் அகலமானது. எங்களது குடிலில் இருக்கிறது. வந்து பார்க்கிறீர்களா?”

கபிலர், பதில் ஏதும் சொல்லவில்லை. திறளி மரம் பற்றிய பழம்பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது. `தன் மனைவி உடன் இருந்தாலும் அழகியை நேசிக்க எந்த ஆணும் தவறுவது இல்லை. அதேபோல சேர, சோழ, பாண்டிய வேந்தர்கள் மூவரும் தங்களுக்கு எனத் தனித்த மரங்களை அரசச் சின்னங்களாகக் கொண்டிருந்தாலும், மூவருக்கும் பிடித்த மரமாக திறளி மரமே இருக்கிறது' என்று சொல்கிறது அந்தப் பாடல். அதற்குக் காரணம், யவன வணிகத்தின் திறவுகோலாகத் திறளி இருப்பதுதான்.

யவன நாட்டோடு வணிகத்தொடர்பு உருவாகி, பல தலைமுறைகள் உருண்டோடிவிட்டன. இன்று அது உச்சத்தில் இருக்கிறது. இந்த வணிகத்தில் பெரும்செல்வமாக யவனர்கள் கருதுவது மிளகைத்தான். கறுத்து, சிறுத்த அந்தத் தானியத்துக்காக, யவனர்கள் எந்த விலையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றனர். யவனக் கப்பல்களை தமிழ் நிலத்தின் துறைமுகங்களை நோக்கி இழுத்துவருவது மிளகுதான்.

பெரும் மதில்போல் கடலில் மிதந்துகொண் டிருக்கும் யவனக் கப்பல்களில் மிளகை ஏற்ற, கரையில் இருந்து ஒற்றை அடிமரத்தாலான தோணியில் எடுத்துச் செல்வார்கள். அந்தத் தோணி, திறளி மரத்தால் ஆனது. துறைமுகங்களில் நிற்கும் திறளி மரத் தோணிகளே மிளகு வணிகத்தின் குறியீடாக மாறின. வணிகர்கள் கடலில் மிதக்கும் கப்பல்களை எண்ணுவதைவிட, கரையில் மிதக்கும் திறளி மரத் தோணிகளை எண்ணியே செல்வச்செழிப்பை மதிப்பிடுகின் றனர். பெரும்பானையில் இருக்கும் உணவை அள்ளிப் போடும் அகப்பையைக்கொண்டு அளவிடுவதைப்போல.


யவன வணிகர்களுக்கு, இப்போது எல்லா கணக்குகளும் மிகத்தெளிவு. நூற்றாண்டுகளுக்கும் மேலாக சிறந்து விளங்கும் இந்த வணிகத்தை, அவர்கள் துல்லியமான கணக்குகளின் மூலமே அளவிட்டனர். `தேர்ந்த மாலுமிகளால் செலுத்தப்படும் கப்பல்கள், 40 இரவுகளும் 40 பகல்களும் கடக்கும் தொலைவைக் கொண்டுள்ளது மேலைக் கடற்கரை' என்பது அவர்களின் கணக்கு. திறளியை `டிரோசி' என்றே அவர்கள் உச்சரித்தனர்.

பேரியாறு, காவிரி, பொருநை என மூன்று நதிகளின் முகத்துவாரத்தில் இருந்த மூவேந்தர்களின் துறைமுகங்களில் எத்தனை டிரோசிகள் நிற்கின்றன என்ற கணக்குகள் நைல்நதிக்கரை நகரத்தில் எழுதிப் பாதுகாக்கப் பட்டன.

நீலக் கடலுக்கு அப்பால் விரிந்துகிடக்கும் நாடுகளை வணிகமே இணைத்தது. அதுவே வரலாற்றை உந்தித் தள்ளியது. யவனர்கள் தங்களுக்குத் தேவையான முத்தும் மிளகும் நவரத்தினங்களும் செழித்துக்கிடக்கும் பூமியாக தமிழ் நிலத்தைக் கண்டனர். அழகின் பித்தர்கள் கூடிவாழும் செல்வவளம்மிக்க நாடாக யவன தேசத்தை தமிழ் வணிகர்கள் அறிந்துவைத் திருந்தனர். இருநாட்டு வணிகர்களும் அரசியல் சதுரங்கத்தில் முன்பின் காய்கள் நகர்வதற்குக் காரணமாக இருந்தனர்.

வணிகமே வரலாற்றின் போக்கைத் தீர்மானிக்கிறது. இந்தக் கருத்தோடு தொடக்கக் காலத்தில் கபிலருக்கு உடன்பாடு இல்லை. ஆனால், கடந்த இருபது ஆண்டுகளாக தனது கண் முன்னால் நடக்கும் அரசியல் சூழ்ச்சிகளை அறிந்த பிறகு, அவர் தனது கருத்தை மாற்றிக்கொண்டார். கடல் கடந்து நடக்கும் இந்தப் பெரும் வணிகம்தான் பேரரசுகளை விடாமல் இயக்குகிறது. அறுபது வயதைக் கடந்துவிட்ட குலசேகரபாண்டியனுக்கு தேறலை ஊற்றிக்கொடுக்க ஒரு `கிளாசரினா' தேவைப்படு கிறாள்.

கடற்பயணத்தின் தொலைவும் கப்பல்களில் ஏற்றப்படும் பொருட்களும் பெருக்கெடுக்கும் லாபமும் கணக்குகளால் கண்டறியப்பட்டபடி இருக்க, வணிகமும் கணிதமும் பேரரசுகளின் இரு கண்களாகின.



மழை கொட்டி முடித்த ஒரு நண்பகல் நேரத்தில் கொற்கைத் துறையில் நின்ற கபிலர், கொந்தளிக்கும் கடல் அலையைப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவரைக் கடந்து போன யவன வணிகர்கள், டிரோசியைப் பற்றி பேசியபடி சென்றனர். திறளியை யவனர்கள் இப்படித்தான் உச்சரிக்கின்றனர் என்பதை கபிலர் அன்றுதான் கேட்டு அறிந்தார்.

பெரும்வணிகத்தின் திறவுகோலாக இருக்கும் திறளி, இங்கு படுத்து உறங்கும் பலகையாகக் கிடக்கிறது. அதுவும் இவ்வளவு அகலமான திறளி மரம், செல்வத்தின் பெரும்குறியீடு அல்லவா! எண்ணங்கள் எங்கெங்கோ ஓடியபடி இருக்க, விரல் நகத்தால் திறளி மரத்தின் மீது அழுத்திக் கோடு போட முயற்சித்துக்கொண்டிருந்தார் கபிலர். அப்போது நீலன், ஊர்ப் பழையனை அழைத்து வந்தான்.

அவரது உயரமே கபிலரை ஆச்சர்யப்பட வைத்தது. சுருங்கி மடிந்திருக்கும் தோல்தான் வயோதிகத்தைச் சொன்னது. மற்றபடி நெடும் உயரம்கொண்ட அந்த மனிதரின் கை எலும்புகள், உருட்டுக்கட்டைகளைப்போல இருந்தன. அடர்த்தியற்ற நரைமுடியை பின்னால் முடிச்சிட்டிருந்தார். அவரது உடல் முழுவதும் தழும்புகள் திட்டுத்திட்டாக இருந்தன. எத்தனை ஈட்டிகளுக்கும் அம்புமுனைகளுக்கும் தப்பிப் பிழைத்த உடல் இது. இவ்வளவு வயதான ஆண்களை இப்போது எல்லாம் பார்ப்பதே அரிதாகிவிட்டது.

பழையன் வந்து, திறளி மரப் பலகையில் கபிலருக்குப் பக்கத்தில் அமர்ந்தார். நீலன் நின்றுகொண்டிருந்தான்.

“தசைப்பிடிப்பு இன்று சரியாகிவிடும். நாளை நீங்கள் நடக்கலாம்” என்றார் பழையன்.

கபிலருக்கு அப்போதுதான் தசைப்பிடிப்பு நினைவுக்கு வந்தது.

“நீலன், என்னைப் பாதுகாப்பாக அழைத்துவந்துவிட்டான்” என்றார் கபிலர்.



“சிறுவன். இன்னும் பக்குவம் போதாது. நாகக்கிடங்கின் ஆபத்தை அவன் உணரவில்லை” என்றார் பழையன்.

“ஆற்றைச் சுற்றிவந்து சேர்வது முடியாது என்பதால், அப்படிச் செய்ததாகச் சொன்னான்” என்றார் கபிலர்.

“சுற்றிவந்து சேர முடியாமல் போகலாம், ஆனால், உயிரோடு வந்து சேர வேண்டும் அல்லவா?’’

கபிலர், நீலனைப் பார்த்தார். இளைஞர்களின் துணிவை பெரியவர்களால் ஏற்றுக்கொள்ள முடிவது இல்லை. அதற்காக இளைஞர்கள் கவலைகொள்வது இல்லை. நீலன் கவலைப் படாமல்தான் நின்றுகொண்டிருந்தான். ஆனாலும் பழையனின் வார்த்தைகளுக்கு முன் பணிவுகொண்டு நின்றான். நாவற்பழம், பழையனுக்கு மிகவும் பிடிக்கும். எனவே, இந்த வசவு வேகமாக முடிவுக்கு வரும் என அவனுக்குத் தெரியும்.


“ஏன் பழத்தை எடுக்காமல் இருக்கிறீர்கள்? எடுத்து உண்ணுங்கள்” என்று கபிலருக்கு அருகில் கூடையை நகர்த்தினார் பழையன்.

கூடையில் இருப்பது, காட்டில் பல்வேறு நாவல்மரங்களில் இருந்து பறித்த பழங்கள். ஒவ்வொரு நாவற்பழத்துக்கும் ஒவ்வொரு வகையான சுவை உண்டு. எந்த நாவற்பழத்தை முதலில் எடுத்து உண்ண வேண்டும் என்பதில் இருந்து தொடங்குகிறது காடு பற்றிய அறிவு. புதிதாக எவராவது வந்தால், அவர்களுக்குக் கூடை நிறைய நாவற்பழத்தைத் தருவது விருந்தோம்பல் மட்டும் அல்ல; காடு பற்றிய அவர்களது அறிதலை அளத்தலும்தான்.

“எடுத்துச் சாப்பிடுங்கள்” என்று பழையன் கூடையை கபிலரிடம் தள்ளியபோது, கபிலர் முதற்பழத்தை எடுத்து வாயில் போட்டார். அதில் இருந்தே தெரிந்துவிட்டது, காடு பற்றி அவருக்கு எதுவும் தெரியாது என்று. ‘காடற்ற மனிதனைக் காட்டுக்குள் அழைத்து வந்திருக்கிறாய்' என்று நீலனை முறைப்பதைப்போல் இருந்தது பழையனின் பார்வை.

`சரி, இனி நாம் விளையாடவேண்டியதுதான்' என்று முடிவுசெய்தார் பழையன். நீலனின் கண்கள், அவர் தேர்ந்தெடுக்கப்போகும் பழத்தின் மீது இருந்தது. அவர் உட்கார்ந்த கணத்தில் தனக்கான பழத்தைத் தேர்வுசெய்திருப்பார் என நீலனுக்குத் தெரியும். ஆனாலும், அவர் இன்றைய விளையாட்டை எதில் இருந்து தொடங்கப் போகிறார் என்பதை அறிய ஆவலோடு இருந்தான். ஆனால், கண்ணிமைக்கும்

நேரத்தில் பழையன் முதற்பழத்தை எடுத்து வாயில் போட்டுவிட்டார். நீலனால் அவர் எந்தப் பழத்தை எடுத்து வாயில் போட்டார் என்பதைக் கவனிக்க முடியவில்லை.



கபிலரின் கண்களும் பழையனின் விரல்கள் மீதுதான் இருந்தன. மடிப்புகள் அலையலையாக இறங்கி கருமையேறியிருக்கும் விரல்கள். நகம் பிளவுண்டு உலர்ந்திருந்தது. தோலின் வழியே கனிந்து வழிந்துகொண்டிருந்தது வயோதிகம்.
கபிலர் கேட்டார், “உங்களின் வயது என்ன பெரியவரே?”

மென்ற நாவற்பழக் கொட்டையை இடது உள்ளங்கையில் துப்பியபடி பழையன் சொன்னார், “தொண்ணூற்று ஏழு”.

கபிலர் ஆச்சர்யத்தோடு அவரைப் பார்த்தார். நீலனின் கண்கள் அதைவிடக் கவனமாக அவரது விரல்களைப் பார்த்துக்கொண்டிருந்தன. அவர் பதில் சொல்வதற்குள் அடுத்த பழத்தை எடுத்து வாயில் போட்டார். இப்போது அவன் கண்டுபிடித்தான். அவர் கையில் எடுத்தது நரிநாவல். இது துவர்ப்பை உச்சத்துக்குக் கொண்டுபோகும். அப்படியென்றால், இதற்கு முன்னால் அவர் எடுத்து வாயில் போட்டது வெண்நாவலாகத்தான் இருக்கும். அதற்குத்தான் புளிப்பு அதிகம். மொத்த வாயையும் உச்சுக்கொட்டவைத்து விழுங்கும் எச்சிலின் வழியே பேராவலை அது தூண்டும். அதற்கு அடுத்து நரிநாவலை எடுத்துத் தின்றால், தூக்கலான துவர்ப்பு முற்றிலும் வேறு ஒரு சுவையைக் கொடுக்கும். ஆனால், இதில் முக்கியமானது அடுத்து எடுக்கப்போவதில்தான் இருக்கிறது. பழையன் எந்தப் பழத்தை எடுத்து சுவையின் பாதையை எப்படி அமைத்துக் கொள்ளப்போகிறார் என்பதை அறிய ஆர்வத்தோடு இருந்தான் நீலன்.

கபிலர் விடுபடாத ஆச்சர்யத்தின் வழியே கேட்டார் “எப்படி இவ்வளவு துல்லியமாக வயதைச் சொல்கிறீர்கள்?”

நரிநாவலில் சதையைவிட அதன் கொட்டையை அசைபோட்டு மெல்லுவதில்தான் சுவை இருக்கிறது. அதன் மேல்தோல் கழறக் கழற, சுவை உச்சத்துக்குச் செல்லும். தப்பித் தவறி சற்றே அழுத்திக் கடித்து கொட்டையை உடைத்துவிட்டால் அவ்வளவுதான்! உள்ளே இருக்கும் பச்சை நிறப் பருப்பின் கசப்பு இருக்கிறதே, அது நாக்கையே கழற்றிப் போட்டாலும் போகாது. குறைந்தது மூன்று மாதங்களுக்காவது காறிக்காறித் துப்பிக்கொண்டே இருக்க வேண்டியதுதான். எனவே, நரிநாவலைத் தின்னும்போது மிகக் கவனமாகத் தின்னவேண்டும். தந்திரத்தோடு அதன் கொட்டையின் மேல்பகுதியைக் கடித்துச் சுவைக்க வேண்டும், பழையன் வாயில் நரிநாவலை ஒதுக்கிவைத்திருக்கும்போது, கபிலர் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுள்ளார். எப்படிப் பதில் சொல்கிறார் பார்ப்போம் என்று ஆவலோடு இருந்தான் நீலன்.

எத்தனை கேள்விகளைப் பார்த்தவர் பழையன், அவருக்குத் தெரியாதா நரிநாவலை என்ன செய்ய வேண்டும் என்று! தாடையின் ஒரு பக்கவாட்டில் இருந்து மறு பக்கவாட்டுக்கு நரியைப் பக்குவமாக அணைத்து ஓடவிட்டுக்கொண்டிருந்தார். துவர்ப்பின் சாறு உள்நாக்கில் இறங்கிக்கொண்டிருந்தது. கண்களாலேயே கபிலரைப் பொறுத்திருக்கச் சொன்னார். `என்னென்ன வித்தைகளைக் காட்டுகிறான்

கிழவன்!' என ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் நீலன்.

நன்றாக மென்ற கொட்டையை இடது உள்ளங்கையில் துப்பிவிட்டு, கபிலரைப் பார்த்து "என்ன கேட்டீர்கள்?" என்றார் பழையன்.

"வயது தொண்ணூற்று ஏழு என்று எப்படி துல்லியமாகச் சொல்கிறீர்கள்?" என்று மீண்டும் கேட்டார் கபிலர்.



பழையனின் கைவிரல்கள், கூடையில் இருக்கும் பழங்களைக் கிளறி மூன்று பழங்களை எடுத்தன. நீலன் அவர் எதை எடுத்திருக்கிறார் என உற்றுப்பார்த்தான். உள்ளங்கை சற்றே மூடியிருந்ததால், சரியாகத் தெரியவில்லை. பழையன், கபிலரைப் பார்த்து "மேல் மலையில் இருக்கும் குறிஞ்சிச் செடியில் இரண்டாவது கணுவில் பூ பூத்திருக்கும்போது, நான் பிறந்ததாக என் தாய் சொன்னாள். கடந்த ஆண்டு அந்தச் செடியில் பத்தாவது கணுவில் பூ பூத்திருந்தது" என்றார்.

சொல்லி முடித்ததும் தனது கையில் உள்ள பழங்களை வாயில் போட்டார். அப்போதுதான் நீலன் கவனித்தான், இரண்டு நீர்நாவலும் ஒரு கொடிநாவலும் அதில் இருந்தன. துவர்ப்பேறிய வெற்றிலையில் சுண்ணமும் தெக்கம்பாக்கையும் சேர்ப்பதைப்போலத்தான் இது. இந்தச் சேர்மானம் தரும் சுவைக்கு அளவு இல்லை. துவர்ப்பை அதன் முனையில் தட்டிவிட்டு வேறு ஒன்றாக்கும்.


கனிகளின் சுவையை நாம் எந்த வழியில், எந்தச் சேர்மானத்தோடு அழைத்துச் செல்கிறோம் என்பதுதான் முக்கியம். ஒவ்வொரு வழிக்கும் ஒவ்வொரு விதமான வாசமும் வண்ணமும் உண்டு. `பழையன், துவர்ப்புக்கு அடுத்து சிறுநாவலை எடுத்து இளங்காரத்தோடு முடிப்பார்' என்றுதான் நீலன் நினைத்தான். ஆனால், அவரோ சட்டென வேறு ஒரு சுவைக்குத் தவ்விக் குதித்துவிட்டார். அதுவரை நீலம் ஏறியிருந்த அவரது நாக்கு, செவல் நிறத்துக்கு மாறத் தொடங்கியது. நீலன் அதிர்ந்துபோய்தான் நின்றான். பழையன் தனது நாக்கால் மேல் உதட்டைத் தடவியபடி பேசியதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது. நெல்லிக்கனிக்கு அடுத்து குடிக்கும் முதல் மிடறு நீர், நெல்லியால் அறியப்படாத சுவையை நாக்குக்குத் தந்து முடிப்பதைப்போல்தான் இதுவும்.

நாவற்பழத்தின் அடர்கருநீலத்துக்குள் இருப்பது ஒரு சுவை அல்ல, சுவைகளின் பேருலகம். கணக்கில்லாக் கனிகள் தொங்கும் மரத்தில் தனக்கான கனியைத் தேர்வுசெய்யும் பறவையைப்போலத்தான் பழையனும்.

நீலன் ஆச்சர்யப்படுவதைத் தவிர வேறு வழி இல்லை. கபிலருக்கு ஏற்பட்டது ஆச்சர்யம் அல்ல, அதிர்ச்சி. அவர் மனதுக்குள் பழையன் சொன்ன கணக்கு சரிதானா என்பதை எண்ணிக்கொண்டிருந்தார். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப் பூ. இரண்டாவது கணுவுக்கும் பத்தாவது

கணுவுக்கும் இடையில் இருக்கும் கணுக்களின் எண்ணிக்கை, முன்னும் பின்னும் மீதி இருக்கும் ஆண்டுகள் என எல்லாவற்றையும் மனதுக்குள் கணக்கு போட்டுக்கொண்டிருந்தார்.
தொண்ணூற்று ஏழு என்று பழையன் சொன்ன கணக்கு மிகச் சரியானது என அறிந்த போது, கபிலர் ஏறக்குறைய உறைந்துபோனார். கணிதம் கடலிலும் கப்பலிலும் மட்டும் அல்ல, காட்டிலும் கணுக்களிலும் இருக்கிறது என்பதை ஒற்றைச் செய்தியில் விளங்கவைத்தான் பழையன்.

ஆனால், கபிலரால் விளங்கிக்கொள்ள முடியாத எத்தனையோ விஷயங்கள் அங்கு நடந்துகொண்டிருந்தன. தான் எடுக்கப்போகும் நாவற்பழம் கொண்டு தனது காட்டு அறிவு கணிக்கப்படும் என்பது, அவரால் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாத ஒன்று. எடுத்த உடனே பூநாவலை எடுக்கும் ஒருவரைப் பற்றி சொல்ல என்ன இருக்கிறது?



“இரவு கஞ்சி குடிக்கும் முன் இவருக்கு தும்முச்சிச் சாறு கொடுங்கப்பா” என்று சொல்லிவிட்டுப் போனார் பழையன்.

“அது என்ன சாறு? எனக்குத்தான் கால் வலி சரியாகிவிட்டதே. பிறகு ஏன் தரவேண்டும்?” என்று விடாமல் கேட்டுக்கொண்டிருந்தார் கபிலர்.

நீலன் சொன்னான், “நீங்கள் காட்டுக்குப் புதியவர் அல்லவா, அதனால்தான்.”

“நானா காட்டுக்குப் புதியவன்? குறிஞ்சி நிலத்திலேயேதான் எனது வாழ்வின் பெரும்பகுதியைக் கழித்திருக்கிறேன். அந்தத் துணிவில்தான் நான் பாரியைப் பார்க்கத் தன்னந்தனியாக மலையேறத் தொடங்கினேன்” என்றார்.

``மனித வழித்தடங்களின் வழியாக நீங்கள் காட்டை அறிந்திருப்பீர்கள். இது மனிதவாசனை படாத காடு. ஒளி விழாத இடத்துக்குள் நுழைந்து செல்ல வேண்டும். பலவகையான பூச்சிகள் இருக்கின்றன. அவை எல்லாம் கடித்த பிறகுதான் உங்களால் உணர முடியும். அதன் பின்னரும் உணர முடியாத பூச்சிகள்தான் இந்தக் காட்டில் அதிகம். எனவே, இதைக் குடித்தால் மட்டுமே நல்ல உடல்நிலையோடு மலைக்கு மேல் செல்ல முடியும். தற்காப்புக்கு மிகத் தேவை.”

நீலன் சொல்லிவிட்டுப் போன சிறிது நேரத்தில், அந்தப் பெண் சிறு குவளையில் சாறு கொண்டு வந்தாள். அதைக் குடிக்கும்போதுதான் கபிலருக்குத் தோன்றியது, மூவேந்தர்களாலும் பாரியை நெருங்க முடியாது என்று பாணர்கள் மீண்டும் மீண்டும் பாடுவதன் அர்த்தம்.

**- பாரி வருவான்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-6




குடிலின் தாழ்வாரம் முழுக்க விளக்கின் வெளிச்சம் படர்ந்திருந்தது. பெருங்கலயத்தில் கஞ்சியும் இலையில் சுருட்டப்பட்ட துவையலும் கொண்டுவந்து கொடுத்தாள் அந்தப் பெண். துவையலைத் தொட்டு வழிப்பதற்கு ஏற்ப சுருட்டப்பட்ட இலையை விரித்துவைத்து, கலயத்தை வாங்கிக் குடிக்கத் தொடங்கினார் கபிலர். கஞ்சி தொண்டைக்குள் இறங்கும்போதே குளிர்ச்சி உடல் எங்கும் பரவியது.

புளிப்பேறிய அருஞ்சுவையாக இருந்தது. 'சுவைத்துச் சிறிது சிறிதாகக் குடிக்கவேண்டும்' என்று எண்ணிய கபிலர், ஆட்காட்டி விரலால் துவையலை எடுத்து, நடுநாக்கில் வைத்து விரலை எடுப்பதற்குள், அதன் காரம் உச்சந்தலைக்குப் போய் முட்டியது. கண்கள் பிதுங்கின. விழுங்கிய துவையல் தொண்டையில் நின்றது. விழுங்குவதா... துப்புவதா என யோசிக்கும் முன்னர் காரம் சுழன்று பரவிக்கொண்டிருந்தது. கணநேரத்துக்குள் முழுக் கலயத்தையும் வாய்க்குள் கொட்டி முடித்தார். மூச்சு வாங்கியது. நாக்கு, காற்றைத் துழாவியது. சற்றே ஆசுவாசப்பட்டார். கண்கலங்கிய கபிலரைப் பார்த்து, வாய் பொத்திச் சிரித்தாள் அவள்.

தலையை உலுப்பி, காரத்தைக் கீழிறக்கினார் கபிலர். மறுகலயத்தைக் கொடுத்தாள். அணில்வால்தினை கொண்டு காய்ச்சப்பட்ட கஞ்சி.

``புளிப்பிரண்டையை வால்மிளகோடு பிசைந்து செய்யப்பட்ட துவையல்'' என்றாள்.

கபிலருக்கு இப்போதுதான் நிதானம் வந்தது.

“வால்மிளகு இவ்வளவு காரமாகவா இருக்கும்?” என்று கேட்டார்.

“காரத்துக்குக் காரணம், துவையல் சுருட்டப்பட்ட மகரவாழையின் கொழுந்து இலைதான். முதல்நாள் இரவே அதில் சுருட்டி வைத்துவிடுவோம், நாள் செல்லச் செல்ல காரம் கட்டிநிற்கும். இதுவே மூன்றாம் நாளாக இருந்திருந்தால்…” என்று சொல்லி மீண்டும் வாய் பொத்திச் சிரித்தாள்.
கபிலர் சற்றே நிதானமாக மறுகலயத்தை வாங்கிக் குடித்தார். கண்களின் ஓரம் நீர் வழிந்தது. அவள் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக இடது பக்கமாகத் தலையைத் திருப்பிக்கொண்டார். துவையலை கண்கள் பார்த்தன. ஆனால், விரல்கள் கிட்ட நெருங்கவில்லை. எரிந்துகொண்டிருக்கும் விளக்கின் இலுப்பை எண்ணெய் வாசனை அவருக்குப் பிடிபட்டது. ஆனால், அந்த விளக்கின் வடிவம்தான் வித்தியாசமாக இருந்தது. இது எதனால் செய்யப்பட்ட விளக்கு என யோசித்துக்கொண்டிருக்கும்போது பழக்கத்தில் துவையலை விரல் வழித்து எடுத்துவிட்டது. உடனே அவருக்குப் பொறிதட்டியது.
சட்டெனத் தலையைத் திருப்பி அவளைப் பார்த்தார். அவளோ வெடித்துச் சிரிக்கத் தயாராக இருந்தாள்.



துவையலை எடுத்த விரலை அவளுக்கு நேரே நீட்டி, “காரமலை என்று இந்த மலைக்கு இதனால்தான் பெயர் வந்ததா?” எனக் கேட்டார்.

“எனக்குத் தெரியாது” என்றாள் அவள்.

‘ஒருவழியாகச் சமாளித்துவிட்டோம்’ என்று மனதுக்குள் நினைத்தபடி, விரலை இலையின் ஓரத்தில் தேய்த்துவிட்டு, மீதிக்கஞ்சியைக் குடித்து முடித்தார்.

கலயத்தை அவரிடம் வாங்கும்போதும் அவள் முகத்தில் இருந்த சிரிப்பு அடங்கவில்லை.

“நான் உன்னிடம் விளக்கம் கேட்கத்தான் இரண்டாம் முறை துவையலை எடுத்தேன்” என்றார்.

“நான் அதற்காகச் சிரிக்கவில்லை” என்றாள்.

“பின்னர் எதற்குச் சிரிக்கிறாய்?”

“மாலையில் நான் நாவற்பழங்கள் கொண்டுவந்து கொடுத்தபோது, நீங்கள் முதலில் பூநாவலை எடுத்துத் தின்றீர்களாமே?”

கபிலருக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. தான் எடுத்துத் தின்ற நாவலுக்கு அதுதான் பெயரா என்றும், அவருக்குத் தெரியவில்லை. மெள்ளத் தலையை ஆட்டி “ஆம்” என்றார்.

அவள் வாய்விட்டுச் சிரித்தபடி, இலையோடு சேர்த்துத் துவையலை மடித்து எடுத்துவிட்டுச் சொன்னாள், “உதிரப்போக்கு நிற்காத பெண்கள்தான் பூநாவலைச் சாப்பிட வேண்டும்."

பழையனும் நீலனும் மீண்டும் குடிலுக்குள் நுழைய, அவள் சிரித்தபடி வெளியேறினாள்.

“என்ன சொல்லிச் சிரித்துக்கொண்டு போகிறாள்” எனக் கேட்டார் பழையன்.

கபிலரோ ‘எதைச் சொல்ல?’ என்ற திகைப்பும் வியப்பும் மிரட்சியும் கலந்தவராக இருந்தார்.

“இவளிடம் பேச்சு கொடுத்தால் மீளமுடியாது, என்னையவே வந்து பார் என்பாள். விருந்தினர் என்பதால் உங்களிடம் சற்று பக்குவமாக நடந்துகொள்கிறாள்” என்றார் பழையன்.

“ஆம்” என்று அவளது பக்குவத்தை ஆமோதிப்பதைத் தவிர, அவருக்கு முன் வேறு எந்த வழியும் இல்லை. காட்டின் இருளுக்குள் இருந்து குளிர்க்காற்று அவ்வப்போது வீசியது. விளக்கு நிலைகொள்ளாமல் ஆடிக்கொண்டே இருந்தது. மகரவாழையில் இருந்து பேச்சைத் தொடங்கிய கபிலர், நெடுநேரம் பழையனோடு பேசிக்கொண்டிருந்தார். நீலன் அங்கும் இங்குமாகப் போய் வந்தபடி

இருந்தான். பகலில் வேட்டைக்குப் போயிருந்த நாய்கள் குடில் திரும்பியிருந்தன. குரைப்பொலி விடாமல் கேட்டுக்கொண்டிருந்தது. தனது கண் முன்னால் கடந்துபோன ஒரு நாயின் உயரத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த கபிலரிடம் பழையன் கேட்டார், “பாரியைப் பார்த்துவிட்டு எப்போது திரும்பப் போகிறீர்கள்?”



“மழைக்காலம் தொடங்குவதற்குள் கீழிறங்க வேண்டும். எனவே ஒரு மாதம்தான் எனது திட்டம்.”

“அப்படி என்றால் நீங்கள் கொற்றவைக் கூத்தைப் பார்க்கத்தான் வந்திருக்கிறீர்களா?”

“இல்லையே, அப்படி ஒரு கூத்தைப் பற்றி நான் கேள்விப்பட்டதுகூட இல்லையே” என்றார் கபிலர்.

“நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் கூத்து இது. பறம்பு நாட்டின் உக்கிரம் ஏறிய விழா. நாடே திரண்டிருக்கும். பழைமையான பாணர் கூட்டம் எந்த நாட்டில் இருந்தாலும் இந்த விழாவில் வந்து பங்கெடுக்கும். நீங்கள் அதைக் கேள்விப்பட்டு வந்திருப்பதாகத்தான் நான் நினைத்தேன்” என்றார் பழையன்.

மறுநாள் அதிகாலை கபிலரை அழைத்துக் கொண்டு பழையன், நீலன் உள்பட பத்துக்கு மேற்பட்டோர் ஆதிமலைக்குப் புறப்பட்டனர்.

“நேற்று முன்தினம் ஊரே புறப்பட்டுப் போய்விட்டது. உங்களை அழைத்துச் செல்லத்தான் நாங்கள் இருந்தோம்” என்று சொல்லிக்கொண்டே பழையன் முன்நடந்து சென்றார்.

இரண்டு பகல் ஓர் இரவு நீடிக்கும் பயணம் அது. பயணம் முழுவதும் கபிலர் கொற்றவைக் கூத்து பற்றித்தான் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டே வந்தார்.

மற்றவர்கள் கபிலருக்காக வேகம் குறைத்தே நடந்தனர். ஆனாலும் கபிலரால் ஈடுகொடுத்து நடக்க முடியவில்லை. நீலன் அவருக்கு அவ்வப்போது உதவிகள் செய்தான். பாதை சில இடங்களில் மிகக் கடினமாக இருந்தது. சிறு பிசகு ஏற்பட்டாலும் பெரும்பள்ளத்தில் விழும் அபாயம் இருந்தது. விலங்குகளின் தடயங்களைப் பார்த்தபடி அனேக இடங்களைக் கடந்தனர். யானைக் கூட்டங்கள் கடந்து

செல்லட்டும் என்று சில இடங்களில் பொறுத்திருந்தனர். கிழங்குகளைத் தின்றுவிட்டு, சிறுத்தோடும் சுனைநீர் அருந்தினர்.
பின்கோடை காலமாதலால் செடிகொடிகள் சற்றே துவண்டுபோய்க் கிடந்தன. ஆனாலும் தொலைவு செல்லச் செல்ல காட்டின் உள் அடர்த்தி அதிகமானபடியே இருந்தது. எல்லா மரங்களும் கொடிகளைப்போல ஒன்றை ஒன்று பின்னிக்கிடந்தன. நீலனின் வயதொத்த மூன்று `இளைஞர்கள்' உடன் வந்துகொண்டிருந்தனர்.

நீண்டு திரும்பும் பாறையைக் கைபிடித்து கடக்கும்போது சற்றே கீழ்ப்பக்கம் குனிந்து பார்த்தார் கபிலர். அந்தக் காட்சியின் அற்புதம் பெரும்பரவசத்தை ஏற்படுத்தியது. அது காரமலையின் உச்சிப்பகுதி. பெரும்மலைச்சரிவு காலுக்குக் கீழ் பரந்துகிடக்கிறது. ஒளியின் தகதகப்பில் இலைகள் சுடரேற்ற, காடே தீப நாக்கால் சீழ்கை அடிப்பதைப்போல இருக்கிறது. நின்ற இடம்விட்டு கபிலரின் கால் நகரவில்லை. “காட்டின் பேரழகுக்கு ஈடில்லை” என்றார் கபிலர்.

“சரி வாருங்கள்” என்று பக்குவமாய் அவரைக் கைபிடித்து அழைத்தபடி நீலன் சொன்னான், “புலியின் மீசைமயிரின் மீது உட்கார்ந்திருக்கும் சிறு தும்பி போலத்தான் நாம்”, நீலன் பேச்சை முடிப்பதற்குள், முன்னால் நடந்துகொண்டிருந்த இளைஞன் சொன்னான், “பாதையில் மட்டும் கவனம்கொள்ளுங்கள், பார்வையை ஓடவிடாதீர்கள்”.


‘அப்படி இருக்கத்தான் விரும்புகிறேன். ஆனால், இந்த அழகில் கரையவில்லை என்றால் நான் கவிஞனா?’ என்று தனக்குள்ளே கேட்டுக்கொண்டார் கபிலர். உச்சியில் இருந்த குறுகலான பாறையைக் கடந்ததும் காரமலையின் பின்புற இறக்கத்தில் இறங்கத் தொடங்கினர்.

கபிலர் கேட்டார்...

“பறம்பு நாட்டின் தலைநகரான எவ்வியூருக்குச் செல்லும் எல்லா பாதைகளும் இதுபோன்ற ஒற்றையடிப் பாதைகள்தானா அல்லது வண்டிகள் செல்லும் சாலைகள் இருக்கின்றனவா?”

“பறம்பு நாடு நானூறுக்கும் மேற்பட்ட ஊர்களைக்கொண்டது. எல்லா ஊரில் இருந்தும் இதுபோன்ற பாதைகள் உண்டு. இதுதவிர எட்டுத்திசை எல்லைகளுக்கும் குதிரைகள் போய்த் திரும்பும் பாதைகள் உண்டு. அதைக் காவல்வீரர்கள் மட்டுமே அறிவர்” - சொல்லிவிட்டு அவன் நீலனைப் பார்த்ததை கபிலர் கவனித்தார்.

அவன் பேச்சைத் தொடர்ந்தான் “வண்டிச்சாலை ஒன்று உண்டு. வட திசையில் இருக்கும் தண்டலை



ஆற்றின் கரை வழியாக அது காரமலைக்கு ஏறுகிறது. ஆனால், மலையின் பாதித்தொலைவில் இருக்கும் பள்ளத்தூர் வரைதான் அந்தச் சாலை இருக்கும். அதன் பிறகு இதுபோன்ற ஒற்றையடிப் பாதைதான்.

கடற்கரையில் இருந்து உப்பு கொண்டுவரும் உமணரின் வண்டிகள் பள்ளத்தூர் வரை வரும். அங்கு வந்து உப்பைக் கொடுத்துவிட்டு, மலைப்பொருட்களை வாங்கிக்கொண்டு உமணர் திரும்பிவிடுவர். அங்கு இருந்து பறம்பு நாட்டில் இருக்கும் எல்லா ஊர்களுக்குமான உப்பை பள்ளத்தூரைச் சேர்ந்தவர்கள் பிரித்துக் கொடுத்துவிடுவர்” என்றான்.

நீலன் குறிக்கிட்டுச் சொன்னான், “வெளியில் இருந்து பறம்பு நாட்டுக்குள் வரும் ஒரே பொருள் உப்பு மட்டும்தான்.”

பேசியபடி நடந்துகொண்டிருக்கும்போது மரங்களின் மீது பறவைகள் படபடத்துக் கலைவதுபோல் இருந்தது. மனிதச் சத்தத்தைக் கேட்டு அவை கலைகின்றன என்று நினைத்தார்கள். அடுத்த சில அடிகள் எடுத்து வைப்பதற்குள் பறவைகள் கத்தத் தொடங்கின. ஒன்று இரண்டு பறவைகளின் சத்தம்தான்

முதலில் கேட்டது, கணநேரத்துக்குள் மொத்தப் பறவைகளும் காது கிழிவதைப்போல, `க்கீ… க்கீ…க்கீ…’ எனக் கத்தி, இங்கும் அங்கும் அலைமோதின. மரக்கொப்புகள் மோதி இலைகள் சிதறி உதிர்ந்தன. மேலே என்ன நடக்கிறது என்று தெரியாமல், மரக்கொப்புகளை அண்ணாந்து பார்த்தபடி அவர்கள் இருந்தனர். கொப்புக்குள் பறவைகள் அம்பைப்போல காற்றைக் கிழித்துக்கொண்டு பறந்தன. பெரும்பருந்து ஒன்று இவர்களின் தலையை உரசிக்கொண்டு போனது. கூட்டம் மொத்தமும் என்ன எனத் தெரியாமல் முழித்தபோது, திடீரென பழையன் பெரும்குரலெடுத்துக் கத்தினார்…

“காக்காவிரிச்சிடா…”



மொத்தக் கூட்டமும் கண்ணிமைக்கும் நேரத்தில் சிதறி பாறைகளின் ஓரம் விழுந்து சரிந்தனர். கரும்பாறையை ஒட்டி கீழே சரிந்து, பாறையோடு பாறையாக ஒண்டினான் நீலன். மற்றவர்கள் இங்கும் அங்குமாக இடுக்குகளில் புதைந்தனர். பாறையின் இடுக்கில் இருந்த நீலன் சட்டெனத் திரும்பிப் பார்த்தான். கபிலர் தன்னந்தனியாக நின்றுகொண்டிருந்தார். அவருக்கு நடப்பது எதுவும் புரியவில்லை. மின்னல் வேகத்தில் கபிலரின் மீது பாய்ந்தான் நீலன். அவர் நிலைகுலைந்து மண்ணில் சரிந்தார். அவரைக் கீழே போட்டு அமுக்கியபடி கிடந்த நீலன், தலையை மட்டும் தூக்கி மேலே பார்த்தான். பறவைகளின் வேகம் மொத்த மரத்தையும் உலுக்கிக்கொண்டிருந்தது. `க்கீ… க்கீ…க்கீ…’ எனக் காடே நடுங்குவதுபோல் ஓசை வந்துகொண்டிருந்தது. புதருக்குள் இருந்த ஒரு பெரும்விலங்கு தாவி வெளியேறியது. பாறை ஓரத்தில் இருந்த மற்ற இரு இளைஞர்களும் நீலனை நோக்கிப் பாய்ந்து புரண்டனர். மண்ணில் சரிந்து குத்தீட்டிகளைக் கையில் பிடித்தபடி அண்ணாந்து மரத்தைப் பார்த்தனர்.

அவர்களின் கண்கள் அலைமோதின. அவர்கள் யாராலும் காக்காவிரிச்சியைப் பார்க்க முடியவில்லை. பாறையோடு பாறையாகக் குத்தவைத்தபடி அமர்ந்திருந்த பழையனின் கண்கள் மட்டும், அதைத் துல்லியமாகப் பார்த்துக்கொண்டிருந்தன. நின்று நிதானமாக அது வேட்டையாடியது. அங்கும் இங்குமாகப் பறவைகளின் உடல் துண்டுதுண்டாகச் சிதறின. ஒரு பெரும்பருந்தின் தலையை, வாள்கொண்டு சீவுவதைப்போல அதன் கூர்மூக்கால் வெட்டி எறிவதை இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார் பழையன். துடிக்கும் அதன் கழுத்துக்குள் காக்காவிரிச்சியின் அலகு இருந்தது. அதன் இறக்கைகள் மெள்ள அசைய, காற்றில் பறந்தபடியே அது பருந்தின் ரத்தத்தைக் குடித்துக்கொண்டே சென்றது.

நீண்ட நேரத்துக்குப் பிறகுதான் கிழவனின் குரல் வெளியே கேட்டது.

“போயிருச்சுடா...”

கீழே கிடந்தவர்கள் மெள்ள எழுந்தார்கள். கிழவன் பார்த்த திசைநோக்கிப் பார்த்தபடி இருந்தன மற்றவர்களின் கண்கள். ஆனால், அவர்கள் கிடந்த இடத்தில் இருந்து அதைப் பார்க்க முடியவில்லை. மரங்களின் அசைவுகளும் பறவைகளின் ஓசையும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கின.

கபிலர் கையை ஊன்றி மெள்ள எழுந்தார். உடம்பு எங்கும் சிராய்ப்புகள். பாறை ஓரத்திலும் செடிகளுக்குள்ளும் பதுங்கிக் கிடந்தவர்கள் எழுந்து வந்தனர். அவர்களின் கண்கள் இங்கும் அங்குமாக அலைமோதிக்கொண்டுதான் இருந்தன. அது கொன்றுபோட்ட பருந்தின் உடல், சரிவில் இருந்த செடிகளுக்குள் கிடந்தது. ஒருவன் அதை எட்டிப்பார்க்க முயன்றான்.

“அதைப் பார்க்க வேண்டாம்” என்று கத்தினார் பழையன்.

அவன் திரும்பிவிட்டான். கிளைகளின் ஆட்டம் நிற்கவில்லை. பழுத்த இலைகள் உதிர்ந்துகொண்டே இருந்தன.

கபிலர் கேட்டார் “என்ன பெயர் சொன்னீர்கள்?”

பழையன் சொன்னார், “காக்காவிரிச்சி. வௌவால் இனத்தைச் சேர்ந்த ரத்தம் குடிக்கும் பறவை.”

“இதைக் கேள்விதான்பட்டிருக்கிறேன். இன்றுதான் இதன் தாக்குதலைப் பார்க்கிறேன். ஆனாலும் அதைப் பார்க்க முடியவில்லை” என்றான் நீலன்.



“அது மரங்களில் இருக்கும் சிறுபறவைகளை வேட்டையாடாது. பாறைகளின் பொந்துகளில் இருக்கும் பருந்து இனங்களைத்தான் வேட்டையாடும். பருந்துகள் வானில் பறந்து இதனிடம் இருந்து தப்பிக்க

முடியாது.  அதனால்தான் இந்தப் பருந்து மரங்களுக்குள் நுழைந்து தப்பிக்க இங்கும் அங்குமாக அலை மோதியது. பருந்தின் இந்தக் கூச்சலால் மற்ற பறவைகள் எல்லாம் அலறியடித்தன. இனி உங்களுக்கு எப்போதாவது சந்தேகம் ஏற்பட்டால் மரங்களைப் பார்க்காதீர்கள். பக்கத்தில் இருக்கும் மலைப்பாறைகளை அண்ணாந்து பாருங்கள். பருந்தோ, கழுகோ சிதறிப் பறந்தால் அது காக்காவிரிச்சி தான் என்று முடிவு செய்துகொள்ளுங்கள்" என்று இளைஞர்களுக்குக் குறிப்பு சொன்னார் பழையன்.

"இதற்கு முன்னால் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று பழையனைப் பார்த்துக் கேட்டார் கபிலர்.

"பார்த்திருக்கிறேன். கைக்கெட்டும் தொலைவில் உட்கார்ந்திருந்த என் மனைவியின் பிடறியை தனது அலகால் தட்டிவிட்டுப் பறந்தது. பின்மண்டையில் இருந்து ரத்தம் பீறிட அவள் என் உள்ளங்கையில் சரிந்தபடி செத்துப்போனாள்."

அதன் பிறகு யாரும் பேசிக்கொள்ளவில்லை. கால்கள் மட்டும் நடந்துகொண்டிருந்தன. ஊர் பழைச்சியின் அறுந்த பின்மண்டை நரம்பு நீலனுக்கு ஞாபகம் இருந்தது.

அப்போது அவன் மிகச் சிறுவனாக இருந்தான். ஆனாலும் பழையன் அழுத கண்ணீர் அவனுள் வற்றாமல் தேங்கியிருந்தது.

நீண்ட நேரத்துக்குப் பிறகு மௌனம் கலைத்து பழையன் சொன்னார், "கொற்றவை விழாவுக்கு முன்னர் பறவைகளின் ரத்தம் காற்றில் தூவப்படுவது நல்ல நிமித்தம்."

பள்ளத்தில் சரிந்துகொண்டிருக்கும் மனிதனின் கையில் அகப்படும் கொப்புபோல இருந்தது இந்த வார்த்தை. தீமையைக் கணப்பொழுதில் நன்மையாக மாற்றமுடிகிற வல்லமை வார்த்தைகளுக்கு உண்டு. வார்த்தை தரும் ஆறுதலை வேறு எதுவும் தருவது இல்லை. மனிதன் முதிரும்போதுதான் மனங்களைக் கையாளக் கற்றுக்கொள்கிறான். மனம் விழுந்த பின்னர் எழவைக்க எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. ஆனால், வீழ்ந்து கொண்டிருக்கும்போது தடுத்து நிறுத்துவதுதான் மிக முக்கியம். வாழ்வின் சாரமேறிக் கிடக்கும் அனுபவ அறிவால்தான் அதைச் செய்ய முடியும். அதிர்ச்சி குலையாமல் இருக்கும் இந்தக் கணத்தில் பழையனின் வார்த்தைகள், அடர் காட்டுக்குள் துணிந்து கால்களை முன்நகர்த்தும் மனதைரியத்தைக் கொடுத்தன.

ஆனாலும் தயக்கத்தை உடைக்கவேண்டி யிருந்தது. யார் முகத்தையும் பார்த்து பழையன் இந்த முடிவுக்கு வரவில்லை. உறைந்த மௌனமே எல்லாவற்றையும் சொன்னது. பின்திரும்பாமலே பழையன் சொன்னார்...
"மின்னலைப்போல வாளை வீசி காக்காவிரிச்சியின் இறக்கைகளை வெட்டித் தள்ளியவன் வேள்பாரி."

வார்த்தைகள், முதுகுத்தண்டை முறுக்கேற்றும் வல்லமைகொண்டவை என்பதை கபிலர் உணர்ந்த

தருணம் அது. உள்ளுக்குள் உறைந்து கிடந்த அதிர்ச்சியை கிழவன் பொடிப்பொடியாக் கினான். எல்லோருக்குள்ளும் ஆவேசமிக்க ஆர்வத்தைத் தூண்டினான். பாரி வாள் சுழற்றிய கணத்தில் சரிந்த காக்காவிரிச்சியின் இடப்புற இறக்கையைப் பற்றி, காதுநரம்பு விடைக்கச் சொல்லிக்கொண்டு நடந்தான் பழையன். கபிலரின் கண்களுக்கு முன்னர் ஒரு வீரக் கதை அரங்கேறிக்கொண்டிருந்தது.

**- பாரி வருவான்..**

# வீரயுக நாயகன் வேள்பாரி-7




இருட்டும்போது, நடுமலையின் மேற்குத் திசை அடிவாரத்தில் இருந்து புலிவால் குகைக்கு வந்து சேர்ந்தார்கள். இவர்கள் வரும் முன்னரே அந்தக் குகையில் பலர் இருந்தனர். எல்லோரும் கொற்றவைக் கூத்து பார்க்க, பறம்பு நாட்டின் வெவ்வேறு ஊர்களில் இருந்து வந்தவர்கள். புலிவால் குகை, மிக நீளமானது. எத்தனை பேர் வேண்டுமானாலும் படுத்துறங்கிப் போகலாம். அதன் கீழ் மூலையில் கொடுங்கோடையிலும் வற்றாத நீரூற்று உண்டு. முன்னால் வந்தவர்கள், பந்தத்தைப் பொறுத்திவைத்திருந்தனர். ஏந்திவந்த ஆயுதங்கள் ஓர் ஓரத்தில் சாய்த்துவைக்கப்பட்டிருந்தன. வேட்டூர் பழையனைப் பார்த்ததும் எல்லோருக்கும் பெருமகிழ்ச்சி. ஆசையோடு வந்து பேசினர். வயோதிகத்திலும் தளர்ந்துவிடாத பழையனைப் பற்றி பேச எவ்வளவோ இருக்கின்றன!

ஆணும் பெண்ணுமாக, பெருங்கூட்டம் கூடியிருந்தது. தாங்கள் கொண்டுவந்த உணவுகளைப் பறிமாறிக்கொண்டனர். அவித்த பன்றிக்கறியை உப்பு போட்டுப் பிசைந்து, பெருங்கூடையில் தூக்கி வந்திருந்தது ஒரு கூட்டம். மூன்று மலைகளை ஏறி இறங்கியவர்களின் பசியை அதுதான் தாங்கும். விரல்களுக்கு இடையில் பன்றியின் ஊண் ஒழுகக் கடித்து இழுத்தனர்.

மிகவும் களைத்துப்போயிருந்த கபிலருக்கு, பனையோலை நிறையத் துண்டங்களை எடுத்துவந்து நீலன் கொடுத்தான். உப்புக்கறியின் சுவை மிகவும் பிடித்திருந்தது. விரும்பிச் சாப்பிட்டார் கபிலர். இன்னும் சாப்பிட வேண்டும்போல் இருந்தது. அரை இருட்டில் நீலனை அடையாளம் காண முடியவில்லை. மற்றவர்களுக்கு எடுத்துக் கொடுத்துக்கொண்டிருப்பான். சத்தம்போட்டு அவனை அழைக்கத் தயங்கியபடி இருந்தார் கபிலர். பச்சிளங்குழந்தை ஒன்று, பசித்து அழுதது. அப்போதுதான் கை நிறையக் கறித்துண்டங்களை வாங்கிய அந்தத் தாய், அப்படியே பக்கத்தில் இருந்த கபிலரின் கையில் அவற்றைக் கொடுத்துவிட்டு, சேலைத்துணியில் கையைத் துடைத்தபடியே ஓடிப்போய், மூலையில் தோல்விரித்துப் படுக்கப்போட்டிருந்த குழந்தையைத் தூக்கி பால் கொடுத்தாள்.


கபிலர், கையில் கறித்துண்டங்களோடு உட்கார்ந்திருந்தார். அவள் மறுமுலை தாங்கி குழந்தையை அணைத்தாள். அது வயிறு நிறைந்ததும் உதடு பிதுக்கி மறுத்தது. அதை மீண்டும் படுக்கப்போட்டு, அழகிய சிரிப்போடு கன்னத்தைத் தொட்டுக் கொஞ்சிவிட்டு எழுந்தாள். இந்தக் கூட்டத்தில் யாரிடம் கறித்துண்டங்களைக் கொடுத்தோம் என்பது அவளுக்கு நினைவில் இல்லை. எல்லோரும் கறியைக் கடித்து இழுத்துக்கொண்டிருந்தனர். பனங்கூடையின் அருகில் போனாள். கறி தீர்ந்துவிட்டது. அவள் மிகவும் சோர்ந்துபோனாள். அந்த அரை இருட்டில், அவளின் தவிப்பு யார் கண்ணிலும்படாமல் இருந்தது. சற்றே கலங்கியபடி அவள் திரும்பும்போது, “மகளே... உனக்கான உணவு எனது கையில் இருக்கிறது” என்றது கபிலரின் குரல்.

அவள், குரல் கேட்ட இடம் நோக்கி வந்தாள். கை தாழ்த்தாமல் அப்படியே பிடித்திருந்தார் கபிலர். வாங்கிய அவள், கனிந்த சிரிப்பில் நன்றி சொல்லியபடி கறித்துண்டங்களைக் கடித்தாள்.

“கடும் பசி. சுவை வேறு இழுத்தது. கையில் இருப்பதில் ஒரு துண்டையாவது சாப்பிடலாமா என, பலமுறை தோன்றியது. ஆனால் கைநிறையக் கறித்துண்டங்களை வாங்கிய நீ, குழந்தையின் குரல் கேட்ட கணத்தில் மொத்தத்தையும் உதறிவிட்டு ஓடினாயே! தாய்மைக்கு முன்பு ஆண்களாகிய நாங்கள் அற்பப்புழுவம்மா” என்றார் கபிலர்.

“பெரிய சொல் சொல்கிறீர்கள். இருட்டில் உங்களின் முகம் தெரியவில்லை. ஆனாலும் தந்தையை முகத்தைப் பார்த்துதான் அடையாளம் காண வேண்டுமா என்ன?” - சாப்பிட்டுக்கொண்டே பேசினாள்.

ஈச்சமதுவுக்கு வறுத்த கறிதான் சரியான ஈடு. ஆனாலும் வெப்பத்தை அடைகாத்திருக்கும் கற்குகைக்குள் உப்புக்கறித்துண்டுகள் எல்லாவற்றையும் விஞ்சும். அலுப்புத்தீர எடுத்து முடித்தது அந்தக் கூட்டம். வலி பொறுக்க இன்னொரு குவளையும் சேர்த்துக் கொடுத்தான் நீலன். குடித்த கபிலர், ஓர் ஓரமாகப் படுத்துச் சமாளிப்போம் என முயற்சி செய்தார்.



எத்தனை ஆண்டுகள் காட்டில் வாழ்ந்தாலும், ஒவ்வொரு நாளும் புதுப்புது அனுபவத்தைத் தரவல்லது காடு. அன்றைய அனுபவத்தின் கதை காக்காவிரிச்சியைப் பற்றியதாக இருந்தது. இளம்வயது, எந்த விலங்கையும் வீழ்த்தும் துணிவோடு வேல்கம்பைத் தூக்கி நிற்கும். வயோதிகம், எவ்வளவு கொடும்விலங்கிடம் இருந்தும், எளிதில் தப்பிக்கும் வித்தையைக் கக்கத்தில் வைத்துக் காத்திருக்கும். பழையனின் கம்புக்கூட்டுக்குள், அவன் மரணத்தை வென்ற பல கதைகள் இடுக்கிக் கிடந்தன. அதில் இன்னொன்றாக இன்றைய கதையும் சேர்ந்துகொண்டது.

கபிலர், தூக்கமின்றி எழுந்து உட்கார்ந்தார். தாகம் எடுத்தது. `சுனை நோக்கிப் போகலாம்!' என நினைத்து எழுந்தார். அதைப் பார்த்த நீலன், உடன் வந்து அவரை அழைத்துச் சென்றான்.

“மடிப்புப் பாறைகள், கால்களைக் கவனமாகத் தூக்கிவையுங்கள்” என்றான். அவர் பதில் ஏதும் சொல்லாமல் தலையாட்டியபடி வலது கையை மெள்ள உயர்த்தி, நீலனின் தோள்பட்டையைப் பிடித்தார். அவரது கையின் உள்நடுக்கத்தை நீலனால் உணர முடிந்தது. பந்த வெளிச்சத்தைவிட்டு விலகி, நீரின் சத்தத்தை நோக்கி அவர்கள் நடந்தனர்.

“நான் உங்களை எதிர்பாராமல் கீழே தள்ளியதால் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டுவிட்டது. என்னை மன்னியுங்கள்” என்றான் நீலன்.

``எனது உயிரைக் காப்பாற்றிய உனக்கு, நான் அல்லவா நன்றி சொல்ல வேண்டும்” என்றார் கபிலர்.

“உங்களின் உயிருக்கு எந்தவித ஆபத்தும் ஏற்பட்டிருக்காது!” என்று நீலன் சொல்லிக் கொண்டிருக்கும் போது குறுக்கிட்ட கபிலர், “முதலில் அது என்னைத்தான் நேர்கொண்டு பார்த்தது.”

நீலன் அதிர்ச்சியடைந்தான்.

“அதை நீங்கள் பார்த்தீர்களா?”

“ஆம், கருவேங்கை போல… மரக்கொப்புகளில் தாவி உட்காரும் ஏதோ ஒரு விலங்கு என்றுதான் நினைத்தேன். இறக்கைகளை விரித்த பிறகுதான் அது பறவை எனப் புரிந்தது. நீ என்னைக் கீழே தள்ளியபோதுதான், நம்மைக் கடந்துபோன பருந்தை அது அடித்தது. பழையன் முன்னால் இருந்ததைத்தான் பார்த்தார். வந்தது ஒன்று அல்ல, இரண்டு.”

நீலன் நடுக்கமுற்றான்.


“எங்களின் கண்களுக்கு மட்டும் எப்படி அது தெரியாமல்போனது?”

“அதைப் பற்றி நீங்கள் அறிந்திருந்ததால், அதனிடம் இருந்து தப்பிக்கவே முதலில் முயன்றீர்கள். நீங்கள் பதுங்க இடம் தேடிப் பாய்ந்தபோது என்ன நடக்கிறது என்று தெரியாமல் நின்றுகொண்டிருந்த நான், அண்ணாந்து பார்த்து அதைக் கண்டறிந்தேன். இவை எல்லாம் அறியாமை ஏற்படுத்திக்கொடுக்கும் வாய்ப்புகள்; அறிந்தவர்களுக்குக் கிடைக்காது.”

நீலனுக்கு அவர் சொல்லவருவது புரியவில்லை. விளக்கமாகக் கேட்பதற்குள் நீரூற்றை அடைந்தனர். கபிலர் குனிந்து இரு கைகளாலும் நீரை அள்ளினார். நீரின் குளிர்ச்சி, உடல் முழுவதும் பரவியது. நீலன், முகத்தை நீரால் அடித்து மயக்கம் கலைத்தான்.

“ஆதிமலையின் வடமேற்கு மூலை, மிகவும் செங்குத்தான பாறைகளும் அடர்ந்த மரங்களும் நிறைந்த பகுதி. அதை `ஆளிக்காடு' என்று நாங்கள் சொல்வோம். அங்கே இரு கடவுகள் உண்டு. ஆதிகால மாந்தர் அவற்றைப் பயன்படுத்தினராம். அந்தக் குத்துப்பாறைகளுக்கு இடையில்தான் காக்காவிரிச்சிகள் தங்குவதாகச் சொல்வார்கள். அந்தத் திசையில் மலையைவிட்டு மிகத் தள்ளி குட்டநாட்டு எல்லை தொடங்குகிறது” என்றான் நீலன்.

“காக்காவிரிச்சி பற்றி நீண்டகாலமாகவே மலைமக்கள் அறிவார்களா?” என்று கேட்டார் கபிலர்.



“ஆதிகாலத்தில் இருந்தே அதைப் பற்றிய கதைகள் உண்டு. ஆனால், அதைப் பார்த்தவர்கள் மிகச் சிலரே. இப்போது பறம்புநாட்டில் உயிரோடு இருப்பவர்களில் அதைப் பார்த்தவர்கள் பத்துபேர்தான் இருக்கும்”
“இப்படி ஒரு பறவையைப் பற்றி சமவெளியில் வாழும் மக்களுக்கு எதுவும் தெரியவில்லையே. நாடு எல்லாம் சுற்றும் எனக்கே இன்றுதான் இப்படி ஒரு பறவை இருப்பது தெரியும்.”

“காட்டில் நமக்குத் தெரியாதவை எத்தனையோ உண்டு. நாம் ஆச்சர்யப்பட ஆரம்பித்தால், அதற்கு எல்லையே கிடையாது.”

பேசியபடியே குகைக்குள் நுழைந்தனர். சிறிது நேரத்தில் கபிலர் படுக்கப்போனார். உடல் எங்கும் வலி திரண்டிருந்தது. எந்தப் பக்கம் திரும்பிப் படுத்தாலும் வலித்தது. வேறு வழியின்றி சமாளித்துக்கொண்டு படுத்தார்.
வேட்டூர் கூட்டத்தோடு வந்திருக்கும் புதிய மனிதரைப் பற்றி நள்ளிரவுக்குப் பின் பேச்சுத் தொடங்கியது.

“எழுத்து கற்ற புலவர் என்று சொன்னார். பாரியைப் பார்க்கவேண்டுமாம். அழைத்து வருகிறோம்” என்றார் பழையன்.

அப்போதுதான் ஆழ்ந்த உறக்கத்துக்குப்போன கபிலருக்கு, தன்னைப் பற்றி பேசுவது காதில் அரைகுறையாகக் கேட்டது. தொலைவில் படுத்துக்கிடந்த இன்னொருவர் கேட்ட கேள்வி காதில் சரியாக விழவில்லை. அதற்கு பழையன் பதில் சொன்னார் “ஒற்றனுக்கு உரிய திறன் எதுவும் அவரிடம் இல்லை.”

கபிலருக்கு கேள்வி விளங்கியது.

“அப்படி நம்பவைப்பதுதானே சிறந்த ஒற்றனின் தகுதி” என்றது இன்னொரு குரல்.

பழையனின் பேச்சை மடக்கிப் பேசுவது யார் என, குரல் வந்த திசையை எல்லோரும் பார்த்தனர். இருட்டுக்குள் இருந்த அந்த மனிதனை மற்றவர்கள் பார்த்து அறியும் முன் குரல் கேட்டே பழையன் கேட்டார்...

“வந்திருப்பது கூழையனா?”

“கிழவா... கண்ணும் காதும் அப்படியே இருக்கடா உனக்கு” - அருகில் வந்து பழையனைக் கட்டி அணைத்தான் பறம்புநாட்டு தென்பகுதி எல்லைக்காவலன் கூழையன். உயரத்தில் மிகக் குள்ளனாக இருந்தாலும், வீரத்திலும் பலத்திலும் யாராலும் விஞ்ச முடியாதவன் என பெயர் எடுத்தவன்.

படுத்துறங்கும் கபிலரைவிட்டு இருவரும் சற்று தூரம் நகர்ந்தனர்.

“காலம் மாறிவிட்டது கிழவா. எண்ணற்றக் குலங்களை அழித்து வலுக்கொண்டிருக்கின்றனர் வேந்தர் மூவரும். எல்லோரின் கண்களுக்கும் உறுத்தலாக இருப்பது பாரிதான். பறம்பின் செல்வத்தைச் சூறையாட பாரியே தடை எனக் கருதுகின்றனர். மூவரும் தனித்தனியாக எத்தனையோ திட்டங்களைத் தீட்டுகின்றனர். ஒற்றர் படை இல்லாத நம் காதுகளுக்கே இவ்வளவு செய்திகள் வந்து சேர்கின்றன. அப்படியென்றால், எவ்வளவு திட்டங்கள் தீட்டப்படுகின்றன என்பதை எண்ணிப்பார்.”

“ஆகட்டும்... அவர்கள் என்ன திட்டம் தீட்டினாலும் நம்மை ஒன்றும் செய்ய முடியாது” - கிழவனின் நம்பிக்கையின் மீது அச்சத்தை ஏற்றும் வல்லமை, கூழையனுக்கு இல்லை. ஆனாலும், காலமாற்றத்தை பழையனுக்கு உணர்த்த வேண்டும் என்று விரும்பினான்.

``உங்களின் காலம் அல்ல இது. சேரனின் மிளகைப் பின் தள்ளி, வணிகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கின்றன கொற்கை முத்துக்கள். யவன வணிகத்தில் தனக்கு இருக்கும் முதல் இடத்தைத் தக்கவைக்க உதியஞ்சேரல் எதையும் செய்வான். மிளகுச்செடி தழைத்துச் செழிக்கும் எண்ணற்றக் குன்றுகள் நம்மிடம் உண்டு. அதுமட்டும் அல்ல, ஏற்கெனவே பறம்பு நாட்டிடம் அடைந்த தோல்விக்குப் பழிவாங்க வேண்டும் என்ற வெறியோடு இருக்கிறான். இதுபற்றி பாரியிடம் பேசிவிட்டுத்தான் திரும்புகிறேன்.”

“என்ன சொல்கிறாய், நீ கொற்றவைக் கூத்தில் பங்கெடுக்கவில்லையா?”

“இல்லை கிழவா. எல்லைக்குத் திரும்பியாக வேண்டும்.”

“கொற்றவைக் கூத்தில் பங்கெடுக்காமல் திரும்பும் அளவுக்கு நிலைமை மோசமாக உள்ளதா?”

“நீங்கள் நம்ப மாட்டீர்கள். ஆனால், உண்மை அதுதான்.”

கிழவன் குறுகுறுவென கூழையனையே பார்த்தான்.

``எதை வைத்துச் சொல்கிறாய்?”

“எல்லைப்புற ஊர்களில் புதிய மனிதர்கள் நடமாடுகின்றனர். நாம் அறியாத வேட்டை நாய்கள் காடுகளுக்குள் அலைகின்றன. பள்ளத்தூருக்கு வரும் உப்பு வணிகர் முன்புபோல் உடனுக்குடன் புறப்படுவது இல்லை. தேவைக்கு அதிகமாகத் தங்கிவிட்டுப் போகின்றனர். பறம்பு நாட்டுக்கு வந்த எந்த ஒரு பாணர் குழுவும் கடந்த ஆண்டில் ஒருமுறைகூட, வரும் வழியில் உள்ள முல்லை நிலக் காடுகளில் கொள்ளையர்களிடம் அகப்படவில்லை. இவை எல்லாம் நமது ஐயத்தை வலுப்படுத்தவே செய்கின்றன.”

“கொள்ளையரிடம் சிக்காமல் இருப்பதற்கும் இதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது?”

“காடுகளில் வேந்தர்களின் படைகள் நிலைகொண்டுள்ளன எனப் பொருள். படைகள் இருக்கும் காடுகளில் கொள்ளையர் இருக்க மாட்டார் அல்லவா! நம்மை, பலரும் நெருங்கியுள்ளனர். வழக்கத்துக்கு அதிகமாக இந்த ஆண்டு அதிக விருந்தினர் வந்துள்ளனர். போருக்கு முன்னர் விருந்தினரின் எண்ணிக்கை பெருகும் எனக் கேள்விப்பட்டது இல்லையா?”

“அதற்காக, விருந்தினரை எல்லாம் சந்தேகப்பட முடியுமா?”

“சந்தேகப்பட முடியாது. ஆனால், கண்டறிய முடியும். அதற்கான எந்த முயற்சியும் செய்யாமல்தான் நீங்கள் இவரை அழைத்துக்கொண்டு போகிறீர்கள்.”

“என்ன செய்திருக்க வேண்டும்?”


“பாணருக்குத்தான் வறுமை காரணமாக பரிசில் பெறவேண்டிய தேவை இருக்கிறது. புலவனுக்கு இங்கு என்ன வேலை? எழுத்து கற்றவனுக்கு உதவத்தான் மூவேந்தரும் போட்டிபோடுகின்றனரே! அவரிடம் கிடைக்காத பொன்னா... பொருளா? அப்படியிருக்க, இவ்வளவு கடினமான ஒரு மலைப்பயணத்தைச் செய்யவேண்டிய தேவை என்ன? இவை எல்லாவற்றையும் பற்றிகூட நீ அவரிடம் பேசாமல் இருந்திருக்கலாம். ஆனால், தனித்த தேரில் வந்து இறங்கி காட்டுக்குள் நுழைந்திருக்கிறார். இறக்கிவிட்டுப் போனது யாருடைய தேர்? தேரில் வந்து இறங்கும் வளம்கொண்டவன், காட்டின் கடுமையை அனுபவிப்பது எதனால்?”

பழையனின் கண்கள் நீலனைத் தேடின. அவன் கூழையனுக்குப் பின்னால் நின்றிருந்தான்.

“ஆகட்டும்... நாளை காலையில் அவரிடம் பேச்சுக்கொடுத்துப் பார்க்கிறேன்” என்றார் பழையன்.

கூழையனின் முகத்தில் சிரிப்புப் படர்ந்தது.

“ஏன் சிரிக்கிறாய்?” என்று கேட்டார் பழையன்.



“நம்பிய பிறகு ஒருவனைச் சந்தேகப்படுவது எளிது அல்ல. அதுவும் உன்னால் உறுதியாக முடியாது. நானே காலையில் அவருடன் பேசுகிறேன். உங்களோடு அனுப்பிவைப்பதா, என்னோடு அழைத்துச் செல்வதா என்பதை அவர் அளிக்கும் பதில்கள் முடிவுசெய்யட்டும்” என்றான் கூழையன்.

பழையனும் நீலனும் அதன் பிறகு பேசிக்கொள்ளவில்லை. நீலன், திசைக்காவல் வீரன்; கூழையனின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டவன். நிச்சயமாக அவனுக்கு அதிகமான வசவு கிடைத்திருக்கும் என்பது பழையனுக்குத் தெரியும். வீரர்களின் கட்டளை ஒழுங்குகளில் பழையனுக்கு எப்போதும் நம்பிக்கை இல்லை. ஒரு மனிதனின் முகத்தையும் சொல்லையும் பார்த்துக் கணிக்க முடியாதது எதுவும் இல்லை என்று நம்புகிறவர் பழையன். ‘காடு, மிகவும் தூய்மையான இடம் மட்டும் அல்ல; மனித இதயத்துக்கு மிக நெருக்கமான இடமும்கூட. ஒருவனுக்குள் இருக்கும் உண்மைகளை எளிதில் உதிர்க்கச் செய்யும் ஆற்றல் காட்டுக்கு உண்டு. காட்டின் ஊடே பயணப்படும் ஒருவனால் கபடத்தனத்தை மறைத்து இவ்வளவு தொலைவு எடுத்து வர முடியாது. இதை உணர முடியாத அளவுக்கு கூழையனைப் பதற்றம் தொற்றியுள்ளது. காலையில் என்னதான் நடக்கிறது பார்ப்போம், என்ற முடிவோடு தலை சாய்த்தான் பழையன்.

காலையில் பறவைகளின் ஒலியால் காடு நிரம்பி இருந்தது. கபிலரின் தூக்கம் கலைந்தது. உடல் முறுக்கி எழுந்தார். முடிச்சுகள் பிரிவதைப்போல தசைநார்கள் பிரிந்து அவிழ்ந்தன. வலி இலகுவாகிறதா...விட்டுப்பிடிக்கிறதா எனத் தெரியவில்லை. இரவு முழுவதும் கேட்டுக்கொண் டேயிருந்த பேச்சுச் சத்தம் எதுவும் இப்போது இல்லை. மெள்ள கண்கள் விழித்துப் பார்த்தார். குகைக்குள் யாரும் இருப்பதுபோலத் தெரியவில்லை. ‘அதிகாலையிலே எழுந்து போய்விட்டனரா! மற்றவர் போயிருந்தாலும் அழைத்துச் செல்ல நீலன் இருப்பானே, எங்கே அவனைக் காணோம்' என்று நினைத்தபடியே எழுந்து உட்கார்ந்தார்.

குகை முகப்பின் வழியே சூரிய ஒளி பாய்ந்து வந்துகொண்டிருந்தது. அப்போது ஓரத்தில் இருந்த பாறையின் மீது ஒருவர் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தார் கபிலர்.

முகம் தெரியவில்லை. நெடு உயரம். திரண்டு விரிந்திருந்த தோள்கள், உடல் அமைப்பின் கம்பீரத்தைச் சொல்லின.

கபிலர் எழுந்துவிட்டதைப் பார்த்த அந்த மனிதர், முன்னோக்கி நடந்துவந்தார். முழு சூரியனையும் அவரது முதுகு அடைத்திருக்க, பின்புறம் இருந்து சூரிய ஒளி பீச்சியடித்துக் கொண்டிருந்தது. தோள்பட்டையில் விழுந்து சுருண்டிருக்கும் தலைமுடியின் வழியே பாய்ந்துவரும் ஒளி மேல்படர, கபிலர் கையூன்றி எழுந்தார். மஞ்சள் ஒளியால் கண்கள் கூசின. ஆனாலும் காட்சியின் அபூர்வம் அவரை இமை கொட்டாமல் பார்க்கவைத்தது.

குகைக்கு முன்புறம் இருந்த மலைச்சரிவில் மொத்தக் கூட்டமும் நின்றுகொண்டிருப்பது அரைகுறையாகத் தெரிந்தது. எட்டிப்பார்க்கும் போது முன்நகர்ந்து வருபவரின் குரல் குகை எங்கும் ஒலித்தது.


“முதல் நாளே கால் தசை பிறண்டுவிட்டது. நாக்கறுத்தான் புற்கள் உடல் எங்கும் கீறியுள்ளன. காக்காவிரிச்சி நிலைகுலையவைத்துள்ளது. நீலன், எதிர்பாராமல் தூக்கி அடித்திருக்கிறான். இவ்வளவு தாக்குதல்களையும் வலியையும் தாங்கியபடி விடாமல் மலைகள் கடந்து வந்திருக்கிறீர்களே, இனியாவது உங்களை எனது தோளிலே தூக்கிச்செல்ல அனுமதிப்பீர்களா?”

திகைப்பில் இருந்து மீளாத கபிலர், நெருங்கிவரும் அந்த மாமனிதனைப் பார்த்துக் கேட்டார், “நீங்கள் யார்?”

``வேள்பாரி!’’

- *பாரி வருவான்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-8




அடுத்து வந்த நாட்களில், எவ்வியூரில் நிகழ்ந்த கொண்டாட்டங்களை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. திரும்பும் திசைகள் எல்லாம் ஆட்டமும் பாட்டும் கூத்துமாக, காடே கலகலவென இருந்தது. கபிலரின் வரவு பெரும் விழாவானது. பாரியின் பீறிடும் அன்பை வெளிக்காட்ட வடிவங்கள் ஏது? கொண்டாட்டங்கள்... கொண்டாட்டங்கள்...கொண்டாட்டங்கள்!

`கபிலரைத் தோளிலே சுமந்து வந்தான் பாரி' என்ற செய்தி, நாடு எங்கும் பரவியது. கபிலர் யார் என, பறம்பு மக்களுக்கு நேற்று வரை தெரியாது. ஆனால், தங்களின் தலைவன் தோளிலே சுமந்த ஒரு மாமனிதனைப் பற்றித்தான் இப்போது காடு எங்கும் பேச்சு.

ஒரே நாளில் கபிலர், காட்டின் கதையாக மாறினார். அவரை அழைத்து வந்த நீலனும் வேட்டூர் பழையனும் இப்போது எல்லோராலும் தேடப்படும் மனிதராக இருக்கின்றனர். வேட்டுவன் குன்றில் கால் பதித்ததில் இருந்து, எவ்வியூருக்குள் நுழையும் வரையிலான கபிலரின் ஒவ்வோர் அடியும் இப்போது பழையனின் கதைக்குள் மிதந்துகொண்டிருக்கின்றன.

தனது வீரத்தால் பேர் எடுத்த நீலனின் புகழ், கபிலரால் இன்னும் உச்சத்துக்குப்போனது. எந்நேரமும்

இளம்பெண்கள் சூழ இருக்கும் நீலனைக் கண்டு, அவனது நண்பர்கள் சற்றே பொறாமைகொள்கின்றனர். காலிலே தசைப்பிடிப்பு ஏற்பட்டவுடன் திருப்பி அனுப்பாமல் அழைத்து வந்த நீலனைக் கட்டி அணைத்தான் பாரி.

`கண நேரத்துக்குள் அவருக்குத் தனைமயக்கி மூலிகை கொடுக்க வேண்டும் என நீ துணிந்ததுதான் மிக முக்கியம். சிறந்த வீரனால் மட்டுமே அந்நிலையில் நாகக் கிடங்குக்குள் நுழைய முடியும்' - பாரி சொன்ன சொற்களை இப்போது எல்லோரும் சொல்கின்றனர்.

கொற்றவை விழா தொடங்க ஒரு வார காலம் இருக்க, இப்போது கபிலருக்கான விழா தொடங்கியது. “கபிலரின் வருகை, காட்டின் திருவிழா” என்று பாரி சொன்ன சொல்லில் இருந்து அது தொடங்கியது. காட்டின் விழா என்றால், அதன் முதல் வெளிப்பாடு வேட்டைதான். பெரும் உற்சாகத்தோடு பல குழுக்கள் வேட்டைக்குப் புறப்பட்டுப் போகும். சொல்லிவைத்த பொழுதுக்குள் ஊர்வந்து சேர வேண்டும். வேட்டையில் சிக்கும் முக்கியமான விலங்கு எதுவோ, அதுதான் அன்றைய விருந்தைத் தீர்மானிக்கும்.

ஒவ்வொரு விலங்கின் ருசிக்கும் ஏற்ற மதுவகை உண்டு. மதுவின் தன்மைக்கு ஏற்றபடியே இசை முழங்கும். இசைக்கு ஏற்பவே ஆட்டம். அன்றைய ஆட்டத்தின் ஆரம்பம் வேட்டையாடப்படும் விலங்கில் இருந்தே தொடங்குகிறது. அது மானாட்டமா, மயிலாட்டமா, மிளா கூத்தா, காட்டு எருமையின் கொம்பாட்டமா என்பது மதுவோடும் உணவோடும் இசையோடும் ஆட்டத்தோடும் கலந்தது.




மான்கறிக்கு ஈச்சங்கள் எடுபடாது. பறவைகளின் கறிக்கு தென்னங்கள் பொருந்தாது. ஈனா கெடாரிக்கு மூன்றாம் நாள் பனங்கள்தான் சிறந்தது. அத்தி மதுவுக்கும் அறுபதாங்கோழியின் கறிக்கும் ஈடு இவ்வுலகில் கிடையாது. `அறுபதாங்கோழி அகப்படாதா!' என ஏக்கத்தோடு இருந்தான் பாரி. `வேட்டைக்குப் போன ஒரு குழுவாவது அறுபதாங்கோழியைப் பிடித்துவரும்' என, மூன்று நாட்களாக பாரி ஆசையோடு காத்திருக்கிறான். கபிலர் எனும் பெரும்புலவர் வந்திருக்கிறார். அந்த வருகையைக் கொண்டாட அறுபதாங்கோழியே பொருத்தமானது. பாரியின் ஆசை இன்றாவது நிறைவேற வேண்டும் என, எவ்வியூரில் இருக்கும் ஒவ்வொருவரும் ஆசைப்படுகின்றனர். முதல் நாளும் கிடைக்கவில்லை, அடுத்த நாளும் கிடைக்கவில்லை. இந்தச் செய்தி எங்கும் பரவ, பறம்பு நாட்டில் இருக்கும் எல்லா ஊர்களும் காட்டுக்குள் அறுபதாங்கோழியைத் தேடி தினமும் அலைகின்றன.

`காட்டின் பிரமாண்டத் துக்குள் சின்னஞ்சிறு கோழியைக் கண்டுபிடிப்பது என்ன சாதாரணச் செயலா? அறுபதாங்கோழி, தான் பிடிபடுவதை அதுதான் முடிவுசெய்யும்' என்பார்கள். பாரி, அதன்மீதுதான் நம்பிக்கைகொண்டிருக்கிறான். “எனக்காகவா கேட்கிறேன்? கபிலருக்காக அது இந்நேரம் வந்து அகப்பட்டிருக்க வேண்டாமா!” என்று எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருக்கிறான். ஒரு குழந்தையைப்போல அடம்பிடிக்கும் பாரியின் ஆசையை நிறைவேற்ற, ஒவ்வொருவரும் துடியாகத் துடிக்கின்றனர். “இந்நேரம் ஆயிரம் யானைகளைக்கூட ஓட்டிவந்திருக்கலாம். ஆனால், காட்டுக்குள் கோழி பிடிப்பது எளிதான செயலா? இது பாரிக்கு ஏன் புரியவில்லை? பச்சிளம் பிள்ளையைப்போல அடம்பிடிக்கிறானே!'' என்று புலம்பியபடியே காட்டின் இண்டு இடுக்கு எல்லாம் நுழைந்து தேடுகின்றனர் பறம்பு மக்கள். விவரம் தெரிந்தவர்கள், புலிகளின் நடமாட்டப் பகுதியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றனர்.

கபிலர் திகைத்துப்போய் இருந்தார். ஒவ்வொரு நாளும் பெரும் விருந்துகளோடுதான் தொடங்குகிறது. மறுநாள் அதைவிடச் சிறந்த விருந்து அரங்கேறுகிறது. அவர் யவனத்தேறலை பாண்டியக் கிழவனோடு உட்கார்ந்து நாட்கணக்கில் குடித்திருக்கிறார். சேரனோடு பெருவிருந்து உண்டு மகிழ்ந்திருக்கிறார். ரசனையில் சோழனே சிறந்தவன் எனக் கருதுபவர் கபிலர். அவனது உபசரிப்பும் ஏற்பாடுகளும் அவ்வளவு எழில் வாய்ந்தவையாக இருக்கும். அவை எல்லாம் அதிகாரத்தாலும் ஆடம்பரத்தாலும் நடப்பவை; செல்வத்தின் திளைப்பில் நடப்பவை. ஆனால், இங்கு நடப்பது முற்றிலும் வேறானது. பாவனைகளும் அலங்காரமும் படியாத மானுட அன்பின் தூய வடிவம். அதே தூய்மையுடன் இருக்கும் ஒருவனால்தான் இதை அனுபவிக்க முடியும்.

மனதின் ஓரத்தில் இருக்கும் அழுக்குகூட நம்மை வெட்கித் தலைகுனியச் செய்யும் அளவுக்கு உக்கிரம் ஏறிய பேரன்பு இது. கபிலர் திணறிப்போனார். அறுகநாட்டுச் சிறுகுடி மன்னன் செம்பனிடம், தான் சொல்லிவந்த வார்த்தைகள் உள்ளத்தை அறுத்துக் கொண்டிருந்தன. ‘பாரியின் தூய்மையான அன்புக்கு முன் நான் கூனிக்குறுகியே நிற்கிறேன். நான் அதற்குத் தகுதியானவன் அல்ல. அவனது புகழ் மீது ஐயங்கொண்டு அதைக் கண்டறியவே, நான் இங்கு வந்தேன். இதை அவனிடம் சொல்ல வேண்டும்' என்று கபிலரின் மனம் தவித்தது.



பாரியின் நிழல்போல் எந்நேரமும் உடன்நிற்பவன் முடியன். வேகமும் வீரமும்கொண்ட இளைஞன். அவனது இடுப்பில் ஒரு பக்கம் வாளும் இன்னொரு பக்கம் மாட்டுக்கொம்பும் தொங்கிக்கொண்டிருந்தன. பழைமையும் புதுமையுமான இரண்டு ஆயுதங்களை ஒருசேர வைத்திருந்தான். ‘முடியன்’ என்பது அவனது பெயர் என்றுதான் கபிலர் முதலில் நினைத்தார். ஆனால், அது `தளபதி'போல ஒரு பட்டம் என்பது பின்னர்தான் கபிலருக்குத் தெரியவந்தது.

அதேபோல் எவ்வியூரில் எல்லோரும் வணங்கும் மனிதராக, பெரியவர் தேக்கன் இருக்கிறார். அதுவும் பட்டமா அல்லது பெயரா என கபிலருக்குத் தெரியவில்லை. இருவரிடமும் தனது நிலையை விளக்க வேண்டும் என கபிலர் முயற்சிசெய்ய, அவர்களோ அறுபதாங்கோழி கிடைக்கும் வரை எதையும் காதுகொடுத்துக் கேட்கவே தயாராக இல்லை. கபிலர் என்ன செய்வது எனத் தெரியாமல் திக்கித்திணறிக் கிடந்தார்.

ஆனால், கபிலரைவிட திணறிக் கிடப்பது பறம்பு மக்கள்தான். அறுபதாம்கோழிக்காக அவர்கள் இப்போது காடு எங்கும் அலைந்துகொண்டிருக்கின்றனர், பாரியின் குடும்பம் உள்பட. ஆசைப்பட்டது பாரி என்பதால், அதை நிறைவேற்றுவதை கடமையாகவே எல்லோரும் கருதுகின்றனர். அறுபதாம்கோழி, காட்டின் அதிசயங்களில் ஒன்று. கோழியைப்போல் உடலும் சேவலைப்போல் வாலும் கொண்டிருக்கும்.


வண்ணமயமான வாங்கருவாள் போல் வாலின் இறகுகள் சிலிர்த்து நிற்கும். அது அறுபது நாட்களுக்கு ஒருமுறைதான் முட்டையிடும். அன்னப்பறவை சாவதற்கு முன், ஒரே ஒருமுறை பெருங்குரல் எழுப்பிக் கூவிவிட்டு செத்துப்போவதைப் போலத்தான் இதுவும். சாவதற்கு முன் பகற்பொழுதில் சேவலைப்போல் பெருங்குரல் எடுத்துக் கூவிவிட்டு செத்துப்போகும்.

அந்த ஓசைதான் அதை `அறுபதாங்கோழி' என்று அடையாளப்படுத்துவது. ஓசை வந்த பகுதியில் தேடினால், ஏதேனும் ஓர் இண்டுஇடுக்குக்குள் செத்துக்கிடக்கும். அறுபதாங்கோழியைத்தான் முருகன் தனது கொடியில் வைத்திருந்தான். முன்புறம் கோழி போன்றும், பின்புறம் சேவல் போன்றும் அது காட்சியளித்தது.

`அது முருகனின் மாயவித்தை' என, பின்னால் வந்தவர்கள் சொல்லிக்கொண்டிருந்தபோது `எவ்வி'தான் ஒருநாள் அறுபதாங்கோழியைக் கண்டறிந்தான். முருகன் கொடியாக வைத்திருந்தது இதுதான் என்பது அவன் சொல்லித்தான் மற்றவர்களுக்குத் தெரியும். அந்தக் கோழியின் பெரும் அதிசயம் என்ன என்றால், அதன் கழிவில் இருந்துதான் `தீப்புல்' முளைக்கும். அதன் கறியின் சுவைக்கு ஈடுஇணை இல்லை. முருகனிடம் இருக்கும் ஒன்றின் சுவையைப் பற்றி தனித்துச் சொல்லவேண்டியது இல்லை.

அறுபது நாட்களுக்கு ஒருமுறை முட்டையிடும். அது காட்டுக்குள் எந்த விலங்கின் உணவாகவும் மாறாமல், மண்ணுக்குள் பாதுகாப்பாக இருந்து பொறிக்க வேண்டும். அதன் சுவை வேட்டை விலங்குகளுக்கு மிகவும் பிடித்தமானது. ஆனால், அதை வேட்டையாடுவது எளிது அல்ல. புலி போன்ற வேட்டை விலங்கு அதன் சுவைக்கு மயங்கி அதன் வாசனையை நுகர்ந்தபடி, காட்டின் குறிப்பிட்ட பகுதியில் அலைந்துகொண்டே இருக்கும். புலியால் எளிதில் அறுபதாங்கோழியைப் பிடிக்க முடியாது, அதே நேரம் அதன் வாசனையைவிட்டு விலகவும் முடியாது. எந்நேரமும் புதருக்குள் பதுங்கியபடியே நகர்ந்துகொண்டு கிடக்கும். தன்னைக் கடந்துபோகும் மான் கூட்டத்தைக் கண்டும் புலி அமைதியாக இருக்கிறது என்றால், அங்கு அறுபதாங்கோழி இருக்கிறது என அர்த்தம். புலியின் இந்த மயக்கச் செயலின் வழியே அங்கு அறுபதாங்கோழி இருப்பதை, காடு அறிந்தவர்கள் அறிவார்கள்.

நான்காம் நாள் அதிகாலை, தென்புறக் காட்டுக்குள் சரசரவெனக் கீழ் இறங்கினான் பாரி. உடன் வீரர்கள் சிலரும் சென்றுகொண்டி ருந்தனர். புலியின் நடமாட்டம் பற்றிய தகவல் வந்திருக்கலாம். எனவே, `அறுபதாங்கோழி இருக்கும் வாய்ப்பு இருக்கிறது. நாமே செல்வோம்' என முடிவெடுத்து பாரி போய்க்கொண்டி ருக்கிறான் என்று மற்றவர் நினைத்தனர். சிற்றோடையைத் தாண்டிய சிறிது தொலைவில் செழித்து வளர்ந்திருந்த கடம்பமரத்தின் முன் நின்றான் பாரி. குறி சொல்லும் வேலன் பூசாரி முன்னரே அங்கு வந்திருந்தார். வீரருக்கு அப்போதுதான் புரிந்தது. சற்று தொலைவில் நின்று முருகனை நோக்கிக் கைதொழு தனர்.



தமிழ் நிலத்தில் எஞ்சியிருக்கும் மலைமக்களின் அரசுகள் இருபத்திரண்டு மட்டுமே. அவற்றுள் முதன்மையாக அறியப்படுவது பறம்புநாடு. அதன் தலைவன் பாரி. இந்த நாட்டைப் பற்றி மூவேந்தருக்கும் சமவெளியில் வாழும் மக்களுக்கும் இதுவரை தெரிந்த உண்மைகள் பாணர் பலரால் சொல்லப்பட் டவையே! தமது வறிய நிலையைப் போக்க வரும் பாணர், பாரியின் அள்ளித் தரும் வள்ளல் தன்மையையே மீண்டும் மீண்டும் பாடினர்.

ஆனால், வேளீர்களின் பறம்புநாடு எத்தகைய வளத்தைக்கொண்டுள்ளது, அந்த மக்கள் தமது வாழ்வை எப்படி அமைத்துக்கொண்டுள்ளனர், பாரி நடத்தும் ஆட்சியின் தனித்துவம் என்ன என்று, எதுவும் வெளி உலகில் இருப்பவர்களுக்குத் தெரியாது. 'மலைமகன் ஒருவன் ஆளுகிறான்; இல்லாதவர்கள் போனால் `இல்லை' எனச் சொல்லாமல் அள்ளித் தருகிறான்' என்றுதான் நினைத்திருந்தனர்.

முதன்முறையாக வயிற்றுப்பாட்டுக்காக அல்லாமல், பாரியையும் அவனது பறம்புநாட்டையும் அளந்து பார்க்க வேண்டும் என்று முடிவோடு ஒருவர் வந்திருக்கிறார். வெளி உலகின் கண்கொண்டு இந்த நாடு இப்போதுதான் பார்க்கப்படுகிறது.

இவர்கள் காட்டின் பழைமையான மைந்தர்கள்தான். ஆனால், காலமாற்றத்தின் கரங்களை இறுகப் பற்றியுள்ளனர். இந்த மண்ணில் இருந்து அழிக்கப்பட்ட எத்தனையோ குலங்களின் கண்ணீரும் ரத்தமும் இவர்களை உருமாற்றியபடி இருக்கின்றன. பத்து ஆண்டுகளாக இந்தக் குலத்தின் தலைவனாக இருக்கிறான் வேள்பாரி. வேளீர்குல வீரன் ஒருவன் எறியும் ஈட்டியைக் கண்டு, வேந்தனே ஆனாலும் விலகி நிற்கும் மனநிலையை உருவாக்கிய மாவீரன் வேள்பாரி.




`நாடு என்பது அரசும் அரச நியதியும்தான்' என விதி செய்பவர்களுக்கு மத்தியில், `நாடு என்பது அரசற்ற மக்களின் ஆதிநிலம்' என நிலைநிறுத்தி உள்ளான். இந்த நிலத்தில் நடந்துவரும் கபிலருக்கு, கண்ணில் படுபவை எல்லாம் ஆச்சர்யத்தையே உண்டு பண்ணின. அதிகாரம் உயிர்பெறாத இடத்தில் அன்பு மட்டுமே தழைத்திருக்கும். ஆசை, கோபம், சோகம் எல்லாமே அன்புமயமாக நிகழும் ஓர் உலகின் நிகழ்வைக் கனவில்கூட காண முடியாதே! நிஜத்தில் என்ன செய்வார் கபிலர்? நிலைகுலைந்துபோனார்.


கபிலரின் கண்களில் முதலில் பட்டது பறம்பின் தலைநகரான `எவ்வியூர்'. வேட்டூரில் இருந்து நடந்து வரும்போது நீலன் சொன்னான், ``பாம்புத் தச்சன்தான் எவ்வியூருக்கு வடிவம் கொடுத்தவன்'' என்று. “பாம்புத் தச்சனா, அது யார்?” எனக் கேட்டார் கபிலர்.

“பாம்புக்கு வீடு கட்டும் தச்சன் யார்? எனத் திருப்பிக் கேட்டான் நீலன்.

“கறையான்” என்றார் கபிலர்.

“கறையான் கட்டியுள்ள புற்றைப்போல, ஆதிமலையின் நடுவில் உள்ள கரும்பாறையைச் சுற்றி பாறையோடு பாறையாகச் சற்றே குடைந்து, முன்னால் புற்றுமண்ணால் சுவர் எடுத்து மரச்சட்டகங்களால் வடிவமைக்கப்பட்ட வீடுகளைக்கொண்டது எவ்வியூர். கார்காலத்தில் மழை கொட்டித்தீர்க்கும். எவ்வளவு பெரிய மழை பெய்தாலும் உச்சியில் இருந்து கீழ்நோக்கிப் பாய்ந்தோடும் நீர், சிறு துளிகூடத் தேங்கி நிற்காது. கோடையில் கொடுங்காட்டுத் தீ பரவினாலும் உள்ளுக்குள் ஏறாது. சுட்டமண், மழைக்கு உறுதியானது; நெருப்பை உள்வாங்கும்; அனல் தாங்காமல் இளகி உருகும். ஆனால், புற்றுமண் நெருப்பை ஒட்டவிடாது, விலக்கிக் கொடுக்கும். நீரும் நெருப்பும் ஒன்றும் செய்துவிட முடியாத ஒரு கட்டுமானம். இவற்றுள் மிக வியக்கவைப்பது எவ்வி கட்டியுள்ள அரண்மனை. அதை நேரில் பார்த்தால்தான் உமக்குப் புரியும்” என்றான் நீலன்.

எவ்வியூரைக் காணும் வரை இதன் வடிவம் கபிலருக்குப் பிடிபடவில்லை. உண்மையில் ஆச்சர்யம் நிரம்பிய கட்டுமானம்தான் இது. இன்னும் அரண்மனையைப் பார்க்கவில்லை. அதைப் பற்றி ஒற்றை வரியில் முடித்துக் கொண்டான் நீலன். பார்த்ததன் வியப்பு பார்க்காததன் மீதே படிகிறது. அவருக்கு அரண்மனையைப் பார்க்க ஆசைதான். ஆனால், இந்த ஊரில் எந்தத் தெருவுக்குள் போனாலும் ஆச்சர்யத்தின் வழியாகத்தான் கடக்க வேண்டியிருக்கிறது.



பறம்புநாட்டில் மனிதன் உழைத்து விளைவிக்கக்கூடிய எந்த ஒரு பொருளும் இல்லை. தினை வகைகள், பழ வகைகள், காய்கறி வகைகள் எல்லாம் இயற்கையில் தாமாக விளைகின்றன. உணவு என்பது சேகரிப்புதானே தவிர, உற்பத்தி அல்ல. பிறநாடுகளைப்போல் உணவு உற்பத்திக்காகப் பெரும் உழைப்பைச் செலுத்தவேண்டிய தேவை இல்லை. பிறநாடுகளில் பெரும்பகுதி மக்கள் செய்யும் வேலைக்கு, இங்கு சிறு பொழுது மட்டுமே செலவழிக்கப்படுகிறது.

ஆண்களின் வாழ்வு முழுவதும் ஆயுதங்களோடுதான் கழிகிறது. வேட்டை தொடங்கி போர் வரை எல்லாவிதமான ஆயுதங்களையும் பயன்படுத்தும் அசாதாரணமான கலையை ஒவ்வொருவரும் கற்றிருக்கின்றனர். எட்டு வயதில் காடு அறிந்துவர வீட்டைவிட்டு வனத்துக்குள் அனுப்பப்படும் சிறுவர், அதன் பிறகு மாவீரராகத்தான் குடில் திரும்புகின்றனர். இவரின் முயற்சிக்கு இணையான முயற்சிகள் வேறு எங்கும் இல்லை.
இரண்டாவது, இயற்கையை அறிதல். தாவரங்கள், விலங்குகள், பறவைகள், காலநிலைகள் ஆகியவற்றைப் பற்றி இவருக்கு இருக்கும் பேரறிவுக்கு இணை சொல்லும் அறிவு வேறு எவருக்கும் இல்லை. அதனாலேயே இவர்கள் மருத்துவத்தில் அற்புதங்களைக் கைவரப்பெற்றவராக இருக்கின்றனர். மருத்துவம் கைவரப்பெற்றதாலேயே வீரத்தின் எல்லையை இன்னும் கூட்டுகின்றனர்.

பயிற்சியின்போது வாள்முனை நெஞ்சைக் கீறிப்போனாலும் கவலைகொள்ளும் வீரன் எவனும் இல்லை. `அத்தாப்பொறுத்தி' மூலிகையைக் கண்டறிந்த பிறகு, சதையை அறுத்துக்கொண்டுபோனாலும் அறுத்ததைப் பொறுத்திக்கொடுக்கிறான் மருத்துவன். பறம்பு நாடு அபரிமிதமான ஆற்றலோடு இருக்கிறது.

வெளிஉலகுக்குப் பெரிதாகத் தெரிவது பாரியின் புகழ்தான். ஆனால், அதைவிட பெரிய ஆற்றலும் அறிவும் ஆச்சர்யங்களும் இங்கு இருக்கின்றன. ஆனால், இவை எல்லாவற்றையும்விட கபிலர் அதிசயித்தது இந்த மக்களின் வாழ்முறையைத்தான்.



ஒவ்வொருவருக்கு எனத் தனித்த சொத்தும், எப்பாடுபட்டாயினும் அதைச் சேமித்துப் பெருக்க வேண்டும் என்ற பெருந்தாகமும் இங்கு இல்லை. இயற்கை பிற உயிரினங்களுக்கு வடிவமைத்த குண எல்லைகளைக் கடந்து மனிதன் போகவில்லை. மழை வந்ததும் செழிப்புறத் தழைத்து, வெயில் காலத்தில் வாடித் துவண்டு, மலரும்போது நறுமணம் வீசி, கனியும்போது அள்ளி வழங்கி, உதிரும்போது சத்தம் இல்லாமல் மண்ணில் மக்கி தம்மை உரமாக்கியபடி பயணத்தை முடித்துக்கொள்ளும் இந்த வாழ்க்கை, கபிலரை மண்டியிட்டு வணங்கவைத்தது.

கடம்ப மரத்தின் முன் மண்டியிட்டு வணங்கிய பாரி, நீண்ட நேரம் கழித்தே எழுந்தான். வேலன்பூசாரி குறி சொன்ன வார்த்தைகள் எவையும் அவனது காதுகளில் விழவில்லை. அவன் முருகனை வணங்கி நின்றான். ஆனால், அவன் மனம் வணங்கவில்லை. அவனுக்கு இருந்தது கோபம். அதைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகவே இறங்கி வந்தான். காற்றின் அசைவின்றி இறுகி நின்றது கடம்ப மரம். பாரியும் கோபம் தளர்த்தாமலே திரும்பினான். எதிரில் செய்தி சொல்ல ஒருவன் வேகமாக இறங்கி வருவது தெரிந்தது. பாரிக்கு ஆவல் மேலிட்டது. ‘அறுபதாங்கோழியைப் பற்றிய செய்தி வருகிறதோ!' என எண்ணினான். வந்தவன் வணங்கிவிட்டுச் சொன்னான், “குடநாட்டு அமைச்சர் கோளூர் சாத்தன் தங்களைக் காண வந்திருக்கிறார்.”

- *பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-9

கபிலர் எவ்வியூர் வருவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் நடந்த நிகழ்வு இது...

சித்தாற்றின் வடபுலத்தைச் சேர்ந்த பாணர் கூட்டம் ஒன்று, எவ்வியூருக்கு வந்திருந்தது. அவர்கள், வேட்டைச் சமூகப் பின்புலத்தில் இருந்து பாணர்களாக மாறியவர்கள்; யாழ் தெய்வமான மதங்கனையும் மதங்கியையும் வணங்குபவர்கள். இந்தக் குழுத் தலைவன் `மதங்கன்' என்றும், தலைவி `மதங்கி' என்றும் அழைக்கப்படுவர். தாங்களே வேட்டையாடி, அந்த விலங்கில் இருந்து யாழுக்கு நரம்பு எடுத்துக் கட்டுவர்; அந்த விலங்கின் தோல்கொண்டு பறை செய்வர்.

இவர்களின் கூத்து, நள்ளிரவுக்குப் பிறகுதான் தொடங்கும். அரிசியின் அளவு பருமன்கொண்ட யாழ் நரம்புகள் மீட்டப்பட்டு பறை ஒலிக்கத் தொடங்கும்போது, வேட்டை விலங்கின் சீற்றம் ஆரம்பம் ஆகும். சிறுபறையின் ஒலியில் தொடங்கும் கூத்து, நேரம் ஆக ஆக உக்கிரம்கொண்டு காட்டை மிரட்டும். குகை விலங்கு வெளியில் வந்து எட்டிப்பார்க்கும். அதன் கண்களுக்குள் இருக்கும் நீல ஒளி, இருளுக்குள் ஊர்ந்து இறங்கும். இந்தக் குழுவினரின் அடையாளமே தோல் கருவியான தடாரிதான். தடாரிகளைத் துணியால் கட்டி, கூடையில் வைத்து, காவடியைப்போல இருபுறமும் தூக்கி வருவார்கள். பயணத்தின்போது அவற்றைக் கீழ் இறக்கி மண்ணில் வைக்க மாட்டார்கள். தடாரி மண்ணைத் தொட்டால், அங்கு கூத்து நிகழ்த்தப்பட்டுத்தான் அவற்றைத் தூக்கவேண்டும். எனவே, கூத்து நடக்கும் இடத்தில் மட்டுமே அதைக் கீழே இறக்குவார்கள். மற்ற நேரங்களில் எல்லாம் காவடியைப்போல தோளிலும் கைக்குழந்தையைப்போல இடுப்பிலும் சுமந்தபடியே இருப்பர். தங்களின் முன்னோர்கள் வேட்டையாடிய யானையின் காலடியின் அளவுகொண்டே தடாரியை வடிவமைப்பர்.

கூத்து நிகழ்ந்துகொண்டிருக்கும் எந்தக் கணத்தில் தடாரிகளை எடுத்து, பெரும் மதங்கன் களம் இறங்குவான் எனத் தெரியாது. யாழ்தேவதை உருகி அழைக்க, ஏதோ ஒரு கணத்தில் சினம்கொண்டு இறங்குவான். தடாரிகள் எழுப்பும் ஒலி கேட்டு மலைதெய்வம் உள்ளொடுங்கும். மதங்கன், மலை நடுங்க ஆடுவான். தடாரிகளின் பேரொலி, காட்டைக் கிட்டித்து இடிக்கும். காட்டின் ஆதி மைந்தர்கள் ஆடிய ஆட்டம் அது. மதங்கனின் ஆட்டத்தைக் கதையாகக் கேட்கும்போதே பலரும் நடுங்குவர்.

மதங்கன் கூட்டம் வந்திருக்கிறது என்பதைக் கேள்விப்பட்ட பாரி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பாரி, இதுவரை மதங்கனின் கூத்தைப் பார்த்தது இல்லை. பாரியின் மனைவி ஆதினி. அவள் பொதினிமலையின் (பழநி) குலமகள். அவள் சிறுவயதில் பொதினிமலையில் தந்தையோடு சேர்ந்து மதங்கனின் நிகழ்வைப் பார்த்து, பயந்து அழுததைப் பற்றி பாரியிடம் பல நாள் சொல்லியிருக்கிறாள். ஏனோ பறம்பு நாட்டுக்கு மதங்கனின் கூட்டம் எதுவும் வந்தது இல்லை. நீண்ட காலத்துக்குப் பிறகுதான் பாரி கேள்விப்பட்டான், `சித்தாற்றங் கரையில் இருந்த நெட்டூர் மலையை சோழன் கைப்பற்றிவிட்டான்' என்று. அந்த மண்ணின் மகா கலைஞர்களான மதங்கர்கள், இப்போது அவனது கடல் பணிகளுக்கு ஏவல் வேலை செய்துகொண்டிருக்கின்றனர். யாழிசையின் பெருந்தேவிகளான அந்தக் குலப்பெண்கள், சோழ

அரண்மனையில் விறலிகளாக மாறிக்கிடக்கின்றனர். பேரரசை உருவாக்கும் கனவுக்கு எண்ணற்ற இனக் குழுக்கள் இரையாக்கப்பட்டுவிட்டன. `மதங்கர் இனமே முற்றிலும் அழிந்துபோய்விட்டது!' என நினைத்துக்கொண்டிருந்த பாரிக்கு, தப்பிப் பிழைத்த அந்தப் பாணர் குழுவைப் பார்த்ததில் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.




பாரிக்கு இரு மகள்கள். மூத்தவள் அங்கவை; இளையவள் சங்கவை. சிறுமியின் விளையாட்டை இன்னும் தொலைக்காமல் இருக்கும் சங்கவையைவிட ஆறு ஆண்டுகள் மூத்தவள் அங்கவை. பாரியின் குலக்கொடி. தந்தையின் எண்ணத்தை அவரது கண்களில் இருந்தே கண்டறிந்துவிடுவாள். தாய் ஆதினிக்கு அங்கவையின் மீதான ஆச்சர்யம் எப்போதும் நீங்கியது இல்லை. தான் அறியாத பாரியை இவள் எப்படிக் கண்டறிகிறாள் என எத்தனையோ முறை நினைத்திருக்கிறாள். `உனது சொல்லைத்தான் தந்தை கேட்பார்' என, ஒருமுறைகூட சொல்லியது இல்லை. ஆனால், `தந்தையைப்போலவே நீயும் சொல்கிறாயே!' எனச் சொல்லாத நாள் இல்லை. எது ஒன்றையும் அவளின் கண்கொண்டு பாரி பார்ப்பதும், பாரியின் எண்ணம்கொண்டு அங்கவை யோசிப்பதும் எப்போதும் நடக்கும் நிகழ்வுகள் ஆகிவிட்டன.



ஒருநாள் நண்பகலில் அருவிக் குளியல் முடித்து, உணவுக்குக் காத்திருந்தனர். சமையல் தயாராகிக்கொண்டிருந்தது. அருகில் இருந்த பாறையின் மீது ஏறி முடிகள் காய, சுடுவெயில் தாங்கி நின்றான் பாரி. சிறு துணியால் தலை துவட்டியபடியே ஆதினியும் அங்கவையும் பாறை ஏறி வந்தனர்.

“என்ன பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் தந்தையே?” எனக் கேட்டாள் அங்கவை.

குரல் கேட்டுத் திரும்பாமல், “கண்டுபிடி!” என்றான் பாரி.

எதிரில் விரிந்து பறந்த காடு. பின்புறம் கேட்கும் அருவியின் ஓசை, எங்கும் சிறகடித்துத் திரியும் பறவைகள், அவ்வப்போது வீசிச் செல்லும் காற்றின் சலசலப்பு என, அனைத்தையும் பார்த்தனர் ஆதினியும் அங்கவையும்.

பதிலுக்காகக் காத்திருந்தான் பாரி. ஆதினி சொன்னாள்... “எங்கும் பறவைகளின் குரல் கேட்கிறது. ஏதாவது ஒரு பறவையின் குரலில் துயரத்தின் சாயல் வெளிப்பட்டிருக்கும், அதைத்தான் நீங்கள் கவனித்துக்கொண்டிருக்கிறீர்கள்” என்றாள்.

அங்கவையோ, “இல்லை... தந்தை வேறு ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தார். அதை நான் கண்டு பிடித்துவிட்டேன்” என்றாள்.

சொல்லும்போதே அவளது முகத்தில் வெட்கம் பூத்து நின்றது. பாரி அவளை உச்சி முகர்ந்தான். ஆதினிக்குக் கோபம் வந்தது.

“அவள் எதைச் சொல்கிறாள். நீங்கள் எதைப் பார்த்தீர்கள்... சொல்லுங்கள்?” என்றாள் சற்றே பொறாமையுடன்.

அங்கவை சொன்னாள்... “அம்மா, அதோ அந்த மூலையில் சந்தனவேங்கை மரம் நிற்கிறது பாருங்கள். தந்தை அதைத்தான் பார்த்துக்கொண்டி ருந்தார்” என்றாள்.

இப்போது ஆதினி முகத்தில் வெட்கம் ஓடியது.
“இவ்வளவு நேரம் அந்தத் திசையைப் பார்த்துக்கொண்டு நின்றது அதனால்தானா?” என்றாள் ஆதினி.

“ஆம்... நம் மகளையும் காதல் அழைத்துச் செல்லும். அதற்குள் நாம் அவளுக்குச் செய்ய வேண்டியவற்றைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்” என்றான் பாரி.



“என்ன அது?” என ஆர்வத்தோடு கேட்டாள் ஆதினி.

“நிலம் எங்கும் அறியப்பட்ட பெரும் புலவர்கள் பரணரும் கபிலரும். அவர்களில் ஒருவரேனும் பறம்பு நாட்டுக்கு வர மாட்டார்களா என, பல நாட்கள் விரும்பியிருக்கிறேன். அந்த விருப்பம் இன்று வரை நிறைவேறவில்லை. என் மகள் மணமுடித்துச் செல்வதற்குள், அவர்கள் வர வேண்டும் என்று மனம் ஏங்குகிறது. அவர்கள் எழுத்து கற்றவர்கள். அவர்களிடம் இருந்து என் மகளும் என் மக்கள் சிலரேனும் எழுத்து கற்றால், எவ்வளவு நன்றாக இருக்கும்” என்றான் பாரி.

“அது எனக்கான உங்களின் விருப்பம் தந்தையே! அதைவிட ஆழமான ஆசைகள் உங்களிடம் உண்டு. அவை நிறைவேற வேண்டும் என்றுதான் நான் விரும்புவேன்” என அங்கவை சொன்னாள்.

பாரியே சற்று வியந்து, “எதைச் சொல்கிறாய்?” எனக் கேட்டான்.

அங்கவை சொன்னாள், ``பறம்பு நாட்டில் முழங்காத பறை இல்லை; ஆடாத கூத்து இல்லை; மீட்டாத யாழ் இல்லை. ஆனால், மதங்கர் கூட்டம் இந்த மண்ணை மிதிக்கவில்லை என்ற ஏக்கம் நீண்ட நாள் உங்களின் ஆழ்மனதில் உண்டு.

உங்களோடு அமர்ந்து அந்த விசையையும் கூத்தையும் நான் காண வேண்டும். அதுதான் எனது ஆசை” என்றாள்.

சமையல் தயாராகிவிட்டதால், கீழ் இருந்து அழைக்கும் குரல் கேட்டது.

“நீ போய் முதலில் சாப்பிடு. நாங்கள் வருகிறோம்” என்று மகளை அனுப்பிவைத்தான் பாரி. அவனது கண்கள் கலங்கியிருந்தன. கவனித்த ஆதினி என்ன என்று கேட்டாள்.

“மதங்கர் நாட்டை, சோழன் அடிமையாக்கிக்கொண்டான். அந்த மகத்தான இசைவாணர்கள் வர இனி வாய்ப்பே இல்லை” எனச் சொல்லும்போது பாரியின் குரல் உடைந்தது.

செய்வது அறியாது நின்ற ஆதினி, அவன் தோளைத் தொட்டாள். சற்றே ஆசுவாசம் அடைந்து நிதானித்தான் பாரி.

“சரி, வாருங்கள். அந்தச் சந்தனவேங்கை மரம் வரை போய் வருவோம்” என்றாள்.

சிறிய நகைப்போடு பாரி சொன்னான், “மகள் இருக்கும்போதே நீ அழைத்திருக்க வேண்டும். அந்தத் துணிவை ஏன் இழந்தாய்?”

ஆதினி சொன்னாள்... “எனது கண்களை நீங்கள் பார்த்திருந்தால் உங்களுக்குத் தெரிந்திருக்கும். நீங்கள்தான் அவற்றை நேர்கொண்டு பார்ப்பதே இல்லையே.”

இந்தத் தாக்குதலை பாரி எதிர்பார்க்கவில்லை. ஆதினியின் கண்கொண்டு பார்க்கத் தவறிய நாட்கள் எத்தனையோ! `காலம் எவ்வளவு வேகமாக அழைத்துக்கொண்டு போகிறது. கணவனின் இடத்தை தந்தை எந்தக் கணம் விழுங்குகிறான் என்பதை நிதானிக்கவே முடியவில்லையே!' என யோசித்துக் கொண்டிருக்கும்போது பாரி சொன்னான்...

“நீதான் எனது கண்கொண்டு பார்த்தவள்.”



புரியாமல் விழித்தாள் ஆதினி.

“உண்மையில், நான் அந்தப் பச்சைப்புறாவின் சற்றே மாறுபட்ட குரல் ஒலியைத்தான் கேட்டுக்கொண்டிருந்தேன். அங்கவை, காதல் பருவத்தில் நிற்கிறாள். அவளின் கண்களின் வழியே அவள் பார்க்கத் தொடங்கிவிட்டாள். அவளின் கண்களுக்கு சந்தனவேங்கைதானே முதலில் படும். அதைத்தான் தந்தை பார்த்திருப்பார் என நம்பிச் சொன்னாள்” என்றான்.

“நீங்கள் ஏன் அதை ஒப்புக்கொண்டீர்கள்?” எனக் கேட்டாள்.

மெல்லியச் சிரிப்போடு பாரி சொன்னான்... “குழந்தைகளிடம் விட்டுக்கொடுக்கும்போதும் தோற்கும்போதும்தான் ஓர் ஆண், தாய்மையை அனுபவிக்கிறான்.”

இதை ஆதினி எதிர்பார்க்கவில்லை. சற்றே கலங்கிய அவள், பாரியின் நெஞ்சில் சாய்ந்து சுடுவெயில் மறைய இதழ் பதித்தாள்.

நள்ளிரவு சிறுநிலவு, காடு எங்கும் சாம்பல் தூவிக்கொண்டிருந்தது. ஊர்மன்றலில் பந்தங்கள் ஏற்றப்பட்டு, எவ்வியூர் முழுக்கத் திரண்டிருந்தது. செய்தி கேள்விப்பட்டு, பலரும் இரவோடு இரவாக வந்துகொண்டிருந்தனர். மதங்கி, யாழ் மீட்டத் தொடங்கியதில் இருந்து, பார்வையாளர்கள் இமை சிமிட்டுவது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டிருந்தது. இசைக்கருவிகள் ஒவ்வொன்றாக இணைந்தன. சிறுபறையும் அரிப்பறையும் முழங்கும் போது இருள், நடுக்கம்கொள்ளத் தொடங்கியது. சலங்கை அணிந்த பெண்கள் இருவர், நெடுநிழல் நகர ஆவேசம்கொண்டு ஆடினர். பாரியின் இடதுபக்கம் அங்கவை அமர்ந்திருந்தாள். வலதுபக்கம் அமர்ந்திருந்த ஆதினியின் அருகில் சங்கவை இருந்தாள். வழக்கம்போல் பாரியின் பின்புறமாக நின்றிருந்தான் முடியன்.

`பாட்டாப் பிறை’ எனச் சொல்லப்படும் பாட்டன்மார்களுக்கான மேடையில் அமர்ந்து பார்த்துக்கொண் டிருந்தான் தேக்கன். அவர்களோடு தேக்கனின் வயதுடைய பெருசுகளும் உட்கார்ந்திருந்தனர்.

கூத்தின் பாங்கில் துயரத்தின் நெடுங்குரல் மேலே எழும்பியது. அழிந்த இனத்தின் கடைசிப் பாடகன், தனது குரல்நாளங்கள் வெடிப்பதைப்போல் பாடத் தொடங்கினான். இன்றோடு குரல் வெடித்துச் சாக வேண்டும் என்பதே அவன் விழைவாக இருந்தது. ஆறாத் துயரைக் கலையாக்கும்போது கலைஞன் படும் வேதனைக்கு இணைகூற சொல் இல்லை.

குரலும் சலங்கையும் யாழும் பறையும் ஒன்றை ஒன்று விலகியும் விழுங்கியும் நகர்ந்தன. போர்க் குதிரைகளின் விரட்டுதலில் இருந்து தப்பியோடும் ஓர் இசைக்கலைஞனின் காலடி ஓசை, தனித்து கேட்டுக்கொண்டிருப்பதைப்போல பாரி உணர்ந்தான். `அந்த ஓசை எந்தக் கருவியில் இருந்து வருகிறது?' என்பதை அவனது கண்கள் தேடிக்கொண்டிருந்தன. எல்லோரும் மெய்ச்சிலிர்த்துப் பார்த்துக் கொண்டிருந்த கணத்தில், இரு தடாரிகளோடு குதித்து உள்ளே இறங்கினான் மதங்கன். அதுவரை முழங்காமல் இருந்த அனைத்துத் தடாரிகளும் ஏக காலத்தில் ஒலி எழுப்பின. சற்றும் எதிர்பாராத பேரிசை. பாரியே குலுங்கி உட்கார்ந்தான். பயந்த சங்கவை, “அம்மா...” எனக் கத்திய ஓசை பக்கத்தில் இருப்பவருக்கு மட்டுமே கேட்டது. ஆதினி அவளை அணைத்து மடியில் இறுக்கிக்கொண்டாள். அதைக் கவனித்த பாரியின் கண்களுக்கு, சிறுவயதில் பயந்து கத்திய ஆதினியும் சேர்ந்து தெரிந்தாள்.

மதங்கன், தாவி உள்ளிறங்கிய இடத்தில் மண் பெயர்ந்து மேலே எழுந்தது. வேட்டையாடிய யானையின் காலடி நிலத்தை அதிரச் செய்வதைப்போல அது இருந்தது. ஓர் ஆட்டம் தொடங்கும் கணத்தில் இவ்வளவு ஆவேசம்கொண்டு நிகழுமா என்ற வியப்பு எல்லோருக்கும் இருந்தது. இருமுகப் பறையான தடாரியைக் கையால் அடித்து முழங்க வேண்டும். அவன் இரண்டு நடை முன்னும்

பின்னுமாகத் தவ்வித் தவ்வி தடாரிகளில் ஒலி எழுப்பிக்கொண்டிருந்தான். மதங்கனின் குடுமி கழன்று, சிகை சுழன்று எழும்பியது. ஆவேசம்கொண்ட மதங்கன், கால்களை முன்னும் பின்னுமாக மாற்றி, குதிக்காலால் குத்திக் குத்தி ஆடினான். மதயானை தனது நிழலைக் கொல்ல, மீண்டும் மீண்டும் தந்தத்தால் மண்ணைக் குத்துவதுபோல அது இருந்தது. எல்லா கருவிகளும் முழங்கிக்கொண்டிருந்தன. பாரி உறைந்த நிலையில் மதங்கனைப் பார்த்துக்கொண்டிருந்தான். மூதாதையர்களின் ஆதிக்கூத்து, மதங்கன் மயங்கிச் சரிந்ததோடு முடிந்தது.



பின்னிரவில் கூத்து முடிந்ததும் எல்லோரும் கலைந்தனர். கலைஞர்கள், இசைக்கருவிகளை துணிகளில் எடுத்துக் கட்டினர். மதங்கனை அருகில் அழைத்து அமரச்செய்த பாரி, அவன் உள்ளங்கையைத் தொட்டும் தடவியும் பார்த்தபடி நீண்ட நேரம் எதுவும் பேசாமல் இருந்தான். உள்ளங்கை சிவந்து இறுகிப்போய் இருந்தது.

“நீங்கள் இங்கேயே தங்கிவிடுங்களேன்” என்றாள் ஆதினி.

“இல்லை... நிலைகொள்ளக் கூடாது என்பது தெய்வவாக்கு” என்றான் மதங்கன்.

நிமிர்ந்து அவன் கண்களைப் பார்த்தான் பாரி.

“நாங்கள் தப்பி ஓடுகிறோம். மீளாத் துயர் எங்களை விரட்டுகிறது. ஓர் இடத்தில் நின்றுவிட்டால் துயர் முழுமையும் கவிந்துவிடும். அதனால்தான் மறுபகல் காணாமல் இரவோடு இரவாக ஆடிய நிலம்விட்டு அகல்கிறோம். விளக்கிச் சொல்ல மனதில் துணிவு இல்லை. எனவேதான் தெய்வவாக்கு என்கிறோம்” என்றான் மதங்கன்.

பாரிக்குச் சொல்ல எதுவும் இல்லை.

“உனக்கு என்ன வேண்டும்? எது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்” என்றான்.

மதங்கன் கேட்க, சற்றே தயங்கினான்.

“தயங்காமல் கேளுங்கள்” என்றார் பெரியவர் தேக்கன்.

மதங்கன், மெல்லியக் குரலில் கேட்டான்...

“வேறு எதுவும் வேண்டாம். கொல்லிக்காட்டு விதை கொடுங்கள்.”

பாரி அதிர்ந்து பார்த்தான். யாரும் எதிர்பாராத ஒன்று. என்ன பதில் சொல்வது எனத் தெரியவில்லை. `இப்படி ஒரு பொருள் இருப்பதே வெளியில் உள்ளவர்களுக்குத் தெரியாது. இதை எப்படிக் கேட்டான் மதங்கன்?' - நீடித்த மௌனம் கலைத்து தேக்கன் சொன்னான்...


“பறம்பின் ஆதிப்பொருட்கள், குலம் தாண்டக் கூடாது என்பது குலநாகினி வாக்கு. வேறு எது வேண்டுமானாலும் கேளுங்கள்.”

“குலநாகினியின் வாக்கு, காப்பாற்றப்படட்டும். நாங்கள் புறப்படுகிறோம்” எனச் சொல்லி, வேறு எதுவும் கேட்காமல் மதங்கன் எழுந்தான்.

அவன் உள்ளங்கை பாரியிடம் இருந்தது. தடாரியை அடித்து அடித்து வடுவேறிய கை. அதைத் தொட்டு அழுத்தியபடியே தலை நிமிராமல் பாரி சொன்னான்...

“எடுத்து வாருங்கள்.”

அரண்மனையை நோக்கி வீரர்கள் ஓடினர்.



மூன்று நாட்களுக்கு முன்னர்...

மதங்கன் கூட்டம், மேற்கு எல்லையின் வழியே பறம்பு நாட்டுக்குள் நுழைந்தனர். பன்றிக் காட்டின் அடிவாரம் இருக்கும் காட்டாலம்தான் முதல் கிராமம். அந்தத் திசை வழியே நுழையும் எந்தப் பாணர் கூட்டமும், அந்தக் கிராமத்தை வந்து அடையும். அதன் பிறகு வீரன் ஒருவன் அந்தக் கூட்டத்தை அழைத்துக்கொண்டு மூன்று நாட்கள் பயணித்து, எவ்வியூர் கொண்டுவந்து சேர்ப்பான். அப்படித்தான் இவர்களும் வந்தார்கள். வரும் வழியில் கூட்டத்தில் இருந்த பெண் ஒருத்தி மயங்கிச் சரிந்தாள். `என்ன?' என, அழைத்துவந்த வீரன் விசாரித்தபோதுதான் தெரிந்தது, ஆகாரம் இன்றி தொடரும் நான்காம் நாள் பயணம் இது என்பது. குடுவையில் இருந்த நீரைத் தெளித்து அவளை எழுப்பினர். `பக்கத்தில் கிராமம் எதுவும் இல்லை. உணவுக்கு என்ன செய்யலாம்?' என யோசித்த வீரன், சிறிது தொலைவில் இருந்த குளத்துக்கு அழைத்துச் சென்றான். மதங்கன் கூட்டமும் ஆவலோடு போனது.

குளக்கரையை அடைந்ததும், “நீங்கள் உட்காருங்கள், நான் மீன்பிடித்து வருகிறேன்” என்றான்.


“கையில் வலை இல்லை, குத்தீட்டி இல்லை. எதைவைத்து மீன் பிடிப்பாய்?” என மதங்கன் கேட்டான்.

இடுப்புத் துணியில் முடிந்துவைத்திருந்த சிறிய காய் ஒன்றை எடுத்துக்காட்டினான் வீரன்.

“இதைவைத்து எப்படி மீன் பிடிப்பாய்?” எனக் கேட்டான் மதங்கன்.

“பாருங்கள்” என்று சொன்ன வீரன். அந்தக் காயை அருகில் உள்ள கல்மீது வைத்துத் தட்டினான். அது இரண்டாக உடைந்தது. ஒரு துண்டை எடுத்து இடிப்புத் துணியில் முடிந்துகொண்டான். மறுதுண்டை கல்லால் தட்டி பொடிப்பொடியாக ஆக்கினான். அதைத் துளியும் மிஞ்சாமல் எடுத்து குளத்தில் தூவிவிட்டான்.

அவன் தூவிய இடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் மதங்கன். நீர் சிறிது கலங்க ஆரம்பித்தது. சிற்றலைகள் தோன்றின. வீரன் சொன்னான்... “இது கொல்லிக்காட்டு விதை. காக்காய்க் கொல்லி விதை என்றும் சொல்வோம். அதை மீன்களும் பறவைகளும் விரும்பித் தின்னும். பிறகு சிறிது நேரத்திலேயே மயக்கம் அடைந்துவிடும்” என்றான்.



மதங்கன் ஆச்சர்யத்தோடு கேட்டான்...

“மீன் எப்படி மயக்கம் அடையும்?”
“அதோ பாருங்கள்” என்றான் வீரன்.

மதங்கன் அந்த இடத்தைப் பார்க்க, மீன்கள் மேலும் கீழுமாகச் சுழன்றும் பிறண்டும் நீந்திக்கொண்டிருந்தன. பெருமீன் ஒன்று வாலை மட்டும் மெள்ள அசைத்தபடி மிதக்க ஆரம்பித்தது. வீரன் உள்ளே இறங்கி ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுக்க ஆரம்பித்தான். வாய் பிளந்து நின்ற மதங்கன் அதை வாங்கினான். எட்டு பேருக்குத் தேவையான மீன்களை எடுத்த பிறகு, வீரன் கரை ஏறினான். இன்னும் சில மீன்கள் மிதந்து கொண்டிருந்தன.
“நமக்கு இவை போதும்; அவை சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்து நீருக்குள் சென்றுவிடும். அது வரை

பறவைகள் எதுவும் கொத்தாமல் பார்த்துக்கொள்ளுங்கள்” என்று சொல்லிவிட்டு, நெருப்புமூட்ட தீக்கல் எடுக்கச் சென்றான் வீரன்.




மதங்கன் பார்த்துக்கொண்டே இருந்தான். அரண்மனைக்குச் சென்ற வீரர்கள், பெரும் தாழிப்பானையைத் தூக்கிவந்து பாரியின் முன்னால் வைத்தனர். மதங்கனின் கண்கள் ஆச்சர்யம் நீங்காமல் பானைக்குள் பார்த்தன. அதே காய்கள். பாரி சொன்னான்... “எவ்வளவு வேண்டுமோ எடுத்துக்கொள்ளுங்கள்.”

தேக்கனின் மனம் பதறியது. ஆதினிக்கு என்ன சொல்வது எனப் புரியவில்லை. குல வழக்கங்களை மீறும் இடங்களுக்குச் சாட்சியாக நிற்பவர் யாராக இருந்தாலும் உள்நடுக்கம்கொள்வர். எல் லோருக்குள்ளும் ஒருவித அச்சம் உண்டானது. இறுக்கமான அந்தச் சூழலில் மதங்கனின் இரு கைகளும் தாழிக்குள் இருந்து கொல்லிக்காட்டு விதையை கைநிறைய அள்ளின. தடாரி பேரொலி எழுப்பியபோது உணர்ந்ததைப்போல, பல மடங்கு நடுக்கத்தை இப்போது உணர்ந்தனர்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-10



யவனர்களின் `சொலாண்டியா' கப்பல், வழக்கம்போல் அரபுத் துறைமுகங்களில் தங்காமல், ஓசிலிஸ் வழியாக சிந்துநதியின் முகத்துவாரத்தில் இருக்கும் பாப்பரிக்கோன் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது. கப்பலின் மாலுமி எபிரஸ், நீண்டகால கடல் அனுபவம் பெற்றவன். கடற்காற்றின் குறிப்பு அறிந்து கப்பலைச் செலுத்துவதில் கைதேர்ந்தவன். அதனால்தான் மிகப்பெரிய கப்பலான `சொலாண்டியா'வின் பயணம் இவன் வசமே பல ஆண்டுகளாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. கப்பலின் பாதுகாப்புத் தளபதி திரேஷியன். தனி ஒருவனே கப்பலை நகர்த்திவிடுவது போன்ற உடல் அமைப்பு கொண்டவன். கடற்கொள்ளையர்களிடம் இருந்து தற்காத்து, `சொலாண்டியா'வின் பயணம் தொடர்ந்து வெற்றிகரமாக அமைய, இவனே முதற்காரணம். இவனது படைவீரர்களும் அபாரத் திறமைகொண்டவர்கள்.




பாப்பரிக்கோன் துறைமுகம், சரக்கு வர்த்தகத்தில் முக்கியமானது எனச் சொல்ல முடியாது. ஆனாலும் கப்பல்கள் பல நாட்கள் இங்கு தங்கிச் செல்வது வழக்கம். காரணம், இந்த நிலப்பரப்பின் தனித்த அடையாளமாக விளங்கும் யவன - இந்திய வம்சக் கலப்பால் உருவான அழகிகள். ஒரு சாயலில் யவனத் தேவதைகளாகவும் மறு சாயலில் இந்தியப் பதுமைகளாகவும் காட்சிதருபவர்கள். அவர்களின் படுக்கையைவிட்டு, கப்பல் மாலுமிகள் அவ்வளவு எளிதில் விலகுவது இல்லை.


நீலம் பூத்த கண்களையும் செழித்த கொங்கைகளையும் ஒருசேரப் பார்க்கும் எந்த ஆணும் அணைத்த கையைப் பிரித்து எடுக்க மாட்டான். வேறு வழியே இல்லாமல்தான் எபிரஸ் வெளியேறி கப்பலுக்கு வந்துசேர்வான். ஆனால், திரேஷியன் வந்துசேர அதன்பின் ஒரு வாரம்கூட ஆகலாம்.

`உடலே ஒரு மர்மக்குகைபோல் இருக்கிறது எபிரஸ். வெளிர்மஞ்சள் நிறங்கொண்ட யவன அழகிக்குள் நுழைந்து, கருமஞ்சள் நிறங்கொண்ட இந்தியப் பதுமையின் வழியே கரை சேர்ந்தேன்' எனச் சொல்லியபடி கப்பலுக்கு வருவான். அவனைக் கோபம்கொள்ள முடியாது. ஏனென்றால், இந்தப் பயணத்தின் மிக ஆபத்தான பகுதி இனிமேல்தான் இருக்கிறது.

கச் வளைகுடா, ஆழமற்றது மட்டும் அல்ல... கூர்மையான பாறைகள் நிரம்பியதும்கூட. எந்த நேரத்திலும் கப்பலின் அடிப்பாகம் நொறுங்கும் ஆபத்து உண்டு. மிகக் கவனமாக அதைக் கடந்து சுபாகரா வந்து சேர வேண்டும். கரையை ஒட்டிப் பயணிக்கும் இந்தப் போக்குவரத்துதான், துருவங்களைக் கடந்த வணிகத்துக்கு அச்சாணியாக இருக்கிறது. ஆனால், அவற்றின் மிக ஆபத்தான பகுதிகளான மேலிமேடுவும் மங்களகிரியும் அடுத்தடுத்து உள்ளன. இதைக் கடற் கொள்ளையர்களின் நாடாக யவனர்கள் குறித்துவைத்துள்ளனர். இதைக் கடப்பதுதான் மொத்தப் பயணத்திலும் மிகச் சவாலான காரியம். இதை வெற்றிகரமாகக் கடந்துவிட்டால், அதன் பிறகு தீண்டிஸுக்கு வந்துவிடலாம். யவனர்கள் தொண்டியைத்தான், `தீண்டிஸ்' என அழைத்தார்கள். அவர்கள் இந்த நிலப்பரப்புக்கு, சம்புத்தீவு அதாவது `நாவலந்தீவு' எனப் பெயர் இட்டிருந்தார்கள். நாவல் மரங்கள் அதிகம் இருக்கும் காரணத்தால் இந்தப் பெயர். இந்த நிலப்பரப்பு நாற்சதுர வடிவில் உள்ளது என்றும், இதில் அறுபத்தைந்து நதிகளும் நூற்றிப்பதினெட்டு நாடுகளும் உள்ளன எனவும் அவர்கள் குறிப்பு எடுத்துவைத்திருந்தனர். இந்த நாற்சதுரத்தின் ஒருமுனை திரும்பும் இடமே தொண்டி.

இங்கு வந்துவிட்டால் அதன் பிறகு மிகப் பாதுகாப்பான பயணம் ஆரம்பம் ஆகும். அதுமட்டும் அல்ல, இந்த நெடும் பயணத்தின் முக்கிய வணிகமே இனிமேல்தான் உள்ளது. நாற்சதுரத்தின் முதல்முனையான தொண்டியை விட்டுத் திரும்பும் கப்பல்கள், அடுத்து முசிறியை அடையும். அதன் பிறகு சற்றுப் பயணித்து மறு திருப்பத்தில் குமரியை அடையும். அங்கு இருந்து கொற்கைக்குச் செல்லும். பின்னர் புகார் வந்துசேரும். கப்பலின் பெரும்பாலான பொருட்கள் இறக்கி - ஏற்றப்பட்டு, கப்பல்கள் மீண்டும் யவனத்தை நோக்கிப் பயணத்தைத் தொடங்கும்.

`**சொ**லாண்டியா' கப்பல், நற்பகலில் தொண்டி துறைமுகத்துக்குள் நுழைந்தது. பிரமாண்டமான கப்பலின் வருகை மிகத் தொலைவிலேயே கண்டறியப்பட்டுவிடும். பாய்மரத்தின் உப்பிய வயிற்றில் விலைமதிப்பற்ற வணிகத்தைச் சூல்கொண்டுவரும் யவனத் தேவதையைப்போல, `சொலாண்டியா' வந்து நிற்கும். கடற் காகங்களின் கரைச்சல் அலையின் சத்தத்தையும் மிஞ்சிக்கொண்டிருக்க, எபிரஸ் நங்கூரத்தை இறக்க உத்தர விட்டான்.




சேரர் குலம், இரு வம்சாவழியாகப் பிரிந்து நாளாகிவிட்டது. முன்னவன் உதியன் பரம்பரை என அழைக்கப்பட்டான். வஞ்சியைத் தலைநகராகக்கொண்டு, முசிறியைத் துறைமுகப்பட்டணமாக அமைத்து அவன் ஆட்சி நடத்தினான். அவனது நாடு `குட்ட நாடு' என அழைக்கப் பட்டது. பின்னவன் அந்துவன் பரம்பரை என அழைக்கப்பட்டான். மாந்தையைத் தலைநகராகக்கொண்டு, தொண்டியைத் துறைமுகப்பட்டணமாக அமைத்து அவன் ஆட்சி நடத்தினான். அவனது நாடு `குடநாடு' என அழைக்கப்பட்டது. இருவரும் சேரனின் வம்சக்கொடி தாங்களே என்று உரிமைகொள்வர். ஆனாலும் முன்தலைமுடி வைத்துக்கொள்ளும் உரிமை முன்னவனான உதியன் பரம்பரைக்கே இருந்தது.

கடற்கரை மாளிகையில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தான் எபிரஸ். வழக்கம்போல் பவளக்கற்களும் ரசக்கண்ணாடிகளும் மதுப்புட்டிகளும் இறங்கிக்கொண்டிருந்தன. பதிலுக்கு அந்தத் துறைமுகத்தில் இருந்து ஏற்றப்படவேண்டிய பொருட்கள்... மிளகும் உதிரவேங்கை மரத்தின் பட்டைகளும்தான். குடநாட்டில் மிளகு விளையும் பகுதி அளவில் சிறியதே. அதனால், அந்தக் கடற்கரையில் சில திறளிமரப் படகுகளே நின்றன. உதிரவேங்கைப்பட்டை மிகுந்த மருத்துவக் குணம்கொண்டது. அதை யவனர்கள் முக்கியமாக வாங்குவர். இரு பொருட்களைச் சேர்த்தாலும் இங்கு நடக்கும் வர்த்தக மதிப்பு மிகக் குறைவுதான். எனவே, வேகமாக சரக்கை இறக்கிவிட்டுச் செல்வதிலேயே மாலுமிகளும் உடன் வந்துள்ள வியாபாரிகளும் தீவிரமாக இருப்பர். ஏற்றவேண்டிய பொருட்களை, திரும்பி வரும்போதுதான் ஏற்றுவர்.

பொருட்கள் எல்லாம் இறக்கப்பட்டுவிட்ட தகவல் கிடைத்ததும் எபிரஸ், மாளிகையில் இருந்து புறப்படத் தயார் ஆனான். அப்போது மாளிகைக்கு வந்தான் குடநாட்டு அமைச்சன் கோளூர்சாத்தன். தளபதிக்குரிய உடலமைப்பும், அமைச்சனுக்குரிய அறிவுக்கூர்மையும் ஒருங்கே அமையப்பெற்றவன். யவனத்துடனான குடநாட்டு வர்த்தகத்தை முதல்நிலைக்குக் கொண்டுவர வேண்டும் எனத் தீவிரமாக முயல்பவன். அவனுடன் இரு வணிகர்களும் வந்திருந்தனர்.

திரேஷியன், தனது கப்பலை நோக்கி வந்தான். அவன் வீரர்கள், தளபதிக்கு உரிய ஆயுத மரியாதையைச் செய்து அவனை கப்பலுக்குள் வரவேற்றார்கள். உள்ளே வந்த பிறகுதான் அவனுக்குத் தெரிந்தது எபிரஸ் இன்னும் வரவில்லை என்பது.



“எப்போதும் எனக்கு முன்னமே வந்துவிடுவானே, ஏன் தாமதம்?” எனக் கேட்டான். யாருக்கும் தெரியவில்லை. குடநாட்டு அழகிகளால் காலதாமதம் ஏற்பட வாய்ப்பு இல்லையே என யோசித்தபடி, அவனது மாளிகையை நோக்கி திரேஷியன் நடந்து போனான். வீரர்கள் அணிவகுத்துச் சென்றனர்.

காவலாளி கதவைத் திறக்க, மாளிகையின் உள்ளே நுழைந்தான் திரேஷியன். ஆச்சர்யம் நீங்காத நிலையில் எபிரஸ் உட்கார்ந்து இருந்ததைக் கண்டான். அவனது எதிர் இருக்கையில் கோளூர்சாத்தனும் வணிகர்கள் இருவரும் உட்கார்ந்து இருந்தனர். நடுவில் இருந்த பலகையின் மேல் தங்கத்தாலான வட்டத்தட்டில் `கொல்லிக்காட்டு விதைகள்’ வைக்கப்பட்டிருந்தன.

“புகார் சென்று திரும்புவதற்குள் நீங்கள் சேகரித்துவையுங்கள். இதற்கு என்ன விலை கொடுக்கவும் நான்

தயார்!” என்று அவர்களிடம் சொல்லிவிட்டு எழுந்தான் எபிரஸ். கப்பல் நோக்கி அவனும் திரேஷியனும் பேசிக்கொண்டே வந்தனர்.
எபிரஸ் சொன்னான்... “ஒருவேளை இந்த வியாபாரம் கைகூடினால் தொண்டி துறைமுகம் பிற மூன்று துறைமுகங் களையும் வணிகத்தில் விஞ்சிவிடும். அதுமட்டும் அல்ல, நாம்தான் யவனத்தின் அதிசக்தியுள்ள மந்திர மனிதர்களாக மாறுவோம்.”

கடம்ப மரத்தில் இருக்கும் முருகனை வழிபட்டுத் திரும்பும் பாரியிடம், “குடநாட்டு அமைச்சன் வந்திருக்கும் செய்தி சொல்லப்பட்டது. அவன் காத்திருந்த மாளிகையை நோக்கிச் சென்றான் பாரி. உடன் முடியனும் பெரியவர் தேக்கனும் வந்தனர். சேரகுலத்தின் அந்துவன் பரம்பரையின் மீது மட்டும் சிறுமதிப்பு, பறம்பு நாட்டுக்கு உண்டு. அதனால்தான் அவர்கள் அழைத்துவர அனுமதிக்கப்பட்டனர். கபிலர் வந்ததால் எவ்வியூரே கொண்டாட்டத்தில் திளைத்துக் கொண்டிருந்த நேரம் இது. பாரியின் மனம் பூத்துக் கனிந்திருந்தது. அறுபதாங்கோழி இன்னும் கிடைக்கவில்லை என்ற கவலை மட்டுமே மனதின் ஓரத்தில் இருந்தது. அதுவும் எந்த நேரத்திலும் சரியாகிவிடக்கூடியதுதான்.
மாளிகைக்குள் நுழையும் பாரியின் முகமலர்ச்சியைப் பார்த்த அமைச்சன், கோளூர்சாத்தன் அகமகிழ்வுகொண்டான். தான் வந்த காரியம் நல்லபடியாக முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு ஆழமானது. அவன் கொண்டுவந்த பரிசுப்பொருட்களை பாரி அமரும் இருக்கைக்கு முன்பாகப் பரப்பி வைத்திருந்தனர். யவனத்தில் இருந்து வாங்கப்பட்ட ரசக்கண்ணாடி, நடுவில் வைக்கப்பட்டிருந்தது. கண்ணாடியின் மேல் இரண்டு யவன அழகிகளின் உருவங்களைக் கொண்ட மரவேலைப்பாடுகள் இருந்தன. இருக்கையில் அமரும் பாரியின் முகத்தைப் பிரதிபலிப்பதைப்போல அந்தக் கண்ணாடி வைக்கப்பட்டிருந்தது.

அமைச்சன் ஆரம்பித்தான்...

“பறம்பின் மாமன்னரை வணங்குகிறோம். குடநாட்டு வேந்தன், `குடவர்கோ’வின் அன்புப் பரிசை நீங்கள் ஏற்க வேண்டும்” என்று முன்னால் பரப்பி வைக்கப்பட்டிருந்தவற்றைப் பார்த்துச் சொன்னான்.
பாரியின் உதட்டோரம் தொடங்கிய மெல்லிய சிரிப்பு, முழுமைகொள்ளாமல் வேகமாக முடிந்தது.

“வந்ததன் நோக்கம்?”

காணிக்கையை ஏற்பதைப் பற்றி எந்தவித பதிலும் சொல்லாமல், பாரி கேள்விக்குள் போனது சற்றே ஆச்சர்யத்தைக் கொடுத்தது. அமைச்சன் சொன்னான், “குடநாட்டு வேந்தர், வணிகப்பேச்சு ஒன்றுக்காக என்னை அனுப்பிவைத்தார்.”

“வணிகம், இயற்கைக்கு விரோதமானதே! அதை ஏன் என்னிடம் பேசவந்தீர்கள்?”

அமைச்சன் எச்சில் விழுங்கினான்.

``வணிகம்தானே ஓர் அரசின் அச்சாணி. வணிகம் செழித்தால்தானே அரசு செழிக்கும். அரசு செழித்தால்தானே மக்கள் செழிப்பர்.”

“வணிகமே இல்லாததால்தான் நாங்கள் செழித்திருக்கிறோம்” என்று சொன்ன பாரி, சற்று இடைவெளிவிட்டுச் சொன்னான், “எந்த மன்னனின் காலடியிலும் பறம்பின் தட்டுக்கள் பணிந்துவைக்கப்பட்டது இல்லை என்பதை அறிவீரா?”
அமைச்சன், அதிர்ச்சி அடைந்தான். பாரி தொடர்ந்தான்...

“இயற்கை வழங்குகிறது; நாம் வாழ்கிறோம். இடையில் விற்கவும் வாங்கவும் நாம் யார்?’’

“கொள்ளாமலும் கொடுக்காமலும் எப்படி வாழ முடியும் மன்னா? பறம்பு நாட்டுக்குத் தேவையான உப்பை உமணர்களிடம் இருந்து நீங்கள் வாங்கத்தானே செய்கிறீர்கள்?”




“எங்களுக்குத் தேவையானதையும் அவர் களுக்குத் தேவையானதையும் பரிமாறிக்கொள்கிறோம். பகிர்ந்து உண்பதும் பரிமாறி வாழ்வதும், இயற்கை நமக்குக் கற்றுக்கொடுத்தவை.”

“அதுதானே வணிகமும்.”

“இல்லை... பரிமாற்றம் என்பது தேவை சார்ந்தது. வணிகம் என்பது ஆதாயம் சார்ந்தது. ஆதாயம் மனிதத்தன்மையற்றது; மாண்புகளைச் சிதைப்பது. யவன அழகிகளை எனது காலடியில் வந்து பரப்ப உங்களைத் தயார்செய்வது. இதனினும் கீழ்மை அடையத் தூண்டுவது” எனச் சொன்ன பாரி, சற்றே குரல் உயர்த்திச் சொன்னான்... “நான் சொல்வது விளங்கவில்லையா? எனது காலடியில் யவன அழகிகளின் சிற்பத்தைப் பரப்புகிற உன் மன்னன், இதைவிட பெரிய ஆதாயத்துக்காக வேறு யாருடைய காலடியில் எவற்றை எல்லாம் பரப்புவான்?”

அமைச்சனின் நாடி நரம்புகள் ஒடுங்கின.

“நாட்டை ஆள்பவர்கள் நீங்கள். அமைச்சர் களாகிய நாங்கள் உங்களின் சொற்கேட்டுப் பணியாற்றுபவர்கள்” - தற்காத்துப் பதில் சொன்னான் அமைச்சன்.

“நாங்கள் ஆள்பவர்கள் அல்லர்; ஆளப்படு கிறவர்கள். இயற்கைதான் எங்களை ஆள்கிறது.”

சற்று மௌனத்துக்குப் பிறகு அமைச்சன் சொன்னான், “உங்களையும் பறம்பு நாட்டையும் எந்தக் கணமும் அழிக்கத் துடித்துக்கொண்டிருக்கிறான் குட்டநாட்டு அரசன் உதியஞ்சேரல். அவனே இப்போது யவன வணிகத்தில் உச்சத்தில் இருக்கிறான். அவனிடம் சேரும் ஒவ்வொரு செல்வமும் பறம்பு நாட்டுக்கு எதிரான போர் ஆயுதமே. வணிகத்தில் அவனை விஞ்ச குடநாட்டுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. நீங்கள் எங்களுக்கு உதவினால், எங்களால் அதைச் சாதிக்க முடியும். உதியஞ்சேரலைப் பின்னுக்குத் தள்ள முடியும். நாங்கள் பறம்பின் நண்பர்கள். என்றும் உங்களுக்குத் துணை நிற்போம்.”

“எங்களை நீங்கள் எதிர்க்க முடியாததனால், நண்பர்கள் எனச் சொல்லிக்கொள்வதை ஏற்க மாட்டோம். நட்பின் பொருள் மிக ஆழமானது. உதியஞ்சேரலைப்போல வணிகத்தில் நீங்களும் பெரும்செல்வம் ஈட்டுவீர்களானால், இவ்வளவு பணிவுடன் பேசுமாறு உங்கள் மன்னன் சொல்லி அனுப்ப மாட்டான்.”

“அப்படி என்றால் எங்களுக்கும் குட்டநாட்டு அரசுக்கும் வேறுபாடு இல்லை என்று கருதுகிறீர்களா?”

“உண்டு... உதியஞ்சேரலின் தந்தை, என்னால் கொல்லப்பட்டவன்; உங்கள் மன்னனின் தந்தை என்னால் வாழ அனுமதிக்கப்பட்டவன். அதுமட்டுமே உங்கள் இருவரின் அணுகுமுறை வேறுபாட்டுக்குக் காரணம். வேறு அடிப்படைக் காரணங்கள் இல்லை.”

புறப்படவேண்டிய நேரம் வந்துவிட்டதை அமைச்சன் உணர்ந்தான்.

“ஒன்று மட்டும் சொல்ல வேண்டும் எனத் தோன்றுகிறது. சொல்ல அனுமதிப்பீர்களா?”

“என்ன?”

“உட்கார்ந்த கணத்தில் மூன்று முறை இந்த ரசக்கண்ணாடியை நீங்கள் பார்த்தீர்கள். உங்களை அறியாமலேயே உங்களின் கை, மீசையைச் சரிபடுத்திக்கொண்டது. இந்த வேளையில் நீங்கள் தனித்து இருந்தால் அது உங்களை முன்னூறு முறை பார்க்கவைத்திருக்கும். உங்களின் தேவையாக அது மாறும். எது ஒன்றையும் தேவையானதாக மாற்றுவதுதான் வணிகம். வணிகத்திடம்தான் ஆசையின் திறவுகோல் உள்ளது. அதை வெல்லும் ஆற்றல் யாருக்கும் இல்லை.”

“இதுவரை நீ எங்களைப் பார்த்தது இல்லை. இப்போது பார்த்துவிட்டாய் அல்லவா? இதை வெல்லும் ஆற்றல்கொண்டவர்கள் இருக்கிறார்கள் என உலகுக்குச் சொல். நீ போகலாம்” - சொல்லிவிட்டு எழுந்தான் பாரி.



**பா**ரியின் வருகையை, அவன் குடும்பமே எதிர்பார்த்துக் காத்திருந்தது. மாளிகையின் மூன்றாம் கதவு திறக்க, அவன் உள்நுழைந்தான். ஆவலோடு எதிர் நின்ற அங்கவை கேட்டாள், “என்ன தந்தையே இவ்வளவு நேரம்?”

“வணிகம் பேச குடநாட்டு மன்னன் ஆள் அனுப்பியிருந்தான்”.

அருகில் இருந்த ஆதினி சற்றே பதற்றமாகி பாரியின் முகத்தைப் பார்த்தாள். அங்கவை அம்மாவின் கரம் பற்றி சொன்னாள், “கபிலர் வந்திருப்பதால் தந்தை கோபம்கொண்டிருக்க மாட்டார். இல்லையா தந்தையே!”

“ஆம் மகளே... வணிகம் பேசித் திரும்பும் ஒருவனுக்கு, கை கால்கள் இருப்பதைப் பார்க்க எனக்கும் ஆச்சர்யமாகத்தான் இருந்தது.”

“என்ன வணிகம் பேச வந்தான்?”

“அதை நான் கேட்கவில்லையே மகளே.”

“அதனால்தான் அவன் தப்பிப் போயிருக்கிறான்.”

பாரி, மாளிகையின் மையத்தில் இருந்த இருக்கையில் அமர்ந்தான். அவன் அருகில் வந்து அமர்ந்த இளையவள் சங்கவை, தந்தையின் கையை தனது மடியின் மேல் வைத்து சேவல் இறகால் மெள்ள வருடினாள். பாரி கேட்டான், “ஆவலோடு எதிர்பார்த்ததாகச் சொன்னீர்களே எதற்காக?”

மூவருக்குமே பாரியின் கேள்வி ஆச்சர்யத்தை உண்டுபண்ணியது.

“என்ன தந்தையே... வந்தவன் உங்களின் மனநிலையைத் தொந்தரவு செய்வதைப்போல் எதையும் கேட்டானா?”

“அப்படி எதுவும் இல்லை மகளே.”

“எங்களின் தந்தையை நாங்கள் அறிவோம். மறைக்க முயலாதீர்கள்?”

“இவ்வளவு தொலைவு மேல் ஏறிவந்து வணிகம் பேசுகிறான் என்றால், அவனது துணிவுக்குக் காரணம் அவனுடைய வலிமையாக இருக்காது. அவன் பெற விளையும் ஆதாயமாக இருக்கும் எனத் தோன்றுகிறது. என்ன பொருளுக்காக வந்தான் என்பதைக் கேட்டிருக்க வேண்டும்.”

“அதற்காகக் கவலைகொள்ளாதீர்கள். வந்தவர்களைத் திருப்பி அனுப்ப, எல்லை வரை முடியனும் போயிருக்கிறான் அல்லவா... நிச்சயமாக அறிந்துவருவான்” என்றாள் ஆதினி.
சங்கவை, பாரியின் கைகளை இறகால் வருடியபடியே இருந்தாள்.

“என்ன மகளே, தந்தைக்கு வருடிக்கொடுக்கிறாய்?”
“ஆம் தந்தையே... சேவல் இறகால் வருடினால் சுகமாக இருக்கும் அல்லவா! அதனால்தான்...”

“மயில் இறகுதான் வருடுவதற்கு ஏற்றது.”
“ஆனால் இந்த இறகுதானே உங்களுக்குப் பிடிக்கும்” எனச் சொன்னவள் தந்தையின் முகம் பார்த்துச் சொன்னாள், “இது சேவலின் இறகு. ஆனால், கோழியினுடையது.”
அப்போதுதான் பாரிக்குப் புரிந்தது.

“அறுபதாங்கோழி கிடைத்துவிட்டதா?” எனக் கத்தியபடி மகள்களை வாரி அணைத்தான் பாரி.

எல்லையைக் கடக்க, சிறிது தொலைவே இருந்தது. கோளூர்சாத்தன் குழுவினருடன் முடியனும் பறம்பின் வீரர்கள் சிலரும் வந்துகொண்டிருந்தனர். முன்னால் செல்லும் முடியனின் இடுப்பின் ஒருபக்கம் வாளும் மறுபக்கம் கொம்பும் தொங்கிக்கொண்டிருந்தன. அதைப் பார்த்தபடி வந்துகொண்டிருந்தான் கோளூர்சாத்தன்.

`விரி ஈட்டி, கேடயம், சூரிவாள் என எவ்வளவோ ஆயுதங்களை உருவாக்கி பிற நாடுகள் முன்னேறி விட்டன. இன்னும் இடுப்பில் கொம்பைக் கட்டிக்கொண்டு அலைகிற இந்த மலைவாசிக் கூட்டத்துக்கு வணிகத்தின் பயனை எப்படிப் புரியவைப்பது?’ என்ற எண்ணமே கோளூர் சாத்தனின் மனதில் ஓடிக்கொண்டிருந்தது.

முன்னால் போய்க்கொண்டிருந்த முடியன் கேட்டான், “எந்தப் பொருளுக்காக வணிகம் பேச வந்தீர்கள்?”

கோளூர்சாத்தனின் முகம்  மலரத் தொடங்கியது. தனக்குள் ஓடியதுபோலவே வணிகம் சார்ந்த எண்ணமே இவனுக்குள்ளும் ஓடியிருக்கிறது. அந்த ஆர்வத்தில்தான் கேட்கிறான். அதை ஊதிப் பெரிதாக்கிவிடலாம். இன்று இல்லாவிட்டாலும் நாளை உதவும் என எண்ணினான். உடன்வந்த வணிகனைப் பார்த்துக் கை அசைத்தான். அதில் ஒருவன் தனது இடுப்பில் முடிச்சிட்டிருந்த கொல்லிக்காட்டு விதையை எடுத்துக் கொடுத்தான்.

அதை வாங்கிய முடியனின் கை நடுங்கியது. கண்கள் நம்ப மறுத்து அந்த விதையைக் கூர்ந்து பார்த்துக்கொண்டே இருந்தன. உயிரற்ற குரலில் கேட்டான், “என்ன விலை கொடுத்திருந்தாலும் மதங்கன் இதை விற்றிருக்க மாட்டான். அவனை என்ன செய்தீர்கள்?”
கோளூர்சாத்தன் அசட்டுச் சிரிப்போடு கேட்டான், “உனக்கு என்ன வேண்டும் கேள்?”
**அ**த்திமதுவும் அறுபதாம்கோழியின் கறியும்  கபிலருக்கு விருந்தாக்கப்பட்டன. அவருக்கு அரண்மனையில் நடக்கும் முதல் விருந்து. பாரி மனைவி ஆதினியும் மகள்கள் அங்கவையும் சங்கவையும் கபிலரை இன்றுதான் சந்திக்கின்றனர். இந்த நாளுக்காகத்தான் அவர்கள் தவியாய்த் தவித்திருந்தனர்.

அரண்மனையின் மேல்வட்ட அறையில் இரவு எல்லாம் ஆட்டமும் கூத்துமாக இருந்தது. வேட்டூர் பழையனுக்கும் நீலனுக்கும் அறுபதாங்கோழியின் கறித்துண்டு ஆளுக்கு ஒன்று கிடைத்தது. பாரிக்குத்தான் அதுவும் இல்லை. கபிலர் சொன்னார், “உன்னோடு சேர்ந்து கள் அருந்தும் நாள்தான் வாழ்வின் திருநாள் என்று நீலன் சொன்னான்” என்றார். பெருங்குவளை நிறையக் கள்ளினை ஊற்றி, அதை நீலனுக்குக் கொடுத்தபடி பாரி சொன்னான், “உனக்கு கள் ஊற்றிக் கொடுக்கும் இந்த நாள்தான் என் வாழ்வின் திருநாள்.”
நீலன் மெய்சிலிர்த்து நின்றான். பெரியவர் தேக்கன் சொன்னார், “கபிலருக்குத் தோள்கொடுத்த பாரி உனக்குத்தானடா கள் கொடுத்தான்.”
எல்லோரும் சிரித்து மகிழ்ந்தனர்.
“முடியன் ஏன் இன்னும் வரவில்லை?’’ எனக் கேட்டான் பாரி.

**ப**றம்பு நாட்டின் வட எல்லையில், குடநாட்டுக்கு உள்நுழையும் இடத்தில் தோளில் இருந்து பொங்கும் குருதியை மறுகையால் பொத்தியவாறு கதறிக்கொண்டே ஓடினர் கோளூர்சாத்தனும் இரு வணிகர்களும். அங்கு இருந்த பனைமரத்தில் வெட்டப்பட்ட மூவரின் கைகளையும் தொங்கவிட்டுக் கொண்டிருந்தான் முடியன்!

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-11

இருள் விலகாத இரவின் கடைசி நாழிகையில், கபிலரை எழுப்ப அவரது அறை நோக்கி வந்துகொண்டிருந்தான் வீரன் ஒருவன். அவனது காலடி ஓசை மிகத் தொலைவில் இருந்தே கேட்கத் தொடங்கியது. படுக்கையில் இருந்து மெள்ள அசைந்தார். ஓசை, அறைக்குள் நுழைவதற்குள் எங்கு இருந்தோ வந்த மலரின் மணம் அவரது மூக்குக்குள் ஏறியது. சற்றே மூச்சை இழுத்து முகர்ந்தார். காலடி ஓசை அருகில் வந்து நின்றது.




நள்ளிரவில் மலரும் மயிலை மலரின் மணம். நள்ளிரவு மலருக்கு எனத் தனிக் குணங்கள் உண்டு அது வண்ணங்களை எல்லாம் வாசனையாக்கி ஒளி வீசக்கூடியது. ஆம்பலும் முசுண்டையும் நள்ளிரவிலே பூப்பவை. ஆனாலும், மயிலையின் தனித்துவ மிக்க வாசத்துக்கு அவற்றை இணைசொல்ல முடியாது. மயிலையின் மணம் அறை எங்கும் பரவியது. காட்சிக்கு முன்பே நறுமணத்தால் இதயம் நிரம்பியது. அகமகிழ்வோடு கண் விழித்தார் கபிலர்.

மலர்க் கூடையை அறையில் வைத்துவிட்டு ஒரு பெண் வெளியேறினாள். அருகே வந்த வீரன் சொன்னான், "பறம்பின் தலைவர் உங்களை அழைத்துவரச் சொன்னார்". மலர் மணத்தோடு இணைந்தது இனியவனின் அழைப்பு. சிறிது நேரத்தில் வருவதாகக் கூறினார்.

மாளிகையின் முகப்பில் தயாராக நின்றுகொண்டிருந்தான் பாரி. கபிலர் வெளியேறி வந்ததும், ``வாருங்கள் போகலாம்" என உற்சாகமாக அழைத்துச் சென்றான். இரவின் கடைசி இதழ் இப்போதுதான் உதிரத் தொடங்கியிருந்தது. தீப்பந்தங்களை அணைக்க வீரர்கள் மூடுகுவளைகளோடு போய்க்கொண்டிருந்தனர். பறவைகளின் சத்தம் இன்னும் வெளியேற வில்லை. எவ்வியூரின் நடுவீதியின் வழியே கபிலரை அழைத்துக்கொண்டு மேலே ஏறினான்.

பாரி அணிந்திருந்த உடையில் இருந்து நறுமணம் பரவியது. அறைக்குள் நிரம்பியிருந்த மயிலையின் மணத்தை அது விஞ்சியது. வீதியில் நடக்கும்போதுகூட வாசனை கரையாமல் ஆடையோடு வந்துகொண்டிருக் கிறது. கபிலரை எவ்வியூரின் மேலே இருக்கும் உச்சிப்பாறைக்கு அழைத்துச் சென்றுகொண்டி ருந்தான் பாரி. நாய்களின் குரைப்பொலி அங்கும் இங்குமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. அவர்கள் மேல்நோக்கி நடந்துகொண்டிருந்தனர்.

புலர்காலையில் வீதிகளின் உள்ளழகை ரசித்தபடி நடந்துகொண்டிருந்த கபிலர், பாரியிடம் கேட்டார், "யவனத்தில் இருந்து நறுமண எண்ணெய்களை வாங்கி, பூசிக் கொள்ளும் வேந்தர்களையும் பெரு வணிகர்களையும் அறிவேன். ஆனால், அந்த வாசனைகூட இவ்வளவு மணமூட்டுவதாக நான் உணர்ந்தது இல்லை. உனது ஆடையின் வாசனை அளவற்ற நறுமணத்தைப் பரப்புகிறதே..."

“அதிகாலைக் காற்று மணம்கொண்டுதானே மிதந்துவரும். அதனால் இருக்கலாம்.”

“இல்லை. காலடியோசை என்னை எழுப்பியபோது காற்றில் கலந்திருந்த மெல்லிய மணத்தை நான் உணர்ந்தேன். பின்னர் மயிலையின் மணத்தால் அறையே நிறைந்தது. அதை நுகர்ந்த எனது மூக்கு அதைவிடச் சிறப்பான ஒரு மணத்தைக் கண்டறியாதா என்ன?”




இருவரும் உச்சிப்பாறையின் அருகே வந்தனர். வெளிச்சம் மெள்ளப் பரவிக்கொண்டிருந்தது. பறவைகளின் குரல் கேட்கத் தொடங்கியது. பாரி சொன்னான், ``தாழை மலரில் பெண் பூ, ஆண் பூ இருக்கின்றன அல்லவா? அவற்றுள் ஆண் பூவின் அரும்பு மிகவும் மணமூட்டக்கூடியது. காய்ந்த ஆண் பூவின் இதழ்களை ஆடைகளுக்குள் போட்டுவைத்தால், சிறுபூச்சிகள் ஆடைக்குள் நுழையாது. அதுமட்டும் அல்ல; நல்ல மணமூட்டி யாகவும் அவை இருக்கும். இவை எல்லாம் சொல்லத்தான் கேள்வி. இப்போது நீங்கள் சொல்வ தால்தான் இவ்வளவு மணம் வீசுவது தெரிகிறது. எங்களுக்கு இது பழகிவிட்டதால் தெரியவில்லை” எனச் சொல்லியபடி, பாறையின் மேலே கபிலரைக் கைதூக்கி ஏற்றினான் பாரி.

கைபிடித்து மேலேறியபடி கபிலர் கேட்டார் ``பெண் பூவைவிட அதிக மணம் வீசும் ஆண் பூ ஆடையின் மீது இருக்கிறதா... ஆடையை அணிந்திருக்கிறதா?”

பாரி சற்றே வெட்கப்பட்டு அந்தக் கேள்வியைக் கடந்தான். இருள் அகன்று எவ்வியூரின் மீது வெளிச்சம் பரவிக்கொண்டிருந்தது. கபிலர் உச்சிப்பாறையில் இருந்து நாற்புறமும் பார்த்தார். எவ்வியூரின் பேரழகு அவரது கண்களைச் சுழற்றிக்கொண்டிருந்தது. முழுவட்டமும் சுற்றியபோது நகரின் அழகில் தன்னை மறந்தார். இயற்கையான பாறை அமைப்புகளுக்கு ஏற்ப, மடித்து மடித்துக் கட்டப்பட்ட வீடுகள். இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கிளைபரப்பி நிற்கும் பெரும் மரங்கள். கரும்பாறைகளை அரணாகக்கொண்டு கட்டி எழுப்பப்பட்டுள்ள அரண்மனை.

அரண்மனை இருக்கும் தென்திசையில் மிகத் தொலைவில், மலை நோக்கிச் செல்லும் சாலையில் தேர் ஒன்று விரைந்துபோவது தெரிந்தது. அதைக் கவனித்த கபிலர் கைநீட்டியபடி பாரியைப் பார்த்தார். பாரி சொன்னான், ``அந்தப் பக்கம் இரு குன்றுகளுக்குப் பின்னால்தான் பாழி நகர் இருக்கிறது. அங்குதான் ஆயுதசாலைகள், பயிற்சிக்கூடங்கள், தொழிலகங்கள் எல்லாம் இருக்கின்றன. எவ்வியூரைவிட அதிகமான மக்கள் அங்கு வாழ்கின்றனர். விருந்தினர்கள் தங்கும் இல்லங்கள் அங்குதான் இருக்கின்றன. பாணர் கூட்டம் வந்து தங்கிச் செல்வது எல்லாம் அந்த இடத்தில்தான்.”


``பாழி நகரில்தான் வேளீர்கள் செல்வங்களை எல்லாம் பாதுகாத்து வைத்துள்ளனர் என்று கேள்விப் பட்டுள்ளேன். அங்குதான் இருக்கிறதா பாழி நகர்?”

கபிலரின் கேள்விகண்டு புன்னகைத்தான் பாரி. எங்கும் பறவைகளின் ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. கிழக்கு திசையைப் பார்த்தபடி நின்றிருந்த பாரி, மறுபக்கம் திரும்பாமல் கபிலரின் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான். கபிலரின் கண்கள் சுற்றிச்சுற்றிச் சுழன்றுகொண்டிருந்தன. வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடும்போது, கரும்பாறையின் மீதுள்ள நகரம் தனது மேனியின் எழிலைக் கூட்டிக் கொண்டிருந்தது. மக்கள், வீடுகளில் இருந்து வெளியில் வரத் தொடங்கினர். பறவைகளின் கீச்சுக்குரல்கள் காட்டையே எழுப்பிக் கொண்டிருந்தன. தீபத்தின் உச்சியில் இருந்து அடிபெருத்த அகல்விளக்கைப் பார்ப்பதைப் போன்று இருந்தது அந்த நகரம். இளங்காற்று உச்சிப்பாறையைத் தழுவி மேலே ஏறியபடி இருந்தது.

கபிலர், “காணக் கிடைக்காத காட்சி” என்றார்.

கிழக்கு திசையைப் பார்த்து நின்று கொண்டிருந்த பாரி, அவரின் தோள் தொட்டுத் திருப்பினான். கபிலர் கிழக்குப் பக்கமாகத் திரும்பும்போது பாரி சொன்னான், “இப்போது நீங்கள் காணப்போவதுதான் காணக் கிடைக்காத காட்சி.”
கபிலர் இன்முகத்தோடு கிழக்கு திசை பார்த்தார். எல்லா திசைகளிலும் இருக்கும் அதே அழகோடுதான்

எவ்வியூரின் கிழக்கு திசையும் இருந்தது. ‘இதில் கூடுதல் சிறப்பு என்று பாரி சொல்வது எதை?’ என்று கபிலரின் கண்கள் தேடிக்கொண்டிருந்தன.



கிழக்கு திசையில் ஆதிமலைக்கு நடுவே இருந்த மெல்லியப் பிளவின் வழியே சூரியனின் செந்நிறக் கதிர் மெள்ளக் கசிந்துகொண்டிருந்தது. பார்க்கும் கணத்தில் ஒளிபெருகிக் கூரிய வாள்போல் பாய்ந்து வந்தது. கபிலர் இமைகொட்டாமல் பார்த்தார். எவ்வியூரின் கிழக்குப் பகுதி இருளை இரண்டு துண்டாக்கியது. `காணக் கிடைக்காத காட்சி’ என்று கபிலரின் வாய் முணுமுணுத்துக்கொண்டிருக்கும் போது அந்தக் கூரிய ஒளி வாள் கபிலரின் மார்பில் இறங்கியது. கபிலரின் நாடிநரம்புகள் எல்லாம் சிலிர்த்தன. மெய்மறந்து இரு கைகளையும் மேலே உயர்த்தினார். எவ்வியூரின் அடிவாரம் வரை இரு திசைகளும் அவரது கரங்களின் நிழல் படர்ந்து அசைந்தது. கதிரவனைப் பார்த்து அவர் கைகளை உயர்த்தி வணங்கினார்.

பெருங்குலவை ஒலி எவ்வியூர் முழுக்க மேலெழுந்தது. நான்கு திசை வாயில்களில் இருந்தும் பறைகள் முழங்கின. முழவின் ஓசையில் காடு நடுங்கியது. மக்கள் எல்லோரும் தங்களின் வீடுகளின் மேலேறி குலவையிட்டு அந்த அருங்காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர். துல்லியமான இடத்தில் கபிலரை நிறுத்திய பாரி, ஈரடி கீழிறங்கி நின்று அண்ணாந்து பார்த்தான். `பேரறிவின் தீச்சுடர் இதுதானா?’ நினைக்கும்போதே மெய்சிலிர்த்தது பாரிக்கு.

கணநேரத்துக்குள் பிளவின் மேல்விளிம்பை சூரியன் தொட்டவுடன் அந்த ஒளி வாள் மறைந்தது. எங்கும் புலர்மஞ்சள் நிரம்பியது. கபிலர் உறைந்துபோய் நின்றார். மக்கள் கூட்டம் கூட்டமாகப் பாறையை

நோக்கி வரத் தொடங்கினர். குலவைச்சத்தம் எங்கும் எதிரொலித்தது. பாரி, உச்சிப்பாறையின் மீதேறி கபிலரின் அருகில் வந்தான்.

“நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை, தெற்கு ஓட்டக்காலத்தின் ஆறாம் நாளில் ஆதிமலையில் உள்ள பெருங்கடவின் நடுவில் இருந்து கதிரவன் வேலெழும்பி வருவான். நெருப்பை உருக்கி ஊற்றியதைப்போல கண்ணிமைக்கும் நேரத்தில் நீளும் ஒளி வாள். அரை நாழிகை நேரம் மட்டுமே நீண்டிருக்கும். கதிரவன் ஒளி வாளை எவ்வியூரின் மேல் இறக்கிய மூன்றாம் நாள் கொற்றவைக் கூத்து தொடங்கும்” என்று கூறிவிட்டு இறங்கி நடந்தான் பாரி.

திரண்ட மக்கள் கூட்டம் உணர்ச்சிப் பெருக்கோடு குலவையிட்டபடி அவன் பின்னே சென்றுகொண்டிருந்தது. அவர்கள் அரண்மனைக்குள் நுழையும் வரை பார்த்துக்கொண்டிருந்தார் கபிலர்.



இயற்கையைப் பற்றிய வியப்பு, பாரியின் சொல்கேட்ட கணத்தில் இயற்கை அறிவைப் பற்றிய வியப்பாக மாறியது. வானியல் வசப்படுவதுதான் கணிதத்தின் உச்சம். கணிதம் வசப்படுதல் அறிவின் உச்சம். நோக்கறிவு கொண்டு விண்மீன்களைக் கணித்தலும், கதிரவனின் நகர்வை அளத்தலும் மனிதனின் அபாரச் சாதனை. இந்தச் சாதனைகளைச் சொந்தமாக்கிவைத்துள்ளவர்கள் மூவேந்தர்கள். வானியலையும் கணிதத்தையும் தலைமுறை, தலைமுறையாகக் கற்று ஆளும் ‘கணியர்கள்’ அவர்களிடமே இருக்கின்றனர். அதனால்தான் நீரும் நிலமும் வானும் வேந்தர்களுக்கு வசப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்தப் பேரறிவு, சின்னஞ்சிறு வேளீர் கூட்டத்துக்கு எப்படி வசப்பட்டது?

ஒரு வாரத்துக்கு முன்பே கொற்றவைக் கூத்து தொடங்கப்போவது பற்றி வேட்டூர் பழையன் சொன்னது கபிலருக்கு நினைவு வந்தது. ‘நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை அரை நாழிகை நேரம் மட்டுமே நிகழும் ஒளி வாளின் கோலக்காட்சியை நாளும் நேரமும் தவறாமல், எப்படி இவர்கள் கணக்கிட்டனர்?’ அடுத்தடுத்து எழுந்த கேள்விகள் கபிலரைத் திக்குமுக்காடச் செய்தன.

கதிரவன் தகதகத்து மேலேறிக்கொண்டிருந்தான். திகைப்பில் இருந்து மீளா கபிலர் சிறிது நேரத்துக்குப் பின்னர் பாறையைவிட்டு கீழே இறங்கினார். அவரை அழைத்துச்செல்ல வீரர்கள் நின்றிருந்தனர். ஊரின் தென்திசைக்குப் போய்விட்டு அரண்மனைக்கு வருவதாகச் சொல்லி அவர்களை அனுப்பினார்.

அவரைச் சந்திக்கக் காத்திருந்த மக்களுடன் ஆங்காங்கே நின்று பேசியபடி கீழே இறங்கிக்கொண்டிருந்தார். ஒவ்வொருவரும் அவருடன் பெரும் மகிழ்வைப் பகிர்ந்து கொண்டனர். தென்திசையின் அடிவாரம் வந்துசேர்ந்தவர், அரண்மனையை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

பாண்டிய நாட்டுப் பெருங்கணியன் திசைவேழரின் நினைவு வந்தது. நீளும் நிழல்கொண்டு உலகை அளக்கும் அவரை கபிலர் தன் ஆசான்களில் ஒருவராக எண்ணுவார். கண்சிமிட்டாத விண்மீனைப்போல வானத்தைப் பார்த்துக்கொண்டே இருக்கும் வானியலாளர்; தலைமுறை தலைமுறையாகச் சேகரித்த அறிவுச்சேகரத்தின் உறைவிடம். கபிலர், அந்த வான் உழவனின் தாள்பணிந்து பாடிய கவிதைகள் ஏராளம். அவர்தம் முன்னோர்கள் கண்டறிந்து பெயர்சூட்டிய வெள்ளியைக் கண்டுதான் இன்று நாளும் நேரமும் கணிக்கப்படுகின்றன.

வானம், மிதந்துகொண்டிருக்கும் ஒரு மாயத்தட்டு; கற்பனைக்கு எட்டாத பேருலகு. மனிதன் தனது அறிவால் அதைக் கணிப்பது என்பது நம்ப முடியாத அதிசயம். தரத்தரவென தனது கையை இழுத்துக் கொண்டுபோய் இயற்கையின் கூர்முனையின் எதிரில் துல்லியமாக நிறுத்திவிட்டான் பாரி.

‘பெருங்கணியன் திசைவேழர் இந்த நாளில் தன்னோடு இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? பாரியைக் கட்டி அணைத்திருப்பார். நாட்டுத் தலைவர்கள் யாருக்கும் இல்லாத நாள் அறிவும் கோள் அறிவும் பாரியிடம் இருப்பதைக் கண்டு திகைத்திருப்பார்.

திசைகள் மட்டுமே திகைப்பை ஏற்படுத்தக்கூடியவை. திக்குத்தெரியாத திகைப்பை நிலமும் கடலும் வானும் ஒவ்வொரு கணத்திலும் உருவாக்கும். அந்தத் திகைப்பை வெல்லத் தெரிந்தவர்களே திசையாளும் கணியர்கள். எனவே, அவர்கள் மனிதர்களைக் கண்டு ஒருபோதும் திகைக்க மாட்டார்கள். ஆனால், இன்று பாரியின் செய்கையை பெருங்கணியன் கண்டிருந்தால், திகைக்காமல் இருந்திருக்க மாட்டான்’ என எண்ணியபடி இடப்புற வீதியின் வழியே திரும்பி நடந்தார் கபிலர்.

எதிர் வந்த பெண் ஒருத்தி கை நீட்டி அவரின் பாதையை மறித்தாள். விலகிப்போக முயல்கிறாளோ என நினைத்த கபிலர் வலப்புறம் நகர்ந்தபோது, அவள் இன்னொரு கையையும் நீட்டி வழியை அடைத்தாள்.

பெருங்கணியன் இரு பக்கங்களும் கைகளை விரித்து நீளும் நிழலின் நகர்வுகளைத் தனக்குச் சொல்லிக்கொடுத்தது நினைவுக்கு வந்தது. உள்மனதில் கணியனின் உருவம் படிந்திருக்க, அந்தக்

கையை விலக்கி நடக்க முயன்றார். ஆனால், அந்தப் பெண்ணின் கைகள் அவருக்கு இடம் தரவில்லை. மறித்த கைகள் தட்டி நின்றன.

அப்போதுதான் கணியனின் நினைவில் இருந்து மீண்டு அந்தப் பெண்ணை உற்றுப் பார்த்தார் கபிலர். நேர்கொண்டு பார்த்த அந்த இளம்பெண்ணின் கண்கள் கோபத்தைக் கக்கின.

“ஏனம்மா வழி மறிக்கிறாய்?”

கபிலரின் கண்களையே கூர்ந்து பார்த்தாள்.

``பாரியிடம் நட்புக்கொள்ளும் தகுதியுண்டோ உம்மிடம்?”

கபிலர் அதிர்ந்துபோனார். நெஞ்சில் கூர்மைகொண்டு இறங்கியது சொல்.

``ஏனம்மா இப்படிக் கேட்கிறாய்... என்ன தவறு இழைத்தேன் நான்?”

மௌனத்தின் வழியே கபிலரின் அதிர்ச்சியை அதிகப்படுத்தினாள். எந்த வகையிலும் அவளின் கோபத்துக்கான காரணத்தை கபிலரால் தொடர்புபடுத்திக்கொள்ள முடியவில்லை.



``எவ்வளவு பதற்றமான சூழ்நிலையிலும் கார்காலத்து இரவில், இங்கு இருந்து பாழி நகருக்குத் தேர் ஏறிச் செல்ல மாட்டான் பாரி. தெரியுமா உமக்கு?”

கபிலர் பதில் எதுவும் சொல்லாமல் அவளின் கண்களையே பார்த்தார். அவள் தொடர்ந்தாள்.

“கார்காலத்து இரவுகளில் மான்கள் இணை சேரும். தனது தேரின் ஒலி அவற்றின் இணக்கத்தைக் குலைத்துவிடும் என்பதால், தேரில் செல்ல மாட்டான். ஆனால், உமது செயல் அதற்கு நேர் எதிராக இருக்கிறது.”

இளம்பெண் உதிர்த்த சுடுசொல் கண்டு அஞ்சினார் கபிலர்.

“யான் செய்த பிழை என்ன மகளே?”

அவளின் கண்கள் குளமாகின.

``அழகிய பூக்காடாக இருந்த எம் காதலில் புயல்காற்று வீசச் செய்துவிட்டீர்.”

``கலங்கி நிற்கும் உனது கண்கள் என்னைப் பதறவைக்கின்றன. எனக்கு விளங்கும்படி சொல்.”

“உங்களால்தான் அவன் புகழின் உச்சியை அடைந்திருக்கிறான். எனது கைகள் தழுவிக்கிடந்த அவனது தோளின் மீது இப்போது பாரியின் கை கிடக்கிறது. புகழால் நிலை தடுமாறிக் கொண்டிருக்கிறது எனது காதல்.”

“நீ யாரைச் சொல்கிறாய்... உன் காதலன் யார்?”

“நீலன்.”

கபிலர் பெருமூச்சு விட்டார். சின்னதாக ஒரு சிரிப்பு உதட்டின் ஓரம் பரவியது. அவளோ வேகம் குறையாமல் தொடர்ந்தாள்.



“சிறு கல்லைத் தாண்டுவதைப்போல இருபெரும் குன்றுகளைத் தாண்டி, நினைத்தபோது எல்லாம் என்னைப் பார்க்க வந்தவன், அடுத்த தெருவில் நான் இருப்பது தெரிந்தும் இன்னும் என்னை வந்து பார்க்கவில்லை. எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அவனைப் பற்றித்தான் பேசுகிறாள். என் நீலனின் பெயர்கொண்டே என் நெஞ்சைச் சுடுகிறார்கள்.”

“உன் காதலன் பற்றி பெருமை பேசினால் நீ மகிழத்தானே வேண்டும். ஏன் கவலைகொள்கிறாய்?”

உடைந்து அழுதாள் அவள்.

“இந்தக் கேள்வியை நானே பலமுறை கேட்டுவிட்டேன். என்னால் விடை காண முடியவில்லை. அவனது உறுதியை நன்கு அறிந்தவள் நான். ஆனாலும் கைப்பற்ற அவனது கண்பார்வை கிடைக்காமல் தவிக்கிறேன்.”

குறுக்கிட்ட கைகளை மடக்கி பக்கத்தில் இருந்த வீட்டின் திண்ணையில் உட்கார்ந்தாள். நெஞ்சொடிந்து விழுவதைப்போல்தான் அது இருந்தது.

“எங்களின் குன்று எவ்வளவு அழகானது தெரியுமா? யார் கண்பட்டதோ தெரியவில்லை, பொழுது எல்லாம் எங்கள் காதல் செழித்து வளர்ந்த அந்த நிலத்தின் அடிவாரத்தில், ஒரு தேர் வந்து நின்றது.” கபிலர், சற்றே சுதாரித்துப் பார்த்தார்.

“எனது மடி மீது தலைசாய்த்து இருந்தான். நான்தான், `யாரோ ஒருவர் தேரில் இருந்து இறங்கி வேட்டுவன் பாறையில் கால் பதிக்கிறார்’ என்றேன். எனது காதலின் அமைதியை எனது சொல்கொண்டே கெடுத்துவிட்டேன்” சொல்லிக்கொண்டிருக்கும்போது கண்ணீர் வழிந்தோடியது.

துடைத்தபடி தொடர்ந்தாள்... ``குயில்கள் கூவும் அந்த மாமர நிழலில், இதழ்விட்டு நழுவிப்போன அவனது மறுமுத்தத்துக்காக அன்று முழுவதும் காத்திருந்தேன். வரவில்லை. மறுநாள் அவன் ஊருக்குப் போனேன். `வந்திருப்பவருக்குக் காலில் அடிபட்டுள்ளது. நீ எவ்வியூருக்குப் போ. இரண்டு நாளில் நான் அவரை அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறேன். கொற்றவை விழா முடியும் வரை நாம் அங்கு மகிழ்ந்திருப்போம்’ ” என்று சொல்லி அனுப்பினான்.
கபிலர், தனது கதையைத் தானே கேட்டுக்கொண்டிருந்தார். ‘எனது காலடிக்குப் பின்னால் ஒரு காதல் நடந்து வந்திருக்கிறது. இவ்வளவு அழகிய இளம்பெண்ணின் இதழ்முத்தம் விலக்கிவந்தவனா, தசை பிறண்ட பின்னும் என்னைத் தாங்கிவந்தான்?’ - நீலன் மீதான மரியாதை இன்னும் கூடியது.

அவள் தொடர்ந்தாள்... “எவ்வியூருக்கு வந்த பின்பாவது நான் வாய் பொத்தியிருக்க வேண்டாமா? உனது காதலன் வருவானா எனக் கேட்ட எனது தோழியிடம், ‘கபிலர் என்று ஒருவர் கால் ஒடிந்துகிடக்கிறார். அவரை அழைத்துக்கொண்டு வர வேண்டுமாம். இரண்டு நாட்கள் ஆகும் என்று சொல்லி அனுப்பியுள்ளான் என்றேன்.”

கபிலருக்கு அவளை, ‘மகளே...’ என அணைத்துப் பிடித்துக் கதைகேட்க வேண்டும்போல் இருந்தது.

“எல்லாம் எனது போதாத காலம். எதைச் சொன்னாலும் அது பிரச்னையாக மாறித்தான் போகும். நான்

சொன்ன சொல் பாரியின் காதுக்கு எட்ட, உடனடியாக என்னை அரண்மனைக்கு அழைத்துச்சென்று விசாரித்தனர். நான் கபிலருக்கு கால் ஒடிந்ததால், எனது காதலின் நாள் ஒடிந்த கதையைச் சொன்னேன். அவ்வளவுதான் இரவோடு இரவாக பாரியே புறப்பட்டு புலிவால் குகைக்குப் போய்விட்டான்.”

கபிலருக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. தன்னை ஒருகை பிடித்து நீலன் அழைத்து வந்ததைப்போலவே, மறுகை பிடித்து இவளும் அழைத்துவந்திருக்கிறாளே என மகிழ்ந்து கிறங்கினார்.



“போதாத காலத்தைப் புலம்பித்தான் தீர்க்க வேண்டும் என்பார்கள். கபிலரை, பாரி தனது தோளில் ஏற்ற, என்னைத் தனது நெஞ்சில் ஏற்றிவைத்திருந்தவன் எங்கு சென்றானோ தெரியவில்லை.”

கண்ணீரைத் துடைத்தபடி சொன்னாள்... “ஊரே பேசுகிறது, நேற்று இரவு அவனுக்கு அறுபதாங்கோழிக்கறி விருந்து படைக்கப் பட்டதாம். உள்ளங்கையில் கஞ்சி காய்ச்சி அவனது உதடு விலக்கி ஊட்டிவிட்ட எனது அன்புக்கு இணையாகுமா இந்த உலகு? சொல்லுங்கள் அந்தக் கொடியவனை என்ன செய்யலாம்?”

கணநேரமும் தாமதிக்காமல் பதில் சொன்னார் கபிலர், “அது தெரியாமல்தான் நானும் விழித்துக்கொண்டிருக்கிறேன். நான் தங்கியுள்ள இடத்தில் என்னோடுதான் அவனும் தங்கியுள்ளான். நேரம் கிடைக்கும்போது எல்லாம், “மயிலா… மயிலா…” என்று எவளோ ஒருத்தியின் பெயரைச் சொல்லிப் புலம்பிக்கொண்டே இருக்கிறான். அந்தப் பெண்ணுக்கு நள்ளிரவு பூக்கும் மயிலை மலர் மிகவும் பிடிக்குமாம். முழுநிலா நாளில் மயிலம் பூச்சூடி, அவள் மீது காதல்கொண்டானாம். இன்று எப்படியாவது அவளைப் பார்க்க வேண்டும் என்பதற்காக எனக்குத் தெரியாமல், நான் கேட்டதாக

அரண்மனையில் சொல்லி, மயிலை மலரைக் கொண்டுவந்து வைத்திருந்தான். இன்று காலை அவளுக்குச் சூட்டப்போயிருப்பான் என்று நினைக்கிறேன்.”

வெட்கமும் ஆசையும் பீறிட்டு மேலெழும்பியது. ஆடைகொண்டு கண்ணீர் துடைத்தாள். அதையும் மீறிச் சிந்தியது சிரிப்பு. மகிழ்வை மறைக்க மெனக்கிட்டாள். முடியவில்லை. கண்ணீர் வெடித்துக் காதலாக மலரும் அந்த அதிசயத்தை அருகே இருந்து ரசித்தபடி அவளின் கரம்பிடித்தார் கபிலர்.

“விடுமய்யா கையை, இன்னொரு நாளும் உம்மால் வீணாகிவிடக் கூடாது” எனச் சொல்லியபடி, பிடித்த கையை உதறிவிட்டு ஓடினாள் மயிலா!

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-12




ஒரு பொன்வண்டு கூட்டுக்குள் நுழைவதைப்போல் இருந்தது. விளிம்பில் கருமைகொண்டு நீண்டுகிடந்த மரக்கிளைகள், அந்தப் பொன்வண்டின் எண்ணற்ற கால்கள் எனக் காட்சியளித்தன. மாளிகையின் மேல்மாடத்தில் நின்றபடி, மேற்குத் திசையில் மலையில் மறையும் சூரியனைப் பார்த்துக்கொண்டிருந்தார் கபிலர். கண்கள், ஊர்ந்து இறங்கும் பொன்வண்டைப் பார்த்துக்கொண்டிருந்தாலும், மனம் முழுவதும் காலைச் சூரியனே நிறைந்திருந்தான். அருகில் யாரோ வரும் காலடி ஓசை கேட்டுத் திரும்பினார்.

``மறையும் கதிரவனிடம் ஒளி வாளை ஒப்படைத்துக்கொண்டிருக்கிறீர்களா?”- கேட்டுக்கொண்டே இன்முகத்தோடு வந்தான் பாரி. இருவரும் பேசியபடியே இருக்கையில் அமர்ந்தனர்.

பாரி கேட்டான்... “காலையில் உச்சிப்பாறை ஏறியதும் மேற்குத் திசையைப் பார்த்தபடி, ‘காணக்கிடைக்காத காட்சி’ எனச் சொன்னீர்களே... எதைச் சொன்னீர்கள்?”

சற்றே யோசித்த கபிலர், “அதுவா… மேலே ஏறியதும் முதலில் கண்ணில்பட்டது கோட்டைச்சுவரே இல்லாத இந்த நகர அமைப்புதான். இப்படி ஒரு தலைநகர் உலகில் எவ்வியூர் மட்டுமாகத்தான் இருக்கும்.”

``எதிரிகளிடம் இருந்து தற்காத்துக்கொள்ள, கோட்டைச்சுவர் எதுவும் எங்களுக்குத் தேவை இல்லை. ஏனென்றால், எங்களின் ஒத்துழைப்பும் உதவியும் இல்லாமல், யாரும் இந்தப் பெரும்காட்டையும் மலைமுகடுகளையும் கடந்து இங்கு வந்துவிட முடியாது அல்லவா?”

பாரியின் கேள்வியை ஆமோதித்தார் கபிலர்.

``அதே நேரம் காட்டு உயிரினங்களிடம் இருந்து உங்களுக்குப் பாதுகாப்பு தேவை.அதற்காகவாவது சுவர் எழுப்பியிருக்கலாமே?”

``அதன் பொருட்டுத்தான் எழுப்பியுள்ளோம்.”

``எங்கே எழுப்பியிருக்கிறீர்கள்... என் கண்களுக்குத் தெரியவில்லையே. எதுவும் மாயச்சுவர் கட்டியுள்ளீர்களா?”

பாரி சிரித்தான்.

``உங்களின் கண்களுக்குத் தெரிகிறது. ஆனால், அதுதான் சுவர் என்பதை உங்களின் எண்ணம் ஏற்க மறுக்கிறது.”

கபிலர், உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்து பார்த்தார். அவரைக் கவனித்தபடி பாரி கேட்டான்... “இந்தக் காட்டில் எத்தனை வகையான விலங்குகள் இருக்கின்றன என்று யாருக்குத் தெரியும்? காட்டுவிலங்குகளால் உடைத்து நொறுக்கவோ, தாவிக் கடக்கவோ முடியாத ஒரு கோட்டை மதிலை மனிதனால் கட்டிவிட முடியுமா? கார்காலத்தில் மூன்று `குளகு’ தின்ற ஒரு பெண் யானை, எவ்வளவு பெரிய கற்கோட்டையையும் தகர்க்கும். `அதிங்கத்தை’த் தின்ற ஆண் யானைக் கூட்டம் உள்நுழைந்தால், பெரும்மலையும் கிடுகிடுக்கும். மரமேறி உயிரினங்களால் தாவிக் கடக்க முடியாத தடுப்புச்சுவரை எழுப்ப முடியுமா? இந்த மலைத்தொடர் வடதிசையிலும் தென்திசையிலும் எவ்வளவு தொலைவு நீண்டுகிடக்கிறதோ, யார் அறிவார்? இடையில் ஒரு சிறு பகுதியில் பறம்பு நாடு இருக்கிறது. எண்ணிக்கையில் அடங்காத விலங்குக் கூட்டங்கள் நாள்தோறும் இடமும் வலமுமாக எங்களைக் கடக்கின்றன. இவற்றிடம் இருந்து பாதுகாக்க எத்தனையோ முறைகளைக் கையாண்ட எம் முன்னோர்கள், இறுதியாக இந்த நாகப்பச்சை வேலியை பெரும்கோட்டையாக எழுப்பினர்.”

கபிலர் சுற்றும் முற்றும் பார்த்தார். எவ்வியூரின் கடைசி வீடுகளும் தெருக்களும் முடிவடைந்த சிறிது தொலைவில் இருந்து காடு ஆரம்பம் ஆகிறது. இதில் வேலியோ, சுவரோ எங்கு இருக்கிறது என யோசித்தபடி நின்றார்.

பாரி சொன்னான்... “ஊரின் எல்லை முடிவடைந்ததும் காடு தொடங்குகிறது.இடையில் வேலி எங்கே இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? நீங்கள் பார்க்கும் அந்தக் காட்டின் தொடக்கம் இயற்கையானது அன்று. அந்தத் தாவரங்கள், தாமாக முளைத்தவை அல்ல; நாங்கள் அறிந்த இந்தப் பெரும் உலககெங்கிலும் இருந்தும் கொண்டுவந்து, இங்கு முளைக்கவைத்தவை.”

கபிலர், பாரியைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்.

“காட்டில் உள்ள ஒவ்வோர் உயிரும் தின்னக்கூடிய தாவரங்களும் உண்டு; தின்னக் கூடாத தாவரங்களும் உண்டு. நுகரக்கூடியதும் நுகரக் கூடாததுமான பச்சிலைகள் உண்டு. பற்றக்கூடியதும் பற்றக் கூடாததுமான செடி, கொடிகள் உண்டு. நாங்கள் வன உயிரினங்கள் நுகரவும் நெருங்கவும் பற்றவும் முடியாத தாவரங்களைக்கொண்டு, ஒரு பெரும் வேலி அமைத்துள்ளோம். தலைமுறைத் தலைமுறையாக எங்கள் தாவர அறிவின் சேகரம், இந்த நாகப்பச்சை வேலிதான்.”

இவ்வளவு எளிதான வார்த்தைகளால் எவ்வளவு பெரிய செய்தியைச் சொல்லிக் கொண்டிருக்கிறான் பாரி, நம்ப முடியாமல் நின்றுகொண்டிருந்தார் கபிலர்.



``இதை எப்படி மனிதனால் செய்ய முடிந்தது?”

“அதைச் செய்ய முடிந்ததால்தான், நாங்கள் இங்கு வாழ்கிறோம். காற்றுகூட உள்நுழைய முடியாத இந்தக் கானகத்தில் ஓரிரு வீரர்கள் காவல் காக்க, நாள்தோறும் தூங்கி, உயிரோடு எழுகிறோம். எங்கள் குழந்தைகள் மறுநாள் காலை சிரித்துக்கொண்டு விளையாடுகின்றனர். எங்கள் இளைஞர்களின் இதழ்களில் முத்தத்தின் ஈரம் ஊறிக்கொண்டே இருக்கிறது.”

``இது எப்படி…?” - நா தயங்கி வெளிவந்தன கபிலரின் வார்த்தைகள்.

``வெறிமணம்கொண்ட செடி, கொடி, மரங்களால் சூழ்ந்துகிடக்கிறது இந்த வேலியின் வெளிப்புறம். நடுப்பகுதியோ, புறவைரமும் அகவைரமும் பாய்ந்தோடும் மரங்கள் ஒன்றை ஒன்று

பின்னிக்கிடப்பதைப்போல நன்கு திட்டமிட்டு வளர்க்கப்பட்டுள்ளது. வெளிவிஷம், மற்றும் உள்விஷத் தாவரங்களால் தழைத்துக் கிடக்கிறது இதன் முதல் பகுதி. இந்த மூன்று பகுதிகளின் இடைவெளிகளிலும் நஞ்சு ஏறிய அலரி வேர்கொண்டு சுருக்கு வலை பின்னப்பட்டுள்ளது.

நச்சுப் பிசின் வழியும் மருவு, தொடரிப் பட்டைகள் இடைவிடாதிருக்கும். ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து பின்னிப்பிணைந்து உருவாக்கப்படும் பிணையல், மாலையைப்போல தாவரப்பச்சிலைகளோடு பிணைந்து கட்டிக் கிடக்கும். அதன் கணுக்கள்தோறும் வேர்களை உண்டாக்கி, அந்தப் பச்சிலைச்செடிகள் தழைத்தபடி இருக்கும்.


இந்த வேலிக்குள் உருவாக்கப்பட்டுள்ள அனைத்துத் தாவரங்களின் மீதும் குறுக்கும் நெடுக்குமாகப் படர்ந்துகிடக்கும் எண்ணிலடங்காத படர்கொடிகளும் சுற்றுக்கொடிகளும்தான், இந்த நாகப்பச்சை வேலியின் உயிர்நாடி. வலப்புறம் சுற்றும் கொடியும் இடப்புறம் சுற்றும் கொடியும் ஒன்று மாற்றி ஒன்றாகப் படர்ந்துகொண்டே இருக்கின்றன. சுருண்டு எழும் அவற்றின் ஊசிநாவுகள் எதிரெதிர் திசையில் ஒருசேரப் பின்னியபடியே மேலே எழுகின்றன. உதிர்ந்து கொண்டிருக்கும் இலையைக்கூட இந்த வேலி அந்தரத்தில் நிறுத்திவிடும்.

விலங்கின் நாசியை வெகுதொலைவிலேயே இந்த வெறிமணம் தாக்கும். அதையும் கடந்து உள்நுழையும் உயிரினம் விஷமுள்ளாலோ, நச்சுக்கணுக்களாலோ, நாவில்படும் பச்சிலையாலோ, சற்றே மயங்கி அமரும். அந்த கணத்தில் அதன் மயிர்க்கால்கள் ஒவ்வொன்றையும் பற்றி உள்ளிழுக்கின்றன சுருட்கொடிகள். அந்த உயிரினத்தின் இயக்கத்தை மிக விரைவாக தனது கட்டுக்குள் கொண்டுவந்துவிடுகிறது இந்த நாகப்பச்சை வேலி. அதன் பிறகு அந்த விலங்கு அமர்ந்த இடத்தில் உள்ள தாவரமும் கறையான்களும் எறும்புகளும் சிலந்திகளும் சற்றே கூடுதல் செழிப்புக்கொள்கின்றன.”

பாரி சொல்வதை வாய் பிளந்து கேட்டுக்கொண்டிருந்தார் கபிலர்.

“தாமரை இதழை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி, அதன் மேல் ஊன்றப்படும் வேலம் முள், முதல் இதழுக்குள் இறங்கும் நேரம்தான் கணப்பொழுது. மூன்றாம் இதழைக் கடக்கும் நேரம்தான் இமைப்பொழுது, ஆறாம் இதழுக்குள் நுழையும் நேரம்தான் விநாடிப்பொழுது. எந்த ஒரு விலங்கின் இயக்கத்தையும் வேலம் முள் ஆறாம் இதழைக் கடக்கும் பொழுதுக்குள் நிறுத்திவிடும் ஆற்றல் இந்த நாகப்பச்சை வேலிக்கு உண்டு என்று எம் முன்னோர் கூறுவர்.”

இயற்கையைப் பற்றிய பேரறிவின் முன்னர், தூசி என நின்றுகொண்டிருப்பதாக கபிலர் உணர்ந்தார். மேற்கு மலையின் விளிம்பில் பொன்வண்டு தனது கடைசிக்கால்களை உள்ளிழுத்துக்கொண்டிருந்தது. பாரி, இறங்கும் சூரியனையே பார்த்துக்கொண்டிருந்தான்.



ஆச்சர்யம் விலக்கி, சற்றே ஆர்வம் மேலிட கபிலர் கேட்டார், ``எந்த வெறிமணம் யானைகள் கூட்டத்தை விரட்டக்கூடியது?"

ஒளி உள்வாங்கும் அழகைப் பார்த்தபடி பாரி சொன்னான்.

"ஏழிலைப் பாலை."


கபிலரின் கண்கள் பூத்தன.

"அந்த மரத்தின் வாடையை நுகரும் யானைகள் காதத் தொலைவுக்கு விலகி ஓடும்" என்றான் பாரி.

"அந்த மரங்கள் எங்கே இருக்கின்றன? நான் அருகில் சென்று பார்க்க வேண்டும்."

பாரியின் உதட்டில் சின்னதாக ஒரு சிரிப்பு ஓடி மறைந்தது.

`சிரிக்கக்கூடிய கேள்வியையா நான் கேட்டுவிட்டேன்' என்று யோசித்தபடி பதிலுக்குக் காத்திருந்தார் கபிலர்.



``ஒவ்வொரு திசைக்கும் ஒரு மரம் நின்றுகொண்டிருக்கிறது.''

``எறும்புக் கூட்டங்கள்போல் யானைக் கூட்டங்கள் திரியும் இந்தக் காட்டில், திசைக்கு ஒரு மரம் போதுமா?''

"அதற்கும் அதிகமாக வைத்தால் எவ்வியூர் தாங்காது" என்றான் பாரி.

கபிலருக்கு, பதில் விளங்கவில்லை.

பாரி சொன்னான்... ``அந்த மரத்தால் வேறு தொல்லைகள் இருக்கின்றன. மதயானை ஏழிலைப் பாலையின் வாசனையை நுகர்ந்துவிட்டால், வெறிகொண்டு வந்து அந்த மரத்தை அடியோடு பிடுங்கி எறிந்து நாசம் செய்துவிடும்.''

``பின் எப்படிச் சமாளிப்பீர்கள்?''

"அதன் பிறகு மனித முயற்சிதான். ஆயுதங்களும் பறை ஒலிகளும் தீப்பந்தங்களும்தான் கைகொடுக்கும். திசைக்கு ஒன்று என்றால் வந்த திசையில் இருக்கும் அந்த ஒன்றோடு அதன் ஆத்திரம் தணிய வாய்ப்பு இருக்கிறது அல்லவா? இப்படி ஒரு நிகழ்வு மூன்று தலைமுறைகளுக்கு முன்னர் நடந்ததாகச் சொல்வார்கள்."

ஆர்வத்தில் கேட்ட கேள்வி அதிர்ச்சியைப் பதிலாகக் கொடுத்தது. கணப்பொழுதுக்குள் மாறிச் செல்லும் உணர்வுகளின் வழியே பயணமாகிக்கொண்டிருந்தது கபிலரின் எண்ணம்.

"அதுமட்டும் அல்ல. இன்னொரு பிரச்னையும் உண்டு. அதுதான் மிக முக்கியமானதும்கூட."


"என்ன அது?"

"அந்த மரத்தின் வாசனை, காமத்தைத் தூண்டும். கோல்கொண்டு நெருப்பைக் கிளறுவதைப்போல, அது வாசனையைக்கொண்டு காமத்தைக் கிளர்த்திக்கொண்டே இருக்கும்."

சற்றே இடைவெளிவிட்டு பாரி சொன்னான், "எவ்வியூருக்குள் வேறு வேலையும் நடக்க வேண்டும் அல்லவா? அதனால்தான் திசைக்கு ஒரு மரம் மட்டும் வைத்திருக்கிறோம்" - பாரியின் சொல்லைத் தாண்டி வெளிவந்தது சிரிப்பு.

கபிலரும் சேர்ந்து சிரித்தார். நினைவு வந்ததும் சட்டென சிரிப்பை அடக்கிவிட்டுக் கேட்டார், "அதனால்தான் மரத்தின் அருகில் சென்று நான் பார்க்க வேண்டும் என்று கேட்டதற்கு நீ சிரித்தாயா?"

அவ்வளவு நேரம் அடக்கமாக வெளிப்பட்ட சிரிப்பு இப்போது பீறிட்டது. சிரித்தபடியே ‘ஆம்’ என, தலையை மேலும் கீழுமாக ஆட்டினான் பாரி.



கபிலர் சற்றே வேகமாக, “ஏழிலைப் பாலையை அடியோடு வீழ்த்தும் மதயானை மனிதரிலும் உண்டு.”

சட்டென பாரி சொன்னான்... ``காமம் கண்டு பயந்த சொல் இது.”

``பயம் இல்லை என்று சொல்ல நான் பொய்யன் அல்ல. ஆனால், பயப்பட மாட்டேன் எனச் சொல்ல பொய் தேவை இல்லை.”

``அதுதான் புலவன். சொல் சுடும்போது சொல்லைச் சுடுவான் என்று சொல்லக் கேட்டுள்ளேன். இன்றுதான் சொல்லிக் கேட்கிறேன்.”

நாழிகை மணியோசை எவ்வியூர் முழுவதும் எதிரொலித்தது. சூரியன் முழுவதும் விழுந்தவுடன் இருள், காட்டின் எல்லா திசைகளில் இருந்தும் இறங்கி வந்துகொண்டிருந்தது. பந்தங்களை ஏற்றும் வீரர்கள்,

கையில் நீண்ட குழல்போன்ற விளக்குகளுடன் ஓர் இடம் நோக்கிக் குவிந்துகொண்டிருக்கின்றனர்.

பேச்சு எதிர்பாராத கணத்தில் காமத்துக்குள் போனதைப் பற்றி யோசித்தபடி கபிலர் கூறினார்... “இரவு வரும்போதே ஏதாவது ஒரு வடிவில் காமத்தையும் அழைத்து வந்துவிடுகிறதே.”

பாரி அசட்டுச் சிரிப்போடு சொன்னான்... “ஏழிலைப் பாலைக்கு இரவு ஏது... பகல் ஏது?”

பறம்புமலை ஏறத் தொடங்கியதில் இருந்து தனது சொல் முறியும் ஓசையை விடாமல் கேட்டுக் கொண்டிருந்தார் கபிலர்.

பாரி சொன்னான்... “ஏழிலைப் பாலையின் அடிவாரத்துக்கு வள்ளியை அழைத்து வந்ததுதான் முருகன் செய்த மிகப்பெரிய தந்திரம். இல்லை என்றால், வள்ளியை ஒருநாளும் அவனால் இணங்க வைத்திருக்க முடியாது.”
``அவனும் குறுக்குவழியைத்தான் கையாண்டானா?”

சற்றே தயக்கத்துடன், “ஆம்” எனச் சொல்லியபடி தொடர்ந்தான் பாரி. “முருகன் வேட்டுவர் குலம்; வள்ளியோ கொடிக்குலம். செடி, கொடிகளை அறிந்தவர்கள் வேட்டையாடியவர்களைவிட மனநுட்பத்தில் முன்னேறியவர்கள் அல்லவா? வலிமையைவிட நுட்பத்துக்குத்தானே ஆற்றல் அதிகம். அதனால்தான் முருகனால் வள்ளியின் மனதில் எதைச் சொல்லியும் இடம்பிடிக்க முடியவில்லை.

காட்டை அழித்து, பயிரிடு முன் அந்த நிலத்தில் காமம் நிகழ்த்தி மனிதக் குருதி படிந்த தாய்நிலத்துக்குள் முதல் பயிரிடுதலைத் தொடங்கிய வர்கள்தான் கொடிக்குலத்துக் காரர்கள். முதலில் நட்ட வள்ளிக் கிழங்கைத் தோண்டி எடுக்கும்போது இடுப்பு வலிகண்டு, அந்த நிலத்திலே பிறந்தாள் அந்தப் பெண். விதைத்த இடத்திலே முளைத்தவள் அவள். அதனால் அந்தச் செவ்வள்ளிக் கிழங்கின் பெயரையே அந்த அழகிய பெண்ணுக்குச் சூட்டினர். வள்ளிக்கிழங்கும் வஞ்சிக்கொடியுமே பெண்ணாக மாறிய பேரெழில் கொடிக்குலத்துக்கு உரியது.

செடி, கொடிகளை அறிந்தவர்களை எளிதில் ஈர்க்க முடியாது. அவர்கள் கணம்தோறும் உயிரின் வளர்ச்சியைப் பார்த்து மகிழ்ந்தவர்கள். வண்ணங்களையும் வாசனைகளையும் அவர்கள் அளவுக்கு அறிந்தவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். அவர்களின் கவனத்தைக் கவர்வதோ, காதலைப் பெறுவதோ எளிது அல்ல. வேறு வழியே இல்லாமல்தான் ஏழிலைப் பாலையின் அடிவாரத்துக்கு வள்ளியை அழைத்துச் சென்றான் முருகன்.”


கபிலரின் கண் முன் காலமும் காதலும் கடவுளும் ஒன்றை ஒன்று பின்னி மேலே எழுந்தபடி இருந்தன. ஆண் ஆதியில் இருந்தே வெல்வதற்குத்தான் முயன்றிருக்கிறான். பெண் ஆதியில் இருந்தே நம்புவதற்குத்தான் ஆசைப்பட்டிருக்கிறாள்.

பாரி சொன்னான்... “ஏழிலைப் பாலை, பெண்மையால் பூக்கும்; அதைவிட முக்கியம் பெண்ணையும் ஆணையும் ஒருசேரப் பூக்கவைக்கும்.”

வியப்பு நீங்க சிறிது நேரமானது. உள்ளுக்குள் ஏனோ ஒரு சிரிப்பு பொங்கிவந்தது. அதை அடக்க முடியவில்லை. சற்றே திரும்பிச் சிரித்தார் கபிலர். ஏளனம்கொண்ட அந்தச் சிரிப்பின் தொனியைக் கவனித்த பாரி, ‘இதில் சிரிக்க என்ன இருக்கிறது?' என, பார்வையால் கேட்டான்.

கபிலர் சொன்னார்... ``அந்த ஏழிலைப் பாலையைத் தலைமாட்டில் நட்டுவைத்துக் குடும்பம் நடத்திக்கொண்டிருக்கும் கூட்டத்தோடு நான் வந்து சேர்ந்துவிட்டேனே என்று என்னை நினைத்துச் சிரித்தேன்.”

கபிலரோடு சேர்ந்து வெடித்துச் சிரித்தான் பாரி.



இருளை விரட்ட பந்தங்கள் தயாராகிக்கொண்டி ருந்தன. பாரி சொன்னான், “பந்த ஒளிக்குப் பூச்சிகள் வந்து விழாமல் இருக்க இலுப்பை எண்ணெய் ஊற்றப்படுவதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், அதற்கு எல்லாம் இந்தக் காட்டுப்பூச்சிகள் கட்டுப்படாது. நாங்கள் பயன்படுத்துவது கொம்பன் விளக்குகள். அதில் நாகக் கழிவும் நஞ்சுப் பிசினும் சேர்த்து மெழுகியிருப்போம். பந்தம் எரிவது திரியில் இருந்து மட்டும் அல்ல, திரியோடு சேர்ந்து விளக்கின் விளிம்பும் கருகியபடி தீய்ந்து எரியும். அந்த வாசனையை ஊடறுத்து பூச்சிகளால் உள்நுழைய முடியாது. ஒருவகையில் இதை `ஒளிவலை' எனச் சொல்லலாம். ஒவ்வொரு பருவகாலத்துக்கும் மாறுபடும் பூச்சியினங்களுக்கு ஏற்ப, கொம்பனில் தேய்க்கும் பசையும் மாறும். எண்ணெய்யின் சேர்மானமும் மாறும். அப்போதுதான் அவற்றைக் கட்டுப்படுத்த முடியும்.

கபிலர் பந்தம் ஏற்றப்போகும் காவலர்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஒரு பெரும் தாழ்வாரத்தின் அடியில், அவர்கள் எல்லோரும் கூடியிருந்தனர். கொம்பன் விளக்கில் எண்ணெய் ஊற்றப்பட்ட பிறகும், அவர்கள் நெருப்பைப் பற்றவைக்காமல் யாருக்கோ காத்திருந்தனர்.

தொலைவில் மாளிகையின் மேல்மாடத்தில் இருந்து அதைப் பார்த்துக்கொண்டிருந்த கபிலர் கேட்டார், ``உனது உத்தரவுக்காகத்தான் காத்திருக்கிறார்களா?”

“இல்லை. அவர்கள் குலநாகினியின் வருகைக்காகக் காத்திருக்கின்றனர்.”

பாரி சொல்லிக்கொண்டிருக்கும்போதே வயதான கிழவிகளின் கூட்டம் ஒன்று எவ்வியூரின் கீழ்த் திசையில் இருந்து நடந்து வந்துகொண்டி ருந்தது. கபிலர் எட்டிப்பார்த்தார். பாரி கையைக் காட்டிச் சொன்னான்... “அதுதான் நாகினிகளின் கூட்டம். அதற்குள்தான் குலநாகினி வந்துகொண்டிருப்பாள். அவள்தான் எங்கள் குலமூதாய். இந்த நாகப்பச்சை வேலியை ஆட்சிசெய்பவள் அவள்தான்.

பெண்களால்தான் இவ்வளவு நுட்பமான ஒரு வேலியைக் கட்டியமைத்துக் காப்பாற்ற முடியும். அவர்களின் சொல்கேட்டு தாவரங்கள் தழைக்கும்; தலையாட்டும். அவர்களின் உடம்பில்தான் கொடிக்குலத்தின் ரத்தம் ஓடுகிறது.

ஆதியில் நிலத்தில் சிந்திய குருதியில் இருந்து தழைத்தவர்கள்தானே அவர்களின் முன்னோர்கள். ஒரே நேரத்தில் மண்ணுக்குள் வேர்விடவும் மேல்நோக்கி முளைவிடவும் தாவரங்களால் முடிவதைப்போல இவர்களால் முடியும். கருவுக்குள் புது உயிர் சூல்கொள்ளும் கணத்தில்கூட, பிறந்த குழந்தைக்காக மார்பில் பால் சுரந்துகொண்டிருக்கும் அல்லவா? எல்லாம் தாவரப்பட்சினிகள். அபார ஆற்றல் படைத்தவர்கள். இவர்களிடம் மிகக் கவனமாக இருக்க வேண்டும்."

பாரியின் குரலுக்குள் இதுவரை கேட்டு அறியாத அச்சம் இருந்தது. குல சமூகத்தில் பெண்ணின் தலைமை இடத்தை வேளீர் குலம் அப்படியே வைத்துள்ளது.



“எங்களின் மூதாயின் குரலுக்கு குலமே அஞ்சும்” என்றான் பாரி.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அந்தக் கூட்டம் பந்தங்கள் ஏற்றப்படும் தாழ்வாரத்துக்கு வந்துசேர்ந்தது. நகர் எங்கும் ஏற்றப்படவேண்டிய பந்த எண்ணெய்களின் வாடையையும் கொம்பன் விளக்கின் வாடையையும் நுகர்ந்து பார்த்தபடியே ஒவ்வொரு விளக்காக ஏற்றிக் கொடுத்துக்கொண்டி ருந்தார்கள் நாகினிகள். ஏற்றப்பட்ட விளக்குகளைக் கையில் ஏந்திய வீரர்கள், அவற்றை உரிய இடங்களுக்கு எடுத்துச் சென்றுகொண்டிருந்தனர்.

``நாகப்பச்சை வேலியையும் ஒளி வலையையும் நிர்வகிப்பவர்கள் குலநாகினியின் தலைமை யிலான

பெண்களே. அவர்கள்தான் பருவ காலங்களின் தன்மையை அறிந்து, செய்ய வேண்டிய எல்லா முன்னெச்சரிக்கைகளையும் செய்து இந்த நகரையும் எங்களையும் காத்துவருகிறவர்கள். ஆண்கள் எல்லோரும் விலங்குகளை வேட்டையாடவும் வெளியுலக மனிதர்களிடம் இருந்து தற்காக்கவும்தான். புல் பூண்டில் இருந்து, இலையின் முனைக்கு வந்து இரு கால்கள் நீட்டி எட்டிப்பார்க்கும் எறும்புகள் வரை அறிந்தவர்கள் அவர்களே.”

பிரமிப்பு நீங்காமல் இருந்தது பாரியின் ஒவ்வொரு வார்த்தையும். வந்ததில் இருந்து இதுவரை பார்த்தறியாத பாரியை, கபிலர் இப்போது பார்த்துக்கொண்டிருந்தார்.

``நாகினிகள் பார்க்கிறார்கள். வாருங்கள் கீழிறங்கிப் போவோம்” என்றான் பாரி.

இருவரும் அந்த இடம் நோக்கி நடந்தனர். வீரர்கள் தீப்பந்தம் ஏந்தி எல்லா திசைகளிலும் சென்றுகொண்டிருந்தனர். எல்லா தீப்பந்தங்களும் அந்த இடத்தில் வைத்துதான் ஏற்றப்படுவதால், அங்கு கரும்புகை நிரம்பியிருந்தது. உள்ளே இருக்கும் யாருடைய முகமும் அருகில் வரும் வரை தெரியவில்லை. கரும்புகைக்குள் நுழைந்ததும் பாரி வணங்கினான். கபிலருக்கு புகைவாடை பெரும் உமட்டலைக் கொடுத்தது. கண்கள் வேறு எரிந்தன. உள்ளுக்குள் இருக்கும் யார் முகமும் தெரியவில்லை. உமட்டலை அடக்கியபடி கண்களைக் கசக்கிக் கசக்கிப் பார்த்தார். புகை பொங்கிப் பொங்கி வந்துகொண்டிருந்தது. மூக்கில் காரநொடி ஏறி, தும்மல் உருவானது. மூச்சிழுத்து வாய் திறந்தபடி, தும்மப்போகும் அந்த நொடியில் மூக்குக்கு மிக அருகில் தெரிந்தது பெருவிழி விரிந்திருந்த குலநாகினி முகம்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-13




நள்ளிரவு நெருங்கியது. எவ்வியூரை விட்டு சற்றுத் தொலைவில் நடுக்காட்டில் பெரும் மர அடிவாரத்தைச் சுற்றி வட்ட வடிவில் ஊரே உட்கார்ந்திருந்தது. எங்கும் பந்தங்கள் எரிந்துகொண்டிருந்தன. நடுவில் ஆடுகளம் இருந்தது. உட்காருவதற்கு ஏதுவாக மண்திட்டுகளும் மர அடுக்குகளும் உருவாக்கப்பட்டிருந்தன. அந்தப் பெரும் மரப் புதர்தான் கொற்றவையின் இருப்பிடம். அந்த மர அடிவாரத்தின் முன்னர் இலைவிரித்து, பதினைந்துவிதமான பனங்கூடைகள் நிறைய பல்வேறு வகையான பழங்கள் நிரப்பி வைக்கப்பட்டிருந்தன.
சுற்றிலும் பெரும் கூட்டம். நேர் எதிரே பாரியின் இருக்கை. அதற்குப் பக்கத்தில் கபிலர் அமர்ந்திருந்தார். மரத்தின் வலதுபக்கம் எண்ணற்ற பாணர்கள் வாத்தியக் கருவிகளோடு காத்திருந்தனர். இடதுபக்கம் குலநாகினி உட்கார்ந்திருந்தாள். அவளைச் சுற்றி நாகினிகளின் கூட்டம் இருந்தது. ஊர்மன்றலில் நடக்கும் குரவைக்கூத்துக்கோ, பாணர்களின் ஆட்டம்பாட்டத்துக்கோ, சந்தனவேங்கை முன்பு நிகழும் வள்ளிக்கூத்துக்கோ நாகினிகள் வர மாட்டார்கள். குலச்சடங்குகள் தவிர்த்து கொற்றவைக் கூத்துக்கு மட்டுமே அவர்கள் வருவார்கள்.

இருளின் மையத்தில் சிறுத்திருந்த வெளிச்சத்துக்கு நடுவில் குலநாகினியைப் பார்ப்பதே அச்சம்கொள்ளச் செய்தது. அவளின் தோளிலும் மடியிலும் கூகைக்குஞ்சுகள் தாவிச் சரிந்துகொண்டிருந்தன. அவள் தன் மேல் போட்டிருந்த தாவர வேர்களாலான மாலைக்குள், சிறுபாம்புகள் நெளிவதுபோல் கபிலருக்குத் தெரிந்தது. அந்தச் சூழலே மிகவும் அச்சமூட்டுவதாக இருந்தது. விழா தொடங்கவில்லை. பெரும் அமைதி நிலவியது. யாருக்காகக் காத்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

கபிலருக்கு கொற்றவை விழா பற்றி எத்தனையோ கேள்விகள் இருந்தன. ஆனால், விழா நாள் நெருங்க நெருங்க, ஊரே பேச்சைக் குறைத்து மௌனமாகியது. கபிலரால் யாரிடமும் எளிதில் உரையாட முடியவில்லை. தன்னோடு எப்போதும் பேசி மகிழும் நீலன், மற்றவர்களைவிட இறுகிய மௌனம் கொண்டிருந்தான். அவனிடம் இருந்து ஒரு வார்த்தையைக்கூட கபிலரால் வாங்க முடியவில்லை; ஏன் என்றும் புரியவில்லை. கபிலர் கேட்கிறார் என்பதால், பாரி மட்டுமே அவ்வப்போது ஒரு சில கேள்விகளுக்குப் பதில் அளித்தான்.

``கொற்றவைக் கூத்து பாலை நிலத்துக்கு உரியதுதானே. அதை ஏன் குறிஞ்சி நிலத்தில் நடத்துகிறீர்கள்?” என்று கேட்டார் கபிலர்.

“மனம் கொடும்பாலையாக வெடித்துக்கிடக்கும்போது எங்கே நடத்தினால் என்ன?”

பாரியிடம் இருந்து இவ்வளவு விரக்தியான ஒரு பதிலை கபிலர் எதிர்பார்க்கவில்லை. அவர் திகைப்புற்று நின்றார்.




“இது குறிஞ்சிக்கு உரிய கூத்து அன்று. ஐந்திணைக்கும் உரிய கூத்து” என்ற பாரியின் குரல், சத்தற்று பெரும் கலக்கம் கொண்டிருந்தது. இதற்கு மேல் கேள்வி எதுவும் கேட்க வேண்டாம் என கபிலர் எண்ணிக்கொண்டிருந்தபோது, பாரி தொடர்ந்தான்.

“இந்த மண் எங்கும் மூவேந்தர்களால் எத்தனையோ குலங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. பலநூறு ஆண்டுகளாகக் குருதி ஆறு வற்றாமல் ஓடிக்கொண்டிருக்கிறது. அழிபடும் குலங்களின் எண்ணிக்கை இன்று வரை தொடர்கிறது.”

இந்த விழாவுக்கும் பாரி சொல்லும் பதிலுக்கும் என்ன சம்பந்தம் என்ற குழப்பத்துடன், கபிலர் கேட்டுக்கொண்டிருந்தார்.பாரி தொடர்ந்தான், “அழிக்கப்பட்ட குலங்கள் எண்ணிக்கையில் எத்தனையோ… யார் அறிவார்? ஆனால், பேரரசுகளின் கொடும் தாக்குதலில் இருந்து தப்பி உயிர்பிழைத்தவர்கள் மிகச் சிலர். அவர்கள் எங்கெங்கோ அலைந்து திரிந்து, இறுதியில் பறம்பு

நாட்டுக்கு வந்து குடியேறி உள்ளனர். மூவேந்தர்களால் அழிக்கப்பட்ட பதினாறு குலங்களின் மிச்சங்கள், இப்போது பறம்பு நாட்டில் வசிக்கின்றன. அவர்கள் போர் தெய்வமான கொற்றவையிடம் முறையிட்டு, ஆராத்துயரைக் கொட்டி வஞ்சினம் உரைக்கும் விழாதான் இது.”



அழிக்கப்பட்ட பதினாறு குலங்களின் வழித்தோன்றல்கள் இன்னும் மிச்சம் இருக்கிறார்களா, அவர்கள் எல்லாம் பறம்பு நாட்டில் இருக்கிறார்களா? செய்தி கபிலரைக் கலங்கடித்தது.

பாரி தொடர்ந்தான்... ``நாங்கள் மட்டுமே வேந்தர்களிடம் இருந்து பாதுகாத்து அடைக்கலம் தர முடியும் என்ற நம்பிக்கையில் அவர்கள் இங்கு குடிபுகுந்தனர். அந்தக் குலங்களுக்கான குடிப் பாணர்களின் வழித்தோன்றல்கள், இப்போது எங்கெங்கோ இருக்கின்றனர். அவர்கள் எல்லாம் நான்கு ஆண்டுக்கு ஒரு முறை நிகழும் இந்த விழாவுக்கு வந்துவிடுவர். அழிந்த குலத்தின் வரலாற்றை அந்தப் பாணர்கள் பாட, இறுதியில் குலத்தின்  வழித்தோன்றல்கள் கொற்றவைக்குப் பலியிட்டுச் சூளுரைப்பார்கள்” என்றான் பாரி.

அதன் பிறகு இங்கு வந்து அமரும் வரை, கபிலர் பேச்சற்றவராக ஆனார். காலம் மனித அனுமானங்களுக்கு அப்பால் இயங்கிக்கொண்டேதான் இருக்கிறது. அதை எதிர்பாராத கணத்தில் சந்திக்கும்போது மனிதன் பொறி கலங்கிப்போவதைத் தவிர வேறு வழி என்ன?

அழிந்த குலங்களின் வழித்தோன்றல்களை இன்னும் சிறிது நேரத்தில் பார்க்கப்போகிறோம் என்பதை, கபிலரால் நம்பவே முடியவில்லை. கடந்த காலத்தின் பெரும் சாட்சி ஒன்று கண்கள் முன்னால் விரியப்போகிறது. மிச்சம் இருக்கும் அந்தக் குலங்கள்  எவை... எவை? தப்பிப் பிழைத்த அந்த மனிதர்கள் யார்... யார்? வரலாற்றில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட அந்த மகத்தான மனிதச் செல்வங்களை மீண்டும் காணக்கிடைப்பது எவ்வளவு பெரும் வாய்ப்பு. இப்படி ஒரு தருணம் தனது வாழ்வில் வரும் என அவர் நினைத்துக்கூட பார்த்தது இல்லை. பெரும் எதிர்பார்ப்புடன் இருந்தார். ஆனால், விழா

தொடங்காமல் இருந்தது. இந்த மௌனம் யாருக்காக, ஏன் நீடிக்கிறது என்பது கபிலருக்கு விளங்கவில்லை. பொழுது நள்ளிரவைக் கடந்தது.



இந்த மரத்தில் தெய்வவாக்கு சொல்லும் விலங்குகள் உள்ளன. அவை மிகச் சிறியவை. ஆந்தை முகமும் அணில் உடலும் குரங்குக் கால்களும்கொண்ட விலங்குகள் அவை. மிகப் பயந்த சுபாவம்கொண்டவை. அகலக் கண்களை விழித்து, குழந்தையைப் போலவே பயந்து பயந்து பார்க்கும் அவை, இன்னும் மரத்தைவிட்டு இறங்காமல் இருக்கின்றன. அவை மெள்ள இறங்கிவந்து எந்தக் கூடையில் உள்ள பழத்தை எடுத்துச் செல்கின்றவோ, அந்தக் குலப்பாடகன் தனது பாடலைப் பாடத் தொடங்குவான். பாடல் முடிந்ததும் அந்தக் குலத்தின் வழித்தோன்றல் கொற்றவைக்குப் பலியிட்டுச் சூளுரைப்பான். அந்தத் தெய்வவாக்கு விலங்குகள் இறங்கி வருவதற்காகத்தான் எல்லோரும் அமைதிகொண்டு காத்திருந்தனர். சிறுசத்தமும் அசைவும் இருந்தால்கூட அவை வெளிவராது. எனவே, அந்த இடத்தில் இருள் மிரளும் அமைதி நிலவியது.

மரக்கிளைகளுக்கு நடுவில், அப்போதுதான் பிறந்த ஆட்டுக்குட்டியைப் போல சின்னஞ்சிறிய உடல்கொண்ட அந்த விலங்கு மெள்ள இறங்கி வந்தது. தலையைத் திருப்பித் திருப்பிப் பார்த்தபடி, பயந்த விழிகளோடு கூடை அருகில் வந்தது. எல்லோரும் அது எந்தப் பழத்தை எடுக்கப்போகிறது என்பதை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர். கபிலரின் கண்கள் இமைகொட்டாமல் நிலைகுத்தி நின்றன. அசையும் மரக்கொப்பு ஒன்று சிற்றோசை எழுப்ப, பயந்து கணநேரத்துக்குள் அது உள்ளோடி ஒழிந்தது. அதன் மறுவருகைக்காக எல்லோரும் காத்திருந்தனர். அதைவிடச் சின்னதான தெய்வவாக்கு விலங்கு ஒன்று வேறுதிசையில் இருந்து இறங்கி வந்தது. தயங்கியபடி கால் எடுத்து வைத்த அது, கூடைக்கு அருகில் வந்து சேராது என்றுதான் பலரும் நினைத்தனர். ஆனால், நினைத்து முடிக்கும் கணத்தில் அதன் கையில், மூன்றாம் கூடையில் இருந்த இலந்தைப்பழம் இருந்தது.

அந்தக் கணத்தில் காட்டையே மிரட்டும் பேரொலியாக மேலே எழுந்தது குலவை ஒலி. மருத நிலத்துக்கு உரிய கிணைப்பறை கொட்டும் பாணர்கள் ஆடுகளத்துக்குள் நுழைந்தனர். கொற்றவையின் அருகில் வந்த மூத்த கிணையன், சிறுகோள்கொண்டு கிணைப்பறையின் தோலுக்கு மையத்தில் இருக்கும் கண்ணில் ஓங்கி அடித்தான். உடன்வந்த கலைஞர்கள் எல்லோரும் கிணை முழங்க அச்சமூட்டும் கிணைப்பறையின் பேரொலி எங்கும் பரவியது. குடிப்பாணன் பாடலைத் தொடங்கத் தயாரானான்.

கபிலர் நடப்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் பாரியைப் பார்த்தார்.



வைகைக் கரை கூடல்நகரை ஆட்சிசெய்த அகுதைக் குடிப்பாணர்கள் அவர்கள். அகுதையின் குலப்பாடலைப் பாடப்போகிறார்கள்” என்றான் பாரி.

கபிலருக்கு மயிர்க்கூச்செரிந்தது. அகுதையின் வழித்தோன்றல்கள் இந்த உலகில் இன்னும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்களா, அந்தக் கதையை பாணர்கள் பாடுகின்றனரா? கபிலர் உச்சந்தலையை கைகளால் அழுத்தி, மயிர்க்கற்றையின் சிலிர்ப்பைத் தளர்த்த முயன்றார். கூடல்மாநகரின் வரலாற்றையும் அகுதையின் கதையையும் அணுஅணுவாக அறிந்தவர் கபிலர். எத்தனையோ தலைமுறைக்கு முன்னால் நடந்த நிகழ்வு அது.

உரத்துச் சொல்லப்படுவதைவிட, காதோடு காதாகப் பேசும் கதைக்கு வயது அதிகம். அது காட்டுச்செடிபோல ஒருபோதும் நிலம்விட்டு அகலாது. அகுதையின் குலம் கூடலைவிட்டு அகற்றப்பட்டாலும் அவனைப் பற்றிய கதை கூடல்மாநகரில் இன்னும் சொல்லப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. யாரும் அறியாமல், விளக்குகள் அணைக்கப்பட்ட நள்ளிரவில், ரகசிய மொழியில், அகுதையின் கதை காலங்களைக் கடந்து வந்துகொண்டே இருக்கிறது.

நாட்டில் உலவும் ரகசியக் கதை, காட்டுக்குள் பெரும் குரலெடுத்துக் கர்ஜிக்கிறது. கிணைப்பறை முழங்க, பெரும் பாணன் கதையைத் தொடங்கினான்.

**வை**கைக் கரையில் செழித்து வளர்ந்த வேளாண்மை, அழகிய நாகரிகத்துக்கு அடித்தளம் அமைத்தது. நதிக்கரையின் நிலவளம் கொண்டு பயிர் வளர்க்கவும் விளையவைக்கவும் அறுவடையைக் குவிக்கவுமாக, விவசாயத்தின் ஆதிரகசியங்களைக் கண்டறிந்தவர்கள் கூடல்வாசிகளே.

குறிஞ்சி நிலம், கற்களாலான மண்ணை உடையது; முல்லை, வெண்ணிற மண்ணை உடையது; நெய்தல், உவர் மண்நிலம். பாலை, செம்மை ஏறியது; மருதம் மட்டுமே பொன்னிறமாக கரிசலும் வண்டலும் மேவிக்கிடப்பது. அதனாலேயே மண்ணையும் நீரையும் பிசைந்து உணவாக மாற்றக்கூடிய வித்தையை கூடல்வாசிகள் முந்திக் கற்றனர்.



அவர்களுக்குத்தான் மண்ணின் நிறம் பிடிபட்டது. வெவ்வேறு வகையான மண்ணுக்கு இருக்கக்கூடிய குணங்கள் பிடிபட்டன. புற்றுகளும் ஊற்றுகளும் அவர்களின் கணிப்புக்குள் அடங்கின. தாவரங்களின் வேர்களை எந்த மண் தனது மார்போடு உள்வாங்கி அணைத்துக்கொள்ளும், எந்த மண் தலையில் முட்டி வெளித்தள்ளும் என அவர்கள் கண்டறிந்தனர். பறவைகளின் அலகு பறித்துத் தின்னும் காட்டுக் கதிர்களைக் கண்டறிந்தனர். பறவைகளின் கழிவில் இருந்து முளைவிடும் தானியமணிகள் எவை எவை என்பதைப் பற்றிய அறிவுச்சேகரம் அவர்களிடம் இருந்தது.

முதல் தானியம் நடும்போது அந்தப் பறவையின் சிறகை, அதன் அருகில் நட்டு தங்களுக்கு வழிகாட்டிய அந்த வானம்பாடிக்கு நன்றி சொல்லும் மரபைக்கொண்டவர்கள். விளைந்த பயிரைத் தின்னவரும் விலங்குகளை வேல்கொண்டு விரட்டுவர். ஆனால், பறவைகளை வேண்டிக்கொள்ள மட்டுமே செய்வர். ஏனென்றால் பறவையே ஆசான். பறவையின் எச்சம் கண்டே பயிர்செய்து பழகியவர்கள். பறவை உண்ட மிச்சமே நமக்கு என அறம் வகுத்துக்கொண்டனர்.

காடு எங்கும் அலைந்து சேகரித்த தானியங்களை, கால் பரப்புக்குள் விளையவைத்து அறுக்க முடியும் என்பதைச் செய்துகாட்டியவர்கள் அந்தக் குலத்தின் முன்னோர்களே. அவர்களே மனிதக் கூடலின் ஆற்றலை, மண்ணில் விளையும் பயிராக மாற்றியவர்கள். அவர்கள் வாழ்விடமே கூடல் என அழைக்கப்படலாயிற்று. அந்தக் கூடல் நகரை உருவாக்கிய குலத்தின் தலைவன் அகுதை.

அகுதையின் கதையைக் குலப்பாடகன் பாடத்தொடங்கிய கணமே பாரியின் கண்கள் கலங்கின.

``வேளாண் அறிவின் நுணுக்கத்தை இந்த உலகுக்குக் கண்டறிந்து சொன்னது அகுதையின் குலம் அல்லவா” - கபிலரைப் பார்த்து பாரி சொன்னபோது, அவனது கண்களில் திரண்ட நீருக்குள் பந்தத்தின் வெளிச்சம் நெளிந்தது.

உப்பு விற்கும் உமணர்களே நிலம் எங்கும் அலைந்து திரிபவர்கள். கடற்கரை தொடங்கி மலைமுகடு வரை அவர்களின் வண்டிச்சக்கரங்கள் சதா உருண்டுகொண்டே இருந்தன. எல்லோருக்கும் தேவைப்படும் பொருள்கள் அவர்களிடம் இருந்தன. எல்லோரும் தங்கள் கைவசம் இருந்த பொருளை அவர்களிடம் கொடுத்து உப்பைப் பெற்றனர்.

இந்த நிலம் எங்கும் இருக்கும் மனிதக் கூட்டங்கள், அவர்களின் வாழ்விடங்கள், அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், செல்வச் செழிப்பு, சேமிப்பு என, எல்லாவற்றையும் அறிந்தவர்கள் அவர்களே.

கூடல்நகரில் வளமை கொடிகட்டிப் பறந்தது. விளைச்சல்கள் குவிய, தானியக் குதிர்கள் வைக்கும் ஆளுயர மொடாவை, உமணர்கள் அங்குதான் முதன்முதலில் கண்டனர். அந்தக் குலத்தின் செழிப்பு உமணர்களின் கண்களில் அதிசயம் என நிலைபெற்றது. அது சொல்லவேண்டிய எல்லா செய்திகளையும் சொன்னது.


பொருநை ஆற்றின் முகத்துவாரத்தில் இருந்த கொற்கைப்பாண்டியன் தன் வீரர்களோடு புறப்பட வேண்டிய  நாளை, உமணர்கள் சொன்ன தகவலை வைத்தே முடிவுசெய்தான்.

`வைகையில் புனலாட்டு விழா. கூடல்வாசிகள் முழுவதும் நீராடி மகிழ்ந்திருக்கும் நன்னாள். அன்று காலை நமது படை கூடல் நகருக்குள் நுழைந்தால் எளிதில் அதைக் கைப்பற்றலாம்' என்று உமணர்கள் நாள் குறித்துச் சொன்னார்கள். முதல் நாள் நண்பகலில் கொற்கைப்பாண்டியன் படை கடற்கரையில் இருந்து புறப்பட்டது.

**கி**ணைப்பாணன் தனது தாள லயத்தைக் கூட்டத் தொடங்கினான். செங்காலி மரத்தால் செய்யப்பட்டு, மயிர்சீவாத செவ்வித்தோலைக் கொண்டு போத்தப்பட்ட கிணைப்பறை, அதன் அகால ஓசையை எழுப்பத் தொடங்கியது. குலப்பாடகனின் குரல்நாளங்கள் வெடிப்புறத் தொடங்கின. ஒரு கொடூரம் அரங்கேறப்போகும் விடியல்பொழுதைப் பாட அவனது நா எழவில்லை.

**பொ**ழுது புலர்ந்தது. வைகையின் பெருவெள்ளம் தாவிக் குதித்தோடியது. கூடல் மாநகரே நதிக்கரையில் வந்து ஆவலோடு நின்றுகொண்டிருந்தது. குலத்தலைவன் அகுதை, யானை மீது ஏறி வைகைக் கரைக்கு வந்து சேர்ந்தான். எல்லோரும் அவனது கையசைவுக்காகக் காத்திருந்தனர்.

வைகையை வணங்கி, கூட்டத்தை நோக்கிக் கையசைத்தான் அகுதை. புனலாட்டு விழா தொடங்கியது. கரையில் இருந்த இளைஞர்களும் இளைஞிகளும் வைகையில் பாய்ந்து உள்ளே இறங்கினர். புனலாட்டு விழா என்பது காதல் திருவிழா. காதலர்கள் நீரால் ஒருவரை ஒருவர் அடித்து விளையாட ஆரம்பித்து, நேரம் செல்லச் செல்ல நீர் அடித்தாலும் விலகாத விளையாட்டாக மாறும். மணமானவர்களும் தம் இணையோடு சென்று வைகையில் நீராடி, காதல் பேசி, கனிவுகொண்டு விளையாடுவர்.



காமத்துக்கு மிக அருகில் பயணிக்கும் ஒரு திரவம் நீர். அதுவும் நதியில் ஓடும் நீர் தனது உள்ளங்கையில் இருக்கும் ஆணையும் பெண்ணையும் கணநேரத்துக்குள் கரைத்துவிடும். கரைந்தவர்கள் காதல்கொண்டவரின் உடலுக்குள் உறைந்திருப்பர். உடலின் வாசனையை மனதுக்குள் பாயவிடும் மாயசக்தி நீருக்கு மட்டுமே உண்டு.

மண்ணில் கால்பாவாமல் மனிதன் நடப்பது தண்ணீருக்குள்ளும் காதலுக்குள்ளும்தான். இரண்டும் ஒன்றுசேரும் தருணத்தில் நிகழ்வது எல்லாம் மாயவித்தைகளே. வித்தைகளின் வாடிவாசல் வழியே பீறிட்டு ஓடிக்கொண்டிருந்தது வைகை.
அகுதை உள்ளிறங்கும் பொழுதுக்காக கரையில் நின்றிருந்தவர்கள் காத்திருந்தனர். காதல் ஏறிய கண்கொண்டு தனது மனைவியைப் பார்த்தான் அகுதை. அவளோ அவனது தோள்கவ்வி உள்ளிறங்கும் பொழுதுக்காகக் காத்திருந்தாள். அகுதை நதி நீருக்குள் கால் நுழைத்தான். இன்னும் சற்று உள்ளே போகட்டும் அவனது தோளைத் தாவிப்பிடித்தபடி நாம் இறங்குவோம் என அவள் கல்பாவியத் திட்டில் நின்றிருந்தாள். ஏன் இன்னும் வராமல் இருக்கிறாள் என யோசித்தபடி, அகுதை இரண்டாவது அடியை எடுத்து நீருக்குள் வைத்தான். அவன் தோளின்மேல் சரிந்துவிழலாம் என அவள் நினைத்தபோது, அருகில் தோழியிடம் இருந்த அவள் மகன், பெரும் குரலெடுத்து அழ ஆரம்பித்தான்.

``பெருக்கெடுத்து ஓடும் நீரும் உற்சாகப் பேரொலியும் குழந்தையைப் பயமுறுத்தியிருக்கும், அவனை அமைதிப்படுத்திவிட்டு வருகிறேன். நீங்கள் உள்ளிறங்குங்கள்'' எனச் சொல்லிவிட்டு தோழியிடம் போனாள். தாயைப் பார்த்ததும் குழந்தையின் அழுகை மேலும் கூடியது. அவள் அவனைச் சமாதானப்படுத்த எவ்வளவோ முயன்றாள்; முடியவில்லை. நீருக்குள் இருந்து அவளையே பார்த்துக்கொண்டிருந்தான் அகுதை. அந்தப் பார்வை அவளைத் துளைத்துக் கொண்டிருந்தது. குழந்தை அழுகையை நிறுத்துவதாக இல்லை. வேறு வழியில்லாமல் குழந்தையைத் தூக்கிக்கொண்டு, நதிக்கரைவிட்டு சற்றே அகன்று உள்காட்டுக்குள் நுழைந்தாள். குழந்தையின் முதுகைத் தட்டியபடி சமாதானப்படுத்தினாள்.

குழந்தை அழுகையை நிறுத்தவே இல்லை. நீரின் சத்தமும் நீராடுவோர் சத்தமும் கேட்காத அளவுக்கு அடர்ந்த மரங்களுக்கு இடையே மிகவும் உள்ளே சென்றாள். உள்ளே செல்லச் செல்ல ஓசையின் அளவு கூடுவதுபோல் உணர்ந்தாள். மனிதக் கூக்குரல் எங்கும் எதிரொலிக்கிறதே என யோசித்தவள், அகுதையின் கண்கள் தன்னைத் தடுமாறவைக்கிறது என நினைத்தபடி காட்டை ஊடுருவி வெகுதொலைவு சென்றாள். காலைக்கதிர்களின் இளமஞ்சள் ஒளியில் உள்காடு ஒளிர்ந்துகொண்டிருந்தது. எங்கும் தும்பிகள் பறந்தன. புல்நுனிகள், பனித்துளிகளை உலர்த்தாமல் வைத்திருந்தன.

தரையில் அழகிய செம்மூதாய் ஒன்று நகர்ந்துகொண்டிருந்தது. செந்நிறப் பட்டுப்பூச்சி அது. மேனி எல்லாம் மெத்தைபோல மினுமினுத்து நகர்ந்தது. குழந்தையை அதன் அருகில் இறக்கிவிட்டாள். குழந்தை தனது பிஞ்சுவிரலால் செம்மூதாயின் மேனியை மெள்ளத் தொட்டதும் அது நகர்வதைப்

பார்த்து மலர்ந்து சிரித்தது. அந்தப் செம்பட்டுப் பூச்சியிடம் சிறிதுநேரம் விளையாடவிட்டபடி அவள் நின்றுகொண்டி ருந்தாள்.

சிவப்பு, காமத்தின் அடையாளம். அவளது கண்கள் அதற்குள் போக எண்ணங்கள் எங்கெங்கோ சென்றுகொண்டிருந்தன. அகுதையின் தோள்தழுவிய அந்த முதற்கணம் நினைவுக்கு வந்தது. அகுதை, அதிகம் பேசாதவன். ஆனால், அந்த இரவில் அவன் பேசியதை இன்னோர் ஆண், இந்த உலகில் பேசியிருப்பானா என்பது சந்தேகமே. காதல் சொல்லால்தான் மலர்கிறது. காதல்கொள்கையில் சின்னஞ்சிறு சொற்கள் எவ்வளவு பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தக்கூடியனவாக இருக்கின்றன.
சிறு உளியால் மலைகள் உடையும் தருணம் அது. அவன் ஒற்றைச்சொல் சொல்லும்போது, அப்படி ஒரு வெட்கம் உடல் எங்கும் பரவியது. அந்தச் சொல் ஞாபகம் வந்த கணம் மீண்டும் வெட்கம் பரவி, தன்னை அறியாமல் சிலிர்த்து மீண்டாள்.




சொற்கள் நினைவுக்கு வந்த கணத்திலேயே, செயல்களும் நினைவின் வழியே மேலே எழுந்து வந்துவிடுகின்றன. அதன்பின் என்ன செய்ய முடியும்? சற்றே பெருமூச்சுவிட்டபடி குழந்தையைப் பார்த்தாள். அவன் செம்மூதாயின் பின்னால் நகர்ந்துபோய்க்கொண்டிருந்தான்.

திருமணம் முடிந்த முதல் புனலாட்டு விழாவின்போது அவள் கருவுற்றிருந்தாள். அதனால் ஆற்றுக்குள் இறங்கவில்லை. இரண்டாம் ஆண்டான இப்போதும், அதேபோல் தன்னந்தனியாகவே அகுதை ஆற்றுக்குள் இறங்கினான். கரையில் நின்ற அவளைத் துளைத்தெடுத்தது அகுதையின் பார்வை.

ஆணின் பார்வை பெண்ணின் பார்வையைப்போல நயமிக்கது இல்லை. ஆணின் கண்கள் காதல்கொள்பவை; ஆனால், காதலைச் சொல்லக் கற்றவை அல்ல. அவன் பார்வையால் பற்றி இழுத்தாலும், அவள் கண்களால் கைம்மாறு செய்துகொண்டிருந்தாள்.

கண்கள் விழித்திருந்தாலும் ஆந்தைக்கு பகலில் பார்வை கிடையாது. அதைப்போலத்தான், மனிதன் நீருக்குள் மூழ்கிவிட்டால் பார்வையைத் தொலைத்துவிடுகிறான். ஆனால், காதலர்களுக்கு அப்படி அல்ல. அவர்கள் அந்த இடமே பார்வை பெறுகின்றனர். கண்களின் வேலையை கைகள் எடுத்துக்கொள்கின்றன. தொடுதலின் மூலம் ஆயிரம் விழிகள் உள்ளுக்குள் விழித்து அடங்குகின்றன. அதனால்தான் நீர் விளையாட்டு காதலின் களம் ஆகிறது.

அவள் கண்களைச் சிமிட்டி கனவைக் கலைத்தாள். குழந்தை நீண்ட நேரம் விளையாடி அமைதி அடைந்தது. சரி... அழைத்துச் செல்லலாம் என முடிவுசெய்து, அவள் காட்டைவிட்டு நடக்கத் தொடங்கினாள். நதியை நோக்கி வர வர அவளுக்குக் காட்டின் அமைதியே நீடித்தது. கொண்டாட்டத்தின் பேரொலி கேட்கவில்லை. இவ்வளவு அமைதியாக நீராட வாய்ப்பே இல்லையே என யோசித்தபடி, நதியின் கரையில் ஏறி நின்று பார்த்தாள். மொத்த வைகையும் நீண்டு நகரும் செம்மூதாயாகக் காட்சி அளித்தது. குருதி கரைபுரண்டோட கரை எங்கும் மீன் எலும்புகள்போல் முட்கள் கோக்கப்பட்ட ஈட்டியுடனும் உயர்த்திய வாளுடனும், எண்ணற்ற வேற்றுக்குலத்தினர் நின்றுகொண்டிருந்தனர்.

குரல்வெடித்துச் சரிந்தான் குலப்பாடகன். பெண்களின் குலவை ஒலி பீறிட்டுக்கொண்டிருந்தது. குரல் உடைந்தபடி பாரி கபிலரிடம் சொன்னான்... “அந்தப் பெண் எதிரிகளின் கண்ணிற்படாமல் தப்பித்து, கையில் குழந்தையோடு ஒரு முதுகிழவனை அழைத்துக்கொண்டு, பல மாதங்களுக்குப் பிறகு பறம்பு நாட்டுக்குள் நுழைந்திருக்கிறாள். பறம்பின் மக்கள் அவளை அள்ளி அணைத்துப் பாதுகாத்திருக்கின்றனர். அவள் வழித்தோன்றல்தான் இப்போது கொற்றவைக்குக் காளையைப் பலிகொடுத்துச் சூளுரைக்கப் போகிறான்” என்றான்.

தாங்க முடியாத துக்கத்தைக் கிழித்துக்கொண்டு கபிலருக்கு ஆர்வம் மேலே ஏறியது. அகுதையின் வழித்தோன்றல் - இயற்கையை, வேளாண்மையை, நாகரிகத்தை நேசித்த அந்த மாமனிதனின் வம்சக்கொடி யார் என அறிய, கபிலர் ஆடுகளத்தை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார். தாமரையின் மேல் இதழில் முள் இறங்கும் நேரம்கூட அவரால் தாங்க முடியவில்லை. அந்த மகத்தான குலத்தில் உதித்த திருமகனைக் கண்டு வணங்க அவரை அறியாமலே கைகள் கூப்பின.

அந்தக் கணம் இடம் இருந்து உள்ளிறங்கினான் நீலன்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-14




இரவில் ஏற்பட்ட மனக்கலக்கம் பகல் முழுவதும் பரவிக்கிடந்தது. பாரி தனது அறைக்கு வரும் வரை கபிலர் செயலற்றே கிடந்தார். பாரிதான் அவரை அழைத்துச் சென்று உணவு அருந்தவைத்தான். பிறகு இருவரும் தேர் ஏறி பாழியூருக்குச் செல்லும் பாதையில் சென்றனர். கபிலர் எதுவும் கேட்காமல் வந்துகொண்டிருந்தார்.

புன்னைமர அடிவாரத்தில் தேரை நிறுத்தச் சொன்னான் பாரி. வளவன், குதிரைகளின் கடிவாளத்தை இழுத்து நிறுத்தினான். இருவரும் இறங்கி காட்டுக்குள் நடந்தனர்.



“பறம்பில் காலடி எடுத்துவைத்த கணத்தில் இருந்து நீலனோடு பயணிக்கிறேன். தன்னைப் பற்றி ஒரு சொல்கூட அவன் சொல்லவில்லை” என்றார் கபிலர்.

பாரி அமைதியாகக் கேட்டுக்கொண்டு வந்தான்.

சட்டென நினைவு வந்தவுடன், “இல்லை...இல்லை...” என தான் சொன்ன சொல்லை மறுத்த கபிலர், “வேட்டுவன் பாறையில் வரும்போது அவனது குலப்பாடல் பற்றி அவன் சொல்ல வந்தான். `அது இருக்கட்டும்’ என அதைப் புறந்தள்ளிவிட்டேன். எனது அந்தக் கொடும் செயலுக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் தரலாம்” என்றார்.

``பறம்பில் தண்டனை கிடையாது.”

பாரியின் சொல், குற்றவுணர்வில் இருந்து வியப்பின் பரப்புக்குத் தூக்கி வந்தது கபிலரை. வழக்கம்போல் சொல்லால் தாக்குண்ட புலவன், மறுசொல்லின்றி பாரியின் குரலுக்காகக் காத்திருந்தான்.
பாரி சொன்னான், “ஒருவகையில் அதுதான் கொடும் தண்டனை.”


கபிலர் மெள்ளத் தலையசைத்து, தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை ஏற்றார்.

இவர்கள் பேசிக்கொண்டு நடந்த அதே பொழுதில், எவ்வியூரின் தென்புறக்காட்டில் மருதமர அடிவாரம் ஒன்றில் மயிலாவின் மடியில் தலைசாய்த்துக்கிடந்தான் நீலன். இரவில் எருமையின் தலையை வெட்டி, பொங்கும் குருதியோடு நீலன் ஆடிய ஆட்டத்தைப் பார்த்தவர்கள், இன்னும் நடுக்கம் மீளாமல்தான் இருக்கின்றனர். தான் பார்த்து அறியாத நீலனை நேற்றுதான் கண்டுணர்ந்தாள் மயிலா.

தனது மடியில் தலைசாய்த்துக்கிடக்கும் அவனை, கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் முதல்முறையாக கொற்றவைக்கூத்துக்கு இப்போதுதான் வந்திருக்கிறாள். நீலனோடு இருவார காலம் எவ்வியூரில் மகிழ்ந்திருக்கலாம் என்பதற்காகத்தான் வந்தாள். ஆனால், வைகையில் ஓடிய குருதி அவனது உடலில் தேங்கிக்கிடக்கிறது என்பது இங்கு வந்த பிறகுதான் அவளுக்குத் தெரியும். வாளோடும் வலியோடும் ஒட்டிப்பிறந்த ஒருவன், அவள் மடிமீது தலைவைத்துத் துயில்கிறான்.

இரவில் நீலன் ஆடியது, ஆட்டம் அல்ல; ஒரு போர்க்களத்தின் இறுதிப்பாய்ச்சல். வெட்டிய காட்டு எருமையின் குருதியை உடல் முழுவதும் பூசியபடி நிலம் அதிர ஆடினான். நிலத்தில் பட்டும் வானில் சுழன்றும் திரிந்த நீலனின் கால் அசைவுகளுக்கு ஈடுகொடுக்க முயன்று, திம்... திம்...திம்... திம்... எனப் பறையைக் கொட்டிய பாணர்களின் கைகள் நொந்ததுதான் மிச்சம். அவனது காலடி அசைவுகளுக்கு, பறையொலியால் இறுதிவரை ஈடுகொடுக்க இயலவில்லை. பறை அடிக்கும் கோல்கள் நார் நாராகப் பிரிந்தன. கிணைப்பறையின் கண் கிழிந்த பிறகும் நீலனின் ஆட்டம் நிற்கவில்லை. கூட்டத்தின் குலவை ஒலி மலை எங்கும் எதிரொலித்த ஒரு கணத்தில், உடலின் ஆவேசம் உச்சம் அடைந்து மயக்கநிலை கொண்டான் நீலன். அவன் சரிந்துவிழப் போகிறான் என யூகித்த பாரி, தன் இருக்கையைவிட்டு எழுந்து அவனை நோக்கி ஓடினான். ஆவேசத்தோடு நிலத்தைச் சுற்றிய


வேகத்தில், ஒடிந்த கொம்புபோல் சரிந்தான் நீலன். சரியும் அவனது உடல் மண்ணைத் தொடும் முன் தாங்கிப்பிடித்தன குலநாகினியின் கரங்கள்.



உக்கிரம் ஏறிய குலநாகினி, நீலனை இரு கைகள் ஏந்தி எதிர்க்களமாடினாள். போர்க்களத்தில் சினம்கொண்டு ஆடும் கொற்றவையின் ஆட்டம் அது. தாவர வேர்கள் உடல் எல்லாம் சரசரக்க, கூகைக்குஞ்சுகள் எங்கும் சிதறி விழ, நாகப்பச்சை நாயகி, வேளீர்குல நாகினி, நீலனை ஏந்தி களம் முழுவதும் வலம்வந்தாள். குலவை ஒலிகளும் பறையொலியும் விண்ணை முட்டின. ஆடுகளம், ஆவேசத்தால் குலுங்கியது. நாகினியின் முன் மண்டியிட்டு இரு கைகள் ஏந்தி நின்றான் பாரி. கண்களில் இருந்து நீர் சரிவதைப்போல, அவளது கரங்களில் இருந்து சரிந்த நீலனைத் தாங்கின பாரியின் கரங்கள்.

அந்த உடல்தான் தளர்ந்து மயிலாவின் மடியில் சாய்ந்துகிடக்கிறது. அவளால் அவனைத் தொட முடியவில்லை. காதல்கொண்டு நெருங்க முடியாத ஒரு மானுடனை என்ன செய்வது எனத் தெரியாமல் அவள் திகைத்துக்கிடந்தாள். பெரும் வனத்தை சிறு பூ ஒன்று காதல்கொள்வதைப் போல் அவளுக்குத் தோன்றியது.

திகைப்பில் இருந்து மீள முடியாமல்தான் இருவரும் நடந்தனர். ஆனால், எந்த ஓர் உரையாடலை நடத்தினாலும், அது மேலும் திகைப்பைக் கூட்டவேசெய்யும் என்பது இருவருக்கும் தெரியும். ஏனென்றால், அகுதையின் குலக்கதை இந்த மண்ணில் எல்லோரும் அறிந்ததே. எல்லோரும் அறிந்த கதையை அறிஞர்கள் இன்னும் அடியாழத்தில் இருந்து அள்ளித்தருவர். கபிலரின் சொற்கேட்க ஆவலோடு இருந்தான் பாரி.



கபிலர் சொன்னார், ``மருத நிலத்தில் ஒரு பறவை இருந்தது. அதன் பெயர் `அசுணமா'. இசைக்கு மயங்கும் பறவை அது. கூடல்வாசிகள் வைகைக் கரையில் அமர்ந்து, மாலைப்பொழுதில் சிறு யாழ் மீட்டி மகிழ்ந்திருப்பர். அசுணமா சிற்றொலி எழுப்பியபடி நாணல்களுக்குள் இருந்து ஒவ்வொன்றாகப் பறந்து வரும். யாழ் இசைக்கப்பட்டுக்கொண்டே இருக்க, இசைப்பவனைச் சுற்றி அசுணமா வந்து இறங்கும். கொன்றை மரக் கிளையால் செய்யப்பட்ட யாழையே கூடல்வாசிகள் மீட்டுவர். அசுணமா, கொன்றை மரத்தில் மட்டுமே அடையக்கூடிய பறவை. யாழின் இசை செவியிலும் கொன்றையின் வாசனை நாசியிலும் ஏற, அசுணமா கிறங்கி, அந்த இடத்திலேயே அடையத் தவிக்கும். நேரம் ஆக ஆக அது இசைப்பவனை நெருங்கும். பின்னர் அவன் மேலே ஏறத் தொடங்கும். அவனது தோள், கால், கை என எங்கும் சிற்றீசல்போல் மொய்க்கத் தொடங்கும். மயங்கிய அசுணமா, இசைப்பவனோடு கொஞ்சும்; தனது சிறு அலகால் அவனது கூந்தலைக் கோதும்.

மலரின் இதழ் விரிவதற்காக, அவற்றுக்கு எதிரே பறந்தபடியே காத்திருக்கும் தேனீக்கள் போல, இசைப்பவனின் இமைக்கு நேரே இறக்கைகளை அசைத்தபடி அது தள்ளாடித் தள்ளாடி மிதக்கும்.

இசைப்பவன் அதைக் கண்டு சிரித்துக்கொண்டே யாழ் மீட்டுவான். அந்தச் சிரிப்பை தனது அலகால் கொத்த அவனது இதழை முட்டும். அதன் கொஞ்சலில் இருந்து விடுபட முடியா இசைஞன், இரவு எல்லாம் யாழ் மீட்டிக்கிடப்பான்” எனச் சொல்லும்போதே கபிலரின் குரல் உடையத் தொடங்கியது. “கூடல்வாசிகளுக்கு அசுணமாதான் குலப்பறவை. இசை கேட்டுத் தலையாட்டும் அசுணமா, இன்று இந்த நிலவுலகில் எங்கும் இல்லை. அந்தப் பறவை இனம் எங்கே போனது, எப்படி அழிந்தது என யாருக்கும் தெரியவில்லை. `குட்டூர் முடவனார்’தான் ஒரு கவிதை பாடினார், அகுதையின் குலம் அழிந்த மறுநாள், யாழ் நரம்பில் வந்து மோதி மோதி, தங்களின் கழுத்தை அறுத்துக்கொண்டு அசுணமாக்களும் அழிந்தன என்று.”

விரல்களால் அவனது தலைமுடியை மெள்ளக் கோதினாள். ஆற்றல் இன்றி அயர்ந்துகிடந்த நீலன், கண்விழிக்க முயன்றான். அவள் கன்னம் தொட்டு, தூங்குமாறு இமை மூடினாள். அவனுக்குள் இரவின் ஆவேசம் மேலே எழும்பியபடியே இருந்தது. கிணைப்பாணனின் குரல் செவிப்பறைக்குள் மீண்டும் மீண்டும் வந்து மோதியது. நினைவுகள் அவனது கழுத்தை நெரித்தன. எல்லாவற்றையும் சட்டென மறுத்து கண் விழித்தான். அவள் சற்றே அச்சம்கொண்டாள். அவளது விரல்கள் கன்னம் தொட அஞ்சின.

அவன் கழுத்தைத் தூக்கி எழ முயலும்போது, அவள் நெஞ்சில் கைவைத்து அழுத்தி, அவனைப் படுக்கச் செய்தாள். அவன் மனம் இரவில் இருந்து மீள முயன்றது. அவள் விரல்களால் அவனது உடல் முகர்ந்து, வெளிவர வழி அமைத்துக்கொண்டிருந்தாள்.



பாரி கேட்டான், “கூடல்வாசிகளுக்கு மட்டும் உழவு சிறப்பாக வசப்பட்டது எப்படி?''

“எல்லோரும் காட்டை அழித்து விளைநிலமாக்கியபோது, காட்டை அறிந்துகொண்டு நிலத்தை விளையவைத்தவர்கள் அவர்கள்.”

ஆர்வத்தோடு பாரி வினவினான், ``எப்படி?”

``பன்றி அகழ்ந்த நிலத்தில் பயிர் நட்ட மலை அனுபவம்தான், சமதளத்தில் பயிர் நடுமுன் மண்ணை ஏர்கொண்டு கிளறச் சொல்லியது. பன்றியின் முன் உதடு பூமியின் தன்மையை உணரும். அதுபோல

பூமியை உணரவும், அதைக் கிழித்து இறங்கும் மரத்தை உணரவும் முயன்றனர் கூடல்வாசிகள்.

வண்டல் மண்ணுக்கு, இறுகிய மண்ணுக்கு, இளமண்ணுக்கு என உழுபடைகளை வகைப்படுத்தி உருவாக்கினர். தாளி மரமும் வேலா மரமும் வெக்காளி மரமும்கொண்டு கலப்பைகள் செய்து, மண்ணின் தன்மைக்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்தினர். உழு மரங்கள் மண்ணுக்கு ஏற்ற ஆழம்கொண்டு உழுதன. எல்லோரும் நிலத்தை உழ வேண்டும் என அறிந்திருந்தனர். ஆனால், உழும் நிலத்தை உணர வேண்டும் என்று அறிந்தவர்கள் அவர்களே.”

உணர முடியா இடத்தில் கிடந்த நீலனை உணரத் தலைப்பட்டாள் மயிலா. இடதுகையால் கழுத்தோடு அணைத்து அவனைத் தூக்கினாள்.அவனது முகம் முழுவதும் அவளது கூந்தல் உழுது இறங்கியது. மேல் உதடு கிளறி உள்ளிறங்கத் துடித்தன அவளது இதழ்கள். ஆனால், அவன் சோர்வில் இருந்து விடுபடாமல் இருந்தான். மூடி வைத்திருந்த சிறு கலயத்தை எடுத்து அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். அவன் கைகள் மிகவும் துவண்டிருந்தன. அவளது வலதுகை, கலயத்தைத் தாங்கியிருக்க... அவன் குடித்தான்.

நினைவுகளை உதிர்த்துவிட்டு வெளிவரத் துடிக்கும் அவனது வேட்கை, கண்களில் தெரிந்தது. நீராகாரம் உள்ளுக்குள் இறங்கி மயக்கம் கலைக்கத் தொடங்கியது. நீலன் நினைவின் ஆழத்தில் இருந்து மேலேறி மேலேறி, அவளது மார்பின் சரிவுக்கு வந்து சேர்ந்தான்.

கபிலர், தான் கேள்விப்பட்ட அந்தப் பூர்வகதையை வியப்பு குறையாமலே சொன்னார்...

``அது மட்டும் அல்ல. ஏர்க்கலப்பையை மாடு இழுக்க, அதன் கழுத்தில் போடும் குறுக்கு ஆரத்தை (நேக்கா) எல்லா மரங்களிலும் செய்து மாட்டின் கழுத்தில் மாட்டி இழுக்கவைத்தனர். அகுதையின் குலம்தான் முதலில் கண்டறிந்தது, அத்தி மரம்தான் ஆவினத்தின் சேர்மானம் என்று. குறுக்கு ஆரத்தை அத்திமரத்தில் செய்தனர். அதுதான் கனம் குறைவாக இருக்கும். எவ்வளவு இழுத்தாலும் மாட்டின் கழுத்துத் தோலில் வடு பிடிக்காது. அதன் கழுத்து நரம்புக்கு எண்ணெய் நீவியதுபோல், சிறு நெளிவுக்குக்கூட சரிந்துகொடுத்துச் செல்லும்.”

பாரி வியப்போடு கேட்டான், “கால்நடைகளை மரங்களோடு இணைத்துப் பொருத்த மதிநுட்பம் தேவை. காடும் கால்நடைகளும் அதிசய உறவுகொண்டவை.”

‘ஆம்’ என்று தலையாட்டிய கபிலர் சொன்னார், “மரத்தையும் மாட்டையும் இணைத்தது மட்டும் அல்லாமல், தாவரத்தையும் மண்ணையும் இணைத்தனர். ஆவார இலையை அடிமண்ணில் போட்டபோது அவர்கள் சொல்வதை யாரும் நம்பவில்லை. அறுவடை நாளில் அம்பாரமாகக் குவிந்த விளைச்சல் கண்டு வாய் பிளந்தவர்கள், அந்தத் தாவரத்தின் பெயர் என்ன என மீண்டும் மீண்டும் வந்து கேட்டுப் போயினர்.”

``எதற்கும் ஆகார்” எனக் கேலி பேசிச் சிரித்த அவர்களின் பெருங்கிழவன் ஒருவன்தான், அந்த இலையைக் கண்டறிந்து நிலத்தில் போட்டு அமுக்கியவன். `பயிர்களுக்கு நல்ல ஆகாரம் இந்த இலை’ என அவன் சொன்னதை இரண்டு விளைச்சலுக்குப் பிறகே உண்மை என கூடல்வாசிகள் ஏற்றனர். `ஆகார இலை' என்று அந்த இலைக்குப் பெயர் சூட்டினர். அவர்களே அறியாமல் அது ஆவார இலையாக வளைந்துகொண்டது.”

அவன் நீராகாரத்தைக் குடித்து முடித்தான். அவனது முகம் சற்றே அமைதிகொண்டது. மயிலா அவனை எப்படி உள்வாங்குவது எனத் தெரியாமல் தவித்தாள். அவனது முகத்தை மார்போடு அணைத்தபோது அவளது கைகள் நடுங்கின. தன்னை எத்தனையோ முறை தழுவிக்கிடந்த நீலன்தான் இவன். ஆனால், குலநாகினி கையில் ஏந்த நின்ற அந்தக் காட்சியைப் பார்த்தப் பிறகு, அவனைத் தொடவே ஆழ்மனம் அஞ்சுகிறது.

“நேற்றைய இரவில் நான் பார்த்த நீலன் நீதானா?” என்று அவனைப் பார்த்துக் கேட்கவே, அவள் தலை குனிந்தாள். அந்தச் சமயம் அவனது தலை நிமிர்ந்தது. உதடுகள் உணர நிலம் கிளறி உள்ளிறங்கினான். இதழ்கள் இணைந்தபோதும் அவள் கொண்டுவந்ததை அவன் குடித்துக்கொண்டுதான் இருந்தான்.

சிறிதுநேரம் கழித்து, இதழ்கள் விலக்கி பெருமூச்சு வாங்கியபடி தன்நிலைக்கு வந்தாள்.

``நீ ஏன் உன்னைப் பற்றி என்னிடம் இதுவரை சொல்லவில்லை?’’

மயிலாவின் கேள்விக்கு, அவன் பதில் ஏதும் சொல்லவில்லை. அவளது இமைகள் துடித்து ஆடுவதையே பார்த்துக்கொண்டிருந்தான். அடிமண்ணில் ஆகாரமாகச் சேர்ந்துகிடக்கும் குலக்கதைகள் வெளிப்பார்வைக்குச் சட்டெனத் தெரியாதே!

“உனது தோள்கள் எனது அணைப்புக்கு அப்பாற்பட்டவையாக மாறியுள்ளன என உணர்கிறேன். உனக்குள் இருக்கும் நெருப்புக்கு முன் நம் காதல் நிலைகொள்ள மறுக்கிறது” எனச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவளது கண்களில் இருந்து நீர் வழிந்தது. ஒரு கணம் கண்களை மூடி தன்னை நிதானப்படுத்தினாள்.

பறம்பின் எல்லா பெண்களையும்போல அவளுக்கும் அந்தச் சமயம் வள்ளியே நினைவுக்கு வந்தாள். வள்ளியின் உறுதிப்பாட்டுக்கு இணை சொல்ல யாரும் இல்லை. பெண்ணின் வீரிய வடிவம் அவள். மயிலாவின் மனம் வள்ளியை நினைத்துக்கொண்டிருந்தபோது தன்னைத் தூக்கிக்கொண்டு செல்வதுபோல உணர்ந்தாள். வள்ளியின் நினைவு எந்தத் துயரத்தில் இருந்தும் வெளியேற்றும். நினைவின் சுகத்தை உடல் உணர்ந்துகொண்டிருந்தது.

சட்டென கண்விழித்துப் பார்த்தாள் மயிலா. நீலன் தன் இரு கைகளால் அவளைத் தூக்கியபடி மர நிழல்விட்டு வெயில் இறங்கும் நிலம் நோக்கி வந்து நின்றான்.

சூரிய ஒளி இருவர் மீதும் பொழிந்து இறங்கியது. அவளின் கண்களைப் பார்த்து நீலன் சொன்னான், “நான் அகுதை, நீ அசுணமா. வாழ்ந்தாலும் அழிந்தாலும் பிரிவில்லை நமக்கு.”

``மலையில் இருந்தவர்கள், காட்டில் இருந்தவர்கள், கடற்கரையில் இருந்தவர்கள் எல்லோரும் வெட்டிச் சாய்க்கும் வாள்முனையின் பின்னும் பாய்ந்து இறங்கும் அம்புமுனையின் பின்புமே அலைந்துகொண்டிருந்தனர். ஆனால், கூடல்வாசிகள்தான் எந்நேரமும் ஊர்ந்து நகரும் மண்புழுவின் பின்னும், சிறு துவாரம் உருவாக்கி மறுகணம் சிறகு விரிக்கும் ஈசலின் பின்னும் அலைந்துகொண்டிருந்தனர்” என்றார் கபிலர்

“உண்மைதான். ஆனால், வாள்முனைதானே வெற்றிகொண்டது. எந்த மண்ணிலும் விளைய வைக்கத் தெரிந்தவர்களை, விதைநெல்லே அறியாதவர்கள் வீழ்த்திவிட்டனரே. காலம் வைகையின் சாட்சியாகச் சொல்லும் செய்தி ஒன்றுதான். எந்தக் கணமும் நீ தாக்கப்படலாம். ஆனால், அதற்கு முந்தைய கணம் உன்னுடையது. அதில் நீ கையறுநிலையில் நின்றால் ஆறோடு உன் குலம் போகும்” என்றான் பாரி.

கபிலர் தலையசைத்து ஆமோதித்தார். ``அகுதை மாவீரன்தான். ஆனால், திருநாளின் அதிகாலையில் கொலைவாள் கொண்டு சூழப்படுவோம் என்பதை எதிர்பார்க்கும் அளவுக்கு அவன் மனம் சீர்கெடவில்லை.”

``தீயவர்களின் வீழ்ச்சி, மகிழ்வைக் கொடுக்கும்; பாதிப்பை ஏற்படுத்தாது. நல்லவர்களின் வீழ்ச்சியோ, துயரத்தோடு நிற்காது; பெரும்பாதிப்பை உருவாக்கும். அகுதையின் தோல்விதான் இந்த மண்ணின் சமநிலை சரியக் காரணமானது. வளமான பூமி தன் கை வந்ததும் வென்றவன் பெரும் வலிமைகொண்டவன் ஆனான். அதே போன்ற ஒரு கொலைவெறித் தாக்குதலை எதிர்பாராத பொழுதில் நிகழ்த்தினால், நாமும் பெரும்வளம் பெற்றவர்களாக மாறுவோம் என்ற எண்ணம் எல்லோருக்கும் வரத் தொடங்கியது. அதைவிடப் பெரும் தாக்குதலை நிகழ்த்தி அடுத்தடுத்து மூன்று குலங்களை அழித்ததனால், சேர குலம் முதல்நிலை பெற்றது. போர் என்பது அறை கூவி நிகழ்த்துவது என்ற மரபை உடைத்தான் கொற்கைப்பாண்டியன். அகுதையின் மீது தொடுக்கப்பட்டது போர் அல்ல.”

பாரி பேசிக்கொண்டிருக்கும்போது இடதுபுறம் இருந்த புதருக்குள் இருந்து செந்நாய் ஒன்று பாய்ந்து ஓடியது. அது ஓடிய திசைநோக்கி விரைந்தான் பாரி. அது அடுத்தடுத்த புதர்களுக்குள் நுழைந்து வேகம்கொண்டது. அதன் திசையைக் கூர்ந்து கவனித்தபடி தனது கையில் இருந்த ஈட்டியை இழுத்து வீசினான். செடிகொடிகளைக் கிழித்துக்கொண்டு அதன் விலாவிலே இறங்கியது ஈட்டி.

பாரியை நோக்கி ஓடிவந்து நின்ற கபிலர், மூச்சிரைத்தபடியே கேட்டார், ``அது இறந்துவிட்டதா?”

“ஆம்” என்றான் பாரி.

தன்போக்கில் போகும் விலங்கை ஈட்டி எரிந்து கொல்லும் செயல், கபிலருக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியது. `பாரிதானா இது?!' எனப் பதறியபடி பார்த்தார்.

புதருக்குள் போன பாரி, தான் எறிந்த ஈட்டியை அதன் உடலில் இருந்து பிடுங்கி எடுத்து வந்தான். கபிலரின் முகத்தில் இருந்த வெறுப்பைப் பார்த்தபடி இலைகளால் ஈட்டியில் இருந்த குருதியைத் துடைத்துக்கொண்டே சொன்னான், “விலங்குகள் தமது உணவுக்காக பிற விலங்குகளை வேட்டையாடித் தின்கின்றன. ஆனால், தனது உணவுக்காகவும் தேவைக்காகவும் மட்டும் அல்லாமல், கண்ணில் படும் எல்லா விலங்குகளையும் கொன்றுபோடும் இயல்புடைய விலங்கு இது மட்டும்தான். கண்ணில் படும் நாடுகளை எல்லாம் விழுங்கப்பார்க்கும் வேந்தர்களைப்போல.”

கபிலர் அதிர்ந்து பார்த்தார்.

“காட்டு உயிர்களின் அழிவுச்சக்தி இதுவே. அழிவுச்சக்திகளை எந்த இடத்தில் கண்டாலும் பறம்பின் ஈட்டி பாயும்.”

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-15




இரண்டாம் நாள் நள்ளிரவுக்கு முன்பே தெய்வவாக்கு விலங்கு, மரம் இறங்கி பழத்தை எடுத்தது. முன்புறம் நடப்பதுபோலவே பின்புறமும் நடப்பது இந்த விலங்கின் இயல்பு. பழம் எடுத்ததும், சில நேரம் திரும்பி நடந்து மரக்கிளையின் மீது ஏறும்; சில நேரம் யாரும் தன்னை நெருங்கிவிடுவார்களோ என்ற பயத்தால் முன்பக்கம் பார்த்தபடியே கால்களைப் பின்னால் நகர்த்திப் போகும். இந்த முறை அப்படித்தான் போனது. அது பின்னால் நடந்து போனால், இரட்டை விளக்கு ஏற்றப்பட வேண்டும் என்பது வழக்கம். மரத்துக்கு முன்பு வைக்கப்பட்டிருந்த தீச்சட்டியில் நெருப்பு எரிந்துகொண்டிருந்தது. எண்ணெயில் முக்கி எடுத்த சிறு மரத்துண்டுகளைக் கொண்டுவந்து அதில் பக்குவமாக வைத்தனர். குலநாகினியின் கண்கள் அதைப் பார்த்துக்கொண்டிருக்க, பிற நாகினிகள் அந்த வேலையைச் செய்தனர்.

விளக்கில் தீயின் கனஅளவு அதிகமாகி, தழல் இரு கூறுகளாகப் பிரிந்து எரிந்தது. தீயின் கனஅளவு எவ்வளவு இருக்க வேண்டும் என்பதையும், தழல் எத்தனை கூறுகளாகப் பிரிய வேண்டும் என்பதையும் அவர்கள் முடிவுசெய்தனர். நீர்பாய்ச்சுவதைப்போல, தீயையும் கட்டுப்படுத்திப் பாய்ச்ச அவர்கள் கற்றிருந்தனர். குலநாகினி பார்த்துக்கொண்டிருக்க, எழும் நெருப்பின் தழல் பல கூறுகளாகப் பிரிந்து இரு கூறுகளாக நிலைகொண்டது.

நேற்றைப்போலவே தெய்வவாக்கு விலங்கு பழம் எடுத்ததும் பாணர் கூட்டம் உள்ளிறங்கும் என எதிர்பார்த்திருந்த கபிலருக்கு, சற்றே ஏமாற்றமாக இருந்தது.

“கூத்து தொடங்க நேரமாகும். வாருங்கள் நாம் இந்த மரத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டு வருவோம்” எனச் சொல்லி, கபிலரை அழைத்துக்கொண்டு நடந்தான் பாரி.

கொற்றவை நிலைகொண்டிருக்கும் மரக்கூட்டம் பெரும் அடர்த்திகொண்டது. மனிதனால் உள்நுழைய முடியாத அளவுக்குப் பின்னிக்கிடப்பது. பாரியோடு கபிலர் அந்த மரத்தைச் சுற்றி நடந்துகொண்டிருந்தார். அடர்ந்த காட்டில், பந்த வெளிச்சத்தில் ஆங்காங்கே தனித்தனியான வீடுகள் இருப்பது தெரிந்தது.

“இந்த அடர்வனத்தில் தனி வீடுகள் ஏன் இருக்கின்றன?” எனக் கேட்டார் கபிலர்.


“இது ஒரு மர விலங்கு. காலகாலமாக இந்த ஒரு மரத்தில் மட்டுமே இந்த விலங்கு வாழ்கிறது. வேறு எந்த மரத்திலும் இது ஏறாது. எனவே, இந்த இடம் தவிர, வேறு எங்கேயும் இந்தப் பிராணியை நீங்கள் பார்க்க முடியாது. இந்த விலங்கு, வேட்டை விலங்குகளுக்கு மிகவும் பிடித்த உணவு. இந்த மரப் புதருக்குள் நுழைந்து இதை எப்படியாவது தின்றுவிட அவை முயல்கின்றன. அதனால்தான் இதைப் பாதுகாக்க காவற்குடிகள் இங்கு இருக்கின்றனர்.”
பேசிக்கொண்டிருக்கும்போது துடிப்பறையின் ஒலி கேட்கத் தொடங்கியது. `‘வாருங்கள்’' எனச் சொல்லி வேகமாக முன் நடந்தான் பாரி.

**செ**ம்பாதேவியின் கதை இது. எனவே, ஆடுகளம் முழுவதையும் நிறைத்து ஓர் அழகிய கோலம் போடப்பட்டிருந்தது. பாரியும் கபிலரும் இருக்கையில் வந்து அமர்ந்தனர். அப்போதுதான் தரையை மெழுகி, கோலம் போட்டிருந்ததால் சாணத்தின் வாசனை எங்கும் வீசியது. அதன் ஈரம் காயவில்லை. கோலத்தின் நடுவில் வெண்ணெயில் தானியங்களை உருட்டிச் செய்யப்பட்ட `வெண்சாந்து உருண்டை’ வைக்கப்பட்டிருந்தது. அந்த உருண்டையின் நடுவில் மாட்டின் இரு கொம்புகளை நட்டுவைத்திருந்தனர். வெண்சாந்து உருண்டையின் வாசனை எங்கும் பரவியிருந்தது.

கோலத்தின் முன்பு பெண் ஒருத்தி அமர்ந்து உடுக்கை வகையைச் சேர்ந்த துடிப்பறையை அடிக்கத் தொடங்கினாள்.

“இவர்கள் பாணர்களா?” எனக் கேட்டார் கபிலர்.

“இல்லை… பறம்பு மக்கள்” என்றான் பாரி.



துடியின் ஓசை பேராந்தையின் ஓசையைப்போல அச்சத்தை ஏற்படுத்தக்கூடியது. நீருக்குள் பொடி கரைவதைப்போல, இருளுக்குள் துடி கரையத் தொடங்கியது. தங்களுக்கு என்று பாணர்கள் அற்ற குலம் இவர்களுடையது. அந்தக் குலப்பெண் செம்பாதேவியின் கதையைத் தொடங்கினாள். கபிலர் கேள்விப்பட்டிராத கதை இது.

ஆதிகாலத்தில் மலைமக்களில் ஒரு பிரிவினர் கால்நடைகளை வளர்க்கப் பழகியபோது, மேய்ச்சல் நிலங்களை நோக்கி தந்தரைக்கு இறங்கினர். குறிஞ்சி நிலத்தைவிட்டு இறங்கிய ஐந்து குடும்பங்கள் செம்மலையின் அடிவாரத்தில் குடில் அமைத்தனர். கால்நடைகளை மேய்த்துப் பல்கிப் பெருக்கினர். ஐந்து வகைக் குடும்பத்தின் குலவழி தழைத்தது.

அந்தக் குலவழியின் வகையை அடிப்படையாகக்கொண்டு அடையாளங்களை உருவாக்கவேண்டிய தேவை வந்தது. குலத்துக்கு ஒரு வகை என ஐவகையான சூட்டுக்காயங்களை ஆண்கள் தம் வலது தோளிலே உருவாக்கிக் கொண்டனர். பெண்களுக்கு அதே போல சூட்டுக்காயத்தை உருவாக்கினால் திருமணத்துக்குப் பின்னர் அவளது குடும்ப அடையாளம் மாறும், எனவே சூட்டுக்காயம் சரிப்பட்டு வராது. வேறு வழிகளைச் சிந்தித்தனர். பெண்களே அதற்கு ஒரு முடிவும் கண்டனர். தங்களின் தலைமுடியை, குலத்துக்கு ஒரு வகை என ஐந்து வகைகளாகப் பின்னிக்கொள்வது என முடிவு எடுத்தனர்.

ஐவகைக் கொண்டைகளை உருவாக்கினர். அந்தக் காலத்தில், எல்லா நாட்டுப் பெண்களுக்கும் தலைமுடியைச் சுருட்டி கொண்டைபோடும் பழக்கம் மட்டும்தான் இருந்தது. ஆனால், உச்சந்தலையில் வகிடு எடுத்து இரு பக்கங்களும் முடி சரிய இரு கொண்டைகள்... அதேபோல மூன்று, நான்கு, ஐந்து என ஐந்து விதமான கொண்டைகளை இவர்கள் முடிந்தனர். ஐந்து விதங்களிலும் சடைகளைப் பின்னினர். அதில் மேய்ச்சலுக்குச் செல்லும் வெவ்வேறு நிலத்தின் பூக்கள் சூடப்பட, இவர்களைப் பார்க்கும் ஆணும் பெண்ணும் சொக்கிப்போனார்கள். `அழகைப் பேணும் அதிசயக் கூட்டம்' என இவர்களைப் பற்றி திசை எங்கும் பேச்சு பரவியது.

மேய்ச்சலின்போது கால்நடைகளின் கோமியம் வெவ்வேறு வகையில் வளைந்து வளைந்து வடிவம்கொள்வதை, காலம்பூராவும் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் இந்தப் பெண்கள். அந்த நீர்க்கோலம் மனதுக்கு எப்போதும் ஒரு காட்சி இன்பத்தை ஏற்படுத்தக்கூடியது. ஆனால், கணப்பொழுதில் அந்தக் காட்சி மறைந்துவிடும். புன்னகை, காற்றில் மறைவதைப்போல மண்ணில் மறையும் மஞ்சள் வண்ண நீர் அது.

தனது குடிலின் வாசலில் அதே போன்ற ஒரு கோலத்தை வரைந்தால் என்ன என எண்ணினர். இடித்த குருணையின் தொலியைச் சிறுகத் தூவியபடி அவர்களின் விரல்கள் வலமும் இடமுமாக வளைய ஆரம்பித்தன. ஐந்து விதமாக தலைமுடியைப் பின்னியும் கொண்டைபோட்டும் பழக்கப்பட்ட விரல்களுக்கு வளைந்து நெளியும் கோலம் எளிதில் வசப்பட்டது. மாடு பெய்த நீரின் எல்லா வளைவுகளையும் தனது ஒற்றைக் கோலத்துக்குள் கொண்டுவர அவர்களுக்கு அதிக காலம் ஆகவில்லை.


செம்மலையின் அடிவாரத்தில் உள்ள பெண்கள் விதவிதமாகக் கொண்டை போட்டு, தரை எங்கும் கோலம் போடும் அழகு அரசிகள் என எல்லோராலும் பேசப்பட்டனர். காட்டு வழியிலும் உமணர்களின் காது வழியிலும் இந்தச் செய்தி எல்லா பகுதிகளுக்கும் பரவியது. இவர்கள் இருக்கும் பகுதிக்கு `கோலநாடு' எனப் பெயர் உருவாயிற்று.

புதிய நாகரிகத்தின் அடையாளமாக செம்மலை மாறியது. இதில் வெளி உலகுக்குத் தெரியாத இன்னொன்றும் இருந்தது. ஐந்து குடும்பங்களும் தங்களின் மாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துப்போய்விட்டு வந்து, ஐந்து தனித்தனிப் பட்டியில்தான் அடைக்க வேண்டும். அப்படி என்றால், அவற்றுக்கும் தனித்தனி அடையாளம் தேவை. மாடுகளுக்கு, பிற இடங்களில் சூட்டுக்குறி, காது அறுத்தக் குறிகள் எல்லாம் போட்டிருப்பதைக் கேள்விப்பட்டனர். கால்நடைகளே தங்களின் தெய்வம். எனவே, அவற்றைத் துன்புறுத்தாத வழியில் அடையாளம் இட விரும்பினர்.

மூத்த கிழவி ஒருத்தி, `இந்தச் செம்மலையில் இத்தனை வகையான வண்ணக்கற்கள் கிடக்கின்றன. அவற்றை எடுத்து, ஒரு குடும்பத்துக்கு ஒரு வண்ணம் என முடிவுசெய்யுங்கள். அந்த வண்ணக்கல்லையே அந்தக் குடும்பத்தின் மாடுகளுக்கும் நெற்றிப்பட்டமாகச் சூட்டுங்கள்’ என்றாள்.

அதில் இருந்து ஐந்து வகையான வண்ணக் கற்களைக்கொண்டு கொம்புகளுக்கு இடையில் கயிறு முடிந்து நெற்றிப்பட்டத்தை உருவாக்கினர்.

மாடுகள் எந்த நிலையிலும் துன்பப்படக் கூடாது என்பதே இவர்களின் எண்ணமாக இருந்தது. கிடைமாடுகளின் மேல் சிறுபூச்சிகளும் உண்ணிகளும் நிறைந்துகிடந்தன. அவற்றைக் கொத்தித் தின்ன எந்த நேரமும் பறவைகள் அவற்றின் மீதே அமர்ந்து இருந்தன.



இதைத் தடுக்க ஒரு வழியைக் கண்டறிந்தனர். திரட்டப்பட்ட வெண்ணெயில் தானியங்களைக் கலந்து, பெரிய வெண்சாந்து உருண்டைகளை உருவாக்கினர். அந்த உருண்டையை நாணல்கூடையில் வைத்து கிடையின் ஓரம் ஏதாவது ஓர் இடத்தில் வைத்துவிட்டால் போதும். பறவைகள் முழுக்க வெண்சாந்து உருண்டையைத்தான் மொய்த்துக்கிடந்து, மாடுகளின் பக்கம் போகவே போகாது.

ஒருநாள் இரவு வெண்சாந்து உருண்டை வைக்கப்பட்டிருந்த நாணல் கூடையை குடிலுக்குள் வைக்காமல், மறந்து வெளியில் வைத்துவிட்டுத் தூங்கிவிட்டனர். நாணல் கூடையின் இண்டு இடுக்குகளில் ஒட்டியிருப்பதை இரவு முழுவதும் பறவைகள் கொத்தித் தின்றுள்ளன. காலையில் எழுந்து பார்த்தபோது, நாணல் கூடை நார்நாராக உதிர்ந்துகிடந்தது. வெண்சாந்து உருண்டையின் சுவை, பறவைகளையே வெறிகொள்ளச் செய்துள்ளது.

நாடோடி நாகரிகம் எல்லா உயிர்களையும் தனதாக்கி நேசித்தது. இவர்களின் குலம் தலைமுறைத் தலைமுறையாகத் தழைத்து முன்னேறியது. மனிதர்களும் கால்நடைகளும் பல்கிப் பெருகின.

கோல நாட்டினர், பல்வேறு குழுக்களாக ஒவ்வோர் ஆண்டும் மார்கழி மாதம் பிரிந்து மேய்ச்சலுக்குப் போவார்கள்; மீண்டும் ஆவணி மாதம் செம்மலைக்குத் திரும்புவார்கள். எல்லோரும் கொண்டுவரும் மாடுகள் குடும்ப அடையாளத்தோடு பிரிக்கப்பட்டு, கணக்கு வைத்துக்கொள்ளப்படும்.

வழக்கம்போல் மார்கழி மாதம் கோல நாட்டில் இருந்து மேய்ச்சலுக்காகப் பல்வேறு திசைகளில் கிடைபோட குழுக்கள் புறப்பட்டுப் போயின. ஒரு குழு, காவிரி ஆற்றின் படுகையில் நகர்ந்தது. பதினெட்டுக் குடும்பங்களையும் இருநூறு மாடுகளையும் கொண்டிருந்தது அந்தக் கிடை. அந்தக் கிடையில் சுடர்ந்து ஒளிவீசும் தழல்போல் இருப்பவள் செம்பா. வகிடு எடுத்து இரு சடை பின்னிய குடும்பம் அவளுடையது. கோவனின் தோள்கள் மாட்டின் திமில்போல் உருத்திரண்டு இருக்கும். அவனது வலது தோளில் பொறிக்கப்பட்ட மூன்று சூட்டு அடையாளத்தின் மீது சிறுவயதில் விரல்வைத்துப் பார்த்த செம்பா, இப்போது இதழ் பதித்துப் பார்க்கவே ஆசைப்படுகிறாள்.

கிடையின் முன்னால் நடந்துபோகும் கோவனின் நடையைத் தொடர்ந்து மொத்த மாடுகளும் நகர்ந்தன. கிடையின் இடது ஓரம், நாணல் கூடை தூக்கி நடக்கும் செம்பாவைச் சுற்றி பறவைக் கூட்டம் மிதந்து வந்தது. மாட்டின் காதுகள் விடைத்து ஆட, பறவைகளின் இறக்கைகள் படபடத்து அடிக்க, பசுக்களுக்கும் பறவைகளுக்கும் நடுவில் செழித்து வளர்ந்தது அவர்களின் காதல்.

கிடைமாடு நடந்துகொண்டிருக்கும்போதே குட்டியை ஈனும். அந்தக் குட்டியால் உடனடியாக கிடையின் வேகத்துக்கு நடக்க முடியாது. பால் குடிக்கும் நேரம் தவிர, பிற நேரத்தில் அதைத் தோளிலே தூக்கித்தான் நடக்க வேண்டும். கோவன் இளங்குட்டியைத் தோளில் தூக்கி நடக்க, ஈன்ற பசு அவனை உரசியே நடந்து வந்து, குட்டியை நாவால் நக்கி இன்புற்றது. செம்பாவின் கண்கள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தன. தோளில் கிடக்கும் இளங்குட்டியின் மீது ஒரு கணம் பொறாமை வந்து விலகியது.


மாலையில் மாடுகளைக் கிடைபோட்டு, இரவு கஞ்சி குடித்து, தங்களின் குடிலுக்கு நடுவில் சிறு கூத்து நிகழ்த்துவர். எல்லோருக்கும் பாடத் தெரியும். ஆள் மாற்றி ஆள் பாடுவர். கிடையில் காவலுக்கு நிற்பவன்கூட எட்ட இருந்தே தனது பாடலைப் பாடுவான். எல்லோரின் பாடலுக்கும் துடிப்பறை முழங்கி இசை கொடுப்பவன் கோவன்தான். இடது கை துடியை இழுத்துப் பிடிக்க வலது கை விரல்களால் அதன் வலதுபுறத்தை அடித்து அடித்து தாளம் எழுப்பும் அழகைப் பார்த்து மகிழ்வாள் செம்பா. அன்று கோவனின் துடியிசை வழக்கத்துக்கு மாறாகத் துள்ளலோடு இருந்தது. கூத்து முடிந்ததும் எல்லோரும் தங்களின் குடிலுக்குப் போக செம்பா, கோவனின் காது அருகே போய்ச் சொன்னாள், “துடியின் இடப்பக்கம் போலவே நானும் உனது விரல்படாமல் இருக்கிறேன்.”

கோவன் கலங்கிப்போனான். அன்று இரவு முழுவதும் துடியின் இடதுபுறம் பற்றியே நினைத்திருந்தான். கிடைக் காவல்காரனின் பார்வைக்குத் தப்பி குடில் தாண்ட முடியாது. வேறு வழியின்றி கோவன் ஒடுங்கிப் படுத்தான்.

மறுநாள் பக்கத்தில் இருக்கும் ஊருக்கு வெண்ணெய் விற்கப் போனாள் செம்பா. வெண்ணெய் விற்று, தானியம் பெற்றுவருவது பெண்களின் வேலை. உழவு செழிப்பாக நடந்துகொண்டிருந்த ஊர் அது. இரு தெருக்களைத் தாண்டும் முன்பே அவள் கொண்டுவந்த வெண்ணெய் விற்றுத் தீர்ந்தது. தானியங்களைப் பெற்றுக்கொண்டு மர அடிவாரத்தில் காத்திருந்தாள். எதிர்ப்பக்கம் விற்கப்போன அவள் தோழி இன்னும் வரவில்லை. அங்கும் இங்குமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். சற்றுத் தொலைவில் நின்றிருந்த இளைஞன் ஒருவன் தன்னையே பார்த்துக்கொண்டிருந்ததை அவள் கவனித்தாள். தோழியை கண்கள் தேடிக்கொண்டிருக்க, தன்னைக் கடந்துபோகும் பெரியவரிடம், ``இந்த ஊர் பெயர் என்ன?'' எனக் கேட்டாள்.

“உறையூர்” என்றார் அவர்.

பார்த்துக்கொண்டிருந்தவனைக் கடந்து தோழி நடந்து வந்தாள். இருவரும் கிடை நோக்கி தானியங்களைத் தூக்கிக்கொண்டு நடந்தனர். தானிய முடியை மறுதோளுக்கு மாற்றியபடியே தோழி சொன்னாள். “உன்னைப் பார்த்துக்கொண்டே நின்றவன் இந்த ஊர் குலத்தலைவரின் மகனாம். ஊருக்குள் நுழைந்ததில் இருந்து உன் பின்னால்தான் வந்துகொண்டிருக்கிறானாம். கிள்ளி என அவனை அழைத்தார்கள்.”



``புதுவிதமான பெயராக இருக்கிறதே?”

“ `எதிரிகளின் தலையைக் கிள்ளி எடுத்ததால் இந்தப் பெயர் உருவாயிற்று’ என்று ஒரு மூதாட்டி சொன்னாள். ஆனால், உன்னைப் பார்த்துக்கொண்டிருந்த அவனது கண்களும் அதே வேலையைத்தான் செய்தன.”

அவள் சொல்வதைப் பொருட்படுத்தாத செம்பா, மகிழ்வோடு சொன்னாள், “இன்று சிறு சோளம்

கிடைத்திருக்கிறது. காரமாட்டுப்பாலில் இருந்து கடையப்பட்ட இளவெண்ணெயைப் பிசைந்து சாப்பிட்டால், அப்படி ஒரு சுவை இருக்கும். நினைக்கும்போதே நாவூறுகிறது” என்றாள்.

இரவு, கஞ்சி குடித்த பிறகு கூத்து முடிந்து எல்லோரும் கலைந்தனர். அன்றைய கிடைக்காவல் முறையில் கோவனும் உண்டு. செம்பா அவனுக்காகச் சமைத்த கஞ்சியைச் சிறு கலயத்தில் ஏந்தி குடிலுக்குப் பின் காத்திருந்தாள். இருள் நன்றாக அடங்கிய பிறகு குடிலுக்குப் பின்புறமாக மறைவாக வந்து சேர்ந்தான் கோவன். அந்த இடமே சுவையால் மணத்துக்கிடக்க, பூத்து நின்றாள் செம்பா. பிசைந்த உணவை ஊட்ட அவன் வாய் அருகே கையைக்கொண்டு சென்றபோது நாவால் விரல் தொட்டு வாங்கினான்.

அந்தச் சிறு தொடுதல் மொத்த உடலையும் குலுக்கியது. காதலின் கூர்மிகு ஆயுதம் நீர்சுரக்கும் நுனி நாக்கு. சற்றும் எதிர்பாராமல் கோவன் அதைப் பயன்படுத்தியபோது செம்பா நடுங்கிப்போனாள்.

உணவு அருந்தியபடியே துடியின் இடதுபுறத்தின் மீது அவனது விரல்கள் படரத் தொடங்கின. அவள் உள்நடுங்கிக் குலுங்கினாள். அவள் கண்செருகி மீண்டபோது கடைசிக் குடிலுக்குப் பின்னால் குதிரையில் ஒருவன் போவது தெரிந்தது. கிடையில் கிடந்த நாய்கள் சுதாரித்து அந்தத் திசைநோக்கிப் பாயத் தொடங்கின. ஆனால், குதிரை படுவேகத்தில் மறைந்தது. நாயின் குரைப்பொலியில் அனைவரும் எழுந்துவிட்டனர். வேல்கம்பைத் தூக்கியபடி முன்னால் ஓடி நின்றான் கோவன். அவிழ்ந்த நூல்களைக் கட்டியபடி குடிலுக்குள் நுழைந்த செம்பாவிடம் எதிர்ப்பட்ட தோழி சொன்னாள்... “வந்தது அவன்தான்”. சொல்லியபோது செம்பாவின் கட்டு கழன்று இருந்ததை அதிர்ச்சியோடு பார்த்தாள் தோழி.

செம்பா, தலையை மறுத்தபடி ஆட்டி, சற்றே வெட்கப்பட்டுச் சொன்னாள்...

“கோவன்.”

தோழி திரும்பிப் பார்த்தாள். கோவன் வேல்கம்போடு முன்னிலையில் நின்றுகொண்டிருந்தான். காதல், கண நேரத்துக்குள் எல்லோரையும் கண்ணைக்கட்டி விளையாடிக்கொண்டிருந்தது. நாய்கள் திருடனோடு சேர்ந்து ஓடுபவனைக் குரைத்தன. தோழி கோவனின் அருகில் போய் காதோடு சொன்னாள், “இனி நீ கிடைக்காவல் நிற்கும் நாள் எல்லாம், நான் இடைக்காவலுக்கு நிற்பேன்.”

மறுநாள் மாலையில், கிடைக்கு இடப்புறம் இருந்த பெருமேட்டிலே தந்தையோடு வந்து நின்றான் கிள்ளி. சற்றுத் தொலைவில் மாட்டுக்கிடையும் குடில்களும் இருந்தன. தந்தையின் கண்கள் மாடுகளை எண்ணின.

“இருநூறுக்கும் குறைவாகத்தான் இருக்கிறது. இதைவிட பெருஞ்செல்வம் இருக்கும் இடத்தில் பெண் எடுப்போம்” என்றார்.

அவனோ அவர் சொல்வதை ஏற்கவில்லை. “அவள் பேரழகு, அதற்கு இணையான செல்வம் எதுவும் இல்லை” என்றான்.

அவரோ மறுத்துப் பேசி அவனது மனதை மாற்ற முயன்றுகொண்டிருந்தார். நடக்கவில்லை. சரி, நமது மாளிகைக்குப் போய் பேசிக்கொள்வோம் என முடிவு எடுத்து குதிரையின் மீது ஏறப்போகும்போது சொன்னான்... “இன்னும் சிறிது நேரத்தில் குடிலுக்கு நடுவில் பந்தம் ஏற்றி கூத்து நிகழ்த்துவார்கள். அப்போது அவள் குடிலுக்குள் இருந்து வெளியில் வருவாள். அவளை நீங்கள் பாருங்கள். நான் சொல்வதை ஏற்பீர்கள்” என்றான்.

இருள் கூடியது. பந்தங்கள் ஏற்றப்பட்டன. எல்லோரும் வந்து கோலத்தைச் சுற்றி அமர்ந்தனர். கோவன் வழக்கம்போல துடியோடு வந்து உட்கார்ந்தான். நேர் எதிரில் தோழி வந்து உட்கார்ந்தாள். கோவன் சற்றே தலையைத் திருப்பி தனக்குள் சொல்லிக்கொண்டான்... “துடியின் இடப்புறத்தை ஊர் திரும்பி மணம் முடிப்பது வரை நினைக்கக் கூடாது.”

அவள் இன்னும் ஏன் குடில்விட்டு வெளிவரவில்லை என ஆவலோடு பார்த்தபடி தொலைவில் நின்றுகொண்டிருந்தான் கிள்ளி. எங்கும் கும்மிருட்டுச் சூழ்ந்திருந்தது. பந்த வெளிச்சத்தில் எதிர்சுடர் வீச அவள் குடிலுக்குள் இருந்து வெளியேறி வந்து, கோவனுக்கு எதிரில் உட்கார்ந்தாள். நேற்று கலைந்த வெட்கம், இன்று கூடி நின்றது. கோவனால் அவளை நேர்கொண்டு பார்க்க முடியவில்லை. அவனது விரல்கள் துடியின் மீது படவே அஞ்சின. தாளம் கூடவில்லை. ஓசையும் அவனைப்போலவே பம்மியது. கிடையின் பெரியாம்பளைச் சொன்னார், “டேய்... நேத்து கஞ்சி குடிச்சவன் மாதிரி அடிச்சுக்கிட்டு இருக்க, சத்தமே கேட்கலை. இழுத்து அடிடா.”

தோழி சொன்னாள்...

“பெருசு, நேத்தும் அவன் கஞ்சி குடிக்கலை. அதுதான் விரல் செத்துப்போய் கிடக்கு.”

செம்பா அதிர்ச்சியோடு தோழியைப் பார்த்தபோது, அவளோ சற்றே ஆணவச் சிரிப்போடு கோவனைப் பார்த்தாள்.

**தொ**லைவில் இருந்து பார்த்தபடி அவள் பேரழகில் மயங்கி வாய்பிளந்து நின்ற கிள்ளி, தந்தையிடம் காட்ட அவரை நோக்கித் திரும்பினான். அவரோ ஒலியற்ற இருளின் திசையை நோக்கி வாய்பிளந்து பார்த்தபடி, அதிர்ச்சியில் உறைந்து நின்றார்!

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-16





துடிப்பறை அடிக்கும் பெண், மரம் நோக்கி உட்கார்ந்திருந்தாள். அவளது விரல்கள், துடியின் வலதுபுறத்தை இழுத்து இழுத்து அடித்து ஓசையை எழுப்பிக்கொண்டிருந்தன. நான்கு பின்னல் சடையைப் பின்னிய பெண்கள் உள்ளிறங்கினர். உச்சி எடுத்து இருபக்கச் சடைப்பின்னல் மட்டும் யாரும் போடவில்லை. எனவே, அது துடி வாசிக்கும் பெண்ணுக்கு உரியது என்பது கபிலருக்குப் புரிந்தது. அந்தப் பெண்ணை இதற்கு முன்னால் பார்த்ததுபோல் இருக்கிறது. ஆனால், எங்கு என்று நினைவில்லை.

உள்ளிறங்கிய பெண்கள், தாங்கள் பின்னியிருந்த சடைமுடியை அவிழ்த்தனர். கூந்தல் பரவி தோள் முழுக்கச் சரிந்தது. மெள்ள தலையை ஆட்டியபடி இருந்தனர்.

‘‘அணங்குகள் இறங்குகின்றன’’ என்றான் பாரி.

`மோகினி’ என அஞ்சப்படும் வனதேவதைகளே அணங்குகள் ஆவர். அணங்குகள் முனங்கும் ஓசை விரிந்த கூந்தலின் வழியே வெளிவரத் தொடங்கியது. கபிலர் உற்றுப்பார்த்தபடி இருந்தார். அவரது கவனம் பாடுபவள் சொல்லிச் செல்லும் கதையின் மீதே இருந்தது.




உறையூரைவிட்டு கிடை புறப்பட்டது. கோடைவெயில் தகித்துக்கொண்டிருந்தது. அவர்கள் அதற்கு ஏற்ற நிலப்பகுதியைப் பார்த்து கிடையைச் செலுத்திக்கொண்டிருந்தனர். தோழியைக் கண்டு பம்மியபடி நகர்ந்து கொண்டிருந்தான் கோவன். அவனது பம்மலுக்கான காரணம் செம்பாவுக்கு முதலில் புரியவில்லை. நிலைகொண்டு தங்காமல் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தது கிடை. கோவன் மறைந்து மறைந்து சிரித்துக்கொண்டு இருந்தான். ஒரு பிற்பகல் நேரத்தில் தோழி நாணல்கூடையில் வெண்சாந்து உருண்டையைத் தூக்கியபடி கிடையின் பின்புற ஓரத்தில் வந்துகொண்டிருந்தாள். முன்புறத்தின் இடது ஓரத்தில் நடந்துகொண்டிருந்தான் கோவன். அவனது தோளில், ஈன்றகுட்டி ஒன்று கிடந்தது. பின்னால் வரும் தாய்ப்பசு நாவால் நக்க, அது துள்ளியபடி இருந்தது. அந்தக் கன்று துள்ளிவிடாதபடி அதன் கால்களை தனது இரு கைகளாலும் இறுகப்பிடித்து நடந்துகொண்டிருந்தான். அவனைக் கடந்துபோன செம்பா, தாய்ப்பசு கத்தும் ஓசையோடு சேர்த்து வலதுபுற இடுப்பில் இரு விரல்கொண்டு ஒரு நிமிண்டு நிமிண்டினாள்.

பால் பீச்சும் விரல்கள் மூங்கில் நாரைவிட வலுமிக்கவை. நிமிண்டிய விரல்களை எடுக்கும் முன்னர் துள்ளி வில்லைப்போல் வளைந்தான் கோவன். அவனைத் தாண்டி குதித்தோடியது தோளில் கிடந்த குட்டி. அது வேறு திசையில் ஓடிவிடக் கூடாது என்பதற்காகப் பாய்ந்து விழுந்து பிடித்தான். விழுந்தவனின் அருகில் புன்முறுவலோடு மண்டியிட்டு உட்கார்ந்தாள் செம்பா. அவன் பிடியில் இருந்து குட்டியை விடுவித்தாள். அவளது பிடியில் இருந்து, தன்னை விடுவித்துக்கொள்ள அவன் முயற்சி செய்யவில்லை. முயன்றாலும் அது நடக்காது எனத் தெரியும். கிடைமாடுகள் அவர்களைச் சுற்றி விலகி நடந்தன. அவளின் கன்னத்தை வாலால் தட்டிவிட்டுப்போனது கிடாரி ஒன்று.

பறவைகள் மொய்த்துக்கிடக்கும் நாணல் கூடையைத் தூக்கிவந்த தோழியின் கண்கள் கிடையை

மேய்ந்தன. இருவரையும் காணவில்லை. குறுக்கும் நெடுக்குமாக பறவைகள் பறந்தபடியிருக்க, அவளால் எந்தப் பகுதியையும் உற்றுப்பார்க்க முடியவில்லை. இளங்கன்று, வயிறு நிறைய பால் குடித்து முடித்தது. கோவன் மீண்டும் கன்றைத் தோளில் தூக்கியபடி எழுந்தான். உடன் எழுந்தபடி செம்பா சொன்னாள், “அவள் இன்னொரு முறை வந்து கேட்டாள் சொல்... நீ இடைக்காவல்தான் இருக்க முடியும். இதழுக்குக் காவல் இருக்க முடியாது என்று."

உரசி நகரும் கிடை வாழ்க்கை எந்நேரமும் காதலைப் பற்றவைத்தபடியே இருந்தது. கடையப்பட்ட தயிர் மத்தின் விளிம்புகளுக்கு இடையில் விரல் தேய்த்து வெண்ணெயை எடுப்பதைப்போல, திரளத்திரளக் காதலை எடுத்துக்கொண்டே நடந்தனர் செம்பாவும் கோவனும். அவர்கள் சற்றே கவனக்குறைவாக இருந்தாலும், தோழி அடிக்க வருவதாக நினைத்து புது மத்தைக் கையில் கொடுத்துவிட்டுப் போய்விடுவாள். அதற்குள் இன்னொரு பசு கன்றை ஈனும். துள்ள முடியாதபடி கோவன் கன்றையும், செம்பா அவனையும் பிடித்தபடி இருப்பார்கள். அவ்வப்போது விரல்கள் நிமிண்டித் திருகின. விலகும் கிடைக்கு இடையில் நிலம்தொட்டு காதல் துள்ளி எழுந்தது.



அந்தக் கிடைக்குப் பின்னால், வெகுதொலைவில் குதிரை வீரர்கள் சிலர் பல நாட்களாக வந்துகொண்டிருந்தனர். குலத்தலைவனின் உத்தரவு அது. செம்பாவை வாய் பிளந்து பார்த்தபடி கிள்ளி நின்றுகொண்டிருந்த போது, அவனது தந்தை இருட்டுக்குள் இருந்த கிடை மாடுகளைத்தான் வாய்பிளந்து பார்த்துக் கொண்டிருந்தான். மாடுகளின் கொம்புகளுக்கு இடையில் கயிறு முறுக்கிக் கட்டப்பட்டிருந்த நெற்றிப்பட்டத்தில் இளஞ்சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை, கருஞ்சிவப்பு என ஐந்து வண்ணங்களில் கற்கள் ஒளிவிட்டுக்கொண்டிருந்தன. அவனது கண்களையே அவனால் நம்ப முடியவில்லை.

மாளிகைக்கு அழைத்துப்போய் மகனைக் கட்டித்தழுவி முத்தமிட்டான் தந்தை.

“ `இருளிலும் சுடர்போல் ஒளிரும்’ என்று நீ சொன்னபோது பெண்ணைச் சொல்கிறாயோ எனத் தவறாக நினைத்துவிட்டேன். எல்லாம் மணிக்கற்கள். யாருக்கும் கிடைக்காத மணிக்கற்கள். அவற்றை நாம் அடையவேண்டும்” எனச் சொல்லி கிடையை அறிந்து வர ஆள் அனுப்பினான்.

போய்வந்தவர்கள் சொன்னார்கள்... “அவர்களின் ஊர் இருக்கும் மலை முழுவதும் இந்தக் கல் கிடக்கிறதாம். அதைவைத்துதான் மாட்டுக்குப் பட்டம் கட்டியுள்ளனர்.”

“அவர்களின் மலை எங்கும் கிடப்பது மணிக்கற்கள் என அந்த மூடர்களுக்குத் தெரியவில்லை. நாம் இந்த இருநூறு கற்களோடு ஏமாந்துவிடக் கூடாது. இந்தக் கிடையைப் பின்தொடர்ந்தே போங்கள். அந்த ஊரை அடைந்ததும் தகவல் சொல்லுங்கள்” எனச் சொல்லி அனுப்பினான். வீரர்கள் அவர்களின் பின்னால் வந்துகொண்டே இருந்தனர்.

ஒரு முன்மாலைப்பொழுதில் கிடை நகர்ந்துகொண்டிருந்தபோது, தோழி ஓசை எழுப்பி செம்பாவை அழைத்தாள்.

“அருகில் இருக்கும் ஓடையில் நீர் அருந்தி வருகிறேன். அதுவரை நீ தூக்கி வா” எனச் சொல்லி வெண்சாந்து உருண்டை இருந்த நாணல்கூடையை செம்பாவின் தலைக்கு மாற்றினாள்.

கூடை மாற்றுவதை மிகக் கவனமாகச் செய்ய வேண்டும். வெண்சாந்து உருண்டைகள் தோளில் சிந்திவிட்டால், அவற்றைக் கையால் தட்டும் முன் பறவையின் அலகு கொத்தி எடுத்துவிடும். காக்கை கொத்தினால் தோளில் சிறு கீறல் ஏற்படும். மைனாவின் அலகோ சிறு துளையிட்டு எடுக்கும். அதுவே மரங்கொத்தியாக இருந்தால், காயம் ஆற ஒரு வாரம் ஆகும்.

பறவைக் கூட்டம் இப்போது செம்பாவின் தலையைச் சுற்றி இடம் மாறியது. பறவைகளின் இடைவிடாத கீச்சொலிக்கு இடையில் செம்பா கூப்பிட்டது கோவனுக்குக் கேட்கவில்லை. முதுகிலே சுள்ளென கல் விழுந்த பிறகுதான் திரும்பிப் பார்த்தான்.

தோழியைச் சுற்றும்முற்றும் பார்த்தபடி செம்பாவின் அருகில் வந்தான் கோவன். அவள் கூடையை அவன் தலைக்கு மாற்றினாள். பறவைகள் தேனீக்கள் மொய்ப்பதைப்போல அவர்கள் இருவரையும் சுற்றி, படபடத்து, மொய்த்துக்கொண்டிருந்தன. உடல் மேல் சிந்திய வெண்சாந்து உருண்டையை பறவைகள் கொத்தி எடுப்பதால்தான், அவன் இப்படி நெளிந்தும் வளைந்தும் பாடாய்ப்படுகிறான் எனப் பார்த்தவர்கள் நினைத்தனர்.

பசுக்களுக்கு இடையில் படர்ந்ததைப்போல, பறவைகளுக்கு இடையிலும் சுழன்றது அந்தக் காதல். பசுக்கள் விலகி நடக்கவும், பறவைகள் கூடிப்பறக்கவும் இவர்களுக்காகவே கற்றுக்கொண்டதுபோல் இருந்தது. குருவி ஒன்று அவர்களின் இதழைக் கொத்திய பிறகுதான், செம்பா அவனைவிட்டு விலகி, நீர் அருந்தி வருவதாகக் கூறி, ஓடையை நோக்கிச் சென்றாள்.

தோழி போன அதே ஓடைப்பாதையில் அவள் நடந்தபோது எதிரில் வந்துகொண்டிருந்தாள் தோழி.

“பறவையின் இறகு ஒன்று கண்ணில் விழுந்துவிட்டது, ஊதிவிடு” எனச் சொல்லி தோழியிடம் முகத்தை நீட்டினாள் செம்பா. அவள், இடது கன்னத்தைப் பிடித்து கண்ணுக்குள் ஊதப்போகும் போதுதான் இவளுக்கு நினைவு வந்தது, பதிந்துகிடக்கும் பல் தடத்தை அவள் பார்த்துவிடுவாளோ என்று. சட்டெனக் கன்னத்தை அவள் கையில் இருந்து விலக்கி, “சரியாகிவிட்டது” என்றாள் செம்பா.

தோழியோ, “இன்னும் ஊதவே இல்லையடி” எனச் சொன்னபோதும், “இல்லை… இல்லை…சரியாகிவிட்டது” எனக் கூறி விலக முயன்ற செம்பாவின் முகத்தை, இரு கைகளாலும் அழுத்திப் பிடித்து நிறுத்தினாள் தோழி.

செம்பா அதிர்ச்சியோடு அவளைப் பார்த்தாள்.

“திரும்பிப் பார்க்காதே, குதிரைகள் இன்னும் நம்மைப் பின்தொடர்ந்துதான் வந்துகொண்டி ருக்கின்றன.”

தோழியின் சொல் செம்பாவை இடி எனத் தாக்கியது. கலங்கியிருந்த கண்களைப் பார்த்த தோழி, “தூசி இன்னும் இருக்கிறது” எனச் சொல்லியபடி இழுத்து மூச்சுவாங்கி ஊதிவிட்டாள். செம்பாவின் கண்ணீர்த்துளி, காற்றில் பறந்தது.

இரவு, கிடை பெரியாம்பளைகளிடம் செய்தியைச் சொன்னார்கள். கிடையின் திசைவழியை மாற்றி ஊர் நோக்கி நடந்தார்கள். துள்ளிக்குதித்து கிடை எங்கும் பரவியபடி இருக்கும் செம்பாவின் சிரிப்பை அதன் பிறகு கோவன் பார்க்கவே இல்லை. இரு நாட்களுக்கு ஒருமுறை புதிதாக ஈனும் குட்டிகளை, அவன் தோளில் சுமந்தபடி நடந்துகொண்டே இருந்தான். செம்பா அருகில் வரவே இல்லை. பெரியாம்பளைகள் ஏன் கிடையின் போக்கை மாற்றி ஊருக்குப் போக முடிவு எடுத்தார்கள் என்பதும் அவனுக்கு விளங்கவில்லை. சரி, ஊருக்கு வேகமாகப் போனால், செம்பாவுடனான தனது திருமணம் வேகமாக நடக்கும். அதனால் நாமும் வேகமாகவே நடப்போம் என முடிவு எடுத்த கோவனின் கால்கள் கிடையின் முன்கால்களாக மண் மிதித்துச் சென்றன.

இரு மாதங்களுக்கு முன்னரே இந்தக் கிடை ஊர் திரும்பிவிட்டது. ஊரில் இருந்தது கிழவன்களும் கிழவிகளும்தான். மற்றவர்கள் எல்லாம் கிடை போட போயிருக்கின்றனர். வழக்கம்போல ஆவணி மாதம்தான் வருவார்கள். ஊர் முழுவதும் இடையில் திரும்பிய கிடையைப் பற்றித்தான் பேச்சாக இருந்தது. கோவனுக்குச் செய்தி இப்போதுதான் தெரியவந்தது. பெரியாம்பளைகளோடு சண்டைக்குப் போனான்.

``அவசரப்பட்டு முடிவு எடுத்துவிட்டீர்கள் அவர்கள் இப்போது செம்பாவைத் தூக்க ஊருக்குப் படை திரட்டி வந்தால் என்ன செய்வது? நமது கூட்டம் வந்துசேர இரண்டு மாதங்கள் ஆகும்” என்றான். பெரியவர் ஒருவர் சொன்னார், “ஆளுக்கு ஒரு திசையில் போய், கிடைகளை வேகமாக வரச்


சொல்வோமா?”

“ஓடித் திரும்பும் வலுவோடு இருப்பது இருபது பேர். அவர்களையும் அனுப்பிவிட்டு என்ன செய்வது?”

எல்லோருக்குள்ளும் பதற்றம் இருந்தது. ஆனால், குதிரைக்காரர்கள் யாரும் கண்ணில் படவில்லை. நாட்கள் கழிந்துகொண்டிருந்தன.

“வரும் நான்காம் நாள் செம்பாவுக்கும் கோவனுக்கும் மணம் முடித்துவிடுவோம்” என யோசனை சொன்னார் ஒரு பெரியாம்பளை.

“முடிப்பது என்று முடிவான பிறகு நான்காம் நாள் வரை ஏன் காத்திருக்க வேண்டும்? இன்று இரவே மணம் முடிப்போம்” என்றாள் கிழவி.



அச்சத்தை மகிழ்ச்சிகொண்டு கடக்க முடிவுசெய்தனர். மணவிழாவுக்கான ஏற்பாடுகள் தொடங்கின. சாணம் கரைத்து தெரு எங்கும் மெழுகினர். கோவன் இளைஞர்களோடு செம்மலையின் குகைகளுக்குள் அமர்ந்து பாதுகாப்புக்கான திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தான். இப்போது அந்த இருபது இளைஞர்களோடு இருநூறு மாடுகளும் பதிமூன்றும் கிடை நாய்களும் மட்டுமே இருந்தன. அவற்றைக்கொண்டு எதையும் சமாளிக்க முடியும் என அந்த இருபது பேரும் நம்பினர்.

“நான், அந்த ஊருக்குள் போகவில்லை. ஆனால், வளமான ஊர். படைபலம் சற்றே அதிகம் இருக்கும் என்று நினைக்கிறேன். அதற்கு ஏற்ப திட்டம் வேண்டும்” என்றான் கோவன்.

செம்மலையின் மேற்கிலும் வடக்கிலும் அடர்ந்த காடு. அதற்குள் எந்தப் படையும் ஊடுருவி வர முடியாது. படைகள் வந்தால் கிழக்கிலும் தெற்கிலும் இருந்துதான் வர முடியும். வருவதை அறிய பல காதத் தொலைவுக்கு முன்னரே கிடை நாயோடு ஆட்கள் நிறுத்தப்பட்டார்கள்.

மலை எங்கும் கோவனைத் தேடி அலைந்த சிறுவன் உச்சிவெயிலில் பச்சைக் குகைக்குள் அவனைப் பார்த்தான்.

“இன்னிக்கு இரவுல உனக்கும் செம்பாவுக்கும் திருமணமாம். பெரியாம்பளை சொல்லிவிட்டாரு” என்றான் அவன்.

கோவனுக்கு ஆத்திரம் ஏறி வந்தது.

“எல்லாம் தப்புத்தப்பா முடிவு எடுக்கிறான் அந்தக் கிழவன்” எனக் கொதித்தான். மற்றவர்கள் அவனைச்

சமாதானப்படுத்தினர். சிறுவனிடம், “மாலையில் மணமேடைக்கு கோவன் வருவான்” எனச் சொல்லி அனுப்பினர்.

இருநூறு மாடுகளில் கொள்ளிக்கொம்பு மாடுகள் இருபது இருந்தன. விரிகொம்பு மாடுகள் முப்பது இருந்தன. நெற்றியில் மூன்று சுழியும் ஒன்றுடன் ஒன்று எதிர்த்திருக்கும் இடிமேலி மாடுகள் இருபத்தி ஆறு இருந்தன. மற்றவை எல்லாம் சொல்லிக்கொள்ளும்படியான மாடுகள் இல்லை. ஆனாலும் கொம்பு உள்ள மாடுகள்தான். அவற்றைப் பயன்படுத்துவதற்கான திட்டத்தை வகுத்துக்கொண்டிருந்தான் கோவன்.

மலையைவிட்டு ஊருக்குள் இறங்கி வந்த மூன்று இளைஞர்கள், கோவன் சொல்லி அனுப்பிய எரிசாற்றுப் பச்சிலையை அரைத்துக் கொடுக்கச் சொல்லிக் கேட்டனர். அதைக் கேள்விப்பட்டு ஊரே நடுங்கியது.

“குலமே அழிந்தாலும் செய்யக் கூடாத செயல் இது. எங்களின் உயிரே போனாலும் நாங்கள் அதை அரைத்துக் கொடுக்க மாட்டோம்” என்று எல்லா கிழவிகளும் சொல்லிவிட்டனர். வேறு வழி இன்றி இளைஞர்கள் மலை திரும்பும்போது குறுக்கிட்ட செம்பா, மூன்று கலயங்களை நீட்டினாள். அவர்கள் கேட்டதைவிட அதிகமானதாகவே அது இருந்தது.

பொழுது இறங்கத் தொடங்கியது. ஊர் முழுவதும் சாணம் மெழுகி, கோலம்போட்டு முடித்தனர். ஊரே கூடிக் கொண்டாடவேண்டிய திருமணம், இப்படி கையளவு ஆட்களை வைத்து நடத்தவேண்டியது ஆகிவிட்டதே என்று எல்லோருக்குள்ளும் கவலை படர்ந்திருந்தது. ஆனால், வாசலில் கோலம் மலர்ந்துவிட்டால், கவலைகள் எல்லாம் காற்றாகப் பறந்துபோகும்.

நீராட்டுச் சடங்கு தொடங்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. பிற நான்கு வீட்டுப் பெண்களும் செம்பாவை அழைத்துக்கொண்டு, ஊரின் மேற்குப் பக்கக் காட்டுக்கு நடுவில் இருக்கும் செங்குளத்துக்குப் போனார்கள்.
சூரியன் இறங்கத் தொடங்கியபோது தூரத்து மேட்டில் கிடை நாய் ஒன்று பாய்ந்துவருவதை மலை மேல் இருந்து கவனித்தான் கோவன். திட்டங்களைச் செயல்படுத்தும் நேரம் நெருங்கிவிட்டது.

``ஊரார்களை மலைக்கு மேல் ஏற்றுங்கள்'' என்றான்.


பேரோசைக்கும் கூச்சலுக்கும் நடுவில் எல்லோரும் மலை ஏறினர். செம்பாவைத் தேடின கோவனின் கண்கள். மண நீராட்டுக்காக செங்குளத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டி ருப்பதாகச் சொன்னார்கள். இந்த ஏற்பாடுகளைச் செய்த கிழவனை வெட்டிக் கொல்ல வேண்டும்போல் இருந்தது. ``மின்னல் எனப் போய்த் திரும்புகிறேன்" எனச் சொல்லி மேற்குத் திசைக் காட்டுக்குள் ஓடினான் கோவன். போகும்போது அவனுக்குப் பிடிபட்டது, கிழவன் செய்த செயல் ஒருவிதத்தில் நல்லதே.

செம்பாவை, நான்கு வீட்டுத் தோழிகளும் நீராட்டினர். உச்சி எடுத்துப் பின்னியிருந்த அவளது இரட்டைப் பின்னல் கூந்தலை மெள்ளக் கழற்றி, கோவனின் வீட்டு அடையாளமான மூன்று சடைப்பின்னலைப் பின்னத் தொடங்கினர். வழக்கமாக இந்தச் சடங்கின்போது கேலிப் பேச்சும் கிண்டல் சொல்லுமாக செங்குளமே கலங்கிப்போயிருக்கும். ஆனால், இன்று அப்படி அல்ல.

நான்கு பெண்களும் மூன்று பின்னல் சடையைப் பின்னி முடித்தபோது, குளக்கரையில் வந்து நின்றான் கோவன். அவர்கள் நால்வரை மட்டும் தனியாக அழைத்தான். சுற்றிமுற்றிப் பார்த்தான். வெண்சாந்து உருண்டை வைக்கப் பயன்பட்ட பழைய நாணல்கூடை ஒன்று நைந்த நிலையில் கிடந்தது. அதை எடுத்துவந்து அதன் மீது கைவைத்தபடி வாக்கு கேட்டான்.

“என்ன நடந்தாலும் செம்பாவை ஊருக்குள் கூட்டி வரக் கூடாது. அவர்கள் கையில் சிக்காமல் வெளியேற வேண்டும்.”

நான்கு பெண்களும் பயந்து தயங்கியபடி இருக்க, செம்பாவின் கை நாணல்கூடையை இறுக்கிப் பிடித்து அவனுக்கான வாக்கை அளித்தது. கோவன் மலை நோக்கி ஓடினான்.



தீப்பந்தங்களோடு அவர்களின் படை கிழக்கிலும் தெற்கிலுமாக ஊரைச் சூழ்ந்தது. ஊருக்குள் எதிர்ப்புகள் எதுவும் இல்லை. உறையூர் படைக்கு வாள் வீசாமலே வெற்றி கைகூடுவதுபோல் இருந்தது. ஊருக்கும் செம்மலைக்கும் இடையில் இருக்கும் இடைவெளிக்கு அந்தப் படை வரட்டும் எனக் காத்திருந்தான் கோவன்.

அவன் எதிர்பார்த்த இடத்துக்குப் படை வந்தது. கொம்பின் உச்சிமுனை வாள்போல மடித்து நீட்டியபடி இருக்கும் கொள்ளிக்கொம்பு மாடுகளை, இரு திசைகளுக்கும் பத்து எனப் பிரித்த கோவன், அவற்றின் மூக்கில் பச்சிலையை வைத்து நுழைத்தபடி கயிறுகளை உருவிவிட சைகை செய்தான்.
உற்றுப்பார்த்தால் தீ நிறத்தில் இருக்கும் அவற்றின் கண்கள் பச்சிலைச் சாறு மூக்கில் ஏறியபோது கண்ணில்பட்ட தீப்பந்தங்களை எல்லாம் குத்திக் கிழித்துக்கொண்டு நுழைந்தன.

இடது பக்கமும் வலது பக்கமும் இரு கைகளை விரித்ததைப்போல் கொம்புகள் விரிந்துகிடக்கும் ‘விரிகொம்பு’ மாடுகள் முப்பதும் உள்ளிறங்கின. அவை உள்ளே ஓடினாலே இரு பக்கங்களும் உள்ள

குதிரைகளின் விலாவினைச் சீவிச் சரிந்தபடி இருக்கும். பச்சிலை உருண்டையை இரு காதுகளுக்குள்ளும் திணித்த பிறகு தலையை மறுத்து மறுத்து ஆட்டி, ஆவேசம்கொண்டு உள்ளிறங்கின. அவற்றின் மண்டைக்குள் இறங்கும் பச்சிலையின் எரிசாறு கணப்பொழுதில் நூறுமுறை தலையை மறுத்தாட்டி வெறிகொள்ளச் செய்தது.

மீதி இருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மாடுகள் எல்லாம் சிறப்புத் தகுதியற்ற மாடுகள்தான். ஆனால், கொம்பு உள்ளவை. அது ஒன்று போதும். பிற மாடுகளைவிட வலிமையாக அவற்றைப் பயன்படுத்த முடியும் என்பது கோவனுக்குத் தெரியும். அவற்றின் குதத்துக்குள் கைகளை நுழைத்து இலை உருண்டைகளை அமுக்கினர். சிறிது நேரத்தில் அவற்றின் குடல் பிறண்டு தலைக்கு ஏறிக்கொண்டிருந்தது. பின்புறக் கால்களை உதறியபடி அவை வந்த வேகத்தில் பாறைகள் உருண்டன. மாடுகளின் நிலைகொள்ளாத சீற்றம் குதிரைகளைக் கலங்கடித்தது. தாவிச் சரிந்து உள்நுழைந்தன மாடுகள்.



ஊருக்குள் பட்டிபோட்டு அடைக்கப் பட்டிருந்தன கிடை நாய்கள். வயல்வெளிகளில் கிடையைவிட்டுத் தனித்துப் பிரியும் முட்டுக்காளைகளையே குரைத்தபடி மிரட்டி நகர்த்தும் பழக்கம் உள்ள நாய்கள் அவை. குதிரையைத் தாண்டிக் குதிக்கக்கூடியவை. நாக்கை மடித்து சீழ்க்கை அடித்தபடி ஒரு வங்கிழவன் பட்டியைத் திறந்துவிட்டான். பெரும் குரைப்பொலியோடு குதிரைகளின் பின்னங்கால் சப்பைகளின் மீது அவை பாய்ந்துகொண்டிருந்தன. உறையூர் படைக்கு என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. நாய்களின் பாய்ச்சலையும் மாடுகளின் ஆவேசத்தையும் எதிர்கொள்ளத் திணறிய நேரத்தில், கோவன் தனது இறுதி ஆயுதத்தை இறக்க முடிவுசெய்தான்.

மலையின் பின்புறம் நின்றுகொண்டிருந்த இடிமேலி மாடுகள் இருபத்தியாறையும் மலையுச்சியில் அணிவகுத்து நிறுத்தினான். இடிமேல் இடிவிழுந்தாலும் அஞ்சாமல் முன்னால் நகரும் மாட்டு இனம் அது. தான் செய்யப்போகும் செயலுக்கான கலக்கம் எதுவும் இல்லாமல்தான் கோவனின் முகம் இருந்தது. பெரிய பெரிய வைக்கோற்கட்டுகளை அவற்றின் கொம்புகளின் மேல் செருகினர். இரு திசைகளிலும் பாய்ந்து இறங்குவதைப்போல அவை நின்றுகொண்டிருந்த போது, வைக்கோல் கட்டுகளின் மேல் தீவைத்து கழுத்துக் கயிறுகளை உருவிவிட்டனர்.

மிகப்பெரிய மர உருளைகளில் தீயைப் பற்றவைத்தபடி மலை உச்சியில் இருந்து ஆயிரக்கணக்கானவர்கள் இறங்குவதைப்போல அந்தக் காட்சி இருந்தது. உறையூர் படை கதிகலங்கிய நேரத்தில், எரிந்து இறங்கும் தீப்பந்தத்தின் தழலில் செம்மலையின் மணிக்கற்கள் எல்லாம் ஒளிவீசின. மலை எங்கும் இருந்து பல்லாயிரம் பேர் பந்தங்களோடு இறங்குவதைப் போல் தெரிந்தது. இது கோவனாலும் திட்டமிடப்படாதது. நிலைமை அதிபயங்கரமானதை உணர்ந்த உறையூர் படை, உயிர் தப்பித்தால் போதும் என ஓடத் தொடங்கியது. குறுக்கும் நெடுக்குமாக ஆவேசத்துடன் அலையும் கிடைமாடுகள் நிலைகொண்ட இடத்தில் இருந்து எளிதில் வெளியேறாதவை. அவற்றைக் கடந்து

வெளியேற முடியாமல், உறையூரின் முழுப்படையும் அழிந்துகொண்டிருந்தது. வலையைத் தாண்டி மீன்கள் தவ்வுவதைப்போல குதிரைகளைத் தாண்டியபடி நாய்களின் பாய்ச்சல் நிகழ்ந்துகொண்டே இருந்தது. மிச்சம் மீதியை கோவனின் கூட்டாளிகள் உள்ளிறங்கி வெட்டிச் சரித்தனர்.

பொழுது புலர்ந்தது. உறையூர் படை தோற்று ஓடியதை உறுதிப்படுத்தினான் கோவன். குடல் சரிந்த குதிரைகளும் உறையூர் வீரர்களின் உடல்களும் எங்கும் கிடந்தன. அவற்றுக்கு நடுவில் நடந்துகொண்டிருந்தான். பெரும்வாள் கொண்டு தலை இருகூறுகளாகப் பிளக்கப்பட்ட விரிகொம்பு மாடு ஒன்று செத்துக்கிடந்தது. `மாடுகளை, பூச்சிகளும் உண்ணிகளும் கடிப்பதையே பொறுத்துக்கொள்ள முடியாமல் வெண்சாந்து உருண்டை செய்த குலத்தில் பிறந்த நான், எம் மாடுகள் அனைத்தும் அழிய பச்சிலை எரிச்சாற்றை என் கையாலே தந்துவிட்டேனே' எனக் கதறியபடி, செத்துக்கிடந்த மாட்டின் முன் மண்டியிட்டு உட்கார்ந்தான். சரிந்துகிடந்த அதன் இருபக்கக் கொம்புகளையும் பிய்த்து எடுத்தான். தான் செய்யப்போகும் செயலுக்கான கலக்கம் எதுவும் இல்லாமல்தான், அவனது முகம் இருந்தது. சூரியன் அவனுக்கு நேர் எதிராக மேலே எழுந்தபோது, இரு கொம்புகளையும் முழு விசையோடு செலுத்தி, தொண்டைக்குள் இறக்கினான் கோவன். சூரியனைப் பார்த்தபடி அவனது உடல் மண்ணில் சரிந்தது.


**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-17




**அ**ணங்கேறி ஆடிய பெண்கள் உக்கிரம்கொண்டனர். போர்க்களத்தில், விரிந்த கூந்தலும் பிளந்த வாயுமாக நிணத்தைத் தின்று குதித்தாடும் பேயாடல் தொடங்கியது. துடியின் ஓசை காதைக் கிழித்தது. கூட்டத்தின் குலவை ஒலி பயங்கர அச்சத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.

முன்புறம் கொற்றவையின் திசைநோக்கி துடியடித்துக் குலப்பாடலைப் பாடிக்கொண்டிருந்த பெண், ஆவேசம் மேலிட துடியை வீசியெறிந்து பின்புறம் திரும்பினாள். நெருப்புக்கோலமாக இருந்தன அவளது கண்கள். அணங்குகளின் பேய் ஆட்டத்தால் நிலம் நடுங்கிக்கொண்டிருந்தது. பின்புறம் திரும்பியவள் களத்தின் நடுவில் வரையப்பட்டிருந்த கோலத்தைக் கால்களால் குறுக்கும் நெடுக்குமாக அழித்து அலங்கோலமாக்கினாள். “செம்பாதேவி…வேணாந்தாயீ…” என ஆண்களும் பெண்களும் பெருங்குரலெடுத்து வேண்டினர். கதறலும் கண்ணீரும் கரைபுரண்டன.



கோலத்தின் நடுவில் நாணல் கூடையில் வைக்கப்பட்டிருந்த வெண்சாந்து உருண்டையை நோக்கிப் போனாள் அவள். அவளது கண்களில் இருந்த ஆவேசத்தையும் கைகளின் வேகத்தையும் கண்டு கூட்டம் நடுங்கியது.

`அங்கு என்ன நடக்கப்போகிறதோ?!' என்ற பதற்றத்தில் கூச்சல் உச்சத்துக்குப்போனது. குலவை ஒலி பீறிட எல்லோரும் களத்தை நெருங்கிக்கொண்டிருந்தனர். ஆனால், அணங்குகளின் ஆட்டத்தைத் தாண்டி யாரும் உள்ளே நுழைய முடியவில்லை.
வெண்சாந்து உருண்டையில் வைக்கப்பட்டிருந்த இரு கொம்புகளையும் ஆவேசத்தோடு பிடுங்கி எடுத்தாள் அவள். கூட்டம் கதறியது. பிறர் அவளை நெருங்க முடியாத வளையத்தை அணங்குகள் உருவாக்கினர். “வேண்டாந்தாயீ...” என உயிர் நடுங்கக் கத்தினர். கத்தும் குரல்களுக்கு நடுவில், அவளோ பிடுங்கிய கொம்புகளை தனது இரு மார்புகளை நோக்கி உள்ளிறக்கத் துணிந்தபோது, கண்ணிமைக்கும் நேரத்தில் இடதுபுறத்தில் இருந்து தாக்கப்பட்டு, தூக்கி வீசப்பட்டாள்.

இரு கொம்புகளும் எங்கோ போய் உருண்டன. கூட்டத்தினர் வாய் பிளந்து நின்றனர். தாக்கிய குலநாகினி, அணங்குகளுக்கு நடுவில் மூச்சிரைக்க நின்றாள். அணங்குகளின் ஆத்திரம் தணிய ஆரம்பித்தது. ஆவேசம்கொண்ட குலநாகினி காலத்தையும் கதையையும் தனது இரு கைகளைக்கொண்டு இறுக்கி நிறுத்தினாள். கூட்டம் நிம்மதிப் பெருமூச்சு விட்டது.



தள்ளப்பட்டு கீழே விழுந்தவளுக்கு ஆத்திரம் அடங்கவில்லை. பற்களை நறநறவெனக் கடித்தபடி குலநாகினியை நோக்கிப் பாய்ந்து வந்தாள். மரமே நிலைகுலைந்து சரிந்துவிழுவதுபோல் இருந்தது அவளின் பாய்ச்சல். அவளின் வேகத்தை எதிர்கொண்டு தாங்கி அசையவிடாமல் பிடித்து நிறுத்தினாள் குலநாகினி. கூடியிருந்தவர்களின் குலவை ஒலி மீண்டும் உச்சத்துக்குப்போனது. அவளது இரு

கைகளையும் பிடித்த குலநாகினி, அப்படியே அழுத்தி வெண்சாந்து உருண்டை வைக்கப்பட்டிருந்த கூடைக்கு முன் அமரவைத்தாள். கூடையைப் பார்த்ததும் அவளின் கொதிப்பு கொஞ்சம் கொஞ்சமாக அடங்கத் தொடங்கியது.

குலநாகினியை அண்ணாந்து பார்த்தபடி, அனைத்துப் பற்களும் தெரிவதைப்போல முழு வாயிலும் சிரிப்பைக் காட்டித் தலையாட்டினாள். அதே போன்ற சிரிப்புடன் தலையை வேகமாக ஆட்டி அமைதிப்படுத்தினாள் குலநாகினி. அணங்கு ஆடிய நான்கு பெண்களும் பல்வரிசை காட்டிச் சிரித்தபடியே அவளைச் சுற்றி அமர்ந்தனர். குலநாகினி, அந்த வட்டத்தைவிட்டு வெளியேறி தனது இடத்துக்குப் போனாள்.

கபிலருக்கு உடல் முழுவதும் வியர்த்து வடிந்தது. கூட்டத்தின் நெரிசலில் பாரி எங்கு நிற்கிறான் எனத் தெரியவில்லை. நிலைமை அமைதியான பிறகுதான் பாரியின் அருகில் அவரால் வர முடிந்தது.

“கணிக்க முடியாத நிகழ்வுகளைக் கைக்கொள்ள யாரால் முடியும்? இது காலங்களுக்கு இடையில் நடக்கும் போர். நினைவுகளின் வழியே குருதி வழிகிறது. நம்மால் என்ன செய்ய முடியும்? வெட்டுக்காயம் இருப்பதோ, பல நூறு ஆண்டுகளுக்கு முன்” பாரியின் வார்த்தைகளை கபிலரால் பற்ற முடியவில்லை. காட்சிகள் ஏற்படுத்திய கொதிப்பால் அவர் மனம் திணறிக்கிடந்தது.
மூச்சுவிட முடியாத திணறலோடுதான் பாரியின் குரலும் இருந்தது. கபிலர், பாரியை உற்றுப்பார்த்தார். புருவம் உயர்த்தி பெருமூச்சு விட்டபடி பாரி சொன்னான், “கதை இன்னும் முடியவில்லை.”

கபிலரின் கருவிழிகள் அசைவற்று நின்றன.

மூன்று வாரங்களுக்குப் பிறகு பெரும்படையோடு உறையூர் தலைவன் செம்மலை அடிவாரம் போனான். அப்போது அவர்களை எதிர்த்துப் போரிட அங்கு யாரும் இல்லை. அந்தப் பெரும் பொக்கிஷ மலை, தங்களின் ஆளுகைக்கு வரக் காரணமான மகன் கிள்ளியைக் கொண்டாடித் தீர்த்தான் தந்தை.

சில மாதங்களுக்குப் பிறகு, கிள்ளியின் குதிரை உறையூரின் பெரும்வீதியைக் கடந்தபோது தொலைவில் வெண்ணெய் விற்கும் பெண் ஒருத்தி போவது தெரிந்தது. சற்றே அருகில் போய்ப் பார்த்தான். அவனால் நம்பவே முடியவில்லை, தலையில் கூடையைச் சுமந்து போய்க்கொண்டிருந்தவள் செம்பா. வாய் பிளந்து நின்றான். `அன்று நள்ளிரவு நடந்த தாக்குதலில் இந்த அழகு தேவதை அழிந்துபோனாள் என்று அல்லவா எண்ணியிருந்தேன். எனக்காகவே மீண்டு வந்தவள்போல், அதே தெருவில் வந்து நிற்கிறாளே!' என்று திகைத்துப்போனான் கிள்ளி.



சற்றே திரும்பி அவனைப் பார்த்த செம்பா, சின்னதாகச் சிரித்துவிட்டு நடந்தாள். அன்று பார்த்ததைவிட மெருகேறிய அழகு. அருகில் இருந்தவனை அழைத்து குதிரையை அவன் கையில் கொடுத்த கிள்ளி, “போய் தந்தையை அழைத்து வா. அன்று பார்க்காத அழகை இன்றாவது பார்த்துத் தெரிந்துகொள்ளட்டும்” என்று சொல்லி அனுப்பிவிட்டு, அவள் பின்னால் நடந்தான்.

இறங்கு வெயிலில் ஊரைவிட்டு மிகத் தள்ளி, முன்னர் கிடைபோட்டிருந்த நிலத்தை நோக்கி அவள் நடந்தாள். அடர்ந்த செடி கொடிகள் துளிர்த்துக்கிடக்கும் பாதையில் அவள் நடந்துபோகும் அழகை ரசித்தபடி பின்னால் நடந்தான் கிள்ளி. அவள் வேண்டுமென்றே எதையும் செய்வதுபோல் தெரியவில்லை. கைகளை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக நீட்டி பூக்களைப் பறிப்பதும் பூச்சிகளைத் தட்டிவிடுவதுமாக அவள் நடந்துகொண்டிருந்தாள். பின்னால் வரும் ஒருவனுக்கு, அவை அனைத்தும் சமிக்ஞைகளாக இருந்தன.

காற்றில் பறந்தபடி காமம்கொண்ட இணைத் தும்பிகள் அவளின் முகத்துக்கு நேராகப் பறந்தபோது, தலைவணங்கி அந்த இடம் கடந்தாள். பின்னால் வந்தவனால் அந்தக் காட்சியைக் கடக்க முடியவில்லை.

பெருங்கூடையைக் கவிழ்த்துப்போட்டதைப் போன்ற அந்தச் சிறுகுடில் தனித்து இருந்தது. அவனைத் திரும்பிப் பார்க்காமலேயே குடிலுக்குள் நுழைந்த செம்பா, படலை மூடாமல் திறந்தேவைத்தாள். அவள் நடக்கத் தொடங்கிய பொழுதில் இருந்து அவனை அழைத்தபடிதான் இருக்கிறாள். வீட்டுக்குள் நுழையும்போது தனியாக அழைக்க வேண்டுமா என்ன? அவன் குடிலுக்குள் தலை நுழைத்தான். அதற்குள் வைக்கோல் பாய் ஒன்றை விரித்திருந்தாள். அதன் நடுவில் கால் மடக்கி அவள் அமர்ந்தபோது, தும்பி உடல் மடக்கிப் பறந்தது அவனின் நினைவுக்கு வந்தது.
முன்செல்லும் தும்பியை நினைத்தபடி பின்னந்தலை சரிய, பாயில் படுத்தான்.

செம்பாவின் முதுகின் மேல் கை வைக்கப்போகும்போதுதான், அவனுக்கு உள்ளிருந்த ஆபத்து பிடிபடத் தொடங்கியது. குடிலின் நான்கு திசைகளிலும் செம்பாவைப் போலவே நான்கு பெண்கள் குத்தவைத்த நிலையில் உட்கார்ந்து இருந்தனர். பார்த்த கணத்தில்

சட்டென எழ முயற்சி செய்யும்போது ஆளுக்கு ஒருவராக அவனது கைகளையும் கால்களையும் பிடித்தனர். அவன் கடுங்கோபத்தோடு கூச்சலிட்டு, தன்னை விடுவிக்க முயன்றான். அவர்கள் பெரும் அழுத்தம் கொடுக்காமல் மிக இயல்பாக அவனை அழுத்திப் பிடித்திருந்தனர். நாள் ஒன்றுக்கு நூறு மாடுகளின் நானூறு காம்புகளில் பால் கறக்கும் விரல்கள். பெரும் கிடைக்குள் விதவிதமான கொம்புகளோடு உரசிக்கிடக்கும் எண்ணற்ற மாடுகளை விலக்கி, நகர்த்தி, தள்ளி வெளிவரும் கைகள். அதுவும் ஒருவர் இருவர் அல்ல, நான்கு பேர். அவனால் என்ன செய்ய முடியும்?

செம்பா, குடிலின் மேல் செருகிவைக்கப்பட்டிருந்த இரண்டு கொம்புகளை உருவி எடுத்தாள். அதுவரை கத்திக்கொண்டிருந்தவன், கண்களின் முன் மரணத்தின் வடிவத்தைப் பார்த்து உறைந்துபோனான். குருதிக்கறையேறி இருந்த கொம்புகள். கோவனின் தொண்டைக்குழிக்குள் இறங்கியவை.

“விட்டுவிடுங்கள்... விட்டுவிடுங்கள்...'' என்று மீண்டும் மீண்டும் உயிர்போகக் கத்தினான். காவிரி ஆற்றங்கரையில் செழித்துக்கிடக்கும் மரப்புதர்களைத் தாண்டி, தனித்து இருக்கும் குடிலுக்குள் போடும் கத்தல் யாருக்குக் கேட்கும்? செம்பா, கால் மடக்கி அவன் அருகில் உட்கார்ந்தாள். நெஞ்சுக்குழிக்குள் கொம்பை இறக்கப்போகிறாள் என அவன் நடுங்கியபோது, அவனது மார்பில் கோவனுக்குப் பிடித்த ஒற்றைச்சுழிக் கோலத்தைப் போட்டாள் செம்பா.

கொம்பின் நுனி அவன் நெஞ்சின் மேல்தோலைக் கீறியபடி நகர, நெஞ்சு நிறைய மெள்ள ஊறும் குருதியின் வழியே ஒற்றைச்சுழிக் கோலம் உருவானது. அவள் என்ன செய்கிறாள் என அவனுக்குப் புரியவில்லை. நெஞ்சுப் பகுதியை முடித்த பிறகு இடுப்புக்குக் கீழ் இரு கால்களிலும் வளைந்த இரு கோடுகளைக் கொம்பின் கூர்முனைகொண்டு இழுத்தாள். கதறலை நிறுத்திய அவன், அவளது விநோதமான செயலால் உறைந்துபோனான்.

நான்கு பெண்களும் அவனை அப்படியே புரட்டிப்போட்டனர். முதுகிலும் ஒற்றைச்சுழிக் கோலத்தைப் போட்டு, இடுப்புக்குக் கீழ் பாதம் வரை இருகோடுகளை இழுத்தாள் செம்பா.

கொம்புகளால் குத்திக் கொல்லாமல் மேலெழுந்தபடி கீறிவிடுகிறாள். `இதுபோதும் எப்படியாவது உயிர் பிழைத்துவிடலாம்!' என்ற நம்பிக்கை அவனது கண்களில் உயிர்கொண்டபோது, அவனைத் தூக்கி நிறுத்தினர். சட்டென கையை உதறி தன்னை விடுவிக்க முயற்சித்தபோது, இடதுபுறம் நின்றவள் ஒரு முறுக்கு முறுக்கினாள். நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளின் மூக்கில், பச்சிலை சாறு விடவேண்டும். அப்போது அதன் கொம்புகளை முறுக்கி மூக்கை மேல்நோக்கித் திருப்பியபடி சாறு இறங்கும் வரை பிடித்திருக்க வேண்டும். மாடு, தனது முழு பலத்தால் கொம்பைத் திருகும். ஆனால், அதைப் பிடித்திருப்பவர் அசையவிடக் கூடாது. மாட்டின் கொம்பைத் திருகி நிறுத்தும் பணிதான், கிடையில் அவளுக்குப் பல நாள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவனது கையை சற்றே திருகியபோது உள்ளுக்குள் எத்தனை எலும்புகள் நொறுங்கின எனத்

தெரியவில்லை. ஆனால், இவ்வளவு நேரமும் அவன் கத்திய மொத்தக் கதறலும் இப்போது ஒரே நேரத்தில் வெளிவந்தது. போதும் என நினைத்துத் திரும்பிய செம்பா, அப்போதுதான் அவனது தோள்களைப் பார்த்தாள். வலதுகை தோள்பட்டையில் ஒரு சுழியைக் கீறி, விரல்கள் வரை இறக்கினாள். அதே போல இடது கையிலும் இழுத்தாள்.

கொம்பை மீண்டும் மேற்கூரையில் செருகிய செம்பா, குடிலின் ஓரத்தில் மூடிவைக்கப்பட்டிருந்த நாணல்கூடையை எடுத்தாள். அதில் மணமணத்துக்கிடந்தது வெண்சாந்து உருண்டை. அதை இரு கைகளாலும் அள்ளி அவனது கால்கணுவில் இருந்து கழுத்து வரை பூசினாள். வெண்ணெயின் குளுமை அவனது உடலெங்கும் பரவியது. கூடை நிறைய இருந்த வெண்சாந்து உருண்டை அவன் உடல் முழுவதும் மணமணத்தது. நால்வரும் பிடியைவிட்டு விலகினர். உயிர்பிழைத்தால் போதும் என, குடிலைவிட்டு வெளியே ஓடினான் கிள்ளி.


நீண்ட இடைவெளிக்குப் பிறகு, வெண்சாந்து உருண்டையின் மணம் காற்றில் பரவி, பறவைகளின் மூக்குக்குள் இறங்கியது. ஓடிய கிள்ளியின் இடதுபுறத் தோளிலே வந்து அமர்ந்தது ஒரு காகம். ஒரு கையால் அதைத் தட்டிவிட்டு திரும்பும்போது மூன்று காகங்கள் வலதுபுறத் தோளில் அமர வந்தன. இன்னொரு கையைத் தூக்க முடியாததால், வலதுகையாலே அவற்றைத் தட்டி விரட்ட முயன்றபோது தோளின் கிழிபாடுகளுக்குள் இறங்கி எழுந்தது காக்கையின் அலகு. “அய்யோ” எனக் கத்த வாயெடுத்தவனின் செயலை, மறுகணமே வாயடைக்கவைத்தது எதிர் திசையில் படபடத்து வந்துகொண்டிருந்த பறவைகளின் பெருங்கூட்டம். காய்ந்த நாணல்கூடையையே நார்நாராகக் கிழிக்கும் அளவுக்கு பறவைகளை வெறிகொள்ளச் செய்தது வெண்சாந்து உருண்டை.

மாலை நேரத்தில் பறவைகள் வலசை போகின்றன என ஊரார்கள் நினைத்தபோது, அவை அனைத்தும் அலை அலையாக வந்து இவன் மீது இறங்கிக்கொண்டிருந்தன. துள்ளத் துடிக்கக் கதறியபடி அவன் ஓட ஓட, பறவைகளின் கூட்டம் மகிழ்ந்து அவனைச் சூழ்ந்தது. பறவைகளின் அலகுகள் கொத்தியெடுக்கும் இடம் எல்லாம் வெண்சாந்து உருண்டை உருகி உள்ளேபோனது. அடுத்த பறவையின் அலகு, ஆழத்துக்குள் போய் அதை எடுத்தது.

செம்பா வெண்சாந்து உருண்டையை மேலெல்லாம் பூசும்போது, அவனது முகத்தில் சிறு துளிகூடப் படாமல் பூசினாள். ஏன் என்பது, உடன் இருந்த நான்கு பெண்களுக்குக்கூட விளங்கவில்லை. குடிலின் வாசலில் நின்று பார்க்கும்போதுதான் அவர்களுக்கு விளங்கியது. பறவைகள் அவனது உடலை துகள்துகளாகக் கிள்ளி எடுப்பதை, கண்களில் கடைசித்துளி உயிர் இருக்கும் வரை அவன் பார்க்க வேண்டும்.

அழிவு அணு அணுவாக நிகழ்ந்துகொண்டிருந்த அந்த இடத்துக்கு மிகவும் தாமதமாக வந்து சேர்ந்தன மரங்கொத்திகள். அவற்றால் உள்நுழைய முடியவில்லை. காக்கைகளின் இடைவிடாத கரைச்சலும் பிற பறவைகளின் கத்தலுமாகப் பேரிரைச்சல் நிலவிய அந்த இடத்தில், மரங்கொத்திப் பறவை ஒன்று,

அவனது இடதுபுற மார்பை நோக்கி ஓர் அம்பு நுழைவதைப்போல பாய்ந்து, அதே வேகத்தில் வெளியே இழுத்தது தனது கூரிய அலகை.



கபிலர் மறுநாள் காலையில் எழுந்தபோது உடல் முழுவதும் நடுக்கம்கொண்டிருந்தது. மூலிகைச் சாற்றைக் கொடுத்தார்கள். வாங்கிக் குடித்தார். பகல் முழுவதும் நடுக்கம் நீடித்தது. கண்ணுக்குள் செம்பாதேவி நிலைகொண்டிருந்தாள். ஆடுகளத்தில் உருண்டு விழுந்த இரு கொம்புகளை எடுத்துவந்து அவள் முன் வணங்கி நின்றான் முடியன். அதில் ஒன்றை அவனது இடுப்பு உறையில் செருகினாள். மற்றொன்றை அவளின் காலடியைத் தொட்டு வணங்கிக்கிடந்த வீரன் ஒருவனின் இடுப்பில் செருகினாள்.

குலப்பாடலைத் துடியடித்துப் பாடிய அந்தப் பெண்ணின் முகத்தை அப்போதுதான் கூர்ந்து பார்த்தார் கபிலர். அவருக்கு அறிமுகமான முகம் அது. 'எங்கே பார்த்திருக்கிறோம்?' என யோசித்தபோது புலிவால் குகை அவரின் நினைவுக்கு வந்தது. பன்றிக்கறியை அவளின் கையில் கொடுத்த கணம் நிழலாட, கைகூப்பி கபிலர் சொன்னார், “மகள் அல்லள், என் தாய் நீ”.

மாலை நெருங்கியபோது, கபிலரின் இருப்பிடத்துக்கு வந்தான் பாரி. உடல் நடுக்கம் இருக்கத்தான் செய்தது. அதைக் காட்டிக்கொள்ளக் கூடாது என அவர் செய்த முயற்சி, பலன் அளிக்கவில்லை.

``உங்களின் நடுக்கத்துக்குக் காரணம் உடல் அல்ல, மனம். அது கலங்கிப்போய் இருக்கிறது” என்றான் பாரி.

அதை ஏற்பதைப்போல தலையாட்டிய கபிலர் சற்று மௌனத்துக்குப் பிறகு, “சிந்தப்பட்ட குருதி, கதைகளின் வழியே தலைமுறைகளுக்குக் கைமாறி வந்துகொண்டே இருக்கிறது. கதைகள்தான் மனித நினைவுகளில் இருந்து, குருதிவாடை அகலாமல் இருக்கக் காரணமா?” என்றார்.

`ஆம்' எனத் தலையசைத்தபடி பாரி சொன்னான், “கடித்து இழுக்க விலங்குகளுக்குப் பல் இருப்பதைப்போல் மனிதனுக்குக் கதை.”

நடுங்கி எழுந்தார் கபிலர். மனம் அல்ல, சொல்லால் நிகழ்கிறது நடுக்கம்.

“கிள்ளியின் முன்புறம் பாய்ந்த மரங்கொத்தி, பின்புறமாக வெளியேறிச் சென்றதைப் பேசும் கதைதான் நம்பிக்கையின் வேராக இருக்கிறது. அது இல்லையென்றால், `மேலெல்லாம் வைரக்கல் பதித்த பெரும்வடம் அணிந்தபடி கிள்ளி ஆட்சிசெய்து, எல்லோரையும் வாழவைத்தான்' என்றே கதைகள் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கும்.

கதைகள்தான் நல்லவர்களுக்கான கடைசி நம்பிக்கை. பறவைகள், விலங்குகள், மரம், செடி கொடி என இயற்கை எல்லாம் நமக்கு துணை நிற்க, அழித்தொழிப்பவர்கள் வீழ்வார்கள்; அழிக்கப்பட்டவர்கள் எழுவார்கள் என்ற நம்பிக்கையை, கதையன்றி வேறு யார் கொடுப்பது?” - பாரி சொல்வதை, கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார் கபிலர்.

பாரி தொடர்ந்தான், “ஈட்டியை விசைகொண்டு எறியும் எங்கள் வீரர்களின் கை தன்னிகரற்ற வலிமைகொண்டிருப்பது சதையால் அன்று, கதையால்.”

‘இந்தப் பதிலில் இருக்கும் நியாயங்கள் ஏன் என்னை வந்து சேரவில்லை? அதைத் தடுத்துக்கொண்டிருந்த உண்மைகள் என்ன?’ என்று யோசித்தார் கபிலர். வேந்தர்களுடன் தான்கொண்ட நட்புக்கு மனம் நம்பிக்கையாக இருக்க நினைக்கிறது. தன்னைப் பேணிப் போற்றுவதில் வேந்தர்கள் காட்டிய அக்கறையை பொய் என எப்படிச் சொல்ல முடியும்? எண்ணங்கள், மனக்கலக்கத்தை மேலும் அதிகப்படுத்தின. அவர் பாரி சொன்னதை வழிமொழியவில்லை. முகம் உணர்வுகளை வெளிக்காட்டிவிடக் கூடாது என நினைத்து சற்றே இறுக்கத்துடன் தலைசாய்த்தார்.

கவனித்த பாரி, சின்னதாகப் புன்முறுவல் பூத்தபடி இருக்கையைவிட்டு எழுந்தான். “நீங்கள் நன்றாக

ஓய்வெடுங்கள். நாளை காலை நான் வந்து பார்க்கிறேன்” என்றான்.

“ஏன், நான் இன்று வர வேண்டாமா?”

“உங்களது உடல்நிலை அப்படியிருப்பதால் `ஓய்வெடுங்கள்' என்று சொல்கிறேன். இன்று மூன்றாம் நாள். பிற நாளைப்போல இருக்காது. சற்றே அச்சமூட்டுவதாக இருக்கும்.”

அச்சம் என்பதற்கு அவன் கொண்டுள்ள விளக்கத்துக்குள் நேற்றைய நாள் இடம் பெறவில்லைபோலும். கடந்த இரு நாள்களில் நடந்தவற்றை நினைவுகூர்ந்தவாறே கபிலர் கேட்டார், `‘தெய்வவாக்கு விலங்கு பழம் எடுத்தப் பிறகுதானே குலப்பாணன் உள்ளிறங்குவான். முன்கூட்டியே எப்படிச் சொல்கிறீர்கள்?”

“மூன்றாம் நாளில் தெய்வவாக்கு விலங்குக்கு வேலை இல்லை. காலம் காலமாகப் பின்பற்றப்படும் மரபு இது.”

“மரபுகளுக்குக் காரணம் இருக்க வேண்டும் அல்லவா?”

“நீங்கள் வருவதில் உறுதியாக இருக்கிறீர்களா?”

``ஆம்” என்றார் கபிலர்.

“சரி வாருங்கள், பேசிக்கொண்டே போவோம்” என்றான் பாரி.

இருவரும் கொற்றவை மரம் நோக்கி புறப்பட்டபோது இருள் முழுமை கொண்டுவிட்டது. கபிலர் சொன்னார், “மரபுக்கான காரணத்தைச் சொல்லாமல் அமைதி காப்பது எதனால்?”

“தனித்தக் காரணம் ஒன்றும் இல்லை. நான் வேறு சிந்தனையில் இருந்ததால் மறந்துவிட்டேன்” என்று சொன்ன பாரி மேலும் கூறினான். “உடலெல்லாம் அச்சம்கொண்ட தெய்வவாக்கு விலங்கால் பழங்களைத்தான் எடுக்க முடியும், பாம்புகளை எப்படி எடுக்க முடியும்?”

“புரியவில்லை” என்றார் கபிலர்.

“இன்று சொல்லப்படப்போவது நாகக்குடியின் கதை”.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்..**

# வீரயுக நாயகன் வேள்பாரி-18



**கொ**ற்றவைக்கூத்தின் மூன்றாம் நாள். கூட்டத்தின் அளவு பாதிதான் இருந்தது. தரையில் எவரும் உட்காரவில்லை. மூன்று அடிகளுக்குமேல் இருக்கும் திட்டுகளிலும் மரக்கட்டை களிலும்தான் உட்கார்ந்திருந்தனர். இந்த மலையெங்கும் இருக்கும் பாம்புகள், இன்றைய கூத்தைக் கேட்கின்றன என்பது நம்பிக்கை.

ஆடுகளத்தின் முன் ஒரு பனை நீளத்துக்கும் இரு கை அகலத்துக்கும் மரக்கட்டைகளை அடுக்கி, அதில் நெருப்பைப் பற்றவைத்துக்கொண்டிருந்தனர். பற்றிய நெருப்பு, நான்கு முனைகளில் இருந்தும் மெள்ளப் பரவிக்கொண்டிருந்தது.

வழக்கமாகக் கபிலரின் முகக்குறிப்பு அறிந்தே விளக்கம் சொல்லும் பாரி, இமை மூடாமல் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அடுக்கிவைக்கப்பட்ட எல்லா கட்டைகளிலும் நெருப்பு பற்றியது.

தழல், மேலேறத் தொடங்கியது. சற்று நேரம் கழித்து கபிலர் கேட்டார், “இங்கு என்ன நடக்கிறது?”

“பாம்புக்கு நீர் கொடுக்கும் நாகரவண்டுகள் இன்னும் வந்து சேரவில்லை.”

கபிலர் சுற்றும்முற்றும் பார்த்தார். சூழல் வழக்கம்போல் இல்லை. நாகர்குடி பாணன் ‘பகுளி’ என்ற பறையை இசைக்கத் தொடங்கினான். அதன் ஓசை சன்னமாக வெளிவந்தது. கபிலர், இசைப்பவனையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார். சிறிது நேரத்துக்குப் பிறகு பாரியிடம் கேட்டார், “நாகரவண்டுகள் வந்துவிட்டனவா?”

“அவை வந்த பிறகுதான் ஆட்டம் தொடங்கியது.”




``எங்கே, யார் ஆடுவது?” எனக் கேட்டார் கபிலர்.

“உற்றுப்பாருங்கள், நெருப்பின் பின்புறம் என்ன நடக்கிறது என்று.”

கபிலர் சற்றே கூர்ந்து கவனித்தார். நெருப்பின் பின்புறம் வளைந்தும் நெளிந்தும் இரண்டு உருவங்கள் ஆடிக்கொண்டிருந்தன. எரியும் தழலுக்குப் பின்புறம் இருளின் அசைவுகள்போல் அவை இருந்தன.

``கை புணர்ந்தாடும் துணங்கை ஆட்டம்” என்றான் பாரி.


``அவர்களை நாம் பார்க்கக் கூடாது என்பதற்காக நெருப்பு மூட்டப்பட்டிருக்கிறதா?” என்று கேட்டார் கபிலர்.

``இல்லை. சிறிது நேரத்துக்குப் பிறகு, அவர்கள் நெருப்புக்குள் இறங்கி ஆடுவார்கள்” என்றான்.

நெருப்பு எரிந்து முடிந்த பிறகு, கங்குகளின் மீது ஆடத்தான் இந்த ஏற்பாடு எனப் புரிந்துகொண்டார் கபிலர்.

பின்புறம் ஆடுபவர்களின் உடல்மொழி மாறியது. பாம்புத்துள்ளல் தொடங்கியது. நாகக்குடியின் கதையை, பாணன் தொடங்கினான்.

எருக்குமலையைச் சேர்ந்த நாகர்கள்தான் இந்த மலைத்தொடரில் மிகவும் பழைமையான குடிகள். ‘நாகம், இவர்களின் சொல் கேட்கும்; இவர்களின் வாசனை அறிந்து விலகிச் செல்லும். இவர்களால் நாகத்தைக் கட்டுப்படுத்த முடியும்’ என இவர்களைப் பற்றி பலவிதமான பேச்சுகள் இந்த மலை முழுவதும் உண்டு.



தேறிமலையின் அடிவாரத்தில் `சேரலர்' என்ற ஒரு குலம் உண்டு. எருக்குமலையும் தேறிமலையும் ஒரே மலைத்தொடரின் இரு வேறு பகுதிகள். எருக்குமலை, தேறிமலையைவிட மிக உயர்ந்து பரந்தது. அந்த மலையின் மீதுதான் நாகர்கள் இருந்தனர். தேறிமலையின் அடிவாரத்தில் சேரலர் இருந்தனர்.

சேரலர் குடி, மலை அடிவாரத்தின் சமதளத்தில் இருந்ததால் வேளாண்மை, வணிகம் என தங்களின் செயல்களை விரைவாகப் பெருக்கியது. வளமும் கூடியது. பெருஞ்சேரல்தான் அந்தக் குலத்தின் தலைவனாக இருந்தான். நீண்டகாலம் அவனது தலைமையில் சேரலர் குலம் தழைத்தது. அவனுக்கு வயது கூடியது. தோலில் சுருக்கம்படியத் தொடங்கியது.

ஒருநாள் அவனது ஊர் மன்றலில் குடிக்கூத்து நடந்துகொண்டிருந்தது. பெருஞ்சேரலும் அவன் குலமக்கள் அனைவரும் அதைக் கண்டு மகிழ்ந்தனர். அப்போது கூத்தாடிய இளம்பெண் ஒருத்தி, கூத்தின் வேகத்துக்கு ஏற்ப கண்களைச் சுழற்றிச் சுழற்றி ஆடினாள். அவளது கண்கள் தன்னைத்தான் சுற்றிக்கொண்டிருக்கின்றன எனப் பெருஞ்சேரல் நினைத்தான். நீண்ட நேரத்துக்குப் பிறகுதான் தெரிந்தது, அவளது கண்கள் சுழன்று வந்து மொய்த்தது தன்னை அல்ல; தனக்குப் பின்னால் நின்றுகொண்டிருக்கும் வீரனை என்று. அன்று இரவு முழுவதும் சேரலுக்குத் தூக்கம் கொள்ளவில்லை. அழகியின் கண்கள் தன்னைத் தாண்டிப்போன கணத்தை அவனால் தாங்க முடியவில்லை.

`சேரல்குலத்தின் வளம்பெருக்கி, திறன்கூட்டிய மாவீரன்' எனப் புகழப்பட்ட தன்னை, வயோதிகம் வந்து பற்ற நினைப்பதை அவனால் ஏற்க முடியவில்லை. தோலில் ஏற்படும் சுருக்கங்களைக் காண, கண்கள் மறுத்தன. ``சுருக்கம் களைய வழி உண்டா?” எனக் கேட்டு, திசையெங்கும் ஆட்களை அனுப்பினான்.

வடதிசை போனவன் வந்து சொன்னான், “நான் பார்த்த பெருமுனி ஒருவன், இதற்கு வழி உண்டு எனச் சொன்னான். ஆனால், என்னவென்று சொல்ல மறுத்துவிட்டான்” என்றான்.



வெகுவிரைவில் அந்த முனி தேறிமலைக்கு வரவழைக்கப்பட்டார். “தேகத்தின் சுருக்கம், மரத்தின் சருகைப்போல உதிரக்கூடியதுதான்” என்றார் அவர்.

“அதற்கான வழியைக் காட்டுங்கள்” என்று பெருஞ்சேரல் வேண்டி நின்றான்.

சிறு குண்டம் அமைத்து, அதில் பலவிதமான மரக்குச்சிகளைப் போட்டுத் தீமூட்டி, அந்தப் புகை நடுவே நின்று அந்த முனி சொன்னார், “நாகங்கள் சட்டையைக் கழற்ற ஒரு மூலிகையை உண்ணும். அந்த மூலிகையை நீ உண்டால், உனது தேகத்தின் சுருங்கிய மேல்தோல் கழன்று யௌவனம் அடைவாய்” என்று.

“அந்த மூலிகையை எவ்வாறு கண்டறிவது?” எனக் கேட்க, “இந்தப் புவிமேல் அந்த ரகசியத்தை அறிந்தவர்கள் நாகக்குடியினர் மட்டுமே.

நீ அவர்களிடம் கேட்டு அந்த மூலிகையைப் பெற்றுப் பயனடைவாய்” என்றார் முனி.

பெருஞ்சேரலின் மனம் குளிர்ந்தது. முனியின் மனம் குளிரச் செய்யவேண்டிய அனைத்தையும் செய்து அனுப்பினான்.

எருக்குமலைக்குச் சென்று நாகர் குடியின் தலைவனைக் காணுமாறு, தனது அவையினருக்குப் பெருஞ்சேரல் உத்தரவிட்டான். அந்த உத்தரவை ஏற்று மலையேற, யாரும் முன்வரவில்லை. காரணம், நாகர்களைப் பற்றிய கதைகள் அப்படி. நாகர்குடியின் வயதான முதுமகள் உடுத்தியிருக்கும் ஆடையில் இருந்துதான் விரியன்பாம்புக் குட்டிகள் உதிர்ந்து வெளியேறுகின்றன என அவர்கள் நம்பினர். நாகத்தைப் பற்றி எப்போது பேசினாலும் அதைக் கேட்கும் சக்தி அதற்கு உண்டு என நம்பினர். நாகத்தைப் பற்றிய எந்த ஒரு சொல்லும் நாகத்தின் செவியில்தான் போய்த் தங்கும் என்பது எல்லோரும் அறிந்ததே.

``தங்களின் குலத்தலைவனுக்காகப் போக எவருக்கும் துணிவு இல்லையா?” எனக் கேட்டபோது, பெரியவர் பொறையன் முன்வந்தார். திறன்கொண்ட பன்னிரு வீரர்களின் துணையோடு, தான் போய் வருவதாகக் கூறினார். பெருஞ்சேரல் மகிழ்வுற்றான்.


சற்றே தயக்கத்துடன் பொறையன் கேட்டார். “ஒருவேளை அந்த மூலிகையை அவர்கள் தெரிவிக்க மறுத்துவிட்டால் என்ன செய்வது?”

“வடதிசை முனி சொன்ன இரண்டாவது வழியில் வேண்டிப் பெறுங்கள்” என்றான் பெருஞ்சேரல்.

சரியென பொறையன் சம்மதித்தார். பன்னிரு வீரர்களுடன், பாம்புக்கடிக்கு வைத்தியம் பார்க்கும் பிடார வைத்தியன் இருவருமாக பதினான்கு பேரை உடன் அனுப்ப முடிவானது. வயதில் மூத்த பிடார வைத்தியனுக்கு, இரு காதுகளும் அறுபட்டிருந்தன. இன்னொருவன் வயதில் இளையவனாக இருந்தான். இருவரும் இருவேறு திசைகளில் இருந்து வரவழைக்கப்பட்டிருந்தனர். பொறையனோடு சேர்த்து பதினைந்து பேரிடமும் குடிமுனை வாக்குப் பெற்றான் பெருஞ்சேரல். எந்தச் சூழலிலும் அவர்கள் இந்தக் கட்டளையை நிறைவேற்றாமல் இனி நாடு திரும்ப முடியாது.

பதினைந்து பேரும் எருக்குமலையில் ஏறத் தொடங்கினர். நாகர்குடி அல்லாத வேற்றுக்குடியினரின் காலடி, எருக்குமலையில் இதுவரை பட்டதில்லை. முதன்முதலாக அது நிகழ்ந்தது. எருக்குமலையின் அடிவாரம், காட்டுப்புற்களாலும் குறுமரங் களாலும் நிரம்பியதாக இருக்கும். புற்களை விலக்கி அவர்கள் மலையேறத் தொடங்கினர். புது மனிதர்களின் வாடையை நாகங்கள் நன்கு அறியும். அவர்கள் முன்னால் இருக்கும் புற்களை விலக்கி, கால்களை மிகக் கவனமாக முன்நகர்த்திச் சென்று கொண்டிருந்தனர். மலையின் முதல் குன்றைக் கடந்தபோது நிழல்விரியன் ஒன்று நடந்துகொண்டிருந்த ஒருவனின் நிழலுக்குள் நுழைந்தது.

எந்த மனிதனின் நிழலுக்குள் அது நுழைகிறதோ, அவன் நிழலிலேயே அது ஊர்ந்து வந்துகொண்டிருக்கும். நடந்துசெல்பவன் எவ்வளவு வேகமாக நடந்தாலும், மெதுவாக நடந்தாலும் அதுவும் அதே வேகத்தில் நிழலுக்குள் நெளிந்தபடியே வரும். அதன் உடலில் படிந்த நிழலைவிட்டு அது பிரியாது.



இளைய பிடாரனின் நாசி, பாம்பின் வாசனையை நுகர்ந்தது. “யாரும் நின்றுவிடாதீர்கள். ஏதோ ஒரு பாம்பு நம் அருகில் வந்துகொண்டிருக்கிறது” என்றான். எல்லோருக்குள்ளும் அதிர்ச்சி பரவியது; வியர்க்கத் தொடங்கியது. என்ன வாசனை என்பது அவனுக்குப் பிடிபடவில்லை. மூத்த பிடாரனைப் பார்த்துக் கேட்டான், “உங்களின் மூக்கை வாசனை எட்டவில்லையா?”

மூத்த பிடாரன், ‘இவனது செயல் சிறுபிள்ளைத் தனமாக இருக்கிறதே’ என்று நினைத்தபடியே பதில் ஏதும் சொல்லாமல் நடந்துகொண்டிருந்தான். நடந்துசெல்லும் வீரர்கள் அனைவரும் கையில் ஆயுதங்களுடன் இருந்தனர். மனிதன், பாம்பைப் பற்றி பேசும் கணத்திலேயே அது அவனுக்குள்ளே வந்துவிடுகிறது. வெளியே அவன் எந்த வகை ஆயுதங்களை வைத்திருந்தும் என்னவாகப் போகிறது?

உள்ளுக்குள் ஏற்படும் நடுக்கத்தை எவரால் நிறுத்த முடியும்?

நடுக்கமின்றி நடந்துகொண்டிருந்தவன் மூத்த பிடாரன் மட்டும்தான். அவனது நாசி, நீண்ட நேரத்துக்கு முன்பே நாவிப்பூ மணத்தைக் கண்டறிந்துவிட்டது. கருவிரியனுக்கும் நிழல் விரியனுக்கும்தான் இந்த வாடை வரும். கருவிரியனாக இருந்தால் வாடை நுகர்வதற்குள் கடி விழுந்திருக்கும். இது நிழல்விரியன்தான். அதனால்தான் நடக்கவிட்டு வந்துகொண்டே இருக்கிறது. யாருடைய நிழலில் வருகிறது என்பதுதான் அவனுக்குத் தெரியவில்லை.

`மனிதரின் நிழலுக்குள் அது நுழைந்துவிட்டால், அந்த நிழலைவிட்டு விலகாமல் வந்துகொண்டே இருக்கும். நிழலுக்கு உரியவன் அதனிடமிருந்து தப்பிக்க ஒரே வழி, நிற்காமல் நடந்துகொண்டே இருப்பதுதான். மாலையில் கதிரவனின் ஒளி மறைந்து மனித நிழல் அதுவாகச் சிதைந்தால் மட்டுமே அது திக்குத்தெரியாமல் திசை மாறும். இல்லையென்றால், அது வந்துகொண்டேதான் இருக்கும். நடப்பவன் எந்த இடத்தில் நின்று இளைப்பாறுகிறானோ, அந்த இடத்தில் அவனது குதிக்காலைக் கடித்துச் சுற்றும். இதை நாம் சொன்னால், மொத்தக் கூட்டமும் பயந்து சிதறிவிடும். என்ன செய்வது?' என, மூத்த பிடாரன் சிந்தித்தபடியே நடந்துகொண்டிருந்தான். இளைய பிடாரனோ பொறையனிடம் போய்ச் சொன்னான், “பாம்பின் வாடை வருகிறது. இந்த வாடையைக்கூட இந்தக் காது அறுந்தவனால் உணர முடியவில்லை. இவன் பாம்புப் பிடாரன்தானா என்பதே சந்தேகமாக இருக்கிறது.”

அவனது சொல்லைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார் பொறையன். மூத்த பிடாரனைத் திரும்பிப் பார்த்தார். பொறையன் நடையை நிறுத்தியதும் எல்லோரும் நின்றனர். மூத்த பிடாரன் மட்டும் நிற்காமல் நடந்தான். தன்னை இவன் அவமதிக்கிறான் எனப் பொறையன் நினைத்த கணத்தில், இடதுபக்கம் வந்துகொண்டிருந்த வீரன் ஒருவன் கத்திக்கொண்டு கீழே விழுந்தான்.

அன்று இரவு, தனித்த மரம் ஒன்றில் பரண் அமைத்துத் தங்கினர். வீரர்கள், சுழற்சி முறையில் காவல் காத்தனர். உணவு மூடைகளைக்கூட கீழே வைக்காமல் மரத்திலேயே கட்டித் தொங்கவிட்டனர். நடந்ததை மூத்த பிடாரன் விளக்கியபோது, இளைய பிடாரன் வணங்கி மன்னிப்புக் கோரினான்.

மறுநாள் விடிந்தது. ``பாம்பு பெரும்பாலும் காலையிலும் மாலையிலும்தான் இரை மேயும். எனவே, வெயில் நன்கு மேலேறிய பிறகு நடக்கலாம்'' என்றான் மூத்த பிடாரன். அதன்படியே அவர்கள் பொறுத்திருந்து நடந்தனர்.

வீரர்கள் எல்லோருக்குள்ளும் அச்சம் அப்பிக்கிடந்தது. மூத்த பிடாரன் முன் சென்றுகொண்டிருந்தான். வீரர்களுக்கு நடுவில் பொறையனும் இறுதியில் இளைய பிடாரனும் நடந்தனர். பாம்புகளின் விதவிதமான தடங்கள் நெடுகக்கிடந்தன. தொலைவில் இருந்த புதரின் மேல் பெரும்கிளையைப்போல கழுத்தை நீட்டி பறப்பவற்றை மேய்ந்துகொண்டிருந்தது ஏதோ ஒன்று. பின்னால் நடந்துகொண்டிருந்த வீரன் ஒருவன் அதைப் பார்த்துக் கை காட்டினான். இளைய பிடாரன் அதை உற்றுப்பார்த்தான்.

அது கட்டையா அல்லது பாம்பா என்பதை அவனால் உணர முடியவில்லை. ஒரு கல் எடுத்து அதை நோக்கி வீசினான். அது மெள்ளத் திரும்பியது.

முன்னால் போய்க்கொண்டிருந்த மூத்த பிடாரனிடம் சத்தம்போட்டுச் சொன்னான், “உனது காதுகளை அறுத்தால் ஒழிய உனக்குப் புத்தி வராது.’’

அப்போதுதான் புரிந்தது. அவன் ஏற்கெனவே அதைப் பார்த்துவிட்டான் என்று. பதில் சொல்லியபடியே நடக்கும் வேகத்தை இரு மடங்கு கூட்டினான் மூத்த பிடாரன். ஏதோ ஓர் ஆபத்து வரப்போகிறது என்பதை எல்லோரும் புரிந்து, வேகம்கொண்டனர்.

இளைய பிடாரன், வீரர்களைக் கடந்து சற்று உள்ளே போய்விட முயன்றபோது, அவனுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த வீரர்கள், ``காலிலே குச்சியாலேயே குத்திவிட்டது" என்று சொல்லி கீழே உட்கார்ந்தனர். அவ்வாறு உட்கார்ந்த நான்கு பேரும் அதன் பிறகு எழுந்திருக்கவே இல்லை.

“ஒரு கட்டைவிரியன் இருந்தால், அதைச் சுற்றி எண்ணற்றக் குறுவிரியன்கள் இருக்கும் என்பதுகூடவா உனக்குத் தெரியாது? தேன்கூட்டைக் கலைப்பதுபோல புதரில் கிடந்தவற்றைக் கல் வீசிக் கலைத்துவிட்டாயே!” என்று சொல்லிக்கொண்டே இளைய பிடாரனது காதோரத்தின் சிறு பகுதியை அறுத்தான் மூத்த பிடாரன்.

இளைய பிடாரன் வலியால் கத்தினான். ஆனால், நான்கு வீரர்களின் மரணத்துக்கு, தான் காரணமாகிவிட்டதால் தண்டனையை ஏற்றான்.



இதுபோன்ற காரணங்களுக்காகச் சிறுகச் சிறுக அறுத்து இரண்டு காதுகளையும் முழுமையாக இழந்து நிற்பவன்தான் மூத்த பிடாரன். காதுகள் அற்ற அவனது தோற்றத்துக்குப் பின்னால், எத்தனை வகையான பாம்புகளைப் பற்றிய அறிவு இருக்கும் என்பதை இளைய பிடாரன் அப்போதுதான் உணர்ந்தான்.

மூன்றில் ஒரு பங்கு வீரர்களை இரண்டாம் நாளிலேயே இழந்தனர். `நாகக்குடியினரின் வாழ்விடத்துக்கு என, ஆறு நாள்கள் ஆகும்’ என்று முன்னோர் சொல்லக் கேட்டுள்ளனர். அங்கு சென்று சேரும்போது எத்தனை பேர் உயிரோடு இருப்போம் என்ற அச்சம் எல்லோரையும் ஆட்கொண்டது.

மூன்றாம் நாள் காலைப்பொழுது கழிந்த பிறகு நடக்க ஆரம்பித்தனர். ஒருவருக்கொருவர் எந்தவிதப் பேச்சும் பேசவில்லை. சற்றே பெரும் மரங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாக இருக்கும் காடு அது. வழக்கத்தைவிடக் கூடுதல் அச்சம் உள்ளுக்குள் ஆட்டிக்கொண்டிருந்தது. ஐந்து பேர் மரணித்துள்ளனர். வாயில் நுரைதள்ளி, உடல் நீலம்பூத்து, கால் விரல் சுருண்டு இழுத்து... என மரணத்தின் இறுதி

வடிவங்கள் நினைவிலிருந்து அகல மறுத்தன.

முன்னால் நடந்துகொண்டிருந்த மூத்த பிடாரன், கீழே பதிந்துகிடக்கும் தடத்தைப் பார்த்ததும் நடையை நிறுத்தினான். எல்லோரும் இடம்விட்டு அசையாமல் அப்படியே நின்றனர். அவன் குனிந்து மண்ணில் இருக்கும் நெளிவுகளை உற்றுப்பார்த்தான். பின்னால் இருப்பவர்களுக்கு என்ன செய்வது எனப் புரியவில்லை. நின்றால் நிழல்விரியன் குதிக்காலைக் கவ்வும், பேசினால் குறுவிரியன் செவிக்கு எட்டும். என்ன செய்வது எனப் புரியவில்லை. ஆயுதங்களின் பிடி வழுக்கும் அளவு வீரர்களின் உள்ளங்கை வியர்த்தது.

மூத்த பிடாரன், அந்தத் தடத்தைப் பார்த்தபடி அது போன திசையில் இன்னும் சிறிது தொலைவு புற்களை விலக்கி உள்ளே போனான். அவன் எதுவும் சொல்லாததால் பதற்றத்தின் வேகம் கூடிக்கொண்டே இருந்தது. பின்னால் நின்று இருந்த இளைய பிடாரன், ``நான் அங்கு வரவா?” என்று கேட்க வாயெடுத்தபோது, கை மீறிக் காதைத் தடவிப் பார்த்துக்கொண்டது.

மூத்த பிடாரனின் முகம் இன்னும் தெளிவடையாமல் இருப்பதைப் பொறையன் கவனித்தார். சின்னதாக அச்சம் அவருக்குள் ஏற ஆரம்பித்தது. மூத்த பிடாரன் தடத்தைப் பார்த்தபடியே அங்கு இருந்த பாறை விரிசலை நோக்கி நகர்ந்துபோனான்.

`எந்தப் பாம்பின் தடத்தையும் தொலைவில் இருந்தே சொல்லக்கூடியவன் மூத்த பிடாரன். இந்தத் தடம் பற்றி மட்டும் ஏன் இன்னும் முடிவுக்கு வராமல் இருக்கிறான்?' என்று பொறையன் குழம்பிக்கொண்டிருக்கையில், மூத்த பிடாரன் சொன்னான், “மலஞ்சாரைப் புரண்டிருக்கிறது”.

அவன் சொல்வது மற்றவர்களுக்குப் புரியவில்லை.

“பாம்புகள், வளைந்து வளைந்து போகக்கூடியவை. பாம்புகளின் இனத்துக்கும் தன்மைக்கும் ஏற்ப வளைவுகளின் அகலம் மாறுபடும். பாம்புகளுக்கு வயது ஆக ஆக வளையும் ஆற்றல் குறையும். அதனால் அவற்றின் வேகம் குறையும். இந்த நிலையிலேயே பெரும்பாலான பாம்புகள் இறந்துவிடும். ஒருசில பாம்புகள்தான் இவற்றைத் தாண்டியும் வாழும். முடிந்தவரை நெளிவுகொடுத்து நகர்ந்துபோகும். மிகவும் வயதானால், அதாவது, மனிதன் நூறு வயதை எட்டுவதைப்போல பாம்பும் பெரும் வயதை அடைந்தால், அதன் உடல் பாதி அளவுக்குச் சுருங்கிவிடும். அதனால் நெளிந்தபடி நகர முடியாது. உடலை முறுக்கிப் புரளத் தொடங்கும். அப்படியே இடதுபுறமும் வலதுபுறமுமாகப் புரண்டு புரண்டுதான் இடத்தைக் கடக்கும். மனிதன் வயோதிகத்தில் உட்கார்ந்து உட்கார்ந்து போவதைப்போலத்தான் அதுவும். இந்த இடத்தில் மலஞ்சாரை ஒன்று புரண்டுபோயிருக்கிறது” என்றான் மூத்த பிடாரன்.

அவன் சொல்வதை அனைவரும் வாய்பிளந்து கேட்டுக் கொண்டிருந்தனர்.

மூத்த பிடாரன் தொடர்ந்தான், “இதில் மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், இந்தக் குன்றில் வேறு எந்தப் பாம்பும் இருக்காது.”

எல்லோரையும் ஆச்சர்யம் தொற்றியது.

`` `பாம்பு புரளும் மண்ணில் பிற பாம்புகள் தங்காது’ என்பது முன்னோர் வாக்கு. எனவே, இன்று இந்தக் குன்றைக் கடக்கும் வரை உங்களுக்கு அச்சம் தேவையில்லை” என்றான் மூத்த பிடாரன்.

வீரர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. “அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டனர். அச்சமற்ற அடிகளை கால்கள் எடுத்துவைத்தன. நடையின் வேகம் கூடியது. பேச்சு தொடங்கியது. பாம்புகளைக் கையாள்வதில் உள்ள நுட்பங்களைப் பற்றி பேசினர்.

“பாம்புகள், மனிதனைக் கண்டு அஞ்சித்தானே ஓடுகின்றன. பின்னர் ஏன் மனித மனம் பாம்பைக் கண்டு பதறுகிறது?” என்று கேட்டான் வீரன் ஒருவன்.

அசட்டுச் சிரிப்புடன் மூத்த பிடாரன் சொன்னான், “மனிதன், பாம்பின் ஓட்டத்தைப் பொய்யாகப் புரிந்துகொண்டான் என்று பொருள்.”

“அது அஞ்சி ஓடவில்லை என்கிறீர்களா?”


“அதைக் கண்டு நாம் அஞ்ச, அதனிடம் நஞ்சு இருக்கிறது. நம்மைக் கண்டு அது அஞ்சி ஓட, என்ன இருக்கிறது நம்மிடம்?”

வீரனிடம் பதில் இல்லை.

``ஒவ்வொரு பாம்பும் தனது இனத்தின் எண்ணற்றப் பாம்புகளைத் தின்றுவிட்டுத்தான் உயிர்வாழ்கிறது. மனிதனைப்போல் ஓர் உடம்புக்குள் வாழும் ஓர் உயிர் அல்ல; எண்ணிலடங்காத உயிர்கள் வாழும் ஓர் உடல். அது தின்ற உயிருக்கு ஏற்ப அதன் கால்கள் அமைகின்றன.”

மூத்த பிடாரனின் பேச்சு, அச்சமூட்டுவதாக இருந்தது. பாம்பை விடுத்து வேறு எதையும் பேசும் சூழல் இல்லை. இன்னொரு வீரன் நாகர்களைப் பற்றி கேட்டான். ``நாகர்களும் நம்மைப் போன்ற மனிதர்கள்தானா அல்லது அவர்களுக்குத் தனித்த அடையாளம் ஏதும் உண்டா?”

“நம்மைப் போன்ற மனிதர்கள்தான். ஆனால், தனித்த அடையாளங்களும் உண்டு.”



“என்னென்ன?”

``நாகர்குடியின் ஆண்களை நீங்கள் கண்டறிய வேண்டும் என்றால், அவர்களின் கால்களை வைத்துத்தான் கண்டறிய முடியும். குதிக்காலில் நமக்கு மேலும் கீழுமாக வெடிப்புகள் இருக்கும். அவர்களுக்கோ, செதில் செதிலாகப் பக்குகள் இருக்கும். அதேபோல கைவிரல் நகக்கண்ணில் தோல் நமக்கு மேலும் கீழுமாக உரியும். அவர்களுக்கோ செதில் செதிலாகத்தான் உரியும். உற்றுப்பார்த்தால் நகம் எங்கிருந்து தொடங்குகிறது என்பதே தெரியாது” அவ்வளவு நேரம் உற்சாகமாக இருந்த பேச்சொலி, இப்போது சற்றே அமைதிகொள்ளத் தொடங்கியது.

இன்னொருவன் கேட்டான், “நாகர்குடிப் பெண்களை எப்படிக் கண்டறிவது?”

“காமம் கொள்கையில்” என்று மட்டும் சொல்லி நிறுத்திக்கொண்டான் மூத்த பிடாரன்.

“எப்படி?” என்று மீண்டும் அழுத்திக் கேட்டான் அவன். இந்தப் பதிலை அறிய, எல்லோரும் மிக ஆவலுடன் இருந்தனர். சிறு சத்தம்கூட எழுப்பாமல் கால்கள் நடந்துகொண்டிருந்தன.

மூத்த பிடாரன் சொன்னான், “காமம் கொள்கையில் விம்மும் கொங்கையின் நாவு படம்போல் விரிந்து அடங்கும். அதை உணரும்போது நாம் மரணித்துக்கொண்டிருப்போம்.”

அந்த இடம் அமைதியாக இருந்தது. சிறிது நேரம் கழித்து ஒருவன் கேட்டான், “காமத்தின்போது அவர்கள் இமை மூட மாட்டார்கள் என்றுதானே சொல்வார்கள். நீங்கள் வேறொன்றைச் சொல்கிறீர்களே?”

“எல்லாம் கண்டறியாதவர்கள் சொல்லும் கதைகள்தானே. ஆளுக்கு ஒன்றாகத்தான் இருக்கும்” என்றான் மூத்த பிடாரன். மூன்றாம் குன்றைவிட்டுக் கீழ் இறங்கினர். ``இந்த இடத்தில் இன்று தங்கிவிட்டு, நாளை மீண்டும் பயணத்தைத் தொடங்கலாம்" என்றார் பொறையன்.

வீரர்கள், தங்குவதற்கான ஏற்பாடுகளைத் தொடங்கினர். உணவு மூடைகளைத் தூக்கிவந்த ஒருவன், ஆளுக்கு ஒரு கனியை உண்ணக் கொடுத்தான். மூத்த பிடாரனும் பொறையனும் கனியைப் பெற்றுக்கொண்டு சற்றுத் தள்ளியிருக்கும் சிறுபாறையை நோக்கி நடந்தனர்.

பொறையன், பாறையின் மீது ஏறி உட்கார்ந்து கனியைக் கடித்தார். அவருக்கு எதிரில் நின்றபடி மூத்த பிடாரன் கனியைக் கடிக்கும்போதுதான் கவனித்தான். பொறையன் கனியைக் கடிக்கும்போது பற்களுக்கு இடையில் இருக்கும் செதில்களிலிருந்து குருதி வந்துகொண்டிருந்தது.

பொறையன் கனியைக் கடித்துத் தின்றபடியே சொன்னார், “மரணம் ஏதும் இன்றி இன்றைய பொழுது முடிந்தது."

அவரது சொல்லை அவரே இன்னும் சிறிது நேரத்தில் பொய்யாக்கப்போகிறார் என்பது மூத்த பிடாரனுக்குப் புரிந்துவிட்டது. ‘நேற்று இரவு மூடைகளைக் கட்டித் தொங்கவிட்ட மரத்திலிருந்து அது கனிகளுக்குள் இறங்கியிருக்க வேண்டும்’ என ஊகித்தபடியே பதில் ஏதும் சொல்லாமல், பொறையனையே பார்த்துக்கொண்டிருந்தான் மூத்த பிடாரன்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-19




கடிக்கணக்கும் நஞ்சுக்கணக்கும் அறிந்த மூத்த பிடாரனின் கணக்குகளைத் தவறாக்கின செத்து விழுந்த வீரர்களின் உடல்கள். பாம்புகள் முன்நகரும் என்று மட்டுமே அறிந்த பிடாரனின் அறிவைப் பொய்ப்பித்தது செம்மண்ணுளி. அது கோடைக்காலத்தில் முன்நகரும்; மழைக்காலத்தில் பின்நகரும். நிலத்தின் வெப்பத்துக்கு ஏற்ப நகரும் இரு வகைச் செதில்களைக்கொண்டது அது.

எரிவிரியனையும் ஊதுசுருட்டையும் நண்டுதின்னி நாகத்தையும் கண்கொண்டு பார்த்தறிந்தான் இளம் பிடாரன். இவற்றைப் பற்றியெல்லாம் அறிந்தபடி ஆறாம் மலை அடிவாரத்துக்கு அவர்கள் வந்தபோது உயிரோடு இருந்தவர்கள், இரு பிடாரன்களோடு ஒரு வீரன் மட்டுமே.

இவர்கள் வந்த செய்தி, நாகர் குலத் தலைவனுக்கு எட்டியது. அழைத்துவந்து விசாரித்தான். தலைவனைக் கண்டதும் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினர் மூவரும். பெருஞ்சேரலின் வேண்டுதலைச் சொன்னான் மூத்த பிடாரன்.

“தோலை உரிப்பதற்காக பாம்பு தின்னும் மூலிகையை, சேரல் குலத் தலைவனுக்கு நீங்கள் தந்துதவ வேண்டும்.”

நாகர் குலத் தலைவன் மிக இளவயதுக்காரன்போல் தெரிந்தான். அசட்டையான பார்வையோடு

கேட்டான், “ஒவ்வொரு பாம்பும் ஒவ்வொருவிதமான மூலிகையைத் தின்னும். நீ எந்த மூலிகையைக் கேட்டு வந்துள்ளாய்?”

மூத்த பிடாரனுக்கு இந்தக் கேள்வி பெரும்வியப்பைத் தந்தது. பாம்பு தின்னும் ஏதாவது ஒரு மூலிகையை அறிந்துவைத்திருப்பதே அரிதானது. இவர்கள் ஒவ்வொரு பாம்புக்குமான மூலிகையை அறிந்துவைத்திருக்கின்றனர்.


“எந்த மூலிகையைத் தின்றால், மனிதனின் மேல் தோல் உரியும்?” எனக் கேட்டான் மூத்த பிடாரன்.

“நாங்கள் அதைத் தின்றதில்லை” என்றான் நாகர் குலத் தலைவன்.

மூத்த பிடாரனுக்கு, அடுத்து என்ன சொல்வதென்று தெரியவில்லை. பெருஞ்சேரல் சொல்லி அனுப்பிய இரண்டாவது வேண்டுகோளை முன்வைக்க முடிவுசெய்தான்.

கொண்டுவந்த கோணிப்பையில் இருந்து வெண்ணிறத் துணி ஒன்றை எடுத்து, நாகர் குலத் தலைவனை நோக்கி நீட்டியபடி, “இந்தத் துகிலை, புணரும் நாகங்களின் மீது போத்தி எடுத்துத் தர வேண்டும்” என்றான்.

`நாகங்கள் புணர்கையில் அவற்றின் மீது போத்தப்பட்ட துணியால் மனிதனுக்கு நீடித்த ஆயுளும் அதிர்ஷ்டமும் கைக்கூடும்' என்பது வடதேசத்து முனியின் வாக்கு. அதனால்தான் இதைக் கொடுத்து அனுப்பினான் பெருஞ்சேரல்.



``நாகங்கள் புணர்வதைக் கண்டவர் யாரும் இல்லை” என்றான் நாகர் குலத் தலைவன்.

“நாகங்கள் பின்னிக்கிடப்பதை ஊரெங்கும் உள்ள மக்கள் பார்த்திருக்கின்றனர். நீங்கள் பார்த்ததில்லை என்பது நம்பும்படியாக இல்லையே” என்றான் மூத்த பிடாரன்.

“நாகங்கள் பின்னிக்கொள்வது அவற்றின் காதல் விளையாட்டு. அதை எல்லோரும் பார்க்கலாம். ஆனால், நாகங்கள் புணர்வதைத்தான் யாரும் பார்க்க முடியாது.”

இவை இரண்டும் வெவ்வேறு வகையான செயல்கள் என்பதை இப்போதுதான் மூத்த பிடாரன் கேள்விப்படுகிறான்.

நாகர் குலத் தலைவன் சொன்னான், ``நாகத்துக்கு காமம் பெருகும் காலங்களில் மெல்லிய நீரொன்று உடலெங்கும் ஊறி, அதன் கண்களை மறைக்கத் தொடங்கும். மனிதரைப் போலத்தான் அதற்கும் காமம் கண்களைக் கட்டும். அதற்குரிய மூலிகையைத் தின்ற பிறகு, நாகம் தனது மூக்கு நுனியின் வழியே அந்த நீர்த்தோலைக் கழற்றத் தொடங்கும். கண்களின் மேல் படர்ந்த காமத்திரையை அகற்றும். முழு உடலையும் உருவிப் புத்துடல்கொள்ளும். அதன் பிறகு அது எட்டு நாள்களுக்கு வெளியே வராது. எங்கு, எப்படி இருக்கும் என்பதை இதுவரை யாரும் அறிந்ததில்லை. தன் இணையோடின்றி, தனித்து நாகம் தோல் உரிப்பதில்லை.

புத்துடல்கொண்ட கணத்திலிருந்து அது இணை சேரத் தொடங்கும். ஒவ்வொரு செதிலாலும் தன் இணையின் ஒவ்வொரு செதிலுடன் கலந்து மீளும். திருகி, புரண்டு, இறுகி, மேல் தோல் கனிந்து முதிர்ந்த பிறகுதான் இணையைப் பிரிந்து வெளியேறும். தன் பழைய உடலின் வழியே இணை கூடாத ஒரே உயிரினம் அது மட்டும்தான்” எனச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே நாகனின் கருவிழிகளில் நீல நிற வளையம் ஒன்று பூத்து அடங்கியது.

நாகன் மேலும் சொன்னான், “புதிய மேனிகொண்டு மட்டுமே தழுவி வாழும் காதல் வாழ்க்கை நாகத்தினுடையது. இந்தப் புவியில் எந்த உயிரும் இன்புற்றிராத அபூர்வக் காதல் அது.”

மூத்த பிடாரன், வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தான். ‘காமம்கொள்கையில் மனிதன் நாகங்களைப் போல பின்ன ஆசைப்படுவது அதனால்தானா?’ என்ற எண்ணம் ஓடியது. சற்றே நிதானித்தான். தனது இரண்டு வேண்டுதல்களும் அர்த்தமற்றதாகிவிட்டன என்பதை உணர்ந்தான். அடுத்து என்ன சொல்வது எனத் தெரியாமல் நின்றுகொண்டிருந்தான்.

“வேறு என்ன வேண்டும் உங்களுக்கு?”

``நீங்கள் வணங்கும் நாகதேவதையை நாங்கள் வணங்கி விடைபெற எண்ணுகிறோம்.”

``பொழுது சரிந்துவிட்டது. நாளை உங்களை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்கிறேன். இன்றிரவு குடிலில் தங்குங்கள். எக்காரணம்கொண்டும் குடிலைவிட்டு வெளியே வரக் கூடாது.”

“சரி” என்று சம்மதித்தான் மூத்த பிடாரன்.



தனித்து இருந்த குடில் ஒன்றில், அவர்கள் தங்கவைக்கப்பட்டனர். இரவு கூடியது. `மகுளி'ப் பறை இசைக்கும் ஓசை கேட்டது. இன்று நாகர்களின் விருப்ப நாள். வந்துள்ளவன் பிடாரன் எனத் தெரிந்தும் அவனிடம் கனிவுகாட்டியதற்கு அதுதான் காரணம்.

குலத்தின் வழக்கப்படி புதிய இணையர்கள் விரும்பிக்கூடும் நாள் இது. நாகர்குடி முழுவதும் மந்தையைச் சூழ்ந்து உட்கார்ந்திருந்தது. நடுவில் பெரும்வட்டத்தில் நெருப்பு மூட்டியிருந்தனர்.

குடிலுக்குள் அடைபட்டிருந்தனர் மூவரும். வீரனுக்கு எதுவும் தோன்றவில்லை. அவன் படுக்க தலை சாய்த்தான். பிடாரன்கள் இருவரும் வெளியே என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள தவியாய்த் தவித்தனர். இசையின் ஓசை கூடிக்கொண்டே இருந்தது.

இளம் ஆண்களும் பெண்களும் தங்களின் இணையைத் தேர்வுசெய்யத் தொடங்கினர். மூத்த பிடாரன், ஓலை வேய்ந்த குடிலில் மிகவும் பக்குவமாக சிறுதுளையை உருவாக்க முயன்றுகொண்டிருந்தான். நாகர்கள் வேய்ந்த குடிலில் ஆபத்து நிறைந்திருக்கும் என்பதை அவனால் யூகிக்க முடிந்தது. எனவே, மிகவும் கவனமாக அந்த வேலையைச் செய்துகொண்டிருந்தான்.

இளம்பெண்கள் அமர்ந்திருக்க, இளம் ஆண்கள் அவர்களின் அருகில் வந்து இரு கைகளையும் பற்றி உள்ளங்கையை ஒன்றோடொன்று உரசினர். சாரைப்பாம்பின் அடிவயிறு வழவழப்பானதாக இருக்கும். நல்லபாம்பின் அடிவயிறு சொரசொரப் பானதாக இருக்கும். அது மரம் ஏறக்கூடியதால், அந்தத் தன்மை வாய்ந்தது.

ஆண், பெண் இருவரிலும் இந்த இரு இனங்களும் உண்டு. எதிரெதிர் தன்மை உள்ளவர்கள் கைகளை இறுகப் பற்றினர். அவ்வாறு இல்லாதவர்களின் கைகள், விலகி மறு கை பற்றின. வழவழப்பான சாரையின் அடிவயிற்றை, சொரசொரப்பான உள்ளங்கைகள் சூழத்தொடங்கின.

மூத்த பிடாரன் பக்குவமாகத் துளையிட்டு தொலைவில் நடப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தான். இளைய பிடாரனும் அதே போல துளையிட முயன்றான். கைகளைப் பற்றியவர்களின் ஆட்டம் தொடங்கியது. கை புணர்ந்து ஆடும் துணங்கைக் கூத்து. நாகத்திடமிருந்து மனிதன் கற்ற காதற்கலை இது. சுழிவும் பின்னலுமாக நெருப்பின் தழல் போல் உடல்கள் ஒன்றின் மேல் ஒன்று படர்ந்து

மேலேறின. இசை கூடியது. நாகம் படம் விரிக்கையில், மயில்தோகையில் பல வண்ணம் சட்டெனத் தோன்றி மறையும். நாகர் குலப் பெண்களின் முகங்கள் தழல் படர்ந்த வெளிச்சத்தில் அவ்வாறே தோன்றின.

மூத்த பிடாரன் வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருக்கையில், “ஐயோ..!" எனக் கத்தியபடி கீழே சரிந்தான் இளம் பிடாரன். வேகமாக வந்து அவனைத் தாங்கிப்பிடித்தான் மூத்த பிடாரன். அவனது கண்களின் ஓரம் சிறியதாக நீண்டிருந்தது உள்ளே சென்றதன் வால் பகுதி.

அதிர்ந்துபோனான் மூத்த பிடாரன். கொத்தும் பாம்புகளைத்தான் இதுவரைப் பார்த்துள்ளான். தீண்டிய வேகத்தில் உள்நுழையும் நாகத்தை இப்போதுதான் பார்க்கிறான். தாங்கிப் பிடித்தவனின் கை நடுங்கியது. இனி அவனைக் காப்பாற்ற முடியாது எனத் தெரிந்ததும் அப்படியே தரையில் படுக்கவைத்தான். ‘நாகர்கள் வேய்ந்த ஓலையில் எல்லாம் இருக்கும் என்பதை அறியாது அவசரப்பட்டு விட்டானே’ என்று மூத்த பிடாரன் கவலைகொண்டான்.

அதன் பிறகு துளையில் எட்டிப்பார்க்க மனம்வரவில்லை. இசை கேட்டுக்கொண்டே இருந்தது. நாகங்களுக்கு நெருப்பு ஆகாது. இவர்கள் ஏன் நெருப்பை மூட்டி ஆடுகின்றனர் என்பதை அறியவேண்டும் என ஆவலிருந்தது. ஆனால், கண்ணுக்குள் நுழைந்ததைப் பார்த்த பிறகு எல்லாம் வடிந்துவிட்டன.

மறுநாள் காலை நாகர்குடி இளைஞன் ஒருவன் வந்து, இருவரையும் நாகதேவதையின் இருப்பிடத்துக்கு அழைத்துச் சென்றான். செல்லும்போது வீரன் கேட்டான், “இளைய பிடாரன் ஏன் இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிறான்?”

``எழுந்திருக்க முடியாததால்” என்றான் மூத்த பிடாரன்.



நாகதேவதையின் இருப்பிடத்தை அடைந்தனர். மர அடிவாரத்தில் சிறு சிறு கற்களும் பாம்பு உரித்த தோல் ஒன்றும் இருந்தன.

நாகங்களைப் படமெடுக்கச் செய்து, அவற்றின் தலையில் சிறு கல் வைத்து அழைத்துவருவாள் குலத்தின் முதுமகள் எனக் கேள்விப்பட்டுள்ளான் பிடாரன். அங்கு இருக்கும் கற்கள் எல்லாம் தலைமுறை தலைமுறையாக அவ்வாறு கொண்டுவரப்பட்ட கற்களாக இருக்கும் என யூகித்தான் மூத்த பிடாரன். ஆனால், ``பாம்பு கழற்றிய அந்தத் தோலை வைத்து ஏன் வணங்குகின்றனர், அதன் காரணம் என்ன?" என்று கேட்டான்.

அழைத்து வந்த நாகர்குடி வீரன் சொன்னான், “அது வெண்சாரைக் கழற்றிய தோல்.”

இரண்டு நாள்களில் அடைந்திராத பேரதிர்ச்சியை மூத்த பிடாரன் இப்போது அடைந்தான்.

“வெண்சாரையைப் பார்ப்பது தெய்வத்தைப் பார்ப்பதற்குச் சமம் என்பார்கள். நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?”

“எங்கள் முன்னோர்கள் பார்த்திருக்கிறார்கள்” என்று மட்டும் சொன்னான் நாகன்.

**சே**ரலின் அவையில் நடந்தவற்றை விளக்கினான் மூத்த பிடாரன். வரும்போது நாக வீரன் எங்களை கீழ்மலையின் அடிவாரம் வரை அழைத்து வந்தான். உயிரிழப்பு இன்றி இருவரும் வந்து சேர்ந்தோம்” என்றான்.

“நாம் கேட்ட இரண்டையும் அவர்கள் கொடுக்காமல், கவனமாகப் பேசி உங்களைத் திருப்பி அனுப்பியுள்ளனர்” என்றான் சேரல்.

“கவனம் பேச்சில் இருந்து என்ன செய்ய, செயலில் வேண்டும்” என்றான் மூத்த பிடாரன்.

அவன் சொல்வது அவையோருக்குப் புரியவில்லை.

“நாகம், என்றுமே மனிதனின் எதிரிதான். அதனிடம் இரந்து பயன் ஏதுமில்லை. அதை அழித்தால் மட்டுமே மனிதன் பயனடைவான். நாகர்கள் அதனினும் கொடிய அழிவுசக்திகள். அவர்களைக் கூண்டோடு அழித்தாக வேண்டும். அவர்கள் இறங்கி வர முடிவெடுத்தால், ஒரே நாளில் சேரல் குலம் அழிந்துபோகும்”.

அந்தக் கணம், பெருஞ்சேரலின் உடல் நடுங்கி அடங்கியது.

“என்ன உளறுகிறாய்?”

“நான் இந்தப் பயணத்தை மேற்கொண்டது, நீங்கள் தர முன்வந்த செல்வத்துக்காக அல்ல. பிடாரன்களின்

வாழ்நாள் வைராக்கியம், நாகங்களை வெல்வதே. கரும்பருந்திடம் நாங்கள் அளித்துள்ள வாக்கும் அதுதான். நாகர்களின் ஆற்றலை அறியவே எருக்குமலை ஏறினேன். என்னை யாரென அவர்களால் கண்டறிய முடியவில்லை. ஆனால், அவர்களை நான் கண்டறிந்துவிட்டேன். மிகச் சிறியதொரு கூட்டம் அது. பெரும்சக்தி வாய்ந்த சேரலர் அவர்களை ஏன் இன்னும் விட்டுவைத்திருக்கிறீர்கள் எனப் புரியவில்லை.”

“என்ன செய்யலாம் எனச் சொல்கிறாய்?”


``நீங்கள் உதவ முன்வந்தால், அவர்களைக் கூண்டோடு அழித்துவிடலாம்.”

``ஆறு மலைகளைத் தாண்டி அவர்களின் இருப்பிடம் உள்ளது. எப்படி அழிக்க முடியும்?”

“இந்தத் திசையில் போனால்தான் ஆறு மலைகளைத் தாண்ட முடியும். நாட்டின் வட எல்லையில் கடலோடு இணைந்த மலைமுகடு ஒன்று உள்ளது அல்லவா? அந்தத் திசையில் நுழைந்தால், முதல் குன்றின் மீதுதான் நாகக்குடியின் இருப்பிடம் உள்ளது. இந்தப் பயணத்தில் நான் கண்டறிந்த உண்மை அதுவே.”

பெருஞ்சேரல் மூத்தமகன் பதுமன், “அப்படியென்றால், தாக்குதலை இன்றே தொடங்கலாம்” என்றான் படுஉற்சாகமாக.

பெருஞ்சேரலோ, நிதானம் தவறாமல் இருந்தான்.



“நாகர்களை நம்மால் எப்படி வெல்ல முடியும்?”

``நீங்கள் படைகளைத் தாருங்கள். நான் வெற்றியைத் தருகிறேன்.”

‘பிடாரனின் சொல்லை நம்பலாமா?’ என்ற சிந்தனையில் இருந்தான் பெருஞ்சேரல்.

“நாம் வென்றால், வளம்மிக்க மலைக்குன்றுகள் நம் நாட்டுடன் இணையும். அதுமட்டுமன்று, நாகர்களையே வென்றவர்களாக சேரலர் அறியப்படுவர். அதன் பிறகு, யார் மீது நாம் போர் தொடுத்தாலும் நமது ஆயுதங்கள் தாக்கும் முன் நாம் வென்ற நாகர்களின் கதைகள் அவர்களைத் தாக்கி பலம் இழக்கச் செய்யும்” என்றான் பதுமன்.

பெருஞ்சேரல் மூத்த பிடாரனைப் பார்த்துக் கேட்டான், “படைகள் எப்போது புறப்பட வேண்டும்?’’

``எனக்கான ஆயுதங்களை நான் சேகரிக்க, சில மாதங்கள் ஆகும். அதன் பிறகு புறப்படலாம்.”

வடதிசை மலைமுகட்டின் அடிவாரத்தில், சேரலர் படை அணிவகுத்து நின்றது. தளபதிகள் இரண்டு நிலைகளாகப் படைகளை நிறுத்தியிருந்தனர். காலாட்படையும் விற்படையும் எருக்குமலையை நோக்கி நின்றன. படைகளுக்குப் பின்னால் முகட்டின் மேல்புறத்திலிருந்து பெருஞ்சேரல் களத்தைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான்.

பெருஞ்சேரலின் படை அடிவாரத்தில் திரண்டிருப்பதை அறிந்த நாகர்கள், எதிர் தாக்குதலுக்கு ஆயத்தமானார்கள்.

மூத்த பிடாரன் மூன்று மாதங்களாகச் சேகரித்த ஆயுதங்கள் எல்லாம் நான்கு கூட்டு வண்டிகளில் இருந்தன. அவை என்ன ஆயுதங்கள் என்பதை அவன் யாரிடமும் சொல்லவில்லை. போரின் போக்குகளுக்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்தலாம் என்ற முடிவோடு, நாகர்களின் தாக்குதல் உத்தியைக் கவனித்துக்கொண்டிருந்தான். அவனோடு பெருஞ்சேரல் மகன் பதுமன் நின்றிருந்தான்.

விரிசங்கு ஊதி போரைத் தொடங்கினான் பெருஞ்சேரல். அவன் படைவீரர்கள் ஆயுதங்களோடு மெள்ள முன்நகர்ந்தனர். மலையின் மீதிருந்து நாகர் படைத் தளபதியின் கொம்போசை கேட்டது.

நாகர்களின் தாக்குதல் எப்படி இருக்கும் என இதுவரை யாரும் பார்த்ததில்லை. எனவே, வீரர்கள் பெரும் நடுக்கத்தின் வழியேதான் ஆயுதங்களைப் பிடித்துக்கொண்டு முன்னேறினர். சேரலர் படை எண்ணிக்கை மிகப் பெரியதாக இருந்தது. அதில் நான்கில் ஒரு பங்குக்கும் குறைவாகத்தான் நாகர் குடியினர் இருப்பார்கள் எனக் கணித்திருந்தான் மூத்த பிடாரன். எனவே, இந்தப் போர் உச்சிப் பொழுதுக்குள் முடிந்துவிடும் என்பது அவனது எண்ணம்.

சேரல வீரர்கள் முன்னோக்கிச் சென்றபோது நாகர்களும் மூன்று அணிகளாக இறங்கி வந்தனர். ஒவ்வோர் அணியிலும் மிகக் குறைவான வீரர்களே இருந்தனர். அதைக் கண்ட சேரல வீரர்களுக்கு பெரும் நம்பிக்கை பிறந்தது. அவர்கள் இறங்கி வருவதில் ஏதோ மாறுபட்டத்தன்மை இருக்கிறதே என உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் மூத்த பிடாரன்.

நாகர்களின் இடதுபுறக் குழு குறுவளைவு கொண்டு இறங்கியது. வலதுபுறக் குழு பெரும்வளைவு கொண்டு இறங்கியது. நடுவில் வந்த குழு, வளைவுகளற்று நெட்டுவாக்கில் படுவேகமாக இறங்கியது. இதற்கான காரணம் என்னவாக இருக்கும் எனக் கணித்துக்கொண்டிருக்கும்போதே சேரலர் படை நாகர்களை நோக்கி அம்புகளை வீசியது.

நடுவில் நெட்டுவாக்கில் வந்த நாகர் படையின் முன்வரிசையினர் மண்டியிட்டு அமர்ந்து அம்பை நாணில் ஏற்றினர். வழக்கமான நேரத்தைவிட அவர்கள் நாண் ஏற்ற மும்மடங்கு நேரமானது. ``போர்ப் பயிற்சி அற்றவர்கள் என்பது இதிலிருந்தே தெரிகிறது'' என்றான் பதுமன்.

நாகர்கள் தொடுத்த நாணில் இருந்து அம்புகள் பறந்து வரும்போதுதான், அம்போடு சேர்த்து மற்றொன்று நெளிந்துகொண்டு வருவது தெரிந்தது. கண நேரத்துக்குள் சேரலர் படை கதிகலங்கியது.

அம்போடு வந்து இறங்கிய சாரைகள் நான்கு புறங்களிலும் விழுந்து நகர, படைவீரர்கள் திசையெங்கும் தெறித்து ஓடினர்.

நாகர்களின் இந்தத் தாக்குதலை எதிர்பார்த்திருந்தான் மூத்த பிடாரன். “முதலிலே சொன்னால், படைவீரன் ஒருவன்கூட களத்தில் நிற்க மாட்டான். அதனால்தான் சொல்லவில்லை” என்று பதுமனிடம் கூறினான்.

“நடுவில் நெட்டுவாக்கில் இறங்கியது சாரைப்பாம்பு உத்தி. இடதுபுறம் குறுவளைவு கொண்டு இறங்கியது எரிவிரியன் உத்தி. வலதுபுறம் பெருவளைவுகொண்டு இறங்கியது நல்லபாம்பு உத்தி. பாம்புகளின் தடத்துக்கு ஏற்ப உத்தி வகுத்துள்ளனர். அவர்கள் இப்போது சாரைப் பாம்பை மட்டுமே பயன்படுத்தி அம்பு எய்துள்ளனர்” என்றான் பிடாரன்.

பதுமனுக்கு, உடல் நடுக்கம்கொள்ளத் தொடங்கியது.

“இதைத் தடுக்க வழி என்ன?”

கேட்டுக்கொண்டிருக்கும்போதே தனது கூட்டு வண்டியின் மேல்கூடாரத்தைத் திறந்துவிட்டான் மூத்த பிடாரன். கரும்பருந்துகளும் பாம்புப் பருந்துகளும் படபடத்து வெளியேறின. காற்றில் ஏறிய பருந்துகளின் ஓசை, எங்கும் எதிரொலித்தது. பருந்துகளின் விரல்கள் களத்தில் நெளியும் சாரைகளைக் கவ்வி மேலேறின. அந்தக் காடு முழுவதும் பருந்துகள் வட்டமடிக்கத் தொடங்கின. பருந்தின் கண்கள் பாம்பைக் காணும் முன் அதை பாம்பு கண்டுணர்ந்துவிடும்.

“இனி எந்தப் பாம்பும் வெளியே நிலைகொள்ளாது. அனைத்தும் தன் இருப்பிடத்தை நோக்கி ஓடிவிடும். அவர்களால் அதைக் கையில் எடுத்து அம்பில் பொருத்தி அனுப்ப முடியாது” என்றான் பிடாரன்.

பதுமனுக்கு, மேலெல்லாம் வியர்த்திருந்தது.

பிடாரனின் இந்த உத்தியை எதிர்பார்த்து இருந்தவனைப் போல நாகர் குலத் தளபதி குறுஞ்சிரிப்பு ஒன்றை உகுத்தான்.

“முகட்டின் பின்புறம் நிறுத்தப்பட்டிருக்கும் அடுத்த படைப் பிரிவை முன்னகர்ந்து வரச் சொல்” என்று கத்தினான் மூத்த பிடாரன்.



பதுமன் அதற்கான உத்தரவைப் பிறப்பித்துக் கொண்டிருக்கும்போதே, நான்காவது கூட்டுவண்டியின் கதவைத் திறந்தான் மூத்த பிடாரன். மரப்பெட்டிகள் நிறைந்திருந்தன. “வீரர்களிடம் பெட்டியை எடுத்துக்கொண்டுபோய், எதிர்திசையில் பகுதிக்கு ஒன்றாகத் திறந்துவிடச் சொல்" என்றான் மூத்த பிடாரன். பதுமன் உடனடியாக அதற்கான உத்தரவை இட்டான்.

வீரர்கள், பெட்டியை எடுத்துக்கொண்டு ஓடினர்.

“பெட்டிகள் முழுக்க எண்ணற்ற பாம்புக்கீரிகளும் கருங்கீரிகளும் இருக்கின்றன. அவை முக்கியம் அல்ல. எட்டு பழந்தின்னிக் கீறிகள் இருக்கின்றன. அவற்றின் வாடை காற்றில் மிதந்தாலே போதும், இந்தத் திசைவிட்டே பாம்புகள் வெளியேறிவிடும்” என்றான் மூத்த பிடாரன்.

சேரலர் படை, மறுமுறை அணிவகுத்தது. இப்போது பின்வரிசையில் கம்பீரமாக நிலைகொண்டது யானைப்படை. அதற்கு முன்னால் விற்படையும் காலாட்படையும் அணிவகுத்தன. முதலில் இருந்ததைப்போல இருமடங்கு வீரர்கள். உத்தரவு கிடைத்ததும் முன்னேறினர்.

நாகர் குலத் தளபதி கை அசைத்ததும் நாகர்களின் அம்புகள் நாணில் இருந்து விடுபட்டு, காற்றில் பாய்ந்தன. இப்போது அம்போடு நெளிந்து வளையும் பாம்புகள் எவையும் தென்படவில்லை. சேரல வீரர்கள் உற்சாகத்துடன் முன்னேறினர். பதுமன், மூத்த பிடாரனைத் தழுவிப் பாராட்டினான். “இனி வெற்றி உறுதி!” என்று சொல்லி மகிழ்ந்தான் பதுமன்.

சிறிது நேரத்தில் முன்கள வீரர்களிடம் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன. என்னவென்று அறியும் முன்பே வீரர்கள் பின்னோக்கி ஓட ஆரம்பித்தனர். சருகில் தீப்பற்றுவதைப் போலத்தான் போர்க்களத்தில் ஓட ஆரம்பிப்பது. ஒருவன் ஓட ஆரம்பித்தால், அந்த அச்சம் கண நேரத்துக்குள் ஒட்டுமொத்த படையிலும் பரவும். யானைப்படைத் தளபதி சட்டென அனுமானித்து, களத்தைவிட்டு வெளியேற உத்தரவிட்டான்.

மூத்த பிடாரனுக்கு, நடப்பது எதுவும் புரியவில்லை. நாகர்கள், அம்பு எய்தியபடி முன்னோக்கி வந்துகொண்டிருந்தனர். சேரலர் படை, களம்விட்டு ஓடிக்கொண்டிருந்தது. பிடாரன் நடப்பதை அறியாமல் திகைத்து நின்றான்.

வீரர்கள், உயிர்பிழைக்க வெறிகொண்டு ஓடினர். என்ன என்பது விளங்கவில்லை. `தாமதிக்கக் கூடாது' என முடிவெடுத்த மூத்த பிடாரன், முன் களத்தை நோக்கி விரைந்தான். பதுமன் அடுத்து என்ன முடிவெடுப்பது என்பது தெரியாமல் தந்தை இருக்கும் இடம் நோக்கி மேலேறினான்.

பெருஞ்சேரல், முகட்டின் மேல் இருந்தபடி களத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனது படை பின்வாங்கி ஓடிக்கொண்டிருந்தது. சின்னஞ்சிறிய நாகர் கூட்டம் முன்னோக்கி வந்துகொண்டிருந்தது. பதுமன் வந்து தந்தையோடு இணைந்தான். எந்தவித முடிவும் எடுக்காமல் மூத்த பிடாரனுக்காக அவர்கள் காத்திருந்தனர்.

சிறிது நேரம் கழித்து மூச்சிரைக்க ஓடிவந்தான் மூத்த பிடாரன். மேலெல்லாம் அலங்கோலமாய் இருந்தது. “எள்ளுச்செடியில் உற்பத்தியாகும் கண்ணுக்குத் தெரியாத கொடும்நாகம் ‘குருதிப்பனையன்’. அம்புகளோடு இணைந்து அவை வந்துகொண்டிருக்கின்றன” என்று தன் மீது பாய்ந்த அம்பை கையில் ஏந்தியபடி கூறினான்.

பெருஞ்சேரலன் நடுங்கிப்போனான்.

“இப்போது என்ன செய்யலாம்?”

பதில் சொல்லும் ஆற்றல் குறைந்துகொண்டிருந்தது. ஆனாலும் உள்ளுக்குள் பாயும் நஞ்சின் வேகத்தை கணித்துக்கொண்டிருந்தான் மூத்த பிடாரன். அப்போது பாய்ந்து வந்த அம்பு ஒன்று, அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து சற்று தொலைவில் குத்தியது.

மூத்த பிடாரன் சொன்னான், “இந்தக் குன்றில் மட்டுமே அவர்களின் குடி இருக்கிறது. இன்று இரவோடு இரவாகக் குன்றைச் சுற்றிவளையமிட்டுத் தீயிடுங்கள். தீயில் இருந்து மீள, அவர்களுக்கு வேறு எந்த வழியும் இல்லை. நாகர் இனம் முழு முற்றாக அழியும்.”

பெருஞ்சேரல் சற்றே தயங்கிச் சிந்தித்தான்.

மூத்த பிடாரன் சொன்னான், “ஒருமுறை தாக்கிவிட்டுப் பாதியில்விட்டால், அவர்கள் உங்களை அழிக்காமல் விட மாட்டார்கள். எனவே, முழுமையும் அழித்துவிடுங்கள்.”

பெருஞ்சேரலின் உடலெங்கும் அச்சம் பரவியிருந்தது. அவனது தயக்கத்தைக் கணித்தபடி பிடாரன் வாய் குழறிச் சொன்னான், “இவர்களை அழித்தால் மட்டுமே உங்கள் இரண்டாவது மகனின் ஆட்சிக்காலம் நிலைத்திருக்கும்.”
‘முதல் மகன் பதுமன் இருக்கும்போது ஏன் இவன் இரண்டாவது மகனைப் பற்றிச் சொல்கிறான்?’ என்ற அதிர்ச்சியோடு பெருஞ்சேரல் திரும்பி பதுமனைப் பார்த்தான்.

பெருஞ்சேரலின் கதறல், காதில் சன்னமாக விழுந்தது. கேட்டபடியே மண்ணில் சரிந்த மூத்த பிடாரனின் வாய் முணுமுணுத்தது, “ஒரு முழம் அளவில் கிளைகளில் தொங்கியபடி வாய் பிளந்து இருக்கும் மனிதனைக் கண்டால் தாவிக் கடிக்கும் உச்ச நஞ்சுகொண்ட பச்சிலை விரியன், சிறிது நேரத்துக்கு முன் பாய்ந்து வந்த அம்பிலிருந்து விலகித் தாவி பதுமனின் தொண்டையைக் கவ்வியது.”

வாயில் நுரை தள்ளியபடி இருந்தது. ஆனாலும் மூத்த பிடாரனின் உடலில் இருந்த நச்சுமுறி மருந்துகள் அவனை விரைவில் சாகவிடவில்லை.
அன்று இரவு எருக்குமலையைச் சுற்றி தீ மூட்டப்பட்டது. மூத்த பிடாரனின் கண் முன் எருக்குமலை முழுமுற்றாக எரிந்தது. அதன் மஞ்சள் வெளிச்சத்தில் நாகர்கள் துடிதுடித்துச் செத்தனர். நாகர்களின் அழிவோடு பிடாரனின் வாழ்வும் முடிந்தது.

கதை கேட்டுக்கொண்டிருந்த கபிலருக்கு, உயிர் உறைந்துவிடுவதுபோல் இருந்தது. ஆனால், கதையைவிட அவரை உலுக்கியது கண்ணுக்கு முன்னால் காணும் காட்சி. நெருப்பு அணைந்த பிறகு கங்குகளின் மீதுதான் இறங்குவார்கள் என்றுதான் அவர் நினைத்துக்கொண்டிருந்தார். ஆனால், புதிதாக இரண்டு காதல் இணையர்கள் கை புணர்ந்து ஆடியபடி நெருப்பை நோக்கி நகர்ந்தனர்.

நெருப்பின் அனலில் நின்றாடப்போகிறார்கள் எனக் கபிலர் நினைத்துக்கொண்டிருந்தபோதே, அவர்கள் எரியும் நெருப்புக்குள் நுழைந்தனர். கபிலருக்கு குருதியோட்டமே நின்றுவிடுவதுபோல் இருந்தது.

மனிதர்கள் உயிரோடு நெருப்புக்குள் இறங்குவதை, கண்களால் காண முடியவில்லை. நெருப்புக்குள் இறங்கியவர்கள் சுழன்று கைகளை வீசியபோது, உள்ளிருந்து தீப்பொறிகள் நான்கு புறங்களிலும் தெறித்தன. அவர்கள் ஆடுகின்றனரா... எரிகின்றனரா? புரியாத நிலையில் கண்ணிமை செருக, மயங்கிச் சரிந்தார் கபிலர்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-20




அது ஆதி பழங்காலம். எந்த ஆண்டிலும் இல்லாதவாறு கோடைவெயில் உக்கிரம்கொண்டிருந்தது. எங்கும் இலை, தழைகள் காய்ந்து சருகாகக் கிடந்தன. நிலத்தின் வெக்கை, எலிவளைக்குள்கூட நாகங்களை இருக்கவிடவில்லை. மனிதர்களின் பாடு அதனினும் மோசமாக இருந்தது. ஒரு கொடும்பகலில் எருக்குமலையின் தென்திசையில் காட்டுத் தீ பற்றியது. பற்றிய வேகத்தில் மலையின் அடிவாரம் முழுவதும் நெருப்புப் பரவியது. மலையின் மேல்புறத்தில் குடியிருக்கும் நாகர்கள் பரவிவரும் நெருப்பை பகல் முழுவதும் அறியவில்லை. சூரிய வெப்பம் தாங்க முடியாத அளவுக்கு இருந்ததால், அவர்கள் பகலில் குடிலைவிட்டு வெளியே வராமல் இருந்துள்ளனர். அனல் அலையலையாக மேலேறி வர, அது வழக்கமான ஒன்றுதான் என்று நினைத்தனர்.

சூரியன் இறங்கிய பிறகே அவர்கள் வெளியேறி வந்தனர். கரும்புகை விண்ணை நோக்கி எழுந்தவண்ணம் இருந்தது. எருக்குமலையின் நாலாபுறங்களில் இருந்தும் சருகுகள் பற்றி எரிய, தீயின் நாவுகள் சுழன்று மேல்நோக்கிப் பாய்ந்துவந்தன. மலையின் எந்தத் திசை வழியாகவும் வெளியேற முடியாத நிலை உருவாகிவிட்டது. இருக்கும் ஒரே வழி, மலையின் மேற்கு முகப்பிலே இருக்கும்

கரும்பாறை மடிப்புகளும் அவற்றில் ஆங்காங்கே இருக்கும் குகைகளும்தான். நாகர்கள் எல்லோரும் குடிலைவிட்டு அகன்று குகைகளில் நுழைந்தனர்.



உயிர் தப்பிய மகிழ்வு யாரிடமும் இல்லை. மலை முழுவதும் இருந்த நாகங்கள் நெருப்பில் அழிந்திருக்குமே, அவற்றைக் காப்பாற்ற முடியாமல் நாம் மட்டும் பிழைத்து என்ன ஆகப்போகிறது என்ற மனநிலைதான் எல்லோருக்கும். காட்டுத் தீ ஆறு நாட்கள் எரிந்தது. காற்று வீச வீச நெருப்பின் வெக்கை நாலாபுறங்களிலும் சீறிக்கொண்டிருந்தது. கரும்பாறைகள் பிளவுண்டன.

இரவும் பகலும் நாகர்கள் அழுகையை நிறுத்தவே இல்லை. ஒரு நள்ளிரவில் முதுமகள் ஒருத்தி குகையைவிட்டுச் சற்றுத் தள்ளிப்போய், பாறையின் மீது அமர்ந்து நெருப்புக்கோளமாகத் தகதகத்துக்கிடக்கும் காட்டைப் பார்த்தபடி இருந்தாள். அந்த இடத்தின் சூட்டில் யாரும் ஒரு கண்ணிமைப்பொழுதும் நிற்க முடியாது. அவள் எப்படி இவ்வளவு நேரம் நிற்கிறாள் என மற்றவர்களுக்குப் புரியவில்லை.

அவள் கண்களில் உயிர் இல்லை. எங்கும் தகிக்கும் கங்குகளே இருந்தன. நிலைகொண்ட மரங்கள் எவையும் இல்லை. நெருப்பு, மரங்களை முறுக்கித் திருகியது. இரவில் எரிந்து சரியும் மரங்களைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது. அங்குமிங்குமாக மரங்கள் வெடிக்கும் ஓசை நின்றபாடில்லை. கருநாகத்தின் சீற்றம் என வெடிப்புற்ற மரங்கள் நெருப்பைக் கக்கின.

முதுமகள், அழும் கண்களைத் துடைத்தபடி பாறையைவிட்டு எழுந்தாள். எழும்போது தொலைவில் தகித்துக்கொண்டிருக்கும் நெருப்பின் பரப்பில், ஏதோ ஒரு வேறுபாட்டை உணர்ந்தாள். அது என்னவென்று அவளுக்குப் பிடிபடவில்லை. அந்த இடத்தைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஒன்றும் தெரியவில்லை. எங்கும் கங்குகள் கண் விழித்திருந்தன. இந்தக் கொடும் இரவில் எதைப் பார்த்து என்ன ஆகப்போகிறது என்ற நினைப்போடு எழுந்தாள். மீண்டும் அந்த இடத்தில் ஏதோ ஓர் அசைவு தெரிந்தது. கண்களைக் கூர்மையாக்கி உற்றுப்பார்த்தாள். கங்குகளின் உள்நெருப்பு காற்றின் போக்குக்கு ஏற்ப கூடிக் குறைவதால் ஏற்படும் அசைவுகள் நம்மைத் தொந்தரவு செய்கின்றன என்று நினைத்தபடி, குகையை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.



சிறிது தொலைவு நடந்தவள், மனம் பொறுக்காமல் மீண்டும் திரும்பிவந்து அந்த இடத்தை உற்றுப்பார்த்தாள். கங்குகளின் மீதான அசைவுகள் கொஞ்சம் கொஞ்சமாகப் புலப்படத் தொடங்கின. அவளின் கண்கள் இமைகளை இறக்காமல் உற்றுப்பார்த்தபடியே இருந்தன. நம்பவே முடியாத பேரதிசயம் ஒன்றை அவள் உணரத் தொடங்கினாள். உடலெங்கும் வியர்த்து அடங்கியது. அது உண்மைதானா என்ற கேள்வியை மனம் மீண்டும் மீண்டும் எழுப்ப, அசையாமல் பார்த்தாள். உண்மைதான். `என் கண்கொண்டுதான் அதைப் பார்க்கிறேன்' என்பதை அவள் நம்பத் தொடங்கினாள்.

நெருப்பு எரிவது அடங்கி, கங்குகள் மட்டும் கனன்றுகொண்டிருந்த ஓர் இடத்தில், சாம்பல் படிந்த கங்குகளின் மீது ஒரு நாகம் ஊர்ந்து போவதுபோல் இருந்தது. உற்றுப்பார்த்தாள் அவள். கண்ணிமைக்கும் நேரத்தில் கங்குகளைக் கடந்து, நெருப்பு அணைந்த இருள் பகுதிக்குள் நுழைந்தது அந்த நாகம்.

முதுமகள், குகையை நோக்கி ஓடினாள். கத்தியபடி இந்த உண்மையைச் சொன்னாள். `இந்தக் கொடும்நெருப்பால் ஆறு நாட்கள் சூழப்பட்ட இந்த நிலையில் எல்லோரும் மனம் சிதைந்தே இருக்கிறோம். முதுமகள், அதிகச் சிதைவுக்கு உள்ளாகிவிட்டாள்' என்று மற்றவர்கள் நினைத்தனர்.



அவளோ, `‘இல்லை நெருப்பின் மீது நாகம் ஊர்ந்து செல்வதை நான் பார்த்தேன்'' எனக் கத்தி முறையிட்டாள். எல்லோருக்குமான ஆசையே, `‘மண்ணின் அதிசய உயிரினமான நாகங்கள் எப்படியாவது உயிர் பிழைக்க வேண்டும் என்பதுதானே. குலத்தின் முதுமகளுக்கு அது இருக்காதா?'' என்று ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லினர்.

முதுமகள் ஆறாத சினம்கொண்டாள். மறுநாள் இரவு எல்லோரையும் அவள் அமர்ந்திருந்த பாறைக்கு அழைத்துவந்தாள். தாங்க முடியாத வெக்கைக்கு நடுவே இரவு முழுவதும் அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர். நேற்றுபோல் கங்குகள் பெரும் அனலோடு இல்லை. சற்றே குறைந்திருந்தது. ஆனாலும் உள்நெருப்பு இரவானதும் கண்கள் விழித்துத் தகித்தது. ஊரே உட்கார்ந்து

பார்த்துக்கொண்டிருந்தது. கரும்புகை விடாது வந்து முகத்தில் அறைந்தது.

பொழுது, நள்ளிரவைத் தாண்டியது. அவர்கள் தலைமுறைத் தலைமுறையாக வாழும் காட்டைச் சுழற்றித் தின்ற நெருப்பு, இப்போது சம்மணமிட்டு உட்கார்ந்திருக்கிறது.

`‘இந்தக் கொடும்காட்சியை இரவும் பகலுமாகப் பார்த்துக்கொண்டிருந்தால் எல்லோருக்கும் மனம் சிதைந்துதான்போகும், வாருங்கள் குகைக்குள் ஒடுங்குவோம்” என்று சொல்லி, பெரியவர் ஒருவர் எழுந்தவுடன் அனைவரும் எழுந்து குகை நோக்கிப் புறப்பட்டனர்.

முதுமகளுக்கு என்ன சொல்வது எனத் தெரியவில்லை. இனி இவர்களை நிறுத்த முடியாது என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது. அவளும் உடன் நடக்கத் தொடங்கினாள். எல்லோரும் பாறைவிட்டு அகன்ற பிறகு, ஒரு சிறுவன் மட்டும் எதிர்திசையில் பார்த்தபடி அசையாமல் நின்றுகொண்டிருந்தான். மற்றவர்கள் அவனைச் சத்தம்போட்டு அழைத்தபடி குகை நோக்கி நடந்தனர்.

சிறுவனின் குரல் மெல்லியதாகத்தான் கேட்டது. எல்லோரும் அருகில் வந்து அந்தத் திசை நோக்கிப் பார்த்தனர். வியப்பால் விழிகள் பிதுங்கிக்கொண்டிருந்தன. கூட்டத்தினர் மூச்சு விடும் சத்தம்கூடக் கேட்கவில்லை. உறைந்துபோன நிலையில் அதைப் பார்த்துக்கொண்டே இருந்தனர். கண்ணீரைத் துடைத்தபடி முதுமகள் மட்டும் குகையை நோக்கி நடந்தாள்.

அதன் பிறகு, பலகாலம் அந்த ரகசியத்தைக் கண்டறிய முடியாமல் நாகர்கள் தவித்துப்போயினர். கங்குகளின் மீது பாம்புகளால் எப்படி ஊர்ந்துபோக முடிந்தது? விடை தெரியாமல் இருந்த கேள்விக்கு முதுமகள்தான் ஒருநாள் விடை கண்டாள். அந்த மலையின் தென்திசைப் பாறை இடுக்குக்குள் ஓர் இடத்தில் ‘தீக்களி’ உள்ளது. அதில் புரண்டு, மேனி எல்லாம் தீக்களி அப்பியபடி நாகங்கள் நெருப்பைக் கடந்துள்ளன என்று அறிந்தாள்.

அது உண்மையா என்பதை அறிய முதலில் தானே உடல் எங்கும் தீக்களி பூசியபடி நெருப்புக்குள் இறங்கப்போவதாகச் சொன்னாள். முதுமகள் வாக்கைத் தட்ட முடியாமல் பெரும்மரங்களை வெட்டி வீழ்த்தி தீயை உருவாக்கினர். ஆடை துறந்து உடல் எங்கும் தீக்களி பூசியபடி நெருப்பினுள் நுழைந்தாள் முதுமகள். நாகர் கூட்டத்தின் உயிர்நாடி ஒடுங்கியது. அவள் உள்நுழைந்தபோது வீசிய காற்று, தழலைக் கிளர்ந்தெழச் செய்தது. குலத்தின் முதுமகள் நெருப்பில் மறைந்தாள்.

கணநேரத்தில் பதறிய ஆண்கள், “தண்ணீர்கொண்டு ஊற்றி நெருப்பை அணையுங்கள்” என்று கத்த, பெண்களோ, “முதுமகள் வாக்கை மீற அனுமதிக்க மாட்டோம்” என்று தீயைக் காத்து நின்றனர். சூழ்கொடி எனப் படர்ந்திருந்த நெருப்பின் கிளைகளை விலக்கி வெளியே வந்தாள் அவள்.

உறைந்து நின்றனர் நாகர்கள்.

``எண்ணெய்க்குள் நீர் நுழைய முடியாததைப்போலத்தான் இந்தத் தீக்களியைத் தாண்டி தீ நுழைய முடியாது” - சொல்லியபடி நடந்தாள் முதுமகள்.

நிர்வாண நிறைச்சுடரை அழைத்துக்கொண்டு நீராடச் சென்றனர் நாகினிகள். நடக்கும்போது அவள் சொன்னாள், “நெருப்பு, கண்ணுக்குள் படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அவ்வப்போது கண்கள் திறந்தால் போதும்.”



அவளின் குரலை, கண்விழித்துக் கேட்டுக்கொண்டிருந்தன நாகங்கள்.

தழல்மாலை சூடி வந்தவளின் மேனி எல்லாம் நீரூற்றி நீர்மாலை சூடினர்.

பெருஞ்சேரலின் படை எருக்குமலையைச் சூழ்ந்து எரியூட்டியபோது நாகர்கள் பலரும் போரிட்டு மாண்டுள்ளனர். மிஞ்சியவர்கள் உடல் எங்கும் `தீக்களி' பூசி அந்த நெருப்பில் இருந்து வெளியேறி பறம்புமலை வந்து சேர்ந்தனர்.

அப்போதிருந்து, அவர்களின் குலவழக்கப்படி கொற்றவைக் கூத்தில் கை புணர்ந்தாடும் துணங்கைக் கூத்து நிகழ்கிறது. புதிய இணையர்கள் தங்களின் மேனி எங்கும் ‘தீக்களி’ பூசியபடி நெருப்புக்குள் நுழைந்து, `தழல்மாலை சூடுவர்.

கபிலரின் உடல்நிலை ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருந்தது. நேற்றைய இரவுக்குப் பிறகு நிலைமை இன்னும் மோசமானது. பகல் முழுக்க தனது மாளிகையில் படுத்தபடி ஏதேதோ பிதற்றினார். உடல் மிகவும் சூடேறியிருந்தது. செய்தியைக் கேள்விப்பட்டு பாரி வந்தான். மருத்துவர்கள் மருந்துகள் தந்தனர். அவர்கள் போன பிறகு பாரி ‘தழல்மாலை சூடும்’ நிகழ்வை விளக்கிச் சொன்னான். அதை முழுமையாக அறிந்த பிறகுதான் கபிலரின் மனம் நிதானமடைந்தது.

`` `மூன்றாம் நாள் சற்றே அச்சமூட்டுவதாக இருக்கும். நீங்கள் ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள்’ என்று சொன்னேன். நீங்கள்தான் செவி சாய்க்கவில்லை” என்றான் பாரி.

“எனது உடல் ஈடுகொடுக்க மறுக்கிறது; மனம் உடலைப் பொருட்படுத்த மறுக்கிறது.”

அவர் சொன்னதைப் பற்றி பாரி சிந்தித்துக்கொண்டிருந்தான். கபிலர் தொடர்ந்தார்.

``எத்தனையோ தலைமுறைக்கு முன்னால் அழிந்த குலங்கள் பற்றி நான் கேள்விப்பட்ட கதைகள் இங்கு உயிர்கொள்கின்றன. மனிதர்கள் வரலாற்றுக்குள்ளிருந்து இறங்கிவருகிறார்கள். இந்த மண்ணெங்கும் சிந்தப்பட்ட குருதியும் கண்ணீரும் உலராமல் உனது உள்ளங்கையில் இருக்கின்றன பாரி” எனச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே கபிலரின் குரல் உடைந்தது.



பாரிக்கு என்ன சொல்வது எனத் தெரியவில்லை.

“அந்தக் கண்ணீருக்கும் குருதிக்கும் பறம்பு கடமைப்பட்டுள்ளது” என்று மட்டும் சொன்னான்.

சிறிது நேரம் பேச்சற்ற அமைதி நீடித்தது.

“நீங்கள் நன்றாக ஓய்வெடுங்கள். நான் பிறகு வருகிறேன்” என்று சொல்லிவிட்டு எழுந்தான் பாரி.

“உன்னிடம் இன்னொன்று கேட்க வேண்டும்?”

“என்ன?” என்றான் பாரி.

“நான் முதன்முதலாகக் கொற்றவைக் கூத்து பார்க்கிறேன். தழல்மாலை சூடலைப் பற்றி கேள்விப்பட்டதுகூட இல்லை. ஆனால், நீ காலங்காலமாக அதைப் பார்த்துக்கொண்டி ருப்பவன். அப்படியிருக்க அவர்கள் நெருப்புக்குள் இறங்கும்போது உனது உடல் நடுங்கியது ஏன், உனது கண்கள் ஏன் கலங்கின?”

கபிலரின் கேள்வி, பாரிக்குப் பெரும்வியப்பைக் கொடுத்தது. நெருப்பாடல் கண்டு கூட்டமே உறைந்துபோயிருந்த வேளையில், தன்னை எப்படி இவ்வளவு கூர்மையாகக் கவனித்தார்?

எழுந்த பாரி, கபிலரின் அருகில் உட்கார்ந்தான். அவனது முகத்தில் இவ்வளவு நேரம் இல்லாத ஓர் இளஞ்சிரிப்பு ஓடி மறைந்தது.

பாரி சொன்னான், ``நேற்று தழல்மாலை சூட மூன்று இணையர்கள் நெருப்புக்குள் இறங்கினர் அல்லவா? நெருப்புக்குப் பின்புறம் இருந்து உடல் எல்லாம் தீக்களி பூசிக்கொண்டு இறங்குபவர்களை, நெருப்புக்கு முன்புறம் உட்கார்ந்திருக்கும் நம்மால் எளிதில் அடையாளம் காண முடியாது. நேற்றும் அப்படித்தான். ஆனால், மூன்றாவது இணை உள்ளிறங்கும்போது அந்த ஆண்மகன் யார் என எனக்குத் தெரியவில்லை.

ஆனால், அந்தப் பெண்மகள் யார் என்று எனக்குத் தெரிந்தது. கணநேரத்தில் கண்டறிந்தேன்.”

சற்றே அமைதி காத்த பிறகு பாரி சொன்னான், “அவள் என் மூத்தமகள் அங்கவை.”

அதிர்ந்தார் கபிலர்.

பாரி தொடர்ந்தான், “சிறுவயதில் இருந்து தழல்மாலை சூடுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். நெருப்பால் தீக்களியை மீறி ஒன்றும் செய்துவிட முடியாது என்று நன்றாகத் தெரியும். ஆனால், உள்ளிறங்கியது அங்கவை எனத் தெரிந்த கணத்தில் எனது உடல் நடுங்கியது.

அவள் ஆட்டத்தில் சிறந்தவள். தனது இணையோடு நெருப்பில் இறங்கி ஆடுகிறாள். ‘காதல்கொண்டு நெருப்பில் குளிக்கும் உன் மகளைப் பார்’ என ஒருபக்கம் மனம் துள்ளிக் குதித்தது. இன்னொரு பக்கமோ தழலுக்குள் இறங்குவது என் தசை எனத் துடித்தது.

உடலும் மனமும் இரு கூறுகளாப் பிளவுண்டதாக நீங்கள் சொன்னீர்களே, எனக்கோ மனமே இரு கூறுகளாகப் பிளவுண்டது.”

கலங்குவதிலும் கலங்கி மீள்வதிலும் பாரியே உதாரணமாக இருக்கிறான் என கபிலருக்குத் தோன்றியது.

“அவள் காதல்கொண்டது உனக்குத் தெரியுமா?”

``அவள் காதல் கொண்டுள்ளாள் என்பதை நான் முன்பே கணித்துவிட்டேன். ஆனால், யாரைத் தேர்ந்தெடுத்துள்ளாள் என்றுதான் தெரியாமல் இருந்தது.

``இப்போது தெரிந்ததா?’’

``இல்லை. நெருப்பில் நம் தசையைத்தானே நாம் உணர முடியும். அந்த இளைஞன் யார் எனத் தெரிந்துகொள்ள ஆசையோடிருக்கிறேன். அவளே சொல்லட்டும். அவள் காதல்கொண்டுள்ளாள் என்றால், அவன் மாவீரனாகத்தான் இருப்பான். இவளின் காதலைப் பெற முடிந்த ஒருவன், வீரத்தைத் தாண்டிய அருங்குணங்களைக் கொண்டிருப்பான். காத்திருக்கிறேன். அவனின் கைப்பற்றி எனக்கு எதிரில் வந்து அவள் நிற்கும் நாளுக்காக.”

மகிழ்ச்சி பொங்க கபிலர் கேட்டார்...

``ஆதினிக்குத் தெரியுமா?”

சிரித்தான் பாரி.

``அவளுக்குத் தெரியாமலா இருக்கும்? தனக்கும் அவனுக்கும் ஏற்பட்டுள்ளது காதல் என்று அங்கவை உணரும் முன்பே அவள் அறிந்திருப்பாள். அவள், தாய் அல்லவா?”

கலங்கினார் கபிலர். மண்ணை வேர் ஊடுருவுவதுபோல மனங்களை ஊடுருவுகிறான் பாரி. தன்னையும் அவன் ஊடுருவிக்கொண்டிருப்பான்.

“அப்படி எனில், வேளீர் குலம் நாகர் குலத்தோடு கலக்கப்போகிறது அல்லவா?”

“கலவையில்தானே புதுமைகள் பூக்கும். வேடர்குலமும் கொடிக்குலமும் இணைந்ததில்தானே வேளீர்குலம் பிறந்தது. வேளீர்குலத்தில் கலந்துள்ள கலவைகள் எத்தனை எத்தனை! என் தாய் சொல்வாள்... `உன் பாட்டன் திரையர் பெண்ணை மணந்தான்’ என்று. `காட்டெருமையை அடக்கும் வலு எனது தோள்களுக்கு வாய்த்தது அதனால்தான்' எனப் பலமுறை நினைத்திருக்கிறேன். திரையர்போல் திடம்கொண்ட ஒரு குலம் இந்த மண்ணில் வேறு எது? நாளை என் பேரக்குழந்தையின் கண்களில் நீல வளையம் பூத்து மறையும் அழகைப் பார்க்க இப்போதே தயாராகிவிட்டேன்” - சொல்லும்போதே பாரியின் முகம் எல்லாம் பூத்து மலர்ந்தது.

கபிலரின் உடற்சூடு குறையவில்லை. மாலை ஆனதும் அதிகமாகத் தொடங்கியது. நீலன், திசைக்காவல் வீரன். ஆதலால், கொற்றவைக் கூத்து முடிந்ததும் அவன் வேட்டுவன் பாறைக்குச் சென்றாக வேண்டும். எனவே, கபிலருக்கு உதவ உதிரனை அனுப்பிவைத்தான் பாரி.

இளம்வீரன் உதிரன், கபிலரின் மாளிகைக்கு மாலையில் வந்துசேர்ந்தான். அந்தப் பெருங்கவியை விழுந்து வணங்கினான். இருக்கையில் அமர்ந்தபடி அவனுக்கு வாழ்த்து சொன்னார் கபிலர். கொண்டுவந்த பச்சிலை உருண்டைகளை அவர் கையில் கொடுத்து, வாயில் போட்டுக்கொள்ளச் சொன்னான்.

“எனது உடற்சூடு குறைந்துள்ளதாக உணர்கிறேன்.”

குடிக்க நீரைக் குவளையில் நீட்டியபடி உதிரன் சொன்னான், “இன்னும் குறையவில்லை?”

உதிரனை உற்றுப்பார்த்தார் கபிலர்.

“உங்களின் கால் தொடும்போது அறிந்தேன். நீங்கள் நன்றாக ஓய்வெடுக்க வேண்டும். மருத்துவர்கள் மீண்டும் மீண்டும் சொல்லி அனுப்பியுள்ளனர்” என்றான் உதிரன்.

பெரியவர்கள் சில வேலைகளைச் செய்ய மறுப்பார்கள். அதற்கான காரணங்கள் அவர்களிடம் இருக்கும். அதுதான் சரி என உறுதியாக நம்புவார்கள். அதை மீறி அவர்களைச் செய்யவைக்கச் சிறந்த வழி, வயதில் மிகச் சிறியவர்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பதுதான். இறங்கிவந்து அவர்களால் வாதாட முடியாது. அவர்களைக் கொண்டே அவர்களின் தரப்பை வீழ்த்தும் முயற்சி. பாரி அதையே செய்தான்.

உதிரன், ஒரு பெருங்கவியைக் குழந்தைவடிவில் கண்டுகொண்டிருந்தான். அவர் இரவானதும், “கொற்றவைக் கூத்துப் பார்க்க அழைத்துப் போ” என்று நச்சரிக்கத் தொடங்கினார். அவனோ அவரை மாளிகையின் மேலே அழைத்துச் சென்றான். காற்றில் மிதந்துவரும் இசையை வைத்தே, அன்றைய கூத்து யாருடையது என்று அவருக்குச் சொல்லத் தொடங்கினான்.

நான்காம் நாள் கூத்துக்கான சல்லென்ற ஓசையுடைய சல்லிகையின் ஓசை கேட்டது. மறுநாள் மலைத்தெய்வம் சாத்தனுக்காக முழங்கப்படும் இசைக்கருவியான ‘அடக்கத்தின்’ ஓசை கேட்டது. ஆறாம் நாள் பலாமரத்தினால் செய்யப்பட்டு கரடி கத்துவதுபோல் ஓசை எழுப்பக்கூடிய ‘கரடிகை’யின் ஓசை கேட்டது.

இப்படி ஒவ்வொரு நாளும் கேட்கும் ஓசையை வைத்தே அன்றைய கூத்தில் பாடப்படும் கதையை அவன் கூறினான்.

எட்டாம் நாள் இசையின் சத்தமே இல்லாமல் விட்டு விட்டு மனிதர்கள் கத்தும் ஓசை மட்டும் கேட்டது. ``இது கூவல் குடி'' என்றான்.

``ஒலிக் குறியீடுகளை உருவாக்கி, காட்டைத் தங்களின் குரல்வளையால் பின்னி, தொடர்புகளை உருவாக்கும் வித்தை தெரிந்தவர்கள்'' என்றான். மறுநாள் கொம்பன் குடியைப் பற்றிக் கூறினான். இடையில் சற்றே உடல் நலம் சரியான கபிலர் கொம்பன் குடியின் கதையைக் கேட்ட நாள் அன்று முற்றிலும் தூக்கம் தொலைத்தார். கதைகள் பல நேரம் குருதியை உறையவைக்கக்கூடியனவாக அமைந்துவிடுகின்றன.

கதை, சொல்லும்போது பெருகக்கூடியது; நினைக்கும்போது திரளக்கூடியது; மறக்க எண்ணும்போது நம்மைக் கண்டு சிரிக்கக்கூடியது. வடிவமற்ற ஒன்றின் அதீத ஆற்றலைக் கதைகளிடம்தான் மனிதன் உணர்கிறான்.

மறுநாள் கடும் மழை இறங்கியது. கார்காலத்தின் தொடக்க நாள்கள். காட்டின் குணம் மாறத் தொடங்கியது. இரவில் மழையின் ஒலியே எங்கும் கேட்டது. இசைக்கருவிகளின் ஓசை எதுவும் கேட்கவில்லை. முதல் இரண்டு நாள்கள் இரவில் விட்டுவிட்டுப் பெய்த மழை, அதன் பிறகு, முழு இரவும் கொட்டித் தீர்த்தது. மீதம் இருக்கும் நாள்களின் கதைகளைச் சொல்லும்படி கபிலர்

கேட்டுக்கொண்டே இருந்தார்.

மூன்று கதைகளைச் சொன்னான் உதிரன். பதினைந்து கூடையில் பழங்கள் வைக்கப்பட்டு, தெய்வவாக்கு விலங்குக்காகக் காத்திருப்பது கபிலருக்கு நன்கு தெரியும். எனவே, மீதமுள்ள நான்கு நாள்களுக்கான கதைகளை கேட்டுக்கொண்டே இருந்தார். உதிரன், ஏதேதோ காரணம் சொல்லி சமாளித்துப் பார்த்தான்.

“நான் ஒன்றும் சிறுபிள்ளை அல்ல” என்று சற்றே கோபித்தார் கபிலர்.

உதிரன் மனம் கலங்கிச் சொன்னான், “என்னை மன்னித்துவிடுங்கள். அந்தக் கதைகளைச் சொல்லும் வலிமை எனக்கு இல்லை.’’

சொல்லும்போதே அவனது உடல் நடுங்கியதைக் கபிலர் உணர்ந்தார். மறுநாள் கபிலரைப் பார்க்க வந்த மருத்துவர்களிடம் அவனும் மருந்து வாங்கிக்கொண்டான்.

``இன்று பதினேழாம் நாள் எவ்வளவு கடும் மழை பெய்தாலும், அதையும் மீறி இசையின் ஓசை கேட்கும்’’ என்றான்.

“காரணம் என்ன?” எனக் கேட்டார் கபிலர்.

``இன்றைய நாள் வேளீருக்கு உரியது. வந்துள்ள அத்தனை குடிப் பாணர்களின் இசைக்கருவிகளும் ஒருசேர முழங்கும். காடு கிடுகிடுக்க, காண்போர் நடுநடுங்க களமிறங்கி ஆடுபவன் வேள்பாரி. கொற்றவைக்கு முன் காட்டெருமையைப் பலியிட்டு, மேலெல்லாம் குருதி பூசி நிலம் நடுங்க ஆடுவான். பறம்பின் எல்லைக்குள் வந்த குலங்களின் கண்ணீர் துடைக்க உயிரையும் தரச் சித்தம் என உருகிச் சொல்லும் பெருநாள் இது."

சொல்லிக்கொண்டிருக்கும் உதிரனின் உடல்மொழியைக்கொண்டே பாரியின் ஆட்டத்தை உணர்ந்தார் கபிலர். போர்த் தெய்வமான கொற்றவையின் முன், வாளேந்தி ஆடும் அமலையின் ஆட்டத்தை ஆடுவான் வேள்பாரி!

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# பாகம் 2

# வீரயுக நாயகன் வேள்பாரி-21




இளமருதன், குதிரையின் மீது ஏறி அமர்ந்தான். அவனது குதிரைக்கு ‘ஆலா’ எனப் பெயர். ஆலாப்பறவை ஓய்வின்றி நாள் முழுவதும் பறந்துகொண்டிருப்பதைப்போல, அவனது குதிரையும் நாள் முழுவதும் நிற்காமல் ஓடக்கூடியது. ‘ஆலாய்ப் பறக்கிறான் இளமருதன்’ என்ற பேச்சு, எங்கும் பரவியிருந்தது.

குதிரை, தன் வேகத்தைவிட இளமருதனின் குறிப்பு அறிந்து செயல்படும்விதம்தான் வியப்பூட்டக்கூடியது. ஆலாவின் முன்தலையை விரல்களால் வருடியபடி அதனுடன் பல நேரம் பேசிக்கொண்டிருப்பான். அது தலையை மெள்ள ஆட்டிக் கேட்டுக்கொண்டிருக்கும். அவன் சொல் கேட்டுத் தலையாட்டுகிறதா அல்லது விரல்கள் நீவுவதால் இன்புற்றுத் தலையசைக்கிறதா என்பது, காண்போருக்குப் புரியாது. அது அவர்கள் இருவரின் மனவோட்டத்தோடு தொடர்புடையது. மேலே அமர்ந்திருக்கும் வீரனின் எண்ணத்தோடு குதிரையின் மனவோட்டமும் இணையும்போதுதான் வேகத்தை ஆளும் ஆற்றலைப் பெற முடிகிறது.

இளமருதனுக்கு இந்த உலகிலேயே மிகவும் பிடித்த செயல் ஆலாவின் மீது அமர்ந்து, பாய்ந்து செல்வதுதான். நிலத்தை ஆலாவின் காலடியில் அழுத்தி விண்ணில் குதிக்கும் அந்தக் கணம் மனதில்

ஏற்படுத்தும் மகிழ்ச்சியை இன்னொன்று ஏற்படுத்தாது. எனவே, கடிவாளத்தைச் சுண்டியதும் குதிரை பாயத் தொடங்கும் அந்த முதற்கணத்துக்காக எப்போதும் காத்திருப்பான்.

அதனாலேயே இந்த நீண்ட பயணம் அவனுக்கு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. புறப்படும் நாளுக்காக ஆவலோடு காத்திருந்தான். அவன் தந்தை மையூர்கிழார், வெங்கல்நாட்டுத் தலைவன்; பாண்டிய வேந்தனுக்குக் கட்டுப்பட்ட சிறுகுடி மன்னன்.
பாண்டிய மாவேந்தன் குலசேகரப் பாண்டியனின் ஆளுகைக்குக் கீழ் எண்ணற்ற சிறுகுடி மன்னர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் வெங்கல்நாட்டுத் தலைவனுக்குத் தனித்த ஓர் இடம் உண்டு. அதனால்தான் இளவரசர் பொதியவெற்பனின் மணவிழாவுக்கான சிறப்பு அழைப்பு அவருக்கு வந்திருக்கிறது.

பாண்டியநாட்டு இளவரசனின் மணவிழா, நான்கு நிகழ்வுகளாக இரு மாதகாலம் நடைபெறுகிறது. நிறைவாக நடக்கும் திருமாலை அணியும் விழாவுக்குத்தான் சிறுகுடி மன்னர்கள் அனைவருக்கும் அழைப்பு. மற்ற விழாக்களுக்கு அவர்களுக்கு அழைப்பில்லை. மாமன்னரின் மனதில் தனித்து இடம்பிடித்த சிறுகுடி மன்னர்கள் எண்மருக்குத்தான் இந்த முழு விழாவுக்கான அழைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அதில் ஒன்று வெங்கல்நாடு.

புறப்படுவதற்கு இன்னும் காலம் இருந்தது. இந்நிலையில், நேற்றைய தினம் அரண்மனையிலிருந்து அவசர ஓலை. `மணவிழாவுக்காகப் புதிய மாளிகைகள் கட்டப்பட்டு வருகின்றன. அவற்றின் பணிகளை வேகமாக முடிக்கவேண்டியுள்ளதால், தேர்ந்த சுதை வேலைகள் செய்யும் ‘மண்ணீட்டாளர்களை’ அனுப்ப வேண்டும்' என்னும் ஓலையைக் கொண்டுவந்தான் அரண்மனையின் முதன்மை அலுவலனான செவியன்.

வெங்கல்நாடு, மதுரைக்கு வெகுதொலைவில் பச்சைமலையின் தென்புற அடிவாரத்தில் உள்ளது. `பாண்டியநாட்டின் வடமேற்கு எல்லை இது' எனச் சொல்லலாம். செழிப்பான நிலப்பகுதிகளைக் கொண்டது. சரிபாதி மலை வளத்தையும் மீதிப்பாதி மருத நிலத்தையும் கொண்டது. எனவே, வனத்தின் செல்வமும் உழவின் செல்வமும் ஒருங்கே கிடைத்தன. அதனாலேயே வெங்கல்நாடு செழிப்புற்று விளங்கியது.

மரவேலைப்பாடுகளும் மண் வேலைப்பாடுகளும் சிறப்புறச் செய்யும் எண்ணற்ற கலைஞர்கள் இங்கு உள்ளனர். கட்டடங்கள் கட்டியெழுப்பும் கொற்றர்களுக்கு இது தாய்நிலம். பெரும்கட்டடங்கள், இவர்களின் கரம்கொண்டே மேலெழும்பின. அதன் தொடர்ச்சியாக, நுட்பமான சுதை வேலைப்பாடுகளைச் செய்யும் மண்ணீட்டாளர்களும் உருவாகினர். தலைநகர் மதுரையின் கட்டடத் தேவைகளுக்கான கலைஞர்களைத் தருவதில் வெங்கல்நாடு முதன்மையாக விளங்கியது.

பல ஆண்டுகளுக்குப் பிறகு தலைநகர் மதுரையை இப்போதுதான் பார்க்கப்போகிறான் இளமருதன்.

மணவிழாவுக்கு, வெங்கல்நாட்டின் சார்பில் தரவேண்டிய சிறப்பான பரிசுப்பொருளைத் தேர்வுசெய்வதில்தான் கடந்த சில மாதங்களாக இவர்கள் மும்முரமாக இருந்தனர். நடக்கப்போவது இந்தப் புவியின் மாபெரும் விழா. இந்த விழாவில் கலந்துகொள்ள, உலகெங்கிலும் இருந்து அரசக் குடும்பத்தினர் வந்து இறங்கப்போகின்றனர். தனது வாழ்நாளில் இப்படியொரு பெருவிழாவை இன்னொரு முறை பார்க்கும் வாய்ப்பு தனக்குக் கிடைக்கப்போவதில்லை என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார் மையூர்கிழார். எனவே, தாங்கள் தரும் பரிசுப்பொருளை மாமன்னரும் இளவரசனும் கண நேரமாவது கண்கொண்டு பார்க்க வேண்டும் என்பதற்கு பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர்.

எத்தனையோ பொருள்கள் தயாராகிக் கொண்டிருந்தன. ஆனால், மையூர்கிழார் பெரிதும் கவனம் செலுத்திக்கொண்டிருப்பது ஒரு பொருளின் மீதுதான். அரண்மனையில் புதிதாகக் கட்டப்படும் மாளிகைகளைப் பற்றிய விவரம் மற்றவர்களுக்குத் தெரிகிறதோ இல்லையோ, மையூர்கிழாருக்கு நன்கு தெரியும். ஏனென்றால், மதுரைக்கு அதிகமான கொற்றர்களை அனுப்பிவைப்பது இவர்தானே!

புதிய கட்டுமானத்தில் பேரெழிலோடு எழுப்பப்பட்டுவருவது ‘பாண்டரங்கம்’. அரசக் குலத்தினர் மட்டும் ஆடி மகிழும் கலைக்கூடம். அதுவும் இந்தப் பாண்டரங்கம், இளவரசரின் மணவிழாவுக்காகக் கட்டப்படுகிறது. பொதிய வெற்பனின் அந்தரங்க அவை அது. அங்கு கண்ணில்படும் பொருள், அதன் பிறகு ஒருபோதும் மறையாது. நாம் தரும் பரிசுப்பொருள் பாண்டரங்கத்தில் இடம்பெற வேண்டும். அதற்குச் செய்யவேண்டியது என்ன என்பதைத்தான் பல மாதங்களாகச் சிந்தித்துக்கொண்டிருந்தனர்.

மணமக்கள் பொற்காசுகளை அள்ளி எறிய, மதுரையின் வீதியெங்கும் பொன்னொளி வீசப்போகும் திருவிழா. இந்த விழாவில் சிறுகுடி மன்னன் ஒருவன் தரும் பரிசுப்பொருள் நினைவில் நிற்கவேண்டுமென்றால், அது இயலாத காரியம் என்றுதான் எல்லோரும் சொன்னார்கள். ஆனால், மையூர்கிழார் விடாமல் முயற்சி செய்துகொண்டிருந்தார். செல்வத்தை விஞ்சும் ஆற்றல் கலைகளுக்கு உண்டு. செல்வத்தின் திளைப்பில் மிதக்கும் கண்களை, அதைவிட அதிகமான செல்வத்தைக் கொட்டுவதன் மூலம் கவனம் பெறவைக்க முடியாது. ஆனால், கலையின் நுணுக்கம் கண்களை அசைவற்று நிறுத்தும்.

மனிதன், கனவுகளுக்கு அடிமைப்பட்டவன். அவனைக் குறுக்குவழியில் வீழ்த்துவது எப்போதும் எளிது. மையூர்கிழார் பாண்டரங்கத்தில் வைப்பதற்கு ஏற்ற பொருளை ஆயத்தம்செய்வது என முடிவுக்கு வந்தார். அப்போதுதான் அதிலிருக்கும் இன்னொரு சிக்கல் தெரியவந்தது.

நடக்கும் திருமணம் பாண்டியநாட்டு இளவரசருக்கு என்பதைவிட மிக முதன்மையானது, அவர்கள் பெண் எடுக்கும் இடம் பற்றியது. இந்த மணவிழாவுக்கு, உலகில் உள்ள கலைப்பொருள்கள் அனைத்தையும் கொண்டுவந்து கொட்டுவர் என்பதை எண்ணியபோதுதான் மையூர்கிழாருக்கு சற்றே அவநம்பிக்கை ஏற்பட்டது. அந்தக் கலைப்பொருள்களோடு நாம் ஈடுகொடுக்க முடியாது என்று எண்ணி சோர்வுற்றார்.



அப்போது பொற்கொல்லர் அவையில் இருந்த இளைஞன் `காராளி' சொன்னான், `‘வாசல் வரை வந்து வழுக்கி விழக் கூடாது. அந்த வழியிலேயே காலெடுத்து வைத்து முன் நகர்வோம்.'’

“பாண்டரங்கம் முழுவதும் இடம்பெறப்போவது, யவனர்களின் மிகச்சிறந்த கலைப் படைப்பான `பாவை விளக்கு'தான். அது இருக்கும் அவையில் வேறு எந்தப் பொருளும் கவனம்பெற முடியாது” என்று மையூர்கிழார் சோர்வடைந்தபோது காராளி சொன்னான், `‘யவன பாவை விளக்கை விஞ்சும் விளக்கொன்றை நம்மால் உருவாக்க முடியும்.”

`‘உறுதியாக முடியாது” என்று சொன்ன மையூர்கிழார், காராளியிடம் கேட்டார்

`‘நீ யவனர்களின் பாவை விளக்கைப் பார்த்திருக்கிறாயா?”

“இல்லை மன்னா.”

“அதனால்தான் எளிதில் சொல்லிவிட்டாய்.”

“நீங்கள் எவ்விடம் பார்த்தீர்கள் மன்னா?”

“வேந்தனின் அரண்மனை முழுவதும் இப்போது யவனர்களின் பாவை விளக்குகள்தானே கண்ணில்படுகின்றன. அரசவை மாடத்தில் சுடர் ஏந்தி நிற்கும் அந்த விளக்குகளைக் காண்பவர் வியந்துபோய் நிற்பர்.”

சற்றே இடைவெளிவிட்டு காராளி சொன்னான், ``அரசவை மண்டபம், அரண்மனை மாடங்கள் என எங்கும் பார்த்துப் பழகிய ஒரு கலைப்பொருள், அந்தரங்கமான இடத்தில் கூடுதல் கவனத்தைப் பெறுமா?”

காராளியின் கேள்வி, மையூர்கிழாருக்கு வழிகாட்டத் தொடங்கியது. அவன் மேலும் சொன்னான், “அது மணமக்கள் கூடிக்குலவும் அரங்கு. அங்கே கண்களுக்குத் தேவை புதுமை. அதுவும் காதலுக்கு அப்பாற்பட்ட புதுமை அன்று; காதலுக்குள்ளே மூச்சுமுட்ட இழுத்துச் செல்லும் ஒரு புதுமை. அதை நாம் கலைவடிவாக்கலாம்.”

“என்ன செய்யலாம் என்கிறாய்?”

“காமன் விளக்கு செய்வோம்.”

பொற்கொல்லர் அவையில் இருந்த அனைவரும் வியப்புற்று நின்றனர். `மிகச் சிறப்பான சிந்தனை' என மையூர்கிழாருக்குப் பட்டது.

அவன் அடுத்துச் சொன்னான், “காமன் விளக்கு மட்டும் போதாது. நாம் வழக்கமாகச் செய்யும் நாக விளக்கு இரண்டையும் சேர்த்துச் செய்யவேண்டும். அதுதான் காமன் ஏற்படுத்தும் கனவுக்கு உருவம் கொடுக்கும்''.

எல்லோரும் வாயடைத்துப்போனார்கள். இரண்டு நாகங்கள் பின்னியபடி மேலெழுந்து தலை நீட்ட, அதன் உச்சந்தலைச் சிறு குழியின் முன் விளக்கின் நாக்கும் நாகங்களின் நாக்குகளும் ஒன்றாக நீட்ட, சுடர் எரியும் வடிவுகொண்டது நாக விளக்கு.

நாகம் கொண்டு காமம் கவர்கிறான் இளைஞன் எனப் பூரித்து நின்ற மையூர்கிழார் கேட்டார், “வயதிலும் அனுபவத்திலும் பெரியவர்கள் இருக்கும் இந்த அவையில், யாருக்கும் தோன்றாத சிந்தனை உனக்கு எப்படித் தோன்றியது?”

மெல்லிய சிரிப்போடு காராளி சொன்னான், ‘`அவர்கள் வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர்கள். எனவே, அனுபவத்தின் கண்கொண்டு பார்க்கின்றனர். அனுபவம், அடைவதிலிருந்து மட்டும் ஏற்படுவதில்லை; அடையாததிலிருந்தும் ஏற்படுகிறது. நான் அடைந்திராத அனுபவத்தின் கண்கொண்டு பார்த்தேன்.”

மையூர்கிழார் வியந்துபோனார். அவனது சொல், அவரை மயக்கியது. பணிகள் தொடங்கின.

காமன் விளக்கை எப்படிச் செய்வது? காமத்துக்கு வடிவம் கொடுக்க முடியுமா? அது காட்சிவயப்பட்டதன்று, கனவு வயப்பட்டது. பூவின் மலர்தலில் வெளியேறும் மணம்போல, மனித மலர்தலில் உள்ளுருகும் நிகழ்வு அது.

கனவைக் கண்கொண்டு பார்க்க நினைப்பது அறியாமை. அது கண்ணுள் பார்க்கவேண்டியது. எனவே, தங்களுக்குள் மூழ்கும் எண்ணங்களுக்கு வாசல் திறக்கும் வழிமுறைகளைப் பற்றிச் சிந்திக்கலானான் காராளி.

சட்டகங்களால் எல்லா திசைகளிலும் இழுத்துப்பிடிக்கப்பட்டிருக்கும் தோலில் ஓவியத்தை வரையத் தொடங்கினான். காதல் பரவசத்தில் நிற்கும் ஒரு பெண், தன் வலதுகையை பக்கவாட்டில் சற்றே உயர்த்திப் பிடித்திருக்கிறாள். அந்த உள்ளங்கையில் தீபத்துக்கான அகல் இருக்கிறது. இடதுகையை மார்போடு அணைத்தபடி வைத்திருக்கிறாள். அந்தக் கை, ஒரு மலரைப் பிடித்துக்கொண்டிருக்கிறது. அவளின் பேரழகில் மயங்கிய காதலன், அவளின் முகம் பார்த்தபடி மிகவும் அணுக்கமாகக் கிறங்கி நிற்கிறான்.

காராளி வரைந்த இந்த ஓவியத்தைப் பார்த்தவர்களுக்கு, சற்றே ஏமாற்றம் ஏற்பட்டது. “இந்தப் படம் மிக அழகாக இருக்கிறது. ஆனால், இதில் என்ன புதுமை இருக்கிறது?” எனக் கேட்டனர்.



“ஓவியத்தைச் சிலையாக்கினால்தான் இதில் உள்ள புதுமை தெரியும்” என்றான் காராளி.

அவன் வரைந்ததுபோலவே, அழகும் உணர்வும் கொப்புளிக்கும் சிலை வடிக்கப்பட்டது. வலதுகையில் விளக்கு ஏந்தி, இடதுகையில் மலரை மார்போடு அணைத்து நின்றாள் அந்தப் பெண். காதல் பேருணர்வில் அவளின் முகத்தருகே வியந்து நின்றான் ஆண்.

பெரும் எதிர்பார்ப்புடன் வந்து வார்ப்புச்சிலையைப் பார்த்த மையூர்கிழாரின் முகம் சற்றே வாடியது, “அழகாய் இருக்கிறது. ஆனால், புதுமை இல்லையே!” என்றார்.

காராளி சொன்னான், “அவளின் கையில் இருக்கும் அகலில் விளக்கேற்றிப் பாருங்கள். புதுமை துலங்கும்.”

அந்தப் புதிய விளக்கில் எண்ணெய் ஊற்றி விளக்கேற்றினர். தீச்சுடர் எரியத் தொடங்கியது. எல்லோரும் கவனமாகப் பார்த்தனர். விளக்கின் ஒளி, இருவரின் கன்னங்களிலும் பட்டுத் தெறிப்பதை கண்கள் உற்றுப்பார்க்கையில் காராளி கூறினான், “பின்புறம் நீளும் நிழலைப் பாருங்கள்.”

பக்கவாட்டில் ஏந்தி நின்ற வலதுகையில் தீபம் எரியத் தொடங்கியதும், இருவரின் நிழல்களும் ஒன்றின் மேல் ஒன்றாகப் படர்ந்து ஒற்றை நிழலாக நீண்டன. ஏந்தி நிற்கும் விளக்கின் உயரத்தையும் நிழல்கள் படரும் கோணத்தையும் அவ்வளவு துல்லியமாக வடிவமைத்திருந்தான் காராளி. அதைப் பார்த்த அனைவரும் மெய்ம்மறந்து நின்றனர்.

காராளி சொன்னான், “அந்தரங்க அவையில் காமன் விளக்கில் சுடர் ஏற்றியதும் அவர்கள் ஒளியின் வழியே நிழலுள் கரைவர். தனது நிழல் எது எனப் பிரித்தறிய முடியாத தவிப்பு, இரவு முழுவதும் அவர்களைச் சூழும். காமம், ஒளியால் அல்ல... ஒளி ஏற்படுத்தித்தரும் இருளுக்குள்தான் மலரத் தொடங்கும். நீர்மநிலையில் இருக்கும் எண்ணெய் நெருப்பாய் மாறி சுடர்வதைப் போலத்தான் தங்களுக்குள் இருக்கும் உயிர் பற்றி எறிய... ஓர் உயிராய் ஒடுங்குவர்.”

அனைவரும் வாயடைத்துப்போனார்கள். காராளி தொடர்ந்தான், ``நிழலை, இன்னும் கூர்ந்து கவனியுங்கள்.”

அதிர்ச்சியில் இருந்து மீளாதவர்கள், கண்களை அகலத் திறந்தபடி உற்றுப்பார்த்தனர். தீச்சுடர் அசையும்போதெல்லாம் நீண்டு கிடந்த நிழல்கள் அசைந்து நெளிந்தபடி இருந்தன. இறுக அணைத்துப் புரளும் உருவங்களை அவை நினைவுபடுத்தின. உருவ அசைவுகள் ஆளுக்கொன்றாகத் தோன்றத் தொடங்கின. கனவு ஒவ்வொருவருக்குள்ளும் நிகழ்ந்து கொண்டிருந்தது.

எவரும் பேசிக்கொள்ளவில்லை. ஏறக்குறைய உறைநிலையை அடைந்தனர். “காண்பவரின் கண்ணுக்குள் கனவை நிகழ்த்துவதுதான் கலை.”

காராளி, தான் முன்னர் சொன்ன சொற்களை மனதுக்குள் அசைபோட்டபடி நின்று கொண்டிருந்தான்.

பேச்சற்று நின்றிருந்த மையூர்கிழார் நேரம் கழித்துச் சொன்னார், “இந்த விளக்கு, எனது வாக்கைக் காப்பாற்றியது; உனது வாக்கை அழித்துவிட்டது.”

அவர் சொல்வதன் பொருள் யாருக்கும் புரியவில்லை. `என்ன தவறிழைத்தான் காராளி?' என, மற்றவர்கள் சிந்திக்கலாயினர்.

மையூர்கிழார் சொன்னார், “மிகச்சிறந்த பரிசுப்பொருளைக் கொண்டு செல்வேன் என்ற எனது வாக்கை, இந்தச் சிலை காப்பாற்றிவிட்டது. ஆனால், அனுபவமில்லாதவன் என்ற உனது வாக்கை இது பொய்யாக்கிவிட்டது.”


அரங்கம், சிரிப்பால் நிரம்பியது. காராளி, சற்றே தலைவணங்கி நின்றான். இந்தச் சிலையின் சிறப்பு, வலது கையில் ஏந்தி நிற்கும் விளக்கன்று; இடதுகையில் பிடித்திருக்கும் மலர்தான். ஆனால், அது யார் கண்ணுக்கும் படவில்லை. யாரும் அதைப் பொருட்படுத்திப் பார்க்கவில்லை. பெரும்படைப்பை உருவாக்கும் கலைஞனுக்கு ஏமாற்றமே மிஞ்சும். காராளிக்கும் அதுவே மிஞ்சியது. ஆனாலும் யாரேனும் ஒருவரின் கண் அந்தச் சிறப்பைக் கண்டறியும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. அகம் மகிழ்ந்து பாராட்டினார் மையூர்கிழார். ``மெருகேற்றும் பணியை விரைவில் முடியுங்கள்'' என்று உற்சாகமாகச் சொல்லிச் சென்றார். வேலைகள் முன்னிலும் வேகமாக நடந்தன.

இந்த நிலையில்தான் மதுரையிலிருந்து செவியன் ஓலை கொண்டுவந்தான். `கொற்றர்களை அழைத்துக்கொண்டு உடனே வரவேண்டும்' என்று.

ஐம்பது கொற்றர்களோடு இளமருதன் மறுநாள் புறப்படுவதாக முடிவாயிற்று. காராளி செய்துகொண்டிருக்கும் காமன் விளக்கின் பணிகள் முடிவடைய, இன்னும் ஒரு வார காலம் ஆகும். ஆனால், நாளை தனது மகன் வெறுங்கையோடு போனால் நன்றாக இருக்காது. ஏதாவது பரிசுப்பொருள் கொண்டுபோக வேண்டுமே என எண்ணினார் மையூர்கிழார். ஒன்றும் பிடிபடவில்லை. தனித்துவம் இல்லாத பொருளைக் கொடுத்துவிடுவதை மனம் ஏற்கவில்லை. ‘சரி, விடியட்டும் பார்க்கலாம்’ என முடிவுசெய்தார்.

மறுநாள் அதிகாலை, மலையடிவாரத்தில் உள்ள தனது நிலத்தின் விளைச்சலைப் பார்க்க மூன்றேர் உழவன் சென்றான். காட்டாற்றின் அக்கரையில் இருந்தது அவனது விளைநிலம். இரவு கடும் மழை பெய்திருந்தது. காட்டாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியிருக்க வேண்டும். இப்போது சற்றே குறைந்திருந்தது. ஆனாலும் ஆற்றைக் கடக்க முடியாது. கரையில் நின்று பார்த்துக்கொண்டிருந்தான். அடித்துவரப்பட்ட பெரும்மரத்தின் தூர்ப்பகுதி கரையில் இருந்த பாறையின் இடுக்கில் செருகி நின்றது.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த அவனின் கண்களுக்கு, மரத்தின் மேல் ஈரத்தில் நடுங்கியபடி அமர்ந்திருந்த இரண்டு சிறு உயிரினங்கள் தெரிந்தன.



அருகில் சென்று உற்றுப்பார்த்தான். அவை என்ன உயிரினம் எனப் புலப்படவில்லை. இதற்கு முன்பு இவற்றைப் போன்ற ஒன்றைப் பார்த்ததில்லை. அவை ஈரத்துக்கு நடுங்கியபடி இருந்தன. பார்க்கவே மிகவும் கவலையாக இருந்தது. அவை இரண்டும் குழந்தைகளைப்போல கண்களால் மிரண்டு பார்த்துக்கொண்டிருந்தன. நீரின் போக்கு, அவற்றை பெரும் அச்சம்கொள்ளச் செய்தது. அவற்றால் சிறிதும் நகர முடியவில்லை. சற்றே நகர்ந்தாலும் நழுவி நீருக்குள் விழுந்துவிடும் ஆபத்து இருந்தது.

உழவன், அருகில் சென்று அவற்றைக் காப்பாற்றலாம் என எண்ணினான். ஆனால், அருகில் சென்றால் கடித்துவிடுமோ என்ற அச்சம் வந்தது. அவை கொடிய நஞ்சாக இருந்தால் என்ன செய்ய முடியும்? எனவே, இறங்கிப் போய்ப் பிடிக்க வேண்டாம். அவையாகக் கரைக்கு ஏறுவதைப்போல ஒரு பெரிய கட்டையை எடுத்து கரைக்கும் அவை இருக்கும் கொப்புக்கும் இடையில் பாலம் அமைத்தான். ஆனால் அவையோ, அச்சத்தில் நடுங்கியபடி சிறிதும் நகராமல் அப்படியே ஒண்டிப்போய் நின்றன.

துணிந்து நீருக்குள் இறங்கி, அவற்றின் அருகில் சென்றான். அவை இரண்டும் பயந்து பம்மின. அவற்றைப் பிடித்துக்கொண்டு கரைக்கு வந்தான். அவை ஒன்றும் செய்யாமல் அப்படியே இருந்தன. விசித்திர வடிவம் தாங்கிய விலங்கை அவன் நீண்ட நேரம் பார்த்துக்கொண்டே இருந்தான்.

குடித்தலைவர் மையூர்கிழாரிடம் கொண்டுபோய்க் கொடுப்போம் என முடிவுசெய்து, கிழாரின் மாளிகைக்கு வந்தான். அவரோ மகனை, கொற்றர்களுடன் மதுரைக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டிருந்தார். வாழ்த்துச் சொல்ல வந்த பாணர் கூட்டம் ஒன்று, அங்கு காத்திருந்தது.

மாளிகையின் உள்ளே வந்த உழவன், “இந்தப் புதுமையான விலங்கைப் பாருங்கள்” என்று சொல்லி, அவற்றை வெளியே எடுக்க முயன்றான்.

அவை உழவனைவிட்டு வெளியே வராமல் அவனது ஆடைக்குள் ஒடுங்கிப் பம்மின. அவன், இடுப்பைப் பிடித்து இழுத்து வெளியே விட்டான். வட்டவடிவக் கண்களால் மிரண்டு மிரண்டு விழித்தன. மையூர்கிழாரும் உடன் இருந்த அனைவரும் இந்த விலங்கை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தனர். யாரும் இதற்கு முன் இவற்றைப் பார்த்ததில்லை. இவை என்ன வகை விலங்கு என, ஆளுக்கொரு விளக்கத்தை அளித்துக் கொண்டிருந்தனர். சற்றுத்தள்ளி நின்ற பாணர் கூட்டத்தின் முதியோன் ஒருவன் எட்டிப்பார்த்தபடி சொன்னான், “இது பறம்புநாட்டின் தெய்வவாக்குச் சொல்லும் விலங்கு. பெரும்மழையில் அடித்து, தரைக்கு வந்து சேர்ந்திருக்கிறது.”

பாணனின் குரல், வியப்பை ஏற்படுத்தியது. அவற்றின் மீதான வியப்பு இன்னும் அதிகமானது. அதுவரை தள்ளி நின்று பார்த்துக்கொண்டிருந்த மையூர்கிழார், இப்போது அருகில் வந்து அவற்றைத் தொட்டுத் தூக்கினார். அவை அஞ்சி மிரண்டன.

புறப்படவேண்டிய நேரம் வந்துவிட்டதை நினைவுபடுத்த, அவரைத் தேடி வந்தான் இளமருதன். தந்தையின் கையில் புதுமையான விலங்குகள் இருப்பதைப் பார்த்தான். அவை என்ன விலங்கு என அவனுக்குப் புரியவில்லை. அவற்றின் தோற்றம், சற்றே அருவருப்பை ஏற்படுத்துவதுபோல் இருந்தது.

மையூர்கிழார் சொன்னார், “மகனே நீ எடுத்துச் செல்லவேண்டிய பரிசுப்பொருள்கள் தாமாக வந்து சேர்ந்திருக்கின்றன.”

“இவற்றையா... அருவருப்புக்கொண்ட இந்த விலங்குகளையா எடுத்துச்செல்லச் சொல்கிறீர்கள்?”

``ஆம். பாண்டிய வேந்தன் நிமித்தம் பார்ப்பதில் மிகுந்த நம்பிக்கையுள்ளவன். இளவரசனின் மணவிழாவின்போது பறம்புநாட்டின் தெய்வவாக்கு விலங்கு மதுரைக்கு வந்து சேர்வதை மிக நல்ல நிமித்தமாக நினைப்பான். எவராலும் கொடுக்க முடியாத பரிசுப்பொருளை இத்தனை மாதங்களாகத் தேடிக்கிடந்தோம் அல்லவா? இதோ உரிய நேரத்தில் தானாக வந்து சேர்ந்திருக்கின்றன. இவற்றை நீ கொண்டு செல். இரு வாரங்கள் கழித்து, மணவிழாவுக்கு காமன் விளக்கோடு நான் வந்து சேர்கிறேன்.”

சுற்றி இருந்த அனைவரும் வாயடைத்துப் போனார்கள். மையூர்கிழாரின் குரலில் இருந்த உற்சாகம் இளமருதனையும் தொற்றியது.

இரட்டைக் குதிரைகள் இழுத்துச் செல்லும் ஐந்து பெருவண்டிகள், மதுரையிலிருந்து வந்திருந்தன. அவற்றில் கொற்றர்கள் ஏறி அமர்ந்தனர். அவர்களுக்கு இடையில் சதுரவடிவக் கூண்டுக்குள் மிரட்சி விலகாமல் அவை இருந்தன. ஆலாவைச் சுண்டியபடி மதுரை நோக்கிப் புறப்பட்டான் இளமருதன்.

வெங்கல்நாட்டு மன்னனின் வளாகம் முழுவதும் இதுவே பேச்சாக இருந்தது. வேந்தனை வியக்கவைக்கும் பரிசுப்பொருள்களோடு மகனும், இளவரசனை வியக்கவைக்கும் பரிசுப் பொருளோடு

தந்தையும் மதுரைக்குள் நுழைய உள்ளனர். இது வெங்கல்நாட்டுக்கு நல்ல பலனைத் தரும் எனக் கருதினர்.

மையூர்கிழாரைப் பார்த்துப் பாட வந்த பாணர்கள், பாடாமலேயே பெரும்பொருளைப் பரிசாகப் பெற்றனர். “நீங்கள் சொன்ன செய்தி ஏற்படுத்தியதைவிட பெரும்மகிழ்வை உங்கள் பாடலால் ஏற்படுத்திவிட முடியாது” என்று கூறியபடி மையூர்கிழார் அள்ளி வழங்கினான்.

அவர்கள், அவை நீங்கி வெளியேறினர். முகத்தில் கவலையின் ரேகை படர்ந்திருந்தது. அன்றைய பகல் முடியும் முன் வெங்கல்நாட்டின் எல்லையைக் கடந்தனர். பேச்சற்ற நெடும்பகலாக அது இருந்தது.

நீண்டபொழுதுக்குப் பிறகு இளம் பாணனைப் பார்த்து மூத்த பாணன் கேட்டான், ``பறம்புநாட்டின் தெய்வவாக்கு விலங்கு தரை வந்து சேர்ந்ததைப் பற்றி என்ன நினைக்கிறாய்?”

``பாரி, இனி தனது ஆற்றலை இழக்கத் தொடங்குவான்.”


பதில் கேட்ட மூத்த பாணன், சற்றே அமைதியோடு நடந்தான்.

“நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?” எனக் கேட்ட இளம் பாணனின் கேள்வி முடியும் முன் மூத்த பாணன் சொன்னான்,

``இறங்கி அடிக்கப்போகிறான் வேள்பாரி.”

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-22




மதுரைக் கோட்டையின் மேற்கு வாசலை நோக்கி சூரியக்கதிர்கள் தகதகத்து இறங்கிக்கொண்டிருந்தன. வாங்கிய ஒளியை அதைவிட வேகமாக வெளியில் உமிழ்ந்தன கதவுகள். அந்த நெடுங்கதவுகள் முழுக்க பொன்னாலான பூச்சுகொண்டவை. அவற்றின் குமிழ்களின் மேல் மணிக்கற்கள் பொதிந்திருந்தன. பச்சை நிறப் பெருங்கல் ஒன்று தன்னை நோக்கிவந்த செம்மஞ்சள் நிற ஒளியை, சூற்குடத்தில் உள்வாங்கி சுட்டுக் கருக்கி வெளியேற்றியது. அருவியில் நீர் விழுந்து தெறிப்பதைப்போல, பொன்பூச்சில் விழுந்து சிதறின செஞ்சூரியனின் ஒளிக்கதிர்கள்.

பொழுது மறையும் முன்னர் கோட்டைக்குள் நுழைந்தால்தான் உண்டு. அதன் பின்னர், கதவுகளைத் திறக்கவைப்பது எளிது அல்ல. காவல் வீரர்களின் கடுமை இரும்பினும் இறுகியது. பகற்பொழுதின் முப்பதாம் நாழிகை முடிந்ததும், நாழிகைக் கணக்கன் நிலைமாடத்தின் மணியோசையை எழுப்புவான். அந்த ஓசை கேட்டதும் நெடுங்கதவுகளின் குறுக்குத்தடிகளை யானையைக்கொண்டு தூக்கிச் செருகுவர். அதன் பின், மறுநாள் காலை மீண்டும் யானையைக் கொண்டுவந்தே குறுக்குத்தடிகளை விலக்குவர்.

கோட்டையின் கதவுகள் மூடப்பட்ட பின் அவற்றைத் திறக்கவைப்பதெல்லாம் இயலாத செயல். அதை உணர்ந்தே விரைந்து பயணித்தான் செவியன். அவன் குதிரைதான் முன்னால் போய்க்கொண்டிருந்தது. அதை அடுத்து இளமருதனின் குதிரை. தொடர்ந்து சற்றுத் தொலைவில் ஐந்து வண்டிகள் வந்தன. இளமருதன் சிறுவயதில் பார்த்த மதுரையை இப்போது மீண்டும் பார்க்கப்போகிறான். தொலைவிலேயே கோட்டைச்சுவர் தெரியத் தொடங்கியது. மதுரையை அடைத்து நின்றது செம்பொன் நிறத்தாலான நெடுங்கோட்டை. அதன் பிரம்மாண்டத்தைப் பார்த்து வாய் பிளந்தபடி வந்துகொண்டிருந்தனர். கோட்டை வாயிலில் வந்து அவர்கள் நிற்கும்போது முழுமையாக இருள் சூழ்ந்துவிட்டது. நெடுங்கதவுகள் அடை பட்டிருந்தன. தீப்பந்தங்களின் வெளிச்சத்தில் பொன்பூச்சு மின்னியது.


மேற்கு வாசலின் தளபதியை அழைத்துவரச்சொல்லி, பெருங்குரலில் கத்தினான் செவியன். கோட்டை வாயிலின் மேல்மாடத்தில் நின்றிருந்த காவலர்கள் வியந்து பார்த்தனர். வருகிறவர்கள் கோட்டைக் கதவுகளைத் திறக்கச்சொல்லி முறையிடுவார்கள். ஆனால், இவனோ தளபதியை அழைத்து வரச்சொல்லி ஆணை பிறப்பிக்கிறான். வந்திருப்பவன் மதுரையின் நிர்வாகத்தை நன்கு அறிந்துள்ளான் என்பதை அவனது குரலே சொல்கிறது. மறுசொல் கூறாமல் தளபதியை அழைக்கப் போனார்கள்.

இளமருதன் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். யானையின் மீது வீரன் அமர்ந்து கொடியைத் தாழ்த்தாமல் உள்நுழையக்கூடிய அளவு உயரம்கொண்ட கோட்டை வாயில். காற்று புகாவண்ணம் அடைப்பட்டிருக்கும் அந்த நெடுங்கதவுகளின் பொன்பூச்சில்தான் எவ்வளவு வேலைப்பாடுகள். குமிழ்களின் மேல் கால் பதித்து மயில் ஒன்று நிற்கிறது. அதன் தோகை ஒரு பாதி விரிந்திருக்க, இடப்புறமாகத் திரும்பி வாயிலில் நிற்பவர்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறது மயில். என்ன அழகான வேலைப்பாடு. இந்தக் கதவுகள் முழுக்க எவ்வளவு நுட்பங்கள். ஒரே ஒரு பரிசுப்பொருளை உருவாக்க நமக்குப் பல மாதங்கள் ஆகின்றன. ஆனால், வாயிற் கதவுகளிலேயே எவ்வளவு வேலைப்பாடுகள்.

இளமருதனின் மனதில் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தபோது, மேல்மாடத்தில் வந்து நின்ற மேற்குவாசல் தளபதி மாரையனிடம், தாங்கள் யார் என செவியன் சொல்லி முடித்தான். ‘கட்டுமானப் பணிக்கு அழைத்துவரப்பட்டிருக்கும் கொற்றர்களை உடனடியாக உள்ளே அனுப்ப வேண்டும். அரண்மனையில் பணிகள் இரவு பகலாக நடக்கின்றன. இவர்களை நாளை பகல் வரை வெளியில் நிறுத்தினால், நாம் தண்டிக்கப் பட்டுவிடுவோம்’ என்பதை உணர்ந்தான் மாரையன். ஆனால், கோட்டைத் தளபதியின் உத்தரவு இல்லாமல் நெடுங்கதவைத் திறக்க இயலாது. உடனடியாக அவரைக் காண விரைந்தான். உடன் இரு வீரர்களும் சென்றனர்.

மதுரைக் கோட்டையின் நான்கு வாசல்களுக்கும், வாசலுக்கு ஒருவர் என நான்கு வாயில் தளபதிகள் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் கோட்டைத் தளபதிக்குக் கட்டுப்பட்டவர்கள். மாலையில் கோட்டைக் கதவுகள் மூடப்பட்ட பின் கோட்டைத்தளபதி உத்தரவு இல்லாமல் அவற்றை மீண்டும்

திறக்க முடியாது. பகலிலும் இந்த நெடுங்கதவை முழுமையாகத் திறந்து மூடும் அதிகாரம் அவரிடமே இருந்தது. கதவின் கீழ்ப்புறத்தில் மனிதர்கள் வந்துபோக ஏற்றதாகச் சிறிய அளவில் உள்ள ‘பிள்ளைக் கதவுகளை’த் திறந்து மூடும் அதிகாரம் தான் வாயில் தளபதிகளுக்கு உண்டு.



மதுரையின் கோட்டைத் தளபதி சாகலைவன். வீரத்துக்கும் தந்திரத்துக்கும் பெயர் எடுத்தவன். அவன் கோட்டையின் எந்தத் திசையில் இருப்பான் என்பதை, கீழ்நிலையில் இருக்கும் அதிகாரிகளால் கண்டறிந்துவிட முடியாது. அதுவும் இந்த விழாக்காலத்தில் அவனைக் கண்டறிவது எளிது அல்ல.

மாரையனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மாலையில் கிழக்கு வாசலில் சாகலைவனைப் பார்த்ததாக ஒருவர் கூறினார். இங்கிருந்து கிழக்கு வாசலுக்குச் செல்வது மிகக் கடினம், நகர் முழுவதும் விழாக்கோலம் பூண்டுவிட்டது. யவனர்கள் இன்றிரவு வந்து இறங்கப்போகிறார்கள். வணிக வீதிகளில் எள் விழ இடம் இல்லை. எங்கும் பெருந்திரள் கூட்டம். குதிரையை விரட்டிச் செல்ல முடியாது. கூட்ட நெரிசலில் சிக்கினால் கிழக்கு வாசலை அடையும் முன்னே விடிந்துவிடும். என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பிப்போய் நின்றான் மாரையன். அவனால் நிற்கவும் முடியவில்லை; நகரவும் முடியவில்லை.

யோசித்தபடியே கூட்டம் குறைவான தென்புற வீதியில் நுழைந்தான். அந்த வீதி திரும்பும் இடத்தில் இரு குதிரைகள் பூட்டப்பட்ட தேர் ஒன்று கண்ணில் பட்டது. முன்னால் நான்கும் பின்னால் நான்குமாக எட்டு குதிரை வீரர்கள் ஈட்டியை ஏந்தியபடி சென்றுகொண்டிருந்தனர். போய்க்கொண்டிருப்பது அரசின் உயர் அலுவலர் என்பது புரிந்தது. யாராக இருக்கும் என்பதை அறிந்துகொள்ள விரைந்து சென்றான். அவர் அரசாங்கத்தின் களஞ்சியத் தலைவர், ‘வெள்ளி கொண்டார்’. இந்தப் பேரரசின் செல்வத்தைக் கட்டிக்காக்கும் மாமனிதர்.

அவரைக் கண்டதும் குதிரையைவிட்டு இறங்கி வணங்கினான். மேற்கு வாயில் தளபதியைப் பார்த்தவுடன் அடையாளம் கண்டார் அவர். என்ன என்று விசாரிக்க, சூழலை விளக்கிச் சொன்னான் மாரையன். எந்த ஒன்றையும் காதுகொடுத்துக் கேட்பது எவ்வளவு ஆபத்தானது என்பது, கேட்ட பின்புதான் புரியும். வெள்ளிகொண்டாரின் நிலைமை அதுவே. அவரைப் போன்ற உயரிய இடத்தில் இருப்பவர்களின் கவனத்துக்கு ஓர் இக்கட்டு வந்த பின், அதற்குத் தீர்வுகாணும் பொறுப்பும் இயல்பாக அவர்களையே வந்துசேருகிறது.

வெள்ளிகொண்டார் போகும் வேலைக்குக் குறுக்கே, கோட்டைத் தளபதியைக் கண்டறியும் வேலையும் வந்து நின்றது. என்ன செய்யலாம் என்று சிந்தித்தார். தேரோட்டி திரும்பிப் பார்த்தான். அவரின் உத்தரவு கிடைக்காததால் தேர் அசைவற்று நின்றது. அருகில் சற்றே இளைப்பாறியபடி நின்றான் மாரையன்

“இந்தப் பெருங்கூட்டத்தில் நீ எங்கு போய்க் கண்டறிவாய். இரவு முழுவதும் தேடிக்கொண்டே இருக்க வேண்டியதாகிவிடும். எனது தேரில் வந்து உட்கார்” என்றார்.

சற்றே தயக்கத்துடன் தேரில் ஏறி அவரின் எதிரில் ஒடுங்கி உட்கார்ந்தான். தேர் புறப்பட்டது. முன்செல்லும் குதிரை வீரர்களைக் கண்டதும் கூட்டம் தானாக விலகி இடம்கொடுத்தது.

தென்புறச் சாலையில் இருந்து கிழக்கு முகமாக உள்வீதிக்குள் திரும்பியதும் திகைத்துப்போனான் தேரோட்டி. கூட்டத்தை விலக்கி தேருக்கு வழியை அமைக்க முடியுமா என்பது ஐயமே. முன்னால் செல்லும் குதிரைவீரர்கள் நால்வரும் ஓசை எழுப்பியபடி சென்றனர். ஆனாலும், தேரின் நகர்வு மிகவும் மெதுவாகத்தான் இருந்தது.

மாரையனின் கண்களில் இருந்து மிரட்சி அகலவில்லை. “இப்போதே இப்படி என்றால் மணவிழா தொடங்க இன்னும் இரு வார காலம் இருக்கிறதே, மதுரை எப்படித் தாங்கும்?” என்றான்.

தேரின் இருக்கையை முழுவதும் அடைத்து உட்கார்ந்திருந்த அந்த அகண்ட மனிதர், வாயில் வெற்றிலை மென்றபடி, “மணவிழா என்றால் மதுரை தாங்கியிருக்கும். ஆனால், இது வெறும் மணவிழா மட்டும் அல்லவே?” என்று சொல்லி நிறுத்திக்கொண்டார். மாரையனுக்குப் புரியவில்லை.

ஆனால், அவரிடம் விளக்கம் கேட்கும் தகுதி அவனுக்கு இல்லை. அதனால் அடக்கமாக அவரது முகம் பார்த்தான். அவனது பார்வையின் பொருள் புரிந்தது. வயிறு பொருமி ஏப்பம் வந்தது. நீண்ட ஒலியோடு ஏப்பம் விட்டார். பெருத்துச் சரிந்திருந்த வயிறு சற்றே உள்வாங்கி இறங்கியது. இரவு உணவு முடித்துவருகிறார். ஆனால், தனக்கு அதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை என்று மாரையன் நினைத்தபோது, வெள்ளிகொண்டார் தனது நெஞ்சுக்கூட்டை இடதுகையால்

அழுத்தித்தடவியபடி, “எல்லாம் இதுவால் வந்தது” என்று விரல்களில் சிக்கிய முத்துமாலையை தொட்டுத் தடவிக்கொண்டே சொன்னார்.

“கொற்கை முத்து இப்போது யவன தேசத்தின் கனவுப்பொருளாக மாறிவிட்டது. சேரனின் மிளகுக்கு இணையான வணிகப்போட்டிக்கு எதுவுமில்லை என்ற நிலை உடைந்துவிட்டது. மிளகும் முத்தும் யவன வணிகத்தில் இணையான இடத்தைப் பிடித்தன. அதுதான் நேற்று வரை இருந்த நிலை. ஆனால், இந்தத் திருமணம் வணிக நிகர்நிலையை உடைத்து பாண்டியனை முதல் நிலைக்குக் கொண்டுவந்துள்ளது.

பாண்டிய இளவரசன் பொதியவெற்பன் மணமுடிக்கப்போவது இன்னொரு வேந்தன் மகளாக இருந்திருந்தால், இந்தத் திருமணம் இரு நாடுகளின் திருவிழாவாகத்தான் இருந்திருக்கும். ஆனால், இன்று அப்படி அல்ல. இந்தப் புவியின் பெருவிழாவாக இது மாறிப்போனது. கடலையும் காற்றையும் அறிந்து இந்தப் புவியெங்கும் வணிகம் செய்துகொண்டிருப்பவர்கள் நூற்றியிருபது வணிகர்கள். அவர்கள் தங்களுக்கு என்று ‘சாத்துக்கள்’ என்ற அமைப்பை வைத்துள்ளனர். பேரரசுகளை விஞ்சும் செல்வத்தின் நாயகனாக சாத்துக்கள் அமைப்பின் தலைவன் இருக்கிறான். அந்தத் தலைவனை ‘சூல்கடல் முதுவன்’ என்ற பெரும்பெயர் கொண்டு அழைக்கின்றனர். அந்தச் சூல்கடல் முதுவனின் மகள்தான் மதுரையின் இளவரசனை மணக்கப்போகிறவள். அவளின் பெயர் ‘பொற்சுவை’.

ஓய்வறியா அலைகடலின் பாய்மரங்கள் வைகைக் கரை நோக்கியே வலசை வந்து கொண்டிருக்கின்றன. கடற்பரப்பு எங்கும் மிதந்துகிடக்கும் நாவாய்கள் இப்போது கொற்கைத் துறையில் நங்கூரம் இறக்கிவிட்டன. இப்படி ஒரு தகுதி இந்த மண்ணில் இதுவரை எந்தப் பேரரசுக்கும் கிடைக்கவில்லை. இந்தத் திருமணம் பாண்டியப் பேரரசு கடல் வணிகத்தில் முதல்நிலையைப் பெற்றதைப் பறைசாற்றும் அரசியல் நிகழ்வு. இதனால், இந்தப் பேரரசு காணப்போவதோ கரைபுரளும் செல்வச்செழிப்பு.

தன் இரண்டு மகன்களையும் கடற்புயலில் இழந்தவன் சூல்கடல் முதுவன். அவனின் ஒரே மகள் பொற்சுவை இப்போது மதுரைக்கு மணமகளாக வரப்போகிறாள். உலகெங்கும் இருந்து வணிகத்தால் நிரப்பபட்ட பெருஞ்செல்வம் நெடும்படி தாண்டி பாண்டியனின் கருவூலம் வந்துசேரவுள்ளது.

பொற்சக்கரங்கள் பூட்டப்பட்ட சாத்துக்களின் வண்டிகள், மதுரையின் பெருந்தேர் சாலைகளில் தடம்பதிக்க இருக்கின்றன. பொற்குவியலில் திணறப்போகிறது இந்த மாமதுரை. யவனம் முதல் சாவகம் வரை கண்டறியப்பட்ட அதிசிறந்த கலைப் படைப்புகள் இந்த நகரின் நெடுவீதி எங்கும் நின்று மிளிரப்போகின்றன.

வணிக சாத்துக்களின் வரைவில்லா செல்வத்தைவிட இந்தப் பேரரசே செழிப்புமிக்கது என்பதைக் காட்ட வேண்டிய தேவை நம் பேரரசருக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, அரசாங்கக் கருவூலத்தில் குவிந்துகிடக்கும்

செல்வம் எல்லாம் மதுரையின் வீதிகளில் அள்ளிவீசப்பட உள்ளன.

இந்த இருவரும் இணையும் இந்த வேளையை மிகுந்த கவனத்தோடு பயன்படுத்தக் களமிறங்கி விட்டனர் யவனர்கள். பேரரசர் குலசேகரப்பாண்டியனையும் சூல்கடல் முதுவனையும் ஒருசேரத் திகைப்பில் ஆழ்த்த அவர்கள் தயாராகிவிட்டனர். இந்த மணவிழாவுக்கான பரிசுப்பொருள்களை கப்பல் நிறைய எடுத்து வந்துள்ளனர். யவனத் தேறல் மட்டுமே ஆறு திறளி மரப்படகில் கரை வந்து சேர்ந்தது என்று செய்தி.

இந்தத் திருமணத்தின் வழியாக யவனர்களுக்கு ஒரு செய்தி தெளிவாகச் சொல்லப்பட்டுவிட்டது. அவர்களும் அதைப் புரிந்துகொண்டார்கள். இனி யவன அரசர்கள் இந்த நாவலத்தீவின் முதற்சிறப்பை பாண்டியருக்கே செய்வார்கள். அதன் அறிகுறிகளும் தொடங்கிவிட்டன.



இன்னும் சொல்ல எவ்வளவோ இருக்கின்றன. மதுரை விழாக்களின் நகரம். இந்த மாநகரின் மண்ணடுக்கு விழாக்களில் ஏற்றப்படும் தீபப் புகையால்தான் சாம்பல் நிறம்கொண்டுள்ளதோ என்று நான் பலநேரம் நினைத்தது உண்டு. ஆனால், இப்போது நடைபெறப்போகும் இந்த மணவிழாதான் அதன் உச்சம். இந்த உச்சத்தை மதுரை இனி எந்தக் காலத்தில் எட்டும் எனத் தெரியாது. இன்று நள்ளிரவுக்குப் பிறகு விற்பனைக்கான பொருள்களை மட்டும் யவனர்கள் நகரத்தின் வணிக வீதிக்குக் கொண்டுவர உள்ளனர். அதை வாங்கத்தான் மக்கள் பெரும் ஆர்வத்தோடு திரண்டுள்ளனர். திருமணத்தை முன்னிட்டு எல்லா குடும்பங்களும் அலங்காரத்துக்குத் தயாராகி வருகின்றன. யவனர்களே அலங்காரப் பொருளின் அடையாளமாகிவிட்டார்கள்.

கோட்டையின் கிழக்கு வாசலுக்கு வெளிப்புறத்தில் இரு காதத் தொலைவில் இருக்கிறது யவனச்சேரி. இன்று மாலைதான் கொற்கையில் இருந்து பொருள்கள் எல்லாம் அங்கு வந்துசேர்ந்தன. அதில் விற்பனைக்கான பொருள்களை மட்டும் தனியே பிரித்தெடுத்து, நள்ளிரவுக்குப் பின்னர் வணிக வீதிக்குக் கொண்டுவருவார்கள். எனவே, இரவின் பதினைந்தாம் நாழிகையின்போது கோட்டையின் கிழக்கு வாசல் திறக்க இருக்கிறது. அப்போது கோட்டைத் தளபதி சாகலைவன் அங்கிருப்பான். அதுவரை அவன் எங்கிருப்பான் என்பதுதான் கேள்வி.”

அவர் சொல்லியதை மாரையன் வாய்பிளந்து கேட்டுக்கொண்டு வந்தான். தேர் கிழக்குப் பக்கமாகவோ, வணிக வீதியின் பக்கமாகவோ செல்லாமல் வட திசையின் தனித்த மாளிகையை நோக்கிப் போனது. இந்தப் பக்கம் எதற்குப் போகிறது என்பது அவனுக்கு விளங்கவில்லை. அவரிடம் விளக்கம் கேட்க முடியாமல் சுற்றும்முற்றும் பார்த்தபடி வந்துகொண்டிருந்தான்.

மாளிகையின் வாசலில் வந்து நின்றது தேர். முன்னால் இருந்த குதிரை வீரன் ஒருவன், வேகமாக வந்து அவர் தேரை விட்டு இறங்கக் கைப்பிடித்து நின்றான். தொடர்ந்து மாரையன் இறங்கினான். மாளிகை,

அலங்காரத்தால் மின்னியது. எங்கும் தீபங்கள் ஏற்றப்பட்டுக் கண்சிமிட்டியபடி இருந்தன. வெள்ளிகொண்டார் வந்ததை அறிந்து உள்ளிருந்த இளம்பெண்கள் இருவர் ஓடோடி வந்து, அவரது கைப்பற்றி வாசல் படி கடந்து உள்ளே அழைத்துச் சென்றனர்.

மாரையன் முன்னறையில் அமரவைக்கப்பட்டான். பட்டுத் திரைச்சீலைகள் காற்றில் அசைந்தபடி இருக்க, முகங்கள் இங்குமங்குமாக நழுவி மறைந்தன. இளமஞ்சள் நிறத்தில் ஒளிரும் தீபத்தின் விளிம்பில் எப்போதும் ஒரு செந்நிறம் கலந்திருக்கும். இயற்கை எந்த ஓர் அழகையும் முழுமைகொள்ள அதன் விளிம்பில் அடர்வண்ணம் பூசுகிறது. திரைச்சீலைகளின் விளிம்பில் அடர்வண்ண முகங்கள் மறைந்து மறைந்து தெரிந்துகொண்டிருந்தன. காமக்கிழத்திகள் பற்றிய சொல்லோவியங்களைப் பொய்யாக்கின அந்த முகங்கள். எந்தச் சொல்லாலும் இந்த அழகைச் சொல்லிவிட முடியாது என்று மாரையனுக்குத் தோன்றியது.

கோட்டையின் மேல்மாடத்திலிருந்து இரவு முழுக்க வெளிப்புற இருளை வெறித்துப்பார்த்துப் பழகிய அவனின் கண்கள், மின்னும் ஒளிவிளக்கில் பொன்முகங்கள் மிதந்துபோவதைப் பார்த்துத் தடுமாறிக்கொண்டிருந்தன.

`இந்தப் பேரழகிகளிடமிருந்து வெள்ளிகொண்டார் மீண்டு வந்து அதன் பின் நாம் தளபதியைத் தேடிப்பிடிப்பதற்குள் விடிந்துவிடும்’ என்று அவன் மனதில் நினைத்துக் கொண்டிருந்தபோது யானைக் கட்டுத்தறியின் தலைவனுக்கு சாகலைவன் எழுதிய ஓலையை, பெண்ணொருத்தி கொண்டுவந்து கொடுத்தாள். ஓலையை வாங்கிப் படித்த மாரையன் அதிர்ந்துபோனான்.


“கோட்டைத் தளபதியும் இங்குதானா?”

‘குறித்த நாழிகைக்குள் எல்லாவற்றையும் சரியாகச் செய்து முடிக்க வேண்டும் என்று கோட்டைத் தளபதி அடிக்கடி சொல்வது இதைத்தானா?’ - கேள்வியோடு அந்த இடம் விட்டு நீங்கினான்.

**கோ**ட்டை மேற்கு வாசலின் வெளிப்புறம் அவர்கள் காத்திருந்தனர். செவியன் சற்றே பொறுமையிழந்திருந்தான். இளமருதனுக்கு அங்கு வியந்துபார்க்க நிறையவே இருந்தன. அகழியில் முதலைகள் தெரிகிறதா என்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர் மண்ணீட்டாளர்கள். தாமரை மொட்டுகளும் ஆம்பல் மலர்களும் நீர் எங்கும் நிறைந்திருந்தன. பொழுது நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருந்தது.

கோட்டைத் தளபதியிடம் வாங்கிய ஓலையைக் கட்டுத்தறியின் தலைவன் அல்லங்கீரனிடம் கொண்டுவந்தான் மாரையன். அல்லங்கீரனுக்கு வயது அறுபதைக் கடந்திருக்கும். யானைகளின் குணம் காண்பதில் இவருக்கு இணை யாரும் இல்லை. அந்த வயதான பெரியவரை எழுப்பினான் மாரையன்.

‘நள்ளிரவு வந்து எழுப்புவதைக்கூட மன்னிக்கலாம். ஆனால், எழுந்தவனிடம் எழுத்தைக் காட்டிப் படிக்கச் சொல்பவனுக்கு மன்னிப்பே கிடையாது’ என்று புலம்பியபடியே ஓலையை வாங்கிப் படித்தார்.



அவருக்கு வந்த கோபத்துக்கு அளவே இல்லை.

“இங்கு இருப்பவை எல்லாம் பாசறையில் இருக்கும் இளவயது யானைகள் என்று நினைத்தாயா? ஐம்பது வயதைக் கடந்த யானை களைத்தான் கட்டுத்தறிக்குக் கொண்டுவருகிறோம். இவற்றை நீங்கள் சொல்லும்போதெல்லாம் வேலைவாங்க முடியாது. அதுவும் இரவு முழுநிலை உணவு மூன்று சுற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு பாரம் புல்லும் நான்கு ஆடகம் அரிசியும் அரைக் குடுபம் எண்ணெயும் பத்து பலம் வெல்லமும் பத்து பலம் உப்பும் கலந்து கொடுத்துள்ளோம். வயிறார உண்டுவிட்டு அயர்ந்திருக்கின்றன. இப்போது அவற்றை எழுப்பி வேலை வாங்குவது இயலாத செயல் மட்டுமன்று; ஆபத்தானதும்கூட.”

மாரையனுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. ஆனால், அவசர வேலைக்காக அழைத்துவரப்பட்டவர்கள் கோட்டைக்கு வெளியே காத்திருக்கிறார்கள். அவர்களை எப்படியாவது

உள்ளே அனுமதிக்க வேண்டும். அதற்காகத் தொடர்ந்து வேண்டினான்.

“கோட்டைத் தளபதி எங்கே?’’ என்று கேட்டார் அல்லங்கீரன்.

மாரையன் பதில் சொன்னான்.

“அவசரத்துக்கு அவனால் எழுந்துவந்து உன்னிடம் ஓலை கொடுக்க முடியவில்லை அல்லவா? யானையை மட்டும் உடனே எழுப்பு என்றால் என்ன பொருள்?”

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. ஆனால், பெரியவரின் கேள்வி பொருத்தமானது என்று தோன்றியது.

பிரச்னை வந்து நிற்பது மாரையனுக்கு முன்னால் நாளை விசாரிக்கப்பட்டால், அவன்தான் பதில் சொல்லவேண்டியிருக்கும். எனவே, அவன் அந்த இடத்தைவிட்டு அசைவதாக இல்லை. பெரியவர் அல்லங்கீரனுக்கும் வேறு வழி இல்லை. நீண்ட நேரம் கழித்து யானையை எழுப்ப பாகனுக்கு உத்தரவிட்டார்.




மாரையன் தன்னுடன் வந்த வீரர்களோடு வெளியில் காத்திருந்தான். சிறிது நேரத்தில் யானை வெளியேறி வந்தது. பொழுது நள்ளிரவைக் கடந்தது. தனது கால் பெருவிரலால் அதனுடைய காதின் பின்பக்கத்தை ஊன்றி உந்தினான் பாகன். ஆனாலும், அது மெள்ளவே முன்னகர்ந்து சென்றது.

பக்கவாட்டில் குதிரையில் இருந்தபடியே பாகனைப் பார்த்து மாரையன் சொன்னான், “இந்த வேகத்தில் நடந்தால், வாசலை அடைவதற்குள் விடிந்துவிடும். வேகமாக நடத்து.”

பாகன் சொன்னான்... “எனது தொடை நடுக்கத்தை நீ உணர மாட்டாய். யானைக்கு மிக மோசமான வயது ஐம்பது. இளமைக்கும் முதுமைக்கும் நடுவில் இருப்பது. அது என்ன நினைக்கிறது என்பதை நாம் கணிக்க முடியாது. இந்த வயதுடைய யானைக்கு நிலையுணவு கொடுத்து, நள்ளிரவு எழுப்புவது ஆபத்தை விலைக்கு வாங்குவதைப் போன்றது. இதுவரை இல்லாத செயலை இது இப்போது வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது.”

“ஒழுங்காகத்தானே போய்க்கொண்டிருக்கிறது. இதில் என்ன சிக்கல்?”

“எழுப்பியதிலிருந்து துதிக்கையைத் தந்தத்தில் சுற்றியபடியே வருவதைப் பார்த்தீரா? தந்தத்தில் அது கொடுக்கும் அழுத்தத்தை எனது அடித்தொடையில் உணர முடிகிறது.”


மாரையன் சற்றே அதிர்ந்து பார்த்தான்.

“எனக்குச் சொல்லப்பட்ட உத்தரவை நான் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறேன். ஆனால், எனது உத்தரவை யானை எந்தக் கணமும் மறுக்கலாம்.”

மாரையன் குதிரையை வேகப்படுத்தி முன்னால் நகர்ந்தான். நள்ளிரவின் மணியோசையை நாழிகைக் கணக்கன் எழுப்பினான். கோட்டையின் கிழக்கு வாயிலில் முரசுகள் முழங்கத் தொடங்கின. வணிகவீதியில் மக்களின் ஆரவாரம் எங்கும் எதிரொலித்தது.

யானை, கோட்டையின் மேற்கு வாசல் குறுக்குக்கட்டையைத் தூக்கி எடுத்தது. அப்படியே வலதுபுறம் திரும்புவதற்காக இடதுபாத முனையால் இடப்பாக காதின் அடியை மெள்ளத் தட்டினான் பாகன். அது அசைந்து திரும்பியது.

மாரையன் மகிழ்ச்சியோடு கதவைத் திறக்க உத்தரவிட்டான். வீரர்கள் நெடுங்கதவை இழுத்துத் திறந்தனர். இளமருதன் குதிரையைவிட்டு இறங்கி தனது ஆலாவைப் பிடித்தபடி மதுரைக்குள் நுழைந்தான். வண்டிகள் ஐந்தும் ஒவ்வொன்றாக உள்நுழைந்தன. கடைசி வண்டியில் உட்கார்ந்திருப் பவர்களுக்கிடையில் மரச்சட்டகத்தால் ஆன கூண்டு ஒன்று இருப்பதைப் பார்த்த காவல் வீரனொருவன் கேட்டான்.



“என்ன அது?”

“தெய்வவாக்கு விலங்கு’’ என்றான் ஒருவன்.

இன்னொருவன், “தேவாக்கு விலங்கு’’ என்றான்.

காவல் வீரனுக்கு அவன் சொல்வது புரியவில்லை.

“என்ன பெயர் சொல்கிறீர்கள்?” என்று மீண்டும் கேட்டான்.

“தேவாங்கு” என்றான் இன்னொருவன்.

கோட்டைக்குள் நுழைந்ததும் அவை இரண்டும் மிரண்டுபார்த்து கண்களை உருட்டின. எல்லோரும் உள்நுழைந்த உற்சாகத்தில் இருந்தனர்.

மாரையன் பெருமூச்சுவிட்டான்.

பாகனுக்கு உள்நடுக்கம் பல மடங்கு அதிகமானது. குறுக்குக்கட்டையைத் தூக்கிய பின் அது அமைதியாக நடந்துகொண்டே இருந்தது. அவனது கால்கள் இரு காதுகளுக்கு அடியில் அனைத்து உத்தரவுகளையும் கொடுத்துவிட்டன. அது எதையும் பொருட்படுத்தாமல் சென்றுகொண்டே இருந்தது. அந்தப் பெரும் குறுக்குத்தடி அதன் தந்தங்களின் மேல் வாகாக உட்கார்ந்திருந்தது. துதிக்கையை வலப்புறமும் இடப்புறமும் முழுமையாக வீசி நடந்தது. பாகன் நடுங்கினான்.

“இந்நேரம் கோட்டையின் கிழக்கு வாசலுக்குள் யவனப்பொருள்களைக் கொண்டுவந்திருப்பர்’ என்று எண்ணியபடியே நெடுங்கதவை மூட உத்தரவிட்டுவிட்டான் மாரையன். வீரர்கள் கதவை இழுத்து அடைத்தனர். குறுக்குத்தடியை பொருத்தச் சொல்வதற்காக மாரையன் திரும்பிப் பார்த்தான். தடியைச் சுமந்தபடி யானை இடப்புறம் உள்ளே போய்க்கொண்டிருந்தது. குறுந்தடியைக்கொண்டு கதவை மூடாமல் அதை எடுத்துக்கொண்டு ஏன் உள்ளே போகிறது என்று பதறிய மாரையன் அதை நோக்கி குதிரையில் விரைந்தான்.

வலப்புறம் போன வண்டியில் இருந்த தேவாங்குகள் வெளிச்சத்தைப் பார்க்க முடியாமல் கண் கூசிப் பதுங்கின. கிழக்கு வாசலின் வழியே பெரும் உற்சாகத்தோடு யவன வண்டிகள் உள்நுழைந்தன. தனது உத்தரவை மறுக்கும் யானை என்ன செய்யப்போகிறது எனத் தெரியாமல் பாகன் பதைபதைத்துக்கொண்டிருந்தபோது, யானைக்குப் பின்னாலிருந்து விரைந்து வந்த மாரையன் சற்றும் எதிர்பாராமல் குறுக்கிட்டான். அதிர்ந்த பாகனின் முகத்துக்கு நேரே ஓங்கிய துதிக்கை வந்துசென்றது!

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-23




உள்ளறை ஒன்றில் படுத்திருந்த இளமருதன் கண்விழித்தபோது, விடிந்து நெடுநேரமாகியிருந்தது. அவன் அழைத்துவந்த கொற்றர்களுக்கு வேலைகள் ஒதுக்கப்பட்டு, அவர்கள் தங்களுக்குரிய இடத்துக்குச் சென்றுவிட்டனர். தன்னை அழைத்துவந்த செவியன் எங்கே எனத் தேடியபடி வெளியே வந்தான் இளமருதன். அவனின் கண்கள் வியப்பில் மூழ்கின. தாமரை மொட்டுபோல அடுக்கடுக்காகக் குவிந்து நிற்கும் புதிய மாளிகைகள், கதிரவனின் ஒளிபட்டு வெண்பஞ்சுபோல் ஒளிர்ந்துகொண்டி ருந்தன. வியப்புற்று நின்ற அவனருகே வந்து தோள் தொட்டான் செவியன்.

“இந்தப் பகுதியில் மூன்று பெரும்மாளிகைகள் கட்டி எழுப்பப்பட்டுள்ளன. கட்டட வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டன. மர வேலைப்பாடுகளும் ஓவியப் பணிகளும்தான் நடக்கின்றன. மாளிகைக்குப் பின்புறம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பூந்தோட்டத்தில், ஒருசில பணிகளும் நடைபாதை, சுற்றுச்சுவர் போன்ற சிறுசிறு வேலைகளும்தான் மிச்சமிருக்கின்றன. நாம் அழைத்துவந்த கொற்றர்களை அங்கு அனுப்பியாகிவிட்டது” என்றான் செவியன்.

மலைப்பில் இருந்து மீளாமல் கேட்டுக்கொண்டி ருந்தான் இளமருதன். மேல்மாடத்தின் வெளிப்புற விளிம்பில், கடல் அலைகளின் வளைவுகள் சுழன்று பொங்கியபடி இருந்தன. அதைப் பார்த்தபடி கேட்டான், “எப்படி இவ்வளவு நுணுக்கமாக வடிவமைக்க முடிந்தது?”

செவியன் சொன்னான்... “அலைகள் பொங்கும் கடல்போல் மாடத்தின் விளிம்புகள் வடிவமைக்கப்பட்டிருப்பதன் காரணம், உள்ளிருக்கும் மாளிகையின் மொத்த வடிவம் சிப்பி போன்றது. சிப்பிக்குள் இருக்கும்
ஆதி இருளுக்குள்தானே வெண்முத்து சூல்கொள்ளும்?”

புரியாமல் விழித்தான் இளமருதன்.

“இதுதான் மணமக்களின் பள்ளியறை. இந்தப் பேரரசின் வம்சக்கொடி வேர்பிடித்து மலர வேண்டிய மாளிகை.”

அசைவுறா கண்கள் திரும்ப மறுத்தன.


“வாருங்கள் உள்ளே போய்ப் பார்ப்போம்’’ எனச் சொல்லி மாளிகைக்குள் அழைத்துச் சென்றான் செவியன்.

உள்ளே மகதநாட்டு வினைஞர்கள் நெடுங்கதவுகளை இழைத்துப் பொருத்தும் பணியைச் செய்துகொண்டிருந்தார்கள்.

காற்று எங்கும் நுண்ணிய மரத்தூள்கள் மிதந்துகொண்டிருந்தன. சந்தனத்தின் வாசனை மாளிகைக்குள் நுழையும் முன்னரே இளமருதனின் மூக்கில் ஏறியது. உள்நுழைந்த இளமருதன், வடிவிலும் வாசனையிலும் வண்ணத்திலும் நிலைமறந்து நின்றான்.

பெரும் வட்டவடிவில் ஒன்பது தூண்கள் நின்றுகொண்டிருந்தன. தூண்களின் மடிப்புகளும் வேலைப்பாடுகளும் இணை சொல்ல முடியாதவை. அந்தத் தூண்களின் மேல் குவிமாடம் இருந்தது. மாடத்தின் மேற்கூரை முழுவதும் ஓவியம் தீட்டப்பட்டிருந்தது. இரவு நேரத்து வானம். நிலவு ஒளிர்ந்துகொண்டிருக்க, எங்கும் விண்மீன்கள் மின்னிக்கொண்டிருக்கும் காட்சி அதில் இருந்தது. அண்ணாந்து பார்த்தபடி மேற்கூரையின் முழுவட்டத்தையும் நோக்கினான்.

“ஓவியர்கள், வேலையை முடித்துவிட்டார்கள். ஆனால், குறித்துக்கொடுத்த அந்துவன் வந்து பார்த்து `சரி' எனச் சொன்னால்தான் சாரத்தைப் பிரிக்க முடியும். இன்று நற்பகல் அவர் வந்துவிடுவார்” என்று சொல்லியபடி, “வாருங்கள் இன்னொரு பள்ளியறைக்கு” என்று அழைத்தான் செவியன்.



“இன்னொரு பள்ளியறையா?”

“ஆம், இது கார்காலப் பள்ளியறை. கீழ்நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. அடர்ந்த தூண்களும் மரவேலைகளும் இதில் அதிகம். இன்னொன்று வேனிற்காலப் பள்ளியறை. அது மேல்மாடத்தில் கட்டப்பட்டுள்ளது. வைகையின் காற்று எல்லா திசைகளிலிருந்தும் உள்நுழைவதைப்போல வடிவமைக்கப் பட்டிருக்கும்” என்று சொல்லியபடி அங்கு அழைத்துச் சென்றான். அங்கும் வேலைகள் நடந்துகொண்டிருந்தன. வேலைசெய்பவர்கள் யவனத் தச்சர்கள். வேனிற்கால வெக்கையைக் காதலின் கவசமாக மாற்றும் வித்தையைச் செய்துகொண்டிருந்தனர். விதவிதமான கைக்கருவிகளை வைத்துப் பணியாற்றினர். இளமருதன் கண்களை எங்கும் ஓடவிட்டான். அங்கு நெருக்கமாக அமைக்கப்படாமல் விலகி நிற்கும் தூண்கள், சாளரத்திலிருந்து தன்னியல்பிலே வந்து தழுவிச்செல்லும் காற்று என, இரண்டு மாளிகைகளுக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் இருந்தன. மேற்கூரை ஓவியம் மட்டும்தான் ஒன்றுபோல இருந்தது. இரவு நேரத்து விண்மீன்களும் நிலவும் ஒளிவீசியபடி.

“இந்த இரண்டை ஒன்றுசேர்த்தாலும் ஈடாக முடியாத பெரும் மாளிகை ஒன்று கட்டப்பட்டு வருகிறது” என்று சொல்லி பாண்டரங்கத்துக்கு அழைத்துச்சென்றான் செவியன்.


அங்கே வைப்பதற்காகத்தான் அவன் தந்தை காமன்விளக்கு செய்துகொண்டிருக்கிறார் என்பதால், அந்த அரங்கு எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க ஆவலுடன் போனான் இளமருதன். பளிங்குக்கற்கள் பாவப்பட்டு, நிலைச்சுவரிலும் தந்தரையிலும் பளபளப்பு ஏறியிருந்தது. ஓவியங்களும் மரவேலைப்பாடுகளும் மனிதக் கற்பனைக்கு எட்டாத பேரழகுகொண்டு விளங்கின. கலை வேலைப்பாடுகளின் உச்சம் என இந்த அரங்கைச் சொல்லலாம். நடுவில் ஆடுகளம். அதைச் சுற்றி

இசைக்கவும் பாடவும், பார்த்து ரசிக்கவும் ஏற்றவாறு ஒவ்வொன்றுக்கும் தகுந்த மேடைகள். எல்லா தூண்களிலும் சிற்ப வேலைகள் ஏறக்குறைய முடிந்துவிட்டன. சுவர்களில் சுதை வேலைப்பாட்டுக்கும் வண்ணங்கள் பூசப்பட்டுவிட்டன. மேற்கூரை ஓவியமும் முடிந்துவிட்டது. அந்துவன் வந்து பார்த்துவிட்டால் எல்லாம் முற்றுபெற்றுவிடும்.”

நிலைமறந்து பாண்டரங்கத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான் இளமருதன்.

“வாருங்கள், அந்துவன் வருவதற்குள் நாம் உணவருந்திவிட்டு வந்துவிடுவோம்” என்று சொல்லி அழைத்துச்சென்றான் செவியன்.

கோட்டைக்கு தெற்கே மதுரையின் இடுகாடு இருந்தது. இறந்துபோன மேற்கு வாசலின் தளபதி மாரையனின் உடல் அங்குதான் கொண்டுவரப்பட்டது. வீரர்கள் உடலேந்தி வந்தனர். நேற்று நள்ளிரவு யானையைக் குறுக்கிட்ட மாரையனை, சற்றும் எதிர்பாராமல் துதிக்கையால் சுழற்றி அடித்தது. குதிரையின் முதுகெலும்பு நொறுங்கி, கீழே சரிந்தான் மாரையன். பின்னங்கால்களால் அவனை மிதித்துக் கடந்தது யானை. பின்புறம் வந்த வீரர்கள் நிலைமையை உணர்ந்து யானைக் கட்டுத்தறியின் தலைவன் அல்லங்கீரனிடம் செய்தி சொல்ல ஓடினர்.




மேலே உட்கார்ந்திருந்த பாகனுக்கு, இப்போதுதான் விஷயம் பிடிபட்டது. யானைக்கு மதம்கொள்ளவில்லை. மதம் பிடித்திருந்தால் இந்நேரம் தான் உயிரோடு இருக்க மாட்டோம். தந்தத்தில் தாங்கிப் பிடித்திருக்கும் குறுக்குக்கட்டையால் இந்த இடத்தையே தகர்த்திருக்கும். முழுநிலை உணவு மூன்று சுற்று கொடுக்கப்பட்ட பிறகு அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த அதை எழுப்பி வேலைவாங்கியதில் ஏதோ பிரச்னை ஏற்பட்டுள்ளது. தளபதி மாரையன், அவசரப்பட்டு இடையில் வந்து குறுக்கிட்டுவிட்டார். `இது வேறு திசை போகாமல் வந்த வழியே கட்டுத்தறி நோக்கித்தான் போய்க்கொண்டிருக்கிறது' என்று நினைத்தபடியே அதன்மேல் அமர்ந்திருந்தவன் குத்துக்கோலை (அங்குசம்) வலது காதின் பின்புறம் செருகிவிட்டு, சட்டென யானையின் மேல் இருந்து பக்கத்து மாளிகைச் சுவரின் மேல் தாவினான். அல்லங்கீரனைப் பார்த்துத் தகுந்த ஏற்பாடு செய்வதற்காக அவரை நோக்கி ஓடினான்.

மாரையனின் வீரர்கள்தான் முதலில் கட்டுத்தறியின் தலைவனை வந்தடைந்தனர். வீரர்கள் ஓடிவரும் வேகத்தைப் பார்த்ததும் என்ன நடந்திருக்கும் என்பதைப் புரிந்துகொண்டார் அல்லங்கீரன்.

``தளபதியை மிதித்துக் கொன்றுவிட்டது'' என, பதைபதைக்கச் சொன்னார்கள். உடனடியாக மூன்றாம் தறியில் இருந்த யானைகளை எழுப்ப உத்தரவிட்டான்.

எத்தனை நூறு யானைகளைப் பழக்கியவன் அல்லங்கீரன். போர்க்களத்தில் எதிரிகளின் யானைப் படையைச் சிதைக்க எத்தனையோ முறை வழிவகுத்தவன். வயதாகிவிட்ட காரணத்தைச் சொல்லி யானைப்படை பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டபோது, வாரக்கணக்கில் உணவெடுக்காமல் பட்டினிகிடந்து துயரத்தைக் கடந்தவன். யானைகளுடனே வாழ்வைக் கழித்தவன். வயதான யானைகள் இருக்கும் கட்டுத்தறி, இப்போது இவன் வசம்.

யானைகளால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் பொழுதுகளில் அவனது ஆளுமையைக் கண்டு நாடே நடுங்கியிருக்கிறது. இப்போது உடல் மிகவும் தளர்ந்துவிட்டது. ஆனாலும் சவாலைச் சந்திக்கத் தயாரானான்.



நிலைப்படை வீரர்கள்,  அலையலையாக யானையின் பின்னால் வந்து கொண்டிருந்தனர்.  அவர்கள் கோட்டையின் உள்பக்கமாகப் போகாமல் கட்டுத்தறியை நோக்கியே நடந்தனர். வீரர்கள், பாதுகாப்பான தொலைவில் பின்தொடர்ந்தனர்.

குறுக்குத் தெருக்களின் வழியாக விரைந்தோடி வந்த பாகன் கட்டுத்தறியை அடைந்தபோது அல்லங்கீரன் அங்கு இல்லை. செய்தியைக் கேட்டு யானையை மறிக்கப் போய்விட்டார் என்பதை உணர்ந்தான். அவர் போன திசை நோக்கி ஓடினான். யானைக்கு மதம் பிடிக்கவில்லை. கட்டுப்பட மறுக்கிறதே தவிர, கட்டுப்பாட்டை மீறவில்லை. வலது காலில் இருக்கும் காயங்களை நோக்கிக் கட்டுகளை வீசி இறுக்கிவிட்டால்,
அது அசையாமல் நின்றுவிடும். இதை அவரிடம் சொல்லத்தான் விரைந்து வந்தான். ஆனால், அதற்குள் எல்லோரும் போய்விட்டார்கள். அதற்கு மதம் பிடித்துவிட்டது எனக் கருதி அதை வீழ்த்தப்போகிறார்கள். எப்படியாவது அந்தச் செயலைத் தடுக்க வேண்டும் எனப் பதறியடித்து யானையை நோக்கி ஓடினான் பாகன்.


யானை வந்துகொண்டிருக்கும் வீதியை அடைந்தான் அல்லங்கீரன். கொடுக்குப்போல் மேல்தூக்கி இருந்த அதன் அடிவாலைக் கொண்டுதான் மதத்தைக் கணக்கிட முடியும். வந்தவுடன் அடிவாலைப் பார்க்க முயன்றபோது, மேலே பாகன் இல்லை என்பது தெரிந்தது. அவனை, யானை கொன்றுவிட்டது என்ற முடிவுக்கு அவர் போனதால், மேல்தூக்காமல் இருந்த அடிவாலை அவரது கண்கள் காணவில்லை.

மதயானையை எதிர்கொள்வதற்காகவே பயிற்சிபெற்ற வீரர்கள், துல்லியமான தாக்குதலை முன்னெடுத்தார்கள். பாண்டியப் பேரரசு, யானைப் போர்களிலும் மதயானையை அடக்கும்

உத்திகளிலும் நிகரற்று விளங்கியது.

மதுரையில் மாபெரும்விழா நடக்கும் நேரம். சற்றே பிசகு ஏற்பட்டாலும் பெரும் இழப்பில் முடிந்துவிடும். எனவே, தாமதிக்க வேண்டாம் என முடிவெடுத்தார் அல்லங்கீரன். அதைப் போகவிட்டு சரியான ஒரு நாற்சந்தியில் யானைகளோடு மறித்தார். ஒரே நேரத்தில் யானைகள் நான்கும் பிளிறிக்கொண்டு துதிக்கையைத் தூக்கியபடி அதை நோக்கி முன்நகர்ந்தன. அவற்றின் தந்தங்களின் முனைகளில் பளிச்சிடும் பூண்களும் குத்தீட்டிகளும் மாட்டப்பட்டிருந்தன. அந்த அடர் இருட்டில் என்ன நடக்கிறது என்பது யாருக்கும் புரியவில்லை. பிளிறலின் பேரொலி மேலெழுந்தபோது அது குறுந்தடியோடு மண்ணில் சரிந்தது.
மற்ற நாள்களில் இது நடந்திருந்தால், இந்தப் பேரோசை கேட்டு மொத்த நகரமும் விழித்திருக்கும். ஆனால், விழாக் கொண்டாட்டத்தில் நகரம் திளைத்துக்கொண்டிருந்ததால், எங்கும் எதிரொலிக்கும் பேரொலிக்கு நடுவில் யானைகளின் பிளிறல், கொண்டாட்டத்தின் பகுதியாகக் காற்றில் கரைந்தது.


தலைமை அமைச்சர் முசுகுந்தருக்கு, முதலில் செய்தி சொல்லப்பட்டது. இந்த மாநகரை வகுக்கப்பட்ட விதிகளின் வழியே கட்டிக்காப்பவர் அவர்தான். மணவிழா திருநாளுக்காக எங்கும் மங்கலப் பேரொலி நிரம்பியிருக்கும் நாளில், இப்படி ஒரு செய்தியைக் கேட்டு மனிதர் நடுங்கிப்போனார். இந்தச் செய்தி பரவாமல் உடனடியாகக் கட்டுக்குள் கொண்டுவந்தார். விடிவதற்குள் எல்லாவற்றையும் அப்புறப்படுத்த உத்தரவிட்டார்.



பெரும் மரவண்டியில் யானையை இழுத்து ஏற்றினர். முன்னும் பின்னுமாக யானைகளே அந்த வண்டியை இழுத்தும் தள்ளியும் கொண்டுசென்றன. அந்த இடத்தில் மண்ணைக் கொட்டிக் குருதியை மூழ்கடித்தனர். இரவோடு இரவாக வேலையை முடித்தனர். ஆனாலும், விதிகளின்படி விசாரணை உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும்.

அரண்மனையின் நாள்களையும் கோள்களையும் கணித்துச் சொல்லும் தலைமைக் கணியனின் பெயர்தான் அந்துவன். காலம் கணிக்கும் கணியனான அந்துவனின் சொல்லுக்கு மறுசொல் இல்லை இந்த மாநகரில். அவன் கணித்துச்சொல்லும் சொல்லே பேரரசின் சொல்லாகிறது. சிறுகோல் ஒன்றை எப்போதும் கையில் வைத்திருக்கும் அவன், தடித்த கோல்போலவே உடல்கொண்டவன். பொதிகை மலையடிவாரத்தில் வீற்றிருக்கும் பாண்டிய நாட்டின் பெருங்கணியர் திசைவேழருக்கு மாணவன்.

திருமணத்தை முன்னிட்டுப் புதிதாக மூன்று மாளிகைகள் கட்டப்படுவதை அறிந்ததும், அதன் மேற்கூரையில் என்ன ஓவியம் இருக்கலாம் என்று முடிவுசெய்ய, பொதிகை மலை சென்று பேராசான் திசைவேழரிடம் கருத்தறிந்து வந்தவன். அவர் சொன்ன அடிப்படையில் வானியல் அமைப்புகளைச் சொல்லி ஓவியர்களை வரையவைத்துள்ளான்.



திருமணத்தை முன்னிட்டு நாளை பெருங்கணியர் திசைவேழர் அரண்மனைக்கு வரவிருக்கிறார். அவர் வருவதற்குள் ஓவியப் பணிகளை முடித்து வைக்க வேண்டும். வரையப்பட்டவை எல்லாம் சரியாக இருக்கின்றனவா எனப் பார்ப்பதற்காக அந்துவன் புதிய மாளிகையை நோக்கி வந்துகொண்டிருந்த போது, அவரது வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தனர் செவியனும் இளமருதனும்.

அந்துவன் வந்ததும் இளமருதனை அவருக்கு அறிமுகம் செய்துவைத்தான் செவியன். இளமருதன் அவரை வணங்கினான். அவனது வணக்கத்தை ஏற்றுக்கொண்டதன் அடையாளமாக, தலையை மெள்ள அசைத்தபடி நடந்தார் அந்துவன்.

புதிய மாளிகைகள் குறித்து இளமருதன் தனது வியப்பை அவரிடம் வெளிப்படுத்தியபடியே உடன் நடந்தான். மூவரும் கார்காலப் பள்ளியறையை நோக்கி நடந்தனர். கட்டட அமைப்பை, மரவேலைப் பாடுகளை, கலை நுணுக்கங்களை வியந்து சொல்லிக்கொண்டே அவன் வந்தான். மேற்கூரை ஓவியத்தைப் பற்றி ஏதாவது சொல்வானா என, கணியனின் காதுகள் காத்திருந்தன.

அப்போது செவியன் சொன்னான்... “கணியரே மூன்றும் வெவ்வேறு விதமான மாளிகைகள். ஆனால், மேற்கூரை ஓவியத்தை மட்டும் ஏன் ஒன்றுபோல் வரைந்திருக்கிறீர்கள்?”

“மூன்றும் வெவ்வேறானவைதானே” என்றார் அந்துவன்.

“இல்லையே, ஒரே மாதிரிதானே இருக்கின்றன” என்றான் செவியன்.

“வானத்தில் உள்ள வேறுபாடுகளை அறிய, சற்றே வானறிவு வேண்டும். வாருங்கள் என்ன வேறுபாடு என்று உங்களுக்குச் சொல்கிறேன்” எனச் சொல்லிக்கொண்டே மாளிகைக்குள் நுழைந்தார் அந்துவன். பின்னாலேயே இருவரும் நுழைந்தனர்.

கார்காலத்து மாளிகையின் மேற்கூரையைக் காட்டிச் சொன்னார்... “இதில் மதி எவ்விடம் இருக்கிறது பார்த்தீர்களா?”

“மேற்கூரையின் இடது பக்கம் இருக்கிறது” என்றான் செவியன்.



“நான் இடம் எனச் சொன்னது காலத்தை, வானில் நிறைமதி எந்த விண்மீன் கூட்டத்தோடு இணைந்து நிற்கிறதோ, அந்த விண்மீன் பெயரில்தான் அந்த மாதத்தை அழைக்கிறோம். அங்கு பாருங்கள் ஆறு முத்துக்களைப்போல மின்னிக் கொண்டிருப்பவைதான் கார்த்திகை விண்மீன் கூட்டம். அதோடு மதி நிற்பதால் இது கார்த்திகை மாதம். மதி நிற்கும் இடம், விண்மீன் கூட்டம் இருக்கும் இடமும் பிற கோள்கள் நிற்கும் இடமும் வானியல் கணக்குப்படி அமைக்கப்பட்டுள்ளன. திகிரிக் கணக்கு. அதாவது, வானியல் கணக்கை அறிந்தவர்கள் இந்த ஓவியத்தைப் பார்த்தால் எந்த ஆண்டு, எந்த மாதம், எந்த நாளை இந்த ஓவியம் குறிக்கிறது என்பதைத் துல்லியமாகச் சொல்லிவிடுவார்கள். மேற்கூரையின் வட்டத்துக்குள் இருப்பது ஓவியம் அன்று, காலம்.

இளவரசர் பொதியவெற்பன் பிறந்தபோது வானத்தில் நாள்மீன்களும் கோள்மீன்களும் இருந்த அமைப்பு இதுதான். படுக்கையில் சாய்ந்து பார்க்கும்போது அவரது கண்கள் நேரடியாக இதைத்தான் பார்க்கும். மதியும் விண்மீன்களும் கோள்மீன்களும் இதே அமைப்புக்கு மறுபடி வர, அறுபது ஆண்டுகள் ஆகும். காலத்தின் முழு வட்டம், எல்லா காலங்களிலும் ஒளிவீசிக்கொண்டுதான் இருக்கப்போகின்றன. அதைப்போல் என்றென்றும் ஒளிவீசக்கூடிய வாழ்வை நீ அமைத்துக்கொள் என்று காலம் அவருக்கு ஒவ்வோர் இரவும் சொல்லும்.”

அந்துவனின் விளக்கத்தைக் கேட்டு மெய்சிலிர்த்து நின்றான் செவியன். மேற்கூரையை அண்ணாந்து பார்த்தபடி இருந்த இளமருதனுக்கு, பேச நா எழவில்லை.

சற்று நேரம் கழித்து அந்துவன் சொன்னார், “வேனிற்கால மாளிகையின் மேற்கூரையில் இருக்கும் கால அமைப்பு, இளவரசியார் ‘பொற்சுவை’ பிறந்தபோது நிலைகொண்டிருந்த வானியல் அமைப்பு.”

மூவரும் அந்த அரங்குக்குள் நுழைந்தனர். மதி முற்றிலும் வேறு ஒரு திசையில் இருந்தது. நாள்மீன்களும் கோள்மீன்களும் வெவ்வேறு இடங்களில் நிலைகொண்டிருந்தன.

மூன்றாவது மாளிகையான பாண்டரங்கத்துக்குள் நுழைந்தனர்.

“இது யார் பிறந்த கால அமைப்பு?” என்று கேட்டான் செவியன்.

“அதுதான் எனக்கும் தெரியவில்லை. நாள்களும் கோள்களும் இந்த இடத்தில் இருக்க வேண்டும் என திசைவேழர் குறித்துத் தந்தார். அதன்படி வரைந்துள்ளேன். `இது என்ன அமைப்பு என்று இப்போது வரை எனக்கு விளங்கவில்லை' என்றார் அந்துவன். நாளை அவர் வரவிருக்கிறார். இதில் எத்தனை குறைகள் அவர் கண்களுக்குத் தெரியப்போகின்றனவோ?” என்றவரின் குரலில் பதற்றத்தை உணர முடிந்தது.

``அரண்மனைக் கணியனின் பார்வையில் நடந்துள்ளவற்றில் குறை கண்டறிய முடியுமா என்ன?”

அசட்டையான சிரிப்போடு அந்துவன் சொன்னார்... ``வரையப்பட்ட வானில் எத்தனை விண்மீன்கள் இருக்கின்றனவோ, அத்தனை குறைகளை அவரால் கண்டறிய முடியும். ஏனென்றால், வானில் அவ்வளவு நிறைகண்டவர் அவர். அதனால்தானே பெரும்புலவர் கபிலர், திசைவேழரைப் போற்றி அத்தனை பாடல்களைப் பாடியுள்ளார்.”

சொல்லிக்கொண்டே அந்துவன் வெளிமாடத்தைப் பார்த்தபோது அங்கு வட்டவடிவில் செய்துவைக்கப்பட்டிருந்த திகிரி மேடையின் மேல் நாற்சதுரக் கூண்டு ஒன்று வைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. அதைப் பார்த்ததும் பதறிப்போன அவர், ``அதைத் தூக்கிக் கீழே எறியுங்கள்'' எனக் கத்தியபடி அதை நோக்கி விரைந்தார்.

அவ்வளவு நேரம் அவர் சொன்னதை வியந்து கேட்டுக் கொண்டிருந்த இளமருதன், அவர் கத்தியதால் ஓடிப்போய், “அய்யா பொறுத்துக்கொள்ளுங்கள். நான் கொண்டுவந்த கூடுதான் இது” என்று சொல்லிக்கொண்டே கூண்டைத் தூக்கி கீழே இறக்கினான்.

அந்துவனின் கண்கள் சிவந்தன.



“என்ன இது அருவருப்பான விலங்கு, இதைக் கொண்டுவந்து ஏன் இதில் வைத்தாய், அது என்ன மேடை தெரியுமா, எதற்காக அமைத்திருக்கிறோம் தெரியமா?  இப்படி இதைக் கறைபடுத்தி விட்டாயே” என்று கோபப்பட்டார்.

இளமருதன் அவரை வணங்கி மீண்டும், மீண்டும் மன்னிப்புக் கேட்டான். பணியாளர்களை வரவழைத்து திகிரி மேடையைத் தூய்மைப்படுத்தச் சொன்னார். அவர்களும் வேகவேகமாகச் செய்தனர்.

செவியனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

``தேவாங்கு இருக்கும் கூண்டை எங்கு வைக்க?'' என்று  இளமருதன் கேட்டபோது, ``மாளிகையைவிட்டு வெளியே தனித்திருக்கும் அந்த மேடையின் மீது வையுங்கள்'' என்று சொன்னது அவன்தான்.

‘வெளியிலிருந்து வந்துள்ள ஒருவன் செய்துவிட்டான் என்பதால், அவரது கோபம் இந்த அளவுக்கு இருக்கிறது. இதை வைக்கச் சொன்னது நான்தான் என்பது தெரிந்தால் அவ்வளவுதான்’ என்று மனதில் நினைத்துக் கொண்டு, பேச்சைத் திருப்ப, “இந்த அழகிய வட்டவடிவ மேடையை எதற்காக மாளிகையை விட்டு வெளியே அமைத்துள்ளார்கள்?” எனக் கேட்டார்.

சற்றே கோபம் தனிந்த அந்துவன் சொன்னார்... “இது சக்கரவாகப் பறவைக்கான மேடை. `பறவைகளின் இளவரசி சக்கரவாகப் பறவை' என்று சொல்வார்கள். வரப்போகும் பாண்டியநாட்டு இளவரசியார் பொற்சுவையின் செல்லப்பறவை அதுதானாம். இது உண்மையில் பறவைகளின் இளவரசி அன்று... வணிகர்களின் இளவரசி. ஆம்... கால மாற்றத்தைக் கணித்துச் சொல்லும் பறவை அது. கார்காலத்துக்கான காற்று தொடங்கும்போது உலகின் எந்தத் திசையிலிருந்தோ இது வந்துவிடுகிறது. இது வந்துவிட்டால், காற்றின் திசையும் மழையின் தொடக்கத்தையும் கடலில் மிதக்கும் வணிகர்கள் அறிவார்கள். மழையோடு வந்து மழைநீரை மட்டுமே அருந்தி உயிர்வாழும் வியப்புதரும் இந்தப் பறவை, மழைக்காலம் முடிந்ததும் புறப்பட்டு மீண்டும் கடலுக்குள் போய்விடுகிறது.

இளவரசியார் இந்தப் பறவையோடுதான் வந்துகொண்டிருக்கிறாராம். அந்தப் பறவைக்கான கூண்டு வைக்கும் மேடை ஒன்றைச் செய்யச் சொன்னார்கள். அது கார்காலம் முடிந்ததும் பறந்துசெல்லும் திசையை நோக்கி, ஆறு மரங்களால் வட்டவடிவில் அந்த திகிரி மேடையை அமைத்துள்ளேன். அதில் போய் இந்த விலங்கை வைத்துவிட்டீர்களே” என்று கோபப்பட்டவர், தேவாங்கைப் பார்த்தபடியே கேட்டார். “என்ன விலங்கு இது? இதற்கு முன்னால் நான் பார்த்ததில்லையே. எதற்கு இதைக் கொண்டு வந்துள்ளீர்கள்?”

``தேவாங்கு'' என்று அதன் பெயரைச் சொன்ன இளமருதன். இதைக் கொண்டுவந்ததன் காரணத்தைச் சொல்ல வாயெடுத்தான். ஆனால், சட்டென அதை நிறுத்திக்கொண்டான். `பாரிக்கு தெய்வவாக்குச் சொல்லும் விலங்கு இது. இதை மாமன்னருக்குப் பரிசுப்பொருளாகக் கொண்டு வந்துள்ளோம். இதைப்

பார்த்ததும் மாமன்னர் அடையப்போகும் மகிழ்வு அளவற்றது. இதை மாமன்னரிடம்தான் சொல்ல வேண்டும். இடையில் இருப்பவர்களிடம் சொன்னால், எப்படியும் மாற்றிவிடுவார்கள்' என்று நினைத்தவன் சட்டென வாயடைத்துக் கொண்டான்.

“உலகமே வியக்கப்போகும் ஒரு திருமணத்துக்கு நீ கொண்டுவந்துள்ள பரிசு இதுதானா?” என்று சொல்லிச் சிரித்தபடி, ``குறுநில மன்னன் ஒருவனின் மகனால் மாமன்னரை இந்தக் காலத்தில் கண்டுவிட முடியுமா என்ன?”

செவியன் சொன்னான்... “வெங்கல்நாட்டின் மீது பேரரசருக்கு நல்ல மதிப்பு உண்டு. எனவே, நேரம் ஒதுக்குவார் என்றுதான் நான் நினைக்கிறேன்.”

“சரி அதையும் பார்ப்போம்” என்று சொன்ன அந்துவன், “இந்த விலங்குக் கூண்டை இனி இங்கு வைக்கக் கூடாது. மாளிகைக்குள் இருக்கும் மேடையில் வைத்துக்கொள்ளுங்கள்” என்றார்.

இளமருதன் கூண்டை எடுத்துக்கொண்டு பாண்டரங்கத்துக்குள் நுழைந்தான். `இந்த அரங்கில் வைக்கத்தான் தந்தை காமன்விளக்கைச் செய்துகொண்டிருக்கிறார். ஆனால், நான் கொண்டுவந்த விலங்கு அதற்கும் முன்னே உள்நுழைந்துவிட்டது' என எண்ணியபடி, அந்தக் கலைமாடத்தின் மேல்புறம் இருக்கும் மேடை ஒன்றின் மீது வைத்தான்.

உள்ளிருந்த இரண்டு தேவாங்குகளும் வட்டக்கண்களை உருட்டி உருட்டி இங்கும் அங்கும் பார்த்தன.

முன்புபோல் இவை அச்சம்கொள்வதில்லையே என இளமருதன் எண்ணிக்கொண்டிருக்கையில், அவை இரண்டும் அண்ணாந்து மேற்கூரையைப் பார்த்தன. பார்த்த கணத்தில் கத்தியபடி மருண்டு உள்ளொடுங்கின.

முதன்முறையாக அவற்றின் கத்தலைக் கேட்ட இளமருதன், அப்படி என்ன இருக்கிறது மேற்கூரையில் என எண்ணியபடி அண்ணாந்து பார்த்தான். சிதறிக்கிடக்கும் விண்மீன்களுக்கு இடையில் ஓர் ஓரத்தில் நிலவு இருந்தது. காலம், சொல்லவேண்டியதைச் சொல்லிக்கொண்டி ருந்தது. அவனுக்கு அது புரியவில்லை!

- ***பறம்பின் குரல் ஒலிக்கும்...***

# வீரயுக நாயகன் வேள்பாரி-24




**கா**ர்காலத்தின் தொடக்க நாளிலேயே மழை கொட்டித்தீர்த்தது. கபிலரின் உடல், சூழலுக்கேற்ப தன்னைத் தகவமைத்துக்கொண்டது. கபிலர் இருந்த வீட்டில்தான் எந்நேரமும் பாரியின் மகள்கள் இருந்தனர். அங்கவை, சங்கவையோடு சேர்த்து எட்டுப் பேருக்கு எழுத்துகளைக் கற்றுக்கொடுக்கத் தொடங்கியிருந்தார் கபிலர். நடுவீட்டில் மரப்பலகையில் மணல் கொட்டி, அதன் மேல் உயிரெழுத்துகளை எழுதச் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தார். சிறிது காலம் கபிலருக்கு உதவியாக அவரோடு இருந்துவிட்டு வருவதாகச் சொல்லி, மயிலா அங்கேயே தங்கிவிட்டாள்.

பறம்புநாட்டின் தென் பகுதி எல்லைக்காவல் பொறுப்பாளன் கூழையனிடமிருந்து தேக்கனுக்குத் தகவல் வந்திருந்தது. குடநாட்டு அமைச்சன் கோளூர் சாத்தனின் கைகளை வெட்டி அனுப்பியதற்குப் பிறகு, குட்டநாட்டு அரசவைக்குக் குடநாட்டின் தூதுவர்கள் சென்றுள்ளனர். `அடுத்து நிகழப்போவதைப் பற்றிய விழிப்போடு இருக்க வேண்டிய வேளை இது!' என அவர் நினைத்தார்.

கொற்றவைக்கூத்து முடிந்து ஒரு வாரத்துக்குப் பிறகு, கபிலரின் உடல் முற்றிலும் குணமானது. ஆனால் மனம், மிகவும் துவண்டே இருந்தது. நீலன் புறப்பட்ட பிறகு, கபிலரின் மனம் நிலைகொள்ள

நாளெடுத்துக்கொண்டது. பார்த்த முதல் கணத்திலிருந்து அவனைப் பற்றிய வியப்பு பெருகிக்கொண்டே இருந்தது. வேட்டுவன் பாறையில் பார்த்தபோது, கையில் பிடித்திருந்த அதே வேற்கம்போடு கபிலரிடமிருந்து விலகி காட்டுக்குள் மறைந்தான் நீலன். கண்களைவிட்டுப் பிரியும் வரை கபிலரின் கண்கள் அசைவற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தன.

இப்போது கபிலரோடு எந்நேரமும் உடனிருந்து உதவிகள் செய்பவன் உதிரன். இவனும் நீலனைப் போலத்தான்; துடிப்பேறிய இளைஞன். கபிலரின் தேவைகளை மிகுந்த அக்கறையோடு கவனித்துவருபவன்.

ஒரு பகற்பொழுதில், கபிலரின் வலது காலை தனது தொடையின் மேல் தூக்கி வைத்துக்கொண்டு விரல்நகங்களை நறுக்கத் தொடங்கினான் உதிரன். அவரின் வலதுகால் நடுவிரல் சூம்பிப்போய் சின்னஞ்சிறியதாக இருந்தது. அந்த விரலின் அடிப்பகுதியை விரல்களால் மெள்ள நீவிவிட்டான். சற்றே உயரமான மரப்பலகையின் மேல் உட்கார்ந்திருந்தார் கபிலர். அவரின் எண்ணங்கள் வேறு எங்கோ இருந்தன. உதிரன் நகம் நறுக்குகிறான் என்பது மட்டுமே அவரின் நினைவில் இருந்தது. சூம்பிய விரலுக்கு உணர்ச்சியில்லாததால், அவன் அந்த விரலின் அடிப்பாகத்தை நீவிவிட்டுக் கொண்டிருப்பதை அவரால் உணர முடியவில்லை.

‘பறம்புநாடே ஒரு தாய்போல் இருக்கிறது. அழிந்த இனங்களை, வாழத் துடிப்பவர்களை, எங்கெங்கோ இருந்து வந்து சேர்ந்தவர்களை எல்லாம் அள்ளி அணைத்துக்கொண்டுள்ளது. சேரனின் நாடு, சோழனின் நாடு, பாண்டியனின் நாடு என, மன்னர்களால்தானே நாடுகள் அறியப் படுகின்றன. ஆனால், ஒரு தாயின் குணத்தோடு விளங்கும் நாட்டை ஏன் `தாய்நாடு' எனச் சொல்லக் கூடாது? நாட்டைத் தாயோடு ஒப்பிடும் எண்ணம் இதுவரை யாருக்கும் தோன்றியதில்லை. சில மாதங்களுக்கு முன்னால் இப்படியோர் எண்ணம் தோன்றியிருந்தால், அது எவ்வளவு பொருளற்றதாக இருந்திருக்கும். மண்ணும் நாடும் உடைமையின் குறியீடுகள். அவற்றைப்போய் தாய்க்கு உவமையாக எப்படிச் சொல்ல முடியும்? ஆனால், கொற்றவைக் கூத்தைப் பார்த்த பிறகு, திசையற்றவர்களையும் நிலமற்றவர்களையும் தலைமுறை தலைமுறையாக அள்ளி அரவணைத்து நிற்கும் பறம்புநாட்டைத் `தாய்நாடு' எனச் சொல்வதைவிட வேறென்ன சொல்ல முடியும்?’ என்று கபிலரின் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தபோது, அவரை அறியாமலே கண்கள் கலங்கின.

ஒருகணம் கண்களை மூடிச் சிந்தித்தார். தனக்குள் என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது? மேலெல்லாம் ஏன் சில்லிட்டு அடங்கியது? இப்போது நினைவுக்குள் என் தாய் வந்துவிட்டுப் போனாளே எப்படி? நினைவின் வழியே எதையோ கண்டறிந்துவிட நினைத்தபோதுதான் அவர் கால்விரல் நினைவுக்கு வந்தது. மெள்ளக் குனிந்து கீழே பார்த்தார்.



அவ்வளவு நேரம் எங்கேயோ பார்த்தபடி இருந்த கபிலர், இப்போது குனிந்து தன்னைப் பார்க்கிறார் என்பதை அறிந்ததும் உதிரன் சொன்னான், “உங்கள் வலதுகால் நடுவிரலில் குருதி யோட்டத்துக்காக அடிநரம்பைச் சற்று அழுத்தி நீவிவிட்டேன். எதுவும் தொந்தரவாகிவிட்டதா?”

‘இல்லை’ என்று தலையாட்ட மட்டும் செய்தார் கபிலர்.

உதிரன் சொன்னான், “நடுவிரல் சூம்பியுள்ளதால், நடக்கும்போது சற்றே இடறினாலும் தசை பிறண்டுவிடும். கூடுமானவரை பாதடியைக் கழற்றாதீர்கள்.”

இப்போது தலையாட்டாமல் அவனையே பார்த்தார் கபிலர்.

“வேட்டுவன் பாறையில் ஏறும்போது நீலன், உங்கள் பாதடியைக் கழற்றச் சொன்னதால்தான் உடனே உங்களுக்குத் தசை பிறண்டிருக்கிறது. காட்டில் பிடித்து நடப்பதைப்போன்ற வடிவில் ஒரு பாதடியைச் செய்துதர ஏற்பாடு செய்கிறேன்” என்று சொல்லியபடி, விரலின் அடிப்பாகத்தை அழுத்தி நீவிவிட்டான் உதிரன்.

கபிலரின் கண்கள் கலங்கின.

அதைக் கவனித்த உதிரன், “வலி ஏற்படுவதுபோல மிகவும் அழுத்திவிட்டேனா?” என்று பதற்றப்பட்டுக் கேட்டான்.

“இல்லை, சிறுவயதில் என் தாய் அந்த விரலின் அடிநரம்பை இளஞ்சூட்டு எண்ணெய் தொட்டு அழுத்தி நீவிவிடுவாள். அப்போது ஏதாவது ஒருகணத்தில் அந்த விரலை நான் உணர்ந்திருக்கிறேன். மற்ற நேரங்களில் அதை நான் உணர்ந்ததேயில்லை. எத்தனையோ ஆண்டுகள் ஓடிவிட்டன, எவ்வளவோ நிலப்பரப்புகளை நடந்தே கடந்திருக்கிறேன். பல்லாண்டுகளுக்குப் பிறகு, சட்டென இப்போது ஒருகணம் அந்த விரலை நான் உணர்ந்தேன். உணர்ந்த அந்தக் கணம் என் தாய் நினைவுக்கு வந்துவிட்டாள். உடலெல்லாம் சிலிர்ப்பு மேலிடுகிறது” எனச் சொல்லியபடியே உதிரனின் உச்சந்தலையில் கைவைத்தார் கபிலர். ஊறிய கண்ணீர் ஒழுகாமலா இருக்கும்?

சிறிது நேரத்தில், பெண்பிள்ளைகள் மொழி கற்றுக்கொள்ள வீடு வந்தனர். நறுக்கிய நகத்துண்டுகளை எடுத்துக்கொண்டு உதிரன் வெளியேறினான். கபிலர், மொழிக்குள் நுழையத் தொடங்கினார். மழை அதிகமாகத் தொடங்கியது. வாரக்கணக்கில் விடாது கொட்டும் அடைமழை, இன்னும் சில நாள்களில் தொடங்கும். அடைமழை தொடங்கிவிட்டால், அடுத்து கடுங்குளிர்.

தந்தரையிலிருந்து வந்தவர்களால் இந்தக் குளிரைத் தாங்க முடியாது. கடுங்குளிர் தாங்க, கபிலருக்கு எலிமயிர்ப் போர்வையை நெய்யுமாறு பாரி சொன்னான். குளிரிலிருந்து காத்துக்கொள்ள எவ்வியூரில் உள்ளவர்கள் முடியுள்ள தோல் ஆடைகளைப் பயன்படுத்துவர். அது, காட்டில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்களுக்குப் போதுமானது. புதியவர்களின் உடலுக்கு அது போதுமானதாக இருக்காது. அவர்களின் உடற்சூட்டைப் பாதுகாக்கும் மேலாடை தேவை.

காட்டின் மிக உயர்ந்த பகுதிகளில் லவங்கமும் செங்கடம்பும் அடர்ந்துகிடக்கும் இடங்களில் பேரெலி உயிர்வாழும். இது பூனையைவிட அளவில் பெரியது. பஞ்சினும் மெல்லிய மயிர்களை உடையது. பொங்கும் புகைபோல பொசுபொசுவென இருக்கும் இதன் மயிர்களால் உருவாக்கப்படும் போர்வை, உடலுக்கு மிகுந்த கதகதப்பைத் தரும். உடலின் சூட்டை வெளிவிடாமல் காத்துக்கொள்ளும்; கடுங்குளிரையும் உடலோடு அண்டவிடாது.

கபிலருக்கு எலிமயிர்ப் போர்வையை நெய்ய, தேவையான எலிகளைப் பிடித்தாக வேண்டும். உதிரன், பத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களை அழைத்துக்கொண்டு புறப்பட்டான். கபிலர், தானும் உடன் சென்று வருவதாக பாரியிடம் கூறினார்.

“பேரெலி, உயரமான கரும்பாறை இடுக்குகளில்தான் இருக்கும். இளைஞர்கள் மிக விரைந்து செயல்பட்டால்தான், அதைப் பிடிக்க முடியும். நீங்கள் அவர்களைப் பின்தொடர்வது கடினமாயிற்றே?” என்றான் பாரி.
“நான் என்ன விரட்டியா பிடிக்கப்போகிறேன்? பிடிக்கப்போகிறவர்களைப் பின்தொடரப் போகிறேன்.”

“முன்னேறுவதைவிடக் கடினமானது பின்தொடர்வது.”

“பின்தொடரக்கூட முடியாத அளவுக்கு நான் தளர்ந்துவிடவில்லை; எனக்கு வயதாகிவிடவும் இல்லை.”

சின்ன சிரிப்புடன் பாரி சொன்னான், “மழைக்காலம் அல்லவா, பாறைகள் வழுக்கும் எனச் சொல்லவந்தேன்.”



“எப்படிச் சொன்னாலும் நீ சொல்லவரும் செய்தி அதுதானே?” என்றார் கபிலர்.

“நான் பதில் சொல்லவில்லை என்றால், உங்கள் வினாவே விடையாகிவிடும். என் தோழன் அவனது சொல்லாலேயே கண்டறியப்பட்டுவிடக் கூடாதல்லவா?”

“ `எந்தப் பக்கம் போய் மறித்தாலும் தப்பித்துப்போகும் வல்லமைகொண்டது' என்று உதிரன் சொன்னது, பேரெலியை மட்டும்தான் என நினைத்துவிட்டேன்.”

பாரி சிரித்துக்கொண்டே கபிலரைக் கட்டி அணைத்தான். இருவரும் புறப்பட்டனர். ஆதிமலையின் குறிப்பிட்ட திசை நோக்கி இளைஞர்கள் வேகமாகச் சென்றனர். சூரிய ஒளி, நற்பகல் வரைதான் தெரியும். அந்தப் பொழுதுக்குள் பிடித்தால்தான் உண்டு. நாளொன்றுக்கு இரண்டு பிடிப்பதே கடினம். ஒரு போர்வை செய்ய, குறைந்தது இருபது பேரெலிகளையாவது பிடித்தாக வேண்டும். உதிரன், சரசரவெனப் பாறைகளில் ஏறிப் போய்க்கொண்டிருந்தான். மிகச்சிறிய நேரம்தான் அவர்களைப் பின்தொடர்ந்தனர். அதன் பிறகு, பின்தொடர்தலுக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

பாரியும் கபிலரும் பேசியபடி அவர்கள் சென்ற திசை நோக்கி மலையேறிக்கொண்டிருந்தனர். “பன்மயிர் பேரெலி என்று இந்த எலியைப் பற்றிப் பழம்புலவர் ஒருவர் பாடியுள்ளார்” என்று சொன்ன கபிலர், சட்டென நினைவு வந்தவராகச் சொன்னார், “அங்கவை, கற்றுக்கொள்வதில் அளவற்ற ஆர்வத்துடன் இருக்கிறாள்.”

பாரிக்கு இது புதிய செய்தி அல்ல. ஆனால், கபிலர் வாயால் கேட்பது மகிழ்வைத் தந்தது.

“பொதுவாக, மாணவர்கள் தெரிந்து கொள்வதற்காகத்தான் கேள்வி கேட்பார்கள். அங்கவையோ,

அறிந்துகொள்வதற்காகக் கேள்விகள் கேட்கிறாள்.”

இரண்டுக்கும் என்ன வேறுபாடு என்பதைப் போலிருந்தது பாரியின் பார்வை.

“மரத்தைத் தெரிந்துகொள்ள மரத்தைப் பார்த்தால் போதும். ஆனால், மரத்தை அறிந்து கொள்ள அதன் வேரைப் பார்க்க வேண்டும் அல்லவா? அதைப்போலத்தான் ‘உயிரெழுத்து பன்னிரண்டு’ என்று நான் சொன்னபோது தெரிந்துகொள்ளும் ஆர்வத்தோடு, ‘என்னென்ன?’ எனக் கேட்பாள் என நினைத்தேன். அவளோ ‘ஏன் பன்னிரண்டு?’ எனக் கேட்டாள்.

“வினா சரிதானே?”

``சரிதான். ஆனால், விடைக்கான இடம் வினாவில் இருக்க வேண்டுமல்லவா? எத்தனையோ தலைமுறைகளாக நமது முன்னோர்கள் ஒலியை உருட்டி உருட்டி எழுத்தாக்கி வைத்திருக்கிறார்கள். நீர் போன இடத்தில் பதியும் தடம்போல, பேசும் ஒலிக்கு ஒரு தடத்தை உருவாக்க முயன்றிருக்கிறார்கள். இந்தப் பெரும் பட்டறிவுச்சேகரத்தை எனது அறிவால் எப்படி அளந்துபார்த்து விடை சொல்ல முடியும்?”

கபிலரின் விடை, பாரிக்குப் பொருத்தமாகப் பட்டது.

கபிலர் சொன்னார், “முன்பு ஒருமுறை என்னிடம் மொழி கற்ற மாணவி இப்படித்தான் வினாக்களைக் கேட்டுக்கொண்டே இருப்பாள். காலையில் அங்கவை கேள்வி கேட்டதில் அவளின் நினைவாகவே இருக்கிறது” என்று சொன்னபடி எதிரில் இருக்கும் வேங்கை மரத்தைப் பார்த்து அப்படியே அசைவற்று நின்றார் கபிலர். பாரியும் நின்றான்.

வேங்கைமரத்தின் தாழ்வான கிளையில் மயில் ஒன்று அமர்ந்திருந்தது. பேச்சுக் கேட்டு பறந்துவிடக் கூடாது என்பதற்காக, கபிலர் பேச்சை நிறுத்தினார். அது தன் தலையை மட்டும் மேலே தூக்கியது. அதன் அசைவை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார் கபிலர். பாரி, மரத்தின் அடிவாரத்தில் எதையோ உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான்.

மயில் மெள்ள தலையைத் திருப்பி, இருவரையும் பார்த்தபடி கிளையிலிருந்து குதித்து, காட்டுக்குள் மறைந்தது. “இன்னும் சிறிது நேரம் உட்கார்ந்திருக்கக் கூடாதா? வெருகுப்பூனையின் கண்களுக்குள் இருக்குமே நீலமும் பச்சையும் கலந்த கலவை. அதுதானே மயில்தோகையின் கண்களிலும் இருக்கிறது?” என்றார் கபிலர்.

பாரி, மறுமொழி ஏதுமின்றி மரத்தின் அடிவாரத்தை நோக்கி நடந்தான். கபிலர், அந்தக் கிளையை நோக்கிச் சென்றார். மயில், கிளையிலிருந்து தாவி மண்ணில் கால் பதித்த இடத்தில் அதன் காலடி

படிந்திருந்தது. அதைப் பார்த்தபடி சொன்னார், “மயிலின் காலடியை நொச்சி இலைக்கு உவமை சொல்வர். வெண்ணொச்சி ஐந்து இலைகளை உடையது. மயிலுக்கு முன்பக்கம் மூன்று விரல்கள்தானே, அதனால் கருநொச்சியைத் தான் உவமை சொல்லியிருக்க வேண்டும். அதற்குத்தான் மூன்று இலை.”

கபிலரின் பேச்சுக்கு, பாரியிடமிருந்து மறுமொழி ஏதும் இல்லை.

“நீ என்ன பார்த்துக்கொண்டிருக்கிறாய்?” என வினவியபடி பாரியின் அருகில் வந்தார் கபிலர்.

மரத்தின் பட்டையில் ஒட்டியிருந்த செந்நிறத் தடத்தைக் காண்பித்து பாரி சொன்னான், “புலி, தனது வாயில் இருந்த குருதியைத் துடைத்துவிட்டுப் போயிருக்கிறது.”

கபிலரின் கண்கள் குருதியை உற்றுப் பார்த்தன.

“புலியின் வாயில் இவ்வளவு குருதி இருந்திருக்குமேயானால், அது யானையைத்தான் வீழ்த்தியிருக்கும்.”

கபிலரின் கண்கள் பாரியை உற்றுப்பார்த்தன.

“புலி குட்டி போட்டிருக்கும் புதருக்குள் யானை எதிர்பாராமல் நுழைந்ததால், இந்தத் தாக்குதல் நடந்திருக்கலாம்.”

தடத்தின் வழியே காட்சியை அடுக்கிக்கொண்டேபோனான் பாரி. கபிலரின் மனதுக்குள்ளும் சொற்கள் விரிந்துகொண்டே போயின.

**‘கிளையில் தோகை விரித்த மயில்.**

**அடியில் குருதி துடைத்த புலி.**

**மயிலின் கால் தடம் நொச்சியைச் சொன்னது.**

**புலியின் வாய்த் தடம் யானையைக் கொன்றது.**

**குருதி யுலரா வேங்கையின் அடியில்**
**தனது இறகு உதிர்க்காமல் சென்றது மயிலே’**

என, கபிலரின் மனம் காட்சிகளைச் சரசரவெனத் தொகுத்துக்கொண்டிருந்தபோது, பாரியின் வலதுகை ஈட்டியை இறுகப்பிடித்திருந்தது. ஏனென்றால், குருதியின் ஈரம் காயாமல்தான் இருந்தது. ஒருவேளை அந்தப் புதர் மிக அருகில் இருக்கலாம்.

விழா என்றால், அறுவகைத் தராசும் தரை தட்டும் ஓசை நிற்காமல் கேட்க வேண்டும். அதுவே திருவிழா என்றால், இந்த அறுவகையோடு சேர்ந்து எழுவகை அளவையும் நில்லாமல் நீள வேண்டும். அதனினும் பெருவிழா என்றால், இந்த இரண்டோடு சேர்த்து எண்வகை இன்பத்தில் நகரம் திளைக்க வேண்டும். இதுவே விழாக்களுக்கு இலக்கணம் கண்டோர் சொன்ன சொல்.

மாமதுரையின் வணிகச்சாலையில் குவிந்துள்ள மக்களின் கூட்டம் குறைவதாக இல்லை. மாணிக்கக்கற்களை நிறுத்தும் மிகச்சிறிய மணித்தராசும், தங்க நகைகளை நிறுத்தும் பொன்தராசும், உலோகங்களை நிறுத்தும் உலோகத்தராசும் பண்டத்தராசும் மரத்தராசும் தூக்குத்தராசும் நிலை கொள்ளாமல் இரவு முழுவதும் ஆடியபடியே இருந்தன. தராசுத்தட்டு தரை தட்டும் ஓசை இடைவிடாது ஒலிக்கும் இசை அரங்கம் போல கேட்டுக்கொண்டே இருந்தது. துலா முள்ளின் தலையாட்டல் நின்றபாடில்லை. நிற்காமல் துடிக்கும் வணிகத்தின் வால் அதுதானே.


பண்டகக் காப்போன், எண்ணற்ற கணக்கர்களோடு அமர்ந்து நாள்கணக்கில் கணக்குகளைப் போட்டுக்கொண்டே இருந்தான். இந்தத் திருமணத்துக்கு வரப்போகும் தேர்கள் எத்தனை, ஒரு குதிரை இழுக்கும் தேர், இரு குதிரைகள் இழுக்கும் தேர், நான்கு குதிரைகள் இழுக்கும் தேர் என வகைக்கு ஏற்ப பிரித்துக் கணக்கிட்டனர். குதிரைகள் தவிர, பிற விலங்குகளால் இழுத்து வரப்படும் தேருக்கு மணவிழா முடியும் வரை கோட்டைக்குள் அனுமதி இல்லை. அதேபோல, சிறிய பல்லக்குகளுக்கும் சிவிகைகளுக்கும் அனுமதி இல்லை. நான்கு பேர் சுமக்கும் பெரும்பல்லக்குகளுக்கும் எட்டுப்பேர் சுமக்கும் மணிப்பல்லக்குகளுக்கும் யானையின் மேல் பொருத்தப்பட்ட கூண்டுப் பல்லக்குகளுக்கும் மட்டுமே அனுமதி.

தேர்களின் எண்ணிக்கையை உய்த்தறிந்து அதன் அடிப்படையில் தேர் இழுக்கும் விலங்குகளின் எண்ணிக்கை கணக்கிடப் பட்டது. விலங்குகளுக்குத் தேவையான கூலங்கள் கணக்கிடப்பட்டன. பணியாளர் களின் எண்ணிக்கையையும் விருந்தினர்களின் எண்ணிக்கையையும் கணக்கிட்டனர். நெல், வரகு, தினை, சாமை தொடங்கி எள், கொள், அவரை, மொச்சை, வரையிலான பதினெட்டு வகைக் கூலங்களையும் நிறுத்தல், முகர்தல், பெய்தல் அளவைகளைக்கொண்டு தேவைகளைக் கணக்கிட்டனர்.

பண்டகக் காப்போனின் அறை முழுவதும் கணக்குகள் நிரம்பி வழிந்தன. இரவும் பகலும் இதே வேலையாக இருந்ததால், ஏடுகளில் எழுதாமலேயே எண்களை ஒப்புவித்துக் கொண்டிருந்தனர். ஒரு படிக்கு அவரை 1,800, பயறு 14,800, அரிசி 38,000 இருக்கும் என எண்ணிக்கையை நினைவுகளின் பகுதியாக்கினர்.

குதிரைகளின் கட்டுத்தறிக் கணக்குகள் துல்லியமாகத் தயாராகின. ஆட்டுத்தோல் பிடிகொண்ட கசை எத்தனை தேவை என்பதில் தொடங்கி கண்பட்டி, கடிவாளம் வரை குதிரைக்குத் தேவையான பொருள்கள் எவ்வளவு, கொள், புல், தண்ணீர் வேளை தவறாமல் கொடுக்கவேண்டிய அளவுக்கான மொத்தக் கணக்குகளும் எழுதப்பட்டன. கட்டுத்தறியின் துர்நாற்றத்திலிருந்து நகரத்தைக் காப்பாற்ற கணக்குகளே அச்சாணிகளாக இருந்தன.

எண்ணற்ற விழாக்களையும் திருவிழாக்களையும் கண்ட மதுரை, இப்போது பெருவிழாவுக்குத் தயாராகியது. இன்னும் சிறிது நேரத்தில் மணமகள் வந்திறங்க இருக்கிறாள். அவரை வரவேற்க, நெடுங்கல்சாலை முழுவதும் பேரலங்காரம் பூண்டிருந்தது. எங்கும் அரச குலத்தினர் திரண்டிருந்தனர். வரப்போகும் மதுரையின் குலமகளுக்காக மாமன்னர் குலசேகரப் பாண்டியன் இன்று அதிகாலை வைகையில் நீராடி, பொன்னால் செய்யப்பட்ட தும்பைப்பூவை இருபது மாவீரர் களுக்குப் பரிசாக வழங்கினார்.



பொன்னரிமாலையும் நெற்றிப் பட்டமும் சூடிய பட்டத்துயானை முன்னே வந்தது. அதைத் தொடர்ந்து பொன்னால் செய்யப்பட்ட சேண மணிந்த குதிரைகளில் பொன்பூவைச் சூடிய மாவீரர்கள் இருபது பேர் அணிவகுத்து வந்தனர்.

அதற்கு அடுத்து, மின்னும் தலையணிகளும் சங்கு வளையல்களும் செந்நிற வடமும் இடையணியும் அணிந்த அழகுப் பதுமைகள் எண்மர் பொற்கிடுகு மேயப்பட்ட சிறு பல்லக்கைத் தூக்கி வந்தனர்.

பெண்கள் பல்லக்குத் தூக்கி வருவதை, மதுரை முதன்முறையாகக் கண்டது. நெடுங்கல்சாலையில் விலக முடியாத பெருங்கூட்டம் நின்றது. இளமருதனும் செவ்வியனும் கூட்ட நெரிசலில் திணறியபடி நின்றுகொண்டிருந்தனர். இந்த அரிய காட்சி என்றைக்குக் கிடைக்கும்? எவ்வளவு நெரிசல் இருந்தாலும் வந்து இறங்கும் இளவரசியாரைப் பார்க்காமல் போவதில்லை என்ற முடிவோடு இருவரும் நின்றிருந்தனர்.

நெடுங்கல்சாலையின் திருப்பத்தில்தான் அவர்கள் நின்றிருந்தனர். அங்கிருந்து பார்த்தால், தொலைவில் பல்லக்கில் வந்து இறங்கி அரண்மனையின் நெடும் படி ஏறி உள்ளே செல்வதைப் பார்க்க முடியும்.

பொன்னால் ஆன தும்பைப்பூ சூடிய வீரர்களின் அணிவகுப்பைத் தொடர்ந்து பெண்கள் எண்மர் தூக்கி வரும் சிறு பல்லக்கு முதலில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கப்போவது யார் என எல்லோரும் ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டு நின்றனர். ஆனால், அந்தப் பல்லக்கிலிருந்து யாரும் இறங்கவில்லை.

முன்னால் இருப்பவன் அடைத்து நின்றதால், இளமருதனால் சரியாகப் பார்க்க முடியவில்லை. “யார் இறங்குவதென்று தெரியவில்லை. சற்றே விலகுங்கள்'' என்று கூறினான். அதற்கு அடைத்து நின்ற அந்த மனிதன் சொன்னான், “அந்தப் பல்லக்கில் இருந்து யாரும் இறங்க மாட்டார்கள்.”

செவியன் அவனை உற்றுப்பார்த்தான். தோற்றமே அவனொரு வணிகன் என்பதைச் சொல்லியது. சாத்துகளின் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்பதை, பிற அடையாளங்களைக்கொண்டு அறிந்தனர். அவன் பல செய்திகளையும் அறிந்திருப்பான் என உய்த்தறிந்த செவியன் கேட்டான்.

“அந்தப் பல்லக்கில் யாரும் வரவில்லையா?”

“அது பொற்கிடுகு வேய்ந்த பல்லக்கு. சாத்துகளின் விழாக்களில் அதற்குத்தான் முதல் இடம்.”

“அந்தப் பல்லக்கில் யார் இருப்பார்?”

“செல்வத்தின் இளவரசி இருப்பாள்.”

அவன் சொல்வது புரியாமல் இருவரும் முழித்தபோது அவன் மேலும் சொன்னான், “அது சக்கரவாகப் பறவையைக் கொண்டுவரும் பல்லக்கு.”

அந்தக் கணம் இளமருதனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ‘இப்பெரும்விழாவில் தலைமரியாதை கொடுத்துப் பொற்பல்லக்கில் எடுத்துவரும் பறவைக்காகச் செய்யப்பட்ட மேடையிலா நான் ஈச்சமரச் சட்டகங்களால் செய்யப்பட்ட தேவாங்கின் கூட்டை வைத்திருந்தேன். அந்துவன் கோபப்பட்டதன் நியாயம் இப்போது விளங்குகிறது’ என எண்ணிக்கொண்டிருக்கும்போதே செம்மணிகள் பதிக்கப்பட்ட மகரப்பல்லக்கு வருவது தொலைவில் தெரிந்தது. சூரிய ஒளி மின்னி மேலெழும் அழகு எல்லாவற்றையும் சொன்னது.

“எட்டு அண்ணகர்கள் தூக்கி வருகிறார்களே, அதுதான் இளவரசியாரின் பல்லக்கு” என்றான் அந்த வணிகன்.

‘அவன் சொல்லாமலே அதுதான் இளவரசியாரின் பல்லக்கு என்பது தெரிந்தது. ஆனால், தூக்கி வருபவர்களை அண்ணகர்கள் எனச் சொல்கிறானே!?’ என எண்ணியவாறே, அவர்கள் யாரெனக் கேட்டான் இளமருதன்.

“விதை எடுக்கப்பட்டவர்கள்” என்றான் வணிகன்.

அவன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே இசைக் கருவிகளின் முழக்கம் எங்கும் கேட்கத் தொடங்கியது. அரண்மனைப் பெண்கள் மங்கலக் குலவையிட்டனர். இளவரசியாரை வரவேற்க, பழையன்மாதேவி படி இறங்கி வந்தார். மலர்க்குவியலும் மஞ்சள் அரிசியும் பொன்வட்டில் எடுத்தபடி சேடிப்பெண்கள் உடன்வர, அவர் வந்து நிற்பதும் பொற்பல்லக்கு மாளிகை நெடும் படியின் எதிரில் வந்து நிற்பதும் ஒரேபொழுதில் நிகழ்ந்தன.

தொட்டியில் தண்ணீர் இறங்குவதைப்போல பல்லக்கை சிறு அசைவுகூட இன்றிக் கீழிறக்கினர் அண்ணகர்கள். தங்களின் கால் பார்த்தபடியே வணங்கி பின் நகர்ந்து நின்றனர்.

இசைக்கருவிகளின் ஓசை எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. மாடங்களிலிருந்து பூக்கள் சொரியப்பட்டுக்கொண்டிருந்தன. பல்லக்கிலிருந்து இறங்கும் இளவரசியைப் பார்க்க, கூட்டம் அலைமோதிக்கொண்டிருந்தது. இளமருதன் எக்கி, வணிகனின் தோள்பட்டையைத் தாண்ட முயன்றான்.

மகரப்பல்லக்கின் செம்மணிகள் ஒவ்வொன்றைப் பற்றியும் சொல்லி, அவற்றின் நிறப்பெருமையையும் அவை எடுக்கப்பட்ட நிலங்களின் தன்மையையும் அவை தாங்கி வந்துள்ள இளவரசியாரின் சிறப்பையும் இணைத்து இணைத்துச் சொல்லி மகிழ்ந்தான் வணிகன். அவனுடைய வார்த்தைகளில் வணிகர்குலம் பெருமிதம் பொங்கியது. எல்லோரின் கண்களும் இறக்கப்பட்ட பல்லக்கையே பார்த்துக்கொண்டிருந்தன. மேளதாளங்களின் ஓசையாலும் தூவப்படும் வண்ணமலர்களாலும் நெடுங்கல்சாலை திணறியது.

பழையன்மாதேவி வந்து நின்றபின்னும், பல்லக்கிலிருந்து யாரும் இறங்கவில்லை. பெருகும் உற்சாகத்துக்கு நடுவே, மிகச்சிலரின் கண்கள் தாமதமாகும் அந்தக் காலத்தைக் கணித்துக் கொண்டிருந்தன.

பல்லக்கின் உள்ளே இருந்தவள் யோசித்துக் கொண்டே இருந்தாள். ‘இந்தத் தயக்கம் எனது வாழ்வின் எல்லா உண்மைகளையும் சொல்லும்.’ கண் மூடி அந்தக் கணத்தைக் கடந்தாள். நெஞ்சின் அழுத்தத்தை மூச்சுக்காற்று வெளியேற்றியது. மூடிய கண்களைத் திறந்தாள். இடக்கை விரல்களால் செம்பட்டுத் திரைச்சீலையை மெள்ள விலக்கினாள். மதுரையின் மண் அவள் கண்களில்பட்டது. சற்றுநேரம் மண்ணைப் பார்த்துக் கொண்டிருந்தவள், காலடியை மதுரையில் வைத்தாள்.

கூட்டத்தின் ஆரவாரமும் இசை முழக்கமும் வாழ்த்துச்சொல்லும் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தன. இளமருதன் நின்ற இடத்திலிருந்து நெரிபடும் கூட்டத்துக்குள் தலைதூக்கிப் பார்த்தான். தூவப்படும் மலர்களுக்கு இடையில் கண்கொள்ளாப் பேரழகு நகர்ந்துகொண்டிருந்தது. இளமஞ்சள் வெயிலில் கண நேரத்தில் மறைந்த அவளது வடிவு கண்டு அவனை அறியாமலேயே, “உலகின் பேரழகி” என்று வாய் முணுமுணுத்தது.

முன்னால் நின்றிருந்த வணிகனின் காதில் அந்த முணுமுணுப்பு கேட்டது. அவன் சற்றே திரும்பிச் சொன்னான், “அந்த அழகையும் விஞ்சும் பேரறிவுகொண்டவள் பொற்சுவை.”

இளமருதனுக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் வணிகனைப் பார்த்தான். அவன் மேலும் சொன்னான், “பெரும்புலவர் கபிலரிடம் கல்வி பயின்றவள் அல்லவா?”

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-25

வயது பழுத்த முதுகிழவர். தோளிலே விழுந்து புரளும் நரைமுடி. பற்கள் உதிர்ந்துவிட்டன. ஆனாலும் கண்பார்வை மட்டும் அப்படியே. அதுவும் இரவாகிவிட்டால் கண்களின் ஒளி மெருகேறிவிடும்போல. அரண்மனைத் தாழ்வாரத்தின் வழியே தளர்ந்து நடந்துவரும் திசைவேழரைச் சுற்றி தலைமை மாணாக்கர்கள் நால்வர் வந்தனர். நேற்று இரவே அரண்மனைக்கு வந்து சேர்ந்த அவர், நண்பகலில்தான் புது மாளிகையில் வரையப்பட்ட காலக்கணக்கைப் பார்க்க வருகிறார்.

அவரது வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தான் அந்துவன். அரண்மனையின் தலைமைக் கணியன் அவன்தான். ஆனாலும் ஆசான் வருகை உள்ளுக்குள் சிறு நடுக்கத்தை ஏற்படுத்தியபடி இருந்தது. அந்துவனுக்குப் பக்கத்தில் அவன் உதவியாளர்கள் நின்றிருந்தனர்.

ஆணை மணி ஓசையெழுப்பியபடி பணியாளன் முன்நடந்து வந்தான். அரண்மனையின் பேரதிகாரம் பெற்றவர்கள் வரும்போது, அவர்களுக்கு முன் இந்த ஓசை எழுப்பப்படும். திசைவேழர், கோலூன்றி நடந்து வந்தார். அரண்மனைக்கு அவர் வந்து எட்டு ஆண்டுகள் ஆயிற்று. சென்றமுறை அவர் வந்தபோது அவரோடு கபிலரும் வந்திருந்தார். இருவரும் இருமாத காலம் இங்கு தங்கியிருந்தனர். விண்ணையும் மண்ணையும் பற்றி இரவு பகலாகப் பேசிக் களித்தனர். ஒரு வைகறைப்பொழுதில் வைகையின் நிலை மண்டபத்தில் அமர்ந்த கபிலர், அந்த முழு நாளும் எழுந்து வராமல் எழுதிக்கொண்டே இருந்தார். அத்தனையும் திசைவேழரின் பேரறிவைப் போற்றிப் பாடிய பாடல்கள்.



அந்த நாள்களின் எண்ணங்கள் அவர் மனதில் ஓடிக்கொண்டிருந்தன. பட்டியக்கல்லைப் பார்த்தபடியே ஊன்றுகோலை எடுத்துவைத்து நடந்தார். கார்கால மாளிகையின் வாயிலில் நின்ற அந்துவன் வணங்கி வரவேற்றான். சொற்கேட்டு  தலை ஆட்டினார். முகம் பார்க்கவில்லை. மாளிகையின் நடுவில், சின்ன அடையாளம் ஒன்றை வைத்திருந்தனர். நேராக அந்த இடம் வந்து நின்றார். நெஞ்சுக்கு நேராக ஊன்றுகோலை ஊன்றி இரு கைகளாலும் இறுகப்பிடித்தார். தலையை முன்சாய்த்து கண்கள் மூடியவர், சிறிய கால இடைவெளியில் தலையை அப்படியே பின்னால் சாய்த்தார். படுத்துக் கிடப்பவனைப்போல முகம் கிடைமட்டத்திலிருந்து  மேற்கூரையைப் பார்த்தது. கண்களைத் திறந்தார். கருவிழிகள் காலத்துக்குள் நுழைந்தன. பொதியவெற்பன் பிறந்தபோது இருந்த நாள்மீன்களும் கோள்மீன்களும் அவரின்  நினைவுக்கு வந்தன.  மேற்கூரையில் உள்ளொடுங்கிய விண்மீன்களுக்குள் கண்கள் செருகின.

உடலையோ கழுத்தையோ சுற்றாமல் கருவிழிகளைச் சுழற்றி மேற்கூரையின் முழுவட்டத்தையும் பார்த்து முடித்தார். தலை முன்வணங்கி கோல் நோக்கிக் கவிழ்ந்தது. என்ன சொல்லப்போகிறார் என்பதறிய அந்துவன் ஆவலோடு இருந்தான்.

அமைதியான அந்த மாளிகையில் மெள்ள ஒலித்தது திசைவேழரின் குரல். “பொதியவெற்பன் பிறந்தநாள் என்ன?”

அந்துவனுக்கு விடை உடனே நினைவுக்கு வரவில்லை. சற்றே நிதானித்துச் சொன்னான், “வளர்பிறையின் எட்டாம் நாள்.”

“எந்தப்பொழுதில் பிறப்பு நிகழ்ந்தது?”

“அதிகாலையில்.”

“நீ செய்திருக்கும் பிழை என்ன?”

விளக்கம் அளிக்கும் வாய்ப்பு எதுவும் இந்த வினாவில் இல்லை. அடுத்த பிழையைத் தவிர்க்க மட்டுமே வாய்ப்பு அளிக்கப்பட்டது. அந்துவன் அதிர்ச்சிக்குள்ளானான். கண்களை அகலத் திறந்து மேற்கூரையைப் பார்த்தான். ஒன்றும் பிடிபடவில்லை.

“வளர்பிறை நாள்களில் கதிரவன் எழுவதற்கு முன்பே நிலவு மறைந்துவிடும். கதிரவனும் நிலவும் இல்லா புலர் காலைப்பொழுதில்தான் பொதியவெற்பன் பிறந்தான். ஆனால், நீ வானத்தின் மேற்கு விளிம்பில் எட்டாம் நாள் நிலவை வரைந்து வைத்திருக்கிறாய். இதன் பொருள் என்ன தெரியுமா?”

உறைந்துபோய் நின்ற அந்துவனுக்கு, விடை சொல்ல நா எழவில்லை.

``ஓவியம் குறிப்பது, வளர்பிறையின் எட்டாம் நாள் அல்ல.”

அந்துவனுக்கு வியர்த்துக்கொட்டியது.

“மற்றவற்றில் தவறுகளின் அளவைப் பொறுத்து பாதிப்பின் தன்மை இருக்கும். ஆனால், காலக்கணக்கில் அப்படி அன்று. பெரியதோ, சிறியதோ பிசகு பிசகுதான். கணப்பொழுதில் எல்லாம் குலைந்துவிடும்.”
சொல்லியபடியே வேனிற்காலப் பள்ளியறையை நோக்கி நடந்தார். அது மேல்மாடத்தில் இருக்கிறது. ஏறிச்செல்ல தன் மாணவர்களைத்தான் அனுப்புவார் என்று நினைத்திருந்தான் அந்துவன். ஆனால், திசைவேழரின் கால்கள் படியேறிக் கொண்டிருந்தன.

தலைமை அமைச்சர் முசுகுந்தரின் முன் யானைப்பாகன் நிறுத்தப்பட்டிருந்தான். “பாண்டியநாட்டின் பெருவிழா நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இந்தச் சிக்கல் தொடர்பாக விசாரிக்கத் தாங்கள் வரவேண்டுமா?” என்று முசுகுந்தரிடம் அரசாங்கத்தின் களஞ்சியத் தலைவர் வெள்ளிகொண்டார் கேட்டார்.

“இப்படி ஒரு கோர நிகழ்வு நடந்துள்ளது என்பது நம்மினும் மேலுள்ளவர்களுக்குத் தெரியாது. ஆனால், கீழ்நிலை வீரர்கள் காதோடு காதாக இதைத்தான் பேசிக்கொண்டிருப்பார்கள். இப்போதே இதுகுறித்து விசாரித்து தண்டனை வழங்கினால், அந்த வீரர்களின் காதுகளில் தானாகப் போய்ச்சேரும். விழாக்காலத்தில் ஒழுங்கை உறுதிப்படுத்துவது முக்கியம். அதற்குத் தேவையான அச்ச உணர்வை ஊட்ட இது நல்ல வாய்ப்பு. அதை ஏன் தவறவிட வேண்டும்?”

நிர்வாகத்தை நடத்திச்செல்லும் மூதறிவாளர் முசுகுந்தர் என்பது அவரது ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுவதாக எண்ணி மகிழ்ந்தார் வெள்ளிகொண்டார்.

தனித்திருந்த அந்த மாளிகைக்கு இருவரும் வந்தபோது, கோட்டைத்தளபதி சாகலைவனும் யானைக் கட்டுத்தறியின் பொறுப்பாளன் அல்லங்கீரனும் அங்கு இருந்தனர். விசாரணைக்காக வரவழைக்கப்பட்ட மற்ற நான்கு வீரர்களும் பாகனுக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்தனர்.

பாகனின்மீது சுமத்தப்பட்ட குற்றத்தை, தளபதி சாகலைவன் தடித்த குரலில் கூறினான்
“யானையைவிட்டுப் பாகனும், கப்பலைவிட்டு மீகானும் (மாலுமி) தப்பிக்க அனுமதியில்லை. இது பாண்டியநாட்டின் விதி. அதை நீ மீறியிருக்கிறாய்.”

“நான் என்னைக் காப்பாற்றிக்கொள்ளத் தப்பவில்லை. அதைக் காப்பாற்றவே முயன்றேன்.”



“மதம்கொண்ட யானையை எப்படிக் காப்பாற்ற முடியும்?”

“அதற்கு மதம் பிடிக்கவில்லை.”

“தளபதி மாரையனை அது ஏன் கொன்றது?”

“என்னை ஏன் அது கொல்லவில்லை?”

எதிர்க்கேள்வி, எரிச்சலை உண்டுபண்ணியது. கேள்விக்குள் இருக்கும் உண்மை, பதற்றத்தைக் கூட்டியது.

“அரை இருட்டுக்குள்ளிருந்து குதிரை பாய்ந்து கண்ணெதிரே வந்தால், எந்த விலங்குதான் அச்சங்கொள்ளாது? அச்சத்தால்தான் அது அடித்தது. மதத்தால் அல்ல.”

“உனது விளக்கம், தளபதியின் மரணத்தை நியாயப்படுத்தப் போதுமானதாக இல்லை. அதுவும் இந்தப் பெருவிழா நடந்து கொண்டிருக்கும்போது. ஒருவேளை யானை நெடுந்தெருவுக்குள் நுழைந்திருந்தால் இழப்பு என்ன ஆகியிருக்கும்?”

“என் உத்தரவுகளை அது ஏற்கவில்லையே தவிர, அதற்கு மதம் பிடிக்கவில்லை. அதனால்தான் அது கட்டுத்தறியை நோக்கிப் போனது. மூன்று திருப்பங்களிலும் சரியாகத் திரும்பி நடந்தது. மேற்குவாசல் தளபதி சட்டென எதிரில் வந்துவிட்டார். இருட்டில் அவரின் வருகையை நானே பார்க்கவில்லை. அது வேகம் கொள்ளாமல்தான் அடித்தது. பின்னங்காலில் மிதிபட்டதால் அவர் செத்தார். அது நிற்காமல்... ஆனால், சரியான திசைநோக்கிப் போனதால்தான் குத்துக்கோலைக் (அங்குசத்தை) காதோரம் செருகிவிட்டு இறங்கினேன். அதை எளிதில் பிடித்திருக்க முடியும். ஆனால், அவசரத்தில் எல்லாம் தவறுதலாக நடந்துவிட்டன.”

“நீ நடந்துகொண்டதுதான் தவறு. அதை ஏற்காமல் எல்லாவற்றின் மீதும் பழிசுமத்தாதே.”

பாகனின் எதிர்க்கூற்றைக் கேட்டுக் கொண்டிருந்த முசுகுந்தர் சொன்னார், “பாண்டிய நாட்டின் பெருவிழா நடந்துகொண்டிருக்கும் இந்த வேளையில் மற்றவர்களுக்குத் தெரியாமல் விசாரித்துக்கொண்டிருக்கிறோம். விசாரணையைக்கூடக் குற்றத்தின் பகுதியாக நீ மாற்றிவிட்டாய். நீ இழைத்த குற்றம் அன்றோடு நிற்கவில்லை. இன்றும் தொடர்கிறது.”

முசுகுந்தரின் சொல்லால் அதிர்ச்சியடைந்த அல்லங்கீரன், இனியும் பேசாமல் இருப்பது முறையல்ல என்று முடிவுசெய்தார்.

**வே**னிற்கால மாளிகைக்குள் நுழைந்தார் திசைவேழர். சுற்றுச்சுவர் முழுக்க செடிகொடிகளால் ஆன வண்ண ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. பச்சைநிறப் பரப்பாய் மதில்கள் காட்சி தந்தன. மாளிகையின் நடுவே போன திசைவேழர் வழக்கம்போல் கோலை ஊன்றி தலையை மேலேற்றி அண்ணாந்து பார்த்தார்.

சிறுபுலி கண்போல் அறுவை (சித்திரை) இருமீன் மேற்கூரையின் உச்சியில் இருந்தது. அதன் இடப்புறம் மூன்றாம்பிறை நிலவு இருந்தது. அதற்கு நேர் கீழே செவ்வாயும், அதற்கு எதிரே காரியும் (சனி) இருந்தன. அண்ணாந்த திசைவேழரின் தலை சற்றே கூடுதல் நேரம் எடுத்தது. அதேபோல அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த அந்துவனுக்குப் பிடரி பிடிப்பதைப்போல இருந்தது.

தலை இறக்காமலே கேள்வி வந்தது. “செவ்வாய்க்கோளுக்குப் பூசியுள்ள செந்நிறத்துக்கான வண்ணத்தை எதிலிருந்து எடுத்தாய்?”

“வெடவேலம் பட்டையிலிருந்து எடுத்தேன்.”

“அதுதான் இளஞ்சிவப்பாக இருக்கிறது. செவ்வாய் அடர்சிவப்பு நிறம் அல்லவா? அதனால்தானே இந்த அழகிய பெயரை நம் முன்னோர்கள் சூட்டினர். நுணாமரக் கட்டையிலிருந்து சாறு எடுத்துப் பூசு. அதுதான் அடர்சிவப்பைத் தரும்.”

‘சரி’யென்று வேகமாகத் தலையாட்டினான் அந்துவன்.

``விண்மீன்கள் அனைத்தும் இமைக்கும் ஒளி உடையவை. அவற்றுக்குக் கோள்மீன்களைப்போல வெறும்வண்ணம் பூசாதே. சிப்பியைத் தட்டியோ, சுக்கான் துகளைக் கலந்தோ பூசு. அப்போதுதான் இமைக்கும் தன்மை கிடைக்கும்."

‘சரி’யென்று மீண்டும் தலையசைத்தான். `நல்லவேளை பெரிய தவறு எதுவும் இதில் இல்லை' என்று மனம் சற்று நிம்மதியடைந்தது.

திசைவேழர் திரும்பி நடக்கத் தொடங்கினார். எதிரே இருந்த சுவர் ஓவியத்தின் கீழ்ப்புறம் அவர் கண்ணில்பட்டது. நடக்கத் தொடங்கிய கால்கள் நின்றன. மற்றவர்களும் நின்றனர். எல்லோரின் கண்களும் எதிர் சுவரைப் பார்த்தன. வேனிற்கால மாளிகையாதலால் செடிகொடிகள் பின்னிக்கிடக்கும் பச்சை வண்ணக் காட்சி வரையப்பட்டிருந்தது.

எதைப் பார்த்து நிற்கிறார் என்பது மற்றவர்களுக்குப் புரியவில்லை. சற்றே உற்றுப்பார்த்தார். பின்னிக்கிடக்கும் கொடிகளுக்குக் கீழே தரையோடு இருக்கும் ஒரு செடியில் பூ வரையப்பட்டிருந்தது. ஊன்றுகோலை நோக்கிக் காட்டி “இது என்ன பூ?” என்று கேட்டார்.

என்ன  விடை சொன்னாலும் அது தவறாகத்தான் இருக்கும் என்று எல்லோருக்கும் தெரியும். ஏனென்றால், அது தவறாக வரையப்பட்டதால்தான் இந்தக் கேள்வியே பிறந்திருக்கிறது என்று எல்லோரும் நம்பினர்.  விடையேதும் வரவில்லை.

“யாருக்குமே இது என்ன பூ என்று தெரியவில்லையா?” என, சற்றே குரல் உயர்த்திக் கேட்டார்.

ஈட்டிபோல் புற இதழ்களையும், விசிறிபோல் அக இதழ்களையும் உடைய பொன்மஞ்சள் வண்ணம் கொண்ட அந்தப் பூவை உற்றுப்பார்த்து ஒரு மாணவன் சொன்னான், “நெருஞ்சிப் பூ.”

அந்துவனும் அதைத்தான் நினைத்தான். ஆனால், தவறு ஏதும் வந்துவிடக் கூடாது என்பதால் சொல்லவில்லை.

“நெருஞ்சிப் பூவுக்கு இன்னொரு பெயர் ஞாயிறுதிரும்பி. கதிரவன் எழுவதிலிருந்து மறைவது வரை அதைப் பார்த்தபடி திரும்பக்கூடிய விந்தையான மலர். அதனால் இதைக் கதிரவன் மேல் காமம்கொண்ட மலர் என்று சொல்வார்கள்” என்றார் திசைவேழர். எல்லோருக்கும் தெரிந்த செய்திதான். ஆனால், புதிதாகக் கேட்பதைப்போலக் கேட்டனர். விடையின்றித் தலை தாழ்த்தி நிற்கும் மாணவனே ஆசானின் அகங்காரத்துக்குச் சுவையூட்டுகிறான்.



“பள்ளியறையில் நெருஞ்சிப் பூ வரைதல் மிகப்பொருத்தம்” என்று பாராட்டினார் திசைவேழர்.

தங்கள் ஆசானுக்குப் பாராட்டக்கூடத் தெரியும் என்று பல மாணவர்கள் அன்றுதான் அறிந்தார்கள். `இவர் பாராட்டுவார் எனத் தெரிந்திருந்தால், நாமே சொல்லியிருக்கலாமே!' என்று அந்துவனுக்குத் தோன்றியது.

அடுத்த கணம் கேட்டார், “இதில் இருக்கும் பிழை என்னவென்று சொல்லுங்கள்?”

வழக்கம்போல் அனைவரும் திகைத்தனர். பூவின் இதழ்களையும் அதன் வடிவத்தையும் உற்றுப்பார்த்தான் அந்துவன். `எல்லாம் சரியாகத்தானே இருக்கின்றன. இதில் என்ன பிழை கண்டார்?' எனச் சிந்தித்தான்.

யாருக்கும் எதுவும் பிடிபடவில்லை.

அவரே சொன்னார். “நெருஞ்சிப் பூ எத்திசை நோக்கி இருக்கிறது?”

“நேராக மேல்வானத்தை நோக்கி இருக்கிறது.”

“அப்படியென்றால் நண்பகல் என்று பொருள். மாளிகையின் மேற்கூரையில் பின்னிரவு விண்மீன்கள் மின்னுகின்றன. மாளிகையின் சுவரில் பகல் வெயில் சுடுகிறது. என்ன வானியல் இது?”

மாணவர்கள் உறைந்துபோனார்கள். அவர் யாரையும் பார்க்காமல் ஊன்றுகோலை நகர்த்தியபடி முன் நடந்தார்.


ஒருகாலமும் கட்டுப்பாட்டுக்குள் அடங்கா பெருங்கிழவன் அல்லங்கீரன். அவன் பேச ஆரம்பித்ததும் விசாரணையின் சூழலே மாறியது.

“வந்திருக்கும் மண்ணீட்டாளர்கள் அவசரமாக அனுமதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை மாரையன் உணர்ந்திருந்தான். ஆனால், கோட்டைக் கதவை அவனால் திறந்துவிட முடியவில்லை. எல்லா அதிகாரங்களையும் காமக்கிழத்தின் படுக்கை அறைக்குள் வைத்துக்கொண்டு நீ இருந்தாய். அதுதான் சிக்கலுக்குக் காரணமே.”

அல்லங்கீரனின் குற்றச்சாட்டு சாகலைவனின் முகத்துக்கு நேர் எகிறியது.

“அவனுக்குக் கதவைத் திறக்கும் அதிகாரம் இருந்திருந்தால், இரவு நிலையுணவு கொடுப்பதற்கு முன்பே கட்டுத்தறிக்குச் செய்தி சொல்லி யிருப்பான். யானையும் கதவைத் திறந்து விட்டிருக்கும். எந்தச் சிக்கலும் ஏற்பட்டிருக்காது.”

“ஒரு மரணத்தை வைத்து நிலைநிறுத்தப்பட்ட அதிகாரத்தைக் கேள்வி கேட்காதீர்கள்” என்றார் வெள்ளிகொண்டார்.



“மாரையன் கதவைத் திறக்க அவ்வளவு முயன்றபோதும், சாகலைவன் காமக்கிழத்தியின் கட்டிலைவிட்டு அகலாமல் இருந்ததுதான் அதிகாரத்தின் கோரவடிவம். நான் அதைத்தான் கேள்வி கேட்கிறேன்.”

“எல்லாவற்றையும் அறிந்துதான் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை கேள்விக்கு உட்படுத்தும் அதிகாரம் யாருக்கும் வழங்கப் படவில்லை” என்றார் வெள்ளிகொண்டார்.

“அறிவாலும் குணத்தாலும் எடுக்கவேண்டிய முடிவை, விதிகளாலும் கட்டளைகளாலும் எடுக்க முடியாது. மனிதன் எடுக்கவேண்டிய முடிவைச் சட்டத்தின் கையில் ஒப்படைப்பது அறிவீனம்.”

அவ்வளவு நேரமும் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த முசுகுந்தர், சற்றே ஆவேசத்தோடு தலையிட்டார், “கட்டளைகளால் கட்டியெழுப்பப்படுவதுதான் அரசாட்சி. அதன் உறுப்புகள் அனைத்தும் உத்தரவுகளால் மட்டுமே இயங்க வேண்டும். முடிவெடுக்கும் அதிகாரத்தை இழப்பதன் மூலமே எல்லோருக்குமான சிறந்த முடிவு கிடைக்கிறது. எல்லோர் கைகளிலும் அதிகாரம் இருந்தால் எல்லாம் அழியும்.”

“மனிதனைவிட உயர்ந்த இடத்தை விதிகளுக்கு எப்படித் தர முடியும்?” என்று சொன்ன அல்லங்கீரன் சற்றே மூச்சுவாங்கிவிட்டுச் சொன்னார் “உங்களைப்போல உயரத்தில் இருக்கும் மனிதர்களுக்கு அதுதான் வசதியாக இருக்கிறது. ஏனென்றால், உங்களின் கையில்தான் சட்டவிதிகள் இருக்கின்றன. அவற்றுக்குத்தான் கண், காது என எதுவும் இல்லையே. கையில் எடுப்பவனுக்குத் தகுந்த கையுறைகள்தானே சட்டவிதிகள்.”
`கிழவனை இன்னும் பேசவிடக் கூடாது' என முசுகுந்தனுக்குத் தோன்றியது.

“இந்த மாநகரம் சட்டவிதிகளால் பதப்படுத்தப் பட்டது. அதன் பக்குவத்தைக் குலைக்க நினைப்பதை அனுமதிக்க முடியாது.”

``முளைத்தது விளையும்... விளைந்தது கனியும். அதற்கு எதிராக எதுவொன்றையும் பக்குவப் படுத்தி விளையவைக்கவும் முடியாது; பதப்படுத்தி கனியவைக்கவும் முடியாது. அதுதான் இயற்கை.”

“இயற்கையை ஆள்வதற்காகத்தான் வெல்ல முயல்கிறோம். வெல்வதற்காகத்தான் அழிக்க முயல்கிறோம். அந்த அழிவுதான் அரசாட்சியின் சாட்சி” குரல் கணீரென எதிரொலிக்க, இருக்கையிலிருந்து எழுந்தார் முசுகுந்தர்.

அடுத்து என்ன சொல்லப்போகிறார் என்பது அல்லங்கீரனுக்கு நன்கு தெரியும். அதனால் சற்றே முந்திக்கொண்டு சொன்னார், “மதமற்ற யானையை நான் கொன்றேன். மேல் தூக்காத அதன் வாலைக் கவனிக்காது பெரும் தவறிழைத்தவன் நான்தான். எனக்கான தண்டனையையும் சேர்த்துச் சொல்லிவிடுங்கள்.”

“நீதான் விதிகளின்படி முடிவைச் சிறப்பாக நிறைவேற்றியவன். தனித்து வந்த யானையை கண நேரத்தில் வீழ்த்தினாய். மணநாளில் மாமன்னர் சிறந்தோருக்கு வழங்கவிருக்கும் பொற்றாமரைப்

பூவை உனக்கும் வழங்க ஏற்பாடு செய்கிறேன்.”

“தவறுகளைச் ‘சிறப்பு’ என்று நீங்கள் பாராட்டுவதன் காரணம், சிறப்பானவற்றைத் தவறானதாக மாற்றிவைத்திருக்கும் உங்களின் அதிகாரம்தான்.”

திசைவேழர் பாண்டரங்கத்துக்குள் நுழைந்தார். மாணவர்கள் பின்தொடர்ந்தனர். இதுவரை பார்த்த இரு பள்ளியறையை இணைத்தாலும் இதன் அகலம் வராது. பார்வையின் எல்லை மேற்கூரையைத் தொடும்போது மனம் விரிந்து அடங்கும். ஆனால், ஆசானுக்கு அப்படி இருக்காது என்பது எல்லோருக்கும் தெரியும்.

உள்ளே நுழைந்ததும் அனைவரின் முகத்திலும் ஏற்பட்ட வியப்பு அளவு கடந்ததாக இருந்தது. ஆனால், அந்துவனின் முகம் எதையும் காட்டிக்கொள்ளாமல் மிக அமைதியாக இருந்தது. ‘இவ்வளவு பெரிய மேற்கூரையில் எல்லாமே மிக நுணுக்கமாக வரையப்பட்டுள்ளன. வானியல் வரையப்பட்டதில் மிகப்பெரிய மேற்கூரை இதுதான். இதைச் சரியாக வரையத்தான் மாதக்கணக்கில் பணி செய்தேன். இதைப் பார்த்து ஆசிரியன் சொல்லப்போகும் அந்தப் பாராட்டுச் சொல் போதும் வாழ்வுக்கு’ என்று காத்திருந்தான் அந்துவன்.

திசைவேழர் மண்டபத்தின் நடுவில் கோல் பிடித்து நின்று, மெள்ள தலையைத் தூக்கினார். அவர் கண்விழித்துப் பார்க்கும் அந்த முதற்கணம் அவர் முகத்தில் ஏற்படும் மலர்ச்சியைப் பார்க்க ஆவலோடு இருந்தான் அந்துவன். அவர் தலையைப் பின்புறம் கவிழ்ந்து கண்விழிக்கப்போகும் நிலையில் அந்துவனுக்குச் சட்டென நினைவுக்கு வந்தது தேவாங்கு இருக்கும் மரக்கூண்டு. ‘இளமருதன் இங்குதானே வைத்திருந்தான்.
எடுத்துவிட்டானா அல்லது இன்னும் இங்குதான் இருக்கின்றனவா?’ என்று சுற்றியிருக்கும் மேடைகளைப் பார்த்தான். அவன் இருக்கும் இடத்திலிருந்து ஒரு பாதி மேடைகள்தான் தெரிந்தன. பெருந்தூண்கள், மேடைகளை மறைத்து நின்றன. இரண்டு அடிகள் முன்னும் பின்னுமாகப் போய், கண்களை ஓடவிட்டான். இடப்புறம் இறுதித்தூணுக்குப் பின்புறம் ஒரு மரக்கூண்டு இருப்பதன் சிறு பகுதி தெரிந்தது.

கூண்டுக்குள் இருக்கும் அந்த விலங்கைப் பார்த்தால், ஆசான் என்ன சொல்வாரோ என்று எண்ணிய கணத்தில்தான் அவர், வரையப்பட்ட மேற்கூரையை நீண்டநேரம் பார்த்துக் கொண்டிருப்பது நினைவுக்கு வந்தது. சட்டென அவரை நோக்கித் திரும்பினான். அவர் மேற்கூரையைப் பார்த்து முடித்துவிட்டு தலையை முன்சாய்த்தார்.

‘அவரின் முகக்குறிப்பைப் பார்க்க முடியவில்லையே, என்ன சொல்லப்போகிறாரோ!' என்று பதற்றம் கூடியது. அவர் குறித்துக் கொடுத்தது நினைவுக்கு வந்தது. குதிரையின் தலைபோல் இருக்கும் ஆறு புரவிகளும் (அசுவினி) இடப்புறம் இருந்தன. குமிழ்போல் மூன்று புள்ளிகளாக இருக்கும் அடுப்பு (பரணி)

அதன் நேர்மேலே இருந்தது. பொற்கால் கட்டில்போல் இருக்கும் கணை (பூரம்) சற்றே கீழிறங்கி இருந்தது. ஒவ்வொரு விண்மீன் கூட்டமும் நினைவுக்கு வந்தது. மனக்கண்ணில் எல்லாவற்றையும் நினைத்து மீண்டும் மேலே பார்த்தான் எல்லாம் சரியாகத்தான் வரையப்பட்டிருந்தன. ஆனால், ஆசான் இன்னும் வாய் திறக்கவில்லை.
அமைதி எல்லோரையும் பீடித்தது. மெல்லிய செருமல் வந்தது. என்ன சொல்லப்போகிறார் என்ற ஆர்வத்தோடு இருந்தனர்.

“இந்த வானியல் அமைப்பு எதைக் குறிக்கிறது?”

குரல் இறுக்கமாக இருந்ததை ஒருசிலர் மட்டும் உணர்ந்தனர். வினாவுக்கான விடை யாரிடமும் இல்லை. மற்றவர்கள் அந்துவனையே பார்த்தார்கள். தயங்கியபடி அந்துவன் சொன்னான் “பேரரசரின் பிறந்தநாள் அமைப்பு இதுவன்று. பேரரசியாரின் பிறந்தநாள் அமைப்பும் இதுவன்று. வேறு யாருடையது என்று என்னால் உய்த்தறிய முடியவில்லை ஆசானே.”

“மனிதனுக்குரிய நாளை நினைவுபடுத்துவது மட்டுமா வானியலின் வேலை? அது இயற்கையின் காலமானி அல்லவா?”

அவரின் சொல், புதிய திறப்பை உருவாக்கியது. வியப்போடு தலைநிமிர்ந்து மேலே பார்த்தான். ஒன்றும் பிடிபடவில்லை.

ஆசானின் குரல் கணீரென ஒலித்தது. “இது மேற்கு மலையில் பெருமழை பெய்து வைகையில் வெள்ளம் பெருகும் கோள்நிலை. பாண்டரங்கத்தில் ஆடலும் பாடலும் செழிக்க, பாண்டியநாட்டில் உழவும் வணிகமும் தழைக்க இந்தக் கோள்நிலையே அடிப்படை. இது பிறந்த காலத்தைக் குறிப்பதன்று, இந்தப் பேரரசின் சிறந்த காலத்தைக் குறிப்பது.”

வாயடைத்துப்போனார்கள் அனைவரும். வானியல் பேராசானின் அறிவுகண்டு மெய்ம்மறந்து நின்றபோது, அவரின் குரல் அதைவிட கனத்து ஒலித்தது, “இதில் நீ செய்த பிழை என்ன தெரியுமா?”

அடித்தொண்டையிலிருந்து வந்தது கேள்வி. அந்துவனின் உடல் உதறியது. அவன் நிமிர்ந்து பார்த்தான். மேற்கூரையைக் கண்கள் சுற்றின, தலையும் சுற்றியது.

ஆசானின் குரல் வெளிவந்தது. “வெள்ளி வெறும் கோளன்று… மழைக்கான கோள். ஆனால், அது தெற்கே விலகி இருப்பது மழையின்மைக்கு அறிகுறி. நீ எங்கே வரைந்து வைத்திருக்கிறாய் பார்.”

அந்துவன் திரும்பி மேற்கூரையைப் பார்த்தான். வெள்ளி தெற்கே விலகி இருந்ததைப் பார்த்த கணத்தில் உச்சந்தலையைத் தாக்கியது ஆசானின் ஊன்றுகோல். துவண்டு விழுந்தான் அந்துவன்.

“பாண்டரங்கத்தைப் பாழுமரங்காக்கப் பார்த்தாயா?”

குரல் கேட்டு நடுங்கினான் அந்துவன். “மன்னியுங்கள் ஆசானே, என்னை மன்னியுங்கள். உடனடியாகச் சரிப்படுத்துகிறேன். பொறுத்தருளுங்கள்.”

அந்துவனைவிட அதிக நடுக்கம் இருந்தது ஆசானின் கைகளில்தான். “காலத்தைக் கணித்தல் எளிதன்று; கணநேரத்தில் எல்லாம் மாறிவிடும்.

நீ என் தலைமாணவன் என்பதால்தான் உன்னை அரண்மனைக்கு அனுப்பினேன்.”

அந்துவன் பாய்ந்துவந்து காலைப் பிடித்தான். அடுத்து என்ன சொல்லப்போகிறார் என்பதை அவனால் உய்த்தறிய முடிந்தது. “ஒரு வாய்ப்பு கொடுங்கள் ஆசானே, மறுபடியும் பொருத்தமாக வரைந்து காட்டுகிறேன்.”

அந்துவனின் கதறல் ஓசை கேட்டுக்கொண்டே இருக்க, திசைவேழர் பாண்டரங்கத்தைவிட்டு வெளியேறினார்.

**கோ**ட்டையின் வெளிப்புறம் இருக்கும் காட்டரண் அது. அங்குதான் யானைகளுக்கான வட்டரங்கு இருக்கிறது. முசுகுந்தரின் தீர்ப்பை நிறைவேற்ற எல்லோரும் வந்திருந்தனர்.

முதலில் பாகன் அரங்குக்குள் அனுப்பப் பட்டான். இன்னும் சிறிது நேரத்தில் யானை உள்ளே நுழையும்.

சுழல் அரங்கில் யானையிடம் தப்பி பாகன் ஓடவேண்டும். அவன் ஓடித் தப்பித்தால் குற்ற மற்றவன். மிதிபட்டுச் செத்தால் பாவமற்றவன். இதுதான் போட்டியின் விதி.

போட்டி தொடங்க இன்னும் நேரமிருந்தது. அதேசமயம், முடிவு எல்லோருக்கும் தெரிந்தேயிருந்தது.

- பறம்பின் குரல் ஒலிக்கும்...

# வீரயுக நாயகன் வேள்பாரி-26

பாண்டரங்கத்தின் மேற்கூரையில் புதிதாக ஓவியம் வரையும் பணி தொடங்கியிருந்தது. ஆசான் சொன்ன பிழையை மட்டும் திருத்தலாம் என்று ஓவியர்கள் சொன்னார்கள். ஆனால், அந்துவன் அதை ஏற்கவில்லை. “தெற்கே விலகியிருக்கும் வெள்ளியைப் பொருத்தமான இடத்தில் வரையலாம். ஆனால், உறுதியாக அது நிற வேறுபாட்டை வெளிப்படுத்தும். ஏற்கெனவே, வரையப்பட்ட ஓவியத்தின் வண்ணத்திலிருந்து புதிதாக வரையப்பட்ட பகுதி வேறுபட்டே தெரியும். இன்னொரு முறை ஆசானின் கோபத்துக்கு ஆளாக விரும்பவில்லை. எனவே, மேற்கூரையில் வரையப்பட்ட முழு ஓவியத்தையும் கருநீல வண்ணம் பூசி மறைக்கச் சொன்னான்.

அதன் மீது நாள்மீன்களையும் கோள்மீன்களையும் புதிதாக வரைந்துவிடலாம் எனச் சொல்லிவிட்டான். ஓவியர்கள், அந்துவன் சொன்னபடி பணியைத் தொடங்கினர்.




செவியன் மூலம் செய்தியைக் கேள்விப்பட்ட இளமருதன், சற்றே நடுங்கிப்போய் இருந்தான். ஆசான் வரும்போது தேவாங்கின் கூட்டை எடுத்து வேறு அறையில் வைத்துவிட வேண்டும் என்று அன்றே அந்துவன் சொல்லியிருந்தான். ஆனால், கடைசி நேரத்தில் எல்லோருக்கும் அது மறந்துவிட்டது. `பிரச்னைக்கு ஏதோ ஒருவகையில் தானும் காரணமாகிவிட்டோமோ!' என்று அஞ்சியபடி தேவாங்கின் கூட்டை வேறு இடம் மாற்றிவிடலாம் என முடிவுசெய்தான் இளமருதன். ஓவியர்கள் எல்லோரும் உணவருந்தப் போன நேரம் பார்த்து பாண்டரங்கத்துக்குள் நுழைந்தான்.

இடப்புறம் கடைசித் தூணுக்குப் பின்னால் இருந்த கூண்டை நோக்கிப் போனான். யாரோ ஒருவன் அதன் அருகில் உட்கார்ந்திருந்தான். அருகில் போன பிறகுதான் அவன் அந்துவன் என்பது தெரிந்தது.

“தவறிழைத்துவிட்டேன் மன்னியுங்கள்” என்றான் இளமருதன்.

“நீ ஏன் மன்னிப்புக்கோருகிறாய்? நீயா வெள்ளியைத் தென்புறம் நகர்த்தியது?” என்று கேட்டான் அந்துவன்.

இளமருதனுக்கு என்ன மறுமொழி சொல்வதென்று தெரியவில்லை.

சற்று அமைதியாக இருந்துவிட்டு, “நான் இந்தக் கூண்டை இங்கிருந்து எடுத்துக்கொண்டு போய்விடுகிறேன்” என்று சொல்லி, தேவாங்கின் கூண்டை எடுக்க முற்பட்டான்.

“வேண்டாம்" என்று தடுத்த அந்துவன் சொன்னான், “மேற்கூரையில் ஓவியப்பணி முழுமையாக முடியும் வரை நான் இந்த அரங்கத்தைவிட்டு வெளியேறப்போவதில்லை. இந்த அரங்கத்துக்குள்தான் நாள்கணக்கில் இருக்கப்போகிறேன். எவ்வளவு நேரம்தான் அண்ணாந்து மேற்கூரையையே பார்த்துக்கொண்டிருக்க முடியும்? அவ்வப்போது குனிந்து கூண்டுக்குள் இவற்றின் விளையாட்டைப் பார்த்து மகிழ்வதுதான் என் ஒரே பொழுதுபோக்கு. எனவே, நான் இங்கு இருக்கும் வரை இவையும் இருக்கட்டும். பணிகள் முடிந்ததும் சொல்கிறேன். அதன் பிறகு, நீ வந்து எடுத்துச் செல்” என்று சொல்லி இளமருதனை அனுப்பிவைத்தான்.

இளமருதனால் மறுப்புச் சொல்ல முடியவில்லை. ‘சரி’ எனத் தலையாட்டியபடி வெளியேறினான்.



அந்துவன் இலந்தைப்பழங்களை உள்ளே உருட்டிவிட்டபடி கூண்டையே பார்த்துக்கொண்டிருந்தான். தேவாங்குகள் இரண்டும் தலையை மெள்ள நீட்டி பழத்தை நோக்கி வந்தன.

அரண்மனையின் வளாகத்தில் மிகப் பழைமையான மாளிகை ஒன்று உண்டு. அதன் பெயர் `பாசிலை அரங்கு'. பச்சைநிற மணிக்கற்கள் பதிக்கப்பட்ட அரங்கு. எந்த ஒரு நற்செயலையும் பாண்டியர்குடி அங்குதான் தொடங்கும். இந்தத் திருமணத்தின் முதல் நிகழ்வும் அங்குதான் தொடங்கவிருந்தது.

அரச குடும்பத்தினர் மட்டுமே இந்தக் கூடுகையில் பங்கெடுத்தனர். வேறு எவருக்கும் அனுமதியில்லை. குடும்பத்தினர் அல்லாத ஒரே ஒருவர் திசைவேழர் மட்டுமே. காலம் குறித்த அச்சம் எல்லோருக்கும் எப்போதும் இருக்கத்தானே செய்கிறது. காலத்தை அறிந்தவனுக்கு அதிகாரத்தின் எல்லா கதவுகளும் திறக்கத்தானே செய்கின்றன.

அரச குடும்பத்துப் பெண்களும் ஆண்களும் பேரலங்காரத்துடன் அரங்கை நிறைத்திருந்தனர். வணிகக் குடும்பத்தினரின் அணிகலன்கள் மேலேறி மின்னிக்கொண்டிருந்தன. ஒருவரைப் பார்த்து ஒருவர் வியப்புற்றபோது, மாமன்னர் குலசேகர பாண்டியனும் சூல்கடல் முதுவனும் இணைந்து அரங்குக்குள் நுழைந்தனர்.

இருவருக்கும் வயது ஐம்பதைக் கடந்திருக்கும். நெடு உயரமும் உடல் வலிமையும் தோளில் புரளும்

வெண்முடியும் இருவருக்கும் ஒரே மாதிரி இருந்தாலும், முக அமைப்பு இருவேறு உலகங்களைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தெளிவாகச் சொன்னது. ஆழ்கடலின் உப்பங்காற்று காலம் முழுவதும் படிந்ததன் அடையாளத்தோடு இருந்தது சூல்கடல் முதுவனின் முகம். இளம்வயதில் செங்கணூர் முற்றுகையின்போது வெட்டப்பட்ட கீழ் உதட்டின் தழும்புகள் இன்று வரை மறையவில்லை குலசேகர பாண்டியனுக்கு. இருவரும் முழுநிலை அலங்காரத்துடன் அரங்கினுள் நுழைந்தனர். மனம் குவிந்து, உடல் விழுந்து, வணங்கி எழுந்தனர் அனைவரும். சமமான உயரத்தில் இருவிதமான அடையாளங் களுடனான இருக்கையில் இருவரும் அமர்ந்தனர்.

மணமகன் பொதியவெற்பன் வந்து, தந்தையின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்தான். எல்லோரும் மணமகளுக்காகக் காத்திருந்தனர். சூல்கடல் முதுவனின் கண்களில் ஒரு செருக்கு மேலேறியது. உள்நுழையும் தன் மகளின் பேரழகு கணநேரத்தில் இந்த அவையைச் சுழற்றிவிடும் என்பது அவருக்குத் தெரியும். அவள் வரும் திசையைப் பார்த்திருந்தனர்.

தோழிகள் சூழ, பொற்சுவை உள்நுழைந்தாள். ஒன்பதுவிதமான மணிகளை வரிசையாகப் பொருத்தி, ஒற்றைக்கொடிபோல உச்சந் தலையிலிருந்து முன்சரிந்திருந்தது தலைப்பாளை. நீலநிறக் கச்சை அணிந்திருந்ததால், இப்படி ஒரு வண்ணத்தில் மெல்லிய துணியை இதுவரை யாரும் கண்டதில்லை. காலடியில், ஒளி பட்டு மின்னும் பொற்சலங்கையிலிருந்து கசியும் வண்ணம்போல் இருந்தது செவ்வண்ணப்பூச்சு. கண்டவர் கருவிழிகள் நகர முடியாமல் நின்றன. பொற்சுவை மட்டும் நகர்ந்து கொண்டிருந்தாள். அவள் சற்றே தலை தாழ்த்தித்தான் நடந்து வந்தாள். அலங்காரங்களைக் கடந்து அவளது ஆழ்மனதைப் பார்க்கக்கூடியவர் எவரும் இல்லை அந்த அவையில்.



தந்தையின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்தாள். அவள் அதிக ஆபரணங்கள் அணியவில்லை. ஆனால், அணிந்திருந்த எந்த ஒன்றையும் இதற்கு முன் எவரும் பார்த்ததில்லை.
பாண்டியன்மாதேவியின் தோழிகள் பேசிக்கொண்டார்கள், “பெரும்வணிகன் மகள். ஆனால், அவள் கழுத்தில் ஒற்றை அணி மாலையே அணிந்திருக்கிறாள். அதிலும் ஒற்றை முத்து மட்டுமே இருக்கிறதே ஏன்?”

``இடம்புரி சங்கு ஆயிரம் சூழ்ந்தது வலம்புரி சங்கு. வலம்புரி சங்கு, ஆயிரத்தில் ஒன்றுதான் வளைநிலை வடிவில் இருக்கும். அதுகொண்டுதான் அணிசெய்ய முடியுமாம். அந்தச் சிறப்புகொண்ட வலம்புரி சங்கு, இதுவரை இரண்டு மட்டும்தான் எடுக்கப்பட்டுள்ளனவாம். அதில் ஒன்று, யவன அரசியாரின் தலைமுடியில் இருக்கிறதாம். இன்னொன்று, பொற்சுவையின் கழுத்தில் இருக்கிறதாம்” அவளின் மறுமொழி காதோடுக் காதாகச் சுற்றிவந்தது. அதன் பிறகு, அரங்கு பேச்சற்றுப்போனது.

பாண்டியர்குல முதியவள், மின்னும் வெண்தட்டை எடுத்துவந்து பேரரசனிடம் கொடுத்தாள். அதில் மஞ்சள்கிழங்கு வட்டவடிவில் இருந்தது. நடுவில் வெற்றிலை வைக்கப்பட்டிருந்தது.
குலசேகரபாண்டியன் அதைச் சூல்கடல் முதுவனிடம் வழங்கினான். அதைப் பெற்றுக்கொண்ட சூல்கடல் முதுவன், தங்களின் வழக்கப்படி பொன்நிறத் தட்டை வழங்கினான். அதிலும் மஞ்சள் சூழ நடுவில் வெற்றிலை இருந்தது. முன்னோர் மரபுப்படி இருவரும் வெற்றிலை மாற்றி மணமுடி வாக்களித்தனர். முறைப்படி மணவிழா இந்தக் கணத்திலிருந்து தொடங்குகிறது. இரண்டு மாதங்களில் ஆறு நிகழ்வுகளாக அது நிகழும். நிறைவாக, மணமாலை சூடலுடன் விழா நிறைவுறும்.

வீசிய ஈட்டி, கருங்கல்லில் பட்டுத் தெறித்தது. உதிரன் விடுவதாக இல்லை. பேரெலி, பாறை இடுக்குகளுக்குள் விரைந்து பதுங்கியது. கண்ணில் படாத வரைதான் அது தப்பித்து வாழும். கண்ணில் பட்டுவிட்டால், அது எந்தப் பாறைக்குள் நுழைந்து எவ்வளவு ஆழம் போனாலும் தப்ப முடியாது. அது உள்நுழைந்த கருங்கல்லை வீரர்கள் நால்வர் சேர்ந்து புரட்டிக்கொண்டிருந்தனர். அது தப்பி வெளியேறினால் குத்தித் தூக்க, உதிரனும் மற்றொரு வீரனும் தயாராக இருந்தனர்.
பாறைக்குச் சற்று மேலே இருந்தபடி பாரியும் கபிலரும் இதைப் பார்த்துக்கொண்டிருந்தனர். வீரர்கள் கரும்பாறையைப் புரட்டிக் கீழே தள்ளினர். உள்ளே எலியும் இல்லை; எந்தத் துளையும் இல்லை. `அதற்குள் எங்கே போனது?' என அனைவரும் உற்று நோக்கிக்கொண்டிருந்தனர். ‘எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கையில் அது எப்படித் தப்பிப் போயிருக்க முடியும்?’ என்று எண்ணிக்கொண்டிருக்கையில், யாரும் எதிர்பாராமல் வேறொரு திசையிலிருந்து குத்தித் தூக்கினான் உதிரன்.

அதன் கீச்சொலியோடு எல்லோரின் உற்சாக ஒலியும் கலந்தது. இந்தச் செயலைக் கண்டு தன்னையும் அறியாமல் சீழ்க்கை அடித்தான் பாரி.

பிடிபட்ட பேரெலியைச் சிறு கூடையில் போட்டுக்கொண்டு அடுத்த பாறையை நோக்கி நகர்ந்தனர். வழக்கம்போல் வீரர்கள் முன்னால் போக, பாரியும் கபிலரும் பின்னால் வந்துகொண்டிருந்தனர்.

பாறைகளுக்கு இடையில் இருக்கும் செடி கொடிகளைக் கிண்டியபடி வீரர்கள் நகர்ந்து கொண்டிருந்தனர். உதிரனின் கவனம் சற்றே சிதறத் தொடங்கியது. பாரியின் கண்கள் தன்னை ஊடுருவுவதை அவன் இரண்டு, மூன்று முறை கவனித்துவிட்டான். ஏன் என்று அவனுக்குப் புரியவில்லை. பாரி உடன் வருவது கபிலருக்காக என்றுதான் உதிரனும் முதலில் நினைத்தான். ஆனால், இந்த இரண்டு நாள்களும் பாரியை உற்றுக்கவனித்ததிலிருந்து அவனுக்குச் சந்தேகம் வர ஆரம்பித்தது.

தனது திறனையும் திட்டமிடலையும் ஆராய்வதற் காகத்தான் இது நடந்துகொண்டிருக்கிறதோ என்று எண்ணத் தோன்றியது. நீலனுக்குப் பிறகு, கபிலருடன் இருக்கும் பொறுப்பு தனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நான் அதற்குத் தகுதியானவன்தானா என்று கவனித்துக்கொண்டிருக்கிறாரா?

பாரியைப் பற்றி எண்ணற்றக் கதைகளைச் சிறு வயது முதல் கேள்விப்பட்டுள்ளான் உதிரன். `பாரியின் அறிவுநுட்பம் யாருக்கும் வாய்க்காது!' எனச் சொல்வார்கள். மற்ற வீரர்கள் எல்லோரும் பேரெலி வேட்டையைத் தான் பாரி பார்த்து க்கொண்டிருக்கிறான் என நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், பாரியின் கவனம் வேறொன்றாக இருக்கவே வாய்ப்பு அதிகம் என்று உதிரனுக்குத் தோன்றியது.

உதிரன் துல்லியமாகக் குத்தித் தூக்கியதை வியந்து பாராட்டியபடி வந்துகொண்டிருந்தார் கபிலர். பாரி மறுமொழி சொல்லாமல் நடந்து வந்தான்.

“அப்போது சீழ்க்கை அடித்துவிட்டு, இப்போது எதுவும் சொல்லாமல் வருகிறாய்?” எனக் கேட்டார் கபிலர்.

“நான் சீழ்க்கை அடித்தது உதிரனுக்காக அல்ல, பேரெலிக்காக.”

“என்ன சொல்கிறாய்?”

“தடித்த உடலைக்கொண்டதால் பேரெலியால் வேகமாக ஓடவோ, சிற்றிடுக்கு களுக்குள் நுழையவோ முடியாது. அப்படியிருந்தும் எத்தனையோ விலங்கு களிடமிருந்து அது தப்பி உயிர் வாழ்கிறது என்றால், அதன் தந்திரம்தான் காரணம். சமவெளியில் இருக்கும் நரியின் தந்திரத்தைவிட, மலைமுகட்டில் இருக்கும் பேரெலியின் தந்திரம் வியக்கக்கூடியது.”

“அப்படியென்ன அங்கே நிகழ்ந்தது? நீ எதைக் கண்டு சீழ்க்கை அடித்தாய்?”

“பாறையில் இருந்து வெளியேறி வந்த எலியும், உதிரன் குத்தித் தூக்கிய எலியும் வெவ்வேறு எலிகள். உள்ளிருந்து வந்தது வலப்புறம் ஓடிய வேகத்தில், அந்தச் சிறு புதருக்குள் இருந்த இன்னொன்று

எதிர்பாராமல் வெளியேறியது. அதைத்தான் உதிரன் குத்தித் தூக்கினான். அவனது காலடியின் அருகில்தான், வெளியேறி வந்த எலி பதுங்கி இருந்தது.”

“நீ ஏன் அதைத் தெரிவிக்கவில்லை?”

“அது எனக்குத் தப்பித்தலைக் கற்றுக்கொடுக்கிறது. நான் எப்படி அதைக் காட்டிக்கொடுப்பேன்?”

எதிர்பாராத மறுமொழியாக மட்டுமல்ல, வேட்டையின் ஒழுங்குக்கு எதிரான மறுமொழியாகவும் இருப்பதாக, கபிலருக்குத் தோன்றியது.

“வேட்டைக்குப் பொருள் என்ன பாரி?”

“தாக்குதலும் தப்பித்தலும். நீங்கள் எந்தப் பக்கம் இருந்தும் இந்த விளையாட்டைப் பார்க்கலாம்.”

“நீ எந்தப் பக்கம் இருந்து இதைப் பார்த்தாய்?”

“வேட்டையை நான் எப்போதும் தப்பிச் செல்லும் விலங்கின் பக்கம் இருந்துதான் பார்ப்பேன். இந்த வேட்டையில் உதிரனின் விளையாட்டு வேறு மாதிரி இருக்கிறது. எனவே, நான் எந்தப் பக்கமும் சாராமல் இருக்கிறேன்.”

“ஏன் அப்படி?”

“உதிரனின் செய்கை அப்படி. அவன் வேண்டுமென்றே தப்பிக்க முடியாத பேரெலியாகப் பார்த்து வேட்டையாடுகிறான். அந்த எலிகொண்டு உங்களுக்கு ஆடை நெய்ய எண்ணுகிறான்.”

பாரி சொல்வதன் விளக்கம், கபிலருக்குப் புரியவில்லை.

“தப்பிக்க முடியாத பேரெலியைக்கொண்டு மட்டும் ஆடை நெய்வதன் பொருள் என்ன?”

“புரியவில்லையா? என்றென்றும் உங்களைப் பறம்பு நாட்டிலே வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான்.”

சொல்லிவிட்டு, பாரி நடந்துகொண்டிருந்தான். கபிலர் அப்படியே நின்றுவிட்டார்.

ஒரு கணம் கழித்துக் கேட்டார், “நீங்கள் இருவரும் என்னைத்தான் வேட்டையாடிக்கொண்டிருக்கிறீர்களா?”

“நிச்சயம் இல்லை” என்று சொன்ன பாரி, சற்றே இடைவெளிவிட்டுச் சொன்னான் “பிடிபட்ட பிறகு எவராவது வேட்டையாடுவார்களா?”

பதில் கேட்டு அடங்காச் சிரிப்பை வெளிப்படுத்திய கபிலர் சொன்னார், “கூடு என்பது, பறவைக்கான தங்கும் இடம். வானம்தான் வாழ்விடம்.”

“உண்மைதான், ஒருநாள் உங்களின் வானமே நாங்களாக விரிந்திருப்போம்.”

பாரியின் தோழமை எல்லை கடந்து விரிந்துகொண்டிருந்தது. மலையின் கீழ்த்திசையில் ஊசிப்புகை மேலெழுந்து கொண்டிருந்தது. வேட்டையாடிக்கொண்டிருந்தவர்கள் பாறையின் இடப்புறம் இருந்ததால், அதைப் பார்க்கவில்லை. பாறையின் மேலே பாரி நின்றதால், அதைப் பார்த்தான்.

அந்தத் திசை நோக்கி அப்படியே நின்றான். அதைக் கவனித்தபடி கபிலரும் நின்றார். மிகத்தொலைவில் கீழ்க்காட்டின் நடுவில் இருந்து ஊசிபோல் மெல்லியப் புகை மேல் நோக்கி போய்க்கொண்டிருந்தது. காற்று வீசவில்லை என்பதால், புகை கலையாமல் உச்சிக்குப் போனது.

உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த பாரியைப் பார்த்துக் கபிலர் கேட்டார், “என்ன அது? காட்டின் ஊடேயிருந்து புகை வரக் காரணம் என்ன?”

“அங்குள்ளவருக்கு உதவி தேவைப்படுகிறது” என்று சொல்லிவிட்டு, இடப்புறம் திரும்பிப் பார்த்தான். பாறையின் இடப்புறம் பேரெலி வேட்டையில் உதிரன் குழு மிகவும் கவனமாக இருந்தது. பாறை மறைத்திருந்ததால் எழும் ஊசிப்புகையை அவர்கள் பார்க்கவில்லை.



“காட்டுக்குள் இருக்கும் யாருக்கேனும் உதவி தேவைப்பட்டால், படர்ந்து கிடக்கும் சென்றிக்கொடியைப் பறித்துத் தீக்கற்களால் தீ மூட்டுவார்கள். அந்தக் கொடியில் தீப்பற்றி எரியாது; புகை மட்டுமே வரும். அவ்வாறு கசியும் புகை, கீழே படராது; அறுந்துவிடாமல் மேலெழும்பிக்கொண்டே இருக்கும்.

எங்கிருந்து பார்த்தாலும் உச்சிநோக்கி விடாமல் மேலெழும் ஊசிப்புகையைப் பார்த்துவிட முடியும். உடனே அவருக்கு உதவி செய்ய மக்கள் போய்விடுவார்கள்” என்றான் பாரி.

“அப்படியென்றால், அவர்களுக்கு உதவி செய்ய வீரர்களை அனுப்பாமலிருப்பது ஏன்?”

“தொலைவைக் கணக்கிட்டால், நாம் இருக்கும் இடத்தைவிட குறைவான தொலைவில் தென்திசையில் ஊர் ஒன்று உண்டு. அங்கிருந்து மக்கள் புறப்பட்டுப் போயிருப்பார்கள். இன்னும் சிறிது நேரத்தில் தெரிந்துவிடும்.”
“எப்படி?" எனக் கேட்டார் கபிலர்.

“அதோ பாருங்கள்” என அந்தத் திசையைச் சுட்டிக்காட்டினான் பாரி.

ஏற்கெனவே மேலெழுந்த ஊசிப்புகையின் அருகே இன்னோர் ஊசிப்புகை மேலெழுந்து கொண்டிருந்தது.

“மற்றொரு புகை மேலெழுந்தால், உதவிக்கு ஆள்கள் போய்விட்டார்கள். வேறு யாரும் வரவேண்டியதில்லை என்று பொருள்” என்றான் பாரி.


பாறைகளைச் சூழ்ந்தபடி பேரெலியை விரட்டிக்கொண்டு இங்கும் அங்குமாக ஓடிக்கொண்டிருந்தனர் வீரர்கள். இன்று நான்கு பேரெலியையாவது பிடித்துவிட வேண்டும் என்று உதிரன் மிகத்தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தான்.
“காட்டுக்குள் பிறவற்றிலிருந்து தப்பித்தலைப் போல, பிறருக்குத் தன்னைக் காட்டிக்கொள்வதும் சம முக்கியத்துவம் உள்ள கலைதான். ஒவ்வோர் உயிரினமும் இந்த இரண்டு வித்தைகளையும் தெளிவாகத் தெரிந்திருக்கிறது. நாம் அவற்றிடமிருந்து கற்றுக்கொள்ள எவ்வளவோ இருக்கின்றன” என்று பேசியபடி வீரர்களை நோக்கி பாரியும் கபிலரும் வந்துகொண்டிருந்தனர்.

பெரும்புதருக்குள்ளும் கரும்பாறை இடுக்குகளுக்குள்ளும் வீரர்கள் விடாமல் தேடினர். கண்களில் ஒன்றும் அகப்படவில்லை. உச்சிப்பொழுது கடந்துகொண்டிருந்தது. இன்னும் சிறிது நேரம்தான் வேட்டைக்குக் கிடைக்கும். அதன் பிறகு, இடுக்குகளில் மறைந்து வாழும் உயிரினங்களைக் கண்டறிவது இயலாத காரியம்.

கபிலர் நடப்பதற்கு ஏற்ப வழிகளைத் தேர்வுசெய்து அவரை அழைத்து வந்து கொண்டிருந்தான் பாரி. வீரர்கள் பாறை இடுக்குகளைக் கிளறிக்கொண்டிருக்க, உதிரன் மட்டும் தனியாகக் கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். சற்று தொலைவில் இருந்தே அதைக் கவனித்தான் பாரி. உதிரன் போய்க்கொண்டிருந்த திசையில் தனித்த மரம் ஒன்று இருந்தது. அதை நோக்கித்தான் அவன் போகிறான் என்பது தெரிந்தது.

தொலைவில் இருந்து பார்க்கையில் அது என்ன மரம் என்பது யாருக்கும் பிடிபடவில்லை. போய்க்கொண்டிருந்த உதிரன், மரத்தின் அருகில் போகாமல் சற்று தொலைவிலேயே நின்றுவிட்டான்.

அனைவரும் அவனை நோக்கி இறங்கி வந்தனர். பாரியின் கண்கள் அவற்றைக் கண்டறிந்தன. கபிலரிடம், “நீங்கள் இங்கேயே அமர்ந்திருங்கள்” என்று பாறை ஒன்றின் மேல் உட்காரவைத்துவிட்டு அந்த இடம் போனான்.



தொலைவிலேயே கபிலரை உட்கார வைத்துவிட்டு தனித்து வரும் பாரியைப் பார்த்த உதிரன், இது என்ன மரம் என்பதை அங்கிருந்தே பாரியின் கண்கள் கண்டறிந்துவிட்டன என்று தெரிந்துகொண்டான்.

உதிரன் இருக்கும் இடத்துக்கு எல்லோரும் வந்து சேர்ந்தனர். தனித்திருக்கும் அந்த மரத்தின் அடிவாரத்தில் அங்குமிங்குமாக வண்டுகள் செத்துக்கிடந்தன. எறும்புகளோ கறையான்களோ அவற்றை உண்ணவில்லை. அங்கு வந்து நின்ற எல்லோரின் கண்களும் கீழே கிடப்பனவற்றை உன்னிப்பாகப் பார்த்தன.

அது வண்டுகடி மரம். அந்த மரத்தின் இலைகளுக்குள் வண்டு பறந்தாலோ, கிளைகளின் மீது உட்கார்ந்தாலோ சிறிது நேரத்திலேயே மயங்கி கீழே விழுந்துவிடும். அதன் பிறகு, மயக்கம் தெளியாமலேயே இறந்துவிடும். இறந்ததை மொய்ப்பதற்குக்கூட எதுவும் அருகில் வராது. காட்டின் மிக அரிதான மரங்களில் வண்டுகடி மரமும் ஒன்று.

காட்டுக்குப் பழக்கப்படாத புதியவர்களின் மீது இதன் வாசனை பட்டாலே உடலெல்லாம் வீங்கிவிடும். மூக்கில் ஏற்படும் எரிச்சல் தாங்க முடியாது. அதனால்தான் கபிலரைத் தொலைவிலேயே உட்காரவைத்துவிட்டு வந்தான் பாரி. கபிலர் வந்ததிலிருந்து, 'வண்டுகடி மரம் கண்ணில் படாதா?' என்று பலமுறை எண்ணியுள்ளான். ஏனென்றால், வண்டுகடி மரத்தின் பட்டையை அறைத்துத் தேய்த்தால், காட்டுப்பூச்சிகள் எவையும் அண்டாது.

பறம்பிலேயே பிறந்து வாழ்பவர்களுக்கு இது தேவையில்லை. ஆனால், வெளியிலிருந்து வருபவர்களுக்கு, அதுவும் குறிப்பாக மழைக் காலத்தில் வந்து தங்குபவர்களுக்குப் பெரும்பாதுகாப்புக் கவசத்தை இதுவே அளிக்கும்.

அந்த மரப்பட்டையை உரிப்பது கடினமான பணி. அருகில் போய்ப் பிய்த்து எடுக்கவெல்லாம் முடியாது. அதன் வாசனை எந்த நேரமும் மயக்கத்தை உருவாக்கும். என்ன செய்யலாம் எனச் சிந்தித்தனர். உதிரன்தான் தனது ஈட்டியை மரத்தின் அடிவாரத்தை நோக்கி வீசி எறிந்தான். அது மரத்தின் தூர்ப் பகுதியின் விளிம்பில் குத்தி நின்றது. படுவேகமாக ஓடி, அதனருகே போன வேகத்தில் ஈட்டியின் முனையோடு பெரும் பட்டையைப் பிய்த்து எடுத்து எதிர்புறம் வெளியேறினான். முதன்முறையாக அவனது வேகம் பாரியைப் பொருள்படுத்திப் பார்க்கவைத்தது.

அன்றைய வேட்டையை அத்துடன் முடித்துப் புறப்பட்டனர். இன்று சிக்கியதென்னவோ ஒரு பேரெலிதான். ஆனால், பாரி அளவற்ற மகிழ்வில் இருந்தான்.

"என்னை ஏன் தனியே உட்காரவைத்துவிட்டுப் போனீர்கள்?" என்று கபிலர் கேட்டதற்கு, பாரி பதில் சொன்னான்.

அளவற்ற மகிழ்வோடு இருந்தது பாரியின் பதில்.

"பறம்பில் நீங்கள் இருக்கும் ஒவ்வொரு பொழுதும் என் மனம் பதற்றத்தில்தான் இருந்தது. அதுவும் கார்காலம் தொடங்கிய பிறகு, என் பதற்றம் அளவற்றதாகிவிட்டது.

எண்ணற்றப் பூச்சிகள், உயிரினங்கள் வாழும் இந்தக் காட்டில் கண்ணுக்குத் தெரியாத சிறு பூச்சிகூட பெரும் நஞ்சை உட்செலுத்திவிடும். அதன் பிறகு, நஞ்சுமுறி கொடுக்கும் வரை உங்களின் உடல் அதைத்

தாங்குமா என்பது தெரியாது. எனவே, என் பதற்றம் அதிகமாகிக் கொண்டேதான் இருந்தது. வண்டுகடி மரப்பட்டையை அறைத்து உடலெங்கும் தேய்த்து விட்டால், பிறகு எந்த ஒரு பூச்சியும் உங்களை அண்டாது. அதனால்தான் இந்த மரம் கண்ணில் படாதா என்று காத்திருந்தேன். உதிரன் கண்டறிந்து விட்டான்" எனச் சொல்லி, மகிழ்வோடு கபிலரை அழைத்துவந்தான் பாரி.

"நான் பறம்புக்கு வந்து இத்தனை நாள்களாகி விட்டன. இன்னும் என்னை ஆயத்தப்படுத்தும் வேலை முடியவில்லை போலும்?"

சிரித்துக்கொண்டே பாரி சொன்னான், "வந்து செல்பவர்களுக்கு இவ்வளவு தேவையில்லை. வந்தவர்களுக்கு மட்டும்தான் இவ்வளவும் தேவை."




மறுமொழிக்குள்ளிருக்கும் சூட்சுமம் கபிலருக்குப் புரிந்தது.

"வேட்டை இன்னும் முடியவில்லையா?" என்று கேட்ட கபிலர், "இந்த வேட்டையில் நீ எந்தப் பக்கமும் சாராமல் இருப்பதாகச் சொன்னாய். ஆனால், உன் மகிழ்வு வேட்டை யாடுபவனின் மனநிலையை நீ சார்ந்துவிட்டதைச் சொல்கிறது."
"ஆம், அளவற்ற மகிழ்வின் மூலம் என்னை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன். அதன் மூலமே என் எண்ணத்தை வெளிப்படுத்தி விடுகிறேன் அல்லவா?"

பாரியின் ஒவ்வொரு சொல்லும் செயலும் கபிலரின் மீதான பேரன்பைக் கொட்டித்தீர்த்தன.

இருவரும் சிறிது நேரம் பேசிக்கொள்ளவில்லை. ஆனால், ஆழ்மன உரையாடல் நின்றபாடில்லை. மனதை இந்த எண்ணங்களிலிருந்து வேறொன்றுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று கபிலருக்குத் தோன்றியது. அமைதியைக் கலைத்து பாரியிடம் கேட்டார், "அன்றொரு நாள் உன் முப்பாட்டன் ஒருவன் திரையர் பெண்ணை மணந்தான் என்று கூறினாய். அதைப் பற்றி பின்னர் பேசுவோம் என்றாயே, யார் அந்தத் திரையர்கள்?"

கபிலரின் கேள்வி, பாரிக்கு வியப்பை ஏற்படுத்தியது.

“நீங்கள் திரையர்களை அறிந்ததில்லையா?”

“இல்லை.”

“அவர்கள் குலம்தானே வெற்றிலையை முதன் முதலாகக் கண்டறிந்தது. இந்த மலைத்தொடரின் மாவீரர்கள் என்றால், அது அவர்கள்தானே!”

வெண்ணிறத் தட்டையும் பொன்னிறத் தட்டையும் மாற்றிக்கொண்ட குலசேகர பாண்டியனும் சூல்கடல் முதுவனும் மாற்றப்பட்ட தட்டுகளில் இருந்த வெற்றிலையை எடுத்து மெல்லத் தொடங்கினர். வெற்றிலையை மென்ற இருவர் நாவிலும் அதன் சாறு ஊறிப் பரவியது.

வெற்றிலையைக் கண்டறிந்த மாவீரர்களான திரையர்களின் கதை, பாரியின் நாவெங்கும் பொங்கி வெளிவந்தது.


**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-27




"எட்டு முதல் பதினைந்து வயதுடைய பறம்பின் ஆண்மக்கள் அனைவரும் 'காடறிய'ப் புறப்படுகின்றனர். மூன்று முதல் நான்கு ஆண்டுகள் வரை நீடிக்கும் பயணம் அது. பயணத்தில் வழிகாட்டி அழைத்துச் செல்பவனே தேக்கன். 'தேக்கன்' என்பது பெயர் அன்று, காடு அறிந்த ஆசானை அழைக்கும் பட்டம். அவனை நம்பியே பிள்ளைகள் அனுப்பப்படுகின்றனர்.

'சாமப்பூ' ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை பூப்பது. ஒவ்வொரு முறை அது பூக்கும்போதும் எட்டு வயதைக் கடந்த அனைத்து ஆண் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு, காட்டுக்குள் நுழைவான் தேக்கன். பயிற்சி முடிந்து திரும்பிய பின், அடுத்த முறை சாமப்பூ பூக்கும் வரை தேக்கன் ஊரில் இருப்பான். மறுமுறை பூ பூத்த பின் மீண்டும் புறப்படுவான்.



பறம்பின் ஒவ்வோர் ஆணும் காடு பற்றிய எல்லா விதமான அறிவுகளையும் பெற்று, காட்டின் சவால்களை எதிர்கொள்ளும்  ஆற்றல் உடையவனாக மாறுவதுதான் காடு அறிதல். வெறுங்கையுடன் காட்டுக்குள் நுழையும் சிறுவர்கள்  பெரும் வனத்துக்குள் தன்னந்தனியாக முழுவாழ்வையும் வாழக் கற்றுக்கொள்கின்றனர்.

இந்தப் பயிற்சி எண்ணற்ற ஆபத்துகளை உடையது.   சிறுவர்கள் சிலர் இதில் இறக்கின்றனர். சிலருக்குக் கை கால்கள் சிதைகின்றன. சிலர் காட்டுக்குள் தொலைந்துவிடுகின்றனர்.  அவர்களுள் பலர் வீடு திரும்புவதே இல்லை. ஆண்டுகள் பல கழிந்த பின்னர், சிலர் வீடு திரும்பியுள்ளனர்.

காடு அறிய அழைத்துச்செல்லப்படும் சிறுவர்கள் கடும் சவால்களைத் தொடர்ந்து  எதிர்கொள்ள நேரும். இயற்கை ஒவ்வொரு கணமும் சவால்களை உருவாக்கியபடியேதான் இருக்கும்; ஆனால், அவை எல்லாம் தேக்கனின் கணக்குக்குள் வராது. ஒவ்வொரு நாளும் தேக்கன் உருவாக்கும் சவால்கள் தனி ரகம். அவற்றை மாணவர்கள்  எதிர்கொண்டு மீடேற வேண்டும். இவ்வாறு முன்பொரு முறை தேக்கன் அழைத்துச்சென்ற குழுவில் என் முன்னோன் சூலிவேளும் இடம்பெற்றிருந்தான்” என்றான் பாரி.

அவன் சொல்லும் கதையை மிகவும் கவனத்தோடு கேட்டுக்கொண்டிருந்தார் கபிலர்.


**“அது** கார்காலம். மழை விடாது கொட்டித் தீர்த்தது. தேக்கனும் மாணவர்களும் சிறு குகை ஒன்றில் ஒண்டியபடி இருந்தனர். நாள் முழுவதும் மழை நின்றபாடில்லை. மாணவர்களுக்குக் கடும் பசி. ஆனால், தேக்கன் உணவுக்கான உத்தரவைக் கொடுக்கவில்லை. அவர் உத்தரவு கொடுத்த பின்தான் நெருப்பை மூட்டி கைவசம் இருக்கும் கிழங்குகளைச் சுட்டுச் சாப்பிட வேண்டும். மழையை வெறித்துப் பார்த்துக்கொண்டே இருந்தான் தேக்கன். பொறுத்துப் பார்த்த மாணவர்கள் ஒருகட்டத்தில் பொறுமை இழந்து வாய்விட்டுக் கேட்டனர்.

``சரி, சுட்டுச் சாப்பிடுங்கள்” என்றான் தேக்கன். மாணவர்கள் மகிழ்ந்தனர்.  முந்தைய நாள் காலை உணவுக்குப் பின் யாரையும் சிறுபழம்கூடச் சாப்பிட அனுமதிக்கவில்லை. இப்போது அனுமதி கொடுத்தவுடன் வேலைகளை வேகமாகத் தொடங்கினர். குகைக்குள் இருந்த இடுக்கில் இரண்டு கட்டைகள் கிடந்தன. அவற்றைப் பயன்படுத்தி கிழங்கைச் சுட்டுவிடலாம் என்று முடிவுசெய்தனர்.

குகைக்கு வெளியே மழை கொட்டியது. கைவசம் இருக்கும் தீக்கல்லை வைத்து மாணவன் ஒருவன் தீ மூட்ட முனைந்தபோது தேக்கன் குகையை விட்டு வெளியேறினான்.

மழையில் நனைந்தபடி தேக்கன் வெளியேறியதன் காரணத்தை அறியாமல் மாணவர்கள் விழித்தனர். “அவர் நனைந்தபடி வெளியில் நின்று கொண்டிருக்கிறார். நாம் சாப்பிடப்போவது அவருக்குப் பிடிக்கவில்லையா? அவரிடம் கேட்டுத்தானே நாம் அனல் மூட்ட முயல்கிறோம்” என்று புலம்பியபடி இருந்தனர். பசி அதிகமாகிக்கொண்டே இருந்தது. ‘சாப்பிட்ட பின் என்னவென்று

கேட்டுக்கொள்வோம்’ என நினைத்த ஒருவன், அனல் மூட்ட முயன்றான். அப்போது சூலிவேள் அவனைத் தடுத்தான்.



‘மாணவர்களில் மிகத் திறன்வாய்ந்தவன்’ என தேக்கன் கருதுவது சூலிவேளைத்தான். “அவரிடமே காரணம் கேட்போம்” என்றான் சூலிவேள்.

“சரி” என்றார்கள் மாணவர்கள்.

“நாங்கள் நெருப்பு மூட்டும்போது நீங்கள் ஏன் வெளியில் சென்றீர்கள்?” எனச் சத்தமாகக் கேட்டான் சூலிவேள்.

“உங்களை எப்போது சாப்பிடச் சொல்ல வேண்டும் என எனக்குத் தெரியாதா?”

“பசி தாங்காமல்தான் கேட்டோம்.”


“அப்படி என்றால் சுட்டுச் சாப்பிடுங்கள்.”

“நீங்கள் ஏன் வெளியில் போய் மழையில் நிற்கிறீர்கள்?”

“இரண்டு ஆண்டுகள் முடியப் போகின்றன. இன்னும் உங்களால் இதைக் கண்டறிய முடியவில்லையா?”

மாணவர்கள் எல்லோருக்கும் அப்போதுதான் இதில் ஏதோ சிக்கல் இருப்பது புரிந்தது.

என்னவாக இருக்கும் எனச் சிந்தித்தார்கள். ஒன்றும் புரிபடவில்லை. சிறிது நேரத்துக்குப் பின் சூலிவேள்தான் கண்டறிந்தான். தாங்கள் தீமுட்ட முயன்ற கட்டை தில்லைமரத்தினுடையது. “தில்லைமரக் கட்டையின் புகை கண்ணிற்பட்டால் பார்வையை இழக்க நேரிடும். அதனால்தான் தேக்கன் உடனடியாக வெளியேறி யிருக்கிறார்” என்றான் சூலிவேள்.



மாணவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். தேக்கனிடம் மன்னிப்புக் கோரினர்.

“பசி கண்ணை மறைக்கலாம். ஆனால், கண்ணைக் கெடுத்துவிடக் கூடாது” என்றான் தேக்கன்.

பொறுத்திருந்தனர். சிறிது நேரத்தில் மழை நின்றது. குகைவிட்டு மாணவர்கள் வெளிவந்தனர். பக்கத்துக் குகையிலோ, பாறை இடுக்குகளிலோ காய்ந்த கட்டை இருக்கிறதா எனத் தேடப் போனார்கள். ஆனால், தேக்கன் ``வேண்டாம்'' என்று சொல்லிவிட்டான்.

இப்போது இதற்கான காரணம் தெரியாமல் விழித்தார்கள்.

``குகைக்கு வெளியில் வைத்து தில்லைமரக்கட்டையைக் கொண்டே தீ மூட்டுங்கள். புகை கண்ணிற்படாமல் கிழங்கைச் சுட்டெடுங்கள். இதுவும் தேவைப்படும் ஒரு பயிற்சிதான்'' என்றார்.

இருந்த பசி எங்கு போனது என்றே தெரியவில்லை. யாரும் தீ மூட்ட ஆயத்தமாகவில்லை. எல்லோரும் அப்படியே நின்றுகொண்டிருந்தனர்.

சூலிவேளை அழைத்தார் தேக்கன். ஒருவேளை யார் கண்ணையாவது புகை தாக்கிவிட்டால், உடனடியாகச் செய்ய வேண்டிய மாற்று என்ன என்பதை அவனிடம் சொன்னார். அதன் பிறகு, மாணவர்கள் துணிந்து
தீ மூட்டத் தொடங்கினர்.

நன்றாக முகம் விலக்கி, அனற்கல்லை உரசிப் பற்றவைத்தான் ஒருவன். தில்லைமரக்கட்டையில் தீப்பிடித்தது. புகை தாக்கிவிடக் கூடாது என்ற மிகுந்த எச்சரிக்கையோடு கிழங்கைச் சுட்டனர். குகைவாசலில் உட்கார்ந்தபடி மாணவர்கள் கிழங்கு சுடுவதைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான்

தேக்கன். புகை மேல்நோக்கி எழுந்தபடியே இருந்தது. சிலர் கிழங்கைக் கருகவிட்டனர்.

சிலர் கிழங்கை நெருப்பின் அருகே கொண்டுபோகவே பெரும்பாடுபட்டனர். அணைவதற்கும் அகல்வதற்குமான தொலைவை யாராலும் மதிப்பிட முடியவில்லை. புகையைக் கண்டு அஞ்சியவர்கள் கூடுதலாக விலகினர். மற்றவர்கள் விலகவேண்டிய அளவை எழும் புகை முடிவுசெய்தது. அனைத்தையும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த தேக்கன் மனதில், ‘இவர்கள் யாருடைய கண்ணிலாவது புகைபட்டுவிட்டால் சூலிவேள் உடனடியாகச் செய்ய வேண்டிய மாற்றைச் செய்கிறானா என்று பார்த்துவிடலாம்’ என எண்ணிக் கொண்டிருந்தார்.

மாணவர்கள் காற்றின் சிறிய அசைவுக்குக்கூட உடல்விலக்கி மிகக் கவனமாகக் கிழங்கைச் சுட்டுக் கொண்டிருந்தபோது, எங்கிருந்தோ பெருங்காற்று வீசியது. சட்டென மாணவர்கள் கண்களை மூடி தரையோடு தரையாகப் படுத்துவிட்டார்கள்.
அடித்த காற்று, புகையைக் கொண்டுபோய் குகையோடு சேர்த்து தேக்கன் மீது அப்பியது. கண்களை மூடிய கணத்தில் தேக்கன் உணர்ந்து விட்டான், புகை இமைகளுக்குள் சூழ்ந்துவிட்டது என்று.

“சூலிவேள் உடனடியாக என்னை தூக்கிச் செல்” என்றான்.


தேக்கனைத் தோளில் தூக்கியபடி மலைச்சரிவில் இருக்கும் ஆற்றை நோக்கி இறங்கினான் சூலிவேள். மற்றவர்கள் பின்தொடர முடியாதபடி இருந்தது அவனது வேகம். மழை மீண்டும் பெய்யத்தொடங்கியது. சரிந்து விழுந்துவிடாமல் கவனமாக நடக்க வேண்டும் என்பது எல்லாம் சூலிவேளுக்குப் புலப்படவில்லை. அவனது தோள்களின் பலமும் காலடியின் பிடிமானமும் அபார மானவை. நெடிதுயர்ந்த தேக்கனைத் தூக்கிக்கொண்டு விரைந்து இறங்கினான் சூலிவேள்.

ஆற்றங்கரையை அடைந்ததும் தேக்கனைப் படுக்கவைத்துவிட்டு உள்ளே குதித்தான். தேக்கன் சொல்லியிருந்தபடி ஆற்றில் முங்கி அதன் ஆதிக்களியை அள்ளி வந்தான். தேக்கனைச் சுற்றி மாணவர்கள் உட்கார்ந் திருந்தனர். அள்ளி வந்ததைக் கொடுத்தான். அவரது இரு கண்களின் மேலும் அந்தக் களியை அப்பினர். அவர் இமைகளுக்குள் குளுமையை உணரத் தொடங்கினார்.

“இன்னும் அள்ளி வருகிறேன்” என்றான் சூலிவேள். “இதுவே போதும், சிறிதுநேரத்தில் சரியாகிவிடும்” என்று தேக்கன் சொல்லியபோது ஆற்றின் நடுவில் நீந்திக்கொண்டிருந்த சூலிவேள், பொருத்தமான இடம்பார்த்து நீரில் மூழ்கினான். அடிமரம் ஒன்றை இழுத்துக்கொண்டு சடசடவெனக் கீழிறங்கியது பெருவெள்ளம். மாணவர்கள் உடனடியாகத் தேக்கனைத் தூக்கிக்கொண்டு மேலேறினர். கணநேரத்துக்குள் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்தது. வெள்ளத்தின் வேகம் மலையேறுபவர்களின் கால்களைப் பிடித்து இழுத்துக்கொண்டிருந்தது. தேக்கனைத் தூக்கியபடி விரைந்து மேலேறி உயிர் தப்பினர்.

மேலே ஏறியதும், தேக்கன் கண்களைக் கசக்கியபடி திறந்தான். கொட்டும் மழையில் வெள்ளம் இரு பனைமரம் உயரத்துக்கு போய்க்கொண்டிருந்தது. கண்களுக்குள் எரிச்சல் இல்லை. ஆனால், துயரம் தாங்க முடியவில்லை. சூலிவேளை நினைத்து “ஓ” எனக் கத்தி அழுதான் தேக்கன்.

வெள்ளம் புரட்டி எடுத்துக்கொண்டு சென்றது. நீந்திக் கடப்பது இயலாத செயல். உயிரைத் தக்கவைத்தபடி வெள்ளத்தின் போக்கில் போவது என முடிவெடுத்தான் சூலிவேள். அடித்து, இழுத்துப் புரட்டிக்கொண்டுபோனது. கைகளில் சிக்கும் மரங்களைப் பற்றியும் அதில் இருந்து நழுவியும் இழுத்துச்செல்லும் நீருடன் சென்றுகொண்டிருந்தான்.



குறுக்கிட்டு நீந்திக் கரையை அடைய நீரின் வேகம் குறையும் தருவாய்க்காகக் காத்திருந்தான். ஆனால், அது நிகழும்போது அவன் அரை மயக்கத்தில் இருந்தான். இரவு, பகல் கடந்த பின் நீர் அவனைப் பாறையின் இடுக்கு ஒன்றில் அடித்துச் செருகியது.

ஆற்றங்கரையோரம் வந்த சிலர் பாறை இடுக்கில் சிக்கிக்கிடப்பவனை எட்டிப் பார்த்தனர். உயிர் இருக்கிறதா என்பது அறிய முடியவில்லை. கூட்டத்தில் இருந்த பெரியவர் இடுக்குக்குள் நுழைந்து அவனைப் பார்த்தார். வலது கால் உள்ளே செருகிக்கிடந்தது. இடது கால் எலும்பு ஒடிந்துகிடந்தது. ஒரு கை திரும்பிவிட்டது. மேல் எல்லாம் பாறைகளில் அடிபட்டுச் செதில்செதிலாகப் பிளந்துகிடந்தது. “இவனை வெளியில் தூக்கி உயிரைக் காப்பாற்றினாலும் இவன் வாழத் தகுதியற்ற வனாகத்தான் கிடப்பான்” என்றார் அந்தப் பெரியவர்.

கூட்டத்தினர் பெரியவர் சொல்கேட்டு விலகினர். உள்ளிருந்த `தூதுவை’க்கு அவ்வாறு விட்டுச்செல்ல மனம் இல்லை. பெரியவரோடு வாதிட்டாள். ஆனால், அவனது நிலைமை படுமோசமாக இருந்ததாலும் பாறையின் இடுக்கைவிட்டு வெளியில் எடுக்க முடியாதபடி, அவன் உடல் செருகிக்கிடந்ததாலும், மற்றவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. கூட்டம் நகரத் தொடங்கியது.

இறுதியாக ‘தூதுவை’ சொன்னாள்... “பாறையிடுக்கில் கிடப்பவனை எடுத்து வெளியில்

போட்டுவிட்டாவது போவோம். திறன் இருந்தால் பிழைக்கட்டும்” என்றாள். ‘சரி’ என்று ஒப்புக்கொண்டு பெருமுயற்சி செய்து, அவனை வெளியில் எடுத்து கரை மீது கிடத்தினர். நீர் நிறைய குடித்திருந்ததால் வயிறு ஊதிப்போய் இருந்தது. வெட்டுப்பட்ட எந்தப் பிளவின் வழியேயும் குருதி கசியவில்லை. வெளிறித்தான் கிடந்தது எல்லாம். இன்று இரவு தாங்க மாட்டான் எனச் சொல்லிவிட்டு நடந்தார் பெரியவர். மற்றவர்களும் உடன் நடந்தனர்.

காற்று இரவெல்லாம் உடலை உலர்த்திக் கொண்டே இருந்தது. அடர்வனத்தில் ரீங்கரிக்கும் சில்வண்டுகளின் ஓசை செவிக்குள் துளையிட்டு நுழைந்தது. கானகத்தின் பல்வேறு ஓசைகளும் நினைவின் ஆழத்தைத் தொட்டுத் திரும்பின. கண்ணுக்குத் தெரியாத சிறுபூச்சி ஒன்று, வெட்டுப்பட்ட பிளவின் நடுவில் உட்கார்ந்து ஊசிக்கொடுக்கால் கொத்தி வெளியில் எடுத்தபோது அவனது உடல், வலியை நினைவுகொள்ளத் தொடங்கியது.

பொழுது புலர்ந்தது. சூலிவேள் மெள்ளக் கண் விழித்தான். தனக்கு உயிர் இருக்கிறது என்பதை உணர்ந்தான். கை, கால்களை அசைக்க முடியவில்லை. அங்கேயே கிடந்தான். தன்னை இழுத்து வெளியில்போட்டவர்கள் பேசிய பேச்சு அரைகுறையாக நினைவில் இருந்தது. தனக்கு என்னவெல்லாம் ஆகியிருக்கிறது என, அந்தப் பெரியவர் சொன்னதைவைத்து தனது உடலை மதிப்பிட்டான். அது தேக்கனின் குரல் என அவனுக்குத் தோன்றியது.

இந்த நிலையில் தேக்கன் இதைத்தான் செய்திருப்பார். ‘மற்றவற்றை எல்லாம் நீதான் சரிசெய்ய வேண்டும். இதுதான் பயிற்சி என்பார்.’ தேக்கனின் குரல் எப்போதும் சவால்களையே உருவாக்கும். எனவே, சவால்கள் உருவாகும் போதெல்லாம் தேக்கனின் நினைவு வருகிறது. அதில் மாறுபட்டு ஒலித்தது ஒரு பெண்ணின் குரல். அந்தக் குரலில் இருந்த நம்பிக்கை இப்போது மனதுக்கு மிகவும் தேவையாக இருந்தது. தனக்காக வாதிட்ட அந்தக் குரலை மெய்ப்பிக்க வேண்டும் எனத் தோன்றியது.

கதிரவன் மேலே ஏறிவந்தான். படுத்துக்கிடந்த சூலிவேளால் உட்கார மட்டுமே முடிந்தது. இரண்டு நாள்களாக எந்த உணவும் உண்ணாததால் கைகால்கள் உயிரற்று இருந்தன. எதையாவது சாப்பிட வேண்டும் எனத் தோன்றியது. வலது கால் வலி மரத்துக்கிடந்தது. அதை எல்லாம் அவன் பொருட்படுத்தவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தான். அடர்காட்டின் நடுவே சீறிப்பாயும் ஆறு. ஆற்றின் போக்கைப் பார்த்துக்கொண்டே இருந்தான். சட்டென நினைவுக்கு வந்தது. இடுப்பில் கைவைத்தான். இறுகிக்கட்டப்பட்ட நார்க்கயிறு இருந்தது. நார்க்கயிற்றில் போடப்பட்ட முடிச்சை அவிழ்த்தான். உள்ளே கொல்லிக்காட்டு விதை ஒன்று இருந்தது.

பயிற்சியின்போது அகாலத்தில் அகப்பட்டுக் கொண்டால், பயன்படுத்தச் சொல்லி தேக்கன் கொடுத்த கொல்லிக்காட்டு விதை. விதையை விரல்களால் திருகி உடைத்தான். அதில் சிறுபகுதியை கையோரமாக மண்ணில் தூவிவிட்டு, மீதியை முடிச்சிட்டான். படபடத்து வந்திறங்கின இரண்டு பறவைகள். அவை விதையின் வாசனையை நுகர்ந்தபடி அருகில் வந்தன. சூலிவேள் அவற்றைப்

பிடிக்காமல் பார்த்துக்கொண்டே இருந்தான். சற்றுநேரத்தில் பெருங்காடை ஒன்று இறங்கிய வேகத்தில், அந்தப் பறவைகள் இரண்டும் விலகிக்கொண்டன. கொல்லிக்காட்டு விதையை தனியொரு காடை கொத்தித் தின்றது. அது தின்று முடிக்கும்போது, சூலிவேள் கையை அருகில் கொண்டுபோனான். கையோடு அது சாய்ந்து படுத்தது.
இரவு எல்லாம் மனம்பொறுக்காமல் தூக்கம் தொலைத்துக்கிடந்த தூதுவை, காலையிலேயே தன் தோழியை அழைத்துக்கொண்டு சூலிவேளிடம் வந்துவிட்டாள். அவள் வரும்போது அவன் எழுந்து உட்கார்ந்திருந்தான். மரணத்தை நோக்கி விட்டுச்சென்ற ஒருவன், அதற்கு எதிர் திசையில் எழுந்து அமர்ந்திருப்பதைப்போல இருந்தது. பெரும்வியப்போடு அவள் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போதுதான் எங்கிருந்தோ வந்த பறவை ஒன்று, அவன் கைகளில் வந்து படுத்துக்கொண்டது. தான் கண்ணால் பார்ப்பதை அவளால் நம்ப முடியவில்லை. என்ன நடக்கிறது எனத் தோழிக்கும் புரியவில்லை.

கையில் சிக்கிய பறவையைச் சுட்டுத்தின்ன ஆயத்தமானான். இறகுகளை வேகவேகமாகப் பிய்த்தெடுத்தான். அப்படியே கடித்துத் தின்னப்போகிறான் எனப் பார்த்துக்கொண்டிருந்த பெண்கள் இருவரும் எண்ணினர்.

இறகுகளை உரித்து முடித்த சூலிவேள், நெருப்பு மூட்ட வழி என்னவென்று சுற்றும்முற்றும் பார்த்தான். கொட்டித்தீர்த்த மழையும் விடாது புரண்டுசென்ற வெள்ளமும் எங்கும் நீரை ஊறவைத்திருந்தன. உலர்ந்தவை ஒன்றும் இல்லை. கரையின் சரிவில் எடுக்கும் தொலைவில் அனற்கறகள் கிடந்தன. ஆனால், அவற்றை வைத்து எதை எரிப்பது எனச் சிந்தித்தபடியே கண்களை எங்கும் சுழலவிட்டான்.

அவனால் நம்ப முடியாத ஒன்று அவனது கண்களுக்கு முன்னால் இருந்தது. அவன் செருகிக்கிடந்த பாறையை ஒட்டி ‘பால்கொறண்டி’ செடி ஒன்று தழைத்திருந்தது. அதன் தூர்ப்பகுதி நீரில் மூழ்கியிருந்தது.

சூலிவேளுக்கு மகிழ்ச்சி உடல் எங்கும் பரவியது. காய்ந்த சருகைவிட அதிவேகமாகப் பற்றி எரியும் பச்சையான பால்கொறண்டி. அது வியப்புக்கு உரிய செடி. செடிகள் எல்லாம் வியக்கத்தக்கவைதான். நமக்குத்தான் அதைக் கண்டுணரத் தெரிய வேண்டும்.
கால்களை மெள்ள அசைத்தபடி கரையின் மேலிருந்து கீழ்நோக்கிச் சரிந்தான் சூலிவேள். கரையைத் தாண்ட மேல்நோக்கி ஏறுவதாக இருந்தால், ஒருவேளை முடியாமல் போயிருக்கும். ஆற்றின் ஓரமாகக் கீழே இருந்ததால் எளிதாகிவிட்டது. உடலை இழுத்தபடி கீழே வந்துசேர்ந்தான்.

‘ஏன் ஆற்றை நோக்கிச் சரிகிறான்?’ எனப் பதறிய தூதுவையும் தோழியும் சற்றே முன்னால் வந்து எட்டிப்பார்த்தனர்.

சூலிவேள் பால்கொறண்டியின் இலைகளை ஒட்டி அனற்கல்லை உரசினான். உடலில் எங்கெங்கோ

இருந்து வலி மேலே ஏறி வந்துகொண்டிருந்தது. இரு கற்களையும் அழுத்திப் பிடித்து உரசும் வலிமையை, இறகு உறிக்கப்பட்ட பறவையே கொடுத்துக் கொண்டிருந்தது. கல்லுக்குள் இருந்து தெறிக்கும் ஒற்றைத் தீப்பொறியை உருவாக்க மொத்த உடலிலும் விசை ஏற்றவேண்டியிருந்தது. விடாமல் மீண்டும் மீண்டும் முயற்சிசெய்தான். உடல் முழுவதையும் தனது விசையோடு இணைத்தான். அறுந்த நரம்புகள் எல்லாம் அவனது எண்ணங்களோடு இணைந்தன.

தண்ணீரில் இருக்கும் செடியில் போய் அனற்கற்களை ஏன் தட்டிக்கொண்டிருக்கிறான் என்பது இருவருக்கும் புரியவில்லை. குழம்பிப்போய் மிகவும் முன்நகர்ந்து வந்து பார்த்தனர்.

சட்டெனத் தெறித்த தீப்பொறி பால்கொறண்டியில் பட்டவுடன் பற்றி மேலே ஏழுந்தது. எண்ணெயில் ஊறித் திருகி நிற்கும் திரியைப்போல, ஒவ்வோர் இலையும் நெருப்பை மேல்நோக்கி ஊதின. சடசடத்து நாலாபுறமும் பற்றியது நெருப்பு. நன்றாக இறங்கிவந்து நீருக்குள் கால் நுழைத்து, பறவையைப் பால்கொறண்டியின் நடுத்தண்டில் செருகினான் சூலிவேள்.

செடியின் அடிவாரத்தில் சூழ்ந்திருந்த நீரில் நெருப்பின் ஒளி கங்குபோல் தகதகத்தது. தீயின் நிழலுக்குள் கால்நுழைத்தபடி பறவையின் உடலை முன்னும் பின்னுமாகத் திருப்பிக் கொண்டிருந்தான் சூலிவேள்.

அவனது கால்களில் இருந்து நீரின் வழியாக நெருப்பு ஏறியதைப் பார்த்த தூதுவைக்குத் தலை சுற்றுவதுபோல் இருந்தது. ஆனால், அவளுக்கு முன்னரே கண் செருகினாள் தோழி.

**ஊ**ர் மாடத்தில் வந்து தூதுவை சொன்னபோது யாரும் நம்பவில்லை.

“அவன் உயிரோடு மீள்வான் என்பதே நம்ப முடியாத செய்தி.

நீ என்னென்னவோ சொல்கிறாய்” என மறுத்தான் கிழவன்.

தூதுவையும் தோழியும் சொல்வதைப் பார்த்தால் பேயோ, அணங்கோ, வனத் தாதனாகவோதான் இருக்க வேண்டும் என முடிவெடுத்து பூசாரியையும் கையோடு அழைத்துக்கொண்டு புறப்பட்டனர்.

நற்பகலுக்குப் பின், அவர்கள் சூலிவேள் இருக்கும் இடத்துக்கு வந்துசேர்ந்தனர். அவன் கரையேற முடியாமல் அப்படியே நீரில் கால் நனைத்தபடியே உட்கார்ந்திருந்தான். ஆனால், கொழுத்த பறவையைத் தின்றதால் முகம் தெளுச்சியாக இருந்தது.
பெரும்கூட்டம் ஒன்று வந்து நிற்பதை உணர்ந்து, பின்னால் திரும்பிப் பார்த்தான். வந்திருந்தது பெரும்கூட்டம் அன்று, சிறுகூட்டம்தான். ஆனால், ஒவ்வொரு மனிதனும் மூன்று மனிதர்களுக்கு இணை. விரிந்த மார்பும் திரண்ட சதையுமாக வந்து நின்றனர் அவர்கள்.

திரண்ட மனிதர்களை விலக்கி முன்வந்த பெரியவர் கேட்டார், “எங்களின் கண் முன் உனது மாயவித்தைகளைக் காட்டு?”




“எனக்கு எந்த மாயவித்தையும் தெரியாது.”

“இல்லை, நீ செய்த வித்தைகளை நாங்கள் கண்கொண்டு பார்த்தோம்” என்றது தூதுவையின் குரல்.

ஒரு கணம் கண்ணை மூடினான் சூலிவேள். ‘நேற்று எனக்கு நம்பிக்கை தந்த அந்தக் குரல். இந்தக் குரலை மெய்ப்பிக்கவே நான் போராடிக் கொண்டிருக்கிறேன்’ நினைத்தபடியே கண் திறந்தான். தூதுவை வந்து எதிரில் நின்றாள். பார்த்த பின் பேச்சு எதுவும் வரவில்லை.

வந்தவர்கள் கேட்டார்கள்...

“கால்கள் நீட்டி நீரின் வழியாக பச்சை இலையைச் சுட்டு எரித்தாயாமே உண்மையா?”

சூலிவேள் மறுமொழி சொல்லாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவர்கள் மீண்டும் கேட்டார்கள். பெரும் உடல்வாகுகொண்ட அந்த மனிதர்களை வியந்து பார்ப்பதைப்போலவே சின்னஞ்சிறு கண்கொண்ட தூதுவையையும், தன்னை மறந்து பார்த்துக்கொண்டே இருந்தான் சூலிவேள்.

அவர்கள் மீண்டும் கேட்டபோது, அனற்கல்லைக் கொடுக்க கைநீட்டினான். சிறுவன் ஒருவன் போய் அதை வாங்கினான். கரையின் இடப்புற உச்சியில் தனித்து நின்றுகொண்டிருந்தது பால்கொறண்டி ஒன்று. ``அதைப் போய்த் தீ மூட்டு’’ என்றான். அந்தச் சிறுவனும் அவ்வாறே போய்த் தீ மூட்ட, அடுத்த கணம் பற்றி எரிந்தது பால்கொறண்டி.

அந்தச் செடியின் ஆற்றலை விளக்கிச் சொல்லிக்கொண்டிருந்தான். பசும்செடி பற்றி எரியும் என்பதை அவர்கள் நம்பாமல்தான் பார்த்தார்கள். தூதுவையைப் பார்க்கும் வரை உள்ளுக்குள் நெருப்பின்றி எரியும் தீயைப்பற்றி யாராவது சொல்லியிருந்தால், சூலிவேளும் கூடத்தான் நம்பியிருக்க மாட்டான்.

“பறவை எப்படித் தானாக வந்து அமர்ந்தது?” எனக் கேட்டார்கள். இடுப்பிலிருந்த விதையின் சிறுபகுதியைக் கொடுத்துக் கரையில் போடச் சொன்னான். பறவைகள் வந்து தின்றன. தின்று முடித்துப் பறக்கத் தொடங்குகையில் சிறகை ஈரடி அடித்து மண்ணில் சரிந்தன.

“பறவை மயங்குமா?” எனக் கேட்டனர்.

தன் மயக்கம் மீளாமல் இருந்த அவனுக்கு தன்னையே எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டும் எனத் தோன்றியது. அவளைப் பார்த்தபடியே, வேண்டாம் என நிறுத்திக் கொண்டான்.

“அது என்ன காய்... எங்கு விளைகிறது?”

எனக் கேட்டனர்.

“வெளியே சொல்லக் கூடாது என்பது எங்கள் குலநாகினியின் வாக்கு” என்றான்.

பெரும்வியப்புக்கு உரிய ஒருவனாக அவன் இருந்ததைப் பார்த்தபடி நின்றிருந்தனர்.

“பாறைகளின் இடுக்கில் செருகிக்கிடந்த என்னை எப்படி வெளியில் எடுத்தீர்கள்?” எனக் கேட்டான்.

“இந்தப் பாறையை நகர்த்தி எடுத்தோம்” என்றார் பெரியவர்.

ஒருகணம் திரும்பி அந்தப் பாறையைப் பார்த்தான். இரண்டு ஆள் உயரம்கொண்ட இரண்டு பெரும்பாறைகள் ஒன்றுடன் ஒன்று உரசியபடி நின்றுகொண்டிருந்தன.

“இவ்வளவு பெரும்பாறையை நகர்த்தினீர்களா? எப்படி முடிந்தது... யார் நீங்கள்?” என்றான்.

வந்தவர்கள் சொன்னார்கள், “நாங்கள் திரையர்கள்.”

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-28

முறிந்த காலிலும் திருகிய கையிலும் கட்டுப்போடப்பட்ட அவன், ஊர் மந்தையில் படுக்கவைக்கப்பட்டிருந்தான்.

‘இரு மாதங்கள் கடந்துவிட்டன. இதுவே பறம்பின் வைத்தியனாக இருந்தால், பாதி நாள்கள்கூட ஆகியிருக்காது. திரையர்கள் உடல்வலிமையில் இணையற்றவர்கள்தான். ஆனால், அறிவுநுட்பத்தில் பறம்பு மக்களுக்கு ஈடுசொல்ல முடியாது’ என்று தோன்றியது சூலிவேளுக்கு.




கட்டுகள் கழட்டப்படும் நாளுக்காகக் காத்திருந்தான். தூதுவையின் குரல் அவனுக்கு மிகவும் தேவைப்பட்டது. அவள் அருகில் வரும்போதெல்லாம் தேக்கன்தான் நினைவுக்கு வந்தான். காட்டில் மனிதன் எந்தச் சவாலையும் எதிர்கொண்டு வாழும் பயிற்சியை அளித்தது தேக்கன்தான். எந்தச் சூழலையும் வெல்லும் வித்தையை அவன்தான் கற்றுக்கொடுத்தவன். ஆனால், தன்னைச் சுற்றி எதுவும் நிகழாமல் மனம் ஏன் ஒடிந்து விழுகிறது. சிதைந்த மனம் கணநேரத்தில் எப்படித் துளிர்த்தெழுகிறது? இதைப் பற்றி தேக்கன் எதையும் சொல்ல வில்லையே! இயற்கையின் ஆதிரகசியத்தை, செடிகொடிகளிலிருந்துதான் கற்றுக்கொள்ள வேண்டுமா? வழுக்குப்பாறையாக பார்வை மாறினால், பற்றி ஏற விழுது ஏது? நினைவு ஏன் கட்டுப்பட மறுக்கிறது? செடிகொடிகளுக்கும் விலங்குகளுக்கும் இப்படித்தான் நிகழுமா அல்லது மனிதனுக்கு மட்டுமானதா? மனதுக்குள் அடர்ந்துகிடக்கும் காதலின் ரகசியங்களை யார் சொல்லித்தருவது? வினாக்கள் வினாக்களாகவே இருந்தன.

திரையர்களின் உடல்வாகு, கண்களுக்கு எப்போதும் மிரட்சியை உருவாக்குபவையாகவே இருந்தது. அவர்களின் பல செயல்களை சூலிவேளால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவனுக்குள் என்ன நடக்கிறது என்பதையே அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவன் எப்படி திரையர்களைப் புரிந்துகொள்வான்.

இடையிடையே ஊரின் நினைவு வந்து போய்க்கொண்டிருந்தது. நடுகாட்டுக்குள்தான் இப்போதும் இருக்கிறோம். ஆனாலும், `நம் காடு' என்று தோன்றாமல் இருக்கிறது. `தேக்கனும் மற்றவர்களும் பயிற்சி முடித்து எப்போது ஊர் திரும்புவார்கள்? நாம் அதற்கு முன் திரும்பி விடுவோமா?' என்று எண்ணிக்கொண்டிருக்கும்போது, பெரும் சத்தத்துடன் ஓர் இளைஞனைத் தோளில் வைத்துத் தூக்கி வந்தனர். மேலெல்லாம் குருதி சிந்தியபடி இருந்தது. அவன் கைகளில் ஏதோ ஓர் இலையை வைத்திருந்தான். மந்தையில் பெரியவர்கள் உட்கார்ந்தனர். ஊரே கூடியது. உள்ளே என்ன நடக்கிறது என்று சூலிவேளுக்குத் தெரியவில்லை. ஆனால், எல்லோர் முகங்களிலும் பெருமகிழ்ச்சி இருந்தது. நல்ல செயல் நடைபெறுகிறது என நினைத்துக்கொண்டான்.

மறுநாள் காலையில் தூதுவை அவனைப் பார்க்க வந்தபோதுதான் சொன்னாள், “அவன் காட்டெருமையை வீழ்த்தி, வெற்றிலையைப் பறித்துவந்தான். அதனால் ஊரே அவனைக் கொண்டாடியது.”
“எத்தனை பேர் சேர்ந்து வீழ்த்தினார்கள்?” எனக் கேட்டான்.

“ஒரே ஆள்தான் வீழ்த்தினான்” என்று சொன்னாள்.


“ஒரே ஆள், ஒரு காட்டெருமையை எப்படி வீழ்த்த முடியும்? நீ சொல்வது நம்பும்படியாக இல்லையே” என்றான்.

“எந்த ஆயுதமும் வைத்துக்கொள்ளலாம். ஆனால், தனியொருவனாகக் காட்டெருமையை வீழ்த்தி, மலைமுகட்டில் இருக்கும் வெற்றிலையைப் பறித்து மந்தைக்கு வந்து சேரும் வீரனைத்தான் திரையர் குலப்பெண் ஏற்றுக்கொள்வாள். இல்லையென்றால், எந்தப் பெண்ணும் அவனை ஏற்க மாட்டாள்” என்றாள்.

சூலிவேளால் நம்ப முடியவில்லை. “தனியொருவனாக எப்படி காட்டெருமையை வீழ்த்த முடியும்? நீ பொய் சொல்கிறாய்” என்றான்.

“இதே மந்தையில்தான் நான் வந்து சொன்னேன், `ஒருவன் பச்சைச்செடியை எரியவைக்கிறான்', `பறவையை மயங்க வைக்கிறான்' என்று. `நம்பும்படியாகவா இருக்கிறது?' ” என்று கேட்டார்கள். அதுதானே உண்மை. அதேபோல்தான் இதுவும். அப்போது அவர்கள் நம்ப மறுத்தார்கள். இப்போது நீ நம்ப மறுக்கிறாய்” என்றாள்.

சூலிவேளால் இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. `எவ்வளவு வலிமை வாய்ந்தவனாக இருந்தாலும், தனியொருவனாக எப்படி காட்டெருமையை அடக்க முடியும்?' என்று தன்னைத்தானே மீண்டும், மீண்டும் கேட்டுக்கொண்டே இருந்தான்.



நீண்டநேரம் கழித்து, அவள் மண்வட்டியில் ஊன்சோறு கொண்டுவந்து கொடுத்தாள். மலையரிசிச் சோற்றுக்கு ஊடே பெரும்பெரும் கறித்துண்டங்கள் கிடந்தன. மிகவும் சுவைத்துச் சாப்பிட்டான்.

“சோற்றுக்குள் கிடப்பது அவன் வெற்றிகொண்ட காட்டெருமையின் கறி” என்றாள்.

அவள் சொன்ன உண்மை, சூலிவேளின் வயிறு வரை வந்து சேர்ந்தது. ஆனாலும், அவனால் நம்ப முடியவில்லை. ‘காட்டெருமைகளிடமிருந்து விலகிச் செல்லவும், விரட்டினால் தப்பிக்கவும்தானே நமக்குத் தெரியும். அதை எப்படி வீழ்த்த முடியும்?’ என்று காட்டெருமையின் கறியைச் சாப்பிட்டுக்கொண்டே சிந்தித்தான். சாப்பிட்டு முடித்ததும், அவள் தான் கொண்டுவந்த வெற்றிலையைக் கொடுத்தாள்.

“காட்டெருமையைச் சாப்பிட்டால் அதைப்போலவே நாமும் இலை, தழைகளைச் சாப்பிட வேண்டுமா?” எனக் கேட்டான்.

“காட்டெருமையின் கறி மிகவும் வலிமை வாய்ந்தது. அது செரிக்க வேண்டுமானால், வெற்றிலையை உண்ண வேண்டும்” என்று சொல்லியபடி நீட்டினாள். வெற்றிலையை வாங்கி மெல்லத் தொடங்கினான். அதன் காரச்சுவை மிகவும் பிடித்துப்போனது. அவன் மெல்வதை நிறுத்தவேயில்லை. கேட்டு வாங்கிச்

சாப்பிட்டுக்கொண்டே இருந்தான். அவனுக்குக் கொடுப்பதில் அவளுக்குள் ஒரு மகிழ்ச்சி. கொஞ்சம் கொஞ்சமாகச் சிவக்கத் தொடங்கும் அவன் உள்ளுதடுகளைப் பார்க்கும் ஆர்வத்தில் இருந்தன அவள் கண்கள்.

அவன் மீண்டும் மீண்டும் கை நீட்டினான். “காட்டெருமையைவிட அதிகமாகவே தின்றுவிட்டாய்... போதும்” என்று சிரித்தபடியே சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

உடல் நன்கு தேறிவிட்டது. எழுந்து நடக்கவும் ஓடவும் தாவிக்குதிக்கவுமாக உடலைத் தயார் செய்தான். உள்ளம்தான் அதற்கு எதிராகச் செயல்பட்டுக்கொண்டிருந்தது. தில்லைமரத்தின் புகை இல்லாமலே காதல் கண்ணைக் கட்டியது. ஒரு மாலை வேளையில், தான் வந்துசேர்ந்த அந்தப் பாறையைப் பார்த்தபடி ஆற்றோரம் உட்கார்ந்திருந்தான். தூதுவையும் அந்த இடத்துக்கு வந்தாள்.

இருவரும் பேசிக்கொள்ளாமல் நீண்ட நேரம் உட்கார்ந்திருந்தனர். அமைதி, பெரும்பாறையாக உருத்திரண்டு நின்றது. இப்போது இருவரும் அதன் இடுக்கில் சிக்கியிருந்தனர். பாறையை நகர்த்தி வெளியேற, இருவருக்கும் விருப்பமில்லை. எண்ணங்கள் எங்கெங்கோ போயின. அதுவும் சுகமாகத்தான் இருந்தது. பேசிக்கொள்ளாமலேயே அவள் எழுந்தபோதுதான் அவன் கவனித்தான், அவளின் வலது தோள்பட்டையின் மேல்புறத்தில் உள்ளங்கை அளவுக்குக் கரும்பச்சை நிற மச்சம் ஒன்று இருந்தது. அதன் ஒரு பகுதியை அவளது மேலாடை மறைத்திருந்தது. அதைப் பார்த்தபடி, “என்ன இது?” என்று கேட்டான்.


“அதுவா... `வெற்றிலை மச்சம்' என்று சொல்வார்கள். எங்கள் குலத்தில் நிறைய பேருக்கு இது இருக்கும்” என்று சொல்லியபடி அவள் புறப்பட்டாள். மனதுக்குள் நிகழ்ந்து கொண்டிருக்கும் உரையாடலை, பேச்சுக் கொடுத்துக் கலைக்க அவள் விரும்பவில்லை.

நாள்கள் சென்றன. அடுத்த இளைஞன் காட்டெருமையை வேட்டையாடுவதைப் பார்க்க வேண்டும் என்று அவன் காத்திருந்தான். அந்த நாளும் வந்தது. ஊராரோடு சேர்ந்து அவனும் காட்டின் உச்சிப் பகுதிக்குச் சென்றான். எல்லோரும் முகட்டின்மேல் இருந்த பாறையில் ஏறி உட்கார்ந்தனர்.

இரு மலைகள் சரிந்து இணையும் பகுதி, நடுவில் நீர் சிறுத்து ஓடிக்கொண்டிருந்தது. அதில் தண்ணீர் குடிக்கக் காட்டெருமை வரும் என்று ஓடைக்கரையில் அந்த இளைஞன் காத்திருந்தான். நீண்ட நேரத்துக்குப் பிறகு, காட்டெருமை ஒன்று ஓடை நோக்கி வந்துகொண்டிருந்தது.

மலைமுகட்டிலிருந்து ஊராரோடு சேர்ந்து சூலிவேளும் அதைப் பார்த்தான். உண்மையிலேயே தனித்தொருவன் காட்டெருமையின் அருகில் போய்க்கொண்டிருக்கிறான் என்பதை அவன் கண்கள் நம்பவில்லை. போகிறவனின் இடுப்பில் இருபெரும் ஆயுதங்கள் இருந்தன. அவன் காட்டெருமையை

நீர் குடிக்கவிடாமல் குறுக்கே போய் மறிக்க முயன்றான். பார்த்துக்கொண்டிருந்த சூலிவேளுக்கு மெய் சிலிர்த்தது.



அந்தக் காட்டெருமையின் உயரம் மலை முகட்டிலிருந்து பார்க்கும்போதே அச்சம் தருவதாக இருந்தது. திருகியிருக்கும் அதன் கொம்புகள் பாறையை நொறுக்கக்கூடியன. அதன் முன்நெற்றி எந்த மரத்தையும் முட்டிச் சாய்க்கும் வலுக்கொண்டது. அதை ஒருவன் தன்னந்தனியனாகச் சந்திக்கப்போகிறான். சூலிவேளால் நிற்க முடியவில்லை.

அதன் பாதையில் குறுக்கிட்ட அந்த இளைஞன் ஏதோ ஒன்று செய்து அதைச் சீண்டினான். அது அவனை விரட்ட, பாயத் தொடங்கியது. நீரோடையைத் தாண்டி மலையின் எதிர்ப்புறம் ஓடத் தொடங்கினான். அது நான்குகால் பாய்ச்சலில் வீறுகொண்டது. அவன் மலைப்புதருக்குள் படுவேகமாக மேலேறினான். காட்டெருமையின் ஓட்டத்தைவிட அவனுடைய ஓட்டத்தின் வேகம் கூடுதலாக இருந்தது. அது காட்டெருமையை மேலும் வேகப்படுத்தியது.

சூலிவேளால் பார்க்கும் காட்சியை நம்ப முடியவில்லை. ஒருவன் காட்டெருமையைவிட வேகமாக ஓடுகிறான். அதுவும் மலைச்சரிவில் மேல்நோக்கி ஓடுகிறான். அதுவும் பாதை இல்லாமல் புதர்களுக்குள் பிய்த்துக்கொண்டு ஓடுகிறான். எப்படி இது முடிகிறது? நம்பவே முடியவில்லை.

பலமுறை பார்த்துப் பழக்கப்பட்ட ஒன்றை, திரையர்கள் இயல்பாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். சூலிவேளால் ஒரு கணம்கூட தாங்க முடியவில்லை. திரையர்களின் உடல்பலத்தையும் வேகத்தையும் வந்த நாள் முதல் பார்த்துக்கொண்டேதான் இருக்கிறான். ஆனால், மலையில் விலங்கைப்போல செடிகொடிகளுக்கு இடையில் அறுத்தெறிந்து எப்படி ஓட முடிகிறது? அவன் அருகில் இருக்கும்

திரையர்களின் உடல் அமைப்பை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினான். அவர்களது காலடி, ஒரு சுளகுபோல விரிந்து இருந்தது; சூலிவேளின் காலடியைவிட இருமடங்கு அகலமாக இருந்தது.

வேகமாக மேலே ஏறிக்கொண்டிருந்தவன், சட்டென ஓரிடத்தில் வளைவுகொண்டு கீழ்நோக்கித் திரும்பி சரசரவென ஓடைநோக்கி இறங்கினான். காட்டெருமையின் ஆத்திரம் இன்னும் அதிகமானது. இறங்கத் தொடங்கியதும் அதன் வேகம் கூடுவதுபோலிருந்தது. இரண்டாவது முறை குதித்து பெரும்புதரைத் தாண்டி அவன் முதுகுக்கு நேராக அதன் தலை இறங்கிக்கொண்டிருந்தது. எந்தக் கணம் அதைவிட அதிகமான தொலைவை அவன் தாவிக் கடந்தான் என்பதை சூலிவேளின் கண்கள் கண்டுணரவில்லை. மிக வேகமாக முன்னால் வந்து ஓடையைத் தாண்டி எதிர்புற மலையின் மீது ஏறினான்.

அதன் மூச்சில் அனல்காற்று சீறியது. கொம்புகளில் அடிபட்டு மரக்கிளைகள் முறிந்துகொண்டிருந்தன. அவன் மின்னல் வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தான். நம்ப முடியாத காட்சிகளை வாழ்க்கை சூலிவேளுக்குக் காண்பித்துக்கொண்டிருந்தது. திரையர்கள் உற்சாக ஒலியெழுப்பியபடி இருந்தனர்.

அங்கு நிகழ்ந்துகொண்டிருக்கும் வீரவிளையாட்டு, சூலிவேளின் அறிவுக்குப் புலப்படவில்லை. ஓடுபவன் மேலும் கீழுமாக மூன்றுமுறை ஓடையைக் கடந்து ஓடினான். காட்டெருமையும் வெறிகொண்டு ஓடியது. அவனைத் தாக்கப்போகும் கணமும் தப்பிக்கும் கணமும் மிகமிக அருகில் இருந்தன.

ஓடையை நோக்கி வேகமாக இறங்கிக் கொண்டிருந்தபோது, ஏதோ ஒரு மரத்தின் கிளையைப் பிடித்துப் போக்குக்காட்டி ஒரு சுற்று சுற்றினான். அது குதித்துக் கீழே இறங்கிக்கொண்டிருந்தது. அவன், அதன் பின்புறம் இறங்கிக்கொண்டிருந்தான். புதர் அசைவில் என்ன நிகழ்ந்தது எனத் துல்லியமாகத் தெரியவில்லை. அவ்வளவு நேரம் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்த திரையர்கள், எழுந்து நின்று உற்சாக ஒலியெழுப்பினர்.

அவன் மீண்டும் முந்திக்கொண்டு ஓடையைக் கடந்து மேலே ஏறத் தொடங்கினான். வந்த வேகத்தில் அது ஓடையைக் கடந்து மேலே ஏற முடியாமல் தவித்தது. அதன் ஓட்டம் குறையத் தொடங்கியது.

திரையர்களின் கூச்சல் ஒலி பெருகியது.

ஒருகட்டத்தில் காட்டெருமையின் ஓட்டம் முழுமுற்றாக நின்றது. இப்போது அவனும் ஓட்டத்தை நிறுத்திவிட்டு, இடுப்பில் இருந்த இரண்டு ஆயுதங்களையும் கைகளில் ஏந்தத் தொடங்கினான். ஒரே இடத்தில் நின்றபடி அது அவனை நெருங்கவிடாமல் குத்த தலைப்பட்டது. அவன் விலகி விலகி, சரியான வேளைக்காகக் காத்திருந்தான்.

திரையர்களின் கூட்டம் பேரொலியோடு ஓடையை நோக்கி இறங்கத் தொடங்கியது. என்ன நடக்கிறது

என்று சூலிவேளுக்குப் புரியவில்லை. அவனும் சேர்ந்து இறங்கினான். அவர்கள் அந்த இடத்தை அடையும்போது, அவன் காட்டெருமையை முழுமையாக வீழ்த்தியிருந்தான். வந்த வேகத்தில் ஒரு கூட்டம் அவனைத் தோளில் தூக்கியது. மேலெல்லாம் மரக்குச்சிகளும் கொடிகளும் விளார்விளாராக சீவியிருந்தன. அவன் கதிரவனைப் பார்த்து நரம்பு முறுக்கிச் சிலிர்த்தான்.

வெற்றிலையைப் பறிக்க அவன் தன் தோழர்களோடு போனபோது, மற்றவர்கள் காட்டெருமையை வெட்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டனர். காட்டெருமையை அடக்கியவன், மாலைக்குள் மந்தையில் வெற்றிலையை வைத்து மணமுடிக்க வேண்டும். எனவே, அடுத்தகட்ட வேலைகள் வேகமாக நடந்தன.

பொழுது சாய்வதற்குள் ஊர் மந்தைக்கு வந்து அவன் வெற்றிலையை வைத்தான். பெரியவர்கள் என்னவென்று கேட்டார்கள். அவனுக்குரியவளைச் சொன்னான். அவளும் வெற்றிலையோடு மேலேறினாள். ஊர்வட்டியில் இருவரும் வெற்றிலையை மாற்றி எடுத்துக் கொண்டனர். ஊன் தயாரானது. கொண்டாட்டம் தொடங்கி இரவு முழுவதும் நீண்டது.

வழக்கம்போல் மந்தையில் இருந்த அவனுக்கு ஊன்சோறும் வெற்றிலையும் கொண்டுவந்தாள் தூதுவை. அவன் எதுவும் சொல்லாமல் வாங்கிச் சாப்பிட்டான். “நான் சொன்னதை, நேரில் பார்த்த பிறகுதான் ஊர் நம்பியது. நீயும் அப்படித்தானே?” என்று கேட்டாள்.

அவன் பதிலேதும் சொல்லாமல் இருந்தான். வாழ்வில் முதன்முறையாகத் தன்னால் ஒன்றைச் செய்ய முடியாது என்பதை ஏற்றுக்கொள்ளவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் அவன் தடுமாறிக்கொண்டிருந்தான். அந்தத் தடுமாற்றத்தை அவள் உணர்ந்தாள். ஆனாலும் அவளின் நம்பிக்கையை, வெற்றிலையைக் கொடுக்கும்போது கை தொட்டுக் கடத்திவிட்டுத்தான் எழுந்தாள்.

**நா**ள்கள் சென்றன. அந்த மலைச்சரிவுக்குப் பல நாள்கள் போய் வந்துகொண்டிருந்தான். எப்போதாவது காட்டெருமைகள் வந்து நீர் குடிப்பதைத் தொலைவிலிருந்து பார்ப்பான். அதன் உருவ அமைப்பும் வலிமையும் முன்னெற்றியில் திரண்டிருக்கும் எலும்பின் திரட்சியும் பார்க்கவே அச்சம்தருவனவாக இருந்தன.

ஒருமுறை அதைச் சீண்டிப்பார்க்க அருகில் போக முடிவெடுத்த கணமே அது விரட்டத் தொடங்கி, படுவேகமாக மலைமேல் ஏறினான். அதன் வேகம் என்ன என்பது அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. மேல்நோக்கி ஏறும்போது அதன் வேகம் அதிகமாகிக்கொண்டே இருந்தது. ஏதேதோ வித்தைகாட்டி இறுதியில் உயிர்பிழைத்து ஊர்வந்து சேர்ந்தான்.

மேலெல்லாம் செடிகளும் கொடிகளும் குச்சிகளும் கிழித்து எடுத்திருந்தன. வரும்போதே பச்சிலைகளைப் பறித்துக் கொண்டு வந்தான். அறைத்துப் பூசிக்கொண்டு படுத்தான். மனம் முழுவதும் காட்டெருமையின் பாய்ச்சலும் தூதுவையின் மீதான காதலும் சரிசமமாக இருந்தன.

கிழவி ஒருத்தி அவன் அருகே வந்து உட்கார்ந்தாள். “காட்டெருமையை வீழ்த்தப் போகிறவர்கள் வெற்றிலையோடு வருவார்கள். நீ என்ன பச்சிலையோடு வந்திருக்கிறாய்?”

அவமானப்படுதல் அவனுக்கு அறிமுகமாகிக் கொண்டிருந்தது. “பால்கொறண்டியை எரிக்கவும் பறவையை மயக்கவும் வித்தை தெரிந்தால் போதும். இதற்கு வீரம் வேண்டும்" என்றாள்.தொடர்ந்து மனம் சீண்டப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த இடம் கடந்துபோன தூதுவை, கிழவி இவனோடு இருந்ததைப் பார்த்து சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டுப் போனாள்.

இவனது கோபம் மேலும் கூடியது. கிழவியும் விடுவதாக இல்லை. “காட்டுக்கோழியைக்கூடப் பிடிக்க முடியாதவன், காட்டெருமையை எப்படிப் பிடிப்பான்?” என்று அவளாகக் கேள்வி கேட்டுவிட்டு, எழுந்து போய்விட்டாள்.

இவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மறுநாள் அந்த மலைச்சரிவை நோக்கி மீண்டும் போனான். காட்டுக்கோழிகளின் கூவல் சத்தத்தைக் கடந்த அவனுக்குக் கிழவி சொன்னது நினைவுக்கு வந்தது. `ஏனோ காட்டுக்கோழியைப் பிடித்துப் பார்ப்போம்' என்று தோன்றியது.

மரக்கொப்புகளின் மீதேறி தாவி சென்று கொண்டிருந்தது. அது மீண்டும் பறக்கும் வேளைக்காகக் காத்திருந்தான் சூலிவேள். படபடத்து மேலெழுந்த காட்டுக்கோழி, அவன் வீசிய கல்லால் சுருண்டு விழுந்தது. அதைப் போய்ப் பார்த்துவிட்டு எடுக்காமல் போய்விட்டான்.

‘கிழவி நம்மை இவ்வளவு எளிதாக நினைத்துவிட்டாளே!’ என்று தோன்றியது. மாலையில் மந்தைக்குத் திரும்பியதும் கிழவி அவன் அருகில் வந்தாள்.

“கோழி எங்கே?” என்று கேட்டாள்.

` ‘நான் கோழியை அடித்துவிட்டேன்' என்று சொல்வது வீரனுக்கு அழகல்ல. அதே நேரத்தில் ‘கோழியைக்கூடப் பிடிக்க முடியாதவன்’ என்று இவள் நம்மை பற்றி நினைத்திருப்பதையும் மாற்ற வேண்டும், என்ன செய்வது?’ என்று சிந்தித்தான்.

“எறிந்த இடத்தில் கிடக்கிறது. வேண்டுமென்றால், போய் எடுத்துக்கொள்” என்றான்.

“எடுக்கவேண்டியது நீதான். ஏன் எடுக்காமல் வந்தாய்?” எனக் கேட்டாள்.

அவளது கேள்வியின் நோக்கம் அவனுக்குப் புரியவில்லை.

“அதன் கால்களைப் பார்த்தாயா?” என்றாள்.

“காட்டுக்கோழியின் காலின் பின்புறம் சிறுவிரல் ஒன்று இருக்கும். அதைப்போலவே காட்டெருமையின் பின்னங்கால் குளம்பின் பின்புறம் சிறுதசை ஒன்று வளர்ந்திருக்கும். சரியாக அந்தத் தசையை அடித்துவிட்டால், அதன் பின்னங்கால் நரம்புகள் இழுத்துக்கொள்ளும். அதனால் காலை நகர்த்த முடியாது. இருந்த இடத்தில் இருந்துதான் போராடும். அதன் பிறகு, அதை ஆயுதம்கொண்டு வீழ்த்திவிடலாம்” என்று குறிப்பு சொன்னாள் கிழவி.

சூலிவேள் அன்று பார்த்த காட்சியை நினைத்தான். ‘மூன்றுமுறை மலைச்சரிவின் மேலும் கீழுமாக ஓடியவன், மூன்றாம்முறை இறங்கும்போது சட்டென ஓரிடத்தில் விழுதைப் பிடித்து சுழன்று காட்டெருமையின் பின்புறம் தாக்கியது இதைத்தானா?’ எனத் தோன்றியது. அவனின் கோபத்தைக் கிழவி தூண்டியபோது தூதுவைச் சிரித்துக்கொண்டே போனதற்கான காரணம் இப்போதுதான் அவனுக்குப் புரிந்தது.

மறுநாள் பொழுது மறைவதற்குச் சிறிது நேரத்துக்கு முன், சூலிவேள் மந்தையை நோக்கித் தட்டுத்தடுமாறி நடந்து வந்தான். அவன்மேல் பழையபடி கீறல் காயங்கள் இருந்தன. குருதி கசிந்துகொண்டிருந்தது. ‘மீண்டும் ஆற்றில் விழுந்து, பாறையில் அடிபட்டு வருகிறானா?’ என்று பார்ப்பவர்கள் எண்ணினர். ஆனால், அவன் கைகளில் வெற்றிலை இருந்தது. ‘இதை ஏன் பறித்து வருகிறான்?’ என்பது புரியவில்லை.

வந்தவன் மந்தையில் ஏறி அமர்ந்தான். ஊர்வட்டியில் வெற்றிலையை வைத்தான். எல்லோரும் கூடினர். யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. ‘வெற்றிலையைப் பறிக்கப்போய் ஏன் இவ்வளவு காயங்களுடன் வந்திருக்கிறான்?’ என்று ஒருவர் மாற்றி ஒருவர் கேட்டுக்கொண்டிருந்தனர். மூன்று இளைஞர்கள் மந்தை நோக்கி வந்து சொன்னார்கள், “அவன் காட்டெருமையை வீழ்த்தி, வெற்றிலையைப் பறித்து வருகிறான்” என்று.

ஊர் அதை நம்பவில்லை. “நீங்கள் சொல்வது உண்மையா?” என்று மீண்டும் மீண்டும் கேட்டனர். அந்த இளைஞர்கள் சொன்னார்கள், “நாம் பலமுறை மேலும் கீழும் ஓடவிட்டுத்தான் காட்டெருமையின் பின் நரம்பை அடிப்போம். இவனோ முதல்முறையே அடித்துவிட்டான்.”

ஊரார் அதிர்ந்துபோனார்கள்.

சூலிவேள் ஊர்வட்டியில் வெற்றிலையை வைத்தபடி பேசாமல் இருந்தான். ஊராருக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. சூலிவேள் எதுவும் பேசவில்லை.



‘இவன் என்ன கேட்க வருகிறான்?’ என்பதும் ஊராருக்குப் புரியவில்லை. ஊரின் வயது முதிர்ந்த கிழவன் கூட்டத்தை விலகச்சொல்லி உள்ளே வந்தார். அவன் ஊர்வட்டியில் வைத்திருந்த வெற்றிலை ஒன்றை எடுத்து திருப்பிப் பார்த்தார். அவர் கண்கள் வியப்புக்கொண்டு விரிந்தன. அடுத்த வெற்றிலையை எடுத்து பின்புறம் திருப்பிப் பார்த்தார். ஊரார்கள் அவரையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தனர். அவரோ அவன் வைத்த அனைத்து வெற்றிலைகளையும் எடுத்துத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு பெருமூச்சுவிட்டார்.

“இவன் முன்வைத்துள்ளது அனைத்தும் ஆண் வெற்றிலை” என்றார். திரையர்கள் திகைத்துப்போனார்கள். மிகச்சிலருக்கு மட்டும்தான் வெற்றிலையில் உள்ள வேறுபாடுகள் தெரிந்தன. வெற்றிலையின் பின்புறம் இருக்கும் நரம்புகள் மூன்றும் ஏற்ற இறக்கம் இல்லாமல் ஒன்றுபோல் இறங்கியிருந்தால், அது ஆண் வெற்றிலை. மேலே இருப்பது இறங்கியும் மற்ற நரம்புகள் விலகியும் இறங்கியும் இருந்தால்
அது பெண் வெற்றிலை.

சூலிவேள் ஊர்வட்டிலில் ஆண் வெற்றிலைகளைக் கொண்டுவந்து வைத்துவிட்டான். இப்போது எதிர் வெற்றிலையாக, பெண் வெற்றிலையை ஊர் வைத்தே ஆக வேண்டும். என்ன செய்வது என்று சிந்தித்தனர். இனி புறப்பட்டு வெற்றிலைக்கொடி இருக்கும் மேல் காட்டுக்குப் போவதற்குள் இருட்டிவிடும். அதன் பிறகு, பெண் வெற்றிலையாகத் தேடிப் பறித்து வருவதெல்லாம் இயலாத செயல். ஆனால், பொழுது மறைவதற்குள் எதிர் வெற்றிலையை வைக்க வேண்டும் என்பது ஊரின் மரபு. என்ன செய்யலாம் என்பதறியாது எல்லோரும் திகைத்துக்கொண்டிருக்கையில், தூதுவை மந்தை நோக்கி வந்தாள்.
இவள் ஏன் உள்ளே வருகிறாள் என்பது யாருக்கும் புரியவில்லை. அனைவரையும் விலகச் சொல்லியபடி நடுமந்தைக்கு வந்த அவள், ஊர்வட்டிலில் எதிர் வெற்றிலையை வைக்கவேண்டிய இடத்தில் கால் மடக்கி அமர்ந்தாள்.

வலது தோள்பட்டையில் கிடந்த ஆடையை மெள்ள விலக்கியபடி சூலிவேளின் கண்களை நேர்கொண்டு பார்த்தாள்.

அவளின் தோளில் கரும்பச்சை நிற வெற்றிலை மச்சம் இருந்தது. அதற்குள் ஓடிய நரம்புகள் ஒன்றுபோல் இல்லாமல்தான் இருந்தன. வியப்படைந்த கண்களில் மகிழ்ச்சி பூக்கத் தொடங்கியது. ஊருக்கு, பின்னங்கால் நரம்பில் அடிவிழுந்து சரிந்ததுபோல் இருந்தது. எல்லோருக்கும் செய்தி புரிந்தது. திரையர்களுக்கு இணையான வீரன் என்பதை சூலிவேள் மெய்ப்பித்துவிட்டான். இனி மறுத்துச் சொல்வதற்கு எதுவும் இல்லை. கொண்டாட்டம் தொடங்கியது. காட்டெருமையின் கறியை ஊன்சோற்றில் பிசைந்தனர் திரையர்கள்.

அந்தப் பெருங்கிழவன் மட்டும் கிழவியை முறைத்துப் பார்த்தபடி போனான். காட்டெருமையோ வெற்றிலையோ பின்னால் இருக்கும் நரம்பில்தான் எல்லாம் இருக்கிறது என்று சொல்லிக்கொடுத்தவள் அவளாகத்தான் இருக்கும் என்பது அவருக்குப் புரிந்திருந்தது.

ஊன்சோறு பரிமாறப்பட்டது. பச்சைக்கொடி பற்றி எரிய, பறக்கும் பறவைகள் மயங்கிச் சரிய, அந்த இரவு முழுவதும் பெண் வெற்றிலையை விரும்பி உண்டான் சூலிவேள். ஆண் வெற்றிலையின் காரம் தூதுவைக்கு மிகவும் பிடித்திருந்தது. நாக்குக்குள் சுழலும் வெற்றிலை நாக்குகளைச் சுழற்றியது. சிவப்பேறிய இதழ்களுடன் பல இரவுகளைக் கடந்து, ஒரு நற்பகலில் எவ்வியூர் வந்தடைந்தனர்.

பாரி, கதையை முடித்தபோது இருள் சூழ்ந்து இறங்கத் தொடங்கியது. அவர்கள் எவ்வியூருக்குள் நுழைந்தனர். “திரையர்களின் கதைதான் இவ்வளவு வேகமாக இழுத்துவந்தது. இல்லையென்றால், நாம் ஊரடைய நள்ளிர வாகியிருக்கும்” என்றான் பாரி. கதையின் மயக்கத்திலிருந்து மீளாதவராக கபிலர் இருந்தார்.

பாரி சொன்னான், “இது எத்தனையோ தலைமுறைகளுக்கு முன் நடந்த கதை. அதன் பிறகு, திரையர்களுக்கும் வேளீருக்குமான திருமண உறவுகள் பெரிதாக நடக்கவில்லை. காரணம், அவர்களின் நாடு இந்த மலைத்தொடரின் ஏதோ ஓர் எல்லையில் இருக்கிறது. எப்போதாவது ஒருமுறை ஊர்வழிபாட்டுக்கு வந்து அழைத்துச் செல்வார்கள் என்று என் தந்தை சொல்வார். அதுவும் அவரின் தந்தையார் காலத்துக்குப் பிறகு வரவில்லை என்பார்.”

“நிலப்பரப்பால் ஏற்பட்ட இடைவெளி அல்லவா?”




“ஆம். ஆனால் உயிருக்குள் கலந்துவிட்டால், நிலவியல் இடைவெளியால் என்ன செய்ய முடியும்?” என்றான் பாரி.

அவன் சொல்லவருவது கபிலருக்குப் புரியவில்லை.

“இளையவளை நன்கு கவனித்துப் பார்த்திருக்கிறீர்களா?” என்று கேட்டான்.

“சங்கவையையா?”

“ஆம்.”

“என்ன?”


சின்ன புன்னகையுடன் பாரி சொன்னான், “அவளின் வலது தோள்பட்டையின் முன்புறம் கரும்பச்சை மச்சம் ஒன்று இருக்கிறது. அவள் வளர்ந்து பெரியவளானால், அது வெற்றிலையின் வடிவம்கொள்ளும்.”

கபிலர் திகைத்துப்போனார். என்ன சொல்வதென்று தெரியவில்லை. வாய் மட்டும் முணுமுணுத்தது. “கதைகள் ஒருபோதும் முடிவதில்லை.”

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-29

**க**ருநீலத்தில் ஏறியிருக்கும் மெல்லிய வெண்ணிறம் போதுமான அளவுக்கு இல்லை. சற்றே அதிகப்படுத்தச் சொன்னான் அந்துவன். அவன் சொன்னபடி ஓவியர்கள் நிறத்தைக் கூட்டிக்கொண்டிருந்தனர். அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தவன், இளைப்பாறலாம் என த் தேவாங்கின் கூண்டு அருகே உட்கார்ந்து சிறுகுச்சியால் அவற்றை அடிக்கப்போவதைப்போல் ஓங்கினான். அவை இங்குமங்குமாக ஓடி அலைக்கழிந்தன. மீண்டும் மீண்டும் அப்படியே செய்தான்.




அந்துவனின் மனம் அமைதியற்று இருந்தது. மீண்டும் அண்ணாந்து பார்த்தான். ஓவியர்கள் அவன் சொன்னதைப்போல வெண்ணிறத்தைச் சற்றே கூட்டியிருந்தனர். ஆனாலும், அவனுக்கு நிறைவாயில்லை.
மனம் தத்தளித்துக்கொண்டிருந்தது.

இந்தப் பெருவிழாவின் முதல் நிகழ்வான வெற்றிலை மாற்றி மணமுடிக்க வாக்களிக்கும் நிகழ்வில், அரண்மனைக் கணியனான தான் இல்லாததை அந்துவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மனம் அலைமோதியது. கூண்டுக்குள் இருக்கும் தேவாங்குகளையும் அதேபோல அலைமோதவைத்தது. ‘அரண்மனைக் கணியன் ஏன் வரவில்லை?’ எனக் கேள்வி எழுப்பப்பட்டிருக்குமா அதற்கு திசைவேழர் என்ன பதில் சொல்லியிருப்பார் எனச் சிந்தித்தான். மனதின் வலியும் புறக்கணிப்பின் வேதனையும் இன்னும் அதிகமாகின.

“வலியையும் வேதனையையும் வெளிக் காட்டாமல் வாழ்வதுகூட ஒருவிதமான கலைதான்” என்றாள் பொற்சுவை.

தோழி சுகமதிக்கு என்ன சொல்வது எனத் தெரியவில்லை. பொற்சுவையை முழுமையும் அறிந்தவள் அவள் மட்டும்தான். எனவே, இந்தக் கூற்றை அவளால் எதிர்கொள்ள முடியவில்லை. கண்கள் கலங்கின. வெளிக்காட்டாமல் இறுகிக்கொண்டாள்.

“வணிகர் குலத்தில் பெண்ணாகப் பிறக்கக் கூடாது சுகமதி. அதுவும் அளவற்ற செல்வம்கொண்ட ஒரு குடும்பத்தில் பிறக்கவே கூடாது. இணையற்ற பொன்னொளியில் திரளும் கண்ணீர் எவர் கண்களிலும் படாது. வழிந்தோடுவது நம் கண்ணீர்தான் என்பதை சிலநேரம் நம்மாலேயே உணர முடியாமல் போய்விடும்.”

என்ன சொல்வது எனத் தெரியாமல் விழித்தாள் சுகமதி. பொற்பல்லக்கில் கொண்டுவரப்பட்ட கூண்டு அப்படியே இருந்தது. ‘பாண்டரங்கத்தில் வேலைகள் முடிந்ததும், அதன் எதிரில் கட்டப்பட்டுள்ள திகிரி மேடையில் வைத்துக்கொள்ளலாம். அதுவரை இங்கேயே இருக்கட்டும்’ எனச் சொன்னதால் சக்கரவாகப் பறவையைப் பொற்சுவையின் அறையிலேயே வைத்திருந்தனர். அதைப் பார்த்துக்கொண்டேதான் பொற்சுவை கேட்டாள்.

“என் மண நாளுக்குள் இது பறந்துவிடுமா சுகமதி?”

விடையின்றித் தத்தளித்தாள் சுகமதி.

பொற்சுவையின் குரல் உடைந்துவிடாமல் மிக நிதானமாக இருந்தது.

``கார்காலத்தின் இறுதி மழைத்துளியை ஏந்தியபடி இது பறந்தபின் என் கண்கள் பார்த்திருக்க என்ன இருக்கிறது இந்த அரண்மனையில்?”

பொற்சுவையின் மனதை ஆற்றுப்படுத்த ஒற்றைச் சொல்லின்றித் தவித்தாள் சுகமதி.

கூண்டுக்குள் விரல்களைவிட்டு சக்கரவாகப் பறவையின் உதிர்ந்த இறகு ஒன்றை எடுத்தாள். “என்ன ஓர் உறுதி இந்தப் பறவைக்கு, ‘மழைநீரை மட்டுமே அருந்துவேன்!’ என. நம்மால்தான் எந்த உறுதிப்பாட்டையும் கொண்டிருக்க முடியவில்லை.”

சுகமதி அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். உள்ளுக்குள் கிடக்கும் ஓராயிரம் சொற்களை வெளியில் கொட்டுவதுதான் பொற்சுவைக்கு இப்போது தேவை. எனவே, அவள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பேசட்டும் எனக் காத்திருந்தாள் சுகமதி.

“நானும் உறுதி ஏற்றிருப்பேன்... கடற்புயல்  மட்டும் என் அண்ணனைக் காவுகொள்ளாமல் இருந்திருந்தால்! அவன் இன்றி நான் யாரை நம்பி உறுதி ஏற்பது?”

சுகமதி எவ்வளவோ முயன்றும் அவளுடைய கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால், மறைத்துக்கொள்ள முடிந்தது.



“என் தாயின் மரணம்கூட எனக்கு நினைவில்லை. அப்போது நான் சிறுபிள்ளை. ஆனால், விரல்பிடித்து எனக்கு வாழ்வைச் சொல்லிக்கொடுத்தவன் என் அண்ணன் தான். நான் காதல் கொண்டதை அவனிடம் சொன்னபோது அவனுக்குள் ஏற்பட்ட மகிழ்வை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை.

“சாவகப் பயணம் முடித்து வந்ததும் நானே தந்தையிடம் சொல்லி இதற்கான ஒப்புதலைப் பெறுவேன்” என்றான்.

ஆனால், எல்லாவற்றையும் ஒரு புயல் அடித்துக்கொண்டு போனது.

சுகமதி எதுவும் சொல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

`நான் அமைதியைக் குலைக்காமல் இருப்பதுதான் சரி, ஏனென்றால், பொற்சுவை பேசிக்கொண்டிருப்பது என்னோடு அல்ல... அவளின் ஆழ்மனதோடு. இந்த உரையாடல் ஏதோ ஒருவகையில் அவள் மேலெழுந்து வர உதவியாக இருக்கும்’ என எண்ணினாள்.

“நான் மிகவும் உறுதியானவள் எனச் சிறுபிள்ளையில் இருந்து பாராட்டப் பட்டுள்ளேன். என் உறுதியின் மீது எனக்கு நம்பிக்கை வரவைக்க ஏதாவது வழி உண்டா சுகமதி?”

பேசவேண்டிய இடம் இதுதான் என, சுகமதிக்குத் தோன்றியதும் பதில் சொன்னாள்...

“உண்டு இளவரசி.”

“என்ன?”

“உங்களைக் கலங்கடிக்கும் எதையும் உங்களுக்குள் அனுமதிக்காதவர்தான் நீங்கள். அதனால்தான், காதலையும் உங்களுக்குள் எளிதில் அனுமதிக்கவில்லை. ஓர் ஆண் உங்களின் காதலைப் பெற எவ்வளவு காலம் ஆனது என்பதை நான் அறிவேன். இப்போதும், அதேபோல உங்களைக் கலங்கடிக்கும் எதையும் உங்களுக்குள் அனுமதிக்காதீர்கள்.”

அசட்டுச் சிரிப்போடு கேட்டாள்...

“பொதியவெற்பனை அனுமதிக்காதே என்கிறாயா?”

சுகமதி ஒரு கணம் நடுங்கிப்போனாள்.

“நான், எண்ணங்களைச் சொல்கிறேன். அலைக்கழிக்கும் நினைவுகளைச் சொல்கிறேன். எந்த இடத்திலும் உங்களுக்கான வாழ்வை அமைத்துக் கொள்ளும் வல்லமைவாய்ந்தவர் நீங்கள். இசையும் இலக்கியமும் இருக்கும் வரை உங்களுக்கான உலகை யாராலும் தட்டிப் பறித்துவிட முடியாது.”

“காதல் எல்லாவற்றையும் தட்டிப்பறித்துவிடும் சுகமதி. அதுவும் பறிக்கப்பட்ட காதலின் ஆவேசம் எளிதில் அடங்காது. பூவுக்குள் இருந்து விதை முளைவிடுவதைப்போல, இன்னொரு முறை காண முடியாத அதிசயக் கனவு. அது என்னைவிட்டு ஒருபோதும் பிரியாது. அந்த நினைவுக்குப் பிறகு, என் இளமை முகிழ்ந்த கணம் இருக்கிறது. பற்றி எரியும் காமம் இருக்கிறது. சிறுமுலைகொண்டு பெருஞ்சினம் தீர்த்த பொழுதுகள் மறைந்து கிடக்கின்றன. நான் என்ன செய்வேன் சுகமதி?


தட்டுகளை மாற்றி தாம்பூலம் தரித்தபின் என்னிடம் சொல்ல என்ன இருக்கிறது என நினைத்துவிட்டார்கள். அண்ணகர்கள் பல்லக்கைக் கீழிறக்கிய இடத்தில் நான் இறங்கிவிடலாம்; ஆனால், எனது மனம் ஒருபோதும் கீழிறங்காது. அது, இந்த உலகின் அரிய காதலைத் தன்வயம் கொண்டது. நானே நினைத்தாலும் தனது நினைவு களைவிட்டு அது விலகாது.”

நினைவுகளைவிட்டு ஒருபோதும் அகலாத நாளாக இந்த நாள் இருக்கப்போகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். ஏனென்றால், இந்த மண்ணில் நடக்கும் ஒரு திருமணத்துக்கு யவனர்கள் பெரும் ஏற்பாட்டோடு வந்து, பரிசுகள் வழங்கி, மரியாதை செய்வது இதுவே முதன்முறை.

நூற்றாண்டுக்கும் மேலாக நீடிக்கும் இந்த வணிகத்தில் இன்றைய நாள் மிகவும் முக்கியமானது. யவனப் பெருவணிகன் வெஸ் பானியன் தலைமையில் அவர்கள் அணிதிரண்டு வந்துள்ளனர். அரசப் பிரதிநிதிகள், வணிகர்கள், துறைமுகப் பொறுப்பாளர்கள் எனப் பலரும் ஆறுக்கும் மேற்பட்ட நாவாய்களில் வந்து இறங்கினர். மிக முக்கியமாக ஹிப்பாலஸ் வந்துள்ளான். கடல்பயணத்தின் சாகசத் தளபதி என யவனர்களால் கொண்டாடப்படுபவன். அவன் வருகை துறைமுகங்களில் தனித்த விழாவாகக் கொண்டாடப்படும் என்று  கடலோடிகள் சொல்வார்கள்.

கொற்கையில் வந்து இறங்கிய எல்லோரும் மதுரைக்கு அருகில் உள்ள யவனச் சேரியில் நன்றாக ஓய்வெடுத்து, தங்களின் முறைப்படி இந்தத் திருமணத்தைக் கொண்டாடிக் களிக்க அரச மாளிகைக்குள் நுழைந்தனர்.
வட்டுடை வீரர்கள் புடைசூழ, யவனப் பேரழகிகள் கைகளில் பரிசுத்தட்டை ஏந்திவர வெஸ்பானியன், ஹிப்பாலஸ், கால்பா, பிலிப், எபிரஸ், திரேஷியன் எனப் பலரும் வந்தனர். அரண்மனையின் நடுமண்டபத்தில் அவர்களின் வருகையை எதிர்பார்த்து, பேரரசரும் சூல்கடல் முதுவனும் வீற்றிருந்தனர்.

மதுரையின் எல்லா திசைகளிலும் இரவு, பகலாகக் கொண்டாட்டங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. யவனர்கள் வந்து இறங்கிய திலிருந்து கொண்டாட்ட பேரொலியைக் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள்.
ஆனால், இவையெல்லாம் அரண்மனைக்குள் நடக்கும் கொண்டாட்டத்துக்கு ஈடாகுமா? அவர்கள் நுழைந்த கணத்திலிருந்து இன்றைய நாள் கொண்டாட்டம் தொடங்கியது.



தங்களுக்கான வரவேற்பை ஏற்றுக்கொண்ட பின் வெஸ்பானியன் அறிவித்தான்…

“இந்தத் திருமணத்தை முன்னிட்டு எம் அரசர் பொன் நாணயம் ஒன்றை வெளியிட்டுள்ளார். உங்களின் அதிசிறந்த உயிரினமான யானையை அதில் பொறித்துள்ளார். அந்த நாணயத்துக்கு ‘மீனாள்’ எனப் பெயர்சூட்டி இந்தப் பாண்டிய அரசைப் பெருமைப்படுத்தியுள்ளார்” என அறிவித்து, தங்கத் தட்டிலிலுள்ள நாணயங்களைப் பேரரசரின் முன்னும், சூல்கடல் முதுவனின் முன்னும் நீட்டினார். அவர்கள் வியப்பு குறையாமல் அதை நீண்டநேரம் பார்த்தனர்.

நாற்சதுர வடிவின் நடுவே அச்சுப்பதிக்கப்பட்ட யானை ஒன்று ஒளிவீசி மின்னியது. அதன் மேல் `மீனாள்’ என யவனத்தில் எழுதியிருந்ததை, சூல்கடல் முதுவன் வாசித்துச்சொல்ல அகமகிழ்ந்தார் பேரரசர். அந்த நாணயங்களைத் தன் இருகைகளாலும் அள்ளி அவையை நோக்கி வீசினார். உற்சாகப் பேரொலி எங்கும் எதிரொலித்தது.

நூறுகால் மண்டபத்தின் ஆடலரங்கு இதுவரை இல்லாத பேரலங்காரத்தைக் கொண்டிருந்தது. விருந்தினர்கள் முப்புறமும் இருந்து மேடையைப் பார்த்தபடி அமர்ந்தனர். மேடையின் முன்நெற்றியில் நால்வகை முரசுகள் வைக்கப்படுவதற்கான கட்டில்கள் முதலில் கொண்டுவரப்பட்டன. அதன்பின், வட்ட வடிவ முறிகள் கொண்டு வரப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து முரசங்களை எடுத்துவந்தனர்.

தன்னந்தனியாக ஒற்றை மனிதன் ஒழுங்கற்ற ஆடையை அலங்காரமாகப் போத்திக்கொண்டு உள்நுழைந்தான். உள்நுழையும் கட்டியங்காரனைப் பற்றி மொழிபெயர்ப்பாளர்கள் யவனர்களுக்கு அறிமுகம் செய்தனர். அரங்கில் நுழைந்தவன், நான்கு முரசுகளும் வைக்கப்பட்டிருந்த கட்டில் கால்கள் எந்தெந்த நாட்டின் காவல் மரங்களை வெட்டியெடுத்துச் செய்யப்பட்டவை எனப் பட்டியலிட்டான். பேரரசின் வீரம் போற்றும் வரலாறு, முரசுக்கட்டிலின் கால்களிலிருந்து தொடங்கியது. கூட்டத்தினரின் உற்சாகப் பேரொலி எங்கும் எதிரொலித்தது. திரி முறுக்கிக் கட்டப்பட்ட வட்டவடிவ முறிகட்டில் கால்களின் நடுவில் வைக்கப்பட அதன் மீது முரசின் அடிப்பகுதி பொறுத்தப்பட்டது.

எத்தனை நாட்டு அரசியர்களின் கூந்தலை அறுத்துத் திருகிய முறி இதுவெனக் கட்டியங்காரன் சொன்னபோது அரங்கு அதிர்ந்து குலுங்கியது. அவன் சொல்லும் பெயர்ப்பட்டியல் நீண்டபடியே இருக்க, அரங்கின் அதிர்வோசை மேலும் மேலும் கூடியது. அந்தப் போர்களின் வெற்றிகளுக்குப் பின்னர், நிகழ்ந்த கொண்டாட்டங்கள், அரங்கினுள் மீண்டும் நிகழத்தொடங்கின.

மலை, ஆறு, நாடு, ஊர், யானை, குதிரை, மாலை, முரசு, கொடி, ஆணை எனப் பாண்டியப் பேரரசின் பத்து பெரிய அடையாளங்களுக்கான திருப்பெயர்களை வரிசைப்படுத்தி வணங்கினான் கட்டியங்காரன்.

சூல்கடல் முதுவனுக்கு ஆடல்களைக் காண்பதில் பெரிதாக ஆர்வம் இல்லை. வந்ததிலிருந்து பாண்டிய நாட்டின் மகா கணியன் திசைவேழரைச் சந்தித்து உரையாட வேண்டும் என்பதில் விருப்பத்தோடு

இருந்தார். தாம்பூலம் தரித்த நாள் அன்று சந்தித்து வணங்கிக் கொள்ளத்தான் நேரம் கிடைத்தது. பேசிக்கொள்ள முடியவில்லை. இந்த நேரத்தை அதற்குப் பயன்படுத்தலாம் என எண்ணியவர், உதவியாளர் களிடம் அவரின் மாளிகைக்கு அழைத்துச்செல்ல உத்தரவிட்டார்.



அரண்மனையின் தென்திசை மாளிகையில் தான் அவர் தங்கியிருந்தார். மாளிகையின் மேல்மாடத்தில் ஒளிரும் விண்மீன்களைப் பார்த்தபடி இருந்த திசைவேழரை, மேல்மாடம் சென்று வணங்கினார் சூல்கடல் முதுவன்.

திசைவேழர் அவரை ஆரத்தழுவி வரவேற்றார். “ஆடல் அரங்கில் இருக்கவேண்டிய நேரத்தில் என்னைக் காண வந்திருக்கிறீர்கள்?” என்றார்.

“ஆடல் மகளிரை எங்கும் பார்க்கலாம். திசைவேழரை இங்கு மட்டும்தானே பார்க்க முடியும்.”

புன்முறுவல் பூத்தபடி இருவரும் இருக்கையில் அமர்ந்தனர்.

“இந்த விரிந்த வானத்தை எங்கும் பார்க்கலாம். ஆனால், இத்தனை கலைஞர்கள் பங்கெடுக்கும் ஆடல் நிகழ்வை இந்த அரங்கில்தானே பார்க்க முடியும். நீங்கள் ஏன் அங்கு வராமல் இங்கு அமர்ந்திருக்கிறீர்கள்?” என எதிர் வினாவை எழுப்பினார் சூல்கடல் முதுவன்.

திசைவேழரின் உதட்டில் மெல்லிய சிரிப்பு ஓடியது. இருவரும் எதிரெதிர் இருக்கையில் அமர்ந்திருந்தனர்.

“எங்கிருந்தும் வானத்தைப் பார்க்கலாம். ஆனால், எங்கிருந்து பார்க்கிறோம் என்பதுதானே முக்கியம்.

நீங்கள் இருக்கும் இடத்திலிருந்து வானத்தைப் பார்க்கும் கோணமும் நான் இருக்கும் இடத்திலிருந்து வானத்தைப் பார்க்கும் கோணமும் வெவ்வேறானவை. கடல் அதன் அலைகளின் வழியாக அறியப்படுவதைப்போல வானம், அதைக் காணும் கோணத்தின் வழியாகத்தான் காட்சிப்படுகிறது.”

“இதற்குத்தான் நான் உங்களைப் பார்க்க வந்தேன். பாண்டிய நாட்டில் நிலைகொண்டுள்ள வானியல் அறிவைப் பற்றியும், உங்களைப் பற்றியும் பெரும்புலவர் கபிலர் பாடியுள்ள பாடல்களைக் கேட்டுள்ளேன். அதனாலே உங்களோடு உரையாட விரும்பி வந்தேன்.”

“கபிலர் நம்மொழியின் பெருங்கவி. அவருக்கு ஏனோ வானியல் மட்டும் வசப்படவே இல்லை. கோள்மீன்களையும் நாள்மீன்களையும் பற்றி நானும் எவ்வளவோ சொல்லியுள்ளேன். ஆனாலும், அவரது ஐயங்கள் தீர்ந்தபாடில்லை. ஆனால், அவர் படைத்த கவிதைகளைக் கொண்டுதான் பலரும் என்னை அறிந்து கொள்கின்றனர். அறியாதவரைக் கொண்டு அறியப்படுதல் சற்றே நாணச் செய்கிறது” என்றார் திசைவேழர்.
‘கபிலர் மூலம் உங்களை அறிந்தேன்’ எனச் சொல்வது அவருக்கு மகிழ்வைத் தரும் என்று அல்லவா நினைத்தேன். இப்படி ஆகிவிட்டதே எனச் சற்றே அதிர்ச்சி அடைந்தார் முதுவன். ஆனாலும், வெளிக்காட்டிக்கொள்ளாமல் சொன்னார், “நான் செல்லும் எல்லா நாடுகளிலும் காலக்கணியர்கள் இருக்கிறார்கள். அரசரின் அவையில் பெரும் தகுதியோடு அவர்கள் வீற்றிருப்பதை எங்கும் பார்க்கிறேன். அந்தக் கணியர்கள் யார், அவர்களின் கணிப்பு முறை என்ன, அவர்கள் நிலவை அடிப்படையாகக் கொண்டு காலத்தைக் கணிக்கின்றனரா, அல்லது கதிரவனை அடிப்படையாகக்கொண்டு காலத்தைக் கணிக்கின்றனரா, அவர்களின் கோணம் எப்படிப்பட்டது… என உரையாடத் தோன்றியதே இல்லை. காலம் முழுக்கக் கடலில் கிடக்கும் நமக்கு, அரண்மனைவாசிகள் சொல்ல ஒன்றுமில்லை என்றுதான் தோன்றும். ஆனால், பாண்டியப் பேரரங்கில், எண்ணிலடங்காத கலைஞர்கள் சுழன்றாடும் ஆடல் நிகழ்வை விட்டுவிட்டு உங்களைக் காண என் மனம் உந்தித்தள்ளியதற்குக் காரணம், கபிலர் பாடிய பாடல்கள்தான். அவருக்கு வானியலைக் கணிக்க முடியாமல் இருக்கலாம். ஆனால், உங்களைச் சரியாகக் கணித்திருக்கிறார் என்றே நினைக்கிறேன்.”

சட்டென திசைவேழரிடமிருந்து மறுமொழி வந்துவிடவில்லை. சிறிது நேரத்துக்குப் பின் சொன்னார்…

“நம் மொழி ஆசான்கள் எல்லோருமே வானியல் ஆசான்களாக இருந்துள்ளனர். கோள்களின் பெயரையே நாள்களின் பெயராகச் சூட்டினர். விண்மீன் கூட்டங்களுக்குச் சூட்டிய பெயரையே மாதங்களுக்கும் சூட்டினர். இது வெறும் பெயர்சூட்டல் அல்ல. அபாரமான வானியல் அச்சை வாழ்வுக்குள் பொருத்தும் செயல். இந்தப் பெரும் காலச்சுழற்சிக்குள்தான் நமது ஒவ்வொரு நாளும் சுழல்கிறது என்ற உண்மையை நாள் தவறாமல் எடுத்துச்சொல்லும் பேரறிவு. இயற்கையின் சுழல்தட்டில் அமர்ந்து புதுவிசைகொண்டு சுழலும் உயிரினம் நாம்.

இந்தப் பேரறிவின் தொடர்ச்சியைப் பாணர்களிடம் நான் காண்கிறேன். ஆனால், எழுத்து கற்ற

புலவர்களிடம் இது இல்லை. காலத்தின் அறிவு கணியர்களுக்கானது எனப் புலவர்கள் நினைக்கின்றனரோ எனத் தோன்றுகிறது. அதுதான் எனது கவலை” என்றார்.

திசைவேழரின் மறுமொழி முற்றிலும் வேறு ஒரு பார்வையைக் கொண்டிருந்தது. அது சூழ்கடல் முதுவனை, மேலும் சிந்திக்கத் தூண்டியது.

ஆர்ப்பரித்து எழும் பெரும் குரல் அடங்கவே இல்லை. நூறுகால் அரங்கு திணறியது. கட்டியங்காரனின் குரல் அனைவரையும் துடிப்பு நிலைக்கு மேல் ஏற்றிக்கொண்டிருந்தது.

ஆடை, அணி, உண்டி, தாம்பூலம், நறுமணம், காமம், இசை, கொண்டாட்டம் என்னும் எண்வகை இன்பத்தில் திளைக்கத் தொடங்கியது அரண்மனை வளாகம். இந்த இரவு பேரின்பத்தின் இரவு. இந்த இரவின் தொடக்கம், இந்த அரங்கின் கொண்டாட்டத்தின் வழியே தொடங்கியது.



எழுவகை முழவுகள் மேடையின் இடது புறம் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. ஆடல் கற்பிப்போன், இசையோன், பாடலாசிரியன், குழலோன், யாழ்வல்லுநர்கள்... என எண்ணற்ற கலைஞர்கள் மேடையில் நிறைந்தனர். கட்டியங்காரன் தன் குரலை உயர்த்திச் சொல்லவும் திரைச்சீலைகள் அகலத் தொடங்கின. எல்லோரின் கவனமும் மேடையில் குவிந்தது. ஏற்றப்பட்ட சிறுவிளக்கின் வழியே பொன்நிற ஒளி சிந்திக்கொண்டிருந்தது. நூறு நரம்புகள்கொண்ட மூன்று யாழ்கள் மேடையின் மூன்று புறமும் இருந்தன. யாழை மீட்ட அருகே வந்த பெண்கலைஞர்கள் நரம்பின் மீது தம் விரலை மெள்ள நகர்த்தினர். அதிரும் நரம்பின் வழி இசை கசியத் தொடங்கியது.

கூட்டத்தின் ஆர்ப்பரிக்கும் குரல் மெள்ள ஒடுங்கத் தொடங்கியபோது நடனமங்கைகள் எழுவர் வந்து நடுக்களம் இறங்கினர். ஒரு மெல்லிய வட்டமடித்து அறுவரும் உட்கார, நடுவில் ஒருத்தி நின்றுகொண்டிருந்தாள். யாழிசை நின்றுவிட்டது. பிற இசைக்கருவிகள் எவையும் இசைக்கப்படவில்லை. விளக்கின் நாவுகள் தவிர, மேடையில் அசையும் பொருள் எதுவும் இல்லை. நடுவில் நிற்பது சிலையாகப் புலப்பட்டது. பார்வையாளர்கள் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தனர். யவனர்களுக்கு விளக்கிச் சொல்ல எதுவும் தேவைப்படவில்லை.

சற்று இடைவெளிக்குப் பின். சிலை மெள்ள அசைந்து, வலது காலைத் தூக்கி மேடையின் முன்புறம்

சட்டெனா எவ்விக் குதித்தது. குதித்த அந்தத் துள்ளலுக்குள் அறுபது இசைக்கருவிகளும் இணைந்தன. யாழின் நரம்பும் முழவின் தோலும் பறையின் முகமும் ஏககாலத்தில் அதிர்ந்தன. குதித்த அவளின் காலடி தரைதொடும்போது நிலம் வெடிப்புறுவதைப்போல பேரோசை எழுந்தது. எழுந்த பேரொலின் மீது கூட்டத்தினரின் ஆர்ப்பரிப்பு விசைகொண்டு மோதியது.

இன்னும் அவளின் விழிகள் சுழலத் தொடங்க வில்லை. அதற்குள் நூறுகால் மண்டபத்தின் தூண்கள் ஆரவார ஓசையால் தள்ளாடத் தொடங்கின.

வயதானதால் திசைவேழரின் நடையில் மட்டுமே தள்ளாட்டம் தெரிந்தது. அவரது கருத்தில் இருக்கும் உறுதி காலத்தால் அசைக்க முடியாததாகத் தோன்றியது. அவரிடம் கேட்க எவ்வளவோ இருந்தும்.

மிகமுக்கியமான கேள்வியை மட்டும் கேட்டார் சூல்கடல் முதுவன்.

“யவனர்கள் ஒரு நாளை 24 பகுதியாகப் பகுக்கின்றனர். காலவட்டத்தை 12 ஆண்டுகள் என வகுக்கின்றனர். நாமோ ஒரு நாளை 60 நாழிகைகளாகப் பகுக்கிறோம். கால சுழற்சியின் வட்டத்தை 60 ஆண்டுகள் என வகுத்துக் கொண்டுள்ளோம். இதில் எது சரியானது?”

சற்று அமைதிக்குப் பின் திசைவேழர் பேசத் தொடங்கினார், “எது சரி, எது தவறு, என்று ஏன் வரையறுக்க நினைக்கிறீர்கள்? காலத்தை ஒருபோதும் வரையறுக்க முடியாது. தட்டின் மீது உட்கார்ந்துகொண்டு தராசை எப்படி எடைபோடுவீர்கள்? பகுக்கப்பட்டதற்கான காரணத்தை அறிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்.

சனிக்கோளும் நிலவும் பிற விண்மீன் கூட்டங்களும் ஒரே அமைப்புக்கு மீண்டும் வந்து சேர 60 ஆண்டுகள் ஆகின்றன என்பதை நம் முன்னோர்கள் கணித்துள்ளனர். அதனால்தான் காலச்சுழற்சி வட்டத்தை 60 ஆண்டுகள் என வரையறுத்தனர். அதே அளவு வட்டத்தை ஒவ்வொரு நாளும் கொண்டுள்ளது என வரையறுத் தார்கள். எனவே, ஒரு நாளை 60 நாழிகைகளாகப் பகுத்துள்ளனர்.

எனக்கு யவனர்களின் கால அளவீடு தெரியாது. ஆனால், நீங்கள் சொன்ன குறிப்பில் இருந்து எனக்குத் தோன்றுவது. அவர்கள் வியாழன் கோளை அடிப்படையாகக்கொண்டு கால அட்டவணையை உருவாக்கியிருக்கலாம். வியாழன் ஒரு சுழற்சியை முழுமைகொள்ள 12 ஆண்டுகள் ஆகின்றன. அதையே சுழற்சி வட்டமாக வரையறுத்திருக்கலாம். அதன் அடிப்படையிலே பகலை 12 பகுதிகளாகவும் இரவை 12 பகுதிகளாகவும் பிரித்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.”

“இதில் எதைப் பின்பற்றுவது பொருத்தம்?”

“உனக்கு எது தேவைப்படுகிறதோ, அதை எடுத்துக்கொள். உழவனுக்குக் கதிரவனும் வணிகனுக்கு

விண்மீனுமே அதிகம் தேவைப் படுகின்றன. இது பொதுவானது. எல்லா வணிகனின் தேவையும் ஒன்று அல்லவே, கடல் வணிகனின் தேவை இன்னும் அதிகத் துல்லியத்தை எதிர்பார்க்கக் கூடியது. எனவே உங்களுக்கானதை நீங்கள் தேர்வு செய்துகொள்ளுங்கள்.”



திசைவேழரின் மறுமொழி கேட்டு முதுவன் மெய்சிலிர்த்தான். என்ன ஒரு பரந்த அறிவு. இயற்கைக்கு முன் குறுகிநிற்கும் தன்னடக்கம். உண்மை எங்கிருந்தாலும் ஏற்கும் மனநிலை. அதுதான், இவரைப் பேராசானாகப் போற்றச் சொல்கிறது.

இளவரசன் பொதியவெற்பனைப் போற்றித்தான் அந்தப் பாடல்கள் அமைந்திருந்தன. ஆனால் ஆடல், பாடல், அழகு என மூன்றிலும் இணைசொல்ல முடியா ஒருத்தி அதைக் கலை என நிகழ்த்திக்கொண்டிருக்கும்போது அது கிளர்த்தும் உணர்வுக்கு அளவு ஏதும் இல்லை.
வழக்கமான வார்த்தைகள் எதுவும் இல்லாத புதுப்பொலிவுகொண்டிருந்தன; அவள் உச்சரிக்கும் வார்த்தைகள். சற்றே குள்ளமான பொதியவெற்பனின் உருவம் கூடலில் எவ்வளவு வாகானது என அவள் பாடும்போது, அவனால் இருக்கையில் எப்படி உட்கார்ந்திருக்க முடியும்.
அவன் இதுவரை நுகராத வாசனை அவன் மூக்குக்கு அருகில் மணம் வீசிச் சுழன்றாடிக் கொண்டிருந்தது. பொதியவெற்பனின் கண்கள் செருகின. இந்த உண்மைகள் எப்படி இவளுக்குத் தெரியும் எனத் தோன்றியது. மறுகணமே தனக்கு எப்படி இவள் தெரியாமல்போனாள் என்ற கேள்வி எழுந்தது. அதற்கு அடுத்த கணம் இவ்வளவு பேருக்குத் தெரிவதைப்போல இவள் ஏன் ஆடிக்கொண்டிருக்கிறாள் எனக் கோபம் வந்தது.

அவள் ஆடினாள்; அவன் அடங்கினான்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்**

# வீரயுக நாயகன் வேள்பாரி-30

**நண்பகலுக்குப் பின்னர்தான் எல்லோரும் படுக்கையைவிட்டு எழுந்தனர். முந்தையநாள் கொண்டாட்டம் முடிந்ததென்னவோ அதிகாலையில் தான். உறங்கிய பிறகு, கனவில் தொடர்ந்த ஆட்டங்கள் எப்போது முடிந்திருக்குமோ யார் அறிவார்?. மாலை நேரம் நெருங்கும் வேளையில் சித்திர மாளிகைக்கு ஒவ்வொருவராக வரத் தொடங்கினர்.**

பேரரசர் வரும் நேரம் அறிந்து ஏற்பாடுகள் ஆயத்தமாயின. பாண்டிய நாட்டின் பெரும்படைத் தளபதி கருங்கைவாணன் நேற்றுதான் தலைநகர் திரும்பியிருந்தான்.




கருங்கைவாணனைப் போன்ற ஒரு மாவீரன் எப்பேரரசுக்கும் தளபதியாய் அமைந்ததில்லை என்றே சொல்கின்றனர். அவன் தளபதியாக வழிநடத்திச் சென்ற எல்லா போர்களிலும் இணையற்ற வெற்றிகளே கிடைத்துள்ளன. பேரரசுக்கு வெற்றி கிடைப்பது அரிய செய்தியல்ல. ஆனால், அவனடைந்த வெற்றிகள் அனைத்தும் சோதித்துப் பார்த்து அடைந்த வெற்றிகள்.

எதிரிகள் வீசும் அம்புகளுக்கு இடையில் போர்க்கலையின் பயிற்சியை நிகழ்த்த அளவற்ற திறன் வேண்டும். அவன் எதிரிகளை வைத்துப் போரினை அறியவே முயல்கிறான். போர் தொடங்கிய சில நாழிகைகளிலேயே களத்தின் ஒவ்வோர் இயக்கமும் அவனால் கணிக்கப்பட்ட வடிவத்துக்குள் வந்துவிடுகிறது. எதிரிகள் அவன் சொற்பேச்சைக் கேட்டு வந்துசேருவதைப் போலத்தான் அவனது திட்டத்துக்குள் தலை நுழைத்து எட்டிப்பார்க்கின்றனர். பார்த்துக் கொண்டிருக்கும்போதே தலைகள் உடலைவிட்டு தள்ளிப்போய் விழுகின்றன.

நாடுகளைப் பிடிப்பதென்ற நிலையைக் கடந்து குறிப்பிட்ட மக்கள்குலங்களைத் தேடித்தேடி வேட்டையாடுகின்றனர். எல்லாவிதத் திறன்களையும் சேகரித்துக்கொள்ள வேண்டியது ஒரு பேரரசின் தேவையாக இருக்கிறது. இப்போதுகூட குறிப்பிட்டதொரு குலத்தை வெற்றிகொண்டுதான் திரும்பியிருக்கிறான். இத்திருமணத்தை முன்னிட்டு சூல்கடல் முதுவனுக்கு மிகச்சிறந்த பரிசைத் தர பேரரசர் விருப்பப்பட்டார்.

அதற்காகவே, பெரும்தாக்குதல் நடத்தப்பட்டது. சிலநூறு பேரைப் பிடிக்க பல்லாயிரம் வீரர்கள் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதல். வழக்கமாக தாக்குதல் முடிந்து படைகள் பாசறைக்குத் திரும்பினால், தலைநகர் முழுவதும் அவர்களின் வீரக்கதைகள்தான் பேசப்படும். ஆனால், இப்போது அதையெல்லாம் பேச யாருமில்லை. முந்தையநாள் பெருவிருந்தில் யார் எங்கே குடைசாய்ந்தனர் என்பதுதான் பேச்சாக இருக்கிறது.

வந்திறங்கிய யவன அழகிகளைப் பற்றிப் பேசாதவர்கள் யாருமில்லை. ஒளிகுன்றாப் பேரழகு என்று பார்த்தோர் சொல்கின்றனர். யவனத் தளபதிகளும் பாண்டிய நாட்டைப்பார்த்து வியந்துபோயிருந்தனர். மேற்கூரை மூடப்பட்ட நூற்றுக்கால் அரங்கே அவர்களைப் பெருவியப்பில் ஆழ்த்தியதாக மொழிபெயர்ப்பாளர்கள் கூறினர். அவர்கள் நாட்டில் உள்ளதெல்லாம் மூடப்படாத திறந்தவெளி அரங்குகள்தானாம்.

பேச்சினூடே ஒவ்வொருவராகச் சித்திர மாளிகைக்கு வந்து சேர்ந்தனர். வணிகர்குலத் தலைவர்கள் நால்வர் உள்ளே நுழைந்தபோது இளவரசனும் கருங்கைவாணனும் சாகலைவனும் அங்கே இருந்தனர். முசுகுந்தரும் வெள்ளி கொண்டாரும் உள்நுழைந்தனர். இன்னும் சற்றுநேரத்தில் பேரரசரும் சூல்கடல் முதுவனும் வந்துவிடுவார்கள் எனச் செய்தி சொன்னார்கள். பணியாள்கள் பளிங்குக் குவளைகளில் தேறலை ஊற்ற ஆயத்தமாயினர்.


“நேற்றைய கொண்டாட்டத்தில், மேற்கூரையிலிருந்து தொங்கும் கயிற்றைப் பிடித்துக்கொண்டு அந்தரத்தில் ஒருத்தி ஆடினாளே, இப்போதும் என்னால் அதை நம்ப முடியவில்லை” என்றான் சாகலைவன்.

“அவள் தந்தரையில் ஆடினால்கூட நமது கண்களால் நம்பமுடியாமல்தான் இருந்திருக்கும்” என்றார் கருங்கைவாணன்.

பேசிக்கொண்டிருக்கும்போது வெள்ளி கொண்டார் கேட்டார், “அந்த ஆட்டம் எப்பொழுது நிகழ்ந்தது?”

எல்லோரும் சிரித்தனர்.

“உங்களின் ஆட்டம் தொடங்கிய பின்னால் தான்” என்றான் சாகலைவன்.



“அவளாவது கயிற்றைப் பிடித்து ஆடினாள். நீங்களோ காற்றைப்பிடித்தே ஆடினீர்கள்” என்றார் முசுகுந்தர்.

சிரிப்பு அரங்கை நிறைத்தது.

பேரரசர் வரும் அறிவிப்பு ஓசை கேட்டது. சிரிப்பொலியை அடக்கி, வாயில் நோக்கி வணங்கி நின்றனர்.

தேறல் மட்டுந்தான் அருந்தும்போது தரும் மயக்கத்தை, அதன் மணத்தை நுகரும்போதே தந்துவிடும் சிறப்பைக்கொண்டது. அதனாலேயே குவளையில் ஏந்தியபடி மோந்தும் விலக்கியுமாக ஒரு விளையாட்டை விளையாடுவர்.

மூக்கில் ஏறும் மயக்கம் கணநேரத்திலேயே நடு உச்சியைத் தொட்டுத் திரும்புகிறது. கலையாமல் இருக்கும் மேகம்போல அது உச்சந்தலையில் நீண்டு நிலைகொள்ளும். எப்போது குடிக்கத் தொடங்குகிறீர்களோ அதன்பின், அது வயிற்றோடும் எரிகொள்ளும் மயக்கத்தோடும் தொடர்புடையதாகிவிடுகிறது. எனவே, முதல் மிடறை அருந்தும் வரை மயங்கும் காலத்தை நீட்டித்துச் செல்பவன்தான் தேறலில் தேர்ந்தவனாகிறான்.
இங்கிருப்பவர்கள் எல்லோரும் தேர்ந்தவர்கள் தான். ஏந்திய குவளையை மூக்குகள் நுகர்ந்தபடி பேச்சுக்கள் மட்டுமே சுழன்றுகொண்டிருந்தன. அரங்கின் ஆட்டம் பற்றிப் பேசுதல் மிதக்கும்

மனநிலைக்கு மெருகேற்றியது. “திரைச்சீலை விலக மறுத்த கணத்தில் பணியாளன் ஒருவன் ஓடிப்போய் அதனைச் சரிசெய்தான். அது தற்செயலான நிகழ்வு என்று எல்லோரும் நினைத்தனர். ஆனால், அரங்கினரின் கவனம் முழுவதையும் திரைச்சீலையில் நிறுத்தி, தனது சீலையை மாற்றி சுழன்று உள்நுழைந்தாளே அவள். அந்தக் கணம்தான் நேற்றைய ஆட்டத்தின் உச்சம்” என்றார் முசுகுந்தர்.

தேறலை அருந்தியபடி பொதியவெற்பனின் வாய் முணுமுணுத்தது, “உச்சத்தை அறிந்தவன் நான் மட்டுமே!”

எல்லோரும் ஆடல் அரங்கையே பேசிக் கொண்டிருக்க, சூல்கடல் முதுவன் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்துப் பேரரசர் கேட்டார்... ”நீங்கள் பேரரங்கில் கலந்துகொள்ளவில்லையா?”

“இல்லை அரசே. நான் திசைவேழரைக்  காணப் போயிருந்தேன். மிகப்பயனுள்ள பொழுதாக அது அமைந்தது.”

“நீங்கள் அடைந்த பயனை எங்களோடு பகிர்ந்துகொள்ளலாமா?”

“யவனர்களுக்கும் நமக்குமான வானியல் வேறுபாட்டைப் பற்றி, பொருத்தமானவரிடம் உரையாட வேண்டும் என நீண்டநாள் நினைத் திருந்தேன். அது நேற்றுதான் நிறைவேறியது.”


“திசைவேழர் வானியலின் பேராசான். நீங்களோ கடல் வணிகத்தின் பெருமுதுவன். இருவரும் உரையாடினால் எவ்வளவு அறிவார்ந்த உரையாடலாக அது இருந்திருக்கும். எனக்குக் கேட்க வாய்ப்பின்றிப் போய்விட்டதே.”

பேரரசரின் இச்சொல் சூல்கடல் முதுவனை நாணச்செய்தது.

“யவனர்கள் பெரும்பேரரசை ஆண்டு கொண்டிருப்பவர்கள். நம்மை அவர்களோடு ஒப்பிட முடியாது. ஆனாலும், இருவருக்கும் நிறைய ஒற்றுமைகள் உண்டு. அப்படித்தானே முதுவரே?” என்று கேட்டார் முசுகுந்தர்.

"ஆம்” என்றார் முதுவன். “கொள்வதற்கு விலையில்லாச் செல்வம் அவர்களிடம் உண்டு, கொடுக்கவோ ஒப்பிடமுடியா வளம் நம்மிடம் உண்டு. இப்பெரும் வணிகம் நடக்கும் கடலை நாம் ‘நேமி’ என்கிறோம்; அவர்களும் இதைப்போன்றே சொல்கின்றனர். நாம் வட்டத்தை ‘திகிரி’ என்கிறோம்; அவர்களோ ‘டிகிரி’ என்கின்றனர். காலத்தின் அளவீடுகளை நாம் ‘ஓரை’ என்கிறோம்; அவர்களோ ‘ஹோவர்’ என்கின்றனர்.

வெம்மையைக் குளுமையாக்கும் அதிசய மரமாக நமக்கு ‘வேம்பு’ இருக்கிறது; அவர்களுக்கோ ‘ஆலிவ்’. இரண்டின் இலையிலும் இருப்பது ஒரே கசப்பு. இரண்டின் நிழலிலும் இருப்பது ஒரே குளுமை. நூற்றாண்டுக்கும் மேற்பட்ட வணிகத்தால் எவ்வளவோ கொடுக்கல் வாங்கல் நடந்திருக்கிறது”.



”இவ்வணிகம் அவர்களின் தேவையில் இருந்துதான் தொடங்கி வளர்ந்தது. அதற்கான மாற்று ஈடாகத்தான் நாம் பலவற்றைப் பெற்றுக்கொள்கிறோம். அந்தத் தொடக்க கட்டத்திலிருந்து நாம் வெகுதூரம் முன்னோக்கி வந்துவிட்டோம். இப்போதைய நிலையில் கடல் வணிகத்தில் நமது கை ஓங்க வழியென்ன?” எனக் கேட்டார் முசுகுந்தர்.

கற்பனைக்கான மயக்கத்துக்கு இப்போது தேறலோ, நேற்றைய ஆட்டத்தின் நினைவோ தேவைப்படவில்லை; வணிகத்தின் பெருங்கனவே போதுமானதாக இருந்தது.

“கனவென்பது உண்மையின் மீது அகலாத திரையைப்போலப் படிந்தே கிடக்க வேண்டும். காதலுக்குத்தான் அத்தகைய கனவை உருவாக்கும் வல்லமை உண்டு. அதனாலேயே கைகூடாத காதலுக்கு பெருந்தண்டனையைக் கனவுகளே அளிக்கின்றன” என்றாள் பொற்சுவை.

வைகையின் கரையோரம் பூவிலி மன்றத்தில் இருந்து ஓடும் நதியைப் பார்த்துக்கொண்டே பொற்சுவை கூறியது சுகமதிக்கு அதிர்ச்சியைத் தந்தது.

சக்கரவாகப்பறவை கடலின் குறியீடாக மட்டுமல்ல, காதலின் குறியீடாகவும் இருக்கிறது. எனவே, அவ்விடம்விட்டு வெளியில் வருதல் நலம் எனத் தோன்றியதால், வைகைக்கரைக்கு அழைத்துவந்தாள் சுகமதி.


``நதி கனவோடும் காதலோடும் கலந்த ஒன்றல்லவா? அதுவும் வைகை, காதலர் திருவிழாவைக் காலங்காலமாகத் தனது உள்ளங்கையில் வைத்துக்கொண்டாடும் நதியல்லவா? இங்கு வந்தால் வேறு எதன் நினைவு வரும் என்று நீ நினைத்தாய்?” எனக் கேட்டாள் பொற்சுவை.

”வைகையைத் தமிழ்நதி என்றுதானே புலவர்கள் அழைக்கின்றனர். அதனால் உங்களின் நினைவு இலக்கியத்தின்பால் செல்லும் என நினைத்தேன்” என்றாள் சுகமதி.

“இலக்கியமும் காதலும் வெவ்வேறா சுகமதி?” எனக் கேட்டவள் கூறினாள், “நீ கப்பலுக்குள் இருக்கும் நீரணி மன்றத்தில் நாட்டியம் பார்த்திருக்கிறாயா?”

“ஒரே ஒரு முறை, மணிவாய்த்தீவுக்குப் போகும்போது உங்களோடு சேர்ந்து பார்த்திருக்கிறேன்”.

“அப்போது என்ன நடந்தது என்று நினைவுபடுத்திப் பார். நடனமாடுபவளின் கால்களை நாம் வியந்து பார்த்துக் கொண்டி ருப்போம். ஆனால், அதைவிட அதிகமாக நாம் ஆடிக்கொண்டிருப்போம். எது நடனம் என்ற குழப்பம் இருந்துகொண்டே இருக்கும். இலக்கியமும் காதலும் அப்படித்தான். எது இலக்கியம், எது காதல், என்பதைப் பிரித்தறிய முடியாது. ஒன்றின் நிழலாக இன்னொன்று இருக்கும். ஆனால், எது நிழல் என்பதை உறுதியாக சொல்ல முடியாது.”



சுகமதி வாயடைத்துப்போனாள்.

வைகையின் சிற்றலைகள் அடுத்தடுத்து வந்து பொற்சுவையின் கால்களை நனைத்து போயின. ஆடையின் கீழ்விளிம்பு முழுவதும் ஈரமானது.

“நேற்று ஆடலரங்குக்கு நீங்கள் ஏன் வரவில்லை என்றும், ‘நீயாவது சொல்லி அழைத்துவர வேண்டாமா?’ என்றும் பலர் என்னைக் கேட்டனர்”.

“நீ என்ன சொன்னாய்?”

“பொற்சுவை மிகச்சிறந்த நடனமங்கை. யாருடைய ஆட்டத்தைப் பார்க்க வேண்டும் என்று அவருக்குத் தெரியாதா?” எனப் பதிலுக்குக் கேட்டேன்.

மறுமொழியால் மகிழ்ந்த பொற்சுவை கேட்டாள், “நான் சிறந்த நடன மங்கையா சுகமதி?”

“இதில் என்ன ஐயம்? நீங்கள் ஆடிய ஆட்டத்தைக் கண்டு மயங்கியவன்தானே அந்த மாவீரன்.”

கேலிச் சிரிப்பொன்றை உதிர்த்தபடி பொற்சுவை கேட்டாள், ``நீ எதற்காக என்னை வைகைக்கரைக்கு அழைத்து வந்தாய்? இப்போது எதை நினைவூட்டுகிறாய் எனக்  கவனித்தாயா?”

அப்போதுதான் சுகமதிக்கு தான் செய்த தவறு புரிந்தது. நாக்கை மடக்கிக் கடித்தாள்.

“தப்பிக்க முடியாது சுகமதி. நானும் நீயும் காதலைவிட்டு ஒருபோதும் தப்பிக்க முடியாது. ஆடையின் கீழ்விளிம்பை நதிநீரும், கழுத்தின் மேல்விளிம்பைக் கண்ணீரும் கடந்து கொண்டிருக்கின்றன. நாம் என்ன செய்ய முடியும்?”

“இப்படியொரு மயக்கம் உள்ளுக்குள் சுழல ஆரம்பித்தால் யார்தான் என்ன செய்ய முடியும்?” தேறலின் சுவையை இதழ்கள் பருகத் தொடங்கிய நேரத்தில் சூல்கடல் முதுவன் பேசத் தொடங்கினான்.

“யவனத்தேறல் இதனினும் கடுஞ்சுவைகொண்டது. ஆனால், மணமற்றது. பாண்டிய நாட்டுத் தேறலின் தனிச்சுவையே மணத்தாலேயே மயக்குதல்தான்.”

“யவனத்தேறல் மணமற்றுப் போகலாம். ஆனால், யவன அழகிகள் பார்த்தாலே மயங்கவைக்கும் மாயங்களன்றோ,  அவர்களை என்ன சொல்வது?”



ஏளனமாய் ஒரு சிரிப்புச் சிரித்தார் முதுவன்.

“இதில் சிரிக்க என்ன இருக்கிறது?” எனக் கேட்டார் முசுகுந்தர்.

“நீங்கள் பேரழகிகள் என்று வர்ணித்து மயங்குகிறீர்களே, அவர்களில் பெரும் பான்மையோர் யவன அழகிகள் அல்லர்.”

அவையிலிருந்த எல்லோருக்கும் உச்சியில் ஏறிய மயக்கம் சட்டெனக் கீழிறங்கியது. பேரரசர் திகைத்துப் போனார்.

முதுவன் அதனைக் கண்டுகொள்ளாமல் தேறலைப் பருகினான்.

“என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? அவர்கள் யவன அழகிகள் இல்லாமல் வேறு யார்?”

“அவர்கள் எல்லோரும் பாப்ரிகோன் அழகிகள். ஒரு சாயலில் யவன அழகிகள்போல் இருப்பார்கள். அவர்களைத்தான் கப்பலில் வந்து இறக்குகின்றனர். எங்களுக்கு உண்மை தெரியும் என்பதால், இம்முறை மூன்று பேரை மட்டும் யவனத்திலிருந்தும் மீதம் இருபதுக்கும் மேற்பட்டோரை பாப்ரிகோனிலிருந்தும் அழைத்துவந்து பரிசளித்தனர்”.

எல்லோரும் அதிர்ந்துபோனார்கள். சற்றே பதற்றமும் உருவானது.

“பரிசளிக்கப்பட்டவர்களில் மூவர் மட்டுந்தான் யவன அழகிகள் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?” எனக் கேட்டார் வெள்ளி கொண்டார்.

குவளையை மாற்றி, நிரப்பிய தேறலைக் கையிலேந்தியபடி முதுவன் சொன்னான், “நாங்கள் வணிகத்தில் பெரும்பொருள் ஈட்டு பவர்கள் மட்டுமல்ல; பெரும்பொருள் இழப்பவர்களும்தான்”

பேரரசருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி வெளிப்படையாகவே தெரிந்தது.

“இந்த ஏமாற்றம் ஒரு தரப்புக்கு மட்டும் என்று நினைத்துவிடாதீர்கள். இருதரப்புக்கும்தான் நிகழ்கிறது” என்றார் முதுவன்.

அந்தத் தரப்புக்கு என்ன நிகழ்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள ஆர்வத்தோடு இருந்தனர்.

“இங்கே வாங்கும் முத்துகளை பலநூறுமடங்கு விலைக்கு அவர்களின் சொந்தநாட்டினரிடம் விற்பனை செய்கின்றனர். உங்களுக்குத் தருவனவற்றில் நிறமும் மூக்கும்தான் வேறுபடுகின்றன. அவர்களுக்குத் தருவனவற்றில் நூற்றுக்கு நூறு வேறுபடுகின்றன.”

எல்லோரும் வாய்பிளந்து கேட்டுக் கொண்டிருந்தனர்.

முதுவன் சொன்னான், “இதுதான் வணிகத்தின் நியதி. விற்கப்படும் இடத்தில் முடிவாகும் விலை, பொருளுக்கு மட்டுமல்ல; அதைப் பற்றிய அறியாமைக்கும் சேர்த்துத்தான்”.

“பலநூறு மடங்கு அதிகப்படுத்தி விற்கிறார்கள் என்றால், அதை ஏன் அவர்கள் மட்டும் பெற வேண்டும்?”

“இவ்வணிகப்பாதையின் கட்டமைப்பைக் கையில் வைத்திருப்பது அவர்கள்தானே.”

“அவர்கள் வைத்துள்ள கட்டமைப்பு என்ன என்பதனைச் சற்று விளக்கமாகச் சொல்லுங்கள். அதன்பின், நாம் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி சிந்திக்கலாம்” என்றார் முசுகுந்தர்.

“இனிமேல் சிந்திக்க என்னடி இருக்கிறது. எல்லாம் முடிந்துவிட்டது.”

“என்னால் இன்னும் நம்பமுடியவில்லை. எதனால் தங்கள் தந்தை இந்த முடிவை எடுத்தார்?”

“பாண்டிய நாட்டு முத்துகள் நூறுமடங்கு அதிக விலைக்கு யவனத்தில் விற்பனையாவதை அறிந்துதான்.”

“அதற்காகவா எடுத்திருப்பார்?”



“வேறு எதற்காக எடுத்தார்? மிளகின் விலை இதைவிட அதிகமாக இருந்திருக்குமேயானால் இத்தனை கப்பல்களும் முசிறியில்தானே நங்கூரம் பாய்ச்சியிருக்கும். இந்நேரம் நாம் இருவரும் பேரியாற்றின் கரையில் பேசிக் கொண்டிருந்திருப்போம்.”

சுகமதி திகைத்தபடி நிற்க, பொற்சுவை தொடர்ந்தாள்... “யவனர்கள் எண்ணற்ற அழகிகளைக் கொண்டுவந்துள்ளதாகக் கூறினாயே, அதற்கு என்ன காரணமோ, அதே காரணம்தான் என் தந்தை என்னைக் கொண்டு வந்துள்ளதற்கும்.”

சுகமதி உறைந்து நின்றாள்.

வைகையைப் பார்த்தபடியே பேசிக் கொண்டிருந்தாள் பொற்சுவை. “ஓடும் நீருக்குள் உறங்கும் நதி” என்று மனதுக்குள் ஒரு வரி தோன்றியது. அதுதான் பெண் எனவும் தோன்றியது”.

சுகமதி அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தாள்.

பொற்சுவை சுகமதியைப் பார்த்துக் கேட்டாள், “என்ன சுகமதி பேச்சற்றுப் போனாய்?”

“இல்லை… ஒன்றுமில்லை…” எனச் சொல்லி தனது உணர்வை மறைக்கப் பார்த்தாள்.

“நீயும் நானும் மட்டுமல்ல, இப்பூவிலி மன்றத்தில் வந்து நின்ற எல்லா பெண்களின் கண்களும் இப்படிக் கலங்கித்தான் இருந்திருக் கின்றன. அதை வைகை அறியும். நேற்று மணமுடி கொடுத்து வெற்றிலை மாற்றும் அரங்கில் என்னவெல்லாம் இருந்தன என்பதை நீ கவனித்தாயா?”

எல்லாவற்றையும் சுகமதி பார்த்துக் கொண்டுதான் இருந்தாள். ஆனால், பொற்சுவை எதைக் கேட்கிறாள் எனத் தெரியவில்லை.

“அரங்கில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தட்டுகள் முழுவதிலும் பூக்களும் கனிகளும் மட்டுமே வைக்கப்பட்டிருந்தன. வேர்களும் தண்டுகளும் வைக்கப்படுவதில்லை. ஏன் தெரியுமா?”

கேள்விக்குப் பிறகுதான், சுகமதி சிந்திக்கத் தொடங்கினாள் அதற்கான காரணம் தெரியவில்லை.

“வேர்களும் தண்டுகளும் தம்மைப் பெருக்கிக் கொள்வன. பூக்களும் கனிகளும்தான் தம் இனத்தைப் பெருக்குவன. அலங்கரித்த தட்டில் வைத்து கனி மாற்றப்பட்டதன் காரணம்தான் நான் மாற்றப்படுவதும்.”

ஓரளவு கல்வியறிவுகொண்டவள்தான் சுகமதி. வணிக குலத்திலிருந்து வந்தவள்தான் அவளும்; அதனால்தான் பொற்சுவை பேசும் பொருளின் ஆழம் அவளுக்குப் புரிந்தது. ஆனால், அதைஎதிர்கொள்ளும் மனவலிமை அவளிடம் இல்லை. மனமாற்றத்துக்குத்தான் வைகைக் கரைக்குப் போவோம் என்று சொல்லி அழைத்துவந்தாள். ஆனால், இங்கு நடப்பது தலைகீழாக இருந்தது. வைகைக் கரையைவிட்டு விரைவில் அகலமாட்டோமா என்று தோன்றியது சுகமதிக்கு.

“அதுவும் தட்டில் என்னென்ன கனிகள் வைக்கப்பட்டிருந்தன என்று பார்த்தாயா?”

நினைத்துப்பார்த்து சுகமதி சொன்னாள், “பலாவும் மாதுளையும் இருந்தன.”

“இவை இரண்டும்தான் கனிகளா? எல்லோருக்கும் பிடித்த மாங்கனி ஏன் வைக்கப்படவில்லை? இவ்வளவு பெரிய பாண்டிய நாட்டில் ஒரு மாங்கனி கூடவா கிடைக்கவில்லை? ”

சுகமதிக்குக் காரணம் புலப்படவில்லை.

பொற்சுவை சொன்னாள், ``பலாவும் மாதுளையும் பல வித்துக்களைக்கொண்ட கனிகள். ``மா” ஒற்றை விதையைக்கொண்ட கனி.”

சொல்லவருவதன் பொருள் புரிந்தபோது திகைத்துப்போனாள் சுகமதி. சடங்குகளுக்குப் பின்னால் இருக்கும் காரணங்கள் நடுங்கச் செய்வனவாக இருந்தன.



பொற்சுவை மேலும் சொன்னாள், “என் உடல் எக்கனியாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால், என் மனமோ ஒற்றை விதையுடைய மாங்கனி. அதில் இன்னொரு விதைக்கு இடமில்லை.”

“இன்னும் வயிற்றில் இடமிருக்கிறதா?” எனக் கேட்டபோது, சூல்கடல் முதுவன் சொன்னார், “நாங்கள் கடற்குடிகாரர்கள். நீரில் மிதப்பதும் நீரால் மிதப்பதும்தான் எங்களின் வாழ்வு.”

முதுவனின் பேச்சைக் கேட்டு மகிழ்ந்தனர் எல்லோரும். அவர் வணிகப்பாதையின் கட்டமைப்பைப் பற்றி சொல்ல  ஆயத்தமானார். அதைக் கவனித்த பேரரசர் கூறினார், “இவ்வுரையாடலின்போது திசைவேழரும் இருந்தால் பொருத்தமாக இருக்கும். அவரை அழைத்து வாருங்கள்” என்று உத்தரவிட்டதும், பணியாளர்கள் ஓடினர்.

“அவர் வந்ததும் இதைப்பற்றிப் பேசுவோம்” என்றார் பேரரசர்.

‘திசைவேழர் தென்திசை மாளிகையில் இருக்கிறார். இங்கிருந்து போய் அவரை அழைத்து வந்துசேர நேரமாகும். முதுவன் சொல்லத் தொடங்கும்போது தந்தை ஏன் இப்படிச் செய்துவிட்டார்?’ என மனதுக்குள் புலம்பினான் இளவரசன்.

‘பெருங்குவளை மூன்றைக் கடந்துவிட்டால் நினைவை நமது கட்டுப்பாட்டின் வழியே ஒழுங்குபடுத்த முடியாது. இவ்வளவு  முதன்மையான செய்தியை உளறலாகப் பேசிவிடக்கூடாது. அது மட்டுமல்ல, உடன் மூன்று வணிகர்களை வைத்துக்கொண்டு பேசுவது அறிவுடைமையல்ல. எனவே, நாளை நிதானமாகப் பேசலாம்’ என்று முடிவெடுத்த பேரரசர் சற்று நேரங்கடத்துவதற்குத்தான் இதைச் செய்தார். முசுகுந்தருக்கு மட்டும் இது புரிந்தது.

“சொல்ல மறந்துவிட்டேன். திசைவேழர் வந்ததும், அவரிடம் யாரும் கபிலரைப் பற்றி சொல்லிவிடாதீர்கள், கோபப்பட்டுவிடுவார்” என்று சொல்லிச் சிரித்தார் முதுவன்.

முதற் குவளையைக் கடக்காமல் இருந்த முசுகுந்தர் கேட்டார், “பெருங்கவி இன்னும் ஏன் மணவிழாவுக்கு வந்து சேரவில்லை?”

“மணமுடி நிகழ்வுக்கு முன்னதாக வந்துவிடுவார் என நினைத்தேன். தாம்பூலம் தரிக்கையில் அவர் இல்லாதது மனதைக் கவலைகொள்ளச் செய்தது” என்றார் பேரரசர்.

“இத்திருமணம் பற்றிய செய்தி தெரியாத இடமேயில்லை. தெரிந்தால் அவர் வராமல் இருந்திருக்க மாட்டார்.”

“ஒருவேளை நெடுந்தொலைவுள்ள தீவு எதற்கேனும் போயிருந்தால் செய்தி எட்டாமல் போயிருக்கலாம் அல்லவா?”

முதுவன் சொன்னான். “இல்லை. எல்லா தீவில் இருந்தும் வணிகர்கள் வந்துவிட்டனர். இத்திருமணச் செய்தி தெரியாத பகுதி நிலப்பரப்பில் எங்கேனும் இருக்கலாம். தீவுக்குள் எங்கும் இல்லை.”

“கடலும் கடல்சார் வாழ்வும்தானே உங்களுக்கு அமைந்தது. நீங்கள் எப்படி செடி, கொடி, காய், கனிகளைப்பற்றியெல்லாம் இவ்வளவு அறிந்தீர்கள்?” வைகையில் இருந்து மாளிகை திரும்பு வழியில் சுகமதி கேட்டாள்.

மறுமொழியின்றி அமைதியாக வந்தாள் பொற்சுவை. தேர்ச்சக்கரம் உருளும் ஓசை மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தது.

“நான் எதுவும் தவறாகக் கேட்டுவிட்டேனா?”

“இல்லை. மனம் ஆசானிடம் போய்விட்டது. அவர் எனக்குக் கற்றுக்கொடுத்தது ஏராளம். அவரைப் பார்க்கக் கண்கள் ஏங்குகின்றன.”

“அவர் ஏன் இன்னும் மணவிழாவுக்கு வராமல் இருக்கிறார்?”

“அதைப்பற்றி நான் சிந்திக்கவில்லை.

அவரைப் பார்த்தால் அந்தக்கணமே உடைந்து அழுதுவிடுவேன். அவரை நினைத்தாலே மனதில் பதற்றம் பற்றிக்கொள்கிறது. அதனாலே நினைக்காமல் இருக்கிறேன். இப்போது நீ அவரை நோக்கிய

நினைவைக் கிளறி விட்டுவிட்டாய்.”

“இன்னும் சிலநாள்கள்தானே இருக்கின்றன. அதற்குள் வந்துவிடுவார் என நினைக்கிறேன்.”

“வருவதாக இருந்திருந்தால் எப்போதோ வந்திருக்க வேண்டும். அதற்கான நாள்கள் கடந்துவிட்டன. இனி அவர் வரமாட்டார்.”




“பாண்டியப் பேரரசின் போற்றுதலுக்குரிய பெருங்கவி உங்கள் பேராசான். பின் எப்படி வராமல் இருப்பார்?”

“இம்மணவிழா பற்றிய செய்தி தெரிந்தால்தானே வரமுடியும்?”

“வேந்தர்கள் அனைவருக்கும், சிற்றரசர்கள் எல்லோருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. தீவுக்கூட்டங்கள் எங்குமிருந்து வணிகர்கள் வந்துள்ளனர். பின், அவருக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லையே?”
உதட்டோரம் சின்னதாய் ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டுப் பொற்சுவை சொன்னாள், “அவர் பறம்பு நாட்டுக்குப் போயிருந்தால் எப்படித் தெரிந்திருக்கும்?”

சுகமதியின் கண்கள் இமைக்காமல் நிலை கொண்டன.

பொற்சுவை தொடர்ந்தாள், “இதுபோன்ற செய்திகள் சென்றடையாமல் இருக்கும் ஒரே நிலப்பகுதி அதுவாகத்தான் இருக்க முடியும். ஆசானும் அங்கே போக வேண்டும் என்று பல ஆண்டுகள் விருப்பத்தோடு இருந்தார். அது இப்போது நிகழ்ந்திருக்க வேண்டும்.”

சற்று இடைவெளிவிட்டுச் சொன்னாள், “என் கண்ணீர் அவரை வெகுதொலைவிலே நிறுத்திவிட்டது சுகமதி”.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-31

இடது புறம் குதிரைத்தலையைப் போலிருக்கும் `ஆறு புரவி'(அசுவினி) விண்மீன் கூட்டம் முன்பைவிடத் துல்லியமாகவும் தெளிவாகவும் இருந்தது. அதையே நீண்டநேரம் பார்த்தபடி இருந்தான் அந்துவன். அவனை அறியாமலேயே மனம் மகிழ்வை உணர்ந்தது. அவனது கண்கள் வரையப்படும் விண்மீன் கூட்டத்தையும், பின்னர் கூண்டுக்குள் இருந்த தேவாங்குகளையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டே இருந்தன. விண்மீன் கூட்டங்களுக்கு இடையில் உலவித் திரியும் விலங்கினைப்போல அத்தேவாங்குகள் தோன்றின.

வாயும் மூக்கும் சிறிது நீண்டிருப்பதால் பறவைகளின் கைப்பிள்ளைபோல இருப்பதாக அந்துவன் எண்ணினான். மேற்கூரையின் வேலைகள் முடியும் தருவாயில் இருக்கின்றன. விரைவில் பாண்டரங்கை விட்டு வெளிச்செல்ல காத்திருந்தான் அந்துவன்.




அன்றைய நாளின் காலை நேரத்திலேயே கலந்துரையாடல் அரங்குக்கு ஒருவர் பின் ஒருவராக வந்து சேர்ந்தனர். ஏமாற்றம் எதில் நடக்கிறது என்பதைப் பொருத்துத்தான் மனித மனம் எப்படி அதை எடுத்துக்கொள்கிறது என்பது தெரியவருகிறது. தங்களின் அந்தப்புரத்தில் இருப்பவரெல்லாம் யவன அழகிகள் அல்ல என்று முதுவன் சொன்னபோது பேரரசரின் மனம் பேரதிர்ச்சிக்கு உள்ளானது. நேற்றிரவு விருந்தில் மற்றவர்கள் கவனிக்காதபோது முதுவனிடம் பேரரசர் கேட்டார். “நீங்கள் கிளாசரினாவை பார்த்திருக்கிறீர்களா?”

இந்தக் கேள்விக்கு என்ன பொருள் என்பது முதுவனுக்குப் புரிந்தது.

“மணமுடி நிகழ்வில் பார்த்தேன் அரசே. அவள் யவன அழகியல்லவா? அதனால்தான் தனித்துவத்தோடு இருக்கிறாள். இமைகள் கவிழும்போதுகூட அவளின் கண்களைப் பார்க்கத் தோன்றுகிறது.”

பேரரசருக்கு எதிர்பார்த்த பதில் கிடைத்தது. ஆனாலும், சற்றே பதற்றமானார். ‘மணமுடிவாக்கு கொடுக்கும் நிகழ்வில் அரங்கின் இடதுபுற மூலையில் அவள் அமர்ந்திருந்தாள். முதுவன் உட்கார்ந்திருந்ததோ தனக்கருகில். எப்படி இவ்வளவு தொலைவில் கவிழும் இமைகளைக் கண்டறிந்தான்? சில பாதைகளில் பயணிக்கத் தொடங்கினால் பதற்றம் கூடத்தான் செய்யுமே தவிர குறையாது’ என்று எண்ணங்கள் ஓடியபடி இருக்க ஆலோசனை மாடத்தை நோக்கி நடந்தார் பேரரசர்.

அங்கு இளவரசன் பொதியவெற்பனும், சூல்கடல் முதுவனும், திசைவேழரும் வீற்றிருந்தனர். இவர்கள் வருவதற்கு முன்பே தலைமை அமைச்சர் முசுகுந்தரும் தளபதி கருங்கைவாணனும், வெள்ளிகொண்டாரும் வந்துவிட்டனர். இன்று நடைபெறப்போகும் உரையாடல், பாண்டிய நாட்டின் எதிர்காலத்தில் பெரும்மாற்றத்தை நிகழ்த்தலாம் என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் இருந்தது. “நேற்று தற்செயலாக நிகழ்ந்த ஓர் உரையாடல் இவ்வளவு ஆக்கபூர்வமான இடத்துக்கு வருமென்று நான் நம்பவில்லை” என்று வெள்ளிகொண்டார் சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால், இது தற்செயல் அன்று என்பது, சிலருக்கு மட்டும் தெரிந்திருந்தது  பேரரசர் வந்ததும் பேச்சுத் தொடங்கியது. தோல் வரைபடம் ஒன்றை மரப்பலகையில் விரித்தார் முதுவன். எல்லோரும் அதைச் சுற்றி நின்றனர். பார்த்தவுடன் புரிந்தது அது யவனர்களின் வரைபடம் என்று.

“இவ்வணிகப் பயணம் மூன்று இடங்களில் ‘தங்கல்’களைக் கொண்டது. கொற்கையிலிருந்து புறப்பட்டால் முதல் `தங்கல்’ சிந்து ஆறு கடலிற்புகுமிடத்தில் இருக்கும் பாப்ரிகோனில். அங்கு ஓய்வெடுத்துக்கொண்டு தேவைப்பட்டால் அடிமைகளை மாற்றிக்கொண்டு கப்பல் புறப்படும். அங்கிருந்து செங்கடலின் முனையில் இருக்கும் பெர்னிகே துறைமுகத்துக்குச் செல்ல வேண்டும். அங்கிருந்து பொருள்களைக் கழுதைகளின் மீதேற்றி நடத்தி மணற்பரப்பைக் கடந்து நீல ஆற்றங்கரை(நைல்நதி)யில் இருக்கும் கோபடஸ் துறைமுகத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும். அங்கிருந்து மீண்டும் கப்பல் மூலமாக யவனத்தை அடைய வேண்டும்.
யவனர்கள் தமிழ்நிலத்தில் இரு கோட்டை களைக் கட்டி வீரர்களையும் எண்ணற்ற அடிமைகளையும் வைத்துள்ளனர். தங்களின் நாவாய்களைப் பழுதுபார்க்கத் தேர்ந்த தச்சர்களையும் வைத்துள்ளனர். இதேபோன்று பாப்ரிகோன், பெர்னிகே, கோபடஸ் ஆகிய மூன்று இடங்களிலும் கோட்டைகள் அமைத்து எல்லா ஏற்பாடுகளையும் செய்துவைத்துள்ளனர்.

இப்பெரும் பயணத்தில் மேலிமேடும் மங்களகிரியும் கடற்கொள்ளையர்கள் அதிகமுள்ள பகுதி. அதேபோலச் செங்கடலில் இருந்து பெர்னிகே செல்லும் வழியில் பாலை மணற்பரப்பில் கருங்கொள்ளையர்களின் தாக்குதல் அதிகம் நிகழும். அவற்றைச் சமாளிப்பதில் சிறு தவறு நடந்தால்கூட எல்லாம் அழியும்; அதனால்தான் தேர்ந்த படைவீரர்கள் கப்பலின் பாதுகாப்புக்கு இருப்பதும், ஒன்றுக்கும் மேற்பட்ட கப்பல்கள் மொத்தமாகப் போவதும் முக்கியமாகிறது.”

இவையெல்லாம் தெரிந்த செய்திகள்தான். இவற்றில் முதன்மையானது ஒவ்வொரு கோட்டையிலும் எத்தனை வீரர்கள், எத்தனை அடிமைகள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான்.

“பெர்னிகேவைத் தாண்டி நாம் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், இங்கிருந்து பெர்னிகே வரையிலான பயணத்துக்கு நாம் சில தங்கல்களை ஏற்படுத்த முடியுமல்லவா?” எனக் கேட்டார் முசுகுந்தர்.

“நமது நாட்டில் யவனச்சேரியை அவர்கள் அமைத்துள்ளதைப்போல பாப்ரிகோனிலும் பெர்னிகேவிலும் ஒப்பந்தம் செய்துகொண்டு நாம் தங்கல்களுக்கான கோட்டைகளை அமைக்கலாம்” என்றார் வெள்ளிகொண்டார்.



``யவனர்களால் தங்கவைக்கப்பட்டுள்ள வீரர்கள், அடிமைகள் ஆகியோரின் எண்ணிக் கையைவிட இருமடங்கு எண்ணிக்கையில் நம்மால் தங்கவைக்க முடியும்.” என்றான் கருங்கைவாணன்.

பேரரசர் அவனது கூற்றை உற்றுநோக்கினார்.

“மேலிமேட்டிலும் மங்களகிரியிலும் கடற்கொள்ளையை நடத்திக் கொண்டிருப் பவர்கள் யாரென நமக்குத் தெரியும். அவர்களை எப்படி அடக்குவதெனவும் நமக்குத் தெரியும்” என்று சற்றே ஆணவத்தோடு சொன்னான் கருங்கைவாணன்.

இன்று மணச்சடங்கின் முதல் நிகழ்வான ‘சிலம்புக் கழிதல்’ நிகழ்வு. பெண்ணின் வாழ்வில் சிலம்பு அணிதலும் சிலம்பு கழற்றலும் முதன்மையான நிகழ்வுகளாகும். குழந்தைமை நீங்கி

இளம்பருவத்துக்குள் நுழையும்போது பெண்ணுக்குச் சிலம்பை அணிவித்தல் பெருவிழாவாக நடத்தப்பெறுகிறது. அதன்பின், அவளுக்கு மணமாகும்போது சிலம்பு அவளின் கால்களில் இருந்து கழற்றப்பெறுகிறது.

மாடத்தில் அரசகுலப்பெண்கள் அமர்ந்திருந்தனர். எல்லோரும் பொற்சுவைக்காக காத்திருந்தனர். அவள் தனது அறையிலிருந்து புறப்பட விருப்பமின்றி இருந்தாள். `எல்லோரும் அரங்குக்கு வந்துவிட்டார்கள்' எனச் சொல்லி சுகமதிதான் அவளை வேகப்படுத்தினாள். அவளோ அதைப் பொருட்படுத்தவே இல்லை.

சிலம்பு அணிவிக்கப்பெற்ற முதல்நாள் நினைவுகளுக்குள் அவள் மனம் மூழ்கிக்கிடந்தது. தன் கால்களிலிருந்து எழும் ஓசையைக் கேட்க அவ்வளவு ஆசைப்பட்ட காலமது. ஓசைக்காகவே ஓடிப்பார்த்தது எத்தனை முறை. எத்தனை விதத்தில் கால்களை தரைத்தட்டி பழக்கினோம்! தூங்கும்போதும் ஆடிய கால்கள். தூரியில் தொங்கிக்கொண்டே ஆடிய கால்கள். ஓசை எழுப்பும் கால்கள் வாய்த்தன என எண்ணி மகிழ்ந்த நாள்கள்தான் எத்தனை, எத்தனை! பறவைகள் சிறகுக்குள் தலைநுழைத்து கோதிக்கொண்டே இருப்பதைப்போல, குனிந்து இருகைகளாலும் சிலம்பைத் தொட்டு அசைத்துக் கொண்டே இருந்தது ஒரு காலம்.

சிலம்பு அணிதலுக்குத் தந்தை நாள்குறித்தபோது, அண்ணன்தான் கேட்டான். “என்ன பரல் கொண்டு சிலம்பு செய்யப்போகிறீர்கள்?”

“நீயே சொல். உன் தங்கையின் காற்சிலம்புக்கு என்ன பரல் வேண்டுமென்று?”

“நாளை சொல்கிறேன்” என்று சொல்லிவிட்டுப் போனான்.

மறுநாள் இல்லத்தின் முற்றத்தில் அனைவரும் அமர்ந்திருக்கும்போது உள்ளே வந்தவன் தந்தையைப் பார்த்துக் கேட்டான், “தந்தையே, என்றென்றும் வெல்ல வேண்டும் என்பதற்காகத் தங்களின் மணிமுடியில் அரசர்கள் பதிக்க விரும்புவது எந்த வகை மணிக்கற்களை?”

“இளஞ்சிவப்பு நிற மாணிக்கக் கற்களைத் தங்களின் மணிமுடியில் பதித்தால் எப்போரிலும் வெல்லலாம் என்று சொல்வார்கள்.”

``அப்படியென்றால் இளஞ்சிவப்பு நிற மாணிக்கக்கல்லைக் கொண்டு என் தங்கையின் கால்களுக்குச் சிலம்பு செய்யுங்கள்.”

“அவள் எந்தப் போரை வெல்லப் போகிறாள் மகனே?”

“அவள் ஒரு பேரழகி. நாளை அவளுக்காகவே போர் நடக்கலாம் அல்லது அவளே ஒரு போரை நடத்தலாம். யார் அறிவார்?”

தந்தை அதிர்ந்துபோனார். தயக்கம் நீங்க நேரமானது. ‘நாம் வணிகர்குலம் என்பதை இவன் அடிக்கடி

மறந்துவிடுகிறான், அதுவும் தங்கை என்று வந்துவிட்டால், இவனது எண்ணம் கட்டுக்குள்ளே இருப்பதில்லை' என்று எண்ணியபடி, "எங்கிருந்து கிடைக்கும் அவ்வளவு கற்கள்? எனக் கேட்டார்.

"பெருவணிகர் நீங்கள். எங்கு கிடைக்குமென உங்களுக்குத் தெரியாதா?" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

தந்தை பெரும்குழப்பத்துக்கு உள்ளானார்.

வணிகர்கள் உருவாக்கிய கதைக்குள் இப்போது பெருவணிகர் ஒருவரே மாட்டிக்கொண்டார். அந்தக் குறிப்பிட்ட தீவு எதுவெனத் தந்தை அறிவார். அவரே புறப்பட்டுப் போனார்.

கப்பல் நீர்கிழித்துப் போனது. நில்லாது அசையும் அலைபோல, அதன் பின், ஓசை நில்லாது ஒலி எழுப்பிக்கொண்டே இருக்கும் இளஞ்சிவப்பு நிற மாணிக்கக்கல் கொண்ட சிலம்பு பொற்சுவையின் காற்சிலம்பானது.
பிற மூன்று இடங்களிலும் யவனர்கள் உருவாக்கியுள்ள கோட்டைகளில் எத்தனை வகையான பொறிகள் இருக்கின்றன என்று வரிசைப்படுத்தினார் சூல்கடல் முதுவன். அதுவரை அவ்விடங்களில் உள்ளவை மிகப் பாதுகாப்பான கோட்டைகள்; அவற்றினுள் வீரர்கள் உள்ளனர் என்று மட்டும்தான் தெரியும். ஆனால், யவனர்களின் வலிமை கோட்டையிலும் வீரர்களிடமும் மட்டுமில்லை; எண்ணற்ற பொறிகளை அவர்கள் உருவாக்கியுள்ளனர். அவைதான் அவர்களின் வலிமைக்கு அடிப்படை" என்று கூறியபடி பொறிகளைப் பட்டியலிட்டார்.

"பெரும் தோல்கயிற்றால் இழுத்துக் கட்டடப்பட்டு, கவட்டைபோல் இரும்புக் கம்பிகள் நீண்டபடி கோட்டைமதிலில் நிறுத்தப்பட்டுள்ள 'எந்திர வில்'. அதை இயக்க ஒருசிலர் போதும். அதிலிருந்து ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான அம்புகள் பாய்ந்து வெளிவரும். இரண்டு எந்திர வில்கள் இருந்தால் கோட்டையை எதிரிகள் நெருங்கவிடாமல் பார்த்துக்கொள்ளலாம்.

நூற்றுக்கணக்கான கற்களை உமிழும் 'கவண்பொறி.' இரும்பால் செய்யப்பட்ட சிற்றூசி உருளைகளை வீசி எறியும் 'கூடைப்பொறி.' கோட்டைமதிலை நெருங்கும் பகைவரின் உடலைக் கொத்தித்தூக்கும் 'தூண்டிற் பொறி.' அதையும் மீறி மேலேறுபவரை அகழியை நோக்கித் தள்ளும் 'கவைப் பொறி'" என்று வரிசையாகத் தாக்கவும் தடுக்கவும் யவனர்கள் பயன்படுத்தும் பொறிகளைப் பட்டியலிட்டுக் கொண்டே வந்தார். கடைசியாக மூன்று பொறிகளைப் பற்றிச் சொல்லியபோது எல்லோரும் வாயடைத்துப் போனார்கள்.
சிறிதுநேரம் எந்தப் பேச்சும் இல்லை.

பொற்சுவையின் வருகைக்காக எல்லோரும் அரங்கில் நெடுநேரமாக உட்கார்ந்திருந்தனர். அவளோ நினைவுகளில் மூழ்கியவளாக அறையைவிட்டு அகலாமல் இருந்தாள். அரச குடும்பத்தின் மூத்தபெண்மணிகள் காரணம் அறியாமல் திகைத்தனர். "இன்னும் சிறிதுநேரத்தில் பேரரசியார் வந்துவிடுவார். அதற்குள் அழைத்து வாருங்கள்" என்று ஆள் மாற்றி ஆள் அனுப்பிக் கொண்டே இருந்தனர்.

`ஒப்பனை இன்னும் முடியவில்லை' என்று இடைவிடாமல் மறுமொழி சொல்லிக்கொண்டே இருந்தாள் சுகமதி. பொழுதாகிக்கொண்டே இருந்தது. நிலைமையை எப்படிக் கையாள்வது என்று தெரியாமல் திணறிக்கொண்டிருந்த சுகமதிக்கு ஓர் எண்ணம் பிறந்தது.

பொற்சுவையை அழைத்துவர அனுப்பப்பட்ட பணிப்பெண்களிடம் பெரும் கூடையைக் கொடுத்துவிட்டாள். அவர்கள் அதை எடுத்துக் கொண்டு அரங்குக்கு வந்தனர். அரங்கில் இருந்த மற்றவர்கள் என்னவென்று புரியாமல் திகைத்தபோது, பணிப்பெண்கள் சொன்னார்கள். “சிலம்பு கழற்றும் விழாவுக்காகச் சாவகத்தில் இருந்து கொண்டு வரப்பட்டதாம்” என்று சொல்லியபடி, பெட்டியில் இருந்த பனை விசிறியை எடுத்து ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்தனர்.

‘பனைவிசிறியா!’ என்று சற்றே முகம் சுழித்தபடி வாங்கியவர்கள் அதை விரிக்கத் தொடங்கினர். விரியும் பனையோலை முழுவதும் அழகு நிரம்பிய ஓவியங்கள். அத்துணையும் இணையற்ற எழில்கொண்டவை. அனைவரின் கண்களும் ஓவியங்களை உற்றுப் பார்க்கும்போதுதான் தெரிந்தது, பனைவிசிறியின் மேல்முனையில் முத்துகள் பதிக்கப்பட்டிருந்தது. வாங்கியவர்கள் வாய்பிளந்து பார்த்துக்கொண்டிருந்தனர். பறவையின் சிறகுபோல விசிறியை விரிக்கும்போது ஓவியங்களின் அழகும் முத்துகளின் ஒளியும் மெய்ம்மறக்கச் செய்தன.

ஒருவர்கூட விசிறியை விசிறாமல் கண்ணாடியைப்போல் முகத்துக்கு நேராக வைத்துப் பார்த்துக்கொண்டிருக்கையில் ஒருத்தி மட்டும் சொன்னாள், “விசிறிக்கே இவ்வளவு வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளபோது, இளவரசிக்கு ஒப்பனை செய்ய பொழுதாகாமல் என்ன செய்யும்?”

நமது கலங்களைவிட யவனர்களின் நாவாய்கள் சிறப்புமிக்கவையா? இரண்டுக்குமான வேறுபாடுகள் என்ன?



இளவரசனின் வினாவுக்கு சூல்கடல் முதுவன் சொல்லப்போகும் விடை கப்பலின் இயங்கு பொறிகளைப் பற்றியதாக இருக்குமென நினைத்தனர். ஆனால், அவர் வேறு ஒரு விடையைச் சொன்னார்.

“கடற்பயணத்தின் வலிமை என்பது கப்பலோடு தொடர்புடையதல்ல; கணிதத்தோடு தொடர்புடையது. வானியலும் நிலவியலும் பற்றிய கணித அறிவே கடற்பயணத்தின் வெற்றி தோல்வியை முடிவுசெய்கிறது.”
``இவ்விரண்டிலும் நமது அறிவு வலிமைமிக்கதுதானே.”

முசுகுந்தரின் கூற்றுக்கு, முதுவன் மறுமொழி சொன்னார், ``நமது வலிமையை யவனர்களோடு ஒப்பிட்டால் யார் வலியவர், யார் வலிமை குற்றியவர் என்பதைப் பற்றிப் பேச முடியும். ஆனால், கடல் பயணத்தில் வலிமையை ஒப்பிடவேண்டியது பிற கடலாடிகளோடு அல்ல; எழும் அலைகளுடனும் வீசும் காற்றுடனும் இழுத்துச் செல்லும் நீரோட்டங்களுடனும்தான். அவற்றோடு ஒப்பிட என்ன இருக்கிறது நம்மிடம்?”
இந்த மறுமொழியின் தொடர்ச்சியை அனைவரும் திசைவேழரிடம் எதிர்பார்த்தனர். அவரோ அமைதியாக உரையாடலைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

“கடலையும் காலத்தையும் புரிந்துகொள்வதில் நமக்கும் யவனர்களுக்குமே வேறுபாடுகள் உள்ளன. அவற்றைப்பற்றி பேசத்தான் நேற்றைக்கு முன்தினம் திசைவேழரைப் போய்ப் பார்த்தேன். நாம், ஆண்டை 12 மாதங்களாகப் பிரிக்கிறோம்; யவனர்களோ 10 மாதங்களாகப் பிரிக்கின்றனர். ஆனால், நாள்களின் எண்ணிக்கையில் பெரிய வேறுபாடு இல்லை.

அவர்கள் ஒரு நாளை 24 மணிகளாகப் பிரிக்கின்றனர். நாமோ 60 நாழிகைகளாகப் பிரிக்கிறோம். நேரத்தை அவர்களைவிட மிகத்துல்லியமாக நம்மால் கணிக்க முடிகிறது. ஆனால், நிலவியலைப் பொருத்தவரை அப்படிச் சொல்ல முடியுமா என்று தெரியவில்லை. அவர்கள் நிலப்பரப்பை ‘டிகிரி’ கணக்கில் 360 பாகங்களாகப் பிரிக்கின்றனர். அது நமது முறையைவிடத் துல்லியமான குறிப்புகளை அவர்களுக்குத் தருகிறது. இருவரும் இருவேறு விதத்தில் காலத்தையும் திசையையும் அறிகிறோம். ஆனாலும், கடலெனும் பேரியக்கத்தைக் கண்டு அஞ்சி நடுங்கியபடி ஓரத்தில் பதுங்கிக்கடக்கும் சிற்றெலிகள்தான் நமது கப்பல்களும் யவன நாவாய்களும்.

இவ்வணிகத்தில் நாம் கோலோச்ச வேண்டும் என்றால் அதற்கு அடிப்படை `தங்கல்’ முகாம்களில் கோட்டைகள் அமைப்பதும் அங்கு வீரர்களை இறக்குவதுமல்ல, காலத்தையும் இடத்தையும் பற்றிய அறிவில் அடுத்தக்கட்ட வளர்ச்சியை அடைவதால் மட்டுமே நிகழும்.



சுகமதி எவ்வளவு சொல்லியும் பொற்சுவை புறப்படுவதாக இல்லை.
உண்மையில் பொற்சுவையும் தனக்குள் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறாள். ஆனால், மனம் கேட்க மறுத்துக்கொண்டே இருந்தது. மனம் உண்மையைப் பற்றி நிற்கும் விலங்கு. அதைச் சூழலுக்குப் பழக்குதல் எளிதல்ல.

சிலம்பிலிருந்து தெறிக்கும் மாணிக்கப் பரல்களின் ஓசையைக் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட பொற்சுவை, முதன்முறையாகக் காதலனால் பாதம் தொடப்பட்ட கணத்தில்தான் அமைதி அடைந்த சிலம்பின் பரல்களை ரசித்துப் பார்த்தாள்.

அந்தப்பார்வையில் இருந்து விலக முடியாமல் சிலம்பைத் தொட்டுப் பார்த்தபடி அவன் கேட்டான், “பெண்பிள்ளைகளுக்கு ஏன் சிலம்பு அணிவிக்கிறார்கள் தெரியுமா?”

அவனின் சிறுதொடுதல்கள் சிலம்பின் மாயவோசையை உள்ளுக்குள் கடத்திக் கொண்டிருந்தன. அவள் விடையின்றி நின்றாள்.

அவன் சொன்னான், “பெண் தன் காதலனின் அழைப்பை ஏற்று ஊர் உறங்கும் வேளையில் ஓசையின்றி அவனோடு சென்றுவிடக்கூடாது. அதற்காகத்தான் அவள் எங்கு சென்றாலும் ஓசையோடு செல்லும் ஏற்பாட்டைச் செய்தார்கள்.”

அவனால் ஏற்பட்ட மயக்கத்தை அவனின் மறுமொழியே தெளிவடையச் செய்தது.

அவன் மேலும் சொன்னான், “அதனால்தான் இளம்பருவத்தில் சிலம்பு அணிதலும் திருமணத்துக்கு முன்சடங்காக சிலம்பைக் கழற்றலும் நடக்கிறது. சிலம்பின் வேலை கால்களுக்கு அழகூட்டுவதோ, மனதை மகிழ்விப்பதோ அல்ல; காதுகளுக்கு ஓசையைக் கடத்துவது மட்டுமே. ஓசை தேவையில்லாதபோது அதைக் கழற்றிவிடுகிறார்கள்.”

அவன் சொன்னதைக் கேட்டபோது, `அன்றே அதைக் கழற்றிவிட வேண்டும்' என்று தோன்றியது. ஆனால், அண்ணனின் மேல் இருந்த வாஞ்சையால் அது இவ்வளவு காலம் காலிலே இருந்தது. `இப்போதுதான் அண்ணனும் இல்லை; என்னவனோடு நானும் இல்லை. இச்சிலம்பு மட்டும் ஏன் இருக்க வேண்டும்?'

எண்ணம் தோன்றிய கணத்தில் சிலம்பைக் கழற்ற அரங்கு நோக்கி விரைந்தாள் பொற்சுவை.


சூல்கடல் முதுவன் வரைபடத்தை வைத்துச் சொன்னான். குமரிமுனை திரும்பியப்பின் பாப்ரிகோன் போவது வரை எந்த இடையூறும் இல்லை. நேரடியான வடக்கு நோக்கிய பயணம் அது. கரையின் பார்வையிலிருந்து விலகாமல் இரவு பகலாகப் பயணத்தைத் தொடரலாம். சற்றே திசைமாறி ஆழ்கடலுக்குள் கப்பல்கள் போய்விட்டாலும் மறுநாள் காலை கதிரவனைப் பார்த்துக் கலத்தைச் செலுத்தினால் கரையோரம் வந்துவிடலாம்.

இப்பயணத்தின் பெரும் சவால் நிறைந்த பகுதியே பாப்ரிகோனிலிருந்து பெர்னிகே வரையிலான பகுதிதான். மேற்கு நோக்கி வளைந்து செல்லும் நெடும்பயணம். கரையின் பார்வையைத் தவறவிட்டோம் என்றால், நாம் பெரும்சிக்கலில் மாட்டிக்கொள்வோம். இரவில் விண்மீன்கள் எல்லா காலங்களிலும் ஒரே இடத்தில் இருப்பதில்லை. எல்லா விண்மீன்களும் ஆண்டு முழுவதும் தெரிவதும் இல்லை. அவற்றை நம்பமுடியாது. எனவே, பகலில் மட்டுமே பயணிக்க முடியும். அதுவும் தெளிவான

வானியல் காலம்தான் பயணத்துக்குப் பாதுகாப்பானது. சற்றே திசைமாறினாலும், நாம் எந்தத் திசைவழி மீள வேண்டும் என்பது பற்றி யாருக்கும் தெளிவான புரிதல் இல்லை. யவனக் நாவாய்கள் பலவும் நம்முடைய கப்பல்கள் பலவும் மறைந்து கொண்டேதான் இருக்கின்றன.

பாப்ரிகோன் முதல் பெர்னிகே வரையிலான பகுதிக்குத் துல்லியமான திசை அறிதலுக்கான வடிவம் ஒன்றை நாம் கண்டடைந்தால் கடற்பயணத்தின் பெரும்சாதனையாக அது அமையும்” வரைபடத்தைக் காட்டி நிலைமையை முழுமையாக விளக்கினார் சூல்கடல் முதுவன்.

அதன்பின், எல்லோரும் திசைவேழரைப் பார்த்தனர். பார்வைக்கான பொருள் அவருக்குப் புரிந்தது. ஆனால், அவர் எதுவும் பேசாமலே வரைபடத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்.



``பாப்ரிகோன் முதல் பெர்னிகே வரையிலான பயணத்தில் கடைசியாகக் கப்பல்கள் எப்போது மறைந்தன?”

மூன்று மாதங்களுக்கு முன்பு மூன்று நாவாய் களும் இரு கப்பல்களும் மறைந்துவிட்டன.

சற்றே சிந்தித்தபடி இருந்தவர் சொன்னார். “மூன்று மாதங்களுக்கு முன்பு மேலைக்காற்று உச்சங்கொண்டிருந்த காலம். அப்போது தவறிய கப்பல்கள் நடுகடல் நோக்கிப் போகமுடியாது. அதற்கு எதிர்த்திசையில்தான் காற்று தள்ளிக்கொண்டு வந்திருக்க வேண்டும். அவர்கள் பாதுகாப்பாகக் கரை ஒதுங்கியிருப்பார்கள்.”

“அப்படி எதுவும் நிகழ்வில்லையே!”

“அப்படி என்றால், நீ வைத்துள்ள வரைபடம் தவறு. இதில் உள்ள திசை தவறு.”

சூல்கடல் முதுவன் மறுமொழியின்றி நின்றார்.

“தவறான ஒன்றை வைத்துக்கொண்டு சரியானதற்கான வழியைக் கண்டறிய முடியாது.”

“அப்படியென்றால் சரியானதென்று எதைச் சொல்கிறீர்கள்?”

“வரைந்த கோடுகளை அடிப்படையாக் கொண்டு திசையறிய முடியாது. நாள்மீன்களையும் கோள்மீன்களையும் கொண்டு திசையறியலாம். அதையும் அறியமுடியாமல் செய்யும் ஆற்றல் இயற்கைக்கு உண்டு. எனவே, இவற்றைக் கடந்த வழிமுறைகள் உண்டா என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும்.”

“அது எப்படிச் சாத்தியமாகும்?”

“ஏன் ஆகாது. கதிரவனின் நிழலை மட்டுமா நம்பி பொழுதளக்கிறோம். நீர் வட்டிகளைக் கொண்டும் மணற்குடுவைகளைக் கொண்டும் பொழுதளக்கிறோம் அல்லவா? சின்னஞ்சிறு கருவியைக்கொண்டு கதிரவன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பொழுதை நம்மால் அளக்க முடிகிறது. பகலையும் இரவையும் நமது கணக்குகளுக்குள் அடக்க முடிகிறது. அதேபோலக் கதிரவனையும் விண்மீன்களையும் பார்க்க முடியாவிட்டாலும் திசையைக் கண்டறியும் வழிமுறை ஒன்றை நாம் கண்டறிய வேண்டும். அதுதான் இதற்கான தீர்வைத் தரும்.”

“அப்படி ஒன்றை நம்மால் உருவாக்க முடியுமா?”




“நம்மால் உருவாக்க முடியுமா என்று எனக்குத் தெரியாது. ஆனால், ஒன்றை உறுதியாகச் சொல்ல முடியும். இயற்கை ஏற்கெனவே உருவாக்கி வைத்திருக்கும். நாம் அவற்றைக் கண்டறிய வேண்டும்.”

“எப்படி?”

“அதுதான் அதன் ரகசியம்.”

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-32

கபிலரின் மீது, வண்டுகடி மரத்தின் பட்டையை அறைத்து மூன்று நாள் பூசினர். உடலின் எரிச்சல் சற்றே அதிகமாக இருந்தது. ``இப்படித் தொடர்ந்து பூசினால், கைகால்களில் உள்ள முடிகள் கருகிவிடப்போகின்றன” என்றார் கபிலர்.

உதிரனும் மற்ற இரு பெரியவர்களும் தேய்த்து விட்டுக்கொண்டு இருந்தனர். எதிரில் இருந்த கல்லில் உட்கார்ந்தபடி தேக்கன் சொன்னான், “உங்களின் கவலை அப்படி இருக்கிறது; எனது கவலையோ வேறு மாதிரி இருக்கிறது”

“என்ன அது?”

“இப்படித் தொடர்ந்து தேய்ப்பதன் மூலம் முடிகள் சடைபிடித்து வளர்ந்துவிட்டால் என்ன செய்வது?”

தேய்த்துக்கொண்டிருந்த பெரியவர்களுக்கு சிரிப்புத் தாங்கமுடியவில்லை. கபிலருக்கோ சற்றே அதிர்ச்சியாக இருந்தது. “ஏன்? இதற்கு முன்னால் தேய்த்து விடப்பட்டவர்களுக்கு அவ்வாறு வளர்ந்ததா?”

“அதுதானே தெரியவில்லை. நாங்கள் கேள்விப்பட்டவரை வெளியில் இருந்து வந்த யாரும் பறம்பில் காலவரையின்றித் தங்கவில்லை. எனவே, மற்றவர்களுக்கு இதனைத் தேய்த்துவிடும் பேச்சே எழவில்லை.”

“நான்தான் சோதனை உயிரியா?”

“உங்களை ஒருபோதும் நாங்கள் சோதிக்க மாட்டோம். உங்களுக்காக எல்லாச் சோதனை களையும் நாங்கள் ஏற்போம்” என்று சொல்லியபடி உதிரனின் தோளைத் தொட்டான் தேக்கன்.

கபிலர் அவனைப் பார்த்தார். உதிரன் இருவரையும் பார்த்தபடி நின்றான்.

தேக்கன் சொன்னான், “நான்கு முறை நான் காடறிய பிள்ளைகளை அழைத்துப்போய் வந்துவிட்டேன். காட்டின் எல்லாச் சவால்களையும் எதிர்கொண்டு மீளத்தான் அப்பயணத்தை மேற்கொள்கிறோம். ஆனால், அப்பொழுதுகூட வண்டுகடி மரத்தின் அடியில் யாரையும் அனுப்பியதில்லை. அதன் வாடை கணநேரத்தில் மயக்கத்தை ஏற்படுத்தி விடக்கூடியது. அடுத்தவனை அனுப்பி, அவனைத் தூக்கிவருவதற்குள் இவனும் மயங்கிவிடுவான். இப்படிப் போகிறவர்கள் எல்லாம் மாட்டிக்கொள்ளும் வாய்ப்பு அதில் அதிகம். அது நம்மை எளிதில் ஏமாற்றி, உயிர்கொல்லும் மரம். அந்த மரத்தின் பட்டையை ஒருவன் துணிந்துபோய் உரித்தான் என்பதும், அதனைப் பாரி அனுமதித்தான் என்பதும் உங்களுக்காகத்தான். உங்களின்பொருட்டு நாங்கள் எச்சோதனையையும் எதிர்கொள்வோம்.” சொல்லும்போது, தேக்கனின் குரலில் இருந்த உறுதி கபிலரை உலுக்கியது.




தேய்த்த மருந்தோடு குறிப்பிட்ட நேரம் வரை அமர்ந்திருந்த கபிலர், பின்னர் குளித்துவிட்டு வந்தார். தேக்கனும் அவரும் பொழுதெல்லாம் பேசினர். தேக்கனைப்பற்றியும் காடறிதலைப் பற்றியும் கபிலருக்குத் தெரிந்துகொள்ள வேண்டியவை நிறைய இருந்தன. எல்லாவற்றையும் பேசிக் கழித்தார்.

ஒரு வாரம் கழிந்தது. மூன்று குழுக்கள் சென்று, இருபது பேரெலிகளைப் பிடித்துவிட்டன. இன்னும் இரண்டு தேவையாக இருந்தது. தோழர்களோடு உதிரன் புறப்பட்டபோது கபிலரும் புறப்பட்டார். “இத்தனை நாள் நான் ஓய்வில்தானே இருந்தேன்” எனச் சொல்லிப் புறப்பட்டார். அவர் புறப்பட்டால் பாரியும் வந்துவிடுவான் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், கபிலர் வராமல் இருந்த நாட்களிலும் பாரி வேட்டைக்கு வந்தான். அதுதான் ஏன் என்று புரியாமல் வீரர்கள் திகைத்தனர். பறம்புமலையின் மேற்றிசைக் குன்றுகளிலே அவர்கள் அதிகம் அலைந்து திரிந்தனர்.

வழக்கம்போல் குழு புறப்பட்டது. வடகிழக்குத்திசை நோக்கிச் செல்லலாம் என்று அவர்கள் முடிவுசெய்தபோது, அதற்கு நேரெதிராக தென்மேற்குத்திசை நோக்கிப் போகுமாறு பாரி சொன்னான். உதிரனுக்கும் மற்ற வீரர்களுக்கும் அதற்கான காரணம் புரியவில்லை. அவர்களை அனுப்பிவைத்த தேக்கனால் உய்த்தறிய முடிந்தது.

அவர்கள் எவ்வியூரின் தென்மேற்குத் திசையில் போனார்கள். ‘இப்பகுதியில் புலிகள் மிக அதிகம். அவற்றிடம் தப்பித்தான் பேரெலிகள் உயிர்வாழவேண்டும். பிற பகுதியோடு ஒப்பிட்டால், மிகமிகக் குறைவாகத்தான் இப்பகுதியில் பேரெலிகள் இருக்க வாய்ப்புண்டு. பின் ஏன் பாரி இத்திசையில் போகச் சொன்னான்?’ என்று எண்ணியபடியே நடந்தான் உதிரன். பாறை இடுக்குகளைக் கிண்டிக் கிளறியபடி போய்க்கொண்டிருந்தான். பேரெலியின் எச்சங்கள் எவையும் தென்படவில்லை. நடுப்பகல் வரை அவர்களின் கண்களுக்கு எதுவும் தட்டுப்படவில்லை.



இன்னொரு நாள் வரவேண்டியிருக்கும்போல என்று உதிரனுக்குத் தோன்றியது. நெடும்பொழுது கடந்தது. வீரர்கள் இருகூறாகப் பிரியலாம் என்று கருத்துச் சொன்னார்கள். ‘`சரி’’யென்றான் பாரி.

பிரிந்தவர்கள் நாலு எட்டு வைப்பதற்குள், மழை பொழியத் தொடங்கியது. சடசடவென இறங்கிய கணத்திலேயே அதன் வேகம் எதிர்கொள்ள முடியாததாக இருந்தது. அனைவரும் அருகிலிருந்த மலைப்பொடவிற்குள் போய் ஒடுங்கினர்.

மேனியில் இருந்த நீர்த்துளிகளை உதறியபடி, “மழைத்துளிகள் ஒவ்வொன்றும் வேப்பமுத்து அளவு இருக்கிறது” என்றார் கபிலர்.

“கார்காலத்தின் முதுநாள் தொடங்கப் போகிறது. இனி, அதன் வேகம் இணையற்றதாகத்தான் இருக்கும்” என்றான் பாரி.

மழைக்கான பருவத்தில்தான் மழை பெய்கிறது. ஆனால், அதன் பொழிவு வெவ்வேறு தன்மைகளைக் கொண்டது. தொடக்க நாட்களில் பெய்யும் மழை என்பது மேகம் உதிர்க்கும் தூசி போன்றது. காற்றில் அலைஅலையாய் இறங்குவதும், நிலம் ஈரமாகுமுன் மறைவதும், காற்றுக்குள்ளே கரைந்துபோகும் கன அளவு கொண்டதுமாக இருக்கும்.

தூசிப் பருவம் முடிந்து, தும்மல் பருவம் தொடங்கும். எதிர்பாராத நேரத்தில் சட்டென அடித்துவிட்டுப் போய்விடும். போய்விட்டது என நினைக்கும்போது திரும்பி அடிக்கும். நம்மால் கணிக்க முடியாத ஒரு விளையாட்டை விளையாடும். அப்போது பெய்யும் மழையில் நீர்த்துளிகள் நீள்வடிவிலே இறங்கிவரும்.

மூன்றாம் கட்டம், முகில்கள் கூடல்கொள்ளும் பருவம். இதுநாள்வரை நீரை உதிர்த்துக் கொண்டிருந்த மேகங்கள் இப்போது கூடலில் மயங்கி உருக ஆரம்பிக்கும். இணைமேகங்கள் சூழ வலம்வந்து வானில் இடைவிடாமல்கூட, காதல் கசிந்து காட்டாறாய் உருகி ஓடும். மழைத்துளிகள் வேப்பமுத்து அளவினைக் கொண்டிருக்கும்.

நான்காம் பருவத்தில் மோகம்கொண்ட முகில்கள் தரைவந்து தங்கும். நிலம் வானுக்குள் நுழையும். மரத்தின் உச்சிக்கிளை மேகத்தின் வெளிப்புறம் நீண்டிருக்க, வேரில் மழைநீர் பாய்ந்தோடிக்கொண்டிருக்கும். அது இயற்கையின் அதிசய காலம். வானுக்கும் மண்ணுக்கும் இடையில் இருக்கும் ஏணி விலகிக்கொள்ள, மேகக்கூட்டம் மரம், செடி, கொடிகளுக்கிடையே மீனைப்போல நீந்திப்போகும். ஒருவரை ஒருவர் பிடித்தும் விலகியும் கரைந்தும் உருகியும் காதல்கொள்ளும் காலம். இதுவே கார்காலத்தின் முதுநிலைப்பருவம்.

இப்போது அது தொடங்கியிருக்கிறது. இறங்கிய மழை, இரவு வரை நிற்கவில்லை. குகையைவிட்டு வெளிவரும் எண்ணமே பிறக்கவில்லை. முன்னிரவில் குறையத் தொடங்கிய மழை, நள்ளிரவில்தான் நின்றது. வீரர்கள் பின்னிரவானதும் இருவேறு குழுக்களாகப் பிரிந்து போகலாம் என்று முடிவுசெய்தார்கள். நாம் எந்தக் குழுவோடு போவது என்று கபிலர் சிந்தித்துக் கொண்டிருக்கையில், பாரி அவரை அழைத்தபடி குகையைவிட்டு வெளியேறினான்.

“அவர்கள் பேரெலியைப் பிடித்து வந்து சேரட்டும். நாம் வேறொரு திசை வழியே போவோம்” என்றான்.

பாரியின் இந்த முடிவை எதிர்பார்க்காத கபிலர் சற்றே திகைத்தபடி பின்னால் நடக்கத் தொடங்கினார். மேகத்தைக் கொட்டித்தீர்த்த வானம் விண்மீன்களால் பூத்துக்கிடந்தது. தேய்நிலவு கொடிபோல் மெலிந்திருந்தது. மெல்லிய நீலநிற வெளிச்சம் தரையில் பரவிக்கிடக்க, கபிலரை அழைத்துக்கொண்டு பாரி மலைமுகட்டை நோக்கி நடந்தான். எங்கும் நீரோடும் ஓசை கேட்டுக்கொண்டே இருந்தது. “வண்டுகடி மரப்பட்டையைத் தேய்த்ததால்தான் உங்களைத் துணிந்து அழைத்துச் செல்ல முடிகிறது’’ என்று சொல்லியபடி, பாறையின் மீதேறி நின்று பார்த்தான். ஒளிரும் எண்ணிலடங்கா விண்மீன்களைக்கொண்டு வானம் வித்தை காட்டிக் கொண்டிருந்தது. அவர்களுக்கு நேரெதிரில் வடிவுகொண்டு வளைந்திருந்தது கார்த்திகை விண்மீன் கூட்டம்.

விண்மீன் பார்த்துத் திசை அறிந்தபடி முன்நடந்தான் பாரி. தொடர்ந்து வந்த கபிலரிடம் கேட்டான், “அவ்விண்மீன் கூட்டத்தைக் கவனித்தீர்களா?”

“எதைக் கேட்கிறாய்? கார்த்திகைக் கூட்டத்தையா?”

“ஆம்.”

“பார்த்தேனே” என்றார்.

பாரி வேறெதையும் கேட்காமல், அமைதியாக நடந்து சென்றான்.


கபிலரும் பாரியைத் தொடர்ந்து நடந்து வந்துகொண்டிருந்தார். அவருக்குப் பாரியின் கேள்வி உறுத்திக்கொண்டிருந்தது. ‘இதை ஏன் கேட்டான் பாரி? கார்த்திகைக் கூட்டம் பற்றி நமக்கு என்னவெல்லாம் தெரியும் எனப் பேசிப்பார்க்க நினைத்தானோ?’ என்று தோன்றியது. பெருங்கணியர் திசைவேழரிடம் உட்கார்ந்து நாள்கணக்கில் கார்த்திகை விண்மீன் கூட்டத்தைப் பற்றிப் பேசியது நினைவுக்குள்ளிருந்து அலைஅலையாய் மேலெழுந்து வந்தது. கபிலர் பாரியை நோக்கிக் கேட்டார், “கார்த்திகை விண்மீன் கூட்டத்தைப் பற்றி எதையோ கேட்கவந்து நிறுத்திக்கொண்டாயே, ஏன்?”

கார்த்திகை விண்மீன் கூட்டத்தைப் பற்றி பாரி கேட்கும் விளக்கத்துக்கு விடை சொல்லும் ஆர்வத்திலிருந்துதான் கபிலரின் கேள்வி பிறந்தது. இவ்வழகிய விண்மீன் கூட்டம் கபிலரை மிகவும் கவர்ந்தது. ஒவ்வொரு மாதத்திலும் அதன் நகர்வைப் பற்றி மிக நுட்பமாகத் தெரிந்துவைத்திருந்தார். அதனையெல்லாம் பாரியிடம் பகிர்ந்துகொள்ளும் ஆர்வமே அவரை உந்தித்தள்ளியது.

முன்னால் நடந்தபடி இருந்த பாரி கேட்டான், “அவ்விண்மீன் கூட்டத்திற்குக் கார்த்திகை என்று பெயர் சூட்டியது யார் தெரியுமா?”

கேள்வி கபிலரை திடுக்கிடச் செய்தது. நடுங்கி நின்றார் கபிலர். தாக்குதலைக்கடந்து வார்த்தை மேலெழவில்லை. நேரங்கழித்தே சொல் வெளிவந்தது... “என்ன கேட்டாய்?”

“அவ்விண்மீன் கூட்டத்திற்குப் பெயர் சூட்டியது யாரெனக் கேட்டேன்?”



‘பதில் இருக்கட்டும்; இப்படியொரு கேள்வியே ஒருபோதும் எனக்குத் தோன்றவில்லையே? திசைவேழருக்குக்கூட இக்கேள்வி தோன்றியிருக்காது என்றே நினைக்கிறேன். விண்மீன்கள் பற்றி

எண்ணற்ற கேள்விகள் கேட்டுள்ளேன். உன் ஐயங்கள் தீரவே தீராதா என்று திசைவேழர் பலமுறை சலித்துக்கொண்டுள்ளார். ஆனாலும், இப்படியொரு கேள்வி ஏன் இதுவரை எனக்குத் தோன்றவில்லை? திசைவேழருக்கு இதுபற்றித் தெரிந்திருந்தால் என்னிடம் அவர் அதைப் பகிர்ந்துகொண்டிருப்பார். அவருக்கும் தெரியாதென்றே நினைக்கிறேன்...' - எண்ணங்கள் ஓடியபடி இருக்க, பேச வார்த்தையின்றித் தடுமாறினார் கபிலர்.

“எதுவும் பேசாமல் வருகிறீர்களே... ஏன்?”

“உனது கேள்வி ஆதிகாலத்தைப் பற்றியதாக இருக்கிறது. மனிதன் பொருளின்மீது மொழியைப் பொருத்தத் தொடங்கிய காலத்தைப் பற்றி நீ கேள்வி கேட்கிறாய். நாங்கள் தற்காலத்துக்காரர்கள். மனிதர்களை ஆசானாக ஏற்று, கற்று வளர்ந்தவர்கள். இயற்கையை இரண்டாம் நிலைக்குக் கொண்டு சென்றுவிட்டோம். எங்களது கற்றல்முறை ஆழமற்றதெனத் தெரிகிறது.” பதிலுக்காகச் சொற்களைத் தேடினார் கபிலர்.
கேட்டபடி நடந்துகொண்டிருந்த பாரி, “பெரும்புலவர் விடைசொல்லாமல், விளக்கம் சொல்வது ஏன்?”

“விடை சொல்லாவிட்டால் விட்டுவிடும் கேள்வியை நீ கேட்கவில்லை. நான் விடை சொல்லமுடியாததற்கான சரியான காரணத்தை முன்வைக்க முடியவில்லை என்றால், உனது கேள்வி எனது அறிதலின் அச்சையே நொறுக்கிவிடக்கூடியது. அதனால்தான் எனக்குள் இப்பதற்றம் உருவாகிவிட்டது என்று நினைக்கிறேன்.”



மழை நின்ற நள்ளிரவில், நீரோடைகளின் சலசலப்பில், மயக்கும் இளநீல ஒளியில் நிலம் பூத்துக்கிடக்க, மின்னிச்சிரிக்கும் விண்மீன் கூட்டத்தைப் பார்த்தபடி பாரி சொன்னான், “கார்த்திகை விண்மீன் கூட்டத்தைக் கண்டறிந்து பெயர் சூட்டியவன் முருகன்.”
எதிர்பாராத பதிலாக இருந்தது. நடையை நிறுத்தினார் கபிலர். “முருகன்தான் இவ்விண்மீன் கூட்டத்திற்குப் பெயர் சூட்டினான் என்று எப்படிச் சொல்கிறாய்?”

சற்றே சிந்தித்த பாரி, “நீங்கள் பச்சை மலைத்தொடரில் ஏறத்தொடங்கிய முதல்நாளில் நாக்கறுத்தான் புற்களைக் கடக்கும்போது நீலன் உங்களுக்கு முருகனின் கதையைச் சொன்னான் அல்லவா?”

“ஆம்.”

“அவன் கதையை எத்துடன் முடித்தான்?”

“அது எனக்குத் தெரியாது. சந்தனவேங்கையின்மீது பரண் அமைத்து, முருகனையும் வள்ளியையும் அதில் தங்கவைத்த எவ்வி, அதன்பின் குடில் திரும்பி பூண்டுப்பானத்தைக் கலக்கிக் கொடுத்து யாரையும் அப்பக்கம் போகவிடாமல் செய்தான் என்பது வரை எனக்கு நினைவிருந்தது. தனை மயக்கி மூலிகையைக் கொடுத்ததால், அதன் பிறகு அவன் சொன்ன கதைகள் எவையும் எனக்கு நினைவில்லை.”

நேரெதிரே கார்த்திகை விண்மீன் ஒளிவீசிக்கொண்டிருந்தது. அதனைப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்த பாரி, மீதிக்கதையைச் சொல்லத் தொடங்கினான்.

பச்சை மலையில், யானைப் பள்ளத்தின் தென்திசை முகட்டில் தனித்திருந்த வேங்கை மரத்தின்மீது சந்தனக்கட்டை கொண்டு சிலாக்கொடியால் பிணைத்துக் கட்டிய பரண்விட்டு, மறுபகல் இறங்கினர் முருகனும் வள்ளியும்.



ஆணும் பெண்ணும் தங்களை அறியத்தொடங்கிய தலைநாள் இரவது. இவ்விரவின் குணம் பல பருவங்களுக்கும் நீடிக்கும். இயற்கையின் எல்லா மாற்றங்களின் வழியேயும் தங்கள் இணையின் மீதான காதலை நெய்யத்துடிக்கும் உயிராற்றல் பெருகியபடி இருக்கும். காதல் அறியும்பொழுதுதான் அடுத்த இடத்துக்கு அழைத்துச்செல்லும்; அறியாதவன் அதுவே காதல் என்று நின்றுவிடுவான்.

காதலின் அழைப்பை ஏற்று இருவரும் செல்லத் தொடங்கினர். கார்காலத்தின் தூசிப்பருவம் தொடங்கியது. காற்றில் மெல்லிய சாரல் மிதந்துவந்து வள்ளியின் முகத்தில் நீர்பூசிச் சென்றது. அவள் கைகொண்டு அதனைத் துடைக்காமல் நடந்தாள். முருகன் முன்னால் சென்றுகொண்டிருந்தான்.

மேகத்தின் தூசி இருவர் மீதும் விடாமல் படர்ந்தது. இக்கானகத்தில் எம்மலர்களுடனும் ஒப்பிட முடியாத பேரழகுகொண்டு மிளிர்ந்தது வள்ளியின் முகம். பார்வையை விலக்கி நடக்க முடியாது என்று முருகனுக்குத் தோன்றியது. தனது விரல்கொண்டு அவளது முகத்தைத் துடைக்க எண்ணினான். அப்போது வள்ளியின் கைகள் முருகனின் முகத்தைத் துடைத்துக்கொண்டிருந்தன.

முருகனின் முகத்தில் கைதொட்ட கணத்தில் வள்ளியின் முகத்தில் இருந்த நீர்த்துளிகள் மறைந்தன. முருகனின் கை அவளது கன்னம் தொடும்போது நீர்த்துளி அற்று இருந்தது வள்ளியின் முகம். “எனது விரல் தொடுவதற்குள் நீர்த்துளிகள் எப்படி மறைந்தன?” எனக் கேட்டான் முருகன்.

“என் விரல்கள் உனது முகம் தொட்டதனால்.”

முருகன் திகைத்து நின்றான்.

வள்ளி சொன்னாள், “தொடுதலில் கடந்துவரும் ஆற்றல் என்னையே உருக்குகிறது. சின்ன நீர்த்துளிகள் என்ன ஆகும்?”

‘தொடுதலின் மூலம்தான் ஆணின் ஆற்றல் கடக்கிறது. ஆனால், தொடாமலே பெண் கடத்தும் ஆற்றலுக்கு இணை சொல்ல என்ன இருக்கிறது’ என்று எண்ணியபடி, முருகன் முன்னே நடந்துகொண்டிருந்தான்.

அவள் பேச்சேதுமின்றிப் பின்தொடர்ந்தாள். தூசிக்காற்று எதிர்வீசியபடி இருந்தது.

வள்ளி கேட்டாள், “வேங்கை மரத்தின் சந்தனப்பரண்விட்டு ஏன் அகல்கிறோம்?

“அது எவ்வி உருவாக்கியது. நமக்கான இடத்தை நம் கனவால் உருவாக்க வேண்டும்.”

வள்ளிக்கும் ‘சரி’தான் என்று தோன்றியது.

“சென்ற முறை ஏழிலைப்பாலை நோக்கி நான் அழைத்துச் சென்றேன். இம்முறை நீ அழைத்துச் செல்” என்றான் முருகன்.

அவனது சொல்சுமந்து முன்நடந்தாள் வள்ளி. இணையற்ற இடம்நோக்கி அழைத்துச் செல்கிறாள் என்பதை, பூரிக்கும் அவளுடைய முகம் சொன்னது.

பின்நடந்து வந்த முருகனின் மயக்கம் மேலும் அதிகமானது.

“மானிலும் மயிலிலும் மட்டுமே ஆண் அழகு” என்றான் முருகன்.

“நானும் அப்படித்தான் நம்பினேன்... உன்னைக் காணும் வரை” என்றாள் வள்ளி.

இருவரும் வெட்கம் கலைந்து சிரித்தனர். தூசிக்காற்று நின்று பொழிந்தது.

முன்சென்ற வள்ளியின் கண்களுக்குச் சற்றுத் தொலைவில், விளைந்த பயிர் தெரிந்தது. அதனருகே போனாள். யானை படுத்துறங்கும் அளவு நிலத்தில் அப்பயிர்கள் விளைந்திருந்தன. அந்தக் கதிரை கைகளால் உருவியபடியே வள்ளி சொன்னாள், “இது அரிதான நெற்பயிர். அன்னமழகியரிசி என்று இதனைச் சொல்வோம். மற்ற பயிர்களெல்லாம் பசியைப் போக்கும். ஆனால், இதுமட்டுந்தான் பசி நீக்குவதோடு, உடலை மலரவைத்துச் சுகம் தரும். மனம்தான் பெரும்பாலும் மகிழ்வை உணர்கிறது. உடல் தேவையை மட்டுமே உணர்கிறது. ஆனால் இப்பயிர்தான் உடலை மகிழவும் வைக்கும்.” சொல்லிக்கொண்டே, கைப்பிடி அளவு கதிர் பறித்து, உள்ளங்கையில் வைத்துக் கசக்கி, அதனை முருகனுக்குக் கொடுத்தாள்.

முருகன் அதனை வாங்கி உட்கொண்டான். ‘ஏற்கெனவே என் உடலும் மனமும் மகிழ்வால் திணறிக்கிடக்கின்றன. இதில் இதுவும் சேர்ந்தால், நிலைமை கட்டுக்கடங்காமல் போகுமோ?’ என்று அவனுக்குத் தோன்றியது.

வள்ளியும் வாயில் போட்டு மென்றபடி நடந்துவந்தாள். சிறிது தொலைவு சென்றபின், வள்ளிக்கு விக்கல் வந்தது. அருகில் நீரோடை எதுவும் இல்லை. கார்காலம் இப்போதுதான் தொடங்குகிறது, நீர் புரண்டோட இன்னும் நாளாகும். குட்டை எதுவும் இருக்கிறதா என்று பார்த்தான் முருகன். எதுவும் தென்படவில்லை.

வள்ளிக்கு உடனடியாகக் குடிக்க நீர் தேவைப்பட்டது. ஆனால், அவ்விடம் கிடைக்காது எனத் தெரிந்தது.

அருகிருந்த சிறு பாறையின் மீதேறி, நாற்புறமும் பார்த்த முருகன், ஒரு திசை நோக்கி ஓடினான்.

நீர்நிலையைக் கண்டறிந்துவிட்டானோ என்ற எண்ணத்துடன் பின்தொடர்ந்து ஓடினாள் வள்ளி. அங்கு கானவெள்ளெருக்கொன்று செழித்திருந்தது.

“இங்கு ஏன் ஓடி வந்தீர்கள்?” எனக் கேட்டாள் வள்ளி.

“நீர் எடுக்கத்தான்” எனச் சொல்லியபடி, வெள்ளெருக்கின் அடிவாரமிருந்த சிறுசிறு கற்களை நகர்த்தி, குழியை உருவாக்கினான்.

“இவ்விடத்தில் நீர் இருக்கும் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?”

``கானவெள்ளெருக்கின் விதையைக் காற்று எங்கும் தூவிவிட்டிருக்கும். ஆனால், இங்கு மட்டுந்தான் அது முளைத்துள்ளது, அது நீர் உறிஞ்சும் செடியல்ல; நீர் குடிக்கும் செடி. அதிக நீர் இருப்பதால்தான் இவ்விடத்தில் வளர்ந்திருக்கிறது'' சொல்லிக்கொண்டே கற்களை விலக்கி, குழியை ஆழப்படுத்தினான்.

“வெள்ளெருக்கின் வேர் இரு முழத்தைத் தாண்டாது. எனவே அந்த அளவுக்குள்தான் நீர் இருக்க வேண்டும்” என்று முருகன் சொல்லும்போதே பாறையின் இடுக்கில் கசிந்தோடியது நீர்.

இரு கைகளையும் அதன் அடியில் நுழைத்து, நீர் அள்ளிப் பருகினாள் வள்ளி. நீரின் குளிர்ச்சி உடலெங்கும் பரவியது.

முருகன் சொன்னான், “மண்ணுக்குள் நீர் இருப்பதும் மனதிற்குள் நீ இருப்பதும் முகம் பார்த்தால் தெரியாதா என்ன?''

குளிர்ச்சி நீரின்றியும் பரவியது.



முருகன் மீண்டும் சொன்னான், “காதல் சற்றே தலைகீழானது. நீர் இருக்கும் இடத்தில் தழைக்கும் வேரல்ல; வேர் இருக்கும் இடத்தில் சுரக்கும் நீர்.” சொல்லிக்கொண்டே, சிறு கற்களை குழிநோக்கி நகர்த்தி மூடினான் முருகன்.

வள்ளி மீண்டும் நடக்கத் தொடங்கினாள். அவள் அழைத்துச் செல்லும் இடம் காண முருகனுக்குள் பேரார்வம் மேலெழுந்தபடி இருந்தது. அவர்களின் கண்படும் தொலைவில் பன்றிக்கூட்டம் ஒன்று எதிர்சென்றது. இருவரின் கண்களும் அதனைப் பார்த்தன.
'நான் விரட்டிச்சென்று அம்பெய்திய பன்றிக்கூட்டம் இதுதானா?' எனக் கேள்வி எழுந்தது முருகனுக்கு.

'இவற்றை விரட்டி வந்ததால்தான் நான் வள்ளியைக் கண்டேன். எனக்குக் காதலைத் தந்த இவற்றுக்கு நான் அம்பெய்திக் காயத்தை அல்லவா தந்துள்ளேன்?' எனத் தோன்றியது. சட்டென பின்திரும்பி ஓடினான் முருகன். வெள்ளெறுக்கஞ்செடியின் அடிவாரத்தில் மூடிய கற்களை மீண்டும் கிளறி அகற்றி, பன்றிகள் நீர் அருந்த வழிசெய்துவிட்டு ஒதுங்கினான்.

பன்றிக்கூட்டம் நீர் நோக்கி நகர்ந்தது. அதன் குவிவாய் நீர்தொட்டு உறிஞ்சின. பார்த்துக் கொண்டே வள்ளியின் அருகில் வந்தான் முருகன். அவள் கேட்டாள், "இவற்றின் முதுகில் செந்தாது படிந்திருப்பதைப் பார்த்தீர்களா?"

"இவற்றின் உடலில் காயம் இருக்கிறதா என்பதைத்தான் எனது கண்கள் தேடின. வேறெதையும் நான் கவனிக்கவில்லை."

"கார்காலத்தில் முதலில் மலரும் செங்கடம்பு மலரத் தொடங்கிவிட்டது. அம்மர அடிவாரத்தில் உதிர்ந்து கிடக்கும் மஞ்சள்பாவிய செந்நிறப் பூக்களின் மீதுதான் இவை படுத்தெழுந்து வருகின்றன. அதனால்தான் இவற்றின் மேலெல்லாம் செந்தாது ஒட்டியிருக்கிறது."

அவள் சொன்ன பிறகுதான் அதனைக் கவனித்தான். உடலில் இருக்கும் மயிர்க்கால்களில் செந்தாது பூசியிருந்தது. ஒன்றினை ஒன்று உரசியபடி நீர் அருந்த, குழிநோக்கி முண்டின.

பார்த்துக்கொண்டே வள்ளி சொன்னாள், "மரத்திலே மாலைபோலத் தொங்கும் செங்கடம்ப மலரெடுத்து உனது மார்பில் சூடும்படி அவை எனக்குச் சொல்கின்றன"

"அது கொத்துப்பூ. அதை எனது மார்பில் சூடுவதைவிட, உனது கூந்தலில் சூடுவதுதான் அழகு!"

"அக்கொத்துப்பூவின் இதழ்கள் எவ்வளவு அசைத்தாலும் உதிராதது. அசையா மணம்கொண்டது. அதனால்தான் உனது மார்பிற்சூட ஆசைப்படுகிறேன்."

`உதிராத பூக்களை எனது மார்பிற்சூட ஏன் ஆசைப்படுகிறாள்?' என முருகன் நினைத்துக் கொண்டிருக்கும்போது, வள்ளி சொன்னாள், "அசைத்தால் உதிராதது, அணைத்தாலும் உதிராதல்லவா?"

முருகன் திகைத்தான். செங்கடம்பின் அடிவாரத்தில் மனம் புரண்டு எழுந்தது. நீள்வாய் கொண்டு நீருறிஞ்சும் ஓசை பின்னணியில் கேட்டுக்கொண்டிருந்தது. மனம் அதனை நோக்கித் தாவியது.

``நான் கூந்தலில் சூடுவது ஒருவருக்கானதாகிறது. நீ மார்பில் அணிவது இருவருக்குமானதாகிறது."

சொல்ல நினைக்கும் சொற்களைச் சொல்லாமலே நடந்தாள் வள்ளி.

சொல்லாத சொற்களைச் சுவைத்துதான் காதல் வளர்கிறது. வெள்ளெருக்கின் வேர்போல மனதின் ஆழத்தில் இருந்து நீர்குடித்துப் பழகியது காதல். அதற்குச் சொல் சொல்ல மலர்வாய் தேவையில்லை. அதனினும் ஆழ்ந்த அன்பைக் குடித்து வளரவே வாய்முகப்பின் ஈரிதழ்களும்.




சுரந்துகொண்டிருக்கும்போதே அருந்திக் கொண்டிருக்கும் அதிசயத்தை இதழ்கள் நிகழ்த்திக்கொண்டிருந்தன. முருகனின் மனதில் மலர்ந்தது சொல், “நான் அகழ்ந்து கண்டறிந்ததை, நீ அணைத்துக் கண்டறிந்தாய். நான் கண்டறிந்தது ஒருவருக்கானது; நீ கண்டறிந்தது இருவருக்குமானது.” சொல்லாத சொல்லேந்தி இப்பொழுது முருகன் நடந்துகொண்டிருந்தான்.

முன் நடந்த வள்ளி, பாறை இடுக்குகளின் வழியே உள்நுழைந்தாள். இருட்பிளவின் வழியே எங்கே அழைத்துச் செல்கிறாள்?’ என்று சிந்தித்தபடியே பின்தொடர்ந்தான் முருகன்.

ஒரு பெரும்பாறையின் முனை திரும்பினாள் அவள். பின்னால் வந்தவன் அதேபோலப் பாறை கடந்ததும் முனை திரும்பினான். திரும்பிய கணத்தில் அவன் கண்கள் பார்த்த காட்சி, அவனை அசையவிடாமல் அப்படியே நிறுத்தியது. இமைகொட்டாமல் பார்த்தான் முருகன், தான் வாழ்வில் இதுவரை பார்க்காத ஒன்றை.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-33

குறுவழியில் உள்நுழைந்து புதுநிலப்பகுதியைப் பார்த்த கணத்தில் மெய்மறந்து நின்றான் முருகன். பெருவட்ட வடிவில் மலைகள் சூழ்ந்திருந்தன. உயர்ந்து நிற்கும் அடர்மரங்களைக்கொண்ட அந்த மலைவளையத்தின் நடுவே பரந்து விரிந்த நிலப்பரப்பு. அந்நிலப்பரப்பு முழுவதும் கழுத்தளவிற்கு விளைந்து நிற்கும் புல்வெளி. பார்க்கும்தோறும் அதன் அழகு பெருகிக்கொண்டே இருப்பதுபோல் உணர்ந்தான். சூழலில் மிதக்கும் மனம் மெல்லிய மயக்கத்தை ஏற்படுத்தியது.

“இந்த அழகைவிட்டுப் பார்வை பிரியாது” என்றாள் வள்ளி.

குரல் கேட்டுத் திரும்பாமலே முருகன் கேட்டான், “புலனறிய முடியாத மயக்கம் சூழ்கிறது. என்ன இருக்கிறது இவ்விடத்தில்?”




“நமது கண்களுக்கு முன்னால் விளைந்து நிற்பது நரந்தம் புல். இதன் நறுமணம் யாரையும் மயக்கிவிடும். மயிலம் மலர் போலத்தான் இதுவும் காயக்காய நறுமணம் அதிகமாகிக்கொண்டே இருக்கும். காய்ந்த சருகுகள் வெளிப்படுத்தும் வாசனைக்கு அளவேதுமில்லை. நீலக்கடலுக்குள் உப்பு தேங்கிக்கிடப்பதைப் போல, இந்நரந்தம் புல்வெளியில் நறுமணம் தேங்கிக் கிடக்கிறது.”

சொல்லியபடி முருகனின் கைப்பிடித்து புல்வெளிக்குள் நுழைந்தாள் வள்ளி. புற்களைக் கையால் விலக்கி, காலால் மிதித்து நடக்கையில் கிளர்ந்த நறுமணம் இருவரின் மனத்தையும் மயக்கிச்

சுழற்றியது. ஏற்கெனவே உட்கொண்டிருந்த அன்னமகிழரிசி உள்ளுக்குள் மலர்த்தலைத் தொடங்கியது. உடலும் மனமும் காற்றாய் மிதக்க காதல் கனிவாய் உருகி மனமாய் பெருகியது.

அவர்களின் பார்வைக்குமுன் பறவைகளும் விலங்கினங்களும் குறுக்கும் நெடுக்குமாகக் கடந்தபடி இருந்தன. பார்வையில் கடக்கும் அவற்றின் மீது எண்ணங்கள் நிலைகொள்ளவில்லை. மயக்கத்தின் முழுநிலையில் இருந்தான் முருகன். ஆனால் காதலின் துடிப்பு உள்ளத்தில் விசையைக் கூட்டியபடி இருந்தது.

முருகனின் ஆழ்மனம் விழித்திருந்தது. ‘இது வெறும் மயக்கம் என்றால், நாம் எப்பொழுதோ நினைவைத் தவறவிட்டிருக்க வேண்டும். ஆனால் இப்பொழுதும் நினைவிருக்கிறது. மயங்கிய மனம் காதலைத்தவிர, வேறெதிலும் நிலைகொள்ள மறுக்கிறது, என்ன நிகழ்கிறது இங்கு?’

வள்ளி கைப்பிடித்து முருகனை அழைத்துச்சென்றாள். மயக்கம் தெளியத் தெளிய ஆழ்மயக்கத்துக்குள் அவர்கள் நுழைந்தனர். புல்வெளியின் நடுவில் இருந்த சிறுமேட்டில் அமர்ந்தாள் வள்ளி. அமர்ந்த கணம் அவள் மடிதனில் சாய்ந்தான் முருகன்.

தனது மடியில் அவன் முகம் ஏந்தியபடி எதையோ சொல்ல வாயெடுத்தாள். சொல்லின்றி அமைதியானாள். அவள் முகம் பார்த்த முருகனுக்கு எல்லாம் புரிந்தது. ‘கணநேரம் ஏழிலைப்பாலையின் அணுக்கத்தில் நிறுத்தி மலரவைத்தேன். நீயோ காலம் முழுவதும் மலரவைக்க வழிசெய்கிறாய். நிலமகள் நீ. உனது ஆற்றல் எனைநோக்கிக் கடத்தும் ‘காதல்’ எதிர்கொள்ள முடியாததாக இருக்கிறது; உள்நுழைந்த நறுமணமாய் உனக்குள் மறைகிறேன் நான்.'

நறுமணம் சூல்கொண்டிருக்கும் கருப்பைதான் அம்மலைக்குடுவை. அதன் நடுவில் இருந்த சிறுமேட்டில் வானம் பார்த்துப் படுத்திருந்தனர் இருவரும். நிறையிருள்கொண்டு வானம் கருத்திருக்க எங்கும் விண்மீன்கள் ஒளிவீசின.

காதலில் தெளியும்பொழுதுதான் மயக்கத்தின் ஆழம் புரிகிறது. ஆழத்தை அறியும்பொழுதுதான் அது அறியமுடியாத இடமென்ற உண்மை உரைக்கிறது. அன்னமகிழரிசி உடலை மலர வைத்தது. நரந்தம் புல் மனதை மலரவைத்தது. வள்ளியின் அணுக்கம் மலர்தலில் வாழவைத்தது.

வள்ளி சொன்னாள், “இவ்விடத்தில் இணையோடு இருக்கும் உயிரினங்கள் மட்டுமே தங்க முடியும். நரந்தம் புல் கிளர்த்தும் மனவெழுச்சி தனித்த உயிரினத்தை விரட்டிவிடும். பறவைகளும் விலங்கினங்களும் நீங்காத மயக்கம்கொண்டு காதலில் திளைத்திருக்கின்றன.”

“பார்த்துக்கொண்டுதானே இருக்கிறேன். புலிகளுக்குமுன் இணைமான்கள் மலர் உண்ணுகின்றன. மான் உண்ணாத மலரில் வண்டுகள் நிலைகொள்கின்றன. ஆண்மலரின் மகரமும் பெண்மலரின் சூலகமும் இதழின்றி மலர்கின்றன. இவ்வியப்பு வேறெங்கு நிகழும்?”

விண்மீன்களைப் பார்த்தபடி இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். இரவு நகர்தலற்று


நிலைகொண்டிருந்தது. முருகனின் கண்கள் வானத்தைப் பார்த்து, குறிப்பிட்ட விண்மீன் கூட்டத்தையே உற்றுநோக்கின.
“வளைந்தோடும் ஆறுபோல இருக்கும் அவ்விண்மீன் கூட்டத்தைப் பார்” என்றான் முருகன்.

“எங்கே?” என்று கேட்டபடி வள்ளியின் கண்கள் தேடின. விரல் நீட்டி அதன் வளைவுகளைச் சொல்லிக்கொடுத்தான். ஆறு புள்ளிகள் வளைவுகொண்டு மின்னின. நீண்டநேரம் அதனையே பார்த்தாள் வள்ளி.

முருகன் செங்கடம்பின் மாலை அணிந்தபடி படுத்திருந்தான். வள்ளியின் மேனியெல்லாம் அதன் மனம் வீசியபடி இருந்தது. மாலையில்லாத தனது உடலில் மணக்கும் செங்கடம்பின் வாசனையை நுகர்ந்தபடி இடப்புறம் திரும்பினாள். முருகனின் மேனியில் உதிராத இதழ்களோடு அவை இருப்பதைப் பார்த்தபடி புன்னைகையோடு சொன்னாள். “மாலை மார்பன்.”

மனதுக்குள் பொங்கும் காதலோடு முருகன் சொன்னான் “மாமலர்க் கோதை.”

கூடிய வெட்கத்தோடு குழைந்து சொன்னாள், “அழகின் வடிவு நீ.”



இதழ் முத்தம்போல வாங்கியவற்றையே வழங்கினான், “வடிவின் அழகு நீ.”

சிதறிய சிரிப்போடு மீண்டும் தலைசாய்த்து விண்ணைப்பார்த்தாள். சொல் சுழல பொருளும் சுழன்றது. செங்கடம்ப மாலை இப்பொழுது வள்ளியின் மேல் படர்ந்திருந்தது. இமை சொருகினாள்.

“அவ்விண்மீன்களின் வளைவை என்மீது சுற்றுவதுபோல் இருக்கிறது உனது விரல்களின் தொடுதல்.”

முருகனின் மூச்சுக்காற்று மட்டுமே மறுமொழியாய் இருந்தது.

காற்றிலே வந்த மறுமொழி கண்டு வள்ளி சொன்னாள், “அனலெரியும் காதல் ஒளியுருக்கி ஊற்றுகிறது. அச்சம்கொள்ளவைக்கும் அணைப்பு.”

அணைப்பு நீங்கி முருகன் மொழிந்தான், “மலைமகள் அச்சம் காணாள்.”

மூடிய இமை திறக்காமலே சொன்னாள், “வேலன் மிச்சம் காணான்.”

சொல்கிளர்த்தும் மகிழ்வோடு சொன்னான், “காதலில் நான் வேலன் அல்ல.”

“வேட்டையில் மறைந்து கொள்வது உனக்கு புதிதல்ல.”

வள்ளியின் சொல்லுக்கு மறுசொல் வரவில்லை.

சிலகணம் கழித்து முருகன் சொன்னான், “நான் உன்னுள் மறைந்து கொள்கிறேன். எனை நீ கண்டறியாதே.”

“சரி, ஆனால் என்னைக் கண்டறிய உன்னைப் பின்தொடர்வேன். மறைப்புகள் விலக்கி உன்னுள் புதைந்தெழுவேன்.”

பதிலின்றி இருந்தான் முருகன். அதுவே பதிலாய் அமைந்தது. மறைதலும் தேடலும் கார்காலம் முழுவதும் தொடர்ந்தன. புதைந்தவள் மீண்டாள்; மீண்டவன் புதைந்தான். மேகத்தில் தூசி மாறி தும்மல்கொண்டது. பின்னர் கூடும் முகில்களின் கொட்டம் தொடங்கியது. வேப்ப முத்து அளவினைக்கொண்ட மழைத்துளிகள் கொட்டித்தீர்ந்தன. ஒவ்வொரு துளி நீருக்குள்ளும் நரந்தம் புல்லின் மணம் மேலேறியது. மணமேறிய நீரின் துளிகள் வள்ளிமுருகனின் வாசனையைக் கொண்டிருந்தன.

புல்வெளியின் பெரும்பரப்பைச் சுற்றியிருந்த மலைமுகடுகளில் எண்ணிலடங்காத பூக்கள் பூத்துக் குலுங்கின. கொடிமலர்களும் கொத்து மலர்களும் வண்ணம்வீசி வளைய வந்தன. வேங்கை மரத்தின் கொத்துப்பூக்கள் கரும்பாறையெங்கும் கொட்டிக்கிடந்தன. உதிரவேங்கையும் மணிமுத்து வேங்கையும் பூத்தவேங்கையும் பாயாவேங்கையும் கொட்டும் மழைத்துளிக்கு இணையாக பூக்களைச் சொரிந்தன.

நெருப்பையொத்த எறுழம்பூக்களும் சிறுவட்ட இதழ்கொண்ட எருவைப்பூக்களும் வெண்ணிறக் கூதாளிமலரும் பருத்து பேரழகோடு மலரும் புழுகுப்பூக்களும் சூல்வட்ட மலையை வண்ணக்குவளையாக மாற்றின.

கொட்டும் மழையில் பாறைக்குகைகளில் இருந்த முருகனும் வள்ளியும் மழை நின்ற பொழுதுகளில் நரந்தம் மேட்டில் வந்தமர்வர். மழை நின்ற இரவுகளில் வெளிர்வானில் மின்னும் விண்மீன்களின் அழகு சொல்லிமாளாது. முருகனின் கண்கள் அவற்றையே பார்த்துக் கொண்டிருந்தன.

வளைந்து கிடக்கும் ஆறு புள்ளிகொண்ட அந்த விண்மீன் கூட்டத்துக்குள் நிலவு சிக்கியிருந்தது. விண்ணில் தெரியும் வியத்தகு ஒளி இணையாய் அது இருந்தது. அவ்விணை கூடியதும் மேகங்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து நிலம் நோக்கிச் சரிந்தன. கொட்டும் மழை பொழிய விண்ணுக்கும் மண்ணுக்கும் இடைவெளியின்றி இருந்ததால், ஊற்று கசிவதைப்போல மேகத்திலிருந்து உருகி மண்ணில் ஓடியது மேகநதி.

எத்தனை பகலிரவு இப்படிக் கடந்ததெனத் தெரியாது. மேகம் விலகிய நள்ளிரவுகளில் முருகனின் கண்கள் ஆறு விண்மீன் கூட்டத்தைக் கடந்து பயணிக்கும் நிலவின் பாதையையே பார்த்துக்கொண்டிருந்தன.
ஓர் அதிகாலை மழைநின்றவுடன் குகைவிட்டு வெளிவந்த வள்ளியின் கண்களில் முதலிற்பட்டன பூத்து நின்ற செங்காந்தள் மலர்கள். செவ்வொளி வீசும் ஆறு இதழ்களோடு அவை இருப்பதைப் பார்த்தபடி முருகனை அழைத்துக் காண்பித்தாள்.

“அவ்விண்மீன் கூட்டத்தின் சுடர்போல் இம்மலர் ஆறு இதழ்களைக் கொண்டுள்ளது” என்றாள்.

செவ்விதழ்களை உற்றுப்பார்த்தான் முருகன். இதழின் அடியில் இளம்பசுமை நிறமிருந்தது. நடுவில் மஞ்சள் மேவி பின்னர் வெண்மையில் கரைந்தது. மேற்பகுதி இளஞ்சிவப்புப் பூண்டுமுனை அடர்சிவப்பாய் மிளிறியது. இதே நிறவாகு அவ்விண்மீன் கூட்டத்தில் உள்ளதை முருகனின் கண்கள் பல இரவுகளில் பார்த்துள்ளன.

“ஆறுவிண்மீனின் அதே குணம் இம்மலரின் ஆறு இதழ்களிலும் இருக்கின்றன” என்றான் முருகன்.
“அப்படியா!” என்று அவள் கேட்பதற்குள் சொன்னான், “இந்நிறங்கள் அனைத்தையும் காதலில் திளைக்கும் வேளையில் உன்னிடமும் கண்டுள்ளேன்.”

வியப்புற்று வள்ளி கேட்டாள், “நீ விண்ணைக் காணும்பொழுதும் என்னைத்தான் கண்டாயா?”

“நீயின்றி நான் காண விண்ணேது? மண்ணேது?”

சொல்லியபடி செங்காந்தள் மலர்பறித்து வள்ளியின் கூந்தலிற் சூட்டினான். அடர்வானம்கொண்டு கொட்டித் தீர்த்த கார்காலத்து அடைமழை விலகத் தொடங்கியது. விரிவானம் மேகமற்று மிதக்க, அவ்விண்மீன் கூட்டம்விட்டு நிலவு நகர்ந்தது.

நரந்தம் புல் பரப்பில் இருந்து விலகத்தொடங்கினான் முருகன். செங்காந்தள் சூடியபடி அவனுடன் நடந்தாள் வள்ளி. புது இடம் நோக்கி அவளை அழைத்துச்சென்றான் முருகன்.

மலையுச்சியிலிருந்து அடிவாரக் காட்டுக்கு கீழிறங்கி வந்தனர். அடைமழையின் கூதிர்ப்பருவம் முடிந்து முன்பனி தொடங்கியது. நடுக்கம் அதிகமாகும் முன்பனிப்பொழுதில் தங்குவதற்குக் கொன்றை மரங்கள் அடர்ந்து கிடக்கும் இடுக்கினைப் பயன்படுத்தினான். குளிர் சற்றே குறையும் பின்னரவில் படுத்துறங்க கருங்கொன்றையின் உச்சியில் பரண் அமைத்தான்.


பனி நடுக்கம் தாளாமல் முயல்கள் கொன்றை மரயிடுக்கில் பதுங்கின. அவ்விடுக்கின் உள்ளே கால்களை இறுகணைத்து அமர்ந்திருந்தாள் வள்ளி. வள்ளியின் கணப்பில் அண்டின முயல்கள்.

இரைதேடி வேட்டைக்குப் போன முருகன் திரும்பி வந்தபோது வள்ளியின் கணப்பில் முயல்கள் அண்டியிருப்பதைப் பார்த்தான். நீள்காது அசைய அவை வள்ளியை நோக்கித் திரும்பின. வள்ளியின் முகத்தில் புன்முறுவல் இருந்தது.

முருகன் முயல்களைப் பார்த்து சொன்னான், “அவ்விடம் அணையாதீர்கள். பின்னர் ஒருபோதும் விலகமாட்டீர்கள்.”

சொல்லுக்குள் பொறாமை வெளித் தெரியாமல் பார்த்துக்கொண்டான். ஆனால் பார்வையே அதனைச் சொல்லியது. அதன்பிறகுதான் சில முயற்குட்டிகள் வள்ளியின் மேலேறிப் பதுங்கின.

நீண்ட கொன்றைக்காயின் விதைகளை ஒருபக்கம் துளையிட்டு எடுத்துவிட்டு இசைபாடும் குழலாய் மாற்றினான். பொழியும் பனியின் ஊடே பரணில் படுத்தபடி நகரும் ஆறு விண்மீன்களைப் பார்க்க அவன் தவறுவதில்லை.



குருவிக்குஞ்சுபோல் வெண்மை திரண்டு பூக்கும் முன்பனியின் புதுமலரான ஈங்கை மலர் பறித்து வள்ளியின் கூந்தலில் சூட்டிய நாளன்று அவன் காடுவிட்டு வெளியேறப் போகிறான் என அவளுக்குப் புரிந்தது.

கீழுதடு நடுங்கும்படி பின்பனி கொட்டும் அந்த நாட்களில் அவனோடு வயல்வெளியின் ஊடே நடந்து வந்தாள் வள்ளி. தவளைச் சத்தம் விடாது கேட்க, மூக்கெங்கும் ஈரப்பதம் ஏறியிருந்தது. தாமரை படர்ந்துகிடக்கும் குளக்கரையில் மருதமரத்தின் மீது பரண் அமைத்தான்.

“எங்கு போனாலும் பரண் மீதே தங்குவதேன்?” எனக் கேட்டாள் வள்ளி.

“இது காதல் வாழ்க்கை. தரையில் தங்கினால் இறுகிய நிலத்தில் கூடலின் வளம் முழுமை கொள்ளாது. வானில் மிதந்தால் கூடலின் இறுக்கம் வலிமை கொள்ளாது. இரண்டும் கலந்த பரணில்தான் நிலம் அசைய, வான் நகர, நடுவில் நாம் மூன்றிலும் கலப்போம்.”

அதன்பின் மறுமொழி சொல்ல ஒன்றுமில்லை வள்ளிக்கு.


பகலும் இரவும் பரண்மேல் மலரும் காதல் கண்டு பறக்கும் நாரைகள் இறகுதிர்த்துப் போயின. காற்றில் மிதந்துவரும் வெண்சாம்பல் இறகுகளைச் சேகரித்து, கொடிகொண்டு முடிச்சிட்டு வள்ளியின் தலையில் மகுடமெனச் சூட்டினான் முருகன்.

“காலநேரமின்றி மிதந்து கொண்டிருக்கிறேன். இதில் நாரைகளின் இறகுகளை தலையில் அணிவித்தால், பறத்தல் நிறுத்தி ஒருபோதும் தரையிறங்காமல் போவேன்” என்றாள் வள்ளி.

“உனது அணைப்பில் மீளமுடியா மயக்கத்தில் கிடந்த எனக்கு, அன்னமழகியரிசி கொடுத்து உடலையும், நரந்தம்புல் கொண்டு மனதையும் தெளிவடைய முடியாத திகைப்பில் வீழ்த்தினாயே, அதைவிடவா?”

முருகனின் வினாவிற்கு விடையேதும் சொல்லவில்லை வள்ளி. இக்கைமாறில்தான் காதல் கனல் நீங்கா வெக்கை கொள்கிறது. அணுக்கள்தோறும் துடிப்படங்கா தவிப்பு கொள்கிறது.

தவிப்பு நீங்கா அதிகாலையில் பின்பனிப் பருவத்துப் புதுமலரான கமுகின் சிறு பூ எடுத்து வள்ளிக்குச் சூட்டினான். வயல் தாண்டி கடல் நோக்கி புறப்பட்டனர் இருவரும்.



கடற்காற்று மேலேறி வந்து தாழை மரங்களுக்கு இடையில் கட்டிய ஊஞ்சல் பரணை ஆட்டிவிட்டுச் சென்றது.

பரண்மீது ஆடிக்கொண்டே வள்ளி சொன்னாள், “கரையில் இருந்தும் அலையில் மிதக்கிறோம்.”

“மலையிலும் காட்டிலும் வயலிலும் நாம் மிதக்கத்தானே செய்தோம்.”

“ஆனால் இப்பொழுதுதான் உப்பேறிய காற்று உடல் தழுவிச்செல்கிறது. இளவேனில் ஒளிக்கதிர்களால் உடல் சுடுகிறது. இவை அனைத்தும் இவ்வளவு நாளும் உள்ளுக்குள் மட்டுமே நிகழ்ந்தன” சொல்லி மகிழ்ந்தாள் வள்ளி.

இருவரும் ஆடும்பரணில் படுத்தபடி கடல் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

நீண்ட நேரத்துக்குப் பின் வள்ளி கேட்டாள், ``கடல் ஏன் கரையோடு நிற்கிறது?”

“கரை மீது கொண்டுள்ள காதலால்.”

மறுமொழி அவளை ஏதோ செய்தது. சட்டென அவனை நோக்கித் திரும்பியபடி கேட்டாள். “அப்படியென்றால், இவ்வளவு தழுவல்கொண்ட காதலர்கள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள் அல்லவா?” கேள்வி கேட்ட கணத்திலே மனம் தோல்வியை ஒப்புக்கொள்ள முடியாமல் திணறியது.

முகக்குறிப்பறிந்து முருகன் கேட்டான், “என்ன ஆனது?”

சொல்லமுடியாமல் திணறிய வள்ளியை முருகனின் கைகள் சூழ்ந்தபோது கடலும் கரையும் பரணில் இருந்தன.

இரவு நெடுக அலைகளின் ஓசை கேட்டுக்கொண்டே இருந்தது. அவ்வப்பொழுது தெறித்த நீர்த்துளிகள் காற்றில் வந்தன. விண்மீன்களைப் பார்த்தபடி இருந்த அவர்களது நாவிலிருந்து சுடுமீனின் வாசனை விலகவேயில்லை.

இளவேனிற்காலத்துச் சுடுவெயில் உச்சத்தில் இருந்த பொழுது, கடற்கரை மணல்வெளியில் முள்ளி மாமலர் பூக்கத் தொடங்கியது. அந்நீலநிறப் பூவைப்பறித்து பரண் நோக்கி முருகன் வந்தான். அவள் பாலை நிலம் நோக்கிப் புறப்பட ஆயத்தமாக இருந்தாள்.



கொடும்பாலையில் அளவில்லாத தொலைவு நடந்தனர் இருவரும். வற்றிய சுனையில் ஒளி மேவிக்கிடந்தது. பறந்து கடக்கும் கழுகுகளின் நிழல்கள் மட்டுமே மண்ணில் ஊர்ந்தன. வள்ளியின்


பாதங்களில் கொப்பளங்கள் பூத்தன. ஆனாலும் விடாது நடந்தாள். பாலை நிலத்தின் பின்கோடை வெயில் எண்ணிலடங்காத தாவரங்களை மலரச்செய்கிறது. சுட்டெரிக்கும் மண் மீது ஏதோ ஒரு மூலையில் சிறுமலரொன்று இதழ் விரித்திருப்பதைப் பார்க்கும் பொழுதெல்லாம் வள்ளியின் முகம் மலர்ந்தது.

அழிச்சியும் அலரியும் சுள்ளியும் எருக்கும் இங்குமங்குமாகப் பூத்திருந்தன. இரும்பைப்பூவின் இனிப்பு பறவைக்கூட்டங்களை ஈர்த்தது. வேப்பம் பழத்தைத் தின்ற கைப்புச்சுவை மாற வௌவால்கள் இலும்பை மரத்தைவிட்டு நீங்காமற் கிடந்தன. பொன்நிற தனிப்பூவை கோங்கு உதிர்த்தபொழுது அணிலின் முதுகின் மேல் இருக்கும் வரிகளைப் போன்ற ஊகம்பூவும் இணைந்தே கிடந்தது.

எப்பொழுதோ வீசும் காற்றில் பறக்கும் மலர்கள் மீண்டும் மண் தொடும்போது சருகின் ஓசையுடனேயே சரிந்தன. மண்ணும் மரமும் காற்றும் சுடுவெயில் ஏந்தி நின்றன. ஏந்திய வெயிலின் இறங்காத சூடு மண்ணெங்கும் நிலைகொண்டது. வலிமையிழந்த புலிகள் பதுங்கிய இடத்தைவிட்டு எழ முடியவில்லை. நீரின்றி அலைந்த செந்நாய்களின் கால்தடங்கள் மட்டுமே மிஞ்சின. எப்புறமும் சுடுவெயில் சூழ்ந்த பாலையின் நடுநிலம் நோக்கி நகர்ந்தனர் வள்ளியும் முருகனும்.

வள்ளியின் உதடுகள் வெப்பக்காற்றில் வெடித்துக்கிடந்தன. முதுவேனிலின் சுடுபழத்தைச் சுவைத்து உண்டதன் அடையாளங்கள் அவை. எங்கும் பட்டமரங்களே நின்றிருந்தன. சிறுபாறையோரம் தனித்திருந்த வாகை மரத்தின் மீது பரண் அமைத்தான் முருகன்.

பகல் மங்கியபொழுது பரணேறிச் சாய்ந்தனர் இருவரும். இரவானதும் வானமும் சுடுமோ என்று அஞ்சவைத்தது பகலின் நினைவு. முருகனின் கண்கள் விண்மீன்களைப் பார்த்துக் கொண்டிருந்தன. வளைவுகொண்ட அந்த ஆறு விண்மீன்களும் வானில் தெரியவில்லை.



“அவை வான்விட்டு எங்கு போயின?” எனக்கேட்டாள் வள்ளி.

“எந்த ஒரு வளைவிலும் மறைவுகள் இருக்குமல்லவா? அதேபோல அந்த ஒளி வளைவின் மறைவிடத்தில் நாம் இருக்கிறோம். அதனால் பார்வையில் இருந்து தப்பியுள்ளது” என்றான் முருகன். அதன் பிறகு அது பற்றி அவள் கேட்கவில்லை.

அவை தவிர்த்து எண்ணிலடங்காத விண்மீன்கள் வான்வெளியைப் பூக்காடாய் மாற்றியிருந்தன. எங்கும் சிதறிக்கிடக்கும் வான்பூக்களைப் பார்த்தபடி வள்ளி கேட்டாள், “மழை கொட்டித்தீர்த்த கார்காலத்தில் நிலமெங்கும் மலர்கள் பூத்துக் குலுங்கின. அதன் பிறகு இம்முதுகோடையில்தான் எண்ணிலடங்காத பூக்கள் பூக்கின்றன. மற்ற பருவங்களில் இவ்வளவு பூக்கள் பூக்கவில்லையே ஏன்?”

முருகனின் முகத்தில் மெல்லிய சிரிப்பொன்று ஓடி மறைந்தது. அவன் சொல்லப் போகும் மறுமொழிக்காக காத்திருந்தாள். மறுமொழியேதும் வராமல் நேரம் கடந்தது.

முருகனின் சிந்தனை வேறெங்கோ இருக்கிறது என நினைத்த வள்ளி தனது கேள்வியில் இருந்து எண்ணத்தை விலக்கினாள்.

சற்று பொழுது கடந்து முருகன் சொன்னான், “எல்லாவற்றிற்கும் காரணம் ஆறு விண்மீன் கூட்டம்தான்.”

முருகனின் விடை எதிர்பாராததாக இருந்தது. திகைப்புற்ற வள்ளி கேட்டாள், “எப்படி?”

“அந்த ஆறுவிண்மீன் கூட்டத்தோடு நிலவு இணைந்திருந்த காலத்தில்தான் கார்மேகங்கள் வானம் எங்கும் நிறைந்திருந்தன. பெருமழை விடாது கொட்டித்தீர்த்தது. அதேபோல அந்த ஆறு விண்மீன் கூட்டத்தோடு கதிரவன் இணைந்திருக்கும் இக்காலத்தில் சுடுவெயில் தீயென விடாது பொழிகிறது. நீரும் ஒளியும்தான் மலரென வடிவம் கொள்கின்றன. அதனால்தான் பிறகாலங்களைவிட இவ்விரு காலங்களிலும் மலர்கள் அதிகமாக மலர்கின்றன. இம்மலர்தலுக்கு காரணம் வளைவுகொண்ட அந்த ஆறுவிண்மீன்கள்தான்.”

முருகனின் விடை முற்றிலும் புதிதாய்த் தோன்றியது. அதனை உள்வாங்கி மறுவினா தொடுக்க சற்று நேரமானது. அவள் கேட்டாள், “அவ்விண்மீன் கூட்டத்தோடு நிலவு இருந்ததை நாம் பார்த்தோம். இப்பொழுது கதிரவன் அக்கூட்டத்தோடு இருக்கிறான் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?”

“விண்மீனின் நகர்வுகளைக் காலம் முழுவதும் பார்த்துக்கொண்டேதான் இருக்கிறேன். வானின் ஒவ்வொரு பகுதியிலும் அது நகர்ந்து செல்லும் வழித்தடம் எனது மனக்கண்ணில் இருக்கிறது. இப்பொழுது அவற்றோடு இணைந்தே கதிரவன் பயணிக்க வேண்டும். பகல் பயணம் அது. அதனால்தான் இரவில் அவ்விண்மீன் கூட்டம் நம் கண்களுக்குத் தெரியவில்லை. காலச்சுழற்சியின் பாதை அதுவே.”

பதிலுரையால் உறைந்து நின்றாள் வள்ளி. அடுத்த சொல் சொல்ல நா எழாமல் இருந்தது. அதனைக் கவனித்தபடி முருகன் சொன்னான், “உனது முதுகுப்புறத்தை நீ பார்க்கமுடியாமல் இருக்கலாம். ஆனால் உன்னால் உணரமுடியும் அல்லவா? அதுபோல்தான் இதுவும்.”

இவ்வுவமைக்குப்பின் சொல்ல எதுவும் இல்லை என்று தோன்றியது. ஆனால் இவ்வுவமையே பல சொற்களைச் சொல்லவும் தூண்டியது. வேண்டாம் என்று கட்டுப்படுத்தினாள் வள்ளி. ஆனாலும் உருக்கொண்ட வார்த்தைகள், தனக்குத்தானே ஒருமுறையாவது சொல்லிக்கொண்டால் மட்டுமே அமைதிகொள்ளும்.

“எல்லா அணைப்புகளிலும் சூழ்ந்த உனது கைகள் எனது முதுகினையே பற்றியது. காதல் அதனால்தான் இவ்வளவு வெக்கை கொண்டுள்ளதா? சுட்டெறிக்கும் அனல், காதலைவிட்டு எப்பொழுதும் நீங்காமல் இருப்பது அதனால்தானா?” சொற்கள் வேள்விகளாய் உருத்திரண்டபடி இருக்க, அனைத்தையும்

விழுங்கிவிட்டு ஒரே ஒரு கேள்வியை மட்டுமே கேட்டாள், “எல்லா இரவுகளிலும் வான்நோக்கி பரண் அமைத்தது காதலில் மூழ்கத்தான் என நினைத்தேன். ஆனால் காலத்துள் மூழ்கத்தான் அதனைச் செய்தாயா?”




அழகிய சிரிப்போடு முருகன் சொன்னான், “நான் காலத்துள் மூழ்கும்போதெல்லாம் காதலுக்குள்தான் மூழ்கினேன். காதல்தானே காலச்சுழற்சியின் அடையாளம். நிலவும் கதிரும் இயற்கைக்குப் பாலூட்டும் இருமார்புகள். கருணையும் காமமும் சமமாய்ச் சுரக்கும் அவ்வழகிய தனங்களைவிட்டு நான் எக்காலமும் அகலாமல்தானே இருந்தேன். அணைப்பு நீங்காமல் அதனை அறிந்தவள் நீதானே.”

சொல்கிளர்த்தும் காதல் உடலெங்கும் பொங்க, செய்வதறியாமல் நின்றாள் வள்ளி. அவளது முகத்தை தனது கைகளில் ஏந்தியபடி முருகன் சொன்னான், “கார்மேகம் மழையைக் கொட்டித் தீர்ப்பதற்கும், தீயாய் வெயில் சுட்டெறிப்பதற்கும் அவ்விண்மீன் கூட்டமே காரணம். எனவே அதனைக் கார்த் தீ என அழைக்கலாமா?”

“உனது கைகள் எனது முகமேந்திய கணத்தில் உடலெங்கும் கார்காலக் குளுமை பரவியது. ஆனால் அணைக்காமல் விலகி நிற்கும் இவ்விடைவெளியில் பாலைத் தீ பற்றி எரிகிறது” வள்ளி வார்த்தையை முடிக்கும் முன்னே இறுக அணைத்தான் முருகன். கார்காலக் குளுமையின் மீது பற்றியெறிந்தது தீ. கார்த் தீ!

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-34

இருளுக்குள் நடந்துகொண்டே கார்த்திகையின் கதையைச் சொல்லி முடித்தான் பாரி. கதை கேட்டபடி பின்னால் வந்துகொண்டிருந்தார் கபிலர். திசைவேழரின் காலக்கணிதம், பேரரசுகளின் வானியலறிவு ஆகியன பற்றி கபிலருக்கு இருந்த எண்ணங்கள், பாரி சொன்ன ஒற்றைக்கதையால் தள்ளாடத் தொடங்கின. `நான்கு ஆண்டுக்கு ஒருமுறை வரும் ஒளிவாளினை இவ்வளவு துல்லியமாகக் கணித்துவைத்திருக்கும்போதே, மலைமக்களின் வானியலறிவைப் புரிந்துகொள்ள கூடுதலாக முயன்றிருக்க வேண்டும்' எனத் தோன்றியது.

பேச்சற்று வந்துகொண்டிருந்த கபிலரைப் பார்த்து பாரி, “முருகன், கார்த்திகை விண்மீன் கூட்டத்துக்குப் பெயர் சூட்டிய கதையை மட்டும்தானே சொல்லியுள்ளேன். இன்னும் எவ்வளவோ இருக்கின்றனவே” என்றான்.

“இன்னும் எவ்வளவோ என்றால், முருகனைப் பற்றியா... விண்மீன்களைப் பற்றியா?”

“காலத்தைப் பற்றி”




‘என்ன சொல்லவருகிறான் பாரி?’ என்ற திகைப்பு வாயடைக்கச் செய்தது கபிலரை.

பாரி சொன்னான், “அந்த ஆறு விண்மீன்களின் அடிப்படையில்தான் காலமும் ஆறு கூறுகளாகப்

பகுக்கப்பட்டன. கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் என ஆறு பெரும்பொழுதுகளும், வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என ஆறு சிறுபொழுதுகளும் இதன் அடிப்படையில்தான் பகுக்கப்பட்டதாகச் சொல்வார்கள்.”

இருள் சூழ்ந்துள்ள ஒற்றையடிப்பாதையில் பின்னால் வருகிறவர் சிறு ஓசைகூட எழுப்பாமல் வரக் கூடாது என்பது கபிலருக்குத் தெரியும். ஆனால், தெரிந்தவை எல்லாம் தெரியாதவற்றின் பின்புலத்தில் போய் மறைகின்றன. பின்னணிக் கதைகள் காலத்தையே புரட்டுகின்றன. கபிலர் என்ன செய்வார்?

மனம் புரண்டு எழுந்து உண்மையைப்பற்ற நினைத்தபோது குறுக்கிட்ட கதை, ‘அது உண்மையா?’ என்ற கேள்வியை எழுப்பியது. திகைத்து நின்றவரிடம் புதிதாய் வினா ஒன்று மேலெழுந்தது.

“வேளிர்குலத் தலைவன் உருவாக்கியதால்தான் பொழுதை அறிய `வேளை’ என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோமா? காலை வேளை, மாலை வேளை என அழைப்பதன் காரணம் அதுதானா?”

கபிலரின் வினாவுக்கு, பாரியிடம் விடை இல்லை.

சற்றுநேர இடைவெளியில் மீண்டும் கபிலர் கேட்டார், ``காலச்சுழற்சியை அறுபது ஆண்டுகளாக வகுத்ததற்கும், ஒரு நாளை அறுபது நாழிகைகளாகப் பிரித்ததற்கும் இந்த ஆறுதான் அடிப்படையா?”

பாரியிடமிருந்து மறுமொழி எதுவும் வரவில்லை. ஆனால், கபிலரின் உள்ளத்துக்குள் உருக்கொண்ட வினாக்கள் நின்றபாடில்லை.

“சற்றே நில்” என்றார் கபிலர்.

முன் நடந்துகொண்டிந்த பாரி நின்றான்.

“அன்று அங்கவை கேட்ட வினாவை உன்னிடம் சொன்னேனே நினைவிருக்கிறதா?”

எதுவென்று பாரி யோசித்துக் கொண்டிருந்தான். அந்தப் பொழுதுகூட கபிலரால் காத்திருக்க முடியவில்லை. “ `உயிரெழுத்துகள் ஏன் பன்னிரண்டு?’ என்று கேட்டாளே” என்றார்.

“ஆம்” என்றான் பாரி.

“உயிரெழுத்துகள் பன்னிரண்டு, மெய்யெழுத்துகள் பதினெட்டு எல்லாம் ஆறின் மடங்குகளாகவே இருப்பது அதனால்தானா? ஆறு என்ற அச்சின் மீதுதான் எம்மொழி நிலை கொண்டுள்ளதா? ஆறு என்பது எண்ணாகவும், நதியாகவும், மொழியாகவும், காலமாகவும் விரிவுகொண்டதா?” என, கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனார் கபிலர்.

அமைதியாய் நின்ற பாரி சொன்னான், “ இந்த வினாக்களுக்கு விடைகூற வேண்டியவர் நீங்கள்தானே,

என்னிடம் கேட்கிறீர்கள்?”

``விடையை யாரும் சொல்லிவிடலாம். வினாக்கள் உருத்திரள்வதுதான் முக்கியம். பறம்பின் மீது ஏறத் தொடங்கியதிலிருந்து நான் முக்கியமாகக் கண்டடைந்தது விடையை அல்ல, வினாவைத்தான்.”
பெரும் உண்மைகள், எளிய கேள்விகளுக்குள் தலை நுழைத்துதான் வெளிவருகின்றன. கபிலர், கேள்விகளுக்குள் தலை நுழைத்துக் கொண்டிருந்தார்.

“காலத்தைப் பற்றி வேறென்ன சொல்ல வந்தாய்?”

“முருகன் அளவுக்கு இயற்கையின் ஒவ்வோர் அசைவையும் நுட்பத்தையும் புரிந்துகொண்ட இன்னொரு தலைவன் இல்லை. முருகனோடு இரண்டு பறவைகளைப் பற்றிய கதைகளை இணைத்தே மக்கள் சொல்வர். கேட்டிருக்கிறீர்களா?”

“நான் கேள்விப்பட்ட கதைகள் எல்லாம் இங்கு தலைகீழாக மாறிவிடுகிறதே! நீ எந்தப் பறவைகளைச் சொல்கிறாய்?”

``சேவலையும் மயிலையும்தான்.”



இந்தப் பறவைகளுக்கும் காலத்துக்கும் இருக்கும் உறவைப் பற்றி கபிலர் சிந்தித்துக்கொண்டிருந்தபோது பாரி சொன்னான், ``சேவல், கதிரவன் விரும்பி; செந்நிற ஒளியின் முதல் கீற்று வானில் மேலெழத் தொடங்கியவுடன் குதூகலித்துக் கொக்கரிக்கத் தொடங்கிவிடும். அதன்

மகிழ்வுக்கு அளவு ஏதுமில்லை. அதேபோலத்தான் மயிலும். அது, மழைவிரும்பி; கார்மேகங்கள் கூடத் தொடங்கியதும் குதூகலிக்கத் தொடங்கும்; இறகு விரித்து தனது மகிழ்வைக் கொண்டாடும். நெருப்பும் நீரும்போலத்தான் கார்த்திகையின் இன்னொரு குறியீடு இவை இரண்டும்.”

சேவலின் கொக்கரிப்பையும் மயிலின் தோகை விரிப்பையும் கார்த்திகையோடு இணைத்து பாரி சொன்ன கணத்தில், உடல் சிலிர்த்து அடங்கியது. `காலத்தின் எதிரெதிர் முனைகளை வைத்துதான் முருகனைப் பற்றிய எல்லாக் கதைகளும் பின்னப்பட்டுள்ளன’ எனத் தோன்றியபோதே அறுபதாங்கோழியின் நினைவுவந்தது. “முருகனுக்கு மிகவும் பிடித்தது அறுபதாங்கோழி என்றுதானே பறம்பு மக்கள் சொன்னார்கள்?”
இளஞ்சிரிப்பு மாறாமல் பாரி சொன்னான்,“சேவலும் மயிலும் காலத்தின் குறியீடு என்றால், அறுபதாங்கோழி காதலின் குறியீடு. அது முழுநிலா நாளில் வானம் பார்த்து தனது மெல்லிய குரல்கொண்டு ஒலியெழுப்பும். சேவல்போல தனது அலகு திறந்து கூவாது. மூடிய வாயின் முணுமுணுப்பாய் வெளிவரும் இசை. வண்டுகளின் ரீங்காரம்போல மெல்லொலி எழுப்பும். வள்ளியும் முருகனும் நரந்தம்புல்லின் நடுமேட்டில் இருந்த காலமெல்லாம் காற்றில் மிதந்த ஓசை அதனுடையதுதான். அந்த ஓசை, காதலர்கள் உயிர் சுருண்டு ஓருடல்கொள்ள வழிசெய்யும்.

கார்காலமும் வேனிற்காலமும் இணைந்ததன் அடையாளமாகக் கார்த்திகை இருப்பதைப்போல, ஆணும் பெண்ணும் இணைந்த காதல் அடையாளம்தான் அறுபதாங்கோழி. ஒருவகையில் எரியும் நீரும் குளிரும் நெருப்புதான் அதுவும்.”

``காலத்தையும் காதலையும் வைத்து வள்ளியுடன் நடத்திய விளையாட்டு வள்ளிமுருகனைப் பற்றிய எல்லாக் கதைகளிலும் நிகழும்போலும்” என்றார் கபிலர்.

``காலத்துடனும் காதலுடன் விளையாடிப் பார்க்க விருப்பமில்லா மனிதன் யார்? மனிதனின் அடிப்படையான விருப்பம் இவை இரண்டும் தானே. அதனால்தான் எல்லோருக்கும் இந்த விளையாட்டு பிடித்திருக்கிறது. அதை விளையாடித் தீர்த்த வள்ளிமுருகனையும் பிடித்திருக்கிறது.”

வள்ளிமுருகனின் கதையை அசைபோடுதல், காலத்தையும் காதலையும் மறுபடி நிகழ்த்திப்பார்த்தல்போலத்தான். அந்த நிகழ்வு மனதுக்குள் நிகழும்போது வெளிப்பேச்சுக்கு வேலையென்ன? பாரியும் கபிலரும் இருவேறு உலகுக்குள் நீந்தியபடி நடந்து சென்றனர்.

இருளின் அடர்த்தி குறையத் தொடங்கியது. மழை நின்ற இரவு, கிழக்கே மேலெழும் புத்தொளிக்காகக் காத்திருந்தது. பறவைகளின் குரலொலி கேட்டபடி இருவரும் நடந்தனர். நீண்டநேரம் கழித்து கபிலர் கேட்டார், “முருகன் கண்டறிந்தவை வேறு என்னென்ன?’’



“நிறைய இருக்கின்றன. ஆனால், சொல்ல முடியாதவைகளாக இருக்கின்றன.”

“என்னிடம் சொல்ல முடியாதவையா?”

“ஆம், தம் குலம் அல்லாதவர்களுடன் பகிர்ந்துகொள்ள முடியாதவை, குலங்களில் நிறைய உண்டல்லவா?”

நீண்டநேரம் கழித்து கதைகளிலிருந்து மீண்டு தன்நிலைக்கு வந்தார் கபிலர். எவ்வளவு ஒன்றினாலும் விலகவேண்டிய இடம் உண்டு என்பதை உணரும் நேரம் சற்றே கடுமையானது.

“ஆனாலும் அவை குறித்து நீங்கள் ஏற்கெனவே கேள்வி எழுப்பிவிட்டீர்கள். உங்களது கேள்வியால் திகைத்துப்போய் நின்றது அன்றுதான்” என்றான் பாரி.

`எதைச் சொல்கிறான் பாரி?’ என யோசித்துக் கொண்டிருந்தார் கபிலர். பாரி சொன்னான், ``ஒளிவாளினைப் பார்க்க குன்றுக்கு மேல் உங்களை நான் அழைத்துச் சென்றபோது நீங்கள் கேள்வி ஒன்று கேட்டீர்கள்.”
கபிலர் சிந்தித்தபடியே சொன்னார், “பாழி நகர் பற்றிக் கேட்டேன். `அங்கு வேளிர்களின் செல்வங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளனவா?’ என்று கேட்டேன்.’’

பாரி சொன்னான் ``குமரிக்கடல் முதல் வட திசையின் எல்லை வரை இருக்கும் இந்தப் பச்சைமலைத்தொடரில் இருப்பவர்கள் ஈரேழு பதினான்கு வேளிர்கள். இந்த வேளிர் கூட்டம், தங்களுக்குக் கிடைக்கும் பெரும்செல்வம் எதுவானாலும் அதைப் பாழி நகரில் வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்று முன்னோர்கள் விதிசெய்தனர். அந்தப் பாழி நகரை உருவாக்கியவன் முருகன்.”

தான் அன்று கேட்ட வினாவுக்கு, இன்று பாரியிடமிருந்து விடை வந்தது.

“அந்நகரை வேளிர் மட்டுமே அறிவர் எனக் கேள்விப்பட்டுள்ளேன்.”

“ஆம்” என்றான் பாரி.

``பிறரால் அறிய முடியாத நகரம் மண்ணில் எப்படி இருக்க முடியும்?”

“மண்ணின் மேல் இருக்க முடியாது. மண்ணுக்குள் இருக்க முடியுமல்லவா?”

கபிலர் மிரண்டு நின்றார். பாரி சொன்னான், “அது மண்ணுக்குள் வடிவமைக்கப்பட்ட அமைப்புகளைக்கொண்டது. அங்குதான் ஆதிகாலந்தொட்டு வேளிர்களின் செல்வங்கள். அதாவது பச்சைமலையின் வியக்கத்தகு செல்வங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன. அந்தப் பாழி நகரைப் பாதுகாக்கும் பொறுப்பை எவ்வியிடம் ஒப்படைத்தான் முருகன். அன்றிலிருந்து பறம்பின் மக்கள் அதைப் பாதுகாத்துவருகிறார்கள்.”

“மற்ற வேளிர்கள் அந்த இடத்துக்கு வந்து செல்கின்றனரா?”

“ஆம், பாதுகாப்பது மட்டும்தான் எங்களின் பணி. மற்ற அனைத்து வேளிர்களுக்கும் அந்த இடம் எங்கு

இருக்கிறது என்ற உண்மை தெரியும்.”

“ எவ்வியூரிலிருந்து மலைப்பாதையின் வழியே போனால், பாழி நகர் போய்விடலாம் என்று நீ சொன்னாயே!”

கபிலர் முடிப்பதற்குள் பாரி சொன்னான், ``அது வெளித்தோற்றத்துக்காக நாங்கள் அமைத்துள்ள சிறுபாழிக்கான பாதை. பெரும்பாழி இருக்கும் இடம் வேறொன்று.”

முடிச்சோடு நின்றது பாரியின் மறுமொழி. `இதை நேரடியாகக் கேட்க முடியாது. ஆனால், கேட்காமல் இருக்கவும் முடியாது. என்ன செய்யலாம்?’ என்று சிந்தித்தபடியே கபிலர் கேட்டார், ``மலைப்பகுதியில் மண்ணுள் இருக்கும் ஓர் இடத்தை எல்லாக் காலங்களிலும் பாதுகாத்துவிட முடியுமா? கால ஓட்டத்தில் எளிதில் அழிந்துவிடாதா?”

எவ்வளவு நிதானத்துடனும் கூர்மையுடனும் கபிலர் பாழி நகரை நெருங்குகிறார் என்பதை, பாரி கவனித்தபடியே சொன்னான், “அந்த நகரை இப்போது மட்டுமல்ல, இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகளானாலும் மண்ணுள் எவ்வளவு ஆழம் புதைந்தாலும் வேளிர் குலத்தவரால் கண்டுபிடித்துவிட முடியும்.”

“ `எப்படிக் கேட்பது, பாரிக்கு இக்கட்டான நிலையை உருவாக்கிவிடும்’ என்று கபிலருக்குத் தோன்றியது. `ஆனால், கேட்காமல் இருப்பது, உருவாகும் எண்ணத்தை மறைக்கும் செயல். மறைக்க முயல்வது தோழமையன்று’ என்று எண்ணியபடியே கபிலர் சொன்னார், “எப்படி என்பதை நீ வெளிப்படுத்தத் தேவையில்லை.”

கபிலரின் சொல்லாற்றல் கண்டு வியந்து நின்றான் பாரி. எவ்வளவு திறனோடு என்னை முன்னகர்த்தி அவர் பின்வருகிறார் என்று எண்ணியபடியே பாரி சொன்னான், ``அந்த நகருக்கான அடையாளங்களை உருவாக்கியவன் முருகன். அந்த அடையாளங்கள் மண்ணில் இருந்தால், அவை கால ஓட்டத்தில் மறைந்துபோகலாம். விண்ணில் இருந்தால்?”

பாரியின் வினா, கபிலரை இழுத்து நிறுத்தியது. பாரி தொடர்ந்தான், “இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகளானாலும், விண்மீன்களின் இருப்பிடங்கள் மாறவா போகின்றன?”

“இல்லை.”

“பாழி நகருக்கான குறிப்புகள் விண்மீன்களை வைத்து உருவாக்கப்பட்டுள்ளன. இன்னும் எவ்வளவு காலம் கழிந்த பின்னும், மாதங்களின் நாள் வரிசையும் விண்மீன்களின் இட வரிசையையும் தெரிந்தவன் அந்த நகரை எளிதில் கண்டறிந்துவிடுவான்.”

திகைப்பின் அடுத்தகட்டம் அரங்கேறிக் கொண்டிருந்தது. ‘மலைமக்கள், அறிவின் சிறந்த தொடக்கத்தை உருவாக்கியவர்கள். சமவெளியில் உருவான அரசுகள் அதை அடுத்தகட்டத்துக்கு

வளர்த்தெடுத்துள்ளன' என்றுதான் இதுநாள் வரை கபிலர் நினைத்திருந்தார். ஆனால், வளர்ச்சி என்ற பெயரில் தொலைந்து போனவையே அபார ஆற்றல் கொண்டவையாக இருக்கின்றன. விண்மீன்களை வைத்து திசை அடையாளங்களையும் நேர அடையாளங் களையும்தான் கணியர்கள் உருவாக்கியுள்ளனர். ஆனால் இங்கோ, விண்மீன்களை வைத்து நிலம் அடையாளப்படுத்தப்படுகிறது. அறிவு வளர்ச்சியின் ஆதிவிதைகள் இங்கு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

கபிலரின் எண்ண ஓட்டங்களை இடைமறித்து பாரி சொன்னான், "முதுவேனிற்காலத்தில் கார்த்திகை விண்மீன் கூட்டத்தோடு கதிரவன் இருப்பதை விண்மீன்களின் சுழல்வட்டக் கணக்கின் அடிப்படையில் முருகன் கண்டறிந்தான் எனச் சொன்னேன் அல்லவா?"

"ஆம்'' எனத் தலையசைத்தார் கபிலர்.

"அவ்வாறின்றி, வேறொரு முறையில்தான் அதை முருகன் கண்டறிந்தான் எனச் சொல்பவர்களும் உண்டு."

"அது என்ன முறை?"



பாரி சற்றே அமைதிகொண்டு நடந்தான். `சொல்லலாமா?' என்ற வினாவை எழுப்பி மனதை விடை சொல்ல ஆயத்தம் செய்கிறான் என்பது கபிலருக்குப் புரிந்தது.

பாரி சொன்னான், "இம்மலைத்தொடரில் உள்ள பத்து பேரதிசயங்களில் ஒன்று கருநெல்லி."

கபிலர், பாரி உச்சரிக்கும் வார்த்தையை மிகக் கவனமாகக் கேட்டார்.

பாரி சொன்னான், " `அதிசயக்கனியான கருநெல்லியை உண்டால், பகலிலும் விண்மீன் கூட்டத்தைப் பார்க்கலாம் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. முருகனுக்கு நெல்லிக்கனி மிகவும் பிடித்தது. அவன் கருநெல்லி உண்டுதான் பகலில் விண்மீன் நகர்வைப் பார்த்தறிந்தான்' என்று குலநாகினிகள் கதை சொல்லி நான் கேட்டிருக்கிறேன்.''


கபிலர், திகைப்பிலிருந்து மீள வழியில்லாமல் இருந்தார். எண்ணங்கள் கட்டுக்கடங்காமல் ஓடின. மேலேறிய கதிரவனின் ஒளி, காடெங்கும் நிலைகொண்டிருந்த இருளை மஞ்சள் நிற ஆடைகொண்டு போத்திப் பிடித்துக் கொண்டிருந்தது. முன்னால் சென்றுகொண்டிருந்த பாரி, பாறை இடுக்கின் வழியே

உள்நுழைந்து மறைந்தான்.

‘அதற்குள் உள்ளே மறைந்துவிட்டானே. அவ்வளவு அடர்ந்த இடுக்குப்பாதையா இது!’ என்று நினைத்தபடியே கவனமாகக் கால் தூக்கிவைத்து உள்நுழைந்தார். இருள் சூழந்த பாதை நீண்டிருந்தது.

சற்று தொலைவு நடந்தான். பெரும்பாறை ஒன்று பாதையில் குறுக்கே நிற்பது தெரிந்தது. அதன் பின்புறமிருந்து காலைக் கதிரவனின் ஒளி, தெறித்துச் சிதறிக்கொண்டிருந்தது. `எத்தனை முறை பார்த்தாலும் இருளுக்குள் பாய்ந்து நுழையும் ஒளிக்கதிருக்கு இணை சொல்ல எதுவுமில்லை’ என நினைத்தபடியே பாறையின் அருகில் வந்து முன்புறம் திரும்பினார் கபிலர்.

திருப்பத்தில்தான் எல்லாம் இருந்தன. `இணை சொல்ல முடியாதவை’ என்ற சொல்லின் முழுமையை இயற்கை அவருக்குக் காண்பித்தது. வட்டவடிவ பசுங்குடுவையைப்போல் கண்ணுக்கெதிரே பரந்து விரிந்த புல்வெளி. இரு கைகொண்டு அணைத்துப் பிடித்தபடி சுற்றிக்கிடக்கும் மலைக்குன்றுகள். கதிரவனின் ஒளி பொழியத் தொடங்கும்போது கலையத் தொடங்கிய இணைப் பறவைகளின் ஓசை. காற்றெங்கும் மிதந்த நரந்தம்புல்லின் மணம்.



உறைந்து நின்றார் கபிலர். சற்றே விலகி நின்று அவர் முகம் பார்த்து மகிழ்ந்தான் பாரி.

கார்காலத்தின் முதுமழை கொட்டத் தொடங்கியது. இன்னும் சில நாள்களில் அடைமழை தொடங்கும். மழைநீரின் கனம் தாங்காமல் இலையும், இரவின் குளிர் தாங்காமல் மலையும் நடுங்கியபடி இருக்கப்போகின்றன. கபிலருக்கு எலிமயிர்ப் போர்வை நெய்யும் பணி முடியப்போகிறது.

தப்பிச்செல்ல முடியா பேரெலியின் மயிர்தோல்கொண்டு தொல்புலவன் போத்தப்பட இருக்கிறான். அந்த நாளுக்காகக் காத்திருந்தனர் எல்லோரும். கபிலரின் மனமோ, நரந்தம்புல் மேட்டிலும் கார்த்திகையின் கணக்குகளிலும் மொழியின் புதிர்களிலும் போய் மாட்டி நின்றது. அவற்றின் ஆழம் வசப்படவில்லை. எனவே, அதிலிருந்து மீள முடியவில்லை. நீலன், தனைமயக்கி மூலிகை கொடுத்து கதையை மறக்கவைத்தான். பாரியோ, கதையைச் சொல்லி மீதமுள்ள எல்லாவற்றையும் மறக்கவைத்தான். மறதிக்கும் நினைவுக்கும் நடுவில் பெரும்வேட்டையைத் தன்னந்தனியாக நடத்திக்கொண்டிருந்தார் கபிலர்.

மீளமுடியா அந்த மனநிலையோடுதான் பிள்ளைகளுக்குப் பாடம் நடத்தினார். அங்கவையின் வினாக்கள் வழக்கம்போல் அறிதலின் வழியேதான் இருந்தன. மற்றவர்களும் ஆர்வமுடன் பாடம் பயின்றனர். மயிலா புறப்படவேண்டிய நாள் வந்துவிட்டது. அவள் நீலனைப் பார்க்காமல் நீண்டநாள் விலகியிருந்தது இப்போதுதான். ஆனாலும் தனது பெயரையும் நீலனின் பெயரையும் அவள் எழுதக் கற்றிருந்தாள். அது அளவற்ற மகிழ்வை உருவாக்கியிருந்தது. அவனின் ரகசியம் ஒன்று தனக்குள் அடங்கிவிட்டதாக அவள் நினைத்தாள். தனது விரல்களின் வழியே நீளும் கோடுகளுக்குள் அடங்கிய அவனை நினைத்து மகிழ்ந்தாள்.

வேட்டூர் பழையனோடு சேர்ந்து அவள் புறப்படுவதாகத்தான் முடிவுசெய்திருந்தனர். ஆனால், தேக்கன் இன்னும் சில நாள்கள் பழையனை இருக்கச் சொல்லிவிட்டார். அதனால் வீரர்கள் சிலருடன் மயிலா மட்டும் எவ்வியூர்விட்டுப் புறப்பட்டாள். அவளின் முகத்தில் இருந்த மகிழ்ச்சியின் வழியே கபிலர், நீலனைப் பார்த்துக்கொண்டிருந்தார். குன்றுகளுக்கு இடையில் ஆடும் ஊஞ்சல் அவரின் பார்வைக்குத் தெரிந்தது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் சாமப்பூ அரும்புவிடத் தொடங்கியிருந்தது. தேக்கன் புதிய மாணவர்களை அழைத்துக்கொண்டு காடறியப் புறப்படவேண்டிய காலம் வந்துவிட்டது. அதனால்தான் சில செய்திகளைப் பேசுவதற்கு வேட்டூர் பழையனை இருக்கச் சொல்லியிருந்தார் தேக்கன்.

தென்திசை தளபதி கூழையன் அனுப்பும் தகவல்கள், பறம்புக்கான ஆபத்து நெருங்குவதைச் சொல்லிக்கொண்டே இருந்தன. கோளூர் சாத்தனின் கைகளை முடியன் வெட்டியதால் சேரகுடிகள் ஒன்றுசேர நாம் வழிவகுத்துவிட்டோம். பாண்டியனையும் சோழனையும்போல தொலைவில் இருப்பவர்கள் அல்ல சேரர்கள். மலைத்தொடரின் அடுத்த குன்றில் அவர்களது காலடி கிடக்கிறது. சேரர்குடி இருவரும் இணைந்து பறம்பு நோக்கி படைகள் வருவதற்கு ஒரு சில குன்றுகளில் பாதை அமைத்துவருகின்றனர். நாம் மிகுந்த கவனத்தோடு இருக்கவேண்டிய நேரம்.

இந்தச் செய்திகள் வந்தபிறகுதான், பேரெலி வேட்டைக்குப் பாரி ஏன் தொடர்ந்து வந்தான் என்பது தெரியவந்தது. பேரெலி அதிகம் இருக்கும் இடங்களை விட்டுவிட்டு மலைகளின் பல திசைவழியாக ஏன் பயணப்பட வைத்தான் என்றும் இப்போதுதான் புரிந்தது. `சேரர்கள் எந்தெந்தக் குன்றுகளின் வழியே நுழைந்து பாதை உருவாக்க முயல்கின்றனர்?’ என்று பாரி சொன்னதாகத் தேக்கன் சொன்னபோது உதிரன் உறைந்துபோனான்.

கழுகின் மூக்கைப்போன்றது பாரியின் கவனிப்பு. கழுகு, வானுச்சியில் பறந்தாலும் நிலத்தில் கிடக்கும் பறவையின் வாடையை எளிதில் நுகர்ந்துவிடும். அதுபோலத்தான் பாரியும். எவ்வியூரில் இருந்தாலும் பறம்பு மலையின் எண்திசையிலும் நிகழும் மாற்றங்களைத் துல்லியமாகக் கவனித்துவந்தான்.



கூழையன் அனுப்பிய செய்தியும் பாரியின் அவதானிப்பும் ஒன்றுபோல இருந்தன. சேரன் ஏறிவர எல்லா வகைகளிலும் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிந்தது.

“இச்சூழலில் எவ்வியூரின் ஆசான் தேக்கன், பயிற்சிக்காகப் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு காடறியச் செல்ல வேண்டுமா? புதிய ஆசானை அனுப்பினால் என்ன?” என்று சிலர் கேட்டார்கள்.

``அதை முடிவுசெய்யவேண்டியது தேக்கன் தான்'' என்றான் பாரி.

தேக்கனோ, “அம்முடிவை சாமப்பூவின் அரும்பு துளிர்க்கும் முன் எடுத்திருக்க வேண்டும். எனக்கான வாசனையை அது வழங்கிவிட்டது. நான் அதன் அனுமதியை நுகர்ந்துவிட்டேன். பிள்ளைகளை அழைத்துக்கொண்டு காடறியும் எனது பயணத்தை இனி நிறுத்த முடியாது” என்றார்.

பழையனிடம் பகிர்ந்துகொள்ள நிறைய இருந்தன. பறம்பு நாட்டின் மிக மூத்த வீரனென்றால், அது வேட்டூர் பழையன்தான். பறம்பில் உள்ள ஊர்களின் நிலையும் தன்மையும் வீரர்களின் திறனையும் முழுமையும் அறிந்துள்ளவன் பழையன்தான். எனவே, அவனை இருக்கச் சொல்லி நாள்கணக்கில் பேசினான் தேக்கன்.

பழையனின் மனநிலை முற்றிலும் வேறானது. ``திட்டமிடல், முன்தயாரிப்பு இவற்றைக்கொண்டு நிகழ்த்தப்படும் போர்கள் அரச முறையைச் சார்ந்தவை. நாம் ஏன் அதுபோல் சிந்திக்க வேண்டும்? நமது போர்முறை முற்றிலும் வேறானது. அது போர் தொடங்குவதற்கு ஏற்ப வடிவம்கொள்ளக்கூடியது.

போர் என்பது, நிகழும் இடம், தன்மை, சூழல் இவற்றைக்கொண்டு நடத்தப்படுவதுதானே தவிர, வீரர்களைக்கொண்டு மட்டும் நடத்தப்படுவதல்ல. எனவே, அந்தக் கணத்தில் எடுக்கவேண்டிய முடிவை முன்கூட்டி எடுப்பது அறியாமையாகும்” என்றார் பழையன்.



``பேரரசுகளால் சூழப்பட்டுள்ளோம். நமது பாரம்பர்ய முறைப்படி நாம் போரிடுவோம். ஆனால், அவர்களின் போர் உத்திகளைக் கணித்து அதற்கு ஏற்ப ஆயத்தமாக வேண்டிய தேவையிருக்கிறது" என்று வாதிட்டார் தேக்கன்.

முன்தயாரிப்பின் வழியே போரை அணுகும் முறைக்கு பழையனால் பொருந்த முடியவில்லை. "இப்பணியைக் கூழையனிடம் ஒப்படைத்துவிடு. போர் தொடங்கிய பிறகு எனது பணியை முடிவுசெய்துகொள்ளலாம்" என்றான் பழையன்.
``நீ சொல்வதற்கும் நான் சொல்வதற்கும் இடையில் அதிக நாள் இல்லை" என்றான் தேக்கன்.

"இரண்டுக்கும் இடையில் ஒருநாள் இருந்தாலும், நான் ஏன் முன்கூட்டியே ஆயுதங்களைத் தூக்கிக்கொண்டு ஆற்றலை வீணாக்க வேண்டும்?"
பழையனோடு பேச்சில் மட்டுமன்று, எதிலும் வெல்ல முடியாது எனத் தேக்கனுக்குத் தெரியும். உண்மையில் தேக்கன் நடத்தும் போராட்டம் இந்த விடாப்பிடியான மனநிலையோடுதான். நன்கு திட்டமிட்ட போர்முறையை, எதுவுமில்லை என்று ஒதுக்கிவிட முடியாது. இயற்கையின் பல அமைப்புகள், திட்டமிட்ட ஒருங்கிணைப்பைக் கொண்டு தாக்குதல் தொடுக்கின்றன. இந்த எடுத்துக்காட்டை நாம் சொன்னால், இதற்கு மாற்றான ஓராயிரம் எடுத்துக்காட்டுகளை பழையன் சொல்வான். எனவே, மறுமொழியின்றி அமைதியானான் தேக்கன்.

ஆனால், சூழலில் இந்த அமைதி இல்லை.


**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-35

பாண்டரங்கத்தின் பணி முழுமையாக முடிந்தது. மேற்கூரையில் திசைவேழர் சொன்ன குறிப்பின் அடிப்படையிலான ஓவியம் மிகச் சிறப்பாக வரையப்பட்டுவிட்டது. மரச்சாரங்கள் அனைத்தையும் கழற்றிவிட்டுப் பார்க்கும்போது முன்பைவிட மிகத் துல்லியமான அளவுகளில் விண்மீன் கூட்டங்கள் ஒளிவீசின. வெள்ளியின் இருப்பிடம் மட்டுமல்ல, வரையப்பட்ட வானத்தில் கோள்கள் அனைத்தின் இருப்பிடங்களும் பொருத்தமாக இருந்தன. அந்துவன், பாண்டரங்கத்தின் எல்லா திசைகளிலும் நின்று மேற்கூரையைப் பார்த்துக்கொண்டே இருந்தான். 'நாம் கவனமாக வேலைசெய்யும்போதுதான், வேலை சிறப்பாக அமையும். ஆனால், நம்மையும் மீறி அதி சிறந்த இடத்தை அடைவது எப்போதாவதுதான் நிகழும். அதுதான் இப்போது நிகழ்ந்திருக்கிறது'.

மனமும் கண்களும் சலிப்படையும்வரை பார்த்தான். `பின் கழுத்துப் பிடித்துக்கொள்ளும்' என மற்றவர்கள் கூறியபோதும், அவன் அண்ணாந்து பார்த்து மகிழ்வதை நிறுத்தவில்லை. ஊன்றுகோலைத் தூக்கி வீசி ஆசான் ஏற்படுத்திய அவமானத்தைத் துடைக்க மனம் மேலெழுந்து கொண்டிருந்தது.

"ஆசானை அழைத்து வாருங்கள்" என்றான்.




பணியாள்கள் விரைந்தனர். தான் செல்லாமல் பணியாள்களை அனுப்பியதிலிருந்தே ஒரு செய்தியை அவன் சொல்ல முயன்றான்.

அறிவுச்செருக்கின் செயல்பாடு இதுவென ஆசானுக்குத் தெரியும். மாணவர்களிடம் அவர் எதிர்பார்ப்பது இதைத்தான். ஆனால், அவர் எதிர்பார்ப்புக்கு மாறாக நடந்துவிட்டால், விளைவு அப்படியே தலைகீழாக மாறிவிடும். அதன் பிறகு, வாழ்வில் மறக்க முடியாத நாளாக அது மாறும். இதை மாணவர்கள் அறிவர். எனவே, அறிவுச்செருக்கை வெளிக்காட்டி அவரை மகிழ்விக்கும் ஆபத்தைச் செய்ய யாரும் துணிய மாட்டார்கள். ஆனால், அந்துவன் துணிந்தான். மேற்கூரையில் பரந்துவிரிந்து கிடந்த வான்வெளி, அவனை ‘துணிந்து நில்’ எனச் சொல்லியது. ‘காலம் கைகூடும் கனவு இது!’ என அவனது மனம் துணிந்தது.
இந்தக் காலம் முழுவதும் தன்னோடு இருந்த தேவாங்குகளுக்கு நன்றி சொல்லும்வகையில் அந்தக் கூண்டுக்கு அருகில் வந்து அவற்றுக்குப் பிடித்த பல்லி முட்டையை உள்ளே உருட்டினான். வழக்கம்போல் சிறிது நேரத் தயக்கத்துக்குப் பிறகு இரண்டும் அந்த முட்டையை நோக்கி வந்தன. ஒன்று, அதை எடுத்துக்கொண்டு ஓர் ஓரத்தில் போய் உட்கார்ந்தது. இன்னொன்று, அவனைப் பாவமாகப் பார்த்தது. அடுத்த முட்டையை உருட்டிவிட்டான். இன்னொன்று அதை எடுத்துச் சென்றது. அதன் மகிழ்ச்சியைக் கவனித்தான். சற்றே மாறுபட்ட ஒன்று, அவன் கண்களில்பட்டது. அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல், அடுத்தடுத்த முட்டைகளை உருட்டிவிட்டான். அவை இரண்டும் எடுத்துத் தின்றன. முன்னர் அவன் கண்களில்பட்ட அதே செயல் மீண்டும் பட்டது. இது தற்செயலாக இருக்கும் என நினைத்தான். அடுத்தும் பல்லி முட்டைகளை உருட்டிவிட்டான். மீண்டும் அதுவே நடந்தது. அவன் சற்றே அதிர்ச்சியடைந்தான்.


`அப்படியிருக்காது’ என நினைத்தவன், பல்லி முட்டைகளை உருட்டுவதை நிறுத்திவிட்டு, சிறு கம்பு ஒன்றை எடுத்தான். அவ்வளவு நேரம் முட்டையைத் தின்ற அவற்றைக் குச்சிகொண்டு விரட்டினான். அவை  அஞ்சி உள்ளொடுங்கின. அப்போதும் அவற்றின் செயல் ஒன்றுபோலவே இருந்தது. மீண்டும் அவன் குச்சியை ஓங்கினான். உள்ளே போய் ஒண்டியவை, வேறு இடம் நகராமல் அங்கேயே பதுங்கின. அவன் குச்சியால் சற்றே அடித்து அவற்றைக் கலைத்தான். அவை கத்தியபடி அந்த இடம்விட்டு நகர்ந்து, கூண்டின் இன்னொரு பக்கம் வந்தன. அவன் கண்கள், நம்ப முடியாத ஒரு வியப்பைக் கண்டு கொண்டிருந்தன. ‘நான் காண்பது உண்மைதானா?’ என அவன் தன்னை மீண்டும் மீண்டும் கேட்டபடி அந்தச் சோதனையை நடத்திக்கொண்டே இருந்தான்.

பார்த்துக்கொண்டிருந்த பணியாளர்களுக்கு, என்ன நடக்கிறது என்பது புரியவில்லை. `மகிழ்ச்சியாக இருந்த இவர், திடீரென அந்த விலங்கை ஏன் இந்தப் பாடுபடுத்துகிறார்?’ எனப் புரியாமல் திகைத்தனர். ஆசானை அழைக்கச் சென்ற பணியாளன், `மூன்று நாழிகைக்குப் பிறகு வருவார்’ என்ற செய்தியோடு திரும்பியிருந்தான்.



அந்துவனோ, தேவாங்கின் மீதான சோதனையைக் கைவிடுவதாக இல்லை. அடித்தும் அச்சமூட்டியும் அவற்றை ஓடவிட்டுக்கொண்டே இருந்தான். ஒருநிலையில் பாண்டரங்கத்தின் வெளிக் கதவையும் மேல்மாடக் கதவுகளையும் பூட்டச் சொல்லிவிட்டு, கூண்டைத் திறக்கச் சொன்னான். பணியாளர்கள், கூண்டைத் திறந்து அவற்றை வெளியே விட்டனர். ஓங்கிய அவனது கம்பைப் பார்த்து அஞ்சி, அவை அரங்கின் எல்லா திசைகளிலும் ஓடின. அவன் அவற்றை விரட்டியபடி இருந்தான். அவற்றின் செய்கை, அவன் எண்ணத்தை உறுதிப்படுத்துவதாகவே இருந்தது. அவை கத்திக்கொண்டு தூண்களைப் பற்றி ஏற முயற்சித்தன. பிடி நழுவி விழுந்தன. சிறு சிற்பங்களின் மேல் ஏறி மறைய முயன்றன. அவன் விடுவதாக இல்லை. எல்லா திசைகளிலும் அவற்றை விரட்டினான். தன் கண் முன்னால் காண்பது உண்மை என்பதை அவன் முழுமையாக நம்பும்வரை, அவற்றை விரட்டிக் கொண்டே இருந்தான்.

பணியாளர்கள், என்ன நடக்கிறது எனப் புரியாமல் திகைத்துப்போய் நின்றனர். அவை கத்துவதும், பாவமாகப் பார்த்து அலைக்கழிவதும் அவர்களது மனதை உருக்கின. அந்துவனின் மனமோ மகிழ்வில் திளைத்தது. அவற்றின் ஒவ்வொரு துள்ளலிலும் அவன் கண்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தின.



‘இத்தனை நாள் இதை எப்படி நான் கவனிக்காமல் இருந்தேன்?’ என்று புலம்பியவாறே “இதைப் பிடித்துக் கூண்டில் அடையுங்கள். நான் போய் ஆசானை உடனடியாக அழைத்துவருகிறேன்” என்று சொல்லி புறப்பட்டான்.

திசைவேழரின் தென்திசை மாளிகையின் முன் வந்து இறங்கினான் அந்துவன். வேலையாள்கள், அவன் குதிரையை வாங்கிக்கொண்டனர். உள்ளே நுழைந்தான். தொலைவிலேயே அவன் வருவதைப் பார்த்துவிட்டார் திசைவேழர். ‘அறிவுச்செருக்கு சரிந்துவிட்டது’ என அவரது மனம் சொன்னது.
‘இன்னொரு முறை பாண்டரங்கத்தில் பிழை நிகழ்த்தியிருக்கிறான். நான் சொல்லி அனுப்பிய நேரத்துக்குள் பதற்றமாகி அவனே வந்துள்ளதன் காரணம், வேறு என்னவாக இருக்க முடியும்?’ என்று எண்ணியபடியே அவனை உள்ளே அழைத்தார்.

“உடனடியாகப் புறப்பட்டு வரவேண்டும்” என்ற வேண்டுகோளை முன்வைத்தான்.

அவர் எந்தவிதக் காரணமும் கேட்கவில்லை. சற்று நேரத்தில் புறப்பட்டார். அவர் காரணம் கேட்காதது குறித்து, அந்துவன் கவலைகொள்ளவில்லை. அவர் புறப்படும்வரை காத்திருந்து அவரை அழைத்துவந்தான்.
பாண்டரங்கத்துக்குள் இருவரும் நுழைந்தனர். வழக்கம்போல் அவர் மாளிகையின் நடுவில் நின்று, அண்ணாந்து மேற்கூரையைப் பார்த்தார். அவர் நினைத்ததைவிட மிகச் சிறப்பாக அது வரையப் பட்டிருந்தது. அந்துவனைப் பாராட்டலாம் என நினைத்துத் திரும்பியபோதுதான் கவனித்தார். அவன் அருகில் இல்லை. சற்று தொலைவில் தூண்களுக்குப் பக்கத்தில் இருந்த தேவாங்குகளின் கூண்டுக்கு அருகில் நின்றிருந்தான்.

“என்ன அங்கே நிற்கிறாய்?”
“நான் உங்களைக் காண வருமாறு அழைத்தது,  இந்த விலங்கைப் பார்க்கத்தான்.”

“என்ன இது?”

`இதன் பெயர் தேவாங்கு’ எனச் சொல்ல வாயெடுத்தவன், “இயற்கையின் அதிசயம்” என்றான்.

`என்ன சொல்கிறான் இவன்?’ என்று சிந்தித்தபடியே கூண்டருகில் வந்து, உற்றுப்பார்த்தார்.  அவை உள்ளொடுங்கி நின்றன.

“இது ஒரு வானியல் விலங்கு” என்று சொல்லியபடி, கையில் இருந்த குச்சியை அவரின் கையில் கொடுத்தான்.

அவர் அதைக்கொண்டு கூண்டுக்குள் இருந்தவற்றைச் சற்றே தொந்தரவு செய்தார். அவை இங்கும் அங்குமாக நடந்து அலைமோதின. அவற்றின் கண்கள், உடல்வாகு, காது விடைக்கும் தன்மை என எல்லாவற்றையும் உற்றுக் கவனித்தபடியே இருந்தார். அவருக்குப் புதிதாக எந்த ஒன்றும் தெரியவில்லை.

“என்ன புதிதாய்க் கண்டாய்?”

“உங்களின் கண்களுக்கு எதுவும் புலப்படவில்லையா?”

அவன் கேட்பது திசைவேழருக்கு சற்றே அதிர்ச்சியாக இருந்தது. வழக்கமாக, மாணவர்களிடம் அவர் கைக்கொள்ளும் முறை இது. `என் சொற்கள், என்னிடமே திரும்ப வருகின்றன’ என்று சிந்தித்தபடியே அந்த விலங்கை உற்றுப்பார்த்தார். மாறுபாடுகள் எதுவும் கண்ணில் படவில்லை. சற்றே திரும்பி அந்துவனைப் பார்த்தார்.

அந்துவன் சொன்னான், “அவை எந்தத் திசைநோக்கி உட்காருகின்றன பாருங்கள்.”

திசைவேழர் அவற்றைக் கூர்ந்து கவனித்தார். அவை வடக்கு திசை நோக்கி உட்கார்ந்திருந்தன. தன் கையில் இருந்த குச்சியால் அவற்றைச் சீண்டினார். அவை எழுந்து இன்னொரு பக்கம் சென்று வடக்கு திசை நோக்கி உட்கார்ந்தன. மீண்டும் விரட்டினார். மீண்டும் அவை அவ்வாறே உட்கார்ந்தன. கூண்டைத் திறக்கச் சொல்லி வெளியே விரட்டினார். பாண்டரங்கம் முழுவதும் அவை சுற்றிச் சுற்றி வந்தன. ஆனால், எப்போதெல்லாம் தரையில் உட்கார்ந்தனவோ, அப்போ தெல்லாம் அவை வடக்கு திசை நோக்கியே உட்கார்ந்தன.

திசைவேழர் அதிர்ந்துபோனார். ``நான் காண்பது உண்மையா?” என்றார்.

``உண்மை ஆசானே! பலமுறை பரிசோதித்துவிட்டேன். இந்த விலங்கு இயற்கையின் அதிசய ஆற்றல் ஒன்றை தன்னகத்தே கொண்டுள்ளது” என்றான் அந்துவன்.

“என் கண்களை நம்ப முடியவில்லையே!’’ என்று கூறியபடி அவற்றின் பின்னால் ஓடினார். அவை இயல்பாக உட்காருவதைக் கவனித்தார். விரட்டினால் பதற்றமடைந்து உட்காருவதைக் கவனித்தார். எப்போது உட்கார்ந்தாலும் அவை வடக்கு திசை நோக்கியே உட்கார்ந்தன. அவை உட்காரும்போதெல்லாம் அவரது மனம் வியப்பிலும் மகிழ்விலும் துள்ளியது. “என் கண்கள் பொய்யேதும் சொல்லவில்லையே!” என்று அந்துவனைப் பார்த்துக் கேட்டார்.

அந்துவன் சிரித்தான்.

“நீ என் தலை மாணாக்கன் என்பதை மீண்டும் மெய்பித்துவிட்டாய்” என்று சொல்லியபடி வாரி அணைத்தார் அந்துவனை. அவரது சொல், வரையப்பட்ட வான் மண்டலம் முழுவதும் எதிரொலித்தது. இளமருதனுக்கு, என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. ``ஆலோசனை மாடத்துக்கு என்னை அழைத்துச்சென்று தேவாங்கைப் பற்றி இவ்வளவு கேள்விகள் ஏன் கேட்க வேண்டும்? நான் செய்த பிழை என்ன? பாண்டரங்கத்திலிருந்து தேவாங்கின் கூண்டை நான் வெளியே எடுத்தபோது

அந்துவன்தானே `உள்ளேயே இருக்கட்டும்' எனச் சொன்னார். இப்போது அதில் என்ன பிரச்னை?” என்று மாடத்தின் வெளியே நின்று புலம்பினான். சற்று நேரம் கழித்துத்தான் செய்தி தெரிந்தது, `வெங்கல்நாட்டு சிறுகுடி மன்னன் மையூர்க்கிழாரை அழைத்துவரச் சொல்லி அரண்மனையிலிருந்து ஆள் அனுப்பட்டுள்ளது' என்று. இளமருதன் இன்னும் பதறிப்போனான். தன்னைப் பெரிய இடரில் யாரோ மாட்டிவிட்டுவிட்டார்கள் என அஞ்சினான். தேவாங்கின் முகம் நினைவுக்குவந்தது. அதனுடைய பயம் தன்னிடம் ஒட்டிக்கொண்டதோ எனத் தோன்றியது.

ஆலோசனைக் கூடத்துக்குள் பேரரசர், சூல்கடல் முதுவன், திசைவேழர், இளவரசர், தலைமை அமைச்சன் முசுகுந்தர், அந்துவன் ஆகியோர் இருந்தனர். மனம் நம்ப மறுக்கிற ஒன்றைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசியும் கண்களால் பார்த்தும் நம்பத் துணிந்தனர்.

பொன்பூச்சுக்கொண்ட உள்ளரங்கில் பேரரசர் அமரும் இடம்தனில் மிதித்து, நின்று, உட்கார்ந்து கடந்தது தேவாங்கு. அதை ஓடவிட்டும் உட்காரவிட்டும் பார்த்துக்கொண்டே இருக்க மீண்டும் மீண்டும் முயன்றனர். அதைவிட்டு பார்வையை விலக்காமலேயே முசுகுந்தர் கேட்டார் “இந்த விலங்கு வேறு இடத்திலும் இருக்குமல்லவா?”

திசைவேழர் சொன்னார், “பொதியமலையில் உண்டு. நானே பார்த்திருக்கிறேன். ஆனால், குறிப்பிட்ட திசை நோக்கி உட்காரும் தன்மை அதற்கு இல்லை.”



“இதற்கு மட்டும் இருப்பதற்குக் காரணம்?’’

“இது ஒரு மரத்து விலங்கு. குறிப்பிட்ட மரத்தில் மட்டுமே இந்த விலங்கு கூட்டமாகத் தங்கி உயிர்வாழும். பறம்புமலையில் இந்த விலங்கு இருந்த அந்த மரத்தின் அமைப்பு இந்தப் பழக்கம்

உருவாகக் காரணமாக இருந்திருக்க வேண்டும். பல நூறு தலைமுறைகளாக அந்த இடம் இருப்பதால், இந்தப் பழக்கத்துக்கு ஆளாகியிருக்கும்” திசைவேழரின் விவரிப்பு, மேலும் வியப்பைக் கூட்டியது.

“அந்த மரத்தில் எத்தனை தேவாங்குகள் இருக்கின்றன என்ற செய்தி ஏதேனும் உண்டா?”

“திருமணத்துக்கு வந்துள்ள பாணர்களிடம் விசாரித்ததில் பலநூறு தேவாங்குகள் அந்த மரத்தில் உண்டு” என்று அந்துவன் சொன்னான்.

தேவாங்கையும் அதன் எண்ணிக்கையைப் பற்றிய செய்தியையும் அறிந்ததிலிருந்து பொதியவெற்பனுக்கு மகிழ்வு தாங்க முடியாத அளவு இருந்தது. தன் திருமணத்தை முன்னிட்டு நடந்த ஓர் உரையாடலின் தொடர்ச்சியாக இப்படி ஒன்று கண்டறியப்பட்டுள்ளது என்று அவன் மனம் கூத்தாடியது.

சூழ்கடல் முதுவனுக்கோ அதிர்ச்சியும் மகிழ்ச்சியும் திக்குமுக்காடச் செய்தன. தான் காண்பது உண்மையா என்பதை நம்ப, அவர்தான் அதிக நேரம் எடுத்துக்கொண்டார். திசைவேழர் போன்ற பெரும்வானியல் அறிஞன் சொல்லும்போது ஐயப்படுவது அழகன்று. ஆனாலும் இப்படியொரு செயலை மனம் எளிதில் நம்பிவிடுவதில்லை.

அதன் முழு நடவடிக்கையையும் பார்த்துவிட்டு, சூழ்கடல் முதுவன் ஒற்றைவரியில் சொன்னான், “இனி, கடல் வணிகத்தை நாம் ஆளலாம்.”

இந்தச் சொல்லைச் சொன்னதும், பேரரசர் அவரைக் கட்டி அணைத்தார். ``முன்னர் நடந்த கூட்டங்களில் கடல் கண்டு அஞ்சிவந்த தங்களின் சொற்கள், இப்போது முற்றிலும் மாறிவிட்டன. இந்தத் திருமணம் பல புதிய வாய்ப்புகளை நமக்கு உருவாக்கும் என நான் உறுதியாக நம்பினேன். ஆனால், அந்த வாய்ப்பு இவ்வளவு சிறந்ததாக இருக்கப்போகிறது என நான் எதிர்பார்க்கவில்லை” என்றார் பேரரசர்.

சூழ்கடல் முதுவன் சொன்னான், “என் வாழ்வில் இன்று அடைந்துள்ள வியப்பும் மகிழ்வும் கலந்த ஓர் உணர்வை இதுவரை அடைந்ததில்லை. திசை அறிய முடியாமல் எவ்வளவு இழப்புகளை நாங்கள் கண்டுள்ளோம். எத்தனை மனிதர்கள், கப்பல்கள், பொருள்களை எல்லாம் கடல் கொண்டுபோனது. திசையைத் தவறவிட்டதால்தான் என் இரண்டு மகன்களையும் பறிகொடுத்தேன். கடல் பயணத்தில் திசையறிதல் என்பது, கடலை வெல்வதற்கு இணையானது. இது தேவாங்கன்று; உண்மையில் இதுதான் தேவவாக்கு விலங்கு” என்று சொல்லி, அதைத் தொட்டுத் தூக்கிக் கொஞ்சினார்.

இரவு நெருங்கிக்கொண்டிருந்தது. வெளியே உட்கார்ந்திருந்த இளமருதனுக்கு நேரம் ஆக ஆக பதற்றம் கூடிக்கொண்டேபோனது. சிறிது நேரத்தில் செவியன் அங்கு வந்து சேர்ந்தான். காலையில் திசைவேழர் இந்த உண்மையைக் கண்டறிந்த பிறகு, முதலில் பேரரசரிடம் சொல்லியுள்ளனர். பிறகு,

இளவரசனையும் முசுகுந்தரையும் அழைத்துக் காண்பித்திருக்கின்றனர். அதன் பிறகுதான் சூழ்கடல் முதுவனுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். இடைப் பட்ட நேரத்தில் இது தொடர்பானவர்களைத் தனித்தனியே அழைத்து விசாரித்துள்ளனர்.



செவியனும் விசாரிக்கப்பட்டான். இந்த விலங்கைப் பற்றி அவனுக்குத் தெரிந்ததை யெல்லாம் அவன் சொல்லியுள்ளான். அதன் பிறகுதான் மையூர்கிழாரை அழைத்துவர ஆள் அனுப்பப்பட்டது. இவை எல்லாம் ஏன் நடக்கின்றன என்பது அவனுக்கு விளங்கவில்லை. `இளமருதனைக் கண்டு என்ன நடந்தது எனக் கேட்டுப் போகலாம்' என்று வந்துள்ளான். இளமருதனோ பதற்றத்தில் நடுங்கிப் போயிருந்தான். “நான் அந்துவனிடம் ஒப்படைத்துவிட்டுப் போனதோடு சரி. அதற்குப் பிறகு என்ன நடந்ததென்றே தெரியவில்லை” என்றான்.

செவியனுக்கும் மிகவும் குழப்பமாக இருந்தது. “அரண்மனை நிர்வாகத்தை நன்கு அறிந்தவர்தானே நீங்கள். உங்களுக்கும் இதற்கான காரணம் புரியவில்லையா?” எனக் கேட்டான் இளமருதன். ``என்னால் எதுவொன்றையும் தொடர்பு படுத்தவே முடியவில்லை. ஒரே ஒரு செய்தி கேள்விப்பட்டேன். ஆனால், அதற்கு இவ்வளவு நாள் கழித்து ஏன் விசாரிக்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை” என்றான்.

“என்ன செய்தி அது?”

``நாம் அன்று நள்ளிரவுக் கோட்டைக்குள் நுழைந்தோமல்லவா, அப்போது கதவைத் திறந்தவிட்ட யானை மதம்பிடித்து கோட்டைத் தளபதியைக் கொன்றுவிட்டது. இந்தச் செய்தி வெளியே யாருக்கும் தெரியாது. திருமணக் காலத்தில் தலைநகருக்குள் நிகழ்ந்த மரணம் என்பதால், வெளியே தெரியாமல்

எல்லா வற்றையும் முடித்துவிட்டார்கள். அது தொடர்பாகக் கோட்டைவாசலில் பாதுகாப்பில் இருந்த வீரர்கள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அப்போது ஒருவன் மட்டும் சொல்லியிருக்கிறான், ‘பார்க்கவே அருவருப்பாக இருந்த ஒரு விலங்கை உள்ளே எடுத்துவந்தனர். அதைக் கண்ட பிறகுதான் அந்த யானை மிரட்சிக்குள்ளானது’ என்று.”

இளமருதன் நடுங்கிப்போனான்.

செவியன் சொன்னான், “அப்போது நடந்ததற்கு, இப்போது ஏன் விடாமல் விசாரிக்கின்றனர் என்பதுதான் புரியவில்லை.”

இருவரும் என்ன செய்வதென்று தெரியாமல் உட்கார்ந்திருந்தனர். நீண்ட நேரம் கழித்து, சக்கரவாகப் பறவையைக் கொண்டுவரப் பயன்படுத்தப்படும் பொற்பல்லக்கு ஒன்றை, பணியாளர்கள் மாளிகைக்குள் தூக்கிச் சென்றனர். இதை ஏன் தூக்கிச் செல்கின்றனர் என்பது தெரியாமல் விழித்த செவியன், தனக்கு நன்கு தெரிந்த அரண்மனைப் பணியாளனிடம் தனியே போய் விசாரித்தான். “ஏதோ புதிய விலங்கொன்று வந்திருக்கிறதாம். அதை வைக்க” என்றான் அவன்.

அதிர்ச்சியானார்கள் இரண்டு பேரும். ``அன்று சக்கரவாகப் பறவையின் கூண்டு வைக்கப்படும் மேடையின் மீது இதை வைத்ததற்குத்தான் அந்துவன் அவ்வளவு கோபப்பட்டான். `தூக்கி வீசிவிடுங்கள்’ என்றான். இன்றோ சக்கரவாகப் பறவை கொண்டுவரப்பட்டப் பொற்பல்லக்கை இதற்குக் கொண்டுபோகின்றனர். என்ன நடக்கிறது?”

செவியன் சொன்னான், “இளமருதா, இது நீ அச்சம்கொள்ளவேண்டிய நிகழ்வன்று. வேறு ஏதோ முக்கியமானதொரு நிகழ்வு.”

அப்போதுதான் இளமருதனுக்குத் தோன்றியது, ‘பாரிக்கு தேவவாக்குச் சொல்லும் விலங்கு. இதன் சிறப்பைச் சொல்லி நாம் அல்லவா பேரரசரிடம் பாராட்டைப்பெற வேண்டும் என்று இருந்தோம். இப்போது யாரோ உள்ளே புகுந்து நாம் அடையவேண்டிய நற்பெயரை அவர்கள் அடையப்பார்க்கின்றனர். இதை விடக் கூடாது.அடுத்து நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதே முக்கியம்.’



“இந்தத் திருமணத்துக்கு எல்லோரும் வந்திருக்கின்றனர். சேரனுக்கும் சோழனுக்கும் செய்தி சொல்லும் எண்ணற்றோர் இந்த விழாவுக்கு வந்துள்ளனர். அதேபோல யவனர்களின் பெரும்தளபதிகள் இங்கு வந்துள்ளனர். எனவே, இதைப் பற்றிய செய்தி எதுவும் வெளியே தெரியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்” என்றார் முசுகுந்தர்.

“சரி, அந்த விலங்கை, பறம்பு மலையிலிருந்து கொண்டுவர வழி என்ன?” எனக் கேட்டான்

பொதியவெற்பன்.

இவ்வளவு நேரம் அளவற்ற மகிழ்சியில் நடந்துகொண்டிருந்த ஓர் உரையாடல் சற்றே இறுக்கமாக மாறத் தொடங்கியது.

``நாம் ஒரு குழுவை அனுப்பி பாரியிடம் பேசி, அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்” என்றார் சூழ்கடல் முதுவன்.

“வணிகப் பேச்சுக்காகப் போன கோளூர் சாத்தனின் கதை, உங்களுக்கு தெரியாதா?” எனக் கேட்டான் பொதியவெற்பன்.

“கேள்விப்பட்டேன். ஆனால், அதற்கும் இதற்கும் நிறைய வேறுபாடு உண்டல்லவா? இது மிகவும் வியத்தகுத்தன்மைகொண்ட விலங்கு. கடல் பயணத்தில் இது அபாரமான ஆற்றலைத் தரவல்லது. நமது வணிக வலிமையை இது பல மடங்கு உயர்த்தக்கூடியது. இதை எடுத்துச்சொல்லி, `இதற்கு ஈடாக நல்லதொரு பரிமாற்றத்துக்கு பாண்டியநாடு தயாராக இருக்கிறது’ எனச் சொன்னால், பாரி ஏற்பான் என்றே நினைக்கிறேன்” என்றார் சூழ்கடல் முதுவன்.




“பறம்புநாட்டின் மீது ஓரளவு நெருக்கமாக இருந்தவர்கள் குட நாட்டினர்தான். ஆனால், அவர்களின் அமைச்சகன் வணிகம் பேசப்போனதற்கே கைகளை வெட்டி அனுப்பி யுள்ளான். பாண்டியநாட்டுத் தூதுவர்கள் போனால் உள்ளேயே அனுமதிக்க மாட்டான். அதை மீறி உள்ளே போனால், அவர்கள் திரும்பி வர மாட்டார்கள்.”


“அப்படியென்றால் இதற்கு என்ன வழி?” எனக் கேட்டார் சூழ்கடல் முதுவன்.

“தளபதி கருங்கைவாணனை வரச்சொல்லி உத்தரவிடுங்கள்” எனப் பேரரசரை வேண்டினான் பொதியவெற்பன்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்..**

# வீரயுக நாயகன் வேள்பாரி-36

**தே**வாங்கைக் கொண்டுவருதலுக்கான பேச்சுகள் அனைத்தும் பறம்பின்மீது படையெடுப்பதைப் பற்றிய பேச்சாகவே முடிகின்றன. அதுவன்றி வேறுவழிகளைப்பற்றி அக்கறையோடு விவாதித்தனர் முசுகுந்தரும், சூல்கடல் முதுவனும். அதே கருத்துதான் திசைவேழருக்கும். ஆனால், இவர்களால் மாற்றுவழியைச் சொல்ல முடியவில்லை. எனவே, எல்லா உரையாடல்களும் இயல்பாகக் கருங்கைவாணனிடம் போய் முடிந்தன.




கருங்கைவாணனும் பொதியவெற்பனும் குரல் உயர்த்திப் பேசுவதற்கான வாய்ப்பை இவை வழங்கின.

“பாரி இவ்விலங்கை வைத்து என்ன செய்யப்போகிறான்? நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடையிலிருந்து பழம் பொறுக்கத்தான் பயன்படுத்துவான் என்றால், அது எவ்வளவு பெரிய அறியாமை. நாம் அவனிடம் எடுத்துச் சொல்லலாம். இவ்விலங்கின் வலிமை, கடலில்தான் இருக்கிறது. கடற்பயணத்தில் காற்றை வெல்லவும் கரையைச் சொல்லவும் ஆற்றல்கொண்ட ஒன்றை அதற்குரிய இடத்தில் பயன்படுத்துதலே முறை, இதனை உரியவர் மூலம் பாரியிடம் சொல்லவைப்போம்” என்று வாதிட்டார் முசுகுந்தர்.

“உரியவர் என்றால் யார்?”

“வழக்கம்போல அரசு அமைச்சர்களை அனுப்பாமல், பாரி பெரிதும் மதிக்கிற மனிதர்களை அனுப்பிவைப்போம்.”

“நீங்கள் யாரைச் சொல்கிறீர்கள்?”

“கபிலர் போன்ற பெரும்புலவர்களை அனுப்பிப் பேசச்சொல்லலாம் என்கிறேன்.”

“பெரும்புலவர் கபிலர் எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை. திருமணத்துக்கே இன்னும் வந்து சேரவில்லையே. அவரை எங்கே போய்த்தேடுவது?”

“அது ஒன்றும் கடினமான செயல் அல்ல; நாம் நினைத்தால், அவரைக் கண்டடைந்துவிடலாம்.”

“ஆனால், அதற்கு மாதக்கணக்கில் ஆகும். அதுவரைப் பொறுத்திருக்க முடியுமா?”

பேச்சின் போக்கு பொதியவெற்பனுக்குப் பிடிக்கவில்லை.  உரையாடல்களைப் பெரும்பாலான நேரங்களில் உணர்வுகளே முடிவுசெய்கின்றன. பொதியவெற்பன் உணர்வின் கொந்தளிப்பில் இருந்தான். பொதுவாகத் திருமணக் காலங்களில் போர்தொடுத்தல் விரும்பத்தக்கதல்ல. ஆனால், இப்பொழுது உள்ள சூழல் இத்திருமணமே போரின் வாசலை வேகமாக திறந்துவிடுவதாக இருக்கிறது.

பேரரசர் குலசேகரப்பாண்டியனின் ஆற்றலே, தன்னைச் சுற்றியுள்ளவர்கள் எவ்வளவு வலியுறுத்திச் சொன்னாலும், அதன் உள்ளுண்மையை  மட்டுமே கண்டுணரும் அறிவுதான். அதனால், பொதியவெற்பன் எவ்வளவு குரல்கொடுத்தும் அவர் ஏற்றுக்கொள்வதற்கானச் செய்திகள் கிடைக்காமலே இருந்தன.

பொதியவெற்பன் சொன்னான், “படைகளைப் பெருக்குதல், பிறவேந்தர்களை திறைசெலுத்தச் செய்தல், பகைவரை அழித்தல், நிலப்பகுதியை மேன்மேலும் அதிகப்படுத்துதல், குடிகளை நன்கு காத்தல் இவைகளே அரச நியதி. இந்நியதியை நிலைநாட்டியே நமது முன்னோர்கள் இப்பேரரசைக் கட்டியெழுப்பினர். நாம் அவ்வழிச் செல்லுதலே முறை.”

பொதியவெற்பன் ஒருவகையில் பேரரசரை சீண்டும் வேலையைத் தொடங்குகிறான் எனத் தலைமை அமைச்சருக்குப் புரிந்தது. ஆனால், பேரரசர் எடுக்கவேண்டிய முடிவில் தெளிவாக இருப்பார் என்று யாவருக்கும் தெரியும்.


அவர் உரையாடலின் தன்மையைக் கூர்ந்து கவனித்தபடி இருந்தார். திருமணவிழாக் கொண்டாட்டம் பெருகியபடி இருந்தது. ‘மணவிழாவின் மிக முக்கிய நிகழ்வான மலரணிதல் சடங்கு இன்னும் சில நாழிகைகளில் நடக்க இருக்கிறது. நமது மனநிலையை வேறு ஒன்று ஆட்சி செய்கிறது. இதுவோர்

அரிய வாய்ப்பு. கடல் வணிகத்தில் பிற பேரரசுகளை வெல்லுவது மட்டுமல்ல, யவனர்களையே நம்மைக்கண்டு மிரளச்செய்யலாம். கிழக்குக் கடலையும் மேற்குக்கடலையும் நமது கப்பல்கள் ஆளும். அது நமது அரசியல் வலிமையை மேலும் பலமடங்கு அதிகப்படுத்தும். இதனைப் பிறர் அறியாமல் செய்யும்முறையே சிறந்தது. போர்தொடுத்தல் இக்காரணத்தை வெளிப் படுத்தும். அதன் இறுதி அழிவில் அவ்விலங்கினங்களேகூட அழிந்துவிடும் ஆபத்தும் உண்டு. எனவே, சற்று நிதானமாகச் சிந்தித்து முடிவு செய்யவேண்டும்' என்று நினைத்தார்.

வெங்கல் நாட்டு சிறுகுடி மன்னன் மையூர்கிழார் வரும்வரை முடிவெடுப்பதைத் தள்ளிப்போட்டார்.

ஆறுநாட்களுக்குப் பின் மையூர்கிழார் வந்து சேர்ந்தார். மறுநாள் காலைச் சிற்றரங்கிற்கு அவர் அழைத்துவரப்பட்டார். கையில் காராளி செய்த காமன் விளக்கோடு வந்தார். பேரரசரைப் பார்த்ததும் அதனை அவரிடம் கொடுத்து அதன் சிறப்பைச் சொல்ல வேண்டும் என்று விரும்பினார்.

மலரணியும் நிகழ்வுக்குப் புறப்படத் தயாராயிருந்த பேரரசருக்கு மையூர்கிழார் வந்துள்ள செய்தி சொல்லப்பட்டது. உடனே சந்திக்க ஏற்பாடானது. அவர் அளித்த காமன்விளக்கைப் பெற்றுக்கொண்டார். அதன் சிறப்பை விளக்கிச்சொல்வதற்கான சூழல் வாய்க்கவில்லை. பாண்டரங்கத்தில் வைக்கவே தனிக்கவனம் செலுத்திச் செய்தது என்று மட்டுமே சொல்லமுடிந்தது.



கருங்கைவாணன் நேரடியாகப் பேச்சைத் தொடங்கினான். பறம்பின் மீது போர் தொடுப்பது பற்றிய வினாக்கள் அவரின் முன் வைக்கப்பட்டன.

முற்றிலும் எதிர்பாராத கேள்வியை எதிர் கொண்டு திகைத்துப்போனார். மணவிழாவுக்குத் தான்

முன்கூட்டியே அழைக்கப்பட்டுள்ளோம் என நினைத்துப் பெருமகிழ்வோடு வந்த அவருக்கு இக்கேள்வி பெருங்கலக்கத்தை உருவாக்கியது. பாண்டிய நாட்டின் கடைசி எல்லை வெங்கல் நாடு. அதனை அடுத்து பச்சைமலைத்தொடர் தொடங்குகிறது. எனவே இப்போரில் வெங்கல்நாடு முக்கிய பங்காற்ற வேண்டியிருக்கும். ஆனால், இவ்வளவு அவசரமாக திருமணக்காலத்தில் போர்புரிதல் பற்றிப் பேசவேண்டிய தேவை என்ன என்பது அவருக்கு விளங்கவில்லை.

அவர் அதிர்ச்சியடைவார் என்பது எதிர்பார்த்த ஒன்றுதான். எனவே, மற்றவர்கள் அவரின் அதிர்ச்சியைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. பேரரசரின் முன் நடக்கும் கலந்துரையாடல்களில் வினா எழுப்புவதற்கான இடமில்லை. தன்னை நோக்கி எழுப்பப்படும் வினாவிற்கான விடையைப் பணிவோடு முன்வைக்க மட்டுமே அனுமதியுண்டு.

மையூர்கிழாருக்குச் சூழல் பிடிபடவே நேரமானது. போரின் தேவை பற்றித் தெரிந்துகொள்வது நமது வேலையல்ல, போரின் தன்மை பற்றி தனது அறிவுக்குப்பட்டதைச் சொல்லிவிடுவோம் என்ற முடிவுக்கு வந்தார்.
தளபதி கருங்கைவாணன் கேட்டான், “பறம்பு நாட்டில் மொத்தம் எத்தனை ஊர்கள் உள்ளன?”

“நானூறுக்கும் மேல் இருக்கும் என்று நினைக்கிறேன்.”

``மலையில் அமைந்துள்ள ஊரின் பரப்பும் மக்களின் எண்ணிக்கையும் மிகக்குறுகிய அளவுதானே இருக்கும்.’’

“ஆம்” என்றார் மையூர்கிழார்.

“ஆண், பெண், குழந்தைகள் என எல்லாம் சேர்த்து பறம்புநாட்டில் எவ்வளவு பேர் இருப்பார்கள்?”

‘இவ்வினாவிற்கு எப்படி விடை சொல்லமுடியும். பறம்பு நாட்டின் ஓர் ஊரைக்கூட நான் கண்களால் பார்த்ததில்லை. ஒருசில மனிதர்களை மட்டுமே பார்த்துள்ளேன். பின் எப்படி இதற்கு விடை சொல்வது?’ என்று தயங்கிக்கொண்டிருக்கையில் கருங்கைவாணன் சொன்னான். “பாண்டியப் பேரரசின் நிலைப்படையின் எண்ணிக்கையில் பாதிகூட பறம்புநாட்டு மக்களின் எண்ணிக்கை இருக்காது.”

தளபதி சொல்லும் கணக்கு சரியாக இருக்கவே வாய்ப்புள்ளது. ஏனென்றால், பாண்டிய நாட்டு நிலைப்படையின் வலிமை அப்படி. இந்தக் கணக்குச் சொல்லப்படுவதற்கான காரணம் எல்லாரும் அறிந்ததே. ஆனால், போர் என்பது எண்ணிக்கையால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. அதைப் பேரரசர் அறிவார். எனவேதான் தளபதியின் சொல்லைவிட மையூர்கிழாரின் சொல்லை அவர் மிகக்கூர்மையாகக் கவனித்து வந்தார்.
மிக உறுதியாக முன்வைக்கப்படும் தளபதியின் வார்த்தையை எதிர்கொள்ளமுடியாமல்

அமைதிகாத்தது அவை. தலைமை அமைச்சர் முசுகுந்தர் என்ன சொல்லப்போகிறார் என்று மற்றவர்கள் எதிர்பார்த்திருந்தனர். இதற்குமேல் போர் அற்ற ஒரு பேச்சுக்கான இடம் அங்கு இல்லை என்பது அனைவரும் அறிந்ததனால் அமைதி நீடிக்கவே செய்தது.

தளபதியிடமிருந்த உறுதியும் நம்பிக்கையும் பொதியவெற்பனின் முகத்தில் மகிழ்வாய் எதிரொலித்தது. மற்றவர்களும் அதனைக் கவனித்தபடி இருந்தனர். இந்நிலையில் "நீ சொல்ல வருவதென்ன?" என்று மையூர்கிழாரைப் பார்த்து பேரரசர் கேட்டார்.

மையூர்கிழாரின் முகக்குறிப்பறிந்து பேரரசர் கேட்கிறார் என்றுதான் எல்லோரும் நினைத்தனர். ஆனால், தலைதாழ்த்தி நின்றிருந்த மையூர்கிழாருக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. ஆனால், தான் எதையோ சொல்லவேண்டுமென்று பேரரசர் விரும்புகிறார் என்பது மட்டும் புரிந்தது.

சின்னச் செருமலோடு பேசத்தொடங்கினார் மையூர்கிழார். ``நான் நேற்று வந்ததில் இருந்து பலவற்றையும் தெரிந்துகொண்டேன். என் மகன் இளமருதன் சற்றே பதற்றத்தில் இருந்தான். அழைத்துவந்த செவியனிடமும் விசாரித்தேன். ஆளுக்கு ஒன்றாய்ச் சொன்னார்கள். ஆனால், அவர்கள் சொன்னதற்கும் உள்ளே நடக்கும் நிகழ்வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று முதலில் தோன்றியது. இப்பொழுதோ தொடர்பு இருக்குமெனத் தோன்றுகிறது."

மையூர்கிழார் சொல்வது சற்றே குழப்பமாய் இருந்தது.

"நீ எதைச்சொல்ல வருகிறாய்?" எனக்கேட்டார் முசுகுந்தர்.

"மதங்கொண்ட யானையை நீங்கள் கையாண்ட முறையை" என்றார் மையூர்கிழார்.

அதிர்ந்துபோனார் முசுகுந்தர். `பேரரசருக்குத் தெரியாமல் நடந்த ஒன்றை இப்படி அவையில் போட்டு உடைத்துவிட்டானே?'

"எந்த மதயானை? என்ன நடந்தது?" வியப்புற்ற குரலில் இருந்தது பேரரசரின் கேள்வி.

முசுகுந்தர் நடந்ததை விளக்கிச் சொன்னார். "திருமணக்காலத்தில் இப்படியொரு தீய நிகழ்வு தங்களுக்குத் தெரியவேண்டாம் என்பதால், இதனை சற்று மறைவாக விசாரித்து முடித்தோம்" என்றார்.

"எனக்குத் தெரியாது என்று எப்படி நீ நம்பினாய்?" எனக் கேட்டார் பேரரசர்.

"பேரரசருக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை என்பதை நான் அறிவேன். ஆனால், இது ஒற்றர்களின் மூலம் மெல்லிய குரலில் உங்கள் காதுகளில் பட்டும்படாமலும் விழவேண்டிய செய்தி


என்று நான் நினைத்தேன். அதனால்தான் நான் உங்களிடம் தெரிவிக்கவில்லை.”

முசுகுந்தரின் விடை பேரரசருக்கும் அவருக்குமிருந்த ஆழ்ந்த புரிதலை வெளிப்படுத்தியது. மற்றவர்கள் வியப்படைந்தனர்.

இதனை நினைவுபடுத்தியதன் மூலம் மையூர்கிழார் சொல்லவரும் செய்தி என்ன என்பதுதான் முசுகுந்தருக்குப் பிடிபடாமல் இருந்தது.

மையூர்கிழார் கேட்டார், “எத்தனை வீரர்கள்கொண்டு அந்த மதயானையை மறிக்கச்செய்தீர்கள்?”

“வீரர்கள் எண்ணற்றோர் முன்னும் பின்னுமாக ஆயுதங்களோடு சென்றனர். ஆனால், யாராலும் நெருங்கமுடியவில்லை. அல்லங்கீரன் யானைகளின் குணங்களைக் கண்டறிவதில் தேர்ந்தவன். அவன்தான் இதற்கெனவே பயிற்சி பெற்ற நான்கு யானைகளைக்கொண்டு மோதி அதனை வீழ்த்தினான்” என்றார் முசுகுந்தர்.



பேரரசரின் காதுகளுக்கு எது போகக்கூடாது என நினைத்தோமோ, அந்தச் செய்தியைத் தானே சொல்லவேண்டியதாகிவிட்டதே என்று மனம் கூசினார். யானையைக் குத்திக்கொல்வதென்பது கொடும்நிகழ்வு. அது மணவிழாக்காலத்தில் நடந்ததென்பது பெரும் இக்கட்டை ஏற்படுத்தக்கூடியது. ஆனால், முசுகுந்தர் அந்நிகழ்வை விளக்கிக்கொண்டிருந்த இந்தக் கணத்தில் எல்லோரின் எண்ணமும் இதனைவிடக் கொடும்செயல் அரங்கேறும் போரின் மீதுதான் இருந்ததே தவிர, மணவிழாவின் மீது இல்லை.

மையூர்கிழார் சொன்னார் “எங்களின் வெங்கல் நாட்டில் நடந்த நிகழ்வொன்று. அப்பொழுது நான் இளைஞனாக இருந்தேன். எனது தந்தைதான் ஆட்சி நடத்தினார். நாட்டின் தலைநகர் இப்பொழுது இருக்கும் இடத்தில் கிடையாது. பச்சைமலையின் அடிவாரத்தில் இருந்தது. ஓர் அதிகாலையில் அரண்மனையின் பக்கத்திலிருந்த சித்தூரிலிருந்து பெரும்கூச்சல் கேட்டது. என்ன என்று பார்க்கப்போன வீரர்கள் பதறியடித்து ஓடிவந்தனர். மதயானை ஒன்று ஊருக்குள் புகுந்துவிட்டது. கட்டடங்களை முட்டிச்சாய்க்கவும் மரங்களைப் பிடுங்கி எறியவுமாக இருக்கிறது என்றனர்.

தந்தை உடனே வீரர்களை அழைத்துக்கொண்டு அவ்விடம் சென்றார். நானும் உடன் சென்றேன். என்

வாழ்வில் மறக்கமுடியாத நாளது. அந்த யானையின் உயரமும் ஆவேசமும் இன்னும் என் மனக்கண்ணைவிட்டு அகலவில்லை. அவ்வளவு ஆத்திரம்கொண்ட யானையை இன்றுவரை நான் பார்த்ததில்லை. மதயானை முட்டி மரம் சாய்வதைத்தான் நான் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் முட்டிய வேகத்தில் பெரும்மரங்கள்கூட நொறுங்கிச் சரிந்ததை அன்றுதான் பார்த்தேன்.

துதிக்கையில் மண்ணள்ளி வீசிக்கொண்டு அது திடுதிடுவென வந்த வேகம் இன்னும் எனக்குள் பேரச்சத்தை உண்டு பண்ணுகிறது. பெரும்பெரும் ஈட்டிகளோடும் வில் அம்புகளோடும் வீரர்களைத் துணிந்து முன்னகரச் சொன்னார் தந்தை. ஓசையெழுப்பும் மத்தளங்கள் இசைக்கப்பட்டன. ஆனால், அவ்வானை  எதையும் பொருட்படுத்தவில்லை. வீரர்களின் ஆயுதங்கள் காற்றெங்கும் பறந்துகொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் இனி இந்த ஊரைக் காப்பாற்றமுடியாது என்று முடிவுசெய்து எல்லோரும் அவ்விடம்விட்டு அகலுமாறு உத்தரவிட்டார். இவ்வுத்தரவுக்காகக் காத்திருந்த வீரர்கள் குதிரையைத்தாண்டி முன்னால் ஓடினர்.

எல்லோரும் அரண்மனைக்கு வந்த பின்புதான் சிந்தித்தோம். அந்த மத யானை இங்குவந்தால் என்னசெய்வது? அரண்மனைக்கோட்டை திடமானதுதான். ஆனால் யானைமுட்டலில் நொறுங்கிய மரத்தின் உறுதி இதற்கு இருக்காது. எனவே, எப்பாடுபட்டாவது அதனை நெருங்கவிடாமல் தடுக்கவேண்டும் என முடிவுசெய்து முழுவீரர்களையும் அணிவகுக்கச்செய்த ஆயத்தநிலையில் இருந்தார் தந்தை.

சித்தூரைச் சூரையாடிவிட்டு அது எங்களை நோக்கி வரத்தொடங்கியது. வீரர்களின் கால்நடுக்கத்தில் தரையே ஆடியது என்றுதான் சொல்லவேண்டும். அது மனித ஓசைகேட்டு வெறியேறியபடி எங்கள் திசைநோக்கித் திரும்பியது.

இந்தக் காட்சியைப் பச்சைமலைக் குன்றின்மேல் இருந்த பெண்ணொருத்தி பார்த்துக்கொண்டே இருந்திருக்கிறாள். அவள் பறம்புநாட்டுக்காரி. சித்தூரைச் சூறையாடிய யானை அடுத்துள்ள பெரிய ஊரினை நோக்கி நடக்கத்தொடங்கியதும் அவளுக்குக் கவலை அதிகமாகியுள்ளது. ஏனென்றால், இங்கு மக்கள் கூட்டம் அதிகம். இழப்பு அதிகமாகிவிடும் என்று முடிவுசெய்து அவள் வேகவேகமாகக் குன்றினைவிட்டு கீழிறங்கியிருக்கிறாள்.

எங்களின் கண்களுக்கு எதிரே நிலம்நடுங்க பிளிறியபடி யானை வந்துகொண்டிருந்தது. நாங்கள் உருவாக்கிய தடுப்புகள் காற்றில் பறந்துகொண்டிருந்தன. எத்தனை வீரர்கள் தூக்கிவீசப்பட்டார்கள் என்று தெரியவில்லை. ஆனால், அவையெல்லாம் அதனுடைய போக்கினை மறிக்க எந்தத் தடையையும் ஏற்படுத்தவில்லை.

மதயானை ஓரிடத்திலிருந்து நகரும்போது நான்கு திசையிலும் சம அளவிலான அழிவினை ஏற்படுத்தியபடியே நகரக்கூடியது. வீடுகள் இடிந்து சரிந்து நொறுங்கிக்கொண்டிருந்தன. ஒரு

கட்டத்திற்குப் பின் நாய்கள் குரைப்பொலியை முழுமுற்றாக நிறுத்தின. அதன்பின் எங்களின் அச்சம் பலமடங்கு அதிகமானது. நாங்கள் அரண்மனைக்குள் நுழைந்து கோட்டைக்கதவினைத் தாழிட்டோம். அதன் வேகத்துக்கு ஈடுகொடுக்கக்கூடிய வலிமை இங்குள்ள எந்தக் கட்டுமானத்துக்கும் இல்லை என்பதை எல்லோரும் உணர்ந்தோம். ஆனாலும் அரண்மனைக்குள் அண்டுவதைத்தவிர வேறுவழியில்லை. நான் கோட்டையின் மேலேறி தந்தையின் அருகில் நின்று பார்த்தேன்.

செம்மண் குலைத்துக்கட்டப்பட்ட கோட்டைச்சுவர் அதன் கண்களை உறுத்துவதாக இருந்திருக்க வேண்டும். அது வேகமாகக் கோட்டையை நோக்கி வந்துகொண்டிருந்தது. மேலிருந்து பார்த்துக்கொண்டிருந்தவர்களின் கூக்குரல் வானம் தொட்டது.

அப்பொழுதுதான் இடப்புற மலையடிவாரத்திலிருந்து ஒரு பெண் கோட்டையை நோக்கி வருவதைப் பார்த்தேன். அவள் வேகவேகமாக வந்துகொண்டிருந்தாள். மதயானை ஒன்று எதிர்திசையில் வந்துகொண்டிருக்கிறது, அதனை அறியாது பெண் ஒருத்தி வந்துகொண்டிருக்கிறாளே என்று பதறினேன். அவளோ எதனையும் பொருட்படுத்தாமல் வந்துகொண்டிருந்தாள். தனது குழந்தையைப் பின்புறம் முதுகோடு சேர்த்து மேல்துணியால் கட்டியிருந்ததும் தெரிந்தது.

நெருங்கி வரவர மதயானையின் பிளிறல் பேரச்சம் தருவதாக இருந்தது. என்ன நடக்கப்போகிறதோ, என்ற அச்சத்தால் நாங்கள் உறைந்து போயிருந்தோம். ஆனால், எவ்வித அச்ச உணர்வுமின்றி அவள் எதிரில் நடந்துவந்துகொண்டிருந்தாள். முதுகுப்புறம் இருந்த குழந்தை அழுதிருக்க வேண்டும். முன்புறம் போட்டு மார்பில் பால்குடிப்பதற்கு ஏற்ப துணியைக் குழந்தையோடு இறுக்கக்கட்டினாள். ஆனாலும், அவள் நடையின் வேகம் குறைந்தபாடில்லை.



அவள் கையில் ஏதோ ஒரு செடி ஒன்றை வைத்திருப்பது மட்டும் தொலைவிலிருந்து பார்க்கும்பொழுது தெரிந்தது. அவள் அரண்மனை வாசல்நோக்கி உதவிகேட்டு வருகிறாள் என்றுதான் முதலில்

நினைத்தேன். அவளோ இப்பக்கம் வராமல், மதயானை வந்துகொண்டிருக்கும் திசைநோக்கிப் போனாள்.

மேலே இருந்து பார்த்துக்கொண்டிருந்த எங்களால் அக்காட்சியை நம்பவே முடியவில்லை. ‘என்ன ஆனது இந்தப் பெண்ணுக்கு, தன்னந்தனியாக மதயானையை நோக்கிப் போகிறாளே!’ என்று அஞ்சினோம்.

பெரும்படையையே சிதறடித்த வெறிகொண்ட அந்த யானையை நோக்கி சிறிதும் அச்சமின்றி அவள் போய்க்கொண்டிருந்தாள். ஏதோ நடக்கப்போகிறது என்பது மட்டும் எங்களுக்குத் தெரிந்தது. நாங்கள் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தோம்.

அவள் கைகளில் இருந்த செடியை நீட்டியபடி மதயானையை நெருங்கிக்கொண்டிருந்தாள். அவளின் வேகம் அதிகமானபடியிருந்தது. மதயானையின் வேகம் குறைவதுபோல் இருந்தது. நாங்கள் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தோம். அதன் பிறகு நடந்தவைகளை எங்கள் வாழ்நாளில் மறக்கமுடியாது. அத்தனை நூறு வீரர்களை வீசியெறிந்து, குத்தீட்டிகளையும் வேல்கம்புகளையும் சிதறடித்து, எதிரில் பட்டதையெல்லாம் முட்டித்தள்ளி மண்ணோடு மண்ணாக்கிய அந்த மதயானை, மேய்பனின் முன் பணியும் கிடை ஆடுபோல அவளின் சொல்கேட்டுப் பணிந்தது.

அந்த இலையின் வாசனையை நுகர நுகர அதன் மதம் ஒடுங்கி பின்னகரத் தொடங்கியது. அவள் தன்னந்தனியாக சிறுகுச்சியைக்கொண்டு விரட்டுவதைப்போல யானையை விரட்டிக்கொண்டு மலையிலே ஏற்றிவிட்டாள்.

எங்களின்  உயிரச்சம் கலைய நீண்ட பொழுதானது. நாங்கள் கோட்டைக்கதவைத் திறந்து அவளை நோக்கி ஓடினோம். அவள் மலைக்குள் போவதற்குள் அவளைச் சென்றடைந்தோம். பால்குடித்து முடித்த குழந்தையைப் பின்தோளிலே போட்டாள். எனது தந்தை கண்ணீர் மல்க அவளை வணங்கினார். “பலநூறு பேரின் உயிர்காத்த தேவி நீ” என்றார். அவள் மறுமொழியேதும் சொல்லவில்லை. அவள் கையில் இருந்தது கரந்தைச் செடி என்பது மட்டும் தெரிந்தது. ஆனால் கரந்தையில் எண்ணற்ற வகையுண்டு. அது எந்த வகைக் கரந்தை என்பது இன்றுவரை எனக்குத் தெரியவில்லை.


அந்தச் சூழலில் அவளிடம் அதனைக் கேட்கவும் முடியாது. கேட்டாலும் பறம்பின் மக்கள் பகிர்ந்துகொள்ள மாட்டார்கள் என்பது தெரியும். எங்களைக் காத்தருளிய அவளுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று தந்தை துடித்தார். அவள் எதனையும் ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களின் உயிரைக்காப்பாற்றிய அவளின் காலடியில் பணிந்து “பறம்புக்கும் பறம்பின் மக்களுக்கும் எதிராக சிறுதீங்கும் நாங்கள் என்றும் செய்யமாட்டோம்” என்றார் தந்தை.

**மை**யூர்கிழார் சொன்ன கதையை அவை மிகக்கவனமாகக் கேட்டது. போருக்கான கருத்தைக் கேட்ட பேரரசரிடம், ‘நான் கருத்தை மட்டுமே வழங்க முடியும். போரிலே பங்கெடுக்க முடியாது’ என்று

எவ்வளவு அழுத்தமாகச் சொல்ல முடிந்தது மையூர்கிழாரால். வயதும் பட்டறிவும்கொண்ட மூத்த மனிதர்கள் இக்கட்டானச் சூழலை எவ்வளவு நுட்பமாகச் செயல்படுகிறார்கள் என்பதை எண்ணி மனதுக்குள் வியந்தார் முசுகுந்தர்.

அவையில் நீடித்த அமைதி கலைய நேரமானது. இவ்வமைதி அவ்வளவு நேரம் வாதிட்ட தளபதி கருங்கைவாணனின் கருத்துக்கு எதிரானதாக உருத்திரண்டிருந்தது. எனவே, அதனை உடைக்கவேண்டிய பொறுப்பும் தளபதியையே சார்ந்தது.

“போரிலே பங்கெடுக்க மாட்டேன் என்பதைச் சொல்லத்தான் இங்கு வந்தீர்களா?”



கருங்கைவாணனின் வினாவிற்குச் சற்றும் இடைவெளியின்றி மையூர்கிழார் விடை சொன்னார், “இல்லை. அதற்கு இவ்வளவு விரிவான கதையை நான் சொல்லவேண்டியதில்லை. என் தந்தை அளித்த வாக்குறுதியை மட்டும் சென்னாலே போதுமே.”

“வேறென்ன சொல்ல வந்தீர்கள்?”

“நீங்கள் சொன்ன கணக்குத் தவறானது என்று சொல்ல வந்தேன்.”

தளபதிக்குப் புரியவில்லை. மற்றவர்களுக்கும் புரியவில்லை. “விளக்கமாகச் சொல்லுங்கள்” என்றனர்.

“ஒரு பேரரசுக்கு, மதங்கொண்ட யானையை அடக்க பலநூறு வீரர்களும் பயிற்சிகொண்ட நான்கு யானைகளும் காலமெல்லாம் யானைப் படையில் பணியாற்றிய கட்டுத்தறியின் பொறுப்பாளனும்

தேவைப்பட்டுள்ளனர். ஆனால் பறம்பின் மக்களுக்கு அப்படியல்ல, ஒரு பெண்ணும் கையில் ஒரு செடியும் இருந்தால் போதுமானதாக இருக்கிறது. அவள் ஒருத்தி நீங்கள் சொன்ன இத்தனை நூறு வீரர்களுக்குச் சமம் என்றால், பறம்பில் இருக்கும் மக்களையும், செடி கொடிகளையும் கணக்கிட்டு நம் பேரரசில் இருக்கும் நிலைப்படை வீரர்களின் எண்ணிக்கையைச் சொல்லுங்கள் பார்ப்போம்?”

மையூர்கிழார் எழுப்பிய வினாவைக்கேட்டு அவையின் நாவு துடிப்படங்கி ஒடுங்கியது.

“மற்ற நாடுகளின் ஆற்றல் அங்குள்ள வீரர்களைப் பொறுத்தது. ஆனால் பறம்பின் ஆற்றல் மனிதர்களை மட்டும் சார்ந்ததல்ல, எனவே வெறும் மனிதர்களைக்கொண்டு படைநடத்திப் போனால், பறம்பு நாட்டின் சிறுகுன்றினைக்கூட கடந்து உள்நுழைய முடியாது” மையூர்கிழாரின் குரல் கணீரென அரங்கு முழுவதும் ஒலித்தது. சிறுசெடிக்கு ஒடுங்கிய மதயானைபோல் அவரின் குரல்கேட்டு ஒடுங்கியது அவை.

பறம்பின்மீது படைதிரட்டிப் போர்புரிவதில் பேரரசரின் மனம் உடன்பாடு கொள்ளாமல் இருந்தது. போரில் ஒருமுறை தோல்வி ஏற்பட்டால், அது அரசின் அச்சாணியையே அசைத்துப் பார்க்கும் என்பதைக் குலசேகர பாண்டியன் நன்கு அறிவார். அதனால்தான் இவ்வுரையாடலை இவ்வளவு தொலைவு வளரவிட்டு அமைதி காத்தார். அவர் எண்ணிய கருத்தே அவையிலும் நிலைநிறுத்தப்பட்ட கணத்தில் சட்டெனை எழுந்தார். எல்லோரும் பதறி எழுந்தனர்.

“மலரணியும் சடங்கிற்குப் பொழுதாகிவிட்டது” என்று சொல்லியபடி அவை நீங்கினார்.




பொதியவெற்பன் அவருக்கு முன்பே போய் சடங்கில் கலந்துகொள்ள வேண்டும். இவ்வுரையாடலை இந்தத் தன்மையில் விட்டுவிட்டுச் செல்ல மனமில்லை. ஆனால், வேறு வழியே இல்லை. மனமின்றிப் புறப்பட்டுப் போனான். பொற்சுவையும் அவ்வாறே அங்குவந்து காத்திருந்தாள்.

சடங்கு முடிய இரவானது. பேரரசர் தனது பள்ளியறைக்குத் திரும்பும்பொழுது, “தளபதி உடனடியாகக் காணஅனுமதி கேட்கிறார்” என்று பணியாளன் தெரிவித்தான். வரச்சொல்லி அனுமதி கொடுத்தார் பேரரசர்.

நள்ளிரவு வரை அவர்கள் பேசினர். முற்றிலும் புதியதொரு திட்டத்தைத் தளபதி கொண்டு வந்திருந்தார். அது பேரரசருக்கு நம்பிக்கை அளிப்பதாக இருந்தது. அதுபற்றி மிக விரிவாக அவர் வினாக்களை எழுப்பினார். அத்திட்டத்தை முழுமையாகக் கருங்கைவாணன் விளக்கினான். இதுவரை ஏற்படாத நம்பிக்கை இப்பொழுது ஏற்பட்டது. இன்றைய நாள் மிகச்சிறந்த நாள் என்று மனதில் எண்ணம்

தோன்றிய கணத்தில் அத்திட்டத்துக்கான அனுமதியை வழங்கினார் பேரரசர்.

தேவாங்கைக் கொண்டுவர வழியின்றிப் போய்விடுமோ என்ற தவிப்பு நீங்கிய மகிழ்வோடு தனது பள்ளியறைக்குள் நுழைந்தார் பேரரசர். அதனைவிட பலமடங்கு மகிழ்வோடு புறப்பட்டுப் போனான் கருங்கைவாணன்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-37

**கூ**ழையன் எவ்வியூருக்குள் அதிகாலையில் வந்துசேர்ந்தான். வழக்கமாகக் காட்டுப்பாதையில் நடந்து வருபவன் இம்முறை குதிரைப்பாதையில் மூன்று வீரர்களோடு வந்திறங்கினான். அதுவே அவன் வந்துள்ள வேலையின் அவசரத்தைச் சொன்னது.




“உதியஞ்சேரல் கீழ்மலையில் புதர்விலக்கிப் பாதை உருவாக்கியிருக்கிறான். அதற்கு அடுத்து பறம்புமலைத் தொடங்குகிறது. நம் பகுதியில் நுழையவில்லை. மிகக் கவனமாகத் திட்டமிட்டுப் பணியாற்றிக் கொண்டிருக்கிறான். கடற்கரைப் பகுதியிலிருந்து மூங்கில் நார்க்கொடிகளை எண்ணற்ற வண்டிகளில் கொண்டுவந்து தொடர்ந்து இறக்குகின்றனர். அது ஏன் என்று தெரியவில்லை” என்று தென்திசை நிலைமையை விளக்கினான் கூழையன்.

பாரியோடு தேக்கனும், வேட்டூர் பழையனும், முடியனும் அவையில் வீற்றிருந்தனர். எப்பொழுதும் விழிப்போடு இருப்பது கூழையனின் இயல்பு. “உரிய நேரத்தில்தான் விழிப்போடு இயங்கவேண்டும், மற்ற நேரத்தில் இயல்போடு இயங்க வேண்டும் என்று அவனுக்குப் பலமுறை சொல்லியாகிவிட்டது. ஆனாலும், கேட்க மறுக்கிறான்” என்று சலித்துக்கொண்டார் வேட்டூர் பழையன்.

ஆனால், தேக்கனுக்கோ நிலைமையை எளிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று தோன்றியது. சேரனின் வன்மம் மிக ஆழமானது. பத்தாண்டுகளுக்கும் மேலாக அவன் காத்திருக்கிறான். இப்பொழுது குடநாடு அவனுக்கு வாய்ப்பாக வந்தவுடன் செயலிலே இறங்கிவிட்டான் என்று தோன்றியது.

தேக்கன் என்ன சொல்லப்போகிறார் எனக் கூழையன் கவனித்துக்கொண்டிருந்தபொழுது பாரி சொன்னான். ``கீழ்மலைப் பாதையில் நமது எல்லைக்குள் வராமல் கவனமாக நிறுத்தியிருக் கிறான் என்றால், வேறு ஏதோ பகுதியில் பாதை ஊடுருவிக்கொண்டிருக்கிறது என்று பொருள். அவன் கூழையனை நன்கு புரிந்து வைத்திருக்கிறான்'' என்றான் பாரி.

பழையன் சொல்லியதைத்தான் பாரி வேறுவிதத்தில் சொல்கிறான் என்பது அனைவருக்கும் புரிந்தது.

“உதியஞ்சேரல் இம்முறை குடநாட்டைத்தான் முதலிலே உள்ளிறக்கிவிடுவான். நம் மீது கொண்டுள்ள பகையால் நடக்கும் இப்போரில் அவனது முதல் தந்திரம் சகக் கூட்டாளியைக் காவு கொடுப்பது” என்றான் பாரி.

உதியஞ்சேரல் எப்படிச் சிந்திப்பான் என்பதை நன்கு உணர்ந்தவன் பாரி. அவனது கருத்து முற்றிலும் சரியென்று எல்லோருக்கும் தெரியும். உரையாடலின் இறுதியில் பறம்பு நாட்டின் வடமேற்கு எல்லைப்பகுதிக்குச் செல்ல முடியனுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. ஆனாலும், அனைவரும் வலியுறுத்தியதென்னவோ தேக்கனின் செயலைத்தான். காடறிய இப்பொழுது போகும் முடிவைப் பற்றி மீண்டும் யோசியுங்கள் என்று சொன்னார்கள். கூழையன் மிகக் கடுமையான கோபத்தைத் தேக்கனின் மீது வெளிப்படுத்தினான்.

இறுதியில் தேக்கன் தனது நிலையிலிருந்து சற்றே இறங்கி வந்தான். “முழுநிலவுக்கு இன்னும் மூன்று வாரங்கள்  இருக்கின்றன. அதற்குள் பகரியின் ஈரலைக் கொண்டுவர பறம்பின் மக்களுக்கு நீ உத்தரவிடு. யாராவது கொண்டுவந்துவிட்டால் அவரிடம் பொறுப்பை ஒப்படைக்கிறேன்” என்றான்.

தேக்கன் தனது நிலையில் இருந்து இறங்கிவந்தது நல்லது; ஆனால், மூன்று வாரத்துக்குள் பகரியை வேட்டையாடுவதெல்லாம் நடக்காத செயல். ஆனால் வழக்கத்தை மீற முடியாததால், வேறு வழியின்றி ஒப்புக்கொண்டனர்.

மறுநாள் கூழையன் தென்திசைக்கும், முடியன் வடமேற்குத் திசைக்கும் புறப்பட்டனர். பறம்புநாடு முழுவதும் பகரி வேட்டை அறிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வுகள் எல்லாம் கபிலருக்குப் பின்னர்தான் தெரியவந்தன. பகரிதான் பறவைகளின் தலைவன். அதன் வேகத்தையும் நுட்பத்தையும் வேறெந்தப் பறவைக்கும் ஈடுசொல்ல முடியாது. அது முட்டை போட்ட அன்றே குஞ்சு பொரிக்கும் ஆற்றல் வாய்ந்தது. பிற பறவைகள் பல நாட்கள் அடைகாத்து உடற்சூட்டை முட்டைக்கு இறக்கி குஞ்சு பொரிக்கின்றன. ஆனால் பகரி அப்படியன்று, தனது உடலின் வழி பெருவெப்பத்தைக் கடத்தக்கூடியது. பகரியின் ஈரலைச் சாப்பிட்ட மனிதனை எந்த விலங்கு


தீண்டினாலும் அதன் நஞ்சு அவனை ஒன்றும் செய்யாது. சில நேரம் தீண்டிய விலங்கு பாதிப்புக்கு உள்ளாகும்.

பகரியைக் கண்ணிற்பார்ப்பதும் அதனை அடித்து வேட்டையாடுவதும் எளிதான செயலல்ல. பகரியின் ஈரல் உண்டவனே எவ்வியூரின் தேக்கனாகிறான்.



கொடிய பாம்புகளாலும், பூச்சிகளாலும், செடிகொடிகளின் சுணைகளாலும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத மனிதனே காடறியும் ஆசானாகச் செயல்பட முடியும். அவனை நம்பியே பறம்பின் பிள்ளைகளைக் காட்டுக்குள் அனுப்ப முடியும். இல்லையென்றால், இவ்வடர் காட்டில் என்ன நடக்குமென அனுமானிக்கவே முடியாது. பகரியைத் தேடி பறம்பின் கண்கள் வானமெங்கும் பறந்துகொண்டிருந்தன.

நாட்கள் நகர்ந்தன. அடர்மழை கொட்டித் தீர்க்க, பகற்பொழுது மிகக்குறுகியதாகவே இருந்தது. அதில் பகரியைப் போன்றதொரு வீறுகொண்ட பறவையைப் பார்ப்பதே மிகவரிது. பின் எங்கே வேட்டையாடுவது? பறம்பு மலையின் எல்லா முகடுகளிலும் மக்கள் ஏறி இறங்கினர். தன்னியல்பில் எப்பொழுதோ கண்ணிற்படும் ஒரு பறவையை, தனித்து வேட்டையாடி பிடிக்குமளவிற்கு மனிதரின் கைக்குள் இயற்கை சுருங்கி விடவில்லை.



பறம்பின் மக்கள் அச்சிறு பறவையிடம் தங்களின் தோல்வியை ஒப்புக்கொள்ளும் கடைசிப்பகலும் முடிவுக்கு வந்தது. இன்றிரவு முழுநிலவு நாள். வேட்டூர் பழையன், செய்திக்காக முன்னிரவுவரை காத்திருந்தான். எங்கிருந்தும் செய்தி வரவில்லை. பகரி அகப்படவில்லை என்பது முடிவானது. இனித் தேக்கன் காடறியப் புறப்படுதலைத் தடுக்க

முடியாது எனத் தெரிந்ததும் பழையன் வேட்டுவன்பாறை நோக்கி புறப்பட ஆயத்தமானான்.

முன்னிரவில் தேக்கனைக் கண்டு பேசினான். “பிள்ளைகளை நல்லபடியாகப் பயிற்றுவித்துக் கொண்டு வா. மற்றவற்றை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்” என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். அவனோடு இளம் வீரர்களும் உடன் வந்தனர். அவர்கள் அடர்வனம் நோக்கி நடந்தனர். நள்ளிரவுக்குள் புலிவால் குகைக்குப் போய்விடலாம். அங்கு படுத்தெழுந்து பயணத்தைத் தொடரலாம் என்பது திட்டம்.

பெருகியோடும் வைகையின் இருளகற்றி சூரியக் கதிர்கள் மதுரையை எட்டிப்பார்க்கத் தொடங்கின. இருமாத காலம் விழாக்களில் மூழ்கிக்கிடந்த மதுரை, இன்று அதன் உச்சநிகழ்வைக் காணத்தயாராகிக்கொண்டிருந்தது. மணமாலை சூடும் இந்நாளுக்காகத் தான் அவ்வளவு பெரும் கொண்டாட்டங்களும் நடந்து முடிந்துள்ளன.

கருங்கைவாணனின் திட்டம் துல்லியமாக நடைமுறையானது. அவனுக்கு வந்துள்ள தகவல்கள் மிக நல்ல செய்தியைச் சொல்லு கின்றன. இன்று பாண்டியப் பேரரசின் திருநாள். இந்நன்னாளில் பேரரசரின் முன் சொல்லப்படும் முதற்செய்தியாக இது இருக்க வேண்டும் என்று அதிகாலையே பேரரசரைக் காண வந்துவிட்டான் தளபதி கருங்கைவாணன்.

பள்ளியறையைவிட்டு எழுந்து வந்த பேரரசரை வணங்கிச் சொன்னான், “நமக்கு வந்துள்ள செய்திகளின் அடிப்படையில் நம்மால் அனுப்பப்பட்டவர்கள், பச்சைமலைக்குள் வெற்றிகரமாக நுழைந்துவிட்டனர். இலக்கை அடையும் காலம் நெருங்கிவிட்டது.”


அவனைக் கட்டித்தழுவினார் பேரரசர். “மணநாளின் மகிழ்வை விஞ்சும் ஆற்றல்கொண்ட செய்தியை அளித்தாய்” எனப் பாராட்டி மகிழ்ந்தார்.

“பொதியவெற்பனுக்கும் தெரிவித்துவிடு. இந்நாளின் சிறப்பை முன்பே நமக்குச் சொன்ன திசைவேழருக்கும் சொல். சூல்கடல்முதுவனுக்கும் சொல். மணவிழாவின் மகிழ்வு எல்லையற்றதாய்ப் பெருகட்டும்.”

வணங்கி விடைபெற்றான் கருங்கைவாணன்.

பள்ளியறைத் திரைச்சீலையை விலக்கி வெளியேறி வந்த பொற்சுவை, நீராழி அரங்கிற்குள் நுழைந்தாள். நீள்வட்டப் பளிங்கு நீர்க்குடுவை அவளுக்காகக் காத்திருந்தது. அதில் நாற்பத்தி ரெண்டு நறுமணப்பொருட்கள் கலக்கப்பட்ட மணநீர் நிரப்பப்பட்டிருந்தது.

பொற்சுவை அருகில் வந்தாள். சுற்றிலும் சேவைப்பெண்கள் நின்றிருந்தனர். பக்கவாட்டில் அமைந்திருந்த படிமேல் ஏறி வலதுகால் நீட்டி பெருவிரல் கொண்டு நீரினை அசைத்தாள். சிற்றலைகள் விளிம்பிற்போய் முட்டித்திரும்பின. அந்நீரலைகளைப் பார்த்தபடி கால் நுழைத்து கழுத்துவரை உள்ளிறங்கினாள்.



நீர் மெல்லிய சூடு கொண்டிருந்தது. அதிகாலைக் குளிருக்கு இதம் தர இதைவிட வேறென்ன இருக்கிறது. ஆனால், உடல்தொடும் எதுவும் சுகம் தருவதாக மாறிவிடுவதில்லை. சிந்தித்தபடியே மேலாடையைக் கழற்றி இடக்கையில் நீட்டினாள். சேவைப்பெண் அதனைப் பணிந்து பெற்றுக்கொண்டாள்.

மணநீரின் வாசனை எங்கும் பரவி மூச்சடைக்கச் செய்தது. நறுமணக்குளியல் பழகிய ஒன்றுதான். ஆனால், யவன நறுமணங்கள் மூக்கிற்குச் சற்றே கடுமையூட்டக்கூடியவை. அவற்றை அதிகமாக ஊற்றியிருக் கிறார்கள் எனத் தோன்றியது. இந்தக் கலவையை ஆண் உருவாக்கியிருக்க வேண்டும். பெண்ணின் கைப்பக்குவம் இப்படி இருக்காது.

ஆனால், எல்லா ஆண்களும் இதுபோல் கடுமைகொண்ட கலவையை உருவாக்கி விடுவதில்லை. எவ்வித நறுமணப் பொருட்களும் இன்றி அவனோடு சேர்ந்து சுனை நீராடியபொழுது எழுந்த மணமும் இன்பமும் வேறொன்றிலும் ஏற்பட்ட தில்லை. கலவை, நறுமணப் பொருளோடு மட்டும் சம்பந்தப் பட்டதல்ல. ஈடற்ற இன்பத்தை உருவாக்க விரல்கள் மட்டுமே போதுமானவை. விரல்தான் உடலின் கண்களைத் திறக்க வல்லது. பாலாடையின் மீது ஊர்ந்துபோகும் சிற்றெறும்பின் கால்தடம் போலத்தான் விரல்கள் ஏற்படுத்தும் வடுக்களும். வடுக்கள் பதிந்த பள்ளத்தின் வழியேதான் நினைவின் ஊற்று கசிந்துகொண்டே இருக்கும். கண்ணுக்குத் தெரியாமல் நினைவிற் படரும் அந்நறுமணத்துக்கு ஈடுசொல்ல என்ன இருக்கிறது?

`சுனைநீரின் குளுமையை நீ அறிய வேண்டும் என்று சொல்லித்தான் அவன் அழைத்துச் சென்றான். நீர் மேனியெங்கும் ஊர்ந்து போய்க்கொண்டிருந்தது. நீரோடும் பாறை சுடும் என்று சொன்னால், யார் நம்புவார்கள். நீர் தழுவும் எனது மேனியின் சூட்டை நான் உணர்ந்தபொழுதுதான் அந்த உண்மை உரைத்தது. சிறு மணலை அள்ளி எனது கையிற்கொடுத்து 'பூசிக்கொள்' என்றான். நான் மேலெல்லாம் பூசினேன். மென்மலர் மேனியில் சிறுவுராய்வுகளையும் கீறலையும் மணற்துகள்கள் ஏற்படுத்தின. மீண்டும் நீரில் மிதந்தேன். சிற்றெறும்பு கடித்ததைப் போன்ற அக்காயங்களை குளிர்நீருக்குள் உணர்ந்துகொண்டிருந்தபோது அவன் நீருள் இறங்கினான்.

மாமரத்து அடிவாரமிருக்கும் செவ்வெறும்பு கடிப்பதைப்போல உணரத் தொடங்கினேன். கடிகாயங்கள் காமத்துக்குள் மறைந்து கொண்டிருந்தபொழுதே புதிதாகத் தோன்றிக்கொண்டும் இருந்தன. சீற்றம்கொண்டு தாக்கப்படுதலின் சுவையைக் காயங்களே கற்றுக்கொடுத்தன.

நீருக்குள் நுழையும் கைகள் எவ்வளவு இழுத்தணைத்தாலும் வலிமை கூடாது. நீர் தன்னுள் விளையாடுபவர்களோடு தானும் சேர்ந்து விளையாடும். அதற்கான இடத்தைத் தந்தே ஆகவேண்டும். நீர்புகும் முழு இடத்திலும் விளையாட மனிதனால் ஒருபோதும் இயலாது.  நீருலகின் நியதி வேறு. நிலத்தில் காதல்கொள்கையில் காற்று விலகிக்கொடுக்கும். நீரில் காதல்கொள்கையில் அது விலகிக் கொடுப்பதில்லை. நம்முள் நுழையவே பார்க்கும். சக ஆட்டக்காரனைப்போல அதுவும் பங்கெடுக்கும். நமது பொறாமையை மெல்லத் தூண்டும். நமது இயலாமையைக் காட்டிக்கொடுக்கும்.

பஞ்சுப்படுக்கையே காதலுக்கு சிறந்ததென நினைப்பவர்கள் நீர்ப்படுக்கையை அறியாதவர்களே. நீர் மட்டுமே உடலோடு உடல் கிடத்த, சாய்ந்த நிலையைக் கோருவதில்லை. அது இயற்கை மனிதனுக்கு வழங்கிய அதி சிறந்த காதற்களம். காதலில் மூழ்கித்திளைத்த மனம் தன் துணையின்றி நீர் இறங்கும் துணிவைப் பெறுவதில்லை.'

இச்சிந்தனை உருவான கணத்தில் நறுமணத்தொட்டியில் இருந்து மேலேறினாள் பொற்சுவை. தோழிகள் பதறினர். ``ஒரு பொழுதாவது மணநீருக்குள் இருக்க வேண்டும் இளவரசி" என்று வேண்டினர். எச்சொல்லும் உள்நுழைய முடியாத இறுக்கம்கொண்டிருந்தாள் அவள்.

`நாற்பத்திரெண்டு நறுமணங்களையும் விஞ்சிய வாசனை என்னுள் உண்டு. அதை நுகரக்கூடியவனை நுகர்ந்தவள் நான்' சொற்களை மனம் உச்சரிக்கும்பொழுது உள்ளுக்குள் இருந்து வாசனை மேலெழுந்து வந்தது. மேலேறும் வாசனை நினைவுக்காட்சிகளைக் கொட்டிக்க விழ்த்தது.

ஆடை அலங்காரத்துக்கும் மலர் அலங்காரத்துக்கும் எல்லோரும் தயாராக இருந்தனர். ஈரம் உலராத பொற்சுவை, இருக்கையில் வந்து அமர்ந்தவுடன் சேவைப்பெண்கள் அருகில் வந்தனர்.

கைகளில் ஆடைகளை வைத்துக்கொண்டு அவளின் உடல் துடைக்க ஆயத்தமாக இருந்தனர். அவள் நிமிரவேயில்லை. அவளது அனுமதியின்றி யாரும் தொட்டுவிட முடியாது. சேவைப்பெண்கள் செய்வதறியாது நின்றுகொண்டிருந்தனர்.

பொற்சுவையின் எண்ணம் நீர்நிலைவிட்டு அகலாமல் இருந்தது. சுனைநீரிற் குளித்து மேலேறியவள் சொன்னாள். ``ஈரத்தை உடல்வெப்பத்தால் மட்டுமே உலரவைத்து விடுகிறது உனது நெருக்கம்.”

உடல் உலர்ந்துவிடும். ஆனால், இதழ்கள் அப்படியல்ல; நெருக்கத்தில்தான் சுரக்கத் தொடங்கும்.

இதழ் சுரந்துகொண்டிருந்தபொழுது உடல் உலர்த்துகொண்டிருந்தது. நீருள் மூழ்குதல் மீண்டும் தொடங்கியது. நெடுநேரம் கழித்து அவன் உலர்ந்து வீழ்ந்தான். ஆனால், உடலெங்கும் ஈரம் பூத்திருந்தது.
“உள்ளும் புறமுமாக நீரைச் சுழலவிட்டு விளையாடுதலே நீர்விளையாட்டாகிறது. ஆனால், இது தெரியாத பலரும் நீரில் விளையாடுதலையே நீர்விளையாட்டு என்று நினைத்துக் கொள்கின்றனர்” என்று அவன் சொன்னபொழுது, அவள் சொன்னாள். ``இப்பொழுதாவது நான் ஆடைகொண்டு துடைத்து உடலை உலர வைக்கிறேன். நீ அருகில் வராதே.”

அவள் தலைநிமிர்ந்தபொழுது கண்பார்வையைப் புரிந்து சேவைப்பெண்கள் அருகில் வந்து மேனி துடைத்தனர். கூந்தல் உலர்த்த, நறுமணப் புகை தூவ, மேனி துடைக்கவென ஆளுக்கொன்றாய்ப் பணியாற்றினர். வணிகர்குல அலங்காரம் முடிவுக்கு வந்தது. பாண்டியர்குல வழக்கம் தொடங்கியது.


உச்சந்தலையில் மஞ்சள் மின்னும் சூடிகையை அணிவித்தாள் ஒருத்தி. அதனைத் தொடர்ந்து சூடாமணியும் கோதைச்சரமும் சூட்டப்பட்டன. கழுத்தில் கண்டிகையும், மணியாரமும் அணிவித்தனர். அவற்றின்கீழ் தாழ்வடங்கள் நூலளவுத் தொடங்கி விரல் அளவு வரை கனம்கொண்டு இறங்கின. எவ்வொளியையும் உள்வாங்கி பலவண்ணமாய் வெளி க்கும் செவிப்பூ சூடினர் காதுகளுக்கு. ஆடகமும், வால்வளையும், மகரவாய்க்கட்டும் முன்கை மணிக்கட்டில் தொடங்கி சுற்றிச்சுற்றி மேலேறிக் கொண்டிருந்தன. விரல்களில் மணியாழியும் இடையில் எண்வகை வடமும் சூட்டினர்.

அவளது கண்கள் சுகமதியைத் தேடின. அலங்காரம் நடக்கட்டும் என்று விலகி நின்ற அவள், பொற்சுவையின் கண்கள் தேடுவதைக் கண்டாள்.

அலங்காரப் பணியாளர்களை விலக்கி அருகில் வந்த சுகமதியின் காதோடு சொன்னாள். “எனது உடல் திருமணத்திற்குத் தயாராகிவிட்டது சுகமதி.”

**தே**க்கன் பதினோரு சிறுவர்களோடு புறப்படத் தயாரானான். சிறுவர்களைக் காடறிய அனுப்பும் நாள் எவ்வியூரின் உணர்ச்சிப் பெருநாள். தன் மகனைக் காட்டுக்குக் கொடுத்தனுப்பும் பெண்களின் ஆவேசம் அடங்கா எழுச்சி கொள்ளும். குலவை யொலியால் காடு கிடுகிடுக்கும். பறம்பின் தலைவன் குருதிப்பலி ஈந்து சிறுவர்களை அனுப்பினான். பாரியின் மனை நீங்கி குலநாகினிகளின் முன்வந்து அமர்ந்தனர் சிறுவர்கள்.

உடல்வலுவிலும் வயதிலும் மூத்தவனாக கீதானி முன்னிருந்தான். அவனை அடுத்து குறுங்கட்டி, முடிநாகன், அவுதி, மடுவன், இளமன் என வரிசையாக இருந்தனர். வயதில் மிகச்சிறியவன் அலவன்தான்.



ஆனாலும், அவனின் வேகம் இணைசொல்ல முடியாது. எல்லோருக்கும் குலநாகினி பச்சிலைச்சாறு கொடுத்தாள். குடித்து முடித்தனர். அதன்பின் கீதானியை உள்தாழ் வாரத்துக்குள் அழைத்துச் சென்றனர்.

குலநாகினி சிறுகுடுவை ஒன்றை எடுத்துவந்தாள். அதன் உள்ளே மிகக்கெட்டியான வடிவில் ஏதோ இருந்தது. மலைவேம்பின் இலையைப் பறித்துவைத்திருந்தனர். அந்த இலையைக் குடுவைக்குள் நுழைத்தாள். அதன் சாறு இலையில் படிய அவ்விலையைக் கையில் எடுத்தாள். கீதானியை நாக்கை நீட்டச்சொன்னாள். அவன் `ஆ' வென வாய் பிளந்து நாக்கை நீட்டினான். “போதாது” என்று சொல்லி தலையை மறுத்து ஆட்டினாள். இன்னும் வாய் பிளந்து நாக்கை நீட்டினான். மீண்டும் மறுத்து தலையை ஆட்டினாள். இன்னும் முயற்சித்தான். வாயோரத்து தசை கிழிந்துவிடும்போல் இருந்தது. அடித்தாடை வலித்தது.
“இன்னும் நாக்கை நீட்டு” என்று சொல்லிக்கொண்டே அந்த இலையைச் சாறோடு எடுத்துக் கண்ணிமைக்கும் நேரத்தில் அடிநாக்கில் வைத்து இருகையாலும் வாயை இழுத்து மூடிப் பிடித்துக்கொண்டாள். மற்ற நாகினிகள் அவனது கையைப் பிடித்துக் கொண்டார்கள். அவன் பல்லைக்கடித்து, துடித்துத் துள்ளினான். ஏதேதோ செய்து பார்த்தான். சிறு சத்தங்கூட வெளிவராத அளவிற்கு வாய்த்தாடையை அடைத்து அமுக்கி இருந்தாள் குலநாகினி. தாழ்வாரத்தின் வெளியில் நின்றிருந்த மற்ற சிறுவர்களுக்கு உள்ளே ஒருவன் துடியாய்த் துடிப்பது சிறிதும் தெரியாது.

இலையோடு உள்ளே வைக்கப்பட்ட சாறு என்னவென்று குலநாகினிகள் வெளியே சொல்வதில்லை. செடிகொடிகளில் விளையும் மொத்தக்கசப்பும் கலக்கப்பட்டச் சாறு என்று சிலர் கருதுகின்றனர், பதப்படுத்தப்பட்ட பாம்பின் நஞ்சு என்று சிலர் சொல்லுகின்றனர். நாகப்பச்சை வேலியின்

நச்சுக்கொடிகள் கக்கும் பிசின் என்று சொல்லுகின்றனர். எது உண்மை என்று தெரியாது. இந்தச் சாறு கசிந்து, உணவுக்குழல் முழுவதும் இறங்கி முடியும்வரை அவன் கைகளின் பிடி தளர்த்தப்படுவதில்லை.

நாவின் சுவை நரம்புகள் முழுவதும் நஞ்சுக்கசப்பின் சாறு உள்ளிறங்கிய பின்னே அவன் வாய்திறந்து மூச்சுவிட அனுமதிக்கப் படுகிறான். நரம்பில் தேங்கிய கசப்பு நீங்க மாதங்கள் ஆகும். மேல்தோலில் விழும் தழும்பு மறையாததைப்போல அடிநாக்கில் நிலைகொண்ட கசப்பு எளிதில் மறையாது. அவனது நாவு சுவையுணவு தேட இன்னும் சில ஆண்டுகள் ஆகும்.

அறுபதாங்கோழிக்கறி முதல் அத்திமது வரை அனைத்தின் சுவையும் துளியாவது நாக்கில்பட்டு வளர்த்த இவர்களின் நினைவில் இருந்தே சுவை அகலும். காடறிந்து வீடுவந்த பின்னும் சில ஆண்டுகள் ஆகும் இக்கசப்பு மறைய.

இக்கசப்பின் வாடை காட்டுப்பயணத்துக்கு மிக முக்கியமானது. காட்டின் எல்லா விலங்குகளும் இவ்வாடையை அறியும். சிறுவர்கள் பேசியபடி நடந்து செல்ல இவ்வாடையை நுகர்ந்து அவை விலகிச்செல்கின்றன. விலங்குகளை விலக்க இக்கசப்பின் மனமே மொழியாகிறது.

பதினோறு பேரும் மலைவேம்பின் இலையை விழுங்கி, துடித்து அடங்கினர். அதன்பின் அவர்கள் புறப்பட்டனர். யாரிடமும் பேச அவர்கள் ஆயத்தமாயில்லை. வாய்திறந்து பேசப்பேச கசப்பு உள்ளிறங்கும். இக்கசப்புக்குப் பழகி அவர்கள் இயல்பாய்ப் பேசத்தொடங்க சில வாரங்களோ மாதங்களோ ஆகலாம். அதுவரை மிகமிகக் குறைவாகவே அவர்கள் பேசுவர். பேசும் ஒவ்வொரு சொல்லும் ஒரு குடம் வேம்பின் சாற்றைக் குடித்ததற்குச் சமம்.

அடித்தொண்டை முழுவதும் தேங்கிய கசப்பு நிற்க, அதன்பிறகு யாரிடமும் பேசாமல் எவ்வியூர் விட்டு வெளியேறினர். சிலர் வில் அம்பு வைத்திருந்தனர். சிலர் ஈட்டியை ஏந்திப்பிடித்திருந்தனர். சிலரிடம் கவண்கல் இருந்தது. அவரவர்களுக்கான ஆயுதத்தை எடுத்துவந்தனர். ஆனால், இதுவெல்லாம் தொடக்க நிலைக்குத்தான். அவர்கள் பயன்படுத்த வேண்டிய வலிமை மிகுந்த ஆயுதங்களை இனி அவர்களே காட்டில் உருவாக்கிக்கொள்வார்கள். தங்களுக்கான தனித்துவம்மிக்க ஆயுதம் எதுவென்று அவர்கள் கண்டறியும் வரை இவ்வாயுதம் அவர்களின் கையில் இருக்கும்.

தேக்கன் வழக்கம்போல தனக்கான ஆயுதத்தை வீட்டில் இருந்து எடுத்துவந்தான். அது பன்றியின் கடவாய்க்கொம்பு. இக்காட்டில் மிக வலிமை வாய்ந்த பொருள் எதுவெனக்கேட்டால், அது பன்றியின் கடவாக்கொம்புதான். அதனை உடைக்கவோ, நொறுக்கவோ எதனாலும் முடியாது. அதன் அடிப்பகுதிக்கு என்ன வலிமை இருக்கிறதோ, அதே வலிமை கூர்மை மிகுந்த முனைப்பகுதிக்கும் உண்டு. எனவே, முனையின் கூர்மை ஒருபோதும் சிதைவுறாது.

தேக்கன் இருகொம்புகளின் அடிப்பகுதியில் துளையிட்டு அறுந்துபடாத நார்கொண்டு இரண்டு கையின் மணிக்கட்டோடு சேர்த்துக் கட்டியிருந்தான். காடறிதல் பயணக்காலம் முழுமைக்கும் அவன் பயன்படுத்தும் ஒரே ஆயுதம் அது மட்டுந்தான்.

மணிக்கட்டில் கட்டி உள்ளங்கைக்குள் மடக்கிக்கொண்டால், இப்படி ஓர் ஆயுதம் இருப்பதே வெளியில் தெரியாது. இதுகொண்டு எந்த மரத்தின் அடிப்பகுதியையும் குத்தி இழுத்தால், நரம்புச் செதில்கள் பிய்ந்து நொறுங்கும். இறுகிய மரத்தின் தூரையே பிய்த்து எடுக்குமென்றால், விலங்குகள் எல்லாம் ஒரு பொருட்டே அல்ல.

காடறிந்து, சிறந்த போர்வீரனாக விளங்கி, தனது திறமையால் பல வலிமை மிகுந்த பணிகளைச் செய்து இறுதியில் பகரியை வேட்டையாடி ஈரலைத் தின்றவன்தான் தேக்கன் ஆகிறான். எனவே அவன் தனது உடலசைவையோ ஆற்றலையோ துளியும் வீணாகச் செலவிட மாட்டான். எந்தவொரு விலங்கின் தாக்குதலையும் சமாளிக்க மிகச் சில அடிகள் போதும். குத்திக்கொன்று வீழ்த்துவதெல்லாம் வீரர்களின் தொடக்ககால வாழ்வில் நிகழ்த்தும் செயல். ஆனால், வாழ்வு முழுவதும் காடு பார்த்து, பட்டறிவின் உச்சத்தில் நிற்கும் தேக்கனுக்குத் தேவை மிகச்சிறிய சில அசைவுகள்தான். எந்த விலங்கின் நரம்பை எங்கு தட்டினால் போதும் என்று தெரியும்.




கைப்பிடி அளவு கோரைப்புற்களின் முனையில் முடிச்சிட்டு, அதனைக்கொண்டு அடித்தால், யானை நகரமுடியாமல் உட்காரும். அவன் மரம், செடி, கொடி, விலங்கு, பறவை, மனிதன் எல்லாவற்றையும் நரம்புகள்கொண்டு அறிந்தவனாகிறான். எனவே நரம்புகளின் இயங்குவிசை அவனுக்குப் பிடிபட்டுவிடுகிறது. விலங்குகளின் வலிமை, ஆற்றல் மீதான கருத்தெல்லாம் நினைவில் இருந்தே உதிர்ந்துவிடுகிறது.

காடறியும் நான்காவது பயணத்தை மேற்கொள்ளும் தேக்கனின் முதல்நாள் நினைவில் கடந்தகாலம் எதுவும் வந்து செல்லவில்லை. வழக்கம்போல் இன்றைய நாளின் நிகழ்வு மட்டுமே அவன் மனதில் ஓடியது. சாமப்பூவின் வாசனை வந்துசென்றது.


முன்னால் சென்றவனைத் தொடர்ந்து பதினோறு பேரும் வந்துகொண்டிருந்தனர். யாரும் வாயைத் திறந்து எதுவும் கேட்கவில்லை, வாயைத் திறந்தாலே காற்று உள்ளே போய் ஒருகுடம் நஞ்சை அடிவயிற்றில் கொட்டிக்கவிழ்ப்பதுபோல் இருக்கிறது. எனவே, பேச்சின்றிப் பின்தொடர்ந்தனர் அனைவரும். நீண்டநேரத்துக்குப்பின் சிறியவன் அலவன் கேட்டான், ``எதை நோக்கிப் போகிறோம்?”

நடந்தபடியே தேக்கன் சொன்னான் ``கொற்றவையை வழிபட, கூத்துக்களம் நோக்கிச் செல்கிறோம்.”

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-38

கசப்பு... கசப்பு... கசப்பு. நாக்கின் கீழ் நஞ்சுக் கசப்பு உமிழ்நீராக ஊறுவதைப்போல் கொடுமை எதுவுமில்லை. எனவே, நாக்கை அசைத்துப் பேச யாரும் ஆயத்தமாக இல்லை. தீராக்கசப்பு அடிநாக்கிலிருந்து ஊறிப்பெருகி தலையுச்சியில் ஏறிக்கொண்டிருந்தது. கண்கள் பிதுங்கின. மூச்சிழுத்து மொத்தக் குடலையும் காறி வெளியே துப்பவேண்டும்போல் இருந்தது.




ஒவ்வொருவனும் குரல்வளையை முறுக்கித் திருகிக்கொண்டிருந்தான். உடல் மட்டும், தேக்கனின் பின்னால் சென்றுகொண்டிருந்தது. மற்றபடி எண்ணம் முழுவதும் தொண்டைக்குள் கட்டிநிற்கும் கசப்பில்தான் நிலைகொண்டிருந்தது.

தேக்கனின் மனமோ, கடைசியாக நடந்துவரும் சிறுவன் அலவனிடமிருந்தது. `இவ்வளவு கசப்பையும் மீறி, 'எங்கு போகிறோம்?' என்று எப்படி அவன் கேட்டான்? நான் சிறுவனாகக் காடறியப் போகும்போது கொடுத்த கசப்பை விழுங்கி இயல்பாகப் பேச இரு வாரங்கள் ஆகின. ஆனால், இவனால் எப்படி உடனடியாகப் பேச முடிந்தது?' என எண்ணிக்கொண்டிருக்கையில் அடுத்த வினாவைக் கேட்டான் அலவன். "கொற்றவையை வணங்கிவிட்டுத்தான் காடறியச் செல்ல வேண்டுமா?"

தேக்கன் கடும் அதிர்ச்சிக்குள்ளானான். கை அசைத்து அவனை முன்னால் வரச் சொன்னான். அலவன் முன்னேறி தேக்கன் அருகில் வந்தான். அவன் தோளில் கைபோட்டபடி நடந்தான் தேக்கன். 'ஏன் விடை


சொல்லாமல் வருகிறார்?' என்று அலவனுக்குத் தோன்றியது. தேக்கனின் மனம் சொல்லுக்காகத் திண்டாடியது. எப்படிக் கேட்பது எனச் சிந்தித்தபடியே கேட்டான், “கசப்பு உனக்குப் போதவில்லையா?”

“பெருங்கசப்பாகத்தான் இருந்தது. அப்பப்பா… இவ்வளவு கசப்பா கொடுப்பார்கள்?” என்றான் சிறுவனுக்கே உரிய வேகத்தோடு.

தேக்கன் உறைந்து நின்றான். எவ்வளவு பெருஞ்சொல்லை மிக இயல்பாகப் பேசிக் கொண்டிருக்கிறான்.

தேக்கன் நின்றவுடன் மற்றவர்களும் அப்படியே நின்றனர். பற்களை நறநறவென இறுகக் கடித்து, எச்சிலைத் துப்ப முடியாமல், துப்பினால் மறுபடியும் ஊறுகிறது. அதன் காட்டம் இன்னும் அதிகமாக இருக்கிறது. எனவே, என்ன செய்வதென்று அறியாமல் மற்றவர்கள் எல்லாம் விழித்து நிற்க, அலவன் மட்டும் பேசியபடி இருந்தான்.

தேக்கன், அவனின் முகத்தைப் பார்த்தான். எந்தவிதமான கடுமையும் இன்றி இயல்பாக இருந்தது. “நாக்கை நீட்டு” என்றான்.



அலவன் நாக்கை நீட்டினான். அடிநாக்கில் ஒட்டியிருந்தது மலைவேம்பின் இலை. அதன் பச்சை நிறம் மாறி முழுநீலம் கொண்டிருந்தது. அதன் நுனியைப் பிடித்து வெளியே எடுத்தான். நீண்ட நேரமாக உற்றுப்பார்த்தான். இலையின் கசப்பு அலவனுக்குள் இறங்குவதற்கு மாறாக, அவன் நஞ்சு இலையில் ஏறியிருக்கிறது.

திகைப்பு நீங்கி அவன் கண்களை உற்றுப்பார்த்தான் தேக்கன். நீண்ட நேரம் கழித்து உள்ளுக்குள் இருந்த நீல வளையம் பூத்து அடங்கியது. அவனின் பாட்டன் நாகக்குடியைச் சார்ந்தவன் என்ற நினைவு அப்போதுதான் வந்தது.

தேக்கன், மீண்டும் திரும்பி நடக்கத் தொடங்கினான். இப்போது அவனின் கை அலவனின் தோளில் இல்லாமல், தலையின் மேல் இருந்தது. அவனின் உச்சந்தலையை விரல்கள் கோதியபடி மிக இணக்கமாகப் பிடித்திருந்தன. ‘பகரியின் ஈரல் தின்றே நஞ்சை வெல்லும் ஆற்றல் பெறுகிறோம். ஆனால், பிறப்பிலே அந்த ஆற்றலோடு இருக்கும் வீரர்களைப் பற்றி முன்னோர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன். இப்போதுதான் முதன்முறையாகப் பார்க்கிறேன். ஆதியில் நாகக்குடியினர் பறம்பில் வந்து கலந்தபோது ஐந்து குடும்பங்களாக மட்டுமே இருந்தனர். ஆனால், இன்று பறம்புநாட்டின் பல ஊர்களில் கலந்து, சிம்புவெடித்துப் பரவியுள்ளனர். அவர்களின் ஆதி ஆற்றலை முழுமையாகக்கொண்டுள்ள மனிதன் பிறப்பது மிக அரிதுதான். அந்த ஆற்றல் கொண்டவனை இப்போது நான் காடறிய அழைத்துச் செல்கிறேன். காடறியப் புறப்படும்போது மனம் ஆசானாகத் தன்னை உணர்ந்து கொள்ளும். அதன்பிறகு, அது மகிழ்வை உணர்வதில்லை. கவனிப்புகளும் கண்டிப்புகளும் மட்டுமே அதன் பணிகளாக இருக்கும். ஆனால், `இம்முறை காடறியும் முதல் நாள் ஆசானாக உணர்ந்த அன்றே மனம் மகிழ்வை உணரத் தொடங்கியுள்ளது’ என்று தேக்கன் நினைத்துக் கொண்டிருக்கையில் அலவன் கேட்டான். “என் கேள்விக்கு இன்னும் விடை சொல்லவில்லை.”
``எந்தக் கேள்விக்கு?’’

“கொற்றவையை வணங்கிவிட்டுத்தான் காடறியப் போக வேண்டுமா?”


“ஆம்.”

“ஏன்?”

“காட்டில் நாம் செல்கையில் விலங்குகள் நம் வாசனையை மோந்து ஒதுங்கிச் சென்றுவிடுகின்றன. சில விலங்குகள் நாம் எழுப்பும் சிற்றோசையில் விலகிவிடுகின்றன. ஆனால், விலகாத இயல்புடைய விலங்குகள் உண்டு.”

“எந்தெந்த விலங்குகள்?”

``குறிப்பிட்ட விலங்குகள் அல்ல, எல்லா விலங்குகளும் குறிப்பிட்ட பருவத்தில் அப்படிச் செய்கின்றன. ஈன்ற விலங்கு தம் இளம்குட்டியோடு போய்க்கொண்டிருக்கையில் அந்த வழியில் நாம் சென்றால், வாசனையைக் கண்டோ, ஓசையைக் கேட்டோ விலகாது. தாய்மையின் ஆவேசம்கொண்டிருக்கும். மிக வேகமாக நம்மைத் தாக்க வரும். இயல்பான காலத்தில் இருக்கும் அதன் ஆற்றல், அந்தக் காலத்தில் பலமடங்கு அதிகரித்திருக்கும். நம்மால் கணிக்கவே முடியாத தாக்குதலாக அது இருக்கும். நாம் மிகக் கவனமாக இருக்கவேண்டியது ஈன்ற விலங்கிடம்தான்” என்று சொன்ன தேக்கன், “அதற்காகத்தான் தாய் தெய்வமான கொற்றவையை வணங்குகிறோம்” என்றான்.



பேசியபடியே வந்தனர். எவ்வியூரைவிட்டு மிகத்தள்ளி நடுக்காட்டில் இருக்கும் கொற்றவையின் கூத்துக்களம் நோக்கிப் போனார்கள். அங்கு உள்ள காவல் வீரர்கள் பகரி வேட்டைக்குப் போயிருந்ததால், இன்னும் குடில் திரும்பவில்லை. தேக்கன், மாணவர்களோடு வந்துசேர்ந்தான். கூத்துக்களம், புல் விளைந்து கிடந்தது. பறவைகளின் ஒலி எங்கும் கேட்டது. மெல்லிதாக எதிரொலித்தது தேவவாக்கு விலங்கின் ஒலி.

மர அடிவாரத்தில் இருந்த சிறுமேட்டில் கொண்டுவந்த விலங்குக் கறியையும் உணவு வகைகளையும் இறக்கிவைத்தான்.

“தாய் தெய்வ வழிபாடுதான் எல்லாவற்றிலும் மூத்தது. கொற்றவை ஈன்ற பிள்ளைதானே முருகன். எனவே, ஆதிகாலம் தொட்டு இங்கு வழிபாடு நடந்துகொண்டிருக்கிறது. வீறுகொண்ட தாய் இவள். நம் மக்களைக் காக்க எந்தவிதப் போரிலும் நமக்கு வெற்றியைத் தருபவள். `போர் தெய்வம்’ எனப் போற்றப்படுபவள்” என்று சொல்லிக்கொண்டே பொருள்களைப் படையலிடும் வேலைகளைச் செய்து கொண்டிருந்தான் தேக்கன்.

மாணவர்கள், கசப்பைப் போக்க வழியில்லாமல் திணறிக்கொண்டிருந்தனர். அலவன் மட்டும் தேக்கன் சொல்லும் வேலைகளை இயல்பாகச் செய்துகொண்டி ருந்தான். பறித்துவந்த பழத்தைப், பெருவிரலால் அமுக்கி, கண் அமைத்தான் தேக்கன். ``நாம் கண் மூடி வழிபடும்போது நமக்காகப் பார்த்துக்கொண்டிருப்பவை அவைதான். எனவே, வழிபடும் முன் பழங்களுக்குக் கண் திறக்க வேண்டும்” என்று சொல்லியபடி கண் திறந்தான்.


``நாம் ஏன் கண் மூடி வழிபட வேண்டும்?” எனக் கேட்டான் அலவன்.

வேலைகளைச் செய்துகொண்டே தேக்கன் சொன்னான், “கண் மூடினால் இருள் வரும். இருளுக்குள்தானே நம் ஆதி அச்சங்கள் நிலைகொண்டுள்ளன. அவற்றை அங்கேயே வெற்றிகொள்ளும் ஆற்றல் நமக்கு வேண்டுமல்லவா? அதனால்தான், தெய்வங்கள் இருளுக்குள் வந்திறங்குகின்றன” எனத் தேக்கன் முடிக்கும்முன் அலவன் கூறினான். ``நான் இருளைக் கண்டு எப்போதும் அஞ்சியதில்லையே!”

என்ன மறுமொழி சொல்வதென்று தெரியவில்லை, “சரி, நீ வேண்டுமென்றால் கண் திறந்தே வழிபடு” என்றார்.

எல்லாவற்றையும் எடுத்துப் பரப்பும் வேலை முடிந்தது. தேக்கன் கைகளைக் குவித்து, கண் மூடி வழிபட்டான். மாணவர்களும் அதேபோல் வழிபட்டனர். அலவன் மட்டும் திறந்த விழிகளோடு கொற்றவையை வணங்கினான். சற்று நேரத்துக்குப் பிறகு, வழிபாடு முடித்த தேக்கன், படையலிட்ட பொருள்களை எடுத்து மாணவர்களுக்குத் தின்னக்கொடுத்தான்.

``கசப்பு மட்டுப்படும்” என்று சொல்லியபடி கொடுத்ததால், ஒரு கடி அளவு மட்டும் வாங்கிக் கடித்துக்கொண்டனர். அதை விழுங்கவே உயிர்போனது.



எல்லா பழங்களும் கண் திறந்தே இருந்தன. ``நீதான் கண் மூடாமல் வழிபட்டவனாயிற்றே... உனக்கு எந்தப் பழம் தருவது?” எனக் கேட்டபடியே கறித்துண்டங்களை எடுத்துக் கொடுத்தான். அலவன் வாங்கிக்கொண்டான். ``கண் மூடி வணங்குகையில் நீங்கள் கண்டதென்ன?” எனக் கேட்டான் தேக்கன்.

எல்லோர் நினைவுக்குள்ளும் இருந்தது குலநாகினியின் முகம்தான். தாடை உடைவதைப் போல அழுத்திப்பிடித்த அந்த முகம் மறைய நாளாகும் எனத் தோன்றியது. யாரும் வாய் திறந்து பேசவில்லை. அலவன் மட்டும் சொன்னான், “நான் இரு கண்களைப் பார்த்தேன்.”

தேக்கன், மீதம் இருந்தவற்றை எடுத்துக் கொடுத்தபடியே கேட்டார், ``எதனுடைய கண்கள்... தேவவாக்கு விலங்கினுடைய கண்களா அல்லது பறவையின் கண்களா?”

“இரண்டும் அல்ல, அவை மனிதக் கண்கள்.”

மாணவர்கள், அந்த இடம்விட்டுப் புறப்பட ஆயத்தமாயினர். “மனிதக் கண்கள் இதற்குள் எப்படி இருக்கும்? யாரும் உள்நுழைய முடியாத பெருமரப்புதர் அல்லவா இது? அதுவும் பறம்பின் உச்சியில்!” என்று சொல்லியபடியே அந்த இடம்விட்டு நடக்கத் தொடங்கினர்.

கூத்துக்களம்விட்டு காட்டின் தென்திசை நோக்கி நுழைந்தனர். “காடறிதல் என்பது, பச்சைமலைத் தொடரின் எல்லா பகுதிகளையும் அறிந்துவருதல். அதன் தொடக்கம் எப்போதும் தென்திசைதான்.

திசையறிதல் பகலில் எளிது. இரவில் அதைவிட எளிது. விண்மீன்களைப் பார்த்தாலே போதும்” என்றான் தேக்கன்.

இவ்வளவு நேரமும் பேச்சுக்கு ஈடுகொடுத்துப் பேசிவந்த அலவன், எதுவும் கேட்காமல் இருந்தான். மற்ற மாணவர்கள் கசப்புக்கு அஞ்சி இன்னும் வாய் திறக்காமல் இருந்தனர். ‘அலவன் இந்நேரம் கேள்வி கேட்டிருக்க வேண்டுமே, ஏன் கேட்காமல் இருக்கிறான்?’ என்று குழம்பியபடியே அவனைப் பார்த்தான். அவன் குனிந்தபடியே நடந்து வந்தான்.

“ஏன் பேசாமல் வருகிறாய்?”

“நீங்கள் சொன்னதைப் பற்றித்தான் நினைத்துக்கொண்டு வந்தேன்.”

“திசையறிதல் பற்றியா?”

“இல்லை.”

“வேறு எதைப்பற்றி?”

“கண் மூடினால் என்ன நிகழும் என நீங்கள் சொன்னதை நான் நம்பினேன். ஆனால், கண் திறந்ததால் தெரிந்தது என்னவென்று நான் சொன்னதை நீங்கள் நம்பவில்லையே, அதைப் பற்றித்தான்.”

தேக்கன் ஒருகணம் பதற்றமானான். “மனிதக் கண்கள் அந்த மரப்புதருக்குள் எப்படி இருக்க முடியும்?” என்றான்.

“எப்படி இருக்க முடியும் என எனக்குத் தெரியாது. ஆனால், இருந்ததை நான் பார்த்தேன்” என்றான் அலவன்.

தேக்கன் சற்றே நிதானம்கொண்டு சிந்தித்தான். நாகக்குடியினரின் பார்வை ஆற்றல் அளவிட முடியாதது என்பது நினைவுக்கு வந்தது. `ஆனாலும், அந்தப் பெரும்புதருக்குள் மனிதர்கள் எப்படி, எங்கிருந்து போக முடியும்?’ சிந்தித்தபடி நின்றான்.

கேள்விகள் உருவாகிவிட்டால், அவை பதிலின்றி உதிராது. இயல்பாக உதிராத கேள்விகளை உடைத்தால், அவை மீண்டும் தழைக்கும். தேக்கன் முடிவுக்கு வந்தான். ஆசானுடன் மாணவனோ, மாணவனுடன் ஆசானோ சொல் மறுத்துப் பயணிக்க முடியாது. ‘அலவன் கருத்தை அவனே உதிர்த்தாக வேண்டும்’ என முடிவுசெய்த கணத்தில் தேக்கனின் கால்கள் திரும்பின.

மீண்டும் மர அடிவாரம் நோக்கி வந்தனர். இலையில் பரப்பி வைக்கப்பட்ட மீதப்பழங்கள் அப்படியே இருந்தன. அவை தேவவாக்கு விலங்குக்கு மிகப்பிடித்த பழங்கள். எனவே, ‘அச்சத்தால் உள் மறைந்திருக்கும் தேவவாக்கு விலங்குகள், நாம் அந்தப் பழங்களை வைத்துவிட்டுப் போனவுடன்

வேகவேகமாக வந்து சாப்பிட்டிருக்க வேண்டும். ஆனால், இன்று அந்த விலங்கு வந்து பழம் எடுக்கவில்லையே' எனச் சிந்தித்தபடியே நின்றான் தேக்கன். சிறிது நேரமானது. மழைக்காலமாதலால் உள்ளொடுங்கிக் கிடக்கும் என நினைத்தான்.

`அலவனுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் வேலைகொடுப்போம். நினைவிலிருந்து கசப்பு மறைய உதவியாக இருக்கும்' என முடிவுசெய்தான். குறிப்பிட்ட இடைவெளியில் எல்லோரையும் மரப்புதருக்குள் போகச் சொன்னான் தேக்கன். ``உள்ளே போகும்போது கொடிகளையும் சிறுகொப்புகளையும் வளைத்து ஒன்றோடொன்று முடிச்சிட்டுக்கொண்டே போங்கள். அப்போதுதான் சரியான வழி பார்த்து வெளிவர முடியும். இல்லையென்றால், வெளிவர திசை தெரியாமல் மாட்டிக்கொள்வீர்கள். இந்த மரப்புதர் எவ்வியூரின் பாதி அளவு பரப்புகொண்டது. எனவே, கவனமாகப் போய்த் திரும்பவேண்டும்" என்றான். "நான் சீழ்க்கை அடித்ததும் சென்ற வழியிலேயே வெளியேறுங்கள்" என்றான். மாணவர்கள் கவனமாகக் கேட்டனர்.

"ஒருவேளை, வெளிவர முடியாத சிக்கலில் நீங்கள் மாட்டிக்கொண்டால் சீழ்க்கையொலி எழுப்புங்கள். நான் உள்ளே வந்துவிடுகிறேன்."

கசப்பிலிருந்து எண்ணங்கள் மாறி உள்ளே நுழைவதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வழியைக் காண்பித்தான் தேக்கன். ஆசானின் முதல் பயிற்சி தொடங்கிவிட்டது என்பதைப் புரிந்து கொண்டனர். இதைச் சிறப்பாகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அவர்களை இயக்கத் தொடங்கியது.

மரம் விலக்கி உள்நுழைந்தனர். சிலருக்கு எளிதாக உள்நுழையும்படி இடைவெளி இருந்தது. சிலருக்கு உள்நுழைவதே கடினமாக இருந்தது. ஆனாலும், அனைவரும் உள்நுழைந்தனர். அலவன் எந்த இடத்தில் மனிதக் கண்களைப் பார்த்ததாகச் சொன்னானோ, அதை நோக்கி உட்செல்ல அனுப்பப்பட்டான்.

அவர்கள் செடி கொடிகளை விலக்கி உள்நுழையும் ஓசை கொஞ்சம் கொஞ்சமாக உள்ளொடுங்கிப் போய்க்கொண்டிருந்தது. கார் காலமாதலால், செடிகொடிகளின் அடர்த்தி மிக அதிகமாக இருந்தது. எனவே, நுழைந்த சிறிது நேரத்திலேயே பார்வையிலிருந்து மறைந்தனர். தேக்கன் வெளியில் இருந்தபடி மரக்கூட்டத்தைச் சுற்றிவந்துகொண்டிருந்தான்.

'இந்த முறை பயிற்சி ஏன் உன்னுள்ளிருந்து தொடங்குகிறது?' என, மனம் கொற்றவையிடம் கேட்டுக்கொண்டிருந்தது. நேரம் செல்லச் செல்ல, `தான் எடுத்த முடிவு சரிதானா?' என்ற வினா எழத்தொடங்கியது. `அலவன் பார்த்தது மனிதக்கண்கள் அல்ல என்று அவனை நம்ப வைக்க எல்லோரையும் உள்ளே அனுப்பியிருக்க வேண்டுமா?' எனத் தோன்றியது. உள்ளிருந்து பறவைகள் கலையும் ஓசை அவ்வப்போது கேட்டது. தேக்கன் வெளியே காத்திருந்தான். 'காவல்குடி வீரர்கள் இங்கு இருந்திருந்தால், இந்தச் சிக்கலே இல்லை. அவர்கள் பகரி வேட்டைக்குப் போய் இன்னும் ஏன் திரும்பாமல் இருக்கிறார்கள்?' என வினாக்கள் நிற்காமல் எழுந்துகொண்டே இருந்தன.





‘தான் எடுத்த முடிவின்மீது இவ்வளவு மறுசிந்தனை இதுநாள்வரை வந்ததில்லை. இப்போதே வருகிறது? வயதானால் உறுதிப்பாடு அதிகரிக்கத்தானே வேண்டும்’ - எண்ணங்கள் ஓடியபடி இருக்க, பொழுதும் கடந்துகொண்டிருந்தது. `உள்ளே சென்றவர்களை வெளியேறி வரச்சொல்லலாம்’ எனத் தோன்றியது.

குறுங்கட்டிதான் முதலில் உள்ளே போனவன். அவன் போன இடத்திலிருந்து முதல் சீழ்க்கையொலியை எழுப்பினான் தேக்கன். அடுத்து ஒவ்வொரு மாணவரும் உள்ளே நுழைந்த இடத்திலிருந்து சீழ்க்கை அடித்தான். சீழ்க்கையொலி ஈட்டிபோல சல்லெனக் காற்றில் பாய்ந்து செல்லக்கூடியது. அதுவும் தேர்ந்தவனின் அடிநாக்கிலிருந்து கிளம்பும் ஒலி மலைமுகட்டுக்குக்கூட கேட்கும். தேக்கன் மிகவும் கட்டுப்படுத்திக் குறிப்பொலியாக அதைப் பயன் படுத்தினான். சீழ்க்கையொலியைப் பல்வேறு முறையிலும் ஏற்ற இறக்கத்துடனும் பயன்படுத்தப் பழகியவன் அவன்.

மாணவர்கள் திரும்பும் ஓசை எதுவும் கேட்கிறதா எனக் கவனித்தபடி இருந்தான். அவர்கள் அதிகத் தொலைவு உள்நுழைந்துவிடவில்லை. மூன்று பனை தொலைவைக் கடந்திருக்க வாய்ப்பில்லை. எனவே, வேகமாக வந்து விடுவார்கள் எனக் காத்திருந்தான் தேக்கன்.

பறவைகள் கலையும் ஒலியும் பிற ஓசைகளும் கேட்டபடி இருந்தன. மாணவர்களின் சீழ்க்கையொலி எதுவும் கேட்காததால், ஆபத்து எதுவும் இல்லை என்பது புரிந்தது. தேக்கனின் கண்கள் வழிபார்த்துக் காத்திருந்தன.

குறுங்கட்டிதான் முதலில் வெளிவந்தான். மேலெல்லாம் செடி கொடிகள் சுற்றிக்கிடந்தன. எல்லாவற்றையும் இழுத்துப் பிய்த்துக்கொண்டிருந்தான். அடுத்து சிறிது நேரத்தில் மடுவன் வந்தான். மேல்மூச்சு கீழ்மூச்சுவாங்கியது. அவனைத் தொடர்ந்து அவுதி வந்தான். ஒருவர் பின் ஒருவராக வெளிவந்தனர். எட்டாவது ஆளாக அலவன் வந்தான். இன்னும் மூன்று பேர் வெளிவரவேண்டியிருந்தது.

அலவன் சொல்ல ஒன்றும் இருக்காது எனத் தேக்கனுக்குத் தெரியும். அதனால், வெளிவரவேண்டிய மூன்று பேரை நோக்கியே அவன் கவனம்கொண்டிருந்தான். ‘அவர் கேட்காததனாலேயே புரிந்துகொண்டார்’ என்பது அலவனுக்கும் தெரிந்தது. அவன் எவ்வளவு முயன்றும், உள்ளுக்குள் யாரும் தட்டுப்படவில்லை. உடலில் அங்குமிங்கும் கிழிபட்டாலும் உள்ளுக்குள் சிக்கிக் கொண்டால், இரவெல்லாம் அங்கேயே கிடக்க வேண்டியதாயிருக்கும். பொழுதுக்குள் வெளியேறி வந்தது, எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது.

சற்று நேரம் கழித்து இளமன் வந்தான். அவனைத் தொடர்ந்து முடிநாகன் வந்தான். மூத்தவனான கீதானியைத் தவிர எல்லோரும் வந்துவிட்டார்கள். பொழுதாகிக் கொண்டிருந்தது. கீதானி உள்ளே நுழைந்த இடத்தில் நின்று புதருக்குள் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான் தேக்கன். வருவதற்கான ஓசை எதுவும் கேட்கவில்லை. தேக்கன் சற்றே புதர் விலக்கி உள்ளே பார்த்தான். இடைவெளியற்று இருப்பதால், எதுவும் தெரியவில்லை. மீண்டும் ஒருமுறை சீழ்க்கை அடித்தான். மாணவர்கள் எல்லோரும் தேக்கனை உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தனர்.

நேரமாகிக்கொண்டிருந்தது. தேக்கனின் முகக்குறிப்பு மாறத் தொடங்கியது. ‘இன்னும் சற்றுநேரத்தில் பொழுது மறைந்துவிடும். அதற்குள் அவன் வெளிவந்தால்தான் உண்டு. வர முடியாவிட்டால் அவன் சீழ்க்கை அடித்திருப்பானே, ஏன் அடிக்காமல் இருக்கிறான்? ஒருவேளை விலங்கால் கடுமையாகத் தாக்கப் பட்டிருப்பானோ! என்ன செய்வது, நாம் உடனே உள்ளே போகலாமா, உள்ளே போனால் எவ்வளவு தொலைவு போவது? இருட்டிவிட்டால், வெளியே புற்களுக்கிடையில் விழுந்து கிடப்பவனைத் தேடுவதே கடினம், இந்த அடர்புதருக்குள் எப்படித் தேட முடியும்?’ தேக்கன், முடிவெடுக்க முடியாமல் திணறினான்.


பறவைகள் அடையும் நேரமாகி விட்டதால், ஓசை அதிகமாகவே இருந்தது. ஆனாலும், தேக்கன் நம்பிக்கை இழந்துவிடவில்லை. மாணவர்களிலேயே கீதானிதான் மூத்தவன். உடல் வலுவில் மிகச் சிறந்தவன். அவன் எளிதில் விழுந்துவிட மாட்டான் எனத் தோன்றியது. ஆனாலும், அவன் ஓசை எழுப்பாமல் இருப்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

மனம் திணறத் தொடங்கியது. எந்த முடிவு என்றாலும் விரைவில் எடுத்தாக வேண்டும். நேரம் கடந்துகொண்டிருக்கிறது. முடிவெடுக்க முடியாத தேக்கனின் தயக்கம் நீண்டு கொண்டி ருந்தது. மரங்களில் அடையும் பறவைகளின் ஓசை அதிகமாகிக்கொண்டே இருந்தது.

‘சரி, இனியும் காலம் தாழ்த்தவேண்டாம்’ என்று அவன் நினைத்துக்கொண்டிருக்கும்போது உள்ளுக்குள் ஏதோ ஓசை கேட்பதுபோல் இருந்தது. தேக்கன் கூர்ந்து கவனித்தான். மாணவர் களும் உற்றுக் கவனித்தனர். உள்ளுக்குள்ளிருந்து செடி கொடிகளை விலக்கி நகரும் ஓசை துல்லியமாகக் கேட்கத் தொடங்கியது. அது, ஒருவன் நடந்துவரும் ஓசையல்ல; ஓடிவருபவனின் காலடியோசை என்பது புரியத் தொடங்கியது.

‘கீதானிதான் ஓடிவருகிறான். ஆனால், ஏன் ஓடிவர வேண்டும்? எதுவும் விலங்கு துரத்துகிறதா... அப்படியென்றால் சீழ்க்கை அடிக்கலாமே! நாம் உடனடியாக உள்ளே போய் உதவ முடியும். ஏன்

சீழ்க்கை அடிக்காமல் வருகிறான்? பலவற்றையும் சிந்திக்கும் ஆற்றல்கொண்டவன் தானே அவன். நிதானமாக வராமல், அவசரப் பட்டு ஓடத் தொடங்கினால் செடி கொடிகளை இங்கும் அங்குமாக விலக்கிப் போகும்போது ஏற்படுத்திவிட்டுப்போன முடிச்சுகளைப் பார்க்காமல் விட்டுவிடுவோம். வழி தெரியாமல் உள்ளுக்குள்ளே சுற்றவேண்டியிருக்கும்' எனச் சிந்தித்தபடி பதற்றத்தோடு தேக்கன் நின்றுகொண்டிருந்தான். ஓசை நெருங்கத் தொடங்கியது. அவன் வேகம் மிகவும் கூடியது. எல்லோரும் உள்ளுக்குளிருந்து கீதானி என்னவாக வெளிவரப்போகிறான் என்ற பதற்றத்தோடு பார்த்துக்கொண்டிருந்தனர்.



ஒருகணத்தில் மர இடைவெளிகளைப் பிய்த்துக்கொண்டு வெளியே விழுந்தான் கீதானி. அவன்மேல் நூற்றுக்கணக்கான கொடிகள் சுற்றிக்கிடந்தன. ஓடிப்போய்ச் சூழ்ந்தனர் மாணவர்கள். மரத்துக்குள்ளிருந்து அவன் வந்த திசை நோக்கி முழு ஆவேசத்தோடு மறித்து நின்றான் தேக்கன். உள்ளுக்குள்ளிருந்து எந்த விலங்கு வந்தாலும், ஒரே அடியில் வீழ்த்தும் வெறிகொண்டு நின்றான் தேக்கன்.

வெளியில் வந்து விழுந்த வேகத்தில் ஏதோ சொல்ல வந்தான் கீதானி. கசப்பு, தொண்டையில் நஞ்சாய் இறங்கிக்கொண்டிருந்தது. அதையும் மீறி, ``தேக்கனைக் கூப்பிடு” என்று மரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவனைக் கைகாட்டிச் சொன்னான்.

மாணவர்கள் தேக்கனை உடனே அழைத்தனர். உள்ளுக்குள் இருந்து பார்வையை விலக்காமல் அரை மனத்தோடு கீதானியின் அருகில் வந்தான் தேக்கன். அவரைப் பார்த்து மூச்சிரைக்கச் சொன்னான், ``அவர்கள் வெளியேறுகிறார்கள்.”

தேக்கனுக்கு அவன் சொல்வது புரியவில்லை. கீதானியால் தெளிவாகப் பேச முடியவில்லை. உள்ளுக்குள் ஏதோ பிரச்னை, அதைப்பற்றிச் சொல்கிறான் என்பது மட்டும் புரிந்தது. அவன் வெளியேறிய பாதையிலிருந்து ஏதோ ஒன்று வரப்போகிறது எனத் தோன்றியது. கீதானியையும் மரத்தையும் மாறி மாறி பார்த்துக்கொண்டிருந்தான் தேக்கன்.




தான் சொல்லவருவது தேக்கனுக்குப் புரியவில்லை என்பது கீதானிக்குத் தெளிவாக விளங்கியது. மூச்சிரைப்பை முயற்சிகொண்டு கட்டுப்படுத்தியபடி, நஞ்சுக் கசப்பை எவ்வளவு குடித்தாலும் பரவாயில்லை என முடிவெடுத்துக் கத்தினான், ``கிழவா… அவர்கள் எதிர்திசையில் வெளியேறி ஓடுகிறார்கள்.”

தேக்கன் அதிர்ச்சி அடைந்தான். அலவனுக்குப் புரியத் தொடங்கியது. சொல்லி முடித்த கீதானி, கசப்பின் கொடுமையைத் தாங்க முடியாமல் சுற்றியிருந்த செடி கொடிகளை வாயில் போட்டு அமுக்கிக்

கடித்தான். கண்கள் பிதுங்கி நீர் தாரைதாரையாக வழிந்துகொண்டிருந்தது.

தேக்கனின் கைகள் முதன்முறையாக நடுங்கின. அவன் சொல்லவருவதை அறிவு நம்ப மறுத்தது. ஆனால், இனியும் நம்பாமல் இருக்க முடியாது. பன்றியின் கிடைவாய்க்கொம்பை இரு உள்ளங்கைகளிலும் இறுக்கிப் பிடித்தபடி, மரக்கூட்டத்தின் பின்புறம் நோக்கி ஓடத் தொடங்கினான் தேக்கன். வாய் பிளந்து அவன் கத்திய ஓசையில் மரமெங்கும் இருந்த பறவைகள் படபடத்தன.


`நாமும் அவரைப் பின்தொடரலாம்' என மாணவர்கள் எழுந்தபோது, அவர்களின் பார்வையிலிருந்து தேக்கன் மறைந்து நீண்ட நேரமாகியிருந்தது.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-39

**கொ**ற்றவைக்கூத்து நடைபெறும் பெரும் மரப்புதரின் பின்புறம் நோக்கி ஓடினான் தேக்கன். எவ்வியூரின் பாதியளவு பரப்பைக்கொண்ட அடர்மரத்தோப்பின் பின்வட்டத்தை வேகமாகக் கடந்துகொண்டிருந்தன அவனுடைய கால்கள். மரத்தோப்பு முடிந்து காட்டின் சரிவுப்பகுதி தொடங்குமிடம் மிகக்குறுகிய அளவினைக் கொண்டது. அதில் ஓடிக்கொண்டிருந்த தேக்கனின் வேகம் யாரும் பார்த்தறியமுடியாத ஒன்று.

தேக்கன் ஓடத்தொடங்கியபொழுது மாணவர்கள் சிலர் உடனெழுந்து பின்னால் ஓடினர். சிலர் மட்டும் கீதானிக்கு உதவிசெய்துகொண்டிருந்தனர். கீதானி சற்றே மூச்சுவாங்கி இளைப்பாறினான். அவனது வாய் முணுமுணுக்க நினைத்தது. ஆனால், கசப்பு அதனை அனுமதிக்கவில்லை. ஆனாலும், சொற்கள் உள்ளுக்குள் உருண்டுகொண்டே இருந்தன. `அவர்கள் நம்மைப்போன்ற மனிதர்கள் அல்ல; பார்க்கவே அச்சந்தரும் உருவத்தினராக இருந்தனர்.'




இங்குமங்குமாக ஓடிய தேக்கனால், அவர்கள் தோப்பைவிட்டு எப்பக்கம் வெளியேறினார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. 'யார் அவர்கள்? எத்தனை பேர்? பறம்புமலையில் இவ்வளவு தொலைவு அவர்களால் எப்படி ஊடுருவ முடிந்தது? ஏன் இங்கு வந்தார்கள்?' வினாக்கள் மண்டையைத்

துளைத்துக் கொண்டிருந்தன. பதற்றம் அதிகமாகிக் கொண்டிருந்தது. வெளியேறிய தடம் எதுவும் மண்ணில் தெரியவில்லை. ‘மீண்டும் கீதானியை விசாரிக்கலாமா’ என்று தோன்றியது.

சட்டென பிடிபட்டவனாய் அருகிலிருந்த நாங்கில் மரத்தின் மீது ஏறினான். கொப்புகளைப் பிடித்து வேகவேகமாக உச்சிக்கிளைக்குப் போனான். நார்ச்சத்து அதிகமுள்ள மரமாதலால் தேக்கனை, கிளையின் நுனிவரை அது அனுமதித்தது. மர இலைகளைத்தாண்டி அவன் தலை வெளியில் நீண்டது. கண்ணெதிரே மலைச்சரிவின் பள்ளம் முடியுமிடத்தில் சிற்றாறு ஓடிக்கொண்டிருந்தது. அதனைக் கடந்தால் ஆதிமலையின் தொடக்கம். நான்கு மடிப்புகளைக்கொண்டது ஆதிமலை.

மரத்தோப்புக்குள் இருந்து வெளியேறியவர்கள் சிற்றாற்றைக் கடந்திருக்க முடியாது. பொழுது மறைய இன்னும் சிறிதுநேரமே இருந்தது. அவர்கள் சிற்றாற்றைக் கடந்து ஆதிமலைக்கு உள்ளே நுழைவதை இங்கிருந்து துல்லியமாகப் பார்த்துவிடலாம். அவர்கள் எத்தனை பேர் என்பதனை அறிய தேக்கனின் கண்கள் அலைமோதிக்கொண்டிருந்தன. ஆற்றின் ஒருமுனையில் இருந்து மறுமுனை நோக்கி கண்களை ஓடவிட்டுக்கொண்டிருந்தான். மெல்லிய காற்றில் மரக்கொப்பு அசைந்தாடியது. மிகக்கவனமாக நுனிக்கொப்பில் நின்று கொண்டிருந்தான். கொப்பின் கவட்டையை விரல்கள் பற்றியிருக்க, உடலின் எடையை காற்றில் ஏற்றி கண்களை ஓடவிட்டுக் கொண்டிருந்தான்.

அவர்கள் இங்கிருந்து போனால், ஆற்றின் எவ்விடத்தைக் கடப்பார்கள் என்று அவன் எதிர்பார்த்த இடத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். ஆனால், வேறுதிசையில் சிலர் ஆற்றைக் கடப்பது தெரிந்தது.
தேக்கனின் கண்கள் உற்றுநோக்கின. வந்துள்ளவர்கள் ஐந்து பேர். ஒவ்வொருவரும் முதுகுக்குப் பின்னால், நீள்வடிவில் குழல்போன்ற நரம்புக் கூடையைக் கட்டியிருந்தனர். அதனைச் சுமந்தபடி படுவேகமாக ஆற்றைக்கடந்து ஆதிமலையின் முதற்குன்றுக்குள் நுழைந்தனர்.


மரத்திலிருந்து தாவிக்குதித்து அவர்களைக் கொன்று வீசவேண்டும் என்று மனம் துடித்தது. ஆனால், பதற்றப்படாமல் கவனமாகப் பார்த்தான். வேறு யாரும் பின்தொடர்கிறார்களா என்று சிறிதுநேரம் கவனித்தான். யாரும் பின்தொடரவில்லை. வெறும் ஐந்து பேர் இத்தனை மலைகளைக் கடந்து இவ்விடம் வந்து உயிரோடு திரும்பிச்செல்கின்றனர். கண்கள் பார்ப்பதை மனம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஆனாலும், நம்புவதைத் தவிர வேறுவழியில்லை. மரத்திலிருந்து வேகமாக நழுவியபடி கீழிறங்கினான். பொழுது சாய்ந்துகொண்டிருந்தது.

மாணவர்கள் எல்லோரும் மர அடிவாரம் வந்து அண்ணாந்து பார்த்தபடி நின்றிருந்தனர். எல்லோர் கண்களிலும் பெரும்பதற்றம் இருந்தது. ஆசான் சொல்லப்போகும் வார்த்தையை எதிர்பார்த்திருந்தனர்

இறங்கிய வேகத்தில் தேக்கன் சொன்னான், ``அவர்கள் ஆதிமலையின் வலப்புறம் நோக்கி ஓடுகிறார்கள். பறம்பு மலையின் தன்மை அவர்களுக்குத் தெரியவில்லை. வலப்புறம் நோக்கி ஓடும்

அவர்கள் மச்சக்கடவின் வழியாகத் தான் முதற்குன்றைத் தாண்ட வேண்டும். இங்கிருந்து குறுக்குவழியிற்போனால், அவர்களுக்கு வெகுமுன்னரே நாம் போய்விடலாம். கடவைத் தாண்டும்பொழுது ஒருவனின் உடலிலும் உயிர் மிஞ்சக் கூடாது” என்று சொல்லியபடி வெறிகொண்டு கிளம்பினான் தேக்கன். மாணவர்கள் அவனோடு ஓடத்தொடங்கினர். ஓடிக்கொண்டே தேக்கன் கேட்டான், ``மச்சக்கடவுக்குச் செல்லும் வழி யாருக்குத் தெரியும்?”

``எனக்குத் தெரியும்” என்றான் முடிநாகன். அவசரத்தில் வாய்திறந்ததால், குடம் நஞ்சு உள்ளே கொட்டியது. தாங்கமுடியாமல் ஓடிக்கொண்டே காறித்துப்பினான்.



``கீதானியும் அலவனும் என்னைப் பின்தொடர முயலுங்கள். மற்றவர்கள் முடிநாகனோடு இணைந்து வாருங்கள். நீங்கள் வரும்பொழுது அவர்களை மண்ணோடு மண்ணாகச் சாய்த்து வைத்திருப்போம்” என்று அவன் சொல்லிய பொழுது கால்கள் புரவியின் வேகங்கொண்டன.

காட்டில் ஓடுவது சிறந்த கலை. கொடிகளைத் தாண்டவும், முன்காலை மட்டும் ஊன்றவும், படர்தாவரங்களின் மீது குத்துக்காலை பயன்படுத்தவும், பாதமறியா வேகம்கொண்டு ஓடவும் இணையற்ற பயிற்சி வேண்டும். செத்தைகளும் சருகுகளும் கால்களை எளிதில் ஏமாற்றக்கூடியன. பாறைகளும் பாசிகளும் பாதத்தின் மீதான பகையைக் காலங்காலமாக வளர்த்துவருவன. கோரைகளின் வகைகளையும் புற்களின் குணங்களையும் பகுத்தறிய முடியாதவன், பத்தாவது அடியில் மண்டியிட்டு விழுவான். தண்டிலும், இலையிலும், கணுவிலும் நஞ்சை வைக்காமல் உடலெங்கும் இருக்கும் சுனைகளில் நஞ்சை வைத்துள்ள செடிகொடிகளை அவற்றின் வாசனை வழியே கண்டறிந்து

விலகத்தெரிந்தவன் மட்டுமே காட்டில் ஓடி இலக்கை அடைய முடியும்.

மூக்கின் மோப்ப ஆற்றலும், கண்பார்வையின்  கூரிய கவனிப்பும் கால்களை இறகுகள்போல வீசியெறியும் பயிற்சியும் கொண்ட ஒருவனால்தான் காட்டை ஓடிக் கடக்க முடியும்.

வேட்டை விலங்குகளின் நான்கு கால் பாய்ச்ச லுக்குத் தப்பித்துத்தான் மனிதன் பறம்புநாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கிறான். எனவே, அதனுடைய நான்கு கால் வேகத்தையும் மிஞ்சுவதாக மனிதக்கால்கள்  வளம் பெற்றுள்ளன. தேக்கனின் கால்கள் அதனையும் மிஞ்சி ஓடிக்கொண்டிருந்தது.

பொழுது மறைந்து நிலவின் ஒளி படரத்தொடங்கியது. தேக்கனின் ஓட்டத்தை எப்படியாவது நெருங்கிவிட வேண்டும் என்று ஆத்திரங்கொண்டு பின்தொடர்ந்தான் கீதானி. அவனைவிட வயதிலும் உருவத்திலும் இளைத்தவனான அலவன் பல இடங்களில் கீதானியைக் கடந்து ஓடிக்கொண்டிருந்தான்.

நேரம் கூடக்கூட தேக்கனின் வேகம் கூடிக்கொண்டிருந்தது. அவனது மனதில் கேள்விகள் அடுக்கடுக்காக மேலெழுந்து கொண்டிருந்தன. கீதானி மரப்புதருக்குள் இருந்து வந்து, அவர்கள் வெளியேறிவிட்டார்கள் என்று சொன்ன பொழுதுக்கும் அவர்கள் சிற்றாற்றைக் கடக்கும் நேரத்திற்கும் இடையுள்ள நேரத்தைக் கணக்கிட்டபொழுது மனம் முதல் அதிர்ச்சியை அடைந்தது. `இவ்வளவு குறுகிய நேரத்தில் அவ்வளவு தொலைவு எப்படிப் போயிருக்க முடியும்?' என்று வியந்தான். அவர்களின் வேகம் பிடிபடத் தொடங்கியது. ‘அது  வழக்கமான வேகமல்ல’ என்று மனம் கணித்தது.

ஓடிக்கொண்டே கேட்டான், ``அந்தக் கூடையில் என்ன கொண்டுபோகிறார்கள்?”

மிகத்தொலைவில் வந்துகொண்டிருந்த இருவரின் காதுகளிலும் வினா சரியாக விழவில்லை. ``என்ன கேட்கிறீர்கள்?” எனக் கத்தினான் அலவன்.

தேக்கன் மீண்டும் கத்திச் சொன்னான். கீதானி இன்னொருமுறை வாய்திறந்து சொல்லி நஞ்சுக்கசப்பை விழுங்க ஆயத்தமாக இல்லை. ‘நான் ஓடியாக வேண்டும். அதுதான் இப்போதைய தேவை’ என எண்ணியபடியே வேகமாக ஓடினான்.

முன்னால் போய்க்கொண்டிருந்த அலவன் அதே வேகத்தில் பின்னால் திரும்பி, தேக்கன் கேட்டதை மீண்டும் கேட்டான். கீதானி கையசைவாற் சொல்ல, அதனைப் புரிந்துகொண்ட அலவன் மீண்டும் முன்புறம் திரும்பி ஓடியபடி கத்திச் சொன்னான், ``அவர்கள் தேவவாக்கு விலங்கைப் பிடித்துக்கொண்டு போகிறார்களாம்.”

அலவன் சொன்ன சொல் பெரும்மரம் சாய்வதைப்போல தேக்கனின் மீது சாய்ந்தது. அதிர்ந்தான்

தேக்கன். ‘ஓடுவதா, நிற்பதா?’ மனம் தள்ளாடியது. ‘நம்பமுடியாத சொல். என்ன நடக்கிறது இங்கு? எப்படி நடந்தது?
பறம்பு மலையை வேற்று மனிதர்கள் கடந்துவந்து தேவவாக்கு விலங்குகளை எப்படிப் பிடித்துக்கொண்டு போகமுடியும்?’ சிந்திக்கச் சிந்திக்க விடை கிடைக்காமல் வெறி கூடிக்கொண்டிருந்தது. முன்னிலும் வேகங்கொண்டு ஓடினான் தேக்கன்.



அவனுக்குப் பின்னால் வெகுதொலைவில் அலவன் வந்துகொண்டிருந்தான். புதர்கடந்து அடர்மரங்களுக்குள் நுழைந்தான் தேக்கன். அவனை இனி கண்ணிற்பார்க்க இயலாது. குறிப்பின் அடிப்படையில்தான் போக முடியும். எனவே, அடுத்ததாக வந்துகொண்டிருந்த அலவன் ஓட்டத்தின் வேகத்தைக் குறைத்தான். நேரங்கழித்து கீதானி வந்து சேர்ந்தான். இருவரும் இணைந்து அடர்காட்டுக்குள் நுழைந்தனர்.

தேக்கனின் ஓட்டம் அதிவேகமாக இருந்தது. காரணம், எதிரிகளின் ஓட்டத்தைக் கணக்கிட்டதால், மச்சக்கடவிற்குத் தான் போகும் முன், அவர்கள் அதனைக் கடந்துவிடக் கூடாது என்பதால், இன்னும் வேகமாக ஓடினான்.

நான்கில் ஒரு பங்கிற்கும் குறைவான குறுக்குவழியில் தேக்கன் ஓடிக்கொண்டிருந்தான். அதே நேரத்தில், நான்கு பங்கு அதிகமான சுற்றுவழியை எளிதாகக் கடந்து எதிரிகள் வந்துகொண்டிருந்தனர்.

நிலவு ஏறியிருந்தது. காடெங்கும் ஒளி படர்ந்தது. மேல்மூச்சும் கீழ்மூச்சும் வாங்க மச்சக்கடவினை அடைந்தான் தேக்கன். வந்த வேகத்தில் சற்றும் இளைப்பாறாமல், பாறையின் மீதேறிக் கண்களை ஓடவிட்டான். இருளில் எதுவும் பிடிபடவில்லை. மூச்சுவாங்கி ஆசுவாசப்பட்டான். மீண்டும் தலைநீட்டி முன்புறம் சரிந்துள்ள காட்டைப் பார்த்தான். வெகுதொலைவில் பறவைகள் கலைந்து பறந்ததைக் கவனித்தான். வருவது அவர்கள்தான் என்பதை உறுதிப்படுத்திக்கொண்டான். அவர்கள் வந்துகொண்டிருக்கும் இடத்தைக் கணித்தான்.

இக்கடவினை நோக்கித்தான் வருகிறார்கள். அப்படியென்றால், போகும்பொழுதும் இவ்வழியாகத்தான்

போயிருப்பார்கள். இக்கடவு அவர்களுக்கு நன்கு தெரிந்த ஒன்று. மனம் அவர்களின் திசைவழியையும் எண்ணவோட்டத்தையும் கணித்துக்கொண்டிருந்தது. மாணவர்கள் இருவரும் கீழ்ப்புறம் இருந்து வரவேண்டும். எதிரிகள் வருவதற்குள் வந்து விடுவார்களா என எண்ணிக்கொண்டிருக்கையில் இருவரும் வந்து சேர்ந்தனர். ஒருவகையில் மாணவர்கள் நிகழ்த்தியது வியப்பிற்குரிய ஓட்டந்தான். தேக்கனின் கண்கள் ஆசானாய் இருந்து பெருமைப்பட நேரமற்று இருந்தன.

தேக்கன் தாக்குதலுக்கான வழிவகைகளைச் சிந்தித்தான். கடவின் விளிம்புப்பகுதியில் இருவரையும் மறைந்து நிற்கச் சொன்னான். ``கடவின் வழியாக முதலில் வருபவனை நான் அடித்துத் தூக்கிய கணத்தில் பின்னால் வருகிறவர்கள் சுதாரித்துவிடுவார்கள். உள்ளே ஆட்கள் இருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்துவிடும். உடனே கடவின் பிளவுக்குள் வராமல் சுற்றிவர முடிவுசெய்வார்கள். அப்பொழுது நீங்கள் விளிம்புப் பகுதியில் ஈட்டிகள் மட்டும் வெளியே தெரிவதுபோல நீட்டிப்பிடியுங்கள். எல்லாபுறமும் ஆட்கள் இருக்கிறார்கள் என்று அறிந்துகொண்டபின் அவர்கள் பதற்றத்தில் திசை தடுமாறுவார்கள்.
வேறுவழியில்லாமல் துணிந்து கடவினைக் கடக்க முயல்வார்கள் அல்லது திசைக்குழப்பத்தில் பின்வாங்க நினைப்பார்கள். ஒருபோதும் விளிம்பில் தெரியும் ஈட்டி முனைகளை நோக்கி வர மாட்டார்கள்.

அவர்கள் கடவினைத் தாண்ட நினைத்தாலோ, பின்வாங்கி நின்றாலோ நான் பார்த்துக்கொள்வேன். அக்கணம் அவர்களுக்குள் முளைக்கும் அச்சமே அவர்களை அழித்துவிடும். அவர்கள் சுதாரிப்பதற்கு முன்பே அழிவின் கொடூரத்தை அவர்களின் கண்களுக்குக் காட்டுவேன்” என்றான் தேக்கன்.

மூக்கு விடைத்து, மேல்மூச்சும் கீழ்மூச்சும் வாங்கிய இருவரையும் தேக்கனின் ஆவேசம் இறுகப்பற்றியது. ஈட்டியை உறுதிகொண்டு பிடித்தனர். கீதானி வலப்புறமும் அலவன் இடப்புறமுமாக விளிம்பு நோக்கிப் போனார்கள். தேக்கன் முதல் ஆளை அடித்துத் தூக்கும்வரை ஈட்டியை வெளிநீட்டிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தனர்.

கடவின் ஒரு பகுதியில் மெல்ல தலைதூக்கி எட்டிப்பார்த்தான் தேக்கன். அவர்கள் வரும் நேரத்தை மனம் கணித்தபடி காத்திருந்தது. காலடித்தடங்கள் கேட்கின்றனவா என்று கூர்மையாகக் கவனித்தான். முன்புறமிருக்கும் பாறைகளிலிருந்து பறவையொன்று குரல் எழுப்பியது. அவர்கள் நெருங்கிவிட்டார்கள் என்பது தெரிந்தது. ஓடிவரும் அசைவில் தேவவாக்கு விலங்குகள் ஓசை எழும்பியவண்ணம் இருந்தன. தேக்கன் கடவுக்குள் நுழைபவனைத் தோதான திசையிலிருந்து தாக்க, கால்கள் இரண்டையும் பாறையின் செதில்களுக்கு ஏற்ப இறுக அமுக்கிக்கொண்டிருந்தான்.

கீதானியும் அலவனும் தேக்கனை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தனர். தேக்கனின் கைகள் இரண்டும் பன்றிக்கொம்பினை உள்ளங்கைக்குக் கொண்டு வந்தன. முதல் ஆள் கடவினை நோக்கி முன்னேறி வரும் ஓசை கேட்டது. தேக்கன் பாறையோடு பாறையாக சாய்ந்து அடித்துத்தூக்க ஆயத்தமாக

இருந்தான். பாறையில் காலடியோசை கேட்ட கணத்தை மனம் கணிக்கும் முன் கடவின் பிளவை ஓர் உருவம் பாய்ந்து கடந்தது. கணிக்க முடியாத வேகத்தில் நிகழ்ந்த இச்செயலை விட்டுவிடாதபடி அவன் முதுகுப்புறத்தை நோக்கி மின்னல்வேகத்திற் பாய்ந்தான் தேக்கன்.

கடவின் பிளவுக்குள் கால் நுழைத்த கணத்திலேயே ஆளிருப்பதை ஓடிவருபவன் கவனித்துவிட்டான். தன்னைத் தாக்கப்போகிறான் என அறிந்தவுடன் முழுவேகத்தோடு வலக்கையைத் திருப்பிச் சுழற்றினான். முதுகுத்தண்டை நொறுக்கும் வேகத்தோடு பாய்ந்த தேக்கனை, சுழன்ற அவனது வலக்கை அடித்துத் தூக்கியது. இருளுக்குள் பாறையோடு சரிந்தான் தேக்கன்.

அவன் சரிந்து உருளும் ஓசை கேட்பதற்குள் மற்ற நால்வரும் கடவினைக் கடந்தனர். கீதானிக்கு எதுவும் பிடிபடவில்லை. இருளுக்குள் படுவேகமாக உருவங்கள் மறைவதும் யாரோ தூக்கி வீசப்பட்டதும் தெரிந்தது. ஆனால், யார் என்ன என்று தெரியவில்லை. ‘ஒருவன் விழுந்துவிட்டான். வெளியில் ஈட்டியை நீட்டலாம்’ என அவன் எண்ணிக்கொண்டிருக்கையில் இடப்புற விளிம்பில் நின்றிருந்த அலவன் கடவினை நோக்கி ஓடிவந்தான்.


ஈட்டியை வெளிப்புறம் நீட்டாமல் ஏன் கடவினை நோக்கி ஓடிவருகிறான் என்று கீதானிக்குப் புரியவில்லை. ஆனால், அலவனின் கண்கள் நடந்ததைத் துல்லியமாகப் பார்த்தன. அவர்கள் தாக்கிய வேகத்தில் ஆசான் மேற்பாறையில் மோதிக் கீழே விழுந்ததைப் பார்த்த கணம் உறைந்து நின்ற அலவன், சற்றுநேரம் கழித்துத்தான் ஆசானை நோக்கி ஓடிவந்தான். அதன்பிறகுதான் கீதானி ஓடிவந்தான்.
வந்தவுடன் ஆசானின் தலையை ஏந்திப்பிடிக்க கையைக்கொண்டுபோனான் அலவன். அவன் கைப்படுவதற்குள் ஆசான் தானே தலையைத் தூக்கினான். அந்த வேகத்துக்கு உடல் ஒத்துழைக்கவில்லை. வலக்கையை ஊன்றியே நிமிர வேண்டியிருந்தது. பின்மண்டையிற்பட்ட அடி சிறுமயக்கத்தை உருவாக்கியது. கண்களை இறுக மூடித்திறந்தான்.

சற்று ஆசுவாசப்பட்டபின், ``சுனையில் நீரள்ளி வா” என்றான். கீதானி ஓடினான். யானை தாக்கியதைப்போல் உணர்ந்தது தேக்கனின் உடல். எழுந்து உட்கார்ந்தான். கீதானி கை நிறைய நீரள்ளி வந்தான். முகத்தில் அறைந்தும் குடித்தும் தெளிச்சி கொண்டான் தேக்கன். கீதானி மீண்டும் மீண்டும் நீரள்ளி வந்தான்.

வலதுகை கொண்டு இடது தோள்பட்டையை இழுத்து அமுக்கிப்பார்த்தான். மாணவர்களிடம் எதுவும் காட்டிக்கொள்ளக் கூடாது என மனம் போராடியது. கண்கள் மேல்சொருக, மூச்சு வாங்கியது.

கால்களை மெல்ல இழுத்து ஊன்றி எழுந்தான். எலும்புகள் எங்கும் உடைந்துவிடவில்லை. தோள்பட்டையில்தான் நல்ல அடிபட்டிருக்கிறது. அது பாறையிற்போய் தாக்கியதால், ஏற்பட்ட அடியல்ல; அவன் கைவீசி தாக்கியதால், ஏற்பட்டது. `ஓடிக்கொண்டிருக்கும் ஒருவன் எதிர்பாராத

கணத்தில் பின்புறம் திரும்பி, இவ்வளவு ஆற்றலோடு தாக்குகிறான் என்றால், அவனது வலு எவ்வளவு? அவனது உடலுறுதியின் தன்மை என்ன? யார் இவர்கள்?’ தேக்கனின் மனம் பிடி கிடைக்காமல் போராடியது.



கீதானி மெல்ல வாய்திறந்து சொன்னான், ``அவர்களை நான் நன்றாகப் பார்த்தேன். பார்க்கவே அச்சந்தரும் உடல்வாகு கொண்ட வர்களாக இருந்தனர்” சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது கசப்பின் சுரப்பைத் தாங்கமுடியாமல் பெரும்பாடுபட்டான். தொண்டைக்குழியை அழுத்திய அவனது கை, சொற்களை இடைமறித்து நிறுத்தியது.

மூச்சுவாங்கியபடி தேக்கன் சொன்னான், ``அப்பேர்பட்டவனை வீழ்த்திவிட்டேன்.”

கீதானியும் அலவனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். தேக்கன் என்ன சொல்கிறான் எனப் புரியவில்லை.

தேக்கன் மீண்டும் சொன்னான், “அவனது ஓட்டத்தின் வேகத்தை நான் தவறாகக் கணித்துவிட்டேன். நான் நினைத்தைவிட இருமடங்கு வேகம்கொண்டிருந்தான். ஆனாலும், தப்பிச்செல்லவிடாமல் பாய்ந்தடித்தேன். துல்லியமாக அவனது பின்கழுத்து நரம்பை அடித்துவிட்டேன். அது அறுந்துவிட்டதை எனது உள்ளங்கை நன்கு உணர்ந்தது. இனி அதிகத்தொலைவு அவனால் ஓட முடியாது. சிறிது தொலைவிற்குள் விழுந்துவிடுவான்.”

மாணவர்கள் வியந்து பார்த்தனர்.

``மீதமுள்ள நால்வரை வீழ்த்தியாகவேண்டும்” என்று சொல்லியபடி எழுந்து கவனமாகப் பாறையின் மீது ஏறினான். குன்றின் சரிவு அடர்காடுகளைக்கொண்டது; அதற்குள் அவர்கள் நுழைந்து போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

தேக்கன் பாறையைவிட்டுக் கீழ் இறங்கினான். ``நீங்கள் வந்தவழியே திரும்பிப்போங்கள். முடிநாகன் மற்றவர்களை அழைத்துக்கொண்டு எதிரே வந்துகொண்டிருப்பான். கவனமாக இங்கே அழைத்து வாருங்கள். வேகமாக ஓடுங்கள்” என்றான்.

கீதானியும் அலவனும் மீண்டும் ஓடத் தொடங்கினர். முன்பிருந்த அதே வேகம் உடலில் இருந்தது. மனம் சற்றே குழம்பி இருந்தது. ‘தேக்கனையே தூக்கியடிக்கும் வலு கொண்டவர்களா அவர்கள்?’ என்று அலவன் சிந்தித்துக்கொண்டிருக்கையில், ‘அவ்வளவு பெரிய மனிதனை தேக்கன் எப்படி துல்லியமாக அடித்து நரம்பை அறுத்தார்!’ என வியந்தபடியே ஓடினான் கீதானி.

அவர்கள் சிற்றோடையைத் தாண்டும்பொழுது தேக்கன் கத்தும் ஓசையைக் கேட்டு நின்றனர் இருவரும். ‘அவரது இடதுகை இறங்கிவிட்டது. நம்மிடம் அதனைக் காட்டிக்கொள்ளாமல் சரிப்படுத்துவதற்காகத்தான் இருவரையும் அனுப்பிவைத்துவிட்டு அவரே தூக்கிவைத்து அதனைச் சரிப்படுத்துகிறார்’ என்பதை இருவராலும் புரிந்துகொள்ள முடிந்தது.

சிற்றோடையைக் கடந்ததும் மாணவர்கள் எதிர்ப்பட்டனர். ‘பிடித்துவிட்டீர்களா அவர்களை? எங்கே வைத்திருக்கிறீர்கள்? எல்லோரையும் கொன்றுவிட்டீர்களா? யாராவது உயிரோடு இருக்கிறார்களா?’ என்னும் வினாக்கள் எல்லோர் மனதிலும் மேலெழுந்தபடி இருந்தன. ஆனால், கசப்புக்கு அஞ்சி யாரும் வாய் திறக்கவில்லை. வினாக்கள் எதற்கும் சொல்ல விடையின்றி இருந்த கீதானிக்கும் அலவனுக்கும் கசப்பே கைகொடுத்தது. அவர்களை அழைத்துக்கொண்டு விரைவாக மச்சக்கடவுக்கு வந்து சேர்ந்தனர்.

இடக்கையின் தோள்பட்டையை ஒடங்கொடிகொண்டு இடைவிடாது சுற்றி இறுகக் கட்டியிருந்தான் தேக்கன். உள்ளுக்குள் பச்சிலையை வைத்திருக்க வேண்டும். தோள்பட்டைக்குக் கவசம் அணிவிக்கப்பட்டது போல் இருந்தது. என்ன ஆனாலும் உடனடியாக அதனைச் சரிசெய்வதற்கான ஆற்றல் அவற்றுக்கு உண்டு.

முடிநாகனும் மற்றவர்களும் வந்தவுடன் வீழ்ந்துகிடப்பவர்கள் எங்கே என்று தேடினர். யாரும் அங்கு இல்லை. மாறாக ஆசானுக்குத்தான் இடதுதோளில் கட்டுப்போடப்பட்டிருந்தது. என்ன நடந்ததென்று தெரியாமல் விழித்தனர்.

அவர்களின் வரவை எதிர்பார்த்து ஆயத்தமாக இருந்தான் தேக்கன். வந்ததும் சொன்னான், ``கீதானி, அலவன், மடுவன், அவுதி, வண்டன், பிட்டன் ஆகிய ஆறுபேரும் என்னுடன் வாருங்கள். மீதி நான்கு பேரும் முடிநாகனோடு சேர்ந்து எவ்வியூருக்குப் புறப்படுங்கள். நம் எதிரிகள் தென்கிழக்குத்

திசைநோக்கி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். ஆதிமலையின் மிகக்கடினமான அடர்காடு நிறைந்த பகுதிக்குள் அவர்கள் நுழைந்துவிட்டனர். எளிதில் அவர்களால் வெளிவரமுடியாது. நாம் இடப்புறமாக நடந்தால், வெகுவிரைவாக மேலே இருக்கும் எலிவால்முகட்டிற்குப் போய்விடலாம். அவர்கள் அங்கே வரும்பொழுது அவர்களை அழித்தொழிப்போம்.

நீங்கள் எவ்வியூர் சென்று பாரியிடம் கூறி உடனடியாக ஆதிமலையின் எலிவால்முகட்டிற்கு அழைத்துவாருங்கள். எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாகச் செல்லுங்கள்" என்றான்.

தேக்கனின் வேகம் உச்சரிக்கும் சொல் முழுவதும் ஏறியிருந்தது. தன்னால் மட்டும் முடியாது என்றுணர்ந்த கணத்தின் அதிர்ச்சியை வெளிக்காட்டாமல், அதே நேரத்தில் மாணவர்களை நம்பிக்கையோடு இயக்க, சொற்களை மனம் தேடியது. உள்ளுக்குள் ஊறிப்பெருகும் வெறி கணநேரத்தையும் வீணாக்கவிடவில்லை.

``எந்த வழி போவீர்கள்?"

``வந்த வழி."




``இல்லை. மிகவும் நேரமாகிவிடும். சிற்றோடையின் இடப்புறமாகவே சென்றால், சிறிது தொலைவில் அருவி வரும். அவ்விடத்தில் சிற்றோடையைக் கடந்து மேலே ஏறுங்கள். நேராகச் சென்றால், எவ்வியூர் போய்விடலாம்" என்றான்.

மாணவர்கள் சரியென்று தலையாட்டிச் சொன்னார்கள். அவ்வழி பற்றிய ஐயங்களுக்கு, விளக்கங்கள் தேவைப்பட்டன. ஆனாலும் கசப்பை மீறிப் பேச யாரும் தயாராக இல்லை.

முடிநாகனின் மனதுக்குள் தினவு ஏறியது. தன்னிடம் கொடுக்கப்பட்ட இப்பணியைச் சிறப்பாகச் செய்யவேண்டும். ஆபத்து வரும்பொழுது அதனை எதிர்கொள்ளும் இடத்தில் ஒருவன் இருப்பதுதான், வீரம் அவனுக்கு வழங்கும் வாய்ப்பு. அதனை வெற்றியாக முடிக்கவே ஒவ்வொருவனும் ஆசைப்படுகிறான்.

வலிமையான ஆயுதங்களை முடிநாகன் குழுவிற்கு வழங்கிய தேக்கன், "ஓடுங்கள்" என்று கத்தினான். பாறைப்பொடவுக்குள் இருந்த பறவையொன்று படபடத்தது. முடிநாகனும் மற்றவர்களும் அடுத்த அடி எடுத்துவைக்கும் முன் தேக்கன் சொன்னான், "ஈன்ற புலி உங்களை விரட்டுகிறது. இருளைக் கிழித்து நகரும் கால்களின் வேகம் மட்டுமே உங்களைக் காப்பாற்றும் என்ற எண்ணத்தோடு ஓடுங்கள்."

தேக்கன் சொல்லி முடிக்கும்முன் பாறையின் கீழ்ப்புறம் நோக்கிப் பாய்ந்தனர் ஐவரும்.


**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-40

பின்னிரவு கடந்தது. எவ்வியூருக்குள் நுழைய இன்னும் எவ்வளவு நேரம் ஆகுமோ தெரியவில்லை. இரவும் புதிதல்ல, காடும் புதிதல்ல. ஆனால், இரவில் காட்டுக்குள் பெரியவர்களின் துணையின்றிப் பயணித்தல் புதிது. காட்டில் கண்களைக்கட்டி விளையாடும் பேராபத்து நிலத்தில் இருக்கிறது. அந்த நிலத்தின் வாகும் வடிவும் தெரியாமல் நடப்பது, மீள முடியாத ஆபத்தை அடுத்த அடியில் நமக்குத் தந்து முடிக்கும்.

முடிநாகன் அச்சமின்றி வழிநடத்திச் சென்றான். குறுங்கட்டிக்கு, இந்தப் பகுதிக் காட்டைப் பற்றி நன்கு தெரியும். அவன் பெரிய கிழவியோடு சேர்ந்து இரு மாதங்களுக்கு முன் இந்தக் காடு முழுவதும் அலைந்து திரிந்தான். எவ்வியூரில் இரவுகளில் ஏற்றப்படும் கொம்பன் விளக்குக்கு ஒவ்வொரு பருவகாலத்துக்கும் ஏற்ப நாகக்கழிவும் நச்சுப்பிசினும் மாற்றிப் பூசப்படும். மழைக்காலத்தில் விளக்குகளை நோக்கி எண்ணிலடங்கா பூச்சியினங்கள் வந்து குவியும். அவற்றை விரட்ட புதிய சேர்மானத்தோடு கொம்பன் விளக்கை உருவாக்க வேண்டும்.

அதற்கு மிக அதிகளவு தேவைப்படுவது, செவ்விரியனின் கழிவும் மலைநாகத்தின் கழிவும்தான். அவற்றைக் காடுகளுக்குள் சேகரிக்கும் வேலையை முதுபெண்கள் செய்கின்றனர். குறுங்கட்டி, தன் கிழவியோடு இந்தக் காடு முழுவதும் அலைந்தான். பாறை இடுக்குகளிலும், மரத்தின் ஓரங்களிலும், மக்கிய செத்தைகளுக்குள்ளும் அவற்றைத் தேடினர். மண்புழு அளவு கனம்கொண்ட காய்ந்த குச்சியைப் போன்று கிடக்கும் செவ்விரியனின் கழிவை எடுத்து இச்சிமரப் பிசினைக் கலந்து கொம்பன் விளக்கின் மேல் மெழுக வேண்டும். அந்தச் சேர்மானத்தில் விளக்கின் சுடர்பட்டுக் கருகி மேலெழும் புகையும் வாசனையும் காட்டின் எந்தப் பூச்சியையும் நெருங்கவிடாது.



இந்த மழைக்காலம் தொடங்கும் முன்பிருந்தே கிழவியோடு சேர்ந்து இந்த மலையெங்கும் அலைந்து திரிந்தான் குறுங்கட்டி. எனவே, அவனுக்கு இந்தக் காடு மிக நன்றாக வசப்பட்டிருந்தது.

சிற்றாற்றைக் கடந்து மேலே ஏறியவுடன் முடிநாகனை முந்திக்கொண்டு பாய்ந்தன குறுங்கட்டியின் கால்கள். சிறு இடறும் இல்லாமல், மிகத்தெளிவாக வளைந்து, நெளிந்து, பாறைகளைக் கடந்து பாய்ந்து கொண்டிருந்தான் அவன். இளமனும் உளியனும் ஆயுதங்களைக் கவனமாக ஏந்திப் பிடித்தபடி ஓடிவந்துகொண்டிருந்தனர். தங்களுக்குள் ஒரு சொல்கூட பேசிக்கொள்ளாதபோதும் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றில் கவனம் செலுத்தினர். எல்லோரையும் ஓடவிட்டு, கடைசி யாக வந்துகொண்டிருந்தான் முடிநாகன். அவனின் கண்கள் விலங்குகள் ஏதேனும் தெரி கின்றனவா எனத் துழாவின. பின்னிரவின் சரிபாதி நேரத்தில் அவர்கள் எவ்வியூருக்குள் நுழைந்தனர்.

பாரியை எழுப்பிய வீரர்கள், “மாணவர்கள், அவசரமாகப் பார்க்க வந்துள்ளனர்” எனச் சொன்னார்கள்.

பாரிக்குக் காரணம் புரியவில்லை. ஆனாலும், அவர்களிடம் விளக்கம் கேட்பதைத் தவிர்த்தபடி எழுந்து வெளிவாசலுக்கு வந்தான். மாணவர்கள் ஆளுக்கு ஒரு பக்கம் மூச்சிரைத்தபடி கைகால்களை நீட்டிக் கிடந்தனர். பாரி வந்ததும் சட்டென எழுந்திருக்க நினைத்தனர். முடியவில்லை.




ஐவரையும் பார்த்தான் பாரி. முடிநாகன் மெள்ள எழுந்தான். ‘பேசப்போகும் வார்த்தை, தொண்டைக்குழிக்குள் எவ்வளவு கசப்பைக் கொட்டப் போகிறதோ?’ என்ற அச்சம் மேலெழுந்தது. பாரியை எழுப்பும்படி வீரர்களுக்குச் சொல்லிப் புரியவைக்கும் முன்பே, இருமுறை வயிறு குமட்டி வாந்தி எடுத்துவிட்டான். உதவி செய்யவந்த இளமனால், ஒற்றைச் சொல்லுக்குமேல் பேச முடியவில்லை. ஓடிவந்த களைப்பும் தாகமும் தொடர்ந்தன; எச்சில் ஊறுவதால், கசப்பு நிற்காமல் சுரந்துகொண்டிருந்தது. அவற்றையும் மீறி சிறு சொல் பேசினாலே, உமட்டலால் குடல் வெளிவருவதைப்போல அடிவயிறு பிரட்டிக்கொண்டு வருவதை மாணவர்களால் தாங்க முடிய வில்லை. “ஏதோ சொல்ல வருகிறார்கள். என்னவென்று புரியவில்லை” என்றுதான் வீரர்கள் பாரியிடம் சொன்னார்கள்.

முடிநாகன் எழுந்து நின்று மீண்டும் கசப்பை விழுங்க முடிவுசெய்தபடி சொன்னான், “தேக்கன் உங்களை அழைத்துவரச் சொன்னார்.”

முடிநாகனின் முகத்தை உற்றுப் பார்த்தான் பாரி. ஊறிப்பெருகும் கசப்பு அவனின் நாக்கைப் பிடுங்கிக் கொண்டிருந்ததை அந்த முகம் வெளிப்படுத்தியது. ‘தேக்கன் ஏன் என்னை அழைத்துவரச் சொல்ல வேண்டும்... இரவோடு இரவாக இவர்களை மட்டும் ஏன் அனுப்பியுள்ளான்?’ எனச் சிந்தித்தபடியே ஒவ்வொருவரையும் பார்த்தான். கைகால்கள் எல்லாம் இழுபட்டு, ஆங்காங்கே குருதி கசிந்தபடி கிடந்தனர்.

‘வழக்கமாகக் காடறிய உள்ளே அழைத்துச் சென்றுதான் பயிற்சி கொடுப்பான் தேக்கன். இம்முறை உள்ளே அழைத்துச் செல்லவே பயிற்சி தேவை என முடிவுசெய்துவிட்டான்போலும்’ எனத் தோன்றியது.

‘கேள்வி கேட்டு இவர்களை மேலும் கசப்பை விழுங்கவிட வேண்டாம்’ என்று முடிவுசெய்த பாரி, “ஓய்வெடுங்கள். காலையில் போவோம்” என்று சொல்லிவிட்டு, மாளிகை நோக்கித் திரும்பினான். திரும்பிய அவனின் கையை, சற்றும் எதிர்பாராமல் இறுகப் பற்றினான் முடிநாகன்.

உடன் இருந்த வீரர்களுக்கு என்னவெனப் புரியவில்லை. முடிநாகனின் கழுத்து நரம்பெல்லாம் விடைத்து, கண்கள் பிதுங்கின. அவனின் தோள்பட்டைகள் ரத்தவிளாறாக இருந்தன. அவனின் முகம் சொல்லவருவது என்னவெனப் புரியவில்லை. ஆனால், மாணவர்கள் மன்றாடுகிறார்கள் என்பது மட்டும் புரிந்தது.

‘தேக்கன், முதல் நாளிலேயே பயிற்சியை இவ்வளவு கடுமையாக ஏன் தொடங்கினான்?’ எனச் சிந்தித்தபடியே “சரி, புறப்பட்டு வருகிறேன்” என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றான் பாரி. மாணவர்கள் சற்றே நிம்மதி அடைந்தனர்.
சிறிது நேரத்தில் வெளியேறி வந்தான். குளிர் நடுக்கம் குறைவாகத்தான் இருந்தது. இருளின் கடைசி முடிச்சு அவிழ இன்னும் நேரம் இருந்தது.

“தேக்கன் எங்கே வரச்சொன்னார்?” எனக் கேட்டான் பாரி.

``ஆதிமலையின் எலிவால் முகட்டுக்கு” எனப் பதில் சொன்னது உளியன். `எப்படி இவ்வளவு துணிவு அவனுக்கு வந்தது?’ என்று எல்லோரும் நினைத்துக்கொண்டிருக்க, கைகளால் தொண்டைக்குழியைப் பிய்த்து எடுப்பதைப்போல நெரித்தான். அதையும் மீறி குமட்டல் வெளிவந்துகொண்டிருந்தது.

பாரிக்கு வியப்பு அதிகமானது. `பயிற்சியின் முதல்நாளே இரவு முழுவதும் ஓடவிட்டு, மறுபடியும் அவ்வளவு தொலைவு ஏன் வரச்சொல்ல வேண்டும்?’ பாரி குழம்பியபடியே நின்றுகொண்டிருந்தான். பொழுதாகிக் கொண்டிருந்தது. மாணவர்களின் பதற்றம் அதிகமானது. இவ்வளவு நேரமும் பேசுவதைப்பற்றி நினைக்கவே முடியாமல் இருந்த ஆயன், சூழலைப் புரிந்துகொண்டு சொன்னான். “எதிரிகள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.”

சின்ன புன்முறுவலோடு அவனைப் பார்த்தான் பாரி.

‘தேக்கன் சொன்ன கதையை உண்மை என நம்பியே இவர்கள் இவ்வளவு தொலைவு வந்துள்ளனர். தேக்கனின் பயிற்சி உடலுக்கும் அறிவுக்கும் சமஅளவு முக்கியத்துவம் உள்ளதாக இருக்கும். இவர்கள் ஒன்றில் வெற்றிபெற, இன்னொன்றில் தோற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

குதிரைப் பாதைகள் எல்லைப்புற மலைகளுக்குத்தான் இருக்கின்றன. `எலிவால் முகட்டுக்கெல்லாம்

மனிதர்கள் நடந்து போவதே கடினம். முதல்நாளே இந்தக் கடினப் பயிற்சியை ஏன் கொடுத்தான் தேக்கன்? அதுவும் ஐந்து பேருக்கு மட்டும். இவர்களை மட்டும் சோதித்துப்பார்க்க சிறப்புக் காரணம் என்னவாக இருக்கும்?' என எண்ணிய கணத்தில் மறுசிந்தனை வந்தது... 'மற்ற அறுவரும் எந்தத் திசை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறார்களோ?'

`தேக்கனின் நோக்கம் எதுவாகவும் இருக்கட்டும். மாணவர்களை மீண்டும் தேக்கனிடம் கொண்டுசேர்க்கும் வரை நாம்தான் அவர்களுக்கு ஆசானாக இருக்க வேண்டும்' என்று மனதுக்குள் முடிவுசெய்துவிட்டு, மாளிகைவிட்டு வெளியேறி வந்தான் பாரி. உடன் வீரர்களும் வந்தனர்.




"இவர்களே இருள் அப்பிக்கிடக்கும் இந்தக் காட்டுக்குள் தனியாக வந்துள்ளனர். நான் வீரர்களோடு போனால், நன்றாகவா இருக்கும்?" என்றான்.

வீரர்கள் நின்றுகொண்டனர். பின்னால் வந்துகொண்டிருந்த மாணவர்கள் இந்த உரையாடலை அறியவில்லை.

எவ்வியூரின் எல்லை தாண்டிக் காட்டுக்குள் இறங்கும்போது மீண்டும் மாணவர்களின் கால்கள் வேகமெடுத்தன. பாரி, அவர்களின் செயல்களை உன்னிப்பாகக் கவனித்தபடி வந்தான். 'தேக்கன் நடத்தும் இந்தச் சோதனை ஓட்டம் மாணவர்களுக்கானதாக மட்டும் தெரியவில்லை. சேரர்கள் எந்நேரமும் போர்தொடுக்கும் வாய்ப்புள்ள இந்த வேளையில், எனக்குவரும் செய்திகளை விழிப்போடு கேட்டு நான் எப்படி முடிவெடுக்கிறேன் என என்னையும் சோதிக்கிறாரா? வீரகுடி ஆசானின் மனதில் என்னதான் இருக்கிறது?' எனப் பாரி குழம்பினான்.

பாரி சிறுவனாக இருந்து காடறியச் செல்லும்போது தேக்கனாக இருந்தது இவரேதான். பகரியை வேட்டையாடி முதன்முறையாக தேக்கனாகி மாணவர்களை அழைத்துச்சென்றது அப்போதுதான். ஒரே காலத்தில் தேக்கன் மூலம் மாணவர்களும், மாணவர்கள் மூலம் ஆசானாகத் தேக்கனும் பயிற்சிபெற்றனர். ஆசானுக்கே முதன்முறையாக இருந்ததால், பயிற்சி இளகுத்தன்மையற்று மிகக் கடுமையாக இருந்தது. அந்த ஆழ்மனப்பதிவே இப்போதும் பாரியை அவ்வாறு சிந்திக்கவைத்தது.

**தே**வாங்கு தன் கால்களால் பற்றி நிற்பதற்கு ஏற்ப, கூடை முழுவதும் குறுக்குக்குச்சிகள் செருகப்பட்டிருந்தன. சிற்றுருளைப்போல் நீள்வடிவுகொண்ட ஒரு கூடையில் பத்திலிருந்து இருபது தேவாங்குகள் வரை இருந்தன. ஒன்றின் மேல் ஒன்று அமுக்கி நசுங்கிவிடாதபடி குறுக்குக்குச்சியைக் கொடுத்து அந்தக் கூடை பின்னப்பட்டிருந்தது. எவ்வளவு வேகமாக ஓடினாலும், எந்தப் புதருக்குள்

நுழைந்தாலும் தேவாங்குக்கு எந்தச் சேதாரமும் ஆகாதபடி அதை வடிவமைத்திருந்தனர்.

இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவன் காலம்பன். இவன் பறம்பு மலையைப் பார்த்ததில்லை. ஆனால், பலரும் சொன்ன குறிப்புகளைக்கொண்டு இந்தத் திட்டத்தை வடிவமைத்தான். மொத்தம் முப்பது பேர் வந்துள்ளனர். காரமலையின் முகட்டில் பத்து பேர் நின்றுகொண்டனர். நடுமலையின் முகட்டில் எட்டு பேர் நிற்கின்றனர். ஆதிமலையின் முகட்டில் ஏழு பேர் நின்றுகொண்டனர். ஐவர் மட்டும் கொற்றவைப் புதர் நோக்கி உள்ளே நுழைந்தனர்.

வரும்போது யார் கண்ணிலும் பட்டுவிடாமல் படுவேகமாக வந்துவிட முடியும் என அவர்கள் உறுதியாக நம்பினர். ஆனால், தேவாங்கைப் பிடிக்கும்போது காவல் வீரர்கள் பார்த்துவிட்டால் தப்பிச் செல்லுதல் எளிதல்ல. பறம்புநாட்டு வீரர்களின் ஆற்றல் இணையற்றது. எனவே, ஆங்காங்கே தங்கவைக்கப்பட்டுள்ள வீரர்களிடம் கூடையைக் கைமாற்றி எப்படியாவது பறம்புமலையை விட்டுக் கீழிறக்க வேண்டும் என்பதுதான் திட்டம்.


அவர்கள் எதிர்பார்த்ததைப்போலவே, கொற்றவையின் கூத்துக்களத்துக்கு வந்தடைவது வரை யார் கண்ணிலும் படவில்லை. அங்கே காவல் வீரர்கள் இல்லாதது அவர்களின் வேலையை மேலும் எளிதாக்கியது.

தேவாங்கைப் பிடிக்க மூங்கில் குச்சியை வெட்டி, முனையில் தோற்பை போன்ற சுருக்குத் துணியைச் செருகினர். நீள்குச்சிகளைக்கொண்டு மிக விரைவாக அவற்றைப் பிடித்தனர். ஆனால், எதிர்பாராதவிதமாக சிறுவர்களை அழைத்துக்கொண்டு கிழவன் ஒருவன் வந்து நின்றதை அவர்களின் கூட்டத்தில் ஒருவன் பார்த்தான். சிறிது நேரத்தில் அந்தச் சிறுவர்கள் கூட்டம் போய்விட்டது. பிறகு எப்படி மீண்டும் வந்து கடவின் பின்னால் இருந்து தாக்குதல் தொடுத்தார்கள் என்பதுதான் காலம்பனுக்குப் புரியவில்லை.

அவன்தான் முன்னால் ஓடிக்கொண்டிருந்தான். தங்களை எப்படி அவர்கள் கண்டறிந்தார்கள் எனச் சிந்தித்தபடியே அவன் ஓடினான். இருளுக்குள் எளிதில் நுழைய முடியாத அடர்காட்டுக்குள் அவர்கள் நுழைந்துவிட்டதால், விரைவாக முன்னகர முடியவில்லை.

கூடையைச் சுமந்து சென்ற ஒருவன், மெள்ள முனகத் தொடங்கினான். “என்னால் முடியவில்லை” சத்தம் மட்டும் வெளிவந்தது. மற்ற நால்வரும் ஓடுவதை நிறுத்தி அவன் அருகில் வந்தனர். அவன் தளர்ந்தான். “என்ன ஆனது?” என்று மற்றவர்கள் விசாரிக்க, ``கடவின் மறைவிலிருந்து தாக்கியவனின் அடி நரம்புகளை ஏதோ செய்துவிட்டது. என்னால் கால்களை முன்னகர்த்த முடியவில்லை” என்று சொல்லிக்கொண்டே மண்டியிட்டான்.

காலம்பன் அவனைத் தாங்கிப் பிடித்தான். மற்றவர்கள் அவன் முதுகில் இருந்த கூடையைக் கழற்றினார்கள். ``நாங்கள் தோள்களில் தாங்கலாக உன்னைத் தூக்கிக்கொண்டு போய்விடுகிறோம். கவலைப்படாதே” என்றனர்.



இருவர் அவனின் கைகளைத் தங்களின் தோள்களின் மேல் போட்டபடி அவன் நடந்துவர உதவி செய்தனர்.

**பொ**ழுது விடிந்துகொண்டிருந்தது. கதிரவன் கண்ணில் படவில்லை. ஆனால், காடு முழுவதும் ஒளி ஊடுருவிக்கொண்டிருந்தது. தேக்கன், அடர்காட்டுக்குள் போகாமல் வேறு பாதையைத் தேர்ந்தெடுத்துப் போனான். அது சற்று அதிகத் தொலைவுதான். ஆனால், அந்த அடர்காட்டைக் கடப்பதற்கான நேரத்தில் பாதி நேரமே ஆகும்.

மாணவர்கள் களைத்துப்போயினர். ஆனாலும், `நாம் சென்றுவிடலாம்' என்ற நம்பிக்கையோடு போய்க்கொண்டிருந்தனர். 'சரியான நேரத்துக்குள் பாரி வந்து சேர்ந்தால், மீதமுள்ள நால்வரையும் எலிவால் முகட்டிலேயே வெட்டிச்சாய்க்கலாம்' என்ற வெறி ஏறிக்கொண்டிருந்தது. 'மாணவர்கள் என்ன சொல்லி பாரியை அழைப்பார்கள்? அங்கு கேட்கப்படும் கேள்விக்கு இவர்கள் கசப்பை விழுங்கிப் பதில் சொல்லியிருப்பார்களா? என்ன சொல்ல வேண்டும் என்பதை நாம் சொல்லி அனுப்பியிருக்கலாமோ?' எனத் தோன்றியது. இந்த எண்ணங்களோடு ஓடிக்கொண்டிருந்த தேக்கனுக்கு, சிற்றாற்றின் வலதுகரையில் சுண்டாப்பூனை ஒன்று இருப்பதாக இரு நாள்களுக்கு முன் வீரன் ஒருவன் சொன்னது சட்டென நினைவுக்கு வந்தது. `நாம் அதை இவர்களிடம் சொல்லாமல் அனுப்பி விட்டோமே, தீங்கு ஏதும் நேர்ந்திருக்குமா!' என்று எண்ணிய கணத்தில் பதற்றம் கூடியது.

**மா**ணவர்கள், பாரியுடன் சிற்றாற்றைக் கடந்தனர். நேற்று மாலை ஓடத்தொடங்கிய அவர்கள், இன்னும் நின்றபாடில்லை. தேக்கன் சொல்லி அனுப்பிய சொல் அவர்களை நிற்கவிடாமல் துரத்தியது.

மாணவர்களின் ஓட்டத்துக்கு ஈடுகொடுத்தபடி சற்றே பெருநடை நடந்துவந்தான் பாரி. ஒவ்வொருவனின் நடையையும் வேகத்தையும் கவனித்தான். முடிநாகனின் பாதம் முழுவதும் மண்ணை அப்பி எழுந்தது. இளமனின் கால்விரல்கள் விரிவுகொள்ளாமல் இருந்தன. உளியன்

தேவைக்கு அதிகமான உயரத்துக்குக் காலைத் தூக்குகிறான். ஆயனின் நடைதான் ஒப்பீட்டளவில் சரியாக இருந்தது. அதனால், மற்றவர்களைவிட அவனால் வேகமாகப் போக முடிந்தது.

கால்களில் ஒவ்வொருவருக்கும் இருக்கும் பிரச்னையைச் சொன்ன பாரி, காட்டு விலங்குகள் ஒவ்வொன்றின் நடையைப் பற்றியும், கால் அமைப்பைப் பற்றியும் விளக்கத் தொடங்கினான். அவற்றின் வேகத்துக்கும் பாதத்தை அவை பயன்படுத்தும் உத்திக்கும் உள்ள உறவை அவன் விளக்கிச் சொல்லும்போது மாணவர்கள் சற்றே எரிச்சலோடு அதைக் கேட்டு நடந்தனர்.

எவ்வளவு முறை சொற்களாலும் சைகையாலும் சொல்லியும் பாரியைவிட முன்னால் ஓடிவிட முடியவில்லை. களைத்துப்போன தங்களின் ஓட்டத்துக்கு ஈடுகொடுத்தே வருகிறான் என்ற கோபம் எல்லோருக்கும் இருந்தது. என்ன செய்வது எனத் தெரியவில்லை.

இந்நிலையில்தான் பாரியின் கண்களுக்கு அந்தச் சுருள்வால் தெரிந்தது. தலை சாய்த்து உற்றுப்பார்த்தான். புற்களுக்குள்ளே தடித்த செங்காவிநிறச்சுருள் தனித்துத் தெரிந்தது. அவனின் ஐயம் உறுதியானது. அவனை அறியாமலே கால்கள் நின்றன. சின்னதாக ஒலியெழுப்பி மாணவர்களை நிற்கச் சொன்னான். யாரும் அதைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. தளர்ந்தபடி நடந்தனர். சற்றே சத்தமாகச் சொன்னான், “அங்கே நிற்பது சுண்டாப்பூனை; அப்படியே நில்லுங்கள்.”


சுண்டாப்பூனையின் வால், மேல் நோக்கிச் சுருண்டுதான் இருக்கும்; ஒருபோதும் கீழே தொங்காது. அதன் பற்கள் பன்றியின் பற்களைப் போன்றது. கடவாயில் இருந்து உதடு பிளந்து மேல் நீண்டிருக்கும். மனிதனை அதன் முகம் உரசிப் போனாலே, வாள்கொண்டு சீவிப் போனதைப்போல் ஆகிவிடும். அது நீளத்திலும் உயரத்திலும் புலியைவிட சற்றே குறைவு. ஆனால், வேகமும் தாக்கும் திறனும் புலியைவிட அதிகம். சுண்டாப்பூனையைக் கண்டால் புலி ஒதுங்கிப்போகும் என்பார்கள்.

மனிதர்கள் இதைப் பார்த்துவிட்டால் அப்படியே நின்றுவிட வேண்டும். அது சில நேரம் பக்கத்தில் வந்து முகர்ந்து பார்த்துவிட்டுப் போகும். சில நேரம் தொலைவில் இருந்தபடியே போய்விடும். ஆனால், அதைப் பார்த்தபிறகு ஓடத் தொடங்கினால், அவ்வளவுதான். அதன் வேட்டையிலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது. இந்தக் காட்டில் அதற்கு இணையாக ஓடும் இன்னோர் உயிரினம் கிடையாது.

அதைப் பார்த்த கணம் அப்படியே நின்றான் பாரி. மாணவர்கள் நிற்காமல் நடந்தனர். தொலைவில் செடிகளுக்கு இடையில் தெரியும் சுருள்வாலை அவர்கள் பெரிதாகக் கருதவில்லை. பாரிக்கு, சின்னதாகப் பதற்றம் வரத் தொடங்கியது. “நில்லுங்கள்” என்று மீண்டும் மெள்ளக் கத்தினான். முடிநாகனுக்கு தேக்கன் சொன்னதுதான் நினைவுக்கு வந்தது, `உன் பின்னால் ஈன்ற புலி துரத்துகிறது என நினைத்துக்கொண்டு ஓடு’ என்ற வார்த்தைகள் எதிரொலித்தபடி இருந்தன. ‘எதையோ விளக்குவதற்காக நிற்கச் சொல்கிறார் பாரி’ என்று நினைத்தபடி எரிச்சலில் சற்றே வேகத்தை அதிகப்படுத்தினான் முடிநாகன்.

“என்ன செய்கிறாய் நீ?” என்று பாரி குரல் உயர்த்திக் கத்தியபோது மற்றவர்களும் முடிநாகனைத் தொடர்ந்து ஓடத் தொடங்கினர். கண நேரத்தில் ஏதேதோ நடப்பதுபோல் ஆனது. ஈட்டியை இறுகப்

பிடித்தான் பாரி. ‘அது நமக்கு அருகில் வந்தால் மாய்த்துவிடலாம். முன்னால் போகிறவனை ஓர் அடி அடித்துவிட்டு பாய்ந்து ஓடினால் போதும். முதுகுக்கறி எதுவும் மிஞ்சாது. ஏன் இவர்கள் நாம் சொல்வதைக் கேட்க மறுக்கின்றனர்?’ என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கும்போது, மாணவர்களின் எண்ணம் வேறொன்றாக இருந்தது. பதறி ஓடவேண்டிய நேரத்தில் நிற்கச் சொல்லிக் கத்தும் பாரியின் சொல்லை மறுப்பதன் மூலம் தங்களின் கோபத்தை வெளிக்காட்டினர்.



அது இவர்களை நோக்கி வரத் தொடங்கியது. `நாம் எவ்வளவு போராடினாலும், அதனுடைய ஓர் அடி எவன்மீதாவது பட்டால் போதும். அவன் சாவதைத் தவிர வேறு வழியில்லை’ எனப் பாரியைப் பதற்றம் சூழ்ந்தது. கண நேரத்தில் பாய்ந்து முன்னால் போன பாரி, முடிநாகனின் கழுத்தைப் பிடித்து இழுத்துவிட்டான். அவன், பின்னால் சாய்ந்த வேகத்தில் நான்கு மாணவர்களும் மிரண்டு நின்றனர். விரல்களை ஓங்கியபடி “அமைதியாய் நில்லுங்கள்” என்றான் பாரி. அவர்கள் அப்படியே நின்றனர்.

சுண்டாப்பூனையும் சிறிது நேரம் தொலைவில் இருந்தபடியே பார்த்தது. பின்னர் வேறு பக்கம் சென்று மறைந்தது. அது போனதை உறுதிப்படுத்திக்கொண்டபிறகு சொல்லத் தொடங்கினான் பாரி. சுண்டாப்பூனையைப் பற்றிக் கேள்விப் பட்டிராத அவர்களுக்கு அதன் தன்மையை விளக்கினான். அவர்கள் அதைக் கவனித்ததுபோல் தெரியவில்லை. அவர்களின் கவனம் முழுவதும் ஆசானிடம் இருந்தது.

பாரியின் மனதில் சின்னதாக வருத்தம் எழுந்தது. `மாணவர்களை இழுத்து நிறுத்த வேண்டியதாகிவிட்டதே!' என நினைத்துக் கொண்டே அவர்களோடு சேர்ந்து பேசியபடி ஓடினான்.

கண்ணில் படும் ஒவ்வொன்றைப் பற்றியும் சொல்லிக்கொண்டே வந்தான். "எங்களால் வேகமாக ஓட முடியவில்லை. நீங்களாவது முன்னால் போங்கள்" என்று முடிநாகன் அரைகுறை வார்த்தைகளிலும் கை அசைவிலும் சொல்லிப்பார்த்தான். ஆனால், பாரி அதைப் பொருட்படுத்தவில்லை. மாணவர்களுக்குச் சொல்லித் தருவதிலே கவனமாக இருந்தான். ஏதோ ஒருவகையில் தேக்கன் தனக்கு வைக்கும் சோதனையாக அவன் மனதில் பதிந்தது.

`மலையின் மேற்குப் பக்கக் காட்டுக்குள் கடந்த மாதம் முழுவதும் அலைந்தோம், கீழ்த் திசையின் உள்காடுகளுக்குள் நான் வந்து நீண்டகாலமாகி விட்டது. சேரனோடு போர் தொடங்கிவிட்டால் மேற்குப் பக்கமிருந்து நம் கவனம் திசை திரும்ப நெடுங்காலமாகிவிடும். எனவே, கீழ்த் திசைக் காட்டின் இண்டு இடுக்குகளுக்குள் அலைந்து திரிவது அவசியம் எனத் தேக்கன் கருதியிருக்கலாம். மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் வாய்ப்பாகவும் இது அமையும் எனக் கருதியிருப்பார்' என்று நினைத்துக்கொண்டான் பாரி.

ஒரு பாறையின் வளைவில் கடந்ததும் எதிரில் குத்துக்கோரை முளைத்துக்கிடந்தது. "அதில் மிதித்து நடக்கக் கூடாது. அதன் முனைகள் கால்விரல்களின் இடைவெளிகளை எளிதில் அறுத்துவிடும்" என்று சொல்லியபடி சற்று விலகி ஓட வழி காட்டினான். சிறிது தொலைவில் சங்கஞ்செடி பெரும்புதர்போல் கிடந்தது. "அதில் மிதித்து நடந்தால், இலையில் உள்ள பால் நம்மீது பட்டவுடன் அரிக்கத் தொடங்கும். எனவே, மிதிக்காமல் விலகிச் செல்லுங்கள்" என்றான். போகும் வேகம் கூடவில்லை. மேலும் கீழுமாக அலைக்கழிப்பதே அதிகமாகிக்கொண்டிருந்தது.

மாணவர்கள், மனதுக்குள் பொருமிக் கொண்டிருந்தனர். பின்னால் வந்த பாரி, "நில்லுங்கள்" என்று சத்தம் கொடுத்தான். கோபம் மேலிட நின்றனர். அருகில் மிகப்பெரிய செங்கிளுவை மரம் இருந்தது. அதன் கிளை இடுக்கில் எரிவண்டின் கூடு அப்பியிருந்தது. மாணவர்களுக்கு அதைக் காட்டியபடி பாரி சொன்னான், "மரத்தின் முண்டுபோல பெரியதாக இருக்கிறதே, அதுதான் எரிவண்டுக் கூடு. அந்தக் கூட்டைத் தொந்தரவு செய்தால் அவ்வளவுதான்; நம்மை விரட்டி விரட்டிக் கொத்தும். எவ்வளவு விரைந்து ஓடினாலும் அதனிடமிருந்து தப்பிப்பது எளிதல்ல."

பாரி சொல்லி முடிக்கும்போது, முடிநாகன் விட்டான் ஒரு கல்லை. அது எரிவண்டின் கூட்டைப் பிய்த்துக்கொண்டு போனது. ``என்ன செய்கிறாய் நீ?" என்று பாரி கேட்டு முடிக்கும் முன், படை திரட்டி வந்தது எரிவண்டுக் கூட்டம். மாணவர்கள் வெறிகொண்டு ஓடினர். செடி, கொடிகளில் முண்டியும் புதருக்குள் நுழைந்தும் ஓடிய அவர்களின் கால்கள் பலமடங்கு வேகம்கொண்டன. எரிவண்டின் சத்தம் கேட்கக் கேட்கக் கால்கள் காற்றைக் கிழித்துக் கொண்டிருந்தன.

'என்ன ஆனாலும் பாரி நம்மைக் காப்பாற்றுவான்' என்று அவர்களுக்குத் தெரியும். எனவே, அவர்களின் கால்கள் பதற்றமின்றிப் பறக்க முயன்றுகொண்டிருந்தன. முன்னால் ஓடிக்கொண்டிருந்த முடிநாகன் மனதில் எண்ணிக்கொண்டான், `தேக்கனின் சொல்லைக் காப்பாற்றுகிறேன். பாரியையும் சேர்த்து வழிநடத்துகிறேன்.'

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-41

**நே**ற்று மாலை ஓடத்தொடங்கியவர்கள் இன்னும் நின்றபாடில்லை. தேக்கன் வழக்கம்போல் முன்னால் ஓடிக்கொண்டிருந்தான். மாணவர்கள் வரவேண்டும் என்பதற்காகச் சற்றே வேகம் குறைத்து ஓடினான். அவர்கள் விடாப்பிடியோடு ஓடிவந்தனர். அவர்களின் பிரச்னை ஓடுவதில் இல்லை. ஓடிக்கொண்டே இருப்பதால், தண்ணீர் தாகமெடுத்தது. நீர் குடித்துக் கசப்பை விழுங்கும் துணிவு யாருக்கும் இல்லை.




ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் சாமப்பூ, கார்காலத்தில்தான் பூக்கத் தொடங்கும். அதன் பிறகே மாணவர்களை அழைத்துக்கொண்டு காடறியப் புறப்படும் சடங்குகள் தொடங்குகின்றன. குலநாகினி மலைவேம்பின் இலையில் சாறெடுத்து அடித்தொண்டையில் ஊற்றும் நிகழ்வுதான் காடறிதலின் தொடக்கம்.

காட்டின் ஆதிக்கசப்பு அது. நஞ்சினும் மேலான கசப்பு அது. அக்கசப்பினைப்பற்றி எவ்வியூரில் யாரும் எப்போதும் பேசவே மாட்டார்கள். வாரக்கணக்கில் விடாது சுரக்கும் கொடுங்கசப்பை விழுங்கவேண்டியதிருக்கும் எனத்தெரிந்தால் சிறுவர்கள் காடறியப் புறப்படவே தயங்குவார்கள். எனவே, இதுபற்றிப் பேசுவதேயில்லை.

கொற்றவையை வழிபட்டபின் ஆதிமலையின் செங்குகையை அன்றிரவே அடைவார்கள். அதன்பின் சில மாதங்கள் அங்குதான் தங்குவார்கள். மழைக்காலமாதலால், அதிகம் தாகமெடுக்காது. உணவு வழக்கம்போல் உண்ணும் முறையில் இருக்காது. நாள்தோறும் ஒரே ஒரு காய் மட்டுமே தரப்படும். கடித்தும் சுவைத்தும் உண்ணவேண்டியிருப்பதால், விழுங்கும் தேவை மிகமிகக் குறைவே. காயின் துவர்ப்பு, தேங்கி நிற்கும் கசப்பை இறுகப்பிடித்து இறங்கும். கசப்பும் துவர்ப்பும் சுவைநாளங்களின் அடிவேரில் நிலைகொள்ள வைக்கப்படும்.

காயின் அளவும் நாளாக ஆகச் சிறிதாகிக்கொண்டே இருக்கும். இறுதியில் நெல்லிக்காய் அளவேயுள்ள கனி மட்டுமே ஒரு நாளைக்குப் போதுமானதாக மாறிவிடும். பிறந்ததில் இருந்து நன்றாக உண்டு வளர்ந்த அவர்களின் உடல் இறுகுவதற்கான பயிற்சி அது. தசைகள் எலும்புகளோடு ஒட்டிப் பாறையின் இறுக்கம் உடலுக்கு வாய்க்கும். அதன்பிறகு, செங்குகையிலிருந்து வெளியேறுவார்கள்.



குகைவாழ்க்கை முடியும்போது கசப்பு மட்டுமன்று, எல்லா சுவைகளும் நாக்கிலிருந்து வடிகட்டப்பட்டுக் கீழிறக்கப்பட்டிருக்கும். மேல்தாடை மட்டுமே சற்று சுவை உணர்வுகொள்வதால், நடுவில் தாழ்ந்திருக்கும் மனித நாக்கு மேல்நோக்கி உயரவே தொடர்ந்து முயலும்.

தலைகீழாகப் புரண்டிருக்கும் யானை நாக்கினைப் போன்ற வடிவம் அது. இம்மாற்றம் நிகழும்போது, பேச்சுக்குழன்று பின் கொஞ்சம் கொஞ்சமாகச் சரியாகும். காட்டின் மொழி விதவிதமான ஓசைகளைக்கொண்டது. அந்த ஓசைகளை எழுப்ப மனித நாக்கின் இயல்பான வடிவத்தால் முடியாது. பறவைகளும் விலங்குகளும் எழுப்புமோசைக்கு எதிரோசை கொடுக்க மேல்தாடையைத் தொட்டுக்கிடக்கும் நடுநாக்கே அடிப்படை ஆதாரம்.

ஓசையெழுப்பும் முழுத்திறனும் ஒருவனுக்கு வரும்வரை ஒற்றைக் கனியின்றி வேறு உணவு உண்ண அவனை அனுமதிப்பதில்லை. காடறிதலின் முதற்பயிற்சி காட்டின் மொழியைக் கற்றுக்கொள்ளுதல்தான். அதற்கான தொடக்கத்தைத்தான் குலநாகினி அடிநாக்கில் வைத்து அனுப்புகிறாள். அங்கிருந்து தொடங்கி மரநாயில் வந்து முடிகிறது அது.

காட்டு விலங்குகளின் ஓசையை அறிவதில் மிகக்கடினமானது மரநாய் ஓசைதான். மரமேறி விலங்குகளின் வகையிலும் சேராத, மண்மீது நடக்கும் விலங்கின் வகையிலும் சேராத மரநாய் எழுப்பும் ஓசை, முற்றிலும் மாறுபட்ட  தன்மையைக்கொண்டிருக்கும். அதனைத் துல்லியமாகக் கவனித்து அறிதல் எளிதன்று. அவ்வோசையின் முடிப்பில் இருக்கும் சிறுசுழிவை நுட்பமாகக் கவனித்து அறியவில்லையெனில் எளிதில் ஏமாற்றமடைவோம். ஓசையின் முடிப்பில் இருக்கும் அச்சுழிவை மீண்டும் மீண்டும் எழுப்பிப்பார்த்தே உணரவும் அறியவும் முடியும்.

கீழ்வளைந்திருந்த நடுநாக்கு இப்பயிற்சியினால் மேல்நோக்கி எழுந்து பின் சமதளமடையும். இவை

நிகழ்ந்து முடியும்போது, உள்ளுக்குளிருந்து விடாது சுரந்துகொண்டிருந்த கசப்பு எப்போது, எங்கே மறைந்ததென்ற நினைவே இருக்காது.

இப்பயிற்சிகள் எதுவும் நிகழாமல், அடித்தொண்டையில் வைக்கப்பட்ட கொடுங்கசப்பு உள்ளிறங்கியபடியே இருக்க மாணவர்கள் ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். ஓட ஓட தாகமெடுக்கிறது. நீரை அருந்தவோ, வேறு உணவை உண்ணவோ முடியவில்லை. ஒரு மிடறு எச்சில் உள்ளே போனாலே, கொடுங்கசப்பு உள்ளிறங்கும் என்பதை நினைத்து தேக்கன் மிகவும் கவலைகொண்டிருந்தான். ‘அவர்களின் தொண்டைக்குழி முழுவதும் இந்நேரம் புண்ணாகியிருக்கும். இதுவரை காடறியப்போன மாணவர்கள் யாரும்  கண்டிராத கொடிய சோதனையை இவர்கள் கண்டுகொண்டிருக்கின்றனர். இவர்களின் ஓட்டத்தை நிறுத்தச் சொல்லவும் முடியாது. ஓடியபடியே இருந்தால் இவர்கள் என்ன ஆவார்கள் என்றும் தெரியவில்லை’ எனச் சிந்தித்தபடியே தேக்கன் ஓடினான். ஆனாலும் அவனது கவனம், வேகத்தைக் கூட்டும் செயலோடு தன்னையறியாமலே இணைந்திருந்தது.

அடர்காட்டினுள் புகுதல் எளிதல்ல. செடிகொடிகளை விலக்கியும் அறுத்தும் முன்னகர நினைத்து எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியும் நகரமுடியாத பெரும்புதரை நோக்கியே நகர்த்திச்செல்லும் ஆபத்துண்டு. இயற்கையின் தன்மைகளைத் துல்லியமாக அறிந்தவர்களாகத் தான் அவர்கள் இருந்தனர்.எனவே, எக்காட்டுக்குள்ளும் நுழைந்து வெளியேறும் திறன் கொண்டிருந்தனர்.



காலம்பன், சரிவுகளில் கற்கள் உருளாமல் சரசரவென மேலேறிக்கொண்டிருந்தான். அடிபட்டவனால் வேகமாக நடக்க முடியவில்லை. மற்றவர்கள் உதவிசெய்தாலும் அவனால் ஒத்துழைக்க முடியவில்லை. ஆனாலும், அவனை விட்டுவிடக் கூடாது என்பதில் நால்வரும் உறுதியாக இருந்தனர்.

நன்றாக விடிந்துவிட்டது. பின்னிக்கிடக்கும் மரங்களுக்கிடையில் ஊடுருவிக் கதிரவனின் ஒளிக்கதிர்கள் கீழிறங்கிக்கொண்டிருந்தன. ‘நம்மை அவர்கள் பார்த்துவிட்டார்கள். எனவே, விரைவாகச் செல்ல வேண்டும். காட்டை அவர்கள் அளவுக்குப் புரிந்தவர்கள் யாருமில்லை. எனவே, அவர்களின் தாக்குதல் எப்படி இருக்குமெனக் கணிக்க முடியாது. எப்படி இருந்தாலும் நம்மைக் காட்டுக்குள் வைத்து ஒன்றும் செய்ய முடியாது’ என்று உள்ளுக்குள் எண்ணங்கள் ஓடியபடி இருக்க, காலம்பன் வேகத்தைக் கூட்டிக்கொண்டேயிருந்தான்.

வழியமைத்தபடி முன்னால் ஓடிக்கொண்டிருந்த காலம்பனுக்கு இக்காட்டில் ஏதோ ஒரு தன்மை வேறுபட்டிருப்பதாகத் தோன்றியது. என்ன என்பது புலப்படவில்லை. பின்னால் வருபவனின் முனங்குதல் சற்றே அதிகமானபடி இருந்தது. நூலாம்படையைக் கிழித்து விலக்குவதைப்போல கைவிரல்களால் எவ்வளவு பெரிய மரக்கொடிகளையும் எளிதில் விலக்கி முன்னேறினான்.

நேரமாகிக்கொண்டிருந்தது. காலம்பனின் கவனம் கூர்மைகொண்டதாக இருந்தது. மேலேறிக்கொண்டிருந்தவன் சட்டென நின்றான். “பொழுது விடிந்ததிலிருந்து பறவைகளின்

குரலோசை எதுவும் கேட்கவில்லை என்பதைக் கவனித்தீர்களா?”

மற்றவர்களுக்கும் அப்போதுதான் அது பிடிபட்டது. மேலே அண்ணாந்து பார்த்தபடி பார்வையை அங்குமிங்குமாக ஓடவிட்டனர். ‘செடிகொடிகளை விலக்கியும், செத்தைகளை மிதித்தும் வேகவேகமாக வந்துகொண்டிருந்ததால், பிற ஓசைகளைக் கூர்ந்து கவனிக்காமல் இருந்துவிட்டோம்’ என்று தோன்றியது. ‘பறவைகள் ஏன் காட்டின் இப்பகுதியில் இல்லை’ என்று சிந்தித்த கணத்தில் காலம்பன் சொன்னான், “ஒருவேளை, இது இரத்தச்சிலந்திகள் இருக்கும் காடாக இருக்கலாம். அதனால்தான், பறவைகள் தங்கவில்லை.”

ஒருகணம் திகைத்து நின்றனர். “இக்காட்டின் நடுப்பகுதியில் நாம் நிற்கிறோம். எவ்வளவு விரைவாக வெளியேற முடியுமோ அவ்வளவு விரைவாக வெளியேற வேண்டும்” என்றான்.

அடிபட்டவன் சொன்னான், “என்னைத் தூக்கிச் செல்வதன் மூலம் எல்லோரின் ஓட்டமும் தடைபடும். நாம் கொண்ட உறுதி நிறைவேறாமற் போய்விடும். எனவே, என்னை விட்டுவிட்டு இக்கூடையைக் கொண்டுசெல்லுங்கள். விரைந்து இக்காட்டைவிட்டு வெளியேறுங்கள்.”

காலம்பனாலும் மற்றவர்களாலும் இப்போது அவன் சொல்வதை மறுக்க முடியவில்லை. கூடையைத் தோள்மாற்றினர். சற்றுக் குறைந்திருந்த தேவாங்கின் சத்தம் மீண்டும் கூடியது. தோள்களில் பற்றியிருந்த அவன் கைகளை விலக்கமுடியவில்லை. அவர்களின் தயக்கத்தை உணர்ந்த அவன் வலியை மீறிய திறன்செலுத்தி கைகளைத்தூக்கி அவர்களிடமிருந்து விலக்கிக்கொண்டான்.

அவர்களைப் பார்த்தபடி அருகிருந்த ஈருவல்லி மரத்தின் ஓரம் சரிந்து உட்கார்ந்தான். அவர்கள் மீண்டும் முழுவேகத்தோடு ஓடத்தொடங்கினர். அவர்களைவிட விரைவாக அவை மரத்தின் மேலிருந்து இறங்கத்தொடங்கின.

**ஆ**திமலையின் இரண்டாம் மடிப்பை அடையும் வரை அவர்கள் ஓட்டம் குறையவே இல்லை. எரிவண்டுகளின் தாக்குதலைப் பாரி எப்படிச் சமாளிக்கப்போகிறானோ என்று நினைத்தபடி முன்னால் ஓடினர். ஒருமுறைகூட திரும்பிப் பார்க்கவில்லை. கொப்புகளைப் போகிறபோக்கிலே உடைத்து, கிட்டநெருங்கும் வண்டுகளை அடித்து விலக்குவது, முன்னால் செல்பவனுக்குப் பாதையின் திசையைச் சொல்வதென்று பாரியெழுப்பிய ஓசைகள் மட்டுமே ஆங்காங்கே கேட்டுக்கொண்டிருந்தன.

பாரி சொல்லும் திசை எங்கு போகிறது என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியவில்லை. ஈன்ற புலியல்ல, அதனைவிட வேகமாகப் பறக்கும் எரிவண்டு துரத்துகிறது; தப்பிக்க மட்டுமல்ல, எதிரிகளைத் தாக்கவும் நிகழும் ஓட்டமிது. உச்சவேகத்தில் ஓடிக்கொண்டிருந்தனர் மாணவர்கள். ‘நாள்முழுவதும் ஓடினாலும் எரிவண்டுகள் விரட்டுவதை விடாது. மாணவர்கள் இன்னும் சிறிதுநேரத்தில் சோர்ந்து விடுவார்கள். என்ன செய்யலாம்’ என்று சிந்தித்த பாரி, வழியைச் சற்றே மாற்றி சரிவுப்பாறைகளுக்கு அருகிலிருக்கும் விருகமரத்தை நோக்கி அவர்களை ஓடவிட்டுக்கொண்டிருந்தான்.




முன்னால் ஓடிக்கொண்டிருந்த முடிநாகன் விருகமரத்தைக் கடந்தபோது, பாரி ஓட்டத்தை நிறுத்தாமலேயே குனிந்து கற்களை எடுத்தான். எரிவண்டின் ஓசை காதைவிட்டு அகலாமல் துரத்தியபடியே இருந்தது. முடிநாகன் மரத்தை ஒட்டி இடப்புறம் திரும்பும்போது பாரி, கல்லை எடுப்பதை ஓரக்கண்ணால் பார்த்தான்.


‘விரட்டிவரும் இத்தனை வண்டுகளைக் கல்லால் அடித்து வீழ்த்திவிட முடியுமா? அதுவும் பறக்கும் வண்டுகளை ஒவ்வொன்றாய்க் கல்லெறிந்து வீழ்த்துவதென்பது முடிகிற செயலா? அதற்குள் வண்டு எத்தனை பேரைக் கடிக்குமோ? இன்னும் எவ்வளவு நேரத்துக்கு இவ்வளவு வேகமாக ஓட முடியும்? அவசரப்பட்டுக் கூட்டைக் கலைத்துவிட்டோமோ?’ என்று சிந்தித்தபடியும் பாரியின் செயலைப் புரிந்துகொள்ள முடியாமலும் ஓடினான் முடிநாகன்.

எடுத்த கல்லை முழுவிசையோடு குறிபார்த்து எறிந்தான் பாரி. அவனது இலக்கு எரிவண்டல்ல; பாறையின் பொடவு. அப்பொடவுகளுக்குள் என்ன இருக்கிறது எனப் பாரிக்குத் தெரியும். அவன் எறிந்த கல், பொடவின் விளிம்பில்பட்டுத் தெறித்தது. கற்கள் சிதறிச் சரிந்தன. கல்லோசை கேட்டதும் பொடவுக்குள் இருந்து கருங்கொண்டை வல்லூறுகளின் நீள்கழுத்துகள் எட்டிப்பார்த்தன. பார்த்த கணத்தில் அவை சிறகு விரித்து இறங்கத் தொடங்கின. சிறுபூச்சிகளை விட்டில் வேட்டையாடுவதைப் போல எரிவண்டுகளை வேட்டையாடத் தொடங்கின கருங்கொண்டை வல்லூறுகள்.

சடசடக்கும் வல்லூறுகளின் இறகுகள் குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தன. ஓடிக்கொண்டிருந்த கால்களின் வேகத்தைத் தளர்த்துவதற்குள் காற்றில் எரிவண்டுகளின் ஓசை எதுவும் மிச்சமில்லை. இறங்கிய வல்லூறுகள் வேலையை முடித்துவிட்டு மீண்டும் மலைப்பொடவை நோக்கி மேலேறின.

வல்லூறு ஒன்றின் அலகிலிருந்து உதிர்ந்த எரிவண்டின் இறகு ஒன்று முன்னால் ஓடிக்கொண்டிருந்த குறுங்கட்டியின் தோளிலே விழுந்தது. ஓடியபடியே அதனை எடுத்தான் உளியன். ‘இன்னும் சிறிதுநேரத்தில் பாரியின் வேட்டையும் இப்படித்தான் நிகழப்போகிறது. காற்றிலிருந்து கணநேரத்தில் எரிவண்டுகள் அகற்றப்பட்டதைப்போல, இக்காட்டிலிருந்து எதிரிகள் அகற்றப்படுவார்கள்’ என எண்ணியபடி ஓடினான். எரிவண்டு விரட்டியபொழுதைவிட கூடுதல் வேகங்கொண்டன மாணவர்களின் கால்கள்.

பின்னால் நடப்பது மட்டுமல்ல, முன்னால் தங்களை எப்படி நடத்திக்கொண்டிருக்கிறான் பாரி என்பதும் மாணவர்கள் அறியாததுதான். ஒரு கல் எறிந்து முடிநாகன் கூட்டைக் கலைத்தான். மறு கல் எறிந்து அந்த ஆபத்தைக் களைந்தான் பாரி. காட்டில் பிற எந்த ஆயுதத்தையும்விட வலிமைமிக்கது காடு பற்றிய அறிவுதான். அதில் பாரிக்கு இணைசொல்ல யாருமில்லை.



இடைநில்லாது ஓடிவந்தவர்கள் ஆதிமலையின் இரண்டாம் மடிப்பை அடைந்தனர். கால்களுக்குச் சற்று ஓய்வு தேவைப்பட்டது. இளைப்பாறலாம் என நினைத்து மூச்சிரைக்க நின்றனர். ‘முடிநாகன் ஏன் இவ்வாறு நடந்துகொண்டான், மாணவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள்’ என்ற எண்ணம் பாரியின் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது. ‘எதிரிகள், தேக்கன், மச்சக்கடவு, எலிவால் முகடு என்று தனித்தனியாக அவர்கள் சொல்ல முயலும் முழுமையற்ற சொற்கள் எதைக் குறிக்கின்றன என்று சிந்திக்கும்போதெல்லாம் தேக்கன் கொடுக்கும் பயிற்சியின் எண்ணற்ற உத்திகள் எல்லாவற்றையும் விழுங்கி நிற்கின்றன.’

மாணவர்கள் இளைப்பாறட்டும் என்று நின்றுகொண்டிருந்த பாரி, நாற்புறக் காட்டையும் சுற்றிப் பார்த்தான். ஏதோவொரு திசையிலிருந்து மாறுபட்ட ஓசை கேட்டது. மூன்றாம் மடிப்பின் இடப்புற மூலையில்தான் அது கேட்கிறது என்பதை அறிய முடிகிறது. என்ன ஓசை என்று கூர்ந்து கவனித்தான். `அது அழுகுரற் பறவையின் ஓசை. குத்துக்கல் பொடவுகளில்தான் அது தங்கும். அதனை யாரோ கலைத்துள்ளனர். இல்லையென்றால் இவ்வளவு ஓசை எழுப்பாது’ என எண்ணிய பாரி, ஓசையைக் கேட்டபடி அந்தத் திசையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

‘மூன்றாம் மடிப்பு முழுவதும் இருப்பது இரத்தச்சிலந்திகளின் காடு. எனவே, தேக்கன் இதற்குள் போயிருக்க மாட்டான். இக்காட்டைக் கடக்க வலப்புற ஓரத்தைப் பயன்படுத்த முடியாது. பெருஞ்சரிவுகளையும் பள்ளங்களையும் கொண்டது அவ்வோரம். இடப்புற ஓரத்தை மட்டுமே பயன்படுத்த முடியும். அப்பகுதியை நடந்து கடந்தால், அழுகுரற் பறவை ஏன் இப்படி கலைந்து கத்துகிறது?’ என்ற வினா தோன்றியபோது இன்னோர் எண்ணமும் தோன்றியது. ‘இரவுப் பயணத்தில் மாணவர்களில் யாரேனும் ஒருவன் குத்துக்கல் பொடவில் சரிந்து விழுந்திருப்பானோ?

என்னவாயிருக்கும்? பெரும்பெரும் பிளவுகளைக்கொண்ட பள்ளமல்லவா?’ என்று எண்ணியபடி, “நீங்கள் இளைப்பாறிவிட்டு வாருங்கள், நான் முன்னே செல்கிறேன்” என்று சொல்லிவிட்டு ஓடத்தொடங்கினான் பாரி.

பாரியின் கால்களைப் பார்த்தபடி இருந்த முடிநாகனின் முகத்தில் இதுவரை இல்லாத மகிழ்வு பூக்க ஆரம்பித்தது. குனிந்து கால்முட்டியில் கை வைத்து மூச்சிரைத்தபடியே முணுமுணுத்தான், “தேக்கன் சொன்னதைச் செய்து விட்டேன்.”

**தே**க்கன் கணிப்பு மிக நிதானமாக இருந்தது. ‘அவர்கள் இரத்தச்சிலந்திகளின் காட்டுக்குள் இருந்து எளிதில் தப்பி வெளிவரமுடியாது. தன்னால் தாக்கப்பட்டவன் செயலற்றுப்போயிருப்பான். மீதமுள்ள நான்குபேரில் குறைந்தது இருவராவது சிலந்திகளால் தாக்குண்டு வீழ்ந்திருப்பர். அதற்குத் தப்பி ஒருவனோ, இருவரோதான் வெளியேற முடியும். அப்படி அவர்கள் வெளியேறும்போது மேற்பகுதியின் முனையில் வைத்து அவர்களை மறித்தடிக் கலாம். ஆனால், அவர்களின் உடல்வாகு பெரும்பலத்தோடு இருக்கிறது. எனது இடதுகை சேதமடைந்து இருக்கிறது. மாணவர்கள் எவ்விதப் பயிற்சியும் அற்றவர்கள். இந்நிலையில் அவர்களை வீழ்த்த வழியென்ன?’ என்று யோசித்துக்கொண்டே ஓடியவனுக்கு கருஞ்சுரைக் காயின் நினைவு வந்தது.

‘மாணவர்கள் வேறு எந்த ஆயுதத்தையும் பயன்படுத்து வதைவிட கவண் சுற்றி அடிப்பதைத் திறமையுடன் செய்பவர்களாக இருப்பார்கள். சிறுபிள்ளையிலிருந்து கவண் அடித்துப் பழகுவதால், மிக இயல்பாக அதில் தேர்ச்சி இருக்கும். கருஞ்சுரையைக் கவணில் வைத்து அடித்தால் என்ன?’ என்ற சிந்தனை தோன்றிய கணமே தேக்கனின் நம்பிக்கை பெருகத்தொடங்கியது. கருஞ்சுரைக்காய்க்குள் இருக்கும் பால், துளியளவு கண்ணில்பட்டாற்போதும்; கருவிழி உருகி ஓடிவிடும். மாணவர்களை, எதிரிகளின் முகம்நோக்கி அடிக்க வைத்துவிட முடியும் என்ற நம்பிக்கை வலுப்பெற்றது.

குத்துக்கல் பொடவுக்குள் கருஞ்சுரைக்கொடி படர்ந்துகிடப்பதைப் பலமுறை தேக்கன் பார்த்துள்ளான். அதனால்தான், அங்கு வந்து நின்று பிளவுகளை நோக்கி எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தான்.


பார்க்கவே அச்சங்கொள்ளவைக்கும் பெரும்பிளவுகள். பார்ப்பவனின் தலைசுற்றி உள்ளிழுக்கும் தன்மைகொண்டவை. ஏற்கெனவே ஓட்டத்தாலும், தாங்கிக்கொள்ள முடியாத கசப்பாலும் சற்றே மயக்க நிலையில்தான் மாணவர்கள் இருந்தனர். சிறிதுநேரம் இளைப்பாறவிட்டு எட்டிப்பார்க்க வைத்தான். காலைக்கதிரவனின் ஒளி பாறைப்பிளவுகளுக்குள் இன்னும் முழுமையாக ஊடுருவவில்லை. ‘ஆசான் ஏன் இதனைப் பார்க்கச் சொல்கிறார்?’ என்று புரியாமல் திகைத்தனர். அவரின் கண்கள் பொடவின் இடுக்குகளை அங்குமிங்குமாக உற்றுப்பார்த்துத் தேடிக்கொண்டிருந்தன. சற்றுநேரத்தில் அது கண்ணுக்குத் தட்டுப்பட்டது.

மாணவர்களை அழைத்துக் காண்பித்தார். “அதோ,அந்தப் பிளவுக்குக் கீழே பாறைவெடிப்புகளில் படர்ந்து கிடக்கிறதே, அதுதான் கருஞ்சுரைக்காய்க் கொடி. யாராவது ஒருவன் கீழே இறங்கி அதில் உள்ள காய்களைப் பறித்து வரவேண்டும்” என்றார்.

எல்லோருக்குள்ளும் தயக்கம் இருந்தது. ஆனாலும், தயக்கத்தை மீறி கீதானி தயாரானான். அருகில் விளைந்துகிடந்த கட்டுக்கொடியின் தூரை அறுத்து அவன் பிடித்து இறங்க வழிசெய்தனர். கீதானி உள்ளிறங்கினான். மேலே இருந்து அனைவரும் கொடியை இறுகப்பிடித்து இருந்தனர். தேக்கன் சற்றுத் தள்ளிநின்று பள்ளத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

கீதானி, பாறையின் செதில் பார்த்துக் கால்களைக் கவனமாகத் தூக்கிவைத்து இறங்கிக்கொண்டிருந்தான். சட்டென பொடவுக்குள் இருந்த அழுகுரற் பறவை ஒன்று சடசடத்து வெளியேறியது. ஒருகணம் கீதானி திடுக்கிட்டு மீண்டான். எழுந்த வேகத்தில் மேற்சென்ற அதன் அழுகுரல் எங்கும் கேட்டது. எளிதில் அது ஓய்வதாகவும் இல்லை. நடப்பதை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த தேக்கன் ஒரு கட்டத்தில் கீதானியைப் பார்த்துக் கையை மேல்நோக்கி அசைத்தார். மாணவர்கள் புரியாமல் விழித்தனர். ``அவன் மேலேறட்டும்” என்றார்.

‘பறவை எதிர்பாராமல் பறந்தபோது அவன் திடுக்கிட்டு அஞ்சியதால், தேக்கன் இம்முடிவெடுத்துவிட்டாரோ?’ என்று அவர்கள் நினைத்தனர். கீதானி இறங்குவதற்காகக் கால்தொடையில் கொடுத்திருந்த வலுவை கைப்பிடிக்கு மாற்றி உன்னியபடி மேலேறி வந்தான்.



அடுத்து என்ன செய்யலாம் என்று சிந்தித்துக்கொண்டிருந்தார் தேக்கன். அவர் என்ன சிந்திக்கிறார் என்பது அலவனுக்கு மட்டும் புரிந்தது.

`கீழே கருஞ்சுரைக்காய்க்கொடி படர்ந்து கிடக்கும் இடமெல்லாம் ஈயல் புற்று கிடக்கிறது, தேக்கன் இப்போதுதான் அதனைப் பார்த்துள்ளார். நான் கீதானி இறங்குமுன்பே பார்த்துவிட்டேன்’ என்று மனதில் சொல்லிக்கொண்டான் அலவன்.

ஈயல் என்பது சிறகு முளைத்த மலையெறும்பு. மற்ற எறும்புகள் மண்ணுக்குள் துகள் எடுத்துப் புற்று உருவாக்குவதைப்போல, இது பாறைகளின் மேற்பரப்பை உரித்துப் புற்றமைக்கும். அதன் கொடுக்குகள் அவ்வளவு வலிமைமிக்கவை. அதுவும் ஏழுகண் வைத்துப் புற்றுக்கட்டக்கூடியவை. எந்த உயிரினமாவது அதற்கு ஆபத்து விளைவிக்கப்போகிறது என்று தெரிந்தால், ஒரே நேரத்தில் புற்றின் ஏழுகண்களிலும் இருந்து அவை பீச்சியடித்துக்கொண்டு வெளியில் வரக்கூடியவை. `ஸ்ஸ்ஸ்' என்று பாம்பின் சீற்றம்போல இறகடித்து வந்து மொய்க்கத் தொடங்கினால், உயிரினங்கள் எவையும் தப்பித்து வெளியேற முடியாது. பாறைகளையே உரிக்கும் கொடுக்குகளுக்குச் சதைகளைச் சிதைத்தெடுக்க அதிகநேரம் தேவைப்படாது.

கருஞ்சுரைக்காய் இப்போது அவசியத்தேவை. ஆனால், அதனைச்சுற்றி ஈயல் புற்று இருக்கிறது. என்ன செய்யலாம் எனத் தேக்கன் சிந்தித்தபோது கொடியைத் தனது இடுப்பிலே கட்டிக்கொண்டிருந்தான் அலவன்.

அவன் நஞ்சுமுறி உள்ளவன். ஈயலின் நஞ்சு அவனை ஒன்றும் செய்யாது. ஆனால், மிகக் கவனமாக எடுத்துவிட்டு வெளியேற வேண்டும். ஏனென்றால், அதன் கொடுக்கின் தாக்குதலுக்கு அலவனும் தப்பிக்க முடியாது. அதனால்தான், அலவனைக் கீழே இறக்க தேக்கன் தயங்கினான். ஆனால், வேறுயாரும் நெருங்கக்கூட முடியாத நிலையில், தான் இறங்குவதுதான் பொருத்தம் என முடிவுசெய்து கீழிறங்கினான் அலவன்.

இரத்தச்சிலந்திகளின் கால்கள் மனித உடலில் பட்டால் போதும்; பட்ட இடமெல்லாம் கணநேரத்தில் கொப்புளங்கள் பெருகத் தொடங்கும். அதன் காற்கொடுக்குகள் உள்ளேறி துடிதுடிக்க வைத்துவிடும்.

வேகமாக ஓடுவது முக்கியமல்ல, கவனமாக இதனிடமிருந்து தப்பிப்பதுதான் முக்கியம். காலம்பன், செடிகொடிகளை விலக்குவதை மிகக் கவனமாகச் செய்துகொண்டிருந்தான்.

“அவர்கள் நம்மைப் பார்த்துவிட்டார்கள். இவ்வளவு மெதுவாகச் சென்றால் வெளியேறும்போது சூழ்ந்துவிட மாட்டார்களா?” என்றான் மற்றொருவன்.

அடங்காச் சினத்தோடு இருந்த காலம்பன் சொன்னான், ``தனிமனிதர்கள் நம்மை என்ன செய்துவிடமுடியும்? அதுவும் குருதிநாளங்களில் வெறியேறியிருக்கும் இந்த நிலையில்.”

மிகக் கவனமாகக் கருஞ்சுரையின்  மூன்று காய்களைப் பறித்தான் அலவன். பாறையின் மீதிருந்து கண்ணிமைக்காமல் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தனர் அனைவரும்.

ஈயல்கள் அங்குமிங்குமாக ஒன்றிரண்டு பறந்துகொண்டிருந்தன. சில ஈயல்கள் புற்றுகளுக்கு உள்ளே போவதும் வெளியேறுவதுமாக இருந்தன. பறித்த காயைக் கவனமாக இடுப்புத்துணியிலே கட்டியபடி புற்றின் அப்பக்கம் எட்டிப்பார்த்தான் அலவன். அதன் ஒரு கண்ணுக்குள் பாம்பொன்று நுழைந்துகொண்டிருந்தது. ‘ஈயல் புற்றுக்குள் பாம்பு போகாதே, இது எப்படிப் போகிறது?’ என்று

யோசிக்கும்போதுதான் அவனுக்குப் பிடிபட்டது, ஈயல் தனது இரைக்காகப் பாம்பைக் கொன்று உள்ளே இழுத்துச்செல்கிறது என்று. ஒருகணம் மனம் அதிர்ந்தது. அவன் கண்களில் நீல வளையங்கள் பூத்து அடங்கின. ‘விரைவாக மேலேறுவோம்’ என முடிவுசெய்து கையைக் காட்டியவுடன் மேலே இருந்தவர்கள் கொடியை சரசரவென இழுக்கத் தொடங்கினர்.

அவன் மேலேறிய வேகத்தில் இன்னோர் அழுகுரற் பறவை கத்திப் பறக்கத் தொடங்கியது. இதன் குரல் முன்னதைவிட அதிகமாக இருந்தது. அழுகுரற் பறவையின் ஓசையினாலோ, வேறுகாரணத்தினாலோ ஒன்றிரண்டு ஈயல்கள் மேல்நோக்கி வரத்தொடங்கின. அலவன் படுவேகமாக மேலேறி வந்துகொண்டிருந்தான்.

பாரி, குத்துக்கல் பொடவை நோக்கி ஓடிவரும்போது அழுகுரற் பறவையின் ஓசை மீண்டும் கேட்டது. “ஏன் மீண்டும் மீண்டும் இது கத்துகிறது? அங்கு என்னதான் நடக்கிறது” எனக் குழம்பிக்கொண்டிருக்கையில் வலப்புறக்காட்டுக்குளிருந்து உயிர் போக ஒரு மனிதன் கத்தும் ஓசை கேட்டது.

ஓடிவந்துகொண்டிருந்த பாரி இருபுறமுமிருந்து வந்த ஓசைகளைக் கேட்டு திகைத்து நின்றான். அழுகுரற் பறவையின் குரலைவிட கதறும் மனிதக்குரல் அவனது கவனத்தை ஈர்த்தது.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-42

எலிவால் முகட்டின் செங்குத்தான ஏற்றத்தில் விரைந்துகொண்டிருந்தன பாரியின் கால்கள். வேட்டைவிலங்கின் காலடியைப்போல மண்ணில் கால்பாவாமல் விரைந்துகொண்டிருந்தன.

எவ்வியூரில் புறப்பட்டதிலிருந்து கற்றுத்தருதலிலேயே கவனம்கொண்டிருந்தான் பாரி. மாணவர்கள் எவ்வளவு முயன்றும் அவனை வேகங்கொள்ளச்செய்ய முடியவில்லை. எரிவண்டைக்கொண்டு அவனது ஓட்டத்தை வேகப்படுத்தினான் முடிநாகன். கருங்கொண்டை வல்லூறுகொண்டு அதனை மட்டுப்படுத்தினான் பாரி. அதன்பின் அழுகுரற் பறவையின் குரல் கேட்டு ஏதோ ஆபத்து என உணர்ந்தான். ஆனால், இப்பொழுதோ அந்த ஆபத்து என்னவென்று கண்ணெதிரே பார்த்துவிட்டான்.

தேக்கன் அடித்துத் தூக்கி வீசப்பட்டதைப் பார்த்த கணத்தை இப்பொழுதுவரை நம்பமுடியவில்லை. அவர்களின் தாக்குதல் வேகத்தில் மாணவர்கள் காற்றில் பறந்தார்கள். பெருங்கூடைகளில் தெய்வவாக்கு விலங்கை அள்ளிக்கொண்டு பறம்பின் காடுகளுக்குள் யாரோ ஓடிக்கொண்டிருக்கிறார்கள். கண் பார்ப்பதை நம்பமுடியாத கணத்தில் கால்களின் வேகம் கட்டுக்கடங்காமல் இருந்தது.

அடர்காட்டுக்குள் மனிதக்குரல் கேட்டபொழுது பாரியின் அய்யம் தீர்ந்தது. ‘இரத்தச்சிலந்தி இருக்கும் இக்காட்டுக்குள் தேக்கன் மட்டுமல்ல, பறம்பு மக்கள் யாரும் போக மாட்டார்கள். அதற்குள் மனிதக்குரல் கேட்கிறது என்றால் வெளியில் இருந்து எவனோ உள்ளே நுழைந்திருக்கிறான். வந்தவன் ஒருவனாக இருந்தால் தேக்கன் நம்மை அழைத்துவர மாணவர்களை அனுப்பியிருக்க மாட்டான். அவர்கள் பல பேராக இருக்க வேண்டும்’ என்று நினைத்துக்கொண்டே குத்துக்கல் பொடவை நோக்கி ஓடினான் பாரி.

கருஞ்சுரைக்காயை எடுத்தபின் ஆதிமலையின் முகட்டை அடைந்தான் தேக்கன். அடர்காட்டுக்குள் மாட்டியிருக்கும் எதிரிகள் எப்படியும் இத்திசையில்தான் வெளியேற வேண்டும். வெளியேறிய கணத்தில் மாணவர்கள் அவர்களின் முகம் பார்த்து கவண் எறிய வேண்டும் என்று சொல்லி, ஈட்டியை இறுகப்பிடித்து ஆயத்தமாக இருந்தான். ஆனால், தேக்கனின் அதிர்ச்சி அவர்கள் வெளிவந்த கணத்திலேயே தொடங்கியது. ஒருவனைத் தவிர மற்ற நால்வரும் காட்டைவிட்டு வெளியே வந்தனர். ‘இரத்தச்சிலந்திகள் இருக்கும் காட்டை எப்படி இவர்கள் கடந்தனர்’ என்ற அதிர்ச்சி தேக்கனைச் சற்றே தாமதிக்க வைத்தது.

காட்டைவிட்டு வெளியேறிய கணத்தில் தாக்குதலைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்ற எதிர்பார்ப்போடு வந்த காலபன், தேக்கன் ஈட்டியெறியும் முன் தனது வளைத்தடியைச் சுழற்றினான்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அது தேக்கனின் கழுத்துக்கு வந்தது. கவனமாய் அதனைத் தட்டிவிட்டு விலகினான். திசைக்கு ஒன்றாய் நின்ற மாணவர்கள் கவண் வீசத் தொடங்கிய அந்தக் காட்சிதான் தொலைவில் ஓடிவந்துகொண்டிருந்த பாரியின் பார்வையில் முதலில் பட்டது.




அவர்கள் தேக்கனைத் தாக்கிய வேகத்தையும் மாணவர்களைச் சுழற்றி வீசியதையும் பார்த்தபடியே வெறிகொண்டு ஓடிவந்தான் பாரி. மலைச்சரிவில் பாறைகள் உருண்டன. மடுவன் வீசிய கவணிலிருந்து பறந்த கருஞ்சுரைக்காய் ஒருவனின் முகத்தில் அடித்துத்தெறித்த கணத்தில்தான் அந்த இடத்தை அவர்கள் சூறையாடினார்கள். அடிபட்டவன் முகத்தை மூடியபடி கதறிக்கொண்டு பாறையில் மோதி மண்ணில் உருண்டான்.


பறம்புநாட்டின் ஆசான், பகிரியை வேட்டையாடிய பெருவீரன், எத்தனையோ மாணவர்களைக் காடறிய அழைத்துச்சென்று மாவீரர்களாக உருவாக்கியவன், தனியொருவனாக எவ்விலங்கினையும் வீழ்த்தும் ஆற்றல்கொண்ட தேக்கன் தனது முழு ஆற்றலையும் திரட்டி மோதினான். ஆனால், அவனது ஆற்றல் முழுவதும் தற்காத்துக்கொள்ளவே போதுமானதாக இருந்தது. சூழப்பட்ட எதிரிகளின் வலிமை ஒப்பிட முடியாததாக இருந்தது. அவர்களின் தாக்குதலை உள்வாங்கியபடி மனம் அவர்களின் திறனைக் கணித்துக்கொண்டிருந்தது. ஆனால், உடலோ தூக்கிவீசப்பட்டுக்கொண்டிருந்தது.

பாரி இடம் வந்து சேர்ந்தபொழுது எல்லாம் முடிந்திருந்தது. கருவிழி ஒழுகி துடித்துக் கதறிக்கொண்டிருந்த ஒருவனின் முதுகில் இருந்த பெருங்கூடையை அறுத்து எடுத்தனர் மாணவர்கள். தேவவாக்கு விலங்கின் அடங்காத கத்தலும், தூக்கிவீசப்பட்ட மாணவர்களின் வேதனைக்குரலும், கருவிழி கலங்கியவனின் கதறலும் எங்கும் எதிரொலித்துக்கொண்டிருந்தன.

ஆதிமலையின் முகட்டைக் கடந்த அவர்கள் சிறிது தொலைவு போவதற்குள், முகட்டின் பின்புறச் சுனையில் பதுங்கியிருந்த ஏழுபேர் அவர்களுடன் இணைந்துகொண்டனர். அவர்களின் ஓட்டம் மர இடுக்குகளுக்குள் மறைந்தது.

தாக்குதல் முடிந்ததும் வந்துசேர்ந்த பாரி கணநேரமும் தாமதிக்காமல் துடித்துக் கிளம்பினான். கிளம்பிய வேகத்தில் அவனை இறுகப்பற்றி நிறுத்த முயன்றான் தேக்கன். தேக்கனின் செயலுக்குக் காரணம் புரியாமல் பாரி திகைத்தபொழுது, தேக்கனின் வாய் முணுமுணுத்தது "அவர்கள் பலர், நீ ஒருவனாகப் போகவேண்டாம்."

தேக்கனின் சொல் பாரியை நிலைகுலையச்செய்தது. "பறம்பின் ஆசானா இப்படிப் பேசுவது? நான் ஒருவனா? இது எனது காடு. மரமும் செடியும் கொடியும் விலங்கும் இருக்கிற இக்காட்டில் நான் எப்படித் தனியனாவேன்?"



பிடித்த கையை உதறித்தள்ளிய பாரியின் ஆவேசம் பார்க்க முடியாத பெருஞ்சினங்கொண்டிருந்தது. ஓடினான் பாரி. காடதிர, காற்றதிர, கண்ணில் வெறிகொண்டு ஓடினான். பறம்பு நாட்டின் தேவவாக்கு விலங்கைத் தூக்கிக்கொண்டு ஆதிமலையை ஒரு கூட்டம் கடந்துவிட்டதென்ற உண்மையைக் கொன்று புதைக்க ஓடினான். எவ்விலங்கின் ஓட்டத்தையும் விஞ்சக்கூடியவன் வேள்பாரி. காட்டின் எத்தரையிலும் முழுவேகத்தோடு ஓடக்கூடிய விலங்கு எதுவுமில்லை. ஒவ்வொரு விலங்குக்கும் ஓட்டம் உச்சங்கொள்ளும் இடமும் உண்டு; ஊனங்கொள்ளும் இடமும் உண்டு.

எவ்வளவு வேகமாக பாய்ந்து வந்தாலும் கமரிப்புல் இருக்கும் காட்டில் வரிப்புலி காலடி எடுத்து வைக்காது. முக்கொற்றிக்கோரை முளைத்துக்கிடக்கும் தரையில் வேங்கைப்புலி கால் பதிக்காது. முசுறுப்புல் காட்டில் பாம்பு நகராது. வாட்கோரைக்குள் மான் ஓடாது. ஒவ்வொரு விலங்கின் ஓட்டத்துக்கும் நகர்வுக்குமான அடிப்படை முளைத்துக்கிடக்கும் செடிகொடிகளிலும் இருக்கிறது. பறம்பின் எந்த நிலத்திலும், எந்தப் புதரிலும் எந்தக் காட்டிலும் வேகங்குறையாமல் ஓடக்கூடியவன் வேள்பாரி. அவனது பாதத்தின் அகலமும் தோள்களின் வலிமையும் இணையற்றவை. பிடரிமயிர் சிலிர்க்க ஓடும் பாரியின் ஓட்டத்தை மறித்து நிற்கும் உயிர் எதுவும் பறம்புக்காட்டுக்குள் இதுவரை இல்லை.

ஓடிக்கொண்டிருந்த எதிரிகள் எதிர்த்திசைக் காட்டை நோக்கி ஓடாமல் வலப்புறச் சரிவை நோக்கி இறங்கத் தொடங்கினர். யாராவது பின்தொடர்ந்துவந்தால் அவர்களைத் திசைமாற்றவே இத்தந்திரத்தைச் செய்தனர். அவர்கள் தங்களின் வழியை மாற்றிவிட்டனர் என்பதைச் சிறிதுநேரத்திலே கண்டறிந்தான் பாரி.

சிவப்புமூக்கு ஆக்காட்டி வலப்புற ஓடையின் பக்கம் நெடுநேரம் குரல்கொடுத்துக்கொண்டிருந்தது. அவர்கள் அப்பக்கம் திரும்புவார்கள் என யாரும் எதிர்பார்க்க முடியாது. அத்திசை நோக்கி படுவேகமாகப் பாரி இறங்கினான்.



‘எலிவால் முகட்டில் மோதல் நடந்தபொழுது மூன்று பேராக இருந்தவர்கள் இப்பொழுது எப்படி எண்ணற்றவர்களாக மாறினர். முகட்டின் கீழ்த்திசையில் ஏன் மறைந்திருக்க வேண்டும்? அப்படி என்றால் இன்னும் எத்தனை பேர் மறைந்துள்ளனர்?’ மனதில் வினாக்கள் அடுத்தடுத்து எழுந்துகொண்டிருந்தபொழுது அதற்கான விடையைக் கண்டறியும் முன்னே அடுத்த வினா எழுந்து வந்தது.

‘எலிவால் முகட்டைக் கடந்து கீழ்ப்புறம் இறங்கியவர்கள் அதற்குள் எப்படி முகட்டின் அடிவார ஓடையை அடைந்தார்கள்? தேக்கனிடம் சில சொற்களைப் பேச மட்டுமே நான் நேரஞ்செலவிட்டேன். ஆனால், அவர்கள் அதற்குள் ஓடைக்குப் போய்விட்டார்கள் என்றால் அவர்களின் வேகம் நினைத்துப் பார்க்க முடியாதபடி இருக்கிறது. தேக்கனும் மாணவர்களும் இணைந்து தாக்குதல் தொடுத்தபின் வேகத்தை இன்னும் கூட்டியுள்ளனர். என்ன கூட்டினாலும் என்ன; அவர்கள் பறம்பின் காட்டுக்குள்தானே ஓடிக்கொண்டிருக்கின்றனர்.’

பாரியின் மனம் எதிரிகளைப் புரிந்துகொள்ளவும் அவர்களின் வேகத்தைக் கணிக்கவும் தனது தாக்குதலுக்கான முறையை உருவாக்கவும் முயன்றுகொண்டிருந்தபொழுது, அவனது கால்கள் ஏறக்குறைய பறந்துகொண்டிருந்தன.

கீழ்த்திசை ஓடையை அவன் அடைந்தான். காட்டோடையில் நீர் பெருகி ஓடியது. ஓட்டத்தின் வேகம் முழுமையாக அறுந்தது. ஓடையை நீந்திக்கடந்தான். அவர்கள் வெகுநேரத்துக்கு முன்னமே ஓடையின் மறுகரைக்குப் போய்விட்டனர். அது அடர் மரங்களற்ற காடு. புல்மேவிய இரு குன்றுகளைக்கொண்டது. ஓடுவதற்கு ஏற்ற நிலவாகு. பாரி கரையேறும் முன்னே அவர்கள் கண்பார்வையில் இருந்து மறைந்துவிட்டனர்.

`எதிரிகளின் ஆற்றல் ஓட்டத்தில் இருக்கிறது. அடர்ந்த மரங்களுக்கிடையிலே இவ்வளவு வேகமாக ஓடக்கூடியவர்கள், புதர்களற்ற நிலப்பரப்பில் இன்னும் விரைவுகொள்வர். அதுவும் தங்களைப் பறம்பினர் கண்டறிந்துவிட்டனர் என்பதனால் கட்டுக்கடங்காத வேகங்கொள்வர். அதனைத் தடுக்க என்னவழி?’ என்று சிந்தித்தபடியே கரையில் அடர்ந்து கிடக்கும் காட்டு மரங்களுக்கிடையே புகுந்து வெளியேறினான்.

வெளியேறிய இடத்தில் முடிச்சிட்டுக் கிடந்த பெருவேர்களைத் தாவிக்கடந்தபொழுது அவன் கண்ணிற்பட்டதொரு செடி. சட்டென ஓட்டத்தை நிறுத்திப் பெருமுடிச்சுகளை நோக்கித் திரும்பினான்.

மரவேர்களின் கீழ்ப்பக்கம் முளைத்துக் கிடந்ததைப் பார்த்ததும், மனதின் ஆழத்துக்குள் இருந்து சிறு மகிழ்ச்சி மேலேறி வரத் தொடங்கியது. மர வேர்களின் இடப்புறம் அனுவல்லிப்பூண்டு விளைந்து கிடந்தது.

சற்றே நின்று மூச்சுவாங்கினான். அதன் இலைகளை எடுத்து உண்போமா, வேண்டாமா என முடிவெடுக்கச் சிறிது தயங்கினான். அனுவல்லிப்பூண்டின் இலை மனிதனை மூர்க்கம் கொள்ளவைக்கும். இரத்த ஓட்டத்தைக் கூட்டி வெறியேற்றும். உடலுக்குள்ளிருக்கும் ஆற்றலின் விசையை பெருந்தீயெனக் கிளர்த்திவிடும். அவனது சிந்தனை என்னவாக இருக்கிறதோ அதனை நோக்கி பெருவேகத்தில் உடலை ஏவும். எனவே அதனை உட்கொள்வதில் மிகக்கவனம் தேவை.



ஏற்கெனவே உடலெங்கும் வெறிகூடிக்கிடந்த பாரி சற்றே சிந்தித்து ஒரு சில இலைகளை வாயில் போட்டுக்கொள்வோம் என நினைத்து அதன் ஒரு தண்டினை இழுத்தான். மொத்தச்செடியும் கையோடு வந்தது. எண்ணத்தின் வேகம் அப்படி இருக்கிறது என்பதை உணரமுடிந்தது. ஓரிரு இலைகளை மட்டும் பறித்து வாயிற்போட முனைந்தான். அப்பொழுது அருகில் இருந்த பாறையின் பின்புறம் மூச்சிரைக்கும் சிற்றோசை கேட்டது. ஏதோவொன்று இளைப்பாறுகிறது என நினைத்தான். ஆனால், ஓசையின் தன்மை சற்று மாறுபட்டிருந்தது. என்னவென பார்க்க பாறையின் பின்புறம் தலையை நீட்டினான்.

அங்கு சுண்டாப்பூனைகள் இரண்டு கலவி கொண்டிருந்தன. உச்சநிலையில் இயங்கிக் கொண்டிருந்த அவற்றின் கண்களைப் பாரியின் கண்கள் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தன. பன்றிப்பல்லினைப்போல் நீண்டு வளைந்த அவற்றின் பற்கள் வெளித்தெரிய மூர்க்கமேறிச் சினந்துகொண்டிருந்தன. பார்த்தபடி அனுவல்லிப்பூண்டின் இலைகளை ஒவ்வொன்றாய் மென்றுகொண்டிருந்தான். ஆண்பூனையின் மூக்கின் முனையில் இருந்த துடிப்பும் ஆவேசமும் பாரியின் முகத்திலும் இருந்தன.

அவன் அம்முடிவையெடுப்பது என உறுதி கொண்டபொழுது பறித்த செடியில் இலைகள் எவையும் மிஞ்சவில்லை. அவனது வேகமும் வெறியும் அப்படி இருந்தன. அவை இயங்கி முடிக்கும் கணத்துக்காகக் காத்திருந்தான்.

அவை தமது பணியை முடித்துவிட்டன என்று அவன் முடிவுசெய்த கணம், வலதுகால் அருகிருந்த கல்லை எத்திவிட்டது. அந்தக் கல் கீழிருந்த பெண்பூனையின் முன் நெற்றியில் பட்டுத்தெறித்தது. சற்றே கண் சொருகியிருந்த அது இத்தாக்குதலால் வெகுண்டபொழுது மேலிருந்த ஆண்பூனை நிலைதடுமாறிச் சரிந்தது. இரண்டின் கண்களுக்கும் முன்னால் பாரி.

கலவி முடிந்ததும் உருவாகும் தீராப்பசியோடு சீண்டிவிடப்பட்ட சினமும் சேர்ந்தது. இரண்டும் நின்றுகொண்டிருப்பவனைத் தாக்க பாயத் தொடங்கியபொழுது, அவன் தனது வேலையைக் காட்டத்தொடங்கினான். கால்கள் முன்பாய்ந்து ஓடத்தொடங்கின. சுண்டாப்பூனையின் வெறி கணக்கில்லாத மடங்கு பெருகியது.

சீண்டலின் உச்சத்துக்கு இரு பூனைகளும் உள்ளாயின. சுண்டாப்பூனையின் மூர்க்கமும் அனுவல்லிப்பூண்டின் இலைகள் கிளர்த்திய மூர்க்கமும் காற்றைக் கிழித்து, காட்டை அதிரச்செய்தன. பாரியும் வெறிகொண்ட இருவிலங்குகளும் ஓடிய வேகம் இதுவரை காடு பார்த்திராதது. ஓட்டத்தின் வேகம் கூடக்கூட சுண்டாப்பூனைகளின் வெறி மேலேறியபடியே இருந்தது. காலைப்பொழுதில் தொடங்கிய கலவி இவ்வுச்சிப்பொழுதில்தான் முடிவுக்கு வந்தது. உடல் மொத்தமும் இடைவிடாது இயங்கி முடித்ததும் அடிவயிறெங்கும் பற்றியெழும் பசிநெருப்பு அவற்றின் மூர்க்கத்தை எண்ணிலடங்காத மடங்கு அதிகப்படுத்தியது. கல்லாலடித்துச் சீண்டிவிட்டு, சீண்டியவனின் கால்கள் நிற்காமல் ஓடும்பொழுது அவை இதுவரை இல்லாத சினமும் சீற்றமும் மிக்கவைகளாயின.

காடறிய அடிநாக்கில் நஞ்சுக்கசப்பை உள்வாங்கிய மாணவர்கள் நேற்றிருந்து ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். கொடும் நஞ்சு இடைவிடாமல் அவர்களின் தொண்டைக்குள் சுரந்துகொண்டே இருக்க என்னவொரு வேதனையை அவர்கள் அனுபவித்திருப்பார்கள். வீரகுடி ஆசானை அடித்துத் தூக்கிப்போட்டு தேவவாக்கு விலங்கைத் தூக்கிச்செல்லும் வலிமை இவ்வுலகில் யாருக்கோ இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வதும் செத்துமடிவதும் ஒன்றுதான். பறம்புநாட்டின் அடையாளத்தை எடுத்துச்செல்லும் இவர்களின் உயிர் இன்னும் பறம்பின் எல்லைக்குள்தான் இருக்கிறது என்பதை சகித்துக்கொள்ள முடியாத கோபமும் வெறியும் பாரியைக் கட்டுக்கடங்காத ஆவேசங் கொள்ளச்செய்தன.

ஓட்டத்தின் வேகத்தைச் சரிந்துகிடக்கும் நிலமும் படர்ந்துகிடக்கும் செடிகொடிகளும் முடிவுசெய்கின்றன. சுண்டாப்பூனைகளின் முதுகெலும்பு வில்லைப்போல வளைந்து நீள நான்குகாற்பாய்ச்சலில் ஓடிவந்து கொண்டிருந்தபொழுதும் அவற்றால் நெருங்க முடியாத வேகங்கொண்டு பாரி ஓடுவதற்குக் காரணம், கண்ணுக்கு முன்னால் ஓடும் எதிரிகளும் கண் தெரியாத

வெறியை உருவாக்கிய அனுவல்லிப்பூண்டுமே. விலங்குகள் தங்களின் இரை நழுவிப்போகும் காலம் நீளுகையில் இயல்பிலே பல மடங்கு ஆவேசத்தை அடைகின்றன. சுண்டாப்பூனைகள் இவ்வளவு வேகங்கொள்வதற்கு அதுதான் காரணம். பாரி அவற்றைவிட வேகமெடுத்து ஓடிக்கொண்டிருப்பதற்கும் அதுதான் காரணம். இப்பொழுது அவனது மனமும் செயலும் விலங்கினும் கொடுஞ்சினம் கொண்டிருந்தன.

அதையும் கடந்து ஒருவேளை சுண்டாப்பூனைகள் அவன்மீது பாயுமேயானால் இடுப்பில் இருக்கும் இரு கத்திகளும் அவற்றின் கீழ்த்தொண்டையில் இறங்க ஆயத்தமாகத்தான் இருந்தன. ஆனால், பாரி அதனைச் செய்யப்போவதில்லை. ஏனென்றால் விரட்டிவரும் இரண்டும் அவனுடைய இரையல்ல, ஆயுதங்கள்.

காமத்தில் ஏறிய வேகங்குறையாமல் அவற்றை இழுத்து வந்துகொண்டிருப் பதற்குக் காரணம், அதே வேகத்தோடு வேட்டையில் இறக்குவதற்காகத்தான். சுருள்வால் கொண்ட சுண்டாப்பூனையின் பன்றிப்பற்களும் நீள்வளைவு நகங்களும் பறம்பின் தரப்புக்காகக் களமிறங்கப்போகின்றன. தீராத காமம் தீரும்பொழுது கிடைக்கவேண்டிய உணவுக்கான விருந்துக்கு அழைத்துச்சென்றான் வேள்பாரி.

இதோ... விருந்து மிக அருகில் வந்துவிட்டது. அவன் அழைத்துவரும் விருந்தாளிகள் அதனைவிட அருகில் வந்து விட்டன. முன்னால் ஓடிக்கொண்டிருப்பது வேட்டை உணவு, பின்னால் வந்துகொண்டிருப்பன வேட்டை விலங்குகள். இரண்டுக்கும் இடையில் விட்டுவிலகும் சரியான கணத்தை, முன்வைத்த கால்விரல்கள் தீர்மானித்தன.

பாரி இடப்புறப்பள்ளம் நோக்கி எவ்விப்பாய்ந்து சரிந்த கணத்தினை சுண்டாப்பூனைகளால் நினைவுகொள்ள முடியாமல் இருந்ததற்குக் காரணம், கையளவு தொலைவில் ஓடிக்கொண்டிருந்த எண்ணற்ற மனிதர்களின் ஓட்டம். சரிவில் உருண்டு, வேர்கள் பிடித்து, இங்குமங்குமாக தூக்கிவீசப்பட்டு, அடிப்பள்ளத்தில் பாரி நிலைகொண்டபொழுது மேலே வேட்டை முழுவேகத்தில் நடந்துகொண்டிருந்தது. சுண்டாப்பூனைகளின் ஆவேசத்துக்கும் ஆற்றலுக்கும் இரை எதுவும் மிஞ்சாது.

கதறலும் தாக்குதலும் உச்சத்தில் நிகழ்ந்தன. எதிரிகள் என்னவென்றே கணிக்கமுடியாதபொழுது நிகழ்ந்த தாக்குதல் இது. ஓசைகள் காற்றைக் கிழித்துக்கொண்டிருந்தன. உயிர்போகும் கதறலும் ஆவேசங்கொண்ட கூக்குரலும் எங்கும் எதிரொலித்தன.

எத்தகைய ஆயுதத்தைக்கொண்டு தாக்கினாலும் இவ்வளவு வலிமைகொண்ட எதிரிகளின் கூட்டத்தை தனியொருவன் அழிப்பது எளிதன்று. பாரி இக்கூட்டத்தை அழிக்க, காட்டின் வலிமை மிகுந்த ஆயுதத்தை ஏவியுள்ளான். எந்தவொரு எதிரியாலும் நினைத்துப்பார்க்க முடியாத தாக்குதலாக இது இருக்கப்போகிறது.

சுண்டாப்பூனையின் முன்வளைந்த பன்றிப்பள்ளும் முனைநீண்ட அதன் கால்நகங்களும் ஓடிக்கொண்டிருப்பவர்களின் மேலே ஒருமுறை பட்டாற்போதும், அதன்பின் அவன் கொட்டும் குருதிக்கு அளவேதும் இருக்காது.

அதுவும் பழக்கப்படுத்தவே முடியாத காட்டுவிலங்குகளை வைத்து நிகழ்த்தும் தாக்குதலை எதிர்கொண்டு மீள்வது எளிதல்ல. வேட்டை நாயைத் தவிர வேறு எவ்விலங்கையும் மனிதனை நோக்கி ஏவ முடியாது. அதுவும் இப்பயங்கர விலங்கை எப்படி ஏவினார்கள் என்ற திகைப்பு அடங்குமுன் அவர்களின் உயிர்மூச்சு அடங்கியிருக்கும்.

பாறையின் மேற்புரத்தில் கேட்டுக்கொண்டிருந்த பேரோசை கொஞ்சங்கொஞ்சமாகக் குறையத்தொடங்கியது. வேட்டை முடிவுக்கு வந்ததை எழும் ஓசைகள் சொல்லின. பாரி மேலேறிவர முடிவெடுத்தான். குருதி மிதக்கும் குளம்போல இருக்கும் அந்த இடத்தைக் காண திண்டுகளையும், வேர்களையும் பிடித்து மேலேறி வந்தான். ஒரு போர்க்களத்தின் உள்ளங்கையைப்போல் அவ்விடமிருந்தது.


இங்குமங்குமாகப் பலரும் சிதறிக்கிடந்தனர். அருகில் குடல்சரிந்து ஒரு சுண்டாப்பூனை கிடந்தது. இன்னொன்று  தப்பியோடியிருக்க வேண்டும். ஒரு கூடையைக் கடித்து இழுத்துள்ளதால் அதிலிருந்த தேவவாக்கு விலங்குகள் வெளியில் சிதறியிருக்கின்றன. அவற்றைத் தப்பியோடிய பூனை விழுங்கி முடித்திருக்க வேண்டும்.

குருதிக்களம்விட்டு பார்வையை நகர்த்தி அடுத்த குன்றைப் பார்த்தான் பாரி. தப்பித்த மூவர் சற்றுத்தொலைவில் நடுமலையின் விளிம்பை நோக்கி ஓடிக்கொண்டிருந்தார்கள். மூவரின் தோள்களிலும் கூடைகள் இருந்தன. ஆவேசங்கொண்ட சுண்டாப்பூனைகளின் தாக்குதலையும் மிஞ்சி ஓடும் மூவரைப் பாரியின் கண்கள் வியப்புற்றுப் பார்த்தன.


ஏழுபேரைப் பலிகொடுத்தாலும் தூக்கிய மூன்று கூடைகளை விட்டுவிடாமல் அவர்கள் ஓடிக்கொண்டிருக்கின்றனர். பாரி மீண்டும் ஓடத் தொடங்கினான். எதிரிகளின் ஆற்றல் நம்பமுடியாதபடி இருந்தது. இவ்வளவு தாக்குதலுக்குப் பின்பும் அவர்களின் வேகம் குறையாமல் இருந்ததை அவனது கண்கள் கணித்துக்கொண்டிருந்தன. உடன் வந்தவர்களில் பெரும்பான்மையோரின் மரணம் அவர்களின் வேகத்தைச் சிறிதும் தளர்த்தவில்லை.

அவர்களின் உடலும் மனமும் எதனையும் பொருட்படுத்தாத வேகங்கொண்டிருக்கின்றன என்று அவனுக்குத் தோன்றியது. மீண்டும் அவன் ஓடத் தொடங்கினான். நடுமலையின் உச்சிக்கு வந்தான். அவன் கண்ணுக்கு முன்னால் தேவவாக்கு விலங்கை எடுத்துக்கொண்டு மூவர் நடுமலையின் முகட்டைக் கடந்திருந்தனர். அவர்கள் கீழிறங்கிய இடம் மனிதனால் சற்றும் நகரமுடியாத பெரும்

மலைப்பள்ளத்தாக்கு. இதில் மிகமிகக் கவனமாகவே கால்களை நகர்த்த முடியும். வேர்களையும் பாறையிடுக்குகளையும் பிடித்தபடியே இறங்கவேண்டும். இப்பகுதி முழுவதும் இப்படித்தான்.



பொழுது மங்கத்தொடங்கிய நேரம் அவர்கள் பாறைகளின் இண்டு இடுக்குகளின் வழியே கவனமாக இறங்கிக்கொண்டிருந்தனர். பொருத்தமான இடத்தில் நின்று அவர்களைக் கவனிக்கத் தொடங்கினான். இப்பொழுது அவர்கள் மூன்று பேராக இல்லை. நிறைய தலைகள் தெரிந்தன.
பாறையின் இடுக்குகளில் காத்திருந்தவர்கள் மீண்டும் இணைந்துவிட்டனர் என்பது புரிந்தது.



மூச்சிரைத்தபடி பார்த்துக்கொண்டிருந்தான். கண்களுக்கு முன்னால் வேட்டை தப்பித்துப் போய்க்கொண்டிருந்தது. சுண்டாப்பூனைகளை வீழ்த்திவிட்டுத் தப்பிப்போகும் மனிதர்களை அவனது கண்கள் முதன்முறையாகப் பார்த்தன. தாவிக்குதித்து அவர்களை விரட்டிச்செல்ல உடல் துடித்தபொழுது, மனம் சூழலைப் புரிந்துகொள்ளப் போராடியது. அடங்காத ஆவேசத்தோடு சற்றே பின்னால் திரும்பினான்.
ஆதிமலையின் எலிவால் முகட்டிற்கு நேரே சென்றிப்புகை மேலெழுந்து உச்சிவரை போய்க்கொண்டிருந்தது. பறம்பின் ஆசான் உதவிகேட்டு புகைபோட்டிருக்கிறான் என்பது புரிந்தது. ஆசான் புகைபோட்டு நீண்டநேரம் ஆகியுள்ளது.எதிர்திசையில் ஓடிக் கொண்டிருந்ததால் பாரியின் கண்களுக்கு அது தெரியவில்லை. இப்பொழுதுதான் பார்த்தான்.

பாரி அவர்களை விரட்டத்தொடங்கிய உடனே சென்றிப்புகை போட்டுவிட்டான் தேக்கன். ஆதிமலையின் இரண்டாவது மூன்றாவது குன்றுப் பகுதிகளில் பெரும் பரப்பளவில் ஊர்களே கிடையாது. இரத்தச்சிலந்திக் காடாதலால் மனிதர்களும் வேட்டைக்கோ, மற்றவைகளுக்கோ இப்பக்கம் வரமாட்டார்கள். எனவே புகை பார்த்து வருவதாக இருந்தால் மிகத்தொலைவில் இருந்துதான் வர வேண்டும். ஆனால், மழைக்காலமாதலால் மேகங்கள் கீழிறங்காமல் இருந்தால்தான் புகை உச்சிக்குப் போனாலும் மனிதர்களால் கண்டறிந்து வர முடியும்.

தேக்கன் புகைபோட்டு பாதிநாள் கடக்கப்போகிறது; யாரும் வரவில்லை. கடுமையான தாக்குதலுக்கு உள்ளானதால் மாணவர்கள் கொடும் வேதனையில் இருந்தார்கள். பொழுது மறைய சிறிதுநேரமே இருந்தது. அடுத்து என்ன செய்யலாம் என்பதைப் புகைபார்த்து வருகிற ஆளை வைத்துத்தான் முடிவுசெய்ய வேண்டும். இரண்டு, மூன்று திட்டங்களோடு தேக்கன் காத்திருந்தான்.

மடுவன் தொலைவில் கைநீட்டிக் காண்பித்தான். யாரோ வருவது தெரிந்தது. தேக்கன் உற்றுப்பார்த்தான். வந்து நின்றது வேட்டூர் பழையனும் இரு வீரர்களும். ஆதிமலையின் புலிவால் குகையில் தங்கியவன் காலை நேரங்கழித்து புறப்பட்டிருக்கிறான். இரண்டாம் குன்று தாண்டும்பொழுது பார்த்திருக்கிறான். இரத்தச்சிலந்தி காட்டுப்பகுதியில் இருந்து சென்றிப்புகை ஏற்றப்பட்டுள்ளது. மிகத்தொலைவில் புகை எழுந்துள்ளது. ஆனால், இப்பகுதிக் காட்டுக்குள் வேறு யாரும் இருக்கப்போவதில்லை. எனவே உதவிக்கு நாம்தான் இங்கிருந்து போக வேண்டும் என்று நினைத்து வீரர்களோடு நாள்முழுவதும் நடந்து வந்து சேர்ந்தான்.

வேட்டூர் பழையனுக்கு நடந்ததை தேக்கன் விளக்கினான். தாக்குதலுக்கு உள்ளான மாணவர்கள் வலியாலும் கசப்பின் கொடுமை தாங்காமலும் துடித்துக்கிடந்தார்கள். கருவிழி உருகி வழிந்தவன், உருண்டு பெரும்பள்ளத்தில் வீழ்ந்ததில் மயக்கநிலையை அடைந்தான். வேட்டூர் பழையனுக்குப் பார்க்கும் காட்சி, கேட்கும் கதை எதையும் நம்ப முடியாமல் இருந்தது.

தேக்கன் விழுந்து உருண்டதில் இடுப்பின் பின்பகுதியில் பெரும் ஈக்கி குத்தி உள்சொருகியிருந்தது. ஈக்கியை எடுத்துவிடச் சொன்னான். பழையன் கவனமாக அதனைப் பிடித்து வெளியே இழுத்தான். “ஆ”வென கத்திய தேக்கனின் குரல் துண்டிக்கப்பட்டதைப்போல பாதியில் ஒலியற்று நின்றது. அவனது கண்கள் எதிரில் பார்த்த காட்சியே அதற்குக் காரணம். எதிரில் நடுமலையின் உச்சியில் சென்றிப்புகை மேலேறிக்கொண்டிருந்தது. தேக்கனின் கண்கள் அகலத்திறந்தபடி இருந்தன. மேலெழும் புகை பார்த்து வாய் மட்டும் முணுமுணுத்தது “அது... பாரி.”

ஒரே நாளில் பறம்பின் ஆசானும், பறம்பின் தலைவனும் சென்றிப்புகைபோடும் நாளும் வந்தது.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-43

முழுநிலவு கழிந்து இரு நாள்கள்தான் ஆகின்றன. நிலவின் ஒளியை, கூடிநிற்கும் கருமேகங்கள் முழுமையாக மறைத்திருந்தன. கடும் இருட்டுக்கு நடுவில் இங்கும் அங்குமாக மின்னல் வெட்டிச் சரிந்துகொண்டிருந்தது. தேக்கனும் வேட்டூர் பழையனும் உடன்வந்த வீரர்களோடு கீதானியையும் அலவனையும் மட்டும் அழைத்துக்கொண்டு நடுமலையில் இருந்த பாரியிடம் வந்தனர்.

கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த மாணவர்களுக்குச் சில மருத்துவங்களைச் செய்து, குகை ஒன்றில் தங்கச்சொல்லிவிட்டு வந்தனர். நடுமலையிலிருந்து சென்றிப்புகை மேலேறியதைப் பார்த்துக் காட்டுக்குள் இருந்த நால்வர் ஏற்கெனவே பாரியிடம் வந்திருந்தனர். அனைவரும் இப்போது ஒன்றிணைந்தனர்.

காயங்கள் அதிகமாக இருந்ததால், தேக்கனை பாரி எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவனோ, வேட்டூர் பழையனையும் சேர்த்து அழைத்து வந்தது வியப்பை ஏற்படுத்தியது. அடர் இருளுக்குள் மழை கொட்டித்தீர்க்கப்போகிறது. இடியோசையும் வெட்டும் மின்னல் ஒளியும் காட்டை மிரட்டிக்கொண்டிருந்தன.

ஏற்றுக்கொள்ள முடியாத உண்மைகள் கசப்பினும் கொடியவை. அவற்றை விழுங்கவோ, கரைக்கவோ முடியாது. சில கனிகளை வேட்டூர் பழையன் கொடுத்த பிறகு மாணவர்களின் தொண்டைக்குழியில் இருந்த கசப்பு சற்றே மட்டுப்பட்டது. ஆனால், பெரியவர்களின் உடல் முழுவதும் அது ஏறியிருந்தது. ஓடிக்கொண்டிருக்கும் ஒவ்வொருவனும் விழுங்க முடியாத கசப்பை இந்தப் பெரியவர்களுக்கு வழங்கிவிட்டுப் போயிருக்கிறான். எனவே, இப்போது பெரியவர்கள் பேசப் பேச அவர்களுக்குள் மாணவர்களுக்குச் சுரந்ததைப்போல கசப்பு சுரந்துகொண்டிருந்தது. சகித்துக்கொள்ளவே முடியாத கசப்பு. தேவவாக்கு விலங்கைக் கண்ணெதிரே தூக்கிக்கொண்டு ஓடுவதைப் பற்றிப் பேசுவதைவிட கொடுங்கசப்பு வேறில்லை.

“இந்த மலைத்தொடரின் அமைப்பைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியவில்லை என்பது


கொற்றவையின் கூத்துக்களத்திலிருந்து நடுமலை வரை அவர்கள் ஓடிவந்த வழித்தடத்தின் வழியே அறிய முடிகிறது. அதே நேரத்தில் எவ்வளவு கொடுங்காட்டுக்குள்ளேயும் நுழைந்து வெளியேறக்கூடிய ஆற்றல்கொண்டவர்கள் என்பதும் அவர்கள் வந்த வழித்தடத்திலிருந்து அறிய முடிகிறது" என்றான் பாரி.

"யார் இவர்கள்? எத்தனை பேர் வந்துள்ளார்கள்? இந்தத் திசையை நோக்கிப் போனால் எந்த நாட்டை அடைவார்கள்?" என்று கேட்டான் வேட்டூர் பழையன்.

"அவர்கள் ஓடிக்கொண்டிருக்கும் திசையை வைத்து அவர்களின் நாட்டை நம்மால் கண்டறிய முடியாது. அவர்கள் எளிமையானதும் சரியானதுமான திசைவழியைத் தேர்வுசெய்து ஓடவில்லை. எந்த வழியில் ஓடினாலும் இலக்கை அடைய வேண்டும் என்ற உறுதியோடு ஓடுகின்றனர்" என்று சொன்ன பாரி, சற்றே இடைவெளிவிட்டுச் சொன்னான் "எந்தவொரு வேந்தனின் கட்டளைக்காகவும் இவர்கள் இந்தப் பணியைச் செய்யவில்லை. அரசர்களின் போர்வீரர்கள் இவ்வளவு உறுதிப்பாட்டை ஒருபோதும் கொண்டிருக்க  முடியாது. அதையும் தாண்டிய ஏதோ ஒரு காரணத்துக்காகத்தான் இந்த வேலையை இவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்" என்றான். பாரியின் கணிப்பு மிகச்சரியானது எனத் தேக்கனுக்குத் தோன்றியது. அவர்கள் கண்களில் இருந்த ஆவேசம் எந்தக் கணத்திலும் குறையவில்லை. எல்லாவற்றையும் தகர்த்தெறியும் வலிமையும் உறுதியும் கொண்டவர்களாக அவர்களை உணர்ந்திருந்தான் தேக்கன்.

வேட்டூர் பழையனோ பேசப்படும் சொற்களின் வழியே அவர்களின் வேகத்தையும் திறனையும் மனதுக்குள் உருவகித்துக்கொண்டிருந்தான். 'இவ்வளவு பெரிய தாக்குதலை நடத்திவிட்டு எதிரிகள் ஓடிக்கொண்டிருக்கின்றனர். ஆனால், பாரியும் தேக்கனும் நிதானமாகப் பேசிக்கொண்டிருக்கின்றனரே' என்று புதிதாய் வந்து சேர்ந்த வீரர்கள் பதறியபடி நின்றிருந்தனர்.

நடுமலைக்கும் கடைசி மலையான காரமலைக்கும் இடையில் மூன்றாம் சரிவில் இருக்கும் காட்டாற்றின் நடுவில் அவர்களைத் தாக்கும் புதியதொரு தாக்குதல் முறையை வேட்டூர் பழையன் சொன்னான்.



‘`அவர்கள் உடலின் வடிவத்தையும் வலிமையையும் சிந்தித்தால், தண்ணீர்தான் இயல்பிலேயே அவர்களைக் கட்டுக்குள் கொண்டுவர ஏதுவான இடம். அவர்களின் பலத்தையே பலவீனமாக மாற்றலாம்” என்று வாதிட்டான்.

“நீரின் வேகம் வலிமையாக இருந்தால் மட்டுமே அது உதவிசெய்யும். இல்லையென்றால், மிக எளிதில் அந்தத் திட்டத்தை அவர்களால் முறியடித்துவிட முடியும்” என்றான் தேக்கன்.

வேறு வழியென்ன எனச் சிந்தித்தபோது பாரி சொன்னான், “நடுமலையிலிருந்து காரமலை வரை அவர்களைக் குறுக்கீடு செய்ய வேண்டாம். ஓடட்டும். அவர்களுடன் வந்துள்ளவர்கள் இன்னும் எத்தனை பேர் என்பது நமக்குத் தெரிய வேண்டும். அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்த பிறகுதான் நாம் தாக்குதலைத் தொடுக்க வேண்டும்” என்றான்.

தேக்கனும் வேட்டூர் பழையனும் சற்றே அதிர்ந்தனர். காரமலையைத் தாண்டிவிட்டால் சில இடங்களில் ஒன்றிரண்டு குன்றுகள் இருக்கின்றன. சில இடங்களில் அதுவும் இல்லை. மிக எளிதாகச் சமதளக் காடுகளுக்குள் நுழைந்துவிடலாம். எனவே, பாரி சொல்வது ஆபத்தான திட்டமாக அவர்களுக்குத் தோன்றியது.

“இதைத் தவிர வேறு எந்தத் திட்டமிடலைச் செய்தாலும் நம்மால் அவர்களை வளைக்க முடியாது. அடிப்படையில் அவர்கள் எத்தனை பேர் என்பது தெரியாமல், எந்தத் திசையை நோக்கி ஓடுகிறார்கள் என்பதும் தெரியாமல் காட்டுக்குள் அவர்களை நம் வீரர்கள் மறித்துத் தாக்குவது கடினம். நீங்கள் சொன்னபடி, ரத்தச்சிலந்திகள் கீழ் இறங்குவதற்குள் புதரை விலக்கி அந்த இடத்தைக் கடந்துள்ளனர் என்றால், அது எளிதான செயல் அல்ல. அதைவிட அடர் கானகம் வேறு எதுவும் இல்லை. அதையே ஊடறுத்து வெளிவந்துள்ளனர். இனி அவர்கள் பச்சைமலைத்தொடரின் எந்த ஒரு காட்டையும் எளிதில் கடந்துவிடுவார்கள்.”

பாரி சொல்வது நம்ப முடியாத, ஆனால் நம்பியே ஆகவேண்டிய ஒன்றாக இருந்தது.

“இன்னும் சற்றுநேரத்தில் மழை இறங்கப் போகிறது. மழை தொடங்கிவிட்டால், அவர்களால் இந்தக் குத்துக்கல் பள்ளத்தாக்கில் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாது. மண்ணின் சரிவும் இறங்கியோடும் தண்ணீரின் வேகமும் யாரையும் இழுத்துக் கொண்டு போய்விடும். எனவே, இன்று இரவு முழுவதும் அவர்கள் ஏதேனும் ஓர் இடுக்கினில் தங்கித்தான் ஆக வேண்டும்.  மழை நின்ற பிறகு நாளைக் காலையில்தான் அவர்கள் இறங்கத் தொடங்குவார்கள். பகல் முழுவதும் இறங்கினால் மாலை நேரத்தில் அடிவாரத்தை அடையலாம். மண் நன்கு ஈரமாகிவிட்டால், நேரம் இன்னும் அதிகமாகும். அதன் பிறகு எவ்வளவு வேகமாக ஓடினாலும் காரமலையை அடைய அடுத்த நாள் உச்சிப்பொழுது கடந்துவிடும்.

ஆனால், நாம் இப்போது இங்கிருந்து ஓடைச் சரிவின் வழியே நடக்கத் தொடங்கினால் எவ்வளவு மழை பெய்தாலும் ஒரு பாதிப்பும் ஏற்படாது. நாளை மாலைக்குள் காரமலையின் உச்சியை அடைந்துவிடலாம். ஒரு முழு இரவு நம் கையில் இருக்கிறது. அங்கிருந்து தாக்கும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்” என்றான் பாரி.

நீண்டநேரம் அமைதியாகவே இருந்த தேக்கன், இப்போதும் அப்படியே இருந்தான். ஆனால், இவ்வளவு நேரம் உரையாடிக்கொண்டிருந்த வேட்டூர் பழையனோ, மறுமொழி ஏதும் கூறாமல் அமைதியானான். பாரி, பழையனை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான்.

சிறிது நேரத்துக்குப் பிறகு பழையன் சொன்னான், “எல்லாம் எதிர்திசையில் நடந்து கொண்டிருக்கின்றன.”

பழையன் சொல்லவருவது புரியவில்லை. பாரியின் முகமறிந்து பழையன் விளக்கினான், “மேற்கு திசைக் காடுகளில் பறம்பை நோக்கிப் படைகளை நகர்த்த பாதை அமைத்துக் கொண்டிருந்தான் சேரன். நாமும் மிகத்தீவிரமாக அதைக் கண்காணித்துக்கொண்டிருந்தோம். ஆனால், நேரெதிராகக் கிழக்கு திசையிலிருந்து பறம்புக்குள் நுழைந்து கொற்றவையின் கூத்துக்களம் வரை இவர்கள் வந்துள்ளனர். நமது கவனத்தைத் திருப்பி அதற்கு நேர் எதிர்திசையிலிருந்து உள்நுழைந்துள்ளனர். அதேபோன்ற சூழ்ச்சிதான் ஓடிக்கொண்டிருக்கும் இந்தச் செயலின் பின்னணியிலும் இருக்கும் என நினைக்கிறேன்” என்றான் பழையன்.

எவரும் மறுப்பேதும் சொல்லாமல் அவன் சொல்வதை மட்டும் கவனித்தனர்.

“தேவவாக்கு விலங்கை வைத்து என்ன செய்ய முடியும்? அதற்காக ஏன் உயிரைக்கொடுத்து அவர்கள் ஓடிக்கொண்டிருக்கின்றனர்?”

பழையனின் வினாவைத் தொடர்ந்து அமைதியே நீடித்தது.

பழையன் சொன்னான், “அவர்களின் தேவை அந்த விலங்கு அல்ல. அதைக் கவர்ந்து நம்மை இழுக்கப் பார்க்கின்றனர். அந்த விலங்குக்காகப் பறம்புமலையைவிட்டு சமதளத்தில் இறங்கப் போகும் மனிதனே அவர்களின் இலக்கு” என்று சொல்லி நிறுத்திக்கொண்டான் பழையன். அவன் யாரைச் சொல்ல வருகிறான் என்பது புரிந்தது.

இவ்வளவு தொலைவு மலையில் ஓடியவர்களை விட, காரமலையில் மறைந்திருப்பவர்கள்தான் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பர். ‘`நாமும் ஆயத்தமாக அவர்களை அங்கு எதிர்கொள்ளும் போது, நம் கையருகிலிருந்து நழுவி அவர்கள் மலையைவிட்டு இறங்கப் போகிறார்கள். பறம்பின் தேவவாக்கு விலங்கு நழுவிப்போவதை அனுமதிக்க முடியாத நாம், தாக்குதலின் தொடர்ச்சியாக நம்மை அறியாமலேயே மலையைவிட்டு நழுவி சமதளக் காட்டுக்குள் நுழையப்போகிறோம். அங்கே நம்மைச் சூழ அவர்கள் காத்திருப்பார்கள்” என்றான் பழையன்.
அவர் சொல்வதைச் சட்டென மறுத்துவிடும் நிலை இல்லை. உடன் நின்றிருந்த வீரன் சற்றே தயக்கத்தோடு கேட்டான், “ஆனால், பறம்பை இவ்வளவு குறைவாக மதிப்பிட்டு, இவ்வளவு துல்லியமான திட்டமிடலைச் செய்யும் அளவுக்கு யாருக்குத் துணிவிருக்கும்?”



“யாருக்குத் துணிவிருக்கும் என்பது நமக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், யாருக்கோ துணிவிருந்திருக்கிறது என்பதைத்தான் இப்போது நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.”

“உங்களின் கருத்துதான் என்ன?”

“நடுமலைக்கும் காரமலைக்கும் இடையிலேயே அவர்களை அழித்தால்தான் உண்டு. எக்காரணம் கொண்டும் காரமலையின்மீது ஏற அவர்களை அனுமதிக்கக் கூடாது” என்று பாரி உறுதியாகச் சொன்னான். தொடர்ந்து, “அதற்கு வாய்ப்பில்லை. நாம் நின்று திட்டமிட முடியாது; ஓடிக்கொண்டேதான் திட்டமிட முடியும். இருவரின் ஓட்ட வேகத்தில் இருக்கும் இடைவெளிதான் நமக்குக் கிடைக்கும் நேரம். நாம் அவர்களைத் தாக்க ஆயத்தமாவதற்கான குறைந்தளவு நேரம் இந்தக் குறிப்பிட்ட தொலைவை ஓடிக் கடக்க அவர்களை அனுமதிப்பதன் வழியாகவே கிடைக்கும். அவர்கள் நம்மிலும் வேகமாக ஓடக்கூடியவர்கள். ஆனால், தவறான வழியில் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். நாம் சரியான வழியில் ஓடுவதால், அவர்களின் வேகத்தை எளிதாகக் கடந்து முன்னிலையை அடைய முடியும்.”

“சரி, நாம் காரமலையை விரைவில் அடைந்து விட்டால், அவர்கள் வந்துசேர்வதற்குள் நம்மால் எவ்வளவு வீரர்களைத் திரட்டிவிட முடியும்?” எனக் கேட்டான் பழையன்.

“போரிடப் புதிதாக வீரர்கள் தேவையில்லை. இங்கு இருப்பவர்களே போதும்” என்றான் பாரி.

அவனது சொல் தேக்கனையும் பழையனையும் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. ‘பதற்றத்தில் பாரி நிதானம் தவறுகிறானோ’ எனத் தோன்றியது. தோன்றிய மறுகணமே, ‘இல்லை, பாரி உதிர்க்கும் சொற்கள் பறம்பைப்போல் நிலைகொண்டவை. ஒருபோதும் உதிராது. எந்தச் சூழலிலும் பாரி நிதானம் இழப்பவனல்லன்’ என்றும் தோன்றியது.

‘ஆனால் இப்போது ஏற்பட்டுள்ளது புதிய சூழல். இதை வழக்கமான ஒன்றைப்போல மதிப்பிடவும் முடியாது’ என்றும் தோன்றியது. இருவருக்கும் குழப்பமே மிஞ்சியது. பாரி குழப்பமற்று இருந்தான். அது இவர்கள் இருவரையும் மேலும் குழப்பத்துக்குள்ளாக்கியது.
பாரி தொடர்ந்தான், “எனக்கு வீரர்கள் தேவையில்லை. காட்டுக்குள் எதிரிகளின் நகர்வை உணர்த்தும் அடையாளக்காரர்கள் மட்டுமே தேவை” என்றவன் மேலும் சொன்னான், “அவர்களை வழக்கமான தாக்குதல் முறைகளால் ஒன்றும் செய்துவிட முடியாது. அவர்களை அழித்து, தேவவாக்கு விலங்கைக் காப்பாற்ற வேறு வழிமுறையைத்தான் பின்பற்ற வேண்டும். அதைப் பற்றி நான் சிந்தித்துவிட்டேன்” என்றான்.

பாரியின் குரலில் இருந்த உறுதி எதிர் கேள்விக்கான இடம் எதையும் விட்டுவைக்கவில்லை.
ஆனாலும் பழையன் கேட்டான், “நீ இவ்வளவு உறுதிகொண்டு சொல்வதால் நான் ஏற்கிறேன். ஒருவேளை, அவர்கள் தேவவாக்கு விலங்கைத் தூக்கிக்கொண்டு சமதளக் காட்டுக்குள் நுழையும் சூழல் வந்தால், பறம்பைவிட்டு நீ கீழிறங்கக் கூடாது. நாங்கள் பின்தொடர்ந்து தாக்கி அதைக் கைப்பற்றுகிறோம்.’’

“இந்த உறுதியை அளிப்பதன் மூலம் எனது உறுதியைக் கேள்விக்குள்ளாக்க விரும்பவில்லை. அவர்களால் ஒருபோதும் பறம்பின் எல்லையைத் தாண்ட முடியாது.” பாரியின் சொல் பாறையென நிலைகொண்டது.

இடியோசையில் திசைகள் நடுங்கின. மழை இறங்கியது. வெட்டும் மின்னலொளியில் காட்டின் மேற்கூரை கழன்றுவிட்டதுபோல் தெரிந்தது. “தேவவாக்கு விலங்கு என்பது, கொற்றவையின் குறிசொல்லும் குழந்தை. அதை எதிரியிடம் பறிகொடுப்பது நமது உயிரைக் கொடுப்பதற்கு நிகர். ஒருபோதும் அது நிகழாது.’’ - முழங்கும் பாரியின் குரலே இடியோசையென காடெங்கும் ஒலித்தது.



எதிரிகளை அழிக்கும் பணி பாரியினுடைய தானது. அவர்கள் எந்த இடத்தில் காரமலையைக் கடக்கப்போகின்றனர் என்பதைக் கண்டடைவதும், அங்கிருந்து அவர்கள் போகும் வழியைத் தெளிவாகத் தெரியப்படுத்துவதும்தான் மற்றவர்களின் வேலை.

இருப்பவர்களை இருகூறாகப் பிரித்தனர். பாரி தன்னுடன் கீதானியையும் அலவனையும்

வைத்துக்கொண்டான். வந்த வீரர்களில் அம்பு எய்வதில் சிறந்த இருவரை உடன் அழைத்துக் கொண்டான். மற்ற எல்லோரையும் இன்னொரு குழுவாக்கினான். அவர்களுக்கான பணி உறுதியானவுடன் அவர்கள் நடுமலையின் தென்புறம் நோக்கிப் புறப்படத் தொடங்கினர். பாரி, வடதிசையை நோக்கிப் புறப்பட்டான்.

காட்டில் வீறுகொண்டு மழையடிக்கும்போது, நிலம் பார்த்து மிகக்கவனமாக அடியெடுத்து வைக்க வேண்டும். இல்லையென்றால், நீரும் நிலமும் மனிதனை விழுங்கிவிடக்கூடும். ஆனால், இப்போது நடப்பது வேறொன்று. மின்னலைக் கைக்கோலாகக்கொண்டு நடக்கும் மனிதர்களை, காடு பார்த்துக்கொண்டிருந்தது. தங்கள் தோளில் பட்டுத் தெறிக்கும் நீர்த்துளி மண்ணில் விழும் முன் மறுகுன்று கடக்க அவர்கள் முயன்று கொண்டிருந்தனர்.

தேக்கனும் வேட்டூர் பழையனும் உடன் வந்த நான்கு வீரர்களும் தென்திசை நோக்கி விரைந்தனர். அதிகாலைக்குள் குடிமனூரை அடைந்தே ஆகவேண்டும். அங்குதான் கூவல்குடியினர் இருக்கின்றனர்.

இந்த ஆண்டு நடந்த கொற்றவைக் கூத்தில் எட்டாம் நாள் விழா கூவல்குடியினருடையது. கூவல்குடியினர், இயற்கையின் ஆதிமைந்தர்கள்; தவளையை வழிபடுபவர்கள். தவளையின் குரல்வளையிலிருந்து எழும் ஓசை, பறையின் அதிர்வோசையையும் விஞ்சக்கூடியது. அதனால்தான் தவளையை ‘ஓசையின் அரசி’ என்று அழைக்கின்றனர்.

அளவு சிறுத்த இடியை அடித்தொண்டையில் வைத்து இரவெல்லாம் கக்கிக்கொண்டே இருக்கும் உயிரினம் அது. களைப்பின்றி ஓசையை எழுப்பிக்கொண்டே இருப்பதில் தவளைக்கு நிகரானது எதுவும் இல்லை. கூவல்குடியினரும் அதைப்போல்தான். அவர்களின் குரல்வளை இடியோசைக்கு நிகரானது மட்டுமன்று, இளைப்பாறுதல் அற்றது. எவ்வளவு பெரிய மலைத்தொடரையும் ஒலிக்குறிப்புகளைக்கொண்டு இணைத்துவிடும் ஆற்றல்கொண்டது.

மலையில் ஓசையெழுப்பும் பெருங்கருவி என்றால், அது காரிக்கொம்புதான். எல்லா மலையூர்களிலும் அது இருக்கும். அதை எளிதாக எடுத்து ஊத முடியாது. அதை ஊத மிகச்சிறந்த பயிற்சி வேண்டும். முழுவலிமையோடு ஊதினால் மலை முழுவதும் எதிரொலிக்கும். ஒருமுறை ஊதுவது, இரட்டித்து ஊதுவது என்ற இரண்டு முறைகளால் மலைமக்கள் தங்களின் குறியீட்டு முறையைப் பயன்படுத்திச்

செய்திகளைப் பரப்புகின்றனர்.

இதிலிருந்து சற்றே மாறுபட்டவர்கள் பறம்பின் மக்கள். அவர்கள் காரிக்கொம்பைச் சிறப்பாகப் பயன்படுத்துவர். ஆனால், அதை நிலைகொண்ட ஊர் இருக்கும் இடத்தில்தான் பொதுவாகப் பயன்படுத்த முடிகிறது. காட்டுக்குள் உள்ள ஒரு மனிதன், உதவி தேவைப்பட்டால் என்ன செய்ய முடியும் எனச் சிந்தித்து சென்றிக்கொடியைக் கண்டறிந்தனர்.

காரிக்கொம்பைத் தூக்கி ஊதப் பயிற்சி தேவை. அப்போதுதான் அது தொலைவுக்குக் கேட்கும். ஆனால், சென்றிக்கொடியால் புகைபோடுதல் மிக எளிது. சிறுவர்கூட தனக்கு உதவி தேவை என்று காட்டின் இன்னொரு மூலையில் இருப்பவருக்குத் தெரிவித்துவிட முடியும். அவ்வளவு எளியது மட்டுமன்று, சிறந்ததும்கூட. அதிலும் பிரச்னை இல்லாமல் இல்லை. புகையை, பகலில் மட்டுமே பயன்படுத்த முடியும். அதுவும் மழைக்காலத்தில் மேகங்கள் திரண்டுவிட்டால் மறைக்கப்பட்டுவிடும்.

மேளதாள ஓசைகள், காரிக்கொம்பு, சென்றிப்புகை என உதவி கேட்கும் வழிமுறைகள் பல இருந்தாலும், ஒவ்வொன்றிலும் நிறைகுறைகள் இருக்கின்றன. ஆனால், இந்தக் கருவிகள் எவையும் கூவல்குடியைச் சேர்ந்த ஒரு தனிமனிதனுக்கு இணையாகா. அவர்கள் இடியை விழுங்கி இரவெல்லாம் கக்கிக்கொண்டிருப்பவர்கள். பழுத்த கனியை பாறையில் எறிந்து தெறிக்கவைப்பதைப்போல, ஓசையைக் காற்றுடன் மோதவிட்டுத் தெறிக்கவிடக் கூடியவர்கள். தம் அடிநாக்கை மடித்து எழுப்பும் ஒலியால் காட்டுக்கே ஒலிவேலி கட்டுகிறவர்கள். அவர்களின் இருப்பிடமான குடிமனூரை நோக்கியே தென்புறம் சென்றுகொண்டிருக்கிறது தேக்கனின் தலைமையிலான குழு.

**கொ**ட்டும் மழையில், மிக மெதுவாகவே நடந்தான் பாரி. அவனுக்கு நிறையவே நேரம் இருந்தது. கீதானியும் அலவனும் கடந்த இரு நாள்களாக ஓடிய ஓட்டத்தை அவன் அறிவான். அதுமட்டுமல்ல, எதிரிகளின் தக்குதலாலும் கடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளன. தொண்டைக்கசப்புக்கு வேட்டூர் பழையன் மாற்று கொடுத்துள்ளான். அதனால்தான் இப்போது அவர்களால் சற்றே இயல்பாக இருக்க முடிகிறது. இல்லையென்றால், இந்நேரம் அவர்கள் குரல் நாளங்களைப் பிய்த்தெறிய ஆயத்தமாகியிருப்பார்கள்.

பாரி, இருவரையும் அரவணைத்து அழைத்துச்சென்றான். மற்ற வீரர்கள் இருவரும் ஆவேசத்தோடு

முன்னால் ஓடிக்கொண்டிருந்தனர். காட்டோடையில் பெருகும் நீர் பார்த்து இரவெல்லாம் நடந்தனர். இடியும் மின்னலும் பாறையெங்கும் விழுந்து சரிந்துகொண்டிருந்தன. மழையோசை கேட்டு விலங்குகள் பம்மிக்கிடந்தன. நீரின் விதவிதமான ஒலிகளால் காடு நிறைந்துகிடந்தது.

ஒளிக்கீற்று மெள்ள பரவத் தொடங்கியபோது நாய்வாய் ஊற்றுக்கு வந்து சேர்ந்தனர். மழை சற்று முன்னர்தான் நின்றது. உடல்மேல் பொழிந்துகிடந்த நீர் உதிர்த்துப் பறவைகள் சிறகசைக்கத் தொடங்கின. காரமலையின் அடிவாரம் செல்ல இன்னும் சிறிதுதொலைவே இருந்தது. கிழக்குதிசை வெளிச்சம் காரமலையின் மேலிருந்து வழியத் தொடங்கியது . பாரியின் கண்களுக்குத் தூர் அகன்ற உடைமரம் ஒன்று கண்ணில் பட்டது. அதைப் பார்த்ததும் நின்றுவிட்டான். உடன் வந்தவர்களும் நின்றனர்.

இந்த மரத்தில் என்ன இருக்கிறது என்று மற்றவர்கள் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தனர். பாரி, வீரர்கள் இருவரையும் பார்த்துச் சொன்னான், “உடைமுற்களைக் கை நிறைய ஒடித்து வாருங்கள்.’’

வீரர்கள் இருவரும் முள் ஒடிக்கப் போனார்கள். அலவனையும் கீதானியையும் அருகில் இருக்கும் பறையின்மீது உட்காரச் சொன்னான். இருவரும் உட்கார்ந்தனர். ‘முள் ஒடித்து என்ன செய்யப்போகிறான் பாரி?’ என்ற எண்ணம் வீரர்கள் இருவருக்கும் இருந்ததைப்போலவே இவர்களுக்கும் இருந்தது.

வீரர்கள் மிகக்கவனமாக ஒவ்வொரு முள்ளாக ஒடிக்கத் தொடங்கினர். பாரி, அலவனைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். அலவனின் கவனம் உடைமரத்தில் இருந்ததால், அவன் பாரியைக் கவனிக்கவில்லை. கீதானி காலால் மெள்ளத் தட்டியபிறகுதான் கவனித்தான்.

“சிறுத்துக் கிடக்கும் உடைமரப் புதருக்குள் கொம்பேறி மூக்கன் கிடக்குமே, உன்னால் பிடித்துவிட முடியுமா?” என்று கேட்டான் பாரி.

“முடியும்” என்றான் அலவன்.




“பிடித்து வா, பார்ப்போம்” என்றான் பாரி.

அலவன், கீதானியைத் துணைக்கு அழைத்துக்கொண்டான். கழி ஒன்றை எடுத்துக் கொண்டு புதரின் ஒரு பக்கத்தை அசைக்கச் சொல்லி, மறுபக்கத்தில் நின்று கவனித்தான். கொம்பேறி மூக்கன், கொப்புகளைவிட்டு மறுகொப்புக்கு மிக வேகமாகப் பயணிக்கக் கூடியது. பிடிப்பது எளிதல்ல. பார்த்த கணத்தில் கடந்து செல்லும் வல்லமைகொண்டது. கீதானி ஒவ்வொரு புதராகப் போய் அசைத்தான். அலவனின் கண்கள் கூர்மையாகத் தேடின.

முள் ஒடிக்கும் வீரர்களுக்கும் பாம்பு பிடிக்கும் மாணவர்களுக்கும், இந்தப் பணியைச் செய்யச் சொன்னதன் காரணம் விளங்கவில்லை. ‘எதிரிகளின் வலிமையைப் பற்றி நேற்றிரவு பேசிய பேச்சுக்கும், இப்போது செய்துகொண்டிருக்கும் செயலுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? ஒற்றைக் கையால் தேக்கனை அடித்துத் தூக்கும் அந்த வீரர்களை இந்தச் சிறுமுள்ளையும் பாம்பையும்கொண்டு தாக்கி வீழ்த்திவிட முடியுமா?’ சிந்திக்கச் சிந்திக்கக் குழப்பமே மிஞ்சியது. இவற்றை வைத்து பாரி என்ன செய்யப்போகிறான் என்பது புரிந்துகொள்ளவே முடியாததாக இருந்தது.

பாறையில் உட்கார்ந்த பாரி சொன்னான், “முள் ஒடிக்கும் முன் மூக்கனைப் பிடித்து வா அலவா.’’



முள் ஒடிக்கும் வீரர்களுக்கு அப்போதுதான் தோன்றியது, ‘சிறுவன் பாம்பை உடனே பிடித்து விட்டால், நாம் பின்தங்கிவிடுவோமே’ என்று. மாணவர்களுக்குத் தோன்றியது, ‘அவர்கள் எளிதில் முள் ஒடித்துவிடுவார்கள். அதற்குள் நாம் மூக்கனைப் பிடித்தாக வேண்டும்’ என்று. இருவரும் இப்போதுதான் கவனம்கொள்ளத் தொடங்கினர்.

வேகவேகமாக வேலை நடந்துகொண்டிருந்தது. வீரர்கள் சடசடவென ஒடிக்க நினைத்தனர். கவனமாக இல்லையென்றால், அது விரல்களைக் குத்திக் கிழித்துக்கொண்டே இருக்கும். அதுவும் இரவு முழுவதும் நனைந்ததால் அவர்களின் விரல்கள் ஊறிப்போய் இருந்தன. நகங்களின் முனையை வைத்தே ஒடித்துக்கொண்டிருந்தனர். இருவரும் கை நிறைய ஒடித்துவந்து பாறையில் கொட்டினர்.

சற்றே சாய்ந்து உட்கார்ந்த பாரி, விரல்களால் கிளறி, மிக நீளமாக இருக்கும் முள்களையும் நீளமற்று இருக்கும் முள்களையும் ஒதுக்கிவிட்டு நடுத்தரமான அளவுகொண்ட முள்களை மட்டும் தனியே பிரித்தெடுத்தான்.

பாரி இதை ஏன் செய்கிறான் என்று புரியாமல் வீரர்கள் இருவரும் முழித்துக்கொண்டிருந்தபோது அலவனிடமிருந்து குரல் கேட்டது, “கொம்பேறி மூக்கன் கிடைக்கவில்லை. கொடிமூக்கன்தான் கிடைத்துள்ளான். போதுமா, இல்லை இன்னும் தேடவா?”

“கொண்டு வா, அதன் அளவைப் பார்ப்போம்” என்றான் பாரி.

புதர் விலக்கி அவர்கள் வெளிவந்தபோது அதன் நீளத்தைப் பார்த்து வீரர்கள் இருவரும் விக்கித்துப்போனார்கள். அலவன் அதன் கழுத்தைப் பிடித்திருந்தான். கீதானி அதன் நடுப்பகுதியைப் பிடித்திருந்தான். கை முழுவதும் சுற்றிச் சுருண்டிருந்த அதன் நீளம் பார்க்கவே அச்சமூட்டுவதாக இருந்தது.

‘கொம்பேறி மூக்கன் கிடைக்கவில்லையே’ எனச் சிந்தித்த பாரி, பிடிபட்ட கொடிமூக்கனைக் கொண்டுவரச் சொன்னதற்குக் காரணம் அதன் நீளத்தை அறியத்தான். அவன் எதிர்பார்த்ததைவிட வயது முதிர்ந்ததாக அது இருந்தது.

“இது போதும், வா” என்றான் பாரி.

இருவரும் பாறை நோக்கி வந்தனர். தனக்கான ஆயுதத்தைப் பாரி தயார் செய்யத் தொடங்கியபோது, காரமலையின் மேல்விளிம்பிலிருந்து எட்டிப்பார்த்தான் கதிரவன்.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-44

கூவல்குடியினர் எட்டுப்பேரை அழைத்துவந்தான் தேக்கன். அதில் மூன்று பேர் வயதானவர்கள். ஐந்து பேர் இளைஞர்கள். வயதானவர்கள் எழுப்பும் ஓசை இணையற்றதாக இருக்கும். மலையின் எந்த எல்லைக்கும் அவர்களால் குறிப்புச் சொல்ல முடியும். ஆற்றுநீரில் சுழி ஏற்படுவதுபோல காற்றில் ஓசைகொண்டு சுழிக்கச்செய்யும் ஆற்றல்கொண்டவர்கள். ஆனால், காட்டை ஊடறுத்து வேகமாக ஓட முடியாது. இளைஞர்களால் அவர்களின் அளவுக்கு ஓசையைக் காடுதாண்டி வீச முடியாது. ஆனால், தங்களின் ஓட்டத்தால் அந்த இடைவெளியை நிரப்பிவிடுவார்கள்.
ஊரிலிருந்த எட்டுப்பேரை அழைத்துக்கொண்டு அதிகாலையிலேயே காரமலையில் ஏறத் தொடங்கிவிட்டான் தேக்கன். மிக விரைவாகவே அவர்கள் மலையுச்சியை அடைந்துவிட்டனர். காரமலையின் ஒவ்வொரு முகட்டுக்கும் ஒவ்வொருவராகப் பிரித்து அனுப்பப்பட்டனர். பொழுதடைவதற்குள் அவர்கள் தங்களின் இருப்பிடங்களில் நிலைகொண்டனர்.

ஒரு திசையிலிருந்து மறுதிசைக்குக் கண்ணுக்கெட்டிய தொலைவுவரை காரமலை, இப்பொழுது ஒலிக்கண்ணிகளால் பின்னப்பட்டுவிட்டது. இந்த எல்லைக்குள் எதிரிகள் எவ்விடத்தில் மலையைக் கடந்தாலும், கண்டறிந்து ஒலியெழுப்பிக் குறிப்புகொடுக்க அவர்கள் ஆயத்தமாக இருந்தனர். மலைமுகட்டுக்கு வந்ததும் வேட்டூர் பழையன் புறப்படத் தயாரானான். எதிரிகளை வீழ்த்த பாரி என்ன உத்தியை வகுத்திருக்கிறான் என்பதைச் சொல்லவில்லை. ஆனாலும் மலையடிவாரத்தில் முழு தயாரிப்போடு இருக்க வேண்டியது கட்டாயம் என்று தோன்றியது.

“இங்கிருந்து காரிக்கொம்பை ஊதினாலே கீழே வேட்டுவன் பறையிலிருக்கும் நீலன் வீரர்களோடு ஆயத்தமாகிவிடுவான். ஆனால், அந்த ஓசை எதிரிகளையும் விழிப்படையச் செய்துவிடும். எனவே, நான் நேரில் போகிறேன்” என்று சொல்லிப் புறப்பட்டான் வேட்டூர் பழையன்.

பழையனைக் கீழே அனுப்புவது முறையல்ல என்று தேக்கனுக்குத் தோன்றியது. மலையின் மீதிருந்து எதிரிகளை வீழ்த்தப் பாரி போரிடும் போது, நாம் உடனிருப்பது கட்டாயம் என்று தோன்றிய அதே நேரத்தில் முன்னெச்சரிக்கை யாகச் சிலவற்றைச் செய்ய வேண்டியதும் அவசியம் எனத் தோன்றியது. முடிவெடுக்கத் தயங்கினான் தேக்கன்.

வேட்டூர் பழையனால் தேக்கனைப் புரிந்துகொள்ள முடிந்தது. அவன் எதிரிகளைக் கூத்துக்களத்திலிருந்து விரட்டிவருகிறான். அவனது எல்லா முயற்சிகளையும் முறியடித்து அவர்கள் முன்னேறிவருகின்றனர். பறம்புநாடு, தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை இப்படியோர் எதிரியைக்

44

கண்டதில்லை. அதே நேரம் பாரி, ‘அவர்களை வீழ்த்தும் வழிமுறையைக் கண்டறிந்துவிட்டேன்’ என்று திடமான சொல்கொண்டு காத்திருக்கிறான்.

எதிரிகளின் தாக்குதலைத் தனது உடல் முழுவதும் ஏற்றிருக்கிறான் தேக்கன். அவர்களின் ஆற்றல்பற்றி அவனுக்கு ஆழமான கருத்து உருவாகியிருக்கிறது. அவர்களை வீழ்த்தும் உத்தியைப்பற்றி பாரி எதுவும் சொல்லாததால், தேக்கனின் மனம் நிலைகொள்ளவில்லை. தடுமாற்றம் தவிர்க்க முடியாததாக இருக்கிறது.

புரிந்துகொண்ட பழையன், புரியாததைப்போல அவனைவிட்டு விலகி நடக்கத் தொடங்குகிறான். இரண்டு கிழவர்களின் மனநிலையும் இரண்டு விதமாக இருக்கின்றன.

ஆனால், இருவரும் பாரியின் சொல்லை ஏதோ ஒருவகையில் கடந்துகொண்டிருக்கின்றனர். ஒருவேளை, பாரியால் எதிரிகளை வீழ்த்த முடியாமற்போய்விட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் மனதின் ஆழத்தில் உருவாகியிருக்கிறது. அதனை அவர்கள் நம்பாமலிருக்க முயல்கின்றனர். ஆனால், எதிரியின் இணையற்ற ஆற்றல் அவர்களை அடுத்தடுத்து சிந்திக்கச் செய்கிறது. அச்சிந்தனை பாரியின் சொல்லைக் கடந்தும் போய்க்கொண்டிருக்கிறது.

மூன்று மலைகளைக் கடந்து உள்ளே வருவதுதான் எல்லாவகையிலும் கடினமானது. உள்ளே வந்துவிட்டால், வெளியேறுவது அவ்வளவு கடினமல்ல. இயற்கையில் அமைந்துள்ள இந்தச் சாதகமான நிலையை இரு கிழவர்களும் அறிவர். காட்டுக்குள் தப்பியோடும் ஒருவனை விரட்டிச்சென்று மறிப்பது எளிதல்ல. அதுவும் இவர்கள் அபாரமான ஆற்றல் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

எண்ணங்கள் ஓடியபடி இருக்க, வேட்டூர் பழையன் புறப்பட்டான். காரமலையின் கீழ்த்திசைச் சரிவில் இருக்கும் ஒவ்வொரு பாறையும், பிளவும், முடிச்சும், மரமும், செடியும், விலங்கும் அவன் சொல் கேட்பன. எதிரிகளைப்பற்றி இவ்வளவு நேரம் கேட்ட செய்திகளிலிருந்து அவன் சில முடிவுகளுக்கு வந்திருந்தான். எதிரிகளை வீழ்த்த எவற்றைச் செய்யக் கூடாது என மனதில் பட்டியலிட்டான்.


‘வேட்டுவன் பாறையில் மிகச் சிறந்த வேட்டைநாய்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றைத் தாக்குதலில் ஈடுபடுத்தக் கூடாது. சுண்டாப்பூனையையே கொன்று வீசியவர்கள் வேட்டைநாயை எளிதில் வீழ்த்திவிடுவார்கள்.

தேக்கனையே  அடித்துத்தூக்கியவர்கள், எவ்வளவு பெரியவீரனையும் சரித்துவிடுவார்கள். எனவே, அவர்களை நேர்நிலையில் எதிர்கொள்ளக் கூடாது. உடலின் வலிமையும் காட்டுச்செடியைக் கிழித்து முன்னகரும் ஆற்றலும் இணையற்றவையாக இருக்கின்றன. எனவே, அவர்களைப் பின்தொடர்ந்து விரட்டித்தாக்க முடியாது. இவற்றையெல்லாம் கடந்த வழியென்ன இருக்கிறது என்று  சிந்தித்தபடியே மலையிறங்கினான் வேட்டூர் பழையன்.

நீண்டநேரம் சிந்தித்தாலும் விடையேதும் கிடைக்கவில்லை. ஆனால், பாரி எதனை யோசித்து அவ்வளவுத் தெளிவாகச் சொன்னான். இவற்றைக் கடந்த தாக்குதல்முறையைப்பற்றி பாரி சிந்தித்திருப்பான். அது என்னவாக இருக்கும்?’ வினாவிற்கான விடையேதும் கிடைக்காமலே கால்கள் நடந்துகொண்டிருந்தன.

வெகுதொலைவு இறங்கியபின் வேறோர் எண்ணம் தோன்றியது. ‘இவ்வழிகள் அல்லாத வேறுவழி பற்றிய திட்டம் இல்லாமல் நாம் கீழே போய் என்ன செய்யப்போகிறோம்? மாற்றுவழியைக் கண்டுபிடித்திருக்கும் பாரியுடன் இணைந்து தாக்குதல் தொடுப்பதுதானே இப்போதைய தேவை.’ மனம் நிலைகொள்ள மறுத்தது. ‘இதே குழப்பம் தேக்கனுக்கும் இருக்கிறது. ஆனால், பாரி மட்டும் எப்படி குழப்பம் சிறிதுமின்றித் தெளிவான முடிவெடுத்தான்?’ என்று நினைத்த கணம் நடையை நிறுத்தி, ‘மீண்டும் காரமலை ஏறிவிடலாமா?’ என்று தோன்றியது.

வேட்டூர் பழையன் நிலைதடுமாறினான். ஆனாலும் சட்டெனத் தெளிந்தான். ‘வீழ்த்த முடியாத மனிதர் யார் இருக்கிறார்? காக்காவிரிச்சியையே வீழ்த்த முடிந்த பாரியால் மனிதனை வீழ்த்த முடியாதா? எவ்வளவு பெரும்வீரனாக இருந்தாலும் திருடிச்செல்பவனின் உள்ளம் அச்சங்கொள்ளத்தானே செய்யும். அதனைத் தடுக்க நினைப்பவன் வெற்றிபெறுவதற்கு வீரத்தைக் கடந்த ஆயுதங்களும் உண்டு. எண்ணங்கள் உருவேறியபடி இருக்க, வேட்டூர் பழையனின் கால்கள் பலமடங்கு வேகத்தோடு வேட்டுவன் பாறையை நோக்கிக் கீழிறங்கிக் கொண்டிருக்கின்றன.



கொற்றவைக் கூத்திற்குப் போனதிலிருந்து எவ்வியூரிலே தங்கியிருந்த மயிலா, சில நாள்களுக்கு முன்புதான் கீழிறங்கி வந்தாள். வந்ததும் வேட்டுவன் பாறையிலிருந்த நீலனைப் பார்க்கப் போனாள். நீலனோ பகரி வேட்டைக்குச் செல்பவர்களோடு இணைந்து உள்காட்டுக்குப் போயிருந்தான். மூன்று நாள்களாக அவன் வந்து சேரவில்லை. அதன்பின் இருவரும் சந்தித்துக்கொண்டாலும் முழுப் பொழுதையும் சேர்ந்து கழிக்கும் வாய்ப்பின்றியே இருந்தது.

நேற்று பகலில்தான் இருவரும் சந்தித்தனர். மாதங்கள் கடந்ததால், தவித்தலையும் கண்களோடு மயிலா கேட்டாள், “நான் சொல்லும் இடத்துக்கு என்னை அழைத்துச்செல்.”

“எங்கே?” என்றான் நீலன்.

“சுனைவால் முடுக்கிற்கு.”

நீலன் எதிர்பார்க்கவில்லை. “வழக்கமாக அருகிலிருக்கும் குன்றுக்குத்தானே செல்வோம். இப்பொழுது ஏன் அங்கு அழைத்துச்செல்லச் சொல்கிறாய்?”

“காரணமிருக்கிறது. அழைத்துச்செல்.”

‘அங்கு சிறிய நீர்க்குட்டை மட்டுமே உண்டு. அதைக்காணவா அவ்வளவு தொலைவு செல்ல வேண்டும்?’ என நீலன் தயங்கினான்.

“ஏன் தயங்குகிறாய்?” எனக் கேட்டாள் மயிலா.

“சுனைவால் முடுக்கு, காரமலையின் பின்புறச்சரிவில் இருக்கிறது. நாம் போய்ச் சேரவே இரவாகிவிடுமே” என்றான்.

“ஆமாம். அது இருளுக்குள் இருந்து காணவேண்டிய இடம்” என்றாள்.

நீலனுக்குப் புரியவில்லை. “அவ்விடம் சிறிய நீர்க்குட்டை மட்டுமே உண்டு. நீ வேறு இடத்தை நினைத்துக்கொண்டு சுனைவால் முடுக்கைச் சொல்கிறாய் என்று நினைக்கிறேன்” என்றான்.



“இல்லை. நான் தெரிந்தேதான் சொல்கிறேன். என்னை அவ்விடம் அழைத்துச்செல்.”

“வானில் கருமேகங்கள் ஏறிவருகின்றன. பொழுது மறைவதற்குள் மழை வந்துவிடும். இரவெல்லாம் கொட்டித்தீர்ப்பதற்கான வாய்ப்பிருக்கிறது” என்றான் நீலன்.

அவனது அறியாமையை எண்ணிச் சிரித்தபடி மயிலா சொன்னாள், “அதற்காகத்தான் என்னை அழைத்துச்செல்லச் சொல்கிறேன்.”

இப்பொழுதும் அவனுக்குப் புரியவில்லை. `அது, கண்டுமகிழும் இடமுமில்லை; காதல்கொள்ள ஏற்ற இடமுமில்லை. அங்கு ஏன் அழைத்துச்செல்லச் சொல்லி இவ்வளவு வலியுறுத்துகிறாள்?’ எனச் சிந்தித்தபடியே அவ்விடம் நோக்கி நடக்கத் தொடங்கினான் நீலன்.

மயிலாவுக்குக் கபிலரோடு இருந்த காலத்தைப்பற்றி நீலனிடம் பகிர்ந்துகொள்ள எண்ணற்ற செய்திகள் இருந்தன. அதேபோலத்தான் நீலனுக்கும். கடந்த வாரம் முழுவதும் உள்காட்டிற்கு வேட்டைக்குப் போனதால் சொல்லத் தவித்துக்கொண்டிருக்கும் சொற்களோடு காத்திருந்தான்.

பொதுவாக எல்லையில் கவனம் செலுத்துவதால், பிற வீரர்களோடு சேர்ந்து உள்காட்டு வேட்டைக்கு நீலன் போவதில்லை. ஆனால், மயிலா இல்லாத வெறுமையைக் கடக்க முடியாததால்

மனமாற்றத்திற்காகத் தான் இம்முறை பகரி வேட்டைக்குச் செல்பவர்களோடு இணைந்து போனான்.

கார்காலம், உயிரினங்கள் இணை சேரும் காலம். அதுவும் உள்காடுகளில் பெருங்குன்றுகளே ஒன்றினையொன்று கட்டியணைத்துக் கிடப்பதைப் போலத்தான் காட்சிக்குத் தெரியும். தும்பிகளில் தொடங்கி துதிக்கைத் திருகும் யானைகள் வரை இணையும் காலஅளவைப்பற்றியே பார்த்தும் கணித்தும் பேசிச்சென்றனர் அனைவரும்.

வேட்டையாட வேண்டிய விலங்கினைக்கூட எல்லா காலங்களிலும் வேட்டையாடிவிட முடியாது. இணை சேர வழியின்றிக் கூட்டங்களிலிருந்து தப்பிய விலங்குகள் மட்டுமே கார்காலத்து வேட்டைக்கு உகந்தவை. தாவரங்கள் ஒன்றிணையொன்று பின்னுவதுபோல விலங்குகளும் பின்னுகின்றன. விலங்குகள் பிடறிக்கவ்வி முயங்குவதைப்போல தாவரங்களும் முயங்குகின்றன.

பகரி வேட்டையாடச் செல்லும் அனைவருமே வயதில் மூத்த பெரியவர்கள்தான். அவர்களின் உதவிக்காக இளைஞர்கள் சிலர் உடன் சென்றனர். கார்காலத்தில் கனிந்தி ருக்கும் உயிரினங்களின் காதல் வாழ்வைப் பெரியவர்கள் எளிதில் கடந்துபோய்விடுவர். ஆனால், இளைஞர்களால் அப்படிக் கடக்க முடியவில்லை. இணைசேருதல் உயிரினப் பொதுமை. ஆனால், அக்காட்சி காணும் கண்களுக்குள் கடத்தும் உணர்வு பொதுமையானதல்ல. வாழ்வின் எந்நிலையில் அவன் நிற்கிறானோ, அந்நிலையோடு தொடர்புடையது. இளைஞர்கள் நிற்கும் நிலையில் நிலைகொள்ளாமல் இருந்தனர். காமம் நிலை கொள்ளாமையை அடிப்படையாகக் கொண்டது. அது நடப்பன, ஊர்வன, பறப்பன என எவ்வொன்றிலுமிருந்து பாய்ந்துவந்து மனிதனைக் கவ்விப் பிடித்துக்கொள்ளக் கூடியது.

விளார் விளாராக உடம்பிற் பதிந்த தடம்போல, மண்ணிற்பதிந்து கிடக்கும் தடத்தைப் பார்த்ததும் ஒரு பெரியவர் சொன்னார், “இது புலியின் முதற்கூடுகை. வால்கொண்டு அடித்த தடங்கள் இவை” கடக்கும்பொழுது சொல்லும் செய்திகள் கடக்க முடியாதவைகளாக மாறுவதை இளைஞர்கள் உணர்ந்தபடியே இருந்தனர். மயிலாவின் சடை பின்னிய கூந்தலின் தடம் தனது மார்பில் பதிந்துகிடந்த நினைவு நீலனைத் தாக்கிச்சென்றது.

பெரியவர்கள் தடங்களை மண்ணிற் பார்த்துச் சொன்னபடிக் கடப்பதை, இளைஞர்கள் நினைவிற் பார்த்துக் கடக்க முடியாமல் நின்றனர்.

“மண்ணில் காதல்கொண்டால் அடுத்தவர் கண்ணில் தடம்படும் என்பதால்தான் முருகன் பரண் அமைத்தான். அடுத்து வந்தவர்கள் நான்கு காலூன்றிச் சிறுபரண் அமைத்து, இறுகக்கட்டிக்கொண்டனர். அதனைக் ‘கட்டில்’ என்றும் அழைத்தனர்” என்றார் முன்னால் போன பெரியவர்.
இளைஞர்களின் விழிக்குறிப்பறிந்து அவர் இப்பேச்சைத் தொடங்கினார். பேச்சு எந்தக் கணம் காமத்தின் பக்கம் போகிறதோ, அதன்பின் அதிலிருந்து விலகுதலை அதுதான் முடிவுசெய்யும்; நாம் முடிவுசெய்ய முடியாது.

விலகுதலும் இணைதலும் எப்பொழுது என்பதைக் கணிப்பதில்தான் இருக்கிறது காமத்தைக் கைக்கொள்ளும் வித்தை. அந்தப் பெரியவர் வித்தை தெரிந்த வீரனாக இருந்தார். இந்தவொரு

குறிப்புச்சொன்னதும் இளைஞர்கள் மிகக் கவனமாக அவரைச் சூழ்ந்து வந்தனர். தனது சொல்லோடு அவர்களை இணைத்த பெரியவர் அதன்பின் வீடு திரும்பும்வரை அவர்கள் விலகாமல் பார்த்துக்கொண்டார். “தேனின் சுவை சுவைப்பதில் அல்ல, சுவைத்ததில் இருக்கிறது. காமமும் அப்படித்தான்” என்று அவர் சொன்ன சொல்லின் ஆழம்செல்ல அவர்களால் முடியவில்லை.



மயிலா மட்டுமல்ல, அந்தக் கிழவன் சொன்ன சொற்கள் அனைத்தும் நீலனைப் பின்தொடர்ந்து வந்துகொண்டேயிருந்தன. அவன் சுனைவால் முடுக்கு நோக்கி மிக வேகமாக அவளை அழைத்துச் சென்றுகொண்டிருந்தான். மழை இறங்கும்முன் காரமலையின் முகட்டைத் தாண்டிவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு நடந்துகொண்டிருந்தான்.

சற்றுத் தொலைவில் சமதளமான இடமொன்றில் மண் பிரண்டு கிடந்தது. இவ்வளவு அகலமாக மண் பிரண்டு கிடக்கிறதே என்று சற்று அருகில் சென்றான். உள்ளுக்குள் இருந்து பிரண்ட மண் எங்கும் சிதறிக்கிடந்தது. அதன் நடுவில் பெரும்பள்ளம் உருவாகியிருந்தது. அவ்விடத்தை நின்று பார்த்தான் நீலன். அருகில் வந்த மயிலா, “இங்கு என்ன நடந்துள்ளது?” எனக் கேட்டாள்.

உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த நீலன் சொன்னான். “தங்களின் கூட்டத்திலிருந்து பிரிந்துவிட்ட காட்டெருமைகள் தனித்து அலைகின்றன. அவ்வகைக் காட்டெருமைகள் மிக ஆபத்தானவை. அவ்வாறு தனித்தலையும் இரு காட்டெருமைகள் எதிர்பட்டால், ஒன்றினையொன்று தாக்கத்துவங்கும். மிகக்

கொடூரமாக அத்தாக்குதல் நிகழும். மரணம் வரை இரண்டும் தாக்குவதை நிறுத்தாது. மூன்று அல்லது நான்கு நாள்களுக்குக்கூட அத்தாக்குதல் நீடிக்கும். இறுதியில் அவற்றிலொன்று மடிந்து வீழ்ந்தபின்தான் அம்மோதல் முடிவுக்கு வரும்” என்று சொன்னவன் மேலும் சொன்னான், “இவ்விடத்தில் குறைந்தது மூன்று நாள்கள் இரு காட்டெருமைகள் சண்டையிட்டுள்ளன. இல்லையென்றால், இவ்வளவு பெரும்பரப்பில் மண் பள்ளமாகி இருக்காது” என்றான்.

“தோற்றது என்ன ஆகியிருக்கும்?” என்று மயிலா கேட்டாள்.

“தோற்றது ஓடத் தொடங்கும். ஓடத் தொடங்கிவிட்டாலே அதன் மரணம் அடுத்த சில அடிகளில் நிகழப்போகிறது என்று பொருள். வென்றது, அதனைக் குத்தித்தூக்கிப் பள்ளத்தில் வீசியிருக்கும்” என்றான்.

பள்ளத்தை வியந்து பார்த்துக்கொண்டிருந்த மயிலாவை, “சரி. வேகமாகச் செல்ல வேண்டும்” என்று அழைத்தபடி விரைந்தான் நீலன். காரமலை உச்சியைத் தாண்டும்முன் மழை இறங்கத் தொடங்கியது. அங்கங்கு பாறை இடுக்குகளிலும் குகைகளிலும் அண்டியபடி மழை பார்த்து நகர்ந்தனர். நள்ளிரவில் பெருமழை கொட்டித்தீர்க்கும் பொழுது அவர்கள் சுனைவால் முடுக்குக்கு வந்துவிட்டனர். சுனையோரமிருக்கும் பாறைமறைப்பில் பதுங்கினர். எதிரிலிருந்த சிறியகுளம், கொட்டும் மழையில் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. ‘இவ்விடம் வர ஏன் மயிலா விருப்பப்பட்டாள்?’ என்று நீலன் சிந்தித்துக்கொண்டே இருந்தான். மழை நின்றது. பாறைகளின் மேலிருந்து பாய்ந்து கடக்கும் நீரினோட்டம் மட்டுப்படத் தொடங்கியது.

சுனைக்கு முன் பெருகித்தேங்கியிருந்த நீர் முழுவதும் சிறிதுநேரத்தில் வழிந்தோடியது. தேங்கிய நீர் எப்பொழுது வடியும் என்று காத்திருந்த மயிலாவின் கண்கள் இங்குமங்குமாக அலைமோதிக்கொண்டிருந்தன. நீர் முழுமையும் வழிந்தோடியபின் அவள் காணவந்த காட்சியைக் கண்டாள். மனம் மகிழ்வில் மலர்ந்தது. பாறையில் சாய்ந்தபடி குகையைப் பார்த்து உட்கார்ந்திருந்த நீலனின் தோள்தொட்டுத் திருப்பினாள்.

‘எதைப் பார்க்கச் சொல்கிறாள்?’ எனக் குழம்பியபடியே அவன் திரும்பிய கணம், அப்படியே சிலிர்த்து அடங்கினான். அந்தச் சிறு நீர்த்தேக்கம் முழுவதும், சின்னஞ்சிறு சுடர்கள் எரிந்துகொண்டிருந்தன.

நீலனுக்கு, தான் காண்பதை நம்ப முடியவில்லை. “என்ன இது... விளக்கேற்றி வைத்ததைப்போல எங்கும் அசையும் சுடர்?”

அவன் வியந்துசொல்லி முடிக்கும்முன் மயிலா சொன்னாள், “இதுதான் தீப்புல்.”

நீலனின் கண்கள் சிற்றொளி கண்டு உறைந்து நின்றன. நீர்பட்டு அடங்கியவுடன் ஒளிரும் தன்மைகொண்டது தீப்புல். மின்மினிப்பூச்சியின் உடல்போல இப்புல்லின் உடல் இன்னும் சிறிதுநேரம் ஒளிர்ந்து அடங்கும். அதனைப்பற்றி நீலன் கேள்விப்பட்டிருக்கிறான். அறுபதாம் கோழியின் கழிவில்தான் இப்புல் முளைக்கிறது என்று சொல்வதும் அவன் அறிந்ததே. ஆனால், இன்றுதான்

முதன்முறையாகப் பார்க்கிறான்.

மயக்கம் நீங்க நெடுநேரமானது. இருளுக்குள் நெளியும் ஒளியின் அழகைவிட்டுக் கண்கள் எப்படி விலகும்? விலகாத கண்களைத் தன்னை நோக்கித் திருப்பக் கன்னம்தொட்டு இழுத்தாள் மயிலா.

கருவிழி, தீப்புல்லில் நிலைகுத்தி நிற்க, முகம் மட்டும் திரும்பியது. "இவ்விடம் தீப்புல் இருக்கிறது என்பதை நீ எப்படி அறிந்தாய்?"

மெல்லிய காற்றுக்குப் புற்கள் ஆட, தீயின் நாவுகள் எங்கும் அசைந்தாடின. பார்க்கக் கிடைக்காத காட்சியை இமை மூடாமல் பார்த்தபடியே சொன்னாள். "இவ்விடம் தீப்புல் இருக்கிறது என்பதை அங்கவை சொன்னாள்."




வியப்பு அடுத்த கட்டத்தை அடைந்தது.

"அவள் எப்படி இவ்விடம் அறிந்தாள்?"

"அவளின் காதலன் சொன்னானாம்."

வியப்பு உறைநிலை அடைந்ததைப் போலானது.

"இது எப்பொழுதிருந்து?" எனக் கேட்டான் நீலன்.

சற்றே சிரித்தபடி சொன்னாள், "நாம் தொடங்கி நீண்டகாலத்துக்குப் பின்தான் அவர்கள் தொடங்கியுள்ளனர்" சொல்லும் பொழுது முகம் முழுவதும் தீப்புல்லாய் ஒளிர்ந்தது.

கைநீட்டி அருகிருந்த தீப்புல் ஒன்றைப் பறித்தாள். அவனை தனது மடியிற்கிடத்தி புல்கொண்டு மார்பில் எழுதினாள்.

சற்றே கூசிச் சிலிர்த்தபடி அவன் கேட்டான், "என்ன செய்கிறாய்?"

"தீப்புல்கொண்டு உன் பெயர் எழுதுகிறேன்."

அவன் அமைதியானான். தீயின் நாவுகள் அவன் உடலுக்குள் இறங்கிக்கொண்டிருந்தன. மழையில் குளிர்ந்து நடுங்கிய உடலுக்குள்ளிருந்து அனல் மேலேறிவரத் தொடங்கியது. தீயின் நாவுகள்கொண்டு எழுதியவளின் மீது, நாவின் நுனிகொண்டு தீ ஊற்றினான் நீலன். சுடர்விட்டு எரிந்தது தீ. சுனை நீரோடையின் ஈரம்பட்டு நனைந்த பாறைகளின் மீது, அவர்களது மேனியின் இளம்சூடு படர்ந்து மறைந்தது.

மயங்கி, கிறங்கி, உருகி, கரைந்த நீலன் அவளது மடியினில் தலைசாய்த்தான். அவள் அவனது தலையைக் கோதியபடி தீப்புல்லின் அசைவுகளைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். புல்லின் அகலத்துக்கும் உயரத்துக்கும் ஏற்றாற்போல் திரியின் சுடர் அசைந்தாடிக் கொண்டிருந்தது. இருளப்பிக்கிடக்கும் காட்டுக்குள் ஒளிரும் சுடர்களைப் பார்த்தபடியே அவள் மயங்கிக் கண்சொருகினாள்.

கடைசியாய் இருந்த தீப்புல் மீண்டும் நீரில் மூழ்கியது. மயங்கிய நிலையிலிருந்த மயிலா சற்றே கவனம்கொண்டு பார்த்தாள். அங்குமிங்குமாக மீண்டும் தீப்புல்கள் நீரில் மூழ்கின. சுனைநீரின் ஓசையில் வேறு ஓசை கேட்கவில்லை. கண்ணிமைத்து உற்றுப்பார்த்தாள். கால்கள் மிதித்தோடி அவ்விடத்தைக் கடந்து கொண்டிருந்தன. மிருகங்கள் ஓடுகின்றனவோ என நினைத்தாள். ஆனால், அவளின் கண்ணிற்பட்ட உருவங்கள் மனிதவடிவில் இருந்தன. மயக்கம் கலைந்து விழித்துப் பார்ப்பதற்குள் ஓடி மறைந்துவிட்டன.



மடியிற்கிடந்த நீலனிடம் சொன்னாள், “மனிதர்கள் ஓடுகிறார்கள்.”

“எங்கு?”

“காட்டுக்குள்.”

சற்றுத் தலைநிமிர்ந்து பார்த்தான். “இந்த இருளுக்குள் விலங்குகள் மட்டுமே மலைப்புதரில் நுழைந்து ஓட முடியும்?”

‘விலங்குகளைத்தான் நாம் தவறாக நினைத்து விட்டோமோ?’ என்று மயிலாவுக்குத் தோன்றியது. தோன்றிய கணமே இல்லையென்ற முடிவுக்கு வந்தாள். அவளின் கண்கள் உருவங்களைத் தெளிவாகவே பார்த்திருந்தன.

பொழுதுவிடியும்வரை அவள் பதற்றங் கொண்டே இருந்தாள். நன்றாக விடிந்ததும் அவ்விடம் போய்ப் பார்த்தனர். நீர்நிலை கடந்து கிடந்தன மனிதர்களின் காலடித்தடங்கள்.

நீலனுக்குப் பொறி கலங்கியதுபோல இருந்தது. அவனால் நம்ப முடியவில்லை. ‘யார் இவர்கள், ஏன் நள்ளிரவில் இப்படி ஓடினர், எதை எடுத்துச் செல்கின்றனர்?’ வினாக்கள் உடலை வெறியேற்றின. “எத்தனை பேர் இருந்தார்கள்?”

“பத்துக்கும் மேல்” என்றாள் மயிலா.

“நீ வழிபார்த்து வா. நான் புறப்படுகிறேன்” எனச் சொல்லி ஈட்டியேந்தியபடி அவர்கள் சென்ற திசையில் காரமலையின் மேல்விளிம்பை நோக்கி ஓடத் தொடங்கினான் நீலன்.

எதிரிகள் காரமலையின் விளிம்பை நரிப்பாறையின் முகட்டோரமாகக் கடந்தனர். சற்றுத் தொலைவிலிருந்தபடி அவர்களைப் பார்த்த கூவல்குடி கிழவன் நீட்டியிழுத்து ஓரோசையைக் குறிப்பிட்ட பாறையை நோக்கி வீசினான். பாறையிடுக்கில் மோதிய ஓசை காரமலையெங்கும் எதிரொலித்தது. நரி ஊளையிடும் ஓசையது. புதிய ஆட்களால் எளிதில் ஐயங்கொள்ள முடியாது. ஆனால், பறம்பின் மக்களுக்குத் தெரியும்.

கிழவன் ஓசைகொடுத்த இடத்தை மலை யெங்கும் நிற்கும் கூவல்குடியினர் கணித்தனர். நரிப்பாறையைக் கடந்தோடும் எதிரிகளைப் பின்தொடர்ந்து ஓசையெழுப்பியபடி அவர்கள் ஓட வேண்டும். எனவே, தாங்கள் நின்றிருந்த இடத்திலிருந்து அவர்களை நோக்கி குறுக்குவெட்டாக இறங்கிக்கொண்டிருந்தனர். தேக்கனும் அவ்வாறே இறங்கிக்கொண்டிருந்தான்.

காத்திருந்த பாரி ஓசை கேட்டதும் அவர்களின் ஓட்டத்தைக் கணக்கிட்டு, தானிருக்கும் இடத்தி லிருந்து ஊடறுத்து இறங்கினால் எவ்விடம் அவர்களின் மீது தாக்குதல் தொடுக்கலாம் என்பதைக் கணித்து சரசரவென கீழிறங்கத் தொடங்கினான்.

ஓசை கேட்டதும் கீழ்மலையில் இருந்த வேட்டூர் பழையனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. அவனால் நீலனைக் கண்டறிய முடியவில்லை. நீலனைப்போன்ற சிறந்த வீரனில்லாது இவ்வளவு வலிமை மிகுந்த எதிரியை எதிர்கொள்வது கடினம். ஆனாலும் கூவல்குடியினரின் ஓசை கேட்டதும் எதிரிகள் இறங்கும் திசை நோக்கி வீரர்களோடு ஆயத்தமானான் பழையன்.

ஓசை கேட்ட சிறிதுநேரத்திலே காரமலையின் முகட்டை அடைந்தான் நீலன். இது நரியின் ஊளையல்ல; கூவல்குடியினரின் குரல் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். என்ன நடக்கிறது இவ்விடம் என்ற குழப்பம் அவனைத் தாக்கியது. எதிரிகள் எதையோ செய்துவிட்டுத் தப்பி ஓடுகின்றனர். இந்நேரத்தில் அவர்களை எதிர்கொண்டு வீழ்த்த வேட்டுவன் பாறையில் இல்லாமல், இப்படிப் பின்னால் ஓட வேண்டியதாகி விட்டதே என்று வேதனை உருவானது. வேதனை, கட்டுக்கடங்கா வேகங் கொள்ளச்செய்தது.

அனைத்துத் திசைகளிலிருந்தும் எதிரிகளை நோக்கிப் பறம்புமக்கள் இறங்கிக் கொண்டிருக்கும் பொழுது காலம்பனின் முகம் இதுவரை இல்லாத பெருமகிழ்வைக்கொண்டது. காரமலையின் மேல்விளிம்பைக் கடந்ததும் அவன் முடிவு செய்துவிட்டான், ‘பச்சைமலைத் தொடரின் இரண்டு மலைகளைக் கடந்து கடைசி மலையின் விளிம்பையும் கடந்துவிட்டோம். இனி இந்தவொரு சரிவு மட்டுமே. இச்சரிவில் பெரும்படையே எதிர்வந்து நின்றாலும் அடித்துத்தூக்கும் வல்லமை உண்டு. இதுவரை இல்லாத அளவு இருபதுக்கும் மேற்பட்ட வர்களோடு இப்பொழுது ஓடுகிறோம். இப்பெரும் எண்ணிக்கையை எதிர்த்து நிற்க எவராலும் முடியாது. கண்ணுக்கு எதிரில் பறம்பின் எல்லை தெரியத் தொடங்கிவிட்டது. மலையடிவார சமதளக்காடுகள் கரம்விரித்து அழைக்கின்றன.’

விடாமல் ஓடிவந்த அயர்வும் சோர்வும் கணநேரத்தில் மறைந்தன. கால்கள் மேலும் வேகங்கொண்டன. சரிவுப்பாறையில் பெருங்கற்கள் உருள, கால்கள் ககனத்தில் பறந்துகொண்டிருந்தன. காலம்பனின் மனம் இலக்கை அடையப்போகும் நேரத்தைத் துல்லியமாகக் கணித்தது.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-45

நேற்று அதிகாலை நாய்வாய்ஊற்றின் இடப்புறப் பாறையின் மீதிருந்துதான் பாரி தனது ஆயுதத்தை உருவாக்கத் தொடங்கினான். கொடிமூக்கனைப் பிடித்தபடி அலவனும் கீதானியும் நின்றிருந்தனர். மற்ற இருவீரர்களும் உடைமர முட்களை ஒடித்துமுடித்து அடுத்து என்ன செய்யப்போகிறான் பாரி என்று எதிர்பார்த்து நின்றிருந்தனர்.




“கொடிமூக்கனின் வாயைத்திற” என்றான் பாரி.

அலவன் அதன் கழுத்துப்பகுதியில் இருக்கும் தாடையை அழுத்தப்போகும்பொழுது பாரி சொன்னான், “அது சிலநேரம் நஞ்சை பீச்சியடிக்கக் கூடியது, அப்பக்கம் திருப்பிக் கொள்.”

அலவன் இடப்புறம் திருப்பியபடி அடிக்கழுத்தை அமுக்கிப் பெருவிரலை சற்று மேலேற்றினான். மேலுங்கீழுமாகத் தாடை அகன்றதும் கண்ணிமைக்கும் நேரத்தில் நஞ்சைப் பீய்ச்சியடித்தது. நஞ்சின் சீற்றம் கண்டு அதிர்ந்தனர்.

பெரிதுமில்லாமல், சிறியதுமில்லாமல் நடுத்தரமான நீளத்தோடு இருந்த முட்களைக் கை நிறைய அள்ளி கொடிமூக்கனின் வாய்க்குள் போட கையை அருகில் கொண்டுவந்தான் பாரி. அவனது உள்ளங்கையிலிருந்த ரேகை இடுக்கின் வழியே முட்கள் வரிசையாக இறங்கிக் கொடிமூக்கனின் நாக்கோடு இணைந்து படிந்தன. அகன்ற அதன் வாய்க்குள் சுமார் முப்பது முட்கள் அடங்கின. முட்கள் எதுவும் மேல்நோக்கி இல்லாமல் சமநிலையில் கிடப்பதைப்போலத் தாடையைச் சற்றே அசைத்துச் சமப்படுத்தினான் அலவன்.

“இப்பொழுது வாயை மூடு” என்றான் பாரி.

கழுத்துப்பகுதியை அழுத்திக்கொண்டிருந்த அவனது விரல்கள் இப்பொழுது மேல்வாயையும் கீழ்வாயையும் சேர்த்து அமுக்கி வாயை மூடின. அலவனின் கையெலும்பை நொறுக்குவதைப்போல் கொடிமூக்கன் இறுக்கிச் சுருண்டுகொண்டிருந்தது. பாதி உடலைக் கீதானிப் பிடித்திருந்தான். ஆனாலும், முறுக்கித் திருகும் அதன் ஆற்றலைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

“எருக்குநாரைக்கொண்டு வாயைக்கட்டு” என்றான் பாரி.


வீரர்கள் இங்குமங்குமாக அலைந்து நாரெடுத்து வந்தனர். கொடிமூக்கனின் வாயை நார்கொண்டு இறுகச் சுற்றினர்.



“குறைந்தது மூன்று சுற்றாவது சுற்று. முடிச்சு, எக்காரணம்கொண்டும் கீழ்த்தாடையில் இருக்கக் கூடாது. மேல்தாடையின் மேலே இருக்க வேண்டும்” என்றான் பாரி. அவனது ஒவ்வொரு சொல்லுக்குள்ளும் இருக்கும் பொருள் அவர்களை வியப்பில் ஆழ்த்தியது.

அதன் வால் சுழற்றிச் சுழற்றி அடித்துக்கொண்டிருந்தது. உடலின் கீழ்ப்பகுதி வரை அழுத்திப்பிடித்திருந்த கீதானி வால்பகுதியையும் சேர்த்து அமுக்கிப்பிடிக்க முயலும்பொழுது பாரி சொன்னான், “வாலினைச் சுழற்றி அடிக்கட்டும். உன்மேல் படாமல் மட்டும் பார்த்துக்கொள்” என்றான். “சரி” யென்று சொல்லி அதற்குத் தகுந்தாற்போல் அலவனும் கீதானியும் கொடிமூக்கனைப் பிடித்துக்கொண்டனர். கொடிமூக்கன் தாடையைத் திறக்க முயலும்போதெல்லாம் அதன் நஞ்சுப்பை விரிந்து, வாய் நிறைய நஞ்சை உமிழ்ந்துகொண்டே இருந்தது. வாய்க்குள் இருக்கும் முட்கள் நஞ்சில் ஊறிக்கொண்டே இருந்தன.

எப்பொழுதெல்லாம் வாலைச் சுழற்றுகிறதோ அப்பொழுதெல்லாம் நஞ்சுப்பை திறந்தது. அதனால்தான் வாலைச் சுழற்றி அடிக்கட்டும் என்றான் பாரி.



வாயைக்கட்டியவுடன் மலையேறத் தொடங்கினர். விரைந்து ஓட வேண்டிய தேவையில்லை. ஆனாலும், உள்ளத்தின் வெறி வேகத்தைக் கூட்டியபடியே இருந்தது. காரமலையின் நான்கில் ஒரு பங்கைக் கடந்தனர். முதலில் கையெலும்பு நொறுங்குவதைப்போல முறுக்கிய கொடிமூக்கன் சற்றே அமைதியடையத் தொடங்கியது. அதனைக் கவனித்த பாரி, “வீரனிடம் பாம்பினைக் கொடு” என்றான். “சரி”யென்று சொல்லி அலவன் அதனை வீரனின் கைக்கு மாறினான்.


வாங்கிய கணத்தில் மீண்டும் வெகு ஆற்றலோடு உடல்முறுக்கி சீறித் தலைநெளித்து எழப்பார்த்தது. வீரன் சற்றே பதற்றமடைந்தான். அவனது கை முழுவதும் சுற்றித் திருகியது. வால் பகுதியின் துடிப்பு மிக அதிகமானது. புதிய உடற்சூட்டுக்கு மாறும்பொழுது அது மீண்டும் எழுச்சிகொண்டு தாக்கத் தலைப்படும். வால்சுழற்றி விடாது அடிக்க, நஞ்சுப்பை இடைவிடாது நஞ்சை உமிழும். அதனால்தான், குறிப்பிட்ட இடைவெளி வந்ததும் பாரி அலவனிடமிருந்து இன்னொருவனுக்குக் கொடிமூக்கனை மாற்றினான்.

இப்பொழுது இன்னும் வேகத்தோடு அவர்கள் காரமலையின் மீது ஏறிக்கொண்டிருந்தனர். ‘நேற்று இரவு முழுவதும் பெருமழை கொட்டித்தீர்த்தது. எனவே, எதிரிகளால் குத்துக்கல் பள்ளத்தாக்கில் ஓரடிகூட எடுத்துவைத்திருக்க முடியாது. சரியான இடம் பார்த்து பதுங்கினால் மட்டுமே அவர்கள் உயிர்தப்பிக்க முடியும். இல்லையென்றால், நீரின் வேகம் அவர்களை இழுத்துவந்து பெரும்பாறையில் அடித்துச் சிதறவைக்கும். அவர்கள் மழை நின்ற அதிகாலையில்தான் இறங்கத் தொடங்குவார்கள்.

பகல் முழுவதும் இறங்கினால்தான் பொழுதடையும் நேரம் சமதளத்தை அடைய முடியும். அதன்பின் முழுவேகத்தோடு ஓடுவார்கள். பகலும் இரவுமாக ஓடினாலும் காரமலையின் உச்சியை வந்தடைய மறுநாள் பொழுதுவிடியும்’ என்று கணித்தபடியே பாரி நடந்துகொண்டிருந்தான்.
அவனது கண்ணில் இச்சி மரமொன்றுபட்டது. “அதனது செதில்களில் வழிந்திருக்கும் பிசினை எடுத்துக்கொள்” என்று கீதானியைப் பார்த்துச் சொன்னான். கீதானியும் அவ்வாறே பிசினைப் பிய்த்தெடுத்துக்கொண்டான். ஓட்டம் படுவேகமாக இருந்தது. நடுப்பொழுது கடந்ததும் கொடிமூக்கனை இன்னொருவீரனின் கைக்கு மாற்றச்சொன்னான் பாரி. புதியசூடு கண்டு மீண்டும் சீறி வால் முறித்து, நஞ்சைக் கக்கியது. முட்கள் நஞ்சினைக் குடித்து ஊறின.

பாரி மிக நிதானமாக ஆனால், தெளிவான தயாரிப்புகளோடு போய்க்கொண்டிருந்தான். கடக்கும் வழியில் மலைப்பருத்தியைப் பார்த்தான். “அதன் இலையைப் பறித்துக்கொள்” என்றான். கீதானி பறித்துக்கொண்டான். இடுக்குப்பாறையின் வழியே வேர்களைப் பிடித்து மேலேற வேண்டிய சூழல் வந்தது. ஒருகையில் பாம்பைப் பிடித்துக்கொண்டிருக்கும் வீரனால், வேர்களைப் பிடித்து மேலேற முடியாது. என்ன செய்யலாம் என்று சிந்தித்தனர்.

‘பெரும்பாறையைக் கடக்க இவ்வழியன்றி வேறுவழியைப் பயன்படுத்தினால் அதிகத் தொலைவு நடக்க வேண்டியிருக்கும். இப்பொழுது கூடுதல் நேரத்தை எடுத்துக்கொள்வது நல்லதல்ல. குத்துக்கல் பள்ளத்தாக்கைவிட்டுச் சமதளத்தை அடைந்துவிட்டால் எதிரிகள் என்ன வேகம் எடுப்பார்கள் என்பதை முடிவுசெய்வது கடினம். நாம் மிகவிரைவாக முன்நோக்கிச் செல்ல வேண்டும்’ என்று சிந்தித்த பாரி கொடிமூக்கனை அலவனிடம் கொடுக்கச் சொன்னான். உடற்சூடு மாறியவுடன் அது மீண்டும் வால்முறுக்கி நஞ்சை உமிழ்ந்தது. வேர்களால் அலவனை முறுக்கிக்கட்டி மேலே தூக்குவது எனப் பாரி முடிவெடுத்தான்.



சரசரவென மேலேறியவர்கள் அவ்வாறே அலவனைக் கட்டித்தூக்கினர். வேர்கள் உடலையும் பாம்பு கையையும் சுற்றி இருக்க அலவன் காற்றில் சுழன்றபடி மேலேறிக்கொண்டிருந்தான். பாறையை மேலேறிக்கடந்ததும் மீண்டும் ஓட்டம் தொடங்கியது. ஓட்டம் ஒருவனின் காலில் இருந்து இன்னொருவனின் காலுக்கு விரைந்து பரவக்கூடியது. முன்செல்பவனின் கால்கள் தன்னியல்பிலேயே பின்வரும் கால்களை இயக்கத் தொடங்கிவிடுகிறது.

அவர்கள் விரைவுகொண்டு ஓடினர். சற்றுத் தொலைவு கடந்ததும் உக்காமூங்கில் மரம் பெரும்புதரெனக் கிடந்தது. “அதன் இலைகளையும் பறித்துக்கொள்” என்றான் பாரி. நீண்ட ஈட்டிபோல இருக்கும் அதன் இலைகளையும் வீரர்கள் பறித்துக்கொண்டனர்.


நடையின் வேகம் குறையாமல் இருந்தது. முந்தைய நாள் இரவில் பெய்த பெருமழையால் காடு குளிர்ந்து எங்கும் மணம் வீசிக்கொண்டிருந்தது. அனைத்தையும் கவனித்தபடி நடந்த பாரி எதனின்பாலும் எண்ணங்களைச் செலுத்தாமல் போய்க்கொண்டிருந்தான். அவன் மனமெங்கும் எதிரிகளே நிறைந்திருந்தனர்.

மாலைப்பொழுதுக்குள் காரமலையின் உச்சியை அடைந்தனர். ‘தேக்கனும் இந்நேரம் கூவல்குடியினரை அழைத்து வந்திருப்பான். அவர்களும் மலைவிளிம்புகளில் அணிவகுத்திருப்பர்’

என்று எண்ணியபடிப் பார்வையின் கோணம் மறையாத இடத்தைத் தேர்வு செய்தான்.

அனைவரையும் நன்றாக ஓய்வெடுக்கச் சொன்னான். இரவு முழுக்கக் கொடிமூக்கனைக் குறிப்பிட்ட நேர இடைவெளியில் கைமாற்றிக்கொண்டே இருந்தான். நஞ்சுப்பை விடாது கக்கிக்கொண்டே இருந்தது. ஒரு பகல் முழுவதும் நஞ்சூரிய முட்கள் உடலில் தைத்தால், அதன் நஞ்சைத் தாங்கும் சக்தி எந்த உயிருக்கும் கிடையாது. ஆனால், இப்பொழுதோ பகலும் இரவுமாக இருமடங்கு நேரம் முட்கள் நஞ்சேறிக்கிடக்கின்றன. இதன் வீரியம் அளவற்றதாக இருக்கும். கொம்பேறி மூக்கனை ஒப்பிட்டால் கொடிமூக்கனின் நஞ்சு வீரியம் குறைந்ததுதான். ஆனால், நஞ்சேறும் பதத்துக்கு இருமடங்கு நேரம் கிடைத்ததால், இதுவும் அளவற்ற வீரியத்தோடுதான் இருக்கும்.

காரமலையின் உச்சியின் மீது இரவு முழுவதும் கவனம்கொண்டிருந்தனர். பொழுது விடியத் தொடங்கியது. கதிரவனின் ஒளிக்கீற்று மேலேறின. வீரர்கள் வைத்திருந்த அம்பின் முனையைக் கத்தியால் சிறிதாகப் பிளக்கச் சொன்னான் பாரி. அவர்களும் அவ்வாறே பிளந்தனர்.
குகையை ஒட்டி உப்பறுகஞ்செடி இருந்தது. “அதன் இலையையும் கணுவையும் உடைத்தால் பால் வரும். அந்தப் பாலை விரல்கள் முழுவதும் தேய்த்துக் கொள்” என்று கீதானியைப் பார்த்துச் சொன்னான். கீதானியும் அதன் கணுவையும் இலையையும் உடைத்தான். பாலூறி வந்தது. ஊற ஊறத் தனது வலதுகையின் ஐந்து விரல்களிலும் படும்படி அதனைத் தேய்த்துக்கொண்டான்.



“கொடிமூக்கனின் வாய்க்கட்டைக் கழற்று” என்றான்.

அலவன் பாம்பைப் பிடித்திருக்க வீரனொருவன் எருக்குநாரின் முடிச்சை அவிழ்த்து கட்டைக் கழற்றினான். கழற்றிய வேகத்தில் அது வாய்திறந்து சீறாமல் இருக்க அலவனின் விரல்கள் அதன் தாடையை அழுத்திப் பிடித்திருந்தன. மலைப்பருத்தி இலையைப் புரட்டிவைத்து, கொடிமூக்கனின் வாயை அதில் கவிழ்க்கச்சொன்னான். அலவனும் அவ்வாறே செய்தான். நஞ்சேறிய முட்கள் அவ்விலையில் கொட்டப்பட்டன. முட்களோடு சேர்ந்து கொடிமூக்கனின் நஞ்சு எச்சிலாய் வடிந்துகொண்டிருந்தது. வடியும் நஞ்சுநூல் அறுபட நேரமானது. பொறுமையோடு அனைவரும் அதைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

முற்றிலும் வடிந்தவுடன், “அதனை வெளியில் போய்விட்டுவிடு” என்றான் பாரி. அலவன் குகைக்கு

வெளியே போய்ப் புதர் ஒன்றின்மீது கைநீட்டி, அது வெளியேற வாகாகப் பிடியைத் தளர்த்தினான். அம்பு பாய்வதைப்போல அவன் கையிலிருந்து பாய்ந்து மறைந்தான் கொடிமூக்கன்.
மலைப்பருத்தியின் மீது கொட்டிக்கிடப்பவை உடைமர முட்கள் அல்ல, நஞ்சு நிரம்பிய பாம்பின் பற்கள். அவற்றைப் பார்த்த வீரன் ஒருவன், `ஒரே ஒரு பாம்பிலிருந்து இத்தனை பாம்புகளை உருவாக்கிவிட்டானே பாரி' என வியந்து நின்றான்.

பாரி சொன்னான், "தாக்குதல் தொடுக்கும்போது ஒவ்வொரு முள்ளாய் எடுத்து அம்பின் முனையில் இருக்கும் சிறுபிளவுக்குள் பொருத்தித் தர வேண்டியது அலவனும் கீதானியும் செய்ய வேண்டிய வேலை. முட்களை மிகக்கவனமாக எடுக்க வேண்டும். எடுக்கும்பொழுது சின்னதாய்த் குத்தினாலும் எடுப்பவனின் மேலே நஞ்சு ஏறிவிடும்" என்றான். அதனால்தான் உப்பறுகஞ்செடியின் பாலை விரல் முழுவதும் தேய்த்துக்கொள்ளச் சொன்னான் பாரி. பால்தேய்த்துக் காய்ந்த விரல்களின் மேல் உக்காமூங்கிலின் இலையைக் கசக்கித்தேய்த்தபடி இச்சிப் பிசினை பூசிக்கொள்ளச் சொன்னான். பிசினைப் பூசிக்கொண்ட சிறிதுநேரத்திலே அது காய்ந்து இறுகி விரல்கவசம்போல் ஆனது. இனி முட்கள் விரல்களில் தைக்க முடியாது. கீதானியால் நஞ்சேறிய முட்களை எடுத்துத் தர முடியும். அவனுக்கு நஞ்சால் தீங்கும் நேராது. இந்த விரல்கவசம் எதுவும் அலவனுக்குத் தேவையில்லை. அவன் பாம்பின் வாயில் இருந்தே அதனை எடுத்துத்தரும் வல்லமை கொண்டவன்.

பாரியின் செய்முறைகள் சிறிது சிறிதாகப் புரியத் தொடங்கும்பொழுது உருவான நம்பிக்கை அளவற்றதாக இருந்தது. வீரர்கள் தாக்குதலுக்கு ஆயத்தமாயினர். பெருவில் ஒன்றைப் பாரிக்குத் தந்தனர். மற்ற இருவில்களை ஏந்தி நின்றனர் வீரர்கள் இருவரும்.

பாறையின் மேல் நின்று காரமலையின் நாலாபுறமும் கண்களைச் சுழலவிட்டுக் கொண்டிருந்தான் பாரி. அவன் கணித்த நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. 'நேற்று இரவு சிறிதுநேரம் கனமழை பெய்ததால் எதிரிகளின் ஓட்டம் சற்றே தடைபட்டிருக்க வாய்ப்பிருக்கிறது. அதுதான் இந்தத் தாமதத்துக்குக் காரணம்' என்று மனதுக்குள் கணக்குப்போட்டுக் கொண்டிருந்தான்.

பாரியைச் சுற்றி நான்குபேரும் பாய்ந்துசெல்லத் தயார் நிலையில் இருந்தனர்.
கைவிட்டுப்பிரியும்பொழுது கொடிமூக்கனிடம் இருந்த சீற்றம், இப்பொழுது நான்குபேரின் உடலிலும் இருந்தது. நஞ்சேறிய முள்ளும், பகையேறிய கண்ணும், முறுக்கேறிய நரம்புமாக அவர்கள் கொதிப்பேறி நின்றிருந்தனர். காரமலையின் கீழ்த்திசைக் காட்டைக் கிழித்துச்செல்லக் கால்கள் காத்திருந்தன.



பொழுதுவிடிந்து நீண்ட நேரமாயிருந்தது. காடெங்கும் இருந்து பறவைகள் கலைந்து பறந்தன. கண்கள் இங்குமங்குமாக அலைமோதிக்கொண்டிருந்தன. சற்றும் எதிர்பாராத திசையிலிருந்து நரி ஊளையிடும் ஓசை எதிரொலித்தது. இது கூவல் குடியினரின் ஓசை. எதிரிகள் நரிப்பாறையின் வழியே காரமலை விளிம்பைக் கடந்துள்ளனர். கணநேரத்தில் பாரி எல்லாவற்றையும் கணித்தான்.

தானிருக்கும் இடத்திலிருந்து அவர்கள் இறங்குமிடத்திற்குச் செல்ல ஆகும் நேரத்தையும்

வழித்தடத்தையும் அவனது மனம் திட்டமிட்டது. கணிப்புகளை விஞ்சும் வேகத்தில் கால்கள் பாய்ந்துகொண்டிருந்தன. நெடுந்தொடர்கொண்ட காரமலை, குன்றுகளும் பிளவுகளும் நிறைந்தது. பாரி இருக்குமிடத்திலிருந்து இரு பெரும்பிளவுகள் தாண்டி அங்கு செல்ல வேண்டும். ‘கூவல்குடியைச் சேர்ந்த பிறரும் அவர்கள் இறங்கும் திசைநோக்கி இந்நேரம் பாய்ந்து சென்றுகொண்டிருப்பர். எதிரிகளின் ஓட்டம் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஓசையாகக் காடெங்கும் எதிரொலிக்கும்’ எனப் பாரியின் மனம் எண்ணிக்கொண்டிருந்தது.

மலைச்சரிவில் ஓடும் வழித்தடத்தைக் கண்கள் பார்த்திருக்க, கூவல்குடியினர் எழுப்பும் ஓசையைக் காது கூர்மையாய் கவனிக்க, கால்கள் இணையற்ற வேகத்தில் பாய்ந்து கொண்டிருந்தன.


மலைச்சரிவில் கால்களில் மிதிபட்டுக் கற்கள் உருண்டு தெறித்தன. கதிரவன் மேலேறுவதைப் பார்த்தபடி காலம்பன் ஓடிக்கொண்டிருந்தான். ‘பறம்பு வீரர்கள் எப்படியும் மறிக்க முயல்வார்கள். வேட்டுவன் பாறையின் அருகே ஓர் ஊர் உள்ளது. அப்பக்கம் போகாமல் வேறு திசைநோக்கி இறங்க வேண்டும்’ என்று சிந்தித்தபடியே அவன் ஓடினான். வெற்றியின் எல்லையை நெருங்கும்போது களைப்பு தானே மறைந்து போய்விடும்; புது உத்வேகத்தை எண்ணத்தின் வழியே உடல் எடுத்துக்கொள்ளும்.

அவர்களுடைய ஓட்டத்தின் வேகம் இவ்வளவு கூடுவதற்கு அதுவே காரணம். காலம்பனின் கவனம் இறங்கும் திசையில், கீழே மறித்துத் தாக்க வாய்ப்புள்ள இடங்கள் பற்றியே இருந்தது. பின்னால் அவ்வப்பொழுது எழும் ஓசையை அவன் கவனம் கொள்ளவில்லை.

காரமலையில் நான்கில் ஒரு பகுதித் தொலைவைக் கடந்தபொழுதுதான் அவனது கவனம் சற்றே அதன்மீது சென்றது. இரண்டொரு முறை நரி ஊளையிடும் ஓசை கேட்டது. உச்சிமலையின் மீது நரிக்கென்ன வேலை என்று சிந்திக்க நேரமின்றி ஓடிக்கொண்டிருந்தான். பின்னர் காட்டுக்கோழியின் கூவல் ஓசை கேட்டது. கூவலின் அளவு பெரிதாக இருந்தது. ‘மிக அருகில் இருந்து கூவுகிறது. அதனால்தான் இவ்வளவு சத்தமாகக் கேட்கிறது’ என்று காலம்பனும் மற்றவர்களும் நினைத்துக்கொண்டனர்.

காலம்பனின் கவனம், இறங்கும் திசையில் எதிர்கொள்ளப்போகும் எதிரிகளின் மீதே இருந்தது. பின்னால் சங்கிலித்தொடர்போல் பின்னப்பட்டுவரும் ஓசைகளின் குறிப்புகளை அவன் அறியவில்லை. நேரம் செல்லச்செல்ல அவர்களின் கால்கள் வேகத்தைக் கூட்டின. ஆனால், அதே அளவு வேகத்தோடு காரமலையின் பல இடங்களில் இருந்து அவர்களை நோக்கிக் கால்கள் வந்துகொண்டிருந்தன.

எதிரிகளின் ஓட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாது. ஆனால், அவர்கள் இறங்கும் திசையறிந்து அதனை நோக்கிக் குறுக்கிட்டு வருவதால், கூவல்குடியினரும் பாரியும் மிகத்துல்லியமாக அவர்களை நெருங்கிக் கொண்டிருந்தனர்.



காரமலையின் சரிபாதியை அவர்கள் கடந்துவிட்டனர் என்பதைக் கூவல்குடியினர் வீசியெறியும் கூகையின் குழறல் சொன்னது. வேட்டுவன் பாறையின் மீது நின்றிருந்த வேட்டூர் பழையன் ஓசைவந்த இடத்தைக் கணித்ததும் அதிர்ச்சியடைந்தான். ‘அவர்கள் சரிபாதித் தொலைவைக் கடந்துவிட்டனர். இன்னும் ஏன் பாரியின் தாக்குதல் நிகழாமல் இருக்கிறது. பாரி எவ்விடத்திலிருந்து வந்துகொண்டிருக்கிறான்? இவ்வளவு நேரமாகியும் வந்துசேர முடியவில்லை யென்றால் அவன் மிகத்தொலைவில் இருந்து வந்துகொண்டிருக்க வேண்டும்.

காரமலையில் வைத்து அவர்களைத் தாக்குவது என்ற திட்டமே ஆபத்தானது. இப்பொழுதோ அவர்கள் பாதிமலையைக் கடந்துவிட்டனர். இனி அவர்களைத் தாக்குவது இன்னும் ஆபத்தானது’ பழையனின் மனம் குழம்பியது. தவறிழைத்துவிட்டோமோ என்று தோன்றியது. பாரி இந்த ஆலோசனையைச் சொன்னபோது உறுதியாக மறுத்திருக்க வேண்டும், அவ்வாறு செய்யாதது சரியன்று என்று தனக்குத்தானே மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தான்.

எதிரிகளைப் பின்தொடர்ந்து ஓடிவரும் நீலனுக்கு எதுவும் புரியவில்லை. ‘ஓடிக்கொண்டிருப்பவர்கள் யார்? கூவல்குடியினர் ஓசையை எழுப்பியபடியே இருக்கின்றனரே, அவர்கள் யாருக்காக

ஓசையெழுப்புகின்றனர்? ஓடுகிறவர்கள் எங்கெங்கோ வளைந்து செல்கின்றனர். கணிக்க முடியாத பாதையில் அவர்கள் செல்கின்றனர். ஓடுபவர்கள் எதிரிகளாக இருந்தால் மேலே இருந்து காரிக்கொம்பு ஊதினால் போதுமே, கீழே இருக்கும் வீரர்கள் ஆயத்தமாகிவிடுவார்களே. அவ்வாறு செய்யாமல் வேறுபட்ட ஒலியெழுப்பியபடி ஏன் கூவல்குடியினர் ஓடுகின்றனர்?'

காரமலையில் தன்னால் சிந்திக்க முடியாத செயல்கள் நடந்துகொண்டிருப்பதை நினைத்து மிகவும் குழம்பிப்போனான் நீலன். அக்குழப்பம் மனதுக்குள் ஆத்திரத்தைக் கூட்டவே செய்தது. ஆற்றல்பெருக்கி ஓடினான். எவ்வளவு விரைந்து ஓடினாலும், ஓசை கேட்கும் பகுதியை அவனால் நெருங்கவே முடியவில்லை. 'இவ்வளவு வேகமாகவா அவர்கள் ஓடுகின்றனர்?' நம்ப முடியாத குழப்பம் அவனைத் திண்டாடவைத்தது.

கீழ்த்திசைக் காவல் பொறுப்பாளனான தனக்குள் ஏற்படும் தடுமாற்றத்தை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கூவல்குடியினர் யாராவது கண்ணிற்பட்டால் நடப்பதென்ன என்பதை அறிந்துகொள்ளலாம். ஆனால், ஓசை கேட்கும் இடங்கள் நேர்கோட்டில் இல்லாமல் இங்குமங்குமாக இருக்கின்றன. எனவே யாரும் கண்ணிற்பட வாய்ப்பின்றி இருக்கிறது.

தேக்கன் தன்னால் முடிந்த அளவு வேகமாக ஓடிவந்துகொண்டிருந்தான். அவனது உடலில் அடிவிழாத இடமே இல்லை. கைக்கட்டை இன்னும் கழற்றவில்லை. ஆனாலும் விடாது துரத்திவருகிறான். கூவல்குடியினரிடம் தெளிவாகச் சொன்னான், "எக்காரணங் கொண்டும் எனக்காக நீங்கள் நிற்கக் கூடாது. எதிரிகளைப் பின்தொடர்ந்து நீங்கள் போய்க்கொண்டே இருக்க வேண்டும். நான் குரல் கேட்டு வந்துவிடுவேன்" என்று.




மிகவும் தள்ளித்தான் தேக்கன் வந்து கொண்டிருந்தான். அவனது கண்ணில் தனித்துச்செல்லும் மனித உருவம் ஒன்றுபட்டது. சற்றே நின்று பார்த்து நெருங்கினான். அது பெண் என்பதை உறுதிப்படுத்திய கணம் சத்தம் கொடுத்தான். தொலைவில் போய்க்கொண்டிருந்த மயிலா பதில் கொடுத்தாள்.

யாரெனத் தெரியாமல் நீலன் விரட்டிச் செல்வதை மயிலா சொன்னவுடன் தேக்கனின் கவலை இரட்டிப்பாகியது. நீலனை வைத்துதான் தாக்குதல் திட்டத்தை வேட்டூர் பழையன் தீட்டியிருந்தான். ஆனால், நீலனோ எதிரிகளின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறான் என்பதை அறிந்தபோது தேக்கனைச் சோர்வு தாக்கியது. நீலன் இல்லாமல் வேட்டூர் பழையன் என்ன செய்துகொண்டிருப்பான் எனச் சிந்தித்தபடி நடந்தான். நடையின் வேகம் குறையக் கூடாது என மனதில் நினைத்துக்கொண்டே நடந்தான். ஆனால், தேக்கனைவிட பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானது மயிலாதான். உடலெல்லாம்

இரத்தவிளாராக இருக்க, கையில் கட்டுபோடப்பட்ட நிலையில் தேக்கனைப் பார்த்ததும் அவள் அதிர்ந்து போனாள். 'பறம்பின் ஆசானை இவ்வளவு கொடுமையாகத் தாக்கிவிட்டு ஓடும் வலிமைகொண்டவர்கள் யார்? அவர்களை நீலன் இன்னும் ஏன் கொல்லாமல் இருக்கிறான்?' என்று அதிர்ந்து நின்றுவிட்டாள்.

நடுவில் பாறைகளில் விழுந்து சிற்றாறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அதனைக் கடக்க கவனமாக இறங்க வேண்டியிருந்தது. காலம்பன் முதலிலே இறங்கினான். அனைவரும் ஒருவர் பின் ஒருவராக இறங்கினர். சிலர் நீர்பருகினர். ஆனாலும் ஓட்டத்தின் வேகம் குறைந்துவிடக் கூடாது என்பதற்காக அளவோடு பருகினர். சிலர் அதனையும் தவிர்த்தனர். தேவாங்கு விலங்கு திடீர் திடீரென ஓசை எழுப்புவதும், அடங்குவதுமாக இருந்தது.

ஓடையின் மறுகரைப்பாறையின் மீது காலம்பன் ஏறினான். அவனைத் தொடர்ந்து ஒவ்வொருவராய் ஏறினர். மீண்டும் கால்கள் வேகமெடுக்கத் தொடங்கியபொழுது ஓடையின் அக்கரையில் இருந்து செந்நாய் ஊளையிடுவதைப் போன்ற ஓசை கேட்டது. முன்னெடுத்து ஓடிக்கொண்டிருந்த காலம்பனுக்கு சற்றே ஐயம் வரத்தொடங்கியது. ஓட்டத்தை நிறுத்தி மீண்டும் ஓடைக்கரை விளிம்புக்கு மரங்களினூடே மறைந்தபடி வந்தான்.

**பா**ரியின் வேகம் இதனைப்போல் இருமடங்கு. ஆனால், அலவனையும், கீதானியையும் அழைத்துவர வேண்டும் என்பதற்காகப் போதுமான வேகத்திலே வந்துகொண்டிருந்தான். கூவல்குடியினரின் ஓசையைக் கணக்கிட்டு சிற்றோடையை நோக்கி இறங்கிக் கொண்டிருந்தான். இடையில் ஒரு சிறுகுன்று இருந்தது. அதனைக் கடந்த கணத்தில் எதிரிகளை வீழ்த்தலாம் என்ற முடிவோடு வந்து கொண்டிருந்தான் பாரி.

மீண்டும் செந்நாய் ஊளையிடும் ஓசை கேட்டது. அவர்கள் ஓடையைக் கடந்துவிட்டனர் என்பதனை அந்தக் குறிப்புச் சொன்னது. தனது வேகத்தை இன்னும் கூட்ட வேண்டும் என்று அவன் முடிவெடுக்கும்போது ஊளையின் ஓசை பாதியில் அறுபட்டு நின்றது.
ஓடிக்கொண்டிருந்த பாரியின் கால்கள் அப்படியே நின்றன. மற்றவர்களும் நின்றனர். மேல்மூச்சும் கீழ்மூச்சுமாகத் தவித்தபடி எல்லோரும் பாரியின் முகத்தைப் பார்த்தனர். சற்று அமைதிக்குப் பின் பாரி சொன்னான், “எதிரிகள் கூவுகிறவனின் தொண்டைக்குழியில் ஈட்டியை இறக்கிவிட்டனர்”.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-46

விலங்கின் பாய்ச்சலைப் பின்னுக்குத் தள்ளும் ஆற்றல்கொண்டது வேள்பாரியின் பாய்ச்சல். ஆனால், இன்று அதையும் விஞ்சும் வேகத்தை, காடு பார்த்துக்கொண்டிருந்தது. பாரி வேட்டை தொடங்கியது. நாணேற்ற துடித்துக்கொண்டிருந்த விரல்களைக் கட்டுப்படுத்தப் போராடினான் பாரி. கட்டுப்பாடுகளை எல்லா நேரங்களிலும் மனம் சிறப்பாகக் கையாள்வதில்லை. ரத்தக்கறை படிந்த கணத்தில் அதன் முடிவு எப்படி இருக்கும் என்பது ஊகத்துக்கு அப்பாற்பட்டது.

அவன் நினைத்ததைவிட விரைவாக இந்த இடத்துக்கு வந்து சேர்ந்துவிட்டான். சிறு குன்றின் மறுபக்கத்தில் எதிரிகளின் வருகைக்காகக் காத்திருந்தான். வீரர்கள் இருவரும் ஆயத்தநிலையில் நின்றனர். அலவனும் கீதானியும் அம்பின் முனையில் நஞ்சு முள்ளைச் செருகிக் கொடுத்துவிட்டு மறு அம்பினைக் கொடுக்கக் காத்திருந்தனர். காஞ்சிரை மரத்தின் பின்னணியில் அவர்களின் உருவம் கண்ணில்படும் பொழுதுக்காகக் காத்திருந்தனர் அனைவரும்.

ஓசை எழுப்பியவனின் தொண்டைக்குழியில் ஈட்டியைச் செருகியவுடன் அவன் ஓடைக்குள் சரிந்துவிழுந்தான். அவன் விழுந்து மடிந்ததைப் பார்த்தபிறகுதான் காலம்பன் அந்த இடம்விட்டுப் புறப்பட்டான்.




ஓட்டத்தை நிறுத்தி ஓசை கேட்டுத் திரும்பியதும், அவனைத் தேடித் தாக்கவும் அவன் இறந்துவிட்டானா என்பதை உறுதிப் படுத்தவும் காலம்பன் செலவழித்த நேரம்தான் பாரி முன்வந்து சேரக் கூடுதல் வாய்ப்பை உருவாக்கியது. முன்னோக்கிச் சென்று மிகப் பொருத்தமான இடத்தைத் தேர்வுசெய்து காத்திருந்தான் பாரி.

ஓசை கொடுப்பவனைக் கொன்றபிறகுதான் காலம்பனின் மனதில் குழப்பங்கள் தோன்றத் தொடங்கின. ‘காரமலையின் மேல் விளிம்பிலிருந்து அவ்வப்போது ஓசை கேட்டது. காலை நேரத்து உயிரினங்களின் ஓசை என்றே கவனம்கொள்ளாமல் விட்டுவிட்டோம். அவை அனைத்தும் மனிதர்கள் எழுப்பிய ஓசையென்றால், அவர்கள் யாருக்காக எழுப்பி னார்கள்? இந்த ஓசை கேட்டு வரப்போகிறவர்கள் யார்? அல்லது ஆயத்தநிலையில் நிற்கப் போகிறவர்கள் யார்? நம்மீது தாக்குதல் தொடுக்க எந்த இடத்தை அவர்கள் தேர்வுசெய்துள்ளனர்?’ என்று அவன் சிந்தித்துக்கொண்டிருந்தபோது, பாரி தேர்வுசெய்த இடத்தில் மிகச்சரியாக வந்துகொண்டிருந்தான் காலம்பன்.


வில்லில் இழுபடும் நாண், விடுபடும் கணத்துக்காகக் காத்திருந்தது. வீரர்கள் இருவரும் பாரியின் தொடக்கத்தை எதிர்பார்த்திருந்தனர். வலதுகையின் பிடரி நரம்பு முறுக்கேறியபோது, விரல்களின் வலு இன்னும் கூடியது. ஆனாலும், முதன்மையாக ஓடிக்கொண்டிருக்கும் காலம்பனை நோக்கிப் பாரி அம்பினை எய்தவில்லை.

அடுத்தடுத்து மூன்று முறை அம்பை எய்துவதற்கு ஏற்றாற்போல் எதிரிகளின் கூட்டம் தடுப்பேதும் இல்லாமல் முழுமையாக முன்னால் வரும்வரை காத்திருந்தான் பாரி. தனது தாக்குதல் இலக்குக்குள் எதிரி வந்தபிறகும் தாக்காமல் காத்திருக்கப் பயிற்சி கைக்கொடுப்பதில்லை. அங்கு கைக்கொடுப்பதெல்லாம் முழுமையையும் அழிக்க வேண்டும் என்ற வெறி மட்டும்தான். அடங்காத வெறிகொண்டு நிதானத்தைக் கைக்கொள்வது மட்டுமே மனம் பக்குவப்பட்டதன் உச்ச அடையாளம். அம்பின் முனை கண்ணிமைப் பொழுதுகூட முன்பாய்ந்தோ, பின்தங்கியோ சென்றுவிடக் கூடாது என்பதில் மிகக் கவனம்கொண்டிருந்தான் பாரி.

குன்றின் மேடான பகுதியிலிருந்து சிறு ஓசை கேட்டுக் காலம்பன் திரும்பிய கணத்தில் அம்புகள் காற்றைக் கிழித்துக்கொண்டு வந்தன. தற்காத்துக்கொள்ள மரங்களோ பெரும்பாறையோ அற்று வெறும் கொடிகள் மட்டுமே படர்ந்து கிடக்கும் இடத்தில் பாய்ந்துவந்த அம்பில் ஒன்றுகூட இலக்குத் தப்பவில்லை. இரண்டாவது அம்பைத் தொடுக்க எடுத்துக்கொண்ட நேரம் மட்டுமே எதிரிகளுக்குக் கிடைத்த சிறு வாய்ப்பாக அமைந்தது.

எதிர்பாராத தாக்குதலை எதிர்கொள்ள, சில கணங்கள் தேவைப்பட்டன. கூட்டத்தின் தலைவன் யார் என்பது தெரியாவிட்டாலும் முன்னால் வருகிறவர்கள் சட்டென மறைந்து கொள்ள மரமோ, பாறைகளோ இல்லை. ஆனால், பின்னால் வருகிறவர்களுக்கு அந்த வாய்ப்பு இருக்கிறது என முடிவுசெய்த பாரி, தாக்குதலின் முதல் இலக்காகக் கடைசியாக வந்துகொண்டிருப்பவர்களைக் குறிவைத்தான்.

**த**ன்னுடைய தோள்பட்டையில் வந்து செருகிய அம்பை உருவி எடுத்தான் ஒருவன். சிறு விரல்நுனி அளவே அது உள்ளே போயிருந்தது. அம்பைத் தொலைவில் வீசியபடிச் சொன்னான், “இது தைத்து நாம் வீழ்வோம் என நினைத்துப் போரிடுபவர்களை என்ன சொல்வது?”



“அவர்கள் நம்மைக் கண்டுணர்ந்து நெருங்கிவிட்டார்கள். நாம் இந்த இடத்தைவிட்டு விரைவாக அகல்வோம்” என்று கத்தியபடி காலம்பன் ஓட்டத்தின் வேகத்தைக் கூட்டினான். மரமோ, பெரும்பாறையோ அற்ற இந்தப் பகுதி அம்பு எய்தித் தாக்குவதற்கு ஏற்றது. இதை விரைவில் கடக்க வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்தபோது கால்களின் விசை இரட்டிப்பானது. ஓடிக்கொண்டே அடுத்து செய்யவேண்டியது என்ன என்று சிந்தித்தபோதுதான் ஏதோ ஒரு மாற்றத்தை உணர்ந்தான். என்னவென்று நிதானிப்பதற்குள் புரிந்துவிட்டது, தனக்குப் பின்னால் விரைந்து வரும் கால்களின் ஓசை அறுபட்டுவிட்டதென்று. என்ன ஆனது எனத் திரும்பி, புதர் விலக்கி அந்த இடம் வந்தபோது அம்பு தைத்த அறுவர், மண்ணில் சாய்ந்துகிடந்தனர்.

மற்றவர்கள் மறைப்புகளில் அண்டியபடி சாய்ந்து கிடந்த ஒருவனின் முதுகில் இருந்த கூடையை எடுக்க முயன்றனர். அம்பு எய்துகிறவர்கள் உயரமான, மிகப் பொருத்தமான இடத்திலிருந்து எய்துவதால் தப்பிப்பது கடினமாக இருந்தது. கூடையைக் கழற்ற முற்பட்டபோது இன்னொருவனின் கழுத்தில் செருகியது அம்பு. அவன் மயங்கிச் சரிய அதிக நேரம் ஆகவில்லை.


நிலைமையின் விபரீதத்தைக் காலம்பன் உணரத் தொடங்கினான். அவை வெறும் அம்புகள் அல்ல; நஞ்சு தடவிய அம்புகள்கூட. உடலைச் செயழிலக்கச்செய்ய நாள்கணக்கில் ஆகும். அதனினும் கொடும் ஆயுதம்கொண்டு தாக்குதல் நடக்கிறது. புரிந்துகொண்ட கணம் ``விழுந்து கிடப்பவனிடம் இருக்கும் கூடையை எடுக்க முயலாதீர்கள். விரைந்து இந்த இடம்விட்டு வெளியேறுங்கள்” என்று கத்தினான். அவனது குரலின் அதிர்வு அடங்குமுன் அனைவரும் பாய்ந்து வெளியேறினர். ஆனால், நீண்ட தொலைவுக்கு மறைப்புகள் ஏதுமின்றி இடுப்பளவு இருக்கும் செடிகொடிகளுக்குள்தான் ஓடவேண்டியிருந்தது. அம்புகள் கணக்கின்றி சீறிக்கொண்டிருந்தன. பாரி, முழு வேட்டையையும் முடிக்க முயன்று கொண்டிருந்தான்.

முன்னால் சென்றுகொண்டிருந்த காலம்பனின் பாய்ச்சல், மின்னல் வேகம்கொண்டது. கணிக்க முடியாத வேகத்தில் அவர்களின் கால்கள் பாய்ந்துகொண்டிருந்தன. தங்களின் போக்கைச் ‘சட்’டென மாற்றி இடப்புறச் சரிவில் இறங்கலாம் எனக் காலம்பன் முடிவுசெய்தான். அது தாக்குதல் தொடுப்பவர்களுக்குக் குழப்பத்தை உருவாக்கக் கூடியது. தங்களின் வேகத்தை இனி எவனாலும் பின்தொடர்ந்து நெருங்க முடியாது என அவன் எண்ணிய கணத்தில், அவன் ஓடும் திசையின் மேட்டுப் பகுதியிலிருந்து மீண்டும் ஒரு செந்நாய் ஊளையிட்டது.

விக்கித்து நின்றான் காலம்பன். ‘என்ன நடக்கிறது இங்கு? இன்னொருவன் ஓசை எழுப்பிக்கொண்டிருக்கிறான். ஓசை எழுப்புவதை எத்தனை பேர் செய்கிறார்கள்? மூன்று மலைகளிலும் நாம் ஆட்களை நிறுத்தியதைப்போல, மூன்றாம் மலையெங்கும் அவர்கள் நிறுத்தியுள்ளார்களா?’ என நினைத்துக்கொண்டே பாதையை மாற்றிப் புதர்க்காட்டுக்குள் நுழைந்தான்.

பெருமரங்களும் அடர்ந்த புதர்களும் இனி இல்லை. குறுமரங்களின் காடும் பனைமரக் கூட்டமே விளைந்து கிடக்கின்றன. கண்காணாமல் மறைந்து விரைவதற்கு இனி வாய்ப்பில்லை என்று காலம்பன் கணித்தபோது, அவன் போன புதிய திசையின் எதிர்புறத்திலிருந்து கோட்டானின் குரல் கேட்டது.

பனங்காட்டிலிருந்து இயல்பாகக் கேட்கும் ஓசைதான் அது. ஆனால், அது கோட்டானின் ஓசை என்று நம்பக் காலம்பன் ஆயத்தமாக இல்லை. எந்தத் திசையும் அவர்கள் சூழ்ந்துவிட்டார்கள் என்ற முடிவுக்குப் போனான். சற்றே வேகம் குறைத்தபோது உடன்வந்து நிற்பவர்களின் எண்ணிக்கை பேரதிர்ச்சியைக் கொடுத்தது. அம்புகளுக்குத் தப்பி வந்து சேர்ந்தது அறுவர் மட்டுமே. பேரழிவு, பத்து பனை தொலைவைத் தாண்டுமுன் நிகழ்ந்து முடிந்துவிட்டது. அப்படியென்றால், பறம்பின் வீரர்கள் எவ்வளவு துல்லியமான ஆயத்தத்தோடு இருந்துள்ளனர்.



மனம் ஒருகணம் கலங்கியது. மறுகணம் மீண்டது. இனிச் சமவெளியல்லாத பகுதியின் வழியே செல்வோம். இந்த அறுவர் போதும். அவர்களின் தோளிலே இருக்கும் இரு கூடை போதும். எண்ணிக்கொண்டே அதற்குத் தகுந்த திசை வழியைத் தேர்வுசெய்தான் காலம்பன். சற்றே பின்வாங்கிச் சிற்றோடையைக் கடந்து இடப்புறக் காட்டை ஊடறுத்துச் செல்ல முயன்றான்.

அவனது வருகைக்காகக் காத்திருந்தான் பாரி. குறிப்பொலிகள் சரியான அடையாளங்களைப் பாரிக்குக் காட்டிக்கொண்டிருந்தன. மிகவும் கவனமாகத்தான் சிற்றோடையில் காலம்பன் இறங்கினான். அதைவிடக் கவனமாகப் பாரி அவனை நோக்கிக் கொண்டிருந் தான். அடுத்தடுத்து அவர்கள் உள்ளே

இறங்கினர். காத்திருந்த பாரியின் விரல்கள் நாணை விடுவித்தபோது அம்புகள் சீறின.

ஓசை கேட்டதும் எதிரிகள் சிற்றோடையெங்கும் கிடக்கும் பாறைகளின் மறைவில் பதுங்கினர். ``இருவரின் மீது அம்பு தைத்தது உறுதி'' என்று வீரர்கள் சொன்னார்கள். ஆனால், எல்லோரும் பாறையின் மறைவில் பதுங்கியதால் தாக்கப் பட்டவர்கள் எத்தனை பேர் எனத் தெரியவில்லை. சற்றே விலகி அவர்களை எதிர் கொள்ளும் முகமாகக் கீழ்த்திசைக்குப் போக முடிவெடுத்தான் பாரி. புதர்க்காட்டைக் கிழித்துக்கொண்டு ஓடைக்கரையோரம் ஓடின கால்கள். சரிபாதிக்கு மேல் வீழ்த்திவிட்ட மகிழ்வில் வீரர்களின் வேகம் பல மடங்கு அதிகரித்தது. பாரியின் கணிப்பையும், நுட்பத்தையும், வீரத்தையும், ஆவேசத்தையும் அருகிருந்து பார்க்கும் இந்தக் கணம், மற்ற நால்வருக்கும் இணையற்றதாக இருந்தது.

சிற்றோடையின் கீழ்த்திசைக்கு வந்ததும் பொருத்தமான இடத்தில் நின்று பார்த்தான் பாரி. தாக்கப்பட்ட இடத்தில் சரிந்து கிடந்த இருவரைத் தவிர, வேறு யாரும் இல்லை. `அதற்குள் எங்கே போனார்கள்?' என அவன் தேடியபோது கூவல்குடியினரின் ஓசை, ஓடையின் மேல்புறத்திலிருந்து கேட்டது. காலம்பன் தனது முடிவை மாற்றினான். `தேவாங்கு விலங்கை எடுத்துச் செல்வதுதான் தனது நோக்கம். பறம்பின் மக்களைத் தாக்கி அழிப்பது தனது வேலையில்லை' என்று சொல்லிவந்த அவன், இப்போது வேறு சிந்தனைக்குப் போனான். தங்களை நோக்கித் தாக்குதல் தொடுப்பவர்களை அழிக்காமல் தங்களால் தேவாங்கு விலங்கைக் கொண்டு செல்ல முடியாது என்பது தெரிந்துவிட்டது. எனவே, எதிர்த்தாக்குதல் நடத்தும் உத்தியை வகுத்தான்.

கூடையைச் சுமந்திருக்கும் இருவரை மலையின் சரிவொன்றில் பதுங்கி இருக்கச் செய்தான். மீதம் உள்ள நால்வரும் தாக்குதலுக்கு ஆயத்தமாகினர். ஓடையின் மறுகரையில் உள்ள புதர்க்காட்டைக் கிழித்துத் தாக்குதல் தொடுப்பவர்களைத் தேடி அவர்கள் முன்னேறினர். பச்சைமலைத் தொடரில் ஏறத் தொடங்கிப் பத்து நாள்கள் ஆகிவிட்டன. ஆனால், இந்தப் பத்து நாள்களும் பதுங்கியே செயல்பட்டுக்கொண்டிருந்த அவர்கள், முதன்முறையாகத் தாக்குதல் தொடுக்கும் ஆவேசத்தோடு பீறிட்டு ஓடினர். காலம்பன், மரங்களை முறித்துக்கொண்டு முன்னகர்ந்தான். அவனது கண்ணில்படும் மனிதனை ஒற்றைக்கையால் ஒடித்தெறியும் வேகம்கொண்டான்.

சற்றும் எதிர்பாராமல் கூடையோடு மலைச்சரிவில் பதுங்கி இருப்பவர்களின் திசையிலிருந்து கூவலோசை கேட்டது. ஓடிக்கொண்டிருந்த காலம்பன் அதிர்ந்து நின்றான். சிற்றோடையில் இருக்கும்போது தங்களைத் தாக்கியவர்கள் இந்த மேட்டின்மீது நின்றுதான் அம்பு எய்தார்கள். அவர்களைத் தேடித்தான் அவன் போய்க்கொண்டிருந்தான். ஆனால், இப்போது தேவாங்கு விலங்குகளோடு இருப்பவர்களை நோக்கி ஆபத்து வரப்போகிறது எனத் தெரிந்ததும் மீண்டும் அவர்களை நோக்கித் திரும்பினான்.

கூவல்குடியினரின் ஓசை கேட்டதும் சிற்றோடையின் கீழ்ப்புறம் இருந்த பாரி அதை நோக்கி ஓடத் தொடங்கினான். காலம்பன், ஓடையின் வலப்புறப் புதர்களின் வழியேயும் பாரி, ஓடையின் இடப்புறப் புதர்களின் வழியேயும் ஓடிக்கொண்டிருக்கும் போது ஓசை வந்த திசையை நோக்கி மலைக்கு மேலே இருந்து இணை சொல்ல முடியாத வேகத்துடன் கீழிறங்கிக் கொண்டிருந்தான் நீலன்.





ஓடையைச் சுற்றியே மீண்டும் மீண்டும் கூவல்குடியின் குரல் கேட்கிறது, அங்கு என்னதான் நடக்கிறது என்பது புரியாது தத்தளித்தான் பழையன். மலையின் சரிபாதிக்கும் கீழ், தந்தரைக்கு மிக அருகில்தான் அந்த இடம் இருக்கிறது. `நாம் வீரர்களோடு அந்த இடம் போவோமா?' எனத் தோன்றியது. `ஒருவேளை வேறு வழியில் அவர்கள் கீழிறங்கித் தப்பிக்க முற்பட்டால் என்ன செய்வது?' என்று சிந்தித்து, மேலேறிப் போகும் திட்டத்தைக் கைவிட்டான். அவர்கள் இறங்க வாய்ப்புள்ள பகுதியைக் கணித்தபடி ஆயத்தநிலையில் இருந்தான் வேட்டூர் பழையன்.

இதுவரை இல்லாத சினம், காலம்பனின் மனதில் உருவேறியபடி இருந்தது. ‘இந்த விலங்கை எடுத்துச் செல்லத்தான் எவ்வளவு இழப்புகளைச் சந்தித்து எவ்வளவு பெரிய முயற்சியைச் செய்துள்ளோம். அது வெற்றிகரமாக முடியப்போகும் இறுதிக்கட்டத்தில் முற்றிலும் எதிர்பாராத தாக்குதலை எதிர்கொள்ளவேண்டியதாகிவிட்டது. ஆனாலும், எந்தக் காரணம்கொண்டும் இந்த முயற்சியில் நாங்கள் தோற்க மாட்டோம். அதையும் மீறி நாங்கள் தோற்க நேர்ந்தால், எங்கள் அத்தனை பேரின் உயிரும் இந்த மலையில் மடிந்தாலும் எம்மில் ஒருவன் அந்தக் கூடையைச் சுமந்து பறம்பின் எல்லையைத் தாண்டி வெளியேறிப் போவதைத் தடுக்கும் வலிமை எவனுக்கும் இல்லை.’

காலம்பனின் நாடிநரம்புகள் எல்லாம் கனன்றுகொண்டிருந்தன. எதிர்படும் பாறையைக் கையால் குத்தி நொறுக்கிவிடும் ஆவேசத்தோடு ஓடிக்கொண்டிருந்தான். சிற்றோடையின் இரு கரைகளிலும் பறவைகள் படபடத்து விலகியபோது இருவரும் உணர்ந்தனர் இணையாக ஓடிவரும் எதிரியை. தேவாங்கின் கூடை சுமந்து உட்கார்ந்திருப்பவர்களை நோக்கி பாரி விசைகொண்டு ஓடியபோது எதிரிகளின் ஈட்டி பாரியின் பின்னால் வந்துகொண்டிருந்த வீரன் ஒருவனைச் சாய்த்தது.

ஓடையின் நாணல்களுக்கு இடையிலும் அம்புகள் இறங்கிக்கொண்டுதான் இருந்தன. காட்டின் தன்மையும் காற்றின் வேகமும் அறிந்து அம்பு எய்துவதில் பறம்பின் வீரர்களுக்கு இணை சொல்ல முடியாது. ஆனால், இந்த இரண்டு குறிப்புகளையும் அறியாமலேயே எதிரிகள் எறியும் ஈட்டியின் வலிமை மரங்களைத் துளைத்துச் செல்லக்கூடியதாக இருந்தது.

கூடையோடு பதுங்கி இருந்தவனை நோக்கிப் பாரியின் அம்புகள் பாய்ந்தபோது, எதிர்த்திசையில் ஓடிவந்துகொண்டிருந்த எதிரிகளின் மீது நீலனின் ஈட்டி இறங்கியது. மேலிருந்து வந்த வேகத்தில் இணையற்ற விசையோடு எறியப்பட்ட ஈட்டி எதிரியின் மார்பில் தைத்து அம்பினைப்போல் நின்றபோது, அவர்கள் எறிந்த ஈட்டி பாரியோடு வந்துகொண்டிருந்த இன்னொரு வீரனின் மார்பைத் துளைத்து வெளியேறியது.

சூழலை யாராலும் கணிக்க முடியவில்லை. பின்னால் வந்தவர்கள் பதுங்கினார்களா, வீழ்ந்தார்களா, மறைந்தார்களா எனக் காலம்பனால் கணிக்க முடியாததைப்போல பாரியாலும் கணிக்க முடியவில்லை. அலவனும் கீதானியும் ஓட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் தொலைவில் ஓடிவந்துகொண்டிருந்தார்கள்.

கூடையோடு பதுங்கிய இருவரின் மீதும் அம்புகள் பாய்ந்ததைக் காலம்பன் உறுதிப்படுத்தியபோது, தனக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த இரு வீரர்களும் இல்லை என்பதைப் பாரி உணர்ந்துகொண்டான். காலம்பன் வெறியின் உச்சத்தில் இருந்தபோது அதனினும் மூர்க்கம்கொண்டிருந்தான் பாரி. அம்புகளற்று நின்றிருந்த பாரியை நோக்கி ஓடிவந்துகொண்டிருந்தனர் கீதானியும் அலவனும். மேலிருந்து ஈட்டியைப் பாய்ச்சிய வேகத்தில் நிலைதடுமாறி உருண்டு கொண்டிருந்தான் நீலன்.

உருளும் திசை பார்த்துப் பாரியும் காலம்பனும் கவனம் சிதறவில்லை. இருவரும் ஒருவரை ஒருவர் முதன்முறையாக நேர்கொண்டு பார்த்தனர். தன்னை நோக்கி ஓடிவந்துகொண்டிருக்கும் கீதானியின் பக்கம் திரும்பாமலே அவன் வரும் வேகத்தைக் கணித்து அம்பை வாங்கக் கையை நீட்டினான் பாரி. தனது முழு வேகத்தோடு வந்துகொண்டிருந்த கீதானி, அம்பை பாரியிடம் நீட்ட முனைந்தபோது அவனது முதுகைத் துளைத்து வெளியேறிக்கொண்டிருந்தது காலம்பன் எறிந்த ஈட்டி. ஒரு கணம் அதிர்ந்து நின்றான் பாரி. அம்பைத் தர முடியாத ஏக்கத் தோடு கீதானி மண்ணில் சரிந்து கொண்டிருந்தபோது, பின்னால் வந்து கொண்டிருந்த அலவன் தடுமாறிப் பள்ளத்தில் உருண்டுகொண்டிருந்தான்.


களத்தில் மிஞ்சி நின்றது காலம்பனும் பாரியும் மட்டுமே. விழுந்த இடத்திலிருந்து தலைநிமிர்ந்து நீலன்

பார்த்தபோது அங்கு நடப்பது எதுவும் புரியவில்லை. அவன் வீழ்ந்த பள்ளத்திலிருந்து மேலேறும் முன், பாறைகளும் மரங்களும் ஒன்றுடன் ஒன்று மோதி நொறுங்குவதைப்போல் உணர்ந்தான். ‘பாரி இங்கு எப்படி வந்தான்? யார் அந்த எதிரி? என்ன நடக்கிறது?’ எதுவும் புரிபடவில்லை. பள்ளத்திலிருந்து வேரினைப் பிடித்து மேலேறி வந்த நீலனின் கண்களில் இருவரும் தென்படவில்லை.

இங்கும் அங்குமாக அலைமோதி ஓடையோரத்துப் பாறையின் பின்புறம் நோக்கி ஓசை கேட்டுப் போனான். நேற்று மயிலாவோடு வந்தபோது மண் பிரண்டு பெரும்பள்ளமாகக் கிடக்கும் இந்த இடத்தில் காட்டெருமைகள் மோதிய கதையை நீலன் சொன்னான். இப்போது அந்த இடத்தில் காட்டெருமையினும் வலுகொண்டு இருவர் மோதிக்கொண்டிருந்தனர்.

காலம்பனின் தோள்கள் பாறையைச் சிதைக்கவல்லது. பாரியின் தோள்களோ பாறைகொண்டும் சிதைக்க முடியாதது. இரண்டும் ஒன்றுடன் ஒன்று நேர்கொண்டு மோதிச் சரிந்தன. காட்டெருமைகளின் ஆற்றல் கொம்புகளில் இல்லை; அவற்றிலும் வலிமையான முன்னெற்றியின் குமிழ்தான். அதே குமிழ்கள் பிடரியோடு சேர்ந்த முன் மார்பில் இறுகியிருந்தது. மோதும் வேகமும் ஓசையும் காடு அதிரச்செய்தன.

காலம்பன் தனது எதிரியின் உடலை இரு கூராக்க முற்பட்டபோது, எதிரியும் அதற்குத்தான் முயல்கிறான் என்பதை உணர்ந்தான். சற்றே உடல் விலக்கி பின்விசை கொடுத்து முட்டித் தூக்கினான் காலம்பன். பாரியின் கால்கள் எளிதில் மண்விட்டு அகலவில்லை. நிலத்தில் வேர் ஊன்றுவதைப்போல ஊன்றி நிற்கும் பாரியை அவ்வளவு எளிதில் காலம்பனால் அசைத்து எடுத்துவிட முடியவில்லை.



காலம்பனின் தோள்கள் மிகவும் விரிந்தவை. உறுதியிலும் உயரத்திலும் ஒப்பிட முடியாதவை. பாரியை அப்படிச் சொல்லிவிட முடியாது. ஆனால், தோற்றத்தின் அளவுகள் தீர்மானித்து விடுவதில்லை என்பதைப் பாரியைச் சரிக்க முடியாத கணத்தில் காலம்பனும் உணர்ந்தான்.

இருவர் சமநிலையில் மற்போர் புரியும்போது, இணைதலும் விலக்குதலும் மரபன்று. நீலன் திகைத்து நின்றான். முன்காலால் மண்ணைத் தொடர்ந்து வாரியெடுத்து பெரும்பள்ளத்தை உருவாக்கி வைத்திருந்தன காட்டெருமைகள். கொம்புகள் முட்டித்தூக்கி வீசியதால், சிதறிய மண்கட்டிகள் எங்கும் கிடந்தன. ஆனால், அதனினும் பெரும்பள்ளமும் மண் சிதறலும் நிகழ்ந்துகொண்டிருந்தன.

மூர்க்கம்கொண்டு மோதுவதற்கு உருவேறியிருக்கும் வெறியே அடிப்படையாகிறது. ‘இவ்வளவு பெரும் வீரர்களோடு காட்டைக் கிழித்து, உள்நுழைந்து, தேவாங்கைக் கைப்பற்றி, வெளியேறப்போகும் கடைசிப் பொழுதில் மறித்து அழிக்கும் இவனின் உயிர் எடுக்காமல் விடேன்’ என்று மண் பிளப்பதைப்போல் அடித்து நகர்த்தினான் காலம்பன்.

‘பறம்பின் குல அடையாளத்தைக் கைப்பற்றி, மூன்று மலை கடந்து, உயிர் பல சிதைத்து, காரமலையின் கரை தொட நினைக்கும் இவனின் எலும்புகொண்டு இந்த இடம் அகழ்ந்து கீதானியை அடக்கம் செய்ய குழியமைப்பேன்’ என்று மனதுக்குள் முழங்கினான் வேள்பாரி.
காட்டெருமைகளின் குணங்கள் மாற்ற முடியாதவை. ஒன்றுடன் ஒன்று மோதி, எதிரியின் மரணம் பார்த்துத்தான் களம்விட்டு அகலும். அது எத்தனை பகல், எத்தனை இரவானாலும் பின்வாங்காது. பாதக் குளம்பிலிருந்து உச்சிக்கொம்பு வரை அடங்கா சினம் தேங்கி நிற்கும். அந்தச் சினமே கிழிபடும் மேல் தோளினைத் தனது கொம்புகொண்டு கூடுதலாகக் கிழித்துத் தனக்குத்தானே வெறியேற்றிக்கொள்ளச் செய்யும். இருவரும் அதனையே செய்தனர்.

சோர்வும் தளர்வும் நெருங்காதவண்ணம் உள்ளுக்குள்ளிருந்து ஆத்திரத்தை ஊதிப்பெருக்கிக்கொண்டனர். எதிரியைச் சாய்க்கக்கூடிய வேளை நீடிப்பதை ஒருவராலும் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இரண்டுமுறை காலம்பனின் அடித்தொடையின் பின்நரம்பு பாரிக்கு வசப்பட்டது. அதில் சுழித்து அடித்தால் சரிவான் அவன். ஆனால், மற்போரில் அதைச் செய்யக் கூடாது என மனதைத் திசை மாற்றினான் பாரி.

காலம்பனின் இடுப்பில் கட்டியிருந்த ஆடையின் தடித்த சரடுக்குள் கழுத்தினில் இறக்கக்கூடிய குத்துக்கோல் இருந்தது. சட்டென அதை எடுத்து எதிரியின் தோளிலே இறக்கும் வாய்ப்பு வந்த கணம் காலம்பன் தன்னையே அவமானமாகக் கருதினான். `எனது வீரத்தை எனது கையால் சிதைக்கும் செயலைவிட நான் மரணத்தையே தழுவுவேன்’ என்று உறுதிகொண்டான்.

அவனது எண்ணம் அந்த உறுதி ஏற்கும் கணம் பாரியின் எதிர்பாராத தாக்குதலில் தூக்கி அடிக்கப்பட்டான். மண் சிதைந்து எங்கும் தூசி படர்ந்துகொண்டிருந்தபோது சரிவிலிருந்து இறங்கி வந்து சேர்ந்தான் தேக்கன். பாரியின் மீது எண்ணிலடங்காத கற்கள் சரிந்து விழுவதைப் போல இருந்தது அதன் பிறகான காலம்பனின் தாக்குதல்.

கண்ணின் ஓரத்தில் தேக்கன் வந்தது பாரிக்குத் தெரிந்தது. இவ்வளவு வலிமைவாய்ந்த எதிரிகளைத் தன்னந்தனியாகச் சந்தித்து இருமுறை மோதி, இருவரை வீழ்த்தி, தனது உடலெங்கும் பெரும் தாக்குதலைத் தாங்கி சற்றும் அசராமல் மூன்று மலைகளைக் கடந்து, கடைசிக் கணம்வரை ஆறாத

சினத்தோடு வந்து கொண்டிருக்கும் பறம்பின் ஆசான் கண்ணில்பட்ட கணம் பாரியின் ஆவேசம் சூறைக்காற்றாய் மேலெழுந்தது.




கண்ணிமைக்கும் நேரத்தில் நெருப்பை ஊடறுத்துச் செல்லும் விட்டிலைப்போல காலம்பனைப் பிளந்து நுழையும் வேகத்தோடு முன் தலையால் குத்தி நகர்த்தினான் பாரி. இதுவரையிலான தாக்குதலைவிட இருமடங்கு வேகத்தோடு, தான் தூக்கி வீசப்படுவதைக் காலம்பன் உணர்ந்தான்.

தனியொரு வீரன் தன்னை முட்டிச் சாய்க்கும் வீரத்தோடு இருப்பதை முதன்முறையாக உணர்ந்த காலம்பன், அதே முன் தலை முட்டின் வழியே விலா எலும்பை நொறுக்கி அவனது வீரத்துக்குக் கைம்மாறு வழங்க வேண்டும் என்ற வெறிகொண்டபடி, மண்ணில் விழுந்த வேகத்தில் புரண்டு எழுந்தான். விழுந்து புரண்டதில் அவன் இடுப்பில் முடிச்சிடப்பட்ட ஆடை கிழிபட்டதால், சரட்டுக்குள் குத்துக்கோல் இருப்பது சூரிய ஒளியில் பளிச்சிட்டது. அதைப் பார்த்த கணத்தில் தேக்கன் கத்தினான். “பாரி... மோதுவதற்காக அவன் அருகில் செல்லாதே, குத்துக்கோல் மறைத்துள்ளான்” என்று கத்தியபடி தனது இடுப்பிலிருந்த குறுவாளைத் தூக்கி வீசினான்.

வெறிகொண்ட பாரியின் கண்கள், காலம்பனையே பார்த்துக்கொண்டிருந்தன. குறுவாள் எங்கு விழுந்தது எனத் தெரியாது. விழுந்த கணம் வெகுண்டெழுந்த காலம்பன், பாரியின் மீது பாயப்போகும் கணத்தில் பின்னாலிருந்து கத்திய கிழவனின் குரல் மனதை இடியெனத் தாக்கியது. எழும் புழுதிக்கு நடுவே உறையவைக்கும் சொல்லாக அது இருந்தது. சற்றே தடுமாறி அவன் சொல்லிய பெயரை இன்னொரு முறை நினைவுபடுத்திப்பார்த்தான்.

அவனது தாக்குதலை எதிர்கொள்ள பாரி நின்றபோது, காலம்பனின் வாய், கிழவன் சொன்ன பெயரை உச்சரித்தது. “பா……ரி”

‘நான் பாரி எனும் மாமனிதனுடனா இவ்வளவு நேரமும் மோதிக்கொண்டிருந்தேன்’ மனம் நம்ப மறுத்தது. எதிரியைப் பாரியாக எண்ணத் தொடங்கிய கணத்திலிருந்து அவனது ஆவேசம் உதிரத் தொடங்கியது. அடிவேர் அறுபட்ட மரம்போல் உணர்ந்தான் காலம்பன். தாக்குதலுக்காகப் பறவையின் சிறகுபோல விரிந்த அவனது கைகள் அவனை அறியாமலேயே ஒன்றிணைந்துகொண்டிருந்தன.

அவனது செயல்கள் எவையும் அவன் கட்டுப்பாட்டுக்குள் இல்லை. பாரியைப் பற்றி சிறுவயது முதல் கேள்விப்பட்ட கதைகள் காலம்பனின் செயலைத் தம்வயம் எடுத்துக்கொண்டன. பெருக்கெடுத்த குருதியின் ஆவேசத்தை, குலக்கதைகள் கீழிறக்கின. அவனது கைகள் குவியத் தொடங்கும்போது, கால்கள் மண்ணை நோக்கிச் சரிந்துகொண்டிருந்தன.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-47

பொதியவெற்பனுக்குப் பெண்பார்க்கும் நிகழ்வு இரண்டாண்டுகளுக்கும் மேலாக நடந்தது. பாண்டியநாட்டுக்கு இளவரசியாகவும் பின்னாளில் பேரரசியாகவும் முடிசூட்டப்படப் போகிறவளைத் தேர்வுசெய்ய எத்தனையோ வழிமுறைகளும் விதிமுறைகளும் இருக்கின்றன. சேர, சோழப் பேரரசுகளிலிருந்து பெண்ணெடுக்கும் அளவிற்கு மூவருக்குமிடையே இனிய உறவு இல்லை. அதேநேரம் சிற்றரசர்களிடமிருந்து பெண்ணெடுப்பது பேரரசுக்கு அழகன்று. முன்புபோல இருந்தாற்கூட அதனைச் சிலர் ஏற்பர். ஆனால், குலசேகரபாண்டியன் காலத்தில் பாண்டியநாடு முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது. அந்த நிலை இத்திருமணத்திலும் எதிரொலிக்க வேண்டும் எனப் பேரரசர் விரும்புகிறார்.

வெவ்வேறு நாட்டைச் சேர்ந்த இளவரசிகளைப் போய் பார்த்துத் திரும்பியது பாண்டிய நாட்டுக்குழு. அவர்கள் சொல்லும் ஆலோசனைகளை அரண்மனைவாசிகள் ஏற்க மறுத்தனர். செல்வச்செழிப்பான நாட்டின் இளவரசியையும் பார்த்த கணமே ஆண்கள் மயங்கும் பேரழகிகளையும் அவர்கள் நிராகரிக்கத்தான் செய்தார்கள்.




எதனால் இப்படிச் செய்கிறார்கள் என்பது முதலில் விளங்காமல் இருந்தது. பின்னர்தான் செய்தி மெல்லக் கசியத் தொடங்கியது. பொதியவெற்பன் உயரத்தில் சற்றே குறைந்தவன். அவனைவிட உயரமான பெண் எவ்வளவு அழகியாக இருந்தாலும், பொதியவெற்பன் ஏற்பதில்லை; நிராகரித்துவிடுகிறான். ஆனால், அவனது உயரத்துக்கோ அல்லது அவனைவிட உயரத்தில் சற்றே குறைவான உயரமுள்ள பெண்ணையோ தேர்வுசெய்தால் பேரரசர் ஏற்றுக்கொள்வதில்லை. அவர் நிராகரித்துவிடுகிறார்.

இளவரசர் நிராகரிக்கக் காரணமிருப்பதைப்போல பேரரசர் நிராகரிப்பதற்கும் காரணமிருக்கத்தான் செய்தது. வணிகம் தொடங்கிப் பாதுகாப்பு வரை ஒருநாட்டில் அளவைகள் மிக முக்கியமானவைகளாக இருக்கின்றன. பேரரசின் நிர்வாகத்துக்கு மிக முக்கியமானவை கணக்குகளே. நிலவியல் சார்ந்த கணக்குகளுக்கு அடிப்படையாக நீட்டல் அளவைகள் இருக்கின்றன.


நீட்டல் அளவையின் அடிப்படையாகக் கோல் அளவு இருக்கிறது. கோல் அளவினைக்கொண்ட குறிப்புகளே அரசின் கணக்குகளாகப் பாதுகாக்கப் படுகின்றன. ஒரு கோல் எவ்வளவு நீளமுடையதாக இருக்க வேண்டும் என்ற கேள்வி வந்தபொழுது நாட்டினை ஆளும் பேரரசரின் கை முழ அளவே கோலின் அளவு என்று முடிவாகியுள்ளது. பலநாடுகளிலும் இதுவே வழக்கமாகவும் இருக்கிறது.

பேரரசர் குலசேகரபாண்டியனைவிட பொதியவெற்பன் குள்ளமானவனாக இருப்பதால், கை முழ

அளவும் குறைவானதாகவே இருக்கிறது. இது எதிர்காலத்தில் பல மாற்றங்களுக்கும் குழப்பங்களுக்கும் காரணமாக அமையப்போகிறது என்பதை அரண்மனையில் பலரும் பலகாலமாக ரகசியக் குரலில் பேசிக்கொள்கின்றனர். இது அவ்வப்போது பேரரசரின் காதுக்கும் போய்ச் சேருகிறது.

இந்நிலையில் பெண்பார்க்கும்பொழுது அவனது உயரத்துக்குச் சற்றே மேலான பெண்ணாக இருந்தால், பிறக்கப்போகும் குழந்தை நல்ல உயரத்துடன் பிறக்க வாய்ப்பிருக்கிறது. இல்லையென்றால் குழந்தை இவனைவிடக் குள்ளமாகப் பிறந்துவிடும். அது நாட்டின் எதிர்காலத்தில் குழப்பத்தை இன்னும் அதிகமாக்கும். எனவே, உயரமான பெண்ணாகப் பார்க்க வேண்டும் என்பது பேரரசரின் உத்தரவு. இந்த உத்தரவு இளவரசருக்குத் தெரிவிக்கப்படவில்லை. அவரோ தன்னைவிட உயரமான பெண்ணை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். இதனால் தேர்வு செய்யும் எந்தப் பெண்ணும் முடிவாகாமலே போகிறாள்.

தந்தையின் முடிவும் மகனின் முடிவும் இருவேறுவிதமாக இருப்பதால் பெண்பார்க்கும் பணியில் ஈடுபட்டவர்கள் பெருங்குழப்பத்தில் சிக்கித்தவித்தனர். இந்நிலையில்தான் ‘சூல்கடல் முதுவனின் மகள் பொற்சுவையை நமது இளவரசருக்கு மணமுடித்தால் என்ன?’ என்ற கேள்வி எழுந்தது. இதே கேள்வி சோழநாட்டு அரண்மனையிலும் பேசப்படும் செய்தியும் வந்து சேர்ந்தது.



சூல்கடல் முதுவனின் செல்வச்செழிப்பும் யவன அரசாட்சியுடனும் யவன வணிகர் களுடனும் அவருக்கு இருக்கும் தொடர்பும் சாத்துக்களின் தலைவன் என்ற பெரும்பதவியும் யாரையும் ஈர்க்கும் தன்மை கொண்டவை. எனவே, இதில் நாம் முந்திக்கொள்ள வேண்டும் என்று பேரரசர் நினைத்தார். இளவரசன் பொதியவெற்பனோ, அப்பெண்ணைப் பற்றிய எந்த விபரத்தையும் கேட்கக்கூட ஆயத்தமாக இல்லை. வணிகமே அரசாட்சியின் அச்சாணியாக இருக்கிறது என்பதை நன்கு அறிந்தவனாக இருந்தான் அவன். சேரநாட்டினர் யவன வணிகத்தின் மூலமே உச்சத்தை அடைந்தனர் என்பதை யாவரும் அறிவர். எனவே, அவன் உடனடியாகச் சம்மதித்தான்.

பாண்டியநாட்டு சம்மதம் தெரிவிக்கப் பட்டவுடன் அடுத்தகட்டப் பணிகள் தொடங்கின. சிறிதுகாலத்திலே பேரரசருக்கு மற்றுமொரு மகிழ்வான செய்தியும் வந்து சேர்ந்தது. அவர் எதிர்பார்த்ததுபோலவே பொதியவெற்பனைவிட பொற்சுவை சற்றே உயரமானவள் என்று. அவர் அன்று அடைந்த மகிழ்வுக்கு அளவில்லை. பொதியவெற்பனுக்கு இப்பொழுது இதுவெல்லாம் ஒரு பொருட்டே அன்று. சூழ்கடல் முதுவனின் மகள் அரண்மனைக்கு வந்துசேரும்பொழுது, பறவைகள் எல்லாம் மரத்தில் வந்து அடைவதைப்போல, கடலில் மிதக்கும் கப்பல்கள் எல்லாம் பாண்டியநாட்டுத் துறையில் வந்து அடையப்போகின்றன. அது கடல் மேலாதிக்கத்துக்கான வாசலைத் திறக்கும்.

வணிகம் சூழ்ச்சியை அடி உரமாகக் கொண்டது. அது கொடுத்து, வாங்கும் இரு கைகளுக்குள்ளும் குருதியைப்போல் ஓடுவது. சாத்துக்களின் பெருந்தலைவன் பலநாடுகளின் அரசியல் அறிந்தவனாக இருப்பான். எந்தவொரு நாட்டின் உள்விவகாரங்களையும் அவனால் எளிதில் அறிந்து சொல்ல முடியும்.

சாத்துக்கள் என்ற இவ்வமைப்பின் கீழுள்ள பெருவணிகர்கள் பலரும் சிற்றரசர்கள் பலருக்குப் பெண்கொடுத்துப் பெண்ணெடுத்தவர்கள். அவ்வணிகக் கூட்டத்தின் தலைவனின் மகளைப் பெண்ணெடுப்பதன் மூலம் பாண்டியநாட்டு எல்லைக்கு அப்பால் இருக்கும் பல அரசர்களினும் மேல்நிலையை இயல்பிலே பாண்டியநாடு அடைந்துவிடுகிறது.

பொதியவெற்பனின் எண்ண ஓட்டங்கள் மிகத்தீவிரமாக இருந்தன. அவ்வெண்ண ஓட்டங்களுக்கு இடையில் மணமகளின் உயரமோ, அழகோ மட்டுமல்ல; மணமகள் என்ற பெண்ணே தெரியவில்லை. கொடுத்து வாங்கும் கைகளான குலசேகரபாண்டியனின் கையிலும் சூல்கடல் முதுவனின் கையிலும் ஒரே ரத்தம்தான் ஓடிக்கொண்டிருந்தது. இருவரும் மிகுந்த மகிழ்வோடு மணமுடிப்புக்கு ஒப்புக்கொண்டு மணவிழாவுக்கான ஏற்பாடுகளைப்பற்றிப் பேசத்தொடங்கினர்.

இந்நிலையில்தான் சூல்கடல் முதுவனின் செல்லச்செழிப்பைப் பற்றிய பல்வேறு செய்திகள் பேரரசருக்குத் தெரியவந்தன. உலகின் பல தீவுகளில் கிடைக்கும் மிக உயர்ந்த மணிக்கற்கள் எண்ணற்றவை அவரிடம் உண்டு. அதுமட்டுமல்ல, வணிகர்கள் பலரும் திருமணப்பரிசாகத் தர உள்ள பொருள்களைப்பற்றி பல்வேறு வகையான செய்திகள் வந்து சேர்ந்த வண்ணமே இருந்தன.


ஒருநாள் பேரரசர், “இத்திருமணத்தை முன்னிட்டு சாத்துக்களின் தலைவன் என்ற முறையில் சூல்கடல் முதுவனுக்கு நான் மிக உயர்ந்த பரிசுப்பொருள் ஒன்றினைத் தர விரும்புகிறேன்” என்றார்.

அவையோர் அனைவரும், “கட்டாயம் தர வேண்டும் பேரரசே’’ என்றனர்.

“என்ன தருவது?”

“விலை உயர்ந்த முத்துக்கள் எண்ணற்றவை நம்மிடம் உண்டு. ஆனால், வணிகர்குலத் தலைவனுக்கு அவற்றை வழங்குதல் வியப்பை ஏற்படுத்தாது.”

“வேறென்ன வழங்குவது?”



“யவனம் மட்டுமன்று; உலகின் பல இடங்களில் செய்யப்பட்ட அழகுப்பொருள்களைப் பார்த்து மகிழ்ந்தவராகவே அவர் இருப்பார். அவரிடம் பாண்டியநாட்டு அழகுப்பொருளைக் கொடுப்பதும் பொருட்டாக இருக்காது.”

“வேறென்னதான் தருவது?”

அவையோர் சளைக்காமல் ஆலோசனை வழங்கினர். வணிகர்கள் மூலம் கொண்டு வரப்பட்ட பொருள்களைப் பற்றிய ஆலோசனைகளாகவே அவைகள் இருந்தன. எனவே, எந்தப் பொருளைக் கொடுப்பது என்பது தெரியாமல் திகைத்தனர். வியப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு பரிசுப்பொருள் பற்றிய ஆலோசனையை யாராலும் வழங்க முடியவில்லை.

பேரரசருக்கு சோர்வே மிஞ்சியது. அவையின் நடவடிக்கையை நன்கு அறிந்தவர்கள் பேரரசரின் சோர்வை எதிர்பார்த்துக் காத்திருப்பர். அந்நேரம்தான் அவர்கள் பேசத் தொடங்குவார்கள். சோர்வோடு இருக்கும் பேரரசர் அவர்கள் சொல்லும் கருத்தை இயல்பிலே பற்ற நினைப்பார் என்பது அவர்களது எண்ணம். ஆனால், அவர்கள்கூட இன்று எழுந்து பேசவில்லை. ஏனென்றால், எல்லா கருத்துகளும் சொல்லப்பட்டாகிவிட்டது. இனிச் சொல்ல ஒன்றும் இல்லை என்ற நிலையில் தளபதி கருங்கைவாணன் எழுந்தான்.

யாரும் எதிர்பார்க்காமல்தான் இருந்தது கருங்கைவாணன் முன்வந்தது. பேரரசரை வணங்கிவிட்டுச்

சொன்னான். “பேரரசர் அனுமதித்தால் சூல்கடல் முதுவன் வியக்கும் பரிசுப்பொருள் பற்றி என்னால் கூற முடியும்?”

“என்ன அது?”


“சூல்கடல் முதுவன் தனக்காகவும் தனது குடும்பத்தினருக்காகவும் செய்துள்ள மிகச்சிறந்த கப்பல் ஒன்றுண்டு. அதன் பெயர் `கடற்கோதை’. அந்தக் கப்பலைக்கண்டு யவன அரச குடும்பமே வியந்ததாம். அதன் வேலைப்பாடுகள் அப்படி.

கடற்கோதையை மற்ற எல்லா கப்பலையும்போல ஒவ்வொரு துறைமுகத்திலும் நிறுத்தி, அடிமைகளை மாற்றி அல்லது ஓய்வெடுக்கவைத்து மீண்டும் கொண்டு செல்வது அவருக்குப் பிடிக்கவில்லை. தொலைதூரம்  வரை கப்பலை நிறுத்தாமல் கொண்டுசெல்லும் ஆற்றல்கொண்ட அடிமைகள் யவனர்களிடமே உண்டு. சிறைபிடிக்கப்பட்ட கருங் கொள்ளை யர்களையே அவர்கள் கப்பல் அடிமைகளாகப் பயன்படுத்துகின்றனர். அவ்வடிமைகளின் தோள்கள் சோர்வின்றி நெடுந் தொலைவுக்குக் கப்பலைக் கொண்டுசேர்க்கும். எனவே, யவனர்களிடம் எவ்விலையும் கொடுக்கிறேன், அவ்வகை அடிமைகளை எனக்குத் தாருங்கள் எனக் கேட்டுள்ளார். அவரின் வேண்டுதலை மறுக்கவில்லை; ஆனால், இன்னும் கொடுக்கவில்லை” என்று சொல்லி நிறுத்தினான் கருங்கைவாணன்.

பேரரசர் உள்ளிட்ட அவையோர் அனைவரும் கருங்கைவாணன் அடுத்துச் சொல்லப் போவதை உற்றுக் கவனித்தனர். “கருங்கொள்ளையர்களுக்கு இணையான திறள் தோளும் பேருடல் வலிமையுங்கொண்டவர்கள் இம்மண்ணிலும் உண்டு.”

எல்லோரும் வாய்பிளந்து கேட்டனர். “யார் அவர்கள்?” என்று பேரரசர் கேட்கும்படி எண்ணத்தைத்தூண்டி. ஆனால், அவர் கேட்பதற்கு முன் பணிந்து சொல்வது அரசவை வித்தைகளில் ஒன்று. கருங்கைவாணன் பணிந்து சொன்னான். “திரையர் கூட்டம் ஒன்றிருக்கிறது. மேற்குமலையின் ஆதிப்பழங்குடிக் கூட்டம். அவர்களை வென்று அடிமைகளாக்கினால், சூல்கடல் முதுவனை வியப்பிலே திகைக்கச் செய்யும் பரிசுப்பொருளை வழங்கலாம்.”

குலசேகரபாண்டியனின் முகத்தில் மகிழ்வு பூத்தது. அரசவை வித்தைகளில் நம் எல்லோரையும் விஞ்சிக்கொண்டிருக்கிறான் கருங்கைவாணன் என்ற பேச்சு அவையில் கேட்டுக் கொண்டிருந்தபொழுது சிலரின் மனதில் மட்டும் எண்ணங்கள் வேறுவிதமாக இருந்தன. ‘கருங்கைவாணன் வலியப்போய் தலையைக் கொடுத்துவிட்டான். திரையர்கள் உள்காடுகளில் இருக்கும் மாவீரர்கள். அம்மலையடிவாரத்தில் இருக்கும் சோழன் பெரும்படை திரட்டி மாதக்கணக்கில் போரிட்டு அவர்களை வெல்ல முடியாமல் திரும்பிவிட்டான். நாம் மிகத்தொலைவில் இருப்பவர்கள். இங்கிருந்து படைதிரட்டிப் போய் அவர்களை வெல்வதெல்லாம் ஒருபோதும் நிகழாத செயல். கருங்கைவாணன் தன்பெயரைத் தானே கெடுத்துக்கொள்ள வழியமைத்துக்கொள்கிறான்’ என்று கருதினர்.



கருங்கைவாணனை நன்கு அறிந்த சிலர்தான் உண்மையான காரணத்தைச் சிந்திக்க முடிந்தது. போரினை அரசகடமையாக நினைப்பவன் அல்ல கருங்கைவாணன். அவனுக்கு அதுதான் செயல், சிந்தனை, வாழ்வு எல்லாம். போரின் அனைத்து முகத்தையும் அறியும் அவனது ஆவல் ஒருபோதும் குறைந்ததில்லை. தனது வீரர்களுக்கு எதிரியை வைத்துப் போரினைப் பயிற்றுவிக்கும் வேலையை ஒவ்வொரு போர்க்களத்திலும் செய்பவன். மிகச்சிறந்த எதிரிகளைத்தேடி களம் அமைத்துக்கொண்டே இருப்பவன்.

திரையர்களின் வீரம் பற்றி எண்ணற்ற கதைகளைக் கேட்டு வளர்ந்தவன்தான் கருங்கைவாணன். இன்று உலகம்போற்றும் பாண்டிநாட்டுத் தளபதி. ஆனாலும், கதைகள் உருவாக்கி வைத்திருக்கும் பகை ஒருபோதும் அழியாது. பகை மட்டுமே வீரத்தின் விசையைக் கூட்டவல்லது. பகையின்றி ஒருவன் வீரனாக உயிர் வாழ்ந்துவிட முடிவதில்லை. கருங்கைவாணன் எல்லா போரிலும் வெற்றியைத் தழுவினான். ஒருநிலைக்குப்பின் வெற்றி ஏற்படுத்தும் சுவை பழக்கப்பட்டதாக மாறிவிடுகிறது. அது இன்னொரு செய்தியாகத் தன்னைத்தானே கீழிறக்கிக்கொள்கிறது.

பழக்கப்பட்டதை மீறி புதிய சுவைக்கான விருப்பத்துடனே போர்க்களத்தில் அலைந்து திரிபவன் கருங்கைவாணன். அவனது மனதில் சிறுகுழந்தையாக இருந்தபொழுது விதைக்கப்பட்ட ஆதிவிதையாகத் திரையர்களின் வீரம் இருந்தது. அவர்களை வெல்லும் அவனது ஆவேசம் பெருகிக்கொண்டேதான் இருந்தது. ஆனால், எந்த ஓர் அரசும் விலையில்லா இழப்பைத் தளபதியின் விருப்பத்தின் பொருட்டுச் சந்திப்பதில்லை. அதுவும் குலசேகரபாண்டியன் போன்றதோர் அறிவுக்கூர்மையுள்ள பேரரசனிடம் எளிதில் ஒப்புதலைப் பெற்றுவிட முடியாது. ஏனென்றால், எவ்வித நிலவியல் தொடர்பும் அரசியல் தொடர்பும் இல்லாத காட்டுப்பகுதிக்குள் திரையர்கள் இருக்கிறார்கள்.

காத்திருந்த கருங்கைவாணன் சரியான வாய்ப்பைப் பயன்படுத்தினான். சூல்கடல்முதுவனின் பொருட்டு பாண்டியப்படையின் பெரும் அணிவகுப்பு வடதிசை நோக்கி நகரத்தொடங்கியது. கதையும் பகையும் வனம்நோக்கி நகர்ந்தன.

பெரும் யானைப்படையோடு புறப்பட்டுப்போனான் கருங்கைவாணன். திரையர்களைப் போரிட்டு வீழ்த்துவது எளிதான காரியமல்ல. அவர்களிடம் போரிட்டு சோழன் தோல்வியைத் தழுவினான் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், அப்போரின் மூலம் கற்றவைகளே மிக முக்கியமானவை. திரையர்கள் எண்ணிக்கையில் மிகக்குறைந்த கூட்டம். அவர்களை நேர்போரில் தோற்கடிக்க முடியாது.

அப்போரில் பங்கெடுத்த இரண்டாம்நிலை தளபதியான திதியனை விலைக்கு வாங்கினான் கருங்கைவாணன். அவனிடமிருந்து பல செய்திகள் கிடைத்தன. சோழர்படை போரிலே தோற்றது. ஆனால், திரையர்களின் எண்ணிக்கையில் சரிபாதியை அது அழித்தது. எனவே, மிக விரைவாக இன்னொரு தாக்குதலுக்குத் திட்டமிடுவோம் என்று அவன் மன்னனுக்குத் தெரிவித்துள்ளான். சோழமன்னன் செங்கனச்சோழனோ அதனை ஏற்கவில்லை. திரையர்களை வீழ்த்த முனைவது வீண்வேலை என்று மறுத்துவிட்டான்.


திதியன் வழங்கிய ஆலோசனையின் படிதான் கருங்கைவாணன் படை நடத்திச்செல்கிறான். கார்காலத்தின் முன்மழை கொட்டத்தொடங்கியது. திரையர்கள் வசிக்கும் மலைப்பகுதியில் மழையின் கால அளவு சற்றுமுன்னதாகவே வேகம்கொள்வதாக இருந்தது. அதனைக் கணித்துத்தான் திதியன் கூட்டிச்சென்றான்.

ஆற்றுவழிப்பாதையில் கவசவீரர்கள் அணிவகுக்க, யானைப்படை மேலேறிச்சென்றது. சரிபாதித்தொலைவு ஆற்றுவழிப்பாதையில் மேலேறிச் சென்றதும் அடைமழை தொடங்கியது. அதற்காகத்தான் திதியன் காத்திருந்தான். அடைமழை தொடங்கியவுடன் ஆற்றுவழியில் இருந்து கரையேறினான். எந்தக் கணமும் வெள்ளம் பெருகி வரலாம் என்பது மட்டுமல்ல காரணம். அடைமழையின்பொழுது யானைப்படையைக் காடறுத்து வேகமாக உள்ளே கொண்டுசெல்ல முடியும். மழையோசைக்குள் இச்செயலின் தன்மை வெளியே தெரியாது.

திதியன் கணித்ததைப்போலவே அடைமழை காடு கரைவதைப்போல கொட்டியது. முதல் நாளினைவிட இரண்டாம் நாளும் இரண்டாம் நாளினைவிட மூன்றாம் நாளும் அதன் தன்மை அதிகரிக்கவே செய்தது. அடைமழையின் தன்மை மிகக்கடினமாக இருந்ததால், திரையர்கள் குடில்விட்டு வெளிவராமலே இருந்தனர். சிலர் மலைக்குகைக்குள் அடைந்துகிடந்தனர்.

கவசவீரர்களைக்கொண்ட கருங்கைவாணனின் யானைப்படையைத் திரையர்களின் குடிக்குக் கொண்டுவந்து சேர்த்தான் திதியன். குடிலின் அருகில் யானையின் பிளிறல் கேட்டபொழுது ஒரு கிழவன் மட்டும் வேய்ந்த கூரையை விலக்கிப்பார்த்தான். யானைகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தன. கொட்டும் மழையின் சத்தத்தோடு காற்றும் சேர்ந்துகொண்டது. பயிற்சி பெற்ற யானைகள் அவ்வெளிய குடிலைச் சுழற்றி எறிந்தன. உள்ளுக்குள் இருந்தவர்கள் என்ன நடக்கிறது என்பதை அறியும் முன்னே இரும்புவலைப் பின்னல்களைக்கொண்டு வீசிப்பிடிக்கப் பட்டனர். குடிலுக்குப் பதில்

கூர்முனைகொண்ட இரும்பு வலைப் பின்னல்களால் போர்த்தப்பட்டனர். உள்ளுக்குள் இருந்த யாரும், துளியளவு அசைந்தாலும் இரும்பின் கூர்முனைக் கிழித்து உள்ளிறங்கிக்கொண்டிருந்தது.



குடில்கள் ஒவ்வொன்றாகத் தாக்கப்பட்டன. திரையர்குடி வீரன் நான்குபேர்கூட எந்தக் கணமும் ஒன்றுசேர முடியவில்லை. குடிலுக்குள்ளிருக்கும் ஆண்களைக் கவசம் அணிந்த இருபது வீரர்கள் ஒன்று சேர்ந்து தனியே பிரித்தனர். அவ்வாறு பிரிக்கும்போதுதான் மோதல் உக்கிரங்கொண்டது. கவசவீரர்கள் நாலாபுறமும் சிதறியபடியே இருந்தனர். ஆனால், அவர்களின் கண்முன்னே குடும்பத்தினரின் மேலெல்லாம் இரும்பின் கூர்முனை குத்திக் கிழித்தபடியிருக்க, காணச்சகிக்காதுப் போரிட்டு வீழ்ந்தனர்.

வெட்டி வீசப்பட்டவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவு. வீறுகொண்டு தாக்கிய சிலர்தான் கொன்றழிக்கப் பட்டனர். மற்ற எல்லோரும் சிறைப்பிடிக்கப்பட்டனர். கதறல் ஓலம் மேலெழ எக்கட்டத்திலும் அடைமழை வாய்ப்புக்கொடுக்கவில்லை. சரியான திட்டமிடலோடு வந்த திதியன் மிகத்துல்லியமாகத் தாக்குதலை நிறைவேற்றினான். அதற்கு அடிப்படையாக இருந்தது கருங்கைவாணனின் துணிவு.

இக்காட்டின் உச்சியில் இருக்கும் திரையர்களைப் பிடித்துவிட முடியும் என்று தளபதிக்குத் துணிவு வருதல் எளிதல்ல. சோழன் அத்தனை ஆயிரம் படைவீரர்களைத் திரட்டிவந்து தாக்குதல் நடத்தித் தோற்றான். அவனின் தாக்குதல் நிகழாமல் இருந்திருந்தால், இவ்வெற்றி சாத்தியமில்லை. திரையர்களின் எண்ணிக்கை சரிபாதி குறைந்திருக்காது. அவர்களின் இருப்பிடம், வழித்தடம் பற்றிய செய்திகள் எவையும் கிடைத்திருக்காது. சோழனின் படையெடுப்பே இவ்வெற்றிக்குக் காரணம். ஆனால், வெற்றியை அறுவடை செய்தது பாண்டியப்படை.

குடில்கள் எல்லாம் அழிக்கப்பட்டு ஆண், பெண் குழந்தைகள் எல்லாம் சிறைப்பிடிக்கப் பட்டுவிட்டனர். பிடிபட்ட ஆண்களின் கழுத்தில் இரும்பு வளையங்கள் தொங்கக் கைகால்களுடன் அவை பிணைக்கப்பட்டன. வீரர்கள் அறுவர் அறுவராக இணைக்கப்பட்டு யானையின் மேல்வாரச் சங்கிலிகளுடன் இறுகக்கட்டப்பட்டனர். மற்றவர்களை மொத்தமொத்தமாக அடைக்கப் பட்டதைப்போல் சுற்றுவட்டத்தில் கட்டி யாரும் துளியும் பிசுற முடியாமல் இறுக்கப்பட்டனர்.

கருங்கைவாணனின் கீழ்நிலையில் இருக்கும் தளபதிகள் மூவரும் புறப்படலாம் என்று சொல்லிக்கொண்டிருந்தபோது திதியன் மட்டும் பதில் சொல்லாமல் இருந்தான். மழைகொட்டிக் கொண்டிருந்தது. அழுகையும் ஓலமும் ஆவேசமுமாக இருந்தது. எல்லாவற்றையும் மழையின் ஓசை விழுங்கியபடி இருந்தது. யார் பேசினாலும் காதருகே போய் சத்தமாகப் பேச வேண்டியிருந்தது.

“எல்லோரையும் பிடித்துவிட்டோம். உடனே இவ்விடம்விட்டு நகர்ந்து விடுவோம்” என்ற பொழுது திதியன் சொன்னான். “இல்லை. இவர்களின் தலைவனைக் காணவில்லை. அவனைத்தான் அப்பொழுதிருந்து தேடிக் கொண்டிருக்கிறேன்” என்று பிடிபட்ட ஒவ்வொருவனின் முகத்தையும் அருகில்போய் பார்த்தபடியே சொல்லிக் கொண்டிருந்தான்.

கொட்டும் மழையில் கைகால்களில் எல்லாம் குருதி வழிய நின்றிருந்த வீரர்களை மீண்டும் மீண்டும் பார்த்தான். அவன் தேடிய தலைவன் இல்லை.

“அவன் இல்லையென்றால் என்ன? கிடைத்தவர்கள் போதுமே, நாம் புறப்படலாம்” என்று மற்றவர்கள் சொன்னபொழுது திதியன் சொன்னான், “அவனை இவ்விடம் வைத்துக் கைதுசெய்ய வேண்டும் அல்லது கொன்று முடிக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் நாம் புறப்பட்டால் காட்டினைவிட்டுக் கீழிறங்கும்போது நம்மில் ஒருவர்கூட உயிரோடு இருக்க மாட்டோம்.”

திதியன் சொன்னபின்புதான் ஆபத்தின் அளவு புரிந்தது. “இது அவனது காடு. அவனோடு ஐந்து வீரர்கள் இருந்தால் போதும், நமது மொத்தப்படையையும் அழித்துவிடு வான். மலைச்சரிவுகளில் ஆடுகளைப் போல நமது யானைகள் உருண்டு செல்வதைப் பார்க்க நீங்கள் ஆசைப்படுகிறீர்களா?” எனக் கேட்டான்.

அனைவரும் விக்கித்து நின்றனர்.

“எனது படையின் ஐநூறு வீரர்களையும் அழித்தவன் அவன்.”

கேட்பவர்களின் நெஞ்சில் அச்சம் பரவிக்கொண்டிருந்தது. “அவனைப் பிடிக்க இதுவே ஏற்ற இடம். அவனை இவ்விடம் வரவைத்தால் மட்டுமே நாம் வெல்ல முடியும். இவ்விடம்விட்டு நகர்ந்தால் அவனது தாக்குதலை நம்மால் சந்திக்க முடியாது.”

மழை கொட்டிக்கொண்டிருந்தது. பிடிபட்ட வீரர்கள் ஆவேசங்கொண்டு கத்தியபடி பிணைக்கப்பட்ட இரும்புக் கம்பிகளை வளைத்து நொறுக்க முயன்றுகொண்டிருந்தனர். திதியனின் மனதில் பகை கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. எப்படியும் இன்று அவனைச் சிறைபிடிக்காமல் இவ்விடம்விட்டு நகரக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தான். பல்வேறு வகையில் சிந்தித்த அவன் இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தான்.

அவனுக்குக் குழந்தைகள் உண்டு என்று கேள்விப்பட்டுள்ளான். அது நினைவுக்கு வந்த கணம் ஆவேசங்கொண்டு கத்தினான். அவனது குழந்தை எதுவென சொல்லவில்லையென்றால் எல்லா குழந்தையையும் வெட்டி வீசுவேன் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது அது நிகழ்ந்துகொண்டும் இருந்தது. யாரும் சிந்திப்பதற்குக் கணப்பொழுதுகூட அவன் நேரம் வழங்கவில்லை. வார்த்தைகள் முடியும்முன் செயல்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் அவனது சினம் கண்டு கருங்கைவாணனே அதிர்ந்தான்.

முன்னால் நின்றிருந்த ஒரு சிலரால்தான் அவன் பேசுவதைத் தெளிவாகக் கேட்க முடிந்தது. மற்ற எல்லோரும் அவனது செயலைக்கண்டு வெறியேறியபடி கத்தியபொழுது முன்னால் நின்றிருந்த பெண்ணொருத்தி தலைவனின் மூன்று குழந்தைகளையும் அடையாளம் காட்டினாள். அம்மூன்று குழந்தைகளின் இடதுகால்களையும் ஒன்றாய்க் கட்டி மரத்தின் உச்சிக்குத் தூக்கினான் திதியன். கைதானவர்களின் கதறல் மழையோசையையும் தாண்டி காட்டை உலுக்கியது. மழையின் வேகம் குறையத் தொடங்கியது. திதியன் கடைசி வாய்ப்பை வழங்குவதாகச் சொல்லி பெரும் ஓசையை எழுப்பினான்.

அவனது வீரர்கள் மர உச்சியில் தொங்கவிடப் பட்ட குழந்தைகளை நோக்கி அம்பெய்ய ஆயத்தமாயினர். கைதான வீரர்களின் ஆவேசம் அடக்க முடியாதபடி இருந்தது. யானையோடு கட்டப்பட்ட அறுவரும் இழுத்து நகர்த்திய பொழுது நிலைகொள்ள முடியாத யானைகள் பிளிறத்தொடங்கின. அவற்றின் கால்கள் நீரோடும் ஈரமண்ணில் வழுக்க ஆரம்பித்தன. முன்புற யானைகள் நிலைகொள்ளத் திணறியபொழுது பின்புற யானையொன்று சரிந்து உட்கார்ந்தது.

திரையர்கள் யானையை நகர்த்தும் ஆவேசங்கண்டு பாண்டியப்படை உறைநிலை கொண்டது. நிலைமை கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருந்தது. ஆனால், திதியன் எதற்கும் கலங்கவில்லை. அவனது வெறி கருங்கைவாணனையே அஞ்சச்செய்தது.



திதியனோ, கருங்கைவாணன் உள்ளிட்ட யார் முகத்தையும் பார்க்கவில்லை. யார் உத்தரவையும் கேட்கும் நிலையிலும் இல்லை. இந்தக் கணத்தை இழந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தான். வில்லேந்திய வீரன் ஒருவனை மட்டும் தனியாக நிறுத்தி ஆயத்தமாகச் சொன்னான். கயிற்றில் கட்டித் தொங்கிக் கொண்டிருந்த மூவரில் ஒருவனை நோக்கி அவன் குறி பார்த்தான்.

அதனைக் கவனித்த  திதியன் ஆவேசங்கொண்டு அவனது முகத்தில் தாக்க முற்பட்டான். “நான் ஒரு குழந்தைக்குக் குறிவைக்கச் சொல்லவில்லை. கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் கயிற்றுக்குக் குறி வை. உனது ஒற்றை அம்பு அக்கயிற்றை அறுத்துச்செல்ல வேண்டும். மூவரும் கீழே விழுந்து சிதறிச் சாகவேண்டும்.”

பதறிய கவசவீரன் அம்பின் நுனியை சற்றே மேலே உயர்த்தி ஆடியபடி இருக்கும் கயிற்றுக்குக் குறிபார்த்தான். பெண்கள் கதறித்துடித்தனர். அடுத்து நிகழப்போவதை எண்ணுவதற்குள் நிகழ்த்தி முடிப்பான் என்பதை அவர்கள் அறிந்ததால் விபரீதத்தால் உயிர் கலங்கினர்.

அப்பொழுது என்ன ஓசை கேட்டதென கருங்கைவாணனுக்கோ, திதியனுக்கோ புரியவில்லை. ஆனால், கதறும் பெண்கள் தங்களின் அழுகையை நிறுத்தினர். யானையை இழுத்து நகர்த்திக்கொண்டிருந்த திரையர்குல ஆண்கள் தங்களின் ஆவேசம் அடக்கினர்.

கணநேரத்தில் முழு ஓசையும் அடங்கியது. கயிற்றில் தொங்கும் மூன்று சிறுவர்களின் ஓசை மட்டுமே கேட்டது. அம்பினை இழுத்தபடி நின்ற கவசவீரன் அப்படியே நிறுத்தினான். திதியனும் கருங்கைவாணனும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். எங்கிருந்து என்ன  குறிப்பு வந்தது என்பது தெரியாமல் விழித்தனர். ஆனாலும் திதியன் தினவோடு நின்றான்.

தனது குலமே சிறைப்பட்டு நிற்கும் கொடுமையைக் காணச்சகிக்காது, கையறு நிலையில், வேறுவழியேயின்றி புதர் விலக்கி வெளிவந்தான் திரையர் குலத்தலைவன் காலம்பன்.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள் பாரி-48


திரையர் கூட்டத்தை வென்று, அவர்களை மதுரைக்குக் கொண்டுவந்து சேர்த்தான் கருங்கைவாணன். மதுரை மணவிழாக் கொண்டாட்டத்தில் மூழ்கித் திளைத்துக்கொண்டிருந்தது. யவனர்கள் அளவிட முடியாத பரிசுப் பொருள்களோடு வந்திருந்தனர். அவர்களை மகிழ்விக்க நூறுகால் மண்டபத்தில் பெரும் நாட்டிய நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று இரவு முழுவதும் கொண்டாட்டங்கள் தொடர்ந்தன. நள்ளிரவுக்குப் பின்தான் வென்றவர்களோடு கோட்டைக்குள் நுழைந்தான் கருங்கைவாணன்.

மற்றொரு காலத்தில் இது நிகழ்ந்திருந்தால், இவ்வெற்றியே பெருங்கொண்டாட்டமாக மாறியிருந்திருக்கும். ஆனால், மணவிழாவில் நகரமே திளைத்துக்கொண்டிருக்க, இவ்வெற்றி வெளித்தெரியாமல் மூழ்கியது. யவனர்கள் இவ்விழாவின் பொருட்டுப் பாண்டிய நாட்டினைச் சிறப்பிக்க `மீனாள்' என்ற நாணயத்தை வெளியிட்டனர். மாமன்னர் அளவற்ற மகிழ்ச்சியில் இருந்த அன்றைய நள்ளிரவுதான் கருங்கைவாணன் வந்துசேர்ந்த செய்தி சொல்லப்பட்டது.

அதிகாலையிலையே கருங்கைவாணனை அழைத்து ஆரத்தழுவினார் பேரரசர். சூல்கடல் முதுவனை வியக்கவைக்கும் பரிசுப்பொருளினைத் தர வேண்டும் என்ற தனது விருப்பத்தை நிறைவேற்றினான் தளபதி. அவனது இச்செயலுக்காக எண்ணற்ற பரிசுகளை அள்ளி வழங்கினார். இப்போரில் துணைநின்ற திதியனுக்கும் மாமன்னர் பரிசுகளை வழங்கினார். பெரும் உற்சாகத்தோடு அன்று மாலையிலிருந்து மணவிழா விருந்தில் பங்கெடுக்கத் தொடங்கினான் கருங்கைவாணன்.

திருமணக்கொண்டாட்டம் எண்ணிலடங்காத நிகழ்வுகளாக மதுரை எங்கும் நிகழ்ந்துகொண்டிருந்தது. வைகை ததும்பி ஓட, கரையெங்கும் ஊன்றப்பட்ட எண்ணாயிரம் விளக்குகள் சுடர்விட்டுக்கொண்டிருந்தன. பார்க்கும் கண்கள் பரவசத்தில் திளைத்தன. இவ்வுலகின் வியத்தகு நகரமாக மதுரை ஒளிவீசிக்கொண்டிருந்தது.
வைகையின் அலைகள் சுடரொலியை ஏந்தியபடி நகர்ந்துகொண்டிருந்தன. நதியின் நடுவில் அலங்கரிக்கப்பட்ட ஓடத்தில் பொற்சுவை போய்க்கொண்டிருந்தாள். கரையின் இருபுறமும் விளக்கொளி மின்ன, எண்ணிலடங்காத மக்கள் கூட்டம் திரண்டிருந்தது.

கரையெங்கும் யாராலும் பிடிக்கப்படாமலேயே இத்தனை ஆயிரம் விளக்குகள் எப்படி நிற்கின்றன என்பதே காண்போருக்குப் பெரும் வியப்பாக இருந்தது. விளக்கின் கீழ்ப்பகுதி ஈட்டியின் முனைபோல் கூர்முனைகொண்டிருக்க, அதனை மண்ணில் குத்தி அதன் மேற்பகுதியில் அழகிய அகல் விரிந்திருக்க, அதில் இடப்பட்டிருந்த திரியில் இருந்து சுடர் எரிந்துகொண்டிருந்தது. இதன் பெயர் குத்துவிளக்கென்றும் இத்திருமணத்தின் பொருட்டு வைகைக்கரையில் இதுபோல எண்ணாயிரம் விளக்குகளை ஏற்ற வேண்டியுள்ளதால், அவற்றைப் பொருத்தமான தன்மையோடு வடிவமையுங்கள் என்றும் பேரரசர் சொன்னதனால் பாண்டியநாட்டுக் கலைஞர்கள் இக்குத்துவிளக்குகளை வடிவமைத்தனர்.




ஆற்றங்கரையில் யாரும் தொடாமலேயே ஆளுயரத்துக்கு நின்று ஒளிவீசும் இவ்விளக்கு களைக் காண்பதே கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. வைகையில் பேரலங்காரத்தோடு நகரும் சிற்றோடத்தின் மீதிருந்து இருகரைகளையும் பார்த்துக்கொண்டிருந்தாள் பொற்சுவை. சற்றுப் பின்தள்ளி அமர்ந்திருந்தாள் சுகமதி. அன்னகர்கள் இருவர் ஓடத்தை நீர்வலித்து ஓட்டிக்கொண்டிருந்தனர்

“ஈட்டிகளைத் தலைகீழாக மண்ணிற்குத்தி அதன் மேற்புறத்தில் அகலமைத்து விளக்காக்கி இருக்கிறார்கள். அதனால்தான் யாரும் பிடிக்காமலேயே நின்று ஒளிவீசுகின்றன” என்று புதுமையான குத்துவிளக்கைப் பற்றிச் சொன்னாள் சுகமதி.

வழக்கம்போல் சற்றே அசட்டையான குரலில் பொற்சுவை சொன்னாள், “இத்திருமணத்தில் எத்தனை நிகழ்வுகள் தலைகீழாக இருக்கின்றன பார்த்தாயா?”


தாக்குதலுக்கு உள்ளாதல் சுகமதிக்குப் புதிதன்று. ஆனாலும், இம்முறை அதனை எதிர்கொள்வது என முடிவெடுத்தாள். மணநாள் நெருங்கிக்கொண்டிருக்கிறது. இன்னும் கடந்தகாலத்திலேயே மூழ்கி இருப்பது பொருத்தமல்ல என்றுபட்டது. “தலைகீழாக மண்ணில் புதைந்ததைப் பற்றியே ஏன் நினைவைச் செலுத்த வேண்டும். புதிதாய் ஒளிவீசும் எண்ணற்ற சுடர்களும் நமது கண்களுக்குத்

தெரியத்தானே செய்கின்றன” சற்றே மெல்லிய குரலில் ஆனால், உறுதியோடு சொன்னாள் சுகமதி.

மறுமொழியெதுவும் இல்லை. முதன்முறை பொற்சுவை அமைதியானாள்.

ஓடம் நகர்ந்துகொண்டே இருந்தது. பேச்சொலி எதுவும் இல்லை. சிறிது நேரங்கழித்து சுகமதி அன்னகர்களைப் பார்த்துச் சொன்னாள். “ஓடத்தைப் படித்துறைக்குக் கொண்டு செல்லுங்கள். மலரணியும் சடங்கிற்குச் செல்ல வேண்டும்.”

அன்னகர்கள் ஓடத்தைக் கரை நோக்கித் திருப்பினர். பொற்சுவை எதுவும் பேசாமல் இருந்தாள். சுகமதியின் மனதுக்குள் அச்சம் வளரத்தொடங்கியது. ஓடம் கரைநோக்கிப் போய்க்கொண்டிருந்தது. பொற்சுவையின் அமைதியைப் பொறுக்க முடியாமல் சுகமதி சொன்னாள், “மலரணியும் சடங்கிற்குப் பொழுதாகிவிட்டது, நாம் அலங்காரம் முடித்து அவைக்குச் சென்றாக வேண்டும், பேரரசரும் இளவரசரும் வந்துவிடுவார்கள். அதனால்தான் சொன்னேன்” என்றாள்.



வைகையின் மெல்லிய அலைகளைப் பார்த்தபடியே பொற்சுவை சொன்னாள், “எனது ஓடம் எப்பொழுதோ திருப்பப்பட்டுவிட்டது சுகமதி. இப்பொழுது உனது பங்கிற்கு நீயும் திருப்புகிறாய்; அவ்வளவுதான்.”

பேரரசரின் தனிமாளிகையில் நடந்த உரையாடல் பெருங்கலக்கத்தையே உருவாக்கியது. தேவாங்கு விலங்கைக் கைப்பற்றிப் போர்தொடுக்கலாம் என்று கருங்கைவாணனும் இளவரசரும் சொன்ன கருத்தை மையூர்கிழார் ஒரு மதயானையின் கதையைச் சொல்லித் தகர்த்துவிட்டார். என்ன செய்வதென்று தெரியாத நிலையில் மாமன்னர் எழுந்து மலரணியும் சடங்கிற்கு வந்துவிட்டார்.

இளவரசனும் சூழ்கடல் முதுவனும் அதற்கு முன்பே விரைந்து வந்தனர். எல்லோரின் ஓடங்களும் திசைமாறித்தான் சடங்கு நடக்கும் அவைக்கு வந்து சேர்ந்தன.

என்ன செய்யலாம் என்பது குறித்துத் தீவிரமாகச் சிந்தித்தான் கருங்கைவாணன், ‘நாம் படையெடுத்துச் செல்வதைப் பேரரசர் அனுமதிக்கப் போவதில்லை. வேறு என்னதான் வழி? எப்படியாவது தேவாங்கு விலங்கைக் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். திரையர் போன்ற மாவீரர்களையே வென்று கொண்டுவர முடிந்த நம்மால் இதனைச் செய்ய முடியாதா’ என்று எண்ணிய கணத்தில்தான் இச்சிந்தனை தோன்றியது. தோன்றிய கணத்திலே முடிவு செய்தான்; `திரையர்களே இதற்குப் பொருத்தமானவர்கள்.’

மலரணியும் சடங்கு முடித்துப் பள்ளியறைக்குத் திரும்பிக்கொண்டிருந்த பேரரசரைக் காணக் காத்திருந்தான் கருங்கைவாணன். இரவு நெடுநேரமாகியிருந்தது. இப்பொழுதே சொல்ல வேண்டிய அளவுக்கு என்ன முக்கியச் செய்தி எனக் கேட்ட பேரரசரிடம் விளக்கிச் சொன்னான் கருங்கைவாணன்.

சமவெளி மனிதர்கள் யாராக இருந்தாலும் காட்டுக்குள் ஊடறுத்து உள் நுழைய முடியாது. பெரும்வீரன்கூட காட்டின் சிறு பூச்சிக்கடிக்கு எளிதில் பலியாவான். பாதையற்ற பாதைகளைக்கொண்ட மலைத்தொடர்களைத் தாண்டிச்செல்ல காடுபற்றிய அளவற்ற அறிவும் இயல்பிலேயே அதற்கான உடல்வாகும் வாழ்வெல்லாம் காட்டில் உடல் வளர்த்த மனிதனாகவும் இருத்தல் வேண்டும். மலைமக்கள் எல்லோரையுங்கூட இதில் ஈடுபடுத்திவிட முடியாது. பாரியின் ஆற்றலும் பறம்பு மக்களின் வீரமும் யாவரும் அறிந்தது. அவற்றை எதிர்கொண்டு மீண்டு வர வேண்டுமென்றால், அவர்களைவிடப் பெரும் வீரர்களால்தான் முடியும். அதற்கு இம்மண்ணில் பொருத்தமானவர்கள் திரையர்கள் மட்டுமே. எனவே, அவர்களை இதில் ஈடுபடுத்தலாம் என்று சொல்லி அதற்கான திட்டத்தையும் சொன்னான் கருங்கைவாணன்.

கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாகத் தேவாங்கைக் கொண்டுவர, அரசவையில் எண்ணற்ற வழிமுறைகள் சொல்லப்பட்டன. அதில் ஒன்றுகூட பொருத்தமானதாகப் பேரரசருக்குப் படவில்லை. பறம்பின் தன்மையும் பாரியின் ஆற்றலும் அறியாமல் இவர்கள் பேசுகின்றனர் என்றே அவருக்குத் தோன்றியது. மாற்றுவழியைக் கண்டறிய முடியாத மனநிலையோடு மலரணியும் சடங்கிற்குச் சென்ற பேரரசர், அன்றிரவே இவ்வளவு சிறப்பானதொரு வழி கண்டறியப்படும் என்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை.


“இன்று அரசவையில் நடந்த முக்கியமான உரையாடலால் வைகைக்கரையில் எண்ணாயிரம் குத்துவிளக்குகள் ஏற்றப்பட்ட காட்சியைக் காண முடியாமல் போய்விட்டதே என்று மனம் மிகுந்த கவலைகொண்டிருந்தது. ஆனால், உனது ஆலோசனை அளவற்ற மகிழ்வோடு என்னைப் பள்ளியறைக்கு அனுப்புகிறது” எனச் சொல்லி கருங்கைவாணனைப் பாராட்டி அனுப்பி வைத்தார் பேரரசர்.

இரவோடு இரவாக சிறைக்கொட்டடிக்குள் நுழைந்தான் கருங்கைவாணன். இரும்புக் கம்பிகளால் இறுகப் பிணைக்கப்பட்ட காலம்பனிடம் பேசத் தொடங்கினான். சென்ற போரில் திதியன் ஆற்றிய பணியை இப்பொழுது காலம்பனுக்கு வழங்குவதுதான் அவனது திட்டம். ஆனால், அது அவ்வளவு எளிதானதன்று.

“கடற்பயணத்துக்கு வலிமை மிகுந்த அடிமைகள் தேவை என்பதற்காகத்தான் உங்களைச் சிறைபிடித்தோம். ஆனால், எதிர்பாராத காரணத்தால் நாங்களே உங்களுக்கு உதவிசெய்யும் நிலை ஏற்பட்டுள்ளது” என்று பேச்சைத் தொடங்கினான் கருங்கைவாணன். சுற்றிக் கவசவீரர்கள் நின்றிருந்தாலும் இக்கணம்கூட அவனைக் கொன்றுவிட காலம்பனால் முடியும். ஆனால், தன் குலம் முழுவதும் சிறைப்பட்டிருப்பதால் அமைதி காப்பதே முறை என்று எண்ணிக்கொண்டிருந்தான். கருங்கைவாணன் என்ன சொன்னான் என்பது அவனது காதிலே விழவில்லை.

வெறியேறிக் கிடக்கும் ஒருவனிடம் ஆசையைத் தூண்டுவது எளிதல்ல, தனது குலமும் குடியும் சூறையாடப்பட்டிருக்கும் நிலையில் அவனை ஆற்றுப்படுத்த யாராலும் இயலாது. அரச வாழ்வை அனுபவித்தவனின் மனம் ஆசையின் வழியே சிந்தித்துப் பழகியிருக்கும். தனக்கான உடைமையை, பொன்னை, பொருளைச் சேர்த்துச் சிறப்பாக வாழநினைக்கும் குடிகளுக்கு இவ்வாசைகள் எண்ணற்றனவாக இருக்கின்றன. ஆனால், மலைமக்களின் கனவில் இவை எவையும் இடம்பெறுவதில்லை. திதியனைப்போல காலம்பனை விலைபேசிவிட முடியாது என்பதை பல முயற்சிகளுக்குப் பின்னால்தான் அவர்கள் உணர்ந்தனர்.

பறம்பின் மக்கள் திரையர்களோடு இரத்த உறவுகொண்டவர்கள். அவர்களுக்கு எதிரான எந்தவொரு சிறு செயலையும் செய்வதைவிட தாம் மரணிப்பதே மேல் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர். குலச்சமூகத்தில் முன்னோர்களின் வாக்கிற்கு இருக்கும் இடத்தை சமவெளி மனிதர்களால் எளிதில் புரிந்துகொள்ள முடியாது. தம் கூட்டம் முழுமையும் அழிந்தாலும் குலத்தின் நம்பிக்கைக்குத் தீங்கிழைக்க மாட்டோம் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர்.



‘என்ன செய்யலாம்?’ என்று சிந்தித்த கருங்கைவாணனுக்கு இணையற்ற பெரும்வீரனான காலம்பன் அவனாக வந்து கைதான அந்தக் கணம் நினைவுக்கு வந்தது. மூன்று குழந்தைகளை வைத்து அதனைத் திதியனால் செய்ய முடிந்ததை மொத்தக்கூட்டத்தையும் வைத்து நாம் செய்தால் என்ன என்று தோன்றியது. கருங்கைவாணன் உறுதியான குரலில் தனது திட்டத்தை அறிவித்தான்.

“எமது பேரரசுக்கு இப்பொழுது தேவாங்கு விலங்கு மிகவும் தேவை. உங்களில் எத்தனை பேர் போக வேண்டும் என்று சொல்லுங்கள் அவர்களை அனுப்புகிறோம். நாங்கள் விரும்பியபடி அவற்றை நீங்கள் கொண்டு வந்துவிட்டால் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் விடுவிக்கப் பேரரசர் இசைவு தெரிவித்துள்ளார். இப்பணியைச் செய்ய மறுத்தால், ஆண்கள் எல்லோரும் கப்பலில் அடிமைகளாகச் செல்லத் தொடங்குவீர்கள். ஆனால், மற்றவர்கள் என்னாவார்கள் என்று தெரியாது. ஓர் உத்தரவில் எல்லாம் முடிந்துவிடும். நாளைக் காலைக்குள் முடிவினைச் சொல்லுங்கள்” என்று சொல்லிவிட்டுச் சென்றான் கருங்கைவாணன்.

கூட்டத்தில் இருந்த எல்லோர்க்கும் இச்செய்தி சொல்லப்பட்டது. காலம்பன் கடைசிவரை மறுத்தான். ஆனால், திரையர்குலக் கிழவன் சொன்னான், “உயிர் ஒரு பொருட்டல்ல, ஆனால், கருங்கைவாணனைக் கொல்லும் ஒரு வாய்ப்புக்காக அதனைப் பயன்படுத்தினால் எவ்வளவு பொருளுள்ளதாக மாறும்?”

இவ்வினா காலம்பனுக்குப் புதிய திசைவழியைக் காட்டத் தொடங்கியது. கிழவன் மேலும் சொன்னான், “பறம்பின் மக்களைப் பிடித்துவரச் சொல்லவில்லை. அவ்விலங்கைத்தான் கொண்டுவரச் சொல்லுகிறார்கள். நம் கூட்டமே அதனால் உயிர்வாழும் என்றால், அதனைத் துணிந்து செய்யலாம். நம் மூதாதையர்களே அதற்குத் துணைநிற்பார்கள். நம்மிடத்தில் வைத்து நம்மைச் சிறைப்பிடித்த அவர்களே, அவர்களின் இடத்தில் வைத்து நம்மை விடுவிக்கும் சூழல் வந்துள்ளது. இதனை முதலில் பயன்படுத்துவோம். நாளை இதுவும் மாறும்.”

கிழவனின் சொல் இரவு முழுவதும் காலம்பனின் காதுகளுக்குள் ஒலித்துக்கொண்டே இருந்தது. மறுநாள் காலை காலம்பன் உள்ளிட்ட முப்பது பேரைப் பிணைத்திருந்த கூர்முனை இரும்புச் சங்கிலி கழற்றப்பட்டது.

**கா**லம்பன் நடந்ததைச் சொல்லிக்கொண்டிருந்த பொழுதே பாரியின் கால்கள் நடுங்கத்தொடங்கின. அவனது சொற்கள் உள்ளெலும்புகளை நொறுக்கிக்கொண்டிருந்தன. அவர்கள் திரையர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை உணர்ந்த கணம் பாரியின் மூச்சுக்காற்று உறைந்தது.
காலம்பனின் பாறை போன்ற தாக்குதலை எதிர்கொண்ட பாரியால், முணங்கியபடி சொல்லும் அவனது சொற்களை எதிர்கொள்ள முடியவில்லை. துயரத்தின் கொடூரத்தை செவியினில் வாங்க முடியாத பாரி “அய்யோ…” வென வெடித்துச் சிதறினான். “என் மூதாதையர்களையா கொன்றழித்தேன்? பெரியாத்தா தூதுவையின் பிள்ளைகளையா மாய்த்தேன்?” பாரியின் குரல்வளையிலிருந்து பீறிடும் சொற்கள் அவனைச் சரித்து மண்ணில் வீழ்த்தின.

அதனையும் மீறிப் பீறிட்டது காலம்பனின் கதறல். “நாங்கள்தான் தவறிழைத்தோம். எம் குலம்காக்கும் எண்ணத்துக்காகத் தெரிந்தே தவறிழைத்தோம். சூலிவேளின் குலத்தைக் கொன்றழித்த கொடியவன்

நான். இனியும் நான் உயிரோடு இருக்கக் கூடாது” எனச் சொல்லிக் கொண்டே இடுப்பில் இருந்த குத்துக்கோலை உருவித் தனது கழுத்தில் செருகத்துணிந்தான் காலம்பன். கணநேரத்தில் பாய்ந்து தடுத்தான் தேக்கன்.

இடக்கை ஒடிந்து கட்டுப்போடப்பட்ட நிலையில் ஒருகைகொண்டு காலம்பனைத் தேக்கன் தடுத்தபொழுது, அவனது முகத்தை நேர்கொண்டு பார்க்க முடியாமல் காலில் விழுந்து மன்றாடினான் காலம்பன். “நீங்கள் எங்களின் தாயாதிகள். உங்களைக் கொன்று குவித்த கொலைகாரர்கள் நாங்கள்…” சொல்லிக் கதறும் அவனது கையைக் கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை.


யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை. சூழலின் அவலம் தாங்க முடியாததாக இருந்தது. நெஞ்சு வெடிப்பதைப்போல கதறும் பாரியின் கதறலைப் பறம்பு முதன்முறையாகக் கேட்டது. காலம்பனைத் தனது மார்போடு அணைத்துப் பிடித்த தேக்கன் பாரியைப் பார்த்துக் கைக்குவித்து வேண்டினான். “கதறாதே, நீ பறம்பின் தலைவன். உனது கண்ணீரை இம்மண் அறியக் கூடாது. கதறாதே பாரி” சொல்லிக் கதறினான் தேக்கன்.

பாரியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. “நம்மால் எப்படிக் கண்டறிய முடியாமற் போனது. ஓடுவது நம்குல மாந்தர்கள் என்று நாம் எப்படி அறியாமற் போனோம். எல்லா குலங்களையும் அழியவிடாமற்காத்த நாம், நம் குலத்தை நமது மண்ணில் வைத்தே அழிக்கத் துணிந்துவிட்டோமே” என்று அவன் கதறியபொழுது, “இல்லை பாரி, இல்லை. நாங்கள் உம் குலத்தவரல்லர், அச்சொல்லிற்கான தகுதியை இழந்துவிட்டோம். எம்மைக் கொன்றழித்துவிடு. நாங்கள் செய்த இழிச்செயலுக்கு அதுதான் கைமாறு” சொற்களின் வழியே சாவின் கதவினை வெறிகொண்டு முட்டினான் காலம்பன்.

எந்தக் கையைக்கொண்டு காலம்பன் தனது காலடியைப் பற்றி வணங்கினானோ, அந்தக் கையை ஏந்தி தனது முகத்தில் அறைந்துகொண்டு துடித்தான் பாரி. “மூதாதை தூதுவை எம்மை மன்னிப்பாளா?” என்று கதறும் பாரியின் குரல்கேட்டு தேக்கன் நிலைகுலைந்து மண்ணிற் சரிந்தான்.

``தம் குலத்தைக் காக்கப் பாரியெனும் மாமனிதனையே கொல்லத் துணிந்தேனே” எனச் சொல்லி முகத்தில் அறைந்துகொண்டு துடித்தான் காலம்பன். இணையற்ற வீரர்கள் இருவர் உதிர்க்கும் கண்ணீர் தாங்கிக்கொள்ள முடியாததாக இருந்தது.

வேட்டூர் பழையனும் வந்து சேர்ந்தான். அவலத்தைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. யாராலும் ஆற்றுப்படுத்த முடியாத சூழல் நிலவியது. உணர்வின் பேரலையால் கிழிபட்டுக்கொண்டிருந்தனர் அனைவரும். நிலைமையை மாற்ற வேண்டும் என்று சிந்தித்த கணத்தில் பெருங்குரலெடுத்துக் கத்தினான் பழையன். “பாரி... அழுவதற்குப் பொழுதில்லை. வீழ்ந்தவர்களைக் காப்பாற்ற வேண்டும். அடுத்து செய்ய வேண்டியதைப் பற்றிச் சிந்திப்பாயாக.”



ஒற்றைச்சொல்கொண்டு சூழலையே புரட்டினான் பழையன். மனித மனத்தை இயக்கும் விசையை அறிதலே கலையின் உச்சம். சிக்கலுக்குள் தன்வயப்பட்டுவிட்ட தேக்கனால் அதனைச் செய்ய முடியவில்லை. நிலைமையைப் பழையன் கையிலெடுத்துக்கொண்டான்.

அவனது சொற்கேட்ட கணம் பாரியின் கதறல் உருமாறத் தொடங்கியது. “ஒருவரையும் சாகவிடக் கூடாது. நம்மால் வீழ்த்தப்பட்ட திரையர் குல வீரர்களை உடனடியாகக் காப்பாற்ற வேண்டும்” பதறினான் பாரி. கண்ணீரும் அவலமும் மரணத்தை வெல்லும் வெறியாக மாறியது.

பழையனோடு வந்த வீரர்கள் காடெங்கும் நுழைந்தனர். யார் யார் எங்கெங்கு வீழ்ந்தனர் என்பது பாரிக்கும் தேக்கனுக்கும் துல்லியமாகத் தெரியும். குறிப்புகள் சொல்லி எல்லா இடங்களுக்கும் வீரர்களை அனுப்பினர். ஊர்களில் இருந்த வயதான மருத்துவர்களைத் தோளிலே தூக்கிக்கொண்டு காடெங்கும் ஓடினர் பறம்பின் மக்கள்.

கொம்பேறிமூக்கனின் நஞ்சென்றால் பிழைக்கவைக்க எம்முயற்சியும் எடுக்க முடியாது. ஆனால், கொடிமூக்கனின் நஞ்சு என்பதால் மருத்துவர்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தினர். உறுதியாகப் பலரையும் காப்பாற்ற முடியும் என்று அவர்கள் சொன்ன சொல்லே பாரியின் துயரத்தைக் கட்டுப்படுத்தியது.

அவனும் வீழ்ந்தவர்களை நோக்கி ஓடத்தலைப்பட்டான். காலம்பனால் காலெடுத்து வைக்க முடியவில்லை. குற்றவுணர்வு அவனது முழு ஆற்றலையும் விழுங்கிவிட்டது. `இம்மண்ணில் நடக்கும் தகுதியை நான் இழந்துவிட்டேன் பாரி’ என்று மனம் மன்றாடியபடி இருந்தது. தாங்க முடியாத அவலத்தால் நிலைதடுமாறும் திரையர்குலத் தலைவனைத் தனித்துவிட, பாரி ஆயத்தமாக இல்லை. அவனைத் தாங்கிப்பிடிக்க தனது இருகை ஏந்தினான்.

காலம்பனின் வீரத்தை எதிர்கொள்ள முடிந்த பாரியால் அவனது வேதனையை எதிர்கொள்ள முடியவில்லை. தான் செய்த தவறைக் காலம்பன் மன்னிப்பானா என்று பாரி ஏங்கிய பொழுதெல்லாம்,

“மன்னிக்கக் கூடாத கொடியவன் நான். என்னைக் கொன்று அழித்துவிடு பாரி” என்று மன்றாடினான் காலம்பன்.

வெல்ல முடியாத தோள்வலிமைகொண்ட இருவரும் ஒருவரின் அரவணைப்பில் மற்றவர் நிலைகொண்டனர்.

கழுத்திலே அம்பு பாய்ந்தவனைக் காப்பாற்ற முடியவில்லை. உடலின் பிற இடங்களில் அம்பு பாய்ந்தவர்களையெல்லாம் காப்பாற்றிவிட முடியும் என்று மருத்துவர்கள் உறுதியாகச் சொன்னார்கள். பொருத்தமான மூலிகைகள்கொண்டு சிகிச்சை மிகத்தீவிரமாக நடந்தது. உயிர்மீட்கும் களத்தில் மூலிகைகளை ஏந்தி நிற்கும் பறம்பின் மருத்துவன் எளிதில் தோற்பதில்லை. சுண்டாப்பூனையாலும் இரத்தச் சிலந்தியாலும் கொல்லப்பட்டவர்கள்போக மீதமுள்ள அனைவரையும் காப்பாற்றும் வேலை நடந்துகொண்டிருந்தது. மருத்துவக் குடில்விட்டு நகரவில்லை பாரி.

கண்ணிலே கருஞ்சுரைக்காய் எறிந்து அடிபட்டு வீழ்ந்தவருக்கும் சுண்டாப்பூனையின் தாக்குதலால் கைகால்களை இழந்த மூவருக்கும் சிகிச்சை தீவிரமாக நடந்தது. அவர்களை உயிர்பிழைக்க வைத்துவிட முடியும். ஆனால், உடலுறுப்புகள் இழந்தது இழந்ததுதான்.

பாரியோடு இணைந்து போரிட்ட இரண்டு வீரர்களையும், கீதானியையும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஈட்டி நெஞ்சுக்கூட்டைப் பிளந்து வெளியேறியிருந்தது. அவ்விரு வீரர்களின் உடல்களும் அவர்களின் ஊருக்கு எடுத்துச்செல்லப்பட்டுப் புதைக்கப்பட்டது. கீதானியை எவ்வியூருக்கு தூக்கி வந்தனர்.

தாய்மார்களின் அழுகை ஊரையே உலுக்கியது. கீதானியின் வேகமும் துடிப்பும், பாரியின் கண்களைவிட்டு அகலவில்லை. பெருகும் கண்ணீரைக் காலம்பன் பார்த்துவிடக் கூடாது என்று கட்டுப்படுத்திக்கொண்டிருந்தான்; முடியவில்லை.

கீதானியை நோக்கி ஈட்டியெறிந்த தனது கையை வெட்டி எறிய வேண்டும்போல் இருந்தது காலம்பனுக்கு, ஆனால், அக்கையை இப்போது தனது நெஞ்சோடு அணைத்துப் பிடித்துக்கொண்டிருந்தான் பாரி.

இறந்துபோன திரையர்களோடு கீதானியையும் ஒன்றாய்ச் சேர்த்துப் புதைத்தனர். கொன்ற எல்லோரும் ஒன்றுசேர்ந்து கொல்லப்பட்டவர் களுக்காக அழுது புலம்பினர். குலச்சமூகத்தில் மரணங்களைக் கண்ணீர்கொண்டு கடப்பது மரபன்று. ஆனால், இப்பொழுது அதைத்தவிர வேறு என்ன செய்வதென்று தெரியவில்லை.

புதைகுழிகளை மண்மூடுதலைக் காண முடியாமல் முதலில் அவ்விடம்விட்டு நகர்ந்தது தேக்கன்தான்.

‘தவறிழைத்தது நான்தான்’ என்பது தேக்கனின் மனதில் மிக உறுதியாக நிலைபெற்றுவிட்டது. ‘மூன்று மலைகளைக் கடந்து கொற்றவையின் கூத்துக்களத்துக்கு வந்துள்ளார்கள் என்றால், அது யாரால் முடியும் என்று கணிக்காமல் விட்டுவிட்டேன். பதற்றத்தில் முதலில் தவறிழைத்தது நான்தான். அதுவே அடுத்தடுத்த தவறுகளுக்குக் காரணமாகிவிட்டது.’




`வேந்தர்களின் வீரர்களுக்கு இவ்வளவு ஆற்றல் இருக்காது, அதனினும் உயர்ந்த காரணத்துக்காகவே இது நடக்கிறது என்று பாரி மிகச்சரியாக கணித்துச் சொன்னானே... அப்பொழுதுகூட எனக்குப் புரியாமற் போய்விட்டதே’ தனியே புலம்பித் தவித்து ஆற்றாது அழுதுவடியும் கண்ணீர் நிற்கவே இல்லை. தேக்கனா இது என்று காண்போர் நம்ப முடியாத அளவு மனமொடிந்து இருந்தான் தேக்கன். நடந்ததையெல்லாம் கேள்விப்பட்ட கபிலர் நிலைகுலைந்து போனார். ‘குலசேகர பாண்டியன் ஏன் இந்த முடிவெடுத்தான். தேவவாக்கு விலங்கை எடுத்துவர வேண்டிய தேவையென்ன? இம்முயற்சிக்கு வேறென்னென்ன காரணங்கள் இருக்க முடியும்?’ என்று சிந்தித்தபடி இருந்தார்.

பழையன்தான் வேலைகள் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்துக்கொண்டிருக்கிறான். தேக்கனால் எதுவும் செய்ய முடியவில்லை. பாரியோ முழுமுற்றாக உடைந்து போயிருந்தான். புதைக்கப்பட்ட இடத்தில் மறுநாள் நீரெடுத்து ஊற்றிச் செடிநட்டனர். மாணவர்களைக் கசப்பில் இருந்து மீட்கும் வழிமுறைகளைச் செய்யவேண்டியிருந்தது. மாணவர்களில் காயம்படாதவர்கள் யாரும் இல்லை. ஆனால், கடைசியாகப் பெரும்பள்ளத்தில் உருண்டதால் அலவன் மிகக்கடுமையாகப் பாதிக்கப் பட்டிருந்தான்.

காலம்பனைத் தனது மாளிகையிலே தங்கவைத்துக்கொண்டான் பாரி. தனது மொத்தக்குலமும் அடிமையாகி, இழுத்துச் செல்லப்பட்டு, அதனை மீட்கும் ஒரு வாய்ப்பு வந்தபொழுது அதனைச் செய்வோமா வேண்டாமா என்று பெருங்குழப்பத்துக்கு உள்ளாகி, பின் செய்யத்துணிந்து அதுவும் கைகூடாமற்போன நிலையில் இருக்கும் காலம்பனைப் பற்றிய சிந்தனையிலே இருந்தான் பாரி.

செய்தி அறிந்து தென்திசைக் காவலன் கூழையனும் வடதிசை சென்றிருந்த முடியனும் எவ்வியூர் வந்தடைந்தனர். சேரனின் முயற்சிகளிலே கவனம் குவித்திருந்த அவர்களுக்குப் பாண்டியனின் எதிர்பாராத இந்தத் திட்டம் புரிந்துகொள்ள முடியாததாக இருந்தது. உண்மையில் பாண்டியனின் நோக்கம்தான் என்ன என்பதை அவர்களால் சிந்திக்க முடியவில்லை.

இவற்றைப்பற்றிப் பேச வேண்டும் என நினைத்த தேக்கன், பாரியைத் தேடி வந்தான். அவனோ எவ்வியூரின் உச்சிப்பாறையின் மீதிருப்பதாக வீரர்கள் சொன்னார்கள். உச்சிப்பாறை நோக்கிச் சென்றான் தேக்கன்.

மாலைநேரக் கதிரவன் மறைந்து கொண்டிருந்தான். தனித்து உட்கார்ந்திருந்த பாரியின் மீது பெருங்கவலை கவிந்திருந்தது. காலம்பனோடு தாக்குதல் நடந்த அந்தப் பொழுதுக்குப்பின் இருவரும் பேசிக்கொள்ள வில்லை. தாங்கள் கவனிக்கத் தவறிய பிழைகளை நினைத்து இருவருமே மனமொடிந்து இருந்தனர்.

பாரியின் அருகில் தேக்கன் வந்ததும், அதற்காகக் காத்திருந்தவனைப்போல பேச்சைத் தொடங்கினான் பாரி. “தன் குலத்தைக் காப்பாற்றத்தானே காலம்பன் இம்முயற்சியில் ஈடுபட்டான். தூதுவையின் குலக்கொடிகள் நமக்கும் ரத்த உறவுதானே, அதுவும் நம் குலம்தானே. அதனை மீட்க வேண்டிய பொறுப்பு நம்முடையதுதானே.”

பாரியின் சொற்கள் சடசடவென இறங்கின. அதைவிட வேகமாக அச்சொற்களைச் சுமந்து கீழிறங்கிக்கொண்டிருந்தான் தேக்கன்.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*


# வீரயுக நாயகன் வேள்பாரி-49

ஒரு வாரத்துக்குப் பின்னர் புறப்பட்டனர். நஞ்சுத்தாக்குதலிருந்து விடுபடத் தொடர்ந்து சிகிச்சைத் தேவைப்படுபவர்களும் மிகக் கடுமையாகக் காயம்பட்டவர்களும் எவ்வியூரிலேயே தங்க வைக்கப்பட்டனர். ஓரளவு சமாளிக்கக்கூடிய காயங்களோடு இருக்கும் பதினாறு பேர் புறப்பட்டனர். அவர்களின் தோளிலே நாற்பது தேவவாக்கு விலங்குகள் அடைக்கப்பட்ட இரண்டு கூடைகள் கட்டப்பட்டன. திரையர்களின் இக்கூட்டத்துக்குள் பறம்பின் வீரர்கள் அறுவர் இணைந்தனர். நீலன் உள்ளிட்ட அவர்கள் ஆறு பேரும் நல்ல உடல்வாகுகொண்டவர்கள்தான். அப்படிப்பட்டவர்களைத் தேர்வு செய்துதான் இக்கூட்டத்தோடு இணைத்தான் பாரி. ஆனாலும், திரையர்களுக்கும் இவர்களுக்குமிடையே இருக்கும் வேறுபாடு எளிதில் தெரியக்கூடியதுதான்.

“இவர்களுக்கு இன்னல் ஏதும் வந்துவிடாதா?” என்று காலம்பன் பதறியபொழுது பாரி சொன்னான். “எதிரிகளின் கவனம் முழுவதும் தேவவாக்கு விலங்குகளின் மீதுதான் இருக்கும். வெற்றிக்களிப்பில் இருக்கும் அவர்களின் கண்களுக்கு இந்த வேறுபாடு எதுவும் தெரியாது. கைகால்களில் அடிபட்டு உடல் நெளிந்து குறுகி நிற்கும் பலருக்கு இடையேதான் இவர்கள் இருக்கப்போகிறார்கள். எனவே கவலை வேண்டாம்” என்று சொல்லிய பாரி சற்றே நிறுத்திவிட்டுச் சொன்னான், “ஒருவேளை இவர்கள் கண்டறியப்பட்டால் எப்படி மீள்வது என்று அவர்களுக்குத் தெரியும். இந்த அறுவரில் நீலன் மட்டுமே சிறந்த வீரன். மற்றவர்களும் திறன்மிக்கவர்கள்தான். ஆனால், போரிடுவதில் அல்ல; அதற்குத்தான் நீங்கள் இருக்கிறீர்களே” என்று சொல்லி வழியனுப்பினான்.

எவ்வியூரிலிருந்து அவர்கள் புறப்பட்டனர். நாள்கள் அதிகமானதால் ஐயம் வந்துவிடக் கூடாது எனக் கருதி எங்கும் தங்கவில்லை. ஓர் இரவு இரு பகல்களில் மூன்று மலைகளையும் கடந்து அடிவாரம் வந்தனர். பறம்பின் எல்லையைவிட்டு அகன்று சமதளக்காட்டின் உட்பகுதியிலிருந்த கல்மண்டபத்துக்குத் தன் கூட்டத்தோடு வந்து சேர்ந்தான் காலம்பன். அவனது வரவை எதிர்நோக்கியிருந்தனர் பாண்டியநாட்டு வீரர்கள். காலம்பன் இரு கூடைகளில் எண்ணற்ற தேவாங்குகளோடு வந்தது அளவற்ற மகிழ்ச்சியைத் தந்தது. அனைவரையும் தேரிலே ஏற்றி உடனடியாக மதுரை நோக்கிப் புறப்பட்டனர்.

மணவிழா முடிந்து மூன்று வாரங்கள் ஆகியிருந்தன. தனது வாழ்வில் காணாத பெருவிழாவினைக் கண்டுமுடித்த மதுரை இயல்புநிலைக்குத் திரும்பிக்கொண்டிருந்தது. பெரும்பாலான விருந்தினர்கள் விழா முடித்துப் புறப்பட்டுவிட்டனர். மிகச் சிலர் மட்டுமே இன்னும் இருக்கின்றனர்.
பொற்சுவை இப்போது பாண்டியகுல இளவரசி. இப்பேரரசின் குலவழக்கமும் அரசவிதிகளும் எளிதிற் புரிந்துகொள்ளக்கூடியவை அல்ல. ஒரு பேரியக்கத்துக்கு நடுவில் சிக்கி நகரும் சிற்றுயிராகத் தன்னை உணர்ந்தாள். தனது போக்கில் எல்லாம் போய்க்கொண்டிருந்தன. யாரால் எங்கு, எது முடிவுசெய்யப்படுகிறது என்பதை அவளால் எளிதில் கண்டறிய முடியவில்லை.




அவளது கண்கள் எப்போதும் தேடிக்கொண்டிருப்பது சக்கரவாகப் பறவைகளையும் சுகமதியையும்தான். நாள்தோறும் பார்க்க ஆசைப்பட்டும் சுகமதி, பொற்சுவையின் கண்களில் படவேயில்லை. அவளால், தான் இருக்கும் இடத்திற்குள்ளே எளிதில் நுழைய முடியவில்லை என்பதைப் புரிந்துகொண்டாள் பொற்சுவை. இருவாரங்களுக்கு மேல் காத்திருந்த அவள், பொருத்தமான நேரத்தில் அரண்மனைக்கான மொழியில் பேசத் தொடங்கினாள்.

துறைமுகம் நோக்கிச் செல்ல இருந்த வணிகக் குடும்பங்களோடு புறப்பட ஆயத்தமாக இருந்தாள் சுகமதி. அரண்மனையிலிருந்து `விரைந்து வா' என அழைப்பு வந்தது. மூன்று வாரங்களுக்குப் பின் பொற்சுவையைப் பார்க்கப் புறப்பட்டாள் சுகமதி. மனதுக்குள் எண்ணங்கள் பேரலைகளாய் எழுந்து வந்தன. பார்க்கப்போகும் அந்தக் கணத்தை நெருங்க முடியாமலும் விலக்க முடியாமலும் தவித்தபடி அந்தப்புரத்துக்குள் நுழைந்தாள்.

ஒவ்வொரு நெடுங்கதவைத் தாண்டும்பொழுதும் விசாரிக்கப் பட்டாள். எல்லாம் நடுத்தர வயதுப் பெண்கள். பார்வையின் இறுக்கமே விருப்பமற்ற அனுமதியைச் சொன்னது. எல்லாவற்றையும் கடந்து உள்நுழைந்தாள்.

பொற்சுவையைப் பார்க்கும் அந்த முதற்கணத்தில் தனது முகம் வெளிப்படுத்தப்போகும் உணர்வு என்னவாக இருக்கப்போகிறது, கவலையின் கோடு படியாத, அதே நேரம் அவளின் கவலையை அதிகப்படுத்தாத ஓர் உணர்வுநிலையில் இருக்கத் தன்னை ஆயத்தப்படுத்தியவாறே அறைக்குள் நுழைந்தாள்.

சுகமதிக்காகக் காத்திருந்த பொற்சுவை மலர்ந்த முகத்தோடு அணைத்து வரவேற்றாள். மதுரைக்கு வந்ததிலிருந்து பொற்சுவையின் முகம் இவ்வளவு மலர்ந்து யாரும் பார்த்ததில்லை. சுகமதி திகைத்துப் போனாள். ‘எளிதில் மயங்கி மகிழும் பெண்ணல்ல பொற்சுவை, அப்படியிருக்க அவளின் முகத்திலிருக்கும் இந்த மகிழ்வின் காரணமென்ன?’ சுகமதிக்குப் பிடிபடவில்லை.

மனம் ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கியது. முகத்தின் குறிப்பை எளிதில் கண்டறிவாள் பொற்சுவை என்பதறிந்து அவளை நேர்கொண்டு பார்க்காமல் சக்கரவாகப் பறவைக்கூண்டு இருந்த மேடைநோக்கி இயல்பாய்த் திரும்பினாள். திரும்பிய கணம் அவளுக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. கூட்டிற்குள் பறவைகளில்லை. “அவை..?”

சுகமதி வினாவை முடிக்கும் முன்னே பொற்சுவை சொன்னாள், “ஆம் சுகமதி. பறந்துவிட்டன.”
சட்டென வந்த பொற்சுவையின் மறுமொழிக்குள் இழப்பின் கவலை எதுவுமில்லை. மணவாழ்வு எல்லாவற்றையும் மறக்கவைத்து புத்துலகைக் காண்பிக்கத் தொடங்கிவிட்டது என்பதைப் புரிந்துகொண்ட சுகமதி, தனது கவலை வெளிவராத தன்மையோடு உடனே கேட்டாள், “எப்பொழுது பறந்தன இளவரசி?”

“எனது திருமணம் முடிந்த ஏழாம்நாள் இரவு அவை பறந்துவிட்டன.”

”நீங்கள் பார்த்தீர்களா?”
”இல்லை.அன்றிரவுதான் அயர்ந்து தூங்கினேன்.”

“ஆறு நாள்களும் தூங்காமலா இருந்தீர்கள்?” என்ற கேள்விக்குள் நக்கல் ஓடி மறைந்தது. “புது மணப்பெண்ணுக்கு தூக்கம் எப்படி வரும்?” என்று தனக்குத்தானே சொல்லிச் சிரித்தபடி கார்காலத்துப் பள்ளியறையின் வியப்புக்குள் மூழ்கினாள். பள்ளியறையின் மேற்கூரை முழுவதிலும் விண்மீன்கள் வரையப்பட்டிருந்தன. சுவர் முழுவதிலும் அழகிய ஓவியம் இடம்பெற்றிருந்தது. கண்களை எங்கும் ஓடவிட்டுக்கொண்டிருந்தாள்.

படுக்கையின்மேல், பட்டு இழைகளால் நெய்யப்பட்ட எலிமயிர்ப் போர்வை கிடந்தது. அதன் வண்ணங்கள் கண்களைப் பறித்தன. பார்த்தபடி நின்றாள்.

”எதைப் பார்த்து வியந்து நிற்கிறாய் சுகமதி?”



“வெண்பட்டால் ஒளிமிதக்கும் இவ்வளவு அகலமான படுக்கையை நான் பார்த்ததேயில்லை இளவரசி.”

“அப்படியா?”

“ஆம், இளவரசி.”

“உனக்கு மணமாகும்பொழுது சின்னஞ்சிறு கட்டிலில் படுக்கையை அமைத்துக்கொள்.”

சரியென்பதுபோலத் தலையாட்டினாள். ஆனால், அவளது கண்கள் காரணத்தைக் கோரின. பொற்சுவை சொன்னாள், “கணவன் மனைவிக்கான அகவாழ்வுக்கு அகன்ற படுக்கையைப்போல் இடையூறான இன்னொரு பொருள் எதுவுமில்லை.”

சொல்லியபடி நடந்தாள் பொற்சுவை. அவள் கண்டறிந்து சொல்லும் உண்மை காட்சியாய் சுகமதியின் மனதுக்குள் விரிந்துகொண்டிருந்தது.

“காதலுக்குத் தேவை கட்டிலின் அகலமல்ல; இது பறக்க வேண்டிய இடமல்ல; புதைய வேண்டிய இடம். அது தெரியாத மூடர்களே அறையில் பாதியைக் கட்டிலாகச் செய்கின்றனர்.”

பொற்சுவையின் விளக்கம் சுகமதியை மயக்கியது. கட்டில் செய்த கலைஞனின் மீதான அவளது கோபத்தை நினைத்து உள்ளுக்குள் மகிழ்ந்தாள் சுகமதி. வாழ்வின் இன்னொரு வாசலின் வழியே உள் நுழைந்துவிட்டாள் என்பது பொற்சுவை உதிர்க்கும் ஒவ்வொரு சொல்லிலும் வெளிப்படுகிறது. அதனை

நினைத்து மகிழ்ந்தபடியே அவளைப் பின்தொடர்ந்தாள் சுகமதி.

அறையைவிட்டு வெளியில் வந்தாள் பொற்சுவை. சக்கரவாகப் பறவைக் கூண்டருகில் நின்றபடி சொன்னாள், “மழையோடு வந்த பறவைகள், மழை நிற்கும்போது மழைபெய்யும் பகுதிக்கு மழையோடு சேர்ந்து போய்விடுகின்றன. அவற்றின் இறகுகள் எப்பொழுதும் ஈரத்துடனே இருக்கின்றன. அவற்றின் அலகைவிட்டு மழையின் வாசனை மறைவதேயில்லை. மழைநீர் மட்டுமே அருந்துகின்றன. மற்ற பறவைகளைப்போல இவையும் முட்டையிட்டு அடைகாத்துத்தான் குஞ்சு பொறிக்கின்றன. ஆனால் மழைத் துளிப்பட்டே முட்டையோடு உடைந்து குஞ்சு வெளிவரும் நிகழ்வு இவற்றுக்குத்தான் நிகழ்கிறது.”

பொற்சுவை சொல்லி முடிக்கும்முன் சுகமதி கேட்டாள், “மழைக்காலம் இன்னும் முடியவில்லையே, அதற்குள் ஏன் பறந்துவிட்டன?’’

``அவை காதல் பறவைகளல்லவா? அதனால்தான் பறந்துவிட்டன.”

”காதல்கொள்வதற்கும் மழைக்காலம் முடிவதற்குள் பறப்பதற்கும் என்ன தொடர்பிருக்கிறது?” சுகமதியின் வினாவைத் தனது அசட்டுச் சிரிப்பால் எதிர்கொண்ட பொற்சுவை சொன்னாள், ”படுக்கையில் தனித்திருக்கும் ஒருத்தியை எத்தனை இரவுகள்தான் அவற்றால் பார்த்துக்கொண்டிருக்க முடியும்?”

அதிர்ந்தாள் சுகமதி. அதுவரை பொற்சுவை பேசிய சொற்களுக்கும், மலர்ந்திருக்கும் அவளது முகத்துக்கும் காரணம் அறியவந்தபொழுது நடுங்கி நின்றாள்.

**அ**வர்களின் தேர், மாலைக்குள் கோட்டையின் மேற்குவாசலுக்குள் நுழையும் என்று முன்வந்த வீரன் செய்தி சொன்னான். அச்சொல்லில் இருந்து பரவியது பரபரப்பு. நம்ப முடியாதவற்றை நம்பப்போகும் பொழுதுக்காக ஆயத்தமாயினர். இளவரசன் பொதியவெற்பன் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தான். வெற்றிச்செருக்கோடு இருந்த கருங்கைவாணன் அவர்களின் நுழைவை எதிர்பார்த்து மேற்குவாசல் மாடத்திலே காத்திருந்தான்.



பேரரசர் குலசேகரபாண்டியனை இவ்வளவு மகிழ்வோடு யாரும் பார்த்ததில்லை. முசுகுந்தர் போன்று நெடுங்காலம் அவருக்கு அருகிலே இருக்கும் மனிதர்களுக்கே அது வியப்பாக இருந்தது. மகிழ்வோ, துக்கமோ உணர்ச்சியை எளிதில் காட்டிக்கொள்ளாதவர் பேரரசர். அவரது முகக்குறிப்பிலிருந்து அவரை கணித்துவிட முடியாதென்பது பலரும் அறிந்த உண்மை. ஆனால், இன்று பேரரசரின் உடலும் மனமும் பூரிப்பில் திளைத்தன.

அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. உலகமே வியக்குமளவிற்கு மிகச் சிறப்பாக நடந்து முடிந்த திருமணம், அத்திருமணத்தை முன்னிட்டு கடல்வணிகத்துக்கு அச்சாணி போன்று திசைகாட்டும் விலங்கொன்றைக் கண்டறிந்தது, அதனை எடுத்துவர எந்த வாய்ப்புமில்லை என்று கவலைப்பட்டபொழுது மிகச் சிறப்பான திட்டமிட்டு அதனை எடுத்து வந்தது என எண்ணற்ற காரணங்கள் ஒன்று சேர்ந்துகொண்டன. அதனால்தான் பேரரசர் மகிழ்ச்சியின் உச்சத்தில் திளைக்கிறார் என வெள்ளிகொண்டார் நினைத்தார். ஆனால், முசுகுந்தர்தான் இன்னும் ஆழத்துக்குப்போய்ச் சிந்தித்தார். யாரும் உள்நுழைய முடியா இடமெனக் கருதப்பட்ட பறம்பிக்குள் செல்லும் ஆற்றலை நாம் மெய்ப்பித்துள்ளோம். இன்றுவரை பிற பேரரசுகளால் நினைத்துப் பார்க்க முடியாத செயல் அது.

கடற்பரப்பில் பாண்டிய நாட்டின் ஆற்றல் பன்மடங்கு உயரப்போகிறது. வணிகத்திலும் அரசியலிலும் அது ஏற்படுத்தப்போகும் தாக்கம் அளவிட முடியாததாக இருக்கும். இத்திருமணம் எந்த நோக்கத்தை உள்ளீடாகக்கொண்டிருந்ததோ, அந்த நோக்கம் கனிந்து பழுக்கத் தொடங்கியுள்ளது. முசுகுந்தரின் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

ஒன்றுடன் மற்றொன்று சேரும்பொழுது இரண்டாகும் என்றுதான் பலரும் நினைக்கின்றனர். ஆனால், உண்மையில் அப்படி நடப்பதில்லை. இரண்டு ஆற்றல்கள் இணையும்பொழுது அவை பலவாகத்தான் மாறுகின்றன. நாம் எண்ணிப்பார்க்க முடியாத மடங்குகளாக அவை பரிணமிக்கின்றன.
தனது இருக்கையிலிருந்து எழுந்த பேரரசர் மாளிகையின் மேன்மாடம் நோக்கிச் சென்றார். அவரின் முகக்குறிப்பறிந்து முசுகுந்தர் பின்சென்றார். தேவாங்கினைக் கொண்டு வருகிறவர்கள் வந்துசேரும் நேரம் வரை பொழுதைக் கடப்பது கடினமாகவே இருந்தது. இட்டுநிரப்ப முடியாத காலத்தைக் கையில் வைத்துக்கொண்டு தத்தளித்தனர் இருவரும். மனம் அதனை எவ்வளவு எதிர்பார்த்திருக்கிறது என்பதை எதிர்படும் ஒவ்வொரு கணமும் சொல்லியது.

பேரரசர் மேலேறி வரவும் காவல்வீரர்கள் அகன்று விலகினர். மாடத்திலிருந்த புறாக்கள் படபடத்து வெளியேறின. அவற்றைப் பார்த்தபடி பேரரசர் கேட்டார், “புதிய வரவு அறிந்து, ஏற்கெனவே நிலைகொண்டவை விலக வேண்டியது விதிதானே?”

முசுகுந்தர் சற்றே திகைத்தார். மகிழ்வின் ஆழத்துக்குள் இருந்தபடியே அடுத்த கட்டத்திற்கு பேரரசர் ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறார் என்பது புரிந்தது. எப்பொழுதும்போல் முகம் பார்த்துக் கணிக்க முடியாத இடத்தில்தான் இப்பொழுதும் அவர் இருக்கிறார் என்பதை முசுகுந்தர் உணர்ந்தார்.

“என்ன அமைதியாய் இருக்கிறாய்?”


“தாங்கள் சொன்னதைப் பற்றித்தான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன் பேரரசே. வீரர்களைப்போல தள்ளி நிறுத்த வேண்டியது யாரை? புறாக்களைப்போல தொலைவிற்கு விரட்ட வேண்டியது யாரை?”

சொல்லிவிட்டு அமைதியானார் முசுகுந்தர். 'தான் சொல்லைச் சிதறவிட்டுவிட்டோம். இனி அதனை நிரப்புவது எளிதல்ல' எனத் தோன்றியது. யவனர்கள், சூல்கடல் முதுவன் ஆகிய இருபெரும் ஆற்றல்கொண்டோரோடு விளையாட வேண்டிய விளையாட்டிது. இதில் யாரை அருகில் வைப்பது? யாரைத் தொலைவில் வைப்பது? பேரரசர் என்ன நினைக்கிறார்? அதனை அறியாமல் எதுவும் சொல்லிவிடக் கூடாது' என மனம் திணறியது.

உலகில் எங்கும் இல்லாத முத்துக்களையுடையது பாண்டிய நாடு. என்ன விலை கொடுத்தேனும் அம்முத்துக்களை வாங்கி மகிழும் யவனர்கள். இவை இரண்டுக்கும் இடையில் பரவியிருக்கும் பெருங்கடலை விடாது கடக்கும் வணிகர்கள். இம்மூன்றின் வரிசைப்படிநிலையில் மாற்றம் வரும் சூழல் உருவாகப்போகிறது. இதில் யாரை எங்கு நகர்த்துவது என்பதே தலையாய முடிவு. நாம் கண்டறிந்து கைப்பற்றியுள்ளதோ, வணிகர்களையும் யவனர்களையும் ஒருசேரத் திகைக்கவைக்கப் போகிறது.

கடலை வெல்லும் கண்டுபிடிப்பு இது. இதன் மதிப்பு எல்லையற்றது. காலம் கடந்தாலும் மதிப்பிழக்காதது. அதனை முழுமையாகப் புரிந்துகொண்டு நாம் முடிவெடுக்க வேண்டும். பதட்டத்தில் எதனையும் செய்துவிடக் கூடாது."

பேரரசர் உச்சரிக்கும் சொற்கள் மிகக் கவனமானவை என்பதை முசுகுந்தர் உணர்வார். பதற்றத்தில் ஏதோவொரு முடிவு எடுக்கப்பட்டு விட்டது. அதனால்தான் இச்சொல்லை அவர் பயன்படுத்துகிறார் என்று முசுகுந்தரால் கணிக்க முடிந்தது. என்ன நடந்திருக்கும் என நினைவுகூர்ந்தபொழுது அவரது சிந்தனைக்கு எட்டியவர் சூல்கடல் முதுவன்.தேவாங்கினைக் கொண்டுவந்துகொண்டிருக்கும் செய்தி பேரரசருக்குச் சொல்லப்பட்டவுடனேயே அவருக்கும் சொல்லப்பட்டுவிட்டது. சூல்கடல் முதுவனும் அரங்கிற்கு வந்துவிட்டார். ஏதோ ஒருவகையில் அது தவறு என்று பேரரசர் கருதுகிறார் என்பதை முசுகுந்தர் உணர்ந்தார்.



அன்பு, உறவு, ஆசை, மகிழ்வு என உணர்வுகளால் நெருங்க முடியாததாக இருக்க வேண்டும் அரசாட்சி. அதன் விதிகள் எதன் பொருட்டும் கீழிறங்கக் கூடாது. நாட்டின் விதியை எழுதுகிறவனுக்கு வேறு எவையும் பொருட்டல்ல. பேரரசர் குலசேகரபாண்டியன் மாடத்திலிருந்து கீழிறங்க முனைந்தபோது தள்ளி நிறுத்த வேண்டியவர்களையும் தொலைவிற்கு விலக்க வேண்டியவர்களையும் பற்றிய கணிப்புக்கு வந்தார் முசுகுந்தர். அதில், தான் நிற்கவேண்டிய இடம் எது என்பது மட்டும் அவருக்குப் பிடிபடவில்லை.

வழக்கம்போல் நாழிகையின் மணியோசை கோட்டையின் நடுவிலிருந்து ஒலித்தது. கோட்டையின் நெடுங்கதவுகளை மூடச்சொல்லும் உத்தரவது. மேற்குவாசலின் மேல்மாடத்தில் தளபதி கருங்கைவாணன் நின்றுகொண்டிருந்தான். அவனோடு கோட்டைத்தளபதி சாகலைவன் நின்றான். இளமாறனும் செவியனும் சற்றுத் தள்ளி நின்றுகொண்டிருந்தனர்.

கீழ்நின்றுகொண்டிருந்த காவல்வீரர்களுக்கு நெடுங்கதவை மூடலாமா வேண்டாமா என்று முடிவெடுக்க முடியவில்லை. முக்கியமானவர்களின் வரவை எதிர்பார்த்துத் தளபதி உள்ளிட்டவர்கள் மேலே நின்றுகொண்டிருக்கின்றனர். அப்படியிருக்க நாம் கதவினை மூடினால் என்னவாகும் என நினைத்துக் குழம்பிப்போய் நின்றனர். கட்டுத்தறியில் இருந்து யானை வந்து சேர்ந்தது. கோட்டைக்கதவின் குறுக்குத்தடியை யானையைக்கொண்டே தூக்கிச்செருக வேண்டும். காவல் வீரர்கள் யானைப்பாகனைப் பொறுத்திருக்கச் சொன்னார்கள். அவனுக்குக் காரணம் புரியவில்லை. சரி நிற்போம் என முடிவெடுத்து நின்றான்.
மேல்தளத்தில் நின்றுகொண்டிருந்த இளமாறனுக்கும் செவியனுக்கும் கோட்டைவாசல் தளபதி மாரையனின் நினைவு வந்துபோனது. அன்று இரு தேவாங்குகளோடு நாம் வந்தபோது நெடுநேரம் கோட்டையின் வெளிப்புறம் நின்றோம். ஆனால், இன்று அதே தேவாங்கு வரவிருப்பதற்காகக் கோட்டையின் மேலே தளபதி நிற்கிறார்; கோட்டைக்குள்ளே யானை வந்து நின்றுகொண்டிருக்கிறது.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் குதிரைகள் பாய்ந்து வந்துகொண்டிருந்தன. திரையர்களையும் தேவாங்குகளையும் கொண்டுவரும் வண்டிகள் வேகம் குறையாமல் கோட்டைக்குள்ளே நுழைந்தன. குதிரைகளின் பாய்ச்சல்கண்டு நிறுத்தப்பட்டிருந்த யானை பிளிறியது.

இளமருதனும் செவியனும் கோட்டையின் உட்பக்கமாகப் பார்க்க, நான்கு வண்டிகள் வரிசையாகக் கோட்டைக்குள் நுழைந்தன. வண்டியின் முன்னும் பின்னும் குதிரையில் ஆயுதம் தாங்கிய காவல்வீரர்கள் வந்தனர். வண்டிக்குள் இருந்தவர்கள் அனைவரும் சங்கிலி கொண்டு பூட்டப்பட்டிருந்தனர். கோட்டையை நெருங்கும்பொழுது அனைவரையும் சங்கிலி கொண்டு பூட்டியுள்ளனர். மூன்று வண்டிகளில் திரையர்கள் இருந்தனர். ஒரு வண்டியில் தேவாங்கு விலங்குகள் இருக்கும் இரண்டு கூடைகளை வைத்துக்கொண்டு மதுரை வீரர்கள் அமர்ந்திருந்தனர்.

கூட்டுவண்டியின் சட்டகங்களின் இடைவெளியின் வழியே மதுரையைப் பார்த்தான் நீலன். கோட்டையின் உயரமும் பெருங் கட்டடங்களும் விரிந்து நீண்ட வீதிகளும் பெரும்வியப்பை ஏற்படுத்துவனதான்; ஆனால், நீலனின் கண்களுக்கு அவைப் பொருட்டாகப் படவில்லை. அவனது கண்கள் பிளிறிய யானையைப் பார்த்தன. அதன்மீது அகுதை வீற்றிருப்பதுபோலத் தெரிந்தது. இசைகேட்டு மகிழும் அசுனமாக்கள் நினைவில் வந்து முட்டிக்கொண்டிருந்தன. காலங்காலமாய் கதைகளின் வழியே அவன் அறிந்த மதுரையைக் கண்களின் வழியே அறிந்துகொண்டிருந்தான். மதுரை அவனுக்குள்ளிருந்து எட்டிப்பார்த்தது. ஒரு கணம் உடல் சிலிர்த்து அடங்கியது.

அவனது கண்கள் வைகையைத் தேடின. வண்டிகள் நகரின் நெடுவீதியின் வழியே நுழைந்து சென்றன. உடன் வந்தவர்களின் கண்களில் அடுத்து நடக்கப்போவதன் பதற்றம் தெரியத் தொடங்கியது. நீலனின் கண்கள் பரிதவித்தன. அருகிலிருந்த காலம்பனிடம் கேட்டான், “வைகை எங்கே இருக்கிறது?”

`ஏதோவொரு திசையைச் சொன்னார்களே’ என்று காலம்பன் சிந்தித்துக்கொண்டிருக்கையில் வண்டிகள் நின்றன.

அனைவரும் கீழே இறக்கப்பட்டனர். மதுரையின் வீரர்கள் தேவாங்குகள் இருந்த கூடைகளைச் சுமந்தபடி அரண்மனைக்குள் சென்றனர். சிறிதுநேரம் கழித்துத் திரையர்களைக் கவசவீரர்கள் சூழ்ந்தபடி வண்டியிலிருந்து இறக்கித் தொலைவில் இருந்த மாளிகை ஒன்றில் நிறுத்தினர்.

பேரரசரின் தனித்த மாளிகை. அலங்கார வேலைப்பாடுகளில் இதற்கு இணைசொல்ல எதுவுமில்லை. குலசேகரபாண்டியன் தனது இருக்கையில் அமர்ந்திருக்க, அவரின் கண்முன்னால் பறம்புநாட்டின் தேவவாக்கு விலங்குகளைக் கொண்டுவந்து இறக்கினர் வீரர்கள். இக்காட்சியைப் பார்க்கும் யாவரும் மெய்சிலிர்த்து உறைந்தனர்.



இது நடந்துவிட்டது என்பதை மனம் இன்னும் நம்ப மறுத்துக்கொண்டுதான் இருந்தது. ஆனால், கண்களுக்கு முன்னால் நாற்பது தேவாங்குகள் இருந்தன. இரண்டின் இடுப்பில் தோல்கொண்டு கட்டி மாமன்னரின் கைதொடத் தாங்கி நின்றனர் வீரர்கள். தனது வலக்கையின் நடுவிரலால் அவற்றின் தலைதொட்டுத் தடவினார் பேரரசர். வடதிசை நோக்கிச் சரியும் காலக்கோடு அவரின் விரல்வழியே நகர்ந்தது இறங்கியது.

அரசவை மகிழ்வில் திளைத்தது. கருங்கைவாணனை வானளாவப் பாராட்டினார் பேரரசர். இளமருதனும் செவியனுங்கூட பாராட்டப்பட்டனர். மையூர்கிழார் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தார்.

பொதியவெற்பனின் கண்கள் அந்த விலங்குகளைவிட்டு அகலவேயில்லை. பாண்டியப்பேரரசின் வளமிக்க எதிர்காலத்தை அவற்றின் வட்டவடிவ கண்களுக்குள் பார்த்துக்கொண்டிருந்தான். அந்துவன் மிக அடக்கமாகத் திசைவேழருக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்தான். தன் தலைமாணாக்கனை நினைத்து, பேரறிவின் செருக்கோடு வீற்றிருந்தார் திசைவேழர். கூடையிலிருந்த ஒரு தேவாங்கைப் பிடித்துவந்து அவரின் கைகளில் ஒப்படைத்தான் மாணவன் ஒருவன். அதனை வாங்கியபடி உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார் திசைவேழர். கைகளுக்குள் அடங்கும் ஒரு சின்னஞ்சிறு உயிரினம் காலப்பெருவெளியின் ஆதி ரகசியத்தைத் தன்னுள் கொண்டுள்ளது. இயற்கை ஒன்றுக்குள் ஒன்றாகத் தனது உண்மைகளை மறைத்துவைத்து விளையாடுகிறது. இவற்றையெல்லாம் கண்டறிவதும், இணைப்பதும், புரிந்துகொள்வதும் எவ்வளவு சுவையூட்டக்கூடிய ஒன்று.

திசைவேழர் சிந்தித்துக்கொண்டிருக்கையில் `கண்டறியப்பட்ட திசைகாட்டும் தேவாங்கை எவற்றோடு இணைக்க வேண்டும், யாரும் புரிந்துகொள்ள முடியாத விளையாட்டை எப்படி விளையாட வேண்டும்' என மனதுக்குள் திட்டம் வகுத்துக்கொண்டிருந்தார் பேரரசர்.

சூல்கடல் முதுவனைப் பார்த்துப் பெருமகிழ்வோடு பேரரசர் கூறினார், “இருபது தேவாங்குகளைப் பத்துக் கப்பல்களிலேற்றி முதல் பயணத்தைத் தொடங்குங்கள். காற்றையும் கடலையும் வெல்லும் பயணமாக அது அமையட்டும். நாடுகளையும் கடலோடிகளையும் வணிகர்களையும் பெருவியப்பில் ஆழ்த்துங்கள். நடுக்கடலில்கூட இயல்பாய் திசை திரும்பிப் பயணிக்கும் துணிச்சலைக்கண்டு யவனர்களே வியந்து நிற்கட்டும்.”

பேரரசரின் அறிவிப்பால் அவை மகிழ்வில் திளைத்தது. சூல்கடல் முதுவன் மீண்டும் மீண்டும் வணங்கித் தனது நன்றியறிதலைத் தெரிவித்தான். முசுகுந்தர் மட்டும் ஆழ்ந்து சிந்தித்து நடப்பதைப் புரிந்துகொள்ள முயன்றுகொண்டிருந்தார். இது தேவாங்கோடு சேர்த்து சூல்கடல் முதுவனையும் சோதித்துப்பார்க்கும் திட்டம் என்று அவருக்குத் தோன்றியது.

மறுகணம் அறிவித்தார், “திறன்மிகு தோளும் பாறை மார்பும்கொண்ட இத்திரையர்களை நான் யவனர்களுக்குப் பரிசாக வழங்குகிறேன்.”

அவை திகைத்து நின்றது. “அவர்களின் குடும்பங்கள் அனைத்தையும் விடுதலை செய்கிறேன்” என்றும் கூறினார்.

திருமணத்தை முன்னிட்டு சூல்கடல் முதுவனுக்குப் பரிசாக வழங்கத்தான் திரையர்கள் சிறைபிடித்து வரப்பட்டனர். ஆனால், முற்றிலும் மாறுபட்டு யவனர்களுக்கு ஏன் பரிசாக வழங்குகிறார் என்று கருங்கைவாணனுக்கு விளங்கவில்லை, பொதியவெற்பனுக்கும் விளங்கவில்லை. ஆனால், முசுகுந்தரால் ஓரளவு விளங்கிக்கொள்ள முடிந்தது.




பேராற்றல்கொண்ட கருங்கொள்ளையர் களுக்கு இணையானவர்கள் எங்களிடமும் உண்டு. அவர்களை அடிமைகளாகப் பயன்படுத்துகிறோம் என்றால், பாண்டியநாட்டின் ஆற்றல் எவ்வளவு வலிமை வாய்ந்ததாக இருக்கும் என்பதை யவனர்களுக்கு மறைமுகமாக உணர்த்தும் ஏற்பாடு இது.

நடந்து முடிந்துள்ள திருமணம் பாண்டியநாட்டின் செல்வ வளத்தைப் பறைசாற்றியுள்ளது. அதேநேரத்தில் தேவாங்கின் மூலம் கடற்பயணத்தில் ஏற்படப்போகும் மாற்றத்தையும் அது பற்றிய செய்தியையும் யவனர்கள் அறியப்போகின்றனர். அதற்கு முன்பே பாண்டியநாட்டின் வலிமையை அவர்கள் அறிவது அவசியம்.

சிதறும் பரல்போல அரங்கு முழுவதும் மகிழ்வின் ஒளி பரவிக்கிடந்தது. பேரரசர் இருக்கையைவிட்டு அகன்றார். கொண்டுவந்ததில் மீதமுள்ள தேவாங்குகள் அரசின் பாதுகாப்பில் இருக்கட்டும் என்று முடிவெடுத்து அதனை நடைமுறைப்படுத்தும் பணி தொடங்கியது.

தனித்த மாளிகையில் நிறுத்தப்பட்டிருந்த திரையர்களைக் கவசவீரர்கள் வெளிப்புறமாக அழைத்துச்சென்றனர். உள்ளே என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாது. காலம்பனால் நிலைமையைக் கணிக்க முடியவில்லை என்பதை அவனது முகக்குறி சொன்னது. நீலன், காலம்பனை மட்டுமே கவனித்துக்கொண்டிருந்தான்.

கடினமான இரும்புச்சங்கிலிகள் பட்டியக்கல்லை உரசி நகர, அவர்கள் கவச வீரர்களின் பின்னால் நடந்துகொண்டிருந்தனர்.


*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-50

பூட்டப்பட்ட இரும்புச்சங்கிலிகளைக் கழற்றாமலேயே திரையர்களை வண்டியில் ஏற்றினர். அவர்களுக்கு என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. வாக்குறுதி அளித்த கருங்கைவாணனை அதன்பின் அவர்களால் காணமுடியவில்லை. கோட்டைத்தளபதி சாகலைவன் மட்டும் வந்தான். சிறிதுநேரத்தில் தலைமை அமைச்சர் முசுகுந்தர் வந்தார்.

உட்கார்ந்திருந்த அனைவரும் எழுப்பி நிற்கவைக்கப்பட்டனர். இருவரால் எழுந்து நிற்க முடியவில்லை. முசுகுந்தர் சொன்னார், “உங்கள் குடும்பங்கள் அனைத்தையும் விடுதலை செய்யுமாறு பேரரசர் உத்தரவிட்டுள்ளார். உங்களை யவனர்களுக்குப் பரிசாக வழங்கியுள்ளார்.”
அனைவரும் உறைந்து நின்றனர். ‘கொடுத்த வாக்கினை மதிக்கத் தவறும் மனிதர்களிடம் பேச என்ன இருக்கிறது’ என்று காலம்பனுக்குத் தோன்றியது. “எழுந்திருக்க முடியாமல் காயங்களோடு கிடக்கும் இருவரை யவனர்களுக்குப் பரிசளிப்பது இழிவு. அவர்களை விடுதலைசெய்யப்படுபவர்களோடு சேர்த்து அனுப்பிவிடுங்கள்” என்று சொல்லிவிட்டுச் சென்றார் முசுகுந்தர்.

அந்த இருவரும் தனியே பிரிக்கப்பட்டனர். “விடுதலையானவர்களைப் பறம்புமலைக்கு அழைத்துச் சென்றுவிடுங்கள். எங்களைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்” என அவர்களிடம் காலம்பன் செய்தி சொல்லியனுப்பினான்.




வண்டிகள் வைகைக்கரையோரமாகவே கீழ்க்கடல் நோக்கிப் பயணப்பட்டன. நீலனின் கண்கள் வைகையைப் பார்த்தபடி வந்தன. ஆற்றில்தழும்பி ஓடியது நீர். இருகரைகளிலும் நாணற்புதர்

மண்டிக்கிடந்தது. வண்டிச்சக்கரங்கள் மண்ணில் புதைந்து உருண்டன. நெடும்பயணமாதலால் திரையர்களை நெருக்கி அடைக்காமல், அதிகப்படியான வண்டிகளில் அழைத்துச் சென்றனர். காளைகள் உன்னி இழுத்தன.

கட்டப்பட்ட இரும்புச்சங்கிலிகளைப் பார்த்தபடியே இருந்தான் காலம்பன். அடுத்து என்ன நடக்கப்போகிறது, தான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி எந்தத் திட்டமிடலும் அவன் மனதில் இல்லை. தங்களது குலம் விடுவிக்கப்பட்டு பறம்புமலைக்குச் செல்லப் போவது மனதுக்குள் அளவற்ற மகிழ்வை ஏற்படுத்தியது. குலத்தின் தலைவனாக எனது வேலை முடிந்தது, இனி அவர்களைப் பாரி பாதுகாப்பான் என்ற மகிழ்வு உடலெங்கும் பரவியது. பாரம் இறக்கப்பட்டவனாய் அயர்ந்து உட்கார்ந்திருந்தான் காலம்பன்.

நீலனும் பதற்றம் ஏதுமின்றியே இருந்தான். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் வண்டியில் இருந்து வைகையைப் பார்த்தபடியே வந்தான். அது அவனுக்கு எவ்வளவோ சொன்னது. கரைபுரளும் அதன் சிற்றலைகள் அவனை அழைத்துக்கொண்டே இருந்தன. சட்டென ஒரு கணம் மொத்த வைகையும் நீண்டு நகரும் செம்மூதாயாய்க் காட்சிதந்தது. பொங்கி நகரும் குருதிகண்டு திடுக்கிட்டு அமர்ந்தான்.

அவர்களின் பயணம் அறுபட்ட காட்சிகளுடனும் குருதிபடிந்த கனவுகளுடனும் தொடர்ந்துகொண்டிருந்தது. எல்லோரின் அமைதிக்குள்ளிருந்தும் பீறிட்டுத் தெறிக்கக் காத்திருந்தது சினம்.


வைகை கடலில் கலக்கும் இடத்தில் இருப்பது வைப்பூர்த் துறைமுகம். வைகை கடல்புகும் ஊராதலால் இப்பெயர் உருவாயிற்று. அதன் அருகில்தான் அருகன்குடி என்ற சிற்றூரும் இருக்கிறது. பாண்டிய நாட்டின் முதற்பெரும் துறைமுகமாக வைப்பூர்த் துறைமுகத்தையே சொல்லலாம். காரணம் அதன் அமைவிடம்.

வைகை கடலில் முட்டும் அதன் நெற்றிப்பகுதி வில்போல் வளைந்தது. வளைந்த அந்தக்கரை சற்றே கடினமான மண்ணடுக்குகளைக் கொண்டது. வந்து சேரும் கப்பல் கடலிலிருந்து வைகைக்குள் நுழைந்து ஆற்றின் உள்ளடுக்கினில் இருக்கும் வைப்பூர்த் துறைமுகத்தை அடையும். கடலலைகள் வளைவுகள் கடந்து உள்ளேறிவராது. பெருங்காற்றும் கடற்கொந்தளிப்புங்கூட வைப்பூர்த் துறைமுகத்தைச் சேதப் படுத்தியதில்லை. இதன் பாதுகாப்பிற்கு வேறு எந்தத் துறைமுகத்தையும் இணைசொல்ல முடியாது.

வைப்பூர்த் துறைமுகம் பொருள்களை ஏற்றி இறக்கவும் கப்பல்கள் வந்து தங்கிச்செல்லவும் இயற்கையே அரணமைத்திருந்ததால்தான் யவனர்கள் எங்கும் இல்லாத அளவு பெருங்கோட்டையை இங்கு கட்டியுள்ளனர். தங்களுடைய பொருள்களைக் கொண்டு வந்து இறக்கவும் ஏற்றவும் பொருத்தமான ஏற்பாட்டினை நீண்டகாலத்துக்கு முன்பே செய்துவிட்டனர். பாண்டிய அரசும் வணிகப் பொருளினைப் பாதுகாக்கவும் வரி வாங்கவும் வசதியாகக் கோட்டை எழுப்பியுள்ளது.

வைப்பூர்த் துறைமுகத்தில் இருபெரும் கோட்டைகள் நின்றுகொண்டிருக்கின்றன.

இத்திருமணத்துக்காக யவனப் பெருவணிகன் வெஸ்பானியன் தலைமையில் பலரும் அணிதிரண்டு வந்தனர். அரசபிரதிநிதிகள், வணிகர்கள், துறைமுகப் பொறுப்பாளர்கள், எண்ணற்றோர்களின் கூட்டமது. குறிப்பாக கடல்பயணத்தின் சாகசத்தளபதி ஹிப்பாலஸ் இத்திருமணத்துக்கு வந்ததுதான் வணிகர்கள் மத்தியில் பெரும்பேச்சாக இருந்தது.



வந்திறங்கும்பொழுது பொருநையாற்றின் கழிமுகத்திலுள்ள கொற்கைத் துறையில் இறங்கி மதுரைக்கு வந்தார்கள். புறப்படும்பொழுது வைகையின் கழிமுகத்திலுள்ள வைப்பூர்த் துறையிலிருந்து பயணப்படத் திட்டமிட்டிருந்தனர். வளங்கொழிக்கும் பாண்டிய நாட்டின் இருபெரும் துறைமுகங் களையும் அவற்றின் உள்வாயில்களையும் நேரில் பார்த்தறியும் வாய்ப்பாக இதை அமைத்துக் கொண்டனர்.

திருமணம் முடிந்து மதுரை விட்டுப் புறப்பட்டவர்கள் வைகைக்கரையின் வழியே பயணப்பட்டு வைப்பூர்த் துறைமுகக் கோட்டையை அடைந்தனர். அங்கு அவர்களுக்குப் பெருவிருந்தும் வழியனுப்பும் நிகழ்வும் ஏற்பாடாயிருந்தன.

பேரரசின் சார்பில் இவ்வழியனுப்பும் நிகழ்வுக்கு தலைமையமைச்சர் முசுகுந்தர் வருகை தரவிருந்தார். அவர் வருவதற்கு முன் இரண்டாம்நிலைத் தளபதிகள் வந்துசேர்ந்தனர். இத்திருமணவிழாவின் பெருமகிழ்வுக்குக் காரணமாயிருந்தது வெங்கல்நாடு. அதைப் பாராட்டி மரியாதை செய்யும் பொருட்டு இளமாறனை இரண்டாம்நிலைத் தளபதிகளில் ஒருவனாக பேரரசர் நியமித்தார். மையூர்கிழார் அளவற்ற மகிழ்வில் திளைத்தார். மிக இளம்வயதில் பேரரசரின் நம்பிகையைப் பெற்று இவ்விடத்தை அடைவது எளிதல்ல. மையூர்கிழார் தனது வாழ்வு முழுக்க பாண்டிய நாட்டின் மீதான விசுவாசத்தை வெளிப்படுத்தியவர். ஆனாலும் அரண்மனைக்குள் நுழையும்பொழுது ஆயுதம் வைத்துக்கொள்ளும் தகுதி இன்றளவும் அவருக்கு வழங்கப்படவில்லை. இக்கவலையை அவர் மகன் அகற்றிவிட்டான். இனி உறைவாளோடு அவன் அரண்மனையில் காட்சியளிப்பதை அவர் பார்க்கலாம். ஆனால், அரசரின்

அவையில் வாளோடு செல்லும் உரிமை இளவரசன் உள்ளிட்ட யாருக்கும் இல்லை.

பாண்டிய நாட்டின் சட்டவிதிகள் மிகக்கடுமை யானவை. பட்டத்து யானையின் மீது போர்த்தப்படும் துணியின் வண்ணம் முதல் படுக்கை அறையில் நாள்களுக்குத் தகுந்தவாறு மலரவேண்டிய நறுமணப்புகையின் வாசம் வரை எல்லாவற்றிற்கும் விதிசெய்யப்பட்டுள்ளது. விதியால் வார்க்கப்பட்டதுதான் அரசாட்சி. அதன் உறுதிக்கு மட்டுமல்ல, இரக்கமற்ற குணத்திற்கும் அதுவே அடிப்படை.

விதிகளின் படிக்கட்டுகளில் கால்பதிக்கத் தொடங்கியவனை அதுவே அடுத்தடுத்த நிலைக்குக் கொண்டு சென்றுவிடும். அதன்பிறகு அவனுக்குத் தகுந்ததாக விதி தன்னை மாற்றிக்கொள்ளும். இணைமீன்கள் பொறிக்கப்பட்ட பாண்டிய நாட்டு அரசமுத்திரை யுடனான கவசத்தை இளமாறன் முன்மார்பில் அணிந்ததைப் பார்த்தபொழுது மையூர்கிழாரின் கண்கள் மகிழ்வில் கரைந்தன.

அவர் வெங்கல்நாட்டுக்குப் புறப்படும் நாளன்றுதான் அவன் வைப்பூர்க்கோட்டைக்குத் தனது ஆலாவின் மேலேறிப் பயணப்படத் தொடங்கினான். உடன்வந்த வீரர்களின் குதிரைகளால் ஆலாவின் வேகத்துக்குச் சிறிதும் ஈடுகொடுக்க முடியவில்லை. அவர்களின் புகழ்மாலைகள் முழுவதையும் ஆலாவே சூடிக்கொண்டது.


வைப்பூர்க் கோட்டையை இளமாறன் அடைந்தபொழுது திரையர்கள் அங்கு வந்துசேர்ந்து ஒரு வாரமாகியிருந்தது. முன்புபோல் இல்லாமல் திரையர்களுக்கு நல்ல உணவு கொடுக்கப்பட்டது. யவனர்களுக்குப் பரிசாகக் கொடுக்கும்பொழுது அவர்களின் காயங்கள் ஆறி, தெளிச்சியாக இருக்கவேண்டும் என்பதற்காக.

கோட்டையின் இடதுமூலையில் இருந்த அறையில் தனித்தனிச் சங்கிலிகளால் அவர்கள் கட்டப்பட்டிருந்தனர். கப்பலிலிருந்து இறக்கிய பொருள்கள் எங்கும் குவிக்கப்பட்டிருந்தன. இளமாறன் கோட்டைக்கு வந்ததிலிருந்து அவனைப் பற்றிய பேச்சைவிட அவனது குதிரையைப் பற்றித்தான் பாண்டிய வீரர்கள் அதிகம் பேசினர். குதிரையின் பெயர் ஆலா என்று அறிந்ததிலிருந்து அதன் ஒவ்வோர் அசைவையும் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தான் நீலன்.

சிலநாள்களுக்குப்பின் படைவீரர்களின் பெரும் அணிவகுப்பொன்று கோட்டைக்குள் வந்தது. தலைமை அமைச்சர் முசுகுந்தர் வரும் செய்தி தெரிவிக்கப்பட்டது. ஆனால், வந்தது அவர் மட்டுமல்லர்; பாண்டியப் பேரரசனின் பெருங்செல்வமாகக் கருதப்படும் இருபது தேவாங்குகளும் உடன் கொண்டுவரப்பட்டன.

சூல்கடல் முதுவனுக்குக் கொடுக்கப்பட்ட இருபது தேவாங்குகள் போக மீதமுள்ள இருபதினை நாம் வைத்துக்கொள்வோம் என பேரரசர் முடிவுசெய்தார். அவற்றை எங்கு வைத்திருப்பது என ஆலோசித்தபொழுது வைப்பூர்க் கோட்டையில் வைப்பதே பொருத்தம். கடல்காற்றும் கடல் உணவும் அவற்றிற்குப் பழக்கப்படவேண்டும் என்று அவையோர் கூறினர். எனவே மிகுந்த பாதுகாப்போடு அவை இங்கு எடுத்துவரப்பட்டன.

அவற்றிற்கென வடிவமைக்கப்பட்ட கலைவேலைப்பாடுகளுடனான கூண்டுகளில் அடைக்கப்பட்டு கோட்டைக்குள் வைக்கப்பட்டன. எண்ணற்ற வீரர்கள் உடன் வந்திருந்ததால் முதலில் அவற்றைக் கவனிக்க முடியவில்லை. அன்று மாலைதான் அந்தக் கூண்டுகளுக்குள் அவை இருப்பது தெரியவந்தது. தொலைவிலிருந்து அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த காலம்பனின் முகத்தில் தன்னையும் அறியாமல் புன்னகை பூத்தது. ‘உங்களைத்தேடி சிறுபடையோடு நான் வந்தேன், என்னைத்தேடி பெரும்படையோடு நீங்கள் வந்திருக்கிறீர்கள்” என மனதில் எண்ணிக் கொண்டே நீலனைப் பார்த்தான். நீலனோ அவற்றை நேர்கொண்டு பார்க்கமுடியாமல் தலைகவிழ்ந்து அவற்றிடம் மன்னிப்பு கோரிக்கொண்டிருந்தான். மலையுச்சியிலிருந்து வான்பார்த்துக் கொண்டிருந்த அவை கடலின் விளிம்புக்கு வந்து சேர்ந்ததற்கு ஏதோவொரு வகையில் தானும் காரணமாகிவிட்டோம் என்ற குற்றவுணர்வின் வழியே கலங்கிப்போய் இருந்தன அவன் கண்கள்.



இரவு யவனர்களின் கோட்டையில் பெரும்விருந்து நடக்கவுள்ளது. அதில் பங்கெடுத்து, மணவிழாவுக்காக வந்தவர்களுக்கு நன்றிசொல்லி வழியனுப்பத்தான் முசுகுந்தர் வந்திருக்கிறார். நாளை காலைப்பொழுதில் யவனக்கப்பல்கள் புறப்படவுள்ளன. எனவே, இன்றிரவே திரையர்களை அவர்களிடம் அளிக்க ஏற்பாடாகிக்கொண்டிருந்தது.

யவனர்களை நேரில் சந்தித்துத் தனது நன்றியைத் தெரிவிக்க சூல்கடல் முதுவனும் வந்து சேர்ந்துள்ளார். எல்லோரும் இரவு சந்திக்கவுள்ளனர். அதற்கு முன் சூல்கடல்முதுவன் செய்யவேண்டிய வேலைகள் நிறைய இருந்தன.

தனக்கு வழங்கப்பட்ட இருபது தேவாங்கு களைப் பத்துக் கூண்டுகளில் கொண்டுசெல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கடற்பயணத்துக்கு ஏற்ப அக்கூண்டுகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. மிகமுக்கியமாக எந்தெந்தக் கப்பல்களில் இவற்றை அனுப்பிவைப்பது என்பதை முடிவு செய்வதில்தான் சூல்கடல் முதுவனுக்குப் பெரும்நெருக்கடி இருந்தது.

அவர் வணிக உலகின் நியதியை அறிந்தவர். எந்தக் கணத்திலும் அது என்னவாக மாறும் என்பதைத் தெளிவாக உணர்ந்தவர். அதுவும் திசைகாட்டும் ஒரு விலங்கு என்பது கடற்பயணத்துக்கு அச்சாணிபோன்றது. இதனை அறிந்து, பயன்படுத்திப் பழக்கியபின் உறுதியாகத் தன்னிடம் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். எனவே, தன்னிடம் அளவற்ற நம்பிக்கையோடு இருப்பவர்களிடம் மட்டுமே கொடுக்கவேண்டும். அதே நேரத்தில் எல்லாத் திசைகளிலும் செல்லும் கப்பல்களில் இவ்விலங்குகள் சென்றாக வேண்டும். சிறிய கலங்கள், பெரிய கலங்கள், நாவாய்கள், சீறிப்பாயும்

தன்மைகொண்ட வங்கம் எனப் பலவைக்கப்பட்ட கப்பல்களில் அவற்றை அனுப்பவேண்டும். அப்பொழுதுதான் இதனை முழுமையாக நம்மால் கணிக்க முடியும். மிகத்தொலைவில் உள்ள தீவுகளுக்குப் பெருங்கலங்களே போகின்றன. ஆனால், பெருங்கலங்களை உடைய வணிகர்கள் ஏதோவொரு வகையில் தன்னுடைய போட்டி யாளராக வரும் வாய்ப்பினைக் கொண்டவர்களாக உள்ளனர். எந்த நாட்டின் மன்னன் எந்த வணிகனை எப்பொழுது ஆதரிப்பான் என்பதனைக் கணிக்க இயலாது. அரசியல்நிலை எப்பொழுதும் கடலைவிடக் கொந்தளிப்பு மிக்கது, வணிகத்தைவிடச் சூழ்ச்சி நிறைந்தது. எனவே, எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டு சூல்கடல் முதுவன் திட்டமிட்டான்.

இறலித்தீவுக்கும், தெங்கின்தீவுக்கும் செல்லவிருந்த பெரிய கலங்களில் தேவாங்கின் கூண்டினை ஏற்றினான். குசையின் தீவுக்குப் பயணம் செல்ல இது பொருத்தமான காலமல்ல. அக்கடலில் அவ்வப்பொழுது வீசிச்செல்லும் காற்று கலங்களை எளிதில் திசைமாற்றம் செய்துவிடும். அதன்பின் கலங்களால் நிலைதிரும்ப முடியாது. ஆனால், இப்பொழுது தேவாங்கு இருப்பதால் அக்கவலையில்லை. காற்றால் திசை மாறினாலும் மீண்டும் திசை அறிந்துகொள்வது எளிது. எனவே நம்பிக்கையோடு பயணம் செல்லலாம் என்று சொல்லி, தன் தம்பியை அதற்குப் பொறுப்பாக்கி னான். இருப்பதிலே பெரிய வங்கத்தை எடுத்துக்கொண்டு போ என்றும் அனுமதி கொடுத்தான்.

வணிகம் எவ்வளவு சூழ்ச்சி நிறைந்தது என்பதை குலசேகரபாண்டியன் சூல்கடல் முதுவனை வைத்து சோதிப்பதும், சூல்கடல்முதுவன் தன் தம்பியை வைத்து சோதிப்பதுமாக நடந்தேறியது.

தான் பயணப்படவுள்ள நாவலந்தீவுக்கு திசையறிய எந்த வித உதவியும் தேவையில்லை. எல்லாக்காலத்திலும் கலங்கள் சென்று திரும்பும் எளிய வழிப்பயணம் அது. ஆனால், அப்பயணத்துக்கு நான்கு தேவாங்கினை எடுத்து வைத்துக்கொண்டான் சூல்கடல் முதுவன்.

யவனர்களுக்காக இன்றிரவு நடைபெறவுள்ள விருந்தில் வணிகர்கள் பலரும் கலந்துகொள்ள உள்ளனர். இந்நிகழ்வு முடிந்தபின் நாளை காலையிலிருந்து கலங்கள் எல்லாம் வைப்பூர்த் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு வெளி யேறவுள்ளன. சூல்கடல் முதுவன் விருந்தில் கவனங்கொண்டிருந்த அதேநேரத்தில் இன்னொன்றிலும் மிகக்கவனமாக இருந்தான்.

தேவாங்கினை எடுத்துச்செல்லத் தேர்வு செய்யப்பட்ட கப்பல்கள் இன்று நள்ளிரவிலேயே புறப்படுவதற்கான ஏற்பாட்டினையும் செய்திருந்தான். பேரரசர் விதித்த கட்டளைகள் மிகமுக்கியமானவையாக இருந்தன. முதற்கட்டப் பயணம் முடியும் வரை இவை பிற வணிகர்களுக்குத் தெரியாமலிருப்பது முக்கியம் என்று கூறியிருந்தார்.

இரவு நெருங்கியது. வைப்பூர்த் துறைமுகம் கணக்கில்லாத கலங்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. யவனர்களின் நாவாய்கள் நாளை புறப்படுவதற்காக ஏற்பாடாகிக் கொண்டிருந்தன. பெரும்வடிவத்தில் அசைந்தாடும் யவன நாவாய்களைப் பார்ப்பதே பேரழகு. துறையின் கரையில் பாதித்தொலைவுக்கு மேல் யவன நாவாய்களே நின்றிருந்தன. அவற்றின் அகலமும் உயரமும் கரையிலிருந்து பார்ப்பவரைத் திகைக்கச் செய்யக்கூடியது. நெடுந்தொலைவு செல்லவேண்டிய

பயணமாதலால், இரண்டு, மூன்று பாய்மரங்களைக் கொண்டதாக இருக்கும்.

கப்பலின் வலப்புறம் துறைமுகப்பகுதி. அதாவது துறைமுக மேடையை ஒட்டி நிறுத்த வேண்டிய பகுதி, இடப்புறம் மீகான் மேலேறி நின்று பார்க்கக்கூடிய கூம்பு வடிவ மேடை அமைக்கப்பட்டுள்ள பகுதி. பெருங்கப்பல்களில் இம்மேடையின் உயரம் பாய்மரத்தின் உயரத்தில் மூன்றில் ஒரு பங்கு இருக்கும். அது சிறுகலங்களில் ஏற்றப்படும் பாய்மரத்தின் உயரத்துக்கு நிகரானது. கலங்களின் முன்புறம் இருக்கும் சுக்கானின் மேடையும் அதேபோன்ற தன்மையுடையதுதான். பாய்மரத்தின் மேலிருந்து எங்கும் இழுபட்டு விடைத்திருக்கும் கயிறுகள் ஒரு கோணத்தில் மீட்டத்தயாராக இருக்கும் யாழ்நரம்புகள் போன்றே காட்சியளிக்கும். கடலும் காற்றும் மீட்டியபடி மிதக்குமொரு பயணம் தொடங்க ஏற்பாடாகிக்கொண்டிருந்தது.



யவனக்கப்பல்களைத் தொடர்ந்து சாத்துக்களின் கலங்கள் அதாவது தமிழ்பேசும் வணிகர்களின் எண்ணற்ற கலங்கள் நின்றுகொண்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தன்மையுடையவை. கலங்களின் முகப்பில் பொறிக்கப்பட்ட வடிவத்தைவைத்து அவற்றிற்கான பெயர்கள் அமைந்திருந்தன. யானை, சிங்கம், குதிரை போன்ற எண்ணற்ற வடிவங்களைத் தாங்கியதாக அவற்றின் முகப்புகள் இருந்தன.

வனப்பேறிய இவ்விலங்குகள் எல்லாம் சீறும் கடலலைக்குள் தலைநுழைத்து மேலெழக் காத்திருந்தன. வைப்பூர்த் துறைமுகத்தில் இவ்வளவு கலங்கள் வந்து நிற்பது இதுவரை யாரும் காணாத காட்சி. அதுவும் அவையெல்லாம் அடுத்த ஓரிரு நாள்களில் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தன. கலங்கள் புறப்படப்போவதாக இருந்தால் அதற்கு முன் செய்யவேண்டிய வேலைகள் எண்ணற்றன.

அருகிலிருக்கும் அருகன்குடி மக்கள்தாம் இப்பணிகளை முழுமையும் செய்பவர்கள். ஆனால், ஒரே நேரத்தில் இவ்வளவு கலங்களை அவர்கள் யாரும் பார்த்ததில்லை. பார்க்கவே கண்கொள்ளாக்காட்சியாக அது இருந்தது. கலங்களைச் சரிசெய்யும் திறன்வாய்ந்த தச்சர்களின் பணிகள் முடிந்தபின் பொருள்களை ஏற்றும்பணி தொடங்கியது. கலங்களின் தன்மைக்கு ஏற்ப ஓரிரு நாள்களோ, வாரமோகூட பொருள்கள் ஏற்றப்படும். கரையெங்கும் மனிதக்கூட்டமும் வண்டியிழுக்கும் விலங்குகளும் நெரிசலில் சிக்கித் திணறின.

கரையைவிட நெரிசல் அதிகமான பகுதியாக நீர்ப்பகுதி இருந்தது. கலங்களைச் சுற்றிச் சிறு சிறு

தோணிகளும் ஓடங்களும் திறளிமரப் படகுகளும் மொய்த்துக்கிடந்தன. பட்டத்து யானைக்கு நடக்கும் ஒப்பனையைப் போன்றதுதான் பயணப்படும் முன் கலங்களை ஆயத்தம் செய்வது.
பணிசெய்ய அருகன்குடியிலிருக்கும் மக்கள் போதாததால் பக்கத்திலுள்ள பல ஊர்களிலிருந்து வந்து பணியாளர்கள் வேலைபார்த்தனர். இனிப்பு சாப்பிடும் குழந்தையின் வாய் முழுவதும் ஈக்கள் மொய்ப்பதைப்போல வைகையின் வாய் முழுவதும் கலங்கள் மொய்த்துக்கிடந்தன. இதைப் பார்க்கவே கூட்டம் நிரம்பியிருந்தது. எங்கும் தின்பண்டங்கள் விற்பதும் உற்சாகக் கொண்டாட்டமுமாக இருந்தது. அலை ஓசையும், பறவைகளின் ஓசையும், கூவி விற்கும் மக்களின் ஓசையும் ஒன்றினை ஒன்று விஞ்சிக் கொண்டிருந்தன. வீசுங்காற்றின் உப்பஞ்சாரல் மேனிதழுவியபடி விடாது வீசியது.

யவனத்தேறல்கள் எளிய மனிதருக்கும் கிடைக்கும் வாய்ப்பு துறைமுகத்தில்தான் ஏற்படும். புறப்படப்போகும்பொழுது தமக்குச் சிறப்பாகப் பணிவிடை செய்தவர்களுக்குத் தேறல் குடுவைகளை அள்ளிவழங்கும் யவன வணிகர்கள் உள்ளனர். இருமாதம் நீண்ட மதுரையின் மணநாள் கொண்டாட்டம் தனது கடைசி விழாவை வைப்பூரில் வைத்து நிகழ்த்திக்கொண்டிருந்தது.

திருமணவிழாவில் பங்கெடுத்த வணிகர்கள் பலருக்கும் நன்மைகள் பல கிட்டின. புதிய அறிமுகங்களும் தொடர்புகளும் அவர்களின் கலங்களை அதிகத் தொலைவிற்குப் பயணப்பட அழைத்திருந்தன. எல்லாக் கலங்களும் ஏரா எனும் அடிமரத்தின் மீதே விலாவெலும்புபோல இருபுறமும் மேல்நோக்கிக் கட்டப்படும். அக்கட்டுமானத்தை வாங்குகால் என அழைப்பார்கள். வணிகம் தன்னை இணையில்லா வேகத்துடன் பெருகிக்கொள்ளும் குணத்தையே அடிமரமாகக்கொண்டது. அவ்வடிமரத்தின் மீது வைத்துக் கட்டப்படும் எண்ணிலடங்காத வாங்குகால்கள்தான் மீதமுள்ள எல்லா நடவடிக்கைகளும்.

இத்திருமணம் பங்கெடுத்த வணிகர்களின் அடிமரத்துக்கு வலுச்சேர்க்கும் நிகழ்வாக அமைந்தது என்று மகிழ்ச்சியடையாதவர்கள் யாருமில்லை. வாங்குகால்கள் செழிப்பாக அமைந்ததை விருந்தில் கலந்துகொண்ட ஒவ்வொருவரின் முகமும் சொல்லிக் கொண்டிருந்தது.

விருந்து தொடங்கியிருக்க வேண்டும். யவனக்கோட்டையிலிருந்து கேட்கும் ஓசை அதனைத்தான் சொல்லுகிறது. அவ்வோசை கேட்கத் தொடங்கியவுடன் துறைமுக மேடையிலிருக்கும் கலங்களின் பொறுப்பாளர்கள் தங்களை இறுதிக்கட்டத்துக்கு ஆயத்தப்படுத்தத் தொடங்கினர். ஏனென்றால், விருந்திலிருந்து எந்தக் கணமும் தங்களின் உரிமையாளர் புறப்பட்டு வரக்கூடும். அவர் வந்தவுடன் கலங்களை நகர்த்தியாக வேண்டும். பணிகள் பெரும் விறுவிறுப்போடு நடந்து கொண்டிருக்கையில் வரிசை வரிசையாகக் கொண்டுவரப்பட்ட அடிமைகள் கலங்களில் ஏற்றப்பட்டனர்.



அடிமைகளின் கைகால்களில் இதுநாள் வரை இருந்த இரும்புச் சங்கிலிகள் அகற்றப்பட்டு, துளையிடப்பட்ட கட்டைகளில் இருகைகளும் செருகப்பட்டிருந்தன, துடுப்புகளை இழுக்கத் தோதான வடிவமாக இதுவே இருக்கும் என்பதால். அடிமைகள் வரிசையாகக் கலங்களுக்குள்ளே அனுப்பப்பட்டனர். அவர்களை வழிநடத்தும் பொறுப்பாளர்கள் துறைமுகந்தோறும் புதுச்சாட்டைகளை மாற்றுவது வழக்கம். தோளும் விலங்கின் நரம்பும் மரத்தின் நரம்பும் பின்னியபடி நீள்சாட்டை செய்யும் தச்சுக்கூடம் அருகன்குடியில் மூன்று இருக்கின்றன. ஆனால், இப்பொழுது அங்கு ஒரு சாட்டைகூட இல்லை, எல்லாம் விற்றுத் தீர்ந்துவிட்டன எனப் பேசிக்கொள்கின்றனர்.
மீன்கள் துள்ளியெழக்கூட இடைவெளியற்று கலங்கள் நின்றுகொண்டிருந்தன. ஆனால் எல்லோரின் பார்வையும் குவிந்துகிடந்தது ஒற்றைக்கலத்தின் மீதுதான். அதன் உயரமும் அகலமும் துறைமுகத்தை ஆண்டுகொண்டிருந்தன. அதற்கான வேலைகளைச் செய்ய மட்டுமே எண்ணற்ற பணியாளர்கள் இருந்தனர். அதுதான்  கடல்பயணத்தின் சாகசத்தளபதியான ஹிப்பாலஸின் நாவாய். அக்கப்பல் இத்துறைக்கு வந்து பலநாள் ஆகிவிட்டன, ஆனால் இத்தனை நாள்களும் இரவில் ஒருசில விளக்குகள்தான் அதில் ஏற்றப்பட்டிருந்தன. ஆனால், இன்று இரவு எந்தக் கணத்திலும் சாகசத்தளபதி ஹிப்பாலஸ் கப்பலுக்கு வந்துசேருவான் என்பதால் அனைத்து விளக்குகளும் ஏற்றப்பட்டிருந்தன. அந்தக் காட்சியைக் காண்பவர் யாராலும் கண்களை விலக்க முடியவில்லை. அலைகளுக்கு நடுவே ஓர் அரண்மனை மிதந்துகொண்டிருப்பதுபோல் இருந்தது. வைகை தனது மேனியெல்லாம் ஒளியைக் கொண்டு வந்து கடலில் கலப்பதுபோல் தோன்றியது.
ஹிப்பாலஸின் கப்பலில் அடிமைகள் எல்லோரும் ஏற்றப்பட்டவுடன் அக்கதவைப் பொறுப்பாளன் மூடத்தொடங்கினான். அது அடிமைகளை ஏற்றுவதற்கான கதவு. இனி அடுத்த துறைமுகத்தில்தான் அதைத் திறப்பார்கள். கதவைப் பொறுப்பாளன் மூடியபொழுது ஒருவன் வேகமாக ஓடிவந்து சொன்னான், “இப்புதிய அடிமைகளையும் உள்ளே அனுப்பு.”

அவன் திரும்பிப் பார்த்தான், கருங் கொள்ளை யர்களுக்கு இணையான உடல்வாகு கொண்டவர்களாக அவர்கள் இருந்தனர். வந்தவன் சொன்னான், “பாண்டிய நாட்டின் பரிசுப்பொருளாக நம் தளபதிக்கு இவ்வடிமைகளைத் தந்துள்ளனர்.”
அவன் மேலும் கீழும் பார்த்தான். கைகளில் இருந்த இரும்புச்சங்கிலி கழற்றப்பட்டு, துளை யிடப்பட்ட மரக்கட்டைகள் செருகப்பட்டிருந்தன. “போதுமான அடிமைகளை உள்ளே அனுப்பி முடித்துவிட்டேன். சரி இவர்களை மேல்தளத்துக்குக் கொண்டு போ” என்றான்.
வந்தவன் அவர்களை மேல்தளத்துக்கு அழைத்துச்சென்றான். புதிதாக வந்துள்ள அடிமைகளைச் சோதனை செய்ய எத்தனையோ வழிமுறைகள் உண்டு. கப்பல் பயணிக்கும் போது பேரலைகளுக்கு நடுவே அவர்களை மேலிருந்து தூக்கியெறிவது அதில் ஒருவகை. வீசப்பட்டவன் கடலில் மூழ்காமல் எவ்வளவு நேரம் தாக்குப்பிடிக்கிறான் என்பதைப் பொறுத்து அவனை மீண்டும் கப்பலில் ஏற்றலாமா அல்லது அப்படியே கடலுக்குள் விட்டுவிடலாமா என்பதை, கூம்புவடிவக் கூண்டின் மேலிருந்து மீகான் முடிவுசெய்வான்.

திரையர்கூட்டம் நாவாயின் மேல்தளத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு மீகானின் மேடை அருகே நிறுத்தப்பட்டனர்.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி - இதுவரை நடந்தது என்ன?

**இந்த இதழுடன் இரண்டு பாகங்கள் முடிந்து மூன்றாம் பாகம் பாரி பாய்ச்சலுக்குத் தயாராகிவிட்டது. இதுவரை பாரியைப் பின்தொடர முடியாமல் போனவர்களுக்காக இந்த முன்கதைச் சுருக்கம்.**

யானையின் பிளிறல் கரும்பாறையிற் பட்டு எதிரொலிக்கையில் அமைதி கொண்டிருந்த பறவைகள் கூவிக்குரலெழுப்பு கின்றன. பறவைகள் அலகு திறக்கும்பொழுதே சிறகசைக்கத் தொடங்கிவிடுகின்றன. அவை படபடத்துப் பறக்க, காட்டின் ஆழ்ந்த அமைதி கலைகிறது. கலைந்தெழும் ஓசையோடு ஒவ்வோர் உயிரினத்தின் ஓசையும் இணைகின்றன.

உச்சியிலிருந்து உருளும் பந்தைப்போலத்தான் காட்டில் உருவாகும் ஓசை; உருள உருள அதற்கு விசை கூடுகிறது. கண்காணாத்தொலைவு வரை பயணப்பட்டு மறைந்துபோனதா அல்லது திசை திரும்பிப்போனதா என்பதை அறிய முடியாமலே சென்றுசேருகிறது. மலைத்தொடர்களுக்கிடையில் தொட்டில் கட்டித் தொங்கும் அடர்கானகத்தின் குணம் இதுதான்.

வடக்கும் தெற்குமாக நீண்டுகிடக்கும் பச்சைமலைத்தொடரில் பரவிக்கிடக்கும் அடர்கானகம்தான் பறம்புநாடு. அந்நாட்டின் தலைவன் பாரி. வேளிர் குலத்தின் வம்சாவளி யாதலால் வேள்பாரி என்று அழைக்கப்பட்டான். மலைமனிதர்கள் பசி அறியமாட்டார்கள். கொடுங்கோடையிலும் ஏழுவகைக் கிழங்குகளை அவர்களுக்காக உள்ளங்கையில் வைத்துக் காத்திருக்கிறது காடு. உணவை விளைய வைப்பதோ, அறுப்பதோ அல்ல; சேகரிப்பது மட்டுமே வேலை. அதுவும் சேமிப்பு என்ற சிந்தனையும் சொல்லும் உருவாகாத வாழ்நிலை.

பறம்பின் தலைவன் பாரி இருக்குமிடம் எவ்வியூர். பச்சைமலைத்தொடரில் மூன்று மலைகளைக் கடந்து உச்சியிலிருக்கும் அவ்வூரிலே வசிக்கிறான் பாரி. அவனது புகழ் நிலமெங்கும் பரவிக்கிடக்கிறது. அவன் வள்ளல்தன்மையைப் பாணர்கள் காலம் முழுவதும் பாடுகிறார்கள்.
பெரும்புலவன் கபிலன், சிற்றரசன் ஒருவனின் மாளிகையில் இரவு கள்ளுண்டு மகிழ்ந்திருக்கிறான். தன்னைக் காணவந்த பாணர்களின் செயல்பற்றி அவ்வரசன் கபிலரிடம் கூறுகிறான். எல்லா மன்னர்களிடமும் பரிசில்பெற்றுத் திரும்பும் பாணர்கள் பாரியிடம் மட்டுந்தான் கருணையைப்பெற்றுத் திரும்புகின்றனர். இந்த உண்மையைத்தான் அவர்கள் பாடுகின்றனர் என்கிறான்.

இது கபிலருக்கு ஏற்புடையதாக இல்லை. பாரி விருந்தினரை நிர்வகிப்பதில் சிறந்தவனாக இருக்கலாம். ஆனால், வள்ளல்தன்மை என்பது நிர்வாகத்திறமையல்ல; அது குழந்தையின் குரல் கேட்டகணத்தில் பால்கசியும் தாயின் மார்பைப் போன்றது என்று வாதிடுகிறார். ஆனால், அந்தச் சிற்றரசன் அதனை ஏற்கவில்லை. ஒரு கட்டத்தில் நாளையே பறம்பு நாடு சென்று பார்க்கிறேன் என்று புறப்படுகிறார் கபிலர்.

முன்பின் போகாத அடர்காட்டுக்குள் தன்னந்தனியாக நுழைகிறார். உள்ளே நுழைந்த சிறிதுதொலைவிலேயே நீலன் என்ற வீரன் கபிலரோடு இணைகிறான். அவன் கபிலரை முதலில் தனது

ஊருக்கு அழைத்துச்செல்கிறான். அங்கிருந்து காரமலை, நடுமலை, ஆதிமலை ஆகிய மூன்று மலைகளைக் கடந்து பாரியிருக்கும் எவ்வியூருக்குக் கொண்டு சேர்க்கிறான்.




இந்த வழிப்பயணம் கபிலரின் பல எண்ணங்களைத் தலைகீழாக மாற்றுகிறது. காடு பற்றியும் இயற்கை பற்றியும் மலைமக்கள் பற்றியும், பாரி பற்றியும் அவரின் பார்வைகளில் பெரும் மாற்றம் ஏற்படுகிறது.

கபிலர் வந்துகொண்டிருக்கிறார் என அறிந்த பாரி எதிர்வந்து வணங்கி, கபிலரைத் தன் தோளிலே எவ்வியூருக்குத் தூக்கிச் செல்கிறான். கபிலரின் வரவு எவ்வியூரின் பெரும் விழாவாக கொண்டாடப்படுகிறது.

எவ்வியூரின் மாணவர்களைக் காடறிய அழைத்துச்செல்லும் ஆசானான தேக்கன், பாரியின் மனைவி ஆதினி, பாரியின் இரு மகள்களான அங்கவை, சங்கவை, நீலனின் காதலியான மயிலா என எல்லோரும் கபிலரின் வரவைக் கொண்டாடித் தீர்க்கின்றனர்.

அடுத்த சில நாள்களில் பறம்பின் பெரு விழாவான கொற்றவைக்கூத்து தொடங்குகிறது. சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களும் எத்தனையோ இனக்குழுக்களை அழித்து தங்களது ஆட்சிப்பரப்பை விரிவுபடுத்தி யுள்ளனர். அவ்வாறு அழித்தொழிக்கப் பட்டவர்களில் சிலர் பறம்பில் அடைக்கலம் அடைந்தனர். பறம்பு நாடு அவர்களைத் தங்களின் பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டது. அழித்தொழிக்கப்பட்ட குலங்களின் வம்சாவளிகள் போர்த்தெய்வமான கொற்றவையின் முன்னால் தங்களின் குலத்தின் வரலாற்றைச் சொல்லி, அதனை அழித்தொழித்த வேந்தனின் மீது வெஞ்சினம் உரைத்துப்பாடுவர்.

பதினேழு நாள் பெருவிழா இது. கொற்றவை இருக்கும் பெரும் மரப்புதருக்குள் தெய்வவாக்கு விலங்கிருக்கிறது. அது இறங்கிவந்து முன் இலையில் வைக்கப்பட்ட பலவகையான கனிகளில் ஏதாவது ஒன்றை முதலில் எடுக்கிறது. அப்படி எடுக்கப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட இனக்குழுக்கள் கொற்றவையின் முன் தாங்கள் அழிக்கப்பட்ட கதைகளைச் சொல்லி அருளிறங்கி ஆடுவர். கடைசியாக, பதினேழாவது நாள் பறம்பின் சார்பில் பாரி களமிறங்கி ஆடுவான். இத்தனை இனக் குழுக்களை அழித்தொழித்த மூவேந்தர்களின் பகைமுடிக்க வஞ்சினம் உரைப்பான்.

கொற்றவைக்கூத்தில் பாண்டியனால் அழிக்கப்பட்ட அகுதையின் கதை, சோழனால் அழிக்கப்பட்ட செம்பாதேவியின் கதை, சேரனால் அழிக்கப்பட்ட நாகர்குடியின் கதை என்று ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கதையைக் கேட்ட கபிலரால் அவலத்தைத் தாங்கமுடியவில்லை. அழிக்கப்பட்ட

இனக்குழுக்களின் வம்சாவளிகள் இன்னும் இவ்வுலகில் வாழ்கிறார்கள் என்ற உண்மையே அவரை நிலைகுலையச் செய்துவிட்டது. அக்கதையைப் பாடும் மனிதர்கள் வரலாற்றிலிருந்து இறங்கிவந்து பாடுவதுபோல் இருந்தனர். உண்மையின் வெக்கை தாங்காமல் நிலைகுலைந்து படுத்தார் கபிலர்.

உடல்நலம் குன்றிய கபிலரால் கொற்றவைக் கூத்தில் பாதிநாள்கள்கூடக் கலந்துகொள்ள முடியவில்லை. கூத்து முடிந்த பின்னும் கபிலரால் பலநாள்கள் அதிலிருந்து வெளிவர முடியவில்லை.

இதே காலத்தில் பாண்டியப்பெருவேந்தன் குலசேகரப்பாண்டியன் மகன் பொதியவெற்பனுக்குத் திருமண ஏற்பாடு நடக்கத்தொடங்கியது. யவனத்துக்கும் தமிழகத்துக்குமிடையில் கடல்வணிகம் மிகவும் செழிப்புற்றிருந்த அந்தக் காலத்தில் வணிகர்களின் செல்வமும் செல்வாக்கும் வேந்தர்களுக்கு இணையாக வலிமை பெற்றிருந்தன. கடல்வணிகர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட சாத்துக்கள் என்ற அமைப்பின் தலைவனாக இருந்தான் பெருவணிகன் சூழ்கடல் முதுவன். அவன் மகள் பொற்சுவையைப் பொதியவெற்பனுக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்தனர். மாமதுரை திருமண விழாவுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. அப்பேரழகியின் காதல் கண்ணீரால் கரைக்கமுடியாத ஒன்றாக ஆழ்மனதில் நிலைகொண்டிருந்தது.




பறம்பு நாட்டின் மலையடிவாரத்தில் இருப்பது வெங்கல் நாடு. அந்நாட்டை ஆளும் சிற்றரசர் மையூர்க்கிழார். பாண்டிய வேந்தனுக்கு மிகவும் விசுவாசமாக நடந்து கொள்பவர். உலகமே போற்றி வியக்கப்போகும் பாண்டிய இளவரசனின் திருமணத்துக்கு யாரும் தராத சிறந்த பரிசொன்றைத் தரவேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருக்கிறார். அந்நிலையில் மழைவெள்ளத்தில் அடித்துவரப்பட்ட ஒரு அரிய வகையான உயிரினத்தை உழவன் ஒருவன் மையூர்க்கிழாரிடம் காட்டுகிறான்.

பார்க்கவே சற்று அருவருப்பாக இருக்கும் இது என்னவகையான உயிரினம் எனச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், அங்கிருந்த பாணர் கூட்டத்தலைவன் சொல்லுகிறான். “இதுதான் பாரியின் கொற்றவைக்கூத்தில் குறிசொல்லும் தேவவாக்கு விலங்கு.”

மையூர்க்கிழார் பெருமகிழ்ச்சி அடைந்தார். இதற்கிடையில் மதுரையில் திருமணத்துக்காகக் கட்டப்பட்டுவரும் கட்டுமானப்பணிகளை விரைந்து முடிக்க கொத்தர்களை அனுப்பச்சொல்லி பேரரசரிடமிருந்து உத்தரவு வந்தது. உத்தரவை ஏற்று, புதிய கொத்தர்களை அழைத்துச்செல்லுமாறு தன் மகன் இளமருதனிடம் சொல்லுகிறார்.

இளமருதன் புறப்படுகையில் அவனது கையில் பாரிக்குக் குறிசொல்லும் தேவவாக்கு விலங்கினைக் கொடுத்து அனுப்புகிறார் மையூர்க்கிழார். “பேரரசரிடம் கொடு. இது அவருக்கு மிகப்பெரிய மகிழ்வைக் கொடுக்கும்.”

இளமருதன் தேவவாக்கு விலங்கினை எடுத்துக்கொண்டு, கொத்தர்களையும் அழைத்துக்கொண்டு மதுரைக்குள் நுழைகிறான். அது என்ன விலங்கு என்று பலரும் கேட்க, தேவவாக்கு விலங்கென்றும் தேவாங்கு விலங்கென்றும் அழைக்கின்றனர்.

திருமணத்துக்காக மூன்று பெரும் மாளிகைகள் கட்டப்பட்டு வந்தன. கார்காலப் பள்ளியறை, வேனிற்காலப் பள்ளியறை, அரச குடும்பத்தினர் மட்டும் ஆடிப்பாடி மகிழும் பாண்டரங்கம். இம்மூன்று மாளிகையின் மேற்கூரைகளிலும் வானியல் அமைப்புகள் ஓவியமாக வரையப்பட்டன.

கார்காலப் பள்ளியறையில் பொதியவெற்பன் பிறந்தபொழுதிருந்த வானியல் அமைப்பும் வேனிற்காலப் பள்ளியறையில் பொற்சுவை பிறந்தபொழுதிருந்த வானியல் அமைப்பும் பாண்டரங்கத்தில் வைகையில் வெள்ளப் பெருக்கெடுக்கும் காலத்தைக் குறிக்கும் வானியல் அமைப்பும் வரையப்பட்டன. அப்பணியினை அரண்மனையின் தலைமை வானியல் நிபுணன் அந்துவன் மேற்பார்வை செய்துவந்தான்.

வானியல் அறிவின் பேராசான் திசைவேழர் பொதிகைமலையிலிருந்து திருமண விழாவுக்காக மதுரைக்கு வருகை தந்தார். அவரின் மாணவர்களில் ஒருவன்தான் அந்துவன். அவனது மேற்பார்வையில் வரையப்பட்ட வானியல் அமைப்புகளைப் பார்வையிட்ட திசைவேழர் அதிலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி, கடுங்கோபத்தை வெளிப்படுத்தினார்.




அத்தவறுகளைச் சரிசெய்து வரைந்து முடிக்கும் வரை அந்துவன் அம்மாளிகையை விட்டு வெளியேறவில்லை. அந்தக்காலம் முழுவதும் இளமருதன் கொண்டுவந்த தேவாங்கினைத் தனது அருகிலே வைத்துக்கொண்டான். திருமணப்பரிசாகக் கொடுக்கும்வரை இது இங்கேயே இருக்கட்டும் என்று சொல்லிவிட்டான். மேற்கூரையில் புதிய ஓவியத்தை ஓவியர்கள் திரும்ப வரைந்து முடிக்கும் வரை அந்துவனின் பொழுதுபோக்காக கூண்டில் அடைக்கப்பட்ட அந்தத் தேவாங்கு விலங்கே இருந்தது.

பணி நிறைவுபெறும் பொழுதுதான் அந்தத் தேவாங்கு விலங்கின் சிறப்புத்தன்மையை அவன்

கண்டறிந்தான். அவன் கண்டறிந்த உண்மையைத் தன் ஆசான் திசைவேழரிடம் சொன்னபொழுது அவர் நம்பவே இல்லை. அவரும் சோதித்து அது உண்மைதான் என்பதை அறிந்தார். அந்தத் தேவாங்கு எல்லாதிசைகளிலும் நடக்கிறது. ஆனால், உட்காரும்பொழுது மட்டும் வடதிசை நோக்கியே உட்காருகிறது. எத்தனை முறை உட்கார்ந்தாலும் வடதிசை நோக்கியே உட்காருகிறது. இது இயற்கையின் அதிசயத்தன்மையை வெளிப்படுத்துகிறது.
செய்தி பேரரசருக்குத் தெரிவிக்கப்பட்டது. தேவாங்கின் அதிசய ஆற்றல் கண்டு பேரரசர் திகைத்துப்போனார். குறிப்பாக கடற்பயணத்தில் திசை அறியமுடியாத சூழலில்தான் பல கலங்களை நாம் இழக்கிறோம். இந்த நிலையில் இப்படிப்பட்ட ஒரு விலங்கு கடல் பயணத்துக் கான அடிப்படைத் தடைகளைத் தகர்த்துவிடும். திசையை ஆள்பவனே கடலை ஆளமுடியும். இவ்விலங்கு திசையின் அறிவிப்பாளனாக இருக்கிறது எனச்சொல்லி, பெரும் மகிழ்வை வெளிப்படுத்தினார் சூழ்கடல் முதுவன்.

இது பாரியின் பறம்புநாட்டில் உள்ள கொற்றவைக் குறிசொல்லும் விலங்கு என்பது தெரியவந்தது. இவ்விலங்கின் முக்கியத்துவம் கடலில்தான் இருக்கிறது என்பதை பாரியிடம் பேசிப் புரியவைத்துப் பெறமுடியுமா என்று ஆலோசனை நடத்தினர். என்ன விலை கொடுத்தேனும் இதனைப் பெறவேண்டும் என்று துடித்தனர். ஆனால், பாரியிடம் வணிகம் பேசமுடியாது. பறம்பின் இலைதழைகளைக்கூட எடுத்துச்செல்ல பறம்பின் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். அப்படியிருக்க கொற்றவைக் குறிசொல்லும் தேவவாக்கு விலங்கை எப்படிக் கொடுப்பார்கள். இதனைக் கொண்டுவர வாய்ப்புள்ள அனைத்து வழியையும் சிந்தித்து, கடைசியில் ஒரு வழியைக் கண்டறிகின்றனர்.

திருமணவிழாவின் தொடக்கக்கட்டத்தில் சூல்கடல் முதுவனுக்கு மிகச்சிறந்த பரிசொன்றைத் தரவேண்டுமெனப் பேரரசர் விரும்பினார். உலகம் முழுவதும் வணிகம் செய்யும் வணிகர்குலத்தலைவனுக்குக் கொடுக்கும் பரிசு ஆகச்சிறந்ததாக இருக்க வேண்டும் என்று சிந்தித்தபொழுது பாண்டிய நாட்டின் தலைமைத்தளபதி கருங்கைவாணன் ஓர் ஆலோசனை சொன்னான். சூல்கடல் முதுவனிடம் மிகச்சிறந்த கப்பல் ஒன்று இருக்கிறது. அக்கப்பலைப் பிற கப்பல்களைப் போல எல்லாத் துறைமுகத்திலும் நிறுத்தி அடிமைகளை மாற்றிக்கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. யவனர்கள் பயன்படுத்தும் கருங் கொள்ளையர் களைப்போன்ற ஒப்பிட முடியாத தடந்தோள் அடிமைகள் கிடைத்தால் அவர் கப்பலை எங்கும் நிறுத்தாமல் தொடர்ந்து கொண்டுசெலுத்த முடியும். அவ்வளவு வலிமைகொண்டவர்கள் வடக்குத்திசை மலையில் இருக்கிற திரையர்கள்; அவர்களை வென்று அடிமையாக்கி சூழ்கடல் முதுவனுக்குப் பரிசாக வழங்கலாம் என்று ஆலோசிக்கப்பட்டது. கருங்கைவாணன் தந்திரமிக்க பெரும்போரை நடத்தி, திரையர்களை அடிமையாக்கி மதுரைக்குக் கொண்டுவந்து சேர்த்தான்.




இந்நிலையில்தான் தேவாங்கினைப் பாரியின் பறம்பிலிருந்து கொண்டுவர என்ன வழி என்று ஆராய்ந்து ஒருவழியைக் கண்டடைந்தனர். அடிமையாக்கப்பட்ட திரையர்களின் குலத்தலைவன் காலம்பனிடம் பேரம்பேசினர். பறம்புமலையிலுள்ள தேவாங்கு விலங்கினை எடுத்துவந்தால் உன் குலத்தையும் உன்னையும் விடுதலை செய்வோம் என்றனர்.

திரையர்களும் பறம்புமலை வேளிர்களும் பல தலைமுறைக்கு முன்னர் மணவுறவு கொண்டவர்கள். ஆனால், இந்த மணவுறவு அடுத்தடுத்த தலைமுறைக்குத் தொடரவில்லை. காரணம், இவ்விரு மலைப்பகுதிகளும் பெருந்தொலைவு இடைவெளியோடு இருந்தன. காலம்பன் பறம்புநாட்டைக் கண்கொண்டுகூடப் பார்த்ததில்லை. ஆனாலும் ‘எம்முன்னோர் மணவுறவு கொண்டிருந்த பறம்புக்கு எதிராக நாங்கள் எதனையும் செய்யமாட்டோம்; எங்களின் உயிரே போனாலும் கவலையில்லை’ என்று உறுதியாக மறுத்தபொழுது, அந்தக் குலத்தின் பெரியமனிதர் ஒருவர் காலம்பனை சமாதானப்படுத்தினார்.

பறம்பின்மக்கள் யாரையும் தாக்கச் சொல்லவில்லை. அந்தச் சிறுவிலங்கைத்தான் எடுத்துவரச் சொல்லுகிறார்கள். அதனால் நமது குலமே விடுவிக்கப்படும் என்றால் அதைச் செய்வதில் தவறில்லை என்கிறார். வேறுவழியில்லாமல் காலம்பன் முப்பது வீரர்களை அழைத்துக்கொண்டு பறம்பின் மலைக்குள் நுழைகிறான்.

காடு பற்றிய பேரறிவுகொண்ட திரையர் கூட்டம் மூன்று மலைகளைக் கடந்து கொற்றவைக்கூத்து நடக்கும் களத்துக்குப்போய், ஐந்துகூடை நிறைய தேவாங்கு விலங்கைப் பிடிக்கின்றனர்.
காடறியச் செய்வதற்காகப் பதினொரு மாணவர்களை அழைத்துக்கொண்டு கொற்றவையை வணங்க அவ்விடம் வருகிறான் பறம்பின் ஆசான் தேக்கன். மாணவர்களின் கூருணர்வு மரக்கூட்டத்துக்குள் இருப்பவர் களைக் கண்டறிகிறது. அவர்களை விரட்டத் தொடங்குகிறான் தேக்கன். சின்னஞ்சிறு மாணவர்களை வைத்துக்கொண்டு மிகவலிமையான எதிரிகளை விரட்டி ஓடுகிறான். அவர்கள் தேக்கனை அடித்து வீழ்த்திவிட்டு ஓடுகின்றனர். தேக்கன் விடவில்லை, ஆறு மாணவர்களை எவ்வியூருக்கு அனுப்பி, பாரியை வரச்சொல்லிவிட்டு, மீதம் இருப்பவர்களை வைத்துக்கொண்டு எதிரிகளை விடாது விரட்டிச்செல்கிறான். மாணவர்கள் காடறியும் பயிற்சிக்கான கசப்புச்சாற்றினை உண்டிருப்பதால் பேசமுடியாத நிலையில் இருந்தனர். பாரியிடம் நிலைமையை விலக்கிச்சொல்ல முடியவில்லை. தேக்கன் அழைத்துவரச் சொன்னதாக நள்ளிரவு வந்துசொல்கின்றனர்.

நிலைமையைப் பாரியால் புரிந்துகொள்ள முடியவில்லை, ஆனாலும் மாணவர்களோடு சேர்ந்து அவன் தன்னந்தனியாகப் புறப்படுகிறான். மாணவர்கள் விடாது ஓடுகின்றனர். பாரி, ஆதிமலையைக் கடந்து இரண்டாங்குன்றை அடையும்பொழுது தேக்கனும் மற்ற மாணவர்களும் கடுந்தாக்கு தலுக்கு உள்ளாகியுள்ளது தெரியவருகிறது. யாரோ தேவவாக்கு விலங்கினைத் தூக்கிக் கொண்டு போவதும் தெரிகிறது. அதே மாணவர்களை வைத்துக்கொண்டு காட்டுக்குள் விரட்டி ஓடுகிறான் பாரி.

பறம்புமலையில் செடி, கொடி, பறவை, விலங்கு என அத்தனையையும் பயன்படுத்தி, முப்பது பேர் கொண்ட வலிமைமிகுந்த எதிரிகளை வீழ்த்திமுடிக்கிறான் வேள்பாரி. இறுதியில் எதிரிகளின் தலைவன் காலம்பனும் பாரியும் தனித்து மோதுகின்றனர். இருவரும் நெறிபிறழா அறத்தோடு நின்று மோதுகின்றனர். அப்பொழுது அங்கு வந்துசேரும் தேக்கன் பாரியின் பெயரைச் சொல்லி சத்தமிட்டு ஓசை எழுப்புகிறான்.
அப்பொழுதுதான் காலம்பனுக்குத் தெரியவருகிறது, நாம் இவ்வளவு நேரமும் பாரியெனும் மாமனிதனுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தோம் என்று. பாரி என்ற சொல்கேட்ட கணம் தாக்குதலைக் கைவிட்டு, வணங்கி மண்டியிட்டான் காலம்பன்.

தனது குலம் காக்க தவறான முடிவெடுத்து விட்டேன் எனத் தன்னையே மாய்த்துக் கொள்ளத் துணிகிறான் காலம்பன். இல்லை, நாங்கள்தான் உங்களைக் கணிக்கத் தவறிவிட்டோம் என்று அவனிடம் மன்னிப்பு கோருகிறான் பாரி. இருவரும் வேதனையால் உழன்று மீள்கின்றனர். வீழ்த்தப்பட்ட வீரர்களை உயிர்பிழைக்கச்செய்யும் ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யத் தொடங்கினர்.




பாண்டியனால் சிறைப்பிடிக்கப்பட்ட திரையர் குலம் தங்களுடன் இரத்த உறவுகொண்ட குலம். எனவே அவர்களை மீட்பதைத் தனது கடமையாகக் கருதினான் பாரி. காலம்பனோடு வந்தவர்களில் பெரும்பாதிப்புக்கு உள்ளாகாத வர்களோடு பறம்பின் வீரன் நீலனையும், அவனோடு ஆறு வீரர்களையும் இணைத்து, தேவவாக்கு விலங்கினைக் கொடுத்தனுப்பு கிறான்.

காலம்பன் தலைமையிலான குழு தேவவாக்கு விலங்கோடு அரண்மனை திரும்பியதும் மகிழ்வு கரைபுரண்டு ஓடுகிறது. அவ்விலங்கினை எப்படிப் பயன்படுத்துவது என்று தீவிரமாகத் திட்டமிட்டனர். காலம்பனின் குலத்தை விடுதலை செய்து உத்தரவிடும் வேந்தன், பெரும்வீரர்களான காலம்பன் உள்ளிட்டவர் களை யவனர்களுக்கு அடிமைகளாகக் கொடுக்கிறான்.
விடுதலையானவர்களைப் பறம்புநாட்டுக்குப் போகச்சொல்கிறான் காலம்பன். திரையர் கூட்டத்தினர், வைகையாறு கடல்புகும் இடத்திலிருக்கும் வைப்பூர்த் துறைமுகத்துக்குக் கொண்டுவரப்படுகின்றனர்.

தேவாங்கு விலங்கும் துறைமுகத்துக்குக் கொண்டு வரப்படுகிறது. மூன்று மாதத்துக்கும் மேலாக நீடித்த திருமண விழாவினை முடித்துக்கொண்டு யவன வணிகர்கள் நாடு திரும்ப வைப்பூர்த் துறைமுகத்தில் குழுமியிருந்தனர். பெரும் வணிகர்கள் பலரும் அங்கிருந்தனர். வைப்பூர்த் துறைமுகத்தில் நிற்க இடமின்றித் தத்தளித்துக்கொண்டிருந்தன கலங்கள்.

நெடும்பயணத்துக்குத் தயாராகும் யவனக்கப்பலின் மீது அடிமைகளாக்கப்பட்ட திரையர்கள் மேலேற்றப்பட்டனர். பொருத்தமான நேரத்தில் பறம்பின் வீரர்கள் தங்களின் அபார ஆற்றலால் கைவிலங்குகளை உடைத்தெறிகின்றனர். தங்களின் கைவசமிருந்த மாபெரும் ஆயுதங்களான செடிகொடிகளைக் கொண்டு கலங்களுக்குத் தீயிடத் தொடங்கினர்.

யவன வணிகர்களும் தமிழ் பெரும் வணிகர்களும் விடைபெறப்போகும் பெரும் விருந்தில் இருந்தபொழுது அவர்களின் கலங்கள் பற்றியெறியத் தொடங்கின. ஒன்றினைத்தொட்டு ஒன்றாகத் தீப்படர்ந்து மேலேறியது. ஒரு துறைமுகம் முழுமுற்றாக எரிவதை உலகின் பெருவணிகர்கள் எல்லாம் ஒன்றுகூடிப் பார்த்தனர்.

தப்பித்த திரையர் கூட்டம், தேவாங்கு விலங்கினையும் மீட்டுக்கொண்டு பறம்பு நோக்கிப் புறப்பட்டது. கலங்களில் பற்றிய நெருப்பு வானுச்சியைத் தொட்டபொழுது வெளியெங்கும் பரவிய சுடரின் ஒளிக்குள்ளிருந்து காலம்பனும் நீலனும் சீறிப்பாய்ந்து வெளியேறினர்.
தன் மைந்தர்களைக் கரம் நீட்டி அழைத்துக்கொண்டது பாரியின் பறம்பு.

இரண்டாம்
பாகம்
முற்றிற்று

# பாகம் 3

# வீரயுக நாயகன் வேள்பாரி-51

**பொ**ழுது நள்ளிரவைக் கடந்தது. துறைமுகம் மிகப்பரபரப்பாய் இருந்தது. யவனர்களின் கோட்டையிலிருந்து எழும்பிய இசைக்கருவிகளின் ஓசை திசையெங்கும் எதிரொலித்துக்கொண்டிருந்தது. விருந்தின் கூச்சல் கோட்டைச்சுவர் தாண்டி வெளியெங்கும் வழிந்தது. உச்சத்தை அடைந்த யவனர்களின் இசையோசை முடிந்ததும் கூத்துப்பறையின் ஓசை தொடங்கியது. பாண்டிய அழகிகள் ஆட்டத்தில் இறங்கி விட்டனர் என்பது புரிந்தது. விருந்தில் விடைபெறும் தருணம்தான் வெறிகூட்டும் ஆட்டம் நிகழும் அல்லது அப்பொழுதுதான் மனம் புதியதாய் ஒன்றை அடைய முன்னிலும் அதிகமாய் ஏங்கி நிற்கும். அதனால்தான் விருந்துகள் பின்னிரவுக்குப் பின்னர் சூடுபிடிக்கின்றன. இரவும் இசையும் மதுவும் ஒற்றைக்கோட்டில் வடம்பிடித்து நிற்க, ஆண்களும் பெண்களும் வெளவாலென அதைப்பற்றித் தொங்கிக்கொண்டிருக்கின்றனர். மோகம் எதுவொன்றையும் தலைகீழாக மாற்றுவதில்லை. தலைகீழாக மாறும் பொழுதுதான் அது இயல்புகொள்கிறது.

ஹிப்பாலஸின் நாவாய், துறைமுகத்தில் பெருவீரனைப்போல் கம்பீரமாய் நின்றுகொண்டிருந்தது. மீகான் நின்றுபார்க்கும் அதன் கூம்புமாடத்தின் கீழே திரையர்கள் உட்காரவைக்கப்பட்டிருந்தனர். அவர்களிடமிருந்து சற்று தள்ளி யவனக் காவல்வீரன் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். காவல்வீரர்களின் கவனமெல்லாம் நாவாயில் பொருள்களை ஏற்றும் பணியாளர்களின் மீதே இருந்தது. கைகளில் பெருந்தடிகொண்டு பிணைக்கப்பட்டுள்ள திரையர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையெதுவும் இருப்பதாக அவர்களுக்குத் தோன்றவில்லை.

குத்தவைத்தபடி உட்கார்ந்திருந்த நீலன் சற்றே தலைதூக்கிப் பார்த்தான். அவனுக்கு நேரெதிரே வானில் மெல்லிய மூன்றாம்பிறை நிலவு கண்சிமிட்டியது. பறம்பின் செய்தியை அது ஒளிசிந்தி அவனுக்குச் சொல்லுவதுபோல் இருந்தது. பிறைநிலவைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். நினைவுகள் எங்கெங்கோ ஓடிமறைந்தன. பிற விண்மீன்களையும் பார்த்தான். ‘எல்லோரும் இங்கே வந்து விட்டீர்களா?’ என்று மனம் கேட்டபொழுது உதட்டோரம் சிரிப்பொன்று மேலெழுந்தது.

காலம்பன் நீலனையே பார்த்துக் கொண்டிருந்தான். மூன்றாம்பிறை நிலவைப் பார்த்தபடி எழுந்தான் நீலன். காவல்வீரர்கள் வெகுதொலைவில் பொருள்கள் ஏற்றப்படு வதையே பார்த்துக்கொண்டிருந்தனர். எழுந்த நீலனின் கண்ணில் முதலிற்பட்டது வைகையின் நடுவில் அசைந்தபடி கடல்நோக்கிப் போகும் கப்பல் ஒன்று. அதைச் சற்றே கூர்ந்துபார்த்தான். விளக்கொளியால் கப்பலின் மேல்தளத்தில் இருப்பனவற்றை அவனால் துல்லியமாகப் பார்க்க முடிந்தது.

வேலையாள் ஒருவன் மீகான் நிற்கும் கூம்புமாடத்தின் மேல் கூண்டு ஒன்றினை வைத்துவிட்டுக்

கீழிறங்கிக்கொண்டிருந்தான். நீலன் அதை உற்றுக் கவனித்தான். தேவவாக்கு விலங்கைக் கொண்டுசெல்ல வடிவமைக்கப் பட்ட கூண்டுதான் அது என்பது பார்த்ததும் புலப்பட்டது. இனியும் காலம் தாழ்த்த வேண்டாம் என்று முடிவு செய்தபடி கீழே அமர்ந்தான். அமர்ந்த வேகத்தில் அவனது நாக்குக் குழன்று சிற்றொலியை எழுப்பியது. அணில் எழுப்பும் ஒலிபோல் அது இருந்தது. திரையர்கள் யாருக்கும் எதுவும் புரியவில்லை. ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்தனர். காலம்பன் நீலனின் செயலைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

கூட்டத்தின் நடுவில் உட்கார்ந்திருந்த பறம்பின் வீரர்கள் இருவருக்கான ஒலிக்குறிப்பு அது. அவர்கள் தங்களுக்கான உத்தரவு கிடைத்ததும் வேலையைத் தொடங்கினர். அவர்கள் கழுத்தை ஒட்டி வேர்க்கொடி ஒன்றினைக் கட்டியிருந்தனர். கீழ்த்தாடையைக் கழுத்தோடு தாழ்த்தி நாக்கை நீட்டி அவ்வேர்க்கொடியைப் பற்ற நினைத்தான் பறம்பின் வீரன். அது உள்கழுத்தில் பதிந்திருந்ததால் எளிதில் நாக்கின் நுனிக்குச் சிக்கவில்லை. மீண்டும் மீண்டும் முயன்றான். சிறிதுநேரத்தில் நாக்கின் நுனியில் வேர்க்கொடி சிக்கியது. மெல்ல அதனை நுனிநாக்கிலேந்தி உள்வாய்க்குக் கொண்டுவந்தான்.

இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று திரையர்களுக்குப் புரியவில்லை. உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர். பறம்பின் வீரர்கள் இருவரும் கழுத்தில் சுற்றியிருந்த கொடியைப் பல்லால் கடிக்கத்தொடங்கினர். அது நத்தைச்சூரியின் காய்ந்த இலைகளைக்கொண்டு திருகிக் கட்டப்பட்ட கொடி. நத்தைச்சூரியை வாயிலிட்டு மென்ற ஒருவன் கல்லைக்கூடக் கடித்து நொறுக்கிவிடுவான். அதன் சாறு உருவாக்கும் வீரியத்துக்கு இணையில்லை.

நத்தைச்சூரியின் இலைகளை மென்று அதன் சாறு பல்லிடுக்கில் இறங்கத்தொடங்கியதும் மாற்றங்கள் தெரியத்தொடங்கின. பல் ஈறுகளில் கங்கினைக் கொட்டியதுபோல அவர்கள் துடிக்கத் தொடங்கினர். எலியின் வீறுகொண்ட வகையான செம்மூக்கனைப்போல அவர்கள் மாறினர். மேல்தாடைப் பற்கள் கீழ்த்தாடைப் பற்களை நறநறவெனக் கடித்து நொறுக்கி விடுவதுபோல் இருந்தன. கடவாய்ப் பற்கள் இலையின் கடைசிச்சாறு இறங்கும் வரை அரைத்துக்கொண்டே இருந்தன.

எந்தக்கணம் அது தொடங்கப்போகிறது என்பதைக் காண நீலனின் கண்கள் ஆர்வத் தோடு காத்திருந்தன.  ஒரு கணப்பொழுதில் அது தொடங்கியது. அவன் முதலில் தன் கைகளில் பூட்டப்பட்டிருந்த மரக்கட்டையைக் கடிக்கத் தொடங்கினான். மிகக்கடினமான மரங்களைச் சோளத்தட்டையைக் கடித்துத் துப்புவதுபோலத் துப்பினான். நிகழ்வதைக் காலம்பன் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

செம்மூக்கனின் வேகம் கடிக்கத் தொடங்கிய பிறகுதான் பலமடங்கு அதிகமாகும். மற்ற எலிகள் மண்ணின் மேலே எவ்வளவு வேகமாக ஓடுமோ அதேபோல செம்மூக்கன் மண்ணுக்குள் கரகரவெனக் கடித்துத் துளையிட்டுக் கொண்டே ஓடும் என்பார்கள். கப்பலின் மேலே இருந்த இரு செம்மூக்கன்களும் தமக்கு விலங்காய் இடப்பட்ட கைக் கட்டைகளைக் கடித்துத் துப்பத் தொடங்கியதும் வேகம் பலமடங்கு அதிகமானது. தனது கைக்கட்டையைக் கடித்து இரு துண்டாக்கியதும் நீலனை நோக்கிப் பாய்ந்து வந்தான் ஒருவன். நீலனோ காலம்பனைக் கைகாட்டினான். வந்தவன் திரும்புவதற்குள் மற்றொருவன் காலம்பனின் கைக்கட்டையைக் கடித்துக் கொண்டிருந்தான். அவன் முடிப்பதற்குள் நீலனின்

கைக்கட்டையைக் கரகரவெனக் கடித்துத் துப்பி இருகூறாக்கி முடித்தான். அடுத்தடுத்து ஒவ்வொரு வீரனின் கைக் கட்டையையும் கடித்துத் துப்பிக் கொண்டிருந்தனர். நத்தைச்சூரியின் வீரியம் குறையும் முன் கடித்தாக வேண்டும். நேரமாக ஆக அதன் வீரியம் குறையத்தொடங்கும். அவ்வாறு குறைந்துவிட்டால் கடிப்பவனின் பல்வலி தாங்க முடியாததாகிவிடும்.

ஆனால், இப்பொழுது இருக்கும் நிலையில் அவர்கள் இருவரும் இக்கப்பலையே கடித்து இருகூறாக்கிவிடுவார்கள். அவர்களின் உடலில் ஏறியிருந்த வன்மம் நத்தைச்சூரியையும் விஞ்சுவதாக இருந்தது. செம்மூக்கனின் வேகம் உச்சத்தில் இருந்தது. காலம்பன் ஓர் அதிசயத்தைக் கண்முன்னால் பார்த்துக் கொண்டிருந்தான். வேலைமுடிந்தும் செம்மூக்கன்களின் வேகம் குறைய வில்லை. அவர்கள் நாவாயின் விளிம்பைக் கடித்துத் தங்களை ஆசுவாசப்படுத்த முயன்று கொண்டிருந்தனர்.

ஆனால், வேலை இனிமேல்தான் தொடங்கப்போகிறது. இப்பொழுது உடலில் ஏறிநிற்கும் வீரியத்தை எதுகொண்டும் குறைக்க முடியாது. பறம்பின் மற்ற மூன்று வீரர்களும் இடுப்புத்துணியோடு இணைத்துக் கட்டப் பட்டிருந்த நார்க்கொடியை உருவி எடுத்தனர். அவையெல்லாம் பால்கொறண்டியின் காய்ந்த சக்கைகளைக் கயிறாகத் திரித்துக் கட்டப் பட்டவை. கயிறுகள் எல்லாம் சிறு சிறு அளவாகப் பிய்க்கப்பட்டு ஆளுக்கு ஒரு பகுதி கொடுக்கப்பட்டன. ஒருவன் அருகிலிருந்த விளக்கில் ஒரு கொடியைப் பற்ற வைத்தான்.



தீப்பற்றிப் பிடித்ததும் எல்லோர் கைப்பிடிக்கும் நெருப்பு பரவியது. நாவாயின் விளிம்புக்கட்டையைத் தாண்டி இருபது பேரும் நீருக்குள் குதித்தபொழுது எல்லோரின் கையிலும் பற்றியெரியும் பால்கொறண்டி இருந்தது. பொருள்கள் ஏற்றப்படுவதிலேயே கவனம்கொண்டிருந்த காவல் வீரர்கள் ஓசைகேட்டுத் திரும்பினர். கைக்கட்டையோடு நீரிலே குதிக்கும் அடிமைகளை நினைத்து பரிதாபத் தோடு எட்டிப்பார்க்க வந்தனர்.

குதிக்கும்பொழுது கையில் இருந்த பால்கொறண்டியை விட்டுவிட்டு நீரில் மூழ்கியவர்கள், மீண்டும் எழுந்தபொழுது எரிந்தபடி மிதந்துகொண்டிருந்த பால் கொறண்டியைக் கையிலேந்தினர். மற்ற மூன்று பறம்புவீரர்களும் கழுத்தில் இருந்த தாயத்தைப் பிய்த்தெடுத்து வாயில்போட்டு மென்றனர். தாயத்துக்குள் இருந்தவை எல்லாம் பொறித்துகள்கள்.

நன்றாக மென்ற பின் பால்கொறண்டியில் எரியும் நெருப்போடு சேர்த்து மூச்சிழுத்து பொறித்துகளை நாவாய்களின் மீது உமிழ்ந்தனர். பொறித்துகளில் நெருப்புப்பட்டால் போதும் அது ஒருபொழுதும் அணையாது. கங்குகளை உருக்கிவைத்துள்ள மணல்துகள்கள் போன்றவை அவை. அது நெருப்பை எளிதில் அணையவிடாது கனன்றுகொண்டே இருக்கும். நீரில் மிதந்து ஊறிய கட்டைகள் முழுமையும் பற்றிப்பரவும் வரைகூடப் பொறித்துகளின் தழல் அணையாது. ஒருவன் மாற்றி ஒருவன் ஊதித்தள்ள, பால்கொறண்டியின் நெருப்பு கலம்தோறும் பற்ற, நீரில் ஊறிக்கிடக்கும் அடிமரங்களைத் தீயின் நாவுகள் தேடித் துழாவின. வைகையில் மிதந்த இளங்காற்று துழாவும் தழலுக்குத் தோள்கொடுத்து உள்நுழைத்தது. எல்லாக் கலங்களின் பின்புற அடிவாரங்களிலும் தீவைக்கும் பணி படுவேகமாக நடந்துகொண்டிருந்தது.

கொண்டாட்டங்களின் பேரிரைச்சலும் வேலைகளின் மும்முரமுமாக துறைமுகம் ஆட்களின் நெரிசல் தாளாமல் இருந்தபொழுது, கலங்களின் பின்புற அடிவாரங்களைக் கங்குகள் பற்றி மேலேறப் பொறித்துகள்கள் வழிசெய்து கொண்டிருந்தன. கடல் காற்று வைகை யாற்றோடு உள்நுழைந்து வீசிச்சென்ற பொழுது கலங்களின் உள்கட்டைகளில் தீயின் வேர்கள் ஆழப்பதியத் தொடங்கின.

பெரியது, சிறியது, யவனர்களுடையது, தமிழ் வணிகர்களுடையது என எந்த வேறுபாட்டுக்கும் இடமில்லை. எல்லாவற்றின் அடிக்கட்டைகளையும் பால்கொறண்டிகள் முத்தமிட்டுத் தழுவிச்சென்றன.


இழுத்தணைத்து முத்தம் மட்டும் இட்டுவிட்டு மீள முடிவதில்லை, மீளமுடியாத காமம் உள்வாங்கி இழுத்துக்கொண்டிருந்தது. இன்றிரவு கப்பல் ஏறினால் கரைகாண மாதங்கள் பல ஆகும். எனவே யவனக் கடலோடிகள் முழுவிசையோடு இரவு முழுவதும் இயங்கினர். பாண்டியநாட்டு அழகிகள் ஆடும் இருமுகப்பறையின் அதிர்வாட்டத்தைப் பார்க்க வாய்ப்பது எளிதல்ல; ஒரு கட்டத்தில் முசுகுந்தரே மயங்கிக் கிறங்கிக் களம் புகுந்தார். மகிழ்ச்சியை வேரோடு பிய்த்தெடுக்கும் வெறிகொண்டு நிகழ்ந்தது விருந்து.

விருந்தென்பது இசையும் ஒளியும் வண்ணமும் மட்டும் கொண்டதன்று; இவை எல்லாவற்றையும் மகிழ்ந்து ரசிக்க முடியாத மயக்கமும் கொண்டது. இருமாதங்களுக்கு மேலாக நடந்து முடிந்த பேரரசின் மணவிழாவின் நிறைவை இவ்வளவு சிறப்பாக உலகில் வேறுயாரும் கொண்டாட முடியுமா என்ற ஐயம் ஹிப்பாலஸ்ஸுக்கே உருவானது. அதற்குக் காரணம், கோட்டைக்குள்ளிருந்த வெளிச்சத்தையும் ஓசையையும்விடக் கோட்டைக்கு வெளியே அதிக வெளிச்சமும் ஓசையுமாக அவ்விரவு இருந்தது. வியப்பு எல்லையற்றதானது.

நிலைகொள்ளமுடியாமல் தள்ளாடிக் கொண்டிருக்கும் தங்கள் தலைவர்களிடம் செய்தியைச் சொல்ல

வீரர்கள் அஞ்சினர். கோட்டைக் கதவினை முழுமையாகத் திறந்துவிட்டபொழுதுதான் நிலைமையின் விபரீதம் புரியத்தொடங்கியது.

கேட்கும் ஓசைக்குள் கதறும் குரல் மேலெழுந்தது. ஹிப்பாலஸ்ஸின் கண்ணிற்பட்ட வெளிச்சத்துக்குக் காரணம், இணையில்லாத உயரங் கொண்ட அவனது கப்பலின் பாய்மரம் சுழன்று எரிந்ததுதான். ஏறிய மயக்கம் கணப்பொழுதில் கீழிறங்கியது. பேரதிர்ச்சி கொண்டு துறைமுக மேடையை நோக்கி ஓடினான் ஹிப்பாலஸ். அப்பொழுதும் நிலைமையின் விபரீதம் முசுகுந்தருக்குப் புரியவில்லை. தேறலின் மயக்கம் எளிதில் மீளவிடாது. அதையும் மீறி ஹிப்பாலஸ் மீண்டதற்குக் காரணம் எரிந்துகொண்டிருந்தது கப்பலன்று; அவனது இன்னோர் உயிர்.



எங்கும் கூக்குரல் மேலெழுந்தது. உள்ளும் புறமுமாக வீரர்கள் பதைபதைக்க ஓடினர். துறைமுகத்தின் மேடைப்பகுதியை நெருங்க முடியாதபடி தீயின்சுடர் வாரிச்சுழற்றிக் கொண்டிருந்தது. எல்லா நாவாய்களிலும் முழு அளவு பொருள்கள் ஏற்றப்பட்டுவிட்டதால் நெருப்பு இணைசொல்ல முடியாத வீச்சோடு மேலேறிப் படர்ந்தது. கடல்காற்றில் பற்றிய பாய்மரம் நெருப்போடு அசைந்தாடியது. ஒன்றினைத்தொட்டு ஒன்றாக, கிழக்கிலிருந்து மேற்குவரை எல்லாக் கலங்களிலும் தீப் பற்றிப் பரவியது.

பெரும்மரத்தின் அடிவாரத்தில் கறையான் புற்று சென்னிறச் சிறுகோடுபோலப் பற்றி மேலேறுமே, அப்படித்தான் கலங்களின் அடிவாரத்திலிருந்து ஏதோ ஒரு முனையில் தீயின் நாவுகள் மேலேறிக்கொண்டிருந்தன. மேல்தளத்துக்கு அவை வந்து சேர்ந்ததும் காற்றோடு போட்டியிட்டுப் புரண்டு எழுந்தன.

மேல்தளமெங்கும் பெருவடக் கயிறுகள் கிடப்பதால் தீயின் அடர்வேகம் வலிமை கொண்டு உள்ளிறங்கியது. கலங்களின் ஓரப்பகுதியில் கீழிருந்து மேல்நோக்கி வந்த தீ, இப்பொழுது மையப்பகுதியில் மேலிருந்து கீழே செல்லத் தொடங்கியது. தீ சுழலத் தொடங்கியது. மண்ணுக்குள் நீர் இருப்பதுபோல, மரத்துக்குள் தீ இருக்கும். மரம் தீயாய் மாறும் ஆவேசம் அளவிட முடியாதது. அது

காலகாலமாக அடக்கிவைக்கப்பட்ட ஒன்றின் வெளிப்பாடு. அளவிட முடியாத சீற்றத்துடனே இருக்கும்.

ஹிப்பாலஸ் தன் கண்முன்னால் தனது நாவாய் பற்றியெரிவதைப் பார்த்தபடி நின்றிருந்தான். யவனவீரர்கள் தங்கள் தளபதியின் நாவாயையாவது காப்பாற்றிவிடலாமெனப் பெருமுயற்சி செய்தார்கள். எதுவும் நடக்கவில்லை. கலங்களை நெருங்க முடியாமல் தவித்தவர் களுக்கு, நேரம் செல்லச்செல்ல கரையையே நெருங்க முடியாத நிலை ஏற்பட்டது. மேல்மரங்கள் வெடிக்கத் தொடங்கின. கொடிமரங்கள் சரிந்து வீழ்ந்தன. பாய்மரத்துணி காற்றெங்கும் சாம்பலாய்ப் பறந்து கொண்டிருந்தது.


மற்றவர் அறியாவண்ணம் முன்னிரவே இரு கப்பல்களில் தேவாங்கினை ஏற்றி அனுப்பி வைத்த சூழ்கடல் முதுவன் நள்ளிரவுக்குப் பின்னர்தான் விருந்துக்கு வந்துசேர்ந்தான். கடைசியாக வந்து தேறலுக்குள் ஆழப் புதைந்தான். அவனது மகிழ்வு எல்லோரையும் விட எல்லையற்றதாக இருந்தது. அருந்தும் குவளைக்கு விளிம்புண்டு. ஆனால், தேறலுக்கு அதுவுமில்லை என நம்புபவன் அவன்.

தேவாங்குகள் இருக்கும் பிற கலங்கள் துறைமுகத்தில்தான் நிற்கின்றன. யவனர்களின் நாவாய்கள் எல்லாம் புறப்பட்ட பின் இறுதியாக அதனை நகர்த்துவோம் என்று முடிவுசெய்த சூழ்கடல் முதுவன் ஆடல் அழகிகளோடு உள்ளறைக்குப் போனான். வெளியெங்கும் எதிரொலித்துக்கொண்டிருந்த பெருங்கூச்சல் எதுவும் அவனை எட்டவில்லை.

இருமுகப்பறையின் இன்பத்தைத் தனித்து அவன் அனுபவித்துக்கொண்டிருந்தான். பெருங்கலங்கள் வெடிப்புற்றுத் தெறிக்கும் ஓசைகூட அவனைச் சென்றுசேரவில்லை. எழும் கரும்புகையால் மூச்சடைத்த பொழுதுதான் வெளிவரத் துணிந்தான். அப்பொழுது அவனது கலமான கடற்கோதையை நெருப்பு முழுமையாக அணைத்துப் பிடித்துக் கொண்டிருந்தது. நீரில் அசையும் கலத்தின் மீது நின்று ஆடியது நெருப்பின் சுடர்.

கிழக்கு முனையிலிருந்து ஒருவர்பின் ஒருவராக எல்லோரும் கரையேறினர். கைகளில் இருகூறாகத் தொங்கிக் கொண்டிருந்த கைக்கட்டைகளைக் காலம்பன் பிய்த்து எறிந்தான். பூட்டப்பட்ட கட்டைகளிலிருந்து விடுதலையான எல்லோரும் கைகளை வீசியபடி கரையோரத்தில் நடக்கத் தொடங்கினர். எழும் புகையால் வான்மண்டலம் மறைந்தது. மூன்றாம்பிறை நிலவினை நீலனால் பார்க்க முடியவில்லை. ஆனால், காலைக்கதிரவனின் ஒளித்தகிப்பை நீருக்குள் பார்த்துக்கொண்டிருந்தான். வைகை செம்மூதாயாய்க் கனன்றுகொண்டிருந்தது. கதைகளை மறக்காமல் காலம் அவன் கண்ணுக்குக் காட்டிக்கொண்டிருந்தது.

துறைமுகம் ஒன்று முழுமுற்றாக எரிவதை உலகின் பெரும்வணிகர்கள் எல்லோரும் ஒன்றுகூடிப் பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால், அதனினும் வீரியத்தோடு எரிந்துகொண்டிருந்தது காலம்பனின் சினம். எரியூட்டிய வேலையைச் செய்ததெல்லாம் பறம்பின் வீரர்கள்தாம். தாங்கள் எதுவும் செய்யவில்லை என்ற கோபத்தில், மிதந்தபடி எரிந்துகொண்டிருந்த கலங்களை ஒருபுறமாகச் சாய்த்துத் தலைகுப்புறக் கவிழ்த்தலாமா என்று கேட்டபடி மீண்டும் கடலுக்குள் இறங்கினர் திரையர்கள்.



நீலன் தடுத்து மேலேற்றினான். தேவாங்கினை மீட்டுச்செல்வதே நமது நோக்கம் என்பதை நினைவுபடுத்தி அழைத்துச்சென்றான். காலம்பனின் கண்கள் கருங்கைவாணனையும், திதியனையும் விடாது தேடின. அவர்கள் இங்கு வரவில்லை. பாண்டியனின் இணைமீன் கவசத்தை மார்பில் அணிந்தபடி எவன் எதிரில் வந்தாலும் அவன் காற்றிலே வீசப்பட்டுக் கொண்டிருந்தான். காலம்பனின் கைப்பிடிக்கு நதி சிக்கினால் அதையும் சுழற்றி எறிந்துவிடுவான் என்றுதான் தோன்றியது. எரியும் நதியின் எதிர்திசை நோக்கி அவர்கள் நடந்தனர்.

எங்கும் கூக்குரல்களும் வெடித்து உமிழும் நெருப்பின் குரலுமாக இருந்தது. அருகிலிருந்த அருகன்குடியிலிருந்து மக்கள் சாரிசாரியாக ஓடிக் கொண்டிருந்தனர். திரையர்கள் மட்டும் நெருப்பைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் பாண்டியனின் கோட்டையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர். வழியில் இருந்த பெருஞ்சுவரின் ஓரத்தில் எறியுளிகள் சாய்த்து வைக்கப்பட்டிருந்தன. விலகிப் போய்க் கொண்டிருந்த காலம்பனின் கண்களில் அவை பட்டன. ஆழ்கடல் செல்லும் மீனவர்கள் பெருஞ்சுறாக்களை எறியுளியால் எறிந்தே பிடிப்பர். இணையற்ற நீளமும் கூர்முனையுங் கொண்ட எறியுளிகளைக் கைகளில் அள்ளினான் காலம்பன்.

எரியும் நெருப்பினை விஞ்சிக்கேட்டன சில மனிதக்குரல்கள். நீலன் திரும்பிப் பார்த்தான் கடைசியாய் நின்றிருந்த கலம் ஒன்றின் மீதிருந்து கதறிய அடிமைகளின் குரல்கள் அவை. எல்லோரின் கவனமும்

அப்பக்கம் திரும்பியது. கைகால்களில் விலங்கிடப்பட்டதால் யாராலும் தப்பிக்க முடியவில்லை. நெருப்பு சுற்றியபடி அவர்களை நெருங்கிக்கொண்டிருந்தது. கலங்களின் மேல்விளிம்பை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த திரையர்கள் விலங்கினைப் பிய்த்தெறிந்து அவர்களை வெளியில் தூக்கி வீசினர்.

வீசப்பட்டவர்கள் யாரும் தப்பித்து ஓடாமல் மீண்டும் கலம்நோக்கியே கதறியபடி நெருங்கினர். காரணம் புரியாமல் நீலன் நின்றபொழுது, மீகான் நிற்கும் கூம்புமேடையில் ஒருவன் கட்டப்பட்டிருப்பது தெரிந்தது. "எம் தலைவனைக் காப்பாற்றுங்கள்" என்று அவர்கள் கதறினர். துணிந்து மேலேறிய திரையர்கள் மரம்பிளந்து அவனைத் தூக்கிவந்தனர். உடலெங்கும் செதில்செதிலாகப் பிளவுற்று இருந்த அவன் அரைமயக்கத்தில் இருந்தான். விடுவிக்கப்பட்ட அடிமைகள் அவனை உயிரெனத் தாங்கிக்கொண்டனர்.

பாண்டிய வீரர்கள் பெருங்கலங்கள் எரியும் இடத்தில் கூச்சலிட்டுக்கொண்டு கிடந்ததால் ஓரத்திலிருந்து பற்றியெரிந்த இச்சிறுகலத்தைப் பார்க்க யாருமில்லை. ஆனால், நீலனின் மனதில் இக்காட்சி நெகிழ்வை ஏற்படுத்தியது. விடுவிக்கப்பட்ட அடிமைகள் தாங்கள் உயிர்பிழைத்தால் போதுமென ஓடுவதற்கு மாறாக தம் தலைவனைக் காப்பாற்றும் வரை அந்நெருப்பை விட்டு அகலாமல் இருந்தது அவனுக்கு வியப்பை ஏற்படுத்தியது. மீட்கப்பட்ட அவர்கள் உடன் வந்துகொண்டிருந்தனர்.

பற்றியெரியும் கலங்கள் நோக்கிக் கோட்டை யிலிருந்த வீரர்கள் எல்லோரும் பாய்ந்து ஓடியதால் திறந்துகிடந்த கோட்டைக்குள் பறம்பின் வீரர்கள் நுழையும்பொழுது கேட்க யாருமில்லை. தேவவாக்கு விலங்கின் கூண்டருகே வந்து நின்றான் நீலன். நான்கு பெருங்கூண்டுகளுக்குள் இருந்தனவற்றை யெல்லாம் கூண்டோடு தூக்கினர் திரையர்கள். எண்ணிலடங்காத குதிரைகள் கட்டுத்தறியில் நின்று கொண்டிருந்தன.

கட்டுத்தறியில் வரிசையாய் குதிரைகள் நிற்பது போலத்தான் துறைமுகத்தில் கலங்கள் நிற்கின்றன. பின்னிரவு கழிந்ததும் துருத்தியில் ஊதுவதைப்போல இடைவிடாது வீசியது கடற்காற்று. காற்றின் வேகம் தழலை வெளியெங்கும் வீசி விளையாடியது. நெருங்க முடியாமல் போராடிக்கொண்டிருந்தனர் பாண்டிய வீரர்கள். இளமருதன் தன்னால் முடிந்ததனைத்தும் செய்துபார்த்தான். எதுவும் ஆகவில்லை. அப்பொழுதுதான் ஓடிவந்தவொரு வீரன் செய்தி சொன்னான்.

நெருப்பினும் கொடுஞ்செய்தியாக அது இருந்தது. தன் வீரர்களோடு அருகிருந்த யவனக்கோட்டைக்குள் ஓடினான். அங்கு கட்டப்பட்டிருந்த குதிரைகளில் ஏறி மேற்திசையில் இருந்த பாண்டியக்கோட்டையை நோக்கி விரைந்தான். வழக்கம்போல அவனது ஆலா காற்றைக்கிழித்து சீறிப்பாய்ந்தது. மற்ற வீரர்கள் அவனைப் பின்தொடர்ந்து விரைவதற்கு நீண்ட நேரமானது.

அவன் பாண்டியர் கோட்டைக்குள் நுழைந்தபொழுது தேவாங்கினைத் தூக்கிக் கொண்டு அந்தக் கூட்டம் போய்விட்டது. இவ்விரவில் நெடுந்தொலைவு போயிருக்க முடியாது என முடிவுசெய்த இளமருதன் தனது படையோடு அவர்களை நோக்கி விரைந்தான்.

திரையர்களைச் சுமந்து செல்லும் குதிரைகளால் ஒருபொழுதும் பாய்ந்து செல்ல முடியாது. புறப்பட்ட சிறிது நேரத்திலேயே அதை நீலன் உணர்ந்தான். எனவே தானும் மெதுவாகவே குதிரையைச் செலுத்தினான். விடுவிக்கப் பட்ட அடிமைகளும் குதிரையேறி இவர்களோடு வந்துகொண்டிருந்தனர். அவர்களை விலகிப்போகச் சொல்ல நீலனுக்கு மனமில்லை. தங்கள் தலைவனை ஒரு குதிரையில் தாங்கிப் பிடித்தபடி மற்றவர்கள் சூழ வந்தனர்.

அப்பொழுதுதான் எதிர்பாராமல் இருளுக்குள்ளிருந்து பாய்ந்து வந்திறங்கின ஈட்டிகள். குதிரைகள் சிதறி விலகின. மெதுவாகப் போய்க்கொண்டிருந்த தனது குதிரையை இழுத்து நிறுத்தினான் காலம்பன். கையிலேந்திய எறியுளிகொண்டு சுறாவேட்டையைத் தொடங்கினான். இருளெனும் பெருங்கடலுக்குள் காலம்பன் வீசிய எறியுளிகள், வந்துகொண்டிருந்தவர்களின் உடல்களை இடைவிடாது துளைத்து வெளியேறிக்கொண்டிருந்தன.

தாக்குதலின் கூக்குரலுக்கு நடுவே தங்கள் தலைவனைப் பாதுகாப்பாய்க் கொண்டுசெல்வதிலேயே கவனமாய் இருந்தனர் மீட்கப்பட்ட அடிமைகள். வேகமற்று நடக்கும் திரையர்களின் குதிரைகளை இடைவிடாது வந்து சூழ்ந்தவண்ணம் இருந்தனர் பாண்டிய வீரர்கள். எந்தவோர் ஆயுதத்தையும்விட மிக நீளமானவை எறியுளிகள். எனவே, புழுக்களைக் கோத்துத் தூக்கும் கீற்றோலைபோல அது மனித உடல்களைக் கோத்தெடுத்துக் கொண்டிருந்தது.

இச்சிறு படையை அழிக்க தன் வீரன் ஒருவனே போதும் எனக் காலம்பன் நினைத்தபொழுதுதான் சற்றும் எதிர்பாராதது நடந்தது. முன்னால் போய்க்கொண்டிருந்த நீலனை மறிக்க மின்னல் வேகத்தில் ஒரு குதிரை பாய்ந்து சென்றது. காலம்பன் அதை நோக்கி விரைந்து செல்ல குதிரையை இயக்கிப் பார்த்தான். ஆனால், இவனது குதிரையின் வேகம் கூடவில்லை. கண்ணிமைக்கும் நேரத்தில் பாய்ந்து சென்றது ஆலா. உருவிய வாளோடு இளமருதன் முன்னால் விரைந்ததற்குக் காரணம். நீலனின் முதுகில் கட்டப்பட்டிருந்த தேவாங்கின் கூடை. எக்காரணங் கொண்டும் அதனை எடுத்துச்செல்ல அனுமதிக்கக்கூடாது என்று வெறிகொண்டு தாக்கினான் இளமருதன்.

ஆலா பாய்ந்து சென்ற வேகம் காலம்பனை சற்றே உலுக்கியது. நீலனை நோக்கி விரைந்து செல்லத் துடித்தான். இருளுக்குள் நிகழும் மோதலில் உருவங்கள் புலப்படவில்லை. எனவே எறியுளியை வீசியெறிய முடியாத நிலை. கணநேரங்கூட காலம்பனால் தாங்கமுடியாமல் குதிரை விட்டிறங்கிப் பாய்ந்து ஓடினான்.

சற்றும் எதிர்பாராமல் வெட்டிவீசப்பட்ட தலையொன்று அவனைக் கடந்துபோய் இருளுக்குள் உருண்டது. காலம்பன் அதிர்ந்து நின்றான். இருளுக்குள்ளிருந்து சீறி வெளியேறியது ஆலா. ஆலாவின் முதுகில் அமர்ந்திருந்தான் நீலன்.

# வீரயுக நாயகன் வேள்பாரி-52

களைகட்டியது கூத்து. திசையெங்குமிருந்து பறம்புமலையை நோக்கி அணியணியாய் மேலேறினர் பாணர்கள். கூத்துத் தொடங்கும்முன் தங்களின் பறைகளை நெருப்பிலே சூடேற்றினர். சூடேற்றிய பறையை இழுத்தடித்ததும் ஓசையின் வழி நெருப்பே பரவியது. வைப்பூரை எரித்த நெருப்பு, அருகன்குடியை அழித்த நெருப்பு, யவன நாவாய்களை விழுங்கிய நெருப்பு, கலங்தோறும் கனன்ற நெருப்பு. அந்நெருப்பே பாடலாய் மாறியது. நெருப்பின் பாடலே இரவெங்கும் ஒலித்தது.

பறம்பின் வீரர்கள் நால்வரின் வாயிலிருந்து உமிழப்பட்ட பொறித்துகளை இப்பொழுது நிலமெங்கும் பாணர்கள் உமிழ்ந்துகொண்டிருந்தனர். பாய்மரங்களைவிட உயரத்தில் பறந்துகொண்டிருந்த பாண்டியனின் புகழ்மீது பற்றியெறிந்தது நெருப்பு. கருகி உதிரும் புகழின் சாம்பலேந்தி வழியெங்கும் பாட்டிசைத்தனர் அகவன் மக்கள்.




நீரின்மீது ஆடிய நெருப்பின் நடனத்தை நிலமெங்கும் ஆடிக்களித்தனர் கூத்தர்கள். வணிகர்களின் அச்சு ஒடிவது ஏதோ ஒரு வகையில் மக்கள் எல்லோருக்கும் பிடித்திருந்தது. அதனாலேயே இச்செய்தி மக்களின் செய்தியாக மாறியது. சேரனும் சோழனுங்கூட இக்கதைப்பாடலை அவையில் பாடச்சொல்லிக் கேட்டனர். வேந்தர்களில் முதல்நிலையை அடைந்துவிட்டதாகச் செருக்கிக்கொண்ட பாண்டியன் எரிந்த கதை இன்பத்தைச் சுரந்தது.

பாண்டிய இளவரசனின் மணவிழாவில் நிகழ்ந்த கூத்துகளெல்லாம் இப்பொழுது நிலமெங்கும் கேலிக்கூத்தாய் நிகழ்ந்து கொண்டிருந்தன. செல்வத்தின் கருநிழலில் கால்மிதித்து ஆடினர் கலைஞர்கள். ஓடோடிகளும் நாடோடிகளும் தமக்கான பாடலை தமது நரம்பெடுத்து மீட்டனர். ஆக்கத்தில் கிடைக்கும் இன்பம் அழிவிலும் கிடைக்கும். இவ்வழிவு தற்செயல் என்றுதான் எல்லோரும்

நம்பினர். ஆனால், முற்றிலும் எரிந்த தீயிலிருந்து எரியாமல் வெளிவந்தது உண்மை. இது தற்செயல் அல்ல, தாக்குதல் எனத் தெரியவந்தது. தாக்கியது திரையர் கூட்டம் என்பது அறியவந்தது. உடனிருந்தது பறம்பு மக்கள் என்பதும் புரியவந்தது. அவ்வளவு காலமும் பரவிய நெருப்பைப் பற்றிய கதை, இப்பொழுதுதான் நெருப்பாய்ப் பரவத் தொடங்கியது. வேள்பாரியின் சீற்றம் கடல்தொட்டுத் திரும்பியதெனத் தென்பறை முழங்கினர் பாணர்கள்.

நெருப்பைவிட வேகமாகப் பரவக்கூடியது கதை. நெருப்பைவிட அதிகமாகச் சுடக்கூடியது கதை. நெருப்புகொண்டும் எரிக்கமுடியாதது கதை. எனவே இக்கதை பரவுவதைத் தடுக்கவோ, எரிவதை நிறுத்தவோ, சுடுவதை மறைக்கவோ யாராலும் முடியவில்லை. இந்நெருப்பை நீர்கொண்டு அணைக்க முடியாது. ஏனென்றால் இந்நெருப்பே நீரின் மீதுதான் எரியத்தொடங்கியது. கடைசிவரை நீரின் சாட்சியாகவே எரிந்து தணிந்தது.

வெஸ்பானியனின் உடலிற்படர்ந்த தீயை அணைக்க எவ்வளவு முயன்றும் முடியவில்லை. நதியிலே தள்ளிவிட்டுக் காப்பாற்றிவிடலாம் என நினைத்து நெருப்போடு நீருக்குள் தள்ளினர். அவன் நீரில் விழுந்த சில கணங்களில்தான் எரிந்துகொண்டிருந்த ஹிப்பால்ஸ்ஸின் நாவாய் வெடித்துச் சரிந்தது. வெஸ்பானியன் எரிந்து மூழ்கினானா, மூழ்கி எரிந்தானா என்பது தெரியாமலே போய்விட்டது.

எண்ணிலடங்காத முத்துப்பெட்டிகள் ஏற்றப்பட்ட நாவாய் அது. ஒவ்வொரு வணிகனும் பெரும்மகிழ்வோடு கணக்கிலாத பொருள்களை வாங்கிக் கலம் நிறைத்துப் புறப்படும் வேளையில் நெருப்புநடனம் நிகழ்ந்ததால், கலத்திலிருந்த பொருள்களின் அளவு கணக்கிட முடியாததாக இருந்தது. சந்தை அழிந்த கதையை வழித்தடங்கள் மறக்காமல் எடுத்துச்சென்றுவிடுகின்றன என்பார்கள். இப்பொழுதும் அதுவே நடந்தது. ஒரு துறைமுகம் முழுமுற்றாக அழிந்த கதையை கடல்வழி பயணித்த கலங்கள் எல்லாம் எடுத்துச்சென்றன. நாவாய்கள் ஒதுங்கும் துறைமுகமெங்கும் வைப்பூரின் கரிக்கட்டைகள் கரையொதுங்கின.

கடலிருக்கும் வரை இக்கதை இருக்கும். பாம்பின் தலையை நசுக்குவதைப்போல வைகையின் தலையில் இருந்த துறைமுகத்தை நசுக்கி அழித்தான் வேள்பாரி என்ற வரலாறு நிற்கும்.

வரலாறெங்கும் கேட்டிராத கதையாக இது இருந்ததற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அது, உலகம் இதுவரை கேட்டிராத செய்தி. நீரின் மீது நெருப்பு மூன்று நாள்கள் நின்று எரிந்தது என்னும் செய்தி. எனவே அது பாணர்களின் கற்பனையைத் தாண்டிய கருப்பொருளாக இருந்தது. எரிபொருளே கருப்பொருளானதால் நிற்காமல் எரிந்தது. சுடும்சொற்கள் பற்றியெரிய, எரியும் நெருப்பு சொல்லெனச் சுட்டது.

பாடும் ஒவ்வொருவனும் ஒவ்வொரு கதையைப் பாடுகிறான். உண்மையில் என்னதான் நடந்தது என்பதை அறிய அளவற்ற ஆர்வத்தோடு இருந்தான் பாரி. மழைக்காலம் முடிந்ததும் நிலமெங்குமிருந்து பாணர்கள் பறம்பிற்கு மலையேறத்தொடங்குவது வழக்கம். இவ்வாண்டும் அப்படியே.

பறம்பின் தாக்குதலை எழும் அலைகளும் வீசும் காற்றும் எங்கும் பேசிக்கொண்டிருக்க, துள்ளிக்குதித்து மலையேறினர் பாணர்கள். நாள்தவறாமல் எவ்வியூரில் கூத்து நிகழ்ந்தது. கிணைகொண்டு பாடும் கிணையர் கூட்டம்தான் வைப்பூரின் கதையை எவ்வியூருக்கு வந்து முதலில் பாடியது. இத்தாக்குதல் இவ்வளவு பெரிதாக நிகழ்ந்துள்ளது என்பதை பாரி உள்ளிட்ட அனைவரும் அன்றுதான் அறிந்தார்கள்.

கிணையர் குலத்துக் கிழவன்தான் வைப்பூரின் பெருமையை சங்கூதும் குரலில் இழுத்துப் பாடினான். வைகையின் வாய்முகப்பகுதி, கடலை முத்தமிட்டு முத்தமிட்டுப் பின்வாங்கும் அதன் அழகு, கலங்கள் வந்து நிற்கும் வரிசையை ஒருபோதும் சேதப்படுத்தாத காற்று, பாண்டியனின் மகுடத்தில் ஒளிரும் பொன்நிறக் கல் அது என்று அதன் பெருமையைச் சொல்லி முடித்ததும் இளங்கிணையன் களம் இறங்கினான்.

அவன் இறங்கியதும் கிணையர்குல ஆடுவன் கூட்டம் உள்ளிறங்கியது. ஆண்களும் பெண்களும் சூழ வலம்வந்தனர். கிணைப்பறையின் ஒலிக்குறிப்பு அவர்களுக்கான நுணுக்கங்களைச் சொல்லிக்கொண்டிருந்தது. காலம்பன், பாரியின் இடப்புறம் அமர்ந்திருந்தான். ஏதோ ஒரு கூத்தினைப் பார்க்கிறோம் என்ற எண்ணத்தில்தான் அவன் அமர்ந்திருந்தான். அந்தக் கூத்தின் நாயகன் அவன்தான் என்பது தொடக்கத்தில் புலப்படவில்லை.



நெருப்பின் அகன்றவாய் கலங்களை மென்றுதின்றபொழுது பல்லுக்குள் சிக்கிக்கொண்ட பாய்மரத்தினை ஒடித்து உள்ளே தள்ளினான் காலம்பன் என்றான் கிணையன். கேட்டுக் கொண்டிருந்த காலம்பன் அதிர்ந்து உட்கார்ந்தான். கூட்டம் எழுப்பிய உற்சாக ஒலி விண்ணைத் தொட்டது. தாங்கள் பாடும் கதையின் நாயகன் தங்களின் கண்முன்னால் உட்கார்ந்திருக்கிறான் என்பது கிணையர்களுக்குத் தெரியாது. வீரனின் வாள் கலைஞனின் சொல்லாக மாறினால் என்னவாகும் என்பதை முதன்முறையாகப் பார்த்துக்கொண்டிருந்தான் காலம்பன்.

எறியுளியால் எண்ணற்ற வீரர்களின் உடல்களைச் செருகியபடி தோளிலே தூக்கிவந்த காலம்பனின் உடல்வாகினை இளங்கிணையன் பாடியபொழுது கூத்தரங்கு அதிர்ந்தது. எழுந்த பேரோசை கிணைப்பறையின் ஓசையை விஞ்சியது. அகலவிரித்த கையால் ஒருமுகப்பறையை ஓங்கியடித்துப் பேரொலி எழுப்புவதைப்போல தனது தொடையிலடித்து ஒலியெழுப்பினான் பாரி.

ஆடுவன் கூட்டம் தாக்குதலின் வலிமையை வர்ணிக்கத் தொடங்கியபொழுது பாரியால் இருக்கையில் உட்கார முடியவில்லை. காலம்பனின் வீரச்செயல் பறம்புக்குடிகளுக்கே பாடம் சொன்னது. இசையும் கூத்தும் உச்சியில் ஏறிநிற்க, பரிமாறப்படும் தாக்குதலின் விபரங்கள் கூத்துக்களத்தைப் போர்க்களமாக்கின. சீறியெழும் சினங்கொண்டு பகைமுடிக்கும் ஒற்றைச் சொல்லோடு பாடலை முடித்தான் இளங்கிணையன்.

கூத்துக் கேட்டவர்களின் ஆவேச உணர்ச்சி எல்லையற்றதாக இருந்தது. கூட்டத்தில் உட்கார்ந்திருந்த திரையர்கள் கண்ணீர்பெருகப் பார்த்திருந்தனர். தங்கள் குலத்தலைவனைப் பற்றிப் பாடப்படும் முதற்பாடல் அது. காலம்பன் உறைந்து நின்றபொழுது எதிரில்வந்து வணங்கி நின்றான் பாரி. பாடிய கிணையர்களுக்கு, தங்களது கதையின் நாயகன் இவன்தான் என்று அப்பொழுதுதான் புரியத்தொடங்கியது. காலம்பனைக் கண்கொண்டு பார்த்ததும் தாங்கள் செய்த தவற்றை உணர்ந்தனர். காலம்பனை “விரிந்த மார்பன்” என்று தவறாகப் பாடிவிட்டோம். இவன் விரிந்த மார்பனல்லன், எதிரி தன் இருகையை எவ்வளவு விரித்து வந்தாலும் “அடங்காமார்பன்” என்று சொல்லி மறுபாடலைத் தொடங்கினான் இளங்கிணையன்.

இப்படித்தான் தொடங்கிய கூத்து எதுவும் விடியும் வரை முடிவதில்லை. மறுநாள் இன்னொரு பாணர்குழு வந்து சேரும். மீண்டும் வைப்பூர் பற்றியெரியும். கடலில் கலந்த நாவாய்களின் சாம்பல் கதையெங்கும் மிதக்கும். இடுக்கையும் உடுக்கையும் அந்தரியும் ஆகுளியும் உறுமியும் முழவுமாக கருவிகளின் முழக்கத்துக்கு ஏற்ப வைகையின் நெருப்பு வடிவுகொள்ளும்.

எவ்வியூர் மக்களுக்கும் வந்துசேர்ந்த திரையர் கூட்டத்துக்கும் பெருந்துன்பத்திலிருந்து மேலேற வேண்டிய தேவையிருந்தது. அந்தத் தேவையைக் கூத்துகளே இட்டு நிரப்பின.

நாள்கள் நகர்ந்தன. திரையர்குடி பறம்புக்குடியானது. திரையர்குலத்தின் மூத்த பெண்ணொருத்தி கூடை நிறைய பழங்களைக் கொண்டுவந்து கொற்றவையின் முன்னால் பரப்பினாள். வழிபாடு தொடங்கப்போகும்முன் நடக்கும் சடங்கிது. வைக்கப்பட்ட பழங்களுக் கெல்லாம் குலநாகினி கண்திறக்க முயன்றபொழுது தேக்கன் தடுத்தான். “கண்திறக்காத பழங்களே திரையர்களைக் கொண்டுவந்து சேர்த்தது” என்றான். குலநாகினிக்குப் புரிந்தது. கூட்டத்துக் குள்ளிருந்த அலவனை அருகில் வரச்சொன்னாள். ஏனென்று அவனுக்குப் புரியவில்லை. தயங்கியபடி அருகில் வந்தான். அள்ளி முத்த மிட்டாள் குலநாகினி. ஏனென்று திரையர்களுக்குப் புரியவில்லை. அலவனின் கண்ணில் நீலவளையம் பூத்து அடங்கியது.



கொற்றவையை வணங்கி மண்ணெடுத்து காலம்பனின் நெற்றியில் பூசினாள் குலநாகினி. குலவையொலி பெருகி மேலேறியது. பறவைகளின் படபடப்பையும்மீறி வெளிக்கேட்டது தேவவாக்கு விலங்கின் குரல்.

ஓசைகள் அடங்கியதும் பறம்பின் ஆசான் அறிவித்தான், “வழக்கமாக பதினாறு குலங்களுக்காக நடைபெறும் கொற்றவைக்கூத்து அடுத்தமுறை பதினேழு குலங்களுக்காக நடைபெறும். ஆனால் தேவவாக்கு விலங்கு பழமெடுத்துக் கொடுத்துத் தொடங்கும் கதையல்ல திரையர்களின் கதை. தேவவாக்கு விலங்கையே எடுத்துக்கொடுத்துத் தொடங்கும் கதை” என்றான்.

கூட்டத்தின் குலவையொலி காட்டைக் கிட்டித்தது. திரையர்குலப் பெண்ணொருத்தி உடல்சிலிர்த்து ஆடத்தொடங்கினாள். தூதுவையின் நினைவோடு அருளாட்டம் தொடங்கியது. உருமிகள் நரம்பினை முறுக்கின. அவள் ஆடும் பரப்புக்கேற்ப கூட்டம் விலகிக்கொடுத்தது. நேரமாக ஆக ஆட்டத்தின் ஆவேசம் உச்சங்கொண்டது. கைகளைத் திருகி, முறுக்கி தலைசுற்றி நிமிரும் அவளின் முகம் எதிர்கொள்ள முடியாததாக இருந்தது. பொழுதாவதை உணர்ந்து ஆடுபவளை நிலைகொள்ளச்செய்ய குலநாகினி களமிறங்கினாள்.

திரையர்குலப் பெண்களின் உடல்வாகு எளிதில் அடக்கமுடியாதது. உயரத்திற்கும் உறுதிக்கும் இணையற்றது. அதுவும் அருளிறங்கி ஆடும் பெண்ணை அணைத்து நிறுத்த எவரால் முடியும்? எவ்வளவு முயன்றும் குலநாகினியால் எதுவும் செய்ய முடியவில்லை.

கொற்றவைக் கூத்தின்பொழுது மற்ற குலப்பெண்கள் இரண்டு, மூன்று பேர் அருளிறங்கி ஆடினாலும் இறுதியில் அடக்கி நிறுத்துபவள் குலநாகினி. தோற்றத்திலும் உடல்வலுவிலும் இணையற்றவளான

பறம்பின் மூதாய் குலநாகினி. திரையர்குலத்தின் ஒற்றைப்பெண்ணை எதுசெய்தும் நிறுத்த முடியவில்லை. பார்த்துக் கொண்டிருந்த வேளிர்குலப் பெண்களுக்கு வேர்த்தது.

உறுமியின் நீளோசையும் உருண்டோடும் குலவையொலியும் சூழலின் ஆவேசத்தை அதிகமாக்கிக்கொண்டே இருந்தன. நிலைமையை எப்படிக் கைக்கொள்வதென்று யாருக்கும் புரியவில்லை.

பாரியின் எண்ணங்கள் எங்கெங்கோ போய்த் திரும்பிக்கொண்டிருந்தன. குலங்கள் தாங்கள் அழிந்த கதைகளோடு களமிறங்கிவிட்டால் அவர்களை ஒருபோதும் ஆற்றல்கொண்டு நிறுத்த முடியாது. அவர்களை நிறுத்துவதற்கான வழியைக் கதைகளுக்குள்தான் கண்டறிய வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருந்த பொழுது அருகிருந்த ஆதினி சொன்னாள், “சூலிவேளினை வணங்கி ஆண்வெற்றிலையைக் கொண்டுவந்து அரங்கில் வையுங்கள். ஆவேசம் தணிந்து அமைதியடைவாள் தூதுவை.”

குரல்கேட்டு அதிர்ந்தான் பாரி. செய்வதறியாது திகைத்துக்கொண்டிருந்த அரங்கம் ஆதினியின் குரலை இறுக்கிப்பற்றியது. சிறிதுநேரத்திலே ஆண்வெற்றிலையைக் கொண்டுவந்து பாரியின் கையில் கொடுத்தனர்.

சூலிவேலினை நினைத்தபடி அரங்கின் நடுவே ஆண்வெற்றிலையை வைத்து வணங்கி நின்றான் பாரி. கொற்றவையின் முன்னால் அடங்கி அமர்ந்தாள் தூதுவை.

புதிய மரபுகள் உருவாகிக்கொண்டு தானிருக்கின்றன. குலங்கள் அழிபட்டு பறம்புக்கு வந்துசேர்ந்தபொழுது இப்படித்தானே தம் முன்னோர்கள் மரபுகளை உருவாக்கியிருப்பார்கள் என்று பெரியவர்கள் பேசிக்கொண்டனர்.

“மலைமக்களின் எந்தவொரு குடியும் இனி தனித்து வாழமுடியாது. குடிகளை இணைத்து நாடாக்காமல் விட்டுவிட்டோம். நாட்டின் அமைப்புகளை உருவாக்காமல் இனி எக்குடியும் தப்பிப்பிழைக்காது என்ற எண்ணங்கள் உருவானபொழுது தப்பிப்பிழைத்த குடிகள் எதுவுமில்லை என்ற நிலை உருவாகிவிட்டது. பறம்பு மட்டுமே நமக்கு மிஞ்சியுள்ள ஒரே இடம். இதனை என்றென்றும் காத்து நிற்பர் எம் குலவழியினர்” என்று ஆவேசங்கொண்டு சூளுரைத்தான் காலம்பன்.

**சே**ரனின் அவையிலும் வைப்பூர் எரிந்த கதை பாடப்பட்டது. உதியஞ்சேரலின் கன்னங்கள் பூரிப்பில் சிவக்கும் அளவிற்கு வைப்பூர் நெருப்பு சுகங்கொடுத்தது. குளிருக்காக நெருப்பை அணைத்து மகிழ்வதைப்போல, மகிழ்வுக்காக நெருப்பை இடைவிடாது அணைத்துக்கிடந்தான் உதியன்.

குரல்வாய்ப் பாணர்களின் போட்டிப் பாடல்கள் நாள்தோறும் நடந்தன. “கூலங்கள் எரிவதைப்போல கலங்கள் எரிந்தன” என்றான் ஒருவன், “நீரிலே மூழ்கும் வேழத்தின் கருமையேறிய முதுகினைப்போல கருகிய நாவாயின் அடிமரங்கள் ஆற்றிலே புதைந்தன” என்றான் மற்றொருவன். “பாண்டியனின் பதாகையில் பறந்துகொண்டிருந்த மீன்கள், எரிந்த நெருப்பின் சூடு தாங்காமல் ஆற்றுநீரிலே செத்து

மிதந்துகொண்டிருந்தன” என்றான் இன்னொருவன். கடைசி ஆள் கவிதையை முடித்தான், “பாண்டியன் இனி சுடப்பட்ட மீன்”



மறுநாள் கூத்துக்கலைஞர்கள் உள்ளே நுழைந்தனர். பொருள்கள் ஏற்றப்பட்ட கலங்களில் பற்றிய நெருப்பு என்ன வாசனைகொண்டிருந்தது என்பதை ஒரு பாணன் விளக்கிப் பாடினான். கலங்களின் வடிவத்தையும் நெருப்பின் வேகத்தையும் பாடுவதைவிடுத்து எரிந்தபொருள்களை நினைவுபடுத்தியதற்காக பெரும்பொருளைப் பரிசாகக்கொடுத்தான் உதியஞ்சேரல். அதன்பின் வைப்பூரில் எரிந்த நெருப்பின் வாசனை சேரனின் அவையில் நாள்தோறும் மணக்கத் தொடங்கியது.

சந்தனமும் அகிலும் எண்ணற்ற வாசனைப் பொருள்களும் இருந்த பிற கலங்கள் எரியும்பொழுது எழுந்த வாசனையை விவரித்துக் கூறின பல பாடல்கள். மிளகும் பாக்கும் கருகிய வாசனையைப் பாடிய கூத்தனுக்கு அள்ளிவழங்கினான் சேரன். அரிசந்தனமும் இலவங்கமும் பாதியெரிந்து மூழ்கியபொழுது எழுந்த வாசனை பற்றி மிகநுட்பமான குறிப்பை பாடினி ஒருத்தி பாடினாள். அவளுக்கு உதியஞ்சேரல் கொடுத்த பரிசுப்பொருள்கள் பற்றித் தனிப்பாடலே உருவாயிற்று.

சேரனின் தலைநகரான வஞ்சி முழுக்க வைப்பூரின் வாசனையே மிதந்தது. ஆனாலும் உதியஞ்சேரலுக்கு ஆசை அடங்கவில்லை. ஒரு கட்டத்தில் கூத்தர்களின் வாய்மொழி சலிக்கவே, வணிகர்களின் நேரடிக்கதறல் அவனுக்குக் கூடுதல் மகிழ்வைக் கொடுத்தது. துறைமுகத்தில் வந்திறங்கும் ஒவ்வொரு வணிகனும் ஒவ்வொரு கதையோடு வந்திறங்கினான். பெருவணிகன் என்று

இறுமாப்புக்கொண்ட பலரின் கதை வைப்பூரோடு முடிவுக்கு வந்தது. சாத்துக்களின் தலைவன் சூல்கடல் முதுவன் இனி எந்தத் துறையிலும் தலைநிமிர்ந்து நுழையமுடியாது. அதுமட்டுமல்ல, பாண்டியனுக்குப் பெண்கொடுத்ததால் சாத்துக்களின் தலைவனுக்கே இந்தக் கதி என்பது கடல்போல் நிலைகொண்டுவிட்டது.

அழிந்த நாவாய்களுக்கும் கலங்களுக்கும் உரிமையாளர்கள் இழப்பைப்பற்றித் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட இழப்பு அளவிடமுடியாததாக இருந்தது. எல்லாம் அழிந்தது என்று பல வணிகர்கள் கதறியபடி கடலுக்குள் சென்றனர். ஒவ்வொருவரின் கதையையும் கேட்டு உள்ளுக்குள் மகிழ்வோடு அரண்மனை திரும்பினான் உதியஞ்சேரல்.

துறைமுகம் வந்திறங்கிய வணிகர்கள் எல்லோரும் அழிந்த கதையைத்தான் சொன்னார்கள். யவனக்கப்பலில் பயணஞ்செய்த மொழிபெயர்ப்பாளன் ஒருவன், அழிந்த கதையை மட்டுமல்லாமல் அழித்தவர்களின் கதையையும் சேர்த்துச் சொன்னான்.



அவன் ஹிப்பாலஸ்ஸின் நாவாயில் பணியாற்றியவன். பாண்டிய மன்னனின் பரிசாக முசுகுந்தர் கொடுத்த புதிய அடிமைகளைக் கப்பலின் மேல்தளத்தில் ஏற்றியதிலிருந்து அவன் கதையைத் தொடங்கினான். நடந்தவை எல்லாவற்றையும் சொல்லி முடித்தான். கதைகேட்ட உதியஞ்சேரலின் செவிகளில் பொறித்துகளை உமிழ்ந்தவன் அவன்தான்.

வாய்பிளந்து கேட்டுமகிழ்ந்த உதியஞ்சேரல் வாய்மூடி அமைதியானான். பாரிதான் இவ்வளவையும்

செய்தான் என்பதை அவனால் நம்பவே முடியவில்லை. அதன்பின் உதியஞ்சேரல் யாரிடமும் கதை கேட்கவேயில்லை. ஆனாலும் அதுவரை அவன் கேட்ட கதைகள் எல்லாம் அவனைச் சும்மா விடவில்லை. வைப்பூரில் எரிந்த நெருப்பின் சூடு வஞ்சிமாநகருக்கும் பரவியது.

நெருப்பு சுடத் தொடங்கியது. பறம்புமலை இருக்குமிடத்துக்கும் வைப்பூர் இருக்குமிடத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை. நிலப்பரப்பால் தொடர்பே ஏற்படுத்திக்கொள்ள முடியாத பகுதியையே முற்றிலும் அழித்துள்ளான் வேள்பாரி. அதுவும் சின்னஞ்சிறு படையை மட்டுமே அனுப்பி. நாள்தோறும் சேரன் கேட்ட கதைகள் புதிய புதிய சான்றுகளை அவனுக்குள் இருந்தே எடுத்துக்கொடுத்துக்கொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் தனக்குத்தானே எரியத் தொடங்கினான்.

பதற்றம் கூடியது. பறம்புமலை நோக்கிப் பாதையை உருவாக்கும் திட்டம் ஏறக்குறைய முடியும் தருவாயில் உள்ளது. ஒன்றிரண்டல்ல, பல முனைகளிலிருந்தும் அடர்காட்டைக் கிழித்து சேரவீரர்கள் உள்நுழைந்துள்ளனர். ஏற்கெனவே வகுத்த திட்டப்படி படைகள் புறப்படவேண்டிய நாள் மிக அருகில் இருக்கிறது. ஆனால், படுக்கையிற்கிடந்த உதியஞ்சேரலின் உடற்சூடு அளவிட முடியாததாக இருந்தது.

கதைகேட்டு மகிழ்ந்தபடி இருந்தான் செங்கனச்சோழன். பேரரசர் சோழவேழனின் மகன். முதலில் அவனுக்குத்தான் பொற்சுவையைப் பெண்கேட்டனர். எல்லாம் நல்லபடியாக முடியும் என்று சோழவேழன் நம்பியிருந்த பொழுதுதான், குலசேகர பாண்டியன் முத்துக்களை உருட்டிவிட்டு விளையாடத் தொடங்கினான். சூல்கடல் முதுவனின் சொற்கள் உருளும் முத்துக்களை மிதித்துச் சரிவுகண்டது. மண ஒப்பந்தம் பாண்டியர்களோடு என்று ஆனது.

உள்ளுக்குள் அவமானத்தை உணர்ந்தபடி இருந்த சோழவேழன் அதனை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. இயல்பிலேயே தங்களைவிட சேரர்களும் பாண்டியர்களும் வலிமையோடு இருக்கின்றனர் என்று அவனுக்குத் தெரியும். அந்த வலிமைக்கு முக்கியக் காரணமாக வணிகமும் இருந்தது. எனவேதான் வணிகர்குலம் நோக்கி அவன் பெண்பார்க்கத் தொடங்கினான். ஆனால், நிலைமை கைமீறிப் போய்விட்டது.
திருமணச்செய்தி வந்துகொண்டே இருந்தது. அவமானங்களைக் கடக்க பெரும் பாடுபடவேண்டியிருந்தது. மாதக்கணக்கிற்பட்ட அவமானத்தை வந்துசேர்ந்த ஒற்றைச்செய்தி துடைத்தெறிந்தது. நினைத்து நினைத்து மகிழ்ந்தான். “ஒரு துறைமுகமே அழிந்ததா?” மீண்டும் மீண்டும் கேட்டான். கேட்டுக் கேட்டு மகிழ்ந்தான்.

தந்தையின் அறைக்குள் நுழைந்தான் செங்கனச்சோழன். உடனிருந்தவர்கள் விலகி வெளியேறினர். மகிழ்ந்துகிடக்கும் தந்தையைப் பார்த்து மகன் கேட்டான், “பாண்டியன் எரிந்ததற்கே இவ்வளவு மகிழ்கிறாயே! பறம்பு எரிந்தால் எவ்வளவு மகிழ்வாய்?”

அதிர்ந்தான் சோழவேழன். மகனின் ஆற்றல் அவனுக்கு நன்கு தெரியும். அதனால்தான் இவ்வளவு இளம்வயதில் முடிசூட்ட வேண்டுமா என்று பலரும் தயக்கம் காட்டியபொழுதும் துணிந்து செங்கனனுக்குப் பட்டம் சூட்டினான். அதிர்ச்சியிலிருந்து மீளாமலே கேட்டான் சோழவேழன், “முடியுமா மகனே?”




“இதுநாள் வரை இவ்வினாவிற்கு  விடையின்றி இருந்தேன். இப்பொழுது அதனை அறிந்துவிட்டேன்”

“எப்படி?”

“நம்மையோ, நமது முயற்சியையோ இதுவரை பாரி அறியவில்லை. இனிமேல் அவன் அறியப்போவதேயில்லை. ஏனென்றால் அவனது முழுக்கவனமும் திசை திரும்பிவிட்டது.”

அவன் சொல்ல வருவதை உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தான்.

“ஏற்கெனவே அவமானப்பட்டு நிற்கும் சேரனும் புதிய அவமானத்தோடு நிற்கும் பாண்டியனும் இப்பொழுது ஒன்றிணைவார்கள். பறம்பின் கீழ்திசையிலிருந்தும் மேல்திசையிலிருந்தும் இவர்களின் படை நகரும். இருபெரும் பேரரசுகளின் தாக்குதலை முழுமூச்சோடு எதிர்த்து வலிமையோடு போர்புரிவான் பாரி” சொல்லி நிறுத்தினான் செங்கனச்சோழன். கண்ணிமைக்காமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தான் சோழவேழன்.
தலைதிரும்பி கருவிழியை உருட்டியபடி சொன்னான், “ஆளரவமற்றுக் கிடக்கும் பறம்பின் வடதிசை மலைகளுக்கிடையே நம் படைகள் நகரும் ஓசையை அவன் உணரப்போவதேயில்லை.”

கண்ணிமைக்காமல் இருந்த சோழவேழன் அப்பொழுதுதான் தலைகுலுக்கி நினைவுமீண்டான். “நான் தாக்கப்போவது பறம்பின் தலைநகரையோ, பாரியையோ அல்ல” சொல்லியபடி இருக்கை விட்டு எழுந்தான் செங்கனச்சோழன்.
அவனுடைய சொற்களால் கட்டப்பட்டிருந்த சோழவேழனும் இழுபட்டு எழுந்து அவன் பின்னே சென்றான்.
“நாட்டை ஆள்பவர்கள் காட்டை ஆள நினைக்கும் மூடத்தனத்தை சேரனும் பாண்டியனும் செய்யட்டும். நான் ஆள்வதற்குப் பறம்பில் எதுவும் இல்லை. ஆனால், அடைவதற்கு ஒன்றிருக்கிறது. அதனை அடைவேன்.”

- பறம்பின் குரல் ஒலிக்கும்...

# வீரயுக நாயகன் வேள்பாரி-53

**க**பிலரின் முகம் இவ்வளவு கலக்கத்துடன் எப்பொழுதும் இருந்ததில்லை. முதிர்ந்தமரம் பட்டையை உதிர்ப்பதைப்போல அனுபவத்தை உதிர்த்தபடி வானத்தைப் பார்த்துச் செழித்திருக்கும் திருமுகம். தெளிவுகொண்ட அவரின் சொற்கள் எச்சூழலிலும் மனதைத் துவளவிடாதவை. ஆனால், இப்பொழுது பெருங்குழப்பம் அவருள் சூழ்ந்துள்ளது. சொற்களை விட்டு விலகி அமைதிகொண்டே நின்றார்.

சொற்களின் மீது தன் ஆசான் எவ்வளவு காதல்கொண்டவர் என்பதை அங்கவை அளவுக்கு உணர்ந்தவர் பறம்பில் வேறு யாருமில்லை. எழுதக்கற்கும் வரை உலகைச் சொற்களின் வழியாகப் பார்த்துப் பழகியவர்கள், எழுதக்கற்ற பின்தான் உலகை விழுங்கி நகரும் ஆற்றல் சொற்களுக்கு உண்டு என்பதை உணர்வார்கள். அவ்வாற்றலை உணர்த்திய ஆசான் சொற்களிடமிருந்து இவ்வளவு விலகி நிற்பதேன் எனக் காரணம் புரியாமல் திகைத்தாள் அங்கவை.

பிற்பகல் நேரத்தில், வேயப்பட்ட குடிலில் அவர்கள் அமர்ந்திருந்தனர். ஆசான் சொல்வதை அங்கவை எழுதிக்கொண்டிருந்தாள். மன ஈடுபாடின்றிச் சொல்லும் ஒற்றைச்சொல்கூட ஒருவரைக் காட்டிக்கொடுக்கும்; இன்னொருவரால் கண்டறியப்படும். குனிந்து எழுதிக்கொண்டிருந்த அங்கவை தலைநிமிரவில்லை. சொல்லப்பட்ட சொல்லின் வழியே ஆசானின் எண்ணத்துக்குள் போக முயன்றுகொண்டிருந்தாள். எழுத்தை விட்டு வெளியேதான் அங்கவையின் மனம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்பதைக் கபிலரும் அறிவார். இருவரும் தெரிந்தேதான் ஒளிந்துகொண்டிருந்தனர்.

குடிலின் மறைப்புக்குப் பின்னால் பறவையின் கீச்சொலி கேட்டது. குனிந்து எழுதிக்கொண்டிருந்த அங்கவை நிமிர்ந்துபார்த்தாள். அவளால் குரலோசையைவைத்துப் பறவையைக் கணிக்க முடியவில்லை. மீண்டும் ஒருமுறை கீச்சொலி கேட்டது. கழுத்தை நீட்டிப்பார்த்தாள்; தெரியவில்லை.

“வெளிப்புறம் போனால்தான் கண்டறியமுடியும்” என்றார் கபிலர்.

ஆசான் சொல்லிமுடித்த கணத்தில் அவரது எண்ணத்தை அறிந்தாள் அங்கவை. எழுந்தவள் அப்படியே உட்கார்ந்தாள். கண் கலங்கியது. அவளால் எதுவும் பேசமுடியவில்லை.

“ஏன் போகாமல் உட்கார்ந்துவிட்டாய்?”

அங்கவையிடமிருந்து மறுமொழி வரவில்லை.

“இதைப்போல்தான் என்னாலும் போகமுடியவில்லை.”

சற்றே அமைதிக்குப்பின் மெல்லிய குரலில் கேட்டாள், “பறம்பிலிருந்துகொண்டு உங்களால் கண்டறிய முடியாத உண்மையென்ன ஆசானே?”




அவள் நிமிரவில்லை. கலங்கிய கண் ஆசானுக்குத் தெரியவேண்டாம் என நினைக்கிறாள் என்பது அவருக்குப் புரிந்தது.

“தேவவாக்கு விலங்கிற்காக இவ்வளவு பெரியமுயற்சி ஏன் செய்யப்பட்டது?”

தலைநிமிர்ந்து பார்த்தாள் அங்கவை.

“வைப்பூரும் அருகன்குடியும் எரிந்தபின் பாண்டியன் அடுத்து செய்யப்போவதென்ன?”

கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“இதைப்போல எண்ணற்ற கேள்விகளுக்கான விடை பறம்பை விட்டு வெளியில் போனால்தான் கிடைக்கும். ஆனால், பாரியைப் பொறுத்தவரை இக்கேள்விகள் எதற்கும் விடை அறியவேண்டிய தேவையில்லை என்று கருதுகிறவன்.”

“உங்களைப் பொறுத்தவரை?”

“இக்கேள்விக்கான விடை பறம்பின் எதிர்காலத்தோடு தொடர்புடையது. இதை அறிதல் அவசியம்.”

“உங்களை நான் நன்கு அறிவேன்” என்று சொல்லிவிட்டு, சற்று இடைவெளியுடன் தொடர்ந்தாள், “கட்டாயம் என்று கருதியிருந்தால் நீங்கள் போயிருப்பீர்கள். போகாமல் இருக்க அதனினும் பெருங்காரணம் இருக்க வேண்டும்.”

வியப்போடு அங்கவையைப் பார்த்தார் கபிலர். பார்க்கும்பொழுதே தலையசைத்துக் காரணம் உண்டு என்பதைத் தெரிவித்தார்.

“என்ன?” என்று அவள் கேட்கவில்லை. ஆசான் தன்னுள் இருந்து வெளிவந்து கொண்டிருக்கிறார். அவர் நினைக்கும் சொற்களின் மேல் கால்பதித்து நடந்து வரட்டும் என்று காத்திருந்தாள்.

“நான் வெளியிற் போவது பறம்புக்கு நல்லதல்ல.”

எதிர்பாராத சொல்லாக இருந்தது. இந்தச் சொல்லிற்குள் இருக்கும் ஆழம் புரியவில்லை. கண்களை உருட்டியபடி அவரைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

கபிலர் சொன்னார், “பறம்பின் உள்ளடுக்கு களைப்பற்றி, எவ்வியூரைப்பற்றி, பாரியைப்பற்றி, இங்குள்ள வாழ்வைப்பற்றி வேந்தர்களுக்கு எதுவும் தெரியாது. இரவில் கூத்துநிகழ்த்திச் செல்லும் பாணர்களின் பார்வையில்தான் அவர்கள் பறம்பைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

வியந்ததை, அறிந்ததை, உணர்ந்ததைப் பாடித்திரிவதுதான் எனது தொழில். ஆனால், எனது வாழ்வு முழுக்க வியந்து, அறிந்து, உணர்ந்தவற்றைவிட, பறம்பில் நான் உணர்ந்தவைதாம் அதிகம். எனது மொழியே பறம்பின் மொழியாகிவிட்டது. எனது குரல் குறிஞ்சியின் குரலாகிவிட்டது. இனி நான் பாடும் ஒவ்வொரு பாடலும் பறம்பின் பாடல்தான். நான் என்னைப் பறம்பனாக உணர்ந்துவிட்டேன்” சொல்லி நிறுத்தினார் கபிலர்.

அங்கவை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“அதுதான் எனது அச்சத்திற்குக் காரணம்” கபிலரின் குரல் இறுகியது.

“பறம்பின் ஆற்றல் ஒவ்வொரு செடியிலும் கொடியிலும் மலையிலும் மடுவிலும் இருக்கிறது. நான் இங்குள்ள மனிதர்களைப் பாடாமல் இயற்கையை மட்டுமே பாடினாற்போதும், எதிரிகளுக்கு அதைவிடச் சிறந்த போர்க்குறிப்பு வேறொன்றும் இல்லை.”
அங்கவை உறைந்து நின்றிருந்தாள்.

“பறம்பின் வளமும் வாழ்வும் யாரையும் மயக்கி இழுக்கும். அவற்றோடு எனது சொல்லும் சேர்ந்தால் எழும் ஆபத்து அளவிட முடியாததாகி விடும். ஆசையின் நாக்குகள் பறம்பை நோக்கி என்றென்றும் நீள, நான் சொல் தந்துவிடக்கூடாது. அதனாலேயே நான் வெளியேறிப்போகத் துணிவற்று இருக்கிறேன்.”



சற்று முன்னே வந்து ஆசானின் கால்பற்றி அமர்ந்திருந்தாள் அங்கவை. அவளின் தலையில் கைவைத்தபடி கபிலர் சொன்னார், “என்னை அறியாமலே எனது மொழி பறம்பைக் காட்டிக்கொடுத்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். இனி பறம்பை விட்டு என்னால் வெளிச்செல்ல முடியாது மகளே”

சொல்லிமுடிக்கும் முன் தொலைவில் யாரோ வருவது அறிந்து எழுந்து பார்க்க முனைந்தாள் அங்கவை. கலக்கத்திலிருந்து மீளமுடியாமல் கண்மூடித் திறந்தார் கபிலர். எதிர்வந்து நின்றான் பாரி.

முகம் முழுவதும் அப்படி ஒரு மகிழ்ச்சி. பூத்துக்குலுங்கும் மலர்போல் புன்னகைத்தபடி உள்ளே வந்த பாரி, அமர்ந்திருந்த கபிலரைக் கைபிடித்துத் தூக்கி “வாருங்கள் போவோம்” என்று அழைத்தான்.

பாரியின் முகத்தில் இவ்வளவு மகிழ்வைப் பார்த்து நீண்டநாள்களாகிவிட்டன. கபிலரின் முகத்தில் அளவுகடந்த கவலையைப் பார்த்துக் கொண்டிருந்த அங்கவை, அதற்கு நேரெதிராக எல்லையில்லாத மகிழ்வோடு வந்துநிற்கும் தந்தையைப் பார்த்துத் திகைத்து நின்றாள்.

“வாருங்கள் வேகமாக” என்று கைபிடித்து இழுத்துச் சென்றான் பாரி. அங்கவையை வரச்சொல்லிக் கூறவில்லை; எனவே அவள் குடிலிலேயே நின்றுகொண்டாள். கபிலருக்குக் காரணம் எதுவும் விளங்கவில்லை. பார்த்துக் கொண்டிருந்த அங்கவை சிறிதுநேரங் கழித்துத்தான் யோசித்தாள், ‘கபிலரை மாளிகைக்கு அழைத்துச் செல்லாமல் காட்டுக்குள் ஏன் அழைத்துச் செல்கிறார். முக்கியமான வேட்டை ஏதாவது கிடைத்திருக்கும்’ என்று எண்ணியபடி இருந்தாள்.

பாரி உற்சாகம் குறையாமல் அழைத்துச் சென்றுகொண்டிருந்தான். அவனைப் பார்த்தபடி

நடந்துகொண்டிருந்தார் கபிலர். “முகம் ஏன் இவ்வளவு கவலைகொண்டுள்ளது?” என்று கேட்டபடி முன் நடந்து சென்றான் பாரி.

“அளவற்ற மகிழ்வோடு இருக்கும் ஒருவனிடம் கவலையை எப்படிப் பகிர்ந்துகொள்வது?”


கபிலர் சொல்லற்றவரானார். மாறுபட்ட இரண்டு உணர்ச்சிகளில் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குத் தாவச் சட்டென மொழி கைகொடுப்பதில்லை. மொழி வலிமையற்று இருக்குமிடத்தில் நின்று பேசுவதுதான் புலவனின் ஆற்றல். ஆனால், அவ்வாற்றலை வெளிப்படுத்தும் மனநிலையில் கபிலர் இல்லை.

அமைதியாய் வரும் கபிலரைப் பார்த்துப் பாரி கேட்டான், “பகிர்ந்துகொள்ள முடியாத கவலையா?”

“இல்லை…” என்று சொல்லிபடி நடந்தார். ஆனால், தொடராமல் சொல் நின்றிருந்தது.

எவ்வியூரின் நாகப்பச்சை வேலியைக் கடந்து உட்காட்டுக்குள் நுழைந்தனர். செடிகொடிகளை விலக்கி முன்னே நடந்து கொண்டிருந்தான் பாரி.

மெல்லிய குரலில் கபிலர் பேசத் தொடங்கினார், “நாள்தவறாமல் கூத்து நடக்கிறதே, அவற்றில் என்ன நடக்கிறது என்பதைக் கவனித்தாயா?”



“கூத்துக்களத்தில் எவ்வளவோ நடக்கிறது. நீங்கள் எதைக் கேட்கிறீர்கள்?”

கபிலர் மீண்டும் அமைதியானார். அறியாமல் பேசுபவனல்ல பாரி. ஆனால், அறிந்தவனைப்போல அவன் பேச்சில்லை. என்ன சொல்வதென்று சிந்தித்தபடியே நடந்தார்.

“பாணர் கூட்டத்துக்குள் பாடத்தெரியாதவனும் இருக்கிறான். இசைக்கருவிகளை வாசிப்ப வர்களுக்கு நடுவில் அதில் பயிற்சியே இல்லாதவனும் உடன் வருகிறான்” என்று சொல்லிய கபிலர், சற்றே தயக்கத்தோடு சொன்னார், “கூத்து நடத்த வரும் பாணர் கூட்டத்தில் ஒற்றர்கள் நிறைய வருகிறார்கள்.”

முன் நடந்தபடி பாரி சொன்னான், “பறம்பு நாட்டை இவ்வழியின்றி வேறு எவ்வழியில் அவர்களால் வேவு பார்க்க முடியும். எனவே கூத்துக்கலைஞர்களோடு ஒற்றர்கள் எல்லாக் காலங்களிலும் வந்து கொண்டேதான் இருக்கிறார்கள்.”

“அதனால் ஆபத்து உருவாகி விடாதா?”

“தெய்வத்தின் உருவில் எதிரிவந்தால் வணங்கித்தானே ஆகவேண்டும்.”



சொல்லால் சிதைவுற்றார் கபிலன். முன் நடந்து செல்லும் பாரியைப் பின்தொடர முடியவில்லை. வாழ்வின் பாதை அவ்வளவு செழிப்புற்றிருந்தது பாரிக்கு. செழிப்பேயானாலும் மறித்துக்கிடக்கும் கொடிகள் இடையூறுதானே? கபிலரின் கண்களுக்கு மறித்துக்கிடக்கும் கொடிகளே தென்பட்டன.

“கலைஞர்கள் என்ன செய்வார்கள்? அதிகாரத்துக்கு அஞ்சி அவர்களை உடனழைத்து வருகிறார்கள். ஒற்றர்களும் உடன்வருகிறார்கள் எனத் தெரிந்து தான் எம் வீரர்கள் பறம்புக்குள் அவர்களை அழைத்துவருகிறார்கள். பச்சைமலையின் எல்லா மடிப்பு களின் வழியேயும் ஒற்றர்களை எம் வீரர்கள் அழைத்து வந்திருக் கிறார்கள். அப்படியிருந்தும் எவ்வியூருக்குப் போகும் வழிக்குறிப்பைச் சொல்லப் பாண்டியனால் முடியவில்லை அல்லவா? காலம்பன் தன் முன்னோர்கள் சொன்ன குறிப்பின் வழியில்தானே வந்து சேர்ந்துள்ளான்.”

கபிலருக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.


பாரி சொன்னான், “நாட்டைப் பிடிக்கும்முறையில் காட்டைப் பிடித்துவிட முடியாது. நாட்டில்தான் வழித்தடம் பாதையாக இருக்கிறது. காட்டின் வழி மரமாகவும் பாறையாகவும் அருவியாகவும்தான் இருக்கிறது. மூன்று கருங்காலி மரத்தினருகே ஒரு செங்கடம்பு இருக்குமேயானால் காலடி கவட்டைகொள்ளும்; அதாவது முச்சந்தி என்று பொருள். அது யாருக்குப் புரியும்? இயற்கையாக முளைக்காத வகையில் முளைத்துள்ள தாவரங்களை இயற்கையை அறிந்த ஒருவனால்தான் கண்டறிய முடியும். வண்டிச் சாலைபற்றிய மனித அறிவு சில தலைமுறைகளுக்குத்தான் சொந்தம். ஆனால், காட்டுப்பாதை பற்றிய மனித அறிவு எண்ணிலடங்காத தலைமுறைகளின் சேர்மானம். அது ஒற்றன் வந்துபோகும் ஒற்றைப்பயணத்தில் ஒருபோதும் அடைபடாது” பேசியபடி வேகங்குறையாமல் நடந்துசென்றான் பாரி.

கபிலர் பின்தொடர்ந்தார். வேந்தர்களின் வழியே அரசாட்சியின் இலக்கணங்களையும் வழிமுறைகளையும் அறிந்த வாழ்வு கபிலரின் வாழ்வு. அதற்கு நேர்மாறாக, குலச்சமூகத்தின்

மனவோட்டத்தின் வழியே புரிந்துகொள்ளுதல் எளிய முயற்சியல்ல, ஆனாலும் விடாது முயன்றார் கபிலர்.
அகில்மரத்தின் முடிச்சிட்ட வேர்கள் வழித்தடத்தின் குறுக்கே இருந்தன. அவற்றைக் கவனமாகத் தாண்டிய பாரி, கபிலரின் கால்கள் தடுக்கிவிடாமல் இருக்க நின்று உதவினான்.

அவன் தோள்களைப் பிடித்தபடி வேர்தட்டாமல் கால்தூக்கிவைத்தார் கபிலர். "இதுவரை பறம்பின் மீதான எல்லாத் தாக்குதல்களுக்கும் பின்னே கூத்துக்கு வந்துபோன ஒற்றனே இருக்கிறான். எனது முதற்போருக்கே கூத்துக்களம்தான் காரணமாக அமைந்தது" என்றான் பாரி.
பாரி முதலில் நடத்திய போர் சேரனுக்கு எதிரானது. அப்போரில்தான் உதியஞ்சேரலின் தந்தை செம்மாஞ்சேரலின் தலையை வெட்டியெறிந்தான் என்பது பலரும் சொல்லக்கேட்டுள்ளார் கபிலர். ஆனால், அப்போர் ஒரு கூத்துக்களத்திலிருந்துதான் தொடங்கியது என்பது கேட்டறியாத ஒன்றாக இருந்தது.

தோள்மீது கிடந்த கபிலரின் கை சற்றே இறுக்கிப்பிடித்தது. தோழனின் மொழியை அறியாதவனா பாரி? கூத்துக்களத்தின் கதையைச் சொல்லத் தொடங்கினான்.



கதை வழக்கம்போல் முருகனிடமிருந்து தொடங்கியது. பாரி, முருகனின் பெயரை உச்சரித்தபடி முன் நடந்தான். கபிலருக்குத் தொடக்கமே வியப்பாக இருந்தது. இக்கதையில் முருகன் எப்படி வந்தான் என்று சிந்திக்கத் தொடங்கிய கணமே பாரி கேட்டான், "முருகன் தனது காதலின் பரிசாக எவ்விக்கு ஒரு பூண்டு கொடுத்தானே, அது என்ன தெரியுமா?"

கபிலர் விடையின்றி விழித்தார். நாக்கறுத்தான் புல் விளைந்துகிடந்த நிலத்தைக் கடந்தபொழுது நீலன் சொன்ன கதையது. தனைமயக்கி மூலிகையைக் கொடுத்தபடி கதையைத் தொடங்கி அவன் சொல்லிவந்தான். முருகனையும் வள்ளியையும் சந்தனவேங்கையில் அமைக்கப்பட்ட பரணில் தங்கவைத்து ஊர்வந்து சேர்ந்தான் எவ்வி. தனது கையில் இருந்த பூண்டு போன்ற ஒரு பொருளைப் பைங்குடத்தில் இட்டவுடன் அது சிறிதுசிறிதாகக் கரைந்தது. அந்நீர் பழச்சாறுபோல நுரைபொங்கியிருந்தது. அதனை அருந்தியவர்கள் வாழ்வில் அதுவரை காணாத சுகத்தைக் கண்டார்கள். மீண்டும் மீண்டும் வாங்கிப் பருகி, மயங்கிச் சரிந்தார்கள். அவர்கள் பருகியபொழுது சிந்தியதுளியின் வாசனையை நுகர்ந்தே மலையெங்கு மிருந்து பாம்புகள் அப்புதருக்கு வந்து சேர்ந்தன என்று நீலன் சொன்ன கதையைச் சொன்னார் கபிலர்.

கார்த்திகையின் கதையைச் சொல்வதற்காகச் சந்தனவேங்கையில் இருந்து மறுபகல் கீழிறங்கிய வள்ளி முருகனின் கதையைச் சொன்ன பாரி, இப்பொழுது எவ்வியின் வழியே மீதிக்கதையைத் தொடங்கினான்.

“அப்பூண்டினைப் பைங்குடத்தில் போட்டு நாட்கணக்கில் ஊரே குடித்துள்ளது. அதுவரை மனிதர்கள் அனுபவித்திராத மயக்கத்தையும் இன்பத்தையும் அப்பூண்டுப்பானம் கொடுத்துள்ளது. பைங்குடத்தில் நீர் தீரத்தீர மீண்டும் மீண்டும் நீரூற்றி அப்பானத்தை அருந்தியுள்ளனர். அப்பூண்டு சிறிது சிறிதாக நீரிற்கரைந்து மூன்று வாரங்களுக்குப் பின் முழுமுற்றாக நீருள் மறைந்துவிட்டது.

‘அது என்ன பூண்டு? அது எங்கே இருக்கிறது?’ எனக் கேட்பதற்காகவே அதன்பின் முருகன்வள்ளியைத் தேடிப் பலகாலம் அலைந்திருக்கிறான் எவ்வி. காலங்கள் ஓடியும் அவர்களைக் காணமுடியவில்லை. ஆனால், அந்தப் பூண்டுப்பானத்தை மறக்க முடியவில்லை. வாழ்வில் எப்பொழுதாவது அதுபோன்ற பானத்தை அருந்திவிட மாட்டோமா என்று எவ்வி மட்டுமல்ல, ஊரில் உள்ள ஆண், பெண் அனைவரும் ஏங்கிக் கிடந்துள்ளனர்.

எவ்வியூர் உருவாக்கப்பட்ட சிறிதுகாலத்திலேயே எவ்வி இறந்துவிட்டான். அதன்பின் ஒரு மழைக்காலம் முடியும்பொழுதுதான் இது நடந்துள்ளது. சோமக்கிழவி காட்டுக்குக் கிழங்குதேடிப் போயிருக்கிறாள். பகல் முழுவதும் அலைந்த களைப்பில் நாங்கில் மரத்தின் நிழலில் அமர்ந்து இளைப்பாறியிருக்கிறாள். உச்சிப்பொழுது. எங்கும் வெயில் தகித்துக்கிடந்திருக்கிறது. அவள் கண்பார்வைத்தொலைவில் பன்றிகளின் கூட்டமொன்று நிலத்தை அகழ்ந்து கிழங்குகளைத் தின்றுகொண்டிருந்திருக்கிறது.

நாங்கில்மரத்தின் அடிவாரம் உட்கார்ந்து இளைப்பாறியபடி இருந்திருக்கிறாள். சிறிதுநேரத்தில் எங்கோ இருந்து மணம் வீசியிருக்கிறது. மூக்கில் நுகர்ந்தபடி அப்படியே மயங்கிக் கண்செருகியிருக்கிறாள். அந்நறுமணம் அவளை மயக்கி உள்ளிழுத்திருக்கிறது. மயக்கம் தெளியமுடியாத ஆழத்துக்கு அவளை இட்டுச்சென்றுள்ளது. சட்டெனப் பொறிதட்டி மீண்டிருக்கிறாள்.

இது ஏற்கெனவே நுகர்ந்த மணம். ஆனால், எங்கே, எப்பொழுது என்றுதான் நினைவுக்கு வரவில்லை. மீண்டும் மீண்டும் நினைவுகூர்ந்த பொழுது, அது எவ்வி கொண்டுவந்து கலக்கிக்கொடுத்த அந்தப் பூண்டுப்பானத்தின் மணம் என்பது நினைவுக்கு வந்தது. நாட்கணக்கில் ஊரே உட்கார்ந்து குடித்துக் குடித்துத் தீர்த்தோமே அந்த மணம் என்பது நினைவுக்கு வந்த கணம் சோமக்கிழவிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

அகமகிழ்ந்து எழுந்திருக்கும்பொழுது கண்களில் கண்ணீர் பெருகியது. அந்த மணத்தை மறுமுறை நுகரவேண்டுமென்று அவ்வளவு ஆசைப்பட்டான் எவ்வி! ஆனால், அவன் இப்பொழுது உயிரோடு இல்லை. ஓராண்டுக்கு முன்தான் இறந்தான். அவன் கொண்டுவந்து கொடுத்ததன் மூலம்தானே இம்மணத்தை நாம் நுகர்ந்தோம் என்று எண்ணியபடியே, எங்கிருந்து இம்மணம் வருகிறது எனத் தேடத் தொடங்கினாள். செடி, கொடி, மரம் என எல்லாவற்றையும் அண்ணாந்து பார்த்துக்கொண்டே இருந்தாள். எங்கிருந்து வருகிறதென அவளால் கண்டறிய முடியவில்லை.

காற்று வீசும்பொழுது மிதந்துவரும் மணம், காற்று நிற்கவும் அறுபட்டுவிடுகிறது. சற்றுத் தொலைவிலிருந்து வருகிறது என்பதை உணர்ந்தபடி அப்பக்கம் போகலாம் என நகர்ந்திருக்கிறாள். அவ்வளவு நேரம், கிழங்குகளை மண்கிளறி மேய்ந்துகொண்டிருந்த பன்றிக்கூட்டம் இப்பொழுது அவ்விடம் இல்லை. ஆனால், தேனீக்களும் வண்டுகளும் பெருங்கூட்டமாக வந்து அவ்விடம் மொய்க்கத் தொடங்கியுள்ளன. சோமக்கிழவி அருகில் போய்ப் பார்த்திருக்கிறாள். மண்ணுக்குள் கிழங்கு வடிவத்தில் ஏதோ இருந்திருக்கிறது. கையால் கிளறி அதனை எடுத்திருக்கிறாள். அந்தப் பூண்டின் மணம், எவ்வி கொண்டுவந்து நீரில் கலக்கி ஊரே குடித்த அந்த மணம். அதே வடிவப் பூண்டு.

பல ஆண்டுகளுக்குப்பின் அதனைக் கண்டறிந்த மகிழ்வில் ஓட்டோடி வந்து ஊரிலே கொடுத்திருக்கிறாள். பைங்குடத்தினில் அதனைப் போட்டிருக்கின்றனர். நீர் கலங்கிப் பழச்சாறாகி யிருக்கிறது. ஒருவர் மாற்றி ஒருவர் குடிக்கத் தொடங்கியுள்ளனர். ஊரே நாட்கணக்கில் குடித்திருந்திருக்கிறது. இப்பானம் கிடைக்காதா என்று எவ்வி எத்தனை முறை புலம்பியிருப்பான். அதனைக் குடித்த எல்லோருமே வாழ்வில் இன்னொரு முறை குடிக்கமாட்டோமா என்று புலம்பியபடிதானே இருந்தனர்.




சென்றமுறை முருகனை நினைத்து எல்லோரும் குடித்ததைப்போல இம்முறை எவ்வியை நினைத்து ஊரே குடித்தது. அதற்கு இன்னொரு காரணமும் இருந்திருக்கிறது. சோமக்கிழவி எவ்வியின் மனங்கவர்ந்தவளாம். எவ்வி அவளிடம் மட்டும் அது கிடைக்கும் இடத்தைச் சொல்லிச்சென்றுள்ளான் என்று பேசிச் சிரித்து நாட்கணக்கில் குடித்துள்ளனர். சிறிது சிறிதாகக் கரைந்த அப்பூண்டு முற்றிலும் மறைய ஒரு மாதம் ஆகியுள்ளது.

இன்றுவரை அந்தப்பூண்டு எந்தச் செடி அல்லது கொடியின் கீழ் விளைகிறது என்று யாருக்கும் தெரியாது. கிழங்குதேடும் பன்றி அகழ்ந்துபோட அந்தப்பூண்டு வெளிவருகிறது. அதன் வாசனை பட்டவுடன் பன்றி அந்நிலம் விட்டு அகன்றுவிடுகிறது. எங்குமிருக்கும் தேனீக்களும் வண்டுகளும் அதனை மொய்த்துக்கிடக்கின்றன. மாதக்கணக்கில் ஆனாலும் தேனீக்கள் அதனை மொய்ப்பதை நிறுத்தாது. காட்டில் அலைந்து திரியும் பறம்பு மக்களின் கண்களுக்கு அது எப்படியும் பட்டுவிடுகிறது. அதன்பின் எவ்வியூர் காலநேரமின்றி மிதந்துகொண்டுதான் இருக்கும்.

பூண்டு கிடைத்துவிட்டாற்போதும், மிதக்கும் மயக்கத்தினூடே காதல் பொங்கி மேலெழத் தொடங்குகிறது. வள்ளிமுருகனின் காதலும் எவ்விசோமாவின் காதலும் ஒன்றினையொன்று விஞ்சி மேலெழுகின்றன. இப்பூண்டினை முதலிற் கண்டறிந்தது வள்ளியா முருகனா என்று பேச்சு தொடங்குகிறது. பூண்டின் சாறு இறங்க இறங்க வள்ளியும் முருகனும் இறங்கி ஆடுவர். நாள்கள்

செல்லச்செல்ல எவ்வியா சோமாவா என்று பேச்சு போகிறது. ஆட்டமும் பாட்டுமாகப் பகலிரவு பாராமல் ஊரே மிதக்கிறது. காதலின் பரிசாக வள்ளி முருகன் இருவரும் எவ்விக்குக் கொடுத்திருக்கலாம். ஆனால், தன் காதலிக்கு அதனைக் கொடுத்தது எவ்விதான். தன் காதலனின் நினைவாக அதனைக் கண்டறிந்தது சோமக்கிழவிதானே; எனவே அவளின் பெயரையே அதற்குச் சூட்டினர். அது சோமப்பூண்டு என்று அழைக்கப்பட்டது.

சோமப்பூண்டின் சாறுகுடித்து ஊரே மயங்கிக்கிடக்க, மயங்கிக்கிடப்பவனை, கிழவியின் பெயரைச்சொல்லி, சோம்பிக்கிடக்கிறான் என்று சொல்லிக்கொள்வர். எவ்வியூர்க்காரர்களுக்குத்தான் தெரியும், சோம்பல்முறிக்க மாதமாகும் என்று. முறிக்க முடியாத மயக்கத்தை முறிக்கும் ஆற்றல் எதற்கும் இல்லை. வள்ளியின் காதலும் சோமாவின் காதலும் இணைந்த மயக்கமல்லவா அது. முருகனும் எவ்வியுமே மீளமுடியாத கிறக்கமல்லவா அது. சோம்பிக்கிடக்கும் சுகம் வேறு எதில் வாய்க்கும்?”

கேள்வி எழுப்பியபடி உற்சாகம் பொங்கத் துள்ளிக்குதித்து ஓடிக்கொண்டிருந்தான் பாரி. கதையை நிறுத்திச்சொல்லாமல் இவ்வளவு வேகமாகச் சொல்லிக்கொண்டு ஓடுகிறானே என்ற பதற்றத்தில் பின்தொடர்ந்து கொண்டிருந்தார் கபிலர். கதை என்றாலே ஓட்டம் கூடும். அதுவும் வள்ளி முருகனின் கதை, அதுவும் வாழ்வில் காணாத பெருமயக்கத்தை உண்டாக்கும் கதை. ஓட்டம் கூடிக்கொண்டே இருந்தது. கபிலர் வேகங்கொள்ள கதைசொன்னால் போதும். கதையில் மயங்கும் கபிலருக்கு, மயக்கத்தின் கதையைச் சொன்னால் என்னவாகும்? அதுதான் இப்பொழுது நடந்தது. கபிலர் நடக்கவில்லை, ஓடிக்கொண்டிருந்தார்.

சற்றுத் தொலைவில் இரு பெண்களும் ஒரு பெரியவரும் நின்றிருந்தனர். அவர்களை நோக்கித்தான் பாரி சென்றுகொண்டிருந்தான். ‘யார் அவர்கள்? அங்கென்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?’ என்று சிந்தித்தபடி பின்தொடர்ந்தார் கபிலர். அருகில் செல்லச் செல்ல அவர்களைச் சுற்றித் தேனீக்களும் வண்டுகளும் இடைவிடாமல் பறப்பது தெரிந்தது.

கபிலரின் முகத்தில் வியப்பு மெல்ல படரத்தொடங்கியது. பாரிக்குச் செய்தி சொல்லி அனுப்பி அவனது வருகைக்காகக் காத்திருந்தனர். பாரி அருகில் போய் மண்ணுள் கிடந்ததைக் கிளறி முழுமையாக மேலெடுத்தான்.

இதுவரை முகர்ந்திராத மணத்தை முகர்ந்தார் கபிலர். நாசிக்குள் ஏறிய கணம் உள்ளுக்குள் ஒரு கிறக்கம் உருவானது. சட்டெனத் தலையை மறுத்து ஆட்டி, பாரியின் அருகில் போனார். நின்றிருந்தவர்கள் கபிலரை வணங்கி விலகி நின்றனர். கபிலர் அவர்களை வணங்கி நின்றார்.

முருகனும் வள்ளியும் எவ்வியின் கைகளில் கொடுத்த சோமப்பூண்டை எடுத்துக் கபிலரின் கைகளில் கொடுத்தான் பாரி.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-54

இருபதாண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்விது. முடிவுறாத மழைக்காலத்தின் நள்ளிரவு. மழவன்குடியினர் ஆடும் கூத்தில் நெருப்புப்பொறி பறந்தது. பின்பனி கவிழ்ந்தும் குளிர்நடுக்கம் யாருக்குமில்லை. எவ்வியூர் பெருமகிழ்வை அனுபவித்துக் கிறங்கிக்கிடந்தது. கூத்தும் குளிரும் ஒன்றினையொன்று இறுகத்தழுவி, ஒன்றின் மயக்கத்தை இன்னொன்றுக்கு ஊட்டி மகிழ்ந்தன. ஆனால், இவ்விரண்டையும்விடப் பெருமயக்கமொன்று ஏற்கனவே ஊரில் நிலைகொண்டிருந்தது.

சோமப்பூண்டு கிடைத்திருந்த நேரமது. ஊரே குடித்துக் குடித்துக் கிறங்கிக்கிடந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுதுதான் கிடைத்துள்ளது. யார் விடுவார்கள்? ``இன்னும் பூண்டு கரையவேயில்லை” என்று சொல்லிச்சொல்லிக் குடித்தார்கள். நீர் முகந்த குளம் வற்றிவிடப்போகிறது என்று சொல்லியும் விடாது குடித்தார்கள். இந்நிலையில்தான் மழவன்குடி கூத்துக்கலைஞர்கள் ஊருக்கு வந்தார்கள்.

பாரிக்கு அப்பொழுது மணமாகவில்லை. மேலெல்லாம் இளமை துளிர்த்துக்கிடந்த காலம். சோமப்பூண்டில் சொக்கியவர்களுக்கு மழவன்குடிக்கூத்தும் வந்து சேர்ந்தது. மழவன்குடியை, கூத்திலே மயக்கும் குடி என்பார்கள். ஆனால், அவர்கள் மயக்க இங்கு யாரும் மிச்சமில்லை. எனவே மழவன்குடியினரை எவ்வியூர் மயக்கியது. வந்தவர்களுக்கு முதலில் ஆளுக்கொரு குவளையைக் கொடுத்தார்கள். அவ்வளவுதான், இடைவிடாது வாங்கிக் குடித்தார்கள். எப்பொழுதெல்லாம் தெளிவடைகிறார்களோ, அப்பொழுதெல்லாம் குடித்தார்கள்.




எண்ணிலடங்காத மதுவகைகளை வாழ்வெல்லாம் குடிக்கிறோம். ஆனால், எந்தவொரு மதுவுக்கும் இத்தகு மயக்கம் கிடையாது. உள்ளிறங்கிய கணத்தில் தொடங்கும் கிறக்கத்தை எதிலும் உணரமுடியாது. கிறக்கத்தை அனுபவித்தபடியே முதுகெலும்பை முறுக்கி ‘கிர்’ரென மேலேறுவது என்னவென்பதைக் குடிக்காமல் உணரமுடியாது; குடித்தால் உணரவே முடியாது. உணர்வின் எல்லைக்கு அப்பால் மனிதனை நிறுத்தும் மயக்கம் முதல்துளியிலேயே நிகழ்ந்துவிடும். முதல்மிடறு அடுத்ததையெல்லாம் மறக்கவைக்கும். எனவே, முதலிலிருந்தே மீண்டும் மீண்டும் தொடங்க வேண்டியிருக்கும்.

சோமப்பூண்டின் கிறக்கங்கொண்டு கிடந்த மழவன்குடியினர், தங்களின் பறையைச் சூடேற்றவேயில்லை. வந்து ஒரு வாரமாகியும் அவர்களின் கால்கள் அடவுபிடிக்கவில்லை. அவர்களால் இந்த மதுமயக்கத்தை விட்டுப் பிரியமுடியவில்லை. எவ்வியூரிலுள்ள யாராலும் முடியாதது இவர்களால் எப்படி முடியும். ஏதுசெய்தும் ஆடுகளம் இறங்கமுடியாது எனக் கூட்டத்தின் தலைவன் முடிவுசெய்து, ``மறுமுறை வந்து ஆடுகிறோம்" எனச் சொல்லி, புறப்பட ஆயத்தமானான்.

செய்தி பாரிக்குச் சொல்லப்பட்டவுடன் விரைந்து அவ்விடம் வந்தான். ``மயக்குதல் பொதுவானது. அது மதுவுக்குமுண்டு, கலைக்குமுண்டு. நீ கலைஞன். சோமப்பூண்டு உன் சொற்களிலுமுண்டு என்பதை மறந்துவிட்டாயா? எதன் பொருட்டும் கலையும் கலைஞனும் தோற்கக் கூடாது. ஆடாமல் இந்நிலம் விட்டு அகலுதல் கலைக்கு இழுக்கல்லவா? பைங்குடத்தை ஆடுகளத்தின் நடுவில் வைத்து நிகழ்த்து உனதாட்டத்தை. ஆட்டம் முடியும் கணத்தில் உன் உடன்வந்தவர்களின் தலைக்கு ஒரு பானையை ஏந்தி இந்தப் பானத்தைக் கொண்டுசெல்லுங்கள்" என்றான்.

சொல்லிய கணம் தொடங்கியது ஆட்டம். பைங்குடத்தைச் சுற்றி மழவன்குடியினரின் கால்கள் சுழலத் தொடங்கிவிட்டன. அக்குடிப் பெண்களின் விழிகள் தவளைகளைப் போலத் தாவித்தாவிப் பைங்குடத்துக்குள் விழுந்தபடியிருந்தன. பாணன் பாடினான். ஒருவார காலம் தாங்கள் குடித்த குடியைப் பாடினான். ``வாழ்வெல்லாம் மதுவெனச் சொல்லிக் குடித்த எதுவும் மதுவன்று; புளித்த நுரை மூக்கடைக்காமல் மிதக்கவைக்கும் இவ்வரிய பானத்துக்கு என்ன பெயர்தான் சொல்வது பாரி?" எனக் கேட்டுத்தான் முதல்பாடலைப் பாடினான்.



``பறவைகள் உடலுக்கு வெளியேதான் இறக்கைகளை விரிக்கின்றன. ஆனால், இப்பழச்சாற்றைக் குடித்தால் உடலுக்குள்ளேயே இறக்கைகள் விரிகின்றன. பறக்கும்பொழுது மயங்குகிறோமா, மயங்கும்பொழுது பறக்கிறோமா? சொல் பாரி!

வானத்தில் பறப்பதும் நீரில் மிதப்பதும் அரிதல்ல, ஆனால், இவையிரண்டையும் தன்னுள் நிகழ்த்துவதுதான் அரிதினும் அரிது. அவ்வரிய பழச்சாற்றுக்குப் பெயரென்ன பாரி?

வற்றிய குளம்போல் நாக்கு இப்பானத்துக்காக ஏங்க, வயிறோ நிறைந்தகுளம்போல் பெருகிக்கிடக்கிறது. வயிறே உடைந்தாலும் வற்றிய நாக்கின் ஏக்கம் நீங்க மறுக்கிறதே, சொல்பாரி, நாங்கள் என்ன செய்ய?"

பாரியிடமும் பைங்குடத்து மதுவிடமும் வரிக்குவரி விளக்கங்கேட்டுப் பாடலைத் தொடங்கினான் பாணன். ஆனால், அதன்பிறகு அவன் பாடிய பாடல் எதுவும் யாருக்கும் நினைவில்லை. அவன் அப்பானத்தின் மயக்கத்தை, வீரியத்தை எப்படியாவது அறிய முற்பட்டு, முற்பட்டுத் தோல்வியடைந்து பாட்டை முடித்தான். "ஒரு மிடறு குடித்தால் அச்சுவையைத் துல்லியமாக என்னால் சொல்லிவிட முடியும், பாடும் எனக்கு மட்டும் அதற்கான அனுமதியைக் கொடு பாரி" என வேண்டினான்.

அரங்கு அதிரச் சிரித்தான் பாரி. "இந்த வாரம் முழுவதும் அதிகமாக அப்பானத்தைக் குடித்தது நீதான். முதல்துளியில் கண்டறியமுடியாத சுவையைக் கடலளவு குடித்தாலுங் கண்டறிய முடியாது. உனது நினைவைத்தோண்டிக் குடித்துப்பார், ஒருவேளை உனக்கு அது பிடிபடலாம்" என்றான்.

பாடுபவன் சொன்னான், “குவளையை வாயில் கவிழ்த்தும் வரைதான் நினைவு செல்கிறது, அதன்பின் நான் கவிழ்ந்துகிடப்பதுதான் தெரிகிறது” என்றான்.

சிரித்து மகிழ்ந்தது கூட்டம். சுவையறிய முடியாமல், அறிந்த சுவையிடமிருந்து மனம் பிரியமுடியாமல் கலைஞன் படும்பாடே கலையாக நிகழ்ந்துகொண்டிருந்தது. இரவெல்லாம் பாடினான் பாணன். மதுவின் கிறக்கத்தை விஞ்சும் ஆட்டத்தை ஆடினர் ஆணும் பெண்ணும். பைங்குடம் நடுவில் இருப்பதால் அதன் வாடையை நுகர்ந்து சுழலும் ஆட்டத்தை இரவெல்லாம் பார்த்துக் களித்தனர் எவ்வியூர்க்காரர்கள்.

விடிய விடிய நிகழ்ந்தது ஆட்டம். விடிந்ததும் மழவன்குடியினர் ஒவ்வொருவரும் தங்களுக்கான பானையைத் தேர்வுசெய்தனர். மலை முழுவதும் தூக்கிச்செல்லவேண்டும் என்பது அவர்களின் நினைவிலேயே இல்லை. பானைக்குள் இருக்கப்போவது மட்டுமே அவர்களின் நினைவிலிருந்தது. அவர்கள் தேர்வுசெய்த பானை முழுவதும் பானம் நிரப்பப்பட்டது.

புறப்பட ஆயத்தமாகும்பொழுது பாரி சொன்னான், ``ஒரு மிடறுகூட இதனைக் குடிக்காமல் தூக்கிச்சென்றால் மட்டுமே உங்களின் இடம் வரை இதனைக் கொண்டுசெல்ல முடியும். எங்கேயாவது நின்று குடிப்போம் எனத் தொடங்கினால், அதன்பின் அத்தனை பானைகளும் தீர்ந்த பின்தான் அவ்விடம் விட்டு நீங்கள் அகல்வீர்கள்.”

சரியெனச் சொல்லி அவர்கள் புறப்பட்டனர். இதுவரை தாங்கள் பெற்ற பரிசினிலேயே மிகச்சிறந்த பரிசு இதுதான். இதனைத் தங்களின் குடிகள் இருக்குமிடம் வரை எப்படியாவது கொண்டுசேர்க்க வேண்டும் என்று முடிவுசெய்து அவர்கள் நடந்தனர்.



மழவன்குடிக் கூட்டத்திலிருந்த மூன்றுபேர் சேர ஒற்றர்கள். அத்தனை பானைகளும் சேரனின் அரண்மனைக்குப் போய்ச்சேர்ந்தன. செம்மாஞ்சேரல் தன் அந்தப்புரப்பெண்களோடு

மகிழ்ந்திருந்தபொழுதுதான், “உலகில் யாரும் அறிந்திராத பெருமயக்கத்தை உண்டாக்கும் மதுவகை ஒன்று பறம்பினில் இருக்கிறதாம். அதனை நமது ஒற்றர் கூட்டம் கொண்டுவந்து சேர்த்துள்ளது” எனச் செய்தி சொல்லப்பட்டது.

எறிந்த வேல்போல் காட்டம் உள்குத்தி நிற்கும் ஆற்றல் யவனத் தேறலுக்குத்தான் உண்டு. அதனை முதலில் அருந்தி மகிழ்ந்தவன் சேரன்தான். மிளகுக்கு ஈடாகக் கொண்டுவந்து இறக்கப்பட்ட அதிசிறந்த பொருள் அதுதான். அதன் பிறகுதான் யவனத்தேறல் பற்றி பாண்டியர்களும் சோழர்களும் அறியத் தொடங்கினர்.

இப்பொழுது மீண்டும் வரலாறு திரும்புகிறது. அதிசிறந்த மதுவகையொன்று சேரர்குடியை வந்தடைந்திருக்கிறது. ஆனால், இதனை யவனத்தேறலைவிடச் சிறந்ததெனச் சொல்லிவிட முடியுமா என்பதைக் குடித்துப்பார்த்துதானே முடிவுக்கு வரமுடியும்.

அந்தப்புரப்பெண்களை விலக்கி விரைந்துவந்தான் செம்மாஞ்சேரல். பதினாறு பெரும்பானைகள் அவையின் நடுவே வைக்கப்பட்டிருந்தன. பானைகளை விட்டு சற்றுத்தள்ளி மழவன்குடிக் கலைஞர்கள் நின்றுகொண்டிருந்தனர். அக்குழுவின் தலைவன் தலைதாழ்த்தியபடியே நின்றிருந்தான். ‘என் கூட்டத்தில் ஒற்றர்கள் இருப்பதால்தான் ஆட்டம் நிகழ்த்தாமல் மயக்கங்கொண்டே நாங்கள் புறப்படுகிறோம் என்று பாரியிடம் சொன்னேன். அவனோ, கலைஞன் தோற்கக்கூடாது என எம்மை ஆடவைத்து அப்பானத்தோடு பெரும்பரிசையும் கொடுத்து அனுப்பிவிட்டான். இனி இப்பானத்தின் ஒரு மிடறுகூட எங்களுக்குக் கிடைக்கப்போவதில்லை’ என்று அவன் எண்ணிக்கொண்டிருந்தபொழுதுதான் செம்மாஞ்சேரல் முதல்மிடற்றினை அருந்தினான்.

அதன்பிறகு அவனது நினைவில் வேறெதுவும் இடம்பெறவில்லை. பானைகள் ஒவ்வொன்றாகக் கவிழ்த்து வைக்கப்பட்டன, அவனால் நம்பமுடியவில்லை. இதன் கிறக்கமும் மயக்கமும் என்னவென்பதை அறிய பலமுயற்சிகள் செய்தான். அரசவைப் பெரியோர்கள், வணிகர்கள், கடலோடிகள் எனப் பலருக்கும் அருந்தக் கொடுத்தான். ஆனால், யாருக்கும் ஒரு குவளைக்கு மேல் கொடுக்கவில்லை. அவர்களோ மறுகுவளை கிடைக்காதா என்று நாள்கணக்கில் ஏங்கி நின்றனர்.

இதன் மயக்கம் எவ்வளவு பெரிய மனிதனையும் தாழப் பணியவைத்துவிடுகிறது என்பதை ஒவ்வொரு நாளும் அவன் உணர்ந்தான். ஆனால், இதுவென்ன என்பதை மட்டும் யாராலும் சொல்ல முடியவில்லை. அப்பொழுதுதான் வடதேசத்து முனி ஒருவர் அவனது அரண்மனைக்கு வந்தார். செய்தி அவருக்கும் சொல்லப்பட்டது. “காட்டு மனிதர்கள் பல்வேறு மரப்பட்டைகளைக் கலந்து வடித்தெடுக்கும் மதுவகை வேறுபட்ட மயக்கத்தைத்தான் கொண்டிருக்கும். இதில் இவ்வளவு வியப்புற என்ன இருக்கிறது?” என்று சொல்லியபடி ஒரு குவளையை வாங்கிக் குடித்தார்.



முகத்தில் எவ்வித மாற்றமும் தெரியாததால் அவையில் இருந்த பலரும் அவரைச் சற்றே வியப்போடு பார்த்தனர். முனிவரை இப்பானம் ஒன்றும் செய்துவிடவில்லை என்பதைப் போல முகக்குறிப்பு இருந்தது. செம்மாஞ்சேரனும் வியப்புற்று அவரை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அவரோ, “இன்னொரு குவளை கொடு” என்றார்.

ஊற்றிக்கொடுப்பவன் மன்னனைப் பார்த்தான். மன்னனைத்தவிர வேறு யாருக்கும் மறுகுவளை கொடுக்கப்படவில்லை. செம்மாஞ்சேரன், முனிவரின் முகத்தை உற்றுப்பார்த்தான். அவர் அப்பானத்திடம் தன்னை இழந்துவிடவில்லை என்பது தெரிகிறது என்று எண்ணி மறுகுவளை தரச்சொன்னான்.

அதனையும் வாங்கிக் குடித்தார் முனி. அவரது முகத்தில் எந்தவித வியப்போ, மாற்றுதலோ தெரியவில்லை. ஆனால், எவ்வார்த்தையும் பேசவில்லை. “இன்னொரு குவளை கொடு” என்று மறுபடியும் கையை நீட்டினார். ஊற்றிக்கொடுப்பவன் அக்குவளையை வாங்கவே அச்சப்பட்டு மன்னனைப் பார்த்தான். மன்னனுக்கோ என்ன செய்வதென்று புரியவில்லை. ‘பாதிக்குவளை ஊற்றிக்கொடு’ என்று சொல்ல வேண்டும்போல் இருந்தது.

அப்படிச் சொல்வது தனக்கு அழகல்ல என்று அவனுக்குத் தோன்றியது. மழவன்குடித் தலைவன் தொலைவிலிருந்தபடி இக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு குவளை முகந்துகொடுக்க இவ்வளவு தயங்கும் மனிதர்கள் வாழும் உலகில்தான் பாரியெனும் பெருங்கொடையாளனும் வாழ்கிறான் என்று எண்ணியபடி பாடல் ஒன்றை முணுமுணுத்தான். அதற்குள் செம்மாஞ்சேரல் கையசைப்பது தெரிந்தது.

வேறு வழியேயில்லாமல், ‘அடுத்த குவளை ஊற்றிக்கொடு’ என்று மன்னன் சொன்னது யாவருக்கும் புரிந்தது. ஊற்றிக்கொடுப்பவன் குவளையை வாங்கிப் பானைக்குள் முகந்தான். கண்செருகியபடி இருந்த முனி இடக்கையால் தாடியைத் தடவி, கீழ்நீண்ட கடைமுடியை விரல்களால் உருட்டினான். அதைப் பார்த்த செம்மாஞ்சேரல் சொன்னான், “ஊற்றுவதை நிறுத்து.”

அரங்கு அதிர்ந்து பார்த்தது. ஊற்றுபவன் அப்படியே நிறுத்தினான். ஆனால், உள்செருகிய கண்களை முனிவன் திறக்கவேயில்லை.

“நீங்கள் இப்பானத்தால் மயங்கிவிட்டீர்கள். இனி உங்களால் இதனைக் கண்டறிய முடியாது.”

முனிவனின் முகத்தில் முழுமையான மயக்கம் வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. கண்திறக்காமல் தாடியின் கடைமுடியை இடக்கையால் சுருட்டியபடியே சொன்னார்.

“இதன் பெயரென்ன?”

மன்னனும் அவையோரும் அறிந்திருக்கவில்லை. மழவன்குடியையே எல்லோரும் பார்த்தனர். மழவன்குடித்தலைவன் முன்வந்து சற்றே மெல்லிய குரலில் சொன்னான், “சோமப்பூண்டிலிருந்து உருவாகும் பானம்.”


உதட்டோரம் மெல்லிய சிரிப்பை வெளிப்படுத்தினான் முனிவன்.

அவையோருக்குக் காரணம் புரிபடவில்லை. செம்மாஞ்சேரல் முனிவரையே

பார்த்துக்கொண்டிருந்தான். முனிவர் வாய்திறந்து சொன்னார், “இதுதான் சோமபானம்.”

இதுவரை இப்பெயரை யாரும் கேள்விப்பட்டதில்லை. புதுப்பெயராக இருந்தது. அவையோர் அவர் சொல்வதைக் கூர்ந்து கவனித்தனர்.

முனிவர் சொன்னார், ``தேவர்கள் மட்டுமே அருந்தும் பானம். இது கிடைக்காதா என்று ஆண்டாண்டுக் காலமாய்க் காத்திருப்போர் பலர். இதன் சக்தியை நீ அறியமாட்டாய். மகாசக்திகொண்டது. சொர்க்கம் என்ற பேருலகுக்கு மனிதனைக் கொண்டுசேர்ப்பது” முனிவர் பேசிக்கொண்டே இருக்க, மயக்கம் எல்லா வகையிலும் நிகழ்ந்துகொண்டிருந்தது.



``அரக்கர்களிடமிருந்து இதனை மீட்கும் போரினை, தேவர்கள் எல்லாக் காலங்களிலும் நடத்துகிறார்கள்.”

செம்மாஞ்சேரல் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான். அவனது கண்களுக்கு இப்பொழுது பானம் இருக்கும் ஒருசில பானைகள் தெரியவில்லை. தனது அரண்மனையெங்கும் அப்பானைகள் இருப்பதாகத் தெரிந்தது. மயக்கும் பேருலகத்தை அவன் அகக்கண்ணில் பார்க்கத்தொடங்கிவிட்டான் என்பதை முனிவன் உணரத்தொடங்கினான்.

அதன்பின் முனிவன் சொல்லும் எல்லாச் சொல்லிலும் சோமபானத்தின் மயக்கம் இருந்தது.

சோமப்பூண்டை எடுத்துக்கொண்டு எவ்வியூருக்குள் வரும் வரை வேகவேகமாகக் கதையைச் சொல்லிக்கொண்டு வந்தான் பாரி. ஆனால், சோமப்பூண்டு கண்டறியப்பட்டுவிட்ட செய்தி அதற்குள் ஊர் முழுவதும் தெரிந்துவிட்டது. பாரியும் கபிலரும் ஊருக்குள் நுழைவதற்குள் ஊரே கலைகட்டியிருந்தது.


கபிலருக்கு, பாரி சொல்லிவந்த கதையை முழுவதும் கேட்கவேண்டும் என்ற பேராவல் இருந்தது. அதைவிட அதிகமான ஆவலைக் கையிலிருந்த சோமப்பூண்டு ஏற்படுத்தியிருந்தது. கரைந்துபெருகும் அதன் சாறு அவரைச் சுண்டியிழுத்துக்கொண்டிருந்தது.

கபிலரின் கையில்தான் அது இருக்குமென்பதை எவ்வியூரிலுள்ள எல்லோரும் அறிந்திருந்தனர்.

ஊருக்குள் நுழைந்ததும் கபிலரைத் தோளிலே தூக்கி ஆடியது ஒரு கூட்டம். ஆட்டத்துக்கு இனிமேல்தான் வேலை என்று சொல்லி ஓடியது ஒரு கூட்டம். எங்குமிருந்து சாரிசாரியாக மக்கள் திரளத் தொடங்கினர். களைகட்டியது எவ்வியூர்.

பெருந்தாழி எனச் சொல்லப்படும் பெருவட்டப்பானையை எடுத்துவந்தனர். அதில் குடம்குடமாய் நீரூற்றினர். பானை எளிதில் நிரம்புவதாக இல்லை. அவ்வளவு நேரம்கூடப் பொறுத்திருக்க யாரும் ஆயத்தமாக இல்லை. கூச்சலும் குதியாட்டமுமாக சூழல் வேகங்கொண்டது. அதனினும் வேகமாகக் குடங்கள் வந்துகொண்டிருந்தன. நீர் நிரப்பி முடித்ததும் கபிலரைப் பார்த்துப் பெருமகிழ்வோடு பாரி சொன்னான், “சோமப்பூண்டை அதற்குள் போடுங்கள்.”

அதற்குப்பின் என்ன நடந்தது என்பது துண்டுதுண்டாகத்தான் நினைவிருக்கிறது. சோமப்பூண்டை உள்ளே போட்டவுடன் எழுந்த மணம் முதல் கிறக்கத்தை உண்டாக்கியது. இழுத்து மூச்சுவிட்டு மயங்கியபொழுது ஒருவர் மாற்றி ஒருவர் இடித்துக்கொண்டிருந்தது நினைவிலிருந்தது. அதன்பின் மேல்மாடத்தில் கையில் குவளையோடு பாரி அருகில் இருந்தான். அப்பொழுது கபிலரின் கையிலும் குவளை இருந்தது. பாரியிடம் செம்மாஞ்சேரலின் கதையைக் கேட்டார். பாரியும் அதனைச் சொன்னான்.



“சோமபானம் எங்களுக்கு வேண்டும். என்ன விலை கொடுத்தும் நாங்கள் வாங்கிக்கொள்கிறோம் என்று சொல்லி ஆட்களை அனுப்பினான் செம்மாஞ்சேரல். அது இயற்கை எங்களுக்கு வழங்கும் காதற்பரிசு. அதனை நாங்கள் கண்டறிய முடியாது. அதுவாகத்தான் எங்களைக் கண்டறியும். பல ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் அது நிகழும் என்று சொல்லி அனுப்பினேன்’’ என்றான் பாரி.

கபிலர் நினைவு மீண்டபொழுது அவரது குடிலில் படுத்திருந்தார். பொழுது நண்பகலைக் கடந்திருந்தது. வெளிச்சத்தைப் பார்த்ததும் “விடிந்துவிட்டதா?” என்று கேட்டபடிதான் எழுந்தார். உடனிருந்த உதிரன் சொன்னான், “நண்பகல் கடந்துவிட்டது.”

“நான் எப்பொழுது குடிலுக்கு வந்தேன்?”

“நீங்கள் வரவில்லை. நான்தான் கொண்டுவந்து சேர்த்தேன்.”


அதன்பின் விளக்கம் கேட்க விரும்பவில்லை. “உணவு ஏற்பாடாகப் போகிறது. நீங்கள் தயாராகுங்கள்” என்று சொல்லிவிட்டுப் போனான் உதிரன்.

கபிலரும் வேகவேகமாகத் தயாரானார். இன்றாவது முழுக்கதையையும் கேட்டுவிடவேண்டும் என்று பேரார்வங்கொண்டிருந்தார். புறப்பட்டுக்கொண்டிருக்கும் பொழுது அவருக்கே புலப்பட்டது; பெருக்கெடுக்கும் ஆர்வத்துக்குக் கதையை மீறிய காரணம் ஊற்றப்படும் குவளையில் உண்டென்று. மாலையில் வழக்கம்போல் மேல்மாடத்துக்கு வந்து சேர்ந்தார் கபிலர். அவரின் வருகையை எதிர்பார்த்திருந்தான் பாரி. உடன் தேக்கனும் முடியனும் இருந்தனர். கபிலருடன் வந்த உதிரனை அனுப்பி, காலம்பனை அழைத்துவரச் சொன்னான் பாரி. உதிரனும் புறப்பட்டுப் போனான்.

கபிலர் வந்து உட்கார்ந்ததும் ஆர்வத்தோடு தொடங்கினார், “செம்மாஞ்சேரல் சோமபானம் கேட்டு ஆளனுப்பியதற்கு, நீ மறுமொழி சொல்லி அனுப்பினதாகக் கூறினாயே. அதன்பின் என்ன நடந்தது?”

பாரி, கபிலரைப் பார்த்து மெல்லியதாய் ஒரு புன்முறுவல் உதிர்த்தான். கபிலருக்குக் காரணம் புரியவில்லை. “ஏன் விளக்கம் சொல்லாமல் சிரிக்கிறாய்?”

பாரி சொன்னான், “முழுக்கதையையும் நேற்று சொல்லிமுடித்தேன். நீங்கள் மறுபடி முதலிலிருந்து கேட்கிறீர்களே, அதுதான் சிரித்தேன்.”



கபிலருக்குச் சற்றே வெட்கமாக இருந்தது. “முழுக்கதையையும் சொன்னாயா? நான்தான் நினைவு தவறிவிட்டேன் என நினைக்கிறேன்” என்று கூறி, மறுபடியும் கதைசொல்லச் சொன்னார்.

“பறம்பின் மறுமொழிகேட்ட செம்மாஞ்சேரல் பெருஞ்சினங்கொண்டான். சோமபானத்தைத் தங்களுக்குத் தர மறுக்கிறான் பாரி என்ற முடிவுக்குப் போனான். எதையாவது செய்து அதனைக் கைப்பற்ற வேண்டும் என்று எண்ணியவனுக்கு வடதேசத்து முனி பற்பல எடுத்துக்காட்டுகளைக்கூறி வெறியூட்டினான். சேரர்படை பறம்பின் மேற்குமுகடுகளை நோக்கி அணிவகுக்கத் தொடங்கியது.”

``கூட்டத்தின் குரல் எப்பொழுதும் கேட்டுக்கொண்டே இருப்பதுபோல் இருக்கிறது. ஆனாலும் மயங்கிக்கிடப்பவனுக்கு இவையெல்லாம் நினைவில் தங்காது. நினைவில் இவை இருக்கின்றன என்றால் நான் மயக்கங்கொள்ளவில்லை என்றுதானே பொருள். குவளையில் மது அருந்தியபடி பேசிக்கொண்டிருப்பது வாழ்வெல்லாம் உள்ள பழக்கம்தானே. இப்பொழுது மட்டும் ஏன் அந்தப் பழக்கத்தை முழுமைகொள்ள முடியவில்லை. நம்மால் மட்டும்தானா அல்லது யாராலும் முடியவில்லையா?” கேள்விகள் எழுந்தபடியே இருக்க புரண்டு படுத்தார் கபிலர்.

விழிப்புத்தட்டியது. கண்விழிக்க நினைத்தாலும் சிந்தனை விடுவதாக இல்லை. வெளியில் தெரியும்

வெளிச்சத்தை உள்வாங்க முடியாமல் கண்கள் கூசித்திறந்தன. “நாம் எப்போது வந்து சேர்ந்தோம்?” என்று உதிரனிடம் கேட்டார் கபிலர்.

பதில்சொல்லத் தயங்கியபடி உதிரன் நின்றுகொண்டிருந்தான்.

“ஏன் பதில் சொல்லத் தயங்குகிறாய்?” என அவர் கேட்டுக்கொண்டிருந்தபொழுது பதில் என்னவென்று அவருக்கே புரிந்தது. அவர் மேல்மாடத்துக் கல்லிருக்கையில்தான் படுத்திருந்தார். வீடு திரும்பவேயில்லை.

மீண்டும் பகற்பொழுது கழிந்தது. குளித்துத் தயாராகி மாலைப்பொழுதில் மேல்மாடத்தை வந்தடைந்தார். ஆனால், இன்று கபிலர் வரும்முன்பே ஆட்டம் தொடங்கிவிட்டது. “காலம்பன்தான் தொடக்கிவைத்தான்” என்றான் பாரி.

“முடிக்கமுடியாத ஆட்டத்தை யார் தொடங்கினால் என்ன?” என்றார் கபிலர்.

“ஆட்டம் என்றால் அது முடியத்தான் வேண்டுமா?” எனக் கேட்டான் காலம்பன்.

“கேள்வி சரிதான், ஆனால், நான் ஆட்டத்துக்குள் வந்த பிறகுதான் இதற்கான விடையைச் சொல்ல முடியும்” என்றார்.

வீரனொருவன் நீட்டிய குவளையை வாங்கிய கபிலர் குடிக்காமல் கையில் பிடித்தபடியே பாரியிடம் கேட்டார், “இந்த ஆட்டத்தைப்பற்றிப் பின்னர் பேசுவோம். செம்மாஞ்சேரல் என்னதான் செய்தான்?”




பாரி வழக்கம்போல் சிரித்தான்.

“ஏன் சிரிக்கிறாய்? நேற்றும் முழுக்கதையையும் நீ சொன்னாயா?”

சிரித்தபடியே “ஆம்” என்று தலையாட்டினான்.

“கதைகேட்ட எனக்கு எதுவும் நினைவிலில்லை. கதைசொன்ன உனக்கு மட்டும் எப்படி நினைவிருக்கிறது?”

முன்பைவிடப் பெரும்சத்தத்தோடு சிரித்தான் பாரி.

கபிலருக்கு இதற்கான காரணமும் புரியவில்லை.

“கதைசொல்லி முடிக்கும் வரை குடிக்கக்கூடாது என எனது குவளையையும் வாங்கிக் குடிப்பவர் நீங்கள்தானே, அப்புறம் எனக்கு எப்படி மறக்கும்” என்றான்.

சிரிப்பில் உருண்டது மேல்மாடம். காலம்பன் காடதிரச் சிரித்தான். புரையேறித் தும்மல்கொண்டு மீண்டும் சிரித்தான். அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கண்ணில் நீர் வழிந்துகொண்டிருந்தது. விடாமல் சிரித்தனர் எல்லோரும். பாரியின் கண்ணிலும் நீர் திரண்டது. இப்படி மகிழும் காலம்பனைக் காண இத்தனை நாளானதென நினைத்துத் திரண்ட நீரது.

குவளைகள் சில நொறுங்கியிருக்கலாம். ஆனால், தனது கால்பட்டு பானை ஒன்று சரிந்து விழுந்ததும் கண்விழித்தார் கபிலர். பக்கத்தில் படுத்திருந்த உதிரன் கண்விழித்தான். “பானை காலருகில் எப்படி வந்தது உதிரா?” எனக் கேட்டார்.

உதிரன் சொன்னான். “வீட்டில் உள்ளோர் அவ்விடம் வைத்துள்ளனர்.”

பதில் கேட்டுத் திடுக்கிட்டார் கபிலர். “நாம் இருப்பது…” சரி வேண்டாம் என முடிவுசெய்து விளக்கம் ஏதும் கேட்காமல் அவ்வீட்டை விட்டு எழுந்து நடந்தனர்.

தேக்கன்தான் நேற்று கதையைச் சொன்னான். அந்தப் போரின் முடிவு மட்டும் நினைவில் இருந்தது. “ஒளி சரியப்போகும் அந்தக் கடைசிப்பொழுதில் பாரியின் வாள்வீச்சு எதிர்கொள்ள முடியாததாக இருந்தது. இருதரப்பு வீரர்களும் நிகழ்வதை உற்றுப்பார்த்துக்கொண்டிருக்க, கணநேரத்தில் செம்மாஞ்சேரலின் தலையை இடப்புறக்காட்டை நோக்கி சீவிச்சரித்தான் வேள்பாரி.”


போர் தொடங்கி, நீண்ட தாக்குதலுக்குப்பின்தானே இது நடந்திருக்கும். ஆனால், அதுவெல்லாம் சொல்லாமல் இதனை மட்டும் ஏன் சொன்னார் தேக்கன் என்று தோன்றியது. தோன்றிய மறுகணமே, “அவர் முழுமையும் சொல்லியிருப்பார். நமக்குத்தான் நினைவில் தங்கவில்லை” என நினைத்தபடி நடந்தார் கபிலர்.

“ஆனால், செம்மாஞ்சேரலின் தலையைப் பாரி சீவி எறிந்தது மட்டும் எப்படி நினைவில் இருக்கிறது?” என்ற கேள்வி எழுந்தது.

சோமபானத்தின் மீளமுடியாத மயக்கத்தில் மூழ்கினாலும் அதனைக் கிழித்து நினைவின் ஆழத்துக்குள் இறங்கும் வல்லமை பாரியின் வாளுக்கு உண்டு என்று தோன்றியபொழுது மெய்சிலிர்த்தது கபிலருக்கு.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்…*

# வீரயுக நாயகன் வேள்பாரி-55





முருகனும் வள்ளியும் கொடுத்த காதற்பரிசான சோமப்பூண்டுப்பானத்தைப் பருகும் முன்னுரிமை காதலர்களுக்கே உரியது. எவ்வியூரின் தலைவனேயானாலும் அதற்குக் கட்டுப்பட்டவன்தான். நாள்தோறும் அதிகாலை சோமப்பூண்டு போடப்பட்ட பெருந்தாழியில் நீரெடுத்து ஊற்றும் பணியை முதுபெண்கள் செய்வர். அந்நீரில் சோமப்பூண்டு கொஞ்சங்கொஞ்சமாகக் கரைந்து, கலங்கி, மயக்கும் மணத்தோடு பானமாகத் திரண்டிருக்கும்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் இணையர் இக்காதற்பரிசைக் கையிலேந்தி ஆட்டத்தைத் தொடங்கிவைப்பர். அதற்குப் பின்னர்தான் மற்றவர்களுக்குத் தரப்படும். சோமப்பூண்டு கிடைத்து இன்று ஐந்தாம் நாள். இன்றைய ஆட்டத்தை யார் தொடங்கப்போகிறார்கள் எனப் பலரும் காத்திருந்தபொழுது அரங்கினுள் நுழைந்தாள் அங்கவை; உடன்வந்தான் உதிரன்.

எவ்வியூர் முழுக்கத் தெரிந்த கதைதான் இது. கொற்றவைக்கூத்தின்பொழுது தீக்களி பூசிக்கொண்டு நெருப்பில் இறங்கி ஆடினாள் அங்கவை. தழலுக்குள் சுழலும் அந்தக் காதலிணையர்கள் யாரென அப்பொழுது ஊராருக்குத் தெரியவில்லை. ஆனால், பாரி பார்த்த கணமே அறிந்தான், சுடரும் நெருப்பில் சுற்றிச்சுழல்பவள் தன் மகளென. ஆனால், அங்கவையோடு இணைந்தாடும் ஆடவன் யார் என்பதுதான் பாரிக்குத் தெரியாமல் இருந்தது.

அதுவும் அடுத்த சிலநாள்களிலேயே தெரிந்துவிட்டது. பேரெலி வேட்டையின்பொழுதே உதிரன் பாரியிடம் சிக்கிவிட்டான். அவனது உடல்மொழி கண்டே உண்மையறிந்தான் பாரி.

இச்செய்தியை அறியும் முன்பே கபிலரைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பினை உதிரனுக்குக் கொடுத்திருந்தான் பாரி. இயல்பாய் அமைவதைக்கூட இயல்பானது என ஏற்றுக்கொள்ள முடியாத காரணத்தோடு இயங்கும் ஆற்றல் காலத்துக்கு உண்டு. பாரி தனது இயல்பின் வழியே இணையருக்கான வழித்தடத்தைச் செப்பனிட்டுக் கொடுத்திருந்தான்.



கபிலரிடம் பாடங்கேட்க எந்நேரமும் அவரின் குடிலில் அங்கவை இருந்தாள். அவருக்கு உதவிசெய்ய அங்கேயே இருந்தான் உதிரன். பெரும்புலவனின் சாட்சியாகச் செழித்து வளர்ந்தது காதல். யாருக்கு யார் பாடங் கற்றுக்கொடுக்கிறார்கள் என்ற குழப்பம் குடிலில் எப்பொழுதும் நிலவியது.

அங்கவையைப் போன்ற அறிவிற்சிறந்த மாணவிக்கும் உதிரனைப் போன்ற அழகுநிறைந்த வீரனுக்கும் இடையில் மொழிகற்றுத்தரும் புலவன் சிக்கியிருந்தான். பெரும்புலவனை உருட்டியும் மறைத்தும் விழுங்கியும் விளையாடும் விளையாட்டு காலநேரமின்றி நடந்துகொண்டிருந்தது.

அவர்கள் இருவரும் காதல்கொண்டுள்ளனர் என்று கபிலரும் அறிவார். ``எனது குடிலில் இருக்கும்பொழுது கல்வியறிதல் தாண்டி, சிறு கவனச்சிதறல்கூட அங்கவையிடம் இருந்ததில்லை. அதேபோலத்தான் உதிரனும். எனக்கான பணியைச் செய்வதைத்தவிர வேறெதிலும் ஈடுபாடின்றி விலகி நிற்பான்'' என்று அவர்கள் இருவரைப்பற்றியும் பெருமையோடு மற்றவர்களிடம் கூறுவார் கபிலர்.

பெரும்புலவனேயானாலும் காதலர்களின் விளையாட்டில் தான் என்னவாக இருக்கிறோம் என்பதைக்

கண்டறிய முடியாதுதானே. கபிலர் பார்ப்பதை மட்டுமே உண்மையென நம்பியிருந்தார். அவர் பார்க்காத பகுதியில்தான் உண்மையின் முழுமையிருக்கிறது என்பதை அவர் அறியவில்லை.

அவர்கள் இருவரும் காதல்கொள்கிறார்களா என்ற ஐயம் பலமுறை கபிலருக்கு வந்துள்ளது. ஏனென்றால், அவர்கள் இருவரும் தங்களுக்கு இடப்பட்ட பணியினைத்தவிர வேறெதையும் செய்வதில்லை என்று அவர் நம்பினார். கபிலரைக் கண்ணைக்கட்டி விளையாட்டுக் காட்டியதுதான் அவர்களின் காதல் செழித்திருந்ததன் அடையாளம்.

புலவன் மனங்களுக்குள் ஊடுருவத்தெரிந்தவன். அங்கவையின் கண்ணைப் பார்த்தே கதையைச்சொல்லும் ஆற்றல் கபிலருக்கு உண்டு. ஆனாலும் அவரால், இவர்கள் பேசிக்கொள்ளும் மொழியைப் புரிந்துகொள்ளமுடியவில்லை. காரணம், அம்மொழி இயற்கையின் ஆதிரகசியங்களைக் கொண்டிருந்தது. அங்கவை தனது கூந்தலுக்குப் பூச்சூடி வருவதுதான் கபிலருக்குத் தெரிந்தது. ஆனால், விரியிதழ் மலர் சூடுவதற்கு ஒரு பொருள் உண்டு. கூம்புவடிவப் பூச்சூடினால் சொல்லும் செய்தி வேறொன்று. நான்கிதழ் மலர்சூடி வரும்போதெல்லாம் அங்கவையின் முகத்தில் இருக்கும் பூரிப்பு கபிலரால் உய்த்தறிய முடியாதது.



சமதளத்தில் மன்னர்கள் ஆநிரையைக் கவர வெட்சிப்பூ, மீட்கக் கரந்தைப்பூ, போருக்கு முனைய வஞ்சிப்பூ, தாக்கியோரை எதிர்க்கக் காஞ்சிப்பூ, வெற்றிக்கு வாகைப்பூ எனப் புறக்காரணங்களின் அடையாளங்களாகப் பூக்களைச் சூடிக்கொண்டனர்.


பூக்கள், செடிகொடிகளின் அக அடையாளம். கிளைகளுக்கும் தண்டுகளுக்கும் இலைகளுக்கும் இல்லாத வண்ணமும் வாசமும் பூக்களுக்கு இருப்பது அதனால்தான். குறிஞ்சி காதல் நிலம். அக்காதல் நிலத்தில் நிகழும் காதல் விளையாட்டுக்கு பூக்களைவிட சிறந்த தூதுவன் யாராக இருக்க முடியும். பூக்கள்தான் செய்தியைச் சொல்கின்றன; பூக்கள்தான் உயிரைக் கொல்கின்றன.

ஒருநாள் வழக்கத்துக்கு மாறாக, கூந்தலில் எப்பூவும் சூடாமல் வந்திருந்தாள் அங்கவை. மொழிப்பயிற்சியின் புதிய பாடத்தைத் தொடங்கும் நாள் அது. அங்கவை ஏதோ ஒரு மனச்சோர்வில் இருக்கிறாள் என்று கபிலர் புரிந்துகொண்டார். அதனால் புதிய பாடத்தைத் தொடங்கவில்லை. சிறிதுநேரம் உதிரன் வெளியே போய்வந்தான். அங்கவை உட்கார்ந்திருந்த இடத்தினருகே அத்திக்காய் இருந்தது. பாடம் முடிந்து அங்கவை போன பின்பே அதனைக் கபிலர் பார்த்தார். இது இங்கு எப்படி வந்தது எனக் குழம்பிய கபிலருக்கு அத்திக்காய் சொல்லும் செய்தி தெரியவில்லை.

அத்திக்காய் பூக்காமல் காய்ப்பது. வாழ்வின் ஒருகட்டத்தைத் தாவிக்கடப்பதன் அடையாளம் அது. அங்கவையும் உதிரனும் காதலின் அடுத்த கட்டத்தை அறிய ஆசைப்பட்டதன் வெளிப்பாடு அது. பூச்சூடாமல் அங்கவை வந்ததால் உதிரன் அத்திக்காய் கொடுத்துத் தனது எண்ணத்தைச் சொன்னானா?

அல்லது பூச்சூடாமலே வந்தவள் அத்திக்காய் கொடுத்து அழைத்துவிட்டுப் போனாளா? யார் அறிவார்?

காயை அறியாத கபிலர் காதலை எப்படி அறிவார்? கண்முன் நடக்கும் உரையாடலைக் கண்கொண்டுமட்டும் பார்த்துவிட முடியாது. ஏனென்றால், இது காதலின் உரையாடல். நிகழ்த்தப்பட்ட உரையாடலின் தொடர்ச்சி இப்பொழுது என்னவாக நிகழ்ந்துகொண்டிருக்கும் என்பது தெரியாததால்தான், அத்திமரம் பற்றிய பாடலை அங்கவைக்குச் சொல்லாமல் விட்டுவிட்டோமே என்று கவலைப் பட்டுக்கொண்டிருந்தார் கபிலர். தனக்கும் பாடம் கற்பிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பது புரியவில்லை அவருக்கு.



காதல் விளையாட்டில் இணையற்ற இணையரான அங்கவையும் உதிரனும் சோமப்பூண்டின் பானம் பருக அரங்கினில் நுழைந்தனர். அங்கவை வழக்கத்துக்கு மாறாக சற்றே நாணத்தோடு உள்ளே நுழைந்தாள். உதிரன் அமைதியான இயல்பைக் கொண்டவன். சிறுத்த கண்களைக் கொண்ட அவனது முக அமைப்பு யாரையும் மயக்கக்கூடியது. உதட்டோரம் இருக்கும் சிறுகுழி முகத்தில் எப்பொழுதும் ஒரு சிரிப்பு மலர்ந்திருப்பதைப் போலவே தோற்றம் தரும். மகிழ்வு நீங்காத அழகன் அவன். அவன் மயங்கிக்கிடக்கும் அழகி அவள்.

உள்நுழைந்த இருவரைப் பார்த்ததும் பழச்சாற்றை ஊற்றித்தரக் குவளையை எடுத்தாள் முதுமகள். ஆனால், அங்கவையோ அவள் எடுக்கும் குவளையைப் பார்க்காமல் சற்று தள்ளி எதையோ பார்த்துக்கொண்டிருந்தாள். அங்கு எதைப் பார்க்கிறாள் என முதுமகளும் திரும்பி அப்பக்கம் பார்த்தாள். நீர்கொண்டுவரும் பானை அவ்விடமிருந்தது. முதுமகள் கையிலேந்திய குவளையைக் கீழே வைத்துவிட்டு அப்பானையைப் பார்த்தபொழுது, உதிரன் பானையைக் கையிலெடுத்தான்.

முதுமகளுக்கு வியப்புத் தாங்கமுடியவில்லை.

``தொடங்கும்பொழுதே பானையிலா?’’ என்றாள்.

``ஆம், வேறு வழியில்லை. இப்பெருந்தாழியைத் தூக்கிச்செல்ல முடியாதல்லவா?” என்றான் உதிரன்.

முதுமகளால் சிரிப்பினை அடக்கமுடியவில்லை.

``நாங்கள் காதலர்களான பிறகு, முதன்முறையாக இப்பொழுதுதான் சோமப்பூண்டு கிடைத்திருக்கிறது. இச்சிறுகுவளையில் வாங்கி என்று தீர்க்க எமது கனவை?”

“இவ்வளவு ஆர்வங்கொண்ட நீங்கள் ஐந்து நாட்களாக ஏன் வரவில்லை?” என்று கேட்டாள் முதுமகள்.

உதிரன் சொன்னான். ``நான் கபிலருக்கு உதவியாளன். அவரை அருந்தச்செய்து மகிழ்விப்பதுதான் பாரி எனக்கு இட்டுள்ள கட்டளை. எழமுடியாத மயக்கங்கொண்டு அவர் துயிலும் நாளுக்காகக் காத்திருந்தோம். இன்றுதான் அது வாய்த்தது.”

பேசிக்கொண்டிருக்கும்பொழுதே அடுத்த இணையர் உள்ளே நுழைந்தனர். அவர்கள் நீலனும் மயிலாவும். சோமப்பூண்டு கிடைத்த செய்தி பறம்புநாடு முழுவதும் பரவிவிட்டது. எல்லா ஊர்களிலிருக்கும் காதலர்களும் எவ்வியூர் புறப்பட்டு வந்துகொண்டிருக்கின்றனர். செய்தி வேட்டுவன் பாறைக்குப் போய்ச்சேர்ந்த கணத்தில் இவர்கள் புறப்பட்டு வந்துசேர்ந்துள்ளனர். அதனால்தான் ஐந்தாம் நாள் காலையிலே வர முடிந்தது. நீலனும் மயிலாவும் காதல்கொள்ளத் தொடங்கிய பிறகு முதன்முறையாக இப்பொழுதுதான் சோமப்பூண்டு கிடைத்துள்ளது. அரங்கினுள் முதலில் நுழைந்தான் நீலன், தொடர்ந்து மயிலா வந்தாள்.



மயிலாவைப் பார்த்ததும் முதுமகளுக்கு உள்ளுக்குள் சிறு அச்சம் எட்டிப்பார்த்தது. நீலன் அதிசிறந்த வீரனெனப் பறம்பெங்கும் அறியப்பட்டவன். அவனை வீழ்த்திய வல்லமைகொண்டவளைப்பற்றி அதைவிட அதிகமாக அனைவருக்கும் தெரியும்.

அரங்கினுள் நுழைந்ததும் சோமப்பூண்டின் மணம் நீலனின் மூக்கில் ஏறியது. சற்றே காரத்தன்மையோடு இருக்குமோ எனத் தோன்றிய கணத்தில் அதன் தன்மை வேறொன்றாகப்பட்டது. இதுவரை உணராததாக இருக்கிறதே என்று நினைக்கும்பொழுதே அவன் கிறக்கத்தில் மூழ்கத்தொடங்கினான். அருகிருந்த மயிலா அவனது முதுகைத்தட்டினாள். விழிப்பு வந்தவனைப்போல மணம்விலகி மீண்டான்.

அங்கவையும் உதிரனும் இதுவரை பருகவில்லையே தவிர ஐந்து நாள்களாக இவ்வாடையை நுகர்ந்து

பழகிவிட்டனர். ஆனால், நீலனுக்கும் மயிலாவுக்கும் அப்படியல்ல, நுகர்வதே இவ்வளவு கிறக்கங்கொடுக்குமானால் அருந்தினால் என்னவாகும்?

கிறக்கம் விலக்கி ஊற்றிக்கொடுக்கும் முதுமகளின் அருகில் வந்தனர் இருவரும். இவர்கள் இருவரும் பானையைத்தான் தூக்குவார்கள் என நினைத்த முதுமகள் குவளையை ஓரத்தில் வைத்துவிட்டு இன்னொரு பானையை எடுத்தாள்.

நீலன் முதுமகளையே பார்த்துக்கொண்டிருந்தான். ``என்ன இப்படிப் பார்க்கிறாய்? பானையைத்தானே எதிர்பார்த்தாய்? அதைத்தான் எடுக்கிறேன்” என்றாள்.

நீலனோ, ``இல்லை, நாங்கள் பானையை எதிர்பார்த்து வரவில்லை” என்றான்.

“அப்புறம் எதை எதிர்பார்த்து வந்தீர்கள்? இவர்கள் இருவரைப்போல பெருந்தாழியைத் தூக்கிப் போகலாம் என நினைத்து வந்தீர்களா?” எனக் கேட்டபடி சிரித்தாள்.


உதிரனும் அங்கவையும் உடன் சிரித்தனர். நீலன் சொன்னான், “அவர்கள் காதல்கொண்டுள்ள இடம் எவ்வியூர். எனவே அவர்களால் பெருந்தாழியைத் தூக்கிச்சென்றுவிட முடியும். ஆனால், நாங்கள் வேட்டுவன் பாறைக்கல்லவா போக வேண்டும். அவ்வளவு தொலைவு எப்படித் தூக்கிச்செல்ல முடியும்?”

சற்றே வியப்போடு முதுமகள் கேட்டாள், “அப்படியென்றால் என்ன செய்யலாமென்று வந்துள்ளீர்கள்?’

முதுமகள் சொல்லிமுடிக்கும் முன்பே மயிலா சொன்னாள், “சோமப்பூண்டை எடுத்துச்செல்லலாம் என்று...”

அதிர்ந்த முதுமகள் சட்டென அருகிருந்து கம்பைத் தூக்கினாள். பாய்ந்துவந்து அந்தக் கம்பைப் பிடித்த மயிலா சொன்னாள், “இது காதற்பரிசு. முருகன் எவ்விக்குக் கொடுத்தது பருகும் நீரையல்ல, உருகும் பூண்டினை. கொடுத்ததும் பெற்றதும் காதலர்கள் செய்துகொண்ட செயல்; இடையில் முதுமகள்கள் ஏன் நுழைந்தீர்கள்?” எனச் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, நீலனைப் பார்த்து, “விரைவாக அதனை எடு” என்றாள்.

பூண்டினை எடுக்க தாழிநோக்கிப் பாய்ந்தான் நீலன். எங்கிருந்து அப்படியொரு குரல் வந்ததெனத் தெரியாது. அரங்கமே அதிரும்படி பெருங்குரல் கொடுத்தாள் முதுமகள். குரல் கேட்டதும் வெளியில் இருந்த வீரர்களும் மற்ற முதுமகள்களும் உள்ளே நுழைந்தனர்.



என்ன நடந்துகொண்டிருக்கிறது என யாருக்கும் புரியவில்லை. யாரையும் கட்டுக்கடங்காமல் செய்யும் ஆற்றல் இப்பூண்டுப்பானத்துக்கு உண்டு. அதன் மணம் உருவாக்கிய கிறக்கமே இவ்வளவு வெறிகொள்ளச் செய்கிறது. நிலைமையை எப்படிச் சமாளிக்க எனச் சிந்தித்த முதுமகள், சிக்கலைப் பெரிதாக்க வேண்டாம் என முடிவுசெய்து, சட்டெனக் குவளையை நீட்டியபடி, “முதலில் இதனைக் குடி, என்ன செய்யலாம் என்று பின்னர் முடிவுசெய்வோம்” என நீலனை நோக்கி நீட்டினாள்.

அவனது மூக்கிற்கு மிக அருகில் ஏந்திய குவளைக்குள்ளிருந்து மேலெழுந்த மயக்கம் மூக்கினுள் ஏறி உச்சந்தலையை முட்டியது. தனக்கும் நீலனுக்கும் நடந்துகொண்டிருந்த போராட்டத்தைக் கணநேரத்தில் நீலனுக்கும் சோமப்பூண்டுக்குமான போராட்டமாக மாற்றினாள் முதுமகள்.

சற்று தள்ளி இருந்த மயிலா, முதுமகளின் தந்திரத்தை உணர்ந்தபடி, “அதனை வாங்கிக் குடிக்காதே” என்று கத்தினாள். அவளது சொல் அவன் காதில் விழும்பொழுது பருகிய முதல்மிடறு தொண்டையைக் கடந்து கீழிறங்கிக்கொண்டிருந்தது. இனி அவனைக் கையாள்வது எளிது. அவனின்றி மயிலாவால் மட்டும் இந்த உரிமைப்போரை நடத்த முடியாது என முதுமகள் அறிவாள்.

முதுமகளுக்கு வேர்த்து அடங்கியது. கணநேரத்தில் சூழலே மாறத்தெரிந்ததே எனத் தவித்துப்போனாள்.

சினம் உச்சத்திலேறியபடி ஒரு பார்வை பார்த்தாள் மயிலா. அவளது பார்வையைப் பொருட்படுத்தாதது போல அப்பக்கம் திரும்பிக்கொண்டாள் முதுமகள். சற்று நேரங்கழித்துத்தான் மீண்டும் திரும்பினாள். பானையை ஏந்தியபடி அரங்கை விட்டு வெளியேறிக்கொண்டிருந்தனர் நீலனும் மயிலாவும். அவர்களுக்கு முன்பே அங்கவையும் உதிரனும் வெளியேறியிருந்தனர்.

**வெ**டத்தப்பூவின் இலை எள்ளுச்செடியின் இலையைவிட மிகச்சிறியதாகவும் ஊசியாகவும் இருக்கும். செடியின் அளவும் சிறியதுதான். ஆனால், அதன் அதிசயிக்கத்தக்க சிறப்பு பூவினில் உள்ளது. அது அரும்பும்பொழுது ஒரு நிறத்தில் இருக்கும், அரும்பு விளைந்து மொட்டாகும்பொழுது ஒரு நிறம் கொள்ளும், மொட்டு பருத்து முகையாகும்பொழுது புது நிறத்தில் ஒளிரும். இதழ்விரிந்து மலரும்பொழுது வேறொரு நிறம்காணும். நான்கு நிறங்களில் பூத்து உதிரும்.

இதன் வியப்புறும்தன்மை இத்தோடு நின்று விடுவதில்லை. நான்கு நிலைகளில் நான்கு நிறங்களைக் காணும் வெடத்தப்பூ நான்கு தன்மையிலும் நான்கு சுவைகளை உடையதாகவும் இருக்கும். அச்சுவை நான்குவிதமான நறுமணங்களை வீசும்.

சின்னஞ்சிறு செடி ஒன்று நிறம், மணம், சுவை என அனைத்தையும் விதவிதமாய் வெளிப்படுத்தி இயற்கையின் குதூகலத்தை நிகழ்த்திக்காட்டும். தும்பிகளும் வண்டுகளும் வெடத்தப்பூவைக் கண்டு சற்றே குழப்பமடைகின்றன என்பார்கள். அக்குழப்பத்துக்குக் காரணம் நிறமா, மணமா, சுவையா எனத் தெரியாது. ஆனால், அது ஒரு வியப்புறு தாவரம்.

அதனால்தான் வெடத்தப்பூவைக் காதலர்களின் பூவாக வேளிர்குலம் கருதியது. மனித வாழ்வில் இத்தனை வண்ணங்களும் வாசனைகளும் கொண்ட காலமாக காதல்கொள்ளும் காலமே இருக்கிறது. பறம்பின் காதலர்கள் வெடத்தப்பூவின் அருகில் அமர்ந்தே தங்களின் காதலைப் பரிமாறிக்கொள்கிறார்கள். வெடத்தப்பூவின் அருகில் அமர்ந்திருப்பவர்களை “வெடலைகள்” என்றும் அப்பருவத்தை “வெடலைப்பருவம்” என்றும் பறம்பின் மக்கள் அழைக்கின்றனர்.



மயக்கும் பழச்சாற்றைப் பானையோடு தூக்கிப்போன வெடலைகள் வெடத்தப்பூத் தேடியே அலைந்தனர். உதிரனும் அங்கவையும் எவ்வியூரின் கிழக்குப்பக்கச் சரிவில் வெடத்தப்பூவைக் கண்டு அவ்விடம் அமர்ந்தனர். ``நாம் அப்பக்கம் போகவேண்டாம்” எனச் சொல்லி வடபுறம் சென்ற நீலனும் மயிலாவும், சிற்றோடையின் ஓரம் அச்செடியைக் கண்டறிந்து அமர்ந்தனர்.

வெடத்தப்பூக்கள் சொல்லும் காதல்கதைகள்தாம் எத்தனை எத்தனை. காதல் கணந்தோறும் அழகினைச் சுவைக்கக் கொடுத்துக்கொண்டே இருக்கும் என்பதன் அடையாளம்தான் வெடத்தப்பூக்கள். குறிஞ்சி நிலமே காதல் நிலம்தான். அதிலும் வெடத்தப்பூ குறிஞ்சியின் குறியீடு. நீர்க்குமிழி, கதிரவனின் ஒளிபட்டுப் பலவண்ணங்களைக் குழைத்துக்காட்டுவதைப் போலத்தான் வெடத்தப்பூவும். அது,

இயற்கை தனது எண்ணம்போல் நிறத்தையும் மணத்தையும் சுவையையும் விளையாடிப்பார்க்கும் வண்ணக்குமிழி.

வள்ளியும் முருகனும் வேங்கை மரத்தின் அடிவாரத்தில் அமர்ந்திருந்தபொழுது அருகிருந்த வெடத்தச்செடி அரும்புவிட்டிருந்தது. அரும்பின் நிறம் பச்சை. தேனை நுனிநாக்கில் தொடுவதைப்போன்றது அதன் சுவை. தொட்ட கணம் உடல் முழுவதும் பரவும். இச்சுவையும் அப்படித்தான். மணம் பரவி மூச்சுக்குழலுக்குள் சுழலச்சுழல மயங்கிக் கண்செருகத் தொடங்கும்.

முதலில் அந்த மணம் வள்ளி கூந்தலில் சூடியுள்ள பூவிலிருந்துதான் வருகிறதோ என நினைத்தானாம் முருகன். தோளிலே சாய்ந்திருந்த வள்ளிக்கோ முருகனின் தனித்த மணம் இதுதானோ என்று தோன்றியதாம். வள்ளியின் கூந்தலுக்குள்  அந்நறுமணம் தேட முருகன் முற்பட்டபொழுது, முருகனின் உடலுக்குள் அதனைத் தேடத் தொடங்கினாள் வள்ளி.

காதல் இப்படித்தான் தேடலில் தொடங்கி, தொலைவதில் முடிவடையும். அவர்கள் இருவரும் கண்டடையாமலே தொலைந்துபோயினர். இக்கதையை உதிரன் சொன்ன பொழுது அங்கவை ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாள். ஆனாலும் அது முழுக்கதையல்ல என அவளுக்குத் தோன்றியது.

பச்சை நிறத்துக்கு ஒரு குணம் உண்டு. குறிஞ்சியின் அடிநிறம் பச்சை. நீர் எல்லா நிறமாகவும் மாறும். ஆனாலும் நீரின் நிறம் சருகுவெண்மை. அதுபோலத்தான் குறிஞ்சியின் நிறமும். காதல்கொள்ளத் தொடங்கும் காலத்தில் இளமை செழித்துக்கிடக்கும் பச்சையம்தான் உடலெங்கும் மிதந்துகொண்டிருக்கும்.

அவ்வளவு நேரமும் அவள் சொன்னதைக் கவனித்துக்கொண்டிருந்த உதிரன் கேட்டான், ``காதலின் துளிர்ப்பருவம் பச்சை நிறத்தாலானதா?”

``ஆம்” என்றாள் அங்கவை.

மயிலாவின் மடியினில் தலைவைத்து, சிற்றோடையில் கால்நீட்டிப் படுத்திருந்த நீலன் சொன்னான், ``வள்ளியையும் முருகனையும் ஒருசேர மயக்கியது வெடத்தப்பூ. அதனால்தான் கையில் இருந்த பூண்டினை எவ்வியிடம் கொடுத்தனுப்பிவிட்டனர். அப்பூண்டினைவிடப் பெருமயக்கத்தை வெடத்தப்பூ உருவாக்கியிருக்கும்.” அதனைக் கேட்டுக்கொண்டே நீலனின் தலைமுடியைக் கோதிய மயிலா சொன்னாள்,``நீரில் கரையும் பூண்டினைவிட, காற்றில் கரையும் பூவின் மயக்கம் எதிர்கொள்ள முடியாததாகத்தானே இருக்கும்.”

பதில்கேட்டு இளஞ்சிரிப்பை உதிர்த்தான் நீலன்.

``ஏன் சிரிக்கிறாய்?”

``மடியில் தலைவைத்து மயங்கிக் கிடப்பவனிடம் மயக்கத்தைப்பற்றிப் பேசுகிறாயே என்றுதான்.”

மடியோடு கிடந்தவனைக் கையோடு அள்ளினாள்.

நீலன் புரியாமல் அவளை உற்றுப் பார்த்தபடியிருந்தான்.

சிறிது நேரம் உற்றுப் பார்த்தபடியேயிருந்த மயிலா சொன்னாள், ``மயங்கிய ஒருவனின் கண்களில் இவ்வளவு துடிப்பு இருக்காது. அதுமட்டுமல்ல, மயங்கியவனின் கைகள் இந்த வேலையைச் செய்யாது.”

சட்டெனக் கையை விலக்கியபொழுது சிரிப்பு கொட்டியது. மகிழ்ந்து சிரித்தபடி நீலன் சொன்னான், ``பூவோ, மதுவோ எல்லாம் நினைவை உதிரச்செய்யும் மயக்கங்களைத்தான் உருவாக்கும். காதல் மட்டுந்தான் மயங்க மயங்க நினைவைச் செழிக்கச் செய்யும்.”

எவ்வளவு மயங்கினாலும் உணர்வுப் புலன்கள் மயங்குவதில்லை என்பதை நீலன் சொல்லிக்கொண்டிருந்தபொழுது, மயங்காத மயக்கங்கொண்டிருந்த மயிலா கேட்டாள், ``மயங்கினாலும் முடியாத விளையாட்டா இது?”

``ஆம், மன அளவில் இது முடிவுறாதது. நீர் வற்றினாலும் ஓடையின் குணம் மாறாதல்லவா? காதலும் அப்படித்தான்.”

சொல்லும்பொழுது அவள் உடல் அவன்மீது சரிந்து கீழிறங்கியது. அவள் சொன்னாள், ``வெள்ளம் ஓடினாலும் ஓடையின் குணம் மாறாதுதானே?”

இதற்கு மேல் இருவராலும் பேசிக்கொண்டிருக்க முடியவில்லை, சிற்றோடையில் பெருவெள்ளம் ஓடியது.

**“கா**தலின் நிறம் பச்சையா?” எனக் கேட்டான் உதிரன்.

``துளிரின் நிறம் பச்சை. செழிப்பின் நிறம் பச்சை. இயற்கையின் நிறம் பச்சை. எனவே காதலின் நிறமும் தொடக்கத்தில் பச்சைதான். பின்னர்தான் வெடத்தப்பூப்போல அதுவும் மாறுகிறது” என்றாள் அங்கவை. ``செடிகொடிகளைப்போல மனிதனும் நிறம் மாறுவானா?”

அங்கவை சொன்னாள், ``மனித உடலுக்கு நிறம்மாறத் தெரியாது. ஆனால், நிறத்தைச் சுரக்கத் தெரியும்.”

விடை இன்னும் வியப்பைக் கொடுத்தது, ஆனாலும் அவனது அறிவுக்கு எட்டாததாக அது இருந்தது. ``கபிலரின் மாணவியாய்க் காதலைச் சொல்லித்தர முயலாதே, காதலியாய் உடனிணைந்து கண்டறிய முயற்சி செய்.”

அவன் சொல்வது ‘சரி’தான் என்று தோன்றியது. என்ன செய்யலாம் என்று சிந்தித்தாள்.

உதிரனின் ஆர்வம் சற்றே வேகங்கொண்டிருந்தது. ``மனித உடலுக்குள் வண்ணங்கள் சுரப்பதை அறிய வழியுண்டா?’’

``எத்தனையோ வழிகளுண்டு, ஒவ்வொரு உடலுக்குத்தகுந்து அது மாறும், மலரும்.”

உதிரனின் முகத்தில் வியப்பே தெரிந்தது. எப்படி அவனுக்கு விளங்கவைப்பது எனச் சிந்தித்த அங்கவை, சற்றே நெருங்கி உதிரனின் கன்னத்தை இரு கைகளாலும் அள்ளிப்பிடித்தாள். அவளது உள்ளங்கையின் குளுமை உச்சந்தலைக்கு ஏறியது.

சிந்தனையின் வழியே அறிய எவ்வளவு முயன்றாலும் பிடிபடாத காதல், சின்னத் தொடுதலில் எல்லாவற்றையும் அறியச் செய்துவிடுகிறது. அங்கவை, உதிரனைத் தொடுதல் ஒன்றும் புதிதல்ல; ஆனால், காதலின் ஆழம் காணும் உரையாடலின் நடுவே உதிரனை அள்ளியெடுக்கும் பொழுது அவன் உடலும் அறிவும் ஒன்றாய்க் கிளர்ந்தெழுந்தன. உடல்முழுவதும் பூத்து அடங்கியது உதிரனுக்கு.

கைகளில் ஏந்திய உதிரனின் முகத்தை உற்றுப்பார்த்தபடி அங்கவை சொன்னாள், “காதல் மலரத் தொடங்குங்கணம் உன் கண்களின் நரம்புகளில் பச்சைநிறம் ஓடி மறைகிறது.”

இப்படியொரு விளக்கத்தை எதிர்பார்க்க வில்லை. காதலின் தொடக்க நிறம் பச்சை என்று அதனால்தான் சொன்னாளா என்று எண்ணியபடி அங்கவையின் கன்னம் ஏந்தத் தன் கைகளை அருகில் கொண்டுசென்றான்.




உதிரனின் கன்னத்திலிருந்து கைவிலக்கி, தன்னைநோக்கி வரும் அவனுடைய இரு கைகளையும் இறுகப்பற்றினாள் அங்கவை. உதிரனுக்குப் புரியவில்லை.

பிடித்த கைகளின் முனையில் சிறியதாய் உதடுகுவித்து முத்தங்கொடுத்தாள். இருவருக்குமான நெருக்கத்துக்கிடையில் காற்று புகமுடியாமல் தவித்தது. அதனைவிட அதிகத் தவிப்போடு அவள்

சொன்னாள், “காமம் நுழையும் கணம் உனது விரல்களின் அடிநகம் நீலங்கொண்டு கறுக்கிறது.”

மயக்கத்தில் மூழ்கிய உதிரன் காதல் விலக்கி, சட்டெனத் தன் விரல்களின் அடிநகம் பார்க்கத் தோன்றியது. ஆனால், அவளோ அவற்றைத் தனது மார்போடு அணைத்துப் பிடித்தாள். உதிரனின் கண்கள் சுழன்று மூழ்கின.

நாணங்கொள்ளச் செய்யும்படி அவனை உற்றுப்பார்த்த அங்கவை சொன்னாள், “காமம் தழைக்கும் இக்கணம் உனது முகத்தில் மஞ்சள் பூத்துக் கலைகிறது.”

மீண்டும் அவன் தன் தரைக்கு இறங்கினான். அவளது சொல்லுக்கும் செயலுக்கும் நடுவில் உயிர் உழன்றது. காதலை இணைந்து பருகலாம். ஆனால், இணைந்து பயிலக்கூடாது என அவனுக்குத் தோன்றியபொழுது அங்கவை தொடர்ந்தாள், “காமம் பொங்கிப் பூக்கும் கணம்…” சொல்லி நிறுத்தினாள்.

கிறங்கிய உதிரனுக்கு மூச்சு நிற்பதுபோல் இருந்தது. சற்றே உயிர்பெற்று, மயங்கிய குரலில் கேட்டான் “சொல், என்ன நிறம்?”

சற்றே விட்டு விலகி, அவனது கன்னத்தில் ஓர் அடி அடித்துவிட்டுச் சொன்னாள், “பார்க்காததை எப்படியடா சொல்ல முடியும்?”

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-56

கபிலர் மயக்கம் தெளிந்து எழுந்தபொழுது உதிரன் குடிலில் இல்லை. எப்பொழுதும் உடனிருக்கும் உதிரன் எங்கே போனான் என்று சிந்தித்தபடியே புறப்பட ஆயத்தமானார். பொழுது நண்பகலைக் கடந்திருந்தது. பாரியின் மாளிகையில் இருந்துதான் அவருக்கு உணவு வருகிறது. செய்திசொல்லி அனுப்பும் உதிரன் எங்கே போனான் என்பது தெரியாததால் அவ்வழி வந்த வீரனிடம் சொல்லி அனுப்பினார். சிறிதுநேரத்தில் உணவு வந்தது. உண்டு முடித்தார். உதிரன் இதுவரை தன்னிடம் சொல்லாமல் போனதில்லையே என எண்ணியபடியே கூத்துக்களம் நோக்கிப் புறப்பட்டார்.





கூத்துக்களத்தின் பாட்டாப்பிறையில் எந்நேரமும் பெரியவர்கள் உட்கார்ந்து கதைபேசிக்கொண்டிருப்பார்கள். கதையென்றால் அவை வெறுங்கதைகள் அல்ல; எல்லாம் கண்டுபிடிப்புகள். மின்னல் ஒளியில் மலரும் மலர் ஒன்று உள்ளது என்பதை அவர்கள் கபிலரிடம் சொன்னபொழுது அவரால் அதனைக் கற்பனை செய்யவே முடியவில்லை. அவர்கள் சொன்னார்கள், “மின்னல் ஒளிக்குத் தாழம்பூ மலரும்; எப்பொழுதும் அடிவயிற்றில் தொங்கும் குட்டியைக் கைவிடாத குரங்குகள் இடியோசை கேட்ட கணம் கைவிடும்” என்று.

குறிஞ்சியின் மக்கள் இயற்கையை அறிந்துள்ளவிதம் கணந்தோறும் வியப்பை உருவாக்கக் கூடியது. அவர்கள் புல்பூண்டு, யானை, புலி, பாறை, வேர் என எதைப்பற்றிப் பேசினாலும் எல்லாம் தலைமுறை தலைமுறையாய்ச் சேகரித்த அறிவின் சேர்மானமாய் இருக்கிறதே என வியந்தபடி உட்கார்ந்திருந்தார் கபிலர். நேற்றைய மயக்கமும் நான்கு நாள் கிறக்கமும் தெளியும்முன் பாட்டாப்பிறை பெருசுகள் மீண்டும் கிறக்கி மயக்கினர்.

“எங்கே தேக்கனைக் காணவில்லை?” எனக் கேட்டார் கபிலர்.

“பாழிநகர் வரை போயுள்ளான்; இன்னும் சிறிதுநேரத்தில் வந்துவிடுவான்” என்று சொன்னார் தேக்கனின் வயதொத்த பெரியவர். உடனிருந்த இன்னொருவர் சொன்னார், “வழக்கமாக மேல்மாடத்தில்தானே சந்திப்பீர்கள். நீங்கள் அங்கே போங்கள். அவன் வந்ததும் அனுப்பிவைக்கிறோம்.”

பதிலைக்கேட்ட கபிலர் மறுத்துத் தலையாட்டியபடியே கூறினார், “இல்லை, அங்கே போனால் குவளையைக் கையிலெடுக்காமல் பேச முடிவதில்லை. கையிலெடுத்தால் என்ன பேசினோம் என்பது நினைவில் தங்குவதில்லை. எனவே, அவரிடம் கேட்க வேண்டியதை இங்கு கேட்டுவிட்டுத்தான் மேல்மாடம் போவது என்ற முடிவோடு வந்துள்ளேன்” என்றார்.



பெரியவர்களுக்கு அவர் சொல்வது சரியென்றுதான் பட்டது. “சரி அவரிடம் என்ன கேட்கப்போகிறீர்கள்?”

“செம்மாஞ்சேரலுடன் நடந்த போரின் முடிவு மட்டுந்தான் எனக்கு நினைவில் இருக்கிறது. அப்போர் மூன்று நாள்கள் நடந்ததாகச் சொன்னார். முதலிரண்டு நாள்கள் என்ன நடந்தது என்று தெரியவேண்டும்.”

“அது தேக்கனுக்கே தெரியாதே. பின்னெப்படி உங்களுக்குச் சொல்லுவான்?” என்றார் பெரியவர்.

அருகில் இருந்தவர் சொன்னார், “அதோ வந்துகொண்டிருக்கிறாரே வாரிக்கையன். அவர்தான் அந்தப் போரை, பாரியோடு சேர்ந்து வழிநடத்தியவர். அவரிடம் கேளுங்கள் சொல்வார்” என்றார்.

சிறுதொலைவில் நடந்து வந்துகொண்டிருந்தார் வாரிக்கையன். தேக்கனைவிட வயதானவர். ஆனால், உடலமைப்பைவைத்து வயதினைக் கண்டறிந்துவிட முடிவதில்லை. கபிலர் பறம்புக்கு வந்த புதிதில் அது பெருங்குழப்பத்தை உருவாக்கியது. புரிந்துகொள்வது கடினமாகவும் இருந்தது. வேட்டூர் பழையனைவிட வயதில் மூத்தவர் இவர் என்று அறியவந்தபொழுது கபிலரால் நம்பமுடியவில்லை. சமதளமனிதர் களுக்கும் மலைமனிதர்களுக்கும் வயதானதைக் காட்டும் குறியீடாக இருப்பது நரைமுடி மட்டுமே. அதனைவைத்துதான் பொதுவான தன்மையோடு வயது முதிர்ந்தவர் எனத் துணியலாம். ஆனால், வயதின் காரணமாகப் பல் உதிர்ந்து பொக்கைவாய் ஆவதென்பது மலைமக்களிடம் இல்லாத ஒன்றாய் உள்ளது. கிழத்தன்மையும் பல்லுதிர்வதும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக சமதளத்தில் பார்க்கப்படுகின்றன. ஆனால், இங்கு அப்படியல்ல.

சிறுவயதிலிருந்தே காய்கனிகளையும் மரப்பட்டைகளையும் கடித்திழுப்பது அன்றாட நடவடிக்கையாக இருப்பதால் முன்பற்கள் மிகக்கூர்மையாகவும் பலருக்கு ஒழுங்கற்ற தோற்றத்துடனும் இருக்கின்றன என்பது மட்டுமே கபிலரின் மனப்பதிவாக இருந்தது. ஆனால், பெரும்பாலோருக்குப் பற்கள் உதிர்வதில்லை. அப்படியே உதிர்ந்தாலும் ஒன்றிரண்டுதான் உதிர்கின்றனவே தவிர அத்தனை பற்களும் இல்லாத பொக்கைவாய் மனிதர்களைப் பறம்பில் இன்றுவரை கண்டதில்லை.

வாரிக்கையனை முதலில் பார்த்தபொழுது, அவர் தேக்கனைவிடவும் வேட்டூர் பழையனை விடவும் வயதில் மூத்தவர் என்பதைக் கபிலரால் நம்ப முடியாததற்குக் காரணம், தென்னங்காயைப் பல்லால் கடித்திழுத்தபடியே அவர் கபிலரோடு பேசிக்கொண்டிருந்தார் என்பதுதான்.

வாரிக்கையன் தளர்ந்த நடையில் மெதுவாக வந்து பாட்டாப்பிறையில் உட்கார்ந்தார். சின்னதாய் பெருமூச்சு வாங்கியது. சிறிதுநேரங்கழித்துப் பேச்சைத் தொடங்கிய கபிலர், செம்மாஞ்சேரலுடன் நடந்த போரைப்பற்றிய விவரத்தைக் கேட்டார்.

வாரிக்கையன் கால்மடக்கி உட்கார்ந்தார். “அது போரே அல்ல” என்றார்.

“மூன்றுநாள்கள் போர் நடந்ததாகத்தானே சொன்னார்கள்” என்றார் கபிலர்.

“நாம் போர் நடத்தியிருந்தால் மூன்று பொழுதுக்குள் அது முடிந்திருக்க வேண்டும். பறம்பின் தன்மை தெரியாமல் செம்மாஞ்சேரல் மொத்தப்படையையும் கொண்டுவந்து கழுவாரிக்காட்டிலே நிறுத்திவிட்டான். நம்மில் ஒரு வீரன்கூட அவனது கண்ணிற்படாமல் அவனது மொத்தப்படையையும் அழித்திருக்க முடியும். அவ்விட அமைப்பு அப்படி” என்றார்.

“பின்னர் ஏன் அழிக்கவில்லை? போர் ஏன் மூன்றுநாள்கள் நீடித்தது?”



“அப்பொழுதுதான் நாங்கள் முதன்முறையாக, திறல்கொண்ட குதிரைப்படையைக் கண்ணிற் பார்த்தோம்.”

யவனர்களுக்கு மிளகினை ஏற்றுமதி செய்து அதற்குக் கைம்மாறாக வலிமைமிகு குதிரைகளை வாங்கியது சேரர்கள்தாம். அதன் பின்தான் மற்ற இரு பேரரசுகளும் குதிரைகளை இறக்குமதி செய்யத் தொடங்கின என்பது கபிலருக்குத் தெரியும். ஆனால், பறம்பின் மக்கள் முதன்முறையாக செம்மாஞ்சேரனுடனான போரின்பொழுதுதான் குதிரைப்படையைப் பார்த்துள்ளனர் என்பது புதிய செய்தியாக இருந்தது.

குதிரைப்படையைப் பார்த்ததும் பாரி தாக்கும் திட்டத்தைக் கைவிட்டுவிட்டான். முன்களத்தில் நின்ற

எனக்கு அவன் முடிவினை மாற்றியது தெரியாது. அவனிடமிருந்து குறிப்புச்சொல் எதுவும் எனக்கு வரவில்லை. நான் பாறையின் உச்சிமறைப்புகளில் சிறுபடையோடு நின்றுகொண்டிருந்தேன். பாரியிடமிருந்து எவ்வித ஓசையும் கேட்கவில்லை. செம்மாஞ்சேரலின் படை எங்களைக் கடந்து முன்னுக்குப் போய்க்கொண்டிருந்தது. நாங்கள் பாறையின் மேல் மறைப்புகளில் நின்றிருந்தோம்.

பாரி மொத்தப்படையையும் பின்னுக்கு நகர்த்தி உள்காடுகளுக்குள் போய்விட்டான். செம்மாஞ்சேரலும் தொடர்ந்து போய் க்கொண்டிருந்தான். அவனது குதிரைப்படை மிகவலிமையானது, எனவேதான் அவன் துணிந்து காடுகளுக்குள் நுழைந்துகொண்டிருந்தான்.

“குதிரைகள் ஒன்றுக்குக்கூட சேதாரம் ஆகக்கூடாது, அனைத்தும் பறம்புக்கு வேண்டும்” என்று கூறிவிட்டான் பாரி. திட்டத்தை அதற்குத் தகுந்தாற்போல் மற்றவர்கள் மாற்றிவிட்டார்கள். பாரி ஏன் படையைப் பின்னால் நகர்த்திப் போகிறான் என்று புரியாத குழப்பத்தில் நான் இருந்தேன்.


கழுவாரிக்காடு இப்புதிய திட்டத்துக்கு ஏற்ற இடமல்ல. குதிரையின் மீதுள்ள வீரர்களைத் தாக்கிக் குதிரையைக் கைப்பற்றுவதற்குப் பொருத்தமான இடம், இடப்புறம் இருந்த சருகுமலைக் குன்றுதான். எனவே செம்மாஞ்சேரலின் படையை அப்பக்கம் வரவைக்க வேண்டும் எனப் பாரி சிந்தித்துள்ளான்.

இது எதுவும் எங்களுக்குத் தெரியாது. நாங்கள் பாறையின் உச்சி மறைப்பிலே காத்திருந்தோம். திடீரெனக் கூவல்குடியினரின் ஓசை கேட்கத் தொடங்கியது. அது பின்புறம் ஓடுவதற்கான குறிப்புச்சொல்லும் ஓசை. இந்த ஓசை ஏன் கேட்கிறது என்று சிறு தயக்கம் ஏற்பட்டது. ஆனால், போர்க்களத்தில் தயங்குவதற்கெல்லாம் இடமில்லை. சரியென, பாறையின் உச்சியிலிருந்து கீழிறங்கிப் பின்புறம் செல்லத் தொடங்கியபொழுதுதான் செம்மாஞ்சேரலின் வீரர்கள் எங்களைப் பார்த்தனர்.

நாங்கள் பின்புறமாகப் போவது தெரிந்ததும் குதிரைப்படையின் ஒரு பிரிவினை எங்களை நோக்கி ஏவினான் செம்மாஞ்சேரல். குதிரைகள் பாய்ந்து வந்தன. அப்பொழுதுதான் தெரிந்தது குதிரை ஓட்டம் என்றால் என்னவென்று. நாங்கள் உயிர்பிழைப்பதே பெரும்பாடாகி விட்டது. எப்பக்கம் திரும்பி ஓடினாலும் பாய்ந்து வந்துகொண்டிருந்தனர் சேர வீரர்கள். ஆளுயர ஈட்டியோடு நான்குகால் பாய்ச்சலில் வரும் வீரனிடம் எவ்வளவு நேரம் ஓடித்தப்பிக்க? பாறையின் மேல் இருந்திருந்தால் அவர்கள் அனைவரையும் ஒருபொழுதில் அழித்திருப்பேன். ஆனால், தந்தரையில் என்ன செய்யமுடியும்?
என்னிடமிருந்தவர்கள் மிகக்குறைந்த வீரர்களே. விரட்டிவந்தவர்கள் நான்குமடங்கு அதிக வீரர்கள். நாங்கள் யாரும் தப்பிப்பிழைக்கப் போவதில்லை என்றுதான் தோன்றியது. பாறையின் உச்சியில் பாதுகாப்பாய்த்தானே இருந்தோம். ஏன் கீழே இறங்கி ஓடவிட்டான் பாரி என்ற குழப்பம் வேறு மனதுக்குள் ஓடிக்கொண்டிருந்தது. குதிரை வீரர்கள் மிக அருகில் வந்துவிட்டார்கள்.

அப்பொழுதுதான் சருகுமலையின் இடப்புறப் பிளவிலிருந்து கூவல்குடியினரின் குறிப்புச்சொல் ஓசை கேட்டது. அப்பக்கம் வரச்சொல்வது அறிந்து அதனை நோக்கி முடிந்தவரை வேகங்கொண்டு ஓடினோம். பிளவினை உயிரோடு தாண்டமுடியும் என்ற நம்பிக்கை அடுத்தடுத்த அடியில் குறைந்துகொண்டே வந்தது.

எண்ணிப்பார்க்க முடியாத வேகத்தில் குதிரைகள் வந்துகொண்டிருந்தன. அவை அருகில் வந்துவிட்டதை உணர்ந்தபொழுது நான் உன்னித் தவ்வினேன். அவை என்னைக் கடந்து தாவிப்பாய்ந்தன. கணநேரம் எனக்கு எதுவும் புரியவில்லை. சற்று நேரங்கழித்துதான் புரிந்தது, பாய்ந்து செல்லும் குதிரைகளின் மீது வீரர்கள் யாருமில்லை.



கடவின் இருபுறமிருந்தும் பறம்புவீரர்கள் குதிரையின் மீது அமர்ந்திருந்த எதிரிகளை வீழ்த்தி முடித்தனர். சிறிய காயம்கூட இன்றி குதிரைகள் காட்டுக்குள் ஓடிக்கொண்டிருந்தன. இரண்டுநாள்களும் இப்படி வெவ்வேறு உத்திகளைப் பயன்படுத்திப் பெரும்பகுதிக் குதிரைகளைக் கைப்பற்றினோம்.

இனி குதிரைகளைக் கைப்பற்ற முடியாது என்ற நிலையில்தான் தாக்குதல் போரினை நடத்தினான் பாரி. மூன்றாம் நாள் உச்சிப்பொழுதில் தொடங்கிய போர் மாலைக்குள் முடிவுக்கு வந்தது" என்றார் வாரிக்கையன்.

இத்தனை குதிரைகள் பறம்பில் இருப்பது எப்படி என்பது பறம்புக்கு வந்த நாளிலிருந்து கபிலரின் மனதிலிருந்த கேள்விதான். எதிர்பாராத நேரத்தில் விடை கிடைத்தது. வாரிக்கையன் செம்மாஞ்சேரலுடனான போரினைச் சொல்லி முடித்ததும் அருகிருந்த பெரியவர், கைப்பற்றிய குதிரைகளைக் காட்டின்தன்மைக்கு ஏற்ப எப்படியெல்லாம் பயிற்றுவித்தோம் என்பதையும், இத்தனை ஆண்டுகளில் குதிரைகளின் எண்ணிக்கை பலமடங்கு அதிகரித்ததற்கான காரணத்தையும் விரிவாக விளக்கினார்.

எதிர்பாராத பல செய்திகள் கபிலருக்குக் கிடைத்தன. அவர் வாரிக்கையன் சொல்வதை முழுமையாகக் கேட்டு முடித்தார். நடந்ததைச் சொல்லி முடித்தபின் சிறிதுநேரத்தில் புதிய கேள்வி ஒன்று மேலெழுந்து வந்தது. "தேக்கன் ஏன் அப்போரில் கலந்துகொள்ளவில்லை?"

யாரும் இதனை எதிர்பார்க்கவில்லை. கபிலர் போரை அறிந்துகொள்ளும் ஆர்வத்தில்தான் கேட்கிறார் என்றுதான் விளக்கமாகக் கூறினார்கள். ஆனால், சொல்லப்பட்ட பதிலுக்குள்ளிருந்து தாங்கள் சந்திக்க விரும்பாத ஒரு கேள்வி மேலெழும் என்று யாரும் நினைக்கவில்லை.

அனைவரும் சற்றே அமைதியாயினர். கபிலருக்குக் காரணம் புரியவில்லை. வாரிக்கையன் சொல்லட்டும் என்று மற்றவர்கள் காத்திருக்கிறார்களோ என்றுதான் முதலில் நினைத்தார். ஆனால், வாரிக்கையன் எதுவும் சொல்வதுபோல் இல்லை. அமைதியே நீடித்தது.

``உங்களின் வலதுகால் நடுவிரல் பிறக்கும்போதே இப்படித்தான் சிறுத்து மடங்கி இருந்ததா?" எனக் கேட்டார் எதிரில் இருந்த பெரியவர்.

அனைவரும் இந்த  உண்மையைப் பகிர்ந்துகொள்ள மறுக்கின்றனர். அதனாலேயே வேறு ஒன்றைப்பற்றிப் பேச விருப்பப்பட்டு எனது விரலைப் பற்றுகின்றனர் எனக் கபிலருக்குத் தெரிந்தது. "விரலைப்பற்றிப் பின்னர் பேசுவோம், தேக்கன் ஏன் போரிலே ஈடுபடவில்லை?" என மீண்டும் கேட்டார்.

விரல்பற்றி விளக்கங்கேட்ட பெரியவர்தான் சொன்னார், "பூண்டுப்பானம் கிடைத்து ஊரே மகிழ்ந்திருக்கும்பொழுது அதனை நினைவுபடுத்த வேண்டாமே என்றுதான்..." சொல்லி வார்த்தையை முடிக்காமல் இழுத்தார்.

எல்லோர் மனதையும் கவலைகொள்ளச் செய்யும் கேள்வியாக இது இருக்கும் எனக் கபிலர் எதிர்பார்க்கவில்லை. அப்படியென்றால் வேண்டாம் என்று அவர் முடிவுக்குப் போகும்பொழுது வாரிக்கையன் தொடங்கினார், "காட்டை நாம் ஒருபோதும் அறிந்துகொள்ள முடியாது."

இவ்விடம் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை கபிலர்.

"இந்த உண்மை நமக்குத்தெரியும். ஆனாலும், அவ்வப்போது இயற்கை நமக்குத் தாங்கமுடியாத துயரத்தைக் கொடுத்து இவ்வுண்மையை நினைவூட்டிக்கொண்டே இருக்கிறது" என்றார் வாரிக்கையன். கபிலர் சற்றே அதிர்ந்தபடி அவர் சொல்வதைக் கேட்டார். "தேக்கனின் மூன்று மகன்களும் உயிரோடு இருந்தனர்" என்று தொடங்கினார் வாரிக்கையன். தேக்கனுக்கு மகன்கள் இருந்ததையே கேள்விப்பட்டிராத கபிலருக்கு, வாரிக்கையன் கூறிய சொற்கள் நெஞ்சில் யானை மிதித்ததைப்போல் இருந்தது.

"மூத்தவன் இளவயதுக்காரன். மற்ற இருவரும் சிறுவர்கள். வழக்கம்போல் சிறுவர்கள் எவ்வியூரைச் சுற்றி எங்கும் விளையாடிக்கொண்டு திரிவார்கள். விளையாட்டில் வழிமாறிச் சென்றார்களா அல்லது தெரிந்தே சற்று உள்ளே போய் விளையாடுவோம் என்று போனார்களா என்பது விளங்கவில்லை.

சிறுவர்கள் இருவரும் அடுத்த குன்றைக் கடந்து கீழ்த்திசையில் இறங்கியிருக்கிறார்கள். தாகமெடுத்திருக்கிறது. நீரோடையில் நீர் அருந்திவிட்டு, கரையேறிச் சிறுதொலைவு போயிருக்கிறார்கள். நடுத்தரமான மரம் ஒன்றின் கீழ் இளைப்பாற அமர்ந்திருக்கிறார்கள்.

பொழுது மாலையைக் கடந்தும் அவர்கள் ஊர் திரும்பவில்லை. நேரமாக ஆக எங்களுக்கு ஐயம் கூடத் தொடங்கியது. இரவு, பந்தமேந்தி ஆளுக்கொரு புறம் தேடத் தொடங்கினோம். பூச்சிகள், விலங்குகள்,

பறவைகள், நாகங்கள் என எத்தனையோ வகையில் குழந்தைகளுக்கு ஆபத்து வரலாம். ஆனாலும், இருவர் சேர்ந்து போனதால் எப்படியும் வந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை இருந்தது.



இரவு முழுவதும் தேடியும் அவர்களைக் கண்டறிய முடியவில்லை. மறுநாள் காலை மீண்டும் பல குழுக்களாகப் பிரிந்து காடுகளுக்குள் போனோம். பொழுதுசொல்லிப் புறப்பட்டுப் போனோம். தேக்கன் ஒரு குழுவில் போனான். நான் ஒரு குழுவில் போனேன். பாரி ஒரு பக்கம் போனான். முடியன் ஒரு குழுவில் போனான். மறுநாள் நள்ளிரவு சொல்லிய பொழுதுக்கு எல்லாக்குழுக்களும் எவ்வியூர் திரும்பின. யாராலும் சிறுவர்களைக் கண்டறிய முடியவில்லை.

என்ன செய்யலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்தபொழுதுதான், தேக்கனின் மூத்தமகன் ஊர்திரும்பவில்லை என்ற இன்னோர் உண்மை தெரியவந்தது. அவன் கீழ்த்திசை போன குழுவில் சென்றான். அப் பகுதியில்தான் ஏதோ ஆபத்து இருக்கிறது என்ற முடிவுக்கு வந்தோம். அனைவரும் அப்பகுதிக்குப் போகலாம் எனப் புறப்பட்ட பொழுதுதான் செம்மாஞ்சேரலின் படை புறப்பட்ட செய்தி வந்துசேர்ந்தது.

வேறு வழியில்லாமல் எங்கள் எல்லோரையும் போருக்கு அனுப்பிவைத்துவிட்டு, தேக்கன் மட்டும் சில வீரர்களோடு அத்திசை நோக்கிப் போனான். இரண்டு நாள்கள் தேடியிருக்கின்றனர். எதுவும் அறியமுடியவில்லை. குகைகள், பிளவுகள், பள்ளங்கள், பெருமரப் பொடவுகள், அடர்புதர்கள் என எல்லா இடங்களிலும் தேடியுள்ளனர். அவர்களுக்கு எந்தத் தடயமும் கிடைக்கவில்லை.

நாளாக ஆக தேக்கனுக்கு நம்பிக்கை கூடத் தொடங்கியது. ஒருவேளை அவர்கள் இறந்திருப்பார்களேயானால் அந்த உடல்களைத் தின்னக் கழுகுகளும் இன்னபிற பறவைகளும் வட்டமிடத் தொடங்கியிருக்க வேண்டும். சிறுவர்கள் இருவரும் ஒரே நாளில்தான் தொலைந்துள்ளனர். எனவே இந்த மூன்று குன்றுகளைத் தாண்டி அவர்கள் போயிருக்க முடியாது. இப்பகுதியில் பறக்கும் பறவைகளைவைத்து நம்மால் எளிதில் கண்டறிந்துவிட முடியும். ஆனால், இங்கே ஊனுண்ணும் பறவை எதுவும் தென்படவில்லை. எனவே அவர்கள் இறக்கவில்லை; ஏதோ ஆபத்தில் சிக்கியுள்ளனர் என்ற முடிவுக்குப் போனான்.

என்ன ஆபத்து என்பதை ஊகிக்க முடியவில்லை. இம்மூன்று குன்றுகளில் பெரும்பாறைப் பிளவுகளோ, ஆற்றுப்பள்ளங்களோ எதுவுமில்லை. வேறெங்கு சிக்கியிருப்பார்கள் எனத் தெரியாமல் திகைத்தபொழுதுதான்.  நடுத்தரமான மரம் ஒன்றின் அடிவாரத்தில் மூவரும் கிடப்பதை வீரர்கள் பார்த்துள்ளனர். தொலைவில் அதனைப் பார்த்த வுடன் ஓசையெழுப்பி தேக்கனுக்குக் கூறியுள்ளனர்...”

கதையைச் சொல்லிக்கொண்டிருந்த வாரிக்கையன் வார்த்தைகளைத் தொடராமல் நிறுத்தினார். கேட்டுக்கொண்டிருந்த கபிலர் மூர்ச்சையானதுபோல் இருந்தார்.  “தேக்கன்தான் காடறிந்த பேராசான் என்பதைப் பறம்பே உணர்ந்த கணம் அதுதான்” என்றார்.

கபிலருக்கு விளங்கவில்லை.

சற்று மூச்சுவாங்கியபடி வாரிக்கையன் தொடர்ந்தார், “மகன்கள் மூவரும் ஒரு மர அடிவாரத்தில் கிடப்பதைப் பார்த்தவுடன் யாராக இருந்தாலும் ஓடிப்போய்த் தூக்கியிருப்போம். ஆனால், தொலைவிலிருந்து பார்த்த கணமே தேக்கன் கொடுத்த முதல் குரல், ‘யாரும் அருகில் போகாதே’ என்பதுதான். வீரர்கள் அப்படி அப்படியே நின்றுள்ளனர்.

தேக்கன் மிகத்தள்ளி நின்று அம்மரத்தையே பார்த்துள்ளான். காற்றில் சற்றே வீச்சம் ஏறியிருந்தது. அவர்கள் இறந்துவிட்டனர் என்பதை முடிவுசெய்துள்ளான். இறந்தவர்களின் உடலைக் காட்டுயிரினங்கள் பொழுதுக்குள் இல்லாமல் செய்துவிடும். ஆனால், இவ்வுடல்களை எதுவும் ஒன்றும் செய்யவில்லையே, ஏன்?


தந்தை என்பதை மறந்து மறுகணமே தேக்கனாய் நின்றுள்ளான். கண்ணீர் மேலேற இடந்தராமல் காரணங்களையே சிந்தித்துள்ளான். அதனையும் மீறிச் சில வீரர்கள் அருகிற்செல்ல முனைந்தபொழுது கடுங்கோபத்தோடு தடுத்துள்ளான். தேக்கன் மட்டுமன்று, எவ்வியூரில் இருக்கும் யாரும் நம்பமுடியாத உண்மை ஒன்று வெளிவரத் தொடங்கியது.

அங்கு நின்றிருந்தது ஆட்கொல்லி மரம். பலா இலைபோல விரிந்த இலையுடையது. அதன் முனைமுழுவதும் சுனைசுனையாய் இருக்கும். மெல்லிய முள்ளினைப் போன்ற அச்சுனை காற்றிலே உதிர்ந்து கொண்டே யிருக்கும். யாராவது அருகில்போனால் அச்சுனை உடலிலே படும். பட்டவுடன் அரிப்பெடுக்கும். நாம் கையை வைத்துத் தேய்ப்போம். தேய்த்தவுடன் அது உள்ளே போய்க் குருதியில் கலக்கும். அந்தச் சுனையின் நஞ்சு கொடுமையிலும் கொடுமையானது. கணநேரத்தில் மூர்ச்சையாகும்.

அதன் கிளையில் எந்தவொரு பறவையும் அமராது. தப்பித்தவறி ஏதாவதொரு பறவை அமர்ந்தால், அமர்ந்த கணமே செத்து விழுந்துவிடும். உற்றுப்பார்த்தால்தான் அதன் எலும்புகள் இலைகளுக்கு இடையே சிக்கியிருப்பது தெரியும். இக்கொடிய மரம் பறம்பில் எங்கெங்கு இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவோம். சிறுவயதிலிருந்தே அவ்விடத்தைச் சொல்லியே குழந்தைகளை வளர்க்கிறோம். ஆனால், எங்கள் யாராலும் அறிய முடியாத உண்மை என்னவென்றால், எவ்வியூரின் மிக அருகில், இரண்டாம் குன்றில் ஆட்கொல்லிமரமொன்று இவ்வளவு பெரிதாக வளர்ந்திருக்கிறது என்பதுதான்.

பறவைகள் எதுவும் இம்மரத்தில் தங்குவதில்லை என்பதால் இதன் விதைகள் எளிதில் பரவுவதில்லை. ஏற்கெனவே இருக்கும் மரத்தைச் சுற்றித்தான் மற்றொரு மரம் முளைக்கத் தொடங்கும். பறம்புமலையில் எட்டு இடங்களில் ஆட்கொல்லி மரங்கள் உண்டு. ஆனால், எவ்விதத் தொடர்புமில்லாமல் தனித்த மரமொன்று இவ்விடம் எப்படி முளைத்தது என்பது இன்றுவரை எங்களுக்குத் தெரியவில்லை. அதன் ஒற்றை விதை இவ்விடம் எப்படி வந்துசேர்ந்தது என்பது பெரும் வினா. நீரோட்டப்பாதையல்ல இது. எனவே நீர் அடித்துவந்திருக்க வாய்ப்பில்லை. ஏதோ ஒரு விலங்கோ பறவையோ அதன் கனியை உண்ணக்கூடியதாக இருக்க வேண்டும். அதனால்தான் அதன் விதை இவ்விடம் வந்திருக்க வேண்டும். இவையெல்லாம் தேக்கன் தொடர்ந்து எங்களிடம்

சொல்லியது. அவன் மரணத்தின் துயரை மரத்தை வெல்லும் அறிவாக மாற்ற முயன்றுகொண்டிருந்தான்.”



வாரிக்கையன் இறுதிப்பகுதியை ஏன் வேகவேகமாகச் சொன்னார் என்பது கபிலருக்கு இப்பொழுதுதான் தெரிந்தது. பாட்டாப்பிறை நோக்கி தேக்கன் வந்துகொண்டிருந்தார். இயல்பாய் ஏதோவொன்றைப்பற்றிப் பேசிக்கொண்டிருப் பதைப்போலக் காட்டிக் கொள்ள, பெரியவர்கள் முயற்சி செய்துகொண்டிருந்தனர். வேகமாக வந்த தேக்கன் பாட்டாப்பிறையில் ஏறி அமர்ந்தார்.

கலங்கிப்போயிருந்த கபிலர் அகத்தையும் முகத்தையும் மாற்றப் பெரிதும் முயன்றார். தேக்கனிடம் இதுவரை கேட்காத கேள்வியைக் கேட்டு, பேச்சினை வேறுபக்கம் கொண்டுசெல்ல வேண்டும் என்று தோன்றியது. அமைதி நீடிப்பதை விரும்பவில்லை. ஆனால், எதைக் கேட்பதென்று தெரியவில்லை. தேக்கனின் கால்களைப் பார்த்தார் கபிலர். எல்லா விரல்களும் ஒன்றுபோலத்தான் இருந்தன. ஏன் இந்த எண்ணம் தோன்றியது எனத் தன்னையே இகழ்ந்துகொண்டார். மற்றவர்களும் பேசாததால் அமைதி நீடித்தது.

நீண்டநாள் கேட்க நினைத்த கேள்வி ஒன்று சட்டென கபிலருக்கு நினைவுக்கு வந்தது. தேக்கனைப் பார்த்துக் கேட்டார், “பாரி முல்லைக் கொடிக்குத் தேரைக் கொடுத்தான் என்று பாணர்கள் சமதள மக்களிடம் பாடித் திரிகிறார்களே, அது உண்மையா?”

பாட்டாப்பிறையில் இருந்த யாருக்கும் இதுபற்றித் தெரியவில்லை. ஒரு பெரியவர் மட்டும் சொன்னார், “அவன் கொல்லிக்காட்டு விதையவே கொடுத்தவனப்பா. தேரெல்லாம் ஒரு பொருட்டா?” என்று மட்டும் எதிர்க்கேள்வி கேட்டார். ஆனால், கபிலர் கேட்டதற்கான பதில் வரவில்லை.




தேக்கனுக்கு இதென்ன கேள்வி என்று பட்டது. `படர வழியின்றி ஒரு கொடி இருந்தால், அதற்கு வழியமைக்கும் வேலையை எல்லோரும்தானே செய்வார்கள். இதனைப் பெரியதாய் பாணர்கள் பாடுவதற்கு என்ன இருக்கிறது?’ என நினைத்தார்.

‘சரி பாரியிடமே கேட்டுவிடுவோம்’ என்று கபிலரை அழைத்துக்கொண்டு வேகவேகமாக மேல்மாடத்துக்கு வந்தார் தேக்கன். வேகத்துக்குக் காரணம், தவழுங்கொடி மட்டுமன்று, தளும்பும் குவளையும்தான். அங்கே காலம்பனும் பாரியும் இருந்தனர். கபிலரின் வருகைக்காக, தொடங்காமல் காத்திருந்தனர். நுழைந்ததும் கபிலர் சொன்னார், “குவளையை ஏந்தும்முன் எனக்கொரு விடை தெரியவேண்டும்!”

கபிலரிடமிருந்து அவ்வளவு அவசரமாக முன்வரும் கேள்வியை எதிர்கொள்ளும் ஆவல் பாரியின் முகத்திலே தெரிந்தது.

கபிலர் கேட்டார், “நீ முல்லைக்கொடிக்குத் தேரைக் கொடுத்தாய் என்று பாணர்கள் பாடுகிறார்களே, அது உண்மையா?”

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-57

**செ**ம்மாஞ்சேரலுடன் நடந்த போர்தான் பறம்புக்கு எல்லாவகையிலும் புதிய தொடக்கத்தை உருவாக்கியது. அப்போரில்தான் குதிரைப்படையின் ஆற்றலைக் கண்டான் பாரி. ஏறக்குறைய சேரனின் குதிரைப்படையிலிருந்த மூன்றில் இருபங்குக் குதிரைகளை வெற்றிகரமாகக் கைப்பற்றினான். குதிரைகளைப்பற்றித் தெரிந்துகொள்வதும் பயில்வதும் பயிற்றுவிப்பதுமாக, புதிய பணிகள் தொடங்கின. முழுமையும் மலையுச்சிப்பகுதியான பறம்பின் நில அமைப்பிற்கு ஏற்ப குதிரைகளை எளிதில் பயிற்றுவிக்க முடியாது என்று சிலர் கூறினர்.




தொடக்கத்தில் அந்தக் கூற்று உண்மைபோலத்தான் தோன்றியது. ஆனால், எங்குமில்லாத புல்வகையான தும்பையிலையும் முயற்புல்லும் குதிரைகளின் வாய்ச்சுவைக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தன. அது அவற்றின் குணமாற்றத்துக்கு அடிப்படையாய் அமைந்தது. மனித இயல்போடு அவை தம்மைப் பிணைத்துக்கொள்ள இயற்கையின் எண்ணற்ற தன்மைகள் இயைவு செய்தன. பறம்பின் வீரர்களோடு உரசி நின்ற குதிரைகள் எளிதில் விலகவில்லை. அதன்பின் அவை பறம்புக்கான தன்மைமாற்றத்தை அடையத்தொடங்கின. இப்பொழுது நிலைமை முற்றிலும் வேறுவிதமாக மாறிவிட்டது. பல தலைமுறைக் குதிரைகள் பறம்பில் அலைந்து கொண்டிருக்கின்றன. பறம்பின் மருத்துவர்கள் குதிரையை எவ்வித நோயிலிருந்தும் காக்கும் வழிமுறைகளைக் கண்டறிந்துவிட்டனர்.

செம்மாஞ்சேரலுடனான போர்தான் மாற்றத்திற்கான கண்ணைத் திறந்துவிட்டது என்பான் பாரி. போர் முடிந்த அன்று வெற்றிக் கொண்டாட்டத்தில் பறம்புநாடே திளைத்துக் கிடந்தது. பாரியின் தலைமையில் நடந்த முதற்போர்; அதுவும் பேரரசனாகப் புகழப்படும் சேரனை எதிர்த்து. அவனது

குதிரைகளில் பெரும்பகுதியைப் பறித்துக்கொண்டு அவனை வீழ்த்தி முடித்த போர்முறை பலரையும் வியப்பிலாழ்த்தியது. இளைஞனான பாரியின் சாதனையிதுவெனப் போற்றிப் பாடப்பட்டது. கொண்டாட்டங்கள் அளவற்று நிகழ்ந்தன.

ஆனால், பாரியின் முகத்தில் அதற்கான மகிழ்வு இல்லை. அதனைக் கவனித்தான் வாரிக்கையன். தேக்கனின் மகன்கள் இறந்ததால் பாரி மிகவும் சோர்வுற்று இருக்கிறான் என்றுதான் முதலில் நினைத்தான். ஆனால், அதுமட்டும் காரணமல்ல என்று பின்புதான் தெரிந்தது.



சேரவீரன் ஒருவன் எறிந்த ஈட்டியொன்றினை பாரி எப்பொழுதும் உடன் வைத்திருந்தான். கைப்பற்றப்பட்ட ஆயுதத்தை நினைவுக்காக வைத்திருக்கிறான் என்றுதான் வாரிக்கையன் எண்ணினான். ஆனாலும் பாரியை இளைஞனாக மட்டுமே நினைத்துவிட முடியாது. அவனது அறிவுக்கூர்மை அளவிடற்கரியது என்பதைப் போர்முனையிலும் கண்டு விட்டுத்தான் வந்துள்ளோம் என்று நினைத்தபடியிருந்தான் வாரிக்கையன்.
பாரியின் ஆழ்ந்த சிந்தனைக்கான காரணம் விரைவில் தெரியவந்தது. பறம்பின் கொல்லர்களை அழைத்து, தன்னிடம் இருந்த அம்பினைப்போன்ற நீண்ட ஆயுதத்தைக் காண்பித்தான். அவர்கள் வாங்கிப் பார்த்தனர். இரலைமான் கொம்பினைப்போன்று முறுகிய வடிவுடைய ஆயுதம் அது. கொல்லர்கள் நீண்டநேரம் பார்த்தபடி நின்றனர்.

“நாம் இரும்பினை வைத்துத்தான் ஈட்டியையும் வேல்முனையையும் உருவாக்குகிறோம். ஆனால், அவற்றைத் திருகி முறுக்க முடிவதில்லை. நமது ஆயுதங்கள் ஒரே நேர்கோடாக மட்டுமே நீண்டு இருக்கின்றன. ஆனால், இவர்கள் இரும்பினைத் திருகி முறுக்கியுள்ளனர். இது எப்படிச் சாத்தியமானது.

இது எந்த வகை இரும்பு? இதனை உருவாக்கும் நுட்பவேலைகளை நாம் எப்படி அறியப்போகிறோம்?”

பாரி கேள்விகளை எழுப்பினான். பறம்பின் கொல்லர்கள் அதற்கான விடையைக் கண்டறிய இரவு பகலாய் உழைத்தனர். சிறுபாழி நகரில் அமைந்த தொழிற்கூடங்கள் வெவ்வேறு வகைகளில் வடிவமாற்றம் அடைந்தன. நெருப்பு எரியும் உலை, தாதுக்களை நெருப்பிலிட்டு எடுப்பதற்கான நீள்வடிவத்தொட்டி. பக்கச்சுவர், ஊதுந்துருத்தி என எல்லாம் வெவ்வேறு வடிவங்களாக மாற்றமடையத் தொடங்கின.

இரும்பை உருவாக்கத் தேவைப்படும் தாதுக்களிமண் கட்டிகள் ஒரே இடத்தில்தான் எடுக்கப்பட்டு வந்தன. ஆனால், அவை மூன்று இடங்களிலிருப்பதை அறிந்து மூன்றையும் எடுத்து வந்தனர். மூன்றின் தன்மையும் நிறமும், வெவ்வேறானவையாக இருந்ததால், மூன்றையும் மூன்றுவிதமாக உலையிலிட்டு வடிக்கும் வேலையைச் செய்தனர்.

பறம்பின் பேராற்றல் நெருப்பினை ஆளும் அதன் சக்தி. நெருப்பின் அளவையும் சுடரின் உள்ளிறுக்கத்தையும் அவர்களால் கட்டுப்படுத்தவும் தீர்மானிக்கவும் முடிந்தது. அது இரும்பின் மாற்றம் எந்த அளவில் என்னவாக மாறுகிறது என்பதைத் துல்லியமாக அறியவும், அதே அளவினைப் பேணவும் ஏதுவாக இருந்தது.

உள்ளூற்றிய உலோகம் வெப்பமாகிச் செந்நிறமடையும் பருவத்தைக் குறிக்க செவ்வெப்பம் எனவும், தவிட்டுநிறப் புள்ளிகளோடு உலோகம் ஒளிர்செந்நிறத்தை அடையத் தேவையான வெப்பத்தைக் கருஞ்செந்நிற வெப்பமெனவும், தவிட்டுநிறம் மாறி முற்றாக வெண்மையடைய வெண்ணிற வெப்பம் எனவும் பெயரிட்டனர். வெண்ணிற வெப்பத்தைத் தாண்டி மேலும் வெப்பமாக்கும்பொழுது அது உருகும் தன்மையுடையதாகிறது என்பதையும் கணித்தனர்.

இவ்வெப்பத்தை உருவாக்க ஊதுந்துருத்தியில் காற்றினை எந்தளவிற்கு எவ்வளவு காலம் செலுத்துவது என்பதனையும் துல்லியப்படுத்தினர். பெண்யானை துதிக்கையில் மூச்சுவிடுவதைப் போன்ற மிதமான வேகத்தில் தொடங்கி, சீற்றம் காணும் காட்டெருமையின் மூச்சுக்காற்றைப் போன்ற முழுவிசையோடு காற்றினைச் செலுத்துவதற்கான குறிப்புகளைக் கணித்தனர்.

பறம்பின் வடிவக்கலைஞன் பல்வேறு வடிவங்களை வரைந்தபடியே இருந்தான். கணிதக்கலைஞன் எந்நேரமும் காட்சிகளை எண்களாக மாற்ற முயன்றுகொண்டேயிருந்தான். இரும்பு திருகி வளையத் தொடங்கியது. திருகும் இரும்பின் சேர்மானம் கண்டறியப்பட்டவுடன் நிலைமை தலைகீழாக மாறியது. எல்லா ஆயுதங்களையும் வெவ்வேறு வடிவங்களில் வடிவமைக்கவும் வலிமைப்படுத்தவும் அவர்களால் முடிந்தது.

கொடிமரவில் கார்முகங்கொண்டது. வில்லின் இருதலைக் குதைகளிலும் கனம் கூடியது. அதற்குத் தகுந்தாற்போல இழுபடும் நாண் புதுவகையில் உருவாக்கப்பட்டது. பாய்ந்து செல்லும் அம்பின் தொலைவு மூன்று மடங்கு அதிகரித்தது. கூர்வாளும் சிறுவாளும் ஈர்வாளும் கைவாட்களாக மாறின.

கழுமுட்சூலம் ஏந்தி வாரிக்கையன் நின்றதைப் பார்த்தபொழுது காடே நடுங்கியது. ஆயுதங்களின் கூர்முனையும் ஆற்றலும் அளவிடற்கரியனவாகப் பரிணமித்தன.

யவனத்தொடர்பால், தமிழ்நிலத்தின் பல மாற்றங்கள் சேரமண்ணில்தான் முதலில் தொடங்கின. வலிமைமிகுந்த குதிரைகள் தொடங்கி வளமையான போர் ஆயுதத்துக்கான பொறிகள் வரை பலவும் சேரமண்ணில் காணக்கிடைத்தன. சேரனுடனான பெரும்போரில் பறம்பு வெற்றிபெற்றதால் அவற்றுள் பலவும் பறம்புக்கு அறிமுகமாயின. நவீன மாற்றங்கள் பலவும் பறம்புக்குள் நுழைந்து பாரம்பர்யமான அறிவுச்சேகரத்தோடு இணைந்து பெருவளர்ச்சி அடைந்தன.

இது தற்செயல்தான்; ஆனால், பறம்பின் வலிமையை அது எண்ணிலடங்காத மடங்குகளாகப் பெருக்கிவிட்டது. பாரம்பர்ய அறிவுச்சேர்மானத்தோடு நவீனக் கண்டுபிடிப்புகள் இணையும்பொழுது அது மதிப்பிட முடியாத ஆற்றலைப் பெற்றுவிடுகிறது. சிறுபாழியில்தான் எல்லாவித ஆயுதங்கள் செய்யும் தொழிற்கூடங்களும் இருக்கின்றன. ஊதுந்துருத்தி காற்றை ஊதிக்கொண்டே இருந்தது; கரடி கிண்டுகிற ஈசல் புற்றில் இடைவிடாது ஈசல்கள் பறப்பதைப்போல துருத்தி ஊதும் அடுப்பிலிருந்து இடைவிடாது நெருப்புப்பொறிகள் பறந்தவண்ணமே இருந்தன.

செய்யப்பட்ட ஆயுதங்களின் முனையைத் தட்டிக் கூர்மையாக்கும் வேலைநடப்பதால் உலோக ஒலி கேட்டுக்கொண்டேயிருந்தது. சிறுபாழி கடந்து எவ்வியூர் நோக்கி வந்த பாணன் ஒருவன், தொடர்ந்து எழும் உலோக ஒலி கேட்டு என்ன இது என வினவினான்.

``ஆயுதங்களைத் தட்டிக் கூர்மையாக்குகிறார்கள்” என்று விடை கூறினர் பறம்பு மக்கள்.

அப்பொழுது அவன் சொன்னான், “பொதினி மலையில் ஆயுதங்களை உலோகத்தால் தட்டிக் கூர்மையாக்குவதற்குப் பதில், வட்டவடிவக் கல் ஒன்றினை உருட்டியபடி அதன் மேல் உரசுகிறார்கள். அப்படி உரசும்பொழுது அந்த ஆயுதம் அளவிடற்கரிய கூர்மையை அடைகிறது.”

செய்தி பாரிக்கு எட்டியது. “இரும்பினை உரசிக் கூர்மையாக்கும் கல் இருக்கிறதா?” என்று வியப்போடு கேட்டான்.

“ஆம், இருக்கிறது. நான் நேரில் பார்த்தேன். செய்யப்பட்ட ஆயுதத்தை ஒருநாள் முழுவதும் தட்டிக் கூர்மையாக்குவதைவிட, சிறுபொழுது அக்கல்லில் உரசி அதிகூர்மையாக்குகின்றனர். அது ஒரு அரியவகைக் கல்” என்றான் பாணன்.

‘நம்பும்படியாக இல்லையே’ என்று அவர்கள் ஐயங்கொள்வதைப் பார்த்தபடி மீண்டும் முதுபாணன் சொன்னான், “பொதினி மலையின் வேளிர்குலத்தலைவன் மேழகன் என்னிடமே சொல்லியுள்ளான். இக்கல்லை முதலில் கண்டறிந்தவர்களைக் காரோடர்கள் எனப் பெயரிட்டு அழைத்தான். நான் அவ்வரியவகைக் கல்லை நேரில் பார்த்திருக்கிறேன்” என்றான்.

அன்றிரவு கூத்து முடிந்து கலைஞர்கள் புறப்படும் முன்பே பாரி புறப்பட்டுவிட்டான் என்பது

முதுபாணனுக்குத் தெரியாது. பதினான்கு வேளிர் குடிகளில் ஒன்றுதான் பொதினிமலை வேளிர்குடி. அவர்களும் தங்களின் ஆதிச்செல்வத்தைப் பெரும்பாழியில்தான் வைத்துள்ளனர். அதனைக் காக்கும் பணியைப் பறம்பு மக்கள்தான் பார்த்துக்கொள்கின்றனர். ஆனாலும் தலைமுறைக்கு ஒருமுறையோ, இருமுறையோதான் ஆட்களின் முகம்பார்க்கும் வாய்ப்பு கிடைக்கிறது. பாரி மிகவும் இளையவனாதலால் பொதினி மக்களை அவன் பார்த்ததில்லை. ஆனால், அவர்களைப் பற்றி தந்தை சொல்லக் கேட்டுள்ளான். பறம்பின் மூத்தவீரனான வாரிக்கையனும் கூழையனும் சில வீரர்களும் கொல்லர்கள் சிலருமாக மொத்தம் பத்துப்பேர் உடன்வர, பொதினி நோக்கிப் புறப்பட்டான் பாரி. பறம்பு நாட்டுக்கும் பொதினி மலைக்கும் நீண்ட தொலைவு இடைவெளி இருந்தது. பயணம் முடிந்து திரும்பச் சில மாதமாகலாம் எனச் சொல்லித்தான் சென்றனர்.

தென்திசை நோக்கிப் பயணம் தொடங்கியது. பயணம் எப்போதும் கற்றுக்கொடுத்துக்கொண்டே இருக்கும். அதுவும் அடர்காட்டுப் பயணத்தில் இருக்கும் வியப்புகள் எண்ணிலடங்காதவை. பெருங்காட்டிற்குள் நிலவும் பேரமைதி எந்தக் கணத்திலும் விழிப்பைக் கோரக்கூடியது. அவர்கள் இரவுபகலாக நடந்தனர். உறங்கும்பொழுதும் புலன்கள் விழித்திருந்தன.

வாரிக்கையன்தான் பொதினிக்கான வழியமைப்பைச் சொன்னான். “எண்முகடு கடந்தால் கீரிச்சொளவு வரும். அதிலிருந்து நிலையருவிகள் நான்கைக் கடந்தால் சிறகுநாவல் காடிருக்கும். அங்கிருந்து கூப்பிடும் தொலைவில் ஓரிலைத்தாமரைத் தெப்பம் உண்டு. தெப்பக்கரையில் நின்று பார்த்தால் ஓடும் ஆறு தெரியும். ஆற்றங்கரையில் கீழ்நோக்கி நடக்க பொதினியை அடைவோம்” என்றான்.

முன்னோர்கள் சொல்லிவைத்துள்ள வழி இது. நாட்கணக்கில் நடந்து எண்முகடு கடந்து கீரிச்சொளவுக்கு வந்து சேர்ந்தனர். அப்பெரும் சொளவு நிறைய கீரிகளே இருந்தன. மண்ணெங்கும் கீறிப்புழுக்கைகள் கால்வைக்க முடியாதபடி கிடந்தன. அவற்றைக் கடந்து நிலையருவி அடைந்தனர். மலையெங்கும் ஆங்காங்கே அருவிகள் கொட்டிக்கொண்டிருந்தன. கோடைமலை என்று அழைக்கப்படும் அம்மலைத்தொடரின் நான்காம் அருவியைக் கடந்து, சிறகுநாவல் காட்டினை அடைந்தனர்.

அழகிய நாவல் பழங்கள் எங்கும் உதிர்ந்து கிடந்தன. ஆனால், ஒவ்வொரு பழத்தின் இருபக்கங்களிலும் சிறகுகளைப்போல இலைகள் ஒட்டியிருந்தன. பாரி இவ்வகை நாவலைப் பார்த்ததில்லை. நாவலின் சிறகுகளை விரித்துப்பார்த்தான். உதிரப்போகும் சறுகுகளைப் போல இருந்தன; ஆனால் உதிரவில்லை.

வாரிக்கையன் சொன்னான், “பழங்கள் மரத்தில் இருக்கும் வரை விரிந்த சிறகுகளைப்போல இவ்விரண்டு இலைகளும் பழத்தையொட்டி விரிந்திருக்கின்றன. உதிரும்பொழுது கீழே விழுந்து பழம் தெறித்துவிடாமலிருக்க இயற்கை செய்த ஏற்பாடிது. விரிந்த சிறகுகளோடுதான் பழம் மேலிருந்து உதிரும். காற்றில் மிதந்தபடிதான் அது மண்ணை வந்துசேரும்; அதனால் பழம் அடிபடாது. அதன் பிறகுதான் இலைகள் காயத் தொடங்குகின்றன. ஆனாலும் ஒருபொழுதும் இவ்விலைகள் பழத்தை விட்டு உதிராது.”

பாரி வியப்போடு அதனைப் பார்த்தான். வாரிக்கையன் சொன்னான், “காற்றடி காலத்தில் இப்பழம்

மரத்திலிருந்து உதிரும்பொழுது நேராகக் கீழே விழாமல் நீண்ட தொலைவு காற்றோடு போகிறது. இதன் இலையமைப்பு எளிதில் தரையிறங்கவிடாது. காண்போர் இதனைப் `பறக்கும் பழம்' என்று சொல்வர்."

பாரி வியப்பு குறையாமல் கேட்டுக்கொண்டிருந்த பொழுது கூழையன் சொன்னான், "என் கிழவன் இந்தப் பழத்தைப்பற்றி ஒரு கதை சொன்னான். இது பெண்பழம் என்றும் இறகுகொண்டு மூடி, தன்னை எப்பொழுதும் பாதுகாத்துக்கொள்ளும் என்றும், பெரும்பாலான பழங்கள் இரவில்தான் உதிருமென்றும். முழுநிலா இரவில் காற்றில் பறக்கத் தொடங்கும் இப்பழங்கள் பொதினியின் குலமகளை எந்நேரமும் மொய்த்துக்கிடக்கின்றன."

'நம்பும்படியாகவா இது இருக்கிறது?' என்ற கேள்வி எல்லோர் மனதிலும் உதித்தபடிதான் இருந்தது. சிறகு முளைக்கத் தொடங்கும் சிறுகுருவி போல உதிர்ந்து கிடக்கும் சிறகுநாவலின் அழகை நீண்டநேரம் பார்த்து மகிழ்ந்தான் பாரி.

அவர்கள் தொடர்ந்து நடந்தனர். வாரிக்கையன் சொன்னான், "பொதினியில்தான் மிக அதிக மருத்துவக்குடிகள் இருக்கின்றனர். எண்ணற்ற தாவரங்களையும் தாதுக்களையும் அறிந்து அதனை மருந்தாக மாற்றியுள்ளனர்." அனைவரும் அதனை வழிமொழிந்தனர். வேளிர் கூட்டத்தில் மருத்துவ அறிவின் உச்சங்கண்டோர் பொதினிவாழ் வேளிர்களே என்று முன்னோர் சொல் கேட்டுள்ளதாகக் கூழையன் சொன்னான். பேசியபடி ஓரிலைத் தாமரைத் தெப்பத்தைக் கடந்து ஆற்றின் ஓரம் இறங்கத் தொடங்கினர்.

கீழே இருந்த சிறுகுன்றில் குடில்கள் இருப்பது தெரிந்தன. இரவு இங்கே படுத்துறங்கி, காலையில் எழுந்து அக்குன்று நோக்கி நடப்போம் என முடிவுசெய்தனர்.

உறங்கும் இரவுகளில் கனவுகளை நிறுத்தும் வல்லமையை மனிதன் ஒருபொழுதும் பெற்றுவிட முடியாது. பழங்கள் பறப்பது நம்பும்படியாகவா இருக்கிறது எனக் கேட்ட பாரியின் கனவில் பழங்கள் பறந்துகொண்டிருந்தன. அவை பொதினியின் குலமகளை அடையுமா என்று அவன் எண்ணிக்கொண்டிருந்தபொழுது காலடியோசை கேட்டபடியிருந்தது. யாரோ நம்மைச் சுற்றி நிலைகொள்கின்றனர் என்பதைப் பாரி உணர்ந்தான்; ஆனாலும் அசைவின்றிப் படுத்திருந்தான்.

பொழுது விடியும்பொழுது பொதினி வீரர்கள் ஆயுதங்களோடு சூழ்ந்திருந்தனர். எழுந்து உட்கார்ந்தான் பாரி. சற்றுமுன் எழுந்த வாரிக்கையன் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தான்.



பாரி கேட்டான், “நள்ளிரவே வந்துவிட்டீர்களே, ஏன் அமைதிகொண்டே நின்றீர்கள்?”

“கடம்பமரத்தின் அடிவாரத்தில் வேலூன்றிப் படுத்திருப்பவர்களை நாங்கள் தாக்கமுடியாதே. காப்பதுதானே எங்களின் கடமை” என்றான் வந்துள்ள வீரன்.

கடம்பமரம் முருகனின் உறைவிடம். அம்மரத்தின் அடிவாரத்தில் படுத்துறங்குபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் காப்பது வேளிர்களின் கடமை. பறம்பின் மக்கள் அங்கு படுத்துறங்கியதும் பொதினிவீரர்கள் அவர்களைக் காத்து நின்றதும் வேளிர் குலங்களின் காலகாலத்துப் பழக்கம்.

வந்துள்ளது யாரென விசாரித்துவிட்டு, பொதினித்தலைவன் மேழகனுக்குச் செய்தி சொல்ல வீரர்கள் ஓடினர். வேள்பாரி வந்துள்ளான் என்று செய்தி சொல்லப்பட்டது. செம்மாஞ்சேரலுடனான போர், பாரியின் பெயரை நிலமெங்கும் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டது. பொதினித்தலைவன் மேழகன், பாரியை எதிர்கொண்டு வரவேற்க மலையேறி வந்தான்.

பொதினித்தலைவனுக்குக் கொடுப்பதற்காகப் பறம்பின் ஆதிக்கள்ளான ஆலப்பனைக் கள்ளினை மூங்கிற்குடுவை நிறைய எடுத்து வந்திருந்தனர். எதிர்வந்த மேழகனோ பொதினியின் பூர்வக்கள்ளான ஐஞ்சுவைக்கள்ளினைக் கொடுத்து வரவேற்றான்.

நான் நினைத்ததைவிட இளைஞனாகவும் மாவீரனுக்குரிய உடல் தகுதியோடும் பாரி இருக்கிறான் என்று மேழகன் புகழ்மாலை சூடியபடியிருந்தான். வரவேற்பும் விருந்துமாக, பின்வந்த நாள்கள் கழிந்தன. செங்காற்சேவலடித்து மேழகன் தொடர்ந்து விருந்து வைத்தான். விருந்தின் சுவையில் மகிழ்ந்த பாரி, மூன்றாம் நாள்தான், தான் வந்த நோக்கத்தைத் தெரிவித்தான்.

மேழகன் சற்றே வியந்தான். இச்செய்தி அதற்குள் அங்கு எப்படிப் போனது எனச் சிந்தித்தபடியே சொன்னான், “இரும்பினைக் கூராக்கும் அக்கல்லுக்குச் சாணைக்கல் என்று பெயரிட்டுள்ளோம். அதனை எப்படி வெட்டியெடுத்து உருளையாய்ச் செய்து முடிக்கிறோம் என்பதை உங்களை அழைத்துச்சென்று காண்பிக்கிறேன்” என்றான்.

“காண்பித்தால் மட்டும் போதாது. எங்களுக்கு நீங்கள் அதனைக் கொடுத்துதவ வேண்டும்” என்றான் வாரிக்கையன்.

மேழகன் சொன்னான், “எம்குலம் கண்டறியும் எதனையும் பயன்படுத்திக் குறைதீர்ப்போம்; பயன்பாட்டுக்குக் கொடுத்தனுப்பும் வழக்கமில்லை. ஆனாலும், வேளிர்குலத்தோடு ஒரு மாற்றைச் செய்யலாம் என்பது முன்னோர் வாக்கு. எனவே, நீங்கள் கேட்கும் ஒன்றினை என்னால் தர முடியும்” என்றான்.

மேழகனின் சொல் கேட்டு எல்லோரும் மகிழ்ந்தனர். சாணைக்கல்லினைப் பெற்றுச்செல்ல இருந்த தடை அகன்றது. மறுநாள் சாணைக்கல் இருக்கும் இடத்துக்குச் சென்றனர். அதனை எடுத்து அரக்குக் கலந்து ஓர் உருளையாக மாற்றிக் காயவைக்கின்றனர். நன்றாகக் காய ஒரு வாரம் ஆகும் என்றார்

மேழகன். காத்திருந்து பெற்றுச்செல்கிறோம் என்று பொறுத்திருந்தனர்.

நாள்தோறும் பொதினிமலை மருத்துவர்களின் செயல்களையும் தொழில்கலைஞர்களின் செயல்களையும் அவர்கள் கூர்ந்து கவனித்து வந்தனர். ஆனால், பாரி வேறொன்றைக் கவனித்தபடியிருந்தான். வந்த அன்றே மேழகன் மகள் ஆதினியைப் பார்த்துவிட்டான். ஆனால், பாரியின் கவனம் முழுவதும் சாணைக்கல்லின் மீதே இருந்ததால் வேறுபக்கம் திசைதிரும்பவில்லை. பலமுறை ஆதினியின் கண்கள் பாரியைக் கடந்துபோக முடியாமல் தவித்ததை மற்றவர்கள் பார்த்தனர்.

சாணைக்கல்லினைத் தருவதாக மேழகன் சொன்ன பின்னர்தான் பாரிக்கு வேறு சிந்தனையின் பக்கம் எண்ணங்கள் போகத் தொடங்கின. ஆனால், அதன்பின் ஆதினி பாரியின் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஏன் இந்த மாற்றம் என்று அவள் தோழிகளுக்கு விளங்காததைப்போல பாரிக்கும் விளங்கவில்லை. சற்றே குழப்பத்தில்தான் இருந்தான் பாரி.


அவள் தன்னைத் தவிர்க்கத் தொடங்கிய பிறகுதான் அவளைப் பார்த்தாக வேண்டும் என்ற வேட்கை அதிகரிக்கத் தொடங்கியது. ஆதினியோ அவன் கண்ணிற்படாமல் கடந்துகொண்டிருந்தாள். அவள் தவிர்க்கும் கணமெல்லாம் தவிப்பு மேலெழுந்தபடியிருந்தது.

பாரியைத் தவிர மற்ற அனைவரும் பக்கத்திலிருந்த மருத்துவக் குடியிருப்புக்குப் போயிருந்தனர். வாரிக்கையனும் கூழையனும் ஆளுக்கு ஒரு பக்கமாகப் போய்ப் பார்த்து வருவோம் என்று சொல்லி இரு கூறாகப் பிரிந்து சென்றனர். கூழையன் போனதிசையில் எரியும் நெருப்பின்மேல் சிரட்டையை வைத்து அதில் நீரூற்றி மருந்தினைக் காய்ச்சிக்கொண்டிருந்தார் மருத்துவர். அதனைப் பார்த்த கூழையனுக்கும் மற்றவர்களுக்கும் பெரும்வியப்பாக இருந்தது. நெருப்பில் சிரட்டை எரியாமல் எப்படி இருக்கிறது, நீர் எப்படிக் கொதிக்கிறது எனக் கேட்டனர்.

அம்மருத்துவர் சொன்னார், “பிரண்டையின்மேல் சிரட்டையை நன்றாகத் தேய்த்துக் காயவைக்க வேண்டும். பின்னர் சிரட்டையைப் பக்குவமான சிறுநெருப்பிலே வைத்தால் சிரட்டை எரியாது. உள்ளே இருக்கும் நீர்தான் கொதிக்கும்” என்றார். பிரண்டை நெருப்பைக் கடத்தும் ஆற்றலோடு இருப்பதை அம்மருத்துவன் எளிய முறையிலே சொல்வதை வாய்பிளந்து கேட்டுக்கொண்டிருந்தனர் கூழையன் கூட்டத்தினர்.

வாரிக்கையனோடு போனவர்கள் அவ்வூர் முழுவதும் சுற்றிவந்து ஒரு குடிலில் உட்கார்ந்தனர். தாகமாக இருந்ததால் குடிக்க நீர் கேட்டான் ஒருவன். உள்ளிருந்த பெரியம்மா ஒருத்தி, “சிறிது பொறப்பா. எலிக்குத் தீனிவைத்துவிட்டு வருகிறேன்” எனச் சொல்லி உள்ளே போனாள். இவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தின் ஓரம் பெரும்பூனை ஒன்று நின்று கொண்டிருந்தது.

பூனை இருக்குமிடத்தில் எப்படி எலிக்குத் தீனி போடுவாள் எனக் குழம்பிக் கொண்டிருக்கையிலே கைநிறைய பயறுகளை எடுத்துவந்து வாசலோரம் தூவிவிட்டாள். செடிகொடிகளின் இடுக்குகளுக்குள்ளிருந்து ஏழெட்டு எலிகள் வந்து அதனை மேயத்தொடங்கின. பூனை அவற்றின்மீது பாயப்போகிறது என நினைத்து சற்றே பதற்றத்தில் வாரிக்கையனும் மற்றவர்களும் உட்கார்ந்திருந்தனர். ஆனால், பூனை எதுவும் செய்யாமல் அப்படியே இருந்தது.



வாரிக்கையன் பேரதிர்ச்சிக்கு உள்ளானான். எலியை விரட்டிப் பிடிக்காத பூனை எப்படி இருக்க முடியும்? அவனால் நம்பவே முடியவில்லை. மேலும் கீழுமாகப் பார்த்து விழித்துக்கொண்டிருந்தான். பெரியம்மா குவளையில் தண்ணீர்கொண்டு வரும்பொழுது வாரிக்கையன் கேட்டான். “இந்தப் பூனை ஏன் எலியைப் பிடிக்காமல் உட்கார்ந்திருக்கிறது?”

“இதென்ன கேள்வி? அந்தப் பூனைக்கு அருகில் இருப்பது என்ன செடி?”

வாரிக்கையனும் மற்றவர்களும் அந்தச் செடியை உற்றுப்பார்த்தனர். அவர்களால் அது என்ன செடியெனக் கண்டறிய முடியவில்லை. அவர்கள் விழிப்பதைப் பார்த்தே அவள் சொன்னாள், “அது பூனைவணங்கி.”
அவர்களுக்கு அப்பொழுதும் புரியவில்லை.

“அந்தச்செடியின் வாசனைபட்டால் சிறிதுநேரம் பூனைக்கு மயக்கம் வந்துவிடும். அதனால் எதுவும் செய்யமுடியாது. அப்படியே உட்கார்ந்துவிடும். எலிக்குத் தீனிவைக்கும் முன் பூனைக்கு அந்தச் செடியினடிவாரத்தில் சிறிது உணவு வைத்தால் போதும், தின்று முடித்தவுடன் மயங்கி உட்கார்ந்துவிடும். அப்பொழுது எலிகளுக்கு உணவிட்டால் அவை வந்து மேய்ந்துவிட்டுப் போகின்றன” என்று சொல்லிச் சென்றாள். வாரிக்கையனுக்கும் மற்றவர்களுக்கும் வாய்பேச எதுவுமில்லை.

ஊர்விட்டு வெளியேறி அவர்கள் வந்தபொழுது கூழையனும் மற்றவர்களும் வந்துகொண்டிருந்தனர். யாரும் யாருடனும் பேச்சுக்கொடுக்கக்கூட ஆயத்தமாக இல்லை. பேசாமல் வந்தனர். சரி, பாரியைப் பார்த்து அடுத்து ஆகவேண்டிய வேலையைப் பார்ப்போம் என முடிவுசெய்து பாரியைத் தேடி வந்தனர்.




சிற்றோடைக்கரையில் இருந்த செண்பகமரத்தின் அடிவாரத்தில் பாரி அமர்ந்திருந்தான். இவர்கள் வரும்பொழுதுதான் ஆதினி பாரியின் அருகிலிருந்து விலகிப் போனாள்.

இவள் தனியே வந்து பாரியிடம் என்ன பேசிவிட்டுப் போகிறாள் என்று எண்ணியபடி வந்தனர். பாரியின் அருகில் வந்து அவனது முகத்தைப் பார்த்த கூழையனும் வாரிக்கையனும் அதிர்ந்துபோயினர்.

நெருப்பில் சிரட்டை எரியாமல் இருப்பதைப் பார்த்தபொழுது கூழையன் முகமும், எலியின் மீது பூனை பாயாமல் இருந்தபொழுது வாரிக்கையன் முகமும் எப்படி இருந்தனவோ அவற்றைவிட அதிக மிரட்சியோடு இருந்தது பாரியின் முகம்.

என்னதான் செய்துவிட்டுப் போனாள் ஆதினி?

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-58




கனவுகள் கலைந்த பின்னும், அவை நினைவிலிருந்து மறைவதில்லை. ஏனென்றால், கனவுகள் தோன்றுவதே நினைவுக்குழிக்குள்ளிருந்துதான். அவை மறைந்துகொள்ளும் இடமும் வெளிப்படுத்திக்கொள்ளும் இடமும் ஒன்றுதான். சிறகுநாவல்கள் மொய்த்துக்கிடக்கும் பொதினியின் குலமகளைக் கனவிலே பார்க்கும்முன் காலடியோசை கேட்டு விழிப்புற்றான் பாரி. கனவு கலைந்தது. ஆனால், அதன்பின் நினைவு கலங்கியே இருந்தது. கனவின் ஆற்றல் அதுதான்.

நாவற்பழத்தின் துவர்ப்புச்சுவை படிந்துகிடக்கும் பெண் யாராக இருப்பாள் என்ற வினா எளிதில் உதிர்வதாக இல்லை. மேழகன் ஐஞ்சுவைக் கள் கொடுத்து வரவேற்ற கணத்திலிருந்து பாரியின் கண்கள் ஆதினியைத் தேடத் தொடங்கின. அவன் நினைவில் நாவற்பழங்கள் பறந்தபடியேதான் இருந்தன. ஆதினி மட்டும் கண்ணிற்படாமலே இருந்தாள்.

வந்தவர்கள் விருந்துண்டு மகிழ்ந்தனர். எவ்வியூர்போல மலைமுகட்டில் உள்ள ஊரல்ல பொதினி; மலையடிவாரத்துச் சிறுகுன்றின் மேல் நிலைகொண்டுள்ள ஊர். புல்வேய் குரம்பைக் குடில்கள் இதமான சூழலைக்கொண்டிருந்தன. பாரியின் கண்கள் முதன்முறையாக ஆதினியைக் கண்டபொழுது அவள் சற்றே மறைந்திருந்து அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

தான் பார்த்த கணம் சட்டென மறையும் ஒருத்தி அவளின்றி வேறு யாராக இருக்க முடியும்? அவள் மறையத் தொடங்கும்பொழுதே மனம் கண்டறியத் தொடங்கிவிட்டது. அதன்பின் மனதைக் கட்டுப்படுத்தி அழைத்துச் செல்வது எளிதல்ல. ‘இழுத்துச்செல்லுதல் இயல்பாய் வாய்க்குமோ பெண்ணுக்கு’ என்று வாரிக்கையனிடம் கேட்கவேண்டும் என்று தோன்றியது. ‘சேரனுடனான போரில் முன்களத்தில் நிறுத்தி எந்த பதிலும் சொல்லாமல் தவிக்கவிட்டவன்தானே நீ. இப்பொழுதும் விடையின்றித் தவித்தலை’ என அவன் எண்ணுவானோ என்று தோன்றியது.

இருவரும் காண்பதற்கு முன்பே ஒருவரைப் பற்றி ஒருவர் அறிந்துவைத்திருந்தனர். செம்மாஞ்சேரலுடனான போரில் பாரி ஈட்டிய வெற்றி மலைநாடெங்கும் பரவியிருந்தது. ஆதினியின் கனவுக்குள் அவ்வெற்றிநாயகனே நிலைகொண்டிருந்தான். பாரியின் கனவுகளுக்குள் பறக்கும்

நாவற்பழம் நிலைகொண்டிருந்தது. அவன் அந்தக் கதையை நம்பவில்லை. ஆனால், கதைகளால் சூழப்பட்ட ஒருத்தி, பார்க்கும் முன்பே பழக்கமாகிவிடுவாள். நன்றாகப் பழகிய ஒருத்தியை இன்னும் பார்க்கவேயில்லை என்றால் யாராவது நம்புவார்களா? காதல் இப்படித்தான் செய்யும். நீரற்ற குளத்தில் குளித்து நனைந்த கூந்தலோடு வருகிறவளுக்கு ஆடைகொடுக்கச் சொல்லிக் காதலனை அனுப்பிவைக்கும்.



உறக்கத்தில் பூக்கும் கனவுபோல மயக்கத்தில் பூக்கும் கனவுதான் காதல். ஆனாலும் கனவைவிட வலிமைமிக்கது. கனவு உள்ளுக்குள் மட்டுமே செயலாற்றுகிறது. தனக்குள் மட்டுமே பூக்கும் பூ. ஆனால், காதல் அப்படியல்ல; உலகத்தையே பூக்கச்செய்யும் பூ. பூத்துக்குலுங்கும் பொதினியின் இளங்காற்றினூடே திக்குத்தெரியாமல் அலைந்துகொண்டிருந்தான் பாரி.

தவித்தலைந்த அவன் கண்களுக்கு இரண்டாம் நாள் காலையில் அவள் தென்பட்டாள். மயில்கொன்றை மரத்துக்கு மலர்சூடி வணங்கிக்கொண்டிருந்த ஆதினியைத் தற்செயலாய்ப் பார்த்தான் பாரி. உடன் மேழகனும் வாரிக்கையனும் இருந்தனர்.
பார்த்த கணத்தில் பாரி நகர்தலற்று நின்றான். மேழகனும் வாரிக்கையனும் நின்றனர். ஆதினி மயில்கொன்றை மரத்தைப் பார்த்துநின்று வணங்கிக்கொண்டிருந்தாள். தான் நிற்பதற்கான காரணத்தைச் சொல்ல முடியாமல் நின்றான் பாரி. மேழகனோ அவள் மயில்கொன்றைக்கு மாலைசூட்டி வணங்குவதற்கான காரணத்தைச் சொல்ல முடியாமல் நின்றான்.

பொதினிமலைப் பெண்கள் தனக்கானவனைக் கண்டுவிட்டால் மயில்கொன்றை மரத்துக்கு

மாலைசூட்டி மகிழ்வர். ஆதினி அதைத்தான் செய்துகொண்டிருக்கிறாள். அது மேழகனுக்குப் புரிந்தது. ஆனால், அதைப் பாரியிடம் சொல்லத் தயங்கி நின்றான்.
பாரியின் தயக்கம் வேறுவிதமாக இருந்தது. 'சூட்டிய மாலையை எடுத்து அவளுக்குச் சூட்டிவிடுவோமா?' என்று எண்ணம் ஓடத்தொடங்கியது. தான் பறம்பின் தலைவன். வந்த பணிமுடியாமல் பிற பணியில் கவனம் சிதறுவது அழகன்று எனத் தோன்றியது. எனவே, அப்பணி முடியும் வரை ஆதினியைப் பார்ப்பதில்லை என்று முடிவுசெய்து நடக்கத் தொடங்கினான்.



அவளின் முகம்பார்க்காமல் பொழுதைக் கடத்த முயன்றான் பாரி. அது அவ்வளவு எளிதாக இல்லை. பொதினியின் இளங்காற்றும் புல்மேடும் பெருமலையும் மணக்கும் மலைவாசமும் அவனைப் பாடாய்ப்படுத்தின. ஆனாலும் மிகுந்த கட்டுப்பாட்டோடு எண்ணங்களைச் சிதறவிடாமல் இருந்தான். ஆனால், ஆதினியோ தனது நிழல் அவனது நிழலிற்படும்படி பொழுதுக்கு ஒருமுறை நடந்துகொண்டிருந்தாள். அவள் கைவீசி நடந்தபொழுது வலக்கையின் நீள்நிழல் தனது மார்பை அணைத்துச் சென்றபொழுது துடித்துப்போனான் பாரி. நிழலுக்குள் புகுந்து உடலுக்குள் வெளிவந்துகொண்டிருந்தாள் ஆதினி. என்னதான் செய்ய முடியும் பாரியால்?

மூன்றாம் நாள் மாலைநேரத்தில் பொருத்தமான சூழலில் சாணைக்கல் பற்றிய பேச்சு வந்தது. வாரிக்கையனும் கூழையனும் மிகுந்த மகிழ்வோடு அதில் பங்கெடுத்தனர். பாரி அக்கல்லினைப் பறம்புக்குத் தந்துதவ வேண்டும் என்று கேட்டான். மேழகனும் அதற்குச் சம்மதித்தான். இப்பேச்சு நடந்துகொண்டிருக்கையில் சற்று தொலைவில் நெல்லிமரமொன்றின் அடியில் தோழிகளோடு வீற்றிருந்தாள் ஆதினி. பாரி கேட்டதும் மேழகன் ஒப்புக்கொண்டதும்ஆதினியின் காதிலே விழுந்தன.

ஒருகணம் திகைத்தாள் ஆதினி. 'பாரியா இதனைக் கேட்டது?' என மீண்டுமொருமுறை மனதுக்குள் உறுதிப்படுத்தினாள். அவள் கண்கள் கலங்கின. சட்டென அவ்விடம் விட்டு அகன்றாள். உடனிருந்த தோழிகளுக்குக் காரணம் புரியவில்லை.
மேழகன் சாணைக்கல்லினைத் தர ஒப்புக்கொண்டதற்குப் பிறகுதான் பாரியின் மனம் இயல்புநிலைக்குத் திரும்பியது. அதன்பின்தான் அவன் கண்கள் ஆதினியைத் தேடத் தொடங்கின. அவள் நெல்லிமரம் விட்டு அகன்றிருந்தாள். தேடிப் பார்த்தான், அவளைக் காணவில்லை. மறுநாள் காலையில் எழுந்ததும் பாரியின் கண்கள் அவளைத்தான் தேடின. மேழகன் வந்தான். சாணைக்கல் இருக்குமிடம் செல்ல எல்லோரும் ஒன்றுகூடினர். ஆனால், ஆதினி கண்ணில் தட்டுப்படவேயில்லை. மூன்று நாள்களாகத் தனது நிழலோடு உரசி நகர்ந்த அவள், இப்பொழுது கண்பார்க்கும் வெளியிலேயே இல்லையே ஏன் எனப் புரியாமல் திகைத்தான்.

ஆதினியின் தோழிகளுக்கும் இது புரியவில்லை. பார்த்த கணம் முதல் பாரியை விட்டு அகலாத ஆதினியின் கண்கள் இப்பொழுது அவனிருக்கும் திசைப்பக்கமே திரும்ப மறுப்பது ஏன் என்று அவர்களுக்கும் புரியவில்லை. சாணைக்கல்லை அரக்கோடு கலந்து பேருருளைகளாகச் செய்து காயவைப்பதைப்பற்றி மேழகன் விளக்கினான். பாரி அதைப் பார்த்துக்கொண்டுதானிருந்தான். ஆனால், கல்லும் அரக்கும் ஒட்டாமலிருக்கும் துயரம்தான் அவன் மனதில் இருந்தது.

சாணைக்கல் காய்வதற்கு நாள்கள் ஆயின. அதுவரை காத்திருந்தனர். ஆனால், பாரியால் ஆதினியின் புறக்கணிப்பைப் புரிந்துகொள்ளவும் முடியவில்லை, தாங்கிக்கொள்ளவும் இயலவில்லை. அவளுடன் இருந்த தோழிகளுக்கும் விளங்கவில்லை.



அன்று காலை வாரிக்கையனும் கூழையனும் உடன் வந்தவர்களை அழைத்துக்கொண்டு மருத்துவக்குடில் நோக்கிப் புறப்பட்டுப் போனபொழுது பாரி மட்டும் போகாது தனித்திருந்தான். இன்று ஆதினியைக் கண்டுபேசுவது என முடிவோடிருந்தான். சிற்றோடைக்கரையிலிருந்த செண்பகமரத்தின் அடியில் அவள் அமர்ந்திருந்தாள். தனித்திருந்தவளின் முகத்தில் கவலையின் கீற்று தென்பட்டது.

குழப்பத்தின் பிடியிலிருந்த பாரி அவள் முன்னர் வந்து நின்றதும், பேச ஏதுமற்ற அவள் புறப்பட ஆயத்தமானாள். மறித்த பாரி, “என்னை விட்டு அகல்வதன் காரணமென்ன?” எனக் கேட்டான்.

நிமிர்ந்து பாரியின் கண்களைப் பார்த்தாள் ஆதினி. பார்வையின் பொருள் அவனுக்குப் புரியவில்லை.

அவள் சொன்னாள், “பறம்பின் தலைவன் நான் நினைத்ததுபோல் இல்லை.”

அதிர்ந்தான் பாரி. அவள் எதன் பொருட்டு இவ்வார்த்தையைப் பயன்படுத்துகிறாள் எனப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை இவள் தந்தையிடம் சாணைக்கல் வேண்டும் என உதவிகேட்டதால் இப்படி எண்ணுகிறாளோ என்று தோன்றியது. இதில் தவறொன்றும் இல்லையே; வேளிர்குலம் தங்களுக்குத் தேவையானதைக் கொடுத்து மாற்றிக்கொள்ளும் பழக்கம் எப்பொழுதும் உள்ளதுதானே. இதற்கு ஏன் இப்படி நினைக்க வேண்டும் என்று எண்ணியபடி அவளைப் பார்த்தான். அவள் நேர்கொண்ட பார்வையைக் கீழிறக்காமலிருந்தாள்.

அவளின் உறுதி பார்வையின் கோணத்திலேயே வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. பாரியால் புரிந்துகொள்ள முடியவில்லை. “யான் செய்த பிழையென்ன?” என்று கேட்டான்.

“குலத்தலைவனுக்கு எது அழகு?”

“தன் குலம் காக்கும் துணிவும் வீரமும்.”

“அவை இரண்டும் இருப்பதால்தான் அவன் தலைவனாகிறான். ஆனால், அவனுக்கு அழகு சேர்ப்பது அவற்றையும் மீறிய பண்புகள்தானே?”

இது கேள்வியல்ல; விடை. ‘நான் பண்புபாராட்டுவதில் குறையேதும் வைத்தேனா?’ என்று மனதுக்குள் எண்ணத் தொடங்கியபொழுதே, குரலின் வீரியம் குறையத்தொடங்கியது. சிறு செருமல்கொண்டு நிலைமையைச் சமாளித்தபடி பாரி கேட்டான். “நீ கண்டறிந்த குறையைத் தயக்கமின்றிச் சொல்.”

“குறையைச் சொல்வதில் எனக்குத் தயக்கமில்லை. ஆனால், சொல்லும் உரிமையில்லாததே எனது தயக்கத்துக்குக் காரணம்.”

“நீ மயில்கொன்றைக்கு மாலையிட்டபொழுதே மன அளவில் நாம் உரிமைகொண்டுவிட்டோம். பின் ஏன் தயங்குகிறாய்?”

ஆதினிக்குச் சற்றே அதிர்ச்சியாக இருந்தது. பொதினியின் வழக்கத்தை அதற்குள் பாரி அறிந்துகொண்டானே என்று தோன்றியது.

“பறம்பின் தலைவன் வந்துள்ளான் என அறிந்ததிலிருந்து எனது மனம் நிலைகொள்ளவில்லை. வேளிர்கூட்டத்தின் இணையற்ற வீரனாக உம்மைப் பற்றிய கதை காடெங்கும் பரவிக்கிடக்கிறது. உன்னைப் பார்க்காமலே நான் காதல்கொண்டு கிடந்தேன். உனது வருகை, நான் காதல்கொண்டு நீண்ட நாள்களுக்குப் பின்னர்தான் நடந்தது” என்றாள்.

பாரி வியப்புற்றுக் கேட்டுக்கொண்டிருந்தான்.

“ஆனால்…” சொல்ல சற்றே தயங்கினாள்.

பாரி அவளது வார்த்தையைக் கூர்ந்து கவனித்தான்.

“பொதினிமலை வருகிறவர்கள் தம் குலங்காக்க மருத்துவ உதவியைத்தான் கேட்பார்கள். நீயோ ஆயுத உதவியைக் கேட்டாய். என்னால் அதனை ஏற்க முடியவில்லை.”

ஆதினி கூறிய பிறகு பாரியின் மனவழுத்தம் சற்றே குறைந்தது. அவன் சொன்னான், “வேளிர் கூட்டத்தில் மருத்துவ அறிவில் உச்சங்கொண்டவர்கள் பொதினிமலை வேளிர்களே என்பதை நான் அறிவேன். ஆனால், எங்களுக்குத் தேவையானதைத்தானே நாங்கள் கேட்க முடியும்.”

மறுமொழி ஆதினியை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. “தங்களுக்கு என்ன தேவை என்பதையே

அறியாமல் குலத்தலைவன் எப்படி இருக்க முடியும்?”

ஆதினியின் சொல் கடுந்தாக்குதலாக இருந்தது. எதன் பொருட்டு இவ்வார்த்தைகளைப் பயன்படுத்துகிறாள் என்பது பாரிக்குப் புரியவில்லை. “பறம்பின் தேவைகளை நான் அறியவில்லை என்றா சொல்கிறாய்?”

கேள்வியைப் பாரி முடிக்கும் முன் ஆதினி சொன்னாள் “ஆம்.”

மீண்டும் அதிர்ந்தான் பாரி. ‘பறம்புநாட்டைப் பார்த்தறியாதவள் பறம்பின் தேவையை நான் அறியவில்லை என்று எப்படிச் சொல்லமுடிகிறது?’ அதிர்ச்சியும் ஆவேசமுமாக மாறியது மனம்.

சற்றே மனதை அமைதிப்படுத்தியபடி பாரி சொன்னான், “நீ பறம்பை அறியாதவள். பறம்பும் தேர்ந்த மருத்துவக்குடிகளைக் கொண்டதுதான். எனவே எங்களுக்கு அது சம்பந்தமான தேவையெதுவும் எழவில்லை. எனவேதான் நாங்கள் மருத்துவ உதவி எதுவும் கேட்கவில்லை. சாணைக்கல்...” என்று பாரி பேசிக்கொண்டிருக்கும்பொழுது கையை உயர்த்தி, பேச்சை நிறுத்தச்சொன்னாள் ஆதினி.

அவள் பார்வையில் இருந்த அழுத்தமும் கையை உயர்த்திய வேகமும் இடைவெளியின்றி நிறுத்தியது பாரியின் சொற்களை. பாரி விழி அசையாமல் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

ஆதினி சொன்னாள், “மருத்துவத் தேவை எதுவுமில்லாத ஒரு குலம், தன் குல ஆசானின் மூன்று மகன்களையும் ஆட்கொல்லிமரத்துக்கு சாகக்கொடுப்பானேன்?”

ஒற்றைக் கேள்வியால் பாரியை இருகூறாகப் பிளந்தாள் ஆதினி.

தொலைவில் கூழையனும் வாரிக்கையனும், பிரண்டை தேய்த்த சிரட்டையையும் பூனை வணங்கியையும் பார்த்துவிட்டு, பாரியை நோக்கி வந்தனர். அவர்கள் வருவது அறிந்த ஆதினி அவ்விடம் விட்டு நகர்ந்தாள். உறைகல்லென நிலைகொண்டிருந்த பாரியைப் பார்த்த வாரிக்கையனும் கூழையனும் திகைத்து நின்றனர்.

பாரியின் அதிர்ச்சி கலைய நாளானது. சாணைக்கல் காய்ந்துகொண்டிருந்தது. செங்காற்சேவல் விருந்து நாள்தோறும் நடந்தது. பாரி அதன்பின் ஒவ்வொன்றாக அறியத் தொடங்கினான். ஆட்கொல்லி மரத்தின் அருகிற்செல்லப் பொதினி மருத்துவர்கள் வழிகண்டுள்ளனர் என்பது பிறகுதான் தெரியவந்தது. சேராங்கொட்டை விதையுடன் மூன்றுவிதமான மூலிகைகளை அரைத்து உடலெங்கும் தேய்த்துக்கொண்டால் அதனருகில் சென்றுவரலாம் என்று சொன்னார்கள். சரி, இவ்வளவையும் தேய்த்து அதனருகில் செல்லவேண்டிய தேவை என்ன என்று கேட்டபொழுது, அதற்கு அவர்கள் சொன்ன காரணம் பேரதிர்ச்சிக்குள்ளாக்கியது. பொதினிவாழ் வேளிர் கூட்டத்தின் மருத்துவ அறிவு எவ்வளவு உச்சங்கொண்டிருக்கிறது என்பதைப் பாரியால் அப்பொழுதுதான் முழுமையாகப் புரிந்துகொள்ள முடிந்தது.

செம்மாஞ்சேரலுடன் போரிட்டு அடைந்த வெற்றி மட்டுமன்று, தேக்கனின் மகன்களை ஆட்கொல்லி மரத்துக்குச் சாகக்கொடுத்ததுகூடக் கதைகதையாய் மலையெங்கும் பரவிக்கிடக்கிறது என்பதும் பாரிக்குப் புரிந்தது.

வந்த புதிதில் சாணைக்கல்லைப்பற்றியே கேட்டுக்கொண்டிருந்த பாரி, இப்பொழுது ஆட்கொல்லி மரத்துக்கான மருத்துவத்தையே கேட்டுக்கொண்டிருக்கிறான் என்பதை மேழகன் கவனித்தபடி இருந்தான். வேளிர் கூட்டத்தோடு ஒருமாற்றுச் செய்யலாம் என்பது முன்னோர் வாக்கு. ஆனால், பாரி இருபொருள் கேட்பானோ என்று தோன்றியது.

சாணைக்கல் அரக்கோடு காய்ந்து இறுகப்பற்றி வட்டவடிவ உருளையாக மாறியது. நாளை அதனை எடுத்துப் பயன்படுத்தலாம் என்று மேழகன் சொன்னபொழுது பாரி சொன்னான், “எனக்கு சாணைக்கல் தேவையில்லை.”

இது மேழகன் எதிர்பார்த்ததுதான். சாணைக்கல்லுக்கு மாறாக ஆட்கொல்லி மரத்துக்கான மருந்தினைக் கேட்பான் என்று முன்கூட்டியே நினைத்திருந்தான். “ஆனால், அம்மருந்தினை இனிமேல்தான் உருவாக்கவேண்டும்” என்றான்.

“நான் அம்மருந்தினைக் கேட்கவில்லையே” என்றான் பாரி.
மேழகன் அதிர்ந்தான். “சாணைக்கல்லும் வேண்டாம், ஆட்கொல்லி மரத்துக்கான மருந்தும் வேண்டாம் என்றால், உனக்கு என்ன வேண்டும்?” என்று கேட்டான்.

“அதனை ஆதினியிடம் கேட்டுக்கொள்ளுங்கள்” என்றான் பாரி.

மேழகனுக்கும் புரியவில்லை உடனிருந்த வாரிக்கையனுக்கும் புரியவில்லை. சற்றே குழப்பத்தோடு மகளிடம் போய்க் கேட்டான் மேழகன், “பாரிக்கு என்ன வேண்டும்?”

“இதனை ஏன் என்னிடம் வந்து கேட்கிறீர்கள்?”


“பாரிதான் உன்னிடம் கேட்கச் சொன்னான்.”

‘பறம்பின் தேவையை என்னைவிட நீதான் அதிகம் புரிந்திருக்கிறாய். இப்பொழுது சொல் நான் எதைக் கேட்கவேண்டும்?’ என்று பாரி காதோடு கேட்கும் குரல் அவளுக்குள் எதிரொலித்தது.

உள்ளுக்குள் ஓடிய சிரிப்பை மறைத்தபடி ஆதினி சொன்னாள், “மணவிழாவுக்கு ஏற்பாடு செய்யுங்கள் தந்தையே.”

மேழகனுக்குப் புரியவில்லை. “பறம்பின் தேவை என்ன என்றுதானே உன்னைக் கேட்கச் சொன்னான்?”

“ஆம். பறம்பின் தேவை நான்தான். அதை நான் சரியாகக் கணிக்கிறேனா என்பதை அறியவே பாரி உங்களை அனுப்பியுள்ளான்.”



மேழகனுக்கு இப்பொழுதும் புரியவில்லை. ஆதினி மீண்டும் சொன்னாள், “என்னை வைத்தே என்னைக் கணிக்கும் ஒரு விளையாட்டைப் பாரி விளையாடுகிறான். அதுமட்டுமன்று, பறம்புமீதான எனது அக்கறையைக் காதல்கொண்டு உரசிப்பார்க்கிறான். சாணைக்கல்லில் இரும்பைக் கூர்தீட்டிப் பார்ப்பது இதுதான் தந்தையே.”

ஆதினி சொல்வது விளங்குவதுபோல இருந்தது. ஆனாலும் காதலின் ஆழத்தை அடுத்தவர் விளங்கிக்கொள்ளுதல் எளிதன்று. நிலைமையைச் சமாளித்தபடி மேழகன் சொன்னான், “நீ கடந்த சிலநாள்களாக அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் இருந்ததால், உனக்கு அவனைப் பிடிக்கவில்லையோ என்று நினைத்துவிட்டேன்.”

“இவ்வளவு ஆற்றலும் அழகுங்கொண்ட காதலனைப் பார்த்துக்கொண்டே விலகி நடப்பதைவிட, பார்க்காமல் திரும்பி நடப்பதுதான் உயிர்வாழ்வதற்கான சிறந்தவழி.”

அதன் பிறகு மேழகன் பேசவில்லை.

மணவிழாவுக்கு வரச்சொல்லி எவ்வியூருக்கு வீரர்களை அனுப்பிவைத்தான் வாரிக்கையன். நான்கு அருவிகளையும் எட்டு முகடுகளையுங்கடந்து பாய்ந்து சென்றது காதலின் கதை. பொதினியின் மகிழ்வுக்கு அளவேதும் இல்லை. விருந்து நாள்தோறும் நடந்தது. பறம்போடு மணவுறவு காண்பது வேளிர் குலப்பெருமை என ஊரே மனம் நெகிழ்ந்து கொண்டாடியது.

இறைச்சிகளின் சுவை சுனைநீரின் கலவையோடு இணைந்தது. இவ்விருந்தில் பரிமாறப்படும் இறைச்சிகள் இவ்வளவு சுவையோடு இருப்பதற்குச் சுனை நீர் முக்கியக் காரணம். இடிவிழுந்து பாறைகள் பிளவுறுதல் ஒவ்வோர் ஆண்டும் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. ஆனால், பாறையின் பிளவுகளின் ஊடே உருவாகும் புதிய சுனைநீர் கடினத்தன்மை கொண்டிருக்கும். ஆழப்புதைந்த இடியில் உருவான நிலவுப்பு நீரிற்கலந்து சில மாதங்களாவது வந்துகொண்டே இருக்கும். அந்நீரில் வேகவைக்கப்படும் இறைச்சி இணையற்ற சுவைகொண்டிருக்கும். விழுந்த இடியின் நாட்கணக்கும் பிடிபட்ட விலங்கின் வயதுக்கணக்கும் இணைந்துதான் இலையில் விருந்தாகிறது.

இயற்கையின் வெவ்வேறு ஆற்றலை உணவாகச் சமைக்கத்தெரிந்ததுதான் மனிதனின் மகத்தான கண்டுபிடிப்பு. பொதினி மக்கள் இறைச்சி தொடங்கி இடி வரை பலவற்றைச் சமையலுக்குப் பயன்படுத்தினர். மண்ணும் தாதுக்களும் என்னவெல்லாம் செய்யும் என்பதில் இவர்களுக்கிருக்கும் ஆற்றல் இணைசொல்ல முடியாதது.

புதிய இடியூற்றின் சுனைநீர்கொண்டே விருந்துக்கான இறைச்சி ஏற்பாடானது. வாரிக்கையனும் உடன்வந்த எவரும் எதனையும் விட்டுவைக்காமல் விருந்தை உண்டு மகிழ்ந்தனர்.

பொதினியின் ஐஞ்சுவைக்கள்ளுக்குள்ள குணம் தனிதான். அதனை விளக்கியபடியே மேழகன் சொன்னான், “ஆதினி மயில்கொன்றை மரத்துக்கு மாலையிட்ட அன்றே இத்திருமணம் முடிவாகிவிட்டது.”
சின்னதாய்ச் சிரித்தான் வாரிக்கையன்.

“ஏன் சிரிக்கிறீர்கள்?” எனக் கேட்டான் மேழகன்.


“அதற்கு முன்பே முடிவாகிவிட்டது” என்றான் வாரிக்கையன். மேழகனுக்குப் புரியவில்லை.

“பறம்பின் ஆதிக்கள்ளான ஆலம்பனைக்கள்ளை மணவுறவுக்காக மட்டுமே கொடுக்கும் பழக்கம் எங்களுடையது” என்றான் வாரிக்கையன்.

“அப்படியென்றால் நீங்கள் சாணைக்கல்லுக்காக வரவில்லையா?”

“சாணைக்கல்லுக்கு மட்டுமென்றால் பாரி ஏன் வரவேண்டும், நாங்கள் மட்டும் போதாதா?”

“பாரி அறிந்துதான் வந்தானா?”



சிரித்தபடி வாரிக்கையன் சொன்னான், “நாங்கள் யாரும் அறியமாட்டோம் என்று நம்பி வந்தான். அவன் அப்பனுக்கே மணமுடித்துவைத்தவன் நான். என்னிடமே விளையாடுகிறான்” என்றான்.

“உங்களுக்கே இந்தச் செய்தி தெரியாதா?”

“சாணைக்கல்லைப்பற்றிச் செய்தி சொன்ன முதுபாணனிடம் இவன் அதிகம் வினவியது ஆதினியைப் பற்றித்தான்.”

“அப்படியா?” எனக் கேட்டான் மேழகன்.

“இடிநீரில் இறைச்சியைச் சேர்க்கும் உங்களுடைய அறிவைப்போலத்தான் ஆயுதத்தோடு ஆதினியைச் சேர்த்தான் பாரி.”

மேழகன் வியப்பிலிருந்து மீள நேரமானது.



குன்றின் சிறுபாறை முனையில் அமர்ந்திருந்தான் பாரி. அவனது தோளிலே சாய்ந்திருந்தாள் ஆதினி. கும்மிருட்டு நிலைகொண்டிருந்தது. 'பாறையின் முகப்பில் ஏன் அமரவைத்திருக்கிறாள். ஏதாவது காரணமிருக்கும்' என்று சிந்தித்தபடியிருந்தான். இருளுக்குள்ளிருந்து முழுநிலவு மேலேறி வரும் நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது.

பற்றிய தோளிலிருந்து முகம் விலக்காமல் ஆதினி கேட்டாள், "எதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்?"

மெல்லிய குரல் மேலெழுந்து வந்தது, "குலத்தின் தலைவனுக்கு எது அழகு?"

ஆதினி இதனை எதிர்பார்க்கவில்லை. விடைசொல்ல வாயெடுத்தவள் சற்றே அமைதியானாள்.

"ஏன் விடைசொல்ல மறுக்கிறாய்?"

"அழகான தலைவன் தன் குலத்தோடு சேர்த்த பிறகு நான் சொல்ல என்ன இருக்கிறது?" சொல்லி நிறுத்திய ஆதினி அசைவற்று அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"காதலியிடம் கற்றுக்கொள்ளும் சுகம் ஆணுக்கு வாய்ப்பது அரிது. நீ எனக்கு என்னுடைய அறியாமையைக் காண்பித்தாய். என்னுள் புகும் உனது ஆற்றல் என்னைத் திகைக்கச்செய்துவிட்டது."

ஆதினி சொன்னாள். "என்னுள் புகும் உனது ஆற்றல் என்னை என்ன செய்கிறது தெரியுமா?"

பாரி மெல்ல தலையசைத்து, "தெரியவில்லை" என்றான்.

அவன் தோள் தழுவிய கையைச் சற்றே மேல் நகர்த்தி "இந்த அறியாமைதான் பேரழகு" என்றாள்.

இமைகள் மூடத்தலைப்பட்டபொழுது உச்சிமலையிலிருந்து பெருங்காற்று வீசி இறங்கியது. எதிர்ப்புறக் குன்றின் பின்புறத்திருந்து முழுநிலவு மேலெழ மஞ்சள் ஒளியில் மரங்களின் நுனியிலைகள் கூசிச் சிலிர்த்தன. மயங்கிய பாரி இயற்கையின் பேரழகை விஞ்சும் ஆற்றல் தனது கன்னத்தை ஏந்தி நிற்கும் கைகளுக்கு இருக்கிறதோ என நினைத்துக்கொண்டிருக்கையில் ஆதினி சொன்னாள், "கண்களை மூடுங்கள். உலகின் பேரழகைக் காட்டுகிறேன்."

அவள் சொல்லியவிதமே பெருமயக்கத்தை ஊட்டியது. என்ன செய்யப்போகிறாள் என அறியும் ஆவலில் கண்களை மூடினான். இவ்வளவு பொழுதும் தனது உடலோடு ஒட்டியிருந்த அவள் தன்னை விட்டு விலகுகிறாள் என்பதை உணர்ந்தபடியே இருந்தான் பாரி.

சிறிதுநேரம் எதுவும் சொல்லாமல் இருந்தாள். பாரியின் எண்ணங்கள் எங்கெங்கோ போய்த் திரும்பின.

"இப்பொழுது கண்களைத் திறங்கள்" என்றாள்.

பாரி மெல்ல கண்களைத் திறந்தான். எதிரில் ஆதினி நின்றுகொண்டிருந்தாள். சிறு புன்னகையோடு அவனையே பார்த்துக் கொண்டிருந்த அவள் வலப்புற மலையுச்சியைக் கைகாட்டி, “அங்கே பாருங்கள்” என்றாள்.

பாரி திரும்பிப்பார்த்தான். நிலவொளியில் மலையுச்சியைப் பார்த்துக்கொண்டிருக்கையில் ஏதோவொரு வேறுபட்ட தன்மையை உணர்ந்தான். என்னவென்று புரியவில்லை. காற்று வீசிக்கொண்டிருந்தது. கணநேரத்துக்குள் நூற்றுக் கணக்கான சிறகுநாவற்பழங்கள் மலையுச்சியிலிருந்து காற்றில் மிதந்து வந்துகொண்டிருந்தன. இமைக்காமல் பார்த்தான் பாரி. அலையலையாய் அந்த அதிசயம் வந்திறங்கியது.

உச்சிமலையில் எட்டிப்பார்க்கும் நிலவுக்குள்ளிருந்து கருநீலப்பொன்வண்டு காற்றெங்கும் மிதந்தபடி பாரியை நோக்கி வந்தது. நம்பமுடியாத காட்சி வானம் முழுவதும் வந்துகொண்டிருந்தது. கணநேரத்தில் கிறுகிறுத்துப்போனான்.

மலையுச்சியிலிருக்கும் சிறகுநாவற் காட்டிற்கு நேர்கீழாக இருப்பதுதான் பொதினிக் குன்று. உட்கார்ந்திருக்கும் இந்தப் பாறைமுனை இன்னும் துல்லியமானது.

விரிந்த ஈரிலையால் மிதந்துவரும் நாவலை அவனது கை எட்டிப்பிடிக்கும்பொழுது, விலகியிருந்த ஆதினி அருகில்வந்து கட்டிப்பிடித்தாள். ஈரிலைகொண்டு இருவரையும் மூடின சிறகுநாவல்கள்.

கண்திறக்கவும் முடியாமல் மூடவும் முடியாமல் அவன் தவித்தபொழுது துவர்ப்பின் சுவையை அவனுக்கு ஊட்டத்தொடங்கினாள் ஆதினி. நாவற்பழத்தின் சாறு உள்ளிறங்கியது. பறப்பதற்கு ஈரிலைகூடத் தேவையில்லை, ஈரிதழே போதும்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-59




பறம்பின் தலைவனுக்கு ஆதினியை மணமுடித்து எவ்வியூருக்கு அழைத்துவந்தனர். கொண்டாட்டங்களும் கூத்துகளும்தாம் எத்தனை வகை! விருந்துகளும் விளையாட்டுகளும் முடிந்தபாடில்லை. பொதினிவாழ் வேளிர்கள், இயற்கையின் அதிநுட்பங்கள் பலவற்றைக் கண்டறிந்தவர்கள்; தாதுக்களையும் உலோகங்களையும் நுட்பமாக அவதானித்த மாமனிதர்கள். அந்தக் குலமகள், பறம்புத் தலைவனை மணந்து எவ்வியூர் புகுந்தாள்.

மணமுடித்துச் செல்லும் குலமகளோடு பதினெட்டுக் குடிகளை அனுப்பிவைப்பது பொதினி வேளிர்களின் குலமரபு. பச்சிலை, தாதுக்கள், உலோகங்கள், உடற்கூறுகள் எனப் பலவற்றிலும் தேர்ந்த பதினெட்டு மருத்துவக்குடிகளை உடன் அனுப்பிவைத்தான் மேழகன். மதிப்பிட முடியாத மனிதச் செல்வங்களோடு ஆதினி எவ்வியூருக்குள் நுழைந்தாள்.

பொதினி, மலையடிவாரத்து ஊர். எவ்வியூர் பச்சைமலையின் உச்சியில் நிலைகொண்டுள்ள ஊர். மேகத்துக்குள் வாழ்வதுபோலவே எவ்வியூரின் பகற்பொழுது இருக்கும். நழுவி நகரும் மேகங்களுக்குள் கூந்தல் பறக்க ஓடவேண்டும் என்று ஆசை தோன்றியது ஆதினிக்கு. தான் ஒன்றும் குழந்தை அல்லள் என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டாள். மரங்களின் எல்லா இலைகளின் மீதும் நீர் தேங்கியிருப்பதைப் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

``ஆண்டின் பெரும்பான்மையான மாதங்களில் உலராத ஈரத்தோடுதான் இலைகள் இருக்கும்” என்றான் பாரி.

இயற்கையின் குளுமையைவிட ஆதினியின் ஆழ்மனம் அதிகம் குளிர்ந்திருந்தது. மேல்மாடத்தில் நின்று இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். மாடத்துக்குள் மலர்ப்படுக்கையை ஆயத்தம்செய்யும் பணி நடந்துகொண்டிருந்தது. எவ்வியூர்ப் பெண்கள் பொதினிக்குச் சென்ற அன்று மாலைதான் மணவிழா நடந்தது. அன்று இரவு பாரிக்கும் ஆதினிக்கும் தலைநாள் இரவு. பொதினியின் குலவழக்கப்படி குலசடங்குகளைச் செய்தனர்.

இரவு மலர்ப்படுக்கை ஆயத்தமானது. படுக்கையின் நடுவில் ஆவாரம்பூவின் இதழ்களைப் பரப்பியிருந்தனர். அது மஞ்சள் நிறத்திலானது. அதை அடுத்து அத்திப்பூவின் நீல நிறத்தாலான வளைந்த கோடுகளை உருவாக்கியிருந்தனர். மூன்று கோடுகளைச் சுற்றி வெண்டாழையின் வெண்மை பரவிக்கிடந்தது. அதன் விளிம்புப் பகுதியில் செந்தாழையின் சிவப்பு அணிவகுத்திருந்தது. அது ஒரு மாயப்படுக்கையைப்போல வண்ணத்திலும் மணத்திலும் பெருமயக்கத்தை உருவாக்குவதாக இருந்தது.

அது பொதினியின் பூப்படுக்கை என்றால், எவ்வியூரின் மலர்ப்படுக்கை வேறுவிதமாக இருந்தது. ஐவண்ணக் குறிஞ்சியினால் படுக்கையை ஆயத்தம் செய்தனர். பல்லாண்டுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி, பச்சைமலையின் எத்திசையில் எல்லாம் பூத்துக்கிடக்கிறது என்பதை அறிந்து எல்லாவற்றையும் கொண்டுவந்து சேர்த்தனர். பொன்வண்ணக் குறிஞ்சியின் மஞ்சள் இதழ்களைப் படுக்கையின் நடுவில் விரித்தனர். பச்சைமலையின் வடகோடியில் மட்டுமே பூத்துள்ள மழைவண்ணக் குறிஞ்சியின் நீலநிற இதழ்கொண்டு நடுவிலிருந்த மஞ்சளைச் சுற்றி அழகிய வட்டம் அமைத்தனர். பவளக்குறிஞ்சியின் செம்மை நிற இதழ்களையும், பெருங்குறிஞ்சியின் வெண்மை நிற இதழ்களையும் மாற்றி மாற்றி அடுக்கினர். ஒரு சுடர் படபடத்து எரிவதைப்போன்ற ஒரு தோற்றம் கொள்ளச்செய்தது. வாடாக்குறிஞ்சியின் செந்நீல இதழ்களை விளிம்பெங்கும் வரிசைப்படுத்தினர்.

குறிஞ்சி காமத்துக்கான பூ. அதன் மணமும் வண்ணமும் கணநேரத்தில் மனித ஆழ்மனத்தைத் தன்னகப்படுத்திக்கொள்ளும். குறிஞ்சி பூக்கத் தொடங்கினால் காடு முழுவதும் பூக்கும். காமத்தின் தன்மையும் அதுதான். கால்விரல் நுனியிலிருந்து நெற்றியில் சுருண்டுகிடக்கும் கூந்தல் வரை எல்லாவற்றிலும் காமத்தீ இணையாகப் பற்றும். பற்றியெரியும்போது மிச்சமின்றி எரியும் தீ அது. மொத்தக் காடும் எரிவதைப்போலத்தான் இருக்கும் குறிஞ்சி பூக்கும் காலம். அதுதான் காமத்தின் காலம். காத்திருந்து எரிந்து காலகாலத்துக்கு மணக்கும்.

படுக்கையின் தன்மைக்கு ஏற்ப அதுவே மணத்தை அறையெங்கும் நிரப்பியிருக்கும். மாலை நேரத்துக் கதிரவன் ஒளி மங்க, சிறிது நேரமே இருந்தது. சட்டென ஒரு சிந்தனை தோன்றியது பாரிக்கு. ஆதினியை அழைத்துக்கொண்டு மாடத்தை விட்டுக் கீழிறங்கி வந்தான். மாடத்தின் வெளிப்புறத்தில் புதிதாகச் செய்யப்பட்ட தேர் நின்றிருந்தது. குதிரைகளை அதில் பூட்டச் சொன்னான். வீரர்கள் குதிரைகளைப் பூட்டினர். ஆதினியைத் தேரில் அமரவைத்து பாரி தேரை ஓட்டினான்.

வீரர்களும் மற்றவர்களும் பார்த்திருக்க, நாகப்பச்சை வேலியைக் கடந்து தேர் வெளியேறிப் போனது. எங்கே போகிறான் என யாருக்கும் தெரியாது. `ஆதினியைத் தேரிலே உட்காரவைத்து, சுற்றிக்காண்பித்து வருவான்' என நினைத்தனர்.

ஆதினி இதுவரை தேர்ப்பயணம் செய்ததில்லை. மாலை நேரத்துச் சுருங்கும் ஒலியும், சீறிப்பாயும் தேரின் ஓசையும், மலை மடிப்புகளின் இளம்பச்சையும் காணக்கிடைக்காத காட்சியாக இருந்தது. அவளது முகம், இயற்கையின் ஆதிச்சுவையை உணர்ந்துகொண்டிருந்தது. முறையான பாதைகள் உருவாக்கப்படாததால் வேகத்தைக் குறைத்து, தேரை மெதுவாக ஓட்டினான். தேர் சென்றுகொண்டே இருந்தது. கதிரவன், ஒளி சிறுத்து அணைய ஆயத்தமாகிக்கொண்டிருந்தது. மலை உச்சியில் ஒளி அகலுதல், விளக்கை ஊதி அணைப்பதைப்போலச் சட்டென நிகழ்ந்துவிடும். ஆனாலும் தேரைத்

திருப்பாமல் முன்னோக்கி ஓட்டிச்சென்றான் பாரி. ஆதினி எதுவும் கேட்கவில்லை.

மலைமுகட்டோரம் போய் தேர் நின்றது. வண்டியிலிருந்து இறங்கிய பாரி, ஆதினி இறங்க உதவி செய்தான். சற்றே சிந்தித்தபடி நின்றவன், தேரிலிருந்து குதிரைகளைக் கழற்றி விட்டான். அவன் என்ன செய்யப்போகிறான் என்பதை ஆதினியால் கணிக்க முடியவில்லை.

``உன்னை ஓரிடத்துக்கு அழைத்துச் செல்கிறேன் வா” எனச் சொல்லி, மலைமுகடு நோக்கி நடந்தான். ஒளி முற்றிலும் அகன்று இருள் கவிந்துவிட்டது. அவனைப் பின்பற்றி நடந்தாள் ஆதினி.

``குதிரைகளை அப்படியே விட்டுவிட்டு வந்திருக்கிறீர்களே, காட்டுக்குள் ஓடிவிடாதா?”

``போகாது. இந்த மேட்டில் மட்டுமே முயற்புல் இருக்கிறது. அதற்கு மிகப் பிடித்த உணவு அதுதான். இந்த இடம் விட்டு எளிதில் அகலாது.”

``அப்படியா!” எனக் கேட்டபடி நடந்தாள். இருள் முழுமையாக நிலைகொண்டுவிட்டது. முகட்டை அடைந்ததும் மலையின் சரிவை நோக்கி இறங்கத் தொடங்கினான்.

``கால்களை கவனமாக எடுத்து வை” என்றான்.



நீருக்குள் மூழ்கும்போது உள்ளே போகப் போக அடர்ந்த ஓசை பெருகிவந்து காதடைக்குமே, அப்படித்தான் காட்டின் ஓசையும். நேரம் ஆக ஆக இருள் அடரோசையாக மாறிக் கொண்டிருந்தது.

சிறிதும் பெரிதுமான பாறைகளுக்கு நடுவில் ஆதினியைக் கவனமாக அழைத்துக்கொண்டு கீழிறங்கினான் பாரி.

இருளுக்குள் மீன்களைப்போல் மிதந்துகொண்டிருக்கும் செடிகொடிகளின் இலைகளைக் கையால் தட்டியபடி நடந்த ஆதினி கேட்டாள், ``எங்கே போகிறோம்?”

குறுக்கிட்டுக்கிடந்த மரக்கட்டையை அகற்றி ஆதினி நடப்பதற்கு வழி அமைத்தபடி பாரி சொன்னான், ``நீ பொதினி மலையின் பேரதிசயத்தை எனக்குக் காண்பித்தாய் அல்லவா, அதேபோல பறம்பின் அதிசயத்தை உனக்குக் காட்ட அழைத்துச் செல்கிறேன்.”

``அன்று முழுநிலவு நாள். சிறகுநாவல்பழங்கள் மிதந்துவந்ததைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. இன்று நிலவற்ற காரிருள் நாள். இந்தக் கும்மிருட்டில் எதைப் பார்க்க முடியும்?”

``பொதினியின் அதிசயத்தைப் பார்க்க நிலவின் ஒளி தேவைப்பட்டது. ஆனால், பறம்பின் அதிசயத்தைத் தெளிவாகப் பார்க்க ஒளியற்ற காரிருள்தான் தேவை.”

ஆதினிக்கு வியப்பும் ஆர்வமும் ஒருசேரப் பெருகின. `ஒளியற்ற இருளில்தான் தெளிவாகப் பார்க்க முடியும் என்றால், அது என்னவாக இருக்கும்?’ என்று சிந்தித்தபடியே நடந்தாள்.

நின்று பொறுமையாக வழிக்குறிப்புகளைக் கவனித்தபடி முன்நடந்தான் பாரி. இருளில் இறக்கத்தில் கால் எடுத்து வைப்பதில் கூடுதல் விழிப்பு உணர்வு தேவை. பாரி முன் நடப்பதால் பதற்றம் இல்லாமல் நடந்தாள் ஆதினி.

நேரம் கூடியது. இருளின் அடர்த்தி அதிகரித்துக்கொண்டிருந்தது. முன் நடக்கும் பாரியின் கை பற்றிக் கீழிறங்குவதும், தோள் பிடித்து நடப்பதுமாக ஆதினி வேறொரு விளையாட்டை விளையாடியபடி வந்துகொண்டிருந்தாள். ஆனாலும், என்னதான் காண்பிக்கப்போகிறான் என்பதைக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

``நீங்கள் காண்பிக்கப்போகும் பறம்பின் அதிசயம் என்னவென்று தெரிந்துகொள்ளலாமா?”

``கண் முன்னால் அதைக் காண்பித்துச் சொல்கிறேன். அப்போது அடையும் அனுபவத்தை ஏன் இழக்க வேண்டும்?”

பற்றிய தோளை ஆதினியின் கை இறுகப்பிடித்தது. கால்கள் தடுமாறுகின்றனவோ எனப் பாரி நின்றான். ஆதினி சொன்னாள், ``பறம்பின் பேரதிசயத்தோடுதான் நான் நடந்துகொண்டிருக்கிறேன். இந்த உணர்வு மற்ற எல்லாவற்றையும்விட மிக உயர்ந்தது. நான் புதிதாக எதையும் அடையப்போவதுமில்லை, இழக்கப்போவதுமில்லை. நீங்கள் தயங்காமல் சொல்லலாம்.”

அவளின் சொற்களுக்குள் இருந்த காதல், பாரியைக் கிறங்கச்செய்தது. பிடித்து இறங்க முடியாத பள்ளம்

இருந்தது. மிகப் பாதுகாப்போடு அவளைப் பிடித்து இறக்கினான். தோள் தொடுவதும் கை தொடுவதுமாகத்தான் இவ்வளவு நேரப் பயணம் இருந்தது. ஆனால், இந்தப் பள்ளத்தைக் கடந்தது அப்படியல்ல. கடக்க முடியாத பள்ளமாகப் பாரிக்குத் தோன்றியது. ஆதினியின் உணர்வோ அதையும் கடந்ததாக இருந்தது.

சற்றே கால் சரிந்து பாரியின் மேல் விழுந்தவளை, தூக்கி விலக்கி நிறுத்த முடியவில்லை பாரியால். அந்த இடைவெளி உருவானால்தான் நடக்க முடியும் எனத் தெரிந்தும் அதை உருவாக்குவது எளிதாக இல்லை. செங்குத்தாகச் சரிந்துகிடக்கும் மலைச்சரிவில், கும்மிருட்டில் கண்கட்டி விளையாடுவதுபோல காதல் விளையாடியது. பாரி சற்றே சிந்தித்து `இந்த விளையாட்டுக்குள் மனம் சிக்கிவிடக் கூடாது, கவனமாகக் காலடியெடுத்து வைக்கவேண்டும்' என நினைத்து நடந்தான்.

ஆதினிக்கு அதுவெல்லாம் இல்லை. பாரி மட்டுமே அவளின் பார்வையில் இருந்தான். முன் நடந்த பாரி சொன்னான், ``நான் காண்பிக்கப்போவதை, இதற்கு முன் மிகச் சில மனிதர்களே பார்த்திருப்பார்கள்.”

``அப்படியா!” என்றாள் ஆதினி.

``ஆம், அதன் பெயர் இராவெரி மரம்.”

ஆதினிக்கு சட்டெனப் புரியவில்லை. ``என்ன மரம்?”

``இராவெரி மரம். அதன் இலைகள் பகலிலே வாங்கிய ஒளியை இரவிலே உமிழும். பார்ப்பதற்கு எண்ணிலடங்காத சுடர்கள் எரியும் விளக்கைப்போல் இருக்கும்.’’

கிறங்கி நின்றாள் ஆதினி. ``என்ன சொல்கிறீர்கள்? அப்படியொரு மரம் இருக்கிறதா?”



``ஆம். மழைநீரை உள்வாங்கிய மண், ஊற்றாகக் கசியவிடுகிறதல்லவா. அதேபோல பகல் முழுவதும் ஒளியை உள்வாங்கி இரவு முழுவதும் வெளிச்சத்தைக் கசியவிடும். பார்ப்பதற்கு மரம் பற்றி எரிவதுபோல் இருக்கும்.”

சொல் கேட்டு நின்ற ஆதினியின் தோள் தொட்டான் பாரி. கனவிலிருந்து மீண்டவளைப்போல மீண்டாள்.

``இன்னும் எவ்வளவு தொலைவில் அந்த மரத்தைப் பார்க்கலாம்?”

``சிறிது தொலைவு இறங்கினால் சரிவுப்பாறைகள் முடிச்சிட்டதுபோல் கிடக்கும். அங்கிருந்து பார்த்தால், எதிரில் இருக்கும் மலைச்சரிவில் இராவெரி மரம் தெரியும்.”

ஆதினியால் ஆசையை அடக்க முடியவில்லை. ஒளிரும் மரத்தைப் பார்க்க வாய்க்கும் அந்தக் கணத்தை அடைய மனம் தவித்தது. ``இப்போதுதான் இன்னும் கவனத்தோடு நடக்கவேண்டிய இடம்.

எனவே பார்த்து வா” என்று சொல்லியபடியே நடந்தான் பாரி.


``நீங்கள் எப்போது அந்த மரத்தைப் பார்த்தீர்கள்?”

``காடறியப் பயணப்படும்போது. தேக்கன் காண்பித்தார்.”

``பல ஆண்டுகள் ஆகியிருக்குமே. அதன் பிறகு பார்க்கவில்லையா?”

``இல்லை. பகலில் அந்த மரத்தை நம்மால் கண்டறிய முடியாது. அந்த மரம் பகலில் எப்படி இருக்கும் என்று இன்று வரை யாருக்கும் தெரியாது. இரவு நேரத்தில் எதிர்க் குன்றில் நின்று பார்த்தால்தான் கண்டறிய முடியும். அதுவும் நிலவற்ற இதுபோன்ற காரிருள் நாளின் நள்ளிரவில்தான் நன்றாகக் காண முடியும். அதற்கான வாய்ப்பு இப்போதுதான் அமைந்துள்ளது” என்று சொல்லியபடி
அழைத்துச்சென்றான்.

சரிவுப்பாறைகள் முடிச்சிட்டதுபோல் திருகிக்கிடக்கும் இடம் வந்தது. அவற்றின் ஓரத்தில் நின்றபடி பார்த்தான், எதிரில் எதுவும் தெரியவில்லை. கும்மிருட்டாக இருந்தது. பாறையின் இன்னொரு முனையில் போய்ப் பார்த்தான். அப்போதும் எதிரில் மலைத்தொடர் தெரியவில்லை. தான் வந்தது சரியான பாதைதானா எனச் சிந்தித்தான். அந்த மலைச்சரிவில் இந்த இடம் மட்டும்தான் சரிவுப்பாறைகள் முடிச்சிட்டுக்கிடக்கும் ஒரே இடம். எனவே, தான் வந்துள்ளது சரியான இடம்தான் என்பதை முடிவுசெய்தபோதுதான் ஓர் உண்மை பிடிபட்டது.



ஆதினியிடம் சொன்னான், ``நாம் சரியான இடத்துக்குத்தான் வந்துள்ளோம். ஆனால், மேகக்கூட்டங்கள் இரு மலைகளுக்கும் இடையில் முழுமையாக இறங்கி நிற்கின்றன. அதனால் எதிரில் இருக்கும் மலைத்தொடர் நம் கண்களுக்குத் தெரியவில்லை.”
``ஆதினியின் முகம் சற்றே கவலையடைந்தது. அப்படியென்றால், நம்மால் இன்று பார்க்க முடியாதா?”

அவள் கேட்டுக்கொண்டிருந்தபோதுதான் பாரிக்குத் தோன்றியது. `இன்னும் சிறிது நேரத்தில் மழை வந்துவிடும். நாம் இருப்பது மிகவும் ஆபத்தான இடம். பெருமழை என்றால் சரிவுப்பாறையில் மழைநீர் எவற்றையெல்லாம் இழுத்துக்கொண்டுவரும் எனத் தெரியாது. நாம் உடனடியாகப் பாதுகாப்பான இடத்துக்குப் போயாக வேண்டும்’ என்று.

தொலைவில் இடியோசை கேட்டது. பாறையை இழுத்து அடிக்கையில் தோலின்மீது இருக்கும் தூசி அதிர்வதைப்போல மாமலை அதிர்ந்தது. பெருமின்னல் ஒன்று வெட்டி இறங்கியது. மொத்த மலைத்தொடரின் மீதும் ஒளியின் கண்திறந்து மூடியது.
சரிவுப்பாறையைக் கடந்து இடப்புறம் போவதுதான் பாதுகாப்பு எனக் கருதிய பாரி, ஆதினியின் கையைப் பிடித்துக்கொண்டு வேக வேகமாக நடந்தான். இவ்வளவு வேகமாக இருளுக்குள் நடப்பது சரியில்லை எனத் தோன்றியது. ஆனாலும் வேறு வழியின்றி நடந்தான்.

அடுத்தடுத்து மின்னல்கள் இறங்கத் தொடங்கின. மின்னல் ஒளியால் தென்பட்ட பாதையை வைத்து விரைந்து அழைத்துச்சென்றான். அவன் எண்ணிவந்ததுபோலவே பிளவுண்ட பாறைகளுக்கு நடுவில் பெருங்குகை ஒன்று இருந்தது. விரைந்து வந்து குகைக்குள் நுழைந்தனர்.

கொட்டும் மழையின் கொட்டம் தொடங்கியது. எங்கும் மழையின் பேரோசை, இடியால் நடுங்கியது காடு. ``உரிய நேரத்தில் குகைக்குள் அண்டியதால் ஆபத்திலிருந்து தப்பித்தோம். நாம் இருப்பது மலையின் சரிவான பகுதி. மேலேறவும் முடியாது; கீழிறங்கவும் முடியாது. இந்தப் பகுதியில் பாதுகாப்பாக அண்டுவதற்கு இந்த ஒற்றைக் குகை மட்டுமே உண்டு'' என்று பாரி சொல்லிக்கொண்டிருந்தான்.

காரிருளும் அடர்மழையும் சற்றே அச்சத்தை வரவைப்பனவாக இருந்தன. மின்னல்கள் இடைவெளியின்றி இறங்கிக்கொண்டிருந்தன. ஆனாலும் மின்னல் ஒளியில் குகையின் உட்புறத்தைப் பார்க்க முடியவில்லை. `எவ்வளவு உள்வாங்கிய குகை இது! இதற்குள் விலங்குகள் எதுவும் பதுங்கியிருக்குமோ?' என்ற எண்ணங்கள் தோன்றியபடி இருக்க, ஆதினி அமைதியானாள். இடுப்பில் இருக்கும் சிறு வாள் தவிர, பாரியிடம் வேறு ஆயுதங்கள் இல்லை என்பதையும் அவள் கவனித்தபடி இருந்தாள்.
மழையின் பேரோசை அடங்கும் வரை ஆதினியின் அமைதி நீடிக்கும் என்பதை உணர்ந்தான் பாரி. குகையின் நடுவில் இருந்த சிறுபாறையின் மீது ஆதினியைத் தோள் சாய்த்து உட்கார்ந்திருந்தான். இராவெரி மரத்தை ஆதினிக்குக் காட்ட வேண்டும் என்ற ஆர்வத்தில் மேகத்தின் தன்மையைக் கவனிக்காமல் இருந்துவிட்டோம் எனத் தோன்றியது. கவனித்திருந்தாலும் வராமல் இருந்திருப்போமா என்பது தெரியாது. காதல், இடிமின்னலுக்கு விலகி நடக்கத் தெரியாத உயிரினம் என்று மனதில் நினைத்தபடி உட்கார்ந்திருந்தான். ஒளியை உருவாக்க எந்த ஏற்பாடும் இல்லாமல் வந்துவிட்டோமே என்பதுதான் பாரிக்குக் குறையாகப் பட்டது.

நீண்டநேரம் கழித்து மழை நின்றது. அதன் பிறகுதான் நீரின் ஓசை மேலேறிவந்தது. காற்றெங்கும் ஈரம் மிதந்தபடி இருந்தது. குகையின் உள்ளொடுங்கித்தான் உட்கார்ந்திருந்தனர். ஆனாலும் நீர்த்தொட்டிக்குள் இருப்பதுபோலத்தான் இருந்தது. குளிர் நடுக்கியது. முகம் பார்க்க முடியாத கும்மிருட்டு. மழை பெய்யும் வரை விடாது வெட்டிய மின்னல் ஒளியில் அவ்வப்போது குகைக்குள் வெளிச்சம் தென்பட்டது. மழை நின்ற பிறகு, இருளின் அடர்த்தி மிக அதிகமானது. பாரியின் இடதுகையை இறுகப் பிடித்தபடி சாய்ந்திருந்தாள் ஆதினி.

பொழுதாகிக்கொண்டிருந்தது. `இந்நேரம் நள்ளிரவு கடந்திருக்கும்!' என்று நினைத்த பாரிக்கு,

முதன்முறையாக ஐயம் வந்தது. `பொழுது நள்ளிரவைக் கடந்திருக்குமா... இல்லையா... ஏன் குழப்பம்? ஆதினியின் பாதுகாப்புமீதே கவனம் குவித்திருந்த தால் பொழுதின் ஓட்டத்தைச் சரியாக மதிப்பிட முடியவில்லை. எப்படியோ, விடிந்த பிறகுதான் குகை விட்டு அகல முடியும். ஆதினியை இங்கேயே படுக்கச் சொல்லலாம். ஆனால், அவள் படுக்க மாட்டாள்' என்று எண்ணியபடியே இருந்தான்.

கும்மிருட்டின் அச்சம் எளிதில் மனம் விட்டொழியாது. அதுவும் உள்காட்டின் அடர்குகைக்குள். ஆதினிக்கு அவ்வப்போது எழும் ஐயமே, தான் கண்ணைத் திறந்திருக்கிறோமா... மூடியிருக்கிறோமா என்பதுதான். இரண்டுக்கும் எந்தவித வேறுபாடும் இல்லாத நிலையில் பாரியின் கையை இறுகப்பற்றுவதன்றி வேறு எதையும் கவனிக்க முடியவில்லை.
`எந்தச் சொல்கொண்டு இந்த அமைதியைக் கலைப்பது?' எனப் பாரி சிந்தித்துக்கொண்டிருக்கையில், குகையின் உள்ளடுக்கிலிருந்து சிற்றொளி வெளிப்பட்டது. அதை உணர்ந்த கணம், சட்டென குகையின் உட்பகுதியை நோக்கித் திரும்பினான் பாரி. தோளிலே சாய்ந்திருந்த ஆதினி திடுக்கிட்டு நடுங்கினாள். `உள்ளே இருப்பது விலங்கா... எந்த வகையான விலங்கு?' எதையும் கணிக்க முடியவில்லை. `சட்டென குகையை விட்டு வெளியே போய் நின்று அதை எதிர்கொள்வது பாதுகாப்பானதா? உள்ளேயே எதிர்கொள்வது பாதுகாப்பானதா?' பாரியால் முடிவெடுக்க முடியவில்லை.


ஒளியின் அளவு கூடிக்கொண்டே இருப்பதுபோல் தெரிந்தது. ஒளியின் தன்மை எதையும் கணிக்க முடியாததாக இருந்தது. `பரவும் ஒளிக்குப் பின்னால் இருப்பது பாறையா... இருளா? அல்லது மிருகத்தின் உடலா?' எதுவும் புலப்படவில்லை. இவ்வளவு குழப்பங்கள் வாழ்வில் இதுவரை ஏற்பட்டதில்லை. இயற்கையின் கணிக்க முடியாத கூர்முனையில் முன்னால் நின்றுகொண்டிருந்தான் பாரி. காடு அறியும் காலத்தில்கூட இவ்வளவு பதற்றமான கணத்தைச் சந்தித்ததில்லை. இப்போது ஏற்படும் பதற்றத்துக்குக் காரணம், ஆதினி; எது நடந்தாலும் அவளுக்கு பாதிப்பு எதுவும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான்.

ஒளியின் அளவு கூடிக்கொண்டே இருந்தது. மஞ்சள் கலந்த வெண்ணொளி பாறை இடுக்கின் ஓரத்தில் நீரோடுவதுபோல் கசிந்து ஓடியது. பாரியால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. `இது என்ன உயிரினமா... தாதுக்களின் கசிவா? அல்லது ஏதாவது ஆபத்தின் அடையாளமா?' ஒன்றும் புரியவில்லை. சட்டென ஆதினியை இழுத்துக்கொண்டு வெளியேறிவிடலாம் எனத் தோன்றியது. ஆனால், மனம் அதைச் செய்ய மறுத்தது.

ஒளியின் நீளம் அதிகமாகிக்கொண்டே இருந்தது. அதன் நீளம் அதிகமாக அதிகமாக குகை முழுவதும் செவ்வொளி பரவியது. இது என்ன எனப் புரியவேயில்லை. துணிந்து அருகில் போக முடிவெடுத்தான் பாரி. ஆதினியின் இறுகிய பிடியைத் தளர்த்த முயற்சிசெய்யும்போது பரவும் நீளொளியின் முனைப்பகுதி குச்சிபோல மேலெழுந்தது. ஒருகணம் குப்பென வியர்த்தது பாரிக்கு.

அறிவு, ஐயத்தின் புள்ளியைக் கண்டறிந்தது. அந்த ஐயத்தை நோக்கியே சிந்திக்கத் தொடங்கியது. ஏறக்குறைய பாரி அது என்ன என்று கணிக்கத் தொடங்கினான். சற்று முன்னால் நகர்ந்து பார்ப்போம் என்று எண்ணி, அதற்கு இடப்புறமாக மெள்ள நகர்ந்து பார்த்தான். அவன் கணித்தது சரியானது என்று உறுதிப்படுத்திய கணம், காடு அதிர்வதைப்போல கத்த வேண்டும் என்று தோன்றியது. ஆனால், ஆதினி

அச்சமடைவாள். அதுவும் இடம் விட்டு விலகி பொந்துக்குள் ஓடிவிடும் என்பதால் மகிழ்வை அடக்க முடியாமல் அடக்கினான்.



அவ்வளவு நேரமும் உறையிலிருந்த ஆயுதத்தைப் பிடித்திருந்த வலக்கையை எடுத்து இப்போது ஆதினியை இறுக அணைத்தான். அவளுக்குக் காரணம் புரியவில்லை. கட்டற்ற மகிழ்வை கசியும் காதல்மொழியில் சொன்னான், ``ஆதினி, நீ பார்த்துக்கொண்டிருப்பது இந்தப் புவியின் பேரதிசயம்.”

அவளுக்குப் புரியவில்லை.

``இராவெரி மரத்தைப் பார்த்த பறம்பு மக்கள் பலர் உண்டு. ஆனால், பல தலைமுறைகளாக மனிதர்கள் பார்த்திராத ஒன்றை இப்போது நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.”

அச்சம் நீங்காத குரலில் பாரியின் கைகளை இழுத்து அணைத்தபடி, ``என்ன அது சொல்” என்றாள்.

``இதுதான் ஒளி உமிழும் வெண்சாரை. நாகர்குடியின் குலதெய்வம். இதைப் பார்த்தவர்கள் மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்வார்கள் என்று நாகர்கள் நம்புகிறார்கள்.”

பாரியின் சொல், ஒளியில் மிதந்தபடி இருந்தது. நேரம் ஆக ஆக அந்தக் குகை மிளிரும் வெண்மஞ்சள் ஒளியால் நிரம்பியது. சொற்கள், நாகர்களின் ஆதிவரலாற்றிலிருந்து வெளிவந்துகொண்டிருந்தன.

ஆதினியின் முகத்தில் பூத்த மகிழ்வுக்கு எல்லையே இல்லை. பாரியின் முகம், அதைவிடப் பெருமகிழ்வை வெளிப்படுத்தியது. பெருமின்னல் வெட்டி மீண்டும் மழை தொடங்கியது. குகைக்குள் மகிழ்வு எல்லையற்றதாக இருந்தது.

அவர்கள் அதைப் பார்த்தபடி அப்படியே உட்கார்ந்திருந்தனர். அது பாறையின் ஓரம் அசையாமல் இருந்தது. செதில்களின் அசைவு, சிற்றகலின் நாக்கு அசைவதைப்போல ஒளியை அசைத்துக்கொண்டே இருந்தது. காலம் காலமாக இருக்கும் கதை ஒன்று காட்சியாக மாறிக்கொண்டிருக்கும் அதிசயத்தைக் கண்ணருகே பார்த்துக்கொண்டிருந்தனர். இருவருக்கும் இமைகள் துடிக்கவில்லை.
உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கும் முகம் அசையவில்லை. ஆனாலும் ஒளியின் அளவு கூடுவதை அவர்களால் கவனம்கொள்ள முடியவில்லை.
அதிசயத்தை அளவிட முடியாது. மனம் கரைந்த ஒன்றைக் கணக்கிட முடியாது. அதுதான் நிகழ்ந்துகொண்டிருந்தது. உற்றுப்பார்த்துக் கொண்டிருந்த ஆதினி, சட்டென திடுக்கிட்டுத் துள்ளியெழுந்தாள். என்னவெனப் பார்த்தான் பாரி. ஆதினியின் அருகில் இருந்த பாறையிடுக்கிலிருந்து இன்னொன்று ஊர்ந்து அதை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது.

பார்த்தபடி பாரியின் வலப்புறம் வந்து பதுங்கி உட்கார்ந்தாள். ஒளி உமிழும் இரு வெண்கோடுகளும் ஒன்றாகச் சந்தித்தன. சிறிது நேரத்தில் ஒன்றை ஒன்று சுற்றிப் பின்னத் தொடங்கின. காற்றுக்கு அசையும் சுடரொலிபோல வெண்ணொளி கூடிக்குறைந்துகொண்டிருந்தது. இரவு முழுவதும் ஒளிச்சுடர்கள் இரண்டும் ஒன்றை ஒன்று பின்னியபடியே இருந்தன.

ஆதினி, பாரியின் கைகளை இறுகப் பற்றினாள். அச்சம் உதிர்ந்த கணத்தில் ஆசை மேலேறத் தொடங்கியது. வெண்ணொளி பின்னுவதுபோல இருளுக்குள் இருந்த உருவங்களும் தயங்கித் தயங்கிப் பின்னத்தொடங்கின. மழையின் ஓசையைப்போல மூச்சுக்காற்றின் ஓசையும் கூடிக்கொண்டே இருந்தது.
எவ்வியூர் மாளிகையில் ஐவகைக் குறிஞ்சிமலர் கொண்டு படுக்கையை ஓர் ஓவியம்போல வரைந்து வைத்திருந்தனர். ஆனால், குறிஞ்சி நிலத்தின் உள்ளங்கைக்குள் காமம் தானே தனக்கான ஓவியத்தை வரைந்துகொண்டிருந்தது.





ஆதினி கால்களில் அணிந்திருந்த தண்டை இவ்வளவு ஓசையை எழுப்பியபோதும் பின்னிய நாகங்கள் விலகவில்லை. காமம், விலக முடியாத விளையாட்டு. நாகங்களும் விலகவில்லை, நாகங்கண்டும் விலகவில்லை.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-60

பொழுதுவிடிந்து நீண்ட நேரமாகிவிட்டது. நண்பகல் கடந்த சிறிது நேரத்திலேயே ஒளி அகன்றுவிடும். எனவே, வேகமாக நடக்க வேண்டும் என முடிவுசெய்து குகையை விட்டு வெளியேறினர். இரவு முழுவதும் கடுமழை பெய்ததால் சரிவில் நடந்து மேலேறுவது எளிதல்ல என்பது தெரியும். கவனமாக நடந்து செல்லத் துணிந்தனர். மலையெங்குமிருந்து நீரூற்று கசிந்துகொண்டே இருந்தது. நீரோடும் பாறையை அழுத்தி மிதித்தாலும் வழுக்கும், அழுத்தாமல் மிதித்தாலும் வழுக்கும். பாறையின் செதில்கள் எப்படி இருக்கின்றன என்பதைப் பொறுத்தே காலடியை முன்னெடுக்க வேண்டும்.




பாறைகளைக் கடக்கும்போது பாரி முன்னால் நடந்தான். பாறையின் தன்மை அறிந்து ஆதினிக்கு வழிகாட்டிச் சென்றான். மண்ணை மிதித்து நடக்கும்போதும் அதே அளவு கவனம் தேவை. பல நேரம் ஆதினியை முன்னால் நடக்கவைத்துப் பின்னால் வந்துகொண்டிருந்தான்.

இறங்கும் நீரையும் பாறையையும் மண்ணையும் வேர்களையும் குனிந்து பார்த்தபடியே நீண்டநேரம் நடந்துகொண்டிருந்தாள் ஆதினி. எங்கும் நீர் இழுத்து ஓடியபடியே இருக்க, தொடர்ந்து நடப்பது மிகவும் கடினமாக இருந்தது. சற்றே ஓய்வு தேவைப்பட்டது. ஓரிடத்தில் நின்று இளைப்பாறியபடி பார்வையை

எல்லாப் பக்கங்களிலும் ஓடவிட்டாள். அப்போதுதான் ஆபத்தின் அளவு புரிந்தது. செங்குத்தான பெருஞ்சரிவின் நடுவில் அவர்கள் நின்றுகொண்டிருந்தனர். ஆதினி அதிர்ச்சிக்குள்ளானாள்.

“இந்தச் சரிவிலா இரவில் நடந்தோம்?”

“ஆம். இந்தப் பெருஞ்சரிவில்தான் நடந்தோம். அதுவும் காதல்கொண்டே.”

பாரி சொல்வது தனது செயலைத்தான் என்பது புரிந்தது. ஆனாலும் எந்த மறுமொழியும் சொல்லவில்லை. ``இந்த இடத்தைப் பகலில் பார்த்த ஒருவர், இங்கு இரவில் நடக்கத் துணிய மாட்டார்” என்றாள்.

``இரவிலே நடந்த ஒருவர், பகலில் எளிதில் நடந்து கடப்பார்” என்றான்.

அவனது சொல் ஆதினிக்கானது. அவன் சொல்லில் இருக்கும் உண்மையை அவளது மனம் ஏற்றது. கால்கள் முன்னிலும் வீரியத்தோடு முன்னகர்ந்தன. ஒற்றைச் சொல்லால் விசை கூட்டும் வித்தையை பாரியின் அளவுக்கு அறிந்தவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் எனத் தோன்றியது.

`அவனை நினைத்து மகிழத்தான் எவ்வளவு இருக்கின்றன!’ என்று எண்ணியபடியே நடந்தாள்.

``பின்னிக்கிடக்கும் வெண்சாரைகள் அந்த இடம் விட்டு விடியும் வரை நகராது. நீ அஞ்ச வேண்டாம்” என்று நேற்றிரவு அவன் கூறிய சொல்லிலிருந்துதான் எல்லாம் மாறின. `அவை இந்தப் பக்கம் திரும்பாது என்றால், நாம் ஏன் அந்தப் பக்கம் திரும்ப வேண்டும்?’ எனத் தோன்றியது. அவ்வளவு நேரமும் வெண்சாரையைப் பார்த்துக்கொண்டிருந்த ஆதினி, பாரியின் பக்கம் திரும்பினாள்.

மெல்லிய ஒளி அவனது முகத்தில் பூசி மறைந்தது. வெண்சாரைகள் இரண்டும் இறுக்கி முறுக்கிக்கொள்ளும்போது ஒளியின் அளவு இரு மடங்கு அதிகமானதுபோல் இருந்தது. ஆனால், அதை அவர்கள் கவனிக்கவில்லை; முறுக்கி இறுகும் வெண்சாரைகளும் அவர்களைக் கண்டுகொள்ளவில்லை. தலைக்குப் பின்புறமாக குகை விட்டு வெளியே பேரிடி விடாது விழுந்துகொண்டிருந்தது. கால்களின் கீழ்ப்புறம் வெண்சாரைகள் இறுகிப் புரண்டுகொண்டிருந்தன. மழையின் பேரோசை கூடியபடியே இருக்க, காற்றெங்கும் நீர் மிதந்துகொண்டிருந்தது. இவற்றில் எதையும் காதல் பொருட்படுத்தவில்லை.

இப்போதுதான் அவற்றை ஒவ்வொன்றாக நினைவு கூர்ந்து கொண்டே நடந்தாள். தங்களைச் சுற்றி எவையெல்லாம் இயங்கின என எண்ணிப் பார்த்தாள். எதை நினைத்தாலும் தாங்கள் இயங்கியதில்தான் எண்ணங்கள் முடிவடைகின்றன. `பாரிக்கும் இப்படித்தான் எண்ணங்கள் ஓடுமா? அவனது உள்மனம் இப்போது எதை நினைத்துக் கொண்டிருக்கும்?’ ஆதினியின் சிந்தனை, பாரியை நோக்கி ஓடியது. அவன் கவனமாகச் செடி கொடிகளை விலக்கி முன்நடந்து கொண்டிருந்தான்.

அவனுடைய சொற்களின் வழியே, செயல்களின் வழியே அவனது எண்ண ஓட்டத்தைக் கண்டறிய

முயன்றபடியே வந்தாள். அது அவ்வளவு எளிதானதாக இல்லை. ஆனாலும் ஆதினி தொடர்ந்து முயன்றாள். பெரும்பள்ளம் ஒன்றின் மேலேற வசதியாக அவளைக் கைபிடித்துத் தூக்கினான். அவள் பாரியின் கண்களைப் பார்த்தபடியே முன்காலைத் தூக்கி வைத்து மேலேறினாள். அந்தக் கண்களில் எதையும் கண்டறிய முடியவில்லை. `ஆண்களின் கண்கள் மொழியற்றவையோ!' எனத் தோன்றியது.



`இல்லையே, நேற்றிரவு என்ன செய்வது என அறியாத கணத்தில் அவன் பார்த்த பார்வைதானே காமத்துக்குள் கட்டற்ற வேகத்தில் நம்மை இழுத்துச்சென்றது. `பெண் கண் செருகும்போது தொடங்கும் ஆட்டம், ஆண் கண் செருகி இருக்கும்போது முடிவுறுகிறது' எனச் சொல்லக் கேட்டுள்ளேன். ஆனால், இவை எல்லாம் யாரால் பார்த்தறிய முடியும்? மற்றவர்கள் பார்க்க முடியாது, சம்பந்தப்பட்டவர்களால் பார்க்கவே முடியாது. அப்புறம் எப்படி இவை எல்லாம் கதைகளால் சொல்லப்படுகின்றன?' மனதுக்குள் எண்ணியபடியே நடந்தாள்.

குறுகிய பள்ளத்தில் நீரின் வேகம் சற்றே அதிகமாக இருந்தது. முதலில் அதைக் கடந்த பாரி, அவள் கடப்பதற்குக் கைகொடுத்து இழுத்தான். அவள் கடந்து வந்ததும் முன்னே நடக்கவிட்டுப் பின்தொடர்ந்தான்.
அப்போதுதான் கவனித்தான், ஆதினியின் முதுகில் சிறிய சிறிய கீறல்கள் கோடுகளாய் அங்குமிங்குமாக இருந்தன. `கற்படுக்கையால் இப்படி நேர்ந்துவிட்டதே!' எனக் கவலை கொண்டான். மழை பெய்து குளிர் நீங்காமல் இருப்பதால் எரிச்சல் தெரியாமல் இருக்கிறது. கோடைக்காலமாக இருந்தால் கடும் எரிச்சல் இருந்திருக்கும் என எண்ணியவனுக்கு, அதன் ஆபத்து அப்போதுதான் புரியவந்தது, `இப்படியே போனால் இவள் தோழிகள் கேள்விகள் கேட்டே இவளைத் திணறடித்து விடுவார்களே!' என்று.

என்ன நடந்திருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். எப்படி நடந்திருக்கும் என்பதைத் தெரிந்துகொள்வதில்தான் எல்லோரின் விருப்பமும் இருக்கும். இதுபோன்ற தடயங்கள்தான் அவர்கள் பயன்படுத்தப்போகும் ஆயுதங்கள். நிலைமையை ஆதினியால் சமாளிக்க முடியாத அளவுக்கு இருக்கும். ஏனென்றால், அவளது முதுகில் இருக்கும் தடயங்கள் அவ்வளவு. இதைப் பற்றித் தெரியாமல் ஆதினி ஏதோ சிந்தனையில் நடந்து போய்க்கொண்டிருக்கிறாள் என்று நினைத்த பாரி, ``நீ சிறிது நேரம் இங்கே இரு. நான் அருகில் இருக்கும் செம்பாறை வரை போய் வருகிறேன்'' என்றான்.


``ஏன்?'' எனக் கேட்டாள் ஆதினி.

``உனது முதுகு முழுவதும் பாறையின் செதில்களால் கீறப்பட்ட கோடுகளும் தடயங்களும் நிறைய இருக்கின்றன. தோழிகள் பார்த்தால் கேலிசெய்வார்கள்'' என்றான்.

அவள் முற்றிலும் எதிர்பாராத ஒன்றைப் பற்றிப் பாரி பேசினான். அவனது சொல்லில் இருப்பது அளவிட முடியாத காதல். அதனால்தான் அடுத்த கணமே அது உள்ளுக்குள் இன்பத்தைச் சுரக்கிறது. அவன் காமத்தின் தடயங்களை மறைக்கப் பார்க்கிறான். அந்தக் கணத்தைக் கற்பனையில்கூட அடுத்தவர் நெருங்கக் கூடாது எனத் தவிக்கும் ஆணின் தவிப்புதான் காதலின் ஆகச்சிறந்த பரிசு என அவளுக்குத் தோன்றியது.

அவனது சொல்லைக் கடக்க முடியாமல் நின்றிருந்த ஆதினியைப் பார்த்துப் பாரி சொன்னான், ``செம்பாறையின் ஓரம் இழுத்தோடும் நீரில் பொன்போல மின்னும் மண் துகள் படிந்திருக்கும். அந்த மண் துகளை எடுத்துவந்து முதுகில் பூசிவிடுகிறேன். அது ஒளியை மினுக்கிக்கொண்டிருக்கும். பார்ப்பவர்களுக்கு மினுக்கும் ஒளிதான் தெரியுமே தவிர, முதுகில் உள்ள கீறல்கள் எளிதில் தெரியாது'' என்றான்.

நுனிநாக்கால் மேலுதடைத் தொட்டு நனைத்துக் கொண்டாள். சிரிப்பை மறைக்க அவளுக்கு வேறு வழி தெரியவில்லை.



ஆனால் பாரி கண்டறிந்தான், ``ஏன் சிரிக்கிறாய்?''

``முதுகெல்லாம் ஏன் பொன்மணல் படிந்திருக்கிறது எனக் கேட்டால்?''

``படுத்திருக்கும்போது ஒட்டியிருக்கும் எனச் சொல்.”

``அதனால்தான் பாரியின் முதுகில் பொன்மணல் ஒட்டவில்லையோ எனக் கேட்பார்கள்.”

ஒரு கணம் திகைத்துப்போனான்.

அவன் முகத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியைக் கண்டு மகிழ்ந்து சிரித்தாள். அடுத்தடுத்து எழும் வினாக்களை நோக்கி அவள் உள்ளே போய்க்கொண்டிருந்தாள். திகைத்த இடத்திலே பாரி நின்றுவிட்டான். கேலி விளையாட்டில் பெண்கள் செல்லும் ஆழம் ஆண்களால் அறிய முடியாதது. இது, பெண்கள் தங்களுக்குத் தாங்களே உருவாக்கிக்கொண்ட கலையின்பம். அதனால்தான் எழப்போகும் வினா பாரிக்குத் திகைப்பை உருவாக்கிய கணமே ஆதினிக்குச் சிரிப்பை உருவாக்கியது. தோழிகள் கேட்கப்போகும் வினாக்களுக்குள் நுழைந்தபோது அவளது சிந்தனை திக்குமுக்காடியது. `வெண்சாரைகளின் நிழலில் எங்களின் காமம் நிகழ்ந்தது எனச் சொன்னால் நிலைமை என்ன ஆகும்!’ வேளிர் குலம் முழுக்க தலைமுறை தலைமுறையாக இந்தக் கதை நிலைத்துவிடும் என அவளுக்குத் தெரியும்.

எத்தனை தலைமுறைகளாலும் முதுகில் கீறல்கொண்ட இளம்பெண்கள் இந்த வினாவிலிருந்து தப்பவே முடியாது. காலம்காலமாகப் பாரியின் குறியீடாக பதில்கள் சொல்லப் பட்டுக்கொண்டே இருக்கும். அவன் செய்யப்போகும் செயல் எல்லா இளம்பெண்களின் முதுகிலும் படிந்துவிடும் என நினைத்தபடி பாரியின் கையைப் பிடித்து, ``பொன்மணல் துகள் வேண்டாம். தோழிகளை நான் பார்த்துக்கொள்கிறேன்” என்றாள்.
அவள் சொல்வதை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை. `என்ன சொல்லி சமாளிப்பாள்?’ எனச் சிந்தித்தபடியே அவன் நடந்தான். அவனுக்குள் வினாக்கள் தொடர்ந்து எழுந்தவண்ணம் இருந்தன. ஆனால், எண்ணங்கள் கேட்க விடாமல் தடுத்துக்கொண்டே இருந்தன. சிறுபாறையின் மேலே ஏறி அவளைக் கைபிடித்துத் தூக்கிவிட்டான்.

மேலேறியவுடன் நிமிர்ந்து பார்த்தாள் ஆதினி. எதிரில் சமவெளி விரிந்துகிடந்தது. `செங்குத்தான பெருஞ்சரிவை அதற்குள் ஏறிக் கடந்துவிட்டோமா!’ வியப்பு குறையாமல் முன்னும் பின்னுமாகத் திரும்பிப் பார்த்தாள். அவளால் நம்பவே முடியவில்லை. வியப்போடு பாரியைப் பார்த்தாள். அவன் உள்ளும் வெளியுமாக இயக்கும்விதம் மேலும் மேலும் வியப்பூட்டுவதாக இருந்தது.

கதிரவன், எதிர்க்குன்றின் பின்னால் மறையத் தொடங்கினான். இருவரும் சிறிது தொலைவு சமவெளியில் நடந்து சென்றனர். எதிரில் சிறுமேடு ஒன்று இருந்தது. ``இந்த மேடு ஏறி இறங்கினால், கீழ்த்திசையில் நாம் நிறுத்தி வந்த தேர் இருக்கும். நான் குதிரைகளைக் கண்டறிந்து வருகிறேன். அதுவரை நீ இங்கேயே இரு” என்று சொல்லி நடந்தான்.

காற்று சற்றே அதிகரிக்கத் தொடங்கியது. மாலையானதும் இன்றும் கடுமழை வரப்போகிறது எனச் சிந்தித்தபடி குதிரைகளைப் பிடித்துவர விரைந்தான்.

ஆதினி அவன் வரும் வரை மரத்தடியில் அமர்வோம் என நினைத்து, அருகில் இருந்த செங்கிளுவை

மரத்தின் அருகே போய் உட்கார்ந்தாள். குதிரைகளை நோக்கி விரைந்த பாரி, ஏதோ எண்ணம் தோன்ற, திரும்பி ஆதினியைப் பார்த்தான். அவள் அப்போதுதான் செங்கிளுவையில் சாய்ந்தாள்.

``மரத்தை விட்டு விலகி வந்து ஓய்வெடு. நான் விரைந்து வருகிறேன்” என்று சொல்லியபடி ஓடினான். அவள் மரம் விட்டு நீங்கினாள். அருகில் இருந்த சிறுபாறையின் மீது உட்கார்ந்து மரத்தைப் பார்த்தாள். `ஏன் அதன் அருகே உட்கார வேண்டாம் என்று சொன்னான்?’ என்று சிந்தித்தபடியிருந்தாள்.

சற்று நேரம் கழித்து குதிரைகளோடு வந்தான் பாரி. இருவரும் பேசியபடியே குன்றின் மேல் நடந்தனர். குதிரையைத் தொட்டு வருடும் ஆசையை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. கைகூசியபடி அதனுடைய முதுகை வருடிக் கொண்டே கேட்டாள், ``ஏன் மரத்தை விட்டு அகலச் சொன்னீர்கள்?”

``காற்று பலமாக அடிக்கத் தொடங்கியது. அந்த மரம் பெருங்காற்றைத் தாங்காது. அதனால்தான் தள்ளி உட்காரச் சொன்னேன்.”

``பார்த்தால் வலிமையான மரம்போல் தெரிந்தது. அதனால்தான் அருகில் போனேன்.”

``மலையுச்சி மரங்களின் தன்மையைக் கணிப்பது சற்றே கடினம். எளிதில் நம்மை ஏமாற்றிவிடும்.”

``நீங்கள் எப்படிக் கண்டறிந்தீர்கள்?”



``உதிரும் அதன் இலையை வைத்துதான்.”

``இலையை வைத்தா?”

``ஆம், இலையில்தான் மரத்தின் குறிப்பு இருக்கிறது.”

குதிரைமீதிருந்த கையை விலக்கி அவனைப் பார்த்தாள்.

பாரி சொன்னான், ``உதிரும் இலையின் நுனிப்பகுதி கீழ்நோக்கி வருகிறதா, அடிப்பகுதி கீழ்நோக்கி வருகிறதா அல்லது சம எடையுடன் காற்றை வெட்டி வெட்டி மிதந்து வருகிறதா என்பதை இலையின் கீழ்ப்புறம் உள்ள நரம்பின் தன்மையே தீர்மானிக்கிறது. மரங்களுக்கு வயது ஆக ஆக நரம்பின் பிடிமானமும் கன அளவும் மாறும். அது மாற மாற உதிரும் இலையின் தன்மையும் மாறும். எனவே, உதிரும் இலை எந்த நிலையில் உதிர்கிறது என்பதை வைத்தே மரத்தின் வயதையும் ஆற்றலையும் சொல்லி விடலாம்.”

``வியப்பாக இருக்கிறது” என்றாள் ஆதினி.

``இதிலென்ன வியப்பு இருக்கிறது... ஓடும் நரியைப் பார்த்தவுடன் வயதைச் சொன்னார் உன் தந்தை. அதுதான் வியப்பு.”

சொல்லிக்கொண்டிருக்கும்போதே தொலைவில் தேர் நிற்பது தெரிந்தது. பாரி கை நீட்டி அதைக் காண்பித்தான். அதைப் பார்த்தபடியே ஆதினி கேட்டாள், ``தேரின் நேரெதிர் திசையில்தானே கீழே இறங்கினோம். இப்போது இடப்பக்கமாக ஏறி வருகிறோம்?”

``காட்டில் எதையும் நாம் தீர்மானிக்க முடியாது. காடுதான் தீர்மானிக்கும். நாம் பார்க்கப்போனது ஒன்றை; பார்த்தது வேறொன்றை. அப்படித்தான் எல்லாமும்.”

பேசியபடியே தேரை நெருங்கினர். கதிரவன் மலையில் சரிபாதி மறைந்துவிட்டான். காற்றின் வேகம் கூடியபடி இருந்தது. குதிரைகளைத் தேரில் பூட்ட முன்புறமாகப் போனான் பாரி. ஆதினி, வலப்புறமாகத் தேரை நோக்கி நடந்தாள். காற்று பலம்கொண்டு வீசியதில் குதிரை காதுவிடைத்து, கனைத்தது. அதன் கழுத்துப் பகுதியைத் தடவிக்கொடுத்து அமைதிப்படுத்த முயன்றான். அப்போது ஆதினி அழைக்கும் குரல் கேட்டது. குதிரை மீண்டும் எதிர்காற்றில் துள்ளிக் கனைத்தது. குதிரையை அருகில் இருந்த சிறு மரத்தில் கட்டிவிட்டு ஆதினியின் அருகில் வந்தான்.


அவள் தேர்ச்சக்கரத்தின் அருகில் உட்கார்ந்து எதையோ பார்த்துக்கொண்டிருந்தாள். அங்கு உட்கார்ந்து என்ன செய்கிறாள் என்று எண்ணியபடி அருகில் வந்தான் பாரி. தேர்ச்சக்கரத்தின் ஆரக்காலில் முல்லைக்கொடி ஒன்று முழுச்சுற்று சுற்றி, தலையை வெளிப்புறமாக நீட்டியபடி இருந்தது. இன்னொரு கொடி பக்கத்தில் இருந்த ஆரக்காலில் பாதி சுற்றி, தலை நீட்டியிருந்தது.

அருகில் வந்த பாரி அதைப் பார்த்தான். கொடியின் தளிர், காற்றுக்கு அசைந்தபடி ஆரக்காலைத் தழுவியிருந்தது. ஆதினியின் முகத்தைப் பார்த்தான். சற்றே பதற்றத்தோடு இருந்தாள். ``தேரை எடுத்தால் இரு கொடிகளும் அறுந்துவிட வாய்ப்புள்ளது. இந்த முல்லைக் கொடியைப் பக்குவமாகப் பின்னோக்கிச் சுழற்றி வெளியில் எடுத்துவிடலாமா?” எனக் கேட்டாள்.

பாரி, எதுவும் சொல்லாமல் முல்லைக் கொடிகளையே பார்த்துக்கொண்டிருந்தான். காற்று பெரும்வேகத்தோடு வீசியது. நின்றிருந்த தேர், சற்றே அசைந்துகொடுத்தது. சட்டென சக்கரத்தை இறுகப்பிடிக்க முயன்றாள் ஆதினி. ஆனால், பாரியின் கை அதைப் பிடித்துக் கொண்டிருந்தது. இது

நிகழ்ந்துகொண்டிருக்கும் போது குன்றுக்குப் பின்னால் சடசடவெனப் பேரோசை கேட்டது. அதிர்ந்து திரும்பினாள்.

திரும்பாமலே பாரி சொன்னான், ``அந்தச் செங்கிளுவை விழுந்துவிட்டது.”



ஆதினிக்கு, பதற்றம் இன்னும் அதிகமானது. விழுந்த மரத்தில் அடைந்திருந்த பறவைகள் கலைந்து வெளியெங்கும் ஓசையெழுப்பின. அதைக் கவனித்தபடியே ஆதினியிடம் சொன்னான், ``இலையில் மரத்தின் குறிப்பு இருந்ததைப்போல இந்த முல்லைக்கொடிகளில் இருக்கும் குறிப்பு என்னவென்று பார்.”

அவள் முல்லைக்கொடிகளை உற்றுப் பார்த்தாள். சக்கரத்தின் ஆரக்காலை முழுமையாகச் சுற்றிய கொடி, தலையாட்டியபடி அவளைப் பார்த்துக்கொண்டிருந்தது. அது ஆரத்தைச் சுற்றியிருக்கும் விதத்தைக் கவனித்தாள். எங்கோ பார்த்ததுபோல் இருந்தது. எங்கே என்று சிந்தித்தபோது வெண்சாரைகளின் நினைவு வந்தது. அதே பின்னல்கொண்டு வளைந்து மேலேற முயன்றது முல்லைக்கொடி. பக்கத்து ஆரத்தின் மீதும் அதே முயற்சியைச் செய்து கொண்டிருந்தது இன்னொரு கொடி.

கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்த ஆதினியின் கண்கள் கலங்கின. பாரியைத் திரும்பிப் பார்த்தாள். அவன் கண்கள் எண்ணில்லா சொற்களைப் பேசின. ஆண்களின் கண்களைப் படித்தறிய வேறு வழியுண்டா என மனம் பதறியது. ஆனாலும் தொடர்ந்து முயன்றாள். `இடப்புறம் இருப்பதுதான் நானா?’ என்று ஆதினியின் ஆழ்மனம் கேட்க, `இல்லை வலப்புறம் இருக்கும் கொடிதான் உனது சாயலில் தலைசாய்ந்தே இருக்கிறது’ என்று பாரி சொல்ல, மனதுக்குள் நீங்கா உரையாடல் நிகழ்ந்து கொண்டிருந்தது. `வெண்முல்லையும் வெண்சாரையும் வடிவத்திலும் வாசனையிலும் ஒன்றே!’ என ஆழ்மனம் சொல்லியது. காற்று வீறுகொண்டு வீசியது. ஆதினி, பாரியின் கைகளை இறுக அணைத்துத் தோள் சாய்ந்தாள்.


``குகை நமக்கானதாக மாறியதுபோல, தேர் முல்லைகளுக்கானதாக மாறிவிட்டது” என்றான் பாரி.

வெட்கம் கலையாத சிரிப்போடு ஆதினி சொன்னாள், ``நேற்று நாகம் கற்றுக்கொடுத்தது. இன்று முல்லை கற்றுத்தருகிறது.”

``காடு, கணம்தோறும் நமக்குக் கற்றுத்தந்து கொண்டேதான் இருக்கும்” எனச் சொல்லியபடி தேர் விட்டு நகர்ந்தான் பாரி. தன் விரல்களால் சக்கரங்களின் ஆரங்களைத் தொட்டு வருடியபடி அந்த இடம் விட்டு எழுந்தாள் ஆதினி.

இருவரும் நடக்கத் தொடங்கினர். ஆதினி மெல்லிய குரலில், ``படர்வது குறுமுல்லை. ஒரு மலர் பூத்தால் போதும். காடே மணக்கும்” எனச் சொல்லிவிட்டு, பாரியின் முகத்தைப் பார்த்தாள்.

‘என்ன பொருள் இதற்கு?’ பாரியின் கண்கள் தடுமாறின. பெண்ணின் கண்கள் சொல்வதை முழுமையாகக் கற்க ஆண்களால் முடியுமா என்ன? ‘உதிரும் இலையின் குறிப்பு தெரிந்த உனக்கு வீசும் பார்வையின் பொருள் புரியாதா?’ என்று கேட்பதுபோல் இருந்தது.



இருவரும் காதல் மயக்கம் கலையாமல் நடக்கத் தொடங்கினர். பொன்மணல் துகள் மனமெல்லாம் மின்னிக்கொண்டிருந்தது. கீறல் தழும்புகளிலிருந்து குறுமுல்லையின் நறுமணம் கசியத் தொடங்கியது. பாரியின் வலக்கையைத் தனது இடக்கையால் பின்னியபடி நடந்தாள். வெண்சாரை ஒருபுறமும் குறுமுல்லை மறுபுறமுமாகப் படர்ந்து கொண்டிருந்தன. இருவரும் எவ்வியூர் நோக்கி நடந்தனர்.

இன்றும் ஐவகைக் குறிஞ்சியில் மலர்ப்படுக்கை அமைத்திருப்பர். ஆனால், மலராத முல்லையின் மணமேந்தி, சுடரின்றிப் பரவும் ஒளியேந்தி வந்துகொண்டிருக்கும் இந்தக் காதலர்களின் இரவை மற்றவர்களால் எதுகொண்டு அலங்கரிக்க முடியும்?

போகும்போது கட்டிப்போட்டிருந்த குதிரைகளைக் கையில் பிடித்துக்கொண்டு நடந்தனர். இரு குன்றுகளைத் தாண்டியபோது எதிரில் பாணர் கூட்டம் ஒன்று வந்துகொண்டிருந்தது. எவ்வியூர் வந்து திரும்பும் பாணர்களை, வீரர்கள் அழைத்துக்கொண்டு போயினர்.

``பாரி தேரில்தானே வந்ததாகச் சொன்னார்கள். இப்போது குதிரைகளைக் கையில் பிடித்துக் கொண்டு நடந்து போவானேன்?” என்று ஒரு பாணன் கேட்க, ``அதோ, தேர் அங்கே நிற்கிறது. அருகில் போய்ப் பார்த்தால் காரணம் தெரியப் போகிறது” என்று இன்னொரு பாணன் சொன்னான்.

``முல்லைக்குத் தேரைக் கொடுத்ததாகப் பாணர்கள் பாடுகிறார்களே அது உண்மையா?” என்று கபிலர் கேட்டதற்குத்தான் இந்த முழுக் கதையையும் பாரி சொல்லி முடித்தான். கேள்வி என்னமோ முல்லைக்கொடியைப் பற்றித்தான். ஆனால், பாரி தனது திருமணக் காலத்திலிருந்து நடந்ததை விளக்கியதற்குக் காரணம், காலம்பன் அனைத்தையும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதுதான்.

சோமப்பூண்டின் பானம் இருந்தும் அன்று யாரும் ஒரு குவளைகூடக் குடிக்கவில்லை. பாரி நடந்ததைச் சொல்லி முடிக்கும்போது அனைவரும் பெரும்வியப்பில் மூழ்கிப் போயிருந்தனர். முல்லைக்கொடி பற்றிக் கேட்ட கபிலரோ, இராவெரி மரம் பற்றிக் கேள்விப் பட்டதும் அதிர்ந்துபோனார். ``இதைத்தான் வடதேசத்து முனிகள் `ஜோதி விருட்சம்’ எனச் சொல்கிறார்களோ!’’ எனக் கேட்டார்.

தேக்கனின் வியப்பு வேறுவிதமாக இருந்தது. ``நீயும் ஆதினியும் வெண்சாரையைப் பார்த்தீர்களா? இதுவரை சொல்லவேயில்லையே” எனக் கேட்டார். பாரியைப் பற்றிய தேக்கனின் வியப்பு காலகாலத்துக்கு நீங்காது என்பது அவரின் பார்வையிலேயே புலப்பட்டது.

காலம்பனின் வியப்பு முல்லைக்கொடியோ, வெண்சாரையோ அல்ல; `ஆயுதங்களைக் கூர்மையாக்கும் கல் இருக்கிறதா? பல்வேறு தாதுக்களை ஆற்றலாக மாற்றத் தெரிந்த பொதினியின் பதினெட்டுக் குடிகள். அவர்கள் எதையெல்லாம் செய்யும் ஆற்றல் படைத்தவர்கள்?’ அடுக்கடுக்காய் மேலெழுந்தபடி இருந்தது காலம்பனின் வியப்பு.

எல்லோரும் வியந்ததைப்போல பாரியும் வியப்பு நீங்காமல்தான் இருந்தான். இந்த நிகழ்வு எப்படி வெளியில் தெரிந்திருக்கும் என எண்ணிப்பார்த்தான். ``பேசியபடி தங்களைக் கடந்துபோன பாணர்கள் தேர்ச்சக்கரத்தில் முல்லைக்கொடி பின்னிக்கிடப்பதைப் பார்த்துப் பாடல் புனைந்துள்ளனரோ?!” என்றான்.

கேள்வி, கபிலருக்கு வியப்பைக் கொடுத்தது. ``நிலமெங்கும் உனது புகழைப் பரப்பும் குறியீடு இதுதான்” என்றார் கபிலர்.




``படர வழியின்றிக் கொடி தவித்தால் யாராக இருந்தாலும் அதற்கு வழிசெய்துவிட்டுத்தானே போவார்கள். இதில் வியக்க என்ன இருக்கிறது?” எனக் கேட்டான் தேக்கன்.

``மலைமக்களின் வாழ்வை சமவெளி மனிதர்கள் புரிந்துகொள்வது எப்படி எளிதில்லையோ, அதேபோல்தான் சமவெளி மக்களின் எண்ண ஓட்டங்களையும் சிந்தனை நிலையையும் மலைமக்கள் புரிந்துகொள்வதும் எளிதல்ல” என்றார் கபிலர்.


தேக்கனுக்கு அவர் சொல்லவருவது விளங்கவில்லை,

``உங்களுக்கு இது வாழ்வின் பகுதி. எனவே, நின்றுபார்க்க ஒன்றுமில்லை. ஆனால், தவித்து அலையும் மக்களுக்கு இது கனவு. எனவே, கடக்க வழியின்றிப் பாடியபடியே இருக்கின்றனர்.”

கபிலரின் சொற்கள் ஆழத்துக்குப் போயின. அதைப் பற்றிய சிந்தனையும் அவ்வாறே. இரவெல்லாம் பேசினர். சோமப்பூண்டின் பானம் விட்டு மனமும் உடலும் வெளியேறிவிட்டது என்பதை அவர்கள் உணர்ந்தனர். குடியும் இரவும் அவர்களை விட்டு அகன்றன.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-61




யவனத்தின் சாகசத் தளபதி ஹிப்பாலஸ், வஞ்சி மாநகரத்தில் வந்திறங்கினான். வைப்பூர்த் துறைமுகம் பற்றி எரிந்து பல மாதங்களாகப்போகின்றன. நீண்டநாள்களாக வைப்பூர்க் கோட்டையிலேயே இருந்தவன், பிறகு ஓரிரு இடங்களுக்குப் பயணம் போய் இப்போது வஞ்சியை வந்தடைந்துள்ளான். அவனோடு எபிரஸ், திரேஷியன், கால்பா, பிலிப் ஆகியோர் வந்துள்ளனர்.

பெருவணிகன் வெஸ்பானியன் தலைமையில் யவனத்திலிருந்து ஆறு நாவாய்களில் பாண்டிய இளவரசனின் மணவிழாவுக்குப் புறப்பட்டனர் யவனர்கள். `மீனாள்' என்று யவனத்தில் எழுதப்பட்ட யானை வடிவம் தாங்கிய நாற்சதுர நாணயத்தோடும் எண்ணற்ற பரிசுப்பொருள்களோடும் பாண்டிய நாட்டில் வந்திறங்கினர்.

இந்தப் பெருஞ்சிறப்பு, தமிழ்நிலத்தில் எந்த மன்னனுக்கும் தரப்பட்டதில்லை. அதற்குக் காரணம், யவன வணிகத்தில் முதல் இடத்தைப் பிடித்துள்ள பாண்டிய நாட்டு முத்துகள். அதன்பொருட்டே யவனப் பெருவணிகன் வெஸ்பானியனும் அரச பிரதிநிதிகளும் துறைமுகப் பொறுப்பாளர்களும் வருகைபுரிந்தனர்.

இவர்கள் வருகைபுரிந்த ஆறு நாவாய்களும் வைகை ஆற்றில் சாம்பலாகக் கரைந்தன. வெஸ்பானியன் நெருப்பிலே மாண்டான். வேதனைகளையும் இழப்புகளையும் தாங்க முடியவில்லை. கடக்க முடியாத

துயரங்களைக் கடக்க வழியின்றி நாள்கணக்கில் குடித்தான் ஹிப்பாலஸ். கம்பீரமிக்க தனது நாவாய் எரிந்தபடியே மூழ்கிய காட்சி, அவன் கண்களைவிட்டு எளிதில் அகல மறுத்தது.

எல்லோரையும்போல இது விபத்து என்றுதான் அவனும் முதலில் நினைத்தான். ஆனால், பிறகுதான் செய்தி தெரியவந்தது, பறம்பு வீரர்கள் பற்றவைத்த நெருப்பு என்று. ஆனாலும் காரணம் எளிதில் புரிந்துகொள்ள முடியாததாக இருந்தது. சேர அரசுகளான குட நாட்டுக்கும் குட்ட நாட்டுக்கும் பறம்போடு பன்னெடுங்காலப் பகை இருக்கிறது. பாண்டியனோடு எந்தப் பகையும் பறம்புக்கு இல்லையே. பிறகு ஏன் பறம்பு வீரர்கள் இந்தக் கொடுஞ்செயலைச் செய்ய வேண்டும் என்பது, விளங்கிக்கொள்ள முடியாததாக இருந்தது.

காரணம் அறியாமல் வைப்பூர்க் கோட்டையை விட்டு வெளியேறுவதில்லை என்ற முடிவோடு இருந்தான். செய்திகள், எல்லா முனைகளிலிருந்தும் ஹிப்பாலஸுக்கு வந்துகொண்டிருந்தன. கடலோடிகள், பெருவணிகர்கள், கடற்கரைப் பணியாளர்கள், வைப்பூர் மக்கள், பாண்டிய அரண்மனைப் பணியாளர்கள், போர்வீரர்கள் என எல்லோரும் ஆளுக்கோர் உண்மையை ஹிப்பாலஸுக்குச் சொன்னார்கள். எல்லாவற்றையும் தொகுத்தபடியே இருந்த அவன், கடைசியாகக் கேள்விப்பட்டது தேவாங்கு பற்றிய செய்தியை.

அந்தக் கணத்திலிருந்து அவனுக்கு வியப்பு தாங்க முடியவில்லை. `திசை உணர்த்தும் ஒரு விலங்கா!' காலம் முழுவதும் கடலிலேயே பயணப்படும் ஒருவனுக்கு, தேவாங்கு போன்ற விலங்கு நம்ப முடியாத கற்பனையாகத்தான்` இருக்கும். ஆனாலும் எல்லா வகைகளிலும் அவன் அதை உறுதிப்படுத்தினான்.

குலசேகரப்பாண்டியன் அந்த விலங்கைக் கைப்பற்றப் பறம்புக்குத் திரையர்களை அனுப்பிவைத்ததை அமைச்சர்கள்மூலமே தெரிந்துகொண்டான். திரையர்களோடு பறம்பு வீரர்கள் உடன் வந்துதான் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். ஏனென்றால், விடுதலையான திரையர் குடும்பங்களும் கப்பலிலிருந்து தப்பித்த திரையர்குல வீரர்களும் பறம்புக்குள்தான் நுழைந்துள்ளனர். எனவே, எல்லாம் பாரியின் செயல்தான் என்பதைக் குலசேகரப்பாண்டியன் உறுதிசெய்துள்ளான் என்பது வரை ஹிப்பாலஸுக்குத் தெரியவந்தது.

ஆனாலும், அந்த விலங்கைப் பார்க்காமல் அவனால் நம்ப முடியவில்லை. அந்த விலங்குகள் எல்லாம் பறம்பு வீரர்களால் மீட்கப்பட்டுவிட்டதாகவும் மிஞ்சிய சில, நெருப்பிலே எரிந்துவிட்டதாகவும் சொன்னார்கள். ஒன்றிரண்டாவது எஞ்சியிருக்காதா என்று ஹிப்பாலஸ் தொடர்ந்து முயன்றான். அவன் முயற்சி வீண்போகவில்லை.

வைப்பூர்த் துறையில் நெருப்பு பற்றுவதற்கு முன்னரே இரண்டு கலங்கள் துறையை விட்டு வெளியேறியுள்ளன. இறலித்தீவுக்கும் தெங்கின்தீவுக்கும் பயணமான அவை இரண்டிலும் தேவாங்குகள் இருந்திருக்கின்றன. சூழ்கடல் முதுவன் யாரும் அறியாதபடி நள்ளிரவுக்கு முன்னதாகவே அந்தக் கலங்களை வெளியேற்றியுள்ளான் என்பதை ஹிப்பாலஸ் அறிந்தான்.






எப்படியாவது அந்தக் கலங்களில் உள்ள தேவாங்குகளைப் பார்த்துவிட வேண்டும் என்று பெருமுயற்சி செய்தான். வைப்பூரிலிருந்து கொற்கைக்கு வந்தவன் சிறிய வடிவிலான வங்கத்தை எடுத்துக்கொண்டு இறலித்தீவுக்குப் புறப்பட்டான். அங்கு போய் சூழ்கடல் முதுவனுக்கு நம்பகமான வணிகத் தோழனிடம் அதிகப்படியான விலைபேசி தேவாங்கைக் கைப்பற்றினான். அதைப் பார்த்த கணத்திலிருந்து இப்போது வரை அவனது வியப்பு நீங்கவில்லை.

`கடலின் எல்லாவித ஆபத்துகளையும் நீக்கும் தேவதை இது!' என அவன் தேவாங்கை வர்ணித்தான். இப்படியொரு விலங்கு இருக்கும் செய்தி யவனத்தை எட்டுமானால், உலகெங்கும் இருக்கும் கடல் வணிகர்கள் அனைவரும் பாண்டிய நாட்டை முற்றுகையிடத் தொடங்கிவிடுவர். மற்றவர்கள் அறியும் முன், இந்த விலங்கை நாம் கைப்பற்ற வேண்டும்' என்ற முடிவுக்கு வந்தான் ஹிப்பாலஸ்.

இறலித் தீவிலிருந்து மீண்டும் கொற்கைக்குத் திரும்பிய அவன், நேராக மதுரைக்குச் சென்றான். குலசேகரப்பாண்டியனைக் கண்டு பேசிவிட்டுத்தான் இப்போது வஞ்சி மாநகருக்கு வந்துள்ளான்.

அவனது வருகை உதியஞ்சேரலுக்குத் தெரிவிக்கப்பட்டது. யவனத்தின் பெருமைமிகு வணிகர்களும் கடல் பயண சாகசத் தளபதிகளும் வந்துள்ளதை மகிழ்வோடு வரவேற்றான் உதியஞ்சேரல்.

அவனுடைய உற்சாகத்துக்கு இப்போது கூடுதல் முக்கியத்துவம் இருந்தது. வணிகப் போட்டியில் சேரனின் மிளகை, பாண்டியனின் முத்து கடந்து முன் சென்றுவிட்டது. எனவே, யவன வணிகர்களின் முதல்மரியாதை பாண்டியனை நோக்கியே கடந்த சில ஆண்டுகளாக இருப்பதை யாவரும் அறிவர். அதன்பொருட்டே பாண்டிய இளவரசனின் மணவிழாவுக்கு யவனத்திலிருந்து சிறப்பு ஏற்பாட்டோடு பலரும் வந்து பங்கெடுத்தனர்.



ஆனால், வைப்பூரில் பற்றிய தீயால் யவன வணிகர்களுக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. பாண்டியனின் நற்பெயரில் அழிக்க முடியாத கரும்புகை படிந்துவிட்டது. வைப்பூரில் ஏற்பட்ட இழப்பிலிருந்து எந்த ஒரு வணிகனும் எளிதில் மீண்டுவிட முடியாது. பாண்டியனால் ஏற்பட்ட கசப்பையும் கண்ணீரையும் கடலோடிகளால் எளிதில் கடந்துவிட முடியாது. நெருப்பின் சூட்டைக் கடல் மறக்க, நீண்ட காலமாகும். அதுவரை வஞ்சி நகரே வணிகத்தின் தலைவாசலாக இருக்கும் என்று கணித்தான் உதியஞ்சேரல்.

வைப்பூரில் பற்றிய நெருப்பு, பாண்டியப் பேரரசுக்குப் பெருங்களங்கத்தை உருவாக்கியது உண்மைதான். அதனால் யவன வணிகர்கள் கடுஞ்சினம்கொண்டிருந்ததும் உண்மைதான். ஆனால், இறலித்தீவுக்குப்

போய் தேவாங்கை ஹிப்பாலஸ் நேரில் பார்த்த பிறகு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அதனால்தான் அவன் மீண்டும் கொற்கைக்குத் திரும்பினான். மதுரைக்குப் போய் குலசேகரப்பாண்டியனைக் கண்டான்.
கடுங்குற்றச்சாட்டைப் பகிர்ந்து கொள்வதற்காகவே அவன் திரும்பி வந்திருப்பதாக குலசேகரப்பாண்டியன் நினைத்தார். ஆனால் ஹிப்பாலஸ், ``தங்களைக் கண்டு நன்றி சொல்லவே வந்தேன்” என்றான். பேரரசருக்கு விளங்கவில்லை.

``காலம் முழுவதும் கடலிலேயே வாழ்வைக் கழிக்கும் கடல்மனிதன் நான். திசை அறியும் ஆற்றல்கொண்ட விலங்கு ஒன்று இருக்கிறது என்பதைக் கண்டறிந்ததற்காகவே உங்களைக் கண்டு நன்றி சொல்ல வந்தேன். பாண்டிய நாட்டு வானியல் அறிஞர்களின் ஆற்றல் பற்றி நிறையவே கேள்விப்பட்டுள்ளேன். எமது நாட்டின் மூத்த அறிஞர்கள், பாண்டியர்களைப் பற்றி எண்ணற்ற குறிப்புகளை எழுதிவைத்துள்ளனர். நாட்டை 365 பாகங்களாகப் பிரித்து, நாள்தோறும் ஒவ்வொரு பாகத்தில் குடியிருப்பவர்கள் அரசுக்குத் திறை கட்ட வேண்டும் என்று விதி செய்தவர்கள் பாண்டியர்கள். `பல தலைமுறைக்கு முன்பே ஆண்டை நாள்கணக்கில் துல்லியமாகப் பகுத்து, அதை நிர்வாகத்தோடு இணைத்த அறிவு பாண்டியர்களுடையது’ என எழுதிவைத்துள்ளனர். உங்களின் வானியல் ஆற்றலை நாங்கள் கேள்விப்பட்டுள்ளோம். ஆனால், திசை காட்டும் விலங்கொன்று இருக்கிறது என்பதைக் கண்டறிந்த உங்களின் பேரறிவுக்கு, எங்களின் மரியாதையைச் செலுத்துகிறோம். நீங்கள் கண்டறிந்தது மகத்தான ஒன்று. கடல் இருக்கும் வரை இந்தக் கண்டுபிடிப்புக்காகப் பாண்டியப் பேரரசின் புகழை உலகம் பாடும்” என்றான் ஹிப்பாலஸ்.

அவமான உணர்வால் துவண்டுபோயிருந்த குலசேகரப்பாண்டியனுக்கு, மீண்டும் புத்துணர்வு ஊட்டுவதாக இருந்தது ஹிப்பாலஸின் பேச்சு. பறம்பின் மீதான பழிவாங்கும் உணர்வு கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த நேரத்தில், அதற்கு இன்னொரு பரிமாணத்தை அவன் வழங்கினான்.

நீண்ட நெடுங்காலமாகத் தமிழ் நிலத்துக்கும் யவனத்துக்கும் இடையில் கடல் வணிகம் நடந்துவருகிறது. நுரைதள்ளும் கரைவழிப் பயணமாக இரு நிலத்துக் கடலோடிகளும் பல தலைமுறைகளைக் கழித்துவிட்டனர். இரு நாகரிகங்களும் எண்ணற்றவற்றைப் பரிமாறிக்கொண்டிருக்கின்றன. ஆனால், இந்த இரு நிலப்பரப்புகளில் இருப்பவர்களும் கண்டு பெரிதும் வியக்கும் கண்டுபிடிப்பாக தேவாங்கு இருக்கிறது. `சாகசத் தளபதி’ என்று உலகெங்கும் பெயர்பெற்ற ஹிப்பாலஸ், தனது மிகப்பெரிய நாவாய் எரிந்த துயரைக் கடந்து, கண்டறியப்பட்ட தேவாங்குக்காக, தன்னை வணங்கி நிற்கிறான் என்றால் அது எளிதான ஒன்றல்ல.

ஹிப்பாலஸும் குலசேகரப்பாண்டியனும் அடுத்து நடக்க வேண்டியவற்றைப் பற்றி நிறைய பேசினர். அதன் தொடர்ச்சியாகத்தான் இப்போது உதியஞ்சேரலைப் பார்க்க வந்துள்ளான்.

பறம்பின் மீதான உதியஞ்சேரலின் போர்த் திட்டங்களைப் பற்றித்தான் அவன் உரையாடினான். ஹிப்பாலஸுடன் எபிரஸ், திரேஷியன் இருந்தனர். குடநாட்டு அமைச்சன் கோளூர் சாத்தன் கொல்லிக்காட்டு விதையைப் பெற்றுத்தருவதாகக் கூறி, பறம்புக்குச் சென்று பாரியிடம் வணிகம் பேசியதையும், அதன் பொருட்டு கை துண்டிக்கப்பட்டதையும் கூறிய அவர்கள், குடநாட்டினர் இப்போது உதியஞ்சேரலோடு இணைந்து பறம்புக்கு எதிராகச் செய்யும் முயற்சியையும் பகிர்ந்துகொண்டனர்.

யவனர்கள் இங்கு நிகழும் எல்லாவற்றையும் அறிந்துவைத்துள்ளது உதியஞ்சேரலுக்கு வியப்பளிக்கும் ஒன்றாக இல்லை. பல தலைமுறைகளாகச் செழித்தோங்கியிருக்கும் வணிகம், அரசியலுக்குள் ஆழமான வேர்களைச் செலுத்தியிருக்கும் என்பதை அவன் அறிவான்.

ஆனால், பாரியை எப்படியாவது வீழ்த்த வேண்டும் என்று நீண்டநெடுங்காலமாக சிந்தித்துச் செயல்பட்டுக்கொண்டிருப்பது குட்டநாடு. உதியஞ்சேரலின் தந்தையான செம்மாஞ்சேரலைக் கொன்றழித்தவன் பாரி. அதற்குப் பல காலத்துக்கு முன்பே பகை தொடங்கிவிட்டது. உதியஞ்சேரல் பட்டமேற்ற பிறகு பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவருகிறான்.

அவனோடு முரண்பட்டு விலகியிருந்த குடநாட்டு வேந்தன் குடவர்கோவும் இப்போது இணைந்து செயல்பட முன்வந்துள்ளான். இது சூழலை மிகவும்  ஏதுவாக மாற்றியுள்ளது என்று உதியஞ்சேரல் எண்ணிக்கொண்டிருக்கும் போதுதான் வைப்பூரின் மீதான பாரியின் தாக்குதல் நடந்துள்ளது.

எதிரிகளின் எண்ணிக்கையை, பாரி போதுமான அளவுக்கு அதிகப்படுத்திக்கொண்டான். இதைவிட நல்லகாலம் இனி வாய்க்காது என்று உதியஞ்சேரல் நினைத்துக்கொண்டிருந்தபோது தான் ஹிப்பாலஸ் வந்துசேர்ந்துள்ளான். பேரியாற்றங்கரையின் நெடுவுயர் மன்றத்தில் நடந்தபடியே இருவரும் பேசிக்கொண்டிருந்தனர்.

வைகையின் தென்கரைப் படித்துறையில் இருந்த நிலைமாடத்தில் தனித்திருந்தார் குலசேகரப்பாண்டியன். பொழுது கவியக் காத்திருந்தது. ஆற்றங்கரை எங்கும் கூடு திரும்பும் பறவைகளின் கீச்சொலி கேட்டுக்கொண்டிருந்தது. வைகை சீற்றமின்றி ஓடிக்கொண்டிருந்தது. ஆனால், குலசேகரப்பாண்டியனின் எண்ணவோட்டம் அப்படியில்லை. அது கட்டுக்கடங்காமலே இருந்தது. நீண்டநெடும் அரசியல் அனுபவம், அவருடைய எண்ணங்களை வழிநடத்த முடியாமல் திணறியது. அவர் சிறிது நேரம் நடப்பதும் பிறகு உட்காருவதும் உட்கார்ந்த உடனே எழுந்து நடப்பதுமாக இருந்தார்.

தொலைவில் காவல் வீரர்கள் நின்றிருந்தனர். அவர்களைக் கடந்தே முசுகுந்தரும் மற்றவர்களும்

நின்றிருந்தனர். யாரும் நெருங்க முடியாச் சீற்றம்கொண்டிருந்தார் பேரரசர். ஓடும் வைகை, மூழ்கும் கலங்களைக் கண்களுக்குக் காட்டிக் காட்டி மறைத்துக்கொண்டிருந்தது. அவர் தனிமையில் சிந்திக்கவும் ஓய்வெடுக்கவும் எவ்வளவோ இடங்கள் உண்டு. ஆற்றங்கரை மண்டபத்துக்குப் போனால் வைப்பூரின் நினைவே மீண்டும் மீண்டும் வரும். எனவே, அதைத் தவிர்க்கலாம் என்றுதான் பலரும் சொல்லிப்பார்த்தனர். ஆனால், பேரரசர் வேறு எங்கும் போகாமல் தொடர்ந்து இங்குதான் வருகைதந்தார். அதற்குக் காரணமும் இருந்தது.



பாரியின் புகழ், நிலமெங்கும் பரவியிருந்தது. அது ஆள்வோருக்கு இயல்பாகப் பொறாமையை உருவாக்கியிருந்தது. இடைவிடாது பாடித் திரியும் பாணர்கள் தங்கள் குரல் நாளங்கள் விடைப்புற்று வலியெடுக்கும்போதும் பாரியைப் பற்றியே பாடுகின்றனர். சொற்களுக்குள் உருளும் பாரியின் நினைவு, குரல் நாளங்களுக்கு இதம் தருவதாக பாணர் குலமே கருதியது. தோற்பறையை நெருப்பிலே சூடேற்றி ஒலியெழுப்பும் பக்குவத்துக்குக் கொண்டுவருதல்போல பாடிக் களைத்த குரல் நாளங்களை மீண்டும் பாடும் பக்குவத்துக்குக் கொண்டுவர பாரியைப் பற்றிய பாடல்கள் உதவி செய்வதாகவும் பேசினார்கள். பாரியைப் பற்றிய பாணர்களின் பேச்சும் பாட்டும் இசையும் கூத்தும் வேந்தர்களின் ஆழ்மனதில் வெறுப்பை இடைவிடாது உமிழ்ந்துகொண்டிருந்தன. புகழைப் பழுக்கக்காய்ச்சி வேந்தர்களின் அடிநெஞ்சில் இடைவிடாமல் ஊற்றினர். அது எல்லா வகைகளிலும் வினையாற்றிக்கொண்டே இருந்தது.

பாரியின் மீது வெறுப்பும் பொறாமையும் குலசேகரப்பாண்டியனுக்கும் உண்டு. ஆனாலும் தேவாங்குக்காகப் போர் தொடுக்க வேண்டும் என்று கருங்கைவாணனும் பொதியவெற்பனும் கூறியபோதும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம், பொறாமையும் வெறுப்பும் மனித மனத்தைக் குறைந்த அளவே இயக்கும் ஆற்றல்கொண்டவை. பகை மட்டும்தான் அளவற்ற வெறிகொண்டு மனதை இயக்கும் ஆற்றல்கொண்டது. பாண்டிய நாட்டுக்குப் பறம்பின் மீது பகை உருவாகவேயில்லை. அதன்பொருட்டே குலசேகரப்பாண்டியன் போர்தொடுக்கும் திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கவில்லை. பெரும் மலைத்தொடருக்குள் இருக்கும் ஒரு நாட்டைக் கைப்பற்ற வளமிக்க போர்ப்படை மட்டும் போதாது; அதை வழிநடத்துபவர்களுக்கு ஆறாப்பகை இருக்க வேண்டும். அதுதான் அவர்களைச் சினம்

குறையாமல் இயக்கிக்கொண்டேயிருக்கும். பகை, கணம்தோறும் ஊறிப் பெருகக்கூடியது. சூழலில் நிகழும் ஒவ்வொரு காரணத்தையும் பகை தன்னைப் பெருக்கிக்கொள்ள இயல்பாகப் பயன்படுத்திக்கொள்ளும். வெறும் பொறாமையும் வெறுப்பும் எளிதில் அணைந்துவிடும். பகை மட்டுமே மூட்டியவனால்கூட அணைக்க முடியாத பெருநெருப்பு.

இப்போது பாண்டிய நாட்டுக்குப் பறம்பின் மீது தீராப்பகை உருவாகிவிட்டது. நகரும் நதிநீரை கணம்தோறும் பார்த்தவண்ணமே அந்தப் பகையைக் கொழுந்துவிட்டெழச் செய்துகொண்டிருக்கிறார் குலசேகரப்பாண்டியன்.

பேரியாற்றங்கரையின் நெடுவுயர் மன்றத்தில் நடந்தபடியே உதியஞ்சேரலும் ஹிப்பாலஸும் பேசிக்கொண்டிருந்தனர். உதியஞ்சேரல் வயதில் மிக இளையவன். ஹிப்பாலஸைப்போல நெடிய உயரம்கொண்டவன். அவனது அறிவுக் கூர்மையைப் பலரும் பாராட்டுவதை எத்தனையோ முறை கேட்டுள்ளான் ஹிப்பாலஸ்.

குலசேகரப்பாண்டியன் பறம்புக்கு எதிரான வேலைகளைத் தொடங்கிவிட்டதாக ஹிப்பாலஸ் சொன்னபோது, உதியஞ்சேரல் அதைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை.

சிற்றலைகள் எழுந்தபடியிருந்த பேரியாற்றின் கரையில் கண்களை அங்குமிங்குமாக ஓடவிட்டவாறு உதியஞ்சேரல் சொன்னான், ``பகைமைகொண்டு இயங்குபவன் விரைவில் வலிமை இழப்பான். பகை, சினத்தை மட்டுமே வளர்த்தெடுக்கும். போருக்குத் தேவை சினமன்று. ஆனால், இதைத் தவிர மற்ற எல்லாவற்றையும் பகை பின்னுக்குத் தள்ளிவிடும். எனவே, பாண்டியன் இப்போது எடுக்கும் முடிவால் பறம்புக்கு எந்த ஆபத்தும் நிகழப்போவதில்லை.”

உதியஞ்சேரலின் உரை கேட்டு அதிர்ச்சியானான் ஹிப்பாலஸ். பறந்துவந்த மீன்கொத்தி ஒன்று சட்டென மீனைக் கொத்தித் தூக்கியதைப் பார்த்தபடி உதியஞ்சேரல் சொன்னான், ``தேவாங்கின் ஆற்றலைக் கண்டறிந்தது பாண்டியனின் அறிவுக்கூர்மையைக் காட்டுகிறது. ஆனால், அதைப் பிடித்துவர திரையர்களை அனுப்பியது மலைமக்களைப் பற்றிய அறிவற்றதனத்தையே காட்டுகிறது.” ஹிப்பாலஸ், புரியாமல் விழித்தான்.

``நாம் இவ்விடம் வந்து இருபொழுது களாகின்றன. அந்த மீன்கொத்தி, நீண்டநேரம் நாணலில் உட்கார்ந்திருந்தது. பிறகு அந்த மரக்கிளையில் போய் உட்கார்ந்திருந்தது; காற்றிலே வட்டமிட்டுக்கொண்டே இருந்தது. ஏதோ ஒரு கணத்துக்காக அது காத்திருந்தது. அந்தக் கணம் வந்தவுடன் மலையின் மேலிருந்து பாய்ந்து இறங்கும் வீரனைப்போல காற்றைக் கிழித்துக் கண்ணிமைக்கும் நேரத்தில் மீனைக் கவ்வித் தூக்கியது.

நீருக்குள் இருக்கும் மீனை நீரைவிட்டு வெளியில் இருக்கும் ஓர் உயிரினம் வேட்டையாடுவதைப்போல

சவால் நிறைந்தது வேறில்லை. நீரின் மேற்பரப்பில் நீந்திக்கொண்டிருக்கும் மீன், மீன்கொத்தியின் அலகைத் தாண்டிய ஆழத்துக்குப் போகும் முன் காற்றைக் கிழித்துக் கீழிறங்கி வரவேண்டும். அப்படியென்றால், எவ்வளவு துல்லியமான கணிப்பு தேவை. பார்வையின் கூர்மை, சிறகு அசைக்கும் வேகம், கொத்தித் தூக்கும் அலகின் துடிப்பு எல்லாம் ஒருங்கிணைய வேண்டும். ஆனால், எந்தக் காத்திருப்பும் ஆயத்தமும் இல்லாமல் கடகடவெனக் காட்டுக்குள் இறங்க முடிவெடுத்தான் பாண்டியன். அவனது அறியாமை எல்லையற்றது" என்றான் உதியஞ்சேரல்.

வயதில் மிக மூத்தவரான பேரரசர் குலசேகரப்பாண்டியனின் அரசியல் நடவடிக்கையை, சொற்களால் இடித்துத் தள்ளினான் உதியஞ்சேரல். ஹிப்பாலஸுக்கு என்ன சொல்வதெனத் தெரியவில்லை. ``பறம்பின் மீது போர் தொடுப்பது என நான் முடிவெடுத்து, பத்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால், இன்னும் நாணலின் மீது உட்கார்ந்தும் கொப்பில் அமர்ந்தும் காற்றில் பறந்தபடியும்தான் இருக்கிறேன். நீரை நோக்கிப் பாயும் நேரம் இன்னும் கைகூடவில்லை" சொல்லும்போது அவன் கண்கள் சிவந்தன. முறுக்கேறிய கைகளின் ஆவேசத்தை அவனால் கட்டுப்படுத்த முடிந்தது.

``அந்தக் கணம் வரை நான் காத்திருப்பேன். சீவப்பட்ட என் தந்தையின் தலைக்கு ஈடாக, பாரியின் தலையை மண்ணில் சரிப்பேன்." சொற்களிலிருந்த உறுதி ஹிப்பாலஸையே உலுக்கியது.

``குடநாடும் நீங்களும் பறம்புக்கு எதிராகப் போர்புரிய ஒருங்கிணைந்த திட்டத்தை உருவாக்கியுள்ளதாக அறிகிறேன். அதேபோல பாண்டியருடனும் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுக்கலாம் அல்லவா?"

``அதற்கான தேவையும் இல்லை. அதனால், எந்தப் பலனும் நேரப்போவதில்லை."

``ஏன்?"

``எங்களைவிட மூன்று மடங்கு பெரும்படை பாண்டியர்களிடம் இருக்கும் என்று கருதுகிறேன். ஆனால், பாண்டிய நாட்டின் நிலவியல் அமைப்பு, பச்சைமலைத் தொடரின் தன்மை இவற்றைக்கொண்டு பார்த்தால், கீழ் திசையிலிருந்து பறம்பை எதுவும் செய்துவிட முடியாது. காரமலையைக்கூட அவர்களால் தாண்ட முடியாது. மேலேறும் பாண்டியர் படையை அழித்தொழிக்க, பாரிக்கு அதிகப்பொழுது தேவைப்படாது."

``பேரரசின் படையை அவ்வளவு எளிதில் அழித்துவிட முடியும் என்றா சொல்கிறீர்கள்?"

``பறம்பின் ஆற்றல் என்ன என்று பத்தில் ஒரு பங்குகூட பாண்டியர்களால் உணர முடியாது. அதனால்தான் அறிவீனமான செயல்களைச் செய்துதொலைக்கிறார்கள்."

உதியஞ்சேரலின் கோபத்துக்கான காரணத்தை ஹிப்பாலஸால் புரிந்துகொள்ள முடியவில்லை.
``குடநாடும் குட்டநாடும் பச்சைமலைத் தொடரின் பெருங்காட்டின் ஒரு பகுதியாகத்தான் இருக்கிறோம். எங்களாலேயே அவனது ஆற்றலை இன்று வரை அளவிட முடியவில்லை. எல்லை கடந்த ஆற்றலைக் கொண்டிருக்கிறான் அவன். அப்படி இருக்கும்போது, எங்கோ இருந்த திரையர்களையும் அவர்களோடு சேர்த்துவிடும் மூடத்தனத்தைக் கண்டு சினம்கொள்ளாமல் என்ன செய்வது?''

உதியஞ்சேரலின் சினத்துக்கான காரணத்தை இப்போதுதான் புரிந்துகொள்ள முடிந்தது.

``இதுவரை பாரியின் புகழை மட்டுமே பாடிக்கொண்டிருந்த பாணர்கள், இப்போது `வேந்தர்களை மீறிய வீரம்கொண்டவன் பாரி' எனப் பாடுகின்றனர். வேளிர்களை வேந்தர்களுக்கு இணையாகச் சொல்கின்றனர்.

இதற்கெல்லாம் தளம் அமைத்துக்கொடுத்துவிட்டான் பாண்டியன்.''

உதியஞ்சேரல் அடுக்கடுக்காக முன்வைக்கும் குற்றச்சாட்டுகளைக் கேட்டபடி நின்றுகொண்டிருந்தான் ஹிப்பாலஸ். அடுத்து என்ன சொல்வதென அவனுக்குத் தெரியவில்லை.

பேரியாற்றைப் பார்த்துக்கொண்டே பேசிய உதியஞ்சேரலின் முகத்தில் சற்றே மாறுபட்டதன்மை வெளிப்பட்டது. இழுத்து மூச்சுவாங்கி விட்டபடி சொன்னான், ``நடந்தவை எல்லாவற்றையும் நினைத்துப்பார்க்கும்போது பாண்டியன் செய்தது எல்லாமே பிழை. ஆனால், பறம்பின் வீரர்கள் செய்த பிழையும் ஒன்று இருக்கிறது. அதைத்தான் முக்கியமாகக் கவனிக்கவேண்டியுள்ளது.''

இவ்வளவு நேரம் நிகழ்ந்த உரையாடலில் மிக முக்கியமான ஒன்றைப் பற்றி இப்போது உதியஞ்சேரல் பேசுவதாக ஹிப்பாலஸுக்குத் தோன்றியது.
சற்றே ஆர்வத்தோடு கேட்டான், ``என்ன அது?''

``இளமாறனை வெட்டி வீசியது.''

ஹிப்பாலஸ் வியப்பு நீங்காமல் பார்த்தான்.



``மையூர்கிழாரின் மகன் இளமாறனின் தலையை வெட்டி வீழ்த்தியதன் மூலம் வெங்கல் நாட்டின் பகையைத் தேடிக்கொண்டனர். எந்தக் காரணம்கொண்டும் பறம்புக்குத் தீங்கு செய்ய மாட்டோம் என்று உறுதிபூண்ட குலம் அது. ஆனால், இன்று வெங்கல் நாட்டுத் தலைவர் மையூர்கிழார் தன் மகனின் சாவுக்குப் பழிதீர்க்கச் சூளுரைத்துள்ளார். வெங்கல் நாட்டின் பல ஊர்கள் பச்சைமலைத் தொடரில் உள்ளடங்கியுள்ளன. பறம்பின் ஊர்கள் பலவற்றோடு அந்த மக்களுக்கு நல்ல உறவு உள்ளது. இது எங்களுக்குக்கூடக் கிடைக்காத வாய்ப்பு.”

ஹிப்பாலஸின் கண்கள் அசைவற்று அவனையே பார்த்துக்கொண்டிருந்தன.

உதியஞ்சேரல் இறுதியாகச் சொன்னான், “குலசேகரப்பாண்டியன் சரியாகத் திட்டமிடுபவனாக இருந்தால், பாரியின் முடிவைத் தீர்மானிப்பவனாக மையூர்கிழாரை மாற்ற முடியும்.”

- **பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-62




மூன்று வகையான திட்டங்களை முன்வைத்தான் கருங்கைவாணன். மழைக்காலம் முடிந்துவிட்டது; இனி நெடுங்கோடைதான். எனவே கோடைக்காலத்துக்கேற்ப உத்திகளை வகுத்தான். பாண்டியப் பெரும்படையின் வலிமை அளவற்றது; வேறெந்தப் பேரரசுடனும் ஒப்பிட முடியாதது; தொடர்ந்து எண்ணற்ற வெற்றிகளை ஈட்டிவருவது. அறுவடைக்காலம் முடிந்ததும் இதுபோல் இன்னொரு மடங்கு வீரர்களைத் திரட்ட முடியும். எனவே, கருங்கைவாணன் வகுத்த திட்டத்தில் இடம்பெற்றிருந்த வீரர்களின் எண்ணிக்கை இந்த மண் அறியாதது.

``பாண்டியப்படை கேடயத்தோடு வாள் உரசும் ஓசையை, மூன்றாம் மலை கடந்து பாரி உணர்வான்'' என்றான் கருங்கைவாணன். அவனது திட்டங்களையும் போர் உத்திகளையும் கண்டு பொதியவெற்பனும் முசுகுந்தரும் வாயடைத்துப்போயினர். திதியன், கருங்கைவாணனின் நிழல்போல் எந்நேரமும் உடன் இருந்தான். மலைப்பகுதியில் அமைக்கவேண்டிய உத்திகளைப் பற்றி அவன்தான் ஆலோசனைகளை வழங்கியவன். எல்லாவற்றையும் ஒருங்கிணைத்துத்தான் திட்டங்களை வகுத்திருந்தனர்.

போரில், வழக்கமாக வெற்றியே நோக்கமாக இருக்கும். ஆனால், இந்தப் போரில் அதைக் கடந்த நோக்கங்கள் நிறைய இருந்தன. ஆறாப்பகையைத் தீர்த்துக்கொள்ளவேண்டிய தேவையிருந்தது. வாழ்வில் இதுவரை அடையாத அவமானத்தை அடைந்தவனாகக் கூனிக்குறுகிப்போயிருக்கிறான் கருங்கைவாணன். அவன் வழிநடத்திய ஒரு போரில்கூட பாண்டியர் படை தோல்வியைத் தழுவவில்லை. ஆனால், அவனது தவறுதலான கணிப்பால் நெஞ்சுக்குழிக்குள் ஈட்டியை இறக்கிவிட்டனர் திரையர்கள். பகலையும் இரவையும் கடக்க முடியாமல் துடிக்கும் ஒருவனாக அவன் இருக்கிறான். வேதனைக்கு அணுஅணுவாக முகங்கொடுக்கும் கருங்கைவாணன், எப்போதும் அரண்மனையில் தலை கவிழ்ந்தே நிற்கிறான்.

போருக்கான அனுமதியைப் பேரரசர் தராமல் காலங்கடத்தும் ஒவ்வொரு நாளும் அவன் அடையும் வேதனை அளவற்றதாக இருக்கிறது. இந்த முறை வகுக்கப்பட்டுள்ள திட்டத்தைப் பேரரசர் ஏற்றுக் கொள்வார் என்ற நம்பிக்கையுடன் இருந்தான் அவன்.

நேற்று மிக நீண்டநேரம் வைகையின் தென்துறை நிலைமாடத்தில் இருந்த பேரரசர், அதன் பிறகு யாரையும் சந்திக்கவில்லை. காலையில் அவரின் வருகைக்காக இளவரசனும் முசுகுந்தரும் கருங்கை வாணனும் காத்திருந்தனர். நீண்ட நேரத்துக்குப் பிறகு பேரரசர் வருகை தந்தார். அவரது முகத்தை மகிழ்வோடு எதிர்கொள்ள இன்னும் யாருக்கும் துணிவு வரவில்லை. வணங்கி வரவேற்ற அவர்கள், குனிந்த தலையை நிமிர நீண்டநேரமானது.



கருங்கைவாணன், போருக்கான மூன்றுவிதமான திட்டங்களையும் விளக்கினான். தோல் மடிப்புகளை ஒவ்வொன்றாக விரித்து விரித்து, படை நகர்வுகளையும் தாக்குதலையும் மிகுந்த நிதானத்தோடு சொல்லிக் கொண்டிருந்தான். ஆனால் பேரரசர், கவனமாகக் கேட்பதைப்போல்கூடக் காட்டிக்கொள்ளவில்லை. அவரின் கண்ணசைவுகள் எல்லாவற்றையும் எளிதில் கடந்து போய்க்கொண்டிருந்தன. யாராலும் அவரைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் எதிர்பார்ப்புதான் என்ன என்பது விளங்கிக்கொள்ள முடியாததாக இருந்தது.

அவர் அடுத்த பணிக்காக அவையை விட்டு நீங்கியபோது கருங்கைவாணனும் பொதியவெற்பனும் கூனிக்குறுகிப்போயினர். முசுகுந்தர், கலங்கிய முகத்தோடு அவருக்குப் பின்னால் போய்க் கொண்டிருந்தார்.

முன்புபோல் கலங்கிப்போயிருக்கவில்லை பொற்சுவை. அவளின் முகம் தெளிவுகொண்டிருந்தது. காலம் எல்லாவற்றையும் கற்றுக்கொடுக்கும்; கற்றுக்கொள்ளும் சுவை அறிந்தவளுக்குக் கணக்கின்றிக் கற்றுக்கொடுக்கும். வெளிமாடத்தில் நின்றபடி சக்கரவாகப் பறவை பறந்து சென்ற திசையைப் பார்த்துக்கொண்டே இருந்த காலம் முடிந்துவிட்டது என்பதை உணர்ந்தாள். தன்னுள்ளும் தன்னைச் சுற்றியும் என்னதான் நிகழ்கிறது என்பதை அறியத் தொடங்கினாள்.

வைப்பூரில் நெருப்புப் பற்றிய செய்தி வந்தபோது, அரண்மனையே அதிர்ச்சியில் உறைந்துபோயிருந்தது. ஆனால், அவள் அதிர்ச்சியடைய அதில் ஒன்றுமில்லை. நெருப்பினும் கொடும் அழிவை அகவாழ்வில் கண்ட ஒருத்திக்கு, நெருப்பின் சூடு புதியதாகத் தாக்க என்னவிருக்கிறது? மூழ்கிய கலங்களைப் பற்றியும் மிதந்த சாம்பலைப் பற்றியும் நாள் கணக்கில் பேசினர். அதற்கு வெகுநாள்களுக்கு முன்பிருந்தே அவள் அதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறாள். ஏறக்குறைய

அவளின் அனைத்துக் கனவுகளுக்கும் அதுதான் நிகழ்ந்தது; எந்தவித மிச்சமுமின்றி நிகழ்ந்தது. வைப்பூருக்காவது வைகை மிஞ்சியது; பொற்சுவைக்கு மிஞ்ச எதுவுமில்லை.
துயரம், தன்னுள் மட்டுமல்ல... அரண்மனையின் வெளி முழுவதும் பரவியிருக்கிறது என்பதை உணர்ந்தாள். குலசேலரப்பாண்டியனும் பொதியவெற்பனும் சூல்கடல் முதுவனும் ஒருசேர மனமொடிந்து கிடப்பதாகக் கேள்விப்பட்டாள். மேல் மாடத்தில் வீற்றிருந்த அவளை, வைகையின் இளங்காற்று தழுவிக் கடந்தது. நெருப்பும் துயரமும் தன்னை நோக்கி வர மறுப்பதை அறிந்தபோது வைகை நெருக்கமாக இருப்பதாக உணர்ந்தாள்.



அழிவு நீக்கமற நிகழ்ந்துவிட்டது. மணவிழாவின் நினைவுப்பரப்பெங்கும் துயரம் பரவிக்கொண்டிருப்பதைப் பற்றி எல்லோரும் பேசிக்கொண்டிருந்தனர். எல்லாவற்றையும் அமைதியுடன் கவனித்தபடி இருந்தாள். நீண்ட தனிமை அவளுக்குத் தேவைப்பட்டது. தனித்திருத்தல், அவளின் இயல்புக்கு முற்றிலும் மாறானது. ஆனாலும் அதற்குள் புகுந்தாள். நீண்டநாள்களாக சுகமதியைக் கண்டு பேசவில்லை.

மாதங்கள் சில ஓடிய பிறகு இப்போதுதான் சுகமதியை அழைத்துவரச் சொல்லி, பணிப் பெண்களை அனுப்பினாள்.

பின்தொடர்ந்து போன முசுகுந்தர் விரைந்து நடந்து அவரை அணுகவும் முடியாமல், மிகவும் பின்தங்கியும்விடாமல் நடந்து வந்தார். அதாவது, பேரரசருக்குப் பின்னால் அமைச்சர் நடந்து வருகிறார் என்பதைப் பேரரசர் உணரக்கூடிய நிலையில் வந்துகொண்டிருந்தார்.

முசுகுந்தரின் மனம், பேரரசரைப் புரிந்து கொள்ள இடைவிடாது முயன்றுகொண்டிருந்தது. வைப்பூரில் நிகழ்த்தப்பட்ட தாக்குதலால் பாண்டிய நாட்டின் புகழில் நிரந்தரமான கறை விழுந்துவிட்டது என்று பலரும் பேசுகின்றனர். அதைச் செய்தவர்களை அழித்தொழித்தால் மட்டுமே, இந்தக் கறையை அகற்ற முடியும்; பேரரசின் புகழை நிலைநாட்ட முடியும். ஆனால், பேரரசர் ஏன் தாக்குதலுக்கான அனுமதியைக் கொடுக்க மறுக்கிறார்?

``வைப்பூர்த் துறைமுகத்தைப் புதுப்பிக்கும் பணியை உடனடியாகச் செய்ய வேண்டும்; முன்னிலும் பெருந்துறைமுகமாக அதை வடிவமைக்க வேண்டும்'' என்று வெள்ளிகொண்டார் கேட்டதற்கும் பேரரசர் அனுமதி வழங்கவில்லை.

பேரரசின் வலிமை என்பது, அழிக்கப்பட்ட ஒன்றை அதைவிடப் பல மடங்கு சிறப்போடு கட்டி எழுப்புவதில் உள்ளது. ``துறைமுகம் என்பது செல்வத்தின் கண்; நாம் அதை விரைந்து செப்பனிட வேண்டும்” என்று வெள்ளிகொண்டார் கேட்டுள்ளார்.

``எரித்தவனை அழிக்காமல், எரிக்கப்பட்ட பொருளை மீண்டும் அலங்கரிக்க நினைப்பது அவமானம்” என்று கூறியுள்ளார் பேரரசர்.

அப்படியென்றால் பாரியை வீழ்த்திவிட்டுத்தான் வைப்பூரைப் புதுப்பிக்கும் பணியைச் செய்யும் முடிவோடு இருக்கிறார் என்பது புரிகிறது. பிறகு ஏன் படையெடுப்புக்கான எந்தவித அனுமதியும் வழங்க மறுக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் முசுகுந்தரின் மனம் தவித்தது.

பேரரசர், சித்திரக்கால் மண்டபத்துக்குள் நுழைந்தார். குழம்பிய மனதோடு அவரின் பின்னாலேயே போன முசுகுந்தர், அரசரைப் பார்க்க அனுமதி கேட்டு, பணியாளனை உள்ளே அனுப்பினார்.

**சு**கமதி உள்ளே நுழைந்தாள்.

கார்காலப் பள்ளியறையிலிருந்து வேனிற்காலப் பள்ளியறைக்கு இளவரசி மாறப்போவதால், இங்கிருந்து அங்கு எடுத்துச் செல்லவேண்டிய பொருள்களைப் பணிப்பெண்கள் எடுத்துக் கொண்டிருந்தனர்.

சுகமதியைப் பார்த்ததும் உள்ளறைக்குப் போய் செய்தி சொன்னாள் ஒருத்தி. உள்ளிருந்த பொற்சுவை, மாளிகையின் நடுமண்டபத்துக்கு வந்தாள். வேலை செய்துகொண்டிருந்த பணிப் பெண்கள் இடம் விட்டு வெளியேறினர்.

நடுவில் இருந்த பெருங்கட்டிலில் பட்டுமெத்தைப் படுக்கையின் மீது செந்நிறப் பட்டால் வடிவமைக்கப் பட்ட எலிமயிர்ப் போர்வை ஒழுங்கற்ற மடிப்போடு கிடந்தது. அதைப் பார்த்துக்கொண்டிருந்த சுகமதியின் கண்கள் சட்டெனத் திரும்பி உள்நுழையும் பொற்சுவையைப் பார்த்தன.



பார்த்த கணத்தில் இயல்பான பேச்சு தொடங்கியது. ``கார்காலம் முடிந்துவிட்டது. எனவே, வேனிற்காலப் பள்ளியறைக்கு இளவரசி இடம்பெயர்வது அரண்மனை வழக்கமாம். அதற்கான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன சுகமதி" என்றாள்.

சற்றே மெல்லிய குரலில் ``எல்லாம் வழக்கப்படி தான் நடக்கின்றனவா?" என்று கேட்டபடி இடப்புறமாகத் திரும்பி ஒழுங்கற்ற போர்வை மடிப்பைப் பார்த்தாள் சுகமதி.

அசட்டுச் சிரிப்போடு பொற்சுவை சொன்னாள், ``நானும் உன்னைப்போல்தான் நினைத்தேன். இதே கேள்வியை எனக்குள் கேட்டுக்கொண்டேன்."

சுகமதிக்குப் புரியவில்லை.

``எல்லாம் வழக்கப்படி நடக்கின்றனவா? அப்படி நடக்கவில்லையே என முடிவுசெய்து உள்ளுக்குள் மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால், காலம் தாழ்த்திதான் உணர்ந்தேன் எல்லாம் வழக்கப்படிதான் நடக்கின்றன."

சுகமதி கேட்டதன் பொருள் சற்றே வெளிப்படையாகத்தான் இருந்தது. ஆனால், பொற்சுவை சொல்வதற்குள் என்ன பொருள் இருக்கிறது என்பது புரியவில்லை.

`வெளிப்படையாகவே கேட்போம்' என்று சுகமதிக்குத் தோன்றியது. படுக்கையின் அருகில் வந்தாள், எலிமயிர்ப் போர்வையை மெள்ளத் தொட்டுப் பார்த்தபடி, ``இந்தப் போர்வை உங்கள் இருவரின் உடல்களை உணர்ந்ததா?"

``அதை நீ அறியவேண்டாம் சுகமதி. என்னைப்போல் நீயும் சிக்கிக்கொள்ள நேரிடும்."

பழைய சுகமதியென்றால் தலை கவிழ்ந்து சொற்களை உள்வாங்கி நிதானமாக அடுத்த வினாவைக் கேட்டிருப்பாள். ஆனால், இப்போது அப்படியல்ல. கவிழ்ந்த தலையைச் சட்டென நிமிர்த்திக் கேட்டாள், ``உண்மையில் நீங்கள் யாரிடம் சிக்கிக்கொண்டுள்ளீர்கள், காதலனிடமா... பொதியவெற்பனிடமா?"

``பெண் ஒருபோதும் ஆணிடம் சிக்கிக்கொள்ள மாட்டாள். அவள் சிக்கிக்கொள்வது அவளிடம்

மட்டும்தான்” எனக் கண நேர இடைவெளியின்றிச் சொற்களை எறிந்துவிட்டு நடந்தாள் பொற்சுவை. சுகமதிக்கு எதிர்பாராத பதிலாக இருந்தது.

பொற்சுவை தொடர்ந்தாள், ``ஆண் ஒருபோதும் பெண் மனதைக் கண்டறிய முடியாது. பெண்ணுடல், பிரித்தறிய முடியாத மர்மங்களின் சேர்மானம். ஆண்களால் கணிக்கவே முடியாத கற்பாறை. எனவே, ஆணைக் கண்டு எனக்கு எப்போதும் பயம் இல்லை. நான் சிக்கிக்கொண்டிருப்பது என்னிடம்தான்.”

``உங்களிடமே நீங்கள் சிக்கிக்கொண்டுள்ளீர்கள் என்றால், உங்களை விடுவிக்கும் ஆற்றலும் உங்களிடம் உள்ளது என்றுதானே பொருள்!”

``உனது பேச்சுமொழியே மாறிவிட்டது சுகமதி. முன்னிலும் தெளிவாகப் பேசுகிறாய்” என்று சுகமதியை வெகுவாகப் பாராட்டினாள். ஆனால், அவளின் சிக்கல் என்னவென்று மட்டும் சொல்லவில்லை.

பொற்சுவையின் பின்னால் நடந்தபடியிருந்த சுகமதி, தான் எழுப்பிய கேள்வியிடமிருந்து மட்டும் நகரவில்லை, ``பெண் மனதை ஆண் கணிக்கவே முடியாது என்றா சொல்கிறீர்கள்?”

``ஆம், அதில் என்ன ஐயம்? நதியின் ஆழத்தைப் படகு அறியாது. நீரின் போக்கில் நகர்வதே அதற்கு இன்பம் பயக்கக்கூடியது. அதன் தேவையும் அதுதான்.”

``எல்லா ஆண்களையும் அப்படிச் சொல்லிவிட முடியுமா?”

``ஆண் என்ற வடிவத்துக்கு விதிவிலக்குகள் இல்லை சுகமதி.”

அதிர்ந்தாள். அவளது முகம், பொற்சுவை சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாமல் திணறியது.

``நீலம் என்பது வானத்தின் விதியல்ல, இயல்பு. விதியாக இருந்தால் விதிவிலக்கு இருக்கும். இயல்பாக இருந்தால்?”

சுகமதி திகைத்து நின்றாள்.

**கா**ரணம் புரியாத திகைப்பிலும் குழப்பத்திலுமிருந்து முசுகுந்தர் மீளவில்லை. உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நீண்ட நேரம் காத்திருந்தார்.

பேரரசரின் அழைப்பை, பணியாளன் வந்து சொன்னான். உள்நுழைந்தார் முசுகுந்தர்.

பேரரசரைப் பார்த்துவிட்டுச் சிலர் வெளியேறினர். அவர்கள் யாரென முசுகுந்தரால் அறிந்துகொள்ள முடியவில்லை. யாராக இருக்கும் என்ற சிந்தனையிலேயே பேரரசரின் முன் வந்து நின்றார்.

வந்து நின்ற கணத்தில் பேரரசர் கேட்டார், ``நாம் செய்த பிழை என்ன அமைச்சரே?”

அழுத்திக்கொண்டிருந்த கட்டி வெடித்ததைப்போல் இருந்தது. இந்தக் கேள்வியைக்கூட இத்தனை நாள் அவர் கேட்கவில்லை. வாழ்க்கை முழுவதும் சந்தித்திராத அவமானத்தை இந்தக் காலத்தில்தான் முசுகுந்தர் சந்தித்தார். வைப்பூரின் அழிவுக்குப் பிறகு ஒற்றைக் கேள்விகூட அவர் கேட்கவில்லை. அந்தப் பெரும் அழிவை நேரில் பார்த்தவர் முசுகுந்தர்தான். எதையும் கேட்க மறுத்ததன்மூலம் உருவான நிராகரிப்பை, அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

`இப்போதாவது கேட்டாரே!' என்று சற்றே ஆறுதலுடன் சொன்னார், ``தேவாங்கைக் கொண்டுவந்தவர்கள் எல்லாம் திரையர்கள்தானா என்பதைச் சோதிக்கத் தவறியது.”

``இல்லை. `திரையர்கள் வீழ்ந்து விட்டார்கள்' என்று கருங்கைவாணன் சொல்லியதை நம்பியது.”

பேரரசரின் எண்ணம் எவ்வளவு உள்ளோடியதாக இருக்கும் என்பதை நன்கு தெரிந்த முசுகுந்தரே முதல் கேள்வியிலேயே மூச்சுமுட்ட நின்றார்.

பேரரசர் தொடர்ந்தார், ``படைவீரர்கள் தாம் தோற்றவுடன் வீழ்வார்கள். குலம் காக்கும் போராளிகள் ஒருபோதும் வீழ மாட்டார்கள்; கடைசிக் கணத்திலும் வெகுண்டெழுவார்கள்.”

பேரரசரின் சொல் முசுகுந்தருக்கு எந்தச் சொல்லையும் விட்டுவைக்க வில்லை.

``வெற்றி என்பது, போர் வீரர்களாலும் போர் உத்திகளாலும் நிகழ்வது என்று நம்புகிறான் கருங்கைவாணன். இல்லை, இறுதியாக அது கனிவது எதிரி தரும் வாய்ப்பில்தான். எதிரியையே நம்மால் கணிக்க முடியாதபோது, அவன் தரும் வாய்ப்பை நம்மால் எப்படி அறிய முடியும்?”

``இயல்பாக அமைந்த வாய்ப்புகள் அல்ல, திட்டமிட்டே உருவாக்கப்பட்ட வாய்ப்புகள்” என்றாள் பொற்சுவை.

சுகமதி அதிர்ச்சி நீங்காமல் அவள் சொல்வதைக் கவனித்தாள்.

``மணவிழாக் காலத்திலும், மணம் முடிந்த பிறகும் இளவரசர் நாட்டியப் பெண் நீலவல்லியுடன் மட்டுமே இருந்தார். எனது அருகில் வராதது, எனது தேவையாகவும் இருந்தது. எனவே, அந்த நாள்களை எனது விருப்ப நாள்களாக அமைத்துக்கொண்டேன். நான் நானாக இருப்பதால் கிடைக்கும் இன்பம் பறிக்கப்படாமல் இருந்தால் மகிழ்ச்சிதானே. அந்த மகிழ்ச்சி எல்லையின்றி நீடித்தது.

ஆனாலும் உள்ளுக்குள் ஓர் ஐயம் உருவாகியபடியே இருந்தது. `எல்லாவற்றுக்கும் விதி செய்துள்ள இந்தப் பேரரசில் இதற்கு மட்டும் விதியின்றி இருக்காதே! விதியை மீறிச்செயல்பட வாய்ப்பில்லையே!' எனத் தோன்றியது. சிறிது சிறிதாக விசாரித்தேன். அரண்மனைபோல உண்மைகள் எளிதில் ஒழுகுமிடம் வேறுண்டா என்ன? முழு உண்மையும் வெளிப்பட்டது.”

பொற்சுவை என்ன சொல்லவருகிறாள் என்பதைத் திகைப்போடு கவனித்தாள் சுகமதி.



``இளவரசனுக்கு மனைவிமீது காதல் கூடாது. அது நாணத்தக்க நடத்தை. காதல் மரியாதையை உருவாக்கும்; மரியாதை பணிவை உருவாகும். மனைவியிடம் பணிவதுபோல் இழிசெயல் இன்னொன்றில்லை. மனைவியின் அன்புக்கும் அழகுக்கும் பணிவது ஆண்மையல்ல. மனைவி மீது மோகம்கொள்ளுதல் அரச நடவடிக்கையிலிருந்து அவனது சிந்தனையை மாற்றும்.''

பொற்சுவை சொல்வதை சுகமதியால் உள்வாங்க முடியவில்லை.

அவள் தொடர்ந்தாள், ``இவை எல்லாம்தான் இளவரசனின் அகவாழ்வு பற்றி அரண்மனையில் உருவாக்கப்பட்டுள்ள விதிகள். ஆனால், காமத்தை விதிகளால் கட்டுப்படுத்த முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். எனவே, காமம்கொண்டே அதை ஒழுங்கு படுத்த விதியமைத்துக்கொண்டனர்.

எலிமயிர்ப் போர்வையைச் சற்றே விலக்கி, மெத்தையில் அமர்ந்து, தலையணையில் சாய்ந்தபடி சுகமதியைப் பார்த்தாள் பொற்சுவை.

அடுத்து சொல்லப்போகும் சொல்லை நோக்கியபடி இருந்தாள் சுகமதி. பொற்சுவை தொடர்ந்தாள், ``வழக்கமான வடிவுடைய பெண்ணாக இருந்தாலே மணம் செய்யப்போகும் இளவரசன் அவளின் மீது காதல்கொண்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கும் அரசகுலம், பேரழகு கொண்ட ஒருத்தியை மணப்பெண்ணாகத் தேர்வுசெய்துவிட்டால் எவ்வளவு கவனம்கொண்டு செயல்படும்?! எனது வாழ்க்கையிலும் அதுதான் நடந்துள்ளது.

மணப்பெண்ணாக என்னைத் தேர்வுசெய்த உடனே முடிவுசெய்துள்ளனர், ‘இவ்வளவு அறிவும் அழகும் படைத்த ஒருத்தியிடம் இளவரசன் எக்காரணம்கொண்டும் மயங்கிவிடக் கூடாது’ என்று. எனவே என்னைவிட அழகுவாய்ந்த ஒருத்தியைத் தேடத் தொடங்கியுள்ளனர்.''

சுகமதி, இமை மூடாத வியப்பில் உறைந்து நின்றாள்.

``அழகுக்கலையின் பேரழகி என்று வர்ணிக்கப்பட்ட வேணாட்டு மங்கை நீலவல்லியைக் கண்டறிந்துள்ளனர். மணவிழாவுக்கு மூன்று நாள்களுக்கு முன்பு பெருவிருந்தின் நடன அரங்கில் இளவரசரின் முன் அவளது அரங்கேற்றம் நிகழ்ந்துள்ளது. கலையின் உச்ச சுழற்சியில் காமத்தின் கனியைப் பொதியவெற்பனுக்குப் பரிமாறியுள்ளாள் நீலவல்லி.

திருமணத்துக்கு முன் விருந்தினரோடு நாட்டியம் காண அரசியார் என்னை அழைத்ததாக நீ வந்து சொன்னாய் அல்லவா? அதை இயல்பான நிகழ்வாக நாம் நினைத்தோம். அது இயல்பாக நடந்ததன்று; முன்னேற்பாட்டோடு இளவரசனுக்கும் தெரியாமல் நடத்தப்பட்டது.



கலையின் வழியாக ஆணுக்குள் இறங்குபவள், இயல்பாகவே அடியாழம் வரை இறங்க முடியும். அப்படித்தான் அவள் அவனுக்குள் திட்டமிட்டு இறக்கப்பட்டுள்ளாள். அரண்மனையில் மணவிழா என்பது மணப்பெண்ணைச் சுற்றி மட்டும் நடப்பதல்ல; அதற்கு எதிர் திசையில் இன்னொரு பெண்ணைச் சுற்றியும் நடக்குமாம்.

மணப்பெண்ணின் வாசனையை நுகர்வதற்குச் சற்றுமுன் இன்னொருத்தியின் வாசனையில் அவன் கரைக்கப்படுகிறான். அந்த வாசனையிலிருந்து அவன் மீள நெடுங்காலமாகும். அக்கால இடைவெளி இயல்பாகவே மணப்பெண்ணின் மீதான புதுமையை உள்ளுக்குள் உதிரச்செய்துவிடும்.”

கேட்டுக்கொண்டிருக்கும் சுகமதி என்ன ஆகிறாள் என்பதைக்கூடப் பார்க்க பொற்சுவை ஆயத்தமாகவில்லை. அவள் பேசியபடியே இருந்தாள்.

பேச்சை இழந்து நின்றார் முசுகுந்தர்.

``போர் என்பது, எதிரியின் மீது தொடுக்கும் ஓர் ஆயுதம்தான். அதுபோல வலிமையுடைய வேறு பல ஆயுதங்களும் இருக்கின்றன. நான் அவற்றை உருவாக்கிக்கொண்டிருக்கிறேன்” என்றார் பேரரசர் பேரரசரின் அமைதிக்குக் காரணம், சிறிது சிறிதாக முசுகுந்தருக்குப் புரியத் தொடங்கியது. அவர் பல வழிகளில் இயங்கிக்கொண்டிருக்கிறார். புதிய வழிமுறைகளையும் அதற்கான மனிதர்களையும் அவர் கண்டறிந்துவிட்டார் என்பது தெரிகிறது. ஒருமுறை பாதிப்பை உருவாக்கிவிட்டால் அனைவரின் மீதிருக்கும் நம்பிக்கை எப்படிப் பொய்த்துப் போகிறது என்பதை வெட்கத்தோடு ஏற்றுக்கொள்பவராக முசுகுந்தர் தலைகவிழ்ந்து நின்றார்.

பேரரசர் தொடர்ந்தார், ``இம்மண் காணாத பெரும் படையோடு நிற்கும் கருங்கைவாணன், நான் ஏவப்போகும் ஒற்றை ஆயுதம்தான். அதைப் பொருத்தமான நேரத்தில் பயன்படுத்துவேன். ஆனால், மற்ற ஆயுதங்களை உருவாக்க சற்றே காலம் தேவைப்படுகிறது.”

``அதன் பொருள், நான் தேவைப்படவே இல்லை என்பதல்ல. எப்போது என்பதை அவர்கள் முடிவுசெய்கிறார்கள்.”



கலங்கிப்போய் இருந்த சுகமதி, அவள் பேச்சை உள்வாங்கும் வலிமையற்று நின்றாள்.

``பொருத்தமான நேரத்தில் பயன்படுத்தச் சொல்லி உத்தரவிடப்பட்டதால் சில நாள்களுக்கு முன் அவர் இங்கு வந்தார்.” சொல்லி நிறுத்தினாள் பொற்சுவை.

`என்ன நடந்தது?’ எனக் கேட்க சுகமதிக்குத் துணிவு வரவில்லை, அமைதியானாள். ஆனால், பொற்சுவை யிடமிருந்தும் எந்தச் சொல்லும் வரவில்லை. அமைதியே நீடித்தது. கொடும் அமைதியைப் பொறுக்க முடியாமல் பொற்சுவையை நிமிர்ந்து பார்த்தாள். அவளோ படுக்கையில் படுத்தபடி மாளிகையின் மேற்கூரையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

`ஏன் திடீரெனப் பேச்சை நிறுத்திவிட்டாள்?’ என்று எண்ணியபடி சுகமதியும் அண்ணாந்து மேற்கூரையைப் பார்த்தாள். அமைதி நீடித்தபடியே இருந்தது.

மெல்லிய குரலில் பொற்சுவை கேட்டாள், ``மேலே வரையப்பட்டுள்ளது என்ன தெரியுமா?”

அண்ணாந்து பார்த்தபடியே சுகமதி சொன்னாள், ``விண்மீன்களும் கோள்மீன்களும் வரையப்பட்டுள்ளன.”

மெத்தையில் சாய்ந்துபடுத்து நிலைகொத்தி அதைப் பார்த்தபடி பொற்சுவை சொன்னாள், ``அது பொதியவெற்பன் பிறந்தபோதிருந்த வானியல் அமைப்பு. இந்த அமைப்பு கொண்டவன் தனது வழித்தோன்றல்களை உருவாக்குவதற்கான காலக்குறிப்பு உள்ளதாம். அதைக் கணித்தே அவன் இந்த அறைக்கு அனுப்பப்பட்டான்.”

அதிர்ச்சியிலிருந்து மீள முடியாத சுகமதி, எலிமயிர்ப் போர்வையிலிருந்து மெள்ள கைகளை விலக்கினாள்.

அசைவறிந்து அதைப் பார்த்தபடி பொற்சுவை சொன்னாள், ``அப்படி என்னால் விலகிவிட முடியாதே சுகமதி.”

கதறவேண்டும் எனத் தோன்றியது. கட்டுப்படுத்த முயன்றாலும் கண்கள் பீறிடத் தொடங்கின.

``வேட்டை விலங்கைக் கண்டு எந்த விலங்கும் அழுவதில்லை சுகமதி. வேட்டையின் ஒரே விதி போராடுதல் மட்டும்தான்.”

சொல்லியபடி படுக்கையிலிருந்து எழுந்தாள். ``நள்ளிரவுக்குப் பிறகு திடீரென எனது அறைக்குள் அரண்மனையின் முதுபெண்கள் நுழைந்தனர். விளக்குகள் எல்லாம் ஏற்றப்பட்டன. ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த நான் திடுக்கிட்டு எழுந்தேன். விளக்கொளியில் கண்கள் கூசின. எனது உடலை அவர்கள் சடங்குப்பொருளாக்கினர். முதலில் என்ன நடக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. சிறிது நேரத்தில் புரிந்துகொண்டேன். முற்றிய தேறலின் கடிமணம் காற்றில் மிதந்து வந்தபோது அவர்கள் எல்லோரும் அறையைவிட்டு வெளியேறினர்.

எனது உடலை இவர்கள் என்ன செய்து வைத்திருக்கிறார்கள் என்பதை, குனிந்து இங்கும் அங்குமாகப் பார்த்துக்கொண்டிருக்கும்போது மூச்சுக்காற்று எனது முகத்தில் பட்டது.”

பேரரசர் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் அடுத்தடுத்து வந்து முகத்தில் அறைந்து கொண்டிருந்தது.

``இதுவரை கருங்கைவாணன் நடத்திய அனைத்துப் போர்களிலும் பாண்டிய நாடு வெற்றிபெற்றது என்பது உண்மை. ஆனால், அவை அனைத்தும் படையின் வலிமையால் அடையப் பெற்ற வெற்றியே. தளபதியின் வலிமையாலும் தந்திரத்தாலும் அடைந்த வெற்றி என எதுவுமில்லை. திரையர்களை வெற்றிகொண்டதற்குத் திதியனே காரணம்.”

பேரரசர் இதைச் சொல்வது எதற்காக என, முசுகுந்தரால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், சொல்லை அத்துடன் நிறுத்திய பேரரசர் எழுந்து முசுகுந்தரை ஒரு பார்வை பார்த்தபடி அவை விட்டு அகன்றார்.

`இந்தச் சொல்லுக்கு என்ன பொருள்? இந்தப் பார்வைக்கு என்ன பொருள்? கருங்கைவாணன் போதிய திறமைகொண்டவனல்லன் என்று சொல்கிறாரா அல்லது அவனை மட்டுமே நம்பி படை நடத்த முடியாது என்று சொல்கிறாரா? திதியனின் தந்திரத்தைப் பாராட்டுகிறாரா? அவர் பயன்படுத்திய இந்தச் சொற்களின் வழியாக நான் புரிந்துகொள்ளவேண்டியது என்ன? மற்றவர்களுக்கு நான் சொல்லவேண்டிய செய்தி என்ன? இப்போது தீட்டப்பட்டுள்ள எந்தத் திட்டமும் குறைந்த அளவுகூடத் தகுதியான திட்டமில்லை என்பதைத்தான் அவர் சொல்லிச் செல்கிறாரா?’

சிந்தித்தபடியே நீண்ட நேரம் அந்த இடம் விட்டு அகலாமல் அப்படியே நின்றார் முசுகுந்தர்.

``எவ்வளவு நேரம்தான் அப்படியே நிற்பாய்? வா” என்று கைபிடித்து இழுத்தாள் பொற்சுவை.

உயிரற்ற ஒருத்தியாய் அவளின் இழுவைக்கு உடன்போனாள் சுகமதி.

``பரவிக்கிடப்பது அடர் இருளென்றாலும் அதிகாலையில் செவ்வொளி பரவத்தானே செய்யும். முழுமையாக வேட்டையாடப்பட்டதாக உணர்ந்த பிறகுதான் இன்னொன்றையும் உணர்ந்தேன்.”

சுகமதியின் உயிரற்ற கண்கள் அவளை நோக்கி மெள்ளப் புருவம் உயர்த்தின.

``எவ்வளவு வேட்டையாடப்பட்டாலும் என்னிடமிருக்கும் எதையும் எடுத்துச் சென்றுவிட முடியாதல்லவா? மறுநாள் காலை நிலைக்கண்ணாடி முன் வெகுநேரம் நின்றேன். மெள்ளப் புன்னகைத்துப் பார்த்தேன். எனது புன்னகை என்னிடம்தான் இருந்தது. நான் எதையும் இழக்கவில்லை என்று உணர்ந்தபோதுதான், என்னை வேட்டையாட முடியாது என்பதையும் உணர்ந்தேன்.''

பேசியபடியே கைபிடித்து இழுத்துக்கொண்டே படிகளில் ஏறினாள். `எங்கே அழைத்துச் செல்கிறாள்?' என்ற குழப்பத்திலே வந்தாள் சுகமதி. மேல்நிலையில் இருக்கும் ஓர் அறைக்குள் நுழைந்ததும் சொன்னாள், ``இதுதான் வேனிற்காலப் பள்ளியறை.''




பொற்சுவை சொன்னதும் சட்டெனத் தலை நிமிர்த்தி மேற்கூரையைப் பார்த்தாள் சுகமதி. அங்கேயும் வானியல் காட்சிகள் வரையப்பட்டிருந்தன. நெற்றியில் வடிந்த வியர்வையைத் துடைத்தபடி பொற்சுவையைப் பார்த்தாள்.

``இது, நான் பிறந்த வானியல் அமைப்பைக் குறிக்கும் ஓவியம்.''

மூர்ச்சைகொண்டு நின்றாள் சுகமதி.

மெல்லிய சிரிப்போடு சொன்னாள் பொற்சுவை, ``ஒருவேளை, இனி எனது வேட்டைக்கான காலமாக இருக்குமோ!''

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள் பாரி-63




**வா**ய்நிறைய வெற்றிலையை மென்றபடி கபிலரின் குடிலுக்கு வந்தார் வாரிக்கையன். காலையிலேயே பெரியவர் வந்துள்ளாரே என வேகமாக வெளியில் வந்து திண்ணையில் உட்கார்ந்தார் கபிலர்.

உள்ளிறங்கும் வெற்றிலையின் சாற்றுக்கு இடையூறில்லாமல் பேச்சைத் தொடங்கினார். “எதிரிநாட்டு அரசன் வீழ்ந்துவிட்டான் என்பதன் குறியீடாக அவன் நாட்டுக் காவல்மரத்தை வெட்டியெடுத்துச் செல்வார்கள். பறம்பின் காவல்மரம் எதுவெனத் தெரியாது. அதனால் பறம்பைக் காக்கும் கொற்றவையின் குழந்தையான தேவவாக்கு விலங்கினை எடுத்துச்சென்றால் பறம்பை வென்றதாகப் பொருள். அதனால்தான் காலம்பன் கூட்டத்தை அனுப்பி தேவவாக்கு விலங்கினை எடுத்துவரச் சொல்லியுள்ளான் பாண்டியன் என்று நீங்கள் சொன்னதாக வீரர்கள் சொல்கிறார்களே அது உண்மையா?”

மெல்லும் வெற்றிலையை இடப்புறமாகவும் வலப்புறமாகவும் ஒதுக்கியபடியே பக்குவமாய்ப் பேசினார் வாரிக்கையன். வெற்றிலையின் சிறப்பு, மெல்லுகிறவரின் வாயில் எவ்வளவு ஊறுமோ அதே அளவு அருகில் இருப்பவரின் வாயிலும் ஊறும். கபிலர் கைநீட்டும்பொழுதே வாய் அசையத் தொடங்கிவிட்டது.

வாரிக்கையன் ஒவ்வொரு வெற்றிலையாய் எடுத்துக் கொடுத்தார். வாங்கி, தடம்பார்த்து மடித்தபடியே கபிலர் சொன்னார், “இதுவும் காரணமாக இருக்கலாம் என்றுதான் சொன்னேன். இதுதான் காரணம் என்று சொல்லவில்லை.”

“இது காரணமாக இல்லாமலிருக்கவும் வாய்ப்பிருக்கிறதா?”

“இருக்கிறது.”

மூன்று வெற்றிலைகளை ஒன்றாக மடித்து இடதுகடவாயின் கடைசிப்பல்லுக்குக் கொடுத்தபடி வாரிக்கையன் கேட்டார் “என்ன அது?”

“இந்தக் காரணத்துக்காக எடுத்துச்செல்லப்பட்டிருந்தால், அவற்றை ஏன் துறைமுகத்துக்கும் கலங்களுக்கும் கொண்டுசெல்ல வேண்டும்? யவனர்கள் விலங்குகளையும் பறவைகளையும் அவர்களின் நாட்டுக்கு வாங்கிச்செல்வர். சற்றே வேறுபட்டு இருக்கிறது என்பதால் இதனை வாங்கியிருக்கலாம் என்றுகூடத் தோன்றும். ஆனால், நம் வீரர்கள் சொல்லும் குறிப்பைப் பார்த்தால் தேவவாக்கு விலங்குகளை யவன நாவாய்களில் ஏற்றியதாகத் தெரியவில்லையே. தமிழ்வணிகர்களின் கலங்களில்தான் ஏற்றுப்பட்டுள்ளன.”

“எப்படி அவையெல்லாம் யவன நாவாய்கள் இல்லையென உங்களால் சொல்ல முடிகிறது?”

“எல்லாம் பட்டறிவுக்கணக்குதான். உங்கள் வாய்க்குள் போகும் வெற்றிலைகள் மட்டும் ஆண்வெற்றிலைகளாக இருக்கின்றன அல்லவா? அதுபோல அறிவைத் தன்னியல்பாக்கிக்கொள்வதுதான்.”

“கண்டறிகிறானடா கபிலன்” என்று சிறுவனைத் தட்டிக்கொடுத்துப் பாராட்டுவதுபோல கபிலரைப் பாராட்டிய வாரிக்கையன் தொடர்ந்து கேட்டார், “பின்னர் எதற்குத்தான் அவர்கள் இதனை எடுத்துச்சென்றனர்?”

“இந்தக் கேள்வி ஏன் உனக்குத் தோன்ற மறுக்கிறது எனப் பாரியிடம் கேட்டால், அவன் ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிடுகிறான். ‘வேந்தர்கள் எந்தச் செயல் செய்தாலும் அது அவர்களின் அதிகாரத்துக்கானது. மனிதருக்கும் இயற்கைக்கும் எதிரானது. அதில் கூடுதலாகச் சிந்திக்க என்ன இருக்கிறது?’ என்று.”


சொல்லிக்கொண்டிருக்கும்போதே பாரியும் தேக்கனும் வேகமாக நடந்து போய்க்கொண்டிருப்பது தெரிந்தது. “எங்கே போகிறார்கள்?” எனக் கேட்டார் கபிலர்.

இடப்பக்கமாகத் திரும்பி உதடுகுவித்து வெற்றிலை எச்சிலைத் துப்பியபடி வாரிக்கையன் சொன்னார், “வாயில் வெற்றிலை இருக்கும்பொழுது அதற்கு மட்டுந்தான் வாயசைக்க வேண்டும். சாறு உள்ளிறங்கும்போது ஓசையை வேகமாக வெளியேற்றக் கூடாது, அருகில்போய்க் கேளுங்கள்.”

புறப்பட்டுப் போனார் கபிலர். பாரியும் தேக்கனும் நாகப்பச்சை வேலியினருகே இருந்த காலம்பனை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். காலம்பனோடு திரையர்குல வீரர்கள் ஏழுபேர் இருந்தனர். அறுவர் இளம் வீரர்கள்; ஒருவர் மிகவும் வயதான கிழவர். அவரது பெயர் ஏதோ சொன்னார்களே என்று நினைவுகூர்ந்தபடியே போனார் கபிலர். அருகில் போனவுடன் நினைவிற்கு வந்தது. அவரது பெயர் அணங்கன்.

திரையர்குல வீரர்கள் நீண்ட பயணத்துக்கான ஆயத்தத்தோடு இருப்பதை அறியமுடிந்தது. பெரியவர் அணங்கன் எதையோ துணியிற்சுற்றிக் கையில் வைத்திருந்தார்.

பார்த்தபடி தேக்கன் கேட்டான், “எங்கே புறப்பட்டுவிட்டீர்கள்?”



“நான் போகவில்லை. இவர்கள் அறுவர்தான் போகப்போகிறார்கள். நானும் செதிலனும் இவர்களை அனுப்பிவைத்துவிட்டு வந்துவிடுவோம்” என்றான் காலம்பன்.

“அதுதான், எங்கே போகப்போகிறார்கள்?” என்று தேக்கன் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுதே பாரி சொன்னான், “பறம்பின் காட்டுக்குள் இவர்கள் மட்டும் ஏன் தனியாகப் போகவேண்டும். பறம்பு வீரர்களும் உடன்போகட்டும்.”

பாரி சொல்லி முடிக்கும்முன் சற்றுத் தள்ளி நின்றிருந்த பறம்பு வீரர்கள் சிலர் திரையர்களோடு இணைந்து நின்றனர்.

அவர்களைப் பார்த்தபடி காலம்பன் சொன்னான், “பறம்பு வீரர்கள் உடன்செல்ல வேண்டாமே.”

“ஏன் வேண்டாம் என்று சொல்கிறாய்?” என்றார் தேக்கன்.

“இவர்களால் தாக்குப்பிடிக்க முடியாது” என்றான் காலம்பன்.

பாரிக்கு சற்றே அதிர்ச்சியாக இருந்தது.

“காடறியும் பயிற்சி முடித்த சிறந்த வீரர்கள் இவர்கள்” என்றான் தேக்கன்.

காலம்பன் மீண்டும் சொன்னான், “செய்யப்போகும் வேலைக்கு அவர்களால் ஈடுகொடுக்க முடியாது,

அதனால்தான் வேண்டாம் என்கிறேன்.”

“என்ன வேலைக்குத்தான் போகிறார்கள்?” சற்றே வேகமாக இருந்தது தேக்கனின் குரல்.


“காட்டெருமைகளின் மந்தைக்குள் நுழையப்போகிறார்கள்.”

மறுமொழி எதிர்பாராததாக இருந்தது. வியப்பைக் கடந்து ஐயமே மேலெழுந்தது. “காட்டெருமைகளின் மந்தைக்குள் எப்படிப் போகமுடியும்? அங்கு போய் என்ன செய்யப்போகிறார்கள்?” என்றான் தேக்கன்.

“காட்டெருமையின் மந்தைக்குள் பல்வேறு குணங்களைக்கொண்ட காட்டெருமைகள் உண்டு. அவற்றில் மந்தையை வழிநடத்தும் காட்டெருமையைக் கண்டறியப் போகிறார்கள்.”

காலம்பன் சொல்வது கேள்விப்பட்டிராததாக இருந்தது. “காட்டெருமைகளின் குணங்களைக் கண்டறிய முடியுமா? அவற்றின் பின்கால் நரம்பில் அடித்து அதனை அசையவிடாமற்செய்ய திரையர்களால் முடியும் என்றுதானே கேள்விப்பட்டுள்ளோம். நீ புதிதாகச் சொல்லுகிறாயே?”

“அதுவெல்லாம் சூலிவேள் காலத்தில் செய்யப்பட்ட வேலைகள். அதன்பின் இத்தனை தலைமுறையாக நாங்கள் வேறு என்னதான் கற்றோம்? காட்டெருமையுடனேதான் கிடந்தோம்” என்று சொன்ன காலம்பன், செய்யப்போகும் வேலையைப்பற்றிச் சொன்னான்.



``மந்தைகளை வழிநடத்தும் காட்டெருமையை இனங்காணுவதுதான் முக்கியமான வேலை. ஒவ்வொரு மந்தைக்கும் தலைமையெருமை ஒன்று இருக்கும். அது தான்தான் மந்தைக்குப் பெரிய ஆள் என்பதை நாள்தோறும் செயல்மூலம் காட்டிக்கொண்டே இருக்கும். அதனைத் தவிர அதற்கு வேறு வேலையில்லை. ஆனால், மந்தையை வழிநடத்துவது வேறொன்றாக இருக்கும். அதுதான் ஓசைகளின் மூலமான உத்தரவைக் கூட்டத்துக்கு வழங்கும். அதனைக் கண்டறிந்து நமது கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும். அதன்பின் அந்த மந்தையின் வழித்தடத்தை நம்மால் அறிய முடியும்.”

காலம்பன் சொல்லுவது நம்பமுடியாததாக இருந்தது. “நீ சொல்லுவது உண்மையா?” எனக் கேட்டான் தேக்கன்.

“எலியை நோக்கிப் பூனையைப் பாயவிடாமல் நிறுத்தும் ஆற்றல் பொதினி வேளிர்களிடம் இருந்திருக்கிறது. விலங்குகளின் குருதியிலிருக்கும் வெறியையும் பசியையும் குணத்தையும் அவர்களால் கட்டுப்படுத்த முடிகிறது. பாம்பின் வலிமையே அதன் நஞ்சுதான். ஆனால், அதற்கே தெரியாமல் அதன் நஞ்சை உருவியெடுத்துப் பயன்படுத்தும் ஆற்றல் பறம்பு வேளிர்களுக்கு இருக்கிறது. இவற்றோடு ஒப்பிட்டால் திரையர்களாகிய நாங்கள் கற்றுள்ளது மிகக்குறைவுதான்” என்றான் காலம்பன்.

தேக்கன் சற்றே தாழ்வுணர்ச்சியுடன் அவனது தோளிலே தட்டிச் சொன்னான். “நீங்கள் எவ்வளவு

குறைவாகக் கற்றிருக்கிறீர்கள் என்பது, உடல்முழுக்க வாங்கிய எனக்குத்தானே தெரியும்.”

அனைவரும் சிரித்தனர். “அவர்களை அனுப்பும் வரை நாங்களும் உடன்வருகிறோம்” என்று சொல்லி பாரியும் தேக்கனும் காலம்பனுடன் புறப்பட்டபொழுது கபிலரும் உடன் நடந்துகொண்டிருந்தார்.

திரையர் கூட்டத்திலே மிகவயதான மனிதராக அணங்கன்தான் இருக்கிறார். வந்த புதிதில் கபிலர் அவரோடு பேச முயன்றார். அவர் பேசும்முறையும் மொழி உச்சரிப்பும் புரிந்துகொள்ள மிகக்கடுமையாக இருந்தன. இவர் தமிழ்தான் பேசுகிறாரா அல்லது வேறுமொழி பேசுகிறாரா என்று அவ்வப்பொழுது குழப்பமாக இருக்கும். ஆனால், திரையர் கூட்டத்தில் மற்றவர்கள் பேசுவதைப் புரிந்துகொள்வதில் சிக்கல் எதுவுமில்லை. அணங்கனுக்கு மிகவும் வயதாகிவிட்டதால் சொற்கள் தெளிவாக இல்லையோ எனத் தோன்றியது. பொதுவாக மலைமக்கள் சொற்களை நீட்டி இழுத்தே உச்சரிப்பர். ஆனால், அணங்கனின் உச்சரிப்பு நேரெதிராக சிறிது சிறிதாக வெட்டி வெட்டி இருக்கும். இவர் ஓசையை ஏதேதோ செய்யப்பார்க்கிறார் என்று தோன்றும். மறுகணமே வயதாகிவிட்டதால் உருவாகும் நிலையிது என்று முடிவுக்குப் போவார் கபிலர். பேசவே அவ்வளவு தடுமாறும் அணங்கனை இவ்வளவு கடினமான வேலைக்கு ஏன் கூட்டிப்போகிறார்கள் என்று எண்ணியபடி நடந்தார் கபிலர்.

காலம்பன் காட்டெருமைகளின் மந்தைக்குள் போவதைப் பற்றிக் கூறினான். “ஒரு மந்தையைக் கண்டறிந்து அதற்குத் தெரியாமலேயே அதைப் பின்தொடர வேண்டும். அந்த மந்தையில் உத்தரவு பிறப்பிக்கும் எருமை எதுவெனக் கண்டறிய வேண்டும். இதற்கே வாரக்கணக்கில் ஆகும். அதுவரை காடுமலைகளில் அதன் கண்ணிற்படாமல் கொம்புகளுக்குத் தப்பி, வாலின் வாசம் பிடித்துக்கொண்டே போகவேண்டும்.
உத்தரவு பிறப்பிக்கும் எருமையைக் கண்டுபிடிப்பதுதான் மிகமிக முக்கியம். அதன் செருமலும் கனைப்பும் தலையாட்டலும் தனித்துவமிக்கதாக இருக்கும். அதனைக் கண்டுபிடித்து, கனைப்போசையை மடக்கி எதிர்கனைப்பை வெளியிட வேண்டும். அது எளிய செயலல்ல; மாமனிதர்களால் மட்டுமே முடியக்கூடியது. இப்பொழுது அதனைச் செய்யக்கூடிய ஒரே மனிதராக அணங்கன் மட்டுமே இருக்கிறார். மற்றவர்கள் எல்லாம் போரிலே இறந்துவிட்டனர்” என்று பெரியவரைக் கைகாட்டிச் சொன்னான் காலம்பன்.

தேக்கனும் பாரியும் அணங்கனை பெருவியப்போடு பார்த்தனர். கபிலருக்கு இப்பொழுதுதான் அவர் பேசும்முறையின் காரணம் புரிந்தது. ஓசையைக்கொண்டு வேறோர் உயிரினத்துக்குள் புகமுடியும் மாமனிதனான அணங்கன் அமைதியாக முன்நடந்துகொண்டிருந்தார்.


காலம்பன் தொடர்ந்தான். “அந்தக் குறிப்பிட்ட காட்டெருமை கண்டறியப்பட்டுவிட்டாற்போதும், அதன்பின் நடக்கவேண்டியவற்றையெல்லாம் மற்றவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.”

‘இவ்வளவு எளிதாகச் சொல்கிறானே!’ என்கிற வியப்போடு பார்த்தான் தேக்கன். முன்னால் போகிற அறுவரும் யார் என்பது இப்பொழுதுதான் புரியத் தொடங்கியது.

காலம்பன் சொன்னான், “காட்டெருமை யானையைவிட வலிமைவாய்ந்தது. ஆனால்,

யானையைப்போலக் கூருணர்ச்சி கொண்டதன்று. எளிதில் ஏமாறக்கூடியது. ஒருபோதும் அச்சத்தோடு அவற்றை அணுகக்கூடாது. சிறுபூச்சி ஒன்றை நசுக்கி அழிக்கும் ஆணவத்தோடுதான் அதனை அணுகவேண்டும். அதன் முன்புற நெற்றி இரும்பினைவிட வலிமையானது. அதனை மட்டுமே அது நம்பியிருக்கும். ஆனால் அதைத்தவிர முழுவுடலும் மிச்சமிருக்கிறதே!"

காட்டில் இதுவரை கேள்விப்பட்டிராதவற்றைக் கேட்கும் புதிய மனிதர்களைப்போல பாரியும் தேக்கனும் காலம்பனின் குரலை கவனித்துக்கொண்டிருந்தனர். கபிலரோ மூவரையும் ஒருசேர கவனித்துக்கொண்டிருந்தார்.



காலம்பன் தொடர்ந்தான். "ஆண் காட்டெருமை விரைவில் காதுகேட்கும் ஆற்றலை இழந்துவிடும்."

பறம்பின் ஆசான், பறம்பின் தலைவன், பறம்பின் விருந்தினன் ஆகிய மூவரையும் எந்த வேறுபாடும் இல்லாமல் வியப்பின் விளிம்பில் ஒரே நேர்க்கோட்டில் நிறுத்தின காலம்பனின் சொற்கள்.

அவன் சொன்னான், "ஆண் காட்டெருமையின் காது மடல்களுக்குள் மயிர்க்கால்கள் அடர்ந்து முளைக்கும். அவற்றுள் சிறுகொடுக்குவகைப் பூச்சியினம் அதிகம் அடையும். அதனைக் காட்டெருமையால் ஒன்றுமே செய்யமுடியாது. பூச்சியினம் கட்டும் கூடு காதுகளை அடைத்துக்கொள்வதாலோ, அல்லது தொடர்ந்து உள்ளுக்குள் கொத்திக்கொண்டேயிருப்பதாலோ ஆண்காட்டெருமை கேட்கும் ஆற்றலை முழுமையும் இழந்துவிடுகிறது. ஆனால் பெண் காட்டெருமையின் காது மடல்களில் மயிர்க்கால்கள் முளைப்பதில்லை. எனவே அது காதுகேட்கும் ஆற்றலை இழப்பதில்லை.

குட்டியோடு நகரும் பெண் காட்டெருமைகளைச் சுற்றியேதான் ஆண் காட்டெருமைகளின் நடவடிக்கைகள் இருக்கின்றன. பெண் காட்டெருமைகள் மிகக்கட்டுப்பாடுகொண்டவை. அவை, வழிநடத்தும் தலைமையின் கனைப்பொலிகொண்டே செயல்படுபவை. மந்தைகளை வழிநடத்தும் பெண் காட்டெருமை வயதானதாகத்தான் இருக்கும். அதனை அறிந்து பின்னங்கால் நரம்பைச் சரிக்க வேண்டும். அதன் வேகத்தை முழுமுற்றாகக் கட்டுப்படுத்தியபின் நம்முடைய வேலையைத் தொடங்கவேண்டும். சீண்டலின் மூலமும் செருமலின் மூலமும் நாம் அதனை முன்னகர்த்திச் செல்லலாம். மந்தை முழுமையையும் அது நகர்த்திக்கொண்டு வந்துவிடும்.

ஆனால், இந்தக் கட்டத்தை அடைவது எளிதன்று. வேலையைச் செய்யப்போன ஆறுபேரையும் ஒரேநாளில் முட்டித்தூக்கிக் கொன்ற நிகழ்வுகள் நிறைய இருக்கின்றன. காட்டெருமைகள் நாள்முழுவதும் இளைக்காமல் ஓடக்கூடியவை. எந்த மேட்டிலும் பள்ளத்திலும் விடாது ஓடுபவை. அவற்றின் ஓட்டத்துக்கு முழுநாளும் தாக்குப்பிடிக்கக்கூடியவன்தான் இந்தப் பணிக்குள்ளே இறங்கமுடியும். காட்டுக்குள் எங்களின் ஓட்டங்களைக் காட்டெருமைகளிடம் இருந்துதான் தொடங்குகிறோம். அவையே எங்களின் ஆசான்கள்" என்றான் காலம்பன்.

ஏறக்குறைய பேச்சற்று இருந்தனர் மூவரும். தேக்கனுக்கு நிறைய கேள்விகள் உருவாயின. ஆனால், அவையெல்லாம் மிக எளிதான கேள்விகள். 'காட்டெருமைகளின் காதுமடல்களுக்குள் நுழைந்து காலம்பன் பேசிக்கொண்டிருக்கிறான்; அவனிடம்போய் இதனையா கேட்பது?' என்று தோன்றியதால் எதையும் கேட்கவில்லை. அமைதியே நீடித்தது.

அமைதியைக் குலைத்து, சற்றே குரலுயர்த்தி காலம்பன் சொன்னான், "மலைமக்களுக்குப் பகைகொள்ளத் தெரிவதில்லை. ஆனால், பகை வளர்க்காமல் குலம் காக்கமுடியாது."

காலம்பனின் ஆவேசமிகுந்த சொற்களால் தன்னிலைக்கு வந்தான் தேக்கன். 'இப்பொழுது இதனைச் சொல்லும் காரணமென்ன?' என்று சிந்தித்தான்.

காலம்பன் தொடர்ந்தான், "எவ்வளவோ வாய்ப்புகள் இருந்தும் நாங்கள் அவர்களை அழிக்காமல், எங்களைக் காத்துக்கொள்ளும் போரினை மட்டுமே நடத்தினோம். அதனாலேயே அழிக்கப்பட்டோம். இனியும் நாம் அப்படி இருந்துவிடக்கூடாது."

குரலில் ஆவேசம் உச்சத்தில் இருந்தது.

"என்ன செய்ய வேண்டும் என நினைக்கிறாய்?" எனக் கேட்டான் பாரி.
"பச்சமலையின் நான்கு திசைகளிலும் நான்கு காட்டெருமை மந்தைகளை வழிநடத்தும் ஆற்றலை நாம் பெற்றாக வேண்டும்.அதற்கு இணையான ஆற்றல்கொண்ட படை இவ்வுலகில் இல்லை."

தேக்கன் வியந்து நின்றபோது காலம்பன் சொன்னான், "யானைப் படைகளேயானாலும் அவை பழக்கப்படுத்தப்பட்டவைதான். காட்டெருமைகளைப் பழக்கப்படுத்த முடியாது. அவற்றின் சீற்றம் யானைக் கூட்டத்தை நடுங்கச்செய்துவிடும். அதுவும் பழக்கப்படுத்தப்பட்ட யானைகளைவிட வலிமைகுன்றிய உயிரினம் காட்டில் வேறெதுவும் இல்லை. விலங்குகளின் இயற்கையான ஆற்றலை எதிரிகளை நோக்கிப் பாயவிடும்பொழுது மிஞ்சுவது எதுவும் இருக்காது" சொல்லிய வேகத்தில் பாரியைப் பார்த்தான்; சுண்டாப்பூனையை ஏவி திரையர்குல வீரர்கள் எட்டுப்பேரை வீழ்த்தியவன் பாரி.

பேச்சு நின்ற கணத்தில் பாரியின் சிந்தனையிலும் சுண்டாப்பூனையே வந்து சென்றது. காலம்பன் தொடர்ந்தான், "நாங்கள் கவனக்குறைவாக இருந்துவிட்டோம். பாண்டியர்படை அடர்மழைநாளில் எங்கள் குடில்களைச் சூழ்ந்தபொழுது அணங்கன் ஒருவன் மட்டும் வெளியில் இருந்திருந்தாற்கூடப்

போதும். காட்டெருமை மந்தையைக்கொண்டு அவர்களின் யானைப்படையை முழுமுற்றாக அழித்திருப்பான்.”



காலம்பன் சொல்லிக்கொண்டிருந்தபொழுது சற்றே மெலிந்த உடலோடு அந்தக் கிழவன் காட்டெருமையின் வாசத்தை நுகர்ந்தபடி முன்னே போய்க்கொண்டிருந்தான்.

வலிமையைவிட நுட்பமே ஆற்றல் வாய்ந்தது என்பதைக் காலம் மீண்டும் மீண்டும் சொல்லித்தருகிறது என்று எண்ணியபடி பின்தொடர்ந்தான் பாரி.

இரண்டு நாள் நடந்து ஆறாம்குன்றை அடைந்தனர். இங்குள்ள மக்கள் எதிரிலுள்ள வௌவால் மலையின் பின்புறச்சரிவில் ஒரு மந்தை மேய்வதாகச் சொன்னார்கள். ஆபத்தான சரிவுப்பகுதி அது. அதில் இறங்கிப்போவது கபிலருக்கு நல்லதன்று: அவரை மட்டும் விட்டுவிட்டுப் போகமுடியாத நிலையில் பாரி சொன்னான், “அருகில் வந்தாகிவிட்டதல்லவா? நீங்கள் மந்தையைக் கண்டறிந்து அந்த அறுவரையும் அனுப்பிவைத்துவிட்டு வாருங்கள். நான் கபிலரை அழைத்துக்கொண்டு எவ்வியூர் திரும்புகிறேன்.”

தேக்கனும் காலம்பனும் “சரி” என்று சொல்லி, இருவரையும் அனுப்பிவைத்தனர்.

பாரியும் கபிலரும் எவ்வியூர் நோக்கி நடக்கத் தொடங்கினர். பேச்சு காலம்பன் சொன்னதைப் பற்றியதாக இருந்தது. “பகை வளர்க்காமல் குலங்காக்க முடியாது என்று காலம்பன் சொல்கிறானே, அது சரிதானா?” எனக் கேட்டான் பாரி.

“பகை, காட்டினில் விளையும் நெருப்புபோல... பரவிக்கொண்டும் ஆற்றலைப் பெருக்கிக்கொண்டும் இருக்கும்” என்று கபிலர் சொல்லி முடிக்கும் முன் பாரி சொன்னான், “ஆனால் அழித்துக்கொண்டே இருக்கும்.”

“அழித்தல் எல்லாவிதத்திலும் தவறானதா என்ன?”

“எல்லாவிதத்திலும் தவறன்று; ஆனால், எல்லாவற்றையும் அழிக்கும். ஒரு கட்டத்தில் உங்களால் பிரித்தறிய முடியாது.”

அவனது சொல்லின் ஆழத்தைப்பற்றிச் சிந்திக்கும்போதே நிறுத்தாமல் தொடர்ந்தான் பாரி, “காட்டெருமையின் காதுமடல்களில் உள்நுழைய முடியா ஓசையைக் கணிக்க முடிந்த திரையர்களால், அடர்மழையின் ஓசையில் யானைப்படை வருவதைக் கணிக்கமுடியாமற் போயிருக்கிறது. கவனம்கொள்ளுதல்தான் முக்கியம். பகைவளர்த்தல் அன்று.”

“நீ சொல்வது சரிதான். கவனம்கொள்ளுதல்தான் முக்கியம். ஆனால், அழிக்கப்பட்டவனின் குரல் அப்படித்தானே இருக்கும். நிலம் இழந்தவன், குலம் இழந்தவன் உயிர்வாழ ஒரே காரணம் பகைமுடிக்கத்தானே?”

“அதனால்தான் நானும் சொல்கிறேன். அபகரித்துக்கொண்டவன் நம்முடைய வளங்களையும் சேர்த்து மேலும் வலிமையடைவான். இழந்தவர்கள் பகை மட்டும் வளர்த்துக்கொண்டிருந்தால் வலிமை கூடாது. இருப்பது ஒரேயோர் அணங்கன். அவன் இறந்துவிட்டால் திரையர்களின் வலிமை இன்னும் குறையும்.”

பாரியின் சொற்கள் பாறைகள் உருள்வதைப் போலத்தான் எந்தக் கணத்திலும் மேலேபோட்டு அமுக்கும். அமுக்கிய சொல்லிலிருந்து மீண்டெழ கபிலர் நினைத்துக்கொண்டிருந்தபொழுது பாரி சொன்னான், “நான் உங்களை அழைத்துக்கொண்டு எவ்வியூர் திரும்புகிறேன் என்று சொன்னதுக்கு அதுதான் காரணம். தேக்கனை காலம்பனிடம் பேசச்சொல்லியிருக்கிறேன். இப்போது பயிற்சி தேவைப்படுவது மந்தையை வழிநடத்தும் காட்டெருமைக்கன்று. உடன்செல்லும் மனிதர்களுக்குத்தான். அணங்கனைப்போல அதிதிறமையுள்ள ஆசானிடம் எவ்விதப் பயிற்சியும் பெறாமல் மாதக்கணக்கில் நாம் வீணடித்துள்ளோம். பகை நெருப்பைப்போலப் பரவும் என்று சொன்னீர்கள் அல்லவா, இங்கு என்ன நடந்துள்ளது? ஒற்றைக்குச்சியில் மட்டுமே எரியும் நெருப்பை அடுத்தகுச்சிக்குக்கூடப் பரவாமல் வைத்திருக்கிறது.”

கபிலர் சொன்ன உவமை எப்படித் தவறானது என்பதை, கபிலருக்கு பாரி சொல்லிக்கொண்டிருந்தான். அதைக் கேட்டபடி சற்றே அமைதியாய் கபிலர் வந்துகொண்டிருந்தார். சிறிது நேரத்துக்குப்பின் பாரி கேட்டான், "ஏன் ஏதும் பேசாமல் வருகிறீர்கள்?"

எவ்வியூரிலிருந்து புறப்படும்பொழுது வாரிக்கையன் சொன்னார், "கற்றுக்கொண்டான் கபிலன்" என்று, இப்பொழுது நீ கல்லாத கபிலனை எவ்வியூருக்கு மீண்டும் அழைத்துச்செல்கிறாய்."

மெல்லிய சிரிப்போடு பாரி மறுமொழி சொன்னான், "நீண்ட ஒலிக்குறிப்போடு பேசும் மலைமக்களுக்கு நடுவில் வெட்டி வெட்டி ஒலியைப் பயன்படுத்துகிறாரே என்று அணங்கனைக் கண்டறிய முயன்றது நீங்கள் மட்டுந்தான். அதைக்கூடக் கண்டறிய முடியாதவர்களாகத்தான் நாங்கள் இருந்துள்ளோம்." பேசியபடியே குன்றின் உச்சியிலிருந்து இடப்புறமாக இறங்கத் தொடங்கினர்.




உச்சிப்பொழுது. மலைமடிப்புகளை நின்று பார்க்கத்தோன்றியது. சிறிதுநேரம் குன்றின் உச்சியிலே நின்றார் கபிலர். தென்கிழக்குத் திசையைப் பார்த்தபடி சொன்னார், "அந்த மூன்றாங்குன்றைக் கடந்தால் எவ்வியூரை அடையலாம். சரிதானே."

"இல்லை" என்றான் பாரி. எவ்வியூர் இருப்பது இடப்புறத்தில்.

"அப்படியென்றால் நாம் ஏன் தென்கிழக்குத் திசையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம். இடப்புறக்காட்டை அல்லவா ஊடறுத்துப் போகவேண்டும்."

"சரியான திசையில் போவதாக இருந்தால் அப்படித்தான் போகவேண்டும். ஆனால், இக்காட்டுக்குள் பறம்பு மக்கள் யாரும் காலடி எடுத்துவைக்கமாட்டோம்."

"ஏன்?"

"இது ஆளிக்காடு."

"ஆளியா… கொடூர விலங்கு என்று சொல்வார்களே, அதுவா?'

"ஆம். அது ஈன்ற குட்டியின் முதல்வேட்டையே யானைதான். யானையின் தந்தத்தைப் பிய்த்து அதன் குருத்தைத்தான் விரும்பி உண்ணும் என்பார்கள்."

``அவ்விலங்கு இன்னும் இருக்கிறதா?"

"இல்லை, எப்பொழுதோ அழிந்துவிட்டது."

சிறிதுநேரம் பேச்சின்றி நடந்த கபிலர், "அப்படியொரு விலங்கு உண்மையாய் இருந்திருக்கும் என்று நீ நம்புகிறாயா?"

"இருந்திருக்காது என்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

"நான் அவ்விலங்கைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், எதுவும் நம்பும்படியாக இல்லை. மிகைப்படுத்தப்பட்ட கதையாக இருக்கலாம் அல்லவா?"

மெல்லிய சிரிப்பை வெளிப்படுத்தியபடி பாரி சொன்னான், "வெறும் கதைகளை நம்ப நாங்கள் குழந்தைகள் இல்லை."

"அப்படியென்றால் வேறு எதைவைத்துச் சொல்கிறாய்? குகைப்பாறைகளில் முன்னோர்கள் வரைந்த ஓவியம் எதுவும் இருக்கிறதா?"

"இல்லை, அவற்றைவிடப் பெரிய சான்று இருக்கிறது."

"என்ன?"

"இம்மலைத்தொடர் முழுவதும் எறும்புக் கூட்டங்கள்போல அலைந்து திரியும் யானைகள் எதுவும் இன்றுவரை ஆளிக்காட்டுக்குள் நுழைவதில்லை."

கபிலர் மிரண்டு நின்றார்.

"உயிரினங்களிலே அதிக நினைவாற்றல் கொண்டது யானைதான்."

"ஆம்" என்று தலையசைத்தார் கபிலர்.

"அதுமட்டுமன்று, யானைகளுக்கு மனிதர் சொல்லும் கதைகள் தெரியாது."

பாரியின் சொற்கேட்டு மீளமுடியாமல் நின்ற கபிலர் சற்று நேரங்கழித்துக் கேட்டார். "உங்களைப் பொறுத்தவரை. ஆளி இருந்தது வியப்பன்று, அழிந்ததுதான் வியப்பு?"

"இல்லை" என்றான் பாரி. ``எங்களைப் பொறுத்தவரை ஆளி அழிந்ததில் வியப்பேதுமில்லை."

"ஏன்?"


“அழிவுகளை மட்டுமே செய்யும் உயிரினம் காட்டில் நிலைத்து வாழமுடியாது. ஏனென்றால், அது இயற்கைக்கு எதிரானது.”

கபிலர் நிற்கும் இடம்நோக்கி மேலேறினான் பாரி, “விதையை நடாதவன் கிளையை ஒடிக்க இயற்கை அனுமதிக்காது.”

கண்ணுருட்டிப் பார்த்துக்கொண்டிருந்த கபிலரின் தோளிலே கையை வைத்து பாரி சொன்னான், “இயற்கையை அழிப்பவரை இயற்கை அழிக்கும்”.

- பறம்பின் குரல் ஒலிக்கும்...

# வீரயுக நாயகன் வேள்பாரி-64




**பா**ரியும்  கபிலரும் எவ்வியூருக்கு வந்து சேர்ந்தபோது இரவாகிவிட்டது. தொடர்ந்து நான்கு நாள்கள் நடந்ததால், கபிலரின் கால்கள் துவண்டுபோய் இருந்தன. நீண்ட ஓய்வு தேவைப்படுகிறது என்ற எண்ணத்தோடு எவ்வியூருக்குள் நுழைந்தார். `இந்த எண்ணம் வரும்போதெல்லாம், அணங்கன் நினைவுக்கு வந்துவிடுகிறான். இந்த வயதிலும் காட்டெருமை மந்தைக்குள் நுழைய என்ன ஒரு தினவு வேண்டும்! நுழைந்துவிட்டால், எந்தக் கணமும் பல மடங்கு வேகத்தோடு ஓட வேண்டும். அந்த ஓட்டம் என்றைக்கு முடியும் எனச் சொல்ல முடியாது. எப்படி இதுவெல்லாம் அணங்கனால் முடிகிறது?' என்று எண்ணிக்கொண்டே உள்நுழைந்தார் கபிலர்.

`தேவவாக்கு விலங்கை எடுத்துக்கொண்டு, பறம்பின் அடர்காட்டுக்குள் தொடர்ந்து அத்தனை நாள்கள் எப்படி திரையர்களால் ஓட முடிந்தது?' என்ற கேள்விக்கான முடிச்சுகள் எல்லாம் தன்போக்கில் அவிழ்ந்துவிட்டன.

பாரி வந்ததை அறிந்து, முடியன் அவர்களை நோக்கி வேகமாக வந்தான். ஏதோ ஒரு செய்தி

அவனுக்காகக் காத்திருக்கிறது என்பதைக் கபிலர் உணர்ந்தார். வேட்டுவன் பாறையிலிருந்து நீலன் அனுப்பியுள்ள வீரர்கள் வந்துள்ளதாக அவன் சொன்னான்.

`நீலன் வராமல் ஏன் வீரர்களை அனுப்பியுள்ளான்?' என்று எண்ணிய கபிலர், ``சரி, நான் போய் ஓய்வெடுக்கிறேன்'' என்று சொல்லி விடைபெற முயன்றார்.

``வந்துள்ள செய்தி, உங்களோடு தொடர்புடையது'' என்றான் முடியன்.

கபிலர் சற்றே வியப்படைந்தார். ``எனக்கு என்ன செய்தி வந்திருக்கப்போகிறது?!'' என்று சொல்லிக்கொண்டிருக்க, வீரர்கள் இருவர் அறைக்குள் வந்தனர்.

பாரியையும் கபிலரையும் வணங்கிவிட்டு, ``உங்களைப் பார்க்க மூவர் வந்துள்ளனர்'' என்று கபிலரைப் பார்த்தபடி சொன்னார்கள்.

``என்னைப் பார்க்கவா?!'' என்று திகைப்புற்றுக் கேட்டார் கபிலர்.

கபிலர் கேட்டு முடிக்கும் முன் பாரி சொன்னான், ``கபிலரைப் பார்க்க வந்துள்ளவர்களை அழைத்து வந்திருக்கலாமே. ஏன் நிறுத்திவைத்து வந்தீர்கள்?''

வீரர்கள் சொன்னார்கள், ``அவர்களில் ஒருவர் மிக வயதானவர். அவரால் மலையேற முடியாது.''

வியப்பும் குழப்பமுமாக இருந்தது. `யாராக இருக்கும்?' என்று கபிலர் சிந்தித்துக்கொண்டிருக்கையில் வீரர்கள் சொன்னார்கள், `` `எனது பெயரைச் சொன்னால் அவரே இங்கு வந்துவிடுவார்; போய்ச் சொல்லுங்கள்' என்று எங்களை அனுப்பிவைத்தார்.''

கபிலருக்கு இன்னும் வியப்பு கூடியது. `நாம் இங்கு இருப்பதை அறிந்து இவ்வளவு உரிமையோடு வீரர்களை அனுப்பிவைத்தது யார்?' என எண்ணிக்கொண்டிருக்கையில் வீரன் சொன்னான், ``அவரின் பெயர் திசைவேழர்.''

பெயர் சொல்லப்பட்ட கணத்தில் கபிலரின் முகத்தில் ஏற்பட்ட வியப்பைப் பார்த்தபடி கேட்டான் பாரி ``யார் இந்தப் பெரியவர்?''

அகலத் திறந்திருந்த கபிலரின் கண்கள், ஒளியை உமிழ்ந்தன. வியப்பை உதிர்க்க முடியாமல் திணறியது முகம். கைகளை உயர்த்திக் காட்டி ``வானியல் பேராசான்'' என்றார்.

சொல்லை உச்சரித்த விதத்திலேயே அவரின்பாலுள்ள வாஞ்சையும் மதிப்பும் வெளிப்பட்டன. அதைப் பார்த்து மகிழ்ந்தபடி பாரி சொன்னான், ``அவரை, சிவிகையில் வைத்துச் சுமந்து வரச் சொல்லிவிடலாமா?''



``வேண்டாம் பாரி. அவர் மிக வயதானவர். என் பொருட்டு அவருக்குச் சிறு தொந்தரவுகூட வந்துவிடக் கூடாது. நானே போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்.”

``சரி” என்று ஏற்றுக்கொண்ட பாரி, ``தொடர்ந்து நான்கு நாள்கள் நடந்திருக்கிறீர்கள், மிகவும் களைப்பாக இருக்கும். ஒருநாள் ஓய்வெடுத்துவிட்டு, பிறகு புறப்படுங்கள்.”

``வந்துள்ளது பேராசான். எனது மனம் எப்படி ஓய்வெடுக்கும் பாரி? தாயைத் தேடும் கன்று எத்தனை மலைகளைக் கடந்தாலும் துவண்டுவிடவா செய்யும்?”

அவரது உணர்ச்சிக்குள் இருக்கும் உண்மையைப் பாரியால் உணர முடிந்தது. `தேக்கன் இருந்தால் உடன் அனுப்பிவைக்கலாம். அவனோ காலம்பனோடு இருக்கிறான்’ என்று சிந்தித்தபடியே உதிரனையே அழைத்துக்கொண்டு போகச் சொன்னான். ``சரி’’ என்று ஏற்றுக்கொண்டு விடைபெற்றுக் குடிலுக்குப் போனார் கபிலர்.



மறுநாள் காலை எழுந்ததும், ``கபிலர் புறப்பட்டுவிட்டாரா?” எனப் பாரி கேட்டான்.

``அவர் இந்நேரம் ஆதி மலையில் பாதித் தொலைவைக் கடந்திருப்பார்’’ என்றனர் வீரர்கள்.

**க**பிலர் வேட்டுவன் பாறைக்கு வந்தபோது திசைவேழர் வந்து ஐந்து நாள்களுக்குமேல் ஆகியிருந்தது. அவரைக் காணும் பொழுதைக் கனவுபோலச் சுமந்து வந்தார் கபிலர். `எத்தனை ஆண்டுகளாகிவிட்டன? விரிவடங்கா வானத்தின் விந்தைகளைப் பேசி முடியாத நாள்கள்தான் எத்தனை... எத்தனை!! காலம் கரைகிறதா... நகர்கிறதா?’ என முடிவுறாத பேச்சுகளை எண்ணியபடி திசைவேழர் இருந்த குடில் அருகே வந்தார் கபிலர்.

முதன்முறையாகக் கபிலர், வேட்டுவன் பாறைக்கு வந்த அன்று, அவரைத் தங்கவைத்திருந்த குடில் அது. விரிந்து நீண்ட திறளி மரத்தாலான பலகையில் உட்கார்ந்திருந்தார் திசைவேழர். கபிலர் வருவது தொலைவிலேயே தெரிந்தது. அங்கு இருந்தவர்கள் எழுந்து அவரை வரவேற்றனர். அளவுகடந்த மகிழ்வோடு வந்த கபிலர், திசைவேழரை வணங்கி மகிழ்ந்தார். பெருங்கவியை ஆரத்தழுவிக்கொண்டார் திசைவேழர். கண்களில் கசிந்தது பேரன்பு.

கபிலர் வந்தது அறிந்து வேட்டூர் பழையனும் நீலனும் குடிலுக்கு வந்தனர். வந்து ஐந்து நாள்களாகிவிட்டதால், இவர்கள் அனைவரையும் திசைவேழர் அறிவார். ஆனாலும் பெயர் சொல்லிப் புகழ்ந்தார் கபிலர். நீலனை `மகன்போல்’ எனச் சொல்லி அறிமுகப்படுத்தினார். பேசிக்கொண்டிருக்கும்போது பெண் ஒருத்தி சிறு கூடையில் நாவற்பழம் கொண்டுவந்து வைத்தாள். யார் எனப் பார்த்தார் கபிலர். தனக்கு மகர வாழையில் காரத்துவையல் கொடுத்தவள். கபிலரை வணங்கியபடி அதே சிரிப்போடு அந்த இடம் விட்டு நகர்ந்தாள். இப்போது கைக்குழந்தையோடு இருந்தாள்.

திசைவேழர், கூடையில் வைக்கப்பட்ட நாவல் ஒன்றை உண்பதற்காக எடுத்தார். அதைக் கவனித்த கபிலர், ``வேண்டாம். அதை வைத்துவிடுங்கள்’’ எனச் சொல்லி, இன்னொரு பழத்தை எடுத்து அவருக்குக் கொடுத்தார்.


``உண்பதற்கேற்ப கனிந்துதான் இருக்கிறது. இதை ஏன் வேண்டாம் என்கிறீர்?” எனக் கேட்டார் திசைவேழர்.

கபிலர் சொன்னார், ``அது குழிநாவல்; கார்ப்புச் சுவை அதிகமாக இருக்கும். அதன் பிறகு எந்த நாவலைத் தின்றாலும் கார்ப்புச் சுவை போகாது. எனவே, அதை எடுத்தவுடன் உண்ணக் கூடாது. இதோ சிறுநாவல். இதிலிருந்து தொடங்கலாம். இதற்கடுத்து உண்ணவேண்டியது...” என்று சொல்லி, கூடையைக் கிளறியபடியே சற்றே பெருத்த வெண்ணாவலை எடுத்தார். திசைவேழர் வியப்போடு பார்த்தார்.

கபிலர் ஒவ்வொரு நாவலாக எடுத்து திசைவேழருக்குக் கொடுத்துக்கொண்டே அதன் பெயர், தன்மை, சுவைநுட்பம் என, பழத்தின் சிறப்புகளைக் கூறி மகிழ்ந்தார். கூடையில் இருந்த அனைத்துப் பழங்களைப் பற்றியும் அவரால் விளக்க முடிந்தது. அருகில் இருந்த வேட்டூர் பழையனும் நீலனும்

வியப்பேறிய விழிகளோடு பார்த்துக்கொண்டிருந்தனர்.

பழத்தை உண்டபடி நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தனர். ``சிறிது நேரம் நடந்துகொண்டே பேசுவோம்'' எனச் சொல்லிப் புறப்பட்டனர். வலக்கையை ஊன்றுகோலில் அழுத்தி, இடக்கையைத் தோதாகப் பிடித்து அழுத்தி எழுந்தார் திசைவேழர். வலதுகாலை மடக்கி நீட்ட முடியாத நிலையைப் பற்றிப் பேசியபடியே இருவரும் சிறிது தொலைவு நடந்தனர். அவர்கள் தனியாகப் பேச விரும்புவது அனைவருக்கும் புரிந்தது. எனவே, மற்றவர்கள் குடிலிலேயே இருந்தனர்.



கோல் ஊன்றி நடந்தபடியே திசைவேழர் கேட்டார், ``பறம்பில் வாழ்வனுபவம் எப்படி இருக்கிறது?"

``இதுதான் வாழ்வு எனத் தோன்றுகிறது."

முதல் சொல்லே முழுமைகொண்டிருந்தது. சற்றே திகைப்புற்றார் திசைவேழர். கபிலர் உச்சரிக்கும் சொற்களின் வலிமையை நன்கு உணர்ந்தவர் அவர்.

கபிலர் தொடர்ந்தார், ``இயற்கையைப் பற்றிய மனிதப் பேரறிவு இங்குதான் சேமிக்கப்பட்டிருக்கிறது. வாழ்வு முழுவதும் நான் கற்றுக்கொண்டவற்றை வந்த முதல் நாளே என்னை எடைபோட்டுப் பார்க்கவைத்தவர்கள் பறம்பு மக்கள்.''

கபிலர் உணர்ச்சி மேலிட்டவராக இருக்கிறார் என திசைவேழருக்குத் தோன்றியது.

``எண்ணற்ற செடிகொடிகளுக்கும் எண்ணிலடங்காத பூக்களுக்கும் இவர்கள் பெயரிட்டு அடையாளப்படுத்தியுள்ளனர். இத்தனை வகையான பூக்களையும் அதன் பெயர்களையும் நாம் எங்கேயும் காண முடியாது" என்று சொன்ன கபிலர், மிக மகிழ்வோடு சொன்னார், ``கடந்த வாரம், நாங்கள் அடர்காட்டுக்குள் மிக முக்கியமான வேலைக்காகச் சென்றுகொண்டிருந்தோம். அப்போது என்னுடன் வந்த பாரி, ஓர் இடத்தில் அப்படியே நின்றான். என்ன காரணம் எனப் புரியாமல் உடன் வந்த அனைவரும் நின்றோம். பாரி எதைக் கவனிக்கிறான் என்பதை, அனைவரின் கண்களும் உற்றுநோக்கின.

பாறையின் மீது வேர்போல தேன் நிறத்தில் படர்ந்து இருந்த சிறு கொடியில் மலர்ந்திருந்தது பூ. அதன் இதழ்கள், காற்றடிக்கும்போது சாய்ந்து எரியும் சுடர்போல இருந்தது. அதைப் பார்த்தபடி பாரி சொன்னான், ``இந்த வகைப் பூவை, இதுவரை நான் பார்த்ததில்லை.''

``ஆம். இது புதுவகையான செடியாக இருக்கிறது'' என்றனர் மற்றவர்கள்.

உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த பாரி, ``இந்தப் பூவுக்கு நீங்களே ஒரு பெயர் சூட்டுங்கள்'' என்றான்.

`பூவுக்கு எப்படிப் பெயர் சூட்டுவது... நிறம்கொண்டா, மணம்கொண்டா... அதன் தனிச்சிறப்பு அறிந்தா?' என்று எண்ணங்கள் ஓடியபடியே இருந்தன.

கபிலர் உற்சாகத்தோடு பேசுவதைக் கேட்டபடி நடந்துகொண்டிருந்த திசைவேழர், ``என்னதான் பெயர் சூட்டினீர்?" என்றார்.

``அந்தப் பூவைப் பார்த்த கணமே பாரியின் எண்ணத்தில் பெயர் தோன்றியிருக்கும். அந்தப் பெயர், பூவின் வேரிலிருந்து விளைந்ததாக இருக்கும். அதேபோன்ற தோற்றம்கொண்ட பூக்களுக்கு என்ன பெயர் உள்ளது என அனைத்தையும் ஒப்பிட்டு, பெயரைச் சிந்தித்திருப்பான் பாரி. எனவே, நான் உடனடியாக ஒரு பெயரைச் சொல்லிவிட முடியாது அல்லவா? `சிந்தித்துச் சொல்கிறேன்!' என்று கூறியுள்ளேன்" என்றார்.

``நீங்கள் பெயர்வைக்கும் வரை அது பெயரற்ற `பூ'தானா?"

திசைவேழரின் சொல்லுக்குள் சற்றே எள்ளல் இருப்பதுபோல் கபிலருக்குத் தோன்றியது.

திசைவேழர் தொடர்ந்தார், ``அந்தச் செடி வேறு இடத்திலும் இருக்குமல்லவா? அங்கு அதற்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கலாம் அல்லவா?"


``இருக்கலாம். வேறு எங்கேயாவது அந்தச் செடி இருக்கலாம். அதற்கு மனிதர்கள் பெயரிட்டிருக்கலாம்" என்றார் கபிலர்.

தலையை நிமிர்த்தாமலேயே மெல்லிய குரலில் திசைவேழர் கேட்டார், ``அப்படியென்றால், அறியாதவர்களுக்கு நடுவில் இருப்பதை அறிவென்று ஏற்க முடியுமா?”

திசைவேழர் சொல் அதிர்ச்சியைக் கொடுத்தது. ``அறியாதவர்கள் என்று, பறம்பு மக்களையா சொல்கிறார்?'' நம்ப முடியாமல் கேட்டார், ``எப்படி இப்படியொரு சொல்லைச் சொன்னீர்கள்?”

``நீங்கள் ஒன்றை அறிய நினைக்கும்போது உங்களின் அறியாமையை மற்றவர்கள் அறிந்துகொள்ளுதல் இயற்கைதானே?”

திசைவேழரின் சொற்கேட்டுத் திகைத்து நின்றார் கபிலர். அவருக்குள் இந்தச் சொல் உருத்திரண்டு வர, பூ மட்டும் காரணமல்ல என்பது புரியத் தொடங்கியது.



திசைவேழர் சொன்னார், ``இயற்கை பற்றிய மனிதப் பேரறிவு இங்குதான் சேமிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னீர்களே, அது சரிதானா?”

பதற்றம், உடலெங்கும் பரவியதை உணர முடிந்தது. பறம்பே தனது உடலாக மாறிவிட்டதைப்போல் இருந்தது. அதன்மீது சொல்கொண்டு எறிவதைக்கூட உடல் ஏற்க மறுக்கிறது, ஆனாலும் தன்னை நிதானப்படுத்தியபடி கபிலர் கேட்டார், ``சரியில்லை என்று எப்படித் தோன்றியது உங்களுக்கு?''

``தனது உள்ளங்கையில் இருக்கும் ஒன்றின் ஆற்றலையே மதிப்பிட முடியாதவர்களாக இவர்கள் இருப்பதால்.”

``எதைச் சொல்கிறீர்கள்?”

``தேவாங்கு விலங்கைச் சொல்கிறேன்.”

புதுப் பெயராக இருக்கிறதே என நினைத்த கபிலர், தேவவாக்கு விலங்கைத்தான் இப்படிச் சொல்கிறார் எனப் புரிந்துகொண்டார். ``அதன் ஆற்றலைப் பறம்பு மக்கள் புரிந்துகொள்ளவில்லை என்றா சொல்கிறீர்கள்?”

``ஆம். அதன் ஆற்றலை இப்போது வரை பாரியும் பறம்பு மக்களும் புரிந்துகொள்ளவில்லை.”

கபிலருக்குள் விடை தெரியாமல் உருண்டுகொண்டிருந்த கேள்வி, இப்போது திசைவேழரின் சொல் முனையில் வந்து நின்றது. புருவம் உயர்த்தியபடி திசைவேழரைப் பார்த்து ``என்ன அதன் ஆற்றல்?”

``அது கடலை வெல்லும் ஆற்றல்கொண்ட உயிரினம்.”

கபிலர் அதிர்ந்து நின்றார். அவரின் முகக்குறிப்பு அறிந்து திசைவேழர் தேவாங்கின் சிறப்பைப் பற்றிப் பேசத் தொடங்கினார். எப்போது உட்கார்ந்தாலும் வடதிசை நோக்கியே உட்காரும் அதன் ஆற்றலை, மெய்சிலிர்த்தபடி விளக்கினார். ``பொதிகை மலையில் இதைப் போன்ற உடல் அமைப்பைக்கொண்ட விலங்கு உண்டு. ஆனால், அதற்கு இத்தகைய ஆற்றல் இல்லை. இது ஒருமரத்து விலங்கு. நீண்ட நெடுங்காலம் குறிப்பிட்டதொரு மரத்திலே வாழக்கூடியதால், குறிப்பிட்ட திசை நோக்கி உட்காரும் இயற்கையின் அதிசிறந்த ஆற்றலைப் பெற்றுள்ளது” என்றார்.

கபிலர் மெய்மறந்து கேட்டார். இந்த விலங்குக்காகப் பாண்டியன் ஏன் இவ்வளவு முயன்றான் என்ற விடையின்றித் தத்தளித்த கேள்விக்கு, விடை தெரிந்தது. நூற்றாண்டுகளாகத் தொடரும் யவன வணிகத்துக்கு இதுபோன்ற ஒரு விலங்கு எவ்வளவு முக்கியமான பங்காற்றும் என்பதை, கபிலரால் எளிதில் விளங்கிக்கொள்ள முடிந்தது. பாண்டியனின் பெருமுயற்சிக்குப் பின்னிருந்த உண்மை வெளிவந்தது.

நடையை நிறுத்தி அருகில் இருந்த சிறு பாறையில் சாய்ந்து நின்றார் கபிலர். கோல் ஊன்றியபடி நின்றுகொண்டிருந்த திசைவேழர் சொன்னார், ``கடலையும் வானையும் இணைக்கும் பேராற்றல்கொண்ட உயிரினமாக இது இருக்கிறது. இதைப் பெற வேறு வழியே இன்றிதான் திரையர்களை அனுப்பிவைத்தார் குலசேகரபாண்டியன். நீங்கள் பறம்பில் இருப்பது அப்போது தெரிந்திருந்தால் உங்கள் மூலமே முயன்றிருப்பார் பேரரசர்.”
கபிலர் அசைவின்றி உட்கார்ந்திருந்தார். குலசேகரபாண்டியனின் முயற்சி தொடர்வதை அவரால் உணர முடிந்தது.

திசைவேழர் சொன்னார், ``அந்த அரிய உயிரினத்தால் பறம்புக்கு எந்த நன்மையும் கிட்டப்போவதில்லை. அதன் ஆற்றல் வெளிப்படப்போவது கடலில்தான். எனவே, அதைக் கொடுத்து உதவ, பாரிக்கு நீங்கள் அறிவுறுத்த வேண்டும்.''

கபிலரின் அமைதி நீடித்தது.

சிறிது நேரத்துக்குப் பிறகு திசைவேழர் கேட்டார், ``ஏன் பேச்சின்றி நிற்கிறீர்?”

``பாரி எப்போதும் வியப்புக்குரிய தோழன்தான். ஆனால், இப்போது அந்த வியப்பு மேலும் அதிகரிக்கிறது.”

கபிலரின் சொல்லுக்குப் பொருள் புரியவில்லை. கண்களை உருட்டியபடி பார்த்தார் திசைவேழர்.

கபிலர் சொன்னார், `` `தேவவாக்கு விலங்கை இவ்வளவு முயன்று எடுத்துச் செல்லவேண்டிய தேவை என்ன?' என்று பலமுறை நான் கேள்வி எழுப்பியுள்ளேன். ஆனால், இந்தக் கேள்விக்கு விடையறிய பாரி ஒருபோதும் முயன்றதே இல்லை. எனக்கு அது பெருவியப்பைக் கொடுத்தது. வற்புறுத்திக் காரணம் கேட்டால் சொல்வான், `வேந்தர்கள் எதைச் செய்தாலும் அது அவர்களின் அதிகார நலனுக்கானது; மனிதருக்கும் இயற்கைக்கும் எதிரானது. அதில் கூடுதலாகச் சிந்திக்க என்ன இருக்கிறது?' என்று. மிக

வேகமாக அவன் முடிவுக்கு வந்துவிடுகிறானோ என அப்போது தோன்றியது. ஆனால், இப்போது தெரிகிறது, அவனுடைய சொற்கள் எவ்வளவு ஆழமானவை என்று.”


பாறையை விட்டு எழுந்து, திசைவேழரைப் பார்த்தபடி கபிலர் மேலும் சொன்னார், ``இயற்கையைப் பற்றிய பேரறிவு மட்டுமல்ல, மனிதர்களைப் பற்றிய பேரறிவும் சேகரிக்கப்பட்டுள்ள இடமாக `பறம்பு’ இருக்கிறது.”

தனது சொல்லைத் தனக்கு எதிரானதாக்கிக்கொண்டிருக்கிறார் கபிலர் என்பது திசைவேழருக்குப் புரிந்தது. இருவரும் சிறிது நேரம் பேச்சின்றி நின்றனர்.

நேர்முகம் பார்ப்பதைத் தவிர்க்க எழுந்து நடந்தபடி திசைவேழர் சொன்னார், ``ஆற்றலை அறிவதும் பயன்படுத்துவதும்தான் மனிதனை வெல்லற்கரியவனாக மாற்றியுள்ளன.”

``மனிதன் வெல்லற்கரியவனாக மாறவேண்டியது யாருடைய தேவை?” என்றார் கபிலர்.

சற்றும் இடைவெளியின்றி திசைவேழர் சொன்னார், ``இயற்கையின் தேவை.”



இளக்காரமானதொரு சிரிப்போடு கபிலர் சொன்னார், ``இல்லை. ஆசைக்கு அடிமைப்பட்ட கணத்தில் மனிதன் எடுத்துக்கொண்ட உறுதி அது.”

``அது ஆசையல்ல, இயல்பு. இயற்கையின் தன்மை அதுதான். ஆற்றல்கொண்டதை மட்டுமே அது அரவணைத்துக்கொள்ளும். எனவே, மனிதன் ஆற்றலைப் பெருக்கவே வாழ்வை அமைத்துக்கொள்கிறான்.”

``அது, மனிதன் இயற்கைக்குக் கொடுத்துள்ள விளக்கம்.”

``தேவாங்கு விலங்கு கடலிலே இருக்கும்போது கிடைக்கும் பயன் எல்லையற்றது. அதன் ஆற்றல் துலங்குமிடம் அதுதான். அந்த இடத்திலே அதைப் பயன்படுத்துதல் அனைவருக்கும் நன்மை செய்வதுதானே?”

``இதைப் பாரியிடம் கேட்டால், என்ன சொல்வான் தெரியுமா?”

``என்ன சொல்வான்?”

`` `அதைப் பயன்படுத்த மனிதனுக்கு என்ன உரிமை இருக்கிறது?’ என்று கேட்பான்.”

திசைவேழரின் நடையின் வேகம் கூடியது. ``இந்தக் கேள்வியை எப்போதோ கடந்து வந்துவிட்டனர் நம் முன்னோர்கள். மலைக்காடுகளில் மட்டுமே விளைந்த தானியக்கதிரின் விதைகளைச் சேகரித்து நதிக்கரையில் நட்டுவைத்தபோதே இதைப் போன்ற கேள்விகளெல்லாம் இறந்துவிட்டன. பயனளிக்கும் இடத்தை நோக்கிப் பாய்ந்து செல்லுதலே வாழ்தலின் விதி” என்று கூறிய திசைவேழர், சற்றே சினத்தோடு குரல் உயர்த்திச் சொன்னார், ``நீங்கள் எழுப்புவது இயற்கையின் மீதான உரிமை பற்றிய கேள்வியல்ல; இயற்கையின் இயங்கு விசையைப் புரிந்துகொள்ளாத அறியாமையிலிருந்து எழும் கேள்வி.”

திசைவேழரின் சினத்தை சற்றே எள்ளலோடு எதிர்கொண்ட கபிலர் கூறினார் ``நீங்கள்தான் முதலிலேயே சொல்லிவிட்டீர்களே, `அறிவுதான் அறியாமையின் அடையாளம்’ என்று.”

சினம் மேலேறாமல் கட்டுப்படுத்த முயன்றார் திசைவேழர். கபிலரை இணங்கவைப்பதுதான் முக்கியமானது. அந்தச் செயலை வெற்றிகரமாகச் செய்தாக வேண்டும். அதற்கு ஒரே வழி அவரை கருத்துகள்மூலம் வெல்வது மட்டும்தான். எண்ணங்கள் உள்ளுக்குள் ஓடியபடியிருக்க திசைவேழர் சொன்னார், ``வளைய மறுக்கும் கிளை ஒடிவதும், வளைந்துகொடுக்கும் கிளை நீண்டு தழைப்பதும்தான் இயற்கையின் அமைப்பு.”

சொற்களின் வலிமை அறிந்த இருவர், எதிரெதிர் திசையிலிருந்து அதைப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். தேவாங்கில் தொடங்கி அதைத் தர மறுக்கும் பாரியை நோக்கி உருண்டன சொற்கள். அதை எதிர்கொள்ள, கபிலருக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. ஆனால், இப்படியொரு பணிக்கு திசைவேழர் எப்படி இணங்கினார் என்பதே அவரின் சிந்தனையாக இருந்தது.

``ஒரு தவளை இடும் முட்டையிலிருந்து பல்லாயிரம் தலைப்பிரட்டைகள் உருவாகின்றன. அவை எல்லாம் உயிர்வாழுமேயானால், இந்தப் பூமியில் தவளையைத் தவிர வேறு உயிரினமே இருக்காது. ஒரேயொரு கொக்கு, நாள் ஒன்றுக்கு எண்ணாயிரம் தலைப்பிரட்டைகளை விழுங்கி வாழ்கிறது. இந்த அழிவுகளின் மூலம்தான் இயற்கை சமநிலையைப் பேணுகிறது.”

திசைவேழரின் சொற்களைக் கேட்டபடி கபிலர் அமைதியாக நடந்தார். அழிவுகளின் நியாயத்தைப்

பேசத் தொடங்கி, அடுத்து அழித்தலின் அவசியத்தில் வந்து பேச்சு முடியும். திசைவேழர் எதை நோக்கி வருகிறார் என்பதை, கபிலரால் கணிக்க முடிந்தது.

``வலதுகையால் ஊன்றுகோலை இறுகப்பிடித்து இடதுகையால் அழுத்திக்கொடுத்துதான் உங்களால் எழுந்திருக்க முடிந்தது. இவ்வளவு தளர்ந்த நிலையிலும் நெடுந்தொலைவு பயணித்து என்னைக் காண வந்துள்ளீர்கள் எனப் பெருமகிழ்வடைந்தேன். ஆனால், உங்களின் நோக்கம் எனது மகிழ்வை உதிரச்செய்துவிட்டது” என்று சொன்ன கபிலர், சற்றே தயக்கத்தோடு அதேசமயம் உறுதியான குரலில் கேட்டார், ``உங்களுக்கு உடன்பாடற்ற செயலை ஒருபோதும் நீங்கள் செய்ய மாட்டீர்கள். அப்படியிருக்க, எதன் பொருட்டு இந்தச் செயலில் உங்களுக்கு உடன்பாடு ஏற்பட்டது?”

திசைவேழர் சொன்னார், ``சான்றோர் போற்றும் பெருங்கவி பறம்பில் உள்ளான் என்ற பெருமகிழ்வுடனே இங்கு வந்தேன். என் கால்கள் இதனினும் தளர்ந்துபோயிருப்பினும் நான் இங்கு வந்திருப்பேன் அல்லது உன்னால் மலையிலிருந்து இறங்கி வர முடியாத நிலை ஏற்பட்டிருப்பினும் நான் மலையேறி அங்கு வந்திருப்பேன். ஏனென்றால், வாழ்வு முழுவதும் நான் பயணித்த பாதையில் இப்படியோர் ஆற்றல்கொண்ட உயிரினத்தைக் கண்டதில்லை.”

திசைவேழரின் குரலில் உணர்ச்சி மேலேறிக் கொண்டிருந்தது. ``எனது இளம்பருவத்தில் நாடியைத் தூக்கி அண்ணாந்து வானத்தை உற்றுப்பார்க்கவைத்தார் என் தந்தை. அன்றிலிருந்து இன்று வரை வானக்கோடுகளின் ஊடேதான் நான் வளைந்தும் நெளிந்தும் போய்க் கொண்டிருக்கிறேன். ஒளி அண்டங்களின் மடிப்புகளுக்குள் பேதலித்து நின்ற காலங்கள் எத்தனையோ! முன்னோருக்கு முன்னோர் என எத்தனை தலைமுறைகளாக வானியலின் வியப்புகளுக்குள் மூழ்கிக்கிடக்கிறோம். கதிரவனும் விண்மீன்களும் இன்றி மூடப்பட்ட அறைக்குள் நம்மால் திசை அறிய முடியும் என்று ஒருவன் சொன்னால், அவனை `மூடன்’ என்று சொல்லியிருப்பேன். ஆனால், தேவாங்கு என்ற இந்தச் சின்னஞ்சிறு உயிரினம் நம் அறியாமையைத் தகர்த்துவிட்டது. எல்லையில்லாத அகண்ட வானத்தைத் துளையிட்டுப் பார்ப்பதைப்போல இருக்கிறது, அது வடதிசை நோக்கி உட்கார்ந்திருப்பது.

இனி நம் பாய்மரங்களுக்கு, கடலும் காற்றும் பொருட்டல்ல. நடந்துகொண்டிருக்கும் தேவாங்கு உட்காரும் கணத்தில் திசைகள் தாமே வந்து மீகானின் சொல் கேட்க உள்ளன. இந்த ஆற்றல், வேந்தர்களுக்கு மட்டுமல்ல... மனிதர்கள் அத்தனை பேருக்கும் பயனளிக்கப்போகும் ஒன்று. இதை நாம் தவறவிட்டுவிடக் கூடாது. இந்த அறிவின் அவசியத்தை உன்னால் புரிந்துகொள்ள முடியும். மலைமக்கள், வாழ்வின் இயக்கத்தைப் பிடித்து அடுத்த கட்டத்துக்கு நகர முடியாத மந்தநிலைகொண்டவர்கள். நீதான் பாரியிடம் இதை எடுத்துச்சொல்ல வேண்டும். அதற்காகத்தான் வந்தேன்.”



நெற்றியில் இருந்த வியர்வையைத் துடைத்தபடி மறுமொழியின்றிக் கேட்டுக்கொண்டிருந்தார் கபிலர்.

வேகம் குறையாமல் திசைவேழர் கேட்டார், ``ஏன் பேச்சின்றி நிற்கிறீர்?”


``நீங்கள் சொல்வது எல்லாமே எனக்குப் புரிகிறது. ஆனால், நான் சொல்வது மட்டும் உங்களுக்குப் புரியவில்லை. நீங்கள் தேவாங்கினால் ஏற்படும் பயனைப் பற்றிப் பேசுகிறீர்கள். அது தேவாங்குக்கான பயன் அல்ல என்பது உங்களுக்குப் புரியவில்லை. உங்களின் பயனுக்காக அதைப் பயன்படுத்த உங்களுக்கு உரிமை இல்லாததைப்போல, அனுமதி கொடுக்கும் உரிமை பாரிக்கும் இல்லை. இழக்கக்கூடிய வாழ்விடத்தில் எந்த உயிரையும் இயற்கை உருவாக்கவில்லை. எனவே, தனது வாழ்விடத்தை ஓர் உயிர் இழப்பது இயற்கையுடனான ஆணிவேரை அறுத்துக்கொள்வதற்கு நிகர். பயன்பாட்டுக் கணக்குகளும் பண்டமாற்றுக் கணக்குகளும் எல்லாவற்றுக்கும் எப்படிப் பொருந்தும்? நாடியைத் தூக்கி வானத்தைப் பார்த்தபடி உங்கள் தந்தை விதைத்த கனவுக்கு விலை சொல்ல முடியுமா உங்களால்?”

கபிலரின் குரல் திடமாக ஒலித்தது. சொற்களைச் செங்குத்தாகக் கீழ்நோக்கித் தள்ள புலவனுக்குத் தெரியும். ஆசானாக மதிக்கும் ஒருவரின் மீது அந்தச் செயலைச் செய்யக் கூடாது என நினைத்தார். ஆனால், எண்ணங்களை மீறிச் சொற்கள் உருண்டன.

``தேவாங்கு மட்டுமல்ல, பாரியும் அப்படித்தான். என்ன விலை கொடுத்தாலும் சினம்கொண்டாலும் வீழ்ந்து பணிந்தாலும் திசை மாற மாட்டான்.”

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள் பாரி-65




எவ்வியூரிலிருந்து கபிலரை அழைத்துவந்த உதிரன், வேட்டுவன் பாறையில் உள்ள எல்லோருடனும் பேசி நலம் விசாரித்துக்கொண்டிருந்தான். திசைவேழரும் கபிலரும் தனியே பேச எழுந்து சென்றபோது, நீலனும் உதிரனும் இன்னொரு திசை நோக்கி நடந்து சென்றனர். இரு திசைகளையும் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார் வேட்டூர் பழையன். கற்றறிந்த அறிஞர்கள் இருவர் வலப்புறம் மெதுவாக நடந்து சென்றுகொண்டிருக்கும்போது, பறம்பின் இணையற்ற வீரர்கள் இருவர் இடப்புறமாகப் பேசியபடி நடந்துகொண்டிருந்தனர்.

உதிரனிடம் நீலன் கேட்கவேண்டிய கேள்விகள் நிறைய இருந்தன. ``எவ்வியூருக்குக் கூழையனிடமிருந்து நாள் தவறாமல் செய்தி வந்துகொண்டிருப்பதாகச் சொல்கிறார்களே..?” என்று தொடங்கினான்.

``ஆம், சேரகுடியினர் இருவரும் போருக்கான வேலைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். அந்தச் செய்திகளைக் கூழையன் நாள்தோறும் அனுப்பிக்கொண்டிருக்கிறான். உதியஞ்சேரலைவிடக் குடநாட்டினரிடம்தான் நாம் கூடுதல் விழிப்பு உணர்வுடன் இருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது. அவர்கள் தளபதி எஃகல்மாடன் பற்றி மிகக் கொடுமையான கதைகள் மக்களிடம் பரவியிருக்கின்றன. பிடிபட்ட எதிரி நாட்டு வீரர்கள் யாரையும் கண நேரம்கூட அவன் உயிரோடு வைத்திருப்பதில்லையாம்.

உடல்களைச் சிதைத்துக் கொல்வதை அவன் வழக்கமாக வைத்திருக்கிறானாம். `கோளூர்சாத்தனின் கைகளை வெட்டிய முடியனின் தலையை எடுக்காமல் நான் ஓய மாட்டேன்' எனச் சூளுரைத்தபடி அலைகிறானாம்" என்றான் உதிரன்.

அவன் சொல்லியதைப் பற்றி சிந்தித்தபடி வந்துகொண்டிருந்தான் நீலன். ``பறம்பினைச் சுற்றியுள்ள வேறெந்த நாட்டினருக்கும் இல்லாத வாய்ப்பு குடநாட்டினருக்குத்தான் உண்டு. நில அமைப்பின் தன்மையைக் கணக்கில் கொண்டால் அவர்களால் பச்சைமலையின் நடுப்பகுதி வரை வந்து சேர முடியும். இந்தச் சாதகமான வாய்ப்பைப் பயன்படுத்துவதாக நினைத்துதான் அவர்கள் ஏமாற்றம் அடைவர். ஏனென்றால், அதன் தொடர்ச்சியாக உள்நுழைந்தால் கரும்பாறைப் பிளவுக்குள் எளிதாகச் சூழப்பட்டு முழுமுற்றாக அழிக்கப்படுவர்" என்றான்.

அடுத்த கேள்வியை நீலன் கேட்கும் முன்னர் உதிரன் கேட்டான், ``சோமப்பூண்டின் பானம் குடிக்க வந்தபோது மீட்டுவந்த கப்பல் அடிமைகளைப் பற்றிக் கூறினாயே, அவர்களின் தலைவன் இன்னும் அப்படித்தான் இருக்கிறானா அல்லது ஏதாவது பேசுகிறானா?"



``இப்போது முழுமையாகக் குணமடைந்து விட்டான். மிகக் கொடுமையான காயங்கள் ஏற்பட்டதால் இத்தனை மாதங்கள் ஆகியுள்ளன. ஆனாலும் அவன் எதையும் வாய் திறந்து பேச ஆயத்தமாக இல்லை. எவ்வளவு முயன்றும் அவன் கூட்டத்தைப் பற்றிய உண்மைகள் எதையும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

உடன் இருக்கும் வீரர்கள் தலைவனின் உத்தரவின்றி ஒரு சொல்கூட உதிர்க்க மறுக்கிறார்கள். அவனது கண் அசைவை வைத்தே பணிபுரிகின்றனர். தேர்ந்த போர்க்குடியாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு இவ்வளவு கட்டுப்பாடும் உறுதியும் எளிதில் வராது” என்றான்.

``கபிலர் அவரின் ஆசானோடு ஓரிரு நாள்கள் தங்குவார். நாம் போய் அவனைப் பார்த்து வரலாமா?”

``விடிந்ததும் புறப்பட்டுப் போவோம்” என்றான் நீலன்.

கபிலரும் திசைவேழரும் குடிலுக்குத் திரும்பும்போது நண்பகல் கடந்திருந்தது. அவர்களுக்கான உணவு ஏற்பாடாகியிருந்தது. திறளி மரப்பலகையில் உட்கார்ந்ததும் திசைவேழர் சொன்னார், ``உணவு அருந்தியதும் நாங்கள் புறப்படுகிறோம்.”

``உங்களின் வலதுகாலை மடக்கி எழ முடியாததைப் பற்றி நீங்கள் சொன்னதால், மருத்துவர்கள் மூலிகைகளைப் பறித்துவந்து காத்திருக்கிறார்கள். இன்னும் இரு தினங்கள் தங்குங்கள். அவர்களின் மருத்துவத்தால் முழுமையாகக் குணமடைந்து செல்வீர்கள்” என்றார் வேட்டூர் பழையன்.

மறுமொழி ஏதுமின்றி அமைதியாக இருந்தார் திசைவேழர். வந்த நோக்கம் நிறைவேறாத மனநிலை மட்டுமன்று, இதுவரை தான் கண்டிராத ஒரு கபிலரையும் அவர் கண்டுள்ளார். அவருடைய உணர்வுகள் கொந்தளிப்பாக இருந்தன. பேரரசுக்காகத் தூது வந்ததைப்போல தன்னை கபிலர் நினைத்துவிட்டாரோ என்ற எண்ணமும் எழாமல் இல்லை. அமைதி நீடித்தது. அதைக் கவனித்துக்கொண்டிருந்த கபிலர், ``மருத்துவம் பார்த்துக்கொண்டு குணமடைந்து செல்வதுதான் நல்லது” என்றார்.


திசைவேழரின் மனம் அதை ஏற்கவில்லை. பறம்பைப் பற்றிக் கூறிய சொற்கள் அவரைக் கூசிக்கொண்டிருந்தன. ஆனால், நீட்டி மடக்க முடியாத வலதுகால் அவரது மறுப்புச்சொல்லை மடக்கிப் பிடித்துக்கொண்டது. என்ன செய்வது என அறியாமல் திணறிக்கொண்டிருந்தவர், கபிலரின் சொல்லுக்கு இணங்கித் தலை அசைத்தார்.

மாலை நேரம் நெருங்கியதும் மருத்துவர்கள் பச்சிலைகளையும் மரப்பட்டைகளையும் கொண்டுவந்திருந்தார்கள். திறளி மரப்பலகையில் உட்கார்ந்திருந்த அவரை, வலதுகாலை மட்டும் பலகையின் மேல் நேராக நீட்டச் சொன்னார்கள்.

திசைவேழரால் செய்யவே முடியாத பெருஞ்செயலாக அது இருந்தது. வளைந்த கால் அவ்வளவு எளிதில் நீண்டுகொள்ள ஆயத்தமாக இல்லை. அவரால் எவ்வளவு முடியும் என்பதைக் கணிப்பதற்கே மருத்துவர்கள் இதைச் செய்யச் சொன்னார்கள். அவர் முடிந்தவரை கால்களை நீட்ட முயன்றார். ``அரைவட்ட விண்மீன் கூட்டம் ஒருபோதும் நேர்க்கோட்டு சாட்டைக்கம்பு வெள்ளியாக மாறாது” என்று காலை அழுத்திக்கொண்டே சொன்னார். அவரது சொல்லைக் கேட்டுச் சிரித்தார் கபிலர்.

மருத்துவர்கள் பச்சிலையையும் பட்டையையும் கைக்கருவிகளால் ஒன்றாக்கி அரைத்துக் கொண்டிருந்தனர். அடிநரம்பு, சுண்டி இழுத்துக்கொண்டிருந்தது. வலி உச்சந்தலையைத் தொட்டது. மருத்துவர்கள் அரைத்துக் கொண்டிருக்கும் மூலிகைகளைப் பார்த்தபடி, ``என்ன மருந்து இது?'' எனக் கேட்டார் திசைவேழர்.

மூத்த மருத்துவர் சொன்னார், ``புலி முன் ஆடு.''



திசைவேழருக்குப் புரியவில்லை. அவர்கள் சற்றே விளக்குவார்கள் என எதிர்பார்த்தார். மருத்துவர் மூவரும் அவரவர் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தனர். தலைமாட்டில் இருந்த கபிலரைப் பார்த்தார். அவருக்கும் அதற்கான பொருள் புரியவில்லை. மருத்துவர்களைப் பார்த்து கபிலர் கேட்டார், ``அப்படியென்றால் என்ன... மூலிகையின் பெயரா?''


``இல்லை. மருந்தின் சேர்மானத்தையும் நோயின் தன்மையையும் வைத்து நாங்கள் முடிவுசெய்வோம். எங்களின் மருந்துக்கு முன், இந்த நோயானது புலிக்கு முன் ஆடு போல கண நேரத்தில் பதுங்கி ஒடுங்கும். சில நேரத்தில் நோயும் மருந்தும் புலிக்கு முன் புலி போல சம அளவில் நிற்கும். சில நேரத்தில் மருந்தால் கட்டுப்படுத்த முடியாத அளவில் நோய் இருக்கும், புலியை வீழ்த்தும் யானைபோல'' என்றார் அவர்.

திசைவேழர் வியப்புடன் பார்த்தார். `மருத்துவத்தைத் தொடங்கும் முன்னரே, புலிக்கு முன் ஆடு போல, இந்த நோயானது மருந்துக்கு முன் பதுங்கி ஒடுங்கும் என எப்படி துணிந்து சொல்ல முடிகிறது இவர்களால்?' என்று சிந்தித்தபடியே படுத்திருந்தார். வலி உச்சந்தலையைத் தொட்டுத் திரும்பிய இடத்தில் இப்போது புலியும் ஆடும் உலவிக்கொண்டிருந்தன. மனம் வேறொன்றைக் கணித்துக்கொண்டிருக்க, வலி நினைவில் தங்க இடமின்றி மறந்தொழிந்தது.

இரவு நெடுநேரமாகியும் தூக்கம் வரவில்லை. காலில் கட்டு போடப்பட்டிருந்ததால் அசையாமல் படுத்திருக்கவேண்டியிருந்தது. மனம் அலைமோதிக்கொண்டிருந்தது. அருகில் போடப்பட்டிருந்த கட்டிலில் கபிலர் உட்கார்ந்து திசைவேழரைக் கவனித்தபடி இருந்தார். உரிமை கலந்த இயல்பான பேச்சு இருவரிடமும் இல்லை. `நாம் சற்று கடுமையாகப் பேசிவிட்டோமோ!' என்ற எண்ணம் இருவருக்குள்ளும் ஓடிக்கொண்டிருந்தது.

அமைதியைக் குலைக்கும் சொல்லைக் கண்டறிய முடியாமல் கபிலர் தவித்துக்கொண்டிருக்கும்போது

திசைவேழரின் மெல்லிய குரல் கேட்டது, ``பல ஆண்டுகளுக்கு முன் பொதிகை மலையில் தற்செயலாக ஒரு பாணர் கூட்டத்தைக் கண்டேன். ஒருவார காலம் என்னோடு சேர்ந்து அவர்கள் பயணப்பட்டார்கள். அந்தப் பயணத்தின்போது நான் யார் என்பதை உடன் வந்த மாணாக்கர்கள் மூலம் அறிந்து கொண்டனர். அதன் பிறகு அந்தப் பாணர் குழுவின் தலைவன் நாஞ்சிலன் என்னிடம் வானியல் பற்றி பல ஐயங்களைக் கேட்டான். நான் அவற்றுக்கெல்லாம் விடை சொல்லியபடி வந்தேன்.



பயண வழியில் விலகிச் செல்லும் இடம் வந்தது. அப்போது அவன் சொன்னான், `பச்சைமலைத்தொடரில் வியப்புறு கனியான கருநெல்லி உள்ளது. அதை உட்கொண்டால் பகலிலும் விண்மீன்களைப் பார்க்கலாம். சென்றமுறை நான் பறம்புக்குச் சென்றபோது நடுமலையின் முகட்டில் அந்த மரத்தைக் கண்டேன். பயிற்சிபெற்ற வீரர்களைத் தவிர மற்றவர்களால் ஏறிச்செல்ல முடியாத பெருமுகடு அது. அந்த அதிசயக் கனியைப் பறித்து யாருக்குக் கொடுக்கப்போகிறோம் என்ற எண்ணம் உருவானதால், நான் அதைப் பெரிதாகக் கருதவில்லை. உங்களைப் போன்ற வானியல் பேராசானுக்கு அந்தக் கனி உண்ணக் கிடைத்தால் எவ்வளவு நன்மைபயக்கும்! அடுத்த முறை பறம்பு செல்கிறபோது பாரியிடம் கேட்டு அந்தக் கனியைக் கொண்டுவந்து உங்களுக்குத் தருவேன்’ என்று சொல்லிச் சென்றான்.

அவன் சொல்வதை நான் உண்மை என நம்பவில்லை. பகலிலே விண்மீன் கூட்டத்தை எப்படிப் பார்க்க முடியும்? அவன் ஏதோ கற்பனையாகப் பேசுகிறான் என்று நினைத்தேன். ஆனால், திசைகாட்டும் விலங்கு ஒன்று இருக்கிறது என்பதைப் பார்த்த பிறகு, இப்போது எனது எண்ணம் வேறுவிதமாக இருக்கிறது. அந்தச் செய்தியை அறிந்த நான் அப்போதே பறம்புக்கு வந்திருக்க வேண்டும். தவறிழைத்துவிட்டேனோ எனத் தோன்றுகிறது.”

திசைவேழர் சொல்வதை வியந்து கேட்டுக்கொண்டிருந்தார் கபிலர். என்ன சொல்வது எனப்

பிடிபடவில்லை. சற்றே திணறி மீண்டார். பேச்சற்றிருந்த கபிலரைப் பார்த்து, ``எதுவும் சொல்லாமல் இருக்கிறாய்?” எனக் கேட்டார் திசைவேழர்.

``கருநெல்லியைப் பற்றி பாரி என்னிடம் சொல்லியுள்ளான். `அதை உட்கொண்டால் பகலிலும் விண்மீன்களைப் பார்க்க முடியும். அந்த ஆற்றல் அதற்கு உண்டு என, குலநாகினிகள் சொல்வார்கள்’ என்று கூறியுள்ளான். அந்தக் கனியைப் பாரிகூடப் பார்த்ததில்லை. ஆனால், அதைப் பார்த்த ஒருவர் உங்களிடம் வந்து சொல்லியுள்ளார் என்பது எவ்வளவு முக்கியமான செய்தி! என்னால் நம்பவே முடியவில்லை” என்று வியப்பில் திணறினார் கபிலர்.

`இயற்கையைப் பற்றிய மனிதப்பேரறிவு இங்குதான் சேமிக்கப்பட்டிருக்கிறது’ என்று கபிலர் சொன்ன சொல்லின் ஆழம் காண முயன்றார் திசைவேழர்.

``பகலில் அல்ல, இரவில்கூட விண்மீன்களைப் பார்க்க முடியாத அளவுக்கு, அகந்தையும் ஆணவமும் சில நேரங்களில் கண்களை மறைத்துவிடுகின்றன” என்றார் திசைவேழர்.

இதற்கு என்ன மறுமொழி சொல்வதெனத் தெரியவில்லை. அசையும் அவரது வலதுகால் பாதத்தை மெள்ளப் பிடித்தபடி, ``அசைய வேண்டாம். எல்லாம் சரியாகும்” என்றார் கபிலர்.

பெரும்புலவனின் கைவிரல்கள் பாதத்திடம் பேசிய மொழி கேட்டு திசைவேழரின் கண்கள் கலங்கின.

அதிகாலையில் புறப்பட்ட நீலனும் உதிரனும் இரு குன்றுகள் தாண்டி அருவியின் அருகில் இருந்த மருத்துவக் குடிலை வந்தடைந்தனர். உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் அளவு மிகக் கடினமான காயங்கள் ஏற்பட்டிருந்ததால் இந்த இடம்வைத்தே மருத்துவம் பார்த்தனர். இப்போது அந்த வீரனின் உடல் முழுமையாகக் குணமாகிவிட்டது. நெடிய உயரமும் எல்லையற்ற வலிமையும்கொண்ட அவனது உடலை, சிதைவிலிருந்து முழுமையாக மீட்டிருந்தனர் பறம்பு மருத்துவர்கள்.

நீலனும் உதிரனும் அந்த இடம் வந்து தலைமை மருத்துவரைக் கண்டு வணங்கினர். ``எல்லா வகைகளிலும் அவன் குணமாகிவிட்டான்” என்றார் அவர்.

``ஆனால் பேசத்தான் மறுக்கிறான். அதுதான் ஏன் எனப் புரியவில்லை” என்றார் உடன் இருந்த இன்னொரு மருத்துவர்.


``மற்ற வீரர்களோ, தலைவனின் உத்தரவின்றிப் பேசுதல் முறையன்று என்று சொல்கிறார்கள்” என்றார் அருகில் இருந்த உதவியாளர்.

``அவர்களின் குலம் முழுமையாக அழிக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்களும் மரணத்தைவிடக்

கொடும்வேதனையை அனுபவித்து மீண்டுள்ளனர். அதனால், அச்சம் அவர்களின் ஆழ்மனம் வரை பதிந்திருக்கும். எவரையும் எளிதில் நம்பிவிட முடியாத மனநிலையில் அவர்கள் இருக்கக்கூடும். பறம்பைப் பற்றி அவர்கள் பெரிதாகக் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். எனவே, நம்பிக்கைகொள்ள முடியாத தயக்கமே அவர்களைப் பேசவிடாமல் செய்கிறது என நினைக்கிறேன்” என்றார் தலைமை மருத்துவர்.

எல்லாவற்றையும் கேட்ட இருவரும் புறப்பட்டு அந்த வீரனைக் காணச் சென்றனர். நாய்களை நன்கு பழக்கக்கூடியவர்களாக அந்த வீரர்கள் இருந்தனர். வேட்டைநாய்கள் அனைத்தையும் மிக அணுக்கமாக வைத்திருந்தனர். சுற்றிலும் இருந்த வீரர்கள் நீலனைக் கண்டதும் எழுந்து வணங்கி வழிவிட்டு நின்றனர். அவர்கள் தலைவன், குடிலுக்குள் தனித்திருந்தான். நீலனும் உதிரனும் உள்நுழைந்து அவன் முன் அமர்ந்தனர்.

உடல் முழுக்க வெட்டுத் தழும்புகள் இடைவெளியின்றி இருந்தன. பார்த்த கணம், உதிரனுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. `இவ்வளவு காயங்களையும் மீறி உயிர்பிழைத்து உட்கார்ந்திருக்கிறானே!’ என்ற வியப்பே ஆட்கொண்டது. சிதைந்த உடலை மீண்டும் இறுக்கிக்கட்டும் உடற்பயிற்சியைத் தொடங்கிவிட்டான் என்பதை நீலனால் உணர முடிந்தது. சென்றமுறை பார்த்ததற்கும் இந்தமுறை பார்ப்பதற்கும் உள்ள வேறுபாட்டை அவனுடைய கண்கள் கணித்தன.




அவனை உற்றுப்பார்த்தபடி உதிரன் சொன்னான், ``உனது குடிலுக்குப் பின்னால் இருக்கும் அருவியின் இடப்புறம் சிறிது தொலைவு நடந்தால் வீரன் ஒருவனின் நடுகல் உண்டு. அவனது பெயர் கடுவன். கடுவனின் கதையை யாவரும் அறிவர். அதைக் கேட்டுத் தெரிந்துகொள். உனக்கு இனி தேவைப்படும் மருத்துவம் அதுதான்” சொல்லிவிட்டு எழுந்தான் உதிரன்.

வந்த இருவரும் நீண்டநேரம் பேசுவார்கள் என அவன் நினைத்திருந்தான். ஆனால் அவர்களோ, ஒற்றைச் சொல்லை மட்டும் சொல்லிவிட்டுப் புறப்பட்டனர். தொலைவில் இருவரின் உருவமும் மறையும் வரை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் அவன்.

அது ஒரு கொடும் கோடைக்காலம். மழையின்றி விளைச்சல் பாதித்ததால் சமவெளியில் இருந்த மனிதர்களின் சேமிப்புகள் எல்லாம் தீர்ந்தன. உண்ண உணவு ஏதும் இல்லாமல், மனிதர்கள், உணவு தேடி எங்கும் அலைந்துகொண்டிருந்தனர்.

எவ்வளவு கொடும்பஞ்சம் வந்தாலும் மலைவாழ் மக்களைக் கிழங்குகள் கைவிடாது. ஏழு வகைக் கிழங்குகள் மலையில் விளைகின்றன. நீரின்றிச் செடிகொடிகள் எல்லாம் செத்து மடிந்தாலும் மண்ணுக்குள் கிடக்கும் இந்தக் கிழங்குகள் மனிதனின் உணவுக்காக என்றென்றும் காத்திருப்பவை.

சித்திரவள்ளிக்கிழங்கும் காட்டுவள்ளிக் கிழங்கும் இதர கொடிகளும் மனிதர்கள் உண்ண எப்போதும் கிடைக்கக்கூடியவை. அவைகூட விளையாத கொடும்பஞ்சகாலம் என்றால் இருக்கவே இருக்கிறது நூரை, சவலன், நெடுவன், தீச்சி, நாச்சி, சம்பை, நூழி எனும் ஏழு வகையான கிழங்குகள். ஒவ்வொன்றும் வெவ்வேறு ஆழத்தில் விளைந்துகிடப்பவை. நிலம் அறிந்த மனிதர்கள் அந்தக் கிழங்குகள் இருக்கும் இடத்தை எளிதில் அடையாளம் கண்டு தோண்டி எடுப்பர்.



சமவெளியில் உண்ண வழியில்லாத நிலையில், பலரும் கிழங்குகளைத் தேடி மலைகளில் ஏறினர். போதன் என்பவன், பட்டினிகிடக்கும் தன் குடும்பத்தைக் காப்பாற்ற, கிழங்கு தேடிப் பச்சைமலையில் ஏறியுள்ளான். காலையிலிருந்து உச்சிப்பொழுது வரை தேடி அலைந்துள்ளான். மிகச்சிறிய அளவிலான இரு கிழங்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. ஆனாலும் விடாமல் தேடி அலையும்போது பாறை ஒன்றில் அமர்ந்திருந்த இளைஞனைப் பார்த்துள்ளான். இளைஞனின் காலில் ஏதோ காயம்பட்டுக் குருதி வழிந்து ஓடியது. பச்சிலைகளைப் பறித்து, காயத்தின்மீது தேய்த்தபடி உட்கார்ந்திருக்கிறான் அந்த இளைஞன். அவன் மலைமகன் என்பதை, பார்த்ததும் போதன் புரிந்துகொண்டான். `இவனிடம் கேட்டால் நமக்கு வழி பிறக்கும்!' என நினைத்து, ``எத்திசை போனால் கிழங்கு கிடைக்கும்?" எனக் கேட்டான்.

அவன் பதில் ஏதும் சொல்லாமல் போதன் கையில் வைத்திருந்த இரு கிழங்குகளையே உற்றுப்பார்த்தான். ``கேள்விக்கு விடை சொல்லாமல், கைகளில் இருக்கும் கிழங்குகளையே பார்த்துக்கொண்டிருக்கிறாய்?" எனக் கேட்டான் போதன்.

அதற்கு அந்த இளைஞன், ``நீ கையில் வைத்திருப்பது நூழிக்கிழங்கின் வகை. புதிதாகச் சாப்பிடுகிறவர்களுக்கு இது ஒவ்வாது. இதில் உள்ள கருவிதைகள் செரிமானம் ஆகாது" என்றான்.

``வீட்டில் கொடும்பட்டினியில் கிடக்கிறார்கள். அவர்களின் பசிக்கு எதுவும் உணவுதான். புதிதாகக்

கிழங்குகள் கிடைக்க வழியிருந்தால் சொல்” எனக் கேட்க, இளைஞனோ அருவி விழும் பாறையைக் காட்டி, “அந்தத் திசையில் போய்ப்பாருங்கள், சித்திரவள்ளிக்கிழங்கு கிடைக்கும்” என்றான்.

``சரி” என்று கூறிப் புறப்படும்போது போதன் கேட்டான், ``நீ பறம்பைச் சேர்ந்தவனா?”

``ஆம். எனது பெயர் கடுவன்.”

“அப்படியென்றால் உன்னை நம்பலாம்” எனச் சொல்லி, கையில் வைத்திருந்த நீர்க்குடுவையையும் கிழங்குகளையும் அவனிடம் கொடுத்துவிட்டு. “இதைப் பார்த்துக்கொள். நான் அந்த இடம் சென்று கிழங்கைத் தோண்டிவந்ததும் வாங்கிக்கொள்கிறேன்” என்றான்.

அலைந்து தவித்து, மிகவும் சோர்வுற்று இருக்கும் ஒருவன் சொல்கிறானே என்று கடுவனும் அதை வாங்கிக்கொண்டு அவனை அனுப்பிவைத்தான்.

போதன் சென்ற பிறகு காயங்களில் வழியும் குருதி நின்றுவிட்டதா எனப் பார்த்தபடி கடுவன் உட்கார்ந்திருந்தான். அவன் அருகில் போதன் வைத்துவிட்டுப் போன இரு கிழங்குகளும் நீர்க்குடுவையும் இருந்தன. சிறிது நேரத்தில் பெருமுயல் ஒன்று கடுவன் உட்கார்ந்திருந்த பாறையின் வலப்புறமாகத் தவ்விப் புதருக்குள் ஓடியது.

பார்த்தவுடன் கடுவனுக்கு போதனின் உயிரற்ற குரல் நினைவுக்கு வந்தது. கொடும்பட்டினியில் குடும்பம் கிடப்பதால் நூழிக்கிழங்கை எடுத்துப் போகிறான். `இது புதியவருக்குச் சேராதே!’ என நினைத்தவன், `இந்த முயலைப் பிடித்துக்கொடுத்தால் அவன் குடும்பத்துக்கு உணவாகும்’ எனச் சிந்தித்தபடி கையில் இருந்த மூங்கில்குச்சியை எடுத்துக்கொண்டு சட்டெனப் புதரை நோக்கித் தாவினான்.

அந்தப் புதர் முழுவதும் கிண்டிப் பார்த்தான், முயல் தென்படவில்லை. எந்தத் திசையில் போயிருக்கும் எனக் கால்தடம் பார்த்தான். எதுவும் தென்படவில்லை. மழைக்காலத்தில் எளிதில் தடம் அறியலாம், கோடையில் தடம் அறிவது கடினம். எங்கே போயிருக்கும் எனக் கணித்துக் கீழ்திசை நோக்கி, புதர்களைக் கிளறியபடி போனான். நீண்ட தொலைவு கீழிறங்கிச் சென்றான். முயல் அவனது கண்ணில் படவே இல்லை. மிகவும் சோர்வடைந்து பாறை நோக்கி நடந்தான்.

புதர்களுக்குள் நுழைந்து இங்குமங்கும் தேடியதில் குச்சிகள் கிழித்து, காயத்திலிருந்து மீண்டும் குருதி வழிந்தது. `பச்சிலையைத் தேய்ப்போம்!’ என எண்ணியபடி பாறையின் மீது ஏறி அமர்ந்தான். காய்ந்த குச்சிகளின் கீறல் அளவற்றதாக இருந்தன. `எப்படியாவது பிடிக்க வேண்டுமே என்ற பதற்றத்தில், நிதானமின்றிப் புதருக்குள் ஓடியுள்ளோம்’ என நினைத்தபடி பச்சிலையை எடுத்துத் தேய்த்தான்.

காயத்தில் எரிச்சல் அதிகமாக இருக்கிறதே என்று பற்களைக் கடித்துக்கொண்டே பாறையைப் பார்த்தான். வைத்துவிட்டுப் போன இடத்தில் அந்த இரு கிழங்குகளும் இல்லை. நீர்க்குடுவை மட்டும் ஓரத்தில் உருண்டுகிடந்தது. சற்றே பதற்றமடைந்து இங்குமங்குமாகத் தேடினான். எங்கும் இல்லை. ஏதோ விலங்கு வந்து அதைத் தின்றுவிட்டுப் போய்விட்டது என்பது தெரிந்தது.

போதன் வந்து கேட்டால் என்ன செய்வது என்ற பதற்றத்தில், பாறையைச் சுற்றி எங்காவது விழுந்துகிடக்கிறதா எனத் தேடினான். எதுவும் கண்களில் படவில்லை. நேரமாகிக்கொண்டிருந்தது. `அடுத்து என்ன செய்யலாம்?' எனச் சிந்தித்தான். எங்கிருந்தாவது வேறு கிழங்குகளைத் தோண்டி எடுத்துவந்துவிடலாமா என எண்ணிக்கொண்டிருந்தபோது தொலைவில் போதன் வருவது தெரிந்தது.

கடுவன், பதற்றத்தோடு அவனது வரவைப் பார்த்துக்கொண்டிருந்தான். போதனின் கையில் சித்திரவள்ளிக்கிழங்குகள் சில இருந்தன. சற்று மகிழ்வோடுதான் அவன் வந்தான். “நீ சரியான இடத்தைச் சொன்னாய், உனக்கு நன்றி” என்று சொல்லியபடியே பாறையின் மீதிருந்த நீர்க்குடுவையை எடுத்துக்கொண்டு கிழங்குகளைத் தேடினான். அவற்றைக் காணவில்லை. அப்பக்கம் இருக்குமோ என நினைத்து கடுவனின் பின்திசையில் பார்த்தான். அங்கும் இல்லை. தேடியபடியே, “எங்கே கிழங்குகள்?” என்றான்.

கடுவனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. தயக்கத்தில் சொற்கள் வரவில்லை.

போதனின் கண்கள் தேடியபடியே “கிழங்குகள் எங்கே?” என மீண்டும் கேட்டான்.

தயக்கத்தோடு கடுவன் சொன்னான், ``அவற்றை ஏதோ விலங்கு தின்றுவிட்டது.”

அதிர்ச்சியானான் போதன். தலையை மறுத்து ஆட்டி “என்ன சொல்கிறாய்..?” எனக் கேட்டான்.

“முயலொன்று பார்வையில் பட்டது, உங்களுக்குக் கொடுக்கலாமே என அதைப் பிடிக்க ஓடினேன். அந்த நேரத்தில் ஏதோ ஒரு விலங்கு, கிழங்குகளைத் தின்றுவிட்டது” என்றான் மிகுந்த கவலையோடு.

அதிர்ச்சியிலிருந்து மீளாத போதன், “முயல் எங்கே?” என்றான்.

``பிடிக்க முடியவில்லை. தப்பிச்சென்று விட்டது.”

``என்னை ஏமாற்றப்பார்க்கிறாய். கிழங்குகளைத் தின்றுவிட்டு, என்னிடம் மறைக்க, பொய் சொல்கிறாய்” என்றான்.

கடுவன் மிகுந்த பதற்றத்துக்குள்ளானான், “நான் பொய் சொல்லவில்லை. உங்களுக்குக் கொடுக்கத்தான்

முயலைப் பிடிக்கப் போனேன், அவசரத்தில் கிழங்கை எடுத்துக்கொண்டு போகாமல் இங்கேயே வைத்துவிட்டுப் போய்விட்டேன். அதுதான் நான் செய்த தவறு. என்னை மன்னியுங்கள்” என்றான்.

போதனோ, “நீ பறம்பைச் சேர்ந்தவன் என்பதால்தான் நம்பினேன், என்னை நீ ஏமாற்றிவிட்டாய்” என்றான்.

சொற்கள் கடுவனை நிலைகுலையச்செய்தன. அவன் மீண்டும் மீண்டும் தனது நிலையை விளக்கிச் சொல்ல முயன்றான். போதன் அவனது சொல்லை நம்பவில்லை. “கிழங்கை நீ உட்கொண்டுவிட்டு விலங்கின் மீது பழிபோடுகிறாய்” என்று உறுதியாகச் சொன்னான்.

“சரி, தின்று முடித்துவிட்டாய். இனி நான் புலம்பி என்ன ஆகப்போகிறது, கொடும்பஞ்சம் பறம்பு மக்களையும் மாற்றிவிட்டது” என்று துயருற்றுப் புலம்பியபடியே புறப்பட்டான் போதன்.

சிறு பாறையின் மீது நின்றுகொண்டிருந்த கடுவன் இடுப்பில் இருந்த குறுங்கத்தியை எடுத்தபடி, ``ஒரு கணம் நில்லுங்கள்” என்றான்.

நடக்கத் தொடங்கிய போதன் நின்று அவனைத் திரும்பிப் பார்த்தான்.




பாறையின் மீது இருந்த கடுவன், குறுங்கத்தியை அடிவயிற்றின் இடப்புறம் அழுத்தி உள்நுழைத்தான்.

போதனுக்கு அவன் என்ன செய்கிறான் என்பது புரியவில்லை.

அடிவயிற்றின் இடப்புறம் உள்நுழைத்த கத்தியை வலப்புற முனைவரை கண்ணிமைக்கும் நேரத்தில் இழுத்தான்.

அப்போதுதான் போதனுக்கு அவனது செயல் புரிந்தது.

கத்தியை இழுத்துக்கொண்டிருக்கும்போதே கடுவன் சொன்னான், “எனது வயிற்றில் கிழங்கேதும் இருக்கிறதா எனப் பாருங்கள். செரிமானம் ஆகாத கருவிதைகள் ஒன்றேனும் இருக்கிறதா எனவும் பாருங்கள்” என்று சொல்லியபடி வேலையை முடித்தான்.

பதறிய போதன் அவனை நோக்கி ஓடும்போது பாறையிலிருந்து சரிந்துகொண்டிருந்தான் கடுவன்.

“என்னை மன்னித்துக்கொள்” என போதன் கதறியபடி அவனது தலையை ஏந்திப்பிடித்தபோது கடுவன் சொன்னான், “பறம்பின் மக்கள், நம்பிக்கைக்கு துரோகம் இழைக்க மாட்டார்கள்.”

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-66

வஞ்சித்துறைக்கு அதிகாலையிலேயே வந்துவிட்டான் உதியஞ்சேரல். மன்னன் வந்ததால் பிற வணிக நடவடிக்கைகள் எல்லாம் சற்றே நிறுத்திவைக்கப் பட்டிருந்தன. அரச மாளிகையில் விருந்தினராகத் தங்கியிருந்த ஹிப்பாலஸுக்குச் செய்தி தெரிந்தபோது விடிந்து நீண்ட நேரமாகியிருந்தது. உதியஞ்சேரல் அதிகாலையிலேயே எழுந்து துறைமுகத்துக்கு ஏன் போனான் என்ற காரணம் புரியாத குழப்பத்தில் வேகவேகமாகப் புறப்பட்டு, துறைமுகம் நோக்கி விரைந்தான்.

யவனக் காவல் வீரர்கள் அறுவர் சூழ அவனது வண்டி புறப்பட்டது. புறப்படும் நேரத்தில் வந்து அவனுடன் இணைந்தான் திரேஷியன். பெரும்படையையும் வழிநடத்திச் செல்லும் வல்லமைகொண்ட அவனை ஹிப்பாலஸ் எந்நேரமும் உடன்வைத்துக்கொண்டான். இருவரும் துறைமுகம் அடைந்தபோது சேர அமைச்சன் நாகரையன் இருவரையும் வரவேற்றான்.

துறைமுக மாளிகையில் அரசன் இருப்பதாகக் கூறி, இருவரையும் அங்கு அழைத்துச்சென்றான். உதியஞ்சேரல், தன் தளபதி துடும்பனோடு அமர்ந்து பேசிக்கொண்டிருந்தான். ஹிப்பாலஸ் இங்கு வந்து நாள்கள் பல ஆகிவிட்டன. ஆனால், குட்டநாட்டுத் தளபதியை இதுவரை பார்க்கவில்லை. அரசவையிலும் அவன் இல்லை. போர் நடவடிக்கையில் தீவிரமாக இருப்பதால் தளபதி அவைக்கு வந்து சேர நாளாகும் என, விசாரித்ததில் தெரியவந்தது. அவன் எங்கு போயிருக்கிறான் என்பது அரண்மனையில் உள்ளவர்களுக்கே தெரியவில்லை. இதுபோன்ற செய்திகளைப் பெறுவது யவனர்களுக்குக் கடினமில்லை. ஆனால், அரசனைத் தவிர வேறு யாருக்கும் இந்தச் செய்தி தெரியவில்லை என்பதை ஹிப்பாலஸ் உறுதிப்படுத்திக்கொண்டான். அதனால்தான் தளபதியின் நடவடிக்கையை அறியவேண்டும் என்ற ஆவல் அதிகமாக இருந்தது.

அரண்மனை நடவடிக்கைகளை அறிந்துகொள்வதில் பெருவணிகர்கள் எப்போதும் மிகக் கவனமாக இருப்பர். அவர்களால்கூட இந்தச் செய்தியை அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், சற்றும் எதிர்பாராமல் இன்று காலை துறைமுக மாளிகையில் அரசனோடு அமர்ந்திருந்தான் தளபதி துடும்பன். ஹிப்பாலஸும் திரேஷியனும் இன்றுதான் அவனை முதன்முதலாகப் பார்க்கின்றனர். முதல் தோற்றத்திலேயே அவன்தான் குட்டநாட்டுத் தளபதி என்பதை அவர்களால் ஊகிக்க முடிந்தது.



திரேஷியன்போல மிக உயரமான உருண்டு திரண்ட உடலமைப்போடு இருந்தான் துடும்பன். யவன விருந்தினரை எழுந்து வணங்கினான். ஹிப்பாலஸ் மன்னனுக்கு முகமன் கூறி இருக்கையில் அமர்ந்தான்.

``அதிகாலையிலேயே வந்துவிட்டீர்களா மன்னா?” என்று பேச்சைத் தொடங்கினான் ஹிப்பாலஸ்.

``ஆம். கப்பல்கள் வந்துவிட்ட செய்தி கிடைத்ததும் புறப்பட்டு வந்தேன்” என்றான்.

என்ன கப்பல், எங்கிருந்து வந்துள்ளது என்று எந்த விளக்கமும் இல்லாமலிருந்தது உதியஞ்சேரலின் கூற்று.

சற்று அமைதிக்குப் பிறகு ஹிப்பாலஸை அழைத்துக்கொண்டு மாளிகையின் பின்புறப் படிக்கட்டின் வழியாக மேல்மாடத்துக்கு நடந்தான் உதியஞ்சேரல். துடும்பனும் திரேஷியனும் கீழேயே இருந்தனர்.

துறைமுகத்தில் வரிசைகொண்டு நிற்கும் கப்பல்களை மேல்மாடத்திலிருந்து பார்த்தனர் இருவரும். துறைமுகம் எங்கும் படைவீரர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதையும் புதிதாக நிறைய கப்பல்கள் வந்துள்ளதையும் பார்த்தபடி ஹிப்பாலஸ் நின்றுகொண்டிருந்தான்.

``நான் நீண்டகாலம் எதிர்பார்த்துக் காத்திருந்தது இன்று வந்து சேர்ந்துள்ளது” என்றான் உதியஞ்சேரல்.

``உங்களின் முகத்தில் தெரியும் மகிழ்ச்சியே அதை உணர்த்துகிறது” என்றான் ஹிப்பாலஸ்.

``சாலமலையைக் கடந்தே பறம்பின் எல்லைக்குள் நம்மால் நுழைய முடியும். படைகள் எளிமையாக நுழையக்கூடிய வாகான பகுதிகள் மூன்று இடங்களில் இருக்கின்றன. அவற்றின் வழியே உள்நுழைவதற்குத்தான் இதுவரை முயன்றுள்ளோம். அவ்வாறு முயலும்போதெல்லாம் எளிய வழியிலிருந்து அடர்காட்டு வழியே நம்மை உள்ளிழுத்துத் தாக்கும் திட்டத்தை நிறைவேற்றுவான் பாரி. இந்த முறை நமது திட்டமே அடர்காட்டு வழியே உள்நுழைவதுதான் என்று நான் முடிவுசெய்துள்ளேன். அதற்கான ஏற்பாடுகள் முடிவுறுவதற்காகத்தான் நான் காத்திருந்தேன்’’ என்று சொல்லியபடியே மாடத்திலிருந்து கீழிறங்கி, துறைமுகம் நோக்கி நடந்தான் உதியஞ்சேரல். அவனைப் பின்தொடர்ந்தான் ஹிப்பாலஸ்.

வந்து நிற்கும் புதிய கப்பல்களிலிருந்து பொருள்களை இறக்குவதற்கான ஆயத்தவேலைகள் தீவிரமாகிக் கொண்டிருந்தன. எண்ணற்ற படைவீரர்கள் வரிசையாக வந்து நின்றவண்ணம் இருந்தனர். இவர்கள் என்ன பொருளை இறக்கப் போகிறார்கள் எனத் தெரியாத குழப்பத்தில் இங்கும் அங்கும் பார்த்தபடி நடந்துகொண்டிருந்தான் ஹிப்பாலஸ்.

`இதைத் தாண்டி அருகில் செல்ல வேண்டாம்’ என்று மன்னருக்குச் சொல்வதற்காக, குறிப்பிட்ட இடத்தில் நின்றுகொண்டிருந்தான் துடும்பன். அந்த இடம் வந்ததும் உதியஞ்சேரல் நின்றான். உடன் வந்த ஹிப்பாலஸும் மன்னனோடு சேர்ந்து நின்று கொண்டான். காலை நேரக் கடற்காற்று சற்று அதிகமாக வீசியது. அலைகள் விடாது வந்து கரை மோதி ஓசை எழுப்பியபடியிருந்தன. படைவீரர்கள் மிகவும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர்.

``அப்படி என்னதான் கொண்டு வந்திருக்கிறார்கள்?’’ என்று ஹிப்பாலஸ் ஆவலோடு கலன்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். திடீரென ஊளையிடும் ஓசை கேட்டது. எங்கிருந்து இந்த ஓசை வருகிறது என அவன் சிந்திப்பதற்குள் ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணற்ற ஓசைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து பேரோசையாக மாறி, கரையில் நிற்பவர்களை நடுங்கச் செய்தன.

உதியஞ்சேரல், ஒரு கணம் மிரண்டு நின்றான். ஹிப்பாலஸுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி, அளவிட முடியாததாக இருந்தது. ``அந்தக் கப்பலுக்குள் என்னதான் இருக்கிறது? அலையை மிஞ்சும் பேரோசை நம்மை  நிலைகுலையவைக்கிறது” என்றான்.

ஏற்பட்ட அதிர்ச்சியைக் கடந்து மகிழ்ச்சியை வெளிக்காட்டத் தொடங்கினான் உதியஞ்சேரல். ``இதைக் கொண்டுவரத்தான் இவ்வளவு காலமானது. கடைசியாகக் கொண்டுவந்து சேர்த்துவிட்டான் என் தளபதி” என்று பாராட்டினான். தோள் தட்டிப் பாராட்டு பெறும் துடியனின் பக்கம் திரும்ப ஹிப்பாலஸ் முயன்றான். ஆனால், அவனுடைய கண்களோ கப்பலைவிட்டு அசையவில்லை. அங்கு தீவிரமான வேலை ஏதோ நடந்துகொண்டிருக்கிறது.

கப்பலின் அடித்தளத்திலிருந்து பெரும்மரச்சட்டங்களின் வழியிலான நாற்சதுரக் கூடுகளை இரும்புக்கம்பிகளால் கட்டி மேலேற்றிக்கொண்டிருந்தனர். ஊளையின் ஓசை பெருகியபடியே இருந்தது. அதைவிடப் பெருங்குரலில் பேசினான் உதியஞ்சேரல், ``இந்தக் கப்பல் எங்கிருந்து வந்துள்ளது தெரியுமா?”

`தெரியாது’ என்று ஹிப்பாலஸ் தலையை மறுத்து ஆட்டினான்.

``நக்கவாரத் தீவிலிருந்து.”

அதிர்ந்தான் ஹிப்பாலஸ். ``அந்தத் தீவுக்குள் மனிதக்கறி தின்னும் மனிதர்கள் மட்டுமே இருப்பதாகத்தானே கேள்விப்பட்டுள்ளேன். அங்கு எப்படி?”


அந்தத் தீவு மிக நீளமானது. அதன் கீழ்ப்புறம் மனிதக்கறி தின்னும் மனிதர்கள் உள்ளனர். மேற்புறம் இன்னொரு மனிதக்கூட்டம் உள்ளது. அவர்களுடன்தான் நாம் உறவை உருவாக்கியுள்ளோம்.”

மரச்சட்டத்தால் ஆன பெருங்கூண்டு ஒன்றை, கப்பலின் மேல்தளத்திலிருந்து கரைக்குக் கொண்டுவர முயற்சி நடந்தது. அடித்தொண்டையைக் கிழித்துக்கொண்டு அவை வெளிப்படுத்திய பேரோசை, வீரர்களை அஞ்சி நடுங்கவைத்தது. ஆனால், அந்த மரச்சட்டகங்களைக் கொண்டுவந்த அந்தத் தீவுவாசிகள் அந்த ஓசையைப் பொருட்படுத்தவேயில்லை.

கழுத்தை மேலும் உயர்த்தியபடி பார்த்துக்கொண்டிருந்த ஹிப்பாலஸின் கண்களுக்கு எதுவும் புலப்படவில்லை.

``நிலப்பரப்பெங்கும் இல்லாத புது வகையான விலங்கு இது” என்றான் உதியஞ்சேரல். ஹிப்பாலஸின் ஆர்வம் எல்லை கடந்ததாக இருந்தது. முழு விசையோடு மரச்சட்டகங்களைச் சறுக்குப்பலகையின் வழியே கப்பலின் மேலிருந்து கரைக்கு இறக்கினர். மீண்டும் ஊளையிடும் ஓசை, காற்றைக் கிழித்துக்கொண்டிருந்தது.

உதியஞ்சேரல் சொன்னான், ``இவைதான் தோகைநாய்கள்.”



ஹிப்பாலஸ் கேள்விப்பட்டதில்லை. ஊளையிடும் ஓசையின் மிரட்டல் ஒருபக்கம். அவற்றை மரச்சட்டங்களின் வழியாகக் கட்டியிழுக்க வீரர்கள் படும் பாட்டைப் பார்த்தபடி, உதியஞ்சேரலின் கூற்றைக் கேட்கத் தொடர்ந்து முயன்றான் ஹிப்பாலஸ். தலையை இந்தப் பக்கம் திருப்புவதா அந்தப் பக்கம் திருப்புவதா என்ற குழப்பம் கணம்தோறும் ஏற்பட்டபடி இருந்தது.

அருகில் இருந்த துடும்பன்தான் சொன்னான், ``தீவுகளில் மிகக் கொடுமையான மனிதர்களும் விலங்குகளும் இருப்பது நக்கவாரத் தீவில்தான். அந்தத் தீவில் உள்ளதிலேயே மிகக் கொடுமையான விலங்கினம் இதுதான்.

கீரியைப்போன்ற நீள்வடிவ உடலும் வாலும் கொண்ட அமைப்பு. வால் நிறைய தோகையும் கொண்டது. நாயின் அளவு உயரம் உடையது. உடல் நீளத்தில் மூன்றில் ஒரு பங்கு அதனுடைய நீள்வாய். குதிரையின் கழுத்துப் பகுதியை ஒரே கடியில் எடுத்துவிடக்கூடியது. இதன் சிறப்பே தரையில் எவ்வளவு வேகமாக ஓடுமோ அதே அளவு வேகத்தோடு புதரின் மீதும் மரக்கொப்பின் மீதும் ஓடுவதுதான். மரத்தின் மீதிருந்து பாய்ந்து கீழிறங்கும்போது அதன் வால் பகுதி சிலிர்த்து தோகை முழுவதும் விரிந்துவிடும். பெரும் ஊளையோடு மரத்தின் மீதிருந்து விரிந்த தோகையோடு பாய்ந்து இறங்கும் இதைப் பார்த்தால் எப்படையும் சிதறித் தெறிக்கும்.


குறிப்பாக, அடர்காட்டில் எதிரியின் படையில் இருக்கும் விலங்குகளை அழிக்க, இதற்கு இணையான

இன்னொரு விலங்கு இல்லை. பாரியின் பெரும்பலமாக எல்லோரும் சொல்வது அவனது குதிரைப்படையைத்தான். தோகைநாயின் தாக்குதலால் அவனது குதிரைப்படை உருத்தெரியாமல் அழியும்” என்றான்.

ஊளையிடும் ஓசை காதடைக்கச் செய்தது. காலை வெயில் சுள்ளென அடித்துக்கொண்டிருந்தது. ஹிப்பாலஸால் நீண்ட நேரம் நிற்க முடியவில்லை. துடும்பன் விடாமல் பேசினான். பல நாள்களாகக் கடற் பயணம் செய்ததால், தோகைநாயின் ஓசை துடும்பனுக்குப் பழகிவிட்டது. ஆனால், மற்றவர்களுக்கு அப்படியல்ல. ஒவ்வொரு மரச்சட்டகத்திலும் மூன்று தோகைநாய்கள் இருப்பதுபோல வடிவமைத்திருந்தனர்.

ஹிப்பாலஸ், சட்டகங்களுக்குள் அதன் உருவத்தை உற்றுப்பார்க்க முயன்றான். ஆனால், நிற்காமல் அது உள்ளுக்குள் சுழன்றபடி பெருங்கத்தல்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. இதற்குமேல் இந்த இடத்தில் நிற்க வேண்டாம் என முடிவுசெய்து, ``மாளிகைக்குப் போவோமா?” எனக் கேட்டான். சரியெனச் சொல்லி அழைத்துவந்தான் உதியஞ்சேரல்.

மாளிகைக்கு வந்ததும் இருவருக்கும் பழச்சாறு கொடுக்கப்பட்டது. அருந்தியபோதுதான் சற்று தெளிச்சி வந்தது. ஆனால், ஊளையின் ஓசை நிற்காமல் கேட்டுக் கொண்டே இருந்தது. இந்த நாய்களைப் போரில் பயன்படுத்த, தீவிலிருந்து கொண்டுவரப்பட்ட மனிதர்களும் மரச்சட்டகங்களுக்குப் பக்கத்தில் வந்துகொண்டிருந்தனர். அவர்களின் உடலமைப்பும் உடலின் மேல் தொங்கிக்கொண்டிருக்கும் பொருள்களும் காண்போரை நடுங்கச்செய்வதாக இருந்தன.



ஹிப்பாலஸின் எண்ணங்கள் அலைமோதிக் கொண்டிருந்தன. ஆனால், உதியஞ்சேரலின் எண்ணங்கள் நிதானம்கொண்டிருந்தன. ``கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக நாங்கள் தொடர்ந்து முயன்றுவருகிறோம். குடநாட்டினரும் அவ்வப்போது முயல்கின்றனர். அப்படியிருந்தும் பறம்புநாட்டை வீழ்த்த முடியவில்லை. அதற்கான அடிப்படைக் காரணம் என்ன தெரியுமா?”

மற்ற எல்லோரையும்விட பறம்பை மிக நன்கு புரிந்துவைத்துள்ளவன் உதியஞ்சேரல்தான் என்பது

ஹிப்பாலஸுக்குத் தெரியும். எனவே, அவனது கேள்விக்கு சிந்தித்து விடை சொன்னான், ``அரண் அமைத்து நிற்கும் பறம்புநாட்டின் மலைகள்தான் காரணம்.”

``இல்லை” என்றான் உதியஞ்சேரல்.

தொடர்ந்து அவன் சொல்லப்போகும் சொல்லை உற்று கவனித்தான் ஹிப்பாலஸ். தோகைநாயின் நீள் ஊளை சத்தம் காதுகளுக்குள் இடைவிடாது  அறைந்துகொண்டிருந்தது.

ஓசைகளில் எத்தனையோ வகையுண்டு. அவற்றில், வெளிப்புறம் பெருக்கெடுக்கும் ஓசை ஒரு வகை. ஆனால், சில ஓசைகள் உள்ளுக்குள் கூர்மைகொண்டு இறங்கக்கூடியவை; ஆழ்மனதில் இருக்கும் அச்சங்களை எளிதில் கிளறிவிடக்கூடியவை. தோகைநாயின் ஓசை வெளிப்புறமும் பெருக்கெடுக்கிறது. அதே நேரத்தில் ஆழ்மன அச்சத்தையும் விடாமல் கிளறுகிறது. எனவே, மனதை நிலைகொள்ளச் செய்ய முடியவில்லை. அந்த ஓசை நின்ற கணத்தில் உதியஞ்சேரல் சொன்னான், ``பறம்பின் மலைகள் அல்ல, பாதைகள்தான் காரணம்.”

ஹிப்பாலஸுக்குப் புரியவில்லை. ``என்ன சொல்கிறாய்?” என்றான்.

``பறம்புநாடு முழுவதும் மனிதர்கள் உருவாக்கிய பாதைகளே கிடையாது என்பது மட்டுமல்ல, மனிதர்கள் பாதைகளை உருவாக்கக் கூடாது என்பதிலும் பாரி திடமான முடிவோடு இருக்கிறான்.’’

``பாதையை உருவாக்காதது பெரும்பலம் என்று சொல்ல முடியுமா?”

``அவன் இருப்பிடம் நோக்கி எப்படிப் போவது?” என மறுகேள்வி கேட்டான் உதியஞ்சேரல்.

ஹிப்பாலஸ் சற்றே அமைதியானான்.

``இப்பெரும் மலைத்தொடர் இயற்கையின் பேரரண். இதில் எவ்வியூர் எங்கே இருக்கிறது? போய்த் திரும்பும் ஒற்றர்களுக்கும் பாணர்களுக்கும் எவ்வியூர் எப்படி இருக்கிறது என்றுதான் சொல்லத் தெரிகிறதே தவிர, எங்கே இருக்கிறது எனச் சொல்லத் தெரியவில்லை. ஒவ்வொருவனும் ஒவ்வொரு திசையையும் குறிப்பையும் சொல்கிறான். ஒன்றுபோல் சொன்ன இரண்டு ஒற்றர்களை இதுவரை நான் காணவில்லை.”


ஹிப்பாலஸ் மலைத்துப்போய்க் கேட்டுக்கொண்டிருந்தான்.

``நாம் மலைக்குள் படை நடத்திப் போவதெல்லாம் தோராயமான கணிப்பில்தான்” என்று உதியஞ்சேரல் சொல்லிக்கொண்டிருக்கும் போதே ஹிப்பாலஸ் கேட்டான், ``அப்படியென்றால் பறம்பு மலைத்தொடர்

முழுவதும் பாதைகளே இல்லையா?”

``உண்டு. விலங்குகள் உருவாக்கிய பாதைகள் உண்டு.”

``அதைப் பயன்படுத்தி முன்னேற முடியாதா?”



வலதுகையை நீட்டியவுடன் இன்னொரு குவளை பழச்சாறு கொடுக்கப்பட்டது. அதை வாங்கி அருந்தியபடியே உதியஞ்சேரல் சொன்னான், ``காடுகளில் பாதைகளை விலங்குகளே உருவாக்குகின்றன. அதிலும் குறிப்பாக, யானைகள்தான் பெரும்பாலான பாதைகளை உருவாக்கக்கூடியவை. வேறு சில விலங்குகளும் பாதைகளை உருவாக்குகின்றன.”

ஹிப்பாலஸ் இரண்டாம் குவளை பழச்சாற்றில் பாதி குடித்தபடி அவசரமாகக் கேட்டான், ``யானைப் பாதையை மனிதர்களால் பயன்படுத்த முடியுமல்லவா?”

``முடியும். காட்டு வழிகளில் அமைந்துள்ள பாதைகள் எல்லாம் விலங்குகள் உருவாக்கிய பாதைகள்தான். அதன் பிறகு மனிதர்கள் தமது தேவைக்காக அதை விரிவுபடுத்தி அமைத்துக்கொள்கின்றனர். ஆனால், பறம்பில் அந்த வேலை எதுவும் நடக்கவில்லை. ஆனாலும் விலங்குப் பாதைகளைத் துல்லியமாகக் கணித்து நடக்கக்கூடிய மலைமக்கள் நிறையபேர் நம்மிடம் உண்டு”.

``அவர்களை முன்களத்தில் பயன்படுத்தி, சிக்கலைத் தீர்க்க முடியாதா?’’

``முடியாது.”

``ஏன்?” என்று வேகமாகக் கேட்டான் ஹிப்பாலஸ்.

சற்றே நக்கலான சிரிப்போடு உதியஞ்சேரல் சொன்னான், ``விலங்குகளின் பாதைகள் எல்லாம் எவ்வியூருக்கா போய்ச் சேர்கின்றன? பாரி, காட்டு மனிதர்களின் கூட்டத்துக்குத்தான் தலைவன்; காட்டு விலங்குகளுக்கு அல்லவே!''
அதிர்ந்து பார்த்தான் ஹிப்பாலஸ்.

குடித்து முடித்த குவளையைக் கீழே வைத்தபடி உதியஞ்சேரல் சொன்னான், ``விலங்குகளின் எல்லாப் பாதைகளும் இறுதியாகப் போய் முடிவது ஏதாவதொரு நீர்நிலையில்தான்.”

ஹிப்பாலஸ் கண்கள் அசைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். சமவெளி மக்களின் வாழ்வுக்கு அடிப்படையாக இருப்பது மேய்ச்சல். ``மலைவாசிகளுக்கு மேய்ச்சல் தெரியாது. நாயைத் தவிர எதையும் வளர்த்துப் பழகாதவர்கள். மடுவிலிருந்து பால் பீச்சிக் குடிக்கத் தெரியாத அறிவிலிகள்” என்றான், சற்றே கோபத்தோடு.

`பாதைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், இதை ஏன் சொல்கிறான்?’ என ஹிப்பாலஸ் சிந்தித்துக்கொண்டிருக்கையில் உதியஞ்சேரல் சொன்னான், ``மேய்ச்சல் தெரிந்த மனிதர்களாக இருந்தால் மலையில் எவ்வளவு தொலைவு ஆவினங்களை மேய்த்தாலும் இரவில் வந்து ஊரடைவார்கள். இயல்பாகவே அந்த ஊரை நோக்கிப் பல பாதைகள் உருவாகிவிடுகின்றன. ஆனால், அங்கு அதற்கும் வழியில்லை” என்றான்.



``எந்தப் பாதையையும் பாரி உருவாக்கிக்கொள்ளவில்லையா?”

``பெரும்பாலும் விலங்குகளின் பாதைகளையே பயன்படுத்துகிறான். தேவையான இடங்களில் மட்டும் விலகிச் செல்ல சிறுபாதைகளை உருவாக்கியுள்ளான். ஆனால், அவை மற்றவர்கள் கண்டறிய

முடியாதபடி இருக்கின்றன. விலங்குகளின் பாதைகளிலிருந்து அவர்கள் எந்த இடம் பிரிந்து செல்ல வேண்டும் என்பதற்கான குறிப்பு அல்லது அடையாளம் எது என இன்று வரை தெரியவில்லை. அடையாளம் தெரியாமல் பாதையை விட்டு சற்று விலகினாலும் போதும், அடர்காட்டுக்குள் மீள முடியாமல் சிக்கிக்கொள்வோம்” என்றான்.

``அவனிடம் வலிமையான குதிரைப்படை இருக்கிறது என்கிறாய். குதிரைப்படையை வைத்துள்ள ஒருவன் எப்படி பாதைகளின் அடையாளங்களைப் பிறருக்குத் தெரியாமல் காப்பாற்ற முடியும்?”

“இன்றுவரை அவனால் முடிகிறது. நான் அறிந்தவரை பறம்பில் குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே அந்தப் பாதை பற்றிய குறிப்பு தெரியும் என்று கருதுகிறேன்.”

``இது படை நடத்துவதற்கான அடிப்படையான சிக்கல். இதற்கு வழிவகை தெரியாமல் போர் தொடுக்க முடியாதே?”

``ஆம்” என்று மகிழ்வோடு சொன்ன உதியஞ்சேரல், ``இதற்கு வழிவகை தெரிந்ததால்தான் இப்போது போர் தொடுப்பதற்கான முயற்சியைத் தீவிரப்படுத்துகிறேன்.”

சற்றும் எதிர்பாராத பதிலாக இருந்தது. ஆர்வத்தோடு ஹிப்பாலஸ் கேட்டான், ``இந்தச் சிக்கலுக்கு என்ன வழிவகை கண்டாய்?”

பெரும் ஊளை ஓசை மீண்டும் கேட்டது. அடுத்த கப்பலிலிருந்து மரச்சட்டகங்களை இறக்கத் தொடங்கிவிட்டனர் என்பது தெரிந்தது. ஆனால், முன்பைவிட இந்த ஓசை இன்னும் கூர்மையாகக் காதின் உள்மடிப்புகளில் போய்க் குத்துவதாக இருந்தது. ஹிப்பாலஸ் தனது விரல்களால் காதுத் துளையை அடைப்பதற்காகக் கைகளைக் கொண்டுசென்றபோது, ஓசையோடு சேர்ந்து உதியஞ்சேரல் பீறிட்டான், ``தோகைநாய்கள்...”

`ஆமாம் தோகைநாய்கள்தான் கத்துகின்றன. இதை ஏன் மீண்டும் மீண்டும் சொல்கிறான்?’ என்று ஹிப்பாலஸ் எண்ணியபோது கேள்விக்கான விடையாக இதைச் சொல்கிறான் என்பது புரிந்தது.


ஆத்திரம் கலந்த ஆர்வத்தோடு முன்பல்லைக் கடித்துக்கொண்டே உதியஞ்சேரல் சொன்னான். ``முன்கள தோகைநாயை பறம்பின் குதிரைப்படையின் மீது ஏவிவிட்டால், அது குதிரைகளின் குரல்வளையை அறுத்தெரியும். இது என்ன வகை விலங்கு? இதை எப்படி வீழ்த்துவது எனத் தெரியாத குழப்பத்தில் குதிரைப்படையின் வேகம் கட்டுப்படுத்தப்பட்டு, பின்வாங்கத் தொடங்குவார்கள் எதிரிகள். திரும்பிச் செல்லும் குதிரைகளைப் பின்தொடர்ந்து கடைசி வரை போகக்கூடியது தோகைநாய். அடர்காட்டுக்குள் மறைந்தபடி தொடரும் தோகைநாயை எளிதில் அவர்களால் வீழ்த்திவிட முடியாது. குதிரைப்படைகள் போய்ச் சேரும் கடைசி எல்லை வரை ஒரு தோகைநாய் போய்ச் சேர்ந்தால் போதும்.

கைவசம் இருக்கும் மீதத் தோகைநாய்கள் அதன் வாசனை பிடித்தே எந்த எல்லைக்கும் போய்விடக்கூடியவை.

குதிரைப்படையின் அழிவும் எவ்வியூர் நோக்கிய வழியும் ஒருங்கே நமக்குக் கிடைக்க உள்ளன. இந்தப் புதிய விலங்கின் எதிர்பாராத தாக்குதல் எதிரிகளை நிலைகுலையச் செய்துவிடும். அவர்களின் தாக்குதலால் தோகைநாய்கள் சில மரணிக்கலாம். ஆனால், அவர்களின் குதிரைகளை முழுமுற்றாக இவற்றால் அழிக்க முடியும். இவற்றின் குருதி தாகவேட்டை, எதையும் மிச்சம் வைக்காது.”

ஹிப்பாலஸ் வியந்தபடி கேட்டுக்கொண்டிருந்தான். தோகைநாயின் ஓசையைவிட ஆழத்தில் இறங்கிக்கொண்டிருந்தது உதியஞ்சேரலின் குரல். அவனது நுட்பமான திட்டமிடுதல், ஹிப்பாலஸை திகைப்பிலிருந்து மீள முடியாமல் செய்துகொண்டிருந்தது.

``மாலை அரண்மனைக்கு வாருங்கள், எனது முழுத்திட்டத்தையும் விளக்குகிறேன்” என்று சொல்லி விடைபெற்றான் உதியஞ்சேரல்.



துறைமுகத்திலிருந்து வஞ்சி மாநகரின் விருந்தினர் மாளிகைக்குள் நுழைந்தான் ஹிப்பாலஸ். பகல் உணவு ஆயத்தமாக இருந்தது. ஆனால், அவனது எண்ணங்கள் உதியஞ்சேரலின் தீர்மானமான

குரலிலிருந்து விடுபட முடியாதபடி இருந்தன.

நீண்ட நேரம் கழித்துதான் உணவருந்த வந்தான். அவனது வருகைக்காக திரேஷியன், எபிரஸ், கால்பா, பிலிப் ஆகிய நால்வரும் காத்திருந்தனர். உணவு மேசையிலும் அவனது வியப்பின் குரல் தொடர்ந்தது. உணவருந்திவிட்டு மீண்டும் பேசினான்.


``பாண்டியனின் செல்வச் செழிப்பையும் படையின் வலிமையையும் ஒப்பிட்டால் சேரனின் வலிமை சிறியதுதான். ஆனால், பறம்பைக் கைப்பற்றும் திட்டத்தில் சேரன் பெற்றிருக்கும் அனுபவமும் அவனது அறிவுநுட்பமும் பெரும்வியப்பில் ஆழ்த்துகின்றன. பாண்டிய பெரும்படை கீழ்த்திசையிலிருந்து முன்னேறும்போது சேர அரசர்கள் இருவரும் ஒருங்கிணைந்து தாக்குதல் திட்டத்தை முன்னெடுத்தால் பறம்பின் அரசனால் சில நாள்களுக்குக்கூடத் தாக்குப்பிடிக்க முடியாது என்றே கருதுகிறேன்" என்றான் ஹிப்பாலஸ்.

எபிரஸ் பேசத் தொடங்கினான். வழக்கமாக இதுபோன்ற பேச்சுகளில் மாலுமி கருத்து சொல்வது கிடையாது. ஆனால், இங்கு இருக்கும் யாரையும்விட, தமிழ்த் துறைமுகங்களுடனும் மன்னர்களுடனும் மிக நீண்டகாலப் பழக்கம் கொண்டவன் அவன்தான். எனவே, அவனது கருத்துக்கு ஹிப்பாலஸ் மிகுந்த மதிப்பு கொடுப்பான். எபிரஸும் எளிதில் பேசக்கூடியவன் அல்லன். ஆழ்கடலின் அமைதி எப்போதும் அவனுள் குடிகொண்டிருக்கும், மிகச்சில நேரங்களில்தான் அமைதியைக் கலைப்பான்.

``சேர அரசர்களான குடநாட்டு மன்னனும் குட்டநாட்டு மன்னனும் எத்தனையோ முறை பறம்பின் மீதான தாக்குதலை நடத்தியுள்ளனர். ஒவ்வொரு முறையும் இதுபோல புதிய உத்திகளைக் கண்டறிந்து அந்த நம்பிக்கையில்தான் தாக்குதலைத் தொடங்குகின்றனர். ஆனாலும், அவர்களால் தொடக்கக் கட்டத்தைக்கூடத் தாண்ட முடியவில்லை" என்று மட்டும் சொல்லி நிறுத்திக்கொண்டான் எபிரஸ்.

``அது உண்மையாக இருக்கலாம். இப்போது முழு வீச்சில் இறுதிப்போருக்கு ஆயத்தமாகி விட்டார்கள். பாண்டியனும் பறம்பை நோக்கிப் படையைக் கிளப்பப் போகிறான் எனத் தெரிந்ததும், நிலைமையை இன்னும் தீவிரப் படுத்தியுள்ளனர். ஏனென்றால், அதன் பலன் தங்களுக்கே கிட்ட வேண்டும் என்று அவர்கள் மிக உறுதியாக உள்ளனர். இந்தப் படையெடுப்பைப் பற்றி முழுமையாக விளக்கத்தான் இன்று இரவு என்னை அழைத்துள்ளான்" என்றான் ஹிப்பாலஸ்.

அவர்கள் தொடர்ந்து பேசியபடியிருந்தனர். இரவு கவியத் தொடங்கியது. அரண்மனையின் அழைப்புக்காக ஆவலோடு காத்திருந்தான் ஹிப்பாலஸ். அதுவரை அவனோடு பேசிக்கொண்டிருந்தனர் மற்ற நால்வரும். பொழுது நீண்டுகொண்டேபோனது. அழைப்பு ஏதும் வரவில்லை. காரணமும் புரியவில்லை. ஆனாலும் காத்திருந்தான்.



`மிகுந்த உற்சாகத்தோடு உதியஞ்சேரல் சொல்லிச் சென்றானே... பிறகு ஏன் இன்னும் அழைக்காமல் இருக்கிறான்?' என்று சிந்தித்தபடியிருந்தான் ஹிப்பாலஸ். முன்னிரவு முடியும் நேரம் நெருங்கிவிட்டது. இனி அழைப்பு வர வாய்ப்பில்லை எனத் தெரிந்து தூங்கச் சென்றனர்.

ஹிப்பாலஸால் தூங்க முடியவில்லை. உதியஞ்சேரல் சொன்ன செய்திகள் பலவும் நினைவில் வந்துகொண்டேயிருந்தன. தோகைநாய்களின் ஊளையை உதியஞ்சேரலின் குரல் விஞ்சியதை அவன் மனதுக்குள் மீட்டியபடியே இருந்தான். ஆனாலும் அவனது நினைவுப்பரப்பு எங்கும் தேவாங்கின் முகமே பரவியிருந்தது. பெருங்கடலுக்கு நடுவே நாவாய்களுக்குத் திசைகாட்டி அழைத்துச் செல்லும் அதன் ஆற்றல் அவனை விடாது தூண்டிக்கொண்டேயிருந்தது. நீலக்கடல் எங்கும் குறுக்கும் நெடுக்குமாக நாவாய்கள் கடந்து கொண்டிருக்கும் காட்சி அகல மறுத்தது. இமை மூடும்போதெல்லாம் தேவாங்கின் வட்டக்கண்கள் அவனை எட்டிப்பார்த்தபடியே இருந்தன.

பொழுது விடிந்து நெடுநேரமானபோதும் அவன் அறையிலிருந்து எழுந்து வரவில்லை. மற்ற நால்வரும் அவனுக்காகக் காத்திருந்தனர். நடுப்பகலில்தான் எழுந்து வந்தான். அப்போதுதான் அரண்மனையிலிருந்து வரச்சொல்லி அழைப்பும் வந்தது. வேகவேகமாகப் புறப்பட்டுப் போனான்.

அரசவைக்குள் நுழையும் வரை உடன் வந்த திரேஷியன், அவனுக்கான எல்லையறிந்து நின்று கொண்டான். உள்ளே போன ஹிப்பாலஸால், உதியஞ்சேரலைப் பார்த்த கணத்தில் அவனது முகத்தில் தெரிந்த குழப்பத்தை உணர முடிந்தது.



சற்று அமைதிக்குப் பிறகு உதியஞ்சேரல் பேசத் தொடங்கினான். ``நேற்று மாலை என் ஒற்றர்கள் கொண்டுவந்த செய்தி என்னைப் பெருங்குழப்பத்தில் ஆழ்த்திவிட்டது. அதனால்தான் உங்களை அழைக்க முடியவில்லை” என்றான்.

ஹிப்பாலஸ் உற்று கவனித்தான்.


``செங்கனச்சோழன் பெரும்படையோடு பறம்பின் மீதான போருக்கு ஆயத்தமாகிவிட்டான்” என்றான் உதியஞ்சேரல்.

ஹிப்பாலஸுக்குப் புரியவில்லை. ``சோழன் ஏன் பறம்பின் மீது போர் தொடுக்க வேண்டும்?”

``அதுதான் எனக்கும் புரியவில்லை. இதுவரை பறம்பின் மீது அவர்களுக்கு எந்தப் பகையும் உருவாகவில்லை. அப்படியிருக்க, அவன் ஏன் இவ்வளவு பெரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறான்?” என்று கூறிய உதியஞ்சேரல், சற்றே அமைதிக்குப் பிறகு சொன்னான், ``அவனது படையின் தன்மையையும் எண்ணிக்கைகளையும் பற்றி என் ஒற்றர்கள் சொல்லும் கணக்கை என்னால் நம்பவே முடியவில்லை.”

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-67





கருப்பன்குடி மூதாதையர்தாம் அதைக் கண்டறிந்தனர். எத்தனை தலைமுறைகளுக்கு முன்னர் அது நிகழ்ந்தது எனத் தெரியவில்லை. `எண்ணிலடங்கா காலத்துக்கு முன்னர் அது நிகழ்ந்தது’ எனச் சொல்வார்கள். அந்த ஆற்றுக்கு அப்போது பெயரிடப்படவில்லை. பெயரில்லாத அந்த ஆற்றின் வலக்கரை முழுவதும் செவல்படிந்த சிறுமண் பரப்பு. அதில் புதர் மண்டிய புற்காடு.

புல்லின் வகைகள்தாம் எத்தனை எத்தனை! வடிவத்திலும் நிறத்திலும் அவை ஏற்படுத்தும் வாசனையிலும் வகைப்படுத்த முடியாதவையாகத்தானே இன்று வரை இருக்கின்றன. பறவைகளும் விலங்குகளும் மேய்ந்தறியும் புல்லைக்கொண்டே மனிதன் தனக்கானதைக் கண்டறிந்தான். ஆவினத்தை மேய்த்துக் கொண்டிருக்கையில், புதர் ஒன்றில் நீள்தோகை கொண்ட பெரும்புல் விளைந்து கிடந்திருக்கிறது. மேய்த்துக்கொண்டிருந்தவன் அது என்ன வகைப் புல் என்பதை அறிய அதன் தோகையைக் கைகளால் பறித்துப்பார்க்க முயன்றிருக்கிறான். தோகையின் பக்கவாட்டுக்

கூர்மை கிழித்துவிடக்கூடியதாக இருந்தது. அதன் நீள்தண்டு சற்றே வேறுபட்டு இருந்ததையும் பார்த்திருக்கிறான்.

மேய்ச்சல்வெளிதான் மனிதன் இயற்கையின் நுட்பத்தைக் கவனிக்கக் கிடைத்த முதற்பெரும் வாய்ப்பு. பறந்து அலையும் தும்பிகள் காலூன்றாப் புற்கள் எவை என்பது தொடங்கி, நீண்டிருக்கும் புல் நுனியில் செருகி நிற்கும் பனித்துளியின் கனம் வரை அனைத்தையும் அவன் அறிவின் சேகரமாக மாற்றிக்கொண்டிருந்தான்.



கருநீல நிறமும் நெடுநீள் தோகையும் உடைய அந்தப் புல்லின் தண்டுப்பகுதியை ஒருநாள் தற்செயலாகக் கடித்துப்பார்த்தான். அதன் சாறு அவன் அறிந்திராத தித்திப்பைக் கொடுத்தது. மீண்டும் கடித்தான், தித்திப்பின் அளவு குறையவேயில்லை. மீண்டும் மீண்டும் கடித்துச் சுவைத்தான். சுவை குறையாத இந்தப் புல்லைப் பற்றித் தன் கூட்டத்தார் அனைவருக்கும் போய்ச் சொன்னான். அனைவரும் வந்து கடித்துச் சுவைத்தனர். அதைச் `சுவைப்புல்' என்றே அழைத்தனர்.

அந்தச் சுவைப்புல் தனது கணுக்களிலிருந்து முளைவிடுவது அறிந்து, கரணைகளாக அதை வெட்டிப் புதிய இடத்தில் நட்டுவைத்தனர். கணுக்கள் தழைத்துப் பெரும்புற்களாகின. பல கரணைகளை ஒரே இடத்தில் பரவலாக நட்டுவைக்க சுவைப்புல் பெருங்காடென வளரத் தொடங்கியது.

இந்த அரிய புல்லைப் பற்றி மற்றவர்களும் கொஞ்சம் கொஞ்சமாக அறியத் தொடங்கினர். `கருப்பன் குடியினர், அரியவகை சுவைப்புல்லைப் பயிரிட்டு வளர்க்கின்றனர்' என்ற செய்தி பரவ, பலரும் அவர்களிடம் வந்து சுவைப்புல்லைக் கேட்டு வாங்கிச் சென்றனர். நாளடைவில் `சுவைப்புல்' என்ற

பெயர் நீங்கி, அந்தக் குடியின் பெயரால் `கரும்பா புல்’லென்றும் `கரும்பெ’ன்றும் அதற்குப் பெயர் விளங்கிற்று.

தலைமுறைகள் பல கடந்தோடின. கருப்பன் குடியினர் கரும்பின் எண்ணற்ற நுட்பங்களைத் தங்களது பட்டறிவில் சேகரித்திருந்தனர். கணுக்களின் முகம் பார்த்துக் கரும்பின் சுவையைக் கணிக்கும் பேரறிவைப் பெற்றனர். புதிய நிலங்களில் எந்த வகைக் கரணைகளை நடவேண்டும் என்றும், எந்த வகைக் கரும்புகள் தித்திப்பின் உச்சம் எனவும் அவர்கள் துல்லியமாக அறிந்தனர். பனைச்சாற்றிலிருந்து காய்ச்சப்பட்ட இனிப்புக் கட்டியைப்போலக் கரும்பஞ்சாற்றிலிருந்தும் இனிப்புக் கட்டியைக் காய்ச்சி எடுத்தனர். செய்தி எங்கும் பரவியது. கரும்பென அழைக்கப்படும் சுவைப்புல் அரிதினும் அரியதொன்றாக எல்லோரும் பேசிய காலத்தில்தான், அந்தக் கொடும் தாக்குதல் நடந்தது.

பயிரிடுதலின் நுட்பத்தை அறிய தலைமுறை தலைமுறையாகத் தங்களை ஒடுக்கிக்கொண்டு மண்ணுள் புதைந்திருந்த கருப்பன் குடியினரின் மீது திடீர்த் தாக்குதல் நடந்தது. தாக்குதல் நடத்தியவர்கள் தங்களைச் `சோழர்குடி’ என முழங்கினர். இரக்கமற்ற கொடும்தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் கருப்பன் குடியினர் சிதைவுற்று வீழ்ந்தனர்.

அவர்களை வெட்டி வீசி விளைநிலங்களையும் செல்வங் களையும் கைப்பற்றுவதுதான் அந்தக் காலத்து நடைமுறை. ஆனால், சோழர்குடியின் தலைவன், கருப்பன் குடியினரின் அறிவையும் ஆற்றலையும் நன்கு உணர்ந்தவனாக இருந்தான். எனவே, அந்தக் குடியினரை முழுமுற்றாக அழிக்கவில்லை. எல்லோரையும் விளை நிலங்களில் அடிமைகளாக மாற்றினான். கரும்பை எவ்வளவு அதிகமாக விளையவைக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக விளையவைத்தான்.

கரும்பின் சுவை எங்கும் பரவியது. பனைவெல்லத்தையும் ஈச்சவெல்லத்தையும் கரும்பின் வெல்லச்சுவை மிஞ்சியது. தலைமுறைகள் பல கடந்தாலும் கருப்பன் குடியின் அடிமை வாழ்வு முடிந்தபாடில்லை. அவர்கள் அளவுக்குக் கரும்பை அறிந்த மனிதக்கூட்டம் எதுவும் உருவாகவில்லை. இந்த நிலையில்தான் யவன வணிகம் தொடங்கியது. சேரனின் மிளகுதான் முதலில் யவனர்களை ஈர்த்தது. அந்த வணிகமே பெருமளவு நடந்துகொண்டிருந்தது. அப்போது இந்த நிலத்தில் வேறேதும் புதுமையாகக் கிடைக்காதா எனப் பல யவன வணிகர்கள் கடற்கரை நகரங்களுக்குத் தொடர்ந்து வரத் தொடங்கினர். அவர்களுக்குத் தரப்பட்ட விருந்தொன்றில் கரும்பு பரிமாறப்பட்டது. அதன் தித்திப்பும் தீஞ்சுவையும் அவர்களையும் மயக்கின.

கரும்பின் கெட்டிப்பாகும் விளையவைக்கக் கூடிய விதத்தில் கரும்பின் கரணைகளும் யவனம் நோக்கி நாவாய்களில் பயணப்படத் தொடங்கின. சோழ அரசனின் அவையில் யவனத்தேறலும் மினுக்கும் பாண்டங்களும் மாற்றுப்பொருளாக வந்திறங்கின. காலம் ஓடியபடி இருந்தது.

தம் குலத்தின் விடுதலையைத் தாம் பெற்றே ஆகவேண்டும் என்ற வேட்கையில் அவ்வப்போது கருப்பன்குடி வீரர்கள் முளைத்தெழுவர். ஆனால், அது எப்படியும் சோழனுக்குத் தெரிந்துவிடும். அந்தச் செயல் செய்தவர்களை அழித்தொழிப்பர். ஆனாலும் மொத்தக் குடியையும் அழிக்காமல் பாதுகாத்தனர். கரும்பின் வியப்புறும் சுவையும் நுட்பமும் சோழர்களுக்குத் தேவையாக இருந்தன.



தீஞ்சுவைப் புல்லைக் கண்டறிந்த குடி, எண்ணிலடங்கா தலைமுறைகளாகக் கண்ணீர் சிந்தியபடியே இருந்தது. முளைத்தெழும் கரும்பின் முன் பகுதியில் கருப்பன் குடியின் கண்ணீர் தேங்கியே இருக்கும் என மக்கள் கருதினர். எப்படியாவது இந்த நிலையிலிருந்து மீளவேண்டும் எனத் திட்டமிட்டது வீரர்களின் கூட்டம் ஒன்று. அதற்குத் தலைமையேற்றவன் ஈங்கையன்.

எத்தனையோ முறை அழிக்கப்பட்ட அவர்களின் போராட்டத்தை இந்தமுறை அழித்துவிட முடியாதபடி நன்கு திட்டமிட்டான். ஈங்கையன் இணையற்ற வீரனாக இருந்தான். `தனிமனிதப் போரில் அவனை வெல்லக்கூடிய மனிதர்கள் எவரும் இல்லை' எனப் பெயரெடுத்தான். தன் தோழர்களையும் அதேபோல வளர்த்தெடுத்தான். அவனது அறிவுக்கூர்மையும் ஆற்றலின் வலிமையும் பெரும்நம்பிக்கையைக் கொடுத்தன.
ஆனால், சோழன் இப்போது சிறுகுடியன் அல்லன்; பேரரசன். தன் மகன் செங்கனச் சோழனுக்கு சோழவேலன் முடிசூட்ட நாள் குறித்திருந்தான். முடிசூட்டு விழாவுக்கு முன்னர் நடக்கும் களப்பலி சடங்குக்காக சோழர்களின் குதிரைகள் கரும்புக் காட்டுக்குள் சீறிப்பாய்ந்தன. மீண்டும் எதிர்பாராத தாக்குதல். கருப்பன்குடி வீரர்கள் சிதைந்தனர். எதிரிகளின் படையை ஈங்கையன் தன்னந்தனியாக எதிர்கொண்டான். அவனது வாள்வீச்சில் மயிரிழையில் தப்பிப்பிழைத்தான் சோழநாட்டுத் தளபதி உறையன்.

ஆவேசமும் அதிசிறந்த வீரமும் உடைய ஈங்கையனின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் பின்வாங்கினான் உறையன். முடிசூட்டு விழாக் காலத்தில் சோழப்படை பின்வாங்கிய செய்தி பேரரசனை எட்டுமாயின் தன்னைக் கொன்றளிப்பான் என முடிவு செய்த தளபதி, இரவோடு இரவாகப் பல மடங்கு படை திரட்டினான். பின்வாங்கி ஓடியவன், விரைந்து திரும்பி வருவான் என ஈங்கையன் எதிர்பார்த்தான். ஆனால், பொழுது விடிவதற்குள் பெரும் படையோடு வந்து நிற்பான் என எதிர்பார்க்க வில்லை. எண்ணற்ற இனக்குழுக்களை அழித்து, பேரரசாக வளர்ந்து நிற்கும் அரசாட்சிக்கு முதுகெலும்பாக இருப்பது இத்தகைய படைவளம்தான்.
எதிரிகளின் படையை முடிந்தவரை போரிட்டு அழித்தனர் ஈங்கையனின் படையினர். சோழத் தளபதி உறையன் இந்தமுறையும் பின்வாங்க நேருமோ என அஞ்சும் அளவுக்கு இருந்தது ஈங்கையனின் தாக்குதல். ஆனால், அவனது வீரர்கள் பலரால் நிலைமையை நீண்டநேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

எண்ணிக்கையில் மிகக் குறைந்த அவர்கள், கடுந்தாக்குதலுக்குப் பிறகு முழுமுற்றாகச் சூழப்பட்டனர்.

வீழ்ந்தவர்களை முழுமையாகக் கொன்றழிக்கத்தான் நினைத்தான் உறையன். ஆனால், இவர்களின் உடலமைப்பையும் வலிமையையும் கணித்து மிக நல்ல விலைக்கு விற்கலாம் என முடிவுசெய்து, விலங்கிட்டு இழுத்துச் சென்றான்.

அவன் கணித்ததுபோலவே, கடல் வணிகர்கள் மிக நல்ல விலைகொடுத்து இந்த அடிமைகளை வாங்கினர். புதிய அடிமைகளை அடிமைத் தொழிலுக்குப் பழக்குவது கொடூரமிக்கதொரு செயல். விலைக்கு வாங்கப்பட்டவர்களை ஊனமாக்காமல் அவர்களை உடலாலும் உள்ளத்தாலும் கூனிக்குறுகி உணர்ச்சியற்ற உயிரினமாக மாற்ற வேண்டும். இதைச் செய்து முடிக்க கப்பல் தலைவன் ஒவ்வொருவனும், ஒவ்வொரு வழிமுறையைப் பின்பற்றுவான்.

ஈங்கையன் கூட்டத்தை விலைக்கு வாங்கிய கப்பலின் தலைவனோ, அவர்களுக்கு எந்த வேலையையும் கொடுக்காமல் விலங்கு பூட்டி, கப்பலின் மேல் தளத்தில் அமரவைத்தான். கப்பல், புகாரிலிருந்து வைப்பூருக்கு வந்து சேர்ந்தது. வைப்பூரில் பொருள்கள் ஏற்ற இன்னும் இரண்டு நாள்களாகும் என்ற நிலையில் புதிதாக வாங்கியவர்களை முழு அடிமைகளாக மாற்றும் வேலையில் இறங்கினான். வாங்கப்பட்டவர்களின் தலைவனான ஈங்கையனை மீகானின் கூம்புமாடக் கம்பத்தில் கட்டினான். என்ன செய்யப்போகிறான் என்று மற்றவர்கள் மிரண்டு பார்த்துக்கொண்டிருந்தபோது அருகன்குடியில் வாங்கிய புதுச்சாட்டையோடு மூன்று பேர் மூன்று திசையில் நின்றனர்.

விளாசல் தொடங்கியது. விலங்கின் நரம்பிலும் மரத்தின் நரம்பிலும் செய்யப்பட்ட புதுச்சாட்டைகள் இடைவிடாமல் ஈங்கையனை வெட்டிச் சிதைத்தன. கண்கொண்டு பார்க்க முடியாத கொடுமை நடந்தேறியது. மற்ற வீரர்கள் கதறித் துடித்தனர். இழுபடும் சாட்டையின் வீச்சுக்கு ஏற்ப குருதித் துளிகள் நீண்டு சிதறின. எது செய்தும் காதுகொடுத்துக் கேட்க அங்கு யாருமில்லை. பகல் முழுவதும் அடித்தனர். உடலெங்கும் ரத்தவிளாறாக மாறிக் காலடியில் நிறைந்து நின்றது செங்குருதி. விலங்கிடப்பட்ட நிலையில் பார்த்துக்கொண்டிருக்கும் ஒவ்வொருவனும் உள்ளம் ஒடுங்கிச் சிதைவுற்று அடிமைத்தனத்துக்குள் ஆழப்புதைய வேண்டும் என்பதற்குத்தான் இந்தக் கொடுமையைச் செய்கிறார்கள்.

மாலை மங்கியபோது ஈங்கையன் முழுமையாக நினைவிழந்தான். கப்பலில் ஏற்றப்படவேண்டிய பொருள்கள் வந்து சேர்ந்தன. அவற்றைக் கப்பலில் ஏற்றும் வரை அடிப்பதை நிறுத்தி அந்தப் பணியைச் செய்யத் தொடங்கினர். கம்பத்தில் கட்டப்பட்டிருந்த ஈங்கையன் மயங்கிய நிலையில் தலை தொங்கிக்கிடந்தான். விலங்கிடப்பட்ட அவன் தோழர்கள் செய்வதறியாது துடித்துக் கிடந்தனர். இந்த நிலையில்தான் துறைமுகத்தின் கீழ்ப்பகுதியிலிருந்து பெருநெருப்பு எழுந்தது. கப்பலில் இருந்தவர்கள் அதை அணைக்க ஓடினர். விலங்கிடப்பட்ட அடிமைகள் தங்களையோ, தங்கள் தலைவனையோ விடுவிக்க என்ன செய்வதென்று தெரியாமல் கதறித் துடித்தனர்.


நேரம் ஆக ஆக, நெருப்பு எங்கும் பரவியது. ஒருகட்டத்தில் அவர்கள் இருக்கும் கப்பலின் விளிம்புப் பகுதியில் நெருப்பு மேலேறிக் கொண்டிருந்தது. அவர்கள் பெருங்கூச்சல் எழுப்பினர். அப்போதுதான் திரையர் கூட்டம் நெருப்பினுள் நுழைந்து அவர்களை மீட்டது.

கபிலரும் உதிரனும் வேட்டுவன் பாறையிலிருந்து மீண்டும் எவ்வியூருக்குப் புறப்பட்டனர். வழியில்தான் ஈங்கையனின் கதையை உதிரன் கபிலருக்குச் சொல்லிக் கொண்டுவந்தான். ``இத்தனை மாதங்களாகியும் ஈங்கையனும் அவன் கூட்டத்தாரும் தாங்கள் யார் என்பதை வாய் திறந்து பேசவில்லை. `சோழப் பேரரசன்தான் தங்களின் எதிரி எனத் தெரிந்தால் யாரும் தங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க மாட்டார்கள்' என்று அவர்கள் நினைத்துள்ளனர். அதுமட்டுமன்று, யாரிடமும் நம்பிக்கைகொள்ளும் சூழலும் அவர்களுக்கு இல்லை. அதனால்தான் அவர்கள் பேச்சற்று இருந்துள்ளனர்.

நம்மவர்கள் அவர்களை மீட்டதும் இங்கு வந்ததிலிருந்து நல்லதொரு மருத்துவம் செய்து அவர்கள் தலைவன் ஈங்கையனைக் காப்பாற்றியதும், அவர்களுக்கு நம் மீது நல்ல எண்ணத்தை உருவாக்கியுள்ளது. ஆனாலும் நாம் யார் என்பதை முழுமையாகத் தெரிந்து கொள்ளாமல் பேச மறுத்துள்ளனர். கடுவனின் கதையை அறிந்த பிறகுதான் நம்பிப் பேசத் தொடங்கினான் ஈங்கையன். அவர்களின் குடி அடைந்த துயரம் சொல்லிமாளாது" என்றான் உதிரன்.

கேட்டுக்கொண்டே நடந்த கபிலர், ``அடிக்கரும்பின் தித்திப்புக்காக மனம் எத்தனை முறை ஏங்கியுள்ளது! ஆனால், அவையெல்லாம் இந்தக் குடியின் குருதியில்தானே விளைந்துள்ளன. `பூத்த கரும்பும் காய்த்த நெல்லும் உடையது சோழனின் கழனி' என்று புலவர்கள் பாடுகின்றனர். ஆனால், அந்தக் கழனி கரும்பாக்குடி சிந்திய குருதியால்தான் உலராமல் இருக்கிறது" என்றார்.

உதிரன், கபிலரின் சொற்களைக் கேட்டபடி அமைதிகொண்டு நடந்தான்.



``நெருப்பிலே அழிந்துவிடாமல் இவர்களை மீட்டெடுத்ததன் மூலம் வாழ்வெல்லாம் மகிழ்ந்துண்ட கரும்பஞ்சாற்றுக்கும் வெல்லத்துக்கும் கைம்மாறு செய்துள்ளோம்” என்றார் கபிலர்.

``திரையர்கள் இருந்ததால்தான் இவர்களை மீட்டெடுக்க முடிந்தது. ஈங்கையனின் உருவ அமைப்பைப் பார்த்தால் உங்களுக்குத் தெரியும். அவ்வளவு திறன்வாய்ந்த ஒருவனைக் கம்பத்திலிருந்து பிய்த்தெடுத்துத் தோளிலே போட்டுத் தூக்கிக்கொண்டு நெருப்பிலிருந்து வெளியேறுவதெல்லாம் இயலுகிற செயலன்று” என்றான் உதிரன்.

சற்றே அமைதியுடன் நடந்த கபிலர் சொன்னார், ``வெற்றிலையும் கரும்பும் மனித குலம் இருக்கும் வரை தேவைப் பட்டுக்கொண்டே இருக்கும். தமது இலையாலும் தண்டாலும் சாற்றாலும் மனிதனுக்கு அருமருந்தைத் தந்தபடியேதான் இருக்கும். அந்த அரிய பயிரினங்களைக் கண்டறிந்த ஆதிகுடிகள் எப்படியெல்லாம் வேட்டையாடப்படுகிறார்கள்! அவர்கள் கண்டறிந்த உயிர்ச் செல்வங்களுக்கு நாம் செய்யும் கைம்மாறு இதுதானா?” ஏக்கப்பெருமூச்சோடு பாறையைப் பிடித்து மேலேறிக் கொண்டிருந்தார் கபிலர்.

சொல்லின் வலி, உள்ளத்தின் உறுதியைத் தளர்த்தவல்லது. இதைவிடக் கடினமான செங்குத்துப்பாறையைக்கூட குனிந்து உட்காராமல் நிமிர்ந்தபடி மேலேறிய கபிலர் இந்தச் சிறு பாறையைக் கடக்க உட்கார்ந்து நகர்கிறார். அவரின் செயலை உன்னிப்பாகக் கவனித்த உதிரன், பேச்சை மாற்றி அவரின் எண்ணங்களைத் திருப்ப முயன்றான்.

``உங்களைக் காண வந்த பெரியவரோடு இரண்டு இளைஞர்கள் உதவிக்கு வந்தார்கள் அல்லவா?” என்றான்.

பாறையைக் கவனமாய்க் கடந்த பிறகு நிமிர்ந்த கபிலர், ``ஆம், திசைவேழரோடு இருவர் வந்திருந்தனர்” என்றார்.

``அவர்களில் ஒருவனாவது படைவீரனாகவோ, ஒற்றனாகவோ இருப்பான் என நானும் நீலனும் நினைத்தோம். ஆனால் அப்படியன்று; இருவருமே அவரின் மாணவர்கள்தாம்.”

``அவர் காலத்தைக் கணிக்கும் பேராசான். இதுபோன்ற செயல்களுக்கெல்லாம் மாமனிதர்களைப் பயன்படுத்திவிட முடியாது. இயற்கையின் பேரியக்கத்தைக் கணித்துக் கொண்டிருப்பவர்கள் மனிதர்களின் கீழ்மைக்குத் துணை போக மாட்டார்கள்.”

கபிலர் சொல்லி முடிக்கும் முன்னர் சற்றும் இடைவெளியின்றி உதிரன் கேட்டான், ``பாண்டியப் பேரரசுக்காகத்தானே அவர் இங்கு வந்தார்?”

``இல்லை. அவர் நம்பும் உண்மைக்காக வந்தார். இயற்கையின் உள்நரம்புகள் மனிதனின் கைகளுக்கு மிக அரிதாகவே அகப்படும். அப்படியொன்று தெய்வவாக்கு விலங்கின் வடிவில் அகப்பட்டுள்ளது. அதை இழந்துவிடக் கூடாது என்ற தவிப்பில்தான் வந்துள்ளார்” என்றார்.

``அவரின் கூற்றில் உண்மை இருக்கிறதா?'' எனக் கேட்டான் உதிரன்.

அடுத்த பாறையில் ஏறாமல் அப்படியே நின்றார் கபிலர்.

பாறையின் மேலேறிய உதிரனுக்கு, கபிலர் ஏன் ஏறாமல் நிற்கிறார் என்ற காரணம் புரியவில்லை.

``நான் எங்கே நிற்கிறேன்?'' என்று கேட்டார் கபிலர்.

``கீழே நிற்கிறீர்கள்'' என்றான் உதிரன்.

``காரமலையின் உச்சியில் நின்றாலும் நான் கீழே நிற்பதாகத்தானே உனக்குத் தோன்றுகிறது'' என்றார்.

கபிலர் சொல்லவருவது உதிரனுக்குப் புரியவில்லை.

கபிலர் விளக்கினார். ``உண்மை என்பது, இருக்குமிடம் சார்ந்தது. அதனால்தான் நான் கீழே இருப்பதாக கண நேரத்தில் நீ முடிவு செய்துவிட்டாய். நீ சொல்வது உன்னளவில் மட்டுமே உண்மை. அதுவே முழு உண்மையாகிவிடாது. எல்லோரும் ஓரிடத்தில் நிற்கப்போவதில்லை. எனவே, எல்லோருக்குமான பொது உண்மை இருக்கப்போவதேயில்லை.''

கபிலரும் உதிரனும் எவ்வியூர் அடைந்தபோது தேக்கனும் காலம்பனும் ஊர் திரும்பியிருந்தனர். அனங்கனும் அவன் குழுவினரும் காட்டெருமைக் கூட்டத்தோடு எந்த மலையில் அலைகிறார்கள் என்பதைப் பற்றிப் பலரும் அவர்களிடம் விசாரித்துக்கொண்டிருந்தார்கள்.

கபிலர் வந்து சேர்ந்ததும் விசாரிப்புகள் எல்லாம் அவர் பக்கமாகத் திரும்பின. அவரின் ஆசானைப் பற்றி அறிந்துகொள்ள எல்லோருக்கும் ஆர்வம் இருந்தது. பாட்டாப்பிறையில் பெரியவர்கள் காத்திருந்தனர். ஆனால், பாரியைப் பார்க்கப் போன கபிலர் நள்ளிரவு வரை வரவில்லை.

பாரியின் அவையில்தான் அந்த உரையாடல் நடந்தது. தனக்கும் திசைவேழருக்கும் நிகழ்ந்த சந்திப்பைப் பற்றி முழுமையாக விளக்கினார் கபிலர். உடன் தேக்கனும் முடியனும் இருந்தனர். திசைவேழர் வந்ததன் நோக்கத்தைப் பாரியால் கணிக்க முடிந்தது, ``தேவவாக்கு விலங்கு வடதிசை நோக்கித்தான் உட்காரும் என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். ஆனால், அதற்கு இப்படியொரு பயன்பாட்டுக் காரணம் இருக்கும் என நினைக்கவில்லை'' என்றான் பாரி.


``அது வடதிசை நோக்கி மட்டுமே உட்காரும் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியுமா?'' எனக் கேட்டார் கபிலர்.

``இதுகூடவா தெரியாமல் இருப்போம்?'' என்றான் முடியன்.

``தேவவாக்கு விலங்கை `கொற்றவையின் குழந்தை' என்றுதானே சொல்கிறோம். கொற்றவைக்கு

`வடக்குவா செல்லி' என்றொரு பெயர் உண்டு என்பதை நீங்கள் அறிய மாட்டீர்களா? கொற்றவைக் கூத்தின்போது அனைத்து நாள்களும் அது கீழிறங்கி வந்துதானே பழத்தை எடுத்தது. அப்போதெல்லாம் அது உட்கார்ந்ததை நீங்கள் கவனித்து அறியவில்லையா?'' எனக் கேட்டான் பாரி.

கபிலர் திகைத்துப்போனார். ``அவை மிகவும் அஞ்சியபடி வந்து பழத்தை எடுத்துச் செல்வதைக் கூர்ந்து கவனித்தேன். ஆனால், அவற்றின் தனித்த நடவடிக்கையைக் கவனத்தில்கொள்ளவில்லை" என்றார் கபிலர்.
உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த தேக்கன், இடுப்புத் துணியில் மடித்து வைத்திருந்த வெற்றிலையை எடுத்துக்கொண்டே சொன்னார், ``திசைவேழரின் வருகையிலும் நாம் கவனிக்கத் தவறும் தனித்த விஷயங்கள் இருந்துவிடக் கூடாது."



தேக்கனின் சொல் சற்றே கடுமையானதாகத் தான் இருந்தது. ஆனாலும் இன்முகத்தோடுதான் கபிலர் அதை எதிர்கொண்டார். ``கவனம் தவறிவிடக் கூடாது என்பதில் நான் மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்தேன்.''
``பாண்டியனின் பெருந்துறைமுகமான வைப்பூர்த் துறைமுகமே நம்மவர்களின் தாக்குதலால் அழிந்திருக்கிறது. அப்படியிருந்தும் இவ்வளவு மென்மையான முயற்சியைப் பாண்டியன் ஏன் செய்கிறான்?" எனக் கேட்டார் தேக்கன்.

கபிலரிடம் இதற்கான விடை இல்லை. சிந்தித்தபடி அமைதியானார்.

``பெருந்தாக்குதலுக்கான ஆயத்த முயற்சியில் இருப்பவர்கள், நாங்கள் அப்படியல்ல எனக்

காட்டிக்கொள்ள முயல்வார்கள். இந்த முயற்சி அப்படிப்பட்ட ஒன்றுதான்” என்றார் தேக்கன்.

ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு ``அதற்கும் வாய்ப்பிருக்கிறது” என்று சற்றே மெல்லிய குரலில் சொன்னார் கபிலர்.

அதைக் கவனித்த பாரி கேட்டான், ``உங்களுக்கு ஏன் அவ்வாறு தோன்றியது?”

``முதலில் மிகுந்த சினத்தோடு பறம்பைக் குற்றம்சாட்டிப் பேசிய திசைவேழர், எனது விளக்கத்துக்குப் பிறகு சற்றே அமைதியானார். அவரின் நோக்கம், திசையறியும் ஒரு விலங்கைப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான். அதில் ஐயம் இல்லை. ஆனால், அடுத்தடுத்த நாள்களில் அவரின் முகம் மிகவும் வாடியிருந்தது. நான் அவரை நன்கு அறிவேன். எளிதில் தளராத மனிதர் அவர். அவரின் கண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட முறை கலங்கின. அதற்குக் காரணம் உள்ளுக்குள்ளிருந்த குற்றவுணர்வு. அங்கு நடக்கும் பல முயற்சிகளை அவர் அறிவார். அதைப் பகிர்ந்துகொள்ள முடியாத நிலையில் உள்மனம் அவரைக் கலங்கச் செய்திருக்கும்” என்றார்.

அவரைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்த தேக்கன், ``புலி முன் ஆடு என்பது திசைவேழருக்குச் சொல்லப்பட்ட சொல்லன்று; பாண்டியனுக்காகச் சொல்லப்பட்ட சொல். பறம்பின் முன் அவனது பெரும்படை அடங்கி ஒடுங்கும் என்பது பாண்டியனின் காதுகளுக்குப் போய்ச் சேர்ந்திருக்கும்” என்றார்.

ஒரு கணம் உறைந்துபோனார் கபிலர். `அங்கு பேசிய பேச்சு அதற்குள் எப்படி இங்கு வந்து சேர்ந்தது!’ திகைத்த கண்களோடு தேக்கனைப் பார்த்தார். அவர் வெற்றிலையை மெல்வதற்கு ஏற்ப நன்றாக மடித்துக்கொண்டிருந்தார்.

``உதிரன் கரும்பாக்குடியின் கதையைச் சொன்னான். எனக்கு அவர்களைப் பார்க்க வேண்டும்போல் இருக்கிறது. அவர்கள் யார் எனத் தெரிந்த பிறகும் ஈங்கையனை அழைக்காமல் ஏன் வந்தீர்கள் என உதிரனைத் கோபித்தேன்” என்றான் பாரி.

பேச்சின் போக்கை எவ்விடம் மாற்ற வேண்டும் என்பதைப் பாரி அளவுக்கு நன்கு உணர்ந்தவர் யாருமில்லை என்பது கபிலருக்குத் தெரியும். திசைவேழர், தனக்கு சிகிச்சை செய்த மருத்துவர்களிடம் நிறைய பேசினார். அந்தப் பேச்சுகள் எல்லாம் இங்கு வந்து சேர்ந்தி ருக்கின்றன. அவர் என்னவெல்லாம் பேசினார் என்பது கபிலருக்குக்கூட முழுமையாகத் தெரியாது. அவரின் எண்ண ஓட்டங்களைக் கண்டறிய மருத்துவர்களுக்குக் கூடுதல் வாய்ப்பு இருந்திருக்கும். அவர் சொன்ன சொற்களிலிருந்து தான் தேக்கன் இந்த முடிவுக்குப் போயுள்ளார் என்பதைக் கபிலர் உணர்ந்தபோது, அதுகுறித்த பேச்சை நீட்டிக்க வேண்டாம் என்றுதான் பாரி ஈங்கையனின் பேச்சை எடுத்தான்.

பாரியின் எண்ணத்தைப் புரிந்துகொண்டு கபிலர் சொன்னார், ``நாங்கள் மலை ஏறும்போது தான் ஈங்கையனின் கதையை உதிரன் என்னிடம் சொன்னான். அவர்களைப் பார்க்காமல் வந்துவிட்ட கவலை எனக்கும் உண்டு.”

வெற்றிலையை வாயில் மென்றபடி தேக்கன் கேட்டார், ``என்ன சொன்னார் வேட்டூர் பழையன்?”

`உங்களுக்குத் தெரியாமல் என்னிடம் எதுவும் சொல்லப்போகிறாரா அல்லது என்னிடம் சொல்லியது எதுவும் உங்களுக்குத் தெரியாமல் இருக்கப்போகிறதா?’ என நினைத்துக்கொண்டே, ``நான்கு நாள்கள் அல்லவா! நிறைய பேசினோம். குறிப்பாக, நீலன் - மயிலாவின் மணவிழா பற்றி கண்கள் பூக்கப் பேசினார்” என்றார்.

மென்று சுவைத்த வாயின் அசைவு சட்டென நின்றது. காலம் தாழ்த்துவது அழகல்ல எனத் தோன்றியபடியேயிருந்த எண்ணத்தைக் கிளறிவிட்டது கபிலரின் சொல். திரும்பிப் பாரியைப் பார்க்க நினைத்தவர், அதைத் தவிர்த்து மீண்டும் கபிலரின் பக்கம் திரும்பினார்.

தேக்கனின் எண்ண ஓட்டத்தை மட்டுமன்று, பழையனின் எண்ண ஓட்டத்தையும் நன்கு அறிந்த பாரி சொன்னான், ``இந்தக் கார்காலத்தில் தான் மணவிழாவை முடிவுசெய்திருந்தோம். ஆனால், எதிர்பாராத பலவும் நடந்துவிட்டதால் மணவிழாவை நடத்த முடியாமல் போய்விட்டது. அதற்காக இனியும் காலம் கடத்த வேண்டாம். உப்பறைக்குப் போய் வந்த மூன்றாம் நாள் மணநாளாக முடிவுசெய்து செய்தி அனுப்புங்கள்” என்றான் பாரி.

நீண்டநாள் பேச்சு அந்தக் கணமே முடிவானது தேக்கனுக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. உடனே சம்மதித்தான்.

கபிலரும் மகிழ்வடைந்தார். `உப்பறைக்குப் போய் வந்த உடன்’ என்று பாரி ஏன் சொன்னான் என்பது மட்டும் அவருக்குப் புரியவில்லை.

``உப்பறை எங்கே இருக்கிறது? போய் வர எவ்வளவு நாள்களாகும்?” எனக் கேட்டார்.

``போய் வர ஒரு மாதமாகும். ஆண்டுக்கு ஒருமுறை பறம்பின் தலைவன் அங்கு போய்த் திரும்புவது காலகாலப் பழக்கம். இந்த முறை சற்று தாமதமாகிவிட்டது” என்றான் தேக்கன்.

நீலன், மயிலாவின் மணவிழா ஏற்பாடு உறுதியான மகிழ்வில் வெற்றிலையை வேகவேகமாக மடித்து வாயில் திணித்துக் கொண்டே கேட்டான், ``நீங்கள் என்னோடு இருந்து மணவிழா வேலையில் பங்கெடுக்கிறீர்களா அல்லது பாரியோடு உப்பறைக்குப் போய் வருகிறீர்களா?”

கைநீட்டி வெற்றிலையைக் கேட்டார் கபிலர்.



மறுமொழியேதும் சொல்லாமல் கை நீட்டுகிறாரே எனச் சிந்தித்தபடி வெற்றிலையைக் கொடுத்தார் தேக்கன்.

வாங்கி அதைத் தோதாக மடித்துக்கொண்டே கபிலர் சொன்னார், ``இந்தக் கேள்விக்கு நான் சொல்லித்தான் விடை தெரிய வேண்டுமா உங்களுக்கு?”

சிரித்தான் பாரி.

வெற்றிலையை வாயில் மென்றபடியே முடியன் சொன்னான், ``தேவவாக்கு விலங்கு திசை மாறியா உட்கார்ந்துவிடப்போகிறது!”


மீண்டும் சிரித்தான் பாரி.

கிடைத்த வாய்ப்பைக்கொண்டு தேக்கனை நோக்கிச் சொல்லைச் சுழற்றினார் கபிலர், ``இத்தனை நாள்களாகியும் தனித்த விஷயங்களைக் கவனிக்கவில்லையா நீங்கள்?”

அறையெங்கும் பொங்கி வெடித்தது சிரிப்பு.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-68





அகதமலையின் முகடுகளில் குதிரைகள் பாய்ந்து போய்க்கொண்டிருந்தன. பாரி, காலம்பன், கபிலர் ஆகிய மூவரைத் தொடர்ந்து வீரனொருவன் கூடுதலாக ஒரு குதிரையைக் கையிற்பிடித்தபடி பின்தொடர்ந்தான். அக்குதிரையில் உணவுப்பொருள்களின் சிறுமூடைகள் ஏற்றப்பட்டிருந்தன. இவர்கள் எவ்வியூரிலிருந்து புறப்பட்டு மூன்று நாள்களாகி விட்டன.

கபிலர் இளைஞராய் இருந்தபொழுது குதிரையேற்றப்பயிற்சி பெற்றிருக்கிறார். ஆனால் அதன்பின் நீண்டகாலம் குதிரையேற்றத்தில் ஈடுபடவில்லை. எவ்வியூர் வந்தபின் அவ்வப்பொழுது குதிரையில் ஏற்றி ஒன்றிரண்டு மலைத்தொடருக்கு உதிரன் அழைத்துச்செல்வான். அப்பழக்கம் இருந்ததால்தான் இப்பயணத்தில் அவரால் பங்கெடுக்க முடிந்தது.

இதுவரை மூன்று மலைகளையும் இரு ஆறுகளையும் கடந்துவிட்டார்கள். ஆனால் பயணம் இன்னும் நெடுந்தொலைவு. வடக்கும் தெற்குமாக நீள்கோடெனக் கிடப்பதுதான் பச்சைமலைத்தொடர். இக்கோடு சில இடங்களில் நான்கு மடிப்புகளாகவும் சில இடங்களில் ஏழெட்டு மடிப்புகளாகவும் இருக்கிறது. ஆனாலும் பெருமடிப்புகளாக உள்ள மூன்று மடிப்புகளைத்தான் காரமலை, நடுமலை, ஆதிமலை என அழைக்கின்றனர். இம்மலைத்தொடரில் உள்ள முகடுகளும் துண்டிக்கப்பட்ட தனிக்குன்றுகளும் எண்ணிலடங்காதவை. இவற்றிற்கிடையில் வழிந்தோடும் ஆறுகளைக் கணக்கிட முடியாதுதான். ஆனாலும் பேராறுகளுக்குப் பெயர் சூட்டியிருந்தனர்.

இந்நீள்மடிப்பு மலைத்தொடரின் வடவெல்லை முதல் தென்னெல்லை வரை இருப்பவர்கள்தாம் பதினான்கு வேளிர்குடியினர். இம்மலைத் தொடரின் சிறுபகுதியில்தான் பறம்புநாடு இருக்கிறது. ஏறக்குறைய அதன் நடுவில் எவ்வியூர் உள்ளது. எவ்வியூரிலிருந்து குதிரையில் புறப்பட்டால் பறம்பின் வடக்கு எல்லையைச் சென்றடைய எட்டுநாள்களாகின்றன. ஐந்துநாள் பயணத் தொலைவில் காழகமலையுள்ளது. அதன் அடிவாரத்தில் இருப்பதுதான் உப்பறை.



அதனை நோக்கிய பயணத்தின் மூன்றாம் நாள் அகதமலையில் பயணித்துக்கொண்டி ருந்தனர். கபிலர் இதுவரை பறம்பின் காடுகளை நடந்துதான் கடந்துள்ளார். முதன்முறையாக அகலவிரிந்து கிடக்கும்

பெருங்காடுகளை மலைச் சரிவின் இருபக்கமும் பார்த்தபடி விரைந்து கொண்டிருக்கிறார். பறம்பின் அரண்போன்ற அமைப்பு என்னவென்பதை, காணும் காட்சிகள் உணர்த்திக்கொண்டிருந்தன. இயற்கையின் பெருவிரிப்பிலிருந்து பார்வையை விலக்க முடியாமல் கவனமாய்க் கடிவாளத்தை இழுத்துச்செல்ல வேண்டியிருந்தது.

காடுகளின் மீதான வியப்பேதும் காலம்பனின் கண்களில் இல்லை. வனத்தின் ஆதிப்பிளவு களினூடே முளைத்து வந்தவன் அவன். பாசிபடர்ந்து குளுமையேறிய ஈரப்பாறையையும் வெக்கையை உமிழ்ந்துதள்ளும் கரும்பாறையையும் இரு தோள்களெனக்கொண்டவன். அவனது வியப்பெல்லாம் முன்னால் விரைந்து சென்று கொண்டிருக்கிற பாரி எவ்வடையாளங்களைப் பாதைகளாக்கிக் கடந்துகொண்டிருக்கிறான் என்பதுதான்.
குதிரைகள் இளைப்பாற சிற்றோடையின் அருகில் நின்றான் பாரி. ஓடையில் நீர் சிறுத்து ஓடிக்கொண்டிருந்தது. "இவ்வாண்டு கோடையின் உக்கிரம் மிகக்கடுமையாக இருக்கும்" என்று சொன்னபடி நீரினை அள்ளிப்பருகினான். அப்பொழுதுதான் குதிரையை விட்டு இறங்கிய கபிலர் இடுப்பில் கைகளைவைத்து முதுகைப் பின்புறமாக வளைத்துக்கொடுத்தபடி கேட்டார், "கோடையின் கடுமை அதிகமாக இருக்குமென்றா சொல்கிறாய்?"

"ஆம். நாம் உப்பறை சென்று திரும்புகையில் இவ்வோடை முற்றிலும் வற்றியிருக்கும்."

"எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்?"

"கோடை தொடங்கிய முதல் மாதத்திலேயே நீர்சுரப்பு குறைந்துவிட்டது. இம்மாதத்தில் நீர் இழுத்தோடவேண்டும். ஆனால் இதன் போக்கைப் பாருங்கள். உள்ளே நகரும் மீனின் வேகம்கூட நீருக்கு இல்லை. பாறை இடுக்குகள் இன்னும் பத்து நாளுக்குள் இவ்வோடையைக் குடித்துவிடக்கூடும்."

பாரியின் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு கணிப்பினைச் சொல்லிக்கொண்டிருந்தது. சிற்றோடைகள் வற்றி முடித்த வேகத்தில் ஆறுகள் காயத்தொடங்கும் என்று சொல்லியபடி ஓடையைக் கடந்து மீண்டும் குதிரையில் ஏறினான்.


"இவ்வோடைதான் அகதமலையின் எல்லை. இதனைக் கடந்தால் தொடங்குவது வெப்புமலை. சற்றே செங்குத்தாய் மேலேற வேண்டும்" என்று சொல்லியபடி சிறிது தொலைவு மேலேறியவுடன் கைநீட்டிக் காண்பித்தான். இறங்குமலையில் மிகத்தொலைவில் பாறையின்மீது வெள்ளை விழுதென சிறுத்தநீர் செங்குத்தாய் இறங்குவது தெரிந்தது. "அதோ தெரிகிறதல்லவா! அந்த அருவியில் பெருவெள்ளம் கொட்டும். ஆனால் அதனைத்தொடர்ந்து ஓடும் ஆற்றைக் கண்ணால் பார்க்க முடியாது. இவ்வடர் காட்டில் மரங்களுக்கூடே அது முழுமுற்றாக மறைந்துவிடும். எனவே இதற்கு மறையாறு என்று பெயர்."

குதிரையை நிறுத்தி, காலம்பனும் கபிலரும் அவ்வடர் காட்டினைப் பார்த்தனர். பாரி சொன்னான், "இக்காட்டில்தான் வேறெங்கும் இல்லாத ஓர் உயிரினம் உள்ளது. நெடுங்காது முயல்தான் நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால், இங்கு மட்டும்தான் எலிகளின் காதினைப்போன்ற குறுங்காது முயல்

உள்ளது. அதன் குருதியில்தான் பறம்பின் வீரர்கள் பிடித்து நிற்கும் வில்லின் நாண்கள் ஊறவைக்கப்படுகின்றன.”

அருவியைப் பார்த்துக்கொண்டிருந்த காலம்பனும் கபிலரும் வியப்பு நீங்காமல் பாரியின் பக்கம் திரும்பினர்.

பாரி சொன்னான், “சமவெளி மனிதர்கள் பயன்படுத்தும் வில்லின் ஆற்றலைவிட மலைமக்கள் பயன்படுத்தும் வில்லின் ஆற்றல் மிகவலிமையானது. மலைமக்களில் மற்றவர்கள் பயன்படுத்தும் வில்லிலிருந்து அம்பு போய்ச்சேரும் தொலைவைவிட மூன்றுமடங்குத் தொலைவிற்குப் பறம்பின் வீரன் பயன்படுத்தும் அம்பு போய்ச்சேரும். அதற்கு முக்கியமான காரணத்தில் ஒன்று வில்லில் பூட்டப்படும் நாணின் இழுவைத் திறன். நாங்கள் பயன்படுத்தும் நரம்பினைக் குறுங்காது முயலின் குருதியில் ஊறவைத்துவிடுவோம். இழுத்துத் தள்ளும் அதனது விசை அளவிட முடியாததாக இருக்கிறது.”



வியப்பு நீங்காமல் பார்த்துக்கொண்டிருந்த இருவரும் இப்பொழுது குதிரையை நகர்த்தியே ஆகவேண்டியிருந்தது. ஏனென்றால், பாரி பேசியபடி முன்னால் போய்க்கொண்டிருந்தான். வெப்புமலையின் வடபுற இறக்கத்தில்தான் சூளூர் இருக்கிறது. இன்று இரவு தங்கல் அங்குதான். மூன்று நாள் பயணத்தின் வழியில் ஊர்கள் இல்லை. மிகத்தள்ளி ஒன்றிரண்டு குன்றுகளைத்தாண்டித்தான் ஊர்கள் இருந்தன. அங்கு போய்த் திரும்பினால் மிகக்காலந்தாழும் என்பதால் வழியில் உள்ள குகைத்தளங்களிலேயே தங்கினர். இன்றுதான் ஊரினில் தங்கப்போகின்றனர்.

பாரி வருகை ஊர்மக்களை மகிழ்ச்சிக்கூத்தாடச் செய்யும். வந்த மறுநாள் காலையிலேயே புறப்படுவது இயலாத செயல். ஆனால், புறப்பட்டே ஆகவேண்டிய நிலையை எடுத்துச்சொல்லிப் புரியவைப்போம் என்றுதான் பாரி அதனை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான்.

குதிரைகள் ஏற்றத்தில் மிகவும் மெதுவாக ஏறின. காலம்பனின் குதிரை ஒரு நாளில் இரண்டு முறை மாற்றப்பட்டது. பயணவழியில் நீண்டுகிடக்கும் படர்பாறை இருந்தது. குதிரையை விட்டு இறங்கினான் பாரி. அருகில் வந்ததும் மற்றவர்களும் இறங்கினர். சமதளப்பாறையாகத்தானே இருக்கிறது. இதற்கு ஏன் குதிரையை விட்டு இறங்கினான் பாரி என்ற எண்ணம் மற்ற இருவருக்கும் ஏற்பட்டது. இறங்கி நடந்தபடி பாரி சொன்னான். “சூளூர்தான் முடியனின் ஊர். அங்குதான் அவன் குடும்பம் இருக்கிறது.”

முடியன் என்பது பெயரன்று, தேக்கனைப்போல அது ஒரு பட்டம். சமவெளி அரசுகளில் படைத்தளபதி என்ற பட்டம் இருப்பதுபோல பறம்பிலுள்ள பட்டமிது. ஆனால், இந்தச் செய்தி காலம்பனுக்குத் தெரியுமா என்று கபிலரின் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன. பாரி சொன்னான், “நாம் கடந்து வந்த ஓடை எழுவனாற்றில் போய்ச் சேருகிறது. அந்த ஆற்றுக்கு நீர்ப்பிடிப்பு ஓடைகள் மிகக்குறைவு. எனவே வேகமாக வற்றிவிடும். பச்சைமலையின் உள்ளிடுக்கின் வழியாகவே நீண்டதொலைவு பயணிக்கும் இவ்வாறு குறும்பியூர்க் கணவாயின் வழியாகக் கீழ்த்திசையில் திரும்பி, சமதளத்தை நோக்கிப் பாய்கிறது. கரடுமுரடற்ற பாதையாக இதன் வழித்தடம் அமைந்திருக்கிறது.”

குதிரைகள் பாறையை மிதித்து நடக்கும் ஓசையும் பாரி பேசும் ஓசையும் மட்டுந்தான் கேட்டன. இருவரும் மிக அமைதியாக பாரி பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தனர். “இயற்கையின் மாபெரும் அரணால் சூழப்பட்ட பறம்பினைத் தாக்க எதிரிகளுக்கு உள்ள ஒரே வாய்ப்பு எழுவனாறுதான்” என்றான் பாரி. காலம்பனும் கபிலரும் அதிர்ந்தனர்.

“கோடைக்காலத்தில் இவ்வாற்றின் வழித்தடத்தைப் பயணவழியாகப் பயன்படுத்த முடியும். அதற்கேற்ற தன்மையுடன்தான் இதன் அமைப்பிருக்கிறது. குறும்பியூர்க் கணவாயில் இவ்வாற்றின் வழித்தடம் பற்றி உள்ளே நுழைபவன் எவ்வியூரின் அருகிலுள்ள குன்றுவரை வந்துசேரலாம். ஆனால் அதில் மூன்று சிக்கல்கள் உண்டு. ஒன்று, பறம்புக்குள் இப்படியொரு வழித்தடம் இருக்கிறது என்பது வெளியாட்களுக்குத் தெரிய வாய்ப்பேதுமில்லை. இரண்டு, குறும்பியூர்க் கணவாயிலிருந்து இந்த வெப்புமலைவரை வந்து சேர்வதற்குள் இவ்வாற்றில் பல ஆறுகளும் ஓடைகளும் இணைகின்றன. அவற்றின் அகலமும் எழுவனாற்றின் அகலமும் ஒன்றுபோல்தான் இருக்கின்றன. எனவே மூல ஆறு எது என்பதனை எளிதில் கண்டறிய முடியாது. இணையும் ஆறுகளின் வழியே திரும்பினால் இயற்கையின் பெரும் பொறிக்குள் போய்ச் சிக்கி மீளமுடியாமல் அழிவார்கள்.

மிகச்சரியான வழியைத் துல்லியமாகக் கண்டறிந்து பலநாள் பயணப்பட்டு இந்த வெப்புமலை அடைந்து விட்டார்கள் என்று வைத்துக்கொண்டால் அதன் பிறகு இதனைக்கடந்து ஒருவன்கூட எவ்வியூரை நோக்கித் தென்திசையில் சென்றுவிட முடியாது” என்றான் பாரி.

குதிரைகள் படர்பாறையை நடந்து கடந்துவிட்டன. ``மேலேறிப் பயணத்தைத் தொடர்வோம்; பொழுதாகிக் கொண்டிருக்கிறது” என்று சொல்லி, குதிரையின் மேல் ஏறினான். காரணம் தெரியாமல் குதிரையின் மீது ஏற மற்ற இருவருக்கும் மனமே இல்லை.

முதன்முறையாக காலம்பன் பாரியின் சொல்லை மறுத்து நின்றான். குதிரையில் ஏறியபடி பின்னால் திரும்பிப்பார்த்த பாரி, கடிவாளத்தை இடதுபக்கமாக இழுத்தபடி அவர்களை நோக்கித் திருப்பினான். குதிரை கனைத்தபடி திருப்பியது. “ஏனென்றால் இங்குதான் சூளூர் இருக்கிறது. இவ்வுலகின் தலைசிறந்த வீரர்கள் இவ்வூரில்தான் பிறக்கிறார்கள்” சொல்லும்பொழுதே உரத்தது பாரியின் குரல். “பறம்பின் மாவீரனே இம்மலையைக்காக்கும் பெரும்பொறுப்பினை ஏற்று முடியனாகிறான். இதுவரை முடியன் பட்டத்தை ஏற்றவர்கள் அனைவரும் சூளூர்க்காரர்களே. பறம்பில் உள்ள மற்ற வீரர்கள் குறுங்காது முயலின் குருதியில் ஊறவைத்த நாணேற்றி எய்யும் அம்பின் தொலைவை வெறும் நரம்பில் நாணேற்றி சூளூர்க்காரர்கள் எய்துமுடிப்பர்.”

காலம்பனும் கபிலனும் வியந்து நிற்க, பாரி கேட்டான், “இன்றைய நிலையில் பறம்பில் வில்வித்தையில் மாவீரன் யார் தெரியுமா?”

சற்றும் எதிர்பாராத கேள்வியாக இருந்தது. என்ன சொல்வதென்று தெரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்தனர். நீலனின் திறன் பற்றி தேக்கன் நிறைய சொல்லியுள்ளார். உதிரனின் ஆற்றலைப்பற்றிய பேச்சுவந்தபொழுது வாரிக்கையன் சொன்ன செய்திகள் மிகுந்த வியப்பினை ஏற்படுத்தின. ஆனாலும் முடியனைப்பற்றி இதுவரை யாரும் எதுவும் பேசியதில்லை. இப்பொழுது பாரி சொல்லும்

குறிப்பிலிருந்து பார்த்தால் அவனாகத்தான் இருக்கும் என்று தோன்றியது. அவர்களிடம் விடையை எதிர்பார்க்காமல் பாரி சொன்னான், “அம்மாவீரனின் பெயர் இரவாதன். முடியனின் ஒரே மகன். இன்றிரவு நமக்கான விருந்தினை ஏற்பாடு செய்து காத்திருக்கிறான். காலந்தாழ்த்தாமல் குதிரையேறுங்கள்.”



**செ**ம்மாஞ்சேரலிடமிருந்து விடைபெற்று வஞ்சித்துறைக்கு வந்தான் ஹிப்பாலஸ். சோழனின் படையெடுப்பு பற்றி இருவருக்கும் தெரியவேண்டிய செய்தி இருந்தது. அதனை அறியத்தான் ஹிப்பாலஸ் புறப்படுகிறான். சூழலை சாதகமாக்கிக்கொள்ள வேண்டும் என்பதில் இருவரும் மிகுந்த துடிப்போடு இருந்தனர். சோழப்படையெடுப்பின் காரணம் தெரியாவிட்டாலும் பறம்பின் மீதுதான் படையெடுக்கிறான் என்பதை அறிந்ததிலிருந்து உதிரஞ்சேரலின் மனதுக்குள் மகிழ்ச்சி பொங்கியபடி இருந்தது. பறம்பின் மீது யார் படையெடுத்தாலும் அதன் இறுதி வெற்றியை அடையப்போகும் வாய்ப்பு தனக்குத்தான் என்பதில் அவன்மிக உறுதியாக இருக்கிறான்.

ஹிப்பாலஸ்ஸின் நாவாய் வஞ்சியிலிருந்து புறப்பட்டது. தன்னோடு எபிரஸ்ஸையும் கால்பாவையும் அழைத்துக் கொண்டான். திரேஷியனும் பிலிப்பும் வஞ்சியிலேயே இருந்தனர். புகாரின் பெருஞ்செல்வந்தர்களும் வணிகர்களும் கால்பாவின் நட்புக்காகப் பல்லாண்டுகளாக ஏங்கிக்கிடப்பவர்கள். அவனுடைய நாவாய்கள்தாம் புகார் வணிகர்களின் செல்வங்களுக்கான வடிகாலாக இருந்தன. ஹிப்பாலஸ் அதனால்தான் கால்பாவை உடன் அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

உதியஞ்சேரலுக்கு நன்குதெரியும், ஹிப்பாலஸ் புகாரை அடையும்பொழுது செங்கனச்சோழனின் படை பறம்புமலையின் அடிவாரத்தைச் சென்றடைந்திருக்குமென. ‘படை புறப்பட்டுவிட்டது’ என வந்த ஒற்றுச்செய்தியை ‘படை ஆயத்தமாகிறது’ என்று மட்டும் ஹிப்பாலஸ்ஸுக்குச் சொன்னான் உதியஞ்சேரல். அப்படியிருந்தும் ஹிப்பாலஸ்ஸை அனுப்பி வைப்பதற்குக் காரணம் இருக்கிறது. யவனர்களால் மட்டுமே அரசவையின் அனைத்து உண்மைகளையும் முழுமையாகவும் எளிதாகவும்

அறியமுடியும். செங்கனச்சோழன் படையெடுப்பின் முழுநோக்கம் என்ன என்பதை அறிந்துகொள்ளத் திட்டமிட்டான் உதியஞ்சேரல்.

சூளூரிலிருந்து அதிகாலையிலேயே புறப்பட்டு விட்டனர். ஐந்தாம் நாள் மாலைக்குள் உப்பறையை அடைய வேண்டும். எனவே, இன்றைய பயணத்தொலைவை சற்று கூடுதலாகத் திட்டமிட்டான் பாரி. மற்றவர்களுக்கும் அது புரிந்து கவனமாகவும் விரைவாகவும் செயல்பட்டனர். இன்றைய நாள் முழுவதும் கபிலருக்கு இரவாதனின் நினைவே இருந்தது. வில்லடியின் மாவீரன் என்று பாரி அவனைப்பற்றிச் சொன்ன சொல்லிலிருந்தே சிந்தனை அவனைச் சூழ ஆரம்பித்தது. நேற்றிரவு அவனைப் பார்த்தகணம் முதல் எண்ணங்கள் அவனை விட்டு விலகவில்லை. அவ்விளம் வீரனின் துடிப்பும் அவனது பேரன்பும் கபிலரைக் கிறங்கவைத்தன.

குதிரைகள் விரைந்துகொண்டிருந்தன. மலையின் பக்கவாட்டுச் சரிவிலிருந்து மறுகுன்றுக்குத் திரும்பும் இடத்தில் குதிரையை இழுத்து நிறுத்தினான் பாரி.

மற்ற இருவரும் அவன் சொல்லப்போவதைக் கேட்க ஆயத்தமாயினர். “நாம் இவ்விடம் வளையாமல் நேராகப் பயணித்தால் வடதிசை நோக்கிச் செல்வோம். இத்திசையில் குன்றுகள் தவறாமல் ஊர்கள் உண்டு. ஒவ்வோர் ஊரின் தன்மையும் ஒவ்வொரு வகையானது. ஒருநாளைக்கு ஐந்து முதல் ஆறு ஊர்களை நம்மால் பார்க்க முடியும். தொடர்ந்து பயணித்தால் மூன்று நாள் பயணத்தொலைவில் இருப்பதுதான் தந்தமுத்தம். அவ்வூரைச் சேர்ந்தவர்கள்தாம் முதன்முதலில் யானைகளுடனான மொழியை உருவாக்கியவர்கள். இன்றளவும் யானைகளைப்பற்றி அவர்களுக்கு இருக்கும் அறிவுத்திறன் வேறு யாருக்கும் இல்லை” என்று மிகச்சுருக்கமாகச் சொல்லிவிட்டுக் குதிரையைக் கிளப்பினான்.

பாரியின் குதிரை மலையின் பக்கவாட்டுச் சரிவில் இடப்புறமாகத் திரும்பியது. எதையோ கேட்க வாயெடுத்த காலம்பன் கேட்காமல் நிறுத்திக்கொண்டான். சரிவுப்பாதையின் தன்மை மிக ஆபத்தானதாக இருப்பதை உணர்ந்ததால் பேச்சை நிறுத்திக் கவனமாகக் கடந்தான். யானைகளைப்பற்றி பாரி சொல்லத் தொடங்கியதும் காலம்பனிடமிருந்து கேள்வி எழும் என்று கணித்தார் கபிலர். எழும் கேள்வியைக் கேட்கத்தொடங்கி நிறுத்திய காலம்பன் ஆபத்தான அவ்விடம் கடந்ததும் கேட்டான். “உனது பயணத்தின் போக்கு எனக்கு இப்போது வரை புரியவில்லை.”

என்ன கேட்கிறான் என்று கபிலர் விழித்ததைப்போலவே பாரியும் திகைத்தான். காலம்பன் சொன்னான், “எவ்வடையாளத்தை வைத்து உனது குதிரை போகிறது? எதனைப் பாதையென்று யூகித்துப் பயணிக்கிறாய்? புறப்பட்டதிலிருந்து நான் அதனைத்தான் உற்றுக் கவனித்து வருகிறேன். உனது பயணப்பாதை எனக்குப் பிடிபடவேயில்லை. ஆனால், எவ்விடமும் தயங்கி நிற்காமல் பயணித்தபடியே இருக்கிறாய்” என்றான் காலம்பன்.

பாரி சொன்னான் “மலையின் எல்லாப் பாதைகளையும் விலங்குகளே உருவாக்குகின்றன. நாங்கள் கடமான் உருவாக்கும் பாதையையே பயன்படுத்துவோம். முகடுகளின் வழியான நெடும்பயணத்துக்கு அதுவே ஏற்றது. ஆனால் அதிலும் சிக்கல்கள் உண்டு. கடமான் பாதை, பாறை மடிப்புகளில் போய்ச்

சேர்ந்தபிறகு மீண்டும் எவ்விடமிருந்து தொடங்குகிறது என்பதைக் கண்டறிவது எளிதன்று. தொடங்கும் இடத்தை மிகக்கவனமாகக் கண்டறியாவிட்டால் எத்திசை போய்ச் சேருவோம் என்பதே தெரியாது. அடர்காட்டுக்குள் போய் மாட்டிக்கொண்டு வெளியேற வழியின்றி நிற்போம்.”

நேற்றைய பயணத்தின்பொழுது படர்பாறை வந்ததும் பாரி குதிரையை விட்டு ஏன் இறங்கினான் என்பது இப்பொழுதுதான் விளங்கியது. பாதை மீண்டும் தொடங்கும் இடத்தைக் கண்டறியவே இறங்கியுள்ளான் என்று காலம்பன் நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது கபிலர் கேட்டார், “மண்ணில் அழுத்தமற்ற இவ்வகைப்பாதைகள் எளிதில் மறைந்துவிடும் ஆபத்து இல்லையா?”

“கடமான் பாதை ஒருபொழுதும் அழியாது. அதன் காலடித்தடத்தையும் அதன் பற்கள் புற்களைக் கடிக்கும்வித்தையும் தெரிந்த ஒருவர் அதன் வழித்தடத்தைக் கண்டறிவது கடினமன்று. கொம்புகள் சிக்கிக்கொள்ளாமல் இருக்க முட்களையும் புதர்களையும் விட்டு விலகியே பாதையை அது உருவாக்கி வைத்திருக்கும். ஒருவகையில் குதிரைப்பயணத்துக்கு இவ்வகைப்பாதையே ஏற்றது” என்று சொன்ன பாரி, குதிரையின் கடிவாளத்தைச் சற்றே கவனப்படுத்தியபடி சொன்னான், “இதில் முக்கியமானது கடமான் பாதையிலிருந்து விலகி மீண்டும் அதன் மற்றொரு பாதையில் போய்ச் சேருவதுதான். அவ்விடைப்பட்ட தொலைவில் பாதைக்குறிப்புகளை நாம் உருவாக்கியுள்ளோம்.”

“இவ்வளவு கடினமான அமைப்புகொண்ட பாதையை எப்படி எல்லோராலும் நினைவில் கொள்ள முடியும்?” எனக் கேட்டார் கபிலர்.

“பறம்பின் அனைத்துத் திசைகளிலிருந்தும் இவ்வகைப் பாதைகள் எவ்வியூரை நோக்கி அமைந்திருக்கின்றன. அப்பாதையில் தொடர்ந்து காவல்வீரர்கள் குதிரைகளில் பயணித்தபடிதான் இருக்கின்றனர். அதுமட்டுமன்றி, அத்திசையில் உள்ள ஊர் மக்களுக்கும் இவ்வகைப்பாதையைப் பற்றிய தெளிவு உண்டு. ஆனால், எவ்வியூரில் இருந்து செல்லும் அனைத்துப் பாதைகளையும் கண்டறிந்து, அனைத்துத் திசைகளின் எல்லைவரை பயணிக்கக்கூடியவர்கள் மிகச்சிலரே. வாரிக்கையன், தேக்கன், கூழையன், முடியன் உள்ளிட்ட ஏழுபேரால் மட்டுமே அது முடியும்” என்றான் பாரி.

ஹிப்பாலஸ் புறப்பட்டுப்போன அன்றைய நாளே குடநாட்டு வேந்தனுக்கு ஓலை அனுப்பினான் உதியஞ்சேரல். ஓலை கண்டதும் குடநாட்டின் அமைச்சன் கோளூர் சாத்தனும் தளபதி எஃகல்மாடனும் வஞ்சியை நோக்கிப் புறப்பட்டனர். செப்பனிடப்பட்ட பாதை அமைப்பு இருந்ததால் விரைந்து வந்தனர்.

அவர்கள் வந்த செய்தி உதியஞ்சேரலுக்குத் தெரிவிக்கப்பட்டது. தன் தளபதி துடும்பனுடனும் அமைச்சன் நாகரையனுடன் அவைக்குள் நுழைந்தான். உள்ளே குடநாட்டின் அமைச்சன் கோளூர் சாத்தனும் தளபதி எஃகல்மாடனும் காத்திருந்தனர். வழமையான மரியாதைகள் முடிந்தவுடன் உதியஞ்சேரல் சொன்னான், “நாம் முன்பு திட்டமிட்டதைப்போல ஆளுக்கு ஒருமுனையிலிருந்து படைநடத்தி முன்செல்ல வேண்டாம். சூழல் நமக்கு மிகவும் சாதகமாக மாறியுள்ளது. பாண்டியனின் பெரும்படையும் சோழப்படையும் பறம்பினைத் தாக்க முற்பட்டுள்ளன. அத்தாக்குதல் தொடங்கும் செய்திக்காக நாம் காத்திருப்போம். அவர்களின் தாக்குதலை எதிர்கொள்வது பாரிக்கு எளிதன்று.

அவனது முழுமையான ஆற்றல் பறம்பின் கிழக்கு, வடகிழக்கு முனைகளில் குவிக்கப்படும். அந்த நேரத்தில் நம் இரண்டு படைகளும் ஒரேமுனையில் பறம்புக்குள் நுழைவோம்.

நமது பெருந்தாக்குதலை எதிர்கொள்ளும் ஆற்றல் பாரியிடம் இருக்க வாய்ப்பே இல்லை. ஏனெனில், அவனது படைவலிமை முழுவதும் அவ்விரு எதிரிகளை நோக்கி வெகுதொலைவுக்கு அப்பால் குவிக்கப்பட்டிருக்கும். அதன் பிறகு அவனால் வீரர்களை நம்மை நோக்கி எளிதில் நகர்த்தி வரமுடியாது. எந்தப் பச்சைமலைத்தொடர் அவனுக்கு இதுநாள் வரை அரணாக இருந்ததோ, அதே மலைத்தொடர்தான் அவன் விரைந்து வந்துசேர முடியாத பெருந்தடையாக இருக்கப்போகிறது. கிழக்கிலும் வடகிழக்கிலும் இருக்கும் தொலைவோடு ஒப்பிட்டால் சரிபாதித் தொலைவிற்கு நாம் உள்ளே போனாலே போதும், நடுமலையில் நிலைகொண்டுவிடுவோம். அதன்பிறகு காடு நமக்கான அரணாக மாறும்.”

தாக்குதலின் திட்டத்தை உதியஞ்சேரல் விளக்கியவிதம், கேட்டுக்கொண்டிருந்தவர்களை உறைய வைத்தது. உதியஞ்சேரலின் மனதுக்குள் முழுமையாகப் போர் தொடங்கியிருந்தது.



உப்பறையை அடைந்து இருநாள்களாகிவிட்டன. ஆனாலும் கபிலர் இன்னும் வியப்பின் ஆழத்திற்குள்ளிருந்து மீளவில்லை. அவரால் எளிதில் நம்பக்கூடியதாக இது இல்லை.
உப்பறையென்பது பச்சைமலைத் தொடரின் கருவறை என்றே சொல்லலாம். இங்கு பெரியகுளமொன்று இருக்கிறது. எக்காலத்திலும் நீர்வற்றாத குளமது. இக்குளத்தின் நீர் உப்பேறியிருக்கும். இம்மண்ணிலும் உப்புத்தன்மை மிக அதிகமாக இருக்கும்.
குளம் நோக்கி இருவரையும் அழைத்துக் கொண்டு நடந்தான் பாரி. “வடகோடியிலிருந்து தென்கோடிவரை நீண்டுகிடக்கும் இப்பச்சை மலைத்தொடர் முழுவதும் இருக்கும் விலங்குகள் ஆண்டு தவறாமல் இவ்விடத்துக்கு வந்துவிடுகின்றன. இவ்வுப்புநீரை அருந்துவது மட்டுமன்றி, இம்மண்ணையும் தின்கின்றன. ஏன் என்பதற்கான காரணம் இன்றுவரை புரியவில்லை. விலங்குகளின்

நோய்க்கான மருந்தாக இம்மண் இருக்கிறதா அல்லது ஈனும் காலத்தில் இம்மண்ணின் ஆற்றல் அதற்குத் தேவைப்படுகிறதா என்று எதுவும் எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால், பச்சைமலைத் தொடரிலிருக்கும் எல்லா விலங்குகளும் இக்குளத்துக்கு வராமல் இருக்காது. இக்குளம் பற்றிய அறிவு அவற்றின் குருதிக்குள்ளே இருக்கும்போல. தலைமுறை தலைமுறையாக அவை இவ்விடம் வந்து இத்தண்ணீரைக் குடித்து, இம்மண்ணைத் தின்றுவிட்டுச் செல்கின்றன.”

குருதிக்குள் உறைந்திருக்கும் நினைவிலிருந்து மேலெழுந்துகொண்டிருந்தது பாரியின் சொல். அவன் மேலும் சொன்னான், “ஒருவகையில் விலங்குகளின் தாய்நிலம் இதுதான். இவ்விடத்துக்கு வந்து செல்வதற்கான பாதை எல்லா விலங்குகளுக்கும் தெரிந்திருக்கிறது. இவ்விடமிருக்கும் ஊரின் பெயர் `அறல்.’ இவ்வூர்க்காரர்கள் விலங்குகளை வேட்டையாடக் கூடாது என்பது காலகாலத்துப் பழக்கம். பறம்பில் உழவுசெய்து வாழ்வது இவர்கள் மட்டுந்தான். இவர்கள்தாம் ஆதியிலே உழவைக் கண்டறிந்ததாகச் சொல்லுவார்கள்” என்றான்.




“உழவும் வேளிர்குலம் கண்டறிந்ததுதானா?’ எனக் கேட்டார் கபிலர்.

“இதற்கான விடையை நீங்கள்தாம் சொல்ல வேண்டும். ஆனால் ஒன்று எனக்குத் தெரியும். விலங்குகளின் தாய்நிலமான இந்த உப்பறை பறம்புக்குள் இருப்பதால்தான் பதினான்கு வேளிர்குலத்திலும் பறம்பின் வேளிர்கள் முக்கியத்துவங்கொண்டவர்களாக மாறினர்.”

“அதனால்தான் வேளிர் குலச்செல்வங்கள் அனைத்தும் பறம்பிலே கொண்டுவந்து பாதுகாக்கப்படுகின்றனவா?”

“பறம்பு அனைத்தையும் பாதுகாக்கும். இக்காட்டின் செடிகொடிகளையும், உயிரினங்களையும் காக்கும் பொறுப்பைத்தான் மனிதர்களாகிய எமக்கு இயற்கை அளித்துள்ளது” சொல்லியபடி குளக்கரையில் மண்டியிட்டான் பாரி.


என்ன செய்யப்போகிறான் எனத் தெரியாத திகைப்பில் கபிலரும் காலம்பனும் அவனைப் பார்த்திருக்க, நீரருந்தும் விலங்கினைப்போலக் குனிந்து முகத்தினை நீருக்கு அருகில் கொண்டுசென்றான். “இக்காட்டின் எல்லா உயிர்களைப்போல இவ்வுப்புநீர் குடித்தே எம் வேளிர்குலமும் உயிர்வாழ்கிறது. இந்நீரையும் நிலத்தையும் விலங்கினங்களையும் செடிகொடிகளையும் காத்தல் என்பது எமது உயிரினும் மேலானது” என்று அவன் கூறிய சொற்கள் நீருள் புதைந்திருக்கும் ஆதி உப்பின் மீது படிந்துகொண்டிருந்தன. பார்த்துக்கொண்டிருந்த கபிலரும் காலம்பனும் குளத்து நீரில் வாய்வைத்துக் குடித்துக்கொண்டிருக்கிறான் பாரி என நினைத்தனர்.

முகமெங்கும் நீர் வழிய நிமிர்ந்தான் பாரி. கண்திறவாமல் வான்நோக்கி நாடியை உயர்த்தினான். அவனது தொண்டைக்குழிக்குள் இருந்த உப்புநீரின் வழியே பீறிட்டு வெளிவந்தது ஓசை.

கணநேரத்தில் காட்டை உலுக்கிய ஓசையது. ஓசை வெளிப்பட்ட கணத்தில் கபிலரும் காலம்பனும் அஞ்சி அகன்றனர். எந்த வகையான ஓசையிது என்பது இருவருக்கும் பிடிபடவில்லை. விட்டுவிட்டுத் தெறித்துக்கொண்டிருந்தது ஓசை. பாரி வேறொன்றாக மாறிக்கொண்டிருப்பது போல் தெரிந்தது. திகைத்துப்போய் நின்றபொழுது காலம்பன் கணித்தான். வேட்டையைத் தொடங்கும் கணத்தில் விலங்குகளின் உள்மூக்கிலிருந்து வெளிப்படும் உறுமலோசை இது.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-69




உப்பறைக்குச் சென்ற மூவரும் எவ்வியூர் வந்துசேர்ந்தனர். அவர்கள் வந்தபொழுது குலநாகினிகளைத்தவிர ஊரில் யாருமில்லை. எல்லோரும் நீலன், மயிலா மணவிழாவிற்காக வேட்டுவன் பாறைக்குச் சென்றுவிட்டனர். ஒருநாள் ஓய்விற்குப்பின் மூவரின் குதிரைகளும் எவ்வியூரிலிருந்து வேட்டுவன் பாறையை நோக்கிப் புறப்பட்டன. நீலன், மயிலா மணவிழா மகிழ்வு, பயணத்தின் வேகத்தைக் கூட்டியபடியே இருந்தது.

வேட்டுவன் பாறையில் ஆட்கள் நிரம்பி வழிந்தனர். மணவிழா உற்சாகம் களைகட்டியிருந்தது. எவ்வியூர் முழுமையாக வந்துசேர்ந்திருந்தது. பல ஊர்களிலிருந்தும் ஊர்ப்பெரியவர்கள் வந்திருந்தனர். கள்ளும் கனியுமாக மணவிருந்து தொடங்கிவிட்டது. மான்தசையைச் சுட்டுக்கருக்கும் வாசம் காடெங்கும் வீசிக்கொண்டிருந்தது. வெற்றிலைகள் வகைபிரித்து வரிசை வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன.

புனுகு மணமும் நாகப்பூ மணமும் மணவிழாவுக்கே உரியன. புன்னைப்பூவும் பாதிரிப்பூவும் ஆலம்பனையின் ஓலைக்கொட்டானில் குவிந்துகிடக்க வந்தவர்கள் எல்லாம் மனம்மயங்கி, கனியுண்டு கள்ளருந்தினர். மான்தசையைக் கடித்திழுத்து உண்டுவிட்டு அதனைச் செமித்து முடிக்க வெற்றிலை தின்றனர். மலைமக்களின் மணவிழா என்பது எல்லையில்லாத இன்பத்தை உணரவும் உணர்த்தவுமான விழா. உணவின் வகைகளும் ஆட்டபாட்டத்தின் வகைகளும் சொல்லிமாளாது.

மலையெங்குமிருந்து சாரிசாரியாக ஆட்கள் வந்துகொண்டிருந்தனர். வெவ்வேறு வகையான

இசைக்கருவிகளின் ஓசைகள் அவர்களுடன் வந்துகொண்டிருந்தன. இசைக்கப்படும் ஓசையை வைத்தே வருவது எந்த ஊர்க்காரர்கள் எனப் பெரியவர்கள் சொன்னார்கள். சிறுவர்களின் கொண்டாட்டம் தனித்திருந்தது. காலம்பனின் மூத்த மகன் கொற்றன். அவன்தான் எவ்வியூர் சிறுவர்களின் கூட்டத்துக்குத் தலைவனாக இருந்தான். அவன் எவ்வியூர் வந்த புதிதில் மற்ற சிறுவர்கள் அவனோடு பழகத் தயங்கினர். ஏனெனில் அவனது உருவ அமைப்பு அவனைச் சிறுவனென்று ஏற்றுக்கொள்ள முடியாத தன்மையைக் கொண்டிருந்தது. நாளடைவில் எல்லாம் சரியானது. விளையாட்டில் அவனை யாரும் வெல்ல முடியாதது மட்டுமல்ல; எவ்வியூர் சிறுவர்களுக்குத் தெரியாத புதுவிளையாட்டுகள் நிறைய அவனுக்குத் தெரிந்திருந்தன. காட்டெருமை விளையாட்டினை அவன்தான் எல்லோருக்கும் கற்றுக்கொடுத்தான். ஆட்டபாட்டத்திலும் இணையற்றவனாக இருந்தான். எனவே எவ்வியூர் சிறுவர்கள் எந்நேரமும் அவனுடனே இருந்தனர்.

அலவன், முடிநாகன், குறுங்கட்டி, அவுதி, மடுவன், உளியன், வண்டன் ஆகிய எல்லோரும் இப்பொழுது சிறுவர்களாவும் இல்லாமல் இளைஞர்களோடும் சேரமுடியாமல் நடுவில் நின்று விழித்துக்கொண்டிருந்தனர். இளைஞர்கள் எல்லாம் தங்களின் இணையைப்பற்றிப் பேசிச்சிரித்து மகிழ்ந்துகொண்டிருந்தனர். இவர்கள் அருகிற்போனால் சிறுவர்களோடு விளையாடச்சொல்லி விரட்டிவிடுகிறார்கள். சிறுவர்களிடம் போனால் அவர்கள் எல்லாம் கொற்றனின் தலைமையில் விளையாடிக்கொண்டிருக்கின்றனர். யாரும் இவர்களுடன் நின்று பேசக்கூட ஆயத்தமாக இல்லை. விளையாட்டுகள் அவ்வளவு மும்முரமாகப் போய்க்கொண்டிருந்தன.



சங்கவை, சிறுமிகளின் கூட்டத்தைக் கூட்டிக்கொண்டு தென்புறச்சரிவில் மூங்கிற்குச்சியில் நார்ப்பந்துகளைச்செருகி அடித்து விளையாடிக்கொண்டிருந்தாள். பெண்களும் பெரியவர்களும்

மணவிழா வேலையில் மூழ்கிப்போயிருந்தனர். யார்யார் எங்கு என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியவில்லை.

பொழுதுமங்கி இருள்கவியத் தொடங்கியது. ஊரெங்கும் தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டன. மந்தையில் அமர்ந்திருந்த பெரியவர்கள் ஒவ்வொருவரிடமும் சிறுபிள்ளைகள் வந்து வெற்றிலை கொடுத்தனர். இருப்பதிலே மிகமூத்தவர் வாரிக்கையன்தான். ஆனால் அவருக்கு வெற்றிலை கொடுக்காமல் மற்றவர்களுக்காகப் பிள்ளைகள் கொடுத்துக்கொண்டிருந்தனர். கொடுத்து விடுபவர்கள் சொல்வதைத்தானே பிள்ளைகள் கேட்பர். காலையிலிருந்து இளைஞர்களை விரட்டி விரட்டி வேலைவாங்கியதால் தம்மீது கோபமாக இருக்கிறார்கள் என்று வாரிக்கையனுக்குத் தோன்றியது. ‘சரி, என்னதான் நடக்கிறது பார்ப்போம்’ என்று வாரிக்கையன் பொறுத்திருந்தார்.

எல்லோருக்கும் கொடுத்தபின் ஒரு சிறுமி வந்து வாரிக்கையனுக்குக் கொடுத்தாள். சற்றே கோபத்தோடு அதனை வாங்கினார். ஆனால் மற்றவர்களுக்குக் கொடுத்ததைவிட இருமடங்கு வெற்றிலை அதில் இருந்ததால் முகத்தில் மகிழ்ச்சி பரவியது. உடனடியாக வெற்றிலையை மெல்லத்தொடங்கினார்.

மேற்புறமிருந்து காற்றுவீச மந்தையை ஒட்டியிருந்த பந்தத்தீ பாம்பைப்போலச் சீறி அடங்கியது. எல்லோரும் சீற்றத்தின் ஓசையை கவனிக்க, ஒரு பெரியவர் மட்டும் காற்றோடு மிதந்து வந்த மணத்தை மோந்தபடி “இது குளவிப்பூவின் வாசமாயிற்றே இப்பக்கம் குளவிக்கொடி இருக்கிறதா என்ன?” என்று கேட்டார்.

தேக்கனுக்குத் தெரியவில்லை. பின்னால் உட்கார்ந்திருந்த வாரிக்கையனிடம் கேட்போம் என்று சத்தம்போட்டுக் கேட்டார். எங்கும் பேச்சுக்குரல் கேட்டதால் தேக்கனின் குரல் காதில் விழவில்லை. எழுந்து மந்தையின் முன்பக்கமாக வந்தார் வாரிக்கையன். நொங்கு தின்ற குரங்குபோல அவரின் இருபக்கத் தாடைகளும் உப்பி இருந்தன. உள்ளுக்குள் வெற்றிலையை அடைத்து வைத்திருந்தார். அருகில் வந்துநிற்கும் வாரிக்கையனிடம் குளவிப்பூ பற்றி மீண்டும் கேட்டார் தேக்கன். வெற்றிலையைப் பக்குவமாய் அணைத்துக்கொடுத்துப் பேசக்கூடியவர் வாரிக்கையன் என்பது எல்லோருக்கும் தெரியும். அவரும் பக்குவமாய் நாவால் ஒதுக்கிப் பேசத் தொடங்கும்பொழுது திடீரென ஏதோவொன்று உச்சிமண்டைக்குள் ‘கிர்’ரென ஏறியது. என்னவென்று புரிந்துகொள்ளும்முன் பெருந்தும்மலாக வெடித்து வெளியில் வந்தது. யானையின் துதிக்கைக்குள்ளிருந்து சீறிப்பாய்வதைப் போல மந்தையிலிருந்த எல்லோரின் மீதும் வெற்றிலை எச்சில் தெறித்துச் சிதறியது. உட்கார்ந்திருப்பவர்கள் விழித்துக்கொள்வதற்குள் ஒன்று, இரண்டு, மூன்று என்று விடாமல் தும்மினார் வாரிக்கையன்.

கீழ்ப்புறமிருந்து எதிர்காற்று அடுத்தடுத்து வீசியதுபோல் இருந்தது. பலத்த காற்றோடு சேர்ந்து நீரும் வந்ததால் மந்தையை ஒட்டியிருந்த தீப்பந்தம் முழுமுற்றாக அணைந்தது. மந்தையில் ஓராள்கூட மிச்சமில்லை. நடக்கமுடியாத பெருசுகள்கூட தாவிக்குதித்து வெளியேறியதாகச் சொன்னார்கள். விடாது தும்மிய வாரிக்கையனை அவருக்கு உற்ற தோழர்கள் இருவர் பக்குவமாய் வெளியில் கூட்டிப்போனார்கள்.



மணவிழாக்கொண்டாட்டம் களைகட்டியது. கையில் துடைப்பத்தோடு மந்தைக்கு வந்த பெண்கள் வசவுச் சொல்லை வாரி இறைத்தபடி மந்தையைப் பெருக்கித் தூய்மைப்படுத்தினர். மீசைமுடியிலும் தலைமுடியிலும் ஒட்டிய வெற்றிலையெச்சிலை எப்படி நீக்குவதெனத் தெரியாமல் பெருசுகள் இங்குமங்குமாக அலைந்துகொண்டிருந்தனர்.

மணவிழாவுக்காகத் தொடர்ந்து மூன்றுநாள்கள் விருந்து நடக்கும். விலங்கின் இறைச்சியை வெட்டியெடுக்கும் இடத்திலிருந்து துர்நாற்றம் வந்துவிடக்கூடாது என்பதற்காக குளவிப்பூவின் கொடிகளைக் கொண்டுவந்து அப்பக்கம் போட்டிருந்தனர். அந்த மணத்தை அறிந்துதான் குளவிப்பூ வாசம் இங்கே எப்படி என்று பெரியவர் கேட்டார். அதுதான் இவ்வளவுக்கும் காரணமானது. இப்பொழுது குளவிப்பூக்கொடியை இருவர் கைநிறைய அள்ளிவந்து மந்தையில் போட்டனர். அப்படியும் துப்பிய நாற்றம் போகவில்லை.

வாரிக்கையனை அழைத்துக்கொண்டு போன அவர் தோழர்கள் தனியே ஓரிடத்தில் அவரை உட்காரவைத்தனர். தும்மல் கொஞ்சங்கொஞ்சமாக நின்று அமைதியடைந்தார். கண்ணிலும் மூக்கிலும் நீர்கொட்டி நின்றது. “எப்படி திடீரென இவ்வளவு தும்மல் வந்தது?” எனக் கேட்டார்.

உடனிருந்த பெரியவர்கள் இருவரும் “தும்மலுக்கெல்லாமா காரணம் சொல்ல முடியும்?” என்றனர்.

வாரிக்கையன் ஏற்கவில்லை. இடுப்புத்துணியால் முகத்தை முழுவதுமாகத் துடைத்தபடி “ஏதோ நடந்திருக்கிறது!” என்றார். உடனிருந்த பெரியவர்கள் இருவரும், “இதில் என்ன நடந்திருக்கும்?” என்றனர். வாரிக்கையன் இதனை அப்படியே விட விரும்பவில்லை.

எங்கும் வாரிக்கையன் பேச்சுதான் பேசப்பட்டுக்கொண்டிருந்தது. “மான்கறி, மிளாக்கறி என எவ்வளவு சுவையாகச் சமைத்துப்போட்டாலும் இந்த மணவிழாவின் பேச்சு வெற்றிலையைப் பற்றித்தான்” என அவரிடமே வந்து கேலி பேசிவிட்டுப் போயினர். அதற்கெல்லாம் அவர் கவலைப்படவில்லை. என்ன நடந்திருக்கும் என்பதைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தவர் இறுதியில் அதனைக் கண்டறிந்தார்.


இளசுகளை மிகவும் கடிந்துகொண்டு, ஓயாமல் வேலைவாங்கினார். நீலனின் உற்றதோழன் புங்கனை மந்தையில் வைத்து காலையில் திட்டினார். அதனால் இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து வாரிக்கையனை அதே மந்தையில் வைத்து வாரிவிடத் திட்டந்தீட்டினர்.

தும்மி இலையைப் பறித்துவந்து இவருக்குக் கொடுக்கப்பட்ட வெற்றிலைக்குள் வைத்துக்கொடுத்துள்ளனர். தும்மி இலையையோ, தும்மிப்பூண்டையோ சாப்பிட்டால் உடனடியாகத் தும்மல் வரும். கட்டுப்படுத்த முடியாதபடி வந்துகொண்டே இருக்கும். அதனால்தான் வாரிக்கையன் இந்தப் பாடுபட்டுள்ளார்.

நடந்ததைக் கண்டுபிடித்த வாரிக்கையன் தன்னுடைய வேலையைக்காட்ட முடிவுசெய்தார். மந்தைப்பக்கமே போகாமல் ஊருக்குள் நுழைந்தார். பாவை விளையாட்டும் பந்து விளையாட்டும் விளையாண்டபடி சிறுவர், சிறுமியர் எங்கும் ஓடிக்கொண்டிருந்தனர். தாழ்வான மரக்கிளைதோறும்

ஊஞ்சல்கட்டி பலரும் ஆடினர். வாரிக்கையனின் கண்கள் தேடின. வட்டாட்டத்தையும் கழங்காட்டத்தையும் தாய்மார்களின் துணையோடு குழந்தைகள் ஆடினர். அவ்விடத்தைக் கடந்து போகையில்தான் ஓங்கூர் மருத்துவன் கண்ணிற்பட்டான். அவனை சத்தம்போட்டுக் கூப்பிட்டார் வாரிக்கையன். அவன் அருகில் வந்தான்.

தனக்கு வேண்டியதைக் கேட்டார். மருத்துவர் அதிர்ச்சியடைந்தான். ‘இதை ஏன் இவர் கேட்கிறார்?’ என்பது அவருக்குப் புரியவில்லை. வாரிக்கையன் கேட்கும்பொழுது கொடுக்காமல் இருக்க முடியாது. “சரி ஏற்பாடு செய்துதருகிறேன்” என்று சொல்லிவிட்டுப் போனார்.



‘இனி மந்தைப்பக்கம் போவோம்’ என நடையைக்கட்டினார். மந்தைவெளி இரவு நடைபெறும் ஆட்டத்துக்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தது. வந்துள்ளதில் மணமுடித்தவர்களும் மணமுடிக்காதவர்களும் தங்கள் இணையோடு சேர்ந்து ஆடும் குரவைக்கூத்துதான் மணவிழா நிகழ்வின் உச்சம். இந்த ஆட்டத்தில் பங்கெடுக்கவும் இந்தக் காதற்கொண்டாட்டத்தைக் காணவுந்தான் எல்லோரும் ஆர்வமாக இருப்பர். அதற்கான தொடக்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன.

வாரிக்கையன் கூட்டத்தின் ஓரமாகவே நடந்து மந்தையை நோக்கி வந்துகொண்டிருந்தார். இசைக்கலைஞர்கள் இரவு ஆட்டத்துக்குத் தங்களை ஆயத்தம் செய்துகொண்டிருந்தனர். பகலில் இசைத்தது முக்கியமல்ல; இரவில் இசைக்கப்போவதுதான் முக்கியம். ஏனென்றால், இது ஆணும் பெண்ணும் இருகூறாகப் பிரிந்து தங்கள் இணையோடு ஆடும் போட்டியாட்டம். தழுவித்துள்ளும்

காதலுக்கு இசையே அடிப்படையாக அமையவேண்டும். நள்ளிரவு நெருங்க நெருங்க ஆட்டத்தின் வேகத்துக்கு இசைக்கலைஞன் ஈடுகொடுத்தாக வேண்டும். அதற்கான ஆயத்தங்களில் அவர்கள் தீவிரமாயினர்.

வாரிக்கையன் மந்தை முழுவதையும் சுற்றிப்பார்த்தார். கபிலர் மந்தையின் வடபுறமிருந்த மேட்டிலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். என்ன நடக்கிறது என்பதை அவரால் கண்டறிய முடியாது. எனவே அவரால் ஆபத்து ஏதுமில்லை என முடிவுசெய்த வாரிக்கையன் மந்தையின் முன்புறத் திண்ணையில் தேக்கன் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தார். தூக்கிவாரிப் போட்டது.

‘தேக்கனை வைத்துக்கொண்டு ஒன்றும் செய்யமுடியாது. எதையும் கண்டறிவதில் கெட்டிக்காரன். எனவே இவனை மந்தையை விட்டு வெளியேற்ற என்ன வழி?’ என்று சிந்தித்தார். அப்பொழுது அவரது கண்ணில் கட்டையர்கள் இருவர் தென்பட்டனர்.

ஆதிமலையின் வடகோடி அடிவாரத்தில் வாழ்பவர்கள் கட்டையர்கள். இருப்பதிலே மிகக்குள்ளமானவர்கள். ஆனால் மகாதிறமைசாலிகள். வீரத்தால் புகழ்பெற முடியாது என உணர்ந்த அவர்கள் வித்தைகளைக் கற்றுப் பெரும்புகழடைந்தனர். அவர்கள் ஊர்த்தலைவர்கள் இருவர் மட்டும் வந்துள்ளனர். பார்த்ததும் வாரிக்கையன் அவர்களைத் தனியே அழைத்து. “திகைப்பூச்சி இருக்கிறதா? எங்கிருந்தாவது பிடிக்கமுடியுமா?” எனக் கேட்டார்.

இருவரில் மூத்தவர் சொன்னார், “இருட்டிவிட்டதே, இனி எங்கு போய்த் தேடுவது?”

இளையவன் சொன்னான், “வருகிறபொழுது அருகிருந்த குளத்தில் அது கத்தும் ஓசையைக் கேட்டேன். தீப்பந்தத்தோடு இருவரை அனுப்புங்கள் பிடித்துவருகிறோம்” என்றான். பந்தத்தோடு இரண்டு இளைஞர்களை உடனனுப்பினார் வாரிக்கையன்.

**வே**ட்டுவன் குன்றின் பின்புறச் சரிவில் சிறுகுட்டை ஒன்று இருந்தது. கோடைக்காலமாதலால் நீர் மிகக்குறைவாகவே இருந்தது. அதை நோக்கித்தான் அவர்கள் நால்வரும் போனார்கள். திகைப்பூச்சி நண்டுவலைக்குள்தான் இருக்கும். சிறுசிலந்தியைப்போல சிறிய உடலமைப்பும் நீண்ட கால்களையும்கொண்டது. பார்த்தால் சட்டெனத் தெரியாது. ஆனால் அது ஓசையைத் தெறித்துக்கொண்டேயிருக்கும். தொலைவிலிருந்தும் கேட்கலாம்.

கட்டையர்கள் குட்டையின் அருகிற்போய் நின்றார்கள். திகைப்பூச்சியின் ஓசை வருகிறதா என உற்றுக்கேட்டார்கள். ஓசையை அறிந்து அவ்விடம் போய்க் குத்தவைத்து உட்கார்ந்தனர். குறிப்பிட்ட நண்டுவலைக்குள்ளிருந்து அவ்வோசை வந்தது. பந்த வெளிச்சத்தை நன்றாகக் காண்பிக்கச் சொன்னார்கள். குளக்கரையோரம் சிறுநண்டு ஒன்று ஓடியது. அதனைப் பிடித்து முதுகோடு ஒரு நார்க்கயிற்றைக் கட்டினர். பந்தமேந்தியவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. இவர்கள் என்னதான் செய்கிறார்கள் என்று உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தனர். பிடிபட்ட நண்டினை ஓசைவந்த வலையின் அருகே விட்டனர். அது சொளவுக்குள் குடுகுடுவென ஓடியது. சிறிதுநேரத்திலே நார்க்கயிற்றை மேலே இழுத்தனர். இரண்டுமூன்று திகைப்பூச்சிகளைக் கவ்விய கால்களோடு நண்டு மேலே வந்தது. அதனைப்

பக்குவமாய் எடுத்து இடுப்பிலே இருந்த பைத்துணிக்குள் போட்டு முடிச்சிட்டுக்கொண்டனர்.


நேரமாகிக்கொண்டிருந்தது. கட்டையர்களை இன்னும் காணவில்லை என்ற பதற்றத்தில் இருந்தார் வாரிக்கையன். ஓங்கூர் மருத்துவன் அவர் கேட்டதைக் கொண்டுவந்துவிட்டான். பெருமகிழ்ச்சி. உடனிருந்த இரு பெரியவர்களையும் அழைத்து அடுத்து செய்யவேண்டிய வேலையைச் சொல்லிமுடித்தார். கட்டையர்கள் இன்னும் வந்துசேரவில்லை. சற்றே பதற்றத்தோடு மந்தையில் போய் தேக்கனுக்கு அருகில் உட்கார்ந்தார் வாரிக்கையன்.

மந்தைவெளி முழுக்க ஆட்டத்தைக்காண, பெருவட்டத்தில் மக்கள் உட்கார்ந்தனர். புங்கனின் தலைமையில் இளைஞர்கள் கூட்டமாய் களத்தை நோக்கி வந்தனர். இணையர்கள் எல்லாம் களத்துக்கு வரத் தொடங்கினர். ஆட்டம் நள்ளிரவு வரை நடக்கும். நேரமாக ஆகத்தான் வேகம் கூடும். ஆண்சுற்றில் வேகங்கூடுதலாக இருக்கும், பெண்சுற்றில் குழைவு கூடுதலாக இருக்கும். இறுதிச்சுற்றில் இணையைப் பொறுத்து ஒவ்வொன்றும் ஒவ்வொருமாதிரி இருக்கும். தழுவியாடும் ஆட்டமாதலால் எதையும் முன்கணிக்க முடியாது.

குரவைக்கூத்து என்பது மலைமக்களின் ஆதிநடனம். ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் தொற்றி ஆடுவதால் “தொற்றியாடல்” என்றும் தழுவி ஆடுவதால் “தழுவியாடல்” என்றும் இதற்குப் பெயருண்டு. இணையர்கள் எல்லாம் களத்துக்குள் நுழைந்தனர். பார்வையாளர்கள் வழக்கம்போல் ஆண், பெண் என இருகூறாகப் பிரிந்து ஆட்டத்தினை ஆதரித்து ஆர்ப்பரிக்கத் தொடங்கினர். முதுபெண்களும் வேறு சிலரும் மணவிழா வேலைகளை கவனித்துக்கொண்டிருந்தனர். மணமகள் அவளது ஊரிலிருந்து இன்னும் அழைத்துவரப் படவில்லை. எனவே மணமகன் ஆட்டத்தைக் காணக்கூடாது.

கோடை வெக்கைக்கு தாகம் கடுமையாக இருக்கும். அதுவும் ஆடுபவர்களுக்கு விடாமல் வேர்த்துக்கொட்டும். எனவே ஆட்டக் காரர்களுக்காக ஆண்கள் பக்கமும் பெண்கள் பக்கமும் தனித்தனியாகப் பழச்சாறு கலந்து வைக்கப்பட்டிருந்தது. இசைக்கலைஞர்கள் ஒருமுகப்பறையையும் இரட்டை முகமுடைய இணைமுகப்பறையையும் முழங்கத் தொடங்கினர். கூட்டத்தினரின் ஆர்ப்பரிப்பு எழுச்சிகொண்டது. இளைஞர்கள் ஒருபக்கமும் இளைஞிகள் ஒருபக்கமுமாகக் களமிறங்கினர். புங்கனின் முகத்தில் மகிழ்வின் ஒளிவீசியது.

மற்ற ஆட்டத்தைப்போல மெதுவாகத் தொடங்கி சீரான வேகங்கொள்ளும் ஆட்டமல்ல இது. இணையரின் வேகத்தைப் பொறுத்து சட்டென வேகங்கூடும். ஓர் இணை நெருங்கி ஆடிவிட்டால் போதும் மற்றவர்களும் நெருங்குவதற்காக ஆட்டத்தின் வேகத்தைக் கூட்டுவர். கால்களும் கைகளும் வேகங்கொள்ள பறையிசைப்பவனின் வேகம் அதற்கு முன்னே சென்றாக வேண்டும். முதற்சுற்று எவ்வளவு வேகமாக ஆடினாலும் அது தொடக்கம்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். வாரிக்கையன் கைகளால் உத்தரவுகொடுத்து, வேலையைத் தொடங்கச்சொன்னார். ஒரு பெரியவர் ஆண்கள் குடிப்பதற்கு வைக்கப்பட்டிருந்த பெரும் பானைக்குள் எதையோ போட்டுவிட்டு நகர்ந்து இப்பக்கம் வந்துவிட்டார்.



எல்லோரின் கவனமும் ஆட்டக்களத்தின் மீதே இருந்தது. உள்ளே போடவேண்டியதைப் போட்டாகிவிட்டது என்பது வாரிக்கையனுக்கு மகிழ்ச்சிதான். ஆனாலும் கட்டையர்கள் வந்துசேராதது கவலையைத் தந்தது. தேக்கன் விழிப்போடிருந்தால் நாம் மாட்டிக்கொள்வோம் என்ற பதற்றத்தில் இருந்தார். முதற்சுற்று ஆட்டம் முடிந்தது. ஆடியவர்கள் பானைகளில் இருந்த பழச்சாற்றை அருந்தினர்.

ஆண்களின் பக்கமிருந்த பழச்சாற்றில் வாரிக்கையன் கலக்கச்சொன்னது காமஞ்சுருக்கியை. அது இச்சையைச் சட்டென வற்றிப்போகச்செய்யும். உடலை வேகமாகக் களைப்புறச்செய்து தூக்கத்துக்குக் கொண்டு செல்லும். காமஞ்சுருக்கி கலக்கப்பட்ட பழச்சாற்றை ஆண்கள் நான்கைந்து குவளை குடித்துவிட்டு அடுத்த சுற்றுக்கு ஆயத்தமாயினர்.

இரண்டாஞ்சுற்று ஆண் இறங்கி ஆடவேண்டும். இசைக்கலைஞர்கள் ஆயத்தமானார்கள். புங்கனை நடுவில் நிறுத்திக் கைகோத்து வட்டங்கொண்டது ஆண்களின் அணி. ‘நீங்கள் ஆடி வாருங்கள், பார்ப்போம்’ என்று எதிர்பார்த்தி ருந்தனர் பெண்கள். கூட்டம் பெருமாரவாரத்தைச் செய்துகொண்டிருந்தது. அப்போதுதான் கட்டையர்கள் உள்ளே வந்தார்கள். அவர்களைப் பார்த்த பின்தான் வாரிக்கையன் முகத்திலே மகிழ்ச்சி வந்தது. அவர்களைக் கையசைத்து மந்தைப்பக்கமாக வரச் சொன்னார். அவர்களும் அப்பக்கமாக வந்து யாரும் அறியாத வகையில் திகைப்பூச்சி இருக்கும் சுருக்குப்பையை வாரிக்கையனின் கைகளில் ஒப்படைத்துவிட்டு நகர்ந்தனர்.

பெருமாரவாரத்தோடு தொடங்கிய இரண்டாஞ்சுற்று நேரம் செல்லச்செல்ல வேகங்கூடுவதற்கு பதில் மந்தநிலை கொள்ளத் தொடங்கியது. மந்தையில் தேக்கனுக்கு சற்று பின்னால் உட்கார்ந்திருந்த வாரிக்கையன் ஆட்டத்தைக்கண்டு அகமகிழத் தொடங்கினார். இசைக்கலைஞர்களுக்கு சற்றே குழப்பமானது. ஏன் ஆண்கள் வேகங்கொள்ள மறுக்கின்றனர் என்று சிந்தித்தபடியே இசையின் வேகத்தைக் கூட்ட முயன்றனர்.

தேக்கனுக்குப் பின்னால் இருந்த வாரிக்கையன் சுருக்குப்பையைத் தேக்கனின் முதுக்குப் பின்புறமாக வைத்து அவிழ்த்தார். உள்ளே இருந்த திகைப்பூச்சி தேக்கனின் முதுக்குப்புறமாக மேலே ஏறியது. கண்ணுக்குத்தெரியாத அளவுள்ள அதன் கால்கள் மேலேறுவதை மனிதனால் உணரமுடியாது. மேலேறிய அது கடித்துவிட்டு சிறிதுநேரத்தில் செத்துப்போகும். திகைப் பூச்சியால் கடிக்கப்பட்டவர்கள் சிறிதுநேரத்திலேயே திகைத்துப்போய்விடுவர். அவரால் வழக்கம்போல் செயலாற்ற முடியாது. எண்ணியதைப் பேசமுடியாது, மறுமொழி சொல்லமுடியாது. ஒருவித மந்தநிலையில் திகைப்பு மாறாமல் அவ்வப்பொழுது சிரித்தபடி தலையாட்டிக் கொண்டிருப்பர். வேறெதுவும் செய்யமாட்டார்கள். முதுகில் கடித்தவுடன் திகைப்பூச்சி சரிந்து விழுந்ததை உற்றுப்பார்த்த வாரிக்கையன் இனி சிக்கலேதுமில்லை என்ற முடிவுக்குப் போனார்.



கூட்டத்தின் ஆரவாரம் பலமடங்கு அதிகரித்தது. அதற்குக் காரணம் இளைஞர்களிடம் வேகம் போதாததால் சுற்றியுள்ள ஆண்கள் பெருங்குரலெடுத்துக் கத்தி அவர்களை உற்சாகப்படுத்த முயன்றனர். அப்பொழுது இன்னொரு பெரியவருக்குக் கையசைத்து உத்தரவு கொடுத்தார் வாரிக்கையன். அப்பெரியவர் நேராக பெண்களுக்கான பழச்சாறு கலக்கப்பட்டுள்ள பானையில் எதனையோ போட்டுவிட்டு ஒதுங்கி வந்தார். ஆண்களின் ஆட்டத்தைக்காணும் யாருக்கும் கோபம் வரும், அந்த அளவு மோசமாக ஆடிக்கொண்டிருந்தனர். இசைக்கலைஞர்கள் முடிந்த அளவு வேகத்தைக் கூட்டிப் பார்த்தனர். ஒன்றும் நடக்கவில்லை. வழக்கமாக ஆண்களின் சுற்றில் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் பெண்கள் சிலர் தள்ளாடிவிழுவதும் உட்கார்ந்துவிடுவதும் நடக்கும். இன்று அது எதுவும் நடக்கவில்லை. இவ்வளவு மெதுவாக எவ்வளவு நேரந்தான் ஆடுவது என்று சலித்துப்போய் நிறுத்தினான் இசைக்கலைஞன். வழக்கமாக இசையை எப்பொழுது நிறுத்தினாலும் “நிறுத்தாதே!” என்றுதான் குரல் வரும். ஆனால், இன்று விட்டால்போதும் என்ற நிலையில்தான் ஆடும் இளைஞர்கள் இருந்தனர்.

இளைஞர்கள் ஏன் இவ்வளவு களைப்பாக ஆடுகின்றனர் என்பது யாருக்கும் விளங்கவில்லை. இளைஞிகளுமே சற்று குழப்பத்துக்கு ஆளானார்கள். ‘என்னாச்சு இவனுகளுக்கு? வழக்கமாக இருக்கும் வேகத்தில் பாதிகூட இல்லையே!’ என்று சிந்தித்தபடியே இரண்டாஞ்சுற்றினை முடிவுக்குக் கொண்டுவந்தனர்.

ஆடுபவர்கள் மீண்டும் பழச்சாறு குடிக்கப்போனார்கள். இளைஞர்களின் பக்கம் பெருங்கூட்டம். “நல்லா குடிச்சிட்டு தெம்பா ஆடுங்கப்பா” என ஆளாளுக்கு முகந்து கொடுத்தனர். சிலர் புங்கனை வசைபாடத் தொடங்கினர். இளைஞிகளின் பக்கமும் நிறைய முகந்து குடித்தனர். இசைக்கலைஞன் மறுசுற்றுக்கு ஆயத்தமானான். ஆனால் நடுத்தர ஆண்கள் சிலர் தலையிட்டு, “கொஞ்சம் நேரமாகட்டும்பா,

ஆடுறவங்க மிகக் களைப்பாக இருக்காங்க" என்று சொல்லி ஆட்டத்தைக் காலந்தாழ்த்தினர். வாரிக்கையன் இதனைப் பார்த்து அகமகிழ்ந்துகொண்டிருந்தார். அவரின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த தேக்கன் அவ்வப்பொழுது சிரிக்கத் தொடங்கினார்.

``நல்லா ஆடுங்கடா! தேக்கன் உங்களப் பாத்து சிரிச்சுக்கிட்டு இருக்காரு" என்று சொல்லி மூன்றாஞ்சுற்றுக்கு இளைஞர்களை இறக்கினர் நடுத்தர ஆண்கள். இளைஞர்களைத் தொடர்ந்து இளைஞிகள் உள்ளிறங்கினர். இச்சுற்று பெண்கள் ஏறிப்பாடி ஆடும் சுற்று. களைகட்டும் கூத்து. காண்போரை ஆட்டத்தின் வழியே கிறக்கத்தை உருவாக்குவார்கள் இணையர்கள். இன்று அதே வேகத்தோடு அல்ல, வழக்கத்தைவிடப் பலமடங்கு வேகத்தோடு உள்ளிறங்கியது இளைஞிகள் கூட்டம். ஏனென்றால், அவர்கள் குடித்த பழச்சாற்றிலே வாரிக்கையன் கலக்கச்சொன்னது காமமூட்டியை. அதனை நீரில் கலந்து ஒரு குவளை குடித்தாலே காதலுணர்ச்சி உச்சத்தை அடைந்து படாத பாடுபடுத்தும். முதற்சுற்று ஆடிய களைப்பில் இளைஞிகள் ஒவ்வொருவரும் மூன்று நான்கு குவளையைக் குடித்துவிட்டு உள்ளே இறங்கியுள்ளனர். எதிர்ப்புறமோ இளைஞர்கள் முழுவதும் காமஞ்சுருக்கியை எண்ணற்ற குவளை குடித்துவிட்டு வந்து நின்றனர்.

ஆட்டம் தொடங்கியது. பறம்பு நாட்டில் எந்த ஒரு மணவிழாவிலும் நடக்காத கூத்தாக இந்தக் குரவைக்கூத்து நிகழ்ந்தது. இளைஞிகள் தங்கள் இணைமீது தீராக்காதலோடு களமாடினர். இளைஞர்களின் பாடு பெரும்பாடானது. எவனும் எவளுக்கும் ஈடுகொடுக்க முடியவில்லை. துவளுங்கொடியாக ஆணும் நிமிரும் சுடராகப் பெண்ணும் இருந்தனர். “என்னடா ஆச்சு உனக்கு?” என்று ஒவ்வொருத்தியும் தங்கள் இணையின் காதிலே கடிந்து கேட்டனர். என்ன கேட்டும் எதுவும் நடக்கவில்லை. இசைஞன் அடுத்தடுத்து வேகத்தைக் கூட்டிக்கொண்டிருந்தான்.

கைகோத்து, நடுவிரல் பற்றி, அணிவிரல் சேர்த்து ஆடவேண்டிய ஆட்டத்தை ஆட எவனுக்கும் தெம்பில்லை. ஆனால், எவளும் வேகத்தைக் குறைத்துக்கொள்ள முயலவில்லை. காதலையும் காமத்தையும் உயிர்கொல்லும் உச்சத்துக்குக் கொண்டுசெல்லும் தெய்வமகளாம் `அணங்கு’ இறங்கி ஆடும் கடைசிக்கட்டம் தொடங்கியது. ஆண்களில் எவனாலும் களத்தில் நின்றாட முடியவில்லை. புங்கன்தான் முதலில் சரிந்தான். பெண்களின் ஆர்ப்பரிப்பு விண்ணைத் தொட்டது. பார்த்துக்கொண்டிருந்த ஆண்கள் தலைகவிழ்ந்தனர். மந்தையில் உட்கார்ந்து விண்ணதிரச் சிரித்துக்கொண்டிருந்தார் வாரிக்கையன். தேக்கனோ அவ்வப்பொழுது சிரித்துக்கொண்டிருந்தார். ஆட்டத்தின் இறுதிக்கட்டம் வந்தபொழுது ஈடுகொடுக்க முடியாத தம் இணையை, தோளிலே தூக்கி ஆடினர் பெண்கள்.




“இது மயிலாவின் மணவிழா. அப்படித்தான் இருக்கும். தூக்கிச் சுத்துங்கடி இவனுகள" என்று, பார்த்திருந்த பெண்கள் கத்த, சுற்றிய சுற்றில் சுருண்டு வதங்கினர் இளைஞர்கள்.

ஆட்டம் முடிந்ததும் விருந்து தொடங்கியது. எல்லோருக்கும் உணவு பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தபொழுது, தொலைவில் இருளில் குதிரைகள் வந்து நின்றன. விருந்து ஏற்பாட்டிலிருந்த வேட்டூர் பழையன் குதிரையின் குளம்படி கேட்டுத் திரும்பினார்.

வந்திறங்கிய குதிரை வீரர்களை நோக்கி இருளுக்குள் நடந்து போனார் வேட்டூர் பழையன். அவர்கள் கீழ்த்திசை எல்லைக்காவலர்கள். வேட்டூர் பழையனை வணங்கிவிட்டுச் சொன்னார்கள்,
“நெடுங்குன்றின் அடிவாரம் பாண்டிய நாட்டு வீரர்கள் படை தங்குவதற்கான பாடிவீட்டினை அமைத்துக் கொண்டிருக்கின்றனர்.”

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-70




**பொ**ழுது விடிந்தது. ஆட்டத்தின் களைப்பை உதிர்த்தபடி ஊர் எழுந்தது. பாண்டியர்கள் படைவீடமைக்கும் செய்தியைச் சொன்ன வீரர்களை வேட்டூர் பழையன் தனியே அழைத்துக்கொண்டு போய்விட்டார். நீலனின் கண்களிற்பட்டால் அவன் உடனே புறப்பட்டுச்செல்ல முற்படுவான். கீழ்திசைக்காவல் அவன் பொறுப்பு. என்ன சொல்லியும் அவனைத் தடுத்து நிறுத்த முடியாது. எனவே பாரி வந்து சேரும்வரை காவல்வீரர்களை நீலனின் கண்களிற்படாமல் பழையன் பார்த்துக்கொண்டார். பொழுதாகிக்கொண்டிருந்தது. ஆண்களெல்லாம், ஆடிய இளைஞர்களை மிச்சம் வைக்காமல் திட்டித்தீர்த்துக்கொண்டிருந்தனர். இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்பது புரியவில்லை. ஆனால், இவையெல்லாம் விடிந்து சிறிதுநேரம் மட்டுமே இருந்த எண்ணங்கள். இவையெல்லாம் சேர்ந்ததுதான் மணவிழாக்கொண்டாட்டம். மீண்டும் இசைக்கருவிகளின் ஓசை கேட்கத் தொடங்கியதும் மகிழ்வு மலையெங்குமிருந்து பொங்கி மேலெழுந்தது. மணவிழாவின் வேலைகளில் வேகங்கூடின. ஆனாலும் எல்லோரின் கண்களும் பாரியின் வரவை எதிர்பார்த்தே காத்திருந்தன.

மணமக்கள் குடிபுக சுடுமண் சுவரெழுப்பி புல்வேயப்பட்ட புதுக்குடிலைக் கூரைப்பூக்களைக் கொண்டு அலங்கரித்திருந்தனர். ஆதினியும் அவள் தோழிகளும் அதனைப் பார்த்துவரப் புறப்பட்டனர். அப்புதுக்குடில் நாங்கில் மரத்தை முன்நிழலாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. காரமலையின் கீழ்ப்பகுதியில் விரிந்துகிடக்கும் சமவெளி முழுவதையும் பார்ப்பதைப்போல அக்குடில் இருந்தது. குடிலுக்குள் வந்தாள் ஆதினி. தலையுயர்த்தி, வேயப்பட்ட புல்லினைப் பார்த்தாள், சற்றே ஐயங்கொண்டு வெளியில் வந்து மேற்பரப்பைப் பார்த்தாள். வியப்பு கலந்த மகிழ்வு அவளது முகத்திலே ஓடிமறைந்தது.

மற்ற பெண்களுக்கு சட்டெனப் புரியவில்லை. என்னவென்று கேட்டனர். ஆதினி சொன்னாள். ``குரம்பைப் புல்லினை அடிப்புறம் வைத்து நடுவில் மூங்கிற்புல் பரப்பி, மேலே மாந்தம்புல்லினை மேய்ந்துள்ளனர். எவ்வியூர் போல இது மலைமுகட்டு ஊரல்லவே! அடிவாரத்து ஊராதலால் வெக்கை நிறைந்த கோடைக்காலத்திலும் குளுமை நீங்காமல் இருக்க இந்த ஏற்பாடு. மாந்தம்புல் உச்சிமலையின் கரும்பாறை இடுக்குகளில் மட்டுமே வளரக்கூடியது. கடமான்கள் விரும்பி உண்ணக்கூடிய புல்வகை. அவற்றைப் போய் அறுத்து வருவது எளிய செயலல்ல, நீலன் அவனே மேலேறிச்சென்று இதனை அறுத்து வந்திருப்பான்” என்றாள்.

உடன் வந்த இன்னொரு பெண் சொன்னாள்,  ``அவசரப்பட்டு முடிவுக்குப் போகாதே ஆதினி. மயிலாவே அதனைச் செய்திருப்பாள். அவளைப்பற்றி உனக்குத் தெரியாது” என்றாள். எல்லோரும் சிரித்தனர். வெளியில் இசைக்கருவிகளின் ஓசையோடு ஆரவார ஓசையும் பெருகி வந்தது. பாரி வந்துவிட்டான் என்பதை உணர்ந்து ஊர்மந்தையை நோக்கி விரைந்தனர்.

மக்களின் கூட்டத்துக்கு நடுவே பாரியின் முகத்தைக் காண நீண்டநேரமானது. எல்லோரையும் நலங்கேட்டான் பாரி. பறம்பின் தென்னெல்லையில் உள்ள ஊரிலிருந்தெல்லாம் பெரியவர்கள் வந்து சேர்ந்துள்ளனர். ஒவ்வொருவரிடமும் பாரியின் நலங்கேட்டல் தனித்தன்மை கொண்டதாக இருந்தது. கரியனூர் பெரியாத்தா கூட்டத்தை விலக்கிக்கொண்டு பாரியை நோக்கி வந்தாள். வாஞ்சையோடு வரும் அவளைக் கண்டதும் பாரியின் மனம் பூரித்தது.

பாரியின் தந்தையை சிறுவனைப்போல் நடத்துவாள் அவள். ஆனால் பாரியை அவள் தந்தையைப் போல நடத்துவாள். ``என் அப்பன்னெடா நீ” என்றே எப்பொழுதும் சொல்லுவாள்.

“தள்ளாத வயதில் இவ்வளவு தொலைவு வரவேண்டுமா?” எனப் பாரி கேட்டதற்கு. “இனி நான் மலையேறி எவ்வியூருக்கு வந்து உன்னையப் பாக்க முடியாது. மலையடிவார ஊருக்கு எப்ப நீ வருவேன்னுதான் காத்திருந்தேன். மணநாளுக்கு வருவேன்னு எனக்குத் தெரியும். அதனாலதானப்பா எப்படியாவது ஒன்னையப் பாத்திடணும்ன்னு ஓடிவந்தேன்” என்றாள்.

பாரியின் கண்கள் கலங்கின. ``சூல்மருது எப்படி இருக்கிறது?” எனக் கேட்டான். ``இந்த மழைக்காலத்துல தப்பிச்சிருச்சு. ஆனால் இன்னும் எத்தனை காலமோ?” என்றாள். அவளின் குடிலருகே உள்ள மரமது. ஒருவகையில் அவளின் குலதெய்வமும்கூட.



பாரியின் நலங்கேட்டல்கள் எல்லாம் இப்படித்தான். மரம் செடி கொடி, விலங்குகள், மனிதர்கள் என ஒன்றுவிடாமல் கேட்டுக்கொண்டிருந்தான். கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளே நுழைந்த வேட்டூர் பழையன், ``வந்தவர்களை முதலில் உணவருந்த விடுங்கள்'' என எல்லோரையும் சத்தம் போட்டு விலக்கினான்.

பாரியும் கபிலரும் காலம்பனும் அருகிருந்த குடிலுக்கு உணவருந்தப் போயினர். அவர்களுக்காகப் பொங்கம்பழப் பூந்தேன்கட்டி காத்திருந்தது. தேனீ தனது கூட்டுக்குள் முதலில் தேனைக் கட்டியாகத்தான் வைத்திருக்கும். பின்னர்தான் தேனாக்கும். மலைமக்கள் தேன்கட்டியைத்தான் எடுப்பர். தேனைப் பிழிந்தெடுக்கும் பழக்கம் அவர்களுக்கு இல்லை. அதுவும் எந்தவகைப் பூவில் இருந்து தேனெடுத்து இந்தக் கட்டியைத் தேனீ உருவாக்கியிருக்கிறது என்பதைப் பொறுத்துதான் இந்தக்கட்டியை எடுக்கலாமா வேண்டாமா என்பதனை முடிவுசெய்வர்.

அந்தப்பகுதியில், அந்தப்பருவத்தில் எந்தப் பூ அதிகம் பூத்திருக்கிறதோ அந்தப் பூவின் சுவைதான் தேன்கட்டியிலும் இருக்கும். நாவற்பழப்பூந்தேன் துவர்க்கும், வேப்பம்பழப்பூந்தேன் கசக்கும், கள்ளிப்பூந்தேன் இனிக்கும், கோட்டைப்பழப்பூந்தேனையும் அத்திப்பூந்தேனையும் சுவைபிரித்து அறிவது மிகக்கடினம். இதில் மிகச்சிறந்த சுவைகொண்டது, எவ்வளவு சாப்பிட்டாலும் இன்னும் இன்னும் என்று கேட்டுக்கொண்டே இருக்கச் சொல்லுவது பொங்கப்பழப்பூந்தேன்.



அந்தத் தேன்கட்டியை எடுத்துவந்து அடுக்குவாழை இலையில் வைத்துக்கொடுத்தனர். கட்டிச்சாறு கணக்கின்றி உள்ளிறங்கியது.

உணவு முடிந்ததும் வேட்டூர் பழையன் பாரியிடம் கூறினான், ``எல்லாவற்றையும் தேக்கனிடம் சொல்லியுள்ளேன், பகற்பொழுதிலே நீ போய் நேரில் பார்த்துவிட்டு வந்துவிடு.”

சரியெனச் சொல்லிய பாரி தேக்கனையும் முடியனையும் உடனழைத்துக்கொண்டு புறப்பட்டான். கபிலர் கொற்றவைக்கூத்தில் பார்த்த பலரை அதன்பின் இப்பொழுதுதான் பார்க்கிறார். எனவே அவர் இங்கேயே இருந்து கொண்டார். காலம்பனை பல ஊர்க்காரர்கள் இன்னும் பார்க்கவேயில்லை. ஆனால் பறம்பு முழுவதும் அவனின் வீரக்கதை தெரியும். எல்லோரும் அவனைக் காண விருப்பப்படுவர். எனவே அவனையும் இருக்கவைத்துக்கொண்டார் வேட்டூர் பழையன். ஈங்கையன் பாரியைப் பார்க்க வேண்டுமென விருப்பத்தோடு இருந்தான் ஆனால், பாரி பொழுதுக்குள் போய்த் திரும்பவேண்டியிருந்ததால் வந்த பின் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறிவிட்டார் பழையன்.

பாரியுடன் மற்ற இருவரும் புறப்படும்முன் பழையன் சொன்னான், ``பொழுது சாய்வதற்குள் மணப்பெண்ணை அவளது ஊரிலிருந்து அழைத்து வந்துவிடுவார்கள். அதற்குள் நீங்கள் வந்துவிட்டால் மயிலாவிடமிருந்து தப்பித்தீர்கள். இல்லையென்றால் அவ்வளவுதான்” என்று எச்சரித்து அனுப்பினார் வேட்டூர் பழையன்.

பாரி, தேக்கன், முடியன் மூவரும் குதிரையில் புறப்பட்டனர். உடன் கீழ்திசை எல்லைக் காவல்வீரர்கள் இருவரும் சென்றனர். எதிர்பார்த்திருந்த செய்தியைத்தான் பழையன் சொன்னார். ஆனாலும், அவர் சொல்லும் இரு இடங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருந்தன. குதிரைகள் காரமலையின் சரிவுப் பாதையில் தென்புறம் நோக்கி விரைந்து கொண்டிருந்தன. இரண்டாம் குன்றினைத் தாண்டியபொழுது பாரிக்கு மயிலாவின் நினைவுவந்தது. அக்குன்றின் அடிவாரத்தில்தான் அவளது ஊர்.

மயிலாவின் ஊரான செம்மனூரிலிருந்து மணமகளின் தாய்மாமன் அவளைத் தனது தோளிலே தூக்கி வருவான். வேட்டுவன் பாறையின் எல்லையில் நின்று மணமகன் அவளைத் தனது தோளுக்கு மாற்றித் தூக்கிச்செல்வான். அவ்வாறு தூக்கிச்செல்லும் நிகழ்வுதான் மிகுந்த உற்சாகமும் கொண்டாட்டமும் நிறைந்தது. கேலிப் பேச்சுகளும், குறும்புவிளையாட்டுக்களுமாக ஊரே களைகட்டியிருக்கும். சற்று அமைதியான பெண்கூட மணமகனின் தோளிலே அமர்ந்து வரும்பொழுது இல்லாத குறும்பெல்லாம் செய்வாள். மயிலாவைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. அவள் செய்யப்போகும் குறும்புத்தனங்களைக் காண பாரிக்கும் விருப்பமாகத்தான் இருந்தது. ஆனால், சூழல் வேறுவிதமாக அமைந்துவிட்டது.



குதிரைகள் விரைந்துகொண்டிருந்தன. உச்சிப்பொழுதுக்கு வெள்ளடிக்குன்றின் அடிவாரத்திற்கு வந்தனர். அவர்களின் எண்ணவோட்டத்துக்கு ஈடுகொடுத்து வந்து சேர்ந்தன குதிரைகள். குன்றினை விட்டு மிகவும் தள்ளி, படைகள் தங்குவதற்கான தாவாரங்கள் அடிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. படைவீரர்கள் இங்குமங்குமாகப் புதர்களை அகற்றிக் கொண்டிருந்தனர். குதிரைகள் ஆங்காங்கு கட்டப்பெற்றிருந்தன. கொடியெதுவும் பறக்கவில்லை. ஆனால், பாசறையின் முன்புறத்தில் பாண்டியப்பேரரசின் இணைக்கயல் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. படைவீரர்களின் உடைகளும் தாவாரத்தின் தன்மையும் பார்த்தவுடனே தெரிந்துகொள்ளக் கூடியவையாகத்தான் இருந்தன.

குன்றின் மீது நின்றபடி மூவரும் பார்த்துக்கொண்டிருந்தனர். ``இது வெங்கல்நாட்டின் பகுதியாயிற்றே. பறம்புக்கு எதிராகச் செயல்பட மாட்டோம் என்று வாக்களித்த குலமல்லவா அவருடையது!” என்று முடியன் சொன்னபொழுது, தேக்கன் குறுக்கிட்டார், ``வைப்பூரில் நடந்த மோதலில் அவர் மகனின் தலையை நம்மவர்கள் சீவியெறிந்து விட்டதாகவும் அதன் பொருட்டு மையூர்கிழார் வஞ்சினம் உரைத்துள்ளாதாகவும் வேட்டூர் பழையன் சொன்னார்.”

``இங்கிருக்கும் இவன் எதற்கு வைப்பூர் துறைமுகத்துக்குப் போனான்?” எனக் கேட்டான் பாரி.

“தெரியவில்லை. ‘இளவரசனின் திருமண ஏற்பாட்டிற்குப் போனவன் அப்படியே துறைமுகம் வரை போயிருப்பான்’ என்கிறார் பழையன்.”

நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான் பாரி. சற்று நேரத்துக்குப்பின் புறப்பட்டனர்.

**செ**ம்மனூர்காரர்கள் வேட்டுவன் பாறையின் எல்லையை நெருங்கிக்கொண்டிருந்தனர். அவர்களை வரவேற்று மணப்பெண்ணைத் தூக்கிக்கொள்ள மணமகன் வீட்டார் ஆயத்தமாக இருந்தனர். நீலன் மாவீரன்தான். ஆனால், மயிலாவைத் தூக்கியபின் கீழே இறக்காமல் ஊர்மந்தைக்குக் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். அவள் செய்யப்போகும் குறும்புத்தனங்களை இவன் எப்படிச் சமாளித்துத் தூக்கிவரப்போகிறான் என்பதைக் காண எல்லோரும் ஆவலோடு இருந்தனர்.

செம்மனூர்காரர்கள் எழுப்பும் பெரும்பறையின் ஓசை காட்டையே உலுக்கியது. ஓசைகேட்டு ஆடாத காலில்லை. தாய்மாமனின் தோளில் ஆடாமல் அசையாமல் அப்படியே உட்கார்ந்து வந்தாள் மயிலா. எதிர்கொண்டு வாங்க வேட்டுவன் பாறையின் எல்லையில் தொண்டகப்பறை முழங்க மணமகனின் ஊரார் காத்திருந்தனர்.



வந்தாள் மணப்பெண். தாய்மாமனின் தோளிலிருந்து தனது தோளுக்கு மாற்ற நீலன் அருகில் சென்றான், அவளும் இடமாறி உட்கார வசதியாக அவனுக்குக் கைகொடுத்தாள். பறைமுழக்கம் பேரிசையாய் எழுந்தது. சுற்றத்தார்கள் பூக்கள் சொரிய, அளவற்ற ஆரவாரத்துக்கு நடுவே நீலனின் இடதுதோளுக்கு மாறினாள் மயிலா.

உரிமையோடு காதலியைத் தோளிலே தூக்கிச்செல்லும் ஆணுக்கு இருக்கும் ஒரு மிடுக்குநடையைக் கண்டு மகிழ்ந்தது கூட்டம். நீலனின் திறள்கொண்ட தோளில் வசதியாக உட்கார்ந்து அவனது

இருகைகளையும் பற்றியிருந்தாள் மயிலா. என்ன செய்யப்போகிறாளோ என எல்லோரும் ஆவலோடு அவளையே பார்த்தபடி வந்துகொண்டிருந்தனர். உன்னி நழுவும் அவளை இறங்கவிடாமல் எப்படிச் சமாளிக்கிறான் பார்ப்போம் என்று எதிர்பார்ப்போடு கூட்டம் கூச்சலிட்டுக்கொண்டு வந்தது. தொண்டகப்பறையும் பெரும்பறையும் ஒன்றாக இசைக்க, கூட்டத்தில் பாதிக்கு மேல் ஆட்டத்தில் இருந்தது.

நீலனின் இடப்புறத் தோளிலே உட்கார்ந்த மயிலா அதன்பின் அமைதியாக வந்தாள். நீலன் சிரமமேதுமின்றித் தூக்கிவந்தான். பாதித்தொலைவுக்கு மேல் கடந்துவிட்டனர். இரு ஊராருக்கும் வியப்பு ஏறிக்கொண்டேயிருந்தது. ``சாதாரண காலத்தில் இயல்பாய் இருக்கும் பெண் மணமகனின் தோளில் உட்கார்ந்ததும் பெருங்குறும்பு செய்வதும், எந்நேரமும் குறும்புக்காரியாக இருப்பவள் மணமகனின் தோளிலே உட்கார்ந்ததும் அமைதியாய் அடங்குவதும் இயற்கைதானப்பா” என்று பேசிக்கொண்டே நடந்தனர் சிலர்.

மலைப்பாதையை மறித்தபடி கிளைபரப்பியிருக்கும் மாமரத்தினூடே நுழைந்து போய்க்கொண்டிருந்தது கூட்டம். பறையோசையில் மாமரத்திலிருந்த பறவைகள் ஒலியெழுப்பியபடி கலைந்து பறந்தன. கலையும் பறவைகளின் படபடப்புக்கும் ஓசைக்கும் ஏற்ப ஆட்டத்தின் வேகமும் கூடின. தாளத்துக்கு ஏற்ப பலரும் ஆடிக்கொண்டிருந்தனர். திடீரென மொத்தக் கூட்டமும் பேரோசையை வெளிப்படுத்தி ஆரவாரத்தால் அலைமோதியது. முன்னால் ஆடிக்கொண்டிருந்தவர்களுக்கு என்ன நடந்ததெனத் தெரியவில்லை. மணமக்களை நோக்கி வேகமாக உள்ளே ஓடிவந்து பார்த்தனர்.

சற்றே தாழ்ந்திருந்த மரக்கொப்பை எவ்விப்பிடித்து சட்டென மேலேறிக்கொண்டாள் மயிலா. நீலன் திகைத்துப்போய் அப்படியே நின்றான். கூட்டத்தின் ஆரவார ஓசை காதைக் கிழித்தது. நீலன் மரத்துக்கு மேலேறி அங்கிருந்து தோளிலே தூக்கியபடி கீழிறங்க முடியாது. மயிலாவாக மனம்மாறிக் கீழிறங்கி அவனது தோளுக்கு வந்தால்தான் உண்டு. கூட்டத்தின் கொண்டாட்டம் இருமடங்கானது. மயிலா யாரெனக் காட்டிவிட்டாள் என செம்மனூர்காரர்கள் உற்சாகத்தில் திளைத்தனர்.

நீலனுக்குத்தான் என்ன செய்வதென்று தெரியவில்லை. மயிலாவின் மனம் இறங்கிவர என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்வதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் ஆதியிலிருந்து நடந்துவரும் போராட்டமிது. இதில் ஒருவரையொருவர் வெல்வதைவிட ஒருவரோடு ஒருவர் இணைவதே இயற்கையின் தேவை. அதுவே இறுதியில் வெற்றியும் பெறுகிறது. ஆனால், இப்பொழுது என்ன செய்வது என்று தெரியாமல் நீலன் விழித்தபொழுது மயிலா சொன்னாள். ``என் கேள்விகளுக்கு நீ விடை சொல். சரியான விடை சொன்னால் உனக்கு எறிகிடையாது. தவறான விடை சொன்னால் மாங்காயால் எறிவிழும். உனது எந்த விடை எனது மனம்தொடுகிறதோ அப்பொழுது நான் உனது தோளுக்கு இறங்குவேன்.”

கூட்டத்தின் ஓசை முன்னிலும் கூடியது. இவ்வளவு நேரம் செம்மனூர்காரர்கள், வேட்டுவன் பாறையைச் சேர்ந்தவர்கள் என இருகூறாகப் பிரிந்திருந்த கூட்டம் இப்பொழுது ஆண், பெண்ணென இருகூறானது.

மயிலாவின் சொல்லினை ஏற்பதைத் தவிர நீலனுக்கு வேறு வழியில்லை. இதிலுள்ள பெருஞ்சிக்கல் அவள் பறித்து வைத்திருக்கும் மாங்கனி ஒவ்வொன்றும் உள்ளங்கை அளவு இருக்கிறது. அதில் எறிவாங்கினால் நீலனின் நிலைமை என்னவாகும் என்று ஆளாளுக்குப் பேசிச் சிரித்தனர்.

முதல் கேள்வியைக் கேட்டாள். ``என் தாய்மாமன் உன்னைவிட வலுக்குறைந்தவன். ஆனால், அவன் என்னைப் பூப்போல தூக்கிவந்தான். நீ ஏன் இவ்வளவு அழுத்திப்பிடித்துத் தூக்கிவந்தாய்?”

கேட்டு முடிக்கும்முன் நீலன் சொன்னான், ``நீ நழுவி ஓடிவிடுவாய் அல்லவா? அதற்காகத்தான்” சொல்லி முடிக்கும்முன் சடசடவென விழுந்தது மாங்காயின் எறி. கூட்டத்தின் சிரிப்பு விண்ணைத் தொட்டது. ``நான் உன்னை விட்டு எங்கேடா போகப்போகிறேன். என்மீது நம்பிக்கை இல்லாமல்தான் அவ்வளவு இறுக்கமாகப் பிடித்திருந்தாயா?” எனக் கேட்டபடி கிளையிலிருந்த மாங்காயைப் பறித்துப் பறித்து எறிந்தாள். அவன் எறிபொறுக்கமாட்டாமல் மரத்தின் அப்பக்கமும் இப்பக்கமுமாக ஓடி மறைந்தான். அவளோ கொப்புகளின் மீது இங்குமங்குமாக ஓடியோடி எறிந்தாள்.



அவனுக்காக இரக்கப்பட்ட பெண்ணொருத்தி, ``உன்மேல இருந்த ஆசையிலதான் இறுக்கிப் பிடிச்சேன்னு சொல்லாம இப்படிச் சொல்லிட் டானே” என்று வருத்தப்பட்டுச் சொன்னபொழுது அவளுக்கும் சேர்த்துவிழுந்தது எறி.

அதன்பின் நீலன் முன்னால் வந்து நிற்கவே நீண்டநேரமானது. அவள் கடுங்கோபத்தோடு கண்ணிற்பட்டபொழுதெல்லாம் எறிந்து கொண்டேயிருந்தாள். அவன் ஓடியோடி மறைந்துகொண்டிருந்தான். பொழுதாகிக் கொண்டிருக்கிறது என்று மயிலாவை சமாதானப்படுத்தி நீலனை அழைத்துவந்து அவளின் முன்னால் நிறுத்தியது கூட்டம்.

அடுத்து என்ன கேட்கப்போகிறாளோ என்ற பதைபதைப்போடு இருந்தான் நீலன். அவளோ சற்றே கோபத்தோடு கேட்டாள், ``குழந்தை பிறந்தவுடன் எந்த மார்பில் முதலில் பால்கொடுக்க வேண்டும்?”

பெண்குழந்தையென்றால் இடதுமார்பிலும் ஆண் குழந்தையென்றால் வலதுமார்பிலும் என்று நினைவுக்கு வந்தது. வந்தவுடன் குழப்பமும் சேர்ந்துவந்தது. ‘ஆண் குழந்தைக்குத்தானே இடதுமார்பு!’ என்று குழம்பியபடியே அமைதியானான்.

கூட்டத்திலிருந்த பெண்ணொருத்தி அருகிருந்தவளிடம் சொன்னாள். ``இந்தக் கேள்விக்கு என்ன விடை சொன்னாலும் எறி உறுதி.”

``ஏன்?” என்றாள் அருகிலிருந்தவள்.

``தவறாகச் சொன்னால், ‘இதுகூடத் தெரியவில்லையா?’ எனச் சொல்லி எறிவாள். சரியாகச் சொன்னால், `உனக்குத்தான் அக்கா தங்கச்சி இல்லையே; எவகிட்ட இதக் கேட்ட?’ என்று சொல்லி விடாமல் எறிவாள்” என்று சொல்லிச் சிரித்தாள்.

நீலனின் நிலைமை படுமோசமானது. எல்லோரும் எறி எப்போது தொடங்கப்போகிறது என்று உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தனர்.

நீலன் சொன்னான், ``நான் பிறந்த உடனே ஆத்தாகாரி இறந்துவிட்டாள். உடன்பிறந்தவர்களும் இல்லை. அப்படியென்றால் காதலி நீதானே இதனைச் சொல்லித்தந்திருக்க வேண்டும்?”

எதிர்பாராத பதில். மயிலா ஒரு கணம் திகைத்துப்போனாள். அவன் தன் தாயின் இடத்தில் அவளைவைத்துச் சொல்லிய சொல் மயிலாவை ஏதோ செய்தது. சற்றே அமைதியானாள்.

அவளின் வேகம் மட்டுப்பட்டதை எல்லோரும் பார்த்துக்கொண்டிருந்தனர். அவளோ உணர்வுகளை வெளிக்காட்டிக்கொள்ளாமல் அடுத்த கேள்வியைக் கேட்டாள்.

``நம் குழந்தைக்குப் பாட உனக்கு எத்தனை தாலாட்டுகள் தெரியும்?”

மூணு, ஆறு, பத்து என கூட்டத்திலிருந்த பெண்களின் வாய்கள் முணுமுணுத்தன. அவளிடம் நீலன் மறுபடியும் எறிவாங்கக் கூடாது என எல்லோரின் ஆசையும் எண்ணிக்கையாய் வெளிவந்துகொண்டிருந்தது.
நீலன் சொன்னான் ``ஒரே ஒரு பாட்டு.”

முணுமுணுத்த பெண்கள் தலையில் கையைவைத்தனர். ``கூடுதலாகச் சொல்ல வேண்டியதுதானே. அவள் மீண்டும் எறியப் போறாளே” என்று பதறியபொழுது மரத்தின் மீதிருந்த மயிலா கேட்டாள், ``என்ன பாடல் அது?”

அதுவரை அண்ணாந்து மேலே பார்த்துக் கொண்டிருந்த நீலன் தலைகவிழ்ந்து மண்ணைப் பார்த்தான், கண்களை மூடினான், வைகையின் அலை கரைவந்து அடித்தது. நீரின் செந்நிறத்தை நினைவில் ஏந்தியபடி அகுதையின் பாடலைப் பாடத் தொடங்கினான்.

கூட்டத்தின் ஆரவாரம் கொஞ்சம்கொஞ்சமாக ஒடுங்கியது. எல்லோரும் அமைதியாயினர். அவன் பாடல் மட்டுமே காற்றெங்கும் ஒலித்தது. மயிலாவின் கால்கள் மரம்விட்டுக் கீழிறங்கிக் கொண்டிருந்தன. இமைமூடிய நீலனின் கண்களுக்குள் வைகையை விட்டுக் காட்டுக்குள் ஓடிய குழந்தையே தெரிந்தான். அக்குழந்தை நகரும் செம்மூதாயைத் தொட்டபொழுது தாய் அவளைத் தூக்கினாள். அவ்வரியை அவன் பாடும்பொழுது தன்னையே தூக்குவதுபோல் உணர்ந்தான். அவள் குழந்தையைத் தோளிலே ஏந்தியபடி காட்டுக்குள் நடக்கத் தொடங்கினாள். மயிலாவும் அதனையே செய்தாள். இப்பொழுது நீலனை அவளது தோளிலே தூக்கியிருந்தாள். நீலன் நினைவு மீண்டபொழுது

மயிலாவின் இறுகிய கைப்பிடியிலிருந்து அவனால் தன்னை விடுவிக்க முடியவில்லை. கூட்டம் இருவரையும் வணங்கி விலகியது.

நெடுங்குன்றின் அடிவாரத்தை அடைந்தபொழுது அங்கும் அதேபோன்று தாவாரம் அடிக்கப்பட்டிருந்தது. படைவீரர்கள் புதர்களை நீக்கும் வேலையைச் செய்துகொண்டிருந்தனர். இணைக்கயல் சின்னம் பளிச்சிட்டது. ஆனால், வெள்ளடிக்குன்றின் எதிர்ப்புறம் இருந்தவர்களைவிட இங்கு இருப்பவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தனர். குன்றின் மீதிருந்தபடி பாரியும் பிறரும் அதனைப் பார்த்தனர்.

வெள்ளடிக்குன்றுக்கும் நெடுங்குன்றுக்கும் இடையில் பலகாதத் தொலைவு இடைவெளி உண்டு. “ஏன் இவ்விரு இடங்களில் படைகளை நிறுத்த எண்ணுகிறான்?” என்று கேட்டான் முடியன்.

என்ன நடக்கிறது என்பதை உற்றுக் கவனித்துக்கொண்டிருந்த பாரி சொன்னான். “இவ்விரு இடங்களில் படைகளை நிறுத்தவில்லை. இவ்விரண்டு எல்லைக்கும் இடையில் முழுவதுமாகப் படையை நிறுத்தப்போகிறான்.”

சற்றே திகைத்த முடியன் ``இத்தனை காதத்தொலைவா?”

``ஆம். இத்தனை காதத்தொலைவிற்கு நிறுத்துமளவிற்குப் படைபலம் இருப்பதால்தான் அவன் துணிந்து வருகிறான்” என்றான் பாரி.

சிறிதுநேரம் மூவரிடம் எந்தப் பேச்சும் இல்லை. சற்றே பின்புறம் திரும்பி மலையுச்சியைப் பார்த்தான் பாரி. சித்தேறி முகட்டிலிருந்து இருகூறாகப் பிளந்து சரிந்திருந்தது மலையடிவாரம்.

அவன் சொல்லப்போவது என்னவென்று தேக்கன் கணித்தான்.

மீண்டும் சமதளத்தைப் பார்த்தபடி பாரி சொன்னான், ``இவ்வடிவாரத்தில் எத்தனை பெரியபடையைக் கொண்டுவந்து நிறுத்தினால்தான் என்ன?” என்று சொல்லியபொழுது அவனது முகத்தில் ஓடிய சிரிப்பு கணநேரத்துக்குள் இருவரின் முகத்திலும் பரவியது.

பாரி வேட்டுவன் பாறைக்குத் திரும்பும்பொழுது பந்தவெளிச்சத்தில் மலைமுழுவதும் ஒளிவீசிக்கொண்டிருந்தது. எங்கும் மனிதத்தலைகள் தெரிந்தன. மணவிழாவுக்கு வந்துசேரவேண்டிய எல்லோரும் வந்துவிட்டனர். பாரியும் தேக்கனும் முடியனும் ஊருக்குள் நுழையும்பொழுது பொழுதடைந்து விட்டதால் மயிலா கோபித்துக்கொள்வாளோ எனத் தோன்றியது. ஆனால் பெண்ணை அழைத்துக்கொண்டு வரவே பொழுதுசாய்ந்து விட்டது என்றனர். காரணம் கேட்டபொழுது மாமரத்தில் ஏறிக்கொண்ட மயிலாவின் கதையைச் சொன்னார்கள். மகிழ்ந்து சிரித்தான் பாரி.

வந்த மூவரும் உணவருந்தினர். இசையின் பெருமுழக்கம் மீண்டும் தொடங்கியது. புதுமகிழ்வில் ஊர் திளைத்தது. பாரிக்காகவே காத்திருந்த பெரியவர்கள் அடுத்தகட்ட வேலையைத் தொடங்கினர்.

நீலனையும் மயிலாவையும் இருதிசைகளிலிருந்து ஆட்டபாட்டத்தினூடே அழைத்துவந்தனர். மந்தையின் நடுவிலிருக்கும் செங்கடம்பு மரத்தினடிவாரத்தில் வந்துசேர்ந்தனர்.




ஊரின் நிலைமரம் அது. அதனடிவார மேடையில் நின்று மணமக்கள் மாலை சூட வேண்டும். மயிலம் மலர் மணக்கும் மாலையை அவர்கள் சூடிய பொழுது மலையெங்குமிருந்து பறித்துவந்த பூக்களை அவர்களின் மீது பொழிந்தனர் மக்கள். இசையோசையும் ஆரவாரமும் விண்ணைத்தொட, மலர்மணத்தில் மந்தையே கிறங்கியது. வந்தவரெல்லாம் வாழ்த்துச்சொல் கூறினர்.

அடுத்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள மனைக்கு அவர்கள் செல்லவேண்டும். நீலன் புதுமனை நோக்கி மயிலாவை அழைத்துச்சென்றான். அவனுக்குப் பின்னால் பாரியும் வேட்டூர் பழையனும் தேக்கனும் வந்தனர். அவர்களைத் தொடர்ந்து ஊரே வந்துகொண்டிருந்தது. நாங்கில்மரத்தின் அடிவாரமிருந்த புதுக்குடிலுக்கு வந்துசேர்ந்தனர். கூட்டத்தின் ஆரவாரமும் கேலிப்பேச்சும் பன்மடங்கு கூடியது. குலவை ஒலி பெருகிவர மயிலாவை அழைத்துக்கொண்டு மனைக்குள் நுழைந்தான் நீலன்.

எங்கும் உற்சாகப் பேரொலி. சற்று தொலைவில் பெண்களின் கூட்டத்தினூடே இருந்த ஆதினியைப் பார்த்தான் பாரி. அவளின் கண்கள் அங்குமிங்குமாக தவித்து அலைந்து கொண்டிருந்தன. வழக்கத்துக்கு மாறாக இருப்பதை உணர்ந்து அருகில் சென்றான் பாரி.


கலங்கிய அவள் கண்களில் நீர்பெருகியிருந்தது.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-71

கலங்கி நின்ற ஆதினி சொன்ன செய்தி எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. உதிரனும் அங்கவையும் மணவிழாவுக்கு வந்துசேரவில்லை என்பதுதான் அச்செய்தி. எவ்வியூரிலிருந்து மணவிழாவுக்கு ஒருவாரத்துக்கு முன்பே தன் தோழிகளோடு புறப்பட்டாள் அங்கவை. நான்கு நாள்களுக்கு முன்புதான் புறப்பட்டாள் ஆதினி. இரண்டு இரவும் மூன்று பகலுமெனப் பயணித்து மணநாளுக்கு முதல்நாள் வந்துசேர்ந்தாள் ஆதினி.

அவள் வந்தபொழுது விருந்தினர்களின் பெருங்கூட்டம் வேட்டுவன் பாறைக்கு வந்துசேர்ந்திருந்தது. பறம்புநாடு நானூற்றுக்கும் மேற்பட்ட ஊர்களைக்கொண்டது. எல்லா ஊர்களிலிருந்தும் நீலன்மயிலா திருமணத்துக்கு மக்கள் வந்துசேர்ந்திருந்தனர். தொலைவில் உள்ள ஊர்களிலிருந்து ஓரிருவரும் அருகிலுள்ள ஊர்களிலிருந்து பலரும் வந்துசேர்ந்திருந்தனர்.




தன் கூட்டத்தோடு ஆதினி வந்தபொழுது வேட்டுவன் பாறை மக்கட்கூட்டத்தால் திணறிக்கிடந்தது. எல்லோரும் ஆதினியைக்கண்டு நலங்கேட்டனர். அவளும் வந்ததிலிருந்து இங்குமங்குமாக அலைந்துகொண்டே இருந்தாள். இரண்டொருமுறை சங்கவையைப் பார்த்தாள். அங்கவையோ கண்ணிற்படவேயில்லை. இந்தப் பெருங்கூட்டத்தில் தன் தோழிகளோடு எங்காவது சுற்றிக்கொண்டிருப்பாள் என்று நினைத்தாள். ஆனால், நள்ளிரவில் தொடங்கிய குரவைக்கூத்தில் இணையர்கள் எல்லாம் களமிறங்கியபொழுது அங்கவையும் உதிரனும் ஆடும் ஆட்டத்தைப் பார்க்க மிகுந்த ஆவலோடு வந்து நின்றாள். ஆனால், அவர்கள் இருவரும் களமிறங்கவில்லை. குரவைக்கூத்தில் பங்கெடுக்காமல் எங்கே போனார்கள் என்று தேடத் தொடங்கியபொழுது எதிர்ப்பட்ட

அங்கவைக்குத் தோழியிடம் கேட்டாள்.

“எவ்வியூரிலிருந்து புறப்பட்ட முதல்நாள் இரவு புலிவால்குகையில் தங்கினோம். மறுநாள் காலையில் எழுந்தபொழுது உதிரன் வந்திருந்தான். ‘நீலன்மயிலாவுக்கு அதிசிறந்த பொருளொன்றை மணவிழாவன்று தந்து மகிழ்விக்க வேண்டாமா?’ என்றான். ‘ஆமாம். என்ன தரலாம்?’ என அங்கவை கேட்டபொழுது அவன் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான். ‘நாங்கள் பரிசுப்பொருளோடு வேட்டுவன் பாறைக்கு வந்துசேருகிறோம்’ என்று சொல்லிவிட்டு இருவரும் புறப்பட்டுப் போய்விட்டனர். இன்று வந்துவிடுவாள் என நினைத்திருந்தேன். இன்னும் வரவில்லையா?” எனக் கேட்டாள் அவள். உதிரன் தோழர்கள் யாருக்கும் இதுபற்றித் தெரியவில்லை.

நீலனும் மயிலாவும் புதுமனை புகுந்தவுடன் நிலைமையைப் பாரியிடம் விளக்கினாள் ஆதினி. அன்றிரவு வேட்டுவன் பாறையிலே அனைவரும் தங்கினர். பொழுது விடிந்தது. ஆனால் உதிரனைப்பற்றிய எந்தச்செய்தியும் யாரிடமுமில்லை.
அதற்காக யாரும் பதற்றங்கொள்ளவில்லை. உதிரனும் அங்கவையும் சிறுவர்களல்லர். காடறியும் பயிற்சியில் முதன்மைவீரனாக விளங்கியவன் உதிரன். பச்சைமலையின் எந்தக் காட்டிலும் எவ்வளவு நெருக்கடியான நிலையிலும் மீண்டுவர அவனால் முடியும். அங்கவையும் இணைசொல்ல முடியாத வீரமுடையவள்தான். ஆபத்தில் சிக்கி உதவிதேவைப்பட்டால் சென்றிப்புகையைப் போட்டிருப்பர்.

“மணவிழாவுக்கு வந்துள்ள அனைவரும் அவரவர் ஊர்களுக்குப் புறப்படுங்கள். ஏதாவது சிக்கலில் மாட்டியிருப்பது அறிந்தால் தக்க உதவியைச் செய்யுங்கள்” என்று சொல்லி அனைவரையும் அனுப்பிவிட்டு எவ்வியூர் நோக்கிப் புறப்பட்டான் பாரி.

மணவிழாவுக்கு ஆறு நாள்களுக்கு முன்பு, அதிகாலையில், புலிவால் குகையில் தோழிகளோடு இருந்த அங்கவையைக் கண்டு பேசினான் உதிரன். சிறந்ததொரு பரிசுப்பொருளினை நீலன்மயிலாவுக்குத் தரவேண்டும் என உதிரன் சொன்னபொழுது அங்கவை பெருமகிழ்வோடு அதனைக் கண்டடைய உடனே புறப்பட்டாள். அவளும் குதிரையேற்றம் தெரிந்தவள். தன்னுடனிருந்த இன்னொரு காவல்வீரனின் குதிரையை வாங்கி அங்கவைக்குக் கொடுத்தான் உதிரன். இருவரும் குதிரைப்பாதையில் பயணிக்கத் தொடங்கினர்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை காய்ப்பதுதான் கிளிமூக்கு மாங்காய். பச்சைமலைத்தொடரின் வியப்புறு கனிகளில் அதுவும் ஒன்று. அத்தகைய கனி பறம்பின் வடதிசையில் உள்ள கொழுமலையில் உள்ள செவ்வரிக்காட்டில் காய்த்திருப்பதாகக் காவல்வீரர்கள் சொன்ன செய்தியைக்கொண்டு அப்பக்கமாகப் பயணத்தைத் தொடங்கினான் உதிரன். கொழுமலையென்பது எவ்வியூரிலிருந்து குதிரைப்பாதையில் சென்றால் ஐந்துநாள் பயணத்தொலைவைக் கொண்டது. அவ்வளவு நெடுந்தொலைவு சென்று மணநாளுக்கு முன் திரும்ப முடியாது என நினைத்த உதிரன். மலைமுகட்டில் அமைந்துள்ள குதிரைப்பாதையிலே தொடர்ந்து செல்லாமல், சில இடங்களில் குதிரைப்பாதையையும் சில இடங்களில் குறுக்குவழியில் நடைபாதையுமாக மாறி மாறிச் சென்று குன்றுகளைக் கடந்து கொண்டிருந்தான்.

முதல் இருநாள்கள் மலைமுகட்டின் வழியிலான குதிரைப்பாதையிலே சென்றனர். அங்கவை உடனிருப்பதால் காடுகளுக்குள் தங்காமல் அருகிலுள்ள ஊர்களிலேயே தங்கினர். அவ்வூர்களிலிருந்து மணவிழாவுக்குச் செல்பவர்கள் எல்லாம் ஏற்கெனவே புறப்பட்டிருந்தனர். பின்னர் குறுக்குவழியில் மலையிடுக்குகளுக்குள் புகுந்து பயணத்தைத் தொடர்ந்தனர். மூன்றாம் நாளும் நான்காம் நாளும் நடந்தே செல்ல வேண்டியிருந்தது. உதிரன் நினைத்ததுபோலப் பயணத்தின் வேகம் இல்லை. காரணம் வழியை விட்டுத் தொலைவில் இருக்கும் ஊர்களில் இரவு தங்கவேண்டியிருந்ததால் அங்குபோய்த் திரும்ப நேரமானது.

ஆனாலும் பாதிக்கு மேற்பட்ட தொலைவு வந்தபின் திரும்ப முடியாது என்ற காரணத்தால் பயணத்தைத் தொடர்ந்தனர். கிளிமூக்கு மாங்கனியோடு நீலன்மயிலாவைக் காண்பது எவ்வளவு மகிழ்வைத்தரும் என்பதை நினைத்தபடி அவர்கள் நடந்தனர்.

தன் காதலனோடு பயணிக்கும் அங்கவையின் மனநிலை முற்றிலும் வேறாக இருந்தது. அடர்காடுகளுக்குள் உதிரனோடு நீண்ட நெடும்பயணம். அவனால் காட்டின் எந்த இண்டிடுக்குக்குள்ளும் நுழைந்து வெளியேற முடியும். அவளை எந்தவொரு ஆபத்தும் தீண்டிவிடாதபடி பாதுகாக்க முடியும். பொதினியில் மருத்துவ அறிவை ஆணுக்கு நிகராகப் பெண்களும் அறிவர். அதனால்தான் ஆதினி மூலிகைச்செடிபற்றிய பேரறிவைக்கொண்டவளாக இருந்தாள். அங்கவையையும் அவளைப்போலவே வளர்த்திருந்தாள். இப்பொழுது கபிலரின் மொழியறிவும் அவளுள் செழித்திருக்க அவள் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் புதிதாய் மலரும் பூவினைப்போல் ஒளியும் மணமும் வீசியது.

இருவரின் வியப்புகளுக்குள் அடங்காமல் விரிவடைந்துகொண்டே இருந்தது காடு. நான்காம் நாள் இரவு எயினூரில் தங்கினர். வந்திருப்பது அங்கவை என அறிந்து ஊரே விருந்துசெய்து மகிழ்ந்தது. உதிரனுக்கு வேறொன்று நினைவுக்கு வந்தது, அதனை அங்கவையோடு பகிர்ந்துகொண்டான். “காடறியும் காலத்தில் இவ்வூரின் மேற்றிசையில்தான் இராவெரி மரத்தைப் பார்த்தேன்” என்றான்.

அதனைச் சொன்ன கணத்தில் அங்கவையின் முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தது. “எவ்விடத்தில் இருக்கிறது என்பது உனக்கு நினைவில் உள்ளதா?”

“நன்றாக நினைவில் உள்ளது.” “சென்று பார்ப்போமா?”

“நாம் பார்த்துத் திரும்ப, இருபகல் ஓர் இரவு ஆகுமே.”

அங்கவை சற்றே சிந்தித்தாள். உதிரன் சொன்னான், “ஏற்கெனவே அதிக நாள்களாகிவிட்டன. இனியும் நாம் காலந்தாழ்த்த வேண்டாம். இன்னொருமுறை அதனைப் பார்ப்போம்” என்றான். அங்கவையின் முகம் சற்றே வாடியது. மனக்கவலை தீர இரவில் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தான் உதிரன்.

அங்கவை தங்கிய குடிலின் மூதாட்டி, “இராவெரி மரத்தைப் பார்க்காவிட்டாலென்ன! இரிக்கிச்செடியைப் பறித்துவந்து காட்டு” என்றாள்.



மூதாட்டி என்ன சொல்லுகிறாள் என்று உதிரனுக்குப் புரியவில்லை. “இரிக்கிச் செடி என்றாள் என்ன?” எனக் கேட்டான்.

``உனக்கும் தெரியாதா?” எனக் கேட்டவள், தூரத்திலிருந்த பெண்ணை சத்தம்போட்டு அழைத்து, “இவ்விருவரையும் கூட்டிப்போய் இரிக்கிச்செடியைக் காட்டு” என்றாள்.


அப்பெண், இருவரையும் அழைத்துக்கொண்டு காட்டுக்குள் நுழைந்தாள். தேய்பிறையின் கடைசிக் காலமாதலால் மாமலை கும்மிருட்டில் மூழ்கிக்கிடந்தது. ஊரை விட்டு சற்றுத்தள்ளி உள்ளே போனவள், சந்தன மரத்தின் அடிவாரத்தில் பின்னிக்கிடந்த பெருங்கொடியைப் பிடித்துத்தூக்கினாள். அவர்கள் இருவரும் அக்கொடியையே பார்த்தனர். கொடியின் முனைப்பகுதியை மட்டும் ஒடித்தவள் அங்கவையையும் உதிரனையும் கைநீட்டச் சொன்னாள். இருவரும் கையை நீட்டினர்.

ஒடித்த கொடியிலிருந்து கசியும் நீரினை இருவரின் உள்ளங்கையிலும் ஒவ்வொரு துளி வைத்தாள். இதனை ஏன் கையில் வைக்கிறாள் என இருவரும் உள்ளங்கையை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர். பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவர்களின் கண்கள் விரியத் தொடங்கின. அத்துளி வெண்மை நிறங்கொண்டதாக மாறியபடியிருந்தது. கெட்டியான பால்துளிபோல் அது இருப்பதைப் பார்த்தனர். வியப்பு அடுத்தகட்டத்தை அடைந்தது. இவ்விருட்டில் இவ்வெண்மை நிறம் எப்படி இவ்வளவு துல்லியமாகத் தெரிகிறது எனச் சிந்தித்தபொழுதுதான் புரியவந்தது, அத்துளிநீர் மெல்லியதாய் ஒளியை உமிழ்ந்துகொண்டிருக்கிறது என்று. மின்னுட்டான் பூச்சியின் உடலுக்குள் இருக்கும் வெண்பச்சைநிற நீர்போல்தான் இதுவும் பச்சையின்றி முழுவெண்மையில் ஒளியை உமிழ்கிறது. இருவரும் தங்களின்

உள்ளங்கைக்குள் ஓர் அதிசயத்தை வைத்துக்கொண்டு நின்றனர். கைநடுக்கத்தில் காற்றில் அசையும் சுடர்போல் கையொளி அசைந்துகொண்டிருந்தது.
அழைத்துவந்தவள் நீண்டநேரத்துக்குப் பின், “இன்று இரவு முழுவதும் வைத்திருந்தாலும் ஒளிமங்காது. வாருங்கள் போவோம்” எனச் சொல்லி ஊருக்கு அழைத்துவந்தாள். வரும்பொழுது நீண்டு படர்ந்துகிடந்த அதன் கொடியைப் பறித்து வந்தான் உதிரன்.

ஊர்வந்ததும் அங்கவை தங்கும் குடிலின் உட்புறச்சுவரிலும் மேற்கூரையிலும் செடியை ஒடித்து, கசியும் நீரினைப் பொட்டுப்பொட்டாக வைத்துவிட்டு வெளியேறினான். எரிந்துகொண்டிருந்த சிறுவிளக்கினை அணைத்தாள் அங்கவை. விளக்கொளி நீங்கியதும் குடில் முழுவதும் பெருகி நிறைந்தது இருள். சிறிதுநேரத்திலே நீர்த்துளிகள் பால்நிறங்கொள்ளத் தொடங்கின. இங்குமங்குமாக இருளுக்குள்ளிருந்து வெண்ணிற மொட்டுக்கள் அவிழத்தொடங்கின. அவிழும்பொழுதே ஒளி கசிந்துபரவியது. வான்வெளியில் மஞ்சள் ஒளிசிந்தும் விண்மீன்கள் வெண்மைநிற ஒளியைச் சிந்தினால் எப்படி இருக்கும் என்பதை அங்கவை இரவு முழுவதும் பார்த்திருந்தாள். அவ்விரவு முழுவதும் அவளின் கைக்கெட்டும் தொலைவில் விண்மீன்கள் நிறைந்துகிடந்தன.

பொழுது விடிந்தது. அவர்கள் விரைந்து புறப்பட்டனர். அப்பொழுது உதிரன் செவ்வரிக்காட்டினைப் பற்றி எயினூர் மக்களிடம் கேட்டான். அவர்கள் அக்காட்டினை அடையும் திசைக்குறிப்பினைச் சொன்னார்கள். கிளிமூக்கு மாங்கனி வேண்டும் என்று சொல்லியிருந்தால், அவர்களும் உடன்வந்து பறித்துத் தந்திருப்பார்கள். ஆனால், தாமாகக் கண்டறிந்து நீலன்மயிலாவுக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்பதால் அதனைப்பற்றிக் கேட்கவில்லை.



அவர்கள் சொன்ன குறிப்பின் அடிப்படையில் நடைவழிப்பாதையில் இருமலைகளைத் தாண்டினர். செங்குத்தான ஏற்ற இறக்கமாதலால் களைப்பு அதிகமாக இருந்தது. அன்றிரவு குகையினில் தங்கினர். அருகில் ஊரெதுவும் கிடையாது. உதிரன் கையில் இரிக்கிக்கொடியைப் பறித்து வந்திருந்தான். குகைமுழுவதும் வான்வெளியாக மாற்றி அங்கவையைத் தூங்கவைத்தான். குகைவாயிலில் இரவு முழுவதும் விழித்திருந்தான். அதிகாலை அவள் எழுந்ததும் சிறிதுநேரம் அவன் உறங்கினான்.

வெயில் ஏறத் தொடங்கியபொழுது அவர்கள் வேகவேகமாக நடந்துகொண்டிருந்தனர். செவ்வரிக்காட்டுக்குள் உச்சிப்பொழுதில் நுழைந்தனர். நீண்டுகிடக்கும் மலைமடிப்பின் இருபக்கச் சரிவிலும் பரவிக்கிடப்பதுதான் செவ்வரிக்காடு. காட்டின் நடுவில் ஊடறுத்து ஓடிக்கொண்டிருந்தது எழுவனாறு. அகலமான இவ்வாற்றில் ஒருதுளி நீரில்லை. கோடையின் வெக்கையில் மணற்துகள்கள் மின்னிக் கொண்டிருந்தன.

இருவரும் ஒவ்வொரு மரமாக உற்றுப்பார்த்தபடி நடந்துகொண்டிருந்தனர். எண்ணற்ற மாமரங்கள் இருந்தன. அவை எதிலும் கிளிமூக்கு மாங்கனி இல்லை. மரத்தைப் பார்த்தபடியே இங்குமங்குமாக நடந்தனர். கொடுங்கோடையாதலால் செடிகொடிகள் வதங்கிப்போயிருந்தன. பச்சைமலையின் அடிவாரக்குன்றுப்பகுதிகள் இவை. எனவே வெக்கையின் தாக்கம் கடுமையாகவே இருந்தது.

நன்கு படர்ந்து விரிந்திருந்த மாமரத்தின் அடிவாரத்தில் ஓய்வெடுக்கலாம் என அமர்ந்தனர். சற்றே அவன் தோள்சாய்ந்தாள் அங்கவை. சிறிது ஓய்வுக்குப்பின் உதிரன் சொன்னான், “நிழலிலே அமர்ந்தாலும் வெப்பத்தின் தாக்கம் குறையவில்லை.”

அங்கவை பதிலேதும் சொல்லவில்லை.

“ஏன் எதுவும் பேசாமல் இருக்கிறாய்?” எனக் கேட்டான் உதிரன்.

தோளிலே சாய்ந்திருந்தவள் முகம்பார்த்துப் பேசுவதற்காக எதிரே வந்து உட்கார்ந்து சொன்னாள், “இது மகிழ்வை மட்டுமே அறியும் பருவம். இதற்கு நிழலும் பொருட்டல்ல, வெயிலும் பொருட்டல்ல.”

சொல்லியபடி புன்னகைத்த அவளை மகிழ்ந்து கவனித்துக்கொண்டிருந்த உதிரனின் முகம் சட்டெனக் கடுமையானது. ``அசையாமல் இரு” என்றான்.

என்னவென்று புரியாமல் திகைத்தபடி இருந்தாள் அங்கவை. அவளது கழுத்தின் பின்பகுதியில் அமர்ந்திருந்த பெரிய ஈ ஒன்றை நோக்கி வலக்கையை மெதுவாகக்கொண்டுபோய் சட்டென அமுக்கிப்பிடித்தான்.

பிடித்த வேகத்தில் கைகளை மூடியவன் மெல்ல விரலிடுக்குகளின் வழியாக உள்ளிருப்பதைப் பார்க்க முயன்றான். இவ்வளவு கூர்மையாக எதனைப் பார்க்கிறான் என்று அவளும் உற்றுநோக்கினாள். விரல் இடுக்குகளுக்குள்ளிருந்து அது தலையை முண்டி வெளியேற முயன்றது. அதன் தலையையும் வெளிவரமுயலும் அதன் எத்தனிப்பையும் கவனித்தபடி உதிரன் சொன்னான், “இது அடவி ஈ. மூன்றுநான்கு ஈக்கள் கடித்தால் சற்றுநேரத்திலே மனிதன் மயக்கம் அடைந்துவிடுவான். எண்ணற்ற ஈக்கள் மொய்த்துக்கொண்டு கடித்தால் மரணங்கூட ஏற்படலாம்.”


கணநேரத்தில் அங்கவையின் முகம் இறுகி உறைந்தது. அதனைக் கவனித்தபடி உதிரன் சொன்னான், “இந்த ஈ உன்னைக் கடிக்கவில்லை. அமர்ந்ததும் பிடித்துவிட்டேன். அதுமட்டுமல்ல; ஓர் ஈ கடித்ததால் ஒன்றும் ஆகிவிடாது.”

தலையை மறுத்து ஆட்டியபடி அங்கவை சொன்னாள், “உனது முதுகில் மூன்றுநான்கு ஈக்கள் இருப்பதை அப்போதே பார்த்தேன்.”

சற்றே அதிர்ந்தான் உதிரன்.

சொல்லிக்கொண்டே அவனது முதுகுப்புறமாக வந்துபார்த்தாள். மூன்று ஈக்கள் முதுகோடு ஒட்டியிருந்தன. மரத்தில் சாய்ந்திருந்ததால் மரப்பட்டை அழுத்துகிறது என நினைத்திருந்தான் உதிரன். அவள் தட்டிவிட்டதும் அவை பறந்து வெளியேறின.அவ்விடத்தில் முள்தைத்ததைப்போல் குருதி இருந்தது.

ஒன்றுக்கும் மேற்பட்ட ஈக்கள் கடித்துள்ளன என்பதை அவளின் முகம்பார்த்து உணர்ந்த உதிரன் சொன்னான், “நீ கலங்காதே! ஒருவேளை நான் மயக்கமுற்றாலும் சிலபொழுதில் எழுந்துவிடுவேன். பதற்றமடையாமல் இரு” என்றான்.



அங்கவை சற்றே படபடப்போடு இருந்தாள். ஏனென்றால் இதனைச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே உதிரனின் கண்கள் செருகத் தொடங்கிவிட்டன. அதனைக் கவனித்தவள், அவனது தலையினைத் தனது மடியினில் மெல்லச் சாய்த்தாள். சிறிதுநேரத்திலேயே உதிரன் முழுமுற்றாக மயங்கினான்.

கலக்கத்தில் உடல் உதறுவதுபோல் இருந்தது, ஆனால், அடுத்தகணமே செய்ய வேண்டியதென்ன என்று சிந்தித்தாள். உடனடியாக சென்றிப்புகை போடுவோம். இப்பகுதியில் ஊரேதும் இல்லை. மலையின் பின்புறம் இருமடிப்புகள் தாண்டி எயினூர் இருக்கிறது. இங்கு புகைபோட்டால் அவ்வூரில் இருப்பவர்களால் பார்க்க முடியாது. இம்மலைப்பகுதியில் யாராவது இருந்தால்தான் உண்டு என்று எண்ணியபடி இங்குமங்குமாக சென்றிக்கொடியைத் தேடினாள்.

உதிரனின் இடுப்பிலிருந்த குறுவாளினை எடுத்து அருகிருந்த செடிகொடிகளை வெட்டியிழுத்தாள். வேகமாக அவற்றை உதிரனின் மீது போட்டு மீண்டும் ஈக்கள் மொய்க்காதபடி செய்தவள். சற்று விலகிப்போய் சென்றிக்கொடி தேடலாம் என்று முயன்றாள்.

அவளது தேடல் தொடர்ந்துகொண்டே இருந்தது. கீழ்ப்புறமாக எழுவனாற்றை நோக்கி இறங்கித் தேடினாள். அகன்று விரிந்து கிடந்தது எழுவனாறு. அதன் மணல் வெக்கையை உமிழ்ந்துகொண்டிருந்தது. ஆற்றினூடே குறும்பாறைகள் முளைத்துக்கிடந்தன. அவளின் கண்கள் எங்கும் ஓடித்திரும்பின. உதிரனைப் பார்க்கும் தொலைவைக் கடந்து போய்விடக்கூடாது என

நினைத்துக்கொண்டே திரும்பித் திரும்பிப் பார்த்தபடி தேடிக் கொண்டிருந்தாள்.

எப்பொழுதும் கண்ணில் தட்டுப்படும் ஒன்று தேடும்பொழுது மட்டும் ஏன் கிடைப்பதேயில்லை என்று எண்ணிக்கொண்டிருக்கையில் அவளது கண்களுக்கு முன்னால் அது படர்ந்துகிடந்தது. பார்த்ததும் பெருமூச்சு விட்டாள். கையிலிருந்த குறுவாள்கொண்டு கொடியின் அடிப்புறத்தை அறுக்க எண்ணித் தரையோடு அமர்ந்தாள். ஏதோ மாறுபட்ட ஓசை ஒலிப்பதுபோல் இருந்தது. என்னவோசையிது என்று எண்ணியபடி சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒன்றும் பிடிபடவில்லை. ஆனால், சிறிது சிறிதாக ஓசையின் அளவு கூடிக்கொண்டேயிருப்பதுபோல் உணர்ந்தாள்.

கையிலிருந்த குறுவாளோடு கொடியினை அறுக்காமல் அப்படியே எழுந்தாள். கண்கள் திசையெங்கும் தேடித்துழாவின. பெருகுமோசை என்னவென்று புரியவில்லை. காட்டின் கீழ்ப்புறமிருந்து பறவைகள் கலைந்து பறந்தன. அத்திசையிலிருந்துதான் ஓசை வருகிறதென அறியமுடிந்தது. என்னவென்று தெரியவில்லை. மலையின் உச்சியில் ஏறிநின்று பார்ப்போமா என்று எண்ணியபொழுது, மிகத்தொலைவில் எழுவனாற்று மணல்வெளியில் உருவங்கள் தென்படத் தொடங்கின.



வேகவேகமாக அருகிருந்த மரத்தின் மீதேறி, கொப்புகளுக்குள் தலைநுழைத்துப் பார்த்தாள். முதல்கணம் அவளால் காட்சியை உள்வாங்க முடியவில்லை. அகலவிரித்த கண்களில் தென்படும் எதுவும் அறிவிற்குப் புலப்பட மறுத்தது. எண்ணிலடங்காத யானைகள் எழுவனாற்று மணல்வெளியில் நடந்து முன்னேறிக்கொண்டிருந்தன. உயர்த்தப்பட்ட ஆயுதங்களோடு அவற்றின் மீது வீரர்கள் அமர்ந்திருந்தனர். ஆற்றின் இருகரையையும் அடைத்துக்கொண்டு அப்படை வந்துகொண்டிருந்தது.

காணுங்காட்சியை அவளால் நம்ப முடியவில்லை. சிந்தனையைக் கூர்மையாக்கி மீண்டும் கண்திறந்து பார்த்தாள். வந்துகொண்டிருப்பது பெரும்படை என்பதை சிந்தனைக்குள் ஆழப்பதிந்தாள். கண்கள் காட்சியை அலசிக்கொண்டிருக்க எண்ணம் செய்யவேண்டியதைப் பற்றிச் சிந்தித்தது. கண்பார்வையின் கடைசி விளிம்பில்தான் அப்படை நகர்ந்து வந்துகொண்டிருந்தது. ஆனால் மூலப்படைக்கு முன்னால் தூசிப்படை வருமென அவளுக்குத் தெரியும். அப்படியென்றால் ஆற்றின் இருகரைகளிலும் எதிரிகள் முன்னேறி வந்துகொண்டிருப்பர். எண்ணிய கணத்தில் மரம்விட்டுச் சட்டெனக் குதித்து இறங்கி, உதிரனை நோக்கி ஓடினாள்.

கணநேரத்துக்குள் வாழ்வின் காட்சிகள் மாறிக்கொண்டிருந்தன. மேலே கிடந்த செடிகொடிகளை விலக்கி அவனது கன்னத்தில் அறைந்தும் மார்பில் குத்தியும் எழுப்ப முயன்றாள். உதிரன் உணர்வற்றுக்

கிடந்தான். அங்கவை ஏதேதோ செய்துபார்த்தாள். கண்கள் கலங்கின. தலைமுடியைப் பிடித்து உலுக்கிப்பார்த்தாள். எந்தப் பயனுமில்லை. ஆவேசமும் குழப்பமும் கதறலுமாக மனம் கொந்தளிப்பில் அலைமோதியது. சட்டென அதே மரத்தின் மேலேறி, பொருத்தமான கிளையின் முனையில் போய்நின்று இலைகளை விலக்கிப்பார்த்தாள். மணல்தூசி அடுக்கடுக்காய் மேலேறிக் கொண்டிருந்தது. மிகத்தள்ளி அவர்கள் வந்துகொண்டிருந்தனர். ஆனால், ஆற்றின் எதிர்ப்புறச் சரிவிலிருந்து புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட பதாகையை ஒருவன் அசைத்துக் காண்பிப்பது அவளுக்குத் தெரிந்தது. வந்து கொண்டிருப்பது சோழனின் படை. அப்படியென்றால், அதே அளவுத் தொலைவில் இப்பக்கமும் தூசிப்படை முன்னேறியிருக்கும் என்பது புரிந்தது.



வெறிகொண்ட ஆவேசத்தோடு மரம் விட்டு இறங்கியவள், இங்குமங்குமாகத் தேடி, நீண்டுகிடந்த இண்டங்கொடியை இருபனை உயரத்துக்கு வெட்டியெடுத்தாள். ஒரு முனையில் உதிரனின் கால், இடுப்பு, மார்பு என அனைத்துப்பகுதியையும் மேல்நோக்கித் தூக்குவதற்கு ஏற்ப இறுகக்கட்டினாள். அவன் எவ்வித அசைவுமற்றுக் கிடந்தான்.
இண்டங்கொடியின் மறுமுனையை மரத்தின் கிளைகளுக்குள்ளே எறிந்தாள். தாழ்ந்திருந்த கிளையில் விழுந்து மறுபக்கமாகச் சரிந்தது. அதுவரை மேலே தூக்கி, பின்னர் மறுகிளை நோக்கி மேலுயர்த்துவதெல்லாம் முடியாதசெயல் எனச் சிந்தித்தவள். கொடியைக் கையில் எடுத்துக் கொண்டு சரசரவென மரத்தின் மேற்கிளையை நோக்கி ஏறினாள். பொருத்தமான இடமெனத் தென்பட்ட கவட்டைவடிவக் கிளையில் கொடியைப் போட்டு மறுபக்கமாகக் கீழே எறிந்தாள்.

மரம் விட்டு இறங்கியவள் இழுத்து மேலே தூக்க வசதியாக உதிரனை மரத்தினையொட்டி சாய்வாக உட்காரவைத்து, பின்புறமாகத் தொங்கிக்கொண்டிருக்கும் கொடியை இழுக்க ஆயத்தமானாள். இரு கைகளுக்குள்ளும் அடங்காத அளவு அகலங்கொண்டிருந்த இண்டங்கொடியைப் பிடித்து வாகாக நிற்க முயன்றாள். நகரும் படையின் ஓசை பெருக்கெடுத்து முன்னகர்ந்து வந்தது.

கையிலிருந்த கொடியை விட்டுவிட்டு ஓடிப்போய் எவ்விடம் வந்துள்ளனர் என்பதைப் பார்க்க எண்ணியவள் மறுகணம் இப்பொழுது கையிலிருக்கும் இக்கொடியை விடுவது, உதிரனின் உயிரை விட்டு அகல்வதற்கு நிகர். தூசிப்படையின் கண்களுக்கு மனிதர்கள் தெரிந்தால் வெட்டி யெறிந்துவிட்டுப் போவார்கள் எனச் சிந்தித்தபடி கொடியை இறுகப்பிடித்து வலுக்கொண்டு இழுத்தாள். உதிரன் மெல்ல அசைந்துகொடுத்தான். ஆனால், அவ்வளவு வலுமிக்க வீரனின் உடலை இழுத்து மேலேற்றுவதெல்லாம் எளிய செயலல்ல. ஆவேசங்கொண்டு முயன்றாள் அங்கவை.

அமர்ந்த நிலையிலிருக்கும் உதிரனை நின்றநிலைக்குக்கூடக் கொண்டுவர முடியவில்லை. இது தனிமனிதராகச் செய்யும் முயற்சியல்ல என்பது தெளிவாக விளங்கியது. ஆனால், இம்முயற்சியை விட்டால் உதிரனைக் காப்பாற்ற வேறு எவ்வழியுமில்லை என்பதும் உறுதியாகப் புரிந்தது. எண்ணங்களை ஒருங்கிணைத்து முழுமூச்சோடு முயன்றாள். ‘வீரமும் வலிமையும் சிந்தனையில்தான் உள்ளன. அதனால்தான் சின்னஞ்சிறியவர்களை வைத்துக்கொண்டு திரையர்களின் கூட்டத்தை நடுமலை வரை எதிர்கொண்டார் தேக்கன். அத்தனை முறை தாக்குதலுக்கு ஆளான பின்னும் தளராமல் இறுதி வரை ஓடினர் கீதானியும் அலவனும். எண்ணத்தின் உறுதி எதனையும் செய்யும் ஆற்றலைத் தரும் என்பதை உணர்ந்தபடி ஆவேசத்தோடு இண்டங்கொடியை இழுத்துப் பின்னால் நகர்த்தினாள்.

உதிரன் சற்றே மேலுயர்ந்தான். உதிரனைத் தூக்கிவிட முடியும் என்று கண்ணில் தெரிந்த நம்பிக்கை, கைகளின் வலுவை மேலும் கூட்டியது. உன்னியிழுத்துப் பின்னகர்ந்தாள். உதிரன் உயர்ந்துகொண்டிருந்தான். மூன்று, நான்கு என கைகளில் கொடியைச் சுழற்றியபடி இழுத்தாள். தாழ்ந்திருந்த கொப்பின் உயரத்தை அவன் தலை தொட்டது. கொடியை அருகிருந்த மரத்தில் இழுத்துக்கட்டிவிட்டு வேகமாக வந்து மேலேறினாள்.




இவ்வுயரத்தில் இருந்தால், மரத்துக்குக் கீழே யார் வந்தாலும் எளிதாகப் பார்த்துவிட முடியும். எனவே, மேலே உள்ள கிளைக்குக் கொண்டு போனால்தான் அவனை மறைக்க முடியும் எனத் தோன்றியதும் மீண்டும் கீழிறங்கிவந்து இழுக்க முயன்றாள். கைகளில் வலு போதவில்லை. என்ன செய்வதென்று புலப்படவில்லை. படையின் பேரோசை மலையெங்கும் அதிர்ந்து பரவியது. கைகளைத் தளர்த்தாமல் மூச்சினை இழுத்தாள். மனம் கொற்றவையை வணங்கியது. போர்த்தெய்வத்தின் ஆவேசத்தைக் கேட்டு மன்றாடினாள். மூடிய கண்களுக்குள் செம்பாதேவியின் நினைவு வந்தது. பற்களை நறநறவெனக் கடித்தபடி புலிக்கொடியைக் கிழித்து எறியும் ஆவேசங்கொண்டாள்.
``செம்பா தேவீ” என மனம் கதற, அடக்கமுடியாத ஆற்றலோடு இண்டங்கொடியை இழுத்துத் தள்ளினாள். உதிரன் மேற்கிளையில் முட்டி நின்றான். கயிற்றை மீண்டும் கட்டிவிட்டு மரமேறி

உச்சிக்குப் போனாள். கிளையின் பிளவில் பொருத்தமாக அவனை உட்காரவைத்துக் கவட்டையோடு சேர்த்து அவனைக் கட்டினாள். கீழ்ப்புறமிருந்து பார்த்தால் தெரியாத அளவு கொப்புகளை ஒடித்துச் செருகி மறைத்தாள். இண்டங்கொடியை முழுமையும் மேல்நோக்கி இழுத்துக்கொண்டாள்.

படையோசை எங்கும் கேட்டது. காடெங்கும் பறவைகள் கலைந்து பறந்தன. அடர்கிளைகளை மெல்ல விலக்கினாள். கிளி ஒன்று முகத்தில் கொத்துவதுபோல் வந்தது. தலையைப் பின்புறமாக இழுத்துக்கொண்டு பார்த்தாள். அது கிளிமூக்கு மாங்கனி. மரத்தின் உச்சிக்கிளையில் காய்த்துத் தொங்கிக்கொண்டிருந்தது. ஆடுங்கனியை இடக்கையால் விலக்கிப்பார்த்தாள். தூசிப் படையினர் முன்னேறி வந்துகொண்டிருந்தனர்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-72




மூன்றாம் நாள் நள்ளிரவில் உதிரனும் அங்கவையும் எயினூருக்குள் நுழைந்தனர். நாய்களின் குரைப்பொலியைக் கேட்டு ஊரே விழித்துக்கொண்டது. உடலும் மனமும் அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல் இருந்தன. எழுவனாற்றின் மணல்வெளியைக் கடக்க முடியவில்லை. எத்தனை காலடித் தடங்கள், யானையினுடையவை எத்தனை, வில் வீரர்களுடையவை எத்தனை, கொன்றழிக்க வேண்டிய எதிரிகளின் எண்ணிக்கைதான் எத்தனை எத்தனை!

பார்த்த காட்சியை மற்றவர்களிடம் சொல்ல, கொந்தளிக்கும் உணர்வு இடம் தரவில்லை. எயினூரிலிருந்து மிகத் தள்ளி குன்றுகள் பலவற்றைத் தாண்டி ஓடும் எழுவனாறு, எதிர்ப்புறமாகத் திரும்பிச் செல்கிறது. எனவே, எயினூர் மக்கள் யாரும் படையைப் பார்த்தறியவில்லை. வந்ததும் அங்கவையை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு வீரர்கள் இருவரை அழைத்துக்கொண்டு இரவோடு இரவாகப் புறப்பட்டான் உதிரன்.

மலைப்பாதையில் செங்குத்தான வழித்தடத்தில் கோழியனூரை நோக்கி மேலேறினர். இரவில் இந்தப் பாதையில் செல்வது ஆபத்து என ஊரார் தடுத்தபோதும் கேட்கும் நிலையில் உதிரன் இல்லை. கோழியனூரை அடைந்துவிட்டால் அங்கு காவல் வீரர்களிடம் விட்டுவிட்டு வந்த `குதிரையில் எவ்வியூர் விரைய வேண்டும். எதிரியின் படைகள் பறம்புக்குள் நுழைந்துள்ள செய்தியை மிக விரைவாக பாரியிடம் கொண்டு சேர்க்க வேண்டும். எழுவனாற்றின் வழித்தடத்தை யொட்டிய மலைப்பகுதியில் ஊர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. நாளையோ, நாளை மறுநாளோ படை வந்து கொண்டிருப்பதை மக்கள் பார்த்து விடுவர். வந்துகொண்டிருப்பது, இதுவரை பார்த்திராத அளவு

எண்ணிக்கைகொண்ட பெரும்படை. எனவே, ஆங்காங்கே உள்ள மக்கள் தாக்குதலைத் தொடங்கிவிடக் கூடாது. நன்கு ஒருங்கிணைந்த தாக்குதலாக இருக்க வேண்டும். செய்தியை மிக விரைவாகக் கொண்டுசேர்க்க வேண்டும் என்பதுதான் இப்போது முக்கியம்.'

நன்றாக வழி தெரிந்த இருவரோடு தான் மலையேற்றத்தைத் தொடங்கினான் உதிரன். செங்குத்தான பெரும்பாறைகளில் துணிந்து முன்னேறிச் சென்றனர். காலடியில் உருளும் கற்கள் கீழே போய் விழும் ஓசையைக்கூடக் கேட்க முடியவில்லை. மலைச்சரிவு அவ்வளவு ஆழமுடையதாக இருந்தது. பல இடங்களில் வேர்களையும் கொடிகளையும் பிடித்து மேலேற வேண்டியிருந்தது. வீரர்கள் இருவரும் உதிரனை அழைத்துச் செல்வதில் மிகக் கவனமாகச் செயல்பட்டனர்.

ஆனால், உதிரன் வெறிகொண்டபடி மேலேறிக் கொண்டிருந்தான். எந்த ஆபத்தையும் பொருட்படுத்த அவன் ஆயத்தமாய் இல்லை. அங்கவையின் செயல் அவனை உலுக்கியது. `எவ்வளவு இக்கட்டான நிலையில் தனியொருத்தியாக இருந்து என்னைக் காப்பாற்றியுள்ளாள். கடைசி வரை நம்பிக்கை இழக்காமல் செயல்பட்ட அவளின் துணிவு இணையற்றது. கால்களுக்குக் கீழே எண்ணிலடங்காத எதிரிகள் நகர்ந்து போய்க்கொண்டிருக்கும்போது பகலும் இரவும் கவனமாகத் தன்னையும் காத்து என்னையும் காத்துள்ளாள். இந்த உறுதிப்பாட்டுக்கும் துணிவுக்கும் முன்னால் நம் செயல்கள் எல்லாம் பொருட்டே அல்ல' என்று அவனுக்குத் தோன்றியது. எயினூர் வீரர்கள் சற்றே தயக்கத்தோடு கடக்கும் இடங்களைப் பாய்ந்து கடந்துகொண்டிருந்தான் உதிரன்.



அதிகாலை கோழியனூர் வந்து சேர்ந்ததும் காவல் வீரர்களிடம் குதிரையை வாங்கிக்கொண்டு எவ்வியூர் நோக்கி விரைந்தான். பாய்ந்து செல்லும் குதிரையால் அவனது வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. `மூன்று ஊர்களில் குதிரையை மாற்றி, பயணத்தை நிற்காமல் தொடரவேண்டும்' என்று எண்ணியபடி பகல் இரவு பாராமல் விரைந்துகொண்டிருந்தான்.

அங்கவை சொல்லிய ஒவ்வொரு சொல்லும் அவனால் நம்பவே முடியாததாக இருந்தது. அவன் விழிப்புற்றபோது பெரும்பான்மையான படைகள் கடந்துவிட்டன. பொழுது நீங்கி நீண்டநேரத்துக்குப் பிறகுதான் அவன் மயக்கம் தெளிந்தான். மரத்தின் உச்சிக்கிளையில் உட்கார்ந்த நிலையில் கயிற்றால் கட்டப்பட்டிருப்பது ஏனென்று அவனுக்கு நீண்டநேரம் புரியவில்லை. அவன் பேசத் தொடங்கியதும் ``அதிர்ந்து பேசாதே!'' என எச்சரித்தாள் அங்கவை. பொழுது மங்கி இருள் சூழ்ந்ததால் அவனால் நடப்பதை விளங்கிக்கொள்ள முடியவில்லை. நீண்டநேரத்துக்குப் பிறகு மிக மெதுவான குரலில் நகரும் படையைப் பற்றிக் கூறினாள். அப்போதும் அவனது கட்டை அவள் கழற்றவில்லை. நிலைமையைப் புரிந்துகொள்ளாமல் உணர்ச்சிமேலிட அவன் எதுவும் செய்துவிடக் கூடாது என்பதில் அவள் தெளிவாக இருந்தாள். பறம்புக்குள் எதிரிகள் நுழைந்ததை அறிந்த பிறகும் ஒரு காவல் வீரன், கதை கேட்டுக்கொண்டிருக்க மாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால், இப்போது நிலைமை வேறுவிதமாக இருக்கிறது.


அவன் மயக்கம் நீங்கிய பொழுதிலிருந்து அதிர்ச்சிமேல் அதிர்ச்சிகளை அவள் சொல்லிக்கொண்டே இருந்தாள். ஆற்றின் மேலே நல்ல உயரத்திலிருந்து பார்த்ததாலும், எண்ணறிவில் தேர்ந்தவளாக இருந்ததாலும் நகரும் படையைப் பற்றிய துல்லியமான கணக்கை அவளால் சொல்ல முடிந்தது.

சொல்லிக்கொண்டேயிருந்த அவளின் குரல் காதை விட்டு அகல மறுக்கிறது. ``பறம்புவீரனாக இந்தப் படையைத் தடுப்பது தான் எனது முதல் வேலை. அருகில் இருக்கும் ஊர்களைத் திரட்டி இந்த இரவிலேயே தாக்குதலைத் தொடங்க முடியும். எதிரிகளை இந்த இடம் விட்டுத் துளியும் நகரவிடாமல் என்னால் செய்ய முடியும்" என ஆத்திரம்கொண்டு உரைத்தபோது, மிகவும் அமைதியாக ஆனால் உறுதியான குரலில் அவனது எண்ணத்தை மறுத்தாள் அங்கவை.

``தந்தை, தேக்கன், முடியன் என யாரும் சிந்தித்திராத ஒரு திசை வழியில் பறம்புக்குள் பெரும்படை நுழைந்துள்ளது. அப்படியென்றால், இதற்குப் பின்னால் விரிவான திட்டமிடல் இருக்க வேண்டும். சேரனும் பாண்டியனும் படையெடுப்பார்கள் என எதிர்நோக்கி இருக்கும்போது இவ்வளவு பெரும்படையோடு சோழன் ஏன் உள்ளே நுழைகிறான்? அதுவும் எழுவனாற்றின் வழியினூடே எங்கே போகிறான்? இதெல்லாம் விரிவான தன்மையோடு எதிர்கொள்ள வேண்டிய ஒன்று. எனவே, செய்தியை உடனடியாக எவ்வியூருக்குக் கொண்டு செல்லும் வேலையை மட்டும் செய்."

எதிரியைக் கண்டு குருதி கொப்புளிக்கச் சினந்தெழுந்த உதிரனை மடக்கிப் பிடித்து எவ்வியூர் நோக்கி அனுப்பினாள் அங்கவை. ``செய்தி சொல்ல மற்றவர்களைக்கூட அனுப்பலாம். நான் எதிரிகளைத்

தொடர்ந்து செல்வதுதான் சரி” என உதிரன் மீண்டும் வாதிட்டபோது அங்கவை சொன்னாள், ``எதிர்பாராத திசையிலிருந்தே இவ்வளவு பெரும்படை உள்ளே நுழைந்திருக்கிறது என்றால், மற்ற திசைகளிலிருந்து எவ்வளவு படைகள் உள்ளே நுழைந்துள்ளதோ! அவற்றை எதிர்கொள்ள யார் யார் எங்கெங்கே செல்வது என்பதெல்லாம் பறம்பின் தலைவன் எடுக்க வேண்டிய முடிவு. நீ போரிடவேண்டிய இடம் எது என்பதை எவ்வியூருக்குப் போய் கேட்டுத் தெரிந்துகொள்” எனத் திடம்கொண்ட குரலில் கூறினாள் அங்கவை. ஈட்டி ஏந்திய பல்லாயிரம் எதிரிகள் கீழே போய்க்கொண்டிருப்பதை அறிந்தபோதும் நடுங்காத அவளின் கால்களைவிட உறுதிமிக்கதாக இருந்தன அவளுடைய சொற்கள்.



**பொ**ழுது மங்கிக்கொண்டிருக்கும் மாலை வேளையில் நாகப்பச்சை வேலியைத் தாண்டிப் பாய்ந்தது உதிரனின் குதிரை. மேல்மாடத்தில் பாரி, தேக்கன், முடியன், காலம்பன் ஆகியோர், தென் திசையிலிருந்து கூழையன் அனுப்பிய செய்தியைப் பற்றித் தீவிரமாகக் கலந்துரையாடிக்கொண்டிருந்தனர். தொலைவிலேயே பாரியின் கண்களுக்கு உதிரனின் பாய்ச்சல் தெரிந்தது. அங்கவையின்றித் தனியே வருபவனின் வேகம் ஆபத்து ஒன்றை முன்னுணரச்செய்தது. மாடத்திலிருந்து விரைந்து கீழிறங்கினர்.

இரண்டு நாள்களாக உணவேதுமின்றி அவ்வப்போது குதிரையை மட்டும் மாற்றி விரைந்து வந்து சேர்ந்தான் உதிரன். கிறங்கியபடி வந்தவனை சற்றே இளைப்பாறவைக்க முயன்றார் தேக்கன். ஆனால், கொந்தளிக்கும் உணர்வோடு இருந்த உதிரனால் அவர்கள் கொடுக்கும் நீராகாரத்தை வாங்கிக் குடிக்க முடியவில்லை. பேச்சு ஒழுங்கோடு வெளிவர மறுத்தது. முன்னும் பின்னுமாகத் திணறினான். அங்கவை இல்லாமல் உதிரன் மட்டும் வந்த செய்தி ஆதினியை எட்டியபோது இதுவரை இல்லாத அச்சத்தை அடைந்தாள்.

மாளிகையை நோக்கி ஓடோடி வந்தாள். அவள் உள்ளே நுழைந்தபோது அங்கவையின் கண்களின் வழியே நகர்ந்து செல்லும் யானைப்படையின் எண்ணிக்கையைச் சொல்லிக்கொண்டிருந்தான் உதிரன். காலாட்படையின் தன்மை வேறுபாடுகளைச் சொன்னான். குதிரைப்படை ஏதுமில்லை. படைகளை ஒழுங்கமைக்கவும் தளபதிகளின் பயன்பாட்டுக்காகவும் மட்டுமே குதிரைகள் வந்துள்ளன. வீரர்களின் முகங்களில் களைப்பேதும் இல்லை. தூசிப்படையினர் காதுகளின் மேல்மடல்களில் மூன்று ஓட்டையிட்டிருந்தனர் என்பதுவரை அங்கவை சொல்லி அனுப்பியிருந்தாள்.

ஏறக்குறைய அனைவரும் திகைத்துப்போயினர். `சோழன் ஏன் படையெடுத்து வருகிறான்? எழுவனாற்றினூடே பறம்புக்குள் நுழையும் வழி எப்படி அவனுக்குத் தெரிந்தது? அவனது படையின் வலிமை யானைகளை நம்பியதாக இருக்கிறது. அது மிகச்சரியான உத்தியே. இவ்வளவு தெளிவான திட்டமிடலோடு புறப்பட்டு வரும் நோக்கம் என்ன?' என, ஒவ்வொருவருக்குள்ளும் கேள்விகள் உருண்டுகொண்டிருந்தன.

அவை அமைதிகொண்டது. ஆதினி பெருமூச்சு விட்டாள். அங்கவைக்கு ஆபத்து ஏதும் நிகழவில்லை. அதுபோதும். பறம்புக்குள் எவ்வளவு பெரியபடை வந்தாலும் அச்சம்கொள்ள ஒன்றுமில்லை. எனவே, அவை விட்டு அகன்றாள்.




முந்தைய நாள் நள்ளிரவு, கூழையன் செய்தி அனுப்பியிருந்தான். `குடநாடும் குட்டநாடும் படையை ஒருமுகப்படுத்தியிருக்கின்றன. ஆயிமலையின் பின்புறம் இருநாட்டுப் படைகளும் ஒன்றுசேர்ந்து பாசறை அமைத்துள்ளன. ஆயிமலையின் கணவாய் வழியாக இன்னும் சில நாள்களில் அவர்கள் பறம்புக்குள் நுழைய உள்ளனர்' என்பதுதான் கூழையன் அனுப்பியுள்ள செய்தி. வழக்கத்துக்கு மாறான தன்மையுடன் சேரர்களின் நடவடிக்கை உள்ளது. இருவரும் தனித்தனியே போரிடுவதற்கான ஏற்பாட்டுடன் இருந்ததாகத்தான் ஏற்கெனவே கூழையன் செய்தி அனுப்பி யிருந்தான். திடீரென எப்படி இரு படைகளும் ஒருங்கிணைந்தன? ஆயிமலை கணவாய்ப் பகுதியின் வழியே பறம்புக்குள் நுழையும் துணிவு எப்படி இவனுக்கு வந்தது? கிழக்குப்புறத்தில் பாண்டியன் படை அணி திரண்டுகொண்டிருப்பதற்கும், சேரனின் நடவடிக்கைக்கும் இருக்கும் உறவுகள் என்ன என்பதைப் பற்றிதான் அவையில் ஆய்ந்துகொண்டிருந்தனர்.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும்மேலாக சேரர்களின் தாக்குதல் எத்தனையோ முறை நிகழ்ந்துள்ளது. ஆனால், இந்த முறை உதியஞ்சேரலின் நடவடிக்கைகளில் நிறைய வேறுபாடு

தெரிகிறது. அவன் மிகக் கவனமாகப் பல வேலைகளைச் செய்கிறான். பறம்புக்குள் வழி அமைக்க தொடர்ந்து அவன் முயன்றுள்ளான். ஆனால், அவன் முயன்ற எந்தப் பகுதியிலும் இல்லாமல் ஆயிமலையில் கொண்டுவந்து இப்போது படையை நிறுத்திவைத்துள்ளான். அவனது திட்டமிடலின் ஒரு பகுதியாக நமது எண்ணங்களைக் குழப்பும் உத்தி இடம்பெற்றுள்ளது. இதை எதிர்கொள்ள, செய்யவேண்டியது என்ன எனச் சிந்தித்துக்கொண்டிருந்தவர்களிடம்தான் சோழப்படை உள்நுழைந்ததைப் பற்றிச் சொன்னான் உதிரன்.

உதிரன் சொன்ன செய்தி, எல்லோருக்குள்ளும் குழப்பத்தையே உருவாக்கியது. இந்தப் படையெடுப்பின் நோக்கத்தையும் தன்மையையும் புரிந்துகொள்ள முடியவில்லை. இத்தனை ஆயிரம் எதிரிகள் இதுவரை பறம்புக்குள் நுழைந்ததில்லை. அங்கவை சொல்லியுள்ள கணக்குப்படி காலாட்படையின் எண்ணிக்கை ஐந்தாயிரத்துக்கும் அதிகமாக இருக்கிறது. யானைகளின் எண்ணிக்கை ஐந்நூறு.

`எதிரியின் படையைப் பற்றி பாரி வேறென்ன கேட்கப் போகிறான்?' என்று உதிரன் எதிர்பார்த்திருந்தபோது பாரி கேட்டான், ``நீ கண் விழித்தது எப்போது?"

``மறுநாள் மாலையில்."

``போதிய உணவின்றிப் பல நாள்களாக இருக்கிறாய். முதலில் உணவருந்திவிட்டு வா. பின்னர் பேசுவோம்" என்றான்.

உதிரனுக்கு எழுந்து செல்ல மனமில்லை. தயங்கியபடியே வீரர்களோடு அவையை விட்டு வெளியேறினான்.

துவளாத அவனது நடையைப் பார்த்தபடியே பாரி சொன்னான், ``நாகக்குடி என்பதால் மறுநாள் கண்விழித்திருக்கிறான். ஒன்றுக்கும் மேற்பட்ட அடவி ஈ கடித்திருந்தால் மற்ற யாராக இருந்தாலும் மரணித்திருப்பர்."
தேக்கன் `ஆம்' எனத் தலையசைத்தான். உதிரன் வரும் வரை பேச்சு நீண்டது.

புதிய சூழலுக்கு ஏற்ப தனது கருத்தைக் கூறினான் முடியன். ``ஆயிமலையின் கணவாய்ப் பகுதி மிகக் குறுகியது. அதனுள்ளே நுழைந்து வந்தாலும் அடர் காடுகளைக் கொண்டது. எனவே, அந்தப் பகுதியில் சேரனால் படை நடத்தி உள்நுழைய முடியாது. அவன் வேறு ஏதோ திசை வழியில் இருந்தே உள்ளே வரத் திட்டமிட்டுள்ளான். நமது கவனத்தைத் திருப்பவே இந்த ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறான்."

``அடர்காட்டை எவ்வளவு தொலைவு ஊடறுக்க முடியும்? பெரும்படைகள் நகர்வதற்கான நில அமைப்பை அவனால் எப்படி உருவாக்கிக்கொள்ள முடியும்?" எனக் கேட்டார் வாரிக்கையன்.

``எந்தவித முன்னனுபவமும் இல்லாமல் சோழன் உள்நுழைந்துள்ளான். பல்லாயிரம் வீரர்களைக்கொண்ட படை இருக்கும் மமதையில்தான் மூடத்தனமான முடிவை எடுத்துள்ளான். ஆனால், உதியஞ்சேரலை அப்படிச் சொல்லிவிட முடியாது. நம்மால் கணிக்க முடியாத ஓர் ஆட்டத்தை ஆடிப்பார்க்க எண்ணுகிறான்” என்றார் தேக்கன்.

உரையாடலைக் கேட்டபடி அமைதிகொண்டிருந்த பாரி இப்போது சொன்னான், ``தென்புறத்துக் காவல் வீரர்கள் பயன்படுத்தும் குதிரைப்பாதை ஒன்று ஆயிமலையின் வழியே செல்கிறதல்லவா, அதை அடிப்படையாகக்கொண்டு உதியஞ்சேரல் திட்டம் தீட்டியிருப்பான்.”

யாரும் சிந்திக்காத கருத்தாக அது இருந்தது. ``ஆனால், குதிரைப்பாதையில் பெரும்படை ஒன்று எப்படி நகர்ந்து வர முடியும்?” எனக் கேட்டான் முடியன்.

``அதுவன்று கேள்வி, அந்தக் குதிரைப்பாதையை அவன் எப்படி அறிந்தான் என்பதுதான் கேள்வி. அந்தத் திசை செல்லும் நமது காவல் வீரர்களை அவர்கள் தொடர்ந்து கவனித்ததன் மூலம் அறிந்துள்ளனர். அப்படியென்றால், அந்தப் பாதையின் வழியிலான ஒரு முயற்சிக்கு அவர்கள் ஆயத்தமாகியுள்ளனர்” என்றார் வாரிக்கையன்.


மற்றவர்களின் சிந்தனை அதை நோக்கிப்போனது. ``சாலமலை, கழுவாரிக்காடு, நரிமுகடு ஆகிய மூன்று பகுதிகளில்தான் சேரன் படைநடத்தி உள்ளே வர முடியும். ஆனால், எந்தவிதக் காரணமும் இல்லாமல் ஆயிமலையின் பின்புறம் படையை நிறுத்தியுள்ளது எதனால்?” எனக் கேட்டான் முடியன்.

அமைதி நீடித்தது. ``அவர்களின் திட்டம் எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். மூவரும் நமது கைக்கு அருகே வந்துவிட்டனர். நாம் செய்ய வேண்டியதைப் பற்றி முடிவெடுப்போம்” என்றான் தேக்கன்.

சிறிது நேரம் அமைதி நீடித்தது. அச்சமோ அவசரமோ யாரிடமு மில்லை. சப்பணமிட்டு அமர்ந்திருந்த பாரி எழுந்தபடி கூறினான், ``நீராட்டுக்காகக் கொற்றவையின் கூத்துக்களத்தில் கூடுவோம்.”

**கொ**ற்றவையின் கூத்துக் களத்தைக் காவல்வீரர்கள் வேகவேகமாகத் தூய்மைப்படுத்தி பந்தங்களை ஏற்றிவைத்தனர். உதிரன்தான் முதலில் வந்தான். அவன் சொல்லித்தான் வீரர்களுக்குத் தெரியும். நீராட்டுச் சடங்கு எவ்வளவு உக்கிரமேறியது என்பதை அனைவரும் அறிவர்.

தேக்கன், வாரிக்கையன், முடியன் ஆகிய மூவரும் அடுத்ததாக வந்து சேர்ந்தனர். சற்றுநேரத்தில் பாரியும் காலம்பனும் வந்தனர். அவர்களுக்குப் பின்னே ஆதினி இரு பெண்களுடன் வர, இறுதியில் குலநாகினிகள் கூட்டமாக வந்தனர்.



பந்தங்கள், எங்கும் ஏற்றப் பட்டிருந்தன. வெளிச்சம் கண்டு பறவைகள் படபடத்து ஓசை யெழுப்பின. குலநாகினிகளில் மூவர் உடுக்கையைக் கையில் கொண்டிருந்தனர். ஆதினியுடன் வந்த இரு பெண்களில் இளம்பெண் ஒருத்தி நீர் நிறைந்த பச்சைமண் குடத்தைத் தூக்கி வந்தாள். நீர்க்குடத்துக்குள் முன்னோர்களின் எலும்புகள் இருந்தன. இன்னொருத்தி சூல்வயிற்றுக்காரி. அவளோ பனங்கருக்கைக் கலயத்துள் செருகி, தலையில் ஏந்திவந்தாள்.

போர் என்பது கொற்றவையின் திருவிழா. ஆதிகாலம்தொட்டு அவள் மனம் குளிரும் நிலம் போர்க்களம்தான். சிதைவுண்ட உடல்களும் சரிந்து தொங்கும் குடல்களும் தாடை வெட்டுப்பட்டுப் பிளந்துகிடக்கும் முகங்களும்தான் அவளுக்கான படையல்.

குலுங்கும் முலைகளில் குருதி பெருக்கி தன் மக்களை அவள் பாலூட்டி வளர்ப்பதே, போர்க்களத்தில் இக்கைமாற்றை அவர்கள் செய்வார்கள் என்பதால்தான், செம்பாறையில் தலைகள் உருண்டு தெறிக்கும் ஓசையினையே உடுக்கையின் ஓசையாக்கிக்கொண்டவள். எதிரிகளின் குருதி, நிலமெங்கும் வழிந்தோடும். செவ்வீரமண்ணைப் பிசைந்து அவளுக்கு ஊட்டப்போகும் நற்செய்தியைச் சொல்லவே குலநாகினிகள் வந்துள்ளனர்.

பாரி, தேக்கன், முடியன், வாரிக்கையன், காலம்பன் ஆகிய ஐவரும் குலநாகினிகளுக்கு சற்றுப் பின்னே நின்று கொண்டிருந்தனர். அவர்களை விட்டு விலகி மற்ற வீரர்களோடு நின்றுகொண்டிருந்தான் உதிரன். `போரைத் தொடக்க ஆயத்தநிலையில் உள்ள சேரன், படை நடத்திப் பறம்புக்குள்ளே வந்துள்ள சோழன், பறம்பின் எல்லையில் படையை நிலைகொள்ளச் செய்யும் பாண்டியன் என மூன்று பெரும் எதிரிகள்

சூழ்ந்த நிலையில் நமது தாக்குதலைத் தொடங்க பாரி சொல்லப்போகும் உத்தரவு என்ன? யார் யார் எந்தத் திசையில் களம் புகவேண்டும்? பறம்பின் தலைவன் சொல்லப்போகும் ஆணை என்ன?' என்பதறிய உதிரனின் மனம் துடித்துக்கொண்டிருந்தது.

கூட்டத்தின் ஓசையையும் பந்தங்களின் வெளிச்சத்தையும் கண்டு தேவவாக்கு விலங்கு குரலெழுப்பி, அவர்களுக்கான உத்தரவைக் கொடுத்தது. குலநாகினிகளும் ஆதினியும் சடங்குகளை வேகப்படுத்தினர். பனை ஓலைக் கூடையில் கனிகளையும் இதர பொருள்களையும் கொண்டுவந்த குலநாகினி ஒருத்தி, அவற்றை எடுத்துக் கீழே வைக்கத் தொடங்கினாள். உடல் முழுவதும் இறகு உதிர்த்த நீர்ச்சேவல் ஒன்று கால் கட்டப்பட்ட நிலையில் அதில் இருந்தது.

யானைமுடியும் புலிமயிரும் கொண்டு பின்னப்பட்ட கயிற்றால் நூழிக்கிழங்கைக் கட்டியிருந்தனர். சாம்பற் புழுதியில் குருதி பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக எண்ணற்ற உருண்டைகளை உருட்டியிருந்தனர். கூத்துக்களத்தின் இடப்புறமிருந்து தேவவாக்கு விலங்கின் வழக்கத்துக்கு மாறான குரல் கேட்டதும் உடுக்கை எடுத்து அடிக்கத் தொடங்கினாள் குலநாகினி ஒருத்தி. மற்றவர்களோ குலவையிடத் தொடங்கினர்.
உடுக்கை ஓசையும் குலவை ஓசையும் கூடின. குலநாகினிகள், நடுவில் நின்றிருந்த ஆதினியையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர். அவளோ, முடிச்சிட்ட தலைமுடி அவிழ மெள்ளச் சிரித்துத் தோள் குலுக்கி ஆடத் தொடங்கினாள். உடுக்கையின் ஓசைக்கு ஏற்ப ஆட்டத்தின் வேகம் கூடியது. மிக விரைவாக அது வெறியாட்டமாக மாறியது. நள்ளிரவில் உடலெல்லாம் கொதிப்புற்றுத் துடிக்க ஆதினியின் ஆட்டம் குலநாகினிகளையே நடுக்குறச்செய்வதாக இருந்தது.

குலவை ஓசை மேலும் கூடியது. உடுக்கையின் ஓசை வெடிப்புற்றுத் தெறித்தது. குலநாகினிகள் மூவரும் ஆதினியின் முன் மண்டியிட்டு உடுக்கை அடித்தனர். அவர்களின் கண்களில் நீர் தாரைதாரையாக இறங்கிக்கொண்டிருந்தது. ஆதினியின் ஆவேசம் மேலும் கூடத்தொடங்கியது. உடுக்கையின் ஒலி, நரம்புகளை முறுக்கிச் சுழற்றியது. மற்ற குலநாகினிகள் அவளின் தோள்களைப் பிடித்து அமுக்கி உட்காரவைக்க முயன்றனர். குலவை ஓசைக்கு ஏற்ப குலநாகினிகளின் சடங்கு தீவிரமடைந்தபடியிருந்தது. பற்களை நறநறவெனக் கடித்தபடி பிடித்திருப் போரை உலுக்கியெடுத்தாள் ஆதினி. நெருங்க முடியாப் பறம்பின் தலைவியைக் குலநாகினிகள் மொத்தமாக இணைந்து தோள்களைப் பிடித்து அழுத்தினர்.

உடுக்கையின் ஒலியும் குலவை ஓசையும் பறவைகளின் கத்தல்களும் இணைய கூத்துக்களம் உருமாறிக் கொண்டிருந்தபோது பெருங் குரலெடுத்து ஆதினி கத்தினாள். அதுவரை சாய்ந்துகிடந்த நீர்ச்சேவல், எழுந்து நின்று தலை சிலுப்பிக் கூவியது. அதைக் கண்டவுடன் பாய்ந்து சென்ற மூத்த குலநாகினி, இறகு உதிர்த்த நீர்ச்சேவலை எடுத்து ஆவேசமாகக் கத்தியபடி அதன் தலையை முறுக்கி அத்தெடுத்தாள். குலவை ஓசை உச்சிக்குச் சென்றது.

வலக்கையில் இருந்த நீர்ச்சேவலின் தலையை இடப்புறமாகவும், இடக்கையில் இருந்த நீர்ச்சேவலின் உடலை வலப்புறமாகவும் வீசி எறிந்தாள். குலவை ஓசையும் உடுக்கையின் ஓசையும் காட்டை மிரட்டின. மற்ற குலநாகினிகள் நூழிக்கிழங்கையும் குருதி உருண்டைகளையும் எல்லா திசைகளிலும் வீசியெறிந்தனர். குலவை ஒலியோடு தேவவாக்கு விலங்கின் ஒலியும் இணைந்து இருளை உலுக்கின. இளம்பெண் சுமந்துவந்த பச்சைமண் குடத்து நீரை, அமர்ந்திருந்த ஆதினியின் தலையில் ஊற்றினர். முன்னோர் களின் எலும்புகள் மேலெங்கும் நழுவி இறங்கின. இறங்கும் எலும்பை இரு கைகளிலும் ஏந்தினாள் ஆதினி.

ஆயிரம் அணங்குகள் காடெங்கும் இருந்து இறங்கி வந்து ஆதினிக்குள் அடங்க, எண்ணிலடங்கா முன்னோர்களின் விலா எலும்பை இரு கைகளிலும் ஏந்தினாள் ஆதினி. அதைக் கண்டதும் ஆவேசம்கொண்ட பாரி, அவளை நோக்கி வந்தான். மற்றவர்களும் தொடர்ந்து வந்தனர். ஆதினியின் கையில் இருந்த எலும்பு ஒன்றை எடுத்தான் பாரி. உடுக்கை அடிப்பவர்கள் பாரியைச் சுற்றி ஒலியெழுப்பினர். குலவை ஒலி மேலிட எடுத்த எலும்பு கொண்டு மார்பிலே கீறினான் வேள்பாரி. கொப்புளித்துப் பெருகியது பாரியின் குருதி. உடுக்கை அடிப்பவர்களின் ஆவேசம் மொத்தக் காட்டையும் உலுக்கியது. மற்ற நால்வரும் அதேபோல முன்னோர்களின் எலும்பு எடுத்து மார்பிலே கிழித்தனர்.

திக்கெட்டுமிருந்து தேவவாக்கு விலங்குகளின் குரல் எதிரொலித்துக்கொண்டிருக்க, சூல்வயிற்றுக்காரி தலையில் சுமந்துவந்த கலயத்தோடு பாரியின் முன்னால் மண்டியிட்டு அமர்ந்தாள். குடத்துக்குள் இருந்த பனங்கருக்கினை எடுத்த பாரி, கீறிய மார்பின் மீது உரக்கத் தேய்த்தெடுத்தான். மேற்சதையைப் பிய்த்துக்கொண்டு வந்தது பனங்கருக்கு. குலவை ஓசையும் உடுக்கை ஓசையும் பறவைகளின் கத்தலும் விலங்கின் கதறலும் இணைய ஐவரின் மார்புக் குருதியை பனங்கருக்குகள் வாங்கிக்கொண்டன.

குருதி தோய்ந்த பனங்கருக்கினை ஆதினியின் கைகள் ஏந்திப்பிடிக்க, சூல்வயிற்றுக்காரி மேடையின் மீது ஏறி அமர்ந்தாள். குலநாகினிகள் ஆளுக்கு ஒரு திசை பார்த்து ஆவேசமாய் ஆடினர். கொற்றவையின் பசியடக்கி, தாகம் தீர்க்க எதிரிகளை மலைமலையாய்க் கொன்றழிப்போம் என ஐவரும் மார்புக் குருதிகொண்டு உறுதி அளித்ததால் ஆதினிக்குள் இருந்த கொற்றவை அகமகிழ்ந்தாள். வாய் அகன்று காடதிரச் சிரித்தாள்.

ஆனால், மேடையில் அமர்ந்திருந்த சூல்வயிற்றுக்காரி சிரிக்கவில்லை. ஆவேசம் தணியவில்லை. விரித்த விழிகளில் இமையாடவில்லை. பெருங்குரலெடுத்து ``வா... ஏங்கிட்ட வா...” எனப் பேய்க்கூச்சலிட்டாள்.
தலையை மறுத்து மறுத்து ஆட்டி, ``விழப்போகும் எதிரிகளின் எண்ணிலடங்காத உடல்களைத் தின்று முடித்துவிட்டு வருகிறேன். உருவிய குடல்களால் குன்றுகள் மறைந்து கிடக்க, காடெங்கும் பெருகியோடும் குருதியைக் குடித்துவிட்டு வருகிறேன். அதற்குள் ஏன் அழைக்கிறாய்?” என மறுத்துக் கத்தினாள் கொற்றவை. ஆனால், சூல்வயிற்றுக்காரி விடவில்லை. அதைவிடப் பெருங்குரலெடுத்துக் கத்தினாள். ``காலம் தாழ்த்தாதே, எனக்கான வாக்கை அளித்துவிட்டு நீ பசியாறிக்கொள்.”

கொற்றவை நகரவில்லை. ``என் மக்கள் கொன்றளித்துள்ள பிணங்களைப் புசித்து முடிக்கும் வரை பொறுத்திரு” எனக் கூறி, பற்களை நறநறவெனக் கடித்து, காட்டையே இரு கூறுகளாகப் பிளந்துகொண்டிருந்தாள்.
குலநாகினிகள் ஒன்றுசேர்ந்து கொற்றவையை, சூல்வயிற்றுக்காரியை நோக்கி இழுத்துச் செல்ல முயன்றனர். ஆனால் யாராலும் அவளை அசைக்க முடியவில்லை. ஆயிரம் அணங்குகள் ஒன்றாய் இறங்கி ஆடிக்கொண்டிருந்தனர். குலவையின் பேரொலி பல மடங்கு அதிகரித்தது. உடுக்கை ஓசையில் இலைகள் நடுங்கின. குலநாகினிகள் எல்லோரும் சேர்ந்து பெரும் ஆவேசத்தோடு உட்கார்ந்திருந்தவளைத் தூக்கி மேடையின் மீதிருந்த சூல்வயிற்றுக்காரியை நோக்கி நகர்த்திச் சென்றனர்.

சூல்வயிற்றுக்காரியின் கண்ணில் நீர் வழிந்துகொண்டிருந்தது. ஆனால், கொற்றவை தன்னை நோக்கி வரத் தொடங்கியதும் அவளின் முகத்தில் சிரிப்பு படரத் தொடங்கியது. குலநாகினிகள் வலுக்கொண்ட மட்டும் நகர்த்தினர். அமர்ந்திருந்தவள் ஆதினியல்லள், கொற்றவை. அவ்வளவு எளிதாக நகர்த்திவிட முடியாது.

மேலும் மேலும் ஓசையெழுப்பி, உடுக்கையடித்து, பெருங்குரலில் கதறியபடி கொற்றவையை முன்னகர்த்தினர். மலையெனக் குவியும் பிணங்களின் குருதி வாடையை உள்மூக்கில் நுகர்ந்தபடி சற்றே அகமகிழ்ந்து எழுந்தாள். எழுந்த கணம் குலநாகினிகள் முழு ஆவேசத்தோடு மேடையை நோக்கி நகர்த்தினர். அருகில் சென்று, அமர்ந்திருந்தவளின் நிறைசூலில் கை வைத்தாள் கொற்றவை. காடு நடுங்கும் ஓசை இருளெங்கும் கேட்டது. `நிறைசூலுக்குள் இருக்கும் புது உயிருக்கு இந்த மண்ணைக் காத்தளிப்பேன்’ எனக் கொற்றவை அளித்த வாக்கு, காட்டுயிரின் காதுகளிலெல்லாம் எதிரொலித்தது.

எதிரிகளைக் கொன்றழிக்க நிகழும் சூளுரையும் குருதி குடிக்கத் துடித்தெழும் ஆவேசமுமே இந்தச் சடங்கின் உச்சம். ஆந்தைகளின் வட்டவிழி நடுக்குற்ற அந்தக் கணத்தில், இருளும் மலையும் ஒருசேர உணரும்படி காடதிரக் கத்தினான் வேள்பாரி. ``கொற்றவையின் பசி தீர்க்க எதிரிகளின் பிணங்களை மலையெனக் குவிப்போம்! பறம்பெங்கும் வேந்தர்படை சிந்தும் குருதி விட்டு ஈக்கள் அகலாது நிலைகொள்ளட்டும். சேரனின் படையை அழித்தொழிக்கும் வேலையைத் தேக்கனும் கூழையனும் உதிரனும் செய்யட்டும். கிழக்குத் திசையில் நிலைகொள்ளும் பாண்டியப்படையின் கருவறுக்கும் வேலையை முடியனும் காலம்பனும் நீலனும் செய்யட்டும். எழுவனாற்றின் மணலுக்குள் சோழப்படையைப் புதைத்தொழிக்க நான் புறப்படுகிறேன். கொற்றவையின் பெரும்பசிக்கு திசையெங்கும் விருந்தளிப்போம்.”

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-73

பறம்பின் வலைப்பின்னல்களில் செய்திகள் பறந்துகொண்டிருந்தன. தனது கூட்டில் இரை வந்து சிக்கிய கணத்தில் தூக்கம் கலைந்தெழும் விலங்குபோல் பறம்பு எழுந்தது. சிக்கிய இரையால் இனி ஒருபோதும் தப்ப முடியாது என அதற்குத் தெரியும். தாடை கிழிவதைப்போல வாயைப் பிளந்து கொட்டாவி விட்டபடி மெள்ள இரை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது பறம்பு.




வடக்கும் தெற்குமாக நீண்டுகிடக்கும் பச்சைமலைத் தொடரில் இத்தனை நூறு ஊர்களிலும் ஒரே நேரத்தில் காரிக் கொம்பூதி யாரும் கேள்விப்பட்டதுகூட இல்லை. மலைத் தொடர் எங்கும் கொம்போசை அதிர்ந்து பரவிக்கொண்டிருந்தது. கூவல் குடியினரின் முன்னெச்சரிக்கை ஒலிகள் எல்லை யில்லாத வேகத்தில் பாய்ந்துகொண்டிருந்தன.

`பறம்பின் மாவீரர்கள் அனைவரும் களம்நோக்கிச் சென்று விட்டால், படைகளை ஒருங்கிணைப்பது யார்?' என்ற கேள்வி எழுந்தது. புறப்படும்போது பாரியின் உத்தரவு அதுவாகத்தான் இருந்தது. ``எவ்வியூரிலிருந்து மூன்று திசைப்படைகளையும் ஒருங்கிணைக்கும் வேலை வாரிக்கையனுடையது.”

பாரி தந்தையின் காலம்தொட்டு இக்காலம் வரை எண்ணற்ற தாக்குதலை நடத்தி அனுபவம் வாய்ந்த மாமனிதர் வாரிக்கையன்தான். அவர் அளவுக்கு முன்னனுபவத்தின் வழியே வழிகாட்டக்கூடிய இன்னொரு மனிதர் இல்லை. பாரி உத்தரவிட்ட கணத்திலிருந்து வாரிக்கையன் வேலையைத் தொடங்கினார்.

கூத்துக்களத்தில் நீராட்டு முடிந்ததும் பாரி வடதிசை நோக்கிப் புறப்பட்டான். தேக்கனும் உதிரனும் தென்திசை நோக்கிப் புறப்பட்டனர். முடியனும் காலம்பனும் கீழ்த்திசை நோக்கிப் புறப்பட்டனர். மூன்று திசைகளுக்கும் தலைமை யேற்றவர்களோடு குழுவுக்கு ஆறு வீரர்களை மட்டுமே உடன் அனுப்பினார் வாரிக்கையன். எவ்வியூரில் இருக்கும் அனைத்து வீரர்களும் இப்போது வாரிக்கையனுக்குத் தேவைப்பட்டனர்.

எதிரிகள் மூன்று திசைகளிலும் இருக்கின்றனர். எனவே, நிலைமைக்குத் தகுந்தபடி வழிகாட்டவும் செய்தியைப் பரிமாறவும் வாரிக்கையனுக்கு வலிமை மிகுந்த படை தேவை. அந்தப் படை, பறம்பின் அனைத்து திசைகளுக்கும் மின்னலெனப் பாய்ந்து செல்லும் படையாக இருக்க வேண்டும்; குதிரையிலும் குதிரை இல்லாமலும் விரைந்து செல்லும் படையாக இருக்க வேண்டும். அதற்கு எவ்வியூர் வீரர்களே பொருத்தமானவர்கள். அவர்களால்தான் இந்த வேலைக்கு ஈடுகொடுக்க முடியும். போர்க்களத்தில் இணையற்ற வீரத்தை வெளிப்படுத்தக்கூடிய எவ்வியூர்க்காரர்கள் யாரையும் போர்க்களத்துக்கு அனுப்ப முன்வரவில்லை வாரிக்கையன். காட்டை ஊடறுத்து விலங்கெனப் பாயும் வேட்டைவீரர்களாக அவர்களைப் பயன்படுத்த முடிவுசெய்தார்.

களத்தில் போரிடுபவர் களுக்குத் தேவையான படைகளையும் ஆயுதங் களையும் தடையின்றி வழங்க வேண்டும். நெருக்கடியில் அவர் களுக்கான உத்தரவை வழங்க வேண்டிய பொறுப்பும் வாரிக்கையனுடையது.

உத்தரவிட்ட கணத்தில் கூத்துக்களத்திலிருந்து எல்லோரும் போர்முனை நோக்கிப் பாய்ந்து சென்ற போது, தனித்திருந்த வாரிக்கையனின் முன்னால் எண்ணிலடங்காத கேள்விகள் உருத்திரண்டு நின்றன. எதையும் செய்து முடிக்கக்கூடிய அனுபவ அறிவால் ஒவ்வொன்றுக்கும் விடைகண்டார்.

`ஒரே நேரத்தில் பறம்பின் மூன்று முனைகளிலும் போர் நடத்திய அனுபவம் இதுவரை யாருக்கும் இல்லை. இந்தப் பெருந் தாக்குதலை எப்படி ஒருங்கிணைப்பது? செய்திகளை விரைவாகப் பரிமாறிக்கொள்ள வழி என்ன?' என்று சிந்தித்தபடி தனது முதல் உத்தரவை அதிகாலை பிறப்பித்தார்.

சேரன் பாடிவீடமைத்திருக்கும் போர்முனையான ஆயிமலை தொடங்கி எவ்வியூர் வரை செய்திப்பரிமாற்றப் பின்னலை உருவாக்க, கூவல்குடியினருக்கு உத்தரவிட்டார். மிகநீண்ட தொலைவைக்கொண்ட இந்தப் பரப்பில் செய்தியைப் பரிமாறுவது மிகக்கடினமான பணி. ஏனென்றால், கூவல்குடியினரின் எண்ணிக்கை மிகக்குறைவு. ஆனாலும் அவர்கள் அதற்கு ஆயத்தமாயினர்.

மற்ற இரு முனைகளும் இந்த அளவு ஆபத்துகொண்டவை அல்ல என்பது வாரிக்கையனின் கணிப்பு. அதனால்தான் கூவல்குடி முழுமையும் ஆயிமலை நோக்கி அணிவகுக்கச் செய்தார். எவ்வியூர் பாட்டப்பிறை யிலிருந்துதான் இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. பறம்பில் உள்ள ஊர்களில் மிக அதிக எண்ணிக்கை தென்திசையில்தான் உள்ளன. அந்தத் திசையில் இருந்த நூற்றிருபது ஊர்களிலும் காரிக்கொம்பு ஊதப்பட்டது. தேக்கனின் சொல்லுக்காக அவ்வூரினர் காத்திருப்பர்.

கீழ்த்திசை ஊர்களில் நான்கில் ஒரு பங்கு ஊர்களை மட்டும் வேட்டுவன் பாறைக்கு வர உத்தரவிட்டான் முடியன். வடதிசைதான் மிகக் குறைவான எண்ணிக்கையில் ஊர்கள் இருக்கும் பகுதி. மொத்தம் இருப்பதே அறுபத்தேழு ஊர்கள்தாம். அந்த ஊர்களில் இருக்கும் வீரர்களைக் கொண்டுதான்

ஆறாயிரத்துக்கும் அதிகமானவர்கள் உள்ள சோழப்படையைப் பாரி முறியடித்தாக வேண்டியிருக்கும் என மற்றவர்கள் எண்ணிக்கொண்டிருக்கும்போது, அதிலுள்ள இருபத்துநான்கு ஊர்களை மட்டும் ஆயத்தமாகும்படி செய்தி அனுப்பினான் பாரி.



எவ்வியூர் வீரர்கள், திசைதோறும் செய்திகளைக் கொண்டுசென்றனர். குதிரைப்பாதைகள் இரவுபகலாக இயங்கிக்கொண்டிருந்தன. சோழனுக்கு எதிராகப் பாரியும், பாண்டியனுக்கு எதிராக முடியனும் தீர்மானிக்கும் போர்க்களங்களை நோக்கி, தேவையான ஆயுதங்களையும் மருத்துவக்குடிகளையும் அனுப்பிவைக்க முழுவீச்சில் வேலைகள் நடந்துகொண்டிருந்தன. இந்த இருமுனை களிலிருந்தும் எவ்வியூருக்குச் செய்தியை ஒருங்கிணைக்கக் காரிக்கொம்பினையும் சென்றிப்பு கையையும் பயன்படுத்தலாம் என முடிவுசெய்து அதற்குத் தகுந்தபடி மலைதோறும் இடைவிடாது ஆள்கள் நிறுத்தப்பட்டனர்.

சிறுபாழி நகரிலிருந்து ஆயுதங்களைப் போர்க்களங்களை நோக்கித் தடையின்றிக் கொண்டுசெல்ல பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். ஆயுதங்கள் இடம் மாறத் தொடங்கின. எவ்வியூரின் ஆண் பெண் என்று ஒருவர்கூட மீதமில்லாமல் இரவுபகலாக வேலை பார்த்துக் கொண்டிருந்தனர்.

பறம்பின் நடுப்பகுதியில் இருந்த 114 ஊர்களும் உத்தரவின்றித் தாக்குதலுக்குச் செல்லவேண்டாம் என்று கூறப்பட்டுவிட்டது. ஊரின் வீரர்கள் எல்லோரையும் ஆயத்தநிலையில் இருக்கச் சொன்னார் வாரிக்கையன். தேவையையொட்டி எந்தக் களத்துக்கும் அவர்கள் செல்லவேண்டியிருக்கும்.

இது ஒரு புது அனுபவம். எனவே, எல்லோரும் மகிழ்ந்தும் விரைந்தும் செய்தனர். ஊரார்கள் எல்லோரும் ஒன்றுகூடி, போர்க்களம் நோக்கி ஆயுதங்களை எல்லை பிரித்துக் கைமாற்றினர். மருத்துவக்குடிகளும் ஆயுதங்களோடு சேர்ந்து இடம்பெயர்ந்துகொண்டிருந்தன. கோடைக்காலம் ஆதலால் நீர் ஆதாரங்களைக் குறிவைத்தே பாதைகளை வகுத்துக்கொண்டனர்.

எவ்வளவு மறுத்தும் கபிலர் கேட்கவில்லை. ``தாக்குதல் நடக்கும் இடத்துக்கு வரவில்லை. அருகில் இருக்கும் ஊரில் இருந்துகொள்கிறேன்" என்று விடாப்பிடியாகச் சொல்லியதால் அவரைத் தன்னுடன் அழைத்துச்செல்லச் சம்மதித்தான் பாரி.

மூன்றாம் நாள் இரவு பாரியும் கபிலரும் சூளூரை அடைந்தனர். விடைப்பேறி நின்றுகொண்டிருந்தது ஊர். `எழுவனாற்றில் எதிரிகளின் படை நுழைந்ததும் தாக்கும் உத்தரவை சூளூருக்கல்லவா வழங்கியிருக்க வேண்டும்?' என ஊர் பெரியவர்கள் கோபம்கொண்டிருந்தனர். `எதிரியின் படையை யாரும் தாக்கவேண்டாம். எல்லோரும் அவரவர் ஊரிலே நிலை கொள்ள வேண்டும்' எனப் பாரியிடமிருந்து வந்த முதற்செய்தியைச் செரிக்க முடியாமல் திணிறிக்கிடந்தன வடதிசை ஊர்கள்.

முன்னிரவு நேரத்தில் ஆறு வீரர்களோடு பாரியும் கபிலரும் வந்திறங்கியபோது வரவேற்றவர்களின் முகத்தில் சினமே நிலைகொண்டிருந்தது. ``எழுவனாற்றின் கரையில் இருக்கும் பதினோர் ஊர்களைக்கொண்டு எதிரியை அழிக்கும் உத்தரவை சூளூருக்கு ஏன் வழங்கவில்லை?" என்று கோபத்தோடு கேட்டார் ஊர் பெரியவர் பிட்டன்.

``தாக்குதல் தொடுக்கவேண்டிய உத்தியை எவ்வியூரிலிருந்து முடிவெடுப்பது பொருத்தமாக இருக்காது. அதனால்தான் நேரில் வந்தேன்" என்றான் பாரி.

பல்லாயிரம் வீரர்களைக்கொண்ட படையைப் பதினோர் ஊரார்களைக்கொண்டு எதிர்க்க சூளூர்க் காரர்கள் அனுமதி கேட்பதையும் அதற்குப் பாரி சொல்லும் மறுமொழியையும் கபிலரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

உணவருந்த அமர்ந்தனர். உண்மையில்லாத வெற்றுச்சொற்களைப் பயன்படுத்தும் பழக்கம் அறவே இல்லாதவன் பாரி. அப்படியிருக்க, பெரியவரின் கேள்விக்கு ஏன் இப்படி பதில் சொன்னான் எனக் கபிலருக்கு விளங்கவில்லை. 'இத்தனை பெரும்படையை அவ்வளவு எளிதாக எதிர்கொண்டுவிட முடியுமா?' என்று சிந்தித்துக்கொண்டிருந்தார் கபிலர்.


உணவு முடிந்து ஊர் மந்தையில் கூடினர். சுற்றிலும் பந்தங்கள் எரிந்துகொண்டிருந்தன. நடுவில் இருந்த மேடையில்தான் பாரியும் கபிலரும் உட்கார்ந்திருந்தனர். இன்று வந்து சேரவேண்டிய செய்திக்காக அவர்கள் காத்திருந்தனர். பொழுது நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருந்த வேளையில் கீழ்க்காட்டில் ஓசையை உணர முடிந்தது.

சிறிது நேரத்திலேயே ஆறு வீரர்களோடு இரவாதன் வந்துசேர்ந்தான். செய்தியைக் கேள்விப்பட்ட கணத்திலிருந்து சோழர்படையைப் பின்தொடர்ந்து சென்றவர்கள் இப்போது வந்துசேர்கிறார்கள்.

சாதாரண காலத்திலேயே இரவாதனைப் பார்க்கும்போது அடுத்த கணம் போரிடுவதற் கான துடிப்புடனும் தினவுடனும் நிற்பான். இப்போது அவனது வேகம் எப்படியிருக்கும் என்பதைக் காண கபிலர் காத்திருந்தார். வந்திறங்கிய அவன், நகரும் படையின் தன்மையை விளக்கத் தொடங்கினான். முன்னகரும் யானையின் எண்ணிக்கையிலிருந்து தொடங்கினான். அது ஏற்கெனவே தெரிந்த செய்தி என்பதால் கபிலருக்குப் பெரிய வியப்பேதும் இல்லை.

``முகத்தில் அடர்த்தியான மயிர்கொண்ட யானைகள். அவற்றின் தந்தங்கள் அனைத்தும் மஞ்சள் நிறத்தில் மட்டுமே இருக்கின்றன. எனவே, வயது இருபதுகளைத் தாண்டாது. மோதத் துடிக்கும் வயது இது'' என்று அந்த யானைகளின் தன்மைகளைப் பற்றி விளக்கினான். அதன் பிறகு கபிலரால் இரவாதனை விட்டுச் சிறிதும் கண்விலக்க முடியவில்லை. அவனது கவனிப்பு சிந்தித்துக்கூடப் பார்க்க முடியாததாக இருந்தது.

ஆற்றுமணலில் ஏழு நாள்களுக்கு மேலாக நடந்த பின்னும் காலாட்படை வீரர்கள் சோர்வடையாமல் இருக்கின்றனர். மணலில் யானைகளால் இழுத்துச்செல்லப்படும் வண்டிகளை அவர்கள் பயன்படுத்துகின்றனர். சக்கரமற்ற அந்த வண்டிகளில் போதுமான பொருள்கள் ஏற்றப்பட்டுள்ளன. மணலின் தன்மைக்கேற்ப வண்டிகளின் பெரும் அணிவரிசை படையின் முன்புறம் தொடங்கி இறுதிவரை நகர்ந்துகொண்டிருக்கிறது. கழுதைகளின் மீதும் இதர விலங்குகளின் மீதும் பொருள்கள் ஏற்றப்பட்டு சாரைசாரையாக நடந்துகொண்டிருக்கின்றன.



பாரி சற்றே வியப்போடு பார்த்தான். நீர் வற்றிய ஆற்றின் வழியாகப் படையை நகர்த்த எல்லாவகையான ஆயத்தங்களோடும் வந்துள்ளான் சோழன். எவ்வியூரை அடைவதற்கு எழுவனாற்று வழியே ஏற்றது என்பது எப்படி வெளிமனிதர்களுக்குத் தெரியவந்தது என்பது புரியாத ஒன்றாக இருந்தது.

யானைகளும் காலாட்படை வீரர்களும் அணியணி யாகப் பிரிக்கப்பட்டு, முழுமையாக ஒழுங்குபடுத்தப்பட்டு முன்னேறிக்கொண்டிருந்ததை இரவாதன் விவரித்து முடித்தான்.

இவ்வளவு சிறப்புமிக்க ஒரு வரவேற்பை ஹிப்பாலஸ் எதிர்பார்க்கவில்லை. அவனது நாவாய் புகாரின் துறைமுகத்துக்குள் நுழைந்தது முதல் அரண்மனைக்குள் அவன் காலடியெடுத்துவைப்பது வரை சோழவேந்தன் அவனைத் திகைப்புறச் செய்தான்.

கால்பாவைக் கண்டு பேச, புகார் நகரத்துப் பெருவணிகர்கள் எல்லோரும் ஆயத்தநிலையில் இருந்தனர். ஆனால், பிறர் கண்டுபேசவெல்லாம் மாமன்னர் தரும் விருந்து முடிவுற்ற பிறகுதான் என்று அமைச்சர் வளவன் காரி தெரிவித்துவிட்டான். ஆனால், விருந்து என்றைக்கு முடிவுறும் என்றுதான் யாருக்கும் தெரியவில்லை.

இன்று வரை யவனத்துடனான வணிகத்தில் பாண்டியன், சேரன் ஆகிய இருவருக்கும் அடுத்து மூன்றாம் நிலையில்தான் சோழன் இருக்கிறான். இந்நிலையில் ஹிப்பாலஸ் போன்ற யவன தேசத்தின் மாமனிதன் புகாருக்கு வருவதைப் பெரும்வாய்ப்பாகக் கருதினர். குடகடலில் வீசும் காற்று கால்பாவின் கப்பலுக்காகவே வீசுவதாகப் பேச்சுவழக்குண்டு.

கால்பா, யவனத்தின் மாபெரும் வணிகன். அவனது வணிகச்செயற்பாட்டில் இணைந்தே பெரும்பாலான தமிழ் வணிகர்கள் இருந்தனர். ஹிப்பாலஸும் கால்பாவும் புகார்த் துறையில் வந்து இறங்கியதைப் பெரும்வாய்ப்பாகப் பலரும் கருதினர். மாமன்னன் சோழவேந்தனும் அவ்வாறே எண்ணினான்.

வந்திறங்கிய மூன்று நாள்களும் ஆட்டம் பாட்டங்கள் இடைவெளியின்றி நடந்தேறின. சோழப்பேரரசன் செங்கணச்சோழன் படை நடத்திப் போயுள்ளதால் எல்லா விருந்துகளிலும் அவன் தந்தை சோழவேலனே கலந்துகொண்டார். சுமார் 15 ஆண்டுகள் சோழ நாட்டை ஆண்ட சோழவேலன் யவன வணிகத்தை வளப்படுத்த எண்ணிலடங்காத முயற்சிகளைச் செய்தவர். அதனால்தான் ஹிப்பாலஸும் கால்பாவும் வருகிற செய்தியை அறிந்ததிலிருந்து பெரும் உற்சாகத்தோடு விருந்துகளுக்கான ஏற்பாடுகளைச் செய்ய உத்தரவிட்டார்.



விருந்தினூடே பறம்புக்குப் படைநடத்திச் சென்றிருக்கும் செங்கணச்சோழனைப் பற்றிப் பேசப்பட்டது. தன் மகன் வெற்றிகொண்டு திரும்பும் வரை அவர்கள் இருவரும் புகாரில் தங்கியிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் சோழவேலன்.

தனது பயணம், கடற்காற்றை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டது. எனவே, நீண்டகாலம் தங்கியிருக்க முடியாது என்று சொன்ன ஹிப்பாலஸ், ``அரசர் எந்த மாதத்துக்குள் திரும்புவார் என எதிர்பார்க்கிறீர்கள்?” எனக் கேட்டார்.

``இந்தப் போரின் கால அளவை மிகத் துல்லியமாகவே என்னால் சொல்லிவிட இயலும். ஆனால், அதுகுறித்து விருந்து மண்டபத்தில் பேச வேண்டாம். நாளை எனது மாளிகையில் விரிவாகப் பேசுவோம்” என்றார் சோழவேலன்.

மறுநாள் அதிகாலை புறப்பட்டான் பாரி. சூளூரின் மாவீரர்கள் ஆயத்தமாயினர். அவர்களை இருகூறுகளாகப் பிரித்தான். இரவாதன் தலைமையிலான ஒரு பகுதி வீரர்களை எழுவனாற்றின் வலக்கரைக்கு அனுப்பினான். பிட்டன் தலைமையிலான வீரர்களை எழுவனாற்றின் இடக்கரையில் பயணிக்க உத்தரவிட்டான். வலக்கரைப் பகுதியில் இருக்கும் பதினோர் ஊர்களை இரவாதன் அழைத்துக்கொள்ள வேண்டும். இடக்கரையில் இருக்கும் பதின்மூன்று ஊர்களைப் பிட்டன் அழைத்துக்கொள்ள வேண்டும். எதிரிகளின் படை நகர்வுக்கு ஏற்ப இருபுறமும் மேற்புறக் காடுகளில் மறைவாக அவர்கள் வரவேண்டும்.

மலை முகடுகளில் பயணித்தபடி எதிரிப்படையின் நகர்வுகளைக் கவனித்து வருவான் பாரி. உரியநேரத்தில் அவனது உத்தரவுக்கேற்ப இருபக்கப் படைகளும் தாக்குதலைத் தொடுக்க வேண்டும் என்று விளக்கப்பட்டது. பாரியோடு எவ்வியூரிலிருந்து வந்த அறுவரும் சூளூர் வீரர்கள் அறுவருமாகப் பன்னிருவர் பயணப்பட்டனர். கபிலர், சூளூரில் தங்கவைக்கப்பட்டார்.

குதிரைப்பாதையில் வெப்புமலையின் முகடுகளில் பயணப்பட்டான் பாரி. மலையின் அடிவாரத்தில் எழுவனாற்று மணல் காலடித் தடங்களால் முழுவதும் புரண்டுகிடந்தது. அதைப் பார்த்தவண்ணம் ஆற்றுப் போக்கினிலே போய்க்கொண்டிருந்தான். அவனது மனதில் நீங்காத கேள்வி ஒன்று துருத்திக்கொண்டே யிருந்தது. ``எழுவனாற்றின் வழித்தடத்தை எப்படி அறிந்தான் இவன்?”


ஆங்காங்கே இருக்கும் ஊரார்கள் பாரியைக் கண்டு, சோழர்படையின் தன்மைகளை விளக்கியபடியிருந்தனர். எல்லாவற்றையும் கேட்டபடி அவன் பயணித்துக் கொண்டே இருந்தான். கோடைகாலம் உச்சம் தொட்டுக்கொண்டிருந்தது. காய்ந்த புற்களால் காட்டின் மேனியெங்கும் மஞ்சள் பரவிக்கிடந்தது. ஆனால், இத்தனை ஆயிரம் பேர் உள்ள படையை நடத்திக் கொண்டு ஒருவன் நம்பிக்கையோடு முன்னேறிக் கொண்டிருக்கிறான்.

அன்று நண்பகல் முள்ளூர் பெரியவர், பாரி வரும் குதிரைப்பாதையில் காத்திருந்தார். முள்ளூரைச் சேர்ந்த வீரர்கள் எல்லோரும் பிட்டனோடு இணையப் போய் விட்டனர். ஊர் பெரியவர் மட்டும் பாரியிடம் சொல்லவேண்டிய செய்திக்காக முகட்டின் மீது காத்திருந்தார்.

மிகவும் இடுக்கான பாதையின் வழியே குதிரைகள் வந்துகொண்டிருந்தன. பாதையோரப் பாறையின் மீது அந்தப் பெரியவர் அமர்ந்திருந்தார். தொலைவிலிருந்து பார்த்தபோது கழுகு ஒன்று பாறையின் மீது உட்கார்ந்திருப்பதுபோலத் தெரிந்தது.

பாரியைப் பார்த்ததும் பாறையின் மீதிருந்து சரிந்து இறங்கினார் கிழவர். குதிரையை விட்டு இறங்கிய பாரி, அவரை அணைத்து மகிழ்ந்தான். எப்போதும் மகிழ்வோடு இருக்கும் அவரின் முகத்தில் சிறு கவலை இருப்பதை, பாரி பார்த்த கணமே புரிந்துகொண்டான்.

இருவரும் பாறையின் பின்புற நிழலில் பேசியபடியே அமர்ந்தனர். ``படையின் எண்ணிக்கை பொருட்டல்ல; அதன் தன்மை சற்றே வியப்பூட்டுவதாக இருக்கிறது. அதை உன்னிடம் நேரில் தெரிவிக்கவே வந்தேன்” என்றார்.



``என்ன?'' என்று கேட்டான் பாரி.

``குறும்பியூர்க் கணவாயின் வழியாக அவன் எழுவனாற்றுக்குள் நுழைந்து பத்து நாள்களுக்கும்மேல் இருக்கும். இந்தக் கொடும்கோடையிலும் இவ்வளவு பெரிய படைக்கான நீர் ஆதாரத்தை அவனால் வற்றிய இவ்வாற்றில் உருவாக்கிக்கொள்ள முடிகிறது'' என்றார்.

பாரி, அவர் சொல்லவருவதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். சொல்லி முடித்த வார்த்தையைத் தொடராமல் நிறுத்திக்கொண்டார் கிழவர். சற்றே இடைவெளிக்குப் பிறகு பாரி கேட்டான், ``ஆறு காய்ந்து கிடந்தாலும் அடிமணலுக்குள் இருக்கும் ஊற்றுநீரைப் பயன்படுத்த முடியும்தானே?''

கிழவர் சொன்னார், ``இல்லை பாரி. அவர்கள் ஆற்றுமணலில் இங்கும் அங்குமாக எல்லா இடங்களிலும் குழிதோண்டி நீர் எடுக்கவில்லை. நாள்தோறும் தங்கும் இடத்தை மையப்படுத்தி முன்புறம் இரண்டு கிணறுகளும் பின்புறம் இரண்டு கிணறுகளும் வெட்டுகின்றனர். அந்த நான்கு கிணறுகள்தான் இத்தனை ஆயிரம் வீரர்களுக்கும், இத்தனை நூறு யானைகளுக்கும் நீர் தருகின்றன.''

கிழவரின் சொல், வியப்பை ஏற்படுத்தியது. ``பச்சைமலையின் மற்ற ஆறுகளைவிட எழுவனாறு நீரோட்டம் குறைந்த ஆறுதான். ஆனால், அந்த ஆற்றில் வறண்ட இந்தக் கோடையில் இத்தனை ஆயிரம் பேர் அருந்துவதற்கு ஏற்ப நீரோட்டம் உள்ள கிணறுகளை எப்படி இவர்களால் தோண்ட முடிகிறது? படை நடந்து கடந்த வழியில் குறும்பியூர்க் கணவாய் வரை போய்த் திரும்பிவிட்டேன். அவர்கள் தோண்டியுள்ள எல்லாக் கிணறுகளிலும் வற்றாமல் நீர் இன்னும் இருக்கிறது. அதுகூட வியப்பில்லை. நாள்தோறும் அவர்கள் தோண்டும் நான்கு கிணறுகளில் இரண்டு `கடுத்த நீர்' இருக்கும் கிணறுகளாக இருக்கின்றன.''

பாரியின் முகக் குறிப்பில் சிறு மாற்றம் உருவானது. ``கடுத்த நீர் அருந்திய யானைகளுக்கு எளிதில் தாகம் ஏற்படாது'' என்று கிழவர் சொன்னபோது `தெரியும்' என்பதுபோலத் தலையசைத்தான் பாரி.

``வறண்ட ஆற்றில் இவ்வளவு துல்லியமாக நீரையும் நீரின் தன்மையையும் கண்டறிந்து

பயன்படுத்தியபடி அவர்கள் முன்னேறுகின்றனர். போரிடும் அரசப்படை என்று மட்டும் இதைக் கணித்துவிட வேண்டாம். பல்வேறு ஆற்றல்கொண்டவர்கள் இதற்குள் இருக்கின்றனர்” என்றார் கிழவர்.




பாரியின் சிந்தனை மீண்டும் முதற்புள்ளிக்கே போனது. `பெரும்படைக்குத் தேவையான நீர்வளம் இருக்கும் பாதையாகத்தான் இதைத் தேர்வுசெய்தார்களா அல்லது இதுதான் சரியான பாதை எனத் தெரிந்து தேர்வுசெய்தார்களா?’ என்று எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தபோது கிழவர் சொன்னார், ``எனது சிந்தனைப்படி நாளை இரவு இவர்கள் சுழிப்பள்ளத்தை அடைவார்கள். அங்கு எழுவனாற்றோடு வட்டாறு வந்து கலக்கிறது. அகலத்தில் எழுவனாற்றைவிட வட்டாறே பெரியது. புதிதாய்ப் பார்ப்பவர்கள் அதுதான் மூல ஆறு என்று நினைப்பார்கள். இவர்களும் அப்படி நினைத்து அத்திசையில் திரும்பிவிட்டால் எவ்வியூருக்குத் தொடர்பே இல்லாத திசையிலே பயணப்படுவார்கள். அதுமட்டுமன்று, வட்டாறு கடும்பாறை நிலங்களை வழித்தடமாகக்கொண்டது, எளிதில் இவர்களால் நீரைக் கண்டறிய முடியாது. தனது போக்கிலே இப்படை அழிவுக்குள் சிக்கிக்கொள்ளும்” என்று கிழவர் சொன்னார்.


ஆனால், பாரியின் உள்மனத்துக்குத்தான் தெரியும், அவன் எழுவனாற்றின் வழியே எவ்வியூர் நோக்கி முன்னகர்ந்தால்கூட ஆபத்தேதும் இல்லை. வட்டாற்றில் திரும்பினால்தான் ஆபத்தென்று.

மறுநாள் சோழவேலனின் விருந்து மண்டபத்தில் சந்தித்தனர். வழக்கம்போல் பரிமாறல்களில் பொங்கி வழிந்துகொண்டிருந்தது தேறல். சோழவேலன் தனது நாட்டின் சிறந்த கள்ளைக் கொடுத்தபடி பேச்சைத் தொடங்கினார். உடன் அமைச்சர் வளவன் காரி இருந்தார். கடலோடிகளின் குடிக்கு இணை சொல்ல முடியாது. உள்ளிறங்கும் நீர்மட்டம் உயரட்டும் எனக் காத்திருந்த ஹிப்பாலஸ் பொருத்தமான நேரத்தில் தொடங்கினான், ``திரையர்களை வெற்றிகொள்ள முடியாமல் சோழர்படை பாதியில் திரும்பியதாகக் கேள்வியுற்றேன். அப்படியிருக்க, இப்போது பறம்பின் மீது படையெடுத்துப் போய் எப்படி வெற்றிகொள்ள முடியும்?”

``திரையர்கள் பற்றி வெளியுலகுக்கு ஆதிகாலம்தொட்டே அதிகம் தெரியும். வெளியுலகுக்குத் தெரியாத, ஆனால் திரையர்களைவிட வலிமையான குடியினர் கிழக்குத் திசையில் உள்ள தாளமலையில் உள்ளனர். அவர்களின் பெயர் நெடுங்காடர்கள். `திரையர்களைக்கூட நெருங்க முடியும். ஆனால், நெடுங்காடர்களை நெருங்கவே முடியாது’ என்றுதான் செய்திகள் சொல்லப்பட்டன. ஆனாலும் செங்கணச்சோழன் துணிந்து தாளமலையை முற்றுகையிட்டான். பல மாதகால முற்றுகை. இயற்கையாக அமைந்த மழைவெள்ளத்தால் நெடுங்காடர்கள் குடியிருப்புப் பகுதியில் பெரும்பாறைச்சரிவு ஏற்பட்டது. அவர்கள் ஒருங்கிணைய முடியாத நிலை உருவானது. அதை சாதகமாகப் பயன்படுத்தி நெடுங்காடர்களை முழுமையாக வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை

உருவானதால்தான் திரையர்களை நோக்கி நகர்ந்த படைப்பிரிவின் தலைவன் திதியனைப் பின்வாங்கிவர உத்தரவிட்டோம். செங்கணச்சோழன் மொத்தப் படையையும் ஒருமுகப்படுத்தி நெடுங்காடர்களைச் சூழந்து தாக்கினான்" என்றார்.

நெடுங்காடர்களைப் பற்றி இதுவரை ஹிப்பாலஸ் கேள்விப்பட்டதில்லை. பேச்சு அதைச் சுற்றியே இருந்தது. சோழவேலன் சொன்னார், ``கீழ்நெடுங்காடர்கள், மேல்நெடுங்காடர்கள், குறுங்காடர்கள் என்று மூன்று பிரிவினர் உண்டு. நாங்கள் அறிந்தவரை காடு பற்றி இவர்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் இணை சொல்ல யாரும் இல்லை. மனிதனே புக முடியாத கொடிய காட்டுக்குள் இவர்கள் நுழைந்தால்கூட உணவு, நீர், வழித்தடம் ஆகிய மூன்றையும் கணநேரத்தில் உருவாக்கிவிடுவார்கள்."



ஹிப்பாலஸ் திகைத்துப்போனான். சோழவேலன் தொடர்ந்தார், ``பத்து ஆண்டுகளுக்குமேலாகப் போர் முயற்சியில் இருக்கும் சேரனால்கூட பறம்பை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால், வெகுதொலைவில் இருக்கும் எங்களால் பறம்பை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை எளிதிலா ஏற்பட்டிருக்கும்?"

ஹிப்பாலஸுக்கு என்ன சொல்வது எனத் தெரியவில்லை. சோழவேலன் தனது நரைத்த தலைமுடியை விரல்களால் கோதியபடியே சொன்னார், ``பறம்பின் உட்காடுகள் வரை போகக்கூடிய பாதையை நன்கு அறிந்தவர்கள் நெடுங்காடர்கள். பறம்பின் எல்லைக்குள் எமது படை நுழைந்து பதினான்கு நாள்களாகிவிட்டன. நான்கு நாள்கள் இடைவெளியில் எனக்குச் செய்தி வந்துசேர்கிறது. அப்படியென்றால், பறம்புக்குள் நுழைந்து பத்து நாள்கள் வரை பாரி தாக்குதல் தொடுக்கவில்லை. இவ்வளவு பெரும்படை உள்ளே நுழைந்ததை இரு நாள்களுக்குள்ளேயே அவன் அறிந்திருப்பான். ஆனால், இந்தப் படையின் தன்மையை உணர்ந்த கணமே அவன் வில்லினை உயர்த்தும் ஆற்றலை இழந்திருப்பான்."

பறம்பின் எல்லைக்குள் பத்து நாள்களுக்குமேலாகப் படை சென்றுகொண்டிருக்கிறது என்பதை ஹிப்பாலஸ்ஸால் நம்பவே முடியவில்லை. உதியஞ்சேரலால் இத்தனை ஆண்டுகளாகியும் முடியாததைச் சோழர்கள் எளிதாகச் சாதித்துக்கொண்டிருக்கின்றனர் என்று எண்ணிய ஹிப்பாலஸ், தனது வியப்பை மேலும் வெளிக்காட்டாமல் இருக்க முயன்றான். கூர்மையாகச் சிந்திப்பதைப்போல சற்றுநேரம் அமைதியாக இருந்தான்.

தனது புகழின் மீதான பெருமிதத்தை அடுத்தவன் கண்களின் வழியே பார்ப்பது அளவிட முடியாத மகிழ்வைத் தரக்கூடியது. அதுவும் கிரேக்கத்தின் பெருவணிகனும் கடல் வழித்தடத்தின் தளகர்த்தனும் இமை மூடாமல் சோழப்பேரரசின் வலிமையைத் தனது சொல்கொண்டு பார்த்திருக்க, சோழவேலனால் வார்த்தைகளை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?


``பெரும்படைகொண்டு வெற்றிகொள்ள சமதளத்தில் எண்ணற்ற நாடுகள் இருக்க, பறம்பினை நோக்கி ஏன் படையெடுத்துள்ளார் சோழப்பேரரசர்?" எனக் கேட்டான் ஹிப்பாலஸ்.

சற்றே புன்முறுவலோடு அவனது கேள்வியை எதிர்கொண்ட சோழவேலன், ஒளிவீசும் செவ்வண்ணக் கோப்பையைக் கையில் ஏந்தினார்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-74

இருக்கன்குன்றை அடுத்து ஆயிமலை நீண்டுகிடக்கிறது. ஆயிமலையின் மேல்முகட்டைப் பறம்பின் மக்கள் கடப்பதில்லை. அந்தத் திசையின் அடர்காடுகளில் சேர நாட்டினரே வேட்டையில் ஈடுபடுகின்றனர். எனவே, அப்போதிலிருந்து அது அவர்களின் பகுதியாகவே கருதப்படுகிறது. அந்தக் காட்டின் நடுவில்தான் குட்டநாடும் குடநாடும் இப்போது தத்தம் படைகளை ஒருங்கிணைத்துள்ளன.




குடவர்கோ போர்க்களம் வரவில்லை. அவருக்குப் பதில் அமைச்சன் கோளூர்சாத்தனே வந்திருந்தான். குட்டநாட்டு வேந்தன் உதியஞ்சேரல் தாக்குதலின் முழுத் தன்மையையும் தீர்மானிப்பவனாக இருந்தான். இரு நாட்டுத் தளபதிகளான துடும்பனும் எஃகல்மாடனும் அவனது உத்தரவை நிறைவேற்ற ஆயத்தநிலையில் இருந்தனர். ஆயிமலையின் இடப்புற விளிம்பின் வழியாக எஃகல்மாடன் தலைமையிலும் வலப்புற விளிம்பின் வழியாக துடும்பனின் தலைமையிலும் பறம்புக்குள் படையெடுக்க முடிவுசெய்திருந்தனர்.

நேரெதிராக இருந்த இருக்கன்குன்றின் உச்சியில் நிலைகொண்டிருந்தான் கூழையன். தேக்கனும் உதிரனும் வந்துசேர்ந்தனர். அருகில் இருந்த ஊர்களைச் சேர்ந்த நூறு வீரர்கள் கூழையனோடு

இருந்தனர். தேக்கனிடம் நிலைமையை விவரித்தான் கூழையன். எதிரிப்படையின் எண்ணிக்கையைத் தோராயமாகத்தான் சொல்ல முடிந்தது. ``ஆயிமலையின் மேல்முகடுகளில் இருந்துதான் நம்மால் பார்க்க முடியும். மலையின் கீழ்ப்பகுதியில் உள்ளொடுங்கிய அடர்காட்டுக்குள் அவர்கள் இருப்பதால், அவர்களின் எண்ணிக்கையைச் சரியாக மதிப்பிட முடியவில்லை" என்றான் கூழையன். ஆனால், இருவர் படைகளும் காட்டுக்குள் வந்துவிட்டதை உறுதிசெய்தான். ``அவர்களின் தாக்குதல் திட்டத்தைத்தான் கணிக்க முடியவில்லை'' என்றான்.

தேக்கன் நிலைமையைப் புரிந்து கொள்ள நேரமெடுத்துக் கொண்டான். சேரர்கள் இருவரையும் எளிதாக நினைத்துவிடக் கூடாது என அவனுக்குத் தெரியும். `கூழையனின் கூற்றுப்படி சேரப்படை முழுமையாக வந்து இரு வாரங்களாகப்போகின்றன. ஆனால், இன்னும் அந்த இடம் விட்டு அசையாமல் ஏன் இருக்கிறான்? அவனது காத்திருப்பு எதற்காக?' - தேக்கன், கேள்விகளை எழுப்பியபடியே இருந்தான்.

``சேரன் ஆயிமலையின் இடப்புற விளிம்பு அல்லது வலப்புற விளிம்பு என ஏதேனும் ஒன்றின் வழியாகத்தான் உள்ளே நுழைந்தாக வேண்டும்" என்று கூழையன் சொன்னபோது, ``ஏன், இரண்டு பக்கங்களிலும் ஒருசேர உள்ளே நுழைய மாட்டானா?" எனக் கேட்டான் தேக்கன்.

``வாய்ப்பிருக்கிறது" என்றான் கூழையன்.

``இந்த இரண்டு பக்கங்களிலும் அவனது படையை எதிர்கொள்ள நாம் ஆயத்தமாவோம் என அவனுக்குத் தெரியுமல்லவா, பிறகு ஏன் அவன் காலம் தாழ்த்திக்கொண்டிருக்கிறான்?"

கூழையனிடம் பதில் இல்லை.

``நம்மை இங்கு கவனம் செலுத்தவைத்து, அவன் வேறு திசையில் நுழைய மாட்டானா?" எனக் கேட்டான் உதிரன்.

``இல்லை, வேறு எங்கும் அவனது படை நிலைகொள்ளவில்லை. இங்குதான் அவன் மையமிட்டுள்ளான்" என்றான் கூழையன்.

எப்படிச் சிந்தித்தாலும் அவனது செயலின் காரணம் பிடிபடவில்லை.

அன்றிரவு தேக்கன் எந்த முடிவும் எடுக்கவில்லை. `உதியஞ்சேரல் ஏன் காத்திருக்கிறான்? அவனுக்குத் தேவையான செய்தி வந்து சேரவில்லை அல்லது அவன் நினைத்த இடத்தில் எதிரிகளாகிய நாம் வந்து சேரவில்லை. இந்த இரண்டு காரணங்கள்தாம் இருக்க முடியும். சோழனும் பாண்டியனும் படையெடுத்துள்ள செய்தி அறிந்து அவர்களின் தாக்குதலுக்காகக் காத்திருக்கலாம் அல்லது நாம் ஆயிமலையின் எந்த விளிம்பில் அவனை எதிர்கொள்ள அணிவகுக்கப்போகிறோம் என்பதை அறியக் காத்திருக்கலாம்' என்று சிந்தித்தபடியிருந்தான்.



பின்னிரவு தொடங்கியது. தேக்கன் சொன்னான், ``நாளை காலை இரு விளிம்புகளிலும் நமது படையை அணிவகுக்கச்செய்வோம். அதன் பிறகும் அவன் முன்னகரவில்லை என்றால், சோழ, பாண்டியப் படையெடுப்போடு ஏதோ ஒருவகையில் இவனது திட்டம் ஒருங்கிணைந்துள்ளது என்று பொருள்.”

கூழையனும் உதிரனும் தேக்கனின் சொல்லோடு முரண்பட முடியாமல் அமைதிகாத்தனர். தேக்கன் சொன்னான், ``அப்படியோர் ஒருங்கிணைப்பு இருப்பதாக நாம் முடிவுக்கு வந்தால், எதிரிகளை நோக்கி நமது படை முன்பாய்ச்சலில் சென்று தாக்கவேண்டியிருக்கும்.”

தேக்கனின் கூற்று சரியெனப்பட்டது. திட்டத்தை நடைமுறைப்படுத்துவதைப் பற்றிப் பேசினர். இடப்புற விளிம்பில் உதிரனின் தலைமையில் இருபது ஊர்களையும், வலப்புற விளிம்பில் கூழையனின் தலைமையில் இருபத்தாறு ஊர்களையும் அணிவகுக்குமாறு தேக்கன் சொன்னான். குதிரைப்படையினரோடு குன்றின் மேல்முகட்டில் அமைந்துள்ள இந்த இடத்திலிருந்து இரு பக்க நிலைமைக்கு ஏற்ப முடிவெடுத்துத் தாக்குதலை வலுவூட்டுவது தேக்கனின் வேலை என முடிவானது.

திட்டமிட்டபடி கூழையனும் உதிரனும் ஆயிமலையின் விளிம்புகளில் எதிரிகளைத் தாக்க ஆயத்தமாயினர். வலிமைமிகுந்த குதிரைப்படையோடு இருக்கன்குன்றின் மேலே நின்றபடி இரு பக்க நிலைமைகளையும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான் தேக்கன்.

மறுநாள் முழுவதும் எதிரிகளிடம் எந்த அசைவும் இல்லை. காத்திருந்தான் தேக்கன்.

விருந்து மண்டபம் கோடையின் வெக்கையைச் சிறிதும் உள்ளிறக்காமல் இருந்தது. ஆனால், தேறல் கணக்கின்றி உள்ளிறங்கிக்கொண்டிருந்தது. ஹிப்பாலஸ், குடியில் பேரார்வம் கொண்டவனைப்போலக் காட்டிக்கொண்டிருந்தான். ஆனால், அவன் குடிக்கும் வழக்கமான வேகம் இன்றில்லை. காரணம், அவனது தேவை வேறொன்று.

சோழவேலன் சொன்னார், ``எவ்வளவு அடர்கானகத்தில் இருந்தாலும் தேவையான அளவு வழியமைப்பதில் வல்லமை வாய்ந்தவர்கள் குறுங்காடர்கள். இருக்கையின் மீதிருக்கும் தூசியை ஊதித்தள்ளுவதைப்போல பின்னிக்கிடக்கும் செடிகொடிகளையும் புதர்களையும் விலக்கி எளிதில் வழியமைப்பார்கள். கீழ்க்காடர்களோ, நீரும் வேரும் கிழங்கும் அறிந்தவர்கள். மண்ணுள் இருக்கும் அனைத்தையும் பற்றி அவர்களைப்போல் அறிந்த இன்னோர் உயிர் இல்லை என்றே சொல்லலாம். மேல் மண்ணை மோந்து அடிமண்ணைக் கண்டறியும் ஆற்றல் கொண்டவர்கள். மண்ணுள் மணிக்கற்கள் இருக்கும் இடத்தில் நன்கு வேர்விட்டு வளரக்கூடியது `கருநொச்சி' என்று கண்டறிந்தவர்கள் அவர்களே. அதனால்தான் கருநொச்சி இருக்கும் நிலத்தில் புதையல் இருக்கும் என்று மக்கள் நம்பத் தொடங்கினார்கள்.

மேல்காடர்களோ நிலத்தின் மேற்புறத்தைத் தமது உடலின் மேற்புறம்போல பாவிப்பவர்கள். மரம், செடிகொடி என அனைத்தையும் இருக்கும் நிலையிலேயே ஆயுதமாக மாற்றத் தெரிந்தவர்கள். இவர்கள் மூவரும் ஆதியில் ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகள். `அந்த ஆதித்தாய், மண்ணுள்ளிருந்து விளைந்தவள்; மண்ணாலானவள்' என்று சொல்கிறார்கள். அதனால்தான் இன்றும் மண் போர்த்தி உறங்கும் பழக்கம் அவர்களிடம் உண்டு.''


ஹிப்பாலஸ், இதுவரை இப்படியொரு பழக்கமிருக்கும் மனிதர்களைப் பற்றிக் கேள்விப்பட்டதேயில்லை. மிரண்டு நின்றான்.

``கிழக்குப் பகுதி மலையின் ஆதிகுடிகள் இவர்கள். பச்சைமலைத்தொடர்போல் ஒற்றைக்குணம் கொண்ட நீள்மலையல்ல அது. ஒவ்வொரு குன்றுக்கும் ஒவ்வொரு தன்மை உண்டு. கிழக்கும் மேற்கும் எதிர்த்திசைகளைப்போல இந்த இரு திசைகளில் உள்ள மலைமனிதர்களும் எதிரெதிர்த் தன்மைகளைக் கொண்டவர்களே!''

இத்தனை தலைமுறைகளாகத் தமிழ் நிலத்தோடு வணிகம் நடந்திருந்தும் இதுவரை கேள்விப்பட்டிராத செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்தான் ஹிப்பாலஸ்.

சோழவேலன் தொடர்ந்தார். ``காட்டின் ஆதிக்குணங்களைத் தங்களின் குருதி நாளங்களில் உணர்ந்தவர்கள் நெடுங்காடர்கள். எனவே, அவர்களைக்கொண்டே படையெடுப்பின் முறைமையை வகுத்துள்ளான் என் மகன் செங்கணச்சோழன். சோழநாட்டு நிலைப்படையின் தேர்ந்த வீரர்கள் மட்டுமே இந்தப் படையெடுப்பில் பங்கெடுத்துள்ளனர். நெடுங்காடர்கள் கவசமென அணிவகுக்க, பறம்பை ஊடுருவிச் சென்றுகொண்டிருக்கிறது சோழப்படை. அது சமதளப்போரில் எவ்வளவு ஆற்றல்வாய்ந்த தாக்குதலை நடத்துமோ அதைவிட வலிமையான தாக்குதலை இப்போது காடுகளுக்குள் நடத்த வல்லது'' என்றான்.

விழித்த விழி நகராமல் நின்றது. `சேரனையும் பாண்டியனையும் கடந்தவனாக இருக்கிறான் சோழன்' எனத் தோன்றியது. இந்த எண்ணம் தோன்றிய மறுகணமே `தான் கேட்ட கேள்விக்கான விடையைச் சொல்லாமல், மற்ற செய்திகளைச் சொல்வதன் மூலம் பேச்சை திசைதிருப்புகிறார் சோழவேலன்' என்றும் தோன்றியது.



ஹிப்பாலஸ், ஆழ்ந்து சிந்தித்து `அவரின் வழியையே நாமும் பின்பற்றுவோம்' என நினைத்துக் கேட்டான், ``இவ்வளவு வலிமைகொண்ட படை இருக்குமேயானால், நீங்கள் வெல்வதற்குப் பேரரசுகள் இருக்கின்றனவே. ஏன் பறம்பின் மீது படையெடுக்க வேண்டும்?''

உற்சாகத்தோடு பீறிட்ட சொற்கள் சட்டென நின்றன. வேகம் முறிந்ததுபோலானது. அமைதி சூழ்ந்தது.

சோழவேலன் சொல்லத் தயங்குகிறாரா அல்லது எப்படித் தொடங்குவது எனச் சிந்திக்கிறாரா என்பதை ஹிப்பாலஸால் கணிக்க முடியவில்லை. சற்று அமைதிக்குப் பிறகு ஹிப்பாலஸைப் பார்த்து சோழவேலன் கேட்டார், ``ஒரு நாட்டைச் செழிப்புமிக்க நாடு என எதை வைத்துத் தீர்மானிப்பீர்கள்?''

``அது மனிதர்கள் தீர்மானிப்பதன்று; அந்நாட்டின் சேமிப்பறைகளில் இருக்கும் பொன்னும் மணியும் முத்தும்தாம் தீர்மானிக்கின்றன.''

``சரியாகச் சொன்னீர்கள். யவனர்களாகிய நீங்கள், இந்நிலத்தில் நடக்கும் அரசாட்சிகளையும் நாடுகளையும் நன்கு அறிந்தவர்களாயிற்றே! நீங்களே சொல்லுங்கள், இந்த நிலத்தில் செழிப்புமிக்க நாடு எது?''

இதுபோன்ற பேச்சுகளில்தான் ஆழமான மனக்காயங்கள் உருவாகின்றன. அவை வணிகத்தில் பெரும்பாதிப்பை ஏற்படுத்துகின்றன. வார்த்தைகளுக்குக் கொடுக்கப்படும் விலையை நீதிமானோ, உழவனோ அறிந்ததைவிட வணிகனே அதிகம் அறிந்திருப்பான். எனவே, விடை சொல்வதைத் தவிர்த்தான் ஹிப்பாலஸ்.

``ஏன் தயங்குகிறீர்கள், நீங்கள் நினைப்பதைச் சொல்லுங்கள்?”

சொல்ல முடியாமல் தவித்தவன் தயக்கத்தை உடைத்து மெள்ளச் சொன்னான் ``பொன்னும் மணியும் முத்துக்களைவிட மதிப்பு உயர்ந்தன. ஆனால், அவை மிகக்குறைவாகவே கிடைக்கின்றன. முத்துக்களோ அளவிடற்கரிய முறையில் கிடைக்கின்றன. பெரும்முத்துக்குளியலை நாள்தோறும் நடத்திவரும் பாண்டியநாடே செழிப்புமிக்கது.”

தலையசைத்துச் சிரித்தான் சோழவேலன் ``இப்படித்தான் தவறுதலாக மதிப்பிடுகிறீர்கள்.”

``இதில் என்ன தவறு இருக்கிறது?”

``முத்துக்களைவிடப் பொன்னும் மணியும்தாமே மதிப்பில் உயர்ந்தன?”

``ஆமாம்.”
``அந்தச் செல்வத்தை அளவிட முடியாத அளவு வைத்துள்ளது யார்?”

சற்றே தயங்கியபடி ``தெரியவில்லை” என்றான் ஹிப்பாலஸ்.

ஹிப்பாலஸின் முகத்தைக் கூர்ந்துபார்த்து, புருவங்களை உயர்த்தியபடி சொன்னார், ``பறம்பின் பாரி.”

கண்கள் பிதுங்க விழித்தான் ஹிப்பாலஸ். `என்ன சொல்கிறான் சோழவேலன்' என்பதைப் புரிந்துகொள்ள முடியாத குழப்பத்தை, அவனது முகம் காட்டியது.

``நான் சொல்வதை உங்களால் ஏற்க முடியவில்லை அல்லவா?”

``ஆம்'' எனத் தலையசைத்தான்.

``பச்சைமலைத்தொடரின் நீளம் அறிவீர்களா நீங்கள்?”

``எங்களின் நாவாய்கள் குமரிமுனை திரும்பினால் கரையையொட்டி ஒரு மாதகாலம் பயணப்பட்டு, சுபாகரா இடத்தில் மேற்குத் திசையில் திரும்புகின்றன. அந்த இடம் வரை நீண்டுகிடக்கிறது என நினைக்கிறேன்.”

``ஆமாம். நீங்கள் சொல்வது மிகச்சரி. கண்காண முடியாத தொலைவு நீண்டுகிடக்கும் இந்தப்

பச்சைமலைத்தொடர் முழுவதையும் தம் வாழ்விடமாகக் கொண்டவர்கள்தாம் பதினான்கு வேளிர்குடிகள்.

மலையுள் உள்ள குகைப்பாறைகளின் சுரங்கங்களிலும் ஆற்றிலும் பள்ளத்தாக்கிலும்தான் விலை உயர்ந்த மணிக்கற்கள் கிடைக்கின்றன. உங்களின் யவனப் பேரரசர் உட்பட எல்லா நாட்டு வேந்தர்களும் செல்வந்தர்களும் எண்வகைத் திருமணிகளையே வாங்கவும் அணியவும் சேமிக்கவும் விரும்புகிறோம்.”

அமைதிகொண்டு கேட்டான் ஹிப்பாலஸ்.

``வெருகின் கண்போல முழுப்பச்சை நிறத்தின் நடுவில் செங்குத்தான வெண்கோடு ஒளிருமே பூமர வைடூரியம். அதைத்தானே யவனர்களாகிய நீங்கள் மிக உயர்ந்ததாகக் கருதுவீர்கள்?”

``ஆமாம்.”

``அந்த வகையான வைடூரியம் மிக அதிகமாகக் கிடைப்பது உடுவன்மலையில். அந்த மலையை ஆள்பவன் வேள் அழுந்துவன்.”

`இதை எதற்குச் சொல்கிறார்?’ எனச் சிந்தித்தான் ஹிப்பாலஸ்.

``தேன்துளியின் மீது கதிரவன் ஒளிபட்டு மின்னுவதுபோல் இருக்குமே அது என்ன வகை வைடூரியம்?” எனக் கேட்டார்.

ஹிப்பாலஸுக்கு, சட்டெனப் பெயர் நினைவில் வரவில்லை. சோழவேலன் சொன்னார், ``வாலவாயம். அது கிடைப்பது தணக்கன் குன்றில். அந்த இடம் நெடுவேள் ஆதனின் மலைப்பகுதியைச் சேர்ந்தது. அவனது மலைக்கு அடுத்து இருப்பதுதான் பன்றிமலை. மயிலின் கழுத்துபோலக் கார்நீலம் இறங்கி ஓடும் வைரக்கல் கிடைக்கும் இடம் அதுதான்” என்று பட்டியலிட்டார் சோழவேலன்.

இவரது பேச்சு எதை நோக்கிப் போகிறது என்பதை ஹிப்பாலஸால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஹிப்பாலஸின் முகத்தைக் கூர்ந்து பார்த்தபடி சோழவேலன் கேட்டார், ``எங்கள் வேந்தர்கள் மிகவும் விரும்பி அணியும் வைடூரியம் எது தெரியுமா?”

``தெரியாது” என்றான்.

``முயலின் குருதி சிற்றகலின் ஒளி பட்டுத் திகைத்துத் திகைத்து ஒளி சிந்தும். அதன் ஒவ்வொரு மினுக்கும் ஒவ்வொரு நிறத்தில் இருக்கும். அந்த வகையிலான வைடூரியத்தை `துகிர்கனகம்’ என்போம். அதுதான் இந்த நிலமெங்கும் இருக்கும் வேந்தர்கள் விரும்பி அணிவது. அது கிடைக்கும் இடம் புடவூர் வேளன்குன்றில்.

சொல்லியபடி இருக்கையை விட்டு எழுந்தார் சோழவேலன். ஹிப்பாலஸும் உடன் எழுந்தான். விருந்து மாளிகையின் எதிர்ப்புறச் சுவரை நோக்கி மெள்ள நடந்தபடி சோழவேலன் கேட்டார், ``யவன வணிகர்கள் நீலமணிக்கற்களை மிக அதிகமாக வாங்குவது எந்த நாட்டில்?”

``எங்கள் நாட்டுச் செல்வந்தர்கள் அதிகம் விரும்புவது கார்நீல மணிகளைத்தான். அந்த வகை மணிகள் அதிகம் கிடைப்பது ஈழநாட்டில்தான். எனவே, அங்கிருந்து அதிகம் வாங்குகிறோம். அரச குடும்பத்தினர் பொதுவாக கார்நீலத்தைத் தவிர்த்துவிட்டு மாநீல மணிகற்களைத்தான் பயன்படுத்துவர். அந்த வகைக் கற்கள் அதிகம் கிடைப்பது மணிபல்லவத் தீவில். எனவே, எங்களின் நாவாய்கள் ஆண்டு முழுவதும் மணிபல்லவத் தீவில் நிலைகொள்கின்றன.”

சுவரில் இருந்த ஓவியத்தில் பெண் ஒருத்தி நீர்நிறைந்த சிறு குவளையைக் கையில் வைத்துள்ளாள். அந்தக் குவளையில் உள்ள நீரிலிருந்து ஒளி படருவதுபோல் வரையப்பட்டிருந்தது. அதைக் காட்டி, ``இந்த ஓவியம் எதைக் குறிக்கிறது என்று உங்களால் அறிய முடிகிறதா?” எனக் கேட்டார்.

நீர் நிரம்பிய குவளையிலிருந்து எப்படி ஒளி வருகிறது என்பது ஹிப்பாலஸுக்குப் புரியவில்லை. அதைக் கேட்ட பிறகு சோழவேலன் சொன்னார், ``அதில் உள்ளது புன்னாட்டு மணிக்கல். அது உமிழும் நீலத்துக்கு இணையே இல்லை. குவளை நிறைய கறந்த பாலை நிரப்பி, அதற்குள் அந்த மணிக்கல்லைப் போட்டால் பாலுக்கு மேல் ஒளி பரவும்” என்றார்.

ஹிப்பாலஸின் முகம் முழுவதும் வியப்பு பரவியது. சோழவேலன் சொன்னார், ``அந்தப் புன்னாடு வேள்முடியனின் கையில் உள்ளது. உள்ளுக்குள் தீச்சுடர்போல் அணையாமல் ஒளி வீசும் இளஞ்சிவப்பு நிற மணிக்கற்கள்தாம் வேந்தர்கள் விரும்பி அணிவது. மகுடத்தில் சூடும் முடிமாலையில் அவ்வித மணிக்கற்கள் பதித்தால், அந்த வேந்தன் எந்தப் போரிலும் தோல்வியைத் தழுவ மாட்டான் என்பது நம்பிக்கை. அவ்வித மணிக்கற்கள் அதிகம் கிடைப்பது செருவின்குன்றில். அது அழும்பின் வேள் குன்றாய் இருக்கிறது.

இவர்கள் உட்பட ஒன்பது வேளிர்கள் இன்றும் பச்சைமலையை ஆள்கின்றனர். எஞ்சியோர் வேற்றுநாட்டுப் படையெடுப்புகளால் வீழ்ந்துவிட்டனர். பதினான்கு குடி வேளிர்களுக்கும் ஆதியிலிருந்து ஒரு பழக்கம் இருக்கிறது. அவர்களின் நிலப்பகுதியில் கண்டெடுக்கும் மணிக்கற்களைக் குலத்தலைவனிடம் கொடுப்பர். அவன் அவற்றைப் பாதுகாத்து வைப்பான். அந்தக் குலத்தலைவன் மரணத்தைத் தழுவியவுடன் புதியவன் பொறுப்பை ஏற்கும்போது செய்யும் முதற்பணி, ஏற்கெனவே இருந்தவன் காலத்தில் சேகரிக்கப்பட்ட மணிக்கற்களைப் பறம்புநாட்டிலிருக்கும் பாழி நகரில் போய் வைத்துவிடுவதுதான்.’’


சோழவேலன் சொல்லிவந்தது என்ன என்பதை ஹிப்பாலஸ் உணரும் வேளை தேறல்களின் மயக்கத்தை கணநேரத்தில் கலைத்தது. சோழவேலன் தொடர்ந்தார், ``ஆதியில் நெருக்கடியான சுழலில் யாரோ ஒரு வேளிர்குடி பாழி நகரில் போய் மணிகற்களைப் பாதுகாத்து வைத்திருப்பான். அதன் பிறகு வேளிர் குடிகளிடம் இது ஒரு சடங்காக மாறிவிட்டது. குலத்தின் புதிய தலைவன் பழையவனின் காலத்துச் சேமிப்பைப் பாழியில் போடுவது அவனது காலத்தைச் சிறப்பாக்கும் என்ற நம்பிக்கை

உருவாகியுள்ளது. இப்படி பதினான்கு வேளிர்குடியும் தலைமுறை தலைமுறையாக மணிக்கற்களைப் பாழி நகரில் போட்டுவிட்டு வருகின்றனர். பறம்பு வேளிர்கள் அதைக் காத்துவருகின்றனர்.”

செங்கணச்சோழன் படையெடுப்பின் நோக்கம் ஹிப்பாலஸுக்குத் தெளிவாகப் புரிந்தது. ஆனால், இந்தச் செய்தியே தெரியாமல்தான் மற்ற வேந்தர்கள் இருக்கிறார்கள் என்பதை நம்ப முடியவில்லை. சோழவேலன் சொல்வது உண்மையாக இருக்குமேயானால் பறம்பின் மாபெரும் செல்வம் கொள்ளிக்காட்டு விதையோ, சோமப்பூண்டு பானமோ, தேவாங்கு விலங்கோ அல்ல; பாழி நகர்ச் செல்வம்தான்.”

ஹிப்பாலஸ் எண்ணிக்கொண்டிருக்கும்போது சோழவேலன் சொன்னார், ``இன்று, நேற்று அல்ல... எத்தனையோ தலைமுறைகளாகப் பாழி நகரத்தில் குவிக்கப்படும் செல்வம் கதைகளாகப் பரவியபடியே இருக்கிறது. உலகின் மாபெரும் செல்வமான மணிக்கற்களை மலைமக்கள் பாழாய்ப்போடுகின்றனர் என்று எல்லோருக்கும் தெரியும். அதைக் கைப்பற்றும் கனவும் தலைமுறை தலைமுறையாக வளர்ந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால், அந்தப் பாழி நகர் எங்கு இருக்கிறது என்ற குறிப்பு, வேளிர்குடியின் மிகச்சிலரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அவர்கள் எந்தச் சூழலிலும் அதை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள மாட்டார்கள். போரில் வீழ்ந்த வேளிர்களிடம்கூட அந்த உண்மையைப் பெற முடியவில்லை.”

ஹிப்பாலஸ் தன்னை முழுமுற்றாக மறந்த நிலையில் சோழவேலனின் சொல்லைக் கவனித்துக்கொண்டிருந்தான்.



``மறைக்கப்படுவதுதான் கவனிக்கப்படுவதாக மாறும். மேற்குத்திசையில் உள்ள பச்சைமலைத்தொடரில் வேளிர்களால் மறைக்கப்படுவது கிழக்குத்திசைக் குன்றுகளில் உள்ள நெடுங்காடர்களால் கவனிக்கப்படத் தொடங்கியது. தலைமுறை தலைமுறையாகப் பாழி நகரை அறிவதே நெடுங்காடர்களின் பணி. அவர்களின் முன்னோர்கள் இட்ட வாக்கும் அதுதான். மண்ணின் அடிவாரத்தை மோந்தே கண்டறியும் கீழ்க்காடர்கள்தான் பாழி நகர் நிலைகொண்டுள்ள நிலத்தைக் கண்டறிந்துள்ளனர். எண்ணிலடங்காத மணிக்கற்கள் குவிக்கப்பட்டிருக்கும் அந்த நிலத்தை அவர்கள் கண்டறிந்தபோதுதான் இன்னொன்றையும் சேர்த்தே அறிந்தனர்.

``என்ன?'' என்று அதிர்ந்து கேட்டான் ஹிப்பாலஸ்.

``வேற்று மனிதர்களால் ஒருபோதும் அந்த இடத்தைக் கண்டறிந்து, அந்தச் செல்வத்தைக் கைப்பற்ற முடியாது என்பதுதான் அது. கீழ்க்காடர்களின் இந்தக் கூற்றை மேல்காடர்களும் குறுங்காடர்களும் ஏற்பதில்லை. அந்தச் செல்வத்தைக் கைப்பற்றக் கீழ்க்காடர்கள் ஒத்துழைப்பதில்லை என்ற காரணத்தினாலேயே காடர்களுக்குள் பல தலைமுறைகளாகப் பகை உண்டாகியது.

செங்கணச்சோழன் மூவரையும் ஒருசேரத் தாக்கியபோது, தங்களைப் பாதுகாத்துக்கொள்ள மூவரும் ஒன்றுசேர்ந்துள்ளனர். அப்படியிருந்தும் சோழப் பேரரசின் பெரும்படையை அவர்களால் வீழ்த்த முடியவில்லை. சோழப்படைக்குக் கிடைத்த பெரும்வாய்ப்பு இயற்கையால் நிகழ்ந்த நிலச்சரிவு. அது நெடுங்காடர்களின் குடியிருப்புகளை அழித்தது. அவர்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து சோழப்படையின் மீது தாக்குதல் தொடுக்க முடியாத நிலையை உருவாக்கியது. அப்படியிருந்தும் சோழர்களால் அவர்களை வெல்ல முடியவில்லை. போர் நெடுங்காலம் நீடித்தது. இறுதியில் மேல்காடர்கள் உடன்படிக்கைத் திட்டத்தைச் சொன்னார்கள். செங்கணச்சோழன் அதை ஏற்றுக்கொண்டு தாளமலையைக் கைப்பற்றும் திட்டத்தைக் கைவிட்டான்" என்றான் சோழவேலன்.

ஹிப்பாலஸ், இருக்கையின் முனைக்கே வந்துவிட்டான். மீண்டும் எழுந்தார் சோழவேலன். ``போரிட்டுக்கொண்டிருந்தவர்களை ஒன்றாக இணைத்தது நெடுங்காடர்கள் சொன்ன உடன்படிக்கைத் திட்டம். இருவரின் நீண்டநாள் கனவுகளும் ஒன்றாயின. அதுதான் பாழி நகர். அந்தப் பெருஞ்செல்வத்தை இணைந்து கண்டறிய முடிவுசெய்தனர். காட்டைப் பிளந்து முன்னேறும் ஆற்றல்கொண்ட படையோடு என் மகன் பாழி நகர் நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறான்."

சோழனின் திட்டத்தை முழுமையாக அறிந்தபோது ஹிப்பாலஸ் மெய்சிலிர்த்து நின்றான்.

``கிழக்குக்கும் மேற்குக்குமான பகை, வேந்தனுக்கும் வேளிருக்குமான முரணோடு இணைந்துவிட்டது. இனி பாழி நகரைக் காப்பாற்றப் பாரியால் முடியாது" என்றான் சோழவேலன்.

இருக்கன்குன்றின் மேலே காத்திருந்த தேக்கனுக்கு உதியஞ்சேரலின் திட்டத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆயிமலையின் இரு பக்க விளிம்புகளிலும் தனது படையைக் கொண்டுபோய் நிறுத்திய பிறகும் எதிரிகளின் பக்கத்தில் எந்தவித அசைவும் இல்லை. `என்னதான் நினைக்கிறான் உதியஞ்சேரல்?' என நினைத்தபடியே இருந்த தேக்கன், குதிரைவீரர்களை அழைத்தான். அறுவர்

முன்வந்தனர். தன்னோடு எவ்வியூரிலிருந்து வந்த எயினியிடம் சொன்னான், ``அறுவரையும் அழைத்துக்கொண்டு எதிரில் இருக்கும் ஆயிமலையின் முகட்டுக்குப் போ. அங்கு செல்லும் வரை நமக்குக் குதிரைப்பாதை இருக்கிறது. தேவைப்பட்டால் குதிரைப்பாதையையும் கடந்து சில வீரர்களை அனுப்பிவை. ஆயிமலையின் மறுபக்கம் எதிரிகளின் நடவடிக்கையை அறிந்து வா'' என்றான்.

எயினி, ஆறு வீரர்களை அழைத்துக்கொண்டு புறப்பட்டான். இருக்கன்குன்றிலிருந்து இறங்கி ஆயிமலையின் மேற்புறம் ஏறி உச்சி முகட்டை அடைய வேண்டும். போரின் முதற்பணி தனக்கு வழங்கப்பட்டதை எண்ணி மகிழ்வோடு விரைந்தான் எயினி.

பறம்பில் உள்ள குதிரைகளை, வாரிக்கையன் இரு பாகங்களாகப் பிரித்திருந்தார். அதில் பெரும்பாகத்தை எவ்வியூரில் வைத்துக்கொண்டார். சிறு பாகத்தை மூன்றாகப் பிரித்து மூன்று திசைகளிலும் களம்நோக்கி அனுப்பினார். அவர் அனுப்பிய இருநூறு குதிரைகள் முந்தைய நாள் தேக்கனின் இடத்துக்கு வந்து சேர்ந்தன. அதை முழுமையாகத் தன்னுடன் வைத்துக்கொண்டான். ஆயிமலையின் இரு பக்க விளிம்புகளிலும் கூழையனும் உதிரனும் எதிரிகளைத் தாக்க ஆயத்தநிலையில் இருந்தனர். ஆனால், அவர்களுக்குக் குதிரைவீரர்களை அனுப்பவில்லை. தாக்குதலை மேலிருந்து கண்காணித்துக்கொண்டிருந்த தேக்கனிடம்தான் அனைத்துக் குதிரைவீரர்களும் இருந்தனர். யாருக்கு உதவி தேவையோ அவர்களை நோக்கிக் குதிரைப்படையை அனுப்புவதுதான் தேக்கனின் திட்டம்.

எயினியின் தலைமையிலான ஆறு வீரர்களும் இருக்கன்குன்றைத் தாண்டி ஆயிமலையில் ஏறத் தொடங்கினர். குதிரைகள் பிறந்தது முதலே பறம்பின் மலைப்பாதையில் ஓடிப்பழகியவை. எனவே, மலையேற்றத்திலும் வேகம் குறையாமல் வீரர்களைச் சுமந்து செல்லக்கூடியவை.

ஆயிமலையின் பாதி உயரத்தைக் கடந்தனர். சில இடங்களில் ஆபத்தான சரிவுப்பாறைகள் உண்டு. அந்த இடங்களில் குதிரையை விட்டு இறங்கி நடந்து செல்வர். முன்னால் சென்றுகொண்டிருந்த எயினி இறங்கி நடந்தான். வீரனாகிய தனக்கு வழங்கப்பட்ட இந்தப் பணி குறித்து எயினியின் மனதில் மகிழ்வு பீறிட்டபடி இருந்தது. சரிவுப்பாறையில்கூட குதிரையை நடக்கவிடவில்லை அவன். ஓடுகிற அதே வேகத்தில் இழுத்துக்கொண்டு நடந்தான். பாறையைக் கடந்ததும் குதிரையின் மீது ஏறிக் கடிவாளத்தைச் சுண்டினான். வரிசையாக மற்ற வீரர்களும் குதிரையின் மீது ஏறினர். வேகம் கூடியது. ஆயிமலை முகட்டின் பின்புறமிருந்து உதியஞ்சேரல் எதை எதிர்பார்த்துக் காத்திருந்தானோ அது அவனை நோக்கி வந்துகொண்டிருந்தது.

**சோ**ழனின் பெரும்படை சுழிப்பள்ளத்தை அடைந்தது. படையின் வால்பகுதி மறுமலையைக் கடந்து கிடந்தது.

இடப்புறக் கரையின் மேல் மறைந்தபடி வந்துகொண்டிருந்த பிட்டன் தலைமையிலான படையும் வலப்புறத்திலிருந்த இரவாதன் தலைமையிலான படையும் தங்களின் நிலையிலேயே இருந்தனர். இந்தப் படை சுழிப்பள்ளத்திலிருந்து இடப்புறமாக எழுவனாற்றில் நுழையப்போகிறதா அல்லது வலப்புறமாக வட்டாற்றில் நுழையப்போகிறதா என்பதைப் பொறுத்துத்தான் அவர்கள் தாக்குதல்

அமையும். தாக்குவது என்று முடிவானால் அதற்கான உத்தரவை இரவில்தான் பாரி அறிவிப்பான் என்று இருவரும் நம்பினர். ஏனென்றால், படையின் எண்ணிக்கை மிகப்பெரியது. இரவுதான் சிதறடிக்கும் தாக்குதலுக்குப் பொருத்தமானது.

ஆற்றின் இரு பக்கங்களும் மேலிருந்து படை நகர்வைக் கவனிக்கத் தொடங்கினர். ஆற்றின் போக்கிலே எவ்வியூர் நோக்கிப் போகப்போகிறார்களா அல்லது இணையும் ஆற்றுத்தடத்தில் நுழையப்போகிறார்களா என்பதை உன்னிப்பாகக் கவனித்தனர். விருகமரம் ஒன்றின் மீது ஏறி, தலையை மட்டும் வெளியே நீட்டி உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான் பிட்டன். ஆற்றின் வலப்புறம் பாறையின் மேல்மடிப்பிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான் இரவாதன். மலைமுகட்டின் மீதிருந்த பாரியின் இரு கண்களும் சுழிப்பள்ளத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தன.

பொழுது புலர்ந்த சிறிது நேரத்திலேயே, கதிரவன் ஒளியில் மின்னத் தொடங்கிய வட்டாற்று மணலில் தம்முடைய கால்களைப் பதித்தன சோழப்படையின் முதல் வரிசை யானைகள்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-75

ஆயிமலையின் முகட்டுக்கு எயினி தலைமையில் அறுவரும் வந்து சேர்ந்தனர். குதிரையை விட்டு எயினி இறங்கினான். வீரர்கள் ஒவ்வொருவராக வந்து இறங்கிக்கொண்டிருந்தனர். `முதலில் மூவரை முகட்டின் பின்புறம் அனுப்பிவைப்போம்' என்று அவன் நினைத்தபோது முகட்டுக்கு அப்பாலிருந்து ஏதோ ஓர் ஓசை கேட்டது. எதிரிகள் மிக அருகில்தான் இருக்கிறார்கள் என்பதைக் கணித்த எயினி, சட்டென இடுப்பில் இருந்த குறுவாளை உருவினான்.




மற்றவர்களும் ஆயுதங்களை ஏந்திப்பிடிக்க ஆயத்தமாகும்போது, முகட்டின் பின்புறமிருந்த ஓசை மிக வேகமாக நகர்ந்து வருவதுபோலிருந்தது. 'கண நேரத்துக்குள் எப்படி இங்கே?' என்று எயினி எண்ணிக்கொண்டிருக்கும்போதே மரத்தின் உச்சிக்கிளையில் இருந்த ஒன்று பெரும் ஊளைச் சத்தத்தோடு பாய்ந்து இறங்கியது. மனிதர்கள் வருவார்கள் என்று புதர்களுக்குள் பார்த்துக்கொண்டிருந்தவன், மரத்தின் மேலிருந்து பாய்ச்சலைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

பாய்ந்த தோகைநாய், குதிரையின் பிடரியைக் கவ்வி ஓர் இழு இழுத்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் எயினியின் குதிரை தடுமாறிக் கீழே சாய்ந்தது. எயினி உருவிய வாளோடு அந்த விலங்கை நோக்கிப் பாய்ந்தபோது பீறிட்ட குதிரையின் குருதி அவனது முகத்திலே பீய்ச்சியடித்தது. திகைத்துப்போனவனுக்கு என்ன நடக்கிறது எனப் புரிவதற்கு முன் அடுத்தடுத்து தோகைநாய்கள் மரத்திலிருந்து குதிரைகளை நோக்கிப் பாய்ந்துகொண்டிருந்தன.

வீரர்களால் வில்லில் அம்பைத் தொடுக்கவே முடியவில்லை. இதுவரை கேட்டிராத ஊளைச் சத்தத்தோடு இறங்கிக்கொண்டிருக்கும் விலங்குகளை எப்படி எதிர்கொள்வது எனச் சிந்திக்கும் முன், தாக்குதல் முடிவுறும் கட்டத்தை நெருங்கியது. இடுப்பில் இருந்த குறுவாள்கொண்டு, பாயும் விலங்கின் மீது பாய எத்தனித்தனர். அப்போது குதிரைகளைச் சரிவில் இழுத்துத் தள்ளிக்கொண்டிருந்தன

தோகைநாய்கள். முன்னும் பின்னுமாக வீரர்கள் அலைமோதியபோது பாய்ந்து இறங்கும் தோகைநாய்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருந்தது.

கணநேரத்துக்குள் ஏழு குதிரைகளும் குருதி வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தன. எயினிக்கு, என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. பறம்புவீரன், தான் சாக நேர்ந்தாலும் குதிரையைப் பாதுகாப்பாகக் கொண்டுவந்து சேர்க்க வேண்டும் என்பது பறம்பின் பழக்கம். ஆனால், ஏழு குதிரைகளின் உயிரும் கண்களுக்கு முன்னால் துடித்துக்கொண்டிருக்க எயினி முடிவெடுக்க ஓரிரு கணங்களே இருந்தன.

இருக்கன்குன்றில் இருந்தபடி எதிரில் இருந்த ஆயிமலையின் உச்சியைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான் தேக்கன். திடீரென அங்கே ஓசை கேட்பதை அறிய முடிந்தது. `எதிரிகள் ஏதோ சூழ்ச்சி செய்துவிட்டனர்' என்று அவன் எண்ணிக்கொண்டிருந்தபோது சரிவுப்பாறை ஒன்றில் குதிரை ஒன்று சரிந்து கீழே விழுவது தெரிந்தது. அதிர்ந்தான் தேக்கன். `பறம்பின் மலையில் குதிரையைச் சரித்து வீழ்த்தும் அளவுக்கு எதிரிகளுக்கு எங்கிருந்து வந்தது வீரம்? ஏதோ சூழ்ச்சியில் நம்மவர்கள் மாட்டிக்கொண்டு விட்டார்கள்' என்று கணித்து, அருகில் இருந்த நெடுமனை அழைத்தான். ``பதினைந்து குதிரைவீரர்களை அழைத்துக் கொண்டு உடனடியாகப் போ'' என்று ஆணையிட்டான்.



நெடுமன், மிகத் திறமையான வீரன். ஆபத்தான கட்டத்தில் மட்டுமே பயன்படுத்தக்கூடிய வீரர்களில் அவனும் ஒருவன். நெடுமனின் குதிரை கனைத்தபடி பாதை நோக்கிப் பாய்ந்தது.

வட்டாற்றில் யானைப்படையை வழிநடத்திச் சென்றுகொண்டிருந்தான் அரிஞ்சயன். அவன்தான் யானைப்படையின் தளபதி. இந்தப் படையெடுப்பே யானைப்படையை மையப்படுத்தியதுதான். பல்லாயிரம் வீரர்கள் உடன்வந்தாலும் அவர்களை யானைகளுக்கு இணை சொல்ல முடியாது. காடு, யானைகளின் களம். அடர்காட்டில் பழக்கப்படுத்தப்பட்ட போர் யானைகள் ஒவ்வொன்றும் ஒரு பெரும்படைக்குச் சமம்.

பத்து யானைகளை இணைத்து ஒரு வகைமையாகவும் பத்து வகைமைகளை இணைத்து ஒரு தொகையாகவும் பிரித்திருந்தனர். யானையின் மீது இருப்பவன் பாகன், வகைமையின் பொறுப்பாளன் வாகையன். தொகைகளின் பொறுப்பாளன் தளகர்த்தன். இந்த ஐந்து தளகர்த்தர்களும் யானைப்படைத் தளபதி அரிஞ்சயனுக்குக் கட்டுப்பட்டவர்கள். ஐந்து தொகைகளைப் போதிய இடைவெளியில் தனித்தனியாக வருவதுபோல முன்நடத்திக்கொண்டிருந்தான் அரிஞ்சயன்.

இதேபோன்று காலாட்படையும் எண்ணிக்கை வாரியாகப் பிரிக்கப்பட்டிருந்தது. காலாட்படையின் தளபதி கிழானடி வானவன். ``படையின் வலிமை, எண்ணிக்கையில் அன்று; அதன் கட்டுக்கோப்பான செயல்பாட்டில்தான் இருக்கிறது. வலிமையான தாக்குதலை முறையற்று நடத்துவதைவிட, எளிய தாக்குதலை முறையான ஒழுங்கோடு நடத்துவதே எதிரிகளை வீழ்த்தும்” என்பதை ஒவ்வொரு வீரனையும் உணரச்செய்தவன்.

நெடுங்காடர்கள், தம்முடைய மூன்று பிரிவுகளுக்கும் தனித்தனித் தலைமையைக் கொண்டிருந்தனர். மூவருக்கும் பொதுத்தலைவனாகத் துணங்கன் இருந்தான். இந்தப் பெரும்படையெடுப்புக்குச் சோழநாட்டின் தலைமைத் தளபதி உரையன்தான் தலைமையேற்பதாக இருந்தது. ஆனால், பெருஞ்செல்வத்தை நோக்கிய படையெடுப்பால் தானே தலைமையேற்றான் செங்கணச்சோழன்.

நெடுங்காடர்களின் திறமை கண்டு வியக்காதவர்கள் எவரும் இருக்க முடியாது. காட்டில் அவர்களை வீழ்த்தவோ, வெல்லவோ முடியாது என்பதை உறுதியாக நம்பிய பிறகே செங்கணச்சோழன் போரில் பங்கெடுக்க முடிவுசெய்தான். பேரரசரே நேரில் ஈடுபடும் போரில் படைவீரர்கள் பல மடங்கு ஆற்றலுடன் செயல்படுவார்கள். வெற்றி பற்றிய எண்ணம் உச்சம்கொண்டிருக்கும். வீரர்களின் மனோபலத்தைப் பல மடங்கு அது உயர்த்தியிருக்கும். அதுமட்டுமன்று, பெருஞ்செல்வத்தைக் கைப்பற்ற நடக்கும் போர் என்பதால், வீரர்களுக்கும் அதில் பங்குண்டு. எனவே களைப்பின்றி முன்னேறுவர்.

வட்டாற்றில் திரும்பிய சிறிது நேரத்திலேயே வேந்தனின் அருகில் வந்த தளபதி உரையன் சொன்னான், ``வேற்றுநாட்டு எல்லைக்குள் நுழைந்து இத்தனை நாள்களாகியும் எந்தவிதத் தாக்குதலும் நடக்கவில்லை என்பது பலருக்கும் வியப்பாகவே இருக்கிறது. பறம்பின் வீரர்களுக்குத் தெரியாமலிருக்க வாய்ப்பேதுமில்லை. நமது படையின் வலிமைகண்டு மிரண்டுபோயிருப்பர் என்று வீரர்கள் பேசிக்கொள்கிறார்கள்.”

குதிரையில் பயணித்தபடியே உரையனின் சொல் கேட்டு மகிழ்ந்தான் வேந்தன். சிறிது நேரத்துக்குப் பிறகு நெடுங்காடர்களின் தலைவன் துணங்கனை அழைத்துவரச் சொன்னான்.

துணங்கன் விரைந்து வந்துசேர்ந்தான். குதிரையை விட்டுக் கீழிறங்கி வேந்தனை வணங்கினான். ``எதிரிகளைப் பற்றி என்ன நினைக்கிறாய்?'' என, பேச்சைத் தொடங்கினான் செங்கணச்சோழன்.

குதிரையைப் பிடித்துக்கொண்டு நடந்தபடியே சொன்னான், ``அவர்கள் நம்மைப் பல நாள்களாகப் பின்தொடர்ந்து வருகிறார்கள்.''

இயல்பான குரலில் துணங்கன் சொன்னது, பெரும் அதிர்ச்சியாய் இருந்தது.

``எந்தத் திசையில்?'' என வேகமாகக் கேட்டான் உரையன்.

``ஆற்றின் இரு கரைகளிலும் பத்துப்பனை உயரத்துக்குமேல்.''

``எவ்வளவு உயரத்தில் வந்தால் என்ன? மேலேயிருந்து தாக்குபவர்களின் ஆயுதங்கள் இருமடங்கு வேகம்கொள்ளும் என்றுதான் அவர்களுக்குத் தெரியும். ஆனால், அதைவிட வேகமாக நம் எறிபொறிகள், ஆயுதங்களை மேல்நோக்கி வீசக்கூடியவை என்பது அவர்களுக்குத் தெரியாதே'' என்றான்.

செங்கணச்சோழன் துணங்கனைப் பார்த்தபடி கேட்டான், ``எத்தனை பேர் இருக்கிறார்கள்?''

``களையும் பறவைகள் வெகுதொலைவு செல்வதில்லை. அருகில் இருக்கும் மரங்களிலேயே உட்கார்ந்துவிடுகின்றன. எனவே, எண்ணிக்கை சில நூறுகளாகத்தான் இருக்கும்.''

எதிரிகளின் படைநகர்வைப் பறவைகளை வைத்தே கணிக்கிறான் என அறிந்தபடி ``அவர்களின் திட்டம் என்னவாக இருக்கும் எனக் கருதுகிறாய்?'' எனக் கேட்டான்.

``முடிவெடுக்க முடியாத குழப்பமாக இருக்கும்?''

``ஏன்?''

`` `இந்தப் பாதையை எப்படித் தெரிவுசெய்தார்கள்? எதை நோக்கிப் போகிறார்கள்? இந்தக் கொடுங்கோடையிலும் இவ்வளவு பெரும்படைக்கு எப்படி நீராதாரத்தை உருவாக்குகிறார்கள்?' என எல்லாமே அவர்களுக்கு விடையில்லாத கேள்விகள்தான். விடையில்லாத கேள்விகளோடு போரிடுபவனுக்கு உள்வலிமை இருக்காது. பாரி மிகச்சிறந்த வீரன். எனவே, இந்தக் கேள்விகளுக்கு

விடை கண்டறியாமல் தாக்குதலைத் தொடங்க மாட்டான்.”

ஒரு கணம் திகைத்துப்போனான் செங்கணச்சோழன். பல்லாயிரம் படை வீரர்களோடு பறம்புக்குள் இத்தனை நாள்களாக ஊடுருவி வந்துவிட்ட நிலையிலும் தன் தளபதி ஒருவன் பாரியின் வீரத்தை வியந்து பேசுவது அவனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனால், நெடுங்காடனைத் தன் சொந்தத் தளபதியைப் போல அணுகிவிட முடியாது. எனவே, உணர்வை வெளிக்காட்டாமல் கேட்டான், ``நீ பாரியைப் பார்த்திருக்கிறாயா?’’
``அருகில் பார்த்ததில்லை. மிகத் தொலைவில் பார்த்திருக்கிறேன்.”

``எப்போது?”

``இன்று.”

செங்கணச்சோழன் கடிவாளத்தை இழுத்து நிறுத்தினான். குதிரை கனைத்து நின்றது. ``காலையிலிருந்து இங்கேதானே இருந்தாய்! அவனை எங்கே பார்த்தாய்?”

சற்றே சிரித்தான் துணங்கன். ``நான் மேல்காடன் என்பதை நீங்கள் மறந்துவிட்டீர்கள்.”

உரையன் விரைந்து கேட்டான், ``பத்துப்பனை உயரத்தை நம் எறிபொறிகளால் துல்லியமாகத் தாக்க முடியும். அவன் எந்தத் திசையில் வருகிறான். உடனடியாகச் சொல்.”

துணங்கன் சொன்னான், ``பத்துப்பனை உயரத்தில் வருவது அவன் படைகள் மட்டும்தான். அவன் வருவதோ மலையின் உச்சிமுகட்டில்.”

செங்கணச்சோழனும் உரையனும் சட்டென மலைமுகட்டை அண்ணாந்து பார்த்தனர். கதிரவன் ஒளி, மேல்விளிம்பில் பட்டுத் தெறித்துக்கொண்டிருந்தது. கூசிய கண்களைச் சிமிட்டியபடி கேட்டனர், ``அங்கு வருவதை இங்கிருந்து பார்த்தாயா?”

`ஆம்’ எனத் தலையசைத்தான் துணங்கன்.

``அவன் பாரி என்று எப்படி முடிவுசெய்தாய்?”


இவ்வளவு பெரும்படையை முழுமையாகப் பார்க்கவும் கணிக்கவும் ஒருவன் எந்த உயரத்தைத் தேர்வு செய்கிறான் என்பதைவைத்தே சொல்லிவிடலாம், அவன் யாராக இருக்கும் என. நான்கு நாள்களாக அவன் மேலும் செல்லாமல் கீழும் இறங்காமல் ஒரே மட்டத்தில் வந்து கொண்டிருக்கிறான்.”

``நான்கு நாள்களாகப் பார்க்கிறாயா?”

``ஆம். அதனால்தான் இன்று முடிவுக்கு வந்தேன், அவன் பாரியாகத்தான் இருக்குமென்று.”

**சோ**ழப்படை காலையில் வட்டாற்றில் திரும்பியவுடன் இடப்புறமிருந்த பிட்டனும் வலபுறமிருந்த இரவாதனும் மிகவும் மகிழ்ந்தனர். எவ்வியூர் நோக்கி வந்தவர்கள் திசையறியாமல் மாறிவிட்டனர் என்ற முடிவுக்குப் போயினர். அதுமட்டுமன்று, வட்டாறு பெரும்பாறை அடுக்குகளை அடிநிலமாகக்கொண்டது. எனவே, இவர்களால் அதிகத் தொலைவு செல்ல முடியாது. நீராதாரம் இல்லாமல் படை தவித்து அலையும் நிலை ஏற்படும். அதுவே நமது தாக்குதலுக்கான சரியான நேரமாக இருக்கும். அதற்காகவே பாரி காத்திருக்கிறான் என நினைத்தனர்.

ஆனால், எதிரிகளின் படை வட்டாற்றில் திரும்பியதும் பாரியின் குழப்பம் மேலும் அதிகமானது. `எதிரிகள் எதை நோக்கிச் சென்றுகொண்டிருக் கின்றனர்?’ இந்தக் கேள்விக்குக் கிடைக்கும் விடை, பாரியை உள்ளுக்குள் உலுக்குவதாக இருந்தது.



**நெ**டுமனின் தலைமையிலான படை இருக்கன்குன்றினைக் கடந்து ஆயிமலையின் பாதித்தொலைவுக்குப் போயிருக்கும்போது எதிர்ப்புற மரக்கிளைகளிலிருந்து தோகைநாய்கள் பாய்ந்து இறங்கின. நீள்வாய் நாய்களின் கோரப்பற்களும் பாயும் வேகமும் யாரையும் கணநேரத்தில் நிலைகுலையச் செய்பவை. உச்சிக்கிளையிலிருந்து பாய்ந்து இறங்கிய அவற்றை நோக்கி வாளை உருவியபோது நெடுமன் சரிந்து கீழே கிடந்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் மரங்களின் மேலிருந்து இடைவிடாமல் அவை பாய்ந்து கொண்டிருந்தன. அவையிடும் ஊளையின் ஆவேசம் குதிரைகளை மிரளச்செய்தது. குதிரைகளின் கனைப்பொலி பாதியில் அறுபட, எழும் ஊளையின் ஓசை தேக்கன் இருக்குமிடம் வரை எதிரொலித்தது.

பொழுது மங்கிக்கொண்டிருந்தது. ஆயிமலையின் கிழக்குப்புறச் சரிவு பறம்பின் பகுதி. அதில் பாதித்


தொலைவுக்கு எதிரிகள் வந்து விட்டார்கள் என்பதைத் தேக்கனால் நம்பவே முடியவில்லை. உடனடியாக முழுக் குதிரைப்படையுடன் அந்த இடம் போக ஆயத்தமானான். வீரர்கள் வேகவேகமாகக் குதிரையில் ஏறிப் புறப்படும்போது உடலெங்கும் குருதிகொட்ட அடர்காட்டுக்குள்ளிருந்து மேலேறி வந்தான் எயினி.

குதிரை புறப்படப்போகும் கணத்தில் காட்டின் அசைவுகளைக் கண்டு நிறுத்தினான் தேக்கன். உள்ளிருந்து எயினி வெளியேறி வந்த காட்சி தேக்கனை உலுக்கியது. ஓடிப்போய் அவன் சரிந்துவிடாமல் பிடித்தான். குற்றுயிராக வந்த எயினி சொன்னான், ``உடனடியாக இங்கு இருக்கும் குதிரைகளைக் காப்பாற்றுங்கள். இங்கு நிறுத்த வேண்டாம். இடப்புறச் சரிவில் இருக்கும் குகைகளில் அவற்றை அடைத்து வீரர்களைப் பாதுகாப்புக்கு நிறுத்துங்கள்.”
தேக்கனோடு இருந்த யாருக்கும் எதுவும் புரியவில்லை. ``போரில் ஈடுபடத்தானே குதிரைகள். அவற்றை ஏன் குகைகளில் அடைத்துக் காக்க வேண்டும்?” எனக் கேட்டான் ஒருவன்.
``பேச நேரமில்லை. புது வகையான விலங்கு ஒன்றை ஏவிவிட்டுள்ளான் சேரன். அவை கணநேரத்தில் குதிரையின் கழுத்தைக் கடித்து இழுத்துவிடுகிறது. நாம் எது செய்தும் அதைத் தடுக்க முடியாது. அது பறக்கும் ஓநாய்போல் இருக்கிறது” என்றான்.

``நீ பயங்கொள்ளாதே! நெடுமன் பதினைந்து குதிரைவீரர்களோடு போயுள்ளான். அவற்றை வெட்டிச் சாய்த்துவிடுவான்” என்று வீரன் ஒருவன் சொல்லி முடிக்கும் முன் எயினி சொன்னான், ``அவற்றில் ஒரு குதிரைகூடத் தப்பிப்பிழைக்காது. உடனடியாக மீதி இருக்கும் குதிரைகளைக் கொண்டு செல்லுங்கள்.”

எயினி சொன்னவுடன் வேறொரு வீரன் ஏதோ மறுசொல் சொல்ல முனைந்தான். ஆனால், தேக்கன் தடுத்துவிட்டான். ``எயினி இவ்வளவு அழுத்தமாகச் சொல்கிறான் என்றால், அதை நாம் எளிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அனைத்துக் குதிரைகளையும் கீழ்ப்புறமிருக்கும் குகைப்புடைவுகளில் அடைத்துக் காவல் இருங்கள். காலாட்படை வீரர்கள் பாதிப் பேர் என்னோடு வாருங்கள். மீதிப் பேர் குதிரைவீரர்களோடு இணைந்து காவல் இருங்கள்” என்று சொல்லிவிட்டு நெடுமன் போன திசையை நோக்கி ஓடத் தொடங்கினான் தேக்கன். மற்ற வீரர்கள் அவனுடன் சேர்ந்து ஓடினர். சிலர் எயினியைத் தூக்கிக்கொண்டு மருத்துவரை நோக்கி ஓடினர். மற்றவர்கள் குதிரையைக் காக்கும் பணியில் ஈடுபட்டனர்.

கதிரவன் ஒளி முழுமுற்றாக மங்கியபோது குதிரைப்பாதையில் ஓடிக்கொண்டிருந்தான் தேக்கன். உருவிய வாளோடு வெறிகொண்டு ஓடினர் வீரர்கள். இருக்கன்குன்றின் அடிவாரத்தைக் கடந்து ஆயிமலையில் கால் வைக்கும்போது நெடுமன் தலைமையில் சென்ற வீரர்கள் எதிர்த்திசையில் ஓடிவந்துகொண்டிருந்தனர். பெரும்ஓசையை எழுப்பியபடி நெடுமன் வந்துகொண்டிருந்தான். அவனை நிறுத்தி என்னவென்று கேட்கவேண்டிய தேவை ஏதும் தேக்கனுக்கு இல்லை.



இப்போது அவர்களின் முன்னுரிமை குதிரைகளைக் காப்பாற்றுவது. எயினி சொன்ன ஒவ்வொரு சொல்லும் நினைவில் எதிரொலித்தபடி இருக்க, வந்த வழியிலேயே திரும்பி குகைப்புடைவை நோக்கி ஓடத்தொடங்கினான் தேக்கன். வீரர்களில் சிலர் தாக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்யச் சென்றனர். மற்றவர்கள் தேக்கனோடு இணைந்து வேகம்கொண்டனர்.

ஓடிக்கொண்டிருந்த தேக்கனை எட்டிப்பிடித்து நிறுத்தினான் நெடுமன். ஏன் நிறுத்துகிறான் எனப் புரியாமல் தேக்கன் நின்றபோது கையை உயர்த்தி மரத்தின் மேலே காட்டினான் நெடுமன். தேக்கன் அண்ணாந்து பார்த்தபோது இருளுக்குள் கிளைகள் அசைவது மட்டுமே தெரிந்தது. என்னவென்று அவன் கேட்கும்முன் நெடுமன் சொன்னான், ``அவை முன்னோக்கிப் போய்விட்டன.”

அதிர்ந்து நின்றான் தேக்கன். ``என்ன சொல்கிறாய்?”

``ஆம். எயினியைத் தொடர்ந்தே பாதி போயிருக்கின்றன. இவை மறுபாதி.”

``அவற்றை வீழ்த்த என்ன வழி?”

``தெரியவில்லை. கண்ணிமைக்கும் நேரத்தில் கொப்புகளின் வழியே தாவிவிடுகின்றன.”

திமிறி ஓடும் வீரர்களின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தி, தானும் நின்றான் தேக்கன். எல்லோரும் திகைத்து நின்றனர்.

வெகுதொலைவு உள்செல்லக்கூடிய குகைகள் மூன்று இருக்கின்றன. மூன்றிற்குள்ளேயும் குதிரைகளை அடைத்து ஆயுதங்களோடு வீரர்கள் காத்திருந்தனர். முன்வரிசையில் உருவிய வாளோடு நின்றனர் எவ்வியூர் வீரர்கள். குதிரைகளின் குருதி வாடையை உணர்ந்தபடி பெரும் ஊளையோடு மரங்களின் மேலிருந்து குகைகளை நோக்கிப் பாயத் தொடங்கின தோகைநாய்கள். வீரர்கள் எய்யும் அம்புகளும் வாள்வீச்சும் அவற்றை குகைகளுக்கு அருகில் நெருங்க முடியாமல் செய்தன. வீரர்களின் ஆவேசக் கூக்குரல் இருளை உலுக்கியது. தோகைநாய்களின் ஊளை ஓசை காடெங்கும் இருந்த பறவைகளை நடுக்குறச்செய்தது. மூன்று குகைகளையும் சுற்றிச் சுற்றி வந்து ஊளையிட்டபடி இருந்தன. குகைவாயில் களில் பந்தங்கள் எரிந்துகொண்டிருக்க, இரவில் குகைகளின் மேற்பாறைகளில் உள்நுழையக்கூடிய பிளவு ஏதாவது இருக்கிறதா என்று இங்கும் அங்குமாகத் தேடிக்கொண்டிருந்தன. நீள்வாய் கொண்டு அவை கடித்திழுக்கும் ஓசை அச்சத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.

வீரர்களோடு அந்த இடமே நின்ற தேக்கன் ``என்ன செய்யலாம் என்ற தெளிவில்லாமல் குகை நோக்கி நகரவேண்டாம்'' என்று கூறிவிட்டான். அதை எதிர் கொண்டு தாக்கியவன் நெடுமன்தான். அவனோடு சென்ற பலரும் இன்னும் வந்து சேரவில்லை. என்ன நிலையில் இருக்கின்றனர் என்றுகூடத் தெரியவில்லை. நெடுமனின் கைத்தசைகள் கிழிந்து தொங்கிக்கொண்டிருந்தன. உடன் இருந்த வீரன் ஒருவன் இடுப்புத்துணியால் அதைக் கட்டி, குருதி சிந்துவதை நிறுத்த முயன்றுகொண்டிருந்தான். குருதிப்போக்கு அதிகமிருந்ததால் அவனுக்குக் கண் செருகுவதுபோல் இருந்தது.

``அவை கூட்டுணர்வுள்ள விலங்குகள். முழுமுற்றாக அழிக்கும் வரை ஒரு குதிரையைக்கூட குகை விட்டு வெளியேற்ற வேண்டாம்” என்றான் நெடுமன். “சரி” எனச் சொல்லி நெடுமனை மருத்துவர்கள் இருக்குமிடம் நோக்கிக் கூட்டிச்செல்ல உத்தரவிட்டான் தேக்கன்.

நெடுமனை அனுப்பிய பிறகு சிறிது நேரம் சிந்தித்தபடி இருந்தான். எயினியும் நெடுமனும் அவற்றின் தாக்குதலை கணநேரம்கூட எதிர்கொள்ள முடியவில்லை. கூட்டுணர்வுள்ள விலங்குகள் முன்புறம் தாக்கும்போதே பின்புறக் கால்களைக் கவ்வியிழுக்கும் பழக்கம்கொண்டவை; அறிவுக்கூர்மைமிக்கவை. இந்தக் காட்டில் இல்லாத விலங்கினம் இது. இதை இருக்கன்குன்றினைத் தாண்டிப் பறம்புக்குள் செல்ல விட்டுவிடக் கூடாது. இதை முழுமுற்றாக அழித்தல் மட்டுமே முதற்பணி என்னும் முடிவுக்கு வந்தான் தேக்கன்.

அவன் ஆணையிட்டதும் கூவல்குடி வீரன் ஒருவன் மூன்றுமுறை உட்சுழித்து ஓசையை வெளியிட்டான். ஆயிமலையின் வலப்புறக் கணவாயில் நின்றிருந்த உதிரன் படையோடு திரும்பிவர வேண்டும் என்று அதற்குப் பொருள். மூன்று உட்சுழி ஓசை நான்கு பேரின் தொடர் வெளிப்பாட்டின் வழியே உதிரனை எட்டியது. ஓசையின் வழியே வந்த உத்தரவு அவனுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. இந்த இரவில் படையோடு திரும்பி வரச்சொல்ல வேண்டிய தேவை என்ன என்று உதிரனுக்கு விளங்கவில்லை.

எதுவானாலும் ஆணையைச் செயல்படுத்துவதே அவனது வேலை என்பதால் மொத்தப் படையுடன் இருக்கன்குன்றின் முகடு நோக்கிப் புறப்பட்டான். இந்த இரவில் இப்படியோர் ஆணை வந்துள்ளது என்றால், ஏதோ ஓர் ஆபத்து அல்லது அவசரமான தாக்குதலாக இருக்க வேண்டும் எனக் கருதி வீரர்களை விரைவுபடுத்தி முன்னேறினான்.

நெடுமனுடன் சென்றவர்களில் இரண்டு வீரர்கள்தாம் சிறிய காயங்களோடு களத்திலே நிற்பவர்களாக இருந்தனர். அவர்களின் வாயிலாக அந்த விலங்கின் தன்மையைப் புரிந்துகொள்ள தேக்கன் முயன்றான். எவ்வளவு குறிவைத்து அம்பு எய்தாலும் கணநேரத்தில் கிளைகளினூடே தாவிச் செல்லும் ஒன்றை வீழ்த்துவதிலிருக்கும் சிக்கலைப் பற்றிப் பேசினர். ஆனாலும் அதற்கு ஒரு வழி இல்லாமலாபோகும் என்று சிந்தித்த தேக்கன், நாகர்குடியினர் இருக்கும் ஊர்களுக்கு வீரர்களை உடனே அனுப்பினான். ``எவ்வளவு விரைவாகப் பறவைநாகங்களைப் பிடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாகப் பிடிக்கச் சொல்லுங்கள். கிடைக்கக் கிடைக்க வீரர்களிடம் கொடுத்து அனுப்புங்கள்” என்றான்.
பறவைநாகங்கள் மரக்கொப்புகளில் வசிப்பவை. எதுவொன்று மரத்தின் மீது அசைகிறதோ அதை நோக்கிக் கண்ணிமைக்கும் நேரத்தில் பாய்ந்து கவ்வும் ஆற்றல்கொண்டவை. எனவே, அவற்றைப் பிடித்துவர ஏற்பாடு செய்தான். ஆனால், பறவைநாகங் களைத் தேடிக் கண்டறிவதெல்லாம் எளிய செயலன்று. அப்படியே கிடைத்தாலும் ஒன்றிரண்டுதான் கிடைக்கக்கூடும். ஆனால், இங்கு வந்துள்ள நீள்வாய்நாய்களோ எண்ணற்றவை. வேறென்ன வழிகள் இருக்கின்றன எனச் சிந்தித்தனர். பொழுது விடியச் சிறிது நேரம் இருக்கும்போது உதிரனின் படையணி வந்துசேர்ந்தது. நிலைமையை அவனுக்கு விளக்கினர்.

தாக்கும் திட்டம் ஒன்று உருவானது. பொழுது விடிந்ததும் குகைகளைக் காத்து நிற்கும் வீரர்களும் அவற்றுக்கு எதிர்ப்புறமாகக் காட்டுக்குள் நிற்கும் தேக்கன் தலைமையிலான வீரர்களும் ஒரே நேரத்தில் குகைகளைச் சுற்றி மரங்களின் மீதும் பாறைகளின் மீதும் அம்பு எய்தித் தாக்குவோம். ஐந்து வரிசையாகக் குறிப்பிட்ட நேர இடைவெளியில் வீரர்களின் அம்புகள் காற்றைக் கிழிக்கையில், நீள்வாய்நாய்கள் ஒரு கொப்பிலிருந்து மறுகொப்புக்குத் தாவினால்கூட அவற்றால் எளிதில் தப்ப முடியாது” என்றான் தேக்கன்.

திட்டம்  உருவானது. குகைகளின் வாசல்களிலும் காட்டுக்குள்ளும் வீரர்கள் ஆயத்த நிலையில் இருந்தனர். பொழுது விடிந்தது. காடெங்கும் இருக்கும் பறவைகள் ஓசை எழுப்பிக் கொண்டிருந்தன. மரத்தின் மீதிருந்த அவை குகைக்குள் நுழைய முடியாமல் வெறிகொண்டு இங்கும் அங்கும் கொப்புகளின் மீது தாவிக் கொண்டிருந்தன.

மரக்கொப்புகளை நோக்கி அண்ணாந்து பார்த்தபடி நாணேற்றிக் காத்திருந்தனர் வீரர்கள். பாம்பின் சீற்றம் போன்ற ஓசை தேக்கனின் குரல்வளையிலிருந்து வெளிவந்தபோது காற்றெங்கும் அம்புகள் சீறிப்பாய்ந்தன. குறிப்பிட்ட இடைவெளியில் அடுத்தடுத்து எகிறிக் கொண்டிருந்தன அம்புகள்.

ஊளையின் ஓசை காதைத் துளைத்துக்கொண்டிருந்தது. அம்புகளை எய்து முடித்த பிறகு பார்த்தனர். எந்த நீள்வாய்நாயும் கீழே விழவில்லை. அம்பு தைக்கப்பட்டவைகூட ஓசை எழுப்பியபடியே கொப்புகளில் தாவி வெளியேறித்தான் ஓடின.

இத்தனை நூறு அம்புகளுக்கும் தப்பி அவற்றின் பாய்ச்சல் இருப்பது பேரதிர்ச்சியைக் கொடுத்தது. ஒன்றிரண்டு புதர்களில் விழுந்துகிடக்கலாம் என வீரர்கள் தேடிக்கொண்டிருக்கும்போது தேக்கனும் உதிரனும் மரக்கொப்புகளையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தனர். தாக்குதலின்போது எழுந்த பேரூளையினூடே காடு நடுங்கியது. பறவை நாகங்கள் வந்தாலும் பெரிதாகப் பயன்கிடைக்காது போலத் தோன்றியது.

தாக்குதலின் முதல் நாளே தேக்கன் தலைமையிலான படை இருபதுக்கும் மேற்பட்ட குதிரைகளை இழந்துவிட்டது. மாபெரும் வீரர்கள் நிறைந்த படையணி இது. அப்படியிருந்தும் இந்தப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த இழப்பைப் பற்றிச் சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள். தங்களாலே நம்ப முடியாத இந்த உண்மையின் மீது நின்றுதான் அவர்கள் அடுத்த கட்டத்தைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தனர்.

அப்போது உதிரன் சொன்னான், ``கரும்பாக் குடியின் வீரர்கள் எண்ணற்ற நாய்களைத் தங்களின் குடிலில் வைத்திருந்தனர். அவற்றுள் எதுவும் அவர்கள் கொண்டுவந்ததில்லை. எல்லாம் வந்த இடத்தில் பழக்கியவை. நாயினங்களைப் பற்றிய பல நுட்பங்கள் அவர்களுக்குத் தெரிவதாக நமது மருத்துவர்களும் சொன்னார்கள். நான் உடனடியாகப் போய் ஈங்கையனிடம் பேசிப் பார்க்கிறேன். இந்த வகை நாய்களை எப்படி வீழ்த்துவது என அவன் ஏதேனும் ஆலோசனை சொல்லக்கூடும்” என்றான்.

இப்போதைய நிலையில் இது சிறந்த ஆலோசனை யாகத் தெரிந்தது. உடனடியாக உதிரனை அனுப்பிவைத்தான் தேக்கன். போய்த் திரும்ப ஒரு வாரம்கூட ஆகலாம். ஏனென்றால், நடைபாதையின் வழியாகத்தான் அவன் சென்றாக வேண்டும். அதைத் தவிர வேறு வழியேதுமில்லை. நீள்வாய்நாய்களை அழிக்காமல் ஒரு குதிரையைக்கூட குகை விட்டு வெளியேற்ற முடியாது.




உதிரன் மூன்று வீரர்களோடு அடர்காட்டை ஊடறுத்து ஓடத் தொடங்கினான். நாகர்குடியைப் பார்க்கப்போனவர்களில் ஓரிருவராவது இன்று பறவைநாகங்களோடு வருவார்களா என்று தேக்கன் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது, குகைப்பாறையின் மேல்நிலையில் நின்றிருந்த வீரர்கள் தேக்கனை நோக்கிக் கையசைத்து அழைத்தார்கள். தேக்கன் பாறையின் மீது ஏறி நின்று அவர்கள் கைகாட்டிய

திசையில் பார்த்தான்.

உதிரனின் தலைமையிலான படையைத் திருப்பி அழைத்துக்கொண்டதால் பாதுகாப்பற்றி ருந்தது ஆயிமலையின் வலப்புறக் கணவாய்ப்பகுதி. அதன் விளிம்பில் பெரும்படை ஒன்று பறம்பின் காட்டுக்குள் போய்க்கொண்டிருந்தது.

இத்தனை ஆண்டுக்காலப் போர் அனுபவத்துக்குப் பிறகு சிறு எதிர்ப்புகூட இல்லாமல் பறம்புக்குள் நுழைந்தது சேரனின் படை. இரு கைகளிலும் ஏந்திய ஆயுதங்களோடு பேரோசை முழங்க முன் சென்றான் எஃகல்மாடன்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-76





**சோ**ழப்படை வட்டாற்றில் திரும்பிய கணத்தில் ஏற்பட்ட அதிர்ச்சி பாரியின் மனதிலிருந்து இன்னும் உதிரவில்லை. இதுவரை உருவாகாத புதிய கேள்விகள் மேலெழும்பியபடியே இருந்தன. முடிவெடுக்க முடியாமல், குழப்பம் திணறடித்தது. சோழன், எவ்வியூரை நோக்கி வரும் பாதை தெரியாமல்தான் எழுவனாற்றிலிருந்து வட்டாற்றில் திரும்பிப் பயணிக்கிறான் என பிட்டன் உறுதியாகச் சொல்லுகிறான். ஆனால் பாரி அக்கூற்றினை ஏற்கவில்லை. மூலப்படை வருவதற்கு முன்னர் தூசிப்படையினர் தெளிவான அறிதலோடு அப்பக்கம் திரும்பிச்சென்றதை வீரர்கள் உறுதிப்படுத்தினர்.

வட்டாற்றின் வழித்தடத்தை அறிந்துபோகிற ஒருவனை எளிதாக நினைத்துவிட முடியாது. எழுவனாற்றிலிருந்து வட்டாற்றின் கரையில் எட்டுநாள் பயணத்தொலைவில் சிறுகானம் இருக்கிறது. அதன் மறுபுறத்தில்தான் உப்பறை அமைந்துள்ளது. பாழி நகருக்கான அடையாளம் உப்பறையிலிருந்து தொடங்குகிறது. ஆனால் இவையெல்லாம் வெளியுலகத்தைச் சேர்ந்த யாரும் எவ்வகையிலும் அறிந்திடமுடியாத ஒன்று. எனவே இவற்றை அறிந்துதான் சோழன் படைநடத்திக்கொண்டிருக்கிறான் என்று நம்பமுடியவில்லை. அதேநேரத்தில் அவன் மிகத்தெளிவாக எழுவனாற்றிலிருந்து வட்டாற்றில் திரும்பியதை எளிதாக எடுத்துக்கொள்ள முடியவில்லை.

படை வட்டாற்றில் திரும்பிய முதல்நாள் இரவு பாரியின் மனதில் எண்ணிலடங்காத கேள்விகள் உதித்தவண்ணமிருந்தன. கோடையின் வெக்கையைப் பாறைகள் இரவெல்லாம் உமிழ்ந்தன. அவனது உடலில் வியர்வை அடங்கவேயில்லை. உள்ளுக்குள் எண்ணங்கள் கொப்பளித்தபடியே இருந்தன.

பின்னிரவில் பிட்டன் இருந்த இடம்நோக்கிக் கீழிறங்கினான் பாரி. மற்ற குதிரைவீரர்களை முகட்டின் மீதே பயணிக்கச் சொல்லிவிட்டு இருவீரர்களோடு கீழிறங்கினான். அதிகாலைப் பொழுது விடிகையில் பிட்டனின் படையணிக்குள் வந்து நின்றான் பாரி. எதிர்பாராமல் பாரி வந்து நிற்பது தாக்குதலைத் தொடங்குவதற்காகத்தான் என நினைத்த பிட்டன், அதற்கான வேலையைத் தொடங்க ஆயத்தமானான். ஆனால் பாரியோ, “நான் அதற்காக வரவில்லை. எதிரியை அருகிலிருந்து பார்த்தறியவே வந்தேன்” என்றான்.

“நாம்  தாக்குவதற்குக் காலந்தாழ்த்தக் கூடாது” என வாதிட்டான் பிட்டன். அவனது எண்ணங்களைத் தெரிந்துகொண்ட பாரி உத்தர வேதும் கொடுக்கவில்லை. நகர்ந்து கொண்டிருக்கும் எதிரிகளின் படையணி நோக்கிக் கீழிறங்கிக்கொண்டிருந்தான்.



அன்றைய நாள் முழுவதும் எவ்வளவு நெருக்கமாகப் போகமுடியுமோ, அவ்வளவு நெருக்கமாக நின்று ஆற்றில் நகரும் படையின் தன்மையைக் கவனித்தான். ஆற்றின் நடுப்பகுதி முழுவதும் வேந்தனின் ஒழுங்கமைக்கப்பட்ட படையணி வந்தது. ஆனால், ஆற்றோரத்தில் வந்துகொண்டிருப் பவர்கள் வேந்தர்களின் படையணியைச் சேர்ந்தவர்கள் இல்லை. அவர்கள் மலைமக்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆனால் யார் இவர்கள் என்பதுதான் விளங்கவில்லை.

ஆழ்ந்த சிந்தனையின் வழியே அன்றைய நாள் முழுவதும் நடந்துகொண்டிருந்தான். பொழுது மங்கியவுடன் மீண்டும் முகடுநோக்கி மேலேறத் தொடங்கினான். அப்பொழுதும் பிட்டன் வாதிட்டான். வட்டாற்றில் ஊற்றுநீர் மிகக்குறைவு. அவர்கள் நேற்று தங்கியிருந்த இடத்தில் தோண்டப்பட்ட கிணறுகளில் போதுமான நீரில்லாததால் கிணறுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியுள்ளனர். எழுவனாற்றில் நாளொன்றுக்கு நான்கு கிணறுகளை வெட்டியவர்கள், நேற்று பத்துக்கும் மேற்பட்ட கிணறுகளை வெட்டியுள்ளனர். தோண்டப்படும் கிணறுகளின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகும். அவ்வளவு எண்ணிக்கையில் தோண்டினாலும் இப்பெரும்படைக்குத் தேவையான நீரினை இவர்களால் கண்டறிய முடியாது. யானைகளுக்கும் போதுமான நீர் கிடைத்திருக்காது. இன்றிரவு நிலைமை இன்னும் மோசமாகும். நாளை அனைவரிடமும் முழுமையான சோர்விருக்கும் நாம் தாக்குதலைத் தொடுக்க நாளை இரவு மிகப்பொருத்தமானது” என்றான்.

பாரி மறுமொழியேதும் சொல்லவில்லை. அமைதியின் மூலமே மறுப்பினைச் சொல்லிவிட்டு மேல்நோக்கி நடக்கத் தொடங்கினான். எதிரிப்படையின் ஓரப்பகுதியில் வரும் மலையின மக்களின் உடலமைப்பினைப் பற்றியே மீண்டும் மீண்டும் சிந்தித்தபடியே வந்தான். ‘அவர்கள் பச்சைமலைத்தொடர்ப் பகுதியைச் சார்ந்தவர்கள் அல்லர். அப்படியென்றால் யாரவர்கள்?’ என்று எண்ணியபடியே இருந்தான்.

முள்ளூர்ப் பெரியவர் சொன்ன குறிப்புகள் நினைவுக்கு வந்தன. இரவாதன் சொன்ன அத்தனை செய்திகளையும் சிந்தித்துப்பார்த்தான். உதிரன் பதற்றத்தோடு எவ்வியூர் வந்ததை யோசித்தான். சட்டென அங்கவை சொன்னதாக உதிரன் சொன்ன சொல் நினைவுக்கு வந்தது, “அவர்கள் காதின் மேல்மடல்களில் மூன்று துளையிட்டிருந்தனர்.”

மனதுக்குள் மின்னலின் ஒளி பாய்ச்சுவதுபோல இருந்தது அந்தச் செய்தி. `எவ்வளவு முக்கியமான குறிப்பினை அங்கவை சொல்லியுள்ளாள்! மரத்தின் மீதிருந்து பார்த்ததால் கீழே செல்பவர்களின் காதுமடல்களைத் துல்லியமாகப் பார்க்க முடிந்துள்ளது. நாம் மிகவும் தொலைவிலிருந்து பார்த்ததால் அதனைப் பார்க்கமுடியவில்லை’ என்று நினைத்துக்கொண்டிருந்த பாரியின் மனதில் எதிரிப்படையில் வந்துகொண்டிருப்பது யாரெனப் பிடிபடத் தொடங்கியது. காதுமடல்களில் மேல்நிலையில் மூன்று துளைகளை இடுபவர்கள் மேல்காடர்கள் என்றும் கீழ்ச்சதையில் இரு துளைகளை இடுபவர்கள் கீழ்க்காடர்கள் என்றும், காதின் நடுநரம்பினை ஒட்டிப் பெரிய துளையினை இடுபவர்கள் குறுங்காடர்கள் என்றும் கேள்விப்பட்டுள்ளான். நெடுங்காடர்களை இதுவரை பாரி நேரில் பார்த்ததில்லை. ஆனால், அவர்களைப்பற்றிய எண்ணற்ற கதைகளை வேளிர்குலம் அறியும். அவை அனைத்தும் கடகடவென நினைவுக்கு வந்தன.

வேளிர்குலம் நெருப்பினை அறியவும், வளர்த்தெடுக்கவும், கட்டுப்படுத்தவும் ஆற்றல் கொண்டதைப்போல நீரினைப்பற்றிய பேரறிவு கொண்டவர்கள் காடர்கள் என்பது நினைவுக்கு வந்தது. `மண்ணுக்குள் இருக்கும் கடுநீரை எப்படித் துல்லியமாக அவர்கள் கண்டறிந்தார்கள்?’ என முள்ளூர்ப் பெரியவர் அன்று எழுப்பிய கேள்விக்கு இன்று விடை கிடைத்தது.

நீரும் நெருப்பும் போல, கிழக்கும் மேற்கும்போல இயற்கையின் அதிஆற்றலை வெளிப்படுத்தும் இரு குடிகள்தாம் வேளிர்களும் காடர்களும். இவர்களுக்குள் எதிரெதிர் நிலை கொண்ட முரண்கள் ஆதியிலிருந்தே உருவாகிவிட்டன. வேளிரோடு பகைமைகொண்டு பழிதீர்க்க எண்ணற்ற சடங்குகளைக் காடர்கள் நடத்துவார்கள் என்பதும் பாரி அறிந்ததே. காடர்களின் கண்ணிற்படாமல் எப்படி அங்கவை தப்பினாள் என்பது இப்பொழுது தான் பெருவியப்பாக இருந்தது. அவர்களின் கண்ணிற்பட்டிருந்தால் எவ்வளவு பெரிய கொடூரம் நிகழ்ந்திருக்கும் என நினைத்தபடி விரைவாக நடந்தான்.

சிறுவயதில் காடறியும் பயணத்தின்போது வடதிசை ஊரொன்றின் கிழவன் சொன்ன சொல் நினைவுக்கு வந்தது, “காடர்களும் கருநொச்சியும் இருக்கும் வரை எந்தப் புதையலையும் மறைக்க முடியாது.” அது நினைவுக்கு வந்த மறுகணம் குலநாகினியின் வாக்கும் நினைவுக்கு வந்தது. “பறம்பு மக்கள் இருக்கும் வரை பாழி நகரை எவனும் நெருங்க முடியாது.”

சொற்களின் நினைவுகளுக் குள்ளிருந்து மீண்டு வெளிவந்தான் பாரி. அவனது மனதிலிருந்த கேள்விகள் அத்தனைக்கும் விடை கிடைத்தது.

‘சோழன், காடர்கள்மூலம் பாழிநகர் பற்றிய குறிப்பினை அறிந்துள்ளான். இப்பொழுது அதனை நோக்கியே அவன் போய்க் கொண்டிருக்கிறான். கீழ்க்காடர்களே நீர்ச்சுரப்பைக் கண்டறிந்து கிணற்றினை உருவாக்கியுள்ளனர். படையின் இருபுறங்களிலும் நெடுங்காடர்கள் அணிவகுத்து வருகின்றனர். குறுங்காடர்கள் கொடும் நச்சுப் பூச்சிகளைக் கையாளத் தெரிந்த வர்கள். நகர்ந்துகொண்டிருக்கும் இப்பெரும் படையை எளிதில் அழிக்க முடியாது. ஏனென்றால், நெடுங்காடர்கள் அடர்மரக் கொப்புகளை ஒன்றுடனொன்றாகப் பின்னித் தடுப்பரண்களை எளிதாக அமைத்துவிடுவர். நாம் வீசும் அம்பும் ஈட்டியும் அத்தடுப்பரணைத் துளைத்துக்கொண்டு உள்ளே போவது மிகக்கடினம். நெடுங்காடர்கள் இருக்கும் வரை இப்படையைப் பக்கவாட்டிலிருந்து தாக்கி அழிக்க முடியாது. பிட்டன் மிகவும் அவசரப்படுகிறான். இரவாதனோ நாள்தோறும் உத்தரவு கேட்டுக் குறிப்புகள் அனுப்புகிறான். நீராதாரம் உருவாக்கப்போகும் சிக்கல் என்னவென்பதை நம்மால் எளிதில் முடிவுசெய்ய முடியாது. சற்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்’ என்று எண்ணியபடி உச்சிமுகட்டினை அடைந்தான் பாரி.

**சோ**ழப்படை வட்டாற்றில் திரும்பிய ஆறாம்நாள். பொழுது நண்பகலைக் கடந்தது. கதிரவனின் சூடு உச்சங்கொண்டிருந்தது. நெடுங்காடர்களின் தளபதி துணங்கன் யானைப்படையின் நடுப்பகுதியிலிருக்கும் வேந்தரைக் காண வந்திருந்தான். யானையின் மீதிருந்த அம்பாரியில் அமர்ந்து வந்தான் செங்கனச்சோழன். அருகில் குதிரையின் மீது வந்துகொண்டிருந்தான் உறையன். துணங்கன் வந்துள்ள செய்தியை வேந்தனுக்குத் திரை விலக்காமல் மெய்க்காப்பாளன் சொன்னான். சிறிதுநேரத்தில் திரையை விலக்கினான் செங்கனச்சோழன்.

துணங்கன் முறைப்படியான மரியாதையைத் தெரிவிக்கக் குதிரையிலிருந்து கீழிறங்கி நின்றிருந்தான். அம்பாரியிலிருந்து எட்டிப்பார்த்தபடி அதனை ஏற்ற வேந்தன். ``என்ன செய்தி?” எனக் கேட்டான்.

துணங்கன் பதில் சொல்லும்முன் அவனைக் குதிரையின் மீது ஏறும்படி கையசைத்தான் வேந்தன். துணங்கன் குதிரையின் மீதேறிப் பேசும்பொழுது அதனை யானையின் மீதிருந்து கேட்க வசதியாக இருந்தது. ஆனால் இந்தச் செயல், வேந்தன் களைத்துப்போய் உள்ளான் என்பதன் அடையாளமாகவே துணங்கனுக்குத் தோன்றியது. அவன் சொன்னான், “இவ்வாற்றில் நீராதாரம் நாம் எதிர்பார்த்ததைவிட மிகக்குறைவாக இருக்கிறது.”

“என்ன செய்யலாம்?”

பறம்பில் மிகக்கடுமையான பகுதியை நாம் கடந்துவிட்டோம். அவர்களின் மிகப்பெரிய ஊர்கள் இருப்பதெல்லாம் எழுவனாற்றின் பகுதியில்தான். இனி பேராபத்தேதுமில்லை. எனவே நாம் படையைக் கையாள்வதில் சில முடிவுகள் எடுக்க வேண்டும்.”

“என்ன முடிவெடுக்க வேண்டும்?”


யானைப்படையின் ஒரு பகுதியையும் காலாட்படையின் ஒரு பகுதியையும் ஒருநாள் இடைவெளியில் பின்தொடர்வதைப்போல ஏற்பாடுகள் செய்யலாம். அதன்மூலம் நீராதாரத்தைப் பகிர்ந்து கொடுக்க முடியும். படையும் தெளிச்சிகொண்டு முன்னேறும். நம்முடைய தாக்குதல்திறன் எந்தக் கட்டத்திலும் குறையாது” என்றான்.

சற்றே பதறிய உறையன், “இல்லை, அப்படிச் செய்வதன் மூலம் நமது ஆற்றலை நாமே பிரித்தவர்களாகிவிடுவோம். எதிரி தாக்குதல்தொடுக்க வசதியாகிவிடும்” என்றான்.

துணங்கன் சொன்னான், “அப்படிச் செய்யவில்லையென்றால், நாளையே வீரர்கள் சிலர் மயங்கிவிழ நேரிடலாம். போதிய நீரின்றித் தொடர்ந்து வேலைவாங்கப்படும் யானைகளின் நடத்தை எப்படியிருக்கும் என்பதை நம்மால் கணிக்க முடியாது. வீரர்கள் மயங்கிவிழத் தொடங்கினால் அது போருக்கான மனநிலையை முற்றாகச் சிதைக்கும்” என்றான்.

“பின்னால் வரும் இரண்டாம் நிலைப்படை வலிமைகுன்றி இருக்குமேயானால் எதிரிகள் அதனைச் சூழ்ந்து தாக்கி அழிப்பர்” என்றான் உறையன்.

நெடுங்காடர்கள் இருக்கும் வரை மலைமேலிருந்து அவர்கள் எறியும் ஈட்டியும் அம்பும் எந்த பாதிப்பினையும் ஏற்படுத்தாது. இப்பகுதியெல்லாம் அடர்காடுகள். ஆற்றங்கரை யோரத்திலிருக்கும் மரத்தொகுதிகளை ஒருபொழுதுக்குள் பின்னல்வலையாக மாற்றிவிட முடியும். எண்ணிலடங்காத மூங்கில் மரங்கள் ஆற்றோரம் இருக்கின்றன. எந்தக் கவலையும் நமக்கில்லை” என்றான்.



சிறிதுநேரம் சிந்தித்த செங்கனச்சோழன், “இருதொகுதி யானைகளையும் ஈராயிரம் வீரர்களையும் இன்றிரவு இங்கேயே தங்கவையுங்கள். முன்னணிப்படை வழக்கம்போல் காலையில் புறப்படட்டும்.

இரண்டாம் நிலைப்படை ஒருநாள் இடைவெளியில் நம்மைப் பின்தொடரட்டும். அவசரத்தேவை யென்றால்கூட ஒருநாள் நடைத்தொலைவை எளிதில் வந்தடைந்துவிடலாம்" என்றான்.

இருவரும் ஏற்றுக்கொள்ளும் பதிலாக இருந்தது அது. ஆனாலும் துணங்கனுக்கு ஐயம் இருக்கத்தான் செய்தது. இருதொகுதி என்றால் இருநூறு யானைகள்தாம். மீதமுள்ள முந்நூறு யானைகளுக்கு நீர் கிடைப்பது கடினம். எனவே, சமமாகப் பிரிப்பதே சிறந்தது எனத் தோன்றியது. ஆனால், இதற்குமேல் வேந்தனிடம் பேசுவது முறையல்ல என்று தோன்றியதால் துணங்கன் அமைதிகாத்தான். ஆனால், உறையன் சொன்னான் "பின்னணிப்படையின் பாதுகாப்புக்கு நாம் கூடுதல் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்."

"மிகச்சிறந்த தளபதிகளை அங்கே நியமிப்போம்" என்றான் வேந்தன். சரியெனத் தலையாட்டினான் உறையன்.

இரண்டாம் நிலைப்படையில் யானைப்படைக்குக் கச்சனையும் காலாட்படைக்கு ஆழிமார்பனையும் தளபதியாக்கி உத்தரவிட்டான். நெடுங்காடர்களுக்கு யாரைத் தளபதியாக்கலாம் என்று துணங்கனைப் பார்த்துக் கேட்டான் செங்கனச்சோழன்.

துணங்கன் சொன்னான், "முன்னால் செல்கிறவர்களுக்குப் பின்னால் வரும் படையின் மீது ஐயமோ, கவனமோ சிறிதும் இருக்கக்கூடாது. அந்த அளவு அது வலுமிக்க படையாக அறியப்பட வேண்டும். எனவே இரண்டாம் நிலைப்படைக்கு நானே தளபதியாக நிற்கிறேன். முன்னணிப்படையின் நெடுங்காடர்களுக்கு சிவியன் தளபதியாக இருக்கட்டும்" என்றான்.

நெடுங்காடர்கள் சோழர்களுக்காக இப்போரில் பங்கெடுக்கவில்லை. வேளிர்கள்மீது தங்களுக்குள்ள பகையின் காரணமாகவே பங்கெடுக்கின்றனர் என்பதை எத்தனையோ முறை உணர்ந்த செங்கனச்சோழன் இப்பொழுதும் அதனையே உணர்ந்தான்.

உதிரன் ஈங்கையனை அழைத்துக்கொண்டு ஆறாம்நாள் இருக்கன்குன்றுக்கு வந்து சேர்ந்தான். அவன் வரும்வரை குதிரைகளைப் பாதுகாப்பது பெரும்போராட்டமாக இருந்தது. பகலிரவென ஒவ்வொரு கணமும் விழிப்பு உணர்வோடு இருக்க வேண்டியிருந்தது. சிறு கவனக்குறைவு ஏற்பட்டால்கூடத் தோகைநாய்கள் குகைநோக்கிப் பாயத் தயாராகிவிடுகின்றன. நாள்கள் செல்லச்செல்ல, பசி அவற்றை வெறிகொள்ளச் செய்தது. குதிரைகளின் சுவை வேறு வேட்டையை நோக்கி அவற்றைத் திரும்ப விடவில்லை. குகைக்குள்ளிருக்கும் குதிரைகளை வேட்டையாட ஒவ்வொரு கணமும் முயற்சி செய்துகொண்டிருந்தன.

குகையைக் காத்துநிற்கும் வீரர்களின் எண்ணிக்கையை இருமடங்கு அதிகப்படுத்தினான் தேக்கன். பறவைநாகங்கள் வந்தும் எவ்விதப் பயனும் இல்லை. தோகைநாய்கள் ஒரே கடியில் அவற்றை இருதுண்டுகளாக்கிவிடுகின்றன. வழிதெரியாமல் திகைத்தபடி குகையைக் காத்துநின்றனர் வீரர்கள்.

ஆறாம்நாள் உதிரனும் ஈங்கையனும் வந்து சேர்ந்தனர். பறம்பில் இல்லாத புதுவகையான விலங்கு

என்று அதன் தன்மையைச் சொன்னவுடன் ஈங்கையன் சொல்லிவிட்டான், அதன் பெயர் “தோகைநாய்” என்று. “எவ்விதத் தாக்குதலாலும் அதனை வீழ்த்த முடியாது” என்று சொன்ன ஈங்கையன், “தந்திரத்தால் மட்டுமே அதனைக் கொல்ல முடியும்” என்றான். ஈங்கையனை அழைத்துக்கொண்டு புறப்படும்பொழுதே எல்லாவற்றையும் பேசி அவற்றுக்கான ஏற்பாடுகளையும் செய்தபடியே வந்தான் உதிரன்.

“கரும்புப்பாகு கிடைக்குமா?” எனக் கேட்டான் ஈங்கையன்.

“பறம்பில் கரும்பு இல்லை” என்றான் உதிரன்.

“இனிப்புச்சுவை கொண்ட பாகு வேறென்ன கிடைக்கும்?”

“பனம்பாகும் ஈச்சம்பாகும் கிடைக்கும்” என்றான் உதிரன்.

“எத்தனை பெருங்குடங்களில் பாகு கொண்டுவர முடியுமோ, அத்தனை குடங்களில் பாகினை அவ்விடம் கொண்டுவரச் சொல்லுங்கள்” என்றான் ஈங்கையன்.

வரும் வழியிலேயே எந்தெந்த ஊருக்கு ஆள் அனுப்ப வேண்டுமோ அங்கெல்லாம் ஆட்களை அனுப்பி ஏற்பாடுகளைக் காலம்தாழ்த்தாமல் செய்தான் உதிரன்.

“பிரிக்க முடியாதபடி ஒட்டிக்கொள்ளும் பசை என்ன இருக்கிறது?” எனக் கேட்டான்.

“பலவகையான பசைகள் இருக்கின்றன” என்றான் உதிரன்.

“துளிபட்டாலும் பிரிக்கமுடியாதபடி ஒட்டக்கூடிய பசையை ஏற்பாடு செய்யுங்கள்” என்றான். அதற்கும் பொருத்தமான ஆட்களை அனுப்பி இருக்கன்குன்றுக்குக் கொண்டுவந்து சேர்க்கச் சொன்னான்.

“பசை வாடை அடிக்காமலிருக்க சுவைகூட்டிகளை அதனுடன் சேர்க்க வேண்டும்” என்றான். அதற்கும் ஏற்பாடானது.

ஈங்கையன் அவனோடு மூன்றுவீரர்களை அழைத்து வந்தான். அவர்களால் உதிரனைப் போலவோ, பறம்பின் வீரர்களைப் போலவோ வேகங்கொண்டு ஓட முடியவில்லை. எனவே உதிரனும் சற்று மெதுவாகவே அவர்களுடன் நடக்க வேண்டியதானது.

அவர்கள் ஆறாம்நாள் இருக்கன் குன்றினை வந்தடைந்தார்கள். ஈங்கையன் கேட்டவையெல்லாம் அவன் வரும் முன்னரே வந்துசேர்ந்திருந்தன. அவன் வியந்துபோனான். குகைகாத்து நிற்கும் தேக்கனைக் கண்டு வணங்கினான். நீலனின் மணவிழாவின்பொழுது அவனிடம் நிறைய பேசவேண்டும் என்று தேக்கன் விரும்பியிருந்தான். ஆனால், அதற்கு வாய்ப்பில்லாமற்போனது.

தேக்கனைக் கண்டதும், “தோகைநாய்களைப்பற்றிச் சொல்வதற்கு எவ்வளவோ இருக்கின்றன. ஆனால், அவற்றை வீழ்த்தும் வழியைப்பற்றி மட்டும் இப்பொழுது பேசுவோம்” என்றான்.

தேக்கனும் மற்றவர்களும் அவன் என்ன சொல்லப்போகிறான் என்பதை ஆர்வத்தோடு எதிர்பார்த்திருந்தனர்.

“மூன்று குதிரைகளை நாம் இழக்கவேண்டியிருக்கும்” என்றான்.

“இன்னும் மூன்றா?” எனக் கேட்டான் வீரனொருவன்.

“ஆம். மூன்று குகைகளில் குதிரைகளிருப்பது அவற்றுக்குத் தெரியும். எனவே மூன்று குதிரைகள் கட்டாயம் தேவை. காயம்பட்ட அல்லது வயதான குதிரைகளைக் கொடுங்கள்” என்றான்.

சரியெனச் சம்மதித்தனர்.

“தோகைநாயினை வீழ்த்துவதற்கான ஒரே வழி அதனுடைய தோகைதான்” என்றான்.


வீரர்கள் அவன் சொல்வதைப் பெருவியப்போடு கேட்டனர்.

பெருவட்டவடிவில் செடிகொடிகளை நன்றாக விலக்கிக் களம் அமையுங்கள். அவ்விடம் முழுவதும் ஈச்சம்பாகும் இறுக்கிப்பிடிக்கும் பசையும் அவற்றின் வாடை தெரியாது மறைக்கும் அளவுக்குச் சுவையூட்டிகளும் கலந்த கலவையை நன்றாக ஊற்ற வேண்டும். அவ்விடம் முழுவதும் ஊற்றியபின் ஒருகுதிரையை மட்டும் வீரர்கள் சிலர் அக்களத்தின் நடுப்பகுதிக்குக் கொண்டுசெல்ல வேண்டும். குகை விட்டு வெளிவரும் குதிரையைக் கண்டு தோகைநாய் மின்னல்வேகத்தில் பாய்ந்து வரும். பாகு ஊற்றப்பட்ட வட்டத்தின் நடுவிற்கொண்டுபோய் குதிரையை விட வேண்டும். தோகைநாய்கள் அதன்மீது பாயத் தொடங்கியதும் குதிரையை விட்டுவிட்டு வந்துவிட வேண்டும். எண்ணற்ற தோகைநாய்கள் பாய்ந்துவந்து அவற்றைக் கடித்துக் குதறும். இத்தனை நாள் பசிக்கு ஒரு எலும்பினைக்கூட அவை மிச்சம் வைக்காது.

தோகைநாய்கள் இப்புறமும் அப்புறமும் குதிரைக்கறியை இழுத்து, முன்காலை மடக்கி உட்கார்ந்து, கடித்து உண்ணும்பொழுதெல்லாம் அதனது தோகை பாகுக்கலவையில் முழுமையாகப் புரளும். குதிரையைத் தின்றுமுடிக்கும் வரை அது வேறெதிலும் கவனங்கொள்ளாது. அதன்பிறகு எழுந்து ஓடத் தொடங்கும் பொழுதுதான் தெரியும், வால்பகுதியிலுள்ள தோகையும் அடிவயிற்றுமுடியும் முழுவதுமாக ஒன்றுடனொன்று ஒட்டிக்கிடப்பது. அது எவ்வித் தவ்வும்பொழுது தோகைமுடிகள் சிலிர்த்து விரியாது. வாலின் எடையும் தூக்கித் தாவ முடியாத அளவுக்குக் கனமாக மாறும்.

முதல் தாவலிலே இதனைத் தோகைநாய் உணர்ந்துவிடும். முன்னும் பின்னுமாகத் திரும்பி ஏதேதோ செய்துபார்க்கும். பாகுக்சுவையால் மரக்கிளையில் எவ்விடத்தில் உட்கார்ந்தாலும் எறும்புகளும் பூச்சிகளும் அதனை மொய்க்கத் தொடங்கும். அப்பொழுதுதான் நீள்வாயின் வேட்டை தொடங்கும்.

தனது கூரிய பற்களைக்கொண்டு திரும்பித்திரும்பி அரிக்குமிடத்தில் கடிக்கத் தொடங்கும். இடப்புறமும் வலப்புறமுமாக வண்டு ரீங்காரமிடுதல்போலச் சுற்றிச்சுற்றி முன்பற்களால் கடித்திழுக்கும். அதன் நீள்வாயின் முன்பற்கள் பின்னுடலை மாறிமாறிக் கீறும். பின்புறப் பிட்டங்களிலும் வாலிலுமிருந்து குருதி கசியத் தொடங்கும். எந்நேரமும் பூச்சிகள் மொய்த்துக்கிடக்க எந்த இடத்தில் நின்றாலும் செவ்வெறும்பும் பாறையெறும்பும் மலையெறும்பும் அதன்மேல் ஏற, பேரலறலோடு அது ஓடத் தொடங்கும். உட்கார முடியாமல் ஓடிக்கொண்டேயி ருக்கும் அது வெகுவிரைவிலேயே ஓட முடியாத் தன்மை எய்தும். மலைமுழுவதும் எதிரொலிக்கும் அதன் ஊளைச்சத்தம் சிறிது சிறிதாகக் குறைந்து இளைப்பின் வழியிலான முனகலோடு அதன் வாழ்வு முடியும்" என்றான் ஈங்கையன்.



இரவு நெருங்கியதும் வேலையைத் தொடங்கினர். குகைக்கு முன்னாலிருந்த செடிகொடிகளை வெட்டி அப்புறப்படுத்தினர். கலவைகள் நன்கு தயாராயின. ஈங்கையன் சொன்னபிறகு அதில் தேவையை உணர்ந்து எங்கும் கிடைக்காத எழுமுட்பசையையும் தெல்லுக்கொடிப்பசையையும் சேர்த்தனர். இனி அதன் ஒட்டுந்தன்மைக்கு இணையேதும் இல்லை என்றான் தேக்கன்.

இரவானதும் வெளிச்சம் விழாதபடி பந்தங்களைத் திருப்பி வைத்து, கலவைகளைக் கொண்டு வந்து ஊற்றினர். போதும்போதும் என்று சொல்லுமளவுக்கு ஊற்றி முடித்ததும் மூன்றுவீரர்கள் குதிரையைப் பிடித்துக்கொண்டு கலவையை நோக்கி நடந்தனர். குதிரைகள் குகை விட்டு வெளி வருவதறிந்த கணமே தோகைநாய்கள் தமது தோகைசிலிர்க்க, கிளைகளை விட்டு எழுந்தன. நீள்வாய்கள் மெள்ளத்திறந்த பொழுது கால்கள் குதிரையை நோக்கிப் பாய்ச்சலுக்கு ஆயத்தமாயின.

**பொ**ழுது நடுப்பகலைக் கடந்தது. பாரியை நோக்கி பிட்டன் மலையேறி மேலே வந்தான்.

தொலைவிலேயே அவன் வருவதை அறிந்தான் பாரி. பிட்டனின் பதற்றம் நாளுக்கு நாள் கூட்டிக்கொண்டே இருந்தது. நெடுங்காடர்களைப் பாதுகாப்பு அரணாகப் பயன்படுத்தி அடர்காட்டுக்குள் நகரும் ஒரு படையை எளிதில் தாக்கி வீழ்த்திவிட முடியாது என்பதைப் பாரி நன்கு உணர்ந்திருந்தான். ஆனால் பிட்டனோ, எதிரியின் படையில் நெடுங்காடர்கள் இருக்கிறார்கள் என்பதையே அறியவில்லை. எனவே, காலந்தாழ்த்தாமல் உடனே தாக்குதலைத் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தியபடியே இருந்தான். வழக்கமான தாக்குதலால் இவர்களை ஒன்றும் செய்துவிட முடியாது, வேறுவழியைக் கண்டறிந்தால் மட்டுமே தாக்குதலுக்குப் பலன் கிடைக்கும் என்ற சிந்தனையிலேயே தாக்குதலைத் தள்ளிப்போட்டுக்கொண்டு வந்தான் பாரி.

மேலேறிவந்த பிட்டன் சொன்னான், “எதிரி குடிநீர்ப் பற்றாக்குறையின் காரணமாகப் படையை இருகூறாகப் பிரித்துள்ளான். நேற்றிரவு தங்கிய இடத்தை விட்டு இன்னும் ஒரு பகுதிப்படை புறப்படவில்லை. இதுதான் பொருத்தமான நேரம். இன்றிரவு பின்புறப்படையைத் தாக்கலாம்” என்றான்.

“சற்று பொறுத்திருப்போம்” என்றான் பாரி.

பிட்டனால் பாரியின் வார்த்தைகளை ஏற்க முடியவில்லை. ``இதுபோன்ற சிறந்த வாய்ப்பு இனி கிடைக்காமற்போகலாம்.”

“எதனை வைத்துச் சொல்லுகிறாய்?” எனக் கேட்டான் பாரி.

“எதிரிகள் நீர்ப்பற்றாக்குறையைச் சமாளிக்க சரியான உத்தியை வகுத்துவிட்டார்கள். இன்னும் இரண்டு நாள்கள் இதே தன்மையில் அவர்கள் படையை நகர்த்திச் சென்றுவிட்டால், அதன்பின் அவர்கள் வலிமையடைந்துவிடுவார்கள்.”

“எப்படி?”

“இரண்டு நாள் நடைத்தொலைவில் வட்டாற்றின் ஓரமாகச் சிறுகானத்துக்குச் சற்றே முன்னால் குளமொன்று இருக்கிறது. எக்கோடையிலும் நீர்வற்றாத குளமது. துவண்டுபோயிருக்கும் எதிரிகளின் யானைப்படையை அது முழுமையாகத் தெளிச்சிகொள்ளச் செய்துவிடும். நாம் அதற்குள் முந்தியாக வேண்டும்” என்றான்.

பிட்டனின் கூற்று பாரிக்கு வேறொன்றைச் சொல்லியது. சற்றே வியப்போடு, “இக்கோடையிலும் அதில் நீர் இருக்கிறதா?” எனக் கேட்டான்.

“ஆம். வீரர்கள் பார்த்துவந்த பின்னர்தான் உடனடியாக உன்னிடம் சொல்ல மேலேறி வந்தேன்.”

“அப்படியென்றால் அவர்கள் குளம்நோக்கி நகரட்டும். அதுதான் நமக்கான இடம்.”

பிட்டனுக்குப் புரியவில்லை. அவ்விடத்தில் வைத்துத் தாக்கலாம் எனப் பாரி நினைக்கிறானோ என்று

தோன்றிய கணத்தில் பிட்டன் சொன்னான், "அது மேலிருந்து தாக்குவதற்கான நிலவமைப்பு கொண்ட இடமல்ல. அவ்விடத்தில் தாக்குதலைத் தொடுத்தால் எதிரியை வீழ்த்த முடியாது."

"அவ்விடத்தில் மட்டுமல்ல, மேலிருந்து தாக்கும் போர்முறையால் எவ்விடத்திலிருந்து தாக்கினாலும் எதிரியை வீழ்த்த முடியாது."
'பாரியா இப்படிச் சொல்வது?' என்று அதிர்ந்த பிட்டன், "ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்றான்.

சோழனின் படையை இருபுறமும் அரணெனக் காத்து வந்துகொண்டிருப்பவர்கள் நெடுங்காடர்கள்.

"நெடுங்காடர்களா..?" பிட்டன் ஒரு கணம் உறைந்து மீண்டான்.




"ஆம். அந்த வலிமை இருப்பதால்தான் பறம்புக்குள் துணிந்து இவ்வளவு தொலைவு முன்னேறியுள்ளான் சோழன்."
பிட்டனுக்கு அடுத்து என்ன கேட்பதெனத் தெரியவில்லை. அவன் அதிர்ச்சிக்குள் மூழ்கிக்கொண்டிருந்தபொழுது பாரி தெளிவுநோக்கி மேலேறிக்கொண்டிருந்தான்.

"குளக்கரைதான் நமது தாக்குதலைத் தொடங்கப்போகும் இடம். வீரர்களின் எண்ணிக்கையைப் பலமடங்கு அதிகப்படுத்த வேண்டும். மீதமிருக்கும் வடதிசை ஊர்கள் நாற்பத்தி மூன்றுக்கும் செய்தியனுப்புங்கள். இருகரைகளிலும் வீரர்கள் குவியட்டும். நாளை மறுநாள் நள்ளிரவில் தொடங்குகிறது நமது தாக்குதல்" என்றான் பாரி.

தாக்குதல் எப்பொழுது என்று கேட்டுக்கொண்டேயிருந்த பிட்டனின் கேள்விக்கு இப்போது விடை கிடைத்துவிட்டது. ஆனால், இதுவரை இருந்த வேகமும் தெளிவும் இப்போது குழப்பமாக மாறின.

மலைமுகட்டிலிருந்து கீழே தனது படைநோக்கி வந்தான் பிட்டன். எல்லா ஊர்களுக்கும் செய்திகளைக் கொண்டு சேர்க்க வீரர்கள் புறப்பட்டனர். வலக்கரையில் இருக்கும் இரவாதனுக்கு மறைகுறிப்புகள்மூலம் செய்தி சென்றுசேர்ந்தது. வீரர்கள் தாக்குதலைத் தொடங்க எல்லா வகைகளிலும் ஆயத்தமாகிக்கொண்டிருந்தனர். பிட்டன் விடையில்லாத கேள்வியோடு இருந்தான்.
'குளக்கரையில் வைத்து என்ன செய்துவிட முடியும்? குளத்துநீரில் நஞ்சுகலந்து யானைகளைக் கொல்லும் உத்தியை, பாரி ஒருபொழுதும் கைக்கொள்ள மாட்டான். வேறு என்னதான் செய்யப்போகிறான்?'

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-77

மறுநாள் பொழுது விடிந்தது. நக்கவாரத் தீவிலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள் ஆயிமலையின் உச்சியிலிருந்து இருக்கன்குன்றையே பார்த்தபடி இருந்தனர். கடந்த சில நாள்களாக, குன்றின் மேற்குகையைச் சுற்றியே தோகைநாய்கள் ஊளையிட்டுக்கொண்டிருந்தன. நேற்று நள்ளிரவுக்குப் பிறகு ஊளைச்சத்தம் சற்றே அதிகமாகியது. ஆனால், அதிகாலை தொடங்கி இப்போது வரை அந்தச் சத்தம் பிரிந்து காடெங்கும் பரவிக்கொண்டிருக்கிறது. தீவுமனிதர்கள் குழம்பிப்போய் இருந்தனர்.




செய்தி உதியஞ்சேரலுக்குச் சொல்லப்பட்டவுடன் அவனும், அமைச்சன் நாகரையரும் ஆயிமலைக்கு மேலேறி வந்தனர். குழப்பத்தில் நின்றிருந்த தீவுமனிதர்களிடம், ``என்ன நிலைமை?” என்று கேட்டான் அமைச்சன்.

``எதிரிகள் தோகைநாய்களை ஏதோ செய்துவிட்டார்கள். அவை அனைத்தும் காடுகளுக்குள் சிதறி ஓடிக்கொண்டிருக்கின்றன. அவற்றைவிடக் கொடிய வேட்டை விலங்கு ஒன்றை ஏவி விட்டுள்ளனர். அதனால்தான் அவை இப்படிச் சிதறி ஓடுகின்றன. இனி அவற்றால் பலன் கிடைக்கும் என நாம் எதிர்பார்க்க முடியாது.”

பதில் கேட்டு உதியஞ்சேரல் உறைந்து நின்றான். ``அப்படியென்றால், எதிரிகள் குகைகளுக்குள் இருக்கும் குதிரைகளை வெளியில் கொண்டுவந்துவிடுவார்களா? முழு வேகத்தோடு அவர்களின் தாக்குதல் தொடங்கிவிடுமா?”

தீவுமனிதர்கள் மறுமொழியின்றி நின்றனர்.

``எஃகல்மாடன் பறம்புக்குள் நுழைந்து ஐந்து நாள்கள் ஆகிவிட்டன. நமது திட்டப்படி வலதுபுறக் கணவாயின் வழியாகத் துடும்பனின் தலைமையிலான படை வந்து சேரும் என்ற நம்பிக்கையில் போய்க்கொண்டிருக்கிறான்.”

நாகரையரின் வார்த்தை காதில் விழுந்துகொண்டிருந்தது. ஆனால், அதைக் கவனிக்கும் நிலையில் உதியஞ்சேரல் இல்லை. பறம்பின் உட்காடுகளுக்குள் தனித்துவிடப்பட்ட எஃகல்மாடனின் படை என்னவாகப்போகிறது என்பது அவனது மனக்கண்ணில் தெரிந்துகொண்டிருந்தது.

இரண்டாம் நாள் மாலை நேரம் நெருங்கியபோது குளம் நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது சோழனின் யானைப்படை. அதன் தளபதி அரிஞ்சயன் அளவற்ற மகிழ்வில் இருந்தான். வட்டாற்றில்

திரும்பியதிலிருந்து யானைகளுக்குப் போதுமான நீர் கிடைக்கவில்லை. நிலைமையை எப்படிச் சமாளிக்கப்போகிறோம் எனத் தெரியாமல் திணறிக்கொண்டிருந்தபோதுதான் குளம் இருப்பது பற்றிய செய்தி வந்தது. அதன் பிறகு நெடுங்காடர்கள் தளபதி சிவியன் நேரில் போய்ப் பார்த்தான். குளத்துநீரில் நஞ்சேதும் இல்லை என்று உறுதிப்படுத்திய பிறகுதான், அதை நோக்கி யானைகளைச் செலுத்த அரிஞ்சயன் அனுமதியளித்தான்.

இந்தப் படையெடுப்பே யானைப்படையை மையப்படுத்தியதுதான். அடர்காடுகளில் காட்டுமனிதர்களை எதிர்கொள்ள, யானைப்படையை மையப்படுத்திய போர் உத்திதான் வெற்றியைத் தேடித்தரும். அதுவும் அரிஞ்சயன் போன்ற அனுபவமேறியவர்களின்கீழ் இயங்கும் யானைப்படை, வெற்றியை எளிதில் ஈட்டும்.

சோழர்களின் படைத்தொகுப்பில் இருந்த மொத்த யானைகளில் சரிபாதிக்கும் குறைவான யானைகளைத்தான் இந்தப் படையெடுப்புக்குத் தேர்வுசெய்தான் அரிஞ்சயன். சிறந்ததொரு போர்யானை, தந்தங்களைக்கொண்டு பதினான்கு முறைகளில் தாக்கும் பயிற்சியைப் பெற்றிருக்கும்.

முகத்துக்கு நேராகத் தந்தத்தைக் குத்திச் செருகுவது, குறுக்காகக் கொடுத்துக் குத்தித் தூக்குவது, இரு பக்கங்களிலும் இரு தந்தங்களால் குத்துவது, எதிர் யானையின் தந்தவட்ட உதடு நோக்கிக் குத்துவது, பக்கவாட்டில் சாய்த்துக் குத்துவது, பக்கங்களில் நேராகக் குத்துவது, கண்ணிமைக்கும் நேரத்தில் துதிக்கையின் நடுவில் குத்தித் தூக்குவது, எதிர் யானையின் தலையைக் குறுக்கே பிடித்து ஒரு தந்தத்தால் குத்துவது, கோபத்தோடு எதிர் யானையின் திட்டாணியில் அடித்திழுத்து தந்தத்தைச் செருகுவது, உடலைப் பின்சுற்றிப் பின்பாய்ந்து குத்துவது ஆகியன உள்ளிட்ட பதினான்கு வகையான தந்தத் தாக்குதலில் தேர்ந்த யானைகளை மட்டுமே இந்தப் படையெடுப்பில் பங்கேற்கச் செய்தான் அரிஞ்சயன்.

`அவ்வளவு சிறந்த போர்ப் பயிற்சியுடைய யானைகளை, கொடும்வெக்கையில் போதிய நீரின்றித் தொடர்ந்து நடக்கவைத்துக்கொண்டிருக்கிறோமே!' என்று கவலைகொண்டிருந்தவன், குளம் கண்டு கவலை நீங்கினான். முதலில், ஐந்து வகைமையர்களின் தலைமையிலுள்ள ஐம்பது யானைகளை நீர் அருந்த அனுப்பினான். நீர் உறிஞ்சும் ஓசையிலே அவற்றின் தாகத்தை அறிய முடிந்தது. அதேபோன்று ஐந்து ஐந்து வகைமையரின் தலைமையில் குளம் நோக்கி ஐம்பது ஐம்பது யானைகளாக அனுப்பினான் அரிஞ்சயன்.

பொழுது மங்கி இருள் கூடும் வரை யானைகள் அணிவகுத்துப் போய் நீர் அருந்தித் திரும்பிக்கொண்டிருந்தன. ஏற்கெனவே வகுக்கப்பட்ட ஒழுங்கின் அடிப்படையில் அவை வட்டாற்றில் நிலைகொண்டன.



பிட்டனின் குழப்பம், இந்தக் கணம் வரை நீங்கவில்லை. `சோழப்படையின் கரையோரப் பகுதிகளில் நிற்பவர்கள் நெடுங்காடர்கள் என்பது பாரிக்கும் பிட்டனுக்கும் மட்டுமே தெரியும். நாம் எறியும் அம்பும் ஈட்டியும் சரிபாதிதான் அவர்களைக் கடந்துபோய்த் தாக்கக்கூடியதாக இருக்கும். அப்படியிருந்தும் தாக்குதலுக்குப் பாரி ஆயத்தமாகியுள்ளான் என்றால், தெளிவான உத்தியை வகுத்துவிட்டான் எனப் பொருள். அந்த உத்தி, குளத்தோடு தொடர்புடையதாக இருக்கிறது. என்ன அது?' என்று விடை தெரியாத கேள்வியோடு உத்தரவுக்காகக் காத்து நின்றான் பிட்டன். ஆற்றின் இரு கரைகளிலும் உள்ள மரங்கள் தம்முடைய கிளைகளில் எண்ணிலடங்கா வீரர்களைச் சுமந்தபடி சிலிர்த்து நின்றன.

ஆறாவது முறை ஐந்து வகைமையரின் தலைமையில் ஐம்பது யானைகளை அனுப்பியபோது, குளத்துநீர் ஏறக்குறைய வற்றி, தரை தொட்டுக்கிடந்தது. ஆனாலும் யானைகளின் துதிக்கைகள் உறிஞ்சியெடுத்தன. எல்லா யானைகளும் நீர் அருந்தி முடிக்கும் வரை அரிஞ்சயன் குளக்கரையிலே நின்றிருந்தான். கடைசி வரிசையில் வந்த யானைகளும் குளம் விட்டு அகன்றன. அரிஞ்சயன், அளவற்ற மகிழ்வடைந்தான். இனி பிரச்னையேதும் இருக்காது. சமாளித்துவிட முடியும் என்ற நம்பிக்கை உறுதியானவுடன் அதை வேந்தனிடம் தெரிவிக்க, குதிரையில் விரைந்தான்.

படை அணிவகுப்பில் யானைப்படையைக் கடந்து காலாட்படை தொடங்கும் இடத்தில் செங்கனச்சோழனுக்கான கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. ஆற்றின் நடுவில் அமைக்கப்பட்டிருந்த அந்தக் கூடாரத்தைக் கவசவீரர்கள் காத்து நின்றனர். உள்ளே வேந்தனுக்கு உணவு

பரிமாறப்பட்டுக்கொண்டிருந்தது. கூடாரம் வந்த அரிஞ்சயன், உணவு முடியட்டும் எனக் காத்து நின்றான்.

அணிவரிசையின் முன்புறம் நின்றிருந்த யானைகளிடமிருந்து சற்றே வேறுபட்ட ஒலி எழுவதைக் கேட்க முடிந்தது. `போதுமான அளவு நீர் குடித்த தெளிச்சியில் எழுப்பப்படும் ஒலியிது' என எண்ணியபடி வேந்தனுக்காகக் காத்திருந்தான் அரிஞ்சயன். இதைவிடப் பேரொலிகொண்ட யானைப் பிளிறலை எதிர்பார்த்து மலையின் மேல் காத்திருந்தான் பாரி. அவனைச் சுற்றி நின்றிருந்த பன்னிரு வீரர்களும் அவன் சொல்லப்போகும் உத்தரவை, பிட்டனின் தலைமையிலான இடதுபுறப் படைக்கும் இரவாதனின் தலைமையிலான வலதுபுறப் படைக்கும் தெரிவிக்கக் காத்துக்கொண்டிருந்தனர்.

நிலவற்ற வானில் இருள் அப்பிக்கிடக்கும் இந்தப் பொழுதில், ஒலியின் மூலம் மட்டுமே ஆற்றின் எதிர்த்திசையில் இருக்கும் இரவாதனுக்கு மறைகுறிப்பைக் கடத்த முடியும். பிட்டனும் பாரியும் ஒரே திசையில்தான் மேலும் கீழும் நிற்கின்றனர். எனவே, இவர்களுக்கு ஓசையின் மூலம் மறை குறிப்பைக் கடத்திவிடலாம். எல்லா ஏற்பாடுகளும் ஆயத்தநிலையில் இருந்தன. பாரியோ, வட்டாற்றில் நிறுத்தப்பட்டிருக்கும் யானைப்படையின் பிளிறல் ஓசையை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

இவ்வளவு சிறந்ததொரு வாய்ப்பு கிடைக்கும் எனப் பாரி எதிர்பார்க்கவில்லை. இன்னும் சில நாள் பயணத்துக்குப் பிறகுதான் அவன் தாக்குதலுக்குத் திட்டமிட்டிருந்தான். சிறுகானத்தைக் கடந்து உப்பறைக்குப் போகும்வழி மிகக் குறுகிய கணவாய் அமைப்பைக்கொண்டது. அந்த இடம், நெடுங்காடர்களால் தடுப்பரணையோ, வலைப்பின்னலையோ உருவாக்க முடியாது. முழுமையான பாறைப் பிளவு அது. பிளவின் மேலிருந்து தாக்குதல் தொடுத்தால் படையின் முன்புற அணியை மிகக் குறுகிய நேரத்தில் முழுமுற்றாக அழிக்க முடியும். எதிர்பாராத அந்தத் தாக்குதல் அவர்களின் கட்டுக்கோப்பை எளிதில் சிதறடிக்கலாம்.
நெடுங்காடர்களுக்குத்தான் காடு பற்றிய அச்சமிருக்காது. ஆனால், சோழப்படையினர் அனைவருக்கும் காட்டில் பார்க்கும் ஒவ்வொரு காட்சியும் அச்சத்தை உருவாக்கும். `எங்கெங்குமிருந்து மேலெழும் அம்புகளாலும் ஓசைகளாலும் முழக்கங்களாலும் அவர்களின் உறுதியை முற்றிலுமாகச் சிதைக்கலாம். அதன் பிறகு பறம்புவீரர்கள் சூறையாடலைத் தொடங்கலாம்' என்றுதான் திட்டமிட்டிருந்தான் பாரி. ஆனால், பிட்டன் நீர்வற்றாக் குளம் ஒன்று இருப்பதைப் பற்றிய செய்தியைச் சொன்னவுடன் தனது திட்டத்தை மாற்றிக்கொண்டான்.

நீர்ப்பசை இருக்கும் பாறைப் பிளவுகளிலும் மரச் செதில்களிலும் சங்கு அட்டைகள் இருக்கும். மற்ற அட்டைப்பூச்சிகளுக்கு, குருதியை உறிஞ்சும் வாய்ப்பகுதி ஒன்றுதான் உண்டு. ஆனால், சங்கு அட்டைப்பூசியானது விரிசங்கு வடிவிலானது. அதன் எல்லா முனைகளிலும் குருதி உறிஞ்சும் வாய்கள் உண்டு. மிக அரிதான உயிரினமான இது, மறையாற்றின் பகுதிகளில் உள்ள மர இடுக்குகளிலும் பாறை இடுக்குகளிலும் அதிகம் இருக்கும். அதனாலேயே மக்கள் அந்தக் காட்டுக்குள் போக மாட்டார்கள். ஆனால், இப்போது சங்கு அட்டைகள்தான் மிக அதிகமாகத் தேவைப்பட்டன.



குளம் பற்றிய செய்தியை அறிந்தவுடன் மறையாற்றின் பகுதியில் இருக்கும் சங்கு அட்டையைச் சேகரிக்க, கட்டையர்களுக்குக் கமுக்கமாக உத்தரவிட்டான் பாரி. ஆறு ஊர்க் கட்டையர்களும் மறையாற்றின் அடர்காட்டுக்குள் இறங்கினர். எண்ணற்ற சுரைக்குடுக்கையில் சங்கு அட்டையை நாள் முழுவதும் சேகரித்தனர். மருத்துவர்கள் தந்த செவ்வெண்ணெயைக் கைகளில் தேய்த்துக்கொண்டுதான் அவற்றைப் பிடித்தனர். அப்படியும் பிடித்தவர்களின் கைகள் எங்கும் குருதி கொட்டியபடியே இருந்தது.

அன்று இரவே குடுவையில் இருந்த சங்கு அட்டைகள் முழுவதையும் அந்தக் குளத்துக்குப் போய்ச் சேர்த்தனர். குளம் முழுக்க, எல்லாப் பகுதிகளிலும் பரவுமாறு சங்கு அட்டைகளைக் கொட்டிவிட்டுச் சுரக்குடுக்கையை எடுத்துவந்துவிட்டனர். சங்கு அட்டைகள் நீரின் அடிவாரப் பாறைகளிலும் மண்ணோடும் நீர்மீது மிதக்கும் செத்தைகளிலும் அப்பிக்கிடந்தன. சோழர்களின் தூசிப்படை மருத்துவர்களும் குறுங்காடர்களும் குளத்துநீரில் நஞ்சு கலக்கப்பட்டுள்ளதா எனச் சோதித்துப் பார்த்துவிட்டு, ``நஞ்சு ஏதும் கலக்கவில்லை. யானைகள் நீர் அருந்தலாம்'' என்று கூறினர்.

அதைத் தொடர்ந்து யானைகள் குளத்தடிக்கு வந்து நீள்துதிக்கையால் நீரை உறிஞ்சின. நீரின் மேற்புறமும் அடிவாரத்திலும் இருந்த சங்கு அட்டைகள், உறிஞ்சப்படும் நீரினூடே துதிக்கைக்குள் போய்விட்டன. முதலில் வந்து நீர் குடித்த யானைகளின் துதிக்கைக்குள் ஓரிரு அட்டைகள் உள்ளே போயின. அடுத்தடுத்து யானைகள் வந்து நீரை உறிஞ்சியதும் அடிவாரத்தில் ஒட்டிக்கிடந்த அட்டைகள் கணக்கில்லாத எண்ணிக்கையில் துதிக்கைகளுக்குள் போயின.

உள்ளே போய்த் துதிக்கையின் சதைக்குள் ஒட்டிய சங்கு அட்டைகள், குருதியை உறிஞ்சத் தொடங்கியபோதுதான் விளைவு வெளிப்படத் தொடங்கியது. கூடாரத்துக்குள் உணவு உண்டு முடித்த செங்கனச்சோழனிடம் ``யானைகள் அனைத்தும் நன்றாக நீர் அருந்திவிட்டன. இனி நமக்குக் கவலைவேண்டாம்'' என்று அரிஞ்சயன் சொல்லிக் கொண்டிருந்தபோது யானைகளின் பிளிறல் தொடங்கியது. ஒன்று மாற்றி ஒன்றாக இருளின் திசைக்குள்ளிருந்து பிளிறல் ஓசை மேலேறி வந்தது. அரிஞ்சயன் கூடாரத்துக்குள்ளிருந்து வேகமாக வெளியில் வந்தான். ஒவ்வொரு சங்கு அட்டைக்கும் ஆறு முனைகளில் ஆறு வாய்ப்பகுதிகள் உண்டு. ஆறும் ஒருசேரக் குருதியை உறிஞ்சும்போது அந்த இடத்தில் சதையே பிய்த்துக்கொண்டு வருவதுபோல இருந்தது. அதுவும் துதிக்கைக்குள் இந்தக் குடைச்சல் தொடங்கியதும் யானைகள் தலையை மறுத்து மறுத்து ஆட்டி, துதிக்கையை இங்குமங்குமாக வீசிச் சுழற்றின.

சிறுசிறு சலசலப்புகள் யானைப்படைக்குள் உருவாகத் தொடங்கியபோது பாகன்கள் எல்லோரும் யானைகளை அமைதிப் படுத்தி, நின்ற நிலையிலிருந்து உட்காரும் நிலைக்கு அமர்த்திவைக்க முயன்றனர். அப்போதுதான் இடது மூலையில் இருந்த யானை ஒன்று பெரும்பிளிறலோடு துதிக்கையைத் தூக்கி இரு பக்கங்களும் அடித்தது. பக்கத்தில் இருந்த யானைகள் மிரண்டு விலகின. உடனே அதன் பாகன் அதன் அருகே சென்று அதை அடக்க முற்பட்டபோது சற்றும் எதிர்பாராமல் சுழற்றி வீசப்பட்டான்.

யானைகளுக்கு என்ன நடக்கிறது என்ற கவனம் சில கணம்தான் இருந்தது. அதற்குள் பிளிறலின் ஓசை அங்குமிங்குமாகப் பல இடங் களிலிருந்து மேலெழுந்தது. யாருக்கும் எதுவும் புரியவில்லை. பாகன்கள் எல்லோரும் யானைகளின் மீதேறி அவற்றைக் கட்டுப்படுத்த முயன்று கொண்டிருந்தனர். அங்குசத்தால் அடித்தும் தலையில் ஊன்றிக் குத்தியும் மத்தகத்தில் வைத்து இழுத்தும் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்றனர். ஆனால், அவையெல்லாம் சிறிது நேரம்தான் நடந்தன.

வேந்தனின் கூடாரத்திலிருந்து படையின் முன்வரிசை நோக்கிக் குதிரையில் விரைந்து கொண்டி ருந்தான் அரிஞ்சயன். ஏதோ ஒரு யானைக்கு மதம்பிடித்துவிட்டது என்றுதான் அவன் நினைத்தான். ``அந்த மதயானையை அப்புறப் படுத்துங்கள். முடியவில்லை என்றால், போர்வாள் கொண்டும் தந்த ஈட்டிகொண்டும் குத்திச் சரியுங்கள்'' என்று ஓசையெழுப்பிய படி விரைந்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் இருளுக்குள்ளிருந்து வீசப்பட்ட பாகன் ஒருவன் அரிஞ்சயனின் குதிரைமீது வந்து விழுந்த வேகத்தில் அடியோடு சரிந்தான் அரிஞ்சயன்.

யானைகள் உள்மூக்கில் ஏற்படும் அரிப்பும் எரிச்சலும் தாள முடியாமல் துதிக்கையை முன்னும் பின்னுமாக வெறிகொண்டு வீசித் தாக்கத் தொடங்கிய கணத்தில் கட்டுக்கோப்புகள் எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன. நிலைமையின் விபரீதத்தை உணரும் முன்பே நூற்றுக்கணக்கான யானைப்பாகன்கள் அடித்து, மிதித்து, நசுக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். வீரமுண்ட வாத்தியமும் பேரிகையும் முழங்கி நிலைமையைக் கட்டுப்படுத்த, படைக்காவல்வீரர்கள் சிலர் முயன்றனர். ஆனால்,

யானைகளின் பிளிறலுக்கு நடுவே இந்தக் கருவிகளின் ஓசையேதும் மேலேறவில்லை. கீழே விழுந்த அரிஞ்சயன் எழுந்தபோது முன்புறப் படையின் கட்டுக்கோப்பு மொத்தமும் சிதைந்திருந்தது.

என்ன நடந்தது என்பதைச் சிந்திக்க கணநேரம்கூட யாருக்கும் இல்லை. மூன்று தளகர்த்தர்களின் உத்தரவின் கீழிருக்கும் முந்நூறு யானை களைக்கொண்ட இந்தப் படையில், ஒரே நேரத்தில் முப்பது யானைகள் கட்டுப்பாட்டை இழந்தாலே மொத்தப் படையும் சிதறிப்போய்விடும். ஆனால், இப்போதோ எல்லா யானைகளும் கட்டுப்பாட்டை இழந்துவிட்டன. துதிக்கையைத் தூக்கி வீசி அடித்துத் தாக்கும் அதன் வேகத்தில்தான் வேறுபாடு இருந்தது. சங்கு அட்டைகள் ஒன்றோ இரண்டோ யானைகள் சிலவற்றின் துதிக்கைக்குள் ஏறி அடிப்பகுதிக்குப் போகாமல் முன்பகுதியிலேயே இருந்தன. அந்த யானைகள் மட்டுமே சற்று கட்டுக்கோப்புடன் நடந்துகொள்ள முயன்றன. மற்ற யானைகள் என்ன செய்துகொண்டிருக்கின்றன என்பது யாருக்கும் புரியவில்லை. காடே அதிர்வதுபோலிருந்த பிளிறல் ஓசையால் பின்புறம் நின்றிருந்த காலாட்படை வீரர்கள் நடுங்கினர். கூடாரத்தில் இருந்த வேந்தனைப் பாதுகாக்க, தக்க ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். நெடுங்காடர்களுக்கு என்ன செய்வதெனப் புரியவில்லை. அவர்கள் தலைவன் சிவியன் காலாட்படையின் பின்பகுதியில் நின்றுகொண்டிருந்தான். நிலைமையை அறிந்துவர முன்னோக்கிச் செல்ல முயலும்போது பெரும்கூச்சலோடு படையெங்கும் குழப்பம் பரவியிருந்தது.

செங்கனச்சோழனைக் கூடாரத்திலிருந்து வெளியேற்றி, வேந்தனுக்குரிய யானையின் மீதேற்ற முயன்றுகொண்டிருந்தான் உறையன். அப்போது அந்த இடத்துக்கு வந்த காலாட்படைத் தளபதி கிழானடிவானவன், வேந்தனை யானையின் மீதேற்றிப் பின்புறம் கொண்டுசெல்வதை ஏற்கவில்லை. ``இதைப் பார்க்கும் காலாட்படையின் அனைத்து வீரர்களும் நம்பிக்கை இழப்பர். கணப்பொழுதுக்குள் எல்லோருக்குள்ளும் அச்சம் பரவிவிடும். எனவே, குதிரையின் மீதேற்றிப் பின்புறம் விரைவோம்” என்றான்.

ஆனால் உறையனோ, ``யானைப்படையின் முன்பகுதியில் ஏதோ கடினமான பிரச்னை உருவாகியுள்ளது. சில யானைகளைப் பாகன்களால் கட்டுப்படுத்த முடியவில்லை என நினைக்கிறேன். இந்நிலையில், வேந்தன் குதிரையில் பயணிப்பது நல்லதன்று. வெகுண்டெழும் ஒற்றை யானையின் பிளிறல்கூடக் குதிரையை நிலைகுலையச் செய்துவிடும். எனவே, வேந்தனுக்குரிய யானையின் மீது ஏற்றுங்கள்” என்று வாதிட்டான்.
வேந்தனின் யானை வீரர்களுக்குத் தோண்டப்படும் கிணற்றில் நீர் அருந்தியிருந்தது. எனவே, இதற்குப் பிரச்னை ஏதுமில்லை. பாகன் அதைக் கொண்டுவந்து கூடாரத்தின் ஓரம் நிறுத்தியிருந்தான். ஆனால், உள்ளே உறையனும் கிழானடிவானவனும் கடுமையாக உரையாடிக் கொண்டிருந்தனர்.

அந்த உரையாடல்களை அருகில் இருந்தவர்கூடக் கேட்க முடியாத நிலையில் பிளிறலின் ஓசை பன்மடங்கு அதிகரித்துக்கொண்டிருந்தது. படையின் முன்வரிசையில் இருந்த யானைகள் பாகன்களைச் சுழற்றி எறிந்தபடி வட்டாற்றின் முன்புறம் நோக்கி ஓடத் தொடங்கின.

இந்தக் கணத்துக்காகவே காத்திருந்த பாரி, தனது உத்தரவைப் பிறப்பித்தான். குளக்கரையெங்கும் பதுங்கி இருந்த பறம்புவீரர்கள் ஆற்றின் முன்பகுதியை நோக்கி எரியம்புகளை வீசத் தொடங்கினர். இருளைக் கிழித்தபடி ஆற்றின் இரு திசைகளிலிருந்தும் மணலுக்குள் எரியம்புகள் வந்து செருகின. முன்புறமாக ஓடத் தொடங்கிய யானைகள் நெருப்புமழைபோல் விடாதுபொழியும் எரியம்புகளைக் கண்டு, வந்த திசை நோக்கிப் பின்புறமாகத் திரும்பின.

பிளிறலும் அலறலும் இருளை உலுக்கின. வெறிகொண்ட யானைகள் வட்டாற்றில் வந்த திசை நோக்கித் திரும்பி முறுக்கியபடி மணல் நெளிய ஓடிவந்தன. யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை. வெறி கொண்டு முன்னேறும் யானைகளால் மொத்த யானைப் படையும் சிதறத் தொடங்கியது. ஆவேசம்கொண்ட யானைகள், பின்னிலையில் நின்ற காலாட் படைக்குள் புகுந்தன. அதகளம் தொடங்கியது. சங்கு அட்டைகள் உச்சி மூக்கில் குருதியை உறிஞ்சிய ஒவ்வொரு முறையும் துதிக்கையை ஓராயிரம் முறை சுழற்றியடித்தன யானைகள். தந்தங்களின் கூர்முனை இரு பக்கங்களிலும் குத்திக் கிழித்தன.
இருளெங்கும் பேரோலம் மேலெழுந்தபோது வட்டாற்றின் மணலெங்கும் குருதி ஊற்றெனப் பீச்சியடிக்கத் தொடங்கியது. படைவீரர்கள் செய்வதறியாது எங்கும் சிதறினர். குடிநீருக்காகத் தோண்டப்பட்ட எண்ணற்ற கிணறுகளில் நூற்றுக்கணக் கானவர்களை மிதித்துப் புதைத்தபடி யானைகள் முன்னேறிக் கொண்டிருந்தன. படையின் கட்டுக்கோப்பு குலையும் கணத்தில் பேரழிவு தொடங்கும். ஆனால், இங்கு தொடங்கிய கணத்திலேயே பேரழிவு முடிவுறும் நிலையை நெருங்கியது.

யானைப்படைத் தளபதி அரிஞ்சயன் ஆற்றுமணலுக்குள் ஆழப் புதைந்து கொண்டிருந்தான். மணற்துகள்களைப்போல எலும்புகள் நொறுங்கிக்கொண்டிருந்தன. இடைவெளியின்றி மிதித்து நகர்ந்தன எண்ணிலா யானைகள்.

தலைமைத் தளபதி உறையன் எது செய்தாவது காலாட்படையின் ஒரு பகுதி வீரர்களையாவது காக்க முடியுமா எனச் சிந்திக்கும்போது, எல்லாம் கைமீறிப்போயிருந்தன. படைவீரர்களோ யானைகளோ ஆற்றின் கரைகளில் எங்கெல்லாம் மேலேறுகிறார்களோ, அங்கெல்லாம் எரியம்புகள் பாய்ந்து கீழிறங்கின. நெருப்பின் பொறிபட்ட கணத்தில் கரையோரச் செடிகொடிகள் பற்றி எரிந்தன. மேலேறிய யானைகள் வெக்கை தாக்கிய வேகத்தில் பிளிறியபடி, சிக்கியவர்களை எல்லாம் அடித்து நசுக்கிக்கொண்டு மீண்டும் ஆற்றுக்குள் ஓடின.

வட்டாறெங்கும் பல்லாயிரக்கணக்கான வீரர்களை நசுக்கியபடி யானைகள் ஓடிக் கொண்டிருந்த அந்த நள்ளிரவின் பிற்பகுதியில், அழிவின் உச்சகட்டம் தொடங்கியது. `முதல்நிலைப் படையினர் தாக்குதலுக்கு ஆளாகிவிட்டனர்' என்ற செய்தி, ஒருநாள் இடைவெளியில் வந்துகொண்டிருந்த இரண்டாம் நிலைப் படையின் தளபதிகளுக்கு எட்டியது. நெடுங்காடர்களின் தளபதி துணங்கன் துடித்தெழுந்தான். யானைப்படையின் தளபதி கச்சனும் காலாட்படையின் தளபதி ஆழிமார் பனும் வெகுண்டனர். தாக்கப்பட்டவர்களுக்கு உதவ உடனடியாகப் புறப்பட்டனர். இரவோடு இரவாக

யானைகளை எவ்வளவு வேகமாக விரட்ட முடியுமோ, அவ்வளவு வேகமாக விரட்டிச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து காலாட்படையினரும் விரைந்து வந்தனர்.



பற்றிய நெருப்பு காட்டுக்குள் பரவாமல், தகுந்த முன்னெச்சரிக்கையோடு பறம்புவீரர்கள் செயல்பட்டுக்கொண்டிருந்தனர். அவர்கள் ஒற்றை அம்பைக்கூட சோழப்படையின் வீரர்களை நோக்கி எய்யவில்லை. பிளிறியபடி மேலேறும் யானைப்படையை ஆற்றை நோக்கிக் கீழிறக்கும் வேலையை மட்டுமே அவர்கள் செய்தனர். எந்த ஆற்றைப் பாழிநகருக்கான வழியாக செங்கனச்சோழன் தீர்மானித்து முன்னகர்ந்தானோ, அதே ஆற்றை மரணத்தின் பெரும்பாதையாக மாற்றினான் பாரி. எதிரிகள் நிலைகொண்டிருந்த நான்கு காதத்தொலைவுக்கும் மலைக்குமேல் தகுந்த இடைவெளியில் பறம்புவீரர்கள் நிலைகொண்டிருந்ததால் எல்லாவற்றையும் துல்லியமாகச் செயல்படுத்தினர். இருளை நகர்த்திச் செல்வதைப்போல வெறிகொண்ட யானைக் கூட்டத்தைக் கரையோடு கரையாக நகர்த்திக்கொண்டிருந்தனர்.

போர் என்பது, கட்டுக்கோப்பான தாக்குதல். அதன் வெற்றி, தாக்கும் திறனில் மட்டுமன்று, அதன் ஒழுங்கமைப்பின் வடிவிலும் இருக்கிறது. வேந்தனின் படைகள், இந்தக் கருத்துக்கு நன்கு பழக்கப்படுத்தப்பட்டவை. ஆனால், அடர்காட்டுக்குள் முன்னிலைப்படை தாக்கப்பட்ட செய்தி தெரிந்த பிறகு விரைந்து சென்று சேர்வதுதான் முதல் வேலை. அதில் எவ்வளவு வேகத்தில் விரைய வேண்டுமோ அவ்வளவு வேகத்தில் விரைவதே முக்கியம் என உணர்ந்து ஆழிமார்பனும் கச்சனும் விரைந்துகொண்டிருந்தனர். துணங்கனோ நெடுங்காடர்களைத் திரட்டி யானைகளை முந்திக்கொண்டு ஓடினான்.

பின்னிரவு சரிந்து கீழ்வானில் மெல்லிய ஒளிக்கீற்றுகள் மேலெழத் தொடங்கியபோது வட்டாறு இதுவரை சந்தித்திராத பேரழிவைச் சந்திக்க ஆயத்தமானது. இரண்டாம் நிலையில் இருந்த யானைப்படை கச்சனின் தலைமையில் விரைந்து முன்னேறிக்கொண்டிருந்தபோது, யாரும் எதிர்பார்க்காத வகையில் எதிர்த் திசையிலிருந்து பிளிறிக்கொண்டு வந்தது முதல்நிலை யானைப்படை. எந்த யானையின் மீதும் பாகன்கள் யாரும் இல்லை. வந்து கொண்டிருப்பது நமது படைதானா என்பதைக்கூட இருளுக்குள் தெளிவாகப் பார்க்க முடியவில்லை.

தந்தத்தின் உள்மூக்குக்குள் துருவிக் கொண்டிருக்கும் குடைச்சல் தாங்க முடியாமல் துதிக்கையைச் சுருட்டி, திருகி, முறுக்கி வீசியபடி பிளிறிக்கொண்டு வந்த யானைகளை, எதிர் நிலையில் சந்தித்தது கச்சனின் யானைப்படை.
ஒரு யானையின் குருதி, பல நூறு வீரர்களின் குருதிக்குச் சமம். தந்தங்களைக்கொண்டு பதினான்கு விதங்களில் தாக்குவதற்குப் பயின்ற யானைகள், இருள் முடியும் கணத்தில் ஒன்றுடனொன்று நேர்கொண்டு மோதின. இதுவரை யாரும் கேள்விப்பட்டிராத பேரழிவு நிகழத் தொடங்கியது.
உச்சிமண்டைக்குள் குருதியை உறிஞ்சிக் குடிக்கும் சங்கு அட்டைகளால் ஏற்படும் வேதனை தாங்காமல் துதிக்கைகொண்டு தமது தலையின் கும்பங்களையே நொறுக்குவதுபோல் அடிக்கும் யானைகள் எதிரில் சிக்கும் யானைகளை விட்டுவிடவா செய்யும்! சுழற்றியடித்துத் தந்தத்தால் குத்தித் தூக்கின.
மணிக்கட்டிலும் மார்பிலும் கமுக்கட்டையிலும் விலாப்புற மடிப்பிலும் வயிற்றிலும் குத்தித் தள்ளப்பட்ட எண்ணிலடங்கா யானைகள் எழுப்பிய ஓலம் காட்டை உறையச்செய்தது. வட்டாற்றுக் கொதிமணல் குடித்து முடியாத கருங்குருதி, விழுந்து கிடந்த யானைகளுக்கு நடுவில் வீரர்களின் உடலை இழுத்து நகர்த்தியது. குருதி குடித்த வட்டாற்று மணற்பரப்பு மணிக்கற்களைப்போல ஒளி வீசியது.




**தோ**கைநாய்களை அழித்த பறம்புவீரர்கள் காட்டை ஊடறுத்துக் குறுக்குவழியில் குதிரைகளில் பறந்தனர். எஃகல்மாடன் தலைமையில் நடுக்காட்டுக்குள் ஊர்ந்துகொண்டிருந்த சேரப்படையை இரவில் நாற்புறமும் சூழ்ந்தனர். உள்ளங்கைக்குள் சிக்கிய இரையை அவர்களின் ஆசைக்கேற்ப அடித்திழுக்கும் வேட்டை தொடங்கியது. பறம்புவீரன் ஒவ்வொருவனும் எண்ணற்ற தோகைநாய்களாக உருமாறியிருந்தான். எந்தவொரு தாக்குதலையும் இவ்வளவு கொடும் ஆவேசத்தோடு பறம்புவீரர்கள் தொடங்கிய தில்லை. இருபதுக்கும் மேற்பட்ட குதிரைகளை இழந்தவர்களின் வெறி, வீசப்பட்ட ஒவ்வோர் அம்பிலும் இருந்தது. உள்ளங்கைக்குள் வைத்துக் கழுத்தைத் திருகி எடுப்பதைப்போல எதிரிகளின் படையை உயிரோடு திருகி எடுத்தனர். தாக்குதல் நடந்த செவ்வரிக்காட்டில் குருதி படியாத இலையென்று எதுவும் இல்லை.
முகத்தில் மூன்று அம்புகள் ஒருசேரத் துளைத்தபோது அவன் மண்ணில் வீழ்ந்தான். ஆனாலும் அவன் செய்வதைப்போலவே தலையை வெட்டியெடுத்தான் தேக்கன். குருதி நாளங்கள் வெடிப்பதைப்போலக் கத்திக்கொண்டு துண்டித்த அவனது தலையைத் தூக்கி வீசினான் தேக்கன். நீள்வாய் நாய்களை நம்பி உள்ளே வந்த எஃகல்மாடனின் தலையைக் கவ்விச் செல்ல ஒரு தோகைநாய்கூட உயிருடன் இல்லை.

**- மூன்றாம் பாகம் முற்றிற்று.**

# வீரயுக நாயகன் வேள்பாரி-78

பறம்பு வீரர்கள், வடக்கு-தெற்குப் போர்க்களங்களிலிருந்து ஊர் திரும்பினர். பாரி எவ்வியூரை அடைந்தபோது தேக்கனும் உதிரனும் வந்து சேர்ந்திருந்தனர். இவ்வளவு பெருந்தாக்குதல்களை இதுவரை பறம்பு நடத்தியதில்லை. எனவே, இதுவரை இல்லாத அளவுக்கு, போர் பற்றிய கதைகள் பறம்பு முழுவதும் நிறைந்திருந்தன.




போர் மனநிலையிலிருந்து விடுபடுதல் எளிதன்று. வெறிபிடித்த வேட்டை விலங்குக்கு ஒப்ப எண்ணிலடங்கா நாள்கள் செயல்பட்டுவிட்டு, அதனிலிருந்து இயல்புவாழ்வுக்கு மாறுதல் மனப்பிறழ்விலிருந்து மீள்வதைப் போன்றது. இந்தக் கொடும் துன்பத்திலிருந்து விரைவில் வெளிவர வேண்டும் என்பதால்தான் போர் முடிந்தவுடன் கொற்றவைக்குக் ‘குருதியாட்டுவிழா’ எடுப்பர். வாரக்கணக்கில் நடைபெறும் இந்தப் பெருவிழாவில், அத்தனை வகைக் கள்ளும் ஆற்றுப்பெருக்கென ஓடும். குடித்துக் களித்து, ஆடிப்பாடி, பேருணவு உண்டு முடிப்பர். இந்தப் பெரும்விழா, வீரர்கள் அனைவரையும் குணமாற்றம் அடையச் செய்யும். இழப்பின் வலியிலிருந்து மகிழ்வின் கொண்டாட்டத்துக்கு ஒவ்வொருவரையும் தள்ளும். கண்ணுக்குள் ஊறிக்கிடந்த கொலைவெறி வற்றி இறங்கும். வாழ்வு மீண்டும் வீசிச்செல்லும் இளங்காற்றுக்குத் தலையசைக்கிற சிறுபுல்லின் குணமெய்யும்.

ஆனால், இம்முறை குருதியாட்டு விழாவை நடத்த முடியவில்லை. பாண்டியனின் படை கீழ்த்திசையில் நிலைகொண்டுள்ளது. அவனுடனான போர் இன்னும் தொடங்கவே இல்லை. கொற்றவையின் கூத்துக்களத்தில் நீராட்டு விழாவின்போது வஞ்சினம் உரைத்த பாரியின் கூற்றில் இரண்டை முடித்தாகிவிட்டது. மூன்றாம் கூற்று தொடங்கப்படவேயில்லை. பறம்பைப் பொறுத்தவரை போர் இன்னும் முடியவில்லை. எனவே, போர் மனநிலையை உதற முடியாத நிலையிலேயே அனைவரும் இருந்தனர்.

வட்டாற்றில் சோழப்படையின் மீதான தாக்குதல் முடிந்த மறுநாள் இரவு, பாரி அங்கிருந்து புறப்பட்டுவிட்டான். ``இனி சோழப்படை மீள வாய்ப்பேதும் இல்லை. எனவே, தொடர்ந்து வீறுகொண்ட தாக்குதல் தேவையில்லை. பறம்பு மண்ணைவிட்டு அவர்களை அப்புறப்படுத்தினால் போதும். மிஞ்சியவர்கள் குறும்பியூர்க் கணவாயில் வெளியேறும் வரை, அவர்களை பிட்டன் பின்தொடரட்டும்’’ என்றான் பாரி.

இரவாதனைத் தாக்குதல் களத்திலிருந்து வெளியேற்றி, வேறு வேலைகளைக் கொடுத்தான். எதிரிப்படை வீறுகொண்டு நிற்கும்போதே அவனது தாக்குதலை அவர்களால் எதிர்கொள்ள முடியாது; இப்போதோ அவர்கள் உயிர்பிழைக்க ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் இரவாதனைக் களம் விட்டு வெளியேற்றுவது அவசியம் எனக் கருதினான் பாரி.

``யானையின் துதிக்கைக்குள் சென்ற சங்கு அட்டைகள் ஒருசில நாள்களில் தாமே செத்து உதிரும் வரை யானைக்கு வேதனை இருக்கத்தான் செய்யும். யாரையும் நெருங்க விடாது. தாக்குதலுக்குள்ளாகி இறந்த யானைகளைத் தவிர  குற்றுயிராய் இருக்கும் யானைகளுக்கும் சிகிச்சை தேவைப்படும் யானைகளுக்கும் உதவ வேண்டியது நமது கடமை. நமது மலைகளுக்குள் பிளிறிக் கதறும் யானைகளுக்கு நாம் உதவியே ஆகவேண்டும். யானைகளுடனான ஆதிமொழியை உருவாக்கிய தந்தமுத்தத்தைச் சேர்ந்தவர்களை அழைத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்” என்று இரவாதனுக்கு உத்தரவிட்டான் பாரி.


யானைப்படையை வீழ்த்துவதற்காக உயர்த்திய வில்லோடு அலைந்துகொண்டிருந்த இரவாதனை, தந்தமுத்தத்துக்காரர்கள் கேட்கும் பச்சிலைகளைப் பறித்துத் தருபவனாக மாற்றினான் பாரி. எண்ணிலடங்காத காயங்களுடனும் வேதனையுடனும் அலைந்துதிரியும் யானைகளை, தந்தமுத்தத்துக்காரர்கள் எப்படி அணுகுகிறார்கள் என்பதை அவன் கூர்ந்து கவனிக்க வேண்டியது முக்கியம். வீரன், மருத்துவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள நிறைய உண்டு. அதுவும் வேதனைகொண்ட போர்யானைகளை நெருங்கவும், தேவைப்பட்டால் எளிய முறையில் அவற்றை வீழ்த்தவும், பிறகு சிகிச்சையளிக்கவும் எண்ணற்ற நுணுக்கங்களைத் தந்தமுத்தத்துக்காரர்கள் செய்தனர். இவையெல்லாம் பெரும்படைக்குத் தலைமையேற்பவர்களுக்குத் தேவையான பயிற்சி. இவ்வளவு யானைகளுக்கிடையே இப்படியொரு பயிற்சியைப் பெறும் வாய்ப்பு இரவாதனைத் தவிர பறம்பில் வேறு யாருக்கும் கிடைக்கவில்லை. அவசியம் எனக் கருதியே பாரி இந்தப் பயிற்சியில் அவனை ஈடுபடுத்தினான்.

எழுவனாற்றை விட்டு பாரி புறப்பட்ட பிறகு வலக்கரையில் இருந்த இரவாதன் தந்தமுத்தத்துக்குச் சென்றான். இடதுகரையில் இருந்த பிட்டன், சிறு படையை உடன் வைத்துக்கொண்டு எதிரிகளைப் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருந்தான். பெரும் எண்ணிக்கையிலான பறம்பு வீரர்கள் ஊர்களுக்குத் திரும்பினர்.

யானைகளின் கொடூர அழித்தொழிப்பிலிருந்து செங்கணச்சோழனைக் காப்பதில், சோழர்படையின் முன்னணித் தளபதிகளும் நெடுங்காடர்களும் மிகுந்த கவனத்தோடு செயல்பட்டனர். தேர்ந்த வீரர்களின் வலிமைமிகுந்த பாதுகாப்பு வளையத்தினூடே செங்கணச்சோழனை முன்னகர்த்தி வந்துகொண்டிருந்தனர். தாக்குதல் நடந்த முதல் நாள் இரவு `வேந்தனைக் காக்க முடியாத நிலை வந்துவிடுமோ!' எனக் கவலைப்பட்டனர். நெடுங்காடர்கள், பாறைக்குகை ஒன்றுக்குள் வேந்தனை அனுப்பி, யானைகள் உள்நுழையாதபடி நெருப்பு வளையத்தை உருவாக்கிக் காத்தனர். அடுத்தடுத்த நாள்களில் யானைகளுடனான ஆபத்து குறையத் தொடங்கியதும் தகுந்த ஏற்பாட்டோடு பறம்பை விட்டு வெளியேறும் பயணத்தைத் தொடங்கினர்.

சிறிய படைப்பிரிவு ஒன்று மிகுந்த பாதுகாப்புத் தன்மையோடு ஆற்றின் ஓரப்பகுதியின் வழியே தப்பிச்சென்று கொண்டிருப்பதை அறிந்த பிட்டன், அவர்களை இறங்கித் தாக்க முடிவெடுத்தான். `பெரும்படை முழுமுற்றாக அழிந்த பிறகும், இவர்கள் இவ்வளவு வேகமாகத் தப்பிச்செல்கின்றனரே!' என்று சற்றே அவசரப்பட்டான்.

வேந்தனைக் காத்து நின்றது, மிகத் தேர்ந்த வீரர்களைக்கொண்ட படைப்பிரிவு. உடன் நெடுங்காடர் தளபதி துணங்கன் இருந்தான். தளபதிகளில் தப்பிப்பிழைத்தது அவன் மட்டும்தான். `பறம்புநாட்டை ஊடறுத்துச் செல்லும் தாக்குதலுக்கு எங்களை நம்பி நீங்கள் வரலாம்' என்று நெடுங்காடர்கள் அளித்த வாக்கின் அடிப்படையில்தான் செங்கணச்சோழன் வந்தான். அந்த வாக்கைக் காப்பாற்ற இறுதி வரை முயன்றுகொண்டிருந்தான் துணங்கன்.



பொழுது மங்கிக்கொண்டிருந்த மாலை நேரத்தில் ஆற்றின் வளைவு ஒன்றில் பொருத்தமான இடத்தில் வேந்தனுக்குக் கூடாரம் அமைக்கப்பட்டது. அருகில் இருந்த மூங்கில் மரங்களை ஆற்றுக்குள் சாய்த்துப்பிடித்து வலைப்பின்னல்களை நெடுங்காடர்கள் உருவாக்கினர். எந்தவித பாதிப்பும் அடையாத பன்னிரண்டு யானைகளைப் பாதுகாப்புக்கு நிறுத்தினர். கவசவீரர்கள், கூடாரத்தைச் சுற்றி நின்றிருந்தனர்.

`இவன்தான் இந்தப் படையெடுப்புக்குத் தலைமை தாங்கியவன்!' என்று இந்த ஏற்பாடுகளைக் கண்டதும் பிட்டனுக்குத் தோன்றியது. அமைக்கப்பட்ட கூடாரத்தின் பின்பகுதியில் ஆற்றுவழியே தாக்குதல் எதுவும் நடந்துவிடக் கூடாது எனப் பன்னிரு யானைகள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. கூடாரத்தைச் சுற்றிக் கவசவீரர்கள் விழிப்புடன் காத்து நின்றனர். காரிருள் சூழ்ந்திருந்தபோது

கூடாரத்தின் இடதுபுறமிருந்து பிட்டனின் தலைமையிலான சிறுபடை ஆற்றுமணலுக்குள் இறங்கியது.

பிட்டனின் பார்வை முழுவதும், கூடாரத்தைச் சுற்றி நின்றிருந்த கவசவீரர்களை நோக்கியே இருந்தது. ஆனால், மண் போத்தி உறங்கும் பழக்கம்கொண்ட நெடுங்காடர்கள், ஆற்றுமணலுக்குள் தலை மட்டும் மேலே தெரிவதைப்போல மறைந்து கிடப்பதை அவன் கவனிக்கவில்லை. கூடாரத்தை நோக்கித் தாக்குமாறு பிட்டன் ஆணையிட்டதும் உடன்வந்தவர்கள் வில்லை உயர்த்த எத்தனித்தபோது மணலுக்குள்ளிருந்து தெறித்து மேலெழும்பினர் நெடுங்காடர்கள். இரு கைகளிலும் உருவிய வாள்களோடு எழுந்தவர்கள் தங்களின் கை அருகில் இருக்கும் பறம்பின் வீரர்களை கணப்பொழுதில் வெட்டிச் சரித்தனர்.

பல்லாயிரம் வீரர்களைக்கொண்ட படையை உருத்தெரியாமல் அழித்த எதிரிகள் கை அருகில் சிக்கியுள்ளனர் என்ற வெறியோடு நெடுங்காடர்கள் வெட்டியபோது, வில்லிலிருந்து விடுபட்ட அம்புகள் கவசவீரர்களைத் துளைக்கவும் செய்தன. ஓசை கேட்டு கூடாரத்துக்குள் இருந்த செங்கணச்சோழன் சட்டெனத் திரை விலக்கி வெளியே வந்தான். மேலே தெறித்த மணற்துகள்களுக்கு நடுவே அவனது உருவத்தைத் துல்லியமாகக் கண்டான் பிட்டன். கையில் இருந்த ஈட்டியை அவனை நோக்கி எறிந்தபோது, நெடுங்காடர்களின் எண்ணிலடங்கா வாள்கள் பிட்டனை நோக்கி இறங்கிக்கொண்டிருந்தன.

வலதுகால் தொடையில் ஈட்டி இறங்கிய கணம், பேரலறலோடு செங்கணச்சோழன் மண்ணில் சரிந்தான். அதே வேளையில் பிட்டன் எண்ணற்ற துண்டுகளாக மணலெங்கும் சிதறிக்கிடந்தான்.

குலசேகரபாண்டியனின் வயதும் அனுபவமும், யாராலும் கணிக்க முடியாத முடிவுகளை எப்போதும் எடுப்பவராக அவரை மாற்றியிருந்தன. முதல்நிலைப் படை வெங்கல்நாட்டுக்கு வந்ததும் போருக்கான ஆயத்த வேலைப்பாடு தொடங்கிவிடும் என அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. மிக விரிந்த அளவில் பாடிவீடுகளை ஏற்படுத்தி, படைகளைப் பகுதி பகுதியாகக் கொண்டுவந்து இறக்கும் உத்தரவை மட்டும் கருங்கைவாணனுக்கு வழங்கியிருந்தார்.

பாண்டியநாட்டின் வெவ்வேறு திசைகளிலிருந்து படைகள் வெங்கல்நாடு நோக்கி நகர்ந்தன. ஆனால், படை முழுமையும் அங்கு வந்து குவிந்துவிடவில்லை. குறிப்பிட்ட இடைவெளிகளில் படைகளை ஆங்காங்கு தங்கவைத்து, பேரரசரின் உத்தரவுக்கு ஏற்ப வெங்கல்நாட்டை நோக்கி நகர்த்தினர்.

இளவரசர் பொதியவெற்பனும் தளபதி கருங்கைவாணனும் பாடிவீட்டிலேயே முகாமிட்டிருந்தனர். ஆனாலும் பேரரசரின் எண்ண ஓட்டங்களையோ போர் உத்திகளையோ அவர்களால் யூகிக்க முடியவில்லை. மையூர்கிழார் மிக மும்முரமாக இருந்தார். எண்ணிலடங்காத படைப்பிரிவுகள் நாள்தோறும் வந்தவண்ணம் இருந்தன. அவரது நிலப்பரப்பு எங்கும் குதிரைகளும் யானைகளும் குறுக்கும் நெடுக்குமாகப் போய்வந்தபடி இருந்தன. எல்லா ஏற்பாடுகளிலும் அவரது ஆலோசனை அடிப்படையாக இருந்தது. பேரரசின் அதிகாரமிக்க பிரதிநிதியாக எல்லோராலும் அவர் பார்க்கப்பட்டார். பாண்டிய நாட்டின் எண்ணற்ற படைப்பிரிவின் தளபதிகளும் சிற்றரசர்களும் வந்து சேர்ந்துகொண்டே இருந்தனர். ஆனால், பேரரசர் மட்டும் இன்னும் வெங்கல்நாட்டுக்கு வந்து சேரவில்லை. அவர்

மதுரையிலும் இல்லை. இரண்டுக்கும் இடைப்பட்ட இடத்தில் தும்பாற்று அரண்மனையில் இருந்தார்.

சேரனின் தாக்குதலைப் பற்றியும் சோழனின் படையெடுப்பைப் பற்றியும் ஒற்றர்கள் மூலம் செய்திகளை நாள் தவறாமல் சேகரித்தபடி இருந்தார். அந்தத் தாக்குதலில் ஏற்படும் விளைவுகளைப் பொறுத்தே தன்னுடைய உத்திகளை வகுப்பது என முடிவெடுத்திருந்தார். முதலில் சேரனின் தோல்வி பற்றிய செய்தி வந்துசேர்ந்தது. நீண்டநாள்களுக்குப் பிறகு, சோழப்படையின் அழித்தொழிப்பு பற்றிய செய்தி அவரை எட்டியது. எல்லாவற்றையும் பொறுமையோடு சிந்தித்துக்கொண்டிருந்தார். தனக்கான உத்திகளைத் தனித்துவத்தோடு வகுத்துக்கொண்டிருந்தார்.

போர் என்பது உத்தியால் மட்டும் தீர்மானிக்கப்படுவதன்று; கடைசிகணம் வரை அந்த உத்தியைச் செயல்படுத்தும் புறச்சூழல் நம்முடைய ஆதிக்கத்தில் இருக்க வேண்டும் அல்லது அதனுடைய ஆதிக்கத்தால் பாதிப்படையாத உத்திகள் வகுக்கப்பட்டிருக்க வேண்டும். சேரனும் சோழனும் தவறிய இடங்களைப் பற்றி நேரில் பார்த்தவரைப்போலச் சுட்டிக்காட்டிப் பேசிக்கொண்டிருந்தார். இருநாட்டுத் தாக்குதல்களும் தோல்வியடைந்த பிறகு, வெங்கல்நாடு நோக்கி முன்னகர்ந்தார் குலசேகரபாண்டியன்.

காற்றடிகாலம் உச்சம்கொண்டிருந்தது. குளம், குட்டைகளில் நீரின் இருப்பு மேலும் குறைந்தது. ஆனாலும் மேற்குமலையில் மேகங்கள் கூடும்காலம் நெருங்கிவிட்டது. அதைக் கணித்தே அவரின் நகர்வு இருந்தது. பாண்டியப் பெருவேந்தன் வெங்கல் நாடு நோக்கி வரும் செய்தி எட்டியவுடன் படையெங்கும் உற்சாகக் கொண்டாட்டம் தொடங்கியது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு குலசேகரபாண்டியன் நேரடியாகப் போர்க்களம் ஒன்றுக்கு இப்போதுதான் வருகிறார்.

முடியனும் காலம்பனும், கீழ்த்திசைப் போர்க்களத்துக்கு வந்து மாதக்கணக்காகிறது; பாண்டியப்படை பாடிவீடு அமைத்து எங்கெல்லாம் தங்குகிறார்கள், என்னவெல்லாம் செய்கிறார்கள் என்பதைக் கவனித்தபடி இருந்தனர்.

வேட்டூர்பழையன், மலையடிவாரம் எங்கும் தன் வீரர்களை நிறுத்தி எதிரிகளின் ஒவ்வோர் அசைவையும் கண்காணித்தபடி இருந்தான். மாதக்கணக்கில் பாண்டியர் படை வந்து குவிந்துகொண்டே இருந்தது. கண்களுக்கு எட்டும் தொலைவு வரை ஈட்டி ஏந்திய வீரர்கள் தென்பட்டனர்.

நீலனால் அமைதிகொள்ள முடியவில்லை. இறங்கித் தாக்கவேண்டும் என்ற அவனது எண்ணத்தை மற்றவர்கள் ஏற்கவில்லை. பறம்பினுள் நுழையாத யாரின் மீதும் தாக்குதல் தொடுக்க நமக்கு உரிமையில்லை என்பதை அவனால் ஏற்க முடியவில்லை. மற்ற இரு திசைகளிலும் ஈட்டிய வெற்றிச் செய்தி இங்கு வந்து சேர்ந்ததும் நீலனின் வேகம் இன்னும் கூடியது. அவனைக் கட்டுப்படுத்துதல் வேட்டூர் பழையனால் முடியாதது. எனவே, நீலனை முடியனோடு இருக்கச்செய்தான் பழையன். முடியனின் சொல்லைப் பறம்புவீரன் யாரும் மீற முடியாது. வேறு வழியில்லாமல் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டான் நீலன். காலம்பனின் மனநிலையும் ஏறக்குறைய அதேபோல்தான் இருந்தது. கீழ்த்திசை ஊர்களின் வீரர்கள் மலையெங்கும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

காற்றடிகாலம் தொடங்கும் முன்பே தேக்கனும் உதிரனும் வந்திறங்கினர். கூழையன் மட்டும்

தென்திசையில் சேரநாட்டு எல்லையில் இன்னும் இருந்தான். தேக்கன் வந்த பிறகு உத்திகள் மாற்றப்படும் என்று அவர்களுக்குத் தெரியும். இருபெரும் வெற்றிச் செய்திகளோடு எவ்வியூரில் இருந்த வீரர்களின் கூட்டம் தேக்கனின் தலைமையில் கீழ்த்திசைக்கு இறங்கியது. `அடுத்த சில நாள்களில் பாரி வரவுள்ளான்' என்ற செய்தியையும் தேக்கன் சொன்னான். எல்லோரும் அளவற்ற மகிழ்வடைந்தபோது நீலன் மட்டும் சற்றே வருத்தம்கொண்டான். தனது பொறுப்பில் இருக்கும் காவல்திசை ஒன்றுக்குப் பாரி வரும்போது அவனுக்கு வெற்றியைத் தந்து வரவேற்கும் வாய்ப்பற்றுப்போனதே என்ற கவலை, அவனது முகத்தில் இருந்தது. ஆனாலும் பறம்பின் ஆசான் தேக்கனும் உற்றதோழன் உதிரனும் எண்ணிலடங்காத எவ்வியூர் வீரர்களும் வந்து இறங்கிய மகிழ்வு, அவனை விரைவில் ஆற்றுப்படுத்தியது.

எழுவனாற்றிலும் செவ்வரிக்காட்டிலும் கொட்டித்தீர்த்த எதிரிகளின் குருதியேந்தி இரு திசைப் படையின் பொறுப்பாளர்களும் வேட்டுவன் பாறைக்கு வந்து சேர்ந்தனர். பறம்பின் மாவீரர்கள் எல்லோரும் ஒன்றாய்க் குவிந்திருக்க, நாண்முழவைக் குறுந்தடிகொண்டு எழுப்பும் ஓசை காரமலையின் உச்சியிலிருந்து எதிரொலித்தது. பாரியின் வருகையைக் கீழ்த்திசை முழுவதும் அறிவிக்கும் ஓசை அது. வழக்கமான நாள்களில் இதுபோன்ற ஏற்பாடுகள் இல்லை. போர்க்காலத்தில் எல்லாம் ஒழுங்கமைக்கப்ப ட்டிருந்தது. தான் இருந்த இடத்திலிருந்து பறம்பு முழுவதும் குறிப்பறிந்து வழி நடத்திக்கொண்டிருந்தான் வாரிக்கையன்.



கபிலரோடு நடந்து வந்த பாரி காரமலையின் முகட்டின் மீது கால் வைத்ததும் நாண்முழவின் ஓசை கேட்டது. எல்லோரும் ஓசை கேட்ட திசை நோக்கி வியப்புற்றுத் திரும்பினர். பாரியோ, கபிலரைப் பார்த்து ``இது வழுக்குப்பாறை. கவனமாகக் காலெடுத்து வையுங்கள்” என்றான்.

``பலமுறை இந்த வழியில் காரமலையைக் கடந்து இரு பக்கங்களும் போய்வந்துள்ளேன், அப்போதெல்லாம் முழவின் ஓசை கேட்டதில்லையே” என்றார் கபிலர்.

``இவையெல்லாம் வாரிக்கையனின் ஏற்பாடு. செய்தித்தொடர்புகளின் வலைப்பின்னல்களை இருந்த இடத்திலிருந்தே உருவாக்கும் நுட்பம் அவர் அளவுக்குப் பறம்பில் வேறு யாருக்கும் இல்லை” என்றான் பாரி. கபிலர் வியந்து கேட்டுக்கொண்டிருந்தார்.

``நான் வருவதை முன்னோக்கி அறிவிக்கும் ஓசை என்று மட்டும் நினைத்துவிடாதீர்கள். பின்னோக்கி

அவருக்குச் சென்று சேரவேண்டிய செய்தி ஒன்று வேறு ஒலிக்குறிப்பில் போய்க்கொண்டிருக்கும்” என்றார்.

``எவ்வளவு ஆற்றல்கொண்ட மாமனிதனாக அவர் இருக்கிறார்!” என்று கபிலர் வியந்து கூறியபடி பாரியின் தோள்பற்றி நடந்து கொண்டிருந்தார். பாரி சொன்னான், ``பறவைகளைக் கூடுகளில் பார்த்து மகிழ்வது ஓர் அனுபவம். வானமெங்கும் பறந்து திரிவதைப் பார்த்தறிவது இன்னொரு வகை அனுபவம். அதுவே வேட்டைக்காகச் சிலிர்த்தபடி ஈட்டிபோல இறங்கித் தாக்குவதைப் பார்த்தல் முற்றிலும் வேறுவகை அனுபவமாயிற்றே! இது வேட்டைக்காலம் அல்லவா, தங்களின் ஆற்றல் முழுமையும் பயன்படுத்தும் வாய்ப்பாக ஒவ்வொரு பறம்பு மனிதனும் கருதுவான்” என்றான் பாரி.

``ஆற்றல் அளவிடற்கரியது. அது பயிற்சியோடும் திறமையோடும் மட்டும் தொடர்புடையதன்று; சூழலுடனும் உணர்வுடனும் தொடர்பு டையதாயிற்றே” என்றார் கபிலர்.

``ஆம், அதனால்தான் தளர்ந்த வயதில் வாரிக்கையனும், மிக இளம்வயதில் இரவாதனும் எண்ணிப்பார்க்க முடியாத நுட்பத்துடனும் வலிமையுடனும் ஆற்றலை வெளிப்படுத்து கின்றனர்.”

ஒரு கணம் அதிர்ந்தார் கபிலர். மகா திறமைகொண்ட வாரிக்கையனைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், அந்த வரிசையில் இரவாதனை ஒப்பிட்டுப் பாரி சொன்னது வியப்பைத் தந்தது. சற்றே அமைதிகொண்ட கபிலர் ``இரவாதனை...” என்று மெள்ளத் தொடங்கினார்.

கபிலர் என்ன கேட்க வருகிறார் என்பதைப் புரிந்துகொண்ட பாரி சொன்னான், ``எழுவனாற்றுப் போர்க்களத்தில் ஒரு காட்சியைப் பார்த்தேன். இரவாதன் எய்த அம்பொன்று யானையின் கழுத்தில் ஒருபக்கம் தைத்து மறுபக்கம் எட்டிப்பார்த்தது. அவனது வில்லடியின் ஆற்றல் அளவிட முடியாததாக இருக்கிறது.”

வியப்பு மீறாமல் கபிலர் சொன்னார் ``இதேபோன்ற வியப்போடு நீலனின் ஆற்றலைப் பற்றி தேக்கன் சொல்லிக் கேட்டுள்ளேன்.”


``ஆம், இருவரும் இணையற்ற ஆற்றல்கொண்ட வீரர்கள்தாம். ஆனால், வீரர்களை மாவீரர்களாக மாற்றுவது போர்க்களம்தான்” சொல்லியபடி நடையை நிறுத்தினான் பாரி.

குனிந்தபடி கவனமாக நடந்துவந்த கபிலர், பாரி நின்றதும் தானும் நடையை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தார். மலையடிவாரச் சமவெளிப் பரப்பில் விரிந்துகிடந்தது பாண்டியர் படை. கண்ணிமைக்காமல் அதைப் பார்த்துக் கொண்டிருக்கையில் பாரி சொன்னான் ``பெரும்புகழை அணைத்துக்கொள்ளும் மாவீரர்களுக்காக, களம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.”

**வே**ந்தனுக்கு இதுவரை யாரும் தந்திராத வரவேற்பைத் தர வேண்டும் என்று இரவு பகலாகப் பணியாற்றிக்கொண்டிருந்தது வெங்கல்நாடு. குலசேகரபாண்டியனின் காலடி வெங்கல்நாட்டு அரண்மனையில் பதிந்தபோது, நெடுஞ்சாண்கிடையாக விழுந்து தொட்டு வணங்கி வரவேற்றார்

மையூர்கிழார். பறம்பின் மீதான போர் பற்றிய முடிவெடுக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குமேல் ஆகிவிட்டது. இந்த முடிவு எடுக்கப்பட்டவுடன் தனது அரண்மனையில் புதிய மாளிகை ஒன்றைக் கட்டத் தொடங்கினார் மையூர்கிழார். இந்தப் போரில் குலசேகரபாண்டியன் நேரடியாகக் கலந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது. அப்படி அவர் வந்தால் தங்குவதற்காக இந்த ஏற்பாட்டைச் செய்தார்.

பாண்டியப் பெருவேந்தனின் தங்கல்மாளிகை பேரழகோடு வடிவமைக்கப்பட்டிருந்தது. `கொற்றர்களின் தாய்நிலம்' என்று வர்ணிக்கப்படும் வெங்கல்நாடு, அதிசிறந்த மாளிகையை வடிவமைத்திருந்தது. பேரரசர் உள்நுழைந்ததும் அதன் சுதை வேலைப்பாட்டிலும் வண்ண ஓவியத்திலும் வியந்து நிற்பார் என மையூர்கிழார் எதிர்பார்த்தார். குலசேகரபாண்டியனின் கண்களுக்கு அவை எவையும் தெரியவில்லை. அவர் பார்க்க நினைப்பது மாளிகையை அன்று, வெங்கல்நாட்டின் நிலவியல் அமைப்பை; பறம்பு மலையின் வாகினை; தாக்கி முன்னேறவும் தற்காத்து நிற்கவுமான நிலப்பரப்பை.



மறுநாள் அதிகாலை, கவசவீரர்களின் அணிவகுப்பினூடே நிலப்பரப்பைப் பார்வையிடப் புறப்பட்டார் குலசேகரபாண்டியன். வேட்டுவன் பாறைக்கு மூன்று காத தொலைவிலிருந்து வெங்கல்நாடு தொடங்குகிறது. மையூர்கிழார் முதலில் அங்குதான் வேந்தரை அழைத்து வந்தார். அங்கிருந்து எதிரில் தெரியும் காரமலையைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார். பின்னர் தென்மேற்குத் திசை நோக்கி வேந்தரின் தேர் நகர்ந்தது. தேருக்கு முன்னால் கருங்கைவாணனும் பொதியவெற்பனும் குதிரையில் அணிவகுத்தனர். அவர்களுக்கு முன்னால் காவல்வீரர்கள் சென்றனர். இதேபோல, தளபதிகளும் வீரர்களும் பின்புறமும் அணிவகுக்க, வேந்தரின் தேர் நகர்ந்துகொண்டிருந்தது.

தேரின் இடதுபுறமாகக் குதிரையில் வந்தபடி மலையையும் அதற்கு மேலே இருக்கும் ஊர்களையும் விளக்கினார் மையூர்கிழார். மழைக்காலம் தொடங்கிவிட்டதால், நிலத்தின் தன்மையை மதிப்பிடுவது சற்று எளிதாக இருந்தது. பதியும் குதிரைகளின் குளம்படிகளையும் தேர்ச்சக்கரத்தின் தடங்களையும் கூர்ந்து பார்த்தபடியே பயணித்தார் வேந்தர்.

வெள்ளடிக்குன்றின் அடிவாரத்தை அடைந்தனர். அங்கிருந்துதான் பாண்டியர் படை தங்கியுள்ள கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பேரரசரின் வருகையைக் கண்டு வீரர்கள் ஆயுதங்கள் ஏந்தி, பெருமுழக்கம் செய்தனர். மிகத் தள்ளி பேரரசரின் தேர் பயணப்பட்டுக்கொண்டிருந்தது. வீரர்களின் ஆவேச ஒலி மலையெங்கும் எதிரொலித்தது. பேரரசரின் கவனம் வெள்ளடிக்குன்றின் உயரத்தின் மீதே இருந்தது.

``அந்த ஊரின் பெயரென்ன சொன்னாய்?” எனக் கேட்டார்.

`எந்த ஊரைக் கேட்கிறார்?’ என்று சற்றே குழப்பமானார் மையூர்கிழார்.

``முதலில் சொன்ன ஊரின் பெயர்?”

``வேட்டுவன் பாறை பேரரசே” என்று பணிந்து சொன்னார்.

``அது அவர்களின் காவல் தலைவர்கள் இருக்கும் ஊர் என்று சொல்கிறாய். பின்னர் ஏன் படையை இவ்வளவு அருகில் தங்கவைத்துள்ளாய்?” எனக் கேட்டார்.

யாரிடமும் பதிலில்லை.

குதிரைகள் மீண்டும் புறப்பட்டுப் போயின. வரிசையாகக் குன்றுகளின் பெயரையும் தன்மையையும் அப்பால் உள்ள ஊர்களின் பெயர்களையும் சொல்லியபடி வந்தார் மையூர்கிழார். இடதுபுறம் பாண்டியப்படையின் வீரர்கள் வெற்றிக்கூச்சல் எழுப்பியபடி இருந்தனர். பேரரசரின் வருகையால் வீரர்களின் உணர்வு எல்லைகடந்ததாக இருந்தது. படைவீட்டின் இறுதி எல்லை இருக்கும் நெடுங்குன்றம் வரை நிற்காமல் வந்தடைந்தனர். காரமலையின் தன்மைகளை அண்ணாந்து பார்த்தபடி நின்றார்.

வெள்ளடிக்குன்று தொடங்கி நெடுங்குன்று வரை தெற்கு வடக்காகப் பாடிவீடுகள் அமைக்கப்பட்டதன் காரணத்தைக் கருங்கைவாணன் சொல்ல முற்பட்டான்.

பேரரசரோ ``படை தங்குவதற்கான பாடிவீடுகள் இங்கிருந்து தொடங்கி, தென்திசையில் அமையட்டும்” என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

`இவ்வளவு ஏற்பாடுகளையும் இனி மாற்ற வேண்டுமா?!’ என்ற அதிர்ச்சி எல்லோர் முகங்களிலும் தெரிந்தது. அவர் சொன்னதற்கான காரணம் எவ்வளவு சரியானது என்பது வெளிப்படையாகத்

தெரிந்தது.

மழைக்காலம் தீவிரமடையத் தொடங்கியது. நெடுங்குன்றத்திலிருந்து வெள்ளடிக்குன்று வரை அமைக்கப்பட்ட பாடிவீடுகளையும் படை அமைப்புகளையும் வேந்தர் சொன்னபடி மாற்றும் பணியைத் தொடங்கினர். வெள்ளடிக்குன்றிலிருந்து தொடங்கி, தென்திசையில் நீண்டது படையமைப்பு.

வெங்கல்நாட்டு மாளிகை முழுவதும் போர்ப்பாசறையானது. உணவு தானியங்களுக்கான சேமிப்புக்கலன்களாக அவற்றில் பல உருமாறின.  பாண்டியநாட்டுப் படை பல்வேறு சிற்றரசர்களின் பகுதிகளில் பரவலாக முகாமிட்டிருந்தது. மழைக்காலம் முடிவடைவதற்காக அவர்கள் தங்கவைக்கப்பட்டிருந்தனர். மழை தீவிரமடைவதற்கு முன், புது விருந்தினர் வெங்கல்நாட்டுக்கு வந்தனர். அவரது வருகை, பேரரசருக்குத் தெரிவிக்கப்பட்டது.

குலசேகரபாண்டியன் அவரின் வருகையை எதிர்பார்த்திருந்ததால் வியப்பேதும் அடையவில்லை. ``உள்ளே அழைத்துவரச் சொல்” என்றார்.

சிறியதேயானாலும் எழில்மிகு மாளிகைக்குள் நுழைந்தான் ஹிப்பாலஸ். வஞ்சிமாநகரில் சேரனின் போர் உத்திகளைக் கண்டு வியந்தவன், அங்கிருந்து புறப்பட்டுப் புகாரை அடைந்தபோது செங்கணச்சோழனின் படையெடுப்பையும் அதற்கான காரணத்தையும் கேட்டுத் திகைப்புற்றவன், பாரியை வீழ்த்தும் வல்லமைகொண்டவர்களாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் காட்சியளிப்பதாக நம்பியவன், இறுதியில் தாக்குதலின் முடிவுகளால் நம்பிக்கையற்றவனாக மாறி நின்றான்.

இரு வேந்தர்களும் முழுமுற்றாகத் தோல்வியடைந்த பிறகும் பெருவேந்தனான குலசேகரபாண்டியன் மிக நிதானமாகத் தனது படையெடுப்புப் பணிகளை நடத்தி வருவதறிந்து இந்த இடம் வந்துசேர்ந்துள்ளான். உடன்வந்த கால்பாவும் எபிரஸ்ஸும் விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தனர்.

ஹிப்பாலஸ், பேரரசரை வணங்கி நின்றான். அவரோ அவனை அணைத்து வரவேற்றார். ``சேரனின் மீதும் சோழனின் மீதும் பாரி நடத்திய தாக்குதலின் முழுவிவரங்களும் நீங்கள் அறிவீர்கள்தானே” என்று பேச்சைத் தொடங்கினான்.




அந்தப் படையெடுப்புகள் பற்றியும் அங்கு நிகழ்ந்த பேரழிவுகள் பற்றியும் பரிமாறிக்கொள்ள இருவரிடமும் எண்ணிலடங்காத செய்திகள் இருந்தன. அன்றிரவு முழுவதும் அவை பற்றியே பேசினர். போர்க்களத் தாக்குதல்களைப் பற்றி தான் அறிந்துள்ளவை எவ்வளவு குறைவானவை என்பதை

ஹிப்பாலஸ் உணருவதற்கு வெகுநேரமாகவில்லை. குலசேகரபாண்டியன் சொன்ன செய்திகள் ஹிப்பாலஸ்ஸை உறையவைத்தன. ``மற்ற இருவரும் இழைத்த தவறுகளை நாங்கள் இழைக்க மாட்டோம்” என்று குலசேகரபாண்டியன் சொன்ன கூற்று நம்பிக்கையின் அடிப்படையிலானது மட்டுமன்று, நுட்பமான திட்டமிடலுடன்கூடியது என்பதை ஹிப்பாலஸ்ஸால் உணர முடிந்தது. ஆனாலும் அவன் கேட்டான் ``அவர்களைப்போல் அல்லாமல் உங்களின் தாக்குதல் எந்த விதத்தில் வேறுபடப்போகிறது?”

``கழுகுக்கும் மலைக்காடைக்கும் வேறுபாட்டை அறிவீர்களா?”

பேரரசர் என்ன சொல்ல வருகிறார் என்பது ஹிப்பாலஸுக்குப் புரியவில்லை.

``நானே சொல்கிறேன். கழுகு, தனது இரையை நிலமெங்கும் தேடிப்போய் வேட்டையாடும். மலைக்காடை, நிலமெங்கும் இருக்கும் இரையைத் தனது கூட்டுக்கு வரவழைத்து வேட்டையாடும்” என்றார்.
வியப்புற்றபடி, ``எப்படி?!” எனக் கேட்டான்.

பேரரசர் சொன்னார், ``மலைக்காடை, பாறை இடுக்குகளில் இருக்கும் நாகர வண்டின் இறகுகளைக் கொத்திக் கொண்டுவந்து தனது இருப்பிடத்தில் வைத்துக்கொள்ளும். நாகர வண்டின் மணம் காற்றில் கண நேரத்தில் பரவக்கூடியது. அந்த மணத்தை நுகர்ந்தவுடனே காட்டில் உள்ள வண்டினங்கள் எல்லாம் அதை நோக்கிப் பறந்துவரும். சில்வண்டு தொடங்கி எரிவண்டுகள் வரை அதை நோக்கி வந்தவண்ணமேயிருக்கும். தனது கூட்டில் இருந்தபடியே வந்துசேரும் வண்டினங்களை வளைத்து வளைத்து வேட்டையாடும் மலைக்காடை” என்றார்.

ஹிப்பாலஸ் தனது மனக்கண்ணில் மலைக்காடையை உருவகப்படுத்த முயன்றபோது குலசேகரபாண்டியனின் முகமே தெரிந்தது.

- பறம்பின் குரல் ஒலிக்கும்...

# வீரயுக நாயகன் வேள்பாரி-79

**ஹி**ப்பாலஸ் வஞ்சி நகரை அடைந்து ஒரு வாரத்துக்குப் பிறகுதான் கால்பா புகார் நகரைச் சென்றடைந்தான். இருவரும் குலசேகரபாண்டியனின் திட்டத்தை இரு பெருவேந்தர்களிடமும் விளக்கினர். பறம்பிடம் தோற்றதால் இருவருமே அவமானப்பட்டுக் குறுகிக்கிடந்தனர். செங்கணச்சோழன் கால் எலும்பு முறிந்து உயிர் பிழைத்ததே பெரும்பாடாகிப்போனது. வலதுகாலை இழுத்து இழுத்து, கோலின் துணைகொண்டே நடக்கும் நிலையில் இருந்தான். ஆனால், பறம்பை அழித்தொழிக்கும் வாய்ப்பு பாண்டியனின் மூலம் கிடைக்கிறது எனத் தெரிந்த கணமே வெகுண்டெழுந்தான். தந்தை சோழவேலன், `சற்றே நிதானித்து முடிவெடுப்போம்’ என்று சொல்வதற்கான இடமே அன்றைய அரசவையில் எழவில்லை. சோழப்படையின் அத்தனை ஆற்றல்களையும் கொண்டுவந்து குவிக்க ஆயத்தநிலையில் உள்ளதாக அறிவித்தான்.

உதியஞ்சேரல் சட்டென முடிவெடுத்துவிடவில்லை. `மலைப்பகுதியில் இவ்வளவு திறன்மிகுந்த ஏற்பாடுகளைச் செய்துமே நம்மால் தாக்குதலில் வெற்றிகொள்ள முடியவில்லை; சமவெளிப் போரில் பாரியை வீழ்த்த முடியுமா?’ என்று சிந்தித்தபடியே இருந்தான். ஹிப்பாலஸ், பொறுமையாகப் பல விளக்கங்களைக் கொடுத்தான். சேரனும் சோழனும் என்ன காரணத்துக்காகப் பறம்பின் மீது படை யெடுத்தார்களோ, அந்தச் செல்வங்களை அவர்களே எடுத்துக்கொள்ளட்டும்; தனக்குத் தேவை பறம்பின் வீழ்ச்சி மட்டுமே என குலசேகரபாண்டியன் தெளிவுபடுத்திவிட்டான் என்பதை மீண்டும் மீண்டும் கூறினான்.

தேவாங்கு, கொல்லிக்காட்டு விதை, பாழிநகர் மணிக்கற்கள் என அனைத்தின் மீதும் ஹிப்பாலஸின் கனவு நிலைகொண்டிருந்தது. அதனால்தான் பாண்டியனின் போர்த் திட்டத்தோடு மற்ற இரு பேரரசுகளையும் இணைக்கும் வேலையில் முனைந்து ஈடுபட்டான்.

சேரனும் சோழனும் பாரியிடம் தோல்வியைத் தழுவியுள்ளனர். இந்நிலையில், அவனை எப்படியாவது அழிக்க வேண்டும் எனத் தீவிரத்தோடு போர்புரிவர். அதுமட்டுமன்று, தனது தலைமையில் நடக்கும் ஒரு போரில் அவர்கள் பங்கெடுப்பதே பாண்டியப் பேரரசின் முதன்மையை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளும் செயல்தானே! ஒரு போர் தொடங்கும்போதே மறைமுகமாக உயர்வை வழங்குவதை

எண்ணி மகிழ்ந்தார் குலசேகரபாண்டியன். அதனால்தான் ஹிப்பாலஸை இந்தச் செயலை நோக்கித் தூண்டினார்.



மூன்று பேரரசுகளும் அவை உருவான காலம்தொட்டு தங்களுக்குள் சமரசம் செய்துகொண்டதில்லை. உள்ளுக்குள் எரியும் பகையெனும் நெருப்பை அவை ஒருபோதும் அழித்துக்கொண்டதில்லை. சிற்றரசுகளையும் சிறுகுடிகளையும் வீழ்த்துவதில் இன்றளவும் பேரரசுகளின் படைகளுக்கிடையான மோதல் தவிர்க்க முடியாததாகத்தான் இருக்கிறது. ஆனாலும் யவன வணிகத்தால், கடந்த சில தலைமுறைகளாக மூன்று பேரரசுகளும் பெருஞ்செல்வச்செழிப்பை எட்டியுள்ளன. அரசின் வலிமையை ஆளும் நிலப்பரப்பு மட்டும் தீர்மானிப்பதில்லை; அதனிடமிருக்கும் செல்வங்களும் முக்கியமானவை என்பதை உணர்ந்துள்ளன. அதனால்தான் முத்துகள் கொழிக்கும் கடல்வளத்தையும், மிளகு தொடங்கி எண்ணிலடங்காத வாசனைப் பொருள்களும் மருத்துவப்பொருள்களும் விளைந்துகிடக்கும் மலைவளத்தையும் தனதாக்கிக்கொள்ள விடாமல் முயல்கின்றனர். ஹிப்பாலஸின் இந்த முயற்சிக்கு மூன்று பேரரசுகளும் இசைவு தெரிவித்தது இந்தப் போராட்டத்தின் ஒரு பகுதியே. இத்தனை காலங்களாக எந்த வளத்துக்காக இந்த மூவரும் தனித்தனியே போரிட்டார்களோ, அதே நோக்கத்துக்காகத்தான் இப்போது மூவரும் இணைந்து போரிட முடிவுசெய்துள்ளனர். இந்தப் போர், வெளிப்படையாக எதிரியை நோக்கியது. ஆனால், ஆழத்தில் உடன் இருப்பவரின் இழப்பைக் கண்டு மகிழக்கூடியது.

பாரி வேட்டுவன்பாறைக்கு வந்ததிலிருந்து போர்ச்சூழலைப் பற்றிய உரையாடல்கள் நாள்தோறும்

நடந்தபடியே இருந்தன. ``தாக்குதலுக்கு எல்லா வகையிலும் நாம் ஆயத்தமாக வேண்டும்'' என, தொடர்ந்து வற்புறுத்தப்பட்டது.

``நாம் இறங்கிப்போய்த் தாக்கப்போவதில்லை; எதிரி மலையேறி வந்தால் நாம் தாக்குவதற்குப் புதிதாய் எதுவும் தேவையில்லை. பிறகு ஏன் பதற்றமடைகிறீர்கள்?'' என்றான் பாரி.

பாரியின் கருத்தை மறுத்து உரையாடுதல் எளிய செயலன்று. தேக்கன் மட்டுமே மிக எளிதாக அதைக் கைக்கொள்வான். சற்றே தயங்கி, ஆனால் உறுதியாகப் பேசக்கூடியவன் முடியன். வேட்டூர் பழையன் பாரியின் கூற்றுக்கு மறுப்பாகத்தான் பேசத் தொடங்குவார். ஆனால், அவன்மீதுள்ள வாஞ்சையால் எப்போது திசைமாறினோம் என்பதை அறியாமலேயே பாரியின் கருத்துக்கு உடன்பட்டுப் பேசிக்கொண்டிருப்பார். இவர்கள் எல்லோரிலும் ஒரேயொரு விதிவிலக்கு வாரிக்கையன் மட்டும்தான். அவருடன் பேசும்போது பாரியிடம் ஏற்படும் மாறுபாட்டை மற்றவர்கள் எளிதில் உணர முடியும். ஏனெனில், பாரியின் தந்தையே அவரின் சொல்கேட்டு வளர்ந்தவர்தான். வாரிக்கையன் இன்னும் எவ்வியூரில்தான் இருக்கிறார். போர்க்களம் பற்றிய தற்போதைய உரையாடலில் அவர் கருத்துகள் ஊடாடவில்லை.

மழைக்காலம் தொடங்கியது. பாண்டியர் படையின் பாடிவீட்டுக் கூடாரங்கள் தென்திசை நோக்கி இடமாறத் தொடங்கின. ஆயிரக்கணக்கான பொருள்களின் இடப்பெயர்வு நடந்தது. எண்ணற்ற யானைகள் இந்தச் செயலில் ஈடுபடுத்தப்பட்டன. இவர்கள் என்னதான் செய்கிறார்கள் என்பதைப் பறம்புவீரர்கள் மலையின் மீதிருந்து கவனித் தபடியே இருந்தனர். வெள்ளடிக்குன்றிலிருந்து நெடுங்குன்று வரை கூடாரம் அமைத்திருந்த படை, இப்போது முழுமுற்றாக நெடுங்குன்றி லிருந்து தென்புறமாக இடமாறிக்கொண்டிருந்தது. வேட்டுவன்பாறை என்பது பறம்பின் மிக முக்கியமான இடம் என்பதால், தங்களின் இருப்பிடத்தை மிகவும் தள்ளிக்கொண்டு போகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது.

மயிலா கருவுற்றிருந்ததால் அவளுக்குக் கனிகளைக் கொடுத்து உபசரிக்க ஆதினியை வரச்சொல்லியிருந்தான் பாரி. அவளும் தன் தோழிகளோடு வேட்டுவன்பாறைக்கு வந்திருந்தாள். சில நாள்கள் அங்கேயே தங்கியிருந்தான் பாரி. அடைமழை முடிவுற்ற மறுநாள் பறம்பின் வீரன் ஒருவன் பாரி இருந்த குடில்நோக்கி ஓடிவந்தான். அவன் சொன்ன செய்தி கேட்டு எல்லோரும் குன்றின் மேல் ஏறி நின்று பார்த்தனர். தென்திசையிலிருந்து பெரும்படை ஒன்று அணியணியாய் வந்துகொண்டிருந்தது. படையின் முன்னணி வீரன் ஏந்தியிருந்த பதாகையில் சேரனின் வில் பொறிக்கப்பட்டிருந்தது. அடுத்த பத்தாம் நாள் வடதிசையிலிருந்து வந்த படை அணியினர் புலிக்கொடி ஏந்திய பதாகையைச் சுமந்துவந்தனர். இதுவரை காரமலையின் அடிவாரம் இருந்த மூன்று குன்றுகளின் மேலிருந்து பறம்புவீரர்கள் கண்காணித்து க்கொண்டிருந்தனர். இப்போது ஆறு குன்றுகளின் மேலிருந்து கண்காணிக்கவேண்டியிருந்தது. வந்து குவியும் படைவீரர்களின் எண்ணிக்கை எல்லையில்லாத விரிவை எய்திக்கொண்டிருந்தது.

மூவேந்தர்களும் படையை ஒரு முனையில் குவிக்கின்றனர் என்ற செய்தி உறுதிப்பட்ட பிறகு, பறம்பின் எல்லா திசைகளிலிருந்தும் வீரர்கள் கீழ்த்திசைக்கு அழைக்கப்பட்டனர். வாரிக்கையனும் கூழையனும் சில நாள் இடைவெளியில் வேட்டுவன்பாறைக்கு வந்துசேர்ந்தனர்.

கருவூலப் பொறுப்பாளர் வெள்ளி கொண்டாரைத் தவிர மதுரையின் அரண்மனை நிர்வாகப் பொறுப்பிலிருந்த அனைவரும் வெங்கல்நாட்டுக்கு வந்துசேர்ந்தனர். குட்டநாட்டு அமைச்சன் நாகரையன் வந்துசேர்ந்தான். ஆயிமலையில் நடைபெற்ற தாக்குதலில் குடநாட்டுத் தளபதி எஃகல்மாடன் தலைமையிலான படை மட்டுமே முழுமுற்றாக அழிவுற்றது. குட்டநாட்டுத் தளபதி துடும்பன் தலைமையிலான படை பறம்புக்குள் நுழையாமலேயே நின்றுவிட்டது. இதன் பின்னணியில் உதியஞ்சேரலின் துரோகமும் அடங்கியுள்ளதாக நினைத்த குடநாட்டு வேந்தன் குடவர்கோ இன்னொரு கூட்டுப்போரில் பங்கெடுக்க விரும்பவில்லை. எனவே, குட்டநாட்டுப் படை மட்டுமே போர்க்களம் வந்தது. சேரநாட்டின் அமைச்சராக நாகரையனே விளங்கினான். சோழநாட்டு அமைச்சன் வளவன்காரியும் வந்து சேர்ந்தான். பாண்டியப் பேரரசின் தலைமை அமைச்சர் முசுகுந்தர் எல்லோரையும் ஒருங்கிணைத்து வழிநடத்தினார்.

அமைச்சர்களின் சந்திப்பு நடந்த பிறகுதான் வரப்போகும் படைகளின் தன்மையும் எண்ணிக்கையும் முழுமையாகத் தெரியவந்தன. அந்தப் படைகளுக்குத் தேவையான ஆயுதங்கள், அவற்றைச் செப்பனிடுவதற்கும் புதிதாக உருவாக்குவதற்கும் தேவையான ஏற்பாடுகள், உணவு ஏற்பாடுகள், பண்டகச்சாலைகள், மருத்துவர்கள், சிகிச்சைக்கான பகுதிகள், குதிரைகளுக்கும் யானைகளுக்குமான கட்டுத்தறிகள், போர்க்களத்துக்கான தேர்கள், அவற்றுக்கான பராமரிப்பாளர்கள், பிற கருவிகள், போர் விலங்குகளுக்கான தானியங்கள், கூலங்கள் ஆகிய எல்லாவற்றையும் செம்மையுறக் கணக்கிட்டனர்.

பறம்பின் தரப்பில் ஆயத்தங்களைத் தொடங்கவேண்டியதைப் பற்றிய உரையாடல் ஒருவழியாக முடிவுக்கு வந்தது. பாரி ஒப்புதல் வழங்கிய பிறகு சிறுபாழி நகரில் ஆயுதங்களை உருவாக்கிக்கொண்டிருந்த அத்தனை பேரும் கீழ்த்திசைக்கு இடம் மாறினர். மூவேந்தர்களின் போர்ப்பாசறை, வேட்டுவன் பாறையிலிருந்து பலகாதத் தொலைவில் இருப்பதால் தங்களின் இருப்பிடத்தையும் மாற்ற முடிவுசெய்தனர்.

வேந்தர்களின் படைக்கலக் கொட்டில் செம்மையுற வடிவமைப்பதற்கான வேலைகள் தொடங்கின. மதுரையிலிருந்து தலைமை அமைச்சர் முசுகுந்தர் வரும்போதே அவருடன் அரண்மனையின் தலைமைக் கணியன் அந்துவனும் வந்திருந்தான். மூலப்படைப் பாசறை அமைக்கப்போகும் நிலப்பகுதிக்கு, மூன்று நாட்டு அமைச்சர்களும் அந்துவனும் மாணாக்கர்கள் சிலரும் புறப்பட்டுப் போயினர். அவர்கள் சென்று சேரும்போது மையூர்கிழார் வரவேற்க நின்றுகொண்டிருந்தார். உடன் பூசகர்களின் குழு ஒன்றும் இருந்தது. முசுகுந்தர் அந்தப் பெரும்நிலப்பரப்பைக் குதிரையில் இருந்தபடியே பார்த்தார். காரமலையின் அடிவாரத்தில் சற்றே திமில் முறுக்கியிருக்கும் பெரும்மேடாக அந்த இடம் இருந்தது. மேட்டின் நடுப்பகுதியில் இறங்கி நின்றனர். மழைநீரை எவ்வளவு குடித்தும்

நெகிழ்ந்து கொடுக்காத இறுக்கத்தோடு மண் இருந்தது.

அவர்கள் வந்த சிறிது நேரத்தில் பாண்டியப் பேரரசின் சிறப்புமிக்க முதுயானையை அழைத்துவந்தனர். தாழம்பூ நிறத் தந்தமும் வட்டமாய் அகன்று நடுவில் குழிந்த கும்பங்களும் நீண்டுநெளியும் அழகான வாளும் நாண்பூட்டிய வில்லினையொத்த முதுகெலும்பும் உடைய `பவளவந்திகை' எனும் பெயர்கொண்ட அந்த யானை, பாசறை நிலத்துக்கு வந்துசேர்ந்தது. உடன் மதுரையின் யானை கட்டுத்தறிப் பொறுப்பாளர் அல்லங்கீரனும் கோட்டைத் தளபதி சாகலைவனும் வந்தனர்.

வண்ணத்தட்டில் வைக்கப்பட்டிருந்த பூக்களையும் கனிகளையும்கொண்டு அந்த இடத்தில் சிறு வழிபாடு ஒன்றை பூசகர் நடத்தினர். பிறகு அந்துவன் கையசைத்து உத்தரவிட்டான். அதுவரை கீழே நின்றிருந்த பாகன், யானையின் மீதேறி அமர்ந்தான். பவளவந்திகை நடக்கத் தொடங்கியது. பாகன் தன்னுடைய கால்கள் பவளவந்திகையின் காதுகளின் பின்புறத்தைத் தொட்டுவிடாமல் மடக்கி வைத்துக்கொண்டான். எந்தத் திசைக்குப் போகவேண்டும் என்ற குறிப்பேதும் பாகனின் கால்கள் சொல்லாததால் யானை அதன் விருப்பத்துக்கு நடந்தது. அந்தப் பெருமேடு முழுவதும் குறுக்கும்நெடுக்குமாக நடந்த பவளவந்திகை மீண்டும் புறப்பட்ட இடத்துக்கு வந்துசேர்ந்தது.

இப்போது அந்துவன் தன் மாணாக்கர்களை அழைத்துக்கொண்டு யானையின் காலடிகளைப் பார்த்தபடியே உள்ளே போனான். யானையின் காலடி, ஆமையின் ஓடு போன்ற வடிவம் கொண்டது. வெளிவட்டம் மட்டுமல்ல, உள்ளேயும் ஆமையின் ஓட்டில் இருப்பது போன்று விண்மீன்களின் வடிவம்கொண்ட கோடுகள் இருக்கின்றன. யானையின் பாதத்தில் இருக்கும் ரேகைக்கோடுகள் அவை. யானையின் நான்கு காலடிகளும் நான்குவித ரேகைகளைக் கொண்டவை. பவளவந்திகையின் காலடிகள் அந்தப் பெருமேடெங்கும் பதிந்துகிடக்க அவற்றைக் கூர்ந்து கவனித்தபடி அந்துவனும் அவன் மாணாக்கர்களும் நடந்து கொண்டிருந்தனர்.

காலடியின் அச்சில் அசையாமல் பதிவுகொண்ட விண்மீன்களின் வடிவு எந்தத் திசைநோக்கி அமைந்திருக்கிறது என்பதைக் கணித்தபடி ஒவ்வொரு தடத்தையும் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

மழையின் ஈரம் காயாமல் இருந்ததால் காலடித்தடத்தின் உட்கோடுகள் மண்புழுக்களைப் போல் எங்கும் நெளிந்து கிடந்தன. மாணாக்கர்கள் தேர்வுசெய்த காலடிகளை அந்துவன் போய்ப் பார்த்தபடியிருந்தான். நெடுநேரமானது. ஆனாலும் காலடியின் உள்வடிவங்களை உற்றுப்பார்த்து ஒன்றொடு ஒன்றை ஒப்பிட்டுக் கொண்டிருந்தான் அந்துவன். இறுதியாக மூன்று காலடிகளைத் தேர்வுசெய்தான். பெருமேட்டின் உச்சிப்பகுதியில் அமைந்த காலடித்தடத்தில் பாண்டியப் பெருவேந்தனுக்கான பாசறையை அமைக்க இடம் குறித்தான். அதிலிருந்து மிகத்தள்ளித் தென்புறக் காலடித்தடத்தில் சேரவேந்தனுக்கான இடத்தையும் வடகிழக்குப் பகுதியில் சோழனுக்கான இடத்தையும் அந்துவன் தேர்வுசெய்து தந்தான்.

மூன்று பேரரசர்களும் தங்கப்போகும், அவர்களைச் சுற்றிப் பல்லாயிரம் வீரர்கள் மொய்த்துக்கிடக்கப்போகும் அந்த இடத்துக்கு `மூஞ்சல்' எனப் பெயரிட்டார் முசுகுந்தர். மூலப்படை நிலைகொள்ளப்போகும் படைக்கலக் கொட்டில் மூஞ்சலில் உருவாகத் தொடங்கியது. பேரரசர்களின் பாசறைக் கூடாரம் மிகப் பெரியதாகவும் வசதிமிக்கதாகவும் உட்பாதுகாப்பு அரண்கொண்டதாகவும் அமையத் தொடங்கியது. அவர்களைச் சுற்றி இளவரசர்களும் முக்கியமான சிற்றரசர்களும் தங்குவதற்கான கூடாரங்கள் அமைக்கப்பட்டுக்கொண்டிருந்தன.

குவிக்கப்படும் படைகளை விட்டு மிகத்தள்ளி, பெருமேடு ஒன்றில் விரிவுகொண்ட கூடாரங்கள் எண்ணற்றன அமைக்கப்படுவதை, குன்றின் மேல் நின்று பறம்புவீரர்கள் பார்த்தபடியிருந்தனர். எதிரிப்படைகள் குவிக்கப்ப ட்டிருக்கும் இடத்தை  நோக்கி அதற்கு நேரெதிர்த் திசையில் தங்களுக்கான இடத்தைத் தேக்கன் தேர்வுசெய்தான். காரமலையின் சரிவில் நாகக்கரடு இருக்கிறது சில காதத்தொலைவுக்கு நீண்டுகிடக்கும் கரட்டுமேடு இது; வேட்டுவன்பாறை யளவே உயரம்கொண்டது. பறம்பின் வீரர்கள் நிலைகொள்ள இது ஏற்ற இடம் என்று தேக்கன் முடிவுசெய்தான்.


அவற்றுக்குச் சற்று மேலே காரமலையில் இருபது பனை உயரத்தில் இரலிமேடு இருக்கிறது. எண்ணற்ற குகைப்பாறை களைக்கொண்ட இடம் அது. ஆயுதங்களை வைக்கவும் மருத்துவப் பயன்பாட்டுக்கும் ஏற்ற இடமாகவும் அது இருக்கும் எனக் கருத ப்பட்டாலும், அந்த இடத்தைத் தேர்வுசெய்யச் சற்றே தயங்கினான் தேக்கன். வாரிக்கையனோ துணிந்து தேர்வுசெய்யச் சொன்னான். காரணம், அந்தக் குகைகளின் தன்மை. வேர்க்கொடியைப்போல ஒன்றையொன்று இணைத்துச் செல்லும் எண்ணற்ற குகைகளைக்கொண்ட இடம் அது. மிக நன்கு பழக்கப்பட்டவர்களால் மட்டுமே அதற்குள் போய் வெளிவர முடியும். போரின்போது வீரர்கள் விரைவாக வந்து திரும்பும் தன்மையுடன் அமைவிடம் இருக்க வேண்டும் என்று தேக்கன் தயங்கினான். ஆனால் வாரிக்கையனோ, ``இதுதான் போருக்குப் பொருத்தமான அமைவிடம்'' என்றான்.

இரலிமேட்டின் இடதுபுறம் இருந்த சமதளமான பகுதிகளிலும் மலைச்சரிவுகள் முழுமையும் குடில்கள் அமைக்கும் பணிகள் தொடங்கின. பறம்புவீரர்கள் எல்லா திசைகளிலிருந்தும் இரலிமேட்டுக்கு வரத் தொடங்கினர். ``இவ்விடம்தான் நாம் முகாமிட்டுள்ள இடம் எனத் தெரிந்த கணத்திலிருந்து, எதிரிகள் நம்மைக் கண்காணிப்பார்கள். மையூர்கிழார் ஆள்கள் அவர்களுக்கு நன்கு உதவிசெய்யக்கூடும். எனவே, பறம்புவீரர்கள் இரலிமேட்டுக்கும் நாகக்கரட்டுக்கும் வந்து சேர்வதையே எதிரிகளால் கணிக்க முடியாதபடி இருக்க வேண்டும்" என்றார் வாரிக்கையன்.

``இரவு அடிக்கடி மழை பெய்வதால், சுளுந்துக் கம்பை வெட்டி, பந்தம் ஏற்றுங்கள்'' என்றார். சுளுந்துக் கம்பைக் கூராக வெட்டி பந்தம் ஏற்றினால் அது அணையாமல் எரிந்துகொண்டே இருக்கும். கீழே போட்டு மண் அள்ளிக்கொட்டினால்தான் அணையும். மற்றபடி மழைத்துளிக்கெல்லாம் எளிதில் அணையாது.

சமதளத்திலிருந்து பார்த்தால் குகையின் தன்மையை எளிதில் மதிப்பிட முடியாது. ஒவ்வொரு குகைக்குள்ளும் எண்ணிலடங்காத வீரர்கள் தங்கியிருக்க முடியும். குகைகளின் தன்மை, நீர்க்கசிவுகொண்ட குகைகள், நன்கு காற்றோட்டம் உள்ள குகைகள், மாட்டு மந்தைகளையே அடைக்கக்கூடிய பரப்பைக் கொண்ட குகைகள் என அத்தனையையும் வகை பிரித்து வீரர்களுக்கு விளக்கினார் வாரிக்கையன்.

குகைகளுக்குள் உரிய இடங்களில் விளக்குகளை அமைத்து, குறியீடுகளை உருவாக்கினார். பறம்புவீரர்கள் வந்து குவிந்த வண்ணம் இருந்தனர். சிறுபாழியில் இருந்த தொழிற்கூடங்கள் அத்தனையும் இரலிமேட்டுக்கு இடம்பெயர்ந்தன. பெரும்பான்மையான குகைகள் ஆயுதக்கூடங்களுக்காக மட்டுமல்லாமல் உலைக்களங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டன. மிகவிரிந்த நிலவமைப்பும் காற்றோட்டமும் கொண்ட குகைகள் உலைக்களங்களால் நிரம்பின. அவை மட்டுமல்லாமல் வெளிப்புறத்திலும் எண்ணற்ற உலைக்களங்களை அமைத்துக் கொண்டிருந்தனர்.



குதிரைகளுக்கான கட்டுத்தறிகள் இரலிமேட்டின் தென்புறச் சரிவில் அமைக்கப் பட்டுக்கொண்டிருந்தன. குகைகளுக்கும் கட்டுத்தறிகளுக்கும் இடையில் உணவுக் கூடங்களை அமைத்தனர். மருத்துவக்கூடங்கள் அமைப்பது பற்றிப் பேசப்பட்டது. ``இந்தப் போரில் மருத்துவர்களின் பணி மிக முக்கியமானதாக இருக்கப்போகிறது. எனவே, முறியன் ஆசானை அழைத்துவர வேண்டும்'' என்றார் பழையன்.

நோய்க்கான மருந்தைத் தருவதில் வல்லவர்கள் எண்ணற்றோர் உள்ளனர். ஆனால், போரில் ஏற்படப்போவது காயங்களும் முறிவுகளும்தான். அவற்றுக்கு மருந்தளிப்பதில் மிக வல்லவர் முறியன் ஆசான்தான். பச்சைமலையின் வடதிசையில் ஓடும் மறையாற்றின் கரையில் அவர் இருக்கிறார்.

``வயதாகி மிகத் தளர்ந்த அவரை இவ்வளவு தொலைவு வரவழைக்க வேண்டுமா?” எனத் தயங்கினான் தேக்கன்.

வாரிக்கையனோ, ``கட்டாயம் அவர் இங்கு நம்மோடு இருக்க வேண்டும்” என்றார்.

சிவிகையில் உட்காரவைத்துத் தூக்கிவரும் எண்ணத்தோடு செய்தி அனுப்பப்பட்டது. முதலில் தயங்கிய முறியன் ஆசான், பிறகு ஒரு நிபந்தனையோடு வர ஒப்புக்கொண்டார். “எனது சிவிகையைத் தூக்கிவர இருவரை மட்டுமே அனுப்ப வேண்டும். அவர்களும் என்னைக் கொண்டுவந்து சேர்க்கும் வரை உணவேதும் உண்ணக் கூடாது.”

தேக்கன் உள்ளிட்ட எல்லோரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். ``பத்திலிருந்து பன்னிரண்டு நாள் பயணத் தொலைவை எப்படி உணவின்றிக் கடக்க முடியும்? அதுவும் சிவிகையைத் தூக்கிக்கொண்டு!” எனப் பலரும் தயங்கியபோது வாரிக்கையன் சொன்னார், ``மலைப்பாதையில் உணவு ஏதுமின்றி சிவிகையைத் தூக்கிவரும் வீரர்கள் இரண்டு அல்லது மூன்று நாள்கள் வர முடியும். அதற்குப் பிறகும் அவர்கள் ஓடிவந்தால் மயக்கமடைந்து வீழ்வார்கள். அவர்களை குணப்படுத்தி மீண்டும் சிவிகையைத் தூக்கவைப்பது மருத்துவராகிய அவருடைய வேலை. நாம் ஏன் அதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்?” என்றார்.

சரியென ஒப்புக்கொண்ட தேக்கன், வலிமை மிகுந்த போர்வீரர்கள் இருவரைத் தேர்வுசெய்தான். ஆனால் வாரிக்கையனோ, ``அவர்கள் வேண்டாம்” என்று சொல்லி, தோற்றத்தில் எளிமையான இருவரை அனுப்பிவைத்தார்.

பன்னிரண்டு நாளில் வந்து சேரவேண்டிய அவர்கள் எட்டாம் நாள் காலையிலே வந்துசேர்ந்தனர். இதுதான் நடக்கும் என வாரிக்கையனுக்குத் தெரியும். எனவே, அவர் வியப்பேதுமடையவில்லை. ஆனால், மற்ற அனைவரும் வியப்பால் கிறங்கிப்போனார்கள். சிவிகையைத் தூக்கிவந்த இருவரும் புறப்பட்ட இடத்திலிருந்து இப்போதுவரை உணவு ஏதும் உண்ணவில்லை; முழுவேகத்தோடு வந்துசேர்ந்துள்ளனர் என்ற செய்தி வீரர்கள் எல்லோருக்கும் பரவியது. எப்படி இது நடந்தது எனப் பலரும் பேசிக் கொண்டிருக்கையில் மருத்துவர்களிடமிருந்து உண்மை வெளிவந்தது, ``முறியன் ஆசான் செய்து வைத்துள்ள திங்கள் மூலிகையை உட்கொண்டால், பல நாள்களுக்குப் பசியெடுக்காது; ஆற்றலும் குறையாது” என்று.


மருத்துவனின் வருகை மருத்துவத்தால் அறியப்பட வேண்டும். முறியன் ஆசானின் வருகை அப்படியே அறியப்பட்டது. பறம்பின் அனைத்து வகையான மருத்துவர்களும் முன்னரே இரலிமேட்டுக்கு வந்துசேர்ந்தனர். மருத்துவப் பேராசானோடு பணிசெய்யும் வாய்ப்புக்காகப் பல காலம் காத்திருந்தவர்கள் அவர்கள்.

போர் என்பது, எதிரிகள் இருவருக்கிடையில் நடப்பது மட்டுமன்று; வீரர்களுக்கும் மருத்துவர்களுக்கு மிடையில் நடப்பதும்கூட. எதிரிகளுக்கு மருத்துவனால் குணப்படுத்த முடியாத காயங்களை உருவாக்கவே ஒவ்வொரு வீரனும் நினைக்கிறான். `எதிரிகள் எவ்வளவு காயத்தை உருவாக்கினாலும் குணப்படுத்தி மீண்டும் வீரனை வாள் ஏந்தவைப்பேன்' என்றே ஒவ்வொரு மருத்துவனும் மூலிகைச்சாற்றைப் பிழிகிறான்.
மருத்துவனின் சிகிச்சை மீதிருக்கும் நம்பிக்கையே வீரனின் துணிச்சலைப் பல நேரங்களில் தீர்மானிக்கிறது. ஒவ்வொரு நாளும் போர் முடியும் கணத்தில்தான் போரை அறிந்துகொள்ளுதல் தொடங்குகிறது. அன்றைய இரவின் காட்சிகள்தாம் மறுநாள் அவனது மனஉறுதியைத் தீர்மானிக்கிறது. மரணமெய்தியவர்கள் மரணத்தின் மீது அச்சமூட்டுவதில்லை. உடல் சிதைக்கப்பட்டு, மருத்துவர்களால் எதுவும் செய்ய முடியாமல், எங்கும் கதறிய ஓசையோடு இழுபட்டுக் கிடப்பவர்கள்தாம் ஒவ்வொரு போர்வீரனையும் நிலைகுலையச் செய்கிறார்கள். அதனால்தான் போர்க்களத்தில் தாக்குண்டவர்களை மருத்துவசாலை நோக்கித் தூக்கிவரும் வேலையை வீரர்கள் செய்யக் கூடாது எனப் பேரரசுகள் விதிசெய்துள்ளன; அதைச் செய்வதற்குத் தனிப்படையை அமைத்துள்ளன. போரின் விதியை வீரனின் வாளும் மருத்துவனின் பச்சிலைகளும் இணைந்தே தீர்மானிக்கின்றன.

பறம்புவீரர்கள் இணையற்ற நம்பிக்கையோடு வாளினை ஏந்தவும் நாணினை இழுக்கவும் எதிரிப் படையைச் சிதைத்து முன்னேறவும், மருத்துவர்களும் முக்கியக் காரணம். அதுவும் முறியன் ஆசான் களம் நோக்கி வந்துள்ள செய்தி பறம்புவீரர்களுக்குக் கட்டற்ற வேகத்தைக் கொடுத்தது. மரணத்தை மிதித்து நடக்க ஒவ்வொரு வீரனும் ஆசைப்பட்டான்.

முறியன் ஆசான் இரலிமேட்டுக்கு வந்த அன்றுதான் மூஞ்சலில் வேந்தர்களுக்குக் கூடாரங்கள் அமைக்கும் பணி முடிவுக்கு வந்தது. மூஞ்சல் பகுதிக்கு மட்டும் தனித்துவமான பாதுகாப்பு அரண்கள் உருவாக்கப்பட்டன. மூவேந்தர்களுக்கு மூன்று பெருங்கூடாரங்கள். மூவரும் சந்தித்து உரையாட மாளிகை வடிவிலான பெருங்கூடாரம் ஒன்று. வேந்தர்களுக்கான பணியாளர்கள் மருத்துவர்கள், உணவுச்சாலைகள் ஆகியவற்றுக்காக மூன்று கூடாரங்கள். போரில் பங்கெடுக்கும் அரச குடும்பத்தினர் தங்குவதற்காக ஐந்து கூடாரங்கள் என்று மொத்தம் பன்னிரு கூடாரங்கள், ஆயுதப்பயிற்சிக்கான களம் என அனைத்தும்கொண்ட விரிவான அமைப்போடு மூஞ்சல் நகர் தயாரானது.

மூஞ்சலின் பாதுகாப்புக்குத் தனித்த அரண் அமைக்கப்பட்டது. பெரும்பெரும் மரத் தூண்களாலும் ஆயுதங்களாலும் அமைக்கப்பட்ட அரண் அது. அரணுக்கு வெளியில்தான் படைகள் பலகாதத் தொலைவுக்குப் பரவியிருந்தன. இரவில் கடுங்குளிர் இருந்தாலும் பகற்பொழுதின் வெயில் இன்னும் சூடேறாமல்தான் இருந்தது. மூஞ்சலின் அரண்காவலர்கள் நான்கு முனைகளிலும் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு மேடையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தனர். தென்திசையில் நின்றிருந்த படை வீரர்களிடமிருந்து உற்சாகப் பேரோசை மேலேறிவந்தது.



கடல்போல் பரவிக்கிடந்த படைவீரர்களின் வாழ்த்தொலி முழங்க உதியஞ்சேரலின் தேர் தென்திசையிலிருந்து மூஞ்சல் நோக்கி வந்துகொண்டிருந்தது. தேருக்கு முன்னால் சேரநாட்டுத் தளபதி துடும்பன் குதிரையில் வந்துகொண்டிருந்தான். அவனுக்கு முன்னால் கவசவீரர்கள் அணிவகுத்து வந்தனர். நாணேற்றப்பட்ட வில்லைப் பதாகையில் தாங்கிய வீரன் முதலாவதாக வர, அவனைத் தொடர்ந்து அணியணியாய் சேரவீரர்கள் வந்து கொண்டிருந்தனர்.

மூன்று பேரரசுகளின் அமைச்சர்களாகிய முசுகுந்தரும் நாகரையரும் வளவன்காரியும் உதியஞ்சேரலை வரவேற்க மூஞ்சலின் வாயிலில் காத்துநின்றனர். முசுகுந்தர், பாண்டிய முறைப்படி அவருக்கான வரவேற்பை வழங்கினார். உதியஞ்சேரல் மூஞ்சலுக்குள் நுழைந்தான். அரசகுல முதுயானை பவளவந்திகை மாலை சூட்டி, வணங்கி, தனது முதுகின் மேலிருந்த அம்பாரியில் ஏற்றிக்கொண்டது.

மூஞ்சலின் வீதியெங்கும் நிறைந்துள்ள பாதுகாப்பு வீரர்களின் வாழ்த்தொலிகளை ஏற்றபடி தனக்கான பாசறைக் கூடாரத்துக்குள் நுழைந்தான் உதியஞ்சேரல்.

தான் நினைத்ததைவிட உதியஞ்சேரல் இளமையோடு இருக்கிறார் என்று கருதிய முசுகுந்தருக்கு, அவனுடைய தோளின் மேல் கருங்குரங்குக்குட்டி ஒன்று உட்கார்ந்திருப்பது ஏன் என்பது புரியவில்லை.




உதியஞ்சேரல் வந்த மறுநாள் சோழப் பேரரசனுக்கான வாழ்த்தொலிகளால் படைக்கலக்கொட்டில் குலுங்கியது. புலிக்கொடி ஏந்திய பதாகையை யானையின் மீது தாங்கிப்பி டித்த வீரன் முன்வர அவனைத் தொடர்ந்து பேரரசரின் தேர் வந்துகொண்டிருந்தது. தேருக்குள் தந்தையும் மகனும் இருந்தனர். செங்கணச்சோழனுக்குக் கால் முறிவுகொண்ட தால் அவனால் நின்று போரிட முடியாது.

மற்ற இரு பேரரசர்களும் போரில் நேரடியாக ஈடுபடும்போது சோழப்பேரரசர் மட்டும் நேரடிப்போரில் ஈடுபடாமலிருந்தால் அது சோழநாட்டுக்குப் பேரவமானமாகும். எனவே, ``மகனின் சார்பில் நான் போரில் பங்கெடுப்பேன்” என்று கூறி, சோழவேலன் உடன்வந்தார்.

அன்று மாலை வீரமுண்டா வாத்தியம் இடியென முழங்கத் தொடங்கியது. பேரிகையின் ஓசையோ எல்லையில்லாத அதிர்வை உருவாக்கியது. எங்கும் போர்க்களத்துக்குரிய கருவிகள் இசைக்கப்பட்டன. அணிவகுத்து வந்த யானைகளின் மணியோசை பேரிகையை விஞ்சிக்கொண்டிருந்தது. வீரர்கள், விண்ணைப் பிளப்பதைப்போல முழக்கமிட்டனர். வெடிப்புற்ற தந்தமும் விளைந்த நகமும், முதுகினில் சங்கு வடிவப் புள்ளிகளையும்கொண்ட பாண்டியநாட்டுப் பட்டத்துயானையின் மீது அமர்ந்தபடி மூஞ்சலுக்குள் நுழைந்தார் குலசேகரபாண்டியன்.

- பறம்பின் குரல் ஒலிக்கும்...

# வீரயுக நாயகன் வேள்பாரி-80




**போ**ர்க்கருவிகளின் தொகுப்பாக விளங்கும் படைக்கலப் பேரரங்கு, மூன்று இடங்களில் உருவாக்கப்பட்டது. பாண்டியனின் பேரரங்கு மூஞ்சலின் அருகில் இருந்தது. சேரனின் பேரரங்கு தென்புறமும், சோழனின் பேரரங்கு வடபுறமும் அமைக்கப்பட்டன. மூவேந்தர்களுக்கான போர்க்கருவிகள் முழுமையும் இங்குதான் சேகரித்துவைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பேரரங்கும் மூஞ்சல் நகரின் பரப்பளவைக்கொண்டிருந்தது. அவற்றுள் பத்துக்கும் மேற்பட்ட கூடாரங்கள் இருந்தன.

ஒவ்வொரு கூடாரத்திலும் ஒவ்வொருவிதமான ஆயுதம் வைக்கப்பட்டிருந்தது. ஆயுதங்களை ஒழுங்குமுறைப்படி அடுக்கிவைப்பதும், தேவைக்கேற்ப நாள்தோறும் அவற்றை எடுத்து போர்க்களத்துக்கு அனுப்புவதும் தனித்ததொரு கலை. இந்தக் கலையைச் செய்பவரை `ஆயுதவாரி' என்று அழைத்தனர்.


நான்கு வகையான வில்களும் பதின்மூன்று வகையான அம்புகளும் போர்க்களத்தில் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொருவிதமான அம்புக்கட்டும் தனித்தனியே அடுக்கிவைக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவற்றை எடுத்துத் தர வசதியாக இருக்கும். களம் புகும் வீரன் கையில் ஏந்தியிருக்கும் வில்லுக்குத் தகுந்த அம்புகள் அவனது அம்பறாத்துணிக்கு வந்துசேர வேண்டும்.

ஆயுதங்களை படைக்கலப் பேரரங்கிலிருந்து வீரர்களின் போர்ப்பாசறைக்கு நள்ளிரவுக்குள் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். பொழுது விடியும்போது அந்தப் பாசறையில் இருக்கும் வீரர்களுக்குத் தேவையான ஆயுதங்கள் அவர்களின் கண்கள் முன் பளிச்சிடவேண்டும். `என்னை ஏந்திக்கொள்' என்ற ஆயுதங்களின் அழைப்பை வீரர்கள் உணரவேண்டும்.

படைப் பிரிவுகளின் தன்மைக்கேற்ப குறிப்பிட்ட வகை வில்லை மட்டுமே பயன்படுத்துபவராக ஒவ்வொரு பிரிவினரும் இருப்பர். அந்த வகை வில்லுக்குப் பொருத்தமான அம்புக்கட்டுகள் அங்கு வந்துசேர வேண்டும். அதில் ஏதாவது குழப்பம் நிகழ்ந்தால், அதிகாலையிலேயே சிக்கல் உருவாகிவிடும். எனவே, ஆயுதங்களை பாசறைக்குப் பிரித்துத் தரும் பொறுப்பை வகிக்கும் `ஆயுதவாரி' மிக முக்கியமானவராகக் கருதப்படுவார். போர்க்களத்தில் தளபதிக்கு சமமான அதிகாரம்கொண்டவராக போர்களக் கொட்டிலில் ஆயுதவாரி விளங்குவார்.

மூன்று பேரரசுகளும் அனுபவமேறியவர்களைத் தான் ஆயுதவாரிகளாக நியமித்தன. பல நேரங்களில் படைகளின் தளபதியையே சமாளிக்கவேண்டிய பொறுப்பு ஆயுதவாரிக்கு உண்டு. குறிப்பிட்டவகை ஆயுதம்தான் வேண்டும் என்று தளபதி கேட்பார். ஆனால், அந்த வகையான ஆயுதத்தின் இருப்பு மிகக் குறைவாக இருக்கும். எனவே, மற்றவகை ஆயுதத்தைக் கொடுத்து நிலைமையைச் சமாளிக்க

வேண்டும். போர் நெருக்கடிகளுக்கு இடையில் அதிகம் மோதிக்கொள்பவராக தளபதியும் ஆயுதவாரியும்தான் இருப்பர். அதனால் ஆயுதவாரி பொறுப்புக்கு நியமிக்கப்படுபவர் வயதானவராக இருப்பது அவசியம். அதுவும் தளபதி மதிக்கும் மனிதராக இருக்குமாறு பார்த்துக்கொள்வர். ஏனென்றால், போர்களத்தினூடே அவர்களின் தேவைகளையும் இருப்புகளையும் பற்றிப் பேசிக்கொள்ள சில கணங்களே வாய்க்கும். அதற்குள் அனைத்தையும் புரிந்துகொள்பவராகவும் பரிமாறிக்கொள்பவராகவும் இருக்க வேண்டும்.



இருபது வகையான வாள்கள், எட்டு வகையான வேல்கள், மூன்று வகையான குறுவாள்கள், மூன்று வகையான தண்டங்கள், மூன்று வகையான கேடயங்கள் என அனைத்தும் எந்த இடத்தில் எவ்வளவு இருக்கின்றன, எந்தெந்தப் பாசறைக்கு எந்தெந்த வகையான ஆயுதங்களை எவ்வளவு அனுப்ப வேண்டும், கடைசி வரை இருப்பு குறையாமல் எப்படிச் சமாளிப்பது, உற்பத்திக் களத்திலிருந்து தேவையான ஆயுதங்களை எப்படி விரைவுபடுத்தி வாங்குவது ஆகியவற்றில் மிகுந்த கவனத்தோடு செயல்படுபவராக ஆயுதவாரிகள் இருந்தனர்.

போர்க்களக் கொட்டில்களில் ஆயுதங்கள் பெருமரச்சாரங்களில் ஏற்றி அடுக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது இரலிமேட்டின் முதல் மூன்று குகைகள் முழுக்க ஆயுதங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. ஒவ்வொரு குகையும் பத்து பனை நீளத்துக்கு உள்ளே செல்லக்கூடியதாக இருந்தது. பறம்பின் ஆயுதப் பொறுப்பாளனாக சிறுபாழியைச் சேர்ந்த முதுவேலன் நியமிக்கப்பட்டார். குகைகளுக்குள் விளக்குகள் எந்நேரமும் எரிந்துகொண்டிருந்தன. ஆயுதங்களை எடுத்துத் தர ஏதுவாக மரச்சாரங்களை அடிக்கும் பணி இரண்டே நாளில் முடிவுற்றது. அதன் பிறகு ஆயுதங்கள் அடுக்கப்பட்டன. போர்க்களம் செல்ல முடியாத வயதானவர்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மூங்கிலும் குமிளங்கொம்பும் மட்டுமே வில் செய்ய பயன்படுத்தப்பட்டன. உலோகத்தால் வில் செய்யும் பழக்கம் பறம்பில் இல்லை. வேந்தர்களின் தரப்பில் முன்கள வீரர்களும் தளபதிகளும் உலோக வில்லையே பயன்படுத்துவர். மற்ற வீரர்கள் பயன்படுத்தும் வில்கள் பனைமட்டையாலும் மூங்கிலாலும் ஆனவையாக இருந்தன. ஐந்து, ஏழு, ஒன்பது முடிச்சுகள்கொண்ட வில்களையே வேந்தர்களின் படையினர் பயன்படுத்தினர். பெரும்பாலான முன்கள வீரர்களும் தளபதிகளும் சிறுவிரல் பருமன் அளவு முறுக்கப்பட்ட பட்டுநூலால் ஆன நாணையே பயன்படுத்தினர். ஆனால், பறம்புவீரர்கள் அத்தனை பேரும் குறுங்காது முயலின் குருதியில் ஊறவைக்கப்பட்ட நாண் பூட்டிய வில்லையே பயன்படுத்தினர்.

இரும்புக்கிட்டம், சிரட்டைக்கரி, புளியம் விதை மூன்றையும் கருவேலஞ்சாறு விட்டு இடித்து அதனுடன் கூழாங்கல் மாவைச் சேர்த்து ஆயுதங்களுக்கான `வடி’ உருவாக்கப்பட்டது. நான்காம், ஐந்தாம் குகைகள் ஆயுத உருவாக்கங்களுக்கான உலைகளால் நிரம்பி இருந்தன. உலைகளின் தன்மைக்கு ஏற்ப அவை குகைகளைவிட்டு வெளியே பல இடங்களில் அமைக்கப்பட்டன. சிறிய உலைக்கு காற்றடி இல்லாத ஒடுங்கிய பகுதியே ஏற்றது. அந்த வகை உலைகளில்தான் ஆயுதங்களின் நுனிப்பகுதியிலும் விளிம்பின் கூர்முனையிலும் செய்யவேண்டிய முக்கியமான வேலைகளைச் செய்ய முடியும்.

மற்ற காலங்களில் ஆயுதங்களை பெருவுலையில் அடித்தும் வடித்தும் வைத்திருப்பர். அவை எல்லாம் முதல் மூன்று குகைகளில் வந்து நிரப்பப்பட்டுவிட்டன. இப்போது அவை அனைத்தையும் போருக்குப் பயன்படுத்துவதற்கு ஏற்ப இறுதி வடிவம்கொடுக்கும் வேலையைத்தான் நான்காம், ஐந்தாம் குகைகளில் செய்தனர்.

பறம்புவீரர்கள் பயன்படுத்தும் வாள்கள் அனைத்தையும் கலவைத் தொட்டியில் பத்து நாள்கள் ஊறவைக்க வேண்டும். அதன் பிறகுதான் போர்க்களத்துக்கு எடுத்துச்செல்லப்பட வேண்டும். பொதுவாக, பறம்புவீரர்களுக்கு போர்க்களத்தில் வாளைப் பயன்படுத்தும் வாய்ப்பு அதிகம் வாய்த்ததில்லை. பறம்பின் வில்படையே எதிரிகளை முழுமுற்றாகத் தாக்கி அழித்துவிடும். எனவே, வாளின் வேலை மிகக் குறைவே. ஆனால், இந்தப் போரில் வாள்வீச்சுக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு என்பதால், எண்ணற்ற கலவைத்தொட்டிகள் உருவாக்கப்பட்டன. கொடிக்கள்ளி சாம்பல், புறாவெச்சம், எருக்கிலைப்பால், எலிச்சக்கை ஆகிவற்றால் ஆன கலவையில் உலோகங்கள் நாள்கணக்கில் ஊறவைக்கப்பட்டன. அப்படிச் செய்தால் அவை ஒருபோதும் மொட்டையாகாது. வேறு எந்த உலோகத்துடனோ கருங்கற்பாறையிலோ மோதினாலும் இந்த வாளுக்கு சிறு பாதிப்புகூட ஏற்படாது. முனை, எளிதில் மழுங்காது. வாய்ப்பு கிடைக்குமேயானால், எதிரியின் வாளைப் பிளந்து இறங்கும்.



பறம்புவீரர்கள் பயன்படுத்தும் இந்த வகை வாளுக்கு நிகரான கூர்வழுவுள்ள வாள் வேறெதுவும் இல்லை.

கலவைத் தொட்டியில் ஊறவைக்கப்பட்ட உள்ளங்கை அளவு அகலம்கொண்ட கூர்முனை ஆயுதத்தைக்கொண்டே மூவிலைவேல் தயாரிக்கப்பட்டது. பறம்பின்

தனித்துவமான ஆயுதம் இது. வேறெங்கும் இந்த வகை ஆயுதம் செய்யப்பட்டதில்லை. வேலின் முனையில் விரிந்திருக்கும் மூவிலையில் கல்லூசிகளையும் எஃகூசிகளையும் பன்றியின் முன்கொம்பால் செய்யப்பட்ட ஊசியையும் பொதிந்துவைப்பர். மூவிலைவேலை செய்ய அதிக காலம் தேவைப்படும். எனவே, வீரர்களின் பயன்பாட்டுக்கு இது அரிதாகவே கொடுக்கப்படும். வலிமைகொண்ட வீரன் ஒருவன் குறி தவறாமல் எறிந்தால், எதிரியின் தேர் முறிந்து கீழே சரியும். போர் யானையை ஒரே எறியால் வீழ்த்த முடிகிற ஆயுதம், இது ஒன்றுதான்.

பேரரசுகளின் வலிமை, எண்ணில்லாத மடங்கு ஆயுதங்களை இடைவிடாது போர்க்களத்துக்கு அனுப்புவதிலே இருக்கிறது. ஒரு யானையின்மேல் ஏற்றப்படும் ஆயுதங்களைக்கொண்டு நூறு வீரர்களைக்கொண்ட படைப்பிரிவு நாள் முழுவதும் சண்டையிடலாம். அவ்வாறு ஆயுதங்களை ஏற்றிச்செல்ல மட்டும் நூறு யானைகள் ஆயுதவாரியின் உத்தரவுக்குக் காத்துநின்றன. உடல் முழுவதும் கவசங்களால் பூட்டப்பட்ட யானை, ஆயுதங்களைச் சுமந்து போர்க்களத்துக்குள் செல்லும்போது எதிரிப்படையால் அதை எதிர்த்து எதுவும் செய்ய முடியாது.

வாளும் வேலும் அம்பும் தாக்கும் ஆயுதங்கள் என்றால், கவசமும் கேடயமும்தான் காக்கும் ஆயுதங்கள். பேரரசுகளின் படைகளில் தளபதிகளுக்கும் முதல் நிலை வீரர்களுக்கும் தகுந்த மெய்யுறைக் கவசங்களை உருவாக்கி வைத்திருந்தனர். வாள்வீச்சாளர்கள் அத்தனை பேருக்கும் மூன்று வகையான கேடயங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன. சேரனின் கேடயம் வாள்வீச்சாளன் சுழன்று தாக்க ஏதுவாக இருந்தது. சோழனின் கேடயம் அதே அளவு வலிமையுடன், ஆனால் எடை குறைவானதாக இருந்தது. அதனாலேயே அதைப் பயன்படுத்த வீரர்கள் மிகவும் விரும்பினர். பாண்டியனின் கேடயமோ, யானை ஏறி நின்றபோதும் நெளிந்துகொடுக்கவில்லை.

``பறம்புக்கு கடந்தகாலங்களில் வாள்படை பெரிதாகத் தேவைப்படாததால், கேடயத்துக்கான தேவையும் பெரிய அளவில் இல்லை. இப்போதுதான் அதன் தேவை உணரப்படுகிறது. அதை உருவாக்குவதொன்றும் கடின வேலையல்ல'' என்றான் முதுவேலன். ஆனாலும் முறியன் ஆசான் வந்த பிறகு அவரிடம் கேட்காமல் செய்வது முறையன்று என்பதால், அவரிடம் ஆலோசனை கேட்டான். அவர் சொல்லிய குறிப்பின் அடிப்படையில் வேலைகள் உடனடியாகத் தொடங்கப்பட்டன. ஆனால், மெய்யுறை தயாரிக்க ஆசான் சொல்லும் சிவப்புச் சித்திர மூலக்கொடியும் செங்கொடி வேலியும் எளிதில் கண்ணுக்குப்படாதவை. எங்கோ ஒன்றுதான் முளைத்துக்கிடக்கும். பறம்பின் அத்தனை வீரர்களுக்கும் மெய்யுறை தயாரிக்கத் தேவையான அளவு இந்தக் கொடிகளைப் பறித்துவருதல் எளிதன்று. ஆனால், அதைத் தவிர வேறு வழியில்லை.
முடியன் உத்தரவிட்டான். நாகக்கரடுக்கு வந்து சேர்ந்த வீரர்கள் மட்டும் இங்கு இருக்கவைக்கப்பட்டனர். பல்வேறு பகுதிகளிலிருந்து இரலிமேட்டுக்கு வந்துகொண்டிருந்த வீரர்கள் அனைவருக்கும் செய்தி அனுப்பப்பட்டது. அதேபோல பறம்புமலை முழுவதும் உள்ள மக்களுக்கும் செய்தி கொடுக்கப்பட்டது. எல்லோரும் மூலிகையைத் தேடி காடுகளுக்குள் இறங்கினர்.

கிடைக்கும் மூலிகைகளை, காலம் கடத்தாமல் இரலிமேட்டுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்பது உத்தரவு. வந்துசேர்ந்த மூலிகைக் கொடிகளைக்கொண்டு மெய்யுறை தயாரிக்கும் வேலை நடந்துகொண்டிருந்தது. கல்லில் அறைத்துத் தயாரிக்கப்படும் இவற்றை, நிழலில் உலர்த்திதான்


ஈரம்போக்க வேண்டும். அதற்கு ஏற்ற இடமாக குகைத்தளங்கள் இருந்தன.

வேலைகள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தபோது பாரியும் கபிலரும் வேட்டுவன்பாறையிலிருந்து இரலிமேடு நோக்கிப் புறப்பட்டனர். இத்தனை நாள்களாக பாரி வேட்டுவன்பாறையிலேயே இருந்ததற்கு போர்த்தயாரிப்பு நோக்கி மனம் ஒன்றாததுதான் காரணம். ஆனாலும் முன்னெச்சரிக்கையாக நாம் சில தயாரிப்புகளைச் செய்தாகவேண்டும் என்று அனைவரும் சொன்னதால், அதை ஏற்றான். தேக்கனும் முடியனும் அதைச் செய்து முடிக்கட்டும் என்று வேட்டுவன்பாறையிலே தங்கிவிட்ட பாரி, இன்று காலையில் கபிலருடன் இரலிமேடு நோக்கிப் புறப்பட்டான்.

நடுப்பகலின்போது அவர்கள் நெடுங்குன்றை வந்தடைந்தனர். அங்கிருந்து சமதளத்தில் கண்ணுக்கு எட்டும் தொலைவு வரை வேந்தர்களின் படைகள் பரவிக்கிடந்தன. நெடுங்குன்றைக் கடந்ததும் நாகக்கரடு தொடங்குகிறது. கரடு முழுவதும் பறம்புவீரர்கள் நிலைபெற்றிருந்தனர். நீலனும் உதிரனும் கரட்டின் இருபக்க எல்லைகளில் நிலைகொண்டிருந்தனர். குதிரைகள் நிற்காமல் விரைந்துகொண்டிருந்தன. எங்கும் வீரர்கள் உற்சாகமாக ஒலி எழுப்பியபடி இருந்தனர். மாலை வரை பயணம் நீடித்தது. கரடு முழுவதும் பறம்பின் வீரர்களும் சமவெளி முழுவதும் வேந்தர்களின் படையுமாக நிலமெங்கும் மனிதத்தலைகள் நிரம்பி வழிந்தன.
நாகக்கரட்டைவிட்டு இறங்கி இரலிமேட்டை நோக்கி மேலேற, குதிரையைத் திருப்பினான் பாரி. அந்த இடத்தில்தான் தேர்களைச் செய்வதற்கான வேலைகள் நடந்துகொண்டிருந்தன.

எண்ணிலடங்கா தேர்கள் செய்யப்பட்டு வரிசை வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. பாரியும் கபிலரும் அந்த இடம் வந்ததும் குதிரையை இழுத்து நிறுத்தினர். கபிலரின் கண்கள் வியப்பு நீங்காமல் பார்த்துக்கொண்டிருந்தன. ஒற்றைக் கட்டையால் நடுமரம் அமைக்கப்பட்டு எளிய முறையில் தேரை வடிவமைத்திருந்தனர். வேட்டூர் பழையனும் காலம்பனும் அந்த இடம் நின்றிருந்தனர். தேரின் உறுதியை கலைஞர்கள் பாரிக்கு விளக்கினர். நிறுத்தப்பட்டிருந்த தேர்களைவிட்டு பாரியின் கண்கள் எளிதில் அகலவில்லை.

பார்த்தபடி இரலிமேட்டை நோக்கி குதிரையைச் செலுத்தினர். உலைக்களங்களும் குதிரைக்கொட்டடிகளும் உணவுச்சாலைகளும் இரலிமேடு முழுவதும் நிரம்பி வழிந்துகொண்டிருந்தன. எங்கும் வீரர்கள் வேலைபார்த்துக்கொண்டிருந்தனர். கூழையன் சத்தம் இடதுபுற மூலையில் கேட்டுக்கொண்டிருந்தது.



மூன்றாம் குகையிலிருந்து வெளிவந்தார் வாரிக்கையன். கீழிருந்து பாரியும் கபிலரும் குகை நோக்கி வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அவர்கள் மேலே வரும் வரை அந்த இடம்விட்டு நகரவில்லை. பாரியின் குதிரை, முன்னால் வந்துகொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து கபிலர் வந்துகொண்டிருந்தார்.

குகைவாயில் வந்தடையும் வரை பார்த்துக்கொண்டிருந்தார் வாரிக்கையன்.

பாரி வந்து இறங்கினான். மகிழ்ந்த முகத்தோடு அவனை வரவேற்றார் வாரிக்கையன்.

``என்ன... நெடுநேரமாக நின்று பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்?” எனக் கேட்டான் பாரி.

``உன் பின்னால் வந்துகொண்டிருந்தது கபிலனா, கூழையனா என, சற்றே ஐயமாக இருந்தது!”

``ஏன், பார்வை தெளிவில்லையா?”

``போர்வீரனைப்போல மலையேற்றத்தில்கூட குதிரையை இயல்பாக இயக்கும் தெளிவை புலவன் பெற்றுவிட்டான் அல்லவா! அதனால்” என்றார்.

கபிலர் ஒரு கணம் பூரித்து நின்றார். பாரி சொன்னான், ``உங்களையும் போருக்கு ஆயத்தப்படுத்துகிறார். எச்சரிக்கையாக இருங்கள்.”

மூவரின் சிரிப்பும் குகை முழுவதும் எதிரொலித்தது.

மூவேந்தர்களின் வருகைக்குப் பிறகு மூஞ்சல்நகர் களைகட்டத் தொடங்கியது. பேரரசர்கள் ஒருவருக்கொருவர் ஆரத்தழுவி அன்பைப் பரிமாறிக்கொண்டனர். ரத்தினக்கல் பதித்த ஆரங்களை பாண்டியனுக்கும் சோழனுக்கும் சூட்டி மகிழ்ந்தான் உதியஞ்சேரல். செங்கனச்சோழனும் தனது சிறந்த பரிசை மற்ற இருவருக்கும் வழங்கினான். குலசேகரபாண்டியனோ இருவரையும் முத்துகளால் குளிக்கவைத்தான். மூவரும் ஹிப்பாலஸுக்கு அளவற்ற நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர். இசையும் கூத்தும் இரவெல்லாம் நீண்டன.

நாள்கள் நகர, அடுத்தடுத்த கட்டத்துக்கான ஏற்பாடுகள் தீவிரமாகின. படைகளின் பிரிவுகள் எண்ணற்றச் சேனைகளாக வகுக்கப்பட்டன. ஒவ்வொரு சேனைக்கும் சேனைமுதலி இருந்தார். பன்னிரு சேனைகளைக்கொண்ட பெரும்பிரிவுக்கு சேனைவரையன் இருந்தார். விற்படை, வாள்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை என ஐவகைப் படைகள் ஆயத்தநிலையில் இருந்தன. ஐவகைப் படைகளுக்கும் ஐந்து தளபதிகளைத் தேர்வுசெய்யவேண்டியிருந்தது. விற்படைக்கு துடும்பனும், வாள்படைக்கு சாகலைவனும், குதிரைப்படைக்கு உறுமன்கொடியும், தேர்ப்படைக்கு நகரி வீரனும், யானைப்படைக்கு உச்சங்காரியும் தளபதிகளாக இருக்க முடிவுசெய்யப்பட்டது.


ஐந்து தளபதிகளையும் கட்டுப்படுத்தும் தலைமைத் தளபதியாக `மகாசாமந்தன்’ என்று அழைக்கப்படும் பெரும்பொறுப்புக்கு கருங்கைவாணன் தேர்வுசெய்யப்பட்டான்.

சேரனின் சார்பில் உதியஞ்சேரலும் சோழனின் சார்பில் சோழவேலனும் பாண்டியனின் சார்பில் பொதியவெற்பனும் களத்தில் ஆயுதம் ஏந்துவர். மூவேந்தர்களும் ஒற்றைப்படை அணியில் நின்று ஆயுதம் ஏந்தப்போகும் இந்தப் பெரும்போரின் தொடக்கச் சடங்குக்கு நாள் குறிக்க கணியர்களிடம்

ஆலோசனை கேட்க வேந்தர்கள் முடிவுசெய்தனர்.

மூன்று நாட்டுக் கணியர்களும் மூன்றுவிதமான குறிப்புகளைச் சொல்ல வாய்ப்புண்டு. இந்தப் போரில் அடையப்போகும் வெற்றி பொதுவானது. ஆனால், இழப்பின் தன்மை பொதுவானதாக இருக்க வாய்ப்பில்லை. மூவருக்கும் வேறுபட்ட தன்மையில்தான் அது அமையும். தங்களுக்கு எந்தவித இழப்பும் நேரக் கூடாது என்றே மூவரும் நினைப்பர். அதற்குத் தகுந்த தன்மையில்தான் நாள் குறிக்க எண்ணுவர். எனவே, இதுதான் மூவருக்குள்ளும் ஆழமான விளைவை உருவாக்கும் செயல். இதை மிகவும் கவனமாகக் கையாளவேண்டும் என நினைத்தார் முசுகுந்தர்.

அன்று இரவு குலசேகரபாண்டியனிடம் இது பற்றி தனியே உரையாடினார், ``காலையில் அந்துவன் கையில் வரைபடம் ஏந்திய பட்டுத்துணியோடு என்னை வந்து சந்தித்தான். `பவளவந்திகையின் காலடி குறிப்பைக்கொண்டே வேந்தர்களின் பாடிவீடு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குறிப்பின் அடிப்படையிலே நாள் குறிப்பதுதான் பொருத்தமானது' என்றான். ஆனால், மற்ற இரு பேரரசர்களும் கணியர்களும் இதை ஏற்பார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களின் நாள்கணக்குகள் வேறு மாதிரியாக இருக்க வாய்ப்புண்டு" என்றார்.



``தளபதிகளைத் தேர்வுசெய்ததைப்போல மற்றவர்கள் எளிதில் ஏற்றுக்கொள்ளும் செயலல்ல இது. உணர்வுடனும் நம்பிக்கையுடனும் கலந்தது. எனவே, கவனமாகச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்" என்று சொன்னவர், நீண்டநேரம் கழித்து ``இந்தப் பிரச்னையைத் தீர்க்க நீங்கள் சொல்லும் வழி என்ன?" எனக் கேட்டார்.

``ஒரே வழிதான் உண்டு. தமிழ் நிலத்தின் அத்தனை கணியர்களும் பேராசானாக ஏற்றுக்கொண்டது திசைவேழரைத்தான். அவரை வரவழைத்து நாள் குறிப்போம். மற்ற இரு பேரரசர்களும் அதை ஏற்பர்" என்றார்.
குலசேகரபாண்டியன், திசைவேழரை நன்கு அறிவார். அவரது கருத்தை யாருக்காகவும் விட்டுக்கொடுக்காத அறிவுச்செருக்கின் அடையாளம். அவரை கையாள்வது ஆபத்து நிறைந்தது. ஆனாலும் `மூவரும் ஏற்றுக்கொள்ளும் ஒரு பொதுமனிதர் தேவை. அதற்கு திசைவேழர் பொருத்தமானவர்தான்' என நினைத்து அவரை அழைக்க சம்மதம் தெரிவித்தார்.

மற்ற இரு பேரரசர்களுக்கும் இந்த ஆலோசனை சொல்லப்பட்டது. அனைவரும் மகிழ்வோடு ஏற்றனர்.

திசைவேழரின் தலைமாணவன் அந்துவனையே அனுப்ப முடிவானது. அவரின் இருப்பிடமான பொதிகைமலையில் இருந்தால் வந்துசேர பல நாள் ஆகும். ஆனால், அவரோ வைகையின் ஓரத்தில் இருக்கும் குன்றில்தான் இருந்தார். நான்கு புரவி பூட்டிய பெருந்தேரில் அவரின் இருப்பிடம் நோக்கி விரைந்தான் அந்துவன்.
இரவு-பகல் நிற்காமல் பயணித்து அவரின் இருப்பிடம் அடைந்தான். ஆற்றின் வடகரையில் அவரது குடில் இருந்ததால் வைகையின் வெள்ளத்தைக் கடக்கவேண்டிய தேவை எழவில்லை.
ஆற்றங்கரையிலிருந்து நாணல்கள் விலக்கி குடில் நோக்கி வந்தார் திசைவேழர். தனது ஆசானைப் பணிந்து வணங்கி மூவேந்தர்களின் அழைப்பைத் தெரிவித்தான் அந்துவன்.

``பெருவெள்ளம் ஓடும் ஆற்றங்கரையில் இருக்கிறேன். ஆனால், அள்ளிப்பருக குருதி கொண்டுவந்திருக்கிறாய் நீ.”

அந்துவன் மறுமொழியின்றி அமைதியாக நின்றான்.

``நான் போர்க்களம் புகேன் என மூவேந்தர்களுக்கும் தெரியும். அப்படியிருந்தும் என்னை ஏன் அழைத்தார்கள்?” என வினவினார். அந்துவனிடம் இதற்கும் பதில் இல்லை. திசைவேழர், குடிலுக்குள் போனார்.
அந்துவன் அன்று முழுவதும் காத்திருந்தான். மறுநாள் மாலை குடில்விட்டு வெளியே வந்தார். `மூவேந்தர்களின் அழைப்பை நிராகரிக்க வேண்டாம். போய் நமது நிலையைத் தெளிவுபடுத்திவிட்டு வருவோம்’ என்று எண்ணியபடி ``காலையில் புறப்படுவோம்” எனக் கூறினார்.

இந்தச் செய்தி இரவோடு இரவாகப் பயணித்து விடியும்போது மூஞ்சல்நகர் எட்டியது. `திசைவேழர், அழைப்பை ஏற்க மறுப்பாரோ!’ என்ற அச்சத்திலிருந்த முசுகுந்தர், செய்தி கேட்டு அளவற்ற மகிழ்வடைந்தார். மூஞ்சலில் எல்லாமே சிறப்பான தொடக்கமாக அமைகிறது. மூவேந்தர்களும் தங்களுக்குள் மிக இயல்பாகப் பேசிக்கொள்ள அதிக காலம் எடுத்துக்கொள்ளவில்லை. `தளபதிகளின் தேர்விலும் முரண்கள் எதுவும் உருவாகவில்லை. அதேபோல சடங்குக்கான நாள் குறிப்பிலும் சிக்கலான நிலையேதும் உருவாகாமல் இருந்தால் போதும், எல்லாம் வெற்றிகரமாக அமைந்துவிடும்’ என்று எண்ணியபடி பொதியவெற்பனின் கூடாரத்துக்கு வெளியே நின்றுகொண்டிருந்தார்.

அப்போது உதியஞ்சேரல் தனது மாளிகையைவிட்டு வெளிவருவதை பணியாளர்கள் சிற்றோசை எழுப்பி தெரியப்படுத்தினர். அவர் உணவுக்கூடாரத்தை நோக்கி நடந்து போனார்.
பேசிக்கொண்டே உடன் சென்ற அமைச்சர் நாகரையன், அவர் உணவகம் நுழைந்ததும் வந்த வழியே திரும்பினார்.



சற்று தொலைவில் முசுகுந்தர் நிற்பதைப் பார்த்து அருகில் வந்தார். திசைவேழர் அழைப்பை ஏற்றுக்கொண்ட செய்தியை அவரோடு பரிமாறி மகிழ்ந்தார் முசுகுந்தர். இருவரும் நீண்டநேரம் பேசியபடி நின்றனர்.
முசுகுந்தர் கேட்டார், ``எனக்கு ஓர் ஐயம். தெளிவுபடுத்த முடியுமா?”

``எனக்கு விடை தெரிந்தால் தெளிவுபடுத்துகிறேன்” என்றார் நாகரையர்.

``உங்களின் பேரரசருடன் எந்நேரமும் கருங்குரங்குக் குட்டி ஒன்று இருக்கிறதே, ஏன்?”

நாகரையர் இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. சற்றே சிந்தித்தபடி இருந்தார், ``பேரரசருக்குப் பிடித்த உயிரினம் அது என்பதால்தான்” என்று சொல்லி, வார்த்தையை முடிக்காமல் நீட்டினார். எதையோ சொல்ல தயங்குகிறார் என்பது புரிந்தது.

சற்று இடைவெளியில் அவரே சொன்னார், ``உங்களிடம் மறைக்க விரும்பவில்லை. ஆனால், நீங்கள் மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளாதீர்கள். எந்நேரமும் அந்தக் குட்டி உடன் இருக்காது; உணவுக்கூடாரத்துக்குச் செல்லும்போது மட்டும்தான் உடன் இருக்கும். உணவில் நஞ்சு இருப்பின் வாசனையை நுகர்ந்த கணத்திலேயே அது சத்தமிட்டுக் குதிக்கும்; மலம்கழிக்கும். அதனால்தான் அவர் அதை வைத்துள்ளார். எங்கள் மருத்துவர்கள் கூறியுள்ள பாதுகாப்பு ஏற்பாடு அது” என்றார்.

மூவேந்தர்களுக்குள்ளும் பொதுநம்பிக்கையை உருவாக்குவது எவ்வளவு கடினமான செயல் என்பதை குரங்கின் மூலமும் உணர்ந்தார் முசுகுந்தர்.

திசைவேழரின் இருப்பிடத்திலிருந்து நான்கு புரவிகள் பூட்டிய பெருந்தேர் பயணத்தைத் தொடங்கியது. திசைவேழர், மனக்குழப்பத்தினூடே பயணப்பட்டுக்கொண்டிருந்தார். மறுநாள் போர்ப்பாசறைக்குள் தேர் நுழைந்தது. திரைச்சீலையின் வழியே வெளியில் பார்த்துக்கொண்டு வந்தவர் போர்நிலம் வந்தவுடன் வெளிப்பார்வையைத் தவிர்த்தார். தேர் மூஞ்சலில் வந்து நின்றது.

முசுகுந்தர் வணங்கி வரவேற்றார். பயணக்கலைப்பு நீங்க கூடாரத்தில் தங்கி சற்று ஓய்வெடுக்கச் சொன்னார். மாலை ஆனதும் அவர் முன் உணவு பரிமாறப்பட்டது. இரண்டு வாழைக்கனிகளை மட்டும் எடுத்துக்கொண்டார். பேரரசர்கள் கூடும் நடுக்கூடாரத்துக்கு அவரை அழைத்துச் செல்ல முசுகுந்தர் காத்திருந்தார். சிறிது நேரம் கழித்து புறப்பட்டார். அவரை அழைத்துக்கொண்டு முன்நடந்தார் முசுகுந்தர்.

நடுக்கூடாரத்தில் மூவேந்தர்களுடன் சோழவேலனும் பொதியவெற்பனும் இருந்தனர். அரச குடும்பமல்லாத ஒரே நபராக முசுகுந்தர் இருந்தார். திசைவேழர் உள்ளே நுழைந்ததும் அனைவரும் அவருக்கு மரியாதை செய்தனர். அதை ஏற்றபடி தனக்கான இருக்கையில் அமர்ந்தார் திசைவேழர்.

உதியஞ்சேரலும் செங்கனச்சோழனும் திசைவேழரைப் பார்த்து பல்லாண்டுகள் ஆகின்றன. நீண்ட இடைவெளிக்குப் பிறகு பார்க்கும் இருவரும் அவரின் முதுமையைக் கண்டு மனம்குவித்து வணங்கினர்.
குலசேகரபாண்டியன்தான் பேச்சைத் தொடங்கினார், ``இந்த மண் காணாத பெரும்போரை நடத்த மூவேந்தரும் இணைந்துள்ளோம். போர்ச்சடங்குக்கு நாள் குறித்துத் தரவே பேராசானை அழைத்தோம்” என்றார்.
``பலி நிலத்துக்குக் குறிசொல்லும் இழிசெயல் செய்யேன்” என வார்த்தை வெடித்து மேலே கிளம்ப எத்தனித்தது. `பேரரசர்கள் மூவரும் இருக்கும் அவையில் கடுஞ்சொற்கள் வேண்டாம்!’ என

எண்ணினார் திசைவேழர்.

அமைதி நீடித்தது. அவர் சொல்லப்போகும் வார்த்தையை எதிர்பார்த்துக் காத்திருந்தது அவை. சற்று இடைவேளைக்குப் பிறகு, ``போரைத் தவிர்க்க வழியேதும் இல்லையா?” என மெல்லிய குரலில் கேட்டார்.

போர்க்களத்துச் சடங்குக்கு நாள் குறிக்க அழைக்கப்பட்டவர் போரைத் தவிர்க்க வழிகேட்டது, சேரனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. சடங்கின் தன்மை பேசப்படும் கணத்திலிருந்து தொடங்கக்கூடியது. அது சார்ந்த எல்லா நிகழ்வுகளும் சடங்கின் பகுதியே, அது சார்ந்த செயலும் சொல்லும் சடங்கினால் ஏற்படும் விளைவை தீர்மானிப்பவையே; நாள் குறிக்க நிகழ்த்தப்படும் சடங்கைப் பற்றியப் பேச்சே சட்டென தடுமாறியது நல்ல அறிகுறியாக உதியஞ்சேரலுக்குப் படவில்லை.

குலசேகரபாண்டியனோ திசைவேழரிடமிருந்து இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. என்ன சொல்வதென்ற திகைப்பு எல்லோரிடமும் இருந்தது. பேராசானுடனான உரையாடலில் மிகுந்த கவனம் தேவை என அனைவரும் அறிவர். எனவே, அமைதியே நீடித்தது.

``வலதுகாலை மடக்க முடியாமல் சிரமப்பட்டீர்களே! இப்போது ஆசனத்தில் சம்மணமிட்டு உட்கார்ந்திருக்கிறீர்களே எப்படி?” என்று சூழலை இலகுவாக்க பேச்சின் போக்கை மாற்ற முயன்றார் முசுகுந்தர். ஆனால், அந்தப் பேச்சு பறம்பினைத்தான் நினைவூட்டியது. புலி முன் ஆடு போல இருந்தது அவையின் அமைதி.

``வளம்மிக்க மண்ணைப் பாழ்படுத்துதல் அறமன்று” என்றார் திசைவேழர்.

``வளத்தை, தானும் பயன்படுத்தாமல் மற்றவர்களையும் பயன்படுத்தவிடாமல் தடுப்பது இயற்கைக்குச் செய்யும் நியதியன்று” என்றார் முசுகுந்தர்.






``பயன்பாட்டு உரிமைதான் சிக்கல் என்றால், பேசித் தீர்க்கலாமே. பேசிப்பார்க்காமலேயே போர்க்களம் புகுவது என்ன அறம்?”

மீண்டும் அமைதி நிலவியது.

இந்த இடம் சேரனோ சோழனோ மறுமொழி பேச முடியாது. வயதில் மூத்த குலசேகரபாண்டியன்தான் பேசியாக வேண்டும். எனவே, மற்றவர்கள் அவரையே பார்த்தனர்.

குலசேகரபாண்டியன் சற்றே குழப்பமடைந்தான். நாமே தேவையில்லாமல் சிக்கலை ஏற்படுத்திக்கொண்டோமோ எனத் தோன்றியது. மற்ற இரு பேரரசர்களும் ஏற்கும் பொதுமனிதர் ஒருவர் வேண்டும் என யோசித்தோம். ஆனால், `மூவரும் பேசி இணங்கவைக்க முடியாத மனிதரை அழைத்துவந்துவிட்டோமோ!' எனத் தோன்றியது.

சற்று இடைவெளியில் ``சரி, நீங்களே இதற்கு வழியொன்று சொல்லுங்கள்" என்றார் குலசேகரபாண்டியன்.

திசைவேழர் இதை எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் அதை இறுகப் பற்றிக்கொண்டார். சற்றே கண்மூடிச் சிந்தித்தார். `என்ன சொல்லப்போகிறார்?' என அவை காத்திருந்தது. ``மூன்று பேரரசுகளின் போற்றுதலுக்குரிய பெரும்புலவர் கபிலர்தானே பாரியின் உற்றதோழர். அவர் மூலம் பேசிப்பார்க்கலாமே!"

மூவரின் கண்களும் ஒருவரை ஒருவர் பார்த்துத் திரும்பின. மறுமொழி எழவில்லை. திசைவேழரின் கூற்றை மறுப்பதற்கான காரணம் ஏதுமில்லை. அமைதி நீடித்தது. சம்மணமிட்ட காலை நீட்டித் தொங்கவிட்டார் திசைவேழர்.

இந்த இடத்தை அறிவுக்கூர்மையுடன் கையாள வேண்டும். இல்லையென்றால், போரின் தொடக்கமே சிக்கல் நிரம்பியதாகிவிடும் என நினைத்த குலசேகரபாண்டியன், ``சரி, பேச்சுவார்த்தைக்காக கபிலருக்கு அழைப்பு அனுப்புங்கள்" என்றார்.

- பறம்பின் குரல் ஒலிக்கும்...

# [வீரயுக நாயகன் வேள்பாரி-81]

வாள்படைத் தளபதி சாகலைவன் வந்த தேர், இரவு முழுவதும் நாகக்கரட்டின் அடிவாரத்தில் நின்றது. அவன்தான் கபிலருக்கு அழைப்பு எழுதப்பட்ட சுருள்மடலை எடுத்து வந்தவன். பறம்புவீரர்கள் அதைப் பெற்றுக்கொண்டு இரலிமேட்டுக்குச் சென்றனர். ``மறுமொழி வரும் வரை காத்திருக்கிறேன்'' என்று சொல்லிக் காத்திருந்தான் சாகலைவன். மூவேந்தர்களின் படை நிலைகொண்டுள்ள இடம்விட்டு மிகத் தொலைவில் வந்து பறம்பின் நிலப்பகுதிக்குள் இரவு முழுவதும் காத்திருந்தான் சாகலைவன்.

மறுநாள் பொழுது விடிந்தது. செய்தியை எதிர்பார்த்திருந்தான் சாகலைவன். நீண்ட நேரத்துக்குப் பிறகு கரட்டுமேட்டிலிருந்து ஆள்களின் வருகை தெரிந்தது. உற்றுப்பார்த்தான். நடுவில் வருபவர் கபிலர். அவன் கபிலருக்கு அறிமுகமானவன். மதுரையில் தங்கி இருக்கும்போது கபிலரை பலமுறை கண்டு பேசியிருக்கிறான். அதனால்தான் இந்தப் பணிக்காக அவன் அனுப்பப்பட்டான்.

மேலே இருந்து இறங்கி வந்த கூட்டம், குறிப்பிட்ட இடத்தோடு நின்றுகொண்டது. அதற்குப் பிறகு கபிலர் மட்டும் வந்து கொண்டிருந்தார். அவரோடு சிறுவன் ஒருவனும் வந்தான். அவன் யாரென சாகலைவனுக்குத் தெரியவில்லை. உதவிக்கு அழைத்துவருகிறார் எனப் புரிந்தது.




கபிலர் தேரின் அருகில் வந்ததும் அவரை வணங்கி வரவேற்றான் சாகலைவன். முகம் பார்த்து மலரும் மனநிலையில் கபிலர் இல்லை. தலையை மட்டும் மெள்ள அசைத்தார். குறுக்குக்கட்டையை எடுத்து அவர் தேரில் ஏற வசதி செய்தபடி நின்றான். அவரோ உடன்வந்த அலவனின் தோளை அழுத்தி மேலேறி அமர்ந்தார். அலவனும் ஏறி அவர் அருகில் அமர்ந்துகொண்டான்.

தேர் புறப்பட்டு, சிறிது நேரத்தில் படைக்களத்துக்குள் நுழைந்தது. முதலில் இருந்தது காலாட்படைதான். கண்ணுக்கு எட்டும் தொலைவு வரை வீரர்கள் நிறைந்திருந்தனர். தேர் வேகம்கொண்டு சென்றது. நெடுநேரத்துக்குப் பிறகு காலாட்படையைக் கடந்து குதிரைப் படையின் எல்லையில் போய் வலதுபுறமாகத் திரும்பியது. வேகம் குறையாமல் பயணித்தாலும் படைகளைக் கடந்து நெடுந்தொலைவு போகவேண்டியிருந்தது. தேரோட்டும் வளவன், தேரை விரைவுபடுத்த முயன்றான். ஆனால், வீரர்களின் நெரிசல் அதிகமாக இருந்தது. நீட்டிப்பிடித்த வேற்கம்புகளும் ஈட்டிகளும் குதிரையின் மீது பட்டுவிடுமோ என்ற அச்சம் அவனுக்குள் இருந்தது.

ஆயுதங்கள் குவிக்கப்பட்டிருக்கும் படைக்கலப் பேரரங்குகள் மூன்றையும் தொட்டுப் பயணிப்பதைப்போல வழி சொல்லியிருந்தான் சாகலைவன். தேர், அந்தத் திசையிலேயே

போய்க்கொண்டிருந்தது; வேகம் குறையாமல் தேர்ப்படையின் எல்லைக்குள் நுழைந்தது. இந்தப் பகுதியில் வீரர்களின் எண்ணிக்கை சற்று குறைவு. ஆனால், அங்குமிங்குமாக மரக்கட்டைகளும் குதிரைகளின் ஓட்டமுமாக இருந்தன. சற்றே கவனத்தோடு தேரைச் செலுத்தினான். அதைத் தொடர்ந்து சிற்றரசர்களும் தளபதிகளும் தங்கி இருக்கும் பகுதி இருந்தது. அதை ஓரமாகச் சென்று கடக்க முயன்றான்.

தொலைவில் யாரையோ பார்த்த கபிலர், ``தேரை நிறுத்து'' என்றார். யாரைப் பார்த்துவிட்டு தேரை நிறுத்தச் சொல்கிறார் எனப் புரியாமல் விழித்தான் சாகலைவன். தேர் நின்றது. குறிப்பறிந்து அலவன் கீழே இறங்கினான். அவன் தோள் பிடித்து இறங்கினார் கபிலர்.

சற்று தொலைவில் வாள் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இருவர், தேரைவிட்டு இறங்கும் மனிதர் யார் என உற்றுப்பார்த்தனர். அடையாளம் கண்டறிந்த ஒருவன், ``தேர்விட்டு இறங்குவது பெரும்புலவர் கபிலர்'' என்று சத்தமிட்டுக் கூறியபடி வாளைவிடுத்து ஓடோடி வந்தான்.

அவன் வரும் வேகம் கண்டு அலவன் சற்றே விலகி நின்றான். விரைந்து வந்து கபிலரின் கால் தொட்டு வணங்கினான். அவன் அறுகநாட்டின் சிறுகுடி மன்னன் செம்பன். அவனைக் கண்டதும் கபிலரின் முகம் மலர்ந்தது. ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் இவனது மாளிகையில் தேறல் அருந்தி மான்கறி சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதுதான் பாரியைப் பற்றிய பேச்சுவந்தது. அவனது வள்ளல்தன்மையைப் பற்றி செம்பன் சொன்னதை ஏற்காத கபிலர், ``நாளையே நான் புறப்பட்டு பறம்புமலைக்குப் போகிறேன்'' என்று சொல்லி புறப்பட்டுப் போனார். அதன் பிறகு இன்றுதான் மலைவிட்டு இறங்கி சமவெளிக்கு வந்துள்ளார்.

``யாரைப் பார்த்துவிட்டு பறம்பில் ஏறினேனோ, அவனைத்தான் பறம்புவிட்டு இறங்கியதும் முதலில் பார்க்கிறேன்'' என்று சொல்லி அவனது தோள் தொட்டு மகிழ்ந்தார் கபிலர்.

சுற்றிலும் கூட்டம் கூடியது. அந்தப் பகுதியில் இருந்தவர்கள் எல்லாம் சிறுகுடி மன்னர்களும் தளபதிகளும் ஆவர். அனைவரும் கபிலரை அறிவார்கள். பேரரசர்கள் பணிந்து வணங்கும் பெரும்புலவன் நம்மோடு போர்க்களத்தில் நின்று உரையாடுகிறார் என்ற பெருமிதத்தோடு கூட்டம் கூடியது. ஆனாலும் அனைவரும் விலகியே நின்றனர்.

``நீ அன்று பாரியின் வள்ளல்தன்மை பற்றி வியந்து கூறினாய். நான் மறுத்துக் கூறி அதை சோதித்தறிய மலையேறினேன். ஒன்றரை ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. எனது வாழ்வின் மிகச்சிறந்த இந்தக் காலத்தைச் சொல்லால் வார்த்துச் சொல்கிறேன், `உனது வார்த்தையே மெய்'. அதை நான் பணிந்து ஏற்கிறேன்'' என்று சொல்லி செம்பனை நோக்கிக் கைகுவித்தார் கபிலர்.

நடுங்கிப்போய் கபிலரின் கால் பற்றி வணங்கினான் செம்பன், ``தாங்கள் என்னை வணங்கக் கூடாது'' என்றான்.

``நான் உன்னை வணங்கவில்லை. நீ சொன்ன உண்மையை வணங்குகிறேன்.''



``அந்த உண்மைக்கு எதிராகவே இப்போது வாள் ஏந்த வந்துள்ளேன். பேரரசின் ஆணை இது. என்னை மன்னியுங்கள்'' என்றான் சற்றே கலங்கிய குரலோடு.

``உண்மையல்லாத ஒன்றை நான் எப்போதும் மன்னிப்பதில்லை'' என்று சொல்லியபடி தேரில் ஏறினார் கபிலர். மற்றவர்களுக்கு என்ன நடக்கிறது எனப் புரியவில்லை.

குவித்த கையை விலக்காமல் அவரைப் பார்த்தபடியே நின்றான் செம்பன்.

தேர் ஏறிய கபிலர், அவனது கைகளைப் பார்த்துக்கொண்டே சொன்னார், ``இந்தக் கைகளால் அன்று கறித்துண்டங்கள் நிறைந்த குழிசிப்பானையை என்னை நோக்கித் தள்ள முடிந்திருந்தால், நாம் இந்நேரம் போர்க்களத்தில் சந்தித்திருக்க மாட்டோம் அல்லவா?''

கபிலரின் முகத்திலிருந்த மெல்லிய சிரிப்பு, செம்பனைக் கூனிக்குறுகச் செய்தது. தேர்ப்புழுதி மேலெழும் வரை அவன் அசைவற்று நின்றான்.

நேரம் அதிகமாகிக்கொண்டிருந்ததால் தேரை விரைந்து செலுத்தச் சொன்னான் சாகலைவன். அவனது சொல்லுக்கு ஏற்ப தேரின் வேகம் கூடியது. படைகளைக் கடந்து மூஞ்சல்நகர் நோக்கிச் சென்றது தேர். தனித்துவமிக்க இந்தப் பகுதியைப் பார்த்ததும் பேரரசர்களின் கூடாரப் பகுதி என்பது புரிந்தது. மூஞ்சலுக்குள் தேர் நுழைந்ததும் வரவேற்க அமைச்சர்கள் நின்றிருந்தனர்.

அவர்கள் நின்ற இடம்வந்து தேர் நின்றது. அமைச்சர்கள் மூவரும் பெரும்புலவரை வணங்கி வரவேற்றனர். முசுகுந்தரின் முகம் அளவற்ற மகிழ்வில் இருந்தது. எத்தனையோ மாலைப்பொழுதுகளை வைகைக் கரையில் கபிலரோடு உரையாடி மகிழ்ந்தவர் அவர்.

நாகரையனும் வளவன்காரியும் அவரின் கை தொட்டு வணங்கினர். அவர்கள் இருவருக்கும் கபிலரோடு உரையாடும் அளவுக்கு உறவு இல்லை. தேர்விட்டு இறங்கிய கபிலர் நடக்கத் தொடங்கினார். நினைவின் ஆழத்திலிருந்து கடந்தகாலம் மேலெழுந்து வந்துகொண்டிருந்தது. மூன்று பேரரசர்களுக்கும் தனக்குமான உறவின் வலிமை நினைவெங்கும் பரந்துவிரிந்தது. கடந்த காலத்தின் முன் மனம் கூசி நடுங்கியது. ஆனால், இன்னும் சிறிது நேரத்தில் அந்தக் கடந்த காலத்துக்குள்தான் நுழையப்போகிறார். அங்கிருந்து வந்துள்ள மனிதர்கள்தான் அவருக்காகக் காத்திருக்கின்றனர்.

`எனது புலமையைப் போற்றிக் கொண்டாடிய பேரரசர்களுக்கு எதிராக வந்து விழப்போகும் சொற்கள் என்னவாக இருக்கப்போகின்றன? அவை எனது வாழ்வின் முழுமையிலிருந்து விளைந்த சொற்களாக இருக்கப்போகின்றனவா அல்லது பறம்பிலிருந்து மட்டும் விளைந்த சொற்களாக இருக்கப்போகின்றனவா? சொல், நிலத்திலிருந்து எழுவதில்லை; மனதிலிருந்துதான் எழுகிறது. மனம் உண்மையோடு கரைகிறபோது சொல் தன்னியல்பில் முளைத்து மேலெழுகிறது. உண்மைகள் விளையவைக்கும் சொற்களைப் பற்றி நாம் ஏன் முன்கூட்டியே சிந்திக்கவேண்டும்?' என்று கருதியபடி கூடாரத்துக்குள் நுழைந்தார் கபிலர்.

குலசேகரபாண்டியன் இருக்கைவிட்டு எழுந்து வந்து பெருமகிழ்வோடு வரவேற்றார். செங்கணச்சோழனும் உதியஞ்சேரலும் பொதியவெற்பனும் வணங்கி வரவேற்றனர். சோழவேலன் அணைத்து மகிழ்ந்தான்.


கூடாரத்தின் இடது ஓரம் இருந்த சிறு மேடையில் நால்வர் அமர்ந்து யாழ்மீட்டிப் பாடிக்கொண்டிருந்தனர். கபிலர் உள்நுழைந்ததும் பாடலை நிறுத்தி எழுந்தனர். மீட்டிய யாழையும் பிற இசைக்கருவிகளையும் வைத்துவிட்டு வெளியேறினர்.

அவர்கள் பாடிய `வேந்தே காண்...' எனும் கபிலரின் பாடலைப் பாடியபடி அவரை இருக்கையில் அமரவைத்து தானும் இருக்கையில் அமர்ந்தான் குலசேகரபாண்டியன்.

``நீங்கள் இந்தப் பாடலை எழுதிய அன்று நமக்குள் நிகழ்ந்த உரையாடல் நினைவிருக்கிறதா?" என்று பேச்சை இயல்பாகத் தொடங்கினார் குலசேகரபாண்டியன்.

``நன்றாக நினைவிருக்கிறது" என்றார் கபிலர்.

மனிதர்களைக் கையாள்வதில் குலசேகரபாண்டியனுக்கு இருக்கும் அனுபவம் இணையற்றது என்று எப்போதும் கருதும் முசுகுந்தர், இப்போதும் அதையே நினைத்துக்கொண்டார். எதிரிக்கு தோழனாகக் கருதப்பட்ட பெரும்புலவரை, இவ்வளவு இயல்பாக உரையாடலுக்குள்ளே இழுத்துக்கொண்ட அவரின் ஆற்றல் வியப்பையே தந்தது.



`` `வேந்தனின் செங்கோன்மையை இதைவிடச் சிறப்பாய் இன்னொரு புலவன் சொல்லிவிட முடியாது' என்று நான் சொன்னபோது அன்று நீங்கள் மறுத்தீர்கள் அல்லவா?" என்றார் குலசேகரபாண்டியன்.

``ஆம்" என்றார் கபிலர்.

``இன்று வரை இதற்கு இணையான பாடலை வேறு யாரும் எழுதிவிடவில்லை."

``யாரும் எழுதிவிடாததாலேயே இது சிறந்த பாடலாகிவிடுமா?" எனக் கேட்டார் கபிலர்.

``இன்றைக்கும் இதுதான் சிறந்த பாடல்."

``இல்லை. பிழையான பாடல்."

அதிர்ந்தான் குலசேகரபாண்டியன். ``பெரும்புலவர் கபிலர் பிழையான பாடல் எழுதினாரா?" எனக் கேட்டான்.

``நான் பாடல் எழுதினேன். காலம் அதை பிழையென ஆக்கியுள்ளது."

``எதை பிழையெனச் சொல்கிறீர்?''

``செங்கோன்மைக்கு நான் சொன்ன உவமை பிழையெனக் கருதுகிறேன்."

அவையில் அமைதி நீடித்தது. மற்றவர்களுக்கு அந்தப் பாடல் எது எனத் தெரியாததால், பேச்சில் பங்கெடுக்கவில்லை. முசுகுந்தருக்கு அந்தப் பாடல் நன்கு தெரியும். இந்தப் பேச்சு எதை நோக்கிப் போகிறது என்பதை உணரத் தொடங்கினார்.

கபிலர் தொடர்ந்தார், ``அரசன் நியதியை நிலைநாட்ட தண்டத்தைப் பயன்படுத்துவது பயிருக்குள் இருக்கும் களையை அகற்றுவது போன்றது எனக் குறிப்பிட்டுள்ளேன் அல்லவா அதைத்தான் சொல்கிறேன்" என்றார்.

``அது முற்றிலும் சரியான கருத்துதானே, அதிலென்ன பிழையுள்ளது?”

``அரசு அறத்தை நிலைநாட்ட தண்டத்தினைக்கொண்டு களையைப் பறிக்கலாம். ஆனால், பயிரைப் பறிப்பது எந்த வகை அறம்? அரசநியதியின் பெயரால் நிகழ்த்தப்படும் செயல்கள் அனைத்தும் செங்கோன்மைக்குப் பெருமை சேர்ப்பதாகா.”

கபிலர் சொல்லவருவது என்னவென்று எல்லோருக்கும் புரிந்தது. பேச்சு, எழுதப்பட்ட பாடலைப் பற்றியது அன்று; தூது அனுப்பப்பட்டதன் நோக்கத்தைப் பற்றியது; போர்க்களத்தின் அரசியல் பற்றியது. உரையாடல் தொடங்கும்போதே கபிலர் அவையை அந்த இடம் கொண்டுவந்து நிறுத்துவார் என யாரும் எதிர்பார்க்கவில்லை. இந்தத் தன்மையில் இந்தப் பேச்சு தொடங்கக் கூடாது; தொடரவும் கூடாது எனக் கருதிய முசுகுந்தர், ``முதலில் பயணக் களைப்பாற சுவைநீர் அருந்துங்கள். பிறகு உரையாடலாம்” என்று கை அசைத்தபடி சொன்னார். அவர் சொன்னதும் பணியாளர்கள் நீள்வாய்க்குவளையை உள்ளே கொண்டுவந்தனர். ஒவ்வொருவருக்கும் அழகிய பீங்கான் குவளையில் முந்நீர் வழங்கினர்.

முசுகுந்தர் கபிலரைப் பார்த்து, ``இது, குறும்பை நீரும் கரும்பின் சாறும் தெங்கின் இளநீரும் கலந்த முந்நீர்ச்சாறு. நீங்கள் அருந்தி நீண்டகாலம் ஆகியிருக்கும் அல்லவா?” என சற்றே எள்ளலோடு கேட்டார்.

குவளைநீரை வாங்கியபடி கபிலர் சொன்னார், ``குறும்பையும் தெங்கும் பறம்பில் நிறைய உண்டு. கரும்பை மட்டும் சமவெளி மக்களிடம் மான்தசையும் மதுவும் கொடுத்து வாங்குவர்” எனச் சொன்னவர், ``இன்னும் நீங்கள் கரும்பைப் பிழிந்து சாறெடுத்துதான் குடிக்கிறீர்களா?” எனக் கேட்டார்.


அவையோர் அதிர்ச்சியடைந்தனர். ``கரும்பைப் பிழிந்துதானே சாறெடுக்க முடியும்... வேறெப்படி எடுப்பது?” எனக் கேட்டார் சோழவேலன்.

``கரும்பின் மூன்றாவது கணு மட்டும் சிறு துளையுடையது. விளைந்த கரும்பை செம்மண்ணால் குழைத்த துணிகொண்டு அடி முதல் நுனி வரை இறுகக் கட்ட வேண்டும். மூன்றாவது கணு மட்டும் வெளியில் தெரிவதைப்போல் இருக்க வேண்டும். அதில் குவளையைக் கட்டிவைத்துவிட்டால் பனையில் கள் இறங்குவதுபோல கரும்பின் சாறு இறங்கும். பத்து கரும்புகளுக்கு ஒரு மிடறு சாறு கிடைக்கும். அதற்கு இணையான சுவைநீர் உலகில் வேறில்லை.”

கேட்டுக்கொண்டிருந்தவர்களின் நாக்கில் மூன்றாம் கணுவின் நீர் இறங்கத் தொடங்கியது.

கபிலர் தொடர்ந்தார், ``அதை மட்டுமே குடிக்க வேண்டும் என்று குவளை நிறைய நாள் தவறாமல் எனக்குத் தருவான் பாரி.”

எங்கே தொடங்கினாலும் முடிக்கவேண்டிய இடத்தில் வந்து முடிக்கிறார் கபிலர். குவளையில் முந்நீரை யாரும் அருந்தவில்லை. பேச்சின் சூழல் பொருத்தமாய் அமைவதுபோல் இல்லை. அனைவரின் எண்ணமும் அதுவாகத்தான் இருந்தது.



குவளையைக் கையில் ஏந்திய கபிலர் அப்போதுதான் கவனம்கொண்டார். உடன்வந்த அலவன் அருகில் இல்லை. ``என்னுடன் வந்த சிறுவன் எங்கே?” எனக் கேட்டார். மற்றவர்களும் அதுவரை கவனிக்கவில்லை.

கூடாரத்துக்கு வெளியே பணியாளர்கள் அங்குமிங்குமாகத் தேடினர். மூஞ்சலின் ஒரு மூலையிலிருந்து நடந்து வந்துகொண்டிருந்தான் அலவன். பணியாளர்கள் அவனை அழைத்துக் கொண்டு வந்தனர். கூடாரத்துக்குள் நுழைந்து கபிலரின் அருகே அமர்ந்தான். அவனுக்கும் குவளையில் முந்நீர் தரப்பட்டது.

அதுவரை உதியஞ்சேரலின் அருகே இருந்த கருங்குரங்குக்குட்டி திடீரென பல்லை இளித்து `கீர்ர்ர்’ரென ஓசை எழுப்பத் தொடங்கியது. என்ன ஓசையெழுப்புகிறது என மற்றவர்கள் பார்க்கும்போதே அந்த இடத்தில் மலம் கழித்தது. என்ன செய்கிறது எனப் பார்த்தறியும் முன்னரே அது நிலைகுலைந்து கத்தவும் குதிக்கவும் தொடங்கியது. சேரனின் பணியாளர்கள் உடனே வந்து அதைப் பிடிக்க முயன்றனர். அதன் செயல்கண்டு பதற்றத்தோடு உதியஞ்சேரல் கத்தினான், ``குவளையில் இருக்கும் முந்நீரை அருந்தாதீர்கள். அதில் நஞ்சு கலக்கப் பட்டிருக்கிறது.”

குலசேகரபாண்டியன் மிரண்டு எழுந்தான். ஏந்திய குவளையை சட்டென விடுத்தான் சோழவேலன்.

செங்கணச்சோழனும் பொதியவெற்பனும் அதிர்ந்தனர். முசுகுந்தர் நடுங்கிப்போனார்.

யாருக்கு எதிரான சதியிது? யாருக்கும் ஒன்றும் புரியவில்லை. மூவேந்தர்களும் ஒருவருக்கு ஒருவர் வீசிய பார்வையில் எழுப்பப்பட்ட நம்பிக்கை நொறுங்கிக்கொண்டிருந்தது.

கபிலர், ஏந்திய குவளையோடு அப்படியே இருந்தார். அருகில் இருந்த அலவன் அவரின் காதோடு சொன்னான், ``அது என்னைக் கண்டுதான் மிரண்டு கத்துகிறது. குவளை நீரில் நஞ்சேதும் இல்லை.”

குலசேகரபாண்டியனின் மேலெல்லாம் வியர்த்துக்கொட்டியது. ``சுவைநீரில் நஞ்சிருக்கிறதா என்று சோதியுங்கள். சமையலாளர்களைச் சிறையிடுங்கள்” என்றார்.

மிச்சம் இருந்த குவளைநீரை பணியாளர்கள் கைநடுங்க வந்து வாங்கினர். கபிலர் சொன்னார், ``இதில் நஞ்சேதும் இருப்பதுபோல் தெரியவில்லையே!”

``வேண்டா பெரும்புலவரே” என்று சொன்ன குலசேகரபாண்டியன் அவையைப் பார்த்துச் சொன்னான், ``முந்நீரில் நஞ்சு கலக்கப்பட்டுள்ளதா என்று சோதித்தறிந்த பிறகு பேச்சைத் தொடரலாம்.”

அவை அமைதிகாத்தது. கபிலரையும் அலவனையும் சற்றுநேரம் ஓய்வெடுக்க கூடாரத்துக்கு அழைத்துச்சென்றார் முசுகுந்தர்.

நீண்ட சோதனைக்குப் பிறகு மூவேந்தர்களின் தலைமை மருத்துவர்கள் உள்ளே நுழைந்தனர், ``பார்போற்றும் வேந்தர்களை வணங்குகிறோம். சுவைநீரில் நஞ்சேதும் இல்லை.”

``நன்றாகச் சோதித்தீர்களா?”

``முழுமையாகச் சோதித்துவிட்டோம்.”

``அப்படியென்றால் நீங்கள் மூவரும் முதலில் அருந்துங்கள்” என்றார் சோழவேலன்.
மூவரும் குவளைநீரை அருந்தினர்.

குவளையைக் கீழே வைக்கும் வரை வேந்தர்களின் கண்கள் அவர்களைவிட்டு விலகவில்லை. அருந்திய மருத்துவர்களின் கண்களில் சிறு அச்சம்கூட இல்லை. அவர்கள் குவளையைக் கீழே வைத்த கணத்தில் உதியஞ்சேரல் கத்தினான், ``அந்தக் குரங்கைக் கொன்றுவிடுங்கள்!”

சற்று இடைவெளிக்குப் பிறகு ஓய்வறையில் இருந்த கபிலரை அழைத்துவரச் சொன்னார்கள். நஞ்சு, அச்சம், சதி, விசாரணை, கொலை என சிறிது நேரத்துக்குள் அனைத்தும் நிகழ்ந்து முடிந்த ஓர் அவைக்குள் கபிலர் மீண்டும் நுழைந்தார். யார் முகத்திலும் இயல்பும் மகிழ்வும் இல்லை. பாரியின் தரப்பில் நின்று வேந்தர்களுக்கு எதிராக வெளிப்படையாகச் சொல்லேந்துவார் கபிலர் என யாரும் எதிர்பார்க்கவில்லை.

அதிகாரத்தின் மீதிருந்து வெளிவரும் நேரடியான அரசியல் பேச்சு தொடங்கியது. ``இப்பெரும் போரால் பாரியும் பறம்பும் அழிவதைத் தவிர்க்கவே நாங்கள் விரும்புகிறோம். அதற்காகத்தான் உங்களை அழைத்தோம்” என்றார் குலசேகரபாண்டியன்.

அருகில் இருந்த அலவனைப் பார்த்து, ``நீ வெளியில் போ” என்றார் கபிலர். அவன் வெளியேறினான்.

``நான் என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறீர்கள்?” எனக் கேட்டார் கபிலர்.

``பாரியை சமாதானப்படுத்தி பேரரசர்களோடு இணங்கிப்போகச் சொல்லுங்கள்” என்றார் முசுகுந்தர்.

``போருக்கு ஆயத்தமாக இருக்கும் ஒருவனைத்தானே சமாதானமாகப் போகச்சொல்ல முடியும். பாரிதான் போருக்கே ஆயத்தமாகவில்லையே, பிறகு எப்படி அவனை சமாதானமாகப் போகச்சொல்வது?”

``பெரும்புலவர், பொய் பேசத் துணிந்துவிட்டீர்! எதிர் மலையில் நாள்தோறும் எண்ணற்ற வீரர்களைக் குவித்துக்கொண்டு இருக்கிறான். அவனையா போருக்கு ஆயத்தமாகவில்லை என்று சொல்கிறீர்கள்?”

``அவனது மண்ணைக் காக்க அவனது எல்லைக்குள் வீரர்களைச் சேர்க்கிறான். அதுவா போருக்கான ஏற்பாடு?”

``எல்லையைக் காப்பதற்கும் எல்லைக்குள் இருந்து தாக்குதலுக்கு ஆயத்தமாகவதற்கும் நிறைய வேறுபாடு உண்டு. நீங்கள் அதை அறியாதவரல்லர். ஆனால், அவன் எங்களையும் எமது படையையும் அறியாதவனாக இருக்கிறான். அதை அவனுக்கு உணர்த்தவே உங்களை அழைத்தோம்” என்றார் சோழவேலன்.

``நீங்கள் தேரில் ஏறிய கணமிருந்து இந்த இடம் வந்து சேர இரு பொழுதுகள் ஆனதல்லவா! இதே வேகத்தில் தேரை ஓட்டினால் எமது படை நிற்கும் பரப்பளவு முழுவதும் பார்த்தறிய மூன்று நாள்களாகும். இந்தப் பெரும்படையோடு மோத நினைக்கும் மூடத்தனத்தை அவன் செய்ய வேண்டாம் என நீங்கள் அவனுக்கு எடுத்துரைக்க வேண்டும்” என்றார் குலசேகரபாண்டியன்.




``நாகக்கரட்டின் மேலிருந்து பார்த்தால் படையின் சரிபாதி தெரிகிறது. அதுவே இரலிமேட்டிலிருந்து பார்த்தால் ஒரே பார்வையில் மொத்த படையின் முழுமையையும் பார்த்துவிட முடிகிறது.

அவ்வளவுதான் இந்தப் படையின் அளவு. ஆனாலும் பாரி போரிட வேண்டாம் என்றுதான் முடிவுசெய்துள்ளான்” என்றார் கபிலர்.

``இந்தப் பெரும்படையைப் பார்த்தால், எந்தச் சிறுகுடி மன்னனும் போரிட வேண்டாம் என்றுதான் முடிவுசெய்வான். அதைத் தவிர அவனுக்கு வேறு வழி என்ன இருக்கிறது?” எனக் கேட்டான் உதியஞ்சேரல்.

வார்த்தைகள் உரசிக்கொள்ளத் தொடங்கின. கபிலரைக் காயப்படுத்திவிடக் கூடாது என்ற கவனம் மெள்ள மெள்ள குறைந்துகொண்டிருந்தது.

உதியஞ்சேரல் வயதால் மிகச் சிறியவன்; பலமுறை தோல்வியடைந்ததால் தீராவலியோடு இருப்பவன். அவையனைத்தும் வார்த்தைகளில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன.

``மூவேந்தர்களோடு இணங்கிப் போதல்தான் பாரிக்கு நல்லது. எண்ணற்ற சிறுகுடி மன்னர்களைப்போல அவனும் தனது நிலத்தை சிறப்பாக ஆளலாம்” என்றார் முசுகுந்தர்.

``இல்லையென்றால்..?”

``போர்க்களத்தில் அவனது குடலை கழுகுகள் ஏந்திப் பறக்கும் நாள் விரைவில் வரும்” என்றார் சோழவேலன்.

கூர்முனைகொண்ட வார்த்தைகள் அடியாழம் வரை இறங்கின. கபிலர் சற்றே அமைதிகொண்டார். அவை முழுவதும் அமைதி நீடித்தது. செங்கணச்சோழன் பொதியவெற்பனைப் பார்த்து கண்களை உருட்டி ஏதோ சொல்லச் சொன்னான். தூதுவனைச் சீண்டுவதும் மிரட்டுவதும் மிக முக்கியம். எதிரியை எந்தப் பொறியை நோக்கி நகர்த்த வேண்டும் என்பதிலிருக்கும் தெளிவுதான் தூதுவனை நோக்கி எறியவேண்டிய சொற்களை தீர்மானிக்கிறது. பாரியிடம் சமாதானம் பேசவேண்டிய தேவை எதுவும் மூவேந்தர்களுக்கு இல்லை. திசைவேழரின் வாக்கை ஏற்றதாக இருக்க வேண்டும் என்பதால், இது நடக்கிறது.

இந்தப் படையெடுப்புக்கு வேந்தர்கள் மூவருக்கும் தனித்தனியான காரணங்கள் உண்டு. பொதுவான காரணம், பாரியின் புகழ். அது இவர்களின் ஆழ்மனதை நிம்மதி இழக்கச் செய்துள்ளது. அவனது பெயர் அவமானத்தை நினைவூட்டுவதாக இருக்கிறது. அவனது அழிவு மட்டுமே இதற்கு முடிவு காணக்கூடியது. அதற்காக போர்க்களம் நோக்கி குறிவைத்து இழுக்க பேச்சுவார்த்தையைப் பயன்படுத்துதல் என்பதுதான் இவர்களது எண்ணம்.

பேசவேண்டியது பற்றி கண்களால் குறிப்புச் சொன்னதும் பொதியவெற்பன் கூறினான், ``பெரும்புலவரை வணங்குகிறேன். பேரரசர்கள் வீற்றிருக்கும் அவையில் இளவரசன் பேசுதல் முறையன்று. ஆனாலும் எனது கருத்தைத் தெரிவிக்க விழைகிறேன். பாரியின் முன்னால் இருப்பன இரண்டு வழிகள்தான்.”

என்னவென்று கபிலர் கேட்பார் எனக் கருதியது அவை. அவரோ அமைதியாக அவனையே பார்த்துக்கொண்டிருந்தார்.
கேள்வி எழாததைக் கண்டுகொள்ளாததைப் போல் பேச்சைத் தொடர்ந்தான், ``மூவேந்தர்களில் யாரேனும் ஒருவருக்கு பாரி தன் மகளை மணமுடித்துக் கொடுத்து மணஉறவு காண்பது அல்லது மூவேந்தர்களோடு போரிட்டு மாய்வது. இவை இரண்டில் எது சரியான வழியென உங்கள் நண்பனுக்கு நீங்கள் அறிவுரை வழங்குங்கள்.”
கொந்தளிக்கும் தனது எண்ணங்கள் எதுவும் முகத்தில் தெரிந்துவிடக் கூடாது என பெருமுயற்சி செய்தார் கபிலர். ஆனாலும் மற்றவர்களால் கண்டறிய முடிந்தது. இதுதான் தகுந்த நேரம் என நினைத்த சோழவேலன் சொன்னான், ``போரில் அவன் அழிவான். அதன் பிறகு மூவேந்தர்களும் பறம்பைப் பங்கிட்டுக் கொள்வோம். அதைத் தடுக்க, மூவேந்தர்களோடு மண உறவுகொள்ளுதல் சிறந்ததுதானே?”

இயற்கையின் தன்னியல்பில் பற்றிப் படரும் கொடிபோல் மனிதக்காதல் செழித்துக்கிடக்கும் ஆதிநிலம் குறிஞ்சி. குறிஞ்சியின் குலச்சமூகம் நோக்கி மணவுறவை அரசியல் நடவடிக்கை என்னும் வல்லாயுதமாக மாற்றி வீசியெறிந்தபோது கபிலரின் உடல் நடுங்கியது.
மறுசொல்லின்றி அமர்ந்திருந்தார். அமைதி நீடித்தது. சற்று நேரத்துக்குப் பிறகு கொந்தளித்த உணர்வுகளை ஒருமுகப்படுத்திப் பேசத் தொடங்கினார்,
``உங்கள் மூவருக்கும் பறம்பின் மலைகள் வேண்டும். அவ்வளவுதானே?”

நேரடியாக இப்படிக் கேட்கிறாரே என்று குலசேகரபாண்டியன் எண்ணிக்கொண்டிருந்த போது, சற்றே உயர்த்திய குரலில் சோழவேலன் சொன்னான், ``ஆமாம்.”

``அதோ அந்த மேடையில் இருக்கும் இரண்டு யாழ்களையும் இருவர் கையில் எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டு பெண்களை அழைத்து கால் சலங்கையைக் கட்டிக்கொள்ளச் சொல்லுங்கள். அனைவரும் உடன் வாருங்கள். நான் பாடுகிறேன். பாட்டிசைத்துப் பறம்பேறிய குழுக்கள் கேட்பதை `இல்லை’ எனச் சொல்லும் வழக்கம் பாரியிடம் இல்லை. மொத்த பறம்பினையும் வழங்கிவிடுவான்.”

ஆணவத்தை அடியோடு வெட்டிச் சாய்ப்பதைப்போல சொற்களை வீசியெறிந்துவிட்டு, மறுமொழி என்ன என்பதை இறுமாப்போடு பார்த்தார் கபிலர்.
கொதிநெருப்பைக் கொட்டியதுபோல துடித்தெழுந்தான் சோழவேலன். நிலைமை வேறுவிதமாக ஆகிவிடக் கூடாது எனக் கருதிய குலசேகரபாண்டியன் சட்டெனச் சொன்னார், ``நட்பால் நா பிறழ்கிறது. உமது சொற்கள் பற்றியெறியும் பறம்பினைப் பாட அதிக நாள் இல்லை கபிலரே!”

இருக்கையைவிட்டு எழுந்தார் கபிலர், ``நெருப்பில் எரித்தாலும் மீண்டும் முளைக்கும் ஆற்றல்கொண்டது பனம்பழம் மட்டும்தான். பனையை குலச்சின்னமாகக்கொண்டவன் வேள்பாரி. நெருப்பாலும் அழிக்க முடியாத அவனைப் பாடுதல் எந்தமிழுக்கு அழகு.”

சொல்லியபடி வணங்கி அவை நீங்கினார் கபிலர்.

- *பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-82

வேனிற்காலப் பள்ளியறையிலிருந்து மீண்டும் குளிர்காலப் பள்ளியறைக்கு மாறியிருந்தாள் பொற்சுவை. ஆனால், மாற்றங்கள் வேறு எதிலும் நிகழவில்லை. வேனிற்காலப் பள்ளியறையில் இருந்த காலத்திலும் பொதியவெற்பன் அங்கு வரவில்லை. அரசப் பணிக்காக வெங்கல் நாட்டுக்குப் போனவனை பேரரசர் அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டார். போர்ச்சூழலை நோக்கி நாள்கள் நகர்ந்துகொண்டிருந்தன.

மழைக்காலம் தொடங்கும் முன் பேரரசரும் புறப்பட்டுப் போனார். போருக்கான ஏற்பாடுகளுக்காக அரண்மனையின் முக்கியப் பொறுப்பாளர்கள் அனைவரும் முன்னதாகப் புறப்பட்டுப் போயினர். போர்ச்சூழல், அரண்மனையை ஆண்களின் வாசனையற்றதாக மாற்றியது. கருவூலப் பொறுப்பாளர் வெள்ளிகொண்டார் மட்டுமே கோட்டையில் தங்கியிருந்தார். அரண்மனையின் நிர்வாகப் பொறுப்பு முழுமையும் அவர்வசமிருந்தது.

கோட்டையின் பாதுகாப்புக்கான வீரர்களைத் தவிர படைக்கலனில் இருந்த அனைவரும் புறப்பட்டுப் போயினர். பேரரசரும் இளவரசரும் கோட்டைக்குள் இல்லாத காலங்களில் விழாக் கொண்டாட்டங்கள் நடப்பதில்லை. தெய்வ வழிபாட்டுச் சடங்குகள் மட்டுமே வழக்கம்போல் நடந்தன. அரண்மனையின் அன்றாடம் என்பது ஆடம்பரமற்றே இருந்தது.



இந்தப் புறச்சூழல் எதுவும் பொற்சுவையின் அகத்துக்குள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அவளது நாள்கள் வழக்கம்போலவே கழிந்தன. ஒரு பகல் பொழுதில் சுகமதியை அழைத்துக்கொண்டு அரண்மனையின் வெவ்வேறு மாளிகைகளைப் பார்த்துவந்தாள். தனித்து இருந்த அழகிய மாளிகை ஒன்று அப்போது அவளின் கண்ணில்பட்டது.

கடல் அலைகள் இடைவிடாது சுருண்டு மேலெழுவதுபோல் மாளிகையின் வெளிப்புறச் சுதைவேலைப்பாடுகள் இருந்தன. அலையை மேல்தோல் எனப் போத்தியிருக்கும் அந்த மாளிகையைப் பார்த்ததும் உள்ளே நுழையவேண்டும் என ஆசைகொண்டாள். கடல் அலையின் தளும்பல்களை காலம் முழுவதும் உணர்ந்தவள் அவள். அதைப் பார்த்ததும் கால்கள் தன்னியல்பில் அந்த மாளிகையை நோக்கி நடக்கத் தொடங்கின.

அது என்ன மாளிகை என்று உடன் இருக்கும் சுகமதிக்குத் தெரியும். எனவே, அங்கு போவதைத் தவிர்க்க முயன்றாள். ஆனால், அதற்குள் மாளிகையின் வாசல் அருகே சென்றுவிட்டாள் பொற்சுவை. இளவரசி திடீரென அங்கு வருவாள் என, பணிப்பெண்கள் எதிர்பார்க்கவில்லை. முத்துகள் பதித்த விரிவடிவத் தட்டுகளை எடுத்து வந்து அவளை வரவேற்க ஏற்பாடு செய்தனர். ஆனால், அதற்குள் பொற்சுவை மாளிகையின் உள்ளே நுழைந்துவிட்டாள்.

நிலைச்சுவரிலும் தரையிலும் பளிங்குக்கற்கள் பாவப்பட்டிருந்தன. ஓவியங்களும் மரவேலைப்பாடுகளும், மனிதக் கற்பனைக்கு எட்டாத பேரழகுகொண்டு விளங்கின. எங்கும் இசைக்கருவிகள் நிறைந்திருந்தன. வியந்து பார்த்த பொற்சுவை,”இது என்ன மாளிகை?” எனக் கேட்டாள்.
சொல்வதற்கு சற்றே தயக்கத்தோடு சுகமதி நின்றிருந்தபோது, அருகில் இருந்த தலைமைப் பணிப்பெண் சொன்னாள், “இந்த மாளிகையின் பெயர் பாண்டரங்கம்.”

பெயர் கேட்டதும், நீலவள்ளிதான் நினைவுக்குவந்தாள். ‘திருமணத்துக்காகக் கட்டப்பட்ட பாண்டரங்கில்தான் நீலவள்ளி யோடு மகிழ்ந்துகிடக்கிறான் பொதியவெற்பன்’ என்று பலமுறை கேள்விப்பட்டுள்ளாள். இந்த மாளிகையில்தான் தேவவாக்கு விலங்கின் வடக்கிருக்கும் ஆற்றல் கண்டறியப்பட்டது என்பதையும் அறிவாள். மனதுக்குள் அந்த எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்க, கண்கள் கலைவேலைப்பாடுகளைக் கண்டு சுழன்று கொண்டிருந்தன.

நிமிர்ந்து மேற்கூரையைப் பார்த்தாள். அங்கும் வானியல் காட்சிகள் வரையப்பட்டிருந்தன. காலத்தை வசப்படுத்தும் மனித முயற்சிகள் அவளுக்குச் சிரிப்பையே வரவழைத்தன. பார்த்தபடியே இடதுபுறமாகத் திரும்பினாள். மேடை ஒன்றில் மகரயாழ் வைக்கப்பட்டிருந்தது. அதற்கு சற்று தள்ளி மாளிகையின் நடுவில் விளக்கு ஒன்று இருந்தது. அதன் கலை வேலைப்பாடுகள் கண்களை ஈர்த்தன. மகரயாழை நோக்கிச் செல்ல நினைத்தவள், விளக்கை நோக்கிச் சென்றாள்.

பணிப்பெண் அருகில் வந்து சொன்னாள், “மிகச்சிறந்த கலைவேலைப்பாடுகளைக்கொண்ட விளக்கு இது. ‘காமன் விளக்கு’ என்று இதைச் சொல்வார்கள் இளவரசி.”

வீரயுக நாயகன் 82
வேள்பாரி

காதலுற்றப் பெண் ஒருத்தி வலதுகையை பக்கவாட்டில் சற்றே உயர்த்திப் பிடித்திருக்கிறாள். அவளின் உள்ளங்கையில் அகல் இருக்கிறது. இடதுகையை மார்போடு அணைத்தபடி வைத்திருக்கிறாள். அந்தக் கை ஒரு மலரைப் பிடித்துக்கொண்டிருக்கிறது. அவளின் பேரழகில் மயங்கிய காதலன் அவளின் முகம் பார்த்தபடி அணுக்கமாய் மயங்கி நிற்கிறான். அந்தச் சிலையை உற்றுப்பார்த்தபடியே நின்றாள் பொற்சுவை.

பணிப்பெண் சொன்னாள், “இந்த விளக்கில் சுடரேற்றிப் பார்க்கும்போதுதான் இதன் முழு சிறப்பும் தெரியவரும் இளவரசி.”

‘சரி’ எனத் தலையசைத்தாள் பொற்சுவை. அரங்கின் பிற பகுதிகளிலிருந்து வரும் ஒளியை, திரைச்சீலையை இறக்கி மறைத்தார்கள். பாண்டரங்கில் இருள் நிறைந்தது. பணிப்பெண்கள் காமன் விளக்கில் சுடரேற்றினார்கள். முன்திசையெங்கும் ஒளி பரவியது. அரங்கில் இருந்த கண்ணாடிகளும் முத்துகளும் ஒளியை வாங்கி உமிழத் தொடங்கின.

பணிப்பெண், “இந்த விளக்கின் சிறப்பு, உமிழும் ஒளியல்ல; படரும் நிழல்தான்” என்று பொற்சுவையைப் பார்த்துச் சொல்லியபடி விளக்கின் பின்புறத்தை நோக்கிக் கை நீட்டினாள். பொற்சுவையும் சுகமதியும் அந்தத் திசையைப் பார்த்தனர்.

ஆணும் பெண்ணுமாக இருவர் நிற்கும் சிலையின் நிழல் ஒற்றை உருவமாக படிந்திருந்தது. சுடர் அசையும்போதெல்லாம் நிழலும் அசைந்துகொடுத்தது. அசையும் நிழலுக்குள் புரளும் உருவங்களைப் பற்றி பணிப்பெண் வியந்து சொல்லத் தொடங்கினாள்.

கையை உயர்த்தி அவளின் பேச்சை நிறுத்திய பொற்சுவை. “திரைச்சீலைகளை உயர்த்துங்கள்” என்றாள்.

சற்றே அதிர்ந்த பணிப்பெண்கள் திரைச்சீலைகளை விலக்கினர். பாண்டரங்கம் மீண்டும் ஒளிகொண்டது.

சிலையின் அருகில் இருந்தபடி உற்றுப்பார்த்துக்கொண்டே இருந்த பொற்சுவை, சிறிது நேரம் கழித்துச் சொன்னாள், “இந்தச் சிலையின் சிறப்பு, வலதுகையில் ஏந்திப்பிடித்துள்ள விளக்கோ படரும் நிழலோ அல்ல.”

அனைவரும் வியந்து பார்த்தனர்.

“இடதுகையில் மார்போடு அணைத்துப் பிடித்திருக்கும் அந்த மலர்தான்.”

சுகமதி அப்போதுதான் அந்த மலரை உற்றுப்பார்த்தாள்.

“இந்தச் சிலையை வடித்த சிற்பி யார்?”

பணிப்பெண்களுக்குத் தெரியவில்லை. “கேட்டுச் சொல்கிறோம் இளவரசி.”

“விரைந்து தெரிவியுங்கள்” என்று சொல்லி, பாண்டரங்கம்விட்டு வெளியேறினாள்.

வரும் வழியில் சுகமதி கேட்டாள், “அந்த மலரின் சிறப்பு என்ன இளவரசி?”

“அந்தக் காதலர்களின் முகங்களைப் பார்த்தாயா? உள்ளுக்குள்ளிருந்து பெருகும் பேரன்பால் மலர்ந்திருக்கின்றன. விளக்கில் சுடரை ஏற்றாதபோதும் அந்த முகங்கள் மலர்ந்தே இருக்கின்றன. அப்படியென்றால், ‘அந்த மகிழ்வுக்குக் காரணம் விளக்கன்று, வேறேதோ காரணம் இருக்க வேண்டும்’ எனத் தோன்றியது. அப்போதுதான் அந்த மலரை உற்றுக்கவனித்தேன். அது தனித்துவமிக்கதொரு மலர். அதன் கீழ் இதழ்களின் அடிப்பகுதியில் சிறுசிறு வேர்கள் இருப்பதைப்போல சிற்பி வடித்துள்ளான்” என்றாள்.

“மலரின் இதழ்களில் எப்படி வேர் இருக்கும்? வேரில் காய்கள் காய்க்கும்... மலர்கள் மலருமா என்ன?”

“நானும் இதுவரை கேள்விப்பட்டதில்லை. ஆனால், வேரில் மலரும் தன்மைகொண்ட ஏதோ ஓர் அதிசய மலர் உள்ளது. அதை ஏந்திப்பிடித்துள்ளதால்தான் இந்தக் காதலர்கள் இவ்வளவு மகிழ்வோடு இருக்கிறார்கள். அதைத்தான் சிற்பி மிக நுட்பத்தோடு வார்த்துள்ளான்” என்றாள்.


அன்றைய நாள் முழுவதும் அந்த மலரையும் காமன் விளக்கையும் பற்றியே பேசிக்கொண்டிருந்தாள் பொற்சுவை. அந்த விளக்கைச் செய்த சிற்பி யார்  எனத் தெரிந்துகொள்ள, விடாது முயன்றாள்.

மறுநாள் காலையில் பாண்டரங்கின் தலைமைப் பணிப்பெண் வந்து சொன்னாள், “தங்களின் திருமணத்துக்காக வெங்கல்நாட்டுச் சிறுகுடி மன்னர் கொடுத்த பரிசுப்பொருள் அது. அங்கு உள்ள சிற்பி இதை வடித்துத் தந்துள்ளார்.”

அன்று மாலையே வெள்ளிகொண்டாருக்கு செய்தி தெரிவிக்கப்பட்டது. இளவரசி வெங்கல்நாட்டுக்குச் செல்லவேண்டும்.

போர்க்களத்துக்குச் செல்ல இளவரசி ஏன் ஆசைப்படுகிறார் என்பது வெள்ளிகொண்டாருக்கு விளங்கவில்லை. இளவரசர் அரண்மனையைவிட்டு அகன்று பல மாதகாலம் ஆகிவிட்டது. “அவரைக் காணும் விருப்பத்தில் இளவரசி புறப்படுகிறார்’’ என்று உடன் இருந்தவர்கள் அவருக்குச் சொன்னார்கள். உரிய ஏற்பாட்டோடு இளவரசியை அனுப்பிவைப்பதைத் தவிர அவருக்கு வேறு வழியேதும் தெரியவிலை.

தகுந்த பாதுகாப்போடு இளவரசியை அழைத்துச் செல்லும் பொறுப்பு செவியனுக்கு வழங்கப்பட்டது. அரண்மனையின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கும் செவியன்தான் வெங்கல் நாட்டுக்கு பலமுறை சென்று வந்த அனுபவம்கொண்டவன். எனவே, வெள்ளிகொண்டார் அவனைத் தேர்வுசெய்தார்.



மூன்றாம் நாள் அதிகாலை தேர் புறப்பட்டது. தோழிகள் புடைசூழ, அன்னகர்கள் காவல்கொள்ள, அவர்களைக் கடந்து வீரர்கள் அணிவகுக்க, செவியன் தலைமையில் பயணம் தொடங்கியது.

செவியனின் குதிரையே முன்னே பாய்ந்து சென்றது. ஆனால், அவனது மனம் குழப்பத்திலிருந்தது. கடந்தமுறை வெங்கல் நாட்டிலிருந்து இளமாறனை மதுரைக்கு அழைத்து வந்தது செவியன்தான். ஆனால், அவனால் அழைத்துவரப்பட்டவன் மீண்டும் உயிரோடு வெங்கல்நாடு திரும்பவில்லை. இப்போதோ இளவரசியை வெங்கல்நாடு நோக்கி அழைத்துச்செல்கிறான். இந்தப் பயணம் எப்படி அமையப்போகிறதோ என்ற குழப்பத்தில் தவித்தது அவனது மனம்.

விரைந்து பயணித்தனர். குதிரைகள் இளைபாறுதலுக்காக ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. அப்போதெல்லாம் தேர்விட்டு இறங்கி வெளியில்வரும் இளவரசி, சற்று தொலைவு நடந்து இயற்கையின் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தாள். மழைக்காலம் முடிவுற்ற நேரமிது. வயல்வெளியெங்கும் உழவுத்தொழில் செழிப்புற்று இருக்கவேண்டிய காலம் இது. ஆனால், காட்சிக்கு அப்படித் தெரியவில்லை. அந்த வழி சென்ற இரண்டு பெண்களை அழைத்துக் கேட்டாள் பொற்சுவை.

“ஊர்களில் ஆண்கள் இருந்தால்தானே உழவுத்தொழிலைச் செய்ய முடியும். எல்லோரையும் போர்க்களத்துக்கு அனுப்பச் சொல்லி அரச உத்தரவு. பிறகு எப்படி பயிர்செய்ய முடியும்?” எனக் கேட்டுவிட்டு நடந்தனர் பெண்கள்.

செல்லும் வழியில் எதிர்படும் ஊர்களில் தேர் நின்றது. பெண்களும் குழந்தைகளும் வயோதிகர்களும் மட்டுமே ஊர்களில் இருந்தனர். நீரும் வயலும் இருந்தும் பயிரை விளைய வைக்க முடியாத கொடுமையைப் பார்த்துக்கொண்டே கடந்தாள். கொல்லர், தச்சர், பறம்பர் என எவரும் ஊரில் இல்லை. எல்லோரும் போர்க்களம் சென்றுவிட்டனர். தானியங்களைச் சேமிக்க வழியின்றி இருக்கும்

சின்னஞ்சிறு ஊர்களில் எல்லாம் கோடைக்காலத்தைப் பற்றிய கவலை இப்போதே வரத் தொடங்கிவிட்டது. ஏறக்குறைய எந்த ஊரும் இந்த ஆண்டு முழுமையான அறுவடையைச் செய்யவில்லை. வரப்போகும் காலம் எவ்வளவு கொடுமையாக இருக்கப்போகிறது என்பதை ஒவ்வொருவரின் கண்களிலும் கண்டாள் பொற்சுவை.

இரண்டாம் நாள் பயணத்துக்குப் பிறகு அவள் மனிதர்களைப் பார்ப்பதைத் தவிர்த்தாள். காட்சிகள் மனதைக் கலங்கடிப்பனவாக இருந்தன. எனவே, திரைச்சீலை விலகாமல் பார்த்துக்கொண்டாள்.

தொடர்ந்து பயணித்து வெங்கல்நாட்டு மாளிகையை அடைந்தனர். பாண்டியநாட்டு இளவரசியின் திடீர் வரவு, வெங்கல்நாட்டு அரண்மனையைத் திகைப்புறச் செய்தது. புதிதாகக் கட்டப்பட்ட மாளிகை ஒன்றில் அவள் தங்கவைக்கப்பட்டாள். போர்க்களம், பலகாதத் தொலைவு தள்ளி இருக்கிறது. செவியன் அங்கு சென்று மையூர்கிழாரைக் காண முயன்றான். ஆனால், அதற்கு வாய்ப்பில்லை எனத் தெரிந்தது. மையூர்கிழாருக்கு செய்தி அனுப்பப்பட்டது. அவர் வரும் வரை காத்திருந்தனர்.

இரண்டாம் நாள்தான் செய்தி மையூர்கிழாரை எட்டியது. அவர் காலாட்படையின் வடகோடியில் இருந்தார். செய்தியை அவர் முதலில்  நம்பவில்லை. ‘உலகின் பேரழகி என வர்ணிக்கப்படும் பாண்டியநாட்டு இளவரசி, தனது அரண்மனைக்கு வந்துள்ளாரா?!’ வியப்பு நீங்காமல் குதிரையை விரைவுபடுத்தினார்.

‘பொதியவெற்பன் மதுரைக் கோட்டை யிலிருந்து நீங்கி பல மாத காலம் ஆகிவிட்டது. அதனால்தான் இளவரசியாரும் புறப்பட்டு இங்கு வந்துள்ளார்’ என்று எண்ணியபடியே அவள் தங்கியுள்ள மாளிகையை அடைந்தார். பாண்டியநாட்டு வழக்கப்படி நுன்னிழை பட்டுச் சரடுகளாலான திரைச்சீலைகள் அலையலையாய் மறைத்திருக்க அப்பால் நின்றிருந்த இளவரசி திரை விலக்கி வெளியே வந்தாள். தலை தாழ்த்தி வணங்கிய அவர், இளவரசியின் வருகையை வர்ணித்துக் கூறிய வார்த்தைகளை முடிக்க நீண்டநேரமானது. பொற்சுவை மகிழ்ந்து அவரது வரவேற்பை ஏற்றாள்.

“அமைச்சர் முசுகுந்தரிடம் நான் வந்துள்ள செய்தியைத் தெரிவியுங்கள். அவர் பொருத்தமான நேரத்தில் பேரரசரிடமும் இளவரசரிடமும் இந்தச் செய்தியைச் சேர்ப்பார்” என்றாள்.

“உத்தரவு இளவரசி. அவ்வாறே செய்கிறேன்” என்று கூறி, புறப்பட ஆயத்தமான மையூர்கிழாரை நோக்கி சுகமதி கேட்டாள், “இளவரசியாரின் திருமணத்துக்கு காமன் விளக்கைப் பரிசாகத் தந்தீர்கள் அல்லவா... அந்த விளக்கைச் செய்த சிற்பி எங்கே?”



மையூர்கிழார் உள்ளுக்குள் மகிழ்ந்தார். இந்த மாளிகைக்கு இளவரசர் வரும் நாளன்று காமன் விளக்கு இங்கு இருக்க வேண்டும் என இளவரசி விரும்புவதாக எண்ணிக்கொண்டார்.

“உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்கிறேன்” என்று கூறிய மையூர்கிழார், அரண்மனையின் தலைமைச் சித்திரக்காரர் குழல்தத்தனை அழைத்து காராளி எங்கு இருந்தாலும் அழைத்துவர உத்தரவிட்டு போர்க்களம் திரும்பினார்.

குழல்தத்தன் வயதில் மூத்தவர். இளவரசியைக் கண்டு வணங்கினார். “காராளியின் ஊர் மலைக்குன்றுகளுக்குள் இருக்கிறது. போய்த் திரும்ப மூன்று நாள்கள் ஆகும்” என்று சொல்லிச் சென்றார்.

இளவரசி பொற்சுவை, பயணக்களைப்பு நீங்க ஓய்வெடுத்தாள். மூன்று நாள்களுக்குப் பிறகு குழல்தத்தன் வந்தார். ஆனால், உடன் யாரும் வரவில்லை. இளவரசியிடம் பணிந்து சொன்னார், “காராளி வர மறுத்துவிட்டான் இளவரசி.”

யாரும் எதிர்பாராத பதிலாக இருந்தது.

“பாண்டியநாட்டு இளவரசியின் அழைப்பை ஒரு சிற்பி மறுத்துச் சொல்கிறானா?” எனச் சற்றே கோபத்தோடு கேட்டாள் சுகமதி.

குழல்தத்தன் பேச்சற்று நின்றார்.

“ஏன் மறுத்தான்?” எனக் கேட்டாள் பொற்சுவை.

குழல்தத்தன் எந்த விளக்கமும் சொல்லாமல் நின்றார்.

மீண்டும் கேட்டாள் பொற்சுவை. காரணத்தைச் சொல்வதன்றி குழல்தத்தனுக்கு வேறு வழியில்லை.

“ ‘வாக்குத் தவறியவனின் சொல்லுக்கு மதிப்பளிக்க மாட்டோம்’ எனக் காராளி கூறுகிறான்.”

பொற்சுவைக்குப் புரியவில்லை.”வாக்குத் தவறியது யார்?” எனக் கேட்டாள்.

தயக்கத்தோடு குழல்தத்தன் சொன்னார், “எங்கள் மன்னர் மையூர்கிழார்.”

சற்றே அதிர்ந்தார் பொற்சுவை.

“ ‘பறம்பின் மீது தாக்குதல் தொடுக்கவோ, தொடுப்பவருக்கு உதவியோ செய்ய மாட்டோம் என்பது எம் முன்னோர்களின் வாக்கு. மையூர்கிழார் அதை மீறிவிட்டார். இனி இந்த மண்ணை நான் மிதிக்க மாட்டேன்’ எனக் கூறி வர மறுத்துவிட்டான்” என்றார் குழல்தத்தன்.

காரணம் அறிந்ததும் அமைதிகொண்டாள் பொற்சுவை. அந்த அமைதி, அவன் மீதான கோபமாக உருமாறவில்லை. என்ன சொல்லப்போகிறாரோ என குழல்தத்தன் எதிர்பார்த்திருக்க,"அவன் இங்கு வரவேண்டாம், நான் அங்கு செல்கிறேன்" என்றாள் பொற்சுவை.

குழல்தத்தன் பதறிப்போனார். "இளவரசியார் மலைக்குன்றுகளுக்குள் இருக்கும் அவனுடைய இடத்துக்குப் போகவேண்டுமா!" என்றார்.

அதற்குள் அவளின் ஆணை அன்னகர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பல்லக்குகள் ஏற்பாடாயின. "நாளை காலை புறப்படலாம்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள் பொற்சுவை.

மையூர்கிழாரைக் கண்டு இதைத் தெரிவிக்க முடியவில்லை. அவர் மூவேந்தர்களின் படைக்குள் எங்கு இருக்கிறார் என்பதை அறிவதே இயலாத செயலாகத் தோன்றியது. எனவே, அழைத்துச் செல்வதைத் தவிர குழல்தத்தனுக்கு வேறு வழியில்லை.

பல்லக்கைச் சுமந்தபடி காரமலையின் அடிவாரக் குன்றுகளுக்குள் நுழைந்தனர் அன்னகர்கள். குழல்தத்தன் முன்னால் போய்க்கொண்டிருந்தார். காரமலையின் அடிவாரத்தில் உள்ளொடுங்கி இருக்கும் ஆறு ஊர்களும் வெங்கல்நாட்டுக்கு உட்பட்டவை. அதற்கு முன்னும் பின்னுமாக இருக்கும் ஊர்கள் பறம்புக்கு உட்பட்டவை. உடலெங்கும் வியர்த்துக்கொட்டியபடி இருந்தது. ஆனாலும் பறம்பு மக்கள் மீதிருந்த நம்பிக்கையில் அவர் துணிந்து அழைத்துச்சென்றார். எந்த ஓர் ஆபத்தும் அவர்களால் நேராது என்பது அவரின் எண்ணம்.

சரிவுப்பாறையில் வண்ணக் கலவைகொண்டு ஓவியம் வரைந்துகொண்டிருந்தான் காராளி. அவன் இருக்கும் இடமறிந்து அங்கேயே அழைத்துச் சென்றார் குழல்தத்தன். மலையேற்றப் பாதையில்கூட பல்லக்கைக் குலுங்காமல் தூக்கி வந்தனர் அன்னகர்கள். திறள்கொண்ட அவர்களின் தோள்களும் துடுப்பு போன்ற அகலமான பாதங்களும் அதற்கென பழக்கப்பட்டவை.

சற்று தொலைவில் இருந்த காராளியிடம் போய்ப் பேசினார் குழல்தத்தன். காராளி திரும்பிப் பார்த்தான். பல்லக்கைக் கீழிறக்கிக்கொண்டிருந்தார்கள். உள்ளே இருந்து பெண் ஒருத்தி இறங்கி அவனை நோக்கி வந்தாள். "வருபவர்தான் பாண்டியநாட்டு இளவரசி" என்று சொல்லி, அந்த இடம்விட்டு அகன்றார் குழல்தத்தன். சுகமதி பல்லக்கின் அருகேயே நின்றுகொண்டாள்.

இளவரசியை மகிழ்ந்து வரவேற்க, காராளி ஆயத்தமாக இல்லை. தலையைத் தாழ்த்தியபடி உயிரற்றக் குரலில் வரவேற்புச் சொல்லைக் கூறினான்.

தனது வரவை விரும்பாத ஒருவனின் முன் நிற்கிறோம் என்பதை முதல் பார்வையிலேயே உணர்ந்தாள் பொற்சுவை. 'ஆனாலும் என்ன, அவனது கலை என்னை இங்கே வரவைத்தி ருக்கிறது. வாக்கு மீறியவன் மன்னனேயானாலும் அவன் மாளிகைக்கு வர மாட்டேன் என்று சொல்லும் துணிவு பிடித்திருக்கிறது. அதனால்தான் வந்துள்ளேன்' என மனதுக்குள் நினைத்தபடி சொன்னாள், "நீ வடித்து தந்த காமன் விளக்கு மிகச் சிறப்பாக இருக்கிறது."

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் செய்து தந்த விளக்கைப் பற்றிய நினைவுவந்தது. எல்லோரையும்போல அதன் சிறப்பை அறியாமலேயே சிறப்பித்துக் கூறும் இன்னொ ருவர் என நினைத்தபடி “நன்றி” என்றான் தலைநிமிராமல்.

“அந்தச் சிலையின் அழகு, சுடரில் ஒளியேற்றும்போது இணைந்துவிழும் நிழலில் இருப்பதாகக் கூறினர். ஆனால், எனக்கு அவ்வாறு தோன்றவில்லை” என்றாள்.

சற்றே விழிப்புற்றான் காராளி. தாழ்த்தியிருந்த தலையை மெள்ள உயர்த்தி இளவரசியைப் பார்த்தான். “உங்களுக்கு என்ன தோன்றியது?” எனக் கேட்டான்.

“அவள் இடதுகையில் பிடித்திருக்கும் மலரில்தான் அந்தச் சிலையின் உயிர் இருப்பதாக நினைக்கிறேன்.”

வியப்புற்று விரிந்தன கண்கள். காராளி, சொற்களின்றி அவளின் முகம் பார்த்தபடியே நின்றான்.

“நான் சொல்வது சரிதானா?” எனக் கேட்டாள்.

சற்று இடைவெளிக்குப் பிறகு “எப்படிக் கண்டறிந்தீர்கள்?”




“நீ விளக்கில் வடித்துள்ள சிலைகள் அவ்வளவு உயிர்ப்போடு இருக்கின்றன. அவர்களின் முகங்களில் இருக்கும் மகிழ்வை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அதற்குக் காரணம், இடதுகையில் ஏந்தியிருக்கும் மலர்தான். அவள் அதை உயிரெனக் காத்து வைத்திருக்கிறாள்.”

“ஆம், அதுதான் மலர்களிலே அதிசிறந்தது. காதலின் குறியீடாக மலைமக்கள் போற்றுவது.”

பெருவியப்போடு பொற்சுவை கேட்டாள், “என்ன மலர் அது? அதன் சிறப்பு என்ன?”

முகம் மலர்ந்து காராளி சொன்னான், “நிலத்தில் பூக்கும் பூக்கள் எல்லாம் ஒருமுறைதான் மலர்கின்றன. பிறகு காய்ந்து உதிர்ந்துவிடுகின்றன. ஆனால், நீர்ப்பூக்கள் அப்படியன்று. அவை மலர்கின்றன. பிறகு கூம்புகின்றன, மீண்டும் மலர்கின்றன. பூக்களின் அதிசயம் நீர்ப்பூக்கள் என்றுதான் பலரும் கருதுவர்.”

“ஆம், அதில் என்ன ஐயம்?” எனக் கேட்டாள் பொற்சுவை.

“நீர்ப்பூக்களைப்போல மலர்ந்து பிறகு கூம்பி, மீண்டும் மலரும் பூ ஒன்று நிலத்திலும் இருக்கிறது.”

பெருவியப்போடு, “நீ சொல்வது உண்மையா?” எனக் கேட்டாள் பொற்சுவை.

“ஆம்” என்று சொன்ன காராளி, “அதில் வியப்புக்குரிய செய்தி இதுவன்று; இதனினும் சிறந்த ஒன்று உள்ளது” என்றான்.

சொல்லி முடிக்கும் முன்னர் “என்ன அது?” என்று கேட்டாள்.

காராளி சொன்னான், “முளைக்கும் பயிர் நிலத்தை முண்டி மேலே வருவதைப்போல, வேரிலிருந்து முளைக்கும் இந்த மலர் நிலத்தை முண்டி மேலே வந்து மண்ணோடு மலரும். இதன் வியப்புக்குரிய குணம் என்னவென்றால், மனிதர்கள் யாரேனும் அருகில் போனால் மலர்ந்த அதன் இதழ்களை மீண்டும் கூப்பி உள்ளே இழுத்துக்கொள்ளும். அதன் மேலிதழ்களில் சிறுசிறு முற்கள் இருக்கும். பார்ப்பவர்கள் ஏதோ முள்காய் மண்ணுள் கிடக்கிறது என நினைத்து கடந்து போய்விடுவார்கள்” என்றான்.

பொற்சுவை அசையாமல் கேட்டுக்கொண்டி ருந்தாள். காராளி, பேச்சை நிறுத்தி அமைதியானான்.

“அப்படியென்றால், மனிதர்கள் இதைப் பார்க்கவே முடியாதா?”

“முடியும். பேரன்பால் ஒன்றுகலந்த காதலர்கள் மண்ணுள் புதைந்திருக்கும் இதன் அருகே உட்கார்ந்து, ஈசல் புற்றை மெள்ள ஊதுவதுபோல மூச்சுக்காற்றால் ஊத வேண்டும். காதல் இணையர்களின் மூச்சுக்காற்று படப்பட கொஞ்சம் கொஞ்சமாக இந்த மலர் மலர்ந்து வெளிவரும் என்று சொல்வார்கள்.”

பொற்சுவையின் உடல் நடுங்கி அடங்கியது, “நீ சொல்வது உண்மையா?”

“ஆம்” என்றான் காராளி. “இதன் ஆதிப்பெயர் நிலமொரண்டி. ஆனால், ‘காதல் மலர்’ என்றால்தான் காட்டில் உள்ளவர்களுக்குத் தெரியும்.”

பொற்சுவை சொல்லின்றி நின்றாள்.

“பாரியும் ஆதினியும் தங்களின் மூச்சுக்காற்றால் மலரவைத்த காதல் மலரை ஏந்தி நின்றார்கள் என்று என் ஆசான் ஒருமுறை கூறினார். அந்தக் காட்சியை நான் கற்பனையாக வரைந்திருந்தேன். மையூர்கிழார் புதுமையாக ஏதாவது பரிசுப்பொருள் செய்ய வேண்டும் என்று சொன்னபோது அந்த ஓவியத்தையே விளக்காக வடிவமைத்தேன். எல்லோரும் சிலை அமைக்கப்பட்ட கோணத்தால் நிழல் படர்வதைத்தான் கவனித்தார்களே தவிர, கையில் ஏந்தியிருக்கும் காதல் மலரை யாரும் கவனிக்கவில்லை. நீங்கள் மட்டுமே அந்த அதிசய மலரைக் கண்டறிந்திருக்கிறீர்கள்” என்றான்.

மூர்ச்சையாவதைப்போல தாக்குண்டு நின்றாள் பொற்சுவை. “நீ வடித்துள்ள சிற்பத்தில் இருப்பது பாரியும் ஆதினியுமா?”

“அவர்களை நினைத்துதான் அந்த ஓவியத்தை வரைந்தேன். அந்த ஓவியம்கொண்டே சிற்பத்தை உருவாக்கினேன். அப்படியெனில், அதில் இருப்பது அவர்கள்தானே!”

மிரட்சியிலிருந்து மீள முடியவில்லை. “பாண்டியப் பேரரசின் பாண்டரங்கத்துக்குள் இத்தனை காலமாக இருப்பது பாரியின் சிலையா?!” கலங்கி நின்றாள் பொற்சுவை.

“மனங்களை வெல்லத் தெரிந்தவன் ஒருபோதும் தோல்வியடைய மாட்டான். நாடுகளையும் காலங்களையும் கடந்து, கலைகளால் அவன் வாழ்வான். இன்னும் எத்தனை நூறு ஆண்டுகள் கழித்தும் மனமொன்றிய காதலர்கள் நிலமொரண்டியைக் கண்டு மூச்சுக்காற்றை ஊதினால் பாரியும் ஆதினியுமே இதழ்களாய் விரிவார்கள்” என்றான் காராளி.

கலங்கிய கண்களோடு பேச்சின்றி நின்றாள் பொற்சுவை. அவளின் ஆழ்மனதுக்குள் மூச்சுக்காற்று ஊதப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால், புதைந்துபோன அவளது காதல் மலர் இதழ் விரித்து மேலெழவில்லை. சற்றே அதிர்ச்சியாகி நின்றாள். காலம் கடந்துவிட்டது எனத் தோன்றியது. மூச்சுக்காற்றின் ஓசை மட்டும் கேட்டபடியிருக்க அந்த இடம்விட்டு மெள்ள நகர்ந்தாள்.

‘எதுவும் சொல்லாமல் போகிறாரே!’ என நினைத்த காராளி, பொற்சுவையைப் பார்த்துக் கூறினான், “நாங்கள் ஆறு ஊர்க்காரர்களும் வெங்கல்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால், வாக்குத் தவறியவனுக்காக வில்லேந்த மாட்டோம் என்று உறுதிகொண்டுள்ளோம். எனவே, போர்க்களம் புகப்போவதில்லை. தங்களுக்கு விருப்பமானதைச் சொல்லுங்கள் இளவரசி. செய்துதருகிறேன்”.

தள்ளிப்போன பொற்சுவை கண்களைத் துடைத்தபடி திரும்பினாள். முகம் மெள்ள மலர்ந்தது. காராளியைப் பார்த்துச் சொன்னாள், “எனக்கு வேண்டியதை நீ தந்துவிட்டாய்!”

அவளது புருவங்கள் இசைவாய் வளைந்து கீழிறங்குவதும், இமையோரத்து மயிர்கால்கள் அதை எவ்விப் பிடிக்க முயல்வதும் யாராலும் வரைய முடியாத ஓவியம்போல் இருந்தன. அந்த அழகிய விழிகளைவிட்டு காராளியின் கண்கள் விலகவில்லை.

பேச்சின்றி நின்ற காராளியைப் பார்த்து, “என்ன?” என்றாள் பொற்சுவை.


“இந்த உலகில் வரைய முடியாத ஓவியங்கள் இருக்கும்வரை, ஓவியன் வரைந்துகொண்டே இருப்பான்” என்று சொல்லி மீண்டும் வண்ணக்கலவையைக் கையில் ஏந்தினான் காராளி.

- *பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-83

கபிலர் திரும்பி வந்ததும் அவரிடம் கேட்கப்பட்டதைவிட அலவனிடம்தான் அதிக கேள்விகள் கேட்கப்பட்டன. அவன் அனுப்பப்பட்டதும் அதற்காகத்தான். வேந்தர்களின் படைக்கலக் கொட்டிலில் நஞ்சு சேகரிப்பு இருக்கிறதா, எந்த வகை நஞ்சுகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்பன போன்ற செய்திகள் தேவைப்பட்டன. அதனால்தான் கபிலருக்கு உதவியாளனாக அலவனை அனுப்பிவைத்தான் தேக்கன்.

அலவனின் வேலையை எதிரிகளே பாதியாகக் குறைத்தனர். கபிலரை அழைத்துச்செல்லும்போதே ஆயுதச் சேகரிப்பு இடங்களான படைக்கலக் கொட்டில்கள் மூன்றின் வழியாகத்தான் சாகலைவன் அழைத்துச் சென்றான். வேந்தர்களின் போர் ஆயுதங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடம் எவ்வளவு பெரியதாக இருக்கிறது என்பதைக் காட்டும் உத்தியாக அவ்வாறு செய்தார்கள். ஆனால், அதுவே அலவனின் வேலையைக் குறைத்தது. படைக்கலக் கொட்டில்கள் மூன்றும் எங்கெங்கு இருக்கின்றன என்பதை முதலிலேயே பார்த்துக்கொண்டான்.



பிறகு பேச்சுவார்த்தை நடத்தும்போது, ``நீ வெளியில் இரு'' என கபிலர் சொன்னதும் வெளியில் வந்த அலவன் மூன்று இடங்களையும் போய்ப் பார்த்தான். அவன் பார்க்க நினைக்கும் இடங்களுக்கு வீரர்களே அழைத்துச் சென்றனர். வேந்தர்களின் கூடாரத்துக்குள்ளிருந்து வெளியேறிவந்து கேட்டதால், `அரச உத்தரவு' என நினைத்து தங்குதடையின்றி அழைத்துச் சென்றனர். அலவன் சிறியவனாக இருந்ததால் அவனை ஐயம்கொள்ளவும் வழியின்றிப்போனது.

அலவன் நீண்டநேரம் சுற்றினான். நஞ்சின் வாடையை காற்றை நுகர்ந்தே கண்டறியும் உயிரினங்கள் உண்டு. நஞ்சின் குணமேறிய காற்று பட்டவுடன் வண்டுகள் குழறி ஒலிக்கும்; அன்றிற்புல் மயக்கமெய்யும்; காடை மயிர்சிலிர்க்கும்; மயிலோ நிலைபிறழ்ந்து துள்ளும். இவற்றைப்போலவே நஞ்சின் வாடையை நுகர்ந்தறியும் ஆற்றல்கொண்டவர்கள் நாகக்குடியினர். ஆனால், துள்ளுவது, சிலிர்ப்பது, மயங்குவது என எந்தவிதத்திலும் வெளிக்காட்டிக்கொள்ளாதவர்கள். சிறுவன் எல்லா இடங்களையும் சுற்றிப்பார்த்துத் திரிகிறான் என உடன் இருந்த காவல் வீரர்கள் நினைத்தனர். ஆனால் அவனோ, காற்றில் கலந்திருக்கும் நஞ்சை நிதானமாக நுகர்ந்து ஆய்ந்துகொண்டிருந்தான்.

போய் வந்ததும் முறியன் ஆசான் அவனை அழைத்துப்போய்விட்டார். ஆறாம் குகைக்குள் மருத்துவர்கள் புடைசூழ அலவன் அமர்த்தப்பட்டான். எந்த வகையான நஞ்சுகள் அவர்களின் சேமிப்பில் இருக்கின்றன என அவன் பட்டியலிட்டபோது அனைவரும் வாயடைத்துப்போயினர். இவ்வளவையும் மனிதர்கள் மீது செலுத்த அவர்கள் ஆயத்தநிலையில் வைத்திருக்கிறார்கள் என்பது கேள்விப்படவே பேரதிர்ச்சியாக இருந்தது. இவற்றைச் சேகரிக்கவும் உருவாக்கவும் ஆண்டுகள் பல ஆகியிருக்க வேண்டும்.

நஞ்சைச் சேகரித்தல் எளிதன்று; மருத்துவ அறிவு எங்கு செழிப்புற்று இருக்கிறதோ அங்குதான் நஞ்சைக் கையாளும் முறையும், சேகரிக்கும் முறையும் சிறப்புற்று இருக்கும். தாழைமலரின் மணம்கொண்ட நாகத்தின் நஞ்சும் புளியம் பூ மணம்கொண்ட விரியனின் நஞ்சும் மிக அதிக அளவில் இருந்தன சேரனின் படைக்கலக் கொட்டிலில். புகைநாற்றம்கொண்ட கந்தக நஞ்சு, பாண்டியனின் கொட்டிலிலும், நுகர்ந்த உடனே மார்பு எரிச்சலை உருவாக்கிய பற்பத்தாலான நஞ்சு சோழனின் கொட்டிலிலும் பாதுகாக்கப்பட்டிருப்பதை அலவன் விரிவாகச் சொன்னான்.

``இந்த வகை நஞ்சுகளை எந்த ஆயுதங்களினூடேயும் பயன்படுத்த வாய்ப்புண்டு. இதனால் நமது வீரர்கள் தாக்குண்டால் களத்துக்குள்ளேயே செய்துகொள்ளவேண்டிய மருத்துவம் என்ன... களம்விட்டு வெளியில் கொண்டுவரும் வரை தாக்கப்பட்டவருக்கு உயிர் நிலைக்குமா... அதற்கு என்ன வழி, மருத்துவச்சாலையை இவ்வளவு உயரத்தில் இரலிமேட்டிலே அமைத்துள்ளது எந்த வகையில் பயன்படும்... நாகக்கரடின் கீழே உடனடி மருத்துவத்துக்கு வகைசெய்யும் ஏற்பாட்டைச் செய்யவேண்டுமா?'' என்று உரையாடல் தொடர்ந்தது. அலவன் கண்டறிந்து சொன்ன செய்திக்குப் பிறகு நஞ்சு முறியைச் சேகரிக்கும் பணிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது.

**மு**ன்னுரிமை கொடுக்கப்படவேண்டிய பணி எது என்பது, மையூர்கிழாருக்கு பெருங்குழப்பமாகவே இருந்தது. பாண்டியப் பெருவேந்தனின் மனம்கோணாமல் நடப்பதுதான் அவருக்கு இருக்கும் முன்னுரிமை. ஆனால், என்று மூஞ்சல் நகர் அமைக்கப்பட்டு பாதுகாப்பு அரண் உருவாக்கப்பட்டதோ, அன்றிலிருந்து இன்று வரை அவரால் மூஞ்சல் நகருக்குள் செல்ல முடியவில்லை. வேந்தர்களுக்கான எல்லா தேவைகளையும் நிறைவுசெய்யப் போதுமான நிர்வாக ஏற்பாட்டுடனேயே அவர்கள் உள்ளனர். அமைச்சர் முசுகுந்தர் மூலமே செய்தியை அவ்வப்போது பரிமாறிக்கொண்டார். இளவரசி வந்துள்ள செய்தியை முசுகுந்தரிடம் தெரிவித்தார். அதேபோல போர்க்களம்விட்டு சற்று தொலைவில் தனித்த குடில் ஒன்றில் தங்கியுள்ள திசைவேழரைப் பற்றிய செய்திகளையும் அவ்வப்போது சொல்லிவந்தார்.

மூவேந்தர்களின் படைகள் நிலைகொள்ளும் வரை மையூர்கிழாருக்கு எண்ணற்ற வேலைகள் இருந்தன. ஆனால், படைகள் நிலைகொண்டவுடன் அவருக்குச் சொல்லப்பட்ட முக்கிய வேலை என்பது பறம்புமலைக்குள் எதிரிகள் என்ன செய்கிறார்கள் என்பதை அறிந்து சொல்லுதல் மட்டுமே.
அவர் வாக்கு மீறிய காரணத்தால் அவருடைய வெங்கல்நாட்டைச் சேர்ந்த ஆறு ஊர்க்காரர்கள் இந்தப் போரில் பங்கெடுக்க மாட்டோம் என முடிவுசெய்துள்ளதை அவர் வேந்தனிடம் தெரிவிக்கவில்லை. அது அவர் மீதான மதிப்பைக் குறைத்துவிடும் என நினைத்தார். ஆனால், 'இந்தச் செய்தியை என்று இவன் சொல்கிறான் பார்ப்போம்' எனக் காத்திருந்தார் குலசேகரபாண்டியன்.

ஒற்றாடுதல் என்பது, பெருங்கலையாக வேந்தர்களால் வளர்த்தெடுக்கப்பட்டிருந்தது. வெங்கல்நாட்டு நிர்வாகத்துக்குள் என்னென்ன நடக்கின்றன என்பதை அறிந்து சொல்ல ஒற்றர்படைத் தலைவன் ஒருவனின் கீழ் ஒரு குழு இயங்கியது. அவர்களைப் பொறுத்தவரை மையூர்கிழார், பொற்சுவை, திசைவேழர் எல்லோரும் கண்காணிக்கப்பட வேண்டியவர்களே! அவர்கள் அறிந்த செய்தியை ஒற்றர்படைத் தலைவனிடம் நாள்தோறும் கூறுகின்றனர். அவனோ தனக்கு மேலிருக்கும் பொறுப்பாளனிடம் கூறுகிறான். அவனைப்போல எத்தனை பேர் ஒற்றர்படையில் இருக்கிறார்கள் என்பதை குலசேகரபாண்டியன் மட்டுமே அறிவார்.

குலசேகரபாண்டியன் அமைத்துள்ள ஒற்றர்படை, இணையற்றச் செயல்பாட்டுத் திறனைக்கொண்டிருந்தது. அதனால்தான் சேரனையும் சோழனையும் துணிந்து தனது போர் செயல்பாட்டுக்குள் இணைத்துக் கொண்டார். அவர்கள் இருவரின் படைகளும் பாசறைகளும் குலசேகரபாண்டியனின் செவிப் பறையால் கேட்கக்கூடிய இடங்களாகத்தான் இருந்தன.

சேரனும் சோழனும் ஒற்றர்படை கொண்டிருந்தனர். ஆனால், மாபெரும் இயக்கம் ஒன்றின் ஒரு பகுதியாக இணைந்த பிறகு அதன் மொத்த இயக்கத்தைக் கண்காணிப்பது எளிய செயலன்று. ஆனாலும் அவர்களின் ஒற்றாடற்பணியும் தீவிரமாகத்தான் இருந்தது. அவர்கள் பணியின் இலக்காக இருந்தது பறம்பில் நடப்பதறிந்து வெல்லும் செயலுக்கானதன்று. மாறாக, எதிரியாலோ, மற்ற இரு பேரரசுகளாலோ தங்களுக்கு ஏதும் தீங்கு நேரிடாமல் காக்கும் செயலுக்கானதாக இருந்தது. எனவே, அவர்கள் தற்காப்பு ஆயுதமாக ஒற்றாடலைப் பயன்படுத்தினர். குலசேகரபாண்டியனோ தாக்கும் கருவியாக ஒற்றாடலை கூர்தீட்டியிருந்தான்.

``**போ**ரில் ஆயுதங்கள் மட்டுமே கருவிகள் அல்ல; எந்த ஓர் ஆயுதத்தையும்விட அதிக பாதிப்பை ஏற்படுத்தும் வல்லமை, கண்டறியப்படும் செய்திகளுக்கு உண்டு. எனவே, வெங்கல்நாட்டுக்குள் பறம்புக்குடிகள் சிலரையாவது அனுப்பிவைக்க வேண்டும். அவர்களின் செயல்பாடுகளை ஒற்றறிவது அவசியம்'' என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

``தன்னையும் தனது வீரத்தையும் நம்பாதவனே ஒற்றனை நம்புகிறான்'' என்றான் பாரி.

வாரிக்கையன் மறுத்தான். ``வீரமும் தந்திரமும் சம முக்கியத்துவம்கொண்டவை. போர்க்களத்தில் இரண்டிலும் திறன்மிக்கவர்களாக இருத்தல் வேண்டும்.''

``வீரத்தின்வழி மட்டுமே போரை நடத்துவோம். அறமற்ற வழிக்கு `தந்திரம்' எனப் பெயர் சூட்டுவது கோழைகளின் செயல்'' என்று சொன்ன பாரி, சற்றும் இடைவெளியின்றி தொடர்ந்தான், ``நாம் விரும்பாத ஒரு வழிமுறையில் போரை நடத்தப்போவதில்லை. எதிரிகளின் அறமற்றச் செயலைப் பற்றி நாம் ஏன் கவலைகொள்ள வேண்டும்?''



இப்போது கபிலர் குறுக்கிட்டார், ``போரென்று வந்துவிட்டால், அதற்கு வெற்றி மட்டுமே நோக்கமாக இருக்க முடியும். அந்த வெற்றியை அடைய நிகழ்த்தப்படும் கொலையில் அறமும் அடக்கம். எனவே, போரில் அறம் நெடுநேரம் உயிர்வாழாது. நாம் விரும்பாவிட்டாலும் இதுதான் உண்மை.``

``அறத்தின் கொலைக்கு நாம் காரணமாக இருக்கக் கூடாது. அதுமட்டுமன்று, அந்தக் கொலைக்குக் கைம்மாறுசெய்யும் சீற்றத்தை நாம் இழந்துவிடக் கூடாது.''

பாரியின் சொல்லுக்குப் பிறகு அங்கு எந்தக் கருத்தும் மிஞ்சவில்லை.

இரவு நீண்ட உரையாடல் முடிந்து தூங்குகையில் பொழுது நள்ளிரவைத் தாண்டியிருந்தது.

மறுநாள் மிகவும் காலம் தாழ்த்தியே பாரி எழுந்தான். அவன் எழுந்தபோது எதிரில் நின்றிருந்தான் நீலன்.

அவனைக் கண்டதும்தான் பாரியின் நினைவுக்கு வந்தது, இன்று மயிலாவுக்கான நிறைசூல் விழா. வள்ளிக்கூத்து நடக்கும் நாள். பெண் முதன்முறையாகக் கருவுறும்போது ஒன்பதாம் மாதம் அவளை அவளது இல்லத்திலிருந்து அழைத்துப்போய் சந்தனவேங்கை மரத்தின் அடிவாரத்தில் இரவெல்லாம் வள்ளிக்கூத்து நடத்துவர். பெண்கள் மட்டுமே கலந்துகொள்ளும் பெருங்கூத்து இது. கூத்து முடிந்ததும் மூத்த மருத்துவச்சியின் குடிலுக்கு அழைத்துச்செல்வர். குழந்தை பிறக்கும் வரை அவள் அங்குதான் இருப்பாள். பெண்களின் முதல் மகப்பேறுக்காக நடக்கும் பெருவிழா இது.

வள்ளிக்கூத்தில் ஆண்களுக்கு அனுமதியில்லை. எனவே, இன்று வரை அந்தக் கூத்து எப்படி நடக்கிறது என்று எந்த ஆணுக்கும் தெரியாது. ஆனால், அதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை யாரையும் விடுவதில்லை.

கருவுற்றவளை சந்தனவேங்கை நோக்கி அனுப்பிவைக்கும் சடங்கு, இன்று நடக்க இருக்கிறது. வள்ளிக்கூத்தில் கலந்துகொள்ள ஆதினியும் அங்கவையும் வேட்டுவன் பாறையில்தான் இருந்தனர். பாரியும் வேட்டுவன்பாறைக்கு வருவதாகச் சொல்லியிருந்தான். ஆனால், நேரம் அதிகமாகிவிட்டது. ``நீ இப்போது புறப்பட்டால்தான் மாலைக்குள் போய்ச்சேருவாய். காலம் தாழ்த்தாமல் புறப்படு. நான் இரவுக்குள் வந்து சேருகிறேன்'' என்றான் பாரி.

பாரியின் சொல்லை ஏற்று புறப்பட்டான் நீலன். உடன் அவன் தோழர்கள் புங்கன் உள்பட பத்து பேர் புறப்பட்டனர். காலம்பனின் மூத்தமகனான கொற்றனும் உடன்வந்தான். இரலிமேட்டில் இருக்கும் குகைகளை இந்தப் போருக்காகத்தான் தங்குமிடமாக மாற்றினர். எனவே, இங்கிருந்து மற்ற இடங்களுக்கு செம்மையான குதிரைப்பாதைகள் உருவாகிவிடவில்லை. இரலிமேட்டிலிருந்து கீழே வந்து நாகக்கரடின் வழியே நெடுந்தொலைவைக் கடந்து பிறகு மீண்டும் காரமலையின் மீது ஏறித்தான் குதிரைப் பாதையைப் பிடிக்க முடியும். அதன் பிறகு விரைந்து பயணித்தால் மாலைக்குள் வேட்டுவன்பாறையை அடையலாம். அதனால்தான் ``காலம் தாழ்த்தாமல் புறப்பட்டுப் போ'' என்றான் பாரி.

நீலன் புறப்பட்டுச் சென்ற பிறகு இரலிமேட்டின் மேற்புறம் இருந்த சிற்றருவியில் குளிக்கச் சென்றான். அவனது எண்ணம் முழுக்க நேற்றிரவு நடந்த உரையாடலையே மையம்கொண்டிருந்தது. `போரில் அறம் நெடுநேரம் உயிர்வாழாது' என்ற கபிலரின் வார்த்தை, அவனை இரவெல்லாம் தூங்கவிடவில்லை. பெரும்போரை நோக்கி கொஞ்சம் கொஞ்சமாக உள்ளிழுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறோம் எனத் தோன்றியது.

`நாம் இறங்கித் தாக்கவேண்டிய எந்தத் தேவையும் இல்லை. இப்படியே பறம்புவீரர்கள் எல்லோரும் ஊர்

திரும்பினால் இந்தப் போர் முடிவுக்கு வந்துவிடும். எதிரிகள், இப்போது இருக்கும் இடத்தைவிட்டு பறம்புக்குள் ஒருபோதும் நுழைய மாட்டார்கள். அப்படியே நுழைந்தாலும் அவர்களை அழிக்க நீண்ட பொழுதாகாது. அதை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். அதனால்தான் கண்ணுக்கு முன்னால் பெரும்படையை நிறுத்தி கொஞ்சம் கொஞ்சமாக உருவேற்றுகிறார்கள். எதிரி என்ன செய்கிறான் எனச் சிந்திக்கத் தொடங்குவதே அவனது நோக்கத்துக்குள் நாம் இழுபட்டதன் அடையாளம்தான். தேக்கன் அலவனை அனுப்பியிருக்கக் கூடாது. அவசரப்பட்டுவிட்டான். சேகரிக்கப்பட்டுள்ள கொடும்நஞ்சைப் பற்றிய செய்தி, வீரர்களை மேலும் முறுக்கேற்றிவிடும். நாம் அவர்களை நோக்கி இழுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறோம்' என்ற எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்கும்போது மரத்தின் மீதிருந்து சற்றே மாறுபட்ட பறவையின் ஒலி கேட்டது.

`என்ன பறவை இது... கேட்டிராத ஒலியாக இருக்கிறதே!' என நினைத்து இங்கும் அங்குமாகப் பார்த்தான். எதுவும் தெரியவில்லை. சிறிது நேரத்துக்குப் பிறகு மீண்டும் ஒலி கேட்டது. ஒலி வந்த திசையைக் கூர்ந்து நோக்கினான். சின்னஞ்சிறிய பறவை இன்று முறுக்கித்திரும்பும் கிளையில் உட்கார்ந்திருந்தது. உற்று அதையே பார்த்துக்கொண்டிருந்தான். `அதுதான் கூவியதா... என்ன பறவை அது?' எனப் பார்த்தபடி இருந்தான். மீண்டும் கூவியது. இப்போதுதான் அதன் முகப்பகுதியை முழுமையாகப் பார்க்க முடிந்தது.

ஒரு கணம் திகைத்துப்போனான். அது கருங்கிளி. காட்டின் வியத்தகு பறவைகளில் ஒன்று. எளிதில் யார் கண்ணுக்கும் தட்டுப்படாதது. மகிழ்ச்சி பொங்க அதையே பார்த்துக்கொண்டிருந்தான் பாரி. சிறிது நேரத்தில் அது பறந்து காட்டில் மறைந்தது. சிறுவயதில் தந்தையோடு பயணப்பட்டபோது பார்த்தது. ஆண்டுகள் பல ஆகிவிட்டன. நினைவு, கருங்கிளியையே சுற்றிவந்தது. குளித்து முடித்துத் திரும்பும்போதுதான் தோன்றியது, `கருங்கிளையைப் பார்ப்பது மிக நல்ல நிமித்தம். பறம்பில் உள்ள எல்லோரும் அதை அறிவர். இந்தச் செய்தியைச் சொன்னால் `தாக்குதலை இன்றே தொடங்க வேண்டும் என்று கூறுவார் வாரிக்கையன். எனவே, இதைப் பற்றி பகிர்ந்துகொள்ள வேண்டாம்' என நினைத்தபடி குகைத்தளத்துக்கு வந்தான் பாரி.

உணவு முடித்து சிறிது நேரத்தில் வேட்டுவன்பாறை நோக்கிப் புறப்பட ஆயத்தமானபோது நாகக்கரட்டிலிருந்து குதிரைவீரர்கள் இருவர் வந்தனர். ``முடியன் உடனே தங்களை அழைத்துவரச் சொன்னான்'' என்றனர். போர் தொடர்பான முக்கியச் செய்தியாக இருக்கும். அதனால்தான் உடனே வரச்சொல்லி அழைப்பு அனுப்பியுள்ளான் முடியன் என்பதைப் புரிந்துகொண்ட பாரி, புறப்பட்டான். தேக்கனும் கபிலரும் பின்தொடர்ந்தனர்.



மாலை நெருங்கிக்கொண்டிருந்தது. நீலனின் பயணம் வேட்டுவன்பாறையை நோக்கி விரைந்துகொண்டிருந்தது. செல்லும் வழியில் குமரிவாகையைப் பார்த்தான். வாகைமரத்தில்

முதன்முதலாகப் பூப்பூக்கும் வாகையை `குமரிவாகை' என்பர். குமரிவாகையின் மலர் பேரெழில் கொண்டதாக இருக்கும். மயிலாவுக்கு சூடுவதற்காக அதைப் பறித்துக்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தான்.

வேட்டுவன்பாறைக்குள் நுழையும்போது ஊரே விழாக்கோலம்கொண்டிருந்தது. சேவலின் நெற்றிக்கொண்டை போன்ற கவிர்மலரால் மலரணி வாயிலை உருவாக்கியிருந்தனர். தோரணங்களும் மாலைகளும் எங்கும் தொங்கவிடப்பட்டிருந்தன. சிறுமியர் எல்லாம் ஈங்கைமலரை கூந்தலில் சூடி ஆடிப்பாடிக்கொண்டிருந்தனர். சிட்டுக்குருவியின் குஞ்சு போன்ற அந்த மலர் சிறுமியரின் தலையாட்டலுக்கு ஏற்ப தாவித் தாவி பறந்துகொண்டிருந்தது. மலர் மணக்க, தண்டு மணக்க, தாது மணக்க எங்கும் நிறைந்த மனத்தினூடே மலர்ந்திருந்தது வேட்டுவன்பாறை.

மயிலாவின் தோழிகள் நீலனை வரவேற்று அவனது குடில் நோக்கி அழைத்துச்சென்றனர். மற்ற காலம் என்றால், ஊரே ஆட்டம்பாட்டத்தில் மூழ்கியிருக்கும். போர்ச்சூழலாதலால் அது இல்லை. நீலன், குடிலுக்குள் நுழைந்தான். நிறைசூல் மங்கை எதிரில் அமர்ந்திருந்தாள். குனிந்திருந்த மயிலாவின் முகம் சற்றே நிமிர்ந்தது. மாதம் கழித்து வந்தவனின் கைகளைப் பற்றி நிறை வயிற்றில் வைத்து மகவை உணரச்செய்ய வேண்டும் எனத் தோன்றியது. `நீ கொடுக்கும் முத்தத்தை உள்நாக்கு நழுவி உணர்வதுபோல இருக்கிறது அடிவயிற்றுக்குள் துடிக்கும் மகவின் செயல்' என அவனது காதோடு சொல்லவேண்டும் என ஆசையாய் இருந்தது. ஆனால், அவனது முகத்தைப் பார்த்த கணம் எல்லாம் சொல்லப்பட்ட உணர்வோடு அமைதியானாள்.

அவளைப் பார்த்தபடி எதிரில் அமர்ந்த நீலன், சிறிது நேரம் கழித்து ஆதினியைத் தேடினான். சிரித்த முகத்தோடு நீலனின் அருகில் வந்து அமர்ந்தாள் ஆதினி. பெண்களின் கேலிப் பேச்சினூடே ஏதேதோ நடந்துகொண்டிருந்தது. ஒருத்தி மயிலாவின் காதோரம் போய் ஏதோ சொன்னாள். மகிழ்ந்து சிரித்தாள் மயிலா.

விரிந்த மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை மயிலாவின் கையில் கொடுத்து நீலனுக்குச் சூட்டச் சொன்னாள் ஆதினி. அதை வாங்கிய மயிலா, மலர்ந்த முகத்தோடு விரிமலர் மாலையை நீலனுக்குச் சூடினாள். ஆணின் மலர்தல் பெண்ணின் சூலகத்திலிருந்தே விளைகிறது.

மணம்மிக்க பச்சிலைகளாலான படலை மாலையை நீலனின் கையில் கொடுத்து மயிலாவுக்கு சூட்டச்சொன்னாள் ஆதினி. இருகரம் ஏந்தி அவளுக்கு அணிவித்தான் நீலன். பச்சிலைகளின் ஆதிமணம் சூல்கருவுக்குள் இறங்கும்போது நீலனின் மணமும் இணைந்தே கலந்தது. குடிலெங்கும் நிரம்பிவழிந்தது குலவையொலி.

ஆதினி நீலனிடம் சொன்னாள், ``நீ கொண்டுவந்த பூவை இப்போது அவளுக்குச் சூட்டு.''

நீலன் மறுமொழி சொல்லாமல் மயிலாவையே பார்த்துக்கொண்டிருந்தான்.

``என்ன பேசாமல் இருக்கிறாய்?'' என ஆதினி மீண்டும் கேட்டதற்கு, மயிலாவைப் பார்த்துக்கொண்டே

நீலன் சொன்னான், ``நிறைசூல் பெண்ணின் மலர்ந்த முகத்துக்கு இணையான மலர் இதுவரை கண்டறியப் படவில்லை. நான் எந்தப் பூவைச் சூட்டுவேன் அவளுக்கு?''

அவன் சொல் கேட்டு ஆதினியின் கண்கள் கலங்கின. நீலனைத் தன் மகன் எனத் தழுவி நெற்றிமுகர்ந்து முத்தம் கொடுத்தாள். அப்போதுதான் கவனித்தாள், நீலன் கொண்டு வந்தது குமரிவாகை. ``வாகைப்பூவையா பறித்து வந்தாய்? வாகை, கொற்றவை குடிகொள்ளும் மரமல்லவா? இந்தப் போர்க்காலத்தில் போர் தெய்வத்தின் பூக்கள் உன்னிடமே இருக்கட்டும். அவை உனக்கானவை'' என்றாள்.

நிறைந்திருந்த ஓசையின் நடுவே அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த தோழி ஒருத்தி நீலனைப் பார்த்து சத்தம்போட்டுச் சொன்னாள், ``உனக்குரியது வாகைமலர்தான்; காந்தள் மலர் அல்ல. அதனால்தான் உன் வீட்டை அலங்கரிக்க காந்தள் மலரைப் பயன் படுத்தவில்லை. அதற்கான தகுதி உனக்கில்லை'' என்றாள்.

அவள் சொன்னதைக் கேட்டு வீடு வெடிப்பதைப்போல பெண்கள் சிரித்தனர். தொடர்ந்து அவள் சொன்னாள், ``நீ குடில்விட்டு வெளியேறு. நாங்கள் மயிலாவை அழைத்துக் கொண்டு வள்ளிக்கூத்துக்குப் புறப்படுகிறோம்.”

சிரிப்பொலிக்கும் கேலிப்பேச்சுக்குமிடையே குடில்விட்டு வெளியேறி வந்தான் நீலன். காத்திருந்த தோழர்கள் அவன் அருகில் வந்தார்கள். குடிலுக்குள்ளிருந்து வெளிவந்தவனின் மீது வெளிப்படும் பூந்தாதுவின் மணம் யாரையும் மயக்கக்கூடியதாக இருந்தது. மணத்தை நுகர்ந்தபடியே புங்கன் சொன்னான், ``பெண்களின் விழாதான் இயற்கையின் திருவிழா. ஆண்களுக்கு இதுபோல எந்த விழாவும் இல்லையே!”

அந்தக் கவலை எல்லோருக்கும் இருந்தது. நீலனுக்கு, கூடுதலாக ஒரு கவலை இருந்தது. ஏன் இந்த விழாவில் காந்தள் மலர் பயன்படுத்தப் படவில்லை; தனக்கு அந்தத் தகுதி ஏன் இல்லை எனத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று அங்குமிங்குமாக விசாரித்தான்.

மயிலாவின் காதோரம் கேலிபேசி சிரித்த தோழி வெளியில் வந்தபோது அவளிடமே கேட்டான் நீலன். அவள் சொன்னாள், ``காந்தள் மலர் மலரும் வரை தேனீயோ வண்டோ காத்திருக்காது. கிண்டி மலரச்செய்து தேன் பருகும். ஆனால், நீ அப்படியல்ல. பொறுமை காத்திருக்கிறாய். மணம் ஆன பிறகுதான் மகவைப் பெற்றுள்ளாய். எனவே, உனக்கு காந்தள் மலரைச் சூடும் தகுதியில்லை” எனச் சொல்லியபடி சிரித்துக்கொண்டே ஓடினாள்.



நீலனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ``நான் அப்படியல்ல என்று சொல்வதா, அப்படித்தான் என்று சொல்வதா'' புரியாத குழப்பத்தில் நின்றான்.

நேரமாகிக்கொண்டிருந்தது. வள்ளிக் கூத்துக்கான ஏற்பாடுகள் தீவிரமாகின. நீலன் தலைமையில் வந்த பத்து இளைஞர்களும் ஊரில் இருந்த கிழவர்கள் பன்னிருவருமாக 22 ஆண்களும் ஏக்கத்தோடு பார்த்திருக்க, மயிலாவை அழைத்துக்கொண்டு புறப்பட ஆயத்தமாகினர் பெண்கள்.

படைக்களத்தின் மூன்று மூலைகளிலும் போர்ப்பலிக்கான சடங்குகள் உச்சிப்பொழுதில் தொடங்கின. ஈனாமல் இளவயதிலேயே செத்துப்போன பசுவின் தோலை மயிர்சீவல் போத்தியிருந்த போர்முரசுகள் ஒலிக்கத் தொடங்கின. நிணத்தைத் தின்று குதித்தாடும் பேய்மகளிரின் ஆட்டத்துக்கான கருங்கூத்துக்களம் ஆயத்தமாகிக்கொண்டிருந்தது.

இணையற்ற வீரர்கள் களப்பலிக்குத் தேர்வுசெய்யப்பட்ட செய்தி படையெங்கும் பரவியது. கொப்புளிக்கும் குருதிபோல் வீரவுணர்ச்சி பெருக்கெடுக்க ஆயுதங்களை ஒன்றுடனொன்று உரசி பேரொலியை எழுப்பினர். சடங்குகள் தொடங்குவதற்கான நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. முரசுகளின் ஓசை சீரான வேகத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடத்தொடங்கியது.

முரசு அதிரும் ஓசைகள் ஆங்காங்கே கேட்பதறிந்த முடியன், எதிரிப்படையில் ஏதோ நடக்கிறது என நினைத்து பாரியை அழைத்து வரச்சொல்லி வீரர்களை அனுப்பிவைத்தான். பாரியும் தேக்கனும் கபிலரும் நாகக்கரடுக்கு வந்து சேர்ந்தனர்.

படைகளின் மூன்று திசைகளிலும் மூன்று பலிச்சாலைகளில் சடங்குகள் தொடங்கின. ஆனால், முக்கியச் சடங்கு மூஞ்சலில் நடக்க விருந்தது. அது பகலின் மறைவுக்குப் பிறகுதான் தொடங்கவிருந்தது. ஆனால், மற்ற இடங்களில் பலிச்சடங்குகள் நண்பகல் இருந்தே தொடங்கின. பூசகர்கள் மலர்களையும் கனிகளையும் கொண்டுவந்து குடுவைநீரைத் தெளித்து தீ மூட்டி சடங்குகளைத் தொடங்கினர்.

சடங்குகளின் ஓசை, முரசுகளின் பேரொலி, பேய்மகளிரின் கூத்தாட்டம் எல்லாம் நேரமாக ஆக கூடியபடி இருந்தன. பொழுது மறையத் தொடங்கும்போது பலிச்சடங்கு உச்சம்கொள்ளத் தொடங்கியது. வீரனின் குருதி ஏந்தியபடி கதிரவன் களம் நீங்குவான். அவனது தாகம் நீக்கப்பட்டதன் கைம்மாறாக போர்க்களத்தில் தனது ஒளி படர்ந்துகிடக்கும் ஒரு பகல் பொழுதில் வெற்றியைத் தருவான். அதற்குத்தான் இந்தப் பலிச்சடங்கு நடக்கிறது.

கதிரவனின் தாகம் நீக்க பேரொலிகொண்ட சடங்கு நடக்கும்போது, இதற்குத் தொடர்பில்லாத இன்னொரு சடங்குக்காக மூஞ்சல் ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. அது யட்சினிக்கான சடங்கு. பேராற்றலைக்கொண்ட அழிவின் தேவதை யட்சினி. மலையெனக் குவிக்கப்பட்ட வீரர்களின் உடல்களைக் கண்டும் தாகம் தணியாதவள். மனிதப் பிணங்களையே புணர்ந்து மகிழ்பவள். அவளை இறைஞ்சி அழைக்கும் சடங்கு தொடங்கியது மூஞ்சலில்.

நிலமெங்கும் இருள் கவிழ்ந்தது. சடங்குக்காக மலர்களாலும் குருதி பிசைந்த தினைமாவாலும் நாற்சதுரமிடப்பட்ட நிலம் நோக்கி அதை அழைத்து வந்துகொண்டிருந்தனர். பேய்முரசு முழங்கியது. வீரர்களே அஞ்சி நடுங்கும் பேரோசை இரவெங்கும் பரவியது. நிறைசூலியின் பால்கட்டிய மார்புபோல திரண்ட கும்பத்தையுடைய யானை அது. நேற்று வரை பாண்டியப் பேரரசின் சிறப்புக்குரிய முதுயானை பவளவந்திகை; இப்போதோ யட்சினியின் வாகனம்.

முரசுகளின் முழக்கத்துக்கேற்ப அதை இருளுக்குள் அழைத்துவந்தனர். சடங்கு நிலத்தில் பூசகர்களின் பெருங்கூட்டம் நின்றிருந்தது. குளித்த ஈரத்தை உலர்த்தாமல் நீர்வடிய நின்றிருந்தனர் மூவேந்தர்களும்.

பேய்முரசுகளின் ஓசை இருளை உலுக்கியது. கடல்போல் கிடந்த படையெங்கும் பேரமைதி நிலவியது. சடங்குகளின் தனித்த ஓசை இரவெங்கும் எதிரொலித்துக்கொண்டிருந்தது. அதிர்ந்து அதிர்ந்து பரவிய ஓசை கேட்டு பேய்மகளிர் மூன்று திசைகளிலிருந்தும் மூஞ்சலை நோக்கி வந்துகொண்டிருந்தனர். அவர்களின் கூந்தல் முழுவதும் வீரர்களின் குருதியால் நனைந்திருந்தது. அவர்கள் ஆடிய கருங்கூத்தால் நிலம் அதிர்ந்துகொண்டிருந்தது. அவர்கள் மூஞ்சலுக்கு வந்துசேர்ந்தபோது பவளவந்திகையும் வந்துசேர்ந்தது.

நள்ளிரவைத் தொடுவதற்கு சிறிது நேரமே இருந்தது. பவளவந்திகையை, மண்ணில் அமரச்செய்தான் பாகன். அதன் முகம் முழுவதையும் தோலாடைகளால் இறுகக் கட்டினர். பேய்முரசின் மேல்தோல் விடாது புடைத்தெழுந்துகொண்டிருந்தது. மேலெழும் ஓசை இருளின் செவிப்பறையைக் கிழித்துக் கொண்டிருந்தது.

நாகக்கரடின் உச்சியில் நின்றபடி படைகள் இருக்கும் திசையையே பார்த்துக்கொண்டிருந்தான் பாரி. நண்பகலில் போர்ச்சடங்குகள் மூன்று மூலைகளில் தொடங்கின. ஆனால், இரவான பிறகும் சடங்குகள் முடியவில்லை. படைகளின் நடுப்பகுதியில் சடங்கொன்று தொடங்கும் ஓசை கேட்டதும் `இது என்ன புதியதாய் இருக்கிறதே!' என இருளின் திசையைப் பார்த்தபடியே நின்றிருந்தனர்.

நள்ளிரவைத் தொடும் நேரத்தில் யானை ஒன்றின் சாவுப்பிளிறல் இருளெங்கும் எதிரொலித்தது. வேந்தர்களின் வீரர்கள் அனைவரும் பேய்க்கூச்சல் எழுப்பி ஆயுதங்களை ஒன்றுடனொன்றை உரசி வெற்றி முழக்கமிட்டனர்.

நாகக்கரடின் மேல் இருந்தவர்களுக்கு என்ன நடக்கிறது எனப் புரியவில்லை. ஆனால், யானையின் பிளிறல் கேட்ட கணம் கபிலரின் உடல் நடுங்கி மீண்டது. சிறிது நேரத்துக்குப் பிறகு மெள்ளச் சொன்னார், ``அவர்கள் யட்சினிக்கான சடங்கை நடத்துகிறார்கள்!"

``அப்படியென்றால்?'' விளக்கம் கேட்டான் முடியன்.

``காக்கும் போருக்கும் தாக்கும் போருக்கும் அந்தந்தத் தெய்வ வழிபாட்டுச் சடங்குகளை நடத்துவார்கள். ஆனால், பேரழிவை உருவாக்கும் போருக்கு யட்சினி வழிபாட்டை நடத்துவார்கள். அவள் அழிவின் தேவதை. எதிரியின் படை நோக்கி அவளை ஏவிவிடும் சடங்குக்கான பெரும்பலியை அவர்கள் கொடுத்துள்ளனர்."

எல்லோரும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்க, கபிலர் சொன்னார் ``அவர்கள் தாக்குதலைத் தொடங்கப்போகிறார்கள்.''

- *பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-84

வேட்டுவன்பாறையில் இருந்த பெண்கள் கூட்டம் மயிலாவை அழைத்துக் கொண்டு வள்ளிக் கானம் நோக்கிப் புறப்பட்டது. கூத்துக்களத்தில் இசைக் கருவிகளை இசைக்கக்கூட ஆண்கள் யாருக்கும் அனுமதியில்லை. எல்லாவற்றையும் பெண்களே இசைக்க வேண்டும். எனவே, ஊரில் இருந்த பறை, துடி, முழவு என ஒன்றைக்கூட விடவில்லை. மந்தையில் கட்டியிருந்த காரிக்கொம்பைக்கூட கழற்றி எடுத்துக்கொண்டார்கள். கரைபுரண்ட உற்சாகத்தினூடே கூட்டம் புறப்பட்டது.
பெருங்குரைப்பொலியோடு நாய்க்கூட்டமும் மொத்தமாக உடன் சென்றது.

சந்தனவேங்கை, காட்டின் எந்தத் திசையிலும் இருக்கக்கூடியதுதான். ஆனால், கருவுற்ற பெண்ணுக்கான சடங்கைச் செய்ய எந்தச் சந்தனவேங்கையைத் தேர்வுசெய்கின்றனரோ அந்த மரம் இருக்கும் பகுதியைத்தான் `வள்ளிக்கானம்' என்பர். அங்கு நடக்கும் சடங்கு என்னவென்று இன்று வரை ஆண்களுக்குத் தெரியாது. பறம்புப்பெண்கள் காலங்காலமாய்க் காத்துவரும் ரகசியம் இது. இரவெல்லாம் கூத்து நடத்துகிறார்கள் என்று மட்டுமே ஆண்கள் அறிவர். அங்கு என்ன வகையான கூத்து நடக்கிறது என்பதெல்லாம் புரிந்துகொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கிறது. இந்தச் சடங்கில் பங்கெடுத்துத் திரும்பும் பெண்கள், அதன் பிறகு நெடுநாள்கள் அந்த மகிழ்வைப் பேசிக் களிப்பர். அதுதான் ஆண்களை மேலும் சினமேற்றும். என்னதான் நடக்கிறது அங்கு எனத் தெரிந்துகொள்ள, எண்ணற்ற வழிமுறைகளைக் கையாண்டு பார்த்தனர். ஆனாலும் இன்று வரை அவர்களால் எதையும் கண்டறிய முடியவில்லை.

சு.வெங்கடேசன் ஓவியங்கள்: ம.செ.,

காதல்வயப்பட்ட இளம்பெண், தன் காதலன் மீதான அளவுகடந்த அன்பால் இந்தச் சடங்கில் நிகழ்வதைப் பற்றிச் சொல்ல வாய்ப்பிருக்கிறது. ஆண்கள் அதற்கான முயற்சியையும் செய்துபார்த்தார்கள். ஆனாலும் எந்தக் காதலியும் தன் காதலனிடம் இதை மட்டும் பகிர்ந்து கொள்வதேயில்லை.

காரணம், இந்தச் சடங்கில் பங்கெடுக்கும் இளம்பெண்ணிடம் முதுபெண்கள் சொல்லும் முதல் எச்சரிக்கையே அவள் காதலனைப் பற்றியதுதான். ``வள்ளிக்கூத்தில் என்ன நடக்கிறது என்பதை உன் காதலனிடம் பகிர்ந்துகொள்ளக் கூடாது. அவ்வாறு பகிர்ந்துகொண்டால், உனது பிள்ளைப்பேறு வலி மிகுந்ததாக மாறும். அப்போது எந்த ஆணும் உனது வலியைச் சுமக்க வர மாட்டான். நாங்கள்தான் உடன் நிற்போம். அளவுகடந்த உனது வலியைவைத்தே நீ தப்பு செய்துவிட்டாய் எனக்

கண்டறிந்துவிடுவோம்'' என்று சொல்லிவிடுவார்கள். இது ஓர் அச்சமூட்டும் எச்சரிக்கைக்காகச் சொல்லப் படுவதுதான். ஆனால், இளம்பெண்கள் பிள்ளைப்பேறு வலியை நினைத்துப்பார்த்து யாரிடமும் வாய் திறக்க மாட்டார்கள்.




ஆணுக்குத் தெரியாத ஓர் உலகை, இன்று வரை பறம்புப்பெண்கள் காப்பாற்றிவருகின்றனர். அதுவே அவர்களுக்குப் பெருமகிழ்வைக் கொடுப்பதாகவும் இருக்கிறது. அவர்களின் இந்த மகிழ்வுதான் ஆண்களை மீண்டும் மீண்டும் கண்டறியத் தூண்டிக்கொண்டே இருக்கிறது. இன்றுகூட அதற்கான முயற்சிதான் நடந்தது. இரலிமேட்டிலிருந்து வள்ளிக்கூத்துக்காக நீலன் புறப்பட்டபோது, ``காலம்பன் மூத்தமகன் கொற்றனையும் அழைத்துச் செல்'' என்று வேட்டூர் பழையன் அனுப்பிவைத்தான். அதற்கான காரணம் இதுதான். உள்ளூர்ச் சிறுவர்களை அனுப்பினால் வள்ளிக்கானத்துக்கு அழைத்துச் செல்ல மறுப்பார்கள். அதுவே காலம்பன் மகன் என்றால், மறுத்து ஒதுக்க மாட்டார்கள் என நினைத்து அனுப்பிவைத்தான் பழையன். ஆனால், காட்டுக்குள் நுழையும்போது அவனை நீலனின் கையில் கொடுத்து, ``இங்கேயே இரு. நாங்கள் காலையில் வந்து உனக்கு விருந்துபடைக்கிறோம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள் பெண்கள்.

வேட்டுவன்பாறையின் வயதான இரண்டு பெருசுகள், சோமக்கிழவனும் செம்பூந்தனும். பழையனைவிட சற்று வயது குறைவுதான். ஆனால், மலைப்பாறைகளில் உருண்டதால் நடமாட்டம் வேகமாகத் தளர்ந்துவிட்டது. அதிக தொலைவு நடக்க முடியாத கிழத்தன்மையை அடைந்திருந்தனர். அதனால்தான் இப்போது இரலிமேட்டுக்குப் போகாமல் ஊரிலேயே இருக்கின்றனர். காட்டுக்குள் நுழைந்த பெண்கள் கொற்றனை அழைத்துச் செல்லாமல் ``இங்கேயே இரு" எனக் கூறிச் சென்றவுடன், சோமக்கிழவன் தான் கொதித்தெழுந்தான்.

``சின்னப் பையன் ஆசையாகக் கேட்கிறான். அவனக்கூட கூட்டிப்போகாம விட்டுட்டுப் போறீங்களேடி!" எனப் பெருஞ்சத்தத்தை எழுப்பினான். ஆனால், பெண்கள் யாரும் கண்டுகொள்ளவேயில்லை. கிழவன் ஏன் கத்துகிறான் என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியும். எல்லாக் காலங்களிலும் சிறுவர்களின் மூலமாகவும் காதலன்களின் மூலமாகவும்தான் ஆண்கள் முயல்கிறார்கள். இன்று வரை அந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இப்போதும் கொற்றனைக் கொஞ்சிப் பேசி, நீலனுக்குப் பக்கத்தில் உட்காரவைத்துவிட்டுப் போய் விட்டார்கள்.

அங்கவை, இதுவரை வள்ளிக்கூத்தில் கலந்துகொண்டதில்லை. முதன்முறையாக இப்போதுதான் அவள் கலந்துகொள்கிறாள். பெண்கள் கூட்டம், மயிலாவை அழைத்துக் கொண்டு காட்டுக்குள் போய்க்கொண்டிருந்தது. தீப்பந்தங்களை ஏந்தியவர்கள் முன்னும் பின்னுமாக வந்துகொண்டிருந்தனர். ஆதினிக்கு அருகில் சற்றே அமைதியாக நடந்து வந்து கொண்டிருந்தாள் அங்கவை. கூட்டத்தின் பேச்சொலியினூடே அவளின் அமைதியைக் கவனித்த ஆதினி அருகில் சென்று கேட்டாள்,

``முதன்முறையாகப் பங்கெடுப்பதால் என்னவெல்லாம் நடக்கும் என்ற சிந்தனையிலேயே வருகிறாயா?”



தலையாட்டி `இல்லை’ என்றாள் அங்கவை.

``பிறகு என்ன சிந்தனையில் இருக்கிறாய்?” எனக் கேட்டாள்.

அப்போதும் அங்கவையிடமிருந்து பதிலில்லை.

``இன்றிரவு `என்ன நடந்தது?’ என உதிரன் கேட்டால் சொல்லிவிடுவோம் என அச்சப் படுகிறாயா?” என்று கேட்டாள் சற்றே நக்கலாக.

சின்னப் புன்முறுவலோடு ஆதினியின் காதோடு வந்து சொன்னாள், ``உதிரன் கேட்டால் சொல்ல மாட்டேன். ஆனால், தந்தை கேட்டால் மறுக்க மாட்டேன்.”

ஆதினிக்கு சிரிப்பு தாங்க முடியவில்லை, மகளைத் தோளோடு அணைத்துக் கொண்டு யார் காதிலும் விழாதபடி மெள்ள ``நிச்சயம் உன் தந்தை கேட்க மாட்டார். கவலைப்படாதே!” என்றாள்.

அங்கவை அதிர்ச்சியோடு ஆதினியைப் பார்த்தாள். அவளோ மகளைப் பார்த்துக் கண்களைச்

சிமிட்டியபோது, முகத்திலிருந்து பொங்கி மேலெழுந்தது வெட்கம்.

அங்கவை ஒரு கணம் ஆடிப்போனாள். சற்றே கோபத்தோடு ``அப்படியென்றால் நானும் உதிரனிடம் சொல்வேன்'' என்றாள்.

வெட்கம் படர தாயும் மகளும் மற்றவர்களின் காதில் படாமல் பேசிச் சிரிப்பதைப் பார்த்த பெண் ஒருத்தி ``நீங்கள் மட்டும் என்ன பேசிச் சிரிக்கிறீர்கள்?'' எனக் கேட்டாள்.

கேட்டவளை அழைத்துக்கொண்டு பேச்சை மாற்றியபடி அங்கவையை விட்டு சற்றுத்தள்ளி முன்னே நடந்தாள் ஆதினி.

இன்னும் சிறிது தொலைவுதான் இருந்தது வள்ளிக்கானம். நேரம் செல்லச் செல்ல வேகம் கூடிக் கொண்டேயிருந்தது. இதற்காக மாதக்கணக்கில் காத்திருந்தவர்கள் அல்லவா அவர்கள்! கும்மிருளில் மலைப்பாதையில் அவர்களின் கால்கள் பெருமயக்கத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தன.

சந்தனவேங்கையின் அடிவாரத்தில் கருவுற்ற பெண்ணை அமரவைத்து நடக்கும் சடங்குகள் எல்லாம் வழக்கம்போல் ஊருக்குள் நடக்கும் சடங்குகள்தான். ஆனாலும் இன்றைய இரவின் முக்கியத்துவத்துக்குக் காரணம் வள்ளிக்கானத்தின் கொண்டாட்டம்தான். அந்தக் கொண்டாட்டத்துக்கு அடிப்படை, எங்கும் கிடைக்காத அதிசிறந்த மதுவகைதான்.

ஆண்கள் அறிந்திராத அரிதினும் அரிதான மதுவகை ஒன்று உண்டு. பெண்கள் மட்டுமே அறிந்து, இன்றுவரை ஆண்களின் வாடையே படாமல் காப்பாற்றிவைத்துள்ள மது வகை அது. `வள்ளிக்கானத்தின் கொண்டாட்டத்தில் பெண்கள் மது உண்டு களிக்கின்றனர்' என்ற செய்தி ஆண்களால் யூகிக்கக்கூடியதுதான். ஆனால், அது என்ன வகை மது என்பது இன்றுவரை ஆண்களுக்குத் தெரியவில்லை.

சோமப்பூண்டு பானத்தைக் குடித்த ஒருத்தி, ``எங்களின் மதுபோல இது இல்லை'' என்று ஒருமுறை சொல்லிவிட்டாள். அன்றிலிருந்துதான் வள்ளிக்கூத்தில் குடிக்கும் மதுவின் வகை என்ன என்பதைப் பற்றிய தேடலை ஆண்கள் தீவிரப் படுத்தினர். இன்றுவரை யாருக்கும் தெரியாத ரகசியமாக அது காப்பாற்றப்படுகிறது. காரணம், அந்த மதுவை உருவாக்கும் பணியில் ஈடுபடு பவர்கள் முதுபெண்களே. அவர்களிடமிருந்து ஆண்களோ, மற்ற பெண்களோகூட இது தொடர்பான செய்தியைக் கேட்டறிய முடியாது.

ஒவ்வொரு வகை மலரின் தேனுக்கும் ஒவ்வொரு வகையான குணமுண்டு. ஆனால், இணையற்ற சுவைகொண்ட தேன் இருக்கும் மலர், `நாகசம்பங்கி'. அதில் துளிர்க்கும் தேனின் சுவையை எதனுடனும் ஒப்பிட முடியாது. துளித்தேனை நுனிநாக்கில் வைத்த கணம், மொத்த உடலும் தேனுக்குள் கரைவது

போலிருக்கும். ஆனால், நாக்கில் வைக்கப்பட்ட தேன்துளி எளிதில் கரையாது; ஒட்டிக்கொள்ளும். அதன் சுவையை நாக்கு அடிக்கடி நுகரத் துடிக்கும். அப்போது அந்தச் சுவை உடல் முழுக்கத் தளும்பிக்கொண்டிருக்கும். நினைவுப் புலன்கள், சுவையுணர்வுக்குள் சிக்குண்டுவிடும். மீள முடியாத சுவையை, நினைவு மீண்டும் மீண்டும் மறுசுழற்சி செய்தபடியே இருக்கும். சுவை கரையாமல் தேன் மட்டுமே கரைந்திருக்கும். மறு துளி நோக்கி மனதை நகர்த்தாமல் நிறுத்தி வைக்கக்கூடிய மயக்கம் நாக சம்பங்கியின் தேனுக்கு மட்டுமே உண்டு.



நாகசம்பங்கி பூத்துக்கிடக்கும் பகுதியில் இருக்கும் தேன்கூட்டிலிருந்து தேன்கட்டியை எடுப்பதுதான் முதலில் செய்யும் பணி. அதன் பிறகு அந்தத் தேன்கட்டியைத் தகுந்த சேர்மானத்தோடு சேர்த்து நிலத்துக்குள் புதைத்து வைத்துவிடுவர். பெண் முதன்முறையாகக் கருவுற்றவுடனே முதுபெண்களின் முதல் வேலை நாகசம்பங்கியின் தேனை எடுப்பதுதான். எந்தச் சந்தனவேங்கையைத் தேர்வு செய்கிறார்களோ, அந்த இடத்தில்தான் அதைப் புதைத்துவைப்பர். நான்கு முதல் ஐந்து மாதம் மண்ணுக்குள் இருக்கும் தேன்கட்டி, நுரை துளிர்த்து சுவை இறுகி உறைந்திருக்கும். ஒற்றைத் துளியிலே மனிதரைக் கரைக்கக்கூடிய தேன், இப்போது தேறலாக உருத்திரண்டிருக்கும். இதன் துளி நாக்கில் பட்ட கணம், தேள் கொட்டியதைப் போல சுர்ரென ஒரு காரமயக்கம் உச்சந்தலைக்கு ஏறும். கண நேரம் கண் கட்டி அவிழும். அதன் பிறகு நிகழ்வதை நினைவில் தங்கவைக்க யாராலும் முடியாது.

இன்றைக்குச் சந்தனவேங்கையின் அடிவாரத்தில் அமரவைக்கப்பட்ட மயிலா, முதல் மிடறு குடித்ததிலிருந்து தொடங்கியது வள்ளிக்கூத்து. ஆறு வகையான துடிகளை அடித்து, ஆண்களால் அறியவே முடியாத மதுவின் சாரமேற்றி, பெண்களின் கூட்டம் ஆடத் தொடங்கியது. நேரமாக ஆக துடியின் ஓசையும், பறையின் அதிர்வும், முழவின் சத்தமும் காட்டை உலுக்கின. பெண்கள் தங்களின் ஆதியாட்டத்தை நிலம் பிளக்க ஆடினர்.

வேட்டுவன்பாறையில் இருந்த ஆண்கள் துடியின் ஓசை கேட்டு, காரமலையின் வடபுறம் நோக்கி ஏக்கத்தோடு பார்த்திருந்தனர். பொழுது, நள்ளிரவை நெருங்கவில்லை. ஆனால், அதற்குள் ஆட்டம் தொடங்கிவிட்டதை இசைக்கருவிகளின் ஓசை சொல்லியது. செம்பூந்தன் சொன்னான், ``அது என்ன தேறல்னு இன்னைக்கு வரைக்கும் தெரியலை. எந்த ஆம்பளையினாலும் கண்டுபிடிக்க முடியலை. இவளுக மட்டும் இந்த ஆட்டம் போடுறாளுக!”

சோமக்கிழவனோ ``தொடங்கும்போதே சத்தம் இப்படி இருக்கே... இன்னும் போகப்போக எப்படி இருக்கும் பாரு!” என்றார்.

இளைஞர்கள், ஓசை கேட்ட மலை உச்சியை நோக்கி அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தனர். ஓசை

கூடிக்கொண்டேயிருந்தது.

வேட்டுவன்பாறையைச் சுற்றிப் பல நூறு வீரர்கள் செடிகொடிகளினூடே நுழைந்து மேலேறிக் கொண்டிருந்தனர். கும்மிருட்டு சூழ்ந்திருந்தது. இருப்பதோ இருபத்துநான்கு பேர்தான். எல்லோரின் கவனமும் உச்சிமலை பார்த்து வள்ளிக்கூத்தில் நிலைகொண்டிருந்தது.

மூன்று சேனைகளைக்கொண்ட அறுநூறு பேரோடு மேலேறிக்கொண்டிருந்தான் கருங்கைவாணன். நிறையிருள் நாள் எல்லா வகையிலும் பொருத்தமாக இருந்தது. மிகத்தேர்ந்த வீரர்களைக்கொண்ட படையணியைத் தேர்வுசெய்திருந்தான். பறம்பின் காவல் தலைவர்கள் இருக்கும் ஊருக்குள் நுழைந்து தாக்கப்போகும் இந்தப் படைக்கு, தானே பொறுப்பேற்று வந்தான். திரையர்களைத் தாக்கிய போரில் பெரும் வீரத்தை வெளிப்படுத்திய திதியனை தென்புறத்துக்கும், சேரநாட்டுப் பெருவீரன் துடிச்சாத்தனை வடபுறத்துக்கும் தலைமைதாங்கச் செய்தான். கிழக்குப்புறத்திலிருந்து வீரர்களோடு முன்னேறினான் கருங்கைவாணன்.

வேட்டுவன்பாறையின் பாதி உயரத்தைக் கடந்துகொண்டிருந்தனர். நாய்கள் ஏதும் ஊரில் இல்லாதது அவர்களுக்கு இன்னும் வசதியாகிவிட்டது. புது ஆள்களை மலையடிவாரத்தில் கண்டாலே மேலேயிருந்து பாய்ந்து இறங்குபவை இடுப்புயர நாய்கள். சூழ்ந்துவிட்டால், யானைகளையே நகரவிடாமல் நிறுத்தக்கூடியவை. அத்துணையும் இன்று பெண்களோடு சேர்ந்து மலைமேல் ஏறிவிட்டன. குரைப்பொலி ஏதுமற்று அமைதி கொண்டிருந்த வேட்டுவன்பாறையை நோக்கி எதிரிகள் மேலேறிக்கொண்டிருந்தனர்.

ஊரின் மந்தையில் உட்கார்ந்தபடி காரமலையில் துடியோசை கேட்கும் பகுதியைப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தனர் ஆண்கள். துடியோசை, பெருகத் தொடங்கியது. பெண்கள் இல்லாத ஊரில் பெண்களைப் பற்றிப் பேசத்தான் எவ்வளவு கதைகள் இருக்கின்றன. அதுவும் அவர்களால் நிராகரிக்கப்பட்ட வலியை, கேலிப் பேச்சின் மூலம்தான் கடக்க முடியும். பேச்சு, களைகட்டத் தொடங்கியது. சிறுவன் கொற்றனுக்குத் தூக்கம் வந்தது. அதைக் கவனித்த நீலன், ``நள்ளிரவுக்குப் பிறகு பனி அதிகமாக இருக்கும். நீ போய் குடிலுக்குள் படுத்துக்கொள்" என்றான்.

கொற்றன், மந்தையிலிருந்து எழுந்து நீலனின் குடில் நோக்கி நடந்தான். வேட்டுவன்பாறையின் கிழக்கு முனையில் நாங்கில்மரத்தின் அடிவாரத்தில் அமைக்கப்பட்ட குடில் அது. அங்கிருந்து பார்த்தால், கிழக்குத்திசைக் குன்றின் சரிவும் விரிந்துகிடக்கும் சமவெளியும் முழுமையாகத் தெரியும். கொற்றன் தூக்கக்கலக்கத்திலேயே குடில் நோக்கி வந்தான். படல்கொண்டு மூடப்பட்டிருந்தது வாசல். படலை மெள்ளத் தூக்கிச் சுவர் ஓரமாகத் திரும்பினான். சரிவுப் பகுதியில் இங்கும் அங்குமாக மனிதத்தலைகள் தெரிந்தன. ஆயுதம் ஏந்திய பெருங்கூட்டம் மேலேறிக்கொண்டிருப்பது தெரிந்தது. கும்மிருட்டினூடே தலைகள் பதுங்கி மறைந்தன. எதிரிகள் வந்துகொண்டிருப்பது கண நேரத்தில் புரிந்தது. `இப்படியே சத்தம்போட்டுக்கொண்டு மந்தை நோக்கி ஓடலாமா?' எனத் தோன்றியது. `அப்படிச் செய்தால் எதிரிகள்

விழிப்படைந்து விடுவார்கள்’ எனச் சிந்தித்தபடியே குடிலுக்குள் போய் படலை மூடிக்கொண்டான் கொற்றன்.



ஒரு கணம் சிந்தித்தவன் சட்டென குடிலின் மேற்புறக் கூரையை ஆள் நுழைவதற்கு ஏற்ப பிரித்தெடுத்தான். நாங்கில்மரத்தின் கிளைகள், குடில் மேல் படர்ந்திருந்தன. கூரையினுள் நுழைந்து கிளையின் மேல் ஏறினான். மரங்கள் ஒன்றுடனொன்று நெருங்கிப் பின்னிக் கிடந்தன. கொப்புகளின் வழியே ஊர்ந்து கடந்தவன் கண்ணிமைக்கும் நேரத்தில் மூன்றாம் மரத்தின் அடிவாரத்தில் தரையில் குதித்தான்.

`யாரோ மரத்திலிருந்து குதிப்பதுபோல் இருக்கிறதே!’ என்று மந்தையில் இருப்பவர்கள் திரும்பிப் பார்த்தனர். பதறிப்போய் ஓடிவந்தான் கொற்றன். இப்படி ஒரு நள்ளிரவில்தான் தன்னுடைய ஊர், எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்டது; மக்கள் எல்லோரும் கொன்று குவிக்கப்பட்டனர். மந்தையில் வைத்து ஊரே வெட்டிச் சாய்க்கப்பட்ட கொடுமையை நேர்கொண்டு பார்த்தவனுக்கு, இப்போது உடலெல்லாம் நடுங்கியது; பேச வார்த்தை எழவில்லை. `ஏதோ விலங்கைப் பார்த்துதான் அஞ்சி ஓடிவந்துள்ளான்’ என முதலில் நினைத்தனர். ``அஞ்சாமல் சொல், எதைப் பார்த்தாய்?” என நீலன் கேட்டதற்கு, மேலேறிக்கொண்டிருக்கும் எதிரிகளைப் பற்றிச் சொன்னான் கொற்றன்.

மந்தையில் இருந்தவர்கள் சரிவு நோக்கிப் பாய்ந்து சென்றனர். மூன்று புறங்களிலும் எதிரிகள் மேலேறிக்கொண்டிருந்தனர். சத்தமின்றி நீலன் கையைக் காட்டி ஏதோ சொன்னான். வீரர்கள் சிலர் வீடுகளுக்குள் இருந்த ஆயுதங்களை எல்லாம் வெளியே எடுத்து வந்தனர். புங்கன், தென்புறச் சரிவில் மேலேறும் எதிரிகளைப் பார்த்தான். சோமக் கிழவன் வலதுபுறச் சரிவைப் பார்த்தான். கிழக்குத்திசை முனையிலிருந்து முப்புறமும் பார்த்தான் நீலன். வந்து கொண்டிருப்பது பெரும் எண்ணிக்கையிலான படை என்பது தெரிந்தது. `இருபத்திநான்கு பேர்தான் இருக்கிறோம். அதில் பாதிப்பேர் வயதான

கிழவர்கள். அதற்குத் தகுந்த தாக்குதல் உத்திகளைக் கடைப்பிடிக்க வேண்டும்' என்று சிந்தித்தபடியே ஊரின் நடுப்பகுதிக்கு ஓடிவந்தான்.

மற்ற திசையில் பார்த்துக் கொண்டிருந்த வர்களும் நீலனின் மெல்லிய சீழ்க்கை ஒலி கேட்டு ஒன்றுகூடினர். ``பேசுவதற்கான நேரமில்லை. வேட்டுவன்பாறையின் மீது எதிரிகள் ஏறிவிடக் கூடாது. மூன்றாகப் பிரிவோம் எல்லா வகையான தாக்குதல் உத்திகளையும் பயன்படுத்துங்கள்" என்றான் நீலன். குவிக்கப்பட்டிருந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு மூன்று திசைகளிலும் தாக்க ஆயத்தமானார்கள்.

கருங்கைவாணனின் படை, மிகக் கவனமாக மேலேறிக்கொண்டிருந்தது. இப்போதுவரை யாரும் நம்மைப் பார்க்கவில்லை என்ற எண்ணத்தில்தான் அவர்கள் வந்து கொண்டிருந்தனர். நீலனின் குடிலுக்குச் சற்று கீழ்முனையில் பெரும்பாறை ஒன்றை யாரோ நகர்த்துவதுபோல் தோன்றியது. `மேலே ஏதோ சத்தம் கேட்பதுபோல் இருக்கிறதே!' என உணர்ந்த கருங்கைவாணன், அண்ணாந்து பார்த்தான். பெரும்பாறை ஒன்று மெள்ள உருளத் தொடங்கியது. மேலேறிக்கொண்டிருந்த எதிரிகள் சத்தம் கேட்டு மிரண்டு பார்க்கும்போது பாறைகள் ஒன்றுக்கு அடுத்து ஒன்றாக உருளத் தொடங்கின. உருளும் பாறைகள் நேர்க்கோட்டில் இறங்குவதில்லை. எந்தத் திசையில் நெளியும் எனக் கணிக்க முடியாததால், வீரர்கள் எங்கும் தெறித்துச் சிதறினர். இருட்டு, ஒன்றின் ஓசையை இன்னொன்றுக்கு மாற்றிக்காட்டக்கூடியது. எனவே, பாறைகள் எல்லாப் பக்கங்களும் உருளுவதுபோல் உணர்ந்தனர்.

எதிரிகள் தாக்கத் தொடங்கிவிட்டார்கள் எனத் தெரிந்ததும், எதிர்த்தாக்குதல் நடத்த உத்தரவிட்டான் கருங்கைவாணன். ஆனால், உருளும் பாறைகளிலிருந்து தங்களைக் காத்துக்கொள்வதே வீரர்களுக்கு முதல்நிலைப் பணியாக இருந்தது. ஆங்காங்கே பொருத்தமான இடங்களில் நிலைகொண்ட பிறகே எதிர்த்தாக்குதலைத் தொடங்கினர்.

மூன்று திசைகளிலிருந்தும் வேந்தர்களின் படைகள் தாக்குதலைத் தொடங்கின. சிறிது நேரத்திலேயே மேலிருந்தும் ஆயுதத்தாக்குதல் தொடங்கியது. அம்புகளும் ஈட்டிகளும் இணையற்ற வேகத்தோடு காற்றைக் கிழித்துக்கொண்டு இறங்கின. இருட்டில் எந்தத் திசையிலிருந்து ஆயுதங்கள் வருகின்றன எனத் தெரியாததால், வேந்தர்படை தற்காத்துக்கொள்ள மிகவும் திணறியது. மேலிருந்து தாக்குபவர்களின் வேகம் எண்ணிப்பார்க்க முடியாதபடி இருந்தது.

அம்புகளும் ஈட்டிகளும் இறங்கினாலும், பாறைகளும் ஆங்காங்கே உருண்டுகொண்டுதான் இருந்தன. பாறைகளை உருட்டுவதால் எதிரிகளை அதிக அளவில் கொன்றுவிட முடியாது. ஆனால், மேலேறிக்கொண்டிருப்பவர்களுக்குப் பெரும் அச்சத்தை உருவாக்கலாம். எப்போது எந்தப் பாறை உருளுமோ என ஒவ்வொரு பாறையையும் பார்த்துப் பார்த்து அஞ்சியஞ்சியே முன்னோக்கி நகர முடியும்.

``எரியம்புகளைப் பயன்படுத்த வேண்டாம்'' என்று நீலன் உத்தரவிட்டான். குறைவான வீரர்களே

இருக்கிறார்கள் என்பதை அது காட்டிக் கொடுத்துவிடும் என்பதால் அவ்வாறு சொன்னான்.

வடக்குப்புறச் சரிவில் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்த சோமக்கிழவன், வீரன் ஒருவனை அந்தத் திசையின் உச்சியில் இருக்கும் மரம் ஒன்றில் ஏறச் சொன்னான். அதேபோல இன்னொருவனை மறுவிளிம்பில் இருக்கும் மரத்தில் ஏறச் சொன்னான். மற்றவர்கள் அம்புகளையும் ஈட்டிகளையும் எறிந்துகொண்டிருந்தனர். இரண்டு கிழவர்களை வைத்துக்கொண்டு பாறைகளை நகர்த்தித் தள்ளிக்கொண்டிருந்தான் கொற்றன். அவனது வெறி, கிழவர்களையும் தினவோடு இயங்கவைத்தது. சரிவுகளில் இருக்கும் பாறைகள் எல்லாம் அடப்புக் கொடுத்துச் செருகப்பட்டிருந்த சிறுகற்களால்தான் நின்றுகொண்டி ருந்தன. எந்தெந்தப் பாறைக்கு எப்படியெல்லாம் அடப்புக்கொடுக்கப்பட்டுள்ளது என்பது கிழவர்களுக்குத் தான் நன்கு தெரியும். கும்மிருட்டில்கூட சரியான முறையில் அடப்புக்கல்லை ஈட்டியால் குத்தி நகர்த்தினார்கள். அடப்பை நகர்த்துவதும் அதற்கேற்ற கோணத்தில் பாறையை அசைப்பதும் மிகத் தேர்ந்தவர்களால் மட்டுமே எளிதில் செய்ய முடியும். பெருவீரனால்கூட நகர்த்த முடியாத பாறையை இரண்டு கிழவர்கள் எளிதில் நகர்த்துவார்கள். யானைகளின் உச்சந்தலைக் கும்பம்போலப் பருத்த இரு தோள்கள் திரையர்களுக்குத் தோன்றக் காரணம், குழந்தைப் பருவத்திலிருந்தே பாறைகளுடனான அவர்களின் பழக்கம்தான். திரையர்குடியின் இளம்வீரனான கொற்றன், பாறைகளின் குழந்தை. கிழவர்கள் சொல்லச் சொல்ல, தோளால் முட்டி எம்பினான் பாறைகளை.




தாக்குதல் தொடங்கியவுடன் பெரும்கூச்சலிட்டபடி வேந்தனின் வீரர்கள் அங்கும் இங்குமாகச் சிதறி, தற்காப்புக்கு ஏதுவான இடங்களில் நின்றுகொண்டு, அதற்கு ஏற்பவே எதிர்த்தாக்குதலைத் தொடுத்தனர். இந்த நிலையில் நமது தாக்குதலைத் தீவிரப்படுத்தாமல் `கிழவன் ஏன் மரம் ஏறச் சொல்கிறான்?' எனச் சிந்தித்தபடியே இருவர் வேகவேகமாக மரத்தில் ஏறினர்.

அதில் ஒன்று, தணக்குமரம். இன்னொன்று, அகில்மரம். இரண்டும் முருங்கையைப்போல வலிமையற்றவை. ``சொல்லும் இடத்தில் வேல்கம்புகளால் குத்தி, காலால் மிதித்து, கிளைகளை ஒடி" என்றான் கிழவன். அவ்வாறே வேல்கம்புகளால் குத்தியும் அமுக்கியும் பெரும்பெரும் கிளைகளை `மடார் மடார்' என ஒடித்துச் சரித்தனர் வீரர்கள்.

மேலேறிக்கொண்டிருந்த வேந்தர்படை மிரட்சிக்குள்ளானது. `பெரும்பெரும் மரங்களையே

கணப்பொழுதில் சாய்த்துக் கொண்டிருக்கிறார்கள்; ஏது செய்யப் போகிறார்களோ!' என எதிரிகள் மிரண்டு நின்றனர். எதிரிகளின் வடக்குப்புறப் படைக்குத் தலைமையேற்ற துடிசாத்தன் வீரர்கள் முன்னேறுவதை நிறுத்தி ``தற்காத்து நில்லுங்கள்" என்று ஆணையிட்டான்.

இருட்டுக்குள்ளிருந்து அம்புகள் பாய்வதும் ஈட்டிகள் இறங்குவதும் பாறைகள் உருள்வதுமாக இருக்க, இப்போது மரங்களை உருட்டியோ எறிந்தோ தாக்கப்போகிறார்கள் என நினைத்துத் திகிலடைந்து நின்றது வலப்புறப்படை.

கிழக்குப்புறம் நீலனின் தாக்குதல், எதிரிகளை நிலைகுலையச்செய்தது. மேலிருந்து எறியப்படும் ஈட்டிகள் பாறைகளில் பட்டுத் தெறிக்க, தீப்பொறி விடாது பறந்துகொண்டே இருந்தது. தனது வேகத்தை எக்காரணம் கொண்டும் குறைத்துக்கொள்ளக் கூடாது என உறுதியோடு இருந்தான் கருங்கைவாணன். தாக்குதலைச் சற்று நிறுத்தச் சொன்னால் கூட வீரர்களுக்குப் பின்வாங்கும் மனநிலை உருவாகிவிடும். எனவே, என்ன இழப்பு வந்தாலும் விடாது முன்னேறச் சொல்லி, பேரோசை எழுப்பிக்கொண்டிருந்தான் கருங்கைவாணன். ஆனால், மேல்நிலையி லிருந்த நீலன் தலைமையிலான வீரர்களின் தாக்குதலை மீறி மேலேறுவது எளிய செயல் அல்ல. கருங்கைவாணன் எவ்வளவு கத்தினாலும் அவனது படை சற்றுப் பதுங்கியே நின்றிருந்தது.

அனைத்து திசைகளிலும் ஆவேசமிக்க தாக்குதலை மேலிருந்து நடத்திக் கொண்டிருந்தனர். தங்களைப் பன்மடங்கு காட்டிக்கொள்ள, ஒவ்வொரு வீரனும் இணையற்ற வேகத்தோடு இயங்கிக் கொண்டிருந்தான். ஆனால் தென்புறத்தில் வேந்தர்படைக்குத் திதியன் தலைமையேற்று வந்துகொண்டிருந்தான். அவனது வேகத்தைத் தடுத்து நிறுத்த முடியாமல் திணறியது புங்கனின் தலைமையிலான படை.

சிறிது நேரத்தில் சீழ்க்கை அடித்தபடி ஊரின் நடுப்பகுதிக்கு ஓடிவந்தான் புங்கன். கண நேரத்தில் சோமக்கிழவனும் நீலனும் வந்து சேர்ந்தனர். ``அவர்கள் மேலேறிக்கொண்டிருக்கிறார்கள். நம்மிடம் மிகக் குறைவான வீரர்களே இருக்கிறார்கள். சற்றே பின்வாங்கி, காரமலையில் ஏறிவிட்டால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டுக் கோபத்தோடு கத்தினான் நீலன், ``நம்மை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், கூத்தோசை கேட்கும் வள்ளிக் கானம் நோக்கி எதிரிகளின் படை போனால், நிலைமை என்னவாகும் என நினைத்தாயா?"

அப்போதுதான் ஆபத்தை உணர்ந்தான் புங்கன். ``அப்படியென்றால் உடனடியாகக் காரிக்கொம்பு ஊதச்சொல்லி, செய்தியைத் தெரிவிக்கலாமா?" என புங்கன் கேட்டு முடிக்கும் முன் சோமக்கிழவன் சொன்னான், ``நான் அப்போதே அதற்கான முயற்சியைச் செய்துவிட்டேன்.

பெருங்காரிக்கொம்புகளை எல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இருக்கும் சிறுகொம்பை ஊதினாலும் ஓசை பெரிதாக வெளிப்படவில்லை. மலையின் மேலேயிருந்து கேட்கும் கூத்தின் ஓசைதான் எங்கும் கேட்கிறது” என்றான்.

``என்ன செய்யலாம்?” என புங்கன் கேட்டபோது, ``செய்தியைப் பாரியிடம் சொல்ல, குதிரை எடுத்துக்கொண்டு ஒரு வீரன் மட்டும் விரைந்து செல்லட்டும். நாம் எக்காரணம் கொண்டும் வேட்டுவன்பாறையை விட்டுப் பின்னகரக் கூடாது. நாகக்கரடிலிருந்து வீரர்கள் வரும் வரை நாம் இந்த இடத்தைக் கடக்க எதிரிகளை அனுமதிக்கக் கூடாது” என்றான் நீலன்.

சொன்னவுடன் வீரன் ஒருவன் குதிரைக் கொட்டிலை நோக்கி ஓடத் தொடங்கினான், அவனிடம் சத்தம்போட்டு நீலன் சொன்னான், ``இடதுபுறமாகத் தனித்துக் கட்டப்பட்டிருக்கும் குதிரை ஒன்று உண்டு. அதுதான் ஆலா. அதை எடுத்துச் செல். இருமடங்கு வேகத்தோடு பாயும்.”

முன்களத்தில் இருக்கும் வீரர்கள், முடிந்தளவுக்குத் தாக்குதல் தொடுத்து நிலைமையைச் சமாளித்துக்கொண்டிருந்தனர். மூவரும் மீண்டும் தாக்குதல் இடத்தை அடைந்தனர். நீலனின் அம்புகள், இருளைத் துளைத்து இறங்கத் தொடங்கின. கும்மிருட்டின் பிடியில் மேலிருந்து பேரோசையோடு நடத்தும் எதிரிகளின் தாக்குதலைச் சமாளித்துத் தற்காத்துக் கொள்ளவே முயன்றுகொண்டிருந்தது கருங்கை வாணனின் படை. வடக்குப்புறத்தில் சோமக்கிழவனின் தாக்குதலால் எதிரிகள் நின்ற இடத்திலேயே நின்றுகொண்டிருந்தனர். மேலேறவில்லை. ஆனால், தெற்குப்புறத்தில் புங்கனின் தலைமையிலான வீரர்களால் எதிரிகளின் வேகத்தைக் குறைக்க முடியவில்லை. எதிரிப்படையின் தளபதி திதியனின் ஆவேசம் இணையற்று இருந்தது. எத்தனை வீரர்களைப் பலிகொடுத்தாலும் முன்னேறும் வேகத்தைக் குறைத்துக்கொள்ளுதல் அவனது பழக்கத்திலேயே இல்லை. அந்தத் திசையில் மட்டும் எதிரிகள் அடுத்தடுத்த நிலைநோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர்.

ஆலாவின் மீதேறி விரைந்தான் வீரன். ஊரின் பின்புறத்தில் இருக்கும் குதிரைப்பாதை, கார மலையினூடே பயணிக்கிறது. வள்ளிக்கானத்தின் கூத்தோசைக்கும் வேட்டுவன்பாறையின் தாக்குதலோசைக்கும் நடுவில் குதிரையை வெறிகொண்டு செலுத்தினான்.

மறு குன்றைத் தாண்டும்போதுதான், மயிலாவின் ஊரான செம்மனூர் இந்தத் திசையில் இருப்பது நினைவுக்கு வந்தது. அங்கு போய் செய்தியைச் சொல்லிவிட்டுப் போகலாம் எனக் குதிரையைத் திருப்பினான். சிறிது தொலைவு சென்ற பிறகுதான் தோன்றியது, `ஊரில் இளைஞர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். எல்லோரும் நாகக்கரட்டுக்குப் போயிருப்பார்கள். மிகவும் வயதானவர்கள்தான் இருக்கக்கூடும்’ என்று. குதிரைகளும் அங்கு இல்லை. அவர்கள் நடந்தே வேட்டுவன்பாறைக்குப் போய்ச் சேருவதற்குள் நாமே நாகக்கரட்டிலிருந்து வீரர்களை அழைத்துவந்துவிடலாம் என முடிவுசெய்து மீண்டும் குதிரையைத் திருப்பினான். பதற்றமும் அலைக்கழிப்புணர்வும் மேலோங்க, இருளுக்குள் சீறிப்பாய்ந்துகொண்டிருந்தது ஆலா.

# வீரயுக நாயகன் வேள்பாரி-85

தன் மகன் இளமாறனின் மரணத்துக்கு பறம்புவீரர்களே காரணம் என அறிந்த பிறகுதான் மையூர்கிழார் வெஞ்சினம் உரைத்தார். ``பறம்புக்கு எதிரான போரில் நானும் பங்கெடுத்து, பகை முடிப்பேன்'' என்று முழங்கினார். காற்றைப்போல் இணையற்ற வேகத்தில் செல்லக்கூடிய இளமாறனின் குதிரையான `ஆலா' வேட்டுவன் பாறையில் நிற்கிறது என்று, அவர் வெஞ்சினம் உரைத்து நீண்டநாள்கள் கழித்துதான் தெரியவந்தது. ஒன்றுக்கும் மேற்பட்ட முறை ஆள்களை அனுப்பி, பார்த்துவரச் சொன்னார். எல்லோரும் அதை உறுதிப்படுத்தினர்.

வைப்பூர் துறைமுகத்தின் மீதான தாக்குதலில் வேட்டுவன்பாறை வீரர்களே பங்கெடுத்துள்ளனர் என்பதை எல்லாவகைகளிலும் உறுதிப்படுத்திக்கொண்டார் மையூர்கிழார். நீலனின் வீரத்தை மலைமக்கள் அனைவரும் நன்கு அறிவர். எனவே, ஆலாவைக் கைப்பற்றி தகுந்த பதிலடி கொடுக்க பொருத்தமான நேரத்துக்காகக் காத்திருந்தார். வேட்டுவன்பாறையில் என்ன நடக்கிறது என்று தொடர்ந்து கவனித்தார்.
மயிலாவுக்கான நிறைசூல் விழாவைப் பற்றி பலரும் அறிவர். இந்த விழாவுக்காக நாகக்கரட்டில் இருக்கும் நீலன் உள்ளிட்ட வீரர்கள் வேட்டுவன்பாறைக்கு வருவர். போர்ச்சூழல் இருப்பதால் எண்ணிக்கையில் குறைவான வீரர்களே இந்த விழாவில் பங்கெடுப்பர். ஆனால், நீலன் உறுதியாகப் பங்கெடுப்பான் என எல்லா செய்திகளையும் திரட்டினார் மையூர்கிழார். அதன் அடிப்படையிலேயே இந்தத் தாக்குதல் வடிவமைக்கப்பட்டது.

கருங்கைவாணனின் திட்டமிடல் மையூர்கிழாரிடம்கூட பகிர்ந்துகொள்ளாததாக இருந்தது. யட்சினி வழிபாட்டுக்கான ஏற்பாடுகள்தான் முழுவேகத்தில் நடந்துகொண்டிருந்தன. அது தொடர்பான பணிகள்தான் மையூர்கிழாருக்கு வழங்கப் பட்டிருந்தன. போருக்கான தொடக்கச் சடங்கில் தனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை நினைத்து பெருமிதத்தோடு இயங்கிக்கொண்டிருந்தார். அன்று நண்பகல் அவரை வரவழைத்த கருங்கைவாணன், ``நீலனை நன்கு அடையாளம் தெரிந்த இரு வீரர்களை அனுப்பிவையுங்கள்'' என்றான். `யட்சினிக்கான சடங்கு நடக்கும்போது இருவரை எதற்காகக் கேட்கிறார்?' எனச் சிந்தித்தபடியே இரண்டு வீரர்களை அனுப்பிவைத்தார்.




காரிருளின் நள்ளிரவில் யட்சினி வழிபாட்டின் உச்சத்தில் பவளவந்திகையின் குருதி பீறிட்டுத் தெறித்தது. போர் நிலமெங்கும் பேரிகைகள் முழங்கின. வேட்டுவன் பாறையின் அடிவாரத்தில் இந்த ஓசையை எதிர்பார்த்தே கருங்கைவாணன் காத்திருந்தான். பேரிகைகள் முழங்கியவுடன் தனது படைக்கான உத்தரவைப் பிறப்பித்தான். மூன்று திசைகளிலிருந்தும் அவர்கள் மேலேறினர்.

எதிர்பார்த்ததைவிட கடும்தாக்குதலைச் சந்திக்க நேர்ந்தது. மிகக் குறைவான வீரர்கள் மட்டுமே இருந்தும் இவ்வளவு வலிமையான தாக்குதலை எப்படி நடத்துகின்றனர் என்பது பெரும்வியப்பாகவே இருந்தது. தாக்குதலை எதிர்கொண்டபடி மிக நிதானமாகவே மேலேறிக்கொண்டிருந்தான் கருங்கைவாணன். வடதிசையில் இருந்த துடிச்சாத்தன், கருங்கை வாணன் அளவுக்குக்கூட முன்னேறவில்லை; கீழ்நிலையில் இருந்தான். ஆனால், தென்திசையில் திதியனோ கருங்கைவாணனைவிட இரு பனை உயரத்துக்கு மேலேறியிருந்தான்.

படைகள் இப்படி சமநிலையற்று முன்னேறுவது, எதிரிகளுக்கு வாய்ப்பாக அமைந்துவிடும். துடிச்சாத்தன் ஏன் இவ்வளவு பின்தங்கியுள்ளான் என்ற கவலைகூட பெரிதாக இல்லை; திதியனின் செயல்தான் அதிக கவலையளிப்பதாக இருந்தது. அவன் ஏறக்குறைய வேட்டுவன்பாறையின் மேல்நிலைக்குச் சென்றுவிட்டான். சற்றே பதற்றமானான் கருங்கைவாணன். அவனை பொறுத்திருக்கச் சொல்ல முயன்றான். ஆனால், நீலன் தலைமையிலான வீரர்கள் நடத்தும் தாக்குதல் மிகக் கடுமையாக இருந்தது. தாக்குதலை எதிர்கொண்டு தாக்குப்பிடிப்பதே பெரும்பாடாக இருந்தது.
எவ்வளவு தாக்கினாலும் எதிரிகள் மேலேறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கவனித்தபடியே தாக்குதலை மேலும் தீவிரப்படுத்தினான் நீலன். சோமக்கிழவனின் திசையில் எதிரிகள் மிகவும் கீழ் நிலையில் இருக்கின்றனர். ஆனால், புங்கனின் திசையில் எதிரிகள் மிகவும் மேலேறிய நிலையை அடைந்துள்ளனர் என்பதை அறிந்தபடி என்ன செய்யலாம் எனச் சிந்தித்தான் நீலன். `சோமக்கிழவனின் பக்கம் இருக்கும் மூன்று வீரர்களை இந்தப் பக்கம் அனுப்பலாமா?' எனச் சிந்தித்தபோதுதான் கொற்றனின் நினைவுவந்தது.

அவன் மிகச் சிறியவன். எதிரிகள் மேலேறிக்கொண்டிருக்கின்றனர். இனி தாக்குதல் மிகக் கடுமையாக இருக்கும். காலம்பன் மகனுக்கு எந்தவித ஆபத்தும் நேர்ந்துவிடக் கூடாது என எண்ணிய நீலன், சட்டென சோமக்கிழவனின் திசை நோக்கி ஓடினான். அங்கு எதிரிகளை மேலே ஏறவிடாமல் அனைவரும் ஒருங்கிணைந்த தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தனர். விரைந்து வந்த நீலன், கொற்றனை தனியே அழைத்தான். பாறைகளை முடிந்த அளவுக்குத் தூக்கித் தள்ளிக்கொண்டிருந்த கொற்றன், மறுதிசையில் தாக்குதல் தொடுக்க அழைக்கிறான் என நினைத்து வேகமாக மேலேறிச் சென்றான்.

வேட்டுவன்பாறையின் மேலே குடில்களுக்கு இடையே ஆங்காங்கே பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன. தாக்குதலின் ஓசையும் விடாமல் கேட்டுக்கொண்டிருந்தது. ஆனால், இவற்றையெல்லாம் மீறி வெளிப்பட்டுக் கொண்டிருந்தது வள்ளிக்கானத்தில் நடைபெறும் கூத்தின் ஓசை. எல்லா வகையான இசைக் கருவிகளும் அங்கு வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. காரமலையின் அமைதியை முழுமுற்றாக விரட்டிக்கொண்டிருந்தன கூத்தின் ஓசையும், வேட்டுவன்பாறை தாக்குதலின் சத்தமும்.

கொற்றனை தனியாக அழைத்துவந்த நீலன், பின்புறம் செல்லும் ஒற்றையடிப் பாதையைக் காட்டி, ``இந்த வழியில் ஒருபொழுது நடந்தால் அருவியும் அதன் அடிவாரத்தில் பெரும் பாறைகளும் இருக்கும். நீ அங்கு போய்விட்டால் யாராலும் அதற்குள் வந்து உன்னைக் கண்டறிய முடியாது. நாளை காலை வரை நீ அங்கேயே இரு. விடிந்ததும் ஊருக்கு வா” என்றான்.

எதிரிகளோடு கடும்மோதல் நடந்து கொண்டிருக்கும்போது தன்னை மட்டும் ஏன் தனியே காட்டுக்குள் போகச் சொல்கிறான் என்பது கொற்றனுக்குப் புரியவில்லை. எல்லாவற்றையும் சொல்லிப் புரியவைப்பதற்கான நேரமில்லை. கொற்றன் விழித்துக்கொண்டு நின்றதைப் பார்த்த நீலன், ``காலையில் வந்து உன்னிடம் விளக்கமாகச் சொல்கிறேன். இப்போது புறப்படு" என்றான்.

அதற்குமேல் நீலனின் குரலை மறுத்து நிற்க முடியாது. மனமேயில்லாமல் அவன் சொன்ன பாதையை நோக்கிப் புறப்பட்டான் கொற்றன். அவன் புறப்பட்ட பிறகு நீலன் மீண்டும் கிழக்குத்திசை நோக்கி ஓடத் தொடங்கினான். மூன்று திசைகளிலிருந்தும் தாக்குதலின் ஓசை அதிகமாகிக்கொண்டிருந்தது. தென்திசையின் ஓசை மிகவும் மேலேறிக் கேட்டது. புங்கனின் தலைமையிலான வீரர்கள் வேந்தர்படையின் தாக்குதலைத் தடுக்க முடியாமல் பின்னோக்கி வந்துகொண்டேயிருந்தனர்.

பெருங்குரலெழுப்பியபடி திதியன் முன்னேறிக்கொண்டிருந்தான். காரமலையை நோக்கி விரைந்துகொண்டிருந்த கொற்றன், எதிரிகளின் ஓசை இவ்வளவு அருகில் கேட்கிறதே என நினைத்து சற்றே திரும்பினான். பந்தத்தின் ஒளியில் சீறிக்கொண்டிருந்த திதியனின் முகம் நேர் எதிரே தெரிந்தது. ஓடிக்கொண்டிருந்த கொற்றன் அந்த முகத்தைப் பார்த்த கணத்தில் உறைந்து நின்றான்.

நினைவுகளால் மூச்சுமுட்டியது. தம்பிகளோடு சேர்த்து தன்னையும் கால்களைக்கட்டி தலைகீழாகத் தொங்கவிட்டவன். கையில் சிக்கியவர்களை எல்லாம் கொன்று குவித்தவன். கதறித் துடித்த பெண்களை எல்லாம் கழுத்தை அறுத்து வீசியவன். கண் முன்னால் ஊரையே வேட்டையாடித் தீர்த்தவன். உறைந்து நின்ற கொற்றனுக்கு என்ன செய்வது எனத் தெரியவில்லை. ஆனால், நீலன் சொன்ன பாதையை நோக்கி ஓட கால்கள் மறுத்தன.

புங்கனால் திதியனின் தாக்குதலை எதிர்கொள்ள முடியவில்லை. சிறிது சிறிதாக பின்னோக்கி நகர்ந்து வந்துகொண்டேயிருந்தான். வேந்தர்படையணிக்குத் தலைமை தாங்கிய திதியனின் உறுதிப்பாடு, புங்கனை நிலைகுலையச் செய்தது. அவன் எந்தத் தாக்குதலையும் கண்டு அஞ்சாமல் முன்னோக்கி வந்துகொண்டே யிருக்கிறான். அவனைக் கட்டுப்படுத்த எந்த வழியிலும் புங்கனால் முடியவில்லை.

திதியன் ஏறக்குறைய மேல்நிலைக்கே வந்துவிட்டான். அவனது வருகையை எதிர்பார்த்தபடி தோதக்கத்திமரத்தின் கிளையின் மேல் ஏறி மறைந்து பார்த்துக்கொண்டிருந்தான் கொற்றன். மரத்தின் மீது படர்ந்திருந்த கொடியைப் பிடித்தபடி காத்திருந்தான். மேல்நிலைக்கு அருகில் வந்ததும் திதியனின் ஆவேசம் இன்னும் அதிகமானது. ஆங்காங்கே பந்தங்கள் எரிந்துகொண்டிருந்தன. ஆனால், வீரர்கள் யாரும் தென்படவில்லை. தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் புங்கன் மேலும் மேலும் பின்நோக்கி வந்துகொண்டிருந்தான்.

திதியன் சரியான இடத்துக்கு வரும்வரையில் காத்திருந்தான் கொற்றன். அன்று தலைகீழாய்க் கட்டித்தொங்கவிடப்பட்ட நிலையில் தன்னையும் தம்பிகளையும் சுட்டிக்காட்டி, `அம்பு வீசிக் கொல்' எனக் கொக்கரித்தவனின் தலையை உச்சியில் தொங்கியவாறு எந்தக் கோணத்தில் கொற்றவன் பார்த்தானோ, அவன் தலை இப்போது அதே கோணத்தில் தனக்கு நேர்கீழே வந்து நிற்பதைப் பார்த்தான் கொற்றன். இந்தக் கணத்தை எதிர் பார்த்துதான் இவ்வளவு நேரமும் கொப்போடு கொப்பாக

ஒட்டிக்கிடந்தான். எந்தவித ஓசையும் எழுப்பாமல் கொடியைப் பிடித்தபடி உச்சிக்கொப்பிலிருந்து கீழ்நோக்கிக் குதித்தான். `ஏதோ ஓசை கேட்கிறதே!' என நினைத்த திதியன் சட்டென மேல்நோக்கி அண்ணாந்து பார்க்கும்போது கூர்வாளின் முழுமுனையும் அவனது முகத்தைக் கிழித்துக்கொண்டு நெஞ்சுக்கூட்டுக்குள் இறங்கியது.

திதியனோடு வந்தவர்கள் சற்றும் எதிர்பார்க்காத தாக்குதலாக அது இருந்தது. தங்கள் படையணித்தலைவன் மண்ணில் சாய்ந்த கணத்தில் என்ன செய்வது எனத் தெரியாமல் திகைத்தபோது, விழிப்படைந்த புங்கன் வீறுகொண்டு தாக்கி முன்னோக்கி நகரத் தொடங்கினான். நிலைமையை எதிர்கொள்ள முடியாமல் வேந்தர்படைவீரர்கள் சற்றே பின்னோக்கி இறங்கினர். ஆனால், திதியனோடு சாய்ந்து கிடந்த கொற்றனின் உடலில் எண்ணில்லாத ஈட்டிகள் இறங்கியிருந்தன.

யட்சினி வழிபாடு பற்றி கபிலர் சொன்னதும் அடுத்து செய்யவேண்டிய வேலைகளைப் பற்றி தீவிரமாகச் சிந்திக்கத் தொடாங்கினான் முடியன். யட்சினி வழிபாடு என்பது தாக்குதலுக்கு முன்பு நடக்கும் சடங்கு என கபிலர் கூறிய பிறகு `தாக்குதலை விடிந்ததும் தொடங்குவார்களா... இப்போதா?' என்று கேள்வியை எழுப்பியபடி இருந்தான்.

நாகக்கரட்டுக்குச் சென்ற பாரியும் கபிலரும் இன்னும் வரவில்லையே என நினைத்த தேக்கனும் வாரிக்கையனும் இரலிமேட்டிலிருந்து நாகக்கரட்டுக்கு வந்துசேர்ந்தனர். நள்ளிரவைக் கடந்து நீண்டநேரமாகியிருந்தது. அவர்கள் வந்ததும் மீண்டும் யட்சினிக்கான சடங்கு பற்றி கபிலர் கூறினார், ``எதிரிகளின் தாக்குதலை எதிர்பார்த்துதானே இருக்கிறோம். எப்போது தாக்கினாலும் எதிர்த்தாக்குதலால் அவர்களை வீழ்த்துவோம்'' என்றான் தேக்கன்.


``பொழுது விடியும்போது எல்லா நிலைகளிலும் வீரர்களை ஆயத்தநிலையில் இருக்கச் சொல்லுங்கள். நிலைமைக்கு ஏற்ப முடிவெடுப்போம்'' என்றான் பாரி.

இந்தப் பேச்சு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் வேட்டுவன்பாறையிலிருந்து வந்த வீரன் நாகக்கரட்டின் இடதுமுனையை அடைந்தான். அந்தத் திசைக்குத் தலைமையேற்ற நீலன் நிறைசூல் விழாவுக்குப் போய்விட்டதால், அந்தப் பொறுப்பை வேட்டூர்பழையன் ஏற்றிருந்தார். வந்த வீரன் மூச்சிரைக்க, தாக்குதலை விவரித்தான். செய்தியைக் கேட்டுத் துடித்தெழுந்த பழையன், முதற்படைப் பிரிவை அழைத்துக்கொண்டு வேட்டுவன்பாறை நோக்கிப் பாய்ந்து சென்றான்.

இடதுமுனையிலிருந்து காரிக்கொம்பு ஊதப்பட்டது. ஏதோ பிரச்னை என்பது நாகக்கரட்டின் மேல் இருந்த ஐவருக்கும் தெரிந்தது. வீரன் ஒருவன் நாககரட்டின் மேல்நிலை நோக்கி குதிரையில் வந்துகொண்டிருந்தான். ஐவரும் குதிரையில் ஏறி காரிக்கொம்பு ஊதப்பட்ட இடதுபுறத்தை நோக்கி விரைந்தனர். ஏதோ நடந்திருக்கிறது என்பது புரிந்தது. என்ன என்பதைக் கணிக்க முடியவில்லை. குதிரைகள் விரைந்தன.

வீரன் எதிர்பட்டான். நடந்துகொண்டிருக்கும் தாக்குதலை அவன் விவரித்தபோது அனைவரும் பேரதிர்ச்சிக்கு உள்ளாகினர். வீரன் சொல்லி முடிக்கும்போதே, நீலனைக் காக்க பாய்ந்து செல்லத்

துடித்தது பாரியின் மனம். அதை உணர்ந்த வாரிக்கையன், ``பாரி இங்கே இருக்கட்டும். தேக்கனும் முடியனும் புறப்படுங்கள்'' என்றார்.



பாரி மறுசொல் சொல்லும் முன் பெருங்குரலில், ``எல்லோரையும் வேட்டுவன்பாறையை நோக்கித் திருப்பிவிட்டு, எதிரியின் தாக்குதல் இந்தத் திசையில் அமைய வாய்ப்பிருக்கிறது" என்று சொன்ன தேக்கன், கணநேரம்கூடக் காத்திருக்காமல் குதிரையைத் தட்டி விரட்டினான். முடியனும் வீரர்களும் பின்தொடர்ந்தனர். இமைக்கும் நேரத்துக்குள் முடிவுகள் எடுக்கப்பட்டன. குதிரையின் காலடிக்குளம்பிலிருந்து தெரிந்த மண்துகள் கபிலரின் நெற்றியில் பட்டபோதுதான் திகைப்பு மீண்டார்.

எதிரிகள் மூன்று திசைகளிலும் வேட்டுவன் பாறையின் மேல்நிலையை நெருங்கிவிட்டனர். பறம்பின் தரப்பில் தாக்குதல் தொடுத்த வீரர்களின் எண்ணிக்கை பாதியாகக் குறைந்துவிட்டது. இனியும் தாக்குதல் உத்தியை மாற்றாமல் இருக்கக் கூடாது என நினைத்த நீலன், பின்னோக்கி விரைந்தான். ``குடில்களின் மேற்கூரைகளை எல்லாம் இழுத்துக் கீழே போடுங்கள். காய்ந்த மரங்கள், கட்டைகள் எல்லாவற்றையும்கொண்டு பெரும்வட்டத்தை உருவாக்குங்கள்'' எனச் சொல்லிவிட்டு, மீண்டும் தாக்குதல் முனைக்கு ஓடினான். மேல்நிலையில் நின்றிருந்த வீரர்கள், குடில்களின் மேற்கூரைகளை எல்லாம் கீழே சரித்தனர். திண்ணைகளிலும் முற்றத்திலும் இருக்கும் பெரும்பெரும் கட்டைகளைப் பொருத்தமான இடைவெளிகளில் போட்டு நிரப்பினர். மீண்டும் மீண்டும் வந்து என்ன செய்ய வேண்டும் எனச் சொல்லியபடியே தாக்குதல் தொடுக்க கிழக்குமுனைக்கு ஓடினான் நீலன்.

வேட்டுவன்பாறையின் மந்தையைச் சுற்றி பெரும்வட்டத்தில் கூரைகளையும் மரங்களையும் கட்டைகளையும் கொண்ட ஓர் அரணை உருவாக்கிய பிறகு, எல்லோரையும் உள்ளே வரச் சொன்னான் நீலன். வேட்டுவன்பாறையைச் சேர்ந்த எஞ்சிய வீரர்கள் எல்லோரும் உள்ளே வந்த பிறகு எல்லா திசைகளிலும் ஒரே நேரத்தில் தீயிட்டான். தீக்கங்குகள் வெடித்து மேலேறத் தொடங்கின. பாறைச்

சரிவுகளின் வழியே மூன்று பக்கங்களிலிருந்து மேலேறிய வேந்தர்படை, வேட்டுவன்பாறை முழுக்க குடில்கள் தீப்பிடித்து எரிவதைப் பார்த்துத் திகைத்து நின்றது. `எதிரிகள் தனது கைகளில் சிக்காமல் குடில்களுக்கு தீவைத்துவிட்டு காட்டுக்குள் தப்பி ஓடிவிட்டனர்' என நினைத்தான் கருங்கைவாணன். எந்தத் திசையிலிருந்தும் ஊருக்குள் நெருங்க முடியவில்லை. கூரைகளில் பற்றிய நெருப்பு, பெருங்கட்டைகளைச் சுற்றி வளைத்துக் கொண்டிருந்தது.

உயிரோடு மிஞ்சிய வேட்டுவன்பாறை வீரர்கள் வளையத்துக்குள் ஒன்றுகூடினர். ஊர்தோறும் தீக்களியை தாழி நிறைய சேகரித்து வைத்திருப்பது பறம்பின் வழக்கம். இடதுதோளிலும் காலிலுமாக இரு அம்புகள் தைத்த நிலையிலும் இயங்கக்கூடிய திறனோடு இருந்தான் சோமக்கிழவன். அவன்தான் தீக்களியை நீர்விட்டு பிசைந்து எஞ்சியிருக்கும் எட்டு வீரர்களின் உடலில் பூசினான். தீ நன்றாகப் பற்றி நாலாபுறமும் சீறி எரிவது வரை அவர்கள் காத்திருந்தனர். யார் யார் எந்தத் திசையின் வழியே வெளியேறிச் சென்று தாக்க வேண்டும் என வழிகாட்டினான் நீலன்.

வேந்தர்படை அடுத்து என்ன செய்வதென்று முடிவெடுக்க முடியாமல் நின்றிருந்தபோது, நெருப்பைப் பிளந்துகொண்டு பறம்புவீரர்கள் வெளிப்பட்டனர். இரண்டு கைகளிலும் இரு வாள்களை ஏந்தியபடி படைக்குள் தாவிய அவர்கள், மின்னல் வேகத்தில் சிக்கியவர்களை எல்லாம் வெட்டிச் சரித்துவிட்டு மீண்டும் நெருப்புக்குள் புகுந்து மறைந்தனர். நடுங்கிப்போனது வேந்தர்படை. நெருப்பைப் பிளந்து எதிரிகள் வெளியேறி வந்து தாக்குதல் தொடுக்கின்றனர் என்பதை யாராலும் நினைத்துகூடப் பார்க்க முடியவில்லை. இரு வாள்களோடு வெளிவந்த நீலன், கண நேரத்தில் பத்துக்கும் மேற்பட்டோரை சீவியெறிந்துவிட்டு மீண்டும் தீக்குள் புகுந்தான்.

வீரர்களின் பேரோலத்தைக் கேட்டு ஓடிவந்தான் கருங்கைவாணன். ``நெருப்புக்குள்ளிருந்து வெளியேறி வந்து தாக்குதல் நடத்திவிட்டு மீண்டும் உள்ளே போய்விடுகின்றனர்'' என்று மற்ற வீரர்கள் தெரிவித்தனர். மிரண்டுபோய்ப் பார்த்தான் கருங்கைவாணன். எல்லா திசைகளிலும் பற்றி எரிந்து கொண்டிருந்தது. ``உள்ளே போனவன் எந்த வழியில் போனான்?'' எனக் கேட்டான் கருங்கைவாணன். உடன் இருந்த வீரர்கள், அவன் தாக்குதல் நடத்தித் திரும்பிய இடத்தைக் காண்பித்தனர். மனிதன் நுழைந்து வெளியேறும் அளவுக்கு அந்த இடத்தில் நெருப்பு சிறுத்து எரிகிறதா என, சற்றே உற்றுப்பார்த்தான் கருங்கைவாணன். ஆனால், ஆள் உயரத்துக்கு மேலாக நெருப்பின் கீற்றுகள் மேலெழுந்து கொண்டிருந்தன. இதற்குள்ளிருந்து எப்படி வெளிவந்து மீண்டும் உள்ளே போக முடியும் என்பது புரியாத குழப்பத்தில் மிரண்டு நின்றான்.

தாக்குதல் நடத்திவிட்டு வீரர்கள் உள்ளே வந்ததும், அவர்கள் வந்த நெருப்பின் தடத்துக்குள் ஏற்கெனவே ஆயத்தநிலையில் இருந்த வீரர்கள் மிளகுக் குடுவையை உருட்டிவிட்டனர். குடுவையில் தீப்பொறி பட்டவுடன் சூடேறும். கண நேரத்தில் பெரும்சத்தத்தோடு வெடிக்கும். வெடிப்புற்ற கணம் மேலே கிடக்கும் கட்டைகளையே தூக்கிவீசும். நெருப்புக் கங்குகள் எல்லா பக்கங்களிலும் தெறிக்கும். நீலன் நெருப்புக்குள் நுழைந்த இடத்தை கருங்கைவாணன் உற்றுப்பார்த்தபோதுதான் மிளகுக்குடுவை வெடித்துச் சிதறியது. முகமெல்லாம் கங்குத்துளிகள் தெறித்துவிழ துடித்துப்போனான் கருங்கைவாணன்.

உடனடியாக கருங்கைவாணனுக்கு மற்றவர்கள் உதவிக்கொண்டிருந்தபோது, சற்று தொலைவில் நெருப்புக்குள்ளிருந்து வெளிவந்த வீரன் ஒருவன் இரு வாள்களைக்கொண்டு வெட்டிச் சரித்துவிட்டு மீண்டும் நெருப்புக்குள் நுழைந்தான். வேந்தர்படை உறைந்து நின்றது. எதிரிகள் தாக்குதலை எந்தத் திசையிலிருந்து எப்படி நடத்துகின்றனர் என்பது புரியாதபுதிராக இருந்தது. வடக்குப் பக்கத்தில் நெருப்பைப் பிளந்து வெளியேறும் மனிதர்களைக் கண்டவுடன் துடிச்சாத்தன் செயலற்று நின்றான். வெளியேறியவர்களின் வாள்வீச்சில் குருதி பொங்கித் தெறித்தது. நெருப்பின் சீற்றத்தினூடே குருதியைக் குடித்தபடி வாள்கள் மீண்டும் தீப்பிழம்புக்குள் நுழைந்து மறைந்தன.

`மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட செயலை பறம்புவீரர்கள் செய்துகொண்டிருக்கின்றனர். இனியும் தாம் இங்கு இருப்பது எந்த வகையிலும் நல்லதன்று' எனச் சிந்தித்த துடிச்சாத்தன், கருங்கைவாணனை நோக்கி விரைந்தான். வீரர்கள் சுற்றி நிற்க நெருப்பைவிட்டு மிகவும் தள்ளி பாறை ஒன்றின் மேல் கருங்கைவாணன் அமர்ந்திருந்தான். அவனது முகத்தை துணிகொண்டு மூடி இளைப்பாறச் செய்துகொண்டிருந்தனர்.

தாக்குதல் நடத்திவிட்டு உள்ளே வரும் வீரர்களின் உடலில் தீக்களி காய்ந்தோ, உதிர்ந்தோபோயிருந்தால், மீண்டும் தீக்களியைப் பூசி தாக்குதலுக்கு ஆயத்தம் செய்யும் வேலையைச் செய்துகொண்டிருந்தான் சோமக்கிழவன். நீலன், புங்கன், மேலும் இருவர் என நான்கு பேர்தான் தீக்களி பூசி இரு வாள்கள் ஏந்தி எதிரிகளை வெட்டிச் சாய்த்துக்கொண்டிருந்தனர். மற்ற மூவரும் மிளகுக்குடுவையை நெருப்புக்குள் இங்கும் அங்குமாக வீசியெறிந்துகொண்டிருந்தனர்.

என்ன நடக்கிறது என எதிரிகள் அறியும் முன், பறம்புவீரர்கள் நால்வரும் ஐந்து முறைக்கும் மேலே சென்று தாக்கிவிட்டு மீண்டும் நெருப்புக்குள் திரும்பியிருந்தனர். ஒவ்வொரு வீரனும் பத்துக்கும் மேற்பட்டோரை வெட்டிச்சாய்த்திருந்தான். நீலனின் தாக்குதலில் மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட வீரர்கள் சரிந்திருப்பர். நெருப்பெங்கும் வடியும் குருதியோடு வாளை சூடாக்கிக் கொண்டேயிருந்தனர் பறம்புவீரர்கள்.

முகமெல்லாம் மிளகுப்பொறி பட்டு சுட்டுக்கருகியபோது துடித்துக் கத்தினான் கருங்கைவாணன். ஆனாலும் அவனது இலக்கை விட்டு திரும்பிச் செல்ல அவன் ஆயத்தமாக இல்லை. நெருப்பின் வட்டத்துக்குள்ளிருந்து எப்படி இவர்கள் வெளிவருகின்றனர்; நெருப்பின் சூட்டை இவர்கள் எப்படி தாக்குப்பிடிக்கின்றனர் என எதுவும் புரியவில்லை. வேந்தர்படை வீரர்கள், வெடித்துச் சிதறும் நெருப்பின் பொறி கண்டு அஞ்சி இருளுக்குள் பதுங்கினர். ஆனாலும் ``நெருப்பைவிட்டு அகலாமல் நில்லுங்கள்'' என்று வீரர்களை நோக்கி மீண்டும் மீண்டும் கூறினான் கருங்கைவாணன்.

வள்ளிக்கானத்தில் நாகசம்பங்கியின் தேறல் தேள்போல் கொட்டி உள்ளிறங்கிக் கொண்டிருந்தது.

துடியும் முழவும் பறையும் அடர்காட்டை உலுக்கின. பெண்கள் களிவெறிகொண்டு ஆடினர். பெருங் கூக்குரலினூடே இருளைக்கிழித்து பெண்கள் ஆடிக்கொண்டிருந்தபோது, நெருப்பைப் பிளந்து வாள் ஏந்தி ஆடிக்கொண்டிருந்தனர் ஆண்கள். இருவிதமான ஓசைகள் காரமலையின் இரு இடங்களிலிருந்து வெளிவந்துகொண்டிருந்தன.



கலங்கிப்போய் வந்த துடிச்சாத்தனிடம் நம்பிக்கைகொடுத்து, தாக்குதலுக்கான வழிமுறைகளைப் பற்றிப் பேசினான் கருங்கைவாணன். பறம்புவீரர்கள் நடத்தும் இந்தத் தாக்குதலால் சிலர்தான் வெட்டுப்பட்டு சாகின்றனர். ஆனால், மனித முயற்சிக்கு அப்பாற்றபட்ட அவர்களின் இந்தச் செயலால் வீரர்கள் எல்லாம் நம்பிக்கை இழந்து மிரண்டு நிற்கின்றனர். `பறம்பினரை ஒன்றும் செய்ய முடியாது. தீயின் தேவதை அவர்கள் பக்கம் நிற்கிறாள்' என வீரர்கள் கருதுவதாகவும் ``வேந்தர்படை, விரைவில் இந்த இடம்விட்டு நகர்வது நல்லது'' எனவும் துடிச்சாத்தன் கூறினான்.

முகத்தில் நெருப்புப்பொறி பட்டபோதுகூட இப்படிக் கத்தவில்லை. இப்போது கத்தினான் கருங்கைவாணன். ``நான் வந்த வேலையை முடிக்காமல் திரும்பினால் மூவேந்தர்களின் பெரும்படைக்குத் தலைமைதாங்கும் தகுதியை இழந்தவனாவேன். எனது உயிரே போனாலும் வெற்றிகொள்ளாமல் இந்த இடம்விட்டுத் திரும்ப மாட்டேன்'' என நரம்பு புடைக்கக் கத்தினான்.

``எதிரிகளைக் கண்டு அஞ்சாதீர்கள். அவர்களும் நம்மைப்போல் மனிதர்கள்தான். நெருப்புக்குள் நீண்டநேரம் தாக்குப்பிடிக்க முடியாது. விரைவில் வெளிவந்துதான் தீரவேண்டும். அந்தக்

கணத்துக்காகக் காத்திருப்போம். உரிய நேரத்தில் ஒன்றுபட்டு தாக்குதல் தொடுத்தால் அவர்களை வீழ்த்திவிட முடியும்” என்று பாறையின் மீது நின்று முழங்கினான் கருங்கைவாணன்.

கட்டைகள் வெடித்து நெருப்புப்பொறிகள் எங்கும் சிதறிக்கொண்டிருந்தன. ``வீரர்களே... நெருப்பைவிட்டு மிகவும் தள்ளி நில்லுங்கள். அவர்கள் எவ்விடம் வெளியில் வருகிறார்களோ, அவ்விடம் அம்பு எய்தித் தாக்குங்கள். வாளால் தாக்க முயலாதீர்கள்” என்று வடப்புறமாகக் கத்திவிட்டு, தென்புறம் திரும்பினான் கருங்கைவாணன். கண்ணிமைக்கும் நேரத்தில் வெளியில் வந்து, மூவரின் தலைகளைச் சீவியெறிந்துவிட்டு மீண்டும் நெருப்புக்குள் நுழைந்தான் நீலன்.

நெருப்பைக் கிழித்து வெளிவரும் கணத்திலிருந்து இந்தக் காட்சியைப் பார்த்தான் கருங்கைவாணன். தீச்சுடரே நீண்டுவந்து தலைகளைச் சீவிச்செல்வது போல இருந்தது. நீலனை நன்கு அடையாளம் தெரிந்த இருவரும் எந்நேரமும் கருங்கைவாணனின் அருகிலே இருந்தனர்.
பெருவட்டத்தில் நிலைகொண்டு எரிந்த நெருப்பிலிருந்து எந்தத் திசையிலும் வெளியேறி தாக்கிக்கொண்டே இருந்தனர். கருங்கைவாணன் அந்த வட்டம் முழுவதும் சுற்றியபடி வீரர்களிடம் நம்பிக்கையூட்டினான். ஆனால், அவன் உருவாக்கும் நம்பிக்கைகள் நெருப்பைப் பிளக்கும் மனிதர்களால் கணநேரத்தில் எரியூட்டப்பட்டன.



ஆனாலும் விடாது முயன்றபடி அங்கும் இங்குமாக ஓடினான் கருங்கைவாணன். நெருப்புக்குள் மூங்கில்கட்டைகள் வெடிப்புற்று தெறித்தபோது, தெறிக்கும் நெருப்புக் கொப்புளங்களுக்குள்ளிருந்து வெளிவந்தான் நீலன். அவன் எதிரில் வாளேந்திய கையை உயர்த்தினான் துடிச்சாத்தன். நீலனின் வாள்வீச்சின் வேகம் துடிச்சாத்தனின் கழுத்தில் குறுக்கிட்டு இறங்கியது.

தெறித்த குருதி மண்ணில் விழும் முன் நெருப்பைப் பிளந்து அந்தப் பக்கத்தை அடைந்தான் நீலன். உருண்டு வந்த துடிச்சாத்தனின் தலை, கருங்கைவாணனின் காலில் வந்து முட்டி நின்றது. ஒரு கணம் அப்படியே நின்றான் கருங்கைவாணன். அருகில் இருந்தவன் சொன்னான், ``தாக்கிச்சென்றது நீலன்.”

எந்தத் திசையிலிருந்தெல்லாம் பறம்பினர் வெளிவருகிறார்களோ, அந்தத் திசையில் எல்லாம் வேந்தர்படையினர் விலகியிருந்து அம்பு எய்தனர். நெருப்பைப் பிளந்து வெளியேறியவர்களின் உடல்களில் அம்புகள் தைக்கத் தொடங்கின. உள்ளிருந்து தாக்குதல் தொடுத்தவர்கள் ஒருவர் பின்

ஒருவராக வீழத் தொடங்கினர். ஆனாலும் நீலனின் வேகம் குறையவேயில்லை. நெருப்புக்கு வெளியேயிருந்து தாக்குதல் தொடுப்பவர்கள் மிகவும் விலகி நிற்கிறார்கள் என அறிந்து, அதற்கு ஏற்ப தாக்குதல் திட்டத்தை மாற்றுங்கள் என நீலன் சொன்னபோது, புங்கன் ஈட்டியால் குத்தப்பட்டு நெருப்புக்குள் இருந்து வெளிவர முடியாமல் சாய்ந்தான். எது கண்டும் கலங்கும் நிலையில் நீலன் இல்லை. அவனோடு எஞ்சிய வீரர்கள் இருவர் மட்டுமே.

அவர்களுக்கும் தீக்களியைப் பூசிக்கொண்டிருந்தான் சோமக்கிழவன். நெருப்புக்கு அப்பால் எந்தத் திசையில் சென்று தாக்கலாம் என நெருப்பின் கீற்றுகளை நீலன் பார்த்துக்கொண்டிருக்கும்போதுதான் காற்று அதிரக் கேட்டது காரிக்கொம்பின் ஓசை.

ஒரு கணம் மனதுக்குள் மின்னல்வெட்டியதைப்போல மகிழ்ச்சி பூத்தது. இரண்டாம் குன்றுக்கு அப்பால் வரும்போதே வேட்டூர்பழையன் காரிக்கொம்பை ஊதச் சொல்லிவிட்டான். `நாங்கள் அருகில் வந்துவிட்டோம்' என்று சொல்வதற்கான ஓசை அது. காரிக்கொம்பின் ஓசை கேட்ட கணம் உற்சாகம் பீறிட வெறிகொண்டபடி நெருப்பைப் பிளந்துகொண்டு வெளிவந்தான் நீலன். நெருப்பைவிட்டு விலகி நின்றிருந்த எதிரிகளின் மீது மூன்று ஈட்டிகளை எறிந்துவிட்டு மீண்டும் நெருப்புக்குள் நுழைந்தான்.

அவனது வருகையை எல்லா திசைகளிலும் எதிர்பார்த்திருந்த கருங்கைவாணன், கண்ணெதிரே வந்து திரும்பும் நீலனைப் பார்த்தவுடன் தனது கைநரம்பே அறுந்து கொண்டுபோவதைப்போல வீசினான் ஈட்டியை. நெருப்புக்குள் நுழைந்த நீலனின் வலது பின்னங்கால் தொடையில் இறங்கியது ஈட்டி. நெருப்போடு சாய்ந்தான் நீலன். ``அவனை வெளியே இழுங்கள்" எனக் கத்தியபடி அருகில் ஓடிவந்தான் கருங்கைவாணன்.

இரு குன்றுகளுக்கு அப்பாலிருந்து எரியும் நெருப்பைப் பார்த்தபடி என்ன நடக்கிறது எனப் புரிந்துகொள்ள முடியாமல் பதற்றத்தோடு குதிரையை விரட்டிவந்தான் வேட்டூர்பழையன். அவனோடு படையணி வீரர்கள் அனைவரும் படு ஆவேசத்தோடு வந்துகொண்டிருந்தனர். ``காரிக்கொம்பை விடாம ஊது'' என்று சத்தம்போட்டபடி குதிரையை விரட்டினான்.




இரண்டு குன்றுகளையும் தாண்டி வேட்டுவன்பாறைக்குள் நுழையும்போது கிழக்கின் ஒளிக்கீற்று மெள்ள மேலெழுந்துகொண்டிருந்தது. தீயின் நாக்குகள் இங்கும் அங்குமாக எரிந்துகொண்டிருந்தன. மனிதர்கள் யாரும் உயிருடன் இருப்பதுபோல் தெரியவில்லை, `நீலன்... புங்கன்...' என ஒவ்வொரு

பெயராகச் சொல்லிக் கத்தியபடி எங்கும் ஓடினான் வேட்டூர்பழையன். வீரர்கள், நான்கு திசைகளிலும் தேடித் தவித்தனர்.
நெருப்புக் கட்டைகளுக்கு நடுவே கரிக்கட்டைகளாக சிலர் கிடந்தனர். இரு பக்கங்களிலும் குருதியில் மிதந்தபடி எண்ணற்ற உடல்கள் கிடந்தன. குன்றின் சரிவு முழுக்க வேந்தர்படைவீரர்கள் மாண்டுகிடந்தனர். ஒருவன் சத்தம்போட்டு வேட்டூர்பழையனை அழைத்தான். அவன் இருக்கும் இடத்தை நோக்கி ஓடினான் வேட்டுர்பழையன். வீட்டின் மண்சுவர் ஓரம் குற்றுயிராய்க் கிடந்தான் சோமக்கிழவன்.
பழையனைப் பார்த்ததும் கீழ்ப்புறமாகக் கையை நீட்டி, ``அவர்கள் நீலனைக் கொண்டுசெல்கின்றனர்" என்றான்.


கிழக்குத் திசையில் நீலனின் குடில் இருந்த முனைப்பகுதிக்கு வந்து பதற்றத்தோடு பார்த்தான் வேட்டுர்பழையன். காலைக்கதிரவன் மேலெழுந்துகொண்டிருந்தான். வேட்டுவன்பாறையின் அடிவாரத்திலிருந்து வேந்தர்படைவீரர்கள் குதிரைகளில் புறப்பட்டனர்.
முன்னால் போய்க்கொண்டிருந்த தேரில் கிடத்தப் பட்டிருந்த நீலன் பெருங்கயிறுகளால் கட்டப்பட்டிருந்தான். அந்தத் தேரின் முன்நிலையில் நின்றுகொண்டிருந்த கருங்கைவாணன் உடலெல்லாம் குருதிகொட்ட, முகமெல்லாம் மகிழ்வு பூக்க ஆவேசக்குரல் எழுப்பியபடி தேரைச் செலுத்தினான்.

- ***பறம்பின் குரல் ஒலிக்கும்...***

# வீரயுக நாயகன் வேள்பாரி-86

"நாகரவண்டினைக் கொத்திக்கொண்டு வந்துவிட்டேன்" என்று சொல்லி மகிழ்வின் உச்சத்தை வெளிப்படுத்தினார் குலசேகரபாண்டியன். யவனத்தேறலைக் குடித்துக்கொண்டே அவர் கூறுவதை மகிழ்ந்து கேட்டனர் செங்கனச்சோழனும் உதியஞ்சேரலும். குடியில் ஒருவரை ஒருவர் விஞ்சினர். போர்ச்சூழலில் அளவின்றிக் குடிப்பதைத் தவிர்க்க வேண்டும் எனச் சொல்வதற்கு தொடர்ந்து முயன்றார் முசுகுந்தர். ஆனால், அதற்கான வாய்ப்பே அமையவில்லை.

இத்தனை நாள்கள் மையூர்கிழாரின் மாளிகை ஒன்றில் தங்கவைக்கப்பட்டிருந்த ஹிப்பாலஸ், இன்று மூஞ்சலுக்கு அழைக்கப்பட்டான். இந்த விருந்தில் அவனும் பங்கெடுத்தான். ஹிப்பாலஸிடம் குலசேகரபாண்டியன் மீண்டும் மீண்டும் சொன்னார், ``நாகரவண்டினை நமது கூட்டுக்குக் கொண்டுவந்துவிட்டோம். இனி நமக்கான இரை நம்மைத் தேடி வந்தே தீரும். மூவரும் இணைந்து வளைத்து வளைத்து வேட்டையாடுவோம்."



கருங்கைவாணனுக்கு உடனடியாக மருத்துவ உதவி தேவைப்பட்டதால் அவன் விருந்தில் பங்கெடுக்கவில்லை. மருத்துவர்களின் கூடாரத்தில் இருந்தான். நீண்டகாலத்துக்குப் பிறகு இன்றைக்குத்தான் அவனது வீரத்தை அவையில் புகழ்ந்து பேசினார் குலசேகரபாண்டியன்.

பேரரசர் அவன்மீது வைத்திருந்த நம்பிக்கை, வைப்பூர் தாக்குதலால் சிதைந்துவிட்டது. அதை எப்படியாவது மீட்கவேண்டும் எனப் பேறுதியோடு செயல்பட்டு வந்தான் கருங்கைவாணன். ஆனால், இன்று அந்த உறுதி தளர்ந்தது. திட்டமிட்டபடி நீலனைச் சிறையெடுத்து வந்துவிட்டான். ஆனால், நேற்று

இரவு நடந்த தாக்குதல் அவன் வாழ்வில் இதுவரை காணாத ஒன்று. சின்னஞ்சிறிய கூட்டம் ஒன்று, வேந்தர்பெரும்படையை முழுமுற்றாக அழித்தது. மாவீரர்களான திதியனும் துடிச்சாத்தனும் கொல்லப்பட்டனர். பங்கெடுத்த வீரர்களில் பத்தில் ஒரு பங்கு வீரர்கள் மட்டுமே உயிரோடு மீண்டுள்ளனர். அவர்களில் பாதிப்பேர் போர்க்களம் புக நீண்டகாலமாகும். இருமுறை மயிரிழையில் உயிர்தப்பினான் கருங்கைவாணன்.

இவையெல்லாம் பறம்புவீரர்களின் திறனை வெளிப்படுத்துவனவாக இருந்தாலும், நெருப்பைப் பிளந்துகொண்டு அவர்கள் தாக்குதல் தொடுத்தமுறை குருதியை உறைய வைப்பதாக இருக்கிறது. நினைக்கும்போதே நடுக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்தத் தாக்குதலில் தப்பித்த ஒவ்வொருவனும் இனி இதைத்தான் பேசுவான். பறம்புவீரர்களின் கற்பனைக்கு எட்டாத வீரமும் ஆற்றலும் அடுத்து வரும் நாள்களில் வேந்தர்படை முழுவதும் பரவிவிடும்.

`எதிரிப்படையினர் நம்மைப் போன்ற மனிதர்கள்தான் என்பது மாறி அவர்கள் பேராற்றல்கொண்டவர்கள் என ஆழ்மனம் நம்பிவிடும். நீரை நிலம் விழுங்குவதைப்போல, தனது வீரத்தைத் தானே விழுங்கி வற்றச்செய்யும் வேலையை மனம் நமக்குத் தெரியாமலேயே செய்துகொண்டிருக்கும். இதை எப்படி மாற்றப்போகிறோம்? அவர்களை வீழ்த்தும் வலிமை நமக்கு இருக்கிறது என்பதை படைவீரர்களின் எண்ணிக்கையால் மட்டுமே உருவாக்கிவிட முடியாது. அறுநூறு வீரர்கள் கொண்ட படைப்பிரிவை அந்தச் சின்னஞ்சிறிய கூட்டம் அழித்து முடிக்க அதிக நேரமாகவில்லை. அப்படியென்றால், குவிக்கப்பட்டுள்ள இந்தப் பெரும்படையை அவர்களால் வென்றுவிட முடியும்தானே?' கேள்விகள், விடாது மேலெழுந்து கொண்டேயிருந்தன.

வீரயுக நாயகன்

86

வேள்பாரி

சு.வெங்கடேசன் ஓவியங்கள்: ம.செ.,

``கண்களைச் சற்று மூடுங்கள். முகம் முழுவதும் பச்சிலை தடவ வேண்டும்” என்றார் மருத்துவர். கண்களை மூடினால் நெருப்பைப் பிளந்து கொண்டு பறம்புவீரர்கள் வெளிவந்துகொண்டே இருந்தனர். கருங்கைவாணனால் கண்களை மூட முடியவில்லை. சிந்தனையின் வெக்கை இமைகளைச் சுட்டது.

இந்தப் பெரும்போருக்குத் தலைமையேற்கும் மகாசாமந்தனாகக் கருங்கைவாணனைத் தேர்வுசெய்தது எவ்வளவு பொருத்தமானது என உதியஞ்சேரலும் செங்கனச்சோழனும் பாராட்டிப் பேசினர். `` `போர்க்களத்தில் சிறந்த தளபதியைக் கொண்டுள்ள மன்னன் நிம்மதியாகப் படுத்துறங்குவான்' என்று சொல்வார்கள் அல்லவா!” எனக் கேட்டார் முசுகுந்தர்.

``ஆம்... ஆம்...” என வேந்தர்கள் வழிமொழிந்தனர். நிறைந்த மயக்கத்தில் குலசேகரபாண்டியன் ஹிப்பாலஸிடம் சொன்னார், ``நீங்கள் நாளை புறப்பட்டு மதுரைக்குச் சென்று ஓய்வெடுங்கள். பாரியை

வீழ்த்திவிட்டு நாங்கள் வந்து சேருகிறோம்.”

ஹிப்பாலஸ், மகிழ்வோடு அதை ஏற்றுத் தலைவணங்கி நன்றி சொன்னான். மகிழ்வின் உச்சத்திலும் நிலைகொள்ளாத மயக்கத்திலும்கூட பாண்டிய வேந்தர் செயலில் கவனத்தோடு இருப்பார் என்பதைப் பலமுறை பார்த்து வியந்தவர் முசுகுந்தர். இன்றைய செயலும் அவரை எல்லையற்ற வியப்புக்கு உட்படுத்தியது.

`குலசேகரபாண்டியரை யாராலும் கணித்துவிட முடியாது. எந்தச் சொல்கொண்டு செயலின் திசையை எந்தப் பக்கம் திருப்புவார் என்பதை இத்தனை ஆண்டுகளாக உடனிருக்கும் தன்னாலேயே புரிந்துகொள்ள முடியவில்லையே... உதியஞ்சேரலும் செங்கனச்சோழனுமா புரிந்து கொள்ளப்போகின்றனர்’ என்று எண்ணியபடி ஹிப்பாலஸ்ஸை அனுப்பிவைக்கும் வேலையில் ஈடுபட்டார் முசுகுந்தர். நள்ளிரவுக்குப் பிறகும் வெகுநேரம் விருந்து நீண்டது.

மறுநாள் பொழுது விடிந்த பிறகு நாகக் கரட்டிலிருந்து தனித்த தேர் ஒன்று கீழிறங்கியது. கருநிறத்தாலான பெரும்போர்வையை உடல் முழுவதும் சுற்றி, தேரின் வலதுபுறக் கைக்கட்டையைப் பிடித்தபடி வந்து கொண்டிருந்தார் கபிலர். வேந்தர்களின் படையணியை நோக்கிக் கீழிறங்கி வந்தது தேர். உடலின் அத்துணை உறுப்புகளும் செயலற்றதைப் போல உணர்ந்த நாள் இது. உயிர்த்துடிப்பற்று இருந்தன அவருடைய கண்கள். ஆனாலும் தன்னுடைய கடமையைச் செய்யவேண்டும் என்பதில், அவரது உள்ளம் தெளிவோடு இருந்தது. தேர், வேந்தர்களின் படையணிக்கு அருகில் வந்து நின்றது.

வீரன் ஒருவன் தேருக்கு அருகில் வந்து, ``செய்தி என்ன?” என்று கேட்டான்

``கபிலர் வந்திருக்கிறேன் என்று வேந்தர்களிடம் சொல்” என்றார்.

``சரி” எனக் கூறிய அவன் செய்தியைச் சொல்ல மூஞ்சலை நோக்கிக் குதிரையில் விரைந்தான்.

நள்ளிரவுக்குப் பிறகும் விருந்து நீண்டதால், வேந்தர்கள் யாரும் எழுந்திருக்கவில்லை. மூஞ்சலின் வாசலிலேயே அந்த வீரன் நின்றிருந்தான்.

நெடும்பொழுது கடந்தது. கபிலரின் தேர் அசைவற்று நின்றிருந்தது. அனுமதிக்காகக் காத்திருக்கும் நீண்டபொழுதை, கபிலர் முதன்முறையாகச் சந்தித்துக்கொண்டிருந்தார். மனம் கொந்தளிப்பிலேயே இருந்தது. தேரோட்டி வந்த வீரன், `இடதுபக்கக் கட்டையில் தொங்கிக் கொண்டிருக்கும் மூங்கில் குடுவையில் உள்ள நீராகாரத்தைக் கபிலருக்குத் தருவோம்’ என நினைத்துத் திரும்பினான்.


``எக்காரணங்கொண்டும் திரும்பாதே. அழைப்பு வருகிறதா என்று மட்டும் பார்” என்றார்.

கபிலரின் திடமான குரல் கேட்டு, சற்றே அதிர்ச்சியானான் வீரன்.

இரலிமேட்டிலிருந்து பாரி, கபிலரைப் பார்த்துக்கொண்டேயிருப்பான். இவ்வளவு பொழுது அவர்

நிற்கவைக்கப்பட்டதை அவனால் தாங்கிக்கொள்ள முடியாது. உடனே திரும்பி வாருங்கள் என்று சொல்லிவிடக்கூடும். எனவேதான், ``எப்பக்கமும் திரும்பாதே” என்று கபிலர் வீரனைக் கடிந்து கூறினார்.

பொழுது நண்பகலைக் கடந்தது. தேர் தனது இடம் விட்டு நகராமல் நின்றுகொண்டேயிருந்தது. அனுமதி கேட்கச் சென்றவன் வந்துசேர்ந்தான். கபிலரின் தேர் படையணிக்குள் அனுமதிக்கப் பட்டது. குதிரைவீரன் வழிகாட்டி முன் சென்றான்.



படையணிகளுக்குள்ளும் பாசறைகளுக்கிடையேயும் வளைந்து நெளிந்து சென்ற தேர், இறுதியில் மூஞ்சலை அடைந்தது. கபிலர் இறங்கினார். வரவேற்க எவரும் இல்லை. எந்தக் கூடாரம் நோக்கிப் போவது என்பது சற்றே குழப்பமாக இருந்தது. குதிரைவீரன், மூன்றாம் கூடாரத்தைக் கைகாட்டி ``உங்களை அங்கே வரச்சொன்னார்கள்” என்றான்.

கபிலர் அதை நோக்கி நடந்தார். அருகில் செல்லச் செல்ல இசைக்கருவிகளின் ஓசை கேட்டது. மகிழ்வின் வெளிப்பாடு முகத்தில் அறைந்தது. உடல் கூசி நடுங்கியது. நீண்டநேரம் நிறுத்திவைத்ததன் மூலம் ஏற்படுத்திய உணர்வை, அருகில் அழைப்பதன் மூலமும் ஏற்படுத்த முடிந்தது. கபிலரின் கால்கள் நகராமல் நின்றன. சற்று நேரத்தில் கூடாரத்திலிருந்து வெளியே வந்த முசுகுந்தர் அவருக்கு வணக்கம் தெரிவித்து உள்ளே அழைத்துச் சென்றார்.

இசை நிகழ்வு முடிவுற்றதும் கபிலர் உள்நுழைந்தார். வேந்தர்கள் மகிழ்வோடு வீற்றிருந்தனர். பெரும்புலவரை வழக்கத்தைவிடப் பேரோசையை வெளிப்படுத்தி வரவேற்றார் குலசேகரபாண்டியன். வரவேற்க ஆள்கள் இல்லாதபோது என்ன உணர்வை ஏற்படுத்த முடிந்ததோ, அதே உணர்வை வரவேற்கும்போதும் ஏற்படுத்த முடிந்தது. அவையை வணங்கினார் கபிலர்.

``என்ன புலவரே, நண்பகலில் இவ்வளவு பெரிய போர்வையைப் போர்த்திக்கொண்டு வந்திருக்கிறீர்...

உடல் நடுங்குகிறதா?” எனக் கேட்டார் சோழவேழன்.

``தோழனின் நடுக்கத்தை பெரும்புலவர் தானும் உணர்கிறாரோ?” எனக் கேட்டான் உதியஞ்சேரல்.

மனிதனுக்குள் அவமானத்தைத் துளையிட்டு உள்நுழைக்கிற கருவி, சொற்களின்றி வேறில்லை. கணநேரத்தில் உடல் நடுங்கியது. சூம்பிப்போயிருந்த வலதுகால் நடுவிரல் உள்ளிழுத்தது. பின்னங்கால் நரம்பு இழுக்கத் தடுமாறுவதுபோல் இருந்தது. கண்களை மூடி உடலையும் மனதையும் திடப்படுத்திக்கொண்டார். தனக்கான சொற்கள் எதுவும் தன்னிடம் வரக் கூடாது என நினைத்தார். நீலனைப் பார்க்கும் வரை சொல்லேந்தக் கூடாது என்ற முடிவோடு இருந்தார்.

``பெரும்புலவர் நம்மைப் பார்க்க வரவில்லை. நீலனைப் பார்க்கவே வந்துள்ளார். எனவே, முதலில் அவர் நீலனைப் பார்த்துவிட்டு வரட்டும். பிறகு பேசலாம்” என்றார் குலசேகரபாண்டியன்.

``சரி’’ எனச் சொல்லி எழுந்த முசுகுந்தர், கபிலரை அழைத்துக்கொண்டு வெளியில் வந்தார். மூஞ்சலில் பெரும்பெரும் கூடாரங்கள் போதிய இடைவெளிவிட்டு அமைக்கப்பட்டிருந்தன. அந்தக் கூடாரங்களுக்கு நடுவே சின்னதாய் ஒரு கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. முசுகுந்தர் அதை நோக்கி நடந்தார்.

கபிலரின் கால்கள் முன்னகரத் தயங்கின. நீலன் எந்த நிலையில் இருக்கப்போகிறான் என்ற கவலை அவரை மேலும் நடுக்கமுறவைத்தது. முசுகுந்தர் கூடாரத்தின் திரைச்சீலையை விலக்கியபடி, கபிலர் உள்ளே செல்ல கையை நீட்டினார். உள்நுழைந்தார் கபிலர். கூடாரத்தின் நடுவில் கைகள் கட்டப்பட்ட நிலையில் மரத்தூண் ஒன்றில் சாய்ந்துகிடந்தான் நீலன். உடலெங்கும் குருதி வழிந்த கருந்திட்டுகள் இருந்தன. இன்னும் சில இடங்களில் செங்கசிவு நிற்காமல் இருந்தது. கால்தொடையில் ஈட்டி இறங்கிய இடத்தில் துணிகளைக்கொண்டு கட்டியிருந்தான். ஆங்காங்கே தசைகள் பிய்ந்து தொங்க ஈக்கள் மொய்த்துக்கொண்டிருந்தன. கண்கள் உட்செருகியபடி கிடந்தவன், ஓசை கேட்டு விழித்துப் பார்க்க முயன்றான். புருவங்கள்தான் மேலேறிக்கொண்டிருந்தன. இமைகளைத் திறக்க முடியவில்லை. முயன்று இமை திறந்து பார்த்தான். எதிரில் கபிலர்.

அவனது தலையைக் கைகளால் மெள்ளத் தடவியபடி அருகில் மண்டியிட்டு அமர்ந்தார். விழிகள் ஏறிட்டு கபிலரைப் பார்த்தன. கலங்கிய கண்களோடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தார் கபிலர். அவரின் கண்கள் அவனது காயங்களைத் தேடித் தேடி நகர்ந்தன.

எதிரியின் கூடாரத்தில் கட்டுண்டு கிடக்கும் மாவீரனிடம் நம்பிக்கையூட்டும்படி பேச கபிலரால் முடியும். ஆனால், நீலனைப் பல நேரங்களில் தன் மகனைப்போல உணர்ந்தவர் அவர். அவரது மனம் உணர்வுகளின் கொதிகலனாக இருந்தது. கண்களில் நீர் பெருகிக்கொண்டேயிருந்தது. அவனது காயங்களினூடே கைகள் நகர்ந்தபடி இருந்தன.

அவரை நீலனால் முழுமையாக உணர முடிந்தது. மெள்ள அவன் பேசத் தொடங்கினான், ``உங்களைச் சந்தித்த முதல் நாள் நான் என்ன சொன்னேன் என்பது நினைவிருக்கிறதா?”

தனது உடல்நடுக்கத்தை வெளிக்காட்டிக்கொள்ளக் கூடாது என முயன்றுகொண்டிருந்த கபிலருக்கு, நீலன் எதைக் கேட்கிறான் என்பது புரியவில்லை. சிந்தித்துப்பார்த்தார். அவன் கேட்பது நினைவுக்குப் புலனாகவில்லை.

நீலன் சொன்னான், ``வேட்டுவன்பாறைக்கு நீங்கள் வந்த அன்று சொன்னேன், ‘வீரனின் வாழ்வு மிகக் குறுகியது. பறம்புநாட்டுக்கு நாற்புறமும் எதிரிகள். எப்போது போர்மூளும் எனத் தெரியாது. போர்க் களத்தில் நான் சாயும்போது எனது ஈட்டியை இறுகப் பற்றி முன்னேற, என் மகன் வந்து நிற்க வேண்டும்’ என்று.”

கண்களை அகலத் திறந்தபடி கேட்டுக் கொண்டிருந்தார் கபிலர். ``நான் எனது வார்த்தையைக் காப்பாற்றிவிட்டேன். இன்னும் சில நாள்களேயானாலும் நான் மரணிப்பதற்குள் மயிலா வீரமகவை ஈன்றெடுப்பாள்” என்றான் நீலன்.

கலங்கியபடி கூறினார் கபிலர், ``நீ மாவீரன். போரிடும் முன்பே வாகைப்பூ ஏந்தி வந்த உன்னை மரணம் எப்படி அணுகும்?”

மயிலாவுக்காகக் குமரிவாகையைப் பறித்துப்போனது நினைவுக்கு வந்தது. ஆதினி இதைச் சொல்லித்தான் மயிலாவை ஆற்றுப்படுத்தியிருப்பாள் எனத் தோன்றியது.


``கொற்றவை உனக்கு வெற்றிவாகையைத் தந்து அனுப்பியுள்ளாள். அதனால்தான் உனது வீரத்தை இன்று பறம்பே பேசுகிறது” என்றார் கபிலர்.

தொடர்ந்து பேச முயன்றான் நீலன். ஆனால், அது அவ்வளவு எளிதாக இல்லை. முயன்று சொன்னான், ``என்னைவிடப் பெரும்வீரத்தை வெளிப்படுத்தியவர்கள் சோமக்கிழவனும் கொற்றனும்தான். கிழவனும் சிறுவனும் எண்ணிலடங்காத எதிரிகளை அழித்தொழித்தார்கள்” என்றவன் சற்றே இளைப்பாறி, ``காலம்பனிடம் மன்னிப்பு கேட்டதாகச் சொல்லுங்கள். கொற்றனை நான் காக்கத் தவறிவிட்டேன்” சொல்லும்போது உடைந்து கலங்கினான் நீலன்.

``இல்லை. உரியநேரத்தில் உதவ முடியாததற்காக உன்னிடம் மன்னிப்பு கேட்கச் சொல்லிப் பாரி கூறினான்.”

என்ன பேசுகிறார்கள் என அருகில் நின்று கேட்டுக்கொண்டிருந்தார் முசுகுந்தர். நீலனின் மீது மொய்த்துக்கொண்டிருந்த ஈக்களை விரட்டியபடி, தான் போர்த்தியிருந்த போர்வையை எடுத்து உதறாமல் அவன்மீது இறுகச்சுற்றிப் போர்த்தினார் கபிலர். அவனது காலிலே குருதி வடியத் தொங்கிக்கொண்டிருந்த மேலாடையின் சிறு பகுதியைக் கிழித்து எடுத்தார்.

கபிலர் என்ன செய்கிறார் என முசுகுந்தருக்கு விளங்கவில்லை. கிழித்து எடுத்த அந்தச் சிறு துணியைக் கைவிரல்களில் சுருட்டியபடியே சொன்னார், ``வரும் முழுநிலா நாளில் கொற்றவைக்குக் குருதியாட்டு விழா. கூத்துத்திடலில் திரி போட வேண்டுமல்லவா?” என்றார். நீலன் அவரை உற்றுப்பார்த்தான்.



``பாரிதான் எடுத்துவரச் சொன்னான்” என்று சொல்லியபடியே துணியைச் சுருட்டி முடித்தார்.

நீலனுக்கு விளங்கியது. போர் முடிவுற்றவுடன் நடப்பதுதான் குருதியாட்டு விழா. முழுநிலவுக்கு இன்னும் பன்னிரண்டு நாள்கள் உள்ளன. அதற்குள் எதிரிகளை வென்று முடிப்பேன் எனச் சொல்லி அனுப்பியுள்ளான். அதுமட்டுமன்று, போரிலே தமது குருதி படிந்த ஆடைகொண்டே கொற்றவைக்கு விளக்கேற்றத் திரி போடுவர். நீலனின் குருதி படிந்த மேல்துணியை எடுத்துவரச் சொன்னதற்குக் காரணம், குருதியாட்டு விழாவுக்கு நீலன் திரி போட வந்து சேருவான் என்பதே. நீலனிடம் சொல்ல வேண்டிய எல்லாச் செய்திகளையும் சொல்லி முடித்தார் கபிலர்.

`பன்னிரண்டு நாள்களில் எதிரிகளை வென்று உன்னை மீட்பேன்’ என்று பாரி சொன்னதாகக் கபிலர் சொன்ன எதுவும் முசுகுந்தருக்குப் புரியவில்லை. ``சரி, புறப்படலாம்” என முசுகுந்தரைப் பார்த்துச் சொல்லியபடி நீலனிடமிருந்து எழுந்தார் கபிலர். மகிழ்வின் ஒளியேறிய முகத்தோடு அவரைப் பார்த்தான் நீலன். அந்தப் பார்வை விளங்கிக்கொள்ள முடியாத ஆழத்தோடு இருந்தது. விடைபெற்று கூடாரத்துக்கு வெளியில் வந்தார் கபிலர்.

சிறிது தொலைவு கடந்ததும் முசுகுந்தர் கேட்டார், ``அவன்மீது அளவுகடந்த அன்புகொண்டுள்ளீர்களே!”

`ஆம்’ என்று தலையை மட்டும் ஆட்டினார் கபிலர்.

``நீங்கள் போர்த்தியிருந்த போர்வையை அவனுக்கு ஏன் போர்த்தினீர்கள்?”

``மேலெல்லாம் ஈக்கள் மொய்க்கின்றனவே. அதிலிருந்தாவது அவனைக் காப்போம் என்றுதான்.”

``நீங்கள் நினைத்தால் அவனையே காப்பாற்றலாம்!”

சற்றே நடையின் வேகத்தைக் குறைத்த கபிலர் முசுகுந்தரைப் பார்த்தார்.

``மூவேந்தர்களுக்கு உதவுவதாக வாக்களியுங்கள். உங்களின் தேரிலேயே அவனை அனுப்பிவைக்க ஏற்பாடு செய்கிறேன்.”

சிரித்தார் கபிலர். ``மேகம் எப்படி காற்றுக்கு எதிராகப் பயணிக்கும்?”

``நீலனின் மீது உங்களுக்கு இருப்பது உண்மையான அன்பென்றால், வீசும் காற்று ஒரு பொருட்டன்று.”

``அன்பின் உண்மைத்தன்மையை உங்களால் கண்டறிய முடியுமா முசுகுந்தரே?”

``நிச்சயம் முடியும். கபிலரை எத்தனையோ ஆண்டுகளாக அறிந்தவன் நான். எளிய உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காத பேரறிஞர். ஆனால், இன்று அவனோடு பேசும்போது உங்களின் கண்கள் எத்தனை முறை பெருக்கெடுத்தன என்பதைக் கவனித்தேன். `கபிலர்தானா இவர்?’ என்று உங்களின் மீதே எனக்கே ஐயம் வருமளவுக்கு இருந்தது, அவன் மீது நீங்கள் கொண்டுள்ள அன்பு. அவன் உங்களுக்கு எவ்வளவு முக்கியமானவன் என்று புரிந்துகொண்டேன். அதனால்தான் சொல்கிறேன் உங்களால் அவனைக் காப்பாற்ற முடியும்.”

``அவனது துன்பங்கள் கண்டு என்னை அறியாமல் கண்ணீர் சிந்தினேன். ஆனால், எனது துன்பத்தை பாரி அறிய நேர்ந்தால் குருதி சிந்துவான்.”

முசுகுந்தர் சற்றே அதிர்ச்சியோடு கபிலரைப் பார்த்தார்.

கபிலர் சொன்னார், ``ஒருவேளை காற்றை எதிர்த்துக்கூட மேகம் பயணிக்கலாம். ஆனால், வானத்தை விட்டு விலகிச் செல்ல கதிரவனுக்கு வழியேதுமில்லை.”

முசுகுந்தர் பேச்சின்றி அமைதியானார். பெரும்புலவரை வசப்படுத்துதல் எளிதன்று என அவருக்குத் தெரியும். ஆனாலும் கண்கலங்கியதைப் பார்த்துக் கல்லெறியலாம் என முயன்றார். எதுவும் நடக்கவில்லை. இருவரும் வேந்தர்களின் கூடாரத்துக்குள் நுழைந்தனர்.

அவருக்கான இருக்கையில் அமரும்வரைகூடக் காத்திருக்க ஆயத்தமாயில்லை. வந்தவுடன் சோழவேழன் கேட்டார், ``என்ன கபிலரே, இதை எதிர்பார்த்திருக்க மாட்டீரே!”

இருக்கையில் அமர்ந்துகொண்டே கபிலர் சொன்னார், ``ஆம். பெருவேந்தர்கள் மூவரும் கோழையின் செயலைச் செய்வார்கள் என எப்படி எதிர்பார்க்க முடியும்?”

அதிர்ந்தது அவை. தனக்கான சொற்களைக் கைக்கொள்ளத் தொடங்கினார் கபிலர். பாரி என்ன

நோக்கத்துக்காக அனுப்பிவைத்தானோ, அந்த வேலை முடிந்தது. நீலனுக்கான செய்தி சொல்லப்பட்டுவிட்டது. இனி கபிலர் சொல்லைச் சுழற்றத் தடையேதுமில்லை.

``எது கோழையின் செயல்? திரண்டு நிற்கும் படை கண்டு தோள்கள் புடைக்க களம் காணாமல் காடுகளுக்குள் ஒளிந்துகிடப்பது கோழையின் செயலா? அவனது எல்லைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி அவன் தளபதிகளில் ஒருவனைச் சிறைப்பிடித்து வந்தது கோழையின் செயலா?" சீறினான் உதியஞ்சேரல்.

``ஒற்றறிந்து, இருள்போர்த்தி, பம்மிப் பதுங்கி நீங்கள் நடத்திய தாக்குதலுக்கு என்ன பெயர் வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளுங்கள். ஆனால், அந்தச் செயலுக்கான குணம் கோழையினுடையது."

``ஒற்றறிவதோ, இருள்போத்தி நகர்வதோ, பதுங்கிப் பாய்வதோ போரின் பகுதியென்று நீங்கள் அறியாதவர் அல்லர். பாரியுடனான நட்பு, போர் நியதியை மறந்தவராக உங்களை மாற்றியுள்ளது."

``நியதிகளையும் மரபுகளையும் அறியாதவர்களின் பட்டியலில் என்னைச் சேர்க்கும் அளவுக்கு, போருக்கான மனநிலையில் மூழ்கிவிட்டீர்கள். உங்களின் நோக்கம் அதுவென்றால், உங்களுக்கு உதவ நான் ஒரு வழிமுறை சொல்கிறேன், கேட்கிறீர்களா?"

``பெரும்புலவரே! உங்களால் எங்களுக்கு உதவ முடியாது. எங்களுக்கு உதவுவதாக நீங்கள் எது செய்தாலும் அதற்குப் பின்னால் இருப்பது எங்களின் எதிரியான பாரியின் நலனே" என்றார் குலசேகரபாண்டியன்.

சற்றே வாய்விட்டுச் சிரித்தபடி கபிலர் சொன்னார், ``இதைத்தானே நான் சொன்னேன். போருக்கான மனநிலைக்குள் முழுமுற்றாக மூழ்கிவிட்டீர்கள். இனி குருதி பிசையாமல் உங்களால் உணவருந்த முடியாது."




சொற்களின் கூர்மை நுனிமூக்கைக் குத்தி இழுத்தது. உயர்த்திய குரலோடு உதியஞ்சேரல் கேட்டான், ``சரி, சொல்லுங்கள். எங்களுக்கு உதவ என்ன சொல்லப்போகிறீர்கள்?"
``பாரி மலைவிட்டுக் கீழிறங்கிப் போரிட வேண்டும். அதனால்தானே நீலனைச் சிறைப்பிடித்து வந்துள்ளீர்கள்?"

அவையில் அமைதி நீடித்தது. கபிலர் தொடர்ந்தார், ``நீலனைத் தூக்கிவந்தால்கூட அவன் உடனடியாகப் போர்தொடுக்க மாட்டான். சற்று காலம் தாழ்த்துவான். உங்களின் அவசரம் கருதிச் சொல்கிறேன். நீலனை விடுவித்துவிடுங்கள். என்னைச் சிறையிலிடுங்கள். இந்தக் கணமே போரைத் தொடங்குவான் பாரி.”

கூடாரம் அதிர்வதைப்போலச் சிரித்தார் குலசேகரபாண்டியன். ``பெரும்புலவரே! இதைத்தானே நான் முதலிலேயே சொன்னேன். எங்களுக்கு உதவுவதாக நீங்கள் எது செய்தாலும் அதற்குப் பின்னால் இருப்பது எங்கள் எதிரியான பாரியின் நலனே!”

கபிலர் சற்று அதிர்ந்தார்.

``தமிழ் நிலத்தின் பெரும்புலவரை மூவேந்தர்கள் சிறைப்பிடித்தனர் என்ற அவப்பெயர் எங்களுக்கு நேர வேண்டும். ஆனால், அவரை மீட்கப் போரிட்டு உயிர் நீத்தான் பாரி என, புலவர்குடிகள் காலம்காலமாக அவனைப் போற்றவேண்டும். அதுதானே உங்களின் நோக்கம்?”

கபிலர் சொன்னார், ``நீங்கள் விரும்பும் போர்க்களத்துக்குப் பாரியை உடனடியாக வரவைக்கும் வழியைத்தான் நான் கூறினேன். அதில் துளியும் மிகையில்லை. ஆனால், இந்தச் செயலில் என்பால் அவனுக்கு இருக்கும் அன்பு உங்களுக்குப் புலப்படவில்லை. அவன் அடையப்போகும் புகழ் மட்டுமே உங்களின் கண்களுக்குத் தெரிகிறது. இதைப் பற்றிதான் பேச நினைக்கிறேன்.”

``இன்னும் பேச என்ன இருக்கிறது?”

``இருக்கிறது. உங்களது போர், அவன் கொண்டுள்ள பொருளுக்கானதன்று; அவன் பெற்றுள்ள புகழுக்கானது. ஒருவனின் செல்வத்தைக் கவர்ந்திட நீங்கள் போரிட்டால் அந்தப் போரில் வெற்றி-தோல்வி உண்டு. ஆனால், ஒருவனின் புகழை எதிர்த்து இன்னொருவனால் போரிடவே முடியாது. நீரைப் பாறைகொண்டு நசுக்க முடியாது.”

குலசேகரபாண்டியன் உயர்த்திய குரலோடு சொன்னார், ``இந்தப் போரில் நாங்கள் வெல்வதைத் தடுக்க யாராலும் முடியாது. ஆனாலும் போர் தொடங்கும் முன்பே ஒருவரை நாங்கள் இழந்துவிட்டோம். அதுதான் எங்களுக்கு ஆறாத்துயரை ஏற்படுத்துகிறது.”

``யாரை?” எனக் கேட்டார் கபிலர்.

``உங்களைத்தான். தமிழ் நிலத்தின் பெரும்புலவர்; மூவேந்தர்களின் அவைகளையும் பாட்டால் பொலிவுறச்செய்த பேரறிஞர். இன்று எங்களின் எதிரியோடு போய் நிற்கிறீர். அவன் உங்களின் தமிழால் எங்களைச் சீண்டுகிறான். உங்களின் புலமைகொண்டு நம் நட்பைத் தகர்க்கிறான். தயவுகூர்ந்து உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கோழையை உங்களின் மேலாடையை விட்டு வெளியில் வந்து பேசச் சொல்லுங்கள்.”

பாரியுடனான நட்பும் வேந்தர்களுடனான நட்பும் ஒரே நேரத்தில் இகழ்ச்சிக்குள்ளானது. ``எனது புலமையும் எனது தோழமையும் எத்தனையோ முறை சீண்டப்பட்டிருக்கின்றன. ஆனால், தனிமனிதனாக நான் இப்போது சீண்டப்படுகிறேன்...” என்ற கபிலர் அடுத்த வார்த்தையை உச்சரிக்கும் முன் சட்டென இடைமறித்தார் முசுகுந்தர்.

``இதற்குமேல் பேசிக்கொண்டிருப்பது பொருளற்றது. சிறைப்பிடிக்கப்பட்டவனை மீட்க, துணிவிருந்தால் போரிட்டு மீட்டுக்கொள்ளச் சொல்லுங்கள்” என்று நிறுத்தினார் பேச்சை.

அவையில் சட்டென அமைதி திரும்பியது. தலையசைத்தபடி `சரி’யெனச் சொன்ன கபிலர். ``போரிட்டு மீட்பான் பாரி. ஆனால், போர் முடியும் வரை சிறைப்பிடிக்கப்பட்டவனைப் பாதுகாக்கும் அறத்திலிருந்து நீங்கள் நழுவ மாட்டீர்கள் என நம்புகிறேன்.”

``அவனுக்கு உணவும் நீரும் அளிப்போம். மருந்தளிக்க மாட்டோம். தாக்குண்ட காயத்தால் அவன் மரணம் எய்துவானேயானால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல” என்றார் முசுகுந்தர்.

``உணவும் நீரும் அளியுங்கள். அது போதும்” என்றார் கபிலர்.

``சரி. அப்படியென்றால், போரின் விதிகளை வரையறுத்துக்கொள்ளலாமா?” எனக் கேட்டான் உதியஞ்சேரல்.

``போரின் விதிகளைப் போரிடுபவரிடம்தானே நீங்கள் பேசவேண்டும். நான் போரிடுபவன் அல்லன். போரிடப்போகிறவனுக்கு நண்பன்.”

``அப்படியென்றால் நாளைக் காலை போர் விதிகளை முடிவுசெய்வதற்கான மனிதரை அழைத்துவாருங்கள்” என்றார் குலசேகரபாண்டியன்.

``சரி” எனச் சொல்லி அவை நீங்கினார் கபிலர். அவரைப் பொறுத்தவரை வந்த வேலை எல்லா வகையிலும் சிறப்பாக முடிந்தது. நீலனுக்கு அவர் போர்த்திய போர்வை பருத்தி நூலால் நெய்யப்பட்டது மட்டுமன்று, பருத்தி நூலோடு சேர்த்து மூலிகை நார்களால் பின்னப்பட்டது. எல்லாவகையான மருத்துவப் பொடிகளும் அதன்மீது போர்த்தி மேவப்பட்டிருந்தது. அதை மேலே போர்த்தியவுடன் குருதிக்கசிவுகள் உடனே நிற்கும். காயங்கள் விரைவில் குணமாகும். புத்துணர்ச்சியும் ஆற்றலும் பிறக்கும்.

ஒருவேளை, அவனுக்கு உண்ணக் கொடுக்கும் உணவில் நஞ்சு இருந்தாலும் நஞ்சுமுறியாகவும் அது செயல்படும். முறியன் ஆசான் கொடுத்தனுப்பிய மருத்துவ ஆடை அது. அதன் கீழ் விளிம்பில் சற்றே பெரிதான சரடு போன்ற ஒன்று உண்டு. அது தராக்கொடியும் செவ்வகத்தி வேரும். ஒருவேளை இரும்புத்தூணில் அவன் கட்டப்பட்டிருந்தால் அந்தக் கொடியின் பால் பட்டு இரும்பு உருகும். அதைப்போலவே குறுங்காது முயலின் குருதியில் ஊறிய நரம்புகள் போர்வைக்குள் இருக்கின்றன. கையில் கிடைக்கும் சிறு தடியைக்கொண்டுகூட வில்லைச் செய்ய அது பயன்படும். மருந்து, ஆயுதம்

ஆகிய அனைத்தும் கொண்டதாக இருந்தது அந்தப் போர்வை. நீலனுக்குத் தேவையான அனைத்தும் அவனுக்குத் தரப்பட்டு விட்டன.

கபிலர் நிறைவோடு படை நீங்கி வெளியேறினார். நாகக்கரட்டில் ஏறும்போதே இரவாகிவிட்டது. அவரின் வரவுக்காக ஆறாம் குகையில் பாரி, தேக்கன், முடியன், காலம்பன், கூழையன், வாரிக்கையன், முறியன் ஆசான் ஆகியோர் காத்திருந்தனர். கபிலர் வந்தவுடன் முறியன் ஆசான் எண்ணற்ற கேள்விகளைக் கேட்டார். நீலனின் ஒவ்வொரு காயத்தைப் பற்றியும் விளக்கினார் கபிலர். முறியன் ஆசான் சொன்னதுபோலத்தான் நீலனின் உடல் முழுவதும் விரல்களால் தொட்டுப்பார்த்தார். எந்தெந்த இடத்திலெல்லாம் நீலன் வலிமிகுதியை உணர்ந்தான், எந்தெந்த இடத்திலெல்லாம் உணர்வற்று இருந்தான் என்பதையெல்லாம் துல்லியமாகக் கேட்டார். அவன் எந்தெந்த வடிவில் கைகால்களை நீட்டி மடக்கி உட்கார்ந்திருந்தான் எனக் கேட்டார்.

வலதுகால் தொடையில்தான் ஈட்டி இறங்கிய பெருங்காயம் இருப்பதைச் சொன்னார் கபிலர். ``தொடைப் பகுதியில்தான் போர்வை சுருண்டும் மடங்கியும் அதிக நேரம் குவிந்துகிடக்கும். எனவே, ஓரிரு நாள்களில் அது குணமடைந்துவிடும்” என்றார் முறியன் ஆசான்.

முறியன் ஆசானின் வேலை முடியும் வரை மற்றவர்கள் காத்திருந்தனர். அவர் குகை விட்டு வெளியேறியவுடன் வேந்தர்களோடு நடந்த பேச்சு வார்த்தையைப் பற்றிச் சொன்னார் கபிலர். அனைவரும் கவனமாகக் கேட்டனர்.

போர்விதிகளைப் பற்றிப் பேச, பொருத்தமானவரை அழைத்துக்கொண்டு வருகிறேன் எனக் கூறி வந்துள்ளதாகக் கபிலர் சொன்னார்.

சிறிது நேர சிந்தனைக்குப் பிறகு முடியன் சொன்னான், ``அப்படியென்றால் நாளை கபிலரோடு தேக்கன் செல்லட்டும்.”

எல்லோரும் `சரி’ என்பதுபோலத் தலையசைத்தபோது, பாரி சொன்னான், ``தேக்கன் வேண்டாம்.”

சற்றே வியப்போடு பார்த்தனர்.

``கபிலரோடு வாரிக்கையன் செல்லட்டும்.”


*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-87

கருங்கைவாணன் சிகிச்சை பெற்றுவந்த மருத்துவக் கூடாரத்துக்கு வந்தனர் பொதியவெற்பனும் முசுகுந்தரும். ``முகத்திலும் கை, கால்களிலும் ஆங்காங்கே நெருப்புக்காயங்கள் ஏற்பட்டுள்ளன. ஓரிரு நாள்களில் குணமாகிவிடும்” என்றார் மருத்துவர். தீக்காயங்களின் தன்மையைப் பற்றி மருத்துவர்களிடம் கேட்டறிந்தான் பொதியவெற்பன். மழை பெய்யத் தொடங்கியது. நெடுநேரம் வரை மழை நிற்கவில்லை. வேட்டுவன்பாறையில் நடைபெற்ற தாக்குதலைப் பற்றி கருங்கைவாணனுடன் நீண்ட பொழுது பேசிக்கொண்டிருந்தான் பொதியவெற்பன்.

மூவேந்தர்களும் சோழவேழனும் வழக்கம்போல் இரவில் சந்தித்து உரையாடினர். பொதியவெற்பனும் முசுகுந்தரும் கருங்கைவாணனைப் பார்க்கப் போயிருந்ததால், இன்றைய உரையாடலில் அவர்கள் பங்கெடுக்கவில்லை. சோழவேழன் கேட்டார், `` `போர்விதிக்கான பேச்சுவார்த்தையை நடத்த பொருத்தமானவரை இன்றே அழைத்துவாருங்கள்’ என்று கபிலரிடம் சொல்லியிருக்கலாமே. நாளை அழைத்துவரச் சொன்னது அவர்களுக்கு நேரம் கொடுத்ததாகிவிடாதா?``

குலசேகரபாண்டியன் சொன்னார், ``நாம் திட்டமிட்டுக்கொள்ள நேரம் தேவைப்படுகிறது. அதனால்தான் நாளை அழைத்துவரச் சொன்னேன்.’’



போருக்கான விதிகள் எல்லோரும் அறிந்ததே. பல நூறு போர்க்களங்களில் குருதி கலந்த காற்றை நுகர்ந்தபடி தளபதிகளாலும் அமைச்சர்களாலும் பேசிப் பேசி உருவாக்கப்பட்ட வார்த்தைகள்தான்

அவை. போர் என்பது அழிவின் களம். அங்கு ஒருபோதும் ஒழுங்கை உருவாக்க முடியாது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனாலும் விதிகளை உருவாக்கி, போர்புரியும் மரபு பல தலைமுறைகளாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையான போர்கள் விதிகளின்படிதான் தொடங்குகின்றன. ஆனால், விதிகளின்படி முடிவதில்லை. தமக்கு வெற்றி கிடைக்கும் என்னும் நம்பிக்கை இருக்கும் வரை விதிகளைப் பின்பற்ற அனைவரும் பழகியுள்ளனர். ஆனால், அந்த நம்பிக்கை தகரும்போது விதிகளுக்கு எந்த முக்கியத்துவமும் இருப்பதில்லை.

போர்விதிகள், பொதுவான சில ஒழுங்குகளை முன்வைக்கின்றன. இருதரப்பினருக்கும் அந்த ஒழுங்குகள் தேவையாக இருப்பதால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவற்றைப்போலவே வெற்றியும் இருதரப்புக்கும் தேவையாக இருப்பதால் இருவரும் விதிகளைப் பற்றிப் பேசி, உடன்பட்டு, போரைத் தொடங்கு கின்றனர். ஆனால், போர்க்களத்தில் ஒருவனின் கை வலிமைபெறும்போது இருவருக்கும் விதிகள் முக்கியத்துவமற்றுப் போய்விடுகின்றன.

வாளுக்கு வடிவமைக்கப்பட்ட உறைபோலத்தான் போருக்கு வடிவமைக்கப்படும் விதிகளும். கலை வேலைப்பாட்டுடன் மிளிர்வது உறைக்கு அழகு. ஆனால், வாளுக்கு அழகு, வெட்டிச் சரிக்கத் தேவையான கூர்முனை மட்டுமே. எல்லா வாள்களுக்கும் மேற்பூச்சுகொண்ட உறை தேவைப்படுவதைப்போலத்தான் போருக்கு விதிகள் தேவைப்படுகின்றன.

எல்லோரும் ஏற்றுக்கொண்ட போர்விதிகளை உருவாக்கியதில் பெரும்பங்கு வகித்தவை, மூன்று பேரரசுகள்தான். பல காலங்களாக போர்க்களம் நீங்கா இந்தப் பேரரசுகள்தான் எதிரும் புதிருமான முறையில் எத்தனையோ விதிகளை உருவாக்கின. இன்று பொதுப் புழக்கத்தில் இருக்கும் போர்விதிகளில் பெரும் பான்மையானவை எதிரெதிரே இருக்கையில் அமர்ந்து இந்தப் பேரரசுகளால் உருவாக்கப் பட்டவைதான். வரலாற்றில் முதன்முறையாக மூன்று பேரரசுகளும் ஒன்றாய் உட்கார்ந்து பொது எதிரியோடு போர்புரிவதற்கான விதிகளைப் பற்றி இப்போது பேசுகின்றன.

``போர்விதிகளை உருவாக்குவதில் நாம் புதிதாய்த் திட்டமிட என்ன இருக்கிறது?” எனக் கேட்டான் உதியஞ்சேரல்.

``போர்விதியின் அடிப்படையில் வெற்றிபெற முயல்வதைவிட, வெற்றி பெறுவதற்கான முறையில் விதிகளை வடிவமைத்துக் கொள்வதே அறிவுடைமை” என்றார் குலசேகரபாண்டியன்.

``இந்தப் போரை விதிகளால் ஒழுங்குப்படுத்த முடியாது. ஏனென்றால், எதிரிகளுக்கு என்ன ஆற்றல் இருக்கிறது என்றே நமக்குத் தெரியாது. பிறகு எப்படி நாம் பொதுவிதியை உருவாக்க முடியும்?” எனக் கேட்டான் கருங்கைவாணன்.

இன்று கபிலரோடு நடைபெற்ற பேச்சு வார்த்தையைச் சொல்லி நாளை போரின் விதிகள்

பேசப்படவுள்ளதை முசுகுந்தர் பகிர்ந்துகொண்ட போது, கருங்கைவாணனின் மறுமொழியாக இது இருந்தது.

`கருங்கைவாணனா இப்படிப் பேசுவது!' என வியப்போடு பார்த்தான் பொதியவெற்பன். முசுகுந்தருக்கும் நம்ப முடியாததாகத்தான் இருந்தது.

``மூவேந்தர்களின் கூட்டுப்படைத் தளபதியின் குரலா இது?" எனக் கேட்டார் முசுகுந்தர்.

``ஆம். நமக்கான விதிகளையும் அவர்களுக்கான விதிகளையும் ஒன்றாய்ப் பொருத்த முடியாது."

``ஏன்? நம்மைவிட எந்த வகையில் அவர்கள் வேறுபட்டவர்கள்?"

``அது எனக்குத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் நம்மைப் போன்றோர் அல்லர். புதருக்குள்ளிருந்து விலங்குகள் வெளிவருவதைப்போல நெருப்புக்குள்ளிருந்து வெளிவரும் மிருகங்கள் அவர்கள். அவர்கள் மீது இரக்கமற்ற  தாக்குதலையே நடத்த வேண்டும். ஒழுங்குப்படுத்தப்பட்ட விதிகளெல்லாம் அந்தக் காட்டு மனிதர்களுக்குத் தேவையில்லை."

கருங்கைவாணன் தீக்காயங்களிலிருந்து மீளாது துடித்துக்கொண்டிருப்பது அவனது சொற்களிலேயே தெரிந்தது.

``உனது வார்த்தைப்படியே வைத்துக் கொண்டாலும் விதி என்பது அவர்களது ஆற்றலைக் குறைக்கப் பயன்படுமேயானால், அதை நாம் ஏன் தவறவிட வேண்டும்?"

``அவர்களது ஆற்றல் என்னவென்று தெரிந்தால்தானே நம்மால் குறைக்க முடியும்?"

``அளவிட முடியாத ஆற்றல்கொண்டவர்கள் என்று சொல்கிறாயா?"

``இல்லை, எல்லாவகையான உத்திகளையும் பயன்படுத்தி அழிக்கப் படவேண்டிய ஒரு கூட்டம் என்று சொல்கிறேன். அந்தக் கூட்டத்துக்குப் பொதுவிதிகளைப் பயன்படுத்த வேண்டிய தேவையில்லை. அப்படிப் பொதுவிதிகளை உருவாக்குவது அவர்களுக்கு நாமே வாய்ப்பைத் தருவதுபோல் ஆகிவிடும்."

``உருவாக்கப்படும் விதிகளின் படியே போர் புரியவேண்டும் என்பது முன்னோர் மரபு."

``இதைத்தான் நான் சொல்ல வருகிறேன். சமதளத்தில் வாழ்கிற நமது முன்னோர்கள் உருவாக்கிய மரபு அது. மலைமனிதர்களுக்கு மரபு ஏது... அறம் ஏது?"

``நீ அவர்களின் திறனை மிகைப்படுத்துகிறாய் என நினைக்கிறேன். ஆத்திரப்படுவதால் அவ்வாறு தோன்றுகிறது.”

``இல்லை அமைச்சரே! யாராலும் நெருங்கவே முடியாது எனச் சொல்லப்பட்ட திரையர்களை அவர்களின் இருப்பிடத்துக்குள் நுழைந்து வீழ்த்தினோம். நானே அஞ்சி பின்வாங்க நினைத்தபோதுகூட சற்றும் இரக்கம்காட்டாமல் துணிந்து முன்னேறி அவர்களை வீழ்த்தினான் திதியன். ஆனால், சிறிய குன்றின் மேல் இருந்த சின்னஞ்சிறிய ஒரு கூட்டம், திதியனைக் கொன்றழித்ததை இன்னும் என்னால் நம்ப முடியவில்லை. பெரும்பாறைகளை உருட்டுவதும், மரங்களைச் சாய்த்துத் தள்ளுவதும், நெருப்புக்குள் நுழைந்து வெளிவருவதுமாக அவர்கள் நடத்திய தாக்குதல் முழுவதும் நம்ப முடியாத மாயக்காட்சிகளாக இருந்தன. நாம் நடத்திய திடீர் தாக்குதலிலேயே அவர்களால் இவ்வளவு திறனை வெளிப்படுத்த முடிந்தபோது, திட்டமிட்டு முறைப்படுத்தப்பட்ட விதிகளை உருவாக்கி அதன்படி போரை நடத்த முற்பட்டால் அவர்கள் என்ன செய்வார்கள் எனச் சிந்திக்கவே முடியவில்லை.”

## வீரயுக நாயகன் வேள்பாரி 87

``அதனால்..?’’

``அவர்கள் சிந்திப்பதற்கான வாய்ப்பைக் கொடுக்கக் கூடாது. எல்லா வகையிலும் அழித்தொழிப்பு ஒன்றே நோக்கமாகக்கொண்ட தாக்குதல் முறையைப் பின்பற்ற வேண்டும். சூழ்ச்சிகளும் வரைமுறையற்ற தாக்குதலும் அழித்தொழிப்புமே அவர்களை வீழ்த்துவதற்கான உத்தியாக இருக்க முடியும்.”

``பறம்புநாடு, இதுவரை விதிகள் வகுத்துக்கொள்ளப்பட்ட ஒரு போர்முறைக்குள் பங்கெடுத்ததில்லை. பறம்புக்குள் நுழைந்த எதிர் நாட்டினரின் மீது தாக்குதல் நடத்தி வென்றுள்ளனர். தாக்குதல் போருக்கும், விதிகளால் வரையறுக்கப்பட்ட களப்போருக்கும் நிறைய வேறுபாடு உண்டு. விதிகளால் முறைப்படுத்தப்பட்ட போரில் தாக்கும் திறன் மட்டுமே எல்லாவற்றையும் தீர்மானித்துவிடுவதில்லை. பறம்பினர், தாக்கும் திறனை மட்டுமே நம்பியுள்ள கூட்டத்தினர். அவர்களின் வலிமையின் வழியே அவர்களை வீழ்த்த வேண்டும்” என்றார் குலசேகர பாண்டியன்.
அவர் சொல்வதை சற்று ஆழ்ந்து சிந்தித்தனர். `என்ன செய்யலாம்?’ என்ற கேள்வியே மிச்சமிருந்தது.

``முதன்முறையாக கபிலர் பேசவந்தபோது அவரை அறியாமலேயே முக்கியமான செய்தி ஒன்றை நமக்குத் தெரிவித்தார்.”

குலசேகரபாண்டியன் எதைச் சொல்கிறார் என்று மற்ற மூவரும் சிந்தித்தனர். ஒன்றும் நினைவுக்கு வரவில்லை. அவரே கூறினார்,

`` `நாகக்கரட்டின் மேல் நின்று பார்த்தால் நமது படையில் மூன்றில் ஒரு பகுதி தெரிகிறது. இரலிமேட்டிலிருந்து பார்த்தால் முழுப் படையும் தெரிகிறது' என்றார் அல்லவா?"

அப்போதுதான் மற்றவர்களுக்குக் கபிலர் கூறியது நினைவுக்கு வந்தது.

``அது எவ்வளவு முக்கியமான குறிப்பு. அன்று இரவு முழுவதும் நான் தூங்கவில்லை. வேட்டுவன்பாறையின் மீது திடீர் தாக்குதல் தொடுக்க வேண்டும் என்றுதான் அந்தக் குன்றினைவிட்டு நமது படையை மிகத்தள்ளி கூடாரம் அமைக்கச் சொன்னேன். நம்மைக் கண்டு அஞ்சியே வேந்தர்படையினர் கூடாரத்தைப் பிரித்துக்கொண்டு போகிறார்கள் என்று எதிரிகள் எண்ணவேண்டும் என்பதற்காகத்தான் அவ்வாறு செய்தேன். அப்படிச் செய்ததன் மூலம்தான் வேட்டுவன் பாறையின் மீதான தாக்குதலை வெற்றிகரமாக நடத்த முடிந்தது. அதில் கவனம் செலுத்திய நான் மற்றொன்றைக் கவனிக்கத் தவறிவிட்டேன்" என்றார் சற்று கவலையோடு.

குலசேகரபாண்டியனின் கவலை அனைவர் முகத்திலும் பரவியது.

``நாம் படையை மலையடிவாரத்தில் நிறுத்திவிட்டோம். அவர்கள் பார்வையால் மதிப்பிட முடியாத தொலைவில் நிறுத்தியிருக்க வேண்டும். இன்னொரு முறை படையை நகர்த்தினால், அது வீரர்களிடம் குழப்பத்தையும் பயத்தையும் உருவாக்கிவிடும். எனவே, நாம் போர் உத்தியை மிகக் கவனமாகத் திட்டமிட வேண்டும்" என்றார்.

``என்ன செய்ய வேண்டும் என நினைக்கிறீர்கள்?" எனக் கேட்டான் உதியஞ்சேரல்.

``இந்தப் போருக்கான களம் மலையடி வாரத்தில் அமையக் கூடாது. கிழக்கும் மேற்குமாக நின்று நாம் போரிடக் கூடாது. ஏனென்றால், மேற்குத்திசையில் மலை இருக்கிறது. எதிரிகள் படையின் பின்புறம் மலை இருப்பது அவர்களுக்கான வலிமையைக் கூட்டும். எனவே, படையின் அணிவகுப்பு வடக்கு தெற்காக இருக்க வேண்டும். அதேபோல அவர்கள் மேலிருந்து பார்த்தால் மதிப்பிட முடியாத தொலைவில் போர்க்களம் அமைய வேண்டும்" என்றார்.

இதை எப்படி நடைமுறைப்படுத்துவது என அனைவரும் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினர். இதில் உள்ள பெரும்சிக்கல், போருக்கான களத்தையும் படைகள் நிற்கவேண்டிய திசையையும் தீர்மானிப்பது தளபதிகளோ அரசர்களோ அல்ல; போரின் விதி பிறழாத `நிலைமான் கோல்சொல்லி'களே!

போர் நிலத்தின் அனைத்து விதிகளையும் எழுதுபவர்கள் `நிலைமான் கோல் சொல்லி'களே.

நாள்தோறும் போர் எப்போது தொடங்க வேண்டும் எப்போது முடிவுற வேண்டும் என்பதை, போர்க்களத்தில் நடப்பட்ட நாழிகைக்கோலைப் பார்த்துச் சொல்பவர்களை `கோல்சொல்லிகள்' என்று அழைத்தனர்.

போர்க்களத்தின் ஒவ்வொரு நாளும் கோல் சொல்லியின் குரலிலேதான் தொடங்குகிறது; முடிகிறது. எனவே, இருதரப்பும் ஏற்றுக்கொண்ட கோல்சொல்லியானவர் அறம் தவறாத நிலைமானாக இருக்க வேண்டும் என்பதால், அவரை `நிலைமான் கோல்சொல்லி' என்று அழைக்கும் பழக்கம் உருவானது. அவ்வாறு தேர்வுசெய்யப்படும் நிலைமான் கோல்சொல்லிதான், போர்புரிவதற்கான இடத்தையும் போருக்கான காலத்தையும் முடிவுசெய்கிறார்.

குலசேகரபாண்டியன் சொன்னார், ``எனது கணிப்பின்படி எதிரிகளின் தரப்பில் கோல்சொல்லியாகக் கபிலரையே கூறுவார்கள்.''

``ஆம், அவர்களின் தரப்பில் நாழிகைக்கோலைப் பார்க்கும் அறிவு வேறு யாருக்கு இருக்கப்போகிறது?'' என்றார் சோழவேழன்.

``நமது தரப்பில் யாரை அறிவிக்கப் போகிறாம்?'' எனக் கேட்டான் உதியஞ்சேரல்.

போர்க்களம் அமையும் இடம்தான், இந்தப் போரின் வெற்றி-தோல்வியை முடிவுசெய்வதில் முக்கியப் பங்காற்றப்போகிறது. எனவே, நாம் சொல்லும் இடத்தில் போர்க்களத்தை முடிவுசெய்பவராக நிலைமான்கோல்சொல்லி இருக்க வேண்டும். எதிரியின் தரப்பில் கோல்சொல்லியாக கபிலர் வந்தால், அவரும் நாம் சொல்லும் இடத்தை ஏற்றுக்கொள்ளச் செய்யும் திறன்கொண்டவராகவும் சூழ்ச்சி தெரிந்தவராகவும் இருக்க வேண்டும்'' என்றார் குலசேகரபாண்டியன்.

அவர் சொல்வதை மறுப்பதற்கில்லை. நமது தரப்பில் யாரை நியமிப்பது என்று தீவிரமாகச் சிந்தித்தனர். ``கபிலர், நாழிகைக்கோல் பார்க்கத் தெரிந்தவராக இருக்கலாம். ஆனால், போரின் விதிகளை முழுமையாக அறிந்தவர் என்று சொல்லிவிட முடியாது. எனவே, பொருத்தமானவரைத் தேர்வுசெய்தால் கபிலரை நமது முடிவுக்கு இணங்கச் செய்ய முடியும்'' என்றான் உதியஞ்சேரல்.

``ஆம். அதனால்தான் இந்தப் பணிக்குப் பொருத்தமானவராக பாண்டியநாட்டு அரண்மனையின் தலைமைக் கணியன் அந்துவனைக் கருதுகிறேன்'' என்றார் குலசேகரபாண்டியன்.

`அவன் பொருத்தமானவனா!' என்று மற்றவர்கள் சிந்தித்தனர். ``அந்துவன், கபிலரைவிட மிக இளையவனாக இருக்கிறானே, பெரும்புலவரை திசைமாற்றி போர்க்களத்தை நாம் நினைக்குமிடத்தில் அமைக்கும் ஆற்றல்கொண்டவனா?'' எனக் கேட்டான் செங்கனச்சோழன்.

``அவன், பெருங்கணியர் திசைவேழருக்கு மாணவன். எனவே, அவன்பால் கபிலருக்கு பெரும்மரியாதை உண்டு. அவனது கணிப்பு பல நேரங்களில் ஆசானைப்போல் உள்ளது என்று என்னிடமே கூறியுள்ளார். அதுமட்டுமன்று, கபிலரைக் கையாள்வதில் அவன் மிகவல்லவன். எனவே, நமது திட்டத்தை அச்சுபிசகாமல் நடைமுறைப்படுத்திவிடுவான்” என்றார்.

``அப்படியென்றால் அவனையே நமது தரப்பின் `நிலைமான் கோல்சொல்லி’யாக அறிவித்துவிடலாம்” என்றனர்.



சரியென்று ஏற்றுக்கொண்ட குலசேகரபாண்டியன், ``ஒரு முக்கியச் செய்தி. நாளை மட்டுமன்று, எப்போது கபிலர் பேச வந்தாலும் அவரை அதிகமாக பேசவிட வேண்டும். கோபப்பட்டு நிறுத்தக் கூடாது. அவராகவே நமக்கு வேண்டிய முக்கியக் குறிப்பைக் கொடுத்துவிட்டுச் செல்வார்” என்றார். மற்றவர்கள் மகிழ்ந்து சிரித்தனர்.

மறுநாள் போர்விதிகளை வகுக்க மூஞ்சலின் பெருங்கூடாரத்தில் எதிர்பார்ப்போடு இருந்தனர் வேந்தர்கள். கபிலரின் தேர்ப்படை எல்லைக்குள் நுழைந்ததும் மூஞ்சலுக்குச் செய்தி வந்தது, ``உடன் கிழவன் ஒருவனை அழைத்துக்கொண்டு வருகிறார் கபிலர்.”

``சென்றமுறை சிறுவனை அழைத்துவந்தார். இந்த முறை கிழவனை அழைத்துவருகிறார்” என்று பேசிச் சிரித்தனர். சிறிது நேரத்தில் மூஞ்சலுக்குள் நுழைந்தது கபிலரின் தேர்.

தேரோட்டும் வலவனின் தோள்பற்றி கபிலர் இறங்க, அவரின் தோள்பற்றி வாரிக்கையன் இறங்கினார். ஊன்றுகோலை ஊன்றி கபிலரைப் பின்தொடர்ந்தார் கிழவர். இருவரையும் வரவேற்று கூடாரத்துக்குள் அழைத்துச்சென்றார் முசுகுந்தர். பெருவேந்தர்கள் வீற்றிருந்த அவையில் இருவரும் வந்து அமர்ந்தனர். கபிலர் மூவேந்தர்களையும் உடன் இருந்த சோழவேழன், பொதியவெற்பன், முசுகுந்தர் ஆகிய அறுவரையும் பற்றி வாரிக்கையனிடம் தெரிவித்தார். வாரிக்கையனைப் பற்றி வேந்தர்களிடம் சொல்லும்போது, ``பறம்பு நாட்டுப் பெருங்கிழவன்” என்று கூறினார்.

‘பன்னெடுங்காலத்துக்கு முன் பட்டுப்போன மரம்போல் இருக்கிறான் கிழவன். கால்கள் கவட்டை விழுந்து, நகங்கள் எல்லாம் சூம்பிச்சுருண்டு கிடக்கின்றன. மேல் தோல் செம்பட்டையோடு திட்டுத் திட்டாக இருக்கிறது. பார்க்கவே சற்று அருவருப்பூட்டும் இவரை ஏன் அழைத்துவந்துள்ளார் கபிலர்?’ என்று சிந்தித்தபடி இருந்தனர் அனைவரும்.

பணியாளர்கள் சுவைநீர் கொண்டுவந்து கொடுத்தனர். வாரிக்கையன், ``எனக்குத் தேவையான எல்லா சுவைகளும் வெற்றிலையில்தான் இருக்கின்றன” எனச் சொல்லி இடுப்பின் இடதுபக்கத்தில் சுருட்டிவைத்திருந்த வெற்றிலையை எடுத்தார். கபிலர், சுவைநீர்க் குவளையை வாங்கிக் குடிக்கத் தொடங்கினார். மற்றவர்களும் சுவைநீர் பருகினர்.

வலதுபக்கம் சுருட்டி வைத்திருந்த சுருக்குப்பையை எடுத்தார் வாரிக்கையன். அவர் என்ன செய்கிறார் என்று கண்களைத் திருப்பிப் பார்த்தார் கபிலர். பாக்குக்கொட்டை ஒன்றை எடுத்து உள்ளங்கையில் வைத்து விரல்களால் அழுத்தி உடைத்தார். கொட்டை உடையும் ஓசை ‘சடக்’கெனக் கேட்டது.

வாரிக்கையனுக்கு இடதுபக்கம் கபிலரும் வலது பக்கம் சற்று தள்ளி எதிரே உதியஞ்சேரலும் அமர்ந்திருந்தனர். வாரிக்கையனுக்கு நேர் எதிரில் குலசேகரபாண்டியன் இருந்தார். அவருக்கு வலதும் இடதுமாக மற்றவர்கள் இருந்தனர். கிழவன் பாக்குக்கொட்டையை விரல்களால் அழுத்தி உடைக்கும் ஓசை, பக்கத்தில் இருந்த உதியஞ்சேரலுக்குக் கேட்டது. `தள்ளாடி நடந்துவரும் கிழவன் பாக்குக்கொட்டையை விரல்களால் எப்படி அழுத்தி உடைத்தான்!’ என்று வியப்போடு பார்த்தான் அவன்.

சோழவேழன் சுவைநீரைப் பருகிய படியே கபிலரிடம் கேட்டார், ``நேற்று பெரும்மழை பெய்ததல்லவா? இரவு போதுமான உறக்கம் இருந்திருக்காது; நனைந்து ஈரம்கொண்டிருப்பீர்கள். வயதான காலத்தில் உடல்நிலையைப் பேணுதல் கடினமானது. ஒருவேளை நீங்கள் வர காலந்தாழுமோ என நினைத்தோம்.”

``நான் குகையில் இருந்ததால் மழையில் நனையவில்லை. உறக்கமும் கெடவில்லை” என்றார் கபிலர்.

``மழைக்கு குகை இதமான வெப்பத்தோடு இருக்கும். தூங்கவும் சுகமாகத்தான் இருக்கும். ஆனால்,

வௌவால்கள் நிறைய அடைந்துகிடக்குமே. ஆழ்ந்து தூங்கவிடாதே!” என்றார் சோழவேலன். கபிலரை கூடுதலாகப் பேசவிடுதல் நேற்றெடுத்த முடிவுகளில் ஒன்றல்லவா!

``வௌவாலை அதன் இருப்பிடத்திலிருந்து விரட்டுவது எளிய செயலன்று. அதுவும் நீண்ட குகையென்றால் விரட்ட விரட்ட அது உள்ளே போய் அடைந்துகொள்ளும்” எனச் சொன்ன உதியஞ்சேரல் “அந்தக் குகை எவ்வளவு நீளமானது?” எனக் கேட்டான்.

``எவ்வளவு நீளமாக இருந்தால் என்ன? குகையைவிட்டு வௌவாலை விரட்டுவதெல்லாம் பெரிய வேலையா?” என்று எதிர்க்கேள்வி கேட்டார் வாரிக்கையன்.

அனைவரும் ஆர்வத்தோடு பார்த்தனர். `தங்களுக்குத் தேவை பேச்சின் மூலம் பெறும் தகவல்தான். கபிலரோடு சேர்ந்து கிழவனும் அதிகம் பேசுபவனாக இருக்கிறான்’ என்று எண்ணியபடி அவர் சொல்லப்போவதைக் கவனித்தனர்.

வெற்றிலையை மென்றபடியே வாரிக்கையன் கேட்டான், ``உங்களுக்கு பனையேறி அணிலைப் பற்றித் தெரியுமா?”

``அணிலில் அது ஒரு வகை என்று அறிவேன். அவ்வளவுதான்” என்றான் உதியஞ்சேரல்.

வெற்றிலையை ஒருபக்கமாக ஒதுக்கிக் கொண்டே வாரிக்கையன் சொன்னார். ``தெளிந்த நீர் இருக்கும் கிணற்றில் கல்லைப் போட்டால் அது ஆழத்துக்குச் செல்வது வரை எப்படிப் பார்க்க முடியுமோ, அப்படித்தான் குகைக்குள் பனையேறி அணிலைவிட்டால் அடைந்துகிடக்கும் வௌவாலை கடைசிவரை விரட்டிப்போவதை பார்க்க முடியும்”.

சுவைநீர் அருந்தியபடியே ஆர்வத்தோடு உதியஞ்சேரல் கேட்டான், ``எப்படி?”

``மற்ற அணிலைப்போல பனையேறி அணில் மரத்தில் நேராக மேலேறாது. மாறாக, மரத்தைச் சுற்றிச் சுற்றித்தான் மேலேறும். அதைக் குகைக்குள் விட்டால் நேராக உள்ளே போகாது. குகையின் ஓரப்பகுதியைச் சுற்றிச் சுற்றியே உள்நுழையும். அணில் வருவது அறிந்தவுடன் வௌவால்கள் இருப்பிடத்தைவிட்டு சற்று உள்ளே போகும். அணில் மீண்டும் விளிம்பைச் சுற்றியபடியே உள்ளே போகும். இப்படி, குகையின் கடைசி எல்லை வரை அணில் விரட்டிக்கொண்டே போகும். மூன்று பனையேறி அணில்களை அடுத்தடுத்து குகைக்குள் விட்டால் போதும் ஒரு வௌவாலைக்கூட அந்தக் குகைக்குள் அடையவிடாது” என்றார்.

ஆனால், வெற்றிலையை இருபக்கமுமாக ஒதுக்கியபடி இதைச் சொல்வதற்கு அவர் எடுத்துக்கொண்ட காலம் மிக அதிகம். கேட்பவர்கள் பொறுமையை இழக்கும்படி மென்றுமென்று பேசினார்.

`இவ்வளவு மெதுவாகப் பேசக் கூடியவரல்லரே வாரிக்கையன். ஏன் இவ்வளவு மெதுவாகப் பேசுகிறார்?' எனக் கபிலருக்கே விளங்கவில்லை. சிந்தித்துக்கொண்டிருக்கும் போது பொதியவெற்பன் கேட்டான், ``எந்நேரமும் வெற்றிலையை மென்று கொண்டேதான் இருப்பீர்களா? பேசும்போது கூட மெல்வதை நிறுத்த மாட்டீர்களா?"



கன்னத்தாடை இரண்டும் அகன்று மேலேறின. மென்றுகொண்டே சிரித்தார். ``கருவுற்றப் பெண்ணுக்கு வாயூறிக்கொண்டே இருக்குமல்லவா? அதேபோலத்தான் எனக்கும் வாயூறிக்கொண்டே இருக்கும். அதனால் வெற்றிலையை மென்றுகொண்டே இருப்பேன்" என்று சொன்னவர், கேள்விகேட்ட பொதியவெற்பனைப் பார்த்து, ``உன் மனைவி கருவுற்றிருக்கிறாளா?" எனக் கேட்டார்.

சற்றும் எதிர்பாராத கேள்வி. கபிலரே அதிர்ந்துபோனார். பொதியவெற்பனுக்கு அவையில் என்ன சொல்லவது எனத் தெரியவில்லை. அந்தரங்கத்துக்குள் நெருப்புப் பட்டதுபோல் இருந்தது. அதிர்ச்சியை வெளிக்காட்ட முடியாமலும், உட்செரிக்க முடியாமலும் திணறினான். இறுகிய நிலையை யார் உடைப்பது என யாருக்கும் புரியவில்லை. நிலைமையை அறிந்து முசுகுந்தர் தலையிட்டார் ``இளவரசருக்கு இப்போதுதான் மணமாகியிருக்கிறது."

வாரிக்கையன் விடுவதாக இல்லை. ``இப்போது மணமானவரை ஏன் போர்க்களத்துக்குக் கூட்டிவந்தீர்கள்? பனையேறி அணில்போல மனைவியை அல்லவா சுற்றிக்கொண்டிருக்க வேண்டும்.

இங்கு வந்து கிழவர்களோடு உட்கார்ந்து வௌவாலைப் பற்றி ஏன் பேசிக்கொண்டிருக்கிறார்?" எனக் கேட்டார்.

நிலைமை மிக மோசமாகிக்கொண்டிருக்கிறது என அனைவரும் உணர்ந்தனர். `இதற்குமேல் இந்தப் பேச்சை நீட்டிக்க வேண்டாம். போர்விதிகளுக்கான பேச்சைத் தொடங்கலாம்' என எண்ணி குலசேகரபாண்டியனைப் பார்த்தார் சோழவேழன். அவரோ வாரிக்கையனைக் கூர்ந்து பார்த்தபடி ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். நேரமாகிக்கொண்டிருந்தது.

`சரி, நாமே தொடங்கலாம்' என நினைத்த சோழவேழன், "பறம்பின் தரப்பில் நாழிகைக்கோலைப் பார்த்துச் சொல்லப்போகும் நிலைமான் கோல்சொல்லி யாரென முடிவுசெய்துவிட்டீர்களா?"

கேட்டு முடிக்கும் முன் வாரிக்கையன் சொன்னார், ``கபிலர்தான்."

குலசேகரபாண்டியன் கணித்தது துளியளவும் பிசிறவில்லை. மிகச்சரியாக இருந்தது. கபிலரைக் கைக்கொள்ளும் திட்டம் ஏற்கெனவே தீட்டப்பட்டிருந்தது.

சற்று இடைவெளிக்குப் பிறகு, ``உங்களின் தரப்பில் நிலைமான் கோல்சொல்லி யார்?" எனக் கேட்டான் வாரிக்கையன்.

குலசேகரபாண்டியன்தான். பெயரைச் சொல்ல வேண்டும்... நேற்று அப்படித்தான் பேசப்பட்டது. ஆனால் அவரோ, வாரிக்கையனைக் கூர்ந்து பார்த்தபடி பேசாமல் இருந்தார். அவையில் அமைதி நீடித்தது. மற்ற இரு வேந்தர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. நேற்றைய பேச்சில் பொதியவெற்பனும் முசுகுந்தரும் கலந்துகொள்ளாததால் அவர்கள் இயல்பான அமைதியோடு இருந்தனர்.

வாரிக்கையன், தான் வெற்றிலையை மென்றுகொண்டே கேட்டதால் சரியாகப் புரியவில்லையோ என நினைத்து, மீண்டும் ஒருமுறை கேட்டார் ``உங்களின் தரப்பில் நிலைமான் கோல்சொல்லி யார்?"

அவையில் பேச்சு ஏதும் எழவில்லை. ஏன் எதுவும் சொல்லாமல் இருக்கிறார்கள் என்று கபிலருக்குப் புரியவில்லை. செங்கனச்சோழன் தன் தந்தையின் முகத்தைப் பார்த்தான். உதியஞ்சேரலோ சோழர்கள் இருவரையும் பார்த்தான். எதிரில் உட்கார்ந்திருப்பவர்கள் ஏன் திகைத்தபடி ஒருவரை மாற்றி ஒருவர் பார்த்துக்கொண்டிருக்கின்றனர் எனக் கபிலருக்குப் புரியவில்லை.

`இனியும் பேசாமல் இருக்கக் கூடாது' என நினைத்த சோழவேழன், ``தலைமைக் கணியன்..." என்று தொடங்கினார். ஆனால், பெயர் சட்டென நினைவுக்கு வரவில்லை. நினைவுகூர்ந்தபடி நிறுத்தினார்.

குலசேகரபாண்டியனின் அருகில் நின்றிருந்த முசுகுந்தரோ ஒரு கணம் அதிர்ச்சியானார்.

`திசைவேழரையா சொல்கிறார்!' எனத் திகைத்து குலசேகரபாண்டியனைப் பார்த்தார். அவரோ எதுவும் பேசாமல் வாரிக்கையனையே பார்த்துக்கொண்டிருந்தார்.

அவையோருக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. முசுகுந்தர், குலசேகர பாண்டியனுக்கு மிக அருகில் சென்று மெல்லிய குரலில், ``திசைவேழரா பேரரசே?" எனக் கேட்டார்.

குலசேகரபாண்டியன் மெல்லிய சிரிப்போடு தலையசைத்தார். முசுகுந்தருக்கு பேரதிர்ச்சியாக இருந்தது. `திசைவேழரைப்போன்ற அறம் தவறாத மாமனிதரை, போருக்கான கோல்சொல்லியாக நியமித்தால், அவரை நம்மால் எந்த வகையிலும் பயன்படுத்திக் கொள்ள முடியாது. போர்க்களத்தின் பிடிமானம் நம்மிடம் இல்லாமல்போகும் வாய்ப்புண்டு' எனச் சிந்தித்தபடி மீண்டும் அவரை உற்றுப்பார்த்தார். அதே சிரிப்போடு தலையசைத்தார் குலசேகரபாண்டியன்.

பேரரசர் என்பவர், எப்போதும் யாரும் சிந்திக்காததைச் சிந்திக்கக்கூடியவர் என்பதை வாழ்வு முழுவதும் அறிந்தவர் முசுகுந்தர். எனவே, அவரின் திட்டமிடல் மற்றவர்கள் எண்ணத்துக்கு அப்பாற்பட்டுதான் இருக்கும் என்ற பெருமிதத்தோடு ``எங்கள் தரப்பின் நிலைமான் கோல்சொல்லியாகப் பெருங்கணியர் திசைவேழர் செயல்படுவார்" என அறிவித்தார்.

வேந்தரின் தரப்பில் இருந்த மற்றவர்கள் திகைத்துப்போனார்கள். பொதிய வெற்பனுக்கோ தலையே சுற்றுவதுபோல் ஆனது. என்ன நடக்கிறது இங்கு என்று யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை.

தான் பேசட்டும் என்று மற்றவர்கள் கருதுவதாக நினைத்த முசுகுந்தர், ``திசைவேழரை நாளை அழைத்துவருகிறோம். கோல்சொல்லிகள் இருவரும் போரின் விதிகளை வரையறுக்கட்டும்" என்றார்.

`சரி'யெனச் சொல்லி அவை நீங்கினர் கபிலரும் வாரிக்கையனும்.

பிற்பகலின் இறங்குவெயிலில் தேர், வேந்தர்களின் படையைவிட்டு வெளியேறியது. நீண்டநேரம் கபிலர் எதுவும் பேசவில்லை. அவருக்கு அவையில் நடந்ததைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

"ஏன் பேசாமல் வருகிறீர்கள்?" எனக் கேட்டார் வாரிக்கையன்.

"இல்லை, பேரரசர்களில் மூத்தவர் குலசேகரபாண்டியன். அவர்தான் எல்லாவற்றையும் பேசுவார். ஆனால் இன்று, அவர் பேசுவதை முற்றிலும் தவிர்த்துவிட்டார். மற்றவர்கள், அவரின் முகத்தையே மீண்டும் மீண்டும் பார்த்துக்கொண்டிருந்தனர். காரணம் எதுவும் எனக்குப் பிடிபடவில்லை" என்றார்.

சற்றே சிரிப்போடு, ``காரணம் நான்தான்" என்றார் வாரிக்கையன்.

``நீங்களா?” என அதிர்ச்சியோடு கேட்டார் கபிலர்.




``ஆம். நான் முதலில் இடதுபக்க இடுப்புப் பையில் இருந்த வெற்றிலையை எடுத்தேன் என்பதை நீங்கள் கவனித்தீர்கள். ஆனால், வலதுபக்க சுருக்குப்பையைத் திறந்து என்ன செய்தேன் என்பதை நீங்கள் கவனிக்கவில்லை” என்றார்.

``சுருக்குப்பையில் என்ன செய்தீர்கள்?”

``அதற்குள்தான் திகைப்பூச்சியை வைத்திருந்தேன். பாக்கு எடுப்பதைப்போல அவற்றுள் மூன்றை முதலில் எடுத்து வெளியில் விட்டேன். அவை போவதை மற்றவர்கள் எளிதில் பார்த்துவிட முடியாது. ஆனாலும் கவனமாக இருக்க வேண்டும் என்பதால்தான் பாக்கை மற்றவர்களுக்குக் கேட்பதைப்போல சத்தமாக உடைத்தேன். எல்லோரின் கவனமும் எனது கைக்கு வந்தது. திகைப்பூச்சிகள் எனக்கு நேராக உட்கார்திருப்பவனின் இருக்கை நோக்கிப்போனது. அது கடித்து சிறிதுபொழுதுக்குப் பிறகுதான் திகைப்புத்தன்மை உருவாகும். அதனால்தான் வெற்றிலையை மென்றபடி மெள்ள மெள்ளப் பேசி நேரத்தை நீட்டித்தேன்” என்றார்.

கபிலர் உறைந்துபோனார். ``நீங்கள்தான் குலசேகரபாண்டியனைப் பேசவிடாமல் செய்ததா? அப்படிச் செய்ததால் நமக்கென்ன நன்மை?”

``நம்மிடம் போர்விதிகளை எப்படிப் பேசுவது, யார் யார் பேசுவது என்பதையெல்லாம் அவர்கள் ஏற்கெனவே முடிவுசெய்திருப்பார்கள். திகைப்பூச்சி கடிப்பதன் மூலம் அவர்களில் ஓரிருவர் பேச முடியாத நிலையை எய்துவர். முடிவுசெய்தபடி ஏன் பேசவில்லை என்று மற்றவர்களுக்கு பேச முடியாதவர் மீது ஐயம் உருவாகும். அந்த ஐயம்தான் விரிசலுக்கான வழியை உருவாக்கும்” என்றார்.

கபிலர், விரித்த கண்களை இமைக்காமல் வாரிக்கையனையே பார்த்துக்கொண்டிருந்தார். அவர் மேலும் சொன்னார், “அவர்கள் மூவரும் நண்பர்கள் அல்லர்; நம்மை அழிப்பதற்காக ஒன்றுபட்டுள்ளனர். எனவே, அவர்களுக்குள் விரிசலை உருவாக்க, சிறிய காரணமே போதுமானது.”

நாகக்கரட்டின் அடிவாரத்தில் தேர் வந்து நின்றது. கபிலர் கீழிறங்கினார். அவரின் தோள்பற்றி இறங்கிய வாரிக்கையன் சொன்னார், “இந்தப் போரில் வலிமைமிகுந்த எண்ணற்ற ஆயுதங்களை நாம் பயன்படுத்தப்போகிறோம். ஆனால், நாம் பயன்படுத்தப்போகும் எந்தவோர் ஆயுதத்தையும்விட கண்களுக்குத் தெரியாத இந்தச் சிறுபூச்சி செய்துள்ள நன்மை இணையற்றதாக இருக்கும்”.

பேச்சின்றி நடந்தார் கபிலர்.

``அது சரி, யார் அந்தத் திசைவேழர்?”

வாரிக்கையனின் கேள்விக்கு அதிர்ச்சியிலிருந்து மீண்டபடி பதில் சொன்னார் கபிலர், ``அறத்தின் அடையாளம்.”

- *பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-88


வளர்பிறை நிலவு, வானில் எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தது. மூவேந்தர்களும் அவரவருக்கான பாசறைக் கூடாரத்தில் இருந்தனர். முசுகுந்தர், திசைவேழரைக் கண்டு வேந்தர்களின் வேண்டுகோளை ஏற்கச்செய்து அழைத்துவரப் போயுள்ளார். உதியஞ்சேரலால் அவனது கூடாரத்துக்குள் இருக்க முடியவில்லை. `நேற்று இரவு அந்துவனை நிலைமான் கோல்சொல்லியாகத் தேர்வுசெய்வோம் என்று சொன்ன குலசேகரபாண்டியன் இன்று ஏன் மாற்றினார்? இதற்கான காரணம் என்ன? அதுவும், தான் சொல்லாமல் தன் அமைச்சனின் மூலம் ஏன் சொல்லவைத்தார்?' என்ற கேள்விகள் அவனைக் குடைந்துகொண்டிருந்தன. `இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. ஆனால், என்னவென்று புரியவில்லை' என்று குழம்பிப்போய் இருந்தவன், `இதுபற்றி சோழனிடம் விவாதிக்கலாம்' என்று அவனது கூடாரம் நோக்கிப் புறப்பட்டான்.

செங்கனச்சோழன் தன் தந்தை சோழவேழனிடம் இதைப் பற்றித்தான் விவாதித்துக்கொண்டிருந்தான். அந்நேரம் உதியஞ்சேரலும் உள்ளே வந்தான். ``நேற்றிரவு பேசியதும் இன்று காலையில் நடந்ததும் பேரையத்தை உருவாக்குகின்றன. பாண்டியன் நமக்குத் தெரியாமல் ஏதோ செய்யப்பார்க்கிறான்" என்றான் உதியஞ்சேரல்.

``எனக்கும் புரியவில்லை. திசைவேழர், மிகக் கடுமையானவர்; அறம் பிறழாதவர்; கபிலர் மீது மிகுந்த பற்றுகொண்டவர். அப்படியிருந்தும் ‘அவரைக் கோல்சொல்லியாக நியமிப்பது எந்த வகையில் உதவி செய்யும்? நம்மிடம் அந்துவன் எனச் சொல்லிவிட்டு அவையில் ஏன் மாற்ற வேண்டும்?' என்று அடுக்கடுக்கான கேள்விகளோடுதான் நாங்களும் இருக்கிறோம்" என்றார் சோழவேழன்.

``திசைவேழரும் வேண்டாம், அந்துவனும் வேண்டாம். நம் கணியன் ஒருவனைக் கோல்சொல்லியாக நியமிப்போம். அமைச்சர்கள் நாகரையனையும் வளவன்காரியையும் அனுப்பி குலசேகரபாண்டியனுக்குத் தெரிவிப்போம்" என்று சற்று கோபத்தோடு சொன்னான் செங்கனச்சோழன்.
``அப்படியே செய்யலாம்" என்றான் உதியஞ்சேரல்.
``அவசரப்பட வேண்டாம். சற்றுப் பொறுத்திருப்போம். ஏன் நம்மிடம் தெரிவிக்காமல் திசைவேழரின் பெயரைச் சொன்னார் குலசேகரபாண்டியன்? அந்தக் காரணம் நமக்குத் தெரிய வேண்டும். அதற்கு ஏற்பதான் நம்முடைய அடுத்தகட்டச் செயல்பாடு அமைய வேண்டும்" என்றார் சோழவேழன்.

``அதற்குள் திசைவேழர் நிலைமான் கோல்சொல்லியாகப் பொறுப்பேற்றுப் போரைத் தொடங்கிவிடுவாரே?”



மெல்லிய சிரிப்போடு சோழவேழன் சொன்னார், ``திசைவேழர் அறம் பிறழாதவர். போரின் விதிமீறலை அவரால் பொறுத்துக்கொள்ள முடியாது. நிலைமான் கோல்சொல்லி பொறுப்பிலிருந்து அவராக வெளியேறிச் செல்ல, ஒரு வீரன் தொடுக்கும் அம்பு போதும்” என்றார்.

‘அனுபவமேறிய மனிதர்களின் சிந்தனை தனித்துவமிக்கதுதான்’ எனத் தோன்றியது உதியஞ்சேரலுக்கு. தன் தந்தையின் கருத்தைச் சரியென ஒப்புக்கொண்டான் செங்கனச்சோழன். குலசேகரபாண்டியனின் செயலுக்குக் காரணம் என்ன என்பதை அறிவதுதான் இப்போது முக்கியம் என்பதில் அனைவரும் உடன்பட்டனர்.

**பெ**ருங்குழப்பத்திலும் கட்டுப்படுத்த முடியாத கோபத்திலும் இருந்த பொதியவெற்பன், குதிரையில் ஏறி, கருங்கைவாணனைப் பார்க்க விரைந்தான். மருத்துவக் கூடாரத்தில் இருந்த அவனோடு, நேற்று நள்ளிரவு வரை பேசிக் கொண்டிருந்தான். மீண்டும் இன்றிரவு அவனைக் காண வந்துவிட்டான். இளவரசன் உள்ளே வந்ததும் மருத்துவர்களும் உதவியாளர்களும் கூடாரத்தை விட்டு வெளியேறினர்.

நேற்று இரவு மூவேந்தர்களும் கூடி என்ன பேசினார்கள் என்பது பொதியவெற்பனுக்குத் தெரியாது.

அவனைப் பொறுத்தவரை திசைவேழரைக் கோல்சொல்லியாக நியமித்ததுதான் பேரதிர்ச்சியாக இருந்தது. கடுங்கோபத்தோடு வந்து செய்தியைக் கருங்கைவாணனிடம் பகிர்ந்துகொண்டான். கருங்கைவாணனுக்கும் பேரதிர்ச்சியாக இருந்தது. பொதியவெற்பன், சினமேறிய வார்த்தைகளைக் கொட்டிக்கொண்டிருந்தான். ``தொடக்கம் முதலே தந்தையின் செயல் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. எதையும் தெரிவிக்க மறுக்கிறார். நான் தெரிவிக்கும் எல்லாவற்றையும் மறுக்கிறார். இந்தப் போரில் அவர் பின்பற்றும் உத்திகள் அனைத்தும் நமக்கே புரியாதபுதிராக இருக்கின்றன" என்று மூச்சு விடாமல் பேசினான்.

இளவரசரின் கோபத்தை, கருங்கைவாணனால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடிந்தது. ``பேரரசரின் நடவடிக்கை மிகவும் ஆழ்ந்த சிந்தனைகொண்டதாக இருக்கும். சற்றே நிதானமாக எண்ணிப்பார்க்கலாம்" என்று பொதியவெற்பனின் கோபத்தை மட்டுப்படுத்த முயன்றான் கருங்கைவாணன்.
ஆனால், பொதியவெற்பனால் எளிதில் சமாதானமாக முடியவில்லை. ``என் மனைவியை ஏன் மதுரையை விட்டு வெங்கல்நாட்டுக்கு வரவழைக்க வேண்டும்? அதுவும் அவள் வந்த பிறகுதான் எனக்குச் செய்தி தெரிவிக்கப்படுகிறது" என்றான். கருங்கைவாணன் இந்தச் செய்தியை இப்போதுதான் அறிகிறான். ``இளவரசியார் வெங்கல்நாட்டுக்கு வந்துள்ளாரா?" எனக் கேட்டான்.

``ஏதாவது ஒரு காரணம் இருக்கும். அவள் கபிலர் மாணவி. போர் நடவடிக்கையில் யாரும் எதிர்பார்க்காதபோது அவள் பயன்படக்கூடும் என்று சிந்தித்திருப்பார் எனத் தோன்றுகிறது. அது நல்ல சிந்தனைதான். ஆனால், என் மனைவி வந்துள்ளதையே நான் மையூர்கிழார் சொல்லித் தான் தெரிந்துகொள்கிறேன். இதையாவது பொறுத்துக்கொள்ளலாம். காலையில் வாரிக்கையன் என்ற அந்தக் கிழவன், `உன் மனைவி கருவுற்றிருக்கிறாளா?' என்று அவையில் அவமதிக்கும் தொனியில் கேள்வி எழுப்பியபோது சினந்தெழுவார் என நினைத்து தந்தையைப் பார்த்தேன். அவரோ சிரித்துக்கொண்டிருக்கிறார். இது பாண்டியநாட்டு அரண்மனையன்று. மற்ற இருவேந்தர்களும் இருக்கும் அவையில் என்னை அவமானப்படுத்தவேண்டிய தேவையென்ன? என்னதான் நினைக்கிறார் அவர்?" என்று கோபத்தில் சீறினான் பொதியவெற்பன்.

சிறிது நேரம் பதிலின்றி அமைதியாக இருந்த கருங்கைவாணன், ``பேரரசரின் செயல் நமக்குக்

கவலையைத் தந்தாலும் அதற்குள் ஆழ்ந்த பொருள் இருப்பதை நாம் பல நேரத்தில் உணர்ந்துள்ளோம். இதுவும் அப்படியொரு செயலாக இருக்கலாம் அல்லவா?” எனக் கேட்டான்.

வீரயுக நாயகன் வேள்பாரி 88

``எதைச் சொல்கிறாய்?”

``இளவரசியாரை உங்களுக்குத் தெரிவிக்காமல் வரவழைத்ததைப் பற்றிக் கோபப்பட்ட நீங்கள், அதற்கான காரணத்தைச் சொல்லும்போது சரியானதுதான் என்று சொல்கிறீர்கள் அல்லவா? அதேபோலத்தான் திசைவேழரைக் கோல்சொல்லியாக நியமித்ததற்கும் சரியான காரணம் இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது.”

``என்ன காரணம்?”

``வேட்டுவன்பாறையின் மீதான தாக்குதலின் தன்மையைப் பேரரசர் உணர்ந்திருப்பார். எதிரியின் திறன் வலிமைகொள்ளும் இடம் எது, வலிமை குன்றும் இடம் எது என்று அவரால் துல்லியமாகக் கணிக்க முடியும். களப்போர் என்பது பயிற்சியை அடிப்படையாகக்கொண்டது. பயிற்சியற்ற படைவீரர்கள், தாக்குதல் போரைப் போலவே களப்போரிலும் எல்லாத் திசைகளிலும் அளவற்ற ஆவேசத்தை வெளிப்படுத்துவர். அதனாலேயே அவர்களைச் சூழ்ச்சிகளுக்குள் சிக்கவைக்க வாய்ப்பு அதிகம். அதுமட்டுமல்ல, பறம்பினரைப் போர் விதிகளுக்குள் அடக்குவது ஏதோ ஒருவகையில் அவர்களைக் கட்டுப் படுத்துவதுதான். காட்டாற்றின் வேகத்தைக் கரையெழுப்பிய வாய்க்காலின் வழியே பிரித்துப் பணியவைப்பதைப்போலத்தான். அவர்களின் தரப்பில் கோல்சொல்லியாகக் கபிலர் இருக்கும்போது திசைவேழரை நமது தரப்பு கோல்சொல்லியாக நியமித்தது சிறந்த தந்திரம் என்றே நினைக்கிறேன். போர் விதிகளுக்குள் மீண்டும் மீண்டும் அவர்களை உட்படுத்தும் ஆயுதமாகக் கபிலரையும் திசைவேழரையும் ஒருசேரப் பயன்படுத்த நினைத்துள்ளார். காட்டு யானையின் இரு காதுகளிலும் இரு அங்குசங்களை மாட்ட நினைக்கிறார் பேரரசர்” என்றான் கருங்கைவாணன்.

இப்படியொரு காரணத்தைப் பொதியவெற்பன் சிந்திக்கவில்லை. கருங்கைவாணன் சொல்வதைக் கேட்கும்போது மிக நுட்பமான சூழ்ச்சியாகத் தோன்றியது. பேரரசரின் திட்டம் மிகவும் கவனமிக்கதாக இருக்கிறது என்பதும் விளங்கியது. ஆனாலும், மனதுக்குள் வலி அகலவில்லை.

சட்டென நினைவுக்குவந்து மீண்டும் கேட்டான் பொதியவெற்பன், ``நேற்று `பறம்புடனான போருக்கு விதிகளே வகுக்கக் கூடாது' என்று சொன்னாய். இன்று இப்படிப் பேசுகிறாயே?"

``ஆம். இப்போதும் எனது நிலை அதுதான். ஆனால், விதிகள் வகுக்கப்பட்ட போர் என்று முடிவெடுத்த பிறகு சிறந்த போர் உத்திகளைப் பயன்படுத்த வேண்டும். இப்போது பேரரசர் அதைத்தான் செய்துள்ளார் என நினைக்கிறேன்" என்றான் கருங்கைவாணன்.

**வெ**ங்கல்நாட்டின் வடபுறத்துக் குடில் ஒன்றில் தங்கியிருந்தார் திசைவேழர். கபிலரும் வாரிக்கையனும் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே திசைவேழரைப் பார்க்க விரைந்தார் முசுகுந்தர்.

வைகைக்கரையில் இருந்த திசைவேழரை, போருக்கான நாள் குறித்துத்தரச் சொல்லித்தான் அழைத்தனர். ஆனால் அவரோ, ''போரைத் தவிர்க்க, கபிலர் மூலமாக ஏன் பேசிப்பார்க்கக் கூடாது?'' எனக் கேள்வி எழுப்பினார். அவர் சொன்னதை ஏற்ற வேந்தர்கள், கபிலருக்குத் தூது அனுப்பிப் பேசிப்பார்த்தனர். ஆனால், பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. அன்று மாலையே திசைவேழருக்கு அந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டது.

தனது சொல்லைக் கேட்டு வேந்தர்கள் மூவரும் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனாலும் போரைத் தவிர்க்க முடியவில்லை. எனவே, இனி அவர்கள் கேட்பதுபோல போருக்கான நாள் குறித்துக் கொடுப்பதை மறுத்துச் சொல்ல முடியாத நிலை உருவானது. சற்று குழப்பமான மனநிலையுடனே குடில் விட்டு அகலாமல் இருந்தார் திசைவேழர்.

இரவு பரவும் வேளையில் குடிலுக்கு வந்துசேர்ந்தார் முசுகுந்தர். மாணவர்கள், விளக்கை ஏற்றிக்கொண்டிருந்தனர். செய்தி திசைவேழருக்குச் சொல்லப்பட்டது. `மீண்டும் நாள் குறித்துக் கேட்பதற்காக முசுகுந்தர் வந்துள்ளார்' என நினைத்தபடி அவரை உள்ளே வரச்சொன்னார் திசைவேழர்.

தான் வந்துள்ள பணி எவ்வளவு கடினமானது என முசுகுந்தருக்கு நன்கு தெரியும். திசைவேழர் இதற்கு ஒப்புதல் தருவது எளிய செயலன்று. ஆனாலும், பேரரசர் குலசேகரபாண்டியனின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் தோல்வியடைந்து விடக் கூடாது என்ற முடிவோடு வந்திருந்தார்.

திசைவேழரின் முன் பணிவு குலையாமல் அதே நேரத்தில் எந்தவிதத் தயக்கமுமின்றி, தான் மனதுக்குள் பலமுறை சொல்லிப்பார்த்த சொற்றொடரைத் தலை தாழ்த்தியபடியே கூறினார் முசுகுந்தர். ``இப்பெரும் போருக்கான வேந்தர்படையின் நிலைமான் கோல்சொல்லியாகத் தாங்கள் இருந்து வழிநடத்த வேண்டும் என்று மூவேந்தர்களும் விரும்புகின்றனர் பேராசானே!”

போர்நிலத்தையே பார்க்கக் கூடாது என நினைப்பவனை, போரின் அத்தனை கொலைகளையும் உற்றுநோக்குபவனாக மாற்ற நினைக்கும் ஆலோசனை அவரை நடுங்கச் செய்தது. ஒருகணம் திகைத்துப்போனார். அதிர்ச்சி, சினமாக உருமாறியது. ஆனாலும் கட்டுப்படுத்தினார். மெல்லிய குரலில் உதிர்ந்த இலையை ஊதித்தள்ளுவதைப்போல இந்த ஆலோசனையை அப்புறப்படுத்தினார்.

சினமேறிய வெளிப்பாடு இல்லாதது முசுகுந்தருக்குச் சற்றே ஆறுதலாக இருந்தது. ஆனாலும் அவரின் ஏற்பைப் பெறுவது எளிய செயலன்று. எல்லாவகையிலும் முயன்று அவரின் ஒப்புதலைப் பெற மனதை ஆயத்தப்படுத்திக் கொண்டார்.

திசைவேழர், தனது வழக்கத்துக்கு மாறான செயலைச் செய்துகொண்டிருந்தார். பொங்கி யெழும் சினம் சொல்லின்மேல் படியாமல் பார்த்துக்கொண்டார். நிராகரிக்கும் ஒன்றின் மீது உணர்ச்சியைப் படியவிடுவது பொருளற்றது என்று அவருக்குத் தோன்றியது.

முழுமுற்றாக நிராகரிப்பதற்கும் நிராகரிக்கும் காரணத்தை விளக்குவதற்கும் நுட்பமான இடைவெளி உண்டு. கண்ணுக்குத் தெரியாமல் ஒருபடி கீழிறக்கும் செயல் அது. திசைவேழர் நிராகரிக்கும் ஒற்றைச் சொல்லை மட்டுமே இயல்பான தொனியில் சொல்லிக் கொண்டிருந்தார். எப்படியாவது அதற்கான காரணத்தை விளக்கும் இடத்துக்கு அவரை வரவழைத்துவிட வேண்டும் என முயன்றார் முசுகுந்தர்.

திசைவேழர் போன்ற பேராசானைத் துளித்துளியாகத்தான் கரைக்க முடியும். இந்தப் போரில் தனக்கு வழங்கப்பட்ட மிகக் கடினமான பணி இதுவாகத்தான் இருக்கும். இத்தனை ஆண்டுக்கால அனுபவத்தை

உருத்திரட்டி எதைச் சொன்னால் திசைவேழரின் சொற்கள் கனிவு கொள்ளுமோ, அதற்கான வெக்கையை உருவாக்கும் காரணத்தைத் தேர்வுசெய்து கூறினார். ``போரின் அறத்தை, சிறந்த கோல் சொல்லிகளால் மட்டுமே நிலைநிறுத்த முடியும். எனவே, நீங்கள் மூவேந்தர்களின் கூட்டுப்படைக்கு நிலைமான் கோல்சொல்லியாக இருந்து இந்தப் போரை அறவிதிகள் மீறாமல் நடத்தித்தர வேண்டும்.”



நீண்ட அமைதிக்குப் பிறகு திசைவேழர் கூறினார், ``அறம்பேண, பொது இடமன்று போர்க்களம். அது நம்மை இரக்கமற்ற மனநிலைக்குள் முழுமுற்றாக மூழ்கவைக்கும். எனவே, இந்த ஆலோசனையை என்னால் ஏற்க முடியாது.”

இந்த இடத்துக்கு அவரை வரவழைக்கத்தான் இவ்வளவு முயன்றார் முசுகுந்தர். கரையத் தொடங்கிய ஒன்று மறுபடியும் தனக்குத்தானே உறைந்து இறுகுவது எளிதன்று. இனி வெக்கையின் அடர்த்தியை வெப்பத்தின் இளஞ்சூடாக மாற்ற முயன்றார் முசுகுந்தர், ``ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவிதிகளைத்தானே முன்னோர்கள் ‘அறம்’ என வகைப்படுத்தினர். நாற்றங்காலின் அறமும் அறுவடைக்களத்தின் அறமும் செயலின் வழியேதானே வெவ்வேறானவை. வரையறுக்கப் பட்ட கடமையின் அடிப்படையில் அவற்றுக்குள் வேறுபாடு ஏதும் இல்லையே. பயிரை நடுவதும் பயிரை அறுப்பதும் சமநிலைகொண்ட செயல்பாடுகள் என்பதே அறத்தின் குரல்.

அப்படியிருக்க, பொது இடம் என்றோ, போர்க்களம் என்றோ வேறுபடுத்துவது பொருளற்றதுதானே பேராசானே!”

``முசுகுந்தரே, விதிகளும் அறவுணர்வும் எப்போதும் பொருந்திப்போவதில்லை. விதிகள், சமமான தோற்றத்தை உருவாக்க நினைப்பவை. அறவுணர்வு, சமமற்றவற்றின் நியாயத்தைப் பற்றி நிற்பவை. போருக்குத் தேவை போர்விதிகள்தான். அவற்றைப் 'போரின் அறம்' எனச் சொல்வது அறிவுடைமையாகாது.''

``சமமான அளவீடுகளை உருவாக்குவதே, சமமற்றவற்றுக்கு எதிரான அறச்சிந்தனையின் வெளிப்பாடுதான். அதனால்தானே இந்தச் செயலில் தன்னைப் பொருத்திக்கொள்வது கடமை எனப் பெரும்புலவர் கபிலர் முன்வந்துள்ளார்.''

சற்றே அதிர்ந்தார் திசைவேழர். ``கபிலர் கோல்சொல்லியாக இருக்க முன்வந்துள்ளாரா?''

``ஆம். பறம்பின் தரப்பில் நிலைமான் கோல்சொல்லியாக இருக்கப்போகிறார் பெரும்புலவர் கபிலர். அதனால்தான் மூவேந்தர்களும் ஒருமித்த குரலில் பேராசானே எங்களுக்கான நிலைமான் கோல்சொல்லியாக இருக்க வேண்டும்'' என விரும்புகின்றனர்.

``விதிகள், நீரை ஒழுங்குபடுத்தும் வாய்க்காலைப் போன்றவை; ஆனால், கண்ணுக்குத் தெரியாமல் நீரில் கரையக்கூடியவை. அதனால்தான் உருவாக்குபவனுக்குப் பணியும்தன்மை விதிகளின் இயல்பாகிறது. ஆனால் அறன் எனப்பட்டது, அனைவரையும் கூர்தீட்டிப்பார்த்து, தன்னை நிலைநிறுத்திக்கொள்வது. உங்கள் பேரரசர்களை நன்றாகச் சிந்தித்துக்கொள்ளச் சொல்லுங்கள். நான் போரின் விதிகளை நிலைநிறுத்தும் கோல்சொல்லியாகச் செயல்படேன். போரின் அறத்தை நிலைநிறுத்தும் கோல்சொல்லியாகவே செயல்படுவேன். அது வெற்றியின் சுவைக்கு உவப்பானதன்று.''

முழுமுற்றாக மறுத்துக்கொண்டிருந்த திசைவேழர், இவ்வளவு இறங்கிவந்ததும் இறுகப் பற்றிக்கொள்ள நினைத்தார் முசுகுந்தர். `குலசேகரபாண்டியனின் உத்தரவை நிறைவேற்ற முடியாமற்போய்விடுமோ!' என்ற பதற்றம் தணியத் தொடங்கியது. திடமான குரலில் கூறினார், ``இதற்குமுன் இந்த மண் காணாத பெரும்போர் இது. மூவேந்தர்கள் ஓரணியில் அணிவகுத்து நிற்கப்போகின்றனர். பறவைகளால் பறந்து கடக்க முடியாத நிலப்பரப்பில் வீரர்கள் வாளேந்தி நிற்பர். 'இந்த மாபெரும் போரை அறம் பிறழாமல் நடத்த வேண்டும்' என்று பாண்டியப் பேரரசர் கருதுகிறார். வரலாறு இருக்கும் வரை இந்தப் போர் நிலைபெறப்போகிறது. இதில் அடையப்போகும் வெற்றி எந்தவகையிலும் குறைவுடையதாகக் கூடாது


என்பதில் குலசேகரபாண்டியன் மட்டுமல்ல, மற்ற இரு பேரரசர்களும் மிகுந்த விருப்பத்தோடு இருக்கின்றனர். எனவேதான் தங்களின் ஒப்புதல் தலையாயது எனக் கருதுகின்றனர்” என்றார்.

திசைவேழர் எதிர்ச்சொல்லின்றி அமைதியானார்.

``வைகையின் தென்திசையில் நீங்கள் குடில் அமைத்திருந்தால் வெள்ளத்தைக் கடந்து அந்துவனால் வந்து உங்களைக் கண்டு பேசியிருக்கவே முடியாது. நீங்கள் வடதிசையில் குடில் அமைத்ததே இங்கு வந்து சேருவதற்காகத் தான். எனவே, திசைவேழர் இதற்கு ஒப்புதல் தருவார் என்ற நம்பிக்கையோடு என்னை அனுப்பிவைத்தார் பேரரசர்” என்றார் முசுகுந்தர்.

இதற்குப் பிறகும் பதிலின்றி இருக்க முடியவில்லை. சற்றே தலையசைத்தார் திசைவேழர்.

மகிழ்ச்சி பொங்க அவரது கால் தொட்டு வணங்கினார் முசுகுந்தர்.



**ம**றுநாள் அவை கூடியது. கபிலரும் வாரிக்கையனும் வந்துசேர்ந்தனர். சிறிது நேரத்தில் திசைவேழர் வந்தார். அவர் நிலைமான் கோல்சொல்லியாக இருக்க எப்படி ஒப்புக்கொண்டார் என கபிலருக்குப் பெரும் வியப்பாக இருந்தது. பேரரசர்களோ அதிர்ச்சியில் உறைந்திருந்தனர். மருத்துவக் கூடாரத்திலிருந்து கருங்கைவாணனும் வந்து சேர்ந்துவிட்டான். ‘குலசேகரபாண்டியனின் தந்திரம்மிக்க செயல் இது’ என்று அவன் நினைத்தான். ஆனால் குலசேகரபாண்டியனோ, ஏறக்குறைய கலங்கிய நிலையில் இருந்தார். நேற்று நடுப்பகலில் பேச்சுவார்த்தை முடிந்ததும் அப்படியே போய் மயங்கித்

தூங்கியவர் நள்ளிரவுதான் எழுந்தார். அதன் பிறகுதான் என்ன நடந்தது எனக் கேட்டறிந்தார். நிலைமான் கோல்சொல்லியாக திசைவேழரைத் தேர்வுசெய்ததைக் கேள்விப்பட்டு நடுங்கிப்போனார். ``எப்படி இது நடந்தது?'' என அவைக்குள் இருந்த பணியாளர்களிடம் மீண்டும் மீண்டும் கேட்டார். `தான் எப்படி ஒப்புதல் கொடுத்தோம்' என்பது அவருக்குப் புரியவேயில்லை. ``முசுகுந்தர் எங்கே?'' எனக் கேட்டார்.

``திசைவேழரிடம் ஒப்புதல் பெறப் போயுள்ளார்'' என்று தெரிவித்தனர்.

இவ்வளவு குழப்பங்களுக்குப் பிறகும் அவருக்கு இருந்த நம்பிக்கை, 'திசைவேழர், இந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ள மாட்டார்' என்பதுதான். எனவே, நாம் முன்னரே தெரிவித்தபடி நாளைக் காலை அந்துவனை நிலைமான் கோல்சொல்லியாகத் தேர்வு செய்துவிடலாம் என நினைத்து அந்துவனுக்கும் செய்தி சொல்லி ஆயத்த நிலையில் இருக்கச் சொன்னார்.

ஆனால், அதிகாலையில்தான் செய்தி வந்தது, `திசைவேழர் ஒப்புதல் வழங்கிவிட்டார்' என்று. குலசேகரபாண்டியனுக்குச் செய்தி சொல்லப் பட்ட அதே நேரத்தில் மற்ற இரு பேரரசர்களுக்கும் செய்தி சொல்லப்பட்டுவிட்டது. குலசேகர பாண்டியனால் நம்பவே முடியாத செய்தியாக இது இருந்தது. போர் தொடங்க நாள் குறித்துக் கொடுக்கச் சொன்னதற்கே அவ்வளவு தயங்கிய அவர், கோல்சொல்லியாக இருக்க எப்படி ஒப்புக்கொண்டார் என்பது பெரும்கேள்வியாக இருந்தது. தனக்கு என்ன நேர்ந்தது என்பதும் தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதும் புரிபடாத நிலையில் மீள முடியாத குழப்பத்தில் மூழ்கினார்.

இந்தச் சிக்கலை எப்படிக் கையாள்வது என்பதைப் பற்றி முடிவெடுக்க மிகக் குறைந்த நேரமே இருந்தது. `அவையில், நான் சொன்னதை நானே மறுத்தாலோ, மாற்றிக் கூறினாலோ அது பெரும்பிழையாகிவிடும். வரும் நாள்களில் மூவேந்தர்களின் கூட்டுமுடிவுகள் நம்பகத் தன்மையை இழக்க நானே காரணமாகிவிடுவேன். எனவே, அந்துவனைப் பற்றிய புதிய செய்திகள் காலையில்தான் தெரியவந்தன. அவன் ஆபத்து நிறைந்தவன். அதனால் திசைவேழரைத் தேர்வுசெய்ய எண்ணினேன். ஆனால், முன்கூட்டித் தெரிவிக்க முடியாமற்போய்விட்டது' என்று சொல்லிச் சமாளிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

`எனக்கு என்ன நேர்ந்தது? சற்றே நினைவு தவறி மீண்டதுபோல் உள்ளது. காலையில் உண்ட உணவால்

அப்படியானோமா? இது தற்செயலா அல்லது யாராலாவது திட்டமிடப் பட்டதா?’ என்று அவருள் கேள்விகள் எழுந்தபடியே இருந்தன. அனைத்தையும் தீவிரமாக விசாரிப்பது என முடிவுக்கு வந்தார்.

நடந்துள்ள நிகழ்வுகள் அனைத்திலும் மிகத் துடிப்பாகச் செயல்பட்டுள்ளவர் முசுகுந்தர். அவையில் திசைவேழரின் பெயரைச் சொன்னதும் நள்ளிரவு வரை அவருடன் வாதாடி ஒப்புதல் பெற்றதும் இப்போது அவைக்கு அழைத்துவந்துள்ளதும் முசுகுந்தர்தான். இவை அனைத்திலும் மிகத் தீவிரமாக அவர் செயல்பட்டுள்ளார். குலசேகரபாண்டியனின் ஐயம் முசுகுந்தரின் மீது படரத்தொடங்கியது. ஆனாலும் இப்போது நடக்கவேண்டியதில் மட்டும் கவனமாக இருப்போம் என்ற முடிவுடன் அவையில் அமர்ந்திருந்தார்.

திசைவேழரும் கபிலரும் ஒருங்கே அமர்ந்திருக்கும் பேரவை. மூவேந்தர்களும் அவர்களின் தளபதிகளும் அமர்ந்துள்ளனர். உடன் பறம்புநாட்டுப் பெருங்கிழவர் வாரிக்கையன் இருந்தார். மாபெரும் மனிதர்களால் நிறைந்த அவை இது. வேட்டுவன்பாறைக்கு வந்து திரும்பிய திசைவேழரை இவ்வளவு விரைவாகப் போர்க்களத்தில் காண்போம் என்று கபிலர் எண்ணவில்லை. கவலை தோய்ந்த முகத்தோடு அவரை அருகில் சென்று வணங்கினார்.

அவரின் முகக்கவலையை உணர முடிந்தது. என்ன சொல்வதென்று சிந்தித்தபடி திசைவேழர், ``புலி முன் ஆடா... புலி முன் புலியா... புலி முன் யானையா என்பதை இணைந்து கண்டறியப் போகிறோமா?” எனக் கேட்டபடி இருக்கையில் அமர்ந்தார் திசைவேழர்.

முகத்தில் பரவிய சிறு சிரிப்போடு தனது இருக்கையில் அமர்ந்தார் கபிலர்.

திசைவேழர் அமர்ந்ததும் போர்விதிகளுக்கான பேச்சுவார்த்தை தொடங்கியது. ``இதுவரை வழக்கத்தில் உள்ள விதிமுறைகளைக் கூறுங்கள்” என்றார் திசைவேழர்.

குலசேகரபாண்டியனின் வலதுபுறமிருந்து முசுகுந்தர் எழுந்த அதே நேரத்தில் சோழவேழனின் பக்கத்தில் இருந்த வளவன்காரி கையில் ஏட்டுடன் எழுந்து முன்வந்தான்.

உள்ளே வந்து அமர்ந்ததிலிருந்து வாரிக்கையன் அவையில் உள்ள ஒவ்வொரு முகத்தையும் கூர்ந்து

பார்த்துக்கொண்டிருந்தார். குழப்பமும் பதற்றமும் மிரட்சியுமாக முகங்கள் இருந்தன. மிகுந்த தெளிவோடு இருந்த ஒரே முகம் முசுகுந்தரின் முகம் மட்டுமே. குலசேகரபாண்டியன் இட்ட கட்டளைப்படி பேராசான் திசைவேழரின் ஒப்புதல் பெற்று அவரை அழைத்துவந்துவிட்டேன் என்ற மகிழ்வில் இருந்தார். ஆனால், தனக்கு எதிர்த்திசையில் இருந்த சோழநாட்டு அமைச்சன் வளவன்காரி கையில் ஏட்டோடு முன்னகர்ந்து வந்தது அவருக்குச் சற்றே அதிர்ச்சியாக இருந்தது. திரும்பி, பேரரசரைப் பார்த்தார். குலசேகர பாண்டியன் கையைக் காட்டி முசுகுந்தரை இருக்கையில் அமரச் சொன்னார். நம்ப முடியாத அதிர்ச்சியோடு பின்னிருக்கையில் போய் அமர்ந்தார் முசுகுந்தர்.

வளவன்காரி, போர்விதிகளைப் படிக்கத் தொடங்கினான்.




``போர்க்களம், எதிரியைக் கொன்றழிக்கும் உரிமையை ஒவ்வொரு வீரனுக்கும் வழங்குகிறது. ஆனால், அந்த உரிமைக்குச் சில கட்டுப்பாடுகளும் ஒழுங்குமுறைகளும் உண்டு. அதையே `போர்விதிகள்’ என்கிறோம்.

படை என்பது, இரு தரப்பானது. அதன் எண்ணிக்கை அவரவரின் வலுவைப் பொறுத்தது. எக்காரணம்கொண்டும் எண்ணிக்கையின் மீது இன்னொருவர் சம உரிமை கோர முடியாது.

போர்க்களம் என்பது, வெற்றி தோல்விகளைக் கண்டறியும் இடம். அதில் தீர்ப்பு சொல்ல யாரும் தேவையில்லை. வெற்றியோ தோல்வியோ, அதை அடைகிறவனுக்கு அதுவே எல்லாவற்றையும் சொல்லிவிடும். நிலைமான் கோல்சொல்லிகள், போரை விதிமீறாமல் நடத்திச்செல்வர்.

இப்போது சொல்லப்படும் விதிகள் எல்லாவற்றையும் மீறாமல் இருக்கவேண்டியது இரு தரப்பினரின் பொறுப்பு. மீறப்பட்டதாகக் கோல்சொல்லிகள் கூறினால் அதுவே முடிவு.

போர் என்பது, நாள்தோறும் கோல் சொல்லிகளின் அறிவிப்புடன் தொடங்கும். அவர்களின் அறிவிப்புடன் முடிவுறும். அறிவிப்புக்கு முன்னரோ, பிறகோ வானிலும் மண்ணிலும் போர்ச்செயல்பாடுகள் எதுவும் இருக்கக் கூடாது. அறிவிப்புக்கு முன் நாண் இழுக்கப்பட்டுவிட்டால், அந்த அம்பை மண்ணை நோக்கித்தான் எய்ய வேண்டும். முடிவுறும் ஓசைக்குப் பிறகு போர்க்களத்துக்குள் குதிரைகளைத் தாற்றுக்கோலால் அடித்து ஓட்டக் கூடாது. யானைகள் பிளிற பாகன்கள் அனுமதிக்கக் கூடாது. அந்தக் கணமே அனைத்தையும் நிறுத்துதல் வேண்டும்.

தாக்குதல் கண்டு புறமுதுகிட்டு ஓடுகிறவனையோ, கைகூப்பி வணங்குகிறவனையோ, அவிழ்ந்த தலைப்பாகையைச் சரிசெய்கிறவனையோ, ஆயுதம் இழந்தவனையோ தாக்கக் கூடாது.

காலாட்படை, காலாட்படையுடன்தான் மோத வேண்டும். அதேபோல குதிரைப்படையும் யானைப் படையும் தேர்ப்படையும் தன்மையொத்த படைகளுடன் மட்டுமே மோத வேண்டும்.

தேரை ஓட்டும் வலவனும் யானையைச் செலுத்தும் பாகனும் போர்க்களத்தில் இருந்தாலும் அவர்கள் போர்வீரர்கள் அல்லர். எனவே, அவர்கள் ஆயுதங்களைத் தொடக் கூடாது. அவர்களின்மேல் ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடாது.

ஆயுதங்களில் விலங்கினங்களின் நஞ்சையோ, தாதுக்களின் நஞ்சையோ பயன்படுத்துதல் கூடாது.”

அதுவரை படிக்கப்படுவதைக் கேட்டுக்கொண்டிருந்த வேந்தர்கள் மூவரும் நஞ்சினைப் பற்றிக் கூறும்போது ஒருவரையொருவர் திரும்பிப் பார்த்தனர். இது பொதுவாக எல்லாப் போர்களிலும் உள்ள விதிதான். ஆனால், எந்தப் போரிலும் திசைவேழர் போன்ற மாமனிதர் நிலைமான் கோல்சொல்லியாக இருந்ததில்லை. எனவே, இந்த விதி படிக்கப்படும்போது சற்றே கலக்கமாக இருந்தது. எண்ணற்ற நஞ்சின் வகைகள் மூவேந்தர்களின் படைக்கொட்டில்களிலும் பயன்படுத்த ஆயத்தமாக இருந்தன.

நஞ்சினைப் பற்றிய பேச்சு வந்ததும் குலசேகர பாண்டியனின் நினைவு நேற்றைய நிகழ்வுக்குள் போனது. `எனக்குக் கொடுத்த சுவைநீரில் நஞ்சேதும் கலக்கப்பட்டிருக்குமோ? அதனால்தான் நான் நினைவுபிறழ்ந்தவனாக மாறினேனோ?’ என்று எண்ணினார். இந்த எண்ணம் தோன்றிய மறுகணமே கடந்தமுறை கபிலர் வந்தபோது கருங்குரங்கின் செயலைவைத்து சுவைநீரில் நஞ்சு கலந்துள்ளது என

சேரன் பதறியது நினைவுக்கு வந்தது. தொடர்ந்து ஏதோ ஒரு முயற்சி இங்கே நடந்துவருகிறது என்ற எண்ணம் உறுதியானது. அது யாராக இருக்கும் என்ற சிந்தனைக்குள் இருந்து குலசேகரபாண்டியனால் எளிதில் வெளிவர முடியவில்லை.

போர்விதிகளை முழுமையாகப் படித்து முடித்த வளவன்காரி, இறுதியாக ``விதிகளுக்கு எதிராகப் போர்தொடுத்தல் பெருங்குற்றம். எந்தத் தரப்பு விதிகளை மீறிச் செயல்பட்டது என நிலைமான் கோல்சொல்லிகள் கூறுகின்றனரோ, அந்தத் தரப்பு தண்டனையைத் தாழ்ந்து பெறவேண்டும். இனி போருக்கான களத்தையும் போருக்கான காலத்தையும் நிலைமான் கோல்சொல்லிகள் அறிவிப்பர்'' என்று முடித்தான்.

வேந்தர்களின் முகங்கள் பெருங்கலக்கத்தில் இருந்தன. முதல் நாள் இரவு குலசேகரபாண்டியன் சொன்னதே அனைவருக்கும் நினைவில் ஓடியது. `இந்தப் போரின் வெற்றியைத் தீர்மானிப்பதில் போர்க்களம் அமையப்போகும் இடத்துக்கு முக்கியப் பங்குண்டு'. தாங்கள் நினைத்த இடத்தில் களத்தைத் தேர்வுசெய்ய எல்லா ஏற்பாடும் செய்திருந்தார் குலசேகரபாண்டியன். ஆனால், இப்போது நிலைமான் கோல்சொல்லியாக வந்திருப்பது திசைவேழர். அவர் முடிவுசெய்யும் இடமே போர்க்களமாகப்போகிறது.

சற்றே கலக்கத்தோடு மற்ற வேந்தர்கள் குலசேகரபாண்டியனைப் பார்க்க, அவரது முகமோ பெருங்கலக்கம் கொண்டிருந்தது.

``நானும் கபிலரும் போர்க்களத்தைத் தேர்வுசெய்ய முன்செல்கிறோம். எங்களின் அழைப்பு வந்ததும் இருதரப்புத் தளபதிகளும் வருக. அதன் பிறகு மற்றவர்கள் வரலாம்'' என்று சொல்லி விட்டு வெளியில் நின்றிருந்த தேர் நோக்கி நடந்தார் திசைவேழர். பின்தொடர்ந்தார் கபிலர்.

- *பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-89

நான்கு புரவிகள் பூட்டிய தேர், அன்றைய பகல் முழுவதும் பயணித்துக்கொண்டிருந்தது. திசைவேழரின் எண்ண ஓட்டத்துக்கு இணையாகப் பாய்ந்து கொண்டிருந்தன குதிரைகள். திசையெங்கும் நிலம் விரிந்து கிடக்கிறது. ஆனால், போருக்கான களமாக அதில் எதுவும் திசைவேழருக்குத் தோன்றவில்லை. கபிலர் பேச்சேதுமின்றி அமைதியாக உடன் வந்தார். தேரில் திசைவேழரின் மாணாக்கர்கள் இருவர் இருந்தனர்.

மூஞ்சலிலிருந்து தேர் புறப்படும்போதே வலவனுக்கு மறைமுகமாக அரச உத்தரவு சொல்லப்பட்டது. அவன் அதற்கேற்ப வெங்கல்நாட்டின் உட்பகுதியை நோக்கித் தேரைச் செலுத்தினான். நெடுந்தொலைவு உள்ளே வந்ததும் திசைவேழர் கேட்டார்.

``உன் பெயர் என்ன?”

``முடத்திருக்கண்.”

``நான் உன்னை `படைகளின் எல்லையை விட்டு வெளியில் அழைத்துச்செல்’ என்றேன். நீ ஏன் இங்கு வந்தாய்?”



முடத்திருக்கண் இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. ``பரந்துவிரிந்த நிலப்பகுதி. எனவே, இங்கு அழைத்துவந்தேன்" என்று தலை கவிழ்ந்தபடி சற்றே அச்சத்துடன் சொன்னான்.

``குதிரைகளுக்கு மட்டும்தான் கடிவாளம் இருக்க வேண்டும். வலவனுக்கு இருக்கக் கூடாது" என்று கூறிய திசைவேழர், ``இருக்கையை விட்டுக் கீழிறங்கு" என்றார்.

முடத்திருக்கண் கீழிறங்கினான். தன் மாணவர்களைப் பார்த்து, ``நீங்கள் யாரேனும் தேர் ஓட்டுவீர்களா?" என்று கேட்டார்.

ஒருவன் தலையசைத்தான்.

``நீ வலவன் இருக்கையில் அமர்ந்து தேரைச் செலுத்து" என்றவர் கீழிறங்கிய முடத்திருக்கண்ணைப் பார்த்துச் சொன்னார், ``பாண்டியநாட்டுக்கும் பறம்புநாட்டுக்கும் உரிமையில்லாத நிலம் நோக்கி ஓடு. உனக்குப் பின்னால் தேர் வரும்" என்றார்.

`பெருந்தண்டனை வழங்கிவிடுவாரோ!' என்று அஞ்சியவன், சற்றே ஆறுதலுடன் ஓடத் தொடங்கினான். வெங்கல்நாடு, பாண்டியநாட்டின் பகுதி. அப்படியென்றால், வெங்கல்நாட்டின் எல்லையை விட்டு வெளியேற வேண்டும். கிழக்கிலும் வடக்கிலும் பாண்டியநாட்டுக்கு உட்பட்ட சிறுகுடி மன்னர்களின் ஆளுகைப் பகுதி. எனவே, அங்கு செல்ல முடியாது. மேற்குத் திசையில் பறம்பின் பச்சைமலைத்தொடர். அங்கும் செல்ல முடியாது. மீதம் இருப்பது தென்திசை மட்டுமே. அந்தத் திசையில்தான் தட்டியங்காடு இருக்கிறது. மனிதனின் காலடித்தடமே படாத பெரும்நிலப்பகுதி. காற்று மட்டுமே கடந்தறியும் நிலம் அது. மனிதனோ, மன்னர்களோ உரிமைகொள்ளாத நிலம் அது. அதை நோக்கி ஓடத் தொடங்கினான் முடத்திருக்கண். தேர், அவன் பின்னே சென்றது.

அந்தத் திசையில் செல்லச் செல்ல எதிர்க்காற்று வீசியது. புற்று நிறைந்த பகுதி அது. எங்கும் கருமணலும் ஈக்கி மணலும் பரவியிருந்தன. சரலையோடிய நிலம் கண்கொண்டு பார்க்க முடியாதபடி இருந்தது. முடத்திருக்கண் ஓடிக்கொண்டே இருந்தான். காய்ந்த சருகைப்போன்ற குணம்கொண்ட இந்த மண்ணில் செடிகொடிகள் முளைக்காது. படலைப்புற்றும் குடைப்புற்றும்தான் எங்கும் முளைத்துக் கிடந்தன. உள்ளே செல்லச் செல்ல அச்சம் மேலேறிக்கொண்டிருந்தது.

``விரைந்து ஓடு" என்ற திசைவேழரின் குரல் கேட்டது. மீண்டும் வேகத்தைக் கூட்டினான். எதிர்க்காற்று அவனை முன்னேறவிடாமல் தள்ளியது. முயன்று ஓடினான். மூச்சிரைத்தது. குதிரைகள் அவன் மேல் பாய்வதைப்போல வந்துகொண்டே இருந்தன. வேகமெடுத்து ஓடினான். கூரியகற்கள் பாதங்களைக் கிழித்தன. குருதி ஒழுகியபடி ஓடிக்கொண்டே இருந்தான். திசைவேழரின் ஏவற்குரல் கேட்டுக்கொண்டேயிருந்தது.

முடிந்தளவுக்கு வேகமாக ஓடினான். கண்கள் கட்டின. மயக்கம் வருவதுபோல் இருந்தது. ஆனாலும் முயன்று ஓடினான். இன்னும் சிறிது நேரத்தில் விழுந்துவிடுவான் என்பது தெரிந்தது.

``அவன் எத்திசையை நோக்கி விழுகிறானோ, அத்திசையை நோக்கித் தேரைத் திருப்பி ஒரு பொழுதுக்கு விரைந்து ஓட்டிச் செல்” என்றார் திசைவேழர்.

# வீரயுக நாயகன் வேள்பாரி 89

சு.வெங்கடேசன் ஓவியங்கள்: ம.செ.,

சிறிது நேரத்தில் முடத்திருக்கண் மயங்கி விழுந்தான். மேற்குத் திசை நோக்கி சாய்ந்து கிடந்தது அவனது தலை. தேரை மேற்கே திருப்பி முழு வேகத்தோடு ஓட்டினான் மாணவன்.

நான்கு குதிரைகள் பூட்டிய தேரை விரைந்து செலுத்த முயன்றான். ஆனால், குதிரைகளால் பாய்ந்து செல்ல முடியவில்லை. கனைப்பொலி எழுப்பியபடி தலையை மறுத்தாட்டித் துடித்தன. மாணவனுக்கு, தேரை ஓட்டப் போதிய பயிற்சியில்லை எனத் தோன்றியது. ஒரு பொழுதைக் கடந்ததும் தேரை நிறுத்தினான். திசைவேழரும் கபிலரும் கீழிறங்கினர்.

``தவறிழைத்தவன் தண்டனையின் வழியே காட்டிக்கொடுத்த இடம் இது” என்று சொல்லிக்கொண்டே இறங்கிய திசைவேழர், ``இந்த இடத்துக்கு ஏதோ பெயர் சொன்னானே?” எனக் கேட்டார்.

``தட்டியங்காடு” என்றான் மாணவன்.

``பெரும்புலவரே, நாம் இழைத்த தவறுகளுக்குத் தண்டனை இந்தத் தட்டியங்காடுதான். நம் தலை சாயும் வரையிலும் இந்த நிலம் நம்மைத் துரத்திக்கொண்டே இருக்கும்.’’

தலையசைத்தபடி கபிலர் சொன்னார், ``ஆனாலும் கடமையைச் செய்வோம்.”

மாணவர்களை அனுப்பி அனைவரையும் அழைத்துவரச் சொன்னார் திசைவேழர்.

மாணவர்கள் மூஞ்சல் நகருக்கு வந்து செய்தியைத் தெரிவித்தனர். தட்டியங்காடு என்கிற இடத்தை

இதுவரை யாரும் கேள்விப்படக்கூட இல்லை. மையூர்கிழாரை அழைத்துக் கேட்டனர். ``மனித வாடை அறியாத மண். கறையான்கள் ஆளும் நிலம். முழுமையாகச் சென்று பார்த்தவர் யாருமில்லர்” என்றார்.

மனக்குழப்பத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அனைவரும் புறப்பட்டனர். பொழுது மறைவதற்குள் தட்டியங்காட்டுக்கு வந்து சேர்ந்தனர். குலசேகரபாண்டியன் தேர் விட்டுக் கீழிறங்கியதும் மேற்குத் திசையைத்தான் பார்த்தார். காரமலை, மிகத் தொலைவிலும் இல்லை; அருகிலும் இல்லை. இடைப்பட்ட இடத்தில் இருந்தது. அதை எதிரிகளால் பயன்படுத்த முடியுமா என்ற சிந்தனையில் மூழ்கினார்.

அவர்கள் வந்த சிறிது நேரத்தில் சிறு தேர் ஒன்று வந்தது. அதில் வாரிக்கையனோடு புதிய மனிதன் ஒருவன் வந்தான். கருங்கைவாணனுக்கு இணையான உடல் அமைப்பைக்கொண்ட அவனை, அனைவரும் உற்றுப்பார்த்தனர். ``இவன்தான் பாரியா?” என்று கேள்வி எழுந்துகொண்டிருந்தது. தேர் விட்டு இறங்கிய வாரிக்கையன் உரத்த குரலில் சொன்னார், ``பறம்பின் தளபதி முடியன்.”

இங்கு நிற்கும் எந்த ஒரு தேரையும் ஒரே அடியில் நொறுக்கும் அளவுக்கு இறுகித் திருகிய உடலமைப்பைக்கொண்டவன். அனைவரின் பார்வையும் அவனை நோக்கி இருந்தபோது திசைவேழர் அறிவித்தார், ``நாற்புறமும் நிலைமாறாக் குணம்கொண்ட இடம். எவ்வளவு குருதி சிந்தினாலும் குடித்து முடிக்கக் காத்திருக்கும் நிலம். மலையெனப் பிணங்கள் குவிந்தாலும் மறுநாளில் இல்லாமலாக்கும் கோடானுகோடிக் கறையான்கள் வாழ்கின்ற மண். அழுகல், நாற்றம் மேலேறி வராது. அடைமழை பொழிந்தாலும் நீர் நிற்காது. மரங்களோ, புதர்களோ. நீர்நிலைகளோ இல்லாத போர்க்களத்துக்கே உரிய பாழும் நிலம். எனவே, இந்தத் தட்டியங்காடே போர்க்களமாகும்.”

அனைவரின் கண்களும் முன்னும் பின்னுமாகத் திரும்பி எல்லா திசைகளையும் பார்த்தன. திசைவேழர் அறிவிப்பைத் தொடர்ந்தார், ``இங்கிருந்து வடதிசையில் வேந்தர்படையும் தென்திசையில் பறம்புப்படையும் அணிவகுக்க வேண்டும்.”

வேந்தர்களுக்கு சற்றே நிம்மதியானது. படை கிழக்கு மேற்காக அணிவகுத்தால் பறம்புப்படைக்குப் பின்புற அரணாகக் காரமலை அமைந்துவிடும். எனவே, படையணியின் திசை மாறியது ஆறுதலாக இருந்தது.

வாரிக்கையன் உள்ளுக்குள் மகிழ்ந்தார். கிழக்கு மேற்குமாகப் படையணி இருந்தால் எதிர்த்திசையில் கண்ணுக்கு அப்பால் வேந்தர்படை நிற்கும். பார்த்தறிவது கடினம். இப்போது வடக்கு தெற்காகப் படையணி நிற்கப்போகிறது. வடதிசையில் வேந்தர்படை எவ்வளவு நீளத்துக்கு நின்றாலும் மலைமேல் இருந்து துல்லியமாகப் பார்த்தறிய முடியும்.

திசைவேழரின் குரல் மேலும் ஒலித்தது, ``இந்த இடம் கோபுரப் பரண் அமைக்கப்பட்டு அதன் மேல்

நாழிகைத் தட்டு வைக்கப்படும். ஒவ்வொரு நாளும் பகல் ஐந்தாம் நாழிகை தொடங்கும்போது போர் தொடங்க முரசறைவோம். பகலின் இறுதி ஐந்தாம் நாழிகை தொடங்கும்போது போர் முடிவதற்கான முரசறைவோம். முரசறைய இருபுறங்களிலும் ஐந்தைந்து கோபுரங்கள் அமைக்கபட்டு அவற்றில் முரசறைபவரோடு என் மாணவர்களும் நிற்பர்.”



அனைவரும் கேட்டுக்கொண்டு நின்றனர்.

``போரின் விதிகள் ஏற்கெனவே படிக்கப்பட்டுவிட்டன. இனி புதிதாய்ச் சொல்ல ஒன்றுமில்லை” என்றார்.

அனைவரும் பார்த்திருக்க, கருங்கைவாணன் முன்வந்தான். மூவேந்தர்களையும் பணிந்து வணங்கினான். மூவரும் வாழ்த்தினர். கோல்சொல்லிகளின் முன்வந்து குனிந்து தட்டியங்காட்டு மண்ணை எடுத்தான்.

``போரின் விதிகளை மீற மாட்டோம்” என்று கூறியபடி போர்க்கள மண்ணை திசைவேழரின் கைகளில் கொடுத்து வாக்களித்து வணங்கினான்.

அதேபோல முடியன் முன்வந்தான். குனிந்து மண் அள்ளி கபிலரின் கைகளில் கொடுத்து வாக்களித்து வணங்கினான்.

திசைவேழர் பறம்பின் தரப்புக்காக நின்றிருந்த கபிலர், வாரிக்கையன், முடியன் ஆகியோரைப் பார்த்துக் கூறினார், ``எமது தரப்பில் அளிக்கப்பட்ட வாக்கு மீறப்பட மாட்டாது. போர்விதிகளை வேந்தர்படை காக்கும். இது நான் அளிக்கும் உறுதி.”

நின்றிருந்த மூவேந்தர்களையும் தளபதிகளையும் பார்த்து கபிலர் கூறினார், ``திசைவேழர் நிலைமான் கோல்சொல்லியாக இருக்கும் மேடையில் அவரோடு நின்று பொழுதை அளக்கும் தகுதி வேறு யாருக்குமில்லை. எனவே, அவரின் வாக்கையே நாங்களும் ஏற்கிறோம். பறம்பின் தரப்பில் போரின் விதிகள் மீறப்பட மாட்டாது என்று நிலைமான் கோல்சொல்லியாகிய நான் உறுதியளிக்கிறேன்.”
போர் தொடங்க இரவின் நாழிகையே மிச்சமிருந்தது. தொடக்கத்துக்கு முன்பு அனைத்தையும் திட்டமிட வேண்டி யிருந்தது. தட்டியங்காட்டைப் பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை. நிலவாகு எப்படி இருக்கும் என்பதைப் பற்றி முழுமையான செய்தியோடு நள்ளிரவுக்கு முன் வரவேண்டும் என மையூர்கிழாருக்கு உத்தரவிட்டான் `மகாசாமந்தன்’ கருங்கைவாணன்.

அளவற்ற உற்சாகத்தோடு இருந்தது கருங்கைவாணனின் செயல். ``மலைக்காடைபோல் நாகரவண்டைத் தூக்கி வந்ததால் நமக்கான இரை நம்மைத் தேடி வரப்போகிறது. பாரி, மலையை விட்டுக் கீழிறங்கித் தாக்க ஒப்புக்கொண்டபோதே அவனது முடிவு உறுதியாகிவிட்டது. தட்டியங்காடே அவனது மரணம் நிகழப்போகும் இடம்'' என்று சீறி முழங்கினான் கருங்கைவாணன்.

தன் தளபதிகளுடன் போர் உத்திகளைப் பற்றி விரிவாகத் திட்டமிட்டான். மலைமக்களின் இணையற்ற போர்க்கருவிகள் வில்லும் அம்பும்தான். அவற்றை எதிர்கொண்டு நிற்பது மட்டுமே சற்று கடினமானது. அதற்குத் தகுந்தபடி படையின் அமைப்புகளை நிலைநிறுத்தத் திட்டமிட்டனர். ``வேந்தர்களின் படையோடு ஒப்பிடும்போது பறம்பின் படையில் மிகவும் வலிமையிழந்த படைப்பிரிவு வாட்படையாகத்தான் இருக்கும். எனவே, வேந்தர்களின் வாட்படை விற்படைக்குத் துணையாக, மூன்றுக்கு ஒன்று என்ற அடிப்படையில் சேனைகளை அணிவகுக்கலாம்'' என்ற ஆலோசனையைக் கூறினான் விற்படைத்தளபதி துடும்பன். ஆனால், இந்த ஆலோசனையை வாட்படைத்தளபதி சாகலைவன் ஏற்கவில்லை.


``மலைமக்கள், போதிய வாட்பயிற்சி அற்றவர்கள். நமது படைத்தொகுப்பில் வலிமைமிக்கது வாட்படைதான். இதை முழுமையாக ஒருங்கிணைத்துத் தாக்கினால்தான் எதிரியின் படையைப் பிளந்து முன்னேற முடியும். முதல் நாள் நமது தாக்குதல் எந்த அளவுக்கு வலிமை கொண்டதாகவும் பிளந்து முன்னேறக் கூடியதாகவும் இருக்கிறதோ, அந்த அளவுக்குப் போரின் போக்கைத் தீர்மானிக்கும்'' என்றான்.

``குதிரையும் தேரும் நம்மிடம் இருப்பதில் பத்தில் ஒரு பங்குகூட எதிரிகளிடம் இருக்க வாய்ப்பில்லை. அதேபோல எதிரிகளிடம் பெரும் எண்ணிக்கையிலான யானைப்படை இருப்பதற்கான எந்தச் செய்தியும் இல்லை. எனவே, முதல் நாளில் நாம் வகுக்கும் உத்தி எல்லா வகையிலும் போரை முடித்து வெற்றியை அறிவிப்பதாக இருக்க வேண்டும்'' என்றான் கருங்கைவாணன்.

காரிருள் சூழ்ந்தது. இரவின் இந்த அமைதி இன்று மட்டுமே இருக்கப்போகிறது. நாளைய இரவில் எத்தனை ஆயிரம் மரணங்கள் நிகழ்ந்து முடியவிருக்கின்றன எனக் கணக்கிட முடியாது. காற்றுவெளி முழுவதும் சிதைவுற்ற மனிதர்களின் ஈனக்குரலால் நிறைந்திருக்கப்போகிறது. பேரோலமும் பெருக்கெடுக்கும் குருதி ஆறும் தட்டியங்காடு எங்கும் நின்றாடும் மரணத்தின் ஆட்டமும் சொல்லி மாளாது. மனம் நிலை பிறழ்ந்து இருந்தது. குழப்பத்தினூடே தனது குடிலுக்கு வந்தார் திசைவேழர்.

தேரை விட்டு இறங்கும்போதே குடிலுக்குள் யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்தது. `இந்த இரவில் தனது குடில் அறிந்து வந்திருப்பது யாராக இருக்கும்?' என்ற எண்ணத்துடனே உள்நுழைந்தார்.

உள்ளே அமர்ந்திருந்தது பாண்டியநாட்டு இளவரசி பொற்சுவை.



பெருந்திகைப்புக்குள்ளானார் திசைவேழர். உள்நுழைந்ததும் திசைவேழரின் கால் தொட்டு வணங்கினாள் பொற்சுவை. அருகில் இருந்த சுகமதி, திசைவேழரை வணங்கி வெளியேறினாள். பாண்டிய இளவரசி இந்த இரவு வேளையில் இங்கு வந்திருப்பது ஏன் என அவருக்குப் புரியவில்லை. சிறு விளக்கு எரியும் அந்தக் குடிலில் மண் மெழுகிய திண்ணையில் அமர்ந்தாள் பொற்சுவை. மரச்சட்டகத்தால் ஆன இருக்கையில் அமர்ந்தார் திசைவேழர்.

முகம் பார்த்துப் பேசுவதைத் தவிர்த்து விளக்கின் சுடரைப் பார்த்துக்கொண்டே பொற்சுவை கேட்டாள், ``கோள் கணிக்கும் பேராசான் கொலை நிலத்தில் பரண் ஏற எப்படி ஒப்புக்கொண்டீர்?”

முதல் கேள்வியே திசைவேழரை நேர்கொண்டு தாக்கியது. அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் தாக்குண்ட உணர்வை வெளிக்காட்டாமல் மெல்லிய குரலில் சொன்னார், ``மூவேந்தர்களும் கேட்டுக்கொண்டதால் என்னால் மறுக்க முடியவில்லை.’’

``காலம் கணிக்கும் பேராசானே அதிகாரத்தின் சொல்லை மறுக்கும் ஆற்றலை இழப்பதுதான் கேடுற்ற காலத்தின் அடையாளம்.”

ஈட்டிபோல் இறங்கின சொற்கள். திசைவேழரால் பொற்சுவையின் நோக்கத்தைக் கணிக்க முடியவில்லை. சற்றே அமைதியானார்.

சிறிது நேரத்துக்குப் பிறகு பொற்சுவை சொன்னாள், ``இந்தப் போருக்குக் காரணமானவர் இருவர்.”

``ஒருவன் குலசேகரபாண்டியன். இன்னொருவன் வேள்பாரி. அப்படித்தானே சொல்ல வருகிறீர்கள்?” எனக் கேட்டார் திசைவேழர்.

``இல்லை.”

``அப்படியென்றால் யார் அந்த இருவர்?”

``ஒருத்தி நான். இன்னொருவர் நீங்கள்.”

மிரட்சியுற்றார். ``நான் எப்படிக் காரணமாவேன்?!”

``வான்வெளியில் சிறுபிசகு ஏற்பட்டாலும் காலத்தின்கோலம் எப்படியெல்லாம் மாறும் என்பதைக் கண்டறிந்து கூறும் பேராசான் நீங்கள். உங்களிடம் இதைச் சொல்லவேண்டிய நிலைக்கு வருந்துகிறேன். இருந்தாலும் சொல்கிறேன். எனது திருமணத்துக்காகக் கட்டப்பட்ட பாண்டரங்கத்தின் மேற்கூரையில் வானியல் அமைப்பை வரைய நிலைப்படம் கொடுத்தீர்கள். அது என்னவென்று யாருக்கும் புரியவில்லை. பேரரசரின் பிறப்பைக் குறிக்கும் படமும் ஒன்று; அரசியாரின் பிறப்பைக் குறிக்கும் படமும் ஒன்று. என்ன வானியல் அமைப்பது என நீங்கள் தெளிவாகச் சொல்லாததால், வெள்ளியைத் தவறாக வரைந்தான் அந்துவன்.''


`இதை எதற்கு இப்போது சொல்கிறார்?' என்று எண்ணியபடி கேட்டுக்கொண்டிருந்தார் திசைவேழர்.

``மேற்குமலை பெருமழைகொண்டால் வைகையில் வெள்ளம் பெருக்கெடுக்கும். `பாண்டரங்கத்தில் ஆடலும் பாடலும் செழிக்க, பாண்டியநாட்டில் உழவும் வணிகமும் தழைக்க இந்தக் கோள் நிலையே அடிப்படை!' என்று கூறினீர்கள்.''

``அது இருக்கட்டும். இந்தப் போருக்கு நாம் இருவரும் எப்படிக் காரணம்?''

``அதைத்தான் சொல்ல வருகிறேன். எனது திருமணத்தின் பொருட்டே மையூர்கிழார் தேவவாக்கு விலங்கைப் பரிசாகத் தந்தார். பாண்டரங்கத்தில் வெள்ளியைத் தவறுதலாக வரைந்ததால் சினம்கொண்ட நீங்கள், அந்துவனைக் கண்டித்தீர்கள். உங்களின் சொல்லுக்கு அஞ்சியே அவன் புதிய படத்தை வரைந்து முடிக்கும் வரை பாண்டரங்கை விட்டு வெளியே செல்லாமல் அங்கேயே தங்கியிருந்தான். அந்தக் காலத்தில்தான் தேவாங்கு வடதிசை நோக்கி உட்காரும் என்பதைக் கண்டறிந்தான். தேவாங்கின் ஆற்றல் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் எல்லா சிக்கல்களும் தொடங்கின. ஒருவகையில் நீங்களும் நானும்தான் இந்தச் சிக்கலுக்கான மூல முடிச்சின் கயிற்றை இணைத்தவர்கள்'' என்றாள் பொற்சுவை.

திசைவேழருக்கு இந்தக் கூற்று ஏற்புடையதாக இல்லை. ``தற்செயலுக்கு மிகையான காரணம் கற்பிக்கிறீர்கள் இளவரசி.''



``இல்லை பேராசானே... இல்லை. எந்தத் தற்செயலும் தன்னியல்பில் நடப்பதில்லை. காரணங்கள் வழியேதான் காரியங்கள் நிகழ்கின்றன. தேவாங்கு மதுரைக்கு வந்து சேர்ந்ததற்கும் வடக்கில் இருக்கும் அதன் ஆற்றல் கண்டறியப்பட்டதற்கும் நீங்களும் நானும்தான் அடிப்படைக் காரணம்.''

``அப்படிப் பார்த்தால் அந்துவனும் பொதி யவெற்பனும் இதில் பங்கெடுப்பவர்கள்தானே?”

``நீங்கள் இல்லையென்றால் அந்துவன் படத்தை மறுமுறை வரைந்திருக்கவே மாட்டான். நான் இல்லையென்றால் இன்னொரு நாட்டு இளவரசியோடு பொதியவெற்பனுக்குத் திருமணம் நடந்திருக்கும். ஆனால், வணிகக்குலத்தின் பெருந்தலைவனின் இல்லத் திருமணமாக அது இருந்திருக்காது. அனைவரும் கவர்ச்சியான பொருள்களையே பரிசுப்பொருள்களாகத் தந்திருப்பர். தேவாங்கு போன்ற விலங்கைப் பரிசுப்பொருளாகத் தந்து பேரரசரின் கவனத்தை ஈர்க்கும் மனநிலை ஏற்பட்டிருக்காது. அந்துவனும் பொதியவெற்பனும் இதில் பங்கெடுத்தவர்கள்தான். ஆனால், பொறுப்பேற்கவேண்டியவர்கள் அல்லர்.”

காரணங்களைப் பொற்சுவை அடுக்கியவிதம், திசைவேழரை மறுக்கும் சொல்லின்றி நிற்கவைத்தது. சற்று நேரம் கழித்துக் கேட்டார், ``என்ன செய்யச் சொல்கிறீர்கள் இளவரசி?”

``நிகழவிருப்பது போரன்று; பேரழிவு. மூவேந்தர்களின் கூட்டுப்படை கடல்போல் பரந்துகிடக்கிறது. சின்னஞ்சிறிய ஒரு நாட்டின் மீது இவ்வளவு பெரும்படையெடுப்பை நினைத்துப்பார்க்கவே முடியவில்லை. மதுரையிலிருந்து வரும் வழி எங்கும் துயருற்ற மக்களின் கண்ணீரைக் கடந்தே வந்தேன். உழவும் தொழிலும் நின்றொழிந்துபோயின. வேந்தர்களும் செல்வந்தர்களும் வாழ்வார்கள். படைக்கு வந்துசேர்ந்த வீரர்களின் குடும்பங்களை எல்லாம் மரணம் விழுங்க ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறது. காற்றெங்கும் விம்மல் ஓசை கேட்டுக்கொண்டேயிருக்கிறது. இந்தக் கொடும் அழிவு தடுக்கப்பட வேண்டும். பறம்பின் மீது வேந்தர்கள் கோபம்கொள்ள எத்தனையோ காரணங்கள் உண்டு. ஆனால், பாரி அழியக் கூடாது. பாரியைப்போல அறவழிப்பட்ட ஒரு தலைவனை இதுகாறும் நான் கேள்விப்பட்டதில்லை. அவன் அழிக்கப்பட்டால் அறம் அழிக்கப்பட்டதாகவே பொருள். நீங்களும் நானும் அந்த அழிவுக்கான மூலமுடிச்சுகளாக இருந்தோம் என்பதை நினைக்கும்போதே உடல் நடுங்குகிறது. வாழ்வு எந்தக் கணத்திலும் முடிந்துவிடும். ஆனால், அறத்தின் அழிவுக்கான காரணம் நமது வாழ்வின் மீது படியுமேயானால் அதைவிட இழிவு வேறில்லை.”

பொற்சுவையின் குரலிலிருந்த ஆவேசம் திசைவேழரை நடுங்கவைத்தது. பாண்டரங்கின் மேற்கூரையைத் தவறாக அந்துவன் வரைந்தபோது `பாண்டியநாடு பாழ்படும்’ என்று அவர் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

`அந்துவன் முதலில் வரைந்ததே சரி. நிகழப்போகும் பேரழிவைப் பாண்டரங்கத்தின் மூலம் முன்னுணர்த்தியிருக்கிறது காலம். வைகையில் வெள்ளம் பெருகுகிற அதே நாள்களில்தான் இந்தப் பேரழிவும் அரங்கேறவிருக்கிறது. நான் அதைத் தவறென்று சொல்லி மாற்றினேன். காலத்தை மாற்ற நான் யார்? வெள்ளம் புரண்டோடும் வைகையின் கரையில் இருந்த என்னை அதே அந்துவன் அழைத்துவந்து அழிவின் நாள்களுக்குள் நிறுத்தியுள்ளான். அந்த வரைபடத்துக்குள் இப்போது நான்

நிற்கிறேன். மாற்றிப்பார் என்கிறது காலம். நான் எனது சீற்றமிழந்து நிற்கிறேன். உள்ளுக்குள் புரண்டெழுந்த சொற்கள் தனக்குத்தானே உதிர்ந்து கரைந்தன. செயலற்று நின்றார் திசைவேழர். அவரைக் கூர்ந்து பார்த்தபடி அமர்ந்திருந்தாள் பொற்சுவை.

சிறுவிளக்கின் சுடர் உமிழும் கரும்புகை மட்டுமே திசைவேழரின் கண்களுக்குத் தெரிந்தது.

``இந்தப் போரை நிறுத்த வழியேதும் இல்லையா? பேராசான் நீங்கள் நினைத்தால் முடியும் எனக் கருதுகிறேன்.”

பேசும் ஆற்றல் மேலெழவில்லை. ஆனாலும் முயன்று கூறினார். ``அந்த முயற்சியில் ஏற்கெனவே தோற்றுவிட்டேன். நிலைமான் கோல்சொல்லியாக இருக்க வாக்களித்த நான், இனி போரை வழிநடத்த மட்டுமே முடியும்.”

``அப்படியென்றால், வேறு என்னதான் வழி?”

அமைதி நீடித்தது. சற்று நேரத்துக்குப் பிறகு திசைவேழர் சொன்னார், ``ஒரு வழி உண்டு. அதை உங்களால் மட்டுமே செயல்படுத்த முடியும்.”

``என்னால் செயல்படுத்தக்கூடிய வழியா... என்ன அது?”




``தேவாங்கு என்னும் விலங்குக்காக இத்தனை ஆயிரம் மனிதர்களின் மரணம் நிகழவேண்டுமா? இந்தக் கேள்வி பாரியின் முன் வைக்கப்பட வேண்டும். முல்லைக்குத் தேர் ஈந்தவன் பல்லாயிரம் மரணங்களைத் தடுக்க தேவவாக்கு விலங்கைக் கொடுத்து உதவுவான் என்றே நம்புகிறேன். அவன் அந்த விலங்கைத் தர ஒப்புக்கொண்டால் பாண்டியனை இந்தப் போரிலிருந்து என்னால் வெளியேற்றிவிட முடியும். பாண்டியன் வெளியேறிவிட்டால் சேரனும் சோழனும் ஒன்றும் செய்ய முடியாது. அந்தக் கணமே போர் முடியும்.”

``பாரியிடம் இதை...” என்று பொற்சுவை கேட்டு முடிக்கும் முன் திசைவேழர் சொன்னார், ``நீங்கள் முயன்றால் உங்கள் ஆசான் கபிலரின் மூலம் இதைச் செயல்படுத்த முடியும்.”

நள்ளிரவு நெருங்கிக்கொண்டிருந்தது. போர்நிலத்தைப் பற்றிய செய்தியைச் சேகரிப்பதும் அதற்கேற்ப படை நிலை கொள்வதற்கான ஆலோசனை வழங்குவதுமாக கருங்கைவாணன் மிகத் தீவிரமாக இயங்கிக்கொண்டிருந்தான். இந்த நாளுக்காகவே காத்திருந்த பொதியவெற்பன் கருங்கை வாணனுடன் இணைந்து திட்டமிட்டுக்கொண்டிருந்தான்.

அவனது உத்தரவின்பேரில் போர்க்களக் கொட்டிலில் ஆயுதவாரிகளின் செயல்பாடுகள் தொடங்கின. கொடுத்தனுப்பிய வரைபடத்தின் அடிப்படையில் ஆயுதங்களைக் கொண்டு செல்ல வாகனங்கள் ஆயத்தமாக இருந்தன. சேனை முதலிகள் தங்களின் படைப்பிரிவுக்குத் தேவையான ஆயுதங்களை விரைவில் பெற்று அடுத்தகட்டச் செயல்பாட்டில் இறங்குவதில் மும்முரமாக இருந்தனர். ஆனாலும் அவர்கள் நேரடியாக ஆயுதவாரியை அணுக முடியாது. பன்னிரு சேனைகொண்ட பிரிவுக்குத் தலைமை தாங்கும் சேனைவரையர்களைத்தான் அவர்கள் அணுக முடியும்.
தனக்குக்கீழ் இருக்கும் சேனைகளுக்குத் தேவையான ஆயுதங்களை ஆயுதவாரியிடமிருந்து பெற்றுத்தரும் பொறுப்பு சேனைவரையரைச் சார்ந்தது. எனவே, சேனைவரையர்கள் எல்லோரும் படைக்களக் கொட்டிலில் மொய்த்துக் கிடந்தனர்.

ஆயுதமேற்றிய வண்டிகளும் யானைகளும் நெருக்கடிக்குள் திணறிக்கொண்டிருந்தன. எங்கும் கூச்சலும் பேரோசையுமாக இருந்தது. ஆயுதவாரிகள் தங்களுக்குக் கீழுள்ள பணியாளர்களுக்கு இட்ட கட்டளைப்படி படைக்கலக் கொட்டிலிலிருந்து ஆயுதங்கள் வெளியேற்றப்பட்டுக்கொண்டிருந்தன.

இந்தப் பேரோசை எதிரொலிக்காத அமைதி, சோழனின் கூடாரத்துக்குள் இருந்தது. அங்கு செங்கனச்சோழன், சோழவேழன், உதியஞ்சேரல் ஆகிய மூவரும் இருந்தனர். குலசேகரபாண்டியன் நிலைமான் கோல்சொல்லியாக திசைவேழரை அறிவித்ததன் காரணத்தைத் தெரிந்துகொள்ள எல்லாவகையிலும் முயன்றுகொண்டிருந்தனர். இருநாட்டு ஒற்றர்படைக்கும் அதுவே வேலையாகக் கொடுக்கப்பட்டிருந்தது.

திசைவேழர், கோல்சொல்லியாகி போர்க்களத்தையும் தேர்வுசெய்துவிட்டார். மூன்று நாட்டுத் தளபதிகளும் நாளைய போருக்கான ஆயத்த வேலைகளை ஒருங்கிணைந்து செய்துகொண்டிருந்தனர். ஆனால், வேந்தர்களின் மனங்களுக்குள் ஆழமான ஐயம் ஊடுருவியிருந்தது. இதைப் பற்றியே அவர்கள் தீவிரமாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போதுதான் சேரநாட்டு ஒற்றன் செய்தியொன்று கொண்டுவந்தான். ``இன்று பிற்பகலில் முசுகுந்தர் சிறைப்பிடிக்கப்பட்டு போர்க்களத்துக்கு வெளியில் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.”

ஒற்றனின் செய்தி, பேரதிர்ச்சியை உருவாக்கியது. ``இது உண்மையா... என்ன காரணம்?” என்று அவனிடம் அடுத்தடுத்த கேள்விகள் கேட்கப்பட்டன. ஒற்றனிடம் மிகக்குறைந்த விவரங்களே இருந்தன. ``பாண்டியப் பேரரசர் அருந்திய சுவைநீரில் நஞ்சு கலந்து சதிசெய்ய முற்பட்டார் என்ற காரணத்துக்காக

முசுகுந்தர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளார். ஆனால், பொதியவெற்பன் உள்ளிட்ட யாருக்கும் செய்தி தெரியாது'' என்று கூறினான். கோல்சொல்லி யார் என முடிவெடுக்க நடந்த கூட்டத்தில்தான் இந்த முயற்சி நடந்ததாகவும் கூறினான்.

குலசேகரபாண்டியனின் செயல் மாற்றத்துக்கு இதுதான் காரணம் என அறிந்தபோது, கேட்டுக்கொண்டிருந்த மூவரும் அதிர்ச்சியடைந்தனர். அப்போதுதான் உதியஞ்சேரலுக்கு, தனது கருங்குரங்குக்குட்டி கத்தித் துள்ளியது நினைவுக்கு வந்தது. அன்றும் சுவைநீர் பருகும் நேரத்தில்தான் குரங்குக்குட்டி அவ்வாறு செய்தது. அப்படியென்றால், முசுகுந்தர் தொடர்ந்து ஏதோ ஒரு சதியில் ஈடுபட்டவாறே இருந்துள்ளார் என எண்ணினான். கபிலரோடு அவருக்கு இருந்த நெருக்கம் பற்றிய செய்தியும் பேச்சினூடே மேலெழுந்தது.

இன்று மாலை போர்க்களத்தில் கோல்சொல்லிகளின் அழைப்பை ஏற்று அனைவரும் வந்திருந்தபோது முசுகுந்தர் மட்டும் இல்லாதது நினைவுக்குவந்தது. ``குலசேகரபாண்டி யனின் முகம் இன்று மாலை மிகவும் தெளிவுகொண்டிருந்ததற்குக் காரணம் இதுதானோ?” எனக் கேட்டார் சோழவேழன்.

மனதுக்குள் இருந்த ஐயம் நீங்கிய கணம், போர்க்கொட்டிலிலிருந்து மேலெழுந்த ஓசை கூடாரம் முழுமையும் கேட்டது. `நாளைய போருக்கான ஆயுதங்களைக் கொடுத்தனுப்பும் வேலையை ஆயுதவாரிகள் செய்துமு டித்துவிட்டனர்' என்ற செய்தியைச் சொல்ல வீரன் ஒருவன் உள்ளே வந்தான்.

இரவு முடிந்து விடியலின் கீற்று மேலெழுந்துகொண்டிருந்தது. கதிரவனின் புத்தொளி எங்கும் படர்ந்தபோது பகலின் முதல் நாழிகை தொடங்கியது. திசைவேழர் தனது கூடாரத்தை விட்டு வெளியில் வந்து தேர் ஏறினார்.

மாணவர்கள் எல்லோரும் முன்னரே புறப்பட்டுப் போயிருந்தனர். வலவன் குதிரைகளின் கடிவாளத்தைச் சுண்டி தேரை இயக்கினான்.

வழக்கமாக காலையில் கூடாரத்தை விட்டு வெளியில் வந்ததும் கதிரவனைப் பார்க்கும் திசைவேழர், இன்று சரிந்து நீண்டுகிடக்கும் தேரின் நிழலையே பார்த்தார்.

தட்டியங்காட்டுப் போர் தொடங்க இன்னும் மூன்று நாழிகையே இருக்கிறது.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*


# வீரயுக நாயகன் வேள்பாரி-90

தட்டியங்காட்டுக்கு நேர் மேற்கே இருக்கும் குன்றின் பெயர் `குளவன்திட்டு’. குழவிக் கல்போல் மேகத்தை நோக்கி நிமிர்ந்து நிற்கும் கரும்பாறை அது. காரமலையின் தோள்களின் மேலே பிதுங்கி நிற்கும் பகுதி. குளவன்திட்டின் பின்புறம் காரமலையின் கணவாய்க்குள் இருப்பவர்கள் கானவர்கள். மலைமக்களில் மிகப் பழைமையான குடியினர்.

பறம்புப்படை, முதன்முறையாக சமவெளியில் இறங்கிப் போரிடப்போகிறது; போர்விதிகள் என்னும் சட்டகங்களுக்குள் ஆயுதம் ஏந்தப்போகிறது. மூன்று பெரும் பேரரசுகளையும் எதிர்த்துச் சின்னஞ்சிறு குலம் ஒன்று பிடரி சிலிர்த்துத் தரை இறங்கப்போகிறது. அதற்கு முன் தெரியவேண்டியது தரை இறங்கப்போகும் இடத்தைப் பற்றி.

தட்டியங்காடுதான் போர்க்களம் என முடிவானவுடன் அந்த இடம் பற்றி அறிய மையூர்கிழாரைத் தேடி ஆள் அனுப்பினார் குலசேகரபாண்டியன். கானவர்குடித் தலைவனைக் கண்டுவரச் சொல்லி ஆள் அனுப்பினான் வேள்பாரி.

பச்சைமலைத் தொடரின் தென்பகுதியில் பறம்புநாட்டை அடுத்து இருப்பவர் கானவர் குடியினர். எண்ணிக்கையில் மிகக் குறைந்த கூட்டம். உச்சிமலையில் கணவாயின் அடிவாரத்துக்குள் இருப்பதால் இப்படியொரு மனிதக்கூட்டம் இருப்பது மலைமக்களுக்கே பெரிதாகத் தெரியாது.



மலையின் செங்குத்துப் பிளவுக்குள் பல பனையாழத்தில் மரப்புதர்களிலும் பாறைக்குகைகளிலுமே தங்குபவர்கள். அதனாலேயே யார் கண்ணிலும் படாதவர்கள். இலையாடைகொண்டவர்கள். ஐந்து முதல் ஏழு வயதுக்குள் குறி தவறும் அம்புகளை எய்தி முடித்துவிடுவர். அதன் பிறகு வாழ்நாள் முழுவதும் அவர்களின் அம்புகள் குறி தவறுவதில்லை.

அந்தக் குலத்தலைவன் இகுளிக்கிழவன். அவனைக் காணத்தான் வாரிக்கையனும் தேக்கனும் வந்திருந்தனர். குளவன்திட்டின் பின்புறக்காட்டில் இறங்கிய அவர்கள், இரவில் நெருப்பினாலான குறியீட்டுமொழி மூலம் கானவர்களுக்குத் தங்களின் வரவைத் தெரிவித்தனர்.

சிறிது நேரத்திலேயே அருகில் இருந்த மரத்தின் மேலிருந்து ஒரு கிழவன் கீழிறங்கி வந்தான். பந்த வெளிச்சத்தில் அவனைப் பார்த்ததும் அடையாளம் கண்டார் வாரிக்கையன்.

மகிழ்ச்சியோடு அவனை அணைத்துக் கொண்டார். ``என்னைவிட வயதில் மூத்தவன் இகுளிக்கிழவன்'' என்றார் வாரிக்கையன்.

``உன் தந்தையைவிட வயதில் மூத்தவன் நான்'' என்றான் இகுளிக்கிழவன். இருவரும் சிறுவனிடம் விளக்குவதைப்போல தேக்கனிடம் விளக்கினர்.

`தந்தை' என்ற சொல்லைச் சொல்லியபோது இகுளிக்கிழவனின் முகத்தில் எள்ளல் மிகுந்த சிரிப்பு ஓடியது. கானவர் குடியினர் இன்னும் தாய்வழிக் குலத்தினராகவே இருக்கின்றனர். கூட்டுவாழ்வில் `தந்தை' என்ற உறவை அடையாளப்படுத்தும் சொல்லே கிடையாது. உயிர்களால் தாயை மட்டும்தானே அறிய முடியும். பறவைகளுக்கோ, விலங்குகளுக்கோ அல்லது வேறு எந்தவோர் உயிரினத்துக்கோ இல்லாத பழக்கத்தை வேளிர் குடியினர் கொண்டிருப்பது கானவர் குடிக்கு வியப்பாகவும் கேலிக்குரிய ஒன்றாகவும் இருந்தது. அதன்பொருட்டே வேளிர் குடியினரை வேற்றுமனிதர்களாகப் பார்ப்பர். ஆனாலும் கானவர் குடியோடு நல்லுறவோடு இருந்தனர் வேளிர் குடியினர்.

நீண்ட காலத்துக்குப் பிறகு காண்பதால் பலவற்றைப் பேசிவிட்டு, இறுதியாக போர்நிலம் பற்றிக் கேட்டார் வாரிக்கையன்.

இகுளிக்கிழவன் கேட்டான், ``தட்டியங்காடு தான் போர்க்களம் என்று முடிவெடுத்தவன் யார்?''

``எதிரிகளின் தரப்பைச் சேர்ந்த கோல்சொல்லி'' என்றான் தேக்கன்.

``ஏன் இந்த நிலத்தைத் தேர்வு செய்தான்?''

``போரிடும் இருதரப்பு எல்லைக்குள்ளும் இல்லாத நிலமாக இருக்க வேண்டும் என்பதற்காக இதைத் தேர்வுசெய்ததாகச் சொன்னான்.''
``மனிதர்கள் மனிதர்களுக்குரிய இடத்தில்தானே போரிடவேண்டும். இந்த இடத்தில் எப்படிப் போரிட முடியும்?''

``ஏன்... இது மனிதர்களுக்குரிய இடமில்லையா?”

``மனிதர்களுக்கு மட்டுமன்று, விலங்குகளுக்குரிய இடமுமன்று. செங்காவி நிற ஓணானைத் தவிர வேறு எந்த உயிரினமும் அங்கு வாழாது.”

சற்றே அதிர்ச்சியோடு ``என்ன காரணம்?” எனக் கேட்டான் தேக்கன்.

``கருமணலும் ஈக்கிமணலும் நிறைந்த நிலத்தில் எந்த உயிரினமும் வாழ முடியாது. அந்த நிலத்தில் பத்து அடி தொலைவுக்குப் பாம்பு ஊர்ந்து சென்றால், அதன் அடிவயிறு கிழிந்து செத்துப்போகும்” என்றான்.

வாரிக்கையனும் தேக்கனும் திகைப்போடு அவனைக் கவனித்துக்கொண்டிருந்தனர். ``பாம்புக்கே இதுதான் நிலையென்றால், மற்ற உயிர்களைப் பற்றிச் சொல்லவேண்டுமா என்ன? மண்ணுக்குள் வாழும் கறையான்களுக்கு மட்டுமே அது தாய்நிலம். வேறு எந்த உயிரினமும் வாழ முடியாது” என்றான் இகுளிக்கிழவன்.

``மரம், செடிகொடிகள்கூட இல்லையே... ஏன்?”

``அதற்கு அந்த நிலம் காரணமல்ல. எங்களின் தெய்வம்தான் காரணம்.”

``உங்களின் தெய்வம் அந்த நிலத்தை என்ன செய்தது?”

## வீரயுக நாயகன் வேள்பாரி 90

இகுளிக்கிழவன் பின்புறம் திரும்பி, காரமலையின் உச்சியில் இருந்த பிளவைக் காட்டினான். ``அந்தப் பிளவை `கணவாய்’ என்போம். அந்தக் கணவாய்க்குப் பின்புறம்தான் எங்களின் தெய்வங்களான கொம்மனும் கொம்மையும் இருக்கிறார்கள். அவர்கள் கோபமடையும்போது வாய் திறந்து ஊதுகின்றனர். ஆண் தெய்வமான கொம்மன் ஊதும்போது வெளிவருவது காற்று. பெண் தெய்வமான கொம்மை ஊதும்போது வருவது காற்றி.

ஆணின் குணமேறிய காற்று, குளவன்திட்டின் வலதுபுறமாக இறங்கி, தட்டியங்காட்டு மண்ணைச் சீவியெடுத்துக்கொண்டு போகும். பெண்ணின் குணமேறிய காற்றி, குளவன்திட்டின் இடதுபுறமாக இறங்கி, உருட்டி எடுத்துக்கொண்டு போகும். அதனால்தான் தட்டியங்காட்டில் எந்த மரமும் செடியும் நிலைப்பதில்லை. எல்லாவற்றையும் காற்றும் காற்றியும் பிய்த்துக்கொண்டு போய்விடுகின்றன. புற்று மட்டும்தான்; அதுவும் ஒரு முழம் உயரத்துக்கு மட்டுமே நிலைகொள்ள முடியும். அதற்கு மேலே உயர்ந்தால் அதையும் அழித்துவிடும்.

மலை உச்சியிலிருந்து பாய்ந்துவரும் நீரின் வேகத்தில் கற்கள் அடிபட்டுச் சிதைந்து கூழாங்கற்களாகவும் மணலாகவும் மாறுவதைப் பார்த்திருப்பீர்கள். ஆனால், காற்றின் தாக்குதலால் பாறைகள் உடைந்து செதில்செதிலாகச் சீவப்பட்டு ஈக்கிமணலாகவும் கருமணலாகவும் மாறுவதை இங்கு மட்டும்தான் பார்க்க முடியும். ஈக்கிமணல் என்பது, உடைபட்டுக் கிடக்கும் அம்பு போன்றது” என்றான் இகுளிக்கிழவன்.

வாரிக்கையனும் தேக்கனும் வியப்பு நீங்காமல் கேட்டுக்கொண்டிருந்தனர்.

``நடுப்பகலுக்குப் பிறகு அந்த நிலத்தில் வெக்கை தாள முடியாது. கருமணலில் பட்டு காற்று கருகும். கருகிய புகை மேலெழ, உடலில் இருக்கும் நீரெல்லாம் வற்றி நா வறண்டு வீழ்வான் மனிதன்” என்றான் இகுளிக்கிழவன்.

கொலை நிலம் என்பதன் பொருள் அந்த நிலத்துக்கே முழுமையாகப் பொருந்தும். ஆனாலும் அந்த நிலத்தில் போரிட்டு வெல்வது எப்படி எனச் சிந்தித்தபடியே கேட்டுக் கொண்டிருந்தனர். பொழுதாகிக்கொண்டிருந்தது. தட்டியங்காட்டைப் பற்றித் தெரிந்துகொண்ட செய்தியின் அடிப்படையில் ஆயத்த வேலைகளை உடனே செய்யவேண்டும். இரலிமேட்டில் அனைவரும் நமக்காகக் காத்திருப்பர் எனக் கருதி இருவரும் புறப்பட்டனர்.

அவர்களை வழியனுப்ப, கானவர்குடி எல்லை வரை இகுளிக்கிழவன் உடன் வந்தான். கும்மிருட்டில் தங்களின் நிலப்பாதையை மற்றவர்கள் அறிந்திராதபடிதான் எல்லாப் பாதைகளும் இருக்கின்றன. அவர்களின் தேவை அறிந்து குறுக்குவழியில் விரைவாக அழைத்து வந்தான் இகுளிக்கிழவன்.

வரும்வழியில் இருந்த ஆச்சைமரம் ஒன்றைக் கடக்கும்போது இகுளிக்கிழவன் நின்றுவிட்டான். `ஏன் நிற்கிறான்?’ என்று பின்னால் வந்த இருவரும் அந்த இடத்தை உற்றுப்பார்த்தபோது மரப் புதருக்குள் இரு கண்கள் மட்டும் தெரிந்தன. என்னவென உற்றுப்பார்த்தனர். பெருங்கிழவி ஒருத்தி உள்ளே உட்கார்ந்திருந்தாள்.

வந்துள்ளதன் காரணத்தைக் கேட்டாள்.

``சாமேட்டில் போரிடப்போவதற்காகக் கேட்க வந்துள்ளனர்” என்றான் இகுளிக்கிழவன்.

``சாமேட்டிலா?!” என்று வியப்போடு கேட்டாள் முதுகிழவி.

``ஆம்” என இகுளிக்கிழவன் சொல்ல, முதுகிழவி தானியங்களை உருட்டுவதைப்போல எதையோ சொன்னாள்.

விடைபெற்று வரும்வழியில் இகுளிக்கிழவன் சொன்னான், ``உங்களுக்கு வெற்றிகிட்டட்டும் என்றாள்.’’

``இது என்ன, அந்த இடத்துக்குப் புதுப்பெயரைச் சொன்னாய்?” எனக் கேட்டார் வாரிக்கையன்.

``அங்கேதான் சாவுப்பறவை முட்டையிடும். அந்தப் பறவையை அங்கு வைத்துதான் வேட்டையாடுவோம். எனவே, அந்த இடத்தை `சாமேடு’ என்றுதான் நாங்கள் கூறுவோம்” என்றான்.

``சாவுப்பறவையா... அது என்ன பறவை?” எனக் கேட்டான் தேக்கன்.



``அதைக் கண்டால் உயிரினம் எல்லாம் அலறுமே! கணநேரத்தில் கழுத்தைவெட்டி எடுத்துக்கொண்டு காற்றில் பறக்குமே!” எனச் சொல்லி இரு கைகளையும் விரித்து, தலையை முன்தள்ளியபடி சொன்னான்.

அப்போதுதான் வாரிக்கையனுக்குத் தோன்றியது, `காக்காவிரிச்சியைச் சொல்கிறான் கிழவன்’ என்று.

அதை நினைத்த கணத்தில் உடல் நடுங்கி மீண்டது.

`எந்த உயிரினத்துக்கும் அதன் சாவைக் காட்டும் பறவை என்பதால், அதை `சாவுப்பறவை’ என்கின்றனர்’ என எண்ணிக் கொண்டிருக்கும்போதே பதறிக் கேட்டான் தேக்கன் ``அதை வேட்டையாடுவீர்களா?”

``ஆம்” எனத் தலையாட்டினான் இகுளிக்கிழவன். ``நீங்கள் சொல்லும் அந்த நிலம் முழுவதும் எந்தப் பறவையும் பறந்து கடக்காது. ஏனென்றால், சாவுப்பறவை அங்குதான் குதம் எரிய முட்டையிடும். பிறகு வெறிகொண்டு குளவன்திட்டை நோக்கித்தான் மேலேறி வரும். அதன் அப்போதைய தேவை பசியன்று; எரிச்சல் மிகுந்த கோபம். எனவே, கணவாய்க்குள் மனிதர்கள் இருப்பதால் வெட்டிச்சரிக்க உள்ளே இறங்கும். கண்ணில் சிக்குபவர்களின் தலைகளையெல்லாம் காற்றில் சரிக்கும். அதனால்தான் எங்கள் கானவர் கூட்டம் ஆதியிலே தழைக்காமல் சிறுத்துப்போனது” - கவலைதோய்ந்த குரலில் சொன்னான் கிழவன்.

கேட்டுக்கொண்டிருப்பது மனிதர்கள் சம்பந்தப்பட்ட கதையல்ல; மனிதனால் நம்பவே முடியாத கதை. எனவே, இமை மூடாமல் கவனித்தனர் இருவரும்.

இகுளிக்கிழவன் சொல்லி முடித்ததும் தேக்கன் கேட்டான், ``அதை எப்படி வேட்டையாடுவீர்கள்?”

``எங்கள் தெய்வத்தின் துணையோடு.”

இருவரும் பேச்சின்றி, கிழவனைப் பார்த்தனர்.

``சாவுப்பறவை, முட்டையிட்ட பிறகு குளவன்திட்டை நோக்கித்தான் மேலேறி வரும். நாங்கள் குளவன்திட்டின் மேலே ஆயத்தநிலையில் இருப்போம். எங்களின் தெய்வங்கள் காற்றையும் காற்றியையும் ஊதி அனுப்புவர். அவர்கள் ஊதும் நேரம் அறிந்து நாங்கள் வில்லடிப்போம். அம்புகளை நாங்கள் எய்யும் வேகத்தைவிடப் பத்து மடங்கு வேகத்தில் காற்றும் காற்றியும் எடுத்துச்செல்லும். எங்களது சுருள் அம்புகளின் தாக்குதலை எதிர்த்து சாவுப்பறவையால் மேலே பறந்து வர முடியாது” என்றான்.

காக்காவிரிச்சியை அம்புகளால் வீழ்த்த முடியும் என்பதை நம்ப முடியாமல் கேட்டுக்கொண்டிருந்தனர் இருவரும். ஆனால் தேக்கனின் எண்ணம் முழுவதும், காற்றைப் பயன்படுத்தி அம்பு எய்யும் அவர்களின் உத்தியைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதிலேயே இருந்தது.

வாரிக்கையன் கேட்டார், ``செங்காவி நிற ஓணான் மட்டும் எப்படி அங்கே உயிர் வாழ்கிறது?”

``சாவுப்பறவையின் முட்டைகளைத் தின்றுதான். ஓணான்கள் அந்த முட்டைகளை மட்டும் அழிக்கவில்லையென்றால், இந்நேரம் பச்சைமலை முழுக்க சாவுப்பறவைதான் பறந்துகொண்டிருக்கும்.”

தேக்கன் கேட்டான், ``காற்று, நாம் எய்யும் அம்பின் வேகத்தை பத்து மடங்கு அதிகப்படுத்துமா?''

``படுத்தும். ஆனால், நாம் எய்யும் அம்பு வீசிவரும் காற்றின் முகப்போடு இணைய வேண்டும்.''

``காற்றை நாம் உணரும்போதே, அது நம்மைக் கடந்துவிடுமே. பிறகு எப்படி அதன் முகப்போடு இணைந்து அம்பைச் செலுத்த முடியும்?''

``காற்று வருவதறிந்து நாம் ஆயத்தமாகிவிட வேண்டும்.''

``எப்படி?''

``குளவன்திட்டின் உச்சியில் குகை ஒன்று இருக்கிறது. அதில் விளக்கேற்றுவோம். கணவாயினுள் காற்று வரப்போவதற்கு முன்னர் அந்த விளக்கின் சுடர் வலதுபுறம் நோக்கிச் சாய்ந்து எரியும்; காற்றி வருவதாக இருந்தால் இடதுபுறம் நோக்கிச் சாய்ந்து படபடத்து எரியும். சுடர் சாயத் தொடங்கியவுடன் நாணை இழுத்துவிடுவித்தால் அம்பு எகிறும்போது காற்றின் முகப்போடு இணையும்'' என்றான் இகுளிக்கிழவன்.

பெருங்காற்று வருவதற்கு முன்னரே அதை உணர்ந்து வீசும் வேகத்தோடு அம்பை இணைக்கும் இவர்களின் அறிவுக்கூர்மை மெய்சிலிர்ப்பை உருவாக்கியது. அப்போதுதான் அடுத்த ஐயமும் வந்தது, ``அம்பு சுருள்வடிவில் இருந்தால் எப்படி காற்றில் ஏகிச்செல்லும், திசைமாறி விழுந்துவிடுமே!''

மறுமொழியின்றி அமைதியாக வந்தான் இகுளிக்கிழவன். இருட்டில் ஒடுக்குப்பாதையில் கவனமாக வரவேண்டும். அதைக் கடந்தவுடன் சொன்னான், ``கானவர்குடியின் தனித்த அடையாளம் அது. எனவே, மற்றவர்களோடு அதைப் பகிர்ந்துகொள்ள மாட்டோம்.''

குலச்சமூகங்களின் ஆதிஆற்றல்கள் எல்லாம் இப்படியோர் இறுதி முடிச்சுக்குள் சிக்குண்டு விடுகின்றன. மிகத்தேர்ந்த மனிதர்களால் மட்டுமே சிக்கல் நிறைந்த இந்த முடிச்சுகளைக் கழற்ற முடியும்.

பேச்சை எப்படித் தொடர்வது என்பதறியாமல் திகைத்தபடி இருந்தான் தேக்கன். இவ்வளவு நேரம் பேச்சின்றி வந்த வாரிக்கையன் கேட்டார், ``செங்காவி நிற ஓணான்கள் இல்லையென்றால், சாவுப்பறவையின் எண்ணிக்கை அதிகமாகிவிடும் அல்லவா?''

``அதில் என்ன ஐயம்? நம் தலைக்கு மேல் வேறு எந்தப் பறவையும் பறக்காது'' என்றான் இகுளிக்கிழவன்.

கேள்வி கேட்ட பிறகு அமைதியாக வந்தார் வாரிக்கையன்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, ``ஏன் இதைக் கேட்டீர்கள்?'' என்றான் இகுளிக்கிழவன்.

``தட்டியங்காட்டில் இவ்வளவு பெரிய போர் நடக்கப்போகிறது. மனிதர்கள், குதிரைகள், யானைகள் எனப் பல்லாயிரம் உயிரினங்கள் களத்தில் இறங்கப்போகின்றன. இத்தனை பேரின் கால் மிதிக்குத் தப்பி, செங்காவி நிற ஓணான்கள் எப்படி உயிர் பிழைக்கப்போகின்றன?'' என்றார் கவலை தோய்ந்த குரலில்.

இப்போது இகுளிக்கிழவன் அதிர்ச்சியானான். ``மனிதர்களாலும் குதிரைகளாலும் அவற்றுக்கு ஆபத்து நேராது. ஆனால், எண்ணிலடங்காத யானைகள் மோதிச் சண்டையிட்டால் மண்ணோடு மண்ணாய் ஓணான்கள் எல்லாம் நசுங்கிச் சாகும்'' என்று சொல்லும்போதே அவனது உடலில் நடுக்கம் ஏற்பட்டது.

அதைக் கவனித்தார் வாரிக்கையன்.

ஆனாலும் பேச்சேதுமின்றி மூவரும் இருளுக்குள் நடந்தபடி இருந்தனர்.

இன்னும் குடில்களை உருவாக்காமல் மரப்பொந்துக்குள் வாழ்வதே சாவுப்பறவையால் ஏற்பட்ட அச்சத்தால்தான். அந்த அச்சம் அவ்வளவு எளிதில் அகன்று விடாது. குரல் சற்றே நடுங்க இகுளிக்கிழவன் கேட்டான், ``ஓணான்கள் அழியாமல் தடுக்க நீங்கள் உதவினால், சுருளம்புகளைக் கொடுத்து நாங்கள் உதவுகிறோம்.''



``அது அழியாமல் நாங்கள் எப்படித் தடுக்க முடியும்?''

``யானைப் போரை மட்டும் தட்டியங்காட்டில் நடத்தாதீர்கள். ஓணான்கள் தப்பித்துவிடும்'' என்றான் இகுளிக்கிழவன்.

வாரிக்கையன் இதை எதிர்பார்க்கவில்லை. போர்க்களம் தொடர்புடைய முடிவைப் பாரியும் தேக்கனும் முடியனும்தான் எடுக்க முடியும். தான் எடுக்கக் கூடாது. எனவே, தேக்கனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

எடுக்கப்போகும் முடிவின் முக்கியத்துவத்தை உணர்ந்தபடி ஆழ்ந்து சிந்தித்தான் தேக்கன். ``சரி, யானைப்போரைத் தட்டியங்காட்டில் நடத்தாமல் தவிர்க்கிறோம்'' என்று வாக்களித்தான்.

இகுளிக்கிழவன் மகிழ்ந்து நன்றி சொன்னான்.

``பாறைகளுக்குள் நுழைந்துகிடக்கும் வேர், அதற்குரிய மரம் பட்டுப்போனவுடன் தானும் உயிரற்றுப்போகும். ஆனால், ஊழிப் பாறைக்குள் ஓடும் வேர், மரம் பட்டுப் போனவுடன் தானும்

பட்டுப்போகாது. மாறாக, ஊழிக்கல்லின் குணமெய்யும். பனை மரத்தீக்கிபோலப் பாறையீக்கியாக அது மாறிவிடும். அதை எடுத்து வேண்டிய நீளத்துக்கு உடைத்து அம்பாகப் பயன்படுத்துவோம். அதன் பெயர்தான் `கல்லூழி வேர்'."

இகுளிக்கிழவன் சொன்னதை வியப்போடு கேட்ட தேக்கன், ``பனையீக்கிபோல் நீண்டிருக்கும் என்றால் இரும்பை உருக்கி நீட்டியதுபோல்தானே இருக்கும். அதை எப்படிச் சுருளம்பு என்று சொல்கிறீர்கள்?"

இகுளிக்கிழவன் சொன்னான், ``கல்லூழி வேரில் துளியளவு ஈரம் பட்டதும் சுருண்டு கொள்ளும். எனவே, இந்த அம்பு மனிதனைத் தைத்து உள்ளுக்குள் போகும்போதே குருதியின் ஈரத்தில் சுருண்டுவிடும். அதன் பிறகு அதை எடுக்க முயன்றால் எலும்பும் சதையும் பிய்த்துக் கொண்டுதான் வெளிவரும். அதனால்தான் சாவுப் பறவையை எங்களால் வீழ்த்த முடிகிறது" என்றான்.

இந்தச் செய்தியே மிரட்சியை ஏற்படுத்தியது. கிழவன் சொன்னான், ``ஒரே நேரத்தில் ஆறு அம்புகளை விரல் இழுக்கும் நாண் பிடியில் பொருத்தி எய்ய முடியும். அந்த ஆறு அம்புகளின் மொத்தக் கனமும் நீங்கள் பயன்படுத்தும் அம்பின் கனத்தில் மூன்றில் ஒரு பங்குதான் இருக்கும்" என்றான்.

தங்களின் குதிரைகள் நின்றிருந்த மேட்டின் அருகில் வந்தனர். தேக்கன் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான். எங்கும் விண்மீன்கள் நிறைந்திருந்தன. குறுங்காது முயலின் குருதியில் தோய்ந்த நாணில் வைத்து கல்லூழி அம்புகளை எய்ய, காற்று அவற்றைச் சுமந்து சென்று வெளி முழுவதையும் தைக்க, கசியத் தொடங்கும் குருதித்துளிகளால் நிறைந்திருந்தது வானம்.

``உங்களுக்குத் தேவையான அம்புகள் அனைத்தும் நாளை அதிகாலை கிடைக்கும்" என்றான் இகுளிக்கிழவன்.

மிகுந்த நன்றியோடு வணங்கிவிட்டு இருவரும் குதிரையில் ஏறினர்.

புறப்படுகிறவர்களைப் பார்த்து இகுளிக்கிழவன் சொன்னான், ``அழித்தொழிக்கப்படும் உயிரினம் எதுவும் சமவெளியிலிருந்து மலைமேல் ஏறவிடக் கூடாது."

நள்ளிரவுக்கு முன்பே இரலி மேட்டுக்கு வந்து சேர்ந்தனர் வாரிக்கையனும் தேக்கனும். அவர்களின் வரவை எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர். முறியன் ஆசானிடம் வெக்கை நிறைந்த அந்த நிலத்தின் தன்மையை விளக்கினான் தேக்கன். `நடுப்பகலுக்குப் பிறகு வீரர்கள் யாராலும் நீரின்றி அந்த நிலத்தில் நிற்க முடியாது' என்று இகுளிக்கிழவன் சொன்னதைக் கூறினான்.

போர்க்களத்தில் நீர் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. காடுகளாக இருந்தால் ஓரவத்திக்கொடி எங்கும் இருக்கும். மேலும் கீழும் ஒரே நேரத்தில் வெட்டினால் ஒரு முழக்கொடியில் மூன்று ஆள் குடிக்கும் அளவுக்கு நீர் இருக்கும். ஆனால், சமவெளி நிலத்தில் என்ன செய்வது எனச் சிந்தித்த முறியன் ஆசான், நீர்வேலி படர் கொடிகளை வெட்டி வரச் சொன்னார். வெட்டி எடுக்க இரவோடு இரவாக ஆள்கள் போயினர்.

நாகக்கரட்டிலிருந்து படைவீரர்கள் அனைவரும் குளவன்திட்டின் அடிவாரத்துக்கு இடம்பெயர்ந்துகொண்டிருந்தனர். பாரியிடம் கல்லூழி வேரைப் பற்றி வாரிக்கையன் சொன்னார். ``இப்படியோர் அம்பு இருக்கிறதா?!” என்று வியந்தான் பாரி.

``கருமணல், ஈக்கிமணல் ஆகியவற்றின் தன்மை என்ன?” என்று கேட்டான். இகுளிக்கிழவன் சொன்னதை விளக்கிக் கூறினார் வாரிக்கையன். மணலீக்கிகளை நம்முடைய ஆயுதமாக மாற்றுவது எப்படி என்பதைப் பற்றி சிந்தித்தான் பாரி. இகுளிக்கிழவன் சொன்ன ஒவ்வொரு சொல்லிலிருந்தும் காக்கும் மருந்தை முறியன் ஆசானும், தாக்கும் ஆயுதத்தை வேள்பாரியும் உருவாக்கத் தொடங்கினர். அவர்களுக்குக் கிடைத்ததென்னவோ நள்ளிரவு கழிந்த மிச்சப்பொழுதுதான். ஆனாலும் அவர்களால் அதைச் செயல்படுத்த முடிந்தது. புதிய ஒன்று கிடைக்கிறது என்ற மகிழ்வே ஆற்றலைப் பல மடங்கு பெருக்கும்.

பறம்பின் ஆற்றல் பல்கிப்பெருகிக் கொண்டிருந்தது. களப்போர் என்பது பறம்புக்குப் புதிது. தாக்குதல் மட்டுமன்று, ஒருங்கிணைப்பும் ஒத்திசைவும் மிக முக்கியம். அதை உருவாக்க, புதிதாகச் செய்யவேண்டியது என்ன என்பதே பாரியின் சிந்தனையாக இருந்தது.

நள்ளிரவு கடக்கும் முன்னே கருங்கைவாணன் முழுத் திட்டமிடலையும் முடித்திருந்தான். வாள்படையின் தளபதி சாகலைவனிடம் பன்னிரு சேனைவரையர்கள் இருந்தனர். ஒவ்வொரு சேனைவரையனும் தனக்குக் கீழ் பன்னிரு சேனைமுதலிகளைக்கொண்டிருந்தான். ஒவ்வொரு சேனைமுதலியின் கீழும் இருநூறு படைவீரர்கள் இருந்தனர்.




போர் என்பது. பயிற்சிபெற்ற வீரர்களின் களம். எந்த ஒரு தாக்குதலையும் ஒழுங்குமுறைக்குள் கொண்டுவரும்போது இயல்பிலேயே அதன் ஆற்றல் பன்மடங்கு பெருகிநிற்கும். வேந்தர் படையின் வலிமையே போர்க்களச் செயல் பாட்டில் அது கொண்டிருக்கும் இணையற்ற அனுபவம்தான். ஒவ்வொரு சேனைமுதலியும் தனித்த முரசங்களையும் பதாகைகளையும் கொண்டிருந்தனர். இருநூறு பேர்கொண்ட தனது படை, தாக்குதலை எப்போது தொடங்க வேண்டும் அல்லது தாமதிக்க வேண்டும், முன்னேறுவது அல்லது நின்ற இடத்திலேயே நிலைகொள்வது, எந்தப் பக்கம் திரும்ப வேண்டும் அல்லது பின்வாங்க வேண்டும் என எல்லா வற்றையும் தாக்கும் களத்தின் செயல்பாடு களுடனேயே செய்து முடிக்கக்கூடிய பயிற்சியைக் கொண்டவர்கள். முரசுகள் எழுப்பும் ஓசைகளுக்கு ஏற்ப அவர்கள் தங்களின் செயல் பாடுகளை அமைத்துக்கொள்வர். போர்ப்பயிற்சி என்பதன் சாரம் அதுதான்.

போர்க்களத்தில் ஒரு படை பின்னோக்கி நகர்வது என்பது, பின்வாங்கல் ஆகாது. ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதல் உத்தியின் பகுதியே ஆகும். எனவேதான், பயிற்சிகொண்ட படை எளிதில் களத்தை விட்டுச் சிதைந்துவிடாது. படைப்பிரிவில் ஒவ்வொரு வீரனும் மாவீரனாக இருக்கவேண்டிய தேவையேதும் இல்லை. உத்தரவுகளையும் ஒழுங்குகளையும் பின்பற்றும் ஒருவனாக இருந்தால் மட்டுமே போதுமானது. அவன் குறைந்தளவு ஆற்றலைக் கொண்டவனாக இருந்தாலும் போதும். அவனது திறன், படையின் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்காது. ஏனென்றால், இந்தத் தாக்குதல் முறையே ஒன்றையொன்று இறுகப் பின்னிய சங்கிலித் தொடர்போல வடிவமைக்கப்பட்டுள்ளது. மண்ணில் உரசி நகரும் சங்கிலி எதை நோக்கி நகர்கிறது என்பதை அந்த இடத்திலிருந்து பார்க்கும் ஒருவனால் தீர்மானிக்க முடியாது. அது எங்கோ போய்க்கொண்டிருக்கிறது என்றுதான் நினைப்பான். ஆனால், இறுதியில் அது தனது காலை இறுக்கும்போதுதான் ஆபத்தை உணர்வான்.

எண்ணற்ற கண்ணிகளால் இணைக்கப்பட்ட சங்கிலித்தொடரைப் போர்க்களம் எங்கும் வீசியெறிந்துவிட்டு விடியலுக்காகக் காத்து நின்றான் கருங்கைவாணன். ஐந்து தளபதிகளும் அறுபது சேனைவரையன்களும் எழுநூற்றி இருபது சேனைமுதலிகளும் அவர்களின் கீழ் இயங்கும் எண்ணிலடங்கா வீரர்களும் பெருஞ் சங்கிலித் தொடரின் கண்ணிகளாக இறுகப் பொருத்தப் பட்டிருந்தனர். மொத்தப் படையின் அசைவு களையும் தன் உத்தரவுகளால் துல்லியமாக இயக்கக்கூடியவனாக நிலைகொண்டிருந்தான் கருங்கை வாணன்.

பொழுது விடிந்தது. தட்டியங்காட்டுக்குள் திசைவேழரின் தேர் வந்து நின்றது. நாழிகை வட்டில் வைக்கப்பட்டிருந்த பரண்மீது ஏறினார் திசைவேழர். இரு பக்கங்களிலும் நின்றிருந்த அவரின் மாணவர்கள், அவர் மேலேறுவதற்கு உதவிசெய்தனர்.

பரண் மேலேறி நின்று பார்த்தார். நேரெதிரே கதிரவன் சுடர் வீசி மேலெழுந்தான். செந்நிறக் கீற்றுகளின் நிறம் மாறிக்கொண்டிருந்தது. கதிரவனுடைய ஒளிக்கைகளின் நிறம் பார்த்தே நாழிகையைச் சொல்ல முடியும் அவரால். கண்களை மூடி இரு கைகளைக் குவித்துக் கதிரவனை வணங்கினார்.

தலையை மெள்ளத் திருப்பி, படைகளைப் பார்த்தார். அவரின் பார்வை விளிம்புக்கு அப்பாலும் பெருகிக்கிடந்தது வேந்தர்படை.
மூஞ்சலில் தனது கூடாரத்தில் அமர்ந்திருந்தார் குலசேகரபாண்டியன். அவரது பார்வையில் விரிக்கப்பட்ட தோல் வரைபடத்தில் தட்டியங் காட்டுப் பரப்பு முழுவதும் குறியீடுகளால் நிரம்பி யிருந்தது. மூன்று மெய்க்காவலர்களும் இரண்டு சேனைவரையர்களும் உடன் நின்றுகொண்டிருந்தனர். படைப்பிரிவின் எல்லா நகர்வுகளும் முன்தீர்மானிக்கப்பட்டவையாக இருந்தன.

இந்த நிலம் இதுவரை கண்டிராத பெரும் படையின் தாக்குதலை, வரைபடத்தைப் பார்த்தபடி குலசேகரபாண்டியன் உச்சரிக்கும் சொற்களே தீர்மானித்தன. அவர் சொல்லப் போகும் சொற்கள் கருங்கைவாணனைச் சென்றடைய எத்தனை இமைப்பொழுதுகள் ஆகும் என்பதைக் கணித்திருந்தான் தலைமைக்கணியன் அந்துவன்.
புதிய அமைச்சன் ஆதிநந்தி வலதுபுறமும் அந்துவன் இடதுபுறமும் நிற்க, வரைபடத்தை உற்றுக்கவனித்தபடி இருந்தார் குலசேகர பாண்டியன். இந்தப் போருக்காகப் பாண்டிய நாட்டின்

முதற்படைப் பிரிவு இங்கு வந்து ஓராண்டு ஆகப்போகிறது. இவ்வளவு நெடிய காலம் காத்திருந்து, திட்டமிட்டு, மூவேந்தர்களையும் அணி சேர்த்து, வலிமையைக் கூட்டி, மலையை விட்டுக் கீழிறங்கி வர வாய்ப்பே இல்லை என்று சொல்லப்பட்ட பாரியை சமதளத்தில் இறங்கிப் போரிடும் சூழலை உருவாக்கியதே குலசேகரபாண்டியனின் பெருவெற்றியாகச் சொல்லப்பட்டது. வெற்றிப் புகழுரைகள் அவன் செவிகளில் எதிரொலித்துக் கொண்டேயிருந்தன. ஆனாலும் கண்ணிமைக்காமல் வரைபடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதே நேரத்தில் விரிந்துகிடக்கும் முழுப் படையையும் பார்த்துக்கொண்டிருந்தான் வேள்பாரி. குளவன்திட்டின் உச்சியில் நின்றிருந்தான் அவன். அவனது வலதுபக்கம் இகுளிக்கிழவனும் இடதுபக்கம் காலம்பனும் நின்றிருந்தனர். அவனுக்குப் பின்னால் கூவல்குடியின் வீரர்கள் நின்றிருந்தனர்.
போர்க்களத்தின் இடதுபுறம் வேந்தர்படை நின்றிருந்தது. பரவிக்கிடக்கும் படையின் இறுதி எல்லையில் சிறிதாகத் தெரிந்தன கூடாரங்கள். அதுதான் மூஞ்சல். அதன் உள்ளேதான் நீலன் இருக்கிறான். பாரியின் கண்கள் அந்த இறுதி எல்லையில் நிலைகுத்தி நின்றன.

மூஞ்சலுக்கு நேர் மேற்கே நாகக்கரட்டின் உச்சியில் வாரிக்கையன் நின்றிருந்தார். குளவன்திட்டுக்கும் நாகக்கரட்டுக்கும் இடையில் கூவல்குடியினர் ஒலிப்பின்னலை உருவாக்கினர். பெரும் மலைத்தொடர்களையே துல்லியமான ஒலிக்குறிப்புகளால் இணைக்கக்கூடிய அவர்களுக்கு, சில காதத்தொலைவு கொண்ட இந்த இடைவெளி ஒரு பொருட்டாகவே தெரியவில்லை.
குளவன்திட்டிலிருந்து நாகக்கரடு வரை அணிவகுத்து நிற்கும் வேந்தர்படையின் தன்மையை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான் வேள்பாரி.

பரண்மேல் நின்றிருந்த திசைவேழர், நாழிகை வட்டிலை உற்றுப்பார்த்தபடி இருந்தார். அவரது திசை நோக்கி நீண்டுகிடந்த நாழிகைக்கோலின் நிழல் சிறிது சிறிதாக உள்வாங்கியது. அவர், கண்களைச் சுருக்கிப் பார்த்தபடி இருந்தார். பரப்பப்பட்ட மணலில் துகள்களுக்கு இடையே ஏறி இறங்கிப் பின்வாங்கிக்கொண்டிருந்தது நிழல். ஐந்தாம் நாழிகையைக் குறிக்கும் கோட்டை நோக்கிச் சுருங்கி உள்ளிழுத்து வந்து சேர்ந்தது. மஞ்சள் பூசிய கருநிழல் சிறுகோட்டைத் தொட்டதும், இமைப்பொழுதும் இடை வெளியின்றிக் கையை உயர்த்தினார். அவரின் கை அசைந்தபோது முரசுகளின் பேரொலி எங்கும் எதிரொலித்தது. இருபுறங்களிலும் நிற்கும் எண்ணற்ற பரண்களிலிருந்து முரசொலி எழுந்தபோது நிலமெங்குமிருந்து வெடித்துக் கிளம்பியது வீரர்களின் பேரோசை.


தட்டியங்காட்டுப் போர் தொடங்கியது.

- *பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-91

மூவேந்தர்களின் கூட்டுப்படையில் மிகுவலிமைகொண்டது குதிரைப்படை. அதன் ஆற்றல் அளவிடற்கரியது. திறன்கொண்ட போர்க்குதிரைகள் அலையலையாய் அணிவகுத்து நின்றன. கருங்கைவாணனின் திட்டப்படி பறம்புப்படையை நிலைகுலையச் செய்யப்போவது இந்தக் குதிரைப்படையே. அதற்குப் பெருவீரன் உறுமன்கொடி தலைமையேற்றிருந்தான்.

உறுமன்கொடியின் கணிப்புப்படி வேந்தர்படையின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டால், இருபதில் ஒரு பங்குக் குதிரைகள்கூடப் பறம்பில் இருக்க வாய்ப்பில்லை. எனவே, பறம்புப்படையை வாரிச்சுருட்டிவிடும் மனநிலையில்தான் முரசின் ஓசையைக் கேட்டதும் தாக்குதலுக்கு விரைந்தான். நேரடித் தாக்குதல், திசைதிருப்பித் தாக்குதல், முன்படையின் சுழற்சிக்கேற்ப பின்படை சுற்றுதல் என, குதிரைப்படைக்குரிய எண்ணற்ற போர் உத்திகள் இருந்தாலும், அவை எவற்றையும் திட்டமிட வேண்டிய தேவையில்லை எனக் கருதினான். வலிமையோடு ஏறிப்பாயும் தனது படையின் முன் பறம்புப்படையால் நிலைகொள்ளவே முடியாது. தன் குதிரைகளின் மூன்றாம் அலைப்பாய்ச்சலில் பறம்பின் குதிரைப்படை முற்றாக நிலைகுலையும் எனக் கணித்தான்.



போர் என்பது, ஆயுதங்களின் வழியே இறுதியாகத்தான் நடக்கிறது. அதற்கு முன் மனதின் பல தளங்களில் அது நிகழ்த்திப்பார்க்கப்படுகிறது. எண்ணற்ற வாய்ப்புகளின் வழியே அந்தத் தாக்குதலை நிகழ்த்திப்பார்ப்பவனால்தான் சிறந்த தளபதியாகக் களத்தில் வினையாற்ற முடிகிறது. எண்ணங்களும் கணிப்புகளும் உத்திகளுமே போரைச் செயல்படுத்துகின்றன. உறுமன்கொடியின் கணிப்பில் ஏற்பட்ட நம்பிக்கை அவனை உத்திகளின்பால் நேரத்தைச் செலவழிக்க அனுமதிக்கவில்லை. நேர்கொண்டு

தாக்கி அழிக்கும் முறையே போதுமானது எனக் கருதினான்.

வேந்தர்களின் குதிரைப்படையின் வலிமையை நன்கு அறிவான் வேள்பாரி. மூவேந்தர்களின் ஒருங்கிணைந்த படையில் குதிரைகளின் எண்ணிக்கையும் அவற்றின் ஆற்றலும் இதற்கு முன் கண்டிராத ஒன்றாக இருக்கப்போகிறது எனக் கணித்தான். அதனால்தான் பறம்பின் தரப்பில் குதிரைப்படையின் தளபதியாக இரவாதனை நியமித்தான்.

பறம்பின் தரப்பில் வலிமைமிகுந்த தாக்குதலை நடத்தப்போவது விற்படையே எனக் கணித்தான் கருங்கைவாணன். பறம்பின் தாக்குதலின்கூர்முனை, விற்படையில்தான் இருக்கிறது என எண்ணினான். அதனால்தான் மற்ற படைத்தளபதிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததைவிட அதிகமான சேனைவரையர்களை விற்படைத் தளபதி துடும்பனுக்கு வழங்கினான்.

பதினான்கு சேனைவரையர்களைக்கொண்ட துடும்பன், தனது உத்திகளின் மூலம் பறம்புப்படையை வீழ்த்த வீறுகொண்டு முன்னகர்ந்தான். உத்திகளின் தொடக்கம் மட்டுமே முன்முடிவாகிறது. அவற்றின் அடுத்தடுத்த கட்டங்களைக் களத்தின் போக்கே தீர்மானிக்கிறது.

முன்னேறிவரும் எதிரிகளின் விற்படையைச் சந்திக்கக் காத்திருந்தான் உதிரன். அவனது தலைமையில்தான் பறம்பின் விற்படை ஆயத்தநிலையில் இருந்தது. உதிரனும் நீலனும் பறம்பின் இணையற்ற தளபதிகள். தங்களது தாக்குதலின் மூலம் எதிரிகளை நிலைகுலையச் செய்பவர்கள். வாரிக்கையனும் சோமக்கிழவனும் முதல் தலைமுறையினர். தேக்கனும் கூழையனும் இரண்டாம் தலைமுறையினர். பாரியும் முடியனும் மூன்றாம் தலைமுறையினர். உதிரனும் நீலனும் நான்காம் தலைமுறையினர். இந்த நான்கு தலைமுறைப் போர் உத்திகளும் வீரமும் ஆற்றலும் இரு தோள்களிலும் இறங்கி நிற்கும் மாவீரர்களாக நீலனும் உதிரனும் இருந்தனர். ஆனால், நீலன் எதிரிகளால் சிறை யெடுக்கப்பட்டுள்ளான். அவனை மீட்கும் வரை பறம்புவீரன் எவனும் சோர்வடையப் போவதில்லை. கைகளின் அயர்வை எவனும் உணரப்போவதில்லை.

உதிரன், அதனினும் கூடுதலான சினமேறியவனாக இருந்தான். இந்தப் போரை எதிரிகள் பாரியை வெல்ல நடத்துகின்றனர். ஆனால், பறம்புவீரர்களைப் பொறுத்தவரை இந்தப் போர் நீலனுக்காக நடக்கிறது. பறம்புக்கு அடைக்கலமாக வந்த அகுதையின் குலக்கொடியை ஒருபோதும் பறம்பு இழக்காது. எந்த நிலையிலும் நீலனை மீட்காமல் இந்தப் போர் முடிவுக்கு வராது. எதிரில் நிற்பது எண்ணிக்கையில் கணக்கிடவேண்டிய படையன்று; கொன்று முடிக்கவேண்டிய படை என்பது மட்டுமே உதிரனுக்குத் தெரிந்தது. அதற்காக மலைமக்களின் மாபெரும் ஆயுதமான வில்லை ஏந்தி நின்றது உதிரனின் படை. போர் தொடங்க முரசு முழங்கியபோது காற்றைக் கிழித்து எகிறின அம்புகள்.

வேந்தர்படையின் பெருவீரர்கள் குவிந்துகிடப்பது வாள்படையில்தான். கவசம் பூண்டு, கேடயம் தாங்கி, வாள் ஏந்தி நிற்கும் வீரன் ஒருவன் பல்லாண்டுக்காலப் பயிற்சிக்குப் பிறகுதான் போர்க்களத்துக்கு வந்து நிற்கிறான். நிலைப்படையில் இல்லாமல் அவ்வப்போது திரட்டப்படும் வீரர்கள் யாரும் வாள்படையில் இணைத்துக்கொள்ளப்படுவதில்லை. வாள்போர், எளிய பயிற்சியால் கைகூடுவதில்லை.

வீரயுக நாயகன்

91

# வேள்பாரி

எல்லாக் காலங்களிலும் நிலைப்படையில் நின்று செயலாற்றும் வீரர்களால் மட்டுமே போர்க்களத்தில் தன்முனைப்போடு வாள் சுழற்ற முடியும். மூவேந்தர்களின் நிலைப்படைகள் அனைத்தும் ஒன்றிணையும்போது வாள் உயர்த்தி நிற்கும் வீரர்கள் பெரும் எண்ணிக்கை கொண்டிருந்தனர். கருங்கைவாணனை மகா சாமந்தனாகக்கொண்ட இந்தப் பெரும்படையின் உயிர்நாடியான பகுதியாக வாள்படை விளங்குகிறது. எவ்வளவு கடினமான சூழலிலும் எதிரிகளின் படையைப் பிளந்து முன்னகர்வதில் வாள்படைக்கு இணைசொல்ல முடியாது. அந்தப் பெரும்படைக்குச் சாகலைவன் தலைமையேற்றான்.

பறம்பின் தரப்பில் வாள்படைக்குத் தலைமைதாங்கியவன் தேக்கன். அவன்தான் எதிரியின் வலிமைமிகுந்த பகுதியை எதிர்கொள்ளப்போகிறவன். அவனிடம்தான் களத்தில் கடைப்பிடிக்க வேண்டிய உத்திகள் பற்றி நீண்டநேரம் உரையாடினான் பாரி. வாள்படை, களத்தின் நடுப்பகுதியில் நிலைகொண்டிருந்தது. அதுவே தங்களுக்கு எல்லா வகைகளிலும் வாய்ப்பானது எனக் கருதினான் கருங்கைவாணன். பறம்பின் படையை நடுவில் பிளந்து உள்நுழையும்போது மொத்தக் கட்டுக்கோப்பும் விரைவாகக் குலைந்து சரியும் என மதிப்பிட்டான். அவனது கணிப்பைச் செயல்படுத்த வாளைச் சுழற்றி முன்னேறினான் சாகலைவன்.

வேந்தர்களின் தேர்ப்படைக்கு நகரிவீரன் தலைமையேற்று நின்றிருந்தபோது அதை எதிர்கொள்ள, பறம்பின் தரப்பில் கூழையன் நின்றிருந்தான். தளபதி உச்சங்காரியின் தலைமையில் வேந்தர்களின் யானைப்படை நின்றிருந்தது. ஆனால், பறம்பின் தரப்பில் யானைகள் எவையும் இதுவரை களத்துக்கு வந்துசேரவில்லை.


திசைவேழரின் கையசைவும் போர்முரசின் அதிர்வும் வீரர்களின் பேரோசையுமாகப் போர் தொடங்கியபோது கருங்கைவாணனின் கண்கள் முன்கள நிகழ்வுகளைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தன. அவன் தனது பெரும்படையை மூன்றாகப் பகுத்திருந்தான்.

முதல்நிலைப் படை சீறிப்பாய்ந்து தாக்குதலைத் தொடங்கியது. தனது படையின் மூன்றில் ஒரு பகுதியை மட்டுமே முதல்நிலையில் நிறுத்தியிருந்தான். இரண்டாம்நிலைப் படை தேவைப்பட்டால் களம் இறங்க ஆயத்தமாக இருந்தது. மூன்றாம்நிலைப் படை எந்த வகையிலும் களமிறங்கும் சூழல் வராது எனக் கணித்திருந்தான். முதல்நிலைப் படையின் நடுவில் நின்றிருந்தான் அவன்.

இரண்டாம்நிலைப் படையின் இறுதிப்பகுதியில் சோழவேழனும் பொதியவெற்பனும் உதியஞ்சேரலும் நின்றிருந்தனர். அவர்களை அடுத்துதான் மூன்றாம்நிலைப் படை நின்றிருந்தது. அதைக் கடந்தே மூஞ்சல் இருந்தது. மூஞ்சலுக்குள்தான் குலசேகரபாண்டியன் இருந்தார். அவருக்கு அருகில் உள்ள கூடாரம் ஒன்றில் நீலன் கட்டப்பட்டுக்கிடந்தான்.

போர்க்களத்தின் தலைமைத் தளபதி தாக்குதலின் முகப்பில் நின்றால் அவனால் படையை வழிநடத்த முடியாது. ஆனால், தாக்குதலின் முகப்பில் தனது படை வெளிப்படுத்தும் ஆற்றலை உணர்ந்தவனாக இருக்க வேண்டும். அதற்குத் தகுந்தே போர்க்களத்தில் தளபதி இருக்கவேண்டிய இடம் தீர்மானமாகிறது. கருங்கைவாணன், தனது வாழ்வின் பெரும்பகுதியைப் போர்க்களத்தில் கழித்தவன். களத்தாக்குதலின் தன்மையையும் வேகத்தையும் அவனால் ஓசைகொண்டே மதிப்பிட முடியும்.

தளபதியின் வலிமை, படையைக் கொண்டுசெலுத்துவதில் இருப்பதாக ஒருகாலத்தில் நம்பப்பட்டது. ஆனால், களப்போர் என்பது வீரமும் ஏமாற்றும் கலந்த ஒரு கலவை. தாக்குவதும் திரும்புவதும் பின்வாங்குவதும் சம முக்கியத்துவம் உள்ள செயல்பாடுகளே. ஆனால், இவையெல்லாம் சரியான ஒருவனின் கணிப்பின் வழியே நடந்தால் மட்டுமே அந்தப் படை வெற்றியைக் கொய்ய முடியும். கருங்கைவாணன், வேறு எந்த ஒரு தளபதியையும்விட நீண்ட போர் அனுபவம்கொண்டவனாக இருந்தான். இதுவரை எந்த ஒரு மனிதனின் உத்தரவுக்கும் இவ்வளவு எண்ணிக்கையிலான படைவீரர்கள் கீழ்ப்பணிந்து நின்றது கிடையாது. முதன்முறையாக அந்தப் பெரும்வாய்ப்பு கருங்கைவாணனுக்குக் கிட்டியுள்ளது. முப்பெரும் பேரரசர்கள் தன்னோடு போர்க்களத்தில் வாள் ஏந்தி நிற்கின்றனர். அனைத்தையும் உணர்ந்தாலும் எதன்பொருட்டும் கவனத்தைச் சிதறவிடாமல் முன்களத்தில் நிகழும் ஆயுதங்களின் உரசல் ஓசையை மதிப்பிடுவதிலேயே கவனமாக இருந்தான்.



குளவன்திட்டின்மீது இருந்து போரைப் பார்த்துக்கொண்டிருந்தான் பாரி. பள்ளத்தாக்கு ஒன்றில் வெகுதொலைவிலிருந்து மரம், செடிகொடிகளை அசைத்துவரும் காற்று செங்குத்தாய் நிற்கும்

கரும்பாறையின் மீது மோதுவதுபோல, நீண்டு நகர்ந்துவரும் வேந்தர்படை பறம்புப்படையோடு மோதியது.

பாரி தனது படையை மூன்று நிலைகளாகப் பிரிக்கவில்லை; ஒரே நிலையில்தான் வைத்திருந்தான். ஆனால், தாக்குதல் உத்தியை மூன்றாகப் பிரித்திருந்தான். போர், பகலின் இருபது நாழிகையில் நடக்கிறது. முதல் பத்து நாழிகையில் கடைப்பிடிக்க வேண்டிய உத்தியை ஒன்றாகவும், அடுத்த ஐந்து நாழிகைக்கான உத்தியை வேறொன்றாகவும், இறுதி ஐந்து நாழிகைக்கான உத்தியை மற்றொன்றாகவும் தீர்மானித்திருந்தான்.

தீர்மானம் என்பது, முன்திட்டமிடல் மட்டும்தான். எந்த ஒரு முன்திட்டமிடலும் வாய்ப்புகளை மையப்படுத்தியே வடிவமைக்கப்படுகிறது. வாய்ப்பற்றவற்றின் காரணிகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டாலும் அதற்கு வடிவம்கொடுக்க முடிவதில்லை. அதனால்தான் களத்தின் தேவைக்கேற்ப புதிய முடிவுகளை விரைந்து எடுக்கும் தளபதி வெற்றியை அடைகிறான். பறம்பின் தளபதிகள் அனைவருக்கும் திட்டம் தெளிவாக விளக்கப்பட்டிருந்தது. ஆனால், நிலைமை என்பது போர்க்களத்தில்தான் தீர்மானமாகிறது. அதற்குத் தகுந்த புதிய முடிவுகளை அவர்கள் எடுப்பதில் எந்தத் தடையுமில்லை. ஆனால் வேந்தர்படையில் முடிவெடுக்கும் அதிகாரம், கருங்கைவாணனுக்கும் அவனுக்கு மேலே இருப்பவர்களுக்கும்தான் இருந்தது; முன்களத்தில் நின்று போரிடும் தளபதிகளுக்கில்லை.

கருங்கைவாணன் கணித்ததுபோலவே வேந்தரின் குதிரைப்படை எகிறி முன்னேறியது. எதிரி தாக்குப்பிடித்து நிற்பான் என அவன் கணித்ததில் பாதியளவு நேரம்கூடப் பறம்புப்படையால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. அலையலையாய் வந்து எகிறின குதிரைகள். பறம்புவீரர்களால் முன் நுழைந்து உள்ளே புகமுடியாத அளவுக்கு வேகமும் அடர்த்தியும்கொண்டதாக இருந்தது வேந்தர்படை. அதன் தாக்குதலின் வேகமறிந்து திசையைத் திருப்பியது பறம்புப்படை.

பறம்புப்படை திரும்பத் தொடங்கியதும் பெருங்கூச்சலிட்ட உறுமன்கொடி, கையில் இருந்த வாளை இருமுறை சுழற்றிப் பேரோசை எழுப்பினான். அவனது ஓசையைக் கேட்டதும் குதிரைப்படையின் முரசொலிப்பாளன் முரசுகளை மாற்றி ஒலித்தான். பின் திரும்பும் பறம்புவீரர்களை வேந்தர்களின் குதிரைப்படை வீரர்கள் உற்சாகத்தோடும் ஆவேசத்தோடும் விரட்டத் தொடங்கினர்.

ஆறு அணிகளாகப் பிரிந்து படைவீரர்கள் பின்னோக்கிச் செல்ல உத்தரவிட்டிருந்தான் இரவாதன். அந்த உத்தரவு, போர் தொடங்கும் முன்பே திட்டமிடப்பட்டது. வேந்தர்களின் படையை மிகச் சிறிது நேரம் மட்டுமே எதிர்கொண்டு தாக்கிவிட்டு, கலைந்து பின்செல்ல வேண்டும் என்பது முன்முடிவு. பறம்புவீரர்கள் திட்டமிட்டதுபோலவே குதிரையைத் திருப்பினர். ஆனால், திரும்பிய வேகத்தில் குதிரைகளின் ஓட்டம் பலமடங்கு பெருகியது. மலை மேடுகளிலே பாய்ந்து போகும் பழக்கம்கொண்ட பறம்பின் குதிரைகள், கணநேரத்தில் உச்சவேகத்தை அடைந்தன. அவர்களை அளவற்ற வேகத்தில் விரட்டிவந்தது வேந்தர்படை.

விரட்டிச்செல்லத் தன் படைகளை அடுத்தடுத்து அனுப்பிக்கொண்டே இருந்தான் உறுமன்கொடி.


இத்துடன் பறம்பின் குதிரைப்படை முழுமுற்றாக அழியவேண்டும் என்னும் ஆவேசத்தோடு படைகளுக்கு உத்தரவிட்டான்.

இரவாதன் கணித்ததைவிட மிகக் குறுகிய தொலைவிலேயே வேந்தர்படைக் குதிரைகள் வேகத்தை இழந்தன. பாய்ந்து முன்னகரும் கால்களால் அடுத்த அடியை எடுத்துவைக்க முடியவில்லை. தேங்கத் தொடங்கின.

`ஈக்கிமணலும் கூர்முனைகொண்ட கருமணலும் தகித்துக்கிடக்கும் நிலம் அது' என்று தட்டியங்காட்டு மண்ணைப் பற்றி இகுளிக்கிழவன் சொன்னதும் பாரி முடிவுசெய்தான், வேந்தர்படைக் குதிரைகளின் குளம்புகள் இவற்றைத் தாங்காது என்று. பறம்பின் குதிரைகள் மலைக்காடுகளில் காலம் முழுமையும் அலைபவை. எனவே, அவற்றுக்கு சமவெளிக் குதிரைகளுக்குப் போடுவதுபோல கால் குளம்பில் அரைவட்ட வடிவிலான குளம்புக்குறடு போடுவதில்லை. பாறைகளின் கூர்முனை, குளம்பின் இதர பகுதியைக் குத்திக் கிழித்துவிடும். தொடக்க நாளில் இதற்கு மாற்று என்ன செய்வது என, பறம்பின் மருத்துவர்கள் தீவிரமாக ஆலோசித்தார்கள். அப்போதுதான் செம்புக்களிமண்ணைப் பூசுவது என முடிவானது. செம்புக்களிமண்ணைப் பாதக்குளம்பு முழுவதும் பூசினால், அது ஆமையின் ஓட்டைத் திருப்பிப் போட்டதுபோல குளம்பின் மேல் முழுமையாக உட்கார்ந்துகொள்ளும். பாறை வெடிப்புகளிலும் கூர்முனைக் கல்லிலும் நடந்தாலும் தாவினாலும் குளம்புக்கு ஒன்றும் ஆகாது. எல்லாவகையான கவசமாகவும் அது இருக்கும். அன்றிலிருந்து பறம்பின் குதிரைகள் அனைத்துக்கும் செம்புக்களிமண்ணே குளம்புப்பூச்சாகப் பூசப்படுகிறது.
ஆனால், சமவெளிக் குதிரைகளுக்கு இரும்பால் ஆன அரைவட்ட வடிவிலான குளம்புக்குறடுதான் அடிக்கப்படும். குளம்பின் நடுப்பகுதி எதுவும் அடிக்கப்படாமல் தன்னியல்பிலேயே இருக்கும். போர்க்குதிரைகள் வீரனைச் சுமந்தபடி பாய்ந்து முன்னத்திக் கால்களை ஊன்றும்போது நிலத்தின் தன்மைக்கு ஏற்ப குளம்பின் கால் பகுதி முதல் முக்கால் பகுதி வரை மண்ணுக்குள் புதைந்து மேலெழும். இது, ஈக்கிமணலும் கருமணலும் நிரம்பியுள்ள நிலத்தில் குதிரைகளை என்ன வகையில் பாதிக்கும் என்பது எளிதாகக் கணிக்கக்கூடிய ஒன்றாகத்தான் இருந்தது.

அதனால்தான் குதிரைப்படையின் தளபதியாக எப்போதும் செயல்படும் கூழையனைத் தேர்ப்படைக்கு நியமித்துவிட்டு, இரவாதனைக் குதிரைப்படையின் தளபதியாக அனுப்பிவைத்தான் பாரி. வேந்தர்களின் வலிமைமிகுந்த படையான குதிரைப்படையை எவ்வளவு வேகமாகக் குறைக்கிறோமோ அவ்வளவு வேகமாக வெற்றியை நெருங்க முடியும். எனவே, குதிரைப்படையைச் சூறைக்காற்றின் வேகத்தில் அழித்தொழிக்கும் உத்தியைக் கடைப்பிடிப்பது என முடிவெடுத்தான் பாரி. அதற்குப் பொருத்தமானவன் இரவாதனே. அவனது வாள்வீச்சின் வேகம் யாராலும் எதிர்கொள்ள முடியாதது. சூளூர் வீரர்களின் படைத்தொகுப்பு முழுமையும் இரவாதனின் கீழே அணிவகுக்கச்செய்து மொத்தக் குதிரைப்படையையும் அவனிடம் ஒப்படைத்தான்.

பறம்புவீரர்களை விரட்டிவந்த வேந்தர்களின் குதிரைப்படை, பாய முடியாமல் தேங்கத் தொடங்கியது. மேலே அமர்ந்திருந்த வீரர்கள் அந்தக் குதிரைகளை அடித்து ஓட்ட முனையும்போது முன்காலைத் தூக்கி வைக்க முடியாமல் அவை திணறின.



இரவாதனும் அவன் தோழர்களும் கணித்த இடத்தைவிடச் சற்று முன்னதாகவே வேந்தர்களின் குதிரைப்படை தேங்கத் தொடங்கியதும், அவர்களை நோக்கித் தங்களின் குதிரைகளைத் திருப்பிய பறம்பு வீரர்கள், குதிரைகளின் கடிவாளங்களைச் சுண்டி இழுத்தனர். எதிரிகள், தங்களை நோக்கி வருவது அறிந்து வேந்தர்படை வீரர்கள் தங்களின் குதிரைகளை வேகவேகமாக இயக்க முற்படும்போது மின்னல் வேகத்தில் வந்த வாள்களால் தலைகள் சரிந்துகொண்டிருந்தன. இயங்க முடியாத குதிரைகளின் மேலிருந்து திணறிய வீரர்கள் அடுத்தடுத்த கணங்களில் குதிரையிலிருந்து சரிந்தனர்.

விரட்டிச் சென்ற தங்களின் குதிரைப்படை, எதிரியை முழுமுற்றாக அழித்துத் திரும்பும் எனப் பார்த்திருந்தான் உறுமன்கொடி. சிறிது நேரத்திலேயே பறம்பின் கொடி ஏந்திய குதிரைவீரன்தான் முன்னோக்கிப் பாய்ந்து வந்துகொண்டிருந்தான். உறுமன்கொடிக்கு, ஒரு கணம் எதுவும் புரியவில்லை. `பன்னிரு சேனைமுதலியைக்கொண்ட முதற்படைப்பிரிவு எங்கே போனது... ஏன் யாரும் மிஞ்சவில்லை?' எனச் சிந்திக்கும் முன், அடுத்த சேனைவரையனின் தலைமையிலான பன்னிரு படைப்பிரிவுகளும் அடுக்கடுக்காகத் தாவிப் பாய்ந்து முன்னேறின.

இரவாதன் குழு, மோதல்போக்கைச் சற்றே வெளிப்படுத்திவிட்டு, குதிரைகளை மீண்டும் பின்னோக்கித் திருப்பியது. தங்களின் முதற்பிரிவை அழித்த எதிரிகளைப் பழிதீர்க்கும் எண்ணத்தில் வேந்தர்களின் படைவீரர்கள் குதிரைகளை விரட்டி வந்தனர். ஈக்கிமணல் குதிரைகளின் குளம்புகளைக் கிழித்து உள்ளிறங்கும்போது பறம்பின் வாள்கள் அதைவிட ஆழமாக வீரர்களின் உடல்களுக்குள் இறங்கிக்கொண்டிருந்தன. குதிரைப்படையை அடுத்தடுத்து விரைவுபடுத்த ஆயத்தமாக இருந்தான் உறுமன்கொடி.

விற்படைத் தளபதி உதிரனின் உத்தரவுப்படி முதல்நிலைத் தாக்குதலில் அளவில் சிறுத்த அம்புகளையே பயன்படுத்தினர் வீரர்கள். நாண்களின் விசை கூட்டிக்கொடுக்க, அடுத்தடுத்து வெவ்வேறுநிலை அம்புகளைப் பயன்படுத்தினர். பறம்புவீரர்கள் தொடுக்கும் அம்புகள் எதிரிகளின் மீது ஈட்டியைப்போலப் பாய்ந்தன. அவற்றின் வேகமும் வலிமையும் ஒப்பிட முடியாததாக இருந்தன.

எதிரிகளைத் தங்களின் அம்புகளால் வலிமையோடு தாக்கத் தேவையான தொலைவுக்கு முன்செல்ல வேந்தர்படையால் முடியவில்லை. ஏனென்றால், அதைவிட ஒரு பங்கு அதிகமான தொலைவிலிருந்தே பறம்புவீரர்களால் வலிமையான தாக்குதலைத் தொடுக்க முடிந்தது.

பறம்புவீரர்கள் எய்யும் அம்புகள் சீறிப்பாய்ந்தவண்ணமிருக்க, வேந்தர்படையின் அம்புகள் பலவும் பாதிப்பு ஏதுமின்றிப் பணிந்துகொண்டிருந்தன. உதிரன் தனது படைக்குக் கொடுத்த உத்தரவு, வலிமை குறைந்த அம்புகளை மட்டுமே தொடக்கநிலையில் பயன்படுத்த வேண்டும் என்பது.

துடும்பன் இதை எதிர்பார்த்துதான் இருந்தான். பறம்புவீரர்களை விற்போரில் வீழ்த்த முடியாது என அவனுக்கு நன்கு தெரியும். அவர்களின் தாக்குதல் மற்ற படைப்பிரிவின் பக்கம் போய்விடாமல், தங்களை நோக்கியே இருக்குமாறு பார்த்துக்கொள்வதுதான் துடும்பனுக்குக் கருங்கைவாணனின் உத்தரவு. எனவே, தாக்கியவாறு முன்னகரும் பறம்புப்படையைச் சமாளித்தபடி சற்றே பின்வாங்கிக்கொண்டிருந்தான் துடும்பன்.

வேந்தர்களின் வாள்படை, முன்னோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. தேக்கன் தலைமையிலான பறம்புப்படை, முன்வகுத்த திட்டத்தின்படி பின்நகர்வதற்கான உத்தியையே பின்பற்றின. சாகலைவன் உற்சாகப்பெருக்கில் தனது படையை முன்னகர்த்திக்கொண்டிருந்தான்.

தேர்ப்படையின் தளபதி நகரிவீரனுக்கு, தனக்கு முன்னால் நிற்பதை ஒரு படை எனக் கருதவே மனமில்லை. தாக்குதலுக்கான வடிவத்தில் வலிமை மிகுந்த தேர்கள் வரிசை வரிசையாக முன்னகர்ந்துகொண்டிருந்தன. ஆனால், பறம்பின் தரப்பில் நின்றவற்றை `தேர்' என்றே வகைப்படுத்த முடியாது எனத் தோன்றியது. உழவு வண்டிகளைப் போர்த்தேர்களாக மாற்றி எடுத்துவந்துள்ளனர் எனக் கருதினான். வலிமையற்ற அவற்றின் தன்மை பார்வையிலேயே தெரிந்தது.

தேரின் மீது நிற்கும் வீரன்தான் மற்ற அனைத்துப் படைவீரர்களையும்விடத் திறன்மிக்கவனாக இருக்க வேண்டும். வில், வாள், வேல் ஆகிய மூன்று ஆயுதங்களையும் கையாளத் தெரிந்த பெருவீரன் மட்டுமே தேரின் மீது நின்று போரிட முடியும்.
அதைவிட முக்கியம், போரிடும் வீரனுக்கும் தேரை ஓட்டும் வளவனுக்கும் இருக்கவேண்டிய ஒத்திசைவு. குதிரைகளை அசையவிடாமல் நிறுத்திவைக்கவும் இசைவுக்கு ஏற்ப திருப்பிவைக்கவும் அவன் வீரனின் மனமறிந்து செயல்படுபவனாக இருக்க வேண்டும். போர்நிலம், எவ்விடமும் சமதளத்தைக் கொண்டதன்று; மேடுபள்ளங்களும் ஏற்ற இறக்கங்களும்கொண்ட பாழ்நிலமாகத்தான் இருக்கும். எனவே, தேரைச் சிறிது முன்னேற்ற வேண்டுமானாலும் குதிரைகளை விரைந்து இழுக்கச் செய்து முன்னகர்த்த வேண்டும். சுண்டி நகரும் தேரின் மீது நின்று போரிடுபவன் ஆயுதங்களைக் கையாளுதல் எளிதன்று.

சக்கரங்களை உருட்டுவதையும் உருட்டாமல் நிறுத்துவதையும் திறம்படச்செய்கிற வளவனின் கையில்தான் மேலே நின்று போராடும் வீரனின் முழு ஆற்றலும் இருக்கிறது.

நாக்குக்கு மத்தியில் கடைவாயிலில் பொருந்தியிருக்கும் கடிவாளத்தை எந்த நேரமும் இழுத்துப் பிடித்தபடியே இருக்கும் சூழல் ஏற்பட்டால், எந்தக் குதிரையும் தனது ஒழுங்கை ஒரு துள்ளலில் உதறியெறிந்துவிடும். அதை உணர்ந்தவனாக வளவன் இருந்தால் மட்டுமே முழுநாளும் போர்க்களத்தில் கட்டுப்பாடு இழக்காமல் குதிரையைச் செலுத்த முடியும். வளவன் தேரை நிறுத்தும் தன்மையைப் புரிந்துகொண்டு தாக்குதலை முன்னெடுக்கும் குணமும் புரிதலும் போரிடும் வீரனுக்கு வேண்டும்.




குதிரையின் மனநிலை, வளவனின் திறமை, வீரனின் வலிமை ஆகிய மூன்றும் இணைந்தே தேர்ப்படையின் ஆற்றலாய் வெளிப்படுகிறது. கூழையன் தனது படையை சீரான வேகத்தில் தாக்குதலைத் தொடுக்க ஆணையிட்டி ருந்தான். ஆனால், வேந்தர்களின் படைத்தளபதி நகரிவீரன் முழு ஆற்றலையும் வெளிப்படுத்தி முன்னேறப் பாய்ந்து செல்ல உத்தரவிட்டான்.

நாழிகைப்பரணின் நேர் எதிரே கண் பார்வையின் கடைசிப் பகுதியைத்தான் யானைப்போருக்கான களமாக திசைவேழர் ஒதுக்கியிருந்தார். தட்டியங்காட்டின் கடைக்கோடிப் பகுதி அது. உச்சங்காரியின் தலைமையில் வேந்தர்களின் யானைப்படை நின்றிருந்தது. பறம்பின் தரப்பில் எந்த ஒரு யானையும் களத்துக்கு வரவில்லை.

நீண்டநேரத்துக்குப் பிறகு ஒரே ஒருவன் மட்டும் குதிரையில் போர்க்களம் நோக்கி வந்தான். வருவது யார் என உற்றுப்பார்த்திருந்தான் உச்சங்காரி.

வந்து நின்றான் வேட்டூர்பழையன். யானைப்படையை எதிர்த்துத் தன்னந்தனியாக ஒரு கிழவன் குதிரையில் வந்து நிற்பது எதனால் என யாருக்கும் புரியவில்லை.

வேட்டூர்பழையன் சொன்னான், ``பறம்பின் தரப்பில் யானைப்படை ஏதுமில்லை.”

உச்சங்காரி அதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தான். போர்விதிகளின்படி யானைப்படை யானைப்படையோடு தான் மோத வேண்டும். அப்படியென்றால் என்ன செய்வது எனச் சிந்தித்த அடுத்த

கணம் உச்சங்காரி முடிவெடுத்தான், ``அப்படியென்றால் நாங்கள் பறம்புக்குள் நுழைவோம்.” வேட்டூர்பழையன் கைகளை விரித்துக் காட்டிச் சொன்னான், ``உங்களின் விருப்பம்.”

அதே வேகத்தோடு உச்சங்காரி தனது படைகளுக்கு ஆணை பிறப்பிக்க ஆயத்தமானான். அதற்குள் அருகில் இருந்த இரண்டாம்நிலைத் தளபதி சொன்னான், ``தளபதி, நம்மைச் சிக்கவைத்து அழிக்கும் திட்டம் இதற்குள் இருப்பதாகக் கருதுகிறேன். எனவே, அவசரப்பட்டு முடிவெடுக்க வேண்டாம்.”

வட்டாற்றுத் தாக்குதலில் சோழனின் யானைப்படையை முழுமுற்றாக அழிந்த கதை அனைவருக்கும் தெரியும். அறிவிப்புக்கு ஆயத்தமான உச்சங்காரி, சற்றே நிதானம்கொண்டான். கருங்கைவாணனை ஆலோசித்து, பிறகு முடிவெடுக்கலாம் என நினைத்தான்.

முதல்நிலைப் படையின் இறுதிப்பகுதியில் நின்றிருந்த கருங்கைவாணனுக்கு ஒவ்வொரு திசையிலிருந்தும் செய்திகள் வந்தவண்ணம் இருந்தன. அவனிடமிருந்து வேந்தருக்குச் செய்திகள் சென்றவண்ணம் இருந்தன. சம வலிமைகொண்ட இரு படைகள் மோதினால், மோதலின் தொடக்கமே மொத்த ஆற்றலையும் வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். ஆனால், இங்கு நிலைமை அப்படியன்று. சின்னஞ்சிறு படை ஒன்று மாபெரும் படையின் மீது தாக்குதல் தொடுத்துக்கொண்டிருக்கிறது. எனவே, பெரும்படையின் தலைமைத் தளபதி மிக நிதானத்தோடு வந்துசேரும் செய்திகளைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

எதிர்பார்த்ததைப்போல வாள்படையும் தேர்ப்படையும் முன்னேறிக்கொண்டிருந்தன. சாகலைவனும் நகரிவீரனும் அடுத்தடுத்த செய்தியை அனுப்பிக்கொண்டிருந்தனர். விற்படையின் தளபதி துடும்பனும் வகுக்கப்பட்ட உத்தியின் அடிப்படையில் எதிரியின் தாக்குதலைக் கையாண்டுகொண்டிருந்தான். மூன்று படைப்பிரிவுகளிலும் எத்தனை சேனைமுதலிகள் முன்களத்தில் போரிட்டுக்கொண்டிருக்கின்றனர் என்ற கணக்கை அருகில் இருந்தவர்கள் சொல்லிக்கொண்டிருந்தனர்.

கருங்கைவாணன் பெரிதும் எதிர்பார்த்திருந்த குதிரைப்படையின் முன்னேற்றம் பற்றி இன்னும் செய்திகள் வந்துசேராமல் இருந்தன. அங்கிருந்துதான் முதல்நிலை வெற்றியை அவன் எதிர்பார்த்திருந்தான். அந்த வெற்றியின் அடிப்படையில்தான் அவனது திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. பறம்பின் மொத்தப் படைவீரர்களின் எண்ணிக்கையைவிட வேந்தர்களின் குதிரைப்படை வீரர்களின் எண்ணிக்கை அதிகம். எனவே, முதல்நிலையில் பறம்புப்படை பின்வாங்கிவிட்டால் உறுமன்கொடி தனது வலிமையான குதிரைப்படையைக்கொண்டு பறம்புப்படையை அரைவட்டச் சுற்றில் வளைக்கும் வியூகத்தைத் திட்டமிட்டிருந்தான்.

இடதுமுனையிலிருந்து வந்து சேர்ந்த செய்தி, யானைப்படை பற்றியதாக இருந்தது. உச்சங்காரி, பறம்புக்குள் நுழைய அனுமதி கேட்டுச் செய்தி அனுப்பினான். வட்டாற்றுத் தாக்குதலில் சோழனிடமிருந்து கைப்பற்றப்பட்ட யானைகளே பெரும் எண்ணிக்கையிலானவை. எனவே, பறம்பின் தரப்பில் வலிமையான யானைப்படை இருக்கும் என்றுதான் அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், தங்களிடம் யானைப்படை இல்லை என்று எதிரிகள் சொல்வது போர்த்தந்திரமன்றி வேறில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. ``அவர்களின் திட்டத்தில் நாம் போய்ச் சிக்கிக்கொள்ளக்

கூடாது. எனவே, பறம்புக்குள் போய்த் தாக்கும் நடவடிக்கை வேண்டாம். அடுத்து என்ன செய்வது என்பதை உத்தரவு கிடைத்த பிறகு நிறைவேற்றுக" என்று கூறினான் கருங்கைவாணன்.

இந்தச் செய்தி போய்க்கொண்டிருக்கும் போதுதான் குதிரைப்படைத் தளபதி உறுமன்கொடி அனுப்பிய செய்தி வந்துசேர்ந்தது. ``ஒரு சேனைவரையனும் பதினாறு சேனைமுதலிகளும் நமது தரப்பில் இறந்துள்ளனர்" என்றான் அவன்.

ஒரு கணம் திணறிப்போனான் கருங்கை வாணன். முற்பகலுக்குள் பறம்புப்படையை அழித்தொழிக்கும் வலிமைகொண்டது என எதிர்பார்க்கப்பட்ட குதிரைப்படையிலிருந்து வந்துள்ள முதற்செய்தி, எந்த வகையிலும் நம்பமுடியாததாக இருந்தது.

உறுமன்கொடியை நோக்கி விரையலாமா என நினைத்துக்கொண்டிருந்தபோதுதான் காரமலையின் மேலிருந்து காரிக்கொம்பூதும் ஓசை கேட்டது. ஓசைவந்த திசை நோக்கித் திரும்பிப் பார்த்தான் கருங்கைவாணன்.

பாரியின் திட்டப்படி முதல் பத்து நாழிகை முடிவடைந்ததைக் குறிக்கும் காரிக்கொம்பு ஓசை அது.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-92

காரிக்கொம்போசை மேலெழும்போது, நடுப்பகல் கடந்திருந்தது; போர்க்களத்தின் சரிபாதி நேரம் முடிவடைந்திருந்தது. முன்களத்திலிருந்து அடுத்தடுத்து வந்த செய்திகள் கருங்கைவாணனுக்குக் குழப்பத்தையே உருவாக்கின. உறுமன்கொடி குதிரைப்படையில் நிகழ்ந்துள்ள பாதிப்பைப் பற்றி அனுப்பிய செய்தி, அதிர்ச்சியை உருவாக்கியது. அது உண்மை என நம்புவதே கடினமாக இருந்தது. ஆனால், போர்க்களத்தில் தனக்கு வந்துசேரும் செய்தி உண்மையா என ஆராய்வதில் தளபதி நேரத்தைச் செலவிடக் கூடாது. ஏனென்றால், அது அவன் படை அவனுக்கு அனுப்பும் செய்தி. அந்தச் செய்தியைக் கொண்டு அடுத்து செய்ய வேண்டியதைத்தான் சிந்திக்க வேண்டும்.

குதிரைப்படை சந்தித்த அதே சிக்கலைத்தான் தேர்ப்படையும் சந்தித்தது. ஈக்கிமணல்கள், பாய்ந்து செல்லும் குதிரையின் வேகத்தைக் கட்டுப்படுத்தின. நகரிவீரன், வெகுவிரைவில் தனது ஆவேசத்தை இழந்து குழப்பத்துக்குள் சிக்கினான். பறம்பின் தரப்பில் கூழையனின் தாக்குதல் வேகம், நேரம் ஆக ஆக அதிகரிக்கத் தொடங்கியது. வேந்தர்படையின் தேர்கள் விரைந்து செல்ல முடியாத நிலையில் பறம்பின் தேர்கள் பாய்ந்து முன்னகர்ந்துகொண்டிருந்தன.



வாள்படை மோதும் களத்தில்தான் வேந்தர்படை வெகுதொலைவு முன்னேறியிருந்தது. வாள்படைத் தளபதி சாகலைவன், மூர்க்கத்தோடு தாக்கி முன்னேறிக்கொண்டிருந்தான். ஆனாலும், பறம்பின் தரப்பில் பேரிழப்பு எதுவும் நிகழாமலிருந்தது. நீண்டநேரத்துக்குப் பிறகுதான் அவன், பறம்புவீரர்கள் அணிந்திருக்கும் மெய்க்கவசத்தை உற்றுக்கவனித்தான்.

வேந்தர்களின் தரப்பில் தளபதிகள், சேனைவரையர்கள், சேனைமுதலிகள், மெய்க்காப்பாளர்கள் ஆகியோர் மட்டுமே உடலைக் காக்கும் மெய்க்கவசம் அணிந்திருந்தனர். மற்ற வீரர்கள் அனைவரும் கைகளில் கேடயத்துடனும் வாளுடனும்தான் களத்தில் போரிட்டுக்கொண்டிருந்தனர். பறம்புவீரர்கள் அனைவரும் மெய்க்கவசம் அணிந்திருந்தனர். ஆனால், அது வேந்தர்படையினர் அணிந்திருந்ததைப் போன்று இரும்பால் ஆன மிகுந்த எடைகொண்ட கவசமல்ல; மாறாக, சிவப்புச் சித்திரமூலி, செங்கொடிவேலி ஆகியவற்றை அரைத்து முறியன் ஆசான் செய்தது. முறியன் ஆசான் இரலிமேட்டுக்கு வந்ததும் முதலில் இட்ட கட்டளையே இந்த வகைச் செடிகளைக் கொண்டுவந்து சேர்க்கச் சொல்லித்தான். பறம்பெங்கும் இருக்கும் ஆண்களும் பெண்களும் அடுத்த ஓரிரு நாளில் போதுமான அளவுக்குக் கொண்டுவந்து சேர்த்தனர். அவற்றைத் தகுந்த சேர்மானத்தோடு அரைத்து, பனைநாரோடு பிசைந்து, வெயில் சூடின்றி நிழலிலே உலர்த்தினர். ஆறிய கஞ்சியில் திரண்ட மேலாடையைப்போல அது உலர்ந்தது. தோலின் குணம்கொண்ட, ஆனால் பாறையின் பக்கு போன்றது அந்த ஆடை. ஒருவகையில் உடும்பின் மேற்தோல் போன்றது. அதைத் துளைத்துக் கொண்டு எந்தவோர் ஆயுதமும் எளிதில் உட்புக முடியாது.

பறம்புவீரர்கள் அந்த மெய்க்கவசத்தையே அணிந்திருந்தனர். மார்பின் மேல் போர்த்தி, பின்புறக் கயிறுகளால் இழுத்துக் கட்டியிருந்தனர். கனமில்லாத ஆடையாகவும் அதே நேரத்தில் அம்பும் வாளும் எளிதில் உட்புக முடியாததாகவும் இருந்தது அந்த மெய்க்கவசம்.

வேந்தர்களின் விற்படையின் தாக்குதிறனைப் பறம்பின் தாக்குதிறனோடு ஒப்பிட்டால், சரிபாதிக்கும் குறைவுதான். அதுவும் உலோக வில் ஏந்தியவர்கள் படையின் முன்னணியினர் மட்டுமே. அவர்களின் அம்புதான் வீரியத்துடன் சீறின. மற்ற வீரர்களின் அம்புகளோ பறம்புவீரர்கள் நிற்கும் தொலைவை வந்தடையும்போதே உயிரற்றதாகிவிடுகின்றன.

விற்படை, தேர்ப்படை, யானைப்படை ஆகிய மூன்று படைகளிலும் முதன்மையான ஆயுதம் வில்தான். ஆனால், வேந்தர்படை வீரர்கள் எதிரிகளைத் தாக்குவதற்காகத் தங்களை நிலைநிறுத்திக்கொள்ளவேண்டிய இடத்துக்கு அருகில்கூட வர முடியாதபடி இருந்தது பறம்புப்படையின் தாக்குதல். அதுமட்டுமன்று, பறம்புவீரர்கள் அனைவரும் மெய்க்கவசம் அணிந்தவர்களாக இருந்தனர். எனவே, பறம்பின் தரப்பில் ஒரு வீரனைச் சாய்ப்பதே பெரும்பாடாக இருந்தது. பறம்பின் வாள்படையில் உள்ள அனைவரும் மெய்க்கவசம் அணிந்திருந்ததால், முன்னேறிச் சென்று தாக்கிய சாகலைவனால் எதிரிகளை வீழ்த்தி முன்னேற முடியவில்லை. நீண்ட நேரத்துக்குப் பிறகுதான் அவன் உணர்ந்தான், எதிரிகள் விலகிப் பின்வாங்கும் வழியில் மட்டுமே தனது படை முன்னேறுகிறது என்றும், அவர்களைச் சிதைத்தோ அழித்தோ முன்னேறவில்லை என்றும். ஆனாலும், ஒரு கிழவன் தனக்கு எதிரான படைக்குத் தலைமையேற்கிறான் என்பதை அவனால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அம்பும் ஈட்டியும் போன்றதன்று வாள். அதன் ஒவ்வொரு வீச்சிலும் வீரனின் முழு ஆற்றலும் வெளிப்பட்டாக வேண்டும். கைப்பிடியின் இறுகிய விரல்களுக்குள் காற்று புகுந்தால்கூட வாளின் வீச்சு வலிமையிழக்கும்.

போர் என்பது, உயிரைவைத்து விளையாடும் விளையாட்டு. அதை ஒவ்வொரு கணமும் உணரச்செய்வது வாள்சண்டை. ஈட்டியும் அம்பும்போல, எங்கோ இருப்பவனை நோக்கிய தாக்குதல்

அன்று இது. தான் பிடித்திருக்கும் கேடயத்தில் மோதும் எதிரியின் வாள் வலிமையை, அந்த அழுத்தம்கொண்டு மதிப்பிட முடியாதவனால் ஒருபோதும் வெற்றியை ஈட்ட முடியாது.

# வீரயுக நாயகன் வேள்பாரி 92

பறம்பின் தரப்பில் வாள்படைக்குத் தலைமையேற்ற தேக்கன், எதிரிகளை முடிந்த அளவுக்குத் தனது எல்லைக்குள் உள்வாங்கும் உத்தியையே கடைப்பிடித்தான். எனவே, வேந்தர்படை மிக அதிக தொலைவுக்குப் பறம்பின் தரப்புக்குள் இழுக்கப்பட்டிருந்தது. சாகலைவன், தேக்கனுடனான நேரடித் தாக்குதலை எதிர்பார்த்து முன்னகர்ந்து கொண்டிருந்தான்; கிழவனை வெட்டிச்சரிப்பதன் மூலம் எதிரியின் தளபதியை முதலில் வீழ்த்திய பெருமையை அடைவதற்காக விரைந்து கொண்டிருந்தான்.

வேந்தர்படை இப்போது நிலைகொண்டுள்ள வரைபடம் மிகவும் ஏற்ற இறக்கத்தோடு இருக்கிறது. வாள்படையானது எதிரிகளின் தரப்புக்குள் மிகவும் முன்னேறியிருக்கிறது. ஆனால், விற்படையும் குதிரைப்படையும் தனது தரப்புக்குள் உள்வாங்கியிருக்கின்றன. தேர்ப்படையானது இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கிறது. இதுபோன்ற நிலைதான் தலைமையேற்கும் தளபதிக்குப் பெரும் நெருக்கடியை உருவாக்கும். படையின் இத்தகைய நிலையால் அடுத்து உருவாகப்போகும் சூழலை எளிதில் கணிக்க முடியாது.

அதனால்தான் தனக்கு வந்துசேர்ந்த செய்தியிலிருந்து பெருங்குழப்பத்தைச் சந்தித்துக்கொண்டிருந்தான் கருங்கைவாணன். பறம்புவீரர்களை, எண்ணிக்கையைக் கொண்டு மட்டுமே மதிப்பிடக் கூடாது என்பதை அவன் நன்கு அறிவான். ஆனால், சமதளப்போர் என்பதாலும், தன்னுடைய படையில் இருக்கும் வீரர்களின் எண்ணிக்கை அளவிடற்கரியதாக இருப்பதாலும் அவன் பெருநம்பிக்கை கொண்டிருந்தான். முதல் நாளே இந்தப் போர் முடிவுக்கு வரும் என நினைத்தான். ஆனால், போர்க்களத்தில் மேலெழும் செம்புழுதி, நம்பிக்கையை மறைக்கத் தொடங்கியது.

உதிரனின் தலைமையிலான விற்படை, ஆவேசம்கொண்டு வேந்தர்படையின் கட்டமைப்பைப் பிளந்து முன்னேறிக் கொண்டிருந்தது; பறம்புவீரர்கள் முதுகில் வைத்துள்ள அம்பறாத்தூணி, கம்பங்கதிர் போன்ற வடிவமைப்பைக் கொண்டிருந்தது. மையத்தண்டைச் சுற்றி அம்புகள் செருகப் பட்டிருந்தன. வெவ்வேறு வகையான அம்புகள், அதற்குத்தக்க உயரத்தில் இடம்பிடித்திருந்தன. நூறிலிருந்து நூற்றிருபது அம்புகளைக் கொண்டதாக ஒவ்வோர் அம்பறாத் தூணியும் இருந்தது. வேந்தர்படைவீரர்கள் பயன்படுத்தும் அம்பறாத்தூணி கூம்பு வடிவம்கொண்டிருந்தது. நீண்டிருக்கும் சுரைக்குடுவையைப் போன்று அதற்குள் முப்பது அம்புகளை மட்டுமே வைக்க முடிந்தது.

எதிரிகளைத் தாக்கி அழிக்க முடியாத நிலையில் வெகுவிரைவாகத் தங்களின் அம்புகளைத் தீர்த்த

வேந்தர்படைவீரர்கள் அம்புக்கட்டு வரும் வரை பின்படைக்கு வழிவிட்டு ஒதுங்கவேண்டியிருந்தது. முன்வந்து தாக்கும் அடுத்தடுத்த படைப்பிரிவுகளும் அம்புகளைத் தீர்ப்பதில் மிக வேகமாகச் செயல்பட்டு ஒதுங்கின. உதிரனின் தலைமையிலான விற்படை, தடைகளற்ற வேகம்கொண்டிருந்தது.

தாகம் மேலிட வீரர்களிடம் களைப்பு உருவாகத் தொடங்கியது. கதிரவனின் வெப்பத்தால் தட்டியங்காட்டுக் கருமணலெங்கும் வெப்ப வளையங்கள் உருவாகிக்கொண்டிருந்தன. காலையிலிருந்து பேராவேசத்தோடு போரிட்டுக்கொண்டிருக்கும் வீரர்களின் உடலில் நீர்வற்றி தாகம் ஏற்பட, பெரும் அயர்வுக்குள்ளானார்கள்.

முறியன் ஆசான் நீர்வேலிப் படர்கொடியின் இலைகளை அதன் சிறு சிறு காய்களோடு சேர்த்துச் சுருட்டி, கைகளின் மணிக்கட்டுக்கு மேலும் கழுத்திலும் தாயத்துபோல ஒவ்வொரு வீரனுக்கும் கட்டியிருந்தார். `தாகம் மேலிட்டு மயக்கம் வருவதுபோல் இருந்தால், அந்தத் தாயத்தை அப்படியே கடித்துத் தின்றுவிடுங்கள்' என்று சொல்லியிருந்தார். அந்த இலையும் காயும் உடனடியாக நீர்ச்சத்தைச் சுரக்கக்கூடியவை. பறம்புவீரர்கள் மிகச்சிலரே தாயத்தைக் கடித்தனர். அவர்கள் அதைக் கடிக்கும்போது எதிரில் வேந்தர்படைவீரர்கள் ஆயுதங்களைக் கைக்கொள்ள முடியாத கிறக்கத்தில் இருப்பது தெரிந்தது.


கருங்கைவாணனுக்குக் களத்தின் எல்லா திசைகளிலிருந்தும் செய்திகள் வந்து கொண்டிருந்தன. ஆனால், ஒரு செய்திகூட அவன் நினைத்ததைப்போல இல்லை. வாள்படை மட்டும்தான் வெகுவாக முன்னோக்கிப் போய்க்கொண்டிருந்தது. அதைச் சொல்ல வருபவன் மட்டும்தான் உற்சாகத்தோடு சொல்லிச் செல்கிறான். ஆனால், மற்ற படைகள் இருக்கும் நிலைக்கும் வாள்படை இருக்கும் நிலைக்கும் பெருத்த வேறுபாடு இருந்தது. வேட்டுவன்பாறைத் தாக்குதலில் திதியன் முன்னேறிப்போனபோது வந்த எண்ணம் இப்போது உருவாகத் தொடங்கியது. `சாகலைவன் ஏதோ பொறியில் மாட்டப்போகிறான்!' எனத் தோன்றியது.

இந்த எண்ணம் தோன்றிய கணத்தில்தான் காரமலையின் மேலிருந்து அடுத்ததொரு பேரோசை கேட்டது. இந்த ஓசையின் மூலம் எதிரிகள் என்ன செய்தியைச் சொல்கின்றனர் என்பதைக் கணிக்க முடியவில்லை. ஆனால், இதன் அடிப்படையில்தான் அவர்கள் உத்தியை வகுக்கிறார்கள் என்பது மட்டும் புரிந்தது.

இப்போது வெளிப்பட்ட காரிக்கொம்பின் ஓசை இறுதி ஐந்து நாழிகையின் தொடக்கத்தை அறிவிப்பதாகும். பறம்புவீரர்கள், தாங்கள் வகுத்த போர் உத்தியின் இறுதிப்பகுதியை நிறைவேற்ற ஆயத்தமாகினர். தாகமும் தாங்க முடியாத மயக்கமும் வேந்தர்படை வீரர்களுக்கு உருவாகும் இந்த நேரத்தில், பறம்புவீரர்கள் தங்களின் தாக்குதல் வேகத்தை இரட்டிப்பாக்கினர். விற்படையினர் இதுவரையிலும் பயன்படுத்தாத கொடுமர அம்புகளைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

கருங்கைவாணன் நிலைமையைக் கணித்து `என்ன செய்யலாம்?' எனச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது பறம்பின் அனைத்துப் படைகளும் பல கூறுகளாகப் பிரிந்து ஆவேசம்கொண்டு தாக்கி முன்னேறினர். அவர்கள், நேரெதிர் திசையில் மட்டும் முன்னேறவில்லை. மாறாக, பல திசைகளில் பிரிந்து கலைந்தனர். அதேநேரத்தில், அவர்கள் எந்தத் திசையில் போக நினைக்கிறார்களோ அந்தத் திசையில்

போகவிடாமல் மறித்து நிறுத்த முடியாத நிலையில் வேந்தர்படை இருந்தது. குறுக்கும் மறுக்குமாகப் பல இடங்களில் அவர்கள் நுழைந்துகொண்டிருந்தனர்.



வேந்தர்படை வீரர்களிடம் குழப்பம் உருவாகத் தொடங்கியது. என்ன நடக்கிறது என்பது புரிபடாததாக இருந்தது. முதல்நிலைப் படையில் இருந்த வீரர்களுக்கு உடனடியாக அம்புக்கட்டு தேவைப்பட்டது. அவர்களுக்காக ஆயுதவாரியின் உத்தரவின்பேரில் யானை ஒன்று அம்புக்கட்டை ஏந்தி முதல்நிலைப் படைக்குள் நுழைந்தது. எங்கும் கூச்சலும் மோதலின் பேரோசையுமாக இருந்தது. கருங்கைவாணன், சாகலைவனுக்கு உத்தரவு அனுப்பினான், `தொடர்ந்து முன்னோக்கிச் செல்லாதே!' என்று. அவன் சொல்லிய செய்தியைக் கொண்டுசென்றான் வீரன் ஒருவன்.

`நீண்டநேரமாகக் குதிரைப்படையின் தளபதி உறுமன்கொடியிடமிருந்து எந்தச் செய்தியும் இல்லையே!' எனச் சிந்தித்தான் கருங்கைவாணன். அந்த எண்ணம் தோன்றியபோதுதான் ஆயுதக்கட்டைக் கொண்டுவந்த யானையின் பிளிறல், போர்க்களம் முழுவதும் எதிரொலித்தது.

சட்டெனப் பின்புறம் திரும்பிப் பார்த்தான் கருங்கைவாணன். முடியன் எறிந்த மூவிலைவேல் யானையின் செவிப்புறத்தின் இறங்குகுழியில் குத்தி இறங்கியது. போர்க்களம் முழுவதும்

எதிரொலித்தது யானையின் பிளிறல். தேரில் நின்றபடியே அடுத்த மூவிலைவேலைக் கையில் எடுத்தான் முடியன். அதை எறிவதற்குள் முடியனைத் தாக்கவேண்டும் என நினைத்த கருங்கைவாணன், தன்னிடம் இருந்த வில்லில் நாண் ஏற்றியபோது மத்தகத்தின் இடது முனையில் குத்தி உள்ளிறங்கியது அடுத்த மூவிலைவேல்.

கல்லூசிகளும் எஃகூசிகளும் பன்றியின் முன்கொம்பால் செய்யப்பட்ட நீள்ஊசியும் கொண்ட பறம்பின் தனித்துவமான ஆயுதம் `மூவிலைவேல்.' மூன்று திசைகளில் விரிந்திருக்க, குத்துப்பட்ட வேகத்தில் யானை வெறிகொண்டு கழுத்தை மறுத்து அசைக்க, வேலின் கூர்முனை துளைத்து உட்சென்றுகொண்டிருந்தது. ஏதோ நடக்கப்போகிறது எனக் கருங்கைவாணன் நினைத்தபோது அம்புக்கட்டுகளைப் பிரித்துக் கொடுப்பதற்காக யானையின் மேலேயும் பக்கவாட்டிலும் நின்றிருந்த பன்னிரு வீரர்கள் தூக்கி வீசப்பட்டனர். யானையின் பிளிறலை விஞ்சியது வீசப்பட்ட வீரர்களின் ஓலம்.

கீழே விழுந்தெழுந்த பாகன் ஒருவன், குத்தப்பட்டிருந்த ஈட்டியைப் பிடுங்க முயன்றான். அப்போதுதான் அந்த பயங்கரம் அரங்கேறத் தொடங்கியது. மூவிலைவேலின் வடிவமைப்பே, எதிரெதிர் திசையில் உள்நுழைந்து செருகிக் கிடப்பதுதான். இப்போது அதை இழுக்க நினைத்தால், ஒரு திசையில் இருக்கும் கூர்முனை வெளிவர மற்ற இரு திசைகளில் இருக்கும் கூர்முனைகள் அழுத்தி உள்நுழையும். எஃகூசியும் கல்லூசியும் பன்றிக்கொம்பு இருக்கும் கூர்ஊசியும் மத்தகத்தின் இடது சப்பைக்குள் கிழித்திறங்க, யானை வெறிகொண்டு சுழற்றியது துதிக்கையை. வேந்தர்படைவீரர்களுக்கு நடுவே நின்றிருந்த அதன் தாக்குதல், கணநேரத்துக்குள் பன்மடங்கு ஆவேசமடைந்தது; எறும்புக்கூட்டங்களை நசுக்குவதுபோல, திறன்கொண்ட படையணியை நசுக்கத் தொடங்கியது.

யானை தனது கட்டுப்பாட்டை இழந்து தாக்குதலைத் தொடங்கிவிட்டது என்பதை அறிந்த கருங்கைவாணன், ``அதைக் குத்தி வீழ்த்துங்கள்'' எனப் பெருங்குரலெடுத்துக் கத்தினான். வழக்கமான போர் ஈட்டிகளைக் கொண்டு யானையை வீழ்த்திவிட முடியாது. கூர்வாள் செருகப்பட்ட பெரிய ஈட்டியாலும் தந்த ஈட்டியாலும்தான் யானையைத் தாக்கி வீழ்த்த முடியும். அதுவும் இந்த யானைக்கு முன் நெற்றியிலும் பக்கவாட்டிலும் சங்கிலிகளால் பின்னப்பட்ட போர்க்கவசம் போர்த்தப் பட்டிருந்தது. வீரர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள யானையை வீழ்த்தியே ஆகவேண்டிய நிலை உருவானது. தாக்குதல் தொடுக்கத் தொடுக்க, யானையின் ஆவேசம் பன்மடங்கு பெருகிக்கொண்டிருக்கிறது; துதிக்கையைச் சுழற்றியெறிந்து அடித்து நொறுக்கிக் கொண்டிருந்தது. மத்தகத்தின் இடது சப்பைக்குள் இறங்கிய மூவிலைவேல் வேதனையைப் பல மடங்கு அதிகப்படுத்தியது. பிளிறலின் ஓசையில் அதன் மூர்க்கம் உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது.



இரும்புச்சங்கிலியால் போர்க்கவசம் போர்த்தப்பட்ட யானையை இரு வேல்கம்பு வீச்சுகளால் பறம்பின் பின் வீரன் ஒருவன் தாக்க முடிந்ததை வேந்தர்படைவீரர்கள் மிரண்டுபோய்ப் பார்த்தனர். ஆனால், இந்த மிரட்சி அடுத்த சில கணங்களுக்குக்கூட நிற்கவில்லை. அதே யானை தங்களை அழித்தொழிக்கும் நிலை உருவானதால் ஆவேசத்தோடு இறங்கிப் போரிடவேண்டியதாகி விட்டது. எவ்வளவு வேகமாக இதை வீழ்த்துகிறோமோ, அவ்வளவு வேகமாகப் படையின் பாதிப்பு குறையும்.

வேந்தர்களின் விற்படையின் மையப்பகுதி, யானையுடன் போரிட்டுக்கொண்டிருந்த போதுதான் முதல்நிலைப் படையின் கட்டுக்கோப்பு குலையத் தொடங்கியதைக் கருங்கைவாணன் உணரத் தொடங்கினான். எதிரிப்படையின் தளபதியான முடியன் எங்கே இருக்கிறான் எனக் கருங்கைவாணனின் கண்கள் காலையிலேயே தேடின. அவன், கண்களிலேயே படவில்லை. அதற்குமேல் அவனைப் பொருட்படுத்தித் தேட ஒன்றுமில்லை என்ற முடிவுக்குப் போனான்.

காரிக்கொம்பின் ஓசை கேட்டதும் போர்க்களத்தின் கடைசி நாழிகை தொடங்கியது. பறம்பின் தரப்பில் படைப்பிரிவின் பின்னிலையில் நின்றிருந்த பலர், இப்போது முன்னிலைக்கு வந்துகொண்டிருந்தனர். அப்போதுதான் முடியனின் தேர், களத்தின் நடுவில் வந்து நின்றது. திடீரென இந்த இடத்துக்கு எப்படி இவன் முன்னேறி வந்தான் எனக் கருங்கைவாணன் நினைத்துக்கொண்டிருக்கும்போது, குறுக்கும் நெடுக்குமாக எல்லாப் பகுதிகளிலும் பறம்பு வீரர்கள் நுழைந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

குளவன்திட்டின் மேல் இருந்த பாரி, இப்போதுதான் முதன்முறையாக குகைக்குள் இருக்கும் விளக்கைப் பார்த்தான். காலையிலிருந்து போர்க்களத்தை விட்டு அவன் கண்கள் விலகவில்லை. இகுளிக்கிழவனோ காலையிலிருந்தே குகைக்குள் இருக்கும் விளக்கைத்தான் பார்த்துக்கொண்டே இருந்தான். போர்க்களத்தின் பக்கம் திரும்பவேயில்லை. விளக்கின் சுடர் ஈட்டிபோல மேல் நோக்கி எரிந்துகொண்டிருந்தது. இப்போது காற்றோ, காற்றியோ வீசினால் வேந்தர்படையின் நடுப்பகுதியில் நின்றிருக்கும் எண்ணிலடங்கா வீரர்கள் கணநேரத்தில் தாக்கப்பட்டுச் சரிவார்கள். முதல்நிலைப் படையில் பெருங்குழப்பம் நிலவிக்கொண்டிருக்கும் சூழலில், இரண்டாம்நிலைப் படையின் மீது பெருந்தாக்குதல் நடந்தால் படையின் தன்மை மொத்தமும் குலையும். இறுதி நாழிகையின்போது ஏற்படும் பதற்றத்தை, பறம்புவீரர்கள் மிகத்திறமையாகக் கையாண்டு எதிரியின் படைகளை நடுங்கச்செய்வார்கள் எனப் பாரி கருதினான். ஆனால், கொம்மனும் கொம்மையும் அவனுக்கு உதவ ஆயத்தமாக இல்லை. கணவாயின் பின்புறம் இருந்த அவர்கள், வாய் திறந்து ஊத மனமின்றி இருந்தனர். இகுளிக்கிழவனின் மனம், காற்றியை அனுப்பச் சொல்லி கொம்மையிடம் மன்றாடிக் கொண்டிருந்தது.

திட்டமிடலின்போதே கல்லூழிவேர்த் தாக்குதலை எப்போது நடத்துவது என்பதைப் பற்றி முடிவு ஏதும் எடுக்கவில்லை. எப்போது காற்றும் காற்றியும் வருவதை அறிவிக்கக் காரிக்கொம்பின் உச்ச ஓசை கேட்கிறதோ, அப்போது அதைப் பயன்படுத்த வேண்டும். அதைத் தவிர மற்ற உத்திகள் எல்லாம் முன்திட்டமிடல் செய்யப்பட்டவைதாம்.

தேர்ப்படையின் கடைசி நிலையில் இருந்த ஈங்கையன், இப்போது முன்னிலைக்கு வந்தான். இதுவரை கண்ணிலேயே படாமல் இருந்த தளபதி முடியன், எதிரிப்படையின் நடுக்கூறினைப் பிளந்து

முன்னேறிக்கொண்டிருந்தான். எங்கும் பேய்க்கூச்சல் கேட்டுக்கொண்டிருந்தது. போர்யானை எளிதில் வீழ்வதாக இல்லை. அது வேந்தர்படையின் நடுவில் இருந்ததால், எந்த நேரம் எந்தப் பக்கம் திரும்பும் என்ற பதற்றம் எல்லோருக்கும் இருந்தது. அனைவரின் கவனமும் அதை நோக்கித் திரும்பியது.

காரமலையின் மேலிருந்து இரிக்கிச்செடியின் பால்கொண்டு வரையப்பட்ட குறியீடுகள் பகல் நேர ஒளியிலும் துல்லியமாக மின்னிக் கொண்டிருந்தன. பிளந்து முன்னேறும் பறம்புப்படையின் அணித்தலைவன் யாரோ, அவன் மட்டும் அதை அண்ணாந்து பார்த்து, படையை அதற்கேற்ப வழிநடத்திக் கொண்டிருந்தான்.

குறுக்கும் நெடுக்குமாகப் பாம்புகள் ஊர்வதைப் போலப் பறம்புப்படை நுழைந்துகொண்டிருந்தது. இவர்கள் எங்கே, எதை நோக்கிப் போகிறார்கள் என்பது வேந்தர்படைக்குப் புரியாத குழப்பமாக இருந்தது. எல்லா வீரர்களும் மெய்யுறைக்கவசம் அணிந்திருப்பதால் அம்பு தாக்கி எளிதில் அவர்கள் வீழ்வதில்லை. ஆனால், அவர்களின் அம்புகளோ, ஈட்டிபோல் வேகம்கொண்டு தாக்குகின்றன; முடியனின் தேர் பெருமரத்தின் நடுவே இறங்கும் இரும்பு ஆப்புபோல வேந்தர்படையின் நடுப்பகுதியில் இறங்கிக் கொண்டிருந்தது. முன்னோக்கிச் செல்லும் முடியனின் தேரைத் தடுத்து நிறுத்த உத்தரவிட்டபடி அவனை நோக்கி விரைந்தான் கருங்கைவாணன்.

இப்போது ஈங்கையனின் தாக்குதல் தொடங்கியது. கரும்பாகுடியில் சோழப்படையின் தாக்குதலை மிகச்சில வீரர்களைக்கொண்டு அழித்து முடித்தவன் ஈங்கையன். அவனையும் அவனது கூட்டத்தையும் காப்பாற்றிய பறம்புக்காக மட்டுமன்றி, கண்ணெதிரே தனது குலத்தை அழித்த சோழர்களைப் பழிவாங்குவதற்காகவும் களத்தில் இருந்தான். சோழனின் முத்திரை தாங்கிய தேர் ஒன்றில் அதன் தளபதியரில் ஒருவனான நகரிவீரன் இருப்பதைப் பார்த்தான். அவனை நோக்கி இடியெனத் தாக்கி முன்னேறினான் ஈங்கையன்.

முன்பகுதித் தாக்குதலைச் சற்றே மாற்றி, ஈங்கையனை நோக்கித் திரும்பினான் நகரிவீரன். ஆனால், அதற்குள் அவன் படையின் பெரும்பகுதியினர் முன்திசைத் தாக்குதலிலிருந்து வெளிவர முடியாத நிலையில் இருந்தனர். கூழையனின் தாக்குதலிலிருந்து யாரையும் விலக்க முடியாத நிலையில் ஏறக்குறைய தான் சூழப்பட்டுள்ளோம் என்பதை அவன் உணரத் தொடங்கினான்.

இந்நிலையில்தான் எதிரிப்படையின் இடுப்புப் பகுதியைப் பிளந்து முன்னேறிக்கொண்டிருந்தான் முடியன். அவன் எதிர்பார்த்த நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. இதற்கிடையில் காற்றோ காற்றியோ வீசினால் போர்க்களத்தில் எதிரிப்படையின் கட்டுப்பாடு சீர்குலையும். அது வீசாவிட்டாலும் பாரி தீட்டிய திட்டப்படி அழித்தொழிக்கும் தாக்குதலை நடத்த வேண்டும்



இறுதி நாழிகையின் இறுதிப்பகுதி நெருங்கிக் கொண்டிருந்தது. எல்லா திசைகளிலும் கலைந்து பிரிந்த பறம்புவீரர்கள், களத்தின் நடுவில் வந்து இணையத் தொடங்கினர். பெருஞ் சங்கிலிப் பிணைப்பால் கருங்கை வாணன் அமைத்த முதல்நிலைப் படையின் மையப்பகுதியைச் சூழ்ந்தனர். கட்டற்று நகரும் அதன் வேகத்தின் முகப்பில் சென்றுகொண்டிருந்தான் பறம்புத்தளபதி முடியன்.

சங்கிலித்தொடரின் வெளிப்புறம் இருந்தான் கருங்கைவாணன். என்ன நடக்கிறது என அவனால் உணர முடியவில்லை. ஆனால், நிலைமை கைமீறிக்கொண்டிருக்கிறது என்பது மட்டும் புரிந்தது. இந்நிலையில் `இரண்டாம் நிலையில் நிறுத்தப்பட்ட பெரும்படைக்குத் தாக்குதல் உத்தரவை வழங்கலாமா?!' எனச் சிந்தித்தான். ஆனால், அவனது போர்க்கள அனுபவம் அந்தத் தவற்றைச் செய்வதிலிருந்து அவனைக் காப்பாற்றியது.

`இன்றைய நாளின் இறுதிப்பகுதியை நெருங்கிக்கொண்டிருக்கிறோம். முதல்நிலைப் படை பெருங்குழப்பத்துக்கு உள்ளாகியுள்ளது. யானை, பெருஞ்சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. எதிரிகள், படையின் நடுப்பகுதியில் குவிந்துள்ளனர். நம் தளபதிகள், எதிரிகளின் ஆவேசமிக்க தாக்குதலால் இழுக்கப்பட்டு, படைகளை முறையற்று இயக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் இரண்டாம்நிலைப் படையை இந்தக் கடைசி நேரத்தில் தாக்குதலுக்கு இறக்க வேண்டாம். அது நமது வலிமையின் உள்ளார்ந்த ஆற்றலை வீரர்களிடம் குறைத்துவிடும். இன்னும் இருக்கும் சிறிது நேரத்தில் தாக்குதலின் வேகத்தைக் கூட்டி எவ்வளவு முடியுமோ அவ்வளவு சமாளிப்போம்' என்ற முடிவுக்கு வந்தான்.

வேந்தர்படைத் தளபதி கருங்கைவாணன் குழப்பத்திலிருந்து ஒரு முடிவுக்கு வந்தபோது, பறம்புப்படைத் தளபதி முடியன் தெளிவிலிருந்து முடிவெடுக்க முடியாத குழப்பத்துக்குப் போனான். `திட்டமிட்டபடி தாக்குதல் உத்திகளை நடத்தி, பல்வேறு கூறுகளாகப் பிரிந்து எதிரிப்படையின் நடுப்பகுதியில் இணைந்து விட்டோம். ஆனால், இந்நேரம் இங்கு வந்துசேர்ந்திருக்கவேண்டிய இரவாதன் இன்னும் வந்துசேரவில்லை. குதிரைப்படையின் ஆற்றல்மிகு தாக்குதலால்தான் சூழப்பட்டுள்ள எதிரிகளை முற்றிலும் அழித்தொழிக்க முடியும். இல்லையென்றால், இந்தத் தாக்குதல் திட்டத்தை நிறைவேற்ற முடியாது.

தேர்ப்படையும் வாள்படையும் எதிரிகளின் கவனத்தை முழுமையாகத் திசைதிருப்பி எவ்வளவு தொலைவுக்கு வெளியில் இழுத்துக்கொண்டு போக முடியுமோ அவ்வளவு தொலைவுக்கு வெளியே கொண்டுபோக வேண்டும். உதிரனின் தலைமையிலான பறம்பின் வலிமைமிகுந்த விற்படை, இடதுமுனையிலிருந்து உத்திபிரித்துக் களத்தின் நடுப்பகுதிக்கு வந்து கூடவேண்டும். அந்த நேரத்தில் களத்தின் இடதுமுனையிலிருந்து இரவாதன் தலைமையிலான குதிரைப்படை நடுவில் நிற்கும் விற்படையோடு இணையவேண்டும். அப்போது இடையில் சிக்கியிருக்கும் எதிரிகளின் படையை முழுமுற்றாக அழித்தொழிக்க வேண்டும் என்பதுதான் வகுக்கப்பட்ட திட்டம். இந்தத் திட்டத்தில் கணிக்க முடியாதது காற்றின் வீச்சு மட்டுமே. அது எந்தக் கணத்தில் நிகழ்கிறதோ அந்தக் கணத்தில் அதற்கேற்ப முன்னோக்கித் தாக்கும் உத்தியைச் செயல்படுத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

முன்முடிவின்படி பறம்புவீரர்கள் அனைத்தையும் மிகச்சிறப்பாகச் செய்து முடித்தனர். ஆனால்,

இரவாதனின் தலைமையிலான குதிரைப்படை மட்டும் முடியன் நிலைகொண்டுள்ள நடுப்பகுதிக்கு வந்து சேரவில்லை. தொலைவில் அவனது படைக்குறிப்புக்கான பதாகையும் கண்ணில் தெரியவில்லை. தாக்குதலுக்கான உத்தரவைப் பிறப்பிப்பதா அல்லது காலம் தாழ்த்துவதா என்ற குழப்பத்தில் சிக்கினான் முடியன்.

திட்டமிட்டபடி முடியன் நிலைகொண்டுள்ள நடுப்பகுதிக்குத் தன்னால் போய்ச்சேர முடியாது என்ற முடிவுக்கு வந்தான் இரவாதன், பறம்பின் குதிரைப்படைதான் எதிரிகளைப் பேரழிவுக்கு உள்ளாக்கியுள்ளது. காலையிலிருந்து அதன் வேகம் உறுமன்கொடியை நிலைகுலையவைத்து, தற்காப்பு நிலைக்குத் தள்ளியது. ஆனால், நடுப்பகலுக்குப் பிறகு மனிதர்களால் எப்படி இந்த நிலத்தின் வெக்கையை நீரின்றிப் பொறுத்துக்கொள்ள முடியவில்லையோ, அதே சிக்கலைக் குதிரைகளும் சந்தித்தன. இதற்கான மாற்று ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை. அதுவும் காலையிலிருந்து கணப்பொழுதுகூட நிற்காமல் ஓடிய பறம்பின் குதிரைகள் காரிக்கொம்பின் இரண்டாம் ஓசை கேட்டபோது மிகவும் களைத்துப்போயிருந்தன.

இவ்வளவு களைத்திருக்கும் `குதிரைகளைக் கொண்டு எதிரிகளின் குதிரைப்படையைப் பிளந்து உள்நுழைந்தால், நமது தரப்புக்கு இழப்பு அதிகமாகும் எனக் கணித்த இரவாதன், வேறுவழியே இன்றி, திட்டத்தைச் செயல்படுத்தும் முடிவைக் கைவிட்டான்.

கருங்கைவாணனோ, எதிரிகளின் உத்திகளுக்குள் நமது முதல்நிலைப்படை கடுமையாகச் சிக்கிக்கொண்டது, இருக்கும் சிறிது நேரம் வரை பாதிப்பைக் குறைக்கும் உத்தியை மட்டும் கடைப்பிடிப்போம் என்ற நிலையை எடுத்தான்.

அப்போதுதான் நீள்சங்கின் ஓசை தென்மூலையில் கேட்டது. என்ன இது என்று பறம்புத் தளபதிகளுக்குப் புரியவில்லை. ஆனால், ஓசை கேட்ட கணம் திடுக்கிட்டுத் திரும்பினான் கருங்கைவாணன்.

அது, தளபதி கொல்லப்பட்டுவிட்டால் உடனடியாகத் தலைமைத் தளபதிக்கும் அரசனுக்கும் சொல்லும் குறிப்பு. தன் தளபதி ஒருவன் கொல்லப்பட்ட செய்தி ஒரு கணம் நடுக்குறச்செய்தது. உடனடியாக அந்தத் திசை நோக்கிக் குதிரையை விரைவுபடுத்தினான். கடைசி சில நாழிகையில் தளபதி கொல்லப் பட்டால் அந்தப் படையணி முழுமுற்றாக அழிய அதிக நேரமாகாது. பாதிப்பைக் குறைக்க வேண்டும் என்ற வேகத்தோடு விரைந்தான் கருங்கைவாணன்.

எதிரிப்படைக்குள் ஏறி உள்நுழைந்து சென்றது, தேர்ப்படைத் தளபதி நகரிவீரனும் வாள்படைத் தளபதி சாகலைவனும்தான். நகரிவீரன் சோழநாட்டுத் தளபதிகளில் ஒருவன். அவனது வீரத்தைப் பற்றிப் பெரிதாகத் தெரியாது. ஆனால், சாகலைவன் பாண்டியநாட்டின் இணையற்ற வீரன். எனவே, அவன் கொல்லப் பட்டிருக்க வாய்ப்பில்லை என நினைத்தபோது கருங்கைவாணனின் கண்பார்வையின் தொலைவில் நகரிவீரன் போரிட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது.
கருங்கைவாணனால் நம்ப முடியவில்லை. குதிரையை வேகப்படுத்தியபடி முன்னோக்கி விரைந்தான். வேந்தர்களின் வாள்படை அவனது கண்ணுக்குத் தெரிந்தது. உற்றுப்பார்த்தபடி உருவிய வாளோடு விரைந்தான். குதிரை எவ்விப் பாய்ந்தது.

பரண்மேல் இருந்த திசைவேழர் தன் கைகளை உயர்த்தினார். போர்க்களத்தின் இரு திசைகளிலும் இருந்த பரண்களின் மேலிருந்து எண்ணற்ற முரசுகள் ஒலிக்கத் தொடங்கின. தட்டியங்காடெங்கும் எதிரொலித்தது அந்த ஒலி. இன்றைய போருக்கான நாழிகை முடிந்தது.

பாய்ந்துசென்ற கருங்கைவாணனின் குதிரை சற்றே வேகம் குறைத்தது. வரவேண்டிய இடத்துக்கு வந்துசேர்ந்தான். எதிரில் தலை வெட்டப்பட்ட நிலையில் சரிந்துகிடந்தான் சாகலைவன்.

கொப்புளித்த குருதி மேலெல்லாம் பீச்சியடித்திருக்க, முகத்தைத் துடைத்தபடி, விரிந்துகிடந்த தலைமுடியை உச்சந்தலையில் ஏற்றிக்கட்டி, அருகில் இருந்த குதிரையின் மேல் தாவி ஏறினான் தேக்கன்.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-93

போர்க்களத்திலிருந்து முரசின் ஓசையைக் கேட்டவுடன் இகுளிக்கிழவன் விளக்கை ஊதி அணைத்தான். கொம்மனும் கொம்மையும் இன்றைக்கு உதவாமல்போனது, அவனுக்கு மிகுந்த மனவருத்தத்தை உருவாக்கியது. பறம்புவீரர்கள் கானவர்களுக்கு அளித்த வாக்குப்படி, தட்டியங்காட்டில் யானைப்போர் நடப்பதைத் தவிர்த்துவிட்டனர். சமவெளியில் உள்ளவர்கள் யானையைப் பயிற்றுவிக்கும் முறையுடனும் போரில் ஈடுபடுத்தும் முறையுடனும் ஒப்பிட்டுப்பார்த்தால் மலைமக்களின் ஆற்றல் அளவிடற்கரியது.


சமவெளி மனிதர்கள், யானையைப் பழக்குவது எப்படி என்று மட்டும் அறிந்தவர்கள். மலைமக்கள், யானையின் பழக்கங்களையெல்லாம் அறிந்தவர்கள். அதுவும் பறம்பில்தான் யானையுடனான ஆதிமொழியை உருவாக்கிய தந்தமுத்தத்துக்காரர்கள் இருக்கின்றனர். அவர்கள் யானையைக் கைக்கொள்ளும்முறையை யாராலும் நினைத்துபார்க்கக்கூட முடியாது. இன்று யானைப்போர் நடந்திருந்தால் வேந்தர்படை பேரழிவைச் சந்தித்திருக்கக்கூடும்.

எந்தவொரு படையிலும் பெருவலிமைகொண்டது யானைப்படைப் பிரிவே. அது கடுமையாகத் தாக்கப்படும்போது மொத்தப் படையின் மனநிலையும் பெரும்பாதிப்புக்குள்ளாகும். யானைப்படை வீழ்ச்சியைச் சந்தித்துவிட்டால், அதன் பிறகு மற்ற படைப்பிரிவுகளால் வலிமையான ஆற்றலை வெளிப்படுத்தி முன்னேறிவிட முடியாது. பறம்புக்கு இருந்த மிகச்சிறந்த வாய்ப்பு, எதிரியின் யானைப்படையை நிலைகுலையச்செய்வது. ஆனால், கானவர்களுக்குக் கொடுத்த வாக்கின்படி பறம்பு இன்று யானைப்படையின் மீதான தாக்குதலை முழுமுற்றாக விலக்கிக்கொண்டது. அதற்குக் கைம்மாறு செய்யும்படி காற்றோ, காற்றியோ இன்று வீசவில்லை.

இகுளிக்கிழவன் மிகுந்த கவலைகொண்டான். பாரியிடம் சொல்ல அவனுக்கு வார்த்தையில்லாமல் இருந்தது. கைகளை விரித்துக் காட்டி ஏதோ சொல்ல வந்தான். அதை அறிந்த பாரி, ``இயற்கை ஒருபோதும் நம்மைக் கைவிடாது. நாளை பார்ப்போம்” என்று சொல்லி, குதிரையில் ஏறினான்.

இரலிமேட்டின் குகைகளுக்குச் சற்றுக் கீழே வேங்கைமரத்தின் அடிவாரத்தில், பாட்டாப்பிறை போன்ற அமைப்புகொண்ட பெருந்திட்டுகள் இருந்தன. அங்குதான் இரவு பகலாகப் போர் பற்றிய பேச்சுகள் நடக்கின்றன. இன்றைய போர் பற்றியும், நாளைய தாக்குதல் பற்றியும் பேசுவதற்காக அனைவரும் காத்திருந்தனர்.

ஆங்காங்கே பந்தங்கள் எரிந்துகொண்டிருந்தன. மருத்துவக் கூடாரங்களில் காயம்பட்டவர்களுக்கான மருத்துவம் நடைபெற்றுவந்தது. முறியன் ஆசான், எண்ணற்ற மருத்துவர்களோடு தீவிரமாகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். முதுவேழன், நாளைய போருக்கான ஆயுதங்களைப் பிரித்துக்கொடுக்கும் வேலையைத் தொடங்கிவிட்டார். குகைகளுக்குள்ளிருந்து ஆயுதங்கள் வெளியேறியபடி இருந்தன. மற்றவர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர்.



முடியனும் தேக்கனும் வேங்கைமரத்திட்டின் இடதுபுறத்தில் அமர்ந்திருந்தனர். அதற்கு நேரெதிராக வாரிக்கை யனும் கபிலரும் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு அடுத்தபடியாக வேட்டூர் பழையனும் கூழையனும் இருந்தனர். இரவாதன், உதிரன், ஈங்கையன் ஆகியோர் வீரர்களோடு நாகக்கரட்டிலும் மருத்துவக் கூடாரங்களிலும் இருந்தனர். பாரியும் காலம்பனும் இன்னும் வந்துசேரவில்லை. அவர்களின் வரவுக்காக அனைவரும் காத்திருந்தனர்.

குலசேகரபாண்டியனின் கூடாரத்துக்கு உதியஞ்சேரல், செங்கனச்சோழன், சோழவேழன், பொதியவெற்பன் ஆகிய நால்வரும் வந்து சேர்ந்தனர். சாகலைவனின் இறுதிச்சடங்குக்காகப் போயிருந்தான் கருங்கைவாணன். அவனோடு அமைச்சர்கள் மூவரும் போயிருந்தனர். விசாரணைக்காக மையூர்கிழாரை வரச் சொல்லியிருந்தார் குலசேகரபாண்டியன்.

அரசப்படைகள் பலவகைப்படுகின்றன. பன்னெடுங்காலமாக நாள் தவறாமல் ஆயுதப் பயிற்சியில் ஈடுபட்டு, எந்தக் கணமும் போர்க்களம் புகுவதற்குத் தகுதிகொண்ட படையே மூலப்படையாகும். எல்லாக் காலங்களிலும் அரசனின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும் படை இது ஒன்றே. அனைத்துவகை ஆயுதப் பயிற்சிகளும் இடைவிடாது வழக்கப்படுவதால் இந்தப் படையின் வீரர்களே போர்க்களத்தில் வலிமையான தாக்குதலை நடத்தக்கூடியவர்களாக இருக்கின்றனர். மூலப்படைக்கு அடுத்தபடியாக வலிமைவாய்ந்ததாகக் கருதப்படுவது உரிமைப் படையாகும்.

உரிமைப்படை வீரர்களுக்கு மானியமும் உண்பளமும் எல்லாக் காலங்களிலும் கொடுக்கப் படுகின்றன. அவற்றைப் பெற்றுக்கொண்டு ஆயுதப்பயிற்சியில் தொடர்ந்து ஈடுபடுவர். அவர்கள், ஓர் இடத்திலிருந்து

அந்தப் பயிற்சியை மட்டும் மேற்கொள்பவர்கள் அல்லர்; தத்தமது இடங்களில் இருந்துகொண்டு வெவ்வேறு பணியையும் செய்துகொண்டிருப்பர். போருக்கான ஆணை வந்தவுடன் அரசனுக்காகப் போர்க்களம் புகுவர். அவர்கள் `உரிமைப்படை' என அழைக்கப்படுகின்றனர். கூலி பெற்றுக்கொண்டு அதற்காகப் போரிடுவோர் `கூலிப்படை' என்று அழைக்கப்படுகின்றனர். இந்தப் படைகள் தவிர, துணைப்படை, கானப்படை, வன்படை, குழுப்படை எனப் பல்வேறு படைகள் உள்ளன.

இவையெல்லாம் போர்க்களத்தில் ஆயுதம் ஏந்தும் படையணிகள். ஆனால், போர்க்களம் மட்டுமல்லாமல் எல்லாக் காலங்களிலும் அரசனின் பாதுகாப்புக்கு என்றே உருவாக்கப்பட்டுள்ள படைதான் `அகப்படை.' இந்தப் படையானது அரண்மனையில் அரசப் பாதுகாப்பின் பொருட்டுப் பல்வேறு விதிமுறைகளைக் கடைப்பிடிக்கக் கூடியது. அரண்மனைக்குள் ஆயுதங்கள் வைத்துக்கொள்ளும் உரிமை யார் யாருக்கானது என்பதில் தொடங்கி, அரசனிடம் பேசும்போது யார் யார் எவ்வளவு இடைவெளியில் நின்று பேசவேண்டும் என்பதுவரை இந்தப் படையால் வரையறுக்கப் பட்டுள்ளது.
அரசனுக்கு அணுக்கக்காவலர்கள் இருவர் எந்நேரமும் உடன் இருப்பர். மெய்க்காவலர்கள் அறுவர், அரசருக்கும் அடுத்தவருக்கும் இடைநிலையில் குறுக்கிடாத தன்மையில் இருப்பர். ஆபத்துதவிகள் இருபதின்மர், அரசர் இருக்கும் அவைக்குள் இருப்பர். இவை எல்லாம் அரங்குக்குள் மட்டும் இருக்கும் ஏற்பாடு. இந்த வடிவங்கள் மூவேந்தர்களின் அரண்மனைகளில் ஒருசில மாறுபாடுகளைக் கொண்டிருக்கும். பாண்டியனின் மெய்க்காப்பாளர்கள் `ஆபத்துதவிகள்' என்றும், சோழனின் மெய்க் காப்பாளர்கள் `வேளப்படையினர்' என்றும், சேரனின் மெய்க்காப்பாளர்கள் `காக்குவீரர்கள்' என்றும் அழைக்கப்படுகின்றனர். இதுபோல பெயர் மாறுபாடுகள் இருக்குமே தவிர, அகப்படையின் அடிப்படைப் பணிகளில் மாறுபாடு ஏதும் இருக்காது.




மூஞ்சல் உருவாக்கப்பட்டவுடன் அந்த நகருக்கெனத் தனித்த பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவைப்பட்டன. கடல்போல் பரந்துகிடக்கும் படைவீரர்களுக்கு நடுவில் பெருவேந்தர்கள் மூவரும் தங்கியுள்ளனர். எனவே, மிகுந்த கட்டுப்பாடுகளை வகுக்கவேண்டியிருந்தது. அமைச்சர்கள் மூவரும் பேசி மூஞ்சலுக்கான அகப்படை ஒன்றை உருவாக்கினர்.

ஐந்துநிலைப் பிரிவுகளைக் கொண்ட `அகப்படை'யின் கட்டுப்பாட்டில்தான் மூஞ்சல் இப்போது இருக்கிறது. போர் தொடங்கிய பிறகு அரச விதிகள் இரும்பாலான கையுறைகளை மாட்டிக்கொள்கின்றன. எளிதில் யாருக்கும் அது இரக்கம் காட்டுவதில்லை. மூஞ்சலின் அரண்களைக்

காத்து நிற்பது முதல் நிலைப்படை. மூஞ்சலின் வீதிகளைக் காப்பது இரண்டாம் நிலைப்படை. முஞ்சலுக்குள் இருக்கும் தனித்தனிக் கூடாரங்களைப் பாதுகாப்பது மூன்றாம் நிலைப்படை. அரசர்களைச் சுற்றி நிற்கும் மெய்க்காவலர்கள் நான்காம் நிலைப்படை. அணுக்கக்காவலர்கள் ஐந்தாம் நிலைப்படை.

வரவழைக்கப்பட்ட மையூர்கிழார், முதல் மூன்று நிலைகளில் உள்ள காவலர்களைக் கடந்து கூடாரத்துக்குள் நுழைவதே பெரும்பாடாகிப் போனது. பேரரசர்கள் மூவர், அரச குடும்பத்தினர் களான சோழவேழன், பொதியவெற்பன் மற்றும் மகாசாமந்தனான கருங்கைவாணன் ஆகிய அறுவர் மட்டுமே மூஞ்சலுக்குள் எந்நேரமும் நுழையக்கூடியவர்கள். இவர்களில் மூவேந்தர்கள் மட்டுமே எந்தவித ஆயுதமும் வைத்துக்கொள்ளும் உரிமை கொண்டவர்கள்.

சோழவேழன், பொதியவெற்பன் இருவரும் இடையிலக்கக் கருவிகளையோ, அணுக்கக் கருவிகளையோ வைத்துக்கொள்ளக் கூடாது. ஈர்வாளையும் உடைவாளையும் வைத்துக் கொள்ளலாம். மெய்க்கவசம் பூணலாம். ஆனால், கருங்கைவாணன் மெய்க்கவசம் பூணக் கூடாது. குறுவாள் மட்டும் வைத்துக்கொள்ளலாம்.

இவற்றைத் தவிர மூஞ்சலுக்குள் வர அனுமதிக்கப்பட்டவர்களுக்குத் தனித்ததோர் அடையாள வில்லை கொடுக்கப்பட்டிருந்தது. அது வைத்திருப்பவர்கள் விசாரணையின்றி உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். வில்லைகளின்றி அழைக்கப்பட்டு உள்ளே வரும் யாரும் முழுமையான சோதனைக்குப் பிறகே பேரரசர்களின் கூடாரங்களுக்குள் அனுமதிக்கப் படுகின்றனர். உடல் அசைவற்ற மொழியில் பேச அனுமதிக்கப்படும் அவர்கள், ஒரு கணத்தில் மெய்க்காவலர்களால் வாள்கொண்டு தலை சீவப்படும் இடைவெளியில்தான் நிற்கவைக்க படுகின்றனர்.

இப்போது அவ்விடம் நிறுத்தப்பட்டார் மையூர்கிழார். பாண்டியப் பேரரசின் அரண்மனைக்குள் நுழையும்போதுகூட அவர் இவ்வளவு நெருக்கடியான சோதனையைச் சந்தித்ததில்லை. ஆனால், மூவேந்தர்கள் ஒன்றாக உள்ள இடம். ஆதலால், கடும் சோதனைக் குள்ளானார். இந்த இடத்தில் மூஞ்சல் அமைக்கலாம் என்று சொன்னவரே அவர்தான். ஆனால், அவரிடம் `நீதானே இந்த இடம் பற்றிச் சொன்னாய்?' எனப் பேரரசர் கேட்டால், அவர் சட்டெனத் தலையசைத்துவிடக் கூடாது. அவர் பேசவேண்டிய முறை பற்றி அவருக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஐயத்துக்கிடமான அசைவுகள் எந்த விளைவையும் ஏற்படுத்தக்கூடும். அவருக்குப் பின்னால் நிற்கும் மெய்க்காவலர்களின் வாள் நீளத்தையும் சேர்த்தே அவரிடம் சொல்லி அனுப்பியுள்ளனர்.

மூஞ்சலுக்கு வரச்சொல்லி அழைப்பு வந்தபோதே மையூர்கிழாருக்குப் பதற்றமானது. முதல் நாள் போரில் வேந்தர்கள் தரப்பில் பேரிழப்பு நேர்ந்திருக்கிறது. போர்நிலத்தைப் பற்றி முழுமையான செய்திகள் தெரியாததால்தான் இழப்புகள் அதிகமாகி யிருக்கின்றன என்று பேசிக்கொள்கிறார்கள். உள்ளுக்குள் சற்றே அச்சத்துடன் வந்தார் மையூர்கிழார். உண்மையில் தட்டியங்காட்டைப் பற்றி வெங்கல்நாட்டு மக்கள் யாருக்கும் எதுவும் தெரியாது. அந்தப் பாழ்நிலத்தில் போர்க்களத்தைத் தீர்மானித்ததே பெருந்தவறு. இதை எப்படி வேந்தரிடம் சொல்ல முடியும் என்ற குழப்பத்தோடு வந்தவருக்கு அகப்படையினரின் கெடுபிடிகள் மேலும் பதற்றத்தை உருவாக்கின. பேரரசர்கள் இருந்த

அவையைப் பணிந்து வணங்கி தலை தாழ்த்தியபடி நின்றார் மையூர்கிழார்.

``இன்று பாரி போர்க்களம் புகுந்தானா?" எனக் கேட்டார் குலசேகரபாண்டியன்.

கேள்வி, மையூர்கிழாரைச் சற்றே இளைப்பாறச் செய்தது. அவர் அஞ்சியது போன்ற கேள்விகள் கேட்கப்படவில்லை. சிக்கல் இல்லாத கேள்வியைத்தான் அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனவே, தெளிவான குரலில் சொன்னார், ``பாரி வரவில்லை பேரரசே!"

``அவன் எங்கு இருந்தான்?"

``நாகக்கரட்டின் மேல்தான் இருந்திருக்க வேண்டும். அங்கிருந்துதான் கொம்போசைகள் எழுப்பப்பட்டு, தாக்குதலுக்கு வழிகாட்டப் பட்டது."

``அவன் எப்போது போர்க்களம் புக வாய்ப்பிருக்கிறது?"

``குடி ஆசானும் குடி முடியனும் இருக்கும் வரை பறம்பின் குடித்தலைவன் தனது மண்ணை விட்டு வெளியேறி வர மாட்டான்."

``குடி ஆசான் யார்?"

``தளபதி சாகலைவனைக் கொன்றவன்."



``இன்று போர்க்களத்தில் ஈட்டி எறிந்து யானையை வீழ்த்தியது குடி முடியன்தான்" என்றான் உதியஞ்சேரல்.

அப்போது கருங்கைவாணன் உள்ளே வந்தான். அவனோடு தளபதிகள் நால்வரும் வந்தனர். பேரரசர்களை வணங்கிவிட்டு இருக்கையில் அமர்ந்தான் கருங்கைவாணன். தளபதிகள் நால்வரும் எதிர்ப்புறமாக நின்றனர். மெய்க்கவசங்களோ, ஆயுதங்களோ அவர்களிடம் இல்லை. போர்க்களத்தில் ஏற்படும் மரணங்களை அவையில் பேசக் கூடாது. நடந்த தாக்குதலைப் பற்றியும், நடக்கவேண்டிய தாக்குதலைப் பற்றியும் தான் பேசவேண்டும். எனவே, சாகலைவனின் மரணத்தைப் பற்றிய பேச்சு அவையில் எழவில்லை.

``அவர்கள் ஏன் யானைப்போருக்கு வர மறுத்தார்கள்?" எனக் கேட்டார் குலசேகர பாண்டியன்.

``தெரியவில்லை பேரரசே. யானைப்போரில் நாம் அவர்களை வீழ்த்துவது கடினம். எனவே, அவர்கள் வர மறுத்தது நல்ல செய்திதான்'' என்றார் மையூர்கிழார்.

சாகலைவனின் இறுதிச்சடங்கை நடத்திய வெறியோடு வந்து உட்கார்ந்த கருங்கைவாணனுக்கு மையூர்கிழாரின் கூற்று மேலும் வெறியூட்டியது. வீற்றிருந்த ஐவருக்கும் அவரின் பதில் அதிர்ச்சியைக் கொடுத்தது.

``நம்மிடம் இருப்பதில் பத்தில் ஒரு பங்கு யானைகள்கூட பறம்பின் தரப்பில் இருக்காது என்பதை நீங்கள் அறிவீர்களா?'' எனக் கேட்டான் அருகில் நின்றிருந்த யானைப்படைத் தளபதி உச்சங்காரி.

``எண்ணிக்கையில் என்ன இருக்கிறது தளபதியாரே!'' என்று சொல்லி நிறுத்திக் கொண்டார் மையூர்கிழார்.

மேலும் சினமூட்டும் பதிலாக இருந்தது அது.

``அவர்களிடம் இருந்தாலும் நம்மிடம் இருந்தாலும் யானைகள் யானைகள்தானே?'' எனக் கேட்டார் சோழவேழன்.

இதற்கு என்ன பதில் சொல்வது என மையூர்கிழாருக்குத் தெரியும். ஆனால், எப்படிச் சொல்வது என்பதுதான் விளங்கவில்லை. சற்றே அமைதியாக இருந்தார்.

``ஏன் அமைதியாக நிற்கிறீர்?''

``நம்முடைய குதிரைகள் ஏன் ஓட முடியாமல் தேங்கி நின்றன? அவர்களின் குதிரைகள் எப்படி நாள் முழுவதும் ஓடின? இருவரிடமும் இருந்தவை குதிரைகள்தானே?''

``கூர் மணல் குத்திக் கிழிக்க முடியாதபடி அவர்களின் குதிரைகளுக்குக் குளம்புக்குறடு அமைக்கப்பட்டிருக்கிறது. நம் குதிரைகளின் குளம்புக்குறடுகள் அதற்கு ஏற்ற வடிவில் இல்லை. எனவே, நம் குதிரைகள் தொடர்ந்து ஓட முடியாமல் தேங்கிவிட்டன'' என்றான் குதிரைப் படைத் தளபதி உறுமன்கொடி.

``நம் குதிரைகளுக்கும் அதே போன்று குளம்புக்குறடுகள் இருந்திருந்தாலும் நாள் முழுவதும் நிற்காமல் ஓடிக்கொண்டே இருந்திருக்குமா?''

எதிர்பாராத கேள்வியாக இருந்தது. பேரரசர்களுக்கு முன்னால் நடக்கும் உரையாடல் இது. எதிரியின் தரப்பில் சொல்லிக்கொள்ளும்படி எந்தவித இழப்பும் ஏற்படவில்லை. ஆனால், நம் தரப்பில் வாள்படைத் தளபதியை இழந்திருக்கிறோம். இந்தப் பின்னணியில் அவையில் பேசும் ஒவ்வொரு சொல்லையும் மிகுந்த கவனத்தோடு பேசவேண்டும் என்ற விழிப்போடு இருந்தனர் தளபதிகள் அனைவரும்.

மையூர்கிழாரின் கேள்விக்கு, சட்டென விடை சொல்லிவிட முடியாத நிலை இருந்தது. அவையில் அமைதி நிலவியது. `இவன் என்ன சொல்ல வருகிறான்?' என்று கூர்ந்து கவனித்தபடி இருந்தான் கருங்கைவாணன்.

``தரையில் இருக்கும் குதிரைகளைவிட மலையில் இருக்கும் குதிரைகளுக்கு ஆற்றல் அதிகம் எனச் சொல்லவருகிறீரா?" எனக் கேட்டான் உறுமன்கொடி.

``இல்லை. போர்க்குதிரை என்றாலும் ஆண் குதிரை சிறுநீர் கழிக்க வேண்டுமென்றால் நின்றுவிடும். அதனால்தான் எதிரிகள் ஆண் குதிரைகளைப் போரில் பயன்படுத்துவதில்லை."

ஒரு கணம் உறுமன்கொடி ஆடிப்போனான். இப்படியொரு காரணத்தை அவன் எதிர் பார்க்கவேயில்லை. ``ஆண் குதிரைகளின் ஆற்றல் உணர்ந்து அவற்றையே நாம் முன்களப் படைகளில் பயன்படுத்துகிறோம். அதுமட்டுமன்று, நாள் முழுவதும் குதிரைகள் களத்திலே நிற்கவேண்டிய தேவையிருப்பதால், காலையிலே நன்றாக நீர் குடிக்கவிட்டுத்தான் களத்துக்குக் கொண்டு வருகிறோம். நம்முடைய தேர்வும் முன்னேற் பாடுகளுமே போர்க்களச் செயல்பாட்டுக்கு எதிரானதா?" பேச்சற்று நின்றான் உறுமன்கொடி.

தலைகுனிந்து பேசத் தொடங்கிய மையூர் கிழாரின் குரல், தளபதிகளைத் தலைகுனிந்தே நிற்கவைத்துக்கொண்டிருந்தது. ``இதற்கு முன்பு நடைபெற்ற போர்களில் பறம்புவீரர்கள் யாரும் மெய்க்கவசம் அணிந்ததில்லை. இந்தப் போரில் வீரர்கள் அனைவரும் மெய்க்கவசம் அணிந்திருக்கின்றனர். நாம் அணியும் இரும்பாலான மெய்க்கவசத்தைவிடப் பலமடங்கு எடை குறைவானதாகவும் ஆயுதங்களால் எளிதில் உள்நுழைய முடியாததாகவும் இருக்கிறது அது."

``முன்கூட்டியே எப்படி இவ்வளவு ஏற்பாடுகளைச் செய்தார்கள்?" எனக் கேட்டான் உதியஞ்சேரல்.


``நான் அறிந்தவரை பறம்புவீரர்கள் போர் என்று வந்தால் எதிரிகளை ஒரு பொருட்டாக மதித்ததே கிடையாது. முதன்முறையாக அவர்கள் போருக்கான முன்னேற்பாடுகளைச் செய்துள்ளனர். இந்தச் செயலுக்கு உள்ளே இருப்பது நமது படைவலிமையைப் பற்றிய அச்சம். அந்த அச்சத்தை ஊதிப்பெருக்க வேண்டும். அவர்களின் வலிமையைப் பொருட்டாக நினைக்கக் கூடாது. அவர்களின் அச்சத்தைக் கையாள்வதைப் பற்றியே நாம் சிந்திக்க வேண்டும்."

மையூர்கிழாரின் சொற்கள் போர்க்களத்துக்குத் தேவையான ஆயுதமாக இருப்பதாகக் கருங்கைவாணன் கருதினான். ஆனால், குலசேகர பாண்டியனின் எண்ணம் வேறாக இருந்தது. `பறம்பைப் பற்றி நமக்கு முழுமையாகத் தெரிவிக் காமல், அவனது கூற்றின் முக்கியத்துவத்தின் வழியே நம்மை அவனது விருப்பத்தின் வடிவத்துக்குள் இழுக்கிறான்' என அவருக்குத் தோன்றியது. ``சரி, நீ போகலாம்" என்றார்.

ஆழமானதோர் உரையாடலை சட்டென வெட்டித்தள்ளுவதுபோல் இருந்தது குலசேகரபாண்டியனின் உத்தரவு.

மையூர்கிழார், அவையை வணங்கி வெளியேறினார்.

**பா**ரி வேங்கைமரத்திட்டுக்கு வந்ததும் பேச்சு தொடங்கியது.



சற்றே சினத்தோடு இருந்தான் வேட்டூர் பழையன். ``யானைப்போரைத் தவிர்க்கும் வாக்கை நாம் கானவர்களுக்கு வழங்கியிருக்கக் கூடாது. எதிரிகள் ஆடுகளைப்போல யானை களைக் கொண்டுவந்து நிறுத்தியிருந்தார்கள். நமது தாக்குதல் இன்று யானைப்படையில் இருந்திருக்குமேயானால் எதிரிகள் நிலை குலைந்திருப்பார்கள். நாம் மிகச்சிறந்த வாய்ப்பைத் தவறவிட்டுவிட்டோம்” என்றார்.

வேட்டூர் பழையனின் கவலை எல்லோருக்கும் புரிந்தது. இன்று எதிரிகளின் யானைப்படை தாக்கப்பட்டிருந்தால் அவர்களது படையின் கட்டுக்கோப்புகள் மொத்தமாகச் சீர்குலைந்திருக்கும். ஆனால், எதுவும் இன்று நடக்கவில்லை. காலை முதல் மாலை வரை பறம்புவீரர்கள் கடுமையாகப் போரிட்டாலும் முன்புறப் படையணியின் ஒரு பகுதியை மட்டும்தான் அழித்தொழிக்க முடிந்தது. இந்த எண்ணத்தின் வெளிப்பாடாகத்தான் வேட்டூர் பழையனின் சொல் இருந்தது.

``வாக்களிக்கப்பட்ட பிறகு நமக்குக் கிடைக்கும் நன்மையைக் கருதி, அளிக்கப்பட்ட வாக்குக்காக வருத்தப்படுதல் கோழைத்தனமல்லவா?” எனக் கேட்டான் பாரி.

``எனக்குப் புரிகிறது. ஆனால், மூவேந்தர்களின் பெரும்படைக்கு எதிராகப் போர்க்களத்தில் நின்றுகொண்டிருக்கும் நமக்கு, நாமே சிக்கல்களை உருவாக்கிக்கொள்வது எந்த வகையில் அறிவார்ந்த செயல்?''

``அறிவு என்பது, ஆசைகொண்டு அளக்கப் படுவதல்ல. வெற்றியின் மீது ஆசைகொண்டு, அளிக்கப்பட்ட வாக்கை அளக்க முயல்கிறீர்.''

``இல்லை பாரி! நான் வெறும் ஆசையின் பொருட்டு இதைக் கூறவில்லை. போர் எவ்வளவு விரைவாக முடிக்கப்பட வேண்டுமோ, அவ்வளவு விரைவாக முடிக்கப்பட வேண்டும். நாம் யார் என்பதை எதிரி அறிந்துகொள்ளும்முன் அவர்கள் அழிக்கப்பட்டாக வேண்டும். அவர்களிடம் எண்ணிலடங்கா வீரர்களைக்கொண்ட படை இருக்கிறது என்பது ஒரு பொருட்டே அல்ல. ஆனால், மையூர்கிழார் என்ற ஒருவன் இருக்கிறான். அவனை நாம் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. அவன் சொன்ன குறிப்பைவைத்தே மயிலாவுக்கான நிறைசூல் விழாவை அறிந்து எதிரிகள் தாக்குதல் தொடுத்துள்ளனர். நம் மீது எப்போதெல்லாம் எதிரிக்கு அச்சம் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் அந்த அச்சத்தை அவனால் கலைக்க முடியும். எனது கவலை அவன் பொருட்டுதான்.''

அவை சற்றே அமைதி கொண்டது. சிறிது நேரத்துக்குப் பிறகு பாரி கேட்டான், ``அவனுக்கு, தட்டியங்காட்டு நிலம் பற்றித் தெரியுமா?''

``எனக்கே தெரியாதே. அவனுக்கு எப்படித் தெரியும்?''

``அவன் கானவர்களை அறிவானா?''

``வாய்ப்பில்லை.''

``காற்றையும் காற்றியையும் பற்றித் தெரியுமா?''

``தெரிந்திருக்காது.''

``மெய்க்கவசத்தையும் மூவிலை வேலினையும் அறிவானா?''

``அறிய மாட்டான்.''

``பிறகு, ஏன் அவன்குறித்து இவ்வளவு கவலை கொள்கிறீர்கள்?''

``இவை எல்லாவற்றையும் அவன் அறியவில்லை என்பது பெரிதன்று. ஆனால், அவன் அறிந்துவைத்திருப்பது இவை எல்லாவற்றையும்விட முக்கியமானது.''

``அப்படி எதை அவன் அறிந்திருக்கிறான்?'' என வேகமாகக் கேட்டான் தேக்கன்.

``அவன் பாரியை அறிவான்.”

யாரும் எதிர்பாராததாக இருந்தது.




``பறம்பின் மரபுகளை அறிவான். இங்கு உள்ள குடிகளின் வீரத்தை அறிவான். ஆனால், இவை எல்லாவற்றையும்விட முக்கிய மானது, எதிரியின் கூடாரத்தில் பாரியை அறிந்தவன் அவன் ஒருவனே.”

``அவன் பொருட்டு நாம் பதற்றப்பட வேண்டாம். அவன் போர்க்களம் புகும் நாளுக்காகக் காத்திருப்போம்” என்றான் முடியன்.

அப்போதுதான் இரவாதனும் உதிரனும் ஈங்கையனும் வந்து சேர்ந்தனர்.

**மை**யூர்கிழாரோடு தளபதிகள் நால்வரும் அவை விட்டு வெளியேறினர். பேரரசர்களோடு தலைமைத் தளபதி கருங்கை வாணன் மட்டுமே அவையில் இருந்தான்.

சோழவேழன் சொன்னார், ``மையூர்கிழார், பறம்பினைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் துல்லியமாகக் கூறுகிறார்.”

``இல்லை. வெங்கல்நாட்டுக்குக் கொடுத்திருக்கும் ஒரே வேலை எதிரிகளைப் பற்றிச் செய்தி சேகரிப்பதுதான். ஆனால், இவனுக்கு ஒத்துழைக்காத ஆறு ஊர்கள் வெங்கல்நாட்டில் உண்டு. உண்மையில் அந்த இடத்தில்தான் இவனால் அதிக செய்தியைச் சேகரிக்க முடியும். அது இவனுக்குத் தெரியவில்லை” என்றார் குலசேகரபாண்டியன்.

``இவன், போர்க்களத்துக்குள்ளே வைத்துப் பயன்படுத்தப்படவேண்டிய ஆள். இவனை வெளியில் வைப்பதால் நமக்குத்தான் இழப்பு எனக் கருதுகிறேன்” என்றான் பொதியவெற்பன்.

``அவன்தான் நமக்கான தூண்டில் புழு. அந்தப் புழுவைக் கடிக்க பறம்புத் தளபதிகள் காத்திருப்பர். பொருத்தமான நேரத்தில் போர்க்களத்துக்குள் இவனை இறக்கலாம்” என்றார் குலசேகர பாண்டியன்.

பேரரசர்களுக்கிடையேயான உரையாடலைக் கவனித்தபடியிருந்தான் கருங்கைவாணன். ஒரு தளபதி, இரண்டு சேனைவரையர்கள், முப்பத்தைந்து சேனைமுதலிகள் இன்று கொல்லப்பட்டிருக்கின்றனர்.

ஆனால், இந்த மரணங்கள் எவையும் இந்த அவைக்கு ஒரு பொருட்டே அல்ல. அதுதான் பேரரசர்களின் படைபலம். அந்த மாபெரும் படைப் பிரிவுகளுக்கான அடுத்த நாள் திட்டமிடல் என்ன என்பதைப் பற்றி விளக்கினான் கருங்கைவாணன்.

அவையில் உள்ளோர் திட்டத்தை முழுமையாகக் கேட்டனர். யாருக்கும் மறுப்புச் சொல் இல்லை. கேட்கப்பட்டவை ஏற்கப்பட்டவையாகின. அவை கலையும் முன் குலசேகரபாண்டியன் சொன்னார், ``நாளைய போரில் வாள்படைத் தளபதியாக சூலக்கையன் செயல்படுவான்.''

சரியென அனைவரும் ஏற்றுக்கொண்டனர். கொல்லப்பட்ட சாகலைவன், பாண்டியநாட்டைச் சேர்ந்தவன். அவனுக்குப் பதில் வேறொரு தளபதியை பாண்டிய வேந்தர் சொல்லுதலே முறை. அவ்வாறே செய்தார்.

முடியன் சொன்னான், ``நாளை அவர்கள் குதிரைகளை முன்பாய்ச்சலில் ஈடுபடுத்த மாட்டார்கள். நின்ற இடத்திலே குதிரைப்படை நின்றுகொள்ளும்.”

``அவர்கள் அப்படிச் செய்தால் நம்மால் நெடுந்தொலைவு உட்புகுந்து செல்ல முடியாது. நமது தரப்பில் இழப்பு அதிகமாகும். பயனும் இருக்காது” என்றான் வேட்டூர் பழையன்.

``அதுமட்டுமன்று. காற்றும் காற்றியும் வீசினாலும் குதிரைப்படையின் வலிமையைக் குறைக்காமல் நம்மால் மூஞ்சலை நெருங்க முடியாது” என்றான் தேக்கன்.

`வேறு என்னதான் வழி?' என்ற சிந்தனையில் அவை மூழ்கியது.

எதிரிகள் தங்களின் படையை மூன்று நிலைகளில் வைத்துள்ளனர். அவற்றில் முதல் நிலையில் நிற்கும் படையில் பாதி குதிரைகளைத் தான் இன்று வீழ்த்த முடிந்தது. ஈக்கிமணலால் குளம்பு கிழிபட்ட குதிரைகள் மீண்டும் போர்க்களம் புக, ஒரு மாதம் ஆகும். அப்போதும் அவை துணிந்து தாவிவிடாது. ஆனால், மீதம் உள்ள குதிரைகளை விலக்கி உட்புகுந்து செல்வது எளிய செயலன்று. சரியான உத்தியால் மட்டுமே அதைச் செய்ய முடியும்.

நீண்டநேர சிந்தனைக்குப் பிறகு தேக்கன் சொன்னான், ``ஓங்கலத்தைப் பயன்படுத்துதல் ஒன்றே வழி.''

சட்டென முடியனைப் பார்த்தான் இரவாதன். அவனது பார்வையில் மகிழ்ச்சி மின்னியது.

``அது முறையா... போர்விதி அதை அனுமதிக்குமா?” எனக் கேட்டான் முடியன்.

``கபிலர் நிலைமான் கோல்சொல்லியாக இருக்கும்போது நாம் எப்படி போர்விதியை மீறுவோம். ஓங்கலத்தைப் பயன்படுத்துதலில் தவறேதும் இல்லை” என்றார் வாரிக்கையன்.

பேச்சினூடே தான் ஏன் உள்ளிழுக்கப்பட்டோம் என்பது கபிலருக்கு விளங்கவில்லை. ஆனால்,

வாரிக்கையனின் பேச்சில் ஏதோ ஒரு முடிச்சு இருப்பது மட்டும் புரிந்தது.

``இன்றைய தாக்குதலில் எதிரியின் எல்லாத் தந்திரங்களையும் அறிந்துவிட்டோம். ஆனால், அறிய முடியாததாக ஒன்று இருக்கிறதே?" எனக் கேட்டார் உதியஞ்சேரல்.

``என்ன?" என்றார் குலசேகரபாண்டியன்.

``எதிரிகள் யானைப்போரில் மிகவல்லவர்கள் என்றால், அதை ஏன் அவர்கள் தவிர்த்தார்கள்?"

``தெரியவில்லை. ஆனால், அதை நாம் சாதகமாக்கிக்கொள்வோம். இனி போர்க்களத்தில் யானைகளுக்கு வேலையில்லை. எக்கணமும் நமது யானைப்படை பறம்புக்குள் நுழையலாம். அது எக்கணம் என்பதைப் பொருத்தமான நேரத்தில் முடிவுசெய்வோம். அவர்கள் நமக்காக ஏற்படுத்திக்கொடுத்துள்ள வாய்ப்பு இது" என்றார் குலசேகரபாண்டியன்.

மிகச்சரியான சிந்தனை என அனைவருக்கும் தோன்றியது. பேச்சு முடிந்த சிறிது நேரத்தில் அவை கலைந்தது. வேந்தர்கள் தத்தமது கூடாரங்களை நோக்கிப் போனார்கள். பாண்டியப் பேரரசரைச் சுற்றி ஆபத்துதவிகள் நடந்தார்கள். சோழனைச் சுற்றி வேளப்படையினர் சென்றனர். சேரனைக் காக்குவீரர்கள் அழைத்துச்சென்றனர். மேற்குமலையின் சரிவில் மின்னல் வெட்டி இறங்கியது. செங்கனச்சோழன் ஊன்றுகோலை ஊன்றியபடி மெள்ள நடந்து கூடாரத்துக்குப் போனான்.

அவன் வருகைக்காகக் கூடாரத்துக்குள் காத்திருந்தான் சோழர்களின் ஒற்றர்படைத்தளபதி. மூஞ்சலுக்குள் நுழைய சிறப்பு வில்லைகள் கொடுக்கப்பட்டது ஒற்றர்படைத் தளபதிகளுக்கு மட்டும்தான். அவர்கள் எந்த நேரமும் வரலாம். இந்த இரவு வேளையில் தனது வரவுக்காகக் காத்திருப்பதில் இருந்தே அதன் முக்கியத்துவத்தை உணர முடிந்தது. ``என்ன செய்தி?" எனக் கேட்டான் செங்கனச்சோழன்.

பேரரசனை வணங்கிவிட்டுச் சொன்னான், ``கரும்பாக்குடித் தலைவன் ஈங்கையன், பாரியின் படையில் பங்கேற்றுப் போர்புரிகிறான்" என்றான் ஒற்றர்படைத்தளபதி.

செங்கனச்சோழனுக்கு அவன் சொல்ல வருவது புரியவில்லை, ``என்ன சொல்கிறாய்... விளங்கும்படி சொல்."
``தங்களுக்குப் பேரரசர் பட்டம் சூட்டும் வேளையில் கரும்பாக்குடியினரின் மீது மீண்டும் ஒரு தாக்குதல் நடத்தப்பட்டது. கரும்பாக்குடியினர் ஈங்கையனின் தலைமையில் மிகக்கடுமையான எதிர்த்தாக்குதலை நடத்தினர். இறுதியில் அவர்களை வீழ்த்தினார் நம் தளபதி உறையன். வீழ்த்தப்பட்ட ஈங்கையன் உள்ளிட்ட அவன் தோழர்களைக் கப்பல் அடிமைகளாக விற்றார். ஆனால், அந்த ஈங்கையன் இன்று பறம்பின் படையில் தளபதிகளில் ஒருவனாய் நின்று போர்புரிகிறான்."

வியப்பு நீங்காமல் ஒற்றர்படைத் தளபதியைப் பார்த்தான் செங்கனச்சோழன், ``நீ சொல்வது உறுதியான செய்திதானா?"

``உறுதியான செய்திதான் பேரரசே! நம்மவர்கள் நேரில் பார்த்துள்ளனர்.”

``சரி. மற்றவர்களுக்குத் தெரியவேண்டாம்” என்று சொல்லி அவனை அனுப்பிவைத்தான்.

**கு**லசேகரபாண்டியன் கூடாரத்துக்குள் நுழைந்தபோது அங்கேயும் ஒருவன் இருந்தான். பேரரசரை வணங்கிவிட்டுச் சொன்னான், ``எதிரிகள் தரப்பில் இன்றைய போரில் பங்கெடுத்தவர்களை மதிப்பிட்டோம். நமது படையோடு ஒப்பிட்டால் அவர்களின் படை இருபதில் ஒரு பங்குதான் இருக்கும். இன்றைய போரில் இறந்தவர்களை மதிப்பிட்டோம். நமது தரப்பில் இறந்தவர்களோடு ஒப்பிட்டால் எதிரிகள் தரப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை இருபதில் ஒரு பங்குகூட இருக்காது. அதற்கும் குறைவுதான்.”

**வே**ங்கைமரத்திட்டில் கூடி இருந்தவர்கள் பேச்சு முடிந்து கலைந்தனர். உறங்குவதற்காக ஆறாவது குகையை நோக்கிப் போனான் பாரி. அவன் சென்ற சிறிது நேரத்தில் அந்தக் குகையை நோக்கி உதிரன் போனான். பாரி தங்கும் குகையை நாள்தோறும் தளபதி ஒருவன் காத்து நிற்க வேண்டும் என்பது முடியனின் உத்தரவு.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-94

திசைவேழரின் கையுயர்வின் வழியே மேலெழுந்தது பேரோசை. தட்டியங்காட்டுப் போரின் இரண்டாம் நாள் தொடங்கியது. இனி ஒவ்வொரு நாளும் போர் முடிவுறும் நாழிகையின்போது போர்க்கள நிகழ்வுகளை உற்றுநோக்க வேண்டும். முதல் நாள் இழப்புக்கு வஞ்சினம் உரைத்தவர்கள், மறுநாள் பழிவாங்க அனைத்து வழிகளிலும் முயல்வார்கள். அவர்களுக்கான கடைசி வாய்ப்பாக, போரின் இறுதி நாழிகை இருக்கும். போர் முடிவுற்றதாக முரசுகள் ஒலி எழுப்பினாலும் அந்தக் கணத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவே முயல்வார்கள். எவன் ஒருவன் முரசோசைக்கு மதிப்புகொடுத்து ஆயுதத்தைத் தாழ்த்துகிறானோ, அவனே பாதிக்கப்படுகிறான். நேற்றைய போரில் தளபதி ஒருவன் கொல்லப்பட்டுள்ளான். அப்படியென்றால், இன்றைய போரில் அதற்குப் பலியெடுக்கப்படும். ஒருவேளை பகற்பொழுதில் அந்த வாய்ப்பு அமையாவிடின் கடைசி நாழிகையில் சதிகள் அரங்கேறத் தொடங்கும்.

நிலைமான் கோல்சொல்லிகளின் வேலை இனிமேல்தான் கடினமானதாக மாற இருக்கிறது. வேட்டை விலங்குகளை விதிமுறைகளைப் பேணச்செய்வது எளிதன்று. போர்க்களத்தில் எல்லோரும் வேட்டை விலங்குகள்தான். தனக்கான இரையைப் பற்றியிழுக்கக் கடைசிவரை முயல்வார்கள். அதுவும் கடைசிக்கணத்தில் மூர்க்கமேறிய பாய்ச்சல் இருக்கும். அப்போது ஒலிக்கும் முரசோசை செவிப்புலனுக்குள் நுழையாது. கொலைவெறி ஊறிய அவர்களின் கண்களுக்கு வேறெதுவும் தெரியாது.



போர்க்களம் முழுவதும் விதிகளின் வழியே காத்து நிற்பதுதான் நிலைமான் கோல்சொல்லிகளின் கடமை. முடிவுறும் நாழிகையில் கொலைவெறியை மறித்து நிறுத்தும் செயலில்தான் அவர்களின்

திறன் இருக்கிறது. காற்றில் அங்குமிங்குமாக அம்புகளும் ஈட்டிகளும் பறப்பதன்று பிரச்னை. முரசோசையையே தனது திட்டத்தின் பகுதியாகத் தீர்மானித்துச் செயல்படுபவர்கள்தான் விதிமுறைகளைத் தகர்த்தெறிகிறார்கள். அவர்கள் பெரும்பாலும் நிலைமான் கோல்சொல்லியின் பார்வையெல்லைக்கு அப்பால்தான் தங்களின் திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள். திசைவேழர் முடிவுசெய்தார், `இனிமேல் நடுவில் இருக்கும் இந்தப் பரணில் மட்டும் இருப்பதில்லை. போரின் போக்கிற்கேற்ப முடிவுறும் நாழிகையின்போது வெவ்வேறு பரண்களின்மேல் ஏறி நின்று களத்தைத் துல்லியமாகக் கண்காணிக்க வேண்டும்.'

எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்கையில் தட்டியங்காடெங்கும் வீரர்கள் போரிட்டுக்கொண்டிருந்தனர். ஒரு கணம் திகைப்புற்றார் திசைவேழர். `இத்தனை ஆயிரம் வீரர்கள் போரிடுவதைக் கண்கள் பார்த்தபடியிருக்க, எண்ணங்கள் தாம் செய்யவேண்டிய வேலையில் மட்டுமே கவனம்கொண்டிருக்கின்றன. போர்க்களத்துக்குரிய மனிதராக அவர் மாறிக்கொண்டிருந்தார். சரிந்துவிழும் எண்ணற்ற உடல்களைப் பார்க்காது கடப்பதைப்போலவே பார்த்துக் கடக்கும் மனநிலை உருவாகிறது. வீரர்கள் அனைவரும் இந்த மனநிலையில்தான் இருப்பார்கள். மரணத்தை மதிப்பற்ற ஒன்றாகக் கைக்கொண்டால் மட்டுமே போர்க்களத்துக்குரியவராக மாற முடியும். திசைவேழர் போர்க்களத்துக்கானவராக மாறியிருந்தார்.

நேற்றைய இழப்பின் தாக்கம் ஏதும் வேந்தர்படையில் இல்லை. தளபதிகள் பலருக்கும் இப்போது தெளிவு கூடியிருந்தது. சமதளப் போர்க்களத்தில் பறம்புவீரர்கள் வெளிப்படுத்தும் ஆற்றலைப் பற்றிய குறை மதிப்பீட்டிலிருந்து அவர்கள் மீண்டனர். நேற்றைய போரில் எதிரியைச் சரியான உத்திகளின் மூலம் சந்திக்கவில்லை. எளிதாக வெற்றியை எட்டும் மனநிலையிலேயே அவர்கள் போரைத் தொடங்கினர். ஆனால், இன்று அப்படியல்ல. எதிரியை எந்த வகையிலும் குறைத்து மதிப்பிடக் கூடாது என்பதைச் சாகலைவனின் மரணம் உணர்த்தியிருந்தது.

கருங்கைவாணனைப் பொறுத்தவரையில் தளபதிகளுக்கான தனித்த ஆணை எதையும் இன்று அவன் பிறப்பிக்கவில்லை. பொதுவான தன்மையிலான தாக்குதலுக்கே அவன் அனுமதி கொடுத்திருந்தான். அவனுக்கு நேற்றைய போர் ஒரு மதிப்பீட்டுக்களம்தான். எதிரிகள் செயல்படும் வேகத்தையும் அவர்களின் ஆற்றலையும் மதிப்பிட்டான். இன்றோ அவர்கள் சோர்வடையும் வரை தமது படைத் தாக்குதலை நிறுத்தாமல் தொடரவேண்டும் என்று கூறியிருந்தான். பறம்புவீரர்கள் முழு ஆற்றலோடு போரிடும் வரை அவர்களோடு தீவிரமாக மோதுவதைத் தவிர்க்க வேண்டும். அவர்கள் சோர்வுறும் வரை நமது முன்னணிப் படையினர் விடாது மோதிக்கொண்டிருக்க வேண்டும். அதனால் ஏற்படும் இழப்புகள் ஒரு பொருட்டல்ல. எண்ணற்ற வீரர்களின் இழப்பின் வழியேதான் பறம்புவீரர்களைச் சோர்வடையச் செய்ய முடியும். அதன்பிறகே தாக்குதல் போரை முழு வேகத்தோடு தொடங்க வேண்டும் என்று முடிவுசெய்திருந்தான்.

வழக்கம்போல் முதல்நிலைப் படையின் நடுப்பகுதியில் கருங்கைவாணன் நின்றிருந்தான். நேற்றைய போரில் முதல்நிலைப் படை மூன்றில் ஒரு பகுதி வீரர்களை இழந்திருந்தது. அதே அளவுக்குப் புதிய வீரர்கள் இப்போது படையில் நின்றிருந்தனர். இரண்டாம் நிலையிலும் மூன்றாம் நிலையிலும் இருந்த வீரர்களை இதில் இணைத்திருந்தான். ஆனால், அங்கு இருந்த நிலைப்படை வீரர்கள் யாரையும் இங்கு

வந்து சேர்க்கவில்லை. எதிரிகளைச் சோர்வடையச்செய்யும் உத்தியே பின்பற்றப்பட்டது. இழப்பதையே உத்தியின் பகுதியாக மாற்றியிருந்தான். அதற்கேற்ப கூலிப்படை வீரர்களைத்தான் முன்களத்தில் நிறுத்தியிருந்தான்.

முரசோசை கேட்டதும் உதிரனின் தலைமையிலான விற்படை தங்களது தாக்குதலைத் தொடங்கியது. கூழையனின் தேர்ப்படையும் தேக்கனின் வாள்படையும் முன்னேறத் தொடங்கின. வேந்தரின் குதிரைப்படைத் தளபதி உறுமன்கொடி பாய்ந்து தாக்கவில்லை. நின்ற இடத்திலேயே அணிவகுத்து நின்றுகொண்டான். இது எதிர்பார்க்கப்பட்டது தான். பறம்பின் குதிரைப்படைத் தளபதி இரவாதன் சிறிது நேரம் போக்குக்காட்டிக்கொண்டிருந்தான்.

தொடக்க நாழிகையில் போரின் குணத்தைக் கருங்கைவாணன் நிதானமாக மதிப்பிட்டுக்கொண்டிருந்தபோது, குளவன்திட்டிலிருந்து பாரியும் அதைத்தான் செய்துகொண்டிருந்தான். காலையில் பாரி இந்த இடம் வந்துசேரும்போதே இகுளிக்கிழவனின் முகம் சோர்வுற்று இருந்தது. ``நேற்று இரவெல்லாம் உள்காடுகளில் நல்ல மழை. இப்போதும் கணவாய்ப் பகுதியில் தூறல் விழுந்துகொண்டுதான் இருக்கிறது'' என்றான்.




அவன் என்ன சொல்லவருகிறான் என்பது பாரிக்குப் புரிந்தது.

மெல்லிய குரலில் தயக்கத்தோடு சொன்னான், ``இன்றும் காற்றும் காற்றியும் வருவதற்கு வாய்ப்பில்லை.''

பாரியின் முகத்தில் கவலைதோய்ந்த மாற்றங்கள் எதுவுமில்லை. அதைப் பார்த்தபடி இகுளிக்கிழவன் மேலும் சொன்னான், ``தட்டியங்காட்டு நிலத்தில்கூட அதிகளவுக்கு வெக்கை இருக்காது'' என்றான்.

அப்படியென்றால், வேந்தர்படை வீரர்கள் நடுப்பகலுக்குப் பிறகு சோர்வடைய மாட்டார்கள் என்பதை எண்ணியபடியே போர்க்களத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான் பாரி. பறம்பைப் பொறுத்தவரை இன்றைய போர் உத்தி என்பது, தாக்கி முன்னேறுவதன்று; முழுவதும் இரவாதனைச் சுற்றி உருவாக்கப்பட்டுள்ள உத்தியே. அவனது தாக்குதலுக்குக் குறுக்கே யாரும் வந்துவிடாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

மரத்திலிருந்து கலைந்து வானத்தில் பறக்கும் பறவைகள் சிறிது தொலைவு பறந்த பிறகு ஓர் ஒழுங்கை அடைவதைப்போல, போர் தொடங்கிய கணத்தில் தாக்கி முன்னேறிய பறம்புவீரர்கள் திட்டமிடலுக்கேற்ற ஒழுங்கை அடைந்துகொண்டிருந்தார்கள். பாரியின் கண்கள், அவர்களைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தன.

வேந்தர்களின் வாள்படைக்குப் புதிய தளபதியாக நியமிக்கப்பட்ட சூலக்கையன் திட்டமிடப்பட்டபடி படையை நகர்த்திக்கொண்டிருந்தான். எதிரில் நின்றிருந்த பறம்புத்தளபதி தேக்கன் முன்னகர்ந்து செல்வதற்கான வாய்ப்புகளைக்கூடப் பயன்படுத்தவில்லை. இன்றைய போரில் பறம்புத்தளபதிகள் அனைவருக்கும் கொடுக்கப்பட்ட பணி இரவாதனுக்குத் துணைசெய்வதே.

இரவாதன், தனது குதிரைப்படையைக் கொண்டு பெயரளவிலான தாக்குதலையே நடத்திக்கொண்டிருந்தான். அவனது திட்டத்தை நடைமுறைப்படுத்த இருபுறமும் இருந்த பறம்புத்தளபதிகளான உதிரனும் கூழையனும் குறிப்பிட்ட தொலைவு வரை முன்னேறிப் போகவேண்டியிருந்தது. அதைக் கணித்தபடியே இரவாதன் அங்குமிங்குமாக அலைமோதிக்கொண்டிருந்தான். உறுமன்கொடியோ, தங்களின் குதிரைப்படை நிலைகொண்ட தாக்குதலை நடத்துவதால் என்ன செய்வதென்று புரியாமல் எதிரி திணறுகிறான் என நினைத்தான்.

இரவாதன் உள்ளிட்ட பறம்பின் குதிரைப்படை வீரர்கள் அனைவரின் அம்பறாத்தூணிகளிலும் ஓங்கல அம்புகள் இருந்தன. இன்றைய போரில் பறம்பு நம்பியிருக்கும் பேராயுதம் ஓங்கலம்தான். `ஓங்கலம்' என்பது மூங்கிலின் குறிப்பிட்டதொரு வகை. இந்த வகை மூங்கிலைப் பறவைகளோ, விலங்குகளோ நெருங்காது.

ஓங்கலத்தின் தோகை அறுத்தாலோ, கணு குத்தினாலோ விலங்குகளுக்கு மயக்கம் ஏற்படும். அதன் ஈக்கியில் கசியும் நீர் கணநேரத்தில் உயிரினங்களைக் கண்பார்வை மங்கச்செய்யும். கருவுற்ற யானை ஓங்கலத்தின் தோகையைத் தின்றால், தின்றவுடன் கருக்கலையும். நாகத்தின் நஞ்சால் தாக்குண்ட விலங்கு மட்டும் ஓங்கலத்தைத் தேடிவந்து அதன் தோகைகளை வேகவேகமாக மென்று தின்னும். எதிர்குணம்கொண்ட நஞ்சு, நாகத்தின் நஞ்சைச் செயலிழக்கச்செய்யும் என்பதால், விலங்குகள் இந்த மருந்தைக் கண்டறிந்துள்ளன. ஓங்கலத்துக்குள் நாகங்கள் நுழைவதில்லை. நாகங்கள் அஞ்சும் நஞ்சு, ஓங்கலத்தின் தோகைச் சுணைகள்தான். ஊர்ந்து செல்லும் பாம்பின் மீது தோகையின் விளிம்பில் உள்ள கூர்முனைகொண்ட சுணை பட்டால்போதும், பாம்பின் செதில்களுக்குள் சிக்கிக்கொள்ளும். பாம்பு அசைய அசைய அதன் செதில்களே சுணையை உடலுக்குள் செலுத்திவிடும். நாகம் நஞ்சால் செயலிழக்கும்.

`வேந்தர்களின் குதிரைப்படை பாய்ந்து தாக்காமல் நிலைகொண்டு தாக்கும் உத்தியைத்தான் பின்பற்றும்' என்று நேற்றிரவு வேங்கைமரத்திட்டில் பேசும்போதே முடியன் கணித்தான். அவர்கள் முன்னேறிவந்து தாக்காமல் நிலைகொண்டு தாக்கும் உத்தியைப் பின்பற்றினால் வேந்தர்களின் குதிரைப்படையை எளிதில் வீழ்த்த முடியாது. அவர்கள் படையில் பெரும் எண்ணிக்கையில் குதிரைகள் இருக்கின்றன. அவற்றை வெகுவாகக் குறைத்தால் மட்டுமே மூஞ்சல்நகரை நெருங்க முடியும். மூஞ்சலின் பாதுகாப்பை நொறுக்கி நீலனை மீட்கச் செய்யவேண்டுமென்றால், முதலில் எதிரிகளின்

குதிரைப்படையைக் குறைத்தாக வேண்டும். அதற்கு இருக்கும் ஒரே வாய்ப்பு ஓங்கலத்தைப் பயன்படுத்துதல் மட்டுமே.

நேற்றிரவு வேங்கைமரத்திட்டில் ஓங்கலத்தைப் பயன்படுத்துவதற்கான முடிவை எடுத்தவுடன் செய்திகள் எல்லா இடங்களுக்கும் தெரிவிக்கப்பட்டன. இரவோடு இரவாக ஓங்கல மூங்கிலின் கட்டுகள் தலைச்சுமையாக இரலிமேட்டுக்கு வந்துசேரத் தொடங்கின. உடனடியாக அவை அம்புகளாகச் சீவப்பட்டு குதிரைப்படை வீரர்களின் அம்பறாத்தூணிகளில் செருகப்பட்டன.

இரவாதன் தலைமையிலான குதிரைப்படை வீரர்கள் அனைவரின் அம்பறாத்தூணிகளிலும் இப்போது ஓங்கல அம்புகள் இருக்கின்றன. ஆனால், அவற்றை யாரும் இன்னும் பயன்படுத்தவில்லை. மற்ற அம்புகளைப் பயன்படுத்தியபடியே இங்குமங்குமாக அலைந்துகொண்டிருந்தனர். வேந்தர்களின் குதிரைப்படையின் இரு ஓரங்களிலும் இரவாதனின் குதிரைப்படை கடைசி வரை பாய்ந்து செல்வதற்கு வழியமைத்துக்கொடுக்க உதிரனும் கூழையனும் முன்னோக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.

குறிப்பிட்ட பகுதியில் மட்டும் பறம்புப்படை முன்னோக்கி வந்துகொண்டிருப்பதைக் கருங்கைவாணன் கவனித்துக்கொண்டிருந்தான். தங்கள் படையின் முன்கள வீரர்கள் பெரும்வலிமைகொண்டவர்கள் அல்லர்; தனது திட்டபடி அவர்கள் பலியாடுகளே. ஆனால், குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் பறம்புப்படை இவ்வளவு உள்நுழைந்துள்ளதே எனச் சிந்தித்தபடி நின்றுகொண்டிருந்தான். பறம்புத் தலைமைத் தளபதி முடியனை அவனது கண்கள் தேடின. வழக்கம்போல முடியன் முன்களத்துக்கு வரவில்லை. நேற்றைக்குப்போல நடுப்பகல் கடந்த பிறகுதான் அவன் முன்னே வருவான். அப்படியென்றால், இன்றும் பிற்பகலில் அவர்களின் தாக்குதல் திட்டம் தீவிரமடையும் என நினைத்துக்கொண்டிருந்தான்.

எவ்வளவு துல்லியமாகத் திட்டமிட்டாலும் நாம் சிந்தித்திராத வாய்ப்புகளைப் போர்க்களம் நமக்கு உருவாக்கித்தரும். மிகக் குறைந்த நேரம் மட்டுமே நீடிக்கும் அந்த வாய்ப்பைச் சரியாகக் கண்டறிந்து செயல்படுத்தும் தளபதியே வெற்றியைப் பறிக்கிறான். கருங்கைவாணனின் திறமையே, களத்தில் உருவாகும் வாய்ப்பைப் பயன்படுத்துவதில் இணையற்றவனாக இருப்பதுதான். இன்றைய நாளுக்காக வகுக்கப்பட்ட உத்தியை, படையணிகள் சரியாகச் செயல்படுத்துகின்றனவா என்பதைத் தளபதி உற்றுகவனிக்க வேண்டும். அதே நேரத்தில் எதிரிகள் வகுத்துள்ள உத்தி என்ன என்பதையும் விரைவில் கண்டறிய வேண்டும். எல்லாத் தளபதிகளும் இந்த இரண்டு எண்ணங்களுடன்தான் போர்க்களத்தில் நிற்பர். ஆனால், இவை இரண்டையும் கடந்து மூன்றாவதான வாய்ப்பு ஒன்று போர்க்களத்துக்குள் உருவாகிக்கொண்டிருக்கும். அதை விரைந்து மதிப்பிடத் தெரிந்தவனே போர்க்கலையின் வல்லுநன் ஆகிறான்.

`எதிரிகள் ஏன் குறிப்பிட்ட சில பகுதியில் மட்டும் இவ்வளவு தொலைவு முன்னகர்ந்து வந்துகொண்டிருக்கின்றனர்’ என்று கருங்கைவாணன் எண்ணிக்கொண்டி ருக்கும்போதுதான் சட்டென இன்னொன்றும் தோன்றியது. இந்தப் புதிய சூழல் உருவாக்கும் வாய்ப்பு என்ன எனக் கண்கள் இங்குமங்குமாகத் தேடத் தொடங்கின. எதிரிகள் எவ்வளவு முன்னகர்ந்து போய்க்கொண்டிருந்தாலும் கருங்கைவாணனுக்கு அச்சம் ஏதுமில்லை. ஏனெனில், முதல்நிலைப் படையைக் கடந்து

இரண்டாம்நிலைப் படை நின்று கொண்டிருக்கிறது. அதற்கு அடுத்து மூன்றாம்நிலைப் படை இருக்கிறது. எதிரிகள் எவ்வளவு முயன்றாலும் ஒன்றும் செய்துவிட முடியாது. எனவே, இந்தப் புதிய சூழல் வாய்ப்பை உருவாக்கித் தந்தால் அதைப் பயன்படுத்தலாம் என்று அவனுடைய கண்கள் இங்குமங்குமாக அலைமோதிக்கொண்டிருந்தன.

அப்போதுதான் அவனது கண்ணில் பட்டான் தேக்கன். சாகலைவனின் மரணத்துக்கு மறுநாளே பலியெடுக்கும் வாய்ப்பாக அந்தக் கணம் அவனுக்குத் தோன்றியது. கருங்கைவாணன் அவனை நோக்கிக் குதிரையைச் செலுத்தத் தொடங்கினான். வேந்தர்களின் வாள்படைத் தளபதி சூலக்கையன் சற்றே துடிப்பு நிறைந்தவனாக இருந்தான். தேக்கனோடு நேர்கொண்டு மோதும் வாய்ப்புக்காகக் காத்திருந்த அவனின் நகர்வும் தேக்கனை நோக்கியே இருந்தது.


தேக்கனோ தனது வாள்படையின் நடுப்பகுதியில் இருந்தான். வீரர்களின் கால்கள் மூன்றாம் முன்னெட்டைக் கடக்காமல் இருக்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தான். ஓசைகளின் வழியேயும் கால்கள் கிளப்பும் புழுதியின் வழியேயும் பார்ப்பவர்களின் கண்கள் வேகத்தை உணர்கின்றன. ஆனால், இருக்கும் இடம் விட்டு முன்னோக்கி நகராமல் அவர்கள் போரிட்டுக்கொண்டிருப்பார்கள். ஏறிவரும் எதிரியை மட்டும் வெட்டிச்சரித்தபடி இருப்பார்கள். தேக்கனின் தலைமையிலான வாள்படை அதைத்தான் செய்துகொண்டிருந்தது.

இரவாதன் தனக்கான வாய்ப்புக்காகத் துடித்துக்கொண்டிருந்தான். எதிரிகளது குதிரைப்படையின் இருபக்கவாட்டிலும் முன்னகர்ந்த பறம்புவீரர்கள் குறிப்பிட்ட தொலைவு சென்றவுடன் ஓசையை எழுப்பினர். வேந்தர்படையின் ஒவ்வொரு பிரிவிலும் ஓசை எழுப்பும் கருவியோடு வீரன் நின்றிருந்தான். ஆனால், பறம்புக்கு அப்படியன்று, போரிட்டிக்கொண்டிருக்கும் வீரர்களிலே கூவல்குடியினரும் இருந்தனர். எல்லையைத் தொட்ட குறிப்பை அவர்கள் சீழ்க்கை ஓசையின் வழியே கணநேரத்தில் கடத்தினர். அந்த ஓசைக்காகத்தான் இரவாதன் காத்திருந்தான். ஓசை கேட்ட மறுகணம் தனது உத்தரவைப் படை முழுமைக்கும் வழங்கினான்.

இரவாதனின் குதிரைப்படை, கண்ணிமைக்கும் நேரத்தில் பல கூறுகளாகப் பிரிந்தது; எதிரியின் குதிரைப்படையில் நிற்கும் குதிரைகளை முதலிலிருந்து கடைசி வரை இடைவெளிவிடாமல் துல்லியமாகத் தாக்கும் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியது. திடீரென இவர்கள் ஏன் இவ்வளவு வேகம்கொள்கின்றனர் என்று உறுமன்கொடிக்குப் புரியவில்லை. `ஒருவேளை அப்படிச் செய்தால்தான் நாம் விரட்டித்தாக்குவோம் என நினைத்துச் செய்கின்றனரா?’ என்று சிந்தித்தான். தம்மைக் கோபமூட்டி விரட்டிச்செல்லவைக்கும் உத்தியாக உறுமன்கொடி நினைத்தான். எதிரிகள் எவ்வளவு வேகமாகச் செயல்பட்டுக் குதிரையை விரட்டினாலும், தான் நிலைகொண்ட தாக்குதலை மாற்றக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தான்.

தொடக்க நிலை அம்புகள் சீறிப்பாய்ந்த பிறகு ஓங்கல அம்புகள் வில்லிலிருந்து விடுபடத் தொடங்கின. அவை மற்ற அம்புகளைப்போல வேகம்கொண்டு தாக்குவதில்லை. அதற்கான தேவையும் இல்லை. குதிரையின் முன்பக்கமோ, பின்பக்கமோ அல்லது உடலின் ஏதாவதொரு பாகத்திலோ மெள்ள உரசிச்சென்றால் போதும். அம்பின் ஈக்கியொன்று உள்நுழையும் அளவுக்குச் சிறுசிராய்ப்பை

உருவாக்கினாலே போதும். எனவே, பறம்பு வீரர்கள் முதலிலிருந்து கடைசி வரை நிற்கும் குதிரைகள் அனைத்தின் மீதும் ஏதாவது ஓர் அம்பு தைக்கும்படியான உத்தியைப் பயன்படுத்தினர்.
வேகம், வேகம், அதிவேகம் என்பதே இரவாதனின் செயல்பாடாக இருந்தது. இரண்டு மூன்று அம்புகளுக்கு ஒருமுறைதான் ஓங்கலத்தைப் பயன்படுத்த வேண்டும். எதிரிக்கு எந்த வகையிலும் ஐயம் வந்துவிடக் கூடாது. தாக்கும் போரைப் படுவேகமாகச் செய்கிறார்கள் என்று மட்டும்தான் அவர்கள் நினைக்க வேண்டும். ஆனால், முதலிலிருந்து கடைசி வரை குதிரைப்படை முழுமையும் அம்புகளைப் பொழிந்துதள்ள வேண்டும். இரவாதன், கண்ணிமைக்கும் நேரத்தைக்கூட வீணாக்காமல் செயல்பட்டுக்கொண்டிருந்தான்.



இந்தத் தாக்குதலில் மிகக் கடினமானது எதிரியின் குதிரைப்படையின் நடுப்பகுதியில் இருக்கும் குதிரைகளைத் தாக்குவதுதான். ஏனெனில், ஓங்கல அம்பை மற்ற அம்புகளைப்போல வேகம்கொள்ளச்செய்ய முடியாது. அதன் எடையும் தன்மையும் பாய்ந்து செல்வதற்கான வாகினைக்கொண்டதன்று. எனவே, இழுபடும் நாணின் விசையால் மட்டுமே அதை எதிரிப்படையின் நடுப்பகுதிக்குச் செலுத்த வேண்டும். சூளூர் வீரர்களுக்கு இரவாதன் வரையறுத்தது நடுப்பகுதிக் குதிரைகளைத் தாக்க வேண்டும் என்பதுதான். மற்ற வீரர்கள்தாம் ஓரப்பகுதியைத் தாக்கினார்கள்.

பறம்பின் குதிரைப்படையின் வேகமும் குறுங்காது முயலின் குருதியில் ஊறவைக்கப்பட்ட நாணின் இழுத்துத்தள்ளும் வேகமும் ஒன்றாய் இணைய, ஓங்கல அம்புகள் இடைவெளியின்றிப் பொழிந்தன.

போர்க்களம் தனது போக்கில் உருவாக்கிக் கொடுக்கும் வாய்ப்பைப் பயன்படுத்துதலே அறிவார்ந்த தளபதியின் வேலை. நேற்றைய போரில் சாகலைவனின் தலையைச் சரித்தவனை நோக்கி முன்னகர்ந்துகொண்டிருந்தான் கருங்கைவாணன். ஏற்கெனவே அவனை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தான் சூலக்கையன். தேக்கன், முன்திட்டமிட்டபடியான உத்தியின்படி பறம்புப்படைகளின் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தான்.


தேக்கனின் அருகில் வந்து சேர்ந்த சூலக்கையன் நேரடித் தாக்குதலில் ஈடுபடத் தொடங்கினான். தேக்கன் அதை வழக்கம்போல் எதிர்கொண்டபடியிருந்தான். சூலக்கையன், வயதால் இளையவன்; துடிப்பு நிறைந்தவன். கிழவனைச் சாய்க்கும் வெறியோடு அவன் மோதுவதைத் தேக்கன் உணர அதிக நேரமாகவில்லை. ஆனாலும் தேக்கனின் கவனம் இரவாதன் செயலின் போக்கை அறிவதிலேயே இருந்தது.

கிழவன் பெரிதாகக் கவனம்கொள்ளாமலேயே போரிடுகிறான் என்பதைப் புரிந்துகொண்ட சூலக்கையன் சீற்றம்கொண்டு தாக்கினான். முனையால் சீவிச்சரிக்கும் உத்தியைப் பயன்படுத்தி வாளின் மூக்குப் பகுதியைக் கண்ணிமைக்கும் நேரத்தில் கேடயத்தின் உள்விளிம்பை நோக்கிப் பாய்ச்சினான். பாய்ச்சிய வேகத்தில் கிழவனின் மேலிருந்து கொப்புளிக்கும் குருதியை அவன் கண்கள் தேடின. கேடயத்தின் உள்விளிம்பு ஆயுதத்தின் வேகத்தை உணர்ந்து வெளிப்புறம் நோக்கித் தள்ளியபோது, உடல் உள்வளைந்து எழுந்தது. தேக்கன் எளிதாகச் சுழன்றுகொடுத்து நின்றான். சூலக்கையன் அதிர்ச்சியோடு தேக்கனைப் பார்த்தபோது கருங்கைவாணன் வந்து இறங்கினான்.

மூவேந்தர்படைத் தலைமைத் தளபதி மகாசாமந்தன் போர்க்களம் தனது போக்கில் தந்த வாய்ப்பை வணங்கி வாளேந்தி நின்றான். சூலக்கையனுக்கு ஒதுங்கிக்கொள்வதா இணைந்துகொள்வதா எனத் தெரியவில்லை. சற்றே தயக்கத்தோடு விலகினான். அவன் விலகத் தயங்கிய நேரத்தில் கருங்கைவாணனின் கால்கள் தாக்கப்போகும் தன்மைக்கு ஏற்ப அடியெடுத்து நின்றன. சூலக்கையன் அவனுடைய கால்களைப் பார்த்தான். சட்டென நிமிர்ந்து அவனுடைய கைகளைப் பார்த்தான். இடதுகையில் இருந்த கேடயம் மட்டுமே துருத்தித் துருத்தி முன்னால் நகர்ந்துகொண்டிருந்தது. வலதுகையில் இருந்த வாள் சரியான கணத்துக்காகக் காத்திருந்தது.

தேக்கன், கருங்கைவாணனின் கண்களையே பார்த்தான். இருவரின் கால்களும் பின்னல் வட்டத்தில் நகர்ந்துகொண்டிருந்தன. கிழவனின் கண்களில் அச்சமேதும் தெரியவில்லை. தன்னைத் தாக்கி வீழ்த்த அவன் ஆயத்தமாக இல்லை; தற்காப்பு மட்டுமே அவனது நோக்கமாக இருக்கிறது என்று கணித்தான் கருங்கைவாணன். போர்க்களத்தின் சூழல் கணத்துக்குக் கணம் மாறக்கூடியது. இப்போதைய வாய்ப்பை அடுத்த கணம் வழங்குமா எனத் தெரியாது. எனவே, காலம் தாழ்த்த வேண்டாம் என எண்ணிய கருங்கைவாணன், தனது வலிமைமிகுந்த தாக்குதல் முறையால் மின்னல் வேகத்தில் பாய்ந்தான். வாள்கள் ஒன்றோடொன்று மோதித் திரும்பின. இவன் ஒவ்வொரு தாக்குதலிலும் உயிர் குடிக்க எண்ணுகிறான் என்பதைத் தேக்கன் உணர வெகுநேரம் ஆகவில்லை. கால்கள் முன்பாயும் வேகத்தில்

மூன்று மடங்கு ஆற்றலை வெளிப்படுத்திப் படபடக்கும் சிறகுபோல வாளால் இடைவிடாது தாக்கி எதிரியை நிலைகுலையச் செய்வதே கருங்கைவாணனின் உத்தி.



தேக்கன், அவனது வேகத்தை மதிப்பிடும் முன்பே அடுத்தடுத்து வேகத்தைக் கூட்டிக்கொண்டிருந்தான். முன்னும் பின்னுமாகக் கேடயத்தைச் சுழற்றியபடி வாள்வீச்சை வாங்கிக்கொண்டிருந்தான் தேக்கன். கிழவன் எதிர்கொள்ளத் திணறுகிறான் என்பதை உணர்ந்த கருங்கைவாணன், சரியான நேரத்தில் தேக்கனின் கேடயத்தை ஏமாற்றி நடுமார்பைக் கிழித்தபடி சீவி முன்னகரும் தாக்குதலைத் தொடுத்தான். மின்னல் வேகத்தில் குறுக்கிட்டு வெளிவந்தது கருங்கைவாணன் வீசிய வாள். காற்று அறுபடும் ஓசை காதில் கேட்டது. கிழவன் மண்ணில் சரிந்திருப்பான் என எண்ணியபடியே திரும்பினான். இந்தக் கணத்தைத்தான் தேக்கன் எதிர்பார்த்திருந்தான். கொலை முடிந்த மறுகணத்தில் ஆற்றலேதும் இன்றி அகமகிழ்ந்து திரும்பும் வீரனின் தலையைக் கொய்து முடிப்பதில்தான் சுகம் உண்டு. தனது உயிரைப் பணயம்வைத்து நடக்கும் இந்த விளையாட்டில் வீரர்கள் இந்த உணர்வைச் சுவைக்கவே மீண்டும் மீண்டும் வாள் சுழற்றுகின்றனர். தேக்கன் சுழற்றிய வாள் கருங்கைவாணனின் கழுத்தை நோக்கி வந்தபோது கண நேரத் தாமதமின்றிக் குறுக்கிட்டுப் பாய்ந்தான் சூலக்கையன்.

அதிர்ந்து மீண்டான் கருங்கைவாணன். இமைப்பொழுதில் எல்லாம் மாறத் தெரிந்தன. பின்பக்கமாகத் திரும்பிய கருங்கைவாணனின் முகத்தில் மரணத்தின் ஒளிபட்டுத் தெறித்தது. `கிழவனைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டோமே!' எனத் தோன்றியபோது அவனது மெய்க்கவசத்தைப் பார்த்தான். சரிபாதியாகப் பிளந்து வெளிவந்திருந்தது அவன் வீசிய வாள். இரும்பாலான கேடயமேயானாலும் இந்தத் தாக்குதலால் உள்ளெலும்பு உடைத்திருக்கும். `இவன் எப்படி சாயாமல் நிற்கிறான்?' என நினைத்தபடி கால்களை முன்னகர்த்தினான். `கிழவனின் நெஞ்செலும்பு நடுங்கியபடிதான் இருக்கும். இப்போது இளைப்பாற இடம்தரக் கூடாது' என்ற முடிவோடு வாளைச் சுழற்றி முன்னகர்ந்தான்.

சூலக்கையன், கருங்கைவாணனைப் பார்த்து மிரண்டு நின்றான். கழுத்தின் முனை நோக்கி வாள் பாய்ந்து திரும்பிய மறுகணமே, சீறி முன்னகரும் அவனது சீற்றம் யாரையும் மிரளச்செய்யும்.

இருவரும் கால்களைப் பின்வளைவு போட்டு நகர்த்தி, தேவையான இடைவெளியை

உருவாக்கிக்கொண்டனர். இருவருக்கும் மிக அருகில் மரணம் வந்துபோயுள்ளது. ஆனாலும் இருவரும் அதைப் பொருட்படுத்தவேயில்லை. சூலக்கையன், மிரட்சி குறையாமல் பார்த்துக்கொண்டிருந்தான். கிழவன் வலியை உணர்ந்து நிற்கிறானா, இல்லை வாய்ப்பைக் கணித்து நிற்கிறானா என்பதைக் கருங்கைவாணனால் கணிக்க முடியவில்லை. ஆனால், நேற்றைய போரில் சாகலைவன் எப்படி வெட்டிச்சரிக்கப்பட்டான் என்பதை உணர முடிந்தது. கிழவனைப் பலியெடுக்காமல் இந்த இடம்விட்டு நகரக் கூடாது என மனம் உறுதிகொண்டது. வாளின் பிடியை விரல்கள் இறுக்கிக்கொண்டிருந்தன. கால்கள் வீசி முன்னகர ஆயத்தமாயின. வெறிகொண்டு தாக்கப்போகும் அந்தக் கணத்தைக் கணித்தபடி சிற்றலையென அசைந்துகொண்டிருந்தான். அப்போதுதான் போர்க்களத்தின் இடதுபுறமிருந்து நீள்சங்கின் ஓசை கேட்டது.

அதிர்ந்து திரும்பினான் கருங்கைவாணன். உறுமன்கொடியின் குதிரைப்படை வெளிப்படுத்தும் ஓசையிது. `என்ன ஆனது அங்கு?' எனச் சிந்தனை மோதிப்புரண்டது. தடுமாறித் திரும்பின கருங்கைவாணனின் கண்கள். நிலைமையை உணர்ந்து சூலக்கையன் உள்ளிறங்கினான். வழியின்றிக் கருங்கைவாணன் வெளியேறினான். கிழவன், அடுத்தவனை எதிர்கொள்ள ஆயத்தமானான்.

உறுமன்கொடி இன்று காலையிலிருந்து நிலைகொண்ட தாக்குதலையே நடத்திவந்தான். கருமணலும் ஈக்கிமணலும் இருக்கும் போர்க்களத்தில் குதிரைகளைப் பாயவிட வேண்டாம் என்று முடிவெடுத்ததால் படையை நிலைகொள்ள மட்டுமே செய்திருந்தான். எதிரிகள் தங்களின் நிலையைக் குலைத்து, பாய்ந்துதாக்கும் போர்முறைக்கு இழுக்க முயல்கின்றனர் என்பதைக் கணித்தவாறே நின்று தாக்கிக்கொண்டிருந்தான். நெடுநேரத்துக்குப் பிறகு அவர்கள் வேகம்கொண்டு பக்கவாட்டிலிருந்து தாக்கியபடி விரைந்து கொண்டிருந்தனர். ஆனால், அந்தத் தாக்குதல் வீறுகொண்டதன்று; போக்குகாட்டித் திசைதிருப்பும் தாக்குதலே. உறுமன்கொடி எதிரிகளின் எந்தவொரு முயற்சிக்கும் இரையாவதில்லை என்ற விழிப்போடு இருந்தான். எதிரிகளின் செயலைக் கவனித்தபடி குதிரையை மெள்ள நகர்த்திக்கொண்டிருந்தான். அப்போது அவனது குதிரை போய் வலதுபுறம் இருந்த குதிரையின் மீது மோதியது. `என்ன இப்படிச் செய்கிறது!' என நினைத்தபடி கடிவாளத்தை இழுத்து நிறுத்தினான்.




சிறிது நேரத்துக்குப் பிறகு மீண்டும் குதிரையைக் கிளப்பியபோது அருகில் சென்ற இன்னொரு குதிரையின் மீது அதேபோல முட்டி விலகியது. ஏன் இப்படி நடந்துகொள்கிறது என்பது புரியாமல் குதிரையை விட்டுக் கீழிறங்கினான். கண்பட்டையில் ஏதாவது தூசியோ, கல்லோ சிக்கியிருந்தால் அது குதிரையின் கண்ணை உறுத்திக்கொண்டிருக்கும். அதனால் குதிரை அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாகத் தள்ளாடும் என நினைத்து, கண்பட்டையில் கைகளை விட்டுத் துடைத்தான். உள்ளே

வேறெந்தத் தூசியும் இல்லை. பிறகு ஏன் இப்படிச் செய்கிறது எனச் சிந்தித்தபடியே வந்து மேலேறி உட்கார்ந்தான். அந்தக் கணம் அவனது பருத்த தொடைகள் முதுகை அழுத்தியபோது நடுமுதுகு திடுக்கிட்டுக் குலுங்கியது. குதிரைக்கு ஏதோ ஆகிவிட்டது என்று அவன் உணரத் தொடங்கினான். அவனது கால் குறிப்புகளை உணர்ந்து செயல்பட அது ஆயத்தமாக இல்லை. உணர்வுகளை இழந்ததைப்போலாகிவிட்டது எனத் தெரிந்ததும் சட்டென மேலிருந்து கீழிறங்கினான்.

கட்டுப்பாடுகளை இழந்த குதிரையின் மீது உட்காருவது மரணத்தை அழைத்துக்கொள்வதற்குச் சமம். இனி அது எப்படி நடந்துகொள்ளும் எனத் தெரியாது. கீழிறங்கியவன் அதற்குக் காயங்கள் ஏற்பட்டிருக்கிறதா எனச் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். எந்த அம்பும் தைக்கவில்லை. `பின்தொடைப் பகுதியில் சின்னதாய் ஒரு கீறல் விழுந்திருக்கிறது. துளி அளவுதான் குருதி தெரிகிறது. வேறேதும் ஆகவில்லையே’ எனக் குழம்பிக்கொண்டிருக்கையில் படையின் நடுப்பகுதியில் கூச்சல்கள் அதிகமாகின. என்னவென்று விசாரிக்கத் தொடங்கியபோது ஏறக்குறைய பல வீரர்கள் குதிரையை விட்டு இறங்கி ஏதுசெய்வதென்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தனர். நிலைமை கட்டுமீறுவதற்குள் எதிரிகளின் தாக்குதலிலிருந்து குதிரைப்படையைக் காக்கவேண்டும் என்பதால்தான் தலைமைத் தளபதியை வரவழைக்க நீள்சங்கை ஊதச்சொன்னான் உறுமன்கொடி.

சங்கொலியைக் கேட்டு விரைந்து வந்தான் கருங்கைவாணன். அவன் வந்து நின்றபோது இரவாதனின் தலைமையிலான வீரர்கள், எதிரியின் குதிரைப்படை எல்லையைத் தொட்டுக்கொண்டிருந்தனர். ஓங்கலத்தின் வேலை, முடியும் தறுவாயில் இருந்தது.

*- பறம்பின் குரல் ஒலிக்கும்...*

# வீரயுக நாயகன் வேள்பாரி-95

இரண்டாம் நாளின் பிற்பகல் போரில், வேந்தர்களின் குதிரைப்படையை நிலைகுலையச்செய்தது பறம்புப்படை. நேரம் ஆக ஆக குதிரைகள் முற்றிலுமாகச் செயலிழந்தன. ஒருகட்டத்துக்குப் பிறகு உறுமன்கொடி முழுப் பாதுகாப்பை வேண்டி நின்றான். இன்றைய போரில் வேந்தர்படையின் முன்கள வீரர்களில் பெரும்பான்மையோர் நன்கு பயிற்சிபெற்ற நிலைப்படை வீரர்கள் அல்லர். எனவே, அவர்களைக்கொண்டு குதிரைப்படையைக் காக்கும் முயற்சி ஆபத்தில் முடிந்துவிடும் என நினைத்தான் கருங்கைவாணன்.



செயலிழந்து நிற்கும் குதிரைப்படைக்கு முழுமையான பாதுகாப்பைக் கொடுத்தால் மட்டுமே அதைக் காக்க முடியும். எனவே, இரண்டாம் நிலையில் நிறுத்தப்பட்டிருந்த படைப்பிரிவை உள்ளிறங்க உத்தரவிட்டான். பெரும் எண்ணிக்கையில் இரண்டாம் நிலைப்படை வீரர்கள் உள்ளிறங்கினர். குதிரைப்படையைக் காக்க, அவனுக்கு இதைத் தவிர வேறு வழியில்லை.

போர்க்களத்தில் உரிய காரணத்துக்காகப் படைகளை முன்னும் பின்னுமாக நகர்த்துவதில்தான் தலைமைத் தளபதியின் மதிநுட்பம் இருக்கிறது. ஆனால், அது தாக்குதல் வியூகமாக அமையும்போது பேராற்றலை வீரர்களுக்குத் தன்னியல்பிலே உருவாக்கும். தற்காப்புக்கு அவ்வாறு செய்யும் போது எதிர் மனநிலையை உருவாக்கும் ஆபத்தும் உண்டு.




முதல்நிலைப்படையைக் காக்க, இரண்டாம் நிலைப்படையை இறக்கவேண்டிய நிலை வந்துள்ளதை ஒவ்வொரு வீரனும் அறிவான். போர் தொடங்கிய இரண்டாம் நாளே வேந்தர் படை சற்றே திணறுவது வெளிப்படையாகத் தெரிந்தது. இரண்டாம்நிலைப்படை இறங்கியதும் பறம்புவீரர்கள் பின்னகர்ந்து தற்காப்பு நிலைக்கு வந்தனர். அவர்களைப் பொறுத்தவரை ஓங்கலத்தைப் பயன்படுத்திக் குதிரைப்படையில் பேரிழப்பை உருவாக்குவதுதான் அன்றைய தாக்குதலின் இலக்கு. அது வெற்றிகரமாக முடிக்கப்பட்டுவிட்டது.

திசைவேழரின் கை உயர்வு தட்டியங் காடெங்கும் முரசை ஒலிக்கச்செய்தது. இரண்டாம் நாள் போர் முடிவுக்கு வந்தது. வீரர்கள் பாசறைக்குத் திரும்பிக்கொண்டிருந்த நேரத்திலேயே நாகக்கரட்டில் இருந்த கபிலரை அழைத்துவரச் சொல்லி திசைவேழரின் மாணவன் வந்தான். தன்னை ஏன் அழைத்துள்ளார் திசைவேழர் என்பது கபிலருக்கு விளங்கவில்லை. வழக்கம்போல் வாரிக்கையனும் கபிலருடன் புறப்பட்டார்.

நாழிகை வட்டில் வைக்கப்பட்டிருந்த பரணின் அடிவாரத்தில் பந்தங்கள் ஏற்றப்பட்டிருக்க, அங்கேயே திசைவேழர் இருந்தார். போர்விதிகள் மீறப்பட்டதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டால், அவற்றை விசாரித்து முடிவெடுக்காமல் நிலைமான் கோல்சொல்லி போர்க்களம் விட்டு அகலக் கூடாது என்பது மரபு.

கபிலர் வாரிக்கையனோடு அவ்விடம் வந்தபோது கருங்கைவாணனுடன் பெருங்கூட்டம் நின்றுகொண்டிருந்தது. குதிரைப்படைத் தளபதி உறுமன்கொடியும் அமைச்சர்கள் ஆதிநந்தி, நாகரையர் ஆகியோரும் உடன் இருந்தனர். பறம்புவீரர்கள், தங்களின் ஆயுதத்தில் நஞ்சு கலந்து குதிரைகளைச் செயலிழக்கச் செய்து விட்டனர் என்பதுதான் குற்றச்சாட்டு.




குற்றச்சாட்டைக் கேட்டபோது அதிர்ச்சிக்குள்ளானார் கபிலர். நேற்றிரவு முடியனும் வாரிக்கையனும் தன்னைக் குறிப்பிட்டுப் பேசியது இதைப் பற்றித்தானா என நினைத்தார். வாரிக்கையன் இதை எதிர் பார்த்துதான் வந்துள்ளார்.

``எந்த ஓர் ஆயுதம், காயங்களின் தன்மையையும் அளவையும் மீறிப் பல மடங்கு அதிகமான பாதிப்பை உருவாக்குகிறதோ, அந்த ஆயுதம் ஐயத்துக்குரியது. இன்றைய பொழுதில் பறம்புவீரர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள், குதிரைகளுக்கு மிகச்சிறிய காயங்களையே உருவாக்கியுள்ளன. ஆனால், குதிரைகளை முழுமையாகச் செயலிழக்கச் செய்துள்ளன. எனவே, இந்த ஆயுதங்கள் நஞ்சு பூசப்பட்டவை” என்று வாதிட்டான் உறுமன்கொடி.
வாரிக்கையன் வெற்றிலையை மென்று கொண்டே சொன்னார், ``பறம்பு அளித்த வாக்கை மீறாது. விலங்குகளின் நஞ்சோ, தாதுக்களின் நஞ்சோ பயன்படுத்தக் கூடாது என்று ஏற்றுக்கொண்ட போர்விதிகளை நாங்கள் மீறவில்லை.”

``அம்புகளால் தாக்கப்பட்ட குதிரைகளுக்கு, சிறுகாயங்கள்தான் உருவாகியுள்ளன. சிறு காயங்களால் எப்படி குதிரையைச் செயலிழக்கச் செய்ய முடியும்?”

``அம்புகளின்தன்மை அதற்குக் காரணம்” என்றார் வாரிக்கையன்.


``அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். நஞ்சூறிய அம்பை நீங்கள் பயன்படுத்தியுள்ளீர்கள்” என்றான் ஆதிநந்தி.

தலையை மறுத்து ஆட்டியபடியே வாரிக்கையன் கேட்டார், ``நஞ்சென்றால் என்ன?”

ஆதிநந்தி ஒரு கணம் திகைத்தான். அவன் என்ன விளக்கம் சொன்னாலும் வாரிக்கையன் அதிலிருந்து தப்பித்து வெளியே வருவார் என அவனுக்குத் தெரியும். எனவே, சற்று சிந்தித்தான்.

அதுவரை அமைதியாக இருந்த திசைவேழர் இப்போது கூறினார், ``எண்ணிலடங்கா குதிரைகள் செயலிழந்து கிடக்கின்றன. நீங்களோ சொற்களைக்கொண்டு விதிகளைக் கடக்க நினைக்கிறீர்கள்.”

திசைவேழரின் கூற்று கபிலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால், வாரிக்கையன் அதைப் பொருட்படுத்தவில்லை. வெற்றிலையை மென்று கொண்டே அவரைப் பார்த்துக் கேட்டார், ``நீங்களே சொல்லுங்கள். நஞ்சென்றால் என்ன?”



``கேள்வியின் வழியே எதிர்நிலையில் பயணிக்க நினைக்கிறீர்கள். அது நஞ்சுதான் என்பதற்கு, செயலற்றுக் கிடக்கும் குதிரைகளே சான்று. அது நஞ்சல்ல என்பதற்கு நீங்கள் அளிக்கும் சான்றென்ன?”

வாரிக்கையன் திசைவேழரைச் சொற்களால் மடக்க நினைக்கவில்லை. சொல்லிப் புரிய வைக்கவே நினைத்தார். ``எந்த அம்பு தைத்து குதிரைகள் செயலிழந்து கிடப்பதாகச் சொல்கிறார்களோ, அதே அம்பால் ஒரு மனிதனை தாக்குவோம். அவன் செயலிழந்தால் அது நஞ்சென்று ஏற்கிறேன்.”

யாரும் எதிர்பாராத பதிலாக இருந்தது. எதிர்த் திசையில் நிற்பவர்களுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

வாரிக்கையன், திசைவேழரைப் பார்த்து மீண்டும் சொன்னார், ``நஞ்சென்பது உயிர்களுக்குப் பொதுவானது; பாகுபாடற்றது. குதிரைகள் செயலிழந்து கிடப்பதன் காரணம் அம்புகள் செய்யப்பட்ட மரமாக இருக்கலாம். அந்தக் குறிப்பிட்ட மரம் அந்த விலங்குக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தியிருக்கலாம். சில உணவு சில உயிரினங்களுக்குச் செரிமானம் ஆகாததைப்போலத்தான் இதுவும். இதற்கெல்லாம் மேலாக ஒன்று சொல்கிறேன், அது நஞ்சன்று என்பதற்குச் சான்று எந்தக் குதிரையும் சாகவில்லை என்பதுதான்.”


இரவு குலசேகரபாண்டியனின் கூடாரத்தில் அதிக பேச்சில்லை. பறம்புவீரர்கள் நஞ்சைப் பயன்படுத்தித்தான் குதிரைகளைச் செயலிழக்கச் செய்தனர் என்பதை மெய்ப்பிக்க முடியவில்லை. வாரிக்கையன் முன்வைத்த கூற்றை, திசைவேழர் ஏற்றுக்கொண்டுவிட்டார். தட்டியங்காட்டு நிலமெங்கும் வீழ்ந்து கிடக்கும் எண்ணிலடங்கா குதிரைகளை அவற்றுக்கான கொட்டிலுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க, பெருமுயற்சி நடந்து கொண்டிருந்தது. இரவுக்குள் அனைத்தையும் செய்துவிட முடியுமா எனத் தெரியவில்லை. ஆனாலும் கடும்முயற்சி நடந்துகொண்டிருந்தது.

பேரரசர்களின் கூடாரத்திலிருந்து கருங்கை வாணன் வெளியே வந்தான். மறுநாளைய போருக்கான திட்டமிடல் மிக விரைவிலேயே முடிந்தது.

வேங்கைமரத்தின் அடிவாரத்திட்டில் கூடியவர்களும், திட்டமிடலை முடித்துக்கொண்டு எழுந்தனர். பாரி, ஏழாவது குகை நோக்கி நடந்தான். இன்றிரவு குகைக்காவல் கூழையன். அவனும் சிறிது நேரம் கழித்து அந்தக் குகை நோக்கி நடந்தான்.

மற்றவர்கள் அவரவர்களின் தங்கும் இடம் நோக்கிச் செல்லத் தொடங்கினர். முடியன் மட்டும் வேங்கைமரத் திட்டிலேயே உட்கார்ந் திருந்தான். பறம்புப்படை முழுமையையும் கொண்டுசெலுத்தும் ஆற்றல்கொண்டவனின் முகத்தில் சற்றே கவலையின் கீற்று ஓடிக் கொண்டிருந்தது. உணவு அருந்திய பிறகு மீண்டும் அவன் அருகில் வந்து உட்கார்ந்தார் வாரிக்கையன்.
``உனது கவலைக்கான காரணம் என்ன?” என்று கேட்டார் வாரிக்கையன்.

சற்றே தயங்கினான் முடியன். ஆனாலும் வாரிக்கையனிடம் பகிர்ந்துகொள்வதில் தவறில்லை என்ற முடிவுக்குவந்து சொன்னான், ``மூன்று காரணங்கள் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றன.”



தனது கூடாரத்துக்கு வந்துசேர்ந்த கருங்கை வாணனால் உறங்க முடியவில்லை. நீண்டநேரம் விழித்தே இருந்தான். அவனுக்கு முன்னால் இருந்த வட்டப்பலகையை விட்டு அவனுடைய கண்கள் அகலவில்லை. அப்போது வெளியே ஏதோ ஓசை கேட்பதுபோல் இருந்தது. என்னவென்று திரும்புவதற்குள் உள்நுழைந்த வீரன் ஒருவன் சொன்னான், ``பேரரசர் வருகிறார்.”

குலசேகரபாண்டியன் உள்ளே நுழைந்தார்.

நள்ளிரவில் தனது கூடாரத்துக்கு வந்துள்ள பேரரசரை வணங்கி வரவேற்றான் கருங்கை வாணன். அவனுக்கு முன்னால் இருந்த வட்டப்பலகையில் பறம்புவீரர்கள் பயன்படுத்தும் மெய்க்கவசம் ஒன்றும், வாள் ஒன்றும், ஓங்கல அம்பு ஒன்றும் வைக்கப்பட்டிருந்தன. இந்த மூன்றையும்தான் அவன் உற்றுப்பார்த்தபடி இருந்தான்.

``மூன்று காரணங்கள் என்னென்ன?” என்று கேட்டார் வாரிக்கையன்.

முடியன் சொன்னான், ``நாம் எடுக்கவேண்டிய முடிவை, எடுக்க முடியாதவாறு சிக்கலை நாமே உருவாக்கிக்கொண்டுவிட்டோம்.”



``எதைச் சொல்கிறாய்?”

``காற்றும் காற்றியும் வீசுவதற்கு ஏற்பவே நாம் திட்டமிடவேண்டியுள்ளது.”

``ஒருவேளை காற்றும் காற்றியும் நமக்கு ஒத்துழைக்கவில்லையென்றால், மாற்றுத் திட்டமும் நம்மிடம் இருக்கத்தானே செய்கிறது?”

``இருக்கிறது. ஆனால், எதை, எப்போது செய்யப்போகிறோம் என்பது யாருக்கும் தெரியவில்லை. இந்தக் குழப்பத்துடனே போர்க்களத்தில் தொடர்ந்து நின்றுகொண்டிருக்க முடியாது. எதிர்பாராத நேரத்தில் பாதிப்புகள் அதிகமாகிவிடக்கூடும்.”

முடியன் சொல்வது சரியான காரணமாகத்தான் இருக்கிறது என நினைத்த வாரிக்கையன், ``இரண்டாவது காரணம் என்ன?” என்று கேட்டார்.

``என் மகன் இரவாதன்” என்றான்.

``போர்க்களத்தில் மிகச்சிறந்த வீரத்தை வெளிப்படுத்திவருகிறான். அவன் குறித்துக் கவலைப்பட என்ன இருக்கிறது?”

``அவன் வெளிப்படுத்தும் வீரம்தான் எனக்குக் கவலையளிக்கிறது.”

``புரியும்படி சொல்.”

``அவன் தாக்குதல் போரை நிகழ்த்துவதில் நிகரற்றவனாக இருக்கிறான். அந்த அவசரத்தில் மற்றவற்றின் மீதான கவனத்தைத் தவறவிடுகிறான். உதிரன், எதிரிகளின் படையை நடுவில் பிளந்து உள்ளிறங்குகிறான். தாக்கும் வேகத்திலும் தற்காக்கும் உத்தியிலும் சிறந்தவனாக விளங்குவதால், அவனால் அதைச் செய்ய முடிகிறது. ஆனால் இரவாதன், சூழலைக் கவனிப்பதில் தவறிழைக்கிறான்.”

``அது இளைஞர்களுக்கே உரிய சிக்கல்.”

``புரிந்துதான் அவனை தாக்கும் உத்திக்கு மட்டும் பயன்படுத்துகிறேன். ஆனால், எதிரிகள் வேறு மாதிரி சூழ்ச்சி செய்துவிட்டால் ஆபத்தில் மாட்டிக்கொள்வான்.”

``நீ இன்னொன்றைக் கவனிக்கத் தவறுகிறாய். இளைஞர்கள் தங்களின் அவசரத்தால் ஏற்படுத்தும் இழப்பை, ஆவேசமிக்க தாக்குதலால் பல மடங்கு சரிகட்டிவிடுவார்கள். எனவே, நீ அதைப் பற்றிக் கவலைகொள்ளாதே. மூன்றாவது என்னவென்று சொல்.”

வாரிக்கையன் சொல்வதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாத தயக்கத்துடனே மூன்றாவது

காரணத்தைச் சொன்னான், ``தேக்கன், இன்று கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார். எதிரிப்படைத் தளபதி வீசிய வாள் ஒன்று அவரது நெஞ்செலும்பைக் கடுமையாக பாதித்துள்ளது. ஆனாலும் `நாளைக்கும் போர்க்களம் புகுவேன்' என்று சொல்கிறார். `சற்று ஓய்வெடுத்து சிகிச்சை பெற்றுக்கொள்ளுங்கள்' என்று சொன்னால் கேட்க மறுக்கிறார்" என்றான்.

``நான் அவனிடம் பேசி, சிகிச்சை எடுத்துக்கொள்ளச் சொல்கிறேன்."

``நீங்கள் சொன்னாலும் தேக்கன் ஏற்க மாட்டார்."

``ஏன்?"

``குடி ஆசானோ, குடி முடியனோ போர்க்களத்தில் இல்லையென்றால், பாரி போர்க்களம் புகுந்துவிடுவான். எக்காரணம் கொண்டும் பாரி பறம்பின் எல்லை தாண்டி, போர்க்களம் நோக்கிச் செல்ல அனுமதிக்கக் கூடாது என்பதால், அவர் ஓய்வெடுக்கக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளார்" என்றான்.

**மூ**ன்றைப் பற்றியும் விளக்கினான் கருங்கைவாணன். ``நான் இன்று எனது வாளால் அந்தக் கிழவனைத் தாக்கினேன். இரும்பால் ஆன கேடயமே என்றாலும் அந்தத் தாக்குதலின் வேகத்தில் நெளிந்து அவனது எலும்புகளை நொறுக்கியிருக்க வேண்டும். ஆனால், அவனது மெய்க்கவசம் எனது வாளின் முழுவீச்சையும் உள்வாங்கி, அவனைக் காத்துள்ளது. எடை குறைவான, ஆனால் இரும்பைவிட வலிமையான கவசத்தைப் பூண்டு ஒவ்வொரு வீரனும் நிற்கிறான். இதோ, இந்தச் சாதாரண மரக்குச்சியினால் ஆன அம்பு, நிகரற்ற ஆற்றல்கொண்ட நமது குதிரைப்படையைச் செயலிழக்கச் செய்யும் என்பதை நம்மால் கற்பனைசெய்ய முடியுமா?" என்று கேட்டுக்கொண்டே வட்டப்பலகையில் இருந்த வாளைக் கையில் எடுத்தான் கருங்கை வாணன்.

``இது அவர்கள் பயன்படுத்தும் வாளா?" எனக் கேட்டார் குலசேகரபாண்டியன்.

``இல்லை பேரரசே! சாகலைவன் பயன்படுத்திய வாள். போர்க்களத்தில் எதிரியோடு போரிடும்போது இரு வாள்களின் மோதலில் சில இடங்களில் முனை மழுங்கும். ஆனால், இந்த வாளின் முனையைப் பாருங்கள். ஆங்காங்கே வெட்டுப்பட்டுள்ளது. ஒரு வாள் இன்னொரு வாளின் முனையை வெட்டி இறங்குமா என்ன? அவர்களது வாளின் முனை இரும்பின் தன்மையை மட்டும் கொண்டதன்று, அதைவிடக் கூர்மையான ஏதோ ஒன்றை அவர்கள் தமது வாளின் முனைக்குப் பயன்படுத்துகின்றனர் பேரரசே" என்றான்.

கேட்டுக்கொண்டிருந்த குலசேகரபாண்டியன், ``என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"

**``நா**ன் முதலிலே குறிப்பிட்டதைப்போல, வழக்கமான போர் முறைகளால் இவர்களை வீழ்த்த

நினைப்பது நமக்குப் பெருஞ்சேதத்தை உருவாக்கும். எனவே, வரைமுறையற்ற தாக்குதலால் அவர்களை முற்றிலும் அழித்தொழிக்க வேண்டும்” என்றான்.

``விதிகளைக் கைவிடுவது பற்றியே நீ சிந்திக்கிறாய். விதிகளைப் பயன்படுத்திக் கொள்வதைப் பற்றி நீ சிந்திக்க மறுக்கிறாய்.”

பேரரசரின் குற்றச்சாட்டு, கருங்கைவாணனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

``நான் முடிவெடுத்துவிட்டேன். நாளை மிக முக்கியமான நாள். எதிரிகளின் குதிரைப்படை பேரழிவைச் சந்தித்துள்ளது. எனவே, தற்காப்புப் போருக்கான உத்தியைத்தான் அவர்கள் பயன்படுத்துவார்கள். இந்நிலையில் நான் முன்னேறித் தாக்கப்போகிறேன். பறம்பின் மொத்தப் படையும் முன்னேறித் தாக்குவதை நாளைதான் அவர்கள் முதன்முறையாக எதிர்கொள்ளப்போகின்றனர். ஏறக்குறைய அவர்களின் அனைத்துப் படைகளையும் முற்பகலிலேயே நிலைதடுமாறச் செய்துவிடலாம். எதிரிகளின் முழு கவனமும் என்மீதுதான் இருக்கும். நான் இடது ஓரத்திலிருந்து தாக்கி முன்னேறுவேன். உதிரனோ, தனது வலிமை மிகுந்த விற்படை கொண்டு நடுவில் தாக்கி முன்னகர்வான். இந்த நேரத்தில் இரவாதனின் தலைமையிலான சூளுர் வீரர்களின் படை, ஓங்கலத்தையும் பகழி அம்பையும் பயன்படுத்தி எதிரிகளின் அணிவகுப்பைப் பிளந்துகொண்டு மூஞ்சல் நோக்கி நகர்வார்கள்.

மூஞ்சலைக் கண்ணில் பார்க்கும் தொலைவை அடைந்துவிட்டால் போதும். அதன்பிறகு, நம் வீரர்கள் பல மடங்கு ஆற்றலை அதிகப்படுத்தித் தாக்குவார்கள். உள்ளுக்குள் இருக்கும் நீலனை மீட்கும் எண்ணம் ஒவ்வொரு வீரனையும் மாவீரனாக மாற்றிவிடும். இந்தத் தாக்குதல் நடக்கும்போது இறுதி வரிசையில் தேக்கன் நிற்பான். அவனை இனி வாள் ஏந்த விட மாட்டேன். அதே நேரம் போர்க்களம் விட்டு வெளியேறவும் விட மாட்டேன்” என்றான் முடியன்.

நீண்ட சிந்தனைக்குப் பிறகு தனது புதிய திட்டத்தை விளக்கினான் கருங்கைவாணன். வகுத்துக்கொண்ட விதிகளின் வழியே எதிரியைச் சிக்கவைக்கும் புதிய திட்டம் இது. இதற்குக் குலசேகரபாண்டியன் ஒப்புதல் தந்தார். ``பாரி இல்லாத போர்க்களத்தின் கடைசி நாள் நாளைதான். நாளை மறுநாள் அவன் போர்க்களம் வந்தே ஆகவேண்டும். ஏனென்றால், குடி ஆசானையும் குடி முடியனையும் ஒரே நாளில் வீழ்த்தும் திட்டமிது” என்று முழங்கினான் கருங்கைவாணன்.

பொழுது விடிந்தது. கதிரவன் மேலெழுந்த ஐந்தாம் நாழிகையில் திசைவேழர் கைகளை உயர்த்தினார். மூன்றாம் நாள் போர் தொடங்கியது. போர்க்களத்தின் தன்மை இப்போது இருபக்கப் படைகளுக்கும் சற்றே பழகியிருந்தது. வேந்தர்படை வழக்கம்போல் அலையலையாய் முன்னகர்ந்து வந்து தாக்குதலைத் தொடங்கியது. வழக்கத்துக்கு மாறாக தொடக்கம் முதலே பறம்புவீரர்கள் ஆவேசம்கொண்டு தாக்கத் தொடங்கினர்.

போர் தொடங்கும் கணத்திலேயே எதிரிகளின் தாக்குதலில் இருந்த ஆவேசத்தைக் கருங்கை வாணனால் உணர முடிந்தது. வேந்தர்படை இன்று வகுத்திருந்த திட்டத்துக்கு எதிரிகள் ஆவேசம்கொண்டு முன்னேறுவது உதவியாகத்தான் இருக்கும் எனத் தோன்றியது. வழக்கம்போல் நடுப்பகல் வரை சற்றே நிதானம்கொண்டு தாக்குபவர்கள், நடுப்பகலில் நாகக்கரட்டிலிருந்து ஊதப்படும் காரிக்கொம்பின் ஓசையைக் கேட்டவுடன் தாக்குதலை வேகப் படுத்துவார்கள். உத்திகளையும் மாற்றுவார்கள். அடுத்த ஓசை கேட்கும்போது முழுமைகொண்ட வேகத்தோடு தாக்குவார்கள். இதைக் கணித்துதான் கருங்கைவாணன் இன்றைய உத்தியைத் தீர்மானித்திருந்தான். ஆனால், பறம்புவீரர்கள் தொடக்கத்திலேயே ஆவேசத்தோடு முன்னகர்வது தெரிந்தது.

மையூர்கிழாரின்மேல் பறம்புத் தளபதிகள் எவ்வளவு சினத்தோடு இருக்கிறார்கள் என்று கருங்கைவாணன் முழுமையாக அறிந்தே அன்றைய திட்டத்தை வகுத்திருந்தான். நடுப்பகல் வரை வழக்கமான தாக்குதல் போரை நடத்த வேண்டும். நடுப்பகலில் மலைமேலிருந்து காரிக்கொம்பு ஓசை கேட்கும்போது பின் களத்திலிருந்து முடியன் முன்பகுதிக்கு வருவான். அந்த நேரத்தில் மையூர்கிழாரின் தேர் அவன் கண்ணில்பட வேண்டும். முடியன், மையூர் கிழாரைத் தாக்க அவரை நோக்கி விரைவான். மையூர்கிழார் படையின் வலதுபுற ஓரத்தின் வழியாக முடியனைப் பின்னோக்கி இழுத்துச் செல்லவேண்டும்.

படையணியின் ஓரப்பகுதி வழியாக முடியனை எவ்வளவு தொலைவு பின்னோக்கி இழுக்க முடியுமோ, அவ்வளவு தொலைவு இழுத்துச் செல்ல வேண்டும். மையூர்கிழாரை வீழ்த்தும் வெறிகொண்டு முன்னகரும் முடியனை, வேந்தர்படைத் தளபதிகளான சூலக்கையனும் நகரிவீரனும் பின்தொடர வேண்டும். பொருத்தமான இடத்தில் படையணியின் சுழலுக்குள் சிக்கவைத்து அவனை வீழ்த்த வேண்டும்.

முடியன் தங்களது படையணிக்குள் இழுக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போது கருங்கை வாணன், தேக்கனை நோக்கி முன்னகர்வான். பறம்புப்படைக்குள் எந்த இடத்தில் தேக்கன் இருந்தாலும் அந்த இடம் நோக்கி எதிரிகளைக் கிழித்துக்கொண்டு உட்புகும் ஆற்றல் கருங்கைவாணனின் படைக்கு உண்டு. மற்ற தளபதிகள், எதிரிகளை வேறு திசையில் முன்னேறவிடாமல் தடுக்கும் பணியைச் செய்வர். இதுதான் வேந்தர்படையின் இன்றைய திட்டமாக இருந்தது.

நேற்றைய போரில் வேந்தர்களின் குதிரைப்படை பேரழிவுக்கு உள்ளாகியிருந்த நிலையில், இன்று மூஞ்சலை நோக்கி நகர்வதற்கான திட்டமிடலோடு பறம்புப்படை இருந்தது. போர் தொடங்கியதிலிருந்து அதற்கான தன்மையில் அவர்கள் முன்னகர்ந்தனர். இன்று அவர்களுக்குக் கூவல்குடியினரின் மூலம் வழங்கப்படும் உத்தரவு வழக்கம்போல இருக்காது. காரிக்கொம்பின் ஓசை வெவ்வேறு பொழுதுகளில் தேவையறிந்து ஊதப்படும். போர் தொடங்கிய சிறிது நேரத்திலேயே முடியனின் தேர் பின்புறமிருந்து படையின் நடுப்பகுதியை நோக்கி நகரத் தொடங்கியது.
வழக்கம்போல் குளவன்திட்டின் மேல் நின்றிருந்த பாரி, போர்க்களத்தின் தன்மையை

உற்றுகவனித்துக்கொண்டிருந்தான். மூன்றாம் நாள் போரில்கூட, தான் களம் புகுவதைப் பாரி ஏன் மறுக்கிறான் என்பது காலம்பனுக்குப் புரியவில்லை. திரையர்குலம் இனி சிறிய இழப்பைக்கூடச் சந்திக்கக் கூடாது என்பதைப் பாரி மீண்டும் மீண்டும் சொல்லிவருகிறான். அப்படியிருந்தும் கொற்றனைப் பலிகொடுக்க நேர்ந்ததைப் பாரியால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. தான் போர்க்களம் புக நேர்ந்தாலும்கூட காலம்பன் போர்க்களம் புகக் கூடாது என்றே பாரி நினைத்தான். தட்டியங்காட்டில் திரையர்குலத்தினரின் குருதி வீழக் கூடாது என்ற பாரியின் எண்ணத்துக்கு, திரையர்குலம் கடந்தகாலத்தில் அடைந்துள்ள இழப்புகளே காரணம். பாரியும் காலம்பனும் போர்க்களத்தை உற்றுகவனித்துக்கொண்டிருக்கையில், சிறியதாய் ஏதோ ஓசை கேட்டுத் திரும்பினான் பாரி. அது இகுளிக்கிழவனின் ஓசை. விளக்கின் சுடர் மெள்ள அசையத் தொடங்கியது.

பாரி, வியப்போடு இகுளிக்கிழவனைப் பார்த்தான். அவனோ கைகளைத் தூக்கிக் கூவல் குடியினருக்கு உத்தரவு கொடுக்கக் காத்திருந்தான். இரண்டு நாள்களாக எதிர்பார்த்தபோது எதுவும் நடக்காமல், சற்றும் எதிர்பாராத நேரத்தில் கொம்மனும் கொம்மியும் உதவப்போவது வியப்பைத் தந்தது. பாரியின் மனதில் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்க, விளக்கின் சுடர் சட்டெனச் சாய்ந்தது. இகுளிக்கிழவன் கையை அசைக்க மலையெங்குமிருந்து கூவல்குடியினரின் பீறிட்ட ஓசை கணநேர இடைவெளியின்றி வெளிவந்தது.

பறம்பின் குதிரைப்படை வீரர்களோ, வாள்படை வீரர்களோ இந்தக் கணத்தைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. கல்லூழி அம்புகளை எடுத்து எய்வதற்குள் காற்று அவர்களைக் கடந்தது. ஆனால், உதிரனின் தலைமையிலான விற்படை வீரர்களோ, ஓசையைக் கேட்ட கணத்தில் காற்றின் முகப்போடு அம்பை இணைத்தனர்.




ஆறு அம்புகளைக் கொண்டது ஒரு கொத்து. ஒவ்வொரு வீரனுக்கும் மூன்று கொத்துகள் கொடுக்கப்பட்டிருந்தன. கண்ணிமைக்கும் நேரத்தில் முதல் கொத்தை எடுத்து நாணில் பொருத்தி முழு விசையோடு எய்தது விற்படை. மேற்கு மலைக் கணவாயின் பின்புறத்திலிருந்து கொம்மன் ஊத, வீறுகொண்ட காற்று தட்டியங்காட்டு நிலத்தை நோக்கி வலதுபுறமாகச் சீவிக்கொண்டு இறங்கியது. எண்ணிலடங்காத அம்புகள் காற்றின் முன்முகப்போடு இணைய, கண்பார்வைக்கு அப்பால் சீறிச்சென்றன அம்புகள்.

மலைமேலிருந்து கொம்போசை கேட்ட கணத்திலேயே சற்றே அதிர்ச்சிக்குள்ளானான்

கருங்கைவாணன். வழக்கமான ஓசையாக அது இல்லை. வழக்கமான நேரத்திலும் ஊதப் படவில்லை. `இது என்ன புதுவகையாக இருக்கிறதே!' எனச் சிந்தித்துக்கொண்டிருக்கும் போதுதான், சிறுபுல்லின் கனம்கொண்ட எண்ணிலடங்காத அம்புகள் அவன் தலைக்கு மேலே எங்கோ பறந்து சென்றுகொண்டிருந்தன. `என்ன இது?' எனக் கருங்கைவாணனுக்கு ஒன்றும் புரியவில்லை. தேக்கனை நோக்கி முன்னேறிச் சென்றுகொண்டிருந்தவன் சற்றே குழப்பத்துக்குள்ளாகி அப்படியே நின்றான். பாய்ந்து செல்லும் எண்ணிலடங்காத அம்புகள் எங்கே செல்கின்றன என்று தலையைப் பின்புறமாகத் திரும்பிப் பார்த்தான். வெகு தொலைவுக்கு அப்பால் சென்றன.

வீசிய காற்றின் எதிர்ப்புறமாக வேந்தர்படை நின்றுகொண்டிருந்தது. குறுமணல் தூசிகளை அள்ளி எறிந்தபடி காற்று போய்க்கொண்டிருந்தது. வேந்தர்படை வீரர்கள், கண்களைக் கசக்கிக் கொண்டிருந்தனர். பறம்புவீரர்களைப் பொறுத்த வரை காற்று முதுகுப்புறத்தைத் தாக்கி முன்னகர்ந்தது. இவ்வளவு தொலைவு பறக்கும் அம்புகளை வாழ்வில் முதன்முறையாகப் பார்த்த கருங்கைவாணனுக்கு, ஒன்றும் புரியவில்லை. கண்களைக் கசக்கியபடியே திரும்பினான். எதிர்த்திசையில் பறம்புவீரர்கள் தங்களின் ஆவேசத் தாக்குதலைத் தொடங்கினர்.

கருங்கைவாணன் சட்டெனை விழிப்படைந்து பேரிகையை முழக்கச் சொல்லி, தன் வீரர்களை எதிரிகளின் தாக்குதலை எதிர்கொள்ள ஆயத்தப் படுத்தினான். பறம்புவீரர்களோ, அவ்வளவு தொலைவு செல்லும் அம்பை எய்த மறுகணமே வழக்கம்போலான தாக்குதலைத் தொடங்கினர். எய்யப்பட்ட கல்லூழி அம்பினால் ஏற்பட்ட விளைவு என்ன என்பது எய்த யாருக்கும் தெரியாது. அது கண்ணுக்கு அப்பால் எங்கோ நிகழ்ந்துகொண்டிருந்தது.

குளவன்திட்டில் இருந்தபடி பாரி பார்த்துக் கொண்டிருந்தான். எய்யப்பட்ட அம்புகள் மூன்றாம் நிலையில் நிறுத்தப்பட்டிருந்த வேந்தர்படையின் பிற்பாதியில் போய் இறங்கின. மூன்றாம்நிலைப் படையின் சரிபாதி வீரர்களின் மீது சுருள் அம்புகள் இறங்கின.

போர் நடந்துகொண்டிருந்த முற்பகுதியை மூன்றாம்நிலைப் படையினர் கண்கொண்டே பார்க்க முடியாது. அது எங்கோ நடந்து கொண்டிருந்தது. அவர்களைப் பொறுத்தவரை ஆயத்தநிலையில் நிற்க வேண்டும். அவ்வளவுதான். எந்தத் தொடர்பும் இல்லாமல் காற்றின் வழியே வானெங்குமிருந்து பறந்துவந்த வைக்கோல் அளவே கனம்கொண்ட அம்புகள் வீரர்களை நோக்கிச் சரசரவென இறங்கின.

பறந்து போன அம்புகள் எங்கே இறங்கின என்பது, முன்களத்தில் நின்றிருந்த கருங்கை வாணனுக்குத் தெரியவில்லை. இந்தத் தாக்குதல் என்ன என்பதும் அவனுக்குப் புரியவில்லை. ஏதோ நடக்கிறது என்பது மட்டும் புரிந்தது. இந்நிலையில்தான் முடியனின் தேர் நடுக்களம் நோக்கிச் சென்றது. முன்வகுத்த திட்டப்படி அந்தத் தேரின் பார்வையில் படும்படி மையூர்கிழாரைக் களத்துக்குள் வரச்சொல்லும் மறைக்குறிப்பு அனுப்பப்பட்டது.

தேரில் முன்னகர்ந்துகொண்டிருந்த முடியனின் எண்ணமெல்லாம், கல்லூழி வேர் எவ்விடம் கீழிறங்கியிருக்கக்கூடும் என்பதைக் கணிப்பதிலேயே இருந்தது. தேரின் மீது நின்றாலும் அவனது பார்வைக்கு அப்பால்தான் அந்தத் தாக்குதல் நிகழ்ந்திருந்தது. எப்படியிருந்தாலும் கல்லூழி அம்புகள் தைத்தவுடன் அவற்றின் பாதிப்பு தெரியாது. பிடுங்க முடியாமல் தவிக்கும்போதும் தசையோடு பிய்த்துக்கொண்டே அம்புகள் வெளிவரும்போதும்தான் பாதிப்பை உணரத் தொடங்குவார்கள். அப்போது அங்கிருந்து கொடுக்கப்படும் மறைக்குறிப்பு, முன்களத்தில் நிற்கும் வேந்தர்படையைப் பெருங்குழப்பத்துக்குள்ளாக்கும். அவர்களின் மொத்தக் கட்டுக்கோப்பும் அடுத்த சில பொழுதுகளுக்குள் முழுமுற்றாகக் கலையும் என எண்ணிக்கொண்டிருந்த போது ஏந்திய வில்லோடு மையூர்கிழார் சென்றுகொண்டிருந்த தேர் தெரிந்தது.

இத்தனை நாள்களாகப் போர்க்களத்தில் முடியன் எவனைத் தேடினானோ, அவன் இப்போது கண்ணில்பட்டான். தேரோட்டும் வலவனைப் பார்த்து, ``அந்தத் தேரைப் பின் தொடர்” என்று கூறினான். ஆனால், மறுகணமே அவனது எண்ணம் வேறானது. களத்தின் சூழல் இவ்வளவு அருமையான வாய்ப்பை உருவாக்கியுள்ளபோது நாம் மூஞ்சலை நோக்கிச் செல்வதே சரியான முடிவு எனத் தோன்றியது. ஆனாலும் மையூர்கிழாரை விட்டுவைப்பது சரியன்று என்றும் தோன்றியது. தேரோ, மையூர்கிழாரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. முடியனின் சிந்தனை, முடிவெடுக்க முடியாமல் தடுமாறியது.

ஏறக்குறைய இதே குழப்பத்தைச் சந்தித்தான் கருங்கைவாணன். `இத்தனை ஆயிரம் அம்புகள் காற்றில் எப்படி இவ்வளவு தொலைவு பறந்தன. அவையெல்லாம் எங்கே போய் இறங்கின. எங்கே இறங்கியிருந்தாலும் பல காதத் தொலைவுக்கு நிற்கும் நம் படைவீரர்களின் மீதுதானே இறங்கியிருக்கக் கூடும். பார்ப்பதற்கு மிகவும் சிறுத்த இந்த அம்புகளால் பெரிய பாதிப்பு எதுவும் நிகழ்ந்திருக்காது. ஆனாலும் படைத் தலைமைத் தளபதி என்ற முறையில் பின்களப்படையின் பாதிப்பை அறிந்த பிறகு முன்னேறிச் செல்வதுதான் சரியெனத் தோன்றியது. ஆனாலும் நாம் திட்டமிட்டபடி மையூர்கிழாரை நோக்கி முடியனின் தேர் செல்லத் தொடங்கிவிட்டது. இனி நாம் பொறுத்திருக்க வேண்டாம்’ என்று முடிவுசெய்து தேக்கனை நோக்கிப் பறம்புப்படைக்குள் புகுந்து உள்நுழையத் தொடங்கினான் கருங்கைவாணன்.

போர்க்களத்தில் தளபதிகளால் முழுமுற்றான தெளிவோடு இயங்க முடியாது. பல்லாயிரம் வீரர்கள் ஒருவரை ஒருவர் வெட்டிச்சரித்து முன்னகரும் போரியக்கத்தைத் துல்லியமாகக் கணிப்பது எளிதன்று. தளபதிகள், குழப்பத்துக்குள் சிக்கிச் சிக்கி மீள்பவர்களாகத்தான் இருப்பார்கள்.
கருங்கைவாணன் குழப்பத்துக்குள்ளிருந்து முடிவுக்கு வந்து தேக்கனை நோக்கிப் புறப்பட்டபோது, மையூர்கிழாரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த முடியன், தேரைச் சற்றே நிறுத்தினான். தொலைவில் குதிரையில் இருந்தபடி போரிட்டுக்கொண்டிருந்த வேட்டூர் பழையனைத் தனது தேரில் ஏறச் சொல்லி மையூர்கிழாரைக் கொன்றழிக்க உத்தரவிட்டு, அவனது குதிரையில் ஏறி இரவாதனை நோக்கிப் புறப்பட்டான் முடியன்.

பொழுதாகிக்கொண்டிருந்தது. வேந்தர்படையின் மூன்றாம் நிலையில் நிறுத்தப்பட்டிருந்த எண்ணிலடங்காத வீரர்கள் கல்லூழி அம்பை உருவி எடுக்க முடியாமல் திணறியபோதுதான் ஆபத்தின் அளவு புரியத் தொடங்கியது. கூச்சலும் குழப்பமும் மேலேறி வரத் தொடங்கியபோது முடியன் குதிரைப்படையோடு இணைந்து மூஞ்சலை நோக்கி முன்னகரத் தொடங்கினான்.

முன்திட்டப்படி தன்னைத் தொடர்ந்துவரும் தேரை, படையின் வலதுபுற ஓரமாகவே உள்ளிழுத்துச் சென்றுகொண்டிருந்தார் மையூர்கிழார். தளபதிகள் துடும்பனும் நகரிவீரனும் அவரைக் குறிவைத்துத் தங்களின் தேரை விரைவுபடுத்தினர்.

திட்டமிட்டபடி பறம்புப்படையின் பின்பகுதியை நோக்கி விரைந்து வந்தான் கருங்கைவாணன். எதிரிகளின் படையை விலக்கி முன்னகரும் உத்தியில் அவனது படை இணையற்ற அனுபவம்கொண்டது. விரைந்து முன்னகர்ந்து வந்த கருங்கைவாணனின் கண்களுக்கு வெகுதொலைவில் வாளூன்றி நிற்கும் தேக்கன் தனித்துத் தெரிந்தான்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-96

இரண்டாம் நாளின் பிற்பகல் போரில், வேந்தர்களின் குதிரைப்படையை நிலைகுலையச்செய்தது பறம்புப்படை. நேரம் ஆக ஆக குதிரைகள் முற்றிலுமாகச் செயலிழந்தன. ஒருகட்டத்துக்குப் பிறகு உறுமன்கொடி முழுப் பாதுகாப்பை வேண்டி நின்றான். இன்றைய போரில் வேந்தர்படையின் முன்கள வீரர்களில் பெரும்பான்மையோர் நன்கு பயிற்சிபெற்ற நிலைப்படை வீரர்கள் அல்லர். எனவே, அவர்களைக்கொண்டு குதிரைப்படையைக் காக்கும் முயற்சி ஆபத்தில் முடிந்துவிடும் என நினைத்தான் கருங்கைவாணன்.



செயலிழந்து நிற்கும் குதிரைப்படைக்கு முழுமையான பாதுகாப்பைக் கொடுத்தால் மட்டுமே அதைக் காக்க முடியும். எனவே, இரண்டாம் நிலையில் நிறுத்தப்பட்டிருந்த படைப்பிரிவை உள்ளிறங்க உத்தரவிட்டான். பெரும் எண்ணிக்கையில் இரண்டாம் நிலைப்படை வீரர்கள் உள்ளிறங்கினர். குதிரைப்படையைக் காக்க, அவனுக்கு இதைத் தவிர வேறு வழியில்லை.

போர்க்களத்தில் உரிய காரணத்துக்காகப் படைகளை முன்னும் பின்னுமாக நகர்த்துவதில்தான் தலைமைத் தளபதியின் மதிநுட்பம் இருக்கிறது. ஆனால், அது தாக்குதல் வியூகமாக அமையும்போது பேராற்றலை வீரர்களுக்குத் தன்னியல்பிலே உருவாக்கும். தற்காப்புக்கு அவ்வாறு செய்யும் போது எதிர் மனநிலையை உருவாக்கும் ஆபத்தும் உண்டு.




முதல்நிலைப்படையைக் காக்க, இரண்டாம் நிலைப்படையை இறக்கவேண்டிய நிலை வந்துள்ளதை ஒவ்வொரு வீரனும் அறிவான். போர் தொடங்கிய இரண்டாம் நாளே வேந்தர் படை சற்றே திணறுவது வெளிப்படையாகத் தெரிந்தது. இரண்டாம்நிலைப்படை இறங்கியதும் பறம்புவீரர்கள் பின்னகர்ந்து தற்காப்பு நிலைக்கு வந்தனர். அவர்களைப் பொறுத்தவரை ஓங்கலத்தைப் பயன்படுத்திக் குதிரைப்படையில் பேரிழப்பை உருவாக்குவதுதான் அன்றைய தாக்குதலின் இலக்கு. அது வெற்றிகரமாக முடிக்கப்பட்டுவிட்டது.

திசைவேழரின் கை உயர்வு தட்டியங் காடெங்கும் முரசை ஒலிக்கச்செய்தது. இரண்டாம் நாள் போர் முடிவுக்கு வந்தது. வீரர்கள் பாசறைக்குத் திரும்பிக்கொண்டிருந்த நேரத்திலேயே நாகக்கரட்டில் இருந்த கபிலரை அழைத்துவரச் சொல்லி திசைவேழரின் மாணவன் வந்தான். தன்னை ஏன் அழைத்துள்ளார் திசைவேழர் என்பது கபிலருக்கு விளங்கவில்லை. வழக்கம்போல் வாரிக்கையனும் கபிலருடன் புறப்பட்டார்.

நாழிகை வட்டில் வைக்கப்பட்டிருந்த பரணின் அடிவாரத்தில் பந்தங்கள் ஏற்றப்பட்டிருக்க, அங்கேயே திசைவேழர் இருந்தார். போர்விதிகள் மீறப்பட்டதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டால், அவற்றை விசாரித்து முடிவெடுக்காமல் நிலைமான் கோல்சொல்லி போர்க்களம் விட்டு அகலக் கூடாது என்பது மரபு.

கபிலர் வாரிக்கையனோடு அவ்விடம் வந்தபோது கருங்கைவாணனுடன் பெருங்கூட்டம் நின்றுகொண்டிருந்தது. குதிரைப்படைத் தளபதி உறுமன்கொடியும் அமைச்சர்கள் ஆதிநந்தி, நாகரையர் ஆகியோரும் உடன் இருந்தனர். பறம்புவீரர்கள், தங்களின் ஆயுதத்தில் நஞ்சு கலந்து குதிரைகளைச் செயலிழக்கச் செய்து விட்டனர் என்பதுதான் குற்றச்சாட்டு.




குற்றச்சாட்டைக் கேட்டபோது அதிர்ச்சிக்குள்ளானார் கபிலர். நேற்றிரவு முடியனும் வாரிக்கையனும் தன்னைக் குறிப்பிட்டுப் பேசியது இதைப் பற்றித்தானா என நினைத்தார். வாரிக்கையன் இதை எதிர் பார்த்துதான் வந்துள்ளார்.

``எந்த ஓர் ஆயுதம், காயங்களின் தன்மையையும் அளவையும் மீறிப் பல மடங்கு அதிகமான பாதிப்பை உருவாக்குகிறதோ, அந்த ஆயுதம் ஐயத்துக்குரியது. இன்றைய பொழுதில் பறம்புவீரர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள், குதிரைகளுக்கு மிகச்சிறிய காயங்களையே உருவாக்கியுள்ளன. ஆனால், குதிரைகளை முழுமையாகச் செயலிழக்கச் செய்துள்ளன. எனவே, இந்த ஆயுதங்கள் நஞ்சு பூசப்பட்டவை” என்று வாதிட்டான் உறுமன்கொடி.

வாரிக்கையன் வெற்றிலையை மென்று கொண்டே சொன்னார், ``பறம்பு அளித்த வாக்கை மீறாது. விலங்குகளின் நஞ்சோ, தாதுக்களின் நஞ்சோ பயன்படுத்தக் கூடாது என்று ஏற்றுக்கொண்ட போர்விதிகளை நாங்கள் மீறவில்லை.”

``அம்புகளால் தாக்கப்பட்ட குதிரைகளுக்கு, சிறுகாயங்கள்தான் உருவாகியுள்ளன. சிறு காயங்களால்

எப்படி குதிரையைச் செயலிழக்கச் செய்ய முடியும்?”

``அம்புகளின்தன்மை அதற்குக் காரணம்” என்றார் வாரிக்கையன்.


``அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். நஞ்சூறிய அம்பை நீங்கள் பயன்படுத்தியுள்ளீர்கள்” என்றான் ஆதிநந்தி.

தலையை மறுத்து ஆட்டியபடியே வாரிக்கையன் கேட்டார், ``நஞ்சென்றால் என்ன?”

ஆதிநந்தி ஒரு கணம் திகைத்தான். அவன் என்ன விளக்கம் சொன்னாலும் வாரிக்கையன் அதிலிருந்து தப்பித்து வெளியே வருவார் என அவனுக்குத் தெரியும். எனவே, சற்று சிந்தித்தான்.

அதுவரை அமைதியாக இருந்த திசைவேழர் இப்போது கூறினார், ``எண்ணிலடங்கா குதிரைகள் செயலிழந்து கிடக்கின்றன. நீங்களோ சொற்களைக்கொண்டு விதிகளைக் கடக்க நினைக்கிறீர்கள்.”

திசைவேழரின் கூற்று கபிலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால், வாரிக்கையன் அதைப் பொருட்படுத்தவில்லை. வெற்றிலையை மென்று கொண்டே அவரைப் பார்த்துக் கேட்டார், ``நீங்களே சொல்லுங்கள். நஞ்சென்றால் என்ன?”



``கேள்வியின் வழியே எதிர்நிலையில் பயணிக்க நினைக்கிறீர்கள். அது நஞ்சுதான் என்பதற்கு, செயலற்றுக் கிடக்கும் குதிரைகளே சான்று. அது நஞ்சல்ல என்பதற்கு நீங்கள் அளிக்கும் சான்றென்ன?”

வாரிக்கையன் திசைவேழரைச் சொற்களால் மடக்க நினைக்கவில்லை. சொல்லிப் புரிய வைக்கவே நினைத்தார். ``எந்த அம்பு தைத்து குதிரைகள் செயலிழந்து கிடப்பதாகச் சொல்கிறார்களோ, அதே அம்பால் ஒரு மனிதனை தாக்குவோம். அவன் செயலிழந்தால் அது நஞ்சென்று ஏற்கிறேன்.”

யாரும் எதிர்பாராத பதிலாக இருந்தது. எதிர்த் திசையில் நிற்பவர்களுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.


வாரிக்கையன், திசைவேழரைப் பார்த்து மீண்டும் சொன்னார், ``நஞ்சென்பது உயிர்களுக்குப் பொதுவானது; பாகுபாடற்றது. குதிரைகள் செயலிழந்து கிடப்பதன் காரணம் அம்புகள் செய்யப்பட்ட மரமாக இருக்கலாம். அந்தக் குறிப்பிட்ட மரம் அந்த விலங்குக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தியிருக்கலாம். சில உணவு சில உயிரினங்களுக்குச் செரிமானம் ஆகாததைப்போலத்தான் இதுவும். இதற்கெல்லாம் மேலாக ஒன்று சொல்கிறேன், அது நஞ்சன்று என்பதற்குச் சான்று எந்தக் குதிரையும் சாகவில்லை என்பதுதான்.”

இரவு குலசேகரபாண்டியனின் கூடாரத்தில் அதிக பேச்சில்லை. பறம்புவீரர்கள் நஞ்சைப் பயன்படுத்தித்தான் குதிரைகளைச் செயலிழக்கச் செய்தனர் என்பதை மெய்ப்பிக்க முடியவில்லை. வாரிக்கையன் முன்வைத்த கூற்றை, திசைவேழர் ஏற்றுக்கொண்டுவிட்டார். தட்டியங்காட்டு நிலமெங்கும் வீழ்ந்து கிடக்கும் எண்ணிலடங்கா குதிரைகளை அவற்றுக்கான கொட்டிலுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க, பெருமுயற்சி நடந்து கொண்டிருந்தது. இரவுக்குள் அனைத்தையும் செய்துவிட முடியுமா எனத் தெரியவில்லை. ஆனாலும் கடும்முயற்சி நடந்துகொண்டிருந்தது.

பேரரசர்களின் கூடாரத்திலிருந்து கருங்கை வாணன் வெளியே வந்தான். மறுநாளைய போருக்கான திட்டமிடல் மிக விரைவிலேயே முடிந்தது.

வேங்கைமரத்தின் அடிவாரத்திட்டில் கூடியவர்களும், திட்டமிடலை முடித்துக்கொண்டு எழுந்தனர். பாரி, ஏழாவது குகை நோக்கி நடந்தான். இன்றிரவு குகைக்காவல் கூழையன். அவனும் சிறிது நேரம் கழித்து அந்தக் குகை நோக்கி நடந்தான்.

மற்றவர்கள் அவரவர்களின் தங்கும் இடம் நோக்கிச் செல்லத் தொடங்கினர். முடியன் மட்டும் வேங்கைமரத் திட்டிலேயே உட்கார்ந் திருந்தான். பறம்புப்படை முழுமையையும் கொண்டுசெலுத்தும் ஆற்றல்கொண்டவனின் முகத்தில் சற்றே கவலையின் கீற்று ஓடிக் கொண்டிருந்தது. உணவு அருந்திய பிறகு மீண்டும் அவன் அருகில் வந்து உட்கார்ந்தார் வாரிக்கையன்.



``உனது கவலைக்கான காரணம் என்ன?" என்று கேட்டார் வாரிக்கையன்.

சற்றே தயங்கினான் முடியன். ஆனாலும் வாரிக்கையனிடம் பகிர்ந்துகொள்வதில் தவறில்லை என்ற முடிவுக்குவந்து சொன்னான், ``மூன்று காரணங்கள் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றன."

தனது கூடாரத்துக்கு வந்துசேர்ந்த கருங்கை வாணனால் உறங்க முடியவில்லை. நீண்டநேரம் விழித்தே இருந்தான். அவனுக்கு முன்னால் இருந்த வட்டப்பலகையை விட்டு அவனுடைய கண்கள் அகலவில்லை. அப்போது வெளியே ஏதோ ஓசை கேட்பதுபோல் இருந்தது. என்னவென்று திரும்புவதற்குள் உள்நுழைந்த வீரன் ஒருவன் சொன்னான், ``பேரரசர் வருகிறார்."

குலசேகரபாண்டியன் உள்ளே நுழைந்தார்.

நள்ளிரவில் தனது கூடாரத்துக்கு வந்துள்ள பேரரசரை வணங்கி வரவேற்றான் கருங்கை வாணன். அவனுக்கு முன்னால் இருந்த வட்டப்பலகையில் பறம்புவீரர்கள் பயன்படுத்தும் மெய்க்கவசம் ஒன்றும், வாள் ஒன்றும், ஓங்கல அம்பு ஒன்றும் வைக்கப்பட்டிருந்தன. இந்த மூன்றையும்தான் அவன் உற்றுப்பார்த்தபடி இருந்தான்.

``மூன்று காரணங்கள் என்னென்ன?" என்று கேட்டார் வாரிக்கையன்.

முடியன் சொன்னான், ``நாம் எடுக்கவேண்டிய முடிவை, எடுக்க முடியாதவாறு சிக்கலை நாமே உருவாக்கிக்கொண்டுவிட்டோம்."



``எதைச் சொல்கிறாய்?"
``காற்றும் காற்றியும் வீசுவதற்கு ஏற்பவே நாம் திட்டமிடவேண்டியுள்ளது."

``ஒருவேளை காற்றும் காற்றியும் நமக்கு ஒத்துழைக்கவில்லையென்றால், மாற்றுத் திட்டமும் நம்மிடம் இருக்கத்தானே செய்கிறது?"

``இருக்கிறது. ஆனால், எதை, எப்போது செய்யப்போகிறோம் என்பது யாருக்கும் தெரியவில்லை. இந்தக் குழப்பத்துடனே போர்க்களத்தில் தொடர்ந்து நின்றுகொண்டிருக்க முடியாது. எதிர்பாராத நேரத்தில் பாதிப்புகள் அதிகமாகிவிடக்கூடும்."

முடியன் சொல்வது சரியான காரணமாகத்தான் இருக்கிறது என நினைத்த வாரிக்கையன், ``இரண்டாவது காரணம் என்ன?” என்று கேட்டார்.

``என் மகன் இரவாதன்” என்றான்.

``போர்க்களத்தில் மிகச்சிறந்த வீரத்தை வெளிப்படுத்திவருகிறான். அவன் குறித்துக் கவலைப்பட என்ன இருக்கிறது?”

``அவன் வெளிப்படுத்தும் வீரம்தான் எனக்குக் கவலையளிக்கிறது.”

``புரியும்படி சொல்.”

``அவன் தாக்குதல் போரை நிகழ்த்துவதில் நிகரற்றவனாக இருக்கிறான். அந்த அவசரத்தில் மற்றவற்றின் மீதான கவனத்தைத் தவறவிடுகிறான். உதிரன், எதிரிகளின் படையை நடுவில் பிளந்து உள்ளிறங்குகிறான். தாக்கும் வேகத்திலும் தற்காக்கும் உத்தியிலும் சிறந்தவனாக விளங்குவதால், அவனால் அதைச் செய்ய முடிகிறது. ஆனால் இரவாதன், சூழலைக் கவனிப்பதில் தவறிழைக்கிறான்.”

``அது இளைஞர்களுக்கே உரிய சிக்கல்.”

``புரிந்துதான் அவனை தாக்கும் உத்திக்கு மட்டும் பயன்படுத்துகிறேன். ஆனால், எதிரிகள் வேறு மாதிரி சூழ்ச்சி செய்துவிட்டால் ஆபத்தில் மாட்டிக்கொள்வான்.”

``நீ இன்னொன்றைக் கவனிக்கத் தவறுகிறாய். இளைஞர்கள் தங்களின் அவசரத்தால் ஏற்படுத்தும் இழப்பை, ஆவேசமிக்க தாக்குதலால் பல மடங்கு சரிகட்டிவிடுவார்கள். எனவே, நீ அதைப் பற்றிக் கவலைகொள்ளாதே. மூன்றாவது என்னவென்று சொல்.”

வாரிக்கையன் சொல்வதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாத தயக்கத்துடனே மூன்றாவது காரணத்தைச் சொன்னான், ``தேக்கன், இன்று கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார். எதிரிப்படைத் தளபதி வீசிய வாள் ஒன்று அவரது நெஞ்செலும்பைக் கடுமையாக பாதித்துள்ளது. ஆனாலும் `நாளைக்கும் போர்க்களம் புகுவேன்’ என்று சொல்கிறார். `சற்று ஓய்வெடுத்து சிகிச்சை பெற்றுக்கொள்ளுங்கள்’ என்று சொன்னால் கேட்க மறுக்கிறார்” என்றான்.

``நான் அவனிடம் பேசி, சிகிச்சை எடுத்துக்கொள்ளச் சொல்கிறேன்.”

``நீங்கள் சொன்னாலும் தேக்கன் ஏற்க மாட்டார்.”

``ஏன்?”

``குடி ஆசானோ, குடி முடியனோ போர்க்களத்தில் இல்லையென்றால், பாரி போர்க்களம்

புகுந்துவிடுவான். எக்காரணம் கொண்டும் பாரி பறம்பின் எல்லை தாண்டி, போர்க்களம் நோக்கிச் செல்ல அனுமதிக்கக் கூடாது என்பதால், அவர் ஓய்வெடுக்கக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளார்" என்றான்.

மூன்றைப் பற்றியும் விளக்கினான் கருங்கைவாணன். ``நான் இன்று எனது வாளால் அந்தக் கிழவனைத் தாக்கினேன். இரும்பால் ஆன கேடயமே என்றாலும் அந்தத் தாக்குதலின் வேகத்தில் நெளிந்து அவனது எலும்புகளை நொறுக்கியிருக்க வேண்டும். ஆனால், அவனது மெய்க்கவசம் எனது வாளின் முழுவீச்சையும் உள்வாங்கி, அவனைக் காத்துள்ளது. எடை குறைவான, ஆனால் இரும்பைவிட வலிமையான கவசத்தைப் பூண்டு ஒவ்வொரு வீரனும் நிற்கிறான். இதோ, இந்தச் சாதாரண மரக்குச்சியினால் ஆன அம்பு, நிகரற்ற ஆற்றல்கொண்ட நமது குதிரைப்படையைச் செயலிழக்கச் செய்யும் என்பதை நம்மால் கற்பனைசெய்ய முடியுமா?" என்று கேட்டுக்கொண்டே வட்டப்பலகையில் இருந்த வாளைக் கையில் எடுத்தான் கருங்கை வாணன்.

``இது அவர்கள் பயன்படுத்தும் வாளா?" எனக் கேட்டார் குலசேகரபாண்டியன்.

``இல்லை பேரரசே! சாகலைவன் பயன்படுத்திய வாள். போர்க்களத்தில் எதிரியோடு போரிடும்போது இரு வாள்களின் மோதலில் சில இடங்களில் முனை மழுங்கும். ஆனால், இந்த வாளின் முனையைப் பாருங்கள். ஆங்காங்கே வெட்டுப்பட்டுள்ளது. ஒரு வாள் இன்னொரு வாளின் முனையை வெட்டி இறங்குமா என்ன? அவர்களது வாளின் முனை இரும்பின் தன்மையை மட்டும் கொண்டதன்று, அதைவிடக் கூர்மையான ஏதோ ஒன்றை அவர்கள் தமது வாளின் முனைக்குப் பயன்படுத்துகின்றனர் பேரரசே" என்றான்.

கேட்டுக்கொண்டிருந்த குலசேகரபாண்டியன், ``என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"

``நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல, வழக்கமான போர் முறைகளால் இவர்களை வீழ்த்த நினைப்பது நமக்குப் பெருஞ்சேதத்தை உருவாக்கும். எனவே, வரைமுறையற்ற தாக்குதலால் அவர்களை முற்றிலும் அழித்தொழிக்க வேண்டும்" என்றான்.

``விதிகளைக் கைவிடுவது பற்றியே நீ சிந்திக்கிறாய். விதிகளைப் பயன்படுத்திக் கொள்வதைப் பற்றி நீ சிந்திக்க மறுக்கிறாய்."

பேரரசரின் குற்றச்சாட்டு, கருங்கைவாணனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

``நான் முடிவெடுத்துவிட்டேன். நாளை மிக முக்கியமான நாள். எதிரிகளின் குதிரைப்படை பேரழிவைச் சந்தித்துள்ளது. எனவே, தற்காப்புப் போருக்கான உத்தியைத்தான் அவர்கள் பயன்படுத்துவார்கள். இந்நிலையில் நான் முன்னேறித் தாக்கப்போகிறேன். பறம்பின் மொத்தப் படையும் முன்னேறித் தாக்குவதை நாளைதான் அவர்கள் முதன்முறையாக எதிர்கொள்ளப்போகின்றனர். ஏறக்குறைய அவர்களின் அனைத்துப் படைகளையும் முற்பகலிலேயே நிலைதடுமாறச் செய்துவிடலாம். எதிரிகளின் முழு கவனமும் என்மீதுதான் இருக்கும். நான் இடது ஓரத்திலிருந்து தாக்கி முன்னேறுவேன். உதிரனோ, தனது வலிமை மிகுந்த விற்படை கொண்டு நடுவில் தாக்கி

முன்னகர்வான். இந்த நேரத்தில் இரவாதனின் தலைமையிலான சூளூர் வீரர்களின் படை, ஓங்கலத்தையும் பகழி அம்பையும் பயன்படுத்தி எதிரிகளின் அணிவகுப்பைப் பிளந்துகொண்டு மூஞ்சல் நோக்கி நகர்வார்கள்.

மூஞ்சலைக் கண்ணில் பார்க்கும் தொலைவை அடைந்துவிட்டால் போதும். அதன்பிறகு, நம் வீரர்கள் பல மடங்கு ஆற்றலை அதிகப்படுத்தித் தாக்குவார்கள். உள்ளுக்குள் இருக்கும் நீலனை மீட்கும் எண்ணம் ஒவ்வொரு வீரனையும் மாவீரனாக மாற்றிவிடும். இந்தத் தாக்குதல் நடக்கும்போது இறுதி வரிசையில் தேக்கன் நிற்பான். அவனை இனி வாள் ஏந்த விட மாட்டேன். அதே நேரம் போர்க்களம் விட்டு வெளியேறவும் விட மாட்டேன்” என்றான் முடியன்.

நீண்ட சிந்தனைக்குப் பிறகு தனது புதிய திட்டத்தை விளக்கினான் கருங்கைவாணன். வகுத்துக்கொண்ட விதிகளின் வழியே எதிரியைச் சிக்கவைக்கும் புதிய திட்டம் இது. இதற்குக் குலசேகரபாண்டியன் ஒப்புதல் தந்தார். ``பாரி இல்லாத போர்க்களத்தின் கடைசி நாள் நாளைதான். நாளை மறுநாள் அவன் போர்க்களம் வந்தே ஆகவேண்டும். ஏனென்றால், குடி ஆசானையும் குடி முடியனையும் ஒரே நாளில் வீழ்த்தும் திட்டமிது” என்று முழங்கினான் கருங்கைவாணன்.

பொழுது விடிந்தது. கதிரவன் மேலெழுந்த ஐந்தாம் நாழிகையில் திசைவேழர் கைகளை உயர்த்தினார். மூன்றாம் நாள் போர் தொடங்கியது. போர்க்களத்தின் தன்மை இப்போது இருபக்கப் படைகளுக்கும் சற்றே பழகியிருந்தது. வேந்தர்படை வழக்கம்போல் அலையலையாய் முன்னகர்ந்து வந்து தாக்குதலைத் தொடங்கியது. வழக்கத்துக்கு மாறாக தொடக்கம் முதலே பறம்புவீரர்கள் ஆவேசம்கொண்டு தாக்கத் தொடங்கினர்.

போர் தொடங்கும் கணத்திலேயே எதிரிகளின் தாக்குதலில் இருந்த ஆவேசத்தைக் கருங்கை வாணனால் உணர முடிந்தது. வேந்தர்படை இன்று வகுத்திருந்த திட்டத்துக்கு எதிரிகள் ஆவேசம்கொண்டு முன்னேறுவது உதவியாகத்தான் இருக்கும் எனத் தோன்றியது. வழக்கம்போல் நடுப்பகல் வரை சற்றே நிதானம்கொண்டு தாக்குபவர்கள், நடுப்பகலில் நாகக்கரட்டிலிருந்து ஊதப்படும் காரிக்கொம்பின் ஓசையைக் கேட்டவுடன் தாக்குதலை வேகப் படுத்துவார்கள். உத்திகளையும் மாற்றுவார்கள். அடுத்த ஓசை கேட்கும்போது முழுமைகொண்ட வேகத்தோடு தாக்குவார்கள். இதைக் கணித்துதான் கருங்கைவாணன் இன்றைய உத்தியைத் தீர்மானித்திருந்தான். ஆனால், பறம்புவீரர்கள் தொடக்கத்திலேயே ஆவேசத்தோடு முன்னகர்வது தெரிந்தது.

மையூர்கிழாரின்மேல் பறம்புத் தளபதிகள் எவ்வளவு சினத்தோடு இருக்கிறார்கள் என்று கருங்கைவாணன் முழுமையாக அறிந்தே அன்றைய திட்டத்தை வகுத்திருந்தான். நடுப்பகல் வரை வழக்கமான தாக்குதல் போரை நடத்த வேண்டும். நடுப்பகலில் மலைமேலிருந்து காரிக்கொம்பு ஓசை கேட்கும்போது பின் களத்திலிருந்து முடியன் முன்பகுதிக்கு வருவான். அந்த நேரத்தில் மையூர்கிழாரின் தேர் அவன் கண்ணில்பட வேண்டும். முடியன், மையூர் கிழாரைத் தாக்க அவரை நோக்கி விரைவான். மையூர்கிழார் படையின் வலதுபுற ஓரத்தின் வழியாக முடியனைப் பின்னோக்கி இழுத்துச் செல்லவேண்டும்.

படையணியின் ஓரப்பகுதி வழியாக முடியனை எவ்வளவு தொலைவு பின்னோக்கி இழுக்க முடியுமோ, அவ்வளவு தொலைவு இழுத்துச் செல்ல வேண்டும். மையூர்கிழாரை வீழ்த்தும் வெறிகொண்டு முன்னகரும் முடியனை, வேந்தர்படைத் தளபதிகளான சூலக்கையனும் நகரிவீரனும் பின்தொடர வேண்டும். பொருத்தமான இடத்தில் படையணியின் சுழலுக்குள் சிக்கவைத்து அவனை வீழ்த்த வேண்டும்.

முடியன் தங்களது படையணிக்குள் இழுக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போது கருங்கை வாணன், தேக்கனை நோக்கி முன்னகர்வான். பறம்புப்படைக்குள் எந்த இடத்தில் தேக்கன் இருந்தாலும் அந்த இடம் நோக்கி எதிரிகளைக் கிழித்துக்கொண்டு உட்புகும் ஆற்றல் கருங்கைவாணனின் படைக்கு உண்டு. மற்ற தளபதிகள், எதிரிகளை வேறு திசையில் முன்னேறவிடாமல் தடுக்கும் பணியைச் செய்வர். இதுதான் வேந்தர்படையின் இன்றைய திட்டமாக இருந்தது.

நேற்றைய போரில் வேந்தர்களின் குதிரைப்படை பேரழிவுக்கு உள்ளாகியிருந்த நிலையில், இன்று மூஞ்சலை நோக்கி நகர்வதற்கான திட்டமிடலோடு பறம்புப்படை இருந்தது. போர் தொடங்கியதிலிருந்து அதற்கான தன்மையில் அவர்கள் முன்னகர்ந்தனர். இன்று அவர்களுக்குக் கூவல்குடியினரின் மூலம் வழங்கப்படும் உத்தரவு வழக்கம்போல இருக்காது. காரிக்கொம்பின் ஓசை வெவ்வேறு பொழுதுகளில் தேவையறிந்து ஊதப்படும். போர் தொடங்கிய சிறிது நேரத்திலேயே முடியனின் தேர் பின்புறமிருந்து படையின் நடுப்பகுதியை நோக்கி நகரத் தொடங்கியது.

வழக்கம்போல் குளவன்திட்டின் மேல் நின்றிருந்த பாரி, போர்க்களத்தின் தன்மையை உற்றுகவனித்துக்கொண்டிருந்தான். மூன்றாம் நாள் போரில்கூட, தான் களம் புகுவதைப் பாரி ஏன் மறுக்கிறான் என்பது காலம்பனுக்குப் புரியவில்லை. திரையர்குலம் இனி சிறிய இழப்பைக்கூடச் சந்திக்கக் கூடாது என்பதைப் பாரி மீண்டும் மீண்டும் சொல்லிவருகிறான். அப்படியிருந்தும் கொற்றனைப் பலிகொடுக்க நேர்ந்ததைப் பாரியால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. தான் போர்க்களம் புக நேர்ந்தாலும்கூட காலம்பன் போர்க்களம் புகக் கூடாது என்றே பாரி நினைத்தான். தட்டியங்காட்டில் திரையர்குலத்தினரின் குருதி வீழக் கூடாது என்ற பாரியின் எண்ணத்துக்கு, திரையர்குலம் கடந்தகாலத்தில் அடைந்துள்ள இழப்புகளே காரணம். பாரியும் காலம்பனும் போர்க்களத்தை உற்றுகவனித்துக்கொண்டிருக்கையில், சிறியதாய் ஏதோ ஓசை கேட்டுத் திரும்பினான் பாரி. அது இகுளிக்கிழவனின் ஓசை. விளக்கின் சுடர் மெள்ள அசையத் தொடங்கியது.

பாரி, வியப்போடு இகுளிக்கிழவனைப் பார்த்தான். அவனோ கைகளைத் தூக்கிக் கூவல் குடியினருக்கு உத்தரவு கொடுக்கக் காத்திருந்தான். இரண்டு நாள்களாக எதிர்பார்த்தபோது எதுவும் நடக்காமல், சற்றும் எதிர்பாராத நேரத்தில் கொம்மனும் கொம்மியும் உதவப்போவது வியப்பைத் தந்தது. பாரியின் மனதில் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்க, விளக்கின் சுடர் சட்டெனச் சாய்ந்தது. இகுளிக்கிழவன் கையை அசைக்க மலையெங்குமிருந்து கூவல்குடியினரின் பீறிட்ட ஓசை கணநேர இடைவெளியின்றி வெளிவந்தது.

பறம்பின் குதிரைப்படை வீரர்களோ, வாள்படை வீரர்களோ இந்தக் கணத்தைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. கல்லூழி அம்புகளை எடுத்து எய்வதற்குள் காற்று அவர்களைக் கடந்தது. ஆனால்,

உதிரனின் தலைமையிலான விற்படை வீரர்களோ, ஓசையைக் கேட்ட கணத்தில் காற்றின் முகப்போடு அம்பை இணைத்தனர்.




ஆறு அம்புகளைக் கொண்டது ஒரு கொத்து. ஒவ்வொரு வீரனுக்கும் மூன்று கொத்துகள் கொடுக்கப்பட்டிருந்தன. கண்ணிமைக்கும் நேரத்தில் முதல் கொத்தை எடுத்து நாணில் பொருத்தி முழு விசையோடு எய்தது விற்படை. மேற்கு மலைக் கணவாயின் பின்புறத்திலிருந்து கொம்மன் ஊத, வீறுகொண்ட காற்று தட்டியங்காட்டு நிலத்தை நோக்கி வலதுபுறமாகச் சீவிக்கொண்டு இறங்கியது. எண்ணிலடங்காத அம்புகள் காற்றின் முன்முகப்போடு இணைய, கண்பார்வைக்கு அப்பால் சீறிச்சென்றன அம்புகள்.

மலைமேலிருந்து கொம்போசை கேட்ட கணத்திலேயே சற்றே அதிர்ச்சிக்குள்ளானான் கருங்கைவாணன். வழக்கமான ஓசையாக அது இல்லை. வழக்கமான நேரத்திலும் ஊதப் படவில்லை. `இது என்ன புதுவகையாக இருக்கிறதே!' எனச் சிந்தித்துக்கொண்டிருக்கும் போதுதான், சிறுபுல்லின் கனம்கொண்ட எண்ணிலடங்காத அம்புகள் அவன் தலைக்கு மேலே எங்கோ பறந்து சென்றுகொண்டிருந்தன. `என்ன இது?' எனக் கருங்கைவாணனுக்கு ஒன்றும் புரியவில்லை. தேக்கனை நோக்கி முன்னேறிச் சென்றுகொண்டிருந்தவன் சற்றே குழப்பத்துக்குள்ளாகி அப்படியே நின்றான். பாய்ந்து செல்லும் எண்ணிலடங்காத அம்புகள் எங்கே செல்கின்றன என்று தலையைப் பின்புறமாகத் திரும்பிப் பார்த்தான். வெகு தொலைவுக்கு அப்பால் சென்றன.

வீசிய காற்றின் எதிர்ப்புறமாக வேந்தர்படை நின்றுகொண்டிருந்தது. குறுமணல் தூசிகளை அள்ளி எறிந்தபடி காற்று போய்க்கொண்டிருந்தது. வேந்தர்படை வீரர்கள், கண்களைக் கசக்கிக் கொண்டிருந்தனர். பறம்புவீரர்களைப் பொறுத்த வரை காற்று முதுகுப்புறத்தைத் தாக்கி முன்னகர்ந்தது. இவ்வளவு தொலைவு பறக்கும் அம்புகளை வாழ்வில் முதன்முறையாகப் பார்த்த கருங்கைவாணனுக்கு, ஒன்றும் புரியவில்லை. கண்களைக் கசக்கியபடியே திரும்பினான். எதிர்த்திசையில் பறம்புவீரர்கள் தங்களின் ஆவேசத் தாக்குதலைத் தொடங்கினர்.

கருங்கைவாணன் சட்டெனெ விழிப்படைந்து பேரிகையை முழக்கச் சொல்லி, தன் வீரர்களை எதிரிகளின் தாக்குதலை எதிர்கொள்ள ஆயத்தப் படுத்தினான். பறம்புவீரர்களோ, அவ்வளவு தொலைவு செல்லும் அம்பை எய்த மறுகணமே வழக்கம்போலான தாக்குதலைத் தொடங்கினர். எய்யப்பட்ட கல்லூழி அம்பினால் ஏற்பட்ட விளைவு என்ன என்பது எய்த யாருக்கும் தெரியாது. அது கண்ணுக்கு அப்பால் எங்கோ நிகழ்ந்துகொண்டிருந்தது.

குளவன்திட்டில் இருந்தபடி பாரி பார்த்துக் கொண்டிருந்தான். எய்யப்பட்ட அம்புகள் மூன்றாம் நிலையில் நிறுத்தப்பட்டிருந்த வேந்தர்படையின் பிற்பாதியில் போய் இறங்கின. மூன்றாம்நிலைப் படையின் சரிபாதி வீரர்களின் மீது சுருள் அம்புகள் இறங்கின.

போர் நடந்துகொண்டிருந்த முற்பகுதியை மூன்றாம்நிலைப் படையினர் கண்கொண்டே பார்க்க முடியாது. அது எங்கோ நடந்து கொண்டிருந்தது. அவர்களைப் பொறுத்தவரை ஆயத்தநிலையில் நிற்க வேண்டும். அவ்வளவுதான். எந்தத் தொடர்பும் இல்லாமல் காற்றின் வழியே வானெங்குமிருந்து பறந்துவந்த வைக்கோல் அளவே கனம்கொண்ட அம்புகள் வீரர்களை நோக்கிச் சரசரவென இறங்கின.

பறந்து போன அம்புகள் எங்கே இறங்கின என்பது, முன்களத்தில் நின்றிருந்த கருங்கை வாணனுக்குத் தெரியவில்லை. இந்தத் தாக்குதல் என்ன என்பதும் அவனுக்குப் புரியவில்லை. ஏதோ நடக்கிறது என்பது மட்டும் புரிந்தது. இந்நிலையில்தான் முடியனின் தேர் நடுக்களம் நோக்கிச் சென்றது. முன்வகுத்த திட்டப்படி அந்தத் தேரின் பார்வையில் படும்படி மையூர்கிழாரைக் களத்துக்குள் வரச்சொல்லும் மறைக்குறிப்பு அனுப்பப்பட்டது.

தேரில் முன்னகர்ந்துகொண்டிருந்த முடியனின் எண்ணமெல்லாம், கல்லூழி வேர் எவ்விடம் கீழிறங்கியிருக்கக்கூடும் என்பதைக் கணிப்பதிலேயே இருந்தது. தேரின் மீது நின்றாலும் அவனது பார்வைக்கு அப்பால்தான் அந்தத் தாக்குதல் நிகழ்ந்திருந்தது. எப்படியிருந்தாலும் கல்லூழி அம்புகள் தைத்தவுடன் அவற்றின் பாதிப்பு தெரியாது. பிடுங்க முடியாமல் தவிக்கும்போதும் தசையோடு பிய்த்துக்கொண்டே அம்புகள் வெளிவரும்போதும்தான் பாதிப்பை உணரத் தொடங்குவார்கள். அப்போது அங்கிருந்து கொடுக்கப்படும் மறைக்குறிப்பு, முன்களத்தில் நிற்கும் வேந்தர்படையைப் பெருங்குழப்பத்துக்குள்ளாக்கும். அவர்களின் மொத்தக் கட்டுக்கோப்பும் அடுத்த சில பொழுதுகளுக்குள் முழுமுற்றாகக் கலையும் என எண்ணிக்கொண்டிருந்த போது ஏந்திய வில்லோடு மையூர்கிழார் சென்றுகொண்டிருந்த தேர் தெரிந்தது.

இத்தனை நாள்களாகப் போர்க்களத்தில் முடியன் எவனைத் தேடினானோ, அவன் இப்போது கண்ணில்பட்டான். தேரோட்டும் வலவனைப் பார்த்து, ``அந்தத் தேரைப் பின் தொடர்" என்று கூறினான். ஆனால், மறுகணமே அவனது எண்ணம் வேறானது. களத்தின் சூழல் இவ்வளவு அருமையான வாய்ப்பை உருவாக்கியுள்ளபோது நாம் மூஞ்சலை நோக்கிச் செல்வதே சரியான முடிவு எனத் தோன்றியது. ஆனாலும் மையூர்கிழாரை விட்டுவைப்பது சரியன்று என்றும் தோன்றியது. தேரோ, மையூர்கிழாரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. முடியனின் சிந்தனை, முடிவெடுக்க முடியாமல் தடுமாறியது.

ஏறக்குறைய இதே குழப்பத்தைச் சந்தித்தான் கருங்கைவாணன். `இத்தனை ஆயிரம் அம்புகள் காற்றில் எப்படி இவ்வளவு தொலைவு பறந்தன. அவையெல்லாம் எங்கே போய் இறங்கின. எங்கே இறங்கியிருந்தாலும் பல காதத் தொலைவுக்கு நிற்கும் நம் படைவீரர்களின் மீதுதானே இறங்கியிருக்கக் கூடும். பார்ப்பதற்கு மிகவும் சிறுத்த இந்த அம்புகளால் பெரிய பாதிப்பு எதுவும் நிகழ்ந்திருக்காது. ஆனாலும் படைத் தலைமைத் தளபதி என்ற முறையில் பின்களப்படையின் பாதிப்பை அறிந்த பிறகு முன்னேறிச் செல்வதுதான் சரியெனத் தோன்றியது. ஆனாலும் நாம் திட்டமிட்டபடி மையூர்கிழாரை

நோக்கி முடியனின் தேர் செல்லத் தொடங்கிவிட்டது. இனி நாம் பொறுத்திருக்க வேண்டாம்' என்று முடிவுசெய்து தேக்கனை நோக்கிப் பறம்புப்படைக்குள் புகுந்து உள்நுழையத் தொடங்கினான் கருங்கைவாணன்.
போர்க்களத்தில் தளபதிகளால் முழுமுற்றான தெளிவோடு இயங்க முடியாது. பல்லாயிரம் வீரர்கள் ஒருவரை ஒருவர் வெட்டிச்சரித்து முன்னகரும் போரியக்கத்தைத் துல்லியமாகக் கணிப்பது எளிதன்று. தளபதிகள், குழப்பத்துக்குள் சிக்கிச் சிக்கி மீள்பவர்களாகத்தான் இருப்பார்கள்.
கருங்கைவாணன் குழப்பத்துக்குள்ளிருந்து முடிவுக்கு வந்து தேக்கனை நோக்கிப் புறப்பட்டபோது, மையூர்கிழாரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த முடியன், தேரைச் சற்றே நிறுத்தினான். தொலைவில் குதிரையில் இருந்தபடி போரிட்டுக்கொண்டிருந்த வேட்டூர் பழையனைத் தனது தேரில் ஏறச் சொல்லி மையூர்கிழாரைக் கொன்றழிக்க உத்தரவிட்டு, அவனது குதிரையில் ஏறி இரவாதனை நோக்கிப் புறப்பட்டான் முடியன்.
பொழுதாகிக்கொண்டிருந்தது. வேந்தர்படையின் மூன்றாம் நிலையில் நிறுத்தப்பட்டிருந்த எண்ணிலடங்காத வீரர்கள் கல்லூழி அம்பை உருவி எடுக்க முடியாமல் திணறியபோதுதான் ஆபத்தின் அளவு புரியத் தொடங்கியது. கூச்சலும் குழப்பமும் மேலேறி வரத் தொடங்கியபோது முடியன் குதிரைப்படையோடு இணைந்து மூஞ்சலை நோக்கி முன்னகரத் தொடங்கினான்.

முன்திட்டப்படி தன்னைத் தொடர்ந்துவரும் தேரை, படையின் வலதுபுற ஓரமாகவே உள்ளிழுத்துச் சென்றுகொண்டிருந்தார் மையூர்கிழார். தளபதிகள் துடும்பனும் நகரிவீரனும் அவரைக் குறிவைத்துத் தங்களின் தேரை விரைவுபடுத்தினர்.

திட்டமிட்டபடி பறம்புப்படையின் பின்பகுதியை நோக்கி விரைந்து வந்தான் கருங்கைவாணன். எதிரிகளின் படையை விலக்கி முன்னகரும் உத்தியில் அவனது படை இணையற்ற அனுபவம்கொண்டது. விரைந்து முன்னகர்ந்து வந்த கருங்கைவாணனின் கண்களுக்கு வெகுதொலைவில் வாளூன்றி நிற்கும் தேக்கன் தனித்துத் தெரிந்தான்.

**- பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-96

தட்டியங்காட்டுப் போர்க்களம் இன்று யாரும் கணிக்க முடியாத ஒன்றாக இருந்தது. காலையில் போர் தொடங்கிய சிறிது நேரத்திலேயே காற்று வீசியது. மற்ற நிலத்தில் வீசும் காற்றைப் போன்றதன்று... சீவிச்செல்லும் இந்தக் காற்றின் வேகம் இணையற்றது. குளவன்திட்டின் பின்புறம் உள்ள கணவாயிலிருந்து சீற்றத்தோடு வெளிவந்து தட்டியங்காடெங்கும் இருக்கும் ஈக்கிமணலையும் கருமணலையும் உருட்டி எடுத்துக்கொண்டு போனது. பரண்மேல் நின்றிருந்த திசைவேழர், ஒரு கணம் நடுங்கிப்போனார். காற்றின் வேகம், பரணை இழுத்து ஆட்டியது. கம்பங்களை இறுகப்பிடித்து நின்றார். அவரின் கண்களின் முன்னால் நாழிகை வட்டிலைத் தூக்கி எறிந்தது. நாழிகைக்கோல் எங்கோ பறந்தது. மாணவன் ஒருவன் அவற்றைப் பிடிக்க முயன்றான். ஆனால், கணநேரத்தில் அவை மறைந்துவிட்டன.



காற்றின் வேகம் அளவிடற்கரியதாக இருந்தது. செம்புழுதி மேலேறி வந்து கொண்டிருக்கும்போதுதான் எண்ணிலடங்காத அம்புகள் காற்றோடு பறந்து சென்றதைப் பார்த்தார். அவருடைய கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. இங்கு நிகழ்வது எதிர்பாராத ஒன்றா அல்லது எதிர்பார்த்த ஒன்றா என்று அவருக்குப் புரியவில்லை. பரண்கட்டிய கம்பங்கள் வில்லென வளைந்து மீண்டன. இந்த நிலத்தின் தன்மைக்கு ஏற்ப மரக்கட்டுமானம் இருந்ததால் அவர் தப்பித்தார்.

ஆனாலும் ஆழ்மனம் நடுங்கியபடியே இருந்தது. அதற்குக் காரணம், அவரின் கண் முன்னால் நாழிகைவட்டிலை, காற்று தூக்கியெறிந்ததுதான். நிலைமான் கோல்சொல்லியின் முன்னால் வைக்கப்பட்ட நாழிகைவட்டிலும் அதில் பரப்பப்பட்ட குறுமணலும் நாழிகைக்கோலும் போரின் உயிர்நாடி போன்றவை. ஆனால், காற்று அவருடைய கண்களின் முன்னால் அவற்றைத் தூக்கியெறிந்தது. திசைவேழர் நிலைகுலைந்து நின்றார்.

பறம்புவீரர்கள் எந்தவிதத் திகைப்புக்கும் ஆட்படாமல் தாக்குதலை முன்னெடுத்துக்கொண்டிருந்தனர்.


அவர்கள் காற்றைக் கையாண்டவிதம் யாரும் கேள்விப்பட்டிராத ஒன்றாக இருந்தது.
காரமலையிலிருந்து ஓசை கேட்ட கணத்தில்தான் பெருங்காற்று வீசியது. அந்தக் கணத்தில் அம்புகள் அலையலையாய் மேலேறிப் பறக்கின்றன. திசைவேழருக்கு இந்தச் செயல்பாட்டுக்குள் இருந்த இணைப்புப் பிடிபடவில்லை. `காற்றை வருமுன் உணரும் ஆற்றல்கொண்டவர்களாகப் பறம்பு மக்கள் இருக்கின்றனரா? விண்மீன்களின் நகர்வைக்கொண்டு காலத்தைக் கணிக்கிறோம். ஆனால் இவர்களோ காற்றையே கணிக்கிறார்கள். இது எளிய செயலன்று.' திசைவேழரின் எண்ணங்கள் நடுக்கத்தை அதிகப்படுத்தியபடியே இருந்தன.
தட்டியங்காட்டின் முழு ஆற்றலும், இன்று வெளிப்பட்டுக்கொண்டிருந்தது; அந்த நிலத்தில் நின்று போரிட்டுக்கொண்டிருக்கும் இருதரப்புக்கும் யாராலும் கணிக்க முடியாத புதுப்புதுச் சவால்களை உருவாக்கியபடியே இருந்தது. நடுப்பகலுக்குப் பிறகு வழக்கம்போல் வெக்கையின் தாக்கம் அதிகமாகியது. போர்க்களம், இதுவரை இல்லாத குழப்பத்துடனும் ஆவேசத்துடனும் இருந்தது. வீரர்கள் வழக்கத்தைவிட பேரோசையை எழுப்பிக்கொண்டி ருந்தனர்.

## வீரயுக நாயகன் வேள்பாரி 96

உள்ளும் புறமும் நடுக்கத்தை உணர்ந்தபடி இருந்த திசைவேழர், மாணவன் ஒருவனைக் கீழே அனுப்பி இன்னொரு வட்டிலில் மணலையும் நாழிகைக்கோலையும் எடுத்துவரச் சொன்னார். மாணவன் கீழே இறங்கினான். வீரர்கள் ஒருவரை யொருவர் வெட்டிச்சரித்துக்கொண்டிருந்தனர். குதிரைகளும் தேர்களும் குறுக்கிட்டு ஓடிக்கொண்டிருந்தன. நிலமெங்கும் அம்புகளும் ஈட்டிகளும் காற்றைக் கிழித்தன. தேரில் ஏறி, போர்க்களத்தினூடே புகுந்து, குடிலுக்குச் சென்று திரும்ப முடியும் என அவனுக்குத் தோன்றவில்லை. என்ன செய்வதெனத் தெரியாமல் மிரட்சியோடு நின்றான்.

மையூர்கிழாரை விரட்டிச் சென்ற வேட்டூர்பழையன், எதிரியின் படையைச் சரிபாதிக்குமேல் கடந்தார். இவ்வளவு தொலைவு உள்ளே வருவது சரியன்று எனத் தோன்றியது. ஆனால், முடியன் ``இவனைக் கொன்றழித்துவிடு'' என்று சொல்லியே அவனது தேரை ஒப்படைத்துள்ளான். போர்க்களத்தில் முடியனின் வாக்கைப் பறம்புத்தளபதிகள் மீறுவதில்லை. அதுமட்டுமன்று, மையூர்கிழாரைக் கொல்வதைவிட முக்கிய வேலை இந்தப் போர்க்களத்தில் வேறில்லை. எனவே, பழையன் விடாது விரட்டிச் சென்றார்.

முன்திட்டப்படி படையின் ஓரப் பகுதியாகவே சென்றுகொண்டிருந்தார் மையூர்கிழார். அதனால்தான் இவ்வளவு தொலைவு முடியனின் தேரை இழுத்துவர முடிந்தது. குறிப்பிட்ட அளவு கடந்ததும் பின்தொடர்ந்து வருவது முடியன் அல்ல; வேட்டூர்பழையன் என்பதை மையூர்கிழார் அறிந்துவிட்டார். ஏற்கெனவே வகுக்கப்பட்ட திட்டப்படி உள்ளிழுத்துச் செல்லவேண்டியது முடியனைத்தான். அவன்தான் முதலில் பின்தொடர்ந்து தாக்குதல் தொடுத்தபடி வந்தான். இடையில் பழையன் எப்போது மாறினார் என்பது மையூர்கிழாருக்கு விளங்கவில்லை.




மையூர்கிழாருக்கு நீலன் மீதும் வேட்டூர்பழையன் மீதும்தான் அதிக கோபம் இருந்தது. தன் மகன் இளமாறனின் மரணத்துக்கு வேட்டுவன் பாறையைச் சேர்ந்தவர்களே காரணம் என்று அவர் நம்பினார். எனவே, பின்தொடர்வது முடியனல்ல, வேட்டூர்பழையன்தான் என்பது தெரிந்த பிறகும் அவர் எதையும் காட்டிக்கொள்ளாமல் அதே வேகத்தில் போய்க்கொண்டிருந்தார். பழையனின் மரணம் நிகழப்போவதைக் காணும் வெறி அவரது செயலிலே இருந்தது. மற்ற இரு தளபதிகளான நகரிவீரனும் சூலக்கையனும் வளைத்துத் தாக்குவதற்கு ஏதுவான இடைவெளியில் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தனர்.

முடியன், இரவாதனோடு வந்து இணைந்தான். இது குதிரைப்படை வீரர்கள் யாரும் எதிர்பாராத ஒன்று. பறம்புவீரர்களின் ஆவேச உணர்வு, வெள்ளம்போல் சீறிப்பாயத் தொடங்கியது. எதிரிகளின் தற்காப்புநிலைகளை நினைத்துப்பார்க்க முடியாத வேகத்தில் தகர்த்து முன்னேறியது பறம்பின் குதிரைப்படை. அந்தத் திசையில் நின்றிருந்த வேந்தர்படைத் தளபதி உறுமன்கொடி, `இவர்களால் அதிக தொலைவு முன்னேறி வந்துவிட முடியாது’ என்றுதான் நினைத்தான். ஆனால் பறம்புப்படை, எதிரிப்படையைக் கிழித்துக்கொண்டு இறங்கியது. வாள்வீச்சும் அம்புகளின் தாக்குதலும் எதிர்கொள்ள முடியாத வேகத்தில் இருந்தன.

நேற்றைய தாக்குதலில் தனது படையில் இருந்த பெரும்பான்மையான குதிரைகளை இழந்தான் உறுமன்கொடி. அப்படியிருந்தும் இன்று வாள்வீரர்களைப் பெரும்பகுதியாகத் தனது அணிகளில் நிறுத்தி, மிகக்குறைவான குதிரைகளைப் பின்னிலையில் நிறுத்தியிருந்தான். ஆனால், எதிரிகளின் தாக்குதல் ஈடுகொடுக்க முடியாததாக இருந்தது. பாய்ந்து முன்னேறும் எதிரிகளைத் தடுத்து நிறுத்த முடியாத சூழ்நிலை வந்துவிடுமோ என்று உறுமன்கொடியின் மனதுக்குள் அச்சம்படரத் தொடங்கியது.

அப்போது உதிரனின் தலைமையிலான பறம்பின் விற்படையானது, வேந்தர் படையின் இரண்டாம் நிலையின் மீது முழுவீச்சில் தாக்குதல் நடத்தி உள்நுழைந்துகொண்டிருந்தது. களத்தின் மையப்பகுதியை வழக்கம்போல் தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருந்தான் உதிரன். உண்மையில் பறம்புப்படையின் அச்சு உதிரனின் கையில்தான் இருந்தது. வேந்தர்படை பறம்புப்படைக்குள் எளிதில் நுழைய முடியாத தன்மையை உருவாக்குவது மட்டுமன்று, தேவைப்படும் நேரத்தில் வேந்தர்படையைத் தாக்குதலின் மூலம் திசைதிருப்பவும் உதிரனால் முடிந்தது.



வேந்தர்படையின் வில் வீரர்கள் எய்யும் அம்பைவிட இரு மடங்குத் தொலைவுக்கு பறம்புப்படை அம்பெய்வதால், எதிரிகளால் அருகில் நெருங்கவே முடிவதில்லை. எனவே, இரண்டு நாள் போரிலும் சிறு பாதிப்புகூட விற்படைக்கு ஏற்படவில்லை. உதிரனுக்கு இன்றைய போரில்தான் முழு வேகத்தில் தாக்கி முன்னேற அனுமதி கொடுக்கப்பட்டது. இதற்காகத்தான் அவன் காத்திருந்தான். உதிரனின் வேகம் காலையிலிருந்தே எதிரிகளால் ஈடுகொடுக்க முடியாததாகத்தான் இருந்தது. நடுப்பகலுக்குப் பிறகு நிலைமை மேலும் மோசமானது. பறம்பின் விற்படை வேந்தர்படையின் இரண்டாம்நிலையைப் பிளந்து உள்நுழைந்தபோதுதான் முடியன், இரவாதன் ஆகிய இருவரின் தாக்குதலையும் எதிர்கொள்ள முடியாமல் உறுமன்கொடி திணறி நின்றான். உடனடியாக இரண்டாம்நிலைப் படையை உதவிக்கு அழைக்கலாம் என்று அவன் நினைத்தபோது அங்கு நிலைமை மோசமடைந்துகொண்டிருந்தது. உதிரனின் தாக்குதல், இரண்டாம்நிலைப் படையின் வீரர்களைக் கணக்கின்றி வீழ்த்திக்கொண்டிருந்தது.

தலைமைத் தளபதி கருங்கைவாணன், பறம்புப்படையின் இறுதிப் பகுதியில் நின்றிருந்த தேக்கனை வந்தடைந்தான். அவன் இங்கு வருவான் என்று தேக்கன் உள்ளிட்ட யாரும் எதிர்பார்க்கவில்லை. அவன் வருவது அறிந்ததும் சீழ்க்கை ஒலியெழுப்பினான் தேக்கன்.

அவன் எழுப்பிய ஓசை எதற்கானதென்று கருங்கைவாணனுக்குத் தெரியவில்லை. அவன் குதிரையிலிருந்து கீழே இறங்கினான். கடுமையான வாள்வீச்சுக்குப் பிறகும் கிழவன் மீண்டும் போர்க்களம் வந்து நிற்பதே கருங்கைவாணனுக்கு வியப்பை ஏற்படுத்தியது. ஆனாலும் அவனது வாழ்வு அடுத்த சில கணங்களில் முடியப்போகிறது என எண்ணியபடியே உறையிலிருந்து வாளை உருவினான்.

தேக்கனோ, வாளை ஏந்த ஆயத்தமாக இல்லை; கருங்கைவாணனைப் பார்த்தபடியே நின்றிருந்தான். வீரர்கள் வாள்வீச்சுக்கு இடம்விட்டு விலகினர். அப்போது அங்கு வந்த குதிரையிலிருந்து கூழையன் இறங்கினான். தேக்கனின் சீழ்க்கை ஓசை கூழையனுக்கானது. கருங்கைவாணன், கூழையனைப் பார்த்ததும் அறிந்துகொண்டான், இவன் பறம்பின் தேர்ப்படைத் தளபதியென்று.

கூழையன் குதிரையிலிருந்து இறங்கினான். தேக்கன் போரிட ஆயத்தமாக இல்லாதது ஏன் என்று கருங்கைவாணனால் புரிந்துகொள்ள முடிந்தது. கிழவன் கடுமையான வலியோடு

நின்றுகொண்டிருக்கிறான். ஆனாலும் போர்க்களம் நீங்கக் கூடாது என்பதற்காக வாளேந்தி நிற்கிறான் என எண்ணியபடி கூழையனை நோக்கி முன்னகர்ந்தான்.

தேக்கன், கூழையனை நோக்கி சத்தமாகச் சொன்னான், ``இவன் அதிக நேரம் நிற்க மாட்டான், ஓசை கேட்டதும் பின்னால் ஓடிவிடுவான். எனவே, ஏறித் தாக்காதே; வாங்கித் தாக்கு.”

தேக்கன் சொன்னது கருங்கைவாணனுக்குத் தெளிவாகக் கேட்டது. சுழற்றிய வாளோடு உள்ளிறங்கியவனை அந்தச் சொல் ஒரு கணம் தாக்கி நிறுத்தியது. கிழவன் ஏன் இதைச் சொல்கிறான் என்று கருங்கைவாணன் எண்ணத் தொடங்கியபோது, இயற்கையாகவே அவனது கவனம் படையின் பின்பக்கமிருந்து எழும் ஓசையை அனுமானித்தது. கிழவன் வீசிய முதல் சொல், கருங்கைவாணனின் கவனத்தைச் சிதறச்செய்தது.




கூழையன், விற்போரில் நிகரற்ற வீரத்தை வெளிப்படுத்தக்கூடியவன். ஆனால், வாள்வீச்சில் பெருவீரன் எனச் சொல்லிவிட முடியாது. அதுவும் வேந்தர்படையின் தலைமைத் தளபதியான கருங்கை வாணனின் வாள்வீச்சைக் கூழையனால் எதிர்கொள்ள முடியாது. எனவேதான் எதிரியின் கவனத்தைத் திருப்பும் உத்தியாகவும் இதைக் கையாண்டான் தேக்கன்.

கருங்கைவாணனால் படையின் பின்புறத்திலிருந்து எழும் ஓசையை மதிப்பிட முடியவில்லை. ஆனால், பறம்புத்தளபதி முடியன் வழக்கத்துக்கு மாறாக முற்பகலிலேயே முன்னேறிவந்ததும் காற்றில் பறந்த கணக்கற்ற அம்புகளும் அவனது எண்ணத்தைக் குறுக்கிட்டபடியே இருந்தன. ஆனால் கூழையன், கண்ணுக்கு முன்னால் வாளைச் சுழற்றி இறங்கிவிட்டான். கருங்கைவாணனின் கண்களிலிருந்த குழப்பத்தைத் தேக்கனால் அறிய முடிந்தது.

முழு வேகத்தில் வாள்வீச்சைத் தொடங்க முடியாத சிறு குழப்பத்தைத் தன்னுள் உணர்ந்தான் கருங்கைவாணன். பறம்புப்படையின் கடைசிப் பகுதியில் அவன் இருக்கிறான் என்பதும், பறம்புவீரர்கள் காற்றில் எய்த அம்புகள் அவனது படையின் பின்பகுதியை ஒருவேளை தாக்கியிருக்கக்கூடும் என்பதும் அவனது கவனத்தை முழுமையாகக் கவ்விக்கொண்டன. இவையெல்லாம் எதிரிகளின் தெளிவான திட்டமிடல் என்பதை அவன் உணரும் வேளையில் கூழையனின் வாள் முன்சுழன்று வந்தது.

கருங்கைவாணனைப்போல தேக்கனுமே அந்தக் கணம் அதிர்ச்சியடைந்தான். `வாங்கித் தாக்கத்தானே சொன்னோம். இவன் ஏன் ஏறிப் பாய்கிறான்!’ என்று தேக்கன் சற்றே அதிர்ச்சிக்குள்ளானான். கருங்கைவாணனோ கவனத்தைச் சிதறவிடக் கூடாது என எண்ணியபடி வாளை ஏந்தி முன்னகர்ந்தான்.

பரண் விட்டுக் கீழிறங்கிய திசைவேழரின் மாணவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பொழுதாகிக்கொண்டிருந்தது. இன்றைய போர் முடிய இன்னும் இரண்டொரு நாழிகைகள்தான் இருந்தன. எனவே, வேகமாக ஆசான் கேட்டதைக் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும் என்று பதற்றம்கொண்டான். சற்றுத் தொலைவில், வேந்தர்படை வீரன் பயன்படுத்திய கேடயம் ஒன்று கிடந்தது. வேகமாகப் போய் அதை எடுத்தான். கேடயத்தைத் திருப்பி அதில் மண்ணை அள்ளி நிரப்பினான். குருதி தோய்ந்த அம்பு ஒன்று கிடந்தது. அதை எடுத்து எட்டு விரல்கட்டை அளவு நீளத்துக்கு ஒடித்தான். என்றும் இல்லாத அளவுக்குப் போர்க்களத்தின் ஓசை இன்று பலமடங்கு அதிகமாக இருந்தது. என்ன நடக்கிறது என்று சுற்றும் முற்றும் பார்த்தபடி பரண் மேல் ஏறத் தொடங்கினான்.

மையூர்கிழாரின் தேர், முன்திட்ட மிட்டபடி மூன்றாம்நிலைப் படையின் இறுதிப் பகுதிக்குச் சென்றது. ஆனால், அங்கு பெருங்குழப்பம் நிலவியது. கல்லூழி வேரால் ஆன அம்பைப் பிடுங்க முயலும்போது அதன் வலி நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு இருந்தது. அம்பின் உள்நுழைந்த பகுதி சுருண்டுவிட்டதால், தசையோடு பிய்த்துக்கொண்டுதான் வந்தது. எனவே, வீரர்களின் உடலில் தைத்த எந்த அம்பையும் பிடுங்க முடியவில்லை. `வைக்கோல் அளவுகொண்ட சிறு அம்புதானே, இது என்ன செய்துவிடும்' என்றுதான் அனைவரும் நினைத்தனர். ஆனால், பிடுங்க முடியாமல் ஒவ்வொரு வீரனும் துடிக்கத் தொடங்கிய பிறகுதான் நிலைமையின் விபரீதம் புரியத் தொடங்கியது.

மூன்றாம்நிலைப் படையில் பெருங் குழப்பம் நிலவியதால், மையூர்கிழார் தேரை, படையின் நடுப்பகுதிக்குக் கொண்டுசெல்லவில்லை. மாறாக, ஓரப்பகுதியின் வழியே படை நின்றிருக்கும் பகுதிக்கு வெளிப்புறம் நோக்கி இழுத்துச்செல்லலாம் என்ற முடிவுக்கு வந்தார். தேரை ஓட்டும் வலவனிடம், ``வெளிப்புறமாக விரைந்து ஓட்டு'' என்றார்.

அவரின் தேரைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தார் வேட்டூர்பழையன். `இந்தப் போருக்கான முக்கியக் காரணமாக இருப்பவன் மையூர்கிழார். இவன்தான் பறம்பைப் பற்றிய பல குறிப்புகளை வேந்தர்களுக்கு வழங்குபவன். அவன் இருக்கும் துணிவில்தான் காரமலையின் அடிவாரத்தில் இவ்வளவு பெரிய படையைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றனர்' என்று அவனைப் பற்றிய எண்ணங்கள் மேலேறியபடியே இருந்தன. `எதிரிப்படையின் கடைசிப் பகுதிக்கு வந்துவிட்டோம். இவ்வளவு தொலைவு ஏறி வருதல் நல்லதன்று. ஆனால், இத்தனை நாள் களத்துக்கு வராத இந்தத் துரோகி, இன்று போர்க்களத்துக்குள் வந்துள்ளான். இவனை இன்றோடு கொன்றழிக்காமல் விட்டால் பறம்புக்குக் கடும்பாதிப்பைத் தொடர்ந்து உருவாக்குவான். எனவே, இன்றைய போரில் தனக்கு என்ன நேர்ந்தாலும் மையூர்கிழாரைக் கொன்றழிக்காமல் விடக் கூடாது' என்ற உறுதியோடு அவனை விரட்டிச் சென்றார் வேட்டூர்பழையன்.
முடியனும் இரவாதனும், வேந்தர்படையின் இரண்டாம்நிலையைக் கடந்து மூன்றாம்நிலையை அடைந்தனர். உறுமன்கொடியின் தடுப்பரண்கள் சிதறிப்பறந்தன. எதிர்கொள்ளவே முடியாத தாக்குதலால் நிலைகுலைந்துகொண்டிருந்தான் உறுமன்கொடி. முடியனும் இரவாதனும் ஒரே களத்தில் ஒன்றாய் நின்று இதுவரை போரிட்டதில்லை. தன் மகன் எப்படிப் போர்புரிவான் என்பதை மற்றவர்கள் சொல்லித்தான் முடியன் கேட்டுள்ளான். தட்டியங்காட்டில்தான் அவனது தாக்குதலை முடியனால் பார்க்க முடிந்தது.

இன்று இருவரும் ஒரே படைப்பிரிவில் முன்னேறிப் பாய்க்கின்றனர். உள்ளுக்குள் பெருமிதம் இருந்தாலும் கண்களில் அதைக் காட்டிவிடக் கூடாது என்ற எச்சரிக்கையோடு தாக்குதலை முன்னெடுத்தான் முடியன். தந்தையோடு இணைந்து களத்தில் நின்று போராடும் இந்நாளில், வழக்கத்தைவிட வீரியமாக இருந்தது இரவாதனின் தாக்குதல். சூளூர் வீரர்கள் முன்புற அணியில் தாக்கி முன்னேற, பறம்பின் குதிரைப்படை வேந்தர்படையின் மூன்றாம் நிலைக்குள் வகுடுபிளந்து போய்க்கொண்டிருந்தது.

குளவன்திட்டிலிருந்து போர்க்களத்தை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் பாரி. `பறம்பின் குதிரைப்படை இதே வேகத்தில் முன்னேறினால் இன்னும் சிறிது நேரத்தில் மூஞ்சலை நெருங்கிவிட முடியும்' எனக் கணித்தான். குகைக்குள்ளிருந்து மீண்டும் ஓசை எழுப்பினான் இகுளிக்கிழவன். சற்று நேரத்துக்குப் பிறகுதான் அவனது ஓசையைக் கவனித்தான் பாரி. இகுளிக்கிழவன் கூறினான், சுடர் இடதுபுறம் அசையப்போகிறது. இப்போது வரப்போவது காற்றி. அது தட்டியங்காட்டை இடதுபுறமாக உருட்டிச்செல்லும் என்று சொல்லி, கையை உயர்த்தினான். ஆனால் பாரியோ, கூவல்குடியினரை நோக்கிக் கை அசைக்கவில்லை.

சற்றே அதிர்ச்சிக்குள்ளானான் இகுளிக்கிழவன். ``ஏன் இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்த மறுக்கிறாய்?" என்று இகுளிக்கிழவன் கேட்டதற்குப் பாரி சொன்னான், ``பறம்பின் குதிரைப்படை வீரர்கள் எதிரிகளின் மூன்றாம்நிலைக்குள் நுழைந்துவிட்டனர். இந்தச் சூழலில் முதல்நிலையில் இருந்து எய்யப்படும் அம்பு மூன்றாம்நிலையில் இருக்கும் நம் வீரர்களையே தாக்க வாய்ப்புண்டு. எனவேதான் உத்தரவிடவில்லை."

இகுளிக்கிழவன் மீண்டும் விளக்கைப் பார்த்தான். சாய்ந்த சுடர் மீண்டும் நிமிர நேரமானது.

தேக்கன் கூறியபடி வாங்கித் தாக்காமல், ஏறித் தாக்கிய கூழையன் ஒருகட்டத்துக்குப் பிறகு களைப்படையத் தொடங்கினான். சிறிது நேரம் பின்புறப் படையில் எதுவும் நிகழ்ந்துவிடுமோ என்று கவனத்தைச் செலுத்திய கருங்கைவாணன், நேரம் கடந்த பிறகு தாக்குதலைத் தீவிரப்படுத்தினான். தனது கவனத்தைத் திருப்பவே கிழவன் இப்படிச் சொல்லியுள்ளான் என நினைத்தான் கருங்கைவாணன். இப்போதும் கூழையன் தற்காப்பு நிலையில் நிற்காமல் முன்களம் நோக்கியே பாய்ந்துகொண்டிருந்தான்.

அவனது செயல் பொருத்தமானதில்லை. எதிரிப்படைத் தளபதியை மிகவும் குறைத்து மதிப்பிடுவதால் இவ்வாறு செய்கிறான் எனத் தேக்கனுக்குத் தோன்றியது. ஆனால், போரிட்டுக் கொண்டிருப்பவனை நோக்கிச் சத்தம்போட்டுச் சொல்வது குழப்பதையோ, தவறான புரிதலையோ உருவாக்கிவிடும் என்பதால் அமைதி காத்தான். கூழையன் அணிந்திருக்கும் மெய்க்கவசம் எவ்வளவு வேகமான தாக்குதலையும் வாங்கி நிற்கும். எனவே, கவனமாகத் தாக்கினால்தான் இவனை வீழ்த்த முடியும் என நினைத்தபடியே வாளைச் சுழற்றினான் கருங்கைவாணன். இருவரின் கால்களும் பின்னல் வடிவில் வட்டக்களத்தில் நகர்ந்துகொண்டிருந்தன.

சற்றும் எதிர்பாராமல் காற்று பெருவேகத்தோடு வீசியது. அப்போது எதிர்த்திசையில் கூழையனும்

பறம்பின் திசையில் கருங்கைவாணனும் நின்றுகொண்டிருந்தனர். `இப்பெருங்காற்று வீசும்போது காரமலையிலிருந்து ஏன் ஓசை எழுப்பப்படவில்லை; பாரி என்ன செய்துகொண்டிருக்கிறான்?' என்று கண நேரத்தில் கூழையனின் சிந்தனை காற்றின் வழியே குளவன்திட்டை அடைந்தபோது கருங்கைவாணனின் வாள் கூழையனின் கழுத்துப் பகுதியில் இறங்கி வெளியேறியது.

மூன்றாம்நிலைப் படையைப் பறம்பின் குதிரைப்படை பிளந்து முன்னேறிக்கொண்டி ருந்தபோது ஆபத்து அதன் உச்சத்தை அடைந்தது. உறுமன்கொடியின் கைகளில் இருந்து படையின் கட்டுப்பாடு வழுவத் தொடங்கியது. ஒரு தளபதி வேறு வழியே இன்றிச் செய்யும் கடைசிச் செயலுக்கான உத்தரவை இட்டான். முச்சங்கு ஊதப்பட்டது. அது பேராபத்தைத் தெரிவிக்கும் குறியீடு. மற்ற சங்குகள் ஊதப்பட்டால் அது ஆபத்து பற்றித் தலைமைத் தளபதிக்குத் தெரிவிக்கும் செயல். அவர் உடனடியாக உரிய ஏற்பாட்டைச் செய்வார். ஆனால், முச்சங்கு ஊதப்பட்டால் தலைமைத் தளபதி உட்பட அதைக் கேட்கும் ஒவ்வொரு தளபதியும் உடனடியாக அந்த இடத்துக்கு வந்துசேர வேண்டும்.

ஆனால், உடனடியாக வரும் நிலையில் வேந்தர்படைத் தளபதிகள் எவரும் இல்லை. நகரிவீரனும் சூலக்கையனும் முன்வகுக்கப்பட்ட திட்டப்படி படையின் பின்புறத்தைக் கடந்து மையூர்கிழாரால் கொண்டுசெல்லப்பட்டுக் கொண்டிருந்தனர். கருங்கைவாணனோ பறம்புப்படையின் முன்களத்தில் ஏறிப்போய்ப் போரிட்டுக்கொண்டிருந்தான். விற்படைத் தளபதி துடும்பனோ, உதிரனின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மிகவும் பின்னகர்ந்துகொண்டிருந்தான். உறுமன்கொடி எதிர்பார்த்த எந்த ஒரு தளபதியும் உதவிக்கு வரவில்லை. பறம்பின் குதிரைப்படைத் தாக்குதல் இணையற்ற வேகத்தில் இருந்தது.

முடியனும் இரவாதனும் கணக்கின்றிக் கொன்றழித்து முன்னேறினர். எங்கும் குருதி பீறிட்டது. சூளூர் வீரர்களின் பாய்ச்சலுக்கு முன் வேந்தர்படையால் நிலைகொள்ள முடியவில்லை. உறுமன்கொடி முச்சங்கை மீண்டும் மீண்டும் ஊதச் சொன்னான். களத்தில் ஓசையெழுப்ப நிறுத்தப்பட்டிருந்த அனைவரும் இனி இந்த ஓசையையே எதிரொலிக்க வேண்டும். நிலைமை மிக மோசமாகிறது என்பதன் அறிகுறி இது.

மூன்றாம் நிலையில் மூஞ்சலுக்குப் பக்கத்தில் முழுப் பாதுகாப்போடு நின்றிருந்த வேந்தர்களுக்கு இப்போதுதான் ஆபத்தின் அளவு புரிந்தது. தங்கள் தளபதிகள் ஒன்றுகூட முடியாதபடி சிதறிக்கிடக்கின்றனர்; எதிரிகளின் குதிரைப்படையோ மூஞ்சலை நெருங்கிக்கொண்டிருக்கிறது எனத் தெரிந்ததும் பொதியவெற்பனும் உதியஞ்சேரலும் உறுமன்கொடிக்கு உதவ, தங்களின் படைப்பிரிவினரோடு விரைந்தனர். சோழவேழன், விற்படைத் தளபதி துடும்பனுக்கு உதவ விரைந்தான்.

கூழையன் மண்ணில் சரிந்த பிறகு, தேக்கன் களத்தில் இறங்கினான். கருங்கைவாணன் எதிர்பார்த்த வேட்டை இப்போது அவன் முன்னால் வாளேந்தி நின்றது. ஆனால், படையின் முன்வரிசையிலிருந்து மாறி மாறி ஓசை எழுப்புவதைப் போன்ற உணர்வு தொடர்ந்து இருந்தது. அவனால் துல்லியமாகக் கணிக்க முடியவில்லை. தேக்கன் வாளை ஏந்திப்பிடித்தான். விலா எலும்பு குத்தி உள்ளிறங்குவதுபோல வலியெடுத்தது. ஆனாலும் நிலைமையைச் சமாளித்தாக வேண்டும். வாய்ப்பு கிடைத்தால் கருங்கைவாணனைக் கொன்றழிக்க வேண்டும் என்ற முடிவோடு மீண்டும் முன்னகர்ந்தான்.

இருவரும் சுழற்கட்டுக்கட்டி கேடயத்தை முன்னகர்த்தியபடி வட்டக்களத்தில் கால்களை நகர்த்தினர். நேற்றைய போரில் கிழவன் வீசிய வாளை சூலக்கையன் தடுத்திருக்காவிட்டால் நிலைமை என்னவாகியிருக்கும் என்று நினைத்த கணத்தில், அவனுக்கு வெறி உச்சத்தில் ஏறியது. இன்றோடு இவனைக் கொன்றழிக்க வேண்டும் என்று வாளின் கைப்பிடி நொறுங்குவதுபோல இறுகப்பிடித்தான். கால்கள் தாவி முன்செல்ல ஆயத்தமானபோதுதான், முச்சங்கின் பேரோசை இடைவிடாது எதிரொலித்தது.

ஒரு கணம் நடுங்கி நின்றான். `அப்படியென்றால், அப்போதிருந்து சங்கோசை கேட்டுக்கொண்டே இருந்ததா? நிலைமை கைமீறியதால்தான் முச்சங்கை விடாது ஊதவேண்டிய நிலை வந்துள்ளது. கிழவன் சொன்னது உண்மைதானா?' எனத் திணறி நின்றான் கருங்கைவாணன். தேக்கன் வலிமையோடு இருந்திருந்தால் இந்தக் கணத்தில் கருங்கைவாணனை வெட்டிச்சரித்திருப்பான். வாளை உயர்த்தியபடி செயலற்று நின்ற கருங்கைவாணனை நோக்கிப் பாய்ந்து வாள் வீச முடியாத நிலையில் தேக்கன் இருந்ததால், அவன் தப்பித்துப்போய் குதிரையில் ஏறினான்.

கண்பார்வையின் எல்லையில் மூஞ்சல் கூடாரத்தின் மேல்முனைகள் தெரியத் தொடங்கியபோது பறம்புவீரர்கள் உச்ச அளவுத் தாக்குதலை வெளிப்படுத்திக்கொண்டிருந்தனர். முடியனின் மனதுக்குள் பற்றியெறிந்த தீ சுழற்காற்றைப்போல வேகம்கொண்டது. எதிரிகளின் படைவீரர்களால் மறித்து நின்று போரிட முடியவில்லை. இந்நிலையில்தான் பொதியவெற்பனும் உதியஞ்சேரலும் தங்களின் வலிமைமிகுந்த படையோடு வந்துசேர்ந்தனர்.

உடல் முழுவதும் கவசம் அணிந்த சிறப்புப்படை வீரர்கள் எதிரிகளின் தாக்குதலை வலிமையோடு சந்தித்தனர். மூஞ்சலைக் கண்கொண்டு பார்த்த கணத்தில், பறம்புவீரர்களின் தாக்குதல் எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு இருந்தது. வேந்தர்களின் சிறப்புப்படைப் பிரிவு அவர்களின் வேகத்தை நிறுத்த, பேராற்றலை வெளிப்படுத்தியது.

கைகள் மட்டுமல்ல, முழு உடலும் நடுங்கியது. மணலின் மீது நீண்டுபடர்ந்தது நாழிகைக் கோலின் நிழல். அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த போது திசைவேழரின் கண்களில் நீர் பெருகியது; மனம் துடித்தது. பதற்றத்தில் அவரின் உடல் முழுவதும் ஆடத் தொடங்கியது. எதையும்வெளிக்காட்டிக் கொள்ளக்கூடாது என நினைத்தார். ஆனால், அவரது வயது அனைத்தையும் வெளிக்காட்டியது. கைகளை மெள்ள மேலே உயர்த்தினார். தட்டியங்காடெங்கும் முரசின் ஓசை மேலெழுந்தது. மூன்றாம் நாள் போர் முடிவுக்கு வந்தது.

அதிர்ந்து நின்றான் முடியன். முரசின் ஓசையை அவனால் நம்பவே முடிய வில்லை. இன்னும் சிறுபொழுது இருந்தால்கூட நிலைமை வேறு மாதிரி ஆகியிருக்கும். பறம்பின் குதிரைப்படை வீரர்கள் அனைவரும் அளவுகடந்த ஆவேசத்தோடு போரிட்டனர். `இலக்கை இவ்வளவு நெருங்கியும் பயனின்றிப் போய்விட்டதே!' என வேதனைப்பட்டான் இரவாதன். முடியனோ, முதற்கணத்தில் ஏற்பட்ட ஏமாற்றத்தை மறுகணத்தில் சரிசெய்துகொண்டான். `மூஞ்சலைக் கண்கொண்டு பார்த்துவிட்டோம். இனி, பறம்பின் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது!' எனத் தோன்றியது.

போர்க்களத்தை விட்டு வெகுதொலைவுக்கு அப்பால் போயிருந்தனர் மையூர்கிழாரும் வேட்டூர்பழையனும். ஒருவரை ஒருவர் வீழ்த்தியே தீருவது என்ற உறுதியோடு விரைந்துகொண்டிருந்தனர். காரமலைக் குன்றுகளின் அடிவாரத்தில் முன்சென்ற மையூர்கிழாரின் தேர், பார்வையிலிருந்து சட்டென மறைந்தது. `எந்தப் பக்கம் போனான்?' என நினைத்தபடி சற்றே திரும்பினார் வேட்டூர்பழையன். எதிரில் இரு தளபதிகளான நகரிவீரனும் சூலக்கையனும் இருநூறு குதிரைவீரர்கள் சூழ வந்து நின்றனர்.

பழையன் விரைந்து வில்லுயர்த்திய போது, தளபதிகள் இருவரும் அம்பை நாணிற்பூட்டி இழுத்தனர். வெகு தொலைவுக்கு அப்பால் மெல்லியதாகக் கேட்டது முரசின் ஓசை.

பழையன் நாண் இழுத்த அம்பைக் கீழிறக்கி மண் நோக்கி விடுவித்தான். விடுபட்ட அம்பு மண்ணைக் குத்தி நின்றது. அதைப் பார்த்தபடி நிமிர்ந்து எதிரியைப் பார்த்தான். ஆனால், அவர்கள் இருவரும் தத்தம் வில்களைத் தாழ்த்தவில்லை.
நகரிவீரன் சொன்னான், ``போரின் விதிகள் போர்க்களத்துக்கு மட்டும்தான். நாமோ களம் நீங்கி நெடுநேரமாகிவிட்டது" - சொல்லும்போதே விடுபட்டுச் சீறின அம்புகள்.

சட்டெனத் தடுப்புக்கேடயத்தைத் தூக்கும் முன்பு, எண்ணற்ற அம்புகள் வந்து எகிறின. நெஞ்சில் தைத்த அம்புகள் எல்லாம் மெய்க்கவசத்தில் குத்தி முறிந்தன. ஆனால், வலது தோளிலும் இடது காலிலும் குத்திய இரு அம்புகள் குருதியைப் பீய்ச்சின.

கண்ணிமைக்கும் நேரத்தில் அம்புகளால் தாக்கப்பட்டு வலவன் மண்ணில் சரிந்தான். உருவிய வாளோடு தேரிலிருந்து குதித்து இறங்கிய பழையன், ஓடி மரங்களுக்குள் நுழைந்தான்.

தேரையும் குதிரையையும் விட்டு இறங்கிய வீரர்கள், அவனை விரட்டியபடி மலை ஏறினர். அப்போது ஓசை எழுப்பியபடி இன்னொரு புறத்திலிருந்து வந்தார் மையூர்கிழார். ``இனி அவனைத் தொடர முயலாதீர்கள். அது ஆபத்தில் முடிந்துவிடும்."
சூலக்கையன் கத்திச் சொன்னான், ``கைகால்களில் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளான். அவனால், அதிக தொலைவு செல்ல முடியாது. ஆயுதத்தையும் கைக்கொள்ள முடியாது. எனவே, அவனை எளிதில் கொன்றழித்துவிடலாம்" என்று விரட்டிக்கொண்டு மலையேறினர்.

இங்கும் அங்குமாக வேட்டூர் பழையனது உருவம் மறைந்து மேலேறிக்கொண்டிருந்தது. வீரர்கள் சுற்றிவளைத்துக் குன்றின்மேல் ஏறினர். பொழுது மறைந்துகொண்டிருந்தது. ``அதிக தொலைவு செல்ல முடியாது விரட்டிப்பிடியுங்கள்" என்று கத்திக்கொண்டே முன்னேறினர் தளபதிகள் இருவரும்.

சிறுகுன்றின் உச்சிக்குச் சென்று மறுபுறம் இறங்கத் தொடங்கினர். வானத்தில் கருமையேறியது. தொலைவிலிருந்து வீரன் ஒருவன், ``அதோ, அங்கே போகிறான்" எனச் சத்தமிட்டான்.

எல்லோரும் அந்த இடம் நோக்கி ஓடினர். வேட்டூர்பழையன், தனித்திருந்த மரம் ஒன்றை நோக்கித் தடுமாறித் தடுமாறி நடந்தார். தளபதிகளும் வீரர்களும் அவரை நோக்கி ஓடினர்.

மரத்தின் அடிவாரத்துக்கு வந்த பழையன், மரத்தோடு சாய்ந்து நின்றார். ஓடிவந்த தளபதிகள் உருவிய வாளோடு அவன் அருகே வந்தனர். வீரர்கள் அனைவரும் மரத்தைச் சூழ்ந்து நெருங்கினர்.

நகரிவீரன் ஏந்திய வாளோடு பழையனை நெருங்கியபடி சொன்னான், ``பறம்புத் தளபதி கோழைபோல் ஓடி ஒளிந்தான் என்று உன்னைப் பற்றி மக்கள் கூறுவர்.”


அதிக அளவு குருதி கொட்டிவிட்டதால் மிகவும் களைத்துப்போன வேட்டூர்பழையன் சொன்னான், ``இல்லை, இரண்டு தளபதிகளையும் நூற்றுக்கணக்கான வீரர்களையும் கொன்றுவிட்டே செத்தான் பழையன் என்றுதான் மக்கள் பேசுவர்.”

வாய்விட்டுச் சிரித்தான் நகரிவீரன், ``நீ, எங்கள் அனைவரையும் கொல்லப்போகிறாயா?” என்று சொன்னபோது அருகில் இருந்தவன் ஏதோ மாற்றத்தை உணரத் தொடங்கினான். மூச்சுக்குழல் எரிச்சலடையத் தொடங்கியபோது, மரத்தில் சாய்ந்திருந்த பழையன் சொன்னான், ``இனி நீங்கள் யாரும் உயிர் பிழைக்க முடியாது. உங்களின் மூச்சுக்காற்றுக்குள் சொனைகள் இறங்கிவிட்டன” என்று கூறியவர், மரத்தோடு சரிந்தபடியே சொன்னார் ``இது ஆட்கொல்லிமரம்.”

- பறம்பின் குரல் ஒலிக்கும்...

# வீரயுக நாயகன் வேள்பாரி-97

மூன்றாம் நாள் போர் முடிவுறுவதைக் குறிக்கும் முரசின் ஓசை, எங்கும் கேட்டது. ஓசை கேட்டதும் காயம்பட்டவர்களைத் தூக்கிச் செல்லும் பணியாளர்கள் களம் நோக்கி ஓடினர். வீழ்ந்து கிடப்பவர்களை எடுத்துச்செல்ல கயிற்றுத்தொட்டிலைத் தூக்கியபடி இரலிமேட்டிலிருந்து பெருங்கூட்டம் தட்டியங்காட்டுக்குள் இறங்கியபோது, திசைவேழரின் மாணவன் ஒருவன் இரலிமேடு நோக்கி மேலேறிக்கொண்டிருந்தான்.



நேற்றைக்கு இதே பொழுதில் கபிலரை அழைக்க வந்த மாணவனே இன்றும் வந்தான். வாரிக்கையனும் கபிலரும் ஒரே இடத்தில்தான் இருந்தனர். போர் முடிவுற்ற நேரத்தின் பதற்றம் எல்லோருக்குள்ளிருந்தும் மேலேறிவந்தது. அப்போது அங்கு வந்த அவன், கபிலரை வணங்கிச் சொன்னான், ``ஆசான் உங்களை அழைத்து வரச் சொன்னார்.”

கபிலர் அதிர்ச்சியோடு வாரிக்கையனைப் பார்த்தார். `நேற்று ஓங்கலத்தால் சிக்கல் ஏற்பட்டதைப்போல, இன்றும் ஏதோ பிரச்னையில் மாட்டிவிட்டீர்களா?’ என்று கேட்பதுபோல் இருந்தது அவரது பார்வை. அதைப் புரிந்துகொண்டு வாரிக்கையன் சொன்னார், ``அப்படி எதுவும் நாம் செய்யவில்லை.”

``பிறகு ஏன் அழைத்து வரச் சொல்லியுள்ளார்?”

``என்னிடம் கேட்டால், எனக்கென்ன தெரியும்?” என்று கேட்டவர் சற்று இடைவெளி விட்டு, ``நீங்கள்தான் முன்கூட்டியே சொல்லிவிட்டீர்களே” என்றார்.

``நான் என்ன சொன்னேன்?”

``திசைவேழர் யார் என நான் கேட்டதற்கு, `அறத்தின் அடையாளம்' என்றீர்கள். பாரியிடம் பேசியபோது `போர்க்களத்தில் அறம் நெடுநேரம் உயிர்வாழாது' என்றீர்கள்.''

வாரிக்கையனின் ஒப்பீட்டால் நடுங்கிப்போனார் கபிலர். ``ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?'' எனப் பதறிக் கேட்டார்.

வாரிக்கையன் சொன்னார், ``நாள்கள் செல்லச் செல்ல, போர்க்களத்தில் நிற்கும் மனிதன் தனது வலிமையை இழந்துவிடுவான். முடிவுறாத வேட்டையை எந்த உயிரினமும் நடத்தாது. மனிதன்தான் `போர்' என்ற பெயரில் அதை நடத்திக்கொண்டிருக்கிறான். இரக்கமற்ற அந்தக் காட்சிகளைப் பொழுதெல்லாம் பார்த்துக்கொண்டிருப்பதைப்போலக் கொடுமையானது வேறில்லை. கண்களைத் திறப்பதைவிடக் கடினமானது மூடுவது. மனத்துக்குள் விழுந்துகிடக்கும் கொடூரங்களை எதைக்கொண்டு அப்புறப்படுத்த முடியும்? புறமும் அகமும் வெட்டுண்ட மனிதச்சதைகள் துடித்துக்கொண்டிருக்க, எதிலிருந்து தப்பித்து எங்கே ஓடுவார் அவர்? யாரிடமாவது பேசினால் இந்தத் துயரிலிருந்து மீண்டெழ முடியுமா என்ற தவிப்பு அவரை அலைக்கழிக்கும். அந்தத் தவிப்பிலிருந்து மீள்வதற்கு உங்களை அழைத்திருப்பார்.''




வாரிக்கையனின் விளக்கம், கபிலரைப் பொறிகலங்கச்செய்தது. போர்க்களம் நோக்கிப் பெருங்கலக்கத்தோடு நடக்கத் தொடங்கினார். அவலத்தின் துயரத்தை நெருங்க, கால்கள் அஞ்சின. காட்சிகளை, கண்கொண்டு பார்க்க முடியவில்லை. போர் முடிவுற்ற கணத்தில் களம் நோக்கிப் பயணிப்பதைப்போல் கொடுந்துன்பம் வேறில்லை. ஆயுதங்கள் துளைத்துக்கிடக்கும் மனிதர்களின் ஓலம், எங்கும் கேட்டது. உடல்கள் கிடத்தப்பட்ட கயிற்றுத்தொட்டில்களை சாரிசாரியாகத் தூக்கிச்சென்றனர். எல்லாவற்றையும் கடந்து நாழிகைவட்டில் இருக்கும் பரண் நோக்கி நடந்தார் கபிலர்.

அவரது வருகைக்காகக் காத்திருந்தார் திசைவேழர். திசைவேழரின் முகத்தில் இருளேறியிருந்தது. என்ன நடந்திருக்கும் என, கபிலரால் சிந்திக்க முடியவில்லை. வணங்கியபடி அவர் அருகில் அமர்ந்தார்.

`நிலைமான் கோல்சொல்லியின் உயிர் எனக் கருதப்படும் நாழிகைவட்டிலையும் நாழிகைக்கோலினையும் என்னிடமிருந்து பிடுங்கியெறிந்தது காற்று' என்றுதான் சொல்ல நினைத்தார்

திசைவேழர். ஆனால், அவரை அறியாமலேயே, முடத்திருக்கண்ணைப் பற்றிய பேச்சைத் தொடங்கினார்.

``தவறிழைத்தவன் தண்டனையின் வழியே காட்டிக்கொடுத்த நிலத்தை நாம் தேர்வுசெய்திருக்கக் கூடாதோ?'' எனக் கேட்டார்.

இப்போது ஏன் இதைக் கேட்கிறார் எனக் கபிலருக்குப் புரியவில்லை. ``தவறேதும் நடந்ததா?'' எனக் கேட்டார் கபிலர்.

``எல்லாம் தவறுதலாக நடக்கின்றன'' என்றார் திசைவேழர்.

எதைச் சொல்கிறார் என்பது புரியாமல் விழித்தார் கபிலர்.

``நிலைமான் கோல்சொல்லியின் உயிர்நாடி நாழிகைவட்டிலும் கோலும்தானே. அவை இரண்டையும் இன்று என்னிடமிருந்து காற்று பறித்துக்கொண்டது'' என்று சொன்னவர், ``இன்று எதைக்கொண்டு பொழுதளந்தேன் தெரியுமா?''



கலங்கிய அவருடைய கண்களையே கூர்ந்துபார்த்தார் கபிலர்.

``கொல்லப்பட்ட போர்வீரனின் தசைகள் ஒட்டியிருந்த ஒரு கேடயத்தில், குருதியால் ஊறிப்போன மண் எடுத்து, முறிந்த அம்பை நட்டுப் பொழுதளந்தேன்.''

அவரது சொல்லிலிருந்த நடுக்கம் கபிலரின் மீதும் பரவியது.

``போர்க்களத்தில் மரணத்தின் கருவிகொண்டு பொழுதளந்துள்ளேன். இனி இந்த நிலம் எண்ணிப்பார்க்க முடியாத மரணத்தைக் காணும். கவசங்கள் வீரர்களைக் காத்து நிற்காது. முறிந்த அம்புகளால் நீளும் பொழுது வீரர்களின் குருதியைக் குடித்துக் கொண்டேயிருக்கும். மரணத்தின் அடையாளமே பொழுதென ஆகிவிட்டது. இனி போர்க்களத்தின் பொழுதை மரணமே ஆட்சிசெய்யும்.''

திசைவேழரின் சொற்கள் கபிலரை உறையச்செய்தன.

``இந்த நிலத்தைத் தேர்வுசெய்யும்போது நான் சொன்னது நினைவிருக்கிறதா

உங்களுக்கு? `நாம் இழைத்த தவறுகளுக்கும் தண்டனை இந்தத் தட்டியங்காடுதான். நமது தலை சாயும் வரையிலும் இந்த நிலம் நம்மைத் துரத்திக்கொண்டே இருக்கும்' என்றேனே!"

`ஆம்' எனத் தலையசைத்தார் கபிலர்.

``துரத்திச் செல்லும் இடைவெளியைக் கூட இந்த நிலம் வழங்காது என நினைக்கிறேன். இந்த நிலத்திலேயே நானும் சாய்ந்துவிடுவேன். முடத் திருக்கண்ணின் உயிர் பிரியும்போது அவன் இழைத்த தவற்றுக்கான தண்டனை என நினைத்தேன். எனது உயிர் பிரியும்போதும் அதையே நினைப்பேன்" என்றவர், நின்றுகொண்டிருக்கும் பரண்கம்பங்களைக் கைகளால் தொட்டபடி, ``எனது வாழ்வின் பொழுதை இந்தப் பரண் அளந்து கொண்டிருக்கிறது கபிலரே. எந்தக் கணமும் அளவை முடியலாம்."

கலங்கிப்போயிருக்கும் திசைவேழரை எந்தச் சொல்கொண்டு மீட்பது எனத் தெரியாமல் திணறிய கபிலர் சொன்னார், ``நீங்கள் இன்னும் நெடுநாள் வாழவேண்டியவர். மரணம் பற்றி அதற்குள் ஏன் பேசுகிறீர்கள்?"

``வாழ்வை எளிய கணக்குகளால் அளவிட முடிவதில்லை புலவரே. பொங்கும் புதுப்புனலைப் பார்த்து மகிழவே வைகையின் கரையில் குடில் அமைத்துத் தங்கினேன். ஆனால் இப்போதோ, வீழ்ந்துகிடக்கும் மனித உடலுக்குள்ளிருந்து பல்லாயிரம் கறையான்கள் பொங்கி மேலெழும் காட்சியைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நான் என் கால்களாலேயே இங்கு இழுத்து வரப்பட்டேன். எத்தனையோ முறை இதைத் தவிர்க்க நினைத்தேன். ஆனால், எனது சொல்லின் வழியே நான் வரவழைக்கப்பட்டேன். நான் நன்கு அறிவேன், வேந்தர்கள் அறவழிப்பட்டு வாழ விரும்புவார்கள். ஆனால், அறம் எனப்படுவது விருப்பத்தின்பாற்பட்ட செயலன்று; அது இயல்பின்பாற்பட்டது; அன்பின்பாற்பட்டது. எனவேதான் வேந்தர்களால் அறவழியில் வாழ முடிவதில்லை. அதிகாரமும் அறமும் இரண்டு எல்லைகள். அதிகாரத்தில் இருப்பவர்கள் அறம் பேணவே முடியாது. அப்படியிருக்க, என்னை அழைத்து 'அறம் பிறழாமல் இந்தப் போரை நடத்துங்கள்' எனச் சொல்கிறார்கள் என்றால், நான் ஏதோ ஒருவகையில் அவர்களுக் கானவனாக இருந்திருக்கிறேன். அதிகாரத்தின் மறுப்பையோ நிராகரிப்பையோ நான் பெறவில்லை. நான் பேணிய அறம் அவர்களின் அதிகாரத்தை உறுத்தாமல் இசைவாய் இருந்திருக்கிறது. அதற்கான தண்டனைதான் இது."



கபிலருக்கு என்ன மறுமொழி சொல்வதெனத் தெரியவில்லை. ஆனால், துயரத்தில் மூழ்கும் அவரது மனத்தை மீண்டெழச்செய்ய வேண்டும் என்று மட்டும் தோன்றியது, ``இந்தக் கொடும் தண்டனையை அறத்தின் பொருட்டே நாம் ஏற்றிருக்கிறோம். ஒருவகையில் இதுவும் நமது கடமைதானே!" என்றார்.

``வெல்ல நினைப்பவர்களும் அழிக்க நினைப்பவர்களும்தாம் போரை விரும்புகிறார்கள். வாழ நினைப்பவர்கள் வேறு வழியின்றி அந்தப் போரை எதிர்கொள்கின்றனர். நான் முதல்தரப்புக்காகப் பரணேறியிருக்கிறேன். எனவே, எனது உள்ளொளி அணைந்து கொண்டிருக்கிறது. நீங்களோ இரண்டாம் தரப்புக்காக நிற்கிறீர். எனவேதான் அணையவிடாமல் தடுக்கும் துணிவை இழக்காமல் இருக்கிறீர்" என்று சொன்னவரின் கண்களில் நீர் பெருகியது.

சற்றே தலை கவிழ்ந்த திசைவேழர் குரல் தாழ்த்திச் சொன்னார், ``என்னை ஆற்றுப்படுத்த முயலாதீர்கள். நேற்றிரவுதான் நான் நீலனைப் பற்றி அறிந்தேன். எவ்வளவு பெரிய சூழ்ச்சியில் நான் சிக்கவைக்கப்பட்டுள்ளேன். நீங்களாவது எனக்குத் தெரிவித்திருக்கக் கூடாதா?"

சற்றே தயங்கிய குரலில், ``தாங்கள் நிலைமான் கோல்சொல்லியாக இருக்க ஒப்புக்கொண்ட பிறகு, பேரரசர்கள் வீற்றிருக்கும் அவையில்தானே நான் உங்களைச் சந்தித்தேன். எனவே, இதைப் பற்றிப் பேசும் சூழல் இல்லாமல்போனது" என்றார் கபிலர்.

``இந்தப் போருக்குப் பின்னணியில் இப்படியொரு செயல் நடந்திருக்கிறது எனத் தெரிந்திருந்தால், நான் நிலைமானாக இருக்க ஒப்புக் கொண்டிருக்க மாட்டேன் என்பதை நீங்கள் நம்பத் தவறிவிட்டீர்கள். எனவே, இதைப் பற்றிப் பேச வேண்டும் என உங்களுக்குத் தோன்றவில்லை."

திசைவேழரின் சொற்களைக் கபிலரால் எதிர்கொள்ள முடியவில்லை. நடுங்கிய தன் கைகளைக் குவித்தபடி எதையோ சொல்லவந்தார் கபிலர்.



சட்டென அவரின் கைகளைப் பற்றிய திசைவேழர் சொன்னார், ``என் தோழனாய் என்னை நீங்கள் கவனப்படுத்தத் தவறிவிட்டீர்கள். அதை எனது மனம் ஏற்றுக்கொள்ளாது. ஆனால், நீங்கள் பாரியின் தரப்புக்காக நிற்கிறீர். எனவே, உம் கைகள் நடுங்கக் கூடாது."

பேரரசர்கள் கூடியுள்ள கூடாரத்தில் பேரமைதி நீடித்தது. மையூர்கிழார் தனது வாக்குமூலத்தைச் சொல்லி முடித்துவிட்டு வெளியேறினார். ``மலைமீது ஏறிச் செல்ல வேண்டாம் என்று நான் எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை" என்பதுதான் அவர் வலியுறுத்திச் சொன்னது.


ஆள்கொல்லி மரத்தின் அருகில் போகாமல் மிகத் தள்ளியிருந்த ஓரிரு வீரர்கள் தப்பிவந்து நடந்ததை விளக்கியுள்ளனர். வேந்தர்படையின் இரண்டு தளபதிகள் இன்றைய போரில் இறந்துள்ளனர். அதேநேரம் பறம்பின் தரப்புத் தளபதிகளான கூழையனும் வேட்டூர் பழையனும் கொல்லப் பட்டுள்ளனர்.

சம அளவில்தான் மரணங்கள் நிகழ்ந்துள்ளன எனத் திருப்திப்பட்டுக் கொள்ளும் நிலையில் இங்கு யாரும் இல்லை. ஏனெனில், இன்றைய போரில் பறம்பின் தாக்குதல் எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு இருந்தது. இதுவரை வாள் ஏந்தாமல் நின்றிருந்த அரசர்கள் இன்று தாக்குதல் முனைக்குப் போகவேண்டிய நிலைக்கு வந்துள்ளனர். மையூர்கிழார் அவை நீங்கி நீண்ட நேரமாயினும் யாரும் பேச்சைத் தொடங்கவில்லை.

முதன்முறையாக, போர்க்களம் பற்றிய அச்சம் அவையில் அமைதியின் வடிவில் பரவியிருந்தது. இரு தளபதிகளின் மரணம்கூட பாதிப்பை ஏற்படுத்தவில்லை. மாறாக, பறம்பின் போர்முறைகள் விடை அறிய முடியாத கேள்விகளாக இருந்தன.

``காற்றின் வீச்சும் போக்கும் அம்பை இழுத்துச் செல்லும் அல்லது மறித்துச் சாய்க்கும்; வலுவிழக்கச்

செய்யும். ஆனால், காற்றின் துணைகொண்டு எப்படி அம்பெய்ய முடியும்? காற்றின் வருகையை எப்படிக் கணித்தனர்? அது வருவதற்கு முன் எப்படி அம்பை விடுத்தனர்? கண்பார்வைக்கு அப்பால் அம்புகள் பறவைகளைப்போலப் பாய்ந்து செல்கின்றன. மனிதர்களால் இதுபோன்ற முயற்சியைச் செய்ய முடியுமா? நாம் மனிதர்களோடுதான் போரிட்டுக் கொண்டிருக்கிறோமா?" கேள்விகள் அடுக்கடுக்காய் மேலெழுந்தன. ஆனால், யாரிடமும் விடையில்லை.



உதியஞ்சேரல் சொன்னான், ``வீரர்களைத் தைத்த அம்புகளில் ஒன்றைக்கூட எளிதில் பிடுங்க முடியவில்லை. காற்றின் வேகத்தோடு உள்ளேறிய அம்புகள் சதைகளையும் நரம்புகளையும் பிய்த்துக்கொண்டுதான் வருகின்றன. இதுவரை யாரும் கேள்விப் பட்டிராத அம்புகளாக இருக்கின்றன. போர்முனைக்குத் தொடர்பே இல்லாமல் மூன்றாம் நிலையில் நின்றிருந்த வீரர்களில் எண்ணற்றோரை நாம் இழந்துள்ளோம்."

``நம் தலைமைத் தளபதி எதிரிப்படையின் கடைசிப் பகுதியில் நின்றிருக்கும்போது, அவர்கள் நமது படையின் இறுதி அணியை வீழ்த்தியுள்ளனர். யாராலும் நெருங்கவே முடியாத அளவுக்கு நிறுத்தப்பட்டிருந்த படையணிகளைப் பிளந்துகொண்டு எதிரிகள் மூஞ்சல் வரை வந்துள்ளனர். முப்பெரும் பேரரசுகளின் தாக்குதல் திட்டங்களை ஒரு சிறுகுடி மன்னனின் படை அசைத்துப்பார்க்கிறது. இது எப்படி நிகழ்கிறது?" எனக் கேட்டார் சோழவேழன்.

கேள்வி, நேரடியாகக் கருங்கைவாணனை நோக்கியதாக இருந்தது. நேற்று அவன் வகுத்த திட்டப்படி பறம்பின் குடி முடியனும் குடி ஆசானும் கொல்லப்பட்டிருக்க வேண்டும். பறம்புப்படை இன்று பெரும்நெருக்கடியைச் சந்தித்திருக்க வேண்டும். ஆனால் நடந்தது, இதற்கு நேரெதிராக இருக்கிறது. போர்க்களத்தின் செயல்பாடுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டியது தலைமைத் தளபதியான கருங்கைவாணனே!

அவையில் நடந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த குலசேகர பாண்டியன் இதுவரை கருத்தேதும் சொல்லவில்லை. போர்க்களத்தில் நிகழும் உரையாடலில் சொற்களின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்தவர், இன்று எந்த ஒரு சொல்லையும் உச்சரிக்காமல் அமைதியாக இருந்தார். ஆனால், முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்குக் கருங்கைவாணன் மறுமொழி சொல்லியே ஆகவேண்டிய நிலை இருந்தது.

அவன் பேரரசர்களை வணங்கிவிட்டுச் சொன்னான், ``நான் போர் தொடங்கும் முன்னரே தெரிவித்தேன். இவர்கள் நம்மைப் போன்ற மனிதர்கள் அல்லர்; நெருப்பைப் பிளந்து வெளிவரக்கூடியவர்கள். பாறைகளை உருட்டியும் மரங்களைப் பிடுங்கியெறிந்தும் தாக்கக்கூடியவர்கள். எந்தவொரு விலங்குடனும் மனிதன் விதிகளை உருவாக்கிப் போரிட முடியாது. இந்த விலங்குகளை அழிக்க வேண்டுமென்றால், நாமாக உருவாக்கிக்கொண்ட விதிகளைத் தூக்கியெறிய வேண்டும்.”



கருங்கைவாணனின் சீற்றத்தை மறித்து நிறுத்தினார் சோழவேழன். ``மூன்று பேரரசுகள் ஒன்றிணைந்து ஒரு சிறுகுடி மன்னனை வீழ்த்தும் போரில், மரபுகளையும் விதிகளையும் விட்டொழிக்கச் சொல்வது இழிவென்று தோன்றவில்லையா?”

``நான் எதிரிகளை வீழ்த்த முடியாதவனல்ல. நம்முடைய எதிரிகள் யாரென்றே தெரியாமல் இந்தப் போர்க்களத்தின் விதிகள் வகுக்கப்பட்டுவிட்டன. இத்தனை ஆயிரம் குதிரைகள் போர்க்கொட்டிலில் செயலற்றுக் கிடப்பதை யாராவது பார்த்திருக்கிறீர்களா? இவ்வளவு தொலைவு பறக்கும் அம்புகளை மனிதனால் எய்துவிட முடியும் என்றால், யார் நம்புவார்கள்? நாம் நம்மைப்போன்ற மனிதர்களிடம் போரிடவில்லை. விலங்குக் குணமேறிய காட்டுமனிதர்கள். தீயகுணமும் அதீத ஆற்றலும்கொண்ட கூட்டம் அது. அவர்களால் நமது அறிவுப்புலனுக்கு எட்டாத பலவற்றைச் செய்ய முடியும். எனவேதான் நான் மீண்டும் மீண்டும் கூறுகிறேன், இந்தப் போரை வழக்கப்படி நடத்தக் கூடாது. ஒரே நாளில் முழுமுற்றாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.”

``ஒரே நாளிலா... எப்படி?” எனக் கேட்டார் சோழவேழன்.

``நம்மிடம் இருக்கும் அனைத்துவிதமான ஆயுதங்களையும் நஞ்சேற்றி எதிரிகளின் மொத்தப் படையையும் தாக்க வேண்டும். சிறிய வாய்ப்புகூடத் தரக் கூடாது. தாக்கப்பட்ட ஒருவன்கூட குற்றுயிராகவேனும் போர்க்களம் நீங்கி இரலிமேட்டில் கால்பதிக்கக் கூடாது. ஒரு பகலில் முழுமுற்றாகப் பறம்புப்படை அழித்தொழிக்கப்பட வேண்டும். மிச்சம் வைக்காமல் அழித்தால் மட்டுமே நாம் தட்டியங்காட்டை விட்டு வெற்றியோடு வெளியேற முடியும்.”

கருங்கைவாணன் முடிக்கும் முன் சோழவேழன் சொன்னார், ``எதிரி குறித்து, தலைமைத் தளபதிக்கு இவ்வளவு பதற்றமா?”

``சோழப்பேரரசருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது பதற்றம், அவர்கள் வெல்ல முடியாதவர்கள் என்பதால் அல்ல; நாம் எண்ணிலடங்காத வீரர்களை பலிகொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதால்தான்.”

இவ்வளவு நேரமும் அமைதிகாத்த குலசேகரபாண்டியன் இப்போது சொன்னார், ``நீ விதிகளில் நம்பிக்கையின்றி இருப்பதால்தான் எதிரிகளின் மீதான தாக்குதல் உத்தியை உன்னால் நம்பிக்கையோடு வகுக்க முடியவில்லை.”

அவை, அமைதியோடு அவரின் குரலைக் கேட்டது.

``அடுத்த கூடாரத்தில் நீலன் இருக்கிறான். அவனைப் போய்ப் பார். விதிகள் வகுக்கப்பட்ட இந்தப் போரில் பாரி வெற்றி பெறுவான் என்ற நம்பிக்கையை அவனது ஒவ்வோர் அசைவிலும் உன்னால் உணர முடியும். எதிரிகளிடம் சிறைப்பட்ட ஒருவனுக்கு, அவனது படையின் மீதும் தாக்குதலின் மீதும் முழு நம்பிக்கை இருக்கிறது. ஆனால், சிறைப்பிடித்து வந்த உனக்கு அந்த நம்பிக்கை இல்லை.”

வாழ்வில் முதன்முறையாக, போர்க்களக் கூடாரத்தில் அவமானப்பட்டு நின்றான் கருங்கைவாணன்.

சினமேறிய அவனுடைய கண்கள் வெளித்தெரியாமல் இருக்க, தலை கவிழ்ந்தான்.

அவனுக்கான சொற்களுக்கு இடம் தராமல் குலசேகரபாண்டியன் சொல்லி முடித்தார். ``இரவு உணவை அருந்திய பிறகு கூடுவோம். நாளைய தாக்குதலுக்கான புதிய திட்டத்தோடு வா.”

கருங்கைவாணன் வெளியேறிய பிறகு அரச குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் மட்டும் கூடாரத்தில் இருந்தனர். வெளிப்படையாக எல்லாவற்றையும் பேச முடியாத நிலை மூவேந்தருக்கும் இருந்தது.

`தந்தை சோழவேழன், கருங்கைவாணனைக் கடுஞ்சொற்கள்கொண்டு பேசியது சரியன்று’ என, செங்கனச்சோழனுக்குத் தோன்றியது. ஆனால், பொதியவெற்பனின் எண்ணம் வேறு மாதிரி இருந்தது. தந்தை குலசேகரபாண்டியன் இப்படிப் பேசியதுதான் சரி. தளபதியை அவமானப்படுத்தும் சொற்களை உரிய முறையில் பயன்படுத்தவேண்டியது போர்க்களச் செயல்பாட்டில் முக்கியமான ஒன்று.

தளபதியானவன் வேட்டை விலங்கின் சீற்றம் குறையாமல் போரை வழிநடத்திச் செல்ல வேண்டும். எதிரிகளை வீழ்த்த முடியாததற்கு அவனிடம் தெளிவான காரணங்கள் இருக்கக் கூடாது. போரின் போக்கை மீண்டும் மீண்டும் தனதாக்கிக்கொள்ளும் வெறி மட்டுமே அவனுக்கு வேண்டும். ஆனால் கருங்கைவாணனோ, எதிரிகளின் வலிமைக்கான காரணங்களைத் தன்னுடைய இரண்டு தோள்களிலும் சுமந்துகொண்டு திரிகிறான். அவற்றை வெட்டி வீழ்த்தவேண்டியதே இப்போதைய தேவை. குலசேகர பாண்டியன் அதைத்தான் செய்துள்ளார் எனப் பொதியவெற்பன் நினைத்தான்.



அவை, பேச்சின்றி நீடித்தது. அமைதியை முடிவுக்குக் கொண்டுவந்தது சோழவேழனின் குரல். ``போரில்லாத வழிமுறைகளைப் பற்றியும் நாம் தீவிரமாகச் சிந்திக்கவேண்டிய நேரம் இது.”

``உண்மைதான். ஆனால், மலைமக்களின் கனவுகள் மிகக் குறுகியவை. சமவெளி மனிதர்களைப்போல ஆசைகளுக்கும் விருப்பங்களுக்கும் அவர்கள் விலைபோய் விடுவதில்லை. குலச்சமூகத்தில் உடைப்பை ஏற்படுத்துவதும் எளிதன்று” என்றான் பொதியவெற்பன்.

``பறம்பில் வேளிர்குலம் மட்டும் இல்லையே. பல குலங்கள் இருக்கின்றனவல்லவா? அவற்றை நமக்கான முறையில் நாம் ஏன் பயன்படுத்தக் கூடாது?” எனக் கேட்டார் சோழவேழன்.

``நிறைய குலங்கள் இருக்கின்றன. ஆனால், எல்லோரும் தங்களின் குடிகளோடு பறம்பில் வசிக்கின்றனர். எனவே, எளிதில் பாரிக்கு துரோகம் இழைக்க மாட்டார்கள்” என்று சொன்ன குலசேகரபாண்டியன் சற்று இடைவெளிக்குப் பிறகு சொன்னார், ``அதுபோன்ற செயல்களுக்கு நீண்டகாலம் தேவை. போர்க்களத்தில் தாக்குதல் உச்சம்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அவற்றைப் பற்றிச் சிந்திப்பது நம்மை வலிமை குன்றச் செய்துவிடும். இப்போதைய தேவை எதிரியை உருக்குலைக்கச் செய்யும் தாக்குதல் உத்திதான். கருங்கைவாணன் என்ன திட்டத்தோடு வருகிறான் என்பதை, பொறுத்திருந்து பார்ப்போம்” என்றார்.

அவரின் கருத்தை ஏற்று உணவு அருந்தக் கலைந்தனர்.

அணுக்கக்காவலர்களும் மெய்க்காப்பாளர்களும் சூழ, பேரரசர்கள் தத்தமது கூடாரம் நோக்கிப் போயினர். காக்குவீரர்கள் அணிவகுக்க உதியஞ்சேரல் அவனது கூடாரத்துக்குள் நுழைந்தான். மூஞ்சல் நோக்கிப் பாய்ந்துவந்த எதிரிகளின் தாக்குதல் வேகம் அவனது மனக்கண்ணை விட்டு எளிதில் அகலவில்லை. பறம்போடு அதிகமான போர்களை நடத்தியது சேரர்குடிதான். எனவே, அவனால் முன்னர் நடந்த போர்களின் தன்மைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க முடிந்தது. பறம்புவீரர்களின் தாக்குதல் இந்தப் போரில் பல மடங்கு வலிமைகொண்டுள்ளதாகத் தோன்றியது. மூவேந்தர்களின் கூட்டுப்படையின் எண்ணிக்கை யாரும் நினைத்துப்பார்க்க முடியாதது. ஆனால், அவற்றையெல்லாம் அவர்கள் ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. போரின் மூன்றாம் நாளிலேயே அவர்கள் மூஞ்சலை நெருங்கிவிட்டார்கள். இனி அவர்களின் வேகம் மேலும் அதிகமாகும். நமது தரப்பில் வலிமையான படையைக்கொண்டுள்ளோம். ஆனால், நம்மிடம் சரியான திட்டங்கள் இல்லை என்ற எண்ணத்தோடு உணவு அருந்த அமர்ந்தான் உதியஞ்சேரல்.

அப்போது காவல்வீரன் உள்ளே வந்து வணங்கிச் சொன்னான், ``சோழப்பேரரசர் தங்களைக் காண வந்துள்ளார்.”

உதியஞ்சேரல் எழுந்து வாயில் நோக்கி வருவதற்குள் ஊன்றுகோலை நகர்த்தி உள்நுழைந்தான் செங்கனச்சோழன்.

இருவரும் உணவு அருந்தியபடியே பேசத் தொடங்கினர்.

பொதியவெற்பனைத் தனது கூடாரத்துக்கு உணவு அருந்த அழைத்து வரச் சொன்னார் குலசேகரபாண்டியன்.

தந்தையின் திடீர் அழைப்பு வியப்பை ஏற்படுத்தியது. ‘எதற்காக அழைத்திருப்பார்?’ என்ற சிந்தனை யுடனேயே கூடாரத்துக்குள் வந்தான் பொதிய வெற்பன்.

உணவு அருந்திக் கொண்டிருந்த குலசேகரபாண்டியன், எதிரில் வந்து நிற்கும் பொதிய வெற்பனிடம் கேட்டார், ``நான் கருங்கைவாணனைக் கடுஞ்சொற்களால் பேசியது ஏன் என உன்னால் புரிந்து கொள்ள முடிந்ததா?”

``புரிந்தது தந்தையே. தாக்குதல் உத்தியில் இன்னும் நமது ஆற்றல் முழுமையாக வெளிப்படவில்லை என்பதால்.”

பொதியவெற்பன் சொல்லி முடிக்கும் முன் குலசேகரபாண்டியன் கூறினார், ``இல்லை. அவன் இதுவரை சரியான உத்திகளைத்தான் வகுத்துள்ளான். ஆனால், அவற்றையெல்லாம் எதிரிகள் எளிதில் தகர்க்கிறார்கள்.”
தந்தையின் பேச்சு பொதிய வெற்பனுக்குச் சற்றே அதிர்ச்சியைக் கொடுத்தது.

``ஆனால், அதை நாம் அவையில் ஏற்றுக்கொண்டால் போரை வழிநடத்தும் நமது தலைமைத்திறன்மீது மற்ற இரு பேரரசுகளுக்கும் நம்பிக்கை பொய்க்கத் தொடங்கும். அதனால்தான் கருங்கைவாணன் பின்பற்றும் உத்தியைக் குறைசொல்லாமல் அவன் கொண்டிருக்கும் கருத்தின்மீது தாக்குதல் தொடுத்தேன்.”

பொதியவெற்பன் வாயடைத்து நின்றான்.

``மற்ற இரு பேரரசர்களுக்கும் பறம்பை வெல்ல வேண்டும் என்ற ஒற்றை நோக்கம்தான் இருக்கிறது. ஆனால், நமக்கு இருப்பதோ அந்த ஒற்றை நோக்கம் மட்டுமன்று.”

குலசேகரபாண்டியன் குரலின் வழியே போரின் ஆழம் வெளிப்படத் தொடங்கியது.

குலசேகரபாண்டியன் தொடர்ந்தார், ``மற்ற இரு பேரரசர்களும் முதன்முறையாக நமது தலைமையை ஏற்று வந்துள்ளனர். இந்த நிலையைப் பாதுகாக்க வேண்டும். அது, பறம்பை வெல்வதைவிட முக்கியத்துவம் வாய்ந்தது. அதே நேரத்தில் பறம்பை வெற்றிகொள்ளும் உத்தியின் வழியேதான் நம்மீதான அவர்களின் நம்பிக்கையை இறுகக் கட்ட முடியும்.”

போரின் முழுப்பரிமாணமும் குலசேகரபாண்டியனின் வார்த்தையில் விரிந்தது.

போர்க்களம் உருவாக்கும் நம்பிக்கை அல்லது நம்பிக்கையின்மையைத் தனது பேச்சு மற்றும் கண்ணோட்டத்தின் வழியே தலைகீழாக மாற்றவேண்டிய ஆற்றல் முக்கியமானது. உண்மையில் போர் தலைமையேற்பவர்களின் மனநிலையை வழிநடத்துவதில்தான் நிலைகொள்கிறது.
குலசேகரபாண்டியன் தனித்து நடத்திக்கொண்டிருக்கும் பெரும்போரை விரிந்த கண்களின் வழியே பார்த்துக் கொண்டிருந்தான் பொதியவெற்பன்.

``போரின் போக்கு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?”

செங்கனச்சோழனின் கேள்விக்கு உடனடியாக பதில்சொன்னான் உதியஞ்சேரல், ``நம்மால் நினைத்துப்பார்க்க முடியாதபடி போரின் போக்குகளை அவர்கள் உருவாக்குவார்கள். என் தந்தையின் காலம்தொட்டு எத்தனையோ தாக்குதல்களைப் பறம்பின்மீது நடத்தியிருக்கிறோம். ஆனால், அப்போதெல்லாம் இல்லாத பேராற்றல் இப்போது பறம்புவீரர்களிடம் வெளிப்படுவதைக் காண்கிறேன்.”

``காரணம்?”

``பாரி இறங்கி வந்து போரிட வேண்டும் என்பதற்காக நாம் கடைப்பிடித்த உத்தி தவறானது என நினைக்கிறேன். அளவுக்கு அதிகமாகச் சினம்கொள்ளும்படி அவர்களை நாம் சீண்டிவிட்டோம் எனத் தோன்றுகிறது.”

``அப்படியா நினைக்கிறீர்கள்?”

``ஆம். குகைக்குள் இருக்கும் விலங்கை வெளியேற்ற அதன் குட்டியைத் தூக்கிவரக் கூடாது. அது வெளியேற்றும் செயலன்று; வெறியேற்றும் செயல். நாம் அதைச் செய்துவிட்டோம்.”

``இதை எதிர்கொள்ள என்ன வழி?”

``கருங்கைவாணன் சொல்வதுபோல ஒரே நாளில் நஞ்சாயுதங்களைக்கொண்டு பெருந்தாக்குதல் நடத்துவதுதான் பயன்கொடுக்கும் என நினைக்கிறேன்.”

``வேறு வழியே இல்லையா?”

``எனக்குத் தெரிந்து வேறு வழியேதும் இல்லை. உங்கள் தந்தை கூறியதைப்போல போர் அல்லாத வழிமுறையைப் பற்றிப் பேச இது நேரமல்ல. குலசேகரபாண்டியன் கூறியதைப்போல எண்ணற்ற குலங்கள் பறம்பில் இருந்தாலும் அவர்கள் அனைவரும் தங்கள் குடிகளுடன்தாம் இருக்கின்றனர். எனவே, அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பேதும் இல்லை.”

``இதைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் நான் வந்தேன்” என்றான் செங்கனச்சோழன்.

``இதைப் பற்றிப் பேச வேறென்ன இருக்கிறது?” என்று சற்றே வியப்போடு உதியஞ்சேரல் பார்த்தான்.

செங்கனச்சோழன் சொன்னான், ``குடிகள் அல்லாத குலத்தலைவர்களும் அங்கு உள்ளனர்.”

``வாய்ப்பேயில்லை. பறம்பைத் தொடர்ந்து கவனித்தும் அறிந்தும் வருபவர்கள் நாங்கள். குடிகளின்றிக் குலத்தலைவர்கள் மட்டும் அங்கு இருக்க வாய்ப்பேதும் இல்லை.”

செங்கனச்சோழன் வலதுகையில் பிடித்திருந்த ஊன்றுகோலை மெள்ளத் திருகியபடி கரும்பாக்குடியைப் பற்றிச் சொல்லத் தொடங்கினான்.

``இந்தப் போரில் வரையறுக்கப்பட்ட விதிகளின்படி வெற்றிகொள்ளும் வாய்ப்பைக் கருங்கைவாணனுக்கு வழங்குவேன்” என்றார் குலசேகரபாண்டியன்.

``விதிகளின்படி போரிட்டு வெற்றிகொள்வது மிகக்கடினம் எனத் தெரிந்தும் அந்த வழியே தொடர்ந்து

முயல்வது நமக்குத்தானே இழப்புகளை அதிகமாக்கும். ஏன் மாற்றுவழிக்கு நீங்கள் அனுமதி தர மறுக்கிறீர்கள்?”

``எது சிறந்த மாற்றுவழி என்பதை நான் அறிவேன். எனவே, அதற்கான முயற்சியை நான் செய்துள்ளேன். ஒருவேளை நான் பின்பற்றும் வழியும் தோல்வியடைந்தால் மூன்றாவதாக, கருங்கைவாணன் சொல்லும் நஞ்சுத்தாக்குதலுக்கு அனுமதி வழங்குவேன்.”

குலசேகரபாண்டியனின் சொற்கேட்டு அசைவற்று நின்றான் பொதியவெற்பன். சற்றும் எதிர்பாராத ஒன்றாக இருந்தது அவர் சொன்னது. அந்த மாற்றுவழியில் அவருக்குப் பெரும்நம்பிக்கை இருப்பதால்தான் விதிமுறைப்படி போரிடத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார் என்பது புரிந்தது. அதுமட்டுமன்று, மற்ற இரு பேரரசுகளும் போர்முனை நோக்கியே கவனம்கொண்டிருக்க வேண்டும், அப்போதுதான் மாற்று வழிமுறையானது பாண்டியரின் தனிப்பெரும் முயற்சியாகத் துலங்கிநிற்கும் என்பதும் விளங்கியது.

``போர்க்களம் நம்பிக்கையை மெய்யாக்கினால் தொடர்ந்து வாள் ஏந்தலாம். நம்பிக்கையைப் பொய்யாக்கினால் தொடர்ந்து வாள் ஏந்தக் கூடாது. ஏனெனில், வெற்றி என்பது வாளோடு மட்டும் தொடர்புடையதன்று” என்றார் குலசேகரபாண்டியன்.

`ஆம்’ எனத் தலையசைத்தான் பொதியவெற்பன்.

``எவ்வளவு பெரும்படையும் துரோகத்துக்கு ஈடில்லை என்பதை நீ அறிந்துகொள்ள வேண்டும் மகனே.”

போர்க்களம் கடந்து வெற்றி நோக்கிய மாற்றுப்பாதை ஒன்றைக் கண்டறிந்த தந்தையின் சொற்கள், அளவற்ற மகிழ்வைக் கொடுத்தன. பெரும் தயக்கத்தோடு மெள்ளக் கேட்டான், ``அந்தப் பாதை என்ன தந்தையே?”

``அந்தப் பாதை என்ன என்பதையும் அதில் பயணிக்கப்போகிறவர் யார் என்பதையும் நீ தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் உன்னை வரச் சொன்னேன்.”

கரும்பாக்குடியின் மொத்தக் கதையையும் சொல்லி முடித்தான் செங்கனச்சோழன். ஏறக்குறைய உறைந்த நிலையில் அதைக் கேட்டுக்கொண்டிருந்தான் உதியஞ்சேரல்.

``பொருத்தமான மனிதர்கள் மூலம் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். விரைவில் நல்ல செய்தி வரும்.”

``அடைக்களம் தந்த பாரிக்கு எதிராக அவர்கள் எப்படி...” என்று உதியஞ்சேரல் சொல்லி முடிக்கும் முன் செங்கனச்சோழன் சொன்னான், ``கரும்பாக்குடியின் குலத்தலைவர்கள்தாம் அங்கு இருக்கின்றனர். அந்தக் குடிகள் அனைவரும் எம்முடைய நாட்டில்தான் இருக்கின்றனர். நமக்காக இல்லாவிடினும், அவர்கள் குலம் காக்கவாவது நாம் சொல்வதைச் செய்வார்கள். அதைத் தவிர அவர்களுக்கு வேறு

வழியேதும் இல்லை.”

``உங்களுக்கு நம்பிக்கை உள்ள அந்தப் பாதை என்ன? அதில் பயணிக்கப்போகிறவர் யார் தந்தையே?”

பொதியவெற்பனின் கேள்விக்கு அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்து பதில் சொன்னார் குலசேகரபாண்டியன், ``அந்தப் பாதையில் பயணிக்கப்போவது பொற்சுவை.”

தடுமாறி நின்றான் பொதியவெற்பன். போர்க்களம் வந்து இத்தனை மாதங்கள் கழித்து, தந்தை தன்னைத் தனியே அழைத்துப் பேசுவதன் காரணம் இப்போதுதான் புரியத் தொடங்கியது.

குலசேகரபாண்டியன் சொன்னார், ``அவள் அமைதிவேண்டிப் பாரியைக் காணத் திட்டம் வகுத்திருக்கிறாள். போரில் பங்கெடுக்காத வெங்கல்நாட்டின் ஆறு ஊர்க்காரர்களைக் கொண்டு அந்தச் செயலைச் செய்ய முயல்கிறாள். எனது கணிப்புப்படி விரைவில் அவள் பாரியைக் காண்பாள். அந்த நாளில் நாம் நினைத்தது நடக்கும்.”


தந்தையை இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் பொதியவெற்பன். பாண்டியனின் தனித்த முயற்சியால் பாரி கொல்லப்படுவான். அதுவரை மூவேந்தர்களின் கூட்டுப்படையை வகுக்கப்பட்ட விதிகளின்படி கருங்கைவாணன் வழிநடத்துவான். அறம் பிறழாத போரின் சான்றெனப் பரண்மேல் நின்றிருப்பார் திசைவேழர். தட்டியங்காட்டின் வெற்றி பாண்டியப் பேரரசின் தனிப்பெரும் வெற்றியாக நிலைகொள்ளும்.

பெருவேந்தன் குலசேகரபாண்டியனின் திட்டம் இப்போதுதான் பொதிய வெற்பனுக்குப் புரியத் தொடங்கியது.

- **பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-98

பிறைநிலவு எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது. விளாமரத்தின் அடிவாரத்தில் கூழையனைப் புதைத்தனர். தன் கண்களுக்கு முன்னால் கூழையன் வெட்டிச்சாய்க்கப்பட்டதை, தேக்கனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. சிறுவயது முதல் உற்ற தோழனாய் இருந்தவனைப் பறிகொடுத்த பதற்றம் அவனது உடல் முழுவதும் இருந்தது. மறுகணமே கருங்கைவாணனை வீழ்த்தக் கிடைத்த வாய்ப்பையும் பயன்படுத்த முடியாமல்போய்விட்டது. ஒருவேளை அது நடந்திருந்தால்கூட மனம் சற்றே ஆறுதலடைந்திருக்கும். தேக்கனின் முகம் மிகவும் இறுகியிருந்தது.



புதைத்து முடித்தவுடன் எல்லோரும் இரலிமேட்டில் இருக்கும் பாட்டாப்பிறை நோக்கி வலதுபுறமாகத் திரும்பி நடந்தனர். தேக்கன் மட்டும் இடதுபுறமாக நாகக்கரட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான். இறுதியாகச் சென்றுகொண்டிருந்த முடியன் அவனைப் பார்த்தபோது, ``முறியன் ஆசானைப் பார்த்துவிட்டு வருகிறேன். நீ போ'' என்றான்.

முடியனுக்குப் புரிந்தது. `உடல்வலியோடு மனவலியும் சேர்ந்திருக்கிறது. கிழவன் எதையும் வாய் திறந்து சொல்ல மாட்டான்' என எண்ணியபடி நடந்தான். எங்கும் வீரர்களின் ஓசை கேட்டபடி இருந்தது. நாகக்கரட்டுக்கும் இரலிமேட்டுக்கும் இடைப்பட்ட சமவெளிப் பள்ளத்தாக்கு எங்கும் ஓலை வேய்ந்த சிறு குடில்கள் எண்ணற்றவை அமைக்கப்பட்டிருந்தன. வீரர்களுக்கு உணவு, தங்கல் எல்லாம் அந்தக் குடில்களில்தான்.

தேக்கன் அக்கம்பக்கம் யாரையும் பார்க்கவில்லை. நேராக முறியன் ஆசானின் குடிலை நோக்கி வேகமாக நடந்தான். வளர்பிறையாதலால், வானில் ஒளிப்பரவல் விரைவாக இருந்தது. ``ஆசானின் குடில் சற்றுத் தொலைவில் இருக்கிறது. குதிரையில் போகலாம்'' என்று வீரர்கள் சொன்னதற்கு தேக்கன் மறுத்துவிட்டான்.

குதிரை பாய்ந்து செல்லும்போது விலாவெலும்பு உள்குத்தி ஏறுகிறது. வலி தாங்க முடியவில்லை. அதனால்தான் குதிரையைத் தவிர்த்து வேக வேகமாக நடந்தான். எங்கும் பந்தங்கள் ஏற்றப்பட்டிருந்தன. உலைக்களங்களில் தீப்பொறிகள் பறந்துகொண்டிருந்தன. சாணைக்கல்லில் கருவிகள் கூர்தீட்டப்பட்டுக்கொண்டிருந்தன. பொதினிமலை சாணைக்கற்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. மற்ற சாணைக்கற்களைவிட இருமடங்கு வேகத்தில் ஆயுதங்களைக் கூர்தீட்டக்கூடியவை. அவை கருவிகளோடு உரசும்போது தெறிக்கும் பொறியில் நீலமேறியிருக்கும். வேல், ஈட்டி, எஃகல், ஆலம், சகடம், குந்தம், கயலி, ஈர்வாள் என நாள்தோறும் ஆயுதங்களைக் கூர்தீட்டி வாங்கிக்கொள்வது போர்வீரர்களுக்கு வழக்கம்.

காட்சிகளைப் பார்க்கப் பார்க்க தேக்கனின் மனவேதனை அதிகமாகிக்கொண்டே இருந்தது. வாழ்வில் இனி தனக்கான ஆயுதங்களைக் கூர்தீட்டவே முடியாதோ எனத் தோன்றியது. போர் முடிந்த இரவில் நீலநிறப் பொறிகள் உதிர்க்கும் தீக்கங்குகளை ஒவ்வொரு வீரனும் ஆசையோடு பார்த்துக்கொண்டிருப்பான். இன்றைய போரில் எதிரியோடு தான் நிகழ்த்திய தாக்குதலால் தனது ஆயுதங்கள் முனை மழுங்கிப்போயுள்ளன என்பதை உலைக்களத்தில் உள்ளவர்களிடம் சொல்வதில்தான் அவனது பெருமை இருக்கிறது.

``ஒருவேளை, இன்று நான் எனது ஆயுதத்தைக் கூர்தீட்ட உலைக்களம் சென்றிருந்தால் என்ன பேசியிருப்பேன்? `எனது கைக்கெட்டும் தொலைவில் எதிரிப்படைப் தளபதி இருந்தும் அவனது தலையை வெட்டிச்சரிக்காமல் விட்டுவிட்டேன்' எனச் சொல்லி யிருப்பேனா? பறம்பின் எந்த ஒரு வீரனுக்கும் கிடைக்காத அரிய வாய்ப்பை இழந்து நிற்கிறேன். இனி நான் போர்க்களம் புகவேண்டுமா?'' என்று அடுக்கடுகாய்க் கேள்விகள் மேலேறியபடி இருந்தன. ஆனாலும் மனவோட்டத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டான்.

கயிறுகள் இறுக முடைந்திருந்த கட்டில் ஒன்றில் குடிலின் முன் உட்கார்ந்திருந்தார் முறியன் ஆசான். சுற்றிலும் இளம் மருத்துவர்கள் தங்களின் வேலைகளைப் பார்த்தபடி இருந்தனர். தேக்கன் வந்தவுடன் அவர்கள் சற்று விலகிப் போயினர்.

தேக்கனின் முகத்தைப் பார்த்ததும் வலியின் கூறுகளை முறியன் ஆசானால் உணர முடிந்தது. எதிரில் இருந்த மரப்படுக்கையில் படுக்கச் சொன்னார். ஒருபக்கமாகச் சாய்ந்து கையூன்றி உடலைக் கிடத்தினான் தேக்கன். அவன் படுக்கும்விதமே காயத்தின் தன்மையைச் சொன்னது. நெஞ்செலும்பின் அடிப்பகுதி சற்றே வீக்கம்கொண்டிருந்தது. அதை ஆசான் தொட்டபோது வலி பொறுக்க முடியவில்லை. ஆனால், அதை வெளிக்காட்டாமல் இருந்தான் தேக்கன்.


அந்த இடத்தை விரலால் அழுத்தியபடி தேக்கனின் முகத்தை ஆசான் பார்த்தபோது தேக்கன் சொன்னான், ``என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள். போர் முடியும் வரை நான் களத்தில் நிற்க வேண்டும்.''

``மருத்துவனிடம் முன்நிபந்தனை கூடாது.''

``சிகிச்சை பெறுவதற்கான காரணத்தை மருத்துவனிடம் மறைக்கக் கூடாதல்லவா!''

``போர்க்களத்தில் நின்றால் மட்டும் போதுமா... போரிட வேண்டாமா?''

``வேண்டாம். இந்தப் போரை வெற்றியாக்குவது முடியனின் கடமை. அவன் அதைச் செய்து முடிப்பான். நான் களம் விட்டு அகன்றால் பாரி களம் இறங்கும் சூழல் உருவாகிவிடும். அதைத் தவிர்ப்பதுதான் எனது வேலை. அதே நேரம் எனது செயல் மற்றவர்கள் ஐயம்கொள்ளாதபடி இருக்க வேண்டும்.''



உடலெங்கும் அழுத்திப்பார்த்து உள்காயங்களைக் கணித்தபடியே ஆசான் சொன்னார், ``வாளும் வில்லும் ஏந்தக் கூடாது. ஈட்டியை வைத்துக்கொள்ளுங்கள். ஆயுதம் கைக்கொண்டதாகவும் இருக்கும்; ஊன்றி நிற்க உதவியாகவும் இருக்கும்.''

தேக்கன் பதில் எதுவும் சொல்லவில்லை. ஆனால், அவன் கண்கள் வார்த்தைகளின் கசப்பை விழுங்க முடியாமல் துடித்தன.

அப்போது தேக்கனைச் சந்திக்க வீரன் ஒருவன் வந்தான். ஆனால், மாணவர்களோ தேக்கனுக்குச் சிகிச்சை தொடங்கிவிட்டதால் வீரனைச் சற்றுத் தொலைவிலேயே நிறுத்தினர். வடகோடியில் காட்டுக்குள் நுழைந்த வேட்டூர் பழையன் ஆட்கொல்லி மரத்தை அண்டி எண்ணற்றோரைக் கொன்று தானும் இறந்துள்ளார் என்ற செய்தியைச் சொல்வதற்காக அந்த வீரன் காத்திருந்தான்.

உலைக்களங்களில் எண்ணிலடங்காத ஆயுதங்களை உருவாக்கும் வேலை இரவு பகலாக நடந்தது. ஆனால், அவற்றின் ஓசை எதுவும் மூஞ்சலுக்குள் கேட்காது. ஏனென்றால், உலைக்களம் இருக்கும் பகுதி, படைக்கலப் பேரரங்கு இருக்கும் பகுதி, மருத்துவக்கூடாரம், மூஞ்சல் என எல்லாம் தனித்தனியே வெகுதொலைவில் இருந்தன.

பொழுது, நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருந்தது. குலசேகர பாண்டியன் சொல்லியதைப்போல புதிய

தாக்குதல் திட்டத்தோடு கூடாரத்துக்குள் நுழைந்தான் கருங்கைவாணன். உள்ளே அனைவரும் காத்திருந்தனர். செங்கனச்சோழன் கரும்பாக்குடியினரைப் பற்றிச் சொன்ன செய்தியைக் கேட்டு மகிழ்ந்துபோயிருந்தான் உதியஞ்சேரல். தந்தை குலசேகரபாண்டியனின் திட்டத்தைக் கேட்டு ஆச்சர்யம்கொண்டி ருந்தான் பொதியவெற்பன். அனைவரும் மிக இறுக்கமான சூழலில் இருப்பார்கள் என நினைத்து உள்ளே வந்த கருங்கை வாணன், வேந்தர்களின் முகங்களைப் பார்த்து சற்றே குழப்பமானான். ஆனாலும் அவன் வகுத்த திட்டத்தைப் பற்றிக் கூறலானான். நிறைந்த அவையில் அவமானப்பட்ட ஒரு தளபதியின் சினம், அவன் வகுத்த திட்டத்தின் வழியே வெளிப்படத் தொடங்கியது.

``மூன்று நாள் போர்களின் அனுபவத்திலிருந்து நான் சில முடிவுகளுக்கு வந்துள்ளேன். எதிரிகளின் போர் உத்தி, நம்மால் முன் உணர முடியாததாக இருக்கிறது. இனிமேலும் அப்படித்தான் இருக்கும். ஆனால், அவர்கள் படையின் வலிமை எதில் இருக்கிறது என்பதை என்னால் கணிக்க முடிந்திருக்கிறது'' என்றான்.

இதுவரை தாக்குதல் உத்தியைப் பற்றி மட்டுமே பேசிய கருங்கைவாணன் முதன்முறையாக எதிரிப்படையின் நுணுக்கங்களைப் பற்றிப் பேசத் தொடங்கியதை அவை உன்னிப்பாகக் கேட்டது.

``நம்மோடு ஒப்பிட்டால் பறம்பின் படை அளவில் மிக மிகச் சிறியது. ஆனாலும் அவர்கள் மூன்று நாள் போர்களிலும் முன்னேறித் தாக்கியுள்ளனர். அதற்குக் காரணம், அவர்களது படையின் மைய அச்சாக இருக்கும் விற்படைதான். அவர்கள் அம்பெய்யும் தொலைவில் சரிபாதிதான் நம் வீரர்களால் அம்பெய்ய முடிகிறது. எனவே, விற்படையினரை நம்மால் நெருங்கவே முடியவில்லை. அந்தப் படையினர் போர்க்களத்தின் நடுவில் இருக்கின்றனர். அதனால், எதிரிப்படையின் மீது நம் படையினர் தாக்குதலைக் குவித்து முன்னேற முடியவில்லை. எனவே, நமது தாக்குதலின் மூலம் எதிரிகளைத் தற்காப்புநிலைக்குத் தள்ள முடியவில்லை. மாறாக, எதிரிப்படையின் ஏதாவது ஒரு பிரிவு மூஞ்சலை நோக்கித் தொடர்ந்து முன்னேறித் தாக்குகிறது'' என்றான்.

கருங்கைவாணனின் கணிப்பு மிகச் சரியானது எனத் தோன்றியது. ஆனாலும் அதை வெளிக்காட்டாமல் இருந்தார் குலசேகரபாண்டியன்.

நாளைய போரில் பறம்பின் விற்படையை முழுமுற்றாகச் செயலிழக்கவைப்பதற்கான திட்டத்தை விளக்கினான். போர் உத்திகளை வகுப்பதில் அவன் கொண்டிருந்த அனுபவம், அவன் உச்சரித்த ஒவ்வொரு சொல்லிலும் மிளிர்ந்தது. சோழவேழன், மிரட்சியோடு அவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார். கருங்கைவாணன் திட்டத்தைக் கூறி முடிக்கும்போது யாரும் மறுசொல்லின்றி அதை நிறைவேற்ற ஆயத்தமாயினர். நாளைய போர், வேந்தர்கள் கொண்டாடும் செய்தியைத் தரும் என்பதில் ஐயமேதுமில்லை.

உடலும் மனமும் தளர்ந்தபடி பரண்மீது நின்றுகொண்டு, எழும் கதிரவனைப் பார்த்தார் திசைவேழர். செம்பிழம்பின் வட்டவடிவை மேகத்துண்டுகள் தழுவிக் கடந்தன. வானில் பறவை ஏதும் தென்படவில்லை. கண்கள், வெளியெங்கும் பார்த்துத் திரும்பின. வழக்கத்துக்கு மாறாக வேந்தர்படைகள் நிலைகொண்ட பகுதியில் தூசியும் புழுதியும் சூழ்ந்திருந்தன. `போர் தொடங்கி

நீண்டபொழுதுக்குப் பிறகுதானே இவ்வளவு புழுதி மேலெழும். இன்று என்ன நடந்துள்ளது... போர் தொடங்கும் முன்பே புழுதி இவ்வளவு உயரத்துக்குச் சூழ்ந்துள்ளதே!' என நினைத்தபடியே நாழிகைவட்டிலைப் பார்த்தார். கோலின் நிழல் உள்ளிழுத்துக்கொண்டிருந்தது. சரியான இடத்தைத் தொட்டதும் வலதுகையை உயர்த்தினார். பரணெங்குமிருந்து ஓசை எழுப்பப்பட்டது. தட்டியங்காட்டுப் போரின் நான்காம் நாள் தொடங்கியது.

கை உயர்த்தி இமைப்பொழுது கடப்பதற்குள் நிலம் எங்குமிருந்து வீரர்களின் பெருமுழக்கமும் முரசுகளின் பேரோசையும் வெளியை அதிரச்செய்தன. வழக்கத்தைவிடப் பல மடங்கு ஓசை கணப்பொழுதில் மேலெழும்பியது. களத்தில் என்ன நடக்கிறது என்று திசைவேழர் கூர்ந்துபார்த்தார். பறம்புப்படை வழக்கம்போல் தாக்குதலுக்கு ஆயத்தமானது. ஆனால், வேந்தர்படையோ வழக்கத்துக்கு மாறாக வெள்ளம்போல் பரவி விரியத் தொடங்கியது.

எல்லா திசைகளிலும் ஓசையுடன் புழுதி மேலெழுந்துகொண்டிருந்தது. இதுவரை வேந்தர்படை வடக்கு தெற்காக வரிசைகளை ஏற்படுத்தி, கண்ணுக்கெட்டும் தொலைவு வரை அணிவகுத்து நிற்கும். முதல்நிலைப் படை, இரண்டாம்நிலைப் படை, மூன்றாம்நிலைப் படை என மூன்று பெருந்தொகுப்புகளாகப் படை நின்றிருக்கும். முதல்நிலைப் படை பறம்புப்படையோடு மோதிக்கொண்டிருக்கும். இழப்புகள் அதிகமாகும்போது அடுத்தடுத்த நிலையில் இருக்கும் வீரர்கள் முதல்நிலைப் படையோடு வந்து இணைவர். ஆனால், இன்றைய போரில் வேந்தர்படை வழக்கம்போல் அணிவகுக்கவில்லை. பெரும்மாற்றம் நடந்துள்ளது. ஆனால், என்னவென்று புரிபடவில்லை.

வீரயுக நாயகன்

# வேள்பாரி

சு.வெங்கடேசன்

ஓவியங்கள்: ம.செ.,

98

முரசின் ஓசை கேட்டதும் தாக்குதலுக்குத் தயாரானது பறம்புப்படை. நேற்றைய போரில் மூஞ்சலின் அருகே பறம்பின் குதிரைப்படை சென்றது. இன்றைய போரில் மூஞ்சலுக்குள் நுழையும் திட்டத்தோடு முடியன் வந்திருந்தான். குதிரைப்படையை ஆறு கூறுகளாகப் பிரிப்பது என முடிவெடுத்திருந்தான். மூஞ்சலின் வடிவம் அவன் கண்களுக்குள்ளேயே இருந்தது. குதிரைப்படையின் இரண்டு பிரிவுகள் மூஞ்சலை அடையும் வரை போரிடக் கூடாது. அந்த இரண்டு பிரிவுகளையும் மூஞ்சலின் அருகில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டியது மற்ற நான்கு பிரிவுகளின் வேலை. அந்த நான்கு பிரிவுகளுக்கும் முடியன் பொறுப்பாவான். மூஞ்சலின் அருகில் சென்றதும் எதிரிகளின் தாக்குதல் பல மடங்கு வலிமைகொண்டதாக இருக்கும். ஏறக்குறைய அனைவரும் கவச வீரர்களாக இருப்பர். எனவே, மிக வலிமையான தாக்குதலின்றி மூஞ்சலைச் சுற்றியுள்ள அரணை உடைத்து உட்செல்ல முடியாது. எனவே, மிகத் தேர்ந்த வீரர்களைக்கொண்டு அந்தப் பிரிவினரை உருவாக்கியிருந்தான். அதற்கு இரவாதனைப் பொறுப்பாக்கியிருந்தான்.

போர் தொடங்கிய கணத்தில் வேந்தர்படையின் மின்னல் வேகச் செயல்பாடு யாரும் எதிர்பாராத ஒன்றாக இருந்தது. எல்லா திசைகளிலும் வேந்தர்படையினர் பிரிந்தும் கலைந்தும் விரைந்துகொண்டிருந்தனர். பறம்புப்படையின் மீது அவர்கள் தாக்குதல் தொடுக்கவில்லை. ஆனால், களமெங்கும் விரைந்துகொண்டிருந்தனர். என்ன செய்கிறார்கள் என்று யாருக்கும் பிடிபடவில்லை. முன்னணியில் விரைந்துகொண்டிருந்தவை தேர்கள்தாம். திகிரியையும் ஆழியையும் உருளியாகக்கொண்ட வலிமைமிகுந்த கூவிரம் வகைத் தேர்கள் விடுபட்ட அம்புகளைப்போல விரைந்துகொண்டிருந்தன.

பரண் மேல் நின்றபடி திசைவேழர் இமைக்காமல் அவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தார். பறம்புப்படையை விட்டு மிக விலகி எங்கே அவர்கள் போகின்றனர் எனப் பார்த்துக்கொண்டிருக்கும்போதுதான் அதற்கும் அப்பால் தேர்ப்படையின் இன்னோர் அணி போய்க்கொண்டிருப்பது தெரிந்தது. சற்றே அதிர்ச்சியோடு, முன்னேறிச் செல்லும் அந்த அணியைக் கூர்ந்து பார்த்தார். விரையும் தேர்களின் மீது காலைக்கதிரவனின் ஒளி பட்டுச் சிதறியபடி இருந்தது. உற்றுக் கவனித்தார், அவையெல்லாம் நிறைந்த பூண்களைக்கொண்ட கொடிஞ்சிவகைத் தேர்கள். இந்த வகைத் தேர்களை எந்தக் கருவிகொண்டும் சேதப்படுத்த முடியாது. திசைவேழர் தலையை எக்கிப் பார்த்தார். தேர்களின் உச்சியில் இருந்த கூம்புமொட்டுகள் கதிரவனின் ஒளிபட்டுத் தகதகத்தன. உராய்வில் பறக்கும் தீப்பொறிபோல விரையும் அவற்றின் வேகத்தில் மின்னி நகர்ந்தது வெய்யோன் பொன்னொளி. கண்கள் பார்க்கும் நில விளிம்பில் தேர்கள் எழுப்பும் மண்புழுதி அலையலையாய் மேலெழுந்து கொண்டிருந்தது. என்ன நடக்கிறது என்று திசைவேழருக்குப் புரியத் தொடங்கியது.

மூன்று நிலைகளில் நின்றிருந்த வேந்தர்படையின் ஒழுங்கை, கருங்கைவாணன் இன்று மாற்றிவிட்டான். முதல்நிலைப் படை வழக்கம்போல் பறம்புப்படையை எதிர்கொள்ள முன்னால் நகர்ந்து போய்க்கொண்டிருக்கும்போது, இரண்டாம்நிலைப் படை பறம்புப் பகுதியின் இடுப்புப்பகுதியைச் சூழவேண்டும். அதேநேரம் மூன்றாம்நிலைப் படை அதைவிடத் தொலைவில் அரைவட்டவடிவில் பயணித்துப் பறம்புப்படையின் பின்புறத்தை அடையவேண்டும். அதாவது, பறம்புப்படை முழுமுற்றாக வேந்தர்படையால் சூழப்பட வேண்டும். அவ்வளவு தொலைவு பயணித்து, பறம்பின் மொத்தப் படையையும் முற்றுகையிடுவதற்குத் தேவையான அளவுக்கு வீரர்கள் வேந்தர்படையில் இருந்தனர். அதனால்தான் கருங்கைவாணன் இந்தத் திட்டத்தைத் தீட்டினான்.

அவன் வகுத்த திட்டப்படி வேந்தர்களின் தேர்ப்படை மின்னல் வேகத்தில் பறம்புப்படையின் பின்பகுதியை நோக்கி மிகத்தொலைவில் அரைவட்டமடித்து விரைந்துகொண்டிருந்தது. அந்தத் தேர்கள் எல்லாவற்றிலும் மணிகள் கட்டப்பட்டிருந்தன. எனவே, மணிகளின் பேரோசை எங்கும் எதிரொலித்தது. எழும் புழுதியும் வீரர்களின் பேரோசையும் தெறிக்கும் மணியோசையுமாகப் போர்க்கள வெளியெங்கும் வேந்தர்படையின் ஆதிக்கம் மேலெழுந்தது.

தனது திட்டப்படி விரைந்து தாக்குதலைத் தொடுக்கவேண்டிய முடியன், போர் தொடங்கிய கணமே நிதானம்கொள்ளத் தொடங்கினான். எதிரிகள் என்ன செய்கிறார்கள் என்பது சற்றே குழப்பமாக இருந்தது. அவர்கள் யாரும் பறம்புப்படை நோக்கி ஒற்றை அம்பைக்கூட எய்யவில்லை. ஆனால், எல்லோரும் தீவிரமாக இயங்கிக்கொண்டிருக்கின்றனர். எதிரிகளின் திட்டம் என்ன என்பதை அறிய அவர்களின்

செயலைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான் முடியன். ஆனால், கடைசி வரிசையில் ஈட்டியை ஊன்றுகோலாகப் பிடித்தபடி சாய்ந்து நின்றுகொண்டிருந்த தேக்கனுக்குப் பிடிபடத் தொடங்கியது. ஏனென்றால், பறம்புப்படையை விட்டு மிக விலகி அரைவட்ட வடிவில் புழுதி மேலெழுந்துகொண்டிருந்தது. மேலெழும் புழுதியின் முன்முகம் அவன் இருக்கும் பின்புறத்தை நோக்கி வளைந்து வந்துகொண்டிருந்தது.

கருங்கைவாணன் தாக்குதலுக்கான திட்டத்தை உருவாக்கிய கணத்திலிருந்து மிகத் தீவிரமாய்ச் செயல்பட்டுக்கொண்டி ருக்கிறான். நேற்று நள்ளிரவு மூவேந்தர்களும் இந்தத் திடத்தை ஏற்றனர். கொல்லப்பட்ட தேர்ப்படைத் தளபதி நகரிவீரனுக்குப் பதில் வெறுகாளனைப் புதிய தளபதியாக நியமித்தான் செங்கணச்சோழன். சூலக்கையனுக்குப் பதில் மாகனகனைத் தளபதியாக நியமித்தான் குலசேகர பாண்டியன். உடனடியாகத் தாக்குதல் திட்டத்துக்கான வேலைகள் தொடங்கின. படைக்களக் கொட்டிலில் இருக்கும் ஆயுதவாரியை நோக்கி முதல் ஆணை பிறப்பிக்கும் பொழுது நள்ளிரவைத் தொட்டு நின்றது.

வழக்கம்போலவே நாளைய தாக்குதல் நடக்கும் என நினைத்த ஆயுதவாரி, வீரர்களுக்குத் தேவையான ஆயுதங்களை எல்லாம் படைப்பிரிவுகளுக்கு வழங்கிவிட்டு, தனது கூடாரத்துக்குச் சென்றார். உள்ளே சென்று அமர்ந்ததும் தலைமைத்தளபதியின் ஆணையோடு வீரன் ஒருவன் வந்து நின்றான்.

ஆணையைக் கண்டதும் அவர் அதிர்ச்சிக்குள்ளானார். நாளைய போரில் வேந்தர்படையில் இருக்கும் அத்தனை வீரர்களும் களம்புகுந்து எதிரிகளின் மீது தாக்குதல் நடத்தப்போகிறார்கள். எனவே, அனைவருக்கும் தேவையான ஆயுதங்களை உடனடியாகக் கொண்டுசேர்க்கும் ஏற்பாடுகளைச் செய்யும்படி அதில் கருங்கைவாணனின் உத்தரவு இருந்தது.

``இதுவரை முதல்நிலைப் படைவீரர்கள் மட்டுமே தாக்குதல் தொடுத்தனர். மற்ற இரு நிலைகளிலும் இருந்த வீரர்கள் தாக்குதல் களத்துக்குத் தேவைப்பட்டால் மட்டுமே சென்றனர். தாக்குதல் களத்துக்குள் வீரர்கள் அனைவரும் புகுந்தால் அவர்களிடம் இருக்கும் ஆயுதங்களைப்போல குறைந்தது ஆறு மடங்கு ஆயுதங்களை அவர்களுக்குக் கொண்டுசேர்க்க ஆயுதவாரி ஆயத்தநிலையில் இருக்க வேண்டும். தாக்கும் அணியின் பின்புறம் ஆயுதவண்டிகள் எந்நேரமும் அணிவகுத்து நிற்க வேண்டும். இப்போது படை முழுவதும் இருக்கும் அனைத்து வீரர்களும் தாக்குதலுக்குக் களம்புகப் போகிறார்கள் என்றால், அனைவரின் கைகளிலும் தேவையான அனைத்துவிதமான ஆயுதங்களும் இருக்க வேண்டும். அனைத்துப் படையினருக்கும் களத்துக்குத் தேவையான ஆயுதங்களை வண்டியில் ஏற்றி ஆயத்தப்படுத்த வேண்டும். இவையெல்லாம் இந்த நள்ளிரவுக்குப்பின் எப்படிச் சாத்தியமாகும்? ஒருபோதும் முடியாது'' என்று புலம்பியபடி, ``தலைமைத்தளபதி எங்கே இருக்கிறார்?'' எனக் கேட்டான் ஆயுதவாரி.

செய்தியைக் கொண்டுவந்த வீரன், ``மூஞ்சலுக்குள் இருந்துதான் இதைக் கொடுத்து விட்டார்'' என்றான்.

``மூஞ்சலுக்குள் இருந்தால் எந்த உத்தரவையும் பிறப்பிப்பாரா? நள்ளிரவுக்குப்பின் எப்படி இவ்வளவு ஆயுதங்களையும் கொண்டுசேர்க்க முடியும்? நாளைய போரில் சரிபாதி வீரர்களைக் களத்தில்

இறக்குவோம். நாளை மறுநாள் முழுமையாக அனைவரையும் களத்தில் இறக்க ஏற்பாடு செய்வோம் என்று நான் சொன்னதாகப் போய்ச்சொல்'' என்று கூறி அந்த வீரனைத் திருப்பி அனுப்ப முற்பட்டார்.


ஆனால், வீரனிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே வெளியில் பெருங்கூச்சலோசை கேட்டது. `இந்த நள்ளிரவில் என்ன இவ்வளவு சத்தம்?' என எண்ணியபடி கூடாரத்தை விட்டு வெளியில் வந்து பார்த்தார். படைக்கலப் பேரரங்கை நோக்கி ஆயுதங்களை ஏற்றிச் செல்ல யானைகளும் குதிரைவண்டிகளும் மாடுகள் பூட்டிய நீள்வண்டிகளும் அணியணியாய் வந்துகொண்டிருந்தன. படைக்கலப் பேரரங்கின் முன்னால் பெருங்கூட்டம் கூடிக்கொண்டிருந்தது.

தொலைவில் இருந்து இந்தக் காட்சியைப் பார்த்த ஆயுதவாரிக்கு, என்ன செய்வதெனப் புரியவில்லை. மூன்று நாள் போரிலும் கொல்லப்பட்டதுபோக மீதம் இருக்கும் நாற்பத்தைந்து சேனைமுதலிகளும் அவர்களுக்குக் கீழே இருக்கும் நானூற்றைம்பது சேனைவரையர்களும் நாளை தங்களின் படைகளைக் களம் நோக்கித் தாக்குதலுக்கு நகர்த்துகின்றனர். அனைத்துப் படைப்பிரிவுகளுக்கும் தேவையான ஆயுதங்களைப் பெற்றுச்செல்ல சேனைமுதலிகளின் உத்தரவோடு படைப்பணியாளர்கள் போர்க்களப் பேரரங்குக்கு முன்னால் வந்து குவியத் தொடங்கிவிட்டனர்.

மிரண்டுபோனார் ஆயுதவாரி. தன்னிடம் கேட்காமல் இந்த நள்ளிரவுக்குப்பின் இப்படியோர் உத்தரவை சேனைமுதலிகளுக்கு எப்படி வழங்கலாம் என்று கடுங்கோபத்தோடு பேரரங்கு நோக்கி விரைந்தார்.

பாண்டியனின் படைக்கலப் பேரரங்குதான் மூஞ்சலுக்கு அருகில் இருக்கிறது. சேரனின் பேரரங்கு தென்புறத்திலும், சோழனின் பேரரங்கு வடபுறத்திலும் சற்றுத் தொலைவில் இருக்கின்றன. ஒவ்வொரு பேரரங்கும் மூஞ்சல் நகரைவிடப் பெரியது; எண்ணற்ற கூடாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு கூடாரத்திலும் ஒவ்வொரு வகையான ஆயுதங்களை வரிசைப்படுத்தி வைத்திருந்தனர். நான்கு வகையான வில்கள், பதின்மூன்று வகையான அம்புகள், இருபது வகையான வாள்கள், எட்டு வகையான வேல்கள், மூன்று வகையான குறுவாள்கள், மூன்று வகையான தண்டங்கள், மூன்று வகையான கேடயங்கள். இவை தவிர நூற்றுக்கும் மேற்பட்ட தனித்துவமான ஆயுதங்கள் என அனைத்தும் வகை பிரித்து வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை எடுத்துத் தருவதிலும், களத்தில் வீரர்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதிலும் சிறுகுழப்பம் நடந்தாலும், அது களத்தின் போக்கை வெகுவாக பாதிக்கும். முன்களத்தில் நின்று போரிடும் உலோக வில் ஏந்திய பெருவீரர்களுக்கு, கணை, வாளி, கதிர் ஆகிய மூன்று வகை அம்புகள்தான் கொடுக்கப்பட வேண்டும். மற்றவகை அம்புகள் உலோக வில்லுக்கு ஏற்றவை அல்ல. அதேபோல ஐந்து முடிச்சுகள்கொண்ட மூங்கில் வில்களை ஏந்தி நிற்கும் வீரனிடம் கோலம்பினையோ கதிரம் அம்பினையோ கொடுத்தால் ஒரு பனை தொலைவுகூடப் பாயாது. ஏழு அல்லது ஒன்பது முடிச்சுகளைக்கொண்ட பட்டுநூலால் ஆன நாணைப் பயன்படுத்தும் வில்லாளிதான் விற்படையின் நடுவில் வலிமையோடு நின்று போரிடுபவன். அவனுக்குத் தேவை சரவகை அம்புகள் மட்டுமே. இவை அனைத்தும் துல்லியமான கணக்குகளின் அடிப்படையில் வகை பிரித்து அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. எந்தவிதமான குழப்பமுமின்றி மிகக்கவனமாகச் செய்யப்படவேண்டிய பணியிது.



ஒருமுறை இதில் குழப்பம் ஏற்பட்டு, வரிசையாக அடுக்கப்பட்டுள்ள அம்புக்கட்டுகள் மாறி இன்னோர் அறையில் வைக்கப்பட்டுவிட்டால், அதன்பொருட்டு களத்தில் எத்தனையோ வீரர்கள் உயிரிழக்க நேரிடும். எனவே, பேரரங்கில் ஆயுதம் கையாள்வதை எந்தவித அழுத்தமும் கொடுக்காமல் செயல்படுத்த வேண்டும். ஆனால், `கருங்கைவாணனின் செயல் எதையும் புரிந்துகொள்ளாத ஒரு மூடனின் முடிவையொத்தது’ என மனதுக்குள் வசைபாடியபடியே படைக்களப் பேரரங்குக்கு வந்தார் ஆயுதவாரி.

அங்கோ, எண்ணற்ற போர்க்களப் பணியாளர்கள் தங்களுக்கான ஆயுதங்களை வண்டிகளில் வேகவேகமாக ஏற்றிக்கொண்டிருந்தனர். தான் வரும் முன்பு எப்படி இந்த வேலையைத் தொடங்கினார்கள் என்ற கோபத்தோடு ஆயுதவாரி உள்ளே நுழைந்தபோது, அங்கு கருங்கைவாணன் நின்றுகொண்டு பணிகளை ஒருங்கிணைத்துக்கொண்டி ருந்தான். ``எண்ணற்ற வண்டிகளும் யானைகளும் ஆயுதங்களை ஏற்றிச் செல்லக் காத்திருக்கின்றன. வேகமாக வந்து பணியை ஒருங்கிணையுங்கள்’’ என்று ஆயுதவாரியைப் பார்த்து சத்தம்போட்டுக் கூறினான் கருங்கைவாணன்.

மிகுந்த கோபத்தோடு வந்த ஆயுதவாரிக்கு, வீரர்களும் பணியாளர்களும் நிறைந்த இந்த இடத்தில் தலைமைத்தளபதியிடம் எப்படி சினத்தை வெளிப்படுத்துவதெனத் தெரியவில்லை. ஆனால், வேலை வேகவேகமாக நடைபெற்றுக்கொண்டி ருந்தது. ``விரைவாகப் பிரித்தனுப்புங்கள். சேரனின்

பேரரங்கிலிருந்து ஆயுதமேற்றப்பட்ட வண்டிகள் அப்போதே வெளியேறிவிட்டன’’ என்றான்.

பாண்டியனின் ஆயுதவாரி சற்றே அதிர்ச்சிக்குள்ளானார். ``அதற்குள் எப்படி அவர்கள் பிரித்தனுப்பினார்கள்?’’ என்றார்.

``அவர்கள் ஆயுதவாரி இரவில் கூடாரத்துக்குச் சென்று ஓய்வெடுப்பதில்லையாம். ஆயுதப்பேர ரங்கில்தான் இருப்பாராம். எனவே, செய்தி கிடைத்ததும் வேலையைத் தொடங்கிவிட்டார்’’ என்றான் கருங்கைவாணன். அதன் பிறகு அவர் பேச்சு ஏதுமின்றி ஆயுதங்களைப் பிரித்தனுப்பும் வேலையில் ஈடுபட்டார்.

உண்மையில் கருங்கைவாணன், மற்ற இரு ஆயுதவாரிகளுக்கும் இன்னும் செய்தியையே அனுப்பவில்லை. நள்ளிரவுக்குப்பின் இவ்வளவு பெரிய வேலையைச் சொன்னால், எந்த ஆயுதவாரியும் ஒப்புக்கொள்ள மாட்டார். அதுமட்டுமன்று, வலுக்கட்டாயமாகச் செய்யும் சூழலை ஏற்படுத்தினால் அது போர்க்களத்தில் குழப்பத்தில் முடிய வாய்ப்பிருக்கிறது. எனவேதான், மிகக் கவனமாக இந்த வேலையைச் செய்தான் கருங்கைவாணன்.

பாண்டியனின் பேரரங்கிலிருந்து ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு வண்டிகள் வெளியான பிறகுதான் மற்ற இரு ஆயுதவாரிகளுக்கும் செய்தி சென்று சேர்வதைப்போலப் பார்த்துக்கொண்டான். சிறு முணுமுணுப்புகளும் கோபமும் வெளிப்பட்டனவே தவிர, வேலையை மறுக்கும்நிலை எங்கும் ஏற்படவில்லை. ஏனென்றால், ஒரு பேரரசு இன்னொரு பேரரசைவிடப் பின்தங்கும் நிலை ஏற்படக் கூடாது என்பதில் மூன்று பேரரசுகளின் பொறுப்பாளர்களும் ஆயுதவாரிகளும் மிகக்கவனமாக இருந்தனர்.

பல்லாயிரம் வீரர்களுக்கு எண்ணற்ற வகையான ஆயுதங்களைக் கணக்குகளின்படி துல்லியமாக வகை பிரித்து அனுப்பும் பணியை ஆயுதவாரிகள் மூவரும் அவர்களுக்குக் கீழே பணியாற்றும் எண்ணிலடங்காத போர்ப்பணியாளர்களும் இரவு முழுவதும் செய்தனர். விடியும்போதுகூட ஆயுதமேற்ற யானைகளும் வண்டிகளும் பேரரங்கின் முன்னால் காத்திருந்தன. அப்போதுதான் திசைவேழரின் சங்கொலி கேட்டது.

காற்றெங்கும் செம்புழுதியேறி மிதக்க திசைவேழரின் முரசோசை கேட்டதும் தேர்கள் தங்களுக்கான இலக்கு நோக்கி வேகம்கொள்ளத் தொடங்கின. கருங்கைவாணன் மிகக் கவனமாகத் திட்டங்களை வகுத்து அவற்றை சேனைமுதலிகளுக்கும் தளபதிகளுக்கும் விளக்கியிருந்தான்.

``அனைத்துப் படைப்பிரிவுகளையும் எதிரியின் படையைத் தாக்கப் பயன்படுத்தினால் மூஞ்சலின் பாதுகாப்புக்கு என்ன ஏற்பாடு?’’ என்று கேள்வி எழுப்பப்பட்டது. ``மூஞ்சலை வேந்தர்களின் கவசப்படையும் அகப்படையும் காத்தால் போதும். எதிரிகள் யாரும் இன்று மூஞ்சலை நெருங்க எந்தவித வாய்ப்பும் இல்லை. ஒருவேளை சிறு குழு ஏதாவது நெருங்கினால் இந்தப் படையால் அவர்களை எளிதில் வீழ்த்த முடியும்’’ என்றான்.

``காற்றின் துணைகொண்டு தாக்கும் அம்பை எதிரிகள் பயன்படுத்தினாலும் நமக்கு எந்த பாதிப்பும் நிகழப்போவதில்லை. ஏனென்றால், நமது படை எதுவும் தொலைவில் நிற்கப்போவதில்லை. மொத்தப்படையும் எதிரிகளைச் சூழ்ந்துதான் நிற்கப்போகிறது'' என்றான்.

கருங்கைவாணனின் திட்டம், வேந்தர்களைப்போல தளபதிகளுக்கும் சேனைமுதலிகளுக்கும் பெரும்நம்பிக்கையை உருவாக்கியது. போர்க்களத்தில் தாக்குதலுக்கும் இழப்புக்கும் பின் நம்பிக்கையளிக்கும் திட்டம் தீட்டப்படுமேயானால் அது பல மடங்கு ஆற்றலோடு செயல்பாட்டுக்கு வரும். வேந்தர்படையின் செயல்பாடு இன்று அப்படித்தான் இருந்தது.

பறம்புப்படை நிலைகொண்டுள்ள இடத்துக்கு மேற்குப் பகுதியில் காரமலை உள்ளது. அந்த திசை தவிர, பிற மூன்று திசைகளிலும் முழுமையாக வேந்தர்படை, பறம்புப்படையைச் சுற்றிவளைத்தது.

`ஈக்கிமணலும் கருமணலும் உள்ள தட்டியங்காட்டு நிலத்தில் குதிரைகளால் வெகுதொலைவுக்கு விரைந்து ஓட இயலாது. அதைக் கணித்து ஒரே மூச்சில் குதிரைகளையோட்டி, பறம்புப்படையின் பின்புறம் சென்று சேர்க்க வேண்டும். அதைத் தொடர்ந்து மற்ற வீரர்கள் அணியணியாய்ப் பின்தொடர்ந்து தங்களுக்குரிய இடத்தில் நிலைகொள்ள வேண்டும். இடைப்பகுதிக்கும் பின்பகுதிக்கும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாகப் போய்ச்சேர வேண்டும். அந்த விரைவே, இன்றைய தாக்குதல் உத்திக்கான அடிப்படையை உருவாக்கும்' என்று கூறியிருந்தான் கருங்கைவாணன். அவனது திட்டம் அப்படியே செயல்படுத்தப்பட்டது.

தாக்கி முன்னேறும் தனது திட்டத்தைத் தொடங்காமல் நிறுத்திக்கொண்டான் முடியன். எதிரிகள் என்ன செய்கிறார்கள் என்பதை உற்றுக் கவனித்தான். வேந்தர்படை, பறம்புப்படையை நெருங்கவோ ஆயுதங்களால் தாக்கவோ முற்படவில்லை. ஆனால், முழுமையாகச் சூழ்ந்து அணிவகுத்துக்கொண்டிருந்தது. அந்த நேரத்தில் குதிரையில் ஏறி பறம்புப்படை முழுமையும் சுற்றிவந்தான் முடியன். எதிரிகளின் தளபதிகள் பலரும் அவன் கண்ணில் பட்டனர். ஆனால், கருங்கைவாணன் மட்டும் அவன் கண்ணில் படவே இல்லை. `இவ்வளவு விரிவாகத் திட்டமிட்டிருப்பதால் அவன் முன்னணியில்தானே நிற்க வேண்டும். எங்கே போனான்?' என்று சிந்தித்தவண்ணம் பறம்புப்படையின் பின்பகுதியை வந்து அடைந்தான் முடியன்.

அங்கே தேக்கன் நின்றுகொண்டிருந்தான். தேக்கனின் பாதுகாப்புக்காகத்தான், அவனைப் பின்புற வரிசையில் நிற்குமாறு முடியன் சொல்லியிருந்தான். ஆனால், இப்போது அவன் இருக்கும் திசையிலும் எதிரிகள் சூழ்ந்து நிற்பதால் அவனும் முன்வரிசையில் நிற்பவனாக மாறினான்.

தேக்கனின் அருகில் வந்ததும் குதிரையை விட்டு இறங்கினான் முடியன். அப்போது நாகக்கரட்டிலிருந்து நீள்கொம்பின் சுழியோசை கேட்டது. அதிர்ச்சியோடு நாகக்கரட்டைத் திரும்பிப் பார்த்தான். வெளிப்படுத்தப்படுவது சுழியோசைதானா என்பதை மறுபடியும் கூர்ந்து கவனித்தான். ஆபத்தை முன்னுணர்த்தும் நீள்கொம்பின் சுழியோசைதான் அது.

சற்றே கோபத்தோடு, ``எதிரிகள் நமது படையைச் சூழ்ந்துவிட்டால் ஆபத்து என்று

பொருள்கொண்டுவிடுவதா?’’ என்று தேக்கனைப் பார்த்துக் கேட்டான்.

ஓசை கேட்ட திசையையே பார்த்துக்கொண்டிருந்த தேக்கன் சொன்னான், ``ஆபத்து இங்கில்லை, அங்கு.’’

முடியன் சற்றே மிரட்சியோடு மீண்டும் நாகக்கரட்டைப் பார்த்தான். இருக்கிக்கொடியின் பால்கொண்டு காட்டப்படும் குறிப்பு குளவன்திட்டை நோக்கிக் காண்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஏற்பட்டுள்ள ஆபத்தைப் பாரிக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர் நாக்கரட்டின் மீதிருந்த கூவல்குடியினர்.

- **பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-99

எதிரிப்படையைச் சூழ்ந்து முற்றுகையிடுவது என்பது, தாக்குதல் போரில் உச்சமானதோர் உத்தி. ஏறக்குறைய முழுமுற்றாக எதிரியை அழித்துவிட முடியும் என்ற நிலையில்தான் இப்படியோர் உத்தியைக் கையாள முடியும். `பறம்புப்படை வலுவிழந்த நிலையில் இல்லை; வேந்தர்படை மிகுவலிமையோடும் இல்லை. அப்படியிருந்தும் கருங்கைவாணன் இப்படியோர் உத்தியை ஏன் தேர்வுசெய்தான்? வேந்தர்கள் எப்படி இதற்கு ஒப்புதல் வழங்கினர்?' என்ற ஐயத்தின் பிடியிலிருந்து ஆயுதவாரியால் மீளவே முடியவில்லை. கேட்டு அறிந்துகொள்ளும் சூழலும் இல்லை. போர் தொடங்கும் முரசின் ஓசை கேட்டும்கூடப் படைக்கலப் பேரரங்கின் முன்னால் ஆயுதங்களைப் பெற்றுச் செல்லும் வண்டிகள் வருவது குறையவில்லை.



கருங்கைவாணன் வகுத்த உத்தியில் ஒரு பகுதிதான் எதிரிப்படையை முற்றுகையிடுவது. இன்னொரு பகுதி எதிரியின் எல்லைக்குள் துணிந்து நுழைவது. இரண்டையும் ஒருசேர வகுத்திருந்தான். இன்றைய தாக்குதலின் கூர்முனையாக பறம்பின் விற்படையைத்தான் இலக்கிட்டான். பறம்புப்படையின் மைய அச்சாக விற்படையினரே செயல்படுகின்றனர். விற்படையினரின் ஆற்றலைக் குறைத்து அவர்களை வீழ்த்துவது மட்டுமே பறம்பின் பிற படைகளை வெற்றிகொள்ள வழிவகுக்கும் என முடிவுசெய்து அதற்கான திட்டத்தைத் தீட்டினான்.

வேந்தர்களின் யானைப்படை, எந்த நேரத்திலும் பறம்புக்குள் நுழைய ஆயத்தநிலையில் இருந்தது. பறம்பினர் யானைப்போர் நிகழ்த்த விரும்பாத நிலையில், வேந்தர்களின் யானைகள் பறம்பின் எல்லைக்குள் நுழையும் உரிமை பெற்றவையாயின. அந்த வாய்ப்பைப் பொருத்தமாகப் பயன்படுத்தலாம் என்று வேந்தர்படை காத்திருந்தது. இன்றைய தாக்குதல் திட்டத்தின் மிகமுக்கியப் பணியை யானைப்படைக்கு வழங்கினான் கருங்கைவாணன்.

போருக்கான சங்கொலி கேட்டதும் வேந்தர் படை பறம்பின் படையைச் சூழ்ந்து முற்றுகையிடத் தொடங்கியது. அதே பொழுதில் வேந்தர்களின் யானைப்படை வடகோடியில் நாகக்கரட்டுக்கும் காரமலைக்கும் இடைப்பட்ட பள்ளத்தாக்குக்குள் நுழைந்தது. சில காதத்தொலைவே கொண்ட இந்தப் பள்ளத்தாக்கில், மிக வேகமாக யானைப் படையை விரட்டி வந்தான் அதன் தளபதி உச்சங்காரி. இந்தப் பள்ளத்தாக்கின் தென்பகுதி எல்லையை இரண்டு பொழுதுக்குள் அடையவேண்டும் என்பதுதான் உச்சங்காரிக்கு இடப்பட்ட கட்டளை. அதாவது பறம்புப்படையை முற்றுகையிட வேந்தர்படை சுற்றிவளைத்து முடிக்கும்போது, யானைப்படை பள்ளத்தாக்கின் தென் எல்லையைத் தொட்டிருக்க வேண்டும்.

நாகக்கரட்டின் பின்னால் உள்ள காரமலையில் தான் இரலிமேடு இருக்கிறது. இரண்டுக்கும் இடைப்பட்ட பள்ளத்தாக்கில்தான் பறம்புப் படையினர் தங்கும் குடில்களும், உணவும், இதர தேவைகளுக்கான ஏற்பாடுகளும் இருந்தன. இன்றைய போர் தொடங்கிய கணமே மிக வேகமாக இந்தப் பகுதிக்குள் நுழைந்தது வேந்தர்களின் யானைப்படை. அவர்களின் நோக்கம், இரலிமேட்டுக்கும் நாகக்கரட்டுக்குமான தொடர்பைத் துண்டித்தல்தான். இரலிமேட்டில் உள்ள குகைகளில்தான் பறம்பு வீரர்களுக்கான ஆயுதங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அங்கிருந்து தான் போர்க்களத்துக்கு ஆயுதங்கள் கொண்டுவரப்படுகின்றன.





பறம்புப்படையை முற்றுகையிட்டுப் போர்புரியும் இன்றைய நாளில், வேந்தர்களின் முழுப்படையோடு பறம்புப்படை மோத உள்ளது. தன்னைவிடப் பல மடங்கு அதிகமான வீரர்களை எதிர்த்துப் போரிடும்போது பறம்புப்படைக்குப் பல மடங்கு ஆயுதங்கள் தேவை. ஆனால், ஆயுதங்கள் இரலிமேட்டிலிருந்து வந்துசேரும் வழி இப்போது அடைக்கப்பட்டாகிவிட்டது. இதனால், நண்பகலுக்குமேல் பறம்புவீரர்களின் அம்பறாத்தூணியில் அம்பு எதுவும் மிஞ்சாது. பிற வகை ஆயுதங்களும் போதிய அளவு இருக்காது. சூழப்பட்ட பறம்புப்படை ஆயுதங்களின் போதாமையால், முழு வேகத்தோடு தாக்குதலைத் தொடுக்க முடியாது. இதுவே அவர்களை நசுக்கி அழிக்கச் சிறந்த வழி என உத்தியை வகுத்திருந்தான் கருங்கைவாணன்.

போர் தொடங்கிய வேகத்தில் உச்சங்காரியின் யானைப்படை பள்ளத்தாக்கில் விரைந்து முன்னேறியது. அங்கு வீரர்களோ, தடுப்புகளோ, எதிரிகளின் யானைப்படையோ இல்லாத நிலையில் உச்சங்காரியின் வேலை மிக எளிதாக மாறியது. கருங்கைவாணன் கூறிய நேரத்தைவிட விரைவாகத் தென்கோடிக்கு வந்து சேர்ந்தான் உச்சங்காரி.

இப்போது நாகக்கரடும் இரலிமேடும் இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டுவிட்டன. பறம்பின் ஆயுதங்களும் ஆயுதப் பொறுப்பாளரான முதுவேலரும் கபிலரும் இரலிமேட்டில் இருக்கும் குகைகளில் இருந்தனர். முறியன் ஆசானும் வாரிக்கையனும் கூவல்குடியினரும் நாகக்கரட்டின் மேல் இருந்தனர். படைக்குத் தேவையான பணியைச் செய்பவர்கள், காயம்பட்டு சிகிச்சை பெறுபவர்கள் என எண்ணற்ற வீரர்கள் இருபக்கமாகப் பிரிந்து இருந்தனர்.

நாகக்கரட்டின் மீதிருந்த வாரிக்கையன்தான் எதிரிகளின் யானைப்படையை என்ன செய்வது என முடிவெடுக்க வேண்டியவன். பறம்பின் யானைப்படைத் தளபதி வேட்டூர்பழையன் நேற்றைய போரில் இறந்துவிட்டான். பறம்பின் யானைகளும் அதன் வழிகாட்டிகளுமான தந்தமுத்தக்காரர்களும் இரண்டு குன்றுகளுக்கு அப்பால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வந்து தாக்குதலைத் தொடுக்க வேண்டுமென்றால், நீண்டபொழுதாகிவிடும் என்று சிந்தித்த வாரிக்கையன், ``செய்தியை முதலில் பாரிக்குத் தெரியப்படுத்துங்கள்'' என்றான்.



பாரி நிற்கும் குளவன்திட்டின் மேலிருந்து பார்த்தால் எதிரில் இருக்கும் தட்டியங்காட்டுப் பரப்பு முழுமையாகத் தெரியும். இடதுபுறமாக நாகக்கரடும் அதன் பின்னணியில் இருக்கும் இரலிமேடும் தெரியும். ஆனால், நாகக்கரட்டுக்கும் இரலிமேட்டுக்கும் நடுவில் இருக்கும் பள்ளத்தாக்கு தெரியாது. எனவே, யானைப்படைகள் பள்ளத் தாக்குக்குள் நுழைந்ததை, பாரியால் குளவன் திட்டிலிருந்து பார்க்க முடியாது. அதனால்தான் பாரிக்குச் செய்தியைத் தெரிவிக்க, கூவல் குடியினருக்கு உத்தரவிட்டான் வாரிக்கையன்.

இரிக்கிச்செடியின் பால்கொண்ட குறியீட்டைக் காட்டியபடி கூவல்குடியினரின் நீள்கொம்பு சுழியோசை

குளவன்திட்டில் பட்டு எதிரொலித்தது. அதுவரை தட்டியங்காட்டில் சுற்றிவளைக்கும் எதிரிகளின் படையைப் பார்த்துக்கொண்டிருந்த பாரி, ஓசை கேட்டவுடன் நாகக்கரட்டுப் பக்கம் திரும்பிப் பார்த்தான். பள்ளத்தாக்குக்குள் ஏற்பட்டுள்ள ஆபத்து என்னவென்று தெரியவில்லை.

இகுளிக்கிழவன் பின்புறம் சற்றுத் தள்ளியிருக்கும் பாறை ஒன்றைக் கைகாட்டியபடி சொன்னான், ``அவ்விடம் போய்ப் பாருங்கள்; பள்ளத்தாக்கு தெளிவாகத் தெரியும்.''

பாரியும் காலம்பனும் உடன் நின்றிருந்த கூவல்குடியினரும் அந்தப் பாறையை நோக்கி விரைந்தனர்.

அங்கே என்ன வகையான ஆபத்து ஏற்பட்டுள்ளது என்பதை அறிய, நாகக்கரட்டை நோக்கி வீரர்களை அனுப்பினான் முடியன். எதிரிகளின் தேர் பறம்புப்படையை முழுமையாகச் சுற்றிவளைத்து நின்றது.

``ஈக்கிமணலில் இவனது குதிரைகளால் அதிக தொலைவு பாய்ந்தோட முடியாது எனத் தெரிந்தும் படையைச் சுற்றிவளைத்து நிற்கிறான் என்றால், இவனுக்கு உரிய பாடத்தை நாம் புகட்டியே ஆகவேண்டும்'' என்று சொல்லியபடி குதிரையில் வேகமாக ஏறினான் முடியன்.

``கொஞ்சம் பொறு. ஆபத்தை அறியச் சென்ற வீரர்கள் வரும் வரை தற்காப்புப் போரை நடத்துவோம். அது என்ன வகை ஆபத்து என அறிந்த பிறகு தாக்குதல் போரைத் தொடங்குவோம்'' என்றான் தேக்கன்.

``பறம்புப்படையை முற்றுகையிடும் துணிவு இவனுக்கு எங்கிருந்து வந்தது? எண்ணிக்கையில் பெருங்கூட்டம் என்பதால்தானே ஏறிவந்து நிற்கிறான். பாறைகளை உருட்டும் பேய்க்காற்றைப்போல இவனின் படைவீரர்களின் தலைகளை உருட்டித் தள்ளுவோம்'' என்று கத்தியபடி புறப்பட ஆயத்தமானான் முடியன்.

``அவசரப்படாதே... நில்'' என்று கத்தினான் தேக்கன்.

``இல்லை. இப்போது பொறுமையுடன் தற்காப்புப் போரை நடத்தினால், நாம் அஞ்சிவிட்டோம் என எதிரி புரிந்துகொள்வான். நம்மீதான தாக்குதல் மிகக் கடுமையானதாக இருக்கும். நாம் இப்போது ஏறித் தாக்கினால் மட்டுமே அவனது வேகத்தையும் சீற்றத்தையும் முறித்துத்தள்ள முடியும். நாம் அஞ்சாதவர்களாக இருப்பது முக்கியமல்ல, அஞ்சாதவர்களாக இருக்கிறோம் எனக் காட்டிக்கொள்வது போர்க்களத்தில் மிக முக்கியம்'' என்றான் முடியன்.

``உனது வேகத்தையும் தாக்குதலையும் நீ தீர்மானி. அவன் தீர்மானித்த ஒன்றை நோக்கி நகராதே'' என்று உரத்த குரலில் சொல்லிவிட்டு, தனது கையில் இருக்கும் ஈட்டியை மண்ணில் அழுத்திக் குத்தியபடி முடியனின் கண்களை உற்றுப்பார்த்தான் தேக்கன்.

பறம்பு ஆசானின் பார்வையை அவ்வளவு எளிதில் யாரும் கடந்துவிட முடிவதில்லை. முடியனாக இருந்தாலும் மடங்கவேண்டியதோர் இடமுண்டு. இழுத்துப் பிடித்த குதிரையின் கடிவாளத்தை விரல்கள் விடுவித்தன. தேக்கனை இமைக்காமல் பார்த்துவிட்டுச் சொன்னான், ``சரி,

நாகக்கரட்டிலிருந்து செய்தி வந்துசேரும் வரை தற்காப்புப் போரையே நடத்துகிறேன். நீங்கள் படையின் நடுப்பகுதிக்குச் செல்லுங்கள்.''

முடியனின் சொல் கேட்டுப் பணிந்து நடந்தான் தேக்கன்.

தேக்கனின் சொல் கேட்டு விரைந்து சென்றான் முடியன்.

இகுளிக்கிழவன் சொன்ன பாறையின் உச்சியில் ஏறி நின்று பார்த்தான் பாரி. இரலிமேட்டுக்கும் நாகக்கரட்டுக்கும் நடுவில் யானைப்படை நிரம்பி நின்றது. தட்டியங்காட்டில் முழுப்படையையும் சூழ்ந்து தாக்கத் திட்டம் தீட்டியுள்ளனர். இன்னொருபுறம் ஆயுதங்களைப் போர்க் களத்துக்குக் கொண்டுசெல்ல விடாமல் தடுக்கும் உத்தியைச் செயல்படுத்துகின்றனர் என்று பாரி எண்ணிக்கொண்டிருக்கையில், காலம்பன் இறைஞ்சிக் கேட்கும் குரல் ஒலித்தது, ``நாங்கள் களமிறங்க இப்போதாவது அனுமதி வழங்கு பாரி.''

``அனுமதிக்கிறேன். ஆனால், தட்டியங் காட்டுக்கல்ல, பள்ளத்தாக்குக்கு.''

பெருமகிழ்வடைந்தான் காலம்பன். ``திரையர்குலம் எதிரிகளின் யானைப்படையை முழுமுற்றாக அழித்தொழிக்கும்'' என்று சொல்லிய படி புறப்படப்போகிறவனைப் பார்த்துப் பாரி சொன்னான், ``நான் யானைப்படையை அழிக்கச் சொல்லவில்லையே.''

அதிர்ந்து நின்றான் காலம்பன்.

``இப்போது அந்தப் படையை அழிக்கவேண்டிய தேவையேதும் நமக்கில்லை. இரலிமேட்டிலிருந்து தட்டியங்காட்டுக்கு ஆயுதங்களைக் கொண்டு செல்ல வழிவகுத்தால் போதும். எனவே, யானைப் படையோடு நாம் போரிட வேண்டாம்.''

``வேறென்ன செய்வது?'' எனக் காலம்பன் கேட்க.

``அணங்கன் எங்கே?'' என்றான் பாரி.

காலம்பனுக்குப் புரிந்தது. பின்புறம் இருந்த மலைக்குன்றைக் கைகாட்டி, ``பெருங்காட்டெருமை மந்தையோடு அந்தக் குன்றில் நிற்கிறான் அணங்கன்.'' மேலே இருக்கும் காரமலை முகட்டைக் கைகாட்டி, ``இன்னொரு காட்டெருமை மந்தையோடு செதிலன் அந்த முகட்டில் நிற்கிறான். எதிரி வேறு திசையில் மேலேறிவிடக் கூடாது என்பதால் அங்கு நிற்கச் சொன்னேன்'' என்றான்.

``சரி. அணங்கனுக்கு உத்தரவிடு. காட்டெருமை மந்தையை இரலிமேட்டுக்கு நேராகக் கீழே இறக்கி, யானைப்படையை இருகூறாக்கு. இரலிமேட்டில் இருக்கும் ஆயுதங்களை நடுப்பகலுக்குள் தட்டியங்காட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்'' என்றான்.



சொல்லிக்கொண்டிருக்கும்போதே காலம்பன் வெளிப்படுத்திய சீழ்க்கை ஓசை அணங்கன் இருக்கும் குன்றில் எதிரொலித்தது. கண நேரத்துக்குள் மறு ஓசை மேலே இருந்து கீழே வந்தது.

``மந்தை நகரத் தொடங்கிவிட்டது. நான் உடனடியாக எதிர்த்திசைக்குப் போகிறேன். அப்போதுதான் எந்த இடத்தில் மந்தையைக் கீழே இறக்குவது என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியும்'' என்று சொன்ன காலம்பன், ``திமிறிப் பாயும் காட்டெருமை மந்தையைக் கண்டால் யானை தெறித்து ஓடும். எனவே, பள்ளத்தாக்கில் இறங்கிய வேகத்தில் படையைப் பிளந்து பாதையை உருவாக்கிவிடலாம். ஆனால், அதைவிட முக்கியம், காட்டெருமை மந்தையைக் கொண்டே நூற்றுக்கணக்கான யானைகளை மடக்கி நிறுத்திவிடலாம். பழக்கப்படுத்தப்பட்ட யானைகள் மிகவும் கோழைகள். காட்டெருமையின் கனைப்பொலியைக் கேட்டு அவை தேங்கி நின்றுவிடும். எந்தப் பாகனாலும் நகர்த்திச் செல்ல முடியாது. எண்ணற்ற யானைகளை நாம் வசப்படுத்திப் பயன்படுத்திக்கொள்ளலாம்'' என்றான்.

``நம்மிடம்தான் போதுமான யானைகள் இருக்கின்றனவே. பிறகு நமக்கு எதற்கு யானைகள்?'' என்றான் பாரி.

``தந்தமுத்தக்காரர்களிடம் நாற்பது, ஐம்பது யானைகள்தான் இருக்கின்றன என்று கேள்விப்பட்டேன். அவை போதுமா?''

சின்னச் சிரிப்போடு பாரி சொன்னான், ``நீதான் பழக்கப்படுத்தப்பட்ட யானைகளை `கோழைகள்' என்று சொல்லிவிட்டாயே! பிறகு எப்படி நம் படையில் அவற்றைச் சேர்க்க முடியும்?''

என்ன சொல்வதென்று தெரியவில்லை, `சரி' எனத் தலையாட்டியபடி எதிர்த்திசையில் உள்ள மலை நோக்கி ஓடத் தொடங்கினான் காலம்பன்.

தற்காப்புப் போரைத் தொடங்கினான் முடியன். வேந்தர்களின் படையோ முழுவேகத்தோடு தாக்குதலைத் தொடங்கியது. காலையில் பள்ளத்தாக்குக்குள் யானைப்படை முழுமையும் சென்றதை உறுதிப்படுத்திய பிறகுதான் தட்டியங்காட்டுப் போர்முனைக்கு வந்தான் கருங்கைவாணன். தனது படையின் தாக்கும் உத்தியை மூன்றாகப் பிரித்தான். நெற்றிப் பகுதியே வலிமையான தாக்குதலை முன்னெடுக்கும் ஆற்றல் வாய்ந்தது. அதற்கு அவனே தலைமை ஏற்றான். வலக்கைப் பகுதியில் இருந்த படைப்பிரிவுக்குத் துடும்பனையும், இடக்கைப் பகுதியில் இருந்த படைப்பிரிவுக்கு உறுமன்கொடியையும் தலைமை ஏற்கச் செய்தான்.

கருங்கைவாணன் நெற்றிப்பகுதியின் முன்படையில் வந்து நின்றதும் முடியனும் அந்தத் திசையையே தேர்வுசெய்தான். வலக்கைப் பக்கம் இரவாதனையும், இடக்கைப் பக்கம் உதிரனையும் தலைமை ஏற்கச் செய்தான். தாக்குதல் தொடங்கிய கணமே வேந்தர்களின் படை ஆற்றலின் உச்சத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்தது. `தட்டியங்காட்டுப் போரில் எதிரியை வீழ்த்த இன்றைய நாளே சிறந்தது!' என உறுதியாக நினைத்தான் கருங்கைவாணன். நிறைந்த அவையில் தன்னை அவமானப்படுத்தியவர்களுக்கு, தான் யார் என்பதை மெய்ப்பிக்கும் நாளாக இந்த நாளைக் கருதினான்.

கூட்டுப்படைத் தளபதி முன்களப்போருக்கு வருவது எந்தவிதத்திலும் அறிவுடைமையாகாது. ஆனால், தெரிந்தே இன்று முன்களத்துக்குக் கருங்கைவாணன் வந்துள்ளான். அவனது முக்கியமான இலக்கே விற்படைதான். பறம்பின் விற்படை இடக்கைப் பக்கம் நிற்கிறது. அந்தத் திசையில் வேந்தர்படைக்கு உறுமன்கொடியைத் தலைமையேற்கச் செய்தான். வேந்தர்படையின் மிக வலிமையான கவச அணிவீரர்களின் பத்துக்கும் மேற்பட்ட சேனைமுதலிகளை உறுமன்கொடிக்குக் கீழே நிறுத்தினான். பறம்பின் விற்படையினர் என்ன தாக்குதல் நடத்தினாலும் கவச அணிவீரர்களை ஒன்றும் செய்ய முடியாது. வேந்தர்படையைத் தடுக்க அம்புகளைப் பொழிந்து தள்ளுவர். நண்பகலுக்குள் அம்புக்கட்டுகள் தீர்ந்துபோக பறம்புப்படை கையறுநிலையில் நிற்கும். அதேநேரம் பறம்பின் விற்படையை எதிர்த்து வலிமையான தாக்குதல் நடக்கிறது என்பதை மற்றவர்கள் அறியாமல் இருக்க, கருங்கைவாணன் தானே நெற்றிப்பக்கம் உள்ள படைக்குத் தலைமையேற்றான். இயல்பாகவே கருங்கைவாணன் எந்தத் திசையில் வந்து நிற்கிறானோ அந்தத் திசையே கவனத்தை ஈர்க்கும்.

மூவேந்தர்களின் தலைமைத் தளபதிக்கு எதிராக முழு ஆற்றலையும் குவித்துப் பறம்புமக்கள் போர்புரிவர். ஆனால், பறம்பின் விற்படையினரின் மீது வேந்தர்படை நடத்திக்கொண்டிருக்கும் வலிமைமிகுந்த தாக்குதல் உடனடி கவனத்தைப் பெறாமல்போகும். போர்க்களத்தில் தாக்குதலின் போக்கு திசைமாற சில கணங்களே போதுமானவை. ஒருமுறை திசைமாறிவிட்டால் அதன்பிறகு பழைய நிலைமைக்குக் கொண்டுவர, பேரிழப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

இவ்வளவு திட்டமிட்ட கருங்கைவாணன், பறம்பின் விற்படைத்தளபதி உதிரனைப் பற்றி அறிந்திருக்கவில்லை. வேந்தர்படையின் தாக்கும் ஆற்றலைப் பன்னிருவகையான வில்கொண்டு முறித்துத்தள்ளும் மாவீரன் அவன். இழுபடு நாண்கள், விடுபடு விசை, அலையலையாய் மேலெழும் அம்புகளால் காற்றையே கட்டுப்படுத்த முயல்பவன். போர் தொடங்கிய பிறகு வேந்தர்படையின் குதிரைகள் குடித்த நீரைவிட உதிரனின் விற்படையினருடைய அம்புகள் குடித்த குருதி அதிகம்.

வில்லே மலைமனிதர்களின் தலையாய ஆயுதம். காட்சியைப் பார்த்தலின் மூலமும், ஓசையைக் கேட்டலின் மூலமும் இலக்கை வீழ்த்தும் ஆற்றல்கொண்டவன் வில்லாளி மட்டுமே. பகழி அம்பும் விரி அம்பும் செலுத்தத் தெரிந்த விற்படையினரை எதிர்கொண்டு நிற்கும் படை இதுவரை இந்த மண்ணில் இல்லை. மூங்கிலம்பு பறவையைத் துளைக்கும். விரி அம்பு பனையைத் துளைக்கும். பகழி அம்பு பாறையைத் துளைக்கும். குறுங்காது முயலின் குருதி தோய்ந்த நாணிலிருந்து பறம்புவீரர்கள் விடுவிக்கும் பகழி அம்பை எதிர்கொள்ளும் கவசம் எவனிடமும் இல்லை.

ஆனாலும் பறம்பின் விற்படைக்கு முழு விசையோடு ஏறித்தாக்கும் அனுமதியை இன்றுவரை முடியன்

வழங்கவில்லை. மூஞ்சலின் இருப்பிடம் மிகத்தொலைவில் உள்ளது. குதிரைப்படையால்தான் அவ்வளவு தொலைவுக்குச் சென்று மூஞ்சலைத் தாக்க முடியும். எனவே, இரவாதனுக்கே மூஞ்சலை நோக்கி முன்னேற அனுமதி கொடுக்கப்பட்டது. முன்னகர்ந்து வரும் எதிரிப்படையைத் தடுத்துப் பின்னுக்குத் தள்ளும் வேலை மட்டுமே உதிரனுக்கு வழங்கப்பட்டது. அப்படியிருந்தும் இதுவரையிலான போரில் அவன் நிகழ்த்திய அழிவை பறம்பின் வேறெந்தப் படைப்பிரிவும் நிகழ்த்தவில்லை.

வேந்தர்களின் இன்றைய போர் தனது விற்படைக்கு எதிரான உத்தியைக் கொண்டது என்பது உதிரனுக்குத் தெரியாது. ஆனால், எதிரிகள் பறம்புப்படையை முற்றுகையிட்டுத் தாக்கும் முயற்சி கடுஞ்சினத்தை உருவாக்கியிருந்தது. அவன் கண்ணெதிரே கவசம்பூண்ட பெரும்படையோடு உறுமன்கொடி வந்து கொண்டிருந்தான். தற்காப்புப் போரை மட்டுமே நடத்த வேண்டும் என்று முடியன் உத்தரவிட்டிருந்ததால், வேறு வழியில்லாமல் இடையிலக்கு ஆயுதங்களை மட்டுமே பயன்படுத்தினான் உதிரன்.

உதிரன் மட்டுமல்ல, பறம்பின் மற்ற இரு தளபதிகளும் இடையிலக்கு ஆயுதங்களை மட்டுமே பயன்படுத்தினர். கருவிகள் விடும் ஆயுதம், கைகள் விடும் ஆயுதம், கைகள் விடாத ஆயுதம் என்று போர் ஆயுதங்களை மூன்று வகையாகத்தான் எல்லோரும் பகுத்துள்ளனர். அம்பு, சிலை, ராயம், கொடிமரம், வல்வில், கவண், சக்கரம் ஆகியவை கருவிகள் விடும் ஆயுதங்கள். வேல், எ்கம், அயில், ஆலம், ஈட்டி உள்ளிட்டவை கைகள் விடும் ஆயுதங்கள். வாள், ஈர்வாள், கொடுவாள், மழு, நவியம், குறுந்தடி உள்ளிட்டவை கைகள் விடாத ஆயுதங்கள். ஒரு படை எந்தவிதமான ஆயுதத்தைப் பயன்படுத்துகிறது என்பதைப் பொறுத்தே எதிரில் உள்ள படை தனது ஆயுதத்தைத் தேர்வுசெய்கிறது.

தட்டியங்காட்டுப் போரில் வேந்தர்படைக்குக் குழப்பம் ஏற்படும் இடமே இதுதான். கருவிகள் விடும் ஆயுதத்தைப் பொறுத்தவரை, அது மூன்று தன்மைகளால் அறியப்படுகிறது. தொலையிலக்கு ஆயுதங்கள், இடையிலக்கு ஆயுதங்கள், அண்மையிலக்கு ஆயுதங்கள். விற்படையைப் பொறுத்தவரை எந்த வகையான வில்லில் எந்த வகையான அம்பைப் பொருத்தி எய்தால், அந்த அம்பு எவ்வளவு தொலைவில் உள்ள இலக்கை அடையும் என்பதை, வீரக்கலையைப் பயிற்றுவிக்கும் ஆசான்கள் தங்களின் பயிற்சிக்கூடத்தில் மாணவர்களுக்குச் சொல்லித்தருவர். மூவேந்தர்களின் படையணியில் வந்து நிற்கும் வீரர்கள் எல்லோரும் வீரக்கலை ஆசான்களிடம் பயிற்சிபெற்ற மாணவர்களே.

பறம்பின் வில்லும், பூட்டப்பட்ட நாணும், அம்பின் தன்மையும் முற்றும் மாறுபட்டவை. அதாவது பறம்பினர் பயன்படுத்தும் இடையிலக்கு ஆயுதங்கள் செல்லும் தொலைவுக்கு வேந்தர்படையின் தொலையிலக்கு ஆயுதங்கள் செல்வதில்லை. எனவேதான், `தற்காத்துப் போர்புரி’ என்று முடியன் சொன்னதும் உதிரன் இடையிலக்கு அம்புகளை மட்டுமே பயன்படுத்தத் தனது அணிக்கு உத்தரவிட்டான். ஆனால், அந்தத் தொலைவே வேந்தர்களின் விற்படையால் அம்பெய்ய முடியாத தொலைவாக இருந்தது. அதனால் பறம்புப்படையினர் தொலையிலக்கு அம்புகளைப் பயன்படுத்துகின்றனர் என்று நினைத்த உறுமன்கொடி, எவ்வளவு தொலைவு முன்னேற முடியுமோ அவ்வளவு தொலைவுக்கு முன்னேறித் தாக்கச் சொல்லி உத்தரவிட்டான். இதனால், பறம்புப்படை தாக்கி அழிக்கும் பொறிக்குள் வந்து நின்று போரிட்டுக்கொண்டிருந்தது வேந்தர்படை.




தற்காப்பை விடுத்து, தொலையிலக்கு அம்புகளைப் பயன்படுத்த முடியன் எப்போது உத்தரவிடுவான் என்று ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்திருந்தான் உதிரன். அதே தவிப்போடு இருந்தான் இரவாதன்.

நாகக்கரட்டுக்குச் செய்தி கேட்கப் போன வீரன் திரும்பி வந்து முடியனிடம் நிலைமையைச் சொன்னான். ``காட்டெருமைகள் பாதை வகுத்த பிறகுதான் ஆயுதங்களைத் தட்டியங்காட்டுக்குக் கொண்டுவந்து சேர்க்க முடியும். அதற்கு நண்பகலைக் கடந்து இருபொழுதாகலாம். அதுவரை இருப்பதைக் கொண்டு எதிரிகளைச் சமாளியுங்கள்'' என்று வாரிக்கையன் சொல்லியதைக் கூறினான்.

``நிலைமையைத் தெரிந்த பிறகு முடிவெடுப்போம்'' என்று தேக்கன் சொன்னது எவ்வளவு சரியானது என்று உணரும்போதே, முடியனுக்கு அடுத்த கவலை தொடங்கியது. நண்பகல் கடந்து இரண்டு பொழுது வரை தற்காப்புப் போரில் இழப்புகள் இல்லாமல் நீடிப்பது மிகவும் கடினமான ஒன்று. எனவே, வேறு வழியென்ன எனச் சிந்தித்தான்.

உதிரனையும் இரவாதனையும் தேக்கன் இருக்கும் நடுப்பகுதிக்கு வரச்சொல்லிச் செய்தி அனுப்பிவிட்டு, தானும் பின்னகர்ந்தான். பறம்பின் முன்கள வீரர்கள் ஆவேசத்தோடு போரிட்டு வேந்தர்படையைச் சமாளித்துக் கொண்டிருந்தனர்.

``போர் தொடங்கிப் பத்து நாழிகைகூட ஆகவில்லை. ஆனால், இன்னும் பத்து நாழிகைக்குமேல் நிலைமையைச் சமாளித்தாக வேண்டிய நிலை. அது முடியுமா என்பது பெரும் கேள்வியாக எழுந்தது. வேந்தர்படையின் ஒட்டுமொத்த வீரர்களும் இன்றைய போரில் தாக்குதலை நடத்திக்கொண்டிருக்கின்றனர். காற்றில் இடைவெளியின்றி அம்புகள் பறந்துகொண்டிருக்கின்றன. பறம்புப்படை, முடிந்தளவுக்குச் சமாளித்துப் போரிட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால், புதிதாக ஆயுதங்கள் வந்துசேராத நிலையில், இருப்பதைக் குறைத்துப் பயன்படுத்தும் சூழல் உருவானால் வேந்தர்படையின் கை ஓங்கும் நிலை உடனடியாக உருவாகும். அது இழப்புகளை அதிகப்படுத்தும் வாய்ப்புண்டு. இன்னும் பத்து நாழிகைக்கு இதே வேகத்தோடு போரிட நம்மிடம் ஆயுதங்கள் இல்லை. வேறென்ன செய்வது?'' என்று ஆலோசனை கேட்டான் முடியன்.

கட்டளைகளைக் கணநேரத்துக்குள் நிறைவேற்றும் பயிற்சிகொண்ட உதிரனும் இரவாதனும் களத்தில் மேலெழும் கேள்விக்குமுன் திகைத்து நின்றனர். குருதி குடிக்கும் வெறி மட்டுமே அவர்களின் கண்களில் கனன்றுகொண்டிருந்தது. எல்லாவற்றுக்குமான விடையைச் சிந்தித்துவைத்திருந்தான் தேக்கன். படையின் நடுப்பகுதியில் நின்று போர்க்களத்தின் மொத்தச் செயல்பாட்டையும் கவனித்த அவன் சொன்னான், ``நம்மிடம் இருக்கும் ஆயுதங்கள் இன்னும் ஐந்துபொழுதுக்குமேல் தாங்காது.

எனவே, வேந்தர்படையை எதிர்த்தாக்குதல் நடத்தி நீண்டநேரம் சமாளிக்க முடியாது.''

``வேறென்ன செய்வது?'' என விரைந்து கேட்டான் இரவாதன்.

``அவர்கள் தாக்குதல் வேகத்தைக் குறைத்தால் மட்டுமே நம்மால் நிலைமையைச் சமாளிக்க முடியும்.''

``அவர்களின் மீது வலிமையான எதிர்த்தாக்குதல் செய்ய, போதிய ஆயுதங்கள் இல்லை. பிறகு எப்படி அதைச் செய்வது?'' எனக் கேட்டான் உதிரன்.

``அவர்களின் கவனத்தைத் திசைதிருப்புவதன் மூலமும், குழப்பத்தை உருவாக்குவதன் மூலமும் அவர்களின் வேகத்தை மட்டுப்படுத்த முடியும்.''

``என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டான் முடியன்.

``காலையில் நீ சொன்னதை இப்போது செய்ய வேண்டும்.''

மூவரும் கூர்ந்து கவனிக்க, தேக்கன் சொன்னான், ``இரவாதனின் குதிரைப்படைக்கு, முன்னேறித் தாக்கும் அனுமதியைக் கொடு. சூழ்ந்திருக்கும் வேந்தர்படையின் எந்தவோர் இடத்தையும் பிளந்துகொண்டு அவனால் வெளியேற முடியும். நமது குதிரைப்படையின் வேகமும் வீச்சும் எதிரிகளின் கனவிலும் நடுக்கத்தை உருவாக்கக்கூடியவை. உதிரனின் விற்படை தற்காத்துப் போரிடட்டும். நெற்றியில் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கும் நீ, படையைப் பின்வாங்கச்செய்து நான் இருக்கும் இந்த இடம் வரை வந்துவிடு. உன்னை எதிர்த்துப் போரிடும் கருங்கைவாணனின் அணி வேகமாக முன்னேறி வரும். அப்போது நீ இந்த இடம் விட்டு அகன்றுவிடு. நானும் ஈங்கையனும் இங்கு தலைமையேற்று நின்றுகொள்கிறோம். அவன் இங்கு வந்துசேரும் நேரம், இரவாதனின் குதிரைப்படை எதிரிகளின் முற்றுகையை உடைத்து மூஞ்சலில் போய் தாக்குதலைத் தொடக்கியிருக்கும். இங்கு வந்துசேரும் கருங்கைவாணன் என்னைப் பார்க்கும்போதே `பின்னணியில் மூஞ்சலைத் தாக்கப் பெருந்திட்டம் நடந்துகொண்டிருக்கிறது' என நினைப்பான். நான் கொடுக்கும் ஓசையின் மூலம் அவன் அதை மேலும் உறுதிப்படுத்திக்கொள்வான். அவனது கவனம் முழுவதும் மூஞ்சலை நோக்கித் திரும்பும். அந்நிலையில் நம் படைகள் எல்லா திசைகளிலிருந்தும் கூவல் ஒலிகளை எழுப்பிக்கொண்டே இருக்க வேண்டும். அவனது குழப்பம் பலமடங்கு அதிகமாகும். அந்நிலையில் தொடர்ந்து தாக்கி முன்னேற படைகளை அனுமதிக்க மாட்டான். தற்காப்புப் போருக்கு மாறுவான் அல்லது சற்றே பின்னேறி நிற்பான். அவனுக்குள் ஏற்படும் குழப்பம் மூஞ்சலில் நடக்கும் தாக்குதலின் தன்மையை முழுமையாக அறிந்த பிறகுதான் நீங்கும். அந்தக் கால அளவு போதும், நாம் நிலைமையைச் சமாளிக்கவும் ஆயுதங்கள் வந்துசேரவும்'' என்றான் தேக்கன்.

தேக்கன் சொல்வதைப் பணிந்துகேட்டான் முடியன்.

தேக்கன் சொல்லியதும் பாய்ந்து விரைந்தனர் இரவாதனும் உதிரனும்.

கற்களும் பாறைகளும் உருண்டன. சிறு மரங்களும் கொப்புகளும் உடைந்தன. கனைப்பின் பேரொலியால் காடே நடுங்குவதுபோல் இருந்தது. இரலிமேட்டில் இருந்தவர்கள் இடதுபக்கமாகத் திரும்பிப் பார்த்தனர். மூக்கு விடைத்துக் கனைத்தபடி பள்ளத்தாக்குக்குள் பாய்ந்து இறங்கின காட்டெருமைகள். இரும்பினும் கடுமைகொண்ட அவற்றின் நெற்றி யானைகளின் ஆழ்நினைவுகளுக்குள் பதிந்தவை. தலையில் திருகி நீண்டிருக்கும் பெருங்கொம்புகளை ஆட்டியபடி மந்தையை வழிநடத்தும் காட்டெருமை சீறிப்பாய்ந்தது. அணங்கன், அதனருகே ஒலிக்குறிப்புகளைக் கொடுத்தபடி ஓடிக்கொண்டிருந்தான்.

உள்காட்டிலிருந்து ஒற்றைக் காட்டெருமை வருவதுதான் முதலில் தெரிந்தது. பின்னால் அணங்கன் ஓடிக்கொண்டிருப்பதைக் கபிலர் மட்டும் கவனித்தார். சிறிது நேரத்தில் பெருமந்தை ஒன்று கீழ்நோக்கி இறங்கியது. காட்டையே சரித்து இறங்கும் அதன் வேகத்தைப் பார்த்தபடி இருந்த முதுவேலர், சட்டெனத் திரும்பிப் பள்ளத்தாக்கைப் பார்த்தார். அடர்த்தியாக அணிவகுத்து நின்றுகொண்டிருந்த யானைகள், முன்னும் பின்னுமாக மிரண்டு ஓடத்தொடங்கின.

யானைப்பாகர்களும் மேலே இருக்கும் போர்வீரர்களும் ஏதேதோ செய்தனர். ஆனால், கண நேரத்துக்குள் யானைகளைக் காட்டின் நினைவுகள் ஆக்கிரமிக்கத் தொடங்கின. இறுகிய பாறை போன்ற உடலும், இரும்பென முன் நெற்றியும், இணையில்லாத கொம்புகளும் கொண்ட காட்டெருமைகள் தாவிக்குதித்து வரும்போது, தளர்ந்த சதையும் தொங்கும் தோலும் கொண்ட யானைகள் தம் தந்தங்களை மட்டும் நம்பி நின்றுவிட முடியாது. கனைப்பொலியைக் காதில் கேட்ட கணத்திலேயே பிளிறல் தொடங்கியது. பிளிறல் ஓசையால் காடே கலங்கியது. நாலாபுறமும் பாகன்களும் வீரர்களும் தூக்கிவீசப்பட அணங்கன் பள்ளத்தாக்கின் பாதித்தொலைவில் போய்க்கொண்டிருந்தான்.

இரலிமேட்டிலிருந்து முதுவேலரும் கபிலரும் பார்த்துக்கொண்டிருந்தனர்.

எறும்புக்கூட்டத்துக்கு இடையே இழுத்துக் கோடுபோடுவதுபோல, எதிர்கொண்டு நிற்க எதுவும் இல்லாமல் பிளந்து உள்நுழைந்துகொண்டிருந்தன காட்டெருமைகள். குகைக்குள் இருக்கும் ஆயுதங்களைத் திரையர்கள் தூக்கிச் செல்லத் தொடங்கினர். பெருவண்டிகளில் ஏற்றும் ஆயுதங்களை ஒவ்வொரு வீரனும் தனித்தனியே சுமந்து சென்றான். காட்டெருமை மந்தை பாதித்தொலைவு உள்ளே போனபோது, காலம்பனும் அவன் தோழர்களும் மந்தைக்குப் பின்னே வேகமாக ஓடினர். இவர்கள் அங்கு எதற்கு ஓடுகின்றனர் என்று கபிலரும் முதுவேலரும் உற்றுப்பார்த்தனர்.

முன்னோடிய காலம்பன் காட்டெருமை ஒன்றின் பின்கால்நரம்பை நோக்கி ஓங்கி அடித்தான். அந்தக் காட்டெருமை பெருங்கனைப்பொலியோடு அவ்விடமே நின்று முன்னும் பின்னுமாகச் சுற்றியது. இதேபோல அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காட்டெருமைகளின் கால்நரம்பை அடித்து, பத்துக்கும் மேற்பட்டவற்றை வழியெங்கும் நிறுத்தினர். இருபக்கமும் தெறித்து ஓடிய யானைகளுள் எதுவும் இனி இந்தப் பக்கம் தலை திருப்பாது. திரையர்கள், ஆயுதங்களின் பெருஞ்சுமையைத் தூக்கிக்கொண்டு நின்று விளையாடும் காட்டெருமைகளுக்கு நடுவில் ஓடிக்கொண்டிருந்தனர்.

தேக்கனின் திட்டம் மிகச்சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தது. இரவாதன், எதிரிகளைப் பிளந்து

மூஞ்சலை அடைந்தான். கருங்கைவாணன் முன்னேறி வந்து தேக்கனை அடைந்தான். களமெங்கும் கூவல்குடியினரின் குறிப்போசை மேலெழுந்தது. பெருங்குழப்பத்தோடு கருங்கைவாணன் நிற்க, அவன் கண்களுக்குத் தெரியாத திசையில் நின்றுகொண்டிருந்த முடியன் தற்செயலாக நாகக்கரட்டுப் பக்கம் திரும்பினான். கரட்டின் உச்சிவிளிம்பில் காட்டெருமை ஒன்று குதித்து ஓடியது.

பார்த்த கணத்தில் முன்னேறித் தாக்கும் பேரோசையை வெளிப்படுத்தினான் முடியன். அதற்காகவே காத்திருந்த உதிரனின் உத்தரவு இமைப்பொழுது இடைவெளியின்றி வெளிவந்தது.

பாறைகளைத் துளைக்கும் பகழி அம்புகள் காற்றெங்கும் சீறத் தொடங்கின.

- **பறம்பின் குரல் ஒலிக்கும்...**

# வீரயுக நாயகன் வேள்பாரி-100

முதன்முறையாக இன்றைய போரின் பிற்பகுதியில்தான் பறம்பின் விற்படையினருக்கு முழுமையாக ஏறித்தாக்கி முன்னேறும் அனுமதியைக் கொடுத்தான் முடியன். இந்த உத்தரவுக்காகத்தான் போர் தொடங்கிய நாளிலிருந்து உதிரன் காத்திருந்தான். விற்படையின் முழு ஆற்றலும் பீறிட்டுக் கிளம்பியது. விரி அம்புகளும் பகழி அம்புகளும் இடைவெளியின்றிச் செலுத்தப்பட்டன. பறம்புப்படையை முற்றுகையிடத் துணிந்தவனுக்கு தாங்கள் யார் என்பதை உணர்த்த, ஒவ்வொரு வீரனும் துடித்தான். போர்க்களம், இதுவரை காணாத அளவுக்கு மரணத்தைக் கண்டது.  எதிரிகளின் படையை முழுமையாகச் சுற்றிவளைத்த கருங்கைவாணன், நிலைமை இப்படித் தலைகீழாக மாறும் என எதிர்பார்க்கவில்லை. எதிரிகளால் யானைப்படையைப் பிளந்துகொண்டு நண்பகலுக்குள் போர்க்களத்துக்கு ஆயுதங்களைக் கொண்டுவர முடியும் என்பதை அவனால் நினைத்துப்பார்க்கக்கூட முடியவில்லை.




பறம்புப்படையின் தாக்குதல் எல்லைக்குள் வேந்தர்படையின் முன்கள வீரர்கள் பெரும்பான்மையோர் சிக்கிக்கொண்டனர். பேரழிவுக்குப் பின்னரே நிலைமையை உணர முடிந்தது. ஆனால், உடனடியாகப் படையைப் பின்வாங்க முடியவில்லை. ஒரே பகுதியில் ஏறி நின்று தாக்கினால் பின்வாங்குதல் எளிது. ஆனால், வேந்தர்படையோ அரைச்சுற்று வட்டத்தில் பறம்புப்படையைச் சூழ்ந்து நின்றது. இத்தகைய

உத்தியில் பின்வாங்குதல் எளிதல்ல.

எதிரிப்படையை முற்றுகையிட்டுத் தாக்கும் முடிவை எந்தத் தளபதியும் எளிதில் எடுக்க மாட்டான். முற்றுகை என்பது, எதிரிப்படையின் மீது முழுமையான அடைப்பை உருவாக்குவது. அந்த உத்தியை வகுத்துவிட்டால் பின்வாங்கல் என்பதற்கு இடமேயில்லை. எனவேதான் பின்வாங்கும் சூழல் ஒருபோதும் உருவாகாது என்ற முழு நம்பிக்கை இருக்கும்போது மட்டுமே முற்றுகைப்போரை நடத்துவர்.

கருங்கைவாணன், முழு நம்பிக்கையோடுதான் இந்த உத்தியை முன்னெடுத்தான். எதிரிகளின் கைகளில் ஆயுதங்கள் வந்து சேராமல் இருக்க யானைப்படையையும் கொண்டுபோய் அடைத்து நிறுத்தினான். அவன் திட்டமிட்டதைப்போலவே முற்பகலுக்குள் பறம்புவீரர்களின் கைகளில் இருந்த பெரும்பான்மையான ஆயுதங்கள் தீர்ந்தன. நிலைமை பறம்புப்படைக்கான பேரழிவை நோக்கி நகர்ந்தது. ஆனால், தேக்கன் வகுத்த உத்தியால் வேந்தர்படையின் வேகம் குறைந்தது. குழப்பத்தை உருவாக்கி கருங்கைவாணனைத் திசைதிருப்பினான். மூஞ்சலுக்கு ஆபத்து ஏதுமில்லை என உறுதிப்படுத்திக்கொள்ளும் வரை கருங்கைவாணன் முழு வேகத்தோடு தாக்குதலை முன்னெடுக்கவில்லை. அதற்குள் நிலைமை தலைகீழாக மாறியது.

பறம்பின் ஆற்றல் பீறிடத் தொடங்கியது. கடைசி ஐந்து நாழிகையில் விற்படையினர் நிகழ்த்திய தாக்குதல், இதுவரை நடந்த மொத்தத் தாக்குதல்களுக்கும் நிகரானது. அழிவு... அழிவு... வேந்தர்படையில் பேரழிவு. களத்தில் கருங்கைவாணன் கையறுநிலையில் நின்றான். யானைப்படையை அழித்து நண்பகலுக்குள் ஆயுதங்களை எப்படிக் கொண்டுவந்தனர் என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. மனம் மிரட்சியில் இருக்கும்போது ஆற்றலைக் கைக்கொள்ள முடியாது. படையினர் மீள வழிகாட்ட முடியவில்லை. நெருக்கடி நிலையில் ஒருவன் சிறந்த முடிவை எடுக்க, அவனது போர் அனுபவமே கைகொடுக்கும். ஆனால், கருங்கைவாணன் சந்தித்த எந்தப் போரும் இந்தப் போருடன் ஒப்பிடக்கூடியதன்று. அவன் அதிகமான போர்களில் வெற்றிபெற்றுள்ளான். ஒருசில போர்க்களங்களை விட்டுப் பின்வாங்கி வெளியேறியுள்ளான். ஆனால், இன்று அவனுக்கு ஏற்பட்ட அனுபவம் முற்றிலும் வேறொன்று. பறம்போடு போரிட, தனது படைக்கு எந்தத் தகுதியும் இல்லையா என்ற கேள்வியை அடிமனதில் உருவாக்கியது அது.



அதன் பிறகு அந்தக் கேள்வியே அவனை ஆக்கிரமித்தது. அதிலிருந்து அவன் மீண்டுவர நெடுநேரமானது. அதற்குள் நிலைமை கைமீறியது. முன்களத்தில் எண்ணற்ற வீரர்கள் பகழி அம்புக்குப் பலியாகி மடிந்தனர். கவசவீரர்களின் படைக்கே இந்நிலையானதும் மற்ற வீரர்கள் பறம்பினரை நெருங்கவே அஞ்சினர். கைவிடப்பட்ட படைவீரர்கள் மலையெனக் கொன்றுகுவிக்கப்பட்டனர். தட்டியங்காடெங்கும் குருதி பெருகி ஓடியது.

எல்லாவற்றையும் பரண் மீதிருந்து பார்த்துக்கொண்டு நின்றார் திசைவேழர். நேற்றிரவுதான் அவர் கபிலரிடம் சொன்னார், ``இனி, மரணமே இந்நிலத்தை ஆட்சிசெய்யும்.” அந்தக் காட்சியைத்தான் அவர் இப்போது பார்த்துக்கொண்டிருந்தார். உடல் முழுவதும் செயலிழந்ததுபோல் இருந்தது. கண்விழி உயிரற்று அசைந்துகொண்டிருந்தது. ஆனாலும் நாழிகைக்கோலினைப் பார்த்தபடி தன் கைகளை மெள்ள உயர்த்தினார். முரசின் ஓசை எங்கும் எதிரொலித்தது. தட்டியங்காட்டின் நான்காம் நாள் போர் முடிவுக்கு வந்தது.


மலையடிவாரமெங்கும், விரட்டப்பட்ட யானைகள் சிதறித் திரிந்தன. நண்பகலுக்குப் பிறகு யானைப்படை முற்றிலும் கட்டுப்பாட்டை இழந்தது. தளபதி உச்சங்காரிக்கு என்ன நடந்தது என்பதே புரியவில்லை. திடீரென யானைகள் மிரளத் தொடங்கின. நடுப்பகுதி யானைகள் பாகன்களின் கட்டுப்பாட்டை மீறி மிரண்டு திமிறின. பயம்கொள்ளும் யானையின் பிளிறல் தனித்துவமாகத்

தெரியக்கூடியது. ஒன்றுக்கும் மேற்பட்ட யானைகள் அதேபோலப் பிளிறியவுடன் படையின்தன்மை உருமாறியது. பெரும் எண்ணிக்கையில் காட்டெருமைகள் மொத்தமாக உள்ளே நுழைந்தபோது படை தனது கட்டுப்பாட்டை இழந்தது. மேலே இருந்த வீரர்கள் தூக்கி வீசப்பட்டனர். நாலாபக்கமும் யானைகள் சிதறி ஓடின. காட்டுக்குள் ஓடத்தொடங்கிய யானையின் மீது பாகனோ, வீரனோ உட்கார முடியாது. எல்லோரும் உயிர்பிழைத்தால் போதும் என்ற நிலையை அடைந்தனர். காரமலையின் கீழ்ப்பகுதி முழுக்க வேந்தர்படையின் யானைகளும் வீரர்களும் தவித்து அலைந்தனர்.

எதிரிநாட்டுக்குள் போரிட நுழைந்த வர்களில் பிடிபட்டவர்களை முழுமையாக அழித்தொழிப்பதே மரபு. ஆனால், பறம்பின் தரப்பில் சொல்லப்பட்டுவிட்டது, `உயிர்பிழைக்க ஓடும் பாகன்களையோ வீரர்களையோ கொல்லவேண்டாம்' என்று. போரிடுபவர்களை மட்டுமே எதிர்கொள்வோம். அஞ்சி ஓடுபவர்களை அழிப்பது வீரமாகாது.

நடுப்பகலிலிருந்து வேந்தர்களின் வீரர்கள் நாலாபக்கமும் ஓடிக்கொண்டி ருந்தனர். மாலையில் போர் முடிவுற்றதன் அடையாளமாக முரசின் ஓசை பரண் மேலிருந்து வெளிப்பட்டது. இன்றைய போர், வேந்தர்களுக்கானதாக இருக்கும் என்ற நம்பிக்கையில் தொடங்கி பறம்புக்கானதாக முடிவுற்றது. பறம்புவீரர்கள் பெருமகிழ்வோடு போர்க்களத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்தனர். கபிலர் இரலிமேட்டில் பாட்டாப்பிறையில் அமர்ந்திருந்தார். வழக்கமாக போர் முடிவுறும்போது நாகக்கரட்டின் மீதிருந்து நிலைமையைப் பார்ப்பது வழக்கம். ஆனால், இன்று இரலிமேட்டிலே இருந்துவிட்டார். சிதறுண்ட யானைகள் எங்கும் அலைவது ஒரு காரணம்.  இன்னொரு காரணம், நேற்று திசைவேழர் கூறிய சொற்கள். போர்க்களத்தின் பேரழிவைக் கண்கொண்டு பார்க்க முடியாத நிலையில், `இங்கேயே இருப்போம்... எல்லோரும் வந்து சேரட்டும்' என்று அமர்ந்திருந்தார்.

பொழுது மறையத் தொடங்கியது. வீரர்களின் ஓசை, மலையெங்கும் கேட்டுக்கொண்டிருந்தது. கபிலரின் மனக்கண்ணில் அணங்கனே நிலைகொண்டிருந்தான். `எவ்வியூரின் வடதிசையில் ஏதோ ஒரு காட்டுக்குள் நுழைந்தவன் இத்தனை காட்டெருமைகளோடு எப்படி இங்கு வந்துசேர்ந்தான்? மனிதனின் பேராற்றலை எப்படிப் புரிந்துகொள்வது? மீண்டும் அவன் காரமலையில் ஏறிவிட்டதாகச் சொல்கிறார்கள். அவனைக் கண்டு பேசவேண்டும் எனத் தோன்றுகிறது. ஆனால், அதற்கான வாய்ப்பு கிடைக்குமா எனத் தெரியவில்லை' எண்ணங்கள் ஓடிக்கொண்டிருக்கையில் கபிலரின் முன்னால் வந்து வணங்கி நின்றான் ஒருவன்.



எண்ணங்களிலிருந்து விடுபட்டு அவனைப் பார்த்தார் கபிலர். முதலில் வேந்தர்படையைச் சேர்ந்தவன் எனத் தோன்றியது. ஆனால், போர்வீரனுக்குரிய அடையாளங்கள் எவையும் அவனிடம் இல்லை. `யாராக இருக்கும்?' என்ற சிந்தனையிலேயே, வணங்கிய அவனுக்கு வாழ்த்து சொன்னார்.


மறுகணமே அவன் தனது கையில் இருந்த சுருட்டப்பட்ட துணி ஓலை ஒன்றைக் கொடுத்தான்.

தான் யார் என்று சொல்லாமலேயே ஏன் இதைக் கொடுக்கிறான் என்று நினைத்தபடியே வாங்கி அதை விரித்துப் பார்த்தார்.

பார்த்த கணத்தில் பேரதிர்ச்சிக்குள்ளானார் கபிலர். சிறிது நேரத்தில் அவரின் கண்களில் நீர் பெருகியது. ``என் தலைமாணவி பொற்சுவை" என்று உதடுகள் துடித்தபடியே உச்சரித்தன.

``என் பெயர் காராளி" என்று வந்தவன் தன்னை அறிமுகம் செய்துகொண்டான். தான் வெங்கல்நாட்டைச் சேர்ந்தவன் என்றும், போரில் ஈடுபடாத ஆறு ஊர்களில் ஒன்றைச் சேர்ந்தவன் என்றும் தன்னைப் பற்றிக் கூறினான்.

அவன் வரைந்த ஓவியம்தான் அது. அவளே திரைச்சீலைக்குப் பின்னால் நின்று பார்ப்பதுபோல் இருந்தது. ஓவியத்தை விட்டு கபிலரின் பார்வை நகரவில்லை. உள்ளுக்குள் எண்ணங்கள் பீறிட்டுக்கொண்டி ருந்தன. காராளியின் சொற்களை மனம் பெரிதாகக் கவனம்கொள்ளவில்லை.



சற்றே அவசரத்தோடு காராளி தொடங்கினான், ``இளவரசி உங்களைக் காண வேண்டும் எனக் காத்திருக்கிறார். அதற்கு உங்களின் அனுமதி வேண்டி வந்தேன்.”

காராளியின் சொல் கேட்டுத் திடுக்கிட்டார் கபிலர், ``இந்தப் போர்ச் சூழலில் அவர் ஏன் என்னைக் காண வேண்டும்?”

காராளியிடம் பதில் இல்லை.

சற்று நேரம் கழித்து, ``போர் முடிவுற்றவுடன் காணலாம் என்று சொல்.”

``இல்லை ஐயா, அவர் உங்களைக் காண விரும்புவதே போர்குறித்துப் பேசத்தானாம். போர் தொடங்கும் முன்பே உங்களிடம் அழைத்துப்போகச் சொன்னார். நானும் கடந்த ஐந்து நாள்களாகப் பெருமுயற்சி செய்துவருகிறேன். அதற்கான வாய்ப்பே கிட்டவில்லை. இன்று நடுப்பகலுக்குப் பிறகுதான் வாய்ப்பு கிட்டியது.”


`எப்படி?’ என்று கேட்பதைப்போல இருந்தது கபிலரின் பார்வை.

``நடுப்பகலுக்குப் பிறகு, வேந்தர்களின் யானைப்படை சிதறி ஓடியது. காடெங்கும் வேந்தர்படையின் வீரர்கள் உயிர்பிழைக்க இங்குமங்குமாக ஓடிக்கொண்டி ருக்கிறார்கள். இதுதான் பொருத்தமான நேரம்.

இதைப் பயன்படுத்தி உள்ளே நுழைந்தால் யாரும் ஐயம்கொள்ள மாட்டார்கள் என்றுதான் இன்று வந்துசேர்ந்தேன்” என்றான்.

அவனது அக்கறையும் அறிவுக்கூர்மையும் கபிலரை ஈர்த்தன. ஆனாலும் தயக்கத்துடனே, ``இந்தச் சூழலில் இங்கு வருவது அவருக்கு ஆபத்தாக அமைந்துவிடாதா?”

``ஓர் ஆபத்தும் வராது. நிலைமை குழப்பத்தில் இருக்கும்போதே அவரை அழைத்துவருதல் சிறந்தது. யாருக்கும் எந்தவித ஐயமும் வராது” என்றான்.



தேக்கனிடமோ முடியனிடமோ கலந்து பேசிவிட்டுச் சொல்லலாம் என்று முடிவுசெய்தார். வழக்கமாக அவர்கள் வந்து சேரும் நேரம் கடந்துவிட்டது. ஆனாலும் இருவரும் வந்துசேரவில்லை.

காராளியோ, பொழுதாகிக்கொண்டி ருப்பதால் சற்று பதற்றத்தோடு இருந்தான். அப்போது இரலிமேட்டின் குகைப்பகுதியிலிருந்து வேகமாகக் கீழிறங்கிக்கொண்டிருந்தான் இரவாதன். அவனைப் பார்த்து ``தேக்கனும் முடியனும் ஏன் இன்னும் வந்துசேரவில்லை?” என்று சத்தம்போட்டுக் கேட்டார் கபிலர்.

``தேக்கனுக்கு சற்று ஓய்வு தேவைப்படுவதால் இங்கு வரவில்லை. அவருக்கான குடிலிலேயே தங்கிவிட்டார். அவரைக் கண்டு பேசுவதற்காக முடியன் அங்கு போயுள்ளார். அவர்கள் இருவரையும் பார்க்கத்தான் நான் போகிறேன். எதுவும் சொல்ல வேண்டுமா?” என்று கேட்டுக்கொண்டே நடந்தான் இரவாதன்.

அவசர வேலையாகப் போய்க்கொண்டி ருக்கிறான் என்று சிந்தித்த கபிலர், ``இல்லை, வந்தவுடன் நேரில் பேசிக்கொள்கிறேன்” என்றார்.

என்ன முடிவெடுப்பது எனத் தெரியவில்லை. குழப்பம் சற்று அதிகமானது. காராளியின் பதற்றமும் அதிகமானது. ``நான் விரைந்து போய்ச் சேரவேண்டும். அப்போதுதான் இரவுக்குள் இளவரசிக்குச் செய்தி சொல்ல முடியும்” என்று வற்புறுத்திக் கேட்டான்.

மீண்டும் அவனைக் கூர்ந்து பார்த்தார் கபிலர்.


``நாளையோ, நாளை மறுநாளோ இதே பொழுதில் அழைத்துவருகிறேன். அனுமதி கொடுங்கள் ஐயா” என்றான்.

மனம் முடிவெடுக்க முடியாமல் குழம்பிய நிலையில் தலை மட்டும் சம்மதித்து அசைந்தது.

கால் தொட்டு வணங்கி விடைபெற்றான் காராளி.


தட்டியங்காட்டின் பேரழிவுக்குமுன் செய்வதறியாது நின்றிருந்தான் கருங்கைவாணன். பொழுதும் மங்கி இருள் சூழ்ந்தது. தீப்பந்தங்களோடு உடல்களை அப்புறப்படுத்தும் வேலையில் கணக்கற்றோர் ஈடுபட்டனர். எங்கும் மரணத்தின் பேரோலம். இழுபடும் குரல்கள் உயிரை உதற முடியாமல் துடித்துத் தவித்தன. கருங்கைவாணனால் கூடாரத்துக்குள் இருக்கவும் முடியவில்லை; வெளியில் வந்து நிற்கவும் முடியவில்லை.

தலைமைத் தளபதியின் போர் உத்தி தோல்வியடைந்தால் ஏற்படும் இழப்புகள் எவ்வளவு கொடியவை என்பதை இன்றைய போர்க்களம் உணர்த்திக்கொண்டிருந்தது. யானைப்படைத் தளபதி உச்சங்காரி என்ன ஆனான் என்ற செய்தி ஏதும் இதுவரை கிட்டவில்லை. யானைப்படையை எப்படி நடுப்பொழுதுக்குள் கலைத்தனர் என்பது புரியவில்லை. காட்டெருமைகள் யானைப்படைக்குள் நுழைந்த இடத்தைப் பார்த்த வீரர்கள் யாரும் உயிரோடு இல்லை. முன்னும் பின்னுமாக இருந்த யாருக்கும் என்ன நடந்தது என்பது விளங்கவில்லை. பெருந்தாக்குதலால் படையைச் சிதறச்செய்துவிட்டார்கள் என்பதுதான் புரிந்தது. கருங்கைவாணன் குழம்பித் தவித்து வேதனையில் மூழ்கிக்கொண்டிருந்தான்.



வழக்கமாக வேந்தர்கள் கூடிப்பேசும் நேரம் நெருங்கிவிட்டது. ஆனால், யாரும் இன்னும் மையக்கூடாரத்துக்கு வந்துசேரவில்லை. வேந்தர்களைக் கண்டு என்ன சொல்லப்போகிறோம் என்பது புரியவில்லை. கருங்கைவாணன் வாழ்வில் இவ்வளவு மோசமான இழப்பு எந்த ஒரு போர்க்களத்திலும் அவனுக்கு ஏற்பட்ட தில்லை. ஏறக்குறைய கையறுநிலையில் அவன் நின்றான். வேந்தர்கள் ஏன் இன்னும் தங்களின் கூடாரங்களை விட்டு மையக்கூடாரத்துக்கு வராமல் இருக்கின்றனர் என்பதும் அவனுக்குப் புரியவில்லை. குழப்பத்தோடேயே உட்கார்ந்திருந்தான்.

மூவேந்தர்களும் தங்களின் படைகளுக்கு ஏற்பட்ட பாதிப்பைப் பற்றிய முழுமையான செய்தியை அறிந்துகொண்ட பிறகு கூடாரத்துக்கு வரலாம் எனக் காத்திருந்தனர். ஏற்பட்டுள்ளது பேரிழப்பு. போர்க்களத்திலிருந்து எண்ணிலடங்காத பிணங்களை வெளியேற்றவேண்டியிருந்தது. எண்ணிக்கையைக் கண்டறிவது இரவுக்குள் இயலாது என்று அமைச்சர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. போரின் போக்கு பற்றி உதியஞ்சேரலுக்கு மறுசிந்தனை உருவாகத் தொடங்கியது. `பாண்டியனை நம்பிப் பெரும்படையோடு களம்புகுந்தது சரியா?’ என்ற கேள்வி மேலெழுந்தது. இந்தக் கேள்விக்கு அடிப்படைக் காரணம் பறம்புவீரர்கள் ஒரே நேரத்தில் முற்றுகையைத் தகர்த்து அளவில்லாத இழப்பை உருவாக்கியதும், யானைப்படையைச் சிதறடித்ததும்தான். பறம்புப்படைக்கு இதைவிடப் பெரிய நெருக்கடியை இனி கொடுத்துவிட முடியாது. எனவே, இந்தப் போரின் போக்கு தனக்கான வெற்றிவாய்ப்பை இழக்கத் தொடங்கிவிட்டது என அவன் எண்ணினான். அப்போது கூடாரத்துக்குள் வந்த பணியாள் சொன்னான், ``சோழப்பேரரசர் தங்களைக் காணக் காத்திருக்கிறார்” என்று.



தன்னைப்போல நம்பிக்கை இழந்த நிலையில், அடுத்து என்ன செய்யலாம் என்பதைப் பற்றிப் பேச செங்கனச்சோழன் வந்திருப்பான் என நினைத்தான் உதியஞ்சேரல். ஆனால், உள்ளே வந்தவனின் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. உதியஞ்சேரலுக்குப் புரியவில்லை.

வந்ததும் ஊன்றுகோலைச் சாய்த்துவிட்டு இருக்கையில் அமர்ந்தபடி செங்கனச்சோழன் சொன்னான், ``எல்லாம் நல்லபடியாக முடிந்தது.”


உதியஞ்சேரலுக்குப் புரியவில்லை. முகத்தில் குழப்பமே மிஞ்சியது.

அதை உணர்ந்தவாறு செங்கனச்சோழன் கூறினான், ``ஈங்கையனிடம் பேசிக்கொண்டி ருக்கிறோம் என்று சொன்னேன் அல்லவா; அது நல்லபடியாக முடிந்தது.”

உதியஞ்சேரலுக்கு உயிர்வந்தது போலிருந்தது. ``உண்மையாகவா? நீங்கள் சொல்வதைச் செய்ய ஒப்புக்கொண்டு விட்டானா?” என்று வேகமாகவும் உணர்ச்சிவசப்பட்டும் கேட்டான்.

``ஆம்” என்று தலையசைத்தான் செங்கனச்சோழன்.

அதன் பிறகு உரையாடல் தொடரவில்லை. அமைதி நீடித்தது. என்ன நடந்தது என்று அவன் சொல்வான் எனக் காத்திருந்தான் உதியஞ்சேரல்.



சற்று நேரத்துக்குப் பிறகு செங்கனச்சோழன் சொன்னான், ``நாளை இரவு பாரி பத்தாம் குகையில் தங்குகிறான். அங்கே ஈங்கையனின் காவல்.”

உதியஞ்சேரலுக்குப் புரியவேண்டியது புரிந்தது.

எழுந்துபோய் அவனைக் கட்டியணைத்துக்கொண்டான்.


**மை**யக்கூடாரத்தில் வேந்தர்கள் கூடினர். கருங்கைவாணனோடு சேர்த்து மையூர்கிழாரையும் அழைத்திருந்தனர். இருவரும் வந்து வேந்தர்களுக்கு முன் நின்றனர். அவர்களுக்குச் சற்றுப் பின்னால் தளபதிகளான உறுமன்கொடி, துடும்பன், வெறுகாளன், மாகனகன் ஆகிய நால்வரும் நின்றனர்.

இரலிமேட்டின் குகையிலிருந்துதான் ஆயுதங்கள் தட்டியங்காட்டுக்கு வந்து சேர்கின்றன. இரலிமேட்டுக்கும் நாகக்கரட்டுக்கும் நடுவில் இருக்கும் பள்ளத்தாக்கு மிகக்குறுகியது. யானைப்படையைக் கொண்டுபோய் அடைத்து நிறுத்திவிடலாம். எதிரிகள் தங்களின் யானைப்படை மூலம் தாக்குதல் தொடுத்தாலும் பகற்பொழுதுக்குள் ஆயுதங்களைக் குகைகளிலிருந்து போர்க்களத்துக்கு எடுத்துவந்துவிட முடியாது. ஏனென்றால், பள்ளத்தாக்கு முழுவதும் இருதரப்பு யானைகளுமே ஆவேசம்கொண்டிருக்கும் என்று ஆலோசனையைச் சொன்னது மையூர்கிழார்தான். எனவே, இன்று விளக்கம் சொல்லவேண்டிய முதல் இடத்தில் அவரும் இருந்தார்.

கருங்கைவாணனால் வேந்தர்கள் யாருடைய முகத்தையும் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. மையூர்கிழாரின் முகமும் மிகுந்த கலக்கத்தில்தான் இருந்தது. ஆனால், நிமிர்ந்தே இருந்தார்.

``ஏன் இவ்வாறு நடந்தது?”

சோழவேழனின் கேள்வி யாரை நோக்கி எனத் தெரியாததால், இருவரும் சற்று அமைதியாக நின்றனர். கருங்கைவாணனால் உடனடியாக பதில் சொல்லிவிட முடியாது என்பதால், மையூர்கிழார் பேசத் தொடங்கினார்.



``இவ்வாறு நடக்காது என்பதை நம்மில் யாராலும் ஏன் முன்னாலேயே சிந்திக்க முடியவில்லை?”

சோழவேழன் கேட்ட கேள்வியை அவையில் இருக்கும் எல்லோரையும் நோக்கிய கேள்வியாகத் திருப்பினார் மையூர்கிழார்.

முற்றுகைத் திட்டத்தைக் கருங்கைவாணன் முன்வைத்தான். ஆனால், இப்படித் தலைகீழாக மாறும் வாய்ப்பிருக்கிறது என யாரும் சிந்திக்க வில்லை. அதனால்தான் மையூர்கிழாரின் கேள்விக்கு யாரும் மறுமொழி சொல்லவில்லை.

சிறிது நேரத்துக்குப் பிறகு சோழவேழன் கேட்டார், ``நீ என்ன சொல்ல நினைக்கிறாய்?”

``நடந்த உண்மையைத் தெரிந்துகொண்டால் நம் வீரர்கள் போரிடும் முடிவையே கைவிட்டுவிடுவார்களோ என அஞ்சுகிறேன்.”

அதிர்ந்தது அவை.

``அப்படி என்ன நடந்தது?” எனக் கேட்டார் சோழவேழன்.

``அவர்கள் காட்டெருமைப் படையை நமது யானைப்படையின் மீது ஏவியுள்ளனர். அதனால்தான் நம் யானைகள் போரிடாமலே சிதறி ஓடியிருக்கின்றன.”

``காட்டெருமைப் படையா?”

அவையில் இருந்த தளபதிகள் பலரும் நடுக்குற்று மீண்டனர்.

நேரம் கடந்து சற்றே குறைந்த குரலில் பொதியவெற்பன் சொன்னான், ``நம்பும்படியாக இல்லையே!”

``நம்மால் நம்பவே முடியாத ஆற்றல் எதிரிகளிடம் உள்ளது என்றுதானே தலைமைத் தளபதி முதலிலிருந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்.”

கருங்கைவாணனுக்கு மூச்சு வந்தது. தான் தொடர்ச்சியாகச் சொல்லிவந்ததை இன்னொருவர்

வலியுறுத்திப் பேசுவது, அதுவும் இப்படியொரு நெருக்கடியான நேரத்தில் பேசுவது, சற்று ஆறுதலைத் தந்தது.

``நீங்கள் என்ன சொல்லவருகிறீர்கள்?” எனக் கேட்டான் உதியஞ்சேரல்.

``இப்போரை இப்படி நடத்தினால் வெல்ல முடியாது.”

``ஏன்?”

``ஏனென்றால், இப்போர் பாரிக்கு எதிராக நடைபெறுகிறது.”

``பாரிக்கு எதிராகத்தான் நடைபெறுகிறது. அதை யாரும் மறுக்கவில்லையே!”

``மறுக்கவில்லை. ஆனால், உங்களுக்கு அது புரியவில்லை.”

வேந்தர்களின் முன்னால் மையூர்கிழாரின் பேச்சு மிகத்துணிச்சலாக இருந்தது. ஏற்பட்டுள்ள பேரிழப்பு இதுபோன்ற பேச்சுக்கான இடத்தை இயல்பாக உருவாக்கியது.

``என்ன புரியவில்லை என நினைக்கிறாய்?” எனக் கேட்டார் சோழவேழன்.

``நேற்று எதிரிகள் காற்றைக்கொண்டு அம்பெய்திப் பெரும்பாதிப்பை உருவாக்கினர். அது எப்படியென்று இன்னும் புரியவில்லை. இன்றோ காட்டெருமைப்படையைக்கொண்டு தாக்கியுள்ளனர். இதுவும் எப்படியென்று புரியவில்லை. நாளை அவர்கள் நடத்தப்போகும் தாக்குதலும் புரியப்போவதில்லை.”

``நீ என்னதான் சொல்ல வருகிறாய் என்பதைத் தெளிவாகச் சொல்.”

``நான் முதல் நாளிலிருந்து தெளிவாகத்தான் சொல்லிவருகிறேன். ஆனால், இந்த அவை எனது சொல்லை ஏற்க மறுக்கிறதே” என்று குற்றம்சாட்டினான் மையூர்கிழார்.




பாண்டியப் பேரரசுக்கு உட்பட்ட ஒரு குறுநில மன்னன், பேரரசரும் பிற வேந்தர்களும் இருக்கும் அவையில் இவ்வளவு துணிந்து பேசுவது வியப்பைத் தந்தது. ஆனாலும் அவனிடம்தான் பாரியைப் பற்றியும் பறம்பைப் பற்றியும் அறிந்துகொள்ளவேண்டிய செய்திகள் இருக்கின்றன என்பதால், மற்ற இரு வேந்தர்களும் சற்றே ஆர்வத்துடன் கேட்டனர்.

ஆனால், மையூர்கிழாரின் பேச்சால் கடும்சினம்கொண்டான் பொதியவெற்பன். சற்றே உரத்தகுரலில் சொன்னான், ``புதிய தாக்குதல் திட்டத்தை நீ வைத்திருந்தால் அதை நேரடியாகச் சொல். சுற்றிவளைத்துப் பேசாதே!”

``இளவரசர் என்னை மன்னிக்க வேண்டும். நான்கு நாள் போரையும் முழுமையாகக் கவனித்ததால் சொல்கிறேன். தலைமைத் தளபதி உள்ளிட்ட நம் தளபதிகள் யாருக்கும் இந்தப் போரை எப்படி நடத்துவதென்றே தெரியவில்லை.”

அவை அதிர்ந்தது. கருங்கைவாணன் அதனினும் அதிர்ந்தான். இப்போதுதான் தனக்கு ஆறுதலாக அவனது பேச்சு இருக்கிறது என நினைத்தான். ஆனால், அடுத்த கணமே அவனைத் தகுதியற்றவனாக்கினான்.

``கருங்கைவாணன் வகுத்த திட்டத்தில் நீ கண்ட குறை என்ன?”

சோழவேழனின் கேள்விக்கு மையூர்கிழார் சொன்னார், ``ஒவ்வொரு நாளும் எதிரியின் படையை வெல்வதற்கான உத்தியையே அவர் உருவாக்கினார். அது முற்றிலும் தவறு.”

``என்ன உளறுகிறாய்... எதிரியின் படையை வெல்வதற்குத்தானே போர் நடக்கிறது. அதைச் செய்வதற்கு

உத்தியை உருவாக்குவதில் தவறென்ன இருக்க முடியும்?"

``எதிரிப்படையை வெல்வது நமது இறுதி இலக்கு. ஆனால், ஒவ்வொரு நாள் போரிலும் இறுதி இலக்குக்கான உத்தியையே உருவாக்கக் கூடாது."

அவையின் ஆழ்ந்த கவனிப்பு மையூர்கிழாரின் சொல்லின்மேல் குவியத் தொடங்கியது.

மையூர்கிழார் தொடர்ந்து சொன்னார், ``இந்தப் போர் பாரிக்கு எதிரானது. ஆனால், இன்று வரை அவன் போர்க்களத்துக்கே வரவில்லை. அவன் எங்கே இருக்கிறான் என்றே தெரியாது. பிறகு எப்படி இந்தப் போர்க்களத்தை நம்மால் வெற்றிகொள்ள முடியும்?"

அவையின் அமைதி மேலும் அடர்த்திகொண்டது.

``அவன் மிக உயரமான இடத்திலிருந்து இந்தப் போரை வழிநடத்துகிறான். நமது படையின் ஒவ்வொரு நகர்வையும் அவனால் தெளிவாகப் பார்க்க முடிகிறது. அடுத்த நகர்வை அவனால் உணர முடிகிறது. நாம் செய்வதையும் செய்யப்போவதையும் அவன் எளிதில் கணிக்கிறான். நாம் அவனது கால்களுக்கு அடியிலிருந்து சண்டைபோட்டுக்கொண்டிருக்கிறோம். அவனோ நமது தலைக்கு மேலே இருந்து தாக்குதலை வழிநடத்துகிறான். காற்றையும் காட்டெருமையையும் பயன்படுத்தியது, போரிட்டுக்கொண்டிருக்கும் அவர்களின் தளபதிகள் எடுத்த முடிவுகளல்ல. இன்னும் சொல்லப்போனால், இப்படிப்பட்ட முடிவுகள் எடுக்கப்படக்கூடும் என்பதுகூட அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. பாரி, மலையின் மாமனிதன்; உருளும் கற்களையும் வீசும் காற்றையும் பயன்படுத்தத் தெரிந்த பேரறிவாளன். அவனோடு போரிட்டுக்கொண்டிருக்கும் நம் தளபதிகளோ வாளையும் வேலையும் நம்பிப் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள்."

அவை, அதிர்ச்சிமேல் அதிர்ச்சிகண்டு உறைநிலை அடையத் தொடங்கியது. குலசேகரபாண்டியன், எதுவும் சொல்லாமல் மையூர்கிழாரையே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். மற்றவர்களோ ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக்கொள்ள முடியாத நிலையில் அமைதிகொண்டிருந்தனர். மையூர்கிழாரோ வேகம் குறையாமல் தொடர்ந்தார்.

``இரண்டாம் நாள் போரிலேயே தேக்கனை வெட்டி எறியும் வாய்ப்பு கிட்டியது. அதைத் தலைமைத் தளபதி தவறவிட்டார். அன்று அது நடந்திருந்தால் போரின் போக்கே மாறியிருக்கும். அதனால்தான் நான் முதலிலேயே சொன்னேன், நமது உத்தி தேக்கனுக்கும் முடியனுக்குமானதாக இருந்திருக்க வேண்டும். ஆனால், அது தளபதிகளுக்குப் புரியவேயில்லை. `வேட்டூர்பழையனை விரட்டிக்கொண்டு காட்டுக்குள் போகாதீர்கள்!' என்று கத்தினேன். அதைப் பொருட்டாகவே அவர்கள் நினைக்கவில்லை. இப்படித்தான் இந்தப் போர்க்களத்தில் ஒவ்வொரு நாளும் நடக்கிறது.''

கருங்கைவாணனையும் மற்ற தளபதிகளையும் நேரடியாகத் தாக்கி, குற்றம்சாட்டின மையூர்கிழாரின் சொற்கள். ஆனால், அவற்றில் எதையும் அவர்களால் மறுக்க முடியாது. நேற்று இதே அவையில் சோழவேழன் பேசியதுக்குச் சினம்கொண்டு மறுத்துரைத்தான் கருங்கைவாணன். ஆனால், இன்று அதன் தலைகீழ் நிலை நடந்துகொண்டிருந்தது. வேந்தர்களுக்கு முன்னால் தளபதிகளின் தவறுகளையும் செயலின்மையையும் வெளிப்படையாக எடுத்துக் கூறினார் மையூர்கிழார்.

``நான் இக்கணத்தில் என் மகன் இளமாறன் உயிரோடு இல்லையே என வேதனைப்படுகிறேன். தட்டியங்காட்டையும் நாகக்கரட்டையும் இரலிமேட்டையும் அவன் அளவுக்கு அறிந்தவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். இவ்வளவு பெரும்படையோடு மூவேந்தர்களும் அணிவகுத்து நிற்கும் இந்தப் போர்க்களத்தில் அவன் நின்றிருப்பானேயானால், பறம்பின் கதறலை இந்நேரம் நாம் கேட்டுக்கொண்டிருப்போம். இப்போதோ நமது கதறலை அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.''

இவன் கூறுவதை எதிர்கொள்வதற்கான சொல்லே யாருக்கும் சிக்கவில்லை. பாரி ஏற்படுத்திய பேரழிவை தனக்கான முழுவாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்கி றான். அதேநேரம் தனது விசுவாசத்தை வலிமையாக நிலைநிறுத்துகிறான். இவன் நோக்கம்தான் என்ன என்பது கருங்கைவாணனுக்குப் பிடிபடவில்லை.

``சரி, இப்போது என்ன செய்ய வேண்டும் என நினைக்கிறாய்?'' கேள்வி சோழவேழனிடம் இருந்து வந்தது.

``பாரியை உடனடியாகப் போர்க்களத்துக்கு வரவழைக்க வேண்டும்.''

நீண்டநேர அமைதியை உடைத்து வெளிவந்தது பொதியவெற்பனின் குரல், ``நாளைய போர்க்களத்தில் தேக்கனையோ முடியனையோ வெட்டிச்சாய்க்கும் உறுதியை தலைமைத் தளபதி இந்த அவைக்குத் தரவேண்டும்.”

உண்மையில் தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை கருங்கைவாணனால் புரிந்துகொள்ள முடியவில்லை. இளவரசர் சொல்லை இந்த அவையில் ஏற்பதன் மூலம் தன்னை நிலைநிறுத்திக்கொள்வது சரியான ஒன்றாக இருக்குமா என நினைத்துக்கொண்டிருக்கும்போதே, மையூர்கிழாரின் குரல் கேட்டது.

``இனி அந்த உத்தியின் மூலம் பலன் கிடைக்காது. அதற்குரிய காலம் கடந்துவிட்டது.”

``ஏன் அப்படிச் சொல்கிறாய்?”

``தேக்கனையோ முடியனையோ ஒரே நாள் போரில் வீழ்த்திவிட முடியாது. வேந்தர்படை முழு ஆற்றலோடு இருக்கும்போது அது நடந்திருக்கலாம். இன்றுள்ள நிலையில் அதைச் செய்ய முடியும் என நான் நம்பவில்லை. ஒருவேளை, கருங்கைவாணன் தேக்கனின் தலையை வெட்டினால்கூட, அவன் கரப்பான்பூச்சியைப்போல அதன் பிறகும் பத்து நாள் உயிர் வாழ்வான். பறம்பு மருத்துவர்களால் எதையும் செய்ய முடியும்.”

``வேறு என்ன செய்ய வேண்டும் என நினைக்கிறாய்?”

சட்டென மறுமொழி சொல்லி விடவில்லை. கேள்வி எழுப்பிய உதியஞ்சேரலை மட்டுமல்ல, எல்லோரையும் நோக்கி பார்வையைச் செலுத்தியபடி சொன்னார், ``என்னிடம் இருக்கும் ஆலோசனையை நான் சொல்ல ஆயத்தமாய் இருக்கிறேன். அதை நீங்கள் ஏற்பீர்களா என்பது ஐயமே!”

``ஏன் ஐயம்கொள்கிறாய்? துணிந்து சொல். பொருத்தமுடையதென்றால் ஏற்போம்.”

சோழவேழனின் சொல்லில் நின்றுகொண்டு மையூர்கிழார் சொன்னார், ``காலையில் போர் தொடங்கும்போது, பறம்பின் திசைநோக்கி நீலனின் தலையை வெட்டி வீச வேண்டும். அடுத்த

பொழுதுக்குள் களம் வந்து நிற்பான் பாரி.”

பதறியது அவை. துடித்தெழுந்தான் உதியஞ்சேரல், ``உனது ஆலோசனை பைத்தியக்காரத்தனமானது. எதிரியை வீழ்த்த அவனது வலிமையைக் குறைக்கவேண்டுமேயொழிய, ஆவேசத்தைப் பெருக்கக் கூடாது.”

செங்கனச்சோழனும் அதே சீற்றத்தை வெளிப்படுத்தினான். ``பாரியை வரவழைப்பதைவிட முக்கியமானது அவனை வெற்றிகொள்வது. அதற்கான தெளிவான திட்டம் இல்லாமல் அதைச் செய்வது அறிவுடைமையாகாது.’’

``தூண்டில் முள்ளை வீசுவதற்கும் கொலைவாளை வீசுவதற்கும் வேறுபாடு தெரியாதவனை முட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்” என்றான் சோழவேழன்.

சற்றும் பின்வாங்கவில்லை மையூர்கிழார், ``எனக்குத் தெரியும், நீங்கள் இதை ஒப்புக்கொள்ள மாட்டீர்கள் என்று. தீராப்பகையும் வஞ்சினமும் இருக்கும் ஒருவனால் மட்டுமே இந்தச் செயலைச் செய்ய முடியும். எதிரியை வெட்டி வீழ்த்த நினைக்கும் தளபதிகளை வைத்துக்கொண்டு போரிடத்தான் முடியும். போர்க்களத்தில் எல்லோரும்தான் போரிடுவார்கள். அவர்களை வைத்துக்கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. மரத்தின் கிளையை வெட்டுபவனுக்கும் மரத்தையே பிடுங்கி எறிபவனுக்கும் வேறுபாடு இருக்கிறது. குருதியைக் குடிக்கும் வெறியிருப்பவனால் மட்டுமே தட்டியங்காட்டைத் தனதாக்க முடியும்.”

ஏறி மிதித்தாலும் திமிறி எழும் மையூர்கிழாரின் உறுதியும் ஆவேசமும் சோழவேழனை உலுக்கின. சட்டெனச் சொன்னான், ``இனிவரும் நாள்களுக்கு மையூர்கிழாரை ஏன் தலைமைத் தளபதியாக ஆக்கக் கூடாது?”

கொந்தளிப்பு ஏறி நிற்கும் இந்த அவையை யார் எப்படிக் கைக்கொள்வார்கள் என யாராலும் கணிக்க முடியவில்லை. சோழவேழனின் சொல், அவையைக் கூர்முனையில் நிறுத்தியது. அவையின் நடுவில் தலைகவிழ்ந்து இருந்த கருங்கைவாணன், மெள்ளத் தலைநிமிர்ந்து குலசேகரபாண்டியனைப் பார்த்தான்.

பாண்டியப் பேரரசர் பதற்றம் ஏதுமின்றிச் சொன்னார், ``இன்றைய நாள் நமக்கானதாக இல்லை. எனவே, எந்த முடிவையும் இன்று எடுக்க வேண்டாம். வழக்கம்போல் நாளைய போரை கருங்கைவாணன் முன்னெடுக்கட்டும். மற்றவற்றை நாளை இரவு பேசிக்கொள்வோம்.”

- **பறம்பின் குரல் ஒலிக்கும்...**